உ

கடவுள் துணை

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்

அருளிச்செய்த

திருக்குறள் மூலம்

பரிமேலழகருரை



இதனுடன்

ஷை உரையைக்கொண்டு இயற்றிய

பதவுரை கருத்துரை விசேடவுரையுடன்

திரிசிரபுரம்

செயின்ட் ஜோஸப்ஸ் காலேஜ் தமிழாசிரியர்

வித்வான் (Orient)

௳. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை

அவர்கள்

எழுதிய இலக்கணக்குறிப்பும் சேர்ந்தது.

இரண்டாம் பதிப்பு

A. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

1938

Registered Copy Right.

முகவுரை

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் அருளிச்செய்த திருக்குறளாகிய இந்நூல், எக்காலத்தும் எம்மதத்தினருக்கும் சம்மதமாய பொதுநூலென ஒப்பமுடிந்த முடிவுடையதாகும். இது உலகியலில் ஈடுபடும் ஒவ்வொருவரும் அடையற்பாலனவாகிய, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் அடைதற்குரிய கருவி நூலாகும்.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகப் பால் மூன்றுக்கும் அதிகாரம் நூற்றமுப்பத்துமூன்று ஆக ஆயிரத்து முந்நூற்றமுப்பது குறள்வெண்பாக்களை யுடையது. எம்மொழியிலுஞ் சிறந்த உயர்தனிச் செம்மொழியாகிய இத்தமிழ்மொழியின் மேனிலையும், சொற்சுவையும், பொருட்பொலிவும் போற்றற்குரியன. இதன் சிறப்புநோக்கி எழுந்த திருவள்ளுவமாலையே இதன் பெருமைக்குச் சான்றாம்.

மற்றும் சாத்தனார் எனும் பெரும்புலவர் காமியற்றிய மணிமேகலையில்,

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேராய்."

என்புழி வள்ளுவனுரை பொய்யில் புலவனென்றும், அவர் தம் நூலைப் பொருளுரையென்றும் போற்றியிருப்பதும்;

இடைக்காடனார்,

> "கடுகைத் துளைத்தெழ் கடலைப் புகட்டிக்
> குறுகத் தரித்த குறள்."

என்றும் பாராட்டியிருப்பதும்; மற்றும் ஏனைய அறிவுடைச்சான்றோர் பலரும் இந்நூலைப்போற்றிப் புகழ்ந்து எடுத்தாண்டு வருவதும் போற்றற்குரித்து. பின்னும் ஆங்கிலபாஷாவிற்பனரும் தமிழிலக்

கியங்களில் வல்லுனருமான போப் என்னும் ஆங்கிலப் பாதிரியா
"இந்திய ஜனங்களில் தமிழரே முற்பட்டவர், அவரை அங்ஙன
செய்வித்தது குறளும் நாலடியுமே" எனப் பாராட்டிப் புகழ்ந்திருப்ப
றுடன் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்திருக்கின்றனர் என்றால்
இதன் பெருமையை எவ்வாறு எடுத்தியம்புவது!

தமிழ் நூல்களில் பண்டைப்பழமைவாய்ந்த இலக்கிய நாலாக
கருதப்படுகின்ற இத்தகைய நூலைக் கற்பதனால் நமது பழந்தமி
மக்களாகிய முன்னோர்களின், கல்வி, அறிவு, ஒழுக்கம், நாகரீக
வேளாண்மை, கைத்தொழில், அரசியலுணர்ச்சி ஆகிய இவற்றிற்
கற்ற அகன்ற பெரிய அறிவும், கற்பை யணிகலமாகப்பூண்ட பெர்
புடைமகளிரின் மேம்பாடும், மற்றும் இவைபோன்ற பிறவும், இ
தகையனவென்று உணர்தற்கு இடமாயுள்ளதாலும், செவ்விய உலகி
றிவைப்பெற விரும்புவார் ஒவ்வொருவரும் இதனைக் கற்கவேண்டி
தவசியமானதாலும், தமிழ்மக்களுக்கே உரிய தமிழ்மறையாகத் திக
வதாலும், இந்நூலுக்கு உரைகண்டார் பதின்மரிலும் பரிமேலழகியா
உரையே மிகச் சிறந்ததெனப் பாராட்டப்படுவதாலும், அவ்வுரைக்
உரைதெரிந்தாலன்றிப் பொருளறிவதும் இயலாதானமையாலும், இ
நூலின் கடின சந்திகளையெல்லாம் பிரித்து விளக்கி மேற்கோள்
ருடன் விரிவுரை யென்னும் புத்துரை யொன்று அத்துடன்
சேர்த்து உலகிற்கு நன்கு பயன்படுமாறு வெளியிடலானேம்.

சென்னை
28-8-1931. } அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்.

பரிமேலழகர் வரலாறு

இவர் தொண்டைநாட்டுக் காஞ்சிபுரத்தில் வசித்து வந்தவரென்பது தொண்டைமண்டல சதகத்தால் விளங்கும். மற்றும் "கருக்கான் வகுக்கமைக் கான்கலை தோரோக்கை காவலனே" என்று வருகிற பாவினடியால் இவர் ஒக்கையென்னும் ஊருடையாரென்பதும் பெறப்படும். பின்னும் "பரிமே லழகியகோன் போற்று தமிழ்க்கூடற், பரிமே லழகிய னென்பான்" என்ற வெண்பாவி னீற்றடியாலும் இவர் மதுரையில் வசித்தார் என்பதும் போதரும். எனவே, பரிமேலழகர் ஊர் இதுதானென்று கூறல் அரிதாயினும் ஒக்கை, மதுரை, காஞ்சி யென்ற விம்மூன்றிடங்களிலும் அவர் வசித்தவரென்பதே கொள்ளத் கது. இவரைச் சிலர் காஞ்சிபுரத்தில் உலகளந்தபெருமாள்கோவில் அருச்சகர் மரபில் உதித்த வைணவர் என்றும், வேறுசிலர் சைவர் என்றுங் கூறுவர்.

இவர் இளமையிலேயே தென்மொழி வடமொழிகளிற் சிறந்த புலமை யுடையவராய்த் திகழ்ந்து விளங்கினர். இவர் தமது புலமைக்குத் தக்க பெரியதோருரை யியற்றக்கருதி அதற்குத் திருவள்ளுவ நாயனார் திருக்குறளே ஏற்றதெனவறிந்து, முன்னரே அந்நூலுக்குத் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், சுமிப்பெருமாள், காளிங்கர் முதலியோர் ஒன்பதின்மரும் இயற்றிய உரைகளை யுற்றுநோக்கி அவற்றின்கண் ணுள்ள குற்றங் களைந்து நிறைபெய்து சிறந்ததோருரை யியற்றினர்.

இவர் இவ்வுரையைப் பாண்டியன் அவைக்களத்து அரங்கேற்றச் சென்றபொழுது அவ்வரசனதாணையின்படி வெண்கலப்பரியொன்றி லேறியிருந்து அரங்கேற்றினரென்றும், அப்போழ்து அப்பரி இடம் விட்டுப் பெயர்ந்ததென்றும், அதன்காரணம்பற்றி இவருக்கு இப் பெயருண்டாயிற்றென்றுங் கூறுவர்.

அக்காலத்தார் இவ்வுரைக்குச் சிறப்புப்பாயிரமாகக் கூறிய

"திருத்தகுசீர் தெய்வத் திருவள் ளுவர்தம்
கருத்தமைந்து தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனும்
மன்னு முயர்நாமன் வந்து."

"பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி."

என்னுஞ் செய்யுட்களாலும் இவர் பெருமைவிளங்கும். இவர் பரிபாடற்கும் ஒரு சிறந்த உரை யியற்றினர். இவ்வுரையாளரும் நச்சினார்க்கினியரும் சமகாலத்தவராகக் கருதப்படுதலால் இவரதுகாலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய 600-ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

திருக்குறள்

இந்நூலாடர் சிறக்க குறள்வெண்பாக்களினாலாகிய நூல் எனப் பொருள்படும். நாலடி வெண்பாக்களினால்ாகிய நூலுக்கு 'நாலடியார்' எனப் பெயரானாற்போல, குறள் வெண்பாக்களினாலாகிய இந்நூலுக்கு 'குறள்' எனப் பெயராயிற்று. 'திரு' என்பது யாவரும் விரும்புதற் குரிய சிறப்பு எனப் பொருள்தரும் அடைமொழியாம். சிறுமையை யுணர்த்தாங் குறளென்னும் பண்புப்பெயர் ஈறுபெயராய் வெண்பா யுணர்த்தாங் குறளென்னும் பண்புப்பெயர் ஈறுபெயராய் வெண்பா விற் சிறுமைபுடையதாகிய இரண்டடிப்பாவை யுணர்த்தி, பின் கருவி யாகுபெயராய் அக்குறள்வெண்பாவினாலாகிய நூலை உணர்த்தி, இந் நூற்குக் காரணப்பெயராயிற்று; இது இருமடியாகுபெயர்.

வெண்பாவாவது:—வெண்பா அகவல் கலி வஞ்சி என்ற நால் வகைப் பாவில் ஒன்று. ஈற்றடி முச்சீராகவும், ஏனையடி நாற்சீராகவும் பெற்று, காய்ச்சீரும் இயற்சீரும் வெண்டளையுமே கொண்டு ஈற்றடி யிறுதிச்சீர் காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாடுகளுள் ஒன்றாய் முடிவது.

அவ்வெண்பா:—குறள்வெண்பா - சிந்தியல்வெண்பா - நேரிசை வெண்பா - இன்னிசைவெண்பா - பஃறொடைவெண்பா என ஐந்து வகைப்படும்.

குறள் இரண்டடியாய்வருவது, சிந்தியல் மூன்றடியாய்வருவது, நேரிசையும் இன்னிசையும் நான்கடியாய்வருவது, பஃறொடை ஐந்து முதல் பதின்மூன்றடிவரை வருவது.

குறள் வெண்பாவில் ஈரடியும் எதுகை ஒன்றிவருவது ஒரு விகற்பமெனவும், ஒன்றுதது இருவிகற்பமெனவும் கூறப்படும்.

சங்கநூல்களில் மேற்கணக்கு கீழ்க்கணக்கு என்ற இருவகை நூல்களுள் இந்நூல் கீழ்க்கணக்குப் பதினெட்டனுள் ஒன்று.

கீழ்க்கணக்குப் பதினெட்டாவன:—

" நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு."

கீழ்க்கணக்காவது:—அறம் பொருளின்பங்களைப்பற்றி வெண் பாக்களினால் ஐம்பதுமுதல் ஐந்நூறுவரை பெரும்பான்மையாக வருவது.

பாலியலதிகாரவகராதி

ல்	பக்கம்
றத்துப்பால்	1
மத்துப்பால்	841
ாருட்பால்	281
இயல்	
ங்கவியல்	485
ரசியல்	289
ல்லறவியல்	32
திபியல்	739
ாவியல்	841
பியல்	889
வறவியல்	170
திகாரம்	
க்கமுடைமை	87
மச்சு	485
ன்	571
ருடைமை	170
றிவுறுத்தல்	882
வயின்விதும்பல்	960
வறுத்தல்	271
வயஞ்சாமை	555
வயறிதல்	547
க்காருமை	113
ன்வலியுறுத்தல்	24
வுடைமை	323
புடைமை	54
னையுடைமை	470
	660
றிதல்	378
கணழியாமை	477
ச்சம்	824
	816
வாழ்க்கை	32
றமாட்சி	289
யவைகூறல்	67
னசெய்யாமை	227

அதிகாரம்	பக்கம்
ஈகை	155
உட்பகை	685
உழவு	800
உறப்புலனழிதல்	941
ஊக்கமுடைமை	456
ஊடலுவகை	1000
ஊழ்	281
ஒப்புரவறிதல்	148
ஒழுக்கமுடைமை	93
ஒற்றுடல்	448
கடவுள்வாழ்த்து	1
கண்ணோட்டம்	440
கண்விதுப்பழிதல்	903
கயமை	832
கல்லாமை	308
கல்வி	299
கள்ளாமை	203
கள்ளுண்ணாமை	715
கனவுநிலையுரைத்தல்	928
காதற்சிறப்புரைத்தல்	869
காலமறிதல்	371
குடிசெயல்வகை	792
குடிமை	739
குறிப்பறிதல்	540
குறிப்பறிதல்	849
குறிப்பறிவுறுத்தல்	967
குற்றங்கடிதல்	330
கூடாவொழுக்கம்	637
கூட்டாவொழுக்கம்	194
கேள்வி	315
கொடுங்கோன்மை	425
கொல்லாமை	235
சான்றாண்மை	762
சிற்றினஞ்சேராமை	346
சுற்றந்தழால்	402
சூது	722

அதிகாரம்	பக்கம்
செங்கோன்மை	418
செய்ந்நன்றியறிதல்	74
சொல்வன்மை	493
தகைபணங்குறுத்தல்	842
தவம்	186
தனிப்படர்மிகுதி	916
தீநட்பு	629
தீவினையச்சம்	140
துறவு	253
தூது	524
தெரிந்துசெயல்வகை	354
தெரிந்துதெளிதல்	386
தெரிந்துவினையாடல்	395
நடுவுநிலைமை	80
நட்பாராய்தல்	613
நட்பு	605
நலம்புனைந்துரைத்தல்	862
நல்குரவு	808
நன்றியில்செல்வம்	777
நாடு	562
நாணுடைமை	785
நாணுத்துறவுரைத்தல்	875
நிலையாமை	244
நிறையழிதல்	954
நினைந்தவர்புலம்பல்	922
நீத்தார்பெருமை	16
நெஞ்சொடுகிளத்தல்	947
நெஞ்சொடுபுலத்தல்	980
பகைத்திறந்தெரிதல்	676
பகைமாட்சி	668
பசப்புறுபருவரல்	910
படர்மெலிந்திரங்கல்	897
படைச்செருக்கு	597
படைமாட்சி	588
பண்புடைமை	769
பயனிலசொல்லாமை	134
பழைமை	622
பிரிவாற்றுமை	889
பிறனில்விழையாமை	100
புகழ்	162
புணர்ச்சிமகிழ்தல்	855
புணர்ச்சிவிதும்பல்	974
புதல்வரைப்பெறுதல்	47
புலவி	986
புலவிநுணுக்கம்	993
புலான்மறுத்தல்	179
புல்லறிவாண்மை	653
புறங்கூறுமை	127
பெண்வழிச்சேறல்	700
பெரியாரைத்துணைக்கோடல்	338
பெரியாரைப்பிழையாமை	692
பெருமை	754
பேதைமை	645
பொச்சாவாமை	410
பொருள்செயல்வகை	579
பொழுதுகண்டிரங்கல்	934
பொறையுடைமை	107
மடியின்மை	463
மருந்து	729
மன்னரைச்சேர்ந்தொழுகல்	532
மானம்	746
மெய்யுணர்தல்	261
வரைவின்மகளிர்	708
வலியறிதல்	363
வாய்மை	40
வாழ்க்கைத்துணைநலம்	212
வான்சிறப்பு	9
விருந்தோம்பல்	610
வினைசெயல்வகை	516
வினைத்திட்பம்	508
வினைத்தூய்மை	501
வெகுளாமை	120
வெஃகாமை	220
வெருவந்தசெய்யாமை	432

அகராதி முற்றிற்று.

கடவுள் துணை

திருவள்ளுவ நாயனார் சரித்திரம்

உலகத்துள் மகா சிறப்புப்பொருந்திய கைலாயகிரியிலே, அரு
ருக்கை மண்டபத்தில் பிரம்மாதி முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கள், கின்னரர், கிம்புருடர், கருடர், காந்தர்வர், சித்தர், வித்தியாதரர் முதலானவர்கள் வணங்கிச் சூழும் படி பார்வதி சமேதராய்ப் பரமசிவன் திருவோலக்கமாக எழுந்தருளி யிருந்தார். அப்போது தேவியானவள் எழுந்து வணங்கி நின்று, "சுவாமி! திரிலோகத்திலே இல்லறம் வழுவாது நடத்தி மோக்ஷம் அடைந்தவருண்டோ?" என்று வினவ, சுவாமி திருவுளம் பற்றுகிறார். "உமையவளே! நெய்வலோகத்தில் வசிஷ்டர், அகஸ்தியர், அயன், புயங்கன், சம்பு என்று ஐந்தேபேருண்டு. பூலோகத்தில் திருவள்ளு வர் என்றும் ஒருவர் உண்டு. இவர்கள் தென்புலத்தார்கடன், தேவர் கடன், விருந்தோம்பல், சுற்றந்தழுவல், கபிலபூசை செய்தல் முத லியன இல்லறத்தில் சற்பின் வழுவாத நற்குணநற்செய்கையுள்ள மனை வியோடிருந்து இல்லறக்கடன் நடத்தி மோக்ஷமடைந்தார்" என்று திருவாய்மலர்ந்தருளப் பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவர் யார்? என்று கேட்க, பூர்வத்திலே ஒருபிரளயம் வந்தது. அது வருமென்று பிர்ம்மா முன்னமே தெரிந்து அதிலே யிறவாது பிழைக்கும்படி வேற்றுவடிவமாய் ஒரு சுரைக்கூட்டைத் தனக்கிடமாகக்கொண்டு அதிற் புகுந்து அவ்வெள்ளத்தின்மேல் மிதந்து வந்தார். அதுகண்டு நாம் அறியாதவர்போல் இதற்குள்ளிருப்பவன் யார்? என்று கேட் டோம். தான் வருங்காலமறிந்து செய்தற்கேற்ப வள்ளுவர் என்றார். இப்பிரளயத்தில் நீர் எப்படி பிழைத்திருந்தீர்? எனக் கேட்க, சுவாமி யென்று தெரிந்து மிகுந்த பேரானந்தத்தை யடைந்து பரமசிவனே! உமது திருவருளினால் பிழைத்திருந்தேன். ஆயினும், இந்தப் பிரள யத்தை நீக்கி யருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, நாம் அந்த அதிகாரம் உமக்கே கொடுத்தோமென்று அவராலே முன்புபோல் உலகத்தைச் செய்வித்தோம். அத்தன்மையுடைய அவர் பூமியிலே பிறந்த காரணமுஞ் சொல்லுகிறோம்.

பூர்வகாலத்தில் பூமியிலே பாண்டியராட்டில் மதுரைமாநகரத்தி லிருந்த சங்கப்புலவர்கள் நம்மை அவமதிப்புச் செய்ததின்பொருட்டு

அவர்கள் கர்வபங்கமாகும்படி பிரம்ம ஸ்வரூபராகிய திருவள்ளுவரையும், மகாவிஷ்ணுவையும், சரஸ்வதியையும் பூமியில் அவதரிக்கும்படி அனுப்பினோம்; அவருள் மகாவிஷ்ணு இடைக்காடராய்ப் பிறந்தார். சரஸ்வதியும், திருவள்ளுவரும் வந்த மரபுங் கேட்பாயாக.

ஆதியிலே பிரமபுத்திரர்களாகிய காசிபர் முதலிய நவப்பிரம்மாக்களில் காசிபர் ஊர்வசியைச் சேர்ந்து வசிஷ்டரைப் பெற்றார். அவர் அருந்ததியைச் சேர்ந்து சத்தியரைப் பெற்றார். அவர் புங்கனார்ப் புலைச்சியைச் சேர்ந்து பராசரரைப் பெற்றார். அவர் மச்சகந்தியைச் சேர்ந்து வியாசரைப் பெற்றார். இவர்கள் நால்வரும் வேதங்களுக் குரியவரானார்கள்.

பின்பு பிரம்மாவானவர் இன்னுஞ் சில புத்திரரால் வடமொழியையுந் தென்மொழியையும் விளங்கச்செய்ய வேண்டுமென்றெண்ணி வேதவிதிப்படி ஒரு யாகஞ்செய்ய, அதன்கண் வைத்திருந்த கும்பத்திலிருந்து கலைமகள் அவதரித்தனள். அவளைப் பிரமன் விவாகஞ் செய்துகொண்டான். பின்பு அகஸ்தியர் குறிய வடிவோடு அக்கும்பத்து உதித்தனர். அவர் சமுத்திரகன்னிகையை மணந்து பெருஞ்சாகரன் என்பவரைப் பெற்றார். அவர் திருவாரூர்ப் புலைச்சியைச் சேர்ந்து பகவன் என்பவரைப்பெற்று, அவர்க்குச் சகல சாஸ்திரங்களையுங் கற்பித்தார். அந்நாளில் பிரமவம்சத்தில் தவமுனியென்பவர் அருண்மங்கை என்னும் பிராமணமாதைச் சேர்ந்து ஒரு புத்திரியைப் பெற்றுவைத்து விராலிமலையில் தவஞ்செய்யச் சென்றனர். அக்குழந்தையை உறையூர்ப் பெரும்பறையன் கண்டெடுத்துச் சிலகாலம் வளர்த்து வருகையில், மேல்நடக்கப்போகிற காரணத்தினால் இந்தப் பெண்தவிர மற்றவர்கள் யாவரும் இறக்கும்படி அந்தச்சேரியில் யாது காரணமோ மண்மாரி பெய்தது. பின்பு அந்தப்பெண் அதற்கடுத்த மேலூர் அகரத்திலே நீதியையன் வீட்டில் வளர்ந்திருந்தனள்.

அப்போது பகவனென்பவர் சகல சாஸ்திரபண்டிதராய்க் கண்டவர் யாவரும் மரியாதை பண்ணும்படி பிராமணகிர்த்தியத்தில் வழுவாதவரா யிருக்கையில் யாத்திரைபண்ணும்படி யிச்சைகொண்டு காசிக்குப் போகும்போது இன்னகரத்துக் கடுத்த ஒருசத்திரத்திலிறங்கி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு சமையல் செய்திருந்தார். அவ்விடத்தில் அந்தப்பெண்வர, அவளைக்கண்டு நீயார்? புலைச்சியோ? வலைச்சியோ? இங்கே வந்தாயென்று அதட்டி மிகுந்த கோபங்கொண்டு சட்டுவத்தால் அவளதுதலையிலே உதிரஞ்சோர அடித்தோட்டினார். அவள் அழுதுகொண்டு தன்னிடத்துக்குப் போய்விட்டாள்.

மறுபடியும் பகவனென்பவர் ஸ்நானஞ்செய்து, போசனம்பண்ணி அதிசீக்கிரத்தில் வழிக்கொண்டு, சிலநாளில் காசிக்குப்போய்க் கங்கா ஸ்நானஞ்செய்து, பிரயாகையிலிருந்து நீர்த்தக்காவடி கட்டிக்கொண்டு வரும்போது அந்தச்சத்திரத்தில் வந்திறங்கினர். மேற்சொல்லிய பெண்ணானவள் அப்போது மகாலட்சுமியைப்போலும் அழகும், எவ்வனபருவமும் உடையவளாய் அங்கே வந்தாள். பகவனென்பவர் இவளுடைய சௌந்தரிய முதலிய குணங்களைப் பார்த்து மோகங் கொண்டார். அச்சத்திரத்துக்கு அதிபராகிய நீதியையரென்பவர் அக்குறிப்பினைக்கண்டு என் பெண்ணை விவாகம்பண்ணிக்கொண்டு இங்கேயிருமென்று சொல்ல, அதற்கவர் நான் கொண்டுவந்த காவடியை இராமேச்சுரத்தில் செலுத்திவந்து அப்படியே செய்கிறேனென்று அவரிடத்திலே செலவு பெற்றுக்கொண்டுபோய் இராமலிங்கத்துக்கு அபிஷேகம்பண்ணித் திரும்பிவந்தார். அப்போது நீதியையர் விவாக ஏத்தனம்பண்ணிப் பந்துக்களோடிருந்து விசேஷமாய் நாலுநாளைய சடங்குகளுஞ் செய்து, ஐந்தாநாள் மங்களஸ்நானஞ் செய்விக்கும்போது பகவனென்பவர் அந்தப் பெண்ணினுடைய தலையில் எண்ணெயைப் பெய்யும்படி மயிரை வகிர்ந்தார். அப்போது தான் முன்பு சட்டுவத்தாலடித்த வடுவைக்கண்டு அனுமானித்து இந்தப் பெண்ணினது வரலாற்றையும் விசாரித்து விசனங்கொண்டு நீ நியளல்லவா? என்று சொல்லிவிட்டு ஓடினர். அதுவே அவளுக்கு நீதியென்று காரணப்பெயராயிற்று.

அப்படியோடிய பகவனென்பவர் பொழுது போகையால் எதிரே கண்ட பாணர்சேரியிலிருந்த ஒரு மண்டபத்திலே தங்கினர். ஆதி யென்பவளும் அவர் பின்னே தொடர்ந்து அவரைக்கண்டு, தெய்வச் செயலால் உமக்கும் எனக்கும் இந்தக்காரியம் நடந்திருக்க, நீர் என்னை விட்டுப் போகுதல் உமக்குத் தகுமோ? அல்லது தருமமோ? என்றும் சும்மை நீங்கினால் உயிர்வாழேனென்றும், மிகவும் துக்கத்துடன் சொல்லப் பிரதாபத்துவத்தால் இவர் புத்தியிலும் அது சரியென்று பட்டுப், பெண்ணே! என்னிடத்தில் உனக்கு அன்பிருக்குமானால் நான் சொன்னபடி கேட்கவேண்டும். அஃதென்னெனில், உனக்குப் பிள்ளைகள் எங்கெங்கே பிறக்கிறதோ அங்கங்கே அவைகளை அப் போழுதேவிட்டு வருவையானால் யான் உன்னைக்கூடச் சம்மதிப்பேன் என்றுசொல்ல, அவள் அதற்கு உடன்பட்டபடியால் அன்றிரவில் அம்மண்டபத்திலிருவருங் கூடினர்கள்.

ஔவை

அப்போது பரமசிவன் உத்தரவின்படி சரஸ்வதி யாவராலும் புகழப்பட்ட ஔவையாகப் பிறந்தாள். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவார்? என்று விட்டு நீங்கத் தாய் வருந்தும்போது அது சொல்லியது.

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்சென்று விட்டானே-முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவனுக் கன்னுய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

அதுகேட்டு மனந்துணிந்துபோயினள். பின்பு அக்குழந்தையை அச்சேரியிலுள்ள பாணர்களெடுத்து வளர்க்க வளர்ந்து சரஸ்வதி யாகையால் இயல்பாகவே கலைமுழுதும் அறிந்து சிதக்களபமென்னும் கணபதி அகவல் பாடி அவரை உபாசித்து லோகோபகாரமாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை, பந்தனந் தாதி, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து முதலியவுஞ் செய்து ஓவ் வோர் காரியத்தின் பொருட்டுத் தனிக்கவிதைக ளனேகமும் பாடி அநேக அற்புதங்களெல்லாஞ் செய்து முடித்துவருகாளில் ஒருநாள் கணபதிபூசை விரைவாகச்செய்தாள். அவர் வழக்கப்படியன்றி விரைந்து செய்வது ஏனென்றுகேட்கச் சுவாமி, சுந்தரமூர்த்தியாரும் சேரமான் பெருமானும் கைலாயத்துக்குப் போகின்றார்கள். என்னையும் அழைத்தார்களென்ன அவர்களுக்கு முன்னே உன்னை அங்கே விடு வேன்; நீ பூசையை வழக்கப்படி முடியென்றார். தன் பூசையைக் கிரமப்படி முடித்தாள். உடனே கணபதி துதிக்கையா லெடுத்து விடக் கைலாயமடைந்தாள். பின்புபோன அவ்விருவரும் ஔவை யைக்கண்டு அதிசயப்பட்டார்கள்.

உப்பை

இதுநிற்க, முன்புபோன இருவர்களும் தொண்டைநாட்டில் ஊற் றுக்காடென்னும் ஊரிலுள்ள ஓர் மடத்திற் சென்று கூடினர்கள். அப்பொழுது உப்பையென்பவள் பிறந்தாள். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவார்? என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும் போது அது சொல்லியது.

அத்திமுக லெறும்பி ருனவயி ரத்தனைக்குஞ்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகன்-முற்றமே

கற்பித்தான் போனலே காக்கக் கடனிலையோ
வற்பலே வன்ன யரன்.

அதுகேட்டு மனந்துணிந்து போயினள். அவ்வப்பை முற்பிறப்பில் யாரெனில் பிருகுவின் பத்தினியாகிய காகவல்லியென்பவள் திரிமூர்த்திகளும் அவள் அழகின் மிக்கவளென்று கேள்விப்பட்டுப் பார்க்க மாறுவேஷங்கொண்டுபோய் நிர்வாணபிட்சை கேட்டார்கள். அவள் மகாபதிவிரதை யாகையால், இவர்களைப் பாலாக்கி அப்படியே பால்கொடுத்துத் தன்னைப் பரிசோதித்ததற்குக் கோபங்கொண்டு அவர்களை மூன்றுசனனம் எடுக்கும்படி சொன்னாள். அதுகண்ட திரிமூர்த்திகளுந் தங்களை அவள் மதிக்காமல் பாலாக்கி மூன்றுசனனம் பண்ணும்படி சொன்னதற்காகச் சினங்கொண்டு நீ அழகின்றி மாறுவடிவமாகக் கடவையியன்று சபித்துப்போயினர். பின்பு பிருகுவானவர் இவள் வேற்றுவடிவைக்கண்டு நீ பூமியில் பிறக்கக்கட்டவையென்னர். அவள் கணவனுந்திரவின்படி உப்பை யென்று வந்தவதரித்து பண்ணூர்வளர்க்க வளர்ந்து மாரியம்மையாய் உலகமெல்லாந் தன்னைப் போற்ற இப்பொழுதும் அவ்வூரில் தெய்வமாயிருக்கின்றனள்.

அதிகமான்

இதுநிற்க: முன்புபோன அவ்விருவருஞ் சோழதேசத்தில் கருநிலடைந்து ஒரு சோலையிற்கூட அதிகமானென்பவர் பிறந்தார். தாக்குழந்தையை யாவர் காப்பாற்றுவார்? என்று அதைவிட்டுத் தாய் வருந்தும்போது அது சொல்லியது.

கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்ய-னுருப்பெற்ற
ஓட்டி வளர்க்காலே வோகெடுவா யன்னுய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்.

அதுகேட்டு மனந்துணிந்து போயினள். அந்தக்குழந்தையைச் சமானெடுத்து வளர்க்க வளர்ந்து வில்வேதம், மனுவிக்கியான கலியவையுங் கற்று முடிசூட்டப்பெற்றுச் சொக்காதர் திருமுகமுதிக் கொடுக்கப் பாணபத்திரருக்கு வேண்டிய திரவியங்கள் ாடுத்துப் பொன்வண்ணத்தந்தாதி யென்று ஓர் பிரபந்தம் பாடிச் சம்பாத்தில் அரங்கேற்றி அரசுசெலுத்திச் சுந்தரமூர்த்தியார் கட்டுபற்றிருந்து அவர் கயிலைக்குப் போகும்போது உடனேபோய் ங்கே தாம் பாடியருளிய ஆதியுலாவை அரங்கேற்றிச் சிவானுகம் பெற்று வீற்றிருந்தார்.

உருவை

முன்புபோன அவ்விருவரும் காவிரிப்பூம்பட்டினத்தையடைந்து ஒரு மண்டபத்திற் கூடினார்கள். உருவை யென்பவள் பிறந்தாள். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவார்? என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது அது சொல்லியது.

சண்டப்பைக் குள்ளுயிர்தன் னுயருந்தக் கானருந்தும்
அண்டத் துயிர்பிழைப்ப தாச்சரிய-மண்டி
யலைகின்ற வன்னு யாலுடைய வண்மை
நிலைகண்டு நீயறிந்து நில்.

அதுகேட்டுத் தாய் மனந்துணிந்து போயினள். பின்பு அக்குழந்தையைக் கள் விற்போர் எடுத்து வளர்க்க வளர்ந்து தவஞ்செய்து பத்திரகாளியாய்த் தாருகனைக்கொன்று திருவாலங்காட்டில் சபாநாயகருடனே நிருத்தஞ்செய்து அதிலே தோற்று, அகோர வீரபத்திரரை விவாகம்பண்ணிக்கொண்டு அவ்விடத்திலிருந்தாள்.

கபிலர்

இதுநிற்க: முன்பு அவ்விடம் விட்டுப்போன இருவரும் திருவாரூரை யடைந்து ஒரு மடத்திற்கூடக் கபிலரென்பவர் பிறந்தார். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவார்? என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது அது சொல்லியது.

கண்ணுழையாக் காட்டிற் கருங்கற் றவளைக்கு
முண்ணும் படியறிந் தூட்டுமவர்-நண்ணு
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குந் தொழிலென்ன தான்.

அதுகேட்டு மனந்துணிந்து போயினள். அக்குழந்தையைத் தனக்குப் பிள்ளையில்லாத பாப்பையனென்னும் ஒரு பிராமணன் எடுத்து வளர்த்து வழுவயதில் உபநயனஞ் செய்யத் தொடங்குகையில் பிராமணர்கள் ஒத்துக்கொள்ளமாட்டோமென்று சொல்ல, அதைக் கண்ட கபிலர் அவர்களைப்பார்த்து நான்முகத்தோனென்று ஓர் அகவல் சொல்லிக் கருமத்தினுல் சாதியன்றிச் சென்மத்தால் இல்லையென்று சாதிக்க, அதற்குப் பிரதியுத்தரஞ் சொல்லமாட்டாமல் இதுவே விதியென்று யாவரும் ஒத்துக்கொண்டு அச்சடங்கு முதலானவை முடித்தார்கள். அக்கபிலர் இன்னும் பாதாளவுலகத்தில் தவம்பண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

வள்ளியம்மை

இதுநிற்க: முன்புபோன அவ்விருவரும் வேளின் மலைச்சாரலில் வந்து கூட அப்பொழுது வள்ளியம்மை பிறந்தனள். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவார்? என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது சொல்லியது.

அன்னை வயிற்றி லருத்தி வளர்த்தவன்ரு
னின்னும் வளர்க்கானே வென்றுயே-மின்னவள்
ரூடும் பெருமான் சுடுகாட்டி னின்றுவிளை
யாடும் பெருமா னவன்.

அதுகேட்டு மனந்துணிந்து போயினள். பின்பு அக்குழந்தையை மலைக்குறவர் வளர்த்தார்கள். அவள் முற்பிறப்பில் யாரென்னில் மகாவிஷ்ணுவினால் மோகிக்கப்பட்ட விபுதையென்பவளிடத்தில் பிறந்த குமரியென்பவள் குமாரக்கடவுளைக் குறித்துத் தவஞ்செய்தபோது அவர் வரப்படி தொண்டைமண்டலத்தில் வள்ளிமலையிலிருந்து அக்கடவுளுக்கு நாயகியானாள்.

திருவள்ளுவர்

முன்புபோன அவ்விருவரும் மயிலாப்பூரில் இலுப்பைத்தோப்பிற் கூடினர்கள். அப்பொழுது திருவள்ளுவர் பிறந்தனர். இந்தக் குழந்தையை யாவர் காப்பாற்றுவார்? என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது அது சொல்லியது.

எவ்வுயிருங் காக்குமொரு வீசனுண்டோ வில்லையோ
அவ்வுயிரில் யானுருவ னல்லனோ-வவ்வி
யருகுவது கொண்டிங் கலகுவதே னன்னே
வருகுவது தானே வரும்.

அதுகண்டு மனந்துணிந்து அவ்விருவரும் தீர்த்தயாத்திரைக்குப் போயினர். பின்பு சிவாலயத்தின் அருகேயுள்ள இலுப்பைமரத்தின் கீழிருந்த குழந்தை அவ்விலுப்பை மலரிற் துளிக்குந் தேனை உண்டு பூர்வம் பிர்ம்மாவாதலால் சிகை எக்ஞோபவீதம் சதுர்வேதஸ்தகமுங் கொண்டு வளர்கையில், கங்காகுலசிரேஷ்டனுகிய ஒரு வேளாளன் மனைவி புத்திரனைக்குறித்து அச்சிவாலய சந்நிதியில் தவஞ்செய்திருந்தாள். அப்பொழுது உமாதேவி அவளுடைய தவத்தைக்கிரங்கி தெய்வச்செயலா லுண்டாகிய இக்குழந்தையை நீ எடுத்

றுக்கொள்ளென் றருள்செய்ய, திருவள்ளுவரென்று பூர்வ நாமகரண முஞ் செய்தாள். அவளும் அக்குழந்தையையெடுத்து மகிழ்ச்சியடைந்து கொண்டுபோய்த் தன் புருஷன் கையிற்கொடுத்தாள். அவனும் தன்கையில் வாங்கிப் பேரானந்தமடைந்து, அது வந்த வரலாறுங் கேட்டு இப்படி யிருவரும் அந்தப்பிள்ளையை நாளொருமேனியாக வளர்க்குங்காலத்தில், அவர்கள் சுற்றத்தார்கள் ஏதோ ஒரு பிள்ளையை வளர்க்கிறார்களென்று இவர்களை இகழ்ச்சிபண்ண அதற்கு அவர்கள் நொந்துப் புறத்திலுள்ள ஓர் தொழுவத்திலே தொட்டிலிட்டு அதில் அக்குழந்தையைக் கிடத்திப் பண்ணைக்காரரைக் காவல்வைத்து வளர்த்தார்கள். பின்பு திருவள்ளுவரும் ஐந்து வயதானகாலத்துத் தன்பொருட்டுத் தாயும் தகப்பனும் சுற்றத்தார்களால் நிந்தை செய்யப்படுகிறார்களென்று அவர்களைப்பார்த்து என்னால் உங்களுக்கு வருத்தம் வேண்டுவதில்லை. நான் வேறிடத்திலிருக்கின்றேன்; நீங்கள் வருந்தாதிருங்களென்று சொல்ல, அவர்கள் அப்பா! உன்னைப் பிள்ளைக்கலி தீர்க்கவந்த பெருமானென்று எண்ணியிருந்தோம்; நீ இப்படிச் சொல்லலாமா? என்ன, நாயனார் நீங்கள் என்னை நினைக்கும் போதவந்து உங்களுக்கு வேண்டியதைச் செய்வேனென்று சொல்லிப் புறப்பட்டு அவ்வூர்க்கருகே ஒரு பனைமரத்தின் நிழலிலே யிருந்தார். அப்பனைமரம் தன்னடிவிட்டு நிழல் சாயாதிருக்கக் கண்டவர்கள் இப் பிள்ளை தெய்வமோ, முனிவனோ, கடவுளோ, இவ்வருமைவாடு வந்ததென்று நடுங்க அவர்களைப்பார்த்து நாயனார் இங்கே தெய்வமுமல்ல, மநிமையுமல்ல யாதொன்றும் என்னிடத்திலில்லை போமென்று தாம் அவ்விடத்தை விட்டு நீங்கித் திருமூலர், போகர் முதலாகிய சித்தர்களும், மாதவர்களும் வாசஞ்செய்கின்ற மலைக்கெழுந்தருளித் தவஞ்செய்வார்களோடு கூடியிருந்தார். அங்கிருந்த திருமூலர் இவரைக்கண்டு வள்ளுவரே! பூர்வத்தில் நந்தி எனக்கனுக்கிரகம் பண்ணும்போது அங்கே யிருந்தீரே; உலகத்தார்க்குச் சித்திமுத்தி யருளும்படிக்கும் அறம் பொருளின்பமென்னும் முப்பாலையுந் தமிழில் அருளிச்செய்யும்படிக்கும், இங்குவந் தவதரித்தீரோ? என்றுதுதிக்க, நாயனார் மகிழ்ந்து, அங்கே தவஞ்செய்வோரில் ஒருவராயிருந்து சகல சாஸ்திர பண்டிதரானார். அக்காலத்தில், தொண்டைமண்டலத்தில் ஓர் வேதாளமானது பயிர்களை அழித்தும், உயிர்களை வதைத்தும், அநேக தீன்பஞ்செய்து வந்தது. அப்பொழுது காவேரிப்பாக்கமென்னும் ஓர் ஊரில் ஆயிரம் எருகொண்டு உழுது பயிர்செய்கின்ற மார்க்கசகாயனென்னும் ஒருவேளாளன் இந்த வேதாளத்தை அடக்கினவருக்கு அளவற்ற திரவியமும்

ஒரூரும் வேண்டியவைகளையுந் தருகிறேன் என்று பிரசித்தம் பண்ணினான். அது ஒருவராலும் ஆகாமலிருந்தது. பின்பு அவ்வேளாளன் திருமூலராதியர் வாசஞ்செய்யும் மலையிலேயிருக்கும் பெரியோர்களை அடுத்துச்சொல்ல, அவர்கள் திருவள்ளுவரோடு சொல் என்றார்கள். அவரை வணங்கிச் சொன்னான். அப்போது ஜீவகாருண்ணியராகிய திருவள்ளுவர் அவ்வேளாளன் வேண்டிக்கொள்வதை நிறைவேற்றும் பொருட்டு அவ்வேதாளத்தை விபூதி பஞ்சாக்ஷரத்தால் வென்று யாவரையும் ரக்ஷித்தார். பின்பு அவ்வேளாளன் ஓர் ஊரும் அளவற்ற திரவியமும் அல்லாமலும் நாயனார் யோக்கியதையும் மகத்துவத்தையும் பார்த்து வாசுகி என்னும் தன் பெண்ணையும் கொடுக்கும்படி நிச்சயித்து நாயனாரிடத்துவந்து என்பெண்ணைத் தேவரீருக்குக் கொடுக்க நினைத்திருக்கிறேன். அப்படியே அங்கீகரிக்கவேண்டும் என்று சொன்னான். நாயனார் உலகத்தாருக்கு இல்லற நடத்திக் காட்டவேண்டுங் காரணத்தை யோசித்து, அந்தப்பெண் நான் கொடுக்கும் மணலை அன்னமாக்கி எனக்கிடுமானால் விவாகஞ்செய்துக்கொள்வேனென்றார். அந்தப்பெண் அப்படியே சம்மதித்துச் சமைத்துப் படைத்தனள். நாயனாரும் அங்கீகரித்து விதிப்படி வாசுகியை விவாகஞ்செய்து சிலகாள் அங்கிருந்து பின்பு மனைவியுடன் மயிலையில்வந்து ஓர் இல்லமாக்கிக்கொண்டு இல்லறஞ்செய்து நெய்தற்றொழில் பாபமில்லாததென்று நிலைசிங்கனென்னும் வர்த்தகனிடத்தில் நூல் வாங்கி ஆடைசெய்து அக்கூலியால் சீவனஞ் செய்திருந்தனர். பின்பு ஒருகாலத்தில் திருவாலங்காட்டில் சபாநாயகர் மகிடாசுரசங்காரஞ்செய்து கர்வித்திருந்த பத்திரகாளி கர்வபங்கமாகப் பலவித நடனஞ்செய்ய, அவளுந் தோல்வியடையாமல் ஆடிவந்தாள். பின்பு சுவாமி குண்டலங் கழன்றதைக் காதிலேதானே சேரும்படி ஊர்த்துவபாதமாக நடனஞ் செய்தார். அவளும் அப்படியாட நாணித்தோற்றாள். அப்பொழுது தேவர்கள் சுவாமீ! தேவரீர் ஊர்த்துவதாண்டவம்பண்ணியது என்னகாரணமோ தெரியவில்லை என்று கேட்க, நீர் திருமயிலையிலிருக்குந் திருவள்ளுவரைக் கேட்டீர்களானால் தெரியுமென்று சொல்ல, தேவர்கள் அங்கே போய் அவரைக்கேட்க அவர் சொல்லியது.

பூவி லயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க-நாவி
லிழைநக்கி நானெருடு மேழை யறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து.

அதிலே தெரிந்து தங்கள் சந்தேகத் தெளிந்தார்கள். ஒருநாள் நால் வாங்கும்பொருட்டு வலேலசிங்கள் வீட்டுக்குப்போய் செட்டி யார் எங்கே? என்று கேட்க, அவர் சிவபூஜை செய்கிறார் என்றார்கள். அவர் சிவபூஜை இங்கு செய்கிறதோ? குப்பத்திற் செய்கிறதோ? என் றார். அதை அவர் பத்தினி உள்ளேபோய் அவருக்குச்சொல்ல, அவர் கேட்டுச் சிவபூஜையைவிட்டுத் திடுக்கிட்டு ஓடிவந்து நாயனருடைய உபயபாதங்களில் வணங்கி, சுவாமி! என்னைப் பந்தசாகரத்தினின்றும் எடுத்துக் கரையேற்றவேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தனர். அப்படியே செய்கிறோம் என்றனர். ஒருநாள் நாயனர் அவரது பக் குவத்தையும் இன்னும் சில மாணாக்கர்கள் பக்குவத்தையும் சோதிக்க வெண்ணி அவர்களை அழைத்துக்கொண்டு ஒரு வனத்திற் சென்று அங்கு வெள்ளம் பெருகிவரச் செய்தனர். அவர்கள் பயந்து மீளு மிடமின்றி இக்கரையிலிருந்து உடன்போகமாட்டாமல் விழிக்க, வலேலசிங்கர் மாத்திரம் தம்மைத்தொடர்ந்துவர, அவ்வெள்ளம் வழி விட்டது. பின்பு உயர்ந்த ஒருமரத்தினுனியி லேறென்று சொல்ல, வலேலசிங்கர் ஏறினர். பின்பு பிடித்தகொம்பையும் நின்ற கொம்பை யும் விட்டுவிடென்று அருள, யோசியாமல் விட்டனர். விட்டும் ஒரு அபாயமில்லாதிருந்த வலேலசிங்கரைத் தமது மடியின்மீது வைத்து ஞானோபதேசம்பண்ணி எப்படிப்பட்ட சௌந்தரியமுள்ள மங்கையர் கள் மயக்கினும் மயங்காத திடசித்தத்தையும் அனுக்கிரகித்தார்.

பின்பு தம்மிடத்துக்கு வந்து விட்டார்கள். அப்படியிருக்கு நாளில் அந்நாட்டுக்கு அரசனுகிய அச்சுதராஜன் ஒருநாள் வலேலசிங்க ரோடு பேசிக்கொண்டிருக்கும்போது, உமக்குப் புத்திரப்பேறில் லையே? உம்முடைய ஞானசிரியரை அப்பேறு உண்டாகக் கேட்கலா காதா? என்றான். அவர் நல்லதென்றுபோய் மற்றொருநாள் நாயனரைக்கண்டு விண்ணப்பஞ் செய்ய, அவர் சுவாமி கடாக்ஷிப்பார் என்று அனுக்கிரகம் பண்ணினர். பின்பு ஒருநாள் பரமசிவமே சிறு குழவி யாய் வலேலசிங்கரும் அவர் மனைவியும் நித்தியந்தரிசிக்கும் பசுவின் வாலின்புறத்திற் கிடந்து அழுவதைக்கண்டு அவ்விருவரும் இக்குழந் தையை எடுத்தனர் வெடுத்தார்கள். உடனே அந்த அம்மாள் ஸ்தனங்க ளிலே பால்சுரந்து பெருக, அக்குழந்தைக்குப் பால்கொடுத்து ஞான குருவாகிய நாயனர் சன்னிதானத்திற் கொண்டுபோனர்கள். அவர் அக் குழந்தைக்கு அழகானந்தன் என நாமகரணம் பண்ணினர். உடனே வலேலசிங்கர் அச்சுதராஜன் என்னும் அரசனிடத்திற் சென்று எனக்கு தெய்வீகத்தினல் குழந்தை யுண்டாயிற்று என்று சொல்ல

அவன் அப்படி. தெய்வீகமானால் என்னிடத்திலும் அது வரலாமே என்றான். அவ்விருவரும் இப்படி பேசிக்கொண்டிருக்கும்போது அக் குழந்தை அரசனது மடியில் வந்திருந்தது.

அதை அவன் கண்டு இது அழகானந்தமோ என்று ஆனந்த மடைந்து அணைத்துக்கொண்டு தன் மனைவிகையிற் கொடுக்க, அவள் வாங்கினவுடனே ஸ்தனங்களினின்றும் பால்பெருக அதனைக் குழந்தைக்குப் புகட்டினாள். இப்படி அற்புதமாய் வளர்ந்து பின்பு அநேகருக்கு ஞானோபதேசம் செய்து மகிமையோடு மிருந்தனர். மற்றொரு தினத்தில் ஏலேலசிங்கரது கப்பல் கரைதட்டிப்போக அதைக் கேள்விப்பட்டு அவர் தன் அரசனுடனே சொல்ல, அவன் நம்மாலாவதென்ன? உம்முடைய ஆசாரியருடனே சொல்லுமென்ன, அவர்போய் விண்ணப்பம் பண்ணிக்கொள்வதற்கு முன்னமே நாயனார் அறிந்து ஏலேலசிங்கரை அழைப்பித்துக் கூட்டிக்கொண்டுபோய்க் கப்பலிற் கயிறுபூட்டி அநேகம் படவுகாரர் இழுத்திழுத்து எவ்வளவும் அசையாமற் பதிந்திருப்பதனால் அவர்களெல்லாஞ் சோர்ந்து கிடப்பதைக் கண்டு நாயனார் அதன் அருகிற்சென்று தமது திருக்கையாற்றொட்டு ஏலையா என்று இழுங்களென்று கட்டளையிட அப்படியே யிழுத்தார்கள். உடனே நிற்கவேண்டியபடி கப்பல் நின்றது.

பின்பு ஒருகாலத்தில் மழையில்லாமையால் உலகத்தில் தானியங்கொள்ளக் கிடையாமல் அநேகர் இறந்துபோவதைக் கண்டு நாயனார் மக்கு அன்புள்ள மாணாக்கனாகிய ஏலேலசிங்கரைப் பார்த்து, நீர் ந்தப் பஞ்சகாலம் மாறுகிறவரைக்கும் வாங்கிக் கட்டிவைத்திருக்கிற நெல்லையெல்லாம் வாங்கின விலைக்குக் குறுணி யேற்றமாக விற்கக் டவை என்று அருளினார். அவரது சொல்லை ஆகமமாகக்கொண்டு ற்றார். பொருள் அதிவிர்த்தியாய் மலைபோலுங் குவிந்தன. அவர் ட்டிவைத்திருந்த நெல் ஏழுவருஷங் குறைந்ததில்லை. பின்பு மழை பெய்து உலகம் க்ஷேமமடைந்தது. மறுபடி அவரையழைத்துக் குறுணி குறைய விற்கக் கூறினார். அப்படியே விற்க நெல்லெல்லாம் றுநாள் அஸ்தமயத்துக்குள்ளே செலவாய்ப் போய்விட்டன. பின்பு ாயனார் நீர் நெல் விற்று விர்த்தியான பொருளையெல்லாம் உருக்கித் ரட்டிக் கடலிற் போட்டுவிடுமென, அவர் அப்படியே செய்தார். அதை ஒரு பெருமீன் விழுங்கிற்று. சிலநாளைக்குப் பின்பு அம்மீன் லைக்காரர் கையிலகப்பட்டது. அதனை அவர்கள் சோதிக்கும்போது அதன் வயிற்றில் மலினமும் பாசியும் படிந்து ஒரு ஸ்தம்பமிருக்க

கூலியாட்கள் இப்பொழுதும் ஏலபலி என்று சொல்லுவது வழக்கம்.

அதனை ஏலேலசிங்கருக்குக் கொடுத்தார்கள். கருங்கல்லென்றெண்ணி ஸ்நானம்பண்ணுமிடத்திற் போடுவித்தார். அதன்மேல் நடத்தன் முதலிய பயிற்சியால் மலினம் நீங்கிப் பிரகாசித்தது. அதில் தமது பேர் வெட்டியிருத்தலால், தம்பொருளென்று அறிந்து இது குருவருளென்று அற்புதமடைந்தார்.

இப்படியிருக்குங்காலத்தில் அளவில்லாத மகிமைசெய்து லோகப் பிரசித்தமாயிருக்கிறவரும் ஏலேலசிங்கருடைய புத்திர நிர்ப்பாக்கியத்தை நீக்கினவருமாகிய அழகானந்தரும் சில பெரியோர்களும் திருவள்ளுவரைப் பார்த்து கற்றற்கெளிதாய் இம்மையாதி மும்மைக்கு முதலியாய் லோகோபகாரமாய் உமது பேரால் ஒரு நூல் செய்யவேண்டும் என்று சொல்லினார். நாயனார் வேதாகமசாரங்களைத் திரட்டி, அறம் பொருள் இன்பமென முப்பாலாக்கி 1330-குறள்வெண்பாவாற் பாடியருளினார். பின்பு அழகானந்தர் முதலாயினோர் நாயனாரே இதைக் கொண்டு சங்கத்தாரைச் செயிக்கலாம்போம் என்றார்கள். அப்போதே நாயனார் புறப்பட்டுத் தமதுமனைவியை இல்லின்கணிறுத்தி தாம் வழி கொண்டு நடந்து இடைக்காடர் வசிக்கிற இடைக்கழிநாட்டை அணுகச் சேர்கையில் ஔவை நேர்பட அவளோடும் இடைக்காடரைக் கண்டு, தாஞ்செல்லும் வகையைச் சொல்ல, இடைக்காடரும் நாயனாரை நோக்கி, இடையாலும் கடையாலும் அழியக்கடவது என்று சுவாமி தம்மை நிராகரித்த நற்கீரராதி சங்கத்தாரைச் சபித்திருக்கிறார். ஆதலால் என்னாலும் உம்மாலும் அழிவுபடப்போகிறது. ஆகையால் நாமும் வருகின்றோம் வாருமென்று இடைக்காடரும் ஔவையுங் கூட வரப்பெற்று மதுரையை யடைந்தனர். பின்பு சொக்கலிங்க ஸ்வாமியினுடைய ஆலயத்தைப் பிரதக்ஷணம்பண்ணி ஸ்வாமியையும், அம்மனையும், தரிசனஞ்செய்து ஸ்வாமி சந்நிதானத்தில் பாண்டிய ராஜா மந்திரி பிரதானிகள் மற்றச்சனங்கள் ஔவை இடைக்காடர் முதலான பெரியோர்களிருந்து கேட்கும்படி தாம் அருளிச்செய்த திருக்குறள் முப்பாலையும், சங்கத்தார் நெஞ்சிற்றிகிலேறவும், ஏனையர் நெஞ்சிற் களிப்பேறவும், அரங்கேற்றி முடித்தனர். அதனைக் கேட்டோர்கள் யாவரு மிகுந்த சந்தோஷமடைந்து ஆனந்தமாகி நாயனாரைப் புகழ்ந்து துதித்தனர்.

பின்பு நாயனார் இடைக்காடரும் ஔவையும் மற்றவர்களுஞ் சூழ்ந்துவரப் பொற்றாமரைத் தீர்த்தத்தின்கண்ணுள்ள சங்கப்பலகையின்கண் தமிழ்க்கு அரசராக வீற்றிருக்கின்றவர்களும் தவத்திலும் ஞானத்திலும் செந்தமிழ்வாக்கிலும் அமைந்த பெரியோராகிய திரு

ாதவூரென்னும் மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருக்
ாவையார் நானூற்றுக்கும் நூறுகுற்றங் கூறினவர்களும் சொக்க
ங்கஸ்வாமி தமது அன்பனாகிய தருமியென்னும் பிராமணனுக்குப்
ாற்கிழி கொடுத்தற்பொருட்டு அருளிச்செய்த கொங்குதேரென்
ம் பாடலைக் குற்றங்கூறச் சோமசுந்தரனே வித்வானாயெழுந்தருளி
நெற்றிக்கண் காட்டினுங் குற்றம் குற்றமேயென்று கூறினவர்
ும், மற்றப் புலவர்கள் பாடிய பாடலையெல்லாங் கொள்ளையிட்டு
ஸ்தியரையும் வெற்றிகொள்ளத்தக்க இலக்கணவிலக்கிய ஆராய்ச்சி
ளவர்களுமாகிய நற்கீரராதிப் புலவர்களுடைய தைரியமும், தருக்
புத்திபுங்கலங்கிச் சோர்வடையும்படி ஆட்டுக்கூட்டத்தில் புலி
ந்தாற்போலவும், அரவுக்கூட்டத்தில் கருடனடைந்தாற்போலவும்,
ாக்கூட்டத்தில் சிங்கவேறு சென்றாற்போலவும், மூங்கில்வனத்
றீப்பற்றியதுபோலவும், அவர்களிடத்திற் சென்று அவர்கள்
ம வினாவின அசதி வினாவிற்கெல்லாஞ் செந்தமிழ்ப்பாவால்
ரங்கொடுத்தார்.

பின்பு சங்கத்தார் நாயனாரை நோக்கி, வள்ளுவரே! நீர் பாடிய
ா நாங்கள் ஒப்புக்கொள்ளுவதற்கு ஐயமொன்றுளது. அது
னில், நாங்கள் இருக்கும் இந்தப் பலகை தெள்ளிய செந்தமிழ்
க்கண்டால் இடங்கொடுக்கும். ஆதலால், அது ஒப்புக்கொள்ளு
எங்களுக்கெல்லாஞ் சம்மதி என்று சொல்ல, அவ்வாறே நாய
ம்மால் அருளிச்செய்யப்பட்ட திருக்குறள்முறையை அச்
ப்பலகைமீது வைத்தார். உடனே அப்பலகை தன்னிடத்திருந்த
த்தார் யாவரும் பொற்றாமரையில் விழும்படி தெய்வத்தன்மை
ருந்திய திருக்குறட் புத்தகத்தின் அளவாய்ச் சுருங்கி அதற்கு
ரம் இடங்கொடுக்கக் கண்டவர்கள் யாவரும் களிகூர்ந்தனர்.
ட்சிலர் இது தெய்வீகமாகிய வேதமென்றும், சிலர் அங்கங்க
றும், சிலர் ஞானநூலென்றும், சிலர் ஆகமமென்றும், சிலர்
ாங்களென்றும், சிலர் வாலிபர் மதனாகமமென்றும் தத்தமக்குத்
றியவாறே சொல்லித் துதித்தனர். அன்றியும் அனேக விசேஷ
தெலுங்காதி சாஸ்திரங்களும் கிரந்த முதலான பாஷைகளி
ன்ற பல நூல்களும் இத்திருக்குறளினது பாயிரத்தின் ஓர்
ன் பொருளுக்கு மொவ்வாதென்றும், இதுவே வித்வான்க
ய பாக்கியமென்றும், இந்தப் பயன் அனேகமாயிரம் அகஸ்
ள் ஒருருவாகி வந்து பாடப்பட்டதோவென்றும், பலவித விலக்
லக்கியங்கட்கும் இஃதங்கத்தை யொக்குமென்றும், விஷ்ணு

ஞானாயது' என்றது நன்முயற்சியான்வந்த பொருள். 'அது' என்றது அவ்வழியாலாயது. இதனால் முயற்சி வழியாலாகியது சிறிதெனினும் அது செய்யு மின்பம் பெரிதென்பது பெறப்பட்டது. (5)

ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

(பரி-உரை) ஆவிற்கு நீரென்று இரப்பினும்-தண்ணீர் பெறாது இறக்கு நிலைமைத்தாயதோராவினைக் கண்டு அறனோக்கி இதற்குத் தண்ணீர் தரல் வேண்டுமென் றிரந்து சொல்லுங்காலும், இரவின் நாவிற்கு இளி வந்தது இல்-அவ்விரவுபோல ஒருவனாவிறகிளிவந்து பிறிதில்லை எ-று.

ஆ காத்தோம்பல் பேரறமாகலின் ஆவிற்கென்றும், பொருள் கொடுத்துக்கொள்ளவேண்டாத எண்மைத்தாகலின் நீரென்றும், இரக்கின்றானுக்கு இளிவு அச்சொல்லளவேயாகலின் நாவிற்கென்றும், அதுதான் எல்லா விளிவினும் மேற்படுதலின் இளிவந்ததில்லென்றுங் கூறினார். இதனான் அறனும் முயன்று செய்வதல்லது இரந்து செய்யற்கவென்பது கூறப்பட்டது.

(ப-ரை) ஆவிற்கு-(தண்ணீர்பெறாதிறக்கு நிலைமையதாகிய) பசுவுக்கு, நீரென்று - (தருமநோக்கி) இதற்குத் தண்ணீர்தரல்வேண்டுமென்று, இரப்பினும் - இரந்துசொல்லும்போதும், இரவின் - அவ்விரவுபோல், நாவிற்கு (ஒருவ) னாவிற்கு, இளிவந்தது-அவமானம் வந்தது, இல்-வேறில்லை எ-று.

(க-ரை) பசுவிற்கு நீர்விடென்னும் யாசகம்போல நாவிற்கிழிவில்லை என்பதாம்.

(வி-ரை) ஆவைக் காப்பாற்றல் பெரிய வறமாகலால் ஆவிற்கென்றும், பொருள்கொடுத்துக் கொள்ளவேண்டாத எளிமையதாகலால் நீரென்றும், இரக்கின்றோனுக்கு அவமானமாவது அச்சொல்லளவேயாகலால் நாவிற்கென்றும், அதுதான் எல்லாவவமானங்களிலும் மேற்படுதலால் இளிவந்ததில்லென்றும் சொல்லினார். [இதனால் அறத்தையும் முயன்று செய்வதல்லது இரந்து செய்யலாகாதென்பது சொல்லப்பட்டது.]

ஆவைக்காத்தளித்தல் பெரியவறமாதலின் 'ஆவிற்கு' என்றும் பொருள் தந்துகொள்ளவேண்டாத எளிமையதாகலால் 'நீர்' என்றும், யாசிப்பவனுக்குத் தாழ்ச்சி அச்சொல்லளவேயாகலின் 'நாவிற்கு' என்றும், அச்சொல்தான் எல்லாத்தாழ்ச்சியிலும் மேற்படுதலால் 'இளிவந்ததில்' என்றுங் கூறினார். இதனால் அறமேனும் முயற்சிசெய்து செய்வதல்லாது இரந்துசெய்யலாகாது என்பது பெறப்பட்டது. (6)

இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று.

(பரி-உரை) இரப்பாரை எல்லாம் இரப்பன் - இரப்பாரையெல்லாம் யானிரவாநின்றேன், இரப்பிற் கரப்பார் இரவன்மின் என்று-யாது சொல்லி

யெனின், நமக்கிரக்கவேண்டுமாயிற் நமக்குள்ளது காப்பாரை யிரவா தொழிமினென்ற சொல்லி எ-று.

இரண்டாவது விகாரத்தாற்றொக்கது. இவ்விளிவந்த செயலான் ஊட்டியவழியும் உடம்பு நில்லாதாகலின் இது வேண்டாமென்பது தோன்ற, இரப்பனென்றார். இதனான் மானந்நீர வருமிரவு விலக்கப்பட்டது.

(ப-ரை) இரப்பாரையெல்லாம்-யாசிப்பவரையெல்லாம், இரப்பன்-(நான் இரவாகின்றேன், இரப்பின்-(உமக்கு) இக்கவேண்டுமாகில், காப்பார்-(தமக்கு உள்ளதை) ஒளிப்பவரை, இரவன்மின்-இரவாதிருங்கள் எ-று.

(க-ரை) யாசிப்பாரையெல்லாம் யாசித்தேன். நீங்கள் ஒளிப்பவரிடத்தில் யாசியாதிருங்கள் என்பதாம்.

(வி-ரை) இவ்வுலமானச்செயலால் ஊட்டிவளர்த்தவிடத்தும் உடம்பு நில்லாதாகலின் இது வேண்டாமென்பது தோன்ற இரப்பினென்றார். [இதனால் மானங்கெடவரு மிரவு விலக்கப்பட்டது.] என்ற-இடைச்சொல்.

காப்பாரை இதில் ஐயென்னும் இரண்டனுருபு தொக்கது. 'செயலான்' என்றது இரக்கற்றொழிலால். ஊட்டியவழியும் உடம்பு நில்லாது. இதனை "மானவருங்கலநீக்கி பிரவென்னு, மீனவிளிவினல் வாழ்வேன் மன்-ஈனத்தால், ஊட்டியக்கண்ணு முறுதிசோர்ந் திவ்வுடம்பு, நீட்டித்த நிற்குமெனின்." என்ற நாலடியாரையும் இக்குணர்க. 'இதவேண்டா' என்றது இளிவந்த செயல்வேண்டா.

(7)

இரவென்னு மேமாப்பி ரேணி காவென்னும் பார்தாக்கப் பக்கு விடும்.

(பரி-உரை) இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி - இவ்வறுமையென்னும் கடலை இதனைக் கடத்துமென்றகருதி ஒருவனேறிய இரவென்னுஞ் சேமமற்ற தோணி, காவு என்னும் பார் தாக்கப்பக்குவிடும் - அதன்கணுடுக்காற் காத்தலென்னும் வன்னிலத்தோடு தாக்குமாயிற் பிளந்து போம் எ-று.

முயற்சியாற் கடப்பதனை இரவாற்கடக்கலுற்றான் அதன்கரை காணுமையின், ஏமாப்பிரேணியென்றார். ஏமாப்பின்மை தோணிமேலேற்றப்பட்டது. அது கடத்தற்கேற்ற தன்மையானும், நிலமறியாது செலுத்திய வழி உடைதலானும், அதன்கணேறற்க வென்பதாம். இஃதவயவவுருவகம்.

(பத) (இவ்வறுமையென்னுங் கடலை இதனைக் கடப்போமென்று) னைத்த ஒருவனேறிய) இரவென்னும் - யாசகமென்னும், ஏமாப்பில்-லாலற்ற, தோணி - மரக்கலம், (அதனிடத்தே ஓடுங்கால்) காவென்னும்-ளித்தலென்னும், பார்-வன்னிலத்தோடு, தாக்க-தாக்குமாயின், பக்குவிடும்-னந்தபோம் எ-று.

வானவர் இவ்வுலகை இரண்டடியால் அளந்தார். இது எல்லார் உளத்தையும் ஓரடியால் அளந்ததென்றும், இது சட்சமயத்துக்கும் பொது நூலென்றும், உட்சமயத்துக்கே யுரியநூலென்றும், இப்படிக் கல்வி மான்களும் அரசர்களும் மற்றவரும் கொண்டாடித் துதிக்கும்போது பொற்றாமரையில் விழுந்து தடுமாறி வருந்திய புலவர் நாற்பத்தொன்பதின்மரும் மிகக்கலங்கிக் கரையேறி நாயனாரையும் திருக்குறளையும் புகழ்ந்து துதித்து நாற்பத்தொன்பதின்மரும் நாற்பத்தொன்பது பாடல் அருளிச்செய்தனர். அஃது திருவள்ளுவமாலை யெனப் பெயர்பெறும்.

அச்சங்கத்தாரும், உக்கிரப்பெருவழுதி யென்னும் பாண்டியன் முதலானவர்களும், அத்யந்தம் ஆனந்தமடைந்து வெகு பூசிதம் பண்ணி இந்நூலை அகஸ்தியரும் ஒப்புக்கொளில் நல்லதென்ன, நாயனாரும் விடைபெற்றுப் பொதியமலைக்குப்போய் அகஸ்தியர் முதலானவர்களைக் கண்டு தாஞ்செய்த நூலைக் காண்பிக்க, அவர்கள் அடைந்த சந்தோஷத்தையும் புகழ்ந்த பாடலையும் அநந்தனாலுஞ் சொல்ல முடியாது. அவ்விடத்தில் கொங்கணசித்தர் வழிபட அவருக்கு அனுக்கிரகித்து, நாயனார் அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுத் தாம் முன்பு போம்போது வழியில் நேர்படாத ஸ்தலங்களையெல்லாம் தரிசனம் பண்ணிக்கொண்டு திருமயிலைக்குச் சமீபமாக வருவதை அப்பதியாரும் ஏலேலசிங்கரும் கேள்விப்பட்டு எதிர்கொண்டுபோய் அழைத்து வந்தார்கள். அவரும் வந்து தமது இல்லறத்தில் வாசுகி மாதினோடு மிருந்தார்.

இப்படியிருக்கையில், ஒரு பெரியவர் அவர் இல்லின்கட்சென்று, சுவாமீ! இல்லறம் பெரிதோ? துறவறம் பெரிதோ? அடியேனுக்கு அனுக்கிரகிக்க வேண்டும் என்று பலநாள் பணிசெய்து காத்திருக்க, நாயனார் அவருக்கு உத்தரம் ஒன்றுஞ் சொல்லாமல் அவரே அறிந்து போம்படி ஒருநாள், தமது வாசுகி யென்னும் மனையாள் கிணற்றில் சலந்தூக்கிக்கொண் டிருக்கையில் அழைக்க, அந்தம்மாள் பாதி கிணற்றளவினில் தூக்கின குடத்தை அப்படியே நிற்கவிட்டு வந்ததையும், மற்றொருநாள் அந்தம்மாள் நாயனாருக்குப் பழையது பரிமாறி நிற்கையில், நாயனார் எனக்கு இச்சாதஞ் சுடுகின்றது என, அந்த அம்மாள் சீக்கிரம் விசிறிகொண்டு விசிறியதையும், மற்றொருநாள் நல்ல மத்தியானத்தில் சிறிதும் இருள் அணுகாவிடத்தில் தாம் நெய்யும் போது கையிலிருந்த குழல் தவறி வீழ்ந்ததை எடுக்க மனையாளை நோக்கித் தீபங்கொண்டுவா? எனக் கொண்டுவந்ததையும், வந்திருந்

வர் கண்டு இப்படிப்பட்ட மனையாள் வாய்க்கில் இல்லறமே பெரி நன்றும், இல்லையேல் துறவறமே பெரிதென்றும் எண்ணிக்கொண்டு ன்றங் கோளாமற் போய்விட்டார்.

இப்படி நாயனாரும் மனைவியும் இல்லற நடத்திவருங் காலத்தில் காகியம்மாள் மோக்ஷமடையும்போது, நாயனார் திருமுகத்தைப் ர்க்க, நாயனாரும் என்ன? என்றார். என்ன மணஞ்செய்தபின்று தவரிருக்கு யான் அன்னம் பரிமாறும்போது, ஒரு சிறிய பாத்திரத் ல் சலமும் மயிரும் வையனக் கட்டளையிட்டது இன்னகாரண மனத் தெரியவில்லை என்று விண்ணப்பஞ்செய்தாள். அதற்கு நாய ர் அன்னம் புறத்தில் சிதறில் எடுத்துப் பரிசுத்தஞ் செய்வதற் ன்று சொல்ல, உடனே மோக்ஷமடைந்தனள்.

அப்போது நாயனார் சொல்லியது

வெண்பா

அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் றவறுத பாவா-யடிவருடிப்
பின்றாங்கி முன்னெழுதும் பேதையே போதியோ
வென்றாங்கு மென்க னிரா.

என்றருளி அந்தம்மாள் திருமேனியைச் சமாதி பண்ணினார். யனார் பின்னும் அனேகநாளிருந்து அனேக மகிமைகள் செய்து லைலசிங்கர் முதலாகிய சிஷ்யர்களுக்கும் பூரண அனுக்கிரகம் பண் ிப் பின்பு ஏலேலசிங்கரை யழைத்து நமக்குப் பரிபூரணநிசை ரிட்டிருக்கின்றதால் நாம் பரிபூரணமானபின்பு நமது தேகத்தைப் கட்டி இழுத்து வீதிப்புறத்தில் புதரிற்போட்டு விடுமென்று னுக்கிரகஞ்செய்து நிஷ்டைகூடிப் பரிபூரணமானபோதிருக்க தைக்கண்டு ஏலேலசிங்கர் பொற்பெட்டியில் வைத்து அடக்கம் ண்ண வெத்தனித்ததை அறிந்து உடனே நாயனார் விழித்துப் ர்த்து, அப்பா! நான் சொன்ன சொல்லைக் கடவாதேயென்று அனுக் கித்து, உடனே பரிபூரணமானார். ஏலேலசிங்கரும் நாயனார் கட்ட ப்படி செய்யுமளவில், திருமேனியிற் சிதறிய தசைகளாக் காகமுத னறுகள் அருந்திப் பொன்மயமானதைக்கண்டு பெரிதான ஆச்சரிய டன்று அவர் திருமேனி யிருந்தவிடத்து ஆலயமெடுப்பித்துப் ித்து வந்தார்கள்.

திருவள்ளுவ நாயனார் சரித்திரம்
முற்றிற்று.

மேற்படி சரித்திரத்தில்விட்டபட்ட பாட்டுகள் சொக்கநாதர்
கருமியென்னும் பிராமணனுக்கு அருளிச்செய்த

திருமுகப்பாசுரம்

அகவல்

கொல்குறேதர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇ நட்பின்
மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும்பூவே.

சொக்கநாதர் நற்கீரரைப்பார்த்துச் சொல்லியது

வெண்பா

ஆங்கம் குலைய வரிவாளி னெய்பூசிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்-சங்கதனைக்
கீர்கீரென வறுக்குங் கீரனே வென்கவியை
யாராயு முள்ளத் தவன்.

சொக்கநாதரைப்பார்த்து நற்கீரர் சொல்லியது

வெண்பா

சங்கறுப்ப தெங்கள்குலஞ் சங்கரனுக் கேதகுலம்
பங்கமறச் சொன்னற் பழுதாமே-சங்கை
யரிந்துண்டு வாழ்வோ மரனே நின்போல
இரந்துண்டு வாழ்வ திலை.

சங்கத்தாரை வெல்லவேண்டி ஒளவை ஞானக்குறியால் கைசைகைகள் பண்ணி இவை யென்னென்று கேட்கச் சங்கத்தார் சொல்லியது.

வெண்பா

இவ்வளவு கண்ணினு ளிவ்வளவு சிற்றிடையா
ளிவ்வளவு போன்ற விளமுலையா-ளிவ்வளவாய்க்
காமத் தலிவனையுங் காணாது கன்றினு
ளுமத்தை காட்டுகுறி நன்கு.

இஃது தகுதியான உத்தரவன்றென்று அக்குறிகளுக்கு ஒளவை சொல்லியது.

வெண்பா

ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமி
னிவ்வளவே னும்மனத்தை யிட்டுண்மின்-றெய்வ
மொருவனே யென்ன வுணரவல் லீரே
லருவினைக ளைந்து மறும்.

இப்படியென்று ஔவை சொல்லச் சங்கத்தார் நாணமுற்று இவளை வெல்லப்படாதென்று திருவள்ளுவரைப் பார்த்து நீரெந்தவூரென்றதற்கு அவர் சொல்லியது.

வெண்பா

எந்தவூ ரென்றீ ரிருந்தவூர் நீர்கேளீ
ரந்தவூர் செய்தி யறியீரோ-வந்தவூர்
முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமா
யப்பாலும் பாழா யறும்.

என்றிது முதலான ஞானார்த்தமான செய்யுட்களாலவர் வினவிய வைகளுக்கெல்லா முத்தரவுசொல்ல, இவரையும் வெல்வதரிதென்று இடைக்காடருடனே பேச, அவர் சொல்லியது.

வெண்பா

ஆற்றங் கரையி னருகிருந்த மாமரத்திற்
காக்கை யிருந்து கஃகஃகென்னக்-காக்கைதனை
யெய்யக்கோ லில்லாம லிச்சிச்சென வெய்தான்
வையக்கோ னார்தன் மகன்.

இதுபோன்ற அநேகஞ் செய்யுட்களை அவர்களா லெழுதப்படாமலும் கற்றுக் கொள்ளப்படாமலுஞ் சொல்ல நாணித் தோற்படைந்தார்கள்.

திருவள்ளுவநாயனார் திருவடி வாழ்க.

நாயனார் சொரூப ஸ்துதி

திருமுடி மிசையார் மயிர்முடி யழகுந்
தீர்க்கபுண் டரநுத லழகும்
திரண்மணி புயந்தை வருஞ்செவி யழகுந்
திகழ்நெடுந் தாடியி னழகும்
அருமுடி செபமா லிகைசின்முத் திரைசே
ரபயநேர் வலக்கையி னழகும்
அமிழ்துறழ் தமிழ்மா மறைமுறை வரத
மமைதரு மிடக்கையி னழகும்
கருமுடி யோகப் பட்டையி னழகும்
கடிகொள்கீட் கோவண வழகும்
கழல்களிற் றிகிரி வளைவரை யழகுங்
கமலநல் லாதனத் தழகும்
தருமுடி முகிறோய் மயிலையி னிடைமா
தவர்கள்கண் டிறைஞ்சவீற் றிருக்கும்
தழைபுகழ்த் திருவள் ளுவரெனு நாம
சற்குரு சரணமே சரணம்.

திருநாமங்கள்

ஆசிரியர் பெயர்-9	நூலின் பெயர்-9
திருவள்ளுவர்	திருக்குறள்
நாயனார்	முப்பானூல்
தேவர்	உத்தரவேதம்
முதற்பாவலர்	தெய்வநூல்
தெய்வப்புலவர்	திருவள்ளுவர்
நான்முகனார்	பொய்யாமொழி
மாதானுபங்கி	வாயுறைவாழ்த்து
செந்நாப்போதார்	தமிழ்மறை
பெருநாவலர்	பொதுமறை

திருவள்ளுவநாயனார் திருவடி வாழ்க.

3618
Catalogue No.
LIBRARY

திருக்குறளின்
சிறப்புப்பாயிரமாகிய
திருவள்ளுவமாலை

மூலமும் உரையும்

இவ்வுரை திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் செய்தது

அசரீரி

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு கற்பலகை யொக்க-விருக்க
வுத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கமோ வென்றதோர் சொல்.

(பதவுரை) திரு-அருட்செல்வத்தையும், தகுதெய்வம்-(அதற்குத்) தக்க தெய்வத்தன்மையையும் உடைய, திருவள்ளுவரோடு - திருவள்ளுவருடன், டருத்தகு கற்பலகை- (அவரிருத்தற்குத் தனது) உருவத்திலே தக்க கல்ல ங்கப்பலகையிடத்து, உருத்திரசன்மர் ஒக்கவிருக்க வெனவுரைத்து-சமான ாயிருக்கக்கடவரென்று சொல்லி, வானில்-ஆகாசத்திலிருந்து, ஒருக்க-(அவ் ிடதத்துள்ள புலவர் கருத்தையெல்லாம்) ஒற்றுமை செய்யும்படி, ஓர் சொல்- ரு வாக்கியம், ஒ வென்றது - ஒ வென்று இரைந்தெழுந்தது எ-று.

(விருத்தியுரை) "அருட்செல்வஞ் செல்வத்துட்செல்வம்" ஆதலின், திரு வென்றதற்கு அப்பொருளுரைக்கப்பட்டது. தெய்வத்தன்மை - தெய்வத்தி னவதாரமாய் விளக்குகை. தெய்வத்தன்மை யில்லார்க்கு அருளுனதாயினும் அதனாலே பெரும்பயன் விளையாமையின் தகுதி சொல்லப்பட்டது. திருவள் ருவரென்னும் பெயருள், திருவென்பது உயர்வையும், வள்ளுவரென்பது வண்மையையுடையரென்பதையும், விளக்கி நின்றனவாகலின், அது வேதத் தில் இலேமறைகாய்ந்தும்போற் பலவிடங்களிலும் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களையெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள் செய்தவரென்னுங் காரணம்பற்றி வந்த பெயராயிற்று. வள் - முதனிலை. உர் - இறுதிநிலை. உ - சாரியை. அம்முதனிலைக்குப் பொருள் நிறை. டருத்திரசன்மர்-உருத்திரனுல் சன்மத்தை அடைந்தவரென விரியும். அவர் ருகக்கடவுளது திருவவதாரமாய் வணிகர் மரபிற்றோன்றிய மூன்றைப் ள்ளுவரார். அசரீரி அருவமாய் எங்குநிறைந்துள்ள முதற்றெய்வம். அரங் கேற்றத் தொடங்கிய காலத்துத் தெய்வப் புலவரோடு ஒப்பவிருந்து கேட்ட ற்குத் தகுதியுடையோர் யாரென யாவரும் எண்ணமுற்று நின்றவழி இவ் சரீரி வாக்கியம் பிறந்தது என்றதெனப் படர்க்கை வினையாகக்கூறலின், ண்டு நின்று கேட்ட புலவர்களுள் ஒருவர் அதனை இன்னனம் பாடலாகச் செய்தரென்றறிக.

நாமகள்

காடா முதலான் மறைகான் முகனுவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்-கூடாரை
வெள்ளிய வென்றி விலக்கிலேவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

(ப-ரை) கூடாரை வெள்ளியவென்றி விலக்கிலேவேன்மாற-(பகைவரைப் புறங்கொடுக்கச்செய்த) இகழ்ந்த வெற்றியை உண்டாக்கி விளக்காநின்ற தகட்டு வடிவாபுள்ள வேற்படையையுடைய பாண்டியராஜனே, காடா-(உலகத்தார் விதிவிலக்குகளை அறிந்த உய்யும்வழியை) காடி, முதல்-படைப்புக் காலத்திலே, கான்முகனுவில்-பிரமனது காவிலிருந்து, கான்மறைபாடா-இருக்குமுதலாகிய கான்குவேதங்களையும் பாடி, இடை-(இதற்கும் அதற்கும்) நடுவானகாலத்திலே, பாரதம் பகர்ந்தேன்-பாரதமாகிய வேதத்தைச்சொல்லினேன், பின்-(அதற்குப்) பிற்பட்ட இக்காலத்திலே, என்வாக்கு-என்னுடைய வாக்கு, வள்ளுவன் வாயது-(திருக்குறளாகிய வேதத்தைச் சொல்லி) வள்ளுவன் வாயின்கண்ணதாயிற்று எ-று.

(வி-ரை) வேதமும் சந்தோரூபமாகையால், பாடாவென்றான். தன் கணவனுகலின் கான்முகனுவி லிருந்தென்றும், அவனவதாரமாகலின், வள்ளுவன் வாயதென் வாக்கென்றும் கூறினன். பாரதம் வியாசரைக் கொண்டு சொல்லப்பட்டது. இதனுல் கான்மறை பூர்வவேதமும், பாரதம் மத்திய வேதமும், திருக்குறன் உத்தரவேதமும் என்றதாயிற்று. பூர்வ வேதம் பின் வியாசராலே கான்காக வகுக்கப்பட்டமைபற்றி கான்மறை யெனப்பட்டது. அன்றி கானெனப்பிரித்து எழுவாயாக்கினுமாம். வேதம் மூவகைத்தென்பதனுலும், இவற்றது தோற்றமுறையால், இது வாக்கியப் பிரமாணத்திற் சிறப்புடைத்தென்பதனுலும் சொல்லியபடி. (2)

இறையனுர்

என்றும் புலாா கியாணர்காட் செல்லுகிறு
கின்றலர்ந்த தேன்பிலுற்று நீர்மையதாய்க்-குன்றுத
செக்தளிர்க் கற்பகத்தின் றெய்வத திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

(ப-ரை) மன் புலவன் வள்ளுவன் வாய்ச்சொல்-புலவர்க்கரசனுகிய வள்ளுவன் வாயிற்பிறந்த திருக்குறளானது, என்றும் யாணர் புலாது-எக்காலத்தும் தன்னழகு கெடாமல், காட்செல்லுகிறும் கின்றலர்ந்த-செல்லுங் காலவ் கழியினும் கிலபெற்று மலர்ந்த, தேன் பிலிற்று நீர்மையதாய்-தேனைச் சொரிகின்ற குணமுடையதாய் (விளக்குமாதலால்), குன்றுத செந்தளிராக் கற்பகத்தின்-குறைவுபடாத செய்ய தளிர்களையுடைய கற்பகத்தினது

தெய்வத் திருமலர்போன் - தெய்வத்தன்மை பொருந்திய உயர்வாகிய மலர்போலும் எ-று.

(வி-ரை) திருக்குறளுக்கு அழகு சொன்முடிபு பொருண்முடிபின் குணங்களும் அலர்தல் எங்கும் பரவுதலும், தேன்பிலிற்றல் இருமை யின்பங்களும் விளைததலுமாம். சொல்-ஆகுபெயர். இறையனார் கடவு ளாகலின், இனி இதிற் சிறப்பதொன்றுளதாவ தினறென்னுந் துணிவுதோன்ற என்றுமென்றும், பின்னும் அதனை வலியுறுத்தற்கு நாட்செல்லுகினு தின்றென்றும், வாழ்த்துப் பொருள்பட இவ்வாறு கூறினார். இது அழியாது தின்று பெருகிப் பயன்படுமாறு சொல்லியபடி. (3)

உக்கிரப்பெருவழுதியார்

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகததோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த-நூன்முறையை
வந்திக்க சென்னிவாய வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

(ப-ரை) வள்ளுவனாய் - திருவள்ளுவனாய், தான்மறைந்து - தனது திருமேனியை மறைதது, நான்மறையின் மெய்ப்பொருளை-நான்கு வேதங்களி னுண்மைப்பொருளை, தந்து (இவ்வுலகததிலே) கொணர்ந்து, முப்பொருளா- (அறம்பொருளின்பமென்னு) முப்பாற்பொருளதாக, நான்முகததோன-பிர மனால், உரைத்த-திருவாய்மலர்ந்த, நூல்-நூலினது, முறையை-புத்தகத்தை, சென்னி வந்திக்க - எனது தலையானது தொழக்கடவது, வாய் வாழ்த்துக- வாயானது வாழ்த்தக்கடவது, நன்னெஞ்சம் சிந்திக்க - நல்ல மனமானது நினைக்கக்கடவது, செவிகேட்க-காதுகளானவை கேட்கக்கடவன எ-று.

(வி-ரை) முப்பொருள் - ஆகுபெயர். இவ்வேதப்பொருள் ஆதியிலே வேதஞ்சொல்லியோனாலேயே சொல்லப்பட்டமையால் உலகததுச் சமயாசாரி யர்களாலும் பிறராலும் ஒன்றறகொன்று மாறாகக்கொள்ளப்பட்ட பொருள்கள் போல்வ தன்றெனபது தோன்ற மெய்ப்பொருளென்றார். கலையுணர் புலமையிற் றலைமையோனாகி விதிமுறை வழாது முதுநிலம் புரக்கும் பெருந்தகை யுக்கிரப் பெருவழுதியென்னுந், தன்னிகரில்லா மன்னவர் பெருமான் தான் மேற்கொண்ட சிறப்பைப் பலரும் அறிந்து மேற்கொள்ள, இவ்வாறு வழிபாடு கூறினான், 'மன்னனெப்படி மன்னுயி ரப்படி' ஆதலின், இப்புத்தகத்தை முன்னே பூசித்து மெய் மொழி மனங்களால் வணக்கஞ் செய்து பின் கேட்கவேண்டுமென்று சொல்லியபடி. (4)

கபிலர்

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்-மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

(ப-ரை) மனை அளகு வள்ளைக்கு உறங்கும் வளநாட-மனையில் வளர்க்கப் படுகின்ற பறவைப்பேடுகள் உலக்கைப்பாட்டால் கண்ணுறங்குகின்ற வளம்பொருந்திய நாட்டையுடைய அரசனே, வள்ளுவனார் வெள்ளைக் குறட்பா விரி-திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட குறள் வெண்பா (மிகப் பெரியபொருளைத) தன்னுட்கொண்டு காட்டுதல், தினையளவு போதாச் சிறுபுன்னீர் - தினையரிசியினளவுக்கும் போதாத சிறிய புல்லினது நுனியின்கணுள்ள பனிநீர், நீண்ட பனையளவு காட்டும் படித்து-உயர்ந்த பனையினளவான அதன் சாயையைத் தன்னுட்கொண்டு காட்டுங் குணம் போலுங் குணத்தையுடைத்து எ-று.

(வி-ரை) பனை-ஆகுபெயர். ஆல்-அசை. பறவை-கிளி முதலியவை. உலக்கைப்பாட்டு-மகளிர் பரிமளப்பொடி இடிக்கின்றபோது பாடும்பாட்டு. விரி-விரிததல். எப்படி மிகச்சிறிய பனித்துளியிலே மிகப் பெரிய பனைமரத்தின் சாயை அடங்கி விளங்குகின்றதோ அப்படியே மிகச்சிறிய இக்குறள் வெண்பாவில் மிகப்பெரிய பொருள் அடங்கி விளங்குகின்ற தென்பதாம். இது சுருங்கியிருந்தும் விரிவான பொருளை விளக்குமாறு சொல்லியபடி. இது முதலியன சங்கத்துப்புலவராலே பாடப்பட்டன. (5)

ப ர ண ர்

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்-வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

(ப ரை) மாலும்-திருமாலும், குறளாய்-குறளாய்ப் பிறந்து, வளர்ந்து-வளர்ந்து, இரண்டு மாண அடியால் இரண்டு பெரிய அடிகளால், ஞால முழுதும - உலகமனைததையும், நயந்து-விரும்பி, அளந்தான் - அளந்தான்; வாலறிவின் வள்ளுவரும்-மெய்யறிவினையுடைய திருவள்ளுவரும், தம் குறள் வெண்பாஅடியால் - தம்மினின்றுந் தோன்றி அநநிலைநிற்கின்ற வெண்பாக் குறளின் இரண்டு சிறிய அடிகளால், வையத்தார் உள்ளுவ எல்லாம்-அவ் வுலகமனைததினு முள்ளோரால் நினைக்கப்பட்டவற்றையெல்லாம், ஓர்ந்து-ஆராய்ந்து, அளந்தார்-அளநதார் எ-று.

(வி-ரை) உமமை யிரண்டும், முறையே தேவரிற் பெரியோனாகிய வென்றும், மனிதரிற் சிறியராய்க் காணப்பட்டவென்றும், பொருள்பட நின்றன. உவமானததிலே வளர்தலும் பெருமையும் சொல்லுதலால், உவமேயத்திலே அவற்றுக்கு முரணாகிய நிலைநிற்றலும் சிறுமையும் வருவிக்கப்பட்டன. மாலுக்குததானே குறளாதலும், பின்பு அந்நிலை நில்லாது வளர்தலும் பேரடிகளால் அளவுபட்ட உலகத்தை யளத்தலும், திருவள்ளுவருக்குத் தம்மினின்றுங் குறளை உண்டாக்குதலும், அது தன்னிலை நிற்றலும் அதன் சிற்றடிகளால் அளவுபடாத நினைப்பின் விடயங்களை அளத்தலும்

சொல்லப்படுதலாலும், வேற்றுமை யறிக. நினைக்கப்பட்டன வெல்லாம் இதனகத்து அளவு செய்யப்பட்டமை சொல்லியபடி. (6)

நக்கீரர்

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானு வறமுதலா வங்கான்கு-மேனருக்
கூழி யுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்.
வாழியுல கென்னுற்று மற்று.

(ப-ரை) தானே-தானே, முழுது உணர்ந்த-(வேதப்பொரு)ளனைத்தையு மறிந்து, தண்டமிழின் - தண்ணிய தமிழின்கண், வெண்குறளால்-குறள் வெண்பாக்களால், ஆனுவறமுதலா வங்கான்கும் விட்டு நீங்குதல் கூடாத அற முதலாகிய அங்கான்கு பொருள்களையும், ஏனோருக்கு - அவற்றை யறியாதவர்களுக்கு, (அவர் எளிதினறிய) ஊழின் உரைத்தார்க்கும் முறையாற் சொல்லியருளிய திருவள்ளுவருக்கும், ஒண்ணீர் முகிலுக்கும் - ஒள்ளிய நீரைத்தந்த மேகத்துக்கும், உலகு-இவ்வுலகம், மற்றென்னுற்றும்-எதிர்வன்றி யாது செய்யும்? (செயக்கிடந்தது ஒன்றும் இல்லை); வாழி-(அவரும் அதுவும்) வாழ்க எ-று.

(வி-ரை) ஆனுமை-நீங்காமை. தானே முழுதுணர்ந்தனவே, ஆசாரிய ராயிருந்து பிறரறிவிக்க அறிந்திலனென்றதாயிற்று. முழுதுமென்னும்மை தொக்கது. ஒண்மை இனிமைமேல் நின்றது. முறை-நூலின் மும்பொருள்களின் கிடக்கையொழுங்கு. நாயனார் கொடைச்சிறப்புச் சொல்லியபடி. (7)

மாமூலனார்

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமக் கான்கின்
பிறந்தெரிந்து செப்பிய தேவை-மறந்தீதும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

(ப-ரை) அறம்பொரு ளின்பம் வீடென்னு மக்கான்கின் அறமுதலாகச் சொல்லப்பட்ட அவ்வேதப் பொருள்களாகிய நான்கனை, நிறம்-கூறுபாட்டையும், தெரிந்து-தெரிந்து, செப்பிய-(உலகத்தார்க்குச்) சொல்லிய, தேவை-தேவனை, மறந்தீதும் - மறந்தாயினும், வள்ளுவனென்பான்-(ஒரு மனிதனை உட்கொண்டு) வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவனுளனாயின், அவன் - அவன், பேதை - அறிவில்லாதவனாவன்; அவன் வாய்ச்சொல் - அவனது வாயிற்பிறந்த அச்சொல்லை, அறிவுடையார் - அறிவுடையார், கொள்ளார்-கொள்ளார் எ-று.

(வி-ரை) அறமுதலியவற்றின் கூறுபாடு அவற்றினது தொகை வகை விரிகள். மறந்தேயு மென்றதனால், நினைப்புடன் சொல்லுவோன் பேதையிற் பேதையா மென்பதாயிற்று. முன்னும் பின்னுமுள்ள பாட்டுக்களில் இப்பெயர் தெய்வத்தன்மையைக் குறிப்பிக்கும்படி கன்குமதித்து உயர்த்திச் சொல்லப் படுதலால், ஒருமனிதனை வுட்கொண்டென்பது வருவிக்கப்பட்டது. அன்றி

ஒலிக்குறிப்பினாலே சாதிவிழிவு தோன்ற வள்ளுவனென்பா னெனினு மமையும். இக்குறிப்பொலியை வடநூலார் காகுசரமென்பர். தெய்வப் புலவரை அமைத்தினிழிவு சொல்லியபடி. (8)

கல்லாடர்

ஒன்றே பொருளினின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்-நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

(ப-ரை) ஆறுசமயத்தார் - அறுவகை மதத்தோரும், ஒன்றே பொரு ளென்னின்-(ஒருமதத்தார் தமது நூலிலே உலகமும் உயிரும் கடவுளுமாகிய) பொருள்கள் ஒன்றேயென்ற காட்டுவாயின், வேறென்ப - (மற்றொரு மதத்தார் தமது நூலிலே அதனை மறுத்த அவை) வேறுமென்று காட்டுவர்; வேறெனின் - (அப்படி) வேறென்ற காட்டின், அன்றென்ப - (பின்னொரு மதத்தார்) அதனை அன்றென்று மறுப்பர், (ஆதலால் சமயநூல்களெல்லாம் இவ்வாறு மறுக்கப்படுகின்றன) வள்ளுவனார் முப்பான் மொழிந்த மொழி. திருவள்ளுவராலே முப்பாலாகச் சொல்லப்பட்ட நூலை, நன்றென. நன்றென்ற கொள்ளுவதற்கு, எப்பாலவரும்-எவ்வகைப்பட்ட பகுதியோரும், இயைபுடன்படுவார் என.

(வி-ரை) மொழி-ஆகுபெயர். ஆறுமதமாவன: வியாசமதம், சைமினி மதம், பதஞ்சலிமதம், கபிலமதம், கணாதமதம், அக்ஷபாதமதம்; அன்றிச் சைவ வைணவமுதலியவற்றைக் கூறினுமாம் எச்சமயத்தாரு மென்னுத எப்பாலவருமென்றதனால், வேதத்தைக்கு உட்பட்ட சமயத்தாரேயன்றிப் புறப்பட்ட சைனம், பௌத்தம், சார்வாகம் முதலிய மதத்தாரும், பலவகைப் பட்ட சாதியாரும், தேசத்தாரும், காலத்தாரும், பிறரும் தழுவப்படுதலறிக. இதனே பொதுவேதமென்றபடி. (9)

சித்தலிச்சாத்தனார்

மும்மலையு முக்காடு முக்கதியு மூப்பதியு
மும்மூசு முத்தமிழு முக்கொடியு-மும்மாவுக்
காமுடைய மன்னர் தடமுடிமேற் றூன்றுறை
பாமுறைதேர் வள்ளுவர்மூப் பால்.

(ப-ரை) வள்ளுவர்-திருவள்ளுவரது, பாமுறைதேர் மூப்பால்-பாக்களின் (முன்பின்) முறைதெரிதற் கிடனுகிய திருக்குறளானது, மும்மலையும்-கொல்லிமலை, சேரிமலை, பொதியமலை எனப்படுகின்ற மூன்று மலைகளையும், முக்காடும்-குடகாடு, புனனாடு, தென்னாடு எனப்படுகின்ற மூன்றுநாடுகளையும், முக்கதியும் - பொருகைகதி காவிரிகதி வைகைகதி எனப்படுகின்ற மூன்று கதிகளையும், மூப்பதியும்-கருவூர், உறையூர், மதுரை எனப்படுகின்ற மூன்று பதிகளையும், மும்மூசும் - மங்கலமூசு, வெற்றிமூசு, கொடைமூசு

னப்படுகின்ற மூன்று மூசுகளோடும், முத்தமிழும்.இயற்றமிழ் இசைத்தமிழ் ாடகத்தமிழ் எனப்படுகின்ற மூன்று தமிழ்களோடும், முக்கொடியும். ற்கொடி புலிக்கொடி மீனக்கொடி எனப்படுகின்ற மூன்று கொடிகளோடும், ம்மாவும்.கனவட்டம் பாடலம் கோசம் எனப்படுகின்ற மூன்று குதிரை ளோடும், தாமுடைய மன்னர்-தாம் முறையேயுடைய சோசோழ பாண்டியர் னப்படுகின்ற மூவரசருடைய, தடமுடிமேல்-பெரிய முடிகளின்மேலும் தான்னப்பட்ட, தான்றே-மாலையன்றே எ-று.

(வி-ரை) அன்றேவென்றதனை பலாதிசேற்றம். முப்பால் - ஆகுபெயர். ம்மூசும் முத்தமிழும் அம்மூவரசர்க்கும் பொதுமையவாயினும், இம்முறை ரிமை அவர் குடிமரபிற்கு இயைந்தனபோலும். அரசர் மூவரும் மற்கொண்ட சிறப்புச்சொல்லியபடி. (10)

மருத்துவன்றாமோதரனார்

சிந்திரீர்க் கண்டகந் தெறிசக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குங் கலிக்குந்தில்-காந்தி
மலைக்குத்த மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்தத் தீர்வுசாத் தற்கு.

(ப-ரை) காந்திமலைக்குத்த மால்யானை - (தன் பகையென) கெருண்டு லையைக்குத்தகின்ற பெரிய களிறுபோலுள்ள அரசனே! சிந்திரீர்க்கண்டம்- ந்திரீர்ச் சருக்கரையையும், தெறிசக்கு-சிதைக்கப்பட்ட சுக்கையும், னனாய் தேனெடு கலந்து, மோந்தபின் - மோந்தபின், (அதனால்) ர்க்கும்-(தலைக்குத்தடையோர்) யாவர்க்கும், தலைக்குத்த-தலையிடி, இல்- லையாகும், வள்ளுவர் மூப்பாலால் - திருவள்ளுவர் அருளிச்செய்த ப்பாலினாலே, சாத்தற்கு - சித்தலைச்சாத்தனார்க்கு, தலைக்குத்த-தலையிடி, வு-இல்லையாயிற்று எ-று.

(வி-ரை) யானைபோல்பவனை யானையெனலால் ஆகுபெயர். முன்கேட் பட்ட நூல்களிலெல்லாம் பல சொற்குற்றங்களும் பொருட்குற்றங்களும் ற்றி பொருந்தலையில் அறைந்தகொண்டு வந்தமையால் புண்பட்டுக் ந்தல் உண்டாயிருந்தது. இதன்கண் ஒரு குற்றமுங் காணப்பெறுமையால் ற நீக்கிற்றென்க. எப்படி அம்மூன்று சாக்கும் அதற்கு மருந்தாமோ ப்படியே இதற்கு இம்மூன்றுபாலும் மருந்தாயின வென்பதாம். வென்றுந்தொழிற்பெயர் முற்றப்பொருளில் வந்தது. இதன் குற்றமற்ற க்குகை சொல்லியபடி. (11)

நாகன்றேவனார்

தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று-வாளாதா
மப்பா லொருபாவை யாய்ப்பவோ வள்ளுவனார்
முப்பான் மொழிமூழ்கு வார்.

(ப-ரை) தாளார் மலர்ப்பொய்கை - நாளத்தோடு பொருந்திய தாமரை மலர்களையுடைய ஒருகுளத்து நீரின்கண்ணே, குடைவார் - மூழ்குவோர், தண்ணீரை - (வேறு) தண்ணீரை, வேளாதொழிதல் - விரும்பாதொழிதல், வியப்பன்று - வியப்பைச் செய்வதன்று, வள்ளுவனார் முப்பான் மொழி. திருவள்ளுவரது முப்பால்களையுடைய நூலின்கண்ணே, மூழ்குவார். மூழ்குவார், தாம்-தாம், வாளா வீணாக, அப்பால்-அப்பால், ஒருபாவை-ஒரு நூலை, ஆய்பவோ-விரும்புவரோ (விரும்பார்; ஆகலின் இதுவே வியப்பைச் செய்வதாம்) எ-று.

(வி-ரை) தாளார் மலரெனலால் தாமரைமலரெனப்பட்டது. வியப்பைச் செய்வதை வியப்பென்றார். மூழ்குதல் இங்கே கருத்து முழுதும் அழுந்தி நிற்றன்மேனின்றது. மொழி-ஆகுபெயர். ஓகாரம்-எதிர்மறை. விரும்புதலாகிய காரணத்தை ஆய்பவோவெனக் காரியமாக உபசரித்தார். அது வியப்பன்றென்றமையால் இது வியப்பென்றதாயிற்று. உயர்வான பொருள் பெற்றோர்க்கு அதினிழிவான பொருளையும் பெறவிரும்புதல் இயல்பாயிருக்க, குளிர்ச்சி இன்சுவை நறுமணம் முதலிய குணங்களாலே சிறந்த ஒரு தாமரைக்குளத்து நீரைப் பெற்றோர்க்கு அதனாற்றானே அமைதிபெற்ற வேறு தண்ணீரைப் பெற விரும்பாமை வியப்பைச் செய்வதாயிற்று. ஆயினும் இதுகாறும் ஒருநூலைக் கற்றோர்க்கு வேறுநூலைக் கற்க விரும்புதலன்றி விரும்பாமை யில்லாதிருக்க, இப்போது உளதாகலின், இதுவே பெரு வியப்பைச் செய்வதென்றதாயிற்று. இதனால் இந்நூலகத்து எந்நூற் பொருளும் அடங்கியிருக்கின்றமை குறிப்பிக்கப்பட்டது. பல நூல்களையுங் கற்க விரும்புவோர்க்கு இதுவொன்றே அமைதல் சொல்லியபடி. (12)

அரசில்கிழார்

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்-சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

(ப-ரை) பரந்த பொருளெல்லாம் - (வேதத்திலே) ஒன்றோடொன்று மயங்கிநின்ற நால்வகைப் பொருள்களையும், பாரறிய - இப்பூமியிலுள்ளோர் அறிதற்பொருட்டு, வேறு தெரிந்து-வேறாகப் பிரித்து, திறந்தொறுஞ் சேர- (அது அது தனது தனது) வகையோடு சேரும்படி, சுருங்கிய சொல்லால் சுருக்கமான சொல்லால், பொருள் விளங்க - பொருள் விளங்க, விரித்துச் சொல்லுதல் - விரியும்படி வைத்துச்சொல்லுதல், வல்லார் - வல்லவர்கள், வள்ளுவரல்லால்-திருவள்ளுவரல்லது, ஆர்-ஒருவரும் இல்லை எ-று.

(வி-ரை) பார் - ஆகுபெயர். திறம் - அறமுதலியவற்றின் கூறுபாடு. சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தன் முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப்பட்டனவோ அப்படிப் பிறரால் அமைக்கப்படுதல் கூடாமை காட்டியதாயிற்று. நூலுக்கும் நாயனார்க்கும் தகுதி சொல்லியபடி. (13)

பொன்முடியார்

கானின்ற தொங்கலாய் காசிபனூர் தந்ததுமுன்
கூறின் றளந்த குறளென்ப-தான்முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனூர்
தானின் றளந்த குறள்.

(ப-ரை) கானின்ற தொங்கலாய்-மணந்தங்கப்பெற்ற மாலையையுடைய ண்டியராஜனே!, முன்-முன், காசிபனூர் தந்தது-காசிபராலே தரப்பட்ட றளை, கூறின்று-மண்ணின்கண்ணே நின்று, அளந்த - (உலகத்தை) அளந்த, றளென்ப-குறளென்றுசொல்லுவர், தானின்று-தாம் (இங்கே) எழுந்தருளி, ள்ளுவனூ ளந்தகுறன் - திருவள்ளுவராலே தரப்பட்ட குறன், தான் றையான் - தானின் முறையோடுகூடி, வானின்று - விண்ணின்கண்ணே ன்றும், மண்ணின்று-மண்ணின்கண்ணே நின்றும், அளந்தது-(உலகத்தை) ளந்தது எ-று.

(வி-ரை) கு கூடஎன நீண்டது. ஆனருபு ஒடுவுருபின் பொருளில்வந்தது. க்குறன் வஞ்சித்தப் பெற்றனத்தலால் தான்முறையோடு கூடாததாயிற்று. க்குறளுக்கு ஒலிவடிவும் வரிவடிவுமென இரண்டு வடிவுண்மையால் ஒலி டிவுக்கிடம் வாளுகலின் வானின்றென்றும், வரிவடிவுக்கிடம் மண்ணுலின் ண்ணின்றென்றம் கூறினர். இக்குறளுக்கு தான்முறையோடு கூடலும் னிற்றலும் மிகுத்துச்சொல்லி வேற்றுமை செய்யப்பட்டது. முன் மாலு ன்பாட்டிலே காயனூர்க்கும் மாலுக்கும் இப்பாட்டிலே திருக்குறளுக்கும் வதாரக் குறளுக்கும் ஒப்புமை குறித்துச்சொல்லலால் வேறுபாடாம். கத்தப் பொருளெல்லாம் இம்மை அனத்தற் சிறப்புச் சொல்லியபடி. (14)

கோதமனூர்

ஆற்ற லழியுமென் றக்கணர்க ணான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறதெழுதா-ரேட்டெழுதி
வல்லுகரும் வல்லாரும் வள்ளுவனூர் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று.

(ப-ரை) அக்கணர்கள் - அக்கணர்கள், நான்மறையை - நான்கு வேதங் யும், உரைத்து - வாய்ப்பாடமாக, போற்றி - காப்பாற்றி, ஆற்றலழியு ன்று - (ஏட்டின்கண் எழுதிவைத்தால் வலியில்லாரும் ஓதுவாகலின் ற்றின்) வலிமை குறையுமென்று, ஏட்டின் புறத்து-ஏட்டின்கண், எழுதார் தார்கள், வள்ளுவனூர் முப்பாலை - திருவள்ளுவரது திருக்குறளை, டெழுதி - ஏட்டின்கணெழுதிவைத்தி, வல்லுகரும் - வலியுடையவரும், லாரும்-வலியில்லாரும், சொல்லிடினும்-ஒதினாலும், ஆற்றல் சோர்வின்று மை குறைதலில்லை எ-று.

(வி-ரை) அவ்வேதத்துக்கு உதாத்தம் அனுதாத்தம் சுவரிதமென்னுஞ் கைளின் வழுவாமல் ஓதல்வேண்டுமென்னும் விதியுளதாகலின், அதற்குத் தியுடைய அக்கணரே அதிகாரிகளாயினர். இதற்கு அஃதில்லாமையால்

யாவரும் அதிகாரிகளாவரென்றறிக. சொல்லிடினு மென்றதனால் பொரு
ளுணர்ச்சிக்கு இதற்கும் கலிமை வேண்டுமென்பது பெறப்பட்டது. ஆற்றல்
சொற்செறிவின்றிட்பம். இவ்வனக் கூறலே, அவ்வேதம் சொல்லின்
கண்ணே நிலைமைபுடைத்தென்பதாகும், இவ்வேதம் பொருளின்கண்ணே
நிலைமைபுடைத்தென்பதாகும் பெறப்பட்டன. ஒதப்படுதலின் அவ்வேத
மிலும் இது சிறப்புடைமை சொல்லியபடி. (15)

நத்தத்தனார்

ஆயிரத்த முந்நூற்று மூப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்-போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்கேட்க வீற்றிருக்க லாம்.

(ப-ரை) பாயிரத்தினோடு - பாயிர நான்கதிகாரங்களோடு, (சேர்த்
தொகையாகிய) ஆயிரத்த முந்நூற்று மூப்பதருங்குறளும்-1330 குறளும்
பகர்ந்ததற்பின்-ஒதிமுணர்ந்தபின்பு, போய்-போய், ஒருத்தர் வாய்-ஒருவர்
வாயாலே, கேட்க-கேட்டறிதற்கு, நூல்உளவோ-நூலுளவோ?, (இல்லை) மன்னு
தமிழ்ப்புலவராய் - நிலைபெற்ற தமிழிலே புலமை நிரம்பியோராகி, கேட்க
(பிறர் தம்மிடத்தவர்க) கேட்க, வீற்றிருக்கலாம்-வீற்றிருக்கலாம் எ-று.

(வி-ரை) வீற்றிருத்தல்-ஒரு சபைநடுவிலே உயர்வாகிய ஆசனத்தில்
எறியிருத்தல். இவற்றுட் பலவகைப்பட்ட நூல்களின் கருத்துக்களெல்லாம்
விளக்கிற்றலின் கேட்க நூலுளவோவென்றார். புலவராயினேவ, புலவர்
நிரம்புதற்கு இவை ஆயிரத்த முந்நூற்றுமூப்பது குறள்களும் போதுமென்பது
பெறப்பட்டது. ஒதியோர்க்கு வரும் இம்மைப்பயன் சொல்லியபடி. (16)

முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்

உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால-வள்ளுவனார்
மூப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா வலரினு மில்.

(ப-ரை) வள்ளுவனார் மூப்பாலின் மிக்க-திருவள்ளுவரது திருக்குறளி
னேற்பட்ட, மொழி - நூலொன்று, உண்டெனப் பகர்வார் - உளதென்
சொல்லவல்லவர், எப்பாவலரினும் - எவ்வகைப்பட்ட புலவருள்ளும், இ
இல்லை; (ஆதலால்) செயற்பால-(நாம் இந்நூலைக்குறித்துச்) செய்யக்கட
உள்ளுதல் - (நாம் இதன் பொருளைச்) சிந்தித்துக்கொள்ளுதலும், உ
ரைத்தல்-சிந்தித்துப் (பிறர்க்கு) அதனைச்சொல்லுதலும், உரைத்ததனை
தெள்ளுதல்-(பிறரால்) சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும், அன்
அன்றே எ-று.

(வி-ரை) மொழி-ஆகுபெயர். ஒப்பது வடமொழி வேதமிருத்தல்
மிக்க மொழியென்றும், தமிழின் மாத்திரமின்றி வடமொழி முதலிய
ள்ள புலவரையும் தழுவுதற்கு எப்பாவலரினுமென்றும், அறிவோர்

ண்டற்கு உரைத்ததனைத் தெள்ளுதலென்றும் கூறினர். உள்ளுதலெனவே ட்டலும், தெளிதலெனவே அவ்வாறுமுகலும் அடங்கின. இது பயிற்சி ய்தொழுகுமாறு சொல்லியபடி. (17)

ஆசிரியர் நல்லந்துவனர்

சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்-தோற்றவே
மூப்பான் மொழிந்த முதற்பா வலரோப் பா
செப்பா வலரினு மில்.

(ப-ரை) சாற்றிய பல்கலையும் - (அறிவுடையோரால்) சொல்லப்பட்ட ல நூல்களாலும், தப்பா வருமறையும் - தப்பாத அரிய வேதத்தினாலும், பாற்றி-காப்பாற்றி வைத்திருந்து, உரைத்த - (உலகத்தார்க்குச்) சொல்லப் ட்ட, பொருளெல்லாம்-விடயங்களெல்லாம், தோற்ற-(தன்னிடத்தே) காட் ம்படி, மூப்பான் மொழிந்த - திருக்குறளைச் சொல்லிய, முதற்பாவல ராப்பார் - திருவள்ளுவரையொப்பவர், எப்பாவலரினும் - எவ்வகைப்பட்ட ாவலருள்ளும், இல்-இல்லை எ-று.

(வி-ரை) தம்மாலே சொல்லப்பட்டவற்றில் வழுவுறுமையால் தப்பா வன்றும், பொருளுணர்தற்கேயன்றி ஒதுதற்கும் எளிதன்றுகலின் ருவென்றும், விசேடணஞ் செய்யப்பட்டது. எப்பாவலரினுமில் இதற்கு ன்னுரைக்கப்பட்டபடியேகொள்க. முதற்பாவலர் - முதன்மையையுடைய வலர்; நால்வகைப் பாக்களில் வெண்பாக்களும் அவற்றுள்ளும் குறள் வெண்பாவும் தலைமைபெற்று நிற்றலின், அக்குறள் வெண்பாவால் நூல்செய்த லைமையுடைய தென்றுமாம். புலமையிலே நாயனாருக்கு ஒப்பின்மை சால்லியபடி. (18)

கோந்தையார்

தப்பா முதற்பாவாற் றுமாண்ட பாடலினுன்
மூப்பாலி னுற்பான் மொழிந்தவ-செப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

(ப-ரை) எப்பாலும் வை வைத்த கூர் வேல் வழுதி - எவ்விடத்திலும் ர்மை வைத்த - சிறப்புப்பொருந்திய வேலையுடைய பாண்டியராஜன், மன ழ்-மனமகிழ, தப்பா-(சொல்லப்பட்டபொருள்) வழுவாமல், முதற்பாவால்- தன்மையுடைய பாவாகிய குறள்வெண்பாக்களாலே, தாமாண்ட பாடலி ல் - தாம் மாட்சிபெற்ற பாடற்றொழிலினாலே, மூப்பாலின் - மூன்று பால் நிலே, நாற்பால்-அறமுதலிய நான்கு பகுதிப்பொருளையும், மொழிந்தவர்- நாவாய்மலர்ந்தவர், தெய்வத் திருவள்ளுவர் - தெய்வத்தன்மையை யுடைய திருவள்ளுவநாயனார் எ-று.

(வி-ரை) கூர்-சிறப்பு. நான்கினுண் மூன்றடக்குவதன்றி மூன்றினுள் ன்கடக்காமையின் வியந்து கூறப்பட்டதாயிற்று. நூல்செய்த சிறப்பும் னால் அரசனை மகிழ்வித்தமையும் சொல்லியபடி. (19)

சிறுமேதாவியார்

வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்றொன்றாழ்-கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

(ப-ரை) வள்ளுவர் சொன்ன வகை-திருவள்ளுவராலே சொல்லப்பட்ட திருக்குறளின் அதிகாரவகை, பாயிரநான்கு-பாயிரம் நான்கு, அற முப்பத்து மூன்று-அறம்முப்பத்துமூன்று, ஊழொன்று-ஊழ் ஒன்று, பொருளெழுபது-பொருள் எழுபது, இன்பமிருபதிற்றைந்து - காமம் இருபத்தைந்து அதிகாரத்தையுடைத்து எ-று.

(வி-ரை) அறத்துப்பாலு ளடங்காது அதனைவிட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின் வீடொன்று பாயிரமென்றும், இம்மை மறுமை வீடு மூன்றும் பயத்தற் சிறப்பிற்றாய மூன்றனுண் முதனிற்றலின் விளங்கறமென்றும், யாவர்க்கும் பொதுப்பட நாடித் தொகுக்கப்பட்ட அறத்தின் கூறுபாடு இவையேயாகலின் நாடிய முப்பத்துமூன்றென்றும், முன்னின்ற அறமும் பின்னின்ற இன்பமும் கைகூடுதற்குத் துணையாய் நிற்றலின் கூடுபொருளென்றும், அப்பொருளின் பாகுபாடுகளெல்லாம் இவற்றினடங்குதலின் எள்ளிலெழுபதென்றும் கூறினார். எள்ளல்-இகழ்தல். பாயிரநான்கு-பாயிரமானது நான்கதிகாரங்களையுடைத்து எனப் பிறவும் விரித்துரைத்துக் கொள்க. சில பழையநூல்களிலே சிலவற்றைச் சாதியாரும் சமயத்தாரும் மிகுத்தும் குறைத்தும் வேறுபடுத்தலால், அப்படிப்பட்ட வேறுபாடு இதற்கும் வரினும் வருமென்று ஆசங்கித்து, இதனதிகாரங்களுக்கு இங்ஙனந் தொகை செய்தார். பின் இவ்வாறு தொகைசெய்யப்பட்டு வருவனவற்றிற்கும் இதுவே கருத்தாகக்கொள்க. முப்பால்களுக்கும் அதிகாரத்தொகை சொல்லியபடி.

நல்கூர்வேள்வியார்

உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப-விப்பக்க
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதாற் புனற்கூடற் கச்சு.

(ப-ரை) உப்பக்கநோக்கி - அப்பக்கத்தைக்குறித்துச் சென்றோனாகிய உபகேசி தோண்மணந்தான் - உமாதேவியினது தோளை மணந்த கடவுளை, உத்தரமாமதுரைக்கு-வடமதுரைக்கு, அச்சென்ப-ஆதாரமென்று சொல்லுவர், இப்பக்கம் - இப்பக்கம், மாதானுபங்கி - மாதானுபங்கியெனப்படுகின்ற மறுவில்புலம் - குற்றமற்ற புலமையாகிய தேனைச்சொரிகின்ற, செந்நாப் போதார்-செவ்விய நாவாகிய மலரையுடையவர், புனற்கூடற்கு-நீர்வளத்தையுடைய தென்மதுரைக்கு, அச்சு-ஆதாரமாவர் எ-று.

(வி-ரை) உப்பக்கம் - இடைக்காடர் அரசன் தன்பாடலை அவமதித்தமைபற்றிப் பிணங்கிச் சென்றபக்கம். உப்பக்க நோக்கியென்றது வினை

ணயும்பெயர். கேசி-திருமால்; இது அக்கடவுள் சகசிரநாமத்திற்கண்டது. சிக்குப் பின்னே பிறந்தவள் உபகேசி யென்றாயது, உபேந்திரனென்பது ால. மாதா அனுபங்கி-மாதாவை நிகராகக்கொண்டு நடக்கின்ற ஒழுங்கின னப்படுதலின் அவள் பிள்ளை மேலேபோல் இவர் உலகத்தார்மேல் அருள் ய்தல் சொல்லப்பட்டதாயிற்று. நாப்போதென்றதற்கேற்பப் புலமையிலே ன் ஆரோபிக்கப்பட்டது. அச்சுப்போற்றாங்குதலால் அச்சென்றார். பனாராலே திங்கட்குடையுடைச் சீர்சால் வழுதியுஞ் சங்கப்புலவருந் ழத்திணிதோங்கிய மதுரைக்கு உண்டான சிறப்புச் சொல்லியபடி. (21)

தொடித்தலை விழுத்தண்டினார்

அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து-பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

(ப-ரை) அறநான்கு - (பாயிரம் இல்லறம் துறவறம் ஊழ் என) அறப் னுட்பிரிவுகள் நான்கும், அறிபொருட்டிறம்ஏழ் (அரசு அமைச்சு அரண் படை நட்பு ஒழிபுஎன) அறியப்பட்ட பொருட்பாலி னுட்பிரிவுகளேழும், த்திறம் மூன்று-(ஆண்பால் பெண்பால் அவ்விருபால் எனக்) காமத்துட் னுட்பிரிவுகண் மூன்றும், எனப் பகுதிசெய்து - என்று பகுதிசெய்து, றலரியநாலும்-பெறுதற்கரிய (அறம் பொருள் இன்பம் வீடு எனப்படுகிற) கு பொருள்களையும், மொழிந்த-சொல்லிய, பெருநாவலரே-பெரிய நாவ ர, ஒழிந்த பொருள்-(அவற்றுள் அடங்காமல்) ஒழிந்த பொருள் உளதாயின், னை) நன்குணர்வார்போலும்-நன்றாக அறிய வல்லவர்போலும் எ-று.

(வி - ரை) திறமென்றது அறமுதலியவற்றோடுங் கூட்டப்பட்டது. கு - நான்கு பிரிவுடைத்தென விரித்துரைத்துக்கொள்க. நாவல்லரே ற்றமையால் பிறரால் அறியப்படுவதன்றென்றதாயிற்று. முப்பாலியற் கையும் இவற்றினடங்காதது ஒன்றில்லையென்பதும் சொல்லியபடி. (22)

வெள்ளிவீதியார்

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே-செய்யா
வதற்குரியா ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

(ப - ரை) செய்யா மொழிக்கும் - (ஒருவராலே) செய்யப்படாத ழியாகிய வேதத்துக்கும், திருவள்ளுவர் மொழிந்த - திருவள்ளுவரால் ரிச்செய்யப்பட்ட, பொய்யா மொழிக்கும் - (தன்வழியி னொழுகு க்குப் பயன் விளைவிலே) பொய்படாத மொழியாகிய திருக்குறளுக்கும், ருளொன்றே - பொருளொன்றாம், ஆராயின் - ஆராயில், செய்யாவதற் ார் - செய்யப்படாத அவ்வேதமோதுதற்குரியவர், அந்தணரே -

அந்தணரேயாம், ஏனை யிதற்குரியாரல்லாதார் - பொய்படாத இத்திருக்கு
ளோதுதற்கு உரியவரல்லாதார், இல்-(உலகத்தி)லில்லை எ-று.

(வி-ரை) பூர்வவேதத்தை நித்தியமென்பார் மதம்பற்றிச் செய்யாமொழி
யென்றார். அது வடமொழியும் இது தென்மொழியுமாய் நின்று சில வே
பாடுடையனபோற்றோன்றினும், நுண்ணுணர்வா னோக்குவார்க்குக் கருத்து
வேறுபடாமையின் பொருளொன்றேயெனத் தேற்றேகாரம் கொடுத்து
கூறினார். செய்யாமொழி பொய்யாமொழி - அன்மொழித்தொகைகள். இத
குரியரல்லாதா ரில்லென்றதனாலும் பொதுவேதமாதலறிக. அதற்கு
இதற்கும் பொருள் வேறோவென்றும், இதனையோதற் கதிகாரிகளாவா
யாவரோ வென்றும் நிகழ்கின்ற ஐயமொழித்தபடி. (23

மாங்குடி மருதனார்

ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேத்ப் பொருளாய் மிகவிளங்கித்-தீதற்றோ
ருள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(ப-ரை) வள்ளுவர் வாய் மொழி - திருவள்ளுவரது வாயினின்று
தோன்றிய திருக்குறளினது, மாண்பு-மாட்சியைச்சொல்லின் (அது) ஓ
கெளிதாய்-ஓதப்படுதற்கு ஏளிய சொற்களையுடையதாகியும், உணர்தற்கரிதா
அறியப்படுதற்கு அரிய பொருள்களையுடையதாகியும், வேதப்பொருளா
வேதமெனப்படுகின்ற பொருளாகியும், மிக விளங்கி - (அவ்வேதத்தி
மிக விளங்கி, தீதற்றோர் - குற்றமற்றோர்கள், உள்ளுதொறு உள்ளுதொ
நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும், உள்ளம்-(அவர்களுடைய) மனத்
உருக்கும்-கரைக்கும் எ-று.

(வி-ரை) ஓதற்கெளிதாயெனவே நவின்றோர்க்கினிமை நன்மொ
புணர்த்தல்களும், உணர்தற்கரிதாகி யெனவே ஆழமுடைமையும், வே
பொருளாயெனவே விழுமியது பயத்தலும் பிறவுமாகிய அழகுகளினமை
சொல்லப்பட்டதாயிற்று. தீதற்றோர் - பொருளாராய்ச்சிக்கேற்ற நுண்ண
வுடையோர். உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளமுருக்குமெனவே மு
காணப்பட்டதினும் பின் காணப்படும் பொருள் சிறந்தும் விரிந்
தோன்றுதலுடைமை பெறப்பட்டது. இதனது அற்புதமான குணமுடைமை
சிறப்புச் சொல்லியபடி. (2

எறிச்சலூர் மலாடனார்

பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக-வாய
வறத்துப்பா னால்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

(ப-ரை) வள்ளுவனார்-திருவள்ளுவநாயனார், ஆய்ந்து - (அவ்வேதத்தி
கருத்துக்களை) யாராய்ந்து, நூலின் றிறத்துப்பால் - (தம்மாலே செய்

ட) நூலினது திறத்திற்குத் தக்க நன்மையுடைமையால், தேர்ந்து-வையே உரியவையென்று) தெரிந்து, பாயிரம்-பாயிரம், நான்கு-நான்கும், லறம்-இல்லறம், இருபான்-இருபதும், தூயதுறவறம்-தூய்மையையுடைய வறம், பன்மூன்று-பதின்மூன்றும், ஊழ்-ஊழ், ஒன்று-ஒன்று, ஆகவாய-க்கூடியனவாக, நால்வகையா - (பாயிரமுதலிய) நால்வகையுடைத்தாக, த்துப்பால்-அறத்துப்பாலை, வாய்ந்து-பொருந்தி, உரைத்தார்-கூறினார்.

(வி-ரை) நான்கு முதலிய தொகைகளோடு அதிகாரமுடைத்தென்பது டுக. முப்பாற் பொருள்களினும் முத்திக்குக் காரணமாதற் சிறப்புடை ின் தூயதுறவறமென்றார். துப்பு-நன்மை; அது எல்லா வருணாச்சிரமங் க்கும் பொதுவாயிருக்கை. அறப்பாலியலதிகாரத்தொகை சொல்லியபடி.

போக்கியார்

அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
துருவல் லரணிரண்டொன் றொண்கூ-ழிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை.

(ப-ரை) அரசியல்-அரசியல், ஐயைந்து-இருபத்தைந்து, அமைச்சியல்-மச்சியல், ஈரைந்து-பத்து, அரணிரண்டு - அரணிரண்டு, கூழொன்று-ரான்று, படையிருவியல் - படையிரண்டியல், நட்புப் பதினேழ்-நட்புப் னழ், குடிபதின்மூன்று-குடிபதின்மூன்று, எண்பொருள் - எண்ணப் . பொருட்பாலுக்கு, இவை ஏழாம்-இவ்வியல்களேழாம் எ-று.

(வி-ரை) இத்தொகைகளோடும் முன்சொல்லப்பட்டபடியே கூட்டுக. றுக்கு உருத்திட்பம் சிறத்தலின் உருவல்லரணென்றும், பொருளுடை கே ஒளி அமைவதாகலின் ஒண்பொருளென்றும், படைக்குக் கடும் ிற் பின்கொடாத திண்மை உரித்தாகலின் திண்படையென்றும் னார். பிற்காலத்தார் அமைச்சு முதலியவைந்தனையும் அங்கவியலென லாக்கியும் வழங்குப. பொருட்பாலிய லதிகாரத்தொகை சொல்லியபடி.

மோசி கீரனார்

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறாக-மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

(ப-ரை) ஆண்பால் - ஆண்பால், ஏழ்-ஏழ், பெண்பால் - பெண்பால், ண்டு-பன்னிரண்டு, அடுத்தன்பு பூண்பால்-(ஒருவரையொருவர்) அடுத்து பப் பூணுதற்பகுதியுடைய, இருபால்-அவ்விருபால், ஓராறாக-ஆறாக, பாய காமத்தின் பக்கம் - மாட்சியான காமத்துப்பாலினியல்சன், ஒரு ாக மூன்றாக, நாமத்தின்-பெயர்பெற்ற, வள்ளுவனார் - திருவள்ளுவர், கட்டுரைத்தார்-நன்கு சொல்லினார் எ-று.

(வி-ரை) இவற்றையே பொருளிலக்கணத்துக் கமையக் களவி
கற்பியலென இரண்டாக்கப்பட்டன. இத்தொகைகளுக்கும் முன் கூ
பட்டதை கொண்க காமத்துப்பாலிய லதிகாரத்தொகை சொல்லியபடி.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

ஐயாற நாற மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளக்கப்-பொய்யாத
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனெனி
வந்தா மரைமே லயன்.

(ப-ரை) அதிகாரம் - அதிகாரம், நாறமையாற மூன்றுமா - நா
மூப்பத்தமூன்றுக, மெய்யாய - உண்மையாகிய, வேதப்பொருள் - வே
பொருள், பொய்யாத விளக்க-மெய்யாய் விளக்க, அந்தாமரை மேலய
அழகிய தாமரைமலர்மேல் வீற்றிருக்கின்ற நான்முகக்கடவுள், தா
வள்ளுவனெ தான் வள்ளுவனெ, தந்தான்-உலகிற்குத் தந்தான் எ-ற.

(வி-ரை) உலகு இக்கே மக்களை உணர்த்திநின்றது. மெய்யாய வே
பொருள் பொய்யாத விளக்கவெனவே, இதற்குமுன் மெய்யாயபொ
பொய்யாய் மறைத்தும், பொய்யாயபொருள் மெய்யாய்விளங்கியும் இடந்
சொல்லப்பட்டதாயிற்று. அதிகாரத்தொகையோடு நாற்பொருளிய
சொல்லியபடி.

மதுரைத் தமிழ்நாகனார்

எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையாற்-சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் தினை.

(ப-ரை) எல்லாப்பொருளும் (பலவகை நூல்களாலுஞ் சொல்லப்பட்
எல்லாப் பொருள்களும், இதன்பாலுள - இந்நூலகத்தடங்கியிருக்கின்ற
இதன்பாலில்லாத வெப்பொருளும் - இதனிடத்திலில்லாத யாதெ
பொருளும், இல்லை-(எந்நூலகத்தும்) இல்லை; (ஆகலால்) சொல்லாற் பர
பாவால் - சொல்லனவினாலே விரிந்த நூல்களால், பயனென்-பயனெ
வள்ளுவனார் சுரந்தபா - திருவள்ளுவராலே தரப்பட்ட இந்நூலொ
வையத்தினை-மண்ணுலகத்தாருக்குத் தினையாதலையும் எ-ற.

(வி-ரை) எல்லாப்பொருள்களுமாவன: முதல் வழிசார்பென மூவ
பட்ட அறநூல் பொருணூல் இன்பநூல் வீட்டுநூல் என்பவற்
செம்பொருள் ஆக்கப்பொருள் குறிப்புப்பொருளென இம்மூவகை
கொள்ளக்கிடந்த காட்சிப் பொருள்களும் கருத்துப் பொருள்களு
தொழிலும் பண்பும் ஒரோவழிப் பொருளெனற் கேற்புடைமை
அவையும் இவற்றுள் அடங்குமாறறிக. பின்னும் அதனை வலியுறுத்
இதன்பாலில்லாத வெப்பொருளு மில்லையென்றார். சொல்லாற் பர
வெனவே அவை பொருளாற் பரப்பின்மை பெறப்பட்டது. பர்

ாயிரம் நூறாயிரமுதலிய கிரந்தளவவையால் விரிதல். சொல்லாற் பரந்த
களை ஆய்வோர் மலையகழ்ந்து எலி பிடித்தல்போல மிகவருந்திச்
பயன் கொள்ளுதலால் என்பயனென்றார். ஆல்-அசை. பா, வையம்
பெயர்கள். சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடையோர்க்கு விதிவிலக்குக்கண்
றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கண்டு தெளியுமாறு உணர்த்தித்
ாற்றந்தீர்த்தலின் வையத்துணையென்றார். முற்றொருங்குணர விழை
க்கு இஃது இன்றியமையாச் சிறப்பிற்றென்றபடி. (29)

பாரதம்பாடிய பெருந்தேவனார்

எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு-முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

(ப-ரை) பாரதஞ் சீராமகதை மனுப் பண்டைமறை நேர்வன - பாரதம்
ய சீராமகதையையும் மனுஸ்மிருதி பழைய வேதத்தையும் ஒப்பனவா
எப்பொருளும் - எவ்வகைப்பட்ட பொருள்களையும், யாரும் - எவ்வகை
ரும், இயல்பின்-(அவற்றின்) றன்மையோடு, அறிவுற-அறிய, செப்பிய-
ர்க்குச்) சொல்லும்படிக்கு, வள்ளுவர் செப்பவரு-திருவள்ளுவர் சொல்ல
வந்த, முப்பாற்கு - திருக்குறளுக்கு, நிகர் - உவமானமாகத்தக்கது,
ல-ஒன்றில்லை எ-று.

(வி-ரை) மற்று அசை. அறிதற்கரிய வேதாந்தப்பொருளு மென்றற்கு
பாருளுமென்றும், உயர்குலத்தாரேயன்றி ஏனையோருமென்றற்கு யாரு
றும், ஐயந்திரிபின்றி யறியவென்றற்கு இயல்பினறிவுறவென்றும்
வே சுருதி குருவிரண்டுமாமென்றற்குச் செப்பியவென்றும் கூறினார்.
டையென்பது சீராமகதைக்குங் கூட்டுக. கதாரூபமாயிருந்து பாரத
யணமெனவும், விதிரூபமாயிருந்து சுருதி ஸ்மிருதியெனவும் கூட்டிச்
லப்படுதலால் உவமான உவமேயங்களாதலறிக. எப்பொருளும் யாரு
பி னறிவுறச்செப்புதல் வேதத்திற்கின்மையால் முன் முப்பாலின்மிக்க
யென்ற அதனாற் பெறப்பட்ட வேதத்தினொப்புமையை மறுத்தபடி. ()

உருத்திரசன்மகண்ணர்

மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்முலை யொண்பால்-பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு.

ப-ரை) மணற்கிளைக்க-மணலைத் தோண்டுந்தோறும், நீரூறும்-நீர்பெரு
மைந்தர்கள் வாய்வைத்துண - புதல்வர்கள் வாய்வைத்து உண்ணுந்
ம், தாய்முலை - தாயினது முலைக்கண், ஒண்பால் சுரக்கும்-நல்லபால்
ரும்; (அவைபோல) பிணக்கிலா வாய்மொழி - பிணங்குதற்கு ஏது
த வாய்மைச்சொல்லையுடைய, வள்ளுவர்முப்பால் - திருவள்ளுவரது

நிருக்குறஃ, மூய்தொறும்-மூாபுந்தோறும், மதிப்புலவோர்க்கு-அறிவுடை
புலவர்க்கு, அறிவூறும்-அறிவு வளரும் எ-று.

(வி-ரை) கற்பிதமாகிய சாதிசமயங்களின் மானம்பற்றி உள்ளதை
இல்லதாகவும், இல்லதை உள்ளதாகவும், சிறிதைப் பெரிதாகவும், பெரிதை
சிறிதாகவும், நீயதை கல்லதாகவும், கல்லதைத் நீயதாகவும், புனைந்த பிற
பிணக்கும்படி சொல்லப்பட்டதல்லாமையால் பிணக்கிலா வாய்மொழி
யென்றார். மதிப்புலவோர்க் கறிவூறுமெனவே, அவர் அவ்வறிவுகொண்
பிறர்க்கெல்லாம் விதிவிலக்குகோக் கற்பித்தல் வேண்டுமென்றதாயிற்
றினைச் சிலகாற் பயிறலினமையாத பலகாலும் பயிற்சி செயல் வேண்
மென்றபடி. (81)

பெருஞ்சித்திரனார்

எதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினு
லோதிய வொண்பொரு ளெல்லா-முரைத்ததனுற்
ருதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக்க ன.

(ப-ரை) தாதவிழ் தார்மாற-பொடிபொடு விரிந்த பூமாலையையுடை
பாண்டியராஜனே! எதமில் வள்ளுவர் - குற்றமில்லாத திருவள்ளுவர், இ
குறள் வெண்பாவினுல் - இனிய குறள் வெண்பாக்களாலே, ஓதிய - கான்
வேதக்களாலுஞ் சொல்லப்பட்ட, ஒண்பொருளெல்லாம் - ஒள்ளிய பொரு
களையெல்லாம், உரைத்ததனுல்-சொல்லினமையால், மேதக்க - மேம்பா
டக்குத் தக்கவை, தாமே - அக்குறன் வெண்பாக்களோ, தமைப் பய
வேதமே - முதனூலாய் நின்ற அவற்றைப் பயந்த வேதங்களோ
சொல்வாயாக எ-று.

(வி-ரை) தாம் தம்மை எனப்பட்டவை அவை அவற்றை என்னு
பொருளைத் தந்தின்றன. ஏகாரம் இரண்டும் விளி. பிறநூலாசிரியரு
களெல்லாம் அவரெதிரிகளாலே மறுக்கப்பட்டுவருங் குற்றம்போல்வது இவர்க்
இல்லையென்றற்கு எதமில் வள்ளுவரென்றும், தாங்குறியவாய் நின்
கற்போர்க்கு ஒருதலம் விளையாமைபற்றி இன்குறளென்றும், உணர்வுட
யோராலே விரும்பப்பட்ட கற்குணமுடைமைபற்றி ஒண்பொருளென்
கூறினர். நூலாசிரியர்க்கும், நூலுக்கும், நூலுதலிய பொருளுக்கும், தகு
தோன்றச் சொல்லப்பட்ட விசேடகுணங்களாலே இவ்வேதம் அவ்வே
நிலுஞ் சிறப்புடைமை குறிப்பித்தபடி. (3

நரிவெரூஉத்தலையார்

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநான்-மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

(ப-ரை) இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கும்-இன்பமுதலி
நான்கு பொருளியல்புகளையும், மன்பதைகட்கு - மக்கட்பாப்புக்கு, முன்

அக்காலத்தில், அறியச்சொன்ன-அறியும்வண்ணஞ் சொல்லப்பட்ட, முது மொழிநூல்-பழமொழி வேதமானது, உள்ளவரிதென்று - ஓதியுணரப்படுதற் கரிதென்று, வள்ளுவர் - திருவள்ளுவர், அவை - அவற்றை, உலகங்கொள்ள - உலகத்தார் எளிதினுணரும்படி, குறள் - திருக்குறளை, மொழிந்தார் - சொல்லினார் எ-று.

(வி - ரை) முன்பறியவெனவே, உற்சர்ப்பிணியாகலின், அக்காலத் தோர்க்கு உணர்தற்கேற்ற ஆயுணீட்சியும் உணர்வுவலியும் இருந்தனவென்ப தூஉம், அவசர்ப்பிணியாகலின இக்காலததோர்க்கு அவையிலவென்பதூஉம் பெறப்பட்டன. இவ்விரண்டும் அவாவறுத்தன முதற்பாட்டுரையிற் காண்க. தேயவழக்கிற்படாததும் வருந்திக் கற்போர்க்குமாததிரம் புலப்படுவதுமாய் எல்லாமொழிகட்கும் முற்பட்டுக் கடவுண்மொழியாய் நிற்றலின் முதுமொழி யென்றார். அறமுதலிய நான்கும் பிரிவுபட்டுத் தோன்றாமையை உடைத் தாகலின் உள்ளவரிதாயிற்று. பழையவேதம் உளதாகவும் வேறிது சொல்லு தற்குக் காரணம் உணர்த்தியபடி. (33)

மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச செபப-னிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்.

(ப-ரை) பூமேல் - பூவுலகின்கண்ணே, புலவர் திருவள்ளுவரன்றி - புலவரெனத திருவள்ளுவரை யன்றி, சிலர் புலவரெனச் செபபல் - வேறு சிலரையும் புலவரென்று சொல்லுதல, மாலை - மாலையென்பது, நிலவு பிறங் கொளி மாலைக்கும் பெயர் - நிலவால் விளங்குகின்ற அந்திககும் பெயராக, மற்றும்-இவையன்றியும், கறங்கிருண் மாலைககும் பெயர் - சூழ்கின்ற விருளை யுடைய அந்திக்கும் பெயராக, (செப்பல்)-சொல்லுதல்போலும் எ-று.

(வி-ரை) செப்பலென்றது பின்னுங் கூட்டப்பட்டது. புலமையாவது பல வேறுவகைப்பட்ட நூலுணர்ச்சிகளையெல்லாம் ஒருங்கே கொண்ட பேரறிவுடைமையாம். உயர்வொப்பற்ற இவரது புலமையைக்குறித்து நோக் குங்கால் ஏனையோர் புலமை புலமையன்றாய் முடிதலின் இவவாறு கூறினார். புலவரென்பது நாயனார்க்கே காரணப்பெயரா மென்றபடி. (34)

மதுரையறுவைவாணிகன் இளவேட்டனார்

இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மனமகிழ-வனபொழியா
துள்ளி யுணர வுரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்தது.

(ப-ரை) இன்பமுந் துன்பமு மென்னுமிவை - (பின்வரக்கடவனவாய) சுகமுந் துக்கமு மென்னப்பட்ட இவற்றினுடைய, இரண்டும் - இருவகைக் காரணங்களையும், உள்ளியுணர-ஆராய்ந்தறியவும், அன்பொழியாது-(தம்மே)

லன்பு நீங்காமல், மனமகிழ - உள்ளங் களிகூரவும், மன்பதைக்கெல்லாம்-மக்கட் பரப்புக்கெல்லாம், ஓது சீர்வள்ளுவர் - புகழப்படுஞ் சீரையுடைய திருவள்ளுவர், வாயுறை வாழ்த்து-வாயுறை வாழ்த்தாக, உரைத்தார் - திருக்குறளைச் சொல்லினார் எ-று.

(வி-ரை) இன்பத்தின்காரணம் விதிக்குறளாலும், துன்பத்தின்காரணம் விலக்குக்குறளாலும் சொல்லப்பட்டன. முன்பறிதற்குப் பயன் அவற்றைச் செய்தலும் தவிர்தலுமாம். வேண்டுவனவெல்லாந் தொகுத்துணர்தலின் மனமகிழ்தல் சொல்லப்பட்டது. அவ்வேதம் போலாது பலர்க்கும் உபயோகியாகச் சொல்லலின் மன்பதைக்கெல்லாமென்றார். வாயுறைவாழ்த்தினியல்பு. "வாயுரை வாழ்த்தே வயங்க நாடின், வேம்புங் கடுவும் போல வெஞ்சொற், றாங்குத லின்றி வழிநனி பயக்குமென், றோம்படைக் கிளவியின் வாயுறுத்தற்றே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக. எதிர்கால விளைவுணர்ச்சி பயத்தல் சொல்லியபடி. (35)

கவிசாகரப் பெருந்தேவனார்

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனத
மாவிற் கருமுனியா யானைக்-கமரரும்ப
றேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

(ப-ரை) பூவிற்குத் தாமரை-மலர்களுக்குள்ளே தாமரைமலரும், பொன்னுக்குச் சாம்புனதம் - பொன்களுக்குள்ளே சாம்புனதப் பொன்னும், ஆவிற் கருமுனி ஆ-பசுக்களுக்குள்ளே காமதேனுவும், யானைக்கமரரும்பல் - யானைகளுக்குள்ளே ஐராவதமும், தேவிற்றிருமாலென - தேவர்களுக்குள்ளே திருமாலும்போல, பாவிற்கு வள்ளுவர் வெண்பா - நூல்களுக்குள்ளே திருவள்ளுவரது குறள்வெண்பா, சிறந்தது-சிறப்புடையது, என்ப - என்று (அறிவுடையோர்) சொல்லுவர் எ-று.

(வி-ரை) ஏ அசை. பா-ஆகுபெயர். பொன் ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்புனதம் என நால்வகைப்படும். காமதேனு வசிட்டமுனியிடத்துள்ளதாகலின் அருமுனியா வென்றார். அமரரும்பலென்பது விகாரப்பட்டு நின்றது. உவமானமுகத்தால் இஃது பலநூல்களினும் சிறந்து நிற்கின்ற மாட்சிமை சொல்லியபடி. (36)

மதுரைப் பெருமருதனார்

அறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய-முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனா
ரோதவழுக் கற்ற துலகு.

(ப-ரை) அறத்திறம்-அறத்தின் கூறுபாடு, முப்பத்தெட்டால் - முப்பத்தெட்டு அதிகாரங்களாலும், பொருட்டிறம் - பொருட்கூறுபாடு, எழுபதால்-எழுபது அதிகாரங்களாலும், இன்பத்திற - காமத்தின் கூறுபாடும், இருபத்

தைத்தால்-இருபத்தைந்து அதிகாரங்களாலும், தெளிய-தெளியும்பொருட்டு, முறைமையால் - (காரண காரிய) வொழுங்கால், வேதவிழுப்பொருளை-வேதத்தி னுயர்வாகிய பொருளை, வெண்குறளால் - குறள் வெண்பாக்களால், வள்ளுவனார்-திருவள்ளுவர், ஓசை-ஒசையால், உலகு உலகமானது, வழுக்கற்றது-வழுவுதலினின்றும் நீங்கிற்று எ-று.

(வி-ரை) நிறமும் ஆகுபெயர். உயர்வாகிய பொருள் கருமகாண்டம் பிரமகாண்ட மிரண்டினுள்ளும் நிறைந்தபொருள். வழுக்குதல் - விதியை விலக்கென்றும், விலக்கை விதியென்றும் கோடல். உலகு மக்களை யுணர்த்தினின்றது. இணிவுபற்றி அற்றதென இறந்தகாலத் தாற் கூறினர். முன்னதின் வேறுபட்ட மூப்பால்களி னதிகாரத் தொகை யோடு உலகிற்கு விளையும் நன்மை சொல்லியபடி. (37)

கோவூர் கிழார்

அறமுத லன்கு மகலிடத்தோ செல்லாங்
நிறமுறத் தேர்ந்த தெளிய-குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே சொல்வாதே
முன்னை முதுமொழிவார் மொழி.

(ப-ரை) அறமுதலன்கும்-அறம் பொருள் இன்பம் வீடு என நான்கும், அகலிடத்தோசெல்லாம் - மண்ணுலகத்தினுள்ளோசெல்லாம், நிறமுறத்தேர்ந்த-வகைப்பட அறிந்த, தெளிய - கலக்கந்தீர, குறள் வெண்பாப்பன்னிய-குறள் வெண்பாக்களாலே சொல்லப்பட்ட, வள்ளுவனார் - நாயனாரது, பான்முறை - முப்பால்களையுடைய புத்தகத்தின்கண்ணே, முன்னை முதுமொழிவார்-முற்காலத்துள்ள பெரியோரது நூல்களுக்கு, நேரொவ்வாது-சேர்தல் பொருந்தாத எ-று.

(வி-ரை) மொழி-ஆகுபெயர். பெரியோராவார்-வடமொழியிலும் தென் மொழியிலும், பிறமொழிகளிலும், நூல்செய்த முனிவரும், புலவரும், பிறரும். அந்நூல்களாவன: மனு முதலியோராலே செய்யப்பட்ட அறநூல் முதலியன இதன் புத்தகத்தில் முன் நூல்களிலொன்றும் சேர்க்கப்படுதற்குத் தகுவதன்றென்று சொல்லியபடி. (38)

உறையூர் முதுகூற்றனார்

தேவிற் சிறந்த திருவள்ளுவர் குறள்வெண்
பாவிற் சிறந்திடுமூப் பால்பகரார்-காவிற்
குயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு.

(ப-ரை) தேவிற் சிறந்த திருவள்ளுவர் - தெய்வத்தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது, குறள்வெண்பாவிற் சிறந்திட - குறள் வெண்பாக்களோடு கூடிச் சிறந்த தோன்றுகின்ற, மூப்பால் - மூப்பால்களையும், பகரார் - ஓதாரது, காவிற்கு - வாக்கிற்கு, உயலில்லை-(இன்சொற்சொல்லி) வாழ்தலுண்டாகாது, சொற்சுவை யோர்வில்லை - (மனத்திற்குச்) சொற்களின் சுவையை அறிதலுண்டாகாது, மற்றும் - இவையன்றியும், செயலில்லை - (காயத்திற்கு) நல்ல செயலுண்டாகாது, என்னுந் திரு-என்று நினைத்துத் திருமகள் அவரிடத்துச் சேராள் எ-று.

(வி-கை) கைகோர்த்தற்கும் செயலுக்கும் உரிய மனமும் காயமும் உருவிக்கப்பட்டன. திருமகள் சோமையாகிய காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஒளார்க்குள வாகாமை உறவே, ஒதலோர்க்கு இலையுள வாகலின், வாய்மைக்குக் கடுஞ்சொல், பொய், கோள், புறங்கூறல்களும், மனத்திற்குப் பிறனில்விழைதல், பிறன்பொருள்விழைதல், பிறன்பொருட்குக்கேடெண்ணல், பிறவுயிர்க்கிறதியெண்ணல்களும், காயத்திற்குப் பிறன்மனை புணர்தல், உயிர்க்கொலைசெய்தல், பழியுணுணல், பிறர்பொருள் கவர்தல்களும், ஆகிய குற்றங்களெல்லாம் நீக்குமென்பதை பெறப்பட்டது. அறவின்பங்கட்குக் காரணமாதற் சிறப்புடைய பொருட்பேறு இஃதோதலின் (39).
உளதாமென்றபடி.

இழிகட்பெருங்கண்ணனார்

இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற-மும்மையின்
வீடவற்றி னுன்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடின னின்குறள்வெண் பா.

(ப-கை) இம்மை மறுமை யிரண்டும் - (இகபரங்கட்காவன) விரண்டையும், எழுமைக்கும் - (விணைப்பயன்றொடர்தற்குரிய) எழுபிறப்பிற்குமாக, செம்மைநெறியின் - செவ்வையான வழியால், தெளிவுபெற - (யாவரும்) தெளிதல்பெறவும், மும்மையின் - (அறம் பொருளின்பமென்னும்) மூப்பால்களுன், அவற்றின் - அம்மூப்பாற் பொருள்களோடு, வீடு-வீடுமாகிய, நான்கின் விதி - நாற்பொருள்களது விதிகளும், வழங்க - வழங்கவும், வள்ளுவனார்-திருவள்ளுவர், இன்குறள் வெண்பா-இனிய குறள்வெண்பாவை, பாடினர்-பாடினர் எ-று.

(வி-கை) செவ்வையானவழி விதியும் பத்தியும் ஞானமும் நோயாளிக்கு மருந்தும் அநுபானமும் பத்தியமும்போல் ஒன்றற்கொன்று மூணுதி கூடி நிற்கும் வழி. வீட்டுவிதி அறவறத்திற்காண்க. இம்மை மறுமை வீடு மூன்றம் பயக்குமாறு சொல்லியபடி. (40)

செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார்

ஆவனவு மாகா தனவு மறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்-தேவர்
திருவள்ளுவர் தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

(ப-கை) (மக்களுக்கு) ஆவனவும் - ஆவனவற்றையும், ஆகாதனவும்-ஆகாதவற்றையும், அறிவுடையார் யாவரும் - அறிவுடையார் யாவரும், எடுத்தியம்ப - (இனி இதிலிருந்து) எடுத்துச்சொல்லுதற்கு, வல்லார் - வல்லவராவார்; (ஆதலால்) தேவர் திருவள்ளுவர் - தேவராகிய திருவள்ளுவராலே, செப்பியவே - சொல்லப்பட்டவற்றையே, பொருவி லொழுக்கம் பூண்டார்-ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர், செய்வார் - செய்வார் எ-று.

(வி-கை) இக்ஙனங் கூறவே அவ்வேதத்திலிருந்து உள்ளவாறெடுத்துச் சொல்லுதல் அறிவுடையார்க்கு முடியாமையால், ஒழுக்கம் பூண்டார்க்கு அதன்கண்ணே சொல்லப்பட்டபடி வழுவாமற்செய்தல் கூடாமை காட்டப்பட்டது. தாம், உம் அசைகள். ஆவன - இன்பத்தைத் தருவன. ஆகாதன-

தன்பத்தைத் தருவன. ஒப்பில்லாத வொழுக்கம் - கொல்லாமை முதலியன. போதகாசிரியருக்கும் கேட்டொழுகுவோருக்கும் உரும் கன்மை சொல்லியபடி. (41)

செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்

வேதப் பொருளை விரகால் விரித்தலிலோ
சோதத் தமிழா லுரைசெய்தா-ராதலா
லுள்ளு ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

(ப-ரை) வேதப்பொருளை - வேதப்பொருளை, உலகோசோத-உலகத்தா சோத, விரகால்-உபாயத்தால், விரித்தத் தமிழாலுரைசெய்தார்-விரித்தத் தமிழினாலே உரைசெய்தார்; ஆதலால் - ஆதலால், உள்ளுருள்ளும் பொரு செல்லாம் - நினைப்பவர் நினைக்கும் பொருள்களெல்லாம், வள்ளுவர் வாய்மொழி மாட்டு - திருவள்ளுவர் திருவாயிற் பிறந்த திருக்குறளின் கண்ணே, உண்டென்ப-உண்டென்று (அறிவுடையோர்) சொல்லுவர் எ-று.

(வி-ரை) உபாயத்தால் விரித்தல்-சொற்சுருக்கத்தால் ஒதற்கெளிதென மனவெழுச்சியுண்டாக்கிக் கற்போரது அறிவளவிற்கேற்கப் பொருளளவு விரியவைத்தல். நினைக்கப்படும் பொருள்களெல்லாம் இக்கண்ணே இக் காரணத்தால் தோன்றுகின்றனவென்று கூறியபடி. (42)

வண்ணக்கஞ் சாத்தனார்

தூரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரிய தென்றுரைச் செப்பரிதா-லாரியம்
வேத முடைத்தத் தமிழ்திரு வள்ளுவனு
சோத குறட்பா வுடைத்து.

(ப-ரை) தூரியமுஞ் செந்தமிழு மாராய்ந்த - வடமொழியையும் தென் மொழியையு மாராய்ந்த, இதனினிது சீரியதென்று - இதைக்காட்டிலும் இது சிறப்புடைத்தென்று, ஒன்றைச்செப்பரிது - ஒன்றைத் தெரிந்த சொல்லுதல்கூடாது, தூரியம்-வடமொழி, வேதமுடைத்து-வேதமுடைத்து, தமிழ்-தமிழ், திருவள்ளுவனுசோத-திருவள்ளுவராயனார் சொல்லிய குறட்பா வுடைத்து ஆதலால் எ-று.

(வி-ரை) தூல்-அசை. வடமொழியும் தென்மொழியும் பிறமொழிகள் போலாது, பாணினியாரும் அகத்தியனாரு முதலாயின முனிவர்களாலே செய்யப்பட்ட இலக்கணநூல்களாலே சீர்திருந்தி நிற்றன் முதலிய குணக் ளுடைமையாலும், அது பிராகிருத முதலியவற்றக்குப்போல் இது தூரிய முதலியவற்றக்கு முதலாய் நிற்றலாலும், ஒன்றற்கொன்று குறைபாடுடைத் தன்றேனும், வேதமுடைமைபற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு தென்மொழிக்கண்ணே நிருக்குறன் உண்டாதலின் இனிமில்லையென்றற்கு இதனினிது சீரியதென்றுரைச் செப்பரிதென்றார். இத்திருக்குறளாலே வடமொழியோடு தென்மொழிக்கு ஒப்புமைநிறைவு சொல்லியபடி. (43)

களத்தூர்கிழார்

ஒருவ நிருகுறளே மும்பாலி னைதுக்
கருமு முதலன்குஞ் சாலு-மருமறைக

ஓங்குஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புக்கி மொழிந்த பொருள்.

(ப-ரை) அருமறைகளோங்கும் - (இருக்குமுதற் பாரதமீறாகிய) அரிய வேதங்களோங்கும், சமயநூலாறும்-(அவ்வேதத்தின் வழிப்பட்ட) சமயநூல்க ளாறும், நம் வள்ளுவர் - நம்முடைய திருவள்ளுவரால், புக்கிமொழிந்த பொருள் - (உலகத்தார்க்குப்) புதியதாகச் சொல்லப்பட்ட நூலிலடக்கும், (முதலால்) ஒருவர் - ஒருவர், இருகுறளே - (ஒருவிகற்பமும் இருவிகற்பமு மாகிய) இருவகைக் குறள்களாலுமே, மூப்பாலின் - மூப்பால்களில், ஓங்கும்- அந்தியயனஞ்செய்த அறியப்படுகின்ற, தருமமுதலான்கும்-அறமுதலிய நாற் பொருள்களும், சாலும்-(அவருக்குப்) போதும் எ-று.

(வி-ரை) ஒருவனுக்கே ஐந்தும் ஒதியுணர முடிவுபோகாத வேற வேறான அதிகாரிகளுடைமைபற்றி அருமறைகளோங்குமென்றார். சமய நூலாறும் ஒன்றேபொருளென்னும் பாட்டுரையிற் காண்க. நமக்கெல்லாம் அறிவொழுக்கங்கொளுத்தி நல்வழிப்படுத்த வந்த பரமாசாரியர் இவரே யென்று மூர்மைதோன்றற்கு நம் வள்ளுவனாரென்றார். மறைகளோங்குஞ் சமயநூலாறும் நம் வள்ளுவனார் புக்கிமொழிந்த பொருளெனலால், அவை பலவற்றினும் வேறுவேற வகைப்பட்டுச் சிறந்தநின்ற கருத்துக்களெல்லாம் இவ்வொருநூற்கண்ணே அடங்கிநிற்கின்றமை சொல்லப்பட்டதாயிற்ற. பொருள்-ஆகுபெயர். ஒருவனெனப் பொதுப்படக்கூறலால் இதனை ஓத தற்குப் பெண்பாலாருக்கும் அதிகாரமுண்டென்பது கொள்ளப்பட்டது. இவ்வொரு நூலோதிபுணர்ந்தோர் அருமறைகளோங்குஞ் சமயநூலாறும் ஓதி புணர்ந்தோராவரென்றபடி. (44)

நச்சுமனார்

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ண-மிழுக்கின்றி
யென்றெவர் செய்தன வெல்லா மியம்பின
கின்றிவ ரின்குறள்வெண் பா.

(ப-ரை) எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு வழுக்கில் வனப்பணி வண்ணம்-எழுத்தமுதல் வண்ணமீறாகச் சொல்லப்பட்ட இவற்றுள், இழுக் கின்றி-வழுவுதலில்லாமல், என்றெவர்செய்தன-எக்காலத்தில் எவரால் எவை செய்யப்பட்டன, எல்லாம்-(அவை) யெல்லாம், இன்றிவரின்குறள் வெண்பா- இக்காலத்து இத்திருவள்ளுவராலே செய்யப்பட்ட இவ்வினிய குறள் வெண்பாக்களில், இயம்பின-சொல்லப்பட்டன எ-று.

(வி-ரை) வனப்பு, அம்மை, அழகு, தொன்மை, தோல், விருத்தி, இயைபு, புலன், இழைபு, அணி, சொல்லணி, பொருளணி, ஒலியணி. வண்ணம் குறிலகவற்றுக்கிசைவண்ண முதலியன. ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு பாவலர் ஒவ்வொரு குணத்தினாலே சிறந்த விளங்க நூல்செய்தனர், இவரோ வெனின் எல்லாக்குணங்களாலும் நிறைந்து சிறந்த விளங்கச்செய்தமையின் இவ்வாறு கூறினர். இதன் பாக்களின் சிறப்புச் சொல்லியபடி. (45)

அக்காரக்கனி நச்சுமனார்

கலிநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணி
னிலிநிரம்பு நீர்மைத் தெனினுங்-தொலிவிலா

வானூர் மதியத் தனைக்குண்டோ வள்ளுவர்மூப்
பானூ னயத்தின் பயன்.

(ப-ரை) (மதியமும் மூப்பானூலும்) கலை - பதினாறு கலைகளாலும் அறுபத்துநாலு கலைகளாலும், நிரம்பி-நிறைந்து, கண்டற்கு-கோக்குதற்கு, (ஆராய்ச்சிசெய்தற்கு) இனிதாகி - இனிதாகி, கண்ணினிலை - முகக்கண்ணினிலையில், (அகக்கண்ணினிலையில்) நிரம்பு நிரம்புகின்ற, நிர்மைதனினும்- தண்மையுடைத்தாயினும், (குணமுடைத்தாயினும்) வள்ளுவர் மூப்பானூல்- திருவள்ளுவரது மூப்பானூலினது, நயத்த - நயத்தால் விளைவதாகிய, இன் பயன்-இனிய பயனை, தொலைவிலாவானூர் மதியத்தனக்கு-ஒழிவின்றி ஆகாசத்தின்கண்ணே நிறைகின்ற மதியினிடத்து, உண்டோ-உண்டோ எ-று.

(வி-ரை) மதியத்தனக்கென்றது வேற்றுமைமயக்கம். ஓகாரம் - எதிர் மறை. ஆகாரமாகக் கொள்ளுதற்கு எற்புடைத்தல்லாத வானை ஆகாரமாகக் கோடலின் இழிவுதோன்றத் தொலைவிலாவானூர்மதியமென்றார். நயம்- மறப்படாமை, மழுங்காமை, குறைவுறாமை முதலியன. பயன் - இம்மை மறுமை வீட்டின்பங்கள். ஒப்புமை சொல்லுதற்கு நூல்களில் ஒன்றும் இன்மையால், எனைப்பொருள் பலவற்றினுஞ் சிறந்த மதியையாயினும் சொல்லுதலெனப் புகின் அதுவும் இதனால் தருவதன்றென்றபடி. (46)

நப்பாலத்தனார்

அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு-குறும்பாவா
வள்ளுவனு சேற்றினார் வையத்து வாழ்வார்க
ருள்ளிரு ணீக்கும் விளக்கு.

(ப-ரை) அறம்-தருமம், தகளி - அகலும், பொருள் - பொருள், திரி- நிரியும், இன்பு-காமம், நெய்-நெய்யும், செஞ்சொல்-செவ்வியசொல், தீ- நெருப்பும், குறும்பா-குறட்பா, தண்டு-தண்டும், ஆ - ஆக, வள்ளுவனார்- திருவள்ளுவர் வையத்து வாழ்வார்கள் - பூமியின்கண் வாழ்வோராகி, உள்ளிருள்-அகத்திருளை, நீக்கும்-ஒழிப்பதாகிய, விளக்கு-விளக்கு, ஏற்றினார்- ஏற்றினர் எ-று.

(வி-ரை) ஊன்றல்-மேம்படுதல். அகத்திருள்-அஞ்ஞானம். நீச்சுடர் தகளி முதலியவற்றோடுகூடிப் புறத்திருளை எப்படியோ அப்படி காயஜாதி திருவாயிற் பிறந்த செஞ்சொல் அறமுதலியவற்றோடுகூடி அகத்திருளைக் கெடுத்தலின் இங்ஙனம் உருவகஞ்செயலாயிற்று. மனையகத்தேற்றப்படுகிற விளக்கு அம்மனையகத்துள்ளார்க்கு மாத்திரமே உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருளைக் கெடுக்கவல்ல தன்மையாலும், இம்மை உலகத்து வாழ்வோர் எல்லார்க்கும் உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருள் கெடுத்தலாலும், அதனின் மிக பலகோடி மடங்கு மிக்குச் சிறந்து நிற்கின்றமை உணர்த்தியபடி. (47)

குலபதிநாயனார்

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
கள்ளற் கரியவிரு டள்ளுதலால்-வள்ளுவனார்
வெள்ளாக் குறட்பாவும் வெக்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தருப்குணத்தைக் கொண்டு.

(ப-ரை) உள்ளக் கமல மலர்த்தி-நெஞ்சமாகிய தாமரைமலரை மலர்த்தி, உளத்தின்ன-(மக்களை) அகத்திலுள்ள, தன்னற்கரிய விருள் - (பிறிதொன்ற னூலே) நீக்கப்படாத அஞ்ஞானவிருளை, தள்ளுதலால் - நீக்குதலால், வள்ளு வனார் வெள்ளைக் குறட்பாவும் - திருவள்ளுவரது குறள்வெண்பாவும், வெங் கதிரும் - (புறத்தைத் தாமரைமலரை மலர்த்திப் புறத்திருளை நீக்குகின்ற) சூரியனும், குணத்தைக்கொண்டு - அச்செய்கையைக்கொண்டு, ஒக்குமெனக் கொள்ளத்தகும்-ஒக்குமென்ற கொள்ளத்தகும் எ-று.

(வி-ரை) செயலும் தொழிற் பண்பெனப்படுதலின் குணமெனப்பட்டது. அது மலர்த்தலும் தள்ளுதலுமாம். குணத்தைக் கொண்டெனவே செயப்படுபொருளைக்கொண்டு ஒக்குமெனக் கொள்ளத்தகாதென்றதாயிற்று. உலகுக்கெல்லாம் பேரொளியாகிய சூரியனும் இதற்கு ஒருபுடையொப்பா மென்றபடி. (48)

தேனீக்குடிக் கீரனார்

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளக்கினவே-மூப்பாலிற்
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

(ப-ரை) தெய்வத் திருவள்ளுவர்-தெய்வத்தன்மையையுடைய திருவள் ளுவர், மூப்பாலின்-மூன்று பால்களுடையதாக, செப்பியகுறளால்-சொல்லப் பட்ட குறளாலே கேட்டறிதலால், வையத்து வாழ்வார் மனத்து - பூமியில் வாழ்வார் மனதில், பொய்ப்பால - பொய்யின் பகுதியிற் பட்டவையெல்லாம், பொய்யேயாய்ப் போயின-பொய்யாய்ப்போயின, பொய்யல்லாத - பொய்யல் லாத, மெய்ப்பால - மெய்யின்பகுதியிற் பட்டவையெல்லாம், மெய்யாய் விளக்கின-மெய்யேயாய் விளக்கின எ-று.

(வி-ரை) குறளாற் பொய்ப்பால பொய்யேயாய்ப்போயின, மெய்ப்பால மெய்யேயாய் விளக்கின எனவே, இதற்கு முன்னெல்லாம் உண்மை தெளி யப்படாமையின், பொய்ப்பால மெய்ப்பாலபோன்மேற் கொள்ளப்பட்டும், மெய்ப்பால பொய்ப்பாலபோற் கைவிடப்பட்டும் மயங்கிக்கிடக்தன வென்ற தாயிற்று. பொய்யேயாய்ப்போதல் - வாய்மையெனப்படுவதென்றற் றொடக் கத்துத் திருக்குறள்களாலும், மெய்யாய்விளக்கல், பொய்யாமையும் வாய்மை யிடத்தவென்றற் றொடக்கத்துத் திருக்குறள்களாலும் அறிக. இதன் மெய் (49) புணர்வு பயத்தற்சிறப்புச் சொல்லியபடி.

கொடிஞாழன் மாணிபூதனர்.

அறனறிந்தே மன்ற பொருளறிந்தே மின்பின்
றிறனறிந்தே மம்வீடு தெளிந்தே-மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.

(ப-ரை) மறனெறிந்த வாளார் நெடுமாற - பகைவரை யெறிந்த வாட் படைதங்கிய வீரரேக்கும் பாண்டியனே!, வள்ளுவனார் தம்வாயால்-திருவள் ளுவர் வாக்கால், கேளாதனவெல்லாம் - (இதற்குமுன்) கேட்கப்பட் டில்லா தனவெல்லாம், கேட்டு-(இப்போது) கேட்டு, அறன்றிறனறிந்தேம்-தரும நின் றிறத்தை யறிந்தேம், பொருட்டிற னறிந்தேம் - பொருளின் றிறத்தை அறிந்தேம், இன்பின் றிறனறிந்தேம் - இன்பத்தின் றிறத்தை அறிந்தேம், வீட்டுத்திறன் தெளிந்தேம்-வீட்டின் றிறத்தை அறிந்தேம் எ-று.

(வி-ரை) நிறன் - கூறுபாடு; அது அறமுதலியவற்றோடுங் கூட்டப் பட்டது. மறன்-ஏகபெயர். கௌதமன பிறநூலாசிரியர்க்கெல்லாம் அறிந்த சொல்லுதற்கேட்டாதிருந்த அறமுதலியவற்றினுட்பங்கள். இம்மை மறுமை யாதொன்றிலும் குறைவில்லையென்றபடி. (50)

கவுணியனூர்

சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து-முந்திய
நன்னெறி காமறிய நாப்புலமை வள்ளுவனூர்
பன்னிய வின்குறள் வெண்பா.

(ப-ரை) முந்திய நன்னெறி காமறிய - முற்பட்டதாகிய நல்லவழியை யாமறிய, நாப்புலமை வள்ளுவனூர்-நாவால் விளக்குகின்ற புலமையையுடைய திருவள்ளுவனூரால், பன்னிய-சொல்லப்பட்ட, இன்குறள் வெண்பா-இனிய குறள் வெண்பாக்கள், சிந்தைக்கினிய-(நினைத்தால்) மனத்திற்கின்பஞ் செய் வன, செவிக்கினிய-(கேட்டால்) காதுக்கு இன்பஞ்செய்வன, வாய்க்கினிய-(சொல்லுதலால்) வாய்க்கு இன்பஞ்செய்வன, வந்த விருவினைக்கு-தொடர்ந்துவரு கின்ற இருவினைகளாகிய நோய்களுக்கு, மாமருந்த-பெரிய மருந்துகளாவன.

(வி-ரை) குறட்பாவை மருந்தென்றமைக்கு ஏற்ற வினையை நோயென் றமையால், ஏகதேசரூபகம். கல்வினையும் பிறவிக்கு ஏதுவாகலால் இரு வினையென்றார். முற்பட்ட கல்வழி-நன்மக்களுக்கு அநுகியாயமைத்துள்ளது. ஏது சமயத்தாரது பலவகைப்பட்ட கற்பனையினுலே மறைபட்டு நின்றமை யின் நாமறியவென்றார். இக்நூலின் பாக்களைச் சிந்தித்தன் முதலியன செய்யுங்காலும் சொற்பொருணயங்களாலே இன்பம் விளைத்தல் தெய்வத் தன்மையால் வினைத்தியரும் ஒழிக்குமென்றபடி. (51)

மதுரைப்பாலாசிரியனூர்

வெள்ளி வியாழம் விளக்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத்-தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா வகிலத்தோ
ருள்ளிரு ணீக்கு மொளி.

(ப-ரை) வெள்ளி வியாழம் விளக்கிரவி வெண்டிங்கள்-சுக்கிரன் சுரகுரு ரியன் சந்திரன் எனப்படுகின்ற இவ்வொளிகள், புறவிருளை - புறத்திருளை, பொள்ளென நீக்கும் - விரைவிலே நீக்கும்; (ஆதலின் புறவிருணீக்குதற்கு உண்டாகிய ஒளிகளாம்) தெள்ளிய - மூற்றுணர்ந்த, வள்ளுவரின் குறள் வெண்பா - திருவள்ளுவராயனாது இனிய குறள் வெண்பா, அகிலத்தோர்-உலகத்தோரது, உள்ளிருணீக்கும் ஒளி-உள்ளிருளை நீக்குதற்கு உண்டாகிய ஒளி எ-று.

(வி-ரை) இங்ஙனங்கூறவே, புறத்திருளுக்கு அவை பலவுள; அகத்திரு ளுக்கு இஃதொன்றே உளதென்றதாயிற்று. அவற்றுள் ஒன்றாலும் நீக்கப் படாத அகத்திருளை நீக்கவல்லதாகலின், இதற்கு எவ்வாற்றானும் ஒப்ப தான்றின்றென்றபடி. (52)

ஆலங்குடிவங்கனூர்

வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதிற் றீஞ்சுவையு மொவ்வாதாற்-றெள்ளமுத

முன்டறிவார் தேவ ருலகடைய வண்ணுமால்
வண்டமிழின் முப்பான் மகிழ்ந்து.

(ப-ரை) வள்ளுவர் பாட்டின் வனம் - திருவள்ளுவரது பாட்டினது நீ
சுவையை, உரைக்கின் - சொல்லுமிடத்து, வாய்மடுக்குந் தெள்ளமுதின்
உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது, நீஞ்சுவையும் - இனிய சுவையும்
ஒவ்வாது - ஒப்பாகாது, தெள்ளமுதமுண்டு - அத்தெள்ளிய அமுதை யுண்
அறிவார் - (அதன்சுவையை) அறிபவர், தேவர் - தேவர்கள், வண்டமிழின்
வனம்பொருந்திய தமிழின்கண்ணதாகிய, மூப்பால் - மூப்பாலாகிய அதி
மும்மடி சிறந்தபால, உலகடைய எல்லாவுலகத்தாரும், மகிழ்ந்து-மகிழ்ந்த
உண்ணும்-உண்டு நீஞ்சுவையறிவார் எ-று.

(வி-ரை) வனம்-ஆகுபெயர். ஆல் - அசை, அவ்வமிர்தம் வாயுட்பெய்
வழி சாவிற்பட்ட சிறிதபொழுதனவே நீஞ்சுவை பயப்பத. இப்பாட்
நெஞ்சின்கணிலபெற்ற ஒழிவின்றி நீஞ்சுவைபயத்தலின், ஒவ்வாதென்றா
மூப்பால் சிலிஷ்டரூபகம் இனி எவ்வுலகத்தாருக்குவ் கருமபூமியாகிய இ
வுலகத்தட்டோன்றி மெய்ப்பொரு ளுணர்ந்தன்றி வீட்டின்பம் பெறத்
கூடாமையின், உலகடைய வண்ணுமென்றார். அன்றி, அவ்வுலகத்தத் தேவ
களும் தமது மேற்பட்ட வறிவினுலே இதனது உயர்வொப்பற்ற குணத்தை
அறிந்து முக்கியப் பிரமாணமாகக்கொண்டு மகிழ்கூர்வ தென்பதுபற்
அவ்வனவ் கூறினுமெனினுமமையும். இஃத இவ்வுலகத்தார்க்கேயன்
அவ்வுலகத்தார்க்கும் பயன்படுமாறு சொல்லியபடி. -(5

திருவள்ளுவமாலை மூலமும் உரையும் முற்றிற்று.

இடைக்காடர் பாடல்

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

(ப-ரை) குறள் (காயஞராதனுலின் ஆயிரத்திருநூற்றுமூப்பத) குற
வெண்பாக்களும், கடுகை கடுகை, துளைத்த (அதனுடலே) துளைசெய்து, ஏ
கடலை-ஏழு கடனீரையும், புகட்டி-(அத்துளையுட்) பெய்து, குறுக-(தன்ன
விற்) குறுகுவ்வண்ணம், தறித்த-தறித்தலைவத்தால் அதுபோல்வனவாகும்.

(வி-ரை) மிக்க சிற்றனவிற்கு எடுத்துச் சொல்லப்படுவதொரு தன்
பொருளாகலின் கடுகு சொல்லப்பட்டது. இரண்டனுருபு தறித்தவென்வினை
கொண்டது. துளைத்தல்-உள்ளீடுபோக்குதல். புகவிடென்பது புகட்டெ
விகாரப்பட்டு முதனிலையாய் நிற்றலின் புகட்டியென்றுமது. துளையினிடை
வெளிக்கும் அதன்புறமூடிக்கும் கொள்ளப்பட்ட பங்கு சிறிதாக ஒழிந்தபற்
பெரிதாகலின் குறுகவென்றார். தறித்தாலன்னவெனற்பாலது தறித்தவெ
இடைக்குறைந்தின்றது. இல்லாதபொருளை உவமானமாகக்கூறலின் இ
பொருளுவமை; குறட்பாக்களுன் ஒவ்வொன்றும் அதுபோறலின் தறித்தல
னப் பன்மையாற் கூறலாயிற்று. குறள் - பால்பகாவஃறிணைப் பெயராகலி
இங்கே பன்மைக்காயது. இங்ஙனங்கூறவே, குறட்பாவின் சொற்சுருக்கமு
அதனுள் அடக்கப்பட்ட பொருள்விரிவும் நோக்குவ்வழி, அக்கடுகும் எழ
னீரும்போலுமென்றதாயிற்று. பொருள்விரிவினளவுபடாமை சொல்லியபத

இப்பாட்டிலே "அறுனைவத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்
குறள்" என முதற்சொல்லைமாற்றி ஒளவையாரால் புகழ்ச்சிசெய்யப்பட்டத

36

உ

கணபதிதுணை

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்

அருளிச்செய்த

திருக்குறள்

மூலமும் உரையும்

அறத்துப்பால்

உரைப்பாயிரம்

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத்திவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென பர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை: அறம் பொருள் இன்பம் வீடென்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையு மாழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகை ற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின் ல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.

அவற்றுள் அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன ய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம் வழக்கு ன்டமென மூவகைப்படும்.

அவற்றுள் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்.

வழக்காவது ஒருபொருளைத் தனித்தனியே எனதெனதென் ப்பார் அதுகாரணமாகத் தம்முண் மாறுபட்டு அப்பொருண்மேற் ல்வது. அது கடன்கோடன்முதலிய பதினெட்டுப் பதத்ததாம்.

தண்டமாவது அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் இயினாரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத் வொறுத்தல்,

இவற்றுள் வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்த லாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பி வாகலானும், அவை தாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானு தேயவியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை யொழித்து ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபா டுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புக ளொழித்து எல்லார்க்குமொத்தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறந் துறவறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது.

அவற்றுள் இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லு கின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனை யோடுஞ் செய்யப்படுவதாகலின், அதனை முதற்கட் கூறுவா றொடங்கி, எடுத்துக்கொண்ட இலக்கிய மினிது முடிதற்பொருட்டு கடவுள்வாழ்த்துக் கூறுகின்றார்.

உ

கடவுள்துணை

பாயிரம்

முதல் அதிகாரம்-கட்வுள் வாழ்த்து

(பரிமேலழகருரை) அஃதாவது: கவி தான் வழிபடு கடவுளாயாதல் எடுத்தக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளாயாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக் கடவுள் யென அறிக: என்னெனில் சத்துவ முதலிய குணங்களான் மூன்றுகிய உறுதிப்பொருட்கு அவற்றுன் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான். அம்மூன்று பொருளையுங் கூறலுற் றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினரென வுணர்க.

(உரை) அஃதாவது: கவி தான் வழிபடு கடவுளாயினும் எடுத்துக் கொள்ளப்பட்ட பொருளுக்கு ஏற்புடைக் கடவுளாயினும் வாழ்த்துதலாம். அவைகளுள் இவ்வாழ்த்து ஏற்புடைக்கடவுள் யென்றறிக. எப்படியென்றால், சத்துவமுதலாகிய முக்குணங்களாலே அறமுதல் மூன்றுகிய உறுதிப்பொரு ளுக்கு அக்குணங்களாலே மூவராகிய முதற்கடவுளோடு சம்பந்தம் உண்டா யிருக்கையால் அம்மூன்று பொருள்களையும் சொல்லத்தொடங்கிய இவர்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாதலின், இவ்வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படச் சொல்லினரென்று அறிக.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(பரிமேலழகருரை) எழுத்தெல்லாம் அகர முதல-எழுத்துக்க ளெல் லாம் அகரமாகிய முதலையுடையன: உலகு ஆதிபகவன் முதற்று-அதுபோல உலகம் ஆதிபகவனுகிய * முதலையுடைத்து என்றவாறு.

இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை காரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதிபக வற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்று ணர்தலானுங் கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முத னதல் நோக்கி, எழுத்தெல்லா மென்றார். ஆதிபகவன் என்னு மிருபெய ராட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு. உலகென்றது ஈண்டுயிர்கண்மே லின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூற

---

* ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னு றுக்கும் பகமென்னும் பெயருண்மையால், பகவனென்பதற்கு இவ்வற ணங்களையு முடையோனென்பது பொருள்.

அவர்கள் கர்வபங்கமாகும்படி பிரம்ம ஸ்வரூபமாகிய திருவள்ளுவரை யும், மகாவிஷ்ணுவையும், சரஸ்வதியையும் பூமியில் அவதரிக்கும்படி அனுப்பினேன்; அவருள் மகாவிஷ்ணு இடைக்காடராய்ப் பிறந்தார். சரஸ்வதியார், திருவள்ளுவரும் வந்த மரபுங் கேட்பாயாக.

ஆதியிலே பிரமபுத்திரர்களாகிய காசிபர் முதலிய நவப்பிரம் மாக்களில் காசிபர் ஊர்வசியைச் சேர்ந்து வசிஷ்டரைப் பெற்றார். அவர் அருந்ததியைச் சேர்ந்து சத்தியரைப் பெற்றார். அவர் புங்க னார்ப் புலச்சியைச் சேர்ந்து பராசரரைப் பெற்றார். அவர் மச்சகந்தி யைச் சேர்ந்து வியாசரைப் பெற்றார். இவர்கள் நால்வரும் வேதங்க ளுக் குரியவரானார்கள்.

பின்பு பிரம்மாவானவர் இன்னுஞ் சில புத்திரரால் வடமொழி யையுந் தென்மொழியையும் விளங்கச்செய்ய வேண்டுமென்றெண்ணி வேதவித்திப்படி ஒரு யாகஞ்செய்ய, அதன்கண் வைத்திருந்த கும்பத்தி லிருந்து கலைமகள் அவதரித்தனள். அவளைப் பிரமன் விவாகஞ் செய்துகொண்டான். பின்பு அகஸ்தியர் குறிய வடிவோடு அக் கும்பத்தை உதித்தனர். அவர் சமுத்திரகன்னிகையை மணந்து பெருஞ் சாகரன் என்பவரைப் பெற்றார். அவர் திருவாரூர்ப் புலச்சியைச் சேர்ந்து பகவன் என்பவரைப்பெற்று, அவர்க்குச் சகல சாஸ்திரங் களையுங் கற்பித்தார். அந்நாளில் பிரமவம்சத்தில் தவமுனியென்பவர் அருண்மங்கை என்னும் பிராமணமாதைச் சேர்ந்து ஒரு புத்திரியைப் பெற்றுவைத்து விராலிமலையில் தவஞ்செய்யச் சென்றனர். அக்குழந் தையை உறையூர்ப் பெரும்பறையன் கண்டெடுத்துச் சிலகாலம் வளர்த்து வருகையில், மேல்நடக்கப்போகிற காரணத்தினால் இந்தப் பெண்தவிர மற்றவர்கள் யாவரும் இறக்கும்படி அந்தச்சேரியில் யாது காரணமோ மண்மாரி பெய்தது. பின்பு அந்தப்பெண் அதற்கடுத்த மேலூர் அகரத்திலே நீதியையன் வீட்டில் வளர்ந்திருந்தனள்.

அப்போது பகவனென்பவர் சகல சாஸ்திரபண்டிதராய்க் கண் டவர் யாவரும் மரியாதை பண்ணும்படி பிராமணகிர்த்தியத்தில் வழு வாதவரா யிருக்கையில் யாத்திரைபண்ணும்படி யிச்சைகொண்டு காசிக்குப் போகும்போது இன்னகாரத்துக் கடுத்த ஒருசத்திரத்தி லிறங்கி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு சமையல் செய்திருந் தார். அவ்விடத்தில் அந்தப்பெண்வர, அவளைக்கண்டு நீயார்? புலச் சியோ? வலச்சியோ? இங்கே வந்தாயென்று அதட்டி மிகுந்த கோபங் கொண்டு சட்டுவத்தால் அவளதுதலையிலே உதிரஞ்சோர அடித்தோட் டினர். அவள் அழுதுகொண்டு தன்னிட்டத்துக்குப் போய்விட்டாள்.

மறுபடியும் பகவனென்பவர் ஸ்நானஞ்செய்து, போசனம்பண்ணி அதிசீக்கிரத்தில் வழிக்கொண்டு, சிலநாளில் காசிக்குப்போய்க் கங்கா ஸ்நானஞ்செய்து, பிரயாகையிலிருந்து தீர்த்தக்காவடி கட்டிக்கொண்டு வரும்போது அந்தச்சத்திரத்தில் வந்திறங்கினர். மேற்சொல்லிய பெண்ணானவள் அப்போது மகாலட்சுமியைப்போலும் அழகும், எல்லனபருவமும் உடையவளாய் அங்கே வந்தாள். பகவனென்பவர் இவளுடைய சௌந்தரிய முதலிய குணங்களைப் பார்த்து மோகங் கொண்டார். அச்சத்திரத்துக்கு அதிபராகிய நீதியையரென்பவர் அக்குறிப்பினைக்கண்டு என் பெண்ணை விவாகம்பண்ணிக்கொண்டு இங்கே யிருமென்று சொல்ல, அதற்கவர் நான் கொண்டுவந்த காவடியை இராமேச்சுரத்தில் செலுத்திவந்து அப்படியே செய்கிறேனென்று அவரிடத்திலே செலவு பெற்றுக்கொண்டுபோய் இராமலிங்கத்துக்கு அபிஷேகம்பண்ணித் திரும்பிவந்தார். அப்போது நீதியையர் விவாக எத்தனம்பண்ணிப் பந்துக்களோடிருந்து விசேஷமாய் நானாளைய சடங்குகளுஞ் செய்து, ஐந்தாநாள் மங்களஸ்நானஞ் செய்விக்கும்போது பகவனென்பவர் அந்தப் பெண்ணினுடைய நலியில் எண்ணெயைப் பெய்யும்படி மயிரை வகிர்ந்தார். அப்போது நான் முன்பு சட்டுவத்தாலடித்த வடுவைக்கண்டு அனுமானித்து இந்தப் பெண்ணினது வரலாற்றையும் விசாரித்து விசனங்கொண்டு நீ ஆதியளல்லவா? என்று சொல்லிவிட்டு ஓடினர். அதுவே அவளுக்கு ஆதியென்று காரணப்பெயராயிற்று.

அப்படியோடிய பகவனென்பவர் பொழுது போகையால் எதிரே கண்ட பாணர்சேரியிலிருந்த ஒரு மண்டபத்திலே தங்கினர். ஆதியென்பவளும் அவர் பின்னே தொடர்ந்து அவரைக்கண்டு, தெய்வச் செயலால் உமக்கும் எனக்கும் இந்தக்காரியம் நடந்திருக்க, நீர் என்னை விட்டுப் போகுதல் உமக்குத் தகுமோ? அல்லது தருமமோ? என்றும் சும்மை நீங்கினால் உயிர்வாழேனென்றும், மிகவும் இரக்கத்துடன் சொல்லப் பிராரத்துவத்தால் இவர் புத்தியிலும் அது சரியென்று பட்டுப், பெண்ணே! என்னிடத்தில் உனக்கு அன்பிருக்குமானால் நான் சொன்னபடி கேட்கவேண்டும். அஃதென்னெனில், உனக்குப் பிள்ளைகள் எங்கெங்கே பிறக்கிறதோ அங்கங்கே அவைகளை அப்போழுதேவிட்டு வருவையானால் யான் உன்னைக்கூடச் சம்மதிப்பேன் என்றுசொல்ல, அவள் அதற்கு உடன்பட்டபடியால் அன்றிரவில் அம்மண்டபத்தி லிருவருங் கூடினர்கள்.

(வி-உரை) மலர்போலு நெஞ்சை மலரென்றது உவமையாகுபெயர். அன் பிறவே நினைப்பவரது நெஞ்சில் அவர் நினைத்தவடிவோடு விரைந்துசெல்லு தலிறவே எனவெனின் இறந்தகாலத்தாற் சொல்லினர். இது விரைவுபற்றி வந்த-காலவழுவமைதி. சேர்தல்-இடைவிடாது நினைத்தல்.

பருவத்தே வினைத்து மணந்தருதலின் மலருக்கு மலரென்றுயிற்று. (மலர் தல்-விரிதல்) சண்டு உவமை ஆகுபெயராய் இருதயகமலத்தை யுணர்த்திற்று. சண்டு வடிவும் வினையும்பற்றி யுவமையாயினமை காண்க. (3)

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

(பரி-உரை) வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு-ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலுமில்லாதவ னடியைச்சேர்ந்தார்க்கு, யாண்டும் இடும்பை இல-எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா எ-று.

பிறவித்துன்பங்களாவன:—தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப் பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையான் வரும் துன்பங்கள். அடி சேர்ந்தார்க்கும் அவ்விரண்டும் மின்மையின், அவை காரணமாகவரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின.

(ப-உரை) வேண்டுதல் - (யாதொரு பொருளையும்) விரும்புதலும், வேண் டாமை - வெறுத்தலும், இலான் - இல்லாதவனது, அடி-அடிகளை, சேர்ந் தார்க்கு - சேர்ந்தவர்க்கு, யாண்டும் - எக்காலத்திலும், இடும்பை - பிறவித் துன்பங்கள், இல-உண்டாவனவல்ல எ-று.

(க-உரை) கடவுளடிகளைச் சேர்ந்தவர்களுக்கும் பிறவித் துன்பங்களில்லை என்பதாம்.

(வி-உரை) பிறவித் துன்பங்களாவன: தன்னைப்பற்றி வருவதும், பிறி துயிரைப்பற்றி வருவதும், தெய்வத்தைப்பற்றி வருவதும், என மூவகையாய் வருகிற துன்பங்களாம். [அடிசேர்ந்தார்க்கு அவ்விருப்பு வெறுப்புகள் இல்லாமையால் அவை காரணமாக வருகிற மூவகைத் துன்பங்களும் இல்லையாயின.] அவ்விரண்டு என்றது வேண்டுதலும் வேண்டாமையுமாம்.

'வேண்டுதல் வேண்டாமை யிலான்' என்றது இறைவனை. என்னை விருப்பு வெறுப்பில்லான் ஆதலின் என்க. 'அடி' என்றது இறைவனது பாவனாமூர்த்தத்தின் திருவடிகளை என்பதாம். அடியென்றது சாதி ஒருமை. இனி ஞானபாதத்தைக் குறித்தலின் ஒருமையாற் கூறினரென்பாருமுளர்.

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(பரி-உரை) இருள் சேர் இருவினையும் சேரா-மயக்கத்தைப்பற்றி வரு நல்வினை தீவினையென்னு மிரண்டு வினையும் உளவாகா, இறைவன் பொருள்

சர் புகழ் புரிந்தார் மாட்டு-இறைவனது மெய்ம்மைசேர்ந்த புகழை விரும் னரிடத்து எ-று.

இன்ன தன்மைத்தென ஒருவாலும் கூறப்படாமையின் அவிச்சையை ருளென்றும், நல்வினையும் பிறத்தற் கேதுவாகலான் இருவினைபுஞ் சோ வன்றுங் கூறினர். இறைமைக் குணங்கள் இலராயினுரை உடையரெனக் நதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சோ வாகலின், அவை ற்றவுமுடைய இறைவன் புகழே பொருள்சேர் புகழெனப்பட்டது. புரிதல். ப்பொழுதுஞ் சொல்லுதல்.

(ப-ரை) இறைவன் - தலைவனது, பொருள்சேர் - மெய்ம்மைசேர்ந்த, ழ்-கீர்த்தியை, புரிந்தார்மாட்டு-விரும்பினவரிடத்து, இருள்சேர்-மயக்கத் ப்பற்றி வருகிற, இருவினையும்-நல்வினை தீவினையென்னு மிரண்டுவினை நும், சேரா-உண்டாகாவாம் எ-று.

(க-ரை) கடவுளுடைய கீர்த்தியை விரும்பினவரிடத்து நல்வின வினையென்னு மிருவினைகளு மடையாவாம் என்பதாம்.

(வி-ரை) இப்படிப்பட்டதென்று ஒருவாலும் சொல்லப்படாமையால் ஞ்ஞானத்தை இருளென்றும், நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாதலால் இரு னையும் சோவென்றும் சொல்லினர். [தலைமைக்குணங்க ளில்லாதவரை டையரென்று நினைத்து அறிவிலார் சொல்லுகிற புகழ்பொருள் சோதாக ன்; அவை முழுதுடைய தலைவனது புகழ்பொருள் சேர்புகழெனப்பட்டது.] தல்-எப்பொழுதும் சொல்லுதல்.

'இருள்' என்றது அஞ்ஞானமயக்கத்தை. இதுவே அவித்தை என்பதாம். ருவினையும்' என்றதன்கண் நின்ற உம்மை முற்றும்மை. பொருள் ஒன்றே நியமும் சத்தியமும் உடையதாதலின் "பொருள்சேர்புகழ்" என்றதற்கு மெய்ச்சேர்ந்த கீர்த்தி" என்றுரைபோலும். (5)

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றூர் நீடுவாழ் வார்.

(பரி-உரை) பொறி வாயில் ஐந்து அவித்தான்·மெய், வாய், கண், ுக்குச், செவி யென்னும் பொறிகளை வழியாகவுடைய ஐந்தவாவினையும் ுத்தானது, பொய் தீர் ஒழுக்க நெறி நின்றூர்-மெய்யான ஒழுக்க நெறி ்கண் வழுவாது நின்றூர், நீடு வாழ்வார்-பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு ுமையராய் வாழ்வார் எ-று.

புலன்கள் ஐந்தாகலான், அவற்றின்கட் செல்கின்ற அவாவும் ஐந்தா ும். ஒழுக்கநெறி ஐந்தவித்தானுற் சொல்லப்பட்டமையின்; ஆண்டை றுருபு செய்புட்கிழமைக்கண் வந்தது, கபிலரது பாட்டு என்பதுபோல. வ தான்கு பாட்டானும் இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறி றுஞ் செய்தார் வீடு பெறுவரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) பொறி வாயில்-(மெய், வாய், கண், மூக்கு, செவி, யென்னும் ஐம்பொறிகளே வழிகளாகவுடைய, ஐ-ஐந்தாசைகளையும், அவித்தான் அறத்தவனது, பொய்தீர்-மெய்யான, ஒழுக்கநெறி-ஒழுக்கவழியிலே, நின்றார் (வழுவாது) நின்றவர், நீடுவாழ்வார்-பிறப்பில்லாமல் எக்காலத்திலும் ஒ தன்மையராய் வாழ்வார் எ-று.

(க-ரை) கடவுள் வழியிலே நின்றவர்கள் நீடுழி வாழ்வார்கள் எ பதாம்.

(வி-ரை) ஊறு, சுவை, ஒளி, காற்றம், ஓசை,-எனப்புலன்கள் ஐந்தா லின், அவற்றிலே செல்லுகிற ஆசையும் ஐந்தாயிற்று. ஐந்தவித்தான்-ஒழு வழி அவனைச் சொல்லப்பட்ட வேதமார்க்கம். [இவை நான்குபாட்டாலு கடவுளை யினைத்தோரும், வாழ்த்தினோரும், அவன்வழி நின்றோரும், மோ சத்தைப் பெறுவரென்பது சொல்லப்பட்டது.]

"ஐந்தவித்தான்" என்றது தொகைக்குறிப்பு. ஈண்டு, ஐந்தாசைகளை குறித்தது. "பொறிவாயிலைந்தவித்தான்" என்றது இறைவனே. "பொய்தீ ஒழுக்கம்" என்றது வேதநெறியை. இனி, "பொறிவாயிலைந் தவித்தான் என்றதற்கு ஐம்புலப்பற்றவிட்ட மெய்ஞ்ஞானியர் எனப் பொருள்கொ டுரைப்பாருமுண்டு. இது அதிகாரமுறைக்குப் பொருந்தாமை கண்டுதெளிக.

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான் மனக்கவலை மாற்ற லரிது.

(பரி-உரை) தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லா ஒருவாற்றானுந் தனக்கு நிகரில்லாதவனது தாளைச் சேர்ந்தார்க்கல்லது, மன கவலை மாற்றல் அரிது-மனத்தின்க ணிகழும் துன்பங்களை நீக்குதல் உண்ட காது எ-று.

* "உறற்பால-தீண்டாவிடுதல ரிது." என்றாற்போல, ஈண்டு அருட இன்மைமேல் நின்றது. தான் சேராதார் பிறவிக்கேதுவாகிய காம வெகு மயக்கங்களை மாற்றமாட்டாமையின், பிறந்து அவற்றான் வருந்துன்பங்களு அழுந்துவரென்பதாம்.

(ப-ரை) தனக்கு-தனக்கு, உவமை யில்லாதான் - (ஒருவிதத்தினும நிகரில்லாதவனது, தாள்-அடிகளை, சேர்ந்தார்க்கல்லால்-சேர்ந்தவர்க்கல்ல மனக்கவலை-நெஞ்சிலே தோன்றுகின்ற துன்பங்களை, மாற்றல்-நீக்குத அரிது-உண்டாகாது எ-று.

(க-ரை) கடவுளுடைய திருவடியைச் சேராதவர்களுக்கு மனக்க நீக்குதலில்லை என்பதாம்.

(வி-ரை) இக்கே 'அரிது' இல்லையென்னும் பொருளில்வந்தது. [அ ளைச்சேராதவர் பிறவிக்கு ஏதுவாகிய காமவெகுளிமயக்கங்களை நீக்கமாட்

* காலடியார்: பழமொ-8.

மயிலுலே பிறத்தம், இறத்தம், அவற்றுல் வருகிற தன்பங்களுன் அழுத்த
ாரென்பதாம்]

"தனக்குவமை யில்லாதான்" என்றதனுல் தனக்கு உயர்வின்மையும்
தானித்தல் காண்க. "மலக்கவலை" என்றது பிறவித் தன்பங்களால்
ண்டாகும் மனகோயை.

(7)

அறவாழி யந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(பரி-உரை) அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்-அறக்
லாகிய அந்தணனது தானாகிய புணையைச் சேர்ந்தார்க்கல்லது, பிற ஆழி
தல் அரிது-அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது எ-று.

அறம், பொருள், இன்பம் என உடனெண்ணப்பட்ட மூன்றனுள்
றத்தை முன்னர்ப் பிரித்தமையான், ஏனைப்பொருளும் இன்பமும் பிற
னப்பட்டன. பல வேறுவகைப்பட்ட அறங்களெல்லாவற்றையுந் தனக்கு
வாக வுடையனுகலின், அறவாழியந்தண னென்றுர். அறவாழி யென்ப
னைத் தருமசக்கரமாக்கி அதனையுடைய அந்தணனென்று உரைப்பாரு
ார். அப்புணையைச் சேராதார் கரை காணுது அவற்றுள்ளே அழுந்த
தலின், நீந்தலரிதென்றுர். இஃது ஏகதேசவுருவகம்.

(ப-ரை) அறவாழியந்தணன்-தருமக்கடலாகிய கடவுளது, தாள்-அடி
ணை (மரக்கலத்தை), சேர்ந்தார்க்கல்லால்-சேர்ந்தவர்க்கல்லாமல், பிறவாழி-
தனின்) வேறுகிய கடல்களை, நீந்தல்-கடத்தல், அரிது-கூடாது எ-று.

(க-ரை) கடவுளடிகளைச் சேராதார்க்குப் பொருளும் இன்பமுமாகிய
ல்களைக் கடத்தல் கூடாது என்பதாம்.

(வி-ரை) அறம், பொரு, ளின்பமென, உடனெண்ணப்பட்ட மூன்றுள்
றத்தை முன் பிரித்ததனுல் மற்றை பொருளும் இன்பமும் பிறவெனப்பட்
ன. [பல வேறுவகைப்பட்ட அறங்களெல்லாம் கடவுளுக்கு வடிவாகலின்
வாழி யந்தணனென்றுர்.] அம்மரக்கலத்தைச் சேராதவர் கரைகாணுது
ற்றுள்ளே அழுந்துவாராகலின் நீந்தலரிதென்றுர். தாட்புணை யென்றமை
ம் ஏகதேசவுருவகம்.]

"ஆழி" இது ஆழமுடைய காரணம்பற்றி கடலுக்கு எய்திய காரணப்
பர். "அறவாழி அந்தணன்". என்றது கடவுளை. இறைவன் மிக்க கரு
ணை உடையோன் ஆதலின் அந்தணன் என்றுர். பிறவாழி எனப் பொரு
ளும் இன்பத்தையும் உருவகப்படுத்தியது கடத்தற்கருமை நோக்கி என்க.

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
ாளை வணங்காத் தலை.

(பரி-உரை) கோள் இல் பொறியிற் குணம் இல - தத்தமக்கேற்ற புலன்
க் கொள்ளையில்லாத பொறிகள்போலப் பயன்படுதலுடையவல்ல, எண்

குணத்தான் தாளை வணங்காத் தலை-என்வகைப்பட்ட குணங்களையுடை
எ தாள்களை வணங்காத் தலைகள் எ-று.

எண்குணங்களாவன:-தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை
புணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீக்குதல்,
பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை எ
னை. இவ்வாறு சைவாகமத்திற் கூறப்பட்டது. * அணிமாவை முதல
வுடையனெனவும், † கடையிலா அறிவை முதலாக வுடையனெனவு
உரைப்பாருமுளர். காணுதல் கண் முதலியனபோல வணங்காத தலைகள்
னிலவெனத் தலைமேல்வைத்துக் கூறினார்; கூறினாலும், இனம்பற்
வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில வென்பதாகக் கொள்க. இ
மூன்று பாட்டாலும் அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலும் செய்
வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) கோளில் - (தத்தமக்கேற்ற புலன்களை) கொள்ளுகை யில்ல
பொறியின்-பொறிகள்போல், எண்குணத்தான்-எண்வகைப்பட்டகுணத்
புடையவனது, தாள்-அடிகளை, வணங்காத்தலை - தொழாததலைகள், கு
மிலவே-பயன்படுதலுடையனவல்லவேயாம் எ-று.

(க-ரை) கடவுள் பாதங்களை வணங்காத்தலைகள் பயன்படாவாம் எ
தாம்.

(வி-ரை) எண்குணங்களாவன: தன்வயத்தனாதல், தூயவுடம்பினனா
இயற்கைபுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீ
தல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடை
என்பனவாம். இவை சைவாகமத்திற் சொல்லப்பட்டன. காணுதல் கண்
லானவைபோல் வணங்காத்தலைகள் பயனிலவெனத் தலைமேல்வை
சொல்லினும் இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அப்படியே பயனி
மென்பதங்கொள்க. [இவை மூன்றுபாட்டாலும் அவனை நினைத்த
வாழ்த்தலும் வணங்கலும் செய்யாவிடத்தே உண்டாகிற குற்றஞ் சொ
பட்டது.]

"கோளில்" இது கொள்ளுதல் இல்லா என்னும் பொருளது. கொ
ளுதலாவது பொறிகளுக் கேற்ற புலன்களை என்க. "தாளை வணங்காத்
எனத் தலையைக்கூறியது எண்சாணுடம்பிற்குச் சிரசே பிரதானமாத
வணங்கற்கெழிற்கு தலை உரியதாதலினாலும் என்க. இதனை "தந்
நீ வணங்காய்" என்ற தேவாரத்தினாலும் அறியலாம்.

---

* அணிமா முதலிய எண்சித்திகளாவன:—அணிமா, மகிமா, க
லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசிதை, வசிதை என விவை.

† கடையிலா வறிவு முதலிய எண்குணங்களாவன:—கடையிலா க
கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா வின்பம், நாமின்
கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு எனவிவை. இ
ருகுத லாலிற் கூறப்பட்டது.

பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தா
நிறைவ னடிசேரா தார்.

(பரி-உரை) இறைவன் அடி (சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர்-இறைவனடி யென்னும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர், சேராதார் நீந்தார்-அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனு ழுழ்குவர் எ-று.

காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், பிறவிப்பெருக் டலென்றார். சேர்ந்தாரென்பது சொல்லெச்சம். உலகியல்பை நினையாது இறைவனடியையே நினைப்பார்க்குப் பிறவி யறுதலும், அவ்வாறன்றி மாறி னைப்பார்க்கு அஃதருமையுமாகிய இரண்டும் இதனால் நியமிக்கப்பட்டன.

(ப-உரை) இறைவன்-தலைவனது, அடி-பாதமாகிய மாக்கலத்தை, (சேர்ந் வர்) பிறவிப்பெருங்கடல்-பிறவியாகிய பெரியகடலை, நீந்துவர்-கடப் பார், சேராதார்-(அதனைச்) சேராதவர், நீந்தார்-கடக்கமாட்டார் எ-று.

(க-உரை) கடவுள் பாதத்தைச் சேர்ந்தவர்கள் பிறவிக்கடலைக் கடப்பார் ர், சேராதவர்கள் பிறவிக்கடலைக் கடக்கமாட்டார்கள் என்பதாம்.

(வி-உரை) சேர்ந்தவரென்பது வருவிக்கப்படுதலாற் சொல்லெச்சம். பிறவி ன்றிற்கொன்று காரணகாரிய சம்பந்தப்பட்டுக் கரையில்லாமல் வருதலால் றவிப்பெருங்கடலென்றார். [கடவுளடிகளையே நினைப்பவர்க்குப் பிறவி நீக்கு மும், உலகியல்பை நினைப்பவர்க்கு அது நீங்காமையும், ஆகிய விரண்டும் தனால் நியமிக்கப்பட்டன.]

"பிறவிப் பெருங்கடல்" என்றது பண்டத்தொகை. பிறவியைக்கடல் ன்றதற்கு ஏற்ப நீந்துவர் என்னும் வினைதந்து உரைத்தார். உலகில் உள்ள க்கடலினின்றும் பிரித்துக்காட்டிடுவான் "பிறவிப் பெருங்கடல்" எனப் பரும்' என்றும் அடைமொழிதந்து கூறிய நயம் நோக்கத்தக்கதாம். (10)

1-ம் அதி-கடவுள் வாழ்த்து-முற்றிற்று.

2-ம் அதிகாரம்-வான்சிறப்பு.

(பரி-உரை) அஃதாவது: அக்கடவுள தாணையான் உலகமும் அதற் தியாகிய அறம் பொரு ளின்பங்களும் நடத்தற்கேதுவாகிய மழையினது ப்புக் கூறுதல். அதிகார முறைமையும் இதனுனே விளக்கும்.

(உரை) அஃதாவது: கடவுளது ஆணையால் உலகமும், அதற்கு உறுதி ய அறம்பொரு ளின்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையினது சிறப் ச் சொல்லுதலாம். அதிகார முறைமையும் இதனால் விளக்கும்.

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த் மென்றுணரற் பாற்று.

(பரி-உரை) வான் கின்று உலகம் வழங்கி வருதலால்-மழை இடைய ருத கிற்ப உலகம் கிலபெற்று வருதலான், தான் அமிழ்தமென்று உணரற் பாற்று-அம்மழைதான் உலகத்திற்கு அமிழ்தமென்று உணரும் பான்மையை யுடைத்த எ-று.

கிற்பவென்பது கின்றெனத் திரிந்து நின்றது. உலகமென்றது ஈண்டுயிர் களை. அவை கிலபெற்று வருதலாவது பிறப்பு இடையறுமையின் எஞ்ஞான் றும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தமுண்டார் சாவாது கிலபெறுதலின், உலகத்தை கிலபெறுத்துகின்ற வானை அமிழ்தமென்றுணர்க என்றார்.

(ப-ரை) வான்-மழையானது, கின்று-(ஒடுவே நீங்காது) நிற்க, உலகம்-உயிர்களானவை, வழங்கி வருதலான் - கிலபெற்று வருகையினாலே, தான்-(அம்மழை) தான், * அமிழ்தமென்று-(உயிர்களுக்கு) அமிர்தமென்று, உணரற் பாற்று-அறியப்படுந் தன்மையை யுடைத்தாம் எ-று.

(க-ரை) மழை நீங்காமற்பெய்ய உயிர்கள் கிலபெற்று வருகையால் அம் மழை யுயிர்களுக் கமிர்தம் என்பதாம்.

(வி-ரை) நிற்கவென்பது கின்றெனத் திரிந்தது. உயிர்கள் கிலபெற்று வருதலாவது பிறப்பு ஒடுவே நீங்காமையால் அவை எக்காலும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிர்தமுண்டார் சாவாது கிலபெறுதலின் உயிர்களை கிலபெறச் செய்கிற மழையை அமிழ்தமென்றார்.

'வான்' இது உயர்வு குறிக்குஞ் சொல். இது உயர்ந்த இடத்து உள்ள மழையை ஈண்டு குறித்தது. 'உலகம்' என்றது ஈண்டு உலகத்து உயிர்களை. இது ஆகுபெயர். மழையை 'அமிழ்து' என்றது உபசாரவழக்கு. அமிழ்தம் போல மழை கிலபெறச்செய்தலின் மழையை அமிழ்து என்றார். (1)

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

(பரி-உரை) துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி-உண்பார்க்கு கல்ல உணவுகளை உணவாக்கி, துப்பார்க்குத் துப்பு ஆயதாகும் மழை-அவற்றை யுண் கின்றார்க்குத் தானும் உணவாய் நிற்பதாகும் மழை எ-று.

தானுமுணவாதலாவது தண்ணீராயுண்ணப்படுதல். சிறப்புடைய உயி கிணைமேல் வைத்துக் கூறினமையின், அஃறிணைக்கும் இஃதொக்கும். இவ் வாறு உயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் நீக்குதலின், அவை வழங்கி வருதலுடையவாயின வென்பதாம்.

---

* அமிழ்தமென்பதற்கு, மரணத்தை யொழிப்பதென்பது பொருள், அது அமிர்தமென்னும் வடமொழி திரிந்தது.

(ப-ரை) தப்பார்க்கு-உண்பவருக்கு, தப்பாய - நன்மையாகிய, தப் பாக்கி-உணவுகளையுண்டாக்கி, தப்பார்க்கு-(அவ்வுணவுகளை) உண்பவருக்கு, தப்பாயதாகும்-(தானும்) உணவாய் நிற்பதும், மழை-மழை எ-று.

(க-ரை) உண்பவர்க்கு நன்மையாகிய உணவுகளை யுண்டாக்கி அவ்வு ணவை உண்பவர்க்குத் தானும் உணவாக நிற்பது மழை என்பதாம்.

(வி-ரை) தானும் உணவாதலாவது, கண்ணீராயுண்ணப்படுதல். சிறப் புடைய மனிதர்மேல்வைத்துச் சொல்லுதலால் மற்றை யுயிர்களுக்கும் இஃது ஒக்கும்; இப்படி உயிர்களது பசிதாகங்களை நீக்குதலால் அவ்வுயிர்கள் வழங்கி வருதலும் உடையவாயின வென்பதாம்.

இக்குறளில் தப்பு என்னுஞ்சொல் அதேபொருளில் பன்முறை வந்த மையின் சொற்பொருட் பிறிதினியலையணி. "தப்பாயதாகும்" என்றதில் அள பெடை இசை நிறைக்க வந்த அளபெடை. (2)

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின்று முடற்றும் பசி.

(பரி-உரை) விண் இன்று பொய்ப்பின்-மழை வேண்டுங்காலத்துப் பெய் யாது பொய்க்குமாயின், விரி நீர் வியன் உலகத்துள் - கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண், நின்று உடற்றும் பசி-நிலைபெற்று உயிர்களை வருத் தும் பசி எ-று.

கடலுடைத்தாயினும் அதனாற் பயனில்லை யென்பார், விரிநீர் வியனுல கத்தென்றார். உணவின்மையின், பசியான் உயிர்கள் இறக்கும் என்பதாம்.

(ப-ரை) விண்-மழையானது, நின்று - (பெய்யவேண்டுங் காலத்தில்) பெய்யாமல், பொய்ப்பின்-பொய்க்குமாயின், விரிநீர்-கடலாலே சூழப்பட்ட, வியனுலகத்துள்-பரந்த வுலகத்தினுள், பசி-பசியானது, நின்று-நிலைபெற்று, உடற்றும்-(உயிர்களை) வருத்தும் எ-று.

(க-ரை) மழை பெய்யாது பொய்க்குமாகில் உலகிற் பசியானது உயிர் களை வருத்தும் என்பதாம்.

(வி-ரை) கடலுடைத்தாயினும் அதனாலே பயனில்லை யென்றற்கு விரி நீர் வியனுலகத்தென்றார்; உணவில்லாமையினாலே பசியால் உயிர்கள் இறக்கு மென்பதாம்.

'விண்' இதுவும் 'வான்' என்றதுபோல மழையைக் குறித்தது. 'பொய்த் தல்' சுண்டு பெய்யாது ஒழிதலைக் குறித்தது. 'விரிநீர்' என்றது கடலை. (3)

வரி னுழாஅ வுழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

(பரி-உரை) உழவர் வரின் உழார்-உழவர் ஏராலுழுதலைச் செய்யார், புல் என்னும் வாரி வளம் குன்றிக்கால்-மழை யென்னும் வருவாய் தன் பயன் குன்றின் எ று.

குன்றியக்காலென்பது குறைத்து நின்றது. உணவின்மைக்குக் காரணங் கூறியவாறு.

(ப-ரை) புயலென்னும்வாரி - மழையென்கிற வருவாய், வளங்குன்றிக் கால் - (தன்) பயன்குறையின், உழவர்-பயிரிடு மாந்தர்கள், எரின்-எரிஞல், உழாஅர்-உழமாட்டார்கள் எ-று.

(க-ரை) மழைவளங் குறைந்தால் பயிர்செய்மாக்கள் எருழார் என்பதாம்.

(வி-ரை) 'குன்றியக்கால்' என்பது குறைத்து நின்றது, உணவில்லாமைக்கு காரணஞ் சொல்லியபடி.

'எரின்' இதில் இன் உருபு கருவிப்பொருள் தந்து நிற்றலின் உருபும்யக்கம். 'உழாஅர்' இதில் அளபெடை இசை நிறைத்து நின்றது. (4)

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றூங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

(பரி-உரை) கெடுப்பதூஉம் - பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே எடுப்பதூஉம் அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப் பெய்து மூன் கெடுத்தாற்போல எடுப்பதூஉம், எல்லாம் மழை-இவை யெல்லாம் வல்லது மழை எ-று.

'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. ஆங்கென்பது மறுதலைத்தொழி லுமத்தின்கண் வந்த உவமச்சொல். கெடுமாக்கமும் எய்தாதற்குரியார் மக்களாதலின், கெட்டார்க்கென்றார். எல்லாமென்றது அம்மக்கண் முயற்சி வேறுபாடுகளாற் கெடுத்தல் எடுத்தல்கடாம் பலவாதல் நோக்கி. வல்லதென்பது அவாய் நிலையான் வந்தது. மழையின தாற்றல் கூறியவாறு.

(ப-ரை) கெடுப்பதூஉம்-(பூமியினிடத்து வாழ்வாரைப்) பெய்யாதுநின்று கெடுப்பதும், கெட்டார்க்கு - (அவ்வாறு) கெட்டவர்க்கு, சார்வாய் - துணையாய்ப் (பெய்து), மற்றூங்கே - முன் கெடுத்ததுபோல், எடுப்பதூஉம் - எடுப்பதும், எல்லாம்-(இவை) யெல்லாம், (வல்லது,) மழை-மழையாம் எ-று.

(க-ரை) கெடுப்பதுங் கெட்டவரைக் காப்பதும், மழை என்பதாம்.

(வி-ரை) 'மற்று' வினைமாற்றில் வந்தது. கெடும் பெருக்கமும் பெறாதாகுரியவர் மனிதராதலால் கெட்டார்க்கென்றார். எல்லாமென்றது-அம்மனிதர் முயற்சி வேறுபாடுகளால் கெடுத்தலெடுத்தல்கள் பலவாகுகை நோக்கி. வல்லதென்பது, * அவாய்நிலையால் வந்தது. மழையினது வல்லமையைச் சொல்லியபடி.

'கெடுப்பதூஉம்' 'எடுப்பதூஉம்' என்பன இரண்டும் இன்னிசை அளபெடைகள். கெடுப்பது - அழிப்பது. எடுப்பது - உய்விப்பது. (5)

---

* அவாய்நிலை-ஒருசொல் மற்றொருசொல்லை அவாவிநிற்றல்; இவ்வாறு அவாய் நிலையால் வருவித்து முடிப்பதனை வடநூலார் அத்தியாகாரமென்பர்.

விசும்பிற் றுளிவீழி னல்லால்மற் றூங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

(பரி-உரை) விசும்பின் துளி வீழின் அல்லால்-மேகத்திற்றுளி வீழிற் காண்பதல்லது, மற்று ஆங்கே பசும்புற்றலை காண்பு அரிது - வீழாதாயின், அப்பொழுதே பசும்புல்லினது தலையையுங் காண்டல் அரிது எ-று.

விசும்பு ஆகுபெயர். மற்று வினைமாற்றின்கண் வந்தது. இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. ஓரறிவுயிரும் இல்லை யென்பதாம்.

(ப-ரை) விசும்பின்-மேகத்தினின்றும், துளி-துளிகள், வீழினல்லால்-வீழிற்காண்பதல்லது, மற்றூங்கே-வீழாதாயின் அப்பொழுதே, பசும்புற்றலை-பசும்புல்லினது தலையையும், காண்பு-காணுதல், அரிது-அரிது எ-று.

(க-ரை) மழை பெய்யாவிடில் புல்லின் தலையைக் காணுதலரிது என்பதாம்.

(வி-ரை) விசும்பு ஆகுபெயர்; மற்று வீழாதாயினென்னும்-வினைமாற்றில் வந்தது; தலையுமென்னும் இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது; ஓரறிவுயிரும் இல்லாமற்போமென்பதாம்.

'விசும்பு' என்ற பல்பொருள் ஒருபெயர்த் தொடர்மொழி சுண்டு மழை மேகத்தை உணர்த்திற்று. 'துளி' என்றது நீர்த்துளியை. துள்ளிவிழுவின் துளி என்றபடி. பின்னர்கால அடைவில் சிற்றளவு குறிக்குஞ் சொல்லாக வழங்கலுமாயிற்று.

(6)

நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

(பரி-உரை) நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும்-அளவில்லாத கடலும் தன்னியல்பு குறையும், எழிலி தான் தடிந்து நல்காதாகி விடின்-மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கட் பெய்யாது விடுமாயின் எ-று.

உம்மை சிறப்பும்மை. தன்னியல்பு குறைதலாவது நீர்வாழுயிர்கள் பிறவாமையும், மணிமுதலாயின படாமையுமாம். சுண்டக் குறைத்தலென்றது முதற்றே; அது * "கடல்குறை படுத்தநீர் கல் குறைபட வெறிந்து," என்பதனானும் அறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழை வேண்டும் என்பதாம். இவை ஏழுபாட்டானும், உலகநடத்தற் கேதுவாதல் கூறப்பட்டது.

(ப-ரை) நெடுங்கடலும்-நெடியகடலும், தன்னீர்மைகுன்றும்-தன்னியல்பு குறையும், எழிலிதான்-மேகந்தான், தடிந்து-(அதனைக்) குறைத்து, நல்காதாகிவிடின்-(அதனிடத்துப்) பெய்யாதாகிவிடின் எ-று.

* பரிபாடல்—20.

(க-ரை) மழை பொழியாவிட்டால் நெடியகடலும் வளங்குறையும் என்பதாம்.

(வி-ரை) உம்மை, உயர்வுசிறப்பு. தன்னியல்பு குறைதலாவது, நீர்வாழு முயிர்கள் பிறவாமையும், மணிமுதலானவை உண்டாகாமையும், ஆம். இங்கே, குறைத்தலென்றது முகத்தலை, மழைக்கு முதலாகிய கடலுக்கும், மழை வேண்டுமென்பதாம். [இவை ஏழுபாட்டாலும் உலகம் நடத்தற்கு மழை ஏதுவாதல் சொல்லப்பட்டது.]

'கடலுந் தன்னீர்மை' என்றதில், கடலின் நீர்மைகளாவன: படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தன்மைகளை. இதுபற்றிய கடலுக்கு 'முன்னீர்' என்றோர் பெயரும் வழங்கிவருதல் காண்க. (7)

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(பரி-உரை) வானோர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல்லாது. தேவர்கட்கும் இவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழவும் பூசையும் நடவாது, வானம் வறக்குமேல்-மழை பெய்யாதாயின் எ-று.

நைமித்திகத்தோடு கூடிய நித்திய மென்றாராகலின், செல்லாதென்றார். உம்மை சிறப்பும்மை. நித்தியத்திற் றாழ்வு தீரச் செய்வது நைமித்திக மாதலின், அதனை முற்கூறினார்.

(ப-ரை) வானம் வறக்குமேல்-மழை பெய்யாதாயின், வானோர்க்கும்-தேவர்களுக்கும், ஈண்டு-இல்வுலகத்திலே, சிறப்பொடு-(மக்களாலே செய்யப்படுகிற) திருவிழாவுடனே, பூசனை-பூசையானது, செல்லாது நடவாது எ-று.

(க-ரை) மழை பெய்யாவிட்டால் இவ்வுலகில் தேவர்களுக்கும் பூசை நடவாது என்பதாம்.

(வி-ரை) உம்மை உயர்வுசிறப்பு. விழாவோடு கூடிய பூசை யெனலால் செல்லாதென்று ஒருமையாகச் சொன்னார். பூசையிலே தாழ்வு தீரச் செயப்படுவது விழாவாதலின், இதனை முன்வைத்தார்.

'வானோர்' இது இட அடியாகப் பிறந்த பெயர். வானுலக வாசிகளாகிய தேவரைக் குறித்தது. வானோர் என்றது இந்திராதி தேவர்களை. இந்திரன் முதலிய தேவர்களுக்கு விழாவெடுக்கும் வழக்கு உண்மை கண்டு தெளிக. (8)

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(பரி-உரை) வியன் உலகம் தானம் தவம் இரண்டும் தங்கா-அகன்ற வுலகின்கண் தானமும் தவமுமாகிய இரண்டறமும் உளவாகா, வானம் வழங்கா தெனின்-மழை பெய்யாதாயின் எ-று.

தானமாவது அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகை யோடுங் கொடுத்தல். தவமாவது - மனம் பொறிவழி போகாது கிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கல் முதலாயின. பெரும்பான்மைபற் றித் தானம் இல்லறத்தின்மேலும், தவம் துறவறத்தின்மேலும் நின்றன.

(ப-ரை) வானம்-மழை, வழங்காதெனின்-பெய்யாதாயின், வியலுலகத்-தினிற்ற வுலகத்திலே தானந் தவமிரண்டும்-தானமும், தவமுமாகிய விரண் டுறமும், தங்கா-உளவாகாவாம் எ-று.

(க-ரை) மழை பொழியாவிடி லுலகத்தில் தருமமுந் தவமு முண்டாகா வாம் என்பதாம்.

(வி-ரை) தானமாவது - தரும வழியால் வந்த பொருள்களைப் பெரி யோர்க்கு மகிழ்ச்சியொடு கொடுப்பது. தவமாவது மனம் பொறிவழி போகா தல் கிற்கும்பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கல் முதலானவை, மிகுதி பற்றி தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின்மேலும் நின்றன.

'தானம்' என்றது வறியார்க்கு ஒன்று ஈவதை 'தவம்' என்றது ஐம் பொறி அடக்கி நோற்றலை. 'இரண்டும்' இதில் நின்ற உம்மை முற்றும்மை. 'வியன்' என்பது பெரிய என்னும் பொருளது. ஈண்டு விரிந்த என்னும் பொரு ளில் வந்தது. 'வழங்கல்' என்றது தருதல் என்னும் பொருளது. ஈண்டு மழை பெய்தலை உணர்த்திற்று.

(9)

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(பரி-உரை) யார் யார்க்கும் நீர் இன்று உலகு அமையாது எனின்-எவ் வகை மேம்பாட்டார்க்கும் நீரையின்றி உலகியல் அமையாதாயின், ஒழுக்கு மான் இன்று அமையாது-அந்நீர் இடையறு தொழுகும் ஒழுக்கும் வானை யின்றி யமையாது எ-று.

பொருளின்பங்களை உலகியலென்றார், அவை இம்மைக்கண்ணவாகலின். இடையறு தொழுகுதல். எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல். நீரின் றமையா துலகென்பது எல்லாராலுந் தெளியப்படுதலின், அதுபோல ஒழுக் கும் வானின்றமையாமை தெளியப்படுமென்பார், நீரின் றமையா துலகெனி னென்றார். இதனை நீரையின்றி யமையாது உலகாயின் எத்திறத்தார்க்கும் மழையின்றி ஒழுக்கம் நிரம்பாதென உரைப்பாரு முளர். இவை மூன்று பாட்டாலும் அறம் பொரு ளின்பங்கள் நடத்தற்கு எதுவாதல் கூறப்பட்டது.

(ப-ரை) யார் யார்க்கும் - எவ்வகை மேம்பாட்டோர்க்கும், நீர் - நீரை, யின்ற-இல்லாமல், உலகு-உலகியலானது, அமையாதெனின்-பொருந்தாதா கும், ஒழுக்கு-(அந்நீரினது நடுவே நிங்காத) வொழுக்கமும், வான்-மழையை, யின்ற-இல்லாமல், அமையாது-பொருந்தாது எ-று.

(க-ரை) எவ்வகை மேன்மையுடையோர்க்கும் நீரையல்லாம லுலகியலா
னது நடவாது, அதுபோல, மழையில்லாமல் நீரொழுக்கங் கிடையாது என்ப
தாம்.

(வி-ரை) இம்மையிலே அநுபவிக்கப்படுவன வாதலிற் பொருளின்பங்
களை யுலகியலென்றார், நடுவே நீங்காத வொழுக்கமாவது, எக்காலங்களிலும்
எவ்விடங்களிலும் நீருண்டாயிருத்தல். நீரினாலே பொருளின்பங்கள் பொருந்
துதல்போல், மழையினாலே அந்நீரொழுக்கம் பொருந்துதல் எல்லாராலும்
தெளியப்படுமென்பதைக் காட்டுதற்கு, நீரின்றமையா துலகெனி னென்றார்.
[இவை மூன்று பாட்டாலும் அறம் பொருளின்பங்கள் நடத்தற்கு மழை ஏது
வாதல் சொல்லப்பட்டது.]

உலகம் நடைபெறுதற்கு மழை இன்றியமையாக் கருவியாக இருத்த
லின் "நீரின்றமையா துலகெனின்" என்றார். 'எனின்' இது என்னின் என்ப
தன் தொகுத்தல் விகாரம். 'யார்' இது யாவென் வினாவடியாகப்- பிறந்த
பெயர். 'ஒழுக்கு' என்றது ஒழுக்கத்தை. ஒழுகுவது ஒழுக்கு. (10)

2-ம் அதி-வான்சிறப்பு-முற்றிற்று.

3-ம் அதிகாரம்-நீத்தார் பெருமை.

(பரி-உரை) அஃதாவது; முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறுதல்
அவ்வற முதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறுணர்த்துவார் அவரா
லின், இது வான்சிறப்பின் பின்வைக்கப்பட்டது.

(உ-ரை) அஃதாவது: முற்றத்துறந்த முனிவரது பெருமையை சொல்
தலாம்; அவ்வற முதலாகிய பொருள்களை உலகத்துக்கு உள்ளவாறு அறி
விப்பவர் அவராதலால் இது வான்சிறப்பின் பின்வைக்கப்பட்டது.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவற் றுணிவு.

(பரி-உரை) ஒழுக்கத்து நீத்தார் பெருமை - தமக்குரிய ஒழுக்கத்தி
கண்ணே நின்று துறந்தாரது பெருமையை, விழுப்பத்து வேண்டும் பனு
துணிவு-விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிதென விரு
பும் நூல்களது துணிவு எ-று.

தமக்கு உரிய வொழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலாவது:—தத்
வருணத்திற்கும் நிலைக்கு முரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வ
ரும், அறம் வளரப் பாவந் தேயும், பாவந் தேய அறியாமை நீங்கும், அறியாமை
நீங்க நித்த அநித்தங்களது வேறுபாட்டுணர்வும் அழிதன்மாலையவாய இம்
மறுமை யின்பங்களின் உவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும், அ
தோன்ற வீட்டின்க ணாசை யுண்டாம், அஃதுண்டாகப் பிறவிக்குக் கார

மாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நீங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோக முயற்சியுண்டாம். அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனதென்பதும், அகப்பற்றாகிய யானென்பதும் விடும்; ஆகலான், இவ்விரண்டு பற்றையும் இம்முறையே யுவர்த்துவிடுத லெனக்கொள்க. பனுவலெனப் பொதுப்படக் கூறியவதனான், ஒன்றையொன் றொவ்வாத சமயநூல்களெல்லாவற்றிற்கும் இஃது ஒத்த துணிவென்பது பெற்றாம். செய்தாரது துணிவு பனுவன்மே லேற்றப்பட்டது.

(பரை) பனுவல்-நூல்களது, துணிவு-நிச்சயமானது, ஒழுக்கத்து-(தமக்குரிய) வொழுக்கத்திலே நின்று, நீத்தார்-துறந்தவரது, பெருமை-மகிமையை, விழுப்பத்து-மேலான பல பொருள்களுள்ளும், வேண்டும்-(இதுவே மேலானதென்று) விரும்பும் எ-றீ.

(க-ரை) நூல்களது நிச்சயமானது துறந்தவர் மகிமையை மேலானதென்று விரும்பும் என்பதாம்.

(வி-ரை) தமக்குரிய வொழுக்கத்திலே நின்று துறத்தலாவது தங்கள் தங்கள் வருணாசிரமங்களுக்கு உரிய ஒழுக்கங்கள் தப்பாமல் நடக்கப் புண்ணியம் வளரும், அது வளரப் பாவம் தேயும், அது தேய அறியாமை நீங்கும்; அதுநீங்க இது நித்தியம் இது அநித்தியம் என்கிற பகுத்தறிவும், நிலையில்லாத இம்மை மறுமை யின்பங்களில் வெறுப்பும், பிறவித் துன்பங்களும் தோன்றும், அவை தோன்ற மோட்சத்தில் ஆசை உண்டாம், அது உண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய வீண் முயற்சிகளெல்லாம் நீங்கி மோட்சத்திற்குக் காரணமாகிய யோகமுயற்சி உண்டாம், அது உண்டாகத் தத்துவஞானம் பிறந்து எனதென்பதாகிய மமகாரமும், நானென்பதாகிய அகங்காரமும் விடும். ஆதலின், இவ்விரண்டு பற்றுக்களையும் இம்முறையே வெறுத்து விடுதலாம். நூல்செய்தவரது துணிவு நூலின்மேல் ஏற்றப்பட்டது.

'ஒழுக்கம்' என்றது தத்தமக்கு உரிய வர்ணாசிரம தருமங்களை. இது 'ஒழுகு' என்னும் பகுதி அடியாகப் பிறந்தது. இதில் 'அம்' தொழிற்பெயர் விகுதி. 'நீத்தார்' என்றது துறவிகளை. இதில் 'நீ' பகுதி. (நீ-விலக்கு, நீக்கு) விழுப்பம்-மேன்மை, உயர்வு. பனுவல்-நூல். (1)

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

(பரி-உரை) துறந்தார் பெருமை துணைக் கூறின் - இருவகைப் பற்றினையும் விட்டாரது பெருமையை இவ்வளவென்று எண்ணாற் கூறியறியறின், அளவுபடாமையான், வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டு ற்று-இவ்வுலகத்துப் பிறந்திறந்தாரை எண்ணி இத்துணையரென அறிய ற்றாற்போலும் எ-று.

முடியாதென்பதாம். கொண்டாலென்னும் வினையெச்சம் கொண்டெத் திரிந்து நின்றது.

(ப-ரை) துறந்தார்-(அகங்கார மமகாரங்களை) விட்டவரது, பெருமை. மகிமையை, துணைக்கூறின் - எண்ணிக்கையிலுலே சொல்லி அறியப்புகுந் தால், (அடவுபடாமையால்), வையத்து-இவ்வுலகத்திலே, இறந்தாரை-(பிறர்) நிறைந்தவரை, எண்ணிக்கொண்டற்று - எண்ணி (இத்தனை பேர்களென்று) அறியப் புகுந்தாற்போலும் எ-று.

(க-ரை) துறந்தவர் பெருமையைச் சொல்லில் இறந்தவர்களை எண்ணிக் கொண்டாற்போலும் என்பதாம்.

(வி-ரை) கொண்டாலென்பது கொண்டெனத் திரிந்து நின்றது. 'வையம்' 'துணை' என்றது அளவை. ஈண்டு எண்ணிக்கைமேல்நின்றது. 'வையம்' உலகம். இது பொருள்கள் இருப்பதற்கு இடமாகஇருப்பது. வைக்க இட மாக இருப்பது என்னும் பொருளது. "இறந்தாரை எண்ணிக்கொண்டற்று" இது உலகந் தோன்றிய காலத்திருந்து பிறந்து இறந்தவர்களை எண்ணியது போலாம் என்பதாம். இது எண்ணி முடியாமையை விளக்கி நின்றது. (2)

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

(பரி-உரை) இருமை வகை தெரிந்து-பிறப்பு வீடென்னும் இரண்டனது தன்ப வின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து, ஈண்டு அறம் பூண்டார் பெருமை-அப்பிறப்பறுத்தற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டாரது பெருமையே, உலகு பிறங்கிற்று-உலகின்கண் மிகுயர்ந்தது எ-று.

"தெரிமான் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப்போல, இருமை யென்றது ஈண்டென்னின்க ணின்றது. பிரிநிலை யேகாரம் விகாரத்தாற் றொக்கது. இதனால், திகிரி புருட்டி உலகமுழுதாண்ட அரசர் முதலாயினர் பெருமை பிரிக்கப்பட்டது. இவை மூன்று பாட்டானும் நீத்தார் பெருமையே எல்லாப் பெருமையினும் மிக்க தென்பது கூறப்பட்டது.

(ப-ரை) இருமை-(பிறப்பு வீடென்னும்) இரண்டினது, வகை-(தன்ப வின்பக்) கூறுபாடுகளை, தெரிந்து-(அப்பிறப்பை நீக்குதற்கு) ஆராய்ந்து ஈண்டு - இப்பிறப்பிலே, அறம் - துறவறத்தை, பூண்டார் - கொண்டவரது பெருமை-மகிமையே, உலகு-உலகத்தில், பிறங்கிற்று-உயர்ந்தது எ-று.

(க-ரை) துறவறத்தைக் கொண்டவரது பெருமையே யிவ்வுலகி லுயர்ந்தது என்பதாம்.

(வி-ரை) பெருமையே யென்பதி னேகாரம் விகாரத்தால் தொக்கது. அது உலகமுழுதாண்ட வரசர் முதலானவருடைய பெருமையைப் பிரித்தலாற் பிரிநிலை யேகாரம். [இவை மூன்று பாட்டானும் துறந்தவரது பெருமையே எல்லாப் பெருமைகளினும் உயர்ந்ததென்பது சொல்லப்பட்டது.]

'இருமை' என்றது பிறப்பையும் வீட்டையும். 'ஈண்டு' என்றது இவ்வுலகத்தை, அண்மைச்சுட்டு. 'பிறங்கிற்று' இது பிறங்கு என்னும் பகுதி அடி

கப் பிறந்தது. பிறங்கல்-விளங்கல். உயர்ந்து தோன்றல் என்னும் பொருளது. இதுபற்றியே மலைக்கும் 'பிறங்கல்' என ஒரு பெயர் ஏற்பட்டது. (3)

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

(பரி-உரை) உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்-திண்மையென்னுந் தோட்டியால் பொறிகளாகிய யானை யைந்தனையும் தத்தம் புலங்கண்மேற் செல்லாமற் காப்பான், வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து-எல்லா நிலத்தினும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர் வித்தாம் எ-று.

இஃது ஏகதேச வுருவகம். திண்மை ஈண்டறிவின்மேற்று. அந்நிலத்திற் சென்று முளைத்தலின் வித்தென்றார். ஈண்டுப் பிறந்திறந்து வரும் மகனல்ல னென்பதாம்.

(ப-ரை) உரனென்னுந் தோட்டியான்-அறிவென்னு மங்குசத்தினாலே, ஓரைந்தும்-(பொறிகளாகிய யானைகள்) ஐந்தையும், காப்பான்-(தன்தன் புலன்களின்மேல் செல்லாமற்) காப்பவன், வரனென்னும் வைப்புக்கு-(எல்லா லங்களினும்) மேலானதென்று சொல்லப்படுகிற மோட்சநிலத்துக்கு, ஓர் வித்து-ஒரு வித்தாவான் எ-று.

(க-ரை) ஐம்பொறிகளையும் ஐம்புலன்களிற் செல்லாமற் காப்பவன் மோட்ச நிலத்துக்கு வித்தாவான் என்பதாம்.

(வி-ரை) அந்நிலத்திலே போய் முளைத்தலின் வித்தென்றார்; இங்கே றந்தும் இறந்தும் வருகிற மனிதனல்ல னென்பதாம். [ஏகதேச வுருவக ணி.]

'உரன்' என்றது ஞான அறிவை. 'தோட்டி' இக்காலத்து தொரட்டி ன்பர். ஈண்டு யானையை அடக்கி ஓட்டும் கருவிமேல் நின்றது. ஞானத்தை தாட்டி என்றதால் ஓரைந்தாகிய பொறிகளை யானை என்பது சொல்லா லே அமையும் இது ஏகதேச உருவகம். "வரன் என்னும் வைப்பு" என்றது மாட்சநிலத்தை. (4)

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

(பரி-உரை) ஐந்து அவித்தான் ஆற்றல்-புலன்களிற் செல்கின்ற அவா வந்தனையும் அடக்கினானது வலிக்கு, அகல் விசும்புளார் கோமான் இந்தி னை சாலும் கரி-அகன்ற வானத்துள்ளா ரிறைவனாகிய இந்திரனே அமை ந்தான்று எ-று.

ஐந்துமென்னும் முற்றும்மையும் ஆற்றற்கென்னும் நான்கனுருபும் செய் விகாரத்தாற் றொக்கன. தான் ஐந்தவியாது சாப மெய்திநின்று அவித்த தாற்றல் உணர்த்தினானாகலின், இந்திரனே சாலுங்கரி யென்றார்.

(ப-ரை) ஐந்தவித்தான்-(புலன்களிற் செல்லுகின்ற) வைந்தாசைகளையு மொழித்தவனது, ஆற்றல்-வல்லமைக்கு, அகல் விசும்புளார்-அகன்ற பொன் னுலகத்துள்ள தேவர்க்கு, கோமான் - தலைவனாகிய, இந்திரனே - தேவேந் திரனே, சாலுங்கரி-போதுமான சாட்சியாம் எ-று.

(க-ரை) கௌதமமுனி வல்லமைக்குத் தேவேந்திரனே சாட்சியாம் என்பதாம்.

(வி-ரை) ஐந்தாசைகளையும் நீக்காமல் சாபத்தை அடைந்து நின்று அவ்வாசைகளை நீக்கினவனாகிய கௌதமமுனிவனது வல்லமையைத் தெரி வித்தானாதலின் இந்திரனே சாலுங்கரி யென்றார்.

"இந்திரனே சாலும் கரி" என்றதில் ஏகாரம் தேற்றப்பொருளது. 'சாலும்' என்றது ஐந்தவியாது துன்புற்றாற்கும் தேவரிற் சிறந்த இந்திரனே போதுமான சாட்சி என்பதாம். இந்திரனையே சபித்ததனால் கௌதம முனிவனது ஐந்தவித்த ஆற்றலும், இந்திரன் சாபத்தை ஏற்றதனால் ஐந் தவியாத இழுக்கால் வந்த துன்பத்திற்கும் அவ் இந்திரனே போதிய சான்றானானென்பதுங் கூறியது காண்க. (5)

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(பரி-உரை) செயற்கரிய செய்வார் பெரியர் - ஒத்த பிறப்பினராய மக்களுள் செய்தற் கெளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர், செயற்கரிய செய்கலாதார் சிறியர் - அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றைச் செய்யமாட்டாதார் சிறியர் எ-று.

செயற்கெளியவாவன: மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழி னால் புலன்களிற் செலுத்தலும், வெஃகலும், வெகுடலும் முதலாயின. செயற்கரியவாவன: இயமம் நியமம் முதலாய எண்வகை யோகவுறுப்புக்கள். * நீரிற் பலகான் மூழ்கல் முதலாய நாலிருவழக்கிற் றாபதபக்க மென்பாரு முளர்; அவை நியமத்துள்ளே அடங்கலின், நீத்தாரது பெருமைக் கேலாமை யறிக.

(ப-ரை) (ஒத்த பிறப்பினராகிய மனிதர்களிலே) பெரியர்-பெரியோர், செயற்கரிய-செய்தற் கரியவைகளை, செய்வார்-செய்வார்கள், சிறியர்-சிறி யோர், செயற்கரிய-அச் செய்தற் கரியவைகளை, செய்கலாதார் - செய் மாட்டாதார் எ-று.

(க-ரை) பெரியோர் செய்தற் கரியவைகளைச் செய்வார்கள், சிறியோ செய்தற்கரியவைகளைச் செய்யார்கள் என்பதாம்.

---

* நீரிற் பலகான் மூழ்கல் முதலிய வெட்டும் "நீர்பலகான் மூழ்கி நிலை தசைஇத் தோலுடையாச், சோர்சடை தாழச் சுடரோம்பி-யூரடையார், கான கத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல், வானகத் றுய்க்கும் வழி." என்னு வெண்பாவானுணர்க. வெண்பாமாலை, வாகைப்படலம்-14.

(வி-ரை) எனவே பெரியோர் செய்தற் கெளியவைகளைச் செய்யாதென்பதும், சிறியோர் அவைகளைச் செய்வாரென்பதும் தோன்றுதல் அறிக. செய்தற் கெளியவை மனத்தை வேண்டியபடியே போகவிடுதல், ஆசை இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எண்வகை யோகங்களாம்.

'செயற்கரிய' என்றது மேற்கொண்டு சாதித்த இயற்றதற்கு முடியாமையை உணர்த்திற்று. 'அரிய' என்றது அரியனவாகிய எண்வகை யோக உருப்புகளை. இக்குறளால் யார் பெரியர், யார் சிறியர் என்பது விளக்கமாயிற்று.

(6)

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(பரி-உரை) சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின்வகை-சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமுமென்று சொல்லப்பட்ட தன் மாத்திரைகளினுடைய கூறுபாட்டையும், தெரிவான்கட்டே உலகு-ஆராய்வாரறிவின் கண்ணதே உலகம் எ-று.

அவற்றின் கூறுபாடாவன-பூதங்கட்கு முதலாகிய அவைதாமைந்தும், அவற்றின்கட் டோன்றிய அப்பூதங்களைந்தும், அவற்றின் கூறுகிய ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்துமாகஇருபதுமாம். வகைதெரிவான்கட்டென உடம்பொடு புணர்த்ததனால், தெரிகின்ற புருடனும் அவன் தெரிதற்கருவியாகிய மான் அகங்காரமனங்களும் அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றும். தத்துவமிருபத்தைந்தனையுந் தெரிதலாவது, மூலப்பகுதியன்றிற் சேன்றியதன்மையிற் பகுதியே யாவதல்லது விகுதியாகாதெனவும், அதன்கட்டோன்றிய மானும் அதன்கட் டோன்றிய அகங்காரமும் அதன்கட்டோன்றிய தன்மாத்திரைகளுமாகிய எழும் தத்தமக்கு முதலாயதனை நோக்கப் பகுதியாதலும் தங்கட்டோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலு முடையவனவும், அவற்றின்கட்டோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினைந்தும் தங்கட் டோன்றுவன வின்மையின் பகுதியேயாவதல்லது பகுதியாகாவெனவும், புருடன் தானொன்றிற்சேர்மையானும் தன்கட் டோன்றுவன வின்மையானும் இரண்டுமல்லனெனவும் சாங்கிய நூலோனியவாற்றான் ஆராய்தல். இவ்விருபத்தைந்தல்லதுமெனப் பிறிதொன்றில்லையென உலகின தண்மை யறிதலின், அவனறிவின் கண்ணதாயிற்று. இவை தான்குபாட்டானும் பெருமைக்கேது ஐந்தந்தலும், யோகப்பயிற்சியும், தத்துவவுணர்வு மென்பது கூறப்பட்டது.

(ப-ரை) உலகு-உலகமானது, சுவையொளி யூறோசைநாற்றம் - சுவையொளியும் ஊறும் ஓசையும் நாற்றமும், என்று-என்று சொல்லப்பட்ட, இன்-பஞ்சதன்மாத்திரைகளது, வகை-கூறுபாட்டை, தெரிவான்கட்டே-ஆய்பவனறிவினிடத்தே எ-று.

(க-ரை) உலகமானது பற்றுதன்மாத்திரைகளோ யறிபவனிடத்தே என்பதாம்.

(வி-ரை) சுவை-ரசமும், ஒளி-உருபமும், ஊறு-ஸ்பரிசமும் ஆம். ஐ நின்வகையாவன-அவையைந்தும், அவற்றிலே தோன்றிய பூதங்களைந்தும், அவற்றின் கூறுகிய ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும், ஆக இருபதுமாம். வகைதெரிவா னென்றதனால் தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற்குக் காரணமாகிய மான்-அகங்காரம்-மனம் எனப்பட்டவை யும் அவற்றுக்கு முதலாகிய மூலப்பகுதியும் கொள்ளப்படும். இவ்விருப தைந்து தத்துவக்கூட்டமல்லது, உலகென வேறில்லையென்று உலகினை இருப்பை யறிதலால் அவ்வறிவினிடத்தாயிற்று. பூதமைந்து-நிலம், நீர், நீ, காற்று, வான். ஞானேந்திரியமைந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி. கன் மேந்திரியமைந்து-வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம். மூலப்பகுதி-மாயை. [இவை தான்கு பாட்டாலும் பெருமைக்குக் காரணங்கள் ஐம்பொறியடக்க லும், யோகப்பயிற்சியும், தத்துவஞானமும். ஆமென்பது சொல்லப்பட்டது.]

'ஊறு' என்று கூறியது உற்று அறிதலை. 'கட்டே' இது கண்ணே என்ற பொருளது. ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது. 'கட்டு' இதன் குறிப்பு வினைமுற்று.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(பரி-உரை) நிறைமொழி மாந்தர்பெருமை-நிறைந்த மொழியினையுடைய குறைந்தாரது பெருமையை, நிலத்து மறைமொழி காட்டிவிடும்-நிலவுலகத்தில் கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டும் எ-று.

நிறைமொழி யென்பது அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி. காட்டுதல் பயனறுணர்த்துதல்.

(ப-ரை) நிறைமொழி-பயனிறைந்த சொல்லையுடைய, மாந்தர்-முனிவ ரது, பெருமை - மகிமையை, நிலத்து - நிலவுலகத்தில், மறைமொழி - அ ராணையாகச்சொல்லிய மந்திரங்களே, காட்டிவிடும்-பிரத்தியக்ஷமாகக் காட்ட விடும் எ-று.

(க-ரை) முனிவரது மகிமையை அவர்கள் மந்திரங்களே காட்டி என்பதாம்.

(வி-ரை) பயனிறைந்தமொழியாவது அவர் அருளினாலே சொன்னாலு கோபத்தினாலே சொன்னாலும், அதனதன் பிரயோசனத்தைக் கொடுத்து விடுகிறசொல், காட்டுதல் பிரயோசனப்பட்டு அம்மகிமையை அறிவித்தல்.

'நிறைமொழி' என்றது சாபானுக்கிரகசக்தி நிறைந்த சொல் என்பதாம். 'மாந்தர்' என்றது ஞானமுனிவர்களை. 'மறைமொழி' என்றது மந்திரமெ களை. 'காட்டிவிடும்' என்பதில் 'விடும்' என்ற சொல் தணிவுப் பொரு காட்டி நின்றது.

குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(பரி-உரை) குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி-துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்க ணின்ற முனிவரது வெகுளி, கணமேயும் காத்தல் அரிது-தானுள்ளவளவு கணமேயாயினும் வெகுளப்பட்டாராற் றடுத்தல் அரிது எ-று.

சலியாமையும் பெருமையும் பற்றிக் குணங்களைக் குன்றாக வுருவகஞ் செய்தார். குணம்-சாதியொருமை. அநாதியாய் வருகின்றஉறுபற்றி ஒரோ வழி வெகுளி தோன்றியபொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்குமாகலின் கணமேயுமென்றும், நிறைமொழிமாந்தராகலின் காத்தலரிதென்றுங்கூறினார். இவை யிரண்டுபாட்டானும் அவராணை கூறப்பட்டது.

(ப-ரை) குணமென்னுங் குன்று-(துறவு மெய்யறிவு ஆசையில்லாமை முதலான) நற்குணங்களாகிய மலையின்மேல், ஏறிநின்றார்-ஏறிநின்ற முனிவ ரது, வெகுளி-கோபமானது, கணமேயும்-(தானுள்ளவளவு) க்ஷணகாலமேயா யினும், காத்தல்-கோபிக்கப்பட்டவராலே தடுத்தல், அரிது-அரிதாம் எ-று.

(க-ரை) முனிவர்கள் கோபமானது கோபிக்கப்பட்டவராலே தடுத்தல் படாது என்பதாம்.

(வி-ரை) அசையாமையும் பெருமையும்பற்றிக் குணங்களை மலையாக வுருவகம்செய்தார், அநாதியான பழக்கத்தினாலே ஒரோவிடத்துக்கோபம் தோன்றியபோதே அதனை மெய்யுணர்வு அழிக்கும் ஆதலால் கணமேயு மென்றும், நிறைமொழிமாந்தராகலால் காத்தலரிதென்றும் சொல்லினார். இவை இரண்டு பாட்டாலும் அவராணை சொல்லப்பட்டது.]

'குன்று' இது மலையினும் குறுகி இருத்தலின் குன்று என ஆயது ன்பர். 'குன்று' ஈண்டு மலையை உணர்த்திற்று. 'கணம்' இது காலத்தின் ண்ணிய அளவைக்குறித்தது. ஈண்டு "விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப் பால மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்" என்பதானும் அறியப்படும். துபற்றியன்றோ "காம மாதிகள் வந்தாலுங் கணத்திற்போம் மனத்திற் றோ" என்றார் பிறரும்.

(9)

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

(பரி-உரை) எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்-எல்லா ர்கண்மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகலான், அந்தணர் போர் அறவோர்-அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தி னின்ற எ-று.

பூணுதல் விரதமாகக் கோடல். அந்தணரென்பது அழகிய தட்பத்தினை டயாரென ஏறுப்பெயராகலின், அஃது அவ்வருளுடையார்மேலன்றிச்

செல்லாதென்பது கருத்து. அவ்வா றாணையுடையராயினும் உயிர்கண்மாட்டருளுடைய ரென்பது இதனாற் கூறப்பட்டது.

(ப-ரை) எவ்வுயிர்க்கும்-எல்லாவுயிர்களின்மேலும், செந்தண்மை-செவ்வையானவருளை, பூண்டு-விரதமாகக்கொண்டு, ஒழுகலான்-நடக்கையினாலே, அந்தணரென்போர் - அந்தணரென்று சொல்லப்படுவோர், அறவோர் - துறவறத்தினின்றவர் எ-று.

(க-ரை) அந்தணரென்று சொல்லப்படுவோர் முனிவர்களே என்பதாம்.

(வி-ரை) மற்று - அசைநிலை, அந்தணரென்பது அழகியதன்மையையுடையவரென்னுங் காரணப்பெயராகலின் அவ்வருளுடையார்க் கல்லது மற்றவர்க் காகாதென்பது கருத்து. [அப்படி ஆணையை யுடையவராயினும் உயிர்களிடத்தே அருளுடையரென்பது இதனாற் சொல்லப்பட்டது.]

'அந்தணர்' இதற்கு வேதாந்தப் பொருளை அடைந்தோர் எனவும் பொருள் கூறுவர். அறவோர் என்பது சிறப்புப்பற்றி துறவறத்தைக் குறித்து நின்றது. (10)

3-ம் அதி-நீத்தார் பெருமை-முற்றிற்று.

4-ம் அதிகாரம்-அறன்வலியுறுத்தல்.

(பரி-உரை) அஃதாவது; அம்முனிவரா னுணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப்பொருளு மின்பமும் போலாது, அறன், இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்தென்பது கூறுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும், * "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு, மறத்து வழிப்படூஉந் தோற்றம்போல" என்றார் பிறரும்.

(உரை) அஃதாவது; அம்முனிவரால் அறிவிக்கப்பட்ட மூன்றுள் அறமானது மற்றைப் பொருளின்பங்கள்போ லாகாமல் இம்மை, மறுமை வீடு என்கிற மூன்றையும் தருதலால் அவற்றினும் உறுதியுடைத்தென்பது சொல்லுதலாம். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(பரி-உரை) சிறப்பு ஈனும்-வீடுபேற்றையுந் தரும்; செல்வமும் ஈனும் துறக்கம் முதலிய செல்வத்தையுந்தரும்; உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன் ஆதலான் உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம் யாது? எ-று.

* புறநானூறு-31.

எல்லாப் பேற்றினுஞ் சிறந்தமையின் வீடு சிறப்பெனப்பட்டது. ஆக்கந் தருவதனை ஆக்கமென்றார். ஆக்கம்-மேன்மேலுயர்தல். சண்டியென்றது இதனால் அறத்தின் மிக்க வுறுதி இல்லையென்பது கூறப்பட்டது.

(ப-ரை) சிறப்பு-மோட்சத்தையும், ஈனும்-கொடுக்கும், செல்வமும்-சுவர்க்க முதலாகிய) செல்வத்தையும், ஈனும்-கொடுக்கும், (ஆதலால்) உயிர்க்கு-மனிதருயிர்க்கு, அறத்தினூஉங்கு-தருமத்தின்மேற்பட்ட, ஆக்கம்-பெருக்கத்தைத் தருவது, வேண்-யாதை எ-று.

(க-ரை) மக்களுயிர்க்குத் தருமத்தின் மேற்பட்டதில்லை என்பதாம்.

(வி-ரை) ஓ-அசைநிலை. எல்லாப்பேறுகளிலும் சிறந்தவாகலின் மோட்சத்தைச் சிறப்பென்றார். ஆக்கம்-மேன்மேலுயர்தல். [இதனால் அறத்தினும் அதிகமாகிய உறுதி இல்லையென்பது சொல்லப்பட்டது.]

'செல்வமுமீனும்' இதில் நின்ற உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை; சிறப்பைத் தருவதல்லாமல் செல்வமும் தரும் என்ற பொருளது. 'ஆக்கம்' இது செல்வம் என்னும் பொருளது. இது உயர்வு ஆக்குவது என்னுங் காரணம்பற்றி வந்த காரணப்பெயர். இனி இன்பம் ஆக்குவது எனினும் ஆம். 'வேண்டி' இது விருப்பப்பெயர் சுற்றி நின்ற ஓகாரம் ஈற்றசை என்பர். (1)

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

(பரி-உரை) அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை-ஒருவனுக்கு அறஞ் செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை; அதனை மறத்தலின் ஊங்கு கேடு மில்லை-அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை எ-று.

அறத்தினூஉங் காக்கமு மில்லையென மேற்சொல்லியதனையே அனுவதித்தார், அதனுற் கேடுவருதல் கூறுதற்பயனேக்கி. இதனால் அது செய்யாதிக் கேடுவருதல் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவனுக்கு) அறத்தினூஉங்கு-தருமஞ் (செய்தலின்) மேற்பட்ட, ஆக்கமும்-பெருக்கத்தைத் (தருவதும்), இல்லை-இல்லை, அதனை-அத்தருமத்தை, மறத்தலினூங்கு - (மயக்கத்தால்) மறந்துவிடுதலின் மேற்பட்ட, கேடு-கேட்டைத் (தருவதும்), இல்லை-இல்லை எ-று.

(க-ரை) தருமத்தின் மேற்பட்ட செல்வமுமில்லை, அத்தருமத்தை மறத்தலேப்பார்க்கினும் கேடில்லை என்பதாம்.

(வி-ரை) அறத்தினூங்காக்கமுமில்லையென முன்சொல்லப்பட்டதையே அநுவதித்தார் அதனாலே கேடுவருதலைச் சொல்லுதலாகிய பயனேக்கி. இதனால் அது செய்யாதபோது கேடுவருதல் சொல்லப்பட்டது.]

'ஊங்கு' இது உயர்ந்தது என்னும் பொருளது. இது உகரச்சுட்டடியாப் பிறந்த பெயர். கேடுதருவதைக் கேடு என்றது ஆகுபெயர். (2)

---

* அநுவாதமாவது: முன் சொல்லப்பட்டதையே மற்றொன்றை விதித்துப் பொருட்டேற்பின்னுஞ் சொல்லுதல்.

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(பரி-உரை) ஒல்லும் வகையான்-தத்தமக்கியலுந் திறத்தான், அறவினை ஒவாதே செல்லும் வாய் எல்லாம் செயல்-அறமாகிய கல்வினையை ஒழியாதே அஃதெய்தும் இடத்தா னெல்லாஞ் செய்க எ-று.

இயலுந்திறமாவது: இல்லறம் பொருளனவிற் கேற்பவும், துறவறம் வாக்கைகிலைக் கேற்பவுஞ் செய்தல். ஓவாமை-இடைவிடாமை. எய்தும்விடமாவன: மனம் வாக்குக் காய மென்பன. அவற்றாற் செய்யும் அறங்களாவன: முறையே சற்சிந்தையும், சற்சொல்லும், சற்செயலுமென விவை. இதனான் அறஞ் செய்யுமாறு கூறப்பட்டது.

(ப-ரை) ஒல்லும் வகையால்-(தமக்குத் தமக்குக்கூடும்) வகையால், அறவினை-தருமமாகிய கல்வினையை, ஓவாதே-இடைவிடாமல், செல்லும்வாயெல்லாம்-(அதை) செல்லுமிடங்களிலெல்லாம், செயல்-செய்யக்கடவர் எ-று.

(க-ரை) மனம், வாக்கு, காயம், இம்மூன்றாலுந் தருமஞ் செய்யக்கடவர்கள் என்பதாம்.

(வி-ரை) கூடும்வகையாவது, இல்லறம் பொருளளவுக்கு ஏற்கவும், துறவறம்-சரீரநிலைக்கு ஏற்கவும் செய்தலாம். செல்லுமிடங்களாவன: மனமும், வாக்கும், காயமும், ஆம். அவற்றினாலே செய்யப்படுகிற அறங்களாவன: சற்சிந்தையும், சற்சொல்லும், சற்செயலும் ஆம். [இதனால் அறம் செய்யுமாறு சொல்லப்பட்டது.]

'அறவினை' இது அறத்தைச்சொல்லப்பட்ட வினை என்பதாம். இல்லில் அறம்செய்க. இவைகளால் இல்லில் நன்மைகள் எய்தும் எனப் பெரியோர்களாலும் வேதங்களாலும் அறத்தைச் சொல்லப்பட்ட தென்பதாம். இதற்கு எதிர்மொழி 'மறம்' இது மறத்தைச் சொல்லப்பட்டது என்பதாம். 'ஓவாதே' என்றது குறையாதே என்பதாம். ஈண்டு இடைவிடாது என்னும் பொருளில் பயந்து நின்றது. "செல்லும்வாய்" என்றது நிரிகரண சாத்தியங்களை.

மனத்துக்கண் மாசில னாதல னனைத்தற
னாகுல நீர பிற.

(பரி-உரை) மனத்தக்கண் மாசு இலன் ஆகல் - அவ்வாற்றான் அறஞ் செய்வான் தன் மனத்தின்கட் குற்றமுடைய னல்லனாக, அனைத்து அறனும் அவ்வனவே அறமாவது, பிற ஆகுல நீர-அஃதொழிந்த சொல்லும் வேடமும் அறமெனப்படா, ஆரவார நீர்மைய எ-று.

குற்றம்-தீயனசிந்தித்தல். பிறாநிதல்வேண்டிச் செய்கின்றனவாகலின் ஆகுலநீரவென்றார். மனத்து மாசுடையனாயவழி அதன் வழியவாகிய மெய்களாற் செய்வன பயனிலவென்பதூஉம் பெறப்பட்டது.

(ப-ரை) மனத்தக்கண்-(அப்படி அறஞ்செய்பவன் தன்) மனத்திலே, மாசிலனாதல்-குற்றமில்லாதவனாகக் கடவன், அனைத்து-அவ்வளவே, பிற-அதை ஒழிந்த சொல்லும் வேடமும், அகுலசீர்-(அறமெனப் படுவனவல்ல) ஆசாரகுணத்தை யுடையனவாம் என்று.

(க-ரை) தருமஞ்செய்பவன் மனமாசற்றிருக்கக்கடவன், அவ்வளவே யறம் என்பதாம்.

(வி-ரை) குற்றம் நீயவைகினைத்தல், பிறர் அறியவேண்டிச் செய்யப்படுதலால் அகுலசீர பிறவென்றார். [மனதிலே குற்றமுடையவனாயபோது அதன் வழிப்பட்ட வாக்கினாலும் காயத்தினாலும் செய்யப்படுகிற அறக்களிலே பயன் இல்லையென்பது பெறப்பட்டது.]

"மனத்தக்கண்" இதில் 'கண்' ஏழனுருபு இடப்பொருளது. 'பிற' என்றது சுட்டியதற் கினக்கள. 'ஆகுலம்'-துன்பம், துன்பந்தருவன அறமாகாதாதலின் அறமெனப்படாத ஆசாரசீர என்றார். (4)

அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் லன்கு
மிழுக்கா வியன்ற தறம்.

(பரி-உரை) அழுக்காறு-பிறாக்கம் பொறாமையும், அவா-புலன்கண் மேற் செல்கின்ற அவாவும், வெகுளி-அவை யேதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும், இன்னாச்சொல்-அதுபற்றிவருங் கடுஞ்சொல்லுமாகிய, நான்கும் இழுக்கா இயன்றது அறம்-இந்நான்கினையும் கடிந்து இடையறாது நடந்தது அறமாவது எ-று.

இதனுன் இவற்றோடு விரவியன்றது அறமெனப்படா தென்பதூஉங் கொள்க. இவை யிரண்டு பாட்டானும் அறத்தினதியல்பு கூறப்பட்டது.

(ப-ரை) அழுக்காறு-பிறருயர்ச்சி பொறாமையும், அவா-ஐம்புலவாசையும், வெகுளி-(அவை காரணமாகப் பிறர்மேல் உண்டாகிற) கோபமும், இன்னாச்சொல்-(அதுபற்றிவருகிற) கடுஞ்சொல்லும், நான்கும்-ஆகிய விந்நான்கினையும், இழுக்கா-கடிந்து, இயன்றது-(ஒழிவில்லாமல்) நடந்தது, அறம்-தருமமாவது எ-று.

(க-ரை) பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல், இந்நான்கும் கடிந்து நடந்தே தருமம் என்பதாம்.

(வி-ரை) இதனுல் இந்நான்கோடு கலந்து நடந்தது அறமெனப்படாதென்பதுங் கொள்க. [இவை இரண்டுபாட்டாலும் அறத்தினியல்பு சொல்லப்பட்டது.]

'அழுக்காறவா வெகுளியின்னாச்சொல்' என்றது காரணகாரியத் தொடர்புபற்றியது. 'நான்கும்' என்றதன்கண்வந்த உம்மை முற்றும்மை. "இன்னாச்சொல்" இது கடுஞ்சொல்லே புணர்த்நிற்கு; என்னை அது இனிமையில்லாத சொல்லாதலின் என்க. (5)

அன்றறிவா மென்ன றறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை.

(பரி-உரை) அன்று அறிவாம் என்னை அறம் செய்க-யாம் இதுபொழு
தினையமாகலின் இறக்குஞான்று செய்தமெனக் கருதாது அறத்தினை காடோ
றஞ் செய்க; அது பொன்றுங்கால் பொன்றுத் துணை-அவ்வாறு செய்த
அறம் இவ்வுடம்பினின்றும் உயிர் போங்காலத்து அதற்கு அழிவில்லாத
துணையாம் எ-று.

மற்றென்பது அசைநிலை. பொன்றுத் துணையென்றார், செய்தவுடம்
பழியவும் உயிரோ டொன்றி எனையுடம்பிலுஞ் சேறலின். இதனான் இவ்
வியல்பிற்றாய அறத்தினை நிலையாத யாக்கை நிலையினபொழுதே செய்கவென்
பது கூறப்பட்டது.

(ப-ரை) காம் இப்போது இளையோமாகலின் * அன்று-இறக்குநாளில்,
அறிவா மென்னுது-செய்வோமென்று நினையாமல், அறம்-தருமத்தை, செய்க.
(நினைந்தோறும்) செய்யக்கடவர், அது-அப்படிச்செய்யப்பட்ட தருமமானது,
பொன்றுங்கால் - உடம்பினின்று முயிர்போங்காலத்து, பொன்றுத்துணை.
(அவ்வுயிர்க்கு) அழியாத துணையாம் எ-று.

(க-ரை) இறக்கும்போது தருமஞ் செய்வோமென்னாது நினைந்செய்க
அவ்வறம் இறக்கும்போ துதவியாம் என்பதாம்.

(வி-ரை) மற்று - அசைநிலை, செய்தவுடம்பழியவும் உயிரோடுவி
மற்றைவுடம்பிலும், செல்லுதலால் அழியாத துணையாயிற்று. [இதனால் அப்
படிப்பட்ட தருமத்தை நிலையில்லாத வுடம்பு இருக்கிறபோதே செய்க
வென்பது சொல்லப்பட்டது.]

'அன்று' என்றது இறக்குநாளை. 'அது' என்றது அறவினையை.
"பொன்று" இது 'பொன்றுத' என்பதாம். சாறுகெட்டு நின்றது. (6)

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டோர்ந்தா னிடை.

(பரி-உரை) அறத்து ஆறு இது என வேண்டா-அறத்தின் பயன் இ
வென்று யாம் ஆகமவளவையான் உணர்த்தல் வேண்டா; சிவிகை பொறுத்
தானெடு ஊர்ந்தான் இடை-சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடை
காட்சியளவை தன்னானே உணரப்படும் எ-று.

பயனை ஆறென்றார், பின்னதாகலின். எனவென்னு மெச்சத்தைச்
சொல்லாகிய ஆகமவளவையும், பொறுத்தானெடு ஊர்ந்தானிடையென்றதனாற்
காட்சியளவையும் பெற்றாம். உணரப்படுமென்பது சொல்லெச்சம். இதனாற்
பொன்றுத் துணையாதல் தெளிவிக்கப்பட்டது.

* அகத்தியம் "அன்று முன்னுனெதிர்மறை அசைநிலை"

(ப-ரை) அறத்தாறு-தருமத்தின் பயன், இதுவென-இதுவென்று, (ஞமை னவையால்) அறிவிக்க, வேண்டா-வேண்டியதில்லை, வினை-தன்டிதையை, பொறுத்தானோடு-சுமப்பவனோடு, ஊர்த்தானிடை-செலுத்துவோனிடத்தைக் காட்சியனையிலுலேயே) அறியப்படும் எ-று.

(க-ரை) தருமத்தின் பயன் வினை எடுப்பவனிடத்தும், ஏறுபவனிடத்தும் காணப்படும் என்பதாம்.

(வி-ரை) எனவென்றதனால், சொல்லளவாயை ஞமபிரமாணமும், பொறுத்தானோ டூர்ந்தானிடை என்றதனால், காட்சியளவையாயை பிரத்தியட்ச பிரமாணமும் கொள்ளப்பட்டன. அறியப்படுமென்பது குறைத்து நின்றதனால் சொல்லெச்சம். [இதனுலழியாத தினையாதல் தெளிவிக்கப்பட்டது.]

'அறத்தாறு' இதில் 'ஆறு' என்றது பயனை. "வேண்டா" என்றது "வேண்டா" என்றது வேண்டப்படுவதின்று என்பதாம். "காவுவான்" என்றது சுமப்பவனை.

(7)

வீழ்நாள் படாஅமை நன்றூற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(பரி-உரை) வீழ் நாள் படாமை நன்று ஆற்றின்-செய்யாது கழியும் நாள் ளாவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்யுமாயின், அஃது ஒருவன் வாழ்நாள் ழி அடைக்கும் கல்-அச்செயல் அவன் யாக்கையோடு கூடுநாள் வரும் றியை வாராம லடைக்குங் கல்லாம் எ-று.

ஐவகைக் குற்றத்தான் வரும் இருவகை வினையுமுன்ன தினையும் உயிர் க்கையோடுங் கூடிநின்று அவ்வினைகள் திருவகைப் பயனையும் நுகருமாகன், அந்நாண் முழுவதும் வாழ்நாளெனப்பட்டது. குற்றங்க ளைந்தாவன: விச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பென்பன; இவற்றை வடலார் பஞ்சக்கிலேசமென்ப. வினையிரண்டாவன: நல்வினை தீவினையென்ர. பயனிரண்டாவன: இன்பந் துன்ப மென்பன. இதனுன் அறம் வீடுக்குமென்பது கூறப்பட்டது.

(ப-ரை) ஒருவன்-ஒருவன், வீழ்நாள்-(செய்யாமற்) கழியுநாள், படாமை-ப்டாகாமல், நன்று-தருமத்தை, ஆற்றின்-செய்வானுயின், அஃது-அச்-யகையானது, வாழ்நாள்-(அவன் சரீரத்தோடுகூடி) வாழுநானது, வழி-) வழியை, அடைக்குங்கல்-(வராமல்) அடைக்குங்கல்லாம் எ-று.

(க-ரை) ஒருவன் அறத்தைச் செய்தால் அவ்வற மவன் பிறப்பை நீக்கும் பதாம்.

(வி-ரை) அஞ்ஞானம், அகங்காரம், அவா, விருப்பு, வெறுப்பு, என்கிற கைக் குற்றங்களால் வருகிற நல்வினை, தீவினை என்கிற இருவகை வினை ம் உள்ளவரைக்கு முயிர் உடம்போடு கூடிநின்று அவற்றின் பயன்களா சுகதுக்கங்களை அநுபவிக்கும்; ஆகலால் அக்காலமுழுதும் வாழ்நாளெபட்டது.

'வீழ்நாள்' என்றது அறஞ்செய்யாது கொன்னே கழியும் நாட்களை. "நன்று" என்றது நல்வினைகளாயே தருமங்களை. "வாழ்நாள்" என்றது உயிரோடுகூடி உலகில் இருக்கும் நாளை உணர்த்திற்று. "வழி" என்றது பிறப்பு வழியை. வழியடைத்தலாவது பிறவாமையைத் தருதலை. 'கல்' என்றது அடைகல்லை. (8)

அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

(பரி-உரை) அறத்தான் வருவதே இன்பம்-இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது; மற்ற எல்லாம் புறத்த-அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம் இன்பமாயினுந் துன்பத்தினிடத்த, புகழும் இல-அதுவேபு மன்றிப் புகழுமுடைய வல்ல எ-று.

ஆனுருபு ஈண்டுடனிகழ்ச்சிக்கண் வந்தது, * "தூங்கு கையா னோங்கு நடைய" என்புழிப்போல. இன்பம்-காமநுகர்ச்சி, அஃதாமாறு காமத்துப்பாலின் முதற்கட் சொல்லுதும். இன்பத்திற் புறமெனவே துன்பமாயிற்று. பாவத்தான்வரும் பிறனில் விழைவு முதலாயின அக்கணத்து ளின்பமாய்த் தோன்றுமாயினும் பின்றுன்பமாய் விளைதலின், புறத்தவென்றார். அறத்தோடு வாராதன புகழுமில வெனவே, வருவது புகழுமுடைத்தென்பது பெற்றாம். இதனான் அறஞ் செய்வாரே இம்மையின்பமும் புகழும் எய்துவரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) அறத்தான்-இல்லறத்தோடுபொருந்தி, வருவதே-வருமின்பமே இன்பம்-இன்பமாகும், மற்றெல்லாம் - (அதனோடு பொருந்தாது) வருவன வெல்லாம் இன்பமாயினும், புறத்த-துன்பத்துட் சேர்வனவாம்; அதுவுமல்லாமல், புகழும்-புகழையும், இல-உடையனவல்ல எ-று.

(க-ரை) தன் மனைவியோடு கூடு மின்பமே யின்பமாகும் பிறன் மனைவியோடு கூடுமின்பந் துன்பமாம் என்பதாம்.

(வி-ரை) இன்பம் காமத்தி னநுபவம்; இன்பத்திற் புறமெனவே துன்பமாயிற்று; பாவத்தால் வரும் பிறனில் விழைவு முதலானவை அப்போது இன்பமாய்த் தோன்றுமாயினும், பின்பு துன்பமாய் விளைதலாற் புறத்தவென்றார். புகழுமிலவெனவே அறத்தோடு வருவதாகிய வின்பம் புகழுமுடைத்தாமென்பது பெற்றாம். [இதனால் அறஞ்செய்வாரே இம்மையின்பமும், புகழும் பெறுவாரென்பது சொல்லப்பட்டது.]

'அறம்' என்றது இல்லறத்தை. "இன்பம்" என்றது சிற்றின்பத்தை. "மற்றெல்லாம்" என்றது கூடாஒழுக்கங்களை. 'புறத்த' என்றது துன்பத்தை. "புகழும்" இதில் ஈற்று உம்மை எண்ணும்மை. (9)

* புறநானூறு-22.

செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

(பரி-உரை) ஒருவற்குச் செயற்பாலதை அறனே-ஒருவனுக்குச் செய்தற் பான்மையதை கல்வினையே; உயற்பாலதை பழியே - ஒழிதற்பான்மையதை தீவினையே எ-று.

ஒரு மென்பன வீரண்டும் அசைநிலை, தேற்றகாரம் பின்னுங் கூட்டப் பட்டது. பழிக்கப்படுவதனைப் பழியென்றார். இதனுற் செய்வதுமொழிவதும் நியமிக்கப்பட்டன.

(ப-உரை) ஒருவற்கு-ஒருவனுக்கு, செயற்பாலதை - செய்தற்றன்மையதை, அறனே - கல்வினையே, உயற்பாலதை - ஒழிதற்றன்மையதை, பழியே - தீவி னையே எ-று.

(க-உரை) ஒருவனுக்குச் செய்யத்தக்கதை கல்வினை, செய்யத்தகாதது தீவினை என்பதாம்.

(வி-உரை) தேற்றகாரம் பின்னுங் கூட்டப்பட்டது. ஒருமிரண்டும், அசைநிலைகள். பழிக்கப்படுவதாகிய தீவினையைப் பழி என்றார். [இதனுற் செய்வதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டன.]

'அறனே' இதன் ஈற்று ஏகாரம் தேற்றப்பொருளது. "உயல்" என்றதை ண்டு ஒழித்தலை உணர்த்திற்று. (10)

4-ம் அதி-அறன்வலியுறுத்தல்-முற்றிற்று.

இவை நான்தும் பாயிரம்.

இல்லறவியல்

இல்லறமாவது: இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லப்படுகிற வழியிலே நின்று, அதற்கு துணையாகிய கற்புடைய மனைவியோடு கூடிச் செய்யப்படுவதாம். ஆதலின் அதனை முதலிலே சொல்லத்தொடங்கினர்.

5-ம் அதிகாரம்-இல்வாழ்க்கை

(பரி-உரை) அஃதாவது: இல்லானோடு கூடி வாழ்தலினது சிறப்பு. இன்னிலை அறஞ் செய்தற்குரிய இருவகை நிலையுள் முதலாதலின், இஃது அறன்வலியுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: மனையாளோடு கூடி வாழ்தலினது சிறப்பாம். இவ் வாழ்க்கை நிலையானது அறஞ்செய்தற்குரிய இருவகை நிலைகளுள்ளே முதலாதலின் இது அறன்வலியுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

(பரி-உரை) இல்வாழ்வான் என்பான் - இல்லறத்தோடு கூடி வாழ்வா னென்று சொல்லப்படுவான், இயல்பு உடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை-அறவியல்பினையுடைய எனை மூவர்க்கும் அவர்செல்லும் கல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம் எ-று.

இல்லென்பது ஆகுபெயர். என்பானெனச் செயப்படுபொருள் விண முதல்போலக் கூறப்பட்டது. எனை மூவராவர் ஆசாரியனிடத்தினின்றே தாதலும் விரதங் காத்தலுமாகிய பிரமசரியவொழுக்கத்தானும், இல்லை விட்டு வனத்தின்கட் டீயோடு சென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்பு மொழு கத்தானும், முற்றத்துறந்த யோகவொழுக்கத்தானுமென இவர்; இவருள் முன்னை யிருவரையும் பிறர் மதமேற்கொண்டு கூறினர். இவர் இவ்வொழுக் நெறிகளை முடியச்செல்லுமனவும் அச் செலவிற்குப் பசி நோய் குளிர் மு லியவற்றான் இடையூறு வாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலி வுதவி அவ்வவ் நெறிகளின் வழுவாமற் செலுத்துதலான், நல்லாற்றினின் துணையென்றார்.

(ப-ரை) இல்வாழ்வா னென்பான் - இல்லறத்தோடு கூடி வாழ்பவ னென்று சொல்லப்படுவோன், இயல்புடைய-(துறவறத்) தன்மையையுடை மூவர்க்கும்-(மற்றை) மூவர்க்கும், நல்லாற்றில்-(அவரவ) கல்லொழுக்க நெறி களில், நின்ற-நிலைபெற்ற, துணை-துணையாவான் எ-று.

(க-ரை) இல்லறத்தில் வாழ்பவன் பிரமசாரி, வானப்பிரஸ்தன், சன்னி ாசி இம்மூவர்க்குந் துணையாவான் என்பதாம்.

(வி-ரை) இல்லென்பது அதனறத்தை உணர்த்தலால் ஆகுபெயர். ற்றை மூவராவார்; ஆசாரியனிடத்தே ஒதுகின்றவனும், விரதங்காக்கின்ற ரும், ஆகிய பிரமசாரியும், காட்டினிடத்தே போய் மனைவியோடு தவஞ் ய்கிறவனாகிய வானப்பிரஸ்தனும், எல்லாப் பற்றுகளையும் விட்டவனாகிய ந்நியாசியும் என்றறிக. இல்வாழ்வான் பசி நோய் குளிர் முதலானவற்றால் வொழுக்கங்களுக்கு இடையூறு வராமல் உண்டி மருந்து முதலானவை காடுத்து அவரவ ரொழுக்க வழிகளிலே தப்பாமல் நடத்துகையினாலே ல்லாற்றினின்றதுணை' யென்றார்.

'இல்' என்றது இல்லறத்தை. 'இயல்பு' என்றது அற இயல்பை. "மூவர்க் ம்" இதன் ஈற்றில் நின்ற உம்மை முற்றும்மை. "நல்லாறு" என்றது அம் வர்களின் நல் ஒழுக்கத்தை.

(1)

துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

(பரி-உரை) துறந்தார்க்கும்-களைகணைவராற் றுறக்கப்பட்டார்க்கும், வ்வாதவர்க்கும் - நல்கூர்ந்தார்க்கும், இறந்தார்க்கும் - ஒருவருமின்றித் தன் ல்வர்நிறந்தார்க்கும், இல்வாழ்வான் என்பான்துணை - இல்வாழ்வானென்று சால்லப்படுவான்துணை எ-று.

துறந்தார்க்குப் பாவமொழிய அவர் களைகணாய் நின்று வேண்டுவன சய்தலானும், துவ்வாதவர்க்கு உணவு முதலிய கொடுத்தலானும், இறந் ார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்தலானும் துணை பன்றார். இவை யிரண்டு பாட்டானும் இன்னிலை எல்லா வுபகாரத்திற்கு ரித்தாதல் கூறப்பட்டது.

(ப-ரை) துறந்தார்க்கும் - (ஆதாரமானவராலே) விடப்பட்டோர்க்கும், வ்வாதவர்க்கும்-வறுமைப்பட்டவர்க்கும், இறந்தார்க்கும்-(ஒருவருமில்லாமல் ்த) இறந்தவர்க்கும், இல்வாழ்வானென்பான்-இல்வாழ்வானென்று சொல் ்படுவோனே, துணை-துணையாவான் எ-று.

(க-ரை) துறந்தவர்க்கும், வறியவர்க்கும், இறந்தவர்க்கும், இல்வாழ் ன் துணையாம் என்பதாம்.

(வி-ரை) ஆதாரமானவராலே விடப்பட்டவர்க்குப் பாவமொழிய ர்க்கு ஆதாரமாய் நின்று வேண்டுவன செய்தலாலும், வறுமைப்பட்ட க்கு உணவு முதலானவை கொடுத்தலாலும், இறந்தவர்க்கு நீர்க்கடன் லானவை செய்து நல்ல கதியை அடைவித்தலாலும் துணையென்றார். வை யிரண்டு பாட்டாலும் இல்வாழ்க்கை எல்லா வுபகாரங்களுக்கும் உரித் ல் சொல்லப்பட்டது.]

'துறந்தார்க்கு' என்றது அருளைதகளுக்கு என்பதாம். 'துவ்வாதவர்க்கு' என்றது வறியர்களுக்கு என்பதாம். 'இறந்தார்க்கு' என்றது அருளை னாய்த் தன்பால் வந்து இறந்தவர்களைக் குறித்தது. 'இல்வாழ்வான்' என்ற இல்லறத்தானை. (2)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க ருனென்றுங்
கைம்புலத்தா ரோம்ப றலை.

(பரி-உரை) தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற-பிர் சார் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்ட, ஐம்புலத்து ரை ஓம்பல் தலை-ஐந்திடத்தஞ் செய்யும் அறவொறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம் எ-று.

பிதிராவார் படைப்புக்காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கூ வுட்சாதி; அவர்க்கிடம் தென்றிசையாதலின், தென்புலத்தாரென்றார். தெய் மென்றது சாதியொருமை. விருந்தென்பது புதுமை; அஃது ஈண்டாகுபெ ராய்ப் புதியராய் வந்தார்மேனின்றது; அவர் இருவகையர், பண்டறிவுண்மை யிற் குறித்த வந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாருமென. ஒக்கல் சுற்றத்தார். எல்லா வறங்களும் தானுளனாய் நின்று செய்ய வேண்டுதலின் தன்னை யோம்பலும் அறனாயிற்று. என்ற வென்பது விகாரமாயிற்று. ஆற்ற அசை. ஐவகையும் அறஞ் செய்தற்கிடனாகலின் ஐம்புலமென்றார். அர் னுக்கு இறைப்பொருள் ஆறி லொன்றாயிற்று. இவ் வைம்புலத்திற்கும் ஐந்து கூற வேண்டுதலானென்ப தறிக.

(ப-ரை) தென்புலத்தார்-பிதிராரும், தெய்வம்-தேவரும், விருந்து-அதிதி யரும், ஒக்கல்-சுற்றத்தாரும், தான்-தானும், என்ற - என்ற சொல்லப்பட்ட ஐம்புலத்த-ஐந்திடத்தஞ் செயப்படுகின்ற, ஆற - (அற) வழியை, ஓம்பல் வழுவாமற் செய்தல், தலை-(இல்வாழ்வானுக்குச்) சிறப்புடையவறமாம் எ-று.

(க-ரை) பிதிரர்க்கும், தெய்வத்திற்கும், விருந்திற்கும், இனத்திற்கும் தனக்குந் தருமஞ்செய்தல் தலைமையான தருமமாம் என்பதாம்.

(வி-ரை) ஆற்கு-அசைநிலை. பிதிரர்-ஓர் தேவசாதியார், அவர்க்கு இடம் தெற்காதலின் தென்புலத்தாரென்றார். தெய்வம், சாதியொருமை. விருந்து புதுமை, அது இக்கே புதியவராய் வந்தவரை உணர்த்தலினாலே ஆகுபெய தான் செவ்வையா யிருத்திகொண்டு எல்லா வறங்களையும் செய்யவேண்டு லின் தன்னைக் காப்பாற்றுதலும் அறமாயிற்று. இவ்வைந்துவகையும் தருமஞ் செய்தற்கு இடங்களாகையால் ஐம்புலமென்றார். இவ்வைந்திடங்களுக்கும் ஐந்து பங்கு வேண்டுதலால் அரசனுக்கு ஆறில் ஒருபங்காயிற்று.

'தென்புலத்தார்' என்றது தெற்குப்பக்கத்து உள்ள ஒருவகைத் தே சாதியாரை. இவர்கள் இறந்தவர்க்குச்செய்யும் பூசையாதிகளை ஏற்று இறந்தவர்கள் எடுத்த எடுத்த தேகங்களில் உள்ள ஆன்மாக்களுக்கு திருப்தி யையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கும் கடன்மை பூண்டவர்; இவர்கள் பி

னல் படைக்கப்பெற்றவர்கள். புலம்-இடம், நிலம். 'தெய்வம்' என்றது இந்தி
ராதி தேவர்களையும் மும்மூர்த்திகளையும், பரம்பொருளையும் பொதுப்பட
நின்று குறித்தது. 'விருந்து' என்றது பண்டு அறிந்தும், அறியாதும் வந்த
புதியர்களையும் அதிதிகளையும் குறித்தது. 'தான்' என்றது இல்லறத்தானை.
நம்பல்-காத்தல்; அதாவது இவ் ஐந்து இடங்களிலும் செய்யும் அறங்களை
வழுவாது காத்தலை உணர்த்திற்று. (3)

**பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.**

(பரி-உரை) பழி அஞ்சிப் பாத்தூண் வாழ்க்கை உடைத்தாயின்-
பொருள் செய்யுங்கால் பாவத்தை யஞ்சி யீட்டி, அப்பொருளை இயல்புடைய
பவர் முதலாயினர்க்கும் தென்புலத்தார் முதலிய கால்வர்க்கும் பகுத்தத்
தானுண்டலை ஒருவ னில்வாழ்க்கை உடைத்தாயின், வழி எஞ்ஞான்றும் எஞ்
சல் இல்-அவன் வழி உலகத் தெஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தலில்லை
று-று.

பாவத்தான்வந்த பிறன்பொருளைப் பகுத்துண்ணின், அறம் பொருளு
டையார்மேலும் பாவந் தன்மேலுமாய் நின்று வழியெஞ்சுமாகலின், பழியஞ்சி
யென்றார். வாழ்வானதுடைமை வாழ்க்கையே லேற்றப்பட்டது.

(ப-ரை) (பொருள் சம்பாதிக்கும்போது) பழி-பாவத்துக்கு, அஞ்சி-பயப்
பட்டுச் சம்பாதித்து, பாத்து-(அப்பொருளை முன் சொல்லப்பட்ட பதின்மர்
களுக்கும்) பங்கிட்டு, ஊண்-(தான்) உண்ணுதலை, வாழ்க்கை-(ஒருவனது) இல்
வாழ்க்கையானது, உடைத்தாயின்-உடையதாலால், வழி-(அவனது) சந்ததி
யானது, எஞ்சல்-குறைதல், எஞ்ஞான்றும்-எக்காலும், இல்-இல்லை எ-று.

(க-ரை) பாவத்திற்குப் பயந்து பொருளைத் தேடிப் பங்கிட்டுண்ணு
மொருவன் சந்ததியானது குறைதலில்லை என்பதாம்.

(வி-ரை) பாவத்தால் வந்த பிறன்பொருளைப் பங்கிட்டுண்டால் அறமா
கிய பொருளுடையானையும், பாவமானது தன்னையும் அடைந்து சந்ததி
நிறுமாதலால் பழியஞ்சி யென்றார். [வாழ்பவனது உடைமை வாழ்க்கை
யில் ஏற்றப்பட்டது.]

'பழி' என்றது பழிக்கப்படுவதாகிய பாவத்தை உணர்த்திற்று. 'பாத்து'
என்றது பகுத்து கொடுத்தலை. இல்லறத்தான் தன் அறவழிவந்தபொருளை
அமைச்சரி, வானப்பிரஸ்தன், சன்னியாசி, தென்புலத்தார், தெய்வம், விருந்து,
மன்னர், அரசன், அனுதைகள், வறியர், அனுதையாகத் தன்பால்வந்து இறந்த
வன் என்றும் பத்திடத்தும் அறவழி பிறழாது பங்கிட்டுச் செலவு செய்த
லும் அநுபவிக்கவேண்டுமென்பது இக்குறளால் உணர்த்தியதாம். 'வழி
யெல்' என்றது தமது சந்ததி அருகு தழைத்து கீடித்து நிற்றலை உணர்த்
தினாம். (எஞ்ஞான்றும்-எக்காலத்தும்.) (4)

அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

(பரி-உரை) இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின்-ஒருவனில் வாழ்க்கை தன் துணைவிமேற் செய்யத்தகும் அன்பினையும் பிறர்க்குப் பகுத் தண்டலாகிய அறத்தினையு முடைத்தாயின், அது பண்பும் பயனும்-அவ் வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம் எ-று.

கானிறை இல்லாட்குங் கணவற்கும் கெஞ்சொன் றுகாவழி இல்லறங் கடைபோகாமையின் அன்புடைமை பண்பாயிற்று, அறனுடைமை பயனு மிற்று. இவை மூன்ற பாட்டானும் இன்னிலபினின்றுன் அறஞ் செய்யு மாறு கூறப்பட்டது.

(ப-ரை) இல்வாழ்க்கை - (ஒருவனது) இல்வாழ்க்கையானது, அன்பும் (தன் மனையாளிடத்துச் செய்யத்தகு) மன்பினையும், அறனும் - (பிறர்க்குப் பகுத்தண்ணுதலாகிய) அறத்தினையும், உடைத்தாயின்-உடைத்தானுல், அது அவ்வுடைமையானது, (அவ் வில்வாழ்க்கைக்கு) பண்பும்-குணமும், பயனும்-பிரயோசனமும் ஆம் எ-று.

(க-ரை) ஒருவ னில்வாழ்க்கை அன்பையு மறத்தையு முடைத்தானுல் அவ்வுடைமையானது குணமும் பிரயோசனமுமாம் என்பதாம்.

(வி-ரை) மனையாளுக்கும் கணவனுக்கும் மனவொருமை யில்லாத போது இல்லறம் முடிவுபெறுதாகையால் அன்புடைமை பண்பும், அறமுடைமை பயனும், ஆயின. அன்பையும், அறனையும் முன்வைத்த ஒழுங்கின் படி அவற்றோடு சம்பந்தமுள்ள பண்பையும், பயனையும் வைத்தலால் தினைநயணி. [இவை மூன்று பாட்டாலும் இல்வாழ்வோன் அறஞ்செய்யுமாறு சொல்லப்பட்டது.]

'அன்பும் அறனும்' என்றதன்கண் உள்ள உம்மைகளும் 'பண்பும் பயனும்' என்றதன்கண் உள்ள உம்மைகளும் எண்ணும்மைகள். 'பயன்' என்றது மும்மைப் பயன்களை.

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

(பரி-உரை) இல்வாழ்க்கை அறத்தாற்றின் ஆற்றின்-ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவனுயின், புறத்தாற்றில் போய்ப் பெறுவது எவன் - அவன் அதற்குப் புறமாகிய நெறியிற் போய்ப் பெறும் பயன் யாது? எ-று.

அறத்தாறென்பது பழியஞ்சிப் பகுத்தண்டலும், அன்புடைமையு மேற்சொல்லிய ஆறு. புறத்தாறு இல்லிலவிட்டு வனத்துச் செல்லுநிலை. அந்நிலையின் இது பயனுடைத்தென்பார், போய்ப் பெறுவதெவனென்றார்.

(ப-ரை) (ஒருவன்) இல்வாழ்க்கை-இல்வாழ்க்கையை, அறத்தாற்றின்-தருமத்தின் வழியில், ஆற்றின் - செலுத்துவானுயின், புறத்தாற்றில்-(அவன் அதற்குப்) புறமாகிய வழியிலே, போய்-சென்று, பெறுவது-பெறும்பயன், எவன்-யாது? எ-று.

(க-ரை) ஒருவன் இல்வாழ்க்கையைத் தருமவழியாக நடத்துவனுயின், நறவறத்திற்போய்ப் பெறும்பயன் என்ன என்பதாம்.

(வி-ரை) தருமத்தின் வழி பழியஞ்சிப் பகுத்துண்ணுதலும் அன்புடைமையுமென முன் சொல்லப்பட்ட வழியாம். புறத்தாறு-மனையைவிட்டு வனத்திலே செல்லுதலே. அங்ஙனம் தருமபயனை இது தருமமென்னும் பொருள் தோற்றற்குப் போய்ப் பெறுவதென வென்றார்.

'அறத்தாறு' என்றது அறவழியை. 'ஆற்றல்'-செய்தல். 'இல்வாழ்க்கை' என்றது இல்லறத்தை. 'புறத்தாறு' என்றது வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்னும் ஆசிரமங்களை. 'போஒய்' இது இசை நிறைக்கவந்த அளபெடை. 'எவன்' என்றது வினு? இது விடைதழுவிய வினு. பெறும்பயன்யாது? ஒன்றுமில்லை என்பது பொருளாம். (6)

✓ இயல்பிணு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

(பரி-உரை) இல்வாழ்க்கை இயல்பிணுன் வாழ்பவன் என்பான் - இல்வாழ்க்கைக்கணின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவான், முயல்வாருள் எல்லாம் தலை-புலன்களை விட முயல்வா ரெல்லாருள்ளும் மிக்கவன் எ-று.

முற்றத் துறந்தவர் விட்டமையின், முயல்வாரென்றது மூன்றுநிலையிற்றுரை. அங்ஙனந்தான் பலவகைப்படுதலின் எல்லாருள்ளு மெனவும், துயலாது வைத்துப் பயனெய்துதலின் தலையெனவுங் கூறினர்.

(ப-ரை) இல்வாழ்க்கை - இல்வாழ்க்கையிலே நின்று, இயல்பிணுன்-அதற்குரிய) வியல்போடுகூடி, வாழ்பவனென்பான்-வாழ்பவனென்று சொல்லப்படுவோன், முயல்வாருளெல்லாம் - (ஐம்புலன்களைவிட) முயற்சிசெய்வாரெல்லாருள்ளும், தலை-மேற்பட்டவனுவான் எ-று.

(க-ரை) அறவியல்போடு இல்லறத்தில் வாழ்பவன் தவஞ்செய்வார்க்கெல்லாந் தலையாவான் என்பதாம்.

(வி-ரை) முற்றத்துறந்தவராகிய சந்நியாசிகள் ஐம்புலன்களை விட்டமைத்தல் முயல்வாரென்றது வனத்திலே தவஞ்செய்வோராகிய வானப்பிரஸ்தரை, இல்வாழ்வோன் அம்முயற்சி செய்யாமலே பயனைப் பெறுதலிஞலே தலையென்றார்.

'இயல்பினால்' என்றதை இல்லறத்திற்கு உரிய இலக்கணம் வழாது என்ப தாம். 'ஆல்' மூன்றனுருபு; கருவிப்பொருளில் வந்தது. 'முயல்வார்' என்றது வானப்பிரஸ்தாச்சிரமத்தாரையும், தவத்தினரையும் உணர்த்தும். 'தகை' என்றது சிறப்புடையன் என்ற பொருளில் வந்தது. (7)

ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னென்மை யுடைத்து.

(பரி-உரை) ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை-தவஞ் செய்வாரையுந் தந்த நெறியின்க ணொழுகப்பண்ணித் தானுந் தன்னறத்திற் றவறுத இல்வாழ்க்கை, நோற்பாரின் நோன்மை உடைத்து-அத் தவஞ்செய் வார் கிலேயினும் பொறையுடைத்து எ-று.

பசி முதலிய விடையூறு நீக்கலின், ஆற்றினொழுக்கி யென்றார். நோற்பா சென்பது ஆகுபெயர். நோற்பார் கிலைக்கு அவர்தம்மையுற்ற நோயல்லது இல் வாழ்வார் கிலைபோற் பிறரையுற்றநோயும் பொறுத்தலின்மையின். நோற்பாரி னென்மையுடைத் தென்றார்.

(பத) (தவஞ்செய்வோரையும்) ஆற்றின்-(தமது) வழியிலே, ஒழுக்கி. நடத்தி, அறன் - (தானுந்தன்) னறத்தினின்றும், இழுக்கா - தவறுத, இல் வாழ்க்கை - (இல்வாழ்க்கையானது), நோற்பாரின் - அத்தவஞ் செய்வாரது கிலேயினும், நோன்மை-பொறுமையை, உடைத்து-உடையதாம் எ-று.

(க-ரை) தவத்தோரைத் தவவழியி னடத்தி, தானும் இல்லறத்தினின்று தவறுத வாழ்க்கை தவஞ்செய்வோர் கிலேயினும் பொறுமையுடையது என்ப தாம்.

(வி-ரை) பசிமுதலான இடையூறு நீர்த்தலால் ஆற்றினொழுக்கி யென் றார். நோற்பாரென்றது அவரது கிலேயை உணர்த்தலால் ஆகுபெயர். தவஞ் செய்வோரது கிலே அவருக்கு வந்த நோயை அல்லது இல்வாழ்வானது கிலே போல் பிறருக்கு வந்த நோயையும் பொறுத்தலில்லாமையால் நோற்பாரி னென்மை யுடைத்தென்றார்.

'ஆற்றின் ஒழுக்கி' என்றது தவத்தினரைத் தவவழியில் நடத்தி என்ப தாம். (ஆறு-வழி) 'ஒழுக்கி'-ஒழுகச்செய்து; இது 'ஒழுகு' என்னும் பகுதி அ யாகப் பிறந்தது. 'இழுக்கா'-தவறுத, வழுக்காத. 'நோற்பார்' என்றது தவஞ் செய்வோரை. இதற்கு நோல் பகுதி. 'நோன்மை' என்றது பொறுமையை. (8)

அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

(பரி-உரை) அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே - இருவகையறத்தி னும் நல்லனான் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க் கையே; அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று-எனைத் தவறுமே னெனின், அதவும் பிறனுற் பழிக்கப்படுவதில்லேயாயின், அவ் வில்வாழ்க்கை யோடு ஒருதன்மைத்தாக நன்று எ-று.

ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது; இதனாற் பிரிக்கப்பட்டது துறவறமாக லின், அஃது என்னுஞ் சுட்டுப்பெயர் அதன்மேனின்றது. பிறன்பழிப்ப தென்றது கூடாவொழுக்கத்தை. துறவறம், மனத்தையும் பொறிகளையும் ஒறுத்தடக்கவல்ல அருமை யுடைத்தாயவழியே, அவற்றை யொறுக்கவேண் டாது ஐம்புல வின்பங்களாகத் துய்க்கும் எண்மையோடு இல்வாழ்க்கையோடு அறமென ஒருங்கெண்ணப்படுவ தென்றவாறாயிற்று. இவை நான்கு பாட் டானும் இன்னிலையே பயனுடைத்தென இதன் சிறப்புக் கூறப்பட்டது.'

(ப-ரை) (இருவகையறங்களுள்) அறனெனப்பட்டது - (நூல்களால்) அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது, இல்வாழ்க்கை - இல்வாழ்க் கையே, (மற்றத் துறவறமோவென்றால்) அஃதும்-அதுவும், பிறன் பழிப்பது- பிறனால் பழிக்கப்படுவதை, இல்லாயின்-இல்லாதிருந்தால், நன்று-அவ்வில் வாழ்க்கையோடு ஒரு தன்மையாக நன்றாம் எ-று.

(க-ரை) அறனென்று சொல்லப்பட்டது இல்வாழ்க்கையாகும்; துறவற மும் பிறனாற் பழிக்கப்படுவதில்லாதிருந்தால் நல்லது என்பதாம்.

(வி-ரை) ஏகாரத்தினாலே இல்லறத்தினின்றும் பிரிக்கப்பட்ட துற றத்தை, அஃதென்பது சுட்டிநின்றது. பிறன்பழிப்பதென்றது கூடா வொழுக்கத்தை துறவறத்தில் மனத்தையும் பொறிகளையும் அடக்கவேண்டிய ருத்தம் உண்டாயிருத்தலால், அது நிறைவேறுவது அரிது. இல்லறத்திலே அவ்வருத்தம் இல்லாமையால் இது நிறைவேறுவது எளிது. ஆதலால் ப்படிப்பட்ட துறவறம் பழுதுபடாமல் நடந்துவரும்போது இல்லறத்தோடு சர்த்து எண்ணப்படுவதாயிற்று. [இவை நான்குபாட்டாலும், இல்லறமே பனுடையதென்று அதன் சிறப்புச் சொல்லப்பட்டது.

'அறன்' இது இலக்கணப்போலி. 'அஃதும்' என்றது துறவறத்தை; நன்கண்ணின்ற உம்மை இறந்தது தழீஇய எச்ச உம்மை. இக்குறளின் ருத்தை "இல்லறமல்லது நல்லறமன்று" என்னும் ஔவை வாக்காலும் றியலாம்.

(9)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் படும்.

(பரி-உரை) வாழ்வாங்கு வையத்துள் வாழ்பவன்-இல்லறத்தோடு கூடி ழு மியல்பினால் வையத்தின்கண் வாழ்பவன், வான் உறையும்-தெய்வத் ர் வைக்கப்படும்-வையத்தானே யெனினும் வானின்க ணுறையுந் தேவருள் வனாக வைத்து நன்கு மதிக்கப்படும் எ-று.

பின் றேவனாய் அவ் வறப்பய னுகர்தல் ஒருதலையாகலின், தெய்வத்துள் க்கப்படு மென்றார். இதனான் இன்னிலையது மறுமைப்பயன் கூறப் -து. இம்மைப்பயன் புகழ்; அதனை யிறுதிக்கட் கூறுப.

(ப-ரை) வாழ்வாக்கு-இல்லறத்தோடு கூடிவாழு மியல்பினால், வையத் தன்-மண்ணுலகத்தின், வாழ்பவன்-வாழ்பவன், (மண்ணுலகத்தானே யாயி றும்) வானுறையும் - விண்ணுலகத்திலிருக்கின்ற, தெய்வத்துள்-தேவரும், வைக்கப்படும்-(ஒருவனுக) வைத்து என்றுக மதிக்கப்படுவான் எ-று.

(க-ரை) இல்லறத்து வழுவாது வாழ்பவன் தெய்வத்து னொருவனுக் மதிக்கப்படுவான் என்பதாம்.

(வி-ரை) பின்னே தேவரைக் பிறந்து அவ்வறப்பயனை அனுபவித்தல் நிச்சயமா யிருக்கையால், தெய்வத்துள் வைக்கப்படுமென்றார். [இதனால் இல் லறத்தின் மறுமைப்பயன் சொல்லப்பட்டது.] இம்மைப்பயன் புகழ் அதை இறுதியிலே சொல்லுகின்றார்.

'வையத்துள்' என்றதில் 'உள்' ஏழனுருபு; இடப்பொருளது. 'வாழ் வாக்கு' என்றது வாழும் இயல்பை. 'வைக்கப்படும்' என்றது ஒன்றுகூட்டி எண்ணப் பெறுதலை. (10

5-ம் அதி-இல்வாழ்க்கை-முற்றிற்று.

6-ம் அதிகாரம்-வாழ்க்கைத்துணைநலம்

(பரி-உரை) அஃதாவது; அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்ல தன்மை. அதிகாரமுறைமையும் இதனானே விளக்கும்.

(உ-ரை) அஃதாவது; அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாள் நன்மையாம், இதனாலேயே அதிகாரமுறைமையும் விளக்கும்.

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(பரி-உரை) மனைத் தக்க மாண்பு உடையளாகித் தற்கொண்டான் வளத் தக்காள்-மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளையுடையளாய்த் தன் னைக் கொண்டவனது வருவாய்க்குத்தக்க வாழ்க்கையையுடையாள், வாழ்க் கைத்துணை - அதற்குத் துணை எ-று.

நற்குணங்களாவன - திறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும், வறியா மாட்டருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன வாழ்க்கைக் வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றொழில் கள மையும், தப்புராவுசெய்தலும் முதலாயின. வருவாய்க்குத்தக்க வாழ்க்கையாவது முதலியறிந்து அதற்கியைய அழித்தல். இதனால் இவ்விரண்டு நன்மையுஞ் சிறந்தனவென்பது கூறப்பட்டது.

(ப-ரை) மனைத்தக்க - இல்லறத்துக்குத்தக்க, மாண்புடையாளாகி-(நற் குண நற்செய்கைகளை) புடையவளாகி, தற்கொண்டான்-தன்னைக்கொண் கணவனது, வளத்தக்காள் வாழ்க்கை-வருவாய்க்குத்தகுந்த வாழ்க்கையை புடை யவள், துணை-(அவ்வில்லறத்துக்குத்) துணையாவாள் எ-று.

(க-ரை) இல்லறத்திற்குத்தக்க நற்குண நற்செய்கையோடு தன் கணவன் வரவுக்குத்தக்க செலவு செய்பவள் இல்வாழ்க்கைக்குத் துணை யாவாள் என்பதாம்.

(வி-ரை) நற்குணக்களாவன: அறிந்தவரை புபசரித்தலும், விருந்தா ராய்தலும், வறியவரிடத்தே யருளுடைமையும், முதலானவையாம். நற்செய் கைகளாவன: வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களறிந்து காப்பாற்றிவைத் தலும், உண்டிசமைத்தல் வல்லமையும், உபகாரஞ்செய்தலும் முதலானவை யாம். வருவாய்க்குத்தக்க வாழ்க்கையாவது முதலுக்குத் தக்கபடி செலவு செய்தல். [இதனால் இவ்விரண்டு நன்மைகளும் சிறந்தனவென்பது சொல் லப்பட்டது.]

'மனை' என்றது இல்லறமாகிய மனை அறத்தை. மாண்பு - பெருமை. நற்கொண்டான்' என்றது தன்னை மனைவியாகக்கொண்ட கணவனை. அதற்கு 'கொள்' பகுதி. 'வளம்' என்றது ஈண்டு வருவாயைக் குறித்தது. வாழ்க்கை' என்றது இல்லறவாழ்க்கையை. (1)

மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

(பரி-உரை) மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகள் ஒருவ னில்லாளிடத்தில்லையாயின், வாழ்க்கை யெனைமாட்சித்தாயினும் இல் - அவ்வில்வாழ்க்கை செல்வத்தான் எத்துணை மாட்சிமைபுடைத்தாயினும் அஃதுடைத்தன்று எ-று.

இல்லையென்றார், பயன்படாமையின்.

(ப-ரை) மனைமாட்சி-இல்லறத்துக்குத் தகுந்த நற்குண நற்செய்கைகள், இல்லாள்கண் - (ஒருவனது) மனையாளிடத்தே, இல்லாயின் - இல்லையாயின், வாழ்க்கை-அவ்வில்வாழ்க்கையானது, எனைமாட்சித்தாயினும்-(செல்வத்தால்) எவ்வளவு பெருமையை உடையதாயினும், இல் - அப்பெருமையை உடைய தன்று எ-று.

(க-ரை) இல்லறத்திற்குரிய குணம் மனையாளிடத்தில்லையேல், அவ்வில் வாழ்க்கை எவ்வளவு சிறப்புடைத்தாயினும் பயனில்லை என்பதாம்.

(வி-ரை) பயன்படாமையால் இல்லையென்றார்.

'மாட்சி' என்றது நற்குண நற்செய்கைகளை. இல்லாள் - மனைவி, இது ணைப்பெயர், இல்லிற்கு உரியவள் என்ற காரணம்பற்றி வந்தது. 'எனை மாட்சித்து' என்றது எத்துணை செல்வம், கல்வி முதலியவற்றால் பெருமை பெற்றதாயினும் என்ற பொருளதாம். 'இல்' இது 'இல்லை' என்பதன் இடைக்குறை விகாரம். (2)

இல்லதெ னில்லவண் மாண்பா லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை.

(பரி-உரை) இல்லவன் மாண்பு ஆனால் இல்லது என்-ஒருவனுக்கு இல்லாள் சற்குண சற்செய்கைய னாயினக்கால் இல்லாததியாது? இல்லவள் மாணாக்கடை உள்ளது என்-அவள் அன்னனல்லாக்கால் உள்ளதியாது? எ-று.

மாண்பெனக் குணத்தின் பெயர் குணிமேனின்றது. இவையிரண்டு பாட்டாலும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியே பிறவல்ல வென்பது கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவனுக்கு) இல்லவன் - மனையாள், மாண்பானால்-சற்குண சற்செய்கைகளையிருந்தால், இல்லது - இல்லாதது, என்-யாது, இல்லவள்-அம்மனையாள், மாணாக்கடை-(அப்படிப்பட்டவ) ளாகாதிருந்தால், உள்ளது உள்ளது, என்-யாது எ-று.

(க-ரை) மனையாள் சற்குண சற்செய்கையுடையவளாகில் அவ்வில் வாழ்க்கை எல்லாம் உடைத்து என்பதாம்.

(வி-ரை) மாண்பென்னுங் குணப்பெயர் இங்கே அதனை உடையவளுக்கு ஆயிற்று. [இவ்விரண்டு பாட்டாலும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது மனைய னது சற்குண சற்செய்கையே மற்றவை யல்லவென்பது சொல்லப்பட்டது.]

'இல்லதுஎன்' என்றது இன்பந்தரும் பொருள்களுள் எது இல்லாதது கும் என்றதாம். 'இல்லவள்' என்றது இல்லிற்குரியவளாகிய மனைவியை 'மாண்பானால்' என்றது இல்லாள் மாண்பு உடையவளேயானால் என்றதாம்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(பரி-உரை) பெண்ணின் பெருந்தக்க யாஉள-ஒருவனெய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்களியாவையுள, கற்பு என்னுந் திண்மை உண்டாகப் பெறின்-அவண்மாட்டுக் கற்பென்னுங் கலங்காநிலைமை புண்டாகப் பெறின்? எ-று.

கற்புடையாள்போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிறவின்மையின், யாவுள வென்றார். இதனுற் கற்புநிலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) கற்பென்னுந்திண்மை-கற்பென்னுங் கலங்காநிலைமை, உண்டாகப்பெறின்-(அவளிடத்தே) உண்டாயிருக்கப்பெற்றால், (ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள்) பெண்ணின்-மனையாளினும், பெருந்தக்க-உயர்வாகிய பொருள்கள், யா-எவை, உள-இருக்கின்றன எ-று.

(க-ரை) ஒருவன் பெறும் பேறுகளுக்குள் கற்புடைய மனைவியைப் பார்க்கிலும் எவையிருக்கின்றன என்பதாம்.

(வி-ரை) கற்புடையாள் போல் அறமுதலாகிய மூன்றுக்கும் ஏதுவாம் பொருள்கள் வேறில்லாமையால் யாவுளவென்றார். [இதனால் கற்பு நலத்தது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'பெண்ணில்' இதில் 'இல்' உருபு எல்லைப்பொருளில் வந்தது. 'திண்மை' என்றது மனம் கற்பினின்றும் கலங்காத நிலைமையை. 'யா' இது வினாப் பெயர்.

(4)

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை.

(பரி-உரை) தெய்வம் தொழாள் கொழுநற்றொழுது எழுவாள் பெய்ன-பிறதெய்வந் தொழாது தன்றெய்வமாகிய கொழுநனைத்தொழாநின்று துயிலெழுவாள் பெய்யென்றுசொல்ல, மழை பெய்யும்-மழை பெய்யும் எ-று.

தெய்வந்தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங்காலத்தாகலின், தொழுதெழுவாளென்றார். தொழாநின்றென்பது தொழுதெனத் திரிந்து நின்றது. தெய்வந்தா னேவல் செய்யு மென்பதாம். இதனாற் கற்புடையவள தாற்றல் கூறப்பட்டது.

(ப-ரை) தெய்வம்-(பிற) தெய்வத்தை, தொழாஅள்-வணங்காளாகி, கொழுநன்-(தனது தெய்வமாகிய) கணவனை, தொழுது-வணங்கா நின்று, எழுவாள் - (நித்திரைவிட்) டெழுந்திருப்பவள், பெய்யென - பெய்யென்று சொல்ல, மழை-மழையானது, பெய்யும்-பொழியும் எ-று.

(க-ரை) பிறதெய்வத்தை வணங்காது கணவனை தொழுதெழுபவள், பெய்யென்று சொல்ல மழைபெய்யும் என்பதாம்.

(வி-ரை) தெய்வந் தொழுதற்கு மனம் தெளிவது துயிலெழுங்காலத்தாகலின் தொழுதெழுவாளென்றார். தொழாநின்றென்பது தொழுதெனத் திரிந்து நின்றது; தெய்வமும் ஏவல்செய்யு மென்பதாம். [இதனால் கற்புடையவளது வல்லமை சொல்லப்பட்டது.]

'தொழாஅள்' ஈண்டு அளபெடை இசைநிறைக்கவந்த அளபெடை. 'கொழுநன்' என்றதில் நகரம் பெயரிடைநிலை.

(5)

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

(பரி-உரை) தற்காத்துத் தற்கொண்டாற் பேணி-கற்பினின்றும் வழுவாற் றன்னைக் காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலியவற்றாற் பேணி, தகை சான்ற சொற் காத்து-இருவர் மாட்டும் நன்மை யமைந்த புகழ் தகாமற் காத்து, சோர்வு இலாள் பெண்-மேற்சொல்லிய நற்குண நற்றாய்கைகளினாங் கடைப்பிடி யுடையாளே பெண்ணாவாள் எ-று,

தன்மாட்டுப் புகழாவது வாழ்நர் கற்பாற் றன்னைப் புகழ்வது. சோர்வு. மறவி. இதனால் தற்புகழ்தற் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) தற்காத்த-(கற்பினின்று வழுவாமல்) தன்னைக் காப்பாற்றிக் கொண்டு, தற்கொண்டாற்பேணி-தன்னைக் கொண்டவனையும் (உண்டிமுத லானவற்றால் உபசரித்து, தகைசான்ற-தம்மிருவரிடத்தும் நன்மையமைந்த, சொற்காத்த-புகழை நீக்காமற் காப்பாற்றி, சோர்விலான்-(முன் சொல்லப் பட்ட நற்குண நற்செய்கைகளிலும்) மறவியில்லாதவளே, பெண்-பெண் ணுவாள் எ-று.

(க-ரை) கற்பையும் கணவனையும் நற்குண நற்செய்கைகளையும் காப் பாற்றுபவளே மனையாள் என்பதாம்.

(வி-ரை) தன்னிடத்துப் புகழாவது-யாரார் கற்பிழுலே தன்னைப் புழ் வது, [இதனால் தன்னைப்புகழ்தற் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'தற்காத்த' இது இரண்டாம்வேற்றுமைத்தொகை. எனவொற்று வன்மையாயிற்று. 'சொல்' என்றது புகழைக் குறித்தது. (6)

சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

(பரி-உரை) மகளிர் சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்-மகளிரைத் தலைவர் சிறையாற் காக்குங் காவல் என்ன பயனைச் செய்யும்?, சிறை காக்கும் காப்பே தலை-அவர் தமது சிறையாற் காக்குங் காவலே தலையாயகாவல் எ-று.

சிறை-மதிலும், வாயில் காவலும் முதலாயின. சிறை-நெஞ்சைக் கற்பு நெறியி னிறுத்தல். காவலிரண்டிலும் சிறைக்காவலில்வழி 'எனைச் சிறைக்காவ லாற் பயனில்லை யென்பார், 'சிறைகாக்குங் காப்பே தலை' யென்றார். எகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இதனால் தற்காத்தற் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) மகளிர்-பெண்டிரை, சிறை-சிறையினாலே, காக்கும்-(தலைவர்) காக்கும், காப்பு-காவலானது, எவன்-என்ன பிரயோசனத்தை, செய்யும் செய்யும், சிறை-(தமது) சிறையால், காக்கும்-(அவர்) காக்கும், காப்பே காவலே, தலை-முதன்மையான காவல் எ-று.

(க-ரை) பெண்கள் கற்பால் தங்களைக் காத்துகொள்ளுதலே தலைவ யான காவல் என்பதாம.

(வி-ரை) சிறை-மதிற்காவல், வாயிற்காவல், முதலானவை. சிறை-மன தைக் கற்பின்வழியிலே நிறுத்தல், காவலிரண்டிலும் சிறைக்காவல் இல்லா விடத்துச் சிறைக்காவலாலே பயன் இல்லை என்றற்கு சிறைகாக்குங் காப்பே தலை என்றார். [இதனால் தன்னைக்காத்தலினது சிறப்புச் சொல்லப்பட்டது.

'எவன்' இது 'என்ன' என்றும் பொருளது. 'காப்பு' என்றது காவலை.(7)

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழு முலகு.

(பரி-உரை) பெண்டிர் பெற்றாற் பெறின்-பெண்டிர், தம்மை யெய்திய கணவனை வழிபடுதல் பெறுவராயின், புத்தேளிர் வாழும் உலகு பெருஞ் சிறப்புப் பெறுவர்-புத்தேளிர் வாழு முலகின்கண் அவராற் பெருஞ் சிறப்பினைப் பெறுவர் எ-று.

வழிபடுதலென்பது சொல்லெச்சம். இதனால் தற்கொண்டாற் பேணிய மகளிர் புத்தேளிராற் பேணப்படுவரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) பெண்டிர்-மகளிர், பெற்றார்-(தம்மைக்) கொண்ட கணவனை, பெறின்-(பூசித்தல்) பெறுவாராயின், புத்தேளிர்-தேவர், வாழும்-வாழ்தற்கிடமாகிய, உலகு - உலகத்தில், பெருஞ்சிறப்பு - (அவராற்செய்யப்படும்) பெரிய சிறப்பினை, பெறுவர்-அடைவர் எ-று.

(க-ரை) தன்கணவரை வணங்கும் பெண்களைத் தேவர்கள் தொழுவார் என்பதாம்.

(வி-ரை) பூசித்தல் வருவிக்கப்படுதலால் சொல்லெச்சம். [இதனால் தன்னாக் கொண்டவனைப் பூசித்த பெண்டிர் தேவர்களாலே பூசிக்கப்படுவரென்று சொல்லப்பட்டது.]

'பெற்றான்' என்றது தன்னை மனைவியாகப்பெற்ற கணவனைக்குறித்தது. புத்தேளிர்-தேவர். 'புத்தேளிர் வாழும் உலகு' என்றது தெய்வலோகத்தை. ()

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன் னேறுபோற் பீடு நடை.

(பரி-உரை) புகழ் புரிந்த இல் இலோர்க்கு-புகழை விரும்பிய இல்லாளை இல்லாதார்க்கு, இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை இல்லை - தம்மையிகழ்ந்தாரக்கும் பகைவர்முன் சிங்கவேறுபோல் நடக்கும் பெருமிதநடை இல்லை.

புரிந்த வென்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தாற்றொக்கது. பெருமிதநடையானுக்குச் சிங்கவேறு நடையானுவமமாகலின், ஏறுபோ லென்றார். இதனால் தகைசான்ற சொற்காவா வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) புகழ்-கீர்த்தியை, புரிந்த-விரும்பிய, இல்-மனையாளை, இலோர் இல்லாதவர்க்கு, இகழ்வார்முன் - (தம்மை) யிகழ்ந்து பேசும் பகைவர் முன், ஏறுபோல்-ஆண்சிங்கம்போலும், பீடுநடை - பெருமிதநடை, இல்லை-இல்லை எ-று.

(க-ரை) கற்பாகிய கீர்த்தியையுடைய மனையாளில்லாதவர்க்குப் பகைவர் சிங்கம்போன்ற நடையில்லை என்பதாம்.

(வி-ரை) புரிந்தவென்பதனிறு விகாரத்தால் தொக்கது. பெருமித நடையானுக்குச் சிங்கவேறு நடையினால், உபமானமாதலால் ஏறுபோலென்றார். [இதனால் புகழைக் காப்பாற்றாத விடத்தே உண்டாகும் குற்றஞ் சொல்லப்பட்டது.]

'ஏறு' என்றது விலங்கின் ஆண்பெயர்; ஈண்டு சிறப்புப்பற்றி சிங்க ஏற்றைக் குறித்தது. 'பீடுநடை' என்றது பெருமிதநடையை. (9)

மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு.

(பரி-உரை) மங்கலம் என்ப மனைமாட்சி - ஒருவற்கு நன்மையென்று சொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளை; அதன் நன்கலம் (என்ப) நன்மக்கட் பேறு-அவை தமக்கு நல்ல வணிகலமென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலை எ-று.

அறிந்தோ ரென்பது எஞ்சிநின்றது. மற்று அசைநிலை. இதனால் வாழ்க்கைத்துணைக்கு ஆவதோ ரணிநலங் கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

(ப-ரை) (அறிந்தோர்) மனை-மனையாளது, மாட்சி-நற்குண நற்செய்கைகளை, மங்கலம் - (ஒருவனுக்கு) நன்மையாம், என்ப - என்று சொல்லுவார், நன்மக்கட்பேறு-நல்ல புதல்வரைப் பெறுதலை, அதன்-அவற்றுக்கு, நன்கலன்-நல்லவாபரணம், (என்ப)-என்று சொல்லுவார் எ-று.

(க-ரை) மனையாளது நற்குண நற்செய்கைக ளொருவனுக்கு நன்மையென்றும், நற்புதல்வரைப் பெறுதல் அந்நன்மைக் காபரணமென்றும் சொல்லுவார் என்பதாம்.

(வி-ரை) அறிந்தோரென்பது வருவிக்கப்பட்டது. மற்று-அசை. [இதனால் வாழ்க்கைத் துணைக்காவதோ ரணிகலஞ்சொல்லி அதனால் பின் வருவதாகிய அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.]

'மங்கலம்' இது இன்பம் பயக்குவதாகிய நன்மை என்பதாம். 'என்ப' இது, கற்றவர் கூறுவர் என்னும் பொருளது. 'கலன்' என்றது ஆபரணமாகிய அணிகலனை. 'பேறு' இது பெறுவது என்னுங் காரணம்பற்றிவந்த காரணப்பெயர். இதற்கு 'பெறு' பகுதி. (10)

6-ம் அதி-வாழ்க்கைத்துணைநலம்-முற்றிற்று.

7-ம் அதிகாரம்-புதல்வரைப்பெறுதல்

(பரி-உரை) அஃதாவது; * இருபிறப்பாளர் மூவராலும் இயல்பாக விறுக்கப்படுஉங் கடன் மூன்றனுள், முனிவர்கடன் கேள்வியாலும், தேவர்கடன் வேள்வியாலும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலாலுமல்லது இறுக்கப்படாமையின், அக்கடனிறுத்தற்பொருட்டு நன்மக்களைப் பெறுதல் அதிகாரமுறைமை மேலே பெறப்பட்டது.

(உ-ரை) அஃதாவது; முனிவர்கடன் கேள்வியாலும், தேவர்கடன் வேள்வியாலும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலாலும், அல்லது செலுத்தக்கூடாமையால் அக்கடன் செலுத்தற்பொருட்டு நல்ல மக்களைப் பெறுதலாம். அதிகாரமுறைமை முன்பெறப்பட்டது.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த மக்கட்பே றல்ல பிற.

(பரி-உரை) பெறுமவற்றுள் - ஒருவன் பெறும் பேறுகளுள், அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற-அறிய வேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிற பேறுகளை, யாம் அறிவது இல்லை - யாம் மதிப்பதில்லை எ-று.

அறிவதென்பது அறிதலைச் செய்வதென அத் தொழின்மே னின்றது. காரணமாகிய வுரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தேவிடுமாதலின், அத்துணிவுபற்றி அறிந்தவென இறந்த காலத்தாற் கூறினார். அறிவறிந்த வென்றதனான், மக்களென்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது. இதனாற் புதல்வர்ப் பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) பெறுமவற்றுள்-(ஒருவன்) பெறும் பேறுகளுள், அறிவறிந்த-அறியவேண்டுமவைகளை அறிதற்குரிய, மக்கட்பேறல்ல - புதல்வரைப் பெறுதலையல்லது, பிற - மற்றைப்பேறுகளை, யாம்-நாம், அறிவதில்லை - மதிப்பதில்லை எ-று.

(க-ரை) ஒருவன் பெறும்பேறுகளுக்குள் அறியவேண்டியவைகளை அறிந்த மக்கட்பேற்றை மதிக்கவேண்டும் என்பதாம்.

(வி-ரை) அறிதற்குக் காரணமாகிய வுரிமை அவ்வறிதலை உண்டாக்கியே விடுமாதலின் அத்துணிவுபற்றி அறிந்தவென இறந்தகாலத்தாற் கூறினார். அறிவறிந்த வென்றதனால் மக்களென்னும் பெயர் பெண்பாலை வாழித்து நின்றது. [இதனாலே புதல்வரைப் பெறுதலினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'அறிவறிந்த மக்கள்' என்றதில் 'அறிவறிந்த' என்றது இனம் விலக்கியது. பெண்மக்களை ஒழித்து ஆண்மக்களைக் காட்டிற்று. 'பிற' என்றது பிறபேறுகளை.

* இருபிறப்பாளர் மூவரென்றது உபநயனத்திற்கு முன்னொரு பிறப்பு, பின்னொரு பிறப்புமாகிய இருபிறப்புடையராயுள்ள அந்தணர், அரசர், வைசரென்னும் முதன் மூன்று வருணத்தாரை. இருபிறப்பாள ரெனினும், வைசரெனினும் ஒக்கும்.

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

(பரி-உரை) எழு பிறப்பும் தீயவை தீண்டா-வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பேழின்கண்ணும் ஒருவனைத் தன்பங்கள் சென்றடையா, பழி பிறங்காப் பண்பு உடை மக்கட் பெறின்-பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறுவானாயின் எ-று.

அவன் தீவினை வளராத தேய்தற்குக்காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவனாயினென்றவாறாயிற்று. பிறப்பேழாவன. "ஊர்வ பதினென்றுமொன்பது மாறுட, னீர்பறவை நாற்காலோர் பப்பத்தச் சிரிய, பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த, வந்தமில்சீர்த் தாவரமா லைந்து." தந்தைதாயர் தீவினை தேய்த்தற்பொருட்டு அவரைநோக்கிப் புதல்வர் செய்யுந் தானதருமங்கட்கு அவர் நற்குணங் காரணமாகலின், பண்பென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மே னின்றது.

(பதவுரை) பழிபிறங்கா-(பிறரால்) பழிக்கப்படாத, பண்புடை-நற்குணங்களையுடைய, மக்கட்பெறின்-புதல்வரைப் பெறுவானாயின், எழுபிறப்பும்-(வினைவசத்தினாலே புண்டாகிற) எழுவகைப்பட்ட பிறப்பினும், தீயவை-தீயனவாகிய, தன்பங்கள், தீண்டா-(சென்று ஒருவனை) யடையாவாம் எ-று.

(க-ரை) பழிக்கப்படாத நற்புதல்வரைப் பெறுவானாயின் எழுபிறப்பிலும் தன்பங்களணுகா என்பதாம்.

(வி-ரை) தந்தை தாய்களது தீவினை செய்தற்பொருட்டு அவரைக் குறித்துப் புதல்வரால் செய்யப்படும் தான தருமங்களுக்கு அவர்தம் நற்குணம் காரணமாகலின் பண்புடை மக்களென்றார். எழுபிறப்பு-எழுதற்முறையுமாம். எழுபிறப்பாவன: தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், என்பனவாம்.

'எழுபிறப்பு' என்பதற்கு இனி எழும்பிறப்புகளில் என்பாரும் உண்டு. 'தீயவை' என்றது தன்பத்தை. 'தீண்டா' என்றது சென்றடையா. 'பழிபிறங்காப் பண்புடை' என்பதை உம்மைத் தொகையாகக்கொண்டு பிறரால் பழிக்கப்படாமையும் நற்குணங்களையும் உடைய எனப் பொருள்கோடலும் செய்வர்.

தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

(பரி-உரை) தம் மக்கள் தம்பொருள் என்ப-தம் புதல்வரைத் தம்பொருளென்று சொல்லுவர் அறிந்தோர்; அவர் பொருள் தந்தம் வினையான் வரும்-அப்புதல்வர் செய்த பொருள் தம்மை நோக்கி அவர்செய்யும் நல்வினையாலே தம்பால் வரும் ஆதலான் எ-று.

தந்தும் வினையென்புழித் தொக்கு நின்ற ஆறாம்வேற்றுமை முருனைத நிறுத்தி நிலம் என்புழிப்போல உரிமைப்பொருட்கண் வந்தது. பொருள் செய்த மக்களைப் பொருளென உபசரித்தார். இவை யிரண்டு பாட்டானும் ண்மக்கட் பெற்றோர் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது.

(ப-ரை) தம்மக்கள்-தம்முடைய புதல்வரை, தம்பொருள்-தம்முடைய பொருள்கள், என்ப-என்று சொல்லுவார் (அறிந்தோர்), அவர் பொருள்-அப் புதல்வர் சம்பாதித்தபொருள்கள், தந்தம் வினையான்-தம்மைக்குறித்து அவர் செய்யும் நல்வினையினாலே, வரும்-(தம்மிடத்து) வரும், (ஆகலால்) எ-று.

(க-ரை) பிள்ளை தேடியபொருள் பிதாவிற்கு வருகையால் புதல்வரைத் ம் பொருளென்று சொல்லுவர் என்பதாம்.

(வி-ரை) பொருள் சம்பாதித்த புதல்வரைப் பொருளென வுபசரித்தார். இவை இரண்டு பாட்டாலும் நல்ல புதல்வரைப் பெற்றோர் அடையும் மறு ம்மப்பயன் சொல்லப்பட்டது.

'தம்' என்றது பெற்றோரை. 'அவர்' என்றது மக்களை. (3)

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

(பி-உரை) அமிழ்தினும் ஆற்ற இனிதே-சுவையான் அமிழ்தத்தினும் க வினிமை யுடைத்து; தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ்-தம் மக்களது றுகையா னளாவப்பட்ட சோறு எ-று.

சிறுகையா னளாவலாவது-"இட்டுந் தொட்டுஞ் சொவியுந் தழந்து, ய்புடை யடிசின் மெய்பட விதிர்த்தல்." *

(ப-ரை) தம்மக்கள்-தம்முடைய மக்களது, சிறுகை-சிறியகைகளால், ாவிய - அளாயப்பட்ட, கூழ்-சோறானது, அமிழ்தினும் - (சுவையினாலே நந்த) அமிழ்தத்தினும், ஆற்றவினிது-மிகவுமினிமையை யுடைத்தாயிருக் ம் எ-று.

(க-ரை) தம்மக்கள் சிறுகையாலளாவிய சோறானது அமிர்தத்தினும் வினியது என்பதாம்.

(வி-ரை) சிறுகையளாவல் தாய்தந்தையரோடு உடனிருந்து உண்ணும் து சோற்றைத்தழாவுகை முதலியன.

'அமிழ்தினும்' இதில் இன் உருபு எல்லைப்பொருளது. உம்மை உயர்வுச் ப்பு. 'இனிதே' இதில் ஏகாரம் தேற்றப்பொருளது. 'கூழ்' என்றது வை; இது தாழ்வுகாட்டுதற்பொருட்டுக் கூறும் ஒருவகை உபசார ாகு. 'அமிழ்து' சண்டு மிகுந்த சுவையைக்காட்டற்கு எடுத்து ஓதப் றது. (4)

* புறநானூறு-188.

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

(பரி-உரை) உடற்கு இன்பம் மக்கள் மெய் தீண்டல்-ஒருவன் மெய்யை மென்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல்; செவிக்கு இன்பம் அவர்சொற் கேட்டல்-செவிக் கின்பமாவது அவரது சொல்லைக் கேட்டல் எ-று.

மற்று வினைமாற்று. மக்களது மழலைச்சொல்லையன்றி அவர் கற்றற் வுடையராய்ச் சொல்லுஞ் சொல்லும் இன்பமாகலின், பொதுப்படச் சொ லென்றார். தீண்டல் கேட்டலென்றுங் காரணப்பெயர்கள் சண்டுக் காரியக் களின்மே னின்றன.

(ப-ரை) உடற்கு-(ஒருவனது) உடம்புக்கு, இன்பம்-இன்பமாவது, ம கள்-மக்களது, மெய்-உடம்பை, தீண்டல்-தொடுதல், செவிக்கு-(அவனது காதுக்கு, இன்பம்-இன்பமாவது, அவர்-அவரது, சொல்-சொற்களை, கே டல்-கேட்குதல் எ-று.

(க-ரை) மக்களுடலைத் தொடுதல் உடற்கின்பம், அவர் சொற்களை கேட்டல் செவிக்கின்பம் என்பதாம்.

(வி-ரை) மற்று-அசைநிலை. பிள்ளைகளது மழலைச் சொல்லையன் அவர் கற்றறிந்த பேசுஞ் சொல்லும் இன்பமாகலின் அவ்விரண்டுக்கு பொதுப்படச் சொல்லென்றார். தீண்டல் - கேட்டல்களினால் உண்டாகு இன்பங்களைத் தீண்டல் கேட்டலெனலால் ஆகுபெயர்கள்.

'மெய்' என்றது உடம்பை; இது மங்கலவழக்கால் பொய்யாகிய உ லுக்கு வந்த பெயர். 'உடல்' இது வருந்துதற்கு உரியது என்னுங் காரண பற்றிவந்த பெயர். (உடல்-வருந்து.)

குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.

(பரி-உரை) குழல் இனிது யாழ் இனிது என்ப-குழலிசை யினி யாழிசை யினிதென்று சொல்லுவர், தம் மக்கள் மழலைச் சொற் கேளாத தம் புதல்வருடைய குதலைச்சொற்களைக் கேளாதவர் எ-று.

குழல் யாழ் என்பன ஆகுபெயர். கேட்டவர் அவற்றினும் மழலைச்சொ இனிதென்பதென்பது குறிப்பெச்சம். இனிமை மிகுதிபற்றி மழலைச்சொ லைச் சிறப்புவகையானுங் கூறியவாறு. இவை மூன்று பாட்டானும் இன்ப பயன் கூறப்பட்டது.

(ப-ரை) தம்மக்கள்-தம்முடைய புதல்வரது, மழலைச்சொல்-குதலை சொற்களை, கேளாதவர்-கேட்காதவர், குழல்-குழலினிசை, இனிது-இனி யது, யாழ்-வீணையினிசை, இனிது-இனியது, என்ப-என்று சொல் வார் எ-று.

(க-ரை) தம்மக்கள் மழலைச் சொற்களைக் கேளாதவர்கள் புள்ளாங்குழ
ிசை யினிதென்றும், வீணையிசை யினிதென்றுஞ் சொல்லுவர் என்பதாம்.

(வி-ரை) குழல்-யாழ், அவற்றினிசையைக் காட்டுதலால் ஆகுபெயர்கள்.
கட்டவர் அவற்றினும் மழலைச்சொல் இனிதென்று சொல்லுவாரென்ற
ாயிற்று. இனிமை மிகுதிபற்றி மழலைச்சொல்லைச் சிறப்புவகையாற் சொல்
ினார். [இவை மூன்றுபாட்டாலும் இம்மைப்பயன் சொல்லப்பட்டது.]

'குழல்' என்றதும் 'யாழ்' என்றதும் முறையே புல்லாங்குழலின் இசை
யையும், மகரயாழின் இசையையும் குறித்தன. 'கேளாதவர் என்ப' என்று
காண்டு முடிந்தது. 'மழலைச்சொல்' என்றது குழந்தைகளின் திருந்தாச்
சாற்களை. இதனை 'குதலைமொழி' எனவுங் கூறுவர். 'சொல்' என்றது
ாதி ஒருமை. (6)

தந்தை மகற்காற்று நன்றி யவையத்து முந்தி யிருப்பச் செயல்.

(பரி-உரை) தந்தை மகற்கு ஆற்றும் நன்றி - தந்தை புதல்வனுக்குச்
செய்யும் நன்மையாவது, அவையத்து முந்தி இருப்பச்செயல்-கற்றா ரவை
ன்கண் அவரினும் மிக்கிருக்குமாறு கல்வியுடைய னாக்குதல் எ-று.

பொருளுடையனாக்குதல் முதலாயின துன்பம் பயத்தலின் நன்மை
ாகாவென்பது கருத்து. இதனால் தந்தை கடன் கூறப்பட்டது.

(ப-ரை) தந்தை-தகப்பனானவன், மகற்கு-புதல்வனுக்கு, ஆற்றும்-செய்
த்தகும், நன்றி-நன்மையாவது, அவையத்து-(கற்றவரது) சபையினிடத்து,
ந்தியிருப்ப - (அவரினு) மேற்பட்டிருக்க, செயல் - [கல்வியை யுடையவ]
க்குதலாம் எ-று.

(க-ரை) பிதா பிள்ளைக்குச்செய்யும் உதவியானது சபையில் கல்வியில்
கவல்லவனென முற்பட்டிருக்கச் செயல் என்பதாம்.

(வி-ரை) பொருளுடையவனாக்கல் முதலானவை பின்னே துன்பத்தைத்
ினுந் தரும். ஆதலால் அவை நன்மையாகா வென்பது கருத்து. [இதனால்
தை கடன் சொல்லப்பட்டது.]

'தந்தை'- இதில் 'தை' முறைப்பெயர் விகுதி. 'நன்றி' என்றது நற்
யலை. 'அவையத்து முந்தியிருப்ப' என்றது அவையத்துள்ள கற்றவர்
க்குள் எல்லாம் முந்தி இருத்தலை. அதாவது கற்றவர்களுக்கெல்லாம்
மை பெற்றிருத்தலை. தந்தை மகனுக்கு கல்வியே கற்பிக்கவேண்டும்.
அல்ல; இதனை, 'எச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன, விச்சைமற்
ல பிற' என்ற நாலடியாரானும் அறியலாம். (7)

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லா மினிது.

(பரி-உரை) தம்மக்கள் அறிவுடைமை - தம்மக்களதறிவுடைமை, மா நிலத்த மன் உயிர்க்கெல்லாம் தம்மின் இனிது-பெரிய நிலத்து மன்னுகின்ற உயிர்கட்கெல்லாந் தம்மிலு மினிதாம் எ-று.

சண்டறிவென்றது இயல்பாகிய அறிவோடுகூடிய கல்வியறிவினை. மன் னுயிரென்றது சண்டறிவுடையார்மேனின்றது, அறிவுடைமை கண்டின்பு றற்கு உரியார் அவராகலின். இதனால் தந்தையிலும் அவையத்தா ருவப்ப சென்பது கூறப்பட்டது.

(ப-ரை) தம்மக்கள் - தம்மக்களது, அறிவுடைமை - அறிவுடையரா யிருக்கையானது, மாநிலத்த-பெரியநிலத்தில், மன்-நிலைபெற்ற, உயிர்க்கெ லாம்-உயிர்களுக்கெல்லாம், தம்மின்-தமக்கு (இனியதாதலினும்) இனிது இனிதாயிருக்கும் எ-று.

(க-ரை) தம்மக்களறிவுடைமையானது தம்மைவிட உலகத்துயிர்களுக் கெல்லா மினிதாயிருக்கும் என்பதாம்.

(வி-ரை) இக்கே அறிவென்றது இயற்கை யறிவோடு கூடிய கல்வி யறிவை; அறிவுடைமை கண்டு மகிழ்தற்குரியவர் அறிவுடையோராதலால் இக்கே மன்னுயிரென்றது அவர்மேல் நின்றது. [இதனால் தந்தையிலும் உல கத்தார் மகிழ்வரென்பது சொல்லப்பட்டது.]

'தம்மில்' என்றது தந்தையைக் காட்டிலும் என்பதாம். இதில் 'இல்' உருபு எல்லப்பொருளில் வந்தது. 'மன்னுயிர்' என்றது உலகத்து அறி வுடையாரை. (8)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(பரி-உரை) ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்-தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிகமகிழும், தன்மகனைச் சான்றோன் என் கேட்ட தாய்-தன்மகனைக் கல்வி கேள்விகளா னிலைநந்தானென்று அறிவுடை யோர் சொல்லக் கேட்ட தாய் எ-று.

கவாளின்கட் கண்ட பொதுவுவகையினுஞ் சால்புடையனெனக்கேட்ட சிறப்புவகை பெரிதாகலின் பெரிதுவக்குமெனவும், பெண்ணிப்பாற் முது வறியாமையாற கேட்ட தாயெனவுங் கூறினார். அறிவுடையாரென்பது வி விக்கப்பட்டது. சான்றோனென்றற்குரியர் அவராகலின். தாயுவகைக்கு வின்மையின், அஃதினுற் பிரித்துக் கூறப்பட்டது.

(ப-ரை) தன்மகனை-தன்புத்திரனை, சான்றோனென-(கல்வி கேள் களினுலே) நிறைந்தோனென்று (அறிவுடையோர்) சொல்ல, கேட்ட தாய் கேட்ட தாயானவள், ஈன்றபொழுதின்-பெற்றகாலத்தினும், பெரிதுவக்கும் மிக மகிழ்வாள் எ-று.

(க-ரை) தன் மகனைக் கல்வியில் வல்லவனெனக் கேட்ட தாயானவள் பெற்றகாலத்திலும் பெருமகிழ்ச்சி யடைவாள் என்பதாம்.

(வி-ரை) மடியின்மேலே கண்டதனால் உண்டாகிய பொதுவான மகிழ்ச்சியிலும் நிறைந்த கல்வி கேள்விகளை யுடையவனெனக் கேட்டதனால் உண்டாகிற சிறப்பான மகிழ்ச்சி பெரிதாகலின் பெரிதுவக்குமென்றும், பெண்மைக் குணத்தினால் தானுக அறியமாட்டாமையால் கேட்ட தாயெனவும் சொல்லினர். அறிவுடையோரென்பது வருவிக்கப்பட்டது. சான்றோரென்ற அறிந்து சொல்லுதற்கு உரியவர் அவராகையால், [தாய் மகிழ்ச்சிக்கு அளவில்லாமையால் அது இதனால் வேறெடுத்துச் சொல்லப்பட்டது.]

'ஆண்மகவு' என அறிந்தபோது உண்டாம் மகிழ்ச்சி பிரசவவேதனையை மாற்று மகிழ்ச்சி ஆதலின் 'சான்றபொழுதிற் பெரிதுவக்கும்' என்றார். இதில் 'இல்' உருபு எல்லைப்பொருளின்கண் வந்தது. (9)

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னேற்றான் கொல்லெனுஞ் சொல்.

(பரி-உரை) தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி-கல்வியுடையனுக்கிய தந்தைக்கு மகன் செய்யுங் கைம்மாறுவது, இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்-தன்னறிவு மொழுக்கமுங்கண்டார் இவன்றந்தை இவனைப் பெறுதற்கு என்னதவஞ் செய்தான் கொல்லோவென்று சொல்லுஞ் சொல்லை நிகழ்த்துதல் எ-று.

சொல்லென்பது நிகழ்த்துதலாகிய தன்காரணந் தோன்ற நின்றது நிகழ்த்துதல் அங்ஙனஞ்சொல்ல வொழுகல். இதனாற் புதல்வன் கடன் கூறப்பட்டது.

(ப-ரை) தந்தைக்கு - (தன்னைக் கல்வியுடையவனுகிய) தகப்பனுக்கு, மகன்-புத்திரன், ஆற்றும்-செய்யும், உதவி-எதிர்நன்றியானது, (தன்னறிவையும் ஒழுக்கத்தையும் கண்டவர்) இவன்-இவனது, தந்தை-தகப்பன், (இவனைப் பெறுதற்கு) என்-என்ன தவத்தை, நோற்றான்கொல்-செய்தானோ, என்னும்-என்கிற, சொல்-சொல்லை, உண்டாக்குதலாம் எ-று.

(க-ரை) பின்னை பிதாவுக்குச் செய்யும் உதவியானது இவன் பிதாவினைப் பெறுதற் கென்னதவஞ் செய்தானோவென்று பிறர் சொல்லுஞ் சொல்லை யுண்டாக்கல் என்பதாம்.

(வி-ரை) சொல்லென்பது உண்டாக்குதலாகிய தன் காரணத்தைக் நிறீப்பித்து நின்றது; உண்டாக்குதல் அப்படிச்சொல்ல நடத்தல். [இதனால் புதல்வனது கடன் சொல்லப்பட்டது.]

'ஆற்றும்'-செய்யும். இது உம் விகுதிபெற்ற பெயரெச்சம். இதற்கு 'ற்று' பகுதி. (10)

7-ம் அதி-புதல்வரைப்பெறுதல்-முற்றிற்று.

8-ம் அதிகாரம் - அன்புடைமை

(பரி-உரை) அஃதாவது: அவ்வாழ்க்கைத்துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கட் காதலுடையனாதல். அதிகார முறைமையும் இதனானே வினக்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாகலின், இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பில்வழி இல்லறமினிது நடவாமை "அறவோர்க்களித்தலு மந்தண சோம்பலுந், துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர் கோடலு மிழந்தவென்னே" * என்பதனானும், அதனாலருள் பிறத்தல் "அருளென்னு மன்பீன் குழவி" † என்பதனானுமறிக.

(உரை) அஃதாவது: அம்மனைவி புதல்வர் முதலாகிய சம்பந்த முடையவரிடத்து ஆசையுடையவனாயிருக்கை. அதிகாரமுறைமையும் இதனால் வினக்கும், இல்லறமினிது நடத்தலும் பிறவுயிர்களின்மேல் அருள் பிறத்தலும் அன்பின்பயனாதலால் இது வேண்டப்பட்டது.

அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

(பரி-உரை) அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ-அன்பிற்கும் பிறரறியாம லடைத்தவைக்குந் தாழுளதோ?, ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்-தம்மாலன்பு செய்யப்பட்டாரது துன்பக் கண்டொழி அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லாரு மறியத் தோற்றம் ஆதலான் எ-று.

உம்மை சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரதுன்மை கண்ணீர்மேலேற்றப்பட்டது. காட்சியளவைக் கெய்தாதாயினும் அநுமான வளவையான் வெளிப்படுமென்பதாம். இதனால் அன்பினதுண்மை கூறப்பட்டது.

(ப-ரை) அன்பிற்கும் - அன்பிலுக்கும், அடைக்கும் - (பிறரறியாமல்) அடைத்தவைக்கும், தாழ்-தாழும், உண்டோ-உளதோ, (தம்மால்) அன்பு செயப்பெற்றவரது துன்பங்கண்டவிடத்தே (பொழிகின்ற), ஆர்வலர்-அன்புடையாரது, புன்கணீர்-புல்லியகண்ணீரே, பூசறரும்-(உள்ளே இருக்கிற) அன்பினை எல்லாரும் அறியத் தோற்றம் ஆதலால் எ-று.

(க-ரை) அன்பு கொள்ளப்பட்டவரது துன்பங்கண்டபோதே, அன்புடையவர் கண்ணீரே உள்ளிருந்த அன்பைக்காட்டும் என்பதாம்.

(வி-ரை) உம்மை அன்பைச் சிறப்பித்து நின்றது. காட்சியளவையால் அறியப்படாதாயினும் அநுமானவளவையால் வெளிப்படு மென்பதாம். [இதனால் அன்பினது உண்மை உணர்த்தப்பட்டது.

---

* சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, 71-73-ம் அடிகள்.

† திருக்குறள்-757.

'உண்டோ' என்றதன்கண் உள்ள ஈற்று ஓகாரம் எதிர்மறை வினாப் பொருளில் வந்தது. 'தாழ்' என்றது தாழ்க்கோலை; இக்காலத்து தாழ்ப்பாள் என்பர். 'பூசல்' என்றது சண்டை; ஈண்டு பிறர் அறியத் தோற்றதால் உணர்த்நிற்று. அனுமானமாவது:-புகையைக் கண்ட இடத்து ஆண்டு நெருப்புண் டென்று எண்ணுதல். (1)

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா ரென்பு முரியர் பிறர்க்கு.

(பரி-உரை) அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர்-அன்பிலாதார் பிறர்க்நப் பயன்படாமையின் எல்லாப் பொருளாலுந் தமக்கேயுரியர்; அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர்-அன்புடையார் அவற்றுனேயன்றித் தம்முடம்பாலும் பிறர்க்குரியர் எ-று.

ஆறுருபுகளும் பிரிநிலை யேகாரமும் விகாரத்தாற் றொக்கன. என்பு ஆகுபெயர். என்பு முரியராதல் "தன்னகம் புக்க குறாஅடைப் புறவின், றபுதியஞ் சிச் சிரை * புக்கோன்" முதலாயினுர்கட் காண்க.

(ப-உரை) அன்பிலார்-அன்பிலாதவர், (பிறருக்குப் பயன்படாமையால்) எல்லாம்-எல்லாப் பொருள்களாலும், தமக்கு-தமக்கே, உரியர்-உரியவராவார்; அன்புடையார்-அன்புடையவர், (அவைகளாலே மாத்திரமல்லாமல்) என்பும்-தம்) முடம்பாலும், பிறர்க்கு-பிறருக்கு, உரியர்-உரியவராவார் எ-று.

(க-ரை) அன்பிலார் எல்லாப் பொருளையுந் தமக்கே யுரியவராவர்; அன்புடையவர் பிறர்க்கு எலும்பையுங் கொடுக்க வுரியவராவர் என்பதாம்.

(வி-ரை) தமக்கே யென்ற பிரிநிலை யேகாரம் வருவிக்கப்பட்டது. ன்பு-உடம்பிற்காதலால் ஆகுபெயர். [என்புமுரியராகுகை புருவுக்காகத் லேயேறிய சிபியும், தன் முதுகெலும்பை இந்திரனுக்குக் கொடுத்த ததீசியு தலாயினோரிடத்தே காண்க.

'என்பும்' என்றதன்கண் உள்ள உம்மை இறந்தது தழீஇய எச்ச ம்மை; சிறப்பும்மையாகக் கொள்ளுவாரும் உண்டு. இக்குறளுக்கு எடுத் க் காட்டாக புருவின் பொருட்டாகத் தன்னையே தராசில் நிறுத்துத் தந்த பிச்சக்கரவர்த்தியையும், இந்திரனுக்கு வச்சிராயுதஞ்செய்யத் தன் முதுகு லும்பைத் தந்த ததீசி முனிவரையும் கூறுவர். (2)

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க் கென்போ டியைந்த தொடர்பு.

(பரி-உரை) ஓர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு பெறுதற்கரிய ர்களுயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியினை, அன்போடு இயைந்த ர்க்கு என்ப-அன்போடு பொருந்துதற்குவந்த நெறியின்பயனென்று சொல் வர் அறிந்தோர் எ-று.

---

* புறநானூறு-43.

பிறப்பின தருமை பிறந்த வுயிர்மே லேற்றப்பட்டது. இயைந்தவென்பது உபசாரவழக்கு. வழக்கு ஆகுபெயர். உடம்போ டியைந்தல்லது அன்புசெய்யலாகாமையின், அது செய்தற்பொருட்டு இத் தொடர்ச்சி புனதாயிற் றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமை யென்றுயிற்று.

(ப-ரை) ஆருயிர்க்கு-பெறுதற்குரிய மனிதருயிர்க்கு, என்போடு-உடம்போடு, இயைந்த-உண்டாகிய, தொடர்பு-சம்பந்தத்தை, அன்போடு-அன்போடு, இயைந்த-பொருந்துதற்குவந்த, வழக்கு-வழியின்பயனுகும், என்ப என்று (அறிஞ்தோர்) சொல்லுவார் எ-று.

(க-ரை) மக்களுயிருக் குடலோடுண்டாகிய சம்பந்தத்தை அன்போடு பொருந்தவந்த பயனென்பர் என்பதாம்.

(வி-ரை) மனிதப்பிறப்பி னருமை அதனையடைந்த உயிர்களின்மேல் ஏற்றப்பட்டது. வழக்கென்பது அதன்பயனை புணர்த்தலால் ஆகுபெயர். உடம்போடு கூடியல்லாமல் அன்புசெய்யக் கூடாமையால், அது செய்தற் பொருட்டு இத்தொடர்ச்சி புண்டாயிற்றென்பதாம். ஆகவே [இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமை யென்றுயிற்று.]

இக்குறளுக்கு 'இவ் உடம்பு பிறர்க்கு அன்புசெய்தற்பொருட்டே உண்டாயது' என்பது கருத்தாகும். (3)

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(பரி-உரை) அன்பு ஆர்வமுடைமை ஈனும்-ஒருவனுக்குத் தொடர்புடையார்மாட்டுச் செய்த அன்பு அத்தன்மையாற் பிறர்மாட்டும் விருப்பமுடைமையைத் தரும், அது நண்பு என்னும் நாடாச்சிறப்பு ஈனும்-அவ்விருப்பமுடைமைதான் இவற்குப் பகையும் நொதுமலுமில்லையாய் யாவரும் நண்பென்ற சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும் எ-று.

உடைமை-உடையனுந்தன்மை, யாவரு நண்பாதல். எல்லாப்பொருளு மெய்துதற் கேதுவாகலின், அதனை நாடாச்சிறப்பென்றார்.

(ப-ரை) அன்பு - (சம்பந்தமுடையவரிடத்தே செய்யப்பட்ட) அன்பானது, (அத்தன்மையினாலே) ஆர்வமுடைமை (பிறரிடத்தே) ஆசையையுடையவனுயிருக்கையை, ஈனும்-(ஒருவனுக்குத்) தரும், அது-அவ்விருக்கையானது, நண்பென்னும்-(இவனுக்கு யாவரும்) நட்பினரென்ற சொல்லப்படுகிற, நாடாச் சிறப்பு-அளவிறந்த சிறப்பை, ஈனும்-தரும் எ-று.

(க-ரை) அன்பானது ஆசையைத்தரும், அது பினேகத்தையும் தரு என்பதாம்.

(வி-ரை) எல்லாரும் நடப்பினராதல் எல்லாப்பொருளையும் அடைவுக் காரணமாதலின் அதனை நாடாச் சிறப்பென்றார். 'நொதுமல்' இகழிலார், அயலார் என்னும் பொருளது.

அன்பிலிருந்த ஊர்வமும், ஊர்வத்திலிருந்த நண்பும் உண்டாம் என்பத கருத்தாகும்.

உலகில் நன்மட்பிலும் சிறந்தபொருள் இல்லையாதலின் 'நண்பென்னு நாடாச்சிறப்பு' என்றார். (4)

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று ரெய்துஞ் சிறப்பு.

(பரி-உரை) அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப-அன்புடையராய் இல் லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர், வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு-இவ்வுலகத்து இல்வாழ்க்கைக்க ணின்று இன்ப நுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச்சென் றெய்தும் பேரின் பத்தினை எ-று.

வழக்கு ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கணின்று மனைவியோடும் மக்களோ டும் ஒக்கலோடுங் கூடி யின்புற்றார் தாஞ்செய்த வேள்வித்தொழிலாற் றேவ ராய் ஆண்டு மின்புறுவ ராகலின், இன்புற்று ரெய்துஞ் சிறப்பென்றார். தவத் தாற் றன்புற் றெய்துந் துறக்க வின்பத்தினை ஈண்டு மின்புற் றெய்துதல் அன்பானன்றி யில்லை யென்பதாம்.

(ப-ரை) வையகத்து-இவ்வுலகத்தில், இன்புற்றார் - (இல்வாழ்க்கையிலே நின் று) இன்பத்தை யனுபவித்தவராகி, எய்தும்-(அதன் பின்னே விண்ணுல கத்திற் சென்று) அடையும், சிறப்பு-பேரின்பத்தினை, அன்பு-அன்பை, உற்று-உடையவராகி, அமர்ந்த - (இல்லறத்தோடு) பொருந்திய, வழக்கு - வழியின் வாழ்தலும், என்ப-என்று (அறிந்தோர்) சொல்லுவார் எ-று.

(உ-ரை) விண்ணுலகிலடையும் பேரின்பத்தை மண்ணுலகில் இல்வாழ்க் கையில் பொருந்தியவன் பின் எய்தும் பயனென்பர் என்பதாம்.

(வி-ரை) இல்வாழ்க்கையிலே நின்று மனைவியோடும், மக்களோடும், சுற் றத்தோடும், கூடி இன்பமுற்றவர் தம்மாலே செய்யப்பட்ட வேள்வித் தொழி லினாலே தேவராய்ப்பிறந்து அங்கேயும் இன்பத்தை அநுபவிப்பாராகலின் இன்புற்று ரெய்துஞ் சிறப்பென்றார். தவத்தினாலே தன்பமுற்று அடையப் படுவதாகிய விண்ணுலக வின்பத்தை இங்கேயும் இன்பமுற்று அடைதல் அன்பாலன்றி இல்லை என்பதாம்.

'அன்புற்ற' என்றதை இல்லறத்திலே அன்புற்ற என்பதாம். (5)

அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(பரி-உரை) அன்பு சார்பு அறத்திற்கே என்ப அறியார்-அன்பு துணை யாவது அறத்திற்கே யென்று சொல்லுவர் சிலரறியார்; மறத்திற்கும் அஃதே துணை-வீர மறத்திற்கும் அவ்வன்பே துணையாவது எ-று.

ஒருவன்செய்த பகைமைபற்றி உள்ளத்தை மறவிகழ்த்தழி அவனை கட்பாக்கருதி அவன்மேலன்புசெய்ய அது நீக்குமாகலின், மறத்தை நீக்குதற்குத் துணையாமென்பார், மறத்திற்குமஃதே துணையென்றார், "தற்பத்திற்றியாரே துணையாவார்*." என்புழிப்போல. இவை யைந்து பாட்டாலும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) அறியார்-அறியாதவர் (சிலர்), அன்பு-அன்பானது சார்பு-துணையாவது, அறத்திற்கே-தருமத்திற்கே, என்ப-என்று சொல்லுவார், மறத்திற்கும்-மறத்தை நீக்குதற்கும், அஃதே-அவ்வன்பே, துணை-துணையாவது எ-று.

(க-ரை) அறியாதவர் அறத்திற்கே யன்பு துணையென்பர்; மறத்தை நீக்குதற்கும் அவ்வன்பே துணையாம் என்பதாம்.

(வி-ரை) ஒருவனாலே செய்யப்பட்ட பகைமைபற்றி உள்ளத்திலே மறந்தோன்றியவிடத்தே அவனை கட்பாக நினைத்து அவன்மேல் அன்பு செய்ய அது நீக்குமாகலின் மறத்தை நீக்குதற்குத் துணையாமென்றற்கு மறத்திற்குமஃதே துணையென்றார். மறத்திற்குமஃதே துணையென்றதற்குப் பெண்டிர் புதல்வர் முதலாயினோரை கல்வழிப்படுத்தும்பொருட்டு அவரைக் குறித்துச் செய்யப்படும் கோபத்திற்கும் அன்பே துணையாமெனப் பொருளுரைப்பினுமாம். [இவை ஐந்து பாட்டாலும் அன்பினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'மறத்திற்கும்' என்றதன்கண்நின்ற உம்மை அறத்திற்கு அன்பு சார்பானதுபோல மறத்திற்கும் சார்பாகும் எனப் பொருள் தந்து நின்றது. 'அறத்திற்கே' என்றதன் சுற்று ஏகாரம் பிரிநிலை ஏகாரம். அஃது என்றது அன்பைச்சுட்டி நின்றது.

(6)

என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.

(பரி-உரை) என்பு இலதனை வெயில்போலக் காயும் - என்பில்லாத வுடம்பை வெயில் காய்ந்தாற்போலக் காயும், அன்பு இலதனை அறம்-அன்பில்லாத வுயிரை அறக்கடவுள் எ-று.

என்பிலதென்றதனால் உடம்பென்பதூஉம், அன்பில தென்றதனால் உயிரென்பதூஉம் பெற்றும். வெறுப்பின்றி எக்குமொரு தன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன்னியல்பாற்சென்று கெடுமாறுபோல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லது தன்னியல்பாற் கெடுமென்பதாம். அதனைக் காயுமென வெயிலறங்களின்மே லேற்றினார், அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின். இவ்வாறு 'அல்லவை செய்தாற் கூடங்கூற்றம்' எனப் பிறருங் கூறினார்.

(ப-ரை) என்பிலதனை-எலும்பில்லாதவுடம்பை, வெயில்போல-வெயிலானது சுடுதல்போல, அன்பிலதனை-அன்பில்லாதவுயிரை, அறம்-அறக்கடவுள், காயும்-சுடுவான் எ-று.

* திருக்குறள்-1299.

(க-ரை) என்பில்லாப்புழுக்கூச் ருரியன் சுடுதல்போல அன்பில்லா யுயிர்கோ யறக்கடவுள் சுடும் என்பதாம்.

(வி-ரை) எ-அசைகிலை. என்பிலதென்றதனால் உடம்பென்றும், அன்பில தென்றதனால் உயிரென்றும் கொள்ளப்பட்டன. வெறுப்பில்லாமல் எங்கும் ருதன்மைத்தாகிய வெயிலின்முன்னே புழுமுதலானவை கெடுதல்போல், கப்படிப்பட்ட அறத்தின்முன்னே அன்பில்லாத உயிர் தன்னியல்பாற் சென்று கெடுமென்பதாம்.

'என்பிலதனை' என்பதற்கு என்பில்லாச் சுவசொற்களாகிய 'புழு' என்பர். ன்பில்லாத உடம்பு புழுவுடம்பென்பது பெரியார் பலர் கண்டதாம். (7)

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

(பரி-உரை) அகத்து அன்பு இல்லா உயிர் வாழ்க்கை-மனத்தின்க ணன் பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடிவாழ்தல், வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தற்று-வன்பாலின்கண் வற்றலாகிய மரந் தளிர்த்தாற்போலும் எ-று.

கூடாதென்பதாம். வன்பால் வன்னிலம். வற்றலென்பது பால்விளக்கா மாறிணைப் படர்க்கைப்பெயர்.

(ப-ரை) அன்பகத்தில்லாவுயிர் - மனநிலன்பில்லாத வுயிரானது, வாழ் க்கை-(இல்லறத்தோடுகூடி) வாழ்தலானது, வன்பாற்கண் - வன்பாலென்று லத்திலே, வற்றன்மரம் - உலர்ந்தமரமானது, தளிர்த்தற்று - தளிர்த்தாற் போலும் எ-று.

(க-ரை) அன்பில்லா வுயிர்வாழ்க்கையானது வன்னிலத்திற் பட்டமரந் தளிர்த்தாற்போலும் என்பதாம்.

(வி-ரை) கூடாதென்பதாம். வன்பால்-கடினநிலம்.

'வன்பால்' என்பதற்கு வன்னிலம் என்றார். வன்னிலம் என்றது பாலை லத்தென்பர். கற்பாரைநிலம் என்பர் ஒருசாரார். 'வற்றன்மரம்' என்றது ட்டமரத்தை. (8)

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

(பரி-உரை) யாக்கையகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு-யாக்கையகத் தின்கணின்று இல்லறத்திற் குறுப்பாகிய அன்புடையரல்லாதார்க்கு, புறத்து றுப்பெல்லாம் எவன் செய்யும்-ஏனைப் புறத்தின்கணின்று உறுப்பாவன வெல்லாம் அவ்வறஞ்செய்தற்கண் என்ன வுதவியைச் செய்யும்! எ-று.

புறத்துறுப்பாவன-இடனும், பொருளும், ஏவல்செய்வாரு முதலாயின. ணையொடு கூடாதவழி அவற்றுற் பயனின்மையின், எவன்செய்யுமென்றார். ப்புப்போறலின், உறுப்பெனப்பட்டன. யாக்கையிற் கண்முதலிய உறுப்

புக்களெல்லாம் என்ன பயனைச் செய்யும், மனத்தின்கட்பற்றப்பாகிய அன்பி லாதார்க்கென் றுரைப்பாரு முளர். அதற்கு இல்லறத்தோடு யாதொ மியைபில் லாமை யறிக.

(ப-ரை) யாக்கையகத்த-உடம்பினகத்திலே கின்ற, உறப்பு-(இல்லறத் தக்கு) அங்கமாகிய, அன்பிலவர்க்கு-அன்பில்லாதவர்க்கு, புறத்த-மற்றைப் புறத்திலே கின்ற, உறப்பெல்லாம்-அங்கமாவனவெல்லாம், எவன்-(அவ்வ றஞ்செய்தலிலே) என்னவுதவியை, செய்யும்-செய்யும் எ-று.

(க-ரை) உள்ளன்பில்லாதார்க்குப் பிறவுறப்புகளிருந்தும் பயனில்லை எற்பதாம்.

(வி-ரை) புறத்தவுறப்பாவன: இடம் பொருளேவ லாதிகளாம். அவ் பாகிய தீவினையோடு கூடாதவிடத்தே அவைகளாற் பயனில்லாமையால் எவன் செய்யுமென்றார் [உறப்புப்போலுதலால் உறப்பெனப்பட்டது.]

'எவன்' என்றது எகாரவினை அடியாகப் பிறந்த பெயர். (9)

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(பதி-உரை) அன்பின் வழியது உயிர்நிலை-அன்புமுதலாக அதன்வழி கின்ற உடம்பே உயிர்கின்ற வுடம்பாவது, அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த-அவ்வன்பில்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற் போர்த்தனவாம், உயிர் கின்றனவாகா எ-று.

இல்லறம் பயவாமையின், அன்னவாயின. இவை நான்கு பாட்டானும் அன்பில் வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) அன்பின்வழியது-அன்புமுதலாக அதன்வழிகின்ற உடம்பே, உயிர்நிலை-உயிர்கின்ற உடம்பாகும்; அஃதிலார்க்கு-அவ்வன்பில்லாதார்க் குள்ள, உடம்பு-உடம்புகளானவை, என்பு-எலும்பை, தோல்-தோலினாலே, போர்த்த-போர்க்கப்பட்டனவாம், உயிர்கின்ற வுடம்பாகா எ-று.

(க-ரை) அன்போடு பொருந்திய வுடலே யுயிருள்ள வுடலாகும், அவ் வன்பில்லா வுடலே யுயிரற்றவுடலாகும் என்பதாம்.

(வி-ரை) இல்லறம் பயன்படாமையால் அப்படிப்பட்ட வுடம்புகளாயின. [இவை நான்குபாட்டாலும் அன்பில்லாதவிடத்தே உண்டாகும் குற்றம் சொல்லப்பட்டது.]

அன்பில்லா உடம்பு உயிரில்லா உடம்பு போன்றது என்பது கருத்தாம். 'எலும்பு' என்பது 'என்பு' என்றாயிற்று. (10)

8-ம் அதி-அன்புடைமை-முற்றிற்று.

9-ம் அதிகாரம்-விருந்தோம்பல்

(பரி-உரை) அஃதாவது இருவகை விருந்தினரையும் புறந்தருதல். தென்புலத்தார் முதலிய வைம்புலத்தின் முன்னையிரண்டும் கட்புலனாதாரை நினைத்து செய்வனவாகலானும், பின்னையிரண்டும் பிறர்க்கேயன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல் சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேருகாத அன்புடை யிருவர்கூடி யல்லது செய்யப்படாமையின், இஃது அன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: விருந்தினரை புபசரித்தல், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்கிற ஐவகையோரை உபசரித்தல்களிலே முன்னவை யிரண்டும் கண்ணுற் காணப்படாதவரை நினைத்துச் செயப்படுவன வாதலானும், பின்னவை இரண்டும் பிறர்க்குக் கொடுத்தலல்லாமையானும், நடுநின்ற விருந்தோம்பல் சிறப்பை புடையதாகி அவ்வில்லறங்களுக்கு முதலாயிற்று. வேறுபாடில்லாத அன்பையுடைய கணவனு மனைவியாலும் கூடியல்லது செய்யக்கூடாமையால் இது அன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.

இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு.

(பரி-உரை) இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் - மனைவியோடும் வனத்திற் செல்லாது இல்லின்கணிருந்து பொருள்களைப் போற்றி வாழுஞ் செய்கையெல்லாம், விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு-விருந்தினரைப் பேணி அவர்க்குபகாரஞ் செய்தற்பொருட்டு எ-று.

எனவே, வேளாண்மை செய்யாவழி இல்லின்கணிருத்தலும் பொருள் செய்தலுங் காரணமாக வரும் துன்பச் செய்கைகட்கெல்லாம் பயனில்லையென்பதாம்.

(ப-ரை) (மனைவியோடுங் காட்டினிடத்தே செல்லாமல்) இல் - இல்லிடத்தே, இருந்து-இருந்து, ஓம்பி - (பொருள்களைக்) காப்பாற்றி, வாழ்வதெல்லாம்-வாழுஞ் செய்கையெல்லாம், விருந்து-விருந்தினரை, ஓம்பி-உபசரித்து, வேளாண்மை-உபகாரத்தை, செய்தற்பொருட்டு-(அவருக்குச்) செய்தற்பொருட்டாம் எ-று.

(க-ரை) இல்வாழ்க்கையில் வாழ்வதெல்லாம் விருந்தினரைக் காப்பாற்றும் பொருட்டு என்பதாம்.

(வி-ரை) எனவே உபகாரஞ் செய்யாதவிடத்தே இல்லிலிருத்தலாலும், பொருள் காப்பாற்றலாலும் உண்டாகிற துன்பச் செயல்களுக்கெல்லாம் பயனில்லை என்பதாம்.

'ஓம்பி' காப்பாற்றி; இதற்கு 'ஓம்பு' பகுதி. 'விருந்து' என்றது வந்த புதியாரையும், எதிர்கோளையும் உணர்த்திற்று. 'வேளாண்மை' என்றது உபகாரச்

செய்கையை. இதனானன்றோ 'வேளாளனென்பவன் விருந்திருக்க உண்ணாதான்' என்றார் பிறரும். (1)

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(பரி-உரை) சாவா மருந்து எனினும்-உண்ணப்படும் பொருள் அமிர்தமேயெனினும், விருந்து புறத்ததாத் தான் உண்டல்-தன்னைநோக்கி வந்த விருந்து தன்னில்லின் புறத்ததாகத் தானே உண்டல், வேண்டற்பாற்று அன்று-விரும்புதன் முறைமை யுடைத்தன்று எ-று.

சாவாமருந்து-சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. விருந்தின்றியே ஒருகாற் றானுண்டலைச் சாவா மருந்தென்பார் உளராயினும் அதனை யொழிக வென்றுரைப்பினு மமையும். இவை யிரண்டு பாட்டானும் விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) (உண்ணப்படும்பொருள்) சாவாமருந்தெனினும்-அமிர்தமாயினும், விருந்து-(தன்னைநோக்கிவந்த) விருந்தினர், புறத்ததா-தன் வீட்டின் புறத்திருக்க, தானுண்டல்-தானே யுண்ணுதல், வேண்டற்பாற்றன்று-விரும்பப்படு முறைமையை யுடையதன்றாம் எ-று.

(க-ரை) வந்த விருந்தினரைப் புறம்வைத்துத் தேவாமிர்தமாகினு முண்ணப்படாது என்பதாம்.

(வி-ரை) சாவாமருந்து சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. [இவை இரண்டு பாட்டாலும் விருந்தோம்பலின் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'சாவாமருந்து' என்றது சாவாமையைத் தருவதாகிய தேவாமிர்தத்தை, இக்குறளின் கருத்தை 'மருந்தேயாயினும் விருந்தோ டுண்' என்ற ஔவை சூத்திரம் நன்கு விளக்கும். (2)

வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுத லின்று.

(பரி-உரை) வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை-தன்னை நோக்கி வந்த விருந்தை நாடோறும் புறந்தருவான தில்வாழ்க்கை, பருவந்து பாழ்படுதல் இன்று-நல்குரவான் வருந்திக்கெடுதலில்லை எ-று.

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனாற் பொருடொலையாது மேன்மேற் கிளைக்கு மென்பதாம்.

(ப-ரை) வருவிருந்து-தன்னைநோக்கி வந்தவிருந்தை, வைகலும்-நாளு நாளும், ஓம்புவான்-உபசரித்து வருபவனது, வாழ்க்கை-இல்வாழ்க்கையானது, பருவந்து-(வறுமையால்) வருந்தி, பாழ்படுதலின்று-கெடுதலில்லை எ-று.

(க-ரை) வந்த விருந்தினரைக் காப்பாற்றுபவன் வாழ்க்கை கெடுதலில்லை என்பதாம்.

(வி-ரை) தினந்தோறும் விருந்தோம்புவானுக்கு அதனாலே பொருள் நிறையாமல் மேலுமேலும் வளருமென்பதாம்.

'ஓம்புவான்' என்றது நாண்டு வந்த விருந்தினரை உபசரித்துப் போற்றுவதைக் குறித்தது. பருவரல்-துன்பம்; வறுமை துன்பந்தருவதால், வறுமைக்கும் பருவரல் என்பதாயிற்று.

(3)

அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

(பரி-உரை) செய்யாள் அகன் அமர்ந்து உறையும் - திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும், முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்-முகமினியளுய்த் தக்க விருந்தினரைப் பேணுவான தில்லின்கண் எ-று.

மனமகிழ்தற்குக் காரணம் தன் செல்வம் நல்வழிப்படுதல். தகுதி ஞான வாழுக்கங்களா னுயர்தல். பொருள் நிலைத்தற்குக் காரணங் கூறியவாறு.

(ப-ரை) செய்யாள் - திருமாதானவள், முகனமர்ந்து - முகமினியளுய், நல்விருந்து-தகுந்த விருந்தினரை, ஓம்புவான் - காப்பவனது, இல்-வீட்டினிற்தே, அகனமர்ந்து - மனமகிழ்ந்து, உறையும் - வாழ்ந்துகொண்டிருப்பாள் று.

(க-ரை) விருந்தினரைக் காப்பவன் வீட்டில் இலக்குமி வாசம் பண்ணுவள் என்பதாம்.

(வி-ரை) மனமகிழ்தற்குக் காரணம் தன்செல்வம் நல்வழிப்படுதலாம். தகுதியாவது-ஞானத்தினுலும், ஆசாரத்தினுலும் உயர்தல். பொருள் வளர்தற்குக் காரணம் சொல்லியபடி.]

'செய்யாள்' என்பது திருமகளை. இது செவ்நிறம் உடைமையின் வந்த பெயர். இனி ஒரு சாரார் ஆக்கஞ்செய்யுங் காரணம்பற்றி வந்ததென்பர். (4)

வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

(பரி-உரை) விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம்-முன்னே விருந்தினை மிசைவித்துப் பின் மிக்கதனைத் தான் மிசைவானது விளைபுலத்திற்கு, தம் இடல் வேண்டுமோ-வித்திடுதலும் வேண்டுமோ, வேண்டா எ-று.

கொல்லென்பது அசைநிலை. தானே விளையுமென்பது குறிப்பெச்சம். வ மூன்றுபாட்டானும் விருந்தோம்புவார் இம்மைக்கணெய்தும் பயன் ப்பட்டது.

(ப-ரை) விருந்தோம்பி-(முன்னே) விருந்தினரை யுண்பித்து, மிச்சில்-தினையை, மிசைவான்-(பின்) நுண்பவனது, புலம்-விளைநிலத்துக்கு, வித்தினையும், டல்-டுதலும், வேண்டுங்கொல்-வேண்டுமோ? வேண்டுவ ல எ-று.

(க-உரை) விருந்தினரைக் காப்பவன் விளைநிலத்தானே விளையும் என்பதாம்.

(வி-உரை) ஒ.அசைநிலை. எனவே தானே விளையுமென்பதாயிற்று. [இவை மூன்றுபாட்டாலும் விருந்தோம்புவார் இம்மையிலே அடையும் பயன் சொல்லப்பட்டது.]

'மிச்சில்' என்றது மீதத்தை. 'மிசைதல்'-உண்ணல். 'புலம்' என்றது விளைநிலத்தை. (5)

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

(பரி-உரை) செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான்-தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக்கடவ விருந்தைப் பார்த்திருப்பான், வானத்தவர்க்கு நல்விருந்து-மறுபிறப்பிற் பிற தேவனுய் வானிலுள்ளார்க்கு நல்விருந்தாம் எ-று.

வருவிருந்தென்பது இடைமுலவமைதி. நல்விருந்து-எய்தாவிருந்து, இதனுன் மறுமைக்கணெய்தும் பயன் கூறப்பட்டது.

(ப-உரை) செல்விருந்து - (தன்னிடத்திலே) வந்தவிருந்தை, ஓம்பி-உபசரித்து, வருவிருந்து-(பின்) வரும்விருந்தை, பார்த்து-எதிர்நோக்கி, இருப்பான்-(தான் அதனுலெடுண்ண) விருப்பவன், மறுபிறப்பிலே (தேவனுய்) வானத்தவற்கு-வானிலுள்ளவருக்கு, நல்விருந்து-நல்ல விருந்தாவான் எ-று.

(க-உரை) வந்த விருந்தாளிகளைக் காப்பாற்றி வரும் விருந்தாளிகளை எதிர் பார்த்திருப்பவன் தேவர்களுக்கு விருந்தாளியாவான் என்பதாம்.

(வி-உரை) நல்விருந்து-கிடைத்தற்கரியவிருந்து. [இதனுலே மறுமையில் அடையும்பயன் சொல்லப்பட்டது.]

'செல்விருந்து' என்றது தன்கண்வந்த விருந்தினரை என்னும் பொருளது. 'வருவிருந்து' என்றது இனிவர இருக்கும் விருந்தினரை. 'வானத்தவர்' என்றது தேவர்களை. (6)

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

(பரி-உரை) வேள்விப் பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை; விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இன்னவளவிற் றென்பதோ? வுடைத்தன்று, விருந்தின் றுணைத் துணை - அதற்கு அவ்விருந்தின்றுணையனவே அளவு எ-று.

* ஐம்பெருவேள்வியி னொன்றுதலின் வேள்வியென்றும், பொருளளவு "தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்த டும்" மாகலின், இனைத்தினைத் தென்பதொன்றில்லையென்றுங் கூறினர் தனன் இருமையும் பயத்தற்குக் காரணங் கூறப்பட்டது.

(ப-ரை) வேள்விப்பயன்-(விருந்தினரை யுபசரித்தலாகிய) வேள்வியி தது பயன், இனைத்தினைத்தென்பது-இன்னவளவின தென்பதாகிய, ஒன் ல்லை - ஓரளவினை யுடையதன்று, விருந்தின் - அவ்விருந்தினரது, தினை-குறி) யளவே, தினை-(அதற்கு) அளவாம் எ-று.

(க-ரை) விருந்தினரைக் காக்குமுதவி யிவ்வளவென்ப தொன்றில்லை. ருந்தினர் மகிழ்ச்சியளவேயாம் என்பதாம்.

(வி-ரை) தேவயாகம்-பிதிருயாகம், மனிதயாகம், பூதயாகம், பிரமயாகம் ன்கிற ஐம்பெருவேள்வியில் மனிதயாகம் என்னப்பட்ட விருந்தோம்ப லான்றுகலின் வேள்வியென்றும், பொருளளவு சிறிதாயினும் சற்பாத்திரத் லே சேர்ந்ததாயின் மிகப்பெரிதாமாதலின் இனைத்தினைத்தென்ப தொன் ல்லையென்று சொல்லினர். [இதனால் இருமையும் பயத்தற்குக் காரணம் சால்லப்பட்டது.]

'தினை' என்பது அளவு என்னும் பொருளது. 'தினை' என்னுஞ் சொல் க்குறளில் பன்முறை அதேபொருளின் வந்தமையின் சொற்பொருட் ன்வரு கிலேயணி. (7)

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி வேள்வி தலைப்படா தார்.

(பதி-உரை) பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர்-கிலையாப்பொருளை நர்ந்திக் காத்துப் பின் அதனை யிழந்து இதுபொழுது யாம் பற்றுக்கோ டில யினே மென்றிரங்குவர், விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார் - அப் ாருளான் விருந்தினரை யோம்பி வேள்விப் பயனையெய்தும் பொறியிலா ர் எ-று.

"ஈட்டிய வொண்பொருளைக், காத்தலு மாங்கே கடுந்தன்பம்" ‡ மாகலின் ந்தோம்பி யென்றார். வேள்வி-ஆகுபெயர்.

(பத-ரை) விருந்து-விருந்தினரை, ஓம்பி-(கிலையாப்பொருளைக் கொண்டு) சரித்து, வேள்வி-அவ்வேள்விப்பயனை, தலைப்படாதார் - அடையும் அறி ாதவர், பரிந்தோம்பி-(அப்பொருளை) வருந்திக் காத்து (பின்பு) அதனை

* ஐம்பெரு வேள்வியாவன - பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், ர்யாகம், பூதயாகமென விவை. அவற்றுள், பிரமயாகம் - வேதமோதல்; வயாகம்-ஓமம்வளர்த்தல்; மானுடயாகம் - விருந்தோம்பல், பிதிர்யாகம்-கடனுற்றல்; பூதயாகம்-பலியீதல். † காலடியார் அறன்வலியுறுத்தல்-8. காலடியார் சுயாமை-10.

யிழந்து, பற்றற்றேம்-(இப்போது) பற்றுக்கோடிலமாயினோம், என்பர் - என்றிரங்குவார் எ-று.

(க-ரை) விருந்தாளிகளைக் காப்பாற்றாதார் பொருளைக் காப்பாற்றி யிழந்தோமென்பார் என்பதாம்.

(வி-ரை) சம்பாதிக்கப்பட்ட பொருளைக்காத்தலும் கடுந்துன்பமாதலால் பரிந்தோம்பியென்றார், வேள்வி அதன்பயனை உணர்த்தலால் ஆகு பெயர்.

'பற்று' என்றது ஈண்டு ஆதரவு, பற்றுக்கோடு என்னும் பொருளது. (8)

உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.

(பரி-உரை) உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை உடைமைக்காலத் தின்மையாவது விருந்தோம்பலையிகழும் பேதைமை, மடவார்கண் உண்டு-அஃது அறிந்தார்மாட்டு உளதாகாது, பேதையார்மாட்டே யுளதாம் எ-று.

உடைமை-பொருளுடையனாந்தன்மை. பொருளாற் கொள்ளும் பயனை யிழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமையை இன்மையாக வுபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பலை யிகழிற் பொருள் நின்றவழியும் அதனாற் பயனில்லை யென்பதாம். இவையிரண்டுபாட்டானும் விருந்தோம்பா வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) உடைமையுள்-(பொரு) ளுடையராயிருக்குங்காலத்து, இன்மை வறுமையாவது, விருந்தோம்பல்-விருந்தினரை யுபசரித்தலை, ஓம்பா-இகழும் மடமை-பேதமையாகும், (அது அறிந்தோரிடத்திராது) மடவார்கண்-அறிவிலாதவரிடத்து, உண்டு-உண்டு எ-று.

(க-ரை) செல்வத்துள் வறுமையாவது விருந்தினரை யுபசரியாமை அது, அறிவில்லாரிடத்துண்டு என்பதாம்.

(வி-ரை) மடமையானது பொருளாலே கொள்ளும்பயனை இழப்பித்து உடைமையை இல்லாமையாக்கலால் அதை வறுமையாக உபசரித்தார் பேதைமையால் விருந்தோம்பலை இகழ்ந்தால் பொருளிருந்த விடத்தும் அதனாற் பயனில்லை யென்பதாம். [இவை யிரண்டுபாட்டாலும் விருந்தோம்பா விடத்து உண்டாம் குற்றஞ் சொல்லப்பட்டது.]

'உடைமையுள்' என்றது செல்வம் உடைய காலத்தை. 'இன்மை' என்றது இல்லாமையை; அதாவது வறுமை என்பதாம். 'மடமை' என்றது அறிவு இன்மையை. 'மடவார்' என்றது அறியாமையை உடைய மாக்களை.

மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து,

(பரி-உரை) அனிச்சம் மோப்பக் குழையும்-அனிச்சப்பூ மோந்தழியன்றிக் குழையாது; விருந்து முகம் நிரிந்து நோக்கக் குழையும்-விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர் எ-று.

அனிச்சம்-ஒருபெயர். செய்மைக்கட் கண்டழி இன்முகமும், அதுபற்றி எண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்டவழி ஈன்றுற்றலுமென மிருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்லழிச் செய்மைக்கண்ணே வாடி நீங்குதலின், நீண்டியவழி யல்லது வாடாத அனிச்சப்பூவிற்கும் விருந்தினர் மெல்லியரென்பதாம். இதனுன் விருந்தோம்பு வார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது,

(ப-ரை) அனிச்சம் - அனிச்சப்பூவான்று, மோப்ப - மோந்தவிடத்தே, குழையும்-வாடும், விருந்து - விருந்தினர், முகம்நிரிந்து - முகம் வேறுபட்டு, நோக்க-பார்க்க, குழையும்-வாடுவர் எ-று.

(க-ரை) அனிச்சப்பூ மோந்தவிடத்து வாடும், விருந்து முகம் வேறுபட்டுப் பார்க்க வாடும் என்பதாம்.

(வி-ரை) தானத்திலே கண்டவிடத்து முகமலர்ச்சி காட்டலும், அதன்பின் சமீபித்து வந்தவிடத்து இன்சொற்சொல்லுதலும், அதுகேட்டு உடன்பட்டபோது உபசாரஞ்செய்தலும், ஆகிய விருந்தோம்புவார்க்கு அவசியமிருக்கவேண்டிய மூன்றினுன் முதலாகிய முகமலர்ச்சியில்லாதபோது தானத்திலிருந்தே வாடி நீங்குதலால் நீண்டியவிடத்தல்லது வாடாத அனிச்சப்பூவிலும் விருந்தினர் மெல்லியராயிருப்பரென்பதாம். [இதனுல் விருந்தோம்புவார்க்கு முதலிலே முகமலர்ச்சி வேண்டுமென்பது சொல்லப்பட்டது.]

'அனிச்சம்' என்றது ஈண்டு அனிச்சப்பூவை. வெகுநுட்ப முடையதாகிய மாத்திரத்தைக் குழைத்துபோந்தன்மையது. 'குழையும் விருந்து' என்ற வந்தவிருந்தினர் மனம் வாடுதலை உணர்த்திற்று. இக்குறளால் அனிச்சப்பூ மோந்தாலன்றிக் குழையாது, விருந்தோ முகந்திரிந்து நோக்கினமாத்திரத்தே குழையும் எனக்கூறிய நயம் சற்று உற்று ஆராயத்தக்கதாம். (10)

9-ம் அதி-விருந்தோம்பல்-முற்றிற்று.

10-ம் அதிகாரம்-இனியவைகூறல்

(பரி-உரை) அஃதாவது: மனத்தின்க ணுவகையை வெளிப்படுப்பனவாகிய இனிய சொற்களைச் சொல்லுதல். இதவும், விருந்தோம்புவார்க்கு இன்றியமையாததாகலின், விருந்தோம்பலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: மனத்திலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிற இனிய சொல்லுகளைச் சொல்லுதலாம். இதவும், விருந்தோம்புவார்க்கு அவசியம் வேண்டியதாகலின் அதன்பின் வைக்கப்பட்டது.

இன்சொலா லீர மளஇப் படிறிலவாஞ் /
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(பரி-உரை) இன் சொல்-இன்சொலாவன, ஈரம் அளஇப் படிறு இலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்-அன்போடு கலந்த வஞ்சனையிலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாயிற் சொற்கள் எ-று.

ஈல்-அசைநிலை. அன்போடு கலத்தல் அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை-வாய்மை. மெய்யுணர்ந்தார் செஞ்சிற்கெல்லாஞ் செம்மையுடைத்தாய்த் தோன்றலின், செம்பொருளெனப்பட்டது. இலவாஞ் சொல்லென வியையும். வாயென வேண்டாதது கூறினார், நீயசொற்பயிலாவென்பது நிவித்தற்கு. இதனான் இன்சொற் இலக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) இன்சொல் - இனிய சொற்களாவன, ஈரமளஇ-அன்போடு கலந்த, படிறிலவாம்-வஞ்சனையில்லனவாயிருக்கின்ற, செம்பொருள் - அறத்தினை, கண்டார்-அறிந்தவரது, வாய்ச்சொல்-வாய்ச்சொற்களாகும் எ-று.

(க-ரை) அறத்தின்வழியை யறிந்தவர் வாய்ச்சொற்களே இனிய சொற்களாம் என்பதாம்.

(வி-ரை) ஈல்-அசை. அன்போடு கலத்தல்-அன்புடைமையை வெளிப்படுத்தல். வஞ்சனையில்லாமை, மெய்மை, மெய்யுணர்ந்தவர் கருத்துக்கெல்லாம் செம்மையுடையதாய்த் தோன்றலாலே செம்பொருளெனப்பட்டது. இலவாஞ் சொல்லெனக் கூட்டுக. [இதனால் இனிய சொல்லுக்கு இலக்கணம் சொல்லப்பட்டது.]

'இன்' இது 'இனிமை' என்பதன் விகாரம். 'ஈரம்' என்றது ஈன்ற அன்பைக் குறித்தது. 'அளஇ' இது சொல்லிசைக்கவந்த அளபெடை. (1)

அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந் /
இன்சொல னாகப் பெறின்.

(பரி-உரை) அகன் அமர்ந்து ஈதலின் நன்று-நெஞ்சுவந்து ஒருவற்கு வேண்டிய பொருளைக் கொடுத்தலினும் நன்று, முகன் அமர்ந்து இன்சொலனாகப் பெறின்-கண்டபொழுதே முகமினியனாய் அதனோடு இனிய சொல்லையுடையனாகப் பெறின் எ-று.

இன்முகத்தோடுகூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள்வயத்ததன்றித் தன்வயத்ததாயினும், அறநெஞ்சுடையார்க்கல்லது இயல்பாக வின்மையின், அதனினுமரிதென்னுங் கருத்தான், இன்சொலனாகப் பெறினென்றார்.

(ப-ரை) முகனமர்ந்து - (கண்டபொழுதே) முகமலர்ந்து, இன்சொலனாக-(அதனோடு) இன்சொல்லையுடையவனாக, பெறின்-பெற்றால், (அது) அகனமர்ந்து-மனமகிழ்ந்து, ஈதலின் - (ஒருவருக்கு வேண்டிய பொருளை) கொடுத்தலினும், நன்றே-நல்லதாம் எ-று.

(க-ரை) முகமலர்ந்தினிய சொற்களைச் சொல்லுவானுகில் அகமலர்ந்த ாடுத்தலிற கல்லது என்பதாம்.

(வி-ரை) முகமலர்ச்சியோடு கூடிய வின்சொல் கொடுத்தல்போல் ாருள்வசத்ததாகாமல் தன்வசத்ததாயிருந்தாலும் தருமசிந்தை யுடையவர்க் லது சுபாவமாக இராதாகையால் அதனினும் அரிதென்னும் கருத்தால் சொலருகப் பெறினென்றார்.

'அகன்' இத 'அகம்' என்பதன்போலி; 'முகன்' என்பதுடம் அது. ஈற்ற ந்திற்கு னகரம் போலி யுயிற்று. னகரம் தேற்றப் பொருளது. (2)

முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு
மின்சொ வினதே யறம்.

(பரி-உரை) முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி-கண்டபொழுதே த்தான் விரும்பி இனிதாக நோக்கி, அகத்தான் ஆம் இன்சொலினதே ம்-பின் கண்ணியவழி மனத்தடனுகிய இனிய சொற்களைச் சொல்லுத ாகண்ணதே அறம் எ-று.

நோக்கியென்னும் வினையெச்சம் இன்சொலென அடையடுத்தின்ற னிலத் தொழிற்பெயர் கொண்டது. ஈதலின்கண்ணதன்றென்றவாறு. வ இரண்டு பாட்டானும் இன்முகத்தோடு கூடிய வின்சொல் முன்னரே த்தைக் கோடலின் விருந்தோம்புதற்கட் சிறந்ததென்பது கூறப்பட்டது.

(ப-ரை) அறம்-தருமமானது, முகத்தானமர்ந்து-(கண்டபோதே) முகத் விரும்பி, இனிது நோக்கி-இனிதாகப் பார்த்து, (பின்சொர்ந்தவிடத்து) த்தானும்-மனத்தடனுகிய, இன்சொலினதே-இனிய சொற்களைச் சொல் னிடத்ததே எ-று.

(க-ரை) தருமமானது இன்சொல்லினிடத்ததே என்பதாம்.

(வி-ரை) அறமானது, ஈகையினிடத்தே உள்ளதல்ல வென்பதாம். வ இரண்டு பாட்டாலும் முகமலர்ச்சியோடு கூடிய இன்சொல் முன்ன பற்றிக்கொள்ளுதலால் விருந்தோம்பலிலே சிறந்ததென்பது சொல்லப் ட.]

முகத்தான்' இதன் ஈற்று ஆன் உருபு கருவிப்பொருளில்வந்த மூன் -ருபு. 'சொல்லினதே' இதன் ஈற்று ஏகாரம் தேற்றப்பொருளது. (3)

ன்புடூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
ன்புடூஉ மின்சொ லவர்க்கு.

பரி-உரை) யார்மாட்டும் இன்பு உறூஉம் இன்சொலவர்க்கு-எல்லார் ம் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லையுடையார்க்கு, துன்பு ம் துவ்வாமை யில்லாகும் - துன்பத்தை மிகுவிக்கும் கல்குரவு இல்லை ாகும்.

காமுதலியபொறிகள் சுவைமுதலிய புலன்களோ நுகராமைபுடைய பின், தவ்வாமை யென்றார்.—யார்மாட்டு மின்புறூஉ மின்சொலவர்க்கு பகையும் சொதமலுமின்றி உள்ளத கள்பேயாம். ஆகவே, அவர் எல்லா செல்வமு மெய்தல சென்பத கருத்தி.

(ப-ரை) யார்மாட்டும்-எல்லாரிடத்தும், இன்புறூஉம்-இன்பத்தை மி விக்கும், இன்சொலவர்க்கு-இனிய சொற்களை புடையவர்க்கு, தன்புறூஉம் றன்பத்தை மிகுவிக்கும், தவ்வாமை-வறுமையான த, இல்லாகும்-இல்லை எ-று.

(க-ரை) இன்சொற்களைபுடையவர்க்குத் தன்பமில்லை என்பதாம்.

(வி-ரை) அப்படிப்பட்ட இன்சொல்லை புடையவர்க்கு யாவரும் கட்பி ராதலால் எல்லாச் செல்வமும் பெறுவரென்பத கருத்தி.

'தன்புறூஉம்' என்றதும் 'இன்புறூஉம்' என்றதும் இன்னிசை அ பெடைகள். 'தவ்வாமை' இத அறுபவிக்கவேண்டிய இன்பத்தை அறு விக்கப்பெறுமையாகிய வறுமையைக் குறித்தத.

பணிவுடைய னின்சொல னுத லொருவற்/
கணியல்ல மற்றப் பிற:

(பரி-உரை) ஒருவற்கு அணி பணிவு உடையன் இன்சொலனுதல்-ஒ வறுக்கணியாவத தன்னைற் றுழப்படுவார்கட் டாழ்ச்சியுடையனாய் எல்ல கண்ணும் இனிய சொல்லைபு முடையனுதல், பிற அல்ல-இவை யிரண் மன்றி மெய்க்கணியும் பிறவணிகள் அணியாகா எ-று.

இன்சொலனுதற் கினமாகலின், பணிவுடைமையும் உடன் கூறி மற்ற-அசைநிலை. வேற்றுமையுடைமையாற் பிறவெனவும், இவைபோ பேரழகு செய்யாமையின் அல்லவெனவுங் கூறினர். இவை யிரண்டோட்ட லும் இனியவை கூறுவார்க்கு இம்மைப்பயன் கூறப்பட்டது.

(ப-ரை) ஒருவற்கு-ஒருவனுக்கு, அணி-ஆபரணமாவது, பணிவுடை (பெரியோரிட்த்தே) வணக்கமுடையவனாகி, இன்சொலனுதல்-(எல்லாரிட தம்) இனிய சொல்லை புடையவனா யிருக்கையாம், பிற-இவ்விரண்டுமல் மல், உடம்பில் அணியு மற்றை யாபரணங்கள், அல்ல - ஆபரணங்களா வாம் எ-று.

(க-ரை) ஒருவனுக்கு இன்சொல்லே ஆபரணமாம் என்பதாம்.

(வி-ரை) வணக்கமும் இன்சொல்லுக்கு இனமாதலால் உடன்கூறி மற்ற-அசை. தன்னின் வேறு யிருக்கையால் அணியும் ஆபரணங்களோப் வென்றும் இவைபோல் பேரழகு செய்யாமையால் அல்லவென்றும் சொ வினர். [இவை இரண்டோட்டாலும் இன்சொல்லுகளோச் சொல்வார்களு இம்மைப்பயன் சொல்லப்பட்டன.]

'அவி' ஓர அணியப்படுவது என்னுங் காரணம்பற்றி வந்த காரணப் பயர். 'பிற' என்றது அணியப்படும் பொன் ஆபரணங்களையும் கல்லாபர ங்களையும் குறித்தது.

(5)

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

(பரி-உரை) கல்லவை காடி இனிய சொலின்-பொருளாற் பிறர்க்கு மை பயக்குஞ் சொற்களை மனத்தா லாராய்ந்து இனியவாக ஒருவன் ால்லுமாயின், அல்லவை தேய அறம் பெருகும்-அவனுக்குப் பாவங்களேய ும் வளரும் எ-று.

தேய்தல் தன் பகையாகிய அறம் வளர்தலிற் றனக்கு கிலையின்றி மெலி . "தவத்தின்மு னில்லாதாம் பாவம்" *என்பதூஉம், இப்பொருட்டு. கல் வ காடிச் சொல்லுங்காலுங் கடியவாகச் சொல்லின் அறனுகா தென்ப ம். இதனுன் மறுமைப்பயன் கூறப்பட்டது.

(ப-ரை) கல்லவை - (பொருளினுலே பிறர்க்கு) கன்மையைத்தருஞ் ற்களை, காடி - (மனத்தால்) ஆராய்ந்து, இனிய - இனிமைபுள்ளனவாக, ாலின்-(ஒருவன்) சொல்லுவானுயின், (அவனுக்கு) அல்லவை-பாவங்கள், ய-தேய, அறம்-தருமமானது, பெருகும்-வளரும் எ-று.

(க-ரை) ஒருவன் இன்சொற் சொல்லுவானுகில் பாவந்தேயப் புண்ணி வளரும் என்பதாம்.

(வி-ரை) தேய்தலாவது-பாவம் தன் பகையாகிய அறம் வளர்தலால் க்கு இடமில்லாமல் குறைதல், கல்லசொற்களை ஒருவன் காடிச்சொல்லு ந்தம் கடினமாகச்சொல்லின் அறமாகா தென்பதாம். [இதனுல் மறு ப்பயன் சொல்லப்பட்டது.]

'அல்லவை' இது அறம் அல்லதாகிய மறத்தைக்குறித்தது, அல்லவை- ம். 'தேய' என்றது குறைவுபடுதலை. 'கல்லவை' என்றது இம்மை மறு கு கன்மை பயப்பனவற்றை. 'இனிய' என்றது செவிக்கும் மனதுக்கும் யவற்றை.

(6)

யனின்று நன்றி பயக்கும் பயனின்று
ண்பிற் றலைப்பிரியாச் சொல்.

(பரி-உரை) கயன் ஈன்று நன்றி பயக்கும்-ஒருவனுக்கு இம்மைக்கு நீதி முண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும், பயன் ஈன்று பண்பின் பிரியாச் சொல் - பொருளாற் பிறர்க்கு கன்மையைக் கொடுத்து இனி பண்பினீங்காத சொல் எ-று.

பி-உலகத்தோடு பொருந்துதல். பண்பென்பது ஈண்டதிகாரத்தான் மமே னின்றது. தலைப்பிரிதல் ஒருசொன்னீர்மைத்து.

---

* காலடியார் நூறவு-1.

(ப-ரை) பயனின்ற-(பொருளினுலே பிறர்க்கு) நன்மையைக்கொடுத்த பண்பின் - (இனிமைக்) குணத்தினின்றும், தலைப்பிரியா - நீங்காத, சொல் சொற்களானவை, (ஒருவனுக்கு) நயனின்ற - (இம்மைக்கு) நீதியையுமுண் டாக்கி, நன்றி பயக்கும்-(மறுமைக்கு) அறத்தையும் தரும் எ-று.

(க-ரை) இனிய சொற்களான்வை நீதியையும் தருமத்தையும் தரு என்பதாம்.

(வி-ரை) நீதி-உலகத்தோடு பொருந்துதல்.

'நயம்', 'பயம்' இவை கடைப்போலிகள். 'நயன்' என்றது இம்மை மு மைக்கு ஏதுவாகிய நன்மை தருவனவற்றை. 'தலைப்பிரியாத' என்றது காத என்னும் பொருளது.

சிறுமையு ணீக்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

(பரி-உரை) சிறுமையுள் நீக்கிய இன்சொல்-பொருளாற் பிறர் நோய் செய்யாத இனியசொல், மறுமையும் இம்மையும் இன்பம் தரும்-ஒரு வனுக்கு இருமையினும் இன்பத்தைப் பயக்கும் எ-று.

மறுமையின்பம் பெரிதாகலின், முற்கூறப்பட்டது. இம்மையின்பமாவது உலகம் தன்வயத்ததாகலான் நல்லனவெய்தி இன்புறுதல். இவை யிரண் பாட்டானும் இருமைப்பயனும் ஒருங்கெய்துதல் வலியுறுத்தப்பட்டது.

(ப-ரை) சிறுமையுணீக்கிய-(பொருளினுலே பிறர்க்கு) வருத்தஞ் செ யாத, இன்சொல்-இனிய சொற்களானவை, (ஒருவனுக்கு) மறுமையுமிம்மை யும் - வருபிறப்பினு மிப்பிறப்பினும், இன்பம் - இன்பத்தை, தரும் - கொ கும் எ-று.

(க-ரை) இன்சொற்களானவை இருபிறப்பினு மின்பத்தைத்தரும் எ பதாம்.

(வி-ரை) மறுமையின்பம் பெரிதாகலின் முன்சொல்லப்பட்டது. இம்மை இன்பமாவது, உலகம் தனக்கு வசப்படுதலால் நற்பொருள்களை அடைந் இன்புறுதல். [இவை யிரண்டு பாட்டானும் இருமைப்பயன்களும் ஒருங் அடைதல் உறுதி செய்யப்பட்டது.]

'சிறுமை' என்றது பிறர்க்குத் தீன்புறுத்தலாகிய குற்றத்தை.

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

(பரி-உரை) இன்சொல் இனிது ஈன்றல் காண்பான்-பிறர் கூறும் இ சொற் றனக் கின்பம் பயத்தலை அனுபவித் தறிகின்றவன், வன்சொல் வ குவது எவன்கொல்-அது நிற்கப் பிறர்மாட்டு வன்சொல்லைச் சொல்லு என்னபயன் கருதி_எ-று,

இனிதென்றது வினைக்குறிப்புப்பெயர். கடுஞ்சொற் பிறர்க்கு மின்னாதா கலின், அது கூறலாகாதென்பது கருத்து.

(ப-ரை) இன்சொல்-(பிறருடைய) இனிய சொற்களானவை, இனிதீன்றல்-(தனக்கு) இன்பந்தருதலை, காண்பான்-அநுபவித்தறிபவன், (அதுநிற்க) வன்சொல்-கடுஞ்சொற்களை, வழங்குவது-(பிறரிடத்தே) சொல்வது, எவன்-என்னபயனைக்குறித்து எ-று.

(க-ரை) இன்சொலின்பந் தருதலைக்காண்பவன் வன்சொற் சொல்லுவதென்ன என்பதாம்.

(வி-ரை) கடுஞ்சொல் பிறருக்கும் இனிதன்றாகையால், அது சொல்லலாகாதென்பது கருத்து.

'காண்பான்' இதில் 'பான்' விகுதி. 'கொல்' 'ஓ' அசைகள். 'வன்சொல்' என்றது கடுமொழியை. (9)

இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(பரி-உரை) இனிய உளவாக இன்னாத கூறல்-அறம் பயக்கும், இனிய சொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம் பயக்கும் இன்னாதசொற்களை ஒருவன் கூறுதல், கனி இருப்பக் காய் கவர்ந்தற்று-இனிய கனிகளும் தன்கைக்கணுளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை கவர்ந்ததனோ டொக்கும் எ-று.

கூறலென்பதனாற் சொற்களென்பது பெற்றாம். பொருளை விசேடித்து ன்ற பண்புகள் உம்மைக்கண்ணுஞ்சென்றன. இனிய கனிகளென்றது ளவையுண்ட நெல்லிக்கனி * போல அமிழ்தாவனவற்றை. இன்னாதகாய்களென்றது காஞ்சிரங்காய்போல நஞ்சாவனவற்றை. கடுஞ்சொற் சொல்லுதல் டிவிற்றனக்கே யின்னாதென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் இன்னாத கூறலின் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) இனிய-(அறமுண்டாகும்) இன்சொற்களும், உளவாக-(தன்னிடத்தே) யுண்டாயிருக்க (அவற்றைச் சொல்லாமல்,) இன்னாத-(பாவமுண்டாகும்) கடுஞ்சொற்களை, கூறல்-(ஒருவன்) சொல்லுதல், கனி-(இனிய) கனிகளும், இருப்ப-(தன்னிடத்தே) யுண்டாயிருக்க, (அவற்றைத்தின்னாமல்) காய்-(கனிமையில்லாத) காய்களை, கவர்ந்தற்று-தின்பதனோடொக்கும் எ-று.

---

* ஔவை அதிகமா னெடுமானஞ்சிபால் அமிழ்தான நெல்லிக்கனி ன்று பெற்றதனை, "தொன்னிலைப்-பெருமலை விடரகத் தருமிசைக் ண்ட, சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா, தாத னின்னகத் தடக்கிச், ளீங்க வெமக்கீத்தனையே!" என இவரே பாடிய புறநானூறு 91-ஆம் ப்புளானும், "மால்வரைக்-கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி, யமிழ்துவிளை னி யௌவைக் கீந்த, வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவே, லரவக் ருனையதிகனும்." என்னும் சிறுபாணாற்றுப்படை 99-103-ஆம் அடிக ும் உணர்க.

(க-ரை) இன்சொலிருக்க வன்சொற்சொல்லுதல் கனியிருக்கக் காயைத் தின்றாற்போலும் என்பதாம்.

(வி-ரை) உபமேயத்தக்குச் சொல்லப்பட்ட இனிமையும், இன்னாமையும் உபமானத்தக்கும் கொள்ளப்பட்டன. இனியகனிகள் ஒளவையுண்ட செல்லிக்கனிபோல் அமிர்தானவை. இன்னாத காய்கள் எட்டிக்காய்போல் கஞ்சானவை. கடுஞ்சொற் சொல்லுதல் முடிவிலே தனக்கே இனிதாகாதென்பதாம். [இவை இரண்டுபோட்டாலும் கடுஞ்சொற் சொல்லுதலின் குற்றம் சொல்லப்பட்டதை.]

'இனிய' என்றது இனிய சொற்களை. 'இன்னா' என்றது இனிமையல்லாத சொற்களை. 'கனி' இது கனிவு உடையது என்னுங் காரணம்பற்றி வந்த பெயர். 'கனி' என்றது அமிழ்தொத்தகனிகளை. 'காய்'. இது காய்ப்பது என்னுங் காரணம்பற்றிவந்த பெயர். ஈண்டு 'காய்' என்றது காஞ்சொக்காய் போன்ற விஷக்காய்களை. (10)

10-ம் அதி-இனியவைகூறல்-முற்றிற்று.

11-ம் அதிகாரம்-செய்ந்நன்றியறிதல்

(பரி-உரை) அஃதாவது: தனக்குப் பிறர் செய்த கன்மையை மறவாமை, இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்தியில் குற்றம் செய்ந்நன்றி கோறலே யாகலின், அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டு, இஃது இனியவை கூறலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தனக்குப் பிறர்செய்தநன்றியை மறவாமை, இனிய சொற்களைச்சொல்லி இல்லறத்தின் வழுவாதவர்க்கு கன்றிமறத்தல் தீராக் குற்றமாதலின் இதனை நீக்குதற்பொருட்டு அதன்பின் வைக்கப்பட்டது.

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும் வானகமும் மாற்ற லரிது.

(பரி-உரை) செய்யாமல் செய்த உதவிக்கு-தனக்கு முன்னேருதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த வுதவிக்கு, வையகமும் வானமும் ஆற்றல் அரிது-மண்ணுலகும் விண்ணுலகுங் கைம்மாறாகக் கொடுத்தலும் ஒத்தலரிது எ-று.

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையவாகலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்றுவாயின. செய்யாமைச் செய்தவுதவியென்ற பாடமோதி, மறித்து உதவமாட்டாமை புன்னவிடத்துச் செய்தவுதவியென் றுரைப்பாருமுளர்.

(ப-ரை) செய்யாமல் - (தனக்கு முன்னேருதவியும்) செய்யாதிருக்க, செய்த-(ஒருவன் பிறனுக்குச்) செய்த, உதவிக்கு-உதவிக்கு, வையகமும்-மண்ணுலகத்தையும், வானகமும்-விண்ணுலகத்தையும், மாற்றல்-ஈடாகக்கொடுத்தலும், (ஒத்தல்) அரிது-அருமை எ-று.

(க-ரை) ஒருவன் பிறருதவி வேண்டாத செய்த வுதவிக்கு மண்ணுல கத்தையும் விண்ணுலகத்தையுந் தந்தாலு மொத்தலரிதை என்பதாம்.

(வி-ரை) பிரதி யுபகாரங்களுக்கெல்லாம் காரணமிருக்கையால் காரண மில்லாத இவ்வுபகாரத்திற்கு அவை போதாவாயின.

'ஞாலம்' என்றது எதிர்மறை காட்டிற்று. 'வையகமும் வானகமும்' இதன் கண்நின்ற உம்மைகள் எண் உம்மைகள். 'ஆற்றல்' என்றது ஒப்பாகத் தரு தலைக் குறித்தது. 'ஆற்றல்' என்றதனை 'மாற்றல்' எனக்கொண்டு உரைசெய் தார் பின்னையர். அரிது என்றவிடத்து ஒப்பாதல் அரிது என 'ஒப்பு' என்ற ஒருசொல் வருவித்து உரைக்கப்பெற்றது. (1)

காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

(பரி-உரை) காலத்தினுல் செய்த நன்றி-ஒருவனுக்கு இறந்திவர்த வெல் லக்கண் ஒருவன் செய்த வுபகாரம், சிறிது எனினும் ஞாலத்தின் மாணப் பெரிது-தன்னை நோக்கச் சிறிதா யிருந்ததாயினும் அக்காலத்தை நோக்க மவ்வுலகத்தினும் மிகப் பெரிது எ-று.

அக்கால நோக்குவதல்லது பொருணோக்கலாகா தென்பதாம். காலத் தினென்பது வேற்றுமை மயக்கம்.

(ப-ரை) காலத்தினுல் - (ஒருவனுக்கு) முடிவு வந்த வளவிலே, செய்த வொருவன்) செய்த, நன்றி-உபகாரமானது, சிறிதெனினும்-(தன்னை நோக்கச்) சிறிதாயிருந்ததாயினும், (அக்காலத்தை நோக்க) ஞாலத்தின் - நிலவுலகத்தி னும், மாணப்பெரிது-மிகப் பெரிதாயிருக்கும் எ-று.

(க-ரை) ஒருவன் காலத்திற் செய்த வுதவி சிறிதாயினும் அது உலகினும் பரிது என்பதாம்.

(வி-ரை) அக்காலத்தை நோக்கவேண்டுமேயல்லாமல் பொருட்சிறுமை நோக்கலாகாதென்பதாம். காலத்தினுலென்பது வேற்றுமை மயக்கம்.

'காலத்தினுல்' இது 'காலத்தில்' என்னும் பொருளது. 'காலம்' என்றது தற்காலம், இறந்தகாலங்களை. 'நன்றி' என்றது நற்செயலை. ஞாலம்- ல். கண்ட பொருள்களுள் பூமியினும் பெரியதொன் றில்லையாதலின் ஞாலத்தின் மாணப் பெரிது" என்றார். "பெரிது பெரிது புவனம் பெரிது" என்றார் ஔவைப்பிராட்டியாரும். 'ஞாலத்தின்' என்றதன் 'இன்' உருபு ஏழாம்பொருளில் வந்தது.-மாண-மிகவும், இதற்கு 'மாண்' பகுதி. (2)

பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
நன்மை கடலிற் பெரிது.

(பரி-உரை) பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் - இவர்க்கு செய்தால் நன்னை பயக்குமென்று ஆராய்தலிலாய்ச் செய்த வுதவி

யாகிய சாமுடைமையை ஆராயின், நன்மை கடலிற் பெரிது-அதனன்மை கடலிலும் பெரிதாம் எ-று.

இவை மூன்று பாட்டாலும் முறையே காரணமின்றிச் செய்ததூஉம், காலத்தினாற் செய்ததூஉம், பயன்றூக்காராய்ச் செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டன.

(ப-பா) பயன் - (தாம் செய்யும் உதவியைப் பெறுவோராலே தமக்குப் பின்வரும்) பயனை, தூக்கார்-ஆராய்தலிலராய், செய்த-செய்த, உதவி-உதவியாகிய, நயன்-நயத்தை, தூக்கின்-ஆராயின், நன்மை-அதனன்மையானது, கடலின்-கடலிலும், பெரிது-பெரிது எ-று.

(த-பா) பின் வரும் பலனை யெண்ணாது செய்த வுதவியி னன்மை கடலிலும் பெரிது என்பதாம்.

(வி-பா) [இவை மூன்று பாட்டாலும் முறையே செய்யாமற் செய்ததும் உபத்திரவமையிற் செய்ததும், பிரயோசனத்தை ஆராயாமற் செய்ததும் அளவில்லாதனவையாகுதல் சொல்லப்பட்டது.]

'பயன்' என்றது கைம்மாறை. 'தூக்கார்' என்றது ஆராய்ந்து எதிர் நோக்காது என்பதாம். 'நயன்' என்றது தண் அளியை; இது இலக்கணப் போலி. 'கடலில்' இதில் 'இல்' உருபு எல்லைப்பொருளது. கடலெக்காட்டிலும் என்பதாம். அளவிடப்படா ஆழமும், பரப்பும், பொருளும் உடைமையின் கடல் பெரிதாயிற்று. (3)

நினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

(பரி-உரை) நினைத்துணை நன்றி செயினும்-தமக்குத் தினையளவிற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும், பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார் - அதனை அவ்வளவிற்றாகக் கருதாது பனையளவிற்றாகக் கருதுவர் அக்கருத்தின் பயன் தெரிவார் எ-று.

தினை பனை யென்பன சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சிலவளவை அக்கருத்தின் பயனாவது அற்பனைக் கருதுவார்க்கு வரும் பயன்.

(ப-பா) நினைத்துணை நன்றி-(தமக்குத்) தினையளவதாகிய உபகாரத்தை, செயினும்-(ஒருவன்) செய்தானாயினும், (அதனை அவ்வளவதாக நினையாமல்) பனைத்துணையா-பனையளவதாக, கொள்வர்-நினைப்பார், பயன்-(அந்நினைப்பின்) பயனை, தெரிவார்-அறிபவர் எ-று.

(த-பா) தினையளவு நன்று செய்தாலும் பனையளவு நன்றியாகக் கொள்வர் பெரியோர் என்பதாம்.

(வி-பா) தினை பனை யென்பன-சிறுமை பெருமைகளுக்குக் காட்டும் அளவைகள், அந்நினைப்பின் பயனாவது எப்படி நினைப்போர்க்கு வரும் பிரயோசனம்.

'நினை' என்பது சிறிய அளவு காட்டவந்தது. இதனை "நுனையளவு போதாச் சிறுபுன்னீர்" என்ற பிறர்வாக்காலும் அறியலாம். 'பனை' இது பெருமை காட்டவந்தது. இதனை "பனையளவு காட்டும் படித்தால்" என்றது கொண்டறிக. 'பயன்' என்றது நன்றியா லெய்தும் பயனை. (4)

உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

(பரி-உரை) உதவி உதவி வரைத்த அன்று - கைம்மாறான வுதவி காரணத்தாலும் பொருளாலுங் காலத்தாலுமாகிய மூவகையாலும் முன் செய்த உதவி யளவிற்றன்று; உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து - அதனைச் செய்வித்தக் கொண்டவர்தம் அமைதி யளவிற்று எ-று.

சால்பு எவ்வளவு பெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாமென்பார், சால்பின் வரைத்தென்றார். இவை யிரண்டுபாட்டாலும் மூன்று மல்லாத வுதவி மாத்திரமும் அறிவார்க்குச் செய்த வழிப் பெரிதாமென்பது கூறப்பட்டது.

(ப-ரை) உதவி - (எதிர்செய்யும்) உதவியானது, உதவிவரைத்தன்று - காரணமும், பொருளும், காலமுமாகிய மூவகையாலு முன்செய்த) உதவியளவினதன்று, உதவி செயப்பட்டார் - அவ்வுதவிசெயப் பெற்றுக்கொண்டவரது, சால்பின்வரைத்து-தகுதியளவினதாம் எ-று.

(க-ரை) உதவிக்களவில்லை உதவிசெய்யப் பெற்றுக்கொண்டவர் தகுதியளவே யளவாம் என்பதாம்.

(வி-ரை) சால்பு எவ்வளவு பெரிதாயுள்ளது உதவியும் அவ்வளவு பெரிதாமென்றற்குச் சால்பின்வரைத்தென்றார். [இவை யிரண்டு பாட்டாலும் செய்யாமற் செய்வது முதலான மூன்றுமல்லாத உதவியும், அறிவோர்க்குச் செய்தவிடத்துப் பெரிதாமென்பது சொல்லப்பட்டது.]

'உதவி' என்றது நன்றியை. 'வரை' என்றது ஈண்டு அளவைக்குறித்தது. 'சால்பு' என்றது மன அமைதியை. (5)

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

(பரி-உரை) துன்பத்தின் துப்பு ஆயார் நட்புத் துறவற்க - துன்பக்காலத்துத் தனக்குப் பற்றுக்கோடாயினாரது நட்பை விடாதொழிக; மாசு அற்றார் கேண்மை மறவற்க - அறிவொழுக்கங்களிற் குற்றமற்றாரது கேண்மையை மாதொழிக எ-று.

கேண்மை-கேளாந்தன்மை. இம்மைக்குறுதி கூறுவார் மறுமைக்குறுதி உடன் கூறினர்.

(ப-ரை) தன்பத்தன்-தக்ககாலத்தில், தப்பாயார்-(தனக்கு) உதவியா னவரை, கட்பு-நிகேகத்தை, மறவற்க-விடாதிருக்கக் கடவன், மாசற்றார்-(அறிவொழுக்கங்களிற்) குற்றமற்றவரை, கேண்மை-உறவாந்தன்மையை, மறவற்க-மறவாதிருக்கக்கடவன் எ-று.

(க-ரை) குற்றமற்றவர் நிகேகத்தை மறவாதிருக்கக்கடவன், தன்ப காலத் துதவியானவர் நிகேகத்தை விடாதிருக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) [இம்மைக்கு உறதிசொல்லவந்தவர் மறுமைக்கும் உறதி உடன்சொல்லினர்.]

'கேண்மை' இது கேளாந்தன்மை; அதாவது கட்பு; இதற்கு 'கேள்' பகுதி. கேள்-உறவு. மறவற்க-நீக்காதே. 'தன்பத்தன்' இதில் 'உள்' இடப் பொருள் உருபு. 'தப்பு' என்றது பற்றக்கோடாயிருந்து செய்யும் உதவியை.

எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தக்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

(பரி-உரை) தக்கண் விழுமம் துடைத்தவர் கட்பு-தக்கணெய்திய தன் பத்தை நீக்கினவருடைய கட்பினை, எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்-எழுமை யினையுடைய தம் எழுவகைப் பிறப்பிலும் கினைப்பர் நல்லோர் எ-று.

எழுமையென்றது வினைப்பயன் றொடரும் எழு பிறப்பினை; அது வினை யாபதியுட்கண்டது. எழுவகைப்பிறப்பு மேலே புனைத்தாம். விரைவு தோன் றத் துடைத்தவ ரென்றார். நினைத்தலாவது தன்பந் துடைத்தலான் அவர் மாட்டினதாகிய அன்பு பிறப்புத்தோறுந் தொடர்ந்து அன்புடையராதல். இவை இரண்டு பாட்டாலும் நன்றி செய்தாரது கட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) தக்கண்-தம்மிடத்து உண்டாகிய, விழுமம்-தன்பத்தை, துடைத்தவர்-நீக்கினவரது, நட்பு-கட்பினை, எழுமை-(வினைப்பயன்றொடரு) மெழுமையினையுடைய, எழுபிறப்பும்-தம்மெழுவகைப் பிறப்பிலும், உள்ளுவர்-(நல்லோர்) நினைப்பார் எ-று.

(க-ரை) தன்பத்தை நீக்கினவர் நிகேகத்தை யெழுபிறப்பிலு நினைப்பர் பெரியோர் என்பதாம்.

(வி-ரை) விரைவுதோன்றத் துடைத்தவரென்றார். எழுமை எழுபிறப்பு மென்பதற்கு எழேழு தலைமுறையு மெனினுமாம். [இவை இரண்டுபாட்டி லும் நன்றிசெய்தவரது நட்பை விடலாகாதென்பது சொல்லப்பட்டது.]

உள்ளுவர்-நினைப்பர். இதற்கு 'உள்' பகுதி. விழுமம்-தன்பம், கெடு. 'துடைத்தவர்' என்றது முன்பு தன்பத்தை நீக்கியவரை உணர்த்திற்று. (7)

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

(பரி-உரை) நன்றி மறப்பது நன்று அன்று-ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று; நன்றல்லது அன்றே மறப்பதுநன்று-அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன் எ-று.

இரண்டும் ஒருவனாற் செய்யப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு.

(ப-ரை) நன்றி-(ஒருவன் முன்செய்த) நன்மையை. மறப்பது-மறந்துவிடுவது, நன்றன்று-(ஒருவனுக்கு) அறனல்ல, நன்றல்லது-(அவன்செய்த) தீமையை, அன்றே-செய்தபொழுதே, மறப்பது-மறந்துவிடுவது, நன்று-அறமாம் எ-று.

(க-ரை) பிறர்செய்த நன்றியை மறப்பது தருமமல்ல, தீமையை மறப்பது தருமம் என்பதாம்.

(வி-ரை) இதனால் நன்மையும் தீமையும் ஒருவனாலே செய்யப்பட்டவிடத்து அவ்விரண்டிலே மறப்பதும் மறவாததும் வகுத்துச் சொல்லியவாறு.

'அன்றே' என்றது தீமை செய்த அந்தக் கணத்திலேயே என்பதாம். இதன்கண் நின்ற ஏகாரம் தேற்றப்பொருளது. (8)

கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

(பரி-உரை) கொன்று அன்ன இன்னா செயினும் - தமக்கு முன்னொரு நன்மை செய்தவர் பின்கொன்றாலொத்த இன்னாதவற்றைச் செய்தாராயினும், அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும் - அவையெல்லாம் அவர் செய்த நன்மை யொன்றனையும் நினைக்க இல்லையாம் எ-று.

தினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப்படுதலின், அவ்வொன்றுமே அவற்றை யெல்லாங் கெடுக்கு மென்பதாம். இதனான் நன்றல்லது அன்றே மறக்குந்திறங் கூறப்பட்டது.

(ப-ரை) (தமக்கு முன்னொரு நன்மைசெய்தவர்) கொன்றன்ன-(பின்) கொன்றாற்போலும், இன்னா-வெறுக்கப்படுமவைகளை, செயினும்-செய்தாராயினும், அவர்செய்த-அவர்செய்த, ஒன்று நன்று-அந்நன்மை யொன்றையும், உள்ள-நினைக்க, கெடும்-(அவையெல்லாம்) இல்லையாம் எ-று.

(க-ரை) நன்மைசெய்தவர் கொன்றாற்போலுந் தீமை செய்யினு நன்மையொன்றை நினைக்கத் தீமையெல்லாங் கெடும் என்பதாம்.

(வி-ரை) தினையளவு பனையளவாகக் கொள்ளப்படுதலினாலே அவ்வொன்றுமே அவைகளையெல்லாம் கெடுக்குமென்பதாம். [இதனால் நன்றல்லது அன்றே மறக்கும்விதம் சொல்லப்பட்டது.]

'அன்ன' இது உவம உருபு. 'இன்னா' என்றது தீங்கை; இது இனிமையாதது என்னுங் காரணம்பற்றிவந்த பெயர். 'அவர்' என்றது இன்னாதாரை, (9)

நன்றி கொன்றூர்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(பரி-உரை) எந்நன்றி கொன்றூர்க்கும் உய்வு உண்டாம்-பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தினீக்கும் வாயிலுண்டாம்; செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை - ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃதில்லை எ-று.

பெரிய அறங்களைச் சிதைத்தலாவது சூன்முலை யறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்த புதலும் முதலிய பாதகங்களைச் செய்தல். * இதனைச் செய்ந்நன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது.

(ப-ரை) எந்நன்றி - எந்த வறங்களை, (பெரிய வறங்களை யென்றபடி) கொன்றூர்க்கும்-கெடுத்தவர்க்கும், உய்வு-பாவத்தி னீக்கும்வழி, உண்டாம்-உண்டாகும், செய்ந்நன்றி-(ஒருவன்) செய்த உபகாரத்தை, கொன்றமகற்கு-கெடுத்த மனிதனுக்கு, உய்வு - அப்பாவத்தினீக்கும்வழி, இல்லை - இல்லை எ-று.

(க-ரை) எவ்வகைத் தருமங்களை யழித்தவர்களுக்கு மீடேறும் வழியுண்டாம்; செய்ந்நன்றியைக் கெடுத்தவர்களுக் கீடேறும் வழியில்லை என்பதாம்.

(வி-ரை) பெரிய அறங்களைச் சிதைத்தலாவது, மகளிர் கருவை யழிக்கை முதலாகிய பாதகங்களைச் செய்தல். [இதனாலே செய்த நன்றியைக் கெடுத்தலின் கொடுமை சொல்லப்பட்டது.]

'எந்நன்றி' இதில் எகரம் வினாப்பொருளது. 'உய்வு' என்பது தப்பிப் பிழைத்தல். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனையும் அடைதற்கு உரியவன் மகன் ஆதலின் 'மகற்கு' என்றார். செய்ந்நன்றி கொல்லலாவது, செய்த நன்றியை மறத்தலும், அவர்க்கே தீங்கிழைத்தலுமாம். (10)

11-ம் அதி-செய்ந்நன்றியறிதல்-முற்றிற்று.

12-ம் அதிகாரம்-நடுவுநிலைமை

(பரி-உரை) அஃதாவது: பகை கொதுமல் நண்பென்னும் மூன்று பகுதியிலும் அறத்தின் வழுவாது ஒப்பதிற்கு நிலைமை. இது, நன்றிசெய்தார்மாட்டே அந்நன்றியினை நினைத்தவழிச் சிதையுமன்றே அவ்விடத்தில் சிதையலாதென்றற்கு, செய்ந்நன்றியறிதலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: பகைவர் அயலோர் நட்பினர் இம்மூவகையோரிடத்தும் அறத்தின் வழுவாமல் ஒப்பதிற்கு நிலைமை. இது நன்றிசெய்தவரிடத்த அந்நன்றியை நினைத்தவிடத்தே கெடுமன்றே அவ்விடத்தும் கெடலாகா தென்றதற்குச் செய்ந்நன்றி யறிதலின்பின் வைக்கப்பட்டது.

---

* புறநானூறு-34.

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

(பரி-உரை) தகுதி என ஒன்றே நன்று-கடவுணிலைமையென்று சொல்லப் படும் ஓரறமுமே நன்று, பகுதியான் பாற்பட்டு ஒழுகப்பெறின்-பகை சொதல் கண்பென்னும் பகுதிதோறும் தன் முறைமையை விடா தொழுகப் பெறின் எ-று.

தகுதியுடையதனைத் தகுதியென்றார். "ஊராளோர் தேவகுலம்" என்பது போலப் பகுதியா னென்புழி ஆறுருபு தோறுமென்பதன்பொருட்டாய் நின்றது. பெறினென்பது அவ்வொழுக்கத் தருமைதோன்ற நின்றது. இதனால் கடவுணிலைமையது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-உரை) தகுதியென வொன்றே-கடவு நிலைமையென்று சொல்லப்படும் ஓரறமுமே, நன்று-நன்றாகும், பகுதியால்-(பகைவர், அயலோர், கட்பினரென் றும்) பிரிவுதோறும், பாற்பட்டு - (தன்) முறைமையை விடாது, ஒழுகப்பெ றின்-கடக்கப்பெறின் எ-று.

(க-ரை) கடவு நிலைமையென்று சொல்லும் அறமே நல்லது என்ப தாம்.

(வி-ரை) ஏகாரம் ஒன்று என்பதனோடு கூட்டப்பட்டது. பெறினென் ற அவ்வொழுக்கத்தி னருமை தோன்ற நின்றது. [இதனால் கடவுணிலைமை ற சிறப்புச் சொல்லப்பட்டது.]

'தகுதி' என்றது கடவுணிலைமையை. இதற்குத் 'தகு' என்றது பகுதியாம். க்கது ஏற்றது என்னும் பொருட்டாய் ஈண்டு அதிகாரமுறையால் கடவு லைமையைக் குறித்தது. 'பகுதி' என்றது பிரிவை. (1)

செப்ப முடையவ னுக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

(பரி-உரை) செப்பம் உடையவன் ஆக்கம் - கடவுணிலைமையை புடையவ ற செல்வம், சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து-பிறர் செல் போல் அழிவின்றி அவன் வழியினுள்ளார்க்கும் வலியாதலையுடைத்த ற.

விகாரத்தாற் றொக்க எச்சவும்மையான் இறக்குந் தானும் அவன்றனக் ஏமாப்புடைத்தென்பதை பெற்றும். அறத்தோடு வருதலின், அன்னதா ற. தானிறந்தழி எஞ்சிநிற்பதாகலின், எச்சமென்றார்.

(ப-உரை) செப்பமுடையவன்-கடவுணிலைமையை புடையவனது, ஆக்கம்- ல்வமானது, சிதைவின்றி - (பிறர் செல்வம்போல்) அழிதலின்றி, எச்சத் றும்-அவன் சந்ததியார்க்கும், ஏமாப்பு-உறுதியாதலை, உடைத்து-உடைய ற் எ-று.

(க-ரை) கடவுணிலைமையுடையவன் செல்வமானது அவன் சந்ததிக்குறுதி புடைத்த என்பதாம்.

(வி-ரை) விகாரத்தினுலே தொக்குநின்ற வருவிக்கப்பட்ட வெச்ச வும்மையால் சாமனவும் அவனுக்கும் உறுதியாதல் பெறப்படும்; அறத்தோ வருதலால் அப்படிப்பட்டதாயிற்று.

'செப்பம்' இது செம்மை என்னும் பொருளது. ஈண்டு கடுவுணிலைமையை உணர்த்திற்று. இது செம்மை என்ற பண்பினடியாகப் பிறந்தது. 'ஆக்கம்' என்றது செல்வத்தை; இது இன்பத்தை ஆக்குவது என்னுங் காரணம்பற்றி வந்தபெயர். 'எச்சம்' என்றது ஈண்டு சந்ததியை உணர்த்திற்று. இது 'எஞ்' என்னும் பகுதியினடியாகப் பிறந்தது. எஞ்சி நிற்பது எச்சம். தனக்குப்பிற் எஞ்சி நின்ற குடியைத் தாக்கலின் சந்ததியை எச்சம் என்றார். (2)

நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை யன்றே யொழிய விடல்.

(பதி-உரை) நன்றே தரினும் - தீங்கன்றி நன்மையே பயந்ததாயினும், கடுவு இகந்த ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல்-கடுவு நிற்றலை யொழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே யொழியவிடுக எ-று.

நன்மை பயவாமையின், நன்றே தரினு மென்றார். இகந்தெனத் திரித்துநின்றது. இவை பிரண்டுபாட்டானும் முறையே கடுவுணிலைமையான் வந்த செல்வம் நன்மை பயத்தலும், எனைச்செல்வம் நீமை பயத்தலுங் கூறப்பட்டன.

(ப-ரை) நன்றே தரினும்-(தீங்கன்றி) நன்மையே தரினும், கடுவிகந்த கடுவுநிலை நீங்கலால், ஆம்-உண்டாகின்ற, ஆக்கத்தை-செல்வத்தை, அன்றே அப்போதே, ஒழிய-நீங்க, விடல்-விடக்கடவன் எ-று.

(க-ரை) கடுவுணிலைமை யில்லாதவருஞ் செல்வம் நன்மையைத்தரினு மப் பொழுதே விடக்கடவன் என்பதாம்.

(வி-ரை) நன்மை தாராமையால் நன்றேதரினு மென்றார். [இவை இரண்டுபாட்டானும் முறையே கடுவுணிலைமையால் வந்த செல்வம் நன்மையைத்தருதலும், மற்றைச்செல்வம் நீமையைத் தருதலும் சொல்லப்பட்டன.]

'நன்றே' இதில் ஏகாரம் பிரிநிலைப்பொருளில் வந்தது. 'தரினும்' இதன் கண்நின்ற உம்மை எதிர்மறைப்பொருளில் வந்தது. 'அன்றே' என்றதன் கண்நின்ற ஏகாரம் தேற்றப்பொருளது, ஈண்டு விரைவுப்பொருளுந் தந்தது காண்க.

தக்கார் தகவில ரென்ப தவரவ ரெச்சத்தாற் காணப் படும்.

(பரி-உரை) தக்கார் தகவிலர் என்பது - இவர் நடுவுநிலைமை புடையர் இவர் நடுவுநிலைமை யிலரென்னும் விசேடம், அவரவர் எச்சத்தால் காணப் படும் - அவரவருடைய கன்மக்கனது உண்மையாலும் இன்மையாலும் அறி பப்படும் எ-று.

தக்கார்க் கெச்சமுண்டாதலும் தகவிலார்க் கில்லையாதலும் ஒருதலையாக லின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின. இதனால் தக்காரை ரும் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது.

(ப-ரை) தக்கார்-(இவர்) நடுவு நிலைமையையுடையவர், தகவிலர்-(இவர்) டுவு நிலைமையை யில்லாதவர், என்பது-என்னும் விசேஷம், அவரவர்-அவ வருடைய, எச்சத்தால்-கல்லபுதல்வரது இருப்பினாலும் இல்லாமையாலும், ாணப்படும்-அறியப்படும் எ-று.

(க-ரை) நடுவுநிலைமை புடையவர் நடுவுநிலைமை யில்லாதவர், என்பதைச் ந்ததியாற் காணலாம் என்பதாம்.

(வி-ரை) நடுவுநிலைமையை யுடையவருக்குச் சந்ததி உண்டாதலும் ல்லாதவர்க்கு அது இல்லாமற்போதலும் நிச்சயமாதலின், அவ்விருவகை பார்களையும் அறிதற்கு அவை அடையாளங்களாயின. [இதனால் நடுவு, லையோரையும், அல்லாதோரையும், அறியுமாறு சொல்லப்பட்டது.]

'தக்கார்' என்றது நடுவு நிலைமை புடையவர்களை. இது தகுதியுடையர் லின் என்க. (4)

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க் கணி.

(பரி-உரை) கேடும் பெருக்கமும் இல் அல்ல-தீவினையாற் கேடும், நல் னையாற் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்த இடந்தன; நெஞ்சத் க் கோடாமை சான்றோர்க்கு அணி - அவ்வாற்றையறிந்து அவை காரண ம் மனத்தின்கட் கோடாமையே அறிவானமைந்தார்க்கு அழகாவது எ-று.

அவை காரணமாகக் கோடுதலாவது அவை இப்பொழுது வருவன க் கருதிக் கேடு வாராமையைக்குறித்தும் பெருக்கம் வருதலைக்குறித்தும் தலைக்கணிற்றல். அவற்றிற்குக் காரணம் பழவினையே, கோடுதலன்று உண்மை புணர்ந்து நடுவுநிற்றல் சால்பினை யழகுசெய்தலின், சான் ர்க்கணி யென்றார்.

(ப-ரை) கேடும் - (தீவினையினாலே) கேடும், பெருக்கமும் - (நல்வினையி ல்) பெருக்கமும், இல்லல்ல-(யாவருக்கும்) இல்லாதவையல்ல, (முன் ன அமைந்தவிடந்தன வென்றபடி. அவ்வழியை அறிந்து) நெஞ்சத்தி லே, கோடாமை-(அவை காரணமாகச்) சாய்தலில்லாமையே, சான் ர்க்கு-(அறிவால்) நிறைந்தோர்க்கு, அணி-அழகாம் எ-று.

(க-ரை) பெரியோர்க்கு நடுவுநிலைமையே யழகாம் என்பதாம்.

(வி-ரை) அவை காரணமாகச் சாய்தலாவது கேடும் பெருக்கமும் பழவினையினாலே வந்துகொண்டிருக்க, இப்போதை முயற்சியால் வருமவையாக நினைத்துக் கேடுவராமையைக் குறித்தும், பெருக்கம் வருதலைக்குறித்தும் ஒருபக்கத்திலே சாய்தலாம். அவற்றுக்குக் காரணம் பழவினையே, இச்சாய்தலல்ல என உண்மை யுணர்ந்து நடுவுநிலையராயிருக்கை அறிவுடைமைக்கு அழகுசெய்தலாலே சான்றோர்க்கணி யென்றார்.

'கேடு' என்றது அழிவை. 'பெருக்கம்' என்றது வாழ்வை. 'கோடாமை' என்றது நடுவு நிலைமையினின்றும் பிறழாமையை; இதற்கு 'கோடு' பகுதி; (கோடு-கோணு) 'சான்றோர்' என்றது அறிவு மிகுந்தமைந்த பெரியோரை.

கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

(பரி-உரை) தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின்-ஒருவன் தன் னெஞ்சம் நடுவுநிற்றலையொழிந்து நடுவல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின், யான் கெடுவல் என்பது அறிக-அந்நினைவை யான் கெடக்கடவே னென்றுணரும் உற்பாதமாக அறிக எ-று.

நினைத்தலும் செய்தலோ டொக்குமாகலின் செயினென்றார்.

(ப-ரை) (ஒருவன்) தன்னெஞ்சம் - தனதுமனம், நடுவு-நடுவுநிலைமையிலிருந்து, ஒரீஇ-நீங்கி, அல்ல - பட்சபாதங்களை, செயின் - செய்ய நினைக்குமாயின், (அந்நினைவை) யான்-நான், கெடுவல்-கெடக்கடவேன், என்பது என்றுணரு முற்பாதமாக, அறிக-அறியக்கடவன் எ-று.

(க-ரை) தன் மனம் நடுவுநிலைமை நீங்கின் கெடுவனென் றறியக்கடவன் என்பதாம்.

(வி-ரை) உற்பாதம்-பின்வரும் நன்மை தீமைகளை முன்னறிவிக்குங் குறி. நினைத்தலும் செய்தலோ டொக்குமாதலின் செயினென்றார்.

'நெஞ்சம்' இதில் 'அம்' விகுதி. கருவிப்பொருள் தந்து நின்றது. 'நடுவொரீஇ' இதன்கண் வந்த அளபெடை சொல்லிசையளபெடை. (6)

கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

(பரி-உரை) நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு - நடுவாகநின்ற அறத்தின்கண்ணே தங்கினவனது வறுமையை, கெடுவாக வையாது உலகம் வறுமையென்று கருதார் உயர்ந்தோர் எ-று.

கெடுவென்பது முதனிலைத் தொழிற்பெயர். செல்வமென்று கொள்ளுவரென்பது குறிப்பெச்சம். இவை மூன்று பாட்டானும், முறையே கேடும் பெருக்கமும் கோடுதலான் வாராவென்பதூஉம், கோடுதல் கேட்டிற் கேதுவாமென்பதூஉம், கோடாதவன் றாழ்வு கேடன்றென்பதூஉம் கூறப்பட்டன

(ப-ம) உலகம்-உயர்ந்தோர், நடுவாக-நடுவாக (நின்று), நன்றிக்கண்-நிறத்தின்கண்ணே, தக்கியான்-தக்கினவனது, தாழ்வு-வறுமையை, கெடாக-வறுமையாக, வையாது-வையார் (நினையாரென்றபடி) எ-று.

(க-ம) நடுவுநிலைமையினின்றவன் வறுமையைப் பெரியோர் தாழ்வாக நினையார் என்பதாம்.

(வி-ம) கெடுதலென்பது விருதிகெட்டுவருதல். செல்வமென்று கொள்ளுவாரென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் முறையே கேடும் பெருக்கமும் அபாயத்தால் வருவனவல்லவென்பதும், இதனாலே கேடுண்டாமென்பதும், இது செய்யாதவனது தாழ்வு கேடாகாதென்பதும், சொல்லப்பட்டன.

'உலகம்' என்றது உயர்ந்தோரை. "உலகம் என்ப துயர்ந்தோர் மேட்டே" என்பது இலக்கணம். (7)

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபா
கோடாமை சான்றோர்க் கணி. [றற்

(பரி-உரை) சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்-முன்னே தான் சமன்றி நின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்குந் தலாம்போல, மைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி - இலக்கணங்களா மைந்து ஒருபக்கத்துக் கோடாமை சான்றோர்க்கு அழகாம் எ-று.

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், ருளடையாகிய அமைதலும் ஒருபாற்கோடாமையும் உவமைக்கண்ணும், டி, சான்றோர் சீர்தூக்கலாவது * தொடை விடைகளாற் கேட்டவற்றை ழான் உள்ளவாறுணர்தலாகவும், ஒருபாற் கோடாமையாவது அவ்வுள்ளறை மறைபாத பகை கொதுமல் நட்பென்னும் மூன்று நிறத்தார்க்கும் க் கூறுதலாகவும், உரைக்க. இலக்கணங்களானமைதல் இருவழியும் ன கொள்க.

(ப-ம) சமன்செய்து - (முன்னேதன்னைச்) சமனுகச்செய்து, சீர்தூக் (பின்னே தன்னிடத்து வைக்கப்பட்ட பாரத்தை) அளவுசெய்வதாகிய, போல் - தலாம்போல், அமைந்து - (இலக்கணங்களாலே) நிறைந்து, ால்-ஒருபக்கத்திலே, கோடாமை - சாயாமையானது, சான்றோர்க்கு-வால்) நிறைந்தோருக்கு, அணி-அழகாம் எ-று.

(க-ம) ஒருவர் பக்கமுஞ் சாயாமையே பெரியோர்க் கழகென்ப

(வி-ம) கோலுக்குச் சொல்லப்பட்ட சமன்செய்தலும், சீர்தூக்கலும், றோருக்கும், சான்றோருக்குச் சொல்லப்பட்ட, அமைதலும், ஒருபாற்

* தொடை-வினு. § ஊழ்-முறைமை. "தொடைவிடை யூழாத்தொடை - ன்னி"—வெண்பாமாலை, வாகைப்படலம், அவையழுல்லை, 19.

கோடாமையும், கோலுக்கும் கூட்டுக. சான்றோர் சிர்தூக்கலாவது - வாதி பிரதிவாதிகளாலே அறிவிக்கப்பட்டவற்றை முறையாலுள்ளபடியறிதல். ஒரு பாற்கோடாமையாவது-அவ்வுள்ளவற்றை மறைக்காமல் பகைவர், அயலோர், கட்பினர், இம்மூவகையோருக்கும் ஒப்பச்சொல்லுதல்.

'கோல்' என்றது தராசுக்கோலை. 'சிர்தூக்கல்' என்றது எற்றக் குறைவு கலை உணர்த்துதலாகி வரையறுத்தைக் காட்டுதலை. (8)

சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா வுட்கோட்ட மின்மை பெறின்.

(பரி-உரை) செப்பம் சொற்கோட்டம் இல்லது-நடுவுநிலைமையாவது சொல்லின்கட் கோடுத லில்லாததாம்; உட்கோட்டம் இன்மை ஒருதலையாப் பெறின்-அஃதன்னதாவது மனத்தின்கட் கோட்ட மின்மையைத் தின்னதாகப் பெறின் எ-று.

சொல் ஊழான் அறத்தைச் சொல்லுஞ்சொல். காரணம்பற்றி ஒருபாற் கோடாத மனத்தோடு கூடுமாயின், அறங்கிடந்தவாறு சொல்லுதல் நடுவுநிலைமையா மெனவே, அதனோடு கூடாதாயின் அவ்வாறு சொல்லுதல் நடுவுநிலைமை யன்றென்பது பெறப்பட்டது.

(ப-உரை) செப்பம் - நடுவுநிலைமையாவது, சொல் - சொல்லினிடத்தே, கோட்டமில்லது-கோணுதலில்லாததாகும், (அது அறமாவது) உள்-மனத்தினிடத்தே, கோட்டமின்மை - கோணுதலில்லாமையை, ஒருதலையா-உறுதியாக, பெறின்-பெற்றால் எ-று.

(க-உரை) மனக்கோணலும், சொற்கோணலும் மில்லாமையே, நடுவுநிலைமை என்பதாம்.

(வி-உரை) [சபையாரைநோக்கி இவை யிரண்டுபாட்டாலும் வாயினூல் தருமத்தின்படியே சொல்லினும் மனது ஒருபக்கத்திலே சாய்ந்திருக்குமாயின் அச்சொல் நடுவுநிலைமை யாகாதென்பது சொல்லப்பட்டது.]

'கோட்டம்' என்றது கோணுதலை. 'ஒருதலையா' என்றது உறுதியா (9) என்னும் பொருளது.

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவுந் தமபோற் செயின்.

(பரி-உரை) பிறவும் தமபோல் பேணிச் செயின்-பிறர்பொருளையும் பொருள் போலப் பேணிச் செய்யின், வாணிகம் செய்வார்க்கு வாணிகம் வாணிகஞ் செய்வார்க்கு நன்றாய வாணிகமாம் எ-று.

பிறவுந்தமபோற் செய்தலாவது கொள்வது மிகையும் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்பநாடிச் செய்தல். இப்பாட்டு மூன்றனுள், முன்னிரண்டும் அவையத்தாரை நோக்கின; ஏனைய வாணிகரை நோக்கின; அவ்விருதிறத்தார்க்கும் இவ்வறம் வேறுகச் சிறந்தமையின்.

(ப-ரை) பிறவும்-பிறர்பொருள்களையும், தமபோல் - தம்பொருள்களைப் போல், பேணி-காத்து, செயின்-செய்தால், (அச்செய்கையானது) வாணிகஞ் செய்வார்க்கு-வியாபாரஞ் செய்வார்க்கு, வாணிகம்-நல்ல வியாபாரமாம் எ-று.

(க-ரை) பிறர் பொருளையுந் தமது பொருளைப்போலக் காத்து வியாபாரஞ்செய்யில் அது நல்ல வியாபாரமாம் என்பதாம்.

(வி-ரை) பிறவுந் தமபோற்செய்தலாவது-கொள்வது அதிகமும், கொடுப்பது குறைவும், ஆகாமல் ஒப்பநாடிச்செய்தல். [வணிகரைநோக்கி இதனால் பிறர்பொருள்களையும் தம்பொருள்களைப்போற் செய்யும நடுவுநிலைமை யுடையவர்க்கு வாணிகம் நன்றாமென்பது சொல்லப்பட்டது.]

'பிற' என்றது பிறர்பொருளை. 'பேணி' என்றது போற்றி என்னும் பொருளது. 'வாணிகம்' என்றது நல்ல வாணிகமாம் என்னுங் குறிப்பிற்று. ()

12-ம் அதி-நடுவுநிலைமை-முற்றிற்று.

13-ம் அதிகாரம்-அடக்கமுடைமை

(பரி-உரை) அஃதாவது: மெய், மொழி, மனங்கள் தீநெறிக்கட் செல்லாது அடங்குதலுடையனாதல். அஃது ஏதிலார் குற்றம்போற் றன்குற்றமுங் காணும் நடுவுநிலைமையுடையாற்காதலின், இது நடுவுநிலைமையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: காயமும், வாக்கும், மனமும், தீயவழியிலே செல்லாதல் அடங்குதலுடையவனாயிருத்தலாம். இது பிறர்குற்றம்போலத் தங்குற்றங்காணும் நடுவுநிலைமை யுடையவனுக்கு உரித்தாதலால் அந்நடுவுநிலைமையின் வைக்கப்பட்டது.

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
பாரிரு ளுய்த்து விடும்.

(பரி-உரை) அடக்கம் அமரருள் உய்க்கும்-ஒருவனை அடக்கமாகிய அறம் பிறவுலகத்துய்க்கும், அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும்-அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின்கட் செலுத்தும் எ-று.

இரு ளென்பது ஓர் நரக விசேடம். * "எல்லாம் - பொருளிற் பிறந்து" என்றாற்போல உய்த்துவிடுமென்பது ஒரு சொல்லாய் நின்றது.

(ப ரை) (ஒருவனை) அடக்கம் - அடக்கமாகிய அறமானது, அமரருள்-உலகத்தில், உய்க்கும்-கொண்டுபோய்விடும், அடங்காமை-அடங்காமை பாவமானது, ஆரிருள் - பொறுத்தற்கரிய நரகத்தில், உய்த்துவிடும்-நிலைவிடும் எ-று.

---

* நான்மணிக்கடிகை-7.

(க-ரை) அடக்கமானது ஒருவனுக்குத் தேவருலகத்திற் செலுத்தும், அடக்காமையானது நரகத்திற் செலுத்தும் என்பதாம்.

(வி-ரை) இருனென்பது நரகவகையிலொன்று.

'அமர்' என்றது தேவரை; மரணமில்லாதவர் என்னுங் காரணம்பற்றி (1) வந்தது.

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனிலூஉங் கில்லை யுயிர்க்கு.

(பரி-உரை) உயிர்க்கு அதனின் வைக்கு ஆக்கம் இல்லை-உயிர்கட்கு அடக்கத்தின் மிக்க செல்வமில்லை; அடக்கத்தைப் பொருளாக் காக்க-ஆலால அவ்வடக்கத்தை உறுதிப் பொருளாகக்கொண்டு அழியாமற்காக்க எ-று.

உயிரென்பது சாதியொருமை. அஃது சுண்டு மக்களுயிர்மே னின்றது அறிந்தடக்கிப் பயன் கொள்வது அதனேயாகலின்.

(ப-ரை) அடக்கத்தை-அடக்கத்தை, பொருளா-(உறுதிப்) பொருளா காக்க-காக்கக்கடவன், உயிர்க்கு-மக்களுயிர்க்கு, அதனிலூஉங்கு - அதனின் மேற்பட்ட, ஆக்கம்-செல்வமானது, இல்லை-இல்லை (ஆகலால்) எ-று.

(க-ரை) மக்களுயிர்க்கு அடக்கத்தினுஞ் சிறந்த செல்வமில்லை என்றாம்.

செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

(பரி-உரை) அறிவு அறிந்த ஆற்றின் அடங்கப் பெறின்-அடங்குதற்கு அறிவாவதென் றறிந்த நெறியானே ஒருவன் அடக்கப்பெறின்; செறிவு அறிந்த சீர்மை பயக்கும்-அவ்வடக்கம் நல்லோரா னறியப்பட்டு அவர்க்கு விழுப்பத்தைக் கொடுக்கும் எ-று.

இவ்வாழ்வானுக்கு அடங்குநெறியாவது மெய்ம்முதன் மூன்றும் வயத்தவாதல்.

(ப-ரை) அறிவறிந்த-(அடங்குதலே தமக்கு) அறிவாவதென்று அறிந்த ஆற்றின் - நல்வழியால், (ஒருவன்) அடங்கப்பெறின் - அடக்கப்பெற்றால் செறிவு-அவ்வடக்கமானது, அறிந்து-(நல்லோரால்) அறியப்பட்டு, சீர்மேம்பாட்டை, பயக்கும்-(அவனுக்குத்) தரும் எ-று.

(க-ரை) ஒருவனடங்கி நடப்பானெனில் அவ்வடக்க மேன்மையைத் தரும் என்பதாம்.

(வி-ரை) இல்வாழ்வானுக்கு அடங்கும் வழியாவது காயமும், வாக்கும், மனமும், அவன் வசப்படுதல்.

'சீர்மை' இது மேன்மை என்னும் பொருளது. 'மை' பண்பு விகுதி. 'ஆற்றின்' என்றது நல்லாற்றில் என்பதாம். (3)

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற மலையினு மாணப் பெரிது.

(பரி-உரை) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்-இல்வாழ்க்கையே தன்னெறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி, மலையினும் மாணப் பெரிது-மலையுயர்ச்சியினும் மிகப் பெரிது எ-று.

திரியாதடக்குதல் பொறிகளாற் புலன்களே நுகராதின்றே அடக்குதல். ம-ஆகுபெயர்.

(ப-ரை) நிலையின்-(இல்வாழ்க்கையாகியதன்) வழியில், திரியாது-வேறாது (நின்று), அடங்கியான்-அடக்கினவனது, தோற்றம்-உயர்ச்சியானது, மலையினும்-மலையுயர்ச்சியினும், மாணப்பெரிது-மிகப்பெரிதாம் எ-று.

(க-ரை) அடக்கமுடையவன் உயர்ச்சிமலையினு மிகப்பெரிது என்பதாம்.

(வி-ரை) வேறுபடாதுநின்று அடக்குதல் ஐம்பொறிகளாலும், ஐம்புலனையும் அநுபவித்துக்கொண்டிருந்தே அடக்குதல். மலை அதனுயர்ச்சி உணர்த்தலால் ஆகுபெயர்.

'தோற்றம்' என்றது நண்டு உயர்வு என்னும் பொருள்தந்து நின்றது. 'மலையினும்' என்றதன்கண்நின்ற உம்மை உயர்வுச் சிறப்புப் பொருளது. 'மாண' உருபு எல்லைப்பொருளது. (4)

எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளுஞ் செல்வர்க்கே செல்வந் தகைத்து.

(பரி-உரை) பணிதல் எல்லார்க்கும் நன்றும்-பெருமிதமின்றி யடக்கு மெல்லார்க்கும் ஒப்ப நன்றேயெனினும், அவருள்ளும் செல்வர்க்கே செல்வந் தகைத்து-அவ்வெல்லாருள்ளுஞ் செல்வமுடையார்க்கே வேறொரு செல்வச் சிறப்பினை யுடைத்து எ-று.

பெருமிதத்தினைச் செய்யுங் கல்வியுங் குடிப்பிறப்பு முடையார் அஃதவை தம்மானே யடங்கியவழி அவ்வடக்கஞ் சிறந்து காட்டாதாக செல்வர்க்கே செல்வந் தகைத்தென்றார். செல்வத்தகைத்தென்பது நின்றது. பொதுவென்பானையு முடம்பட்டுச் சிறப்பாதல் கூறிய இவை ஐந்து பாட்டானும் பொதுவகையான் அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) பணிதல் - (பெருமைப்பாடில்லா) தடங்குதல், எல்லார்க்கும். யாவருக்கும், நன்றும் (ஒப்ப) நன்றாகும், (மேலும்) அவருள்ளும் - அவருள் ளும், செல்வர்க்கே செல்வத்தகைத்து-மேலொரு செல்வமாய்த் தோன்றுத் சிறப்பினை யுடையதாம் எ-று.

(க-ரை) அடக்கம் யாவர்க்கும் சிறந்ததாயினும் செல்வர்க்கு மேலான செல்வம் என்பதாம்.

(வி-ரை) பெருமைப்பாட்டை யுண்டாக்கும் கல்வியும் குடிப்பிறப்பும் உடையவர் அதனில்லாமல் அவைகளாலே அடக்கியவிடத்து, அவ்வடக்கம் சிறந்த தோன்றுதாதலின் செல்வர்க்கே செல்வத்தகைத்தென்றார். செல் வத்தகைத்தென்றது விகாரப்பட்டு நின்றது. [இவை ஐந்து பாட்டாலும் பொதுவகையால் அடக்கத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'எல்லார்க்கும்' என்றதன் உம்மை முற்றும்மை. 'ஆம்' இது 'ஆகும்' என்பதன் விகாரம். 'பணிதல்' இதில் 'தல்' தொழிற்பெயர் விகுதி. 'செல் வர்க்கே' இதில் ஏகாரம் தேற்றேகாரம். 'தகைத்து' இது மேன்மையை உடையது என்னும் பொருளது. தகை-சிறப்பு, மேன்மை.

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

(பரி-உரை) ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின்-ஆமை போல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம்பொறிகளையுமடக்க வல்லனாயின் எழுமையும் ஏமாப்பு உடைத்து-அவ்வன்மை அவனுக்கு எழுபிறப்பின்கண்ணும் அரணுதலை யுடையதாம் எ-று.

ஆமை ஐந்தறிப்பினையும் இடர் புகுதாமல் அடக்குமாறுபோல இவனும் ஐம்பொறிகளையும் பாவம் புகுதாம லடக்கவேண்டுமென்பார், ஆமைபோ லென்றார். ஒருமைக்கட் செய்த வினையின் பயன் எழுமைக்கும் தொடரு மென்பது இதனானறிக. இதனுன் மெய்யடக்கம் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) ஒருமையுள்-ஒரு பிறப்பின்கண்ணே, ஆமைபோ ஆமையைப்போல், ஐந்த - ஐந்தை, அடக்கலாற்றின்-அடக்க வல்லவனாயின், (அவ்வல்லமை அவனுக்கு) எழுமையும் - எழுபிறப்பின்கண்ணும், ஏமாப் உடைத்து-காவலாதலை யுடையதாம் எ-று.

(க-ரை) ஒருவனைம்பொறியடக்க வல்லவனுகில் எழுபிறப்பிற்கு முரி புடைத்து என்பதாம்.

(வி-ரை) ஆமை அடக்குமைந்து-கால்கள் நான்கும், தலை யொன்று ஆகிய வுறுப்புகள். அவ்வடக்கம்-தன்பம் சோராதிருத்தற்கு ஒருவன் அடக் கவேண்டு மைந்து - மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் பொறிகள். இவ்வடக்கம்-பாவம் சோராதிருத்தற்கு ஒருபிறப்பிலே செய்யப்பட்ட வினைப் பயன் எழுபிறப்புந் தொடருமென்பது இதனுலறிக. [இதனுலே காயவடக்கம் சொல்லப்பட்டது.]

'ஒருமை' 'எழுமை' என்பன முறையே ஒருபிறப்பையும், எழுபிறப்பை ம் உணர்த்திநின்றன. 'ஐந்தடக்க' என்றதில் ஐந்து என்னுந் தொகைக் றிப்பு ஐம்பொறிகளை உணர்த்திநின்றது. ஏமாப்பு-காவல், அரண். (6)

யாகாவா ராயினு நாகாக்க காவாக்கா சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(பரி-உரை) யா காவாராயினும் நா காக்க-தம்மாற் காக்கப்படுவனவெல் வற்றையுங் காக்கமாட்டாராயினும் நாவொன்றனையுங் காக்க; காவாக்கால் சொல்லிழுக்குப்பட்டுச் சோகாப்பர் - அதனைக் காவாராயிற் சொற்குற்றத் ற்கட்பட்டுத் தாமே துன்புறுவர் எ-று.

யாவென்பது அஃறிணைப் பன்மை விளிப்பெயர்; அஃது ஈண்டு எஞ் மை யுணர்கின்றது. முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. சொற்குற்றம்- சொல்லின்கட் டோன்றுங் குற்றம். அல்லாப்பர் செம்மாப்பர் என்பன லச் சோகாப்பரென்பது ஒருசொல்.

(ப-ரை) யா-(காக்கவேண்டுமவை) யாவையும், காவாராயினும் - காக்க ட்டாராயினும், நா-நாவொன்றையும், காக்க - காக்கக்கடவன், காவாக்)-(அதனைக்) காக்கமாட்டாராயின், சொல்லிழுக்கப்பட்டு - சொற்குற்றத் ல் அகப்பட்டு, சோகாப்பர்-(தாமே) துன்பப்படுவார் எ-று.

(க-ரை) எதைக் காக்காவிடினும் நாவைக் காக்கவேண்டும் என்பதாம்.

(வி-ரை) யாவென்பது எவையென்னும் பொருளைத்தருகிற அஃறிணைப் மை விளிப்பெயர். சொற்குற்றம்-சொல்லிடத்தே தோன்றுங் குற்றம். காப்பரென்பது ஒருசொல்.

'நாகாக்க' என்றது நாவை அடக்குக என்றதாம். நாவை அடக்குதலா சொற்களைச் சொல்லும் விஷயத்தை அடக்கி இருத்தலை. 'சொல்லி ழ்' என்றது சொல்லால் வரும் குற்றங்களை. இழுக்கு-குற்றம். (7)

ன்றூலுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி ன்றுகா தாகி விடும்.

பரி-உரை) தீச்சொற் பொருட்பயன் ஒன்றாலும் உண்டாயின்-தீயவா சாற்களின் பொருள்களாற் பிறர்க்கு வருந்தன்ப மொன்றாயினும் ஒரு க உண்டாவதாயின், நன்று ஆகாதாகிவிடும்-அவனுக்குப் பிறவறங் ண்டான நன்மை நீதாய் விடும் எ-று.

யசொல்லாவன: நீங்குபயக்கும் பொய், குறளை, கடுஞ்சொல் லென் ருவன் நல்லவாகச்சொல்லுஞ் சொற்களின்கண்ணே ஒன்றாயினுந் தீச் மும் பொருளினது பயன் பிறர்க்குண்டாவதாயினென் றுரைப்பாரு

(ப-ரை) தீச்சொல்-தீயசொற்களது, பொருட்பயன்-பொருள்களாலே (பிறருக்கு வரும்) பயனானது, ஒன்றானும்-ஒன்றாயினும், உண்டாயின்-(ஒருவனிடத்தே) உண்டாவதாயின், நன்று-(அவனுக்குப் பிறவறங்களாலுண்டாகிய) நன்மையானது, ஆகாதாகிவிடும்-தீதாய்விடும் எ-று.

(க-ரை) கொடுஞ்சொல் லொன்றுண்டாயின் அவனுக்கு நன்மை யுண்டாகாது என்பதாம்.

(வி-ரை) தீயசொல்-பொய், குறளை, கடுஞ்சொல் ஆம். பயன்-துன்பம்.

'ஒன்றானும்' என்றதன் உம்மை இழிவுச்சிறப்பு. "நன்றாகாதாகிவிடும்" என்றது பிற அறங்களால் உண்டான நன்மைகளும் தீயது ஆகும் என்றதாம்.

தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே நாவினாற் சுட்ட வடு.

(பரி-உரை) தீயினால் சுட்ட புண் உள் ஆறும்-ஒருவனையொருவன் தீயினாற் சுட்ட புண் மெய்க்கட்கிடப்பினும் மனத்தின்கண் அப்பொழுதே யாறும், நாவினால் சுட்ட வடு ஆறாது-அவ்வாறன்றி வெவ்வுரையுடைய நாவினாற் சுட்ட வடு அதன்கண்ணும் எஞ்ஞான்றும் ஆறாது எ-று.

ஆறிப்போதலால் தீயினாற் சுட்டதனைப் புண்ணென்றும், ஆறாது கிடத்தலால் நாவினாற் சுட்டதனை வடுவென்றுங் கூறினார். தீயும் வெவ்வுரையும் சுடுதற்றொழிலான் ஒக்குமாயினும், ஆறாமையாற்றீயினும் வெவ்வுரை கொடுதென்பது போதரலின், இது குறிப்பான் வந்த வேற்றுமையலங்காரம். இவை மூன்று பாட்டாலும் மொழியடக்கங் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவனை யொருவன்) தீயினால்-நெருப்பால், சுட்ட-சுட்ட புண்-புண்ணானது, (உடம்பினிடத்தே யிருந்தாலும்) உள்-மனத்தினிடத்தே ஆறும்-(அப்பொழுதே) ஆறும், (அப்படி யல்லாமல்) நாவினால்-(தீய சொல்களையுடைய) நாவினாலே, சுட்ட-சுட்ட, வடு-வடுவானது, (அதனிடத்து போதும்) ஆறாது-ஆறாது எ-று.

(க-ரை) தீயாற் சுட்ட புண்ணாறும், நாவாற் கட்ட புண்ணாறாது என்பதாம்.

(வி-ரை) ஆறிப்போதலால் தீயினாற் சுட்டதனைப் புண்ணென்றும், ஆறாமையால் நாவினாலே சுட்டதனை வடுவென்றும் சொல்லினார். தீயாகிய உபமானத்தினும் தீயசொல்லாகிய உபமேயத்திலே ஆறாமையை அதிகமாகச் சொல்லுதலாலே வேற்றுமையணியாகும். [இவை மூன்று பாட்டாலும் வாக்கினடக்கம் சொல்லப்பட்டது.]

'உள்' என்றது மனத்தை. தீயாற் சுட்ட புண் ஆறுந்தன்மை உடையதாதலின் 'புண்' என்றார். நாவாற் சுட்ட புண் ஆறாது, ஆகையினால் 'வடு' என்றார். 'ஆறு மாறாதே' என்றது முரணத் தொடுக்கப்பெற்றமையின் நாடொடை.

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

(பரி-உரை) கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி-மனத்தின்கண் வெகுளி தோன்றுமற் காத்துக் கல்வியுடையனு மடங்குதலே வல்லனது செவ்வியை, அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து - அறக்கடவுளாகிற்கும் அவனை யடையும் நெறியின்கட் சென்று எ-று.

அடங்குதல் - மனம் புறத்துப் பாவாது அறத்தின்கண்ணே நிற்றல். செவ்வி-தன் குறைகூறுதற்கேற்ற மனமொழி முகங்கள் இனியனுங் காலம். அப்பெற்றியானை அறந் தானே சென்றடையு மென்பதாம். இதனான் மனக்கு அடக்கம் கூறப்பட்டது.

(ப-ரை) கதம்-கோபத்தை, காத்து-(மனதிலே தோன்றுமல்) காத்து, கற்று-கல்வியுடையவனாகி, அடங்கல்-அடங்குதலில், ஆற்றுவான்-வல்லவனாயிருப்பவனது, செவ்வி-சமயத்தை, அறம்-அறக்கடவுளானவன், பார்க்கும்-பார்த்திருப்பான், ஆற்றில்-(அவனைச் சேரும்) வழியிலே, நுழைந்து-நுழைந்து சென்று.

(க-ரை) கற்றடங்க வல்லவனது விருப்பம் சமயத்தைத் தருமக்கடவுள் பார்க்கும் என்பதாம்.

(வி-ரை) அடங்குதல்-மனம் புறத்திலே பாவாமல் அறத்திலே நிற்றல். செவ்வி-தன் குறை சொல்லுதற் கேற்றகாலம். இப்படிப்பட்டவனை அறக்கடவுள் தானே சென்று அடைவானென்பதாம். [இதனாலே மனவடக்கம் சொல்லப்பட்டது.]

'கதம்' என்றது வெகுளியை. 'கற்று' என்றது ஞானநூற்களைக் கற்று. 'அடங்கல்' என்றது பொறிவழிச் செல்லாது மனது அடங்கி இருத்தல். செவ்வி-காலம். "செவ்வி அறம் பார்க்கும்" என்றது அறக்கடவுள் நன்மை நோக்கி நிற்கும் என்றதாம். (10)

13-ம் அதி-அடக்கமுடைமை-முற்றிற்று.

14-ம் அதிகாரம்-ஒழுக்கமுடைமை

(பரி-உரை) அஃதாவது: தத்தம் வருணத்திற்கும் நிலைக்கு மோதப் ஒழுக்கத்தினை யுடையராதல். இது மெய்ம்முதலிய அடக்கினாற்கல் முடியாதாகலின், அடக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

உரை) அஃதாவது: தக்கன் தங்கள் வருணாசிரமங்களுக்குச் சொல்லப் ஆசாரத்தை யுடையவனு மிருக்கையாம். இது காயமுதலானவை னவர்க்கல்லது முடியாதாகலின் அதன்பின் வைக்கப்பட்டது.

ஒழுக்கம் விழுப்பந் தரலா லொழுக்க
முயிரிற் மோம்பப் படும்.

(பரி-உரை) ஒழுக்கம் விழுப்பம் தரலான்-ஒழுக்கம் எல்லார்க்குஞ் சிறப் பினைத் தருதலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்-அவ்வொழுக்கம் உயிரி னும் பாதுகாக்கப்படும் எ-று.

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந்தருதலின் பொதுப் படக் கூறினர். சுட்டு வருவிக்கப்பட்டது. அதனால் அஃதனம் விழுப்பம் தருவதாயது ஒழுக்கமென்பது பெற்றும். உயிர் எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாயினும் ஒழுக்கம்போல விழுப்பந்தராமையின் உயிரினுமோம்பப் படுமென்றார்.

(ப-ரை) ஒழுக்கம்-ஆசாரமானது, விழுப்பம்-சிறப்பை, தரலான்-(எல் லாருக்கும்) கொடுத்தலால், ஒழுக்கம்-அவ்வாசாரமானது, உயிரினும்-உயி ரைப்பார்க்கிலும், ஓம்பப்படும்-காப்பாற்றப்படும் எ-று.

(க-ரை) ஒழுக்கம்-சிறப்பைத் தரலா லவ்வொழுக்க முயிரினு மேலானது என்பதாம்.

(வி-ரை) உயர்ந்தோர்க்கும் இழிந்தோர்க்கும் சமமாகச் சிறப்பினைத் தருதலால் விழுப்பந் தரலானெனப் பொதுப்படச் சொல்லினார். சுட்டுப் பெயர் வருவிக்கப்பட்டது. உயிர் எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாயினும் ஒழுக்கம்போற் சிறப்பைத் தராமையால் உயிரினுமோம்பப்படுமென்றார்.

'ஒழுக்கம்' இது சிறப்பிலல் ஈண்டு நல் ஒழுக்கத்தைக் குறித்தது. 'ஒழுகு' பகுதி, 'அம்' தொழிற்பெயர் விகுதி. 'விழுப்பம்' என்றது சிறப்பை. 'உயிரினும்' என்றதன் உம்மை உயர்வுச்சிறப்பு உம்மை. 'ஓம்பப்படும்' என் றது நல்ஒழுக்கம் தன்னைவிட்டு அகலாது இருக்குமாறு காத்துக்கோடலை.

பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

(பரி-உரை) ஒழுக்கம் ஓம்பிப் பரிந்து காக்க-ஒழுக்கத்தினை ஒன்றும் அழிவுபடாமற் பேணி வருந்தியுங் காக்க; தெரிந்து ஓம்பித் தேரினும் அஃ தஃதே - அறங்கள் பலவற்றையு மாராய்ந்து அவற்றுள் இருமைக்குந் தீ யாவது யாதென்று மனத்தை யொருக்கித் தேர்ந்தாலும். துணையாய் முடி வது அவ்வொழுக்கமேயாகலான் எ-று.

பரிந்தமென்னு மும்மை விகாரத்தாற்றொக்கது. இவை இரண்டு பா டாலும் ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) ஒழுக்கம்-ஆசாரத்தை, ஓம்பி-(ஒன்றும்) அழிவுபடா பே ?, பரிந்து-வருந்தியும், காக்க-காக்கக்கடவன், தெரிந்து-(பலவற் யும்) ஆராய்ந்து, (இவற்றுள் இருமைக்குந் துணையாவது எதுவென்

ம்பி-(மனத்தை) அடக்கி, தேரினும்-அறிந்தாலும், தணை-தணையாய் முடி
து, அஃதே-அவ்வாசாரமே, (ஆதலால்) எ-று.

(க-ரை) ஒழுக்கத்தைக் காக்க அவ்வொழுக்கமே தணை என்பதாம்.

(வி-ரை) பரிக்தமென்னும்மை விகாரத்தால் தொக்கது. [இவை
ண்டு பாட்டாலும் ஒழுக்கத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'ஒம்பிக்காக்க' என்றது அழிவுபடாது பேணிக்காத்தலை. 'பரிக்க' என்
வருந்தியும் என்பதாம். 'அஃதே' என்றது ஒழுக்கத்தை. ஏகாரம் தேற்
ப்பொருளில் வந்தது. (2)

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

(பரி-உரை) ஒழுக்கமுடைமை குடிமை-எல்லார்க்குந் தத்தம் வருணத்
கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம்; இழுக்கம் இழிந்த பிறப்
ப்விடும்-அப்வொழுக்கத்திற் றவறுதல் அவ்வருணத்திற் றாழ்ந்த வருண
ப் விடும் எ-று.

பிறந்த வருணத்தள் இழிந்த குலத்தாயினும் ஒழுக்கமுடையராக
குலத்தாவர்களின் குடிமையாமென்றும், உயர்ந்த வருணத்தப் பிறந்
யினும் ஒழுக்கத்திற்றவறத் தாழ்ந்த வருணத்தராவராகலின் இழிந்த
ப்பாய்விடுமென்றுங் கூறினர். உள்வழிப்படும் குணத்தினும் இவ்வழிப்
குற்றம் பெரிதென்றவாறு. பயன் இடையீடின்றி யெய்துதலின், அவ்
ரவுபற்றி அவ்வேதுவாகிய வினைகளே பயனுக வோதப்பட்டன.

(ப-ரை) (எல்லார்க்கும்) ஒழுக்கமுடைமை-(தத்தம் வருணத்தக்கு ஏற்ற)
ரமுடைமையானது, குடிமை-குலமுடைமையாம், இழுக்கம்-(அவ்வாசா
னின்றும்) தவறுதலானது, இழிந்த பிறப்பாய்விடும்-தாழ்ந்த வருண
டிடும் எ-று.

(உ-ரை) ஒழுக்கமே உயர்குலமென்பதாம்.

(வி-ரை) ஒழுக்கத்திலிருந்து தவறுதல் இழிந்த பிறப்பாய் விடுமெனவே
த்திலுயர்தல் உயர்ந்த பிறப்பாய் விடுமென்பதும் கொள்ளப்படும்.

குடிச்சிறப்பு.

குடிமை' என்றது உயர்குலமுடைமையை. 'இழுக்கம்' என்றது ஒழுக்
றின்றும் இழுக்குதலை. (இழுக்கம்-தவறுதல்) 'இழிபிறப்பு' என்றது
குலமுடைமையை. (3)

ப்பிலு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
ப்பொழுக்கங் குன்றக் கெடும்.

பரி-உரை) ஒத்த மறப்பிலும் கொளலாகும்-கற்ற வேதத்தினை மறந்தா
ம் அவ்வருணக் கெடாமையிற் பின்னும் அஃதோதிக்கொளலாம்;

பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்-அத்தனைதே உயர்ந்த வருணம் தன்னொழுக்கக் குன்றக் கெடும் எ-று.

மறைதவழி இழிகுலத்தனுமாகலின், மறக்கலாகாதென்றுக் கருத்தான், மறப்பிறுமென்றார். பிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃத வேனைய வருணங்கட்கும் கொள்ளப்படும்.

(ப-ரை) ஒத்த-(கற்ற) வேதத்தை, மறப்பிறும்-மறந்தாலுயினும், கொள்ளலாகும்-(வருணங் கெடாமையினுலே பின்னும்) ஓதிக்கொள்ளலாம்; பார்ப்பான்-பிராமணனது, பிறப்பு-உயர்ந்த வருணமானது, ஒழுக்கங்குன்ற-ஆசாரங் குறைய, கெடும்-அழியும் எ-று.

(க-ரை) பார்ப்பான் வேதமறந்தாலுங் கற்கலாம், ஒழுக்கங் குறைந்தால் விழிகுலனுவன் என்பதாம்.

(வி-ரை) மறைதவிடத்தே இழிகுலத்தானும் ஆதலால் மறக்கலாகாதென்றுக் கருத்தால் மறப்பிறுமென்றார். பிறப்பையுடைய முதல் வருணத்துக்குச் சொல்லுதலினுலே இது மற்றை வருணங்களுக்கும் கொள்ளப்படும்.

'மறப்பிறும்' என்றதன்கண்நின்ற உம்மை மறத்தல் கூடாது என்னும் பொருள்தந்து நின்றது. 'ஒத்த' என்றது வேதத்தை; இது ஓதப்படுதலின் இப்பெயர்த்தாயிற்று. 'பார்ப்பான்' இது வேதகாரியம் பார்ப்பவன் என்னுங் காரணம்பற்றிவந்தது. காற்பாற் குலத்தின் மேற்பாற் குலங்குறிக்கப் பார்ப்பானை எடுத்தோதினார். "பார்ப்பான் ஒழுக்கங்கெட பிறப்புக்கெடும்" என்னும் பொருள் இயைபு கொள்ளுக.

அழுக்கா றுடையான்க ணுக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

(பரி-உரை) அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று-அழுக்காறுடையான்மாட்டு ஆக்கமில்லாதாற்போல, ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை-ஒழுக்கமில்லாதவன்மாட்டும் உயர்ச்சி யில்லை எ-று.

உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சி யில்லையென்பது பெற்றும்; என்னை? * "கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற"மும் கல்லாமின். உயர்வு-உயர்குலமாதல்.

(ப-ரை) அழுக்காறுடையான்கண்-பொறுமையுடையவனிடத்தே, ஆக்கம்போன்று-செல்வமானதுபோன்று, ஒழுக்கமிலான்கண்-ஆசாரமில்லாதவனிடத்தே, உயர்வு-உயர்ச்சியானது, இல்லை-இல்லை எ-று.

(க-ரை) பொறுமை யுள்ளவனிடத்துச் செல்வமில்லாமைபோல, ஒழுக்கமில்லாதவனிடத்து மேன்மையில்லை என்பதாம்.

* திருக்குறள்-166.

(வி-ரை) கொடுப்ப தழுக்கறுப்பானென்னும் குறளிற் சொன்னபடியே ஒவ்வுபமானத்தினால் ஒழுக்கமில்லாதவனது சுற்றத்தாருக்கும் உயர்ச்சியில்லை யென்பது கொள்ளப்படும். உயர்வு-உயர்குலமாதல்.

அழுக்காறு-பொறாமை. 'கண்' ஏழன் உருபு. 'போன்று' இதற்கு 'போல்' பதி. (போன்று-போல) 'உயர்வு' என்றது மேம்பாட்டை. (5)

ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

(பரி-உரை) ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்-செய்தற்கருமை நோக்கி ழுக்கத்திற் சுருக்கார் மனவலியுடையார், இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு றிந்த - அவ்விழுக்கத்தால் தமக் கிழிகுலமாகிய குற்றமுண்டா மாற்றை றிந்த எ-று.

ஒழுக்கத்திற் சுருக்கம் அதனை யுடையார்மே லேற்றப்பட்டது. கொண்ட தம் விடாமைபற்றி உரவோரென்றார்.

(ப-ரை) உரவோர் - மனவலிமையை யுடையோர், (செய்தற்கருமை க்கி) ஒழுக்கத்தின்-ஆசாரத்தில், ஒல்கார்-சுருக்கார், இழுக்கத்தின்-அத் தலால், ஏதம்-(இழிகுலமாதலாகிய) குற்றம், படுபாக்கு-உண்டாதலை, றிந்த-தெரிந்த எ-று.

(க-ரை) பெரியோர் இழுக்கத்தால் இழிகுலமாதலை அறிந்த ஒழுக்கத் குறையார் என்பதாம்.

(வி-ரை) ஒழுக்கத்தின் சுருக்கம் அதனை உடையார்மே லேற்றப்பட் கொண்டவிரதம் விடாமைப்பற்றி உரவோரென்றார்.

ஒல்கார்-சுருக்கார். 'உரவோர்' என்றது மனோபலம், அறிவு வன்மை மையைக் குறித்து நின்றது. ஏதம்-குற்றம். 'படுபாக்கு' இதில் 'பாக்கு' பகுதி. (6)

ழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

பரி-உரை) ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் - எல்லாரும் ஒழுக்கத் மேம்பாட்டை யெய்துவர், இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர்- னின் நிழுக்குதலானே தாம் எய்துதற் குரித்தல்லாத பழியை யெய்து ர்.

கபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம் மென்ற கொள்ளுமாகலின், எய்தாப்பழி யெய்துவரென்றார். இவை ட்டாலும் ஒழுக்கம் உள்வழிப்படுங் குணமும் இல்வழிப்படுங் குற்ற றப்பட்டன.

(ப-ரை) (எல்லாரும்) ஒழுக்கத்தின்-ஆசாரத்தினுலே, மேன்மை-மேம் பாட்டை, எய்தவர்-அடைவர், ஒழுக்கத்தின்-(அதிலிருந்து) தவறுதலாலே, எய்தாப்பழி-(தாம்) அடைதற்கு உரித்தல்லாத பழியை, எய்தவர்-அடை வார் எ-று.

(க-ரை) ஆசாரத்தால் மேன்மை யடைவர் என்பதாம்.

(வி-ரை) பகைமையால் அடாத பழியைச் சொல்லியவிடத்து அதை யும் அத்தவறபற்றி அடுக்குமென்று உலகம் கொள்ளுமாகலின் எய்தாப்பழி எய்தவரென்றார். [இவை ஐந்தபாட்டாலும் ஒழுக்கமுள்ளவிடத்து உண்டா கும் குணமும், இல்லாதவிடத்து உண்டாகும் குற்றமும் சொல்லப்பட்டன.

'ஒழுக்கத்தின்' என்றது உருபு மயக்கம்; ஒழுக்கத்தால் என்பது பொருள். 'எய்தாப்பழி' என்றது கொடும் பழியை.

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க மென்று மிடும்பை தரும்.

(பரி-உரை) நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் - ஒருவனுக்கு நல் லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கு தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்-தீயவொழுக்கம் பாவத்திற்குக் கா ணமாய் இருமையினுந் துன்பம் பயக்கும் எ-று.

நன்றிக்கு வித்தாகுமென்றதனுல் தீயொழுக்கம் பாவத்திற்குக் கார மாதலும், இடும்பைதரு மென்றதனுல் நல்லொழுக்கம் இன்பந் தரு பெற்றும். ஒன்று கின்றே ஏனையதை முடிக்குமாகலின். இதனுற் பின்வி கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவனுக்கு) நல்லொழுக்கம்-நல்ல வாசாரமானது, நன்றி அறத்துக்கு, வித்தாகும் - காரணமாகும், தீயொழுக்கம் - தீயவாசாரமான என்றும்-இருமைகளிலும், இடும்பை-துன்பத்தை, தரும் கொடுக்கும் எ

(க-ரை) ஆசாரம் தருமத்திற்குக் காரணமாகும் என்பதாம்.

(வி - ரை) நல்லொழுக்கம் அறத்துக்குக் காரணமாமென்றது தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாமென்பதும், தீயொழுக்கம் இரு களிலும் துன்பந்தருமென்றதனுல் நல்லொழுக்கம் இருமைகளிலும் இ தருமென்பதும் கொள்ளப்படும். [இதனுலே பின்வருவது சொல்லப்பட்ட

'நன்றி' என்றது அறத்தை. இடும்பை-துன்பம். "இடும்பைக் கிடம் இயலுட்பிதன்றே' என்றதனுலுங் காண்க. 'நல்லொழுக்கம்' இதில் என்னும் அடைமொழி தீயொழுக்கத்தினின்றும் பிரித்துக்கூறலின் தீ விலக்கவந்த அடைமொழி. அறமேபோலும் தீயொழுக்கம் என்றதில் என்றது அடைமொழியாம். நன்மை + ஒழுக்கம் = நல்லொழுக்கம். தீ ஒழுக்கம் = தீயொழுக்கம்,

ஒழுக்கமுடையவர்க் கொல்லாவே நீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

(பரி-உரை) வழுக்கியும் நீய வாயால் சொலல்-மறந்தும் நீய சொற்
ளைத் தம் வாயாற் சொல்லுந் தொழில்கள், ஒழுக்க முடையவர்க்கு ஒல்லா-
ழுக்க முடையவர்க்கு முடியா எ-று.

நீய சொற்களாவன: பிறர்க்குத் தீங்குபயக்கும் பொய்முதலியனவும்,
ருணத்திற்கு உரியவல்லனவுமாம். அவற்றது பன்மையாற் சொல்லுதற்
ழில் பலவாயின. சொலல்-சாதியொருமை. சொலலெனவே அமைந்
ந்க வாயாலென வேண்டாதது கூறினர். கல்ல சொற்கள் பயின்றதனைத்
ம்வேண்டியதன் சிறப்புமுடித்தற்கு இதனை வடநூலார் தாற்பரியமென்ப.

(ப-ரை) வழுக்கியும்-மறந்தும், நீய-நீயசொற்களை, வாயாற்சொல்-
லினற்சொல்லல், ஒழுக்கமுடையவர்க்கு - கல்லொழுக்க முள்ளவர்க்கு,
லா-முடியாவாம் எ-று.

(க-ரை) கல்லொழுக்கமுள்ளவர் நீயசொற்களைச் சொல்லார் என்பதாம்.

(வி-ரை) நீயசொல்லுகளாவன: பிறருக்குத் தீங்கைத்தரும் பொய்முத
ாவையும், வருணத்துக்கு உரியனவல்லாதவையுமாம். கல்ல சொற்
ல பழகியதென்னும் பொருள்படுதற்குச் சொல்லென்னுது வாயாற்
ல்லென்றார்.

ஒல்லா-முடியாது. 'நீய' என்றது நீயசொற்களை. 'வழுக்கியும்' என்றது
மறந்தும் என்னும் பொருளில் வந்தது. (9)

லகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
ல்லா ரறிவிலா தார்.

(பரி-உரை) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார்-உலகத்தோடு
ந்த வொழுகுதலைக் கல்லாதார், பல கற்றும் அறிவிலாதார்-பல நூல்
ற் கற்றாராயினும் அறிவில்லாதார் எ-று.

லகத்தோடு பொருந்த வொழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகிய
ன் ஒழுகுதல். அதனால் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன
ந்து சொல்லாதனவற்றுள் எற்பன கொண்டுவருதலான் அவைபு
உலகத்தோ டொட்டவென்றும், கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்
ன் ஒழுக்கமுமாகலின், அவ்வொழுகுதலைக் கல்லாதார் பலகற்ற அறி
ரென்றுங் கூறினர். ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல். இவை
பாட்டாலும் சொல்லாலுஞ் செயலாலும் வருமொழுக்கங்களெல்
வாற்றாற் றொகுத்துக் கூறப்பட்டன.

ரை) உலகத்தோடு-உலகத்தாரோடு, ஒட்ட-பொருந்த, ஒழுகல்-நடத்
ல்லார்-கற்றிலாதவர், பல-பல நூல்களையும், கற்றும்-கற்றாராயினும்,
தார்-விவேகமில்லாதவராவர் எ-று.

(க-ரை) உலகமடை கல்லாதவர்கள் பல நூல்களைக் கற்றுக் கல்லாதவர்களே என்பதாம்.

(வி-ரை) உயர்த்தாரோடு பொருந்த நடத்தலாவது: அவரெப்படி நடந்தாரோ அப்படி நடத்தல் அவனுலிலே சொல்லப்பட்டவைகளில் இக்காலத்துக்கு ஏற்காதவைகளைவிட்டு அதிலே சொல்லப்படாதவைகளில் ஏற்குமவைகளைத் தழுவிவருதலால், அவையும் அடங்குதற்கு உலகத்தோடொட்ட ஒழுகலென்றும், கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் ஒழுக்கமும், ஆதலின் அவ்வொழுக்கத்தைக் கல்லாதார் பல கற்றும் அறிவிலாதாரென்றும் சொல்லினர். [இவை இரண்டு பாட்டாலும் சொல்லாலும் பொருளாலும் வரும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவிதத்திலுலே தொகுத்துச் சொல்லப்பட்டன.]

'உலகத்தோடு' என்றது உலகத்துள்ள உயர்ந்த மக்களை. 'பல' என்றது பலவாகிய நூற்களை. பலகற்றும் உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லாதாரிலாதார் எனப் பொருள்கோள் இயைத்து கின்றது. (1

14-ம் அதி-ஒழுக்கமுடைமை-முற்றிற்று.

15-ம் அதிகாரம்-பிறனில்விழையாமை

(பரி-உரை) அஃதாவது: காம மயக்கத்தாற் பிறனுடைய இல்லாள் விரும்பாமை. இஃது, ஒழுக்கமுடையார்மாட்டே நிகழ்வதாகலின் ஒழுக்கமுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: காம மயக்கத்திலுலே பிறனது மனையாளை விரும்பாமையாம். இது ஒழுக்கமுடையவரிடத்தே உண்டாவதாகலின் அதன்பின் வைக்கப்பட்டது.

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

(பரி-உரை) பிறன் பொருளாட் பெட்டு ஒழுகும் பேதைமை-பிறனுடைய பொருளாகிய தன்மையை புடையாளைக் காதலித் தொழுகுகின்ற அறியாமை, ஞாலத்து அறம் பொருள் கண்டார்கண் இல்-ஞாலத்தின்கண் அறத்தையும் பொருளையும் ஆராய்ந்தறிந்தார்மாட்டு இல்லை எ-று.

பிறன்பொருள் - பிறனுடைமை. அறம் பொருளென்பன ஆகுபெயராய் செவ்வெண்ணின் ஒருசை தொக்கு நின்றது. இன்ப மொன்றையே நோக்கி இன்பத்தையுடையார் இத் தீயொழுக்கத்தையும் பாகியமென்ற கருதுவதாகலின், அறம் பொருள் கண்டார்களில் லென்றார்; எனவே, அப்பேதைமையுடையார்மாட்டு அறமும் பொருளும் இல்லையென்பது பெறப்பட்டது.

(ப-ரை) பிறன்-பிறனுக்கு, பொருளான் உடைமையான்தன்மையவாம், பட்டு-இச்சித்த, ஒழுகும் - நடக்கின்ற, பேதைமை - அறியாமையானது, நிலத்த - பூமியின்கண், அறம் - அறனாலேயும், பொருள் - பொருளாலேயும், சுடார்கண்-ஞாயிற்றவரிடத்தே, இல்-இல்லை எ-று.

(க-ரை) பிறன் மனைவியை யிச்சிக்குந்தன்மை பெரியோரிடத்தில்லை யென்பதாம்.

(வி-ரை) அறமும் பொருளும் அவற்றி னால்களாற் காட்டலால் ஆகு பெயர்கள். இன்ப மொன்றையே நோக்கும் காமநூலுடையார் இப்பொல் ாத வொழுக்கத்தையும் சொல்லுவாராதலின் அறம் பொருள் கண்டார்க ளென்றார். எனவே, இப்பேதைமை புடையவரிடத்தே அறமும் பொரு ம் இல்லையென்பது பெறப்பட்டது.

'பிறன் பொருளாள்' என்றது அயலான் மனைவியை. மனைவி மக்கள் மையும் ஒருவனுக்குப் பொருள் எனக் கணிக்கப்பெறலின் 'பிறன் பொரு ள்' என்றார் அயலானின் மனைவியை. (பெட்டு-இச்சித்த) அயலான் மனை ய இச்சிப்பது அறியாமையின் காரியமாதலின் 'பேதைமை' என்றார். ம் பொருள்' என்றது அறனாலேயும் பொருள்நூலேயும் இனி இதற்கு ஒரு ார் அறத்தின் உண்மைப்பொருளைக் கண்டவர் என்பர். 'அறம் பொருள்' உம்மைத்தொகை. 'இல்' இது இல்லை என்பதன் கடைக்குறை ரம். (1)

அறன்கடை நின்றாருள் லெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

(பரி-உரை) அறன்கடை நின்றாருள் எல்லாம் - காமங் காரணமாகப் நிற்கண் நின்ற லெல்லாருள்ளும், பிறன்கடை நின்றாரின் பேதையார் பிற னில்லாளைக் காதலித்த அவன் வாயிற்கட்சென்று நின்றார்போல்ப யாரில்லை எ-று.

அறத்தி னீக்கப்பட்டமையின் அறன்கடை யென்றார். அறன்கடைநின்ற வழிச்செல்வாரையும் வரைவின் மகளிரோடும் இழிகுல மகளிரோடுங் ன்ப நுகர்வாரையும்போல அறமும் பொருளும் இழத்தலேயன்றிப், கடை நின்றார்அச்சத்தால் தாங் கருதிய இன்பமும்இழக்கின்றாராகலின் யாரில்லென்றார்; எனவே, இன்பமு மில்லையென்பது பெறப்பட்டது.

ப-ரை) (காமங் காரணமாக) அறன்கடை-பாவத்திலே, நின்றாருள்ள் ன்றவெல்லாருள்ளும், பிறன்கடை-பிறனது வாயிலினிடத்தே, நின் - (அவன் மனையாளை யிச்சித்த) நின்றவர்போல், பேதையார் - மூடர், ில்லை எ-று.

-ரை) பிறன் மனைவியை யிச்சிக்கும் மூடரைப்போல்பவரில்லை என்ப

(வி-ரை) பாவச்செயலிலேநின்ற பெண்வழி நடப்பவரும், பரத்தையரையும், இழிகுல மகளிரையும் அனுபவிப்பவரும்போல், அறம் பொருள்களை மாத்திரம் இழத்தல் அல்லாமல் பிறன் மனையாளிடத்துச் செல்வோர் அச்சத்தினாலே இன்பத்தையு மிழப்பாராதலின் பேதையாரில்லென்றார்; எனவே இன்பமுமில்லை யென்பது பெறப்பட்டது.

'அறன்கடை' என்றது பாவத்தை. 'பிறன்கடை' என்றது அயலான் வீட்டு வாயிலை. ஈண்டு அவன் மனையாளை இச்சித்து அவன் வீட்டு வாயிலி நிற்றலை உணர்த்திற்று.

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற் றீமை புரிந்தொழுகு வார்.

(பரி-உரை) மன்ற தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார்-தம்மை ஐயுறாதாரில்லாள்கண்ணே பாவஞ் செய்தலை விரும்பி யொழுகுவார், விளிந்தாரின் வேறு அல்லர்-உயிருடையரேனும் இறந்தாரேயாவர் எ-று.

அறம் பொரு ளின்பங்களாகிய பயன் உயிரெய்தாமையின் விளிந்தாரின் வேறல்லரென்றும், அவர் தீமைபுரிந்தொழுகுவது இல்லுடையவரது தெளிவு பற்றியாகலின் தெளிந்தாரில்லென்றுங் கூறினார்.

(ப-ரை) மன்ற-ஐயமில்லாமல், தெளிந்தார் - (தம்மை நல்லவரென்று) தெளிந்தவருடைய, இல்-மனையாளிடத்தே, தீமை-பாவஞ்செய்தலை, புரிந்து விரும்பி, ஒழுகுவார்-நடப்பவர், (உயிருடையவராயிருந்தாலும்) விளிந்தாரின் செத்தவரின், வேறல்லர்-வேறாகார் எ-று.

(க-ரை) ஒருவரிடத்திற் சந்தேகமற்றவரது மனைவியை விரும்பி நடப்பவ ருயிரோடிருந்து மிறந்தவரே என்பதாம்.

(வி-ரை) உயிரிருப்பினும் அவ்வுயிர் அறம் பொரு ளின்பங்களாகிய பயன்களை அடையாமையால் விளிந்தாரின் வேறல்லரென்றும், அவர் பாவஞ்செய்வது மனையாளை யுடையவரது தெளிவுபற்றியாதலின் தெளிந்தாரில்லென்றும் சொல்லினார்.

விளிந்தவர்-செத்தவர். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பயனும் எய்தாராகையால் இறந்தவர் என்றார். 'மன்ற' என்றது மிகவும் என்னும் பொருளது. ஈண்டு சந்தேகமற என்னும் பொருள்தந்து நின்றது. 'தெளிந்தார்' என்றது சந்தேகமின்றித் தெளிவு கொண்டவர்களை. 'இல்' என்றது மனைவியை; இல்லுக்குரியள் ஆதலின் இல் என்றார். (இல்-வீடு) 'தீமைபுரிந்து' என்றது பாவச்செயலாகிய மன்றத்தெளிந்தார் மனைவியை இச்சித்தலை.

எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந் தேரான் பிறனில் புகல்.

(பரி-உரை) எனைத்துணையராயினும் என்னும் - எத்துணைப் பெருமை டையராயினும் ஒருவர்க்கு யாதாம்முடியும், கினைத்துணையும் தோன் பிறன் ல் புகல்-காம மயக்கத்தால் கினையளவும் தம் பிழையை யோராத பிறனு டைய இல்லின்கட்புகுதல் எ-று.

இந்திரன்போல எல்லாப் பெருமையு மிழந்த சிறுமை யெய்தல் சோக்கி ஞ்ஞமென்றார். "என்னீ ரறியாதீர் போல விலைகூறி, னின்வீ ரல்ல டுந்தகாய்" என்புழிப்போல உயர்த்தற்கட் பன்மை யொருமை மயங்கிற்று. ரான்பிற னென்பதனைத் தம்மை ஐயுறுத பிறனென்றலைப்பாரு முளர்.

(ப-ரை) (காமமயக்கத்தினாலே) கினைத்துணையும்-கினையளவும், (சிறிதா மென்றபடி) தோன்-(தம்பிழையை) கினையாமல், பிறனில்-பிறனுடைய யாளிடத்தே, புகல் - செல்லுதல், எனைத்துணையராயினும் - எவ்வளவு ருமை யுடையவராயிருக்கினும், என்னும்-(ஒருவருக்கு) யாதாய் முடியும் ?.

(க-ரை) மிகச் சிறப்புடையோர் கினையளவு மெண்ணுத பிறன் மனை ய விரும்பின் அச்சிறப்பழியும் என்பதாம்.

(வி-ரை) இந்திரன்போல் எல்லாப் பெருமைகளையு மிழந்த சிறுமையை டவாரென்பதை குறித்த என்னுமென்றார். இழிவுசெய்தலில் எனைத்துணை ன்னும் பன்மை தோனென்னும் ஒருமையோடு மயங்கிற்று.

'எனை' என்றது எவ்வளவு என்னும் பொருளது. 'துணை' சமமை என்னும் பொருள்தர்தநின்றது. "எனைத்துணைய ராயினும் கினைத் புந் தோன்" என்றது பன்மை ஒருமை மயக்கம். இது இழிவுப் நன்தர வந்தது. 'புகல்' என்றது காம இச்சையாற் செல்லுதலை. (4)

ளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும் .
ளியா தது நிற்கும் பழி.

(பரி-உரை) எளிது என இல் இறப்பான் - எய்தாத வெளிதென்ற ப் பின் வினைவு கருதாது பிறனில்லின்க ணிறப்பான், விளியாது எஞ் ஞான்றும் நிற்கும் பழி எய்தும் - மாய்தலின்றி எஞ்ஞான்றும் நிலைநிற்கும் பழியினை யெய்தும் எ-று.

ல்லின்கணிறத்தல்-இல்லான்கண் நெறிகடந்து சேறல்.

ப-ரை) எளிதென - (இவனைச் சேர்ந்த) வெளிதென்ற கினைத்து, (பின் வ கினையாமல்) இல் - (பிறன்) மனைவியிடத்தே, இறப்பான்-செல்லு , விளியாது-அழியாமல், எஞ்ஞான்றும்-எக்காலமும், நிற்கும்-நிலைநிற்கு பழி-(குடிப்) பழியை, எய்தும்-அடைவான் எ-று.

க-ரை) பிறன் மனைவி எளிதிற் கிடைத்தினும் விரும்பலாகாது என்ப

(வி-மா) இல்லிறத்தல் இல்லாளிடத்து வரம்புகடந்து செல்லுதல்.

'இல் இறத்தல்' என்றது அயலான் மனைவிபாற் செல்லுதலே. 'எஞ்ஞான்று' இது எக்காலமும் என்னும் பொருளது. இது எகாரச்சுட்டடியாகப் பிறந்த பெயர். (விளியாது - அழியாது) 'பழி' என்றது உலகநிந்தனையை.

பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(பரி-உரை) இல் இறப்பான்கண்-பிறனில்லான்கண் நெறிகடந்து செல்வானிடத்து, பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவாவாம்-பகையும் பாவமும் அச்சமுங் குடிப்பழியு மென்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலுந் தீராவாம் எ-று.

எனவே, இருமையுமிழத்தல் பெற்றும். இவை ஆறுபாட்டாலும் பிறனில் விழைவான்கட் குற்றங் கூறப்பட்டன.

(ப-ரை) இல்-(பிறன்) மனைவியினிடத்தே, இறப்பான்கண்-செல்லுவானிடத்து, பகை பாவ மச்சம் பழியென நான்கும்-பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியும் என்னு மிந்நான்கு குற்றங்களும், இகவாவாம்-(ஒருபோதும்) நீங்காவாம் எ-று.

(க-ரை) பிறன் மனைவியைச் சேர்பவனிடத்திற் பகை பாவம் அச்சம் பழி இந்நான்கும் நீங்கா என்பதாம்.

(வி-மா) எனவே, இருமைப்பயன்களையும் இழப்பானென்றதாயிற்று. [இவை ஆறுபாட்டாலும் பிறன் மனையாளை விரும்புவோனிடத்துக் குற்றம் சொல்லப்பட்டன.]

'பகை' என்றதால் இம்மைத்துன்பம் குறித்ததாயிற்று. 'பாவம்' என்றதால் மறுமைத்துன்பம் குறித்ததாயிற்று. 'அச்சம், பழி' என்றதால் இம்மையில் இன்பம் இல்லாமையும், கூட்டத்து இன்பம் இன்மையும் குறித்தன காண்க.

அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

(பரி-உரை) அறனியலான் இல்வாழ்வான் என்பான் - அறனெனப்போடுகூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுவான், பிறன் இயல்பெண்மை நயவாதவன் - பிறனுக் குரிமைபூண்டு அவனுடைய இயல்கண்ணே நிற்பானது பெண்டன்மையை விரும்பாதவன் எ-று.

ஏனைருபு சண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது. இல்லறஞ் செய்வானெனப்படுவான் அவனே யென்பதாம்.

(ப-ரை) பிறனியலாள்-பிறருடைய வியல்பிலே (அவருக்கு உரிமை ண்டு கிற்பவளை), பெண்மை-பெண்தன்மையை, வயவாதவன்-விரும்பாத ன், அறனியலான்-அறமாகிய வியல்போடு கூடி, இல்வாழ்வானென்பான்- ல்வாழ்வானென்று சொல்லப்படுவான் எ-று.

(க-ரை) பிறன் மனைவியை விரும்பாதவனே இல்வாழ்வா னெனப்படு ான் என்பதாம்.

(வி-ரை) இல்லறம் செய்வானெனப்படுவான் அவனேயாவன் என்ப ம்.

'அறன்' இது 'அறம்' என்பதன் கடைப்போலி. 'இயலான்' என்றது னின் இயல்பின் இடத்தே கிற்பவளது என்னும் பொருளது. 'பெண்மை' பெண்தன்மையை. (7)

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்ரோர்க் கறனென்ரே வான்ற வொழுக்கு.

(பரி-உரை) பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை-பிறர் மனையாளை கொள்ளாத பெரிய ஆண்டகைமை, சான்ரோர்க்கு அறன் ஒன்ரே ஆன்ற க்கு-சால்புடையார்க்கு அறனுமாம் நிரம்பிய கொழுக்கமுமாம் எ-று.

புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய ம் அடக்குதற்கருமையின் அதனை யடக்கிய ஆண்மையைப் பேராண்மை ரூர். ஒன்ரே வென்பது எண்ணிடைச்சொல். செய்தற்கரிய அறனும் கமும் இதனைச் செய்யாமையே பயக்குமென்பதாம்.

(ப-ரை) பிறன்மனை-பிறனது மனையாளை, நோக்காத-உட்கொள்ளாத, ண்மை-பெரிய ஆண்தன்மையானது, சான்ரோர்க்கு-(அறிவால்) கிறைந் க்கு, அறனென்ரே-தருமமாவதொன்ரே, ஆன்றவொழுக்கு-கிறைந்த ழுக்கமுமாம் எ-று.

(க-ரை) பிறன் மனைவியை இச்சியாமையே பெரியோர்க்குத் தருமம் ாம்.

(வி-ரை) புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையோர்க்கும் உட்பகை காமத்தை அடக்குதல் அருமையாதலால் அதனை அடக்கிய ஆண்மை பேராண்மையென்றார். செய்தற்கரிய அறமும், ஒழுக்கமும், இதனைச் மையிலுளவேயே உண்டாகுமென்பதாம்.

நோக்காத' என்றது காதல்கொண்டு நோக்குதலை உணர்த்திற்று. புறப் அடக்குதலிலும் அகப்பகைகளில் ஒன்றாகிய கொடிய காமத்தை லினும் 'பேர் ஆண்மை' என்றார். இதனையே ஆண்மை என்றது அடக்கும் வீரமே ஆண்தன்மை என்பது பெறப்பெற்றது. 'ஆன்ற' றைந்த என்றது, கண்டு நிரம்பிய என்னும் பொருள்தந்து நின்றது. ()

நலக்குரியார் யாரெனி னுமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

(பரி-உரை) காம நீர் வைப்பின்-அச்சந்தருங் கடலாற் சூழப்பட்ட உல கத்து, நலக்கு உரியார் யார் எனின்-எல்லா நன்மைகளும் எய்துதற் குரியார் யாவரெனின், பிறற்கு உரியான் தோள் தோயாதார்-பிறனெருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச் சேராதார் எ-று.

அகலம் ஆழம் பொருளுடைமை முதலியவற்றான் அளவிடப்படாமை பின் காமநீரென்றார். நலத்திற்கென்பது நலக்கெனக் குறைந்து நின்றது. உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது. இருமையினும் நன்மை யெய்துவரென் பதாம்.

(ப-ரை) காமநீர் அச்சந் தருங் கடலாற் சூழப்பட்ட, வைப்பில்-பூமியி னிடத்தே, நலக்கு-(எல்லா) நன்மைகளையும் பெறுதற்கு, உரியார்-உரியவர், யாரெனின்-யாரென்றால், பிறர்க்கு-பிறனுக்கு, உரியான்-உரிமையானவளது, தோள்-தோள்களை, தோயாதார்-சேராதவர் எ-று.

(க-ரை) பிறன் மனைவியைச் சேராதவர்களே நன்மைக்குரியவர் என்ப தாம்.

(வி-ரை) நலத்தக்கென்பது நலக்கென விகாரப்பட்டது. இம்மையிலும் நன்மையடைவாரென்பதாம்.

'நலக்கு' என்றது 'நலத்திற்கு' என்றதன் இடைக்குறை விகாரம். 'காமம்' இது 'காம்' என்னும் பகுதியடியாகப் பிறந்தது. காம்-அச்சம். 'பிறர்க்குரியான்' என்றது அயலான் மனைவியை. 'தோடோயார்' என்றது தோளைச் சேராதவர் என்னும் பொருளது; அதாவது புணராமை. இதனை "மெல்லி நல்லா டோள்சேர்" என்ற ஒளவை வாக்காலும் அறிக. (9)

அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

(பரி-உரை) அறன் வரையான் அல்ல செயினும்-ஒருவன் அறத்தைத் தனக்குரித்தாகச்செய்யாது பாவங்களைச்செய்யுமாயினும், பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று-அவனுக்குப் பிறனெல்லைக்கணிற்பானது பெண் மையை விரும்பாமை புண்டாயின் அது நன்று எ-று.

இக்குணமே மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இவை நான்கு பாட் டாலும் பிறனில்விழையாதான்கட் குணங் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) அறம்-அறத்தை, வரையான்-(தனக்கு உரியதாகக் கொள்ளாதவனாகி, அல்ல-பாவங்களை, செயினும்-செய்வானாயினும், (அ

லுக்கு) பிறன்வரையான்-பிறனெல்லையிலே நிற்பதனை, பெண்மை-பெண் தன்மையை, ஆவாமை-விரும்பாமை, (உண்டாயின்) என்ற-(அது) என்று எ-று.

(க-ரை) ஒருவன் அறஞ் செய்யாத பாவமே செய்யினும் பிறன் மனை யினை விரும்பாமையே நன்மை என்பதாம்.

(வி-ரை) அக்குற்றங்களினும் இக்குணமே மேற்பட்டுத் தோன்றுமென்ப தாம். [இவை நான்கு பாட்டாலும் பிறன் மனையாளை விரும்பாதவனிடத்துக் குணம் சொல்லப்பட்டது.]

'அல்ல' என்றது பாவத்தை. 'செயினும்' என்ற உம்மையால் செய்ய லாகாது என்பது பெறப்பெற்றது. 'வரை' என்றது எல்லையை; அதாவது: பிறனுக்கு உரிமையுடைமையாம் எல்லையைக் குறித்தது. இக்குறளால் பிறன் மனைநயத்தல் எல்லாப்பாவத்தினும் கொடியதென்பது உணர்த்தியதாம். (10)

15-ம் அதி-பிறனில்விழையாமை-முற்றிற்று.

16-ம் அதிகாரம்-பொறையுடைமை

(பரி - உரை) அஃதாவது: காரணம் பற்றியாதல் மடமையாலுதல் ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தலை யுடையராதல். தெறிவி னீங்கிய செய்தானையும் பொறுக்க வேண்டுமென்றற்கு இது பிறனில்விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: காரணம்பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தம்மிடத்துத் தீங்கு செய்தவிடத்துத் தாமும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்தலுடையராதல். இது பிறனில்விழையாமைபோல் அவசியம் வேண்டுவதாயிருக்கையால் அதன்பின் வைக்கப்பட்டது.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை யிகழ்வார்ப் பொறுத்த றலை.

(பரி-உரை) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல-தன்னை யகழ்வாரை ழாமற் றாங்கு நிலம்போல, தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை-தம்மை வமதிப்பாரைப் பொறுத்தல் தலையாய வறம் எ-று.

இகழ்தல்-மிகையாயின செய்தலும் சொல்லுதலும்.

(ப-ரை). அகழ்வாரை-(தன்னை) வெட்டுவோரை, தாங்கும்-(வீழாமற்) ப்பதாகிய, நிலம்போல - நிலத்தைப்போல, தம்மை - தம்மை, இகழ்வார்- திப்பவரை, பொறுத்தல்-பொறுத்தல், தலை-முதலான அறமாம் எ-று.

(க-ரை) வெட்டுவோரைத் தாங்கு நிலம்போல இகழ்வாரைப் பொறுத் ல தலையாய அறம் என்பதாம்.

(வி-ரை) இகழ்தல் நீக்குசெய்தலும் சொல்லுமாம்.

'இகழ்வாரை' என்றது நிலத்தை வெட்டிக் குழி செய்வாரை. 'நிலம்' இன காற்று தீர்போலச் சலிக்காதிற்பது என்னும் பொருளது. 'இகழ்வார்' என்றது தன்னை மதியாது பேசுதலும், வினைசெய்தலும் உடையாரை என்ற பொருளதாம். (1)

பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

(பரி-உரை) என்றும் இறப்பினைப் பொறுத்தல்-பொறை கன்றுகலால், தாமொறுத்தற்கு இயன்றகாலத்தும் பிறர்செய்த மிகையைப் பொறுக்க, அதனை மறத்தல் அதனினும் கன்று-அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின் அப்பொறையினும் கன்று எ-று.

மிகையென்றது மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள்ளப்படுதலின் மறத்தலை அதனினு நன்றென்றார்.

(ப-ரை) இறப்பினை - (ஒருவன் செய்த) மிகையை, என்றும் - தன்னொறுத்தற்குக் கூடிய காலத்திலேயும், பொறுத்தல் - பொறுக்கக்கடவன், மறத்தல்-(அதனை யினையாமல் அப்பொழுதே) மறத்தல், (பெறின்) அதனினும்-அப்பொறுமையினும், நன்று-மிகநல்லது எ-று.

(க-ரை) பிறர் குற்றத்தைப் பொறுத்தலினும் மறத்தல் நன்மை என்றாம்.

(வி-ரை) மிகை முன் சொல்லப்பட்ட இரண்டு குற்றங்களும் பொறுக்கும்போதும் அக்குற்றம் உட்கொள்ளப்படுதலால் மறத்தலை அதனினும் நன்றென்றார்.

'இறப்பினை' என்றது மதியாது வரை கடந்து சொல்லும் சொற்களையும் செய்யும் செயற்களையும் ஆம். 'பொறுத்தல்' என்றது பொறுக்க என்னும் பொருள்தருகின்றது. 'அதனை' என்றது அவ் இறப்பினைச் சுட்டிநின்றது. 'அதனினும்' என்றது அப்பொறுத்தலினும் என்னும் பொருளது. (2)

இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

(பரி-உரை) இன்மையுள் இன்மை விருந்து ஓரால்-ஒருவனுக்கு வறுமையுள் வைத்த வறுமையாவது விருந்தினரை யேற்றுக்கொள்ளாது நீக்குதல், வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை-அதுபோல வன்மையுள் வைத்த வன்மையாவது அறிவின்மையான் மிகை செய்தாரைப் பொறுத்தல் எ-று.

இஃது எடுத்துக்காட்டுவமை. அறனல்லாத விருந்தொரால் பெருஞ்செல்வனுடைமை யாகாதவாறுபோல, மடவார்ப் பொறையும் மென்மை யாகாது வன்மையா மென்பது கருத்து.

(ப-ம) (ஒருவனுக்கு) இன்மையுளின்மை-வறுமையுள் வறுமையாவது, விருந்தொரால் - விருந்தினரை (ஏற்றுக்கொள்ளாமல்) நீக்குதலாம், (அது போல்) வன்மையுள் வன்மை-வல்லமையுள் வல்லமையாவது, மடவார்-அறிவாமையினாலே நீக்குசெய்தவரை, பொறை-பொறுத்தல் எ-று.

(க-ரை) ஒருவனுக்கு வல்லமையில் வல்லமை மூடர்செய்த குற்றத்தைப் பொறுத்தல் என்பதாம்.

(வி-ரை) உடைமையுளின்மையென்னுங் குறளின்படி எப்படி விருந்தினரை யுபசரியாமை பொருளுடைமை ஆகாதோ அப்படியே அறிவிலாரைப் பொறுத்தல் இளைத்தலாகாதென்பது கருத்து. [எடுத்துக்காட்டுவமையணி.]

'இன்மை' என்றது பொருள் இல்லாமையாகிய வறுமையை. 'ஒரால்' என்பது 'ஒருவுதல்' என்பதாம்; ஒருவுதல்-நீக்கல். 'வன்மை' என்றது மனோவன்மையை; அறிவுவன்மை என்பாரும் உண்டு. 'மடவார்' என்றது சண்டு அறிவில்லாதவர்களாகிய மூடரை. (3)

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடை
போற்றி யொழுகப் படும். [மை

(பரி-உரை) நிறையுடைமை நீங்காமை வேண்டின் - ஒருவன் சால்புடைமை தன்கணின்று நீங்காமை வேண்டுவனாயின், பொறையுடைமை போற்றி ஒழுகப்படும்-அவனாற் பொறையுடைமை தன்கண் அழியாமற் காத்தொழுகப்படும் எ-று.

பொறையுடையாற்கல்லது சால்பில்லை யென்பதாயிற்று. இவை நான்கு பாட்டானும் பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) நிறையுடைமை - நிறைவை யுடையவனாயிருக்கை, நீங்காமை-தன்னைவிட்டு நீங்காமையை, வேண்டின்-வேண்டுவானாயின், (அவன்) பொறையுடைமை-பொறுமை யுடையவனாயிருக்கை, போற்றி-(அழியாமற்) காத்து, ஒழுகப்படும்-நடக்கப்படும் எ-று.

(க-ரை) நிறைவை வேண்டுவானுகிற் பொறுமையைக் காக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) பொறுமை யில்லார்க்கு நிறைவில்லை யென்பதாயிற்று. [இவை நான்கு பாட்டானும் பொறையுடைமையின் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'நிறையுடைமை' என்றது நற்குணநிறைவை. இதனைச் 'சால்பு' என்பர் பரியார். 'பொறை' என்றது பிறர் மதியாத பேதமையாற் சொல்லும் சொல்லையும், செய்யுஞ் செயலையும் பொறுத்தலை. இது 'பொறு' என்னும் வியடியாகப் பிறந்தது. (4)

ஒறுத்தாரை யொன்றுக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

(பரி-உரை) ஒறுத்தாரை ஒன்றுகவையார்-பிறன் தமக்குத் தீங்குசெய்த வழிப் பொறுத அவனை யொறுத்தாரை அறிவுடையார் ஒரு பொருளாக மனத்துக் கொள்ளார்; பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து வைப்பர். அதனைப் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து கொள்வர் எ-று.

ஒறுத்தவர் தாமும் அத்தீங்கு செய்தவனே டொத்தலின், ஒன்றுகவையாசென்றார். பொதிந்து வைத்தல் - சால்புடைமைபற்றி இடைவிடாது நினைத்தல்.

(ப-ரை) (பிறன் தமக்குத் தீங்கு செய்தவிடத்து) ஒறுத்தாரை-(பொறுமல் அவனை) வருத்தினவரை, (அறிவுடையோர்) ஒன்றுக - ஒருபொருளாக, வையார்-மனத்திட் கொள்ளார், பொறுத்தாரை-(அதனைப்) பொறுத்தவரை, பொன்போல்-பொன்னைப்போல், பொதிந்து-இடைவிடாது, வைப்பர்-மனத்திட் கொள்வார் எ-று.

(க-ரை) பெரியோர்கள் பொறுமை யுள்ளோரைப் பொருளாக நினைப்பார் என்பதாம்.

(வி-ரை) ஒறுத்தவர் அத்தீங்கு செய்தவர்க்குச் சமானமாதலின் ஒன்றுகவையாசென்றார்.

'ஒறுத்தார்' என்றது மறியாது தன்மாட்டுத் தப்புப் புரிந்தாரைத் தண்டித்தவரை என்றதாம். 'ஒன்றுக' என்றது ஒரு பொருளாக என்றதாம். 'வையாரேவைப்பர்' என்றது மூரண்டொடை. "மூரணத்தொடுப்பது மூரண் டொடையாகும்" என்பது இலக்கணம். 'பொன்போல்' என்றது அருமையுடைய பொருளாக என்பதாம். 'வைத்தலாவது' என்றும் மனத்தன்கு மதித்து எண்ணியிருத்தலே.

ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்.

(பரி-உரை) ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்-தமக்குத் தீங்குசெய்தவனை யொறுத்தார்க்கு உண்டாவது அவ்வொருநாளை யின்பமே; பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்-அதனைப் பொறுத்தார்க்கு உலக மழிவுமளவும் புகழுண்டாம் எ-று.

ஒருநாளை யின்பம் - அந்நாளொன்றிலும் கருதியது முடித்தேமென்று தருக்கியிருக்கும் பொய்யின்பம். ஆகாரமாகிய உலகம் பொன்றப் புகழ் பொன்றுமாகலின், எற்புடை யுலகென்னுஞ் சொல் வருவித் துரைக்கப்பட்டது.

(ப-ரை) ஒறுத்தார்க்கு - (தமக்கு தீங்கு செய்தவனை) ஒறுத்தவர்க்கு (உண்டாவது) ஒருநாளை யின்பம் - அவ்வொருநாளை யின்பமே, பொறுத்தார்க்கு-(அதனைப்) பொறுத்தவர்க்கு, பொன்றுத்துணையும்-(உலக) மழியுமளவும், புகழ்-கீர்த்தி, உண்டாம்-உண்டாகும் எ-று.

(க-ரை) பிறர் குற்றக்கண்டு தண்டித்தவர்க் கொருநாளே யின்பம் பொறுத்தவர்க்கு உலக மழியுமளவும் புகழ் என்பதாம்.

(வி-ரை) ஒருநாளே யின்பம் அந்நாளொன்றிலும் கினைத்தது முடித்தோ மேயென்று செருக்கியிருக்கும் பொய் யின்பமாம். [தனக்கிடமாகிய உலகம் அழியப் புகழும் அழியுமாதலின், ஏற்புடைய உலகமென்னுஞ் சொல் வருவிக்கப்பட்டது.

'பொறுத்தார்க்கு' என்றது பேதமையாற் றீங்குசெய்தாரைத் தம் சால்பாற் பொறுத்தார்க்கு என்பதாம். 'பொன்றும்' என்றது உலகம் அழியும் நாலம்வரையும் என்பதாம். ஈண்டு 'உலகம்' என்றது அவாய்நிலையால் வருவிக்கப்பெற்றது.

(6)

ஞிறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.

(பரி-உரை) ஞிறன் அல்ல தன் பிறர் செய்யினும் - செய்யத்தகாத கொடியவற்றைத் தன்கட் பிறர் செய்தாராயினும், நோ நொந்து அறன் அல்ல செய்யாமை நன்று - அவர்க்கு அதனால்வரும் துன்பத்திற்கு நொந்து தான் அறனல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று எ-று.

உம்மை சிறப்பும்மை. துன்பத்திற்கு நோதலாவது "உம்மை—யெரி நாய் நிரயத்து வீழ்வர்கொல்" என்று பரிதல்.

(ப-ரை) ஞிறனல்ல-செய்யத்தகாத கொடியவைகளை, தன்-தன்னிடத்து, றர்-அயலார், செய்யினும்-செய்தாலும், நோ-(அவருக்கு அதனால் வருவதாய) துன்பத்துக்காக, நொந்து-வருந்தி, அறனல்ல-அறமல்லாத (செயல்களை), செய்யாமை-செய்யாதிருத்தல், நன்று-(ஒருவனுக்கு) நல்லதாம் எ-று.

(க-ரை) பிறர் செய்யத்தகாத கொடியவைகளைச் செய்தாலுந் தான் நொந்து அறமல்லாதவைகளைச் செய்யாமை நன்று என்பதாம்.

(வி-ரை) துன்பத்துக்காக வருந்துதலாவது இப்பாவத்தினாலே, இவர் பிறப்பிலே எரிவாய் நரகத்தில் வீழ்வாரோவென்று பரிதல் எ-று.

'ஞிறனல்ல' என்றது செய்யத்தகாத கொடுஞ்செயலை; என்னை, அச்செயல் அறத்திற னல்லவாதலின் 'ஞிறனல்ல' என்றார். 'நோ' என்றது ஞிறனல்ல செய்தார் அடையவிருக்கும் நரகத்துன்பத்தை. 'அறனல்ல' என்றது பிழைத்தார்க்குத் தீங்கு செய்தலை.

(7)

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

(பரி-உரை) மிகுதியான் மிக்கவை செய்தாரை-மனச்செருக்காற் றங்கட் குற்றஞ் செய்தாரை, தாம் தம் தகுதியான் வென்றுவிடல்-தாம் தம்மு டைய பொறையான் வென்றுவிடுக எ-று.

தாமும் அவர்கட் டீயவற்றைச் செய்த தோலாத பொறையான் அவ
ரின் மேம்பட்டு வெல்க வென்பதாம். இவை நான்கு பாட்டானும் பிறர்
செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டன.

(ப-ரை) மிகுதியால்-மனச்செருக்கினாலே, (தம்மிடத்து) மிக்கவை-தீய
வைகளை, செய்தாரை-செய்தவரை, தாம்-தாம், தம் தகுதியால்-தமது பொறு
மையினாலே, வென்றவிடல்-வென்றவிடக்கடவர் எ-று.

(க-ரை) மனச்செருக்காற் பிறர் தீமைசெய்தாலு மவர்க்கு நன்மை
செய்த பொறுமையால் வெல்க என்பதாம்.

(வி-ரை) தாமும் அவரிடத்தே தீயவைகளைச்செய்து தோற்றப்போக
மல் பொறுமையால் அவரின் மேற்பட்டு வெல்லுக வென்பதாம். [இவை
நான்கு பாட்டாலும் பிறர்செய்த குற்றங்களைப் பொறுத்தல் சொல்லப்பட்
டன.]

'மிகுதி' என்றது மனச்செருக்கை. அதாவது ஆணவமிகுதியை; இனி
இதற்கு அறியாமை மிகுதியால் என்பாரும் உண்டு. 'தகுதி' என்றது
பொறையை; இனிச் சால்பின் தகுதியால் என்பாரும் உண்டு. (8)

குறந்தாரிற் றாய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னுச்சொ லேற்கிற் பவர்.

(பரி-உரை) அறந்தாரின் தாய்மை உடையர்-இல்வாழ்க்கைக்கணின்று
யும் அறந்தாரைப்போலத் தாய்மையுடையார், இறந்தார்வாய் இன்னுச்சொ
லேற்கிற்பவர்-நெறியைக் கடந்தார் வாய் இன்னாத சொல்லைப் பொறுப்ப
எ-று.

தாய்மை-மனமாசின்மை. வாயென வேண்டாது கூறினர், தீயசொற்க
பின்றதெனத் தாம் வேண்டியத னிழிபு முடித்தற்கு.

(ப-ரை) இறந்தார்-(நல்வழியைக்) கடந்தவரது, வாய்-வாயிலுண்டாகு
இன்னுச்சொல்-வெறுக்கப்படுஞ் சொற்களை, ஏற்கிற்பவர் - பொறுப்பவர்
(இல்வாழ்க்கையிலேயிருந்தும்) அறந்தாரின்- அறந்தார்போல், தாய்மை
பரிசுத்த குணத்தை, உடையர்-உடையவராவர் எ-று.

(க-ரை) தீயவழியி னடப்பவரது கொடுஞ் சொற்களைப் பொறுப்ப
அறவிகள்போலப் பரிசுத்த குணமுடையவர் என்பதாம்.

(வி-ரை) தாய்மை-மனவழுக்கில்லாமை. வாயென்பதை அதிகமா
சொல்லினர் அதனிழிவு தோன்றுதற்கு.

'அறந்தாரில்' என்றதன் 'இல்' உருபு ஒப்புப் பொருளில் வந்த
'அறந்தவர்களைப்போல' என்பது பொருளாம். 'தாய்மை' என்றது மனப்
சுத்தத்தை. 'இறந்தார்' என்றது வரைதப்பியவர்களாகிய இன்னுச்சொ
சொல்லியவர்களை. 'இறந்தார்' என்பதற்கு அறத்தின் எல்லையைக் கடந்
என்பாரும் உண்டு. 'வாய் இன்னுச்சொல்' என்பதில் 'வாய்' என்ற சே
மிகுதியான் வந்தது.

உண்ணுதல் நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னுச்சொ லேற்பாரிற் பின்.

(பரி-உரை) உண்ணுதல் நோற்பார் பெரியர் - விரதங்களான் வருந்தி தவிர்த்து உற்ற நோயைப் பொறுப்பார் எல்லாரினும் பெரியர்; பிறர் சொல்லும் இன்னுச்சொல் நோற்பாரிற் பின்-அவர் பெரியராவது தம்மைப் பிறர் சொல்லும் இன்னாத சொல்லைப் பொறுப்பாரிற் பின் எ-று.

பிறர் - அறிவிலாதார். நோலாமைக்கேதுவாகிய இருவகைப் பற்றையு மின்றே நோற்றலின், இன்னுச்சொ லேற்பாரிற் பின்னென்றார். இவை இரண்டு பாட்டாலும் பிறர் மிகைக்கச் சொல்லியன பொறுத்தல் கூறப் பட்டது.

(ப-உரை) உண்ணுதல்-(விரதங்களிலே)உணவைவிட்டு, நோற்பார்-(தம்மை அடைந்தநோயைப்) பொறுப்பவர், பெரியர்-(எல்லாரினும்) பெரியவராவார், (அவர் பெரியவராவது,) பிறர்-அயலார், சொல்லும்-(தம்மைச்) சொல்லும், இன்னுச்சொல்-வெறுக்கப்படுஞ் சொற்களை, நோற்பாரின்-பொறுப்பவரின், பின்-பின்னவர் எ-று.

(க-உரை) பிறர் கொடுஞ் சொற்களைப் பொறுப்பவர்க்குத் தவத்தர் பின் னவர் என்பதாம்.

(வி-உரை) பிறர் இங்கே அறிவில்லாதவர் பொறுக்கக்கூடாமைக்கு எது காகிய இருவகைப்பற்றுகளோடிருந்தே பொறுத்தலால் தவஞ்செய்வாரினும் பெரியராகச் சொல்லலாயிற்று. [இவை இரண்டு பாட்டாலும் பிறர் சொல்லிய குற்றங்களைப் பொறுத்தல் சொல்லப்பட்டது.]

'உண்ணுது' என்றது விரதாதிகளால் உண்ணும் உணவுகளை உண்ணுது என்பதாம். 'நோற்பார்' என்றது விரதங்கள் அனுட்டிப்பவரை. இதற்கு 'நால்' பகுதி. 'பிறர்' என்றது தீங்குசொல்லும், தீங்குசெய்யும் பேதை யரை. பின்னைய 'நோற்பார்' என்றது பொறுத்துக்கொள்வோரை. (10)

16-ம் அதி-பொறையுடைமை-முற்றிற்று.

17-ம் அதிகாரம் அழுக்காருமை

(பரி-உரை) இதனுள் அழுக்காறென்பது ஒருசொல். அதற்குப்பொருள் மேலே யுரைத்தாம். அச்சொற் பின்னழுக்காற்றைச் செய்யாமை யென்னும் பொருள்பட எதிர்மறை யாகாரமும் மகர வைகாரவிகுதியும் பெற்று அழுக்காருமை யென நின்றது. இப்பொறுமையும் பொறைக்கு மறுதலை யாதலின், இதனை விலக்குதற் பொருட்டு பொறையுடைமையின்பின் வைக்கப் பட்டது.

(உரை) அஃதாவது: பிறர் செல்வ முதலானவை கண்டவிடத்துப் பொறுமைப்படாமை. இப்பொறுமையும் பொறுமைக்கு எதிரியதாதலின் இதனை விலக்குதற்கு இது பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.

**ஒழுக்காறுக் கொள்க வொருவன் றன்னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.**

(பரி-உரை) ஒருவன் தன்னெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு-ஒருவன் தன்னெஞ்சத்தின்கண் அழுக்காறென்னுங் குற்றமில்லாத இயல்பினை, ஒழுக்காறுக் கொள்க-தனக்கோதிய ஒழுக்க நெறியாகக் கொள்க எ-று.

இயல்பு-அறிவோடு கூடிய தன்மை. அத்தன்மையும் கன்மைபயத்தலின், ஒழுக்க நெறிபோல உயிரினு மோம்புக வென்பதாம்.

(ப-ரை) ஒருவன்-ஒருவன், தன்னெஞ்சத்து-தனது மனத்தின்கண்ணே, அழுக்காறு-பொறுமையாகிய குற்றம், இலாத-இல்லாத, இயல்பு-தன்மையை, ஒழுக்கு - (தனக்குச் சொல்லப்பட்ட) ஒழுக்கத்தினை, ஆறு - வழியாக, கொள்க-கொள்ளக்கடவன் எ-று.

(க-ரை) ஒருவன் பொறுமையில்லாமையே நல்ல வழியாகக் கொள்ளக் கடவன் என்பதாம்.

(வி-ரை) இயல்பு அறிவோடு கூடிய தன்மை. அத்தன்மையும் கன்மையைத்தருதலால், ஒழுக்கம் விழுப்பமென்னுங் குறளிலே சொல்லப்பட்டபடியே ஒழுக்கவழிபோல உயிரினும் சிறந்ததாகக் காப்பாற்றுகவென்பதாம்.

'ஒழுக்காறு' என்றது ஒழுக்கத்தின்வழி என்பது பொருள். என்றது ஒழுக்கநெறியை. 'கொள்க' என்றது கொள்ளக்கடவன் என்ற பொருளதாம். இது வியங்கோள். 'ஒருவன்' என்றது ஒருத்தி என்றதையும் கொள்ளக்கிடந்தது. என்னை 'ஒருமொழியொழி தன்னினங் கொளற் குரித்தே' என்பது ஒத்தாதலின் அன்றியும் அறம் பொருள் இன்பம் வீடு அடைதற்கு உரியவன் ஆண்மகன் என்னும் மேலோர் துணிபுபற்றி 'ஒருவன்' என்னலுமாம். 'நெஞ்சத்த' இதில் 'அத்து' சாரியை. 'அழுக்காறு' என்றது அழுக்காறென்னுங் குற்றநெறியை.

**விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.**

(பரி-உரை) யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்-யாவர்மாட்டும் அழுக்காற்றினின்று நீங்குதலை ஒருவன் பெறுமாயின், விழுப்பேற்றினை அஃது ஒப்பது இல்லை - மற்றவன் பெறுஞ் சிரியபேறுகளுள் அப்பேற்றினை யொப்பதில்லை எ-று.

அழுக்காறு பகைவர்மாட்டும் ஒழிதற்பாற்றென்பார், யார்மாட்டு என்றார். அன்மை-வேறுதல். இவை இரண்டு பாட்டானும் அழுக்காறின்மை குணங் கூறப்பட்டது.

(ப-ரை) யார்மாட்டும் - யாவரிடத்தும், அழுக்காற்றின் - பொருமையி னின்றும், அன்மை-வேருதலை, பெறின்-(ஒருவன்) பெறுவானுயின், விழுப் பேற்றின்-(மற்றவன் பெறும்) மேலான பேறுகளுள், அஃது-அப்பேற்றினை, ஒப்பது-ஒப்பானது, இல்லை-இல்லை எ-று.

(க-ரை) ஒருவன் யாவரிடத்தும் பொருமை யில்லாமையைப் பெறுவா னெனில் அதைவிட வேறுபேறில்லை என்பதாம்.

(வி-ரை) பொருமை பகைவரிடத்தும் ஆகாதென்றற்கு யார்மாட்டு மென்றார். [இவை இரண்டு பாட்டாலும் பொருமை யில்லாமையினது குணம் சொல்லப்பட்டது.]

'விழுப்பேறு' என்றது விழுமைப்பேற்றை, ஈண்டு மைஉருபு கெட்டு நின்றது; விழுமை-சிறப்பு. 'அஃது' என்னும் சுட்டு அவ்விழுப்பேற்றைச் சுட்டி நின்றது. 'இல்லை' என்றது குறிப்புவினைமுற்று. 'யார்' இது 'யா' என்னும் வினா அடியாகப் பிறந்த பெயர். 'யார்மாட்டும்' என்ற உம்மையால் பகைவரிடத்தும் என்றது பொருளாம். 'அழுக்காறு' இதற்கு 'அழுக்கறு' பகுதி. 'பெறின்' இது பெற்றால் என்னும் பொருளது. (2)

அறனுக்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்கம்
பேணு தழுக்கறுப் பான்.

(பரி-உரை) அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான்-மறுமைக்கும் இம் மைக்கும் அறமுஞ் செல்வமுமாகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதா னென்று சொல்லப்படுவான், பிறன் ஆக்கம் பேணுது அழுக்கறுப்பான்-பிறன் செல்வங் கண்டவழி அதற்கு உவவாது அழுக்காற்றைச் செய்வான் எ-று.

அழுக்கறுத்த லெனினும் அழுக்கா றெனினு மொக்கும். அழுக்காறு செய்யின் தனக்கே ஏதமாமென்பதாம்.

(ப-ரை) அறன் - (மறுமைக்கு) அறத்தையும், ஆக்கம் - (இம்மைக்குச்) செல்வத்தையும், வேண்டாதா னென்பான்-(தனக்கு) வேண்டாதவனென்று சொல்லப்படுவோன், பிறன்-பிறனது, ஆக்கம்-செல்வத்தை, பேணுது-(கண்ட வழி)த்து) மகிழாமல், அழுக்கறுப்பான்-பொருமைப்படுவான் எ-று.

(க-ரை) மறுமைக்குத் தருமமு மிம்மைக்குச் செல்வமும் வேண்டா னாய் பிறன் செல்வங்கண்டு பொருமைகொள்வான் என்பதாம்.

(வி-ரை) பொருமைப்படின் தனக்கே துன்பமாம் என்றபடி.

'அறனுக்கம்' என்றது உம்மைத்தொகை. 'பேணுது' என்றது பிறன் செல்வம் கண்டு மனத்தே பொறுத்து மகிழாது என்ற பொருளில் நின்றது. 'அறனுக்கு' 'பேண்' பகுதி. 'ஆ' எதிர்மறைப் பொருள் தந்து நின்றது. 'அழுக்கறுப்பான்' இதில் 'பான்' விகுதி. (3)

அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

(பரி-உரை) அழுக்காற்றின் அல்லவை செய்யார்-அழுக்காறு எதுவாக அறனல்லவற்றைச் செய்யார் அறிவுடையார், இழுக்காற்றின் ஏதம் படு பாக்கு அறிந்த - அத்தீவெறியால் தமக்கிருமையினுந் துன்பம் வருதலை யறிந்த எ-று.

அறனல்லவையாவன: செல்வம் கல்வி முதலியன வுடையார்கட் டூங்கு தினைத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம்.

(ப-உரை) (அறிவுடையோர்) அழுக்காற்றின் - பொறாமையினாலே, அல் லவை-அறமல்லாதவைகளை, செய்யார்-செய்யார், இழுக்காற்றின்-அத்தியவழி யால், ஏதம்-துன்பமான, படுபாக்கு-(தமக்கு இருமையிலும்) உண்டாதலை, அறிந்த-தெரிந்த எ-று.

(க-உரை) பெரியோர் பொறாமையாற் பாவங்களைச் செய்யார் என்பதாம்.

(வி-உரை) அறமல்லாதவையாவன: செல்வங் கல்வி முதலானவை யுடை யாரிடத்தே தீக்கை தினைத்தலும், சொல்லலும், செய்தலுமாம்.

'அழுக்காற்றின்' இதில் 'இன்' உருபு காரணப்பொருள் தந்து நின்றது. 'அல்லவை' இது அறன் அல்லாததாகிய பாவச்செயலை உணர்த்தி நின்றது. 'இழுக்கு' என்றது அறத்தினின்றும் வழுவியது, இழுக்கியதாகிய தீவெறியை உணர்த்திற்று. 'படுபாக்கு' இதில் 'பாக்கு' விகுதி. (4)

அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

(பரி-உரை) ஒன்னார் வழுக்கியும் கேடு சூன்பது-அழுக்காறு பகைவனை யொழிக்குங் கேடு பயப்பதொன்றுகலின், அழுக்காறு உடையார்க்கு அது சாலும்-அவ்வழுக்காறுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடு பயத்தற்கு அது தானே யமையும் எ-று.

அதுவே யென்னும் பிரிநிலை யேகாரம் விகாரத்தாற் றொக்கது.

(ப-உரை) அழுக்காறு-பொறாமையானது, ஒன்னர்-பகைவரின், வழுக்கி யும்-ஒழிந்திருந்தும், கேடீன்பது - கேட்டைத்தருவது (ஆதலால்), உடை யார்க்கு-(அப்பொறாமையை) உடையவர்க்கு, (கேட்டைத் தருதற்குப் பகை வர் வேண்டாம்) அது-அதுவே, சாலும்-போதும் எ-று.

(க-உரை) பொறாமை பகைவரினும் கொடிது என்பதாம்.

(வி-உரை) அதுவேயென்னும், ஏகாரம் வருவிக்கப்பட்டது.

'அழுக்காறுடையார்' என்றது அழுக்காற்றை உடையவர் என்னும் பொருள் தந்து நின்ற இரண்டன்றொகை. 'அது' என்றது அவ் அழு

காற்றை. 'ஒன்னூர்' என்பது பகைவரை. இது மனம் ஒன்றுபடாதவர் என்னும் காரணம் பற்றிவந்த காரணப் பெயர். 'சாலும்' இது பொருத்தம் என்னும் பொருளது. இது 'சால்' என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்தது. 'வழுக்கியும்' என்றதால் பகைவர் கேடுசெய்யாதிருப்பவும் இவர் கொண்ட அழுக்காறே இவர்க்குக் கேட்டைச்செய்யும் என்பது பெற்றும். (5)

ஒகொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

(பரி-உரை) கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம்-ஒருவன் பிறர்க்குக் கொடுப்பதன்கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றம், உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்-உடுக்கப்படுவதும் உண்ணப்படுவது மின்றிக் கெடும் எ-று.

கொடுப்பதன்க ணழுக்கறுத்தலாவது கொடுக்கப்படும் பொருள்களைப் பற்றிப் பொறுமை செய்தல். சுற்றங் கெடுமெனவே, அவன் கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர் பேறு பொறுமை தன் பேற்றையேயன்றித் தன் சுற்றத்தின் பேற்றினையும் இழப்பிக்கு மென்பதாம்.

(ப-உரை) கொடுப்பது-(ஒருவனுற்), பிறர்க்குக் கொடுக்கப்படும் பொருளைக் குறித்து, அழுக்கறுப்பான்-பொறுமைப்படுமவனது, சுற்றம்-உறவானது, டுப்பதூஉம் - உடுக்கப்படுவதும், உண்பதூஉம் - உண்ணப்படுவதும், இன்றிலாமல், கெடும்-அழியும் எ-று.

(க-உரை) கொடுப்பதைக் குறித்துப் பொறுமை கொள்பவன் சுற்றம் க்கவாடையு முண்ணச் சோறுமில்லாமற் கெடும் என்பதாம்.

(வி-உரை) சுற்றம் கெடுமெனவே அவன் கெடுதல் சொல்லவேண்டிய லையாயிற்று. பிறர் பேறுகண்டு பொறுமைப்படுதல் தன் பேறுமாத் மேயல்லாமல் தன் சுற்றத்தின் பேறுகளையும் இழக்கச்செய்யு மென்ப .

'கொடுப்பது' என்றதற்கு பிறர்க்குக் கொடுக்கும் பொருளைப்பற்றி தாம். இனி இதற்கு ஒருவன் பிறர்க்குக் கொடுக்கும் தன்மையுடைமை டும், ஏற்பான் பெறும்பொருள் கண்டும் அழுக்காறு கொள்பவன் எனக் -லும் ஆம். 'சுற்றம்' இது சுற்றமும் என்னும் பொருளது. உம்மை ங்கு நின்றது. இது இறந்தது தழீஇய எச்ச வும்மை என்பாரும் உண்டு. ம் கெடும்' என்றதால் இவன் கேடு சொல்லாமலே அருத்தாபத்தியால் ப்பட்டது என்பர். 'உடுப்பதூஉம்' 'உண்பதூஉம்' என்ற அளபெடை ன்னிசை பயக்க வந்தமையின் இன்னிசையளபெடைகள். (6)

/வ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
ள்வினையைக் காட்டி விடும்.

(பரி-உரை) அழுக்காறு உடையானை-பிறராக்கங் கண்டவழிப் பொருமை புடையானை, செய்யவன் அவ்வித்தத் தவ்வையைக் காட்டிவிடும் - திருமகள் தானும் பொருமை தன் தவ்வைக்குக் காட்டி நீக்கும் எ-று.

தவ்வை-மூத்தவள். தவ்வையைக்காட்டி யென்பது "அறிவுடை யந்தண னவளைக் காட்டென்றலே" என்பதுபோல உருபுமயக்கம். மனத்தைக் கோடுவித்த அழுக்காறுடையனுயினனை யென்றுரைப்பாரு முளர்.

(ப - ரை) அழுக்காறுடையானை - (பிறர் செல்வங் கண்டவிடத்தே) பொருமையுடையவனை, செய்யவன் - திருவானவள், அவ்வித்த - (தானும்) பொருமைப்பட்டு, தவ்வையை-(தனக) தமக்கைக்கு, காட்டி-காண்பித்து, விடும்-நீக்குவாள் எ-று.

(க-ரை) பொருமையுடையவனை யிலக்குமி பொருமைப்பட்டு நீக்குவாள் என்பதாம்.

(வி-ரை) தவ்வையையென்பது உருபுமயக்கம், தவ்வை-மூதேவி.

'அவ்வித்த' இது பொருமை கொண்டு என்னும் பொருளது. 'செய்வாள்' என்றது திருமகளை. இது அவள் செவ்விய திருமேனிபற்றிவந்த காரணப்பெயர். இனி இதற்கு ஆக்கத்தைச் செய்பவள் என்று காரணங் கூறுவாருமுண்டு. 'தவ்வை' என்றது திருமகளுக்கு முன் பிறந்தவளாகிய மூதேவியை உணர்த்தி நின்றது. 'தவ்வை' இது மூத்தாள் என்னும் பொருளது. வறுமைக்கும் துன்பத்திற்கும் உரிய தேவி திருமகளினும் மூத்திருத்தல் பற்றியே 'மூதேவி' என்ற பெயர் ஏற்பட்டமை காணத்தகும். 'தவ்வைக்கு' இது தவ்வைக்கு எனப்பொருள் தந்து நிற்றலின் இரண்டன் உருபு காண்க. உருபுப்பொருளில் மயங்கிநின்ற உருபுமயக்கம்.

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(பரி-உரை) அழுக்காறு என ஒரு பாவி-அழுக்காறென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாதபாவி, திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடும்-தன்னை யுடையானை இம்மைக்கட் செல்வத்தைக் கெடுத்து, மறுமைக்கண் நரகத்தில் செலுத்திவிடும் எ-று.

பண்பிற்குப் பண்பியில்லையேனும், தன்னையாக்கினானை இருமையுங்கொடுத்தல் கொடுமைபற்றி, அழுக்காற்றினைப் பாவியென்றார்; கொடியானைப் பாவி யென்னும் வழக்குண்மையின். இவை யாறுபாட்டானும் அழுக்காறுடையது குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) அழுக்காறென வொருபாவி - பொருமையென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவியானவன், (தன்னையுடையவனை) திருச்செற்று (இம்மையிலே அவனது) செல்வத்தைக்கெடுத்து, தீயுழியுய்த்துவிடுமை-மையிலே நரகத்தினிடத்துச் செலுத்திவிடுவான் எ-று.

(க-ரை) பொறுமையென்னும்பாவி தன்னைச்சேர்ந்தவன் செல்வத்தைக் கெடுத்தவனை நாகத்திற்றள்ளுவான் என்பதாம்.

(வி-ரை) இருமைப்பயன்களையும் கெடுக்கின்ற கொடுமைபற்றிப் பொறுமைப் பாவியென்றார். [இவை ஆறுபாட்டாலும் பொறுமை புடைமையினை குற்றம் சொல்லப்பட்டது.]

'அழுக்காறு என ஒருபாவி' என்றது உருவகம். அழுக்காறு என்னும் குணத்தை ஆளாக உருவகஞ் செய்யப் பெற்றமை காண்க. 'திரு' என்றது நும்மைக்கண் எய்தற்பாலதாகிய செல்வத்தை. 'தீயுழி' என்றது அம்மைக் கண் சேரற்பாலதாகிய நாகத்தை. 'உய்த்துவிடும்' என்றது வலிந்து தாக்கிக் கொண்டுபோய் நாகத்தை இட்டுவிடும் என்னும் பொருளது. இதில் 'விடும்' என்ற வினை தணிவுப்பொருள் தந்து நின்றது. (8)

அவ்விய நெஞ்சத்தா னக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

(பரி-உரை) அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்-கோட்டத்தினைப் பொருந்திய மனத்தையுடையவனதாக்கமும், செவ்வியான் கேடும் நினைக்கப்படும்-தனைச் செம்மையுடையவனது கேடும் உளவாயின் அவை ஆராயப்படும் என்று.

கோட்டம் சண்டழுக்காறு. உளவாயினென்பது எஞ்சிநின்றது. ஆக்கக் கேடென் கோட்டமுஞ் செம்மையும் எதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையார்ல் இதற்கேதுவாகிய பழவினை யாதென் றாராயப்படுதலின், நினைக்கப்படுமென்றார். "இம்மைச் செய்தன யானறி கல்வினை, யும்மைப் பயன்கொ ளாருதனி யுழந்திச், திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது" என வுணக்கப்பட்டவா றறிக.

(ப-ரை) அவ்வியநெஞ்சத்தான் - பொறுமையுள்ள மனத்தையுடையவ னது, ஆக்கமும்-செல்வமும், செவ்வியான்-பொறுமையில்லாத மனத்தை யுடையவனது, கேடும்-வறுமையும், (உண்டாஞல்) நினைக்கப்படும்-(அவை) ஆராயப்படும் எ-று.

(க-ரை) பொறுமையுள்ளவன் செல்வமும் பொறுமையில்லாதவன் வறுமையும், பழையவினையென் றெண்ணப்படும் என்பதாம்.

(வி-ரை) பொறுமையினுலே செல்வமும், பொறுமை யில்லாமையி னுலே கேடும் உண்டாகுதல், கூடாமையால் அறிவுடையார் இவை உண்டற்கு எதுவாகிய பழவினையாதென்று ஆராய்வாராதலின் நினைக்கப்படு மென்றார்.

'அவ்விய நெஞ்சத்தான்' என்றது அழுக்காறுடையவனை. 'செவ்வி' என்றது அழுக்காறிலானை. இதன்கண்வந்த உம்மைகள் இரண்டும் இறந்தவும்மைகள்,

(9)

அழுக்கற் றகன்ற ருரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தா ருமில்.

(பரி-உரை) அழுக்கற்று அகன்ற ருரும் இல்லை - அழுக்காற்றைச்செய்து பெரியராயினுமில்லை, அஃது இல்லார் பெருக்கத்தின் நீர்ந்தாரும் இல். அச்செயலிலாதார் பெருக்கத்தி னீக்கினுரு மில்லை எ-று.

இவை யிரண்டு பாட்டானும் கேடு மாக்கமும் வருதற்கேது ஒருங்கு கூறப்பட்டன.

(ப-ரை) அழுக்கற்று-பொருமைப்பட்டு, அகன்ருரும்-பெருகினவரும், இல்லை-இல்லை, அஃதிலார்-அச்செயலில்லாதவரும், பெருக்கத்தின்-பெருக்கத்திலிருந்து, நீர்த்தாரும்-நீக்கினவரும், இல்-இல்லை எ-று.

(க-ரை) பொருமையுடையோர் வறுமையையும், பொருமைவிட்டோர் செல்வத்தையும் அடைவர் என்பதாம்.

(வி-ரை) கேடும் பெருக்கமும் வருதற்கு ஏதுசொல்லியது. [இவை இரண்டு பாட்டானும் அக்குற்றமும் குணமும் சேர்த்துச் சொல்லப்பட்டன.]

'அழுக்கற்று' என்றது அழுக்காற்றைச்செய்து என்பதாம். 'அகன்ரு' என்றது செல்வமுதலியவற்றுல் பெருகியவர் என்பதாம். 'அஃது' என்ற அவ் அழுக்காற்றை. 'பெருக்கத்தில்' என்றது செல்வமுதலிய காலங்களில் பெருக்கத்தை.

17-ம் அதி-அழுக்காருமை-முற்றிற்று.

18-ம் அதிகாரம்-வெஃகாமை

(பரி-உரை) அஃதாவது: பிறர்க்குரிய பொருளை வௌவக்கருதாமை. பிறருடைமை கண்டவழிப் பொருமையேயன்றி அதனைத் தான் வௌவக் கருதுதலுங் குற்றமென்றற்கு இஃது அழுக்காருமையின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: பிறர்பொருளை வௌவுதற்கு, கினையாமையாவது பிறருடைமை கண்டவிடத்தே பொருமைப்படுதலேயல்லாமல் அதனைத் தான் வௌவுதற்கு கினைத்தலும் குற்றமென்றற்கு இது அதன்பின் வைக்கப்பட்டது.

நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(பரி-உரை) நடுவு இன்றி நன் பொருள் வெஃகின் - பிறர்க்குரிய கோடல் நமக்கு அறனன்றென்றும் நடுவுநிலைமையின்றி அவர் நன்பொ

ஒருவன் வெஃகுமாயின், குடி பொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்-அவ் வெஃகுதல் அவன் குடியைக்கெடச்செய்து பலகுற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும் எ-று.

குடியை வளரச்செய்து பல நன்மையும் பயக்குமியல்புபற்றி, வெஃகி னென்பார், நன்பொருள் வெஃகி னென்றார். பொன்ற வென்பது பொன்றி யெனத் திரிந்துநின்றது. செய்தென்பது சொல்லெச்சம்.

(ப-ரை) நடுவின்றி - (பிறர்க்குரிய பொருளைக்கொள்ளுதல் தமக்கு அறமல்லவென்னும்) நடுவுநிலைமையில்லாமல், நன்பொருள் - (அவரது) நல்ல பொருளை, வெஃகின் - (அபகரித்தற்கு) விரும்பினால், (அவ்விருப்பு) குடி பொன்றி - (அவன் குடியைக்கெடுத்து), குற்றமும் பல குற்றங்களையும், ஆங்கே-அப்போதே, தரும்-(அவனுக்குக்) கொடுக்கும் எ-று.

(க-ரை) பிறர்பொருளை விச்சிக்கும் இச்சை குடியைக் கெடுத்து பழிப் பையும் கொடுக்கும் என்பதாம்.

(வி-ரை) குடியை வளரச்செய்து பல நன்மைகளையும் உண்டாக்கு மியல்பையால் நன்பொருளென்றார். பொன்றியென்னும் தன்வினை பொன்று தென்னும் பிறவினைப் பொருளில் வந்தது.

'நன்பொருள்' என்றதற்கு அறவழியால் வந்த பொருள் என்பாரும் முண்டு. வெஃகல் - விரும்பல். 'குற்றமும்' என்றதன்கண் நின்ற உம்மை தொக்கது தழீஇய எச்ச உம்மை. 'ஆங்கே' என்றது நடுவின்றி நன்பொருள் வெஃகிய அப்பொழுதே என்னும் பொருளது. இது விரைவு குறித்தது. (1)

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

(பரி-உரை) படு பயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்-பிறர் பொருளை யாவிலும் தமக்கு வரும் பயனை விரும்பி அது வெளவுதற்குப் பழியின் மிகுந்த படுஞ் செயல்களைச் செய்யார், நடுவு அன்மை நாணுபவர்-நடுவு நிலைமையன்மையை அஞ்சுபவர் எ-று.

நடுவு-ஒருவன் பொருட்குப் பிறன் உரியனல்ல னென்னும் நடுவு.

(ப-ரை) நடுவன்மை - (ஒருவன் பொருளுக்குப் பிறன் உரியவனல்ல னென்னும்) நடுவுநிலையல்லாமைக்கு, நாணுபவர்-அஞ்சுவோர், (பிறர்பொருளை வவுதலினாலே) படுபயன் - (தமக்கு) வரும்பயனை, வெஃகி - விரும்பி, படுவ-பழியினிடத்தே பொருந்திய செய்கைகளை, செய்யார்-செய்யார்.

(க-ரை) பாவத்துக் கஞ்சுபவர் பொருளை விரும்பித் தீய செயல்களைச் செய்யார் என்பதாம்.

'படுபயன்' என்றது உண்டாகும் கலங்களை. 'பழிப்படுவ' பழிக்கப்படும் செயல்களாகிய தீயசெயல்களை. 'செய்யார்' இதில் ஆகாரம் எதிர்மறைப் பொருளது. 'நடுவன்மை' என்றது அறனல்லாதவற்றை என்னும் பொருளது. (2)

சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

(பரி-உரை) சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யார்-பிறர்பால் வெளவிய பொருளால் தாமெய்தும் கிலேயில்லாத வின்பத்தை விரும்பி அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார், மற்றின்பம் வேண்டுபவர்-அறத்தால் வரும் கிலேயுடைய வின்பத்தைக் காதலிப்பவர் எ-று.

பாவத்தான் வருதலின் அப்பொழுதே யழியுமென்பார், சிற்றின்பமென்றார், மற்றையின்பமென்பது மற்றின்பமென கின்றது.

(ப-ரை) மற்றின்பம்-கிலேயுடைய வின்பத்தை, வேண்டுபவர் - இச்சிப்பவர், சிற்றின்பம் - (பிறரிடத்தே அபகரிக்கப்பட்ட பொருளினுலே தாம் அடைவதாகிய) கிலேயில்லாத வின்பத்தை, வெஃகி - விரும்பி, அறனல்லாத செயல்களை, செய்யார்-(அவரிடத்தே) செய்யார் எ-று.

(க-ரை) பேரின்பத்தை யிச்சிப்பவர் சிற்றின்பத்திற் குரியவைகளை செய்யார் என்பதாம்.

(வி-ரை) பாவத்தால் வருதலால் அப்பொழுதே அழியுமென்றற்கு சிற்றின்பமென்றார்.

சிறிது அளவுகாலமே கின்று அழிதன் மாலேயதாதலின் சிற்றின்பமென்றார். 'அறனல்ல' என்றது தீச்செயல்களை. 'செய்யாரே' இதில் ஏகாரம் தேற்றப்பொருளது. 'மற்றின்பம்' என்றது பேரின்பத்தை. மற்று சுட்டு. சிற்றின்பத்திற்கினமாகிய பேரின்பத்தை உணர்த்தியமைகாண்க. கீன்று காலம் அனுபவிக்கப் பெறுதலினலும், அழிவில்லாமையாலும் பேரின்பமென்றுமிற்று.

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

(பரி-உரை) இலம் என்று வெஃகுதல் செய்யார் - யாம் வறிய மென்று கருதி அது நீர்தற்பொருட்டுப் பிறர் பொருளை விரும்புதல் செய்யார், புலம் வென்ற புன்மையில் காட்சியவர்-ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத காட்சியினையுடையார் எ-று.

வெல்லுதல்-பாவநெறிக்கட் செல்ல விடாமை. புலம்வென்ற புன்மையில் காட்சியவர்க்கு வறுமையின்மையின், வெஃகுதலு மில்லையாயிற்று. புன்மையில்காட்சி-பொருள்களைத் திரிபின்றி யுணர்தல்.

(ப-ரை) புலம்வென்ற - ஐம்புலன்களையும் வென்ற, புன்மையில் - குற்றமில்லாத, காட்சியவர்-அறிவுடையவர், இலமென்று-வறியேமென்று கினைந்து வெஃகுதல் செய்யார் - (அது நீர்தற்பொருட்டுப் பிறர்பொருளை) விரும்பு செய்யார் எ-று.

(க-ரை) ஐம்புலன்களை வென்றவர் வறியோமென்று பிறர் பொருளை விரும்பார் என்பதாம்.

(வி-ரை) ஐம்புலன்களை வெல்லுதல்-பாவவழிகளிலே செல்லவிடாமை. குற்றமில்லாத வறிவு-பொருளை உள்ளபடி யறிந்தவறிவாம். அப்படிப்பட்ட தர்க்கு வறுமை உண்டாகாமையால் பிறர் பொருளை விரும்பதலும் இல லாயிற்று.

'இலம்' இது பொருள் இல்லோம் என்னும் பொருளது. 'புலம் வென்ற' என்றது ஐம்புலன்கள்வழிச் செல்லாமையை உணர்த்தியது. 'புன்மையில் காட்சி' என்றது நிரிபற்ற ஞானக்காட்சியை. (4)

அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

(பரி-உரை) அஃகி அகன்ற அறிவு என்னும்-நுண்ணிதாய் எல்லா நூல்களினுஞ் சென்ற தம்மறிவு என்னபயத்ததாம், வெஃகி யார்மாட்டும் வெறிய செயின்-பொருளை விரும்பி யாவர்மாட்டும் அறிவோடுபடாத செயல் களை அறிவுடையார்ர் செய்வாயின் எ-று.

யார்மாட்டும் வெறிய செய்தலாவது தக்கார்மாட்டும் தகாதார்மாட்டும் நிந்தனவும் கடியனவும் முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமை யாகலின், அறிவென்னு மென்றார்.

(ப-ரை) அஃகி - நுட்பமானதாகி, அகன்ற - (எல்லா நூல்களிலும்) சென்ற, அறிவு-அறிவானது, என்னும்-என்னபயனையுடையதாம், வெஃகி-(பொருளை) விரும்பி, யார்மாட்டும் - யாவரிடத்தும், வெறிய - அறிவோடு பொருந்தாத செயல்களை, செயின்-(அறிவுடையோர்) செய்வாராயின் எ-று.

(க-ரை) யாவரிடத்தும் பொருளை யிச்சித்துத் தீமைசெய்தால் விளைகின் பயனென்ன என்பதாம்.

(வி-ரை) யாவரிடத்தும் அறிவோடு பொருந்தாத செயல்களைச் செய்தல்; யோக்கியரிடத்தும், அயோக்கியரிடத்தும், இழிந்தவையும், கடிய னவும், முதலானவை செய்தல், அறிவுக்குப் பயன் அவை செய்யாமை யென்பதால் அறிவென்னுமென்றார்.

'அஃகி' இது 'அஃகு' என்னும் பகுதி அடியாகப் பிறந்தது. அஃகல்-நுண்மை; சுண்டு குன்பமுடையதாகி என்னும் பொருள் தருவது. 'அஃகி அகன்ற அறிவு' என்றது குசை நுனி அதனினும் கூர்மையுடையதாகி எல்லா நூல்களும் நுழைந்து கண்டு விரிந்த அறிவு என்பதாம். 'யார்மாட்டும்' உம்மை முற்றும்மை. 'வெறிய' இது 'வெறுமை' என்னும் பண்படி பிறந்தது. (5)

அருள்வெஃஇ யாற்றின்க ணின்றுன் பொருள்வெஃஇ
பொல்லாத சூழக் கெடும். [ப்

(பரி-உரை) அருள் வெஃஇ ஆற்றின்கண் நின்றுன் - அருளாகிய அறத்தை விரும்பி அதற்கு வழியாகிய இல்லறத்தின்கணின்றவன், பொருள் வெஃஇப் பொல்லாத சூழக் கெடும்-பிறர் பொருளை யவாவி அதனை வருவிக்குஞ் சூற்ற தொழிலை எண்ணக் கெடும் எ-று.

இல்லற தொறியால் அறிவு முதிர்க்தழி யல்லது அறக்கப்படாமையின், அதனைத் தறவறத்திற்கு ஆறென்றுர். கெடுதல் - இரண்டறமுஞ் சோ விழத்தல். சூழ்ந்த தனையானே கெடுமெனவே, செய்தாற் கெடுஞ் சொல்லாமையே பெறப்பட்டது.

(ப-ரை) அருள்வெஃஇ-அருளாகிய அறத்தை விரும்பி, ஆற்றின்கண் (இல்லறமாகிய) அதன் வழியிலே, நின்றுன்-தங்கினவன், பொருள் வெஃஇ (பிறர்) பொருளை விரும்பி, பொல்லாத - (அதனைவருவிக்கும்) குற்றவழிகளை சூழ-எண்ண, கெடும்-கெடுவான் எ-று.

(க-ரை) அருளை யிச்சித்து நின்றவன் பொருளை யிச்சிக்கக் கெடுவான் என்பதாம்.

(வி-ரை) இல்லறவழியால் அறிவு முதிர்க்தவிடத்தே யல்லது அறக்கூடாமையால் அது அறவறத்தக்கு வழியெனப்பட்டது. கெடுதல் இரண்டறங்களையும் ஒரு சேரவிழத்தல் எண்ணிய வளவிலே கெடுமென அபகரித்தாற் கெடுதல் சொல்லவேண்டிய தில்லையாயிற்று.

'அருள்' என்றது ஈண்டு அறவறத்தை. என்னை, அறவிகட்கெயார்மும் ஒருபடித்தாக இச்சம் உண்டாகிடல் பற்றி என்க. 'ஆற்றின்க' என்றது ஈண்டு இல்லறத்தை; இதில் 'கண்' ஏழன் உருபு. 'நின்றுன்' தினையாலணையும் பெயர். 'பொல்லாத' என்றது தீவொறிகளை. சூழ்த வினைத்தல்.

வேண்டற்க வெஃஇயா மாக்கம் விளவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

(பரி-உரை) வெஃஇ ஆம் ஆக்கம் வேண்டற்க - பிறர்பொருளை யவாவி கொண்டு அதனாலாகின்ற ஆக்கத்தை விரும்பா தொழிக; விளவயின் மாண்டற்கு அரிதாம்-பின்னநுபவிக்குங்கால் அவ்வாக்கத்தின் பயன் கல்லில் ஆகலான் எ-று.

விளையென்பது முதனிலைத் தொழிற்பெயர். இவை ஏழு பாட்டா வெஃகுதலின் குற்றம் கூறப்பட்டது.

(ப-ரை) வெஃகி-(பிறர்பொருளை) விரும்பிக்கொண்டு, ஆம்-(அதனு) லுண்டாகின்ற, ஆக்கம்-பெருக்கத்தை, வேண்டற்க-வேண்டாதிருக்கக்கட வன், விளைவயின்-(பின்) அநுபவிக்கப்படும்போது, பயன்-(அப்பெருக்கத்தின்) பயன், மாண்டற் கரிதாம்-நன்றுகுதலில்லை ஆகலால் எ-று.

(க-ரை) பிறர்பொருளை யனுபவிக்கும்போது அது பயன்படாமையா லப்பொருளை விரும்பாதிருக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) விளை-முதனிலைத் தொழிற்பெயர். [இவ்வேழுபாட்டாலும் பிறர்பொருளை விரும்புதலின் குற்றஞ் சொல்லப்பட்டது.]

'வேண்டற்க' இது எவல் வினைமுற்று. 'ஆம்' இது 'ஆகும்' என்பதன் தொகுத்தல் விகாரம். 'விளைவயின்' இதில் 'வயின்' இது இடப்பொரு ளுருபு. 'மாண்டற்கு' இதில் 'மாண்' பகுதி. (7)

அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை வேண்டும் பிறன்கைப் பொருள்.

(பரி-உரை) செல்வத்திற்கு அஃகாமை யாதெனின்-சுருங்கன் மாலைத் ாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக்காரணம் யாதென்று ஒருவ னாயின், பிறன் வேண்டும் கைப்பொருள் வெஃகாமை - அது பிறன் வேண்டுங் கைப் பொருளைத் தான் வேண்டாமையாம் எ-று.

அஃகாமை - ஆகுபெயர். வெஃகாதான் செல்வம் அஃகாதென்ப ாயிற்று.

(ப-ரை) செல்வத்திற்கு-(குறைந்துபோந் தன்மையையுடைய) செல் த்துக்கு, அஃகாமை - குறையாதிருத்தற்காரணம், யாதெனின் - எதுவென் ருருவ) னாயின், (அது) பிறன்-பிறன், வேண்டும்-விரும்புகின்ற, கைப் பாருள்-கைப்பொருளை, வெஃகாமை-தான் வேண்டாமையாம் எ-று.

(க-ரை) குறையாத செல்வத்திற்குக் காரணம் பிறன்பொருளை விரும் மை என்பதாம்.

(வி-ரை) அஃகாமை அதன்காரணத்தை உணர்த்தலால் ஆகுபெயர். ன்பொருளை விரும்பாதவனது செல்வம் குறையா தென்பதாயிற்று.

'அஃகாமை' என்றது சுருங்காமை; அதாவது குறைவுபடாமை. 'பிறன் ாருள்' என்றதே போதியதாக இருக்க 'பிறன் கைப்பொருள்' என்றது னின் அறத்தில் ஈட்டிய பொருளை என்ற குறிப்பிற்றும். (8)

அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந் திறனறிந் தாங்கே திரு.

(பரி-உரை) அறன் அறிந்து வெஃகா அறிவுடையார்-இஃது அறனென் து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரை, திரு திறன் அறிந் தாங்கே சேரும் - திருமகள் தானடைதற்காங் கூற்றினை யறிந்து அக் கூற் ா சென்றடையும் எ-று.

அடைதற்காக்கூற காலமும், இடமும், செவ்வியும் முதலாயின. இவை பிரண்டுபோட்டாலும் வெஃகாமையின் குணங் கூறப்பட்டது.

(ப-ரை) அறனறிந்த - (இது) அறனென்றறிந்து, வெஃகா - (பிறர் பொருளை) விரும்பாத, அறிவுடையார்-அறிவுடையாரை, திரு-திருவானவன், திறனறிந்து-(தான்சேர்தற்கான்) திறத்தை அறிந்து, ஆங்கே-அத்திறத்தினால், சேரும்-சேருவான் எ-று.

(க-ரை) பிறன்பொருளை விச்சிபாத அறிவுடையவரை யிலக்குமி சேருவான் என்பதாம்.

(வி-ரை) அடைதற்காந்திறம், காலமும், இடமும், செவ்வியும், முதலாயின. [இவை பிரண்டுபோட்டாலும் பிறர்பொருளை விரும்பாமையின் குணம் சொல்லப்பட்டது.]

'அறனறிந்த' என்றது வெஃகாமையே பேர் அறம் என்று அறிந்து என்பதாம். 'வெஃக அறிவு' என்றது பிறன் பொருளை விரும்பாத அறிவை. 'திறன்' என்றது சேருந்திறனை. 'திறன்' என்றது காலம் இடம் முதலிய திறனை. 'ஆங்கே' என்றது அறிந்த அத்திறத்தானே என்பதாம். 'திரு' (9) என்றது திருமகளை.

இறலீனு மென்ணுது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

(பரி-உரை) எண்ணுது வெஃகின் இறல் ஈனும்-பின் விளைவ தறியாது ஒருவன் பிறன் பொருளை வெளவக் கருதின் அக்கருத்து அவனுக் கிறப்பையைப் பயக்கும்; வேண்டாமை என்னும் செருக்கு விறல் ஈனும்-அப்பொருள் வேண்டாமை யென்னுஞ் செல்வம் வெற்றியைப் பயக்கும் எ-று.

பகையும் பாவமும் பெருக்கலின் இறலீனு மென்றும், அப்பொருள் வேண்டி உழல்வோர் யாவரையுங் கீழ்ப்படுத்தலின் விறலீனு மென்றுங் கூறினார். செருக்கு-ஆகுபெயர். இதனால் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) எண்ணுது-(பின் விளைவதை) யெண்ணுமல், வெஃகின்-(பிறன்பொருள்) விரும்புவானாயின், (அவ்விருப்பம்) இறல்-அழிவை ஈனும் - (அவனுக்குத்) தரும், வேண்டாமை யென்னுஞ் செருக்கு - (அப் பொருளை) விரும்பாமையென்னுஞ் செல்வமானது, விறல் - வெற்றியை ஈனும்-தரும் எ-று.

(க-ரை) ஒருவன் பிறன்பொருளை இச்சிப்பதா லழிவும், இச்சியாமையால் வெற்றியும், வரும் என்பதாம்.

(வி-ரை) பகையும் பாவமும் வளர்த்தலால் இறலீனு மென்றும் பொ ளாசை கொண்டலைவோர்கள் யாவரையும் கீழ்ப்படுத்தலால், விறலீனு மென்று சொல்லினார். செருக்கு அதைத்தருஞ் செல்வத்தைக் காட்டலா லாகுபெயர். [இதனால் அக்குணமும் குற்றமும் சேர்த்துச் சொல்லப் பட்டன.]

'இறல்' என்றது அழிவை. 'எண்ணுதல்' என்றது விளையும் கேடுகளை எண்ணுதல் என்பதாம். 'விறல்' என்றது வலிமை. சண்டு வெற்றி என்னும் பொருளது. 'வேண்டாமை' இது பண்புப்பெயர் சண்டு பிறன் பொருளை வெஃகாமையை உணர்த்திற்று. 'செருக்கு' என்றது ஆகுபெயர் செருக்குதற்குக் காரணமாகிய செல்வத்தை உணர்த்தியது. (10)

18-ம் அதி-வெஃகாமை-முற்றிற்று.

19-ம் அதிகாரம்-புறங்கூறுமை

(பரி-உரை) அஃதாவது: காணுதவழிப் பிறரை யிகழ்ந் துரையாமை. மொழிக் குற்றம் மனக்குற்ற மடியாக வருதலான், இஃது அழுக்காறுமை வெஃகாமைகளின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: காணுதவிடத்தே பிறரை இகழ்ந்து பேசாமை யாம். வாய்மின்குற்றம் மனக்குற்றத்தின் வழியாகத் தோன்றலால், இது அழுக்காறுமை வெஃகாமைகளின் பின் வைக்கப்பட்டது.

அறங்கூறு னல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற லினிது.

(பரி-உரை) ஒருவன் அறம் கூறுன் அல்ல செயினும் - ஒருவன் அறன்று சொல்லுவனுஞ் செய்யாத பாவங்களைச் செய்யுமாயினும், புறங்கூறுன் என்றல் இனிது-பிறனைப் புறங்கூறு னென்று உலகத்தாராற் சொல்படுதல் நன்று எ-று.

புறங்கூறுமை அக்குற்றங்களா னிழிக்கப்படாது மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இதனால் அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது.

(ப-ரை) ஒருவன் ஒருவன், அறங்கூறுன்-அறனென்று சொல்லுவதனுப்யாலுகி, அல்ல-பாவங்களை, செயினும்-செய்தாலும், புறங்கூறுன்-(பிறரை) காணுதவிடத்தே இகழ்ந்துபேசான், என்றல்-என்று (உலகத்தோராலே) சொல்லப்படுதல், இனிது-நல்லது எ-று.

(க-ரை) ஒருவன் பாவங்களைச் செய்யினும், புறங்கூறுமையே நன்மையாதாம்.

(வி-ரை) புறங்கூறுமை அக்குற்றங்களால் தாழ்த்தப்படாமல் மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். [இதனால் அவ்வறத்தினது நன்மை சொல்லப்பட்டது.]

'புறங்கூறல்' இது ஒருவன் இல்லாத இட்த்து அவனைப் பழித்துக்கூறல் உணர்த்திற்று. இது வாக்குக் குற்றம். 'செயினும்' இதில் நின்ற உம் அல்லசெய்தல் கூடாதென்பதை உணர்த்தி நின்றது. 'என்றல்' இது உலகத்தாராற் சொல்லப்படாமையை உணர்த்தும். இக்குறளால் புறங்கூறல் எல்லாப் பாவத்திற்றும் தீயதென்பது உணர்த்தியதாம். (1)

அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

(பரி-உரை) அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீது - அறனென்ப தொன் றில்லையென அழித்துச் சொல்லி அதன்மேற் பாவங்களைச் செய்த லிற்றீமை யுடைத்து, புறன் அழீஇப் பொய்த்து நகை-ஒருவனைக் காணுத வழி இகழ்ந்தனையால் அழித்துச்சொல்லிக் கண்டவழி அவனோடு பொய்த்து நகுதல் எ-று.

உறழ்ச்சி கிரனிறை வகையாற் கொள்க. அழித்தல்-ஒளியைக்கோறல்.

(ப-ரை) அறனழீஇ - அறனென்ப தொன்றில்லையென அழித்துச் சொல்லி, அல்லவை செய்தலின்-(அதன்மேற்) பாவங்களைச் செய்தலினும், தீதே - தீமையுடையதேயாம், புறனழீஇ - (ஒருவனைக் காணுதவிடத்தே) இகழ்ந்து - பேசி, பொய்த்துநகை - (கண்டவிடத்தே அவனோடு) பொய்த்து மகிழ்தல் எ-று.

(க-ரை) ஒருவன் காணுவிடத்திகழ்ந்து கண்டவிடத்துப் புகழ்ந்து பேசுதல், பாவத்தைச் செய்தலினுங் கொடிது என்பதாம்.

(வி-ரை) அறத்தை யழித்தலினும், புறங்கூறுதலும், பாவங்களைச் செய் தலினும் பொய்த்து நகுதலும் தீயனவாம் என்றறிக. புறனழித்தல்-புறங்கூ ளியைக் கெடுத்தல்.

'அறனழீஇ' 'புறனழீஇ' என்பன சொல்லிசை அளபெடைகள். 'செ தலில்' இதில் இல் உருபு எல்லைப்பொருளில் வந்தது. 'பொய்த்துநகை' என்றது வஞ்சநகையை; அதாவது உள்ளொன்று புறம்பொன்றுகக்கொண் உறவாடலை உணர்த்தியதாம். 'அறனழீஇ' என்றது அறத்தின் ஒளியை கெடுத்தலை. 'புறனழீஇ' என்றது அகத்துப்பகையை ஒளித்துக் காட்டல் இனி 'புறனழீஇ' என்பதற்கு புறங்கூறி அற ஒளியைக் கெடுத்தல் என்பர்.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

(பரி-உரை) புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின்-பிறனைக் காணு வழி இகழ்ந்தனைத்துக் கண்டவழி அவற்கினியனாகப் பொய்த்து ஒருவனு வாழ்தலின், சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும்-அது செய்யாது சா அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும் எ-று.

பின் புறங்கூறிப் பொய்த்த லொழிதலின் சாதல் ஆக்கந்தருமென் ஆக்கம்-அஃதொழிந்தார் மறுமைக்க ணெய்தும் பயன். அறம் ஆகுபெ தருமென்பது இடவழுவமைதி.

(ப-ரை) புறங்கூறி - பிறனைக் காணுதவிடத்தே இகழ்ந்து, பொய் கண்டவிடத்தே அவனைப் புகழ்ந்து, உயிர்வாழ்தலின்-(ஒருவன்) உயி

தலிலும், சாதல்-(அது செய்யாமல்) உயிர்விடுதல், (அவனுக்கு) அறங்கூறும்-தரும நூல்களினாலே சொல்லப்பட்ட, ஆக்கம்-பயனை, தரும் - கொடுக்கும் எ-று.

(க-ரை) ஒருவன் பிறனை முன்புகழ்ந்தும் பின்னிகழ்ந்தும் பேசி யுயிர் வாழ்தலிலு மிறத்தலே கலம் என்பதாம்.

(வி-ரை) உயிர்விட்டபின் புறங்கூறிப் பொய்த்தலாகிய பாவம் நீங்கலால் சாதல் ஆக்கந்தருமென்றார். ஆக்கம்-அப்பாவஞ் செய்யாதவராலே மற்றமை யில் அடையப்படும் பயன். அறம், அதைச் சொல்லு நூலை யுணர்த்தலால் ஆகுபெயர்.

'பொய்த்துயிர் வாழ்தல்' என்றது கபடாட்பாடி உயிர்வாழ்தலை உணர்த் நின்று. 'சாதல்' என்றது உள்ளும் புறம்பும் ஒன்றாகின்ற சாதலை; இது தொழிற்பெயர்; தல் தொழிற்பெயர் விகுதி. 'வாழ்தலில்' இதில் 'இல்' உருபு யல்லைப்பொருளில் வந்தது. 'அறம்' என்றது அறநூலை உணர்த்தலின் ஆகுபெயர்.

(3)

கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(பரி-உரை) கண் நின்று கண் அறச் சொல்லினும்-ஒருவ னெதிரே நின்று கண்ணோட்டமறச் சொன்னாலும், முன் இன்று பின் நோக்காச் சொல் சொல்லற்க - அவனெதிரின்றிப் பின்வருங் குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லாதொழிக எ-று.

பின் ஆகுபெயர். சொல்வான் றொழில் சொன்மேலேற்றப்பட்டது. இவை மூன்று பாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவனை) கண்ணின்று-எதிரேநின்று, கண்ணற-கண்ணோட்ட மில்லாமல், சொல்லினும்-சொன்னாலும், முன்னின்று-(அவன்) எதிரில்லாமல், பின் னோக்காச்சொல் - பின்வருங் குற்றத்தை நோக்காத சொல்லை, சொல்லற்க-சொல்லாதிருக்கக் கடவன் எ-று.

(க-ரை) ஒருவனை முன்னிகழினும் பின்னிகழாதிருக்கக்கடவன் என்ப

(வி-ரை) பின் அதில்வருங் குற்றத்தைக் காட்டலால் ஆகுபெயர். சொல் லது நோக்குதற்றொழில் சொல்லின்மேல் ஏற்றப்பட்டது. கண்ணோட் டாட்சிணியம். [இவை மூன்றுபாட்டானும் புறங்கூறலின் கொடுமை யுலப்பட்டது.]

ன்னின்று' இது கண்ணுக்கு முன்னே நின்று என்பதாம். 'கண்ணற' கண்+அறு, என்ற இருசொல் ஒருசந்தி. இதற்கு கண்ணோட்டம்) என்ப ாருளாம் 'கண்' என்றது ஈண்டு கண்ணோட்டத்தை. ணோட்டம்-தாட்சிண்யம்) இது ஆகுபெயர். கண்ணுக்குரிய இயற்கைக்

குணம் கண்ணோட்டம் ஆகும். இதனுள்ளே பதினெண்கீழ் கணக்கிலும் 'கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்' என்று முழங்கிற்று. 'சொல்லிலும்' என்றதன்கண் நின்ற உம்மை கண்ணுக்கு முன்நின்று கண்ணறச் சொல்லல் கூடாதென்பதை உணர்த்தியதாகும் ஆம். 'சொல்லற்க' இது முன்னிலை எதிர்மறை ஏவல் வினைமுற்று. 'முன்னின்று' இது முன்+இன்று என்ற இருசொல் ஒருசந்தி; முன்னுலே இல்லாத என்ற பொருளது; அதாவது புறத்தே என்பதாம். 'பின்னோக்கா' இது பின்+நோக்கா என்ற இருசொற் சந்தி. இதற்குப் பின்வரும் பழி பாவங்களை நோக்காத என்பது பொருளாம்.

அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

(பரி-உரை) அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை-புறஞ்சொல்லுவ ஒருவன் அறனை நன்றென்று சொல்லிலும் அது தன்மனத்தானுஞ் சொல்லுகின்றானல்லனென்பது, புறஞ்சொல்லும் புன்மையால் காணப்படும் அவன் புறஞ்சொல்லுதற்குக் காரணமான மனப்புன்மையானே அறியப்படு எ-று.

மனத் தீதாகலின் அச்சொற் கொள்ளப்படா தென்பதாம்.

(ப-ரை) (புறங்கூறுவோனொருவன் அறம் நன்றென்று வாயினா சொல்லிலும்) அறஞ்சொல்லும்-அறத்தை அப்படிச் சொல்லுதற்கு, (எ நெஞ்சத்தானன்மை - மனத்தையுடையவ னல்லாதவனு மிருக்கையான புறஞ்சொல்லும் - அப்புறங்கூறுதற்குக் காரணமாகிய, புன்மையால்-(மன புன்மையாலே, காணப்படும்-(அறிவுடையோரால்) அறியப்படும் எ-று.

(க-ரை) தரும நன்றென்பவன் மனதிலே தரும மில்லாமை புறங்கூ தலா லறியப்படும் என்பதாம்.

(வி-ரை) மனம் தீதாயிருக்கையால் அறம் நன்றென்று சொல்லு சொல் அங்கீகரிக்கப்படா தென்பதாம்.

'அன்மை' இது அல்லாமை என்னும் பொருளது. 'அறஞ் சொல்ல என்றது அறம் நன்று என்று சொல்லும் என்பதாம். 'நெஞ்சத்தா னன்ம இது (நெஞ்சத்தான்+அன்மை) அறங் கூறும் தூய மனத்தவன் அல்ல என்ற பொருளது. 'புன்மை' என்றது மனத்தின் இழிதன்மையை உ நிற்று.

பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும்.

(பரி-உரை) பிறன் பழி கூறுவான் - பிறனொருவன் பழியை புறத்துக் கூறுமவன், தன் பழியுள்ளும் திறன்தெரிந்து கூறப்படு பழி பலவற்றுள்ளும் உளவும் திறமுடையவற்றைத் தெரிந்து கூறப்படும் எ-று.

புறத்தென்பது அதிகாரத்தாற் பெற்றும். இது வருவென்றவற்றிற்கு மொக்கும். கிறன் ஆகுபெயர். தன்னைப் புறக்கூறியவாறு கேட்டான் அக் றியாற்கு அவ்வளவன்றி அவனிறந்துபட்டு உலைபுந் கிறத்தனவாகிய பழிகளை நாடி எதிரே கூறுமாகலின் கிறன்றெரிந்து கூறப்படுமென்றார்.

(ப-ரை) பிறன்பழி-பிறனொருவனது பழியை, கூறுவான்-(அவனைக் ாணுதவிடத்தே) சொல்லுவோன், தன் பழியுள்ளும்-தனது (பல) பழிக ருள்ளும், கிறன்-(வருந்தும்) விதமுடையவைகளை, தெரிந்து-ஆராய்ந்து, றப்படும்-(அவனாலே) சொல்லப்படுவான் எ-று.

(க-ரை) பிறன் குற்றத்தைச் சொல்லுவோன் தன் குற்றம் பிறனாற் சால்லப்படுவான் என்பதாம்.

(வி-ரை) கிறமுடையவைகளைத் கிறனென்றலால் ஆகுபெயர். காணுத டத்தைத் தன்னைக்குறித்துப் பிறனாலே சொல்லப்பட்ட பழியைக் கேட்ட ன் அவன் மிகவும் வருந்தும்படி அதிகமாகிய பழிகளை ஆராய்ந்து எதிரே சால்லுவானுதலால் கிறன்றெரிந்துக் கூறப்படுமென்றார்.

'பழி' என்றது பழிக்கத் தகுந்த காரியங்களை. 'பிறன்பழி கூறுவான்' ன்றதற்கு பிறன் பழியைக் காணுத இடத்துக் கூறுவான் எனக் காணுத -த்து என்று வருவித்துப் பொருள் உரைக்கப்பெற்றது. 'கிறன்' என்றது ட்டவுடன் மனமடிந்து சாகவைக்குக் கிறத்தையுடைய பழியை என்பதாம். றப்படும்' என்ற இடத்து புறங்கூறுவான் முன்னின்றே புறங்கூறப்பட்டவ ும் பிறராலும் கூறப்படுவான் என்பது பொருளாம். (6)

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
ட்பாட நேற்ரு தவர்.

(பரி-உரை) பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்-தம்மைவிட்டு நீக்குமாற் புறங்கூறித் தங்கேளிரையும் பிரியப்பண்ணுவர், நகச்சொல்லி கட்பாடல் ாறுதவர்-கூடி மகிழுமாறு இனிய சொற்களைச்சொல்லி அயலாரோடு ாடலை அறியாதார் எ-று.

கிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கேளிரையும் பிரிப்பரென்ற கருத் , அயலாரோடு மென்பது வருவித் துரைக்கப்பட்டது. அறிதல்-தமக் யென்றறிதல். "கடியு மிடன்நேற்ரு ன்சோர்ந்தனன் கை" என்புழிப் ச் நேற்ரூமை தன்வினையாய் நின்றது. புறங் கூறுவார்க்கு யாவரும் ாவரென்பது கருத்து.

ப-ரை) நகச்சொல்லி-(கூடி மகிழும்படி) இனிய சொற்களைச்சொல்லி, -ல்-(அயலாரோடு) சினைகளுசெய்தலை, நேற்ரூதவர்-(தமக்கு உறுதி) அறியாதவர், பகச்சொல்லி-(தம்மைவிட்டு) நீக்கும்படி புறங்கூறி, (நமது) சுற்றத்தாரையும், பிரிப்பர்-பிரியப்பண்ணுவர் எ-று,

(க-ரை) மகிழும்படி சொல்லிச் சிநேகஞ்செய்தலை யறியாதவர் புறங்கூறி புறவினரைப் பிரிப்பர் என்பதாம்.

(வி-ரை) உம்மை விகாரத்தால் தொக்கது. கேளிரையும் பிரிப்பரென்ற கருத்தால் அயலாரோடென்பது பெருவிக்கப்பட்டது. தேற்றாதவரென்னும் பிறவினை தேறாதவரென்னுந் தன்வினைப்பொருளில் வந்தது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து.

'பக' இது தம்மை விட்டுப் பிரிந்து நீங்க என்ற பொருளது. இது 'பகு' என்னும் பகுதியடியாகப் பிறந்த வினையெச்சம். 'கேளிர்' என்றது புறங்கூறுவாரது கேளிரை. கேளிர்-உறவினர்; இது கேள் என்னும் பகுதி அடியாகப் பிறந்த பலர்பாற் பெயர். 'நக' இது மகிழ்ச்சிகொள்ளுமாறு என்ற பொருளதாம்; 'நகை' பகுதி. 'நகச்சொல்லலாவது' இனிய சொற்களைக் கூறல். இதனானன்றோ இவ்வாசிரியர் இனியவைகூறல் என்ற அதிகாரத்தில் "இனிய வுளவாக இன்னாதகூறல் கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" என்றார்.()

துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா
ரென்னைகொ லேதிலார் மாட்டு.

(பரி-உரை) துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்-தம்மொடு செறிதாரது குற்றத்தையும் அவர் புறத்துத் தூற்று மியல்பினையுடையார், ஏதிலார் மாட்டு என்னைகொல்-அயலார்மாட்டுச் செய்வது யாதுகொல்லோ எ-று.

தூற்றுதல்-பலருமறியப் பரப்புதல். அதனிற் கொடியது பிறிதொன்று காணாமையின் என்னைகொலென்றார். செய்வதென்பது சொல்லெச்சம். என்னர்கொலென்று பாடமோதி, எவ்வியல்பினராவரென் றுரைப்பாரு முளர்.

(ப-ரை) துன்னியார்-(தம்மோடு) நெருங்கினவரது, குற்றமும்-குற்றத்தையும், தூற்றும்-(அவரைக் காணாதவிடத்தே) தூற்றும், மரபினார்-இயல்பையுடையவர், ஏதிலார்மாட்டு - அயலாரிடத்துச் (செய்வது), என்னைகொல்-யாதோ எ-று.

(க-ரை) உறவினர் குற்றத்தையுந் தூற்றுவோர் அயலார் குற்றத்தையெப்படித் தூற்றார் என்பதாம்.

(வி-ரை) தூற்றுதல் - பலரும் அறியப்பரப்புதல். அத்தூற்றுதலினும் கொடிய செயல் வேறொன்றுங் காணாமையால் என்னைகொலென்றார். செய்தென்பது-சொல்லெச்சம்.

'துன்னியார்' என்றது தம்மோடு நெருங்கி ஒருங்கிருக்கும் உறவினரை. இதற்கு 'துன்னு' பகுதி. 'குற்றமும்' ஈண்டு உம்மை உயர்வுச் சிறப்புப்பொருளது. 'தூற்றல்' என்றது பலரறியக்கூறலை. இதனை "* * *—பிறர்ப்பி சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து - யார்யார்க்குந் தாழ்ச்சி சொல்லல்" என்ற ஆன்றோர் வாக்கானும் அறிக. 'மரபு' என்றது ஈண்டு குண இயல்பை. 'மாட்டு' இது இடப்பொருள் தந்தது.

அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

(பரி உரை) புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை-பிறர் நீங்கினவளவு பார்த்து அவர் பழிப்புரையை உரைப்பானது உடற்பாரத்தை, வையம் அறன் நோக்கி ஆற்றுங்கொல்-நிலம் மிகக்கொடியது பொறுத்தலே எனக் கறமாவதெனக் கருதிப் பொறுக்கின்றதுபோலும் எ-று.

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற்கரிதென்னுங் கருத்தால் அறனோக்கி யாற்றுங்கொலென்றார். இவை ஐந்துபாட்டானும் புறங்கூறுவார்க் கெய்துங் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) புறனோக்கி-பிறர் நீங்கினவளவு பார்த்து, புன்சொல்-(அவரது) பழிப்புச்சொல்லை, உரைப்பான் - சொல்லுவோனது, பொறை - (உடற்) பாரத்தை, வையம்-பூமியானது, அறனோக்கி-(இக்கொடியதைச் சுமத்தலே எனக்கு) அறமாவதென்று நினைத்து, ஆற்றுங்கொல்-சுமக்கின்றதுபோலும் எ-று.

(க-ரை) பூமியானது பொறாமைகூறுவோ னுடலைத் தருமத்தைக் குறித்துச் சுமப்பதுபோலும் என்பதாம்.

(வி-ரை) பூமிக்கு எல்லாப்பொருள்களையும் சுமத்தல் சுபாவமாயினும், புறங்கூறுவானைச் சுமப்பது தகாதென்னுங் கருத்தால் அறனோக்கி யாற்றுங்கொல் வையமென்றார். [இவை ஐந்துபாட்டாலும் புறங்கூறுவாருக்கு உண்டாகும் குற்றம் சொல்லப்பட்டது.]

'ஆற்றும்' என்றது பொறை ஆற்றலை. 'கொல்' இது வினாப்பொருளில் வந்தது. 'புறனோக்கி' என்றது அவன் இல்லாத இடத்தே என்பதாம். 'புன்சொல்' என்றது பழிப்புரையை. 'பொறை ஆற்றுங்கொல்' எனக்கொண்டு கூட்டிப் பொருளுரைக்கப்பெற்றது. 'வையம்' இது பூமிக்கு பொருள்கள் வைப்பதற்கு ஆதாரமாக இருக்குங் காரணம்பற்றிவந்த காரணப்பெயர். (9)

ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

(பரி-உரை) ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்-ஏதிலாரைப் புறங்கூறுவார் அதற்கு அவர் குற்றங் காணுமாறுபோலப் புறங்கூறக்கிய தங்குற்றத்தையுங் காண வல்லராயின், மன்னும் உயிர்க்குத் தீதுண்டோ-அவர் நிலைபேறுடைய வுயிர்க்கு வருவதொரு துன்பமுண்டோ வாறு.

நடுவுநின்று ஒப்பக்காண்ட லருமைநோக்கிக் காண்கிற்பி னென்றும், நடவழி யொழிதலிற் பாவமின்றாம். ஆகவே வரும் பிறவிகளினுந் துன்பமுண்டாவென்பது நோக்கி உயிர்க்குத் தீதுண்டோவென்றுங் கூறினார். இனாற் புறங்கூற் றொழிதற்கு உபாயங் கூறப்பட்டது.

(ப-ரை) (புறங்கூறுவோர் அதுசெய்தற்கு) ஏதிலார் குற்றம்போல்-அயலோரது குற்றத்தைப்போல், தங்குற்றம்-(அப்புறங் கூறுதலாகிய) தமது குற்றத்தையும், காண்கிற்பின் - காணமாட்டுவாராயின், மன்னு முயிர்க்கு-அவரது நிலைபெற்ற உயிர்க்கு, தீது-(வருவது) ஒரு துன்பம், உண்டோ-உண்டாகுமோ எ-று.

(க-ரை) அயலார் குற்றத்தைப்போலத் தங்குற்றத்தை யாராயின் உயிர்க்குத் துன்பமில்லை என்பதாம்.

(வி-ரை) நடுவு நிலையாயிருந்து ஒப்பக்காணுத லருமையாதலின் காண்கிற்பினென்றும், கண்டவிடத்தே புறங்கூறாமையால் வருபிறவிகளினும் துன்பப்படாரென்பதைக்குறித்து உயிர்க்குத் தீதுண்டோவென்றும் சொல்லினார். [இதனால் புறங்கூறுதலை விடுதற்கு உபாயம் சொல்லப்பட்டது.]

'தம்குற்றம்' என்றது தம்முடைய புறங்கூறலாகிய குற்றத்தை. 'குற்றம்' இது 'குன்று' என்னும் பகுதி அடியாகப் பிறந்தது. அறத்தினின்றும் குறைவுபட்ட செயல், அறம் குன்றிய செயல் என்பதாம். 'காண்கிற்பின்' இது கண்டால் என்னும் பொருளது. இதில் 'கில்' இடைச்சொல். (10)

19-ம் அதி-புறங்கூறாமை-முற்றிற்று.

20-ம் அதிகாரம்-பயனிலசொல்லாமை

(பரி-உரை) அஃதாவது: தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச்சொல்லாமை. பொய், குறளை கடுஞ்சொல், பயனில்சொல் என வாக்கின்கணிகழும் பாவ நான்கனுள், பொய் துறந்தார்க்கல்லது ஒருதலையாகக் கடியலாகாமையின், அஃதொழித்து இல்வாழ்வாராற் கடியப்படும் ஏனை மூன்றனுள் கடுஞ்சொல் இனியவை கூறலானும், குறளை புறங்கூறாமையானும், விலக்கி நின்ற பயனில்சொல் இதனால் விலக்குகின்றாராகலின் இது புறங்கூறாமையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தமக்கும் பிறர்க்கும் அறம் பொரு ளின்பங்களுள் ஒன்றையுந் தாராத சொற்களைச் சொல்லாமையாம். பொய் குறளை கடுஞ்சொல் பயனில்சொல் என வாக்கினிடத்தே உண்டாம் பாவம் நான்கினும் பொய் துறந்தோர்க்கு அல்லது பற்றற விடக்கூடாமையால் அதனை ஒழித்து இல்வாழ்வாரால் விடக்கூடுமவையாகிய மற்றை மூன்றினுள் கடுஞ்சொல் இனியவை கூறலாலும், குறளை புறங்கூறாமையாலும், விலக்கிநின்ற பயனில்சொல்லை இதனால் விலக்குகின்றாராகலால் இது புறங்கூறாமையின்பின் வைக்கப்பட்டது.

பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(பரி-உரை) பல்லார் முனியப் பயன் இல சொல்லுவான்-அறிவுடையார் பலருங்கேட்டு வெறுப்பப் பயனிலவாகிய சொற்களைச் சொல்லுவான், எல்லாரும் என்னப்படும்-எல்லாராலு மிகழப்படும் எ-று.

அறிவுடையார் பலரும் வெறுப்பவே ஒழிந்தாராலும் இகழப்படுதலின், எல்லாரு மென்னப்படு மென்றார். மூன்றனுருபு விகாரத்தாற் றொக்கது.

(ப-ரை) பல்லார்-(அறிவுடையோர்) பலரும், முனிய-(கேட்டு) வெறுக்க, பயனில-பயனில்லாதசொற்களை, சொல்லுவான்-சொல்பவன், எல்லாராலும், என்னப்படும்-இகழப்படுவான் எ-று.

(க-ரை) பயனில்லாச் சொற்களைச் சொல்பவன் யாவராலு மிகழப்படுவான் என்பதாம்.

(வி-ரை) அறிவுடையோர் பலரும் வெறுக்கவே மற்றோரும் இகழ்வாராகலால் எல்லாரு மென்னப்படுமென்றார்.

'சொல்லுவான்' இது வினையாலணையும் பெயர். 'பல்லார்' இது அறிவுடைய பலரும் என்னும் பொருளது. 'பல்லாரும்' என்றதன்கண் நின்ற உம்மை விகாரத்தாற் றொக்கது. 'எல்லாரும்' என்றது அறிவுடையார் அறிவிலார் ஆகிய எல்லாராலும் என்ற பொருளது. இதன்கண் நின்ற உம்மை முற்றும்மை.

(1)

பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

(பரி-உரை) பயன் இல பல்லார்முன் சொல்லல்-பயனிலவாகிய சொற்களை அறிவுடையார் பலர்முன்பே ஒருவன் சொல்லுதல், நயன் இல நட்டார்கண் செய்தலின் தீது - விருப்ப மிலவாகிய செயல்களைத் தன்னட்டார்க்குச் செய்தலினும் தீது எ-று.

விருப்பமில-வெறுப்பன. இச்சொல் அச்செயலினும் மிக விகழற்பாடுடைக்கு மென்பதாம்.

(ப-ரை) பல்லார்முன் - (அறிவுடையோர்) பலர்முன்னே, பயனில-பயனில்லாத சொற்களை, சொல்லல்-(ஒருவன்) சொல்லுதலானது, நட்டார்கண்-(தன்) நட்பாளரிடத்தே, நயனில-விருப்பமில்லாத செயல்களை, செய்தலின்-செய்தலினும், தீது-குற்றமாம் எ-று.

(க-ரை) பயனிலாச் சொற்களைச் சொல்லுதல் நேரேகாரிடத்துச் செய்யுமையினுந் தீது என்பதாம்.

(வி - ரை) விருப்பமில்லாத செயல்கள் வெறுக்கப்படு செயலாம், சொல் அச்செயலைக்காட்டிலும் மிகவும் இகழப்படுதலை உண்டாக்குமென்பதாம்.

'பயன் இல' இதில் 'இல' என்பது 'இல்லாத' என்றுஞ் சொல் இடை புள் கடைபுக் குறைத்து நின்றது. 'ஈட்டார்' இது ஈன் என்னும் பகுதி அடி யாகப் பிறந்த பலர்பாற்பெயர். 'செய்தலில்' இதில் 'இல்' உருபு எல்லைப் பொருளது. (2)

நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

(பரி-உரை) பயன் இல பாரித்து உரைக்கும் உரை-பயனிலவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்கு முரைதானே, நயன் இலன் என்பது சொல்லும்-இவன் நீதியில னென்பதனை உரைக்கும் எ-று.

உரையால் இவன் நயனில னென்ப தறிபலா மென்பார், அதனை உரைமேலேற்றி உரைசொல்லு மென்றார்.

(ப-ரை) பயனில - பயனில்லாத பொருள்களை, பாரித்து - விரித்து, உரைக்குமுரை-(ஒருவன்) உரைக்கும் உரையானது, நயனிலனென்பது (இவன்) நீதியில்லாதவ னென்பதனை, சொல்லும்-அறிவிக்கும் எ-று.

(க-ரை) பயனில்லாச்சொல் சொல்லுவோனை நீதியில்லாதவ னென்பதை அறிவிக்கும் என்பதாம்.

(வி-ரை) இப்படிப்பட்ட உரையினாலே இவன் நீதியில்லாதவனென்பதை அறியலாமென்றதற்கு அதனை உரைமேலேற்றி உரைசொல்லு மென்றார்.

'நயனிலன்' இது எவராலும் விரும்பப்படும் நீதி இல்லாதவன் என்னும் பொருளில் வந்தது. 'பாரித்து' இது விரித்து என்னும் பொருளது. இது 'பருமை' என்னும் பண்படியாகப் பிறந்த வினையெச்சம். (1)

நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

(பரி-உரை) பயன் சாராப் பண்பு இல் சொல் பல்லாரகத்து - பயனெடுபடாத பண்பில் சொற்களை ஒருவன் பலரிடைச் சொல்லுமாயின், நயன் சாரா நன்மையின் நீக்கும்-அவை அவர்மாட்டு நீதியொடு படாவன அவனை நற்குணங்களி னீக்கும் எ-று.

பண்பு இனிமையும் மெய்ம்மையு முதலாய சொற்குணங்கள். சொல்லுமாயி னென்பதும், அவர்மாட்டென்பதும், எச்சமாக வருவிக்கப்பட்டன.

(ப-ரை) பயன்சாரா - பயனெடு பொருந்தாத, பண்பில்சொல் - குணமில்லாத சொற்களை, பல்லாரகத்து - பலரிடத்தே (ஒருவன் சொல்லுமாயின் அவை அவரிடத்தே) நயன்சாரா-நீதியோடு-பொருந்தாதவையாகிய நன்மையின்-நற்குணங்களிலிருந்து, நீக்கும்-(அவனை) நீக்கும் எ-று.

(க-ரை) பயனில்லாச் சொல் வழங்குவோனை நற்குணங்களிலிருந்து நீக்கும் என்பதாம்.

(வி-ரை) பண்பு இனிமை மெய்மை முதலாகிய சொற்குணங்கள். சொல்லுவானுயின் அவனிடத்தே என்பவை-சொல்லெச்சங்கள்.

'சாரா' என்ற சொல் இருமுறை ஒரே அடியில் வந்தது சொற்பொருட் பிறிதின்மையணி. 'சொல்' என்றது எழுவாயாகின்றது நீக்கும் பயனிலை. ()

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

(பரி-உரை) பயன் இல சீர்மையுடையார் சொலின்-பயனிலவாகிய சொற்களை இனிய நீர்மையுடையார் சொல்லுவராயின், சீர்மை சிறப்பொடு நீங்கும்-அவரது விழுப்பமும் அதனால் வரும் நன்குமதிக்கற்பாடும் உடனே நீங்கும் எ-று.

நீர்மை-நீரின்றன்மை. சொலினென்பது சொல்லாமையை விளக்கிற்று.

(ப-ரை) பயனில-பயனில்லாத சொற்களை, நீர்மையுடையார்-குணத் தன்மையையுடையவர், சொலின்-சொல்லுவாராயின், சீர்மை-(அவரது) மேன்பாடானது, சிறப்பொடு-(அதனால்வரும்) நன்குமதிக்கப் படுதலுடனே, நீங்கும்-(அவரிடத்திருந்து) நீங்கும் எ-று.

(க-ரை) நற்குணமுடையார் பயனில்லாதவைகளைப் பகரிலவர் மேன்மையும் மதிப்பும் குறையும் என்பதாம்.

(வி-ரை) சொலினென்பது, அவரது சொல்லாமையைக் காட்டி நின்றது.

'சீர்மை' பண்புப்பெயர்; இது உயர்வாந் தன்மையை உணர்த்திற்று. 'சிறப்பு' என்றது அவர் உயர்வால் எய்திய புகழை உணர்த்திற்று. 'நீர்மை' என்றது இனிய குணப்பண்பை. 'சொலின்' என்ற எச்சத்தால் நீர்மையுடையார் பயனில சொலார் என்பது பெறப்படும். (5)

பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

(பரி-உரை) பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல்-பயனில்லாத சொற்களைப் பலகாலுஞ் சொல்லுவானை மகனென்று சொல்லற்க, மக்கள் பதடி எனல்-மக்களுட் பதரென்று சொல்லுக எ-று.

அல் விருதி வியங்கோள், முன் எதிர்மறையினும், பின் உடம்பாட்டி வந்தது. அறிவென்றும் உள்ளீடின்மையின், மக்கட்பதடி யென்றார். வ ஆறு பாட்டாலும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங் ப்பட்டது.

(ப-ரை) பயனில்சொல் - பயனில்லாத சொற்களோ, பாராட்டுவானை. (பலதாரமும்) சொல்லுவோனை, மகனெனல்-மனிதனென்று சொல்லாதே, மக்கட்பதடியெனல்-மனிதருக்குள்ளே பதனென்று சொல்லக்கடவாய் எ-று.

(க-ரை) பயனிலாச் சொற்களோச் சொல்பவனை மக்களுள் பதனென்று சொல் என்பதாம்.

(வி-ரை) எப்படி பதருக்கு அரிசியாகிய உள்ளீடு இல்லையோ, அப்படி அவருக்கு அறிவாகிய உள்ளீடு இல்லாமையால் மக்கட்பதடி யென்றார். [இவை ஆறுபாட்டாலும் பயனில்லாத சொற்களோச் சொல்லுதலின் குற்றம் சொல்லப்பட்டது.]

'பாராட்டுவானை' இதில் 'பாராட்டல்' என்றது விரும்பிப் பல்காலும் கூறலை உணர்த்திற்று. 'மகனெனல்' இதில் 'எனல்' என்றது என்று கூறுதலென்னும் பொருளது. 'பதடி' இது இக்காலத்துப் 'பதர்' என வழங்கும். உள்ளீடில்லாத தானியமணிக்கு உரிய பதர் என்ற சொல்லாற் கூறியதால் உள்ளீடாகிய அறிவு அற்றவன் என்பதாம். 'எனல்' இது என்று கூறுதல் என்னும் பொருள்தந்து நின்றது. (6)

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

(பரி-உரை) நயன் இல சான்றோர் சொல்லினும் சொல்லுக-நீதியோடு படாத சொற்களைச் சான்றோர் சொன்னாராயினும், அஃதமையும்; பயன் இல சொல்லாமை நன்று-அவர் பயனிலவற்றைச் சொல்லாமை பெறின் அது நன்று எ-று.

சொல்லினுமெனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றினு பயனில நீயவென்பதாம்.

(ப-ரை) சான்றோர்-அறிவுடையோர், நயனில-நீதியோடு பொருந்தா சொற்களை, சொல்லினும் - சொன்னாலும், சொல்லுக - சொல்லக்கடவ பயனில - பயனில்லாதசொற்களை, சொல்லாமை - சொல்லாமை (பெறின் நன்று-(அது) நன்று எ-று.

(க-ரை) அறிவுடையோர் நீதியில்லாச் சொற்களைச் சொன்னா பயனிலாச் சொற்களைச் சொல்லாமை நல்லது என்பதாம்.

(வி-ரை) சொல்லினுமெனவே சொல்லாமை பெறப்பட்டது. நய லாத சொல்லினும் பயனில்லாத சொல் நீதென்பதாம்.

'நயனில' என்றது நீதியோடு பொருந்தாத சொற்களை. 'சொல்லி என்றதன்கண்நின்ற உம்மை சொல்லுதல் கூடாது என்னும் பொருள் நின்றது. 'சான்றோர்' இது அறிவு மிக்கோர் என்னும் பொருளது. 'சால்' என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயர்.

அரும்பய னுயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். (8)

(பரி-உரை) அரும் பயன் ஆயும் அறிவினர்-அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவினையுடையார், பெரும்பயன் இல்லாத சொல் சொல்லார்-மிக்க பயனுடைய வல்லாத சொற்களைச் சொல்லார் எ-று.

அறிதற்கரிய பயன்களாவன வீடுபேறும், மேற்கதிச் செலவும் முதலாயின. பெரும்பய னில்லாத வெனவே, பயன் சிறிதடையனவும் ஒழிக்கப்பட்டன.

(ப-ரை) அரும்பயன்-அறிதற்கரியபயன்களை, ஆயும்-ஆராயவல்ல, அறிவினர்-அறிவையுடையார், பெரும்பயனில்லாத சொல்-மிகுந்த பயனில்லாத சொற்களை, சொல்லார்-சொல்லார்கள் எ-று.

(க-ரை) அறிவுடையார் பயன்படாச் சொற்களைச் சொல்லார் என்பதாம்.

(வி-ரை) அறிதற்கரியபயன்களாவன-முத்திபேறு, மேற்கதி யடைவு முதலானவை. பெரும்பயனில்லாத சொல்லென்றதனால் சிறிது பயனுடைய சொல்லும் தள்ளப்பட்டது.

'அரும்பயன்' இது அருமைப்பயன் என்னும் பொருளது. அருமைப் பயன் என்றது வீட்டையும், வீட்டுநெறியையும் ஆம்; அதாவது கடவுண் ஞானத்தை. 'ஆயும்' என்றது விசாரித்தலை.

பொருளார்ந்த பொச்சாந்துஞ்சொல்லார் மருளார்ந்த
மாசறு காட்சி யவர். (9)

(பரி-உரை) பொருள் நீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்-பயனி வீங்கிய சொற்களை மறந்துஞ் சொல்லார், மருள் நீர்ந்த மாசு அறு காட்சியவர்-மயக்கந்தி வீங்கிய தூய அறிவினையுடையார் எ-று.

தூயவறிவு-மெய்யறிவு. மருளார்ந்த வென்னும் பெயரெச்சம் காட்சியவர்என்னுங் குறிப்புப்பெயர் கொண்டது. இவை மூன்று பாட்டானும் பயனில சொல்லாமையின் குணம் கூறப்பட்டது.

(ப-ரை) மருளார்ந்த - மயக்கத்தினீங்கிய, மாசறு-மாசற்ற, (பரிசுத்தமாகியவென்றபடி) காட்சியவர்-அறிவினையுடையோர், பொருளார்ந்த-பயனி வீங்கிய சொற்களை, பொச்சாந்தும் - மறந்தும், சொல்லார் - சொல்லார் எ-று.

(க-ரை) குற்றமற்ற வறிவுடையோர் பயனில்லாத சொற்களை மறந்துஞ் சொல்லார் என்பதாம்.

(வி-ரை) பரிசுத்தமாகியவறிவு-மெய்யறிவு. [இவை மூன்று பாட்டானும் பயனில்லாதவை சொல்லாமையின் குணம் சொல்லப்பட்டது.]

'பொருடீர்ந்த' என்றது பொருள் அற்ற என்ற பொருளது. அதாவது பயனில்லாத என்பதாம். 'மருள்' என்றது ஈண்டு அஞ்ஞான மயக்கத்தை. 'தீர்ந்த' இது நீக்கிய, இல்லாத என்னும் பொருளது. 'மாசறு காட்சி' என்றது ஐயம், திரிபு, விபரீதமாகிய மூக்குற்றமற்ற தெளிஞானக்காட்சியை. (9)

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

(பரி-உரை) சொல்லின் பயனுடைய சொல்லுக - சொற்களிற் பயனுடைய சொற்களைச் சொல்லுக, சொல்லின் பயனிலாச் சொல் சொல்லற்க-சொற்களில் பயனில்லாத சொற்களைச் சொல்லா தொழிக எ-று.

சொல்லி னென்பது இருவழியும் மிகையாயினும், சொற்பொருட் பின்வருநிலை யென்னும் அணிநோக்கி வந்தது, "வைகலும் வைகல் வரக் கண்டும்" என்பதுபோல, இதனைச் சொல்லப்படுவனவும் படாதனவும் நியமிக்கப்பட்டன.

(ப-ரை) சொல்லில்-சொற்களிலே, பயனுடைய-பிரயோசனமுடைய சொற்களை, சொல்லுக - சொல்லக்கடவர், சொல்லில் - சொற்களிலே, பயனிலாச்சொல் - பிரயோசனமில்லாத சொற்களை, சொல்லற்க - சொல்லாதிருக்கக் கடவர் எ-று.

(க-ரை) பயனிலாச் சொற்களை நீக்கி பயனுடைய சொற்களைச் சொல்லுக்கடவர் என்பதாம்.

(வி-ரை) இதனுலே சொல்லத்தகுவனவும் தகாதனவும் நியமிக்கப்பட்டன.

இக்குறளில் ஒரே அடியில் 'சொல்லுக' 'சொல்லற்க' என உடன் பாட்டிலும் எதிர்மறையிலும் வந்தமையின் முரண்டொடை. 'சொல்லில்' இதில் 'இல்' உருபு இடப்பொருளுருபு. (10)

20-ம் அதி-பயனிலசொல்லாமை-முற்றிற்று.

21-ம் அதிகாரம்-தீவினையச்சம்

(பரி-உரை) அஃதாவது: பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனுன் மெய்யின்கணிகழும் பாவங்களெல்லாந் தொகுத்து விலக்குகின்றாகலின், இது பயனில சொல்லாமையின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: பாவங்களா யுள்ளவைகளைச் செய்தற்கு அஞ்சலாம். இதனுல் காயத்தினிடத்தே விளைகின்ற பாவங்களையெல்லாம் தொகுத்து விலக்குகின்றாதலின், இது பயனில சொல்லாமையின் பின் வைக்கப்பட்டது.

தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

(பரி-உரை) தீவினை என்னும் செருக்கு - தீவினையென்று சொல்லப் படும் மயக்கத்தை, தீவினையார் அஞ்சார்-முன்செய்த தீவினையுடையார் அஞ் சார், விழுமியார் அஞ்சுவர் - அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர் எ-று.

தீவினை யென்னுஞ் செருக்கெனக் காரியம் காரணமாக உபசரிக்கப் பட்டது. மேற்செருட்டுச் செய்து கைவந்தமையான் அஞ்சாரென்றும், செய் தறியாமையான் அஞ்சுவரென்றுங் கூறினர்.

(ப-ரை) தீவினையென்னுஞ் செருக்கு - தீவினையென்று சொல்லப்படு மயக்கத்திற்கு, தீவினையார் - (முன்செய்த) தீவினையுடையோர், அஞ்சார் - பயப்படார், விழுமியார் - (அதுயில்லாத) மேலோர், அஞ்சுவர் - பயப்படு வார் எ-று.

(க-ரை) பாவத்துக்குத் தீவினையார் பயப்படார்; நல்வினையார் பயப்படு வார் என்பதாம்.

(வி-ரை) தீவினையாகிய காரியம் - அதன் காரணமாகிய செருக்கென உபசரிக்கப்பட்டது. முன்னே தொடங்கிச் செய்து பழகிவந்தமையால் அஞ்சாரென்றும் செய்தறியாமையால் அஞ்சுவாரென்றும் சொல்லினர்.

'தீ' என்றது 'தீமை' என்ற பண்புப்பெயரின் விகாரம். 'தீவினை' என்றது தீமையாகிய வினை என விரிதலின் பண்புத்தொகை. 'வினையார்' என்பது வினையை உடையவர் என விரிதலின் இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை. தீவினையைச் செய்பவர் எனப் பாருள் கூறுவாரும் உண்டு. 'விழுமியார்' என்றது தீவினையில்லாத சீரியரை. 'அஞ்சார்' அஞ்சுவர் என எதிர்மறையும் உடன்பாடும் முறையே ஓரடியில் வந்தமையால் முரண்டொடை. செருக்கு என்றது ஈண்டு மயக்கம் என்னும் பாருளில் வந்தது. மயக்கத்தால் வரும் தீவினையை. செருக்கு என்றது காரண காரியத் தொடர்பு பற்றியது.

(1)

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(பரி-உரை) தீயவை தீய பயத்தலால்-தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யும் தீவினைகள் பின் அஃதொழித்தற்கன்பமே பயத்தலான், தீயவை தீயினும் அஞ்சப்படும் - அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனுத் தீயினு மஞ்சப்படும் எ-று.

பிறிதொரு காலத்தும் பிறிதொரு தேயத்தும் பிறிதோ ருடம்பினுஞ் சென்று சுடுதல் தீக்கின்மையின், தீயினு மஞ்சப்படுவதாயிற்று.

(ப-ரை) தீயவை - (இன்பத்தின் பொருட்டுச் செய்யுந்) தீவினைகள், (பின்னே) தீய - துன்பங்களோ, பயத்தலால் · தருதலால், தீயவை - (அப்படிப் பட்ட) தீவினைகள், தீயிலும்-தீயிலும் அதிகமாக, அஞ்சப்படும்-(ஒருவனால்) அஞ்சப்படும் எ-று.

(க-ரை) பாவமானவை' துன்பங்களைக் கொடுத்தலால் அப்பாவங்கள் தீயிலுங் கொடியன என்பதாம்.

(வி-ரை) வேறொருகாலத்திலும் வேறோரிடத்திலும் வேறு ருடம்பி லும் போய்ச்சுடுதல் தீவினைக்கே அல்லாமல் கருப்புக்கு இல்லாமையால் தீயிலும் அஞ்சப்படுமென்றார்.

'தீயவை' என்றது தீவினைகளை. 'தீய' என்றது தீமையாகிய பயனை. 'தீயிலும்' இது தீயைக்காட்டிலும் என்னும் பொருளது 'பயத்தலால்' இதில் 'அல்' விகுதி காரணப்பொருள் தந்து நின்றது. 'தீயவை' இதில் 'வை' பன்மை விகுதி. (2)

அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய செறுவார்க்குஞ் செய்யா விடல்.

(பரி-உரை) அறிவினுள் எல்லாம் தலை என்ப-தமக்குறுதி காடும் அறிவுக ளெல்லாவற்றுள்ளும் தலையாய அறிவென்று சொல்லுவர் நல்லோர், செறுவார்க்கும் தீய செய்யா விடல் - தம்மைச் செறுவார்மாட்டும் தீவினைகளைச் செய்யாது விடுதலை எ-று.

விடுதற்குக் காரணமாகிய அறிவை விடுதலென்றும், செயத்தக்குழிபுஞ் செய்யா தொழியவே தமக்குத் துன்பம் வாராதென உய்த்துணர்தலின் அதனை அறிவினு ளெல்லாந் தலையென்றுங் கூறினர். செய்யாதென்பது கடைக்குறைத்து நின்றவை. இவை மூன்று பாட்டாலும் தீவினைக்கஞ்ச வேண்டுமென்பது கூறப்பட்டது.

(ப-ரை) செறுவார்க்கும்-(தம்மை) வருத்துவோரிடத்தும், தீய-தீவினைகளை, செய்யாவிடல் - செய்யாமல் விடுதலை, அறிவினுளெல்லாம் - (தமக்குறுதி காடும்) அறிவுகளெல்லாவற்றினும், தலை-முதலான வறிவாகும், என்று (என்று நல்லோர்) சொல்லுவர் எ-று.

(க-ரை) தம்மை வருத்துவோரிடத்துந் தன்பங்களைச் செய்யாம விடுதல் எல்லாவறிவினுள்ளுந் தலைமை என்பதாம்.

(வி-ரை) விடுதற்குக் காரணமாகிய அறிவை விடலென்றும் செய்யத் தக்கவிடத்தும் செய்யாதிருந்தால் தமக்குத் துன்பம் வாராதென்று தெளி சித்தறிதலால் அதனை அறிவினுளெல்லாந் தலையென்றும் சொல்லிற்று. [இவை மூன்றுபாட்டாலும், தீவினைக்கு அஞ்சவேண்டுமென்பது சொல்லப் பட்டது.]

கல்லறிவும் பலதிறப்பட்டிருத்தலின் 'அறிவிலுள் எல்லாம்' என்றார். 'அறிவு' என்றது சிறப்புப்பற்றி கல்லறிவை உணர்த்திற்று. 'தலை' என்றது கண்டு முதன்மை என்னும் பொருள் தந்து நின்றது. 'செறவார்க்கும்' இதன் கண் நின்ற உம்மை இழிவுச் சிறப்புப் பொருளது. 'செறவார்' என்றது தன்புறத்தவோர் அழிப்போர் என்னும் பொருளது. 'செய்யா' இது செய்யாத என்பதன் கடைக்குறை விகாரம். 'விடல்' இது தொழிற்பெயர்; இதில் 'அல்' விகுதி.

மறத்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. (3)

(பரி-உரை) பிறன் கேடு மறந்தும் சூழற்க-ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணுதொழிக; சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் - எண்ணுவனாயின், தனக்குக் கேடு பயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும் எ-று.

கேடென்பன ஆகுபெயர். சூழ்கின்றபொழுதே தானு முடன் சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது பெறப்பட்டது. அறக்கடவு ளெண்ணுதலாவது அவன்கெடத் தான் நீக்க நினைத்தல். தீவினை மாகா தென்பதாம்.

(ப-ரை) (ஒருவன்) பிறன்-பிறனுக்கு, கேடு-கேட்டைத்தரும் வினையை, மறத்தும்-மறவியைப்பொருந்தியும், சூழற்க-எண்ணாதிருக்கக்கடவன், சூழின்-எண்ணுவானாயின், சூழ்ந்தவன் - அவ்வெண்ணினவனுக்கு, கேடு-கேட்டைத்தரும்வினையை, அறம்-அறக்கடவுள், சூழும்-எண்ணுவான் எ-று.

(க-ரை) ஒருவன் மறந்தும் பிறனுக்குக் கேட்டை நினைப்பானாகில் அவனுக்குத் தருமக்கடவுள் கேட்டை நினைக்கும் என்பதாம்.

(வி-ரை) கேடிரண்டும் அவற்றைத்தரும் வினைகளை யுணர்த்தலால் ஆகுபெயர்கள். எண்ணுகிறபொழுதே தானும் உடனே எண்ணுதலால் அவன் பிற்பட்டாலும், அறக்கடவுள் முற்படுவானென்பது கொள்ளப்பட்டது. அறக்கடவுளெண்ணுதலாவது; அவன்கெடத் தான் நீக்க நினைத்தல். தீவினையை எண்ணுதலு மாகாதென்பதாம்.]

'மறத்தும் பிறன்கேடு சூழற்க' என்றதால் நினைப்புடன் செய்தல் மிகவுங் கடியத எனப் பொருள் தாலால் உம்மை எதிர்மறை உம்மை என்பர். சூழற்க' இது முன்னிலை ஒருமை எதிர்மறை ஏவல் வினைமுற்று. 'சூழின்' சூழ்தல் இன் உருபு குழ்ந்தால் என்னும் பொருளது; இது காரணப்பொருளது. அறம்' என்றது அறக்கடவுளை; இது ஆகுபெயர்.

தினனென்று தீயவை செய்யற்க செய்யி
னினனொரு மற்றும் பெயர்த்து. (4)

(பரி-உரை) இலன் என்ற தீயவை செய்யற்க - யான் வறியனென்று கருதி அத நீர்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளை ஒருவன் செய்யா தொழிக; செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும்-செய்வனுயின் பெயர்த்தும் வறியனும் எ-று.

அத்தீவினையாற் பிறவிதோறும் இலனுமென்பதாம். அன் விகுதி முன் தனித் தன்மையினும், பின் படர்க்கை யொருமையினும் வந்தது. தனித் தன்மை "உளனுவென் னுயிரைபுண்டு" என்பதனுனு மறிக. மற்ற-அசை நிலை. இலமென்ற பாட மோதுவாரு முளர். பொருளான் வறியனெனக் கருதித் தீயவை செய்யற்க; செய்யின் அப்பொருளானேயன்றி நற்குணத் செய்கைகளானும் வறியனு மென் றுரைப்பாரு முளர்.

(ப-ரை) இலனென்ற-வறுமையையுடையேனென்று நினைத்து, (அத நீர்தற்பொருட்டு) தீயவை - தீவினைகளை, செய்யற்க - (ஒருவன் பிறர்க்குச்) செய்யாதிருக்கக்கடவன், செய்யின்-செய்தால், பெயர்த்து-பின்னும், இலனு கும்-வறுமையையுடையவனுவான் எ-று.

(க-ரை) வறுமையாலே தீமைசெய்வானுகில் மிக வறுமையுடையவ னுவான் என்பதாம்.

(வி-ரை) மற்றும் - அசைநிலை. அத்தீவினையினுலே பிறவிதோறும் வறியவனுவனென்பதாம்.

'இலன்' இது பொருள் இல்லாதவன், செல்வம் இல்லாதவன் என்னு பொருளது. தன்வறுமை காரணமாக, செல்வம் பெறற்கென்று தீயவை செய்தால் அதனுல் வறுமை தொலையாது பின்னும் பின்னும், பிறவிகளோ றும் வறுமையே எய்தும் என்பார். 'இலனுகும் மற்றும் பெயர்த்து' என்று 'பெயர்த்து' இது பின்னும் என்னும் பொருள் தந்து நின்றது. 'மற்று' என்றது பொருளின்றி அசைநிலைக்க வந்தமையின் அசைநிலையாயிற்று. (5)

நீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால தன்னை யடல்வேண்டா தான்.

(பரி-உரை) நோய்ப்பால தன்னை அடல் வேண்டாதான்-தன்பஞ்செ புஞ் சூற்றவாகிய பாவங்கள் தன்னைப் பின்வந்து வருத்துதலை வேண்டா வன், நீப்பால தான் பிறர்கண் செய்யற்க-நீமைக் கூற்றவாகிய வினைக தான் பிறர்மாட்டுச் செய்யா தொழிக எ-று.

செய்யின், அப்பாவங்க ளெதுல் ஒருதலை யென்பதாம்.

(ப-ரை) நோய்ப்பால-தன்பஞ்செய்யுஞ் சூறடைப்பாவங்கள், தன் தன்னை, அடல்வேண்டாதான் - (பின்வந்து) வருத்துதலை வேண்டாத நீப்பால-நீமைக்கூறுடைய வினைகளை, தான்-தான், பிறர்கண்-பிறரிடத் செய்யற்க-செய்யாதிருக்கக்கடவன் எ-று.

(க-ரை) பாவங்கள் பின்பு தன்னைவருத்துதலை யிச்சியாதவன் பாவங்களைப் பிறரிடத்தச் செய்யாதிருக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) செய்வானுயின் அப்பாவங்கள் அவனை வருத்துவதற்கு ஐயமில்லை என்பதாம்.

'தீப்பால' இதில் 'பால்' என்பது கூறு, பகுப்பு என்னும் பொருளது. 'தீப்பால' என்றது தீவினைகளை. 'அடல்' ஈண்டு வருத்தல் அழித்தல் என்னும் பொருளது. 'ஒருதலை' என்றது ஐயுறற்கில்லா உண்மை என்பது பொருள். ()

எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(பரி-உரை) எனைப்பகை உற்றாரும் உய்வர்-எத்தனைப் பெரிய பகையுடையாரும் அதனை பொருவாற்றாற் றப்புவர்; வினைப்பகை வீயாது பின் சென்று அடும்-அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப்புக்குக் கொல்லும் எ-று.

"வீயா—தடம்பொடு நின்ற வுயிருமில்லை." என்புழியும் வீயாமை நீங்காமைக்கண் வந்தது.

(ப-ரை) எனைப்பகையுற்றாரும் - எவ்வளவு பெரிய பகையை யுடையாரும், உய்வர் - (அதனை ஒருவழியினூலே) தப்புவார், (அப்படியல்லாமல்) வினைப்பகை-தீவினையாகிய பகையானது, வீயாது-நீங்காமல், பின் சென்று-தானவிடத்தக்குப்போய், அடும்-கொல்லும் எ-று.

(க-ரை) எவ்வகைப்பகைக்கும் ஒருவிதத்தால் தப்பலாம். தீவினைப்பகை தொடர்ந்து தப்பாது கொல்லும் என்பதாம்.

'எனைப்பகை' இது எத்தகைய வலியபகையையும் என்னும் பொருளது. 'உய்வர்' என்றது அப்பகையின் தீமைக்குட்படாது தப்புதலை. 'வீயாது' என்பதற்கு 'வீ' பகுதி. 'வீ' அழிவு என்னும் பொருளது. ஈண்டு நீக்கம் என்னும் பொருள் தந்து நின்றது. (7)

தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

(பரி-உரை) தீயவை செய்தார் கெடுதல் - பிறர்க்குத் தீவினைகளைச் செய்தார் தாங்கெடுதல் எத்தன்மைத்தெனின், நிழல் தன்னை வீயாது அடியுறைந்தற்று-ஒருவன் நிழல் தொடர்தாகப் போயும் அவன்றன்னை விடாது வந்து பின்கண் தங்கிய தன்மைத்து எ-று.

இவ்வுவமையைத் தன்காலம் வருந்தினையும் புலனாகாது உயிரைப்பற்றி அது வந்தழி உருப்பதாய தீவினையைச் செய்தார் பின் அதனுற்கெடுவதை உவமையாக்கி உரைப்பாருமுளர். அஃதரையன்றென்பதற்கு அடி

புறைந்தநிழறன்னை வீய்ந்தற்றென்னாது வீயா தடியுரைந்தற்றென்ற பாடமே கரியாயிற்று. மேல் வீயாது பின் சென்றடு மென்றார், ஈண்டு அதனை உவமையான் விளக்கினார்.

(ப-ரை) தீயவை-தீவினைகளை, செய்தார்-(பிறருக்குச்) செய்தவர், கெடுதல்-தாம்கெடுதல், (எத்தன்மைத்தென்றால்) நிழல்-(ஒருவனது) நிழலானது, (நெடுந்தூரம்போயினும்) தன்னை-அவனை, வீயாது-விடாதுவந்து, அடி-அடியினிடத்தே, உறைந்தற்று-தங்கிய தன்மைத்து எ-று.

(க-ரை) தான்செய்த தீவினை தன்னிழல்போலத் தங்கும் என்பதாம்.

(வி-ரை) முன்பாட்டில் வினைப்பகை வீயாது; பின்சென்றடுமென்று சொல்லப்பட்டதை இங்கே உபமானத்தினால் விளக்கினார்.

'தன்னை வீயாது' இதற்குத் தன்னினின்றும் நீங்காது எனப் பொருள் கோடலும் ஆம். 'அற்று' இது அத்தன்மைத்து என்னும் பொருளது. இது உவம உருபுப்பொருள் தந்தமை காண்க. (8)

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

(பரி-உரை) தன்னைத் தான் காதலன் ஆயின்-ஒருவன் தன்னைத் தான் காதல் செய்த லுடையனாயின், தீவினைப்பால் எனைத்து ஒன்றும் துன்னற்க-தீவினையாகிய பகுதி எத்துணையுஞ் சிறியதொன்றாயினும் பிறர்மாட்டுச் செய்யாதொழிக எ-று.

நல்வினை தீவினையென வினைப்பகுதி இரண்டாகலின், தீவினைப்பாலென்றார். பிறர்மாட்டுச் செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம் பயத்தல் விளக்கினாராகலின், தன்னைத்தான் காதலனாயி னென்றார். இவை ஆறுபாட்டானும் பிறர்க்குத் தீவினை செய்யின் தாங் கெடுவரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) தன்னை-தன்னை, தான்-தான், காதலனாயின்-விரும்புதலுடையவனாயிருந்தால், தீவினைப்பால்-தீவினையாகிய பிரிவினுள், எனைத்தொன்றும்-எவ்வளவு சிறியதொன்றையாயினும், துன்னற்க-(பிறரிடத்தே) செய்யாதிருக்கக்கடவன் எ-று.

(க-ரை) தன்னைக் காக்க விரும்பினால் எவ்வளவு சிறிய தீவினையையுஞ் செய்யாதிருக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) நல்வினை தீவினையென வினைப்பிரிவு இரண்டாகலின் தீவினைப்பாலென்றார். பிறரிடத்தே செய்த தீவினை தன்னிடத்தே துன்பந்தருதலை விளக்கினாராதலால், தன்னைத்தான் காதலனாயினென்றார். [இவை ஆறுபாட்டாலும் பிறருக்குத் தீவினைசெய்தால் தாம்கெடுவரென்பது சொல்லப்பட்டது.]

தான் காதலித்த பொருளுக்குத் துன்பம் வாக்காணான், எண்ணான்; இன்பம் வாவே என்னுவனுதலின், 'தன்னைத்தான் காதலனாயின்' என்றார். 'ஆயின்' என்றது ஆனால் என்னும் பொருளது. 'எனைத்தை ஒன்று' என்றது சிறிதாகிய தீவினை என்னும் பொருடந்தது. 'தன்னுதல்' என்றது ஒருங்குதல் என்னும் பொருள்தருஞ் சொல் ஈண்டு செய்தல் என்னும் பொருள் தந்து நின்றது. 'அற்க' இது எதிர்மறை ஏவல் வினை முற்றாகி. 'தீவினைப்பால்' ஈண்டும் பால் பகுப்பு என்னும் பொருளில் வந்தது.

(9)

அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

(பரி-உரை) மருங்கு ஓடித் தீவினை செய்யான் எனின் - ஒருவன் செந்நெறிக்கட் செல்லாது கொடுநெறிக்கட் சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச் செய்யானாயின், அருங்கேடன் என்பது அறிக-அவனை அரிதாகிய கேட்டை யுடையனென்பதறிக எ-று.

அருமை-இன்மை. அருங்கேட னென்பதனை "சென்று சேர் கல்லாப் புன்னை புன்னி லென்றூழ் வியன்குளம்" என்பதுபோலக் கொள்க. ஓடியென்னும் வினையெச்சம் செய்யானென்னும் எதிர்மறை வினையுட் செய்தலோடு முடிந்தது. இதனால் தீவினை செய்யாதவன் கேடில னென்பது கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன் செவ்வையான வழியையிட்டு) மருங்கோடி-கொடிய வழியிலே சென்று, தீவினை-தீவினைகளை, செய்யானெனின்-(பிறரிடத்தே) செய்யானாயின், அருங்கேடனென்பது-(அவன்) இல்லாத கேட்டையுடையவனென்பதை, அறிக-அறியக்கடவர் எ-று.

(க-ரை) ஒருவன் பாவஞ்செய்யாதிருப்பானாகிற் கேடில்லாதவனென்றறி என்பதாம்.

(வி-ரை) [இதனாலே தீவினைசெய்யாதவன் கேடில்லாதவனாவனென்பது சொல்லப்பட்டது.]

'அருங்கேடன்' இதுகேட்டை அரிதாக உடையன் என்னும் பொருள் தந்து நின்றது. அதாவது கேடற்றவன் என்பதாம். ஈண்டு அருமை இல்லாமைப் பொருள் தந்தது. 'மருங்கு' என்றது ஈண்டு நல்வழி அல்லாத வழியை உணர்த்திற்று.

(10)

21-ம் அதி-தீவினையச்சம்-முற்றிற்று.

22-ம் அதிகாரம்-ஒப்புரவறிதல்

(பரி-உரை) அஃதாவது: உலகடையினையறிந்து செய்தல். உலகடை வேதாடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே யறிந்து செய்யுந் தன்மைத்தாகலின், ஒப்புரவறிதலென்றார். மேல் மன மொழி மெய்களாற் றவிர்த்தகுவன கூறினார். இனிச் செய்யத்தகுவனவற்றுள் எஞ்சி நின்றன கூறின்றாகலின், இது நீவினையச்சத்தின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: உலகநடையை அறிந்துசெய்தல். மனோவாக்குக் காயங்களாலே செய்யத்தகாதவை சொல்லினார். இனிச்செய்யத்தகு மவை களில் முன் சொல்லப்பட்டவற்றுள் அடங்காதவைகளைச் சொல்லுகின்ற தாகையால், இது நீவினையச்சத்தின் பின் வைக்கப்பட்டது.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னுற்றுங் கொல்லோ வுலகு.

(பரி-உரை) மாரிமாட்டு உலகு என் ஆற்றும்-தமக்கு நீருதவுகின்ற மேகங்களினிடத்து உயிர்கள் என்னகைம்மாறு செய்யாகின்றன?, கடப்பாடு கைம்மாறு வேண்டா - ஆகலான், அம்மேகங்களைப் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவனவல்ல எ-று.

என்னுற்றுமென்ற வினா யாதுமாற்றுவென்பது தோன்ற நிற்றலின், அது வருவித்துரைக்கப்படும். தவிருந்தன்மைய வல்லவென்பது கடப்பா டென்னும் பெயரானே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவனமே லேற்றினார்.

(ப-ரை) உலகு-உயிர்களானனவை, மாரிமாட்டு-(தமக்கு நீருதவுகின்ற) மேகங்களிடத்து, என்-என்ன பிரதியுபகாரத்தை, ஆற்றும்-செய்துவருகின் றன, (ஒன்றும் செய்கின்றனவில்லையென்றபடி) (ஆதலால்) கடப்பாடு-(அம் மேகங்கள் போல்வார்செய்யும்) உபகாரங்களும், கைம்மாறு-பிரதியுபகாரங் களை, வேண்டா-வேண்டுவனவல்ல எ-று.

(க-ரை) மேகங்களுக் கொப்பானவர் செய்யுமுபகாரங்கள் பிரதியு காரங்களை வேண்டுவனவல்ல என்பதாம்.

(வி-ரை) கொல்-ஓ-அசைகள். கடப்பாடென்னும் பெயரினாலே அவசியம் செய்யவேண்டுவதென்பது பெறப்பட்டது. உபகாரஞ் செய்வாரது வேண்டாமையை உபகாரத்தின்மேல் ஏற்றினார்.

'கைம்மாறு' இது பிரதிப் பிரயோசனம், பதில் உதவி:என்னும் பொரு ளது. 'கடப்பாடு' இது கடன்மைப்பாடு என்பதன் விகாரம், இதனை நீ காலத்துக் கடன்மை என்பர். 'மாரி' என்றது மழை மேகத்தை. 'மாட்டு' இது இடத்து எனப் பொருள்தரும் இடப்பொருளுருபாகின்றது. 'ஆற்று' இது செய்யும் என்னும் பொருளது. 'உலகு' இது இட ஆகுபெயர். உலகத்து உயிர்களைக் குறித்தது.

ஆளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(பரி-உரை) தக்கார்க்கு-தகுதியுடையார்க்காயின், தான் ஆற்றித் தந்த பொருள் எல்லாம் - முயற்சிசெய்து சம்பாதித்த பொருண்முழுதும், வேளாண்மை செய்தற் பொருட்டு-ஒப்புரவு செய்தற் பயத்தவாம் எ-று.

பிறர்க்குதவாதார்போலத் தாமே உண்டற்பொருட்டும், வைத்திழத் தற்பொருட்டுமன் றென்பதாயிற்று.

(ப-உரை) தக்கார்க்கு - தகுதியுடையவர்க்காயின், தானாற்றி - முயற்சி செய்து, தந்த - சம்பாதிக்கப்பட்ட, பொருளெல்லாம் - பொருளனைத்தும், வேளாண்மை - உபகாரத்தை, செய்தற்பொருட்டு - செய்தற்பயனுடையன வாம் எ-று.

(க-உரை) முயற்சிசெய்து சம்பாதித்த பொருளெல்லா முபகாரஞ் செய் யும்பொருட்டு என்பதாம்.

(வி-உரை) தகுதியில்லாத பிறருக்குப்போல் தாம் அனுபவித்தற்பொருட் டும், வைத்து இழத்தற்பொருட்டும், அல்லவென்பதாயிற்று.

'தான்' என்றது ஈண்டு முயற்சியை; இதனை 'தாளாளனென்பான் கடன் படா வாழ்பவன்' என்பதனாலறிக. 'ஆற்றல்' இது செய்தல் என்னும் பொரு ளது. 'ஆற்று' பகுதி. 'தந்த' என்றது ஆற்று ஈட்டிய, சம்பாதித்த என்னும் பொருளது. 'தக்கார்' என்றது தகுதியுடையவர்களை. 'வேளாண்மை' என்றது ஒப்புரவு, உபகாரம் என்னும் பொருளது. (2)

புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

(பரி-உரை) புத்தேளுலகத்தும் ஈண்டும் - தேவருலகத்தும் இவ்வுலகத் தும், ஒப்புரவின் நல்ல பிற பெறல் அரிது-ஒப்புரவுபோல நல்லன பிறசெயல் களைப் பெறுதலரிது எ-று.

ஈவாரும் எற்பாருமின்றி எல்லாரும் ஒருதன்மையராதலின், புத்தேளுல கத்தி அரிதாயிற்று. யாவர்க்குமொப்பது இதுபோற் பிறிதொன்றின்மை யின், இவ்வுலகத்தி அரிதாயிற்று. பெறற்கரிதென்று பாடமோதிப் பெறுதற் குக்காரணம் அரிதென் றுரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-உரை) புத்தேளுலகத்தும்-தேவருலகத்திலும், ஈண்டும் - இவ்வுலகத்தி லும், ஒப்புரவின்-உபகாரம்போல், நல்ல-நல்லவையாகிய, பிற - வேறுசெயல் களை, பெறல்-பெறுதல், அரிது-அரிதாம் எ-று.

(க-உரை) விண்ணுலகத்தும் மண்ணுலகத்தும், உபகாரத்தைப்போல வதொன்றில்லை என்பதாம்.

(வி-உ) கொடுப்பாரும், கொள்வாரும், இல்லாமல் எல்லாரும் ஒரு தன்மையராயிருக்கையால் தேவருலகத்தில் அரிதாயிற்று யாவருக்கும் ஒப்ப நிதபோல் வேறொன்று இல்லாமையால், இவ்வுலகத்தில் அரிதாயிற்று. [இவை மூன்றுபாட்டாலும் ஒப்புரவினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'புத்தேள் உலகம்' என்றது பொன்னுலகத்தை. புத்தேள் - தேவர். 'ஈண்டு' என்றது இவ்வுலகத்தை; இது இகர்ச் சுட்டடியாகப் பிறந்தது. ஈண்டு என்றதில் இகரச்சுட்டு நீண்டு நின்றது. 'உலகத்தும்' 'ஈண்டும்' என்றவைகளில் நின்ற உம்மைகள் எண் உம்மைகள். 'பிற' என்றது மற்றை கற்செயல்களை. (3)

ஒத்த அறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(பரி-உரை) உயிர் வாழ்வான் ஒத்தது அறிவான்-உயிரோடுகூடி வாழ்வா னுவான் உலகநடையினையறிந்துசெய்வான்; மற்றையான் செத்தாருள் வைக் கப்படும்-அஃதறிந்து செய்யாதவன், உயிருடையனேயாயினும், செத்தாருள் ஒருவனுகக் கருதப்படும் எ-று.

உயிரின் அறிவுஞ் செயலுங் காணுமையின், செத்தாருள் வைக்கப்படு மென்றார். இதனால் உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்ந்து னுடைத்தன்றென்பது கூறப்பட்டது.

(ப-ரை) ஒத்ததறிவான்-உலகநடையை அறிந்து செய்பவன், உயிர்வாழ் வான் - உயிரோடுகூடி வாழ்பவனுவான், மற்றையான்-அதனை அறிந்து செய் யாதவன், (உயிருடையவனு யிருந்தாலும்,) செத்தாருள் - இறந்தவர்களுள், வைக்கப்படும் - (ஒருவனுக) வைக்கப்படுவான், (நினைக்கப்படுவா னென்ற படி) எ-று.

(க-ரை) உலக வியல்பையறிந்து நடப்பவ னுயிரோடு வாழ்பவன், அவ்வியல்பை யறியாதவன் செத்தவன் என்பதாம்.

(வி-ரை) உயிருக்குரிய அறிவும், செயலும், அவனிடத்தே காணப்பட மையால் செத்தாருள் வைக்கப்படுமென்றார். [இதனால் உலகநடையிலே தவறுதல் வேதநடையிலே தவறுதல்போல் தீரும்வழியை உடையதன் றென்பது சொல்லப்பட்டது.]

'ஒத்தது' என்றது ஒப்புரவை. 'மற்றையான்' என்றது ஒப்புரவு அறி தவனை. 'செத்தார்' என்றது இறந்தவரை; இதற்கு 'சா' பகுதி. 'வைக்கப் படும்' என்றது வைத்து எண்ணப்படுதலை. (3)

ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(பரி-உரை) உலகு அவாம் பேர் அறிவு ஆன் திரு - உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை யுடையவனது செல்வம், ஊருணி நீர் நிறைந்தற்று - ஊரின் வாழ்வார் தண்ணீர் உண்ணுங் குளம் நீர் நிறைந்தாற் போலும் எ-று.

நிறைதலென்னும் இடத்து நிகழ் பொருளின் நெருழில் இடத்தின்மே லேற்றப்பட்டது. பாழ் போகாது நெடிது நின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பா துதவு மென்பதாம்.

(ப-ரை) உலகு-உலகநடையை, அவாம்-விரும்பிச்செய்யும், போறிவா ஆன்-பெரியவறிவினை யுடையவனானவன், திரு-செல்வத்தினாலே (நிறைதல்) நாலே நின்றதுபோலும் எ-று.

(க-ரை) அறிவானர் செல்வம் ஊராருண்ணுங் குளநிறைந்தாற்போலும் என்பதாம்.

(வி-ரை) அச்செல்வம் பாழ்படாமல் நெடுங்காலம் எல்லாருக்கும் வேண்டுமளவில் உதவுமென்பதாம்.

'ஊருணி' இது குளம் என்னும் பொருளது. இது ஊராரால் நீர் உண் ணப்படுவது என்னுங் காரணம் பற்றி வந்த பெயர். (ஊர்+உண்ணி= ஊருணி) 'ஊருண்ணி' என்றது ஊருணி என ஆய்தம் தொகுத்தல் விகாரம். அற்றே' இது அத்தன்மைத்தே என்னும் பொருளது. இதில் ஏகாரம் தேற் றப்பொருள் தந்து நின்றது. 'உலகு' என்றது உலகநடையைக் குறித்தது. இது ஆகுபெயர். 'அவாம்' இது விரும்பிச்செய்யும் என்னும் பொருளது. 'போறிவானன்' என்றது மிகுந்த நல்லறிவு உடையவனை. "ஊருணி நீர் நிறைந்தற்றே' என்றது உபமானம்.

(5)

பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றூற் செல்வ நயனுடை யான்கட் படின்.

(பரி-உரை) செல்வம் நயனுடையான்கண் படின் - செல்வம் ஒப்புரவு செய்வான்கண்ணே படுமாயின், பயன் மரம் ஊர் உள் பழுத்தற்று - அது பயன்படு மரம் ஊர் நடுவே பழுத்தாற்போலும் என்பதாம்.

உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே நடவென்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன் கொடுக்கு மென்பதாம்.

(ப-ரை) செல்வம் - செல்வமானது, நயனுடையான்கண் - உபகாரஞ் செய்பவனிடத்தே, படின்-உண்டாகுமாயின், (அவ்வுண்டாதல்) உள்ளூர்-ஊர் நடுவே, மரம் - மரத்தினிடத்தே, பயன்-பழமானது, பழுத்தற்று-பழுத்தல்போலும் எ-று.

(க-ரை) உபகாரஞ் செய்பவன் செல்வம் ஊர்நடுவில் மரம் பழுத்தாற் போலும் என்பதாம்.

(வி-ரை) ஆல்-அசை. உலகநீதி பலவகையிலும் ஒப்புரவு சிறந்தமை யால் அதனை நயனென்றார். அவன் அம்மாரம்போல் எல்லார்க்கும் எளிதிலே பயன் கொடுப்பானென்பதாம்.

'பயன்மரம்' என்றது கல்ல பயனைத்தரும் மரம் என்பதாம். பயனுவது கிழங்கால், இலையால், பூ காய்கனிகளைத் தால். 'உள்ளூர்' என்றது ஊரின் கடு இடத்தை. 'அற்றூல்' இதில் 'ஆல்' அசை. 'நயன்' என்றது எல்லா கிதியினுஞ் சிறந்ததாகிய ஒப்புரவை. இது சிறப்புப்பற்றி 'நயன்' எனப் பெற்றது. 'பயன்மரம்' உள்ளூர்ப்பழுத்தற்றூல், என்பது உவமை. (6)

மருந்தாகித் தப்பா மரத்தற்றூற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

(பரி-உரை) செல்வம் பெருந்தகையான்கண்படின் - செல்வம் ஒப்புரவு செய்யும் பெரிய தகைமையையுடையான்கண்ணே படுமாயின், மருந்தாகித் தப்பா மரத்தற்று-அஃது எல்லாவுறப்பும் பிணிகட்கு மருந்தாய்த் தப்பாத மரத்தையொக்கும் என்பதாம்.

தப்புதலாவது கோடற்கு அரிய இடங்களினின்றூதல், மறைந்து கின் றூதல், காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை. தன்குறை நோக்காத எல்லார் வருத்தமும் தீர்க்கு மென்பதாம். இவை மூன்றுபாட்டானும் கடப் பாட்டானையுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது.

(ப-ரை) செல்வம்-செல்வமானது, பெருந்தகையான்கண் - (உபகாரஞ் செய்யும்) பெரியதகைமையை யுடையவனிடத்தே, படின்-உண்டாகுமாஞல் (அச்செல்வமானது) மருந்தாகி-எல்லாவுறப்புக்களும் (பிணிகளுக்கு) மருந் தாய், தப்பா-தப்பாத, மரத்தற்று-மரத்தை ஒக்கும் எ-று.

(க-ரை) பெரியோரிடத்தண்டாகிய செல்வம் மருந்தாகிய மரத்தை கொப்பாகும் என்பதாம்.

(வி-ரை) ஆல் - அசை. எல்லாவுறப்புமென்றது மரத்துக்கு-இலை, பூ காய், கனி முதலானவைகளை செல்வத்துக்கு அநுபவித்தற்குரிய பலபொருள் களை. தப்பாமையாவது-கொள்ளுதற்கரிய விடங்களிலே கின்றுவது, மறைந்து கின்றுவது, காலத்தால் வேறுபட்டாவது, பயன்படாமை தன் குறைவை நோக்காமல் எல்லாவருத்தமும் தீர்க்குமென்பதாம். [இவை மூன்றுபாட்டி லும் உபகாரஞ் செய்பவனது பொருள் பயன்படுமாறு சொல்லப்பட்டது.]

'மருந்து' என்றது பிணிதீர்க்கும் மருந்தை. எல்லாச் சிறப்பும் இருந்து ஒப்புரவு இல்லையாயின் அவன் உயர்ந்தோன் ஆகான்; ஒப்புரவு உடையவனே உயர்ந்தோன் என்பது தோன்ற ஒப்புரவுடையானைப் 'பெருந்தகையான்' என்றூர். இதற்குப் பெருந்தன்மை யுடையன் என்பது பொருள். 'படின்' இது உண்டானுல் என்னும் பொருளது 'இன்' உருபு 'ஆனுல்' என்னும் பொருள் தந்து நின்றது. 'மருந்தாகித் தப்பா மரத்தற்றூல்' என்பது உவமை.

இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(பரி-உரை) இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்-செல்வஞ் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார், கடன் அறி காட்சியவர்-தாஞ் செய்யத் தகுவனவற்றை யறிந்த இயற்கை யறிவுடையார் எ-று.

பிறவெல்லாம் ஒழியினும், இஃது ஒழியா தென்பதாம்.

(ப-ரை) கடன்றி-(தாம்) செய்யத்தகுமவைகளை அறிந்த, காட்சியவர்-இயற்கை யறிவையுடையவர், இடனில் பருவத்தும்-செல்வஞ் சுருங்கிய காலத்திலும், ஒப்புரவிற்கு-உபகாரஞ்செய்தற்கு, ஒல்கார்-தளரார் எ-று.

(க-ரை) அறிவுடையோர் வறுமையிலு முதவிசெய்வர் என்பதாம்.

(வி-ரை) மற்றவைகளையெல்லாம் விட்டாலும் இதனை விடாரென்பதாம்.

'இடனில் பருவம்' என்றது ஒப்புரவு செய்தற்கு முடியாத வறுமைக் காலத்தை. 'இடனில் பருவத்தும்' என்ற உம்மையால் செல்வக் காலத்தில் தளராமை பெறப்படும். 'ஒல்கார்' இது 'ஒல்கு' என்னும் பகுதி அடியாகப் பிறந்தது. தளர்ச்சி அடையார் என்னும் பொருளது. 'கடனறி காட்சி' என்றது தன் கடன்மையை அறிந்த இயற்கை அறிவு உடைமையை. 'கடன்' என்றதால் பிறர்க்கு உபகாரமாக இருத்தலே தன் கடன்மை என்பது அறியக் கிடக்கும். (8)

நயனுடையா னல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

(பரி-உரை) நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆகல்-ஒப்புரவு செய்தலை யுடையான் நல்கூர்ந்தானுதலாவது, செயும் நீர செய்யாத அமைகலா ஆறு-பிறாத செய்யு நீர்மையையுடைய அவ்வொப்புரவுகளைச் செய்யப் பெறாது நின்றகின்ற வியல்பாம் எ-று.

தான் நுகர்வன நுகரப்பெறுமை யன்றென்பதாம். இவை யிரண்டுட்டானும் வறுமையான் ஒப்புர வொழிதற்பாற்று அன்றென்பது கூறப்ட்டது.

(ப-ரை) நயனுடையான்-உபகாரஞ்செய்தலையுடையவன், நல்கூர்ந்தால்-வறுமைபட்டவனாகுதலாவது, (செயும்-(ஒழியாமற்) செய்யும், நீர-நீர்மையையுடைய அவ்வுபகாரங்களை, செய்யாது-செய்யப்பெறாமல், அமைகலாறு-வருந்துகின்ற வியல்பாம் எ-று.

(க-ரை) உபகாரி வறியவனாகுதல் செய்யுமுதவி செய்யாமையால் என்பதாம்.

(வி-ரை) தான் அநுபவிக்கப்படும் பொருள்களைப் பெருமை அவனுக்கு ரவு செய்யாத விடத்தக்கதல்லவென்பது சொல்லப்பட்டது. வறுமையல்லவென்பதாம். [இவை இரண்டுபோட்டாலும் வறுமையால் ஒப்பு

'நயனுடையான்' என்றது ஒப்புரவு ஆற்றுவானை. 'நல்கூர்வு'-வறுமை. 'செயும்' இது 'செய்யும்' என்பதன் தொகுத்தல் விகாரம். 'நீர்மை'-குணம், சண்டு குணமுடையதாகிய ஒப்புரவைக் குறித்தது. 'அமைகலா ஆறு' இது மனம் அமைந்து நிற்காத் தன்மையாகிய வருத்தம் இவ்வை உணர்த்திற்று; சாந்திபெறுதல் தன்புறத்தில என்பது பொருளாம். (9)

ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

(பரி-உரை) ஒப்புரவினுல் கேடு வரும் எனின்-ஒப்புரவு செய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பா ருளராயின், அஃது ஒருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து-அக்கேடு தன்னை விற்றுயினும் கொள்ளுந் தகுதியை யுடைத்து எ-று.

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொரு பொருளில்லையன்றோ? இஃதாயின் அதவுஞ் செய்யப்படுமென்றது, புகழ் பயத்தல் நோக்கி. இதனுல் ஒப்புரவி னுற் கெடுவது கேடன்றென்பது கூறப்பட்டது.

(ப-ரை) ஒப்புரவினுல்-உபகாரஞ்செய்தலினுலே, வருங்கேடெனின்-(ஒருவனுக்குப் பொருட்) கேடுவருமென்பவருண்டாயின், அஃது-அக் கேடானது, ஒருவன்-ஒருவன், விற்று-(தன்னை) விற்றுயினும், கோட்டக் கடைத்து-வாங்குந் தகுதியையுடையதாகும் எ-று.

(க-ரை) உதவிசெய்தலாற் கேடுவருமெனி லவ்வுதவியைத் தன்னை விற்றுகினுஞ் செய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) தன்னைவிற்று வாங்கப்படுவதொருபொருள், இல்லையாயினுஞ் இக்கேடு புகழை உண்டாக்கலால், அதுவும் செய்யப்படுமென்றது. [இ னுலே ஒப்புரவினுலே கெடுவது கேடல்லவென்பது சொல்லப்பட்டது.]

'ஒப்புரவினுல்வருங்கேடெனின்' இதில் 'எனின்' என்பது எண்ணு என்னுங் குறிப்புத் தந்து நின்றது. 'கேடு' என்றது ஈண்டு பொருட்கேடாகி வறுமையை. 'அஃது' என்பது அவ் ஒப்புரவை. 'கோடக்கது'-இது 'கொ ளத்தக்கது' என்பதன் விகாரம்.

22-ம் அதி-ஒப்புரவறிதல்-முற்றிற்று.

23-ம் அதிகாரம்-ஈகை

(பரி-உரை) அஃதாவது: வறியரா யேற்றூர்க்கு மாற்றூத கொடுத்தல். இத மறுமை நோக்கியதாகலின், இம்மை நோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டத.

(உரை) அஃதாவது: வறியவராய் இறந்தவர்க்கு இல்லையென்னுமல் கொடுத்தல். இத மறுமையைக் குறித்ததாகலின், இம்மையைக்குறித்த ஒப்புரவறிதலின் பின் வைக்கப்பட்டது.

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(பரி-உரை) வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை-ஒருபொருளுமில்லா தார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்த லாவது, மற்று எல்லாம் குறி எதிர்ப்பை நீரது உடைத்து-அஃதொழிந்த எல் லாக்கொடையுங் குறியெதிர்ப்பைக் கொடுக்கும் நீர்மையை யுடைத்து எ-று.

ஒழிந்த கொடைகளாவன-வறியரல்லாதார்க்கு ஒருபயனெக்கிக் கொடுப் பன. குறியெதிர்ப்பையாவது - அளவுகுறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது. நீரது என்புழி அதுவென்பது பகுதிப்பொருள் விகுதி. யின்னுந் தன்பால்வருதலின், குறியெதிர்ப்பை நீரதுடைத்தென்றார். இத னுள் ஈகையதிலக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) வறியார்க்கு-ஒருபொருளு மில்லாதவர்க்கு, ஒன்று-(அவர் வேண் டிய) தொன்றை, ஈவதே-கொடுத்தலே, ஈகை-(பிறர்க்குக்) கொடுத்தலாகும், மற்றெல்லாம் - (அதுநீங்கலாகிய) எல்லாக்கொடையும், குறியெதிர்ப்பை நீரதுடைத்தென்றார் கூறப்பட்டபின் வரும் பயனெடுகூடிய, நீரது-குணத்தை, உடைத்து-உடையதாகும் எ-று.

(க-ரை) தரித்திரருக்குக் கொடுத்தலே கொடையாகும், மற்றவர்களுக்குக் கொடுத்தல் பின் வாங்கிக்கொள்ளும் பயனுகும் என்பதாம்.

(வி-ரை) அது நீங்கலாகிய கொடை, வறியவரல்லாதவர்க்கு ஒருபயனை நோக்கிக் கொடுத்தல். நீரது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. இன்னும் தம்மிடத்தே வருதலால் குறியெதிர்ப்பை நீரதுடைத்தென்றார். இதனால் ஈகையினது இலக்கணம் அறிவிக்கப்பட்டது.]

'வறியார்' என்றது பொருளில்லாரை; இதற்கு 'வறுமை' பகுதி. 'ஒன்று' என்றது அவர் வேண்டும் ஒன்றை. 'ஈகை' இது 'மை' விகுதிபெற்ற தொழிற் பெயர். 'ஈ' பகுதி இதற்குக் கொடை என்பது பொருள். 'மற்று' என்றது வேண்டியதற்கு இமையாகிய பிற கொடுத்தல்களைக் குறித்தது. 'எல்லாம்' என்பதில் உம்மை செய்யுளின் தன்மைநோக்கித் தொக்கது. 'குறியெதிர்ப்பு' என்பது உள்ளக்குறிப்புடன் எதிர் நோக்குதலை உணர்த்திற்று. அதாவது தன்பால் ஒன்று பெற்றூர்பால் தான் ஒன்றை எதிர்நோக்குதை என்பதாம். (1)

நல்லா றெனினும் கொளறீ தமேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

(பரி-உரை) கொளல் கல் ஆறு எனினும் தீது-எற்றல் வீட்டுவதற்கு கல்ல தெறியென்பார் உளராயினும் அது தீது; மேல் உலகம் இல் எனினும் ஈதலே கன்று-ஈந்தார்க்கு அவ்வுலகெய்துதலில்லை யென்பார் உளராயினும் ஈதலே கன்று எ-று.

எனினுமென்பது இருவழியும் அகவண்ண கூறுவார் இன்மை விளக்கி கின்றது. பிரிகிலை யேகாரத்தால் பிற அறங்களின் ஈதல் சிறந்ததென்பது பெற்றும். கல்லது கூறுவார் நீயதும் உடன் கூறினர்.

(ப-ரை) கொளல்-இரத்தல், கல்லாறெனினும்-(மேலுலகத்துக்கு) கல்ல வழியென்பவர் உண்டாயினும், (அது) தீது-குற்றமாம், (கொடுத்தவர்க்கு) மேலுலகம்-அந்த மேலுலகத்தை யடைதல், இல்லெனினும்-இல்லையென்பவர் உண்டாயினும், ஈதலே-கொடுத்தலே, கன்று-கல்லதாம் எ-று.

(க-ரை) யாசித்தல் கல்வழியென்றாலும் வாங்குதல் குற்றமே, கொடுத்தலாலே முத்தியில்லையென்றாலுங் கொடுத்தலே கல்லது என்பதாம்.

(வி-ரை) எனினுமென்பன, இரண்டும் அப்படிச் சொல்வாரில்லாமையைக் காட்டி கின்றது. ஏகாரத்தால் பிறவறங்களில் ஈகை சிறந்ததென்பது பெறப்பட்டது. கல்லது சொல்லவந்தவர் நீயதும் உடன்சொல்லினர்.

'கல்லாறு' இது 'கல்ல+ஆறு' என இருசொல் ஒருசந்தி. கன்னெறி என்பது பொருளாம். கண்டு கன்னெறி என்றது முத்திநெறியை. 'எனினும்' என்னுஞ்சொல் இரண்டிடத்தும் என்னுர் என்னும் பொருளை உம்மை விளக்கிக் காட்டிற்று. 'கொளல்' என்றது 'கொள்ளல்' என்றதன் தொகுத்தல் விகாரம். 'இல்' இது 'இல்லை' என்பதன் விகாரம். 'ஈதலே' என்றதன்கண் கின்ற ஏகாரம் தேற்றப்பொருளது.

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(பரி-உரை) இலன் என்னும் எவ்வம் உரையாமை-யான் வறியனென்று இரப்பான் சொல்லும் இளிவரவைத் தான் பிறர்கட் சொல்லாமையும், ஈதல் அதனைத் தன்கட் சொன்னர்க்கு மாற்ற நீதலும், உள குலனுடையான் கண்ணே-இவை யிரண்டு முளவாவன குடிப்பிறந்தான்கண்ணே எ-று.

மேற்றீதென்றது ஒழிதற்கும், கன்றென்றது செய்தற்கு முரியவை உணர்த்தியவாறு. இனி, இலனென்னு மெவ்வ முரையாமை யீதலென்பதற்கு அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்த கொடுத்தலெனவும், அதனைப் பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவனுரையா வகையாற் கொடுத்தலெனவும், யான் இதனொழுத பொ

ளுடையே னல்லேனெனக் கரப்பார் சொல்லும் இளிவரவைச் சொல்லாது கொடுத்தலெனவும் உரைப்பாருமுளர். அவர் ஈதலென்பதனைப் பொருட் பன்மைபற்றி வந்த பன்மையாக வுரைப்பர்.

(ப-ரை) இலனென்னும் - வறியேனென்று (இரப்பவன்) சொல்லும், எவ்வம்-இழிவை, உரையாமை - (பிறரிடத்தே) சொல்லாமையும், (அதனைத் தன்னிடத்தே சொன்னவர்க்கு) ஈதல் - (இல்லையென்னாமற்) கொடுத்தலும், (ஆகியவிரண்டும்) குலனுடையான் கண்ணே - நல்ல குடியிற் பிறந்தவனிடத்தே, உள-உண்டாயிருக்கும் எ-று.

(க-ரை) இல்லையென்னாது கொடுத்தல் நற்குடியிற் பிறந்தவரிடத்து உண்டு என்பதாம்.

(வி-ரை) முன்பாட்டிலே தீதெனப்பட்டதைச் செய்யாமைக்கும் நன்றெனப்பட்டதைச் செய்தற்கும் உரியவனை அறிவித்தபடி.

'இலன்' இது பொருள் இல்லாதவன் என்னும் பொருளது. 'எவ்வம்' என்றது இழிஉரையை. 'குலன்' என்றது உயர்குடிப்பிறப்பை. இது குலம் என்பதன் போலி. இக்குறளுக்கு, தன்பால்வந்து இரப்போன்பால் பிறன் ஒரு வறியன்வந்து இரப்புரை கூறுமுன் குறிப்பறிந்து கொடுக்குமாறு கொடுத்தல்; குடிப்பிறந்தான்பாலுள எனப் பொருள்கூறலும் ஒன்று. 'உரையாமை' இதில் 'மை' ஈறு பண்புப்பெயர் விகுதி. 'கண்ணே' என்பதன் ஈற்று ஏகாரம் தேற்றப்பொருளது.

(3)

இன்னா திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு.

(பரி-உரை) இரக்கப்படுதல் இன்னாது-இரத்தலேயன்றி இரக்கப்படுதலும் இனிதன்று, இரந்தவர் இன்முகம் காணும் அளவு-ஒரு பொருளை யிரந்தவர் அது பெற்றதனால் இனிதாகிய அவர் முகங் காணுமளவும் எ-று.

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தாற்றொக்கன. இரக்கப்படுதல்-இரப்பார்க்கு ஈவலென்றிருத்தல். அதனை இன்னாதென்றது * "எல்லா—இரப்பார்க்கொன் றீயாமை" கூடுங்கொல்லோ வென்னும் அச்ச நோக்கி. ஆவே எல்லாப்பொருளும் ஈதல் வேண்டுமென்பது பெறப்பட்டது.

(ப-ரை) (இரத்தலேயல்லாமல்) இரக்கப்படுதல் - இரக்கப்படுதலும், இன்னாது - இன்பஞ்செய்வதன்று, இரந்தவர் - (ஒருபொருளை) இரந்தவரது, இன் - (அது பெற்றதனால்) இனிதாகிய, முகம் - முகத்தை, காணுமளவு-பார்க்குமளவும் எ-று.

(க-ரை) இரத்தல் அவரினிய முகத்தைக் காணுமளவுந் துன்பம் என்பதாம்.

* நாலடியார்: குடிப்பிறப்பு-5.

(வி-ரை) உம்மை இரண்டும் வருவிக்கப்பட்டன. இரக்கப்படுதல்-இரப்பவர்க்குக் கொடுப்பேனென்றிருத்தல். எல்லா மிரப்பவர்க்கு ஒன்று கொடுக்கக்கூடாமை நேரிடுமோவென்னும் அச்சத்தைக்குறித்து அதனை இன்னுதென்றார். எனவே எல்லாப்பொருளும் கொடுக்கவேண்டுமென்றதாயிற்று.

'இன்னுது' இது இனிமை அல்லாதது என்னும் பொருளது. அதாவது கண்பார்தருவது என்பதாம். 'இன்முகம்' என்றது முகமலர்ச்சியை. இக்குறளால் அகம் மகிழ முகம் மலர இரப்பார்க்கு ஈயாதவரை இரக்கப்படுவார்க்கும் இன்னுதாம் என்பது இதன் உட்கோள். (4)

ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

(பரி-உரை) ஆற்றவார் ஆற்றல் பசி ஆற்றல் - தவத்தான் வலியார்க்கு வலியாவது தம்மையுற்ற பசியைப் பொறுத்தல், அப்பசியை மாற்றவார் ஆற்றலின்பின்-அவ்வலிதான் அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியை ஈகையா லெழிப்பாரது வலிக்குப்பின் எ-று.

தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதா ராற்றலின் தாம்பசியாது பிறரையும் அது தீர்ப்பாராற்றல் கன்றென்பதாம்.

(ப-ரை) ஆற்றவார் - (தவத்தால்) வல்லவராவோருக்கு, ஆற்றல் - வல்லமையாவது, பசியாற்றல்-(தம்மை அடைந்த) பசியைப் பொறுத்தலாம், (அப்) வல்லமைதான்) அப்பசியை-அப்படிப் பொறுத்தற்கரிய பசியை, மாற்றவார் (கொடையினலே) நீக்குவோரது, ஆற்றலிற்பின்-வல்லமைக்குப்பின் எ-று.

(க-ரை) தவத்தோர் பசியைப் பொறுக்கும் வல்லமையிலும் பசியை மாற்றவோர் வல்லமை பெரிது என்பதாம்.

(வி-ரை) தாமும் பசித்துப் பிறருக்கும் அது தீர்க்கமாட்டாதவர் வல்லமையைக்காட்டிலும் தாமும் பசியாது பிறருக்கும் அது தீர்ப்பவர் வல்லமை கன்றென்பதாம்.

'ஆற்றவார்' என்றது தவஞ்செய்வாரை. 'மாற்றவார்' என்றது பிணி நோய் தீர உணவு தருவாரை. ஆற்றல் என்றசொல் இக்குறளில் இருமுறை வந்தது சொற்பொருட் பிறிதினியலயணி. 'ஆற்றல்' என்றசொல் வல்லமை என்ற பொருளிலும் பொறுத்தல் என்னும் பொருளிலும் வந்தன. (5)

அற்ரு ழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்ரூன் பொருள்வைப் புழி.

(பரி-உரை) அற்றூர் அழி பசி தீர்த்தல் - வறியாரது மிக்க பசியை அறவேக்கித் தீர்க்க, பொருள் பெற்றூன் ஒருவன் வைப்புழி அஃது பொருள் பெற்றூனெருவன் அதனைத் தனக்குதவ வைக்குமிடம் அல்லாமாகலான் எ-று.

எல்லா நன்மைகளும் அழியவருதலின் அழிபசி யென்றார். அறனெனப்பி உதவுமென்பதாம்.

(ப-ரை) அற்றார்-வறியவரது, அழிபசி-மிகுந்த பசியை, தீர்த்தல்-(அற னெனப்பி) தீர்க்கக்கடவன், அஃது-அவ்வறம், பொருள்பெற்றானெருவன்- பொருள் படைத்தவனுகிய வொருவன், வைப்புழி - (அப்பொருளைத் தனக் குதவ) வைக்குமிடம் (ஆதலால்) எ-று.

(க-ரை) பொருள் பெற்றவன் வறியவர் பசியைத் தீர்த்தலே யவன் பொருள் வைக்குமிடம் என்பதாம்.

(வி-ரை) எல்லா நன்மைகளும் அழிய வருதலால் அழிபசி யென்றார். அற்றாழிபசிதீர்த்த பொருள் பின் தனக்கேவந்து உதவுமென்பதாம்.

'அற்றார்' என்றது வறியரை; என்னை செல்வம் அற்றவர் ஆதலின் என்க. அழிபசி' இதில் 'அழி' என்றசொல் மிகுதிப்பொருளை உணர்த்தியது. இனி னம் முதலாகிய பத்தையும் அழிக்கும் பசி எனினும் ஆம். அதாவது: மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை, தானந் தவமுயற்சி தானாண் மை—தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந்தி ப்பறந்து போம்" என்ற பெரியார் வெண்பாவால் அறிக. இனி 'அழிபசி' ன்பதற்கு சாலைத்தந்து உடலை அழிக்கவரும் பசி எனப் பொருள் கூறு ாரும் உண்டு. 'அஃது' என்றது அழிபசி தீர்த்தலாகிய அறத்தைக் குறித் து. 'பொருள் வைப்புழி' என்றது கோமகிதி வைக்கும் இடத்தை. 'உழி' ன்றது இடத்தை.

(6)

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

(பரி-உரை) பாத்த ஊண் மரீஇயவனை - எஞ்ஞான்றும் பகுத்துண்டல் ின்றவனை, பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது - பசியென்று சொல் ப்படுந் தீயநோய் தீண்டுதலில்லை எ-று.

இவ்வுடம்பினின்று ஞானவொழுக்கங்களை அழித்து அதனால் வரும் டம்புகட்குந் தன்பஞ்செய்தலின் தீப்பிணி யெனப்பட்டது. தனக்கு ுத்தவன் தானுகலின் பசிப்பிணி நணுகாதென்பதாம். இவை ஆறுபாட் லும் ஈதலின் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) பாத்து-(எந்நாளும்) பகுத்து, ஊண்-உண்ணுதல், மரீஇயவனை- ஜயனை, பசியென்னும் - பசியெனப்படும், தீப்பிணி-நீயநோய், தீண்ட ை-தீண்டுதலில்லை எ-று.

(க-ரை) பிறர்க்கிட் டுண்ணுவோனைப் பசிநோய் தீண்டாது என்பதாம்.

(வி-ரை) இவ்வுடம்பிலே நின்ற ஞானத்தையும் ஆசாரத்தையும் கெடு ் அதனால் பின்வரும் உடம்புகளுக்கும் தன்பஞ்செய்தலால் தீப்பிணி

யெனப்பட்டது. தனக்கு மருத்துவன் தானேயாகையால் பரிப்பிணி சோ தென்பதாம். [இவை பிறபாட்டாலும் ஈதலின் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'பாத்து' இது 'பகு' என்னும் பகுதியடியாகப் பிறந்தது. பகுத்தல் என் பத பொருள். 'உண்' இது 'உண்' என்னும் பகுதி அடியாகப் பிறந்தது. இது உண்ணப்படும் உணவை உணர்த்தும் சண்டு உண்ணல் என்னும் பொருள்தர நின்றது. 'மரீஇய' இது சொல்லிசை யளபெடை. மருவிய+ அவை = 'மருவிய வகை' என்பது 'மரீஇயவை' என விகாரமுற்ற கின்றது. 'தீப்பிணி' இதில் 'தீமை' என்ற பண்புப்பெயர் 'தீ' என நற கெட்டு நின்றது. 'தீண்டல்' என்றது பற்றுதலை. (7)

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ லுமுடைமை வைத்திழக்கும் வன்க ணவர்.

(பரி-உரை) தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர்-தாமுடைய பொருளை ஈயாது வைத்துப் பின் இழந்துபோம் அருளிலாதார், ஈத்து உவ கும் இன்பம் அறியார்கொல் - அறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர் உவத்தலான் அருளுடையா ரெய்தும் இன்பத்தினைக் கண்டறியா கொல்லோ எ-று.

உவக்குமென்பது காரணத்தின்கண்வந்த பெயரெச்சம்; அஃது இன் மென்னும் காரியப்பெயர்கொண்டது. அறிந்தாராயின், தாமும் அவ்வி பத்தை யெய்துவதல்லது வைத்திழவாரென்பது கருத்து.

(ப-ரை) தாமுடைமை - தாமுடையபொருளை, வைத்து - (கொடாது வைத்து, (பின்னே) இழக்கும் - இழந்துவிடும், வன்கணவர்-அருளிலாதவர் ஈத்து - (வறியவர்க்கு வேண்டிய பொருளைக்) கொடுத்து, உவக்கும் - (அவ மிழ்தலினால், (அருளுடையாரடையும்) இன்பம் - மகிழ்ச்சியை, அறியா கொல்-கண்டறியாரோ எ-று.

(க-ரை) பொருளைத் தேடிவைத்திழப்பவர் கொடுத்து மகிழு மின்பத்தை யறியார் என்பதாம்.

(வி-ரை) ஈத்தென்பது எதனைநோக்கி ஈத்தென்றுயிற்று. அறிந் ராயின் தாமும் அவ்வின்பத்தை அனுபவிப்பாரே யல்லாமல் வைத்திழ் ரென்பது கருத்து.

'ஈத்து' இது 'ஈந்து' என்ற சொல்லின் வலித்தல் விகாரம். 'கொ ண்டு ஐயப்பொருளில் வந்தது. 'வன்கண்ணவர்' என்றது இரக்கமில்ல அருளில்லார் என்னும் பொருளது; கொடுமையுடையார் என்னலும் ' 'வைத்து இழக்கும்' என்றது தேடிப் பொருளை ஈட்டினவத்து அநுப யாது அப்பொருளையும் அதனால் எய்தும் அறப்பயனையும் இழத்தலே என்பதாம்.

இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

(பரி-உரை) நிரப்பிய தாமே தமியர் உணல் - பொருட்குறை நிரப்ப வேண்டி வறியார்க்கு ஈயாது தாமே தனித்துண்டல், இரத்தலின் இன்னாது மன்ற-ஒருவர்க்குப் பிறர்பாற் சென்று இரத்தலினும் இன்னாது ஒருதலையாக.

பொருட்குறை நிரப்பலாவது ஒரோ எண்களைக் குறித்து அத்துணை வீட்டுதுமென ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக்கூட்டுதல். தனித்தல்-பிறரை யொழித்தல். இரத்தற்குள்ளது அப்பொழுதை யிளிவரவே, பின் நல்குரவில்லை; தமியருண்டற்கு அவை யிரண்டு முளவாமாகலின், இரத்தலி னின்னாதென்றார். நிரப்பியவென்பதற்குத் தேடிய வுணவுகளை யென்றுரைப் பாருமுளர்.

(ப-ரை) நிரப்பிய-(பொருளின் குறைவை) நிறைக்கவேண்டி, (இரந்த ர்க்குக் கொடாமல்) தாமே-தாமே, தமியர்-தனித்தவராகி, உணல்-உண்ணு லானது, (ஒருவருக்கு) மன்ற-நிச்சயமாக, இரத்தலின்-(பிறரிடத்தேபோய்) ரத்தலினும், இன்னாது-துன்பஞ்செய்வதாம் எ-று.

(க-ரை) பிறர்க்குக் கொடாமல் தாமே யுண்ணுதல் யாசிப்பதிலுந் ன்பம் என்பதாம்.

(வி-ரை) பொருளின் குறையை நிறைத்தலாவது, ஒவ்வொரு தொகை பக் குறித்து அவ்வளவு சம்பாதிப்போமென்று அத்தொழிலையே மேற் ாண்டு உலோபஞ்செய்து சேர்த்தல். தனித்தல்-பிறரைச்சேராமை. இரத் க்கு உள்ளது அப்போதையிழிவே, பின்னே வறுமையில்லை, தனித்துண் தலுக்கு அவ்விரண்டும் உண்டாகுமாதலால் இரத்தலினின்னாதென்றார்.

'இரத்தலின்' இதில் 'இன்' உருபு எல்லைப்பொருளில் வந்தது. 'மன்ற' 'மன்' என்னும் பகுதியடியாகப் பிறந்தது. மிகவும் என்னும் பொரு . 'நிரப்பிய' இது செய்யிய என்னும் வாய்பாட்டுவினையெச்சம். 'தமியர்' றது பிறரைக் கூடக் கொள்ளாது தனித்து இருந்தவராய் என்னும் ருளது. இது 'தமி' என்னும் பகுதியடியாகப் பிறந்தது. 'உணல்' இது ணல்' என்றதன் தொகுத்தல் விகாரம். (9)

சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை.

(பரி-உரை) சாதலின் இன்னாதது இல்லை - ஒருவர்க்குச் சாதல்போல னாதது ஒன்றில்லை, அதூஉம் ஈதல் இயையாக் கடை இனிது - அத்தன் தாகிய சாதலும் வறியார்க்கு ஒன்றீதல் முடியாதவழி இனிது எ-று.

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான் இனிதென்றார். மூன்றுபாட்டானும் ஈயாமையின் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவனுக்கு) சாதலின் - இறத்தல்போல், இன்னாத-துன் பஞ்செய்வதொன்ற, இல்லை-இல்லை, அதூஉம்-அப்படிப்பட்ட இறத்தலும், ஈதல் - (உறியவர்க்குக்) கொடுத்தல், இயையாக்கடை - முடியாதவிடத்து, இனித-இன்பஞ் செய்வதாகும் எ-று.

(க-ரை) இறத்தலே துன்பமாயினும், இறத்தவர்க்குக் கொடாதவிடத் திறத்தலே யின்பம் என்பதாம்.

(வி-ரை) பிறருக்குப் பயன்படாத உடற்சுமை நீக்குதலால் இனிதெற் றார். [இவை மூன்றுபாட்டாலும் சுயாமையின் குற்றம் சொல்லப்பட்டது.]

'சாதலின்' இதன்கண்நின்ற 'இன்' உருபு எல்லைப்பொருளில் வந்தது. 'இனிததூஉம்' இது இன்னிசையளபெடை. 'கடை' என்றது ஏழன் உருபு.

23-ம் அதி-ஈகை-முற்றிற்று.

24-ம் அதிகாரம்-புகழ்

(பரி-உரை) அஃதாவது: இல்வாழ்க்கைமுதல் ஈகையீறாகச் சொல்லப் பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மையிற்பயனாகி இவ்வுலகின்கண் நிகழ்ந்த இறவாத நிற்குங் கீர்த்தி. இது பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின் அதன்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: இல்வாழ்க்கைமுதல் ஈகை ஈறாகச்சொல்லப்பட்ட இல்லறத்தில் தவறுதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகத்திலே செய்தபடி நிற்பதாகிய கீர்த்தியாம். இது பெரும்பாலும் ஈகைபற்றி வருதலால் அதன் பின் வைக்கப்பட்டது.

ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(பரி-உரை) ஈதல் - வறியார்க்கே, இசைபட வாழ்தல் - அதனாற் பூண்டாக வாழ்க, அதுவல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை - அப்புகழல்லா மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லை யாகலான் எ-று.

இசைபட வாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களு முளவேனும், * "உணவின் பிண்ட முண்டி முதற்றே" ஆகலின், ஈதல் நி தென்பதற்கு ஞாபகமாக ஈதலென்றார். உயிர்க்கென்பது பொதுப் கூறினாரேனும் விலங்குயிர்கட் கேலாமையின் மக்களுயிர்மேனின்றது.

(ப-ரை) ஈதல்-(வறியவர்க்குக்) கொடுத்தலிலேலே, இசைபட-புகழ் டாக, வாழ்தல் - வாழக்கடவர், அதுவல்லது - அப்புகழல்லாமல், உயிர் (மக்க) ளுயிர்க்கு, ஊதியம்-வேறுபயன், இல்லை-இல்லை, (ஆதலால்) எ-று.

* புறநானூறு-18.

(க-ரை) வறியார்க்குக் கொடுத்துப் புகழுண்டாக வாழ்தலே மக்களு பிர்க்கு இலாபம் என்பதாம்.

(வி-ரை) இசைபட வாழுதற்குக் கல்வி ஆண்மை முதலாகிய வேறு காரணங்களும் இருக்கினும் ஈகை சிறந்ததாதலால் எடுத்துச் சொல்லப் பட்டது.

'ஈதல்' 'வாழ்தல்' என்பன முறையே ஈக வாழ்க என வியங்கோட் பொருள்தர்கின்றன. 'அது' என்றது ஈதலால்வரும் இசையைச் சுட்டி நின்றது. 'லாபியம்' என்றது இலாபம் என்னும் பொருளது. ஈண்டு பயன் என்னும் பொருள்தர்கின்றது. 'உயிர்க்கு' என்றது மக்கள் உயிரை யன்னே ஈதலும் இசைபட வாழ்தலும் மக்களுயிர்க்கன்றி ஏனை உயிர்க்கு இல்லையாதலின் என்க.

(1)

ஈரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன் றீவார்மே னிற்கும் புகழ்.

(பரி-உரை) உரைப்பார் உரைப்பவை எல்லாம்-உலகத்தை ஒன்றுரைப்பா ருரைப்பனவெல்லாம், இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்-வறு மையான் இரப்பார்க்கு அவர் வேண்டியதொன்றை ஈவார்கண்நிற்கும் பு கழாம் எ-று.

புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும். அவற்றுள் ஈரைப்பா ருரைப்பவையென எல்லார்க்கும் உரிய வழக்கினையே யெடுத்தா யினும், இனம்பற்றிப் புலவர்க்கே யுரிய செய்யுளுள் கொள்ளப்படும்; ஆகலே, பாடுவார் பாடுவனவெல்லாம் புகழாமென்பதனாலும் பெற்றாம். ஈதற் காரணஞ் சிறந்தமை இதனுள்ளுங் காண்க. இதனைப் பிறர்மேலும் நிற்கு மென்பார் தாமெல்லாஞ் சொல்லுக, புகழ் ஈவார்மே னிற்குமென் றுரைப் பாருமுளர். அது புகழது சிறப்பு நோக்காமை யறிக.

(ப-ரை) உரைப்பார்-(உலகத்திலே ஒன்றை) உரைப்பவரால், உரைப் பவையெல்லாம்-உரைக்கப்படு மவைகளெல்லாம், இரப்பார்க்கு - (வறுமை யால்) இரப்பவர்க்கு, ஒன்று - (அவர் வேண்டிய) தொன்றை, ஈவார்மேல்- நாடுப்பவரிடத்தே, நிற்கும்-நிற்கும், புகழ்-கீர்த்திகளாம் எ-று.

(க-ரை) கொடுப்பவரிடத்தே கீர்த்தி நிற்கும் என்பதாம்.

(வி-ரை) புகழ்தான், உரையும் பாட்டும் என இருவகைப்படும். அவற் ரி உரைப்பா ருரைப்பவையென எல்லார்க்கும் உரிய வழக்கத்தையே ந்தாராகினும், இனம்பற்றிப் புலவர்க்கே உரியபாட்டும் கொள்ளப்படும்; வே, பாடுவார் பாடுவவெல்லா மிரப்பார்க்கொன் றீவார்மேனிற்கும் புகழ் பதும் பெற்றும். புகழின் காரணங்களி லீதல் சிறந்தமை இதனுள்ளுங் க.

'உரைப்பார்' என்றது புகழ்ந்து உரைப்பார் என்பதாம். 'உரைப்பது' என்றது புகழ் உரையை. 'ஒன்று உவார்' என்றது இரப்பார் வேண்டும் ஒன்றைத் தருவோர் என்பதாம். 'உவார்மேல்' என்பது 'மேல்' என்றது ஏழனுருபு. 'புகழ்' என்றது கொடைப்புகழை. (2)

ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ரூ உ நிற்பதொன் நில்.

(பரி-உரை) ஒன்று உயர்ந்த புகழ் அல்லால் - தனக்கு இணையின்றி வோங்கிய புகழல்லது, உலகத்துப் பொன்றுத நிற்பது ஒன்று இல் - உலகத்த இறவாத நிற்பது பிறிதொன்றில்லை எ-று.

இணையின்றுக வோங்குதலாவது கொடுத்தற்கரிய உயிர் உறுப்புப் பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னொடொப்பதின்றித் தானே யுயர்தல். அத்தன்மைத்தாகிய புகழே செய்யப்படுவதென்பதாம். இனி ஒன்றுவென்பதற்கு ஒரு வார்த்தையாகச் சொல்லினெனவும், ஒரு தலையாகப் பொன்றுத நிற்பதெனவும் உரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-உரை) ஒன்று-தனக்கு இணையில்லையாக, உயர்ந்த-ஒப்பில, புகழ்லால்-கீர்த்தியல்லாமல், உலகத்த-உலகத்திலே, பொன்றுத - அழியாமல், நிற்பத-நிலைபெறுவது, ஒன்று-வேறொன்று, இல்-இல்லை எ-று.

(க-உரை) உலகத்தில் அழியாது நிற்பது புகழ் என்பதாம்.

(வி-உரை) தனக்கு இணையில்லையாக வோங்குதலாவது கொடுத்தற்கரிய உயிரையும் உறுப்பையும் பொருளையும் கொடுத்தமைபற்றி வருதலால், தன்னொடு ஒப்பது இல்லாமல் தானே உயர்தல். அப்படிப்பட்ட புகழையே மனுஷ்யப் பிறந்தவன் சம்பாதிக்கவேண்டு மென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் புகழது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'ஒன்று' என்றது தனக்கு ஒப்பு இல்லாததாக என்பதாம். இதற்கு 'ஒன்று' பகுதி. 'ஒன்றுத' என்பது சாரகெட்டு நின்றது. இதில் 'அ' எதிர்மறைப் பொருள்தருகின்றது. 'உயர்ந்தபுகழ்' என்றது கொடைப்புகழை. 'பொன்றுத' இதற்கு 'பொன்று' என்பது பகுதியாம். 'நிற்பது' இதற்கு நிற்பது, அழிவின்றி இருப்பது என்னும் பொருளது. 'இல்' இது 'இன்' என்பதன் கடைக்குறை விகாரம்.

நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றுது புத்தே ளுலகு.

(பரி-உரை) நிலவரை நீள்புகழ் பூற்றின்-ஒருவன் நிலவெல்லைக்கண் நின்று பொன்றுத நிற்கும் புகழைச் செய்யுமாயின், புத்தேள் உலகு புலவரைப் போற்றுத - புத்தேளுலகம் அவனையல்லது தன்னே யெய்தினின்ற ஒருவரைப் பேணுத எ-று.

புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே யெய்தாமையின் புலவரைப் போற்றுதென்றார். அவன் இரண்டுலகும் ஒருங் தூர்தி, யெய்தப வென்பதஞ் செய்வினை முடித்த" எனப் பிறாலுஞ் சொல்லப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) நிலவரை-பூமியினெல்லையில், நின்புகழ்-அழியாத நிற்கும்புகழை, ஆற்றின்-செய்வானுயின், புத்தேளுலகு-தெய்வலோகமானது, (அதனையல்லாமல்) புலவரை-(தன்னை யடைந்திருக்கிற) ஞானிகளை, போற்றுதல-பேணுதல எ-று.

(க-ரை) உலகில் அழியாப்புகழைச் செய்வானுயின் தேவலோகத் தேவர் தனைத் தரியாது என்பதாம்.

(வி-ரை) இவன்போல் அவர் புகழ்வடிவால் இவ்வுலகத்தையும், தெய வடிவால் அவ்வுலகத்தையும், ஒருசோ அடையாமையால் புலவரைப் போற் றுத புத்தேளுலகென்றார்.

'நிலவரை' என்றது புவிவரைப்பை. 'வரை' என்றது எல்லையை. நில வரை நின்புகழ்' இதில் எழுவாய்ப் பொருள் தொக்குநின்றது. 'நின்புகழ்' இது அழிவு இன்றி நிற்பதாகிய கொடைப்புகழை. 'புலவர்' என்றது ஞானிகளை. புலம்-அறிவு, ஞானம். 'புத்தேளுலகு' என்றது தேவர் வசிக்கும் பொன்னுலகை.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

(பரி-உரை) நத்தம் (ஆகும்) கேடும்-புகழுடம்பிற்கு ஆக்கமாகுங்கேடும், உளதாகும் சாக்காடும்-புகழுடம்பு உளதாகுஞ் சாக்காடும், வித்தகர்க்கு அல்லால் அரிது-சதுரப்பாடுடையார்க்கல்லது இல்லை எ-று.

நத்தென்னுஞ் தொழிற்பெயர் விகாரத்தான் நத்தென்றாய், பின் அம் மன்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று நத்தமென்றுயிற்று. போலென்பது ஈண்டு உரையசை. ஆகுமென்பதனை முன்னுங் கூட்டி, அரிதென்பதனைத் தனித்தனி கூட்டி முடிக்க. ஆக்கமாகுங் கேடாவது புகழுடம்பு செல்வ மெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகுஞ் சாக்காடாவது புகழுடம்பு நிலைபெறப் பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றுள் நிலையின எய்தலால் வித்த கரின் வித்தகர்க் கல்லாலரிதென்றார். இவை இரண்டுபாட்டானும் முடையாசெய்தும் மேன்மை கூறப்பட்டது.

(ப-ரை) வித்தகர்க்கல்லால் - நிறைமையை யுடையவர்க்கு அல்லாமல், ஏனையோர்க்கு) நத்தமாகும்-(புகழுடம்பிற்கு) பெருக்கமாகும், கேடும்-வறுமை யும் அரிது-இல்லை, உளதாகும்-(அப்புகழுடம்பு) நிலைபெறுவதாகும், சாக் காடும்-மரணமும், அரிது-இல்லை எ-று.

• புறநானூறு-27.

(க-ரை) புகழுடம்பை வளர்த்தலும் கீலபெறச்செய்தலும் அறிவிலார்க்கு அரிது என்பதாம்.

(வி-ரை) கந்த என்னு முதனிலைத்தொழிற்பெயர் கந்த என விகாரப்பட்டு அம் விகுதிபெற்று வந்தது. போல்-உரையசை. ஆதும், அரிது, இவற்றை முன்னுங்கூட்டப்பட்டன. பெருக்கமாகும் கேடாவது புகழுடம்பு செல்வத்தை அடைதற்குப் பூதவுடம்பு வறமைப்படல். கீலபெறுவதாகு மரணமாவது; புகழுடம்பு கீலபெறற்குப் பூதவுடம்பு இறத்தல் கீலயில்லாத வுடம்பை வருத்தியும் விட்டும் கீலயான புகழை வளர்த்தலும் நிறுத்தலும் பிறர்க்கு முடியாமையால் வித்தகர்க்கல்லா லரிதென்றார். [இவை இரண்டு பாட்டாலும் புகழுடையாரது மேன்மை சொல்லப்பட்டது.]

'கந்தம்போல்' இதில் 'போல்' என்பது பொருளின்றி கிற்றலால் உரையசை. 'கந்தம்' இது கந்த என்னும் பகுதியடியாகப் பிறந்தது; வலித்தல் விகாரம்பெற்ற அம் என்னும் பகுதிப்பொருள் விகுதிகொண்டு முடிந்தது. 'கேடு' இது 'கேடு' என்னும் பகுதி அடியாகப் பிறந்தது. கேட்டைத்தருவது 'கேடு' என்பதறிக. 'கேடு' என்றது நண்டு பொருள் இழிவை. 'சாக்காடு' என்றது உடல் அழிவை. இதில் 'காடு' என்றது விகுதி. 'வித்தகர்' என்றது அறிவுச் சாமர்த்தியமுடையவரை. (5)

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(பரி-உரை) தோன்றின் புகழொடு தோன்றுக-மக்களாய்ப் பிறக்கின் புகழுக் கேதுவாகிய குணத்தொடு பிறக்க, அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று-அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று எ-று.

புகழ் நண்டு ஆகுபெயர். அஃதிலாரென்றமையின் மக்களாயென்பதூஉம், மக்களாய்ப் பிறவாமையென்ற அருத்தாபத்தியான் விலங்காய்ப் பிறத்தலென்பதூஉம் பெற்றும். இகழ்வாரின்மையின் நன்றென்றார்.

(ப-ரை) தோன்றின்-(மனிதராய்ப்) பிறந்தால், புகழொடு-புகழுக்(கதுவாகியகுணத்தோடு) தோன்றுக - பிறக்கக்கடவர், அஃதிலார்-அக்குணமில்லாதவர், தோன்றலின்-(மனிதராய்ப்) பிறத்தலினும், தோன்றாமை-பிறவாமையானது, (விலங்குகளாய்ப் பிறத்தலென்றபடி) நன்று-நல்லது எ-று.

(க-ரை) பிறந்தாற் புகழோடு பிறக்கக்கடவர், அவ்வாறில்லாதவர்க்குப் பிறவாமையே நல்லது என்பதாம்.

(வி-ரை) புகழுக்கு ஏதுவைப் புகழென்றலால் ஆகுபெயர். தோன்றுதலால் மனிதரா யென்பதும், மனிதராய்ப் பிறவாமை என்பது அருத்தாபத்தியினாலே விலங்காய்ப்பிறத்தலென்பதும் கொள்ளப்பட்டன. இகழ்வாரில்லாமையால் நன்றென்றார்.

* அருத்தாபத்தியாவன: பகலுண்ணுன் பருத்திருக்கைநோக்கி இரவுண்பானென வறிவதுபோல்வன.

'புகழ்' என்றது புகழுக்குக் காரணமாகிய குணத்தை, இது ஆகுபெயர். 'தோன்றின்' என்பதில் 'இன்' உருபு தோன்றுவானுதல் என்னும் பொருளது. 'அஃது' என்றது புகழ்க்கு எதுவாகிய குணத்தை. 'இலார்' இது இல்லாதவர் என்பதன் விகாரம். 'தோன்றுமை' மக்களாய்த் தோன்றுமை என்பதாம். 'தோன்று' என்றசொல் இக்குறளில் அதேபொருளிற் பன்முறை வந்தமையாற் சொற்பொருட் பின்வருநிலையணி. (6)

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

(பரி-உரை) புகழ்பட வாழாதார் - தமக்குப் புகழுண்டாக வாழமாட்டாதார், தம் நோவார்-அதுபற்றிப் பிறர் இகழ்ந்தவழி இவ்விகழ்ச்சி நம்மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே, தம்மை இகழ்வாரை நோவது எவன்-தம்மை யிகழ்வாரை நோவது என்கருதி எ-று.

புகழ்பட வாழலாயிருக்க அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறரிகழ்தல் ஒருதலையாகலின் இகழ்வாரை யென்றார்.

(ப-ரை) புகழ்பட - (தமக்குப்) புகழுண்டாக, வாழாதார்-வாழமாட்டாதவர், (அதுபற்றிப் பிறரிகழ்ந்தவிடத்தே) தந்நோவார்-(இவ்விகழ்ச்சி நமது மாட்டாமையால் வந்ததென்று) தம்மை நோவாதவராகி, தம்மை-தம்மை, இகழ்வாரை - கிந்திப்பவரை, நோவது - நொந்துகொள்வது, எவன் - என்னினைத்து எ-று.

(க-ரை) புகழுண்டாக வாழாதவர் தம்மை யிகழ்ந்தவரை நொந்துகொள்வதென்ன என்பதாம்.

(வி-ரை) புகழ்பட வாழவேண்டியதாயிருக்க அப்படி வாழமாட்டாதது நம்பற்றிப் பிறர் இகழ்வது ஒருபகுமாகலால் இகழ்வாரை நோவதெவனென்றார்.

'புகழ்பட' இது புகழ் உண்டாக என்னும் பொருளது. 'வாழாதார்' இது 'வாழாதவர்' என்பதன் விகாரம். 'தம்நோவார்' இது தம்மை நோவாராகி என்ற பொருளது, இது இரண்டன்றொகை. 'எவன்' இது வினா அடியாகப் பிறந்த பெயர். (7)

வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறூஅ விடின்.

(பரி-உரை) இசை என்னும் எச்சம் பெறூஅவிடின் - புகழென்னுமெச்சம் பெறலாயிருக்க அது பெறூதொழிவாயின், வையத்தார்க்கு எல்லாம் வசை என்ப-வையகத்தோர்க்கெல்லாம் அதுதானே வசையென்று சொல்லுவர் கல்லோர் எ-று.

எச்சமென்றார் செய்தவரிறந்துபோகத் தான் இறவாது நிற்றலின். புகழ்ப்படுதற்குப் பிறிதொரு குற்றம் வேண்டாவென்பது கருத்து.

(ப-ரை) இசையென்னுமெச்சம் - புகழென்னும் எச்சத்தை, (பெற வேண்டியிருக்க) பெறாவிடின்-(அதனைப்) பெறாது விடுவாராயின், வையத்தார்க்கெல்லாம்-பூமியிலுள்ளார்க்கெல்லாம், வசை-(அதுதானே) வசையாகும், என்ப-என்று (நல்லோர்) சொல்லுவர் எ-று.

(க-ரை) ஒருவன் கீர்த்தியென்னும் பிள்ளையைப் பெறாமலிருப்பானாகி லுலகிற்கு வசை என்பதாம்.

(வி-ரை) செய்தவர் இறந்துபோகத் தாமிறவாமல் நிற்கையால் புகழை எச்சமென்றார். இகழப்படுதற்கு மற்றொருகுற்றம் வேண்டாமென்பதுகருத்து.

'வசை' என்றது இகழ்ந்துரைக்கப்படுவதாகிய இகழ்ச்சியை. 'இசை' என்றது புகழை. புகழைப் பண்ணொடுஇசைக்கும் வழக்குண்மையின் புகழை 'இசை' என்றார். 'இசைக்கப்படுவது இசை' என்றதனானறிக. பூத உடல் பொன்றினும் தனக்குப்பின் புகழுடம்பு பொன்றாது எஞ்சி நிற்பது ஒன்றாதலின் புகழை 'எச்சம்' என்றார். 'பெறாஅ' என்றது இசைநிறைக்கவந்த அளபெடை. (8)

வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

(பரி-உரை) இசை இலா யாக்கை பொறுத்த நிலம்-புகழில்லாத வுடம்பைச் சுமந்த நிலம், வசை இலா வண் பயன் குன்றும் - பழிப்பில்லாத வளப்பத்தையுடைய விளையுள் குன்றும் எ-று.

உயிருண்டாயினும் அதனாற் பயன் கொள்ளாமையின் யாக்கையெனவும் அது நிலத்திற்குப் பொறையாகலிற் பொறுத்த வெனவுங் கூறினார். விளையுள் குன்றுதற்கேது பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. குன்றுமென இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேனின்றது. இவை நான்கு பாட்டானும் புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது.

(ப-ரை) இசையிலா - புகழில்லாத, யாக்கை - உடம்பை, பொறுத்த சுமந்த, நிலம்-நிலத்தில், வசையிலா-பழிப்பில்லாத, வண்பயன்-வளப்பத்தையுடைய விளைவு, குன்றும்-குறையும் எ-று.

(க-ரை) கீர்த்தியில்லாவுடலைச் சுமந்தநிலத்தில் விளைவுகுறையும் என்பதாம்.

(வி-ரை) உயிருண்டாயினும் அதனாலே பயன்கொள்ளாமையால் யாக்கையென்றும், அது நிலத்திற்குப் பாரமாதலின் பொறுத்தலென்றும் சொல்லினார். விளைவு குறைதற்கு ஏது பாபசரீரத்தைச் சுமக்கின்ற வெறுப்பு. [இவை நான்குபாட்டாலும் புகழில்லோரது தாழ்வு சொல்லப்பட்டது.]

'வசைஇலா' இதில் 'இலா' என்பது 'இல்லா' என்பதன் தொகுத்தல் விகாரம். 'வண்' என்றது வளப்பத்தை. 'வண்மை' என்னும் பண்புப்பெயர் ஈறுகெட்டு நின்றது. 'பயன்' என்றது விளைபொருட்பயனை. உயிரோடு கூடிய உடலைத்தாங்கிய மனிதனை. 'யாக்கை' என்றது உயர்க்குரியதாகி. புகழைப் பெறாத இழிபு தோன்ற என்க. (9)

வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய வாழ்வாரே வாழா தவர்.

(பரி-உரை) வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்-தம்மாட்டு வசை புண்டாகாமல் வாழ்வாரே உயிர்வாழ்வாராவார்; இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர்-புகழுண்டாகாமல் வாழ்வாரே இறந்தாராவார் எ-று.

வசையொழிதலாவது இசையென்னும் எச்சம் பெறுதலாயினமையின், இசையொழிதலாவது வசை பெறுதலாயிற்று. மேல், இசையிலாயாக்கை யென்றதனை விளக்கியவாறு. இதனால் இவ்விரண்டும் உடன் கூறப்பட்டன. மறுமைப்பயன் "வானுறையுந் தெய்வத்தின் வைக்கப்படும்." என மேலே கூறப்பட்டது; படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும் தேவருலகிற் போகமும் பயனென்பது பெற்றாம்.

இனி மனு முதலிய அறநூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடக்கும். அஃதறிந்து அடக்கிக்கொள்க; யாம் உரைப்பிற் பெருகும்.

(ப-ரை) வசையொழிய - (தம்மிடத்து) வசையுண்டாகாமல், (புகழுண்டாகவென்றபடி) வாழ்வாரே - வாழ்பவரே, வாழ்வார் - (உயிர்) வாழ்வாராவார், இசையொழிய - புகழுண்டாகாமல், (வசையுண்டாகவென்றபடி) வாழ்வாரே-வாழ்பவரே, வாழாதவர்-இறந்தோராவார் எ-று.

(க-ரை) கீர்த்தியுடன் வாழ்பவரே உயிரோடு வாழ்வார் என்பதாம்.

(வி-ரை) வசையென்பவென்னும் பாட்டில் வசையொழிதல் புகழ்பெறுதலானதால், இங்கே இசையொழிதல் வசைபெறுதலாயிற்று. முன் பாட்டிலே புகழில்லாத வுடம்பென்றதனை விளக்கியவாறு. இதனால் அம்மேன்மையுஞ் சாழ்வும் (உடன்சொல்லப்பட்டன) மறுமைப்பயன் வானுறையுந் தெய்வத்தின் வைக்கப்படுமென முன்னே சொல்லப்பட்டமையால் இல்லறத்தக்கு வ்வுலகத்திலே புகழும் தேவருலகத்திலே போகமும் பயனென்பது கொள்ளப்பட்டது.

இனி மனுமுதலிய அறநூல்களால் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல்லாம் இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடக்கும். அஃதறிந்து அடக்கிக்கொள்க.

'வாழ்வாரே' என்ற இரண்டிடத்தும்நின்ற ஏகாரம் தேற்றப்பொருளது. 'வாழ்வார்' என்றது உயிருடன்கூடி வாழ்பவர் என்னும் பொருளது. 'வாழாதவர்' என்றது இருந்தும் இறந்தவர் என்னும் பொருளது. 'வாழ்' என்னுஞ்சால் இக்குறளில் பன்முறை வந்தது சொற்பொருட் பின்வருநிலையணி. 'வாழ்வாரே வாழாதவர்' என்பது முரண்டொடை. (10)

24-ம் அதி-புகழ்-முற்றிற்று.

இல்லறவியல் முற்றுப்பெற்றது

ஆக அதிகாரம் 24-க்கு திருக்குறள்-240

துறவறவியல்

(பரி-உரை) இனி முறையானே துறவறங் கூறிய தொடங்கினார். துற
வறமாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையாராய்ப்
பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின்பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம்.
அதுதான், வினைமாசுதீர்த்த அந்தக்காரணங்கள் தூயவாதற்பொருட்டு
அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றுள் அவை தூயவாயவழி உதிப்ப
தாய ஞானமுமென இருவகைப்படும்.

(உரை) இனி, முறைப்படித் துறவறம் சொல்லத்தொடங்கினார். துற
வறமாவது முன்சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாது நடந்து அறிவுடை
யாராய்ப் பிறப்பினை அஞ்சி முத்திபெறுதற்பொருட்டுத் துறந்தவர்க்கு உரித்
தாகிய அறமாம். அது விரதமும், ஞானமும் என விருவகைப்படும்.

விரதம்

(பரி-உரை) அவற்றுள் விரதங்களாவன: இன்ன அறஞ் செய்வலென
வும், இன்ன பாவம் ஒழிவலெனவும் தம்மாற்றலுக்கு ஏற்ப வரைந்துகொள்
வன. அவைதாம் வரம்பிலவாகலிற் பெருகுமென்றஞ்சி, அவை தம்முள்ளே
பலவற்றையும் அகப்படுத்தி நிற்குஞ் சிறப்புடையன சிலவற்றை எண்டுக்
கூறுவான் தொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்.

(உரை) அஃதாவது: வினைமாசுதீர்த்த, அந்தக்காணங்கள் பரிசுத்தமா
தற் பொருட்டு இன்ன அறங்களைச் செய்வேனென்றும், இன்ன பாவங்களை
விடுவேனென்றும், தமது வல்லமைக்கு ஏற்ப அளவுசெய்துகொண்டு துற
தோறாலே காப்பாற்றப்படுவது. அவ்விரதங்கள் அளவில்லாதவையாயிருந்தி
னும் அவை பலவற்றையும் தம்முள்ளே அடக்கிநிற்குஞ் சிறப்புடைய சில
வற்றை இங்கே சொல்லத்தொடங்கி முதலிலே அருளுடைமையை அருளிச்
செய்கின்றார்.

25-ம் அதிகாரம்-அருளுடைமை

(பரி-உரை) அஃதாவது, தொடர்பு பற்றுதல் இயல்பாக எல்லாவுயிர்
கண்மேலுஞ் செல்வதாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல,
இது துறவறத்திற்குச் சிறத்தலின் முன் கூறப்பட்டது.

(உரை) அஃதாவது: தொடர்பு பற்றுமல் இயல்பாக எல்லாவுயிர்களின்
மேலும் செல்வதாகிய கருணையையுடையராதலாம். இல்லறத்துக்கு அன்
புடைமைபோல் இது துறவறத்துக்குச் சிறத்தலால் முன் சொல்லப்பட்டது.

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செ
பூரியார் கண்ணு முள. [ல்வம்

(பரி-உரை) செல்வத்துள் செல்வம் அருள் செல்வம்-செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது அருளான்வருஞ் செல்வம், பொருள் செல்வம் பூரியார்கண்ணும் உள-அஃதொழிந்த பொருளான்வருஞ் செல்வங்கள் இழிந்தார்கண்ணுமுளவாம் ஆகலான் எ-று.

அருளான்வருஞ் செல்வமானது உயிர்களை யோம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார்கண்ணே அல்லது இல்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம். ஏனை நீசர்கண்ணேயு முளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பிலவென்பதாம்.

(ப-ரை) பொருட்செல்வம்- பொருளால்வருஞ் செல்வங்கள், பூரியார் கண்ணும்-இழிந்தவரிடத்தும், உள-இருக்கின்றன, (ஆகலால்) செல்வத்துள்-செல்வங்கள் பலவற்றுள்ளும், (ஆராய்ந்து எடுக்கப்பட்ட) செல்வம்-செல்வமானது, அருட்செல்வம்-அருளால்வருஞ் செல்வமாம் எ-று.

(க-ரை) சிறுபையாகிய செல்வமே செல்வம், பொருளாகிய செல்வங் கீழோரிடத்துமுண்டு என்பதாம்.

(வி-ரை) அருளால்வருஞ் செல்வமாவது-உயிர்களைக் காப்பாற்றி அவ்வறத்தால் மேம்படுதலாம். இழிந்தோரிடத்து இல்லாமல் உயர்ந்தோரிடத்து மாத்திரம் உள்ள அருட்செல்வமே சிறப்புடைய செல்வமென்றும், இழிந்தோரிடத்தும் உள்ள மற்றைப் பொருட்செல்வங்கள் சிறப்புடையன அல்லவென்றும் சொல்லியதாம்.

'அருட்செல்வம்' என்றது அருளாகிய செல்வத்தை. இது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பொருட்செல்வம் என்றது பொருளாகிய செல்வத்தை. இதுவும் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. 'பூரியார்' என்றது இழிந்தோரை. 'கண்ணும்' என்றதில் 'கண்' ஏழன் உருபு. உம்மை இழிவுச்சிறப்புவும்மை. 'செல்வம்' என்ற சொல்லும் பொருளும் ஒரே அடியில் மூன்முறைவந்தது சொல்பொருள் பின்வருநிலையணி. (1)

நல்லாற்று ணுடி. யருளால்க பல்லாற்றுந்
தேரிணு மஃதே துணை.

(பரி-உரை) நல்லாற்றுன் நாடி அருள் ஆன்க - அளவைகளானும் பொருத்தமாற்றானும் நன்றான நெறியிலே நின்று நமக்குத் துணையாம் அறம் இதென்றாராய்ந்து அருளுடையராக; பல்லாற்றுல் தேரினும் துணை அஃதே-மற்றையொன் றெறுவ்வாத சமயநெறிகள் எல்லாவற்றானும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே பிறிதில்லை எ-று.

அளவைகளாவன: பொறிகளாற் காணுங்காட்சியும், குறிகளான் உய்த்துணரும் அனுமானமும், கருத்தா மொழியாகிய ஆகமமும் என மூன்று. சிறப்புப்பற்றி உணரும் உவமையும், இங்ஙனம் அன்றாயின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்குமாறாய இன்மையும் என இவ்

றையுங்கூட்டி ஆறென்பாரு முளர். இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருத்தமாறுவது-இது கூடும் இது கூடாதெனத் தன் கண்ணே தோன்றுவது: இதனை வடநூலார் யுத்தி யென்ப. ஆற்றுனென்பது வேற்றுமைமயக்கம். ஒன்றையொன் றுவ் வாமையாவது மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முள் மாறுகோடல்; அன்னவாயினும் அருள் துணையென்றற்கண் ஒக்குமென்ப தாம். உயிரை விட்டு நீக்காத இருமையினும் உதவலின், துணையென்றார். இவை யிரண்டுபாட்டானும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) கல்லாற்றால் - கல்வழியிலேநின்று, நாடி - (அளவைகளாலும் புத்தியாலும் கமக்குத் துணையாகும் அறம் யாதென்று) ஆராய்ந்து, அருளான்க-அருளுடையாராகக்கடவர், பல்லாற்றால்-(ஒன்றுக்கு ஒன்று ஒத்திராத) பல சமயவழிகளால், தேரினும் - ஆராய்ந்தாலும், துணை - துணையாவது, அஃதே-அவ்வருளே (வேறொன்றில்லையென்றபடி) எ-று.

(க-ரை) கல்வழியில் நின்று நிருபையை யாளுவாராயின் அந்நிருபையே துணை என்பதாம்.

(வி-ரை) அளவைகளாவன: பொறிகளாலே காணும் காட்சியும் குறி களாலே ஆலோசித்து அறியும் * அனுமானமும், கருத்தா மொழியாகிய ஆகமமும் என மூன்றுவகைப்படும். ஒப்புமைபற்றி அறிகிற உவமானமும், இப்படியல்லாமற்போனால், இது கூடாதென்று அறியும் அருத்தாபத்தியும் உண்மைக்கு எதிராகிய இல்லாமையும் என விவையுங்கூட்டி ஆறென்பாரும் உண்டு. இவையும் அம்மூன்றுள் அடக்கிக் கொள்ளப்படும். யுத்தியாவது இதுகூடும் இதுகூடாது எனத் தன்னிடத்தே தோன்றுவது. ஒன்றுக்கு ஒன்று ஒத்திராமையாவது மதவேறுபாட்டால் அளவைகளும் பொருள்களும் தம்முள்ளே மாறுகொள்ளுதலாம். அப்படியிருந்தாலும், அருள்துணை யென்பது எல்லாருக்கும் ஒத்திருக்குமென்பதாம். உயிரைவிட்டு நீக்காத இருமையிலும் உதவலால் துணையென்றார். [இவை இரண்டுபாட்டாலும் அருளது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'நல்லாற்றால் நாடி' இதில் 'நல்லாற்றால் நின்று நாடி' என நின்ற என்ற சொல் வருவித்துப் பொருள் உரைக்கப்பெற்றது. 'நாடியருள்க' இதில் அளவைகளால் நாடி அருள் ஆள்க என அளவைகள் என்ற சொல் வருவித்துப் பொருளுரைக்கப் பெற்றது. 'பல்லாறு' என்றது பலசமயநெறி களை. 'தேர்தல்' என்றது ஆராய்ந்து அறிதலை. 'அஃதே' என்றது அருளை. 'துணை' என்றது இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றற்கும் துணையாய் நிற்பது என்பதாம். (2)

அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்ப வுலகம் புகல்.

---

* அனுமானமாவது: புகையினுலே நெருப்பை அறிவது முதலானவை.

(பரி-உரை) இருள் சேர்ந்த இன்ன உலகம், புகல்-இருள் செறிந்த தன்பவுலகத்துட் சென்று புகுதல், அருள்சேர்ந்த நெஞ்சினர்க்கு இல்லை-அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கு இல்லை எ-று.

இருள்செறிந்த தன்பவுலகமென்றது திணிந்த இருளையுடைத்தாய்த் தன்கட்புக்கார்க்குத் தன்பஞ்செய்வதோர் நரகத்தை; அது கீழுலகத்தின் ஓரிடமாகலின் உலகமெனப்பட்டது.

(ப-ரை) இருள்சேர்ந்த-அந்தகாரந்தங்கிய, இன்னுவுலகம்-தன்ப வுல கத்திலே, புகல்-(போய்ப்) புகுதல், அருள்சேர்ந்த-அருளைச்சேர்ந்த, நெஞ்சி னர்க்கு-நெஞ்சை யுடையவர்க்கு, இல்லை-இல்லை எ-று.

(க-ரை) கிருபைபொருந்திய மனமுடையோர் நரகிற்புகார் என்பதாம்.

(வி-ரை) இருள்சேர்ந்த இன்னுவுலகமென்றது நெருங்கிய விருளை புடையதாய்த் தன்னை அடைந்தவர்க்குத் தன்பஞ் செய்வதொரு நரகத்தை; அது கீழுலகத்தின் ஓரிடமாகலின் உலகமெனப்பட்டது.

'அருள்சேர்ந்த நெஞ்சு' என்றது அருள் குடிகொண்டிருக்கும் மனதை. 'இருள்சேர்ந்த இன்னுலகம்' என்றது பேரிருள் உடையதாகிப் பெருந தன்பமே தருவதாகிய ரௌரவாதி நரகங்களை. 'புகல்' இது 'புகுதல்' என்றதன் தொகுத்தல் விகாரம். (3)

மன்னுயிரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(பரி-உரை) மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு-நிலைபேருடைய உயிர் காப் பேணி அவற்றின்கண் அருளுடையனுவானுக்கு, தன் உயிர் அஞ்சும் தன்ன இல் என்ப - தன்னுயிர் அஞ்சுதற்கு ஏதுவாகிய தீவினைகள் உளவாகா வென்று சொல்லுவர் அறிந்தோர் எ-று.

உயிர்களெல்லாம் நித்தமாகலின் மன்னுயிரென்றார். அஞ்சுதல்-தன்ப நோக்கி அஞ்சுதல். அன்ன அறத்திலேன் கொலை முதலிய பாவங்கள் செய்யானெனவே மறுமைக்கண் நரகம் புகாமைக்கேது கூறியவாறுயிற்று.

(ப-ரை) மன்னுயிர்-நிலைபேறுடைய உயிர்களை, ஓம்பி-காப்பாற்றி, அரு ளாள்வாற்கு - (அவைகளிடத்தே) அருளுடையவனை யிருப்பவனுக்கு, தன் னுயிர்-தன்னுடைய வுயிர், அஞ்சும்-அஞ்சுதற்கு ஏதுவாகிய, வினை-பாவங்க ளானவை, இல்-உண்டாகா, என்ப-என்று (அறிந்தோர் சொல்லுவர்) எ-று.

(க-ரை) பிறவுயிர்களிடத்துக் கிருபையுடையவனுக்குத் தன்னுயிர் பயப் படும் பாவமில்லை என்பதாம்.

(வி-ரை) உயிர்களெல்லாம் நித்தியமாதலின் மன்னுயிரென்றார். அஞ்சு தல் - தன்பநோக்கி அஞ்சுதல். அப்படிப்பட்ட அறமுடையவன் கொலை

முதலாகிய பாவங்களைச் செய்யானெனவே, மறுமையிலே நரகத்தை அடையானமைக்கு ஏது சொல்லப்பட்டதாயிற்று.

ஆன்மா அழிவற்றதாதலின் 'மன்னுயிர்' என்றார். 'ஓம்பி' என்றது அவ்வுயிர்களுக்குத் துன்பம் வராது காத்து என்றதாம். 'அருள் ஆள்தல்' என்றது அருளுடையனாகவிருத்தலாம். 'இலை' இது இல்லை என்பதன் விகாரம்.. 'வினை' என்பது தீவினையை; இது தன்னுயிரஞ்சும் என்ற குறிப்பாற்பெறப்பெற்றது. (4)

அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு மல்லன்மா ஞாலங் கரி.

(பரி-உரை) அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை-அருளுடையார்க்கு இம்மையினும் ஒரு துன்பம் உண்டாகாது, வளிவழங்கும் மல்லல்மா ஞாலம் கரி-அதற்குக் காற்று இயங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று எ-று.

சான்றாவார் தாங்கண்டு தேறிய பொருளைக் காணாதார்க்குத் தேற்றுதற்கு உரியவர் அருளாள்வார்க்கு அல்லல் உண்டாக ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒருவரும் கண்டறிவாரின்மையின், இன்மைமுகத்தான் ஞாலத்தார் யாவருஞ் சான்றென்பார், வளிவழங்கு மல்லன்மா ஞாலங்கரி யென்றார். எனவே, இம்மைக்கணென்பதுபெற்றாம். ஞாலம்-ஆகுபெயர். இவை மூன்று பாட்டானும் அத்துணையுடையார்க்கு இருமையினுந் துன்பமில்லாமை கூறப்பட்டது.

(ப-ரை) அருளாள்வார்க்கு-அருளுடையவர்க்கு, (இம்மையிலும்) அல்லல்-ஒரு துன்பமாவது, இல்லை-உண்டாகாது, (அதற்கு) வளிவழங்கும்-காற்றுலாவுகின்ற, மல்லல் - வளப்பத்தையுடைய, மா-பெரிய, ஞாலம்-பூமியில் வாழ்வோர், கரி-சாக்ஷியாவார் எ-று.

(க-ரை) கிருபையுடையவர்களுக்குத் துன்பமில்லை என்பதாம்.

(வி-ரை) சாக்ஷியாவார் தாம் கண்டு தெளிந்த பொருளைக் காணாதார்க்குத் தெளிவித்தற்கு உரியவர். அருளாள்வார்க்கு அல்லலுண்டாக ஒருகாலத்திலும் ஓரிடத்திலும் ஒருவரும் கண்டறிவாரில்லாமையால், உலகத்தாரனைவரும் சாட்சியாவரென்றற்கு ஞாலங்கரியென்றார். எனவே இம்மையிலென்பது பெற்றாம். ஞாலத்தாரை ஞாலமெனலால் ஆகுபெயர். [இவை மூன்று பாட்டாலும் அருளுடையவர்க்கு இருமையிலும் துன்பமில்லாமை சொல்லப்பட்டது.]

'அல்லல்' என்பது துன்பத்தை. இது இன்பம் அல்லாதது இன்பம் அல்லாதது என்னும் பொருளில் அல் அல் என்றாயிற்று என்பர். மற்றொரு சாரார் துன்பத்திற்கு அஞ்ஞானமாகிய இருளே காரணம் ஆதலின் பெரியதோர் அஞ்ஞானத்தால் விளைந்தது என்னும் குறிப்புப்பற்றி துன்பத்தை

'அல்லல்' என்றார் என்பர். வளி-காற்று. வளி வழங்கா ஞாலம் ஒன்றில்லை யாதலால் இது இயல்புகவிற்சியாம். மல்லல்-வளப்பம். ஞாலம்-பூமி. இப்பூமி கடலையும், மலைகளையும், நதிகளையும், காடுகளையும் கொண்டு விளங்கலால் 'மல்லன்மா ஞாலம்' என்றார். 'பெரிது பெரிது புவனம் பெரிது' என ஔவைப்பிராட்டியும் கூறியதால் 'மாஞாலம்' என்றார். முத்திக்கு ஏதுவாய ஞானத்தையுடையது பூமியாதலின் 'மாஞாலம்' என்றார் என்பாரும் உண்டு. 'கரி' என்றது சான்றாகும் என்பதாம். (5)

பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார்.

(பரி-உரை) அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் - உயிர்கண் மாட்டுச் செய்யப்படும் அருளைத்தவிர்ந்து தவிரப்படும் கொடுமைகளைசெய் தொழுகுவாரை, பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் - முன்னும் உறுதிப் பொருளைச் செய்யாது தாம் தன்புறுகின்றமையை மறந்தவரென்று சொல்லுவர் கல்லோர் எ-று.

உறுதிப்பொருள் - அறம். தன்புறுதல் - பிறவித்தன்ப மூன்றினையும் அனுபவித்தல். மறந்திலராயின் அவ்வா றொழுகாரென்பது கருத்து.

(ப-ரை) அருணீங்கி-(உயிர்களிடத்துச்செய்யவேண்டும்) அருளைவிட்டு, அல்லவை-விடவேண்டும் கொடுமைகளை, செய்து-செய்து, ஒழுகுவார்-நடப் பாரை, பொருணீங்கி-(முன் பிறப்பிலேயும்) உறுதிப்பொருளைத் தேடாமல், பொச்சாந்தார் - (தான் தன்பப்படுகின்றமையை) மறந்தவர், என்ப-என்று கல்லோர்) சொல்லுவர் எ-று.

(க-ரை) அருளைவிட்டுப் பாவஞ்செய்பவரை மறுமைப்பொருளை மறந் தவரென்பர் என்பதாம்.

(வி-ரை) உறுதிப்பொருள்-அறம். தன்பப்படுதல்-தன்னைப்பற்றி வரு தல் முதலாகிய பிறவித்தன்ப மூன்றையும் அனுபவித்தலாம் மறவாதிருந்தா யின் அப்படி நடவாரென்பது கருத்து.

'பொருள்' என்றது உறுதிப்பொருளாகிய அறத்தை. 'அல்லவை' இது றம் அல்லதாகிய பாவச்செயல்களை உணர்த்தி நின்றது. 'என்பர்' என்றது றவுடையார் என்பர் என்பதாம். 'அருணீங்கி' 'பொருணீங்கி' என்பன றையே அருளை விட்டு, அறத்தைவிட்டு என்னும் பொருள். 'பொருணீங் ப் பொச்சாந்தார்' என்பதில் மூற்பிறவிகளில் அறத்தினின்றும் நீங்கியதால் ப்பிறவியில் தாம் தன்புறுகின்றமையை மறந்தவர் என சில சொற்கள் வாய்நிலையால் வருவித்துரைக்கப்பெறும். (6)

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

(பரி-உரை) அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை - உயிர்கண்மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பமில்லை; பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு-பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லையாயிற்போல எ-று.

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத்து இன்பத்துக்குப் பொருள் காரணமாஞற்போல, அவ்வுலகத்து இன்பத்துக்கு அருள் காரணமென்பதாயிற்று.

(ப-உரை) பொருளில்லார்க்கு - பொருளில்லாதவர்க்கு, இவ்வுலகம் - இவ்வுலகத்தினின்பம், இல்லாகியாங்கு - இல்லாதமைபோல், அருளில்லார்க்கு-(உயிர்களின்மேல்) அருளில்லாதவர்க்கு, அவ்வுலகம் - அவ்வுலகத்தினின்பம், இல்லை-இல்லை எ-று.

(க-உரை) பொருளில்லாதவர்க் கிவ்வுலகத்தின்ப மில்லாமைபோல் அருளில்லாதவர்க் கவ்வுலகத்தின்பமில்லை என்பதாம்.

(வி-உரை) உலகமிரண்டும் அவற்றினின்பங்களுக்கு ஆகுதலால் ஆகுபெயர்கள். எப்படி இந்த வுலகவின்பத்துக்குப் பொருளோ அப்படியே அந்த வுலகவின்பத்துக்கு அருள் காரணமென்பதாயிற்று.

'அவ்வுலகம்' என்றது முத்தி உலகத்தின்பத்தை; இதில் அகரம் பண்டறிசுட்டு. 'இவ்வுலகம்' என்றது பூ உலகத்து இன்பத்தை. இகரம் அண்மைச்சுட்டு. 'இல்லாகியாங்கு' இது இல்லை+ஆகிய+ஆங்கு மூன்று சொற்களின் இருசந்தி. 'பொருளில்லார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு' என்றது உவமானம்.

பொருளற்றூர் பூப்ப ரொருகா லருளற்று
ரற்றூர்மற் றூத லரிது.

(பரி-உரை) பொருள் அற்றூர் ஒருகால் பூப்பர்-ஊழான் வறியராயினும் அதுநீக்கிப் பின் ஒருகாலத்தச்செல்வத்தாற்பொலிவர்; அருள் அற்றூர் அற்றூர் மற்று ஆதல் அரிது - அவ்வாறன்றி அருளிலாதார் பாவம் அறுமையின் அழிந்தாரே, பின்னொருகாலத்தும் ஆதலில்லை எ-று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. மேற்பொருளின்மையோடு ஒப்பு வாற்று னெப்புமை கூறினராகலின், அது மறுத்து, பிறவாற்றான் அருளினுங் கொடிதென்பது கூறியவாறு.

(ப-உரை) பொருளற்றூர்-(ஊழியினாலே) வறுமை அடைந்தவர், (அது நீங்கி) ஒருகால்-(பின்) னொருகாலத்தில், பூப்பர்-(செல்வத்தினால்) பொலிவார், (அப்படியல்லாமல்) அருளற்றூர்-அருளில்லாதவர், (பாவம் நீங்காமையால்), அற்றூர் - அழிந்தவரே, மற்று - பின்னொருகாலத்திலும், ஆதலரிது ஆகுதலில்லை எ-று.

(க-ரை) பொருளற்றவர் ஒருகாலத்திற் செல்வம்பெறுவர். அருளற்றவர் அழிந்தவரே என்பதாம்.

(வி-ரை) முன்பாட்டில் ஒருவிதத்தால் பொருளில்லாமையோடு அருளில்லாமையை ஒப்பாக்கிச் சொன்னராதலால், இப்பாட்டில் மற்றொரு விதத்திலேலே அதனைமறுத்து அதிலும் கொடிதென்பதை சொல்லியபடி.

'பொருளற்றார்' என்றது போ கூழான் வறுமையடைந்தோர் என்பதாம். 'பூப்பர்' என்றது அப்பொருள் சேரச் செல்வராவர் என்பதாம். 'ஒருகால்' என்றது ஆகூழ் வந்தடைந்த அக்காலத்தை என்பதாம். 'ஆகல்' என்றது உயர்ச்சம்பெற்று வாழ்வு அடைதல் என்பதாம். இக்குறளில் 'அற்றார்' என்றது நான்முறை - அதே பொருளில் வந்தமையால் சொற்பொருட் பின்வருநிலையணி.

(8)

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரி னருளாதான் செய்யு மறம்.

(பரி-உரை) அருளாதான் செய்யும் அறம் தேரின்-உயிர்கண்மாட்டு அருள் செய்யாதவன் செய்யும் அறத்தை ஆராயின், தெருளாதான் மெய்ப்பொருள் கண்டு அற்று - ஞானமில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும் எ-று.

மெய்ப்பொருள்-மெய்ந்நூலிற் சொல்லும்பொருள். நிலைபெற்ற ஞானமில்லாதவன் இடையே மெய்ப்பொருளையுணர்ந்தால் அதனைத் தன்ஞானமின்மையால் தானே யழித்துவிடும். அதுபோல, அருளாதான் இடையே அறஞ் செய்தால் அதனைத் தன்னருளாமையால் தானே யழித்துவிடுமென்பதாயிற்று; ஆகவே, பிற அறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமென்பது பற்றும்- இவை கான்குபாட்டாலும் அத்துணையில்லாதார்க்கு வருங்குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) அருளாதான்-(உயிர்களிடத்தே) அருள்செய்யாதவன், செய்-செய்யும், அறம்-அறத்தை, தேரின்-ஆராயின், தெருளாதான்-ஞானமிலாதவன், மெய்ப்பொருள் - மெய்ந்நூலிற் சொல்லப்பட்ட பொருளை, அற்று-(ஒருகால்) கண்டதுபோலும் எ-று.

(க-ரை) அருளில்லாதவன் செய்யுந் தருமத்தை யாராயின் மெய்ஞ்ஞானமில்லாதவனுண்மைப்பொருளைக் கண்டாற்போலும் என்பதாம்.

(வி-ரை) ஆல்-அசை. எப்படி நிலைபெற்ற ஞானமில்லாதவன் கடுவே மெய்ப்பொருளை உணர்ந்தால் அதனைத் தனது ஞானமில்லாமையாற்றானே அழித்துவிடுவானோ அப்படியே அருளில்லாதவன் கடுவே அறஞ்செய்தால் அதனைத் தன்னருளில்லாமையாற்றானே அழித்துவிடுவா னென்பதாயிற்று. ஆகவே மற்றெல்லா வறங்களுக்கும் அருளுடைமை மூலமென்பது பெறப்பட்டது. [இவை கான்குபாட்டாலும் அருளில்லாதவர்க்கு வருங்குற்றம் சொல்லப்பட்டது.]

'தெருளாதான்' என்றது ஞானத் தெளிவைப் பெறாதவன் என்பதாம். தெருள்-தெளிவு; இது மருளுக்கு மறுதலை. 'மெய்ப்பொருள்' என்றது மெய் ஞாற்பொருளை. 'அற்று' இது அத்தன்மைத்து என்னும் பொருளது. 'தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்' என்பது உபமானம். 'அருளாதான் செய்யும் அறம்' என்றது உபமேயம். 'அருளாதான்' இது உயிர்களிடத்து அருள் காட்டாதவன் என்ற பொருளது. (9)

**வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.**

(பரி-உரை) வலியார் முன் தன்னை நினைக்க-தன்னின் வலியார் தன்னை கலிய வரும்பொழுது அவர்முன் தான் அஞ்சி நிற்கு நிலையினை நினைக்க, தான் தன்னின் மெலியார்மேல் செல்லுமிடத்து-அருளில்லாதவன் தன்னின் எளியார்மேல் தான் கலியச் செல்லும்பொழுது எ-று.

மெலியாரொனச் சிறப்புடைய உயர்திணைமேல் கூறினாயினும், எனை அஃறிணையுங் கொள்ளப்படும். அதனை நினைக்கவே இவ்வுயிர்க்கும் அச்சமாமென்றறிந்து அதன்மேல் அருளுடையனுமென்பது கருத்து. இதனால் அருள் பிறத்தற்கு உபாயங் கூறப்பட்டது.

(ப-ரை) (அருளில்லாதவன்) தன்னின் மெலியார்மேல் - தன்னிலும் மெலியவர்கள்மேல், தான்-தான், செல்லுமிடத்து-(வருத்துதற்குச்) செல்லுமிடத்து, வலியார்-(தன்னின்) வலியவர் (தன்னைவருத்துதற்கு வரும்போது), முன்-(அவர்) முன், தன்னை-(அஞ்சிநிற்கும்) தனதுநிலையை, நினைக்க-நினைக்கடவன் எ-று.

(க-ரை) வலியன் மெலியவனை வருத்தச்செல்லும்போது தன்னிலும் வலியவன் தன்னை வருத்தியதை நினைக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) மெலியாரொனினும் அஃறிணைக்குங் கொள்க. அதனை நினைக்கவே இத்தவுயிருக்கும் அப்படியே அச்சமுண்டாகுமென்று அறிந்து அதன்மேல் அருளுடையவனாவனென்பது கருத்து. [இதனால் அருள் பிறத்தற்கு உபாயம் சொல்லப்பட்டது.]

'வலியார்' என்றது தன்னினும் உடல்வலியுடையாரை. இனி உடல்வலி செல்வப்பொருள்வலி உடையாரை என இருவலியுங் கூட்டி யுரைப்பாருமுண்டு. 'தன்னை நினைக்க' என்றது தன்வலிக்குறைவால் தான் அஞ்சிநிற்கும் நிலையினை நினைக்க என்பதாம். 'இடத்து' என்றது ஈண்டு காலத்தை உணர்த்தி நின்றது. 'நினைக்க' இது வியங்கோள் வினைமுற்று. (10)

25-ம் அதி-அருளுடைமை-முற்றிற்று.

26-ம் அதிகாரம்-புலான்மறுத்தல்

(பரி-உரை) அஃதாவது: ஊனுண்டலையொழிதல். கொலைப்பாவத்தைப் பின்னும் உளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும், முன்னும் அதனுன் வருதலின் அதன் காரியமாதலையும், ஒருங்குடைத்தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்றாகலின், அதனை விலக்குதற்கு இஃது அருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: ஊனுண்ணுதலை ஒழித்தலாம். கொலைப்பாவத்தைப் பின் உண்டாக்கலால், அதற்குக் காரணமாதலையும், முன்னும் அதனால் வருதலால் அதன்காரியமாதலையும் ஒருசேர உடைத்தாகிய ஊனுண்ணுதல் அருளுடையார்க்கு இயைவதன்றாகலின் அதனை விலக்குதற்கு இது அருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.

(பரி-உரை) தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான். ன்னுடம்பை வீக்குதற்பொருட்டுத் தான் பிறிதோ ருயிரின் உடம்பைத் ின்பவன், எங்ஙனம் ஆளும் அருள் - எவ்வகையான் நடத்தும் அருளினை ·று.

பயனிலாத ஊன்பெருக்கலைப் படனெனக்கருதி இக்கொடுமை செய் னே அறிவிலாத கொடியோனென்றவாறாயிற்று. எங்ஙனமாளும் அரு ன்பது ஆளானென்பது பயப்பதின்ற இகழ்ச்சிக்குறிப்பு.

(ப-ரை) தன்னூன்-தன்னுடம்பை, பெருக்கற்கு-வளர்த்தற்பொருட்டு, ன்-தான், பிறிதூன்-மற்றொன்றினுடம்பை, உண்பான்-தின்பவன், ங்ஙனம்-எவ்வகையால், அருள்-அருளை, ஆளும்-ஆளுவான் எ-று.

(க-ரை) தன்னுடல் பெருக்கற்குப் பிறவுடலைத் தின்பவனெவ்வகைற் கிருபையுடையவனுவான் என்பதாம்.

(வி-ரை) பயனில்லாத தன்னூன் வளர்த்தலைப் பயனென நினைத்து ங்கொடுமை செய்வோனே அறிவில்லாத கொடியோனென்றதாயிற்று. எவ் மாளுமருளென்பது ஆளானென்பது படகின்ற இகழ்ச்சிக்குறிப்பு.

'ஊன்' இது னகாரச்சாரியை பெற்ற பெயர். 'ஊ'-இறைச்சி 'ன்' ரியை இது ஆகுபெயராய் மாமிசத்தாலாகிய உடலைக்குறித்தது. 'பெருக் ு' என்றது வளர்த்தலை; இரண்டாவதின்ற ஊன் என்பது இறைச் ி. இதனை 'ஊனைத்தின் றூணைப் பெருக்காமை முன்னினிதே' என்ற லறியலாம். எங்ஙனம்-எவ்விதம். இதில் ஙகரம் விரு இடைச் ால். இனம்-விதம். 'ஆளும் அருள்' என்றது அருள் செய்யும் என்னும் ருளது.

பொருளாட்சி போற்றுதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

(பரி-உரை) பொருள் ஆட்சி போற்றுதார்க்கு இல்லை-பொருளாற் பயன் கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கில்லை, ஆங்கு அருள் ஆட்சி ஊன் தின் பவர்க்கு இல்லை - அதுபோல அருளாற் பயன் கோடல் ஊன்றின்பவர்க் கில்லை எ-று.

பொருட்பயன் இழத்தற்குக் காரணம் காவாமைபோல, அருட்பயன் இழத்தற்கு ஊன்றின்றல் காரணமென்பதாயிற்று. ஊன் தின்றாராயினும் உயிர்கட்கு ஒரு தீங்கும் கினையாதார்க்கு அருளாடற்கு இழுக்கில்லை யென் பாரை மறுத்து, அஃதண்டென்பது. இவை இரண்டுபோட்டானும் கூறப் பட்டது.

(ப-ரை) பொருளாட்சி-பொருளினுலே பயன்கொள்ளுதல், போற்று தார்க்கு-(அதனைக்) காப்பாற்றுதவர்க்கு, இல்லை-இல்லையாம், ஆங்கு-அது போல், அருளாட்சி - அருளினுலே பயன்கொள்ளுதல், ஊன்றின்பவர்க்கு, புலாலுண்பவருக்கு, இல்லை-இல்லை எ-று.

(க-ரை) அருளைக் காப்பாற்றுதார்க் கருளில்வரும் இன்பமில்லை என் தாம்.

(வி-ரை) எப்படி பொருட்பயனை இழத்தற்கு அதனைக் காப்பாற் மையோ அப்படியே அருட்பயனை இழத்தற்கு ஊன்றினல் காரணமென் தாயிற்று. ஊன்றின்றாராயினும் உயிர்களுக்கு ஒருதீங்கு கினையாராயி அருளாளுதற்குக் குறையில்லை யென்பாரை மறுத்து அது உண்டென்பத [இவை இரண்டுபோட்டானும் சொல்லப்பட்டது] எடுத்துக்காட்டுவமையா

'பொருள்' என்றது செல்வப்பொருளை. 'ஆட்சி' என்றது அப்பொ வால் எய்தும் பயனை அடைதல். 'போற்றுதார்க்கு' என்றது அச்செல்வ பொருளைப் பாதுகாவாதவர்க்கு என்பது பொருளாம். 'அருளாட்சி' என்ப அருட்பயன் கோடலை. 'பொருளாட்சி போற்றுதார்க்கில்லை' இது உ மானம்.

படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்
றுடல்சுவை யுண்டார் மனம்.

(பரி-உரை) படைகொண்டார் நெஞ்சம்போல் - கொலைக்கருவினை தங்கையிற் கொண்டவர் மனம் அதனைச் செய்யுங் கொலையையே நோக்கு தல்லது அருளை நோக்காதவாறுபோல, நன்றன் உடல் சுவை உண்ட மனம் நன்று ஊக்காது - பிறிதோருயிரின் உடலைச் சுவைபட வுண்ட மனம் அவ்வூனையே நோக்குவதல்லது அருளை நோக்காது எ-று.

சுவைபடவுண்டல்-காயங்களான் இனிய சுவைத்தாக்கியுண்டல். இதனால் ஊன்றின்றூர் மனம் தீங்குநினைத்தல் உவம அணையாற் சாதித்து மேலது வலியுறுத்தப்பட்டது.

(ப-ரை) ஒன்றன்-பிறிதோருயிரினது, உடல்-உடலை, சுவையுண்டார்-சுவைபடவுண்டவரது, மனம்-மனமானது, படைகொண்டார் - கொலைக்கருவியைத் (தம்கையிலே) கொண்டவரது, நெஞ்சமபோல் - மனம்போல், நன்றாக்காது-(கொலையை நோக்குவதல்லது) அருளை நோக்காது எ-று.

(க-ரை) ஊன் தின்பவர்கள் மனம் அருளை நினையாது என்பதாம்.

(வி-ரை) சுவைபடவுண்டல்-காயங்களால் இனிய சுவைபடச் சமைத்துண்டல். படை-வாள்முதலானவை. [இதனால் ஊன்றின்பாரது மனம் தீங்கு நினைத்தல் உபமானப் பிரமாணத்தினாலே சாதித்து முன்பாட்டிலே சொல்லியது உறுதிசெய்யப்பட்டது.]

'படை' என்றது யுத்தத்திற்கு உரிய ஆயுதங்களை. இது படுப்பது (அழிப்பது) என்னுங் காரணம்பற்றி வந்த பெயர். இது சத்துருக்களை அழித்தலால் இப்பெயர் வந்தது. 'படைகொண்டார் நெஞ்சம்' உபமானம். 'போல்' என்றது உவம உருபு. 'நன்று ஆக்காது' என்றதில் 'நன்று' என்றது அருளை. (3)

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.

(பரி-உரை) அருள் யாது எனின் கொல்லாமை - அருள் யாதெனின் கொல்லாமை, அல்லது (யாதெனின்) கோறல் - அருளல்ல தியாதெனிற் கோறல், அவ்வூன் தினல் பொருள் அல்லது-ஆகலான் அக்கோறலான்வந்த ஊனைத் தின்கை பாவம் எ-று.

உபசாரவழக்காற் கொல்லாமை கோறலாகிய காரியங்களை அருள் அல்லதெனக் காரணங்களாக்கியும், ஊன் தின்கையாகிய காரணத்தைப் பாவமெனக் காரியமாக்கியுங் கூறினர். அருளல்லது-கொடுமை. சிறப்புப் பற்றி அறமும் பொருளெனப்படுதலின், பாவம் பொருளல்லதெனப்பட்டது. கோறலென முன்னின்றமையின் அவ்வூனென்றார். இனி இதனை இவ்வாறன்றி அருளல்லதென்பதனை ஒன்றாக்கி, கொல்லாமை கோறலென்பதற்குக் கொல்லாமையென்னும் விரதத்தை யழித்தலென் றுரைப்பாருமுளர்.

(ப-ரை) அருள்-அருளானது, யாதெனின்-எதுவென்றால், கொல்லாமை-கொலைசெய்யாமை, அல்லது - அவ்வருளல்லாததானது, யாதெனின் - எதுவென்றால், கோறல்-கொல்லுதல், (ஆதலால்) அவ்வூன் - அக்கொல்லுதலால் வந்தவூனை, தினல்-தின்னுதல், பொருளல்லது - அறனல்லாததாம், (பாவமாம்) எ-று.

(க-ரை) கொல்லாமையே அருளாம் கொல்லுதலே பாவமாம் என்ப தாம்.

(வி-ரை) கொல்லாமையை அருளென்றும், கொல்லுதலை அல்லதென் றும் காரியக்கூறுக் காரணக்களாகவும், வன்றின்மையாகிய காரணத்தைப் பாவமாகிய காரியமாகவும் உபசரித்தார். அருளல்லது கொடுமை சிறப்புப் பற்றி அறம் பொருளெனப்படுதலால் பாவம் பொருளல்லது எனப்பட்டது.

இக்குறளில் 'அருள் யாதெனிற் கொல்லாமை' 'அல்லது யாதெனிற் கோறல்' எனப் பொருள் தருதலின் கிரல் நிறைப் பொருள்கோள். 'அல் லது' இது அருள் அல்லாதது என்னும் பொருள்தந்து அருளுக்கு மறுதலைப் பொருளைத் தந்துநின்றது. 'பொருள்' என்றது அறத்தை உணர்த்தியது. என்னை? அறமும் பொருளுள் அடங்கும் ஆதலின் என்க. 'அவ்வூன்' என்றதில் அகரச்சுட்டு அக்கோறலால் வந்த ஊனைக்குறித்தது. (4)

உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ணல்
வண்ணாத்தல் செய்யா தளறு.

(பரி-உரை) உயிர்நிலை ஊன் உண்ணாமை உள்ளது-ஒருசாருயிர் உடம் பின்கண்ணே நிற்றல் ஊனுணாமை யென்கின்ற அறத்தின்கண்ணது, உண்ண அளறு அண்ணாத்தல் செய்யாது - ஆகலான் அந்நிலைகுலைய ஒருவன் அதனை புண்ணுமாயின் அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்கா வாது எ-று.

உண்ணப்படும் விலங்குகள் அதனுற்றேய்ந்து சிலவாக வேனைய பலவாய் வருதலின் உண்ணாமையுள்ளதுயிர்நிலையென்றார். உண்ணினென்பது உண்ண வெனத் திரிந்துநின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான் நெடுங்காலம் நிரயத்தை எழுந்தமென்பதாம். கொலைப்பாவம் கொன்றார்மேனிற்றலின் பின் ஊனுண்பார்க்குப் பாவமில்லை யென்பாரை மறுத்து, அஃது உண்டென்பது இவ்விரண்டுபாட்டானும் கூறப்பட்டது.

(ப-ரை) உயிர் - (சிலவகை) உயிர்கள், நிலை - (உடம்புகளிலே) நிற்கை, ஊன்-ஊனை, உண்ணாமையுள்ளது-உண்ணாமையென்னும் அறத்தினிடத்தது, (ஆதலால்) உண்ண-(அந்நிலைகுலைய ஒருவன் அதனை) உண்பானுயின், அள (அவனை விழுங்கிய) நரகமானது, அண்ணாத்தல் செய்யாது - (பின் உமிழ் தற்கு) வாய்நிறவாது எ-று.

(க-ரை) ஒருவ னூனுண்பானுயி னவனை நரகம் விழுங்கிவிடும் என்ப தாம்.

(வி-ரை.)உண்ணப்படுகிற விலங்குகள் அதனுலே குறைந்துபோகமற்றவை பல்குதலால் உண்ணாமையுள்ள துயிர்நிலையென்றார்.. உண்ணவென்பது உண்ணினென்னும் பொருளில்வந்தது. [ஊனுண்டவன் அப்பாவத்தினுலே நெடுங்காலம் நரகத்தில் அழுந்துவானென்பதாம். கொலைப்பாவம் கொன்

கர்மேல்நிற்றலால் பின் ஊனுண்பார்க்குப் பாவமில்லையென்பாரை மறுத்த அது உண்டென்பதூ இவை இரண்டுபாட்டாலும் சொல்லப்பட்டது.]

இக்குறளில் 'ஊன்' என்றசொல் இடைநின்று 'ஊன் உண்ணுமை' எனவும், 'ஊன் உண்ண' என சுபிடத்தம் இயைந்து பொருள்கொள்ள நிற்றலின் இது மத்திபதீப அலங்காரம். 'உண்ணு' 'உண்ண' என ஒரே அடியில் எதிர்மறையிலும் உடன்பாட்டிலும் வந்தமையால் இது மூரண் டொடை. 'அண்ணுத்தல்' இது வாய்நிறத்தல் என்னும் பொருளது. 'அளறு' என்றது சுகத்தை. இது அளறு நிறைந்துள்ள காரணம்பற்றிவந்த காரணப் பெயர். அளறு-சேறு. (5)

தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.

(பரி-உரை) தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின் - பேதைமை காரணமாக அல்லது ஊன்றின்னை காரணமாக உலகங்கொல்லாதாயின், விலைப்பொருட்டு ஊன்றருவார் யாரும் இல்-பொருள் காரணமாக ஊன் விற்பார் யாவரும் இல்லை எ-று.

உலகென்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேனின்றது. பின்னிகழுந் தின்னை முன்னிகழுந் கொலைக்குக் காரணமாகாமையின் தின்பார்க்குக் காரணத் தான்வரும் பாவமில்லையென்ற வாதியை நோக்கி, அருத்தாபத்தி அளவை யாற் காரணமாதல் சாதித்தலின் இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது.

(ப-ரை) தினற்பொருட்டால் - தின்னுதல் காரணமாக, உலகு - உலகத் தார், கொள்ளாதெனின்-(ஊனைக்) கொள்ளாராயின், விலைப்பொருட்டால்-விலைப்பொருள் காரணமாக, ஊன்றருவார் - ஊனைவிற்பவர், யாரும்-எவரும், இல்-இல்லை எ-று.

(க-ரை) ஊனை வாங்குவாரில்லாமை னதை விற்பாரில்லை என்பதாம்.

(வி-ரை) பின்னே உண்டாவதாகிய ஊனைத் தின்னுதல், அதற்கு முன்னே உண்டாவதாகிய கொலைக்குக்காரணமாகாமையால் தின்பார்க்குக் காரணத்தால் வரும் பாவம் இல்லையென்ற வாதியைநோக்கி அருத்தாபத்தி பிரமாணத்தினுலே காரணமாகுதல் சாதித்தலின் இதனுல் முன்பாட்டிலே சொல்லியது உறுதி செய்யப்பட்டது.

'தினல்' இது தின்னல் என்றதன் தொகுத்தல்விகாரம். 'உலகு' என்றது உலகத்துமக்களை. இது ஆகுபெயர். 'விலைப்பொருட்டால் ஊன்றருவார்' என்றது விலைக்கு ஊன்விற்பார் என்னும் பொருளது. (6)

உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணு ணுணர்வார்ப் பெறின்.

(பரி-உரை) புலாஅல் பிறிது ஒன்றன் புண்-புலாலாவது பிறிதோருடம்பின் புண், அது உணர்வார்ப்பெறின் உண்ணாமைவேண்டும் - அது தூய்து அன்மை யறிவாரைப்பெறின் அதனை உண்ணாதொழியல் வேண்டும் எ-று.

அஃது என்னல்வேண்டும் ஆய்தம் விகாரத்தாற்றொக்கது. அம்மெய்ம்மை புணராமையின் அதனை புண்கின்றாரென்பதாம். பொருந்துமாற்றானும் புலாலுண்டல் இழிந்ததென்பது இதனாற் கூறப்பட்டது.

(ப-ரை) புலால்-புலாலானது, பிறிதொன்றன் - வேறொருடம்பினது, புண்-புண்ணாகும், அது - அப்புலால் அசுத்தமாயிருக்கையை, உணர்வார்-அறிவோரை, பெறின் - பெற்றால், உண்ணாமைவேண்டும் - (அப்புலாலை) உண்ணாதொழியவேண்டும் எ-று.

(க-ரை) பிறவுடலின் புண்ணென்றறிந்தவர்களைப் பெற்றால் ஊனை புண்ணாதிருக்கவேண்டும் என்பதாம்.

(வி-ரை) அந்த மெய்மையை அறியாமையால் அதனை உண்கின்றாரென்பதாம். [இதனால் புத்தியினாலும் ஊணுண்ணல் இழிந்ததென்பது சொல்லப்பட்டது.]

'புலாஅல்' என்றது ஊனை. இதன்கண்வந்த அளபெடை இசை நிறைக்கவந்த அளபெடை. 'அது உணர்வார்ப்பெறின்' என்ற இது புண் என்னும் அத்தன்மையை உணர்வரேயாயின் என்னும் பொருளதாம். (7)

செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணா
ருயிரிற் றலைப்பிரிந்த ஊன்.

(பரி-உரை) செயிரின் தலைப்பிரிந்த-காட்சியார்-மயக்கமாகிய குற்றத்தினீங்கிய அறிவினையுடையார், உயிரின் தலைப்பிரிந்த ஊன் உண்ணார் - ஓர் உயிரினீங்கிவந்த ஊனை யுண்ணார் எ-று.

தலைப்பிரிவென்பது ஒருசொல். பிணமென ஊனின் மெய்ம்மை தாமே யுணர்தலின் உண்ணாரென்றார்.

(ப-ரை) செயிரின் - (மயக்கமாகிய) குற்றத்தினின்றும், தலைப்பிரிந்த-நீங்கிய, காட்சியார்-அறிவினையுடையவர், உயிரின்-ஒருயிரினின்றும், தலைப்பிரிந்த-நீங்கிவந்த, ஊன்-ஊனை, உண்ணார்-தின்னார் எ-று.

(க-ரை) அறிவுடையார் ஊன்தின்னார் என்பதாம்.

(வி-ரை) தலைப்பிரிவு - ஒருசொல். பிணமென்று ஊனின்மெய்மை தாமே அறிதலால் உண்ணாரென்றார்.

'செயிர்' என்றது குற்றம்; ஈண்டு அஞ்ஞானமாகிய குற்றம் என்பதாம். 'தலைப்பிரிதல்' இது நீங்குதல் என்னும்பொருளது. 'காட்சியார்' என்றது ஞானக்காட்சியுடையவரை. 'ஊன்' என ஓதாது உயிரிற்றலைப்பிரிந்த என்றது அது பிணம் என்பதைக் குறிப்பிக்கற்காம். (8)

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

(பரி-உரை) அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின்-தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்டலினும், ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று - ஒரு விலங்கினுயிரைப்போக்கி, அது நின்றனை உண்ணாமை நன்று எ-று.

அவ்வேள்விகளான் வரும் பயனினும் இவ்விரதத்தால் வரும் பயனே பெரிதென்பதாம்.

(ப-ரை) அவி-(நெய்முதலாகிய) அவிகளை, சொரிந்து-(தீயினிடத்தே) பெய்து, ஆயிரம் வேட்டலின் - ஆயிரம் யாகஞ்செய்தலினும், ஒன்றன்-ஒரு விலங்கினது, உயிர்-உயிரை, செகுத்து-போக்கி, உண்ணாமை-(அவ்வுயிர்நின்றனை) உண்ணாமை, நன்று-நல்லது எ-று.

(க-ரை) ஆயிரம் யாகஞ்செய்தலினும் புலாலைத் தின்னாமை நல்லது என்பதாம்.

(வி-ரை) அந்த யாகங்களால் வரும் பயனிலும் இந்த விரதத்தால் வரும் பயன் பெரிதென்பதாம்.

'அவி' இது தேவர்க்கு ஊட்டும் உணவை ஈண்டு உணர்த்திற்று. இனி அவிக்கப்படுதலின் 'அவி' என ஆயிற்று என்பாரும் உண்டு. 'அவித்தல்' இது அக்கினியில் இட்டுச் சமைத்து உதவுவது என்னும் பொருளதாம். 'வேட்டல்' என்றது யாகம்செய்தலை. செகுத்தல்-அழித்தல். (9)

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(பரி-உரை) கொல்லான் புலாலை மறுத்தானை-ஒருயிரையுங் கொல்லாதவனுமாய்ப் புலாலையும் உண்ணாதவனை, எல்லா உயிரும் கைகூப்பித்தொழும்-எல்லாவுயிருங் கைகுவித்துத் தொழும் எ-று.

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றேயு முடையார்க்கு ஊனாற் பயனில்லையாகலின் கொல்லாமையும் உடன்கூறினார். இப்பேரருளுடையான் மறுமைக்கண் தேவரின் மிக்கானாமென அப்பயனது பெருமை கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் ஊனுண்ணாமையது உயர்ச்சி கூறப்பட்டது.

(ப-ரை) கொல்லான் - (ஒருயிரையும்) கொல்லாதவனுமாய், புலாலை மறுத்தானை - புலாலையு முண்ணாதவனை, எல்லாவுயிரும் - எல்லாவுயிர்களும், கைகூப்பி-கைகுவித்து, தொழும்-வணங்கும் எ-று.

(க-ரை) ஊனைத் தின்னாதவனை எல்லாவுயிரும் வணங்கும் என்பதாம்.

(வி-ரை) இவ்விரண்டறங்களேயும் ஒருமிக்கவுடையவர்க்கு அல்லாமல் ஒன்றைமாத்திரம் உடையவர்க்கு அதனைப் பயனில்லாகலின் கொல்லாமையும் உடன்சொல்லினர். இப்போருளுடையவன் மறுமையிலே தேவரினும் உயர்ந்தவனெனன அப்பயனது பெருமை சொல்லியபடி. [இவை மூன்று பாட்டாலும் ஊனுண்ணுமையினது உயர்ச்சி சொல்லப்பட்டது.]

'கொல்லான்' இது கொல்லாதவன் ஆகி என்னும் பொருளது. 'மறுத்தானை' என்றது, உண்ண 'மறுத்தானை என்பதாம். 'தொழும்' என்னுது 'கைகூப்பித் தொழும்' என்றது வணங்குஞ் சிறப்புக்குறித்ததாம்; இதனுன் அவன்மாட்டு உயிர்க்குன்ன பத்தி விளக்கியதாம். இவ் அருளாளனைத் தெய்வமாக எல்லா உயிருங் கருதி வணங்கும் என்றதாம். 'உயிரும்' என்றதன்கண் நின்ற உம்மை முற்றும்மை. (10)

26-ம் அதி-புலான்மறுத்தல்-முற்றிற்று.

27-ம் அதிகாரம்-தவம்

(பரி-உரை) அஃதாவது: மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயில்நிலே நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலே நிற்றலும் முதலிய செயல்களே மேற்கொண்டு அவற்றுல் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தல், பிறவுயிர்களே யோம்புதல். புலான் மறுத்தல் உயிர்கண்மேல் அருண் முதிர்ந்தழிச் செய்யப் படுவதாகலின், இது புலான் மறுத்தலின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: மனம் பொறிவழிபோகாமல் நிற்கையின்பொருட்டு விரதங்களினுலே உண்டிசுருக்குதல் முதலான செயல்களே மேற்கொண்டு அவைகளால், தம்முயிர்க்குவருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களைக் காப்பாற்றலாம். புலாலைமறுத்தல் உயிர்களின்மேல் அருள் முதிர்ந்தவிடத்தே செய்யப்படுவதாகலின் இது புலான் மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

261 உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை யற்றே தவத்திற் குரு.

(பரி-உரை) தவத்திற்கு உரு-தவத்தின் வடிவு, உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே - உண்டிசுருக்கல் முதலியவற்றுல் தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், தாம் பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையுமாகிய அவ்வளவிற்று எ-று.

மற்றுள்ளனவெல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், அற்றே யென்றேகாரங் கொடுத்தார். 'தவத்திற்கு உரு அற்றே என்பது "யானைக்குக் கோடு கூரிதென்பதனை யானைக்குக் கோடு கூரிது" என்றுற்போல

வதன்பொருட்கண் நான்காவது வந்த மயக்கம். இதனால் தவத்தினது இலக் கணங் கூறப்பட்டது.

(ப-ரை) தவத்திற்கு-தவத்திலுக்கு, உரு-வடிவமானது, உற்றநோய்-(உண்டி சுருக்குதல் முதலானவைகளால்) தம் முயிர்க்குவரும் துன்பங்களை, நோன்றல் - பொறுத்தலும், உயிர்க்கு - பிறவுயிர்க்கு, உறுகண் செய்யாமை-(தாம்) துன்பஞ் செய்யாமையும் ஆகிய, அற்றே-அவ்வளவினதேயாகும் எ-று.

(க-ரை) பசி பொறுத்தலும் உயிர்களுக்குத் துன்பஞ் செய்யாமையும் தவத்திற்கு வடிவம் என்பதாம்.

(வி-ரை) மற்றைய விரதங்களெல்லாம் இவ்விரண்டிலே அடங்குமாத லின் அற்றேயெனத் தேற்றேகாரங் கொடுத்தார். [இதனால் தவத்தினது இலக்கணஞ் சொல்லப்பட்டது.]

'உற்றநோய்' என்றது தவ விரதங்களால் உண்டாம் துன்பங்களை. நோன்றல்' என்றது ஈண்டு பொறுத்தல் என்னும் பொருளது. 'உயிர்க்கு' என்றது உலகத்துள்ள ஏனைய உயிர்களுக்கு என்பதாம். 'உறுகண்' இது ஒரு சொல், துன்பம் என்னும் பொருளது. 'அற்றே' இது அவ் அளவினதே என்னும் பொருள் தந்து நின்றது. 'ஏ' தேற்றப் பொருளில் வந்தது. 'உரு' என்றது உருவத்தை.

(1)

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

(பரி-உரை) தவமும் தவம் உடையார்க்கு ஆகும்-பயனேயன்றித் தவத் தானும் உண்டாவது முற்றவமுடையார்க்கே, அதனை அஃது இலார் மேற் கொள்வது அவம்-ஆகலான், அத் தவத்தை அம்முற்றவமில்லாதார் முயல்வது பனில் முயற்சியாம் எ-று.

பரிசயத்தால் அறிவும் ஆற்றலுமுடையராய் முடிவுபோக்கலின் தவ முடையார்க்காகுமென்றும், அஃதிலாதார்க்கு அவை யின்மையின் முடிவு போகாமையின் அவமாமென்றுங் கூறினார்.

(ப-ரை) தவமும்-(பயனேயல்லாமல்) தவம் உண்டாவதும், தவமுடை யார்க்கு-(முன்னைத்) தவத்தையுடையவர்க்கே, ஆகும்-உண்டாகும், (ஆகலால்) அதனை - அத்தவத்தை, அஃதிலார் - அம்முன்னைத் தவமில்லாதவர், மேற் கொள்வது-செயத்தொடங்குவது, அவம்-வீணும் எ-று.

(க-ரை) முற்பிறப்பிற் றவஞ் செய்தவர்க்குத் தவம் பலிக்கும் என்ப தாம்.

(வி-ரை) முன் பழக்கத்தால் அறிவும் வல்லமையும் உடையராய் நின்றதலால் தவமுடையார்க் காகுமென்றும் பழக்கமில்லாதவர்க்கு அவ் விரண்டும் இல்லாமையினலே முடியாண்மையால் அவமென்றுங் கூறினார்.

'தவமும்' இதன்கண் நின்ற உம்மை உயர்வுச் சிறப்பும்மை. 'அவம்' இது வீண் என்னும் பொருளதாம். 'அதனை' என்றது அத்தவத்தினை. 'அஃதிலார்' என்றது அம்முன்னைத் தவமிலாரை. 'மேற்கொள்வது' இது பயிலத் தொடங்குவது என்னும் பொருளது. (2)

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்க்கொன்
மற்றை யவர்க டவம்.

(பரி-உரை) மற்றையவர்கள்-இல்லறத்தையே பற்றி நிற்பார், துறந்தார்க்குத் துப்புரவு வேண்டித் தவம் மறந்தார்கொல்-துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளும் உதவலை விரும்பித் தாந் தவஞ்செய்தலை மறந்தார் போலும் எ-று.

துப்புரவு-அனுபவிக்கப்படுவன * "வேண்டிய வேண்டியாங் கெய்தற்" பயத்ததாகலின் யாவராலுஞ் செய்யப்படுவதாய தவத்தைத் தாஞ்செய்யுந் தானத்தின்மேல் விருப்ப மிகுதியான் மறந்தார்போலு மெனவே, தானத்தி றவம் மிக்கதென்பது பெற்றாம்.

(ப-ரை) மற்றையவர்கள் - இல்லறத்தையேபற்றி நிற்பவர்கள், துறந்தார்க்கு - (இருவகைப்பற்றையுந்) துறந்தவர்களுக்கு, துப்புரவு - உண்டியும் மருந்தும் இருப்பிடமும், வேண்டி - (உதவுதலை) வேண்டி, தவம்-(தாம்) தவஞ் செய்தலை, மறந்தார்கொல்-மறந்தார்போலும் எ-று.

(க-ரை) இல்வாழ்வோர் துறவிகளுக்கு உண்டி மருந்து இடம் உதவ வேண்டித் தவத்தை மறந்தார்போலும் என்பதாம்.

(வி-ரை) துப்புரவு அனுபவிக்கப்படும் பொருள்கள். தவமானது வேண்டியவைகளை வேண்டியபடியே பெறத்தருவதாதலால் யாவராலும் செய்யத்தகுவதாகிய அதைத் தம்மாலே செய்யப்படுகிற தானத்தின்மேல் விருப்ப மிகுதியால், மறந்தார்போலுமெனவே தானத்தினும் தவம் உயர்ந்தது என்றதாயிற்று.

'துறந்தார்' என்றது இல்லந் துறந்தாரை. 'துப்புரவு' இது உண்டி மருந்து, உறையுள் என்பனவற்றைக் குறித்தது. 'வேண்டி' என்பது உதவுதலை வேண்டி என்பதாம். 'மற்றையவர்கள்' என்றது இல்லறத்து இருப்பவரை. 'மறந்தார்கொல்' ஈண்டு கொல் ஐயப்பொருள் தந்து நின்றது. (3)

ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

(பரி-உரை) ஒன்னார்த் தெறலும்-தம் மறத்திற்குப் பகையாய் அழிவு செய்தாரைக் கெடுத்தலும், உவந்தாரை ஆக்கலும் - அதனை யுவந்தாரை உயர்த்தலுமாகிய இவ்விரண்டையும், எண்ணின் தவத்தான் வரும் - தவஞ் செய்வார் நினைப்பாராயின், அவர் தவவலியான் அவை அவர்க்குளவாம் எ-று.

* திருக்குறள்-265.

முற்றத்துறந்தார்க்கு ஒன்னரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், தவத்திற் கேற்றி யுரைக்கப்பட்டது. எண்ணி னென்றதனால், அவர்க்கு அவை யெண்ணுமை இயல்பென்பது பெற்றும். ஒன்னார் பெரியராயினும, உவந்தார் சிறியராயினும், கேடும் ஆக்கமும், நினைத்தவணையானே வந்து நிற்குமெனத் தவஞ் செய்வார்மேலிட்டுத் தவத்தினை ஆற்றல் கூறியவாறு.

(ப-ரை) ஒன்னார் - (தமது அறத்துக்கு இடையூறு செய்த) பகைவரை, தெறலும்-கெடச் செய்தலையும், உவந்தாரை-(அதனை) விரும்பினவரை, ஆக்கலும் - உயரச்செய்தலையும், எண்ணின் - (தவஞ்செய்வோர்) நினைப்பாராயின், தவத்தான்-(அவரது) தவவலிமையினால், வரும் - (அவை அவருக்கு) உண்டாகும் எ-று.

(க-ரை) சாபம், அநுக்கிரகம், தவத்தால் வரும் என்பதாம்.

(வி-ரை) முழுதுந் துறந்தவர்க்கு பகைவரும், நட்பினரும், இருப்பது கூடாமையால் தவத்திற்கு ஏற்றிச் சொல்லப்பட்டது. எண்ணினென்றதனால் அவர்க்கு அவை எண்ணுமையே இயல்பென்பது தோன்றுகின்றது. பகைவர் பெரியராயினும் அவருக்குக் கேடு விரும்பினவர் சிறியராயினும் அவருக்கு உயர்வும் நினைத்தவளவில்வந்து நிற்குமெனத் தவஞ் செய்வார்மேல் வைத்துத் தவத்தின் வல்லமை சொல்லியபடி.

'ஒன்னர்' இது பகைவர் என்னும் பொருளது. இது ஒன்ருர் என்பதன் விகாரம். இது மனம் தன்னோடு ஒன்றுபட்டிராதவர் என்னுங் காரணம்பற்றி வந்த பெயர். தவத்தோர்க்குப் பகைவர் என்றது தாஞ்செய்யும் தவத்திற்கு இடையூருக இருப்பவர் என்றதாம். 'தெறல்' இது அழித்தல், கெடுத்தல் என்னும் பொருளது. 'உவந்தார்' என்றது தாஞ்செய்யுந் தவத்திற்கு உதவியாயிருந்து மகிழ்வுசெய்வாரை. 'ஆக்கல்' என்றது அவ் உவந்தாரை வாழ்வுடையோராக்கல். 'தவத்தான்வரும்' என்றது தவஞ் செய்வோரின் தவவன்மையால் ஆகும் என்பதாம். இக்குறளால் தவத்தினரின் சாபானுக்கிரக சக்தியை உணர்த்தியதாம். 'எண்ணில்' இதில் நின்ற 'இல்' உருபு எண்ணினால் என்னும் பொருள் பயந்தது. இதனால் அவர் விருப்பு வெறுப்பிலாமையின் எண்ணுமையும் பெறப்பட்டது. (4)

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ மீண்டு முயலப் படும்.

(பரி-உரை) வேண்டிய் வேண்டியாங்கு எய்தலால் - முயன்றுல் மறுமைக்கண் தாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால், செய் தவம் ஈண்டு முயலப்படும்-செயப்படுவதாய தவம் இம்மைக்கண் நிலைபெறுவோரான் முயலப்படும் எ-று.

ஈண்டென்பதனால் மறுமைக்கணென்பது பெற்றும். மேற்கதி, வீடு முதலான் தவத்தானன்றி எய்தப்பட்டா வென்பதாம். இவை நான்கு பாட்டாலும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) வேண்டிய-(முயன்றால்) பெறவேண்டிய பயன்களோ, வேண்டியாக்கு-வேண்டியபடியே, எய்தலால்-(மறுமையிலே தாம்) பெறலாமாதலால், செய்தவம்-செய்யத்தகுவதாகிய தவமானது, ஈண்டு-இம்மையில், முயலப்படும்-(அறிவுடையோராலே) முயலப்படும் எ-று.

(க-ரை) மறுமை யின்பங்களை யடையத் தவமுயற்சி செய்யப்படும் என்பதாம்.

(வி-ரை) ஈண்டென்றதனால் மறுமை வருவிக்கப்பட்டது. மேலே கதியும், மோக்ஷமும், தவத்தாலல்லாமல் அடைதல் கூடாதென்பதாம். [இவை நான்கு பாட்டாலும் தவத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'வேண்டிய' என்றது மேற்கதிகளையும் வீடுபேற்றையும் உணர்த்தி நின்றது. 'வேண்டியாக்கு' இதில் 'ஆக்கு' என்றது வேண்டியவிதமாகவே என்னும் பொருள் தந்தது. 'எய்தலால்' இதில் 'ஆல்' விகுதி காரணப்பொருளில் வந்தது, 'செய்தவம்' என்றது அறிவுடையவர்களால் செய்யப்பட வேண்டிய தவம் என்பதாம். 'ஈண்டு' என்றது இவ்வுலகத்திலேயே என்னும் பொருளது. இனி, இப்பொழுதே என்னும் பொருள் தந்தது என்பாரும் உண்டு. 'ஈண்டு' என்பதற்கு இவ்வுலகத்திலேயே எனப் பொருள் கொள்ளின் 'வேண்டிய' என்பதற்கு மறுமையில் வேண்டிய என்பது அருத்தாபத்தியாற் கொள்ளப்பெறும். 'ஈண்டு' என்பதற்கு இப்பொழுதே எனப்பொருள் கொள்ளின் இனி வேண்டிய என்பது பெறப்படும் என்பதறிக. (5)

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

(பரி-உரை) தம் கருமம் செய்வார் தவம் செய்வார்-தங்கருமஞ் செய்வாராவார் துறந்து தவத்தைச் செய்வார்; மற்று அல்லார் ஆசையுள் பட்டு அவம் செய்வார்-அவரையொழிந்த பொருளின்பங்களைச் செய்வார் அழிதற்கண் ஆசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய்வார் எ-று.

அழித்தமாய் மூவகைத் தன்பத்ததாய் உயிரின் வேறுய உடற்கு வருத்தம் வருமென் றொழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களான் அநாதியாகத் தன்பமெய்தி வருகின்ற உயிர் ஞானம் பிறந்த வீடு பெறுமாகலின், தவஞ் செய்வாரைத் தங்கருமஞ் செய்வாரென்றும், கணத்தள் அழிவதாய சிற்றின்பத்தின் பொருட்டுப் பல பிறவியுந் தன்புறத்தக்க பாவஞ்செய்த கோடலின், அல்லாதாரை அவஞ் செய்வாரென்றும் கூறினர். மற்று-வினைமாற்றின்கண் வந்தது.

(ப-ரை) தவஞ்செய்வார்-தவத்தைச்செய்வார், தங்கருமஞ் செய்வார்-தமது கருமத்தைச் செய்பவராவார், மற்றல்லார்-மற்றைப் பொருளின்பங்களைச் செய்வார், ஆசையுட்பட்டு-(அவைகளி) லாசையாகிய வலையில் அகப்பட்டு, அவஞ்செய்வார்-(தமக்குக்) கேடு செய்பவராவார் எ-று.

(க-ரை) தவஞ்செய்பவர் நித்தியப்பொருளை அடைவர் என்பதாம்.

(வி-ரை) அநித்தியமாய் மூவகைத் துன்பத்துக்கு இடமாய் உயிரின் வேறாய் உள்ள உடம்புக்கு வருத்தம் வருமென்று விடாமல் தவத்தைச் செய்தால், பிறப்பு, பிணி, மூப்பு, இறப்பு, இவைகளால் அநாதியாகத் துன்பப் பட்டுக்கொண்டு வருகிற உயிரானது ஞானம் பெற்று மோக்ஷத்தை அடையும். ஆதலால் தவஞ்செய்வாரைத் தக்கருமஞ் செய்வாரென்றும், கூணத்தில் அழிவதாகிய நிற்றின்பத்தின்பொருட்டுப் பல பிறவிகளிலும் துன்பப்படத் தக்க பாவஞ் செய்துகொள்ளுதலால் அல்லாதாரை அவஞ்செய்வாரென்றும், சொல்லினார். நித்தியமின்மை-அநித்தியம்.

தவஞ் செய்வார் பிறவித் துன்பற்று வீடு பெறுவர் ஆதலின் 'தவஞ் செய்வார் தங் கருமஞ் செய்வார்' என்றார். 'மற்றல்லார்' என்றது தவஞ் செய்யாத பிரபஞ்சத் தாசையால் அதற்குழன்று திரிவாரை. இவர் தம் அவாவால் வினைகளைச்செய்து பிறவித்துயரில் உழல்வர் ஆதலின், மற்றல்லாரார் அவஞ் செய்வார்' என்றார். 'அவம்' இகழ்வின் என்னும் பொருளது. ஒனி பாழ் எனலுமாம். பிரபஞ்ச அவாவே பிறப்புக்குக் காரணம், பிறவித் துன்பத்திற்கு மூலம் ஆதலின் 'ஆசையுட்பட்டு' என்றார் என்பதறிக. (6)

சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

(பரி-உரை) சுடச் சுடரும் பொன்போல் - தீயின்கணூடும் பொன்னுக்கு அது சுட சுடத் தன்னெடு கலந்த குற்றம்நீங்கி ஒளி மிகுமாறுபோல, நோற்கிற்பவர்க்குத் துன்பம் சுடச் சுட ஒளிவிடும்-தவஞ் செய்ய வல்லார்க்கு அதனுன் வரும் துன்பம் வருத்த வருத்தத் தம்மொடு கலந்த பாவ நீங்கி ஞானமிகும் எ-று.

சுடச்சுடரும் பொன்போ லென்றாராயினும், கருத்து நோக்கி இவ்வாறுரைக்கப்பட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்கலின், ஒளி யெனப்பட்டது.

(ப-ரை) சுடச்சுடரும்-(புடத்தியானது) சுடச்சுடரும், பொன்போல்-பொன்னுக்குக் குற்றம் நீக்கல்போல், நோற்கிற்பவர்க்கு - தவஞ்செய்யவல்லவர்க்கு, துன்பம் - (அதனால் வருகிற) துன்பம், சுடச்சுட - சுடச்சுட, ஒளிவிடும்-ஒளிமிகும் எ-று.

(க-ரை) புடத்தால் பொன் பிரகாசிப்பதுபோல் தவத்தால் ஞானம் பிரகாசிக்கும் என்பதாம்.

(வி-ரை) ஒளி பொன்னுக்கு காந்தியும் தவஞ்செய்வோர்க்கு ஞானமும் ம். காந்தி மிகுந்தோறும் பொன்னுக்குக்குற்றம் நீக்கல்போல் ஞானமிகுந்தோறும் அவர்க்குப் பாவம் நீக்கல் கொள்க. ஒளிபோற் பொருளை விளக்கல் ஞானம் ஒளியெனப்பட்டது.

'சுடச்சுட்ரும் பொன்' என்றது உபமானம். 'போல்' இது உவமஉருபு. 'சுடச்சுட' இது மிகுதிப் பொருளில் அடுக்கி வந்தது. 'நோற்கிற்பவர்' என்றது தவஞ் செய்வோரை. இதற்கு 'நோல்' பகுதி' 'சுடச்சுட' என்றது அத்தவம் வருத்த வருத்த என்பதாம். (7)

தன்னுயிர் தானறப் பெற்றானே யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

(பரி-உரை) தன் உயிர் தான் அறப் பெற்றானை - தன்னுயிரைத் தான் தனக்குரித்தாகப் பெற்றவனை, எனைய மன்னுயிர் எல்லாம் தொழும்-பெறு தனவாகிய மன்னுயிர்க ளெல்லாந் தொழும் எ-று.

தனக்குரித்தாதல்-தவமாகிய தன் கருமஞ் செய்தல். அதனினூங்குப் பெறுதற் கரியது இன்மையின், பெற்றானை யென்றார். அது பெறுதன வென்றது ஆசையுட்பட்டு அவஞ்செய்யு முயிர்களை. சாபமும் அருளுமாகிய இரண்டாற்றலு முடைமையின், தொழுமென்றார்.

(ப-உரை) தன்னுயிர்-தனது உயிரை, தானற-தனக்கு உரித்தாக, பெற் றானை-பெற்றவனை, எனைய-அது பெறுதலையாகிய, மன்னுயிரெல்லாம்-நிலை பேறுடைய உயிர்களெல்லாம், தொழும்-வணங்கும் எ-று.

(க-உரை) தவத்தா லுயிர்பெற்றவனை எல்லா உயிரும் வணங்கும்.

(வி-உரை) தனக்குரித்தாதல்-தவமாகிய தன் கருமஞ்செய்தல். அதைக் காட்டிலும் பெறுதற்கு உரியது இல்லாமையால், பெற்றானை யென்றார். அது பெறுதலையென்றது, ஆசையிற்பட்டு அவஞ்செய்யு முயிர்களை. சாப மனுக்கிரக வல்லமையைப் பெற்றிருக்கையினாலே எல்லாவுயிரும் தொழு மென்றார்.

'தன்னுயிர் தானறப்பெற்றானை' என்றதற்கு 'தன் ஆன்மதரிசனத்தை தவஞானத்தால் ஐயமறக்கண்டவனை எனவும் ஒரு சாரார் பொருள் கூறுவர். 'எனைய' என்றது தன்னுயிர் தானறப்பெறுத உயிர்களை. 'மன்னுயிர்' என்றது ஆன்மாக்கள் அழிவின்மையுடைய ஆதலின் என்க. இனி 'மன்' என்றது மிகுதிப் பொருளில் வந்ததென்பாரும் உண்டு. 'எல்லாந் தொழும்' இதில் முற்றும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. 'தொழும்' இது சாபானுக்கிரகசக்தி உடைமையால் என்க. இனி, ஆன்மதரிசனம் பெற்றுக் கடவுட்டன்மை பெற்றமையால் என்பர் ஒரு சாரார். (8)

கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற றலைப்பட் டவர்க்கு.

(பரி-உரை) கூற்றம் குதித்தலும் கைகூடும் - கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவதாம், நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு - தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப்பட்டார்க்கு எ-று.

சிறப்புமை அது கூடாமை விளக்கிற்று; மன்னுயிரெல்லாந் தொழு தலேயன்றி இதவுங் கைகூடுமென் எச்சவும்மையாக உரைப்பினுமமையும். ஆற்றல்-சாப அருள்கள். இவை நான்கு பாட்டானும் தவஞ் செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது.

(ப-ரை) கூற்றம்-இயமனை, குதித்தலும்-கடத்தலும், கைகூடும்-உண்டாகும், நோற்றலின்-தவஞ்செய்தலால் வருவதாகிய, ஆற்றல்-வல்லமையை, தலைப்பட்டவர்க்கு-கூடியவர்க்கு எ-று.

(க-ரை) தவத்தலைமை யடைந்தவர் இயமனை வெல்லுவர் என்பதாம்.

(வி-ரை) குதித்தலுமென்னும் உம்மை அது கூடாமையை விளக்கியது. ஆற்றல்-சாபானுக்கிரகம். [இவை நான்குபாட்டாலும் தவஞ் செய்வோரது உயர்ச்சி சொல்லப்பட்டது.]

'கூற்றம்' என்றது எமனை. எமன் உயிரையும் உடலையும் கூறுபடுத்திப் பிரிப்பவன் ஆதலின் இது அவனுக்குக் காரணப்பெயர். 'குதித்தல்' என்றது அக்கூற்றத்தின் கைச்சுருக்கு. 'குதித்தலும்' என்றதன்கண் நின்ற உம்மையால் கூற்றங் குதித்தல் கூடாமை குறிப்பித்ததாம். 'கைகூடும்' இது ஒரு சொல் நீர்மைத்தாய் நின்றது. 'தலைப்பட்டார்க்கு' என்றது தவஞ் செய்து அதிற் சிறந்து நின்று அதன் வலிய பயனைப் பெற்றோர்க்கு என்பது பொருள். இனி, இதற்கு நோற்கத்தொடங்கிய சிறந்தவர்க்கு என்ற பொருள்கொண்டு, நோற்கத் தொடங்கிய சீரியர்க்கே கூற்றங் குதித்தலுங் கூடும், அதனை முற்ற முடித்துச் சிறந்து நின்றோர் ஆற்றல் செப்பற்கொண்ணாகும் எனப் பொருளுரைப்பாரும் உண்டு. இது பொருத்தாமை உய்த்துணரற்பாலதாம். (9)

இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

(பரி-உரை) இலர் பலராகிய காரணம் - உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் பலராதற்குக் காரணம் யாதெனின், நோற்பார் சிலர் நோலாதவர் பலர் - அது தவஞ் செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல் எ-று.

செல்வ நல்குரவென்பன ஈண்டு அறிவினது உண்மை யின்மைகளைப் புலப்படுத்தி நின்றன; என்னை? *"நுண்ணுணர் வின்மை வறுமை யஃதடைமை கண்ணப் பிணைத்த பெருஞ் செல்வம்" என்றாராகலின். நோற்பார் சிலரெனக் காரணங் கூறினமையான், காரியம் வருவித் துரைக்கப்பட்டது. தவஞ் செய்யாதார்க்கு இம்மை யின்பமு மில்லையென இதனால் அவரது இழிவு கூறப்பட்டது.

* காலடியார்: அறிவின்மை-1.

(ப-ரை) (உலகத்திலே செல்வர் சிலராக) இலர்-வறியவர், பலராகிய காரணம்-பலராதற்குக்காரணம் (யாதென்றால்), (அது) நோற்பார்-தவஞ் செய்வோர், சிலர் - சிலராக, நோலாதவர் - தவஞ் செய்யாதவர், பலர் - பல ராதல் எ-று.

(க-ரை) தவஞ்செய்யாதவர் பலராதலால் மிப்பாக்கியர் பலர் என்ப தாம்.

(வி-ரை) இக்கே செல்வம் ஞானத்தையும், வறுமை அஞ்ஞானத்தையும், குறித்தும் நின்றன. நோற்பார் சிலரென்ற காரணத்தைச் சொல்லலால் அதன் காரியமாகிய செல்வர் சிலராதல் வருவிக்கப்பட்டது. [இதனால் தவஞ்செய்யார்க்கு இம்மை யின்பமும் இல்லையென்ற இதனால் அதனை தாழ்வு சொல்லப்பட்டது.]

'இலர்' இது இல்லாதவர் என்றதன் விகாரம். இதற்கு செல்வம் இல்லா தவர், ஞானம் இல்லாதவர் என்பதாம். இவ்வுலகிற்கு வேண்டியதாகிய பொருட் செல்வமும் வீட்டுக்கு வேண்டியதாகிய ஞானமும் தவத்தால் வரு தலின் 'இலர் பலராகிய காரணம் நோற்பார் சிலர் பலர் நோலாதவர்' என்றார். 'நோலாதவர்' என்றது தவஞ் செய்யாதவர் என்றதாம். இதற்கு 'நோல்' பகுதி. (10)

27-ம் அதி-தவம்-முற்றிற்று.

28-ம் அதிகாரம்-கூடாவொழுக்கம்

(பரி-உரை) அஃதாவது: தாம் விட்ட காமவின்பத்தை உரனின்மை பிற் பின்னும் விரும்புமாறு தோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோ பொருந்தாததாய தீய வொழுக்கம். அது விலக்குதற்கு இது தவத்தின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தாம் விட்ட காமவின்பத்தை உறுதியில்லாமை யாலே பின்னும் விரும்பும் வழிதோன்ற அவ்வழியே கொண்டுநின்று தவத் தோடு பொருந்தாததாகிய தீயவொழுக்கம். அது விலக்குதற்கு இது தவத் தின்பின் வைக்கப்பட்டது.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

(பரி-உரை) வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் - வஞ்சம் பொருந்தி மனத்தே புடையவனது மறைந்த வொழுக்கத்தை, பூதங்கள் ஐந்து அகத்தே நகும்-உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங்களைக் கண்டு தம்முள்ளே நகும் எ-று.

காமம் தன் கண்ணே தோன்றி நலியாகிற்கவும் அதனது இன்மை றிப் புறத்தாரை வஞ்சித்தலின் வஞ்சமனமென்றும், அந்நலிவு பொறுக்க மாட்டா தொழுகுங் கனவொழுக்கத்தைப் படிற்றொழுக்கமென்றும், உல கத்துக் கனவுடையார் பிறாறிபாமற் செய்வனவற்றிற்கு ஐம்பெரும்பூதங்கள் சான்றுகலின் அவ்வொழுக்கத்தையும், அவன் மறைகின்ற ஆற்றையு மறிந்த அவனறியாமற் றம்முள்ளே நகுதலின், அகத்தே நகுமென்றுங் கூறினர். செய்த குற்றம் மறையாதாகலின், அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து.

(ப-ரை) வஞ்சமனத்தான் - வஞ்சம் பொருந்திய மனத்தை யுடையவ னாது, படிற்றொழுக்கம்-மறைந்த ஒழுக்கத்தை, பூதங்களைந்தும் - (உடம்பாய் அவற்றோடு கலந்து நிற்கின்ற) பஞ்சபூதங்களும், (கண்டு) அகத்தே - (தம்) முள்ளே, நகும்-சிரிக்கும் எ-று.

(க-ரை) வஞ்சகன் ஒழுக்கத்தைக்கண்டு அவன் பஞ்சபூதங்களுஞ் சிரிக் கும் என்பதாம்.

(வி-ரை.) காமம் தன்னுள்ளே வருத்திக்கொண்டிருக்கவும் காமமில்லா மையைச் சொல்லிப் புறத்தாரை வஞ்சித்தலால் வஞ்சமனமென்றும், அவ் வருத்தம் பொறுக்கமாட்டாமற் செய்யும் கன்னச் செய்கையைப் படிற் றொழுக்கமென்றும், உலகத்திலே கனவுடையவர் பிறர் அறியாமற் செய்யுங் காரியங்களுக்கும் ஐம்பெரும் பூதங்களே சாட்சியாகலின் அச்செய்கையையும், அவன் மறைக்கின்ற விதத்தையும், அறிந்து அவன் அறியாமல் தம் முள்ளே சிரித்தலால் அகத்தே நகுமென்றும் சொல்லினர். செய்த குற்றம் மறையாதாகலின் தவஞ் செய்வோனுக்கு அவ்வொழுக்கம் ஆகாதென்பது கருத்து.

'படிற்றொழுக்கம்' என்றது உண்மையில்லாது பொய்யாய் ஒழுகும் ஒழுக்கம் என்பதாம். 'பூதங்கள்' என்றது மண், நீர், தீ, கால், வான் என்னும் பஞ்சபூதங்களை. இவ் உடல் பூதசம்பந்தமுடையதாதலின் அப்பூதங்க ளியாதன இல்லை என்பதுகொண்டு 'பூதங்களைந்தும் அகத்தே நகும்' என்றார். இதன்கண் நின்ற உம்மை முற்றும்மை. ஈண்டு 'நகும்' என்றது தானஞ்செய்து நகும் நகையை. இது இகழ்ச்சிநகை என்க. (1)

வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

(பரி-உரை) வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - ஒருவனுக்கு வான் ளாலுயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும், தான் அறி குற்றம் தன் ஞ்சம் படின் - தான் குற்றமென் றறிந்த அதன்கண்ணே தன்னெஞ்சு முமாயின் எ-று.

வானுயர் தோற்றமென்பதை * "வான்றோய் குடி" என்றாற்போல இலக்கணவழக்கு. அறியாது செய்த குற்றமல்லது அறிந்தவைத்துச் செய்த குற்றங் கழுவப்படாமையின், நெஞ்சு குற்றத்ததாயே விடும்; விடவே கின்ற வேடமாத்திரத்துக்குப் புறத்தாரை வெருட்டுதலேயல்லது வேறு பயனில்லை யென்பதாம்.

(ப-ரை) தான்-தான், அறி-அறிந்த, குற்றம் - குற்றத்திலே, தன்னெஞ் சம்-தனது மனம், படின் - தாழுமாயின், (ஒருவனுக்கு) வானுயர்-வான்போ லுயர்ந்த, தோற்றம்-தவவேடமானது, எவன்-என்ன பயனை, செய்யும்-செய் யும் எ-று.

(க-ரை) தன் மனம் தானறிந்த குற்றத்திற்படில் உயர்ந்த தவவேடம் என்னபயன் என்பதாம்.

(வி-ரை) அறியாது செய்த குற்றத்துக்கு அல்லாமல் அறிந்து செய்த குற்றத்துக்குப் பிராயச்சித்தம் இல்லாமையால் நெஞ்சு குற்றமுடையதாகி விடும்; விடவே, கின்ற வேஷமாத்திரத்துக்குப் புறத்தாரை வெருட்டுதலே அல்லது வேறு பயன் இல்லை யென்பதாம்.

'வானுயர் தோற்றம்' இது வான்போ லுயர்ந்த தோற்றம் என்பது பொருள். இனி, இதனை மீமிசைச் சொல்லாகக்கொண்டு மிக உயர்ந்த தோற்றம் என்பாரும் உண்டு. என்னை, 'வான்' என்பதற்கு உயர்வு என்னும் பொருள் உண்டாதலின் என்க. 'எவன்' இது 'என்ன' என்னும் பொருள் குறித்த வினாப்பெயர். 'நெஞ்சம்' இதில் 'அம்' விகுதி. 'குற்றம்' இது இழுக்கு என்னும் பொருளது; அறத்தினின்றுங் குறைந்தது இழுக்கியது என்னுங் காரணம்பற்றிவந்த பெயர். இதனை 'வழு' எனலும் ஆம்; இதற்கு அறத்தினின்றும் வழுவியது என்பது பொருளாம். 'படின்' இதில் 'இன்' உருபு பட்டால் என 'ஆல்' உருபின் பொருள் பயந்து நின்றது. (2)

வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

(பரி-உரை) வலி இல் நிலைமையான் வல் உருவம்-மனத்தைத் தன் வழிப் படுத்தும் வலியில்லாத இயல்பினை யுடையான் வலியுடையார் வேடத்தைக் கொண்டு தான் அதன் வழிப்படுதல், பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று-பசு காவலர் கடியாமற் புலியின் தோலைப் போர்த்துப் பயிர் கூழை மேய்ந்தாற்போலும் எ-று.

இல் பொருளுவமை. வலியினிலைமையானென்ற அடையானும், மேய்ந் தற் றென்னுந் தொழிலுவமையானும், வல்லுருவத்தோடு மனவழிப்படுத லென்பதுபெற்றும். காவலர் கடியாமை-புலி புல்தின்னுதென்பதனானும், அச் சத்தானுமாம்; ஆகவே, வல்லுருவங் கோடற்குப் பயன் அன்ன காரணங் ளான் உலகத்தார் அயிராமையாயிற்று. இவ்வாறு தனக்குரிய இல்லாவும்

* காலடியார் குடிப்பிறப்பு-2.

நற்ற வலியுமின்றிப் பிறர் அயிராத வல்லுருவமுங் கொண்டு கின்றவன் னவழிப்படுதலாவது தன் மனமோடியவழியே ஓடி மறைந்து பிறர்க் விட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற்போலு மென்ற உவமையான் றிக.

(ப-ரை) வலி - (மனத்தை அடக்கும்) வல்லமையை, இல் - இல்லாத, லைமையான்-இயல்புடையவன், வல்லுருவம்-அவ்வல்லமையை யுடையவரது வடத்தைக்கொண்டு, (மனம் போனவழி போகுதல்) பெற்றம்-பசுவானது, காவற்காரர் தரத்தாதிருக்கும்படி) புலியின்ரோல் - புலியினது தோலை, போர்த்து - போர்த்துக்கொண்டு, மேய்ந்தற்று - பயிரை மேய்ந்தால் அச் செய்கைபோலும் எ-று.

(க-ரை) மன மடக்காதவன் தவவேடம் பசு புலித்தோல் போர்த்து மேய்ந்தாற்போலும் என்பதாம்.

(வி-ரை) மேய்தலுக்கு ஏற்ற மனம் போனவழி போகுதல் வருவிக்கப் ட்டது. காவற்காரர் தரத்தாமை "புலி பசித்தாற் புல்லைத் தின்னுது" ன்பதனாலும், அச்சத்தாலும் ஆம். ஆகவே, அவ்வல்லுருவங் கொள்ளு ற்குப் பயன் அப்படிப்பட்ட காரணங்களால், உலகத்தார் சந்தேகப்படாமை யிற்று. பசு தனக்கு உரிய புல்லைவிட்டுப் புலித்தோல் போர்த்துப் றர்க்கு உரிய பயிரை மேய்தல்போல் அக்கூடாவொழுக்கத்தான் தனக்கு ரிய மனைவியைவிட்டுத் தவவேடங்கொண்டு பிறருக்கு உரிய பெண்டிரை னுபவித்த லென்க. [அப்படி செய்கிற பசு இல்லாமையால் இல் பொரு வமையணி.]

'வலி' இது வல்லமை என்னும் பொருளது. அதாவது சண்டு மனதை டக்கும் வல்லமையைக் குறித்தது. 'இல்லிலைமை' இது 'இல்லாத கிலைமை' ன்பதன் விகாரம். 'வல்லுருவம்' என்றது மனோவல்லமையுடையார் கொள் ம் தவவேடத்தை உணர்த்தி கின்றது. 'பெற்றம்' என்றது பசுவை. இது ண் பெண் இரண்டிற்கும் பொதுப்பெயராயினும் இடம்பற்றி பெண்ணிய ர்' என்று கொள்ளப் பெற்றது. 'புலியின்ரோல்' 'இது ஆறன்தொகை. தல் கின்ற 'இன்' சாரியை. 'அற்று' இது அத்தன்மைத்து என்னும் பொருளது.

(3)

தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(பரி-உரை) தவம் மறைந்து அல்லவை செய்தல் - அவ்வலியினிலைமை ன் தவவேடத்தின்கண்ணே மறைந்து கின்று தவமல்லவற்றைச் செய்தல், ட்டுவன் புதல் மறைந்து புன் சிமிழ்த்தற்று - வேட்டுவன் புதலின்கண்ணே றைந்து கின்று புட்களைப் பிணித்தாற்போலும் எ-று.

தவம்-ஆகுபெயர். தவமல்லவற்றைச் செய்தலாவது - பிறர்க்குரிய மகளிரைத் தன்வயத்தாக்குதல். இதவும் இத்தொழிலுவமையான் அறிக.

(ப-ரை) (அவ்வல்லமையில்லாத நிலைமையான்) தவம்-தவவேடத்திலே, மறைந்த - மறைந்த, அல்லவை - தவமல்லாதனவைகளை, செய்தல் - செய்தல், வேட்டுவன்-வேடன், புதல்-புதலிலே, மறைந்த-மறைந்த, புள்-பறவைகளை, மிழ்த்தற்று-பிடித்தல்போலும் எ-று.

(க-ரை) தவவேடத்தில் மறைந்தொழுகுவோள் வேடனை ஒப்பாள் என்பதாம்.

(வி-ரை) தவம் அதன் வேடத்துக்கு ஆகுதலால் ஆகுபெயர். தவமல்லவற்றைச் செய்தலாவது பிறர்க்கு உரிய மகளிரைத் தன்வசத்தாராக்குதல். இப்படி செய்தலென்பது, இத்தொழிலுவமையினாலே தோன்றுதல் அறிக.

'தவம்' என்றது ஆகுபெயராய் தவவேடத்தைக் காட்டிற்று. 'அல்லவை' என்றது தவவொழுக்கமல்லதாகிய கூடா வொழுக்கத்தை. இது 'அல்லாதனவை' என்றதன் விகாரம். 'புதல்' இதற்கு 'புதர்' என்பது இலக்கணப்போலி; இதனைப் 'புதர்' எனக் கூறுவது பெரும்பான்மை வழக்கு. 'மிழ்த்தல்' இது கட்டுதல், பிடித்தல், அகப்படுத்தல், கைப்படுத்தல் என்னும் பொருளது. 'புதன் மறைந்த வேட்டுவன் புட்மிழ்த்தற்று' என்றது உபமானம்.

பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென் றேதம் பலவுந் தரும்.

(பரி-உரை) பற்று அற்றேம் என்பார் படிற்று ஒழுக்கம் - தம்மைப் பிறர் நன்கு மதித்தற்பொருட்டு யாம் பற்றற்றேமென்று சொல்வாரது மறைந்த வொழுக்கம், எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும் - அப்பொழுது இனிது போலத் தோன்றுமாயினும், பின் என்செய்தேம் என்செய்தேமென்று தாமே பிரக்கும் வகை, அவர்க்குப் பல தன்பங்களையும் கொடுக்கும் எ-று.

சொல்லளவல்லது பற்றறுமையின், பற்றற்றே மென்பாரென்றும், பிறர் தாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்கால நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன் விளைவின்கண் * "அந்தோ வினையேயென்றழுவ" ராகலின், எற்றெற் றென்றுங் கூறினர். இவையைந்து பாட்டானும் கூடாவொழுக்கத்தின் இழுக்கம் கூறப்பட்டது.

(ப-ரை) (பிறர் தம்மை நன்கு மதித்தற்பொருட்டு) பற்றற்றேமென்பார் பற்றற்றேமென்று (சொல்லுவாரது), படிற்றொழுக்கம்-மறைந்த வொழுக்கமானது, (அப்பொழுது இனிதுபோல தோன்றுமாயினும்) எற்றெற்றென்று (பின்) என்செய்தோம் என்செய்தோமென்று (தாமே இரக்கும்படி), ஏதம் பலவும்-பல தன்பங்களையும், தரும்-(அவருக்குக்) கொடுக்கும் எ-று.

* சிவகசிந்தாமணி: முத்தியிலம்பகம்-27.

(க-ரை) பற்றற்றேமென்பவரது பொய்யொழுக்கம் பின்பு தன்பந் தரும் என்பதாம்.

(வி-ரை) சொல்வினைவிலல்லது பற்று நீக்காமையால் பற்றற்றே மென்பாரென்றும், சிறிதாய்க் கணத்தன்னே அழிவதாகிய இன்பத்தின் பொருட்டுப் பெரிதாய் நெடுங்காலம் கிற்பதாகிய பாவத்தைச் செய்வோர் அது தன்பத்தைத் தரும்போது ஐயோ பாவமேயென்று அழுவாராதலின் ற்றேற்றென்றும் சொல்லினர். [இவை ஐந்து பாட்டாலும் கூடாவொழுக் த்தினது இழுக்கஞ் சொல்லப்பட்டது.]

'என்பார்' என்ற குறிப்பால் மனத்திற் பற்றருதது சொல்லளவிற் கூறு வோர் என்பது பெறப்படும். 'படிற்றொழுக்கம்' என்றது மறைத்துச்செய்யும் டா ஒழுக்கத்தை. 'எற்று எற்று' இது அவலம்பற்றி அடுக்கி வந்தது. தம்' ஈண்டு தன்பத்தை உணர்த்திற்று. தன்பங்களாவன இம்மை இகழும் ண்டனையும், மறுமை நரகும் ஆகிய தன்பங்களை உணர்த்திற்று. 'பலவும்' தன் நற்றநின்ற உம்மை முற்றும்மை. (5)

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வல்கணு ரில்.

(பரி-உரை) நெஞ்சின் துறவார் - நெஞ்சாற் பற்றருது வைத்து, துறந் ார்போல் வஞ்சித்து வாழ்வாரின் - பற்றற்றார்போன்று தானஞ் செய்வாரை ஞ்சித்து வாழுமவர்போல், வன்சணூர் இல் - வன்கண்மையையுடையார் லகத்தில்லை எ-று.

தானஞ் செய்வாரை வஞ்சித்தலாவது, யாம் மறுமைக்கண் தேவராதற் பொருட்டு இவ் அருந்தவர்க்கு இன்னது ஈதுமென்ற அறியாது ஈந்தாரை தகொண்டு இழிபிறப்பின ராக்குதல். அவர் இழிபிறப்பினராதல் "அடங்கலர்ச் கீந்த தானப் பயத்தினு லலறு மூன்னீர்த், தடங்கட னடுவட் வு பலவுள வவற்றுட் டோன்றி, யுடம்பொடு முகங்களொவ்வா ரூழ்கனி ர்ந்து வாழ்வர், மடங்கலஞ் சிற்றத் தப்பின் மானவேன் மன்ன ரேறே" ன்பதனுணர்க. தமக்கு ஆவன செய்தார்க்கு ஆகாதன விளைத்தலின், ன்சணரில் என்றார்.

(ப-ரை) நெஞ்சின்-மனத்தினுல், துறவார்-(பற்றுக்களைத்) துறவாராகி, றந்தார்போல் - பாச நீங்கினவர்போல், வஞ்சித்து - (தானஞ்செய்வாரை) ஞ்சித்து, வாழ்வாரின் - வாழுமவர்போல், வன்சணூர் - இரக்கமில்லாதவர், ல்-இல்லை எ-று.

(க-ரை) துறந்தவர்போல் வஞ்சித்து வாழ்பவரிலுங் கொடியவரில்லை ன்பதாம்.

---

* சிவகசிந்தாமணி: முத்தியிலம்பகம்-244.

(வி-ரை) தானஞ் செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுமையிலே சுற்கதி அடைதற்பொருட்டு இந்த அரிய தவத்தோர்க்கு இன்னது கொடுப்போமென்று அறியாமற் கொடுத்தவரை அதை வாங்கிக்கொண்டு தாழ்ந்தகதியை அடைவித்தலாம். தமக்கு ஆமவைகளைச் செய்தார்க்கு ஆகாதவைகளைச் செய்தலால் வன்கணரில் என்றார்.

'நெஞ்சிற்றுறவார்' இது நெஞ்சாற்றுறவார் என்னும் பொருள் பயத்தலின் இது கேற்றமைமயக்கம். 'துறவார்' என்றது மன், பெண், பொன் என்னும் மூன்றுரைகளை மனத்தினின்றுமவிட்டு நீக்காதவர்களை. 'போல்' இது 'போல' என்றதன் விகாரம். 'வஞ்சித்து' என்றது உலகத்து நற்பெறவென்று தானஞ் செய்வாரை யமாற்றஞ்செய்து என்பதாம். 'வாழ்வாரின்' இதில் 'இன்' உருபு ஒப்புப்பொருளில் வந்தது. இனி, இன் உருபை எல்லாப் பொருளிற் கொண்டு வாழ்வாரைக்காட்டிலும் எனப் பொருள் உரைப்பாரும் உண்டு. 'வன்கண்ணர்' என்றது வன்கண்மை யுடையவர் என்பது பொருளாம். வன்கண்மையாவது இரக்கஞ் சிறிதுமின்றிக் கொடுமை செய்யுந்தன்மை. 'இல்' இது 'இல்லை' என்ற குறிப்புவினைமுற்றின் விகாரம்.

புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

(பரி-உரை) குன்றிப்புறம் கண்டு அனையர் எனும்-குன்றிமணியின் புறம் போல வேடத்தாற் செம்மையுடையராயினும், குன்றி மூக்கின் அகம் கரியார் உடைத்து - அதன் மூக்குப்போல மனம் இருண்டிருப்பாரை உடைத்து உலகம் எ-று.

குன்றி - ஆகுபெயர். செம்மை கருமை யென்பன பொருளின்கண் நிறத்தைவிட்டுச் செப்பத்திலும் அறியாமையிலுஞ் சென்றனவாயினும், பண்பால் ஒத்தலின், இவை பண்புவமை: * "சூழின் மலிமனம் போன்றிருளின்ற கோகிலமே" என்பதுமது.

(ப-ரை) புறம்-மேலே, குன்றி-குன்றிமணியானது, கண்டனையரேனும் காணப்படுதல்போற் காணப்படுகிற செம்மையை யுடையவராயினும், அப்உள்ளே, குன்றிமூக்கின் - அக்குன்றிமணியின் மூக்குப்போல், கரியார் கறுத்திருப்பவரையும், உடைத்து - (உலகமானது) உடையதா யிருக்கிறது எ-று.

(க-ரை) குன்றிமணிபோற் புறத்திற் சுத்தமும் அகத்திற் குற்றமுடையவரை உலகமுடைத்து என்பதாம்.

(வி-ரை) குன்றியாகிய உபமானத்திலே நிறத்தைக் காட்டுகிற செம்மைகருமைகள் உபமேயத்திலே செவ்வையா யிருக்கையையும் அறிவில்லாமையையும் காட்டுகின்றன.

* திருச்சிற்றம்பலக்கோவையார்-322.

'புறங்குன்றி' இது குன்றிப்புறம் என்னும் சொற்கள் மொழிமாறி கின்றன. 'புறம்' என்றது ஈண்டு குன்றிமணியின் புறம்பேயுள்ளதாகிய செம்மை நிறத்தை. 'அகம்' என்றது மனத்தை. 'குன்றிமூக்கு' என்றது குன்றிமணியின் முனையை. 'மூக்கின்' இதில் 'இன்' உருபு ஒப்புப்பொருளில் வந்தது. குன்றிமணியின் செம்மையும் கருமையும் முறையே தவவேடத்திற்கும் அவர் தம் படிற்றொழுக்கத்திற்கும் பண்பால் ஒப்புப்படுத்திக் கூறியதால் இது பண்புவமமாம்.

(7)

மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

(பரி-உரை) மாசு மனத்தது ஆக - மாசு தம்மனத்தின் கண்ணதாக, மாண்டார் நீர் ஆடி-பிறர்க்குத் தவத்தான் மாட்சிமையுடையராய் நீரின் மூழ்கிக்காட்டி, மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் - தாம் அதன்கண்ணே மறைந்தொழுகும் மாந்தர் உலகத்துப் பலர் எ-று.

மாசு - காம வெகுளி மயக்கங்கள். அவை போதற்கன்றி மாண்டாரென்ற பிறர் கருதுதற்கு நீராடுதலான், அத் தொழிலை அவர் மறைதற்கு இடனாக்கினர். இனி மாண்டார் நீராடி யென்பதற்கு, மாட்சிமைப்பட்டாரதன்மையை யுடையராயென உரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் கூடா வொழுக்கமுடையாரது குற்றமும், அவரை யறிந்து நீக்கவேண்டுமென்பதும் கூறப்பட்டன.

(ப-ரை) மாசு-அழுக்கானது, மனத்ததாக-(தம்) மனத்திலுள்ளதாக, மாண்டார்-(பிறர்க்குத் தவத்தால்) மாட்சிமையுடையவராக, நீராடி - நீரிலே மூழ்கி (காட்டி), மறைந்து-(தாம் அதனிடத்தே) மறைந்து, ஒழுகும்-நடக்கும், மாந்தர்-மனிதர், பலர்-(உலகத்திலே) பலர் எ-று.

(க-ரை) உள்ளத் தழுக்கிருக்க உடலழுக்கைக் கழுவுவார் பலர் என்பம்.

(வி-ரை) மாசு-காமவெகுளி மயக்கங்கள். அவை போதற்காக வல்லாமல் மாட்சிமைப்பட்டவரென்று பிறர் நினைத்தற்காக நீராடுதலால் அத்தொழிலை அவர் மறைதற்கு இடமாக்கினர். [இவை மூன்று பாட்டாலும் கூடா வொழுக்கத்தாரது குற்றமும் அவரை அறிந்து நீக்கவேண்டுமென்பதும் சொல்லப்பட்டன.]

'மாசு' என்றது காமாதி தீக்குணங்களை. 'மாசு மனத்தது ஆக' என்றது ஒருநோக்கு. 'மாண்டார்' இதற்கு 'மாண்' பகுதி. 'மறைந்தொழுகு மாந்தர்' என்றது தவவேடங்காட்டி உலகை வஞ்சித்து கூடா ஒழுக்கத்தில் நிற்பவரை.

(8)

நினைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

(பரி-உரை) கணை கொடிதை யாழ் கோடு செவ்விதை - அம்பு வடிவாற் செவ்விதாயினும், செயலாற் கொடிதை; யாழ் கோட்டால் வளைந்ததாயினும், செயலாற் செவ்விதை, ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல்-அவ்வகையே தவஞ் செய்வாரையும் கொடியர் செவ்வியரென்பதை, வடிவாற் கொள்ளாது, அவர் செயல்பட்ட கூற்றானே அறிந்துகொள்க எ-று.

கணைக்குச் செயல் கொலை. யாழுக்குச் செயல் இசையா லின்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயிற் கொடியரெனவும், அறமாயிற் செவ்வியரெனவுங் கொள்க என்பதாம். இதனால் அவரை யறியுமாறு கூறப்பட்டது.

(ப-ரை) கணை - அம்பானது (வடிவினாலே செவ்வியதாயிருந்தாலும்), கொடிதை - (செயலினாலே) கொடியதா யிருக்கின்றது, யாழ் - வீணையானது, கோடு - (வடிவினாலே) வளைவினதாயிருந்தாலும், செவ்விதை - (செயலினாலே) செவ்விதா யிருக்கின்றது, ஆங்கு - அவ்வகையே, அன்ன - தவஞ்செய்வார் கொடியர் செவ்வியரா யிருக்கைகளை அவரது வடிவினாலே கொள்ளாமல், வினைபடுபாலால் - (அவரது) செயல்பட்ட பகுப்பினாலே, கொளல்-அறிந்து கொள்ளக் கடவர் எ-று.

(ந-ரை) தவத்தோர் என்பதை நடக்கையா லறியப்படும் என்பதாம்.

(வி-ரை) அம்புக்குச்செயல்-கொல்லுதல். வீணைக்குச்செயல் - இசையி னாலே இன்பத்தைத் தருதல். அவ்வகையே அவர் பாவத்தைச் செய்தாற் கொடியரென்றும், அறத்தைச் செய்தால் செவ்வியரென்றும் கொள்ள வேண்டு மென்பதாம். [இதனால் அவரை அறியும்வழி சொல்லப்பட்டது.]

கணை வடிவால் நேர்மையுடையதாகிக் கொல்லுங் குணமுடைமையாற் கொடியதை ஆயிற்று. அதுபோல் தோற்றத்தால் தவவேடம் உடையராயினும் செயலால் கூடா ஒழுக்கமுடையார் கொடியரே, தீயபாவிகளே என்பதும், யாழ் வடிவாற்கோணி இருப்பினும் இசையால் யாவர்க்கும் இன்பம் பயத்த லினால், நல்லதை ஆயிற்று. அதுபோல் வேடம் பூணுதை பிச்சர்போ லிருப் பினும் உண்மைத் தவத்தினர் அறமே செய்தலின் நல்லவர் ஆவர் என்பதை உபமானங்களால் விளங்கவைத்தார். இதனானே உருவால் மதியாது செ லால் மதித்தறிக என்பதை உணர்த்தியதாம்.

மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.

(பரி-உரை) மழித்தலும் நீட்டலும் வேண்டா - தவஞ் செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்துவிடின்-உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாதென்று குற்றங் கூறிய ஒழுக்கத்தைக் கடிந்துவிடின் எ-று.

பறித்தலும் மழித்தலு மடங்கும். மழித்தலென்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூறாராயினர். இதனைக் கூடாவொழுக்க மில்லாதார்க்கு வேடமும் வேண்டாவென அவாது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) (தவஞ்செய்வோர்க்கு) மழித்தலும்-(தலைமயிரை) மழித்தலும், நீட்டலும்-(அதனைச்) சடையாக்கலும், அல்லது வளர்த்தலும், வேண்டா-வேண்டுவனவல்ல, உலகம்-உயர்ந்தோரால், பழித்தது-(தவத்திற்கு ஆகா தென்ற) குற்றஞ் சொல்லப்பட்ட ஒழுக்கத்தை, ஒழித்தவிடின்-நீங்கிவிடுவாராயின் ஏ-று.

(க-ரை) உயர்ந்தோர் குற்றமென்ற சொன்னவைகளை நீக்கவேண்டும் என்பதாம்.

(வி-ரை) மழித்தலென்பதே தலைமயிரைக் காட்டலால் அதைச் சொல்லினரில்லை. [இதனாலே கூடாவொழுக்கத்தை விட்டுத் தவஞ்செய்வோர்க்கு வேஷமும் வேண்டாமென அவாது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'மழித்தல்' என்றது தலையை மூண்டனஞ் செய்துகோடல். 'நீட்டல்' என்றது சடைவளர்த்தலை. 'மழித்தலும்', 'நீட்டலும்' என்றதன்கண் உள்ள உம்மைகள் எண்ணும்மைகள். 'உலகம் பழித்தது' என்றது உலகத்தையர்ந்தோரால் பழிக்கப்படுவதாகிய கூடா ஒழுக்கத்தை. (10)

28-ம் அதி-கூடாவொழுக்கம்-முற்றிற்று.

29-ம் அதிகாரம்-கள்ளாமை

(பரி-உரை) அஃதாவது: பிறருடைமையாயிருப்பதியாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை. கருதுதலும் செய்தலோடாத்தலின், கள்ளாமை யென்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டு வகையால் அவரை வஞ்சித்துக் கோடற்கு இயைந்த பொருள்களை யுங்கணங் கொள்ளினும் அமையும்; துறந்தார்க்காயின் அதனைக் கருதிய வழியும் பெரியதோர் நிழுக்காம். ஆதலின், இது துறவறமாயிற்று. புறத்துப் போகாது மடக்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர் மனம் நுஃதொழிந்து புறத்தே போந்து பஃறலைப்பட்டு உடம்பின்பொருட்டுப் பிறரை நோக்குதலேயன்றி, அது தன்னையும் வஞ்சித்துக் கொள்ளக் கருதுதல் அவர்க்குப் பெரியதோர் நிழுக்காதல் அறிக. இவ்வாறு வாய்மை முதற் கொல்லாமையீறாய நான்கு அதிகாரத்திற்கும் ஒக்கும். பொருள்பற்றி வருங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது காமம்பற்றி நிகழ்வதாய கூடாவொழுக்கத்தின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: பிறருடைமையா புள்ளவைகளில் யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக்கொள்ள நினையாமையாம். நினைத்தலும் செய்தற்குச் சமானமாதலால் கள்ளாமை யென்றார்.

இல்லறத்தார்க்குத் தம்மவரோடு விளையாட்டாகவாவது, செய்யக்கூடும் குறவறத்தாருக்கு நினைத்தவிடத்தும் பெரியதவறும். ஆதலின் இது குறவற மாயிற்று. புறத்திலே போகாமல் மடங்கி ஓரிடத்தையுற்று உயிரை நோக்க வேண்டியதாகிய அவரது மனம் அதைவிட்டுப் புறத்திலேபோய்ப் பல விடத்தையுற்று உடம்பின் பொருட்டுப் பொருளை நோக்குதலல்லாமலும் அப்பொருளையும் வஞ்சித்துக்கொள்ள நினைத்தல் அவருக்குப் பெரிய குற்ற மாதல் அறிக. இவ்விதம் வாய்மையுதற் கொல்லாமை முடிவாகிய நான்கறி காரத்தக்கும் ஒக்கும். இது பொருளைப்பற்றி யுண்டாங் குற்றத்தை விலக் குவதாகலின் காமம்பற்றி யுண்டாங் கூடாவொழுக்கத்தின் பின் வைக்கப் பட்டது

எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்று
கள்ளாமை காக்கதன் னெஞ்சு. [ங்

(பரி-உரை) எள்ளாமை வேண்டுவான் என்பான் - வீட்டினை யிகழாத விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்குமதிக்கப்படுவான், எனைத்த ஒன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க-யாதொரு பொருளையும் பிறன வஞ்சித்துக் கொள்ளக் கருதாவகை தன்னெஞ்சினைக் காக்க எ-று.

எள்ளாதென்னும் எதிர்மறை வினையெச்சம் எள்ளாமையெனத் திரிந்த கின்றது. வீட்டினை யிகழ்த்லாவது காட்சியே அளவையாவதென்றும், நிலம், நீர், தீ, வளியெனப் பூதம் நான்கேயென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத் தாற் றோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின்கண்ணே அறிவு மதலிக் கட் களிப்புப்போல வெளிப்பட்டழியுமென்றும், இறந்த வுயிர் பின் பிற தென்றும், இன்பமும் பொருளும் ஒருவனுற் செய்யப்படுவனவென்றுஞ் சொல்லும் உலோகாயத முதலிய மயக்கநூல்களைத் தெளிந்து, அவற்றிற் கேற்ப ஒழுகுதல். ஞானத்திற் கேதுவாய மெய்ந்நூற் பொருளையேறும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனை வஞ்சித்துக் கொள்ளின், அதுவுங் களவா மாகலின், எனைத்தொன்று மென்றார். நெஞ்சு கள்ளாமற் காக்கவெனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதாத லென்பது பெற்றும்.

(ப-ரை) எள்ளாமை-(முத்தியை) இகழாமல், வேண்டுவா னென்பான் விரும்புவோன், இவனென்று-(தவத்தோராலே) நன்றாக மதிக்கப்படுவோன், எனைத்தொன்றும்-யாதொரு பொருளையும், கள்ளாமை-பிறரை வஞ்சித்துக் கொள்ள நினையாதபடி, தன்னெஞ்சு - தனது நெஞ்சை, காக்க - காக்கக் கடவன் எ-று.

(க-ரை) முத்தியை வேண்டுபவன் களவை நினையாதபடி தன் மனதைக் காக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) முத்தியை இகழ்தலாவது காட்சியே பிரமாணமென்றும், நிலம், நீர், நெருப்பு, காற்று, எனப் பூதம் நான்கேயென்றும், அவைகள் கூடி

தலின் சிறப்பிலுலே தோன்றிப் பிரிவிலுலே அழிவதாகிய உடம்பினிடத்தே
அறிவு மதவினிடத்தே களிப்புப்போல் வெளிப்பட்டு அழியுமென்றும்,
றந்த வுயிர் பின்னே பிறவாதென்றும், இன்பமும் பொருளும் முயற்சி
பால் வருவதென்றும் சொல்லும் உலோகாயத மதமுதலாகிய மயக்க நூல்
ளைத் தெளிந்து அவற்றுக்கு எற்க நடத்தலாம். ஞானநூற்பொருளை
யினும் ஆசாரியனுக்கு வழிபாடு செய்யாமல் வஞ்சித்துக்கொள்ளின்
தவும் களவாமாகலின் எனைத்தொன்று மென்றார். செஞ்ச கள்ளாமை
க்கவென்றலால் குறந்தோர்க்கு விலக்கப்பட்ட கள்ளுதலாவது, களவு
செய்ய நினைத்தலென்பது பெற்றும்.

'வேண்டுவான்' என்ற இடத்து 'வீடு' என்னுஞ் சொல்லை அவாய்நிலை
பால் வருவித்து 'வீட்டினை எள்ளாது வேண்டுவான்' எனச் சொற்களை
ட்டிக் கூட்டிப் பொருள் செய்யப்பெற்றது. 'கள்ளாமை' இது களவு செய்
மை என்னும் பொருளது. ஈண்டு பிறர் பொருளை வஞ்சித்துக்கொள்ளக்
ருதாமையை உணர்த்திற்று. 'கள்ளாமை காக்க' என்றது பிறர் பொருளை
ஞ்சித்துக்கொள்ளக் கருதாது காக்க என்பதாம். (1)

உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

(பரி-உரை) உள்ளத்தால் உள்ளலும் தீதே-குற்றங்களைத் தன்நெஞ்சாற்
நினைதலும் குறந்தார்க்குப் பாவம்; பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம்
னல்-ஆதலால், பிறனொருவன் பொருளை அவன் அறியாவகையால் வஞ்சித்
க் கொள்வேமென்று கருதற்க எ-று.

உள்ளத்தாலென வேண்டாது கூறினார், அவருள்ளம் எனையோ ருள்ளம்-
லாது சிறப்புடைத்தென்பது முடிபத்திற்கு. உள்ளலுமென்பது இழிவு
ப்பும்மை, அல் விகுதி வியங்கோளெதிர்மறைக்கண் வந்தது. இவை
ண்டுபாட்டாலும் இக்குடைக்குக் களவாவது இதுவென்பதூஉம், அது
யப்படுவதென்பதூஉங் கூறப்பட்டன.

(ப-ரை) (குற்றங்களை) உள்ளத்தால்-(தமது) நெஞ்சினுலே, உள்ளலும்-
னைத்தலும், தீதே-(குறந்தார்க்குப்) பாவமேயாகும், (ஆதலால்) பிறன்-பிற
ன, பொருளை-பொருளை, கள்ளத்தால்-அவனறியாத வகையினுலே, கள்
ம்-வஞ்சித்துக்கொள்வோம், எனல்-என்று நினையாதிருக்கக்கடவர் எ-று.

(க-ரை) தீமைகளை நினைத்தலுங் குற்றமாதலால் பிறன் பொருளைக்
செய்ய நினையாதிருக்கக்கடவர் என்பதாம்.

(வி-ரை) அவருள்ளம் சிறந்ததென்பது தோன்றுதற்கு உள்ளத்தா
ன்பது அதிகமாகச் சொல்லப்பட்டது. [இவை ஈரண்டு பாட்டாலும்
தோர்க்குக் களவாவது இதுவென்பதும் அதை நீக்கவேண்டு மென்
சொல்லப்பட்டன.]

'உள்ளம்' இச் மனத்தை உணர்த்தும்; இது இட அடியாகப் பிறந்த பெயர். உடலின் உள்ளிடத்து இருப்பது என்னுங் காரணம்பற்றி வந்த பெயர். இனி உள்ளுதற்குக் கருவியாய காரணம்பற்றி வந்தது என்பாரும் உண்டு. உள்ளுதல்-நினைத்தல். "உள்ளத்தா லுள்ளலும்" என்ற இடத்து 'குற்றங்களை' என்னுஞ் சொல் வருவித்து உரைக்கப்பெற்றது. இது வேற்றுப் பொருள் வைப்பணி. 'எனல்' என்றது சண்டு எண்ணுதே என்னும் பொருள் தந்து நின்றது. (2)

களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(பரி-உரை) களவினால் ஆகிய ஆக்கம் - களவினு லானதாகிய பொருள், ஆவதுபோல் அளவிறந்து கெடும்-வளர்வதுபோலத் தோன்றித் தன்னெல்லையைக் கடந்து கெடும் எ-று.

ஆக்கத்திற் கேதுவாகலின், ஆக்கமெனப்பட்டது. எல்லையைக் கடந்து கெடுதலாவது தான் போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்த அறத்தையும் உடன் கொண்டுபோதல். அளவறிந்தென்ற பாடமோதி, அவன் பயன் கொள்ளு மளவறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடுமென்றுரைப்பாரு முளர்.

(ப-உரை) களவினால்-களவு செய்தலினால், ஆகிய-உண்டாகிய, ஆக்கம்-பொருளானது, ஆவதுபோல - வளர்வதுபோல, (தோன்றி) அளவிறந்து (தனது) எல்லையைக்கடந்து, கெடும்-அழியும் எ-று.

(க-ரை) களவால் வந்தசெல்வம் வளர்வதுபோலக் கெடும் என்பதாம்.

(வி-ரை) ஆக்கத்துக்கு ஏதுவாகலால் ஆக்கமென்பப்பட்டது. எல்லையைக் கடந்து கெடுதலாவது போங்கால் பாவத்தையும், பழியையும் நிறுத்திச் செய்த அறத்தையும் உடன் கொண்டுபோகுதல்.

'களவினால்' இதில் 'இன்' சாரியை 'ஆல்' உருபு கருவிப்பொருளில் வந்தது. 'ஆக்கம்' என்றது பொருளை. இது ஆக்கப்படுவது என்னுங் காரணம் பற்றிவந்த பெயர். 'ஆவதுபோல அளவிறந்து கெடும்' எனப் பொருளியைத்துக் கொள்க. (3)

களவின்கட் கன்றிய காதல் விளவின்கண்
வீயா விழுமந் தரும்.

(பரி-உரை) களவின்கண் கன்றிய காதல் - பிறர் பொருளை வஞ்சித்தல் கோடற்கண்ணே மிக்க வேட்கை, விளவின்கண் வீயா விழுமம் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும்பொழுது தொலையாத நடுங்கலைக் கொடுக்கும் எ-று.

கன்றதலான் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்த அதனைப் பாவமும் பழியும் பயக்தேவிடுதலின், வீயா விழுமந்தருமென்றார். இவை இரண்டு பாட்டாலும் அது கடியப்படுதற்குக் காரணம் கூறப்பட்டது.

(ப-ரை) களவின்கண் - பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளுதலிலே, கன்றிய-மிகுந்த, காதல்-ஆசையானது, (அப்போது இனிதுபோல்தோன்றி) பினவின்கண்-தான் பயனைக் கொடுக்கும்போது, வீயாவிழுமம்-தொலையாத துன்பத்தை, தரும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) களவை யிச்சிக்குமிச்சை கெடாத துன்பத்தைத்தரும் என்பதாம்.

(வி-ரை) மிகுதலால் எந்நாளும் அக்களவையே கற்பித்துப் பாவமும் பழியும் கொடுத்தே வருதலால் வீயாவிழுமம் தருமென்றார். [இவை இரண்டு பாட்டாலும் அதை நீக்குதற்குக் காரணம் சொல்லப்பட்டது]

'களவின்கண்' 'பினவின்கண்' இவைகளில் 'இன்' சாரியை; 'கண்' ஏழன்உருபு. 'கன்றியகாதல்' என்றது பேராவல் என்னும் பொருளது. 'விழுமம்' என்றது கேட்டை; 'வீயா விழுமம்' என்றது அழியாக்கேடு என்பதாம். அதாவது அக்கேடு எதானும் தொலைக்க ஒண்ணாது என்பதாம். இனி, அதற்குத் தப்பாது கேட்டைத்தரும் எனப் பொருள் கொண்டாரும் உண்டு.

அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

(பரி-உரை) அருள் கருதி அன்பு உடையர் ஆதல் - அருளினது உயர்ச்சியை யறிந்து அதன்மேல் அன்புடையராயொழுகுதல், பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்-பிறர் பொருளை வஞ்சித்துக்கொள்ளக்கருதி அவரது சோர்வு பார்ப்பார்மாட்டு உண்டாகாது எ-று.

தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித் துறந்து போந்து பிறர்க்குரிய பொருளை நன்குமதித்து அதனை வஞ்சித்துக் கோடற்கு அவரது சோர்வு பார்க்கும் மருட்சியானால், அவர்மாட்டு, உயிர்கண்மேல் நன்செய்தல் நமக்கு உறுதியென் றறிந்து அவ்வருளின் வழுவாதொழுகுதல் வேண்டுமே கூடாதென்பதாம்.

(ப-ரை) அருள்-அருளினது உயர்ச்சியை, கருதி-அறிந்து, அன்புடையராதல்-(அதன்மேல்) அன்புடையராய் நடத்தல், பொருள்-(பிறர்) பொருளை, கருதி-(வஞ்சித்துக்கொள்ள) நினைத்து, பொச்சாப்பு-(அவரது) சோர்வை, பார்ப்பார்கண்-பார்ப்போரிடத்து, இல்-உண்டாகாது எ-று.

(க-ரை) பிறர் பொருளைக் களவுசெய்ய நினைப்பவர்களுக்கு அருளும் அன்புமில்லை என்பதாம்.

(வி-ரை) தமக்கு உரிய பொருளையும் தீதென்று வெறுத்துத் துறந்தவர் பின்னே பிறர்க்கு உரிய பொருளை நன்றென்று விரும்பி அதனை வஞ்சித்துக் கொள்ளுதற்கு அவரது சோர்வைப் பார்ப்பாராயின் அவரிடத்தே பிறவுயிர்களின் மேலே செய்தற்கு உரிய அருளினாலே தவறாது நடத்தல் கூடாதென்பதாம்.

'அருள்கருதி' என்றது அருளின் சிறப்பை ஆராய்ந்து அறிந்து எண்ணி என்பதாம். 'அன்புடையராதல்' என்றது அவ்அருளினிடத்து அன்பு உடையர் ஆதல் என்பதாம். 'பொருள்' என்றது செல்வப்பொருளை. 'பொச்சாப்பு' என்றது மறந்தநிலையை. இதனை மறதி, மறலி என்பர். ஈண்டு அசதி என்னும் பொருள் தந்தது, 'பொச்சாப்புப் பார்ப்பார்' என்பதற்குப் பிறர் பொருளைக் கவர அப்பொருளுடையாரின் அசதியைத் தம் வசதியாகப் பார்ப்பார் என்பதாம். மருட்சி-மயக்கம். தெருட்சி-தெளிவு. (5)

அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட் கன்றிய காத லவர்.

(பரி-உரை) அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார் - உயிர் முதலியவற்றை அளத்தலாகிய நெறியின்கணின்று அதற்கேற்ப ஒழுகமாட்டார், களவின்கண் கன்றிய காதலவர் - களவின்கண்ணே மிக்க வேட்கையையுடையார் எ-று.

உயிர் முதலியவற்றை அளத்தலாவது - காட்சிமுதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான் உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக்கு உற்ற விளைவுகளையும், அவற்றான் அது நாற்கதியுட் பிறந்திறந்து வருதலையும், அது செய்யாமல் அவற்றைக் கெடுத்தற்கு உபாயமாகிய யோகஞானங்களையும், அவற்றான் அஃதெய்தும் வீட்டினையும், அளந்து உள்ளவா ரறிதல். இதனை ஆருகதர் தருமத்தியானம் என்ப. அதற்கேற்ப ஒழுகுதலாவது - அவ்வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றி னீங்கி நல்லனவற்றின் வழிநிற்றல்.

(ப-ரை) களவின்கண்-களவினிடத்தே, கன்றிய-மிகுந்த, காதலவர்-ஆசையையுடையவர், அளவின்கண்-(உயிர் முதலானவைகளை) அளவுசெய்தலாகிய வழியிலே, நின்று-நிலைபெற்று, ஒழுகலாற்றார்-(அதற்கு ஏற்க) நடக்கமாட்டார் எ-று.

(க-ரை) களவிலிச்சை 'யுடையவர்கள் கிருபை வழியிலே நடவார் என்பதாம்.

(வி-ரை) உயிர் முதலானவைகளை யளவுசெய்தலாவது, காட்சி முதலாகிய பிரமாணங்களைக்கொண்டு உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகிற குற்றவினை விளைவுகளையும், அவற்றால் அவ்வுயிர் * நாற்கதியிலே பிறந்திறந்து வருதலையும், அதனையும் ஒழித்தற்கு உபாயமான யோகஞானங்

* நாற்கதி:-தேவகதி, மக்கட்கதி, நரகதி, விலங்குகதி.

களையும், அவற்றால் அவ்வுயிர் அடையு முத்தியையும் அளவு செய்து உள்ள வாறு அறிதல். அதற்கு ஏற்ப நடத்தலாவது அளவு செய்யப்பட்டவை களிலே தீயவைகளினீங்கி நல்லவைகளின் வழிநிற்கை.

'அளவு' என்றதற்கு உயிர்கட்கு உரிய அருள்நெறி அளவை எனவும், ஒழுகலாற்றார்' என்றதற்கு அருள்நெறி கூறும் நல்லொழுக்கத்தில் ஒழுக முடியாதவர் எனவும் பொருள் கூறுவர். (6)

களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு மாற்றல் புரிந்தார்க ணில்.

(பரி-உரை) களவு என்னும் கார் அறிவு ஆண்மை - களவென்று சொல் லப்படுகின்ற இருண்ட அறிவினையுடையராதல், அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல் - உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினார்கண் இல்லை எ-று.

இருள்-மயக்கம். காரியத்தைக் காரணமாக வுபசரித்துக் களவென்னுங் காரறிவாண்மையென்றும், காரணத்தைக் காரியமாக்கி அளவென்னு மாற்ற லென்றுங் கூறினார். களவுந் துறவும் இருளும் ஒளியும்போலத் தம்முண் ணாறாகலின் ஒருங்கு நில்லாவென்பது இவை மூன்று பாட்டானுங் கூறப் பட்டது.

(ப-ரை) களவென்னும் - களவென்று சொல்லப்படும், கார் - இருண்ட, அறிவாண்மை-அறிவினையுடையரா யிருக்கையானது, அளவென்னும்-(உயிர் முதலானவைகளை) அளத்தலென்று சொல்லப்படும், ஆற்றல்-பெருமையை, புரிந்தார்கண்-விரும்பினவரிடத்து, இல்-இல்லை எ-று.

(க-ரை) களவு செய்வோமென்னு மறியாமை பெருமை யுடையோரிடத் தில்லை என்பதாம்.

(வி-ரை) இருள்-மயக்கம். களவென்னுங் காரறிவாண்மை எனக் காரி யத்தைக் காரணமாகவும், அளவென்னு மாற்றல் எனக் காரணத்தைக் காரிய மாகவும் உபசரித்தார். [களவும், துறவறமும், இருளும், ஒளியும்போல் ஒன்றுக்கொன்று பகையாகலின் கூடி நிற்பனவல்லவென்பது இவை மூன்று பாட்டானும் சொல்லப்பட்டது.]

களவு அஞ்ஞானத்தின் காரியம் ஆதலின் "களவென்னுங் காரறி வாண்மை" என்றார். 'அளவு' என்றது ஞானநூல் அளவை. இனி உலகியல் அளவு, உயிர் இயல் அளவு எனக் கொள்ளுவாரும் உண்டு. களவைக்கார் ணாறதற்கேற்ப அளவை ஆற்றல் என்ற நயங் கருதற்பாலது. 'புரிந்தார்' என்றது ஈண்டு விரும்பினார் என்னும் பொருள்தந்து நின்றது. (7)

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங் களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

(பரி-உரை) அளவு அறிந்தார் நெஞ்சத்த அறம்போல கிற்கும் - அவ் வளத்தலேயே பயின்றவர் நெஞ்சத்த அறம் கிலபெற்றுற்போல கிலபெறும். களவு அறிந்தார் நெஞ்சில் காவு-களவையே பயின்றவர் நெஞ்சத்த வஞ்சனை எ-று.

உயிர் முதலியவற்றை அளந்தறிந்தார்க்குத் தவறவறஞ் சலியாத கிற்கு மென்பத இவ்வுவமையாற் பெற்றும். களவோடு மாறின்றி கிற்பத இதனாற் கூறப்பட்டத.

(ப-ரை) களவறிந்தார்-களவை அறிந்தவரத, நெஞ்சில்-மனதில், காவு-வஞ்சனையானத, அளவறிந்தார்-அவ்வளத்தலே அறிந்தவரத, நெஞ்சத்த நெஞ்சில், அறம்போல-அறமானதுபோல, கிற்கும்-கிலபெறும் எ-று.

(க-ரை) களவு செய்வோரிடத்த வஞ்சனை வளரும் என்பதாம்.

(வி-ரை) உயிர் முதலானவைகளை அளந்த அறிந்தவர்களுக்குத் தவற மானத அசையாத கிற்குமென்பத இவ்வுபமானத்தினாலே கொள்ளப் பட்டத. [களவோடு கீங்காத கிற்பத இதனாற் சொல்லப்பட்டத.]

'அளவறிந்தார் நெஞ்சத்த அறம் கிற்றல்' உபமானம். 'நெஞ்சில்' இதில் 'இல்' இடப்பொருளுருபு. 'காவு' என்றத வஞ்சனையை. 'போல' இத உவமவுருபு. (8)

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ரு தவர்.

(பரி-உரை) அளவு அல்ல செய்தாக்கே வீவர் - அவ்வளவல்லாத தீய கினைவுகளை கினைத்தபொழுதே கெடுவர், களவு அல்ல மற்றைய தேற்ரு தவர்-களவல்லாத பிறவற்றை அறியாதவர் எ-று.

தீய கினைவுகளாவன - பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ் சனையால் அத கொள்ளுமாறும், கொண்டவதனால் தாம் புலன்களை நுகரு மாறும் முதலாயின. கினைத்தலுஞ் செய்தலாதலிற் செய்தென்றும், அஃத உள்ள அறங்களைப் போக்கிக் காக்த சொற்செயல்களைப் புகுவித்த அப் பொழுதே கெடுக்குமாகலின் ஆங்கே வீவரென்றுங் கூறினார். மற்றை வாவன - கறந்தார்க்கு உணவாக வோதப்பட்ட காய் கனி கிழங்கு சரு முதலாயினவும், இல்வாழ்வார் செய்யுந் தானங்களுமாம். தேற்ரமை-அவ் றையே நுகர்ந்த அவ்வளவால் கிறைந்திருத்தலை அறியாமை. இதனாற் கள்வார் கெடுமாறு கூறப்பட்டத.

(ப-ரை) களவல்ல-களவல்லாத, மற்றைய-மற்றவைகளை, தேற்ரு தவர் அறியாதவர், (களவொன்றையே அறிந்தவரென்றபடி) அளவல்ல-அவ்வள வல்லாத தீயகினைவுகளை, செய்த-கினைத்த, ஆங்கே-அப்போதே, வீவர் கெடுவர் எ-று.

(க-ரை) கனவை அறிந்தோர் பாவங்களைச்செய்த அழிவர் என்ப தாம்.

(வி - ரை) தீய நினைவுகளாவன: பொருளுடையாரை வஞ்சிக்கும் விதமும், அவ்வஞ்சனையால் அதைக்கொள்ளும் விதமும், கொள்ளப்பட்ட அப்பொருளினுலே தாம் போகங்களை அனுபவிக்கும் விதமும், முதலானவை. நினைத்தலுஞ் செய்தலோ டொக்குமாகலில் செய்தென்ற அந்நினைப்பு உள்ள அறங்களைப்போக்கி; மறைப்பான சொல்லையும் செயலையும் புகுவித்த, அப்போதே கெடுக்குமாதலால் ஆங்கே வீவொன்றும் சொல்லினர். மற்றவை யாவன: அறத்தார்க்கு உணவாகச் சொல்லப்பட்ட காய் கனி மிழக்கு சருகு முதலானவையும், இல்லறத்தோரால் தானஞ்செய்யப்பட்டவையும் ஆம். அறியாமையாவது அவைகளையே உண்டு போதமென்றிருக்க அறியாமை. [இதனுல் களவினுலே கெடுமாறு சொல்லப்பட்டது.]

'அவவல்ல' என்றது அறத்தின் எல்லைக்குட்படாததாகிய தொல்லை தரும் தீய நினைவுகளைக் குறித்தது. 'அங்கே' என்றது அப்பொழுதே, தீய அந்நினைவுகளை நினைத்த அக்காலத்தேயே என்பதாம். 'வீவர்' இது அழிவர் என்னும் பொருளது. இதற்கு 'வீ' பகுதி. 'களவல்ல மற்றையதேற்றாதவர்' இது களவன்றி மற்றையொன்றையும் அறியாதவர் என்ற பொருளது. 'மற்றைய' என்றது காய் இலை சருகு முதலிய கந்தமூலங்களை யுண்டு தவஞ் செயலை.

(9)

கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

(பரி-உரை) கள்வார்க்கு உயிர்நிலை தள்ளும்-களவினைப் பயில்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்புந் தவறும், கள்ளார்க்குப் புத்தேள் உலகு தள் ளாது-அது செய்யாதார்க்கு நெடுஞ் சேணதாகிய புத்தேளுலகுந் தவறுத லின்று.

உயிர் சிற்றற்கிடனுகலின் உயிர்நிலை யெனப்பட்டது. சிறப்புமம்மை சிரண்டும் விகாரத்தாற் றொக்கன. இம்மையினும் அரசனு லொறுக்கப்படு லின் உயிர்நிலையுந் தள்ளுமென்றும், மறுமையினுந் தேவாதல் கூடுதலிற் புத்தேளுலகுந் தள்ளாதென்றும் கூறினர். * 'மற்றது, தள்ளினுந் தள்ளாமை ர்த்து' என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதலறிக. இதற்குப் பிறவா ரைப்பாருமுளர். இதனுல் இருவர் பயனும் ஒருங்கு கூறப்பட்டது.

(ப-ரை) கள்வார்க்கு-களவிலே பழகுவோர்க்கு, உயிர்நிலை - (தம்மின் வேறல்லாத) உடம்பும், தள்ளும்-தவறும், கள்ளார்க்கு-களவிலே பழகாத ர்க்கு, புத்தேளுலகு - (நெடுந்தூரமாகிய) தேவருலகமும், தள்ளாது - தவ அ எ-று.

(க-ரை) களவு செய்வோர் நரகம் அடைவர் என்பதாம்.

* திருக்குறள்-596.

(வி-ரை) தொக்குநின்ற சிறப்பும்மை இரண்டும் வருவிக்கப்பட்டன. இம்மையிலும் அரசனுல் ஒறுக்கப்படுதலால் உடம்பும் தள்ளுமென்றும், மறுமையிலும் தேவராகுதல் கூடுமாதலால் தேவருலகம் தள்ளாதென்றும் சொல்லப்பட்டன. [இதனுல் இருவர் பயன்களும் சேர்த்துச் சொல்லப் பட்டன.]

'உயிர்நிலை' என்றது உடம்பை; என்னை? உயிர்க்கு இருப்பிடமாகிய இருத்தலின் உடம்பை "கூத்தன் குடியிருக்கும் வீடு" என்றுர் பிறரும். 'தள்ளும்' இது தவறும் என்னும் பொருள்தந்தது. கள்வார்க்கு அழியும் கள்ளார்க்கு மறுமை இன்பும் எய்தும் என்பது இக்குறளின் உட்கோள். (10)

29-ம் அதி-கள்ளாமை-முற்றிற்று.

30-ம் அதிகாரம்-வாய்மை

(பரி-உரை) அஃதாவது: மெய்யினது தன்மை. பெரும்பான்மையும் காமமும் பொருளும்பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கங் கள்ளாமைகளின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: மெய்யினது தன்மையாம். பெரும்பாலும் காமமும் பொருளும்பற்றி உண்டாவதாகிய பொய்மையை விலக்கலால் இது கூடா வொழுக்கங் கள்ளாமைகளின் பின் வைக்கப்பட்டது.

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந் தீமை யிலாத சொலல்.

(பரி-உரை) வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய்ம்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின், தீமை யாதொன்றும் இலாத சொலல்-அது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற் களைச் சொல்லுதல் எ-று.

தீமை யாதொன்று மிலாதவென இயையும். எனப்படுவதென்பது "ஊரெனப்படுவ தறையூர்" என்றுற்போல நின்றது. இதனுன் நிகழ்ந்த உறலென்பது நீக்கப்பட்டது. அதுதானும் தீங்கு பயவாதாயின் மெய்ம்மை யாம், பயப்பிற் பொய்மையாமென்பது கருத்து.

(ப-ரை) வாய்மை யெனப்படுவது - மெய்ம்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, யாதெனின் - யாதென்று வினவினுல், (அது பிறிதோ ருயிர்க்கு) யாதொன்றும் - சிறிதாயினும், தீமையிலாத - தீமையைத்தாரா சொல்லுகளை, சொலல்-சொல்லுதல் எ-று.

(க-ரை) பிறருக்குத் தீமையைத்தராத சொற்களைச் சொல்லுதல் சத்தியம் என்பதாம்.

(வி-ரை) இதனுல் நடந்ததைச் சொல்லுதல் வாய்மை அல்லவென்ற நீக்கப்பட்டது. அந்நடந்ததைச் சொல்லுதலும் நீக்கைத் தராதிருக்குமாயின் மெய்மையாம், தருமாயின் பொய்மையாமென்பது கருத்து.

'வாய்மை' என்றது மெய்ம்மையை. வாயின் தன்மை மெய்மை கூறலே என்ற காணிபுபற்றி மெய்மையை 'வாய்மை' என்றார். 'யாத' இது 'யா'வினு அடியாகப் பிறந்த பெயர். இக்குறளால் உண்மையை உரைப்பினும் அது நீங்குபயக்கின் அது வாய்மை எனப் படாதென்பதும், பொய்யே ஆயினும் அது பிறர் எவர்க்கும் எத்தகைய நீங்கும் பயவாத நன்மையே பயக்கு மெனின் அது வாய்மையாம் என்பது பெறப்படும். 'சொலல்' இதில் 'அல்' தொழிற்பெயர் விகுதி. (1)

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்.

(பரி-உரை) புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின் ஒ பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப்பயக்குமாயின், பொய்ம்மையும் வாய்மையிடத்த-பொய்ம் மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் பாலவாம் எ-று.

குற்றந்தீர்ந்த நன்மை-அறம்; அதனைப் பயத்தலாவது: கேடாதல் சாக் நாடாதல் எய்தநின்றதோருயிர். அச்சொற்களின் பொய்ம்மையானே அதனி நீக்கி இன்புறுதல். நிகழாததை கூறலும் நன்மை பயவாதாயிற் பொய்ம்மை பாம்; பயப்பின் மெய்ம்மையாமென்பது கருத்து. இவை இரண்டுபாட்டா றும் நீங்கு பயவாத நிகழ்ந்ததகூறலும் நன்மை பயக்கும் நிகழாததகூறலும் மெய்ம்மையெனவும், நன்மைபயவாத நிகழாததகூறலும் நீங்குபயக்கும் நிகழ்ந்ததகூறலும் பொய்ம்மையெனவும் அவற்றது இலக்கணம் கூறப்பட் டது.

(ப-ரை) பொய்ம்மையும்-பொய்மைச்சொற்களும், புரைதீர்ந்த-குற்றத்தி னின்று நீங்கிய, நன்மை-நன்மையை, பயக்குமெனின் - (பிறருக்குத்) தருமா யின், வாய்மையிடத்த-மெய்மைச்சொற்களி னிடத்தனவாம் எ-று.

(க-ரை) குற்றமற்ற நன்மையைத்தரின் பொய்ம்மையும் வாய்மையை க்கும் என்பதாம்.

(வி-ரை.) குற்றந்தீர்ந்த நன்மை-அறம்; அதனைத் தருதலாவது கேட்டை வது மரணத்தையாவது அடைய நின்றதோருயிர் அச்சொற்களின் பொய்ம் மையினுலே அதுநீங்கி இன்புறுதல் நடவாததைச் சொல்லுதலும் நன்மை யைத் தராதாயின் பொய்ம்மையாம். தருமாயின் மெய்ம்மையாமென்பது ருத்து. [இவை இரண்டுபாட்டாலும் நீங்கைத் தராத நடந்ததைச் சொல் தலும், நன்மையைத்தரும் நடவாததைச் சொல்லுதலும் மெய்ம்மையாம் னவும், நீங்கைத்தரும் நடந்ததைச்சொல்லுதலும், நன்மையைத்தரா த வாததைச் சொல்லுதலும் பொய்மையாம் எனவும் அவைகளி னிலக் ணஞ் சொல்லப்பட்டது.]

'பொய்மையும்' என்றதன் உம்மை இழிவுச்சிறப்புஉம்மை. 'புரைதீர்ந்த' இது குற்றமற்ற என்ற பொருளதாம். 'எனின்' என்றது 'என்றால்' எனப் பொருள்தருகின்றது. (2)

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(பரி-உரை) தன் நெஞ்சு அறிவது பொய்யற்க - ஒருவன் தன்னெஞ்சு அறிவதொன்றனைப் பிறர் அறிந்திலரென்று பொய்யாதொழிக, பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச்சுடும் - பொய்த்தானுயின் அதனை யறிந்த தன் நெஞ்சே அப்பாவத்திற்குக் கரியாய் நின்று தன்னை அதன் பயனுய தண்பத்தை யெய்தவிக்கும் எ-று.

நெஞ்சு கரியாதல் * "கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார்-தங் காத லகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு-ணெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவா-நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்" என்பது ளுணருமறிக. பொய் மறையாமையின் அது கூறலாகாதென்பது இதனுற் கூறப்பட்டது.

(ப-ம) (ஒருவன்) தன்னெஞ்சு-தனது நெஞ்சினுலே, அறிவது-அறியப்படுவதொன்றை, பொய்யற்க-(பிறர் அறிந்திலரென்று) பொய்யா தொழியக் கடவன், பொய்த்தபின்-பொய்த்தானுயின், தன்னெஞ்சே-(அதனை அறிந்த) தனது மனமே, (அப்பாவத்துக்குச் சாக்ஷியாய் நின்று) தன்னை-தன்னை, சுடும்-தபிக்கும் அதன் பயனுகிய தண்பத்தை அடைவிக்கும் எ-று.

(க-ரை) தானறிந்த பொய்யைச் சொன்னுல் தன்மனமே தன்னைக் கெடுக்கும் என்பதாம்.

(வி-ரை) [பொய் மறையாததாயிருக்கையால் அதைச் சொல்லலாகாதென்பது இதனுல் சொல்லப்பட்டது.]

"தன்னெஞ் சறிவது பொய்யற்க" இதன்பொருளை "மனமாரப் பொய் தன்னைச் சொல்லவேண்டாம்" என்னும் ஔவையார் திருவாக்கிலும் காணலாம். 'தன்னெஞ்சே' என்றதன் ஈற்று ஏகாரம் தேற்றப்பொருள்தந்தது. "தன்னெஞ்சே தன்னைச்சுடும்" என்றது பொய்த்தலின் மனமே கரியாய் நின்று தண்புறத்தும் என்றதாம். (3)

உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

(பரி-உரை) உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்-ஒருவன் தன்னுள்ளத்திற் கேற்பப் பொய் கூறுது ஒழுகுவனுயின், உலகத்தார் உள்ளத்தின் எல்லாம் உளன்-அவன் உயர்ந்தோ ருள்ளத்தினுமெல்லாம் உளனும் எ-று.

* கலித்தொகை, நெய்தல்-8.

உள்ளத்தாலென்பது வேற்றுமை மயக்கம். பொய் கூறுதொழுகுத லாவது மெய்கூறி யொழுகுதல். அவனது அறத்தின தருமைநோக்கி உயர்ந் தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பரென்பதாம். இதனால் இம்மைப் பயன் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) உள்ளத்தால்-தன்மனதுக்கேற்ப, பொய்யாத-பொய் பேசாமல், ஒழுகின் - நடப்பானுயின், (அவன்) உலகத்தார்-உயர்ந்தோரது, உள்ளத்துளெல்லாம்-மனங்களிலெல்லாம், உளன்-இருப்பான் எ-று.

(க-ரை) பொய்யாத உள்ளமுடையோன் உயர்ந்தோர் உள்ளத்திலிருப் பான் என்பதாம்.

(வி-ம்) உள்ளத்துக்கு என்பது உள்ளத்தாலென வருதலால், வேற் றுமை மயக்கம் பொய்பேசாமல் நடத்தலாவது, மெய்பேசி நடத்தல். அவனது உவ்வறத்தி னருமையை நோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்பாரென்பதாம். [இதனால் இம்மைப்பயன் சொல்லப்பட்டது.]

'உள்ளத்தால்' என்றதன்கண் உள்ள மூன்றன் உருபு நான்கன் பொரு ளில் மயங்கினமையின் இது வேற்றுமை மயக்கம். 'உலகத்தார்' என்றது உலகத்துள்ள உயர்ந்தார்களை. (4)

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

(பரி-உரை) மனத்தொடு வாய்மை மொழியின்-ஒருவன் தன்மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானுயின், தவத்தொடு தானம் செய்வாரின் தலை-அவன் தவமும் தானமும் ஒருங்குசெய்வாரினுஞ் சிறப்புடையன் எ-று.

மனத்தொடு பொருந்துதல்-மனத்திற் கேறுதல். புறமாகிய மெய்யாற் செய்யு மவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யுமது பயனுடைத் தென்பதாம்.

(ப-ரை) (ஒருவன்) மனத்தொடு - (தன்) மனத்தோடு பொருந்த, வாய்மை-உண்மையை, மொழியின்-சொல்லுவானுயின், (அவன்) தவத்தொடு-தவத்துடனே, தானம்-தானத்தை, செய்வாரின்-(ஒருமிக்கச்) செய்வாரினும், தலை-சிறப்புடையனுவான் எ-று.

(க-ரை) உண்மை சொல்லுவோன் தவம் தானம் செய்பவரினும் மேலானவன் என்பதாம்.

(வி-ரை) புறமாகிய மெய்யினுலே செய்யப்படும் அவைகளினும் அகமா கிய மனவொழுக்குகளாலே செய்யப்படும் இது மிகப் பயனுடையதென்பதாம்.

'மனத்தொடு' இதில் 'ஒடு' மூன்றன் உருபு. இது மனத்துடன் பொருந்து என்றபொருளதாம். 'தவத்தொடு' இதில் 'ஒடு' என்னும் மூன்றன்

உருபு எண்ணுப்பொருளில் வந்தது. 'செய்வாரில்' இதில் 'இல்' உருபு எல்லைப்பொருளில் வந்தது. (5)

பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

(பரி-உரை) பொய்யாமை அன்ன புகழ் இல்லை-ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையை யொத்த புகழ்க்காரணமில்லை, எய்யாமை எல்லா அறமும் தரும்-மறுமைக்கு மெய்வருந்தாமல் அவனுக்கு எல்லா அறங்களையுந் தானே கொடுக்கும் எ-று.

புகழ் ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றானும் துறவறத்திற்கு உண்ணாமை முதலியவற்றானும் வருந்தல் வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல் அவ்விருவகைப் பயனையுந் தானே தருமென்பார் எய்யாமை யெல்லாவறமுந் தருமென்றார்.

(ப-ரை) (ஒருவனுக்கு) பொய்யாமை யன்ன - பொய் பேசாமைக்கு ஒப்பாகிய, புகழ் - புகழ்க்காரணம், இல்லை - (இம்மைக்கு) இல்லை, (அது அவனுக்கு) எய்யாமை-(உடம்பு) வருந்தாமல், எல்லாவறமும்-எல்லா வறங்களையும், தரும்-(மறுமைக்குத்தானே) தரும் எ-று.

(க-ரை) பொய் சொல்லாமையே புகழ்; அது எல்லாத் தருமமுங் கொடுக்கும் என்பதாம்.

(வி-ரை.) புகழ் அதன் காரணத்தைக் காட்டலா லாகுபெயர். இல்லறத்திற்குப் பொருள் சம்பாதிக்கை முதலானவைகளாலும், துறவறத்துக்கு உண்ணாமை முதலானவைகளாலும் வருத்தப்படவேண்டுமல்லவா? அவ்வருத்தங்கள் அடையாமல் அவ்விருவகை அறங்களும் கொடுக்கும் பயன்களைப் பொய்யாமை தானே கொடுக்குமென்றற்கு எய்யாமை யெல்லாவறமுந் தருமென்றார்.

'அன்ன' இது உவமஉருபு. ஈண்டு ஒத்த என்னும் பொருளில் வந்தது. எய்யாமை-வருந்தாமை. 'புகழ்' இது புகழப்படுவது என்னுங் காரணம்பற்றி வந்த பெயர். 'புகழ்தல்' இது ஏத்திக்கூறலாம். 'அறமும்' என்றதன்கண் நின்ற உம்மை முற்றும்மை. (6)

பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

(பரி-உரை) பொய்யாமை பொய்யாமை ஆற்றின்-ஒருவன் பொய்யாமையையே பொய்யாமையையே செய்யவல்லனாயின், பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று-அவன் பிற அறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று எ-று.

அடுக்கிரண்டனுள் முதலது இடைவிடாமை மேற்று; ஏனையது துணிவின்மேற்று. பல அறங்களையும் மேற்கொண்டு செய்தற்கருமையால் சில

கவறிற் குற்றப்படுதலின், அவை யெல்லாவற்றின் பயனையும் தானே தரவல்ல ஒரு இதனையே மேற்கொண்டு தவறுமற் செய்தல் நன்றென்பார், செய்யாமை செய்யாமை நன்றென்றார். இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற் செய்யிற் பிறவறஞ் செய்கை நன்றெனப் பொழிப்பாக்கிப் பொய்கூறிற் பிறவறஞ்செய்கை நன்றாகாதென்பதை அதனுற்போந்த பொருளாக்கி உரைப்பாருமுளர். பிறவறங்களெல்லாந் தரும் பயனைத் தானே தரு மாற்றலுடைத்தென மறுமைப்பயனது மிகுதி இவை மூன்றுபாட்டாலுங் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) பொய்யாமை பொய்யாமை-பொய் பேசாமையையே பொய் பேசாமையையே, ஆற்றின்-செய்யவல்லவனுயின், (அவன்) அறம் பிற-பிறவறங்களை, செய்யாமை செய்யாமை-செய்யாமையே செய்யாமையே, நன்று-நல்லது எ-று.

(க-ரை) பொய் சொல்லாதை நடக்கில் வேறு தருமஞ் செய்யாமையே நல்லது என்பதாம்.

(வி-ரை) பொய்யாமை பொய்யாமையென்னும் அடுக்கு இடைவிடாமை பற்றிவந்தது. செய்யாமை செய்யாமை என்னும் அடுக்கு தணிவுபற்றி வந்தது. பல வறங்களையும் மேற்கொண்டு செய்தற்கு அருமையாகலால் சில கவறினுல் குற்றப்படுதலின் அவ்வெல்லா வறங்களின் பயன்களையும் தானே தரவல்லதாகிய இப்பொய் பேசாமை யொன்றையே மேற்கொண்டு தவறுமற் செய்தல் நல்லதென்றற்கு செய்யாமை செய்யாமை நன்றென்றார். [பிறவறங்களெல்லாம் தரும் பயனைத் தானே தரவல்லதென்று மறுமைப்பயனது மிகுதி இவை மூன்றுபாட்டாலும் சொல்லப்பட்டது.]

இக்குறளால் பொய்யாமை ஒன்றே எல்லா அறப்பயனையும் தரும் என்று உரியதாம். 'ஆற்றின்' இது செய்தால் என்னும் பொருளது. (7)

புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை வாய்மையாற் காணப் படும்.

(பரி-உரை) புறம் தூய்மை நீரான் அமையும் - ஒருவனுக்கு உடம்பு தூய்தாந் தன்மை நீரானேயுண்டாம், அகம் தூய்மை வாய்மையான் காணப்படும்-அதுபோல மனந் தூய்தாந்தன்மை வாய்மையானுண்டாம் எ-று.

காணப்படுவது உள்ளதாகலின் உண்டாமென்றுரைக்கப்பட்டது. உடம்பு தூய்தாதல்-வாலாமை நீக்குதல். மனந் தூய்தாதல்-மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணமில்லாதாற்போல அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணமில்லையென்றவாறுயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டுமென்பதாமும் பெற்றும்.

(ப-ரை) (ஒருவனுக்கு) புறம்-உடம்பு, தூய்மை - பரிசுத்தமாந்தன்மை, நீரான் - நீரினாலே, அமையும் - உண்டாகும், (அதுபோல்) அகம் - மனது,

வாய்மை - பரிசுத்தமாந்தன்மை, வாய்மையான் - உண்மையால், காணப்படும். உண்டாகும் எ-று.

(க-ரை) உடம்பு சோற் சுத்தமாகும் உள்ளஞ் சத்தியத்தாற் சுத்தமாகும் என்பதாம்.

(வி-ரை) புறந்தூயதாதல்-அழுக்கு நீங்குதல். அகந்தூயதாதல்-மெய் யுணர்தல். எப்படி புறஞ் சுத்தமாதற்கு நீரல்லாமற் காரணம் இல்லையோ அப்படியே அகம் சுத்தமாதற்கு வாய்மையல்லாமற் காரணமில்லை யென்ற தாயிற்று.

'புறம்' என்றது உடம்பின் வெளிப்புறத்தை. 'நீரால்' இதில் 'ஆல்' மூன்றன் உருபு கருவிப்பொருளது. 'அகம்' என்றது உடம்பின் உள்ளிட மாகிய மனத்தை. ஒரே அடியில் மறுதலைப்பொருளுள்ள 'புறம்' 'அகம்' என்ற சொற்கள் வந்தமையின் இது முரண்தொடை. "புறந்தூய்மை நீரா னமையும்" இது உபமானம் உவம உருபு தொக்கது. (8)

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

(பரி-உரை) எல்லாவிளக்கும் விளக்கு அல்ல-புறத்திருள்கடியும் உலகத் தார் விளக்குகளெல்லாம் விளக்காகா, சான்றோர்க்கு விளக்கு பொய்யா விளக்கே-துறவான் அமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய் யாமையாகிய விளக்கே எ-று.

உலகத்தார் விளக்காவன-ஞாயிறு திங்கள் தீ யென்பன. இவற்றிற்குப் போகாத விருள்போகவின் பொய்யா விளக்கே விளக்கென்றார். அவ்விரு ளாவது அறியாமை. பொய்யாத விளக்கென்பது குறைந்துநின்றது. பொய் கூறாமையாகிய விளக்கென்றவாறு. இனி இதற்குக் கல்வி முதலியவற்றான் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல, அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமேயென் றுரைப்பாருமுளர்.

(ப-ரை) சான்றோர்க்கு-(துறவினாலே) நிறைந்தோருக்கு, எல்லா விளக் கும்-(புறத்திருளை நீக்குகிற உலகத்தோரது) விளக்குகளெல்லாம், விளக்கல்ல விளக்குகளாவனவல்ல, பொய்யாவிளக்கே-(அகத்திருளை நீக்குகிற) பொய் யாமையாகிய விளக்கே, விளக்கு-விளக்காம் எ-று.

(க-ரை) பெரியோர்க்குப் பொய்சொல்லாமையே விளக்கு என்பதாம்.

(வி-ரை) உலகத்தோரது விளக்குகளாவன: சந்திரன் சூரியன் அக்கினி அகத்திருள் அஞ்ஞானம், இவ்விளக்குகளுக்குப்போகாத அகத்திருள் போகலால் பொய்யாவிளக்கே விளக்கென்றார்.

'விளக்கு' இது விளக்கிக்காட்டுங் காரணம்பற்றிவந்த காரணப்பெயர். சான்றோர்' என்றது ஈண்டு தவத்தைச் செய்வோராகிய சிரியரை. 'பொய்யா

னைக்கு' இது பொய்யாமையாகிய வினைக்கு என்னும் பொருளதாம். னைக்கே' இதில் ஏகாரம் தேற்றப்பொருளது. இக்குறளில் வினைக்கு என்ற சொல் பன்முறை வந்தமையின் இது சொற்பொருள் பின்வரு நிலையணி. (9)

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

(பரி-உரை) யாம் மெய்யாக் கண்டவற்றுள்-யாம் மெய்ந்நூல்களாகக் ண்ட நூல்களுள், எனைத்து ஒன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை- ாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட றவறங்களில்லை எ-று.

மெய்யுணர்த்தவனவற்றை மெய்யென்றார். அவையாவன: தங்கண் யக்கமின்மையின் பொருள்களை யுள்ளவாறுணரவல்லராய்க் காமவெகுளி ின்மையின் அவற்றை யுணர்ந்தாவாறே உரைக்கவும் வல்லராய இறைவர், ருளான் உலகத்தார் உறுதி யெய்துதற்பொருட்டுக் கூறிய ஆகமங்கள். வை யெல்லாவற்றினும் இஃது ஒப்ப முடிந்ததென்பதாம். இவை மூன்று ாட்டானும் இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது.

(ப-ரை) யாம் - எம்மால், மெய்யா - மெய்நூல்களாக, கண்டவற்றுள்- ணப்பட்ட நூல்களுள், எனைத்தொன்றும் - யாதொரு தன்மையாலும், ாய்மையின்-உண்மையினும், நல்ல-மேற்பட்டனவையாகிய, பிற-பிறவறங்கள், ல்லை-கண்டதில்லை எ-று.

(க-ரை) மெய்போன்ற பிற தருமங்களை யாங் கண்டதில்லை என்பதாம்.

(வி-ரை) மெய்யை அறிவிக்கிற நூல்களை மெய்யென்றதால் ஆகுபெயர். ந்நூல்களாவன: கடவுளாலும் அவனருள் வழிப்பட்டு பொருள்களை உள்ள ண்ணம் அறிந்த அறிந்தவண்ணம் சொல்லவல்லவராலும் உலகத்தார் ழைக்கும்பொருட்டு அருளிச்செய்யப்பட்ட ஆகமங்கள். அவை யெல்லா ற்றிலும் இது ஒப்பமுடிந்ததென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் வ்வறத்தினது தலைமை சொல்லப்பட்டது]

'யாம்மெய்யா' என்றதால் தன் சுயானுபவம் கூறப்பெற்றது. 'மெய்யாக் ண்டது' என்றது மெய்நூலாகக்கண்டது என்னும் பொருளதாம். 'வாய் மையின்' இதில் 'இன்' உருபு எல்லைப்பொருள் தந்தின்றது. 'பிற' என்றது ற தருமங்களை. (10)

30-ம் அதி-வாய்மை-முற்றிற்று.

*31-ம் அதிகாரம்-வெகுளாமை

(பரி-உரை) அஃதாவது: சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன் மாட்டுளதாயவிடத்தும் அதனைச் செய்யாமை. இது பொய்ம்மைபற்றி விளைவதாய வெகுளியை விலக்கலின் வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: கோபஞ்செய்தற்குக் காரணமாகிய குற்றம் ஒருவனிடத்தே உண்டாகியவிடத்தும் கோபஞ்செய்யாமையாம். இது பொய்மைபற்றி உண்டாம் கோபத்தை விலக்கலால் வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

(பரி-உரை) சினம் செல் இடத்துக் காப்பான் காப்பான் - தன் சினம் பலிக்குமிடத்து அதனை யெழாமற் றடுப்பானே அருளாற் றடுப்பானுவான்; அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என்-எனைப் பலியாதவிடத்து அதனைத் தடுத்தாலென்? தடாதொழிந்தாலென்? எ-று.

செல்லிடம் அல்லிட மென்றது - தவத்தாற் றன்னின் மெலியாரையும் வலியாரையும். வலியார்மேற் காவாவழியும் அதனுன் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையிற் காத்தவழியும் அறனில்லை யென்பார், காக்கினென் காவாக்கா லென்னென்றார். இதனுன் வெகுளாமைக்கு இடங் கூறப்பட்டது.

(ப-ரை) சினம் - (தன்) கோபத்தை, செல்லிடத்து-(அது) பலிக்குமிடத்து, காப்பான்-(எழும்பாமல்) தடுப்பவனே, காப்பான்-(அருளினுலே) தடுப்பவனுவான், அல்லிடத்து - மற்றைப் பலியாதவிடத்து, ; காக்கின்-(அதனைத்) தடுத்தால், என் - என்ன, காவாக்கால்-தடுக்காவிட்டால், என் என்ன எ-று.

(க-ரை) கோபஞ்செல்லுமிடத்து காப்பவனே கோபத்தைக் காப்பவன் என்பதாம்.

(வி-ரை) தவத்தினுலே தன்னின் மெலியவரைச் செல்லிடமென்றும் வலியவரை அல்லிடமென்றும் சொல்லினுர். வலியவர்மேலே கோபஞ் செய்தவிடத்தும் அதனுல் அவருக்கு ஒருதீங்கு உண்டாகாமையால், அடக்கவிடத்தும் அறம் இல்லையென்றதற்குக் காக்கினென் காவாக்கா லென்னென்றார். [இதனுல் கோபியாமைக்கு இடம் சொல்லப்பட்டது.]

'செல்லிடம்' என்றது தன்னின் மெலிந்தாரை. 'அல்லிடம் என்றது தன்னின் வலியவரை. தன்னின் மெலியாரிடம் கோபிக்கின் அவர்க்குத் தீங்கிழைக்கக் கூடும் ஆதலின் அவர் இடம் கோபங்கொள்ளாமை நன்மாயிற்று. தன்னின் வலியாரிடம் கோபங்கொள்ளின் அவர்க்கோருதீங்கு செய்ய முடியாதாதலின் 'காக்கினென் காவாக்காலென்' என்றார். இதனன்றே பிறரும், "எல்லா மொறுக்கும் மதலையுடையான் பொறுமை பொறை" என்றார்.

**சினஞ்செல்லாவிடத்துச் சினந்தீது செல்லிடத்துஞ்
சினத்தினிற் றீய பிற.**

(பரி-உரை) சினம் செல்லா இடத்தைத் தீது-ஒருவன் வெகுளி தன்னின் வலியார் மேலெழின் தனக்கே தீதாம்; செல் இடத்தும் அதனின் தீய பிற தில்-மற்றை யெளியார்மே லெழினும் அதனிற் றீயன பிற இல்லை எ-று.

செல்லாவிடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான் வரும் தீமை: எனையது இம்மைக்கட் பழியும் மறுமைக்கட் பாவமும் பயத்தலின், அதனிற் றீயன பிறவில்லை யென்றார். ஒரிடத்துமாகாதென்பதாம்.

(ப-ரை) சினம்-(ஒருவனது) கோபமானது, செல்லாவிடத்து-தன்னின் வலியவர்மேல் (உண்டாயின்), தீது-(தனக்கே) தீதாம், செல்லிடத்தும்-தன்னினெளியவர்மேல்) உண்டாயினும், அதனின்-அக்கோபத்தினும், தீய பிற-தீமையையுடையவை வேறே, இல்-இல்லை எ-று.

(க-ரை) கோபத்தை வலியார்மேற் செலுத்திற் றனக்கே குற்றம் மெலியார்மேற் செலுத்தி லதனினுங் குற்றம் என்பதாம்.

(வி-ரை) வலியவர்மேலே செய்யுங் கோபத்தால் உண்டாவது இம்மையிலே அவரால் வருந் தீங்பமொன்றே, எளியவர்மேலே செய்யுங்கோபம் இம்மையிலே பழியையும், மறுமையிலே பாவத்தையும் தருதலால், இல்லதிற் றீயபிறவென்றார். கோபம் வலியவர் எளியவர் யாரிடத்தும் ஆகாதென்பதாம்.

'செல்லாவிடம்' என்றது ஈண்டு தன்னின்வலியாரை. 'செல்லிடம்' என்றது ஈண்டு மெலியாரை. 'அதனின்' இதன்கண் நின்ற 'இன்' உருபு ஏலப்பொருள் தந்தது. (2)

**மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனன் வரும்.**

(பரி-உரை) யார்மாட்டும் வெகுளியை மறத்தல் - யாவர்மாட்டும் வெகுளியொழிக; தீய பிறத்தல் அதனன் வரும் - ஒருவர்க்குத் தீயனவெல்லாமாதல் அதனன் வரும் ஆகலான் எ-று.

வலியார், ஒப்பார், எளியாரென்னும் மூவர்மாட்டும் ஆகாமையின் யார்மாட்டு மென்றும், மனத்தாற் றுறந்தார்க்கு ஆகாதனவாகிய தீச்சிந்தைகளல்லாவற்றையும் பிறப்பித்தலின் தீயபிறத்த லதனன் வருமென்றவினார்.

(ப-ரை) யார்மாட்டும்-யாவரிடத்திலும், வெகுளியை-கோபத்தை, மறத்தல்-மறக்கக்கடவர், (ஒருவருக்கு) தீய-தீமையுடையவையெல்லாம், பிறத்தல்-டாகுதல், அதனல்-அக்கோபத்தினாலே, வரும்-வரும் ஆதலால் எ-று.

(க-ரை) கோபத்தாற் பாவம் வருதலாவதை மறக்கக்கடவன் என்ப

(வி-ரை) வலியவர், ஒப்பானவர், எளியவர், என்று மூவரிடத்தும் ஆகாமையால் யார்மாட்டுமென்றும், மனத்தினுலே குறைந்தவர்க்கு ஆகாதவையாகிய தீயசிந்தைகளை யெல்லாம் உண்டாக்கலால் தீயபிறத்தலதனுன் வருமென்றுஞ் சொல்லினர்.

'மறத்தல்' இது மறக்க என்னும் எவ்பொருளில் வந்தது. 'யார்மாட்டும்' என்றது வலியார், ஒப்பார், மெலியார் என்ற எவர்மாட்டும் என்பதாம். இக்குறளில் 'ஆகலான்' என்றசொல் வருவித்து உரைக்கப்பெற்றது. 'தீய' என்றது தீச்சிந்தை தீச்செயல்களை. (3)

நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

(பரி-உரை) நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் - குறைந்தார்க்கு அருளான் உளவாய முகத்தின்கண் நகையையும் மனத்தின்கண் உவகையுங் கொன்று கொண்டு எழுகின்ற சினமேயல்லது, பிற பகையும் உளவோ-அதனிற் பிறவாய பகைகளும் உளவோ இல்லை எ-று.

குறைவாற் புறப்பகை யிலராயினும் உட்பகையாய் நின்று அருண்முதலிய கட்பினையும் பிரித்துப் பிறவித்துன்பமு மெய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின் மிக்க பகையில்லையாயிற்று. இவை மூன்று பாட்டாலும் வெகுளியது தீக்கு கூறப்பட்டது.

(ப-ரை) (குறைந்தோர்க்கு அருளினுலே உண்டாகிய) நகையும்-(முகத்தினிடத்து) மலர்ச்சியையும், உவகையும்-(மனத்தினிடத்து) மகிழ்ச்சியையும் கொல்லும்-கெடுத்து எழுகின்ற, சினத்தின்-கோபத்தின், பிற - வேருகிய பகையும்-பகைகளும், உளவோ-உண்டோ, (இல்லை) எ-று.

(க-ரை) முகமலர்ச்சியையும் மனமகிழ்ச்சியையுங் கோபங் கெடுத்து அக்கோபத்தினும் பகையில்லை என்பதாம்.

(வி-ரை) குறைந்தோர்க்குப் புறப்பகை இல்லையாயினும் உட்பகையாய் நின்று அவருக்கு கட்பாகிய அருள் முதலானவைகளையும் தீக்கிப் பிறவித்துன்பத்தை அடைவித்தலால் அவர்க்குக் கோபத்தின் மிகுந்த பகையில்லையாயிற்று [இவை மூன்றுபாட்டாலும் கோபத்தினது தீங்கு சொல்லப்பட்டது.]

'நகையும்' 'உவகையும்' என்றதன்கண் நின்ற உம்மைகள் எண்ணும்மைகள். 'சினத்தில்' இதில் 'இல்' எல்லைப்பொருளது. 'கொல்லும்' என்றதன் உம் விகுதி பெயரொச்சவிகுதி. 'பகையும்' என்றதன் சுற்று உம்மை இழிவு சிறப்புப்பொருளது. 'உளவோ' என்ற வினு இல்லை என்னும் விடையைத் தருகின்றது.

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

(பரி-உரை) தன்னைத் தான் காக்கின் சினம் காக்க - தன்னைத்தான் ன்பமெய்தாமற் காக்க கினைத்தானுயின், தன்மனத்துச் சினம் வராமற் க்க; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும் - காவானுயின், அச்சினம் ன்னையே கெடுக்குங் கடுந் துன்பங்களை யெய்துவிக்கும் எ-று.

• "வேண்டிய வேண்டியாங் கெய்தற்" பயத்தாய தவத்தைப் பிறர்மேற் ாபம் விடுதற்காக இழந்த அத்தவத் துன்பத்தோடு பழைய பிறவித் ன்பமும் ஒருங்கு எய்துதலின், தன்னையே கொல்லுமென்றார். † "கொல்லச் ரப்பதாங் கீழ்" என்புழிப்போலக் கொலச்சொல் சண்டுத் துன்ப ருதி புணர்த்தி கின்றது.

(ப-ரை) தன்னை-தன்னை, தான்-தான், காக்கின்-(துன்பம் அடையாமல்) க்க கினைத்தானுகில், சினம்-(தன்மனத்திலே) கோபம்வராமல், காக்க-காக் க்கடவன், காவாக்கால்-காவானுயின், சினம்-அக்கோபமானது, தன்னை-ன்னையே, கொல்லும்-கெடுக்குங் கடுந்துன்பங்களை அடைவிக்கும் எ-று.

(க-ரை) கோபத்தைக் காக்காவிடில் அது தன்னையே கொல்லும் ன்பதாம்.

(வி-ரை) வேண்டிய சன்மையைத் தருவதாகிய தவத்தைப் பிறர்மேலே பமிடுதற்காக இழந்த துன்பத்தோடு பழைய பிறவித்துன்பமும் ஒருமிக்க டைதலால் தன்னையே கொல்லுமென்றார்.

தன்னைக்காத்தலாவது தனக்குக் கேடுவாராமற் காத்தலாம். 'சினம் க்க' என்றது சினம் வாராது காத்தலை. 'தன்னையே' இதில் ஏகாரம் ற்றப்பொருளது. 'கொல்லும்' என்றது தன்னை அழிக்கக்கூடிய கொடிய ன்பங்களை உண்டாக்கும் என்பதாம்.

(5)

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு வேமப் புணையைச் சுடும்.

(பரி-உரை) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி - சினமென்னும் ருப்பு, இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்-தனக்கு இடமானவரையே றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையுஞ் சுடும் எ-று.

சேர்ந்தாரைக்கொல்லி யென்பது ஏதுப்பெயர்; தான் சேர்ந்தவிடத் க் கொல்லுந் தொழிலது என்றவாறு. சேர்ந்தாரையென உயர்திணைப் மைமேல் வைத்த ஏனை நான்குபாலும் தக்கருத்தோடு கூடிய, பொரு ற்றலாற் கொண்டார்; சண்டு உருவகஞ் செய்கின்றது குறைந்தார் சினத் யேயாகலின் சினமென்னு மெருப்பென்ற விதப்பு. உலகத்து மெருப்புச் யது தான் சேர்ந்த இடத்தையே இம்மெருப்புச் சேராத இடத்தையுஞ் மென்னும் வேற்றுமை தோன்ற கின்றது. சண்டு இனமென்றது முற்றத் க்க கவுணாணங்களாற் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிமொழிகளை

• திருக்குறள்: 265. † காலடியார்: சயாமை-6.

னியவாகச் சொல்லுவாரை. உருவகநோக்கிச் சுடுமென்றும் தொழில் கொடுத்தாராயினும், அகற்றுமென்பதை பொருளாகக் கொள்க. எமப்புணை. எமத்தை புபதேசிக்கும் புணை. இனமென்றும் எமப்புணையென்ற எகதே உருவகத்தாற் பிறவிக்கடலுள் எழுந்தாமல் வீடென்றுங் கரையேற்றுகின்ற வென வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தாற் தொக்கது. தன்னையும் வீழ்த்த எடுப்பாரையும் அகற்றுமென்பதாம்.

(ப-ரை) சினமென்றும்-கோபமாகிய, சேர்ந்தாரைக்கொல்லி - தெருப் பானது (தனக்கு இடமானவரை மாத்திரமல்லாமல்), இனமென்றும் (அவருக்கு) இனமாகிய, எமம்-இதோபதேசஞ் செய்கிற, புணையை - மாக் கலத்தையும், சுடும்-சுடும் எ-று.

(க-ரை) கோபத்தியானது தன்னையுந் தன்னினத்தையுஞ் சுடும் என்பதாம்.

(வி-ரை) இனம் உறதிமொழி போதிப்பவர், இனத்தைப் புணையாக உருவகஞ் செய்தலால் பிறவிக்கடலைக் கடப்பித்து முத்திக்கரையைச் சேர்ப்பிக்கின்றவென வருவித்து அப்புணைக்குமுன் கூட்டுக. புணையையுமென்னும் எச்சவும்மை தொக்குநிற்கையால் உருவிக்கப்பட்டது. சுடுமென்றதற்கு தனக்கு இடமானவரை விட்டு நீங்கச் செய்யுமென்பது கருத்து. தன்னையும் பிறவிக்கடலில் வீழ்வித்த எடுப்பாரையும் நீக்குமென்பதாம். [தெருப்பிற்கு சோர்த விடத்தையும் சுடுதலையும் மரக்கலத்திற்கு இதோபதேசஞ் செய்தலும் அதிகமாகச் சொல்லுதலால் மிகைபொற்றுமை உருவகவணி.]

'சேர்ந்தாரைக்கொல்லி' என்றது தெருப்பை; இது தான் சேர்ந்த இடத்தை அழிப்பதால் தெருப்புக்கு இது காரணப்பெயர் ஆயிற்று. 'இனமென்னும் எமப்புணை' என்றது தத்துவஞானிகளாய பெரியாரை. 'எமப்புணை' என்றது ஞானோபதேசத்தால் பிறவிக்கடலுள் அழுந்தாது காக்கு மாக்கலம் போல்வாராகிய தத்துவஞானியரை.

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

(பரி-உரை) சினத்தைப் பொருள் என்ற கொண்டவன் கேடு - சினத்தைத் தன்னுற்றல் உணர்த்துவதோர் குணமென்று தன்கட் கொண்டவன் அவ்வாற்ற விழுத்தல், நிலத்து அறைந்தான் கை பிழையாது அற்ற - நிலத்தின்கண் அறைந்தவன் கை அந்நிலத்தை யுறுதல் தப்பாதவாறுபோல தப்பாது எ-று.

வைசேடிகர்: பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயல் என்பனவற்றை அறுவகைப்பொரு ளென்றாற்போல, ஈண்டுக் குணம் பொருளெனப்பட்டது பிழையாததற் றென்பது குறைந்து நின்றது. இது மூன்றுபாட்டானும் வெகுண்டார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

(ப-ரை) சினத்தை-கோபத்தை, பொருளென்று-(தனது வல்லமையைக் காட்டுகிற) ஒரு குணமென்று, கொண்டவன்-(தன்னிடத்தே) கொண்டவனது, கேடு - அவ்வல்லமை யிழப்பு, நிலத்து - பூமியினிடத்து, அறைந்தான்-அறைந்தவனது, கை-கையானது, பிழையாதற்று - (அங்ஙனத்திலெபடுதல்) தப்பாதவிதம்போல் தப்பாது எ-று.

(க-ரை) நிலத்தறைந்தவன் கைப்பயன்போல் கோபமாகிய பொருளைக் கொண்டோன் வருந்துவன் என்பதாம்.

(வி-ரை) தர்க்சாஸ்திரனது நடைபற்றி குணம் பொருளெனப்பட்டது. பிழையாத வற்றென்பது குறைந்து நின்றது. [இவை மூன்றுபாட்டாலும் கோபஞ் செய்தோர்க்கு வரும் தீங்கு சொல்லப்பட்டது.]

'பொருளென்று' என்றது தன் தபோவலியைக் காட்டும் பொருள் என்று என்பதாம். 'கொண்டவன்' இது வினையாலணையும் பெயர். 'நிலத்தறைந்தான் கைபிழையாதற்று' என்றது உபமானம். (7)

இணரெரி தோய்வன்ன வின்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(பரி-உரை) இணர் எரி தோய்வு அன்ன இன்ன செயினும்-பலசுடரை யுடைத்தாய பேரெரிவந்து தோய்ந்தாலொத்த இன்னதவற்றை ஒருவன் செய்தானெயினும், வெகுளாமை புணரின் நன்று - அவனை வெகுளாமை நுவற்குக் கூடுமாயின் அது நன்று எ-று.

இன்னுமையின் மிகுதி தோன்ற இணரெரியென்றும், அதனை மேன்மேலுஞ் செய்தல் தோன்ற இன்னுவென்றும், அச்செயல் முனிவரையும் வெகுள்விக்குமென்பது தோன்றப் புணரினென்றுங் கூறினர். இதனுன் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது.

(ப-ரை) இணர்-பல சுடர்களையுடைய, எரி-பெருநெருப்பானது, தோய்ந்தன-(வந்து) தழுவினாற்போலும், இன்னு-துன்பந்தருமவைகளை, செயினும்-நுவன்) செய்தானெயினும், வெகுளாமை-(அவன்மேலே) கோபஞ் செய்யாமை, புணரின்-கூடுமாயின், நன்று-(அது) நன்று எ-று.

(க-ரை) ஒருவன் தீயொத்த துன்பஞ் செய்யினு மவன்மேற் கோபியாமை நல்லது என்பதாம்.

(வி-ரை) இன்னுமையின் மிகுதிதோன்ற இணரெரியென்றும், அதனை மேலுஞ் செய்தல்தோன்ற இன்னுவென்றும், அச்செய்கை முனிவரை கோபிக்கச் செய்யுமென்பது தோன்ற புணரினென்றும் சொல்லினர். இனுல் கோபஞ் செய்யாமையினது நன்மை சொல்லப்பட்டது.]

'இணரெரி' என்றது பல ஜ்வாலைகளுடன் பல சுடர்விட்டு எரியும் நெருப்பு பதாம். 'வெகுளாமை புணரின்' என்றதனுல் வெகுளாதிருத்தல்

அருமை என்பது பெறப்பட்டது. 'செயிறும்' என்றதன் ஈற்று உம்மை தொகுத்தல் விகாரம். 'இன்னா' என்றது தீமையை; இது இனிமை அல்லாதது என்னும் பொருளது. (8)

உள்ளிய வெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

(பரி-உரை) உன்னத்தால் வெகுளி உள்ளான் எனின் - தவஞ் செய்பவன் தன்மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானாயின், உள்ளிய எல்லாம் உடன் எய்தும்-தான் கருதிய பேறெல்லாம் ஒருங்கே பெறும் எ-று.

உள்ளத்தாலென வேண்டாது கூறியவதனான், அருளுடை யுள்ளமென்பது முடிந்தது. அதனான் உள்ளாமையாவது அவ்வருளாகிய பகைவனர்த்து அதனான் முற்றக் கடிதல். இம்மை மறுமை வீடு என்பன வேறு வேறு நிறத்தனவாயினும் அவையெல்லாம் இவ்வொன்றானே யெய்துமென்பார், உள்ளியவெல்லா முடனெய்து மென்றார். இதனான் வெகுளாதார்க்கு வரும் சன்மை கூறப்பட்டது.

(ப-ரை) (தவஞ்செய்வோன்) உன்னத்தால்-தன்மனத்தால், வெகுளி-கோபத்தை, உள்ளானெனின்-(ஒருபோதும்) நினையானாயின், உள்ளியவெல்லாம்-நினைக்கப்பட்ட பேறெல்லாம், உடன்-ஒருமிக்க, எய்தும்-பெறுவான் எ-று.

(க-ரை) கோபத்தை நினையாதவன் எவன் நினைத்தவெல்லா மடைவான் என்பதாம்.

(வி-ரை.) அருளுடை யுள்ளமென்பது தோன்றற்கு உள்ளத்தாலென்பது அதிகமாகச் சொல்லப்பட்டது. இம்மை மறுமை வீடு இவையெல்லாம் இவ்வொன்றினாலேயே கிடைக்குமென்றற்கு உள்ளியவெல்லா முடனெய்து மென்றார். [இதனால் கோபஞ் செய்யாதவர்க்கு வருஞ்சன்மை சொல்லப்பட்டது.]

'உள்ளியதெல்லாம்' என்றது இம்மைப்பேறு முதலாக வீட்டுப்பேறீறாக உள்ள எல்லாப் பேறுகளையும். 'எல்லாமும்' என்றதன் ஈற்று உம்மை முற்றும்மை. 'உடன்' என்றது ஒருசேர ஓரமட்டாக என்னும் பொருளது. (9)

இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைதத்
துறந்தார் துறந்தார் துணை.

(பரி-உரை) இறந்தார் இறந்தார் அனையர் - சினத்தின்கண்ணே நின்ற உயிருடையாயினும் செத்தாரோ டொப்பர், சினத்தைதத் துறந்தார் துறந்தார் துணை - சினத்தைதத் துறந்தார் சாதற்றன்மையராயினும் அதனைத் தொழிந்தா ரளவினர் எ-று.

மிக்க சினத்தை யுடையார்க்கு ஞான மெய்துதற்குரிய உயிர் நின்றதாயி றும் கலக்கத்தான் அஃது எய்தாமை ஒருதலையாகலின், அவரை இறந்தா னையொன்றும், சினத்தை விட்டார்க்குச் சாக்கா டெய்துதற்குரிய யாக்கை ன்றதாயிறும், ஞானத்தான் வீடு பெறுதல் ஒருதலையாகலின், அவரை வீடு பெற்றாரோ டொப்பவென்றுங் கூறினார். இதனான் அவ்விருவர் பயனும் ருங்கு கூறப்பட்டது.

(ப-ரை) இறந்தார்-(கோபத்திலே) மிகுந்தவர், (உயிருடையவரா யிருக் னும்) இறந்தாரனையர்-செத்தாரோ டொப்பாவார், சினத்தை-அக்கோபத் த, அறந்தார்-நீக்கினவர், (சாந்தன்மையை யுடையவராயிருக்கினும்) அறந் ர்தூணை-அதனை யொழித்தவரோ டொப்பாவார் எ-று.

(க-ரை) கோபக்கொண்டவர் இறந்தாரையும் விட்டவர் இறவாதவரை ம் ஒப்பர் என்பதாம்.

(வி-ரை) அதிக கோபமுடையவர்க்கு ஞானம் பெறுதற்கு உரிய உயிர் ருக்கினும் கலக்கத்தினாலே அதனை அடையாமை நிச்சயமாதலால் இறந்தா னையொன்றும், கோபத்தைவிட்டவர்க்கு நிலையில்லாதவுடம்பு இருந்தாலும் ஞானத்தினால் முத்தியை அடைவது நிச்சயமாதலால் முத்திபெற்றாரோ டாப்பென்றும் சொல்லினார். [இதனால் அவ்விருவர் பயன்களும் சேர்த்துச் சால்லப்பட்டன.]

'இறந்தாரிறந்தார்' என்றதில் முன்னின்ற 'இறந்தார்' என்றது சினத் ன் மிக்கார் என்றும், பின்னின்ற 'இறந்தார்' என்றது செத்தார் என்றும் பாருள் தந்து நிற்றலின் இது சொற்பின் நிலைவரு அணியாம். 'அனையர்' த 'அனைய' என்ற இடைச்சொல் அடியாகப் பிறந்தபெயர். 'அறந்தார் றந்தார்' இது சொற்பொருட் பின்வரு நிலையணி. முன்னின்ற அறந்தார் ரத்தைத் அறந்தவர் என்றும் பின்னின்ற அறந்தார் என்றது சாதலைத் றந்தார் என்றும் பொருள் தந்தது. 'தூணை' இது ஒப்பாவர் என்ற ாருளது.

(10)

31-ம் அதி-வெகுளாமை-முற்றிற்று.

---

†32-ம் அதிகாரம்-இன்னுசெய்யாமை

(பரி-உரை) அஃதாவது: தனக்கு ஒருபய னெய்கியாதல், செற்றம் யாதல், சோர்வானுதல் ஒருயிர்க்கு இன்னுதவற்றைச் செய்யாமை. ன்னுசெய்தல் வெகுளியொழியவும் நிகழுமென்பது அறிவித்தற்கு, இது நாமையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தனக்கு ஒருபயனைக் குறித்தாவது வைரம்பற்றி து சோர்வினாலாவது ஒருயிர்க்குத் துன்பந்தருமவைகளைச் செய்யாமை. வைச்செய்தல் வெகுளி ஒழியவும் உண்டாமென்பதை அறிவித்தற்கு வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது.

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு செய்யாமை மாசற்றூர் கோள்.

(பரி-உரை) சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - யோகமாகிய சிறப்புத் தரும் அணிமாமுதலிய செல்வங்களைப் பிறர்க்கு இன்னுசெய்து பெறலாமாயினும், பிறர்க்கு இன்னு செய்யாமை மாசு அற்றூர்கோள்-அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறியவாற்றுன் மனந் தூயாரது கணிவு எ-று.

உம்மை பெருமைமேற்று. சிறப்புடையதனைச் சிறப்பென்றும், அதன் பயிற்சியான் வாயுவைவென் றெய்தப்படுதலின் எட்டுச்சித்திகளையுஞ் சிறப்பீனுஞ் செல்வமென்றும், காமம் வெகுளி மயக்கமென்னுங் குற்றங்களற்றமையான் மாசற்றுரென்றுங் கூறினர். இதனால் தமக்கு ஒரு பயனேக்குறித்துச் செய்தல் விலக்கப்பட்டது.

(ப-உரை) சிறப்பு-யோகமாகிய சிறப்பினுலே, ஈனும்-தரப்படுவனவாகிய, செல்வம் - அணிமாமுதலாகிய செல்வங்களை, பெறினும் - பெறலாமாயினும், பிறர்க்கு - அயலார்க்கு, இன்னு - துன்பந்தருமவைகளை, செய்யாமை - செய்யாமை, மாசற்றூர்-(ஆகமவழியினுலே) குற்றமற்றோர் யாவருக்கும், கோள் கணிவாம் எ-று.

(க-உரை) சிறந்த செல்வம்பெறினும் தீமைசெய்யாமை பெரியோர் கணிவு என்பதாம்.

(வி-உரை) சிறப்புடைய யோகத்தைச் சிறப்பென்றும், அதனுற் பெறப்படுதலால் எண்சித்திகளையும் சிறப்பீனுஞ் செல்வமென்றும், காமம் வெகுளி மயக்கம் என்னு மூக்குற்றங்கள் அற்றமையால் மாசற்றுரென்றும் சொல்லினர். [இதனுலே தமக்கு ஒரு பயனேக்குறித்துச் செய்தல் விலக்கப்பட்டது.]

'பெறினும்' என்றதன்கண் நின்ற உம்மை பெறமுடியாமையைக் குறித்து நின்றது. 'மாசற்றூர்' என்றது மூக்குறும்பு அறுத்தாரை. 'கோள்' என்பது கொள்கை என்பதாம்.

கறுத்தின்னு செய்தவக் கண்ணு மறுத்தின்னு செய்யாமை மாசற்றூர் கோள்.

(பரி-உரை) கறுத்த இன்னுசெய்த அக்கண்ணும்-தம்மேற் சென்று கொண்டு ஒருவன் இன்னுதவற்றைச் செய்தவிடத்தும், மறுத்த இன்னு செய்யாமை மாசு அற்றூர் கோள்-மீண்டு தாம் அவனுக்கு இன்னுதவற்றைச் செய்யாமையும் அவரது கணிவு எ-று.

இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. அவ்வின்னுவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பாலதென்பதாம்.

(ப-உரை) (ஒருவன்) கறுத்து-(தம்மேல்) வைரங்கொண்டு, இன்னுதபுன்சருமவைகளை, செய்தவக்கண்ணும்-செய்தவிடத்தும், மறுத்து-மீண்

இன்னு-அத்தன்பன்தருமவைகளை, செய்யாமை - (தாம்) செய்யாமையும், சாசற்றார்-அக்குற்றமற்றவரது, கோள்-தணிவு எ று.

(க-ரை) ஒருவன் தன்பங்களைச் செய்தாலும் அவனுக்குத் தன்பங்களைச் செய்யாமையே பெரியோர் கொள்கை என்பதாம்.

(வி-ரை.) தொக்குநின்ற செய்யாமையுமென்னும் மூன் பாட்டின்பொருளைத் தழுவிய எச்சவும்மை வருவிக்கப்பட்டது. அவன் செய்தவைகளை மனத்திலே வையாமல் விடுவதே செய்யத்தக்கதென்பதாம்.

'கறுத்து' இது கோபித்தல் என்னும் பொருளது. 'மறுத்து' இது அவ்வின்னுசெய்தமைக்குப் பதிலாக என்றபொருளது. 'செய்யாமை' என்றதில் முற்று இறந்தகாலத்தழீஇய எச்சவும்மை செய்யுள்விகாரத்தால் தொக்கது. (2)

செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி
ன்னுய்யா விழுமந் தரும்.

(பரி-உரை) செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின் - தான்முன்பு ஓர் இன்னுமை செய்யாதிருக்கத் தன்மேற் செற்றங்கொண்டவர்க்கும் இன்னாதவற்றைத் தான் செய்தவன் செய்யுமாயின், உய்யா விழுமம் தரும் - அச்செயல் அவனுக்குக் கடக்கமுடியாத இடும்பையைக் கொடுக்கும் எ-று.

அவ்விடும்பையாவது தவமிழந்து பழியும் பாவமுமெய்தல்.

(ப-ரை) செய்யாமல்-(தான் முன்பு தன்பந்தருவதொன்றைச்) செய்யாதிருக்க, செற்றார்க்கும் - (தன்மேலே) வைரங்கொண்டவர்க்கும், இன்னாதன்பந்தருமவைகளை, செய்தபின்-(தான்றந்தவன்) செய்தானாயின் பின்பு, (அச்செயலானது) உய்யா-கடக்கமுடியாத, விழுமம்-இடும்பையை, தரும் - (அவனுக்கு) கொடுக்கும் எ-று.

(க-ரை) தனக்குத் தன்பஞ்செய்தவர்க்குத் தான் தன்பஞ்செய்தல் கூடாதென்பதாம்.

(வி-ரை) இடும்பையாவது தவமிழந்து பழியும் பாவமும் அடைதல்.

'செய்யாமல்' இது முன்னோர் இன்னுவும், செய்யாதிருக்க என்னும் பொருள்தந்து நின்றது. 'செற்றார்' என்றது கோபங்கொண்டானை. இனி வெறுத்தானை என்னலுமாம். 'செற்றார்க்கும்' என்றது இழிவுச் சிறப்பும்மை. 'உய்யாவிழுமம்' என்றது தப்ப ஒண்ணாக்கேடு என்பதாம். (3)

இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
ன்னயஞ் செய்து விடல்.

(பரி-உரை) இன்னு செய்தாரை ஒறுத்தல் - தமக்கு இன்னாதவற்றைச் செய்தானைத் தான்றந்தார் ஒறுத்தலாவது, அவர்நாண நல்லயம் செய்துவிடல்-

அவர் தாமே காணுமாறு அவர்க்கு இனிய வுவகைகளைச்செய்து அவ்விரண்டினையும் மறத்தல் எ-று.

மறவாவழிப் பின்னும்வந்து இன்னாக்குமாகலின் மறக்கற்பாலவாயின அவரை வெல்லுமுபாயங் கூறியவாறு. இவை மூன்றுபாட்டானுஞ் செற்றார்ப் பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது.

(ப-ரை) (தமக்கு) இன்னா-தன்பந்தருமவைகளை, செய்தாரை - செய்தவரை, ஒறுத்தல் - (தண்டித்தோர்) தண்டித்தலாவது, அவர்நாண - (தாமே) காணும்படி, (அவருக்கு) நன்னயம்-இனிமையான மகிழ்ச்சிகளை, செய்து செய்த, விடல்-(அவ்விரண்டையும்) மறத்தலாம் எ-று.

(க-ரை) தன்பஞ்செய்தவரைத் தண்டித்தலாவது அவருக் கின்பஞ் செய்தல் என்பதாம்.

(வி-ரை) மறவாதவிடத்துப் பின்னும்வந்து இன்னாக்குமாதலின் மறக்க வேண்டியவையாயின. அவரை வெல்லு முபாயஞ் சொல்லியபடி. [இவை மூன்றுபாட்டாலும் வைரங்கொண்டு செய்தல் விலக்கப்பட்டது.

'ஒறுத்தல்' இது தண்டித்தல் என்னும் பொருளது; இதில் 'தல்' தொழிற்பெயர் விகுதி. 'அவர்' என்றது அவ் இன்னாசெய்தாரை. 'நன்னயம்' என்றது 'நன்னயம்' என்றது மிக இனியதும் அவர்களுக்கு மகிழ்ச்சி தருவதுமாகிய நன்மைகள் செய்யவேண்டும் என்பதாம். 'விடல்' என்ற குறிப்பால் அவர் தீங்கு செய்தமையையும், தாம் அவர்க்கு நன்மைசெய்தலை என்னும் தற்செருக்கையும் மறந்துவிடவேண்டும் என்பதாம்.

அறிவினு ளுகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றுக் கடை.

(பரி-உரை) அறிவினுள் ளுகுவது உண்டோ - துறந்தார்க்கு உயிர் முதலியவற்றை உள்ளவாறு அறிந்த அறிவினுள் ஆவதொரு பயனுண்டோ? பிறிதின்நோய் தம்நோய்போல் போற்றுக்கடை-பிறிதோருயிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம்முயிர்க்குவந்தனபோலக் குறிக்கொண்டு காவாவிடத்து எ?

குறிக்கொண்டு காத்தலாவது-கடத்தல் இருத்தல் கிடத்தல் கிற்றல் படுத்தல் முதலிய தன்தொழில்களானும் பிறவாற்றானும் உயிர்க ளுறுவனவற்றை முன்னேயறிந்து உறுமற்காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண்ணிய வுடம்புடையவற்றைப்பற்றி வருதலிற் பொதுப்படப் பிறிதினோயென்றும், மறப்பான் அது தன்புறினும் நமக்கின்னாசெய்தலாமென்றற்குக் காத்தல் வேண்டுமாகலின் அது செய்யாவழி அறிவாற் பயனில்லையென்றுங் கூறினார். இதனாற் சோர்வாற் செய்தல் விலக்கப்பட்டது.

(ப-ரை) (துறந்தார்க்கு) அறிவினுள் - (உயிர் முதலானவைகளின் உண்மை வண்ணம் அறிந்த) அறிவினுள், ஆகுவது - ஆகுமொரு பயன், உண்டோ, (இல்லை) பிறிதின்-வேறோருயிருக்குவந்த, நோய்-துன்பம்,

லையை, தன்னோய்போல்-தமக்குவந்த துன்பந்தருமவைபோல், போற்றுக் டை - (குறிக்கொண்டு) காப்பாற்றுதலிடத்த எ-று.

(க-ரை) பிற உயிர்க்குவந்த துன்பத்தைத் தன்னுயிர்க்கு வந்தாற்போல னையாத அறிவினுற் பயனென்ன என்பதாம்.

(வி-ரை) குறிக்கொண்டு காப்பாற்றலாவன: ஈடத்தல் இருத்தல் டத்தல் நிற்றல் உண்டல் முதலாகிய தமது தொழில்களாலும் மற்றை நிகளாலும் உயிர்களுக்குவரும் துன்பங்களை முன்னே அறிந்து அவை ராமற் காத்தல். இத்துன்பம் பெரும்பாலும் அஃறிணையிலே எறும்பு தலாகிய சிறிய வுடம்புடைய பிராணிகளைப்பற்றி வருதலாலே பொதுப்பட நிதிலென்றும், மறப்பினுலே அவை துன்பத்தை அடையினும் நமக்குப் வமென்று அறிந்து காக்கவேண்டுமாகலின் அது செய்யாதவிடத்து வினுலே பயனில்லையென்றும் சொல்லினர். [இதனுல் சோர்வினுலே ய்தல் விலக்கப்பட்டது.]

'அறிவு' என்றது உயிர் அறிவு, உணர்வறிவு, அறஅறிவு, வீட்டறிவு லிய அறிவுகளை. 'ஆகுலதுண்டோ' இந்த வினுவிடை தழுவியவினு; இவ் 'வால் ஆவதோர் பயன் ஒன்றும் இல்லை என்பதாம். 'பிறிதின்நோய்' றது பிற உயிர்களின் நோயை. உயிரோடுகூடிய உடலே இன்ப ரபங்களை அறியவல்லதாதலின் பிற உயிர்கள் என்றும். 'போற்றல்' றது மன்னுயிரைத் தன்னுயிர்போ லெண்ணிக் காத்தலை. (5)

இன்ன வெனத்தா னுணர்ந்தவை துன்னுமை வேண்டும் பிறன்கட் செயல்.

(பரி-உரை) இன்ன எனத்தான் உணர்ந்தவை-இவை மக்கட்கு இன்ன வென அனுமானத்தால் தானறிந்தவற்றை, பிறன்கண்செயல் துன்னுமை வேண்டும்-பிறன்மாட்டுச் செய்தலை மேவாமை அறந்தவனுக்கு வேண்டும்.

இன்பத்துன்பங்கள் உயிர்க்குணமாகலின் அவை காட்சியளவையான் ப்படாமையறிக அறமும் பாவமும் முளவாவது மனமுளதை வழியாக உணர்ந்தவை யென்றார்.

(ப-ரை) இன்னவென-(இவை மனிதருக்குத்) துன்பந்தருமவையென்று, ணர்ந்தவை - (அனுமானப் பிரமாணத்தினுலே) தன்னுல் அறியப்பட்ட ை, பிறன்கண்-பிறனிடத்தே, செயல்-செய்தலை, துன்னுமை-பொருந் , வேண்டும்-அறந்தவனுக்கு வேண்டும் எ-று.

ட-ரை) துன்பமென் றறிந்தவற்றைப் பிறனிடத்துச் செய்யாமை ம் என்பதாம்.

(வி-ரை) இன்பத்தன்பக்கள் உயிர்க்குணமாகலால் அவை பிரத்தியக்ஷ பிரமாணத்தினுலே அறியக்கூடாமை அறிக. அறமும் பாவமும் உண்டாவ்து மனமறிந்து செய்தவிடத்தே ஆகலின் உணர்ந்தவையென்றார்.

'உணர்ந்தவை' இதில் 'வை' அஃறிணைப்பன்மைப்பால் விகுதி. 'தன்னுமை' இது தெருக்காமை என்னும் பொருளது. இதில் இடைநின்ற 'ஆ' சாரம் 'எதிர்மறைப்பொருளது. ஈற்றில் நின்ற 'மை' பண்புப்பெயர் விகுதி. 'பிறர்கண்' இதில் கண் ஏழன்உருபு, இடப்பொருள் தந்துநின்றது.

எனைத்தானு மெய்ஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு மாணுசெய் யாமை தலை.

(பரி-உரை) மனத்தான் ஆம் மாணு-மனத்தோடு உளவாகின்ற இன்னு செயல்களை, எஞ்ஞான்றும் யார்க்கும் எனைத்தானும் செய்யாமை தலை-எல்லத்தும் யாவர்க்குஞ் சிறிதாயினுஞ் செய்யாமை தலையாய அறம் எ-று.

ஈண்டு மனத்தான் ஆகாதவழிப் பாவமில்லையென்பது பெற்றும். ஆண்டாயகாலத்தும் ஆகாமையின் எஞ்ஞான்றுமென்றும், எளியார்க்கு ஆகாமையின் யார்க்குமென்றும், செயல் சிறிதாயினும் பாவம் பெரிதாகலின் எனைத்தானுமென்றுங் கூறினர்.

(ப-ரை) மனத்தானும்-மனத்தோடு உண்டாகின்ற, மாணு-தன்பக்கு மவைகளை, எஞ்ஞான்றும்-யாதொரு காலத்திலும், யார்க்கும் - யாவர்க்கும், எனைத்தானும்-எவ்வளவு சிறிதாயினும், செய்யாமை - செய்யாமை தலை-முதன்மையான அறம் எ-று.

(க-ரை) யாருக்கும் சிறிய தன்பக்தருமவைகளையும் செய்யாமை தலைமையான தருமம் என்பதாம்.

(வி-ரை) மனமறிந்து செய்யாதவிடத்தே பாவம் இல்லையென்பதுபெறும். வல்லமை யுண்டானகாலத்திலும் செய்யலாகாமையால் எஞ்ஞான்றும், மென்றும், எளியவருக்கும் ஆகாமையால் யார்க்குமென்றும், செயல் சிறியினும் பாவம் பெரிதாகலால் எனைத்தானுமென்றும் சொல்லினர்.

'எனைத்தானும்' என்றது எவ்வளவு சிறிதாயினும் என்னும் பொருளாம். என்னை? இன்னுமை சிறிதாயினும் பாவம் பெரிது ஆகலின் என்க. 'எஞ்ஞான்றும்' என்றது எந்தக்காலத்தும் என்பதாம். என்னை? எவ்வளவு தவவலி இருந்தகாலத்தும், இன்னுசெய்யத் தவவலிகெட்டு பாதம் பெறுமாதலின் என்க. இனி இதற்கு எவ்வளவு கொடுமைபைச் செய்தகாலத்தும் என்று கூறவாரும் உண்டு. 'யார்க்கும்' என்றது எவ்வளவு எளியர்க்கும் என்பதாம். என்னை? எளியர்க்கு இன்னுசெய்தல் பெருங்கொடும்பாவம் ஆதலின் என்க. 'மனத்தானும்' என்றதால் மனமறியாது செய்யும் இன்னுவுக்கு உண்டு என்பது பெறப்பட்டது. 'மாணு' என்றது மாண்பல்லாதது இன்னுசெய்தலை. 'தலை' என்றது சிறந்த முதன்மையாகிய அறம் என்பது

தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னு செயல்.

(பரி-உரை) தன் உயிர்க்கு இன்னுமை தான் அறிவான் - பிறர் செய்யும் ன்னுதனி தன்னுயிர்க்கு இன்னுவாந்தன்மையை அனுபவித்தறிகின்றவன், ர் உயிர்க்கு இன்னுசெயல் என்கொல் - நிலபேறடைய பிறவுயிர்கட்குத் ன் அவற்றைச்செய்தல் என்னகாரணத்தான் எ று.

இவ்வாறே இவை பிறவுயிர்க்கு மின்னுவென்பது அனுமானத்தா நிற்றலைத்தச் செய்கின்ற இப்பாவம் சழுவப்படாமையின், இன்னுதன ன் வருத்தப் பின்னேவந்து வருத்துமென்பது ஆகமத்தானுமறிந்து யிற்பாலனென்பது தோன்றத் தானென்றும், அத்தன்மையான் ஒழியா க்குக் காரணம் மயக்கமென்பது தோன்ற என்கொலாவென்றும் னுர். இவை மூன்றுபாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது.

(ப ரை) (பிறர் செய்யும் தன்பந்தருமவை)தன்னுயிர்க்கு-தனதுயிருக்கு, ன்னுமை - தன்பந்தருமவையாந் தன்மையை, அறிவான் - (அனுபவித்து) பவன், மன்னுயிர்க்கு-நிலபுள்ள பிறவுயிர்களுக்கு, இன்னு-அத்தன்பந்தரு வகனை, தான்-தான், செயல்-செய்தல், என்-என்னகாரணத்தால் எ-று.

(க ரை) தன்னுயிர்க்குத் தன்பந்தருவதை அறிபவன் பிற உயிருக்குச் ப்வதென்ன என்பதாம்.

(வி-ரை) கொல், ஓ அசைகள். இப்படியே இவை பிறவுயிர்க்கும் பந்தரு மவைகளென்பது அனுமானத்தால் அறிந்திருந்தும் செய்கின்ற ம் பரிகரிக்கக் கூடாமையால் தன்பந்தருமவைகள் பின்னேவந்து தன்னை ந்தமென்பது ஆகமத்தாலும் அறிந்துவிடக் கடவனென்பது தோன்ற னென்றும், அத்தன்மையால் ஒழியாமைக்குக் காரணம் மயக்கமென்பது ன்ற என்னென்றும் சொல்லினுர். [இவை மூன்றபாட்டாலும் பொது யால் இன்னுசெயல் விலக்கப்பட்டது.]

'தான் அறிவான்' என்றது தன் அனுபவத்தால் அறிந்தவன் என்பது ணாம். 'மன்னுயிர்' என்றது நிலபேறடைய உயிர்களுக்கு என்ப உயிர் அழிவில்லாதது ஆதலின் மன்னுயிர் என்றார். 'என்கொலோ' து இரக்கம்பற்றிவந்த வினு. (8)

றர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு
ற்பகற் ருமே வரும்.

(பரி-உரை) பிறர்க்கு இன்னு முற்பகல் செய்யின் - முறர்தவர் பிறர்க்கு தனவற்றை ஒருபகலது முற்கூற்றின்கட் செய்வாயின், தமக்கு பிற்பகல் தாமேவரும் - தமக்கு இன்னுதன அதன் பிற்கூற்றின்கண் செய்யாமற் ருமேவரும் எ-று.

முற்பகல் பிற்பகலென்பன பின்முன்னுகத் தொக்க ஏழாம்வேற்றுமைத் தொகை. தவம் அழிதலின் அக்கனவுக் கடிதிலும் எளிதினும்வரும்; அதனை அவை செய்யற்கென்பதாம். இனித் தானே வருமென்பது பாடமாயின் அச்செயல்தானே தமக்கின்னுதனவாய் வருமென உபசாரவழக்காக்கி உக்கம் வருவித்துரைக்க.

(ப-ரை) (அறந்தவர்) பிறர்க்கு-பிறர்களுக்கு, இன்னு-துன்பந்தருமவை களை, முற்பகல்-ஒரு முகூர்த்தத்தினது முன்பக்கிலே, செய்யின்-செய்தால், தமக்கு-தமக்கு, இன்னு - துன்பந்தருமவைகள், பிற்பகல்-அம்முகூர்த்தத்தி னது பின்பக்கிலே, (அவர் செய்யாதிருக்க) தாமேவரும்-தாமேவரும் எ-று.

(க-ரை) முன்பு ஒருவருக்குத் தீமைசெய்தால் பின்பு அத்தீமை தனக்கு வரும் என்பதாம்.

(வி-ரை) தவமிழத்தல் இப்படிக் கடிதிலும் எளிதிலும் வரும்; அதனை அவை செய்யாதிருக்கக்கடவனென்பதாம். முகூர்த்தம்-இரண்டுநாழிகை.

'முற்பகல்' என்றது ஒருபகலின் முற்பகுதியை. 'பிற்பகல்' என்றது அப்பகலின் பிற்பகுதியை. 'தாமே' என்றது இன்னு செய்யப்பட்டார் செய்யாத அறக்கடவுள் ஏவலால் இன்னுமை இன்னு செய்தார்க்குத் தாமே வரும் என்றதாம்.

நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்
நோயின்மை வேண்டு பவர். [யா

(பரி-உரை) நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம்-இன்னுதனவெல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னுதன செய்தார் மேலவாம், நோய் இன்மை வேண்டுபவர் நோய்செய்யார் - அதனால் தம்முயிர்க்கு இன்னுதன வேண்டுதார் பிறிதோருயிர்க்கு இன்னுதன செய்யார் எ-று.

* உயிர்நிலத்து விளைவித்திட்டார்க்கு- விளைவும் அதுவேயாகி நோயெல்லா நோய்செய்தார் மேலவாமென்றார். இது சொற்பொருட்பின்வருநிலை. இவை இரண்டுபாட்டானும் அதுசெய்தார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது.

(ப-ரை) நோயெல்லாம் - துன்பந்தருமவையெல்லாம், நோய்செய்தார் மேலவாம் - (ஒன்றனுயிர்க்குத்) துன்பந்தருமவைகளைச் செய்தவர் மேலவாம்; (அதனால்) நோயின்மை வேண்டுபவர் - (தம்முயிர்க்குத்) துன்பந்தருமவை யில்லாமையை வேண்டுவோர், நோய் (ஒன்றனுயிர்க்குத்) துன்பந்தருமவைகளை, செய்யார்-செய்யார் எ-று.

(க-ரை) தன்னுயிர்க்குத் துன்பமில்லாமையை விரும்புவோர் துன்பம் செய்யார் என்பதாம்.

* சிவகசிந்தாமணி: முத்தியிலம்பகம்-164. உரைநடை.

(வி ரை) உவர்நிலத்திலே விளைவித்திட்டார்ச்கு விளைவும் அதுவேயாக ல் நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாமென்றார். சொற்பொருட்பின் நிலையணி. [இவை இரண்டுபாட்டாலும் அது செய்தவர்க்கு வருந் தீங்கு ால்லப்பட்டது.]

இக்குறளால் துன்பமெல்லாம் பிறர்க்கு இன்னா செய்தவர்களுக்கே ும் என்பதும் துன்பம் தனக்கு வரவேண்டாமென் றெண்ணுவோர் ர்க்கின்னாசெய்யார் என்பதும் இதன் உள்ளீடாம். 'மேல்' என்றது த்து என்னும் பொருளது. 'நோய்' என்றது துன்பத்தை; இதற்கு ா' பகுதி. (10)

32-ம் அதி - இன்னாசெய்யாமை - முற்றிற்று.

33-ம் அதிகாரம்—கொல்லாமை

(பரி-உரை) அஃதாவது: ஐயறிவுடையனமுதல் ஓரறிவுடையன ஈறாய ர்களைச் சோர்ந்துங் கொல்லுதலைச் செய்யாமை. இது மேற்கூறிய அறங்க ல்லாவற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் கூறாத அறங்களையும் அகப்படுத்து றலின் இறுதிக்கண் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: * ஐயறிவுடையவைமுதல் ஓரறிவுடையவை கடை ய உயிர்களைச் சோர்வினாலும் கொல்லுதல் செய்யாமை. இது முன் ல்லப்பட்ட அறங்களெல்லாவற்றினும் சிறப்புடைத்தாய் சொல்லா ழிந்த மற்றைய வறங்களையெல்லாந் தன்னுள் அடக்கிநிற்கையால் திபில் வைக்கப்பட்டது.

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

(பரி-உரை) அறவினை யாது எனின் கொல்லாமை - அறங்களெல்லா ய செய்கை யாதென்று வினவின் அஃது ஒருயிரையுங் கொல்லாமை , கோறல் பிறவினை எல்லாம்தரும் - அவற்றைக் கொல்லுதல் பாவச் கைக ளெல்லாவற்றையுந் தானே தரும் ஆதலான் எ-று.

அறம் - சாதியொருமை. விலக்கியது ஒழிதலும் அறஞ்செய்தலாமாக கொல்லாமையை அறவினையென்றார். ஈண்டுப் பிறவினையென்றது

---

* புல் மரம் முதலியன பரிசத்தை அறிகிற ஓரறிவுயிர்கள். சிப்பி சங்கு யன அதனோடு ரசத்தையும் அறிகிற ஈரறிவுயிர்கள். கறையான் பு முதலியன அவ்விரண்டோடு கந்தத்தையும் அறிகிற மூவறிவுயிர்கள். வண்டுமுதலிய அம்மூன்றோடு ரூபத்தையும் அறிகிற நாலறிவுயிர்கள். வர் மக்கள் நரகர் விலங்கு புள் முதலியன அந்நான்கோடு சத்தத்தை அறிகிற ஐயறிவுயிர்கள்.

அவற்றின் விளைவை. கொலைப்பாவம் விளைக்கும் துன்பம் எனைப்பாவ
செல்லாக் கடியும் விளைக்கமாட்டாவென்பதாம். கொல்லாமைதானே
அறக்கெல்லாவற்றின் பயனையும் தருமென்ற மேற்கோள்கூறி அத
என எதிர்மறைமுகத்தாற் கூறியவாறுமிற்க.

(ப-ரை) அறவினை-அறங்களெல்லாமாகிய செய்கை, யாதெனின்-
வென்றால், (அது) கொல்லாமை-(ஒருயிரையும்) கொல்லாமையாம், கொ
(அவற்றைக்) கொல்லுதல், பிறவினையெல்லாம்-பாவச்செய்கைக
வற்றையும், தரும்-(தானே) தரும் (ஆதலால்) எ-று.

(க-ரை) கொலை செய்யாமையே தருமச்செய்கை என்பதாம்.

(வி-ரை) விலக்கப்பட்டதைச் செய்யாமையும் அஞ்செய்தல
ஆதலால் கொல்லாமையை அறவினையென்றார். இக்கே பிறவினையென்
அவ்வினைகளின் விளைவை. கொலைப்பாவம் விளைக்குந் துன்பத்தை மற்
பாவங்களெல்லாம் கூடியும் விளைக்கமாட்டாவென்பதாம். கொல்லா
தானே: பிறவறங்களின் பயனெல்லாந் தருமென்ற மேற்கோள்சொ
அதற்கு எனை எதிர்மறைமுகத்தாற் சொல்லியபடியாயிற்று.

'அறவினை' என்றது அறங்கள் எல்லாம் ஆகிய செய்கை என்பது
ரண்டு வினை என்றது ஜாதி ஒருமை. "அறவினை யாதெனிற் கொல்லா
என்றதனால் அறங்களெல்லாம் ஒன்றுகூடியிருக்குஞ் செயல் 'கொல்லா
யாகும் என்பதாம். "கோறல் பிறவினை எல்லாந் தரும்" என்றதால் கொ
லுதல் எல்லாப் பாவங்களையுங் கொண்டசெயல் என்பதாம். இதனால் கொ
லாமையில் எல்லா அறங்களும் அடங்கிற்ற. கொல்லுதலில் எல்லாப் பா
களும் அடங்கின்றன என்பது பெறப்படும். 'பிறவினை' என்றது பி
வினையை. (கொல்+தல்=கோறல்.)

பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

(பரி-உரை) பகுத்த உண்டு பல் உயிர் ஓம்புதல்-உண்பதனைப் பிற
வுயிர்கட்குப் பகுத்தக்கொடுத்து உண்டு ஐவகை உயிர்களையும் ஓம்பு
னூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை-அறனூலுடையார் தொகுத்
தொகுத்த அறங்களெல்லாவற்றினுந் தலையாய அறம் எ-று.

பல்லுயிரும் என்னும் முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. ஓம்பு
சோர்ந்துங் கொலைவாராமற் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்
டல் இன்றியமையா வுறுப்பாகலின் அச்சிறப்புத்தோன்ற அதனை நி
கால வினையெச்சத்தாற் கூறினர். எல்லா நூல்களிலும் நல்லனவெ
எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இலக்கியல்பாகலின் ஈண்டும் பொ
பட னூலொன்றும் அவரெல்லார்க்கும் ஒப்பமுடிதலான் இது தலை
அறமென்றல் கூறினர்.

(பரி) பகுத்த (உண்ணப்பட்டதைப் பகித்த உயிர்களுக்குப்) பகுத்துக்கொடுத்து, உண்டு-உண்டு, பல்லுயிர் - ஐவகை யுயிர்களோடும், ஓம்புதல்-காப்பாற்றல், நூலோர் - அறநூலுடையோரால், தொகுத்தவற்றுள்ளெல்லாம்-(அறிந்தவர்க்குத்) தொகுத்தவைக்கப்பட்ட அறங்களெல்லாவற்றிலும், நல்-லதன்மையான அறமாம் எ-று.

(கரி) கிடைத்தவற்றைப் பகித்த உயிர்களுக்குப் பகுத்துண்டு உண்டல் நலமையான அறம் என்பதாம்.

(வி-ரை) பல்லுயிரும் என்ற முற்றும்மை வருவிக்கப்பட்டது. ஓம்பு தல் மறந்தும் கொலைவராமற் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்துண் டுதல் அவசியம் இருக்கவேண்டிய அங்கமாதலால் அச்சிறப்புத்தோன்ற பகுத்துண்டு என்றார். எல்லா அறநூல்களிலும் கல்லவைகளை எடுத்து எல்லா ருக்கும் பொதுப்பட்டச்சொல்லுதல் இந்நூலாசிரியருக்கு இயல்பாதலால் இங் கேயும் பொதுப்பட நூலோரென்றும் அவரெல்லாருக்கும் ஒப்பமுடிதலால் லையென்றும் சொல்லினார்.

'பகுத்து' என்றது பாகித்துக்கொடுத்து என்பதாம். 'பகுத்துண்டு' என் றது தனக்குக் கிடைத்த உணவை பல பகித்த உயிர்க்கும் பங்கு பிரித்துக் காடுத்து உண்பித்துத் தானும் உண்டு என்பதாம். 'பல்லுயிரும்' என்றது ம்முதலிய ஓரறிவு உயிர்முதலாக மக்கள்முதலிய ஆறறிவுயிர் ஈறாக உள்ள பிர்களை. 'ஓம்புதல்' என்றது தன்னால் மறந்தும் தீங்குவராது காத்து என்ப ம். 'நூலோர்' என்றது அறநூலோரை. 'தொகுத்தவற்றுள்' என்றது தாகுத்துக்கூறிய அறங்களை. 'நலம்' இது சிறந்தது என்னும்பொருளது. (2)

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

(பரி-உரை) ஒன்றாக நல்லது கொல்லாமை-நூலோர் தொகுத்த அறங் நன் தன்னெஞ்சிணைப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமை, பொய் மை அதன்பின் சாராகன்று-அஃதொழிந்தால் பொய்யாமை அதன்பின்னே ாக கன்று எ-று.

நூலோர் தொகுத்த அறங்களென்பது அதிகாரத்தான்வந்தது. அதிகாரம் ால்லாமையாயினும் மேற்பொய்யாமை பொய்யாமையாற்றின் எனவும் மெய்யாக் கண்டவற்று ளில்லை" எனவுங் கூறினராகலின், இரண்டறத் ாலும் யாது சிறந்ததென்ற ஐயநிகழுமன்றே? அது நிகழாமைப்பொருட்டு, ாடு அதன் பின்சாரப் பொய்யாமை கன்றென்றார். முற்கூறியதிற் பிற் ியது வலியுடைத்தாகலின் அதனைப் பின்சார நன்றென்றது நன்மை க்கும் வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும்வழி மெய்யும் பொய் யும் இதனைப்பற்ற அது நிரித்துவருதலாலென வுணர்க. இவை மூன்று ட்டானும் இவ்வறத்தினது சிறப்புக் கூறப்பட்டது.

(பரை) (நூலோராலே தொகுக்கப்பட்ட அறங்களுள்) ஒன்றாக - (தன் ை இணைப்பது இல்லாமல்) தானேயாக, கொல்லாமை - கொலை செய்

யாமை, கல்லது-கல்லது, (அதனீக்கினால்) பொய்யாமை - பொய்சொல்லாமை, பின்சார-(அதன்) பின்னேசிற்க, என்று-கல்லது எ-று.

(க-ரை) கொல்லாமை கல்லது, அதிலும் பொய்சொல்லாமை கல்லது என்பதாம்.

(வி-ரை) அதிகாரம் கொல்லாமையாயினும் முன் பொய்யாமை பொய்யாமை யாற்றினென்றும், யாமெய்யாக் கண்டவற்று ளில்லையென்றும் சொல்லுதலால் பொய்யாமை கொல்லாமைகளிலே சிறந்தது எதுவென்ற சந்தேகம் உண்டாமென்றே அது உண்டாகாமற்பொருட்டு இங்கே பின்சாரப்பொய்யாமை நன்றென்றார். [முன்சொன்னதிலும் பின்சொன்னது உறுதியுடையதாமாகலால். இவை மூன்றுபாட்டாலும் கொல்லாமையினது சிறப்புச்சொல்லப்பட்டது.]

'ஒன்றாக' என்றது ஒப்புயர்வின்றித் தனிப்பட்டு நிற்கும் இயல்புடையதாகிச் சிறந்தது என்பதாம். 'அதன் பின்சார' என்றது அதன் அடுத்தபடியாக என்பதாம். (3)

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

(பரி-உரை) கல் ஆறு எனப்படுவது யாது எனின்-மேற்கதி வீடு பேறுகட்கு கல்லதெறியென்று சொல்லப்படுவது யாதென்றவினவின், யாதொன்றும் கொல்லாமை சூழும்நெறி-அஃது யாதோருயிரையுங் கொல்லாமையாகிய அறத்தினைக் காக்கக் கருதும் நெறி எ-று.

யாதொன்றுமென்றது ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல்-வழுவாமற் காத்தல். இதனால் இவ்வறத்தினையுடையதே நன்னெறியென்பது கூறப்பட்டது.

(ப-ரை) (மேற்கதியும் முத்தியும் பெறுதற்கு) கல்லாதென்பது-கல்ல வழியென்று சொல்லப்படுவது, யாதெனின் - எதுவென்றால், (அது) யாதொன்றும்-யாதோருயிரையும், கொல்லாமை-கொல்லாமையாகிய அறத்தினை, சூழும்-(காக்க) கினைக்கும், நெறி-வழியாம் எ-று.

(க-ரை) யாதோருயிரையுங் கொல்லாமையே நல்லவழி என்பதாம்.

(வி-ரை) புல்முதலாகிய ஓரறிவுயிரையும் உள்ளாக்குதற்கு யாதொன்றுமென்றார். காத்தல்-தவறுமற்காத்தல். [இதனால் கொல்லாமையையுடையதே நல்வழியென்பது சொல்லப்பட்டது.]

'நல்யாறு' என்றது ஈண்டு வீட்டுநெறியை; இதனை முத்திநெறி என்றலுமாம். 'யாதொன்றும்' என்றது எத்தகைய சிறிய உயிரையும் என்பதாம். இதன்கண்நின்ற உம்மை இழிவுச் சிறப்புஉம்மை. 'சூழும் நெறி' என்றது கருதும் வழியை. (4)

நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.

(பரி-உரை) நில அஞ்சி நீத்தாருள் எல்லாம் - பிறப்பு என்றநிலையை அஞ்சிப் பிறவாமைப்பொருட்டு மனைவாழ்க்கையைத் துறந்தா ரெல்லாருள்ளும், கொலை அஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை - கொலைப்பாவத்தை அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன் எ-று.

பிறப்பு என்ற நிலையாவது-இயங்கு தாவர சிற்ப என்னு மிருவகைப் பிறப்பி றும் இன்பமென்பது ஒன்றின்றி உள்ளனவெல்லாந் துன்பமேயாய நிலைமை. துறவு ஒன்றேயாயினும், சமய வேறுபட்டாற் பலவாமாகலின், நீத்தாரு ளெல்லா மென்றார். இதனுன் இவ்வறம் மறவாதவன் உயர்ச்சி கூறப் பட்டது.

(ப-ரை) நிலை-(பிறப்புஎன்ற) நிலையை, அஞ்சி - பயந்து, (பிறவாமைப் பொருட்டு) நீத்தாருளெல்லாம் - (மனைவாழ்க்கையைத்) துறந்தவரெல்லாருள் ளும், கொலை-கொலைப்பாவத்தை, அஞ்சி-பயந்து, கொல்லாமை-கொல்லாமை யாகிய அறத்தை, சூழ்வான்-மறவாதவன், தலை-உயர்ந்தோன் எ-று.

(க-ரை) கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் துறவிகளுள் தலை பாவான் என்பதாம்.

(வி-ரை) பிறப்புஎன்ற நிலையாவது மனிதர் முதலாகிய சராமும் மரம் முத லாகிய அசராமும் ஆகிய இருவகைப் பிறப்புக்களிலும் இன்பமென்பதொன்று மில்லாமல் உள்ளனவெல்லாம் துன்பமேயாகிய நிலைமை துறவுஒன்றே யாயி றும் சமயவேறுபாட்டால் பலவாமாதலால், நீத்தாருளெல்லாமென்றார். [இதனுன் கொல்லாமையை மறவாதவனது உயர்ச்சி சொல்லப்பட்டது.]

'நிலையஞ்சி' என்றதில் 'நில' என்றது பிறவியின் துன்பநிலையை. இத் தாலால் 'கொல்லாமை என்னும் அறம் பூண்டவன் துறந்தவர்கள் எல்லா ருள்ளும் சிறந்தவன் என்பதைச் சொல்லினர். என்னை? துறவு தன்னுயிர்க்கு றுதி குறித்தது. கொல்லாமை அருள் காரணமாக பிற உயிர்களின் உறுதி நாடலின் என்க. (5)

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நா
ளெல்லா துயிருண்ணுங் கூற்று. [ண்மேற்

(பரி-உரை) கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாண்மேல்- கொல்லாமையை விரதமாக மேற்கொண் டொழுகுவானது வாழ்நாளின் மேல், உயிர் உண்ணும் கூற்றுச் செல்லாது - உயிருண்ணுங் கூற்றுச் செல் லாது எ-று.

மிகப்பெரிய அறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறை யானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பரென்னும்

அறனறிந்து மனிபுபற்றி, இப்போதுஞ் செய்தான்தானுங் கொல்லப்படான்; படானாகவே, அடியிற் கட்டிய வாழ்நாள் இடையூறின்றி யெய்துமென்பார், வாழ்நாள்மேற் கூற்றுச் செல்லாதென்றார்: செல்லாதாகவே, கால நீட்டிக்கும்; நீட்டித்தால் ஞானம் பிறந்த உயிர் வீடு பெறுமென்பது கருத்து. இதனால் அவர்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

(பத) உயிருண்ணுங் கூற்று-உயிரைக்கொண்டுபோம் இயமனானவன், கொல்லாமை-கொலை செய்யாமையாகிய விரதத்தை, மேற்கொண்டு - மேல் கைக்கொண்டு, ஒழுகுவான் - கடைப்பிடிப்பவனது, வாழ்நாண்மேல் - ஆயுளின்மேல், செல்லாது-செல்லான் எ-று.

(க-ரை) கொலை செய்யாதவன் வாழ்நாளின்மேல் இயமன் செல்லான் என்பதாம்.

(வி-ரை) மிகவும் பெரிய அறஞ்செய்தவரும், மிகவும் பெரிய பாவஞ் செய்தவரும், இம்மையிலேதானே அவைகளின் பயன்களை அனுபவிப்பா ரென்னும் அறனுணர்வினை தணிவுபற்றி, இப்பெரிய அறஞ்செய்தவன்தானும் கொல்லப்படானாகவே அவன் கருவுறும்போது நியமிக்கப்பட்ட ஆயுட்காலங் குறைவுபடாதென்றற்கு, வாழ்நாண்மேல் கூற்றுச் செல்லா தென்றார். செல்லாதாகவே காலநீடித்திருந்து ஞானத்தைச் சம்பாதித்து மோட்சத்தை அடைவானென்பது கருத்து. [இதனால் கொல்லாவிரதத்தோர்க்கு வரும் நன்மை சொல்லப்பட்டது.]

கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுபவனின் இச் சிறிய அறத்தின் பயனை கோயின்றி நீணுன்பெற்ற ஞானனத்தவாழ்வில் வாழ்வன். இவன் பாற் கூற்றன் செல்லான். ஞானமுதிர்ச்சி சித்திக்கப்பெற்று வீடுபெறுவான் என்பதை இக்குறளின் உள்ளீடாம். 'உயிருண்ணுங்கூற்று' என்றது கூற்றன் இயல்பு கூறியதாம். அறஞ்செயார் உயிரை வருத்தவது கூற்றன் பணியா லின், 'உயிருண்ணுங் கூற்று' என்றார் போலும். (9)

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

(பரி-உரை) தன் உயிர் நீப்பினும்-அது செய்யாவழித் தன்னுயிர் உடம்பை விக்கிப் போமாயினும், தான் பிறிது இன் உயிர் நீக்கும் வினை செய்யற்க; தான் பிறிதோ ரின்னுயிரை அதனுடம்பி னீக்குந் தொழிலைச் செய்யற்க எ-று.

தன்னை அது கொல்லினுந் தான் அதனைக் கொல்லற்க வென்ற பாவம் கொலையுண்டவழித் தெய்தலும் கொன்றவழி வளர்தலும் கோடி னித் தன்னுயிர் நீப்பினு மென்பதற்குச் சாக்கியாகச் செய்பாதவழித் தன் னுயிர் போமாயினுமென் றுரைப்பாரு முளர்; பிற செய்தலு மாகாமையிற் அஃது உரையன்மை யறிக.

(ப-ரை) தான்-தான், பிறிது-வேறொன்றனது, இன்னுயிர்-இனிதாகிய
பிரை, நீக்கும் - (அதனுடம்பிலிருந்து) நீக்குதலாகிய, வினை - தொழிலை,
அது செய்யாவிடத்து) தன்னுயிர்-தனது உயிரானது, நீப்பினும்-(உடம்பை
ட்டு) நீங்கிப்போமாயினும், செய்யற்க-செய்யாதிருக்கக்கடவன் எ-று.

(க-ரை) தன்னுயிர்போனாலும் பிற உயிரைக்கொல்லாதே என்பதாம்.

(வி-ரை) பாவம் தான் கொலையுண்டவிடத்தே தேய்தலும் ஒன்றைக்
கான்றவிடத்தே வளர்தலும் நோக்கி, தன்னை வொன்று கொன்றாலும்
ான் அதனைக் கொல்லலாகாதென்றதென்க.

'நீப்பினும்' இது கொலை செய்யாவழி தன் உயிர் செல்வதாயிருந்தாலும்
ன்னும் பொருளது. 'செய்யற்க' இது முன்னிலை ஏவல்; இது கட்டளை
ாகக் கூறிய கூற்று. பிறிது உயிர் என்னாது 'பிறிது இன் உயிர்' என 'இன்'
ன்ற அடைமொழி தந்தது தனக்குத் தன்னுயிர் இனிமையுடையது ஆதல்
பால அவைகட்கும் அவ்வுயிர் இனிமையுடையது ஆகும் என்பதனை
யிறுத்தற்கேயாம். 'உயிர் நீக்கும் வினை' என்றது கொலையை. (7)

நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

(பரி-உரை) நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் - தேவர்பொருட்டு
ன்விக்கண் கொன்றால் இன்பமிகுஞ் செல்வம் பெரிதாமென்று இல்வாழ்
ர்க்குக் கூறப்பட்டதாயினும், சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம்
ட - துறவான் அமைந்தார்க்கு ஒருயிரைக் கொல்ல வருஞ் செல்வங்
ட எ-று.

இன்பமிகுஞ் செல்வமாவது - தாமுந் தேவராய்த் துறக்கத்துச் சென்
ய்துஞ் செல்வம். அது சிறிதாகலானும், பின்னும் பிறத்தற்கு ஏதுவாக
னும், வீடாகிய ஈறிலின்பம் எய்துவார்க்குக் கடை யெனப்பட்டது.
க்கம் எய்துவார்க்கு ஆமாயினும் வீடு எய்துவார்க்கு ஆகாதென்றமை
ர், விதிவிலக்குகள் தம்முண் மலையாமை விளக்கியவாறாயிற்று. இஃது
லறம் அன்மைக்குக் காரணம். இவை யிரண்டு பாட்டானுங் கொலையது
றங் கூறப்பட்டது.

(ப-ரை) (யாகத்திலே கொன்றால்) நன்றாகும் - இன்பமிகுவதாகிய,
கம் - செல்வமானது, பெரிது - பெரிதாகும், எனினும்-என்று சொல்லப்
டதாயினும், சான்றோர்க்கு-(துறவினாலே) நிறைந்தோர்க்கு, கொன்று-
யிரைக்) கொன்று, ஆகும்-(அதனா) லுண்டாவதாகிய, ஆக்கம்-செல்வ
ாது, கடை-இழிந்ததாம் எ-று.

(க-ரை) பெரியோர்க்குக் கொலையால் வருஞ் செல்வம் இழிந்தது
பதாம்.

(வி-ரை) இன்பமிகுஞ் செல்வமாவது, தாமும் தேவராய்ச் சுவர்க்கத்
ல சென்று அடையும் செல்வம். அது சிறிதாகையாலும், பின்னும் பிறத்

தற்கு எதுவாகலாலும், மோட்சமாகிய அழிவில்லாத சுகத்தை அடை வோருக்கு கடையெனப்பட்டது. சுவர்க்கபோகத்தை விரும்பினவருக்கு முமாயினும் மோட்சத்தை விரும்பினவருக்கு ஆகாதென்றதனால் விரி விலக்குகள் தங்களிலே விரோதப்படாமல் விளக்கியவாறுயிற்று. [இவை இரண்டுபாட்டாலும் கொலையினது குற்றம் சொல்லப்பட்டது]

'எனினும்' என்றது தேவர்க்கு வேள்வியில் பலியாகக் கொடு அறமாம்; அதனால் இம்மை மறுமைச் செல்வங்கள் உண்டாகும் என்று துய் இல்லறத்தார்க்கு வகுத்துக் கூறியது எனினும் என்பதாம். 'சான்றோர்க்கு' என்றது தவ ஒழுக்கமுடையராகிய உயர்ந்தோர்க்கு என்பதாம். 'கொன்றுய்க்கும் கடை' என்றது வேள்விமுகத்து தேவர்பொருட்டாகக் கொன்று வருஞ் செல்வம் கடைப்பட்டது என்பதாம். (8)

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர் புன்மை தெரிவா ரகத்து.

(பரி-உரை) கொலை வினையர் ஆகிய மாக்கள்-கொலைத்தொழிலையுடை ராகிய மாந்தர், புன்மை தெரிவார் அகத்துப் புல வினையர் - அத்தொழிலின் கீழ்மையை அறியாத நெஞ்சத்தாராயினும், அறிவார் நெஞ்சத்துப் புலை தொழிலினர் எ-று.

கொலைவினைய ரென்றதனான், வேள்விக்கண் கொலையன்மை யறிக புலைவினைய ரென்றது தொழிலாற் புலைய ரென்றவாறு. இம்மைக்கண் கீழ்மை செய்தவ ரென்பதாம்.

(ப-உரை) கொலைவினையராகிய-கொலைத்தொழிலை யுடையவராகிய, மாக்கள்-மனிதர், (அத்தொழிலினது இழிவை அறியாத நெஞ்சினராயிருந்தாலும்) புன்மை தெரிவாரகத்து-அவ்விழிவை அறிவோரது நெஞ்சிலே, புலைவினைப் புலைத்தொழிலராய்த் தோன்றுவர் எ-று.

(கு-உரை) கொலை இழிந்ததென வறிந்தோர் அது செய்வோரைப் புலை தொழிலர் என்று எண்ணுவர் என்பதாம்.

(வி-உரை) கொலைவினைய ரென்றபடியினாலே யாகக்கொலை யல்லாத வறிக. புலைவினையரென்றது தொழிலினாலே புலையராவரென்றது. அது இம்மையிலே தாழ்வை அடைவரென்பதாம்.

'கொலைவினையர்' என்றது கொல்லுந் தொழில் உடையாரை. மக்கள் என்றது 'மாக்கள்' என்றது ஆறுவதறிவாகிய பகுத்தறிவின்மையான் இழி தோன்றற்கென்க. 'புன்மை தெரிவார் அகத்து' என்றது கொலையான் வரும் பாவத்தை, கொலையின் இழிதன்மையை அறிந்த சீரியர் மனத்தினிடத்து மதிக்கப்படுவர் என்றதாம். 'புலைவினை' என்றது இழிதொழில் என்றதாம். (9)

உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

(பரி-உரை) செயிர் உடம்பின் செல்லாத் தீ வாழ்க்கையவர் - நோக்க ாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழிதொழில் வாழ்க்கையினை ுடையாரை, உயிர் உடம்பின் நீக்கியார் என்ப-இவர் முற்பிறப்பின்கண் ுயிர்களை அவை நின்றவுடம்பினின்று நீக்கினவரென்று சொல்லுவர் வினை ிளைவுகளை யறிந்தோர் எ-று.

செல்லாவாழ்க்கை தீவாழ்க்கை யெனக் கூட்டுக. செயிருடம்பின ாதல் * "அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித், துக்கத் தொழுநோ யெழுபவே" என்பதனானு மறிக. மறுமைக்கண் இவையு மெய்துவ ரென் தாம். [இவை யிரண்டு பாட்டானும் கொல்வார்க்கு வருந் தீங்கு கூறப் ட்டது.

அருளுடைமைமுதற் கொல்லாமையீறாகச் சொல்லப்பட்ட இவற் ள்ளே சொல்லப்படாத விரதங்களு மடங்கும்; அஃதறிந்து அடக்கிக் காள்க. ஈண்டு உரைப்பிற் பெருகும்.

(ப-ரை) செயிருடம்பின்-பார்க்கக்கூடாத நோயுடம்புடனே, செல்லாத் வாழ்க்கையவர்-வறுமையோடுகூடிய இழிதொழில் வாழ்க்கையுடையவரை, இவர் முற்பிறப்பிலே) உயிர்-உயிர்களை, உடம்பின்-(அவைநின்ற) உடம்பு ரிலிருந்து, நீக்கியார்-நீக்கினவர், என்பர்-என்று (வினைவிளைவுகளை அறிந் தார்) சொல்லுவார் எ-று.

(க-ரை) வறுமையும் பிணியுமுடையவரை முற்பிறப்பிற் கொலைசெய்தவ ரன்று பெரியோர் சொல்லுவர் என்பதாம்.

(வி-ரை) செல்லாவாழ்க்கை தீவாழ்க்கையெனக் கூட்டுக. நோயுடம்பு- பருவியாதிமுதலானவை கொண்டவுடம்பு மறுமையிலே இவையும் அடைவ ரன்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் கொல்வோர்க்கு வருந்தீங்கு சால்லப்பட்டது.] அருளுடைமைமுதல் கொல்லாமை இறுதியாகிய இவை ரிலே சொல்லப்படாத விரதங்களும் அடங்கும். அஃது அறிந்து அடக்கிக் காள்க.

'உயிர் உடம்பின் நீக்கியார்' என்றது உயிரை உடம்பிலிருந்து நீக்கியவர் ன்பதாம். அதாவது பிற உயிரைக் கொன்றவர் என்பதாம். 'செயிர்' ன்றது குற்றம் என்னும் பொருளது; ஈண்டு நோக்கலாகாக் கொடுநோய் ன்னும் பொருளில் வந்தது. 'செல்லாத்தீவாழ்க்கை' என்றது வறுமை ாடு கூடிய இழிதொழில் செய்வாழ்க்கை என்னும் பொருளது. 'செல்லா' ன்றது வறுமையையும் 'தீ' என்றது இழிதொழிலையும் குறித்துநின்றன.(10)

33-ம் அதி-கொல்லாமை-முற்றிற்று.

---

* நாலடியார்: தீவினையச்சம்-3.

ஞானம்

(பரி-உரை) இனி அவற்றின் பயனுகிய ஞானங் கூறிய தொடங்கி; ஞானமாவது வீடு பயக்கு முணர்வு. அது நிலையாமைமுதல் அவாவறு; லிறுதியாக நான்கதிகாரத்துள் அடக்கப்பட்டது.

(உரை) இனி அவ்விராதங்களினுலே காணங்கள் பரிசுத்தமானவிடத்; உண்டாவதும், மோட்சத்தைத்தருவதும், ஆகிய அறிவு. அது நிலையாமை முதல் அவாவறுத்தல் இறுதியாக நான்கதிகாரத்துள் அடக்கிச் சொல்லப்; கின்றது.

* 34-ம் அதிகாரம்-நிலையாமை

(பரி-உரை) அவற்றுள் நிலையாமையாவது-தோற்றமுடையன யாவு நிலையுத லிலவாந் தன்மை. மயங்கியவழிப் பேய்த்தேரிற் புனல்போலு; தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுதலிற் பொ; யென்பாரும், நில வேறுபட்டு வருதலாற் கணந்தோறும் பிறந்திறந்; மென்பாரும், ஒருவாற்றுன் வேறுபடுதலும் ஒருவாற்றுன் வேறுபடாமை முடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கேயுடைய வென்பா; மெனப் பொருட்பெற்றி கூறுவார் பலதிறத்தாவார்: எல்லார்க்கும் அ; றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்ருர். இ; உணர்த்தழியல்லது பொருள்களிற் பற்றுவிடாதாகலின், இது முன் வை; கப்பட்டது.

(உரை) அஃதாவது, தோற்றமுடையவையெல்லாம் நிலைபெ; தன்மையாம். இதனை, அறிந்தவிடத்தே யல்லாமல் பொருள்களிலே ப; விடாதாகலின் முன்வைக்கப்பட்டது.

நில்லா தவற்றை நிலையின வென்றுணரும் புலவறி வாண்மை கடை.

(பரி-உரை) நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல் அற் ஆண்மை - நிலையுதல் இலவாகிய பொருள்களை நிலையுதல் உடையவென்; கருதுகின்ற புல்லிய அறிவினை யுடையராதல், கடை-குறைந்தார்க்கு; எ-று.

தோற்றமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறிவால் அ; றின்மேற் பற்றுச்செய்தல் பிறவித்துன்பத்திற் கேதுவாகலின், அது வீடெ; வார்க்கு இழுக்கென்பது இதனுற் கூறப்பட்டது. இனிப் புல்லறிவா; பெரும்பான்மையும் பற்றுச் செய்வது சிற்றின்பதுக்குக் கேதுவாகிய செல்; றின்கண்ணும் அதனை யநுபவிக்கும் யாக்கையின்கண்ணு மாகலின், ; கின்ற பாட்டுக்களான் அவற்றது நிலையாமையை விதந்து கூறுப.

(ப-ரை) நில்லாதவற்றை - நிலையில்லாதனவைகளை, நிலையினவென்ற-நிலை புடையனவென்று, உணரும் - நினைக்கின்ற, புல்லறிவாண்மை - அற்ப புத்தியையுடையவரா யிருக்கை, கடை-(அறிந்தார்க்கு) இழிவு எ-று.

(க-ரை) அழிவதை அழியாததாக நினைக்கும் அறியாமை அறிவோர்க்கு இழிவு என்பதாம்.

(வி-ரை) தோற்றமுடையனவை அழிவில்லாதனவையென்று நினைக்கும் அற்ப புத்தியால் அவைகளின்மேலே பற்றுச்செய்தல் பிறவித்துன்பத்துக்கு காரணமாகலால் அது மோட்சத்தை அடைவோர்க்குத் தவறுமென்பது இதனுற் சொல்லப்பட்டது. இனிப் புல்லறிவாளர் பெரும்பாலும் பற்றுச்செய்வது பற்றின்பத்துக்கு ஏதுவாகிய செல்வத்தினிடத்திலும், அதனை அனுபவிக்கும் இடம்பினிடத்திலும் ஆகலின், வருகிற பாட்டுகளால் அவைகளினது நிலையாமையை வேறெடுத்துச் சொல்லுவார்.

'நில்லாதவற்றை' எனப் பன்மையாற் கூறினமையின், ஈண்டு செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமைகளைக் கொண்டது. 'நிலையின' இது அழி வில்லாதன, நிலைத்து என்றும் இருப்பன என்பது பொருளாம். 'புல்லறி வாண்மை' என்றது இழிந்த அறிவை. அதாவது அஞ்ஞானத்தை. 'கடை' என்றது கடைப்பட்ட அறிவு, மூடஅறிவாம் என்பதாம். இது தவத்தோர்க் குக் கூறப்பட்டதென்க. (1)

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

(பரி-உரை) பெருஞ் செல்வம் கூத்தாட்டு அவைக் குழாத்தற்று-ஒருவன் காட்டுப் பெரிய செல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கட் கண்போர் குழாம் வந்தாற்போலும், போக்கும் அது விளிந்தற்று - அதனது போக்கும் அக் கூத்தாட்டு முடிந்தவழி அக்குழாம் போயினாற்போலும் எ-று.

பெருஞ்செல்வமெனவே துறக்கச்செல்வமும் அடங்கிற்று. போக்கு என்ற எச்சவும்மையான் வருதலென்பது பெற்றாம். அக்குழாங் கூத்தாட் டின் காரணமாக அரங்கின்கட் பஞ்சிறத்தாற்றானே வந்து அக்காரணம் போய வழித் தானும் போமாறுபோல செல்வமும் ஒருவனல்வினை காரணமாக வந்மாட்டுப் பஞ்சிறத்தாற்றானேவந்து அக்காரணம் போயவழித் தானும் போமென்றதாயிற்று.

(ப-ரை) (ஒருவனிடத்தே) பெருஞ்செல்வம்-பெரிய செல்வம் வருதல், கூத்தாட்டு-கூத்தாடுதல் செய்கின்ற, அவை-சபையினிடத்தே, குழாத்தற்று-(கண்போர்) கூட்டம் வருதல்போலும், போக்கும் - (அச்செல்வம்) போகுத லும், அது-அக்கூட்டமானது, விளிந்தற்று-(அக்கூத்தாட்டுமுடிந்தவிடத்தே) போதல்போலும் எ-று.

(க-ரை) செல்வம் கூத்தாட்டில் கூட்டம்போல்வரும் அதுபோதல்போல் லும் என்பதாம்.

(வி-ரை) பெருஞ் செல்வமெனவே சுவர்க்கச்செல்வமும் அடங்கிற்று. போக்குமென்ற வும்மையால் வருதலென்பது கொள்ளப்பட்டது. எப்படி அக்கூட்டமானது கூத்தாட்டுக் காரணமாகச் சபையினிடத்தே பலவிதத்தால் தானேவந்து அதுபோனவிடத்தே தானும்போகுமோ அப்படியே செல்வமானது ஒருவனது நல்வினைகாரணமாக அவனிடத்தே பலவிதத்தால் தானேவந்து அது போனவிடத்தே தானும்போ மென்பதாயிற்று.

'கூத்தாட்டவை' என்றது ஆடரங்கை. 'அவை' இது செந்தமிழ்ச்சொல். இதனைத்திரித்து 'சபை' என்பர் வடநூலார். 'குழாம்' என்றது கூட்டத்தை. இது 'குழு' என்னும் பகுதி அடியாகப் பிறந்தது. 'விளி' என்றது அதன் முடிவு; இறுதி என்னும் பொருளில் நின்றது. (2)

அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா லற்குப வாங்கே செயல்.

(பரி-உரை) அற்கா இயல்பிற்றுச் செல்வம்-நில்லாத வியல்பினை யுடைத்துச் செல்வம், அது பெற்றால் அற்குப ஆங்கே செயல்-அதனைப்பெற்றால், அதனாற் செய்யப்படும் அறங்களை அப்பெற்றபொழுதே செய்க எ-று.

அல்கா வென்பது திரிந்துநின்றது. ஊழுள்ளவழியல்லது துறந்தாரா பெறப்படாமையின் அது பெற்றாலென்றும், அஃதில்வழி நில்லாமையின் ஆங்கே யென்றுங் கூறினார். அதனாற் செய்யப்படும் அறங்களாவன பயனோக்காது செய்யப்படுங் கடவுட்பூசையும், தானமும் முதலாயின. அவை ஞானவேதுவாய் வீடு பயத்தலின், அவற்றை அற்குபவென்றும் செய்கவென்றுங் கூறினார். இவை யிரண்டு பாட்டானும் செல்வநிலையாமை கூறப்பட்டது.

(ப-ரை) செல்வம் - செல்வமானது, அற்கா - நிலையாத, இயல்பிற்று இயல்பையுடையதாகும், அதுபெற்றால்-அச்செல்வத்தைப்பெற்றால், அற்குப (அதனாலே செய்யப்படும்) அறங்களை, ஆங்கே - பெற்றபொழுதே, செய்க செய்யக்கடவன் எ-று.

(க-ரை) செல்வம்பெற்றபொழுதே தருமஞ்செய்யக்கடவர் என்பதாம்.

(வி-ரை) அல்காவென்பது விகாரப்பட்டுநின்றது. ஊழ் உள்ளவிடத்தே யல்லது பெறக்கூடாமையால் அது பெற்றாலென்றும், அவ்வூழ் இல்லாத விடத்தே நில்லாமையால் ஆங்கேயென்றும் சொல்லினார். அதனாலே செய்யப்படும் அறங்களாவன பயனைக் குறியாதுசெய்யும் கடவுட்பூசையும், தானமும் முதலானவை. அவை ஞானத்துக்கு ஏதுவாய் மோட்சத்தைக் கொடுத்தலால் அவற்றை அற்குபவென்றும் செயலென்றும் சொல்லினார். [இவை யிரண்டு பாட்டாலும் செல்வநிலையாமை சொல்லப்பட்டது.]

'அற்கா' என்றது நிலையாத என்னும் பொருளது. இது 'அல்கா' என்பதன் வலித்தல் விகாரம். 'அற்காத' என்றது ஈறுகெட்டு நின்றது. 'அது' என்றது செல்வத்தை. 'ஆங்கே' என்றது காலவிரைவுகாட்டி அப்பொழுதே என்னும் பொருளில் வந்தது. (3)

நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள தறிவார்ப் பெறின்.

(பரி-உரை) கான் என ஒன்றுபோல் காட்டி ஈரும் வாளது உயிர்.
ரென்று அறுக்கப்படுவதொரு காலவரையறைபோலத் தன்னைக் காட்டி
ர்த்து செல்கின்ற வாளினது வாயது உயிர், உணர்வார்ப்பெறின் - அஃ
ணர்வாரைப் பெறின் எ-று.

காலமென்னும் அருவப்பொருள் உலகியல் நடத்தற்பொருட்டு ஆதித்
ன் முதலிய அளவைகளாற் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானுக்
றுபடாமையின் நாளென வொன்றுபோ லென்றும், அது தன்னை
ரென்று உணரம்ர்ட்டாதார் நமக்குப் பொழுதுபோகா கின்றதென்ற
ன்புறுமாறு கானாய் மயக்கலிற் காட்டி யென்றும், இடைவிடாது ஈர்த
ரன் வாளின் வாயதென்றும், அஃது ஈர்கின்றமையை உணர்வார் அரிய
கலின் உணர்வார்ப்பெறினென்றுங் கூறினர். உயிரென்னுஞ் சாதி யொரு
மப் பெயர் ஈண்டு உடம்பின்மே னின்றது, ஈரப்படுவது அதுவேயாகலின்.
ரென்பது ஆகுபெயர். இனி இதனை நானென்பதொரு பொருண்போலத்
நான்றி உயிரை யீர்வதொரு வாளாமென் றுரைப்பாருமுளர். எனவென்பது
யரன்றி இடைச்சொல்லாகலானும், ஒன்றுபோற் காட்டி யென்பதற்கு
நபொருட் சிறப்பின்மையானும், அதுவென்பது குற்றியலுகரம் அன்மை
னும், அஃதுரையன்மை யறிக.

(ப-ரை) உயிர்-உயிரானது, நாளென-நாளென்று அளவுசெய்யப்படுவ
கிய, ஒன்றுபோல்-ஒருகாலவளவுபோல், காட்டி-(தன்னைக்) காட்டி, ஈரும்-
நத்தச் செல்லுகின்ற, வாளது - வாளினது வாயினிடத்தது, உணர்வார்ப்
றின்-(அது) அறிவாரைப் பெற்றால் எ-று.

(க-ரை) நாளாகிய வாளின் வாயினிடத்தது உடல் என்பதை அறிவா
லே என்பதாம்.

(வி-ரை) காலமென்னும் அருவப்பொருள் உலகியல் நடத்தற்பொருட்
சூரியன் முதலாகிய அளவைகளால் கூறுபட்டதாக்கி வழங்கப்படுவதல்
றல் தானுகக் கூறுபடாமையால், நாளென வொன்றுபோலென்றும்,
ர தன்னை வாளென்று அறியமாட்டாதவரை, நமக்குப் பொழுது போகா
றதென்று மகிழும்படி மயக்கலால் காட்டியென்றும், இடைவிடாமல்
ரத்தலால் வாளதென்றும், அது அறுக்கின்றபடியை அறியவல்லவர் இவ்
ரத்திலே அரியராயிருக்கையால் உணர்வார்ப்பெறினென்றும் சொல்லி
அறுக்கப்படுவது உடம்பாகலால் உயிரென்பது இங்கே உடம்பைக்
ட்டி நின்றது. வாளினது வாயை வாளென்கையால் ஆகுபெயர். [இதனால்
ம்புகளுக்கு அளவுசெய்யப்பட்ட நான் கழிகிறவிதம் சொல்லப்பட்டது.]

'ஒன்றுபோல்' இது ஒருகால வரையறைபோல் என்னும் பொருள்
ந்தது. 'ஈரும்' இது அறுக்கும் என்னும் பொருளது. இதற்கு 'ஈர்'

பகுதி. 'உயிர்' என்றது உடலை; இது உபசாரவழக்கு. 'வாளது' இதில் வாளது வாயது உயிர் எனச் சொற்கள் வருவித்து உரைக்கப்பெற்றது. 'உணர்வார்ப்பெறின்' சுக்கு 'அது' என்னும் சுட்டு வருவித்து உரைக்கப் பெற்றமை அறிக. 'பெறின்' என்றதால் பெருமை பெறிதென்க. (4)

நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை மேற்சென்று செய்யப் படும்.

(பரி-உரை) நாச் செற்று விக்குள் மேல் வாராமுன் - உரையாடாவண்ணம் நாவை யடக்கி விக்குள் எழுவதற்கு முன்னே, நல்வினை மேற்சென்று செய்யப்படும்-வீட்டிற்கு எதுவாகிய அறம் விரைந்து செய்யப்படும் எ-று.

மேலேக்கிவருதல் ஒருதலையாகலானும், வந்தழிச் செய்தலேயன்றிச் சொல்லல் மாகாமையானும் வாராமு னென்றும், அது தான் இன்ன பொழுது வருமென்பது இன்மையின் மேற்சென் றென்றுங் கூறினர். மேற் சேறல் - மண்டுதல். நல்வினை செய்புமாற்றின்மேல் வைத்து நிலேயாமை கூறியவாறு.

(ப-ரை) நாச்செற்று-(பேசாதிருக்கும்படி) நாவை அடக்கி, விக்குள் விக்கலானது, மேல்வாராமுன் - எழுவதற்கு முன்னே, நல்வினை-(மோகூ)தக்கு எதுவாகிய) அறமானது, மேற்சென்று-விரைந்து, செய்யப்படும்-செய்யப்படும் எ-று.

(கு-ரை) நாவடக்கிச் சேத்தும மெழுமுன் அறத்தை விரைந்து செய்யப்படும் என்பதாம்.

(வி-ரை) நாவை அடக்கி விக்கல்மே லெழுதலுக்கு ஐயமில்லாமையாலும் அது நேரிட்டபோது நல்வினையைச் செய்தலே அல்லாமல், சொல்லலும் ஆகாமையாலும் வாராமுனென்றும், அதுதான் இன்னகாலத்திலே வருமென்று அறியக்கூடாமையால் மேற்சென்றென்றும் சொல்லினர். நல்வினை செய்யும் வழியின்மேல் வைத்து நிலேயாமை சொல்லியபடி. [இசனால் அளவு நான் கழித்தால் உண்டாகு நிலேயாமை சொல்லப்பட்டதை.] (5)

பெரும்பாலும் சாவுக்குமுன் நாக்கு உள் இழுக்கப்பெற்று பேச்சு அடைகிடலின் 'நாச்செற்று' என்றார். உயிர்போமுன் விக்கல் உண்டாமாதலின் 'விக்குண்மேல் வாராமுன்' என்றார். இதனை 'விக்கா வுக்கா வித்தாவி போய்விட்டால்' என்ற ஒட்டக்கூத்தரின் சந்தச்செய்யுளானும் அறிக. 'நல்வினை' என்றது அறவினையை, அறவினை தானத்தை, வறியார்க் கேன்றது. 'மேற்சென்று' என்றது விரைந்து என்னும் பொருளது. விரைந்து செய்தலாவது இளமையிலேயே செய்தலை. இதனை 'காலச் செய்வோமென்றிருத்தலைக் கடைப்பிடித்துச், சாலச்செய்வாரே தலைப்பட்டார்' என்றதனாலும் அறிக.

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

(பரி-உரை) ஒருவன் நெருநல் உளன் இன்று இல்லை என்னும் பெருமை டைத்து - ஒருவன் நெருநல் உளனாயினன் அவனே இன்று இல்லையாயினு ன்று சொல்லும் நிலையாமை, மிகுதியுடைத்து, இவ்வுலகு - இவ்வுலகம் று.

ண்டு உண்மை பிறத்தலையும், இன்மை- இறத்தலையு முணர்த்தி றன. அவை பெண்பாற்கும் உளவாயினும், சிறப்புப்பற்றி ஆண்பாற்கே னார். இந்நிலையாமையே உலகின் மிக்கதென்பதாம்.

(ப-உரை) இவ்வுலகு - இந்தவுலகம், ஒருவன்-ஒருவன், நெருநல் - நேற் க்கு, உளன்-உளனாயினன், [பிறந்தவ னென்றபடி] (அவனே) இன்று- றைக்கு, இல்லை - இலனாயினன், [இறந்தானென்றபடி] என்னும் ருமை-என்று சொல்லும் (நிலையாமையின்) மிகுதியை, உடைத்து-உடை யிருக்கின்றது எ-று.

(க-உரை) இவ்வுலகம் நேற்றிருந்தவ னின்றில்லை என்னும் பெருமை டையது என்பதாம்.

(வி-உரை) பெண்பாலுக்கும் உண்டாயினும் சிறப்புப்பற்றி ஆண்பாலைச் ல்லினார். இந்த நிலையாமையே உலகத்திலே மிகுந்ததென்றபடி. [இத அவ்வுடம்புகள் ஒரோவிடத்துப் பிறந்தவளவிலே இறத்தல் சொல்லப் -து.]

'நெருநல்' இது நேற்று என்னும் பொருளது. 'உளன் ஒருவன்' இதில் ன் என்று சிறப்பினால் உயர்திணை ஆண்பாலாற் கூறினாராயினும் பெண் ம் எனை அஃறிணை உயிர்களுங் கொள்ளக் கிடந்தன. 'என்னும் பெரு டைத்து' என்றது பிறிதினைவிற்கு. (6)

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

(பரி-உரை) ஒருபொழுதும் வாழ்வது அறியார்-ஒருபொழுதளவும் தம் ம்பும் உயிரும் இயைந்திருத்தலைத் தெளியமாட்டார், கோடியும் அல்ல ருதுப-மாட்டாதனவத்தம், கோடியளவுமன்றி அதனினும் பலவாய வுகளை நினையாநிற்பர் அறிவிலாதார் எ-று.

ழிவுசிறப்பும்மையாற் பொழுதென்பது ஈண்டுக் கணத்தின்மேனின் காரணமாகிய வினையினளவே வாழ்தற்கும் அளவாகலின், அஃது அறி -ாததாயிற்று. பலவாய நினைவுகளாவன-பொறிகளா லாகரப்படும் இன் ர் தமக்குரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக்காரணமாம்மாறும், தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாமுயலுமாறும், அவற்

றிற்கு வரு மிடையூறுகளும், அவற்றை நீக்குமாறும் நீக்கி அப்பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப் பிறர் கொள்ளாமற் காக்குமாறும், அதனுள் நட்டாரை யாக்குமாறும், நள்ளாரை யழிக்குமாறும், தாம் அவ்வின்பங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாரது இயல்பின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு. இனிக் கருதுப வென்பதனை அஃறிணைப் பன்மைப் பெயராக்கி உரைப்பாருமுளர்.

(ப-ரை) (அறிவில்லாதவர்), ஒருபொழுதும் - ஒருபொழுதளவும், வாழ்வது - தம்முடம்பும் உயிரும் கூடியிருக்கையை, அறியார் - அறியமாட்டார் (மாட்டாதிருந்தும்) கோடியுமல்ல-கோடியளவுமன்றி, பல - (அதனிலும்) பலவாகிய நினைவுகளை, கருதுப-நினையா நிற்பார் எ-று.

(க-ரை) ஒருநாளளவும் வாழ்வதறியாதவர்கள் அளவிலா எண்ணங்களை எண்ணுகிறார்கள் என்பதாம்.

(வி-ரை) ஒருபொழுதும் என்ற இழிவுசிறப்பும்மையால் இங்கே பொழுதென்பது கணத்தைக்காட்டி நின்றது. காரணமாகிய வினையினளவே வாழ்தற்கும் அளவாகலால், அது அறியப்படாததாயிற்று. பலவாகிய நினைவாவன: அனுபவிக்கப்படும் இன்பங்களுக்குரியவை ஆகும் விதமும், அதற்குப் பொருள் வேண்டியவிதமும், அது தம் முயற்சிகளால் வரும் விதமும், அம்முயற்சிகளைத் தாம் செய்யும் விதமும், அவைகளுக்கு வரும் இடையூறுகளும், அவைகளை நீக்கும் விதமும், நீக்கியபின் அப்பொருளைச் சேர்க்கும் விதமும், அதைப் பிறர் கொண்டுபோகாமற் காப்பாற்றும் விதமும், 'அதனுள் சிநேகித்தவரை ஆக்கும்விதமும், பகைத்தவரை அழிக்கும் விதமும், தாம் அவ்வின்பங்களை அனுபவிக்கும் விதமும் முதலானவையாம். அறிவில்லாதாரியல்பின்மேல்வைத்து நிலையாமை சொல்லியபடி. [அவ்வுடம்புகள் ஒருகாலமாயினும் நிற்குமென்பது நம்பப்படாமை சொல்லப்பட்டது.]

'ஒருபொழுதும்' என்றதில் 'பொழுது' என்றது காலநுண்ணளவு கணத்தைக் குறித்தது. இதில் நின்ற உம்மை இழிவுச் சிறப்புப் பொருள். 'கோடி' என்றது எண்ணலளவைக் குறியாது மிகுதிப் பொருள் தந்தது. 'கோடியுமல்ல பல' என்றது அளவுபடாத பலபல மிகுந்த எண்ணங்கள் எப்பதை உணர்த்திற்று. ஈண்டு 'உண்பதுநாழி யுடுப்பது நான்குமுழம் எப்பது கோடிநினைந் தெண்ணுப' என்ற ஔவை திருவாக்கும் ஒப்பிடத்தக்கது.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு.

(பரி-உரை) குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்று - முன் தாயாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுளிருந்த புள்ளுப் பருவம் உற்று பறந்துபோன தன்மைத்து, உடம்போடு உயிரிடை நட்பு - உடம்பிற்கு உயிர்க்கு முளதாய நட்பு எ-று.

தனித்தொழிய என்றதனால், முன் தனியாமை பெற்றும். அஃதாவது, வுந்தானும் ஒன்றுய்ப்பிறந்த வேறுந் துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்; அதனால் அஃது உடம்பிற் குவமையாயிற்று; அதனுள் வேற்றுமை ற்றி நின்றே பின் புகாமற்போகலின், புள் உயிர்க் குவமையாயிற்று. ட்டையுட் பிறப்பன பிறவுமுளவேனும், புள்ளையே கூறினுர். பறந்த ாதற் றொழிலான் உயர்ோ டொப்புமை யெய்துவது அதுவேயாகலின். பென்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப்போத லுணர்த்தி றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் த்தியமாய உடம்பும் தம்முண் மாறுகலின், வினைவயத்தாற் கூடியதல்லது பில வென்பதறிக. இனிக் குடம்பை யென்பதற்குக் கூடென் றுரைப் நுமுளர். அது புள்ளுடன் றொன்றுமையாலும், அதன்கண் அது மீண்டு த லுடைமையாலும், உடம்பிற்கு உவமையாகாமை யறிக.

(ப-ரை) உடம்போடு-சரீரத்தோடு, உயிரிடை-உயிருக்கு உண்டாகிய, பு-சேதனமான அது, குடம்பை-(முன்னே தனியாதிருந்த) முட்டையான அது, ித்தொழிய-தனித்தக்கிடக்க, புள்-(அதனுளிருந்த) பறவை, பறந்தற்று-நவம் எந்தவிடத்தே) பறந்துபோந் தன்மையை யுடையதாகும் எ-று.

(க-ரை) முட்டைக்கும் பறவைக்கும் சம்பந்தமில்லாமைபோல், உட கும் உயிருக்கும் சம்பந்தமில்லை என்பதாம்.

(வி-ரை) முன்னே தனிமையாவது: கருவும் தானும், ஒன்றுய்ப் பிறந்த றுகுமளவும் அதற்கு இடமாயிருத்தல்; அதனால் அம்முட்டை உடம்புக்கு மானமாயிற்று; அதனுள்ளே வேறுபாடில்லாம லிருந்தே பின்பு திரும்பி ழியாமற் போகலால், புள் உயிர்க்கு உவமானமாயிற்று. நட்பு-சிநேகமில் ற் போகுகையைக் குறிப்பினுலே காட்டிநின்றது. அறிவாகியும் அரு யும், கித்தியமாகியும் உள்ள உயிரும் அறியாமையாகியும், உருவாகியும் த்தியமாகியும், உள்ள உடம்பும் தம்முள்ளே மாறுகலால் வினைவசத்தி ல கூடியதல்லாமல் சிநேகமில்லை யென்பது அறிக. [இதனால் அவ் ம்புகள் உயிர்நீங்கியவிடத்துக் கிடக்குமாறு சொல்லப்பட்டது.

'குடம்பை' என்றது முட்டையை. 'குடம்பை தனித்தொழியப் புட்பறந் ற்' என்றது உபமானம். இது முற்றுமுவமை குடம்பை உடலுக்கும், உயிர்க்கும் உயிர் உடலைவிட்டுச் செல்கை புள் குடம்பைவிட்டுப் பறக் ற்கும் ஒப்பானமை காண்க. (8)

உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

(பரி-உரை) சாக்காடு உறங்குவது போலும் - ஒருவனுக்குச் சாக்காடு ல் உறக்கம் வருதலோ டொக்கும்; பிறப்பு உறங்கி விழிப்பதுபோலும்- பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோடொக்கும் எ-று.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருகின்றாற்போலச், சாக்காடும் பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருமென்பதை கருத்து. நிலையாமையே நிலைபெற்றவாறு அறிவித்தற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது.

(ப - ரை.) (ஒருவனுக்கு) சாக்காடு - மரணம் வருதல், உறங்குதல் போலும்·தக்கம் வருதல்போலும், பிறப்பு·(அதன்பின்னே) பிறப்பு வருதல் உறங்கி விழிப்பதுபோலும்·தங்கி விழித்தல் வருதல்போலும் எ-று.

(க-ரை) மரணம் நித்திரையையும் பிறப்பு விழித்தலையும் ஒக்கும் என்றாம்.

(வி-ரை) உயிர்களுக்கு உறங்கலும் விழித்தலும்போல இறத்தலும் பிறத்தலும், இயல்பாகக் கடிதிலே மாறிமாறி வருமென்பதை கருத்து. நிலையாமையே நிலைபெற்றவிதத்தை அறிவித்தற்குப் பிறப்பும் உடன் சொல்லப்பட்டது. [இதனால் அவ்வுடம்புகளுக்கு இறப்பும், பிறப்பும், மாறிவருமாறு சொல்லப்பட்டது.]

'சாக்காடு' இதில் காடு விகுதி. இக்குறளால் இறப்பும் பிறப்பும் விரைந்த விரைந்த வரும் என்ப தணர்த்தியதாம்.

புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

(பரி-உரை) உடம்பினுள் தச்சில் இருந்த உயிர்க்கு - வாதமுதலியதின் இல்லாய உடம்புகளுள் ஒதக்கிருந்தே போந்த உயிர்க்கு, புக்கி அமைந்த இன்றுகொல் - எஞ்ஞான்றும் இருப்பதோரில் இதனாற் அமைந்ததில்லை போலும் எ-று.

அங்நோய்கள் இருக்க அமைந்தஞான்று இருந்தும், வெகுண்டஞான்று போயும், ஒருடம்பினும் நிலைபெறுத வருதலால், தச்சிலிருந்த வென்றும் பின் புறப்படாத புக்கேவிடுமில் அமைந்ததாயின், பிறர் இற்களுள் ஒதுகிரா தென்பதாம்; ஆகவே, உயிரோடு கூடிநிற்பதோ ருடம்பு மில்லையென்பத பெறப்பட்டது. இவை யேழுபாட்டானும், மூறையே யாக்கைக்கட் வரைந்த கால் கழிகின்றவாறும் கழிந்தால் உளதாய நிலையாமையும், அவை ஓரோவழிப் பிறந்தவளவிலே இருத்தலும், ஒருகணமாயினும் நிற்குமென்பு தெளியப்படாமையும், உயிர் நீக்கியவழிக் கிடக்குமாறும், அவற்றிற்கு நீ்ப்பும் பிறப்பும் மாறிமாறி வருமாறும், அவைதாம் உயிர்க்குரிய வன்மை மென்று, இவ்வாற்றால் யாக்கை நிலையாமை கூறியவாறு கண்டுகொள்க.

(ப-ரை) உடம்பினுள்·(வாதமுதலானவைகளது) வீடுகளாகிய உடம்புளுள், தச்சிலிருந்த·ஒதக்குக்குடியிருந்தவந்த, உயிர்க்கு·உயிருக்கு, புக்கி என்றைக்கும் இருப்பதாகிய ஒருவீடானது, அமைந்தின்றகொல்·(இதனாலில்) அமைந்ததில்லைபோலும் எ-று.

(க-ரை) உடலுள்ளே யொதுக்குக் குடியிருந்த உயிருக்கு என்றுமிருக்க வீடமைந்ததில்லை என்பதாம்.

(வி-ரை) உயிரானது அவ்வாதமுதலான நோய்கள் அமைந்தகாலத்திலே இருந்தும், கோபித்தகாலத்திலே விட்டுப்போகியும், ஒருடம்பிலும் நிலைபெறாமல் வருதலால், துச்சிலிருந்த வென்றார். பின்னே புறப்படாமல் புகுந்தேவிடுகிற இல், அமைந்ததாயின் பிறர் இற்களிலே ஒதுக்குக்குடி இராதென்பதாம். ஆகவே உயிரோடுகூடி நிற்பது, ஒருடம்பும் இல்லையென்பது பெறப்பட்டது. [இதனால் அவ்வுடம்புகள் உயிருக்கு உரியவை அல்லவென்பது சொல்லப்பட்டது.] நாளெனவென்பது முதலாகிய ஏழுபாட்டுகளாலும் யாக்கை நிலையாமை சொல்லப்பட்டது என்றறிக.

'புக்கில்' என்றது முத்திவீட்டை. 'அமைந்தின்று கொல்லோ' இதற்கு அமைந்ததில்லைபோலும் என்பது பொருள். 'துச்சில்' என்றது ஒதுக்கிடம். என்னை? வாதபித்த சிலேட்டுமங்களுக்கு வீடாகிய உடம்பில் உயிர் ஒதுக்கிக் கிடத்தலின் இவ்வாறு கூறினார். இதனால் வீட்டிற்கு உரியராகிய வாதபித்த சிலேட்டுமங்கள் விரட்டினால் உயிர் வெளிப்பட்டு ஓடவேண்டுமென்பது குறிப்பித்ததாயிற்று. 'புக்கில் அமைந்தின்றுகொல்லோ' என்றதனால் முத்திவீடே உயிர்க்குச் சொந்தவீடு அந்தவீடு ஒழிந்த உடம்பாகியவீடு இரவல்வீடு என்ப துணர்த்தியதாயிற்று. (10)

34-ம் அதி-நிலையாமை-முற்றிற்று.

35-ம் அதிகாரம்—துறவு

(பரி-உரை) அஃதாவது: புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி விடுதல் அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(உரை) அஃதாவது: புறமாகிய செல்வத்திலும், அகமாகிய உடம்பிலும், உண்டாகிய பற்றை அவைகளது நிலையாமையைப் பார்த்துவிடுதலாம். அதிகாரம் வைத்த முறைமையும் இதனாலே விளங்கும்.

யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்.

(பரி-உரை) யாதனின் யாதனின் நீங்கியான்-ஒருவன் யாதொரு பொருளின் யாதொரு பொருளின் நீங்கினான், அதனின் அதனின் நோதல் இலன்-அவன் அப்பொருளால் அப்பொருளால் துன்ப மெய்துதலிலன் எ-று.

அடுக்குக்கள் பன்மை குறித்துநின்றன. நீங்குதல் - துறத்தல். ஈண்டுத் துன்பமென்றது இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும்-காத்தலானும்-

இழத்தலாலும் வருவனவும், மறுமைக்கண் பாவத்தான் வருவனவுமாய இருவகைத் தன்பங்களையுமாம். எல்லாப் பொருளையும் ஒருங்கே விடுதல் தலை. அஃதன்றி ஒரோவொன்றுகவிடினும் அவற்றுன் வரும் தன்பமிலனு மென்பது கருத்து.

(ப-ரை.) (ஒருவன்) யாதனின் - யாதனின், யாதொரு பொருளின் யாதொரு பொருளின், நீக்கியான்-நீக்கினான், (அவன்) அதனினதனின்-அப் பொருளினாலே அப்பொருளினாலே, நோதல் - தன்பத்தை அநுபவித்தல், இலன்-உடையவனுகான் எ-று.

(க-ரை) ஐம்பொறி விடயங்களை ஒவ்வொன்றுகவிடின் விட்டவையால் தன்பமடையான் என்பதாம்.

(வி-ரை) இங்கே தன்பமென்றது இப்பிறப்பிலே அவைகளைத் தேடுதலாலும், காப்பாற்றலாலும், இழத்தலாலும் வருமவையும், மறுமையிலே பாவத்தால் வருமவையும், ஆகிய இருவகைத் தன்பங்களையும் ஆம். எல்லாப் பொருள்களையும் ஒருமிக்கவிடுதலே, தலைமையான துறவாகும். அப்படிக்கல்லாமல் ஒவ்வொன்றுகவிட்டாலும் அவைகளால் வருந்தன்பம் அவனுக்கு இல்லையென்பது கருத்து.

'யாதனின் யாதனின்' என்றதனுலும், 'அதனின் அதனின்' என்றதனாலும் மிகுதிபற்றிவந்த அடுக்குகள். 'நீக்குதல்' என்றது அவற்றின்கண்ணுள்ள பற்றை யகற்றுதல். 'நோதல்' என்றது அவைகளால் எய்தும் இம்மை மறுமை நோய்களை. இதனுல் முற்றப் பற்றுகளைவிடின் தன்பமே இல்லை என்பதும், பற்றுகளைவிட்ட அளவில் தன்பங்குறையும் என்பதும் அறிவித்தார். ஈண்டு 'அற்றது பற்றெனின் உற்றது வீடு' என்னும் முதுமொழி கருதற்பாலது. (1)

வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.

(பரி-உரை) துறந்தபின் ஈண்டு இயற்பால பல-எல்லாப் பொருள்களையும் துறந்தால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல; வேண்டின் உண்டாகத் துறக்க - அவ்வின்பங்களை வேண்டின், அவற்றைக் காலம் பெறத் துறக்க எ-று.

அவ்வின்பங்களாவன-அப்பொருள்கள் காரணமாக மன மொழி மெய்கள் அலையாது நிற்றலாலும், அவை நன்னெறிக்கட் சேறலாலும் வருவன. இனமைக்கட் துறந்தான் அவற்றை நெடுங்காலம் எய்துமாகலின், உண்டாகத் துறக்கவென்றுர். இன்பங்களென்பதும் காலமென்பதும் வருவிக்கப்பட்டன. இம்மைக்கண் தன்பங்கள் இலவாதலேயன்றி இன்பங்கள் உளவாதலு முண்டென்பதாம்.

(ப-ரை.) துறந்தபின்-(எல்லாப்பொருள்களையும்) துறந்தபின், (ஒருவர்க்கு) ஈண்டு-இப்பிறப்பிலே, இயற்பால - உண்டாகு முறைமையையுடைய

இன்பங்கள், பல-பலவாம், வேண்டின்-(அவ்வின்பங்களை) வேண்டினால், உண்டாக-(காலம்) உண்டாக, துறக்க - (அப்பொருள்களோத்) துறக்கக்கடவன் எ-று.

(க-ரை) துறந்தபின் உண்டாகும் பல இன்பத்தை வேண்டினால் துறக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) அவ்வின்பங்களாவன: அப்பொருள்களுக்காக மனமும், வாக்கும், காயமும், அலையாத நிற்கையாலும், அவை நல்வழியிலே செல்லுதலாலும் வருவன. இளமையிலேயே துறந்தவன் அவ்வின்பங்களை நெடுங்காலம் அநுபவிப்பானுகலால், உண்டாகத் துறக்கவென்றபடி. இன்பமும், காலமும், வருவிக்கப்பட்டன. இப்பிறப்பிலே துன்பங்கள் இல்லாமற் போதலே அல்லாமல் இன்பங்களும் உண்டாமென்பதாம்.

'வேண்டின்' என்றது இன்பம் வேண்டின் என்பதாம். 'உண்டாக' இது அவ்வின்பங்கள் நீண்டகாலம் உண்டாகி இருக்க என்பதாம். இதனால் இளமையிற் துறந்தால் அவ்வின்பத்தை நீண்டகாலந் துய்க்கலாம் என்பது நுதிப்பு. 'ஈண்டு' என்றது இம்மையை. 'இயற்பால' என்றது தன் இயல்பிலே வரக்கூடிய இன்பப்பகுதிகள் என்பதாம். (2)

அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

(பரி-உரை) ஐந்தன் புலத்தை அடல்வேண்டும் .. வீடெய்துவார்க்குச் செவிமுதலிய ஐம்பொறிகட்கு உரியவாய ஓசைமுதலிய ஐம்புலன்களையுங் கெடுத்தல்வேண்டும்; வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் - கெடுக்நுங்கால் அவற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருண் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும் எ-று.

புலமென்றது அவற்றை நுகர்தலை. அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானும் அன்றி வாராத பொருள்கண்மேலல்லது வீட்டுநெறியாகிய யோகஞானங்களிற் செலுத்தாமையின், அதனை அடல்வேண்டுமென்றும், ஈண்டு அப்பொருள்கண்மேற் செல்லின் அருநுகர்ச்சி விறகுபெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப்படாமையின், வேண்டியவெல்லா மொருங்கு விடல் வேண்டுமென்றுங் கூறினார்.

(ப-ரை.) (முத்தியை அடைவோர்க்கு) ஐந்தன்- செவிமுதலாகிய ஐம்பொறிகளுக்கு உரிய, புலத்தை-ஓசைமுதலாகிய ஐம்புலன்களையும், அடல்வேண்டும்-கெடுத்தல் வேண்டும், (கெடுக்கும்போது) வேண்டியவெல்லாம்-அப்புலன்களை அநுபவித்தற்பொருட்டுத்) தாம்படைத்த பொருள்களையெல்லாம், ஒருங்கு-ஒருமிக்க, விடல்வேண்டும்-விடுத்தல்வேண்டும் எ-று.

(க-ரை) முத்தியை விரும்புவோர் ஐம்பொறிகளுக்குரிய புலன்களைக் கெடுத்தல்வேண்டும் என்பதாம்.

(வி-ரை) புலன்களை அநுபவித்தலைப் புலமென்றார். அவ்வநுபவிப்பு மனத்தைத் தன்பத்தினாலும் பாவத்தினாலும் தேடப்பட்டு வரும் பொருள்களின்மேல் அல்லாமல் முத்திவழியாகிய யோகஞானங்களிலே செல்லவொட்டாமையால் அடல் வேண்டுமென்றும், அம்மனம் அப்பொருள்களிலே சென்றால் அவ்வநுபவிப்பு வளர்வதல்லது கெடுக்கப்படாமையால் வேண்டியவெல்லா மொருங்கு விடல்வேண்டுமென்றும், சொல்லினர்.

'அடல்' என்றது அழித்தலை. 'அடல்வேண்டும்' இது அழிக்கவேண்டும் ஒழிக்கவேண்டும் என்னும் பொருளில் நின்றது. 'ஐந்தன்புலம்' என்றது ஐம் பொறிகளால் எற்படுவதாகிய ஐம்புலனை. இது ஐயறிவைக் குறித்தது. 'வேண்டியவெல்லாம்' என்றது ஐம்புல இன்பசாதனப் பொருள்களை. ஈண்டு முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. 'ஒருங்கு' இது ஒன்றாசை, ஒருமட்டாக என்னும் பொருள்தரு நின்றது. (3)

இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை மயலாகு மற்றும் பெயர்த்து.

(பரி-உரை) ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பு ஆகும் - பற்றப்படுவ தொரு பொருளுமில்லாமை தவஞ் செய்வார்க்கு இயல்பாம்; உடைமை பெயர்த்து மற்றும் மயல் ஆகும் - அஃதன்றி, ஒன்றுயினு முடைமை அத் தவத்தைப் போக்குதலான், மீண்டும் மயங்குதற்கேதுவாம் எ-று.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. நோன்பென்பதூஉம் மயலென்பதூஉம் ஆகுபெயர். பெயர்த்தலான் என்பது நிரிந்துநின்றது. நோன்பைப் பெயர்த்தலானென வேற்றுமைப்படுத்திக் கூட்டுக. எல்லாப் பொருள்களையும் விட்டு ஒருபொருளை விடாதவழியும், அது சார்பாக விட்டனவெல்லாம் மீண்டுவந்து தவத்திற்கு இடையூடாய் மனக்கலக்கஞ் செய்யுமென்பது கருத்து. இவை நான்கு பாட்டானும் எனதென்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது.

(ப-ரை) நோன்பிற்கு-தவஞ்செய்வோர்க்கு, ஒன்று - பற்றப்படுவதொரு பொருளும், இன்மை-இல்லாதிருக்கை, இயல்பாகும்-சுபாவமாகும், உடைமை, (ஒன்றுயினும்) உடைமை, பெயர்த்து - (அத்தவத்தைப்) போக்குதலால், மற்றும்-மீண்டும், மயலாகும்-மயக்கத்துக்கு ஏதுவாகும் எ-று.

(க-ரை) தவத்தோர்க்குப் பற்றற்றிருப்பது இயல்பாகும் என்பதாம்.

(வி-ரை) நோற்பவரை நோன்பென்றும், மயலுக்கு ஏதுவை மயலென்றும், சொல்லுதலால் ஆகுபெயர்கள். எல்லாப்பொருள்களையும் விட்டு ஒரு பொருளை விடாதவிடத்தும் அதுசார்வாக விடப்பட்டவையெல்லாம் திரும்பிவந்து தவத்துக்கு விரோதமாய் மனக்கலக்கம் செய்யுமென்பது கருத்து. [இவை நான்கு பாட்டாலும் எனதென்னும் புறப்பற்று விடுதல் சொல்லப்பட்டது.]

'நோன்பு' என்றது தவத்தை. 'ஒன்றின்மை' இகில் இழிவுச் சிறப்பு ம்மை உம்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது; 'ஒன்றும் இன்மை' ாகும்' என்றது அஞ்ஞானத்தால் உண்டாகும் மயக்கத்திற்குக் காரண ாகும் என்பதாம்.

(4)

மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை.

(பரி-உரை) பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை-பிறப்பறுத் லை மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும் மிகையாம்; மற் ம் தொடர்ப்பாடு எவன் - ஆனபின் அதற்குமேலே இயைபில்லனவுஞ் சில தாடர்ப்பாடு உளவாதல் என்னும்! எ-று.

. உடம்பென்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்புங் கொள்ளப் ம். அவற்றுள், அருவுடம்பாவது-பத்தவகை யிந்திரிய வுணர்வோடும், வகை ஆயுக்களோடும், காம வினைவிளைவுகளோடுங் கூடிய மனம்; இத ண்ணுடம்பெனவும் படும். இதன்கட் பற்று நிலையாமை புணர்ந்ததனை ன்' விடாமையின், விடுதற்கு உபாயம் முன்னர்க் கூறப. இவ்வுடம்புகளால் ன்பம் இடையறாது வருதலை புணர்ந்து இவற்றுளை கட்டினை இறைப் ாழுதும் பொறாது வீட்டின்கண்ணே விரைதலின், உடம்புமிகை யென் ர்.ை இன்பத் தன்பக்களான் உயிரோடு ஒற்றுமை யெய்துதலின், இவ்வுடம்பு நம் யானெனப்படும். இதனுன் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது.

(ப-ரை) பிறப்பறுக்க லுற்றார்க்கு - பிறவியைநீக்கு முயற்சியை மேற் ாண்டவருக்கு, உடம்பும்-(அதற்கு) உதவியாகிய உடம்பும், மிகை-அதிக ம், (ஆனபின்) மற்றும்-அதற்குமேலும், தொடர்ப்பாடு - (சம்பந்தமில்லாத வுஞ் சில பொருள்கள்) பற்றப்படுதல், எவன்-என்னுகும் எ-று.

(க-ரை) பிறவியை நீக்க முயல்வோர்க்கு உடல் பாரமாம், மற்றவையா ன்னபயன் என்பதாம்.

(வி-ரை) கொல்-அசை. பொதுப்பட உடம்பென்றதனுல் உருவுடம்பும் ருவுடம்பும் கொள்ளப்படும். அருவுடம்பு - இந்திரியவுணர்வுகளோடும் ாணவாயுக்களோடும் காமவினை விளைவுகளோடும் கூடியமனம்; இது சூட் சரீரமெனவும்படும்.

'மற்றும்' இது பின்னும் என்னும் பொருளது. 'தொடர்பாடு' என்றது பந்தத்தை. 'பிறப்பறுக்க' என்றது பிறவாதொழிபெற்று வீடுற்று உய்ய பதாம். 'உடம்பு' என்றது தூலசூக்கும தேகங்களை. (5)

பானென தென்னுஞ் செருக்கறுப்பான்வாளினர்க்
நுபர்ந்த வுலகம் புகும்.

(பரி-உரை) யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்-தானல்லாத வுடம்பும் யானென்றும் தன்னே டியையில்லாத பொருளே எனதென்றுங் கருதி அவற்றின்கண் பற்றுச் செய்தற்கு எதுவாகிய மயக்கத்தைக் கெடுப் பான், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் - வானோர்க்கும் எய்தற்கரிய வீட் டுலகத்தை யெய்தும் எ-று.

மயக்கம்-அறியாமை; அதனைக் கெடுத்தலாவது தெளிகர்பாற் பெற்ற உறுதிமொழிகளாலும், யோகப்பயிற்சியாலும், அவை யான் எனது அன்னை தெளிந்த, அவற்றின்கண் பற்றை விடுதல். சிறப்பும்மை விகாரத்தாற் தொ கத. இதனால் இவ்விருவகைப் பற்றினையும் விட்டார்க்கே வீடுளது என் பத கூறப்பட்டது.

(ப-ரை) யானெனதென்னும் - (தானல்லாதவுடம்பை) யானென்றும் (தன்னோடு சம்பந்தமில்லாத பொருளை) எனதென்றும் நினைத்த அவ களிலே பற்றுச் செய்தற்கு எதுவாகிய, செருக்கு-மயக்கத்தை, அறப்பான் கெடுப்பவன், வானோர்க்கு-தேவருக்கும், உயர்ந்த-அடைதற்கரிதாகிய, உ கம்-முத்திபுலகத்தில், புகும்-செல்லுவான் எ-று.

(க-ரை) நான், எனது, என்னு மயக்கமற்றவன் முத்தி அடைவ என்பதாம்.

(வி-ரை) மயக்கம் - அறியாமை. அதனைக் கெடுத்தலாவது, குரு தேசத்தாலும், யோகாப்பியாசத்தாலும், அவ்வுடம்பை யானல்லவென்றும் அப்பொருளை எனதல்லவென்றும், தெளிந்த அவைகளிலே பற்றைவிடுத் வானோர்க்குமென்னும் சிறப்பும்மை வருவிக்கப்பட்டது. [இதனால் இ வகைப்பற்றையும் விட்டவர்க்கே மோக்ஷமுண்டென்பது சொல்லப்பட்டது

'யான்' என்றது அகப்பற்றை. 'எனது' என்றது புறப்பற்றை. 'செரு என்றது ஈண்டு பற்றைச்செய்யும் அஞ்ஞானமயக்கத்தை. 'வானோர்க் உயர்ந்த உலகம்' என்றது வீட்டுலகத்தை; (முத்தியை.)

பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப் பற்றி விடாஅ தவர்க்கு.

(பரி-உரை) பற்றினைப் பற்றி விடாதவர்க்கு - இருவகைப் பற்றினை இறகைப்பற்றி விடாதவரை, இடும்பைகள் பற்றி விடா - பிறவித்துன்பங் இறகைப்பற்றி விடா எ-று.

இறகைப்பற்றுதல் - காதல்கூர்தல். விடாதவர்க்கென்பது வேற்றுமை மயக்கம். இதனால் இவை விடாதவர்க்கு வீடில்லையென்பது கூறப்பட்டது

(ப-ரை.) பற்றினை - (இருவகைப்) பற்றுக்களையும், பற்றி-இறகைப்பற்றி விடாதவர்க்கு-விடாதவரை, இடும்பைகள் துன்பங்கள், பற்றி-இறகைப்பற்றி விடா-விட்டு நீங்காவாம் எ-று.

(க-ம்) இருவகைப்பற்றையும் விடாதவர்களைத் துன்பங்கள் விடா என்பதாம்.

(வி-ரை) இறகைப்பற்றல் - ஆசைமிகுதல். விடாதவர்க்கென்பது வேற்றுமை மயக்கம். [இதனால் பற்றுக்களை விடாதவர்க்கு மோகமும் இல்லையென்பது சொல்லப்பட்டது.]

'பற்றினை' என்றது யான் என்னும் அகப்பற்றையும் எனது என்னும் புறப்பற்றினையும் ஆம். 'இடும்பை' என்றது பிறவித்துன்பங்களை. 'விடாஅ' என்ற அளபெடைகள் இரண்டும் செய்யுளிசை நிறைக்கவந்த அளபெடைகள். 'விடாதவர்க்கு' நண்டு கான்கன் உருபு இரண்டன் பொருளில் மயங்கின வேற்றுமைமயக்கம். (7)

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

(பரி-உரை) தீரத் துறந்தார் தலைப்பட்டார் - முற்றத் துறந்தார் வீட்டைத் தலைப்பட்டார்; மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் - அங்ஙனந் துறவாது மயங்கிப் பிறப்பாகிய வலையுட்பட்டார் எ-று.

முற்றத் துறத்தலாவது - பொருள்களையும், இருவகை யுடம்பினையும் வேர்த்துப் பற்றறவிடுதல். அங்ஙனந் துறவாமையாவது-அவற்றுள் யாதானுமான்றின்கட் சிறிதாயினும் பற்றுச் செய்தல். துணிவுபற்றித் தலைப்பட்டா ரென்றும், பொய்ந்நெறிகண்டே பிறப்புவலையு ளகப்படுதலின் மயங்கினரென்றுங் கூறினர்.

(ப-ரை) தீரத்துறந்தார்-முழுதுந் துறந்தவர், தலைப்பட்டார்-(முத்தியை டைந்தவராவார், மற்றையவர் - அப்படித் துறவாதவர், மயங்கி - மயக்கற்று, வலைப்பட்டார்-(பிறப்பாகிய) வலையிலே அகப்பட்டவராவார் எ-று.

(க-ரை) முற்றத் துறந்தவர்கள் முத்திபெறுவர் துறவாதவர் பிறப்பிழுர்தவர் என்பதாம்.

(வி-ரை) முழுதுந் துறத்தலாவது-பொருள்களையும், இருவகை உடம்புளையும் வெறுத்துப் பற்றறவிடுதல். அப்படித் துறவாமையாவது, அவைகளிலே ஒன்றனிடத்தே சிறிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றி, தலைப்பட்டாரென்றும், பொய்வழிகண்டே பிறப்புவலையுள் அகப்படுதலால் மயங்கினரென்றும் சொல்லினர்.

'தலைப்பட்டார்' இதை பெற்றவராவர் என்னும் பொருளது. 'தீரத்துறந்தார்' என்றது அகப்பற்றுப் புறப்பற்றுகளை எஞ்சாது முற்றுந் துறந்தவர் என்பதாம். 'மற்றையவர்' என்றது முற்றுந்துறவாது யாதானுமொன்றிற்றானும் பற்று வைத்தவரை. 'மயங்கிவலைப்பட்டார்' என்றது அஞ்ஞானத்தால் மயக்கங்கொண்டு பிறவிவலையிற் சிக்கியவர் ஆவர் என்பதாம். (8)

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

(பரி-உரை) பற்று அற்றகண்ணே பிறப்பு அறுக்கும் - ஒருவன் இரு வகைப் பற்றும் அற்றபொழுதே, அப்பற்றறுதி அவன் பிறப்பை யறுக்கும் மற்று நிலையாமை காணப்படும் - அவை யறாதபொழுது அவற்றாற் பிற திறந்து வருகின்ற நிலையாமை காணப்படும் எ-று.

காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதா முறைமைபற்றி, ப றற்ற கண்ணேயென்றார்; *"அற்றது பற்றெனி, லுற்றது வீடு" என்பதுய அதுபற்றி வந்தது. இவை யிரண்டுபாட்டானும் அவ்விருமையும் ஒருங் கூறப்பட்டன.

(ப-ரை) (ஒருவன்) பற்றற்ற கண்ணே - (இருவகைப்) பற்றுகளையு அற்றபொழுதே, (அப்பற்றறுதியானது) பிறப்பு-(அவனது) பிறவியை, அறு கும்-ஒழிக்கும், மற்று-அவை அறாதபொழுது, நிலையாமை-(அவற்றால் பிற தும் இறந்தும் வருகிற) நிலையாமையானது, காணப்படும்-அறியப்படும் எ-று

(க-ரை) பற்றற்ற பொழுதே பிறப்பறும் என்பதாம்.

(வி-ரை) காரணம் அற்றபொழுதே காரியமும் அற்றதா முறை பற்றி பற்றற்ற கண்ணே என்றார். [இவை இரண்டு பாட்டாலும் அ இரண்டும் சேர்த்துச் சொல்லப்பட்டன]

'பற்று' என்றது ஈண்டு இருவகைப்பற்றினையும். 'கண்ணே' என்ற காலங் குறித்து நின்றது. 'பிறப்பு அறுக்கும்' என்றது பிறப்பறுத்து பெறும் என்பதாம். 'மற்று' என்றது சுட்டியதற் கினமாகிய இருவகை பற்றுக்களை அறாதகாலத்து என்பதாம். 'நிலையாமை' என்றது கறங்குபோ கழன்று சுழன்றுவரும் பிறப்பிறப்புக்களை. 'காணப்படும்' என்றது அ வான் என்பதாம்.

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(பரி-உரை) பற்று அற்றான் பற்றினைப் பற்றுக - எல்லாப் பொருளை பற்றிநின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டுநெறியை இதுவே நன்னெ யென்று மனத்துக்கொள்க, அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு-கொள் அதன்கண் உபாயத்தை அம்மனத்தாற் செய்க, விடாதுவந்த பற்று தற்கு எ-று.

கடவுள் வாழ்த்திற் கேற்ப ஈண்டும் பொதுவகையாற் பற்றற்றா னெ றார். பற்றற்றான் பற்றென்புழி ஆறாவது செய்யுட்கிழமைக்கண் வந்த ஆண்டுப் பற்றென்றது பற்றப்படுவதனை. அதன்கண் உபாயமென்ற தியான சமாதிகளை. விடாதுவந்த பற்றென்பது அநாதியாய் வரும் உ பிற் பற்றினை. அப்பற்று விடுதற்கு உபாயம் இதனாற் கூறப்பட்டது.

* திருவாய்மொழி 1-ம் பத்து. 2-ம் திரு. 5-ம் பாசுரம்.

(ப-ரை) பற்றற்றான்-(எல்லாப்பொருள்களையும் பற்றிலன்றே) பற்றில்லாத கடவுளாலே சொல்லப்பட்ட, பற்றினை-முத்திவழியை, பற்றக-(இதுவே கல்லவழியென்ற) மனத்தினிற் கொள்ளக்கடவர், (கொண்டு) அப்பற்றை-அதனிடத்த உபாயத்தை, பற்றக-மனத்தினாலே செய்யக்கடவர், பற்று-(விடாதவத்த) பற்று, விடற்கு-விடுதற்கு எ-று.

(க-ரை) பற்றற்றான் சொல்லிய முத்திவழியைப் பற்றக்கடவர் என்பதாம்.

(வி-ரை) கடவுள் வாழ்த்தக்கேற்ப இங்கும் பொதுவகையினாலே பற்றற்றானென்றார். அதனிடத்த உபாயமும், நியானமும், சமாதியும் ஆம். விடாத வந்தபற்று-அநாதியாய் வருமுடற்பற்று. [இதனால் அப்பற்று விடுதற்கு உபாயஞ் சொல்லப்பட்டது.]

'பற்றற்றான்' என்றது எல்லாவற்றினும் நோய்க்கும் நோயாதிருக்கும் நிருப்பு வெறுப்பில்லாக் கடவுளை. 'பற்றினை' என்றது வீட்டுநெறியை. பற்றக' என்றது மனத்தின் இறுகப்பிடிக்க என்பதாம். இது முன்னிலை வல். 'பற்றவிடற்கு' என்றது பிறவிகடோறும் மாயா சம்பந்தத்தால் விடாத பற்றிவந்த பாசபந்தப் பற்றவிட்டு நீக்குதற்கு என்றதாம். 'அப்பற்றறப்பற்றக' என்றது (வீட்டுநெறியின்கண் சொல்லப்பெற்ற) அவ்வுபாயத்தினை மனத்தாற் பற்றிச் செய்க என்பதாம். பற்று என்றது பன்முறை இச்செய்யுளில் வந்தது சொற்பின்வருநிலையணியாம். (10)

35-ம் அதி-கூறவை-முற்றிற்று.

36-ம் அதிகாரம்—மெய்யுணர்தல்

(பரி-உரை) அஃதாவது: பிறப்பு வீடுகளையும், அவற்றின் காரணங்களையும், விபரீத ஐயங்களான் அன்றி உண்மையாலுணர்தல். இதனை வடநூலார் தத்துவஞானம் என்ப. இதவும் பற்றற்றான் பற்றினைப் பற்றியவழி உளதாவதாகலின், அக்காரண வொற்றுமைபற்றித் துறவின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: பிறப்புவீடுகளையும், அவற்றின் காரணங்களையும் விபரீத † சந்தேகங்களால் அல்லாமல் உண்மையால் அறிதல். இதை வடநூலார் தத்துவஞான மென்பர். இதவும் பற்றற்றான் பற்றினைப் பற்றியவிடத்தே உண்டாவதாகையால், அக்காரண வொற்றுமைபற்றி துறவின்பின் வைக்கப்பட்டது.

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளாஞ மாணாப் பிறப்பு.

விபரீதஞானமாவது கயிற்றைப் பாம்பென்று அறிதல் போல்வன.
சந்தேகஞானமாவது கயிறே பாம்போவெனத் தணியாததுபோல்வன.

(பரி-உரை) பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளாஞ்ஞானம் மெய்ப்பொருள் அல்லவற்றை மெய்ப்பொருளென் றுணரும் விபரீத வுணர்வானே உளதாம், மாணாப் பிறப்பு-இன்பமில்லாத பிறப்பு எ-று.

அவ்விபரீத வுணர்வாலது மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளு மில்லையென்னும், மற்றும் இத்தன்மையவுஞ் சொல்லும் மயக்கநூல் வழக்கு களை மெய்ந்நூல் வழக்கெனத் தணிதல். குற்றியை மகனென்றும், இப் பியை வெள்ளியென்றும், இவ்வாறே ஒன்றனைப் பிறிதொன்றாகத் தணி லும் அது. மருள், மயக்கம், விபரீதவுணர்வு, அவிச்சை என்பன ஒருபொருட் கிளவி. நரகர், விலங்கு, மக்கள், தேவரென்னும் நால்வகைப்பிறப்பினு ளது துன்பமேயாகலின், மாணாப்பிறப்பென்றார். இதனுற் பிறப்புத் துன் மென்பதூஉம், அதற்கு முதற்காரணம் அவிச்சை யென்பதூஉங் கூறப் பட்டன.

(ப-ரை) பொருளல்லவற்றை - மெய்ப்பொருள்க ளல்லாதனவற்றை பொருளென்று-மெய்ப்பொருள்களென்று, உணரும் - அறிகின்ற, மருளாஞ் விபரீத ஞானத்தினாலே, மாணாப்பிறப்பு - மாட்சிமைப்படாத பிறவி, (இன்ப மில்லாத பிறவியென்றபடி) ஆம்-உண்டாகும் எ-று.

(க-ரை) பொய்ப்பொருள்களை மெய்ப்பொருளென்றெண்ணு மயக்கத் தாற் பிறப்புண்டாம் என்பதாம்.

(வி-ரை) இங்கே பொருளல்லவற்றைப் பொருளென் றுணர்தலாவது மறுபிறப்பும் இருவகைப் பயன்களும், கடவுளும் இல்லையென்றும் மற்றும் இப்படிப்பட்டவைகளைச் சொல்லுகிற மயக்கநூல் வழக்கத்தை மெய்த்நூல் வழக்கமென்று தணிதல். நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்கிற நான்கு வகைப் பிறப்புகளிலும் உள்ளது துன்பமேயாகலால் மாணாப்பிறப்பென்றார். [இதனால் பிறப்புத் துன்பமென்பதும், அதற்கு முதற்காரணம் விபரீத ஞானமென்பதும் சொல்லப்பட்டது.]

'பொருள்' என்றது பொய்ந்நூற்பொருள்களை. இரண்டாவது கூறிய 'பொருள்' என்றது மெய்ந்நூற்பொருள் என்பதாம். 'மருள்' என்றது அந்ஞான மயக்கத்தை. 'மாணாப்பிறப்பு' என்றது நால்வகைத்தோற்றம் எனும் வகைப் பிறப்புக்களை. எவ்வாறு? இவைகளால் பிறவித்துன்பங்கள் எற்படுவதால் என்க. இதற்கு 'மாண்' பகுதி.

இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி மாசறு காட்சி யவர்க்கு.

(பரி-உரை) மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு - அவிச்சையினீங்கி மெய்யுணர் வுடையாயினார்க்கு, இருள் நீங்கி இன்பம் பயக்கும் - அம்மெய்யுணர்வு பிறப்பினை நீக்கி வீட்டினைக் கொடுக்கும் எ-று.

இருள்-நரகம்; அஃதை ஆகுபெயராய்க் காரணத்தின்மே னின்ற நீங்கியெனத் தொடைநோக்கி மெலிந்து நின்றது; நீங்க வென்பதன் நீ

பெனிறு மமையும். மருணீங்கி யென்னும் வினையெச்சம் காட்சியவரென்றுங் குறிப்பு வினைப்பெயர் கொண்டது. மாசறுகாட்சி யென்றது கேவல வுணர்வினை. இதனால் வீடாவது நிரதிசய இன்பமென்பதூஉம், அதற்கு நிமித்தகாரணம் கேவலப்பொருளென்பதூஉம் கூறப்பட்டன.

(ப-ரை) மருள்-அவ்விபரீத ஞானத்திலிருந்து, நீங்கி-நீங்கி, மாசறு-ற்றமற்ற, காட்சியவர்க்கு-மெய்யறிவை யுடையவராயினவர்க்கு, (அம் மெய்யறிவானது) இருள் - பிறவியை, நீங்கி-நீங்கச்செய்து, இன்பம்-முத்தியை, யக்கும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) விபரீத ஞானத்தை விட்டோர்க்கு முத்தி இன்பம் உண்டு ன்பதாம்.

(வி-ரை) இருள்-நரகம்; அது தன் காரணமாகிய பிறவிக்கு ஆகுதலால் குபெயர். நீங்கியென்னுந் தன்வினை நீக்கியென்னும் பிறவினைப் பொருளில் ந்தது. மாசறுகாட்சி-கேவலஞானம். [இதனால் வீடாவது உயர் வொப்பில் ாத இன்பமென்பதும், அதற்கு நிமித்தகாரணம் கேவலப்பொருளாகிய ரமமென்பதும் சொல்லப்பட்டன.]

'இருள்' என்றது துன்பத்திற்கு ஏதுவாகியதும், நரகத்திற்கு ஏதுவாகி துமாகிய மாணாப் பிறப்புகளை உணர்த்திற்று. 'மருள்' என்றது அவிச்சை ாகிய அஞ்ஞானத்தை. 'மாசறுகாட்சி' என்றது மயக்கமற்றதாகிய மெய்ஞ் ான உணர்வு என்னும் ஞானக்காட்சியை; இதனைக் கேவலஉணர்வு என் ங் கூறுவர் பெரியார். 'அவர்க்கு' இதில் 'கு' நான்கன் உருபு கொடைப் பாருள் தந்து நின்றது. (2)

ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வான நணிய துடைத்து.

(பரி-உரை) ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு-ஐயத்தினின்று நீங்கி மய்யுணர்ந்தார்க்கு, வையத்தின் வானம் நணியது உடைத்து-எய்திநின்ற வுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் நணித்தாதலுடைத்து எ-று.

ஐயமாவது - பலதலையாய வுணர்வு; அஃதாவது: மறுபிறப்பும், இரு னைப்பயனும், கடவுளும் உளவோ இலவோவென ஒன்றிற் றுணிபு பிற து நிற்றல்; பேய்த்தேரோ புனலோ கயிறோ அரவோவெனத் துணியாது பதும் அது. ஒருவாற்றாற் பிறர்மதங் களைந்து தம்மத நிறுத்தல் எல்லாச் யநூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது ய்யென நிகழும் ஐயத்தினை யோகமுதிர்ச்சியுடையார் தம் அனுபவத்தா ங்கி மெய்யுணர்வாராகலின், அவரை ஐயத்தி னீங்கித் தெளிந்தா ரென் ம், அவர்க்கு அவ்வனுபவவுணர்வு அடிப்பட்டு வரவரப் பண்டை யுலகிய ணர்வு தூர்ந்துவருமாகலின் அதனைப் பயன்மேலிட்டு வையத்தின் வான யதுடைத்தென்றுங் கூறினார்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக் ாணமாதல் கூறப்பட்டது.

(ப-ரை) ஐயத்தின் - சந்தேகத்திலிருந்து, நீக்கி-நீங்கி, தெளிந்தார்க்கு மெய்யுணர்ந்தவர்க்கு, வையத்தின் - (அடைந்துகின்ற) நிலவுலகத்திலும், வானம் - (அடையக்கடவதாகிய) வீட்டுலகம், கணியது - அடைந்ததாதலை, உடைத்து-உடையதாம் எ-று.

(க-ரை) சந்தேக ஞானத்தை விட்டோர்க்கு முத்தியுலகம் மிக்கச் சமீபமாகும் என்பதாம்.

(வி-ரை) இக்கே ஐயமாவது, மறுபிறப்பும், இருவினைப் பயன்களும், கடவுளும் உண்டோ இல்லையோ என்ற ஒன்றிலே தணிவு பிறவாமல் நிற்றல். ஒருவிதத்திலுலே பிறர்மதத்தைக் கேள்ந்து தமது மதத்தை நிறுத்தும் சமயநூல்களுக்கெல்லாம் இயல்பாகலால், அந்நூல்களாலே சொல்லப்பட்ட பொருள்களிலே மெய்யெதுவோவென்ற உண்டாகிற சந்தேகத்தை யோகிகள் தமது அநுபவஞானத்திலுலே நீக்கி மெய்யை அறிவாராகலால், அவர் ஐயத்தினீங்கித் தெளிந்தாரென்றும், அவ்வநுபவஞானம் மேலிடுந்தோறும் பழைய லோகாசாரஞானம் மறைபட்டுக்கொண்டே வருமாதலால், அதனைப் பயன்மேல் வைத்து வையத்தின்வான கணியதடைத்தென்றும் சொல்லினர் சொல்லவே சந்தேகஞானமும் பிறவிக்குக் காரணமாகுதல் சொல்லப்பட்டதாயிற்று.

'ஐயம்' இது, இதுவோ அதுவோ என்று கொள்ளும் எண்ணத்தை, 'தெளிந்தார்' என்றது யோகானுபவத்தால் இதுதான் மெய் எனக்கொள்ளுதல் உறுதிபெற்றுரை. 'வையத்தின்' இதில் 'இன்' உருபு எல்லைப்பொருளது. 'வானம்' என்றது உயர்வுடையதாகிய வீட்டுலகத்தை. 'கணித்து' இது அருகிலுள்ளது என்னும் பொருளது. இதற்கு 'கண்ணு' பகுதி. (3)

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

(பரி-உரை) ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயம் இன்றே - செல்லப்நின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகிய வுணர்வு அவற்றை விட்டுத்தவயத்தாய வழியும், அதனாற் பயனில்லையேயாம், மெய் உணர்வு இல்லாதவர்க்கு-மெய்யினை யுணர்த்த வில்லாதார்க்கு எ-று.

ஐந்தாகிய வுணர்வு - மனம். அஃதெய்துதலாவது மடங்கி ஒருதலைப்பட்டுத் தாமேகக்கண்நிற்றல். அங்ஙன நின்றவழியும் வீடு பயவாமையின், பயமின்றென்றார். சிறப்புமை எய்துதற்கு அருமை விளக்கிநின்றது. இவ்விரண்டு பாட்டானும் மெய்யுணர்வுடையார்க்கே வீடுளதென மெய்யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) மெய்யுணர்வில்லாதவர்க்கு - மெய்யையறிந்த வில்லாதவர்க்கு, ஐயுணர்வு-(ஓசை, ஊறு, ஒளி, சுவை காற்றம் இவ்வைந்து புலன்களிலும்

செல்லுதலால்) ஐந்தாகிய உணர்வு, எய்தியக்கண்ணும் - (அப்புலன்களோ டிட்டுத்) தமக்கு வசப்பட்டவிடத்தும், (அதனாலே) பயன் - பிரயோசனம், இன்று-இல்லை எ-று.

(கரை) மெய்யை யறியாதவர்க்கு ஐம்புலன்களும் வசப்பட்டாலும் பிரயோசனமில்லை என்பதாம்.

(வி-ரை) ஐந்தாகிய உணர்வு - மனம். அது வசப்படுதலாவது, மடக்கி யோகக் குறியிடத்தே நிற்கை. அப்படி நின்றவிடத்தும் அது முத்தியைத் தராமையால் பயனின்றே'யென்றார். [இவை இரண்டுபோட்டாலும் மெய்யை யுணர்ந்தவர்க்கே முத்தி உண்டென்று மெய்யுணர்வின் சிறப்புச் சொல்லப் பட்டது.]

'ஐயுணர்வு எய்தியக் கண்ணும்' என்றதில் 'ஐயுணர்வு' என்றது ஐம்புலன் களை. 'எய்துதலாவது' புலன் வழிச்செல்லாது அவைகளைத் தன்வழிப்படுத் தல். இதில் நின்ற உம்மை உயர்வுசிறப்பு உம்மை. 'பயம்' என்றது 'பயன்' என்றதன் இரண்டிப்போலி. 'மெய்யுணர்வு' என்றது மெய்நூற் பொரு ளாராய்ச்சியால் யோகவழி அனுபவத்தாற்கண்ட மெய்ஞ்ஞான உணர்ச்சியை.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(பரி-உரை) எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும்-யாதொரு பொருள் எதோ நியல்பிற்றாய்த் தோன்றினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப அறிவு-அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்க ணின்ற மெய்யாகிய பொருளைக் காண்பதே மெய்யுணர்வாவது எ-று.

பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற சற் னைகளைக் கழித்து, நின்ற வுண்மையைக் காண்பதென்றவாறாயிற்று. அஃ வது, கோச்சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரலிரும்பொறை ற்றவழி அரசனென்பதோர் சாதியும், சேரமானென்பதொரு குடியும், ழுநோக்கினையுடையா னென்பதோர் வடிவும், சேயென்பதோ நியற்பெய ம், மாந்தரஞ்சேரலிரும்பொறை யென்பதோர் சிறப்புப்பெயரும், ஒரு ாருளின்கட் கற்பனையாகலின், அவ்வாறுணராது நிலமுதல் உயிரீறாகிய தவங்களின் றொகுதியென வுணர்ந்து, அவற்றை நிலமுதலாகத் தத்தங் ணங்களுளொடுக்கிக் கொண்டுசென்றுற் காரணகாரியங்க ளிரண்டு ற்றி முடிவாய் நிற்பதனை யுணர்தலாம். எப்பொருளெனற் பொதுமையான் பகுதிணையும் நிலத்திணையுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே யுண டும். இதனான் மெய்யுணர்வினது இலக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) எப்பொருள்-யாதொரு பொருள், எத்தன்மைத்தாயினும்-யாதோ புடையதாய்த் தோன்றினும், (அத்தோன்றிய விதத்தைக் கண்டுவிடா) அப்பொருள்-(தோன்றிய) அப்பொருளிடத்திருந்தும், மெய்ப்பொருள்- யாகிய பொருளை, காண்பது-காண்பது, அறிவு-மெய்யுணர்வு எ-று.

(க-ரை) எந்தப் பொருளிடத்தும் உண்மைப்பொருளை அறிவதே யறிவு என்பதாம்.

(வி-ரை) சாசரமாகிய பொருள்களெல்லாம் உலகத்தார் கற்பித்துக் கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்தகின்ற உண்மையைக் காண்பதே மெய்யுணர்வு என்றபடியாயிற்று. அதாவது, அரசன் சேமமான் என்றவிடத்தே அரசனென்பதோர் சாதியும், சேமமானென்பதோர் குடியும் ஒருவனிடத்தே கற்பனையாதலால், அக்கற்பனையைவிட்டு அவனை நிலமுதல் உயிரீறுகிய தத்துவங்களின் கூட்டமென்று அறிந்து அத்தத்துவங்களை நிலமுதலாக அதனதன் காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டுபோய் முடிவில் காரணகாரிய மிரண்டும் இல்லாமல் நிற்பதனை அறிதலாம். [இதனால் மெய்யுணர்வினது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'எப்பொருள்' என்றது எகாவினுவடியாகப் பிறந்தபெயர். 'எத்தன்மைத்' என்றதும் அது. 'ஆயினும்' என்றதன் ஈற்ற 'உம்' வினையெச்சவிகுதி. 'அப்பொருள்' என்றது தோன்றியபொருளை. 'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற இடத்து கண், கின்ற என்பன தொக்குநின்றமையின் வருவித்து உரை செய்யப்பெற்றன. 'அறிவு' என்றது மெய்ஞ்ஞானம் என்பதாம்.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(பரி-உரை) ஈண்டு கற்று மெய்ப்பொருள் கண்டார் - இம்மைக்கட்பிற் பின்கண்ணே உபதேசமொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு அதனுன் மெய்ப்பொருளை யுணர்ந்தவர், மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர்-மீண்டு இப்பிறப்பின்கண் வாராத நெறியை யெய்துவர் எ-று.

கற்று என்றதனுல் பலர் பக்கலிலும் பலகாலும் பயிறலும், ஈண்டு என்றதனுல் வீடு பேற்றிற்குரிய மக்கட்பிறப்பினை பெறுதற்கு அருமையும் பெற்றும். ஈண்டு வாராநெறி வீட்டுநெறி. வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளை உணர்தற்கு உபாயம் மூன்று; அவை: கேள்வி, விமரிசம், பாவனை யென்பன. அவற்றட் கேள்வி இதனுற் கூறப்பட்டது.

(ப-ரை) ஈண்டு - இம்மையிலே பிறப்பினிடத்து, கற்று-(உபதேசத்ஞானாசாரியரிடத்தே) கேட்டு, (அதனுல்) மெய்ப்பொருள் - உண்மைப்பொருளை, கண்டார் - உணர்ந்தவர், மற்றீண்டு-திரும்பி இப்பிறப்பினிடத்து வாராநெறி-வாராதவழியை, தலைப்படுவர்-அடைவார் எ-று.

(க-ரை) இப்பிறப்பி லுபதேசத்தைக்கேட்டு உண்மைப்பொருளை யுணர்ந்தவர் பிறவார் என்பதாம்.

(வி-ரை) கற்றென்றதனுல் பலரிடத்தும் பலதாமும் பழகுதலும், ஈண்டென்றதனுல் மோக்ஷத்தை அடைதற்கு உரிய மனிதப்பிறப்பு பெறுதற்கு அரியதென்பதும் கொள்ளப்பட்டன. ஈண்டு வாராநெறி-மோக்ஷமார்க்கம்.

மோட்சத்துக்கு நிமித்தகாரணமாகிய முதற்பொருளை அறிதற்கு உபாயம் மூன்று; அவை கேட்குதல், சிந்தித்தல், தெளிதல் என்பன. [அவற்றுள் கேட்குதல் இதனுலே சொல்லப்பட்டது.]

'ஈண்டு' என்றது இவ்வுலகத்தே இந்த மக்கட்பிறப்பில் என்பதாம். 'கற்று' என்றது மெய்ஞ்ஞானநூற்களை ஸல்லாசிரியர்பாற் கற்க என்பதாம். 'கண்டார்' என்றது தன் சுயானுபூதியாற் கண்டவர் என்பதாம். 'தலைப்படுவர்' என்றது அடைவர் என்றது பொருளாம். 'தலைப்படு என்றது ஒருசொல் நிர்மைத்தாய் நின்றது. 'ஈண்டுவாராதெறி' என்றது பிறவாதெறியாகிய நத்திரை. 'ஈண்டு' என்றது இவ்வுலகத்தை; இது இகாரச்சுட்டடியாகப் பிறந்தபெயர். (6)

ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

(பரி-உரை) உள்ளம் ஒருதலையா ஓர்த்த உள்ளது உணரின் - அங்ஙனங் கட்ட உபதேசமொழிப்பொருளை ஒருவனுள்ளம் அளவைகளாலும் பொருந்தமாற்றலாற் தெளிய ஆராய்ந்த, அதனுன் முதற்பொருளை யுணருமாயின், பேர்த்துப் பிறப்பு உள்ள வேண்டா-அவனுக்கு மாறிப் பிறப்புளதாக வைக்கவேண்டா எ-று.

ஒருதலையா வோர்த்தென இயையும். அளவைகளும் பொருந்தமாறும் மேலே யுரைத்தாம். இதனுல் விமரிசங் கூறப்பட்டது.

(ப-ரை) (அப்படி கேட்கப்பட்ட உபதேசப்பொருளை), உள்ளம்-(ஒருவ ன்) உள்ளமானது, ஒருதலையா-நிச்சயப்பட, ஓர்த்த-(பிரமாணங்களாலும் நீதியினாலும்) ஆராய்ந்த, (அதனால்) உள்ளது-முதற்பொருளை, உணரின்-றியுமாயின், பிறப்பு-(அவனுக்குப்) பிறவியுள்ளதாக, பேர்த்த-மாறி, உள்ள வண்டா-நினைக்கவேண்டுவதில்லை எ-று.

(க-ரை) ஒருவன் மனம் உபதேசத்தால் உண்மைப்பொருளை யறியின் அவனுக்குப் பிறவி இல்லை என்பதாம்.

(வி-ரை) [இதனால் சிந்தித்தல் சொல்லப்பட்டது.]

'ஓர்த்த' என்றது அளவைகளைக்கொண்டு தெளிவுபெற ஆராய்ந்த என்பதாம். 'உள்ளது' என்றது மெய்ப்பொருளாகிய தனிமுதற்பொருளை. 'உணரின்' இதில் 'இன்' என்றது எதிர்ப்பொருள் தந்துநின்றது. (7)

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

(பரி-உரை) பிறப்பு என்னும் பேதைமை நீங்க-பிறப்பிற்கு முதற்காரண மாகிய அவிச்சை கெட, சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு-வீட்

டிற்கு நிமித்தகாரணமாய செல்வியபொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்
புணர்வாவது எ-று.

பிறப்பென்னும் பேதைமை யெனவும், சிறப்பென்னுஞ் செம்பொரு
ளெனவும், காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஐவகைக் குற்றங்களுள்
அவிச்சை யெனைய நான்கிற்குங் காரணமாத லுடைமையின், அச்சிறப்புப்
பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக் கூறினர். எல்லாப் பொருட்
களுஞ் சிறந்ததாகலால், வீடு சிறப்பெனப்பட்டது. தோற்றக் கேடுகளின்மை
யின் நித்தமாய், சோன்மையாற் றன்னை யொன்றுங் கலத்தலின்மையில் தற்
தாய்த் தான் எல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருள் விகா
மின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி, அதனைச் செம்பொரு ளென்
ரூர். மேல் மெய்ப்பொருளெனவும் உள்ளதெனவுங் கூறியதனாலும் இதுபற்றி
யென வுணர்க. அதனைக் காண்கையாவது, உயிர் தன் அவிச்சைகெட்டு அ
னோடு ஒற்றுமையுற இடைவிடாது பாவித்தல். இதனைச் சமாதியெனவும்
சுக்கிலத்தியானம் எனவுங் கூறப. உயிர் உடம்பினீங்குங்காலத்து அதனுள்
யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த் தோன்றுமென்ப
எல்லா ஆகமங்கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்து
பிறப்பிற்கு ஏதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப் பொருளே
பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே பயிறலாய இதனின் மிக
வுபாய மில்லையென்ப தறிக. இதனாற் பாவனை கூறப்பட்டது.

(ப-ரை) பிறப்பென்னும் - பிறவிக்கு முதற்காரண மெனப்படுகி
பேதைமை-அஞ்ஞானமானது, நீக்க-கெட, சிறப்பென்னும்-மோகூத்தற்
நிமித்தகாரணமெனப்படுகிற, செம்பொருள்-செவ்வியபொருளை, காண்பத
அறிவதே, அறிவு-(ஒருவனுக்கு) மெய்யுணர்வாம் எ-று.

(க-ரை) பிறவிக்குக் காரணமாகிய அஞ்ஞானங்கெட உண்மைப்பொரு
ளைக் காண்பதே யறிவாகும் என்பதாம்.

(வி-ரை) பிறப்பென்னும் பேதைமையென்றும், சிறப்பென்னுஞ் செ
பொருளென்றும், காரியங்களைக் காரணங்களாக உபசரித்தார். ஐவகை
குற்றங்களுள் அஞ்ஞானம் மற்றை நான்குக்கும் காரணமாதலால் அச்சிற
புப்பற்றி அதனையே பிறப்புக்குக் காரணமாக்கிச் சொல்லினர். எல்லா
பொருள்களினும் சிறந்ததாகலால் மோட்சம் சிறப்பெனப்பட்டது. நித்
மாகியும், பரிசுத்தமாகியும் எங்கு நிறைந்துள்ள பிரமமென்னப்பட்ட மு
பொருள் விகாரமில்லாமல் எக்காலமும் ஒரே தன்மையதா யிருத்தல்பற்
அதனைச் செம்பொருளென்றார். முன்னே மெய்ப்பொருளென்றும், உள்
தென்றும் சொல்லியதும் இதுபற்றியென்றறிக. அதனைக் காண்கையாவ
உயிர் தனது அஞ்ஞானங்கெட்டு அப்பொருளோடு ஒற்றுமையுற இடைவிட
மல் நினைத்தல். இதனைச் சமாதியென்பர். மரணகாலத்தில் நினைக்கிறப
பிறவி வருமென் றிருத்தலால் மோட்ச மடைவோர்க்கு அக்காலத்தில்

த்துவப்பொருளைப் பாவிக்கும்படி முன்னே பழருதலாகிய இதனின் மிகுந்த பாயம் இல்லையென்பதறிக. [இதனாலே தெளிதல் சொல்லப்பட்டது.]

'பிறப்பு என்னும்' இதில் 'என்னும்' என்றது பிறப்புக்குக் காரணமாகிய ன்னும் பொருள்தந்து நின்றது. 'பேதைமை' என்றது அறியாமையாகிய ஞ்ஞானத்தை. 'சிறப்பு' என்றது வீட்டை. இதிலும் 'என்னும்' என்றது ட்டிற்கு நிமித்தகாரணமாகிய என்னும் பொருள் தந்து நின்றது. 'செம் பாருள்' என்றது இறைவனை. 'அறிவு' என்றது மெய்ஞ்ஞான அறிவை. (8)

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தரு நோய்.

(பரி-உரை) சார்பு உணர்ந்து சார்புகெட ஒழுகின்-ஒருவன் எல்லாப் பாருட்குஞ் சார்பாய அச்செம்பொருளை யுணர்ந்து இருவகைப் பற்றுமற ழகவல்லனாயின், சார்தரும் நோய் அழித்து மற்றுச் சார்தரா-அவனை முன் ரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர்வொழுக்கங்களை யழித்துப் ர் சாரமாட்டா எ-று.

ஆகுபெயராற் சாருமிடத்தையும் சார்வனவற்றையுஞ் சார்பு என்றார். ாடு ஒழுக்கமென்றது யோகநெறி யொழுகுதலை. அஃது இயமம், நியமம், ருப்பு, உயிர்நிலை, மனவொடுக்கம், தாரணை, தியானம், சமாதியென எண் கப்படும். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டு உரைப்பிற் பெருகும்; யோக ங்களுட் காண்க. மற்றுச் சார்தராவென இயையும். சாரக்கடவனவாய் ற துன்பங்களாவன பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றி டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித் வும் பிறந்த வுடம்பான் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னு மனுபவிக்கக் வனவாய்க் கிடந்தன. அவை விளக்கின்முன் இருள்போல் ஞானயோகங் ன் முன்னர்க் கெடுதலான், அழித்துச் சார்தரா என்றார். இதனை ஆரு உவர்ப்பு என்ப. பிறப்பிற்குக் காரணமாகலான், நல்வினைப்பயனும் ய் எனப்பட்டது. மேல் மூன்று உபாயத்தானும் பரம்பொருளை யுணரப் ப்பறுமென்றார். அஃது அறும்வழிக் கிடந்த துன்பங்களெல்லாம் என் ப்பு மென்னுங் கடாவை யாசங்கித்து அவை ஞானயோகங்களின் ர்ச்சியுடைய வுயிரைச் சாரமாட்டாமையானும், வேறு சார்பு இன்மை ங் கெட்டுவிடுமென்பது இதனாற் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) சார்பு - (எல்லாப் பொருள்களுக்கும்) சார்பாகிய செம்பொருளை, உணர்ந்து - அறிந்து, சார்பு - இருவகைப்பற்றுக்களும், -நீக்க, ஒழுகின்-நடக்கவல்லவனாயின், சார்தரும்-(முன் அவனைச்) சேர் ரியவையாய்நின்ற, நோய் - துன்பங்கள், அழித்து - (அவ்வுணர்வையும் கத்தையும்) அழித்து, மற்றுச்சார்தரா-பின் சேரமாட்டாவாம் எ-று.

(க-ரை) மெய்ப்பொருளை யறிந்து இருவகைப் பற்றுகளுங்கெட நடப்ப ர் துன்பங்களனாகா என்பதாம்.

(வி-மா) இக்கே ஒழுக்கமென்றது-யோகவழிநடத்தலே. அது இயம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என என்வகைப்படும். அத்தன்பக்களாவன பிறவி அநாதியாய் வருதலால் உயிரிஞலே அளவில்லாமல் சம்பாதிக்கப்பட்டிருக்கிற வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளால் அநுபவிக்கப்பட்டவையும், பிறந்த உடம்பால் மொண்டுகொள்ளப்பட்டவையும் நீக்கலாக பின்னே அனுபவிக்கும்படி கிடந்தவையாம். அவை வினைக்கின்முன் இருள்போல் ஞானயோகங்களின் முன்னே கெடுதலால் அழித்தச்சார்தாவென்ருர். பிறவிக்குக் காரணமாதலால் கல்வினைப்பயனும் நோயெனப்பட்டது. முன் மூன்றுபாயங்களாலும் பரம்பொருளை அறியப் பிறப்பறமென்ருர். அது அறமிடத்தே பிணவாக்கிடந்த தன்பங்களெல்லாம் எப்படி போமென்னும் வினவை எழுப்பிக்கொண்டு ஞானயோக முதிர்ச்சியுடைய உயிரைச் சேரமாட்டாமையாற் கெட்டுவிடுமென்பது இதனுலே சொல்லப்பட்டது.

'சார்பு உணர்ந்து' என்றதில் 'சார்பு' செம்பொருள். 'ஒழுகின்' இதில் 'இன்' உருபு ஒழுகுவானுயின் என்னும் பொருள்தந்து நின்றது. 'சார்புகெட' என்றதில் 'சார்பு' என்றது அகப்பற்ற புறப்பற்றுக்களாகிய சார்புகளை. 'சாரு தருநோய்' என்றது பிறவித்தன்பங்களை. 'அழித்து' என்ற இடத்து உணர்வு, ஒழுக்கங்களை என்னுஞ் சொற்கள் வருவித்து உரைக்கப்பெற்றன. 'ஒழுகின்' என்றது யோகாரூடமவுனநிலையில் ஒழுகுதலே.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னமங் கெடக்கெடு நோய்.

(பரி-உரை) காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன் காமம் கெட ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு, வெறுப்பு, அவிச்சை யென்னும் இக்குற்றங்கண் மூன்றனுடைய பெயருங் கூடக் கெடுதலால் நோய் கெடும்-அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உளவாகா எ-று.

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானென மதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கண் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன் மறுதலைக்கண் செல்லும் கோபமுமென வடநூலார் குற்றம் ஐந்தென்ருர். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலால் மூன்றென்ருர். இடையருத ஞான யோகங்களின் முன்னர் இக்குற்றங்களை மூன்றும் 'காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்தாய்போலு' மாகலின், அம்மிகுதோன்ற இவை மூன்ற ஞமங்கெட என்ருர். இழிவு சிறப்பும்மை விகாரத்தாலிருக்கது. கெடவென்பது எச்சத்திரிவு. நோயென்பது சாதியொருமை. காரணமாய அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின். அவர்க்கு வாக்கடவ தன்பங்களு மில்லையென்பது இதனுற் கூறப்பட்டது. முன் கிடந்த தன்பங்களும் மேல் வாக்கடவ தன்பங்களும் இலவாதல் மெய்யுணர்வின் பயனுகலின், இவை பிரண்டு பாட்டி-

வ்வதிகாரத்தவாயின. இவ்வாற்றானே மெய்யுணர்ந்தார்க்கு கிற்பன எடுத்த டம்பும், அதுகொண்ட வினைப்பயன்களுமே யென்பது பெற்றும்.

(ப-ரை) (ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையவர்க்கு) காமம் வெகுளி யக்கம்-விருப்பம், வெறுப்பு, அஞ்ஞானம் எனப்படுகிற, இவை மூன்றன்- க்குற்றம் மூன்றனை, காமம்-பெயரும், கெட-கெடுதலால், நோய் - (அவை ரின் காரியங்களாகிய) வினைப்பயன்கள், நெடும்-உண்டாதலில்லை எ-று.

(க-ரை) ஞானவான்களுக்கு மூக்குற்றங்களால் வருந் துன்பங்களில்லை ன்பதாம்.

(வி-ரை) அகாதியாகிய அவித்தையென்னும் அஞ்ஞானமும், அதுபற்றி னெனமதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இது வேண்டுமென் ும் அவாவும், அதுபற்றி அப்பொருளிடத்தே செல்லும் ஆசையும், அது ற்றி அதனது மறுதலையிடத்தே செல்லும் கோபமும் என வடநூலார் ற்றம் ஐந்தென்பார். இவர் அவற்றுள் அகங்காரம் அவித்தையிலும், அவாவு ம் ஆசையிலும் அடங்குதலால் மூன்றென்றார். இடையறாத ஞானயோகங் நுக்கு முன்னே இக்குற்றமூன்றும் காட்டுத்தீ முன்னே பஞ்சுபோலுமாம். தலால் அம்மிகுதி தோன்ற இவை மூன்றுமகற்கெடவென்றார். விகாரத் லே தொக்கநாமம் என்னு மிழிவு சிறப்பும்மை வருவிக்கப்பட்டது. ாணமாகிய அக்குற்றங்களைக் கெடுத்தோர் காரியமாகிய இருவினைகளைச் ய்யாமையால் அவர்க்கு வருதற்குரிய துன்பங்களும் இல்லையென்பது னாலே சொல்லப்பட்டது.] முன்கிடந்த துன்பங்களும் மேல்வருந் துன் களும் இல்லாமற் போகுகை மெய்யுணர்வின் பயனுதலால் இவை ண்டும் இவ்வதிகாரத்திலே சொல்லப்பட்டன. இவ்விதத்தால் மெய் ார்ந்தார்க்கு உன்னவை எடுத்த வுடம்பும் அதுகொண்ட வினைப்பயனுமே ன்பது பெற்றும்.

இக்குறளில் 'ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு' என்றது வித்துப் பொருள் செய்யப்பெற்றது. 'நோய்' என்றது வினைப்பயன் ால் வரும் பிறவிநோய்களை. (10)

36-ம் அதி-மெய்யுணர்தல்-முற்றிற்று.

37-ம் அதிகாரம்—அவாவறுத்தல்

(பரி-உரை) அஃதாவது: முன்னும் பின்னும் வினைத்தொடர்பு அறுத்- க்கு நடுவு நின்ற உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமை , வேதனைபற்றி ஓரோவழித் திறக்கப்பட்ட புலன்கண்மேற் பழைய ற்சிவயத்தான் நினைவு செல்லுமன்றே, அந்நினைவும் அவிச்சையெனப் க்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாது மெய்ப்பொருளுணர் அறத்தல். அதிகாரமுறைமையும் இதனானே விளக்கும்.

(உரை) அஃதாவது: முன்னும் பின்னும் வினைத்தொடர்பு அறுத்தார்க்கு ன்ற உடம்பும், அதுகொண்ட வினைப்பயன்களும், நின்றமையால் அது ஓரோவிடத்துத் திறக்கப்பட்ட புலன்களின்மேலே பழைய பழக்க

வசத்திலுலே கிடைவுசெல்லுமன்றே, அக்கிடைவும் பிறவிக்கு வித்தாமாகலால், அதனை இடைவிடாத மெய்ப்பொருளுணர்வால் அறுத்தலாம். அதிகார முறைமையும் இதனுல் விளக்கும்.

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந் தவாஅப் பிறப்பீனும் வித்து.

(பரி-உரை) எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பு சனும் வித்த - எல்லா வுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாத வருகின்ற பிறப்பிற்கு விளைவிக்கும் வித்த, அவா என்ப அவாவென்று சொல்லுவர் நூலோர் எ-று.

உடம்பு நீக்கிப்போங்காலத்த அடுத்த வினையும், அத காட்டுக் கதி கிமித்தங்களும், அக்கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்தநிப்ப அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட் கொண்டு செல்லுமாகலான், அதனைப் பிறப்பீனும் வித்தென்றும், கதிவயத்தா னா தாய அவ்வுயிர் வேறுபாட்டினும் அவை தன்மைநிரியும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி யென்னுங் காலவேறுபாட்டினும் அத வித்தாதல் வேறுபட்டாமையின் எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுமென்றும், இஃத எல்லா சமயங்கட்கும் ஒத்தலான் என்பவென்றுங் கூறினர். இதனுற் பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப்பட்டது.

(ப-ரை) எல்லாவுயிர்க்கும் - சகல வுயிர்களுக்கும், எஞ்ஞான்றும் - எ காலத்திலும், தவா-கெடாதவருகின்ற, பிறப்பு-பிறவியை, சனும்-விளை தாகிய, வித்த-விதை, அவா-அவாவாகும், என்ப-என்று (நூலோர்) சொல்லு வார் எ-று.

(க-ரை) எவ்வுயிர்களின் பிறவிக்கு விதை ஆசை என்பதாம்.

(வி-ரை) உடம்பு நீக்கிப்போங்காலத்திலே அடுத்தவினையும், அதற்கு ங்கதி கிமித்தங்களும், அக்கதியி லவாவும், உயிரினிடத்தே முறையேகி உதிக்க, அறிவை மோகமானத மறைக்க, அவ்வுயிரை அவ்வவாவானது கதியினிடத்தே கொண்டு செல்லுமாகலால், அதனைப் பிறப்பீனும் வித்தென் றும், கதிவசத்தால் உளதாகிய அவ்வுயிரின் வேறுபாட்டிலும் * உற்சர்ப்பிணி † அவசர்ப்பிணியென்னுங் காலவேறுபாட்டிலும் அத வித்தாகுதை வேறு படாமையால் எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும் என்றும் இத எல்லா சமயங்களுக்கும் ஒத்தலால் என்பவென்றும் கூறினர். [இதனுல் பிறப்புக்கு அவாவித்தாதல் சொல்லப்பட்டத.]

'என்ப' என்றத 'என்று சொல்லுவர் மெய்ஞ்ஞானநூல் அறிந்தவ' என்பதாம். 'தவாஅ' என்றத இசைநிறைக்கவந்த அளபெடை. 'அவி' என்றத ஆசை, விருப்பம் என்னும் பொருளத.

---

* உற்சர்ப்பிணி - உலகம் வாழ்தான் போகம் இவை முதலானவை னாலே வளர்பிறைபோல் பெருகுங்காலம்.

† அவசர்ப்பிணி-அத அவைகளாலே தேய்பிறைபோல் சுருங்குங்காலம்.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

(பரி-உரை) வேண்டுக்கால் பிறவாமை வேண்டும்-பிறப்புத் தன்பமாத லறிந்தவன் ஒன்றை வேண்டிற் பிறவாமையை வேண்டுக்; அது வேண்டாமை வேண்டவரும் - அப்பிறவாமை தான் ஒருபொருளாயும் அவாவாமையை வேண்ட அவனுக்குத் தானே புண்டாம் எ-று.

அநாதியாகத் தான் பிறப்புப் பிணி மூப்பு இறப்புக்களால் தன்பமுற்று வருகின்றமையை புணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின்கண்ணேயாகலின் பிறவாமையை வேண்டுமென்றும், ஈண்டைச் சிற்றின்பக்கருதி ஒருபொருளாவாவின் அது பிறப்பீனும் வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத தன்பமே விளைத்தலின், அது வேண்டாமை வேண்ட வருமென்றுங் கூறினர். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின் அது வரும்வழி கூறத் தொடங்குகின்றமையின், மற்று வினைமாற்றின்கண் வந்தது.

(ப-ரை) (பிறப்புத் தன்பமாயிருக்கையை அறிந்தவன்) வேண்டுக்கால்-ன்றை வேண்டினால், பிறவாமை - பிறவாதிருக்கையையே, வேண்டும்-ச்சிக்கவேண்டும், அது-அப்பிறவாமையானது, வேண்டாமை - (தான் ஒரு பொருளாயும்) அவாவாமையை, வேண்ட - இச்சிக்க, வரும்-(அவனுக்குத்) தானே உண்டாம் எ-று.

(க-ரை) ஒருவன் பிறவாமையையே யிச்சிக்கவேண்டும் என்பதாம்.

(வி-ரை) அநாதியாகத் தான் பிறப்பு, பிணி, மூப்பு, இறப்பு, இவைகளாலே தன்பப்பட்டுக்கொண்டு வருகின்றமையை அறிந்தவனுக்கு இன்பத்தில் ஆசையுண்டாமாதலால் பிறவாமையை வேண்டுமென்றும், இவ்வுலகத்தில் சிற்றின்பத்தைக்குறித்த ஒருபொருளை அவாவினால் அது பிறவிபத்தரும் வித்தாய்ப் பின்னும் முடிவில்லாத தன்பமே விளைத்தலாலே அது வேண்டாமை வேண்டவருமென்றுஞ் சொல்லினர்.

'வேண்டுங்கால்' என்ற இடத்து 'பிறப்புத் தன்பமாதல் அறிந்தவன்' என்பதும் 'ஒன்றை' என்பதும் வருவித்து உரைக்கப்பெற்றது. 'ஒன்றை' என்றது ஒப்புயர்வற்றதாகிய தனித்த வீட்டின்பத்தை. 'மற்று' இது வினைமாற்றில் வந்தது. 'அது' என்றது பிறவாமையை. 'வேண்டாமை' என்றது அவாவின்மையை. 'வேண்டாமைவேண்ட' என்றது மூன்றொடை. (2)

வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

(பரி-வுரை) வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை - ஒருபொருளாயும் அவாவாமையை யொக்கும் விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின்கண் இல்லை, ஈண்டும் அஃது ஒப்பது இல்-இனி அவ்

வரவே யன்று, கேட்கப்படுவென்ற பிறக்கத்தினுங்கூடும் அதனை யொப்பதில்லை எ-று.

மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மென்மே லேக்கக் கோதலுடைமையின், தனக்கு மேலில்லாத வேண்டாமையை விழுச்செல்வமென்றும், அதற்கு இரண்டுலகினும் ஒப்பதில்லையென்றுங் கூறினார். ஆகம அனைபோலாத காட்சியனைவை எல்லாராலுந் தெளியப்படுதலின், மக்கள் செல்வம் வகுத்து முற்கூறப்பட்டது. பிறவாமைக்கு வழியாமெனவும், விழுச்செல்வமாமெனவும், வேண்டாமையின் சிறப்பு இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

(ப-ரை) வேண்டாமையன்ன-(ஒருபொருளையும்) அவாவாமைபோலும், விழுச்செல்வம்-மேலாகிய செல்வமாவது, ஈண்டு-(காணப்படுகிற) இவ்வுலகத்திலே, இல்லை-இல்லை, (அவ்வனவேயன்றி) ஆண்டும்-(கேட்கப்படுகிற) அவ்வுலகத்திலும், அஃதொப்பது-அதுபோல்வது, இல்-இல்லை எ-று.

(க-ரை) இச்சியாமைக் கொப்பான செல்வம் இவ்வுலகத்திலும் மோக்ஷத்திலும் இல்லை என்பதாம்.

(வி-ரை) மக்களது செல்வமும், தேவரது செல்வமும், மேலுமேலுங் கோக்கக் கோதலால் தனக்கு மேலில்லாத வேண்டாமையை விழுச்செல்வமென்றும், அதற்கு இரண்டுலகங்களிலும் ஒப்பதில்லையென்றும் சொல்லினர். [இவ்விரண்டு பாட்டாலும் பிறவாமைக்கு வழியாமெனவும், மேலாகிய செல்வமாமெனவும், வேண்டாமையின் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'அன்ன' இது உவமஉருபு. 'விழுச்செல்வம்' என்றது மேலாகிய சிறந்த செல்வம் என்ற பொருளது. 'விழு' இது 'விழுமை' என்னும் பண்புப்பகாப் பிறந்தது. 'ஈண்டு' என்றது இவ்வுலகத்தை. 'ஆண்டும்' இது அவ்வுலகத்திலும் என்பதாம். ஈண்டு அகரச்சுட்டு நீண்டுநின்றது. 'அஃது' என்றது அவா இன்மையை. ஒய்தம் இடைவந்தசுட்டு. 'இல்' இது 'இல்லை' என்னுங் குறிப்புவினைமுற்றின்விகாரம். (3)

தானுஉய்மை யென்ப தவாவின்மை மற்றது வாஅய்மை வேண்ட வரும்.

(பரி-உரை) தானுஉய்மை என்பது அவாவின்மை - ஒருவர்க்கு வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமை; அது வாய்மை வேண்ட வரும் - அவ்வவாவில்லாமை தான் மெய்ம்மையை வேண்டத் தானே புண்டாம் எ-று.

வீடாவது உயிர் அவிச்சை முதலிய மாசு நீக்குதலாகலின், அதனைத் தாய்மையென்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்துத் தாய்மை யென்றும், தவாவின்மை யென்றும், மெய்ம்மையுடைய பாத்தை ஆகுபெயராய் மெய்ம்மையென்றுங் கூறினர். மற்ற மேலையதுபோல வினைமாற்றின்கண் வந்தது. வேண்தல்-இடைவிடாது பாவித்தல். அவாவறுத்தல் வீட்டிற்கும்

ாம்பரையானன்றி கேரே யேதவென்பதனும், அது வரும் வழியும் தனுற் கூறப்பட்டன.

(ப-ரை) தாயம்மை யென்பது-(ஒருவர்க்கு) முத்தியென்ற சொல்லப் டுவது, அவாவின்மை - அவாவில்லாமையாம், அது - அவ்வவாவில்லாமை, ாதாய்மை-மெய்ம்மையை, வேண்ட-இச்சிக்க, வரும்-தானேயுண்டாம் எ-று.

(க-ரை) மெய்ம்மையை யிச்சிக்கவருவது தூசையில்லாமை அதே முத்தி ன்பதாம்.

(வி-ரை) வீடாவது - உயிர் அஞ்ஞான முதலாகிய அழுக்கறுதலாதலால் தனைத் தாய்மையென்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்துத் தாய்மை யென்பது அவாவின்மையென்றும், வாய்மையையுடைய பரத்தை ஆருபெய ால் வாய்மையென்றும் சொல்லினர். மற்று - அசை. வேண்டுதல் - இடை டாத பாவித்தல். [அவாவறுத்தல் முத்திக்குகேரே காரணமென்பதும் து வருவழியும் இதனுலே சொல்லப்பட்டன].

'தாய்மை' இது மாசுநீர்த்தது, பரிசுத்தமானது என்னும் பொருளது. ண்டு மாசு அற்று விளங்குவதாகிய வீட்டுலகைக் குறித்து நின்றது. ாய்மை' என்றது உண்மையை; ஈண்டு உண்மைப்பொருளாகிய இறை னை உணர்த்திநின்றது. (4)

அற்றவ ரென்பா ரவாவற்றூர் மற்றையா
ரற்றுக வற்ற திலர்.

(பரி-உரை) அற்றவர் என்பார் அவா அற்றூர் - பிறவியற்றவரென்று சால்லப்படுவார் அதற்கு கேரே யேதுவாகிய அவாவற்றவர்கள்; மற்றை ர் அற்று ஆக அற்றது இலர் - பிற எதுக்களற்று அஃதொன்றும் அரு ர்கள், அவற்றுல் சில தன்பங்க ளற்றதல்லது அவர்போற் பிறவியற் ர் எ-று.

இதனுல் அவா அறுத்தாரது சிறப்பு விதிமுகத்தானும், எதிர்மறைமுகத் னுல் கூறப்பட்டது.

(ப-ரை) அற்றவரென்பார் - (பிறவி) யற்றவரென்று சொல்லப்படுமவர், ாவற்றூர் - (அதற்கு கேரே எதுவாகிய) அவ்வாசையற்றவர், மற்றையார்- வேதுக்கள் அற்று அதுவொன்றும் அருதவர், (அவ்வேதுக்களாலே சில ர்பங்கள் அற்றவரல்லாமல்) அற்றுகவற்றதிலர் - அவர்போற் பிறவியற் ர் எ-று.

(க-ரை) பிறவியற்றவரென்று சொல்லப்படுபவர் தூசையற்றவர் என் ாம்.

(வி-ரை) [இதனுல் அவாவற்றவரது சிறப்பு விதியினுலும் எதிர்மறையி ம் சொல்லப்பட்டது.]

'அற்றவர்' என்றது பிறவித்துயர் அற்றவர் என்பதாம். 'மற்றையர்' என்றது முற்றும் அவா அறுதலவர்களை. 'அற்றார்' இது அவ்விதமாக வரும் பொருளது. இது அகரச்சுட்டடியாகப் பிறந்தது. 'இலர்' இது 'இ' என்பதன் அடியாகப் பிறந்த பலர்பாற்பெயர். (5)

அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

(பரி-உரை) ஒருவனை வஞ்சிப்பது அவா - மெய்யுணர்தல் முருகிய காணல்களெல்லாம் எய்தி அவற்றுள் வீடெய்தற்பாலனுய ஒருவனை மறவிவழியாற் புகுந்து பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்க வல்லது அவா; அஞ்சுவதே அறன் - ஆகலான், அவ்வவாவை அஞ்சிக் காப்பது அறவறமாவது எ-று.

ஒருமென்பன அசைநிலை. அநாதியாய்ப் போந்த அவா, ஒரோவழி வாய்மை வேண்டலை யொழிந்த பராக்காற் காவாதுயின், அஃது இடமாக அவனறியாமற் புகுந்து பழைய இயற்கையாய் நின்று பிறப்பினை யுண்டாக்குதலான், அதனை வஞ்சிப்பதென்றார். காத்தலாவது - வாய்மை வேண்டலிடைவிடாது பின்று அது செய்யாமற் பரிகரித்தல். இதனால் அவாவின் குற்றமும் அதனைக் காப்பதே அறமென்பதனுவ் கூறப்பட்டன.

(ப-ரை) ஒருவனை - (மெய்யுணர்தல் முடிவாகிய காரணங்களெல்லாம் பெற்ற அவைகளால் முத்தியை அடைதற் குரியவனுகிய) ஒருத்தனை, வஞ்சிப்பது - மாவிவழியிலுலே நுழைந்து பின்னும் பிறவியிலே தள்ளிக் கெடுக்க வல்லது, அவா - அவாவாம், (ஆகலால்) அஞ்சுவது - (அவ்வவாவை) அஞ்சிக் காப்பதே, அறன்-அறவறமாம் எ-று.

(க-ரை) ஒருவனைக் கெடுக்க வல்லதாகிய ஆசையை நீக்குவதே அறம் என்பதாம்.

(வி-ரை) ஒரும் இரண்டும் அசைகள். அநாதியாய்வந்த அவ்வவா ஒரோவிடத்து வாய்மையை வேண்டுதலேயொழிந்து பராக்கினுலே காத்திடாதுயின் அது இடமாக அவன் அறியாமல் புகுந்து பழைய விபரீதங்களின்று பிறப்பினை உண்டாக்குதலால் அதனை வஞ்சிப்பதென்றார். காத்தலாவது-வாய்மை வேண்டலிலே இடைவிடாமற் பழகிப்பரிகரித்தல். [இதனுல் அவாவின் குற்றமும் அதனைக் காப்பதே அறமென்பதனும் சொல்லப்பட்டது].

'அறனே' என்றது குறைவாகிய அறத்தை. ஈற்றில்நின்ற ஏகார இடைச்சொல் தேற்றப்பொருளில் வந்தது. 'ஒரும்' என்ற இரண்டு அசைகளாக ஒதுக்கப்பெற்றன. இதற்குப் பொருள்செய் துரைப்பாரும் உண்டு. 'வஞ்சிப்பது' என்பதற்கு பின்னும் பிறப்பிற் புகுத்திக் கெடுக்கவல்லது என்று பொருள் செய்யப்பெற்றது கவனிக்கத்தக்கது. (6)

அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றுன் வரும்.

(பரி-உரை) அவாவினை முற்ற அறுப்பின்-ஒருவன் அவாவினையஞ்சித்த ாக் கெடுக்கவல்லனுயின், தவா வினைதான் வேண்டும் முற்றுன் வரும்- வனுக்குக் கேடாமைக்கு ஏதுவாகிய வினைதான் விரும்பு தெறியானே ண்டாம் எ-று.

கேடாமை - பிறவித்துன்பங்களான் அழியாமை. அதற்கேதுவாகிய னை யென்றது மேற்சொல்லிய துறவறத்தினை. வினை-சாதியொருமை. தான் ரும்புதெறி-மெய்வருந்தாதெறி. அவாவினை முற்ற அறுத்தானுக்கு வேறு றஞ் செய்யவேண்டா, செய்தனவெல்லாம் அறமாமென்பது கருத்து. தனுல் அவாவறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) அவாவினை-ஆசையினை, முற்றவறுப்பின்-முழுத றுத்தால், (வஞ்சித்தும் வாராமற் கெடுக்கவல்லவனுயினென்றபடி அவ க்கு) தவாவினை-கேடாமைக்கு ஏதுவாகியசெயல், தான் வேண்டுமாற்றுல்- ான் விரும்பும் வழியினுலே, வரும்-உண்டாகும் எ-று.

(க-ரை) ஒருவனிச்சையை நீக்கினு லவன் கேடாமைக் கேதுவுண்டு ன்பதாம்.

(வி-ரை) கேடாமை - பிறவித்துன்பங்களால் அழியாமை. அதற்கு ாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறத்தினை. தான் விரும்பும் ழி - மெய்வருந்தாதவழி. அவாவை முழுவதும் அறுத்தவனுக்கு மேலே ஞ் செய்யவேண்டுவதில்லை அவனுல் செய்யப்பட்டவையெல்லாம் அறமா ன்பது கருத்து.

'முற்ற' என்பதற்கு முற்றும் ஒரு சிறிதும் எஞ்சலின்றி என்பது பொரு ம். 'தவாவினை' இது கெடுதலற்றதும் வீடுதருவதும் ஆகிய துறவறவினை றதாம். (தவா-கெடாத). (7)

அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவா அது மேன்மேல் வரும்.

(பரி-உரை) அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும்-அவா இல்லா க்கு வாக்கடவதொரு துன்பமுமில்லை, அஃது உண்டேல் தவாது மேன் ல்வரும் - ஒருவற்குப் பிறகாரணங்களெல்லாம் இன்றி அஃதொன்றும் டாயின், அதனுனே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் ம் எ-று.

உடம்பு முதற்றின்ற துன்பம் முன்பே செய்துகொண்டதாகலின் ஈத் துன்பமென்றது. இதுபொழுது அவாவாற் செய்துக்கொள்வன ற. தவாது மேன்மேல் வருமென்றதனுன் மூவகைத் துன்பங்களு பது பெற்றும். இதனுல் அவாவே துன்பத்திற்குக் காரணமென்பது பட்டது.

(ப-ரை) அவாவில்லார்க்கு-ஆசையில்லாதவர்க்கு, என்பம்-(யாக்கை) தொரு என்பம், இல்லாகும்-இல்லையாகும், (ஒருவற்குப் பிறகாரணத்தை சொல்லாம் இல்லாதிருத்தம்) அஃதென்றேல் - அவ்வொன்றுமாத்திரம் உண்டாயின், (அதனால் எல்லாத் துன்பங்களும்) தவாஅது - முடிவில்லாமல், மேன்மேல் வரும்-மேலுமேலும் வரும் எ-று.

(க-ரை) ஆசையற்றவர்களுக்குத் துன்பமில்லை என்பதாம்.

(வி-ரை) உடம்பு மொன்டுகொண்ட துன்பம் முன்பே செய்தகொள் ளப்பட்டதாகலின் இங்கே துன்பமென்றது இப்போது அவாவாலே செய் துக்கொள்ளப்படுகின்றவைகளை. மேன்மேல் வருமென்றதனால் தன்னைப் பற்றி வருவதும், பிறவுயிரைப்பற்றி வருவதும், தெய்வத்தைப்பற்றி வரு தும் ஆகிய மூவகைத் துன்பங்களென்பதை பெற்றாம். [இதனால் அவா துன்பத்திற்குக் காரணமென்பது சொல்லப்பட்டது.]

'அஃத' என்றது அவாவை. 'தவாஅத' என்பதற்கு முடிவின்றி என்று உரைசெய்யப்பெற்றது. 'துன்பம்' என்றது பிறவித் துன்பங்களை. 'மேல் மேல் என்றது மிகுதிபற்றி அடுக்கிவந்தது. 'இல்லார்க்கு இல்லாகும்' என்பதில் இல்லா என்றது இருமுறைவந்தது சொற்பொருட் பின்வருநிலையணி. 'தவாஅத' இது சொல்லிசை யளபெடை. (8)

இன்ப மிடையறு நீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

(பரி-உரை) அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - அவாவென்ற சொல்லப்படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமாயின், சண்டும் இன்பம் இடை அறாது-அவன் வீடு பெற்றவழியேயன்றி உடம்போடு நின்ற வழியும் இன்பம் இடையறாது எ-று.

துன்பத்துள் துன்பம்-எனைத்துன்பங்களெல்லாம் இன்பமாகவருந் துன் பம். விகோவின்கண்ணே அன்றித் தோற்றத்தின்கண்ணும் துன்பமாகலின் இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரியமாக உபசரித்து அவாவென்னும் துன்பத்துட் டுன்பமென்றும், அது கெட்டார்க்கு மனந் தடுமாறுதல் நிகழ்கின்றவான் சண்டு மின்ப மிடையறுதென்றுங் கூறினார். இனி சண்டு மென்பதற்குப் பெருகுமென் றுரைப்பாருமுளர். இதனால் அவா அறுத்தார் வீட்டின்பம் உடம்பொடுநின்றே யெய்துவரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) அவாவென்னும்-அவாவென்று சொல்லப்படுகிற, துன்பத்-துன்பம் - துன்பங்களுள்ளே மிகுந்த துன்பமானது, கெடின்-ஒருவனுக்குக் கெடுமாயின், (அவன்முத்திபெற்றவிடத்தேயல்லாமல்) சண்டும் - இவ்வுடம்பு (உடம்போடுகூடி நின்றவிடத்தும் மென்றபடி) இன்பம் - ஆனந்தமானது இடையறாது-கடுவே நீங்காது எ-று.

(க-ரை) மிகத் துன்பந்தருவதாகிய ஆசை கெடின் இவ்வுலகத்தினும் ...ன்பம் என்பதாம்.

(வி-ரை) துன்பத்துட்டுன்பமாவது மற்றைத் துன்பங்களெல்லாம் இன் ...ங்களாய்த் தோன்றும்படியாகவருங் கொடிய துன்பமாம். அவாவானது ...யனைக் கொடுக்கும்போதேயல்லாமல் தோன்றும்போதும் துன்பமாகலால் ...ப்படிச் சொல்லப்பட்டது. அவாவென்னுந் துன்பத்துட் டுன்பமென்று ...ாரணத்தைக் காரியமாக உபசரித்தார். அவ்வவாக்கெட்டவர்க்கு மனந்தடு ...ாறாது நிரம்பிநிற்குமாகையால் ஈண்டும் இன்பம் இடையறாதென்றார். ...இதனால் அவாவறுத்தவர் முத்தியின்பத்தை உடம்போடுநின்றே அடைவா ...ரன்பது சொல்லப்பட்டது.]

'இன்பம்' என்றது வீட்டின்பத்தை. 'இடையறாது' என்றது மத்தியில் ...ட்டு நீங்காது என்பதாம்; அதாவது ஒரேதொடராய் என்பதாம். 'ஈண்டும்' ...ன்பதற்கு இவ்வுலகத்தும் என்பது பொருளாம். இனி மிகப்பெருகும் ...ன்றுரைத்தலுமாம். 'துன்பத்துட்டுன்பம்' என்றது பெருந்துன்பம் என்ப ...ம். என்னை? அவாவே துன்பங்கட்கெல்லாங் காரணமாதலின் இவ்வாறு ...றினார்.

(9)

ஆரா வியற்கை யவா நீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

(பரி-உரை) ஆரா இயற்கை அவா நீப்பின்-ஒருகாலும் நிரம்பாத இயல் ...னயுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின், அந்நிலையே பேரா இயற்கை ...ம் - அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒருநிலைமையனாம் ...ல்பைக் கொடுக்கும் எ-று.

நிரம்பாமையாவது தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண் ...தனவாய பொருள்களை வேண்டி மேன்மேல் வளர்தல். அவ்வளர்ச்சிக்கு ...ாவின்மையின், நீத்தலே தக்கதென்பது கருத்து. களிப்புக்கவற்சிகளும் ...ப்புப் பிணி மூப்பு இறப்புக்களும் முதலாயினவின்றி உயிர் நிரதிசய இன் ...தாய் நிற்றலின் வீட்டினைப் பேராவியற்கையென்றும், அஃது அவா ...வழிப்பெறுதல் ஒருதலையாகலின் அந்நிலையே தருமென்றுங் கூறினார். ...ன்றாய் ஞானங் கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீர்த், தொன்றாய்க் ...த வரும்பெரும்பா ழுலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து, சென்றாங் ...பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றா, லன்றே யப்போதே வீடு ...வே வீடு வீடாமே" என்பதும் இக்கருத்தேபற்றிவந்தது. இந்நிலைமை ...யவனை வடநூலார் சீவன்முத்தன் என்ப. இதனால் வீடாவது இது ...ப்பதூஉம் அஃது அவா அறுத்தார்க்கு அப்பொழுதே உளதா ...பதூஉங் கூறப்பட்டன.

* திருவாய்மொழி 78-ம் திருப்பதிகம்-6.

(ப-ரை) ஆராவியற்கை - (ஒருபோதும்) நிரம்பாத இயல்பையுடைய, அவா-அவாவை, நீப்பின் (ஒருவன்) விடுவானாயின், (அவ்விடுகை அவனுக்கு) அந்நிலையே - அப்போதே, பேராவியற்கை - (எப்போதும்) ஒருநிலைமையனாந் தன்மையை, தரும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) நிரம்பாத ஆசையைவிடில் அது பிறவாமையைத்தரும் என்பதாம்.

(வி-ரை) நிரம்பாமையாவது - தாமே யல்லாமல் தம்பயனும் நிலையாமையால் வேண்டத்தகாத பொருள்களை வேண்டி மேலுமேலும் வளர்தல். அவ்வளர்ச்சிக்கு அளவில்லாமையால் விடுதலே தக்கதென்பது கருத்து. களிப்புக் கவலைகளும் பிறப்புப்பிணி மூப்பு இறப்புகளும் முதலானவை இல்லாமல் உயிர் ஒப்புயர்வில்லாத இன்பத்தை அடைந்துநிற்கையால் வீட்டினைப்பேராவியற்கையென்றும், அதை அவாவை விட்டவிடத்துப் பெறுதற்கு ஐயமில்லாமையால் அந்நிலையே தருமென்றும் சொல்லினார். அந்நிலைமையை யுடையவனைச் சீவன்முத்தனென்பர். [இதனால் வீடாவது இதுவென்பதும் அதை அவாவறுத்தவர்க்கு அப்போதே உண்டாமென்பதும் சொல்லப்பட்டன.]

'ஆராவியற்கை' என்றது அவாவிற்கு அடைமொழி. அவாவானது "பெற்ற சிறுகப் பெறாத பெருதுள்ளுதலின்" ஆராவியற்கை என்றனர். 'அந்நிலையே' என்றது அஞ்ஞான்றே என விரைவு குறித்துநின்றது. அதாவது அவாவினை நீத்த அந்தக்கணத்தே என்பதாம். 'நீப்பின்' என்பதன் 'இன்' உருபு நீக்குமானால் என்னும்பொருள் பயந்துநின்றது. "பேரா இயற்கை" என்றது நித்தியமாகிய முத்திப்பேற்றை. (10)

37-ம் அதி - அவாவறுத்தல் - முற்றிற்று.

துறவியல் முற்றுப்பெற்றது.

ஆக அதிகாரம் 37-க்கு திருக்குறள்-370.

(பரிமேலழகர்) இவ்வாற்றான் இம்மை மறுமை வீடென்னு மூன்றையும் பயத்தற் சிறப்புடைத்தாய அறங்கூறினார். இனிப் பொருளு மின்பமுங் கூறுவார், அவற்றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறுகின்றார்.

(உரை) இவ்விதத்தால் இம்மை மறுமை வீடு என்கிற மூன்றையும் உண்டாக்குஞ் சிறப்புடைத்தாகிய அறத்தை அருளிச்செய்தார். இனி முறையே பொருளும் இன்பமும் அருளிச்செய்யத்தொடங்கியவர் அவைகளுக்கு முதற்காரணமாகிய ஊழின்வலி சொல்லுகிறார்.

38-ம் அதிகாரம்—ஊழ்

(பரி-உரை) அஃதாவது: இருவினைப்பயன் செய்தவினையே சென்றடைற்கு ஏதுவாகிய கியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், கியதி, விதி ன்பன ஒருபொருட் கிளவி. இது பொருளின்பக்கம் இரண்டற்கும் பாதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையாலும், மேற்கூறிய அறத்தோடு ையபுடைமையாலும் அதனை இறுதிக்கண் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: கல்வினைப்பயனாகிய இன்பமும், தீவினைப்பய ாகிய துன்பமும் அவ்வினைகளைச் செய்தவனையே சென்று அடைதற்கு ஏது ாகிய கியதியாம். ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், கியதி, விதி ன்பவை ஒருபொருட்சொற்கள். இது பொருளின்பக்க மிரண்டுக்கும் பாதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையாலும், முன் சொல்லப்பட்ட றத்தோடு சம்பந்தமுடைமையாலும் அதனிறுதியிலே சொல்லப்பட்டது.

ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.

(பரி உரை) கைப்பொருள் ஆகு ஊழால் அசைவின்மை தோன்றும்; வற்குக் கைப்பொருளாதற்குக் காரணமாகிய ஊழான் முயற்சி புண் ாம்; போகு ஊழால் மடி தோன்றும் - அஃது அழிதற்குக் காரணமாகிய ழான் மடியுண்டாம் எ-று.

ஆகூழ் போகூழ் என்னும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக் பட்டுக் காரணப்பொருளவாய் கின்றன. அசைவு-மடி. பொருளின் ஆக்க திவுகட்குத் துணைக்காரணமாகிய முயற்சி மடிகளிலும் தானே தோற்று க்குமென்பது கருத்து.

(ப-ரை) (ஒருவனுக்கு) கைப்பொருள்-கையிலிருக்கும் பொருள், ஆகூ ல்-ஆகுதற்குக் காரணமாகிய வூழினாலே, அசைவின்மை-முயற்சியானது, ான்றும் - உண்டாகும், போகூழால் - போகுதற்குக் காரணமாகிய வூழி லே, மடி-சோம்பலானது, தோன்றும்-உண்டாகும் எ-று.

(க-ரை) ஒருவனுக்குப் பொருள் வரும் விதியால் முயற்சியும் பொரு தியும் விதியால் சோம்பலும் உண்டாகும் என்பதாம்.

(வி-ரை) ஊழானது ஒருபொருளினது ஆக்கவழிவுகளுக்குத் துணைக்கார மாகியமுயற்சிசோம்பல்களிலும்தானே தோன்றச்செய்யுமென்பதுகருத்து.

'ஆகூழ்' என்றது கல்வினையை. 'ஆகூழ்' 'போகூழ்' என்பன இரண்டும் காலங்களுக்கும் பொதுவாக இருத்தலினாலும் காலக்காந்த பெயரெச்ச தலினாலும் இவை வினைத்தொகை. 'அசைவின்மை' என்றது முயற்சியை.) கேடின்மை என்னும் காரணம்பற்றிவந்தபெயர். என்னை? முயற்சி உன்மையைத் தருதலின் என்க (அசைவு-கேடு) முயற்சி உடைமை ந்தாலின் இவ்வாறு கூறினுர்போலும். 'கைப்பொருள் ஆகூழாற் ன்றும்' என்றது பொருள்கோள். என்னை? கைக்குப் பொருள்

பெறல் முயற்சியாலாதலின் என்க. உள்ள கைப்பொருள் சோம்பலாற் றொலையுமாதலினாலும், சோம்பல் போகூழின் செயலாதலினாலும் 'போகூழாற் றோன்றுமடி' என்றார். 'போகூழ்' என்றது தீவினையை. என்னை? 'போகூழ்' தீவினைப் பயத்ததாகலின் என்க. 'போகூழ்' என்றது செல்வத்தைச் சிதைக்கும் ஊழ், ஆக்கத்தைப் போக்கும் ஊழ் என்னுங் காரணம் பற்றிவந்த பெயர். (1)

பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று மாகலூ ழூற்றக் கடை.

(பரி-உரை) இழவு ஊழ் (உற்றக்கடை) அறிவு பேதைப்படுக்கும் - ஒருவனுக்கு எல்லா அறிவு முளவாயினும் கைப்பொரு ளிழத்தற் கேதுவாகிய ஊழ்வந்து உற்றவிடத்து அஃது அதனைப் பேதையாக்கும்; ஆகல் ஊழ் உற்றக்கடை அகற்றும்-இனி அவனறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற் கேதுவாகிய ஊழ்வந்து உற்றவிடத்து அஃது அதனை விரிக்கும் எ-று.

கைப்பொருளென்பது அதிகாரத்தான் வந்தது. இழவூழ் ஆகலூழ் என்பன இரண்டும் வேற்றுமைத்தொகை. உற்றக்கடை யென்பது முன்னுங் கூட்டப்பட்டது. இயற்கையானாய அறிவையும் வேறுபடுக்கு மென்பதாம்.

(ப-ரை) (ஒருவனுக்கு) அறிவு - எல்லாவறிவும் உண்டாயிருந்தாலும், இழவு - (கைப்பொருளை) இழத்தற்குக் காரணமாகிய, ஊழ் - ஊழ், (உற்றக்கடை)-பொருந்தியவிடத்து, பேதைப்படுக்கும்-(அதனை) அறியாமையாக்கும் (அவனறிவு சுருங்கியிருந்தாலும்) ஆகல்-(கைப்பொருள்) ஆகுதற்குக் காரணமாகிய, ஊழ்-ஊழ், உற்றக்கடை - பொருந்தியவிடத்து, அகற்றும் - (அதனை) விரிக்கும் எ-று.

(க-ரை) போகும் ஊழ் அறிவில்லாமையையும் ஆகும் ஊழ் அறிவையும் தரும் என்பதாம்.

(வி-ரை) கைப்பொருளென்பது அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது ஊழ் இயற்கையாலாகிய அறிவையும் வேறுபடுத்துமென்பதாம்.

'இழவூழ்' என்றது போகூழை. 'பேதைப்படுக்கும்' இது உள்ள நல்லறிவைப்போக்கி சோம்பற்கேதுவாகிய அறிவின்மையை ஆக்கும் என்பது தோன்றக் கூறப்பெற்றமை காண்க. 'அறிவு அகற்றும்' என்றது சுருங்கி நல் அறிவை பெருகச்செய்யும் என்னும் பொருளது. 'உற்றக்கடை' என்றது கடைநின்று இழவூழோடும் ஆகலூழோடும் கூட்டி யுரைக்கப்பெற்றமையின் இது கடைநிலைத்தீபக அலங்காரம். 'கடை' என்றது ஏழன் உருபு. இடப் பொருள் தந்து நின்றது.

நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன் னுண்மை யறிவே மிகும்.

(பரி-உரை) நுண்ணிய நூல் பல கற்பினும்-பேதைப்படுக்கும் ஊழுடையான் ஒருவன் நுண்ணிய பொருள்களை யுணர்த்தும் நூல் பலவற்றையும்

ருளையும், மற்றும் தன் உண்மை அறிவே மிகும்-அவற்றுக்குப் பின்னும் ஊழானுகிய பேதைமை புணர்வே மேற்படும் எ-று.

பொருளிலுண்மை நூலின்மே லேற்றப்பட்டது. மேற்படுதல் - கல்வி லைவைப் பின்னிசைக்குதற்காக்கிச் செயலுக்குந் தான் முற்படுதல். *"காதன் க்குழிக் கற்றவுங் கைகொடா-வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்" ர்பதம் அது. செயற்கையாலுய அறிவையுங் கீழ்ப்படுத்துமென்பதாம்.

(ப-ரை) (அறியாமை யாக்குவதாகிய ஊழுடையவனொருவன்) நன்மை-நட்பமான பொருள்களையுடைய, நூல்பல-பல நூல்களையும், கற்பினும்-ருளையும், (அவனுக்கு) மற்றும் - பின்னும், தன்னுண்மை - தனது ழிலுலகிய, அறிவே-அறிவே, மிகும்-மேற்படும் எ-று.

(க-ரை) ஒருவனுட்பமாகிய நூல்களைக் கற்றாலும் அவனுக்கு ஊழினுகிய அறிவே மிகும் என்பதாம்.

(வி-ரை) பொருளிலுண்மை நூலின்மேல் ஏற்றப்பட்டது. மேற்படுதல்-வியறிவைப் பின்னே இதை என்செய்தோமென்ற தன்பப்படுதற்காக்கிச் யலுக்குந் தான் முற்படுதல். செயற்கையாலாகிய அறிவையும் கீழ்ப் த்துமென்பதாம்.

'நண்ணியநூல்' என்றது நண்ணியதாகிய அறிவைத்தரும் நூல்களை. ண்ணிய' என்றது கூரிய மதியை. 'கற்பினும்' இது கற்றாலும் என்ற ாருளது. இதன்கண்நின்ற உம்மை உயர்வுச்சிறப்புப்பொருளது. 'நண்மை றிவே' என்ற இடத்து 'நண்மை' 'அற்பம்' என்னும் பொருளில் வந்தது. நில்கின்ற ஏகாரம் தேற்றப்பொருளது. (3)

இருவே றுலகத் தியற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு.

(பரி-உரை) உலகத்து இயற்கை இரு வேறு-உலகத்து ஊழினுலைய ற்கை இரண்டுகூறு, திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறு - ஆதலாற் ல்வமுடையராதலும் வேறு, அறிவுடையராதலும் வேறு எ-று.

செல்வத்தினைப் படைத்தலுங் காத்தலும் பயன்கோடலும் அறிவுடை க்கல்லது இயலாவன்றே, அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் யர்ர் செல்வராகவுங் காண்டலான், அறிவுடையாதற்காகும் ஊழ் ல்வமுடையாதற்கு ஆகாது. செல்வமுடையாதற்காகும் ஊழ் வுடையாதற்கு ஆகாதென்றதாயிற்று. ஆகவே செல்வஞ் செய்புக்கால் வாகிய இணைக்காரணமும் வேண்டாவென்பது பெற்றும்.

(ப-ரை) உலகத்து-உலகத்தில், இயற்கை-(ஊழினுலாகிய) இயற்கை ாது, இருவேறு-இரண்டுகூறுயிருக்கின்றது, (ஆதலால்) திரு வேறு-ல்வமுடையவராதலும் வேறு, தெள்ளியராதலும் வேறு - அறிவுடையவ ரும் வேறு எ-று.

---

* சிவகசிந்தாமணி; கனகமாலையாரிலம்பகம்-76.

(க-ரை) உலகில் ஊழின் இயல்பு செல்வமுடைமை அறிவுடைமை என இரண்டுவகை என்பதாம்.

(வி-ரை) செல்வத்தைப் படைத்தலும், காப்பாற்றலும், பயன்கொள்ளுதலும் அறிவுடையவர்க்கல்லது கூடாவென்றே, அவ்விதமல்லாமல் அறிவுடையவர் வறியவராகவும், மற்றவர் செல்வராகவும் காணுதலால், அறிவிலாதற்கு ஆகிற வூழ் செல்வராதற்கும், செல்வராதற்கு ஆகிற வூழ் அறிவிலாதற்கும் ஆகாவென்றதாயிற்று. ஆகவே செல்வத்தைத் தேடும்போது அறிவாகிய துணைக்காரணமும் வேண்டாமென்பது பெற்றாம்.

"இருவேறு உலகத்து இயற்கை" என்றது உலகத்து இயற்கை இருவேறு என்னப் பொருள் கொள்ளப்பெற்றது. 'இருவேறு' இது இரண்டு பாகுபாடுகளை உடையது என்னும்பொருளது. 'உலகத்து இயற்கை' என்ற இடத்து ஊழினாலாகிய என்னுஞ் சொற்கள் வருவித்து, "உலகத்து ஊழினாலாகிய இயற்கை" எனப் பொருள் கூறப்பெற்றது. 'ஆதலும்' என்ற சொல் 'திரு' என்பதனோடுங் கூட்டி யுரைக்கப்பெற்றது. இதற்கு செல்வமுடையராதலும் என்பது பொருளாம். 'தெள்ளியராதல்' என்றது அறிவு மிகுந்து உள்ளத்தெள்ளியராதலை. இதனால் அறிவுதரும் நல்வினைவேறு, செல்வந்தரும் நல்வினை வேறு என்றதாம். என்னை? நல்வினை பலதிறத்தனவாதலின் என்க.

நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

(பரி-உரை) செல்வம் செயற்கு-செல்வத்தை யாக்குதற்கு, நல்லவை எல்லாம் தீயவாம் - நல்லவையெல்லாந் தீயவாய் அழிக்கும், தீயவும் நல்லவாம் அதுவேயன்றித் தீயவை தாமும் நல்லவாய் ஆக்கும் ஊழ்வயத்தான் எ-று.

நல்லவை தீயவை யென்பன-காலமும் இடனும் கருவியும் தொழிலும் முதலாயவற்றை. ஊழானென்பது அதிகாரத்தாற் பெற்றாம். அழிக்கும் ஊழ் உற்றவழிக் காலமுதலிய நல்லவாயினும் அழியும், ஆக்கும் ஊழ் உற்றவழி அவை தீயவாயினும் ஆகுமென்பதாயிற்று. ஆகவே காலமுதலிய துணைக்காரணங்களையும் வேறுபடுக்குமென்பது பெற்றாம்.

(ப-ரை) செல்வம்-செல்வத்தை, செயற்கு-உண்டாக்குதற்கு, நல்லவையெல்லாம்-நன்மை யுள்ளவையெல்லாம், தீயவாம் - தீயவையாய் அழிக்கும் (அதுமாத்திரமல்லாமல்) தீயவும் - தீயவைதாமும், நல்லவாம் - நல்லவையாக்கும் (ஊழ்வசத்தால்) எ-று.

(க-ரை) விதிவசத்தால் நல்லவையெல்லாந் தீயவாம், தீயவையெல்லாம் நல்லவாம் என்பதாம்.

(வி-ரை) நல்லவை தீயவை என்றது காலமும் இடமும் கருவியும் தொழிலும் ஆகிய இவை முதலானவைகளை. ஊழாலென்பது அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. அழிக்குமூழ் உற்றவிடத்துக் காலமுதலானவைகள் நல்லவையாயிருந்தாலும் அழியும், ஆக்குமூழ் உற்றவிடத்து அவை தீயவையா

ருந்தாலும் ஆகுமென்றதாயிற்று. ஆகவே ஊழ்காலமுதலான தினைக் ாரணங்களோடும் வேறுபடுத்தமென்பது பெற்றும்.

போகூழ் உற்றக்கடை கல்லவை எல்லாம் நீயவாம், ஆகூழ் உற்றக் டை நீயவும் கல்லவாம் என அதிகாரத்தால் போகூழ் ஆகூழ் வருவித் ரைக்கப்பெறும். இக்குறளை "கல்லாள் உடன்படிற் ருனே பெருகும் கெடும் பொழுதிற் கண்டனவுங் காணாக் கெடும்" எனவும், "ஆக்கால மெய்வருந்த வண்டாம் தேக்காய்க் கினநீர்போற் சேருமே" என்ற ஆன்றோர் வாக்குகள் லிபுறுத்தும். 'நீயவும்' என்றதன்கண்ணின்ற உம்மை இழிவுச்சிறப்பும்மை.(5)

பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச் சொரியினும் போகா தம.

(பரி-உரை) பால் அல்ல பரியினும் ஆகாவாம் - தமக்கு ஊழல்லாத பொருள்கள் வருந்திக்காப்பினும் தம்மிடத்து நில்லாவாம், தம உய்த்துச் சொரியினும் போகா - ஊழால் தமவாய பொருள்கள் புறத்தே கொண்டு போய்ச் சொரிந்தாலும் தம்மைவிட்டுப் போகா எ-று.

பொருள்களினிலேயும் போக்கும் ஊழினுள் ஆவதல்லது காப்பு இகழ்ச் னான் ஆகாவென்பதாம். இவை ஆறுபாட்டானும் பொருட்குக் காரண ாய ஊழின்வலி கூறப்பட்டது.

(ப-ரை) பால் - ஊழினுலே, அல்ல - தம்முடையவை யாகாத பொருள் ள், பரியினும் - வருந்திக்காப்பாற்றினாலும், ஆகாவாம்-(தம்மிடத்து) நில்லா ற்போகும், தம - தம்முடையவையாகிய பொருள்கள், உய்த்து - (புறத்தே) காண்டுபோய், சொரியினும்-பெய்தவிட்டாலும், போகா-(தம்மைவிட்டுப்) பாகாவாம் எ-று.

(க-ரை) ஊழினுல் தமக்குரித்தாகாப் பொருள்களைக் காப்பாற்றினாலும் ல்லா, உரித்தாகும்பொருள்களைப் புறத்திற்போக்கினாலும் போகா என்பதாம்.

(வி-ரை) பொருள்களது நிலையும் போக்கும் ஊழால் ஆவதல்லது காப் னாலும் இகழ்ச்சியினாலும் ஆகாதென்பதாம். [இவை ஆறுபாட்டாலும் பாருள்களுக்குக் காரணமாகிய ஊழின்வலி சொல்லப்பட்டது.]

'பரிதல்' என்றது ஈண்டு வருந்திக்காத்தலை. 'பாலல்ல' என்றது ஆகூழ்ப் ருதி அல்லாதது என்பதாம். 'பால்' என்றதே 'ஊழ்' என்பதன் பொருள ாம் என்பது அறியற்பாலது. 'ஆகா' என்றது நிலைத்திராது என்னும் பொரு தாம். 'உய்த்து' இது சுமந்துகொண்டுபோய் என்னும் பொருளது. 'தம' ன்றது ஆகூழாற் றம்மதாகிய பொருள்கள் என்பதாம். 'ஆம்' இது ஆகும் ன்பதன் இடைக்குறை விகாரம். 'பாலல்ல' என்றது இடைநின்று பாலல்ல ாயினும் ஆகாவாம், பாலல்ல உய்த்துச்சொரியினும் போகா என இயைத்த ல் இது மத்திபதீபவலங்காரம். இக்குறட்பொருளையும் முற்குறட்கு காம் ட்டிய "கல்லாள் உடன்படிற் ருனே பெருகுங் கெடும்பொழுதிற் கண் வுங் காணாக் கெடும்" என்றது மற்றையதும் வலியுறுத்தநிற்றல் காண்க.0

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

(பரி-உரை) கோடி தொகுத்தார்க்கும் - ஐம்பொறிகளாஸ் நுகரப்படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும், வகுத்தான் வகுத்த வகை அல்லால் துய்த்தல் அரிது - தெய்வம் வகுத்த வகையானல்லது நுகர்தல் உண்டாகாது எ-று.

ஓர் உயிர் செய்த வினைப்பயன் பிறிது ஒருயிரின்கட்செல்லாமல் அவ் வுயிர்க்கே வகுத்தலின் வகுத்தானென்றார். * "இசைத்தலும் மூரிய வேறிடத் தான" என்பதனுன் உயர்திணையாயிற்று. படையாதார்க்கே அன்றிப் படைத் தார்க்கு மென்றமையால் உம்மை எச்சவும்மை. வேறுமுயற்சிகளாற் பொருள் களைப்படைத்தல்லது நுகர்தலாகாது, அதற்கு ஊழ்வேண்டுமென்பதாயிற்று.

(ப-ரை) கோடி-(அனுபவிக்கப்படும் பொருள்கள்) கோடியை, தொகுத் தார்க்கும்-வருந்திச் சேர்த்தவர்க்கும், வகுத்தான் - தெய்வத்தினுல், வகுத்த-வகுக்கப்பட்ட, வகையல்லால் - வகையாலல்லது, துய்த்தல் - அநுபவித்தல், அரிது-உண்டாகாது எ-று.

(க-ரை) கோடிபொருளைச் சம்பாதித்தவர்க்குங் கடவுளமைத்த வகைப் பன்றி யநுபவித்தலரிது என்பதாம்.

(வி-ரை) எத்தவினை எத்த வுயிரினுலே செய்யப்பட்டதோ அத்த வினைப் பயனை அத்த வுயிர்க்கே வகுத்தலால் வகுத்தானென்றார். தொகுத்தார்க்கு மென்னுமும்மை தொகுக்காதவர்க்கு மாத்திரமல்லாமல் என்னும் பொருளைத் தருதலால் எச்சவும்மை. வேறுமுயற்சிகளாலே பொருள்களைச் சேர்க்கலாமே யல்லாமல் அநுபவித்தல் கூடாது, அதற்கு ஊழ் வேண்டுமென்பதாயிற்று.

'வகுத்தான்' என்றது கடவுளை. என்னை? அவ்வவ் வுயிர்களின் வினைக் கூடாக விருப்புரு வெருப்புருக்களை வகுத்தருள்பவன் இறைவன் ஆதலி னென்க. 'கோடி' என்றது சண்டு மிகுதிப்பொருள்தர வந்தது. 'துய்த்தல்' என்றது ஐம்பொறிகளாற அனுபவித்தலை. பொருளை மிகவும் சட்டிவைத் தார்க்கும் அதனை அனுபவிக்க கல்வினைப்பகுப்பில்லையானுல் அனுபவிக் கலாதென்பது இக்குறளின் உட்கோள். 'தொகுத்தார்க்கும்' என்றதன்கண் (7) நின்ற உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.

துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
ஊட்டா கழியு மெனின்.

(பரி-உரை) துப்புரவு இல்லார் துறப்பார் - வறுமையான் நுகர்ச்சியில்லா தார் துறக்குங் கருத்துடையாவர், உறற்பால ஊட்டா கழியும் எனின் - ஊழ்கள் உறுதற்பாலவாய துன்பங்களை உறுவியாதொழியுமாயின் எ-று.

துறப்பாரென்பது ஈரீற்று எதிர்கால முற்றச்சொல். தம்மால் விடப் பெறுவன தாமே விடப்பெற்றவைத்தங் கருத்து வேறுபாட்டால் துன்ப

* தொல்காப்பியம்: சொல்லதிகாரம், வினையாக்கம்-59.

றமென்றது. ஊழின்வலியானென்பது எஞ்சிற்றலின் மன் ஒழிபிசைத் ன்ற வந்தது.

(ப-ரை) தப்புரவில்லார்-(வதமையிலுலே) அநுபவித்தல் இல்லாதவர், றப்பார் - (இல்வாழ்க்கையைத்) தமக்குக் கருத்தையுடையவராவார், (ஊழ் ர்) உறற்பால-அடையும் பருதியையுடைய தன்பங்களை, ஊட்டா-அடை க்காமல், கழியுமெனின்-நீக்குமாயின் எ-று.

(க-ரை) ஊழ்வினைகள் தன்பங்களை யடைவிக்காமல் நீக்கின் வதமை நுபவமில்லார் தரப்பார் என்பதாம்.

(வி-ரை) தம்மால் விடப்படும் பற்றுகளெல்லாம் தாமே விடப்பெற் ருந்தம் கருத்த வேறபாட்டால் தன்பப்படுவது. ஊழ்வலியாலென்னும் றிந்த சொற்பொருளைக் காட்டலால் மன் ஒழிபிசை.

"உறற்பால ஊட்டா கழியு மெனின் தப்புரவில்லார் தரப்பார் மன்" ர்பது இக்குறளின்பொருள்கோள். 'உறற்பால' என்றது போகூழாற்றேன் குரிய தன்பங்களை, 'ஊட்டாகழிதல்' என்றது அநுபவிக்கச்செய்யாது குமாயின் என்பதாம். 'ஊட்டா' என்றது 'ஊட்டாத' என்பதன் விகா ம். 'எனின்' இது என்றல் என்னும் பொருளது. 'தப்புரவு' என்றது ம்பொறியாக அநுபவிக்கப்பெறும் அநுபவத்தை. 'உறற்பால' என்றது வினைப்பயனுகிய போகூழால் வரக்கூடிய தன்பங்களை. (8)

நன்றுங்கா னல்லவாக் காண்பவ ரன்றுங்கா
லல்லற் படுவ தெவன்.

(பரி-உரை) நன்ற ஆக்கால் நல்லவாக் காண்பவர் - நல்வினை விளைபுழ் அதன் விளைவாய இன்பங்களைத் தடைக்குந் நிறன் காடாத இலை லவென்ற இயைந்தனுபவிப்பார், அன்ற ஆக்கால் அல்லல்படுவது எவன்- னத் நீவினை விளைபுழ்தால் அதன் விளைவாய தன்பங்களையும் அவ்வா நுபவியாத தடைக்குந்நிறன் காடி அல்லலுழப்பது என்கருதி எ-று.

தாமே முன் செய்துகொண்டனமாயினும், ஊட்டாத கழியாமை ரும், இரண்டு மியைந்த அநுபவிக்கற்பால, அவற்றுள் ஒன்றற்கு இயைந் நுபவித்த வினையதற்கு அது செய்யாது வருந்தல் அறிவன்றென்பதாம். வை மூன்றபாட்டானும் இன்பத் தன்பக்கட்குக் காரணமாய ஊழின்வலி ப்பட்டது.

(ப-ரை) நன்ற-நல்வினை, ஆக்கால் · இன்பங்களைக் கொடுக்கும்போது, ல்வின்பங்களை நீக்கும்விதந் தேடாமல்) நல்லவா - இவை நல்லவை யென் சந்து, காண்பவர்-அநுபவிப்பவர், அன்ற-மற்றைத்தீவினை, ஆக்கால்- பங்களைக் கொடுக்கும்போது, (அத்தன்பங்களையும் அப்படி அநுபவியா) அல்லற்படுவது - (நீக்கும்விதந்தேடித்) தன்பப்படுவது, எவன்-என்ன ந்த எ-று.

(க-ரை) நன்மையை யநுபவிப்பதுபோலத் தீமையையும் அநுபவிக்க ண்டும் என்பதாம்.

(வி-மா) தாமே முன்செய்துகொண்டமையாலும் பயனைக்கொடாமற் கழியாமையாலும் இரண்டும் இசைந்த அறபவித்தற்கு உரியவையாம். அவைகளிலே ஒன்றற்கு இசைந்த அறப்வித்த மற்றதற்கு அது செய்யாமல் வருந்துதல் அறிவு அன்று என்பதாம். [இவை மூன்றபாட்டாலும் இன்பத் துன்பங்களுக்குக் காரணமாகிய ஊழின்வலி சொல்லப்பட்டது.]

'கன்று' என்றது கல்வினைப்பயனாகிய ஆகாழை. 'ஆங்கால்' இது ஆகுங்கால் என்பதன் விகாரம். 'காண்பவர்' என்றது அனுபவித்த இன்புறுவோர் என்பதாம். 'அன்று' என்றது தீவினைப்பயனாகிய ஆகாழல்லாத போகழை.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

(பரி-உரை) மற்று ஒன்று சூழினும் தான் முந்துறும்-தன்னை விலக்குதற் பொருட்டுத் தனக்கு மறுதலையாவதோ ருபாயத்தைச் சூழினும், தான் அவ்வுபாயமேயாலும் பிறிதொன்றானும் வழியாகவந்த அச்சூழ்ச்சியின்முற்பட்டு நிற்கும், ஊழின் பெருவலி யாஉள-அதனால் ஊழ்போல மிக்க வலியுடையன யாவையுள எ-று.

பெருவலி ஆகுபெயர். சூழ்தல்-பலருடனும் பழுதற எண்ணுதல். செய்தற்கே அன்றிச் சூழ்தற்கும் அவதி கொடாத என்றமையின் உம்மை எச்சவும்மை. எல்லாம் வழியாக வருதலுடைமையின் ஊழே வலியதென்பதாம். இதனால் அவ்விருவகை ஊழின்வலியும் பொதுவாகக் கூறப்பட்டது.

(ப-மா) மற்றொன்ற-(தன்னை விலக்குதற்பொருட்டுத்) தனக்குப் பகையாகிய ஒருபாயத்தை, சூழினும்-ஆராய்ந்தாலும், தான்-தான், முந்துறும் (அவ்வுபாயத்தையாவது மற்றொன்றையாவது வழியாகக்கொண்டுவந்த தன் வாராய்ச்சிக்கு) முற்பட்டுநிற்கும், (அதனால்) ஊழின்-ஊழ்போல், பெருவலி மிகுந்த வலிமையுடையவை, யா-எவை, உள-இருக்கின்றன எ-று.

(க-மா) ஊழை விலக்க நினைக்கின் அதுவே முன்னிற்கும். ஆதலால் அவ்வூழினும் வலியவை இல்லை என்பதாம.

(வி-மா) பெருவலி அதனையுடைய ஊழுக்கு ஆகுதலால் ஆகுபெயர். சூழ்தல்-பலருடனும் பழுதறவெண்ணுதல். ஊழானது அவ்வுபாயத்தைச் செய்தற்கேயல்லாமல் ஆராய்தற்கும் சமயங் கொடாதென்கிற பொருளைக் குறித்த சிற்சையால் உம்மை எச்சவும்மை. எல்லாம் வழியாக வருதலுடைமையால் ஊழே வலியையுடையதென்பதாம். [இதனால் அவ்விருவகை ஊழ்களின் வல்லமையும் பொதுவாகச் சொல்லப்பட்டது.]

'ஊழில்' இதில் 'இல்' உருபு ஒப்புப்பொருளில்வந்தது. 'பெருவலி' என்றது பேராற்றலை. 'யாவுள' இது எவை யிருக்கின்றன என்பதன் பொருளைத் தரும் 'யா' என்றது யாவை என்பதன் விகாரம். 'உள' இது 'உள்ள' என்பதன் விகாரம். 'மற்றொன்று' என்றது ஊழ்தரும் அனுபவத்தை விலக்குதற்கு அதற்கு வேறுயிய ஒன்றை என்பதாம். 'தான்' என்றது அவ்வூழை. (10)

38-ம் அதி-ஊழ்-முற்றிற்று.

முதலாவது அறத்துப்பால் முற்றிற்று.

ஊழ அதிகாரம் 38-க்கு திருக்குறள்-380.

இரண்டாவது

பொருட்பால்

அரசியல்

(பரி-உரை) இனி இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருளின்பங்க
ன் இருமையும் பயப்பதாய பொருள் கூறவா னெடுத்துக்கொண்டார்.
து தன்றுணைக் காரணமாய அரசனீதி கூறவே யடங்கும். அரசனீதி
வது காவலெனடாத்து முறைமை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபிய
னை மூவகைப்படுத்து, மலர்தலையுலகிற் குயிரனைச்சிறந்த அரசனியல்பு
ருபத்தைந்ததிகாரத்தாற் கூறவான்றொடங்கி, முதற்கண் இறைமாட்சி
றுகின்றார்:

(உரை) இனி இல்லறத்தின் வழிப்படுவனவாகிய பொருளின்பங்களுள்
ன்மை மறுமை இரண்டையும் தருவதாகிய பொருளைச் சொல்லும்படி எடுத்
க்கொண்டார். பொருளாவது: அறவழியிலே சேர்க்கப்பட்ட பொன்
ி முதலானவையாம். அது, தனக்குத் துணைக்காரணமாகிய அரசனீதி
ால்லவே அடங்கும். அவ்வரசனீதியாவது, காவலெனடாத்து முறைமை
ம். அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்றியல்களால் அரு
ச்செய்தார். அரசாவது: உலகத்திற்கு உயிரனைச் சிறந்த அரசனது
ைமையாம். அவ்வரசியலை இருபத்தைந் ததிகாரங்களிலுலே சொல்லத்
ாடங்கி முதலிலே இறைமாட்சி சொல்லுகிறார்.

39-ம் அதிகாரம்—இறைமாட்சி

(பரி-உரை) அஃதாவது அவன்றன் கற்குண கற்செய்கைகள். உலக
ருருவாய் கின்று உலகங்காத்தலின் இறையென்றார்; * "திருவுடை
னரைக் காணிற் திருமாலைக் கண்டேனே என்னும்" என்று பெரியாரும்
ித்தார்.

(உரை) அஃதாவது அரசனது கற்குண கற்செய்கைகளாம்.

படைகுடி கூழமைச்சு நட்பர ணிறு
முடையா னரசரு ளேறு.

(பரி-உரை) படை குடி கூழ் அமைச்சு கட்பு அரண் ஆறும் உடையான்-
டபுக் குடியுங் கூழும் அமைச்சும் கட்பும் அரணும் என்று சொல்லப்பட்ட
ங்கங்களையுமுடையவன், அரசருள் ஏறு-அரசருள் ஏறுபோல்வான் எ-று.

* திருவாய்மொழி, 34-ம் திருப்பதிகம், 8.

ண்டுக் குடியென்றதை அதனையுடைய நாட்டினை. கூழென்றதை அந்
தேவாய பொருளை. அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு எ
பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தார். ஆ
முடையா னென்றதனால், அவற்றுள் ஒன்று இல்வழியும் அரசனீதி செல்
தென்பதை பெற்றும்; வடநூலார் இவற்றிற்கு அங்கம் எனப் பெய
கொடுத்ததூஉம் அதுநோக்கி. ஏறு என்பது உபசாரவழக்கு. இதனால்
அரசற்கு அங்கமாவன இனையென்பதூஉம், இவை முற்றும் உடைமையே
அவன் வெற்றிக்கு ஏதுவென்பதூஉம் கூறப்பட்டன.

(ப-ரை) படை-சேனையும், குடி-நாடும், கூழ்-பொருளும், அமைச்
அமைச்சும், நட்பு-நட்பும், அரண்-அரணும் (என்று சொல்லப்படுகிற ஆ
கங்களையும்), உடையான்-உடையவன், அரசருளேறு-மன்னருள் ஆண்சிங்
போல்வானாவான் எ-று.

(க-ரை) சேனை, நாடு, பொருள், அமைச்சு, நட்பு, அரண் இவ்வா
கங்களையு முடையவனரசரு ளாண்சிங்கம்போன்றவன் என்பதாம்.

(வி-ரை) குடியையுடைய நாடு குடியென்றும், கூழுக்கு ஏதுவா
பொருள் கூழென்றும், சொல்லப்பட்டன. அமைச்சு, நட்பு, பொருள், நா
அரண், படை, என்பதே முறையாயினும் இங்கே செய்யுளோக்கிப் பிற
வைத்தார். ஆறுமுடையானென்றதனால் இவைகளிலே ஒன்று குறையி
அரசனீதி செல்லாதென்பதை பெற்றும். [இதனால் அரசனுக்கு அங்கமாவ
இவை யென்பதும் இவை முழுதுமுடைமையே அவன் வெற்றிக்கு ஏ
வென்பதும் சொல்லப்பட்டன.]

'படை' என்பது ஆயுதத்தையும், அதைத்தாங்கிய சேனையையும் குறி
கும். இது 'படு' என்னும் பகுதியடியாகப் பிறந்த பெயர். 'படுப்பது படை
படுப்பது-அழிப்பது, சத்துருக்களை அழிப்பது என்பது பொருள். 'குடி
என்பது ஆகுபெயராய் மக்கள் குடியிருக்கும் நாட்டைக் குறித்தது. 'கூ
என்பது உணவிற்கு ஆதாரமாகிய செல்வத்தை, 'அமைச்சு' என்பது
திறனை; இது மந்திரஞ் சொல்லுதற்கு அமைந்த காரணம் பற்றிவந்த பெ
'நட்பு' இது 'நள்' என்னும் பகுதி அடியாகப் பிறந்தது. 'அரண்' என்ப
நீராண், மலையாண், காட்டாண், மதிளாண், படையாண் முதலிய இவை
தாகிய காவலை யுணர்த்திற்று. 'ஆறும்' என்றதன் சற்றுஉம்மை முற்றும்ம
'ஏறு' என்பது ஆண்சிங்கத்தை. இது சிறப்புப்பற்றி என்க; இதுவே உபசா
வழக்கென்றார். அரசர்க்கெல்லாம் ஆண்சிங்கம் போன்றவன் என்ப
பொருளாம்.

அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

(பி-உரை) வேந்தற்கு இயல்பு - அரசனுக்கு இயல்பாவது, அஞ்சாமை
ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை - நிண்மையும் கொடை

ம் அறிவும் ஊக்கமும் என்னும் இந்நான்கு குணமும் இடைவிடாத
றல் எ-று.

ஊக்கம்-வினைசெய்தற்கண் மனவெழுச்சி. இவற்றுள் அறிவு ஆறங்கத்
ற்கும் உரித்து; சுகை படைக்கு உரித்து, ஏனைய வினைக்குரிய. உயிர்க்
ணங்களுள் ஒன்று தோன்ற ஏனைய அடங்கிவரும், அவற்றுள் இவை யடங்
ர், அரசற்குக் கெடுவன பலவாமாகலின், இவை எப்பொழுதுந் தோன்றி
றல் இயல்பாக வேண்டுமென்பார், எஞ்சாமை வேந்தற் கியல்பென்றார்.

(ப-ரை) வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயல்பாவது, அஞ்சாமை-
ன்மையும், சுகை-கொடையும், அறிவு-விவேகமும், ஊக்கம்-மனவெழுச்சி
ம், இந்நான்கும் - இந்த நான்கு குணங்களும், எஞ்சாமை - கடுவே நீங்காது
கை எ-று.

(க-ரை) அரசனுக் கியல்பாவது; வல்லமை, சுகை, யறிவு, மனவெழுச்சி
கும் என்பதாம்.

(வி-ரை) ஊக்கம் தொழில்செய்தலில் மனவெழுச்சி இவற்றுள் அறிவு
றங்கங்களுக்கும் உரித்து; சுகை படைக்குரித்து, மற்றவை தொழிலுக்
ரியன. உயிர்க்குணங்களுள் ஒன்றுதோன்ற மற்றவை அடங்கிவரும்,
வற்றுள் இவை அடங்கினுல் அரசனுக்குக் கெடுவன பலவாம். ஆதலால்
வை எப்பொழுதும் தோன்றநிற்றல் இயல்பாக வேண்டுமென்பது தோன்
கு எஞ்சாமை வேந்தற் கியல்பென்றார்.

'அஞ்சாமை' என்றது கோழைத்தனமின்மையாகிய மனோவன்மையைக்
றித்தது. 'சுகை' இது 'சு' என்னும் பகுதி அடியாகப் பிறந்த தொழிற்
யர். இதில் 'கை' விகுதி. 'ஊக்கம்' என்றது மன எழுச்சியை. இதனை
காலத்தும் உற்சாகம் என்பர். இதில் அம் தொழிற்பெயர்விகுதி. 'இந்
ற்கும்' என்றதில் உம்மை முற்றும்மை. 'எஞ்சாமை' என்றது இடையே
றாத படாமை என்னும் பொருளது. (2)

தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனுள் பவற்கு.

(பரி-உரை) நிலன் ஆள்பவற்கு - நிலத்தினை யாளுந் திருவுடையாற்கு,
காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா - அக்காரியங்களில்
ாவுடைமையும், அவை யறிதற்கேற்ற கல்வியுடைமையும் ஆண்மையுடை
யுமாகிய இம்மூன்று குணமும் ஒருகாலும் நீங்கா எ-று.

கல்வியது கூறுபாடு முன்னர்க் கூறப்படும். ஆண்மையாவது ஒன்றினை
பாராது கடிதிற் செய்வதாகலின், அஃது சண்டி உபசாரவழக்கால்
னெப்பட்டது. உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. இவற்றுட்
ஆறங்கத்திற்கும் உரித்து, ஏனைய வினைக்குரிய. நீங்கா என்பதற்கு
எஞ்சாமைக் குரைத்தாங்கு உரைக்க.

(ப-ரை) நிலனாள்பவற்கு - நிலத்தினை யாளுந் திருவினை யுடையவனுக்கு, தூங்காமை(யுடைமை)-அக்காரியங்களிலே விரைவுடைமையும், கல்வி (யுடைமை)-(அவைகளை அறிதற்குஏற்ற) கல்வியுடைமையும், துணிவுடைமை-ஆண்மை யுடைமையும், (ஆகிய) இம்மூன்றும் - இம்மூன்றுகுணங்களும், நீங்கா-(ஒருபோதும்) நீங்காவாம் எ-று.

(க-ரை) விரைவுடைமை, கல்வியுடைமை, வலியுடைமை, இம்மூன்றுமரசனைவிட்டு நீங்கா என்பதாம்.

(வி-ரை) கல்வியது கூறுபாடு பின்னேசொல்லப்படும். ஆண்மையாவது ஒன்றையும் பாராமல் கடிதிலே செய்வதாகலால் அது இங்கே துணிவென்று உபசரிக்கப்பட்டது. இவற்றுள் கல்வி ஆறங்கத்துக்கும் உரித்து, மற்றவை தொழிலுக்குரியன. நீங்காமையென்பதற்கு முன்னே எஞ்சாமைக்கு உரைத்தபடி உரைத்துக்கொள்க.

'தூங்காமை' என்றது மந்தகதியாக இராது விரைவுக்கதியாக இருத்தலை. 'துணிஉடைமை' என்றது ஆண்மைத்தன்மையை; என்னை? இடையூற்றிற் கஞ்சாது வரும் இடையூறுகளை எல்லாம் வென்று விரைந்துசெய்தல் ஆண்மகற்குரிய சிறந்தகுணமாதலின் என்க. 'இம்மூன்றும்' என்றதன் ஈற்று உம்மை முற்றும்மை. 'நீங்காமை' இதற்கு 'நீ' பகுதி. 'நிலனாள்பவற்கு' என்றது வேந்தற்கு, அரசச்செல்வம் உடையவர்க்கு என்பது பொருளாம். (3)

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா மான முடைய தரசு.

(பரி-உரை) அறன் இழுக்காது - தனக்கு ஓதிய அறத்தின் வழுவாதொழுகி, அல்லவை நீக்கி - அறனல்லவை தன்னாட்டின்கண்ணும் நிகழாமற் கடிந்து, மறன் இழுக்கா மானம் உடையது அரசு-வீரத்தின் வழுவாத தாழ்வின்மையினை யுடையான் அரசன் எ-று.

அவ்வறமாவது - ஓதல், வேட்டல், ஈதலென்னும் பொதுத்தொழிலினும், படைக்கலம்பயிறல் - பல்லுயிரோம்பல் - பகைத்திறந்தெறுதல் என்னுஞ் சிறப்புத் தொழிலினும், வழுவாது நிற்றல். * "மாண்ட - வறநெறி முதற்றே யரசின்கொற்றம்" என்பதனால் இவ்வறம் பொருட்குக் காரணமாதலறிக. அல்லவை கொலை, களவு முதலாயின. குற்றமாய மானத்தி னீக்குதற்கு, மறனிழுக்கா மானமென்றார்; அஃதாவது,

† "வீறின்மையின் விலங்காமென மதவேழமு மெறியா
னேறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான்
மாறன்மையின் மறம்வாடுமென் றிளையாரையு மெறியா
னாறன்மையின் முதியாரையு மெறியானயி லுழவன்."

---

* புறநானூறு-55.

† சீவகசிந்தாமணி; மண்மகளிலம்பகம்-159.

எனவும் * "அழிபுரர் புறக்கொடை யயில்வே லோச்சான்" எனவுஞ் சால்லப்படுவதை. அரசு - அரசனது தன்மை; அஃது உபசாரவழக்கால் வன்றன் மேனின்றது.

(ப-ரை) அறன் - (தனக்குச்சொல்லப்பட்ட) அறத்திலிருந்து, இழுக் ாது-தவறுது நடந்து, அல்லவை-அறமல்லாதனவகளை, நீக்கி-(தனது காட் டத்தும்) உண்டாகாமற் கடிந்து, மறன்-வீரத்திலிருந்து, இழுக்கா-தவறுது, ானம்-மானத்தை, உடையது-உடையவன், அரசு-அரசனுவான் எ-று.

(க-ரை) தன்னறத்திலிருந்து பாவங்களை நீக்கி வலிமையினால் தவறுத மைமுடையவன் அரசன் என்பதாம்.

(வி-ரை) அவ்வறமாவது வேதமோதல், யாகஞ்செய்தல், ஈதல் என்னும் ாதத் தொழில்களிலும், படைக்கலம் பயிலல், பல்லியிசோம்பல், பகைத் ற மழித்தல், என்னுஞ் சிறப்புத்தொழில்களிலும் தவறுமல் நிற்கை. ல்லவை கொலை, களவு, முதலானவை. குற்றமாகிய மானத்தை நீக்கு ்கு மறனிழுக்கா மானமென்றார். அரசு - அரசனது தன்மையாதலால் ற உபசாரவழக்கால் அவன் மேலேகின்றது.

'அறன்' இது 'அறம்' என்றதன் கடைப்போலி ஈண்டு அறம் என்றது ாது அறத்தையும் அரசர்க்கு உரிய சிறப்பு அறங்களையும். 'இழுக்காது' ற கெடாது வழுவாது என்னும் பொருளது. 'அல்லவை' என்றது செயல்களை. என்னை? தீச்செயல்கள் அறம் அல்லாதவைகள் ஆதலின். ல்லவை' எனப்பெற்றது. 'மறம்' என்ற பல்பொருள் ஒருபெயர்த் திரி ால்; ஈண்டு வீரச்செயலை உணர்த்திற்று. 'மானம்' என்றது தாழ்வில் மையாகிய சிறப்பை. 'அரசு' என்றது ஈண்டு அரசற்கு இருக்கவேண்டிய மை என்பதாம்.

(4)

இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த வகுத்தலும் வல்ல தரசு.

(பரி-உரை) இயற்றலும் - தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை ன்மே லுளவாக்கலும், ஈட்டலும் - அங்ஙனம் வந்தவற்றை ஒருவழித் குத்தலும், காத்தலும்-தொகுத்தவற்றைப் பிறர் கொள்ளாமற் காத்தலும், த வகுத்தலும் - காத்தவற்றை அறம் பொருள் இன்பங்களின் பொருட்டு த்தலும், வல்லது அரசு-வல்லவனே அரசன் எ-று.

ஈட்டல், காத்தல், வகுத்தல் என்றவற்றிற் கேற்ப இயற்றலென்ப ுச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன - மணி, ன், கொல் முதலாயின. அவை வரும் வழிகளாவன - பகைவரை யழித் ம், நிறைகோடலும், தன்னுடு தலையளித்தலும் முதலாயின. பிறரென் பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினர். கடவுளர்,

* புறப்பொருள் வெண்பாமாலை; வஞ்சிப்படலம்-20.

அத்தணர், வறியோரென் றிவர்க்கும் புகழிற்குஞ் கொடுத்தலே அறப் பொருட்டாகவும்; யானை, குதிரை, படை, நாடு, அரண் என்றிவற்றிற்கும் பகையொடு கூடலிற் பிரிக்கப்படுவார்க்குந் தன்னிற் பிரிதலிற் கூட்டப்படுவார்க்குங் கொடுத்தலேப் பொருட்பொருட்டாகவும்; மண்டபம், வாவி, செய்குன்று, இளமாக்கா முதலிய செய்தற்கும், ஐம்புலன்களான் நுகர்வனவற்றிற்குங் கொடுத்தலே இன்பப்பொருட்டாகவுங் கொள்க. இயற்றன் முதலிய தவறுமற் செய்தல் அரிதாகலின், வல்லதென்றார். இவை நான்குபாட்டானும் மாட்சியே கூறப்பட்டது.

(ப-ரை) இயற்றலும் - (தனக்குப் பொருள்கள் வரும் வழிகளே மேலு மேலும்) உண்டாக்கலும், சீட்டலும் - (அப்படிவந்தவைகளை) ஓரிடத்தே தொகுத்தலும், காத்தலும் - (தொகுக்கப்பட்டவைகளைப்) பிறர்கொள்ளாமல் காத்தலும், காத்த-காக்கப்பட்டவைகளை, வகுத்தலும்-(அறம்பொரு ளின்பங் களின்பொருட்டுச்) செலவுசெய்தலும், வல்லது-வல்லவன், அரசு-அரசனவன் எ-று.

(க-ரை) பொருள் வரவுதேடலிலும், சேர்த்தலிலும், காத்தலிலும், அவ வழியில் செலவுசெய்தலிலும், வல்லவன் அரசனுவான் என்பதாம்.

(வி-ரை) பொருள்களாவன மணி, பொன், நெல், முதலானவை. அவை வரும் வழிகளாவன பகைவரை யழித்தலும், நிறைகொள்ளலும், தன்னுடு காத்தலும் முதலானவை. பிறரென்றவர் பகைவர், கள்வர், சுற்றத்தார், தொழில்செய்வோர் முதலானவர். கடவுளர், அத்தணர், வறியோர், என்கிற இவர்க்கும் புகழுக்கும், கொடுத்தலே அறத்தின்பொருட்டாகவும், யானை, குதிரை, படை, நாடு, அரண் என்கிற இவற்றுக்கும் பகையோடு கூடும்போது பிரிக்கப்படுவோர்க்கும் தன்னைவிட்டுப் பிரியும்போது கூட்டப் படுவோர்க்கும், கொடுத்தலே பொருட்பொருட்டாகவும், மண்டபம், வாவி, செய்குன்று, இளமாக்கா, முதலானவைகளைச் செய்தற்கும், ஐம்பொறி களால் அநுபவிக்கப்படுமவைகளுக்கும் கொடுத்தலே இன்பப்பொருட்டாகவும் கொள்க. இயற்றுதல் முதலானவைகளைத் தவறுமல் செய்தல் அரிதாகலால், வல்லதாசென்றார். [இவை நான்குபாட்டாலும் அரசனது நற்குணச் செய்கையாகிய மாட்சியே சொல்லப்பட்டது.]

இதன்கண் வந்த உம்மைகள் எண்ணும்மைகள். 'இயற்றல்' என்றது பொருள்வரும் வழி அறிந்து வினைசெய்தலே. 'சீட்டல்' என்றது இயற்றிவரும் பொருளே ஒன்றுசேர்த்து வைத்தலே. 'காத்தல்' என்றது கள்வர், பகைவர் முதலாயவர்களால் கவரப்படாது காத்தலே. 'காத்த' என்றது இயற்றி, சீட்டி, காத்தபொருளே. வகுத்தல் என்றது அறத்தாற்றுனே செலவு செய்தலே. (5)

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

(பரி-உரை) காட்சிக்கு எளியன் - முறை வேண்டினர்க்குங் குறை வேண்டினர்க்குங் காண்டற்கு எளியனாய், கடுஞ்சொல்லன் அல்லனேல்- யாவர்மாட்டுங் கடுஞ்சொல்லன் அல்லனுமாயின், மன்னன் நிலம் மீக்கூறும்- அம்மன்னனது நிலத்தை எல்லா நிலங்களினும் உயர்த்துக் கூறும் உலகம் எ-று.

முறை வேண்டினர் - வலியான் நலிவெய்தினர். குறை வேண்டினர்- வறுமையுற் றிரந்தார். காண்டற்கெளிமையாவது - போத்தானிக்கண் அந்த ணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியுடையனா யிருத்தல். கடுஞ் சொல்-கேள்வியினும் வினையினுங் கடியவாய சொல். நிலத்தை மீக்கூற மெனவே, மன்னனை மீக்கூறுதல் சொல்லவேண்டாவாயிற்ற. மீக்கூறுதல்- இவன் காக்கின்ற காடு பசி பிணி பகை முதலியவின்றி யாவர்க்கும் பேரின்பந் தருதலின், தேவருலகினும் நன்றென்றல். உலகமென்னும் எழுவாய் வருவிக் கப்பட்டது.

(ப-ரை) மன்னன்-அரசன், காட்சிக்கெளியன்-(வழக்கறிலிப்பவர்க்கும் குறையிரப்பவர்க்கும்) காணுதற்கு எளியவனாகி, கடுஞ்சொல்ல னல்லனேல்- (யாவரிடத்தும்) கடியசொல்லினனல்லாதவனுமாயிருந்தால், நிலம்-(அவ னது) நிலத்தை, (உலகம்) மீக்கூறும்-(எல்லா நிலங்களினும்) உயர்த்துச் சொல்லும் எ-று.

(க-ரை) காண்கைக்கு எளியவனும் இன்சொற் சொல்பவனும் ஆகிய அரசன் நிலத்தை உலகம் உயர்த்திச்சொல்லும் என்பதாம்.

(வி-ரை) காணுதற்கு எளியாமையாவது பெரிய அரசாட்சி மண்டபத் திலே அந்தணர், சான்றோர், உள்ளிட்டவரோடு சமயமுடையவனாயிருத்தல். கடுஞ்சொல்-கேள்வியிலும் தொழிலிலும் கடுமையாகிய சொல். நிலத்தை உயர்த்திச் சொல்லுமெனவே மன்னனை உயர்த்திச் சொல்லுதல் சொல்ல வேண்டுவதில்லையாயிற்ற. உயர்த்திச் சொல்லுதல்-இவன் காக்கின்ற காடு பசி, பிணி, பகை, முதலானவை இல்லாமல் யாவர்க்கும் மிகுந்த வின்பந் தருவதென்று புகழ்ந்து சொல்லல்.

'காட்சிக்கு எளியன்' என்றது முறையிட்டுக்கொள்ள வந்தவர்க்கும் நிரக்கவந்தவர்க்கும் எளிதிலே காணப்படுந்தன்மையை. 'கடுஞ்சொல்' என் றது கடுமையாகிய சொல்லை. இதுபற்றியே ஔவைப்பிராட்டியாரும் 'வெட் டெனப் பேசேல்' என்று திருவாய்மலர்ந்தருளினர். 'மீக்கூறும்' என்றது உயர்த்திக் கூறப்படும் என்பதாம். 'எல்லா நிலங்களிலும்' என்றது வருவித்த உரை. எல்லா நிலங்களிலும் என்றமையால் பொன்னுலகினும் உயர்வாகக் கூறப்பெறும் என்பதுபெற்றும். 'மன்னன் நிலம்' இது மன்னனது நிலம் என நிரிதலின் இது ஆறும் வேற்றுமைத்தொகை. 'மீக்கூறும்' என்றது உலகம் நெய் அரசன் காட்டை எல்லா நிலங்களிலும் சிறந்ததாகக்கூறும் என்பதாம். உலகம்' என்றது வருவித் துரைக்கப்பெற்றது. ஈண்டு உலகம் என்றது யர்ந்தோரை.

(6)

இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றன்கண் டனைத்திவ் வுலகு.

(பரி-உரை) இன் சொலால் ஈத்து அளிக்க வல்லாற்கு - இனிய சொல்லுடனே ஈதலைச் செய்து அளிக்கவல்ல அரசனுக்கு, இவ்வுலகு தன் சொலால் தான்கண்ட அனைத்து-இவ்வுலகம் தன் புகழோடு மேவித் தான் கருதிய அளவிற்றும் எ-று.

இன்சொல் - கேள்வியிலும் வினையிலும் இனியவாய சொல். ஈதல் - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல். அளித்தல்-தன் பரிவாரத்தானும் பகைவரானும் கலிவுபடாமற் காத்தல். இவை அரியவாகலின் வல்லாற்கு என்றும், அவன் மண்முழுது மாளுமாகலின் இவ்வுலகென்றுங் கூறினர். கருதியவளவிற்றுதல்-கருதிய பொருளெல்லாஞ் சாத்தல்.

(ப-ரை) இன்சொலால் - இனியசொல்லுடனே, ஈத்து - கொடுத்து, அளிக்க - காப்பாற்ற, வல்லாற்கு - வல்ல அரசனுக்கு, இவ்வுலகு - இந்த உலகம், தன்சொலால்-தன் புகழோடுபொருந்தி, தான்கண்டனைத்து - தான் கினைத்த அளவினதாகும் எ-று.

(க-ரை) இனிய சொல்லுடன் கொடுத்துக் காக்கு மரசனுக்கு தான் கினைத்தவை உண்டாகும் என்பதாம்.

(வி-ரை) இன்சொல் - கேள்வியிலும், தொழிலிலும், இனிமையாகிய சொல். ஈதல் - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல். அளித்தல் - தன் பரிவாரத்தினாலும், பகைவராலும், கலிவுபடாமற் காத்தல். இவைசெய்தல் அருமையாகலால் வல்லாற்கென்றும், அவன் மண்முழுதும் ஆளுமாகலால் இவ்வுலகென்றும் சொல்லினர். கருதியவளவிற்றுதல் - கினைத்தபொருளெல்லாம் சாத்தல்.

'இன்சொலால்' என்றதில் 'ஆல்' உருபு உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது. 'ஈத்து' இது 'ஈர்த்து' என்றதன் வலித்தல் விகாரம். 'அளித்தல்' என்றது 'தன்னுற் றன்பரிசனத்தால் ஊனமிகு பகைத்திறத்தால் கள்வாய் உயிர்கடம்மால் ஆனபயம் ஐந்தும் நீர்த்துக் காத்தலை 'தன்சொல்லால்' என்றதில் 'சொல்' என்றது ஆகுபெயராய்ப் புகழைக்குறித்தது. இது உயர்த்திச் சொல்லப்படுவது என்னுங் காரணம்பற்றி வந்தபெயர். 'தான் கண்டனைத்து' என்றது தான் கினைத்த எல்லாச் செல்வங்களையும் பெற்று வாழும் என்பதாம்.

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(பரி-உரை) முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் - தான் முறை செய்து பிறர் கலியாமற் காத்தலைபுஞ் செய்புமரசன், மக்கட்கு இறை என்று வைக்கப்படும்-பிறப்பான் மகனேயாயினும், செயலான் மக்கட்குக் கடவுளென்று வேறு வைக்கப்படும் எ-று.

முறை - அறநூலும் நீதிநூலுஞ் சொல்லும் நெறி. பிறன்றன்மேற் சொல்லியாளை. வேறுவைத்தல்-மக்களிற் பிரித்து உயர்த்துவைத்தல்.

(ப-ரை) முறைசெய்து - (தான்) முறைசெய்து, காப்பாற்றும் - (பிறர் வருந்தாமற்) காத்தலுஞ்செய்யும், மன்னவன்-அரசனானவன், (பிறவியினாலே மனிதனேயாயினும்) மக்கட்கு - மனிதர்களுக்கு, இறையென்று - (செயலினாலே) கடவுளென்று, வைக்கப்படும்-வேறுவைக்கப்படுவன் என்று.

(க-ரை) மநுமுறைப்படி குடிகளைக்காக்கும் அரசன் அக் குடிகளுக்குத் தெய்வம் என்பதாம்.

(வி-ரை) முறை-அறநூலிலும், நீதிநூலிலும், சொல்லும்வழி. பிறர்: மேலே சொல்லப்பட்டவர். வேறுவைத்தல் - மனிதரிற் பிரித்து உயர்த்தி வைத்தல்.

'முறை' என்றது அறம் நீதிகளிற் கோடாத அரசமுறை செய்தலை. 'காப்பாற்றும்' என்றது ஐந்துபயம் தீர்த்து மன்னுயிர்களைக் காப்பாற்றுதலை. 'உம்' இது பெயரெச்சவிகுதி. நிகழ்காலங் காட்டிற்று. 'மகனேயாயினும்' என்பதும் 'வேறு' என்பதும் வருவித்து உரைக்கப்பெற்றது. 'இறை' என்றது கடவுளை. அரசனை 'இறைவன்' என்பது உபசாரவழக்கு. (8)

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

(பரி-உரை) சொல் செவி கைப்பப் பொறுக்கும் பண்பு உடை வேந்தன்-குடிக்குந் தீயையாயினும் சொற்களைத் தன்செவி பொறுதாகவும் விளைவு நோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது, கவிகைக் கீழ்த்தங்கும் உலகு-குடை நிழற்கண்ணே தங்கும் உலகம் என்று.

செவி கைப்ப என்றதற் கேற்ப இடிக்குந் தீயையாரென்பது வருவிக்கப் பட்டது. காவின் புலத்தைச் செவியே லேற்றிக் கைப்ப என்றார். பண்புடைமை-விசேட வுணர்வினாலுதல். அறநீதிகளிற் றவறுமையின், மண்முழுதும் தானே யாளுமென்பதாம்.

(ப-ரை) சொல் - (கண்டித்துப் புத்திசொல்லுந் தீயையாயினவாது) சொற்களை, செவிகைப்ப-(தன்) செவிபொறுதாகவும், பொறுக்கும்-(அவைகளின் பயனைக்குறித்துப்) பொறுக்கும், பண்புடை-குணமுடைய, வேந்தன்-அரசனது, கவிகைக்கீழ் - குடைநிழலின்கீழே, உலகு - உலகம், தங்கும்-பொருந்தும் என்று.

(க-ரை) மந்திரி முதலானோர் கடிந்துசொல்லுஞ் சொற்களைப் பொறுக்கு மரசன் உலகமுழுதும் ஆள்வான் என்பதாம்.

(வி-ரை) காவின்கைப்பு - செவியிலேற்றப்பட்டது. பண்புடைமை-சிறப்பறிவுடையவனாகுகை. அறநூல் நீதிநூல்களிலே தவறுமையால் பூமிமுழுதும் தானே ஆள்வானென்பதாம்.

'சொல்' என்ற இடத்து 'இடிக்குந் துணையாயினார்' என்பது வருவித்து உரைக்கப்பெற்றது. 'சொல்' என்றது சட்டுரைகளை. 'பொறுக்கும்' ஈங்கு விளைவுநோக்கி என்பது வருவித்த உரை. 'பண்பு' என்றது சிறப்பை. 'கவிகை' இது கவிந்து இருக்கும் காரணம் பற்றிக் குடைக்கு எய்திய காரணப்பெயர். 'வேந்தன் கவிகைக் கீழ்தங்கு முலகு' என்றது பண்புடை வேந்தன் உலகமுழுதையும் ஆளுவன் என்பதாம். (9)

கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு முடையானாம் வேந்தர்க் கொளி.

(பரி-உரை) கொடை - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும், அளி - யாவர்க்குந் தலையளி செய்தலும், செங்கோல் - முறைசெய்தலும், குடிஓம்பல் - தளர்ந்த குடிகளைப் பேணலுமாகிய, நான்கும் உடையான்- இந்நான்கு செயலையு முடையவன், வேந்தர்க்கு ஒளியாம்-வேந்தர்க்கெல்லாம் விளக்காம் எ-று.

தலையளி - முகமலர்ந்து இனிய கூறல். செவ்விய கோல்போறலின், செங்கோலெனப்பட்டது. குடியோம்பலென எடுத்துக் கூறினமையால், தளர்ச்சிபெற்றாம்; அஃதாவது, ஆறிலொன்றாய பொருடன்னையும் வறுமை நீங்கியவழிக் கொள்ளல் வேண்டின் அவ்வாறு கோடலும், இழத்தல் வேண்டின் இழத்தலுமாம். சாதிமுழுதும் விளக்கலின் விளக்கென்றார். ஒளி- ஆகுபெயர். இவை ஐந்துபாட்டானும் மாட்சியும் பயனும் உடன் கூறப்பட்டன.

(ப-ரை) கொடை - (வேண்டுவோர்க்கு வேண்டுமவைகளைக்) கொடுத்தலும், அளி-(யாவரிடத்தும்) முகமலர்ந்து இன்சொற் சொல்லுதலும், செங்கோல் - முறைசெய்தலும், குடியோம்பல் - (தளர்ந்த) குடிகளைப்பேணலும், ஆகிய, நான்கும் - இந்நான்கு செயல்களையும், உடையான் - உடையவன், வேந்தர்க்கு-அரசர்க்கெல்லாம், ஒளியாம்-விளக்காம் எ-று.

(க-ரை) ஈகை, கிருபை, செங்கோல், குடிகளைக்காத்தல், இவைகளையுடையோன் அரசர்களுக்கு விளக்கு என்பதாம்.

(வி-ரை) செவ்விய கோல்போலுதலால் முறையைச் செங்கோலென்றார். குடியோம்பல் வறுமையுற்றவிடத்தே ஆறிலொன்றாகிய பொருளையும் வாங்காமை முதலானவை செய்தல். தன் சாதிமுழுதும் விளக்கலால் விளக்கென்றார். [இவை ஐந்துபாட்டாலும் மாட்சியும் பயனும் உடன் சொல்லப்பட்டன.]

'கொடை' இது 'கொடு' என்னும் பகுதி அடியாகப் பிறந்த பெயர். 'அளி' என்றது முகமலர்ந்து இன்சொற் கூறலாகிய தலையளியை. 'செங்கோல்' என்பது இலக்கணை. 'நான்கும் இதன்கண்நின்ற உம்மை முற்றும்மை. 'ஆம்' இது ஆகும் என்பதன் விகாரம். 'ஒளி' என்றது பிரகாசத்தை; ஈண்டு ஆகுபெயராய் ஒளிசெய்யும் விளக்கைக் குறித்தது. (10)

39-ம் அதி-இறைமாட்சி-முற்றிற்று.

40-ம் அதிகாரம்—கல்வி

(பரி-உரை) அஃதாவது: அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன: அறநூலும், நீதிநூலும், யானை-குதிரை-தேர்-படைக் கலமென்றிவற்றி நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையவனாய்க் கால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் நோக்கி, இஃது அரியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் றெப்புடைமையிற் பொதுப்படக் கூறுகின்றார். மேல் 'தக்காமை கல்வி' எனத் தோற்றுவாய் செய்த மாட்சியை விரித்துக் கூறுகின்றமையின், இஃது றைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

(உ-ரை) அஃதாவது: அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன: அறநூலும், நீதிநூலும், தேர், யானை, குதிரை, படைக்கலம் எனப்பட்ட இவற்றி நூல்களும், முதலானவையாம். அரசன் அறிவுடைய னாயிருந்தால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் குறித்து இது அரியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதியைத்தரு வதாகிய றெப்புடைமையினாலே பொதுப்படச் சொல்லுகின்றார். முன்னது காரத்திலே தக்காமையென்னும் பாட்டிலே தோற்றுவாய் செயப்பட்ட மாட்சியை விரித்துச் சொல்லுதலால் இது அதன்பின் வைக்கப்பட்டது.

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

(பரி-உரை) கற்பவை கசடு அறக் கற்க - ஒருவன் கற்கப்படு நூல்களைப் பழுதறக் கற்க; கற்றபின் அதற்குத் தக நிற்க - அவ்வனங் கற்றால் அக்கல்விக் குத் தக அவை சொல்லுகின்ற செறிக்கண்ணே நிற்க எ-று.

கற்பவை யென்றதனான், அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப்பொரு ளுணர்த்துவனவன்றிப் பிறபொரு ளுணர்த்துவன வென்னுட் கல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகா வென்பது பெற்றும். கசடறக் கற்றலாவது- பிரித ஐயங்களை நீக்கி மெய்ப்பொருளை கல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல். நிற்றலாவது - இல்வாழ்வுழிக் * "கருமமு முன்படாப் போகமுங் கல்வாத், தருமமுந் தக்கார்க்கே செய்" தலினும், அறந்தழிந் தவத்தான் மெய்புணர்ந்த அவா அறுத்தலினும், வழுவாமை. நிறப்புடை மகற்காயிற் கற்றல்வேண்டு மென்பதூஉம், அவனுற் கற்கப்படு நூல்களும், அவற்றைக் கற்குமாறும், கற்றதனும் பயனும் இதனுற் கூறப்பட்டன.

(ப-ரை) (ஒருவன்) கற்பவை-கற்கப்படு நூல்களை, கசடற - பழுதற, கற்க - கற்கக்கடவன், கற்றபின்-(அப்படி) கற்றபின்னை, அதற்கு - அக்கல் விக்கு, தக-தகுதியாக, நிற்க-(அவைகளாலே சொல்லப்பட்ட வழியிலே) நிற்கக்கடவன் எ-று.

---

* நாலடியார் அறிவுடைமை 10.

(க-ரை) (ஒருவன்) கற்கப்படுநூல்களைக் குற்றமறக்கற்று அக்கல்வியறிவிற்குத்தக்கபடி நிற்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) கற்பவையென்றதனால் அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் உறுதிப்பொருள்களை உணர்த்துகிற நூல்களென்பது பெற்றும். கசடறக் கற்றலாவது விபரீத சந்தேகங்களை நீக்கி, மெய்ப்பொருளை நல்லோர் பலருடனேயும் பலதாமும் பழகுதல். நிற்றலாவது, இல்வாழ்க்கையிலே கருமங்களைச் செய்து யோக்கியருக்குக்கொடுத்துத் தானநுபவித்தலிலும், துறவிலே தவத்தால் மெய்புணர்ந்து அவாவறுத்தலிலும், தவருமை. [இதனால் சிறப்புடையவனுக்குக் கற்கவேண்டுமென்பதும் கற்கத்தகு நூல்களும் அவைகளைக் கற்கும் விதமும் கற்றதனாற் பயனும் சொல்லப்பட்டன.]

'கற்க' இது கற்கக்கடவன் எனப் பொருள் குறித்தலின் வியங்கோளாயிற்று. 'கசடற' என்றது சந்தேகம், மாறுபாடு, விபரீதம் என்னும் மூக்குற்றங்களும் நீங்க என்பதாம். இனி, இதற்கு தம்மிடத்துள்ள அஞ்ஞான நீங்க எனப் பொருள் கூறுவாரும் உண்டு. 'கற்பவை' எனறது கற்கத்தகுந்தனவாகிய அறநூல், நீதிநூல், பொருள்நூல், இன்பநூல், ஞானநூல் எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ள நாறபயனுள தருநூல்களை. 'நிற்க' என்றது அங்ஙன்நூல்கள் கூறிய நெறியில் நிற்க என்பதாம். 'அதற்கு' என்றது தான் கனநூற்களைக் கற்ற தன்மைக்கு என்பதாம். 'தக' என்றது தக்கதாக என்னும் பொருளது. (1)

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(பரி-உரை) எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் - அறியாதார் எண்ணென்று சொல்லுவனவும் மறறை யெழுதவென்று சொல்லுவனவுமாகிய கலைகள் இரண்டினையும், வாழும் உயிர்க்குக கண என்ப - அறிதோறும் சிறப்புடை யுயிர்களுக்குக் கண்ணைனறு சொல்லுவர் எ-று.

எண்ணென்பது கணிதம்: அது, கருவியுஞ் செய்கையும் என இரு வகைப்படும்; அவை ஏரம்பமுதலிய நூல்களுட் காண்க. எழுத்தெனவே, அதனோடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ் விருநிறமும், அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின், கண் எனப்பட்டன. அவை கருவியாதல்,

"ஆதி முதலொழிய வல்லா தனவெண்ணி
னீதி வழுவா நிலைமையவ்வான்—மாதே
யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
நிறமாமோ வெண்ணிறைந்தாற் செப்பு."

"எழுத்தறியத் தீருமிழிதகைமை நீர்த்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா ளகு—மொழித்திறத்தின்
முட்டறுத்த கல்லோன் முதனூற் பொருளுணர்ந்த
கட்டுரைத்த வீடு பெறும்."

இவற்று ளறிக. என்ப வென்பவற்றுள், முன்னைய விரண்டும் அஃறிணைப் பன்மைப்பெயர்; பின்னது உயர்திணைப் பன்மையினை. அறியாதார், அறிந்தாரென்பன வருவிக்கப்பட்டன. சிறப்புடை யுயிரென்றது மக்களுயிருள்ளும் உணர்வு மிகுதியுடையதனை. இதனைற் கற்கப்படு நூல்கட்குக் கருவியாவனவும், அவற்றது இன்றியமையாமையும் கூறப்பட்டன.

(ப-ரை) (அறியாதவராலே) எண்ணென்ப-எண்ணென்ற சொல்லப்படுமையும், ஏனை யெழுத்தென்ப - மற்றை யெழுத்தென்ற சொல்லப்படுமையும் ஆகிய, இவ்விரண்டும் - இக்கலைகளிரண்டையும், (அறிந்தோர்) வாழுமுயிர்க்கு-வாழ்தற்குரிய மனிதர்க்கு, கண்-கண்களாகும், என்ப-என்று சொல்லுவார் எ-று.

(க - ரை) கணிதநூல்களும், இலக்கணநூல்களும், மனிதர்களுக்குக் கண்களாகும் என்பதாம்.

(வி-ரை) எண்-கணிதம். எழுத்து-இலக்கணம். இவ்விருவித நூல்களும், அறமுதலாகிய பொருள்களைக் காணுதற்குக் கருவியாகலால், கண்ணெனப்பட்டன. [இதனால் கற்கப்படு நூல்களுக்குக் கருவியாவனவும் அவைகள் அவசியம் வேண்டியவையென்பதும், சொல்லப்பட்டன.]

'எண்' என்றது கணிதநூலை; இனி, இதற்குத் தருக்கநூல் என்பாரும் உண்டு. 'எழுத்து' என்றது மொழியை; அதாவது இலக்கண இலக்கியங்களை. 'இரண்டும்' என்றதன் ஈற்று உம்மை முற்றும்மை. 'வாழும் உயிர்' என்றது சிறப்புடைய மக்கள் உயிர்க்கு என்பதாம். 'என்ப' என்றது உயர்ந்தோர் கூறுவர் என்பதாம். உயர்ந்தோர் என்றது தொக்கு நின்றது. (2)

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

(பரி-உரை) கண் உடையர் என்பவர் கற்றோர் - கண்ணுடையரென்று உயர்த்துச் சொல்லப்படுவார் கற்றவரே; கல்லாதவர் முகத்து இரண்டு புண் உடையர் - மற்றைக் கல்லாதவர் முகத்தின்கண் இரண்டு புண்ணுடையர், (கண்ணிலர்) எ-று.

நேயம் இடையிட்டவற்றையும் காலம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண் உடைமையின் கற்றாரைக் கண்ணுடையரென்றும், அஃதின்றி நோய் முதலியவற்றுன் துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணே உடைமையிற் கல்லாதவரைப் புண்ணுடைய ரென்றுங் கூறினர். மேற் கண்ணின்மை புரையின்ற ஊனக்கண்ணின் மெய்ம்மை கூறியவாற்றுன், பொருணூல்களையும்

கருவிநூல்களையுங் கற்றாரது உயர்வும் கல்லாதாரது இழிவும் இதனாற் றொகுத்துக் கூறப்பட்டன.

(ப-ரை) கற்றோர் - கற்றவரே, கண்ணுடையர் - கண்களுடையவர், என்பவர் - என்று உயர்த்திச் சொல்லப்படுவர், கல்லாதவர் - கற்றிலாதவர், முகத்து - முகத்தினிடத்து, இரண்டு புண்ணுடையர் - இரண்டு புண்களை யுடையவர் (கண்ணிலார்) எ-று.

(க-ரை) கற்றோர் முகத்திலுள்ளது கண், மற்றோர் முகத்திலுள்ளது புண் என்பதாம்.

(வி-ரை) தூரமான காலதேசங்களில் உள்ளவைகளையும் காணும் ஞானக்கண்ணுடைமையால் கற்றோரை கண்ணுடையரென்றும், அஃது இல்லாமல் நோய்முதலானவைகளாலே, துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணே யுடைமையால் கல்லாதவரை புண்ணுடையரென்றும் சொல்லினார். [முன் பாட்டிலே கண்ணல்லாமை குறிப்பிக்கப்பட்ட ஊனக்கண்ணினது மெய்மை யாகிய சொரூபத்தைச் சொல்லியவிதத்தினாலே பொருணூல்களையுங் கருவி நூல்களையும் கற்றோரது உயர்வும், கல்லாரது இழிவும், இதனாலே சொல்லப் பட்டன.]

அறிவின் ஆற்றலால் எல்லாம் உணரவல்லர் ஆதலின் 'கண்ணுடைய ரென்பவர் கற்றோர்' என்றார். கல்லாதவராய அறிவிலிகளின் முகத்தில் உள்ள கண்கள் நல்லன தீயன அறிந்துகொள்ளும் திறன் இன்றி தீயனவே செய்து துன்புறுத்தலினால் 'முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்' என்றார். (3)

உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

(பரி-உரை) உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே - யாவரை யும் அவர் உவக்குமாறு தலைப்பெய்து இனி இவரை யாமெங்ஙனங் கூடுது மென நினையுமாறு நீங்குதலாகிய அத்தன்மைத்து, புலவர் தொழில்- கற்றறிந்தாரது தொழில் எ-று.

தாம் நல்வழியொழுகல், பிறர்க்கு உறுதி கூறல் என்பன இரண்டுந் தொழிலென ஒன்றா யடங்குதலின் அத்தன்மைத் தென்றார். அத்தன்மை அப் பயனைத் தருந்தன்மை. நல்லொழுக்கங் காண்டலானும், தமக்கு மதுர மும் உறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வு எதிர்வுகளின் இன்பம் பயத்த லானும், கற்றார்மாட்டு எல்லாரும் அன்புடையராவ ரென்பதாம். இதனாற் கற்றாரது உயர்வு வகுத்துக் கூறப்பட்டது.

(ப-ரை) புலவர்-கற்றறிந்தவரது, தொழில் உவப்ப-(யாவரும்) மகிழும் படி, தலைக்கூடி-(அவரைச்) சேர்ந்து, உள்ள-(இனி யிவரை நாம் எப்போது

காண்போமென்ற) கினைக்கும்படி, பிரிதல்-நீக்குதலாகிய, அனைத்து-அத்தன்மையை புடையதாம் எ-று.

(க-ரை) கற்றோரோடு பழகிய மற்றோர் அவர் பிரிய வருந்துவர் என்பதாம்.

(வி-ரை) தாம் கல்வழி நடத்தலும், பிறருக்கு உறுதி சொல்லுதலும், தொழிலென ஒன்றாய் அடங்குதலால் அத்தன்மைத்தென்றார். அத்தன்மை-அப்பயனைத்தரும் தன்மை. காணுதலாலே கல்லொழுக்கமும், மதுரமான வுறுதிச்சொற்களைக் கேட்கையால் இன்பமும், உண்டாதலால் கற்றவரிடத்தே எல்லாரும் அன்புடையவராவ ரென்பதாம். [இதனால் கற்றோரது உயர்வு வகுத்துச் சொல்லப்பட்டது.]

'தலைக்கூடல்' இது சேர்தல் என்னும் பொருளது; தலை+கூடல் என்ற இரண்டு சொற்கள் கூடி ஒருசொல் நீராதாய் நின்றது. 'உள்ள' என்றது எண்ண என்பது பொருளாம். எஞ்ஞான்றாவது இனி இவரொடு எப்பொழுது கூடுவோம் என்னும் எச்சமாம். (4)

உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றூர்
கடையரே கல்லா தவர்.

(பரி-உரை) உடையார்முன் இல்லார்போல் எக்கற்றும் கற்றூர்-*"பிற்றை நிலைமுனியாது கற்றல் கன்று" தலான், செல்வர்முன் கல்கூர்ந்தார் கிற்கு மாறுபோலத் தாமும் ஆசிரியர் முன் எக்கற்று நின்றுங் கற்றூர் தலையாயினர்; கல்லாதவர் கடையரே-அக்கிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்று மிழிந்தாரேயாவர் எ-று.

உடையார் இல்லாரென்பன உலகவழக்கு. எக்கறுதல் - ஆசையாற் சூழ்தல். கடைய ரென்றதனான் அதன் மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது. பொய்யாய மானநோக்கி மெய்யாய கல்வி பிழைத்தார் பின் ஒருஞான்றும் அறிவுடையராகாமையின், கடையரே யென்றார். இதனாற் கற்றாரது உயர்வும் கல்லாதாரது இழிவுங் கூறப்பட்டன.

(ப-ரை) உடையார்முன் - செல்வர்முன்னே, இல்லார்போல்-வறியவர் போல், எக்கற்றும்-(தம்மாசிரியர்முன்) எக்கற்ற கின்றும், கற்றூர்-கற்றவர், (உயர்ந்தவராவார்) கல்லாதவர்-(அக்கிலைக்குநாணிக்) கல்லாதவர், கடையரே-(எப்போதும்) இழிந்தவரேயாவர் எ-று.

(க-ரை) கற்றோருயர்ந்தோரு மற்றோரிழிந்தோருமாவர் என்பதாம்.

(வி-ரை) எக்கறுதல் - ஆசையினாலே தாழ்தல். கடையரென்றதனால் அதற்கு எதிராகிய உயர்ந்தோரென்பது வருவிக்கப்பட்டது. பொய்யாகிய மானத்தைநோக்கி மெய்யாகிய கல்வியை பிழைத்தவர் பின்னொருகாலும் அறிவுடையராகாமையால், கடையரே யென்றார். [இதனாலே கல்லாதவரது இழிவு சொல்லப்பட்டது.

* புறநானூறு-183.

'உடையர்' என்றது செல்வம் உடையாரை. 'இல்லார்' என்றது செல்வம் இல்லாதவர்களாகிய வறியரை. 'எக்கறுதல்' என்றது ஆசையால் தாழ்ந்தகிற்றலை உணர்த்தும். 'கற்றார்' என்ற இடத்து 'கற்றார் தலையாயினார்' எனத் தலையாயினர் என்பதை வருவித்து உரைக்கப்பெற்றது. என்னை? கல்லாதவர் கடையரே என்றதனால் அதன் மறுதலை வருவித்து உரைக்கப் பெற்றது. 'கடையரே' இதன் ஈற்றில் கின்ற ஏகாரம் தேற்றப்பொருளது.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

(பரி-உரை) மணல் கேணி தொட்ட அனைத்த ஊறும்-மணலின்கட். கேணி தோண்டிய அளவிற்றாக ஊறும்; மாந்தர்க்கு அறிவு கற்ற அனைத்.. ஊறும்-அதுபோல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக ஊறும் எ-று.

நன்றே கேணி யென்றது அதன்கண் சீரை. அளவிற்றாக என்றது அதனளவுஞ் செல்ல என்றவாறு. சிறிது கற்ற துணையான் அமையாது மேன் மேற் கற்றல் வேண்டுமென்பதாம். இஃது ஊழ் மாறுகொள்ளா வழியாகலின், மேல் "உண்மையறிவே மிகும்" என்றதனோடு மலையாமை யறிக.

(ப-உரை) மணல் - மணலினிடத்தே, கேணி - கேணியானது, தொட்டனைத்த-தோண்டிய அளவினதாக, ஊறும்-சாக்கும், (அதுபோல்) அறிவு-(மனிதருக்கு) அறிவானது, கற்றனைத்த-கற்ற அளவினதாக, ஊறும்-சாக்கும் எ-று.

(க-ரை) மணற்கேணி தோண்டியவளவு சுரப்பதுபோல மனிதருக் கறிவு கற்றவளவாகும் என்பதாம்.

(வி-ரை) இக்கே கேணியென்றது-அதனீரை. சிறிது கற்றவளவிலுலே போதுமென்று விடாமல் மேன்மேலும் கற்றல்வேண்டு மென்பதாம். இக் கல்வி யறிவுமிகுதல் ஊழ் மாறு கொள்ளாவிடத்தே யாகலால் முன்னே உண்மையறிவே மிகுமென்றதனோடு இப்பாடல் விரோதப்படாமை அறிக.

'தொட்டனைத்த' என்பதில் 'தொடு' என்பது 'தோண்டு' என்று பொருளது. 'ஊறும்' என்றது நீர் ஊறும் என்பதாம். 'தொட்டனைத்தூ மணற்கேணி' என்றது உபமானம், பின்னது உபமேயம்.

யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(பரி-உரை) யாதானும் நாடாம் ஊராம்-கற்றவனுக்குத் தன்னுடைத் தன்னூருமேயன்றி யாதானும் ஒருநாடும் நாடாம், யாதானும் ஓர் ஊரும் ஊராம் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு என் - இங்ஙனமாயின், ஒருவனி தானிறக்குமளவுங் கழிகின்றது என் கருதி எ-று.

உயிரோடு சேறலிற் சாக்தணேபு மென்றார். பிறர் நாடுகளும் ஊர்களும் தமபோல உற்றப் பொருட்கொடையும் பூசையும் உவர்த செய்தற்கேத வாகலிற் கல்விபோலச் சிறந்தத பிறிதில்லை, அதனேயே எப்பொழுதுஞ் செய்கவென்பதாம்.

(ப-ரை) (கற்றவனுக்குத் தன்னுடும் ஊருமேயல்லாமல்) யாதானும்-யாதாயினு மொருநாடும், நாடாம் - தன்னுடாம், (யாதானும்) - யாதாயினு மோருரும், ஊராம்-தன்னூராம், (அப்படியிருக்க) -ஒருவன் - ஒருவன், சாக்தணேபும் - இறக்குமனவும், கல்லாதவாறு - கல்லாமற் கழிகின்றத, என்-என்னே கினேத்து எ-று.

(க-ரை) கற்றவர்க்கு எந்நாடும் எவ்வூரும் தன்னதாயிருக்க ஒருவன் கற்காமலிருப்பதென்ன என்பதாம்.

(வி-ரை) ஆல்-அசைகன். பின்னும் உயிரோடு செல்லுதலால் சாக்தணேபு மென்றார். பிறநாடுகளும் ஊர்களும் தம்முடையவைபோலிருக்த மகிழ்ந்த பொருன் கொடுத்தப் பூசை செய்தற்கு எதுவாகலால், கல்விபோற் சிறந்தது வேறொன்று இல்லேயாகலின் அதனேயே எப்போதும் கற்கவேண்டும் என்பதாம்.

'யாதானும்' இது 'யா' வினுவடியாகப் பிறந்தது. 'யாதானும்' என்பது முன்னின்று நாடு ஆமால் என்பதனேடும், ஊராமால் என்பதனேடும் இயைந்து பொருள் தந்தது. இது முதனிலேத் தீபகஅலங்காரம். 'என்' இது வினுவின் அடியாகப்பிறந்த வினுப்பெயர். 'நாடாமால்', ஊராமால்' என்ற தன்கண் நின்ற ஆல்கள் இரண்டும் அசைநிலேகன். (7)

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

(பரி-உரை) ஒருவற்கு-ஒருவனுக்கு, தான் ஒருமைக்கண் கற்ற கல்வி-தானெரு பிறப்பின்கண் கற்ற கல்வி, எழுமையும் ஏமாப்பு உடைத்த - எழு பிறப்பினுஞ் சென்று உதவுதலே புடைத்த எ-று.

வினேகன்போல உயிரின்கட் கிடந்து அது புக்குழிப் புகுமாகலின், எழு மேமாப்புடைத்தென்றார். எழுமை மேலே கூறப்பட்டது. உதவுதல்-னேறிக்கண் உய்த்தல்.

(ப-ரை) ஒருவற்கு-ஒருவனுக்கு, தான்-தான், ஒருமைக்கண்-ஒரு பிறப்பிடத்தி, கற்ற கல்வி-கற்ற வித்தையானது, எழுமையும்-எழுபிறப்புக்களி லும், ஏமாப்பு-போய் உதவுதலே, உடைத்த-உடையதாகும் எ-று.

(க-ரை) ஒரு பிறவியில் கற்றகல்வி எழுபிறப்பிலும் உதவும் என்பதாம்.

(வி-ரை) வினேகன்போல் உயிரிடத்தே தங்கி அது சென்றவிடத்தே செல்லுமாகலால் எழுமையு மேமாப்புடைத்தென்றார். உதவுதல் - கல்வழி யிலே சேர்த்தல்.

'ஒருமை' என்றது ஒரு பிறப்பை. 'எழுமை' என்றது ஏழு பிறப்புகளை. 'ஏமாப்பு' என்றது கல்வழியிற் செலுத்தி உதவிக்காத்தலை. (8)

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(பரி-உரை) தாம் இன்பு உறுவது உலகு இன்புறக் கண்டு - தாம் இன்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலக மின்புறுதலால் அச் சிறப்பு நோக்கி, கற்றறிந்தார் காமுறுவர் - கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர் எ-று.

தாம் இன்புறுதலாவது-நிகழ்வின்கட் சொற்பொருள்களின் சுவை நுகர்வானும், புகழ் பொருள் பூசை பெறுதலானும், எதிர்வின்கண் அறம் வீடு பயத்தலானும், அதனான் இடையறாத இன்ப மெய்துதல். உலகு இன்புறுதலாவது - இம் மிக்காரோடு தலைப்பெய்து அறியாதனவெல்லாம் அறியப் பெற்றேமென்றும், * "யாண்டு பலவாக நரையிலமாயினேம்" என்றும் உவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தலென் றிவற்றாற் றுன்புறுதலும், பலரையும் பகையாக்கலு முடைத்தென அறிந்து அதனைக் காமுறாமையிற் கற்றறிந்தாரென்றும், கரும்பு அயிறற்குக் கூலிபோலத் தாம் இன்புறுதற்கு உலகு இன்புறுதல் பிறவாற்றானின்மையின் அதனையே காமுறுவரென்றுங் கூறினார்.

(பரை) தாம்-தாங்கள், இன்புறுவது-இன்பமடைதற்கு ஏதுவாகிய கல்விக்கு, உலகு - உலகமானது, இன்புற - இன்பமடைய, கண்டு - (அச்சிறப்பு) நோக்கி, கற்றறிந்தார் - கற்றறிந்தவர்கள், காமுறுவர் - பின்னும் அதனையே விரும்புவார் எ-று.

(க-ரை) கற்றவர் கல்விக்கு உலகத்தா ரின்புறுதல் கண்டு மேன்மேலுங் கற்பார் என்பதாம்.

(வி-ரை) தாமின்புறுதலாவது; - கற்கிறபோது சொற்பொருள்களின் சுவையை அனுபவித்தலாலும், புகழும், பொருளும், பூசையும், பெறுதலாலும்; பின்னே அறத்தையும், வீட்டையும், அடைதலாலும்; அதனால் இடையறாத இன்பத்தை அனுபவித்தல் உலகின்புறுவதாகிய இப்பெரியவரைச் சேர்ந்து அறியாதவைகளையெல்லாம் அறிந்தோமென்று மகிழ்தல். சம்பாதித்தல், காப்பாற்றல், இழத்தல், இவைகளாலே துன்பஞ்செய்து பலரையும் பகையாக்கல்பற்றி செல்வத்தை விரும்பாமையால் கற்றறிந்தாரென்று கரும்பு தின்னுதற்குக் கூலிபோல் தாமின்புறுதற்கு உலக மின்புறுவது மற்றொரு வழியால் இல்லாமையால் அதனையே காமுறுவரென்றும் சொல்லினார்.

'தாம்' என்றது கற்றவரை. 'இன்புறுவது' என்றது இன்புறற்குக் காரணமாகிய கல்வியை. 'காமுறுவர்' என்ற இடத்து அக்கல்வியையே என்பது வருவித்துக்கொளற்பாலது. (9)

* புறநானூறு-191.

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

(பரி-உரை) ஒருவற்குக் கேடு இல் விழுச்செல்வம் கல்வி - ஒருவனுக்கு அழிவில்லாத சிறிய செல்வமாவது கல்வி; மற்றையவை மாடு அல்ல - அஃது ஒழிந்த மணியும் பொன்னு முதலாயின செல்வமல்ல எ-று

அழிவின்மையாவது-நாயத்தார், கள்வர், வலியர், அரசென் றிவராற் கொள்ளப்படாமையும், வழிப்பட்டார்க்குக் கொடுத்தழிக் குறையாமையு மாம். சிறுமை-தக்கார்கண்ணே சிற்றல். மணி பொன் முதலியவற்றிற்கு இவ் விரண்டின்மையின், அவற்றை மாடல்ல வென்றார். இவை ஐந்தபாட் டானும் கல்வியது சிறப்புக் கூறப்பட்டது.

(பத) ஒருவற்கு-ஒருவனுக்கு, கேடில்-அழிவில்லாத, விழு - சிறிய, செல்வம் - செல்வமானது, கல்வி - வித்தையாகும், மற்றையவை-அது நீக்கிய மணியும், பொன்னும் முதலான செல்வம், மாடல்ல - செல்வமல்ல எ-று.

(த-ரை) ஒருவனுக்குக் கல்வி அழிவில்லாத செல்வம் என்பதாம்.

(வி-ரை) அழிவில்லாமையாவது பங்காளிகள், கள்வர், வலியவர், அரசர், இவர்களாலே கொள்ளப்படாமையும், வழிப்பட்டவர்க்குக் கொடுத்தவிடத்தே குறையாமையும் ஆம். சிறுமை - யோக்கியரிடத்தே கிற்கை, மணி, பொன், முதலானவைகளுக்கு இவ்விரண்டும் இல்லாமையால் அவற்றை மாடல்லவென்றார். [இவை ஐந்தபாட்டாலும் கல்வியது சிறப்புச் சொல்லப் பட்டது.]

'கேடில் விழுச்செல்வம்' என்றது அழிவில்லாததும் சிறந்ததுமாகிய செல்வம் என்பது பொருளாம். 'கல்வி' இது 'கல்' என்னும் பகுதி அடியாகப் பிறந்த 'வி' விகுதிபெற்ற தொழிற்பெயர். 'கல்வி' என்னுஞ் சொல் கற்றலும், கற்கப்படும் நூலும், கற்றறிந்த அறிவையும் உணர்த்தி நிற்குமென்ப தறிக. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் காற்பயனையும் அடைதற்கு உரியவன் ஆண்மகன் ஆதலின் 'ஒருவற்கு' என்றார். 'மற்றையவை' என்றது கல்வி ஒழிந்த மணி பொன் முதலியவற்றை. 'மாடல்ல' என்றதில் 'மாடு' என்ற சொல் நின்று 'செல்வம்' என்னும் பொருள் குறித்து நின்றது. (10)

40-ம் அதி - கல்வி - முற்றிற்று.

41-ம் அதிகாரம்—கல்லாமை

(பரி-உரை) அஃதாவது: கற்றலைச் செய்யாமை; என்றது அதனை யுடையினை. கல்விச்சிறப்பு மேல் விதிமுகத்தாற் கூறிய தனையான் முற்றுப்பெறுமை நோக்கி, எதிர்மறை முகத்தாலுங் கூறுகின்றதாகலின், இது கல்விபின்பின் வைக்கப்பட்டது.

(க-உரை) அஃதாவது: கற்றலைச் செய்யாமையினிழிவாம். கல்வியது சிறப்பை முன்னே சொல்லியவளவால் முடிவுபெறுமை நோக்கி, எதிர்மறை யினாலேயும் சொல்லுதலால் இது அதன்பின் வைக்கப்பட்டது.

அரங்கின்றி வட்டாடி யற்றே திரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

(பரி-உரை) அரங்கு இன்றி வட்டு ஆடியற்று - அரங்கினை யிழையாது வட்டாடினாற்போலும், திரம்பிய நூல் இன்றிக் கோட்டி கொளல் - தான் திரம்புதற் கேதுவாகிய நூல்களைக் கல்லாத ஒருவன் அவையின்கண் ஒன்றனைச் சொல்லுதல் எ-று.

அரங்கு-வகுத்தானம். வட்டாடல்-உண்டை யுருட்டல். இவை * "கட்டுரை யன்ன வட்டாங் கையைத்தக், கல்லாச் சிறு அர் கெல்லிவட்டாடும்" என்பதனு னறிக. திரம்புதல்-அறியவேண்டுவனவெல்லா மறிதல். கோட்டி யென்பதை நண்டு ஆகுபெயர்,† "புல்லாவெழுத்திற் பொருளில் வறுக்கோட்டி" என்புழிப்போல. சொல்லும் பொருளும் தெரிப்படா வென்பதாம்.

(ப-உரை) திரம்பிய - (தான்) திரம்புதற்கு ஏதுவாகிய, நூல் - நூல்களை, இன்றி-இல்லாமல், (ஒருவன்) கோட்டிகொளல்-சபையினிடத்தே (தான் ஒன்றைச்சொல்லுதல்), அரங்கு-வகுப்பிடத்தை, இன்றி - இல்லாமல், வட்டாடி யற்று-உண்டை உருட்டியதுபோலும் எ-று.

(க-உரை) கல்வி கல்லாதவன் சபையிலொன்றைச் சொல்லல் வகுப் பறையில்லாமல் சூதாடியதுபோலும் என்பதாம்.

(வி-உரை) திரம்புதல்-அறியவேண்டு மவைகளையெல்லாம் அறிதல். அப் படி செய்தலால், சொல்லும், பொருளும், வழிப்படாமற் போமென்பதாம்.

'அரங்கு' என்றது கட்டங்கிறியதானத்தை. 'வட்டு' என்றது சூதாடு கருவியை. 'அற்று' இது அத்தன்மைபோலும் என்னும் பொருளது. 'திரம் பிய' என்றது தான் அறிவு திரம்புதற்கு உரிய என்பதாம். 'இன்றி' என்றது கல்லாத என்னும் பொருள் பயந்தின்றது. 'கோட்டி' என்றது அவையை; இது கொள்ளுகோரைக் கொண்ட இடம் என்னும் காரணம்பற்றி வந்த பெயர். இதனைத்திரித்த வடநூலார் 'கோஷ்டி' என்றனர். 'கொளல்' என்றது நண்டு சொல்லுதல் என்னும் பொருளது. 'அரங்கின்றி வட்டாடியற்று' என்றது உபமானம். 'திரம்பிய நூலின்றிக் கோட்டிகொளல்' என்றது உபமேயம்.

(1)

* கற்றிணை-8. † காலடியார்: மேன்மக்கள்-5.

கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

(பரி-உரை) கல்லாதான் சொற் காமுறுதல் - கல்வியில்லாதா னொருவன் அவையின்கண் ஒன்று சொல்லுதலை அவாவுதல், முலை இரண்டும் இல்லா தாள் பெண் காமுற்று அற்று - இயல்பாகவே முலையிரண்டு மில்லாதா னொருத்தி பெண்மையை அவாவினாற்போலும் எ-று.

"இனைத்தென அறிந்த சினை" ஆகலின், தொகையொடு முற்றும்மை கொடுத்தார். சிறிது மில்லாதா னென்பதாம். அவாவியவழிக் கடை போகாது, போயினும் நகை விளைக்கு மென்பதாயிற்று.

(ப-உரை) கல்லாதான் - கல்வியில்லாதவனொருவன், சொல் - (சபையி னிடத்தே) ஒன்று சொல்லுதலை, காமுறுதல் - வேண்டுதல், முலையிரண்டும்- இரண்டு முலைகளும், இல்லாதாள் - இல்லாதவளொருத்தி, பெண் - பெண் மையை, காமுற்றற்று-வேண்டுவதுபோலும் எ-று.

(க-உரை) கல்லாதவன் சபையிற்பேச விரும்பின் இருமுலைகளு மில்லாள் பெண்டன்மையை யிச்சித்தல்போலும் என்பதாம்.

(வி-உரை) முலையிரண்டு மில்லாதாள் - முலை சிறிது மில்லாதவ னென்ப தாம். அவாவியவிடத்து முடிவுபெறாது முடிவுபெற்றாலும் நகை விளைக்கு மென்பதாம்.

'காமுறுதல்' இது விரும்புதல் என்னும் பொருளது; இது 'காமர்' என்ற சொல்லினடியாகப்பிறந்தது. என்னை? அழகிய பொருளை விரும்பச்செய்யும் இயல்பாதல்பற்றி என்க.' இது வடமொழியென்பார் கூற்று பொருத்தாப் புலப்பமாம். 'இரண்டும்' என்றதன் ஈற்று உம்மை இனைத்தென்றறி பொரு ளின் மேல்வந்த முற்றும்மை. 'பெண்' என்றது பெண்தன்மையை. (2)

கல்லா தவரு நனிநல்லர் கற்றூர்மூற்
சொல்லா திருக்கப் பெறின்.

(பரி-உரை) கல்லாதவரும் நனி நல்லர் - கல்லாதாரும் மிக நல்லராவர், கற்றூர் முன் சொல்லாது இருக்கப்பெறின் - தாமே தம்மையறிந்து கற்றூர் அவையின்கண் ஒன்றனையுஞ் சொல்லாதிருத்தல் கூடுமாயின் எ-று.

உம்மை இழிவுசிறப்பும்மை. தம்மைத் தாம் அறியாமையின் அது கூடா தென்பார் பெறினென்றும், கூடின் ஆண்டுத் தம்மை வெளிப்படுத்தாமை யாலும், பின் கல்வியை விரும்புவராகலானும், நனிநல்லரென்றுங் கூறினார். இவை மூன்றுபாட்டானுங் கல்லாதார் அவைக்கட் சொல்லுதற்குரியர் அன்மை கூறப்பட்டது.

(ப-உரை) கல்லாதவரும்-கற்றிலாதவரும், நனிநல்லர் - மிகவும் நல்ல வராவர், (தாமே தம்மையறிந்து) கற்றூர்முன் - கற்றோர் சபையிடத்து,

சொல்லாதிருக்கப்பெறின் - (யாதொன்றும்) சொல்லாதிருக்கப் பெறுவா
னாயின் எ-று.

(உ-ம்) கற்றார்முன் யாதொன்றும் சொல்லாதிருப்பின் கல்லா
தவர் மிகல்லவர் என்பதாம்.

(வி-ம்) தம்மைத் தாமறியாமையின் அது கூடாதென்றற்குப் பெறி
னென்றும், பெற்றால் அப்போ தம்மை வெளிப்படுத்தாமையாலும், பின்

'செப்பத பெறப்பெற்றா. 'கொள்ளார்' என்றதை ஒரோவழி ஒருசிடை யிலாய மாதத் தொற்றலை [illegible] யிலபுடைமையல்லவாதலினுலென்க. (4)

கல்லா ஒருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

(பரி உரை) கல்லா ஒருவன் தகைமை - தான்கற்ற கல்லாதவொருவன் யான் அறிவுடையனெனத் தன்னை மதிக்கு மதிப்பு, தலைப்பெய்த சொல் லாடச் சோர்வுபடும்-அவற்றைக் கற்றவன் கண்ட உரையாடக் கெடும் எ-று.

கற்ற லென்பதை வருவிக்கப்பட்டது. யாதானுமோர் வார்த்தை சொல்லுங் காலுமே சிற்பதை, சொல்லியவழி வழுப்படுதலின், அழிக்கலிட மென்பதாம். இவை பிரண்டுபாட்டானுங் கல்லாதாரதை இயற்கையறிவின் குற்றம் கூறப்பட்டது.

(ப-ரை) கல்லாவொருவன்-(தான்கற்ற) கல்லாதவொருவன், தகைமை-(அறிவுடையனென்று தன்னை மதிக்கும்) மதிப்பானது, தலைப்பெய்த-(அவைதான்கற்றவன்) கண்ட, சொல்லாட-பேச, சோர்வுபடும்-கெடும் எ-று.

(க-ரை) கல்லாதவன் மதிப்பு கற்றவன் முன்பேசக் கெடும் என்பதாம்.

(வி-ரை) கற்றலென்பதை வருவிக்கப்பட்டது. யாதானும் ஒரு வார்த்தை சொல்லுமட்டுமே சிற்பதை சொல்லியவிடத்தை எதிருத்தாம் தரும் போதை வழுப்படுதலால் தன்னை மதித்த மதிப்பு அழிக்கலிட மென்பதாம். [இவை இரண்டு பாட்டாலும் கல்லாதவரதை இயற்கை யறிவின் குற்றம் சொல்லப்பட்டது.]

'தகைமை' இதை தன்னைத்தானே மதித்துக்கொண்டிருக்குந் தன்மை யென்பதாம். 'தலைப்பெய்த' இதை கண்ட என்னும் பொருளது. இதை ஒரு சொல். 'சொல்லாடல்' என்றதை பேசுதலை. 'சோர்வுபடும்' என்றதை கெடும் என்னும் பொருளது.

(5)

உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

(பரி-உரை) கல்லாதவர்-கல்லாதவர், உளர் என்னும் மாத்திரையர் அல் லர்-காணப்படுதலான் இலரல்லர் உளரென்ற சிலர் சொல்லுமளவினாத தி, பயவாக் களர் அனையர் - தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் பாத களர் நிலத்தோடு ஒப்பர் எ-று.

களர் தானும் பேணற்பாடழிந்த உயிர்கட்கும் உணவு முதலிய உதவா போலத், தானும் தன்கு மதிக்கற்பாடு அழிந்த பிறர்க்கும் அறிவு முதலிய வாரென்பதாம். இதனுற் கல்லாதாரதை பயன்படாமை கூறப்பட்டது.

(ப-ரை) கல்லாதவர் - கல்லாதவர்கள், (காணப்பட்டுக்கொண் டிருக்கை யால்) உளரென்று மாத்திரையரல்லால் - உளரென்று (லெராலே சொல்லப் படும்) அளவினராதலன்றி, (தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால்) பய வாக்கனரனையர்-விளையாத களர் நிலத்தோடொப்பாவார் எ-று.

(க-ரை) கல்லாதவர் விளைவில்லாக் களர் நிலத்தை யொப்பாவர் என்ப தாம்.

(வி-ரை) எப்படி களர் நிலம் தானும் விரும்பப்படுதலை இழந்து உயிர் களுக்கும் உணவு முதலானவைகளை உதவுவதில்லையோ அப்படியே கல்லாத வர் தாமும் நன்கு மதிக்கப்படுதலை இழந்து பிறர்க்கும் அறிவு முதலானவை களை உதவாரென்பதாம். [இதனாலே கல்லாதவரது பயன்படாமை சொல் லப்பட்டது.]

'உளர்' இது உள்ளவராகி இருக்கின்றார் என்னும் பொருளது. உள்ளர் என்பதன் தொகுத்தல் விகாரம். 'மாத்திரை' என்றது அளவை. 'பயவா' என்றது தனக்கும் பிறர்க்கும் பயனைச்செய்யாத என்னும் பொருளதாம். 'களர்' என்றது களர் நிலத்தை. (6)

நுண்மா ணுழைபுல மில்லா னெழினல-
மண்மாண் புனைபாவை யற்று.

(பரி-உரை) நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம் - நுண்ணி தாய் மாட்சிமைப்பட்டுப் பல. நூல்களினுஞ் சென்ற அறிவு இல்லாதவ னுடைய எழுச்சியும் அழகும், மண் மாண் புனை பாவை அற்று - சுதையான் மாட்சிமைப்படப் புனைந்த பாவையுடைய எழுச்சியும் அழகும்போலும் எ-று.

அறிவிற்கு மாட்சிமையாவது-பொருள்களைக் கடிதிற் காண்டலும், மற வாமையும் முதலாயின. பாவை-ஆகுபெயர். * "உருவின் மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிது" ஆகலான், எழினலங்களும் ஒருபயனே யெனினும், நூலறிவு இல்வழிச் சிறப்பிலவென்பதாம். இதனான் அவர் வடிவழகாற் பய னின்மை கூறப்பட்டது.

(ப-ரை) நுண்-நுட்பமாகிய, மாண்-மாட்சிமைப்பட்டு, நுழை - (பல நூல் களிலும்) சென்ற, புலம்-அறிவை, இல்லான்-இல்லாதவனது, எழில்-எழுச்சி யும், நலம் - அழகும், மண் - சுண்ணச்சாந்தினாலே, மாண்-மாட்சிமைப்பட, புனை - அலங்கரிக்கப்பட்ட, பாவையற்று-பாவையினது எழுச்சியும் அழகும் போலும் எ-று.

(க-ரை) நூலறிவில்லான் எழுச்சியும் அழகும் மண்பாவையை ஒக்கும் என்பதாம்.

(வி-ரை) அறிவுக்கு மாட்சிமையாவது - பொருள்களைக் கடிதிலே காண லும், மறவாமையும், முதலானவை. பாவை-அதன் எழுச்சியழகுகளைக் காட்ட லால் ஆகுபெயர். உருவின் மிகுந்ததோ ருடம்பு கிடைத்தலும் அரிதாகலால்

* சீவகசிந்தாமணி: முததியிலம்பகம்-154.

எழினலக்களும் ஒரு பயனேயாயினும் அலறிவில்லாவிடத்தே சிறப்பில்லை னாம் என்பதாம். [இதனுல் அவர் வடிவழகினுலே பயனில்லாமை சொல்லப் பட்டது.]

'நண்' என்றது நட்பப்பொருள்களேயும் நனித்தை ஆயும் கூரிய தன் மையை. 'மாண்' என்றது சிறந்துள்ளதாகிய அறிவை. 'நுழைபுலம்' என்றது நுலுள்ளும்புகுந்த ஆராயும் அறிவை. 'மண்' என்றது ஈண்டு சுதைச்சாந் தைக்குறித்தது. 'மாண்புழை' என்றது மாண்புபட வலக்கரித்த என்னும் பொருளது. 'பாவை' என்றது பதுமையை. 'எழில்நலம்' என்றது போழுகை. எழிலும் நலமும் எனப்பொருள்தாலின் இது உம்மைத்தொகை. 'எழில்' என் றது எழுச்சியை. 'நலம்' என்றது அழகை எனப் பொருள்கண்டார் உரை யாசிரியர். (7)

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு.

(பரி-உரை) கல்லார்கண் பட்ட வறுமையின் இன்னுது - கற்றூர்மாட்டு ன்ற வறுமையினும் இன்னுது, கல்லார்கண் பட்ட திரு - கல்லாதார்மாட்டு ன்ற செல்வம் எ-று.

இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தத்தநிலேயின் அன்றி மாறி நிற்றலால் தாம் இடுக்கட்படுதலும் உலகிற்குத் தன்பஞ் செய்தலும் இரண் டற்கும் ஒக்குமாயினும், திருக் கல்லாரைக் கெடுக்க, வறுமை கல்லாரைக் கெடாது நிற்றலான், வறுமையினுந் திரு இன்னுதென்றூர். இதனுல் அவர் திருவின்குற்றம் கூறப்பட்டது.

(ப-ரை) கல்லார்கண்-கல்லாதவரிடத்து, பட்ட-உண்டாகிய, திரு-செல் வமானது, கல்லார்கண் - கற்றவரிடத்து, பட்ட - உண்டாகிய, வறுமையின்-வறுமையினும், இன்னுதே-தன்பஞ்செய்வதேயாகும் எ-று.

(க-ரை) கல்லாதவரிடத்துண்டாகிய செல்வம் கற்றவரிடத்துண்டாகிய வறுமையினுந் தன்பஞ்செய்யும் என்பதாம்.

(வி-ரை) செல்வம் தனக்குரிய கற்றவரையும், வறுமை தனக்குரிய கல் லாதவரையும், விட்டு மாறிநிற்கையால் அவ்விரண்டும் தாம் இடுக்கட்பட்டு உலகிற்கும் தன்பஞ்செய்தலால் ஒக்குமாயினும், செல்வம் கல்லாதவரைக் கெடுக்கும், வறுமை கற்றோரைக் கெடுக்காது. ஆதலால் அவ்வறுமையினும் இச்செல்வம் இன்னுதென்றூர். [இதனுல் அவர் செல்வத்தின் குற்றம் சொல் லப்பட்டது.]

'வறுமையின்' இதில் 'இன்' உருபு எல்லேப்பொருளில் வந்தது. 'இன் னுதே' ஈற்று ஏகாரம் தேற்றப்பொருளது. 'திரு' என்றது பொருட்செல் வத்தை. கண்கள் இரண்டும் ஏழன் உருபு. (8)

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு.

(பரி-உரை) கல்லாதார் மேற்பிறந்தார் ஆயினும் - கல்லாதார் உயர்ந்த சாதிக்கட் பிறந்தாராயினும், கீழ்ப் பிறந்தும் கற்றார் அனைத்துப்பாடு இலர்-தாழ்ந்த சாதிக்கட் பிறந்துவைத்துங் கற்றாரது பெருமை அளவிற்றாய பெருமையிலர் எ-று.

உடலோ டொழியுஞ் சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லுங் கல்வியுயர்ச்சி சிறப்புடைத் தென்பதாம். இதனால் அவர் சாதியுயர்ச்சியாற் பயனின்மை கூறப்பட்டது.

(ப-ரை) கல்லாதார் - கல்லாதவர்கள், மேற்பிறந்தாராயினும் - உயர்ந்த சாதியிலே பிறந்தாராயினும், கீழ்ப்பிறந்தும் - தாழ்ந்த சாதியிலே பிறந்திருந்தும், கற்றாரனைத்து-கற்றவரது பெருமையளவினதாகிய, பாடு-பெருமையை, இலர்-இல்லாதவர்களாவார்கள் எ-று.

(க-ரை) மேற்குலத்திற் பிறந்துங் கல்லாராயின் கீழ்க்குலத்திற் பிறந்த கற்றாரோடொப்பாகார் என்பதாம்.

(வி-ரை) உடம்போடு அழியும் சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லும் கல்வியுயர்ச்சி சிறப்புடையதென்பதாம். [இதனால் கல்லாதவரது சாதியுயர்ச்சியால் பயனில்லாமை சொல்லப்பட்டது.]

'மேற்பிறந்தார்' என்றது மேற்குலத்திலே பிறந்தவர் என்னும் பொருளது. 'கீழ்' என்றது கீழ்க்குலத்தை. 'அனைத்து' இது அவ் அளவு என்னும் பொருளது. 'பாடு' என்றது ஈண்டு பெருமை என்னும் பொருளது. (9)

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

(பரி-உரை) விலங்கொடு மக்கள் அனையர்-விலங்கோடு நோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர் அத்துணைத் தீமையுடையர், இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்-விளங்கிய நூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர் எ-று.

விலங்கு, நூல் சாதிப்பெயர். விளங்குதல் - மேம்படுதல். விலங்கின் மக்கட் கேற்றமாய உணர்வு மிகுதி காணப்படுவது, கற்றார் கண்ணேயாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினரல்லரென்பதாம். மயக்கநிரனிறை. இதனால் அவர் மக்கட் பிறப்பாற் பயனெய்தாமை கூறப்பட்டது.

(ப-ரை) இலங்குநூல்-விளங்கியநூலை, கற்றாரோடு-கற்றவருடன், ஏனையவர்-கல்லாதவர், விலங்கொடு - மிருகங்களோடு, மக்களனையர் - மனிதர் எவ்வளவு நன்மையுடையவரோ அவ்வளவு தீமையுடையவராவர் எ-று.

(க-ரை) கற்றவர் மக்களையுங் கல்லாதவர் மிருகங்களையு மொப்பாவார் என்பதாம்.

(வி-ரை) விளங்கல் - மேம்படுதல். விலங்கைக்காட்டிலும் மனிதர்க்கு மேலான அறிவு மிகுதி கற்றவரிடத்தே காணப்படுதலால், கல்லாதவரும் அவரும் சமானமான பிறப்பினரல்லரென்பதாம். [இதனால் கல்லாதவர் மனிதப் பிறப்பினாலே பயனடையாமை சொல்லப்பட்டது.]

'ஒடு' 'ஒடு' இரண்டும் மூன்றன் உருபு. 'இலங்குநூல்' என்றது அறிவு விளக்கியநூலை. 'எனையவர்' என்றது கல்லாதவரை. (10)

41-ம் அதி - கல்லாமை - முற்றிற்று.

42-ம் அதிகாரம்—கேள்வி

(பரி-உரை) அஃதாவது: கேட்கப்படு நூற்பொருள்களைக் கற்றறிந் தார் கூறக்கேட்டல். கற்றவழி அதனினுய அறிவை வலியுறுத்தலானும், கல்லாதவழியும் அதனை உண்டாக்குதலானும், இது கல்வி கல்லாமை களின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: கேட்கத்தகு நூலின் பொருள்களைக் கற்றறிந்தவர் சொல்லக் கேட்குதல். கற்றவிடத்தே அதனாலாகிய அறிவை உறுதிப் படுத்தலாலும், கல்லாதவிடத்தும் அதனை உண்டாக்கலாலும், இது கல்வி கல்லாமைகளின் பின் வைக்கப்பட்டது.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

(பரி-உரை) செல்வத்தன் செல்வம் செவிச் செல்வம் - ஒருவற்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான் வருஞ் செல்வம், அச்செல்வம் செல்வத்தன் எல்லாம் தலை-அச்செல்வம் பிறசெல்வங்க ளெல்லாவற்றினுந் தலையாகலான் எ-று.

செவியான் வருஞ் செல்வம்-கேள்வியான் எல்லாப்பொருளையு மறிதல். பிற செல்வங்கள் பொருளான் வருவன. அவை நிலையாவாகலாலும், துன்ப வினைவினவாகலானும், இது தலையாயிற்று. அவற்றை யொழித்து இதனையே செய்கவென்பது குறிப்பெச்சம்.

(ப-ரை) (ஒருவனுக்கு) செல்வத்துட்செல்வம் - சிறப்புடைய செல்வ மாவது, செவிச்செல்வம்-செவியால்வருஞ் செல்வமாம், அச்செல்வம் அத்தச் செல்வம், செல்வத்துளெல்லாம் - பிறசெல்வங்களெல்லாவற்றினும், தலை-மேலாமையாம் (ஆதலால்) எ-று.

(க-ரை) ஒருவனுக்கு எல்லாச் செல்வங்களிலும் கேள்விச்செல்வம் தலைமையானது என்பதாம்.

(வி-ரை) செவியால்வரும் செல்வம் - கேள்வியால் எல்லாப் பொருளும் அறிதல். பிறசெல்வங்கள் பொருளால் வருவன. அவை கீழ்பெறுமை யாலும், துன்பத்தருதலாலும் இது தலையாயிற்று. அவற்றைவிட்டு இவற் றையே தேடுகவென்பது கருத்து.

'செல்வத்துட்செல்வம்' என்றது சிறந்தசெல்வம் என்னும் பொருளது. 'செவிச்செல்வம்' என்பது கேள்விச்செல்வம். 'அச்செல்வம்' என்றது செவிச்செல்வமாகிய கேள்விச்செல்வத்தை. 'செல்வத்துள் எல்லாம்' என்றது பிறவாகிய பொருட்செல்வம் முதலிய எல்லாச்செல்வங்களிலும் என்பது பொருளாம். பொருட்செல்வம் முதலிய செல்வம் என்றது மக்கட்செல்வம், சுற்றச்செல்வம் முதலியவற்றை. 'தலை' என்றது முதன்மையானது என்னும் பொருளதாம். (1)

செவிக்குணவில் லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

(பரி-உரை) செவிக்கு உணவு இல்லாத போழ்து-செவிக்கு உணவாகிய கேள்வி யில்லாதபொழுது, வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும் - வயிற்றுக்குஞ் சிறிதுணவு இடப்படும் எ-று.

சுவை மிகுதியும் பிற்பயத்தலுமுடைய கேள்வியுள்ளபொழுது வெறுக் கப்படுதலான் இல்லாதபோழ்தென்றும், பெரிதாயவழித் தேடற் றன்மை யன்றி நோயும் காமமும் பெருகுதலாற் சிறிதென்றும், அதனானும் பின்னிருந்த கேட்டற்பொருட்டாகலான் ஈயப்படுமென்றுங் கூறினர். ஈதல் வயிற்றை இழிவுதோன்ற நின்றது. இவை பிரண்டுபோட்டாலும் கேள்வியை சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) செவிக்கு - காதுக்கு, உணவு - உணவாகிய கேள்வியானது, இல்லாதபோழ்து இல்லாதகாலத்தே, வயிற்றுக்கும்-வயிற்றினுக்கும், சிறிது-சிறிதுணவு, ஈயப்படும்-கொடுக்கப்படும் எ-று.

(க-ரை) காதுக்குக் கேள்வி யுணவில்லாதகாலத்து வயிற்றுக் குணவு கொடுக்கவேண்டும் என்பதாம்.

(வி-ரை) கேட்கிறபோது மிகுந்த சுவையையும் பின்னே பயனையும் தருவதாகிய கேள்வி உள்ளபோது வயிற்றுணவு வெறுக்கப்படுதலால் இல்லாத போழ்தென்றும், அதிகமானவிடத்தே சம்பாதிக்குந் துன்பமாத்திரம் அல்லாமல் நோயும் காமமும் பெருகுதலால் சிறிதென்றும், அச்சிறிது கொடுத்தலும் பின்னே பிழைத்திருந்து கேட்குதற்பொருட்டாகலால் ஈயப் படுமென்றும் சொல்லினர். [இவை இரண்டுபோட்டாலும் கேள்வியை சிறப்புச் சொல்லப்பட்டது.]

'செவிக்கு உணவு' என்றது கேள்வியை. செவியுணவு எவ்வளவுக்கு எவ்வளவுமிகினும் நன்மையேதரும். வயிற்றுணவுமிகின் நோய்செய்யுமாத லின் 'சிறிது வயிற்றுக்கு மீயப்படும்' என்றார். 'போழ்க' 'இக' 'பொழுக' என்பதன் விகாரம். 'வயிற்றுக்கும்' என்றதன் ஈற்று உம்மை இறந்தது தழீ இய எச்சவும்மை.

(2)

செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னன்றுரோ டொப்பர் நிலத்து.

(பரி-உரை) செவியுணவிற் கேள்வி உடையார் - செவியுணவாகிய கேள்வியினை யுடையார், நிலத்த அவி உணவின் ஆன்றுரோடு ஒப்பர்-நிலத் தின்கண்ணராயினும், அவியுணவினையுடைய தேவரோடொப்பர் எ-று.

செவியுணவு - செவியாலுண்ணும் உணவு. அல்வழிக்கண்வந்த இன் சாரியையது னகரம் வலிந்து நின்றது. அவியாகிய வுணவு தேவர்க்கு வேள்வித்தீயிற் கொடுப்பன. அறிவான் நிறைந்தமையான் ஆன்றுரென்றும், அன்ப மறியாமையாற் றேவரோ டொப்பரென்றுங் கூறினர். இதனால் அதனை யுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-உரை) செவியுணவின்-செவியுணவாகிய, கேள்வி-கேள்வியை, உடை யார்-உடையவர், நிலத்த-பூமியிலிருக்கினும், அவியுணவின்-அவியாகிய வுண வினையுடைய, ஆன்றுரோடு-தேவரோடு, ஒப்பர்-ஒப்பாவார் எ-று.

(க-உரை) கல்வி கேள்வியையுடையவர் பூமியிலிருப்பினுந் தேவரை யொப்பாவார் என்பதாம்.

(வி-உரை) செவியுணவினென்பதன் இன்சாரியை னகரம் வலித்தல் விகா ரம் பெற்றது. அவியுணவு தேவர்க்கு யாகத்திலே கொடுக்கப்படுவது. அறி வால் நிறைந்தமையால் ஆன்றுரென்றும் அன்பமறியாமையால் தேவரோ டொப்பரென்றும் சொல்லினர். [இதனாலே கேள்வியை யுடையவரது சிறப் புச் சொல்லப்பட்டது.]

'செவியுணவின்' என்றது செவியுணவாகிய என்பதுபொருளாம். 'அவி' என்றது தேவர்க்கு வேள்விமூலம் கொடுக்கப்படும் உணவை. 'அவியுணவின்' என்றது அவியுணவையுடைய என்பதாம். 'ஆன்றார்' என்றது தேவரை. 'நிலத்த' இதில் 'அத்து' சாரியை. கேள்வி உடையார் நிலத்தரேயாயினும் கேள்வியால் அன்பமென்பதின்றி இன்பமே உடையராதலின் 'ஆன்றோ டொப்பர்' என்றார்.

(3)

கற்றில னுயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றுந் துணை.

(பரி-உரை) கற்றிலன் ஆயினும் கேட்க - உறுதி நூல்களைத் தான் கற் றிலனாயினும் அவற்றின் பொருண்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்க,

அஃத ஒருவற்கு ஒற்கத்தின் ஊற்றும் தூண - அக் கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சிவந்தழிப் பற்றக்கோடாந் தூணையாகலான் எ-று.

உம்மை கற்கவேண்டுமென்பது படநின்றது. தளர்ச்சி வறுமையானுதல் அறிவின்மையானுதல் இடுக்கட்பட்டுழி மனந்தளர்தல். அதனைக் கேள்வியி னுய அறிவு தீக்குமாகலின், ஊற்றுத்தூண யென்றார். ஊன்றென்னும் ஆகுபெயரின் னகரம் திரிந்த தின்றது.

(ப-ரை) கற்றிலனாயினும் - (உறுதி நூல்களைத்தான்) கற்றிலனாயினும், கேட்க - (அவைகளின் பொருள்களைக் கற்றார்சொல்லக்) கேட்கக்கடவன், அஃத-அக்கேள்வியானது, ஒருவற்கு-ஒருவனுக்கு, ஒற்கத்தின்-தளர்ச்சிவந்த விடத்து, ஊற்றுத்தூண-பற்றுக்கோடாந் தூணையாம் (ஆதலால்) எ-று.

(க-ரை) கல்லாதவனானுங் கேள்வியுடையவனாயின் அக்கேள்வி அவனுக்குத் தளர்ச்சி வந்தவிடத்துத் தூணையாகும் என்பதாம்.

(வி-ரை) உம்மை கற்கவேண்டுமென்பது தோன்றநின்றது தளர்ச்சி வறுமையாலாவது அறிவில்லாமையாலாவது இடுக்கணுற்று மனந்தளர்தல். அத்தளர்ச்சியை கேள்வியாலாகிய அறிவு தீக்குமாதலால் ஊற்றுத் தூண யென்றார்.

'கற்றிலனாயினும்' என்றதன்கண் நின்ற உம்மை கற்றல்வேண்டும் என்பதை வலியுறுத்தியதாயிற்று. 'கேட்க' இது கேட்கக்கடவன் என்றதாம். 'அஃத' என்றது கேள்விப்பயனை. 'ஒற்கம' என்றது தளர்வை. 'ஊற்றும்' இது ஊன்றுகோலாம் என்பதாம். 'ஊற்ற' என்றது 'ஊன்ற' என்பதன் வலித்தல் விகாரம். (4)

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையாராவாய்ச் சொல.

(பரி-உரை) இழுக்கல் உடை உழி ஊற்றக்கோல் அற்ற-வழுக்குதலை யுடைய சேற்றநிலத்தை இயக்குவார்க்கு ஊன்றுகோல் போலுதவும், ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல் - காவற் சாகாடு கைப்பார்க்கு ஒழுக்கமுடையார் வாயிற்சொற்கள் எ-று.

அவாய்நிலையான் வந்த உவமையடையாற் பொருளடை வருவிக்கப் பட்டது. ஊற்றுகிய கோல்போ லுதவுதல் - தளர்ந்துழி அதனை நீக்குதல். கல்வியுடையரேனும் ஒழுக்கமில்லாதார் அறிவிலராகலின், அவர் வாய்ச் சொற் கேட்கப்படாதெனபது தோன்ற ஒழுக்கமுடையார் வாய்ச்சொல் என்றார். வாயென்பது நீச்சொ லறியாமையாகிய சிறப்புணர் கின்றது. அவற்றைக் கேட்கவென்பது குறிப்பெச்சம்.

(ப-ரை) (ஒருவருக்கு ஆபத்திலே) ஒழுக்கமுடையார் - நல்ல நடை யுடையவரது, வாய்ச்சொல் - வாயிற் பிறக்கின்றசொல், இழுக்கலுடையுழி-

வழுக்குதலையுடைய சேற்றுநிலத்திலே, ஊற்றுக்கோலற்றே-ஊன்றுகோல் போலுதவும் எ-று.

(க-ரை) சேற்றுநிலத்திற்கு ஊன்றுகோல்போல் நல்லவர்கள் சொல் லுஞ்சொல் கேள்வியுடையானுக்கு உதவும் என்பதாம்.

(வி-ரை) ஊன்றுகோல்போ லுதவுதல் - தளர்ந்தவிடத்து அதனை தீக்குதல். ஒழுக்கமில்லாதவர் கல்வியுடையவராயினும் அறிவில்லாராகலால் அவர் வாய்ச்சொல் கேட்கலாகாதென்பது தோன்ற ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்லென்றார். நீச்சொலறியாமையாகிய சிறப்புத்தோன்றற்கு வாயென் பது அதிகமாகச் சொல்லப்பட்டது. அச்சொல்லைக் கேட்கக்கடவரென்பது கருத்து.

'இழுக்கல்' என்றது வழுக்குந்தன்மையுடைய சேற்றை. 'உழி' என்றது நிலத்தை. 'ஊற்றுக்கோல்' இது ஊன்றுகோல் என்பதன் வலித்தல் விகாரம். 'அற்றே' என்றதன் ஈற்று ஏகாரம் தேற்றப்பொருளது. 'ஒழுக்கமுடையார்' என்றது கற்றறிந்த கற்றநூல்களிற் சொற்றபடி கின்றொழுகுவாரை. கற்றறிந்தவரேனும் ஒழுக்கம் இல்லாதவர் அறிவு இல்லாதவரேயாதலினால் 'கற்றார் வாய்ச்சொல்' என்னாது 'ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்' என்றார்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(பரி-உரை) எனைத்தானும் நல்லவை கேட்க - ஒருவன் சிறிதாயினும் உறுதிப்பொருள்களைக் கேட்க, அனைத்தானும் ஆன்ற பெருமைதரும்-அக் கேள்வி அத்துணையாயினும் நிறைந்த பெருமையைத்தரும் ஆகலான் எ-று.

எனைத்து அனைத்து என்பன கேட்கும் பொருண்மேலும் காலத்தின் மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளிபோல வந்தீண்டி எல்லா அறிவு களையும் உளவாக்களின், சிறிதென்று இகழற்க வென்பதாம்.

(ப-ரை) (ஒருவன்) நல்லவை - நல்லவை, (உறுதிப்பொருள்களிலே) எனைத்தானும் - எவ்வளவு சிறிதாயினும், கேட்க - கேட்கக்கடவன், (அக் கேள்வியானது) அனைத்தானும்-அவ்வளவினாலும், ஆன்றபெருமை-நிறைந்த பெருமையை, தரும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) ஒருவ னல்லவைகளைக் கேட்கின் அவை மிகுந்த பெருமை யைத்தரும் என்பதாம்.

(வி-ரை) அச்சிறிய கேள்விகளும் மழைத்துளிகள்போல் வந்து உள்ளே நிறைந்து எல்லா வறிவுகளையும் உண்டாக்கலால் சிறிதென்று இகழலாகா தென்பதாம்.

'எனைத்தானும்' என்றது எவ்வளவு சிற்றளவினதாயினும் என்னும் பொருளது. இது எகாவினுவடியாகப் பிறந்த பெயர். 'அனைத்தானும்'

என்றது அச்சச் சிற்றளவாலும் என்பதாம். 'ஆன்பெருமை' என்றது கிறைந்த நெப்பை. 'பெருமை' இது மையீற்றுப் பண்புப்பெயர். 'கல்லவை' என்றது அதனாற் கேள்வி, ஞானக்கேள்விகளை உணர்த்தி நின்றது. (6)

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்
நீண்டிய கேள்வி யவர். [துணர்ந்

(பரி-உரை) பிழைத்த உணர்ந்தும் பேதைமை சொல்லார் - பிறழ உணர்ந்தவழியும், தமக்குப் பேதைமை பயக்குஞ் சொற்களைச் சொல்லார், இழைத்த உணர்ந்த நீண்டிய கேள்வியவர்-பொருள்களைத் தாமும் நுண்ணிதாக ஆராய்ந்தறிந்த அதன்மேலும் நீண்டிய கேள்வியினையுடையார் எ-று.

பிழைப்பவென்பது நிரிந்துநின்றது. பேதைமை-ஆகுபெயர். நீண்டதல்-பலவாற்றான் வந்த நிறைதல். பொருள்களின் மெய்ம்மையைத் தாமும் மறிந்த அறிந்தாரோடு ஒப்பிப்பதுஞ் செய்தார் தாமதகுணத்தான் மயங்கினாயினும், அவ்வாறல்லது சொல்லாரென்பதாம். இவை நான்குபாட்டானும் கேட்டார்க்கு வருகன்மை கூறப்பட்டது.

(ப-ரை) இழைத்துணர்ந்த - (பொருள்களை) நுட்பமாக ஆராய்ந்து அறிந்த, நீண்டிய-(அதன்மேலும்) நிறைந்த, கேள்வியர்-கேள்வியையுடையவர், பிழைத்துணர்ந்தும் - பிறழ அறிந்தவிடத்தும், பேதைமை-(தமக்குப்) பேதைமைமை உண்டாக்குஞ் சொற்களை, சொல்லார்-சொல்லார் எ-று.

(க-ரை) கற்றவர்கள் அறிவீனமான சொற்களைச் சொல்லார் என்பதாம்.

(வி-ரை) பிழைப்பவென்பது பிழைத்து எனத் நிரிந்தது. பேதமை-அதை உண்டாக்குஞ் சொல்லுக்கு ஆகுதலால் ஆகுபெயர். நீண்டதல்-பல வழிகளாலும் வந்துநிறைதல், பொருள்களின் மெய்மையைத் தாமும் அறிந்த அறிந்தவரிடத்தேயும் அவர் சொல்லக்கேட்டு ஒப்புப் பார்த்து இருப்பவர் தமோகுணத்தால் மயங்கினாயினும் அவ்வாறல்லது சொல்லா ரென்பதாம். [இவை நான்குபாட்டாலும் கேள்வியினாலே நிடப்பட்டவர்க்கு வரும் நன்மை சொல்லப்பட்டது.]

'பிழைத்துணர்ந்தும்' என்றது மாறுபட உணர்தலை. 'பேதமை' என்றது தமக்குப் பேதமையை உண்டாக்கும் சொற்களை என்பதாம். நீண்டது இது ஆகுபெயர். 'இழைத்துணர்ந்த' என்றது தாமும் நுழைந்த பொருள்களை நுண்ணிதின் ஆராய்ந்தவர் என்பதாம். 'நீண்டிய கேள்வி' என்றது அதற்கு மேலும் மிகுந்த ஞானக்கேள்வியுடையவர் என்பதாம். இழைத்துணர்ந்தவர் அறிவு கேள்வியால் நிடப்படலின் 'பேதமை சொல்லார்' என்றார். 'கேள்வியவர்' என்றது கற்றறிந்த ஒழுக்கம் உடையார்மாட்டே கேட்ட ஞானக்கேள்வியை உடையவர் என்பதாம். (7)

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

(பரி-உரை) கேட்பினும் கேளாத்தகையவே-தம் புலமாய ஓசை மாத்திரத்தைக் கேட்குமாயினுஞ் செவிடாந் தன்மையவேயாம், கேள்வியால் தோட்கப்படாத செவி-கேள்வியால் துளைக்கப்படாத செவிகள் எ-று.

எகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஓசை மாத்திரத்தான் உறுதியெய்தாமையிற் கேளாத்தகையவென்றும், மனத்தின்கண் நூற்பொருள் நுழைதற்கு வழியாக்கலிற் கேள்வியைக் கருவியாக்கியும் கூறினர். பழையதுளை துளை அன்றென்பதாம்.

(ப-ரை) கேள்வியால் - கேள்வியினாலே, தோட்கப்படாத - துளைக்கப்படாத, செவி-காதுகள், கேட்பினும் - தமக்குரிய (ஓசையைக்) கேட்குமாயினும், கேளாத்தகையவே-செவிடாந் தன்மையினவேயாம் எ-று.

(க-ரை) கேள்வியாலே துளைக்கப்படாத செவிகள் செவிடு உடையனவன்பதாம்.

(வி-ரை) ஓசைமாத்திரத்தால் உறுதி அடையாமையால் கேளாத்தகையவென்றும் மனத்திலே நூற்பொருள் நுழைதற்கு வழியாகலால் கேள்வியைக் காரணமாக்கியும் சொல்லினர். பழையதுளை துளையன்றென்பதாம்.

'கேட்பினும்' என்றது பொருளைக்கொள்ளாது ஓசையைமட்டுங் கேட்டாலும் என்பதாம். 'தகையவே' இது தன்மையுடையதே என்னும் பொருளது. ஈற்றேகாரம் தேற்றப் பொருளது. 'தோட்கப்படாத' என்றது செவித்துளையுள் நுழைந்து மனத்தை கொள்ளப்படாத என்னும் பொருளில் வந்தது. இதனை 'இரண்டோட்டைச்செவியும் உள' என்றது நன்கு வலியுறுத்தும். ஈண்டு கேட்டு மனத்து வாங்காத செவியை ஓட்டைச்செவி என்றது மரூஉற்பாலதாம். 'செவி' என்றது சாதி ஒருமை. (8)

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

(பரி-உரை) நுணங்கிய கேள்வியர் அல்லார் - நுண்ணிதாகிய கேள்வியுடையர் அல்லாதார், வணக்கிய வாயினர் ஆதல் அரிது-பணிந்த மொழியினையுடையராதல் கூடாது எ-று.

கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை கேள்வியே லேற்றப்பட்டது. நுண்-ஆகுபெயர். பணிந்தமொழி - பணிவைப் புலப்படுத்திய மொழி. கேளாரும் உணர்வின்மையால் தம்மை வியர்த்து கூறுவரென்பதாம். அல்லாரென்பதனுடம் பாடம்.

(ப-ரை) நுணங்கிய - நுட்பமாகிய, கேள்வியரல்லார்-கேள்வியை யுடையரல்லாதவர், வணக்கிய - வணக்கத்தைக் காட்டுகிற, வாயினராதல் - சொல்லையுடையவராகுதல், அரிது-கூடாது எ-று.

(க-ரை) நுட்பமான கல்வி கேள்வியில்லார் வணக்கமுள்ள சொல்லை யுடையராகார் என்பதாம்.

(வி-ரை) கேட்கப்படுகின்ற பொருளினது நுட்பம் கேள்விமேல் ஏற்றப் பட்டது. வாய், அதன் சொல்லுக்கு ஆகுதலால் ஆகுபெயர். கேளாதார் அறிவில்லாமையால் தம்மைத்தாமே வியந்து சொல்லுவாரென்பதாம்.

'நணக்கிய கேள்வி' இது நண்ணிய ஆராய்ச்சியை உடைய ஞானக் கேள்வி என்பதாம். 'வணக்கிய வாயினர்' என்றது பணிந்த சொல்லையுடையர் என்னும் பொருள் தந்தது. 'வாய்' என்றது வாயிலிருந்துவரும் சொல்லை யுணர்த்தலால் ஈண்டு வாய் என்றது ஆகுபெயர். (9)

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

(பரி-உரை) செவியிற் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள்-செவி யான் நுகரப்படுஞ் சுவைகளை யுணராத வாயுணர்வினையுடைய மாக்கள், அவி யினும் வாழினும் என்-சாவினும் வாழினும் உலகிற்கு வருவதென்னை எ-று.

செவியான் நுகரப்படுஞ் சுவைகளாவன - சொற்சுவையும், பொருட் சுவையும்: அவற்றுள் சொற்சுவை: குணம், அலங்காரம் என இருவகைத்து. பொருட்சுவை: காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என ஒன்பது வகைத்து. அவையெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். வாயுணர்வென்பது இடைப்பதங்கள் தொக்குநின்ற மூன்றாம் வேற்றுமைத்தொகை; அது வாயான் நுகரப்படுஞ் சுவைகளை யுணரும் உணர்வென விரியும். அவை: கைப்பு, காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, இவர்ப்பு, தித்திப்பு என ஆறும். செத்தால் இழப்பதும் வாழ்ந்தாற் பெறுவதும் இன்மையின், இரண்டும் ஒக்குமென்பதாம். வாயுணர்வினென்ற பாடம் ஒதுவாருமுளர். இவை மூன்றுபாட்டானுங் கேளாதவழிப்படுங் குற்றம் கூறப்பட்டது.

(ப-ரை) செவியிற்சுவை-காதுகளால் அறியப்படுஞ் சுவைகளை, உணரா அறியாத, வாயுணர்வின் - வாயால் உண்ணப்பட்ட சுவையை, அறியும் அறிவினையுடைய, மாக்கள் - மனிதர், அவியினும் - இறந்தாலும், வாழினும் வாழ்ந்தாலும், என்-(உலகத்துக்கு வருவது) யாது எ-று.

(க-ரை) கேள்விச்சுவை யறியாத மனிதர் இறந்தும் இருந்தும் பயனில்லை என்பதாம்.

(வி-ரை) செவியா லுணரப்படுஞ் சுவைகள் சொற்சுவையும் பொருட் சுவையும் ஆம். இவைகளிலே சொற்சுவை, குணாலங்காரங்கள். பொருட் சுவை, சிங்கார முதலாகிய நவரசங்கள். வாய்ச்சுவை, தித்திப்பு முதல் அறுவகைப்படும். அவர் செத்தால் இழப்பதும், வாழ்ந்தால் பெறுவதும் இல்லாமையால் இரண்டும் சமானந்தானென்பதாம். [இவை மூன்று பாட்டாலும் கேளாதவிடத்து உண்டாகும் குற்றம் சொல்லப்பட்டது.]

'செவியிற் சுவை' என்றது செவியால் உணரப்படும் கேள்விச்சுவையை. 'ஊபுணர்வு' என்றது வாயால் சுவை புணரப்பெறும் அறுசுவை புணர்வை. 'மக்கள்' என்னுது 'மாக்கள்' என்றது ஆருவது அறிவு இல்லா இழிவுபற்றி என்க. மனிதரா யுதித்தும் ஐயறிவுடைய விலங்கேபோல்வார் என்பது தோன்ற மாக்கள் என்றார்போலும். 'அவிதல்' என்றது சுண்டு அழிதலை. 'என் என்விஞ ஒருபயனும் இன்று' என்றது உணர்த்தி நின்றது. (10)

42-ம் அதி - கேள்வி - முற்றிற்று.

43-ம் அதிகாரம்—அறிவுடைமை

(பரி-உரை) அஃதாவது: கல்வி கேள்விகளினுய அறிவோடு உண்மை அறிவுடையனுதல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

(உரை) அஃதாவது: கல்வி கேள்விகளினுலாகிய அறிவோடு உண்மை யறிவுடையனுதல் அதிகார முறைமையும் இதனுல் விளங்கும்.

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண். (1)

(பரி-உரை) அறிவு அற்றம் காக்கும் கருவி - அரசர்க்கு அறிவென்பது பிறரி வாமற் காக்கும் கருவியாம்; செறுவார்க்கு அழிக்கல் ஆகா உள் ளரணும் - அதுவேயுமன்றிப் பகைவர்க்கு அழிக்கலாகாத உள்ளரணுமாம் எ-று.

காத்தல் - முன்னறிந்து பரிகரித்தல். உள்ளரண் - உள்ளாய அரண், உள் புக்கு அழிக்கலாகா அரணென்றுமாம். இதனுல் அறிவினது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) அறிவு-(அரசர்க்கு) அறிவென்பது, அற்றம்-மூடிவுவாராமல், காக்கும் - காக்கின்ற, கருவி - படையாம், (அக்கவல்லாமல்) செறுவார்க்கும்-பகைவர்க்கும், அழிக்கலாகா - அழிக்கக்கூடாத, உள் - உள்ளாகிய, அரண்-அவிடமுமாம் எ-று.

(கரை) அரசர்க்குத் தன்னைக் காக்கும் படையாயும் பகைவரால் அழிக்கக்கூடாத அரணுயும் உள்ளது அறிவு என்பதாம்.

(வி-ரை) காத்தல்-முன்னுகவறிந்து பரிகரித்தல். [இதனுல் அறிவினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'அற்றம்' என்றது சுண்டு அழிவை. 'அறிவு' என்றது மெய்யறிவை. 'செறுவார்க்கு' இது பகைவர்க்கு என்பதாம். இனி, இதற்கு பகையால் கொல்ல வருவார்க்கும் எனப் பொருள் உரைப்பாரும் உண்டு. 'உள்ளழிக்க

லாகாவான்' என்றது உள்ளே புகுந்த அழிக்க முடியாததாகிய அரண் என்பதாம். 'ஆகா' இது 'ஆகாத' என்பதன் கடைக்குறை விகாரம். (1)

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(பரி-உரை) சென்ற இடத்தால் செலவிடா - மனத்தை அது சென்ற புலத்தின்கட் செல்ல விடாது, தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு. அப்புலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனில் நீக்கி நல்லதன்கட் செலுத்தலது அறிவு எ-று.

விஷக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, காற்றம் எனப் புலம் ஐந்தாயினும், ஒருகாலத்து ஒன்றின்கண் அல்லது செல்லாமையின், இடத்தா லென்றார். விடாதென்பது கடைக் குறைத்து நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தம் வாதுவன்போல வேருக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்தலது அறிவென்றார். அஃது உயிர்க்குணமாகலின்.

(ப-ரை) (மனத்தை) சென்றவிடத்தால் - (அது) போனவிஷயத்திலே, செலவிடா - போகவிடாமல், (அவ்விஷயங்களி னன்மை தீமைகளை ஆராய்ந்து) தீது-தீயதிலிருந்து, ஒரீஇ-நீக்கி, நன்றின்பால்-நல்லதனிடத்து, உய்ப்பது-போகவிடுவது, அறிவு-விவேகம் எ-று.

(க-ரை) மனம் போனவழியிற் போகவிடாமல் நன்மையிற் செலுத்துவதே யறிவு என்பதாம்.

(வி-ரை) குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல் வேருக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்தலது அறிவென்றார் அது உயிர்க்குணமாகலால்.

'சென்றவிடத்தால்' என்றது மனம்போன வழியிலே என்னும் பொருளதாம். 'செலவிடாது' இது 'செல்லவிடாது' என்பதன் தொகுத்தல் விகாரம். 'ஒரீஇ' இது சொல்லிசை யளபெடை. 'நன்றின்பால்' என்றது நன்னெறியின்பால் என்பதாம். (2)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(பரி-உரை) எப்பொருன் யார் யார் வாய்க் கேட்பினும் - யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக்கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அப்பொருளின் மெய்யாய பயனைக் காண வல்லது அறிவு எ-று.

குணக்கண் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்கும் உண்மையின் உயர்ந்த பொருன் இழிந்தார் வாயினும், இழிந்தபொருன் உயர்ந்தார் வாயினும், உறுதிப்பொருன் பகைவர் வாயினும், கெடுபொருன் கட்டார்வாயினும்

ஒரோவழிக் கேட்கப்படுதலான் எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மென்றார். அடுக்குப் பன்மை பற்றி வந்தது. வாயென்பது அவர் அப் பொருளின்கட் பயிலாமை யுணர நின்றது. மெய்யாதல் - நிலைபெறுதல். சொல்வாரது இயல்பு நோக்காது அப்பொருளின் பயனெக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்வதறிவென்பதாம்.

(ப-ரை) எப்பொருள்-யாதொரு பொருளை, யார் யார் வாய்-எவரெவர் வாயில், கேட்பினும்-கேட்டாலும், அப்பொருள்-அப்பொருளினது, மெய்ப் பொருள்-மெய்யாகியபயனை, காண்பது-காணவல்லது, அறிவு-விவேகம் எ-று.

(க-ரை) எவரெவர் வாயினுல் எந்தெந்த பொருளைக் கேட்டாலும் அதனுள் மெய்ப்பொருளை அறிவதே அறிவு என்பதாம்.

(வி-ரை) மூக்குணங்களும் மாறிமாறி வருதல் யாவர்க்கும் உண்டாத லால் உயர்ந்தபொருளை இழிந்தார்வாயிலும், இழிந்தபொருளை உயர்ந்தார் வாயிலும், உறுதிப்பொருளை பகைவர்வாயிலும், கெடுபொருளைச் சிநேகர் வாயிலும், ஒரோவிடத்தே கேட்கப்படுதலால் எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினுமென்றார். சொல்லுவா ரியல்பு நோக்காமல் அப்பொருளின் பயனெக்கி நல்லதைக்கொண்டு தீயதை விடுவது அறிவென்பதாம்.

'எப்பொருள்' என்றது எந்தப் பொருளையும், இதில் எகரம் விரு. 'யார் யார்' என்றது பன்மைபற்றிவந்த அடுக்குத் தொடர். 'அப்பொருள்' என்றது யார் யார் வாய்க்கேட்ட அந்தப்பொருளை என்பதாம். 'மெய்ப்பொருள்' என்றது அப்பொருளின் உண்மைப்பயனை என்றதாம். 'பொருள்' என்ற சொல் இச்செய்யுளிற் பன்முறைவந்தது சொற்பொருட் பின்வரும் நிலையணி எனப்பெறும்.

(3)

நுண்பொருள வாகச்செலச்சொல்லித் தான்பிறர்வா
நுண்பொருள் காண்ப தறிவு. [ய்

(பரி-உரை) தான் எண்பொருளவாகச் செலச்சொல்லி-தான் சொல்லுஞ் சொற்களை அரிய பொருளவாயினும் கேட்பார்க்கு எளிய பொருளவாமாறு மனங்கொளச் சொல்லி, பிறர் வாய் நுண் பொருள் காண்பது அறிவு-பிறர் வாய்க் கேட்குஞ் சொற்களின் நுண்ணிய பொருள் காண அரிதாயினும் அதனைக் காணவல்லது அறிவு எ-று.

உடையவன் தொழில் அறிவின்மே லேற்றப்பட்டது சொல்லுவன வழுவின்றி இனிது விளக்கச் சொல்லுகவென்பார் சொன்மேல் வைத்தும், கேட்பன வழுவிலும் இனிது விளங்காவாயினும் பயனெக்கொண்டொழிக வென்பார் பொருண்மேல் வைத்துங் கூறினார்.

(ப-ரை) (தன்னுலே சொல்லப்படும் சொற்கள் அரிய பொருளினவா யிருந்தாலும்) எண்பொருளவாக-(கேட்பவர்க்கு) எளியபொருளினவாய்படி, செல-மனக்கொள்ள, சொல்லி-சொல்லி, தான்-தான், பிறர்வாய்-பிறர்

வாயிற் (கேட்கப்படுஞ் சொற்களில்), நுண்பொருள்-(காணுதற்கரிய) நுட்பப் பொருளையும், காண்பது-காணவல்லது, அறிவு-விவேகம் எ-று.

(க-ரை) பிறர்க்கு அரியவைகளையும் எளியனவாக விளக்கும்படி சொல்லி பின் அவர் வாயினால் அறிவதே அரசனுக்கு அறிவு என்பதாம்.

(வி-ரை) அறிவுடையவனது தொழில் அறிவின்மே லேற்றப்பட்டது. தான் சொல்பவைகளை வழுவில்லாமல் கன்றுக விளக்கச் சொல்லவேண்டு மென்பதற்குச் சொல்லின்மேல் வைத்தும் பிறர்சொல்லக் கேட்கப்படு மவைகள் வழுவினாலும் கன்றுக விளங்காமற் போனாலும் அவைகளின் பயனைக்கொண்டு விடவேண்டு மென்பதற்குப் பொருளின்மேல் வைத்துஞ் சொல்லினார்.

'எண்பொருளவாக' என்றது தான் சொல்லும் பொருள் அரியதாயினும் எளிதிற் புலப்படுமாறு எளிய பொருள்போல என்பதாம். 'செலச் சொல்லி' என்றது காதட்சென்று மனத்தட்படுமாறு சொல்லி என்பதாம். 'நுண் பொருள்' என்றது நுட்பமாகிய பொருளை. நுண்பொருளுடையார் சொல்லுந் திறனின்றி மயக்கக் கூறினாலினும் அப்பொருள் நுட்பத்தைக் கண் டறிவதே அறிவாம் என்பார் 'நுண்பொருள் காண்ப தறிவு' என்றார். (4)

உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

(பரி-உரை) உலகம் தழீஇயது ஒட்பம்-உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம்; மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு - அந்நட்பின்கண் முன் மலர்தலும் பின் கூம்புதலுமின்றி ஒருநிலையனாவது அறிவாம் எ-று.

தழீஇயது இல்லது என்பன அவ்வத்தொழின்மே னின்றன. உலக மென்பது நண்டு உயர்ந்தோரை. அவரோடு கயப்பூப்போல வேறுபடாது * கோட்டுப்பூப்போல ஒருநிலையே நட்பாயினன் எல்லா இன்பமும் எய்த மாகலின், அதனை அறிவென்றார். காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப் பட்டன. இதனைச் செல்வத்தின் மலர்தலும் கல்குரவிற் கூம்பலு மில்ல தென்று உரைப்பாருமுளர்.

(ப-ரை) (ஒருவனுக்கு) உலகம் - உயர்ந்தோரை, தழீஇயது-நட்பாக்கு வது, ஒட்பம்-அறிவுடைமையாம், மலர்தலும்-(முன்னே) விரிதலும், கூம் பலும்-பின்னே குவிதலும், . இல்லது - (அந்நட்பினிடத்தே) இல்லாதது, அறிவு-அறிவு எ-று.

(க-ரை) விருப்பால் முகமலர்தலும், வெறுப்பால் முகங்குவிதலும், இல்லாத அறிவு உயர்ந்தோரை நட்பாக்கும் என்பதாம்.

---

* கோட்டுப்பூப்போல மலர்ந்தபிற் கூம்பாது, வேட்டதே வேட்டதா நட்பாட்சி-தோட்ட, கயப்பூப்போன் முன்மலர்ந்த பிற்கூம்புவாரை, கயப்பூ நட்பாருமில். காலடியார் நட்பாராய்தல்.

(வி-ரை) உயர்ந்தோரோடு நீர்ப்பூப்போல் வேறுபடாமல் கோட்டுப் பூப்போல் ஒருநிலையே கட்பாயிலுல் எல்லா வின்பங்களும் உண்டாகலால் அதனை அறிவென்றார்.

'உலகம்' என்றது அறிவு சான்றாராகிய உயர்ந்தோரை. 'தழீஇய' இது சொல்லிசை யளபெடை. 'ஒட்பம்' என்றது ஒளியுடைமை என்பதாம். ஒளியுடைமை எனினும் அறிவுடைமை எனினும் ஒக்கும். 'ஒட்பம்' இது 'ஒள்' என்னும் பகுதி அடியாகப் பிறந்தது. 'மலர்தல்' என்றது அகமகிழ்ச்சியால் முகமலர்ச்சி உண்டாதலை. 'கூம்பல்' என்றது மனவெறுப்பால் முகங் கடுத்துக் காட்டலை.

(5)

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(பரி-உரை) உலகம் எவ்வது உறைவது - உலகம் யாதொருவாற்றான் ஒழுகுவதாயிற்று, உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு - அவ்வுலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றா லொழுகுவது அரசனுக்கறிவு எ-று.

உலகத்தையெல்லாம் யான் நியமித்தலான் என்னை நியமிப்பாரில்லை யெனக் கருதித் தானினைத்தவாறே ஒழுகிற் பாவமும் பழியுமாம் ஆகலான், அவ்வாறொழுகுதல் அறிவன்றென விலக்கியவாறாயிற்று. இவை ஐந்தபாட்டாலும் அதனது இலக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) உலகம் - உலகமானது, எவ்வது-எவ்விதத்தினுல், உறைவது-நடப்பதாயிருக்கின்றது, உலகத்தோடு அவ்வுலகத்துடன் பொருந்தி, அவ்வது-அவ்விதத்தால், உறைவது - (தானும்) நடப்பது, அறிவு-அரசனுக்கு அறிவாம் எ-று.

(க-ரை) உலகம் எவ்வகையில் நடக்கின்றதோ அவ்வகையில் நடப்பது அரசனுக்கு அறிவு என்பதாம்.

(வி-ரை) உலகத்தையெல்லாம் யான் நியமித்தலால் என்னை நியமிப்பார் இல்லையென்ற நினைத்துத் தான் நினைத்தபடி நடந்தால் பழியும் பாவமும் ஆம். ஆகலால் அப்படி நடத்தல் அரசனுக்கு அறிவன்றென்ற விலக்கியபடியாயிற்று. [இவை ஐந்தபாட்டாலும் அறிவுடைமையி னிலக்கணம் சொல்லப்பட்டது.]

'எவ்வது' இது எகரவினுவடியாகப் பிறந்த பெயர். 'உறைவது' என்றது ஒழுகுவதை. 'அவ்வது' என்றது உலகம் ஒழுகும் அவ் ஒழுக்கப்படி என்பதாம். இதில் மூன்னின்ற அகரம் சுட்டு. ஈண்டு 'உலகம்' என்றது உலகத்து உயர்ந்தோரை.

(6)

அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

(பரி-உரை) அறிவுடையார் ஆவது அறிவார்-அறிவுடையராவார் வரக் கடவதனை முன் அறியவல்லார்; அறிவு இலார் அஃது அறி கல்லாதவர். அறிவிலராவார் அதனை முன் அறியமாட்டாதார் எ-று.

முன்னறிதல் - முன்னே யெண்ணி யறிதல். அஃது அறிகல்லாமை யாவது - வந்தாலறிதல். இனி, ஆவதறிவா ரென்பதற்குத் தமக்கு நன்மை யறிவாரென் றுரைப்பாருமுளர்.

(ப-ரை) ஆவது-வரக்கடவதை, அறிவார் - (முன்னே) அறியவல்லவர், அறிவுடையார் - அறிவையுடையவராவார், அஃது-அவ்வரக்கடவதை, அறி கல்லாதவர் - (முன்னே) அறியமாட்டாதவர், அறிவிலார் - அறிவில்லாதவ ராவார் எ-று.

(க-ரை) முன்வரக்கடவதை அறியவல்லவர் அறிவுடையவர் என்பதாம்.

(வி-ரை) முன்னறிதலாவது-முன்னே எண்ணியறிதல்.

'அறிவார்' 'அறிவிலார்' என்னும் முரண்மொழிகள் ஓரடியில் வந்தமை யால் இது முரண்டொடை. 'அஃது' என்றது அல் ஆவதை யுணர்த்தி நின்றது. 'அறிகலாதவர்' என்பது 'அறிகல்லாதவர்' என வந்தது விரித்தல் விகாரம். இது செய்புள் இசை நோக்கிவந்த செய்புள் விகாரம். (7)

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

(பரி-உரை) அஞ்சுவது அஞ்சாமை பேதைமை - அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம்; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்-அவ் அஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம் எ-று.

பாவமும் பழியுங் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதி பற்றி அஞ்சுவதென்றார். அஞ்சாமை எண்ணுது செய்து கிற்றல். அஞ்சுதல்-எண்ணித்தவிர்தல். அதுகாரியமன்றென்று இகழப்படாதென்பார். அறிவார் தொழிலென்றார். அஞ்சாமை இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின், எண்டு அஞ்சவேண்டுமிடங் கூறியவாறு. இவை யிரண்டுபோட்டானும் அதனை யுடையாரது இலக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) அஞ்சுவது - அஞ்சத்தகுவதை, அஞ்சாமை - பயப்படாமை, பேதைமை - அறிவில்லாமை ஆம், அஞ்சுவது - அஞ்சத்தகுவதை, அஞ்சல்-பயப்படுதல், அறிவார்தொழில்-விவேகிகளது தொழில் ஆம் எ-று.

(க-ரை) அறிவுடையவர் அஞ்சத்தகுவற்கு அஞ்சுவர் என்பதாம்.

(வி-ரை) அஞ்சத்தகுவன: பாவம் பழி கேடு முதலாகிய பலவாயினும் சாதிபற்றி அஞ்சுவதென்ற ஒருமையாகக் கூறினர். அஞ்சாமை-எண்ணுது செய்து கிற்றல். அஞ்சுதல்-எண்ணிச் செய்யாது விடுதல். அஞ்சாமையை இறை மாட்சியாக முன்னே சொல்லுதலால் இங்கே அஞ்சவேண்டுமிடம் சொல்லியபடி. [இவை இரண்டுபோட்டாலும் அறிவுடையவரது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'அஞ்சுவது' என்றது அஞ்சப்படுவனவாகிய பழிபாவங்களை; இது சாதி ஒருமை. 'பேதமை' என்றது அறிவின்மை என்ற பொருளதாம். 'அஞ்சுவ' என்றது மீண்டும் ஒருமுறை வந்தது சொற்பொருட் பின்வருநிலை அணியாம்.

(8)

எதிரதாக் காக்கு மறிவினர்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

(பரி-உரை) எதிரதாக்காக்கும் அறிவினர்க்கு-வரக்கடவதாகிய அதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினையுடையார்க்கு, அதிர வருவது ஓர் நோய் இல்லை-அவர் நடுங்க வருவதொரு துன்பமுமில்லை எ-று.

நோயென வருகின்றமையின், வாளா எதிரதா என்றார். இதனுற் காக்கலாவ் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல் - அதன் காரணத்தை விலக்குதல். அவர்க்குத் துன்பமின்மை இதனுற் கூறப்பட்டது.

(ப-உரை) (வரக்கடவதாகிய அதனை) எதிரதாக்காக்கும் - முன்னே அறிந்து காக்கவல்ல, அறிவினர்க்கு - விவேகமுள்ளவர்க்கு, அதிர - (அவர்) நடுங்கும்படி, வருவதோர் நோய் - வருவதாகிய ஒரு துன்பமும், இல்லை- இல்லை எ-று.

(க-உரை) வருந் துன்பங்களை முன் அறிந்துகாக்கும் அறிவுடையார்க்குத் துன்பம் இல்லை என்பதாம்.

(வி-உரை) இதனுலே வரக்கடவதாகிய துன்பத்தைக் காத்தற்குரிய காலம் அறிவிக்கப்பட்டது. காத்தல்-அத்துன்பத்தின் காரணத்தை விலக்குதல். [அவர்க்குத் துன்பமில்லாமை இதனுலே சொல்லப்பட்டது.]

'எதிரதாக்காக்கும்' என்றது வருமுன் காத்தலை. 'அதிரவருவதோர் நோய்' என்றது நடுக்கந்தருவதாகிய துன்பத்தை.

(9)

அறிவுடை யாரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

(பரி உரை) அறிவு உடையார் எல்லாம் உடையார் - அறிவுடையார் பிறிதொன்று மிலராயினும் எல்லாமுடையவராவர்; அறிவு இலார் என் உடையர் எனும் இலர் - அறிவிலாதார் எல்லாமுடையராயினும் ஒன்றுமில ராவர் எ-று.

செல்வங்களெல்லாம் அறிவாற் படைக்கவுங் காக்கவும் படுதலின் அஃது உடையாரை எல்லாமுடையரென்றும், அவையெல்லாம் முன்னே யமைந்து கெடப்பினும் அழியாமற் காத்தற்குந் தெய்வத்தான் அழித்தழிப் பட்டத்தற்குங் கருவியுடையர் அன்மையின் அஃதில்லாதாரை என்னுடையரேனுமில ரென்றுங் கூறினர். என்னுமென்புழி உம்மை விகாரத்தாற் றொக்கது. இதனுன் அவரது உடைமையும் ஏனையாரது இன்மையுங் கூறப்பட்டன.

(பதவுரை) அறிவுடையார் - விவேகமுடையவர்கள், எல்லாமுடையார் - (கேடொன்றும் இல்லாதவராயிருந்தாலும்) எல்லாமுடையவராவார், அறிவிலார் - விவேகமில்லாதகர்கள், என்னுடையரேனும் - எல்லாமுடையவராயிருந்தாலும், இலர்-(ஒன்றும்) இல்லாதவராவார் எ-று.

(கருத்து) அறிவு இல்லார் எல்லாம் உடையவராயினும் ஒன்றுமில்லாதவராவார் என்பதாம்.

(விசேடம்) செல்வங்களெல்லாம் அறிவினாலே சம்பாதிக்கவும் காக்கவும் படுதலால் அதனையுடையவரை எல்லாமுடையாரென்றும், அவையெல்லாம் முன்னமே அமைத்து விடுத்தாலும் அழியாமற் காத்தற்கும் அழிந்தவிடத்தே சம்பாதித்தற்கும் கருவியாகிய அறிவில்லாமையால் அறிவில்லாதவரை என்னுடையரேனு மிலரென்றும் சொல்லினர். [இதனால் அறிவுடையவரது உடைமையும் மற்றவரது இல்லாமையும் சொல்லப்பட்டன.]

'எல்லாம் உடையார்' என்றது எல்லாச் செல்வமும் உடையவர் என்பதாம். 'என்னுடையரேனும்' என்றது எல்லாச் செல்வம் உடையவராயிருந்தாலும் என்பதாம். 'இலர்' என்றது வறியரே என்பதாம். (10)

43 - ம் அதி - அறிவுடைமை - முற்றிற்று.

44-ம் அதிகாரம்—குற்றங்கடிதல்

(பரி-உரை) அஃதாவது: காமம், வெகுளி, கடும்பற்றுன்னம், மானம், உவகை, மதமெனப்பட்ட குற்றக்கள் ஆறனையும் அரசன் தன்கண் நிகழாமற் கடிதல். இவற்றை வடநூலார் பகைவர்க்கம் என்ப. இவை குற்றமென்றறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின், அதன்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: காமம், குரோதம், உலோபம், மானம், உவகை, மதம் எனப்பட்ட ஆறு குற்றக்களையும், அரசன் தன்னிடத்தே தோன்றுமற் கடிதல். இவைகளைக் குற்றமென்று அறிதலும், கடிதலும், அறிவுடையார்க்கல்லது மற்றவர்க்குக் கூடாமையால் அதன்பின் வைக்கப்பட்டது.

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

(பரி-உரை) செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் மதமும் வெகுளியுங் காமமுமாகிய குற்றக்களில்லாத அரசரது செல்வம், பெருமித நீர்த்து-மேம்பாட்டு நீர்மையினையுடைத்து எ-று.

மதம்-செல்வக்களிப்பு. சிறியோர் செயலாகலின், அளவிறந்த காமஞ் சிறுமை யெனப்பட்டது. இவை நீதியல்லன செய்வித்தலான், இவற்றைத்

கடிந்தார் செல்வம் நல்வழிப்பாடும் நிலைபேறுமுடைமையின், மதிப்புடைத் தென்பதாம். மிகுதிபற்றி இவை முற்கூறப்பட்டன.

(ப-ரை) செருக்கும் - மதமும், சினமும் - குரோதமும், சிறுமையும்-காமமும் ஆகிய (குற்றங்களை,) இல்லார்-இல்லாத அரசரது, பெருக்கம்-செல்வமானது பெருமிதநீர்த்து-மேம்பாட்டுக் குணத்தையுடையதாம் எ-று.

(க-ரை) மதமுங் கோபமுங் காமமுமில்லாத வரசர் செல்வம் மேலானது என்பதாம்.

(வி-ரை) மதம்-செல்வக்களிப்பு. சிறியவரது செயலாதலால் அளவிறந்த காமம் சிறுமையெனப்பட்டது. இக்குற்றங்கள் அநீதிகளைச் செய்வித்தலால் இவைகளை நீக்கினவரது செல்வம் நல்வழிப்படுதலும் நிலைபெறுதலுமுடைமையால், மதிப்புடைத்தாகு மென்பதாம். மிகுதிபற்றி இக்குற்றங்கள் முன் சொல்லப்பட்டன.

'செருக்கு' என்றது மதத்தை, இது மிகுந்த செல்வம்பற்றி எய்தும் களிப்பு. 'சினம்' என்றது வெகுளியை. 'சிறுமை' என்றது அளவிறந்ததாகிய காமத்தை. 'பெருக்கம்' என்றது செல்வப்பெருக்கத்தை. 'பெருமிதம்' என்றது மேம்பாட்டுத் தன்மையை. 'நீர்த்து' என்றது குணத்தது என்னும் பொருளது. இக்குறளின்கண் வந்த உம்மைகள் மூன்றும் எண்ணும்மைகள்.

இவறலு மாண்பிறந்த மானமு மாணா
வுவகையு மேத மிறைக்கு.

(பரி-உரை) இவறலும் - வேண்டும் வழிப் பொருள் கொடாமையும், மாண்பு இறந்த மானமும்-நன்மையினீங்கிய மானமும், மாணா உவகையும்-அளவிறந்த வுவகையும், இறைக்கு ஏதம்-அரசனுக்குக் குற்றம் எ-று.

மாட்சியான மானத்தினீக்குதற்கு மாண்பிறந்த மானமென்றார். அஃதாவது, * "அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாயென் றிவ"ரை வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தே விடுதலும் முதலாயின. அளவிறந்த வுவகையாவது - கழி கண்ணோட்டம். பிறருஞ் † சினனேகாமங் கழிகண்ணோட்ட மென்றிவற்றை யறந்தெரிதி கிரிக்கு வழியடையாகுந் தீதென்றார். இவை யிரண்டுபாட்டானுங் குற்றங்களாவன இவையென்பது கூறப்பட்டது.

(ப-ரை) இவறலும்-வேண்டுமிடத்துப் பொருள்கொடாமையும், மாண்பிறந்த மானமும் - நன்மையினீங்கியமானமும், மாணாவுவகையும்-அளவிறந்த மகிழ்ச்சியும், இறைக்கு-அரசனுக்கு, ஏதம்-குற்றங்களாம் எ-று.

(க-ரை) கொடாமையும் நன்மைநீங்கிய மானமும் அளவிலா மகிழ்ச்சியும் அரசனுக்குக் குற்றங்களாகும் என்பதாம்.

* புறப்பொருள்வெண்பாமாலை பாடாண்படலம்-33.

† பதிற்றுப்பத்து 22.

(வி-உ) மாட்சிமையான மானத்தை நீக்குதற்கு மாண்பிறந்த மானமென்றார். அம்மானமாவது, அத்தணர், சான்றோர், அருந்தவர் தன் முன்னோர், தந்தை, தாய் என்றிவரை வணங்காமையும் முடிக்கத் தகாத தாயினும் தினைத்தன முடிதற்தேவிடுதலும் முதலானவை அனவிறந்த வுவகை மிகுந்த மகிழ்ச்சி. [இவை இரண்டுபாட்டாலும் குற்றங்கள் இவையெனச் சொல்லப்பட்டன.]

'இவறல்' என்றது பொருள் கொடுக்கவேண்டிய இடத்துப் பொருள் கொடாமையை. 'மாண்பிறந்த மானம்' என்றது தன்மையின் நீக்கிய மானத்தை; அதாவது, அத்தணர், சான்றோர், குரவர், தாய், தந்தைகளையும் வணங்காமை. 'மாண் உவகை' என்றது மாட்சிமைதராததாகிய பெரு மகிழ்ச்சியை. இதனைக் கழிகண்ணோட்டம்' என்றார் உரையாசிரியர். 'எதம்' இது குற்றம் என்னும் பொருளது. இக்குறளில் வந்த மூன்று உம்மைகளும் (2)
எண் உம்மைகள்.

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையா
கொள்வர் பழிநாணு வார். [க

(பரி-உரை) பழி நாணுவார் - பழியை யஞ்சுவார், தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் - தங்கண் தினையளவாய குற்றம் வந்தாயினும் அதனை அவ்வளவாகவன்றிப் பனையினளவாகக் கொள்வர் எ-று.

குற்றம்-சாதிப்பெயர். தமக்கேலாமையிற் சிறிதென்று பொறார் பெரிதாகக்கொண்டு வருந்திப் பின்னும் அது வராமற் காப்பரென்பதாம்.

(ப-உ) பழிநாணுவார்-பழியை அஞ்சுவோர், தினைத்துணையாங்குற்றம்-தினையளவு சிறியகுற்றமானது, வரினும் - (தம்மிடத்து) வந்தாயினும், (அதனை அவ்வளவாகவல்லாமல்) பனைத்துணையா - பனையினளவு பெரிதாக, கொள்வர்-கொள்வார்கள் எ-று.

(க-உ) பாவத்துக்கு அஞ்சுவோர் தினையளவு குற்றத்தைப் பனையளவாக எண்ணுவார் என்பதாம்.

(வி-உ) குற்றம் - சாதியொருமைப்பெயர். சிறு குற்றமும் தமக்கு எற்காமையால் சிறிதென்று பொறார் பெரிதாகக்கொண்டு வருந்திப் பின்னும் அது வராமல் காப்பரென்பதாம்.

'பழி' என்றது பழிக்கப்படுஞ்செயலை. 'தினை' என்றது ஈண்டுச் சிற்றளவு குறிக்க வந்தது. 'பனை' என்றது பேரளவு காட்டவந்தது. 'ஆம்' இது 'ஆகும்' என்பதன் தொகுத்தல். 'வரினும்' இது வந்தாலும் என்னும் (3)
பொருளது.

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தருஉம் பகை.

(பரி-உரை) அற்றம் தருஉம் பகை குற்றமே - தனக்கு இறுதி பயக்கும் பகை குற்றமே; குற்றமே பொருளாகக் காக்க - ஆகலான், அக்குற்றம் தன் கண் வாராமையே பயனுகக்கொண்டு காக்கவேண்டும் எ-று.

இவைபற்றியல்லது பகைவர் அற்றந் தாராமையின் இவையே பகை யாவனவென்னும் வடநூலார் மதம் பற்றிக் குற்றமே யற்றந்தருஉம் பகை யென்றும், இவற்றது இன்மையே குணங்களது உண்மையாகக்கொண் டென்பார் பொருளாகவென்றுங் கூறினர். குற்றமே காக்கவென்பது "அரும் பண்பினுற் றீமைகாக்க" என்பதுபோல கின்றது.

(ப-ரை) அற்றம் - மூடிவை, தருஉம்பகை-(தனக்குத்) தரும்பகை, குற் றமே-குற்றமேயாம், (ஆதலால்) குற்றமே-அக்குற்றம் (தன்னிடத்து வாராமை யையே), பொருளாக-பயனுகக்கொண்டு, காக்க-காக்கவேண்டும் எ-று.

(க-ரை) தனக்கு மூடிவைத்தரும் பகையாகிய குற்றத்தைக் காக்கக் கடவன் என்பதாம்.

(வி-ரை) இக்குற்றங்களிலே ஒன்றைப்பற்றியல்லாமல் பகைவர் தனக்கு மூடிவைச் செய்யாமையால் இவையே அரசனுக்குப் பகையாவனவென்றும், இவைகளினில்லாமையையே குணங்களி னிருப்பாகக்கொண் டென்றற்கு பொருளாகவென்றும் சொல்லினர்.

'குற்றமே' இதன் சுற்றில் கின்ற ஏகாரம் இரண்டும் தேற்றப்பொருளன. 'அற்றம்' என்றது அழிவை. 'காக்க' என்றது தன்பால் எய்தாது காக்கக் கடவன் என்பதாம். 'தருஉம்' இது இசை நிறைக்கவந்த அளபெடை. (4)

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(பரி-உரை) வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை - குற்றம் வரக்கடவ தாகின்ற முற்காலத்திலே அதனைக் காவாத அரசன் வாழ்க்கை, எரிமுன்னர் வைத்தூறுபோலக் கெடும் - அது வந்தால் எரிமுகத்து கின்ற வைக்குவை போல அழிந்துவிடும் எ-று.

குற்றமென்பது அதிகாரத்தான் வந்தது. முன்னரென்றது னீற்றது குறிப்பொருள் விகுதி. வருமென்னும் பெயரெச்சம் முன்னரென்னுங் காலப்பெயர் கொண்டது; அதனுற் சாக்கலாங் காலம் பெறப்பட்டது. தூறு சிறிதாயினும் அதனுற் பெரிய செல்வம் அழிந்தேவிடுமென்பது உண்மையாற் பெற்றும்.

(ப-ரை) வருமுன்னர்-(குற்றம்) வருவதன் முன்னே, காவாதான்-(அதனை காமல்) காவாத அரசனது, வாழ்க்கை - வாழ்வானது, (அதுவந்தால்) எரிமுன்னர் - நீருகத்துகின்ற, வைத்தூறுபோல - வைக்கோலின் கூட்டம் போல, கெடும்-அழிந்துவிடும் எ-று.

(க-ரை) குற்றம் வருமுன்னே காத்துக்கொள்ளா வரசன் வாழ்வு அக்கினி முன்னின்ற வைக்கோல்போலக் கெடும் என்பதாம்.

(வி-ரை) குற்றமென்பது அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. முன்ன சென்றதனால் காத்தலாக்காலம் பெறப்பட்டது. [குற்றம் சிறிதாயினும் அதனாலே பெரியசெல்வம் அழிந்தேவிடுமென்பது உபமானத்தினாலே கொள்ளப்பட்டது.]

'வருமுன்னர்' என்ற இடத்து குற்றம் வருமுன்னர் எனக் குற்றம் என் னுஞ்சொல் அவாய் நிலையால் வருவித்து உரைக்கப்பெற்றது. 'வாழ்க்கை' என்றது செல்வம் மிக்க பெருமிதவாழ்க்கை என்பதாம். 'எரி' என்றது பொருப்பை. 'வைத்தறு' என்றது வைக்கோற் குவையை. 'தறு' என்பதற்கு குவியல் எனப் பொருள் செய்யப்பெற்றது. 'போல' இது உவமஉருபு. (5)

தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

(பரி-உரை) தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின்-முன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடித்த பின்னர்ப் பிறர்குற்றங் காணவல்லனாயின், இறைக்கு ஆகும் குற்றம் என்-அரசனுக்கு ஆகக்கடவ குற்றம் யாது எ-று.

அரசனுக்கு தன் குற்றங் கடியாவழியே பிறர் குற்றங் கடிதல் குற்ற மாவது, கடிந்தவழி முறைசெய்தலாமென்பார், என்குற்ற மாகுமென்றார். எனவே, தன்குற்றங் கடிந்தவனே முறைசெய்தற் குரியவனென்பதாயிற்று. இவை கான்குபாட்டானும் அவற்றது கடிதற்பாடு பொதுவகையாற் கூறப் பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறப.

(ப-ரை) தன்குற்றம் - தனது குற்றத்தை, நீக்கி - (முன்னேகண்டு) கடித்து, பிறர்குற்றம்-பிறரது குற்றத்தை, காண்கிற்பின்-(பின்னே) காணவல் லனாயின், இறைக்கு-அரசனுக்கு, ஆகும்-ஆகக்கடவதாகிய, குற்றம் என்- குற்றம் யாது எ-று.

(க-ரை) தன் குற்றத்தை முன்நீக்கி பிறர்குற்றத்தைப் பின்நீக்கு மர சனுக்குக் குற்றமில்லை என்பதாம்.

(வி-ரை) அரசனுக்குத் தன்குற்றங் கடியாதவிடத்தே பிறர் குற்றங் கடிதல் குற்றமாம். அது கடிந்தவிடத்தே முறைசெய்தலாம் என்றதற்கு என் குற்றமாகுமென்றார். எனவே தன்குற்றங் கடிந்தவனே முறைசெய்தற் குரியவனென்றதாயிற்று. [இவை கான்குபாட்டானும் குற்றங்கடிதல் பொது வகையினாலே சொல்லப்பட்டது] இனிச் சிறப்புவகையாற் கூறுகிறார்.

'காண்கிற்பில்' இதில் 'இல்' என்ற இடைநிலை தொழிற்பொருள் தந்தது. இதற்கு காண்பானேயாலுல் என்பது பொருளாம். 'என்குற்ற' இது என்னகுற்றம் என்பதாம். 'என்ன' என்பது 'என்' எனக் கடைகுறைந் (நி) கின்றது.

செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்.

(பரி-உரை) செயற்பால செய்யாத இவறியான் செல்வம்-பொருளாற் றனக்குச் செய்துகொள்ளப்படுமவற்றைச் செய்துகொள்ளாது அதன்கட் பற்றுள்ளஞ் செய்தானத செல்வம், உயற்பாலத அன்றிக் கெடும் - பின் னதாம் பான்மைத்தன்றி வறிதே கெடும் எ-று.

செயற்பாலவாவன - அறம் பொருளின்பங்கள். பொருளாற் பொருள் செய்தலாவத-பெருக்குதல்; அத * "பொன்னிலுகும் பொருபடையப்படை, தன்னிலுகுந் தாணி தாணியிற், பின்னை யாகும் பெரும்பொருளப்பொரு, ளன்னுங் காலைத் தன்னுதன வில்லையே" என்பதனுனறிக. அறஞ் செய்யாமையானும் பொருள் பெருக்காமையானும் உயற்பாலதன்றியென்றும், இன்பப்பயன் கொள்ளாமையிற் கெடுமென்றுங் கூறினார். உயற்பாலதின்றி யென்ற பாடம் ஒதுவாருமுளர்.

(ப-ரை) செயற்பால - (பொருளினாலே தனக்குச்) செய்து கொள்ளப் படுமவைகளை, செய்யாத-செய்துகொள்ளாமல், இவறியான்-(அதனிடத்து) லாபஞ்செய்தவனது, செல்வம் - செல்வமானது, உயற்பாலதன்றி - பின் னதாகும் பகுப்பினதன்றி, கெடும்-வீணுகக்கெடும் எ-று.

(க-ரை) செய்யப்படு மவற்றைச் செய்துகொள்ளாமல் உலோபஞ் சய்பு மாசன் செல்வங்கெடும் என்பதாம்.

(வி-ரை) செய்துகொள்ளப்படுமவை, அறம் பொருளின்பங்கள். பாருளால் இம்மூன்றிலே ஒன்றாகிய பொருள் செய்தலாவது, அதனைப் பருக்குதல். செல்வமானது அறஞ்செய்யாமையாலும், பொருள் பெருக் காமையாலும், பின்னுளதாகாதென்றும், இன்பப்பயன் கொள்ளாமையால் கடுமென்றும் அறிக.

'செயற்பால' என்றது அறம், பொருள், இன்பங் கருதிச் செய்யவேண் டிய பொருட்செலவை. 'இவறல்' என்றது கொடுக்கவேண்டியவைகட்குப் பாருள் கொடாது உலோபஞ்செய்தலை. 'உயற்பாலது' என்றது பின்னர் ன்னதாந்தன்மையை.

(7)

பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.

(பரி-உரை) பற்று உள்ளம் என்னும் இவறன்மை-பொருளை விடத்தகு டத்தை விடாது பற்றுதலைச் செய்யுமுள்ளமாகிய உலோபத்தினது தன்மை, றன்னும் எண்ணப்படுவது ஒன்று அன்று - குற்றத்தன்மைகளெல்லாவற் ன்னும் வைத்தெண்ணப்படுவ தொன்றன்று மிக்கது எ-று.

* வளையாபதி விமலையாரிலம்பகம்-35.

இவறலது தன்மையாவது - குணக்களெல்லாம் ஒருக்குளவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்தித் தான் மேற்பட வல்லவியல்பு. ஒழிந்தன அது மாட்டாமையின், எற்றன்ளு மெண்ணப்படுவ தொன்றன்றென்றார். எவற் றன்ளுமென்பது இடைக்குறைத்து நின்றது. இவை யிரண்டுபாட்டானும் உலோபத்தின் நீமை கூறப்பட்டது.

(ப-ரை) பற்றன்னமென்னும் - (பொருளிடத்தகுமிடத்தவிடாத) பற்றுகின்ற உள்ளமாகிய, இவறன்மை - உலோபத்தன்மையானது, எற்றன் ளும்-எல்லாக் குற்றத்தன்மைகளுள்ளும், எண்ணப்படுவது-(வைத்து) நினைக் கப்படுவது, ஒன்றன்ற-ஒன்றல்ல (மிகுந்ததாம்) எ-று.

(க-ரை) பொருளைப்பற்று முலோபத்தன்மையானது எல்லாக் குற்றத் நிலு மிகுந்தது என்பதாம்.

(வி-ரை) இவறன்மை - குணக்களெல்லாம் சேர்ந்திருந்தாலும் அவை களைக் கீழ்ப்படுத்தித் தான்மேற்படவல்ல வியல்பு. மற்றவை அது செய்ய மாட்டாமையால் எற்றன்ளு மெண்ணப்படுவ தொன்றன்றென்றார். எவற் றன்ளுமென்பது இடைக்குறைவிகாரம். [இவை இரண்டுபாட்டாலும் உலோ பத்தின் நீமை சொல்லப்பட்டது.]

'பற்றன்னமென்னு மிவறன்மை' என்றது பொருளிடத்து அவாவை வைத்து கொடுக்கவேண்டிய இடத்தக் கொடாது உலோபஞ் செய்யுந் தன்னமையை. 'எற்றன்ளும்' இது எவ்றன்ளும் என்றதன் இடைகுறைந்து நின்றது. 'எற்றன்ளும் எண்ணப்படுவதின்று' என்றது எந்தக் குற்றத்தை னோடும் ஒருக்குவைத்து எண்ணக்கூடியதல்ல, எல்லாக் குற்றத்தன்ளுங் பெருங்குற்றமாகும் என்றதாம்.

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க நன்றி பயவா வினை.

(பரி-உரை) எஞ்ஞான்றும் தன்னை வியவற்க - தான் இறப்ப வுயர்ந் ஞான்றும் மதத்தாற் றன்னை கன்குமதியா தொழிக; நன்றி பயவா வினை நயவற்க - தனக்கு நன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாதொழி எ-று.

தன்னை வியந்தழி இடமுங் காலமும் வலியும் அறியப்படாமையாலு அறனும் பொருளும் இகழப்படுதலானும், எஞ்ஞான்றும் வியவற்க என்ற கருதியது முடித்தே விடுவலென்ற அறம் பொரு ளின்பங்கள் பயவா வி களை நயப்பின் அவற்றுற் பாவமும் பழியுங் கேடும் வருமாகலின், அவற்ை நயவற்கவென்றுங் கூறினார். இதனுன் மதமானங்களின் நீமை கூறப்பட்ட

(ப-ரை) எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், (தான் மிகவும் உயர்ந் காலத்திலு மென்றபடி) தன்னை-தன்னை, வியவற்க - (மதத்தினுலே) கன்

தியாதிருக்கக்கடவன், கன்றி - கன்மையை, பயவா - (தனக்குத்) தாராத, வினை-தொழில்களை, கயவற்க-(மானத்தால்) விரும்பாதிருக்கக்கடவன் எ-று.

(க-ரை) ஒருவன் எக்காலத்தும் தன்னை மதியாமலும் கன்மையைத் தாததொழிலை விச்சியாமலும் இருக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) தன்னை கன்குமதித்தவிடத்தே இடமும் காலமும் வலியும் அறிவப்படாமையாலும், அறமும் பொருளும் இகழப்படுதலாலும், எஞ் ஞான்றும் வியவற்கவென்றும், கினைத்தது முடித்தே விடுவேனென்ற அறம் பொரு ளின்பங்களைத் தாத தொழில்களை விரும்பினால் அவைகளால் பாவமும் பழியும் கேடும் வருமாகலால், அவற்றை கயவற்கவென்றும் சொல்லினர். [இதனால் மதமானங்களினது நீமை சொல்லப்பட்டது.]

'வியவற்க' என்றது தன்னை உயர்த்து மதித்தலை செய்யாதிருப்பாயாக என்பதாம். 'எஞ்ஞான்றும்' என்றது தனக்கு மிக உயர்வு உண்டாய காலத்தும் என்பதாம். 'கயத்தல்' கண்டு விரும்புதல் என்னும் பொருளது. 'வியவற்க,' 'கயவற்க' என்பன இரண்டும் முன்னிலையொருமை வினை. (9)

காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

(பரி-உரை) காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்-தான் காதலித்த பொருள்களை அவர் அக்காதலறியாமல் அனுபவிக்க வல்லனாயின், எதிலார் நூல் எதில - பகைவர் தன்னை வஞ்சித்தற்கெண்ணும் எண்ணம் பழுதாம் எ-று.

அறிந்தவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாம யுய்த்தால் வாயிலின்மையின் வஞ்சிக்கப்படானென்பதாம். காமம், வெகுளி, வகையென்பன முற்றக் கடியுங் குற்றம் அன்மையின், இதனுற் பெரும் பான்மைத்தாகிய காமநுகருமாறு கூறி, ஏனைச் சிறபான்மை யவற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிந்தார்.

(ப-ரை) காதல - (தன்னாலே) விரும்பப்பட்ட பொருள்களை, காதல்- அவ்விருப்பத்தை, அறியாமல் - (அவர்) அறியாதிருக்கும்படி, உய்க்கிற்பின்- அனுபவிக்க வல்லவனாயின், எதிலார்-பகைவர், நூல்-(தன்னை வஞ்சித்தற்கு எண்ணும்) எண்ணமானது, இல்-பழுதாம் எ-று.

(க-ரை) தன்னா லிச்சிக்கப்பட்ட பொருள்களையும் தன்னிச்சையையும் யைவரறியாம லனுபவிக்க வல்லவனை லப்பகைவரெண்ணம் பழுதாம் என்பதாம்.

(வி-ரை) அறிந்தவிடத்தே அவைவழியாகப் புகுந்து வஞ்சிப்பாராத னால் அறியாமல் அனுபவிக்கவேண்டு மென்பதாம். [இதனாலே முழுதும் டலாகாத காமத்தை அனுபவிக்கும்விதம் சொல்லப்பட்டது.]

'காதல்' என்றது தான் விருப்பக்கூர்ந்த பொருளை என்பதாம். 'அறியாமை' என்றது பிறர்க்குப் புலனாகாமையை. 'உய்ந்திற்பின்' என்றது தான் அறுபவிக்க வல்லவன் ஆனால் என்பதாம். 'எதிலார்' என்றது பகைவரை. 'நல்' என்றது சுண்டி பகைவர் எண்ணத்தை. 'எதில' என்றது அப்பகைவர்க்குப் பயன் செய்யாத அழியும் என்பதாம். (10)

44-ம் அதி - குற்றங்கடிதல் - முற்றிற்று.

45-ம் அதிகாரம்—பெரியாரைத் துணைக்கோடல்

(பரி-உரை) அஃதாவது: மூவிருகுற்றமும் முறைமையிற் கடிதலிற் காவற்சாதனைத்தற் குரியனைய அரசன் நீதிநெறி விலக்கி தன்னெறிச் செலுத்தும் போதிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல். அதிகார முறைமையும் இதனோடு வினக்கும். போதிவுடையாளாவார் அரசர்க்கும் அக்கேட்கும் மாறுடத் தெய்வக் குற்றங்கள் வாராமற் காத்தற்குரிய அமைச்சர், புரோகிதர்.

(உரை) அஃதாவது: அவ்வறுவகைக் குற்றங்களோடும் கடிந்த அரசன் தன்னைத் நீபவழியில் விலக்கி நல்லவழியிலே செலுத்தும் போதிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல். அதிகார முறைமையும் இதனோடு விளக்கும். போதிவுடையவராவார் அரசாட்சிக்குக் குற்றம் வாராமற் காத்தற்குரிய அமைச்சர் புரோகிதர்.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

(பரி உரை) அறன் அறிந்த மூத்த அறிவுடையார் கேண்மை அறத்தினது நண்மையை யறிந்த தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை, தேர்ந்த திறன் அறிந்துகொளல் - அரசன் அதனது அருமையை யோர்ந்து, கொள்ளுந் திறமறிந்து கொள்க எ-று.

அறநண்மை தூலானேயன்றி உய்த்துணர்வானும் அறியவேண்டுதலின் அறனறிந் தென்றார். மூத்தல் - அறிவானும், சிலத்தானும், காலத்தானும் மூதிர்தல். அறிவுடையார் - நீதியையும் உலகியலையும் அறிதலையுடையார். திறனறிதலாவது-தன்குமதித்தல், உயாச்செய்தல், அவர்வரை கிற்றலென்பன முதலாக அவர் பிணிப்புண்ணுந் திறனறிந்து செய்தல்.

(ப-ரை) அறனறிந்த - அறத்தினது நட்பத்தை அறிந்த, மூத்த (தன்னின்) மூத்த, அறிவுடையார் - அறிவுடையவரது, கேண்மை - நட்பை, தேர்ந்த - (அதனது அருமையைத்) தெரிந்து, திறனறிந்த - (கொள்ளுந்) திறமறிந்து, கொளல் (அரசன்) கொள்ளக்கடவன் எ-று.

(க-ரை) அரச னறிவுடையோர் சினேகத்தைக் கொள்ளக்கடவன் என்பதாம்.

(வி-ரை) மூத்தல்-அறிவாலும், சீலத்தாலும், காலத்தாலும், முதிர்தல். அறிவுடையார் நீதியையும் உலகியலையும் அறிதலையுடையவர். திறனறிதலாவது - நன்குமதித்தல், உயரச்செய்தல், அவர் சொல்வழி நடத்தல் இவை முதலாக அவர் தனக்கு உள்ளாந் திறமறிந்து செய்தல்.

'அறனறிந்து' என்றது தாம் பெற்றுள்ள அறத்தின் கூற்றை ஆராய்ந்து அறிந்து என்பதாம். 'மூத்த' என்றது அறிவு, ஒழுக்கம், காலம் முதலியவற்றால் மிகுந்த என்பதாம். 'கேண்மை' என்றது நேயத்தை. 'திறனறிந்து' என்றது அவர் கேண்மையைக் கொள்ளுந் திறத்தையறிந்து என்பதாம். 'தேர்ந்து' என்றது அம்மூத்தாரை ஆராய்ந்து தெளிந்து தெரிந்து என்பதாம். 'கொளல்' இது கொள்க என்னும் பொருளது. இனி கொள்ளக்கடவன் என்னலும் ஆம்.

(1)

உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(பரி-உரை) உற்ற நோய் நீக்கி-தெய்வத்தானாக மக்களானாகத் தனக்கு உந்த துன்பங்களை நீக்குமா றறிந்து நீக்கி, உறாமை முற்காக்கும் பெற்றியார்-பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன்னறிந்து காக்கவல்ல தன்மை யினையுடையாரை, பேணிக்கொளல் - அரசன் அவர் உவப்பன செய்து துணையாகக்கொள்க எ-று.

தெய்வத்தான் வருந் துன்பங்களாவன - மழையினது இன்மை மிகுதிகளானும், காற்றுத் தீப் பிணியென் றிவற்றானும், வருவன. அவை கடவுளரையுந் தங்கோரையும் நோக்கிச் செய்யுஞ் சாந்திகளான் நீக்கப்படும். மக்களான் வருந் துன்பங்களாவன-பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வாரன்றிவர்களான் வருவன. அவை சாம பேத தான தண்டங்களாகிய ஏல்வகை யுபாயத்துள் ஏற்றதனால் நீக்கப்படும். முற்காத்தலாவது-தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களானறிந்து, அச்சாந்திகளாற் காத்தலும்; மக்களான் வருவனவற்றை அவர் குணம், இங்கிதம், ஆகாரம், செயலென்னவற்றான் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றாற் காத்தலுமாம்; ஆகவே, ரோகிதரையும் அமைச்சரையுங் கூறியவாறாயிற்று. இங்கிதம் - குறிப்பான் நிகழும் உறுப்பின் தொழில். ஆகாரம் - குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன - நன்குமதித்தன் முதலியன. இவை யிரண்டுபாட்டானும் பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கோடல் வேண்டுமென்பதூஉம், கொள்ளுமாறுங் கூறப்பட்டன.

(ப-ரை) உற்ற - (தெய்வத்தாலாவது மனிதராலாவது தனக்கு) உந்த, நோய்-துன்பங்களை, நீக்கி - (நீக்கும் விதம் அறிந்து) நீக்கி, உறாமை - (பின்

அப்படிப்பட்டவை) வாராதபடி, முற்காக்கும்-முன் (னறிந்து) காக்கவல்ல பெற்றியார் - தன்மையுடையவரை, பேணி - அவர் * மகிழத் தக்கவைகளைச் செய்து, கொளல் (அரசன் துணையாகக்) கொள்ளக்கடவன் எ-று.

(க-ரை) வந்த துன்பங்களை நீக்கி அத்துன்பங்கள் வராமற் காக்க வல்லவரை யரசன் சிநேகிக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) தெய்வத்தால் வருந் துன்பங்களாவன: மழை யில்லாமையாலும், அதிக மழையாலும், காற்றுத் தீப் பிணி இவைகளாலும் வருவன அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செயப்படுஞ் சாந்திகளால் நீக்கப்படும். மக்களால் வருந்துன்பங்களாவன: பகைவர், கள்வர், சுற்றத்தார் தொழில்செய்வார் இவர்களால் வருவன. அவை சாம பேத தான தண்டங்களாகிய கால்வகை யுபாயங்களுள் ஏற்றதனால் நீக்கப்படும். முற்காத்தலாவது தெய்வத்தால் வருமவைகளை உற்பாதங்களால் அறிந்து, அச்சாந்திகளாலே காத்தலும்; மனிதரால் வருமவைகளை அவாதி, குணம், இங்கிதம், ஆகாரம், செயல் என்பவைகளால் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றாலே காத்தலுமாம். ஆகவே, புரோகிதரையும் மந்திரிகளையும் சொல்லியபடியாயிற்று. [இவை இரண்டுபோட்டாலும் பெரியோரது இலக்கணமும், அவரைத் தமக்காகக் கொள்ளவேண்டுமென்பதும் கொள்ளும்விதமும் சொல்லப்பட்டன.]

'உருமை' இது செய்யுள் இசை நிறைக்கவந்த அளபெடை. 'பெற்றியார்' என்றது தன்மையை உடையவரை. தன்மையாவது தகுதிவகை. 'பேணிக்கொளல்' என்றது அவர் விரும்புவனவற்றை அறத்திற்கோடாது செய்துகொள்க என்பதாம்.

அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்.

(பரி-உரை) பெரியாரைப் பேணித் தமராக் கொளல்-அப்பெரியவர்களை அவர் உவப்பன அறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல் அரியவற்றுள் எல்லாம் அரிது-அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் அரிது எ-று.

உலகத்து அரியனவெல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பெரியாரைச் சிறந்தனென்றது, இதனால் அவையெல்லாம் உளவாதல் நோக்கி.

(ப-ரை) பெரியாரை - போறிவுடையவர்களை, பேணி - அவர் மகிழத் தக்கனவைகளைச் செய்து, தமரா-தமக்குச் சிறந்தவராக, கொளல்-கொள்ளுதல், (அரசர்க்கு) அரியவற்று ளெல்லாம் - அரிய பேறுகள் பலவினும், அரிது எ-று.

(க-ரை) பெரியோரைச் சிநேகித்தல் அரசன் பெறும் பேறுகளுள் மிகச் சிறந்தபேறு என்பதாம்.

---

* பழிதத்தக்கவை-கன்குமதிக்கை முதலானவை.

(வி-ரை) உலகத்திலே அரியவையெல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பேறு சிறந்ததென்றது, இதனால் அவையெல்லாம் உண்டாதலைக் குறித்தென்க.

'அரியவற்றுள்' என்றது அருமையாய பொருள்களுக்குள் என்பதாம். இனி, அரியதுணைகளுக்குள் என்பாரும் உண்டு. 'அரிதே' ஈற்று ஏகாரம் தேற்றப்பொருளது. 'தமர்' என்றது தம்மவர் என்ற பொருளதாம். அதாவது தனக்கு கட்பாக என்றவாறு. (3)

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

(பரி-உரை) தம்மில் பெரியார் தமரா ஒழுகுதல் - அறிவு முதலிய வற்றுல் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர்வழி நின்றொழுகுதல், வன்மையுள் எல்லாம் தலை - அரசர்க்கு எல்லா வலியுடைமையினுந் தலை எ-று.

பொருள், படை, அரண்களாலுய வலியினும் இத்துணைவலி சிறந்ததென்றது, இவர் அவற்று னீக்கப்படாத செய்வத்தன்ப முதலியனவும் நீக்குதற்கு உரியாராகலின்.

(ப-ரை) தம்மிற்பெரியார் - (அறிவு முதலானவைகளாலே) தம்மின் மிகுந்தவர், தமரா-தமக்குச் சிறந்தவராக, ஒழுகுதல்-(தாம் அவர் வழியிலே நின்று) நடத்தல், (அரசர்க்கு) வன்மையுளெல்லாம் - வலியுடைமை பல வினும், தலை-முதன்மையாம் எ-று.

(க-ரை) தம்மினும் பெரியோரைச் சிநேகித்தல் அரசன் வல்லமையுள் தலைமையான வல்லமை என்பதாம்.

(வி-ரை) இப்பெரியார் பொருள் படை யாண்களால் நீக்கக்கூடாதவை யாகிய தெய்வத்தால்வரும் துன்பமுதலானவைகளையும் நீக்குதற்கு உரியவ ராகலால் அவைகளாலாகிய வலியினும் இத்துணைவலி சிறந்ததெனப் பட்டது.

'தம்மில்' ஈண்டு இல் உருபு எல்லைப்பொருளில் வந்தது; தம்மைக்காட்டி லும் என்பது பொருளாம். 'பெரியார்' என்றது அறிவு, ஒழுக்கம், வயது முதலியவற்றுற் பெரியவரை. 'ஒழுகுதல்' அவர் ஆணைவழி நின்றொழுகல், அவர் சொற்கேட்டொழுகுதல் என்பதாம். 'வன்மை' என்றது வல்லமையை. 'தலை' என்றது சிறந்தது என்னும் பொருளது. (4)

சூழ்வார்கண் ணுக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

(பரி-உரை) சூழ்வார் கண்ணுக ஒழுகலால் - தன் பாரம் அமைச்சரைக் கண்ணுக் கொண்டு நடத்தலான, மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்துகொளல்.

அரசன் அத்தன்மையராய அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்க எ-று.

இரண்டாவது விகாரத்தாற் றொக்கது. தானே சூழ வல்லனெயினும் அளவிறந்த தொழில்களான் ஆகுலமெய்தும் அரசன் பாரம் அதுவே தொழி லாய அமைச்சரான் அல்லது இனிது கடவாமைபற்றி, அவரைக் கண்ணுகக் கூறினர். ஆராய்தல்-அமைச்சியலுட் சொல்லப்படும் இலக்கணத்தின சென் பதனை யாராய்தல். இவை மூன்று பாட்டானும் பெரியாரைத் துணைக் கோடலின் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) சூழ்வார் - மந்திரிகளை, கண்ணுக - கண்ணுகக்கொண்டு, ஒழுக லால் - (தன்பாரம்) கடத்தலால், மன்னவன்-அரசன், சூழ்வாரை-அப்படிப் பட்ட மந்திரிகளை, சூழ்க-ஆராய்ந்து, கொளல் - (தனக்குத் துணையாகக்) கொள்ளக்கடவன் எ-று.

(க-ரை) அரசன் மந்திரிகளைக்கொண்டு பூமிபார கடத்தலால் அவர் களைத் துணையாகக் கொள்ளவேண்டும் என்பதாம்.

(வி-ரை) தானே ஆராயவல்லவனெயிருந்தாலும் அளவில்லாத தொழில் களால் வருத்தமடையுமரசனது பாரம் அவ்வாராய்தலொன்றே தொழிலாகிய மந்திரிகளால் அல்லாமல் இனிது கடவாமைபற்றி அவரைக் கண்ணுக்கிச் சொல்லினர். ஆராய்தல்-அமைச்சியலிலே சொல்லப்படுகிற இலக்கணமுள்ள வென்பதனை ஆராய்தல். [இவை மூன்றுபாட்டாலும் பெரியாரைத் துணை கொள்ளுதலின் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'சூழ்வார்' என்றது அமைச்சரை. என்னை? அமைச்சரே தன்னை நெருங் கிச் சூழ்ந்திருக்க அமைந்தவர் ஆதலினால் என்க. இதனாலேயே மந்திரிகட்கு 'அமைச்சர்' என்ற பெயரும் அமைந்தமை காண்க. 'சூழ்ந்துகொள்' என்றது ஆராய்ந்து அறிந்துகொள்ளக்கடவர் என்பதாம். 'சூழ்' என்ற சொல் பன்முறை இச்செய்யுளில் வந்தமையால் இது சொற்பொருட் பின்வரு நிலையணி. (5)

தக்கா ரினத்தனுய்த் தானெழுக வல்லானைச்
செற்றூர் செயக்கிடந்த தில.

(பரி-உரை) தக்கார் இனத்தனுய்த் தான் ஒழுக வல்லானை - தக்கா ராகிய இனத்தை யுடையனுய்த் தானும் அறிந்தொழுக வல்ல அரசனை, செற்றூர் செயக் கிடந்தது இல் - பகைவர் செய்யக் கிடந்ததொரு தன்பமு மில்லை எ-று.

தக்கார் - அறிவொழுக்கங்களால் தகுதியுடையார். ஒழுகுதல்-அறிந் களின் நெறி வழுவாமல் கடத்தல், வஞ்சித்தல், கூடினரைப்பிரித்தல், வே பகை விளைத்தல் என்றிவற்றானும், வலியானும், பகைவர் செய்யுந் தன்ப கள் பலதிறத்தவாயினும், தானுமறிந்து அறிவார் சொல்லுங் கொண்

ஒழுகுவான்கண் அவற்றனொன்றும் வாராதென்பார், செற்றூர் செயக் கிடந்தில் என்றார்.

(ப-ரை) தக்காரினத்தனும்-யோக்கியராகிய இனத்தினையுடையவனும், தானெழுக-தானும் (அறிந்து) நடக்க, வல்லானை - வல்லவரசனை, செற்றூர்-பகைவர், செயக்கிடந்தது-செய்யக்கிடந்த ஒரு துன்பமும், இல்-இல்லை எ-று.

(க-ரை) பெரியோரினத்தை யுடையவனும் அறவழிப்பட்ட அரசன் பகைவரால் வெல்லப்படான் என்பதாம்.

(வி-ரை) தக்கார்-அறிவொழுக்கங்களாலே தகுதியுடையவர். ஒழுகுதல்-அறநூல்களின் வழிதவறாது நடத்தல். வஞ்சித்தல், கூடினவரைப் பிரித்தல், வேற பகை விளைத்தல் என்கிற இவைகளாலும், வலிமையாலும், பகைவர் செய்யுந் துன்பங்கள் பலவகைப்பட்டிருப்பினும், தானும் அறிந்து அறிந்தோரது சொல்லையும் கேட்டு நடக்கையால் அத்துன்பங்களிலே ஒன்றும் வாராதென்றற்கு செற்றூர் செயக்கிடந்ததில்லென்றார்.

'தக்கார்' என்றது அறிவு, ஒழுக்கம் முதலியவற்றில் தகுதி உடையவர்களை. 'இனம்' என்றது மந்திரி முதலிய இனங்களை. 'செற்றூர்' என்றது பகைவரை. இது 'செறு' என்னும் பகுதியடியாகப்பிறந்த பலர்பாற்பெயர். 'இல்' இது 'இல்லை' என்பதன் கடைக்குறை விகாரம். (6)

இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

(பரி-உரை) இடிக்கும் துணையாரை ஆள்வாரை - நீயனகண்டால் வெருட்டிச் சொல்லுந் துணையாந் தன்மையை யுடையாரை இவர் நமக்குச் சுற்றாரென்றுளும் அரசரை, கெடுக்கும் தகைமையவர் யார் - கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்தியாவர்? எ-று.

நீயன-பாவங்களும் நீதியல்லனவும். துணையாந் தன்மையாவது-தமக்கு வையின்மையும் அரசன்கண் அன்புடைமையுமாம். அத்தன்மையுடையார் றியினீங்க விடாமையின், அவரை யாளும் அரசர் ஒருவராலுங் கெடுக்கப் டாரென்பதாம். வெருட்டிச் சொல்லும் அளவிலேயென் றுரைப்பாரு னர். இவை யிரண்டு பாட்டானும் அதன் பயன் கூறப்பட்டது.

(ப-ரை) (நீயனைகளைக்கண்டால்) இடிக்கும் - கோபித்துப் புத்தி சொல்லும், துணையாரை-துணையாந் தன்மையை யுடையவரை, ஆள்வாரை-இவர் நமக்குச் சிறந்தவரென்று கொண்டு) ஆளுகிற அரசரை, கெடுக்குந் தகைமையவர்-கெடுக்கும் பெருமையையுடைய பகைவர், யார் - (உலகத்தில்) வர்? எ-று.

(க-ரை) அறிவுறுத்திச் சொல்லும் மந்திரிகளைக்கொண்டு அரசாளுகருக்குப் பகைவரில்லை என்பதாம்.

(வி-ரை) நியமை-பாவங்களும் நீதியல்லாதவையும். துணையாற்றன்மை யாவது-தமக்கு அமைவில்லாமையும், அரசனிடத்து அன்புடையவராயிருக் கையும் ஆம். அப்படிப்பட்டவர் கல்வழியி னீக்கவிடாமையால் அவரையாளு மாசர் ஒருவராலும் கெடுக்கப்படாரென்பதாம். எ-அசை. [இவை இரண்டு பாட்டாலும் அதன் பயன் சொல்லப்பட்டது.]

'இடிக்குந்துணையாரை' என்றது நியன கண்டவழி கண்ணோடாத இடித்துக் கூறுந் தன்மையுடைய அறமுடையாரை. 'ஆள்வாரை' என்றது தமக்குத் துணையாக்கொண்டொழுகும் அரசரை என்பதாம். 'யாரே' இது யாவினுவடியாகப் பிறந்த பெயர். 'ஏ' அசை. (7)

இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

(பரி-உரை) இடிப்பாரை இல்லாத எமரா மன்னன் - கழறுதற்குரி யாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையிற் காவலற்ற அரசன், கெடுப்பார் இலானும் கெடும்-பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும் எ-று.

இல்லாத எமரா என்பன பெயரெச்ச அடுக்கு. கெடுப்பார் உளராவ தொன்பது தோன்ற, இலானு மென்றார். தானே கெடுதலாவது-பாகனில்லாத யானைபோல நெறிபல்லாநெறிச் சென்று கெடுதல்.

(ப-ரை) இடிப்பாரை - கண்டித்துப் புத்தி சொல்வாரை, இல்லாத (தனக்குத்துணையாகக்) கொள்ளாமையால், எமரா-காவலற்ற, மன்னன் இராசன், கெடுப்பாரிலானும்-(பகையைக்) கெடுப்பவர் இல்லாதிருந்தாலும், கெடும்-(தானே) கெடுவான் எ-று.

(க-ரை) புத்திசொல்லு மந்திரிகளைப் பெற்றிலாவரசன், கெடுக்கும் பகைவரில்லாமற் கெடுவான் என்பதாம்.

(வி-ரை) கெடுப்பார் உண்டாயிருப்ப தென்பது தோன்ற இலானு மென்றார். தானே கெடுதலாவது-பாகனில்லாத யானைபோல் வழியல்லாத வழியிலே சென்று கெடுதல்.

'இடிப்பாரை' என்றது இடித்துரைத்து நீதிபுகட்டும் பெரியாரிடத் துணைவரை. 'எமரா' என்றது காவலைக்கொள்ளாத என்பதாம். 'கெடுப்பா' என்றது பகைவரை. 'இலானும்' இது இல்லையாயினும் என்பதன் இடை குறை விகாரம். செய்யும்பற்றி வந்த விகாரம்.

முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

(பரி-உரை) முதல் இலார்க்கு ஊதியம் இல்லை முதற்பொரு ளில்லா வணிகர்க்கு அதனால் வரும் ஊதியமில்லையாம்; மதலையாம் சார்பு இலார்க்

கில இல்லை - அதபோலத் தம்மைத் தாக்குவதாற் துணையில்லாத அரசர்க்கு, அதனால் வரும் கிலயில்லை எ-று.

முதலிழப்பெற்றே இலாபம் பெறவேண்டுமாறுபோலத் தாக்குவாரைப் பெற்றே கிலபெறவேண்டுமென்பதாம். கில-அரசர் பாரத்தோடு சலியாத நிற்றல்.

(ப-ரை) முதலிலார்க்கு - முதற்பொருளில்லாத செட்டிகளுக்கு, ஊதியம் - (அதனால் வருகிற) லாபமானது, இல்லை - இல்லை, (அதுபோல்) மதலையாம்-(தம்மைத்) தாக்குவதாகிய, சார்பிலார்க்கு - துணையில்லாத அரசர்க்கு, கில-(அதனால் வருகிற) கிலயானது, இல்லை-இல்லை எ-று.

(க - ரை) முதற்பொரு ளில்லாதவர்க்கு இலாபமில்லை. அதுபோல மந்திரிகளில்லாத வரசனுக்குத் துணையில்லை என்பதாம்.

(வி-ரை) எப்படி முதலைக்கொண்டே இலாபம் பெறவேண்டுமோ அப்படியே தாக்குவாரைக்கொண்டே கிலபெறவேண்டுமென்பதாம். கில-அரசர் தமது அரசாட்சியின் பாரத்தோடு அசையாது நிற்கை.

'ஊதியம்' இது இலாபம், பயன் என்னும் பொருளது. 'முதலிலார்க்கு ஊதியமில்லை' என்றது உபமானம். 'அதுபோல' என்னும் உவமஉருபு தாக்குகின்றது. 'மதலை' என்றது தம்மைத் தாக்குவது என்னும் பொருளது. 'சார்பு' என்றது துணையை. 'கில' என்றது அரசகிலையை. அதாவது அரசகில சலியாதிருக்கும் தன்மை.

(9)

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர்கை விடல்.

(பரி-உரை) பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்து-தானியலுய் வைத்துப் பலரோடும் பகை கொள்ளுதலிற் பதிற்றுமடங்கு மையுடைத்து, நல்லார் தொடர் கைவிடல் - அரசன் பெரியாரோடு கட்பிக் கொள்ளாதொழிதல் எ-று.

பலர் பகையாயக்கால் *"மோதி முன்னொடு முட்பகை கண்டிடல், பேதை செய்த பிளந்திடல்" என்பவை யல்லது ஒருங்கு வினையாக்குறித்துச் செய்லும் ஒருவாற்று னுய்தல்கூடும், நல்லார் தொடர் கைவிட்டால் ஒருவாற்றும் உய்தல் கூடாமையின், இது செய்தல் அதனினுந் தீதென்பதாம். லை மூன்றபாட்டானும் அதுசெய்யாத வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) (அரசன்) நல்லார்-பெரியவரோடு, தொடர்கைவிடல்-நட்புக் ள்ளாது விடுதல், (தான் தனியனுயிருந்துகொண்டு) பல்லார்-பலரோடும்,

* "தீதியா லறத் தள்ளித் மீட்டுத, லாதி யாய வரும்பகை நாட்டுதன், தி முன்னொடு முட்பகை கண்டிடல், பேதை செய்த பிளந்திடல் ட்டதே." சீவகசிந்தாமணி: விமலையாரிலம்பகம்-32.

பகைகொளலின் - விரோதங் கொள்ளுதலிலும், பத்தடுத்த - பத்துப்பங்கு அடுத்த. நிமைத்தே-நிமையையுடையதேயாம் எ-று.

(க-ரை) அரசன் பெரியோர் விரோதத்தை விடுதல் பலபேர் பகைகொள்ளுதலிலும் பத்துப்பங்கு நிமையுடையதாம் என்பதாம்.

(வி-ரை) பலர் பகையால் ஒருமுகமாக யெதிர்த்தகாலத்து ஒருவிதத்தாலே பிழைத்தல் கூடினும் பெரியோர் கட்பைவிட்டால் ஒருவிதத்தாலும் பிழைத்தல் கூடாமையால் இதுசெய்தல் அதனிலும் நீதென்பதாம். [இதை மூன்று பாட்டாலும் அது செய்யாதவிடத்து உண்டாகுங் குற்றம் சொல்லப் பட்டது.]

'பல்லார் பகைகொளலில்' என்ற இடத்து 'தான் றனியனுவைத்' என்றது வருவித்து உரைக்கப் பெற்றது. 'கொளலில்' இதில் 'இல்' உருபு எல்லேப்பொருளது. 'பத்தடுத்த' என்றது பத்துமடங்கு என்பதாம். 'நிமைத்தே' ஈற்று ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது. 'கல்லார்' என்றது அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்களாகிய பெரியவரை. 'தொடர்' என்றது கட்பை. 'கைவிடல்' இது ஒருசொல் சாய்விடல் என்னும் பொருள் தந்தது. (10)

45-ம் அதி - பெரியாரைத் துணைக்கோடல் - முற்றிற்று.

46-ம் அதிகாரம்—சிற்றினஞ்சேராமை

(பரி-உரை) அஃதாவது: சிறிய இனத்தைப் பொருந்தாமை. சிறி இனமாவது: *"கல்லதனலனும் நீயதன் நீமையு மில்லென்போரும்" விடரு தார்த்தரும் கடரும் உள்ளிட்ட குழு. அறிவைத் திரித்து இருமையுங் கெடு கும் இயல்பிற்றாய அதனைப் பொருந்திற் பெரியாரைத் துணைக்கோடல் பயனின்றென்பது உணர்த்தற்கு இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

(உ-ரை) அஃதாவது: சிறியவினத்தைப் பொருந்தாமை. சிறியவினமா வது: கல்லதிலே தன்மையும், நீயதிலே நீமையும், இல்லை யென்போரும் விடரும், தார்த்தரும் முதலாயின கூட்டம் அறிவை வேறுபடுத்தி இருமை யும் கெடுக்கு மியல்பினதாகிய இதனைப் பொருந்தினால், பெரியாரைத் துணைக்கோடல் பயனில்லை யென்பது அறிவித்தற்கு இது அதன்பின் வைக்கப்பட்டது.

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

(பரி-உரை) பெருமை சிற்றினம் அஞ்சும் - பெரியோரியல்பு சிறி இனத்தை அஞ்சாகிற்கும், சிறுமை தான் சுற்றமாச் சூழ்ந்து விடும்-எஞ்

* புறநானூறு-29.

றியோரியல்பு அது சேர்ந்தபொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாக எண்ணித் தணியும் எ-று.

தத்தம் அறிவு நிரியுமாதலும் அதனால் தமக்கு வருந்தன்பமும் நோக்கலின் அறிவுடையா ரஞ்சுவரென்றும், அறிவொற்றுமையாற் பிறிது நோக்காமையின் அறிவிலாதார் தமக்குச் சுற்றமாகத் தணிவரென்றுங் கூறினார். பொருளின் தொழில்கள் பண்பின்மேனின்றன. இதனாற் சிறிய னினம் பெரியோர்க்கு ஆகாதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) பெருமை - பெரியோரியல்பு, சிற்றினம் - சிறியவினத்தை, அஞ்சும்-அஞ்சுதல்செய்யும், சிறுமைதான்-மற்றைச் சிறியோரியல்பு, (அது சேர்ந்தபொழுதே) சுற்றமா - (தனக்கு) உறவாக, சூழ்ந்துவிடும்-எண்ணித் தணியும் எ-று.

(க-ரை) பெரியோரியல்பு சிறியவினத்திற்கஞ்சும், சிறியோரியல்பு சிறியவினத்தைச் சுற்றமாகக்கொள்ளும் என்பதாம்.

(வி-ரை) தம்மறிவு வேறுபடும்விதமும், அதனால் தமக்கு வரும் தன்பமும் நோக்கலால் அறிவுடையார் அஞ்சுவரென்றும், அறிவு ஒற்றுமைப்பட்டு நிற்கையால் வேறு நோக்காமையால் அறிவில்லாதவர் தமக்குச்சுற்றமாகத் தணிவரென்றும் சொல்லினர். பெரியோரும் சிறியோரும் தன குணத்தோடு அஞ்சுதலும் அஞ்சாமையுமாகிய தொழில்கள் பெருமையுஞ் சிறுமையும் ஆகிய குணங்களின்மேல் ஏற்றிச் சொல்லப்பட்டன. இதனால் சிற்றினம் பெரியோர்க்கு ஆகாதென்பது சொல்லப்பட்டது.]

'சிற்றினம்' என்றது சிறியாரது இனத்தை. சிறியர் என்றது அறிவிலி னையும், விடரையும், தூர்த்தரையும். 'பெருமை' என்றது பெருமையுடைய ாகிய பெரியாரை. 'சிறுமை' என்றது சிறுமையுடையாராகிய சிறியரை. சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்துவிடும்" என்றதற்கு மற்றைச் சிறியோரது யல்பு அச்சிற்றினத்தாரைச் சேர்ந்தபொழுதே தமக்கு உறவாக எண்ணித் ணியும் எனச் சொற்கள் வருவித்து உரைசெய்யப்பெற்றது. சண்டு கற்றாரைக் கற்றாரே காமுறுவர்-கற்பிலா, மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்" ன்ற பெரியார் வாக்கு சண்டு ஒப்பிட்டு நோக்கத்தக்கது. (1)

நிலத்தியல்பா னீர்நிரிந் தற்றாங் குயர்ந்தோர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

(பரி-உரை) நிலத்த இயல்பான் நீர் நிரிந்த அற்றாகும்-தான் சேர்ந்த த்தினத இயல்பானே நீர் தன்றன்மை நிரிந்த அந்நிலத்தின் தன்மைத் ம், மாந்தர்க்கு இனத்த இயல்பு அறிவு (நிரிந்த) அது ஆகும்-அதுபோல ந்தர்க்குத் தாம் சேர்ந்த இனத்தின இயல்பானே அறிவுந் தன்றன்மை ரிந்த அவ்வினத்தின் தன்மைத்தாம் எ-று.

எடுத்துக்காட்டுவமை. விசும்பின்கண் தன் தன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்தவழி, நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போலத் தனி நிலக்கண் தன்தன்மைத்தாய அறிவு பிறவினத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரிபுமென இதனால் அதனது காரணங்கூறப்பட்டது.

(ப-ரை) நீர்-நீரானது, நிலத்த-(தான் சேர்ந்த) நிலத்தினது, இயல்பான் இயல்பினாலே, திரிந்த-(தனது) தன்மை வேறுபட்டு, அற்றாகும் - அந்நிலத்தினது தன்மையதாகும், (அதுபோல்) மாந்தர்க்கு - மனிதர்க்கு, அறிவு அறிவானது, இனத்த-(தாம்) சேர்ந்த இனத்தினது, இயல்பு-இயல்பினாலே, திரிந்த) தனது-தன்மை வேறுபட்டு, அதாகும்-அவ்வினத்தினது தன்மையதாகும் எ-று.

(க-ரை) நிலத்தினியல்பினாலே நீர் திரிந்தாற்போலும் அவரவர் சேர்ந்த வினத்தினாலே அறிவு திரிபும் என்பதாம்.

(வி-ரை) [ஆகாசத்திலே தன்றன்மையதாயிருந்த நீருக்கு நிலத்தோடு சேர்ந்தவிடத்து நிறஞ் சுவை முதலாகிய குணங்கள்போல் தனித்திருக்கையிலே தன்றன்மையதாயிருந்த அறிவுக்குப் பிறவினத்தோடு சேர்ந்தவிடத்துக் காட்சி முதலாகிய தொழில்கள் வேறுபடுமென்ற இதனால் அதனது காரணம் சொல்லப்பட்டது.]

'அற்று' என்றது அத்தன்மைத்தாகும் என்னும்பொருளது. "நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும்" என்றது எடுத்துக்காட்டு உவமையணி. 'அதுபோல்' என்றது வருவித்து உரைசெய்யப்பெற்றது. 'இனம்' என்றது சார்பை. (2)

மனத்தான மாந்தர்க் குணர்ச்சி யினத்தான
மின்ன னெனப்படுஞ் சொல்.

(பரி-உரை) மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம்-மாந்தர்க்குப் பொது வுணர்வு தம் மனக்காரணமாக வுண்டாம், இன்னன் எனப்படும் சொல் இனத்தான் ஆம்-இவன் இத்தன்மையனென்ற உலகத்தாராற் சொல்லப்படும் சொல் இனக்காரணமாக வுண்டாம் எ-று.

இயற்கையாய புலனுணர்வு மாத்திரத்திற்கு இனம் வேண்டாமையின் அதனை மனத்தானதுமென்றும், செயற்கையாய விசேட வுணர்வுபற்றி கல் னென்றுகத் தீயனென்றுக திகழுஞ்சொற்கு இனம் வேண்டுதலின் அதனை இனத்தானதுமென்றுங் கூறினார். உவமையனவை கொள்ளாது அத்திரிபும் மனத்தானது மென்பாரை நோக்கி இதனான் அது மறுத்துக் கூறப்பட்டது.

(ப-ரை) மாந்தர்க்கு-மனிதர்க்கு, உணர்ச்சி-பொதுவறிவானது, மனத்தான்-தம் மனத்தினாலே, ஆம்-உண்டாகும், இன்னனெனப்படும்-இவ்விப்படிப்பட்டவனென்று (உலகத்தாராலே) சொல்லப்படுகிற, சொல்-சொல்லானது, இனத்தான்-இனத்தினாலே, ஆம்-உண்டாகும் எ-று.

(க-ரை) மனத்தினுலே யறிவுண்டாம். அதுபோல் ஒருவன் சேர்ந்த வினத்தினுலே யின்னனென் றெண்ணப்படுவான் என்பதாம்.

(வி-ரை) இயற்கையாகிய ஐம்புலவறிவுமாத்திரத்துக்கு இனம் வேண்டாமைபால் அதனை மனத்தானுமென்றும் செயற்கையாகிய சிறப்பறிவுபற்றி நல்லனென்றுவது தீயனென்றுவது உண்டாகுஞ் சொல்லுக்கு இனம் வேண்டுதலால் அதனை இனத்தானுமென்றும் சொல்லினுர். [உபமான பிரமாணத்தை அங்கீகரியாமல் அவ்வறிவு வேறுபாடும் மனத்தாலாமென்பாரை நோக்கி இதனுல் அது மறுத்துக் கூறப்பட்டது.]

'மனத்தான்' 'இனத்தான்' இவற்றில் ஆன் உருபுகள் இரண்டும் கருவிப் பொருளன. 'உணர்ச்சி' என்றது பொது உணர்ச்சியை. 'இன்னுன்' என்றது இன்னதன்மையன் என்பது; அதாவது கல்லவன் கெட்டவன் என்னும் தன்மையை.

(3)

மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

(பரி-உரை) அறிவு - அவ்விசேடவுணர்வு, ஒருவற்கு மனத்து உளதுபோலக் காட்டி-ஒருவற்கு மனத்தின்கண்ணே புனதாவதுபோலத் தன்னைப் புலப்படுத்தி, இனத்து உளதாகும் - அவன் சேர்ந்த இனத்தின்கண்ணே புனதாம் எ-று.

மெய்ம்மை நோக்காமுன் மனத்துளதுபோன்று காட்டியும், பின் நோக்கியே வழிப்பயின்ற இனத்துளதாயுமிருத்தலின் காட்டியென இறந்தகாலத்தாற்கூறினுர். விசேடவுணர்வுதானும் மனத்தின்கண்ணே அன்றே உளதாவதனபாரை நோக்கி ஆண்டுப் புலப்படுத் தலேயேயுள்ளது அதற்கு மூலம் இனமென்பது இதனுற் கூறப்பட்டது.

(பர) அறிவு - அச்சிறப்பறிவு, ஒருவற்கு - ஒருவனுக்கு, மனத்து - மனத்தினிடத்து, உளதுபோல - (அப்போதே) உண்டாவதுபோல், காட்டி - (தன்னைக்) காட்டி, இனத்து - (அவன் சேர்ந்த) இனத்தினிடத்தே, உளதாகும்-உண்டாகும எ-று.

(க-ரை) ஒருவனுக்கறிவான தவன்சேர்ந்த வினத்தினுலாகும் என்பதாம்.

(வி-ரை) மெய்மை நோக்குதற்கு முன்னே மனத்துள்ளதுபோலக் காட்டும் பின்னுக்கியவிடத்தே பழகிய இனத்துள்ளதாகியும் இருக்கையால் காட்டி என விறந்தகாலத்தினுலே சொல்லினுர். [சிறப்பறிவும் மனத்தினிடத்து அப்போதே உண்டாவதென்பவரை நோக்கி அங்கே வெளிப்படுமனவே துளத அதற்கு மூலம் இனமென்பது இதனுலே சொல்லப்பட்டது.]

'உளதுபோல' என்றதனுல் உண்மையில் மனத்து உளது அல என்பது பற்றும். 'உளது' என்ற இரண்டும் 'உள்ளது' என்பதன் தொகுத்தல் ஆம்.

(4)

மனத்தாய்மை செய்வினை தாய்மை யிரண்டு
மினத்தாய்மை தாவா வரும்.

(பரி-உரை) மனம் தாய்மை செய்வினை தாய்மை இரண்டும்-அவ்விசே வுணர்வு புலப்படுதற்கிடனாய மனத் தாயனுதற்றன்மையும் செய்யும்வினை தாயனுதற்றன்மையுமாகிய இரண்டும், இனம் தாய்மை தாவா வரும்-ஒருவற்கு இனத் தாயனுதற்றன்மை பற்றிக்கோடாக உளவாம் எ-று.

மனத்தாயனுதலாவது: விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையி னீக்குதல். செய்வினை தாயனுதலாவது: மொழி மெய்களாற் செய்யும் கல்வினை புடையனுதல். தாவென்பது: அப்பொருட்டாதல் *"தாவறத் தாறக்தாரை" என்பதனுணுமறிக. ஒருவன் இனத்தாயனுகவே அதனுற் பயிற்சியத்தான் மனத்தாயனுய் அதன்கண் விசேடவுணர்வு புலப்பட்டு அதனுற் சொல்லுஞ் செயலுந் தாயனுமென இதனுல் இனத்துள்ளவாறு கூறப்பட்டது.

(ப-ரை) மனம் - (அச்சிறப்பறிவு வெளிப்படுதற்கு இடமாகிய) மனம், தாய்மை-பரிசுத்தனுகைத்தன்மையும், செய்வினை - செய்தொழில், தாய்மை-பரிசுத்தனுகைத்தன்மையும், (ஆகிய) இரண்டும் - இவ்விரண்டும், இனம்-(சேர்ந்த)வினம், தாய்மை-பரிசுத்தனுகைத்தன்மை, தாவா-பற்றுக்கோடாக, வரும்-உண்டாகும் எ-று.

(க-ரை) மனப்பரிசுத்தமும் செய்வினைப் பரிசுத்தமும் சேர்ந்த வினத் தாலாகும் என்பதாம்.

(வி-ரை) மனத்தாயனுதலாவது: சிறப்பறிவு வெளிப்படும்படி இயற்கை யாகிய அறியாமையினீக்குதல். செய்வினை தாயனுதலாவது: மனு வாக்கு னாலே செய்யப்படுகிற கல்ல தொழிலையுடையவனுகுதல். [ஒருவன் பரிசுத்த வினத்தனுகவே அவ்வினத்தோடு பழக்கவசத்தால் பரிசுத்தமனத்தனுய் அம்மனத்தினிடத்தே சிறப்பறிவுதோன்ற அதனுல் பரிசுத்தமான சொல்லுஞ் செயலும் உடையவனுவனென்ற இதனுல் இனத்தில் உள்ளதாம்வி சொல்லப்பட்டது.]

'மனத்தாய்மை' என்றது மனம் அஞ்ஞானத்தினின்றும் நீக்கப்பெறுதல். 'செய்வினை தாய்மை' என்றது சொற்செயல்களில் பரிசுத்தமுடைமை. 'இரண்டும்' என்றதன்கண்ணின்ற உம்மை முற்றும்மை. 'தாவா' இதன்பற்றுக் கோடாக என்னும் பொருளது.

மனத்தாயார்க் கெச்சநன் முகு மினத்தாயார்க்
கில்லைநன் முகா வினை.

---

* கலித்தொகை: செய்தற்கலி-1.

(பரி-உரை) மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும்-மனந் தூயராயி னார்க்கு மக்கட்பேறு நன்றாகும், இனம் தூயார்க்கு நன்று ஆகா வினை இல்லை-இனந்தூயராயினார்க்கு நன்றாகாத வினை யாதுமில்லை எ று.

காரியங் காரணத்தின் வேறுபடாமையின் எச்சநன்றாகுமென்றும், நல்லினத்தோடெண்ணிச் செய்யப்படுதலின் எல்லாவினையு நல்லவாமென்றுங் கூறினார்.

(ப-ரை) மனந்தூயார்க்கு-மனது பரிசுத்தமானவர்க்கு, எச்சம்-மக்கட் பேறு, நன்றாகும்-நன்றாக விளங்கும், இனந்தூயார்க்கு-இனம் பரிசுத்தமான வர்க்கு, நன்றாகாவினை-நன்றாகாதசெயல், இல்லை-(யாதும்) இல்லை எ-று.

(க-ரை) மனஞ் சுத்தமுள்ளவர்க்கு மக்கட்பேறு நன்றாகும், இனம் பரிசுத்தமுள்ளவர்க்கு நன்மையில்லாச் செயலில்லை என்பதாம்.

(வி-ரை) காரணத்திலே எந்தக்குணம் உள்ளது அது காரியத்தினிடத் தும் உண்டாமாதலால் தந்தைகுணம் மைந்தனிடத்திலும் உண்டாமென்பது பற்றி, எச்சநன்றாகுமென்றும், நல்லினத்தோடு எண்ணிச் செயப்படுதலால் இல்லை நன்றாகா வினையென்றும் சொல்லினார்.

'எச்சம்' என்றது மக்கட்பேற்றை. குலத்தே தனக்குப்பின் எஞ்சிநிற்பவ ாதலின் மக்களை எச்சம் என்றார். 'இல்லை நன்றாகாவினை' என்றதனால் ல்லாவினையும் நன்றாகும் என்பதாம். இரண்டு எதிர்மறைகள் வந்தயிடத்து ருடன்பாடாயின.

(6)

மனநல மன்னுயிர்க் காக்க மினநல மெல்லாப் புகழுந் தரும்.

(பரி-உரை) மன் உயிர்க்கு மனநலம் ஆக்கம் (தரும்)-நிலைபெற்ற வுயிர் ட்கு மனத்தது நன்மை செல்வத்தைக்கொடுக்கும், இனநலம் எல்லாப்புகழும் ரும்-இனத்தது நன்மை அதனோடு எல்லாப் புகழையுங் கொடுக்கும்.

மன்னுயிரென்றது ஈண்டு உயர்திணைமேனின்றது. தருமென்னும் இட ழுவமைதிச்சொல் முன்னுங் கூட்டப்பட்டது. உம்மை இறந்தது தழீஇய ச்சவும்மை. மனநன்றாதல்தானே அறமாகலின் அதனை ஆக்கந்தரு மன்றும்; புகழ் கொடுத்தற்குரிய நல்லோர்தாமே இனமாகலின் இனநல மல்லாப்புகழுந் தருமென்றுங் கூறினார். மேல் மனநன்மை இனநன்மை ற்றி வருமென்பதனை உட்கொண்டு அஃது இயல்பாகவே யுடையார்க்கு வ்வின நன்மை வேண்டாவென்பாரை நோக்கி, அதுவேயன்றி அத் ன்மைய பலவற்றையுந் தருமென அவர்க்கும் அது வேண்டுமென்பது வ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

(ப-ரை) மன்னுயிர்க்கு-நிலைபெற்ற உயிர்களுக்கு, மனநலம்-மனத்தினது ன்மையானது, ஆக்கம்-செல்வத்தை, (தரும்) இனநலம் - இனத்தினது

ன்மையானது, எல்லாப்புகழும்-(அதனை) எல்லாப்புகழ்களையும், தரும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) மனத்தினன்மை செல்வத்தைத்தரும், இனத்தினன்மை புகழைத்தரும் என்பதாம்.

(வி-ரை) மனத்தன்மையுகை தானே அறமாகலால் அதனை ஆக்கந்தரு மென்றும், புகழ் கொடுத்தற்குரிய கல்லோர்தாமே இனமாகலால் இனநல மெல்லாப்புகழும் தருமென்றும் சொல்லினர். [முன்னே மனத்தன்மை இனன்மைபற்றி வருமென்பதனை உட்கொண்டு அதை இயல்பாகவே புடை யார்க்கு இவ்வினத்தன்மை வேண்டாமென்பாரை நோக்கி அதுவேயல்லாமல் அப்படிப்பட்ட பலவும் தருமென்று அவர்க்கும் இது வேண்டுமென்பது இவ விரண்டுபாட்டாலும் சொல்லப்பட்டது.]

'மனநலம்' என்றது மனத்துய்மையை. 'மன்னுயிர்' என்றது மக்கள் உயிரை; என்னை? ஆக்கம் புகழ்களுக்குரியவர் அவராதலின். 'ஆக்கம்' என்றது செல்வத்தை. இது உலகவாழ்வில் இன்பத்தை ஆக்கித்தருதலின் செல்வத்திற்கு ஆக்கம் என்றபெயர் காரணம்பற்றிவந்தது. 'எல்லாப்புகழும் தரும்' என்ற இடத்து அவ் ஆக்கத்தோடு என்பது கூட்டியுரைக்கப்பெற்றது. புகழ் எய்துதற்குக் காரணம் பலவாதலின் 'எல்லாப்புகழும்' என்றார். கல்வி கொடை அறிவு வீரம் வெற்றி முதலிய பற்றிவரும் புகழ்களையடக்குவான் 'எல்லாப்புகழும்' என்றதறிக. (7)

மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

(பரி உரை) மனநலம் நன்கு உடையர் ஆயினும்-மனத்தன்மையை முன்னை கல்வினையால் தாமே புடையராயினும், சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து-அமைந்தார்க்கு இனத்தன்மை அதற்கு வலியாதலைபுடைத்து எ-று.

நன்காலென்னும் மூன்றனுருபு விகாரத்தாற்றொக்கது. அக்கல்வினை உள்வழியும் மனநலத்தை வளர்த்து வருதலின் அதற்கு ஏமாப்புடைத்தா யிற்று.

(ப-ரை) மனநலம்-மனத்தன்மையை, நன்கு-(முன்னை) கல்வினையினாலே, உடையராயினும்-(தாமே) உடையவராயிருந்தாலும், சான்றோர்க்கு-கிளைஞர் தோர்க்கு, இனநலம்-இனத்தன்மையானது, ஏமாப்பு-(அதற்கு) வலிமையுதவி, உடைத்து-உடையது எ-று.

(க-ரை) மனத்தன்மை புடையவராலும் பெரியோர்க்கு இத்தன்மை புறநிலைபுடையதாம் என்பதாம்.

(வி-ரை) அக்கல்வினை உள்ளவிடத்தும் மனநலத்தை வளர்த்து வரு லால் அதற்கு வலியாதலுடைத்தாயிற்று.

'கன்குடையாயினும்' என்றது கல்வினையால் உடையாயினும் என்னும் பொருளது. 'ஆல்' உருபு செய்புன்விகாரத்தால் தொக்கது. 'கன்கு' என்றது கல்வினையை. 'சான்றோர்' என்றது எல்லாச் சிறப்புகளும் அமைந்தவரை. 'ஏமாப்பு' என்றது வலிமையை. (8)

மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

(பரி-உரை) மனநலத்தின் மறுமை ஆகும்-ஒருவற்கு மனநன்மையானே மறுமை யின்பமுண்டாம், மற்று அஃதும் இனநலத்தின் ஏமாப்பு உடைத்து-அதற்கு அச்சிறப்புத்தானும் இனநன்மையான் வலிபெறுதலையுடைத்து எ-று.

மனநலத்தினாகு மறுமையென்றது மறுமை பயப்பது மனநன்மைதானே பிறிதொன்றன்றென்னும் மதத்தை யுடம்பட்டுக் கூறியவாறு. மற்று-வினை மாற்று. உம்மை இறந்தது தழீஇயவெச்சவும்மை. ஒரோவழித் தாமதகுணத்தான் மனநலந்திரியினும் கல்வினம் ஒப்பவிறத்தி மறுமை பயப்பிக்குமென வலியுறச்செய்யுமாறு கூறப்பட்டது. இவை ஐந்தபாட்டானுஞ் சிற்றினஞ் சோராமையினது சிறப்பு கல்வினஞ்சேர்தலாகிய எதிர்மறைமுகத்தாற் கூறியவாறறிக.

(ப-ரை) (ஒருவனுக்கு). மனநலத்தின் - மனநன்மையால், மறுமை-வரு பிறப்பின்பம், ஆகும் - உண்டாம், மற்றஃதும் - அதற்கு அச்சிறப்புத்தானும், இனநலத்தின் - இனநன்மையால், ஏமாப்பு - வலிமைபெறுதலை, உடைத்த-உடையது எ-று.

(க-ரை) ஒருவனுக்கு மனநன்மையால் வருபிறப்பின்பமுண்டாம், இன நன்மையால் வலிமையுண்டாம் என்பதாம்.

(வி-ரை) மனநலத்தினாகு மறுமையென்பது மறுமையைத்தருவது மன நன்மையே வேறொன்று அன்று என்கிற மதத்தை உடன்பட்டுச் சொல்லிய படி. சிலவேளைகளிலே தீமோகுணத்தினாலே மனநலம் வேறுபட்டாலும் கல்வினம்திருத்தி மறுமையினின்பத்தைத் தருவிக்குமென்று அதனிலைபெறச் செய்யுமாறு இதனாலே சொல்லப்பட்டது. [இவை ஐந்தபாட்டானும் சிற்றி னஞ்சோராமையினது சிறப்பு கல்வினம் சேர்தலாகிய எதிர்மறைமுகத்தினாலே சொல்லியபடி அறிக.]

'மனநலத்தின்' 'இனநலத்தின்' இவற்றில் ஈற்றில்நின்ற 'இன்' உருபு ரண்டும் 'ஆல்' உருபுப்பொருளில் மயங்கின. 'மறுமை' என்றது சுவர்க்க இன்பத்தை. 'அஃது' என்றது அம்மறுமைபெறுஞ் சிறப்பை. 'மற்று அஃது' என்பதில் 'மற்று' என்றது வினைமாற்றுப் பொருளில் வந்தது. 'அஃதும்' என்றதும் ஈற்று உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. (9)

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

(பரி-உரை) கல் இனத்தின் ஊக்கு தணையும் இல்லை - ஒருவற்கு கல்வினத்தின் மிக்க தணையுமில்லை, நீயினத்தின் (ஊக்கு) அல்லல் படுப்பதூஉம் இல்-நீயவினத்தின் மிக்க பகையுமில்லை எ-று.

ஐந்தனுருபுகள் உறழ்பொருளின்கண் வந்தன. ஊக்கென்பது பின்னுங் கூட்டி உம்மை மாற்றி புரைக்கப்பட்டது. கல்வினம் அறியாமையின் நீக்கித் தயருறுமற் காத்தலின் அதனைத் தணையென்றும், நீயினம் அறிவின்நீக்கித் தயருறவித்தலின் அதனைப் பகையென்றுங் கூறினர். அல்லற்படுப்பதென்பத எதிப்பெயர். இதனுல் விதியெதிர்மறைகள் உடன் கூறப்பட்டன.

(ப-ரை) (ஒருவனுக்கு) கல்வினத்தினுக்கு - கல்லவினத்தின் மிகுந்த தணை-சகாயமும், இல்லை-இல்லை, நீயினத்தினுக்கு-நீயவினத்தின் மிகுந்த, அல்லற்படுப்பதூஉம்-துன்பந்தரும் பகையும், இல்-இல்லை எ-று.

(க-ரை) ஒருவனுக்கு கல்லவினத்தின் மிகுந்த தணையில்லை, நீயவினத்தின் மிகுந்த கேடில்லை என்பதாம்.

(வி-ரை) ஊக்கு பின்னும் கூட்டப்பட்டது. கல்வினம் அறியாமையை நீக்கித் தயரப்படாமல் காத்தலால் அதனைத் தணையென்றும், நீயினம் அறிவைநீக்கித் தயரப்படச்செய்தலால் அதனைப் பகையென்றும் சொல்லினர். [இதனுல் விதியும் எதிர்மறையும் சேர்த்துச் சொல்லப்பட்டன.]

'ஊக்கு' இது உயர்ந்தது சிறந்தது என்னும்பொருளது. 'படுப்பதூஉம்' இதன்கண்வந்த அபபெடை இன்னிசையளபெடை. 'கல்வினத்தின்' 'நீயினத்தின்' என்றவற்றின் ஈற்றில்நின்ற 'இன்' என்னும் ஐந்தன் உருபுகள் இரண்டும் காட்டிலும் என்னும் பொருள்தந்து நின்றன. இதனை 'உறழ் பொருளின்கண்' வந்தன என்றார் ஆசிரியர். (10)

46-ம் அதி - சிற்றினஞ்சேராமை - முற்றிற்று.

---

*47-ம் அதிகாரம்—தெரிந்துசெயல்வகை

(பரி-உரை) அஃதாவது: அரசன் தான்செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத் துணைக்கோடல் பயனுடைத்தாயவழி அவரோடுஞ் செய்யப்படுவதாகலின் இது சிற்றினஞ்சேராமையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: அரசன் தான்செய்யுந் தொழில்களை ஆராய்ந்து செய்யுந்திறம். அச்செயல் பெரியாரைத் துணைக்கொள்ளுதல் பயனுடைத்தாயவிடத்து அவருடன் செய்யப்படுவதாகலால் இது சிற்றினஞ்சேராமையின் பின் வைக்கப்பட்டது.

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

(பரி உரை) அழிவதூஉம் - வினைசெய்புக்கால் அப்பொழுத அதனு ழிவதனையும், ஆவதூஉம்-அழிந்தாற் பின்னுவதனையும், ஆகி வழி பயக்கும் ஊதியமும்-ஆய்கின்ற பிற்பொழுத தரும் ஊதியத்தையும், சூழ்ந்த செயல்-சீர்தக்கி உறவதாயிற் செய்க எ-று.

உறவதாவத - கிழ்வின்கண் அழிவதனில் ஆவத மிக்கு எதிர்வினும் அது வளர்ந்த வருதல். அழிவதின்மையின், எதிர்வின்கண் வரும் ஆக்கத்தை ஊதிய மென்றார்: எனவே, அவ்வூதியம் பெறின் கிழ்வின்கண் அழிவதும் ஆவதுந் தம்முள் ஒத்தாலும் ஒழிதற்பாற்றன்றென்பத பெற்றும். இரண்டு காலத்தும் பயனுடைமை தெரிந்த செய்கவென்பதாம்.

(ப-ரை) (தொழில்செய்யுமிடத்த) அழிவதூஉம்-(அப்போத அதனுல்) அழிவதையும், ஆவதூஉம் - (அழிந்தால் பின்னே) ஆவதையும், ஆகி - ஆய்கின்ற, வழிபயக்கும் - பிற்காலத்தத் தரும், ஊதியமும் - இலாபத்தையும், சூழ்ந்த-ஆராய்ந்த, (உறவதாயின்) செயல்-செய்யக்கடவன் எ-று.

(க ரை) ஒருவனழிவதையு மாவதையு மிலாபத்தையு மாராய்ந்த தொழில் செய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) உறதலாவத-செய்கிறபோத அழிவதின் ஆவத மிகுந்த பிற்காலத்தும் வளர்ந்தவருதல். அழிவதில்லாமையால் பின்வரும் ஆக்கத்தை ஊதியமென்றார். எனவே, அவ்வூதியம் பெற்றால் செய்யும்போத அழிவதும் ஆவதும் ஒத்திருந்தாலும் விடலாகாதென்றதாயிற்று. இரண்டு காலத்திலும் பயனுடைமை தெரிந்த செய்யவேண்டு மென்பதாம்.

'அழிவதூஉம்' 'ஆவதூஉம்' என்பன இன்னிசை அளபெடைகள். 'ஆகிவழி' என்றத வினைமுற்றுப் பெற்றவழி என்பதாம். 'ஊதியம்' என்றத பயனை. 'சூழ்ந்தசெயல்' என்றத ஆராய்ந்த அறிந்த ஊதியம் உறவதாயிற் செய்க என்னும் பொருளதாம்.

(1)

தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க் கரும்பொருள் யாதொன்று மில்.

(பரி-உரை) தெரிந்த இனத்தொடு தேர்ந்த எண்ணிச் செய்வார்க்கு-தாம் தெரிந்துகொண்ட இனத்துடனே செய்யத்தகும் வினையை ஆராய்ந்த பின் தாமேயும் எண்ணிச் செய்த முடிக்கவல்ல அரசர்க்கு, அரும் பொருள் யாதொன்றும் இல்-எய்தத்தரிய பொருள் யாதொன்றுமில்லை எ-று.

ஆராயப்படுவனவெல்லாம் ஆராய்ந்த போந்த இனமென்றுமாம். செய்வார்க்கு என்றதனுல், வினையென்னுஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. வினையாவத - மேற்சேறன்முதல் வேறல் ஈறுய தொழில். பொருள்கட்கேதுவாய அதனிற் றவறுமையின், அரிய பொருள்களெல்லாம் எளிதினெய்தலென்பதாம். இவை யிரண்டுபோட்டானுஞ் செய்யத்தகும் வினையும் அத செய்புமாறும் கூறப்பட்டன.

(ப-ரை) தெரிந்த-(கம்மாலே) தெரிந்தகொள்ளப்பட்ட, இனத்தொடு-இனத்தடனே, தேர்ந்த - (செய்யத்தகுந்தொழிலை) ஆராய்ந்து, எண்ணி. (பின்னே தாமேயும்) எண்ணி, செய்வார்க்கு-செய்து முடிக்கவல்ல அரசருக்கு, அரும்பொருள்-பெறுதற்கரியபொருள், யாதொன்றும் - யாதொன்றும், இல்-இல்லை எ-று.

(க-ரை) கல்லினத்தோ டாராய்ந்து செய்பு மாசர்க்குப் பெறுதற்கரிய பொருளொன்றுமில்லை என்பதாம்.

(வி-ரை) தொழில்வகை - போர்க்குச் செல்லுகைமுதல் வெல்லுகை முடிவாகிய தொழில். பொருள்களுக்கு எதுவாகிய வகனில் தவறுமையால் அரிய பொருள்களெல்லாம் எளிதிலே பெறவாரென்பதாம். [இவை இரண்டு பாட்டாலும் செய்யத்தகுந் தொழிலும் அது செய்பும் விதமும் சொல்லப் பட்டன.]

'தெரிந்த இனம்' என்றது தாம்கல்லர், பெரியார் என்று ஆராய்ந்து அறிந்தகொண்ட இனத்தாரோடு என்பதாம். 'தேர்ந்த' என்றது அவரொடு விசாரணைசெய்த ஆராய்ந்த என்பதாம். 'எண்ணி' என்றது பின்னும்தான் தனித்திருந்த பல்லாற்றானும் ஆராய்ந்து தெளிந்து எண்ணி என்பதாம். 'செய்வார்க்கு' என்றது வினைசெய்வார்க்கு என்பதாம். வினை என்றது போர் செய்தலையும், வென்று கோடலையும் குறித்தன. 'அரும்பொருள் யாதொன்றுமில்' என்றதனால் எண்ணிய எல்லாப்பொருளையும் எண்ணி யாக்கு எளிதிற் பெறுவர் என்பது பெறப்படும். (2)

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார்.

(பத-உரை) ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை - மேல் எய்தக் கடவ ஆதியத்தினை நோக்கி முன் எய்தின்ற முதல் தன்னையும் இழத்தற் கேதுவாய செய்வினையை, அறிவுடையார் ஊக்கார் - அறிவுடையார் மேற் கொள்ளார் எ-று.

கருதியென்னும் வினையெச்சம் இழக்குமென்னும் பெயரெச்சவினை கொண்டது. எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. ஆக்கமேயன்றி முதலையும் இழக்கும் வினைகளாவன-வலியுங் காலமும் இடனும் அறியாது பிறர் மண் கொள்வான் சென்ற தம்மண்ணும் இழத்தல் போல்வன. முன் செய்து போக்த வினையாயினு மென்பார், செய்வினை யென்றார்.

(ப-ரை) ஆக்கங்கருதி -(பின் பெறக்கடவதாகிய) லாபத்தை நோக்கி, முதல் - (முன்பெற்றன்ன) மூதலையும், இழக்கும் - இழத்தற்கு எதுவாகிய, செய்வினை-தொழிலை, அறிவுடையார் - விவேகமுள்ளவர், ஊக்கார் - மேற் கொள்ளார் எ-று.

(க-ரை) அறிவுடையோர் லாபத்தை நினைத்து முதலிழக்குந் தொழிலைச்செய்யார் என்பதாம்.

(வி-ரை) ஆக்கமேயன்றி முதலிழக்குந் தொழில்களாவன: வலியும், காலமும், இடமும், அறியாமல் பிறர்தேசத்தைப் பிடிக்கப்போய்த் தந்தேசத்தையும் இழத்தல் போல்வன. உம்மை வருவிக்கப்பட்டது. முன் செய்தவந்த வினையாயினு மென்றற்குச் செய்வினையென்றார்.

'ஆக்கம்' என்றது மேல்வரக்கூடிய பொருட்பயனை. 'முதல் இழக்குஞ் செய்வினை' என்றது வரும் எனக்கருதிய இலாபம் பெறுதபோவதேயன்றி தான் முன்பெற்றிருந்த முதலையும் இழக்கும்படிவரும் காரியத்தை என்பது பொருளாம். 'ஊக்கார்' இது மேற்கொண்டு செய்யார் என்னும் பொருளது.

தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

(பரி-உரை) தெளிவு இல் அதனைத் தொடங்கார் - இனத்தோடுந் தனித்தும் ஆராய்ந்து துணிதலில்லாத வினையைத் தொடங்கார், இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் - தமக்கு இளிவரவென்னுங் குற்றம் உண்டாதலை அஞ்சுவார் எ-று.

தொடங்கின் இடையின் மடங்கலாகாமையின், தொடங்காரென்றார். இளிவரவு - அவ்வினையாற் பின் அழிவு எய்தியவழி அதன்மேலும் அறிவும் மானமும் இலரென்று உலகத்தார் இகழும் இகழ்ச்சி. அஃதண்டாதல் ஒருதலையாகலின், தெளிவுள்வழித் தொடங்குகவென்பதாம்.

(ப-ரை) இளிவென்னும்-(தமக்கு) இளிவரவென்னும், ஏதப்பாடு-குற்றமுண்டாதலை, அஞ்சுபவர் - அஞ்சுவோர், தெளிவிலதனை - (இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து) துணியப்படாததொழிலை, தொடங்கார் - தொடங்கமாட்டார் எ-று.

(க-ரை) குற்றத்திற் கஞ்சும். பெரியோர் துணியப்படாத தொழிலைச் செய்யார் என்பதாம்.

(வி-ரை) தொடங்கினுல் நடுவிலேயும் மடங்குதல் கூடாமையால் தொடங்காரென்றார். இளிவரவு-அத்தொழிலால் பின்னே அழிவை அடைந்தபடத்தை அதன்மேலும் அறிவும் மானமும் இலரென்று உலகத்தார் இகழுங் கழ்ச்சியாம். அது நிச்சயமாகவே உண்டாமாதலால் தெளிவுள்ள விடத்தைத் தொடங்குக வென்பதாம்.

'தெளிவிலதனை' என்றது இனத்துடன் ஆராய்ந்த வழியும், தானனித்தே யின்று ஆராய்ந்தவழியும் செய்யலாம் எனத் துணிவுதராததாகிய காரியம் ஒன்றை என்பதாம். 'இளிவென்னு மேதப்பாடு' என்றது இளிவரவாகிய குற்றத்தை. 'ஏதப்பாடு' என்றதில் 'பாடு' விகுதி. இளிவரவாவதறிவற்றவர், மானமில்லார் என உலகத்தாரால் இகழப்படுதலை. (4)

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

(பரி உரை) வகை அறச் சூழாது எழுதல்-சென்றால் கிடைக்கும் பிறவெல்லாம் முற்ற எண்ணுதல் சில எண்ணிய தானையானே அரசன் பகைவர் மேற் செல்லுதல், பகைவரைப் பாத்திப் படுப்பது ஓர் ஆறு-அவரை வளரு நிலத்திலே விளைபெறச் செய்வதொரு தெரியாம் எ-று.

அத்திறங்களாவன-வலி, காலம், இடன் என்றிவற்றால் தனக்கும் பகைவர்க்கும் உளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும், அதனாற் பெறும் பயனும் முதலாயின். அவற்றுட் சில எஞ்சினும் பகைவர்க்கு இடனும் ஆகலான், முற்றப்பெற எண்ணவேண்டு மென்பதாம். இவை மூன்றபாட்டானும் ஒழியத்தகும் வினையும் ஒழியாவழிப்படும் இழுக்குங் கூறப்பட்டன.

(ப-ரை) வகை - (சென்றால் கடக்கும்) விதங்களையெல்லாம், அறச் சூழாது - முற்றவெண்ணுமல், (சிலவெண்ணிய வளவிலென்றபடி) எழுதல் (அரசன் பகைவர்மேலே) செல்லுதல், பகைவரை - அப்பகைவரை, பாத்தி வளருநிலத்திலே, படுப்பது-விளைபெறச்செய்வது, ஓராறு-ஒரு வழியாம் எ-று.

(க-ரை) அரசன் யோசியாமற் பகைவர்மேற் செல்லல் பகைவரை விளைபெறச்செய்தலாம் என்பதாம்.

(வி-ரை) வகையாவன: வலி, காலம், இடம் என்கிற இவைகளால் தனக்கும் பகைவர்க்கும் உண்டாகிய நிலைமைகளும், தொழிலைத்தொடங்கும் விதமும், அதற்குவரும் இடையூறுகளும், அவைகளை நீக்கும்விதமும், அவை வெல்லும் விதமும், அதனாலே பெறும்பயனும் முதலானவை சில குறைந்தாலும் பகைவர்க்கு இடமாம். ஆதலால் முற்றப்பெற எண்ணவேண்டு மென்பதாம். [இவை மூன்றபாட்டாலும் விடத்தகுந்தொழிலும் விடாத விடத்தை உண்டாம் இழுக்கும் சொல்லப்பட்டன.]

'வகை' என்றது வினைசெய்யுமுன் அதைபற்றி எண்ணவேண்டிய பாடுகளை. 'அறச்சூழாது' என்றது முறையும் ஆராயாது சில ஆராய்ந்த அளவில் நிருத்திக்கொண்டு எனபதாம். 'எழுதல்' என்றது வினைசெய்தற்கு எழுதலை. 'பகைவர்' இது மனத்தினின்றும் பிரிந்திருப்பவர் என்னும் காரணம்பற்றி வந்தபெயர். இதற்கு 'பகு' என்பது பகுதியாம். 'பாத்தி' என்றது பயிர் வினைதற்கு பகுத்தவைத்துக் கொழுமை செய்யப்பட்ட நிலப்பகுப்பை. இது பகுத்தவைக்கப்பெற்றது என்னுங் காரணம்பற்றிவந்த பெயர். 'படுப்பது' என்றது நிலைபெறச்செய்து வளர்ப்பது என்னும் பொருளதாம்.

செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

(பரி-உரை) செய்தக்க அல்ல செயக் கெடும் - அரசன் தன்வினைகளுள் செய்யத்தக்கன அல்லவற்றைச் செய்தலாற் கெடும்; செய்தக்க செய்யாமையானும் கெடும் - இனி அதனானேயன்றிச் செய்யத்தக்கனவற்றைச் செய்யாமை தன்னானுங் கெடும் எ-று.

செய்யத்தக்கன அல்லவாவன - பெரிய முயற்சியினவும், செய்தாற்பயன் இல்லனவும், அது சிறிதாயினவும், ஐயமாயினவும், பின் தீயர் விளைப்பனவும் எனவிவை. செய்யத்தக்கனவாவன-அவற்றின் மறுதலையாயின. இச் செய்தல் செய்யாமைகளான் அறிவு ஆண்மை பெருமையென்னும் மூவகை ஆற்றலுள் பொருள் படையென இருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனும் ஆகலான், இரண்டுங் கேட்டிற்கு ஏதுவாயின. இதனைச் செய்வன செய்க ஒழிவன ஒழிகவென இருவகையனவும் உடன் கூறப்பட்டன.

(ப-ரை) (அரசன் தனது தொழில்களிலே) செய்தக்கவல்ல - செய்யத்தகாதனவுகளை, செய - செய்தலால், கெடும் - கெடுவான், (இனி அதனாலே மாத்திரமல்லாமல்) செய்தக்க - செய்யத்தக்கனவுகளை, செய்யாமையானும்- செய்யாமையினாலும், கெடும்-கெடுவான் எ-று.

(க-ரை) அரசன் செய்யத்தகாதவற்றைச் செய்தலாலும் செய்யத்தக்கவற்றைச் செய்யாமையாலுங் கெடுவான் என்பதாம்.

(வி-ரை) செய்யத்தகாதவை - பெருமுயற்சியை யுடையவையும், செய்தாற் பயனில்லாதவையும், பயன்சிறிதானவையும், ஐயமானவையும் பின்னே தீயம் விளைப்பவையும் ஆம். செய்யத்தக்கவை - முன் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரானவை. இனிச்செய்தல் செய்யாமைகளால் அறிவு, ஆண்மை, பெருமை, என்கிற மூவகைப்பட்ட ஆற்றல்களிலே பொருளும் படையும் என விருவகைப்பட்ட பெருமையானது சுருங்கிப் பகைவர்க்கு எளியவனாவான் ஆதலால், இரண்டும் கேட்டிற்கு ஏதுவாயின. [இதனால் செய்யத்தக்கவைகளைச் செய்க விடத்தக்கவைகளை விடுகவென்று இருவகையும் உடன் சொல்லப்பட்டன.]

'செய்தக்க' இது 'செய்யத்தக்க' என்பதன் விகாரம்; இது செய்புள் தொக்கு வந்தது. 'செயக்கெடும்' இதில் 'செய' என்றது செய்ய என்பதன் தொகுத்தல் விகாரம். 'செய்யாமையானும்' இதில் நின்ற உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. 'செய்தக்க' 'கெடும்' என்பன மீண்டும் வந்தமையின் சாற்பொருட் பின்வருநிலையணி.

(6)

எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

(பரி-உரை) கருமம் எண்ணித் துணிக - செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தை யெண்ணித் தொடங்குக; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு - தொடங்கி வைத்துப் பின் எண்ணக்கடவேம் என்றெழுதல் குற்றமாதலான் எ-று.

தணிவுபற்றி நிகழ்தலின், தணிவெனப்பட்டது. நெறிப்பும்மை விகாரத் தாற் றொக்கது. உபாயமென்பது அவாய்நிலையான் வந்தது. * அது கொடுத் தல், இன்சொற் சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் என நால்வகைப் படும். இவற்றை வடநூலார் தான சாம பேத தண்டம் என்ப. அவற்றுள் முன்னைய இரண்டும் ஐவகைய, ஏனைய மூவகைய; அவ்வகைகளெல்லாம் நண்ணுரைப்பிற் பெருகும். இவ்வுபாயமெல்லாம் எண்ணுது தொடக்கின் அவ்வினை மாற்றலால் விலக்கப்பட்டு முடியாமையாலும், இடையின் ஒழிந லாகாமையாலும், அரசன். தயருறுதலின், அவ்வெண்ணுமையை இழுக் கென்றார். செய்வனவற்றையும் உபாயமறிந்தே தொடக்குக வென்பதாம்.

(ப-ரை) கருமம் - (செய்யத்தக்க) தொழிலும், எண்ணி - (முடிக்கும் உபாயத்தை) எண்ணி, தணிக-தொடக்கக்கடவன், தணிந்தபின்-தொடங் கியபின், எண்ணுவம் - எண்ணக்கடவோமென்பது, இழுக்கு - குற்றமாக லால் எ-று.

(க - ரை) இராசன் செய்தொழிலை முடிக்கு முபாயமாகவெண்ணிச் செய்யக்கடவன், தொடங்கியபின் னெண்ணுதல் குற்றம் என்பதாம்.

(வி - ரை) உபாயமாவது - கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேற படுத்தல், ஒறுத்தல் என்பன. இவற்றை வடநூலார்-தானம், சாமம், பேதம், தண்டம் என்பர். இவையெல்லாம் எண்ணுது தொடக்கில் அத்தொழில் பகைவனால் விலக்கப்பட்டு முடியாமையாலும், நடுவே விடுதல் கூடாமையா லும், அரசன்பின் தயாரப்படுவானுதலால் இழுக்கென்றார். செயத்தக்கவை யும் உபாயம் அறிந்த தொடங்கவேண்டு மென்பதாம்.

'கருமம்' என்றது தான்செய்யத்தகுவனவாகிய காரியத்தை. "கருமம் என்பது கருமத்தையும் எனப் பொருள்தாலின் உயர்வுச்சிறப்பு உம்மை செய்புன் விகாரத்தாற் றொக்கது. 'எண்ணி' என்றது தன்வலி, காலம், இடம், தினை, பொருள், எவல், பயன், முடிக்கும் ஆறுமுதலியவற்றை எண்ணி என்பதாம். 'இழுக்கு' இது குற்றம் என்னும் பொருளது. (7)

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

(பி-உரை) ஆற்றின் வருந்தா வருத்தம் - முடியும் உபாயத்தாற் மத்தை முயலாத முயற்சி, பலர்கின்று போற்றினும் பொத்துப்படும்-தினை பலர்கின்று புரைபடாமற் காப்பினும் புரைபடும் எ-று.

---

* அரும்பொருள் கொடுத்தல், தரும்பொருள்பெறுது விடுத்தல், கொ கும் பொருள் கொடுத்தல், பிறன்பொருள்கொண்டு கொடுத்தல், இ யொழிதல் எனக்கொடுத்தல் ஐந்து. வணங்கல், புகழ்தல், எதிர்கோட கட்புக்கூறல், உறவுகூறல் என இன்சொற் சொல்லல் ஐந்து. கட்பு ஒழிந் கூடினரைப்பிரித்தல், வேறபகை விளைத்தல் என வேறுபடுத்தல் மூன் தன்பஞ்செய்தல், பொருள்கோடல், கோறல் என ஒறுத்தல் மூன்று.

முடியுமுபாயத்தான் முயறலாவது-கொடுத்தலேப் பொருணலசயானன் கண்ணும்; இன்சொல்லேச் செப்பமுடையான், மடியாளன், முன்னே பிறரோடு பொருது கொன்றவன் என இவர்கண்ணும்; வேறுபடுத்தலேத் துணைப்படையாளன், தன் பகுதியோடு பொருந்தாதான் என இவர்கண்ணும் ஒறுத்தலே இவற்றின் வாராதவழி இவர்கண்ணும் தேறப்படாத தீம்மக்கள் கண்ணுஞ் செய்க, வெல்லுமாற்றான் முயறல். புரைபடுதல்-கருதிய நன்மை யன்றிக் கருதாத தீமை பயத்தல். உபாயத்தை சிறப்புக் கூறியவாறு.

(ப-ரை) ஆற்றின் - முடியுமுபாயத்தால், உருத்தா வருத்தம் - (கருமத் தைக்குறித்து) வருந்தாத முயற்சியானது, பலர் கின்ற - (துணைவர்) பலர் கின்ற, போற்றினும் - (புரைபடாமல்) காப்பினும், பொத்துப்படும் - புரை படும் எ-று.

(க-ரை) முடியு முபாயத்தால் வருந்தா முயற்சியானது பலர் காத்தலுக் குற்றம் படும் என்பதாம்.

(வி-ரை) முடியு முபாயத்தாலே முயலலாவது - பொருளாசைக்கார னிடத்தே கொடுத்தலேயும்; கடுஞ்சேயாளன், சோம்பலானன், பிறரோடு போர் செய்து கொன்றவன், இவரிடத்தே இன்சொல்லேயும்; துணைப்படையாளன் தன் பகுதியோடு பொருந்தாதவன், இவரிடத்தே வேறுபடுத்தலேயும்; இவை களின்வழி வாராதவிடத்து இவரிடத்தேயும்; நம்பக்கூடாத தீம்மக்களிடத் தேயும் ஒறுத்தலேயும், செய்து வெல்லும் வழியால் முயற்சி செய்தலாம். புரைபடுதல்-நன்மையைத்தராது தீமையைத்தருதல். உபாயத்தின் சிறப்புச் சொல்லியபடி.

'ஆற்றின்' என்றது எடுத்தகாரியம் முடியும் உபாயவழியால் என்பதாம். பலர்' என்ற இடத்து துணைவர்பலர் என 'துணைவர்' என்ற சொல் வருவித்து உரைக்கப்பெற்றது. 'பொத்துப்படும்' என்றது கெடும் என்னும் பொருளது. பொத்துப்படும்' இது பொள்ளற்படும், புரைபடும், குற்றப்படும், அழிவெய்தும் என்னும் பொருளது.

(8)

நன்றுற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக் கடை.

(பரி-உரை) நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு-வேற்று வேந்தர்மாட்டு ன்ருன வுபாயஞ் செய்தற்கண்ணுங் குற்றமுண்டாம், அவரவர் பண்பு றிந்து ஆற்றுக்கடை - அவரவர் குணங்களே ஆராய்ந்தறிந்து அவற்றிற் யயச் செய்யாவிடின் எ-று.

ன்ருன உபாயமாவது - கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலுமாம். வை யாவர்கண்ணும் இனியவாதற் சிறப்புடைமையின், உம்மை சிறப் மை. அவற்றை அவரவர் பண்பறிந்து ஆற்றுமையாவது - அவற்றிற்கு யல்லாதார் கண்ணே செய்தல். தவறு-அவ்வினை முடியாமை.

(ப-உ) (வேற்றரசரிடத்த) கன்ற-கல்லவுபாயத்தை, ஆற்றலுள்ளும்-செய்தலுள்ளும், தவற-குற்றம், உண்டு-உண்டாம், அவரவர்-அவரவருடைய, பண்பு-குணக்களை, அறிந்த-(ஆராய்ந்)தறிந்த, ஆற்றுக்கடை - (அக்குணங்களுக்கு இசையச்) செய்யாவிடத்த எ-று.

(க-உ) அவரவர் குணக்களை யறிந்திசையச் செய்யாவிடில் கன்மை செய்தலுள்ளும் குற்றமுண்டாம் என்பதாம்.

(வி-உ) கல்லவுபாயம் கொடுத்தலும் இன்சொற் சொல்லலும் ஆம். அவரவர் குணங்களை யறிந்த செய்யாமையாவது அவைகளுக்கு உரியவ ரல்லாவிடத்தே செய்தல். தவற-தொழின் முடியாமை.

'கன்ற' என்றது கல்லதாகிய உபாயத்தை. 'ஆற்றல்' இது செய்தல் என்னும் பொருளது. 'தவற' இது குற்றம் என்னும் பொருளது. 'பண்பு' என்றது குணத்தை. 'ஆற்றுக்கடை' இதில் 'கடை' இது ஏழன் உருபு. இது இடப்பொருளது. (9)

எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

(பரி-உ) தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளாது - அரசர் வினை முடித்தற்பொருட்டுத் தங்கிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வ ராயின் உலகந் தம்மை யிகழாகிற்கும்; எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும். ஆகலான் அஃது இகழா வுபாயங்களை காடிச் செய்க எ-று.

தம்மென்பது ஆகுபெயர். தங்கிலைமையோடு பொருந்தாத உபாயங் களைச் செய்தலாவது-தாம் வலியராய் வைத்த மெலியார்க்குரிய கொடுத்தல் முதலிய மூன்றனைச் செய்தலும், மெலியராய் வைத்து வலியார்க்குரிய ஒறுத் தலைச் செய்தலுமாம். இவை யிரண்டும் அறிவிலார் செய்வனவாகலின், உலகங் கொள்ளாதென்றார். அஃது எள்ளாதன செய்தலாவது-அவற்றைத் தத்தம் வன்மை மென்மைகட்கு ஏற்பச்செய்தல். மேல் இடவகையான் உரிமை கூறிய உபாயங்கட்கு வினைமுதல் வகையான் உரிமை கூறியவாறு. இவை கான்கு பாட்டானுஞ் செய்வனவற்றிற்கு உபாயமும் அதனது உரிமையுங் கூறப்பட்டன.

(ப-உ) தம்மொடு - தமது நிலைமையோடு, கொள்ளாத - பொருந்தாத உபாயங்களை, (அரசர் தொழில்முடித்தற்பொருட்டுச் செய்வாராயின்) உலகு உலகமானது கொள்ளாது - அங்கீகரியாது, (இகழுமென்றபடி) (ஆகலால்) எள்ளாத - (அவ்வுலகத்தால்) இகழப்படாத வுபாயங்களை, எண்ணி - காடி, செயல்வேண்டும்-செய்யவேண்டும் எ-று.

(க-உ) அரசர் பொருந்தாத வுபாயங்களைச் செய்வாரானு லுலகமே றுக்கொள்ளாது என்பதாம்.

(வி-உ) தமது நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய் லாவது தாம் வலியாயிருக்கொண்டு மெலியார் செய்தற்குரியதான சா

பேதைக்களைச் செய்தலும், மெலியராயிருக்கைகொண்டு வலியார் செய்தற்குரிய தண்டம் செய்தலும் ஆம். இவை அறிவில்லார் செயல்களாதலால் உலகங் கொள்ளாதென்றார். [இவை கான்குபாட்டாலும் செய்யப்படுந் தொழில்களுக்கு உபாயமும் அதனருமையும் சொல்லப்பட்டன.]

'கொள்ளாத' என்றது இகழாத உபாயங்களை. 'உலகு' என்றது உயர்ந்தோரை. 'கொள்ளாத' என்றது தமக்குத் தகுதியல்லாத காரியங்களைச் செய்தலை. (10)

47-ம் அதி - தெரிந்துசெயல்வகை - முற்றிற்று.

48-ம் அதிகாரம்—வலியறிதல்

(பரி-உரை) அஃதாவது: அவ்வுபாயங்களுள் ஒன்றைத் தல் குறித்த அரசன் தால்வகை வலியையும் அளந்தறிதல். அதிகார முறைமையும் இதனுளே விளக்கும்.

(உ-ரை) அஃதாவது: அவ்வுபாயங்களுள் தண்டஞ்செயக்குறித்த அரசனுவன் தால்வகை வலிமைகளையும் அளந்து அறிதலாம். அதிகார முறைமையும் இதனுலே விளக்கும்.

வினைவலியுந் தன்வலியு மாற்றுன் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

(பரி-உரை) வினை வலியும் - தான் செய்யக் கருதிய வினைவலியையும், தன் வலியும் - அதனைச் செய்தி முடிக்குந் தன் வலியையும், மாற்றுன் வலியும் - அதனை விலக்குறும் மாற்றுன் வலியையும், துணை வலியும்-இருவர்க்குந் துணையாவார் வலியையும், தூக்கிச் செயல் - சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க எ-று.

இத்தால்வகை வலியுள் வினைவலி ஆண்மூற்றலும் கோடலும் முதலிய தொழிலானும், ஏனைய மூவகை ஆற்றலானுங் கூறுபடுத்துத் தூக்கப்படும். தன்வலி மிகவின்கட் செய்கவென்ற விதியால், தோற்றல் ஒருதலையாய நிறைவின் கண்ணும், வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிகவென்பது பெற்றும்.

(ப-ரை) வினைவலியும் - (தான்செயக்கருதிய) தொழிலது வலிமையையும், தன்வலியும் - (அதனைச்செய்த முடிக்கும்) தனது வலிமையையும், மாற்றுன் வலியும் - (அதனை விலக்கும்) பகைவனது வலிமையையும், துணை வலியும்-(இருவர்க்கும்) துணையாவோரது வலிமைகளையும், தூக்கி-ஆராய்ந்து, (தனது வலிமை மிகுமாயின்) செயல்-(அத்தொழிலைச்) செய்யக்கடவன் எ-று.

(க-ரை) தொழில் வலிமையையும், தன்வலிமையையும், பகைவன் வலிமையையும், துணைவலிமையையும், ஆராய்ந்து தன்வலி மிகுமாயின் அத்தொழிலைச் செய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) இர்ரால்வகை வலிகளுள், தொழில்வலி கோட்டையை வளைத்தலும் பிடித்தலும் முதலாகிய தொழில்களாலும், மற்றவை மூவகை யாற்றல்களாலும் உறுபடுத்தி ஆராயப்படும். தன் வலிமைமிகுந்த விடத்துச் செய்கென்றதனால், தோற்றல் நிச்சயமாகிய தன்வலிமைக் குறைவினிடத்தும் வெல்லுதல் ஐயமாகிய தன்வலிமையும் அவன்வலிமையும் ஒத்தவிடத்தும் ஒழிகவென்றதாயிற்று.

இதன்கண்வந்த உம்மைகள் எண்ணும்மைகள். 'வலி' என்னுஞ் சொல் ஒரேபொருளில் பன்முறையும் வந்தமையால் சொற்பொருட் பின்வருநிலை யாம். 'தூக்கி' என்றது ஆராய்ந்த அறிந்த என்பதாம். இதனுன் சீர்தூக்கிப் பார்த்தலில் தன்வலி மாற்றான்வலியிலும் மிக்கதாயின் தான் மேற்கொண்ட செயலைச் செய்க என்பதாம். (1)

ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச் செல்வார்க்குச் செல்லாத தில்.

(பரி-உரை) ஒல்வது அறிவது அறிந்து - தமக்கியலும் வினையையும் அதற்கு அறியவேண்டுவதாய வலியையும் அறிந்து, அதன்கண் தங்கிச் செல்வார்க்கு - எப்பொழுதும் மனமொழிமெய்களை அதன்கண் வைத்தும் பகை மேற்செல்லும் அரசர்க்கு, செல்லாதது இல்-முடியாத பொருளில்லை எ-று.

ஒல்வதெனவே வினைவலி முதலாய மூன்றும் அடங்குதலின், சண்டி அறிவதென்றது துணைவலியேயாயிற்று. எல்லாப்பொருளும் எய்துவரென்பதாம். இவை பிரண்டுபாட்டானும் வலியின் பகுதியும் அஃதறிந்து மேற்செல்வாரெய்தும் பயனும் கூறப்பட்டன.

(ப-ரை) ஒல்வது - (தமக்குச்) செய்யக்கூடுந் தொழிலையும், அறிவது (அதற்கு) அறியவேண்டும் வலியையும், அறிந்து-தெரிந்து, அதன்கண்-அதனிடத்து, தங்கி - (மனமொழிகளை எப்போதும்) வைத்து, செல்வார்க்கு (பகையின்மேலே) செல்வார்கு, செல்லாதது - முடியாதபொருள், இல்-இல்லை எ-று.

(க-ரை) செய்யக்கூடுந் தொழிலையு மறியவேண்டும் வலியையுமறிந்து செய்பு மாசர்க்கு முடியாத பொருளில்லை என்பதாம்.

(வி-ரை) இக்கே அறிவது துணைவலியாம். எல்லாப் பொருள்களும் எளிதிலே அடைவரென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் வலியின் பகுப்பும், அதனை அறிந்து பகைமேற் செல்வோர் பெறும்பயனும் சொல்லப் பட்டன.]

'ஒல்வது' என்றது தமக்குச் செய்யக்கூடிய தொழிலை என்பதாம். 'அறிவது அறிந்து' என்றது தன்வலியும், துணைவலியும் மாற்றான் வலிக்கு மிக்கு இருந்தவை அறிந்து என்பதாம். 'செல்வார்' என்றது பகைவர்மேற் செல்வாரை. 'செல்லாததில்' என்றது முடியாதது இல்லை என்பதாம். (2)

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

(பரி-உரை) உடைத் தம் வலி அறியார் - கருத்தாவாதலேபுடைய தம் வலியின் அளவறியாதே, ஊக்கத்தின் ஊக்கி - மனவெழுச்சியால் தம்மின் வலியாரோடு விஞைசெய்தலேத் தொடங்கி, இடைக்கண் முரிந்தார் பலர்- அவர் அடர்த்தலான் அது செய்து முடிக்கப்பெறுது இடையே கெட்ட அரசர் உலகத்துப் பலர் எ-று.

உடையவென்பது அவாய் நின்றமையின், செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது. மூவகையாற்றலுள்ளுஞ் சிறப்புடைய அறிவுடையார் சிலாதலின் முரிந்தார் பலரென்றார். அதனுல் தம் வலியறிந்தே தொடங்குகவென்பது எஞ்சிநின்றது.

(ப-ரை) உடை - (தலைவனுதலே) புடைய, தம்வலி-தமது வலிமையின் அளவை, அறியார்-தெரிந்துகொள்ளாதவராகி, ஊக்கத்தின் - மனவெழுச்சி யால், ஊக்கி - (தம்மின் வலியவரோடு) போர்செய்யத்தொடங்கி, (அவர் வருத்தலால் அதுசெய்து முடிக்கப்பெறுமல்) இடைக்கண்-நடுவிலே, முரிந் தார்-கெட்டவரசர், பலர்-(உலகத்துப்) பலராவர் எ-று.

(க-ரை) தமது வலிமையைத் தெரிந்துகொள்ளாது வலியவரோடு போர் செய்து இடையில் புறங்கொடுத்த வரசர் பலர் என்பதாம்.

(வி-ரை) மூவகை யாற்றல்களுள்ளும் சிறப்பினதாகிய அறிவையுடைய வர் சிலாதலால் முரிந்தார் பலரென்றார். அதனுல் தம்வலிமை அறிந்தே தொடங்குகவென்பது குறைந்து நின்றது.

'உடைத்தம்' இது 'உடையதம்' என்பதன்விகாரம். இது செய்யுள்பற்றி வந்த விகாரம். 'ஊக்கத்தின்' இது மனவெழுச்சியால் என்பதாம். இதில் 'இன்' உருபு 'ஆல்' உருபில் மயங்கிற்று. 'ஊக்கி' என்றது போர்செய்து என் பதாம். 'முரிந்தார்' இது கெட்டார் அழிந்தார் என்னும் பொருளது. 'பலர்' இது பலராவர் என்பது 'ஆவர்' என்பது வருவித்துரைக்கப்பெற்றது. (3)

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

(பரி-உரை) ஆங்கு அமைந்து ஒழுகான்-அயல் வேந்தரோடு பொருந்தி ஒழுகுவதஞ்செய்யாது, அளவு அறியான்-தன் வலியளவறிவதஞ் செய்யாது, தன்னை வியந்தான்-தன்னை வியந்து அவரோடு பகைத்த அரசன், விரைந்து கெடும்-விரையக்கெடும் எ-று.

காரியத்தைக் காரணமாக உபசரித்து வியந்தானென்றார். விரைய வென்பது நிரிந்துநின்றது. கட்பாயொழுகுதல் வலியறிந்து பகைத்தல் என்று மாண்டுள் நின்றன்றே அயல்வேந்தரோடு செயற்பாலது. இவையன்றி

தான் மெலியனாய்வைத்த அவரோடு பகைகொண்டானுக்கு ஒருபொழுதும் கேடுமையின் விரைந்த கெடுமென்றார். இவை இரண்டுபோட்டானும் தன்வலி அறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

(ப-ரை) ஆக்கு-அயல்வேந்தரிடத்த, அமைத்த-பொருந்தி, ஒழுகான்-நடவாதவனுடையும், அளவு(தன்வலி) யளவை, அறியான்-அறியாதவனுடையும், தன்னை-தன்னை, வியந்தான்-மெச்சிக்கொண்டு, (அவரோடு பகைத்த அரசன்) விரைந்த-விரைவாக, கெடும்-கெடுவான் எ-று.

(த-ரை) தன் வலியினளவை யறியாத தன்னைப் புகழ்ந்த அரசன் கெடுவான் என்பதாம்.

(வி-ரை) பகைத்தல் வியத்தலாலாதலின் வியந்தானென உபசரித்தார். கட்பாய் நடந்தலாவது, வலிமையறிந்த பகைத்தலாவது, அயல்வேந்தரோடு செயற்தக்கதாயிருக்க, இவை யில்லாமல் தான் மெலியவனுயிருந்தகொண்டு அவரோடு பகைத்தவனுக்கு ஒருபோதும் கிலையில்லாமையால் விரைந்த கெடுமென்றார். [இவை இரண்டுபோட்டாலும் தன்வலிமை யறியாதவிடத்த உண்டாகும் இழுக்குச் சொல்லப்பட்டது.]

'அமைத்த' இது கட்பாய்ப்பொருந்தி என்பதாம். 'ஆக்கு' இது அயல் வேந்தரிடத்த என்னும் பொருளது. இதில் அகரச்சுட்டு நீண்டுநின்றது. 'அளவு' என்றது தன் ஆற்றல் அளவை. 'வியந்தான்' என்பது தன்னைப் பெரிதாக கினைத்துப் பகைத்தவன் என்பதாம். (4)

பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

(பரி-உரை) பீலி பெய் சாகாடும் அச்சு இறும்-பீலி யேற்றிய சகடமும் அச்சு முறியும், அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் - அப்பீலியை அது பொறுக்குமளவன்றி மிகுத்தேற்றின் எ-று.

உம்மை சாகாட்டது வலிச்சிறப்பே யன்றிப் பீலியது கொய்மைச் சிறப்புத் தோன்றநின்றது. இறம் என்னுஞ் சினைவினை முதன்மேனின்றது. எளியசென்ற பலரோடு பகைகொள்வான் தான் வலியனேயாயினும் அவர் தொக்கவழி வலியழியுமென்னும் பொருள்தோன்ற நின்றமையின் இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம். இதனை நுவலாநுவற்சி என்பாரும், ஒட்டு என்பாருமுளர். ஒருவன் தொகுவார் பலரோடு பகைகொள்ளற்க என்றமையின் இதனுன் மாற்றுன்வலியும் அவன் துணைவலியும் அறியாவழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

(ப-ரை) பீலி-மயிலிறகை, பெய்-ஏற்றப்பெற்ற, சாகாடும்-பண்டியும், அச்சிறம்-அச்சமுறியும், அப்பண்டம்-அம்மயிலிறகை, (அது சுமக்குமளவி லல்லாமல்) சாலமிகுத்த - மிகவும் அதிகப்படுத்தி, பெயின்-ஏற்றினால் எ-று.

(க-ரை) மயிலிறகை ஏற்றப்பட்ட பண்டியு மச்சுமுறியும், அவ்விறகை யதிகமாக வேற்றினால் என்பதாம்.

(வி-ரை) உம்மை பண்டியினது வலிமையையும், மயிலிறகினது மெலிமையையும் காட்டிநின்றது. எளியரென்று பலரோடும் பகைகொள்வோன் தான் வலியனாயிருந்தாலும், அவர் கூடியவிடத்தே வலியழிவானென்னும் பொருள்படநிற்கையால் இது பிறிதுமொழிதலணி. [அது செயலாகாதென்றமையின் இதனால் பகைவன் வலியும் அவன் துணைவலியும் அறியாதவிடத்துப்படும் குற்றஞ் சொல்லப்பட்டது.]

'பீலி' என்றது பட்சியின் இறகை. இனி இதற்கு மயிலிறகு என்பாரும் உண்டு. 'சாகாடு' என்றது சகடத்தை; (சகடம்-வண்டி.) 'இறும்' இது முறியும் என்னும் பொருளது. 'அப்பண்டம்' என்றது அந்தப் பீலியாகிய பண்டத்தை. 'சால' இது மிகுதிப்பொருள்காட்டும் உரிச்சொல். ஈண்டு அது பொறுக்குமளவின்றி என்னும் பொருள்தந்து நின்றது. 'பெயின்' இது ஏற்றினால் என்னும்பொருளது. 'இன்' உருபு 'ஆல்' உருபுப்பொருளில் வந்தது (5)

நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறிது யாகி விடும்.

(பரி-உரை) கொம்பர் நுனி ஏறினார் அஃது இறந்து ஊக்கின்-ஒருமரக் கோட்டினது நுனிக்கண்ணே ஏறிநின்றார் தம் ஊக்கத்தால் அவ்வளவினைக் கடந்து மேலுமேற ஊக்குவராயின், உயிர்க்கு இறுதியாகிவிடும்-அவ்வூக்கம் அவர் உயிர்க்கு இறுதியாய் முடியும் எ-று.

நுனிக்கொம்பரென்பது கடைக்கணென்பதுபோலப் பின்முன்னாகத் தொக்க ஆறாம்வேற்றுமைத்தொகை. பன்மை அறிவின்மைபற்றி இழித்தற்கண் வந்தது. இறுதிக்கு ஏதுவாவதனை இறுதியென்றார். பகைமேற் செல்வான்றொடங்கித் தன்னாற் செல்லலாமளவுஞ்சென்று நின்றான் பின் அவ்வளவில் நில்லாது மனவெழுச்சியான்மேலுஞ் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினை முடிவிற்கு ஏதுவாகாது அவன் உயிர்முடிவிற்கு ஏதுவாமென்னும் பொருள் தோன்ற நின்றமையின் இதுவும் மேலையலங்காரம். அளவறிந்து நிற்றல் வேண்டுமென்றமையின் இதனால் வினைவலி அறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

(ப-ரை) கொம்பர்-(ஒருமரக்)கொம்பினது, நுனி-நுனியிலே, ஏறினார்-ஏறிநின்றவர், அஃது-அவ்வளவினை, இறந்து - கடந்து, ஊக்கின் - (மேலும் ஏற) மனவெழுச்சிகொள்ளின், (அவ்வெழுச்சி) உயிர்க்கு - (அவ)ருயிர்க்கு, இறுதியாகிவிடும்-முடிவாகிவிடும் எ-று.

(க-ரை) நுனிக்கொம்பிலேறினவர் அவ்வளவைக் கடந்தேறுவராகில் அவருயிர்க்கு முடிவுவரும் என்பதாம்.

(வி-ரை) இறுதிக்கு ஏதுவாமதனை இறுதியென்றார். பகைவர்மேற் போர்க்குச் செல்லத்தொடங்கித் தன்னாலே கூடியமட்டுஞ்சென்று நின்றவன்

பின் அவ்வளவிலே நில்லாமல் மனமெழுச்சியினுலே மேலுஞ் செல்லுவா னுயின் அவ்வெழுச்சியானது தொழில் முடிதற்கு ஏதுவாகாமல் அவனுயிர் முடிதற்கு ஏதுவாகும் என்கிற பொருள்பட நிற்கையினுலே இதனும் அவ்வணி. [அளவறிந்து நிற்கவேண்டுமென்றமையின் இதனுல் தொழில் வலிமை அறியாதவிடத்து உண்டாம் இழுக்குச் சொல்லப்பட்டது.]

'நுனிக்கொம்பர்' இது கொம்பின் நுனி என்னும் பொருளது. 'கொம்பர்' இது கொம்பு என்றதன் கடைப்போலி. 'அஃது' என்றது அக் கொம்பினது நுனியை. 'இறந்தக்கின்' என்றது அளவுகடந்து ஏறுதலை. இதில் 'இன்' உருபு 'ஆல்' உருபுப்பொருள் தருகின்றது. 'இறந்து' என்றது அழிவை. (6)

ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

(பதி-உரை) ஆற்றின் அளவு அறிந்த ஈக - ஈபுதெறியானே தமக்குள்ள பொருளின் எல்லையையறிந்த அதற்கேற்ப ஈக, அது பொருள் போற்றி வழங்கும் நெறி - அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக்கொண்டொழுகும் நெறியாம் எ-று.

ஈபுதெறி மேல் இறைமாட்சியுள் * 'வகுத்தலும் வல்லதாசு' என்புழி உரைத்தாம் எல்லைக்கேற்ப ஈதலாவது ஒன்றுன எல்லையை நான்கு கூறுக்கி, அவற்றுள் இரண்டனைத் தன் செலவாக்கி, ஒன்றனைமேல் இடர்வந்தழி அது தீர்குதற்பொருட்டு வைப்பாக்கி, நின்ற வொன்றனை யீதல்: பிறரும் † "வருவாயுட் கால்வழங்கி வாழ்தல்" என்றுர். பேணிக்கொண்டொழுகுதல்: ஒருவரோடு கட்பிலாத அதனைத் தம்மோடு கட்புண்டாக்கிக்கொண்டு ஒழுகுதல். முதலிற் செலவு சுருங்கிற் பொருள் ஒருகாலும் தீர்காதென்பதாம்.

(ப-ரை) ஆற்றின் - (கொடுக்கும்) வழியினுலே, அளவு - (தனக்குள்ள பொருளி) னளவை, அறிந்த - தெரிந்த, ஈக (அதற்கு ஏற்கக்) கொடுக்கக் கடவன், அது-அக்கொடுத்தலானது, பொருள்-பொருளை, போற்றி வழங்கு நெறி-காப்பாற்றிக்கொண்டு கடக்கும் வழியாம் எ-று.

(க-ரை) தனக்குள்ள அளவறிந்து கொடுக்கக்கடவன் அக்கொடை பொருளைக் காப்பாற்றும் வழியாம் என்பதாம்.

(வி-ரை) கொடுக்கும்வழி - இயற்றலுமென்னுங் குறளுரையிற் சொல் லப்பட்டது. அளவுக்கேற்பக் கொடுத்தலாவது: ஒன்றுனனவை நாலுபகு கிட்டு, அவற்றுள் இரண்டைத் தன் செலவுக்காக்கி, ஒன்றைப் பின்னை யுபத்த வந்தவிடத்து அதை நீக்குதற்கு வைப்பாக்கி, மற்றொன்றைக் கொடுத்தல். காப்பாற்றிக்கொண்டு கடத்தலாவது, ஒருவரோடு கட்பில்லாத வரைத் தம்மோடு கட்புண்டாக்கிக்கொண்டு கடத்தல். முதலிலே செலவு சுருங்கினுல் பொருள் ஒருகாலும் நீங்காதென்பதாம்.

* 385-ம் குறளுரையிற் காண்க. † திரிகடுகம்-21.

'ஆற்றின்' என்றது கொடுக்கும் முறையால் என்பதாம். 'அளவு' என்றது தன்பொருளினளவையும், செலவுசெய்யவேண்டிய அளவையும். 'அது' என்றது அளவறிந்து ஈயும் ஈகையை. 'பொருள்போற்றி வழங்குநெறி' என்றது தன்பொருள் அழியாது காத்துக்கொண்டு ஒழுகும் நெறியாகும் என்பதாம். (7)

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

(பரி-உரை) ஆகு ஆறு அளவு இட்டிது ஆயினும் கேடு இல்லை. அரசர்க்குப் பொருள் வருகின்ற நெறியளவு சிறிதாயிற்றாயினும் அதனாற் கேடில்லையாம், போகு ஆறு அகலாக்கடை - போகின்ற நெறியளவு அதனிற் பெருகாதாயின் எ-று.

இட்டிதெனவும் அகலாதெனவும் வந்த பண்பின் றொழில்கள் பொருண்மே னின்றன. பொருளென்பது அதிகாரத்தான் வருவித்து, அளவென்பது பின்னுங் கூட்டி யுரைக்கப்பட்டன. முதலுஞ் செலவுந் தம்முள் ஒப்பினுங் கேடில்லை யென்பதாம்.

(ப-ரை) ஆகாறு - (அரசனுக்குப் பொருள்) வருகின்ற வழியானது, அளவு-அளவினாலே, இட்டிதாயினும்-சிறியதாயிருந்தாலும், கேடு-(அதனாலே) கெடுதல், இல்லை-இல்லை, போகாறு - போகின்றவழி, (அளவு)-அளவினாலே, அகலாக்கடை-(அதிலும்) விரியாதாயின் எ-று.

(க-ரை) அரசனுக்குப் பொருட்செலவு மிகாவிடில் அப்பொருள் வரவு சிறிதாகிலுங் கெடுதியில்லை என்பதாம்.

(வி-ரை) பொருளென்பது அதிகாரத்தினாலே வருவிக்கப்பட்டது. வரவும் செலவும் தம்முள் ஒத்திருந்தாலும் கேடில்லை யென்பதாம்.

'ஆகுஆறு' என்றது பொருள்வரும் வழியை. 'இட்டிது' இது சிறிதெனும் பொருளது. 'போகாறு' என்றது செலவை. 'அகலாக்கடை' இது விரிவாய் இல்லாத இடத்து என்பதாம். (8)

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும்.

(பரி-உரை) அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை-தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கேற்ப வாழமாட்டாதான் வாழ்க்கைகள், உள போல இல்லாகித் தோன்றாக்கெடும்-உள்ளனபோலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமுமின்றிக் கெட்டுவிடும் எ-று.

அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது அதனிற் சுருக்கக் கூடாதாயின் ஒப்பவாயினும் ஈத்துந் துய்த்தும் வாழ்தல். தொடக்கத்திற் கேடு வெளிப்படாமையின், உளபோலத் தோன்றி யென்றார். முதலிற் செலவு மிக்கால் வரும் ஏதங் கூறியவாறு.

(ப-ரை) அளவு - (தனக்குள்ளபொருளி) னளவை, அறிந்த - தெரிந்த (அதற்கேற்ப) வாழாதான் - வாழமாட்டாதவனது, வாழ்க்கை - வாழ்க்கை யானவை, உளபோல-உள்ளவைபோலத் (தோன்றி), இல்லாகி-(மெய்ம்மை யால்) இல்லையாகி, தோன்று-(பின்பு) அத்தோற்றமும் இல்லாமல், கெடும் அழியும் எ-று.

(க-ரை) தனக்குள்ள பொருளளவை யறிந்த வாழாதவன் வாழ்க்கை உள்ளவைபோலத் தோன்றியழியும் என்பதாம்.

(வி-ரை) அவ்வளவிற்கேற்க வாழ்தலாவது முதலிலே சுருக்கக் கூடாம லிருந்தால் அதற்குச் சமமாகவாவது கொடுத்தலும், அநுபவித்தலும், வாழ்தல், ஈரம்பற்றிலே கேடு வெளிப்படாமையால் உளபோலத் தோன்றி எனப் பட்டது. முதலிறும் செலவு மிகுந்தால் வரும் குற்றம் சொல்லியபடி.

'அளவு' என்றது தன்பொருள் அளவையும் செலவுசெய்யும் அளவையும் குறித்தலின்றது. 'உள' இது உள்ளது என்றதன் விகாரம். 'இல்லாகி' இது இல்லையாகி என்பதன் விகாரம். இது செய்புள் தோக்கி வந்த விகாரம். (9)

உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

(பரி-உரை) உள வரை தூக்காத ஒப்புரவு ஆண்மை-தனக்குள்ள அளவு தூக்காமைக்கு ஏதுவாய ஒப்புரவாண்மையால், வளவரை வல்லைக் கெடும். ஒருவன் செல்வத்தின் எல்லை விரையக் கெடும் எ-று.

ஒப்புரவேயாயினும் மிகலாகா தென்றமையான், இதவுமது. இவை கான்குபாட்டானும் மூவகையாற்றலுட் பெருமையின் பகுதியாய் பொருள் வலியறிதல் சிறப்பு நோக்கி வகுத்துக் கூறப்பட்டது.

(ப-ரை) உளவரை - (தனக்கு) உள்ளவளவை, தூக்காத - ஆராயாமைக் கேதுவாகிய, ஒப்புரவாண்மை-உபகாரமுடைமையால், வளவரை-(ஒருவனது) செல்வத்தினளவு, வல்லைக்கெடும்-விரைவாகக் கெடும் எ-று.

(க-ரை) தனக்குள்ளவற்றை யாராயாத உதவியாலே செல்வத்தளவு கெடும் என்பதாம்.

(வி-ரை) உபகாரமே யாயினும் மிகலாகா தெனலால் இதவுமது. [இவை கான்குபாட்டானும் மூவகை ஆற்றலுள் பெருமையின் பகுதியாகிய பொருள் வலியறிதல் சிறப்பு நோக்கி வகுத்துச் சொல்லப்பட்டது.]

'உளவரை' இது உள்ள அளவு என்னும் பொருளது. அதாவது பொருளுள்ள அளவு என்பதாம். 'உள' இது 'உள்ள' என்பதன் தொகுத்தல் விகாரம். 'தூக்காத' இது ஆராய்ந்து பாராத என்பதாம் 'ஒப்புரவாண்மை' இது உபகாரச்செயல் என்னும் பொருளது. 'வளவரை' இது வளத்தின் எல்லையை என்னும் பொருளது. 'வல்லை' இது விரைவு குறிக்குஞ் சொல் சீக்கிரம் என்பதாம். (10)

48-ம் அதி - வலியறிதல் - முற்றிற்று.

49-ம் அதிகாரம்—காலமறிதல்

(பரி-உரை) அஃதாவது: வலியான் மிகுதிபுடையனாய்ப் பகைமேற் சேறலுற்ற அரசன் அச்செலவிற்கேற்ற காலத்தினையறிதல். அதிகார முறைமையும் இதனானே விளக்கும்.

(உரை) அஃதாவது: வலிமையினாலே மிகுதிபுடையனாய்ப் பகைவன் மேல் போர்க்குச் செல்லுமரசன் அச்செல்லுதலுக்கு ஏற்றகாலத்தினை அறிதல். அதிகாரமுறைமையும் இதனாற்றானே விளக்கும்.

பகல்வெல்லுங் கூகையைக்காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(பரி-உரை) கூகையைக் காக்கை பகல் வெல்லும் - தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற்பொழுதின்கண் வெல்லாகிற்கும், இகல் வெல்லும் வேந்தர்க்குப் பொழுது வேண்டும்-அதுபோல, பகைவரது இகலை வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கேற்றகாலம் இன்றியமையாது எ-று.

எடுத்துக்காட்டுவமை. காலம் அல்லாவழி வலியாற் பயனில்லை யென்பது விளக்கின்றது. இனிக் காலமாவது: வெம்மையுங் குளிர்ச்சியுந் தம்முள் ஒத்த சோய்செய்யாத தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த் தானேவருந்தாத செல்லும் இயல்பினதாம். இதனாற் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) காக்கை காகமானது, கூகையை-(தன்னின் வலிதாகிய)கோட்டானை, பகல்-பகற்பொழுதில், வெல்லும்-வெல்லும், (அதுபோல்) இகல்-பகைவரை, வெல்லும் - வெல்லக்கருதுகின்ற, வேந்தர்க்கு - அரசர்க்கு, பொழுது-(அதற்கேற்ற) காலம், வேண்டும்-வேண்டும் எ-று.

(க-ரை) காகங் கோட்டானைப் பகலில் வெல்லும், அதுபோல அரசர் பகைவரை வெல்லக் காலம்வேண்டும் என்பதாம்.

(வி-ரை) காலமல்லாதவிடத்தே வலிமையினாலே பயனில்லை யென்பது விளக்கின்றது. இனிக் காலமாவது வெம்மையும் குளிர்ச்சியும் சமமாய்ச் சோய்செய்யாமல் நீரும் உணவு முதலானவைகளையுடைத்தாய்ச் சேனைவருந்தாமல் செல்லுந்தன்மையதாம். இது எடுத்துக்காட்டுவமையணி. [இதனால் காலத்தினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'காக்கை கூகையை பகல்வெல்லும்' என்பது பொருட்டொடர்பு. 'கூகையை' என்ற இடத்துத் தன்னின் வலிய கூகையை என 'தன்னின் வலிய' என்பது வருவித்து உரைசெய்யப்பெற்றது. 'இகல்' என்றது பகைவரை. 'பொழுது' என்றது காலத்தை. (1)

பருவத்தோ டொட்ட வொழுக நிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

(பரி-உரை) பருவத்தோடு ஒட்ட ஒழுகல் - அரசன் காலத்தோடு பொருந்த வினைசெய்த ஒழுகுதல், திருவினைத் தோமை ஆர்க்கும் கயிறு. ஒருவர் கண்ணும் கில்லாத கீக்குஞ் செல்வத்தைத் தன்கண் நீக்காமற் பிணிக்குங் கயிறும் எ-று.

காலத்தோடு பொருந்தல்-காலத்தப்பாமற் செய்தல். தோமையென்ற தனால் தீர்தன்மாலேயதென்பது பெற்றும். வினை வாய்த்தலருதலான், அதனின் ஆகுஞ் செல்வம் எஞ்ஞான்றும் நீக்காதென்பதாம்.

(ப-ரை) (அரசன்) பருவத்தோடொட்ட - காலத்தோடு பொருந்த, ஒழுகல்-(தொழில்செய்த) கடத்தல், திருவினை - (ஒருவரிடத்தும் கில்லாது) நீக்குஞ் செல்வத்தை, தோமை - தன்னிடத்த நீக்காமல், ஆர்க்கும்-கட்டுவ தாகிய, கயிறு-கயிறாகும் எ று.

(க-ரை) காலமறிந்த தொழிலை கடத்தல் செல்வத்தைக் கட்டுக்கயிறும் என்பதாம்.

(வி-ரை) காலத்தோடு பொருந்துதல் - காலந்தப்பாமற் செய்தலாம். தொழில் கைகூடிவருதலால் அதனால் உண்டாகும் செல்வம் எஞ்ஞாளும் நீக்காதென்பதாம்.

'பருவம்' என்றது காலத்தை. 'பருவத்தோடு ஒட்ட ஒழுகல்' என்றது காலத்திற்கு ஏற்றவாறு அவ்வக்காலத்திற்கு உரிய காரியங்களைச் செய்தல் என்பதாம். 'திருவினை' என்றது ஆகூழால் வந்த செல்வத்தை. இதில் 'இன்' சாரியை. 'தோமை' இது நீக்காமை என்னும் பொருளது. இதில் 'மை' பண்புப்பெயர்விகுதி. 'ஆர்க்கும்' இது கட்டும் என்னும் பொருளது. இது "பருவத்தே பயிர்செய்" என்ற வாக்கும் கருதற்பாலதாம். (2)

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

(பரி-உரை) அருவினை என்ப உளவோ-அரசரால் செய்தற்கரிய வினை என்ற சொல்லப்படுவன உளவோ, கருவியான் காலம் அறிந்து செயின்- அவற்றை முடித்தற்காங் கருவிகளுடனே செய்தற்காங் காலம் அறிந்து செய்வாராயின் எ-று.

கருவிகளாவன: மூவகையாற்றலும் நால்வகைபுபாயங்களுமாம். அவை உளவாயவழியுங் காலம் வேண்டுமென்ப தறிவித்தற்கு கருவியானென்றும் எல்லாவினையும் எளிதின் முடியுமென்பதாம்.

(ப-ரை) அருவினையென்ப - (அரசரால்) செய்தற்கரிய தொழில் என்ற சொல்லப்படுமவை, உளவோ-உண்டோ, கருவியால் - (அவைகளை முடித்தற்காகும்) சாதனங்களுடனே, காலம் - (செய்தற்காகும்) காலத்தை அறிந்து-தெரிந்து, செயின்-செய்தால் எ-று.

(க-ரை) காலமறிந்து செய்தால் அரிய தொழில்களுளவோ என்பதாம்

(வி-உ) கருவிகள் மூவகை யாற்றல்களும், நால்வகை உபாயங்களும் தும். அவை உண்டாகியவிடத்தும் காலம் வேண்டுமென்பதை அறிவித்தற்குக் கருவியாலென்றார். இப்படி செய்வார்க்கு எல்லாத்தொழில்களும் எளிதின் முடியுமென்பதாம்.

'அருவினை' இது செய்தற்கு அரிதாகிய காரியம் என்னும் பொருளது. (அருமை+வினை = அருவினை) ஈண்டு பண்புப்பெயரின்'மை' கெட்டுநின்றது. 'உளவோ' இதில்நின்ற ஈற்று - வோ வினா. இவ்வினா இல்லை என்னும் பொருள்தந்து நின்றது. 'செயின்' இது செய்தால் என்னும் பொருளது. (3)

ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

(பரி-உரை) ஞாலம் கருதினுங்கைகூடும்-ஒருவன் ஞாலமுழுதுந் தானே யாளக் கருதினனெயினும் அஃது அவன் கையகத்ததாம், காலம் கருதி இடத் தான் செயின் - அதற்குச் செய்யும் வினையைக் காலமறிந்து இடத்தோடு பொருந்தச் செய்வனெயின் எ-று.

இடத்தானென்பதற்கு மேற்கருவியா னென்பதற்கு உரைத்தாங் குரைக்க. கைகூடாதெனவும் கைகூடுமென்பதாம். இவை மூன்றுபாட் டானும் காலம் அறிதற்பயன் கூறப்பட்டது.

(ப-உ) (ஒருவன்) ஞாலம்-பூமிமுழுதையும், கருதினும்-(தானே ஆள) நினைத்தாலும், (அது) கைகூடும்-கைக்குள்ளாம், காலம்-காலத்தை, கருதி-அறிந்து, இடத்தால்-இடத்தோடு பொருந்த, செயின் - (அதற்குச் செய்யும் தொழிலைச்) செய்வானெயின் எ-று.

(க-உ) அரசன் காலமறிந்து தொழில்செய்தால் உலகெல்லாமான நினைத்தாலும் கைவசப்படும் என்பதாம்.

(வி-உ) இடமுண்டாகியவிடத்தும் காலம் வேண்டுமென்பதற்கு இடத் தானென்றார். இப்படி செய்வார்க்குக் கைகூடாதனவும் கைகூடுமென் பதாம். [இவை மூன்றுபாட்டாலும் காலமறிதலின்பயன் சொல்லப்பட்டது.]

'ஞாலங் கருதினும்' என்றது உலகம் முழுமையுமே முற்றும் ஆளக் கருதி னாலும் என்பதாம். (ஞாலம்-பூமி) 'கைகூடும்' இது கிடைக்கும் என்னும் பொருளது. "அதற்குச் செய்யும் வினையை" என்பது செயின் என்றதாற் கொள்ளப்பெற்றது. 'இடத்தால்' இதில் 'ஆல்' உருபு 'ஓடு'ப் பொருளது. (4)

காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

(பரி-உரை) கலங்காத ஞாலம் கருதபவர் - தப்பாத ஞாலமெல்லாங் கொள்ளக் கருதும் அரசர், காலம் கருதி இருப்பர் - தாம்வலி மிகுமாயினும்

அது கருதாது அதற்கேற்ற காலத்தையே கருதி அது வருந்தினும் பகைமேற் செல்லார் எ-று.

தப்பாமை - கருதிய வழியே கொள்ளுதல். வலிமிகுதி காலங்கருதி யென்றதனாற் பெற்றும். அது கருதாது செல்வின் இருவகைப் பெருமையுந் தேய்ந்து வருத்தமும் உறுவராகலின், இருப்பரென்றார். இருத்தலாவது-கட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல் கூட்டலென்னும் அறுவகைக்குணங்களுள் மேற்செலவிற்கு மாறுயது. இதனாற் காலம் வாராவழிச் செய்வது உறப்பட்டது.

(ப-ரை) ஞாலம் - பூமியெல்லாம், கலக்காது - தப்பாமல், கருதுபவர்-(கொள்ளை)வினைக்குமாசர், (தம்வலிமிகுமாயினும் அதனை வினையாமல்) காலம்-(அதற்கு ஏற்ற) காலத்தையே, கருதி-வினைத்து, இருப்பர்-(அதுவருமளவும்) இருப்பர், பகைமேற் செல்லார் எ-று.

(க-ரை) பூமிமுற்றுமான வினைக்கு மாசர் பகைவரை வெல்லக் காலம் பார்த்திருப்பார் என்பதாம்.

(வி-ரை) அதை வினையாமற் சென்றால் பொருளும் படையும் ஆகிய இருவகைப் பெருமைகளும் தேய்த்து வருத்துவராகலால் இருப்பரென்றார். இருத்தலாவது - சட்பாக்கல், பகையாக்கல், மேற்செல்லுதல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்கிற அறுவகைக் குணங்களுள் மேற்செல்லுதலுக்கு எதிராகிய தொழில். [இதனாற் காலம் வாராதவிடத்தே செய்யவேண்டியது சொல்லப்பட்டது.]

'கலக்காது' இதற்குத் தப்பாது எனப்பொருள் செய்யப்பெற்றது. அதாவது கருதியவண்ணமே பெறுதல். 'காலம்' என்றது தான் வெல்லற்கு உரிய ஏற்ற காலத்தை. (5)

ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

(பரி-உரை) ஊக்கம் உடையான் ஒடுக்கம்-வலி மிகுதியுடைய அரசன் பகைமேற் செல்லாத காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, பொருதகர் தாக்கற்குப் பேரும் தகைத்து - பொருகின்ற தகர் தன் பகை கெடப் பாய்தற் பொருட்டுப் பின்னே கால் வாங்குந் தன்மைத்து எ-று.

உவமைக்கண் தாக்கற்கு என்றதனால், பொருளிலும் வென்றி யெய்தற் பொருட்டென்பது கொள்க. இதனால் அவ் இருப்பின் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) ஊக்கமுடையான்-மிகுந்த வலிமையுடைய வரசன், ஒடுக்கம்-(பகைமேற்செல்லாத) காலம் பார்த்திருக்கின்ற இருப்பு, பொருதகர்-போர் செய்கின்ற மூட்டுக்கடா, தாக்கற்கு-(தன் பகைகெடப்) பாய்தற்பொருட்டு, பேருந்தகைத்து-பின்னே கால்வாங்குந் தன்மைத்து எ-று.

(க.உரை) வலிமையுள்ள வரசன் பின்வாக்குதல் வெல்லும் பொருட்டாம் என்பதாம்.

(வி.உரை) உபமானத்திலே தாக்கற்கென்று சொல்லப்பட்டிருக்கையினாலே உபமேயத்திலே வெற்றிபெறுதற் கென்பது கொள்க. [இதனால் அவ்விருத்தலின் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'ஊக்கம்' என்றது ஈண்டு மிகுந்த வலியைக் குறித்தது. 'ஒடுக்கம்' என்றது காலங்கருதி அடக்கி இருக்குந்தன்மையை. 'பொருதகர்' என்றது போர்செய்யும் ஆட்டுக்கடாவை. 'பேரும்' என்றது முன்சென்று வலித்த முட்டித் தாக்கற்பொருட்டுப் பின்னே கால்வாங்கிச் செல்லுந்தன்மையை. (6)

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பி ரொள்ளி யவர்.

(பரி-உரை) ஒள்ளியவர் - அறிவுடைய அரசர், ஆங்கே பொள்ளெனப் புறம் வேரார் - பகைவர் மிகை செய்தபொழுதே அவாறியப் புறத்து வெகுளார்; காலம் பார்த்து உள் வேர்ப்பர்-தாம் அவரை வெல்லுதற்கேற்ற காலத்தினே யறிந்து அது வருந்துணையும் உள்ளே வெகுள்வர் எ-று.

பொள்ளென வென்பது குறிப்புமொழி. வேரார் வேர்ப்பரெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். அறிய வெகுண்டுழித் தம்மைக் காப்பாகலிற் புறம்வேராரென்றும், வெகுளி யொழிந்துழிப் பின்னும் மிகை செய்யாம லடக்குதல் கூடாமையின் உள்வேர்ப்பரென்றுங் கூறினர்.

(ப-உரை) ஒள்ளியவர் - அறிவுடைய வரசர், ஆங்கே - (பகைவர் தீங்கு செய்த) அப்பொழுதே, (அவரறிய) பொள்ளென-விரைவாக, புறம்வேரார்-புறத்திலே கோபஞ்செய்யார், காலம் - (தாம் அவரை வெல்லுதற்கேற்ற) காலத்தை, பார்த்து - அறிந்து, (அது வருமளவும்) உள்வேர்ப்பர் - உள்ளே கோபஞ்செய்வார் எ-று.

(க-உரை) அறிவுடைய வரசர் கோபத்தைப் புறங்காட்டார் காலம் வருமளவு மக்கோபத்தை யுள்வைத்திருப்பார் என்பதாம்.

(வி-உரை) பகைவரறியக் கோபஞ்செய்தவிடத்தே அவர் தம்மைக் காத்துக் கொள்வாராகலால் புறம் வேராரென்றும் கோபஞ்செய்யாமல் அடக்குதல் கூடாமையால் உள்வேர்ப்ப ரொள்ளியவரென்றும் சொல்லினர்.

'பொள்ளென' இது விரைவுப்பொருள் காட்டவந்த குறிப்புமொழி. இதனை விரைவுக் குறிப்பென்பர். 'ஆங்கே' என்றது பகையரசர் தமக்கு மிகைசெய்த அக்காலத்தே என்பதாம். 'புறம்வேரார்' என்றது அப்பகை யரசர்க்குப் புலனுமாறு கோபத்தை வெளிக்காட்டார் என்பதாம். 'உள் வேர்ப்பர்' என்றது உள்ளத்துள்ளே வெகுண்டு நிற்பர் என்பதாம். 'ஒள்ளியவர்' என்றது அறிவு உடையாரை. (7)

செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

(பரி·உரை) செறாரைக் காணின் சுமக்க-தாம் வெல்லக்கருதிய அரசர் பகைவருக்கு இறதிக்காலம் வருத்தினையும் அவரைக் கண்டாற் பணிக; இற்வரை காணின் தலை கிழக்காம்-பணியலே அக்காலம் வந்திறும்வழி அவர் தகைவின்றி பிறகர் எ-று.

பகைமை ஒழியும் வகை மிகவுர் தாழ்கவென்பார் சுமக்கவென்றும், அங்ஙனந் தாழலே அவர் தம்மைக் காத்த விகழ்வராகவின் தப்பாமற் கெடுவ ரென்பார் அவர்தலை கீழாமென்றக் கூறினர். தலைமேற்கொண்ட தொரு பொருளைத் தன்னுக்கால் அது தன் தலைகீழாக விழுமாகவின், அவ் வியல்பு பெறப்பட்டது. இவை விரண்டுபோட்டானும் இருக்கும்வழிப் பகைமை தோன்றுமை லிருக்கவென்பது கூறப்பட்டது.

(ப·உரை) (வெல்லக்கருதிய அரசர்) செறாரை - பகைவரை, காணின்- கண்டால், சுமக்க - (அவர்க்கு முடிவுகாலம் வருமளவும்) பணியக்கடவர், இறவரைகாணின் - அக்காலம்வந்து முடியுமிடத்து, தலை - (அவரது) தலை, கிழக்காம்-கீழ்விழும் எ-று.

(க·உரை) அரசர் பகைவரைக்கண்டா லவர்க்கு முடிவுகாலம் வருமளவும் பணியக்கடவர் என்பதாம்.

(வி·உரை) பகைமை நீரும்படி மிகவும் வணங்குகவென்றற்கு சுமக்க வென்றும், அப்படி வணக்கவே அவர் தம்மைக்காத்துக் கொள்ளாமையினலே தப்பாமல் கெடுவாரென்றற்கு கிழக்காந் தலையென்றும் சொல்லினர். [இவ் விரண்டுபோட்டாலும் காலம் பார்த்திருக்குமிடத்துப் பகைமை தோன்றுமல் இருக்கவேண்டுமென்பது சொல்லப்பட்டது.]

'செறார்' என்றது பகைவரை. இதில் 'ரகரம்' பெயர் இடைநிலை. 'சுமக்க' இது மிகவும் பணிக என்னும் பொருளதாம். ஈண்டு அவரை வெல்லுங்காலம் வரும்வரையும் என்பது வருவித்து உரைக்கப்பெற்றது. 'இறவரை காணில்' என்றது அப்பகையை வெல்லும் காலம் வந்து கூடிய விடத்து என்பதாம். 'கிழக்காந்தலை' என்றது தலைகீழாக வீழ்ந்தழிவர் என்பது பொருளாம். (8)

எய்தற் கரிய கிளைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

(பரி உரை) எய்தற்கு அரியது இனையக்கால் - பகையை வெல்லக் கருதும் அரசர் தம்மா லெய்துதற்கரிய காலம் வந்து கூடியக்கால், அந்நிலையே செய்தற்கு அரிய செயல்-அது கழிவதற்கு முன்பே அரி கூடாவழித் தம்மாற் செய்தற்கரிய வினைகளைச் செய்க எ-று.

ஆற்றன் முதலியவற்றுற் செய்துகொள்ளப்படாமையான் எய்தற்கரிய தென்றும், அது தானேவந்தியைதல் அரிதாகலின் இயைந்தக்காலென்றும், இயைந்தவழிப் பின்னில்லாது ஒடுதலின் அக்கிலேயேடென்றும், அது பெரு வழிச் செய்யப்படாமையிற் செய்தற்கரிய என்றுங் கூறினர். இதனாற் காலம் வந்தழி விரைந்து செய்கவென்பது கூறப்பட்டது.

(ப-ரை) (பகையை வெல்ல நினைக்கின்ற அரசர்) எய்தற்கரியது-(தம்மாலே) பெறுதற்கரிய காலம், இயைந்தக்கால்-வந்து கூடியக்கால், அக்கிலேயே-அது கிற்குமளவிலே, செய்தற்கரிய-(இதன்முன்னே) செய்தற்கு அரியவையாயிருந்த தொழில்களே, செயல்-செய்யக்கடவர் எ-று.

(க-ரை) அரசர் பகையை வெல்லக் காலம்வாய்த்தா லப்பொழுதே யத்தொழிலைச் செய்யக்கடவர் என்பதாம்.-

(வி-ரை) ஆற்றல் முதலானவைகளாலே செய்துகொள்ளக் கூடாததா யிருக்கையால் எய்தற்கரியதென்றும், அது தானேவந்து கூடுதல் அரிதாகலால் இயைந்தக்காலென்றும், கூடியவிடத்துப் பின்னில்லாதோடிப்போமாதலால் அக்கிலேயேயென்றும், அது பெருதவிடத்தே செய்யக்கூடாமையால் செய்தற்கரியவென்றும் சொல்லினர். [இதனால் காலம் வந்தவிடத்து விரைந்து செய்கவென்பது சொல்லப்பட்டது.]

'எய்தற்கரிய' என்றது பெறுதற்கு அரியதாகிய ஏற்றகாலத்தை. இயைதல்' இது கூடுதல் என்னும் பொருளது. 'அக்கிலேயே' என்றது அக்காலம் நீங்குமுன் விரைந்து என்றதாம். 'செய்தற்கரிய' என்றது ஏற்ற காலம் எய்துதற்குமுன் செய்தற்கு முடியாதிருந்த செய்கையை என்பதாம். 'செயல்' என்றது ஏற்றசமயம் வாய்த்த இதுபொழுது செய்க என்பதாம். (9)

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

(பரி-உரை) கூம்பும் பருவத்துக் கொக்கு ஒக்க-வினைமேற் செல்லா நிருக்குங்காலத்துக் கொக்கு இருக்குமாறுபோல இருக்க, மற்றுச் சீர்த்த இடத்த அதன் குத்து ஒக்க-மற்றைச் செல்லுங்காலம் வாய்த்தவழி அது செய்து முடிக்குமாறுபோலத் தப்பாமற் செய்துமுடிக்க எ-று.

மீன் கோடற்கு இருக்கும்வழி அது வந்தெய்துந்துணையும் முன்னறிந்து தப்பாமற்பொருட்டு உயிரில்லதுபோன்றிருக்கும் ஆகலானும், எய்தியவழிப் பின் தப்புவதற்குமுன்பே விரைந்த குத்தம் ஆகலானும், இருப்பிற்குஞ் செயலிற்குங் கொக்கு உவமையாயிற்று. கொக்கொக்கவென்றாயினும் அது கூம்புமாறுபோலக் கூம்புகவென்றும், குத்தொக்கவென்றாயினும் அது நிற்குமாறுபோலக் குத்துகவென்றும் உரைக்கப்படும். இது தொழிலுவமமாகலின் உவமை முகத்தால் இருப்பிற்குஞ் செயலிற்கும் இலக்கணங் கூறியவாறுமிற்று.

(ப-ரை) கும்பும் பருவத்த-தொழிலின்மேலே செல்லாதிருக்க வேண்டிய காலத்திலே, கொக்கொக்க-கொக்கு இருக்குமாறுபோல் இருக்கக்கடவன், மற்றச் சிற்றவிடத்த-மற்றைச் (செல்லுங்காலம்) வாய்த்தவிடத்தி, அதன் குத்தொக்க-அது தப்பாமற் செய்துமுடிக்குமாறுபோல் தப்பாது செய்து முடிக்கக்கடவன் எ-று.

(க-ரை) அரசன் பகையை வெல்லக் காலம் வாய்க்காவிடத்துக் கொக்கடங்கல்போலிருக்கக்கடவன், வாய்த்தவிடத்தி அதன் குத்தைப்போல் வெல்லக்கடவன் என்பதாம்.

(வி-ரை) மீன் கொள்ளுதற்கு இருக்குமிடத்தி அது வருமளவும் அது தன் முயற்சியை முன்னறிந்து தப்பிப்போகாமற்பொருட்டு உயிரில்லதுபோலிருக்குமாகலாலும் வந்தவிடத்தைத் தப்பிப்போவதற்கு முன்னுகவே விரைந்து குத்துமாதலாலும் இருத்தலுக்கும் செய்தலுக்கும் கொக்கு உவமானமாயிற்ற. கொக்கொக்க வென்றாராயினும் அது கும்புமாறுபோற் கும்புகவென்றும், குத்தொக்க வென்றாராயினும் அது குத்துமாறுபோற் குத்துகவென்றும் உரைக்கப்படும். [இதனால் இருத்தலுக்கும் தொழில் செய்தலுக்கும் இலக்கணம் சொல்லப்பட்டது.]

'கும்பும் பருவம்' என்றது அடங்கி இருக்கவேண்டிய காலத்தை. பகையைவெல்லும் ஏற்றகாலம் எய்தாதபொழுது என்பதாம். 'சிற்றவிடம்' என்றது பகையை வெல்லுங்காலம் எய்திய இடத்தை என்பதாம். கொக்கின் றொழில் சண்டி உவமையாகக் கூறப்பெற்றமையின் இங்கு கொக்கு தொழிலுவமம் ஆயிற்று. (10)

49-ம் அதி - காலமறிதல் - முற்றிற்று.

50-ம் அதிகாரம்—இடனறிதல்

(பரி-உரை) அஃதாவது: வலியுங் காலமும் அறிந்த பகைமேற் செல்வான் தான் வெல்லுதற்கேற்ற நிலத்தினையறிதல். அதிகாரமுறைமையும் இதனுனே விளக்கும்.

(உரை) அஃதாவது: வலியும் காலமும் அறிந்த பகைமேற் செல்வோன் தான் வெல்லுதற்கு ஏற்றநிலத்தினை அறிதலாம். அதிகாரமுறைமையும் இதனுற்றுனே விளக்கும்.

தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க மூற்று மிடங்கண்ட பின்னல் லது.

(பரி-உரை) முற்றும் இடம் கண்டபின் அல்லது-பகைவரை முற்றுதலாவது ஓரிடம்பெற்றபின் அல்லது, எவ்வினையும் தொடங்கற்க-அவ்வாறாயாதொரு வினையையுந் தொடங்காதொழிக, எள்ளற்க - அவரைச் சிறிதென்ற இகழாதொழிக எ-று.

முற்றுதல்-வளைத்தல். அதற்காம் இடமாவது வாயில்களாலும் தானைகளாலும் அவர் புகலொடு போக்கொழியும்வகை அரணினைச் சூழ்ந்து ஒன்றற் கொன்று துணையாய்த் தம்முள் கலிவிலாத பலபடை யிருப்பிற்கும் மதிலும் அகழுமுதலிய அரண் செய்யப்பட்ட அரசிருப்பிற்கும் ஏற்ற லெக் டக்கையும் நீருமுடையது. அதுபெற்றால் இரண்டுஞ் செய்கவென்பதாம்.

(ப-ரை) முற்றும் - (பகைவரை) வளைத்துக்கொள்வதற்காகும், இடம்- ஒரிடத்தை, கண்டபின்னல்லது - பெற்றபின்னல்லாமல், எவ்வினையும் - யாதொரு தொழிலையும், தொடங்கற்க - (அவரிடத்தை) தொடங்காதிருக் கக்கடவர், என்றற்க - (அவரைச் சிறியரென்று) இகழாதிருக்கக்கடவர் எ-று.

(க-ரை) அரசர் பகைவரை வெல்ல இடங்கண்டாலல்லது எத்தொழிலை புஞ் செய்யாதிருக்கக்கடவர் அவரை யிகழாதிருக்கக்கடவர் என்பதாம்.

(வி - ரை) அதற்காமிடமாவது: வாயில்களாலும் தானைகளாலும் அப்பகைவர் வருதலும் போகுதலும் ஒழியும்வகை அரணைச்சூழ்ந்து ஒன்றற் கொன்று துணையாய்த் தமக்குள்ளே கலிவில்லாது பலபடைகள் இருப்பிற்கும் மதிலும் அகழும் முதலாகிய அரண்செய்யப்பட்ட அரசிருப்பிற்கும் ஏற்ற லெக்கிடக்கையையும் நீரையும் உடையது. அவ்விடத்தைப்பெற்றால் தொடங்குதலும் இகழ்தலும் செய்கவென்பதாம்.

'தொடங்கற்க' இது முன்னிலை எதிர்மறை ஏவல். 'எவ்வினை' இது காலிஞவடியாகப் பிறந்தது. 'என்னற்க' என்றது பகை அரசரைச் சிறிய ரென்று இகழாதே என்பதாம். 'முற்றும் இடம்' என்றது பகைவரை வளைத்துகொள்ளும் இடம் என்பதாம். (1)

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா மாக்கம் பலவுந் தரும்.

(பரி உரை) முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் - மாறுபாட்டோடு டிய வலியினை புடையார்க்கும், அரண் சேர்ந்த ஆம் ஆக்கம் பலவும் தரும்- ரணைச்சேர்ந்து ஆகின்ற ஆக்கம் பல பயன்களோடுங் கொடுக்கும் எ-று.

மாறுபாடாவது: ஞாலம் பொதுவெனப் பொரு அரசர் மனத்தின்கண் ழ்வதாகலாலும், வலிபுடைமை கூறியவதனாலும், இது பகைமேற்சென்ற ரசர்மேற்றாயிற்று. உம்மை சிறப்பும்மை. அரண்சேராதா மாக்கமும் முன் மையின் ரண்டு ஆக்கம் விசேடிக்கப்பட்டது. ஆக்கமென்றது அதற்கேது ய முற்றினை. அது கொடுக்கும் பயன்களாவன: பகைவரால் தமக்கு லிவின்மையும் தாம் கிலைபெற்று கின்று அவரை கலிதலும் முதலாயின.

(ப-ரை) முரண்-மாறுபாட்டை, சேர்ந்த-சேர்ந்த, மொய்ம்பினவர்க்கும்- லிமைபுடையவருக்கும், அரண்-அரணை, சேர்ந்த-சேர்க்க, ஆம்-ஆகின்ற, க்கம்-பெருக்கமானது, பலவும்-பலபயன்களோடும், தரும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) வலிய வாசருக்கும் அரணைச்சேர்ந்தாகின்ற பெருக்கமானது பல பயன்களையுந் தரும் என்பதாம்.

(வி-ரை) மாறுபாடாவது: பூமி பலவாசர் ஆளுதற்குப் பொதுவாயுள்ளதென்பதை பொருத அரசாதல் மனதிலே தோன்றுவதாதலாலும், வலிபுடைமைச்சொன்னவதனாலும், இது பகைவர்மேலே சென்ற அரசருக்கு ஆயிற்று. அரண்சேர்ந்த ஆகின்ற ஆக்கமும் இருக்கையால் இங்கே ஆக்கம் விசேஷிக்கப்பட்டது. ஆக்கமென்றது அதற்கு எதுவாகிய வினைத்தலை. அது கொடுக்கும் பயன்கள்: பகைவராலே தமக்கு கலிவில்லாமையும், தாம் கிலவெற்ற கின்ற அரசருக்கு கலிவுசெய்தலும் முதலானவை.

'மரண்சேர்ந்த மொய்ம்பு' என்றது உலகம் பொதுவெனப் போற்றுதன்னதே எனக்கொள்ளும் மாறுபாட்டோடுகூடிய வலிமையை. (மொய்ம்பு-பலம், வலிமை) 'அவர்க்கும்' என்றதன் உம்மை உயர்வுச்சிறப்பு உம்மை. 'பலவும்' என்றது பல பயன்களையும் என்பது பொருளாம். இதன்கண்கின்ற உம்மை முற்றும்மை. (2)

ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின்.

(பரி-உரை) ஆற்றாரும் ஆற்றி அடுப-வலியர் அல்லாதாரும் வலியராய் வெல்வர், இடன் அறிந்து போற்றிப் போற்றார்கண் செயின் - அதற்கேற்ற இடத்தினை யறிந்து தம்மைக் காத்துப் பகைவர்மாட்டு வினை செய்வாராயின் எ-று.

வினையென்பதனாலும் தம்மையென்பதனாலும் அவாய்நிலையான் வந்தன. காத்தல் பகைவரான் கலிவு வாராமல் அரணாலும் படையாலுங் காத்தல். இவ்வாற்றான் வினை செய்வராயின் மேற்சொல்லிய வலியின்றியும் வெல்வரென்பதாம்.

(ப-ரை) ஆற்றாரும் - வலிமையில்லாதவரும், ஆற்றி - வலிமையுடையவராய், அடுப-வெல்வார், இடன்-(அதற்கேற்ற) இடத்தை, அறிந்து-தெரிந்து, போற்றி - (தம்மைக்) காத்துக்கொண்டு, போற்றார்கண் - பகைவரிடத்து, செயின்-(தொழிலைச்) செய்வாராயின் எ-று.

(க-ரை) வல்லமையில்லா வேந்தரு மிடமறிந்து போற்செய்வாராயின் வெற்றிபெறுவர் என்பதாம்.

(வி-ரை) காத்துக்கொள்ளுதலாவது பகைவரால் கலிவு வாராதிருக்கும்படி அரணாலும், படையாலும் காத்தல். இப்படி தொழில் செய்வாராயின் முன்சொல்லப்பட்ட வலிமை யில்லாதிருந்தாலும் வெல்வரென்பதாம்.

'ஆற்றார்' என்றது வல்லமை இல்லாதவர் என்பதாம். 'ஆற்றி' என்றது ஆற்றல் உடையராகி என்பதாம். 'போற்றார்' என்றது பகையரசரை. இ

தம்மைப்போற்றி கட்பாயிராதவர் என்னும் காரணம்பற்றி வந்தபெயர். 'ஆற்றரும்' இதன்கண்நின்ற உம்மை இழிவுச்சிறப்பு உம்மை. 'செயின்' இது செய்தால் என்னும் பொருளது. 'போற்றி' என்றது தன்னைக் காத்துக் கொண்டு என்பதாம். 'செயின்' என்றதால் வினை என்றது வருவித்துரைக் கப்பெற்றது.

(3)

எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

(பரி-உரை) இடன் அறிந்து துன்னியார் - தாம் வினைசெய்தற் கேற்ற இடத்தினை யறிந்து சென்ற அரசர், துன்னிச் செயின்-அரணைப் பொருந்தி நின்று அதனைச் செய்வாராயின், எண்ணியா எண்ணம் இழப்பர் - அவரை வெல்லுதாக எண்ணியிருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை யிழப்பர் எ-று.

அரணென்பது அவாய்நிலையான் வந்தது. எண்ணமென்றது எண்ணப் பட்ட தம் வெற்றியை. அதனை யிழப்பரென்றார் அவர் வினை செய்யாமல் தம்மைக் காத்தலையின். இதனால் அவர் பகைவர் தோற்பரென்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் பகைவர் அரணின் புறத்திறப்பார் அதற்காகிட மறிதல் கூறப்பட்டது.

(ப-ரை) இடன் - (தாம்தொழில் செய்தற்கேற்ற) இடத்தை, அறிந்-தெரிந்து, துன்னியார்-சென்றவரசர், துன்னி-(அரணைப்) பொருந்திநின்று, செயின் - (அத்தொழிலைச்) செய்வாராயின், எண்ணியார் - (முன்பு அவரை வெல்ல) எண்ணியிருந்த பகைவர், எண்ணம் - அவ்வெண்ணத்தை, இழப்பர்-இழந்துவிடுவார் எ-று.

(க-ரை) அரசர் இடமறிந்து போர்செய்வாராகில் பகைவரெண்ணமுடி யாது என்பதாம்.

(வி-ரை) எண்ணப்பட்ட வெற்றியை எண்ணமென்றார். பகைவர் போர்செய்யாமல் தம்மைக்காத்துக் கொள்ளுதலால் எண்ணமிழப்பரென்றார். இதனால் அவர் பகைவர் தோற்பரென்பதாயிற்று. [இவை நான்குபாட் டானும் பகைவரது அரணின் புறத்து இறங்கற்கு ஆகிடமறிதல் சொல்லப் பட்டது.]

'எண்ணியார்' என்றது வெல்ல எண்ணிய பகை அரசரை. 'எண்ணம்' என்றது வெல்ல எண்ணிய எண்ணத்தை. 'இடனறிந்து துன்னியார்' என்றது தாம் போர்வினை செய்தற்குத்தக்க இடத்தினை அறிந்து சென்று அடைந்த அரசர் என்பதாம். 'துன்னிச்செயின்' என்றது தக்க அரணைப் பொருந்திநின்று செய்தால் என்பதாம்.

(4)

நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற.

(பரி-உரை) முதலை செறும் புனலுள் (பிற) வெல்லும் - முதலை சூழமுடைய நீரின்கண் தன் பிறவற்றையெல்லாந் தான் வெல்லாகிற்கும், புனலின் நீக்கின் அதனைப் பிற அடும்-அப்புனலினீக்குமாயின் அதனைப் பிறவெல்லாம் வெல்லாகிற்கும் எ-று.

எனவே, எல்லாருந் தங்கிலத்து வலியரென்பது கூறப்பட்டது. பிறவென்பது முன்னுங் கூட்டப்பட்டது. நிலைப்படா நீரின்கட் பிறவெல்லாம் கிற்றல் ஆற்றுமையின் அவையெல்லாம் முதலைக்கு எளியவாம். அவை யியக்குதற்குரிய நிலத்தின்கண் அஃது இயக்கல் ஆற்றுமையின் அஃது அவற்றிற்கெல்லாம் எளிதாமென்றது, மேற்செல்லும் அரசர் பகைவர் கிற்றல் ஆற்று இடனறிந்து செல்வாயின் அவர் தமக்கெளியராவர் அன்றித் தாகிற்க லாற்றுவிடத்துச் செல்வாயின் அவர்க்கு எளியராவரென்னும் பொருடோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம். அவரை அவர் கிற்றல் ஆற்றுவிடத்துச் சென்று வெல்கவென்பதாம்.

(ப-உரை) முதலை-முதலையானது, செறும்புனலுள்-சூழநின்ற நீரிலானால், பிற - பிறவுயிர்களையெல்லாம், வெல்லும் - வென்றவிடும், புனலின் - அந்நீரினின்றும், நீக்கின் - நீக்கினால், அதனை - அதை, பிற-பிறவுயிர்களெல்லாம், அடும்-வெல்லும் எ-று.

(க-உரை) முதலை நீரிலிருந்தால் எல்லாவுயிரையும் வெல்லும். அது அந்நீரைவிட்டால் மற்றவுயிர்களாலே தோல்வியடையும் என்பதாம்.

(வி-உரை) எல்லாரும் தமது இடத்திலே வலியராயிருப்பாரென்பது சொல்லப்பட்டது. [நிலையாத நீரினிடத்தே பிறவுயிர்கள் நிற்கமாட்டாமையால், அவையெல்லாம் முதலைக்கு எளியனவாகும். அவை சஞ்சரித்தற்குரிய நிலத்தினிடத்தே அம்முதலைச் சஞ்சரிக்கமாட்டாமையால் அவைகளுக்கெல்லாம் எளிதாமென்பது மேற்செல்லு மரசன் பகைவர் நிற்கமாட்டாத விடமறிந்து சென்றால் அவர் அவனுக்கு எளியவராவார். தான் நிற்கமாட்டாத விடத்தே சென்றால் அவருக்கு அவன் எளியவனாவான் என்கிற பொருள் தோன்ற நின்றமையால் பிறிது மொழிதலணி.]

'செறும்புனல்' என்றது சுண்டு மிக்க ஆழமாகிய நீரை. 'புனலுள்' என்றதில் 'உள்' ஏழன்உருபு. 'அதனைப்பிற அடும்' என்றது பொருள்கோள். 'அடும்' சுண்டு இது வெல்லும் என்னும் பொருளது. கடைநின்ற 'பிற' என்ற சொல் இடையே வெல்லும் என்றதனோடும் கூட்டி உரைக்கப் பெற்றது. (5)

கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

(பரி-உரை) கால் வல் நெடுந்தேர் கடல் ஓடா-நிலத்தின்கண் ஓடும் கால் வலிய நெடிய தேர்கள் கடலின்கண் ஓடமாட்டா, கடல் ஓடும் நாவாயும்

கிலத்த ஓடா - இனி அக்கடலின்கண் ஓடும் நாவாய்கடாமும் கிலத்தின்கண் ஓடமாட்டா எ-று.

கடலோடா என்ற மறுதலையடையான் கிலத்தி ஓடுமென்பது வருவிக்கப்பட்டது. கால்வனெடுந்தேரென்பது ஓடுதற்கேற்ற காலும் பெருமையு முடையவாயினு மென்பதுபட நின்றது. மேற்சென்றூர் பகைவரிடங்களை யறிந்து அவற்றிற்கேற்ற கருவிகளான் வினைசெய்கவென்பது தோன்ற நின்றமையின், இதவும் மேலையலங்காரமாயிற்று.

(ப-ரை) கால்வல்-(கிலத்தில் ஓடுகின்ற) வலிமைபொருந்திய உருளைகளை புடைய, கெடுந்தேர் - பெரியதேர்களானவை, கடல் - கடலில், ஓடா - ஓடமாட்டாவாம், கடலோடும் - கடலில் ஓடுகின்ற, நாவாயும் - மரக்கலங்களும், கிலத்து-கிலத்தில், ஓடா-ஓடமாட்டாவாம் எ-று.

(க-ரை) கிலத்திலோடுந் தேர்கள் கடலிலோடாவாம், கடலிலோடும் மரக்கலங்கள் கிலத்திலோடாவாம் என்பதாம்.

(வி-ரை) ஓடுதற்கேற்ற காலும் பெருமையும் உடையதா யிருக்கினு மென்பது தோன்ற கால்வனெடுந்தேரென்றூர். [இப்பாட்டு போர்க்குச் சென்றவன் பகைவரிடங்களை அறிந்து அவைகளுக்கு ஏற்ற சாதனங்களால் தொழில்செய்ய வேண்டுமென்னும் பொருள்தோன்ற கிற்கையினாலே இதவும் அவ்வணி.]

'கடல்' என்றது கடத்தற்கு முடியாதது என்னுங் காரணம் பற்றிவந்த பெயர். 'கால்' என்றது சக்கரத்தை. இனி சக்கரத்துள்ள ஆரக்கால்களை என்பாரும் உண்டு. 'நாவாய்' என்றது மரக்கலத்தை. 'நாவாயும்' என்றதன் நற்ற உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. (6)

அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

(பரி-உரை) எஞ்சாமை எண்ணி இடத்தான் செயின் - பகையிடத்து வினைசெய்யுங் நிறங்களையெல்லாம் ஒழியாதெண்ணி அவற்றை அரசர் இடத்தொடு பொருந்தச் செய்வராயின், அஞ்சாமை அல்லால் துணை வேண்டா- அச்செயற்குத் தம் நிண்மையல்லது பிறிதொரு துணை வேண்டுவதில்லை எ-று.

நிண்ணியராய் நின்று செய்து முடித்தலே வேண்டுவதல்லது துணை வேண்டா வென்றூர். அவ் வினை தவறுதற் கேதுவின்மையின் இவை மூன்றபாட்டானும் வினை செய்தற்காம் இடனறிதல் கூறப்பட்டது.

(ப-ரை) (அரசர்) எஞ்சாமை - (பகைவரிடத்துத் தொழில்செய்யும் நிறங்களையெல்லாம்) குறையாமல், எண்ணி-ஆலோசித்து, இடத்தால்-இடத்தோடுபொருந்த, செயின் - செய்வாராயின், (அச்செயலுக்கு) அஞ்சாமை யல்லால் - (தமது) தைரியமல்லாமல், துணை - (வேறொரு) துணை, வேண்டா-வேண்டுவதில்லை எ-று.

(க-ரை) குறைவில்லாதெண்ணி யிடமறிந்து போர்செய்தால் தைரிய மின்றி வேறதகுணைகள் வேண்டாவாம் என்பதாம்.

(வி-ரை) அத்தொழில் நலமாதலுக்கு ஏது இல்லாமையால் தைரிய முடையராய் நின்ற முடித்தலல்லது குணவேண்டாவென்றார். [இவை மூன்றபாட்டாலும் போர்செய்தற்கு ஆயிடமறிதல் சொல்லப்பட்டது.]

'அஞ்சாமை' என்றது ஈண்டு திண்மையை. (7)

சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும்.

(பரி-உரை) உறுபடையான்-பெரும்படையுடைய அரசன், சிற படை யான் செல் இடம் சேரின் - எனைச் சிறபடையுடையானை யழித்தல் கருதி அவன் புகலைச் சென்ற சாருமாயின், ஊக்கம் அழிந்தவிடும் - அவனுற் றன்பெருமை அழியும் எ-று.

செல்லிடம் - அவனுக்குச் செல்லுமிடம். அழிந்தவிடுமென்பது எழுந் திருக்குமென்றுற்போல ஒருசொல். ஊக்கத்தினழிவு உடையான்மேல் ஏற்றப்பட்டது. தன் படைப்பெருமை நோக்கி இடநோக்காத செல்வ னுயின், அஃது அப்படைக்கு ஒருங்கு சென்ற வினைசெயல் ஆகாமையா னுகப் பயிற்சியின்மையானுக அப்பெருமையாற் பயனின்றித் தானழிந்தவிடு மென்பதாம்.

(ப-ரை) உறுபடையான்-பெருஞ் சேனையையுடைய அரசன், சிறுபடை யான்-சிறிய சேனையையுடையவனது, செல்லிடம்-செல்லிடத்தை, சேரின்-(அவனை அழிக்க நினைத்துச்) சேர்வனுயின், (அவனுல்) ஊக்கம்-(தன்) பெருமை, அழிந்தவிடும்-அழிவான் எ-று.

(க-ரை) சிறைசேனையையுடைய அரசன் குறைசேனையையுடைய அர சனிடத்தைச் சேர்ந்தழிக்க நினைக்கில் லவனுற் பெருமையை யிழந்தவிடுவான் என்பதாம்.

(வி-ரை) செல்லிடம்-செல்லுமிடம் என விரியும். ஊக்கத்தினழிவு உடையான்மேல் ஏற்றப்பட்டது. தன் சேனையின் பெருமைநோக்கி இடம் நோக்காமல் செல்வானுயின் அச்செலவு அச்சேனைக்கு ஒருசோர்ச்சென்று தொழில் செய்யக்கூடாமையாலாவது பழக்கமில்லாமையாலாவது, அப் பெருமையாற் பயனில்லாமல் அழிவானென்பதாம்.

'சிறுபடையான்' என்றது சிறியபடையை உடையவன் என்பதாம். 'செல்லிடம்' என்றது அவனது புகலிடமாகிய அரணை, இது செல்லுமிடம் என்பதன் விகாரம். 'உறுபடையான்' என்றது பெரும்படை உடையவனை. 'ஊக்கம்' என்றதற்கு பெருமை எனப் பொருள் செய்யப் பெற்றது. (8)

சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

(பரி உரை) சிறை செலலும் சிரும் இலர் எனினும் - அரண் அழித்தற்கு அருமையும் பெருமையாகிய ஆற்றலுமுடையர் அல்லராயினும், மாக்தர் உறைநிலத்தோடு ஒட்டல் அரிது - வினைக்குரிய மாந்தரை அவர் உறைகின்ற நிலத்தின்கட் சென்று தாக்குதல் அரிது எ-று.

நிலத்தோடென்பது வேற்றுமை மயக்கம். ஆண்மையுடையாரைச் சிறுமை நோக்கி இருப்பின்கட் சென்று தாக்கின் அவர் அதனவிட்டுப் போதற் றணவினரன்றிச் சாதற் றணிவினராவர்; ஆகவே, அவர்க்குப் பெரும்படை உடையுமென்பதாம்.

(ப-ரை) சிறைசெலலும்-அரணழித்தற் கருமையையும், சிரும்-பெருமையாகிய ஆற்றலையும், இலரெனினும் - உடையரல்லராயினும், மாக்தர்-(தொழில்செய்தற்குரிய) மனிதரை, உறைநிலத்தோடு - (அவரது) இருப்பிடத்திற் சென்று, ஒட்டல்-தாக்குதல், அரிது-அரிது எ-று.

(க-ரை) அரண்வலியும் பலமுமில்லாராலலும் பகைவர் இருப்பிடஞ் சென்று வெல்லலரிது என்பதாம்.

(வி-ரை) ஆண்மையுடையவரைச் சிறுமைநோக்கி அவரிருப்பிடத்திலே சென்று தாக்கினால் அதைவிட்டுப் போவதற்குத் துணியாமல் சாவதற்குத் துணிவுகொண்டவராய்ப் போர்செய்வாராதலால் அவருக்குப் பெரிய சேனையும் தோற்றோடிப்போமென்பதாம்.

'சிறைசெலன்' என்றது அழித்தற்கியலாத அரணின் நன்மை என்பதாம். 'சீர்' என்றது பகைவெல்லும் ஆற்றலை. 'உறைநிலம்' என்றது பகையரசர் வாழும் இடத்தை. (9)

காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

(பரி-உரை) கண் அஞ்சா வேல் ஆள் முகத்த களிறு - பாகர்க்கு அடங்காவுமாய் வேலாட்களைக் கோத்த கோட்டவுமாய களிறுகளை, கால் ஆழ்சகரின் கரி அடும்-அவை காலாழும் இயல்பிற்றாய சேற்றுநிலத்தைப் பட்டழிகரி கொல்லும் எ-று.

முகம்-ஆகுபெயர். ஆண்மையும் பெருமையு முடையாரும் தமக்கு எலாவகத்துச் செல்வின் அவற்றாற் பயனின்றி மிகவும் எளியரால் அழிவரென்பதனான்ற கின்றமையின், இதுவும் அவ்வலங்காரம். வேலாழ் முகத்தவென்ற பாடம் ஒதுவாருமுளர்: வேற்படை குளித்தமுகத்தவாயின் அதுவும்கரியடுதற்கு வாய்முடிதலின், அது பாடமன்மை யறிக. இவை மூன்றுபாட்டானும் பகைவரைச் சார்தலாகாவிடனும் சார்ந்தழிப்படும் இழுக்குக் கூறப்பட்டன.

(ப-ரை) கண்ணஞ்சா-பாகர்க்கு அடங்காதவையும், வேலாண்முகத்த-வேலையுடைய ஆள்களைக்கோத்த கொம்பையுடையவையும், (ஆகிய) களிறுகளை, காலாழ் - கால்புதைகிற இயல்பினதாகிய, சகரில் - சேற்றுநிலத்தில், (அகப்பட்டவிடத்து) கரி கரிகளானவை, அடும்-கொல்லும் எ-று.

(க-ரை) கரிகள் யானைகளைச் சேற்றுநிலத்தில் வெல்லும் என்பதாம்.

(வி-ரை) முகம் கொம்புக்கு ஆகுதலால் ஆகுபெயர். ஆண்மையும் பெருமையும் உடையராயினும் தகாத இடத்திலே சென்றால் அவைகளாற் பயனின்மை யிவ்வும் எளியரால் அழிகென்பதை தோன்ற கிற்கையால் இதவும் அவ்வணி. [இவை மூன்று பாட்டாலும் பகைவரைச் சார்தலாகாத இடமும், சார்ந்தவிடத்தை உண்டாகும் இழுக்கும் சொல்லப்பட்டன.]

'கண்ணஞ்சா' - இது பகைக்கு அடக்காமையை உணர்த்திற்று. 'வேலான்' என்றது வேல்வீரரை. 'காலாழ்கனரின்' என்றது யானையின்கால் பதியக்கூடிய சேற்றில் அகப்பட்ட இடத்தை என்பதாம். 'கரி' இது அப்பிராணியும் வெல்லும் என்பதற்கு ஏதுத்தக் கூறப்பெற்றது. (10)

50-ம் அதி - இடனறிதல் - முற்றிற்று.

51-ம் அதிகாரம்—தெரிந்துதெளிதல்

(பரி-உரை) அஃதாவது: அமைச்சர் முதலாயினாரைப் பிறப்புக் குணம் அறிவென்பனவற்றையுஞ் செயலையுங் காட்சி கருத்த ஆகமமென்னும் அளவைகளான் ஆராய்ந்த தெளிதல். வலிமுதன் மூன்றும் அறிந்த பகைமேற் செல்வானுக்குத் தானை வினைபுற்றச் செய்தற்பொருட்டும் அறைபோகாமற் பொருட்டும் இது வேண்டுதலின் அவற்றின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: மந்திரி முதலானவர்களைப் பிறப்பு, குணம், அறிவு, எனப்படுகின்றவைகளையும்; செய்கையையும், காட்சி, கருத்த, ஆகமம் என்கிற பிரமாணக்களினாலே ஆராய்ந்த தெளிதல். வலிமுதலாகிய மூன்றையும் அறிந்த பகைமேற் செல்வானுக்குச் சேனை கருத்தோ தொழில் செய்தற்கும் எதிரிடாமைக்கும், இத்தெளிவு வேண்டுதலால் அவைகளின்பின் வைக்கப்பட்டது.

அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
நிறந்தெரிந்து தேறப் படும்.

(பரி-உரை) அறம் பொருள் இன்பம் உயிர் அச்சம்-அரசனுர் தெளியப் படுவான் ஒருவன், அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டாக் வரும் அச்சமுமென்னும், கான்கின் நிறம் தெரிந்த தேறப்படும் - * உபதை கான்கின் நிறத்தான் மனவியல்பாராய்ந்தால் பின்பு தெளியப்படும் எ-று.

அவற்றுள், அறவுபதையாவது-புரோகிதரையும் அறவோரையும் விட்டு அவரால் இவ்வரசன் அறவோனன்மையின் இவனைப்போக்கி அறனும் உரிமையு முடையாளொருவனை வைத்தற்கெண்ணினம், இதுதான் யாவர்க்கு மினையத்தது. கின் கருத்தென்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல்

* உபதை-சோதனை.

பொருளுபதையாவது - சேனைத்தலைவனையும் அவனோடு இயைந்தாரையும் விட்டு, அவரான் இவ்வரசன் இவறன் மாலையனாகலின் இவனைப் போக்கிக் கொடையும் உரிமையுமுடையானொருவனை வைத்தற்கெண்ணினம், இது தான் யாவர்க்கு மியைந்தது நின்கருத்தென்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது - தொன்றுதொட்டு உரிமையொடு பயின்றானொரு தவமுது மகளை விட்டு, அவளால் உரிமையுள் இன்னாள் நின்னைக்கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்க வேண்டுமென்று என்னை விடுத்தாள், அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும் பொருளும் கைகூடுமெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்சவுபதை யாவது ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவனில் லின்கண் அழைப்பித்து இவர் அறைபோவானெண்ணற்குக் குழீஇயினா ரென்று தான் காவல்செய்து, ஒருவனால் இவ்வரசன் நம்மைக்கொல்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச்செய்து நமக்கினிய அரசனொருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கு மியைந்தது நின்கருத்தென்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கினுந் திரிபிலனாயவழி எதிர்காலத்துந் திரிபிலனெனக் கருத்தளவையாற் றெரியப்படுமென்பதாம். இவ்வடநூற் * பொருண்மையை யுட்கொண்டு இவரோதிய தறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்சமெனப் பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே யுரைத்தார்.

(ப-ரை) (அரசனாலே தெளியப்படுவோ னொருவன்) அறம் - அறமும், பொருள்-பொருளும், இன்பம் - இன்பமும், உயிரச்சம்-உயிர்ப்பொருட்டு வரும் அச்சமும், நான்கின் - (என்கின்ற) உபதை நான்கினது, திறம்-திறத்தினால், தெரிந்து - (மனவியல்பு) ஆராய்ந்து, தேறப்படும் - (பின்பு) தெளியப்படுவான் எ-று.

(க-ரை) ஒருவன் அறம்பொரு ளின்ப முயிரச்சமென்கிற நான்கின் திறத்தாற் றேர்ந்துகொள்ளப்படுவான் என்பதாம்.

(வி-ரை) அவற்றுள் அறவுபதையாவது: புரோகிதரையும், அறவோ ரையும் விட்டு அவரால் இவ்வரசன் அறமில்லாதவனா யிருக்கையால் இவனை நீக்கி அறமும் உரிமையும் உடைய ஒருவனை வைத்தற்கு எண்ணினோம். இதுதான் யாவர்க்கும் சம்மதம்; உன்கருத்து என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது: சேனைத்தலைவரையும் அவரோடு சம்பந்தமானவரையும் விட்டு, அவரால் இவ்வரசன் உலுத்தனாயிருக்கையால் இவனை நீக்கி ஈகையும் உரிமையும் உடைய வொருவனை வைத்தற்கு எண்ணி னோம். இதுதான் யாவர்க்கும் சம்மதம்; உன்கருத்து என்னவென்று சபதத் தோடு சொல்லுவித்தல். இன்பவுபதையாவது: ஆதிதொட்டு உரிமையோடு மூகிய ஒருதவ முதுமகளைவிட்டு அவளால் உரிமையுள இன்னாள் உன்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூடவேண்டுமென்று என்னை விடுத்தாள் அவளைக்

* இவ்வுபதை நான்கும் சாணக்கியரது அர்த்தசாஸ்திரம் முதற்பகுதி 10-ம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளன.

கடமையானுல் உனக்கு அதிக சுகமாத்திரமல்லாமல் அதிக நிலையும் கிடைக்குமென்ற சபதத்தோடு சொல்லுவித்தல். உயிராச்சவுபதையாவது: ஒரு நிமித்தத்தின் மேல்வைத்த ஒருமந்திரியினுலே மற்றவரை அவன் வீட்டில் அழைப்பித்த இவர் எதிரிடும்படி எண்ணற்குக் கூட்டினுரென்ற தான் காவல்செய்த ஒருவனுல் இவ்வாசன் கர்மைக்கொல்ல எண்ணுகின்ற மையால் முந்தி நாம் அவனைக்கொன்ற நமக்கு இனிய ஒருவனை வைத்தல் இக்கே யாவர்க்கும் சம்மதம், உன்கருத்த என்னவென்று சபதத்தோடு சொல்லுவித்தல். இந்நான்கினும் வேறுபடாதவனுயிருந்தவிடத்தப் பிற்காலத் திலும் வேறுபடானென்ற கருத்தனவையால் தெளியப்படுவானென்பதாம்.

'அறம்பொருளின்ப முயிர்ச்சம்' என்பவற்றின் இடையே எண்ணும்மை கன் செய்யுள் விகாரத்தாற் றொக்கன. 'அச்சம்' என்ற இடத்து, 'உயிர்ப் பொருட்டான்' வரும் அச்சம் என உயிர்ப்பொருட்டான் என்பது வருவித்த உரைசெய்யப்பெற்றது. 'தேறப்படும்' என்றது தெளிந்த கோடலை. 'தெளிதல்' ஆவது பிறப்பு, குணம், அறிவு செயலைத் தெளிதல். 'பிறப்பு' ஆவது உயர்குடிப்பிறப்பை. 'குணம்' ஆவது நற்குணங்களை. 'அறிவு' ஆவது நல்லறிவை. 'செயல்' ஆவது நற்செயலை. (1)

குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

(பரி-உரை) குடிப் பிறந்து-உயர்ந்த குடியிற்பிறந்து, குற்றத்தின் நீங்கி-குற்றங்களினின்று நீங்கி, வடுப் பரியும் நாண் உடையான் கட்டே தெளிவு-நமக்கு வடு வருங்கொலென் றஞ்சாகிற்கும் நாணுடையவன் கண்ணே அரசனது தெளிவு எ-று.

குற்றங்களாவன - மேல் அரசனுக்குச் சொல்லியவகை * ஆறும், மடி, மறப்பு, பிழைப்பென்றிவைமுதலாயவுமாம். நாண் இழிதொழில்களின் மனஞ் செல்லாமை. இவை பெரும்பான்மையும் தக்கோர்வாய்க்கேட்டலாகிய ஆகம அளவையாற் றெரிவன. இந்நான்குமுடையவனையே தெளிகவென்பதாம்.

(ப-ரை) தெளிவு-(அரசனது) தெளிவானது, குடிப்பிறந்த - (உயர்ந்த) குடியிலே பிறந்த, குற்றத்தின்-குற்றங்களினின்றும், நீங்கி-நீங்கி, வடு-(நமக்குப்) பழுதைவருமோவென்ற, பரியும்-அஞ்சி நிற்கும், நாணுடையான் கட்டே-நாணமுடையவனிடத்தே எ-று.

(க-ரை) நற்குடியிற் பிறந்த குற்றத்திலிருந்து நீங்கி நிற்கு நாணமுடையவனை யரசன் தெளிந்துகொள்வான் என்பதாம்.

(வி-ரை) குற்றங்களாவன: குற்றங்கடிதலதிகாரத்திற் சொல்லப்பட்டவைகளாம். நாணம் - இழிதொழில்களிலே மனஞ்செல்லாமை. இஃது மிகுதியாக லோக்கியர்வாயிற் கேட்டலாகிய ஆகம பிரமாணத்தினுலே தெரிவன. இந்நான்குமுடையவனையே தெளிகவென்பதாம்.

* 431-432-ம் குறள்களிற் காண்க.

'குடிப்பிறத்தல்' என்றதில் உயர்குடியிற்பிறத்தல் என 'உயர்' என்ற சொல் வருவித்த உரை. 'பரிதல்' ஆவது அஞ்சுதல். 'கட்டே' என்றதில் ஈற்று ஏகாரம் தேற்றேகாரம்.

(2)

அரியகற் றூசற்றூர் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

(பரி-உரை) அரிய கற்ற ஆசு அற்றூர் கண்ணும்-கற்றற்கரிய நூல்களைக் கற்று மேற்சொல்லிய குற்றங்களற்றூர்மாட்டும், தெரியுங்கால் வெளிறு இன்மை அரிது - நுண்ணிதாக ஆராயுமிடத்து வெண்மையில்லாமை அரிது என்றவாறு.

வெண்மை-அறியாமை; அஃது இவர்மாட்டுளதாவது மனத்தது கிலேயாமையான் ஓரோவழியாகலின், தெரியுங்காலென்றூர். காட்சியளவையாற் றெரிந்தால் அதவு மில்லாதாரே தெளியப்படுவரென்பது குறிப்பெச்சம். இவ்வளவைகளான் இக்குணமும் குற்றமும் தெரிந்த குணமுடையாரைத் தெளிகவென்பது இவை மூன்று பாட்டானும் கூறப்பட்டது.

(ப-உரை) அரிய-(கற்றற்கு) அருமையாகிய நூல்களை, கற்று-கற்று, ஆசு-(முன்சொல்லப்பட்ட) குற்றங்கள், அற்றூர்கண்ணும் - அற்றவரிடத்தும், தெரியுங்கால் - (நட்பமாக) ஆராயுமிடத்து, வெளிறு - அறியாமையான, இன்மை-இல்லாதிருக்கை, அரிதே-அருமையே எ-று.

(க-உரை) அரியநூல்களைக் கற்றுக் குற்றமற்றவரிடத்தும் அறியாமையில்லாதிருக்கை யரிது என்பதாம்.

(வி-உரை) அறியாமை-இவரிடத்து மனகிலையாமைபற்றி ஓரோவிடத்து உண்டாமாதலால் தெரியுங்காலென்றூர். காட்சிப்பிரமாணத்தினால் தெளிந்தால் அக்குற்றமும் இல்லாதாரே தெளியப்படுவரென்பதாம். [இப்பிரமாணங்களாலே குணமும் குற்றமும் தெரிந்த குணமுடையவரைத் தெளிகவென்பது இம்மூன்று பாட்டாலும் சொல்லப்பட்டது.]

'அரியகற்று' என்ற இடத்து 'அரிய' என்றது கற்றற்கு அருமையாகிய நூல்களைக் குறித்தது. 'ஆசு' என்றது மடி, மறவி, பிழைப்புக்களை. 'கண்ணும்' என்றதன் ஈற்று உம்மை எண்ணும்மை. 'தெரியுங்கால்' என்றது நுண்ணிதின் ஆயும் இடத்து என்பதாம். 'வெண்மை' என்றது வெளிற்று அறிவை; அதாவது பேதைமைத்தன்மையை. 'தெரியுங்கால்' இதில் 'கால்' ஏழன்உருபு.

(3)

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

(பரி-உரை) குணம் நாடி - குணங் குற்றங்களுள் ஒன்றே புடையார் லகத்தின்மையின் ஒருவன் குணங்களையாராய்ந்து, குற்றமும் நாடி-அவைக்

குற்றக்கூறு மாராய்ந்து, அவற்றுள் மிகை நாடி-பின் அவ்விருபகுதியுள்ளு மிக்கவற்றை யாராய்ந்து, மிக்க கொளல் - அவனை அம்மிக்கவற்றானே யறிக எ-று.

மிகையுடையவற்றை மிகையென்றார். அவையாவன - தலைமையானும் பன்மையானுமே உயர்ந்தன. அவற்றானறிதலாவது குணமிக்கதாயின் விரைந்து குரியனென்றும், குற்றமிக்கதாயின் அல்லனென்றுமறிதல். குணமே புடையார் உலகத்தரியாகலின், இவ்வகை யாவரையுந் தெளிகவென்பது இதனுற் கூறப்பட்டது.

(ப-ரை) (குணக்குற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகில் இல்லாமையால்) குணன்-குணங்களை, நாடி-ஆராய்ந்து, குற்றமும்-மற்றைக் குற்றங்களையும், நாடி-ஆராய்ந்து, அவற்றுள்-(பின்பு) அவ்விருவகையுள்ளும், மிகை-மிகுந்தவைகளை, நாடி - ஆராய்ந்து, மிக்க - மிகுந்தவைகளால், கொளல்-(அவரை) அறியக்கடவன் எ-று.

(க-ரை) அரசன் ஒருவன் குணங்களையுங் குற்றங்களையும் ஆராய்ந்து கொள்ளக்கடவன் என்பதாம்.

(வி-ரை) மிகுதல் தலைமையினுலாவது பன்மையினுலாவது உயர்தல். மிகுந்தவைகளால் அறிதலாவது-குணமிகுந்திருந்தால் தொழிலுக்கு உரியவ ரென்றும், குற்றமிகுந்திருந்தால் அல்லரென்றும் அறிதல். [குணமாத்திர முடையவர் உலகத்தில் அரியராகலால் இவ்வகை யாவரையும் தெளிக வென்பது இதனுற் சொல்லப்பட்டது.]

'குணநாடி' சண்டு 'குணம்' என்றது சற்குணங்களை. இது சிறப்புப் பற்றி அடையின்றி நின்றது. 'குற்றமும்' இதில் உம்மை இறந்ததழீஇய எச்சவும்மை. 'மிகை' என்றது மிகுதியை. அதாவது ஆராயுங்கால் குணம் மிகுந்ததோ, குற்றம் மிகுந்ததோ என்று ஆராய்ந்து கண்டு குணம் மிகுந்திருந்தால் குணமாகவும், குற்றம் மிகுந்திருந்தால் குற்றமாகவும் தேர்தல் வேண்டும் என்பதாம். என்னை? உலகில் கடவுளைத்தவிர்த்து குற்றத்தி னீங்கி குணமாகவே உள்ள தொன்றில்லை யாதலினுலென்க. (4)

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங் கருமமே கட்டளைக் கல்.

(பரி-உரை) பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் கட்டளைக்கல்-பிறப்புக்குணம் அறிவென்பனவற்றுன் மக்களெய்தும் பெருமைக்கும் மற்றைச் சிறுமைக்கும் உரைகல்லாவது, தத்தம் கருமமே-தாந்தாஞ் செய்யுங்கருமமே, பிறிதில்லை எ-று.

இஃது ஏகதேசவுருவகம். மக்களது பெருமையுஞ் சிறுமையுந் தப்பாமலறிய லுறவார்க்குப் பிற கருவிகளுமுளவாயினும், முடிந்தகருவி செயலென்பது தேற்றேகாரத்தாற் பெற்றும். இதனுற் குணங் குற்றங்களாடற்குக் கருவி கூறப்பட்டது.

(ப-ரை) (குடிப்பிறப்பு குணம் அறிவு என்றவைகளால் மனிதரைடையும்) பெருமைக்கும் - பெருமையாகிய (பொன்னின் மாற்றறிதற்கும்,) எனைச் சிறுமைக்கும்-மற்றைச் சிறுமையாகிய (பொன்னின் மாற்றறிதற்கும்,) கட்டளைக்கல் - உரைக்கல்லாவது, தந்தங்கருமமே - தங்கள் தங்கள் செயல்களே எ-று.

(க-ரை) மனிதர் பெருமையுஞ் சிறுமையு மறிய முரைகல்லாவது அவரவர் தொழில்களாம் என்பதாம்.

(வி-ரை) மனிதருடைய பெருமை சிறுமைகளைத் தப்பாமல் அறிய வேண்டியவர்களுக்கு முடிவானசாதனம் அவர்செயலே என்றற்கு கருமமே எனத் தேற்றகாரத்தோடு சொல்லினர். பெருமை சிறுமைகளைப் பொன் னெனுமல் கரு ம் ஒன்றைக் கட்டளைக் கல்லெனலால் எகதேசவுருவகமணி. [இதனுற் குணகுற்றங்களை அறிதற்குக் கருவி சொல்லப்பட்டது.]

'பெருமைக்கும் எனைச் சிறுமைக்கும்' என்றதன்கண் நின்ற உம்மைகள் எண்ணும்மைகள். 'கருமம்' என்றது செய்தொழிலை. 'கருமமே' இதன் சுற்ற ஏகாரம் தேற்றேகாரம். 'கட்டளைக்கல்' என்றது உரைகல்லை. 'உரைகல்' என்றது பொன்களின் மாற்று அறியப் பொன்னை உறைத்த அறியும் கல்லை. இது பொன்னின் மாற்றை உரைப்பதாதலின் இப்பெயர்த்தாயிற்று.

அற்றுரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி.

(பரி-உரை) அற்றுரைத் தேறுதல் ஓம்புக-சுற்றமில்லாரைத் தெளிதலை யொழிக; அவர் மற்றப் பற்று இலர் - அவர் உலகத்தோடு தொடர்பிலர், பழிநாணுர்-ஆகலாற் பழிக்கஞ்சார் எ-று.

பற்றிலரென்பதனால் சுற்றமென்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பன வொழிதற்கும் புகழ்வன செய்தற்கு மேதுவாகிய உலகநடை யியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப்படாரென்பதாம்.

(ப-ரை) அற்றுரை - சுற்றமில்லாதவரை, தேறுதலோம்புக - தெளிதலொழியக்கடவன், அவர் - அவர், மற்றப்பற்றிலர் - உலகத்தோடு சம்பந்தமிலாதலால், பழி-பழியை, நாணுர்-அஞ்சார் எ-று.

(க-ரை) அரசன் சுற்றமற்றவரைத் தெளிதலொழியக்கடவன் அவருலகத்தோ டொட்டாகவராதலாற் பழிக்கஞ்சார் என்பதாம்.

(வி-ரை) உலகத்தாரால் பழிக்கப்படுவன எவை அவை விடுதற்கும் புகழப்படுவன எவை அவை செய்தற்கும், காரணமாகிய உலகநடையினியல்பு சுற்றமில்லாதவர்க்கு இல்லாமையால் அவரை நம்பலாகாதென்பதாம்.

'அற்றுரை' என்றது சுற்றத்தார் முதலியவர்கள் இல்லாதாரை. 'ஓம்புக' என்றது அற்றுரைத் தேர்தலினின்றும் உன்னைக் காத்துக்கொள்க என்பதாம். அதாவது சுற்றமற்றவர்களைத் தேறற்க என்பதாம். சுற்றம்

யாதமில்லாதவர் பழிக்குநாணுர் ஆகலின் 'மற்றவர் பற்றிலர் நாணுர்பழி' என்றார். (6)

காதன்மை கந்தா வ்றிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்.

(பரி-உரை) காதன்மை கந்தா அறிவு அறியார்த்தேறுதல்-அன்புடைமை பற்றுக்கோடாகத் தமக் கறியவேண்டுவன அறியாதாரைத் தெளிதல், பேதைமை எல்லாம் தரும் - அரசனுக்கு எல்லா அறியாமையையுங் கொடுக்கும் எ-று.

தன்னெடு அவரிடைகின்ற அன்புபற்றி அரசன் அறிவிலார்மேல் வினையை வைப்பின், அஃது அவரறிவின்மையாற் கெடும்; கெட்டால் அவர்க்குளதேயன்றி வினைக்குரியாரை அறியாமை, மேல்வினை யறியாமை முதலாக அவனுக்கு அறியாமை பல்வு முளவாமென்பதாம்.

(ப-ரை) காதன்மை - அன்புடைமையானது, கந்தா-பற்றுக்கோடாக, அறிவு - (தமக்கு) அறியவேண்டுமவைகளை, அறியார் - அறியாதவரை, தேறுதல்-தெளிதலானது, பேதைமையெல்லாம்-அறிவில்லாமை யெல்லாம், தரும்-(அரசனுக்குத்) தரும் எ-று.

(க-ரை) அறியவேண்டியவைகளை யறியாதவர்களை யரசன் தெரிந்து கொள்ளுதலவனுக் கறிவின்மை யெல்லாந்தரும் என்பதாம்.

(வி-ரை) தன்னெடு அவரிடத்திருக்கின்ற அன்புபற்றி அரசன் அறிவில்லாதவரைத் தொழில் செய்யவைத்தால் அத்தொழில் அவரறிவில்லாமையினாலே கெடும்; கெட்டால் அவர்க்குள்ளது மாத்திரமல்லாமல் தொழிலுக்குரியவரை அறியாமையும், மேல்வினைவை அறியாமையும், முதலாக அவனுக்கு அறியாமைகள் பலவும் உண்டாகும் என்பதாம்.

'காதன்மை' என்றது ஈண்டு அன்புடைமையை. இது யாதானும் ஒரு சிறுகாரணம்பற்றி எய்தும் அன்பைக் குறித்தது. 'கந்து' என்றது ஈண்டுப்பற்றுக்கோடெனப் பொருள் செய்யப்பெற்றது. 'அறிவறியார்' என்றது தாம் அறியவேண்டிய அறம் நீதி அறிவு முதலிய அரசியற்கு அறியவேண்டியவைகளை என்பதாம். 'பேதைமை' என்றது அறியாமையை. 'பேதைமை எல்லாந்தரும்' என்றது அறியாமையால் எய்தக்கூடிய எல்லா எதங்களையும் தரும் என்பதாம். 'தேறுதல்' இது தல்விகுதி பெற்ற தொழிற்பெயர். (7)

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
நீரா விடும்பை தரும்.

(பரி-உரை) பிறனைத் தேரான் தெளிந்தான் - தன்னை டியைபுடைய வல்லாதானைப் பிறப்பு முதலியவற்றுளும் செயலாளும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு, வழிமுறை நீரா இடும்பை தரும் - அத்தெளிவு தன்வழி முறையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும் எ-று.

இயைபு-தன்குடியொடு தொடர்ந்த மரபு. இதனானே அதவும் வேண்டு மென்பதை பெற்றும். தெளிதல் - அவன்கண்ணே வினையை வைத்தல். அவ்வினை கெடுதலால் தன் குலத்துப் பிறந்தாரும் பகைவர் கைப்பட்டுக் கோய் விடுவரென்பதாம். கான்கனுருபு விகாரத்தாற் றொக்கது.

(ப-ரை) பிறனை-தன்னோடு சம்பந்தமில்லாதவனை, தேரான் - (பிறப்பு முதலானவைகளாலும் செய்கையாலும்) ஆராய்ந்திலனாகி, தெளிந்தான். தெளிந்த அரசனுக்கு, (அத்தெளிவு) வழிமுறை-(அவன்) சந்ததிமுறையினும், நீரா-நீங்காத, இடும்பை-துன்பத்தை, தரும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) தன்னோடு சம்பந்த மில்லாதவனைத் தெரிந்துகொண்ட அரசனுக்கு அத்தெளிவு துன்பந்தரும் என்பதாம்.

(வி-ரை) சம்பந்தம் - தன்குடியோடு தொடர்ந்த மரபு. தெளிதல்-அவனிடத்தே தொழிலை வைத்தல். அத்தொழில் கெடுதலால் அவன் குலத்திற் பிறந்தவரும் பகைவர் கைப்பட்டுக் கோவரென்பதாம்.

'பிறனை' என்றது தன்குலத்தொடு சம்பந்தப்படாத அயலானை என்பதாம். 'தெளிந்தான்' என்றது தனக்கு அமைச்சு முதலிய சுற்றமாகத் தெளிந்துகொண்ட அரசனுக்கு என்பதாம். 'வழிமுறை' என்றது தெளிந்த அரசனுக்குமட்டுமன்று அவன் சுற்றத்தார்க்கும் என்னும் பொருளதாம். 'நீராவிடும்பை' என்றது நீர்த்தொழிக்கற்கு ஒண்ணாத துன்பத்தை. (8)

தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்.

(பரி-உரை) யாரையும் தேராது தேறற்க - யாவரையும் ஆராயாது தெளியாதொழிக; தேர்ந்தபின் தேறும் பொருள் தேறுக - ஆராய்ந்தபின் தெளியும்பொருட்களை ஐயுறுதொழிக எ-று.

தேறற்கவென்ற பொதுமையான் ஒருவினைக்கண்ணுங் தெளியலாகா தென்பதை பெற்றும். ஈண்டுத் தேறுகவென்றது தாற்பரியத்தால் ஐயுறவினை விலக்கின்மே னின்றது. தேறும்பொருளென்றது அவரவ ராற்றற்கேற்ற வினைகளை. பொருள்-ஆகுபெயர்.

(ப-ரை) யாரையும்-யாரையும், தேராது-ஆராயாமல், தேறற்க தெளியா திருக்கக்கடவன், தேர்ந்தபின்-ஆராய்ந்தபின், தேறும்பொருள்-தெளியப்படு பொருள்களை, தேறுக-தெளியக்கடவன் எ-று.

(க-ரை) அரசன் யாரையுமாராயாமல் கொள்ளாதிருக்கக்கடவன் ஆராய்ந்தபின் கொள்ளக்கடவன் என்பதாம்.

(வி-ரை) தேறற்கவென்ற பொதுப்படச் சொன்னமையால் யாதொரு தொழிலும் தெளியலாகாதென்பது பெறப்பட்டது. இக்கே தேறுக வென்றதற்கு ஐயுறுதிருக்கக்கடவ னென்பது கருத்து. தேறும்பொருள்-அவரவர் வல்லமைக்கு ஏற்றதொழில்கள். பொருள்-ஆகுபெயர்.

'தேறற்க' இது முன்னிலை ஒருமை வினைமுற்று. 'யாரையும்' இது யாவினை அடியாகப் பிறந்த பெயர், இது எத்தகையவரையும் என்னும் பொருளதாம். 'தேறல' என்றது ஐயுறுதல தேறல என்பதாம். ஐயுறுதல என்பது வருவித்து உரைக்கப்பெற்றது. (9)

தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

(பரி-உரை) தேரான் தெளிவும் - அரசன் ஒருவனை யாராயாது தெளிதலும், தெளிந்தான்கண் ஐயுறவும்-ஆராய்ந்து தெரிந்தவன்மாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும், தீரா இடும்பை தரும் - அவனுக்கு நீங்காத துன்பத்தைக் கொடுக்கும் எ-று.

வினை வைத்தபின் ஒருதலை காணுதலைவத்து ஐயுறுமாயின், அதனை அவனறிந்து இனி இது கில்லாதென்னுங் கருத்தான் அவ்வினையை கெடுத்துவிடும், அதுவேயன்றிப் பகைவரால் எளிதிற் பிரிக்கவும்படும், ஆகலாற் றெளிந்தான்கண் ஐயுறவு மாகாதாயிற்று. தெளிவிற்கெல்லை கூறியவாறு. இவை யைந்தபாட்டானும், தெளியப்படாதார் இவரென்பதூஉம், அவரைத் தெளிந்தாற்படு மிழுக்கும், தெளிவிற்கெல்லையும் கூறப்பட்டன.

(ப-உரை) (அரசன்) தேரான் - (ஒருவனை) ஆராய்ந்திலனாகி, தெளிவும்-தெளிதலும், தெளிந்தான்கண் - ஆராய்ந்து தெளியப்பட்டவனிடத்தே, ஐயுறவும்-சந்தேகப்படுதலும், தீராவிடும்பை - நீங்காத துன்பத்தை, தரும்-(அவனுக்குக்) கொடுக்கும் எ-று.

(க-உரை) அரசன் ஒருவனை யாராய்ந்திலனாகித் தெளிதலும், ஆராயப்பட்டவனிடத்தி லையங்கொள்ளுதலும், அவனுக்குத் துன்பந்தரும் என்பதாம்.

(வி-உரை) அரசன் ஒருவனிடத்தை ஒருதொழிலை வைத்தபின் ஒருதலையும் காணுமல் சந்தேகப்படுவானாயின் அதனை அவன் அறிந்து இனி இது கில்லாதென்னுங் கருத்தால் அத்தொழிலைத் தளரவிடுவான், அதுவல்லாமல் பகைவராலே எளிதிலே பிரிக்கவும் படுவான், ஆதலால் தெளியப்பட்டவனிடத்தே சந்தேகப்படுதலும் ஆகாதாயிற்று. தெளிவுக்கு அளவுசொல்லியபடி. [இவை ஐந்து பாட்டாலும் தெளியப்படாதவர் இவரென்பதும், அவரைத்தெளிந்தால் உண்டாகும் இழுக்கும், தெளிவுக்கு அளவும் சொல்லப்பட்டன.]

'தெளிவும்' 'ஐயுறவும்' என்றதன் ஈற்று உம்மைகள் எண்ணும்மைகள். ஆராயாத ஒருவனை தெளிந்து கொள்ளாதே தெளிந்துகொண்டான் அவன்மாட்டு ஐயுறவுகொள்ளாதே கொண்டால் நீக்கற்கரிய துன்பம்வரும் என்பதாம். (10)

51-ம் அதி - தெரிந்துதெளிதல் - முற்றிற்று.

52-ம் அதிகாரம்—தெரிந்துவினையாடல்

(பரி-உரை) அஃதாவது: அத்தெளியப்பட்டானை அவர் செய்யவல்ல வினைகளை யறிந்து அவற்றின்கண்ணே யாளுந் திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளக்கும்.

(உரை) அஃதாவது: அத்தெளியப்பட்டவரை அவர் செய்யவல்ல தொழில்களை அறிந்து அவைகளிலே ஆளுந்திறம். அதிகாரமுறைமையும் இதனாலே விளக்கும்.

நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா னாளப் படும்.

(பரி-உரை) நன்மையும் தீமையும் நாடி-அரசன் முதற்கண் ஒருவினையைத் தன்கண் வைத்தால், அதன்கண் ஆவனவும் ஆகாதனவுமாய செயல்களை யாராய்ந்தறிந்து, நலம் புரிந்த தன்மையான்-அவற்றுள் ஆவனவற்றையே விரும்பிய வியல்பினையுடையான், ஆளப்படும்-பின் அவனுற் செய்த வினைகளிலே யாளப்படும் எ-று.

தன்னையுரிமை யறிதற்பொருட்டு அகம்புறங்கட்கு நடுவாயதோர் வினையை அரசன் தன்கண் வைத்தவழி அதன்கண் ஆஞ்செயல்களையே செய்தவன் பின்னும் அவ்வியல்பினனுதல்பற்றி அகமாய வினைக்கண்ணே யாளப்படுவனென்பதாயிற்று. புரிந்தவென்ற இறந்தகாலத்தான், முன்னுரிமை யறிதற்பொருட்டு வைத்த வினையாதல் பெற்றும்.

(ப-ரை) (அரசன் முதலிலே ஒரு தொழிலைக்கொடுத்தால்) நன்மையுந் தீமையும்-(அத்தொழிலிலே) ஆமனவையும் ஆகாதனவையும் ஆகிய செயல்களை, நாடி-ஆராய்ந்தறிந்து, நலம்-(அவைகளுள்) ஆமனவைகளையே, புரிந்த-விரும்பிய, தன்மையான்-இயல்பையுடையவன், (பின்னே அவ்வாசனாலே) ஆளப்படும்-(பிறந்த தொழில்களிலே) ஆளப்படுவான் எ-று.

(க-ரை) நன்மை தன்மைகளறிந்து ஆமனவைகளைச் செய்பவன் அரசனாலாளப்படுவான் என்பதாம்.

(வி-ரை) தன்னை உரிமை அறிதற்பொருட்டு உள்ளுக்கும் புறம்புக்கும் நடுவாகிய ஒருதொழிலை அரசன் தன்னிடத்தே வைத்தவிடத்து அதிலே ஆஞ்செயல்களையே செய்தவன் பின்னும் அத்தன்மையனாகுதல்பற்றி உள்ளாகிய தொழிலிலே ஆளப்படுவா னென்பதாயிற்று. [புரிந்தவென்ற இறந்தகாலத்தினாலே சொல்லுதலால் முன்னே உரிமையை அறிதற் பொருட்டு வைத்த தொழிலென்பது பெறப்பட்டது.]

'நன்மை' என்றது ஆக்கந்தருவனவற்றை. 'தீமை' என்றது ஆக்கந் தராத அழிவுதருவனவற்றை. 'நன்மையுந்தீமையும்' என்பவற்றின் உம்மைகள் எண்ணும்மைகள். 'நாடி' என்றது நன்கு ஆராய்ந்து அறிந்து என்பதாம். 'நலம்' என்றது ஆக்கந்தரும் நல்வினைகளை. 'ஆளப்படும்' என்றது பிறகு பிறந்த வினைகள்செய வெப்பெறுவன் என்பதாம். (1)

ஆவாரி பெருக்கி வளம்படுத் தற்றவை
யாராய்வான் செய்க வினை.

(பரி-உரை) வாரி பெருக்கி-பொருள் வருவாயில்களை விரியச்செய்து, வளம் படுத்த-அப்பொருளாற் செல்வங்களை வளர்த்து, உற்றவை ஆராய் வான்-அவ்வாயில்கட்கும் பொருட்குஞ் செல்வங்கட்கு முற்ற இடையூறுகளை காடோறு மாராய்ந்து நீக்கவல்லவன், வினை செய்க - அரசனுக்கு வினை செய்க எ-று.

வாயில்களாவன-மேல் இறைமாட்சியுள் இயற்றலும் என்புழி யுரைத் தனவும், உழவு, பசுக்காவல், வாணிகமென்னும் வார்த்தையுமாம். செல்வங் களாவன-ஈண்டுப் பொருளு மின்பமுமாக உரைக்கப்பட்டன. இடையூறு களாவன-அரசன் வினைசெய்வார், சுற்றத்தார், பகைவர், கள்வரென் றிவரான் வரு கலிவுகள்.

(ப-ரை) வாரி-(பொருள்கள்) வரும்வழிகளை, பெருக்கி-விரியச்செய்து, வளம்படுத்த - (அப்பொருள்களாலே) செல்வங்களை வளர்த்து, உற்றவை- (அவ்வரும் வழிகளுக்கும், பொருள்களுக்கும், செல்வங்களுக்கும்) வந்த இடையூறுகளை, ஆராய்வான் - (இனந்தோறும்) ஆராய்ந்து நீக்கவல்லவன், வினை-தொழிலை, செய்க-(அரசனுக்குச்) செய்யக்கடவன் எ-று.

(க-ரை) பொருள் வரும்வழியை விருத்திசெய்து பொருளை வளர்த்து இடையூறுகளை யாராய்பவன் அரசனுக்குத் தொழில் செய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) வரும் வழிகளாவன-மூன் இறைமாட்சி அதிகாரத்தால் இயற் றலு மென்றவிடத்து உரைக்கப்பட்டவையும், உழவு, பசுக்காவல் வாணிகம் என்பவையும் ஆம். செல்வங்களாவன-அங்கே பொருளும், இன்பமும் ஆச் சொல்லப்பட்டவைகள். இடையூறுகளாவன-அரசன் தொழில்செய்வோர், சுற்றத்தார், பகைவர், கள்வர் என்கிற இவர்களால் வரும் கலிவுகள்.

'வாரி' என்றது பொருள்வரும் வழிகளை. 'பெருக்கி' என்றது பொருள் வருவதற்காய வழிகளை அறவெறிகோடாது அதிகப்படுத்தலால். 'வளம் படுத்த' என்றது செல்வம் உண்டாக்கி என்பதாம். 'உற்றவை' என்றது பொருள்வரும் வழிகளுக்கும், ஈட்டியசெல்வத்திற்கும் மற்றுமுள்ள பொருள் களுக்கும் எய்தக்கூடிய, எய்திய இடையூறுகளை. 'ஆராய்வான்' என்றது ஈண்டு ஆராய்ந்து அறிந்து அவ் இடையூறுகளை நீக்குபவன் என்பதுபொருள். இதில் 'வான்' விகுதி. (2)

அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

(பரி-உரை) அன்பு-அரசன்மாட்டன்பும், அறிவு-அவனுக்காவன அறிவு மறிவும், தேற்றம் - அவை செய்தற்கட் கலக்காமையும், அவாவின்மை

அவற்றுட் பொருள் கையுற்றவழி அதன்மேல் அவாவின்மையுமாகிய, இந் நான்கும் நன்கு உடையான்கட்டே தெளிவு - இந்நான்கு குணக்கோவும் நிலைபெறவுடையான் மேலதே வினையை விட்டிருக்குந் தெளிவு எ-று.

இந்நான்கு நன்குடைமை இவன் செய்கின்ற வினைக்கண் யாதும் மாராய வேண்டுவதில்லையென்று அரசன் தெளிதற்கேதுவாகலின், அஃதே அதன் பிறப்பிடனுக்கிக் கூறினார். இவை மூன்றுபாட்டானும் ஆடற்குரியான இலக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) அன்பு - (அரசனிடத்தே) அன்பும், அறிவு - (அவனுக்கு ஆமவைகளை) அறியும் அறிவும், தேற்றம் - (அவைகளைச் செய்யுமிடத்தைக்) கலங்காமையும், அவாவின்மை - (அவைகளாலே பொருள் கைகூடியவழி அதன்மேல்) அவாவில்லாமையும் ஆகிய, இந்நான்கும்-இந்நான்கு குணக் கோவும், நன்குடையான்கட்டே - நன்றாக உடையவனிடத்தே, தெளிவு- (தொழிலேவிட்டிருக்கும்) தெளிவு எ-று.

(க-ரை) அன்பு, அறிவு, தெளிவு, ஆசையில்லாமை இந்நான்கு முடை யவனிடத்தே யரசனுக்குத் தெளிவுண்டாம் என்பதாம்.

(வி-ரை) இந்நான்கையுமுடைமை அவன் செய்கின்ற தொழிலிலே சிறிதும் ஆராயவேண்டுவ தில்லையென்று அரசன் தெளிதற்கு ஏதுவாகலால் அஃதே அதன் பிறப்பிடமாக்கினர். [இவை மூன்றுபாட்டாலும் ஆளுதற்கு உரியவனது இலக்கணஞ் சொல்லப்பட்டது.]

'அன்பு' என்றது அரசனிடத்து வைக்கும் அன்பை. 'அறிவு' என்றது அரசனுக்கு உறுதிபயப்பன, நன்மைபயப்பனவற்றை அறியும் அறிவை. 'தேற்றம்' என்றது அரசனுக்கு ஆவன செய்வதிற் கலங்காதிருக்கும் நிலைமையை. 'அவாவின்மை' என்றது அரசனது உடமையாகத் தன்கையிற் கொட்டிய பொருளிடத்து ஆசை இல்லாதிருத்தலை. இதன்கண் என்உம்மைகள் தொக்கு நின்றன. 'நான்கும்' இதன் ஈற்று உம்மை முற்றும்மை. 'கட்டே' இதன்கண் நின்ற ஏகாரம் தேற்றப்பொருளது. (3)

எனைவகையாற் றேரியக் கண்ணும் வினைவகையான்
வேறுகு மாந்தர் பலர்.

(பரி உரை) எனைவகையான் தேறியக்கண்ணும் - எல்லா வகையானும் ஆராய்ந்து தெளிந்து வினை வைத்தபின்னும், வினைவகையான் வேறுகும் மாந்தர் பலர் - அவ்வினையி னியல்பானே வேறுபடு மாந்தர் உலகத்துப் பலர் எ-று.

* கட்டியங்காரன்போல அரசவின்பத்தினை வெஃகி விகாரப்படுவ தல்லது அதனைக் குற்றமென் றொழிந்து தம்மியல்பினிற்பார் அரியராகலின்,

* கட்டியங்காரன்-சிவகசிந்தாமணியிற் கூறப்படும் சச்சந்தனென்னும் அரசனுடைய மந்திரி.

வேறுகு மாந்தர் பலசென்றூர். வினை வைப்பதற்குமுன் எல்லாக் குணக்களு முடையராய் வைத்தபின் விசாரப்படுவாரை இடையாயதொரு வினையை வைத்தறிக்க ஒழிக்கவென்பதாம். இதனுன் ஒருவகையா லொழிக்கப் படுவார் இவரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) எனைவகையால் - எல்லாவகைகளாலும், தெரியக்கண்ணும் (ஆராய்ந்த) தெளிந்த (தொழிலேவைத்த) பின்னும், வினைவகையான் - அத் தொழிலியல்பினுலே, வேறுகும் - வேறுபடுகின்ற, மாந்தர்-மனிதர், பலர்- (உலகத்திலே) பலர் எ-று.

(க-ரை) எவ்வகையா லறிந்தவிடத்தும் தொழில்வகையால் வேறுபடு மனிதர் பலர் என்பதாம்.

(வி - ரை) அரசவின்பத்தை விரும்பி வேறுபடுவோரேயல்லாமல் அதனைக் குற்றமென்றுவிட்டுத் தம்மியல்பிலே நிற்பவர் அரியராதலால் வேறுகுமாந்தர் பலசென்றூர். தொழில் வைப்பதற்குமுன்னே எல்லாக் குணக்களுமுடையவராகி வைத்தபின் வேறுபடுவோரை, கடுவானதோர் தொழிலேவைத்த அறிந்த கீக்கவேண்டு மென்பதாம். [இதனுல் ஒருவகை யால் ஒழிக்கப்படுவார் இவரென்பது சொல்லப்பட்டது.]

'எனைவகையால்' இது எகாவினுவடியாகப் பிறந்த பெயர். எல்லாவகை யாலும் என்னும் பொருளது. 'வினை' என்றது அரசனுல் ஏவப்பெற்ற தொழில் பற்றிய வகையால் என்பதாம். 'வேறுகும்' என்றது மனமாறுபா டடைதலே வினைவகையால் வேறுபடு மாந்தரின் மிகுதிபற்றி 'பலர்' என்றூர். (4)

அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

(பரி-உரை) அறிந்த ஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் - செய்யுமுபா யங்களே யறிந்த செயலானும் இடையூறுகளானும் வருந்தன்பங்களைப் பொறுத்த முடிவுசெய்ய வல்லானையல்லது, வினைதான் சிறந்தான் என்ற ஏவற்பாற்றன்று - வினைதான் இவன் கம்மாட்டு அன்புடையனென்ற பிறனொருவனே யேவுமியல்புடைத்தன்று எ-று.

செய்கிற்பாற்கென்பது வேற்றுமைமயக்கம். அறிவாற்றல்களானல்லது அன்பான் முடியாதென இதனுல் வினையினதியல்பு கூறப்பட்டது.

(ப-ரை) வினைதான்-தொழில்தான், அறிந்த-(செய்யும் உபாயங்களை) அறிந்த, ஆற்றி-(செயலாலும், இடையூறுகளாலும் வருந்தன்பங்களைப் பொறுத்த, செய்கிற்பாற் கல்லால் - (முடிவு) செய்யவல்லவனே யல்லது, சிறந்தானென்று-(இவனிடத்து) அன்புடையவனென்று, ஏவற்பாற்றன்று (வேறொருவனை) ஏவுதற்றன்மையை உடையதன்று எ-று.

(க-ரை) தொழில் செய்யு முபாயங்களே யறிந்த முடிப்பவனுக்கல்லது தொழிலே மற்றவனுக்குக் கொடுக்கலாகாது என்பதாம்.

(வி-ரை) அறிவாற்றல்களாலல்லது அன்பினாலே முடியாதென இதனால் தொழிலினது இயல்பு சொல்லப்பட்டது.

'ஆற்றி' என்றது ஈண்டு தான் செய்யும் தொழிலில்வரும் இடையூறுகளைப் பொறுத்தல் என்பதாம். 'செய்கிற்பாற்கு' இதில் 'கில்' இடைநிலை. இதன்கண் நின்ற ஈற்றான்கன் உருபு 'கு' இரண்டன்பொருளில் மயக்கிநின்ற வேற்றுமைமயக்கம்.

(5)

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல்.

(பரி-உரை) செய்வானை நாடி - முதற்கண்ணே செய்வான நிலக்கணத்தை யாராய்ந்து, வினை நாடி - பின் செய்யப்படும் வினையினதியல்பை யாராய்ந்து, காலத்தோடு எய்த உணர்ந்து செயல்-பின் அவனையும் அதனையுங் காலத்தோடு படுத்துப் பொருந்த வறிந்து அவனை அதன்கண் ஊடலைச் செய்க எ-று.

செய்வானது இலக்கணமும் வினையினது இயல்பும் மேலே கூறப்பட்டன. காலத்தோ டெய்தவுணர்தலாவது - இக்காலத்து இவ்விலக்கணமுடையான் செய்யின் இவ்வியல்பிற்றாய வினை முடியுமென்று கூட்டி யுணர்தல்.

(ப-ரை) செய்வானை - செய்பவனிலக்கணத்தை, நாடி - (முன்னே) ஆராய்ந்து, வினை - (செய்யப்படுந்) தொழிலினியல்பை, நாடி-(பின்னே) ஆராய்ந்து, (அதன்பின்பு அவனையும் அதனையும்) காலத்தோடு - காலத்துடனே (சேர்த்து), எய்த-பொருந்த, உணர்ந்து-அறிந்து, செயல்-(அவனை அத்தொழிலினிடத்து ஆளுதல்) செய்யக்கடவன் எ-று.

(க-ரை) அரசன் தொழில் செய்பவனை யறிந்து பின்னத்தொழிலை யறிந்து அவனைத் தொழிலில் வைத்தானக்கடவன் என்பதாம்.

(வி - ரை) செய்பவனிலக்கணமும், தொழிலினியல்பும் முன்னே சொல்லப்பட்டன. காலத்தோடு பொருந்த அறிதலாவது - இக்காலத்தில் இவ்விலக்கணமுடையவன் செய்தால் இவ்வியல்புடைத்தாகிய தொழில் முடியுமென்று கூட்டி அறிதல்.

'செய்வானை' என்றது அரசன் எவற்றொழில் செய்பவனை. 'செய்வானை நாடி' என்றது வினை செய்பவனின் அறம், பொருள், இன்பம், உயிர் அச்சம் என்னும் நான்கின் திறங்களைத் தெரிந்து அவனின் குடிப்பிறப்பு, குற்றத்தின் நீக்கியதன்மை, வடுப்பரியும் நாணுடைமை முதலியவற்றையும் அறிந்து கூடலை. 'வினைநாடி' என்றது ஆக்கந்தருவினையை நாடி என்பதாம். 'காலத்தோடு' என்றது தமக்கு ஊதியம் பயக்கும் காலத்தை.

(6)

இனனை யிதனை லிவன்முடிக்கு மென்றாய்ந்
தனனை யவன்கண் விடல்.

(பரி-உரை) இதனை இதனால் இவன் முடிக்கும் என்ற ஆய்ந்த. இவ்வினையை இக்கருவியால் இவன் முடிக்கவல்லனெனக் கூறபடுத் தாராய்ந்த, அதனை அவன்கண் விடல்-மூன்றும் தம்மு ளியைந்தவழி அவ்வினையை அவன்கண்ணே விடுக எ-று.

கருவி தினைவரும், பொருளும் முதலாயின. வினைமுதலும் கருவியும் வினைபுந் தம்முளியைதலாவது ஒன்றோடு ஏனையவிரண்டற்கும் பொருத்தமுண்டாதல். விடுதல்-அதற்கு அவனை யுரியனாக்குதல்.

(ப-உரை) இதனை - இத்தொழிலை, இதனால்-இச்சாதனத்தால், இவன் முடிக்குமென்ற - இவன்முடிக்க வல்லவனென்று, ஆய்ந்த - (கூறபடுத்தி) ஆராய்ந்த, (இம்மூன்றும் தம்முள் ஒத்திருந்தவிடத்த) அதனை-அத்தொழிலை, அவன்கண்-அவனிடத்தே, விடல்-விடக்கடவன் எ-று.

(க-உரை) அரசன் இத்தொழிலை யிச்சாதனத்தா லிவன் முடிக்கவல்லவ னென்றறிந்த அத்தொழிலை யவனிடத்த விடக்கடவன் என்பதாம்.

(வி-உரை) சாதனம்-தினைவரும், பொருளும் முதலானவை. செய்பவனும், சாதனமும், தொழிலும், தம்முள் ஒத்திருத்தலாவது - ஒவ்வொன்றோடு மற்றவை யிரண்டுக்கும் பொருத்தம் உண்டாகுதல். விடுதல் - அவனை அத் தொழில் செய்தற்கு உரியவனாக்குதல்.

'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்த' இவ்வடி முற்ற மோனை. 'அதனை' என்றது அரசன் கருதிய 'இதனை' என முற்குறிப்பு அவ்வினையை என்பதாம். 'அவன்' என்றது ஆய்ந்த தெளிந்த அவனிடத்த என்பதாம். 'அவன்கண்' இதில் 'கண்' ஏழன்உருபு. (7)

வினைக்குரிமை நாடிய பின்றை யவனை யதற்குரிய னாகச் செயல்.

(பரி-உரை) வினைக்கு உரிமை நாடிய பின்றை - ஒருவனை அரசன் தன் வினை செய்தற்குரியனாகவாராய்ந்த தணிந்தால், அவனை அதற்கு உரியனாகச் செயல்-பின் அவனை அதற்குரியனுமாறு உயாச் செய்க எ-று.

உயாச் செய்தலாவது-அதனைத் தானே செய்தலுமுடிக்கு மாற்றலுடைய னாக்குதல். அது செய்யாக்காலுங் கெடுமென்பது கருத்து.

(ப-உரை) (ஒருவனை அரசன்) உரிமை - (தனது) தொழில் செய்தற்கு உரியவனாயிருக்கையை, நாடியபின்றை-ஆராய்ந்த தணிந்தபின்பு அவனை, அதற்கு-அத்தொழில் செய்தற்கு, உரியனாக-உரியவனாக, செயல் (உயாச்) செய்யக்கடவன் எ-று.

(க-உரை) அரசன் ஒருவனைத் தொழிற்குரியவனாயிருக்கையை யறிந்த அவனை யத்தொழிற்குரியவனாகச் செய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) உயரச்செய்தல் - அதனைத்தானே செய்துமுடிக்க வல்லவனுக்கல். அது செய்யாதவிடத்தும் கெடுமென்பது கருத்து.

'பின்றை' இது பின்னை என்பதன் விகாரம். 'அவனை' என்றது வினைக்கு உரியவன் என்று தெளிந்துகொள்ளப்பெற்றவனைச் சுட்டிநின்றது. 'அதற்கு' என்றது அரசன் கருதிய அவ்வினைக்கு என்பதாம். (8)

**வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றுக
நினைப்பானை நீங்குந் திரு.**

(பரி-உரை) வினைக்கண் வினை உடையான் கேண்மை-எப்பொழுதுந் தன்வினையின்கண்ணே முயறலையுடையான் அவ்வுரிமையாற் றனக்குக் கேளா யொழுகுகின்ற தன்மையை, வேறுக நினைப்பானைத் திரு நீக்கும்-அது பொருதார் சொற்கேட்டு அரசன் மாறுபடக் கருதுமாயின், திருமகள் அவனைவிட்டு நீக்கும் எ-று.

கேளா யொழுகுகின்ற தன்மையாவது-தான் பிறனுய் நில்லாது கேளிர் செய்யு முரிமை யெல்லாஞ் செய்தொழுகுதல். அவனை அவமதிப்பாகக் கொண்டு செறக் கருதுமாயிற் பின்னொருவரும் உட்பட்டு முயல்வாரில்லையாம். ஆகவே, தன் செல்வங் கெடுமென்பது கருத்து. இந்நான்குபாட்டானும் ஆடற்குரியானை யாளுந்திறங் கூறப்பட்டது.

(ப-ரை) வினைக்கண்-(தனது) தொழிலினிடத்தே, வினையுடையான்-(எப்போதும்) முயற்சியையுடையவன், (அவ்வுரிமையால்) கேண்மை-(தனக்குச்) சுற்றமாய் நடக்கின்ற தன்மையை, (அது பொருதவராது சொல்லுக்கேட்டு) வேறுக-மாறுபட, நினைப்பானை - நினைக்கும் அரசனை, திரு-தேவி, நீக்கும்-நீக்குவாள் எ-று.

(க-ரை) தனது தொழிலிலே முயற்சியுடையவனை வேறுக நினைக்கு மரசனைச் சீதேவி நீக்குவாள் என்பதாம்.

(வி-ரை) சுற்றமாய் நடக்கின்ற தன்மையாவது-தான் பிறனுய் நில்லாமல் சுற்றத்தார் செய்யும் உரிமையை எல்லாம் செய்து நடத்தல். அவனை அவமதித்துக் கோபிக்க நினைப்பானையின் பின் ஒருவரும் உட்பட்டு முயல்வாரில்லாமல் செல்வங் கெடுமென்பது கருத்து. [இந்நான்குபாட்டானும் ஆளுதற்கு உரியவனை ஆளுந் திறம் சொல்லப்பட்டது.]

'வினைக்கண்' என்றது அரசன் ஏவிய தொழிலினிடத்து என்பதாம். 'வினையுடையான்' என்றது அத்தொழில் செய்பவன் என்பதாம். 'கேண்மை' என்றது கேளிர்போல வினைசெய்யுந் தன்மையை. 'வேறுக' என்றது கேளிர்போலக் கொள்ளாது அதற்கு மாறுகப் பகைபோல் என்பதாம். 'நினைப்பானை' இது வினையாலணையும் பெயர்; நினைக்கும் அரசனை என்பது பொருளாம். (9)

நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

(பரி-உரை) வினை செய்வான் கோடாமை உலகு கோடாது. வினை செய்வான் கோடாதொழிய உலகுங்கோடாது; மன்னன் நாடோறும் நாடுக. ஆதலான் அரசன் அவன் செயலை நாடோறு மாராய்க எ-று.

அஃதொன்றனைப் மாராயவே அதன் வழித்தாய உலகமெல்லா மாராய்ந்தானும், அதனல் அவனுரிமை அழியாமற் றன்னுள்ளே யாராய்ந்த போதுக வென்பதாம். இதனுன் ஆண்டவழிச் செய்வது கூறப்பட்டது.

(ப-ரை) வினைசெய்வான்-தொழில் செய்பவன், கோடாமை - கோணுதிருக்க, உலகு-உலகமானது, கோடாது-கோணுது, (ஆதலால்) நாடோறும்-தினந்தோறும், மன்னன் - அரசன், நாடுக - (அவன்செயலை) ஆராயக் கடவன் எ-று.

(க-ரை) தொழில் செய்பவன் கோணுதிருக்க உலகங் கோணுது. ஆகையா லரசனவனை நாள்தோறு மாராயக்கடவன் என்பதாம்.

(வி-ரை) அவ்வொன்றனையும் ஆராயவே அதன்வழிப்பட்ட உலகெல் லாம் ஆராய்ந்தவனுவன்; அதனல் அவனுரிமை அழியாமல் தன்னுள்ளே ஆராய்ந்த கொண்டு வரக்கடவ னென்பதாம். [இதனல் ஆண்டவிடத்துச் செய்வது சொல்லப்பட்டது.]

'நாடோறும்' இதில் 'தோறும்' தினமும் என்னும் பொருள் தந்தது. 'நாடுக' இது ஆராய்ந்து அறிந்துகொண்டிருக்க என்பதாம். 'மன்னன்' இது அரசன் என்னும் பொருளது. இது 'மன்' என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயர். மன்னுவுலகத்து மன்னிய புகழோன் ஆதலின் மன்னன் என்ற பெயர் அரசற்கு ஆயிற்று; இது காரணப்பெயர். 'வினைசெய்வான் கோடாமை கோடாதுலகு' என்றது வேற்றுப் பொருள் வைப்பு. (10)

52-ம் அதி - தெரிந்துவினையாடல் - முற்றிற்று.

53-ம் அதிகாரம்—சுற்றந்தழால்

(பரி-உரை) அஃதாவது: அரசன் தன் கிளைஞரைத் தன்னி னீங்காமல் அணைத்தல். வினை செய்வாரைக் கூறி எனைச் சுற்றங் கூறுகின்றுராகவின் இது தெரிந்த வினையாடலின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: அரசன் தனது சுற்றத்தாரைத் தன்னைவிட்டு நீங்காதிருக்கும்படி தழுவுதல். தொழில் செய்வோரைச் சொல்லி மற்றைச் சுற்றத்தாரைச் சொல்லுதலால் இது தெரிந்த வினையாடலின் பின் வைக்கப்பட்டது.

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

(பரி-உரை) பற்ற அற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் - ஒருவன் செல்வம் தொலைந்த வறியனாயவழியும் விடாது தம்மோடு அவனிடைப் பழைமையை எடுத்துக் கொண்டாடு மியல்புகள், சுற்றத்தார் கண்ணே உள. சுற்றத்தார்மாட்டே உளவாவன எ-று.

நெட்புள்ளமை வறியனாயவழிப் பாராட்டப்படாமை விளக்கி நின்றது. பழைமை பற்றறுக்காலத்தைத் தமக்குச் செய்த உபகாரம். பிறசெல்லாம் அவன் பற்றற்றபொழுதே தாமும் அவனோடு பற்றறுவராகலின், எகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இதனாற் சுற்றத்தை சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) பற்றற்ற கண்ணும்-(ஒருவன்) செல்வம் தொலைந்த வறுமைப் பட்ட விடத்தும், பழைமை - (தம்மோடு அவனிடத்து உண்டாகிய) பழைமையை, பாராட்டுதல் (எடுத்துக்கொண்டாடு) மியல்புகள், சுற்றத்தார் கண்ணே-உறவினரிடத்தே, உள-உளவாகும் எ-று.

(க-ரை) ஒருவன் செல்வப் பற்றற்றவிடத்தும், பழமை கொண்டாடுதல் சுற்றத்தாரிடத்தே யுண்டாம் என்பதாம்.

(வி-ரை) பற்றற்ற கண்ணும் என்பதினும்மை வறியனான விடத்துப் பாராட்டாமையை விளக்கினின்றது. பழமை-செல்வத்தோடிருந்தகாலத்திலே தமக்கு செய்த உபகாரம் சுற்றத்தார் பாராட்டுதலால் தெளிவித்தலால் எகாரம் தேற்றேகாரம். [இதனாலே சுற்றத்தினை சிறப்பு சொல்லப்பட்டது.]

'பற்று' சண்டு பற்றப்படுவதாகிய செல்வத்தைக் குறித்தது. 'பற்றறுதலாவது' வறுமையுறல். 'பழமை' என்றது செல்வநிலையில் இருந்து ஒன்று செய்த தன்மையை உணர்த்திற்று. (1)

விருப்பறுச் சுற்ற மியையி னருப்பறு
வாக்கம் பலவுந் தரும்.

(பரி-உரை) விருப்பு அறுச் சுற்றம் இயையின் - அன்பறுத சுற்றம் ஒருவற்கு எய்துமாயின், அருப்பு அறு ஆக்கம் பலவும் தரும்-அஃது அவற்குக் கொடுத்தல் அறுத செல்வங்கள் பலவற்றையுங் கொடுக்கும் எ-று.

உட்பகையை நீக்குதற்கு விருப்பறுச் சுற்றமென்றும், தானே வளர்க்குமொருதலையாய செல்வத்தை நீக்குதற்கு அருப்பறுவாக்கமென்றும், விசேடித்தார். தொடைநோக்கி விகாரமாயிற்று. இயையினென்பது அதனதருமை விளக்கி நின்றது. ஆக்கமென்பது ஆகுபெயர். பலவுமென்றது அங்கங்கள் தோறுநோக்கி. பலர்கூடி வளர்த்தலின், அவை மேன்மேற் கொள்க்குமென்பது கருத்து.

(ப-ரை) விருப்பறா-அன்பு நீங்காத, சுற்றம்-சுற்றமானது, இயையின்-(ஒருவனுக்குக்) கிடைக்குமாயின், (அது) அருப்பறா - கிளைத்தல் நீங்காத, ஆக்கம்பலவும்-பலசெல்வங்களையும், தரும்-(அவனுக்குக்) கொடுக்கும் எ-று.

(க-ரை) ஒருவனுக்கு அன்புள்ள சுற்றங் கிடைத்தா லது பல செல்வங் கொடுக்கும் என்பதாம்.

(வி-ரை) உட்பகையாயினோரை நீக்குதற்கு விருப்பறாச் சுற்றமென்றும், தானேவளர்க்கும் செல்வத்தை நீக்குதற்கு அருப்பறாவாக்கமென்றும், அடை கொடுத்துச் சொல்லினார். இயையினென்பது-அதுகிடைத்தலினது அருமையைக் காட்டி நின்றது. பலவுமென்றது அங்கங்கள் ஆறனையும் பலர் கூடி வளர்த்தலால் அவை மேலுமேலுங் கிளைக்குமென்பது கருத்து.

'விருப்பு' என்றது அன்பை. 'சுற்றம்' என்றது கிளைஞரை. 'அருப்பு' இது 'அரும்பு' என்பதன் வலித்தல் விகாரம். 'ஆக்கம்' என்றது படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறங்கங்களாகிய செல்வத்தை. 'பலவும்' என்றதன் ஈற்று உம்மை முற்றும்மை. (2)

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று.

(பரி உரை) அளவளாவு இல்லாதான் வாழ்க்கை - அச்சுற்றத்தோடு நெஞ்சு கலத்தலில்லாதவன் வாழ்க்கை, குள வளாக் கோடு இன்றி நீர் நிறைந்தற்று-குளப்பரப்புக் கரையின்றி நீர் நிறைந்தாற்போலும் எ-று.

சுற்றத்தோ டென்பது அதிகாரத்தான் வந்தது. நெஞ்சுகலப்புத் தன்னளவும் அதனளவும் உசாவுதலான் வருவதாகலின், அளவளாவென்பது ஆகுபெயர்: வாழ்க்கை யென்றதுஉம் அதற்கேதுவாய செல்வங்களை. நிறைதலென்னும் இடத்து நிகழ்பொருளின் றொழில் இடத்தின்மேனின்றது. சுற்றமில்லாதான் செல்வங்கள் தாங்குவா ரின்மையிற் புறத்துப் போமென்பதாம்.

(ப-ரை) அளவளாவில்லாதான்-(அச்சுற்றத்தோடு) நெஞ்சுகலத்தலில்லாதவனது, வாழ்க்கை-வாழ்வானது, குளவளா-குளப்பறப்பானது, கோடின்றி. கரையில்லாமல், நீர் நிறைந்தற்று-நீர் நிறைந்தாற்போலும் எ-று.

(க-ரை) சுற்றத்தாரோடு கலவாதவன் வாழ்வானது கரையில்லாக் குளநீர் நிறைந்தாற்போலும் என்பதாம்.

(வி-ரை) சுற்றம் அதிகாரத்தாலே வருவிக்கப்பட்டது. வாழ்க்கைக்கு ஏதுவான செல்வங்களை வாழ்க்கை என்றார். சுற்றமில்லாதவனது செல்வங்கள் தாங்குவாரில்லாமையால் புறத்திலே போமென்பதாம்.

'அளவளாவல்' இது நெஞ்சுகலத்தல் என்னும் பொருளது. 'கோடு' என்றது குளத்திற்கு உரியதாகிய கரையை. 'வாழ்க்கை' என்றது செல்வ வாழ்வை. 'குளவளாக் கோடின்றி நீர் நிறைந்தற்று' இது உபமானம். (3)

சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

(பரி-உரை) செல்வம் பெற்றத்தான் பெற்ற பயன் - செல்வம் பெற்றவதனால் ஒருவன் பெற்ற பயனுவது, சுற்றத்தான் தான் சுற்றப்பட ஒழுகல்-தன் சுற்றதனால் தான் சூழப்படும்வகை அதனைத் தழீஇ யொழுகுதல் எ-று.

பெற்ற என்பதனுள் அகாரமும் அதனுனென்பதனுள் அன் சாரியையும் தொடைநோக்கி விகாரத்தாற் றொக்கன. இவ்வொழுக்குப் பகையின்றி அரசாடற்கேதுவாகலின், இதனைச் செல்வத்திற்குப் பயனென்றார். இவை மூன்றுபாட்டானும் சுற்றந்தழால் செல்வத்திற் கேதுவும் அாணும் பயனுமா மென்பது கூறப்பட்டது.

(ப-ரை) செல்வம்-செல்வத்தை, பெற்றத்தால்-பெற்ற அதனல், பெற்ற பயன்-(ஒருவன்)-பெற்ற பயனுவது, (தன்) சுற்றத்தால்-உறவினல், தான் சுற்றப்பட-தான் சூழப்படும்வகை, ஒழுகல்-(அச்சுற்றத்தைத) தழுவி நடத்தலாம் எ-று.

(க-ரை) செல்வம் பெற்றத்தினல் வரும் பயனுவது சுற்றத்தைக் காத்தலாம் என்பதாம்.

(வி-ரை) இச்சுடக்கை பகையில்லாமல் அரசாளுதற்கு ஏதுவாகலால் இதனைச் செல்வத்திற்குப் பயனென்றார். [இவை மூன்றுபாட்டாலும் சுற்றத்தைத் தழுவுதல் செல்வத்துக்கு ஏதுவும், அாணும், பயனும் ஆமென்பது சொல்லப்பட்டது.]

'சுற்றத்தால் சுற்றப்பட வொழுகல்' என்றது சுற்றஞ் சூழ வாழ்தலை. இதனைச் 'சுற்றத்திற்கு அழகு சூழவிருத்தல்' என்றதுங் காண்டு நோக்கற்பால தொன்றும். 'பெற்றத்தால்' இது பெற்றவத்தால் என்பதன் விகாரம். இது செய்புள் ஏதுகை நயம் நோக்கித் தொக்கது. (4)

கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

(பரி-உரை) கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின்-ஒருவன் சுற்றத்திற்கு வேண்டுவன கொடுத்தலையும் இன்சொற் சொல்லுதலையும் வல்லனுயின், அடுக்கிய சுற்றத்தான் சுற்றப்படும்-தம்மிற் றொடர்ந்த பலவகைச் சுற்றத்தானே சூழப்படும் எ-று.

இரண்டும் அளவறிந்தாற்றுதலரிதென்பது தோன்ற ஆற்றி னென்றார். தம்மிற் றொடர்தலாவது - சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமுமாய் அவற்றுற் பிணிப்புண்டு வருதல். இவ்வுபாயங்களை வடநூலார் தானமுஞ் சாமமுமென்ப.

(ப-ரை) (சுற்றத்துக்கு) கொடுத்தலும்-(வேண்டுமவைகளைக்) கொடுத்தலையும், இன்சொலும்-இனியசொற் சொல்லுதலையும், ஆற்றின்-(ஒருவன்

செய்ய) வல்லவனுயின், அடக்கிய - (தம்மிலே) தொடர்ந்த, சுற்றத்தால்- (பலவகைச்) சுற்றத்தாலும், சுற்றப்படும்-சூழப்படுவான் எ-று.

(க-ரை) கொடுத்தலும் இனியசொற் சொல்லுதலும் ஒருவன் செப்தா லவன் சுற்றத்தாற் சூழப்பட வாழ்வான் என்பதாம்.

(வி-ரை) அவ்விரண்டும் அளவறிந்து செய்தல் அரிதென்பது தோன்ற ஆற்றினென்றார். தம்மிலே தொடர்தலாவது உறவினது உறவும், அதனது உறவும் ஆகச் சம்பந்தப்பட்டுவருதல்.

'கொடுத்தலும்' என்றது பொருட்கொடையை. 'இன்சொல்' என்றது செவிக்கும் மனதக்கும் இன்பம் பயப்பதாய் நற்பயன் தருவதாகிய இனிய பயன்மொழியை. 'ஆற்றின்' இது கொடுக்கவும் சொல்லவும் வல்லனுதல் என்னும் பொருளதாம். 'அடுக்கிய சுற்றம்' என்றது ஒவ்வொருவர் கால்பற்றி வந்தணுகி நெருங்கும் சுறறத்தாரை. அதாவது சுற்றத்தாரின் சுற்றத் தாராய், அவர்தம் சுற்றத்தாராய், அவர்தம் சுற்றத்தாராய் வந்து சேரும் சுற்றத்தார்களை. 'சுற்றப்படும்' என்றது சூழ்ந்திருக்கப்பெறுதலை. (5)

பெருங்கொடையான் பேணுன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

(பரி-உரை) பெருங்கொடையான் வெகுளி பேணுன் - ஒருவன் மிக்க கொடையை புடையனுமாய் வெகுளியை விரும்பானுமாயின், அவனின் மருங்கு உடையார் மாநிலத்து இல் - அவன்போலக் கூளபுடையார் இவ்வுலகத்தில்லை எ-று.

மிக்ககொடை-ஒன்றுனும் வறுமையெய்தாமற் கொடுத்தல். விரும்பாமை இஃது அரசற்கு வேண்டுவதொன்றென்று அளவிறந்து செய்யாமை.

(ப-ரை) (ஒருவன்) பெருங்கொடையான்-மிகுந்த கொடையை புடைய வனும், வெகுளி-கோபத்தை, பேணுன்-விரும்பாதவனும், (ஆனுல்) அவனின்- அவன்போல், மருங்குடையார் - சுற்றமுடையவர், மாநிலத்து - இப்பெரிய உலகத்தில், இல்-இல்லை எ-று.

(க-ரை) மிகுந்த கொடையுங் கோபமில்லாமையு முடையவனுகி லவன் போற் சுற்றமுடையவரில்லை என்பதாம்.

(வி - ரை) மிகுந்தகொடை - ஒன்றினுலும் வறுமைப்படாதிருக்கக் கொடுத்தல். விரும்பாமை இது அரசர்க்கு வேண்டுவதென்று அளவுகடந்து செய்யாமை.

'கொடை' இது 'கொடு' என்னும் பகுதியடியாகப் பிறந்தபெயர். 'பெருங்கொடை' என்றது வறுமைதீரக் கொடுக்குங்கொடையை. 'பேணுன் வெகுளி' இது 'வெகுளிபேணுன்' என்பது மொழிமாறி நின்றது; அதாவது கோபத்தை விரும்பாதவனுகி என்பதாம். 'அவனின்' இதில் 'இன்' உருபு ஒப்புப்பொருளில் வந்தது. 'மருங்கு' என்றது ஈண்டு சுற்றத்தாரை. 'இல்' இது 'இல்லை' என்பதன் கடைக்குறை விகாரம். (6)

காக்கை கரவா கரைந்துண் ணு மாக்கமு
மன்ன நீ ரார்க்கே யுள.

(பரி-உரை) காக்கை கரவா கரைந்து உண்ணும்-காக்கைகள் தமக்கிரை யாயின கண்டவழி மறையாது இனத்தை யழைத்த அதனோடுங்கூட வுண்ணு கிற்கும்; ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள-சுற்றத்தானெய்தும் ஆக்கங்களும் அப்பெற்றித்தாய இயல்பினை யுடையார்க்கே உளவாவன எ-று.

அவ் வாக்கங்களாவன - பகையின்மையும், பெருஞ்செல்வமுடைமையும் முதலாயின. எச்சவும்மையான் அறமும் இன்பமுமேயன்றிப் பொருளு மெய்த லென்பத பெறுதம். அப்பெற்றித்தாய இயல்பென்றது தாம் நுகர்வன வெல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல்.

(ப-ரை) காக்கை - காகங்கள், (தமக்கு இரையைக் கண்டவிடத்து) கரவா-மறைக்காமல், கரைந்து-(இனத்தை) அழைத்து, உண்ணும்-(அதனோடு கூடி) உண்ணும், ஆக்கமும் - (சுற்றத்தினாலாகிய) பெருக்கங்களும், அன்ன நீரார்க்கே - அப்படிப்பட்ட இயல்பையுடையவர்க்கே, உள - உள வாகும் எ-று.

(க-ரை) காக மிரைகிடைத்தா லினத்தை யழைத் துண்ணுதல்போல இச்செய்கை நல்லினத்தார்க் குளவாம் என்பதாம்.

(வி-ரை) அப்பெருக்கங்களாவன - பகையில்லாமை பெருஞ் செல்வ முடைமை முதலானவை எச்சவும்மையால் அறமும் இன்பமும் அன்றி பொருளும் பெறவென்பதாயிற்று. அப்படிப்பட்ட வியல்பு தம்மால் அனுபவிக்கப்பட்டவைகளெயெல்லாம் அவரும் அனுபவிக்கும்படி வைத்தல்.

'காக்கை கரவா கரைந்துண்ணும்' இது வேற்றப்பொருள் வைப்பணி. 'கரைந்து' இது சுற்றத்தை இனத்தை அழைத்து என்ற பொருளதாம். 'ஆக்கம்' என்றது சுற்றத்தாரால் எய்தற்பாலதாகிய செல்வத்தை. 'அன்ன' இது உவமச்சொல்; அத்தகைய என்னும் பொருளது. 'நீரார்' இதில் நீர் குணத்தை புணர்த்திற்று. 'நீரார்க்கே' இதில் சுற்று ஏகாரம் தேற்றப் பொருளது. (7)

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

(பரி-உரை) பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்-எல்லா ரையும் ஒரு தன்மையராக நோக்காது அரசன் . தத்தந் தகுதிக்கேற்ப நோக்குமாயின், அதுநோக்கி வாழ்வார் பலர்-அச்சிறப்பு நோக்கி அவனை விடாது வாழுஞ் சுற்றத்தார் பலர் எ-று.

உயர்ந்தார் நீங்குதல் நோக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடாதொழுகுதல் நோக்கி வரிசை நோக்கை விதித்தார். இக்ஙான்கு பாட்டானுஞ் சுற்றந் தழுவு முபாயங் கூறப்பட்டது.

(ப-ரை) வேந்தன் - அரசனுனவன், பொதுநோக்கான் - எல்லாரையும் ஒருதன்மையாக நோக்காமல், வரிசையா - அவரவர் தகுதிக்கு ஏற்க, நோக்கின் - நோக்குவானுயின், அதுநோக்கி - அச்சிறப்புநோக்கி, வாழ்வார். (அவனை விடாத) வாழுஞ் சுற்றத்தார், பலர்-அனேகர் எ-று.

(க-ரை) அரசனவரவர்ச்குத் தகுதியறிந்த நடப்பானுயிலதனைவிடாத வாழுஞ் சுற்றத்தார் பலர் என்பதாம்.

(வி-ரை) உயர்ந்தார் நீக்குதல் குறித்த பொதுநோக்கை விலக்கி எல்லாரும் விடாதொழுகுதல் குறித்த வரிசைநோக்கை விதித்தார். [இவை கான்குபாட்டாலும் சுற்றந் தழுவுதற்கு உபாயம் சொல்லப்பட்டது.]

'பொதுநோக்கான்' என்றது சுற்றத்தார் எல்லாரையும் பொது நோக்காக நோக்காது அவ்அவர் தம் சிறப்புக்கேற்ப சிறப்புரிமைதான் நோக்கல்வேண்டும் என்பதை குறித்து நின்றது. 'வரிசை' என்றது அவரவர் தகுதிகளை. 'நோக்கின்' இது சிறப்புத்தன்னை நோக்குமாயின் என்பதாம். 'அது' என்றது வரிசையால் நோக்கும் அத்தன்மையைச் சுட்டி நின்றது. 'பலர்' என்றது பல சுற்றத்தாரை. (8)

தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

(பரி-உரை) தமராகித் தற்றுறந்தார் சுற்றம் - முன் தமராய் வைத்துத் தன்னேடு அமராத யாதானுமொரு காரணத்தால் தன்னைப் பிரிந்துபோயவர் பின்னும் வந்த சுற்றமாதல், அமராமைக் காரணம் இன்றி வரும் - அவ் வமராமைக் காரணம் தன்மாட்டில்லையாகத் தானே புனதாம் எ-று.

அமராமைக் காரணமின்றி யென்றதனுன், முன் அஃதண்டாய்த் துறத்தல் பெற்றும்: அஃதாவது அரசன் தான் கெறிகெட வொழுகல் வெறுப்பன செய்தலென்றிவை முதலியவற்றுன் வருவது. ஆக்கம் வருவிக்கப் பட்டது. இயற்கையாகவே அன்புடையராய சுற்றத்தார்க்குச் செயற்கையான் வந்த நீக்கம் அதனை யொழிய ஒழியும், ஒழிந்தால் அவர்க்கன்பு செய்த கொள்ளவேண்டா, பழைய வியல்பாய் நிற்குமென்பார், வருமென்றார்.

(ப-ரை) தமராகி - (முன்னே) சுற்றத்தாராயிருந்து, தற்றுறந்தார் (தன்னேடு பொருந்தாமல் யாதாயினும் ஒருகாரணத்தினுலே) தன்னைப்பிரிந்து போனவர், சுற்றம்-(பின்னும்வந்து) சுற்றத்தாராகுதல், அமராமைக்காரணம் அப்பொருந்தாமையின்காரணம், இன்றி-(தன்னிடத்தே) இல்லையாக, வரும் தானே உண்டாகும் எ-று.

(க-ரை) முன் சுற்றத்தாராகிப் பின் பிரிந்தவர் மற்றுஞ் சுற்றத்தா ராகுதல் காரணமில்லாதண்டாம் என்பதாம்.

(வி-ரை) பொருந்தாமையின் காரணமாவது - தான்வழிதப்பி நடத்தல் வெறுப்பனைசெய்தல், இனவ முதலியனவகளால் வருவது. இயற்கையாகவே

அன்புடையாகிய சுற்றத்தார்க்குச் செயற்கையால் வந்தபிரிவு. அச்செயற்கையை ஒழிக்க ஒழிதலால் அவர்க்கு அன்பு பழைய இயல்பாகவே நிற்குமென்றதற்கு வருமென்றார்.

'தமர்' இது சுற்றத்தார் என்னும் பொருளது. என்னை? தம்மவராய் ஒழுகலின் 'தமர்' எனப்பெற்றது. 'தற்றுறந்தார்' என்றது 'தன்னைத் துறந்தவர் என்பதன் விகாரம். 'சுற்றம்' என்றது உறவினரை; இது தன்னைச் சுற்றி இருப்பவர் என்னுங் காரணம்பற்றி வந்தபெயர். 'அமராமை' என்றது தன்னெடுசேர்ந்து இராமை என்னும் பொருளதாம். 'இன்றி' இது இல்லையாக என்னும் பொருளது. 'வரும்' என்றது முன்போல வந்ததன்பாலே கூடியிருப்பர் என்னும் பொருளதாம். 'அமராமைக்காரணம்' இது ஈன்காம் வேற்றுமைத்தொகை, அமராமைக்குக் காரணம் என விரியும். (9)

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

(பரி உரை) உழைப் பிரிந்து காரணத்தின் வந்தானை - காரணமின்றித் தன்னிடத்து நின்றும் பிரிந்துபோய்ப் பின் காரணத்தான் வந்த சுற்றத்தானை, வேந்தன் இழைத்து இருந்து எண்ணிக் கொளல்-அரசன் அக்காரணத்தைச் செய்துவைத்து ஆராய்ந்து தழீஇக்கொள்க எ-று.

வானா உழைப்பிரிந்தென்றமையின், பிரிதற்குக் காரணமின்மை பெற்றும். வருதற் காரணத்தைச் செய்யாதவழிப் பின்னும் பிரிந்துபோய்ப் பகையோடு கூடுமாகலின் இழைத்திருந்தென்றும், அன்பின்றிப் போய்ப் பின்னுங் காரணத்தான் வந்தமையின் எண்ணிக்கொளலென்றுங் கூறினர். பிரிந்துபோய சுற்றத்தாருள் தீமை செய்யப்போய் அதனையொழிய வருவானும் அது செய்யாமற்போய் பின் நன்மைசெய்ய வருவானும் தழுவப்படுமாகலின் தழுவுமாறு முறையே இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

(ப-ரை) உழை-(தன்) னிடத்தினின்றும், பிரிந்து - (காரணமில்லாமற்) பிரிந்துபோய், காரணத்தின் - (பின்பு) காரணத்தினாலே, வந்தானை - வந்த சுற்றத்தானை, வேந்தன்-இராசனானவன், இழைத்திருந்து - அந்தக் காரணத்தைச் செய்துவைத்து, எண்ணி-ஆராய்ந்து, கொளல் - (தழுவிக்) கொள்ளக் கடவன் எ-று.

(க-ரை) ஒருவன் காரணமில்லாமற் பிரிந்துபோய்ப் பின்னொருகாரணத்தால் வந்தானை அரசன் ஆராய்ந்து கொள்ளக்கடவன் என்பதாம்.

(வி-ரை) சும்மா உழைப்பிரிந் தென்றமையால், பிரிதற்குக் காரணமில்லாமை கொள்ளப்பட்டது. வருதற் காரணத்தைச் செய்யாதவிடத்துப் பின்னும் பிரிந்துபோய்ப் பகைவரோடு கூடுவானுதலால் இழைத்திருந்தென்றும், அன்பில்லாமற்போய்ப் பின்னுங் காரணத்தால் வந்தமையால் எண்ணிக்கொளலென்றும் சொல்லினர். பிரிந்துபோன சுற்றத்தாருள் தீமை செய்யப்போய் அதனை விடவருவானும், அது செய்யாமற்போய்ப் பின்பு

கன்மை செய்யவருவானும், தழுவப்படுதலால் தழுவுமாறு முறையே [இவ்விரண்டு பாட்டாலும் சொல்லப்பட்டது.]

'உழை' இது இடம் என்னும் பொருளது. 'உழைப்பிரிந்து' இது தன்னிடமிருந்து காரணமின்றிப் பிரிந்து என்னும் பொருளது. காரணம் என்றது வருவித்து உரைக்கப்பெற்றது. 'காரணத்தின் வந்தானே' இது ஒரு காரணம், அல்லது பயன்நோக்கி வந்தவனே என்னும்பொருளது. 'இழைத்து' என்றது அரசன் அவன் எண்ணிவந்த காரணத்தை அவனுக்கு முற்றுவித்து என்ற பொருளதாம். 'இருந்தெண்ணி' என்றது சற்றுப் பொறுத்து இருந்து ஆராய்ந்தறிந்து என்பதாம். 'கொளல்' என்றது தழுவிக்கோடலே. (10)

53-ம் அதி - சுற்றந்தழால் - முற்றிற்று.

+ 54-ம் அதிகாரம்—போச்சாவாமை

(பரி-உரை) அஃதாவது: உருவும் திருவும் ஆற்றலும் முதலாயவற்றான் மிகழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தல் முதலிய காரியங்களிலும் சோர்தலைச் செய்யாமை. மேற்சொல்லிய சுற்றத்தாராற் பயனுள்ளது இச் சோர்வு வழியாகலின், இது சுற்றந்தழாலின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: அழகும், செல்வமும், ஆற்றலும் முதலான வைகளால் மிகழ்ந்து தன்னைக்காத்துக் கொள்ளுதலிலும் பகையழித்தல் முதலாகிய காரியங்களிலும் மறதிசெய்யாமையாம். முன் சொல்லப்பட்ட சுற்றத்தாரால் பயனுள்ளது.. இம்மறதியில்லாவிடத்தாகலால், இது சுற்றந் தழாலின் பின் வைக்கப்பட்டது.

இறந்த வெகுளியிற் றீதே சிறந்த வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

(பரி-உரை) சிறந்த உவகை மகிழ்ச்சியிற் சோர்வு - மிக்க வுவகைக் களிப்பான் வரும் மறவி, இறந்த வெகுளியிற் றீது - அரசனுக்கு அளவிறந்த வெகுளியினுந் தீது எ-று.

மிக்கவுவகை பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமித மென்றிவற்றான் வருவது. அளவு பகைவரை அடர்த்தற்கும் கொடியோரை ஒறுத்தற்கும் வேண்டுவது. இறந்த வெகுளி ஓரோவழிப் பகைவரையுங்கொல்லும், இஃது அன்னதன்றித் தன்னையே கோறலின், அதனினுந் தீதாயிற்று.

(ப-ரை) சிறந்தவுவகை - மிகுந்த அகமலர்ச்சியினது, மகிழ்ச்சியின் களிப்பால் வருவதாகிய, சோர்வு-மறதியானது, இறந்த வெகுளியின்-அளவு கடந்த கோபத்தினும், தீதே-(அரசனுக்குத்) தீதேயாம் எ-று.

(க-ரை) மிகு மகிழ்ச்சியால் வரு மறதியானது அளவுகடந்த கோபத்தைப் பார்க்கிலும் அரசனுக்குக் குற்றந்தரும் என்பதாம்.

(வி-ரை) மிகுந்த வுவகையாவது பெருஞ்செல்வம் பேரின்பம் பெருமிதம் என்கிற இவைகளால் வருவது. அவை பகைவரை வெல்லுதலுக்கும் கொடியோரை ஒறுத்தலுக்கும் வேண்டுவது. அக்கோபம் ஒரோவிடத்துப் பகைவரையும் கொல்லும், இது அப்படிப்பட்டதல்லாமல் தன்னையே கொல்லலால் அதனினும் தீதாயிற்று.

'இறந்த' இது மிகுந்த, அளவுகடந்த என்னும் பொருளது. 'வெகுளியின்' இதில் 'இன்' உருபு எல்லேப்பொருளில் வந்தது. 'தீதே' இதில் ஈற்று ஏகாரம் தேற்றப்பொருளது. 'சிறந்த' இது மிகுதிப் பொருள் தந்தது. 'உவகை' ஈண்டு உவகை தருவனவாகிய பெருஞ்செல்வம், பெரிய இன்பம், பெருமிதம் முதலியவற்றைக் குறித்து நின்றது. 'சோர்வு' என்றது ஈண்டு மறதியை. 'மகிழ்ச்சியின்' என்பதன் 'இன்' உருபு மூன்றும் வேற்றுமைப் பொருளில் மயங்கியது. (1)

பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

(பரி-உரை) புகழைப் பொச்சாப்புக் கொல்லும்-ஒருவன் புகழினை அவன் மறவி கெடுக்கும், அறிவினை நிச்சநிரப்புக் கொன்றாங்கு - அறிவினை நிச்ச நிரப்புக் கெடுக்குமாறுபோல எ-று.

நிச்சநிரப்பு - நாடோறும் இரவான் வருந்தித் தன்வயிறு நிறைத்தல். அஃது அறிவுடையான்கண் உண்டாயின் அவற்கு இளிவரவானும் பாவத்தானும் என்னற்பாட்டினை விளைத்து அவன் நன்குமதிப்பினை யழிக்கும்; அதுபோல, மறவியும் புகழுடையான்க ணுண்டாயின் அவற்குத் தற்காவாமையானும் காரியக்கேட்டானும் என்னற்பாட்டினை விளைத்து அவன் நன்கு மதிப்பினை அழிக்கு மென்பதாயிற்று. இவை பிரண்டுபாட்டானும் பொச்சாப்பினது குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) பொச்சாப்பு-மறதியானது, புகழை-(ஒருவனது) கீர்த்தியை, கொல்லும் - கெடுக்கும், நிச்சநிரப்பு - நித்திய வறுமையானது, அறிவினை-புத்தியை, கொன்றாங்கு-கெடுக்கும் விதம்போல் எ-று.

(க-ரை) தரித்திர மறிவைக்கெடுக்கும் அதுபோல மறதி புகழைக் கெடுக்கும் என்பதாம்.

(வி-ரை) நித்தியவறுமை - தினந்தோறும் யாசகத்தால் வருந்தித் தன் வயிறு நிறைத்தல். எப்படி அநித்தியவறுமை அறிவுடையானிடத்தே உண்டானால் அவனுக்கு இளிவரவாலும், பாவத்தாலும் இகழ்ச்சியை உண்டாக்கி அவன் மனத்தை அழிக்குமோ அப்படி மறதியும் புகழுடையவனிடத்தே உண்டாயின் அவனுக்குத் தன்னைக் காத்துக்கொள்ளாமையாலும், காரியக் கெடுதியாலும், இகழ்ச்சியை யுண்டாக்கி அவன் மனத்தை அழிக்கு மென்பதாயிற்று. [இவ்விரண்டு பாட்டாலும் மறவியினது குற்றம் சொல்லப்பட்டது.]

'பொச்சாப்பு' என்றது மறதியை. 'கிச்சகிரப்பு' இது 'கித்தகிரப்பு' என்பதன் விகாரம். 'கிரப்பு' இது வறுமை என்னும் பொருளது. (2)

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பாலு லோர்க்குந் துணிவு.

(பரி-உரை) பொச்சாப்பார்க்குப் புகழ்மை இல்லை-பொச்சாந் தொழுகுவார்க்குப் புகழுடைமை யில்லை; அது உலகத்து எப்பால் நூலோர்க்கும் துணிவு-அவ்வின்மை இந்நீதிநூலுடையார்க்கேயன்றி உலகத்து எவ்வகைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்ப முடிந்தது எ-று.

அரசர்க்கேயன்றி அறமுதலிய நான்கினும் முயல்வார் யாவர்க்கும் அவை கைகூடாமையிற் புகழில்லை யென்பது தோன்ற, எப்பாலுலோர்க்குத் துணிவென்றார்.

(ப-உரை) புகழ்மை - புகழுடையாராயிருக்கையானது, பொச்சாப்பார்க்கு-மறந்து கடப்பவர்க்கு, இல்லை-இல்லை, அது-அவ்வில்லாமையானது (இந்நீதிநூலுடையவர்க்கு மாத்திரமல்லாமல்) உலகத்து-உலகத்தில், எப்பாலுலோர்க்கும் - எவ்வகைப்பட்ட நூலுடையவர்க்கும், துணிவு - ஒப்பமுடிந்தது எ-று.

(க-உரை) புகழ்ச்சி மறதியுடையோர்க்கில்லை இது எல்லா நூலார்க்குந் துணிவுதான் என்பதாம்.

(வி-உரை) அரசருக்கேயல்லாமல் அறமுதலாகிய நான்கினும் முயல்பவர் யாவர்க்கும் அவை கைகூடாமையினாலே புகழ் இல்லை யென்பது தோன்ற எப்பாலுலோர்க்குந் துணிவு என்றார்.

'அது' என்றது 'பொச்சாப்பார்க்கில்லை புகழ்மை' என்றதைச் சுட்டி நின்றது. 'எப்பால் நூலோர்க்கும்' என்றது நீதிநூல் உடையார்க்கேயன்றி பிறநூலுடையார்க்கும் என்பது பொருளதாம். 'துணிவு' இது துணியப்படுவது நின்றுகும் என்பதாம். 'நூலோர்க்கும்' இதன் ஈற்று உம்மை முற்றும்மை. (3)

அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

(பரி-உரை) அரண் அச்சம் உடையார்க்கு இல்லை-காடு மலை முதலிய அரண்களுன்னே கிற்பினும், மனத்தின்கண் அச்சமுடையார்க்கு அவற்றுற் பயனில்லை; ஆங்கு நன்கு பொச்சாப்பு உடையார்க்கு இல்லை-அதுபோலச் செல்வமெல்லா முடையராயினும், மனத்தின்கண் மறவியை யுடையார்க்கு அவற்றுற் பயனில்லை எ-று.

நன்மைக்கு எதுவாகலின், நன்கென்றார். அச்சமுடையார் நின்ற அரணழியுமாறுபோல மறவியுடையாருடைய செல்வங்களும் அழியுமென்பதாயிற்று.

(ப-ரை) அச்சமுடையார்க்கு - பயமுடையவர்க்கு, அரண் - (காடு மலை முதலாகிய) அரணங்களில், (இருந்தாலும்) இல்லை - (அவைகளாலேபயன்) இல்லை, ஆங்கு-அதுபோல், பொச்சாப்புடையார்க்கு - மறதியுடையவர்க்கு, நன்கு-செல்வமெல்லாம் (உடையராயிருந்தாலும்), இல்லை-(அவைகளாலே பயன்) இல்லை எ-று.

(க-ரை) பயமுடையவர்க்கு நால்வகை யரணங்களிருந்தும் பயனில்லை. அதுபோல மறதியுடையவர்க்குச் செல்வங்களிருந்தும் பயனில்லை என்பதாம்.

(வி-ரை) செல்வம் நன்குக்கு எதுவாகலால், அதனை நன்கென்றார். எப்படி அச்சமுடையவரது அரணம் அழியுமோ அப்படி மறதியுடையவர் செல்வமும் அழியுமென்பதாயிற்று.

'அச்சம்' என்றது அஞ்சும் இயல்பை. இது ஆண்மைக்கு மறுதலையானது. 'அச்சம் உடையார்க்கு அரணில்லை' இது உபமானம். 'ஆங்கு' இது, அதுபோல என்னும் பொருள் தருகின்றது. 'நன்கு' என்றது செல்வத்திலும் எய்தும் நன்மைப்பயனை. அரண்களுள்ளே இருந்தும் அச்சமுடையார் அரணும், தாமும் அழிதல்போல, செல்வராயிருப்பினும் மறதியுடையார்க்கு அச்செல்வம் அழியும், அவரும் அழிவர் என்பது இக்குறளாற் போந்த பொருள். (4)

முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

(பரி-உரை) முன்னுறக் காவாது இழுக்கியான்-தன்னுற் காக்கப்படுந் தன்பங்களை அவை வருதற்கு முன்னே அறிந்து காவாது மறந்திருந்தான், பின் ஊறு தன்பிழை இரங்கிவிடும்-பின்வந்து உற்றகாலத்துக் காக்கலாகாமையின் அப்பிழைப்பினை நினைந்திரங்கிவிடும் எ-று.

காக்கப்படுந் தன்பங்களாவன - சோர்வுபார்த்துப் பகைவர் செய்வன. ஊற்றின்கணைம்புழி உருபுஞ் சாரியையும் உடன்றொக்கன. உற்றகாலத்துக் காக்கலாகாமையின், இரங்கிவிடுமென்றார். இவை மூன்றுபாட்டானும் பொச்சாப்புடையார்க்கு வரும் எதங் கூறப்பட்டது.

(ப-ரை) (வாராமற் காக்கப்படுந் தன்பங்களை) முன்னுற - (அவை வருதற்கு) முற்பட, காவாது-(அறிந்து) காவாமல், இழுக்கியான்-மறந்திருந்தவன், பின் - பின்பு, ஊறு - உற்றகாலத்து, (காக்கக்கூடாமையால்) தன்பிழை-தன்னுண்டய அததவறு, (தினைத்து) இரங்கிவிடும்-இரங்கிவிடுவான் எ-று.

(க-ரை) தன்பம் வருமுன் காக்காமல் மறந்திருந்தவன் தன் குற்றத்தைக் குறித்துப் பின் விசனப்படுவான் என்பதாம்.

(வி-ரை) அத்தன்பங்களாவன மறதிபார்த்துப் பகைவராலே செய்யப்படுவன. தன்பம் உற்றகாலத்திலே காக்கக்கூடாமையால் இரங்கிவிடு

மென்றார். [இவை மூன்றுபாட்டாலும் மறதியுடையவர்க்கு வரும் தன்பஞ் சொல்லப்பட்டது.]

'முன்னுறக்காவாது' என்றது தன்னுற் காக்கக்கூடிய வன்மையிருந்தும் காக்கக்கூடியவைகளை வருமுன் காவாதவன் என்பது பொருளாம். 'இழுக்கி யான்' என்றது மறந்திருந்தவன் என்னும் பொருளது. 'பின்னூறு' என்றது பின்னர் கேடு தனக்கு வந்தற்றாலென்க என்பதாம். (5)

இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில்.

(பரி-உரை) இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின். அரசர்க்கு மறவாமைக் குணம் யாவர்மாட்டும் எக்காலத்தும் ஒழிவின்றி வாய்க்குமாயின், அது ஒப்பது இல்-அதனை யொக்கும் தன்மை பிறிதில்லை என்றவாறு.

வினைசெய்வார் சுற்றத்தாரென்னுந் தம்பாலார்கண்ணும் ஒப்பவேண்டு தலின் யார்மாட்டு மென்றும், தாம் பெருகியஞான்றும் சுருங்கியஞான்றும் ஒப்பவேண்டுதலின் என்றுமென்றும், எல்லாக் காரியங்களினும் ஒப்பவேண்டு தலின் வழுக்காமையென்றும் கூறினர். வாயினென்பது மூதனிலத்தொழிற் பெயரடியாக வந்த வினையெச்சம். வாய்த்தல்-கோப்படுதல்.

(ப-ரை) (அரசர்க்கு) இழுக்காமை - மறவாமையானது, யார்மாட்டும்- யாவரிடத்தும், என்றும் - எக்காலத்திலும், வழுக்காமை - ஒழிவில்லாமல், வாயின்-கோப்படுமாயின், அது-அதனை, ஒப்பது-ஒக்கு தன்மையானது, இல்-இல்லை எ-று.

(க - ரை) யாவரிடத்து மறவில்லாமை வாய்க்குமாயி லதற்கொப் பொன்றுமில்லை என்பதாம்.

(வி-ரை) தொழில்செய்வோர், சுற்றத்தார் என்கிற தம்மவரிடத்தும் சமமாகவேண்டுதலால் யார்மாட்டுமென்றும், தன்பெருக்கக் காலத்திலும் சுருக்கக்காலத்திலும் சமமாகவேண்டுதலால் என்றுமென்றும், எல்லாக்காரி யங்களிலும் சமமாக வேண்டுதலால் வழுக்காமையென்றும் சொல்லினர்.

'இழுக்காமை' என்றது மறவாமையை. 'யார்மாட்டும்' என்றது வினை செய்வார், சுற்றத்தார் பெரியார் என்னும் யாவரிடத்தும் என்பதாம். 'என்றும்' என்றது ஆக்கம், கேடு என்னும் இரண்டுகாலத்தும் என்பதாம். 'வழுக்காமை' இது நண்டு நீக்காமை என்னும் பொருள் தந்து நின்றது. 'வாயின்' இது வாய்த்தால் என்னும் பொருளது. 'அது' என்றது இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாய்த்தலைச் சுட்டி நின்றது. (6)

அரியவென் றுகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

(பரி-உரை) அரிய என்று ஆகாத இல்லை - இவை செய்தற்கரியன வென்று சொல்லப்பட்டு ஒருவற்கு முடியாத காரியங்களில்லை, பொச்சாவாக் கருவியான் போற்றிச் செயின்-மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப் பெறின் எ-று.

பொச்சாவாத என்பதன் இறுதிநிலை விகாரத்தாற் றொக்கது. அந்தக் கரண மாகலிற்* கருவி யென்றார். இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியு முடையார்க்கு எல்லாம் எளிதின் முடியுமென்பதாம். இவை இரண்டு பாட்டானும் பொச்சாவாமையது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) அரியவென்று - (இவை) அரியவையென்று சொல்லப்பட்டு, ஆகாத-(ஒருவனுக்கு) முடியாத காரியங்கள், இல்லை - இல்லையாகும், பொச் சாவா - மறவாத, கருவியால்-மனத்தினாலே, போற்றி - எண்ணி, செயின்- செய்தால் எ-று.

(க-ரை) மறவாத மனத்தா லாலோசித்துச்செய்தால் அரசனுக்கரியவை யொன்றுமில்லை என்பதாம்.

(வி-ரை) அந்தக்கரணமாதலால், மனத்தைக் கருவியென்றார். இடை விடாத நினைவும் தப்பாத எண்ணமும் உடையவர்க்கு எல்லாம் எளிதின் முடியுமென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் மறவாமையினது சிறப்புச் சொல்லப்பட்டது.] கரணம்-காரணம்.

'அரிய' என்றது செய்து முடித்தற்கு அருமையானது என்னும் பொருளது. 'ஆகாத' இது செய்துமுடிக்க முடியாதகாரியம் என்னும் பொருளது. இது பெயரெச்சம். 'போற்றி' என்றது ஆராய்ந்து எண்ணி என்பதாம். (7)

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

(பரி-உரை) புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்-நீதிநூலுடையார் இவை அரசர்க்குரியனவென்று உயர்த்துக் கூறிய செயல்களைக் கடைப் பிடித்துச் செய்க, செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் - அங்ஙனஞ் செய்யாது மறந்தவர்க்கு எழுமையினும் நன்மையில்லை யாகலான் எ-று.

---

* பொச்சாவாக்கருவி என்பதற்குப் பொச்சாவாமையாகிய கருவியெனப் பொருள் கோடலே சிறப்பு. அது தொல்காப்பியத்து வினையியலுள் "நிலனும் பொருளும்" என்னும் முப்பத்தேழாஞ் சூத்திரத்துரையிலே சேனா வரையர் "நின்முகங்காணுமருந்தினேன் என்புழிக் காட்சியை மருந்தென்றா ராகலிற் காணுமருந்தென்பது வினைப்பெயர் கொண்டதாம். பொச்சாவாக் கருவியாற் போற்றிச்செயின் என்புழிப்பொச்சாவாக்கருவி என்பதும் அது" எனக் கூறுமாற்றா னுணர்க. இலக்கணவிளக்க நூலார்க்கும் இலக்கண விளக்கச் சூறாவளியார்க்கும் இதுவே கருத்தென்க.

அச்செயல்களாவன: மூவகை யாற்றலும், நால்வகை உபாயமும், ஐவகைத் தொழிலும், அறவகைக்குணமும் முதலாய செயல்கள். சாதிதரும மாகிய இவற்றின் வழீஇயோர்க்கு உள்ளது கிரயத்தன்பமேயாகலின், எழுமையுமில்லென்றார். எழுமை-ஆகுபெயர். இதனற் பொச்சாவாது செய்ய வேண்டுவன கூறப்பட்டன.

(ப-ரை) புகழ்த்தலை-(நீதிநூலுடையாரால் இவை அரசர்க்கு உரியவை யென்ற) உயர்த்திச் சொல்லப்பட்ட செயல்களை, போற்றி - முடிவுபற்றி, செயல்வேண்டும்-செய்யக்கடவர், செய்யாது-(அப்படி) செய்யாமல், இகழ்ந் தார்க்கு-மறந்தவர்க்கு, எழுமையும் - எழுபிறப்பிலும் வரும் நன்மை, இல்-இல்லை (ஆதலால்) எ-று.

(க-ரை) மேலானவற்றை யாசரெண்ணிச் செய்யக்கடவர் செய்யாது, மறந்தவர்க் கெழுபிறப்பிலும் நன்மையில்லை என்பதாம்.

(வி-ரை) அச்செயல்களாவன: மூவகை ஆற்றலும், நால்வகையுபாயமும், ஐவகைத்தொழிலும், அறவகைக் குணமும் முதலான செயல்கள். சாதி தருமமாகிய இவைகளில் வழுவிய அரசர்க்கு நரகதுக்கமே உள்ளதாகலால் எழுமையு மில்லையென்றார். எழுமை-ஆகுபெயர். [இதனால் மறவாது செய்ய வேண்டுமவைகள் சொல்லப்பட்டன.]

'புகழ்த்தலை' என்றது அறநூல், நீதிநூல், அறிவுநூல் முதலிய நூலுடைய பெரியோராற் புகழ்ந்து கூறப்பட்டவைகளை. 'போற்றி' ஈண்டு மறவாது உறுதியாகக்கொண்டு என்பதாம். 'செய்யாது இகழ்ந்தார்க்கு' என்றது அவ்வாறு செய்யாது மறந்தவர்க்கு என்னும் பொருளது. 'எழுமை' என்றது எழுபிறப்புக்களை. (8)

இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

(பரி-உரை) தம் மகிழ்ச்சியின் தாம் மைந்து உறும் போழ்து-அரசர் தம் மகிழ்ச்சிக்கண் தாம் வலியுறும்பொழுது, இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக-முற்காலத்து அதனினுய சோர்வாற் கெட்டவர்களை நினைக்க எ-று.

காரணக்களோடு அவர்க்குளதாய உரிமையை மகிழ்ச்சிமே லேற்றித் தம் மகிழ்ச்சியி னென்றும், இகழ்ச்சியுங் கேடும் உடன்றொன்றுமாகலின் மகிழ்ச்சியின் மைந்துறும்போழ்தென்றுங் கூறினர். கெட்டாரை உள்ளலே, காமும் அவ்வாறே கெடுதலென்ற அதன்கண் மைந்துறுதலென்பது கருத்து. எண்ணுகவென்ற பாடம் ஒதுவாருமுளர்.

(ப-ரை) (அரசர்) தம்மகிழ்ச்சியின்-தமது மகிழ்ச்சியினிடத்து, தாமைந் துறும்போழ்து-தாம் செறுக்குறும்பொழுது, இகழ்ச்சியின்-(முற்காலத்திலே அதனால் ஆகிய) மறதியினாலே, கெட்டாரை - கெட்டவர்களை, உள்ளுக-நினைக்கக்கடவர் எ-று.

(க-ரை) அரசர் செல்வத்திலே மகிழ்ச்சி யடைபும்போது முற்காலத் திலே மகிழ்ச்சியிலே மறதியடைந்தவர்களே நினைக்கக்கடவர் என்பதாம்.

(வி-ரை) மகிழ்ச்சிக்குக் காரணமாபுள்ளவைகளோடு அவர்க்கு உண் டாகிய உரிமையை மகிழ்ச்சிமேலேற்றி தம்மகிழ்ச்சியினென்றும், இகழ்ச்சியும் கேடும் உடன் தோன்றுமாகலால் மகிழ்ச்சியின் மைந்தறும், போழ்தென்றும் சொல்லினர். கெட்டாரை நினைக்கவே ஈரும் அப்படியே கெடுவோமென்று அதனிடத்தே செருக்குறுரென்பது கருத்து.

'இகழ்ச்சியிற் கெட்டாரை' இது மறதியினால் கெட்டவர்களே என்னும் பொருளது. 'இன்' உருபு 'ஆல்' உருபுப்பொருளில் மயங்கியது. 'தாம்தம் மகிழ்ச்சியின் மைந்தறும்போழ்து' இது தமது மகிழ்ச்சியினால் தாம் வலிமை புற்றிருக்கும் பொழுது என்பதாம். (மைந்து-வலிமை) மகிழ்ச்சியினால் தாம் வலியுற்றிருத்தலாவது மகிழ்ச்சிப்பெருக்கால் தன்னை மறந்திருத்தலே. 'மகிழ்ச்சியில்' ஈண்டும் 'இல்' உருபு 'ஆல்' உருபுப்பொருளில் மயங்கின்றது.

உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

(பரி-உரை) தான் உள்ளியது எய்தல் எளிது மன்-அரசனுக்குத் தான் எய்த நினைத்த பொருளே அந்நினைத்த பெற்றியே எய்துதல் எளிதாம், மற்றும் உள்ளியது உள்ளப்பெறின்-பின்னும் அதனையே நினைக்கக் கூடுமாயின் எ-று.

அது கூடாதென்பது ஒழிந்து நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அதனையே நினைத்தலாவது-மறவியின்றி அதன்கண்ணே முயறல். இவை யிரண்டுபோட்டாலும் பொச்சாவாமைக்கு உபாயங் கூறப்பட்டது.

(ப-ரை) (அரசனுக்கு) உள்ளியது-(தான்பெற) நினைத்த பொருளே, எய்தல்-(அந்நினைத்தபடியே) அடைதல், எளிதுமன் - எளிதாகும், மற்றும்-பின்னும், தான்-தான், உள்ளியது-அந்நினைத்த பொருளையே, உள்ளப் பெறின்-நினைக்கக்கூடுமானால் எ-று.

(க-ரை) அரசன் நினைத்தபொருளே நினைக்கக்கூடுமானலப்பொருளே யடைத லெளிதாகும் என்பதாம்.

(வி-ரை) அது கூடாதென்னும் ஒழிந்த சொற்பொருளைக் காட்டலால் மன் ஒழியிசையிலே வந்தது. இசையென்பது சொல். அதனையே நினைத்த லாவது மறதியில்லாமல் அதனிடத்தே முயற்சிசெய்தல். [இவை இரண்டு பாட்டாலும் மறவாமைக்கு உபாயஞ் சொல்லப்பட்டது.]

'தான் உள்ளியது' என்றது தான்பெற நினைத்த ஒன்றை என்பதாம். 'உள்ளியது உள்ளல்' என்றது தான் நினைத்ததை மறவாதிருத்தல் என்னும் பொருளது. (10)

54-ம் அதி - பொச்சாவாமை - முற்றிற்று.

55-ம் அதிகாரம்—செங்கோன்மை

(பரி-உரை) அஃதாவது அரசனாற் செய்யப்படும் முறையினது தன்மை. அம்முறை ஒருபாற் கோடாத செவ்விய கோல் போறலிற் செங்கோலெனப்பட்டது. வடநூலாரும் தண்டம் என்றார். அது சோர்வில்லாத அரசனாற் செயற்பாலதாகலின், இது பொச்சாவாமையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அரசனாலே செய்யப்படு முறையினது தன்மை. அந்த முறையானது ஒருபக்கத்திலே சாயாமற் செவ்வையாகிய கோல்போலுதலாலே செங்கோலெனப்பட்டது. அது மறதியில்லாத அரசனாலே செய்யத்தக்கதாகலால் இது பொச்சாவாமையின் பின்வைக்கப்பட்டது.

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந் தேர்ந்துசெய் வஃதே முறை.

(பரி-உரை) ஓர்த்த தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத்தை நாடி, யார்மாட்டும் கண்ணோடாது - யாவர்மாட்டுங் கண்ணோடாது, இறை புரிந்த - கடுவு கிலேமையைப் பொருந்தி, தேர்ந்த - அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடும் ஆராய்ந்து, செய்வஃதே முறை. அவ்வனவிற்றாகச் செய்வதே முறையாம் எ-று.

கடுவுகிற்றல் இறைக்கியல்பாகலின் அதனை யிறையென்றும், உயிரினுஞ் சிறந்தார்கண்ணும் என்பார் யார்மாட்டுமென்றுங் கூறினர். இறைமை இறையெனவும், செய்வது செய்வஃதெனவும் கின்றன. இதனாற் செங்கோன்மையது இலக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) (தன்கீழ் வாழ்வோராலே செய்யப்பட்ட குற்றத்தை) ஓர்த்து நாடி, யார்மாட்டும் - யாவரிடத்தும், கண்ணோடாது - முகங்கொடாமல், இறைபுரிந்த-கடுவு கிலேமையைப்பொருந்தி, தேர்ந்த - (அக்குற்றத்திற்குச் சொல்லப்பட்ட தண்டத்தை நூலோரோடும்) ஆராய்ந்து, செய்வஃதே - அவ்வனவினதாகச் செய்தலே, முறை-செங்கோலாம் எ-று.

(கரை) அரசன் குற்றத்தை யாராய்ந்து எல்லாரிடத்தும் கடுவுகிலேமை பொருந்தி யாசான்வதே செங்கோலாம் என்பதாம்.

(வி-ரை) கடுவாய் கிற்கை இறை என்கிற அரசனுக்கு இயல்பாகலால் அதனை இறையென்றும், உயிரினும் சிறந்தவரிடத்தும் என்றற்கு யார்மாட்டுமென்றும் சொல்லினர். இறைமை - இறையெனவும், செய்வது-செயவஃதெனவும் விகாரப்பட்டன. [இதனாலே செங்கோன்மையினது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'ஓர்து' என்றதற்கு தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத்தை நாடி என்பது பொருளாம். ஈண்டு தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத்தை, என்றவரை வருவித்துரை. 'கண்ணோடாமை' என்றது

தாட்சண்யக்காட்டாமையை. 'இறைபுரிந்த' என்றது நடுவு நிலைமை கொண்டொழுகி என்பதாம். 'யார்மாட்டும்' என்றது கட்பினர், பகைவர், தொகுமல் என்ற மூப்பாலாரிடத்தும என்பதாம். 'தேர்ந்த' என்றது நூல்வல்லாரோடு ஆராய்ந்த தெளிந்த என்பதாம். 'செய்வஃதே' இது செய்வதே என்பது செய்யுள்நோக்கி வந்தவிகாரம். 'முறை' என்றது செங்கோன் முறையை. (1)

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

(பரி-உரை) உலகு எல்லாம் வான் நோக்கி வாழும்-உலகத்து உயிரெல்லாம் மழையுளதாயின் உளவாகாகிற்குமே யெனினும், குடி மன்னவன் கோல் நோக்கி வாழும்-குடிகள் அரசன் செங்கோலுளதாயின் உளவாகாகிற்கும் எ-று.

நோக்கிவாழ்தல் இன்றியமையாமை. வானிலையவுணவை வான் என்றும், கோலிலைய எமத்தைக் கோல் என்றுங் கூறினர். அவ்வேம மில்வழி உணவுளதாயினுங் குடிகட்கு அதனாற் பயனில்லை என்பதாம்.

(ப-உரை) உலகெல்லாம்-உயிர்களெல்லாம், வானோக்கி-மழையை நோக்கி, வாழும்-வாழும் (என்றாலும்), குடி-குடிகளானவை, மன்னவன்-அரசனது, கோனோக்கி-செங்கோலை நோக்கி, வாழும்-வாழும் எ-று.

(க-உரை) உயிரனைத்தும் மழையை நோக்கி வாழும், குடிகளனைத்தும் அரசன் செங்கோலை நோக்கி வாழும் என்பதாம்.

(வி-உரை) வானிலையாகிய உணவை வானென்றும் கோலாலாகிய எமத்தைக் கோலென்றும் சொல்லினர். அவ்வேமம் இல்லாதவிடத்தே உணவு உளதாயிருந்தாலும் குடிகளுக்கு அதனாலே பயன் இல்லை என்பதாம்.

'வான்' என்றது மழையை. 'உலகம் எல்லாம்' என்றது இடவாகுபெயராய் உலகத்து உயிர்களைக் குறித்தது. 'கோல்' என்றது செங்கோலை. அரசன் செலுத்திய அரசாட்சியைச் செங்கோல் என்றது இலக்கணை. (2)

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

(பரி-உரை) அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது-அந்தணர்க்கு உரித்தாய வேதத்திற்கும் அதனாற் சொல்லப்பட்ட அறத்திற்குங் காரணமாய் நிலைபெற்றது, மன்னவன் கோல்-அரசனாற் செலுத்தப்படுகின்ற செங்கோல் எ-று.

அரசர் வணிகரென்னும் ஏனையோர்க்கும் உரித்தாயினும், தலைமைபற்றி அந்தணர் நூல் என்றார். "மாதவர் நோன்பு மடவார்கற்பும், காவலன் காவல்" என்றித் தங்காவலான் ஆகலின், நான்கு அறமென்றது அவை யொழிந்த வற்றை. வேதமும் அறனும் அரசியலினுஞ் செங்கோலில்லாழி படவா

வாகலின், அதனை அவற்றிற்கு ஆகியென்றும், அப்பெற்றியே தனக்கு ஆகியாவதை பிறிதில்லை யென்பார் கின்றதென்றுங் கூறினர். இவை யிரண்டு பாட்டானுஞ் செங்கோலதை சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) மன்னவன்கோல் - அரசன் செங்கோலானது, அந்தணர் நூற்கும்-அந்தணர்க்கு உரித்தாகிய வேதத்திற்கும், அறத்திற்கும்-(அதனுளே சொல்லப்பட்ட) தருமத்திற்கும், ஆகியாய் - காரணமாகி, கின்றது - கிலை பெற்றது எ-று.

(க-ரை) வேதத்திற்கும் தருமத்திற்குங் காரணமாகி கின்றது அரசன் செங்கோலாம் என்பதாம்.

(வி-ரை) வேதமும் அறமும் அகாதியாயினும் செங்கோல் இல்லாத விடத்து கடவாதாகலால் அதனை அவைகளுக்கு ஆகியென்றும், அப்பெற்றியே தனக்கு ஆகியாவது வேறொன்றும் இல்லையென்றற்கு கின்றதென்றும் சொல்லினர். [இவை இரண்டு பாட்டாலும் செங்கோலதை சிறப்புச் சொல்லப்பட்டது.]

'அந்தணர்' என்றது வேதாந்தப்பொருளைக் கண்டடைந்தவர் எனவும், அழகிய கருணையை உடையவர் எனவும் பொருள்தந்து நின்று மறையோரை உணர்த்திகின்றது. 'நூற்கும்' 'அறத்திற்கும்' என்பதன்கண்நின்ற உம்மைகள் எண்ணும்மைகள். 'ஆகியாய்' என்றது காரணமாய் என்னும் பொருளது. 'கோல்' என்றது செங்கோலை. (3)

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன,
னடிதழீஇ நிற்கு முலகு.

(பரி-உரை) குடி தழீஇக் கோல் ஓச்சும் மாநிலமன்னன் அடி-தன் குடிகளையும் அணைத்துச் செங்கோலையுஞ் செலுத்தும் பெருகில வேந்தன் அடியை, தழீஇ கிற்கும் உலகு-பொருந்தி விடார் உலகத்தார் எ-று.

அணைத்தல் - இன்சொற் சொல்லுதலும், தளர்ந்தழி வேண்டுவன கொடுத்தலும் முதலாயின. இவ்விரண்டனையும் வழுவாமற் செய்வான் கிலமுழுதும் ஆளுமாகலின் அவனை மாநிலமன்னன் என்றும், அவன்மாட்டி யாவரும் கீக்கா அன்பினராவராகலின் அடிதழீஇ கிற்குமுலகு என்றும் கூறினர்.

(ப-ரை) உலகு-உலகத்தார், குடிதழீஇ-(தன்) குடிகளையும் அணைத்து, கோலோச்சும் - செங்கோலையும் செலுத்தும், மாநிலமன்னன் - பெருமை வேந்தனது, அடிதழீஇ-அடியைப் பொருந்தி, கிற்கும்-கிற்பார் எ-று.

(க-ரை) உலகத்தார் குடிகளைத்தழுவி அரசனடியைப் பொருந்தி கிற்பார் என்பதாம்.

(வி-ரை) அணைத்தல் - இன்சொற் சொல்லுதலும், தளர்ந்தவிடத்து வேண்டுவன கொடுத்தலும் முதலானவை. இவ்விரண்டும் தப்பாமற்

செய்பவன் நிலமுழுதும் ஆள்வானுகையால் அவனை மாநில மன்னனென்றும், அவனிடத்தில் யாவரும் நீங்காத அன்புடையவராகலால் அடிதழீஇ நிற்கு முலகென்றும் சொல்லினர்.

'குடிதழீஇ' 'அடிதழீஇ' இவ் இரண்டும் இன்னிசை யளபெடைகள். 'கோலோச்சல்' இது செங்கோல் செலுத்தலைக் குறித்தது. 'உலகு' என்றது உலகத்தவர்களை. (4)

இயல்புளிக் கோலோச்சு மன்னவனுட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

(பரி-உரை) பெயலும் விளையுளும் தொக்கு - பருவமழையுங் குன்றுத விளைவும் ஒருங்குகூடி, இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவன் காட்ட - நூல்கள் சொல்லிய வியல்பாற் செங்கோலைச் செலுத்தும் அரசனது நாட்டின் கண்ணவாம் எ-று.

உளியென்பது மூன்றுவதன் பொருள்படுவதோ நிடைச்சொல். வானும் நிலனுஞ் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக்கு மென்பதாம்.

(ப-உரை) பெயலும் பருவமழையும், விளையுளும் (குறையாத) விளைவும், தொக்கு-கூடி, இயல்புளி - (நூல்களாலே சொல்லப்பட்ட) இயல்பால், கோலோச்சும்-செங்கோலைச் செலுத்தும், மன்னவன் - அரசனது, நாட்ட-நாட்டிலுள்ளனவாம் எ-று.

(க-உரை) நீதிமன்ன னுட்டிலே மழையும் விளைவு நிறைந்திருப்பனவாம் என்பதாம்.

(வி-உரை) அவனது நாட்டிலே வானமும் நிலமும் சேரத்தொழிற்பட்டு வளஞ்சுரக்கு மென்பதாம்.

'இயல்புளி' என்றது இயல்பால் என்னும் பொருளது. 'உளி' இது மூன்றன் உருபாகிய 'ஆல்' என்னுஞ் உருபின் பொருள்தரும் ஓர் இடைச் சொல். 'நாட்ட' இது நாட்டின் இடத்ததாகும் என்பதாம். 'பெயல்' என்றது சிறந்து பருவமழையை. என்னை? பெய்யப்படுவதாதலின் இப்பெயர்த்தாயிற்று. 'விளையுள்' என்றது பயிர்விளைவை. இதில் 'உள' விகுதி. 'தொக்கு' இது ஒருங்கு, ஒன்றுகூடி என்னும் பொருளது. (5)

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

(பரி-உரை) மன்னவன் வென்றி தருவது வேல் அன்று கோல்-மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக்கொடுப்பது அவன் எறியும் வேலன்று கோல், அதூஉம் கோடாது எனின் - அஃதும் அப்பெற்றித்தாவது தான் கோடாதாயின் எ-று.

கோல் செவ்விதாயவழியே வேல் வாய்ப்பதென்பார் வேலன்றென்றார்: * "மாண்ட வறநெறி மூதற்றே யரசின் கொற்றம்" என்றார் பிறரும். கோடா னென்பது பாடமாயின், கருவியின் தொழில் வினைமுதன்மே னின்றதாக வுரைக்க.

(ப-ரை) மன்னவன்-அரசனுக்கு, வென்றிதருவது (போரில்) வெற்றி யைத்தருவது, வேலன்ற - (அவனெறியும்) வேற்படையன்றாகும், கோல். (அவனது) செங்கோலாகும், அதுஉம்-அக்கோலும், (அப்படிப்பட்டதாவது) கோடாதெனின் (தான்) கோணுதிருக்குமாயின் எ-று.

(க-ரை) அரசனுக்கு வேல் வெற்றியைத்தராத செங்கோல் வெற்றி யைத்தரும் என்பதாம்.

(வி-ரை) கோல் செம்மையாயிருக்கின்றவிடத்தே வேல் பயன்படு மென்றற்கு வேலன்ற வெற்றி தருவது கோலென்றார்.

'வேல்' இது வேலாயுதத்தைக் குறிக்கும். இனி ஆயுதப்பொத்வையுங் குறிக்கும். வெல்லுங் காரணம்பற்றி வந்தபெயர். 'வெல்லுவதுவேல்' 'வென்றி' இது 'வெற்றி' என்பதன் மெலித்தல் விகாரம். 'கோல்' என்றது அவன் ஆட்சிக்கோலை. 'கோலதுஉம்' என்றது . இன்னிசையளபெடை. 'அதுஉம்' இது அதுவும் என்பதன் விகாரம். (8)

இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

(பரி-உரை) வையகம் எல்லாம் இறை காக்கும்-வையகத்தையெல்லாம் அரசன் காக்கும், அவனை முறை காக்கும்-அவன்றன்னை-அவனது செங் கோலே காக்கும், முட்டாச் செயின்-அதனை முட்டவர்தழியும் முட்டாமற் செலுத்தவனுயின் எ-று.

முட்டாமற் செலுத்தியவாறு § மகனை முறைசெய்தான்கண்ணும், ‡ தன்னை குறைத்தான்கண்ணுங் காண்க. முட்டாதென்பதன் இறந்தகால விகாரத்தாற் றொக்கது. இவை நான்கு பாட்டானும் அதனைச் செலுத்தினான் எய்தும் பயன் கூறப்பட்டது.

(ப-ரை) இறை - அரசனானவன், வையகமெல்லாம் - பூமிமுழுதையும், காக்கும் - காப்பாற்றுவான், முறை - (அவனது) செங்கோலானது, அவனை அவன் தன்னை, காக்கும்-காப்பாற்றுவதாகும், முட்டாச்செயின்-முட்டாமற் செலுத்தவானுயின் எ-று.

(க-ரை) அரசன் பூமியைக் காப்பான், செங்கோல் அவனைக் காக்கும் என்பதாம்.

---

* புறநானூறு-55.
§ மணிமேகலை: சிறைசெய்காதை-53-55.
‡ பொற்சிறைப்பாண்டியன்: சிலப்பதிகாரம்-23, கட்டுரைகாதை-42-53.

(வி-ரை) மூட்டாமற் செங்கோல் செலுத்தியவிதத்தை மகளைத் தொட்காலில் வைத்தூர்ந்த சோழனிடத்தும், அயலார் வீட்டுக் கதவைத் தட்டிய தன் கையைக்குறைத்த பாண்டியனிடத்தும் காண்க. [இந்நான்கு பாட்டானும் செங்கோல் செலுத்துபவன் அடையும்பயன் சொல்லப்பட்டது.]

'இறை' இது அரசன் என்னும் பொருளது. இது அவனுக்கு நிலைமை பற்றிவந்த பெயர். 'அவனை' என்றது இறைவனை. 'முறை' என்றது இறைவனின் செங்கோலை. 'மூட்டாச்செயின்' என்றது மூட்டுப்பெற வந்தவழியும் மூட்டுறுதடிச்செய்யின் என்பது பொருளாம். (மூட்டு குறைபாடு) 'செயின்' இது செய்தால் என்னும் பொருளது. (7)

எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும்.

(பரி-உரை) எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன் - முறை வேண்டினோர்க்கு எளிய செவ்வியையுடையனாய் அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோடும் ஆராய்ந்தறிந்த வுண்மைக்கொப்ப முறைசெய்யாத அரசன், தண்பதத்தான் தானே கெடும்-தாழ்ந்த பதத்திலே நின்று தானே கெடும் எ-று.

எண்பதத்தானென்னும் முற்றுவினையெச்சமும், ஓராவென்னும் வினையெச்சமும், செய்யாவென்னும் பெயரெச்ச எதிர்மறையுட் செய்தல்வினை கொண்டன. தாழ்ந்தபதம்-பாவமும் பழியும் எய்தியிற்கும்மேல். * 'அல்லவை செய்தாற் கறங்கூற்றம்'. ஆகலின், பகைவர் இன்றியுங் கெடுமென்றார். இதனுள் முறை செலுத்தாதானது கேடு கூறப்பட்டது.

(ப-ரை) (வழக்கறிவிப்பவர்க்கு) எண்பதத்தான் - எளிதான சமயத்தை யுடையனாகி; ஓரா-(அவரால் அறிவிக்கப்பட்டவைகளை நூலோர் பலரோடும்) ஆராய்ந்து, முறைசெய்யா - (தின்ற உண்மைக்கு ஒப்பாக) முறைசெய்யாத, மன்னவன்-அரசன், தண்பதத்தால் - தாழ்ந்த பதத்திலே நின்று, தானே கெடும்-தானே கெடுவான் எ-று.

(க-ரை) எளிய சமயமுடையவனாகி யாராய்ந்து முறைசெய்யாத மன்னன் தானே கெடுவான் என்பதாம்.

(வி-ரை) தாழ்ந்தபதம்-பாவமும் பழியும் அடைந்து நிற்கும்மேல். அல்லவைசெய்தார்க்கு அறங்கூற்றமாகலால் பகைவரில்லாதிருந்தாலும் தானே கெடுமென்றார். [இதனால் முறைசெலுத்தாதவனது கேடு சொல்லப்பட்டது.]

'எண்பதத்தான்' இது குறையிரப்பார்க்கு எளிதில் காட்சிதரக்கூடியவனாகி என்பதாம். 'ஓரா' இது செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இது ஓர்ந்து என்னும் பொருளது. ஓர்தலாவது ஆராய்ந்து உண்மைகண்டு அறிதல். 'செய்யா' இது 'செய்யாத' என்றதன் ஈறுகெட்டு நின்றது. இது

* நான்மணிக்கடிகை 85. மேலே எடுத்துக்காட்டியும். அதுகு காண்க.

எதிர்மறைப்பெயரெச்சம். 'தண்பதம்' என்றது தாழ்வானதாகிய தேற்பட்ட நிலையை. 'தானே கெடும்' இது பகைவரில்லாமலேபுன்கெடும் என்பதாம். (8)

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்.

(பரி-உரை) குடி புறங்காத்த லோம்பிக் குற்றம் கடிதல்-குடிகளைப் பிறர் கலியாமற் காத்தற் றானும் கலியாத பேணி, அவர் மாட்டுக் குற்றங்களின் அதனை யொறுப்பா லொழித்தல், வேந்தன் வடு அன்று தொழில் - வேந்தனுக்குப் பழியன்ற தொழிலாகலான் எ-று.

தண்பஞ்செய்தல், பொருட்கோடல், கோறல் என மூவகைப்பு மூன்று; அவற்றன் முண்டைக்கு எய்தவன முன்னையவென்பது குற்றங்கடிதலென் பதனாற் பெற்றாம். தன்கீழ் வாழ்வாரை ஒறுத்தல் அறனன்மையின் வடுவா மென்பதனை ஆசங்கித்த, அஃதாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தின் நீக்கித் தூயராக்குதலுஞ் சாதிதருமமென்றார்.

(ப-ரை) குடி-குடிகளை, புறங்காத்து-பிறர் வருத்தாமற் காத்து, ஓம்பி-தானும் வருத்தாமல் ஆதரவுசெய்து, குற்றம் - (அவரிடத்திலே) குற்றம் உண்டானால், கடிதல் (அதனைத் தீர்க்கும்படி) தண்டித்தல், வேந்தன்றொழில்-அரசனது தொழிலாம், (ஆகலால்) வடுவன்று-பழியாகாது எ-று.

(க-ரை) குடிகளைக் காத்துக் குற்றங்கடிதல் அரசனது தொழிலாம் என்பதாம்.

(வி-ரை) தண்பஞ்செய்தல், பொருள்வாங்கல், கொல்லுதல் என ஒறுப்பு என்ற தண்டம் மூன்றும். அவைகளுள் இங்கே சொல்லப்பட்டது குற்றங்கடிதலென்றதனால் முன்னையிரண்டுமாம். தன்கீழ் வாழ்வாரை ஒறுத்தல் அறனல்லாமையால் வடுவாமென்பதனை ஆக்ஷேபமாக்கிக்கொண்டு அது அரசனுக்கு அவரை அக்குற்றத்தினீக்கிப் பரிசுத்தராக்குதலால் சாதிதருமமென்றார்.

'புறங்காத்து' என்றது பிறர் தன்புறத்தாவண்ணம் காப்பாற்றிப்பேற்றி என்பதாம். 'ஓம்பி' என்றது தானும் தன்புறத்தாது பேணி என்பதாம். 'குற்றங்கடிதல்' என்றது குற்றத்தினின்றும் நீக்கும்பொருட்டு தண்டித்தல் என்பதாம். இதில் 'தல்' தொழிற்பெயர்விகுதி. 'வடு' என்றது பழிப்பை. 'வேந்தன் றொழில்' என்றது அரசமுறைநீதி என்பதாம்.

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

(பரி-உரை) வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல் - அரசன் கொடியவர்களைக் கொலையான் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல், பைங்கூழ் களை கட்டதனொடு நேர்-உழவன் களையைக் களைந்து பைங்கூழைக் காத்தலை யொடொக்கும் எ-று.

கொடியவனென்றது நீக்கொளுவுவார், கஞ்சிவார், கருவியிற்கொல்வார், கள்வர், ஏறலேப்பார், சூறைகொள்வார், பிறனில் விழைவாரென்றிவர் முதலாயினரை. இவரை வடநூலார் ஆததாயிகள் என்ப. இப்பெற்றியாரைக் கண்ணோடிக் கொல்லாவழிப் புற்கேளைக்கு அஞ்சாகின்ற பைங்கூழ் போன்ற கலிவு பலவெய்தி உலகு இடர்ப்படுதலின், கோறலும் அரசற்குச் சாதிதருமமென்பதாயிற்று. இவை இரண்டு பாட்டானுஞ் செங்கோல் செலுத்தும் வெண்குடை வேந்தற்குத் தீயார்மாட்டு மூவகையொறுப்பும் ஒழியற்பால அல்லவென்பது கூறப்பட்டது.

(ப-ரை) வேந்து-அரசனனவன், கொடியாரை-கொடியவரை, கொலையின்-கொலையினுலே, ஒறுத்தல் - தண்டித்து (நல்லோரைக் காப்பாற்றல்), (உழ்வனனவன்) பைங்கூழ்-பயிரை, களை கட்டதனெடு-களையைக் களைந்து காப்பாற்றலோடு, சேர்-ஒக்கும் எ-று.

(க-ரை) அரசன் கொடியவரைத் தண்டித்து நல்லவரைக் காத்தல் உழவன் பயிர்க்குக் களையெடுத்தல்போலாம் என்பதாம்.

(வி-ரை) கொடியோர் - நீக்கொளுவுவோர், கஞ்சிடுவோர், படையிற் சேர்ப்போர், கள்வர், வழியலேப்போர், கொள்ளையிடுவோர், பிறனில்லாளை விரும்புவோர் இவர் முதலாயினோர்கள். இப்படிப்பட்டவரை அரசன் கொல்லாதவிடத்துப் புல்லுக்களைக்கு அஞ்சாகின்ற பயிர்போன்ற பல வருத்தங்களை அடைந்த உலகத்தார் தன்பப்படுவர். [இவை இரண்டுபாட்டாலும் செங்கோல் செலுத்தும் அரசனுக்குத் தீயாரிடத்து மூவகைத்தண்டமும் செய்யவேண்டுமென்பது சொல்லப்பட்டது.]

'கொலை' இது 'கொல்' என்னும் பகுதி அடியாகப் பிறந்த பெயர். 'கொடியார்' இது 'கொடுமை' என்னும் பண்பினடியாகப் பிறந்த பெயர். 'ஒறுத்தல்' இது தண்டித்தல் என்னும் பொருளது. 'பைங்கூழ்' இது பசுமை + கூழ் என்பதன் விகாரம். 'கூழ்' என்பது பயிரை. 'களை' என்றது களையப்படுவது என்னுங் காரணம்பற்றி வந்த பெயர். இது பயிர்க்கு இடையூறுகத் தோன்றும் புன் முதலியனவற்றைக் குறிக்கும். (10)

55-ம் அதி - செங்கோன்மை - முற்றிற்று.

56-ம் அதிகாரம்—கொடுங்கோன்மை

(பரி உரை) அஃதாவது: அம்முறையினது கோடுதற்றன்மை. ஈண்டும் கோன்மையின் பெயர் பொருண்மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறுகலின் இது அதன்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: அம்முறையினது கோணுதற்றன்மையாம். செங்கோன்மைக்கு மாறுகலால் இது அதன்பின் வைக்கப்பட்டது.

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொ
டல்லவை செய்தொழுகும் வேந்து. [ண்

(பதவுரை) கொலைமேற் கொண்டாரிற் கொடிது - பகைமைபற்றிக் கொல்லுதற்றொழிலைத் தம்மேற்கொண்டு ஒழுகுவாரினும் கொடியன், அலைமேற்கொண்டு அல்லவை செய்து ஒழுகும் வேந்து-பொருள் வெஃகிக் குடிகளை அலைத்தற்றொழிலைத் தன்மேற்கொண்டு முறையல்லாதவற்றைச் செய்தொழுகும் வேந்தன் எ-று.

அஃது செய்வது ஒருபொழுதைத் துன்பம், இவன் செய்வது எப்பொழுதும் துன்பமாமென்பதுபற்றி அவரினும் கொடியனென்றார். பான்மயக்குறழ்ச்சி. வேந்தென்பது உயர்திணைப்பொருட்கண் வந்த அஃறிணைச்சொல். அலை கொலையினும் கொடிதென்பதாயிற்று.

(ப-ரை) அலை - (பொருளை விரும்பிக் குடிகளை) அலைத்தற்றொழிலை, மேற்கொண்டு - (தன்) மேற்கொண்டு, அல்லவை - முறையல்லாதவைகளை, செய்து செய்து, ஒழுகும்-நடக்கும், வேந்து-அரசனானவன், கொலை-(பகைமைபற்றிக்) கொல்லுதற்றொழிலை, மேற்கொண்டாரின்-(தம்) மேற்கொண்டு கூடப்பவரினும், கொடிது-கொடியவனாவான் எ-று.

(க-ரை) அநியாயஞ் செய்யு மரசன் கொலைசெய்பவரிலும் கொடியன் என்பதாம்.

(வி-ரை) அவர் செய்வது ஒருகாலத்துன்பம், இவன் செய்வது எக்காலும் துன்பமாமென்பதுபற்றி அவரினும் கொடியனென்றார். அலைத்தல் கொலையினும் கொடியதென்பதாயிற்று.

'கொண்டாரில்' இதில் 'இல்' உருபு எல்லைப்பொருளில் வந்தது. 'கொடிதே' இதில் ஏகாரம் தேற்றப்பொருளது. 'அலைமேற்கொண்டு' என்றது பொருள்விரும்பி குடிகளை அலைத்தற் றொழிலில் மேற்கொண்டு என்பதாம். (அலைத்தல்-துன்புறுத்தல்) 'பொருள்விரும்பி' என்பது வருவித்து உரைக்கப்பெற்றது. 'அல்லவை' என்றது அரசநீதி அல்லாததாகிய கொடுஞ் செயல்களை. (1)

வேலொடு நின்ரு னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்ரு னிரவு.

(பத-உரை) வேலொடு நின்றான் - ஆறலைக்குமிடத்தைத் தனியே கைக்கொண்டு நின்ற கள்வன், இடு என்றது போலும்-ஆறுசெல்வாரை நின்னைப் பொருள் தா என்ற வேண்டுதலோடொக்கும், கோலொடு நின்றான் இரு ஆறலைத்தற்றொழிலோடு நின்ற அரசன் குடிகளைப் பொருள்வேண்டுதல் எ-று.

வேலொடு நின்றானென்றதனாற் பிறதொடு நில்லாமையும் இரவென்றதனால் இறைப்பொருள் அன்மையும் பெற்றாம். தாராக்கால் ஒறுப்பனென்றல்

குறிப்பினாலேனும், இகலாற்கோடலும் கொடுங்கோன்மையாயிற்று. இவை இரண்டு பாட்டாலும் கொடுங்கோன்மையது குற்றம் கூறப்பட்டது.

(ப-ரை) கோலொடு - ஒறுத்தற்றொழிலோடு, நின்றான்-நின்றவரசன், இரவு-(குடிகளோப்பொருள்) வேண்டுதலானது, கோலொடு கோலாயுதத்தோடு, நின்றான் - (வழியில் அவற்றைப் பறிக்குமிடத்தைத் தனியே) நின்ற கள்வன், நிலனென்றதுபோலும் - (வழிப்போக்கனை நோக்கி உன் கைப்பொருளை) தாவென்ற வேண்டுதல்போலும் எ-று.

(க-ரை) கொடுங்கோலரசன் குடிகளை வருத்திப் பொருள் வேண்டுதல் வழிப்போக்கனைக் கள்வன் வருத்திப் பொருள்கொடு கென்றல்போல் என்பதாம்.

(வி-ரை) கோலொடு நின்றானென்றதனாலே பிறரொடு நில்லாமையும், இரவென்றதனாலே குடியினை யில்லாமையும் கொள்ளப்பட்டன. தாராக்கால் தண்டிப்பேனென்னும் குறிப்பினாலும் இரத்தல் வாய்ப்பதலும் கொடுங் கோன்மையாயிற்று. [இவ்விரண்டு பாட்டாலும் கொடுங்கோன்மையினது குற்றம் சொல்லப்பட்டது.]

'கோலொடு நின்றான்' என்றதற்கு ஆறலைக்கும் இடத்தைத் தனியே கோல் கொண்டு நின்ற கள்வன் என்பது பொருள். இதில் 'ஒடு' மூன்றன் உருபு. 'ஆறலைக்கும் இடத்தைத் தனியே' என்பது வருவித்துரைக்கப்பெற்றது. 'கோலொடு' என்றது ஒறுத்தற்றொழிலோடு என்பதாம். 'இரவு' கண்டு வேண்டிக் கேட்டலை என்னும் பொருளது. (2)

நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்.

(பரி-உரை) நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்-தன்னாட்டு நிகழ் நிலைகளை நாடொறும் ஆராய்ந்து அதற்கு ஒத்த முறைமையைச் செய்யாத அரசன், நாடொறும் நாடு கெடும்-நாடொறும் நாடழியும் எ-று.

அரசனுக்கு நாடு உறப்பாகலின் அதன்வினை அவன்மேனின்றது. நிகழ்தல்-பயன் எய்தாமை. மன்னவனொடு நாடொறுங் கெடுமென் றுரைப் பாருமுளர்.

(ப-ரை) நாடொறும் - நாள்தோறும், நாடி-(தன்னாட்டிலே நேர்ந்த நிலைகளை) ஆராய்ந்து, முறை - முறைமையை, செய்யா - (அதற்கு ஒத்தச்) செய்யாத, மன்னவன் - அரசன், நாடொறும் - நாள்தோறும், நாடுகெடும்-நாடழிப்பான் எ-று.

(க-ரை) தன்னாட்டிற் குற்றங்களை யாராய்ந்து நீதி செலுத்தாத மன்னன் தன்னாட்டை யிழப்பான் என்பதாம்.

(வி-ரை) நாடு உறப்பாகலால் அதன் கெடுதல் அவன்மேல் நின்றது. நிகழ்தல்-பயன் அடையாமை.

'காடொறும்' இதில் தொறும் பன்மைப்பொருள்தர வந்த இடைச் சொல். தினந்தினம் என்பது பொருள். 'முறைசெய்யா' என்றது ஆட்சி முறையை. (3)

கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

(பரி-உரை) சூழாது கோல் கோடிச் செய்யும் அரசு-மேல் விளைவதை எண்ணாது முறைதப்பச் செய்யும் அரசன், கூழும் குடியும் ஒருங்கு இழக்கும். அச்செயலான் முன் ஈட்டிய பொருளையும் பின் ஈட்டுதற் கேதுவாகிய குடிகளையுஞ் சேர இழக்கும் எ-று.

கோடவென்பது திரிந்து நின்றது. முன் ஈட்டிய பொருள் இழந்தற்கே தென வருகின்ற பாட்டாற் கூறுப.

(ப-ரை) சூழாது - (மேல்விளைவை) எண்ணாமல், கோல்கோடி - முறை தப்ப, செய்யும்-செய்யும், அரசு - அரசனானவன், (அச்செயலால்) கூழும்-(முன்னேசம்பாதிக்கப்பட்ட) பொருளையும், குடியும்-பின் (அது சம்பாதிக்கைக்கு ஏதுவாகிய) குடிகளையும், ஒருங்கு-ஒருசேர, இழக்கும்-இழப்பான்.

(க-ரை) மறுதிதப்ப வாசாளுமரசன் பொருளையுங் குடிகளையு மிழப்பான் என்பதாம்.

(வி-ரை) கோடியென்னும் வினையெச்சம் கோடவென்னும் வினையெச்சப் பொருளில் வந்தது. முன் சம்பாதிக்கப்பட்ட பொருளை இழத்தற்கு ஏது வருமிறை பாட்டாற் சொல்லுகிறார்.

'கூழுங்குடியும்' என்றது செல்வத்தையும் பின்னும் மேன்மேலுஞ் செல்வஞ் சேர்தற்கு ஆதாரமாகிய குடிகளையும் என்பதாம். இதன்கண் வந்த உம்மைகள் இரண்டும் எண்ணும்மைகள். 'ஒருங்கு' இது ஒருமிக்க என்னும் பொருளது. 'கோல்கோடி' என்றது கொடுங்கோலனென்பதாம். (4)

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

(பரி-உரை) அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே-அரசன் முறைசெய்யாமையாற் குடிகள் தன்பமுற்று அதனைப் பொறுக்கமாட்டாது அழுத கண்ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை-அவன் செல்வத்தைக் குறைக்குங் கருவி எ-று.

அழுதகண்ணீர் - அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தை யென்றுமையின், இஃது ஏகதேசவுருவகம். அல்லற்படுத்திய பாவத்தைத் தொழில் அதற்கேதுவாகிய கண்ணீர்மேனின்றது. அக்கண்ணீரிற் கொடிய பிறிதின்மையின், செல்வங் கெடுதற்கேதுமென்பது கருத்து.

(ப-ரை) செல்வத்தை (அரசன்) செல்வமாகிய (மரத்தை), தேய்க்கும்-குறைக்கும், படை-வாளாவது (அவன்) முறைசெய்யாமையினாலே, அல்லற் பட்டு (குடிகள்) தன்பப்பட்டு, ஆற்றாது (அதனைப்) பொறுக்கமாட்டாமல், அழுதகண்ணீரன்றே-அழுதகண்ணீரல்லவோ எ-று.

(க-ரை) குடிகளழுத கண்ணீரல்லவோ கொடுங்கோல் வேந்தன் செல்வத்தை யறுக்கும் வாளென்பதாம்.

(வி-ரை) அல்லற்படுத்திய பாவத்தினது தேய்த்தல் அதற்கு ஏதுவாகிய கண்ணீர்மேல் நின்றது. அக்கண்ணீரைக்காட்டிலும் கொடியது வேறில்லாமையால் செல்வங் கடிதினிலே தேயுமென்பது கருத்து (ஏகதேச வுருவகவணி.)

'அல்லல்' இது தன்பம் என்னும் பொருளது. 'அன்றே' இதில் ஈற்றகாரம் தேற்றப்பொருளது. 'செல்வத்தை' என்றது அரசசெல்வத்தை. (5)

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றே
மன்னவா மன்னர்க் கொளி. [ன்

(பரி உரை) மன்னர்க்கு மன்னுதல் செய்கோன்மை - அரசர்க்குப் புகழ்கள் தாம் நிலைபெறுதல் செங்கோன்மையானும், அஃது இன்றேல் மன்னர்க்கு ஒளி மன்னுவாம்-அச்செங்கோன்மை யில்லையாயின், அவர்க்கு அப்புகழ்கள் தாம் உளவாகா எ-று.

விகாரத்தாற்றொக்க மூன்றுவது விரித்து ஆக்கம் வருவித்துரைக்கப் பட்டது. மன்னுதற்கேது புகழாதல் * "இந்நிலத்து மன்னுதல் வேண்டி னிசை நடுக" என்பதனானுமறிக. மன்னுமை - ஒருகாலு நிலையாமை. பழிக்கப்பட்டால் ஒளி மன்னுவாம்; ஆகவே, தாமுமன்னுரென்பதாயிற்று. வென்றி, கொடை முதலிய ஏதுக்களாற் புகழ் பகுதிப்படுதலின், பன்மையாற் கூறினர். அவையெல்லாம் செங்கோன்மை யில்வழி இலவா மென்பதாம். இவை கான்கு பாட்டானுங் கொடுங்கோலனுயினன் எய்துங் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) மன்னர்க்கு - அரசர்க்கு, மன்னுதல் - (புகழ்களாலே) நிலை பெறுதல், செங்கோன்மை-செங்கோன்மையினால் (ஆகும்) அஃது-அச்செங் கோன்மை, இன்றேல் - இல்லையாயின், மன்னர்க்கு - அரசர்க்கு, ஒளி-அப் புகழ்களானவை, மன்னுவாம்-உண்டாகாவாம் எ-று.

(க-ரை) அரசர்க்கு செங்கோன்மையே புகழ்களாம் அஃதில்லாவிடி லப்புகழ்க ளுண்டாகாவாம் என்பதாம்.

(வி-ரை) மன்னுமை-ஒருபோதும் நிலையாமை. பழிக்கப்பட்டால் புகழ் நிலையாமையால் தாமும் நிலையாரென்பதாயிற்று. வெற்றி, கொடை, முதலாகிய ஏதுக்களால் புகழ் பலவகைப்படுதலால் மன்னு எனப் பன்மையாற்

* நான்மணிக்கடிகை.

சொல்லினர். அப்புகழ்களெல்லாம் செங்கோன்மை யில்லாதவிடத்து இல்லையா மென்பதாம். [இவை கான்குபாட்டாலும் கொடுங்கோன்மையான் அடையுங்குற்றம் சொல்லப்பட்டது.]

'மன்னுதல்' இது புகழ்நிலை பெறுதல் என்னும் பொருளது. 'அஃது' என்றது அச்செங்கோன்மையை. 'ஒளி' என்றது புகழ் ஒளியை. (6)

துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
ளளியின்மை வாழு முயிர்க்கு.

(பரி-உரை) துளி இன்மை ஞாலத்திற்கு எற்று - மழையில்லாமை யையத்து வாழு முயிர்கட்கு எவ்வகைத் துன்பம் பயக்கும், அற்றே வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு - அவ்வகைத் துன்பம் பயக்கும் அரசன் றண்ணளியில்லாமை அவனுட்டு வாழுங் குடிகட்கு எ-று.

சிறப்புப்பற்றித் துளியென்பது மழைமேனின்றது; உயிரென்பது குடி கண்மேனின்றது. மேல் வானெக்கிவாழு மென்றதனை எதிர்மறை முகத்தாற் கூறியவாறு.

(ப-ரை) வேந்தன்-அரசனது, அளியின்மை - அருளில்லாமையானது, வாழும்-(அவனுட்டிலே) வாழும், உயிர்க்கு-குடிகளுக்கு, துளி-மழையினது, இன்மை-இல்லாமையானது, ஞாலத்திற்கு-பூமியில் வாழுமுயிர்களுக்கு, எற்று-எவ்வகைத் துன்பந்தருமோ, அற்றே-அவ்வகைத் துன்பமே தரும் எ-று.

(க-ரை) மழையில்லாமை துன்பந்தரும், அதுபோல அரசனருளில் லாமை குடிகளுக்குத் துன்பந்தரும் என்பதாம்.

(வி-ரை) உயிரென்றது குடிகளை. முன் வானெக்கி வாழுமென்றதனை எதிர்மறை முகத்தாற் சொல்லியபடி.

'துளி' என்றது ஈண்டு மழையை. 'எற்று' இது எத்தன்மைத்து என்னும் பொருளது. 'அற்றே' இது அத்தன்மைத்தே என்னும் பொருளது. ஏகாரம் தேற்றப்பொருளது. 'அளி' என்றது தண்ணருளை. 'வாழும் உயிர்க்கு' என்றது காட்டில் வாழும் குடிகளுக்கு என்பதாம். (7)

இன்மையி னின்ன துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

(பரி-உரை) முறை செய்யா மன்னவன் கோற்கீழ்ப் படின் - முறை செய்யாத அரசனது கொடுங்கோலின்கீழ் வாழின், இன்மையின் உடைமை இன்னாது - யாவர்க்கும் பொருளினது இன்மையினும் உடைமை இன்னாது என்றவாறு.

தனக்குரிய பொருளோடு அமையாது மேலும் வெஃகுவோனது காட்டுக் கைக்கோள் யாப்புண்டல் முதலிய வருவது பொருளுடையார்க்கே யாகலின், அவ்வுடைமை இன்மையினும் இன்னாதாயிற்று. இவை மூன்று பாட்டானும் அவனுட்டு வாழ்வார்க்கு வருங்குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) முறைசெய்யா-முறையைச் செய்யாத, மன்னவன்-அரசனது, கோற்கீழ்-கொடுங்கோலின்கீழ், படின்-வாழின், (யாவர்க்கும்) உடைமை-(பொரு) ளுடைமையானது, இன்மையின்-இல்லாமையினும், இன்னாது-அதிக துக்கத்தைச் செய்வதாகும் எ-று.

(க-ரை) அரசன் கொடுங்கோலின்கீழ் வாழ்ந்தால் வறுமையிலுங் கொடிய துன்பந்தரும் என்பதாம்.

(வி-ரை) தனக்குரிய பொருளோடு அமையாது மேலும் விரும்புவானது காட்டிலே அடி குத்து முதலானவை பொருளுடையார்க்கே ஆதலால் அவ் வுடைமை யில்லாமையினும் இன்னாதாயிற்று. [இவை இரண்டுபாட்டாலும் அவனுட்டு வாழ்வார்க்கு வரும் குற்றஞ் சொல்லப்பட்டது]

'இன்மை' இது பொருள் இல்லாமையாகிய வறுமையைக் குறித்தது. 'இன்னா' இது இனிமை அல்லாதது, துன்பந்தருவது என்னும் பொருளது. 'உடைமை' என்றது பொருள் உடைமையாகிய செல்வநிலையை. 'முறை செய்யாமன்னவன்' என்றது கொடுங்கோன் மன்னனை. 'கோல்' என்றது தண்டு கொடுங்கோலை. (8)

முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.

(பரி-உரை) மன்னவன் முறை கோடிச் செய்யின்-மன்னவன் தான் செய்யும் பொருளை முறை தப்பச் செய்யுமாயின், உறை கோடி வானம் பெயல் ஒல்லாது-அவனுட்டுப் பருவமழை இன்றும்வகை மேகம் பொழிதலைச் செய்யாது எ-று.

இரண்டிடத்தும் கோடவென்பன திரிந்துநின்றன. உறை கோடுதலாவது பெய்யுங்காலத்துப் பெய்யாமை, அதற்கு ஏது வருகின்ற பாட்டாற் கூறுப.

(ப-ரை) மன்னவன்-அரசன், முறைகோடி-முறைதப்ப, செய்யின்-(பொருளைச்) சம்பாதிப்பானாயின், (அவனது நாட்டிலே) உறை-பருவமழை யானது, கோடி-இல்லாமற்போக, வானம்-மேகமானது, பெயல்-பொழிதலை, ஒல்லாது-பொருந்தாது எ-று.

(க-ரை) அரசன் முறைதப்ப வாசாலி லவநாட்டிலே மழைபெய்யாது என்பதாம்.

(வி-ரை) பருவமழை யில்லாமைக்கு ஏதுவருகின்றபாட்டாற் சொல்லு கிறார். கோடி எனவந்த இரண்டு சொற்களும் கோட என்னுஞ் சொற் பொருளில் வந்தன.

'முறைகோடி' என்றது அரசமுறை தப்பி என்பதாம். 'செய்யின்' முறை தவறி ஆளுகை செய்வானாயின் என்பதாம். 'உறை' என்றது பருவமழையை. 'வானம்' என்றது தண்டு மேகத்தை. (9)

ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

(பரி-உரை) காவலன் காவான் எனின்-காத்தற்குரிய அரசன் உயிர்களைக் காவானுயின், ஆபயன் குன்றம்-அறனில்லாத அவனுட்டுப் பசுக்களும் பால் குன்றம்; அறுதொழிலோர் நூல் மறப்பர்-அந்தணரும் நூல்களை மறந்துவிடுவர் எ-று.

ஆபயன்-ஆவாற் கொள்ளும் பயன். அறுதொழிலாவன:—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என இவை. பசுக்கள் பால் குன்றியவழி அவியின்மையானும், அவை கொடுத்தற்குரியார் மந்திரம் கற்பம் என்பன ஒதாமையானும், வேள்வி கடவாதாம்; ஆகவே, வானம் பெய்யலொல்லா தென்பதாயிற்று. இவை யிரண்டு பாட்டானும் அவனுட்டின்கண் கிழுங் குற்றம் கூறப்பட்டது.

(ப-உரை) காவலன் - காப்பாற்றற்கு உரிய அரசன், காவானெனின்-(உயிர்களைக்) காப்பாற்றானுயின், (அவன நாட்டிலே) ஆ-பசுக்களும், பயன் குன்றம்-பால்சுருக்கும், அறுதொழிலோர் - அந்தணரும், நூல் - நூல்களை, மறப்பர்-மறந்துவிடுவர் எ-று.

(க-உரை) அரசன் உயிர்களைக் காவாவிடி லவனுட்டிற் பசுக்கள் பால் சுருக்கும், வேதியர் வேதமறப்பர் என்பதாம்.

(வி-உரை) ஆபயன்-ஆவினின்றும் கொள்ளப்படும் பயன். அறுதொழிலாவன:—வேதமோதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்பனவு. பால் குறைதலாலும், நூலை மறைத்தலாலும், தேவர்க்கு யாகம் கடவாமையால் மழைபெய்யா தென்பதாயிற்று. [இவை இரண்டு பாட்டாலும் அவனுட்டில் உண்டாம் குற்றம் சொல்லப்பட்டது.]

'ஆபயன்' என்றது பசுவாற் பெறப்படும் பால், நெய், தயிர் மோர் முதலியவற்றை. 'அறுதொழிலோர்' என்றது அந்தணரை. 'நூல்' என்றது வேதநூலை. (10)

56-ம் அதி - கொடுங்கோன்மை - முற்றிற்று.

57-ம் அதிகாரம்—வெருவந்தசெய்யாமை

(பரி-உரை) அஞ்சாவது: குடிகள் அஞ்சுவதும், பகுதி அஞ்சுவதுந் தான் அஞ்சுவதுமாய தொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மைபாற்படுதலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஞ்சாவது: குடிகள் அஞ்சுவதும், பகுதியென்ற சொல்லப்படுகிற மந்திரிமுதலாகிய அங்கங்கள் அஞ்சுவதும், தான் அஞ்சுவதும் ஆகிய தொழில்களைச் செய்யாமை. அவைசெய்தல் கொடுங்கோன்மையிலே சேர்தலால் இது அதன்பின் வைக்கப்பட்டது.

தக்காங்கு நாடித் தலைசெல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

(பரி-உரை) தக்காங்கு காடி-ஒருவன் தன்னின் மெலியார்மேற் சென்ற வழி அதனை கடுவாக கின்றாராய்ந்து, தலைச்செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - பின்னும் அது செய்யாமற்பொருட்டு அவனை அக்குற்றத் திற்கு ஒப்ப ஒறுப்பானே அரசனுவான் எ-று.

தக்காங்கு ஒத்தாங்கு என்பன ஒருசொல். தகுதியென்பது கடுவுகிலைமை பாதல் "தகுதி யெனவொன்று கன்றே" என்பதனானு மறிக. இதனானே தக்காங்கு காடாமையும், பிறிதோர் காரணம்பற்றி மிக வொறுத்தலும், குடிகளஞ்சும் வினையாதல் பெற்றும்.

(ப-ரை) (ஒருவன் மெலியவனுக்குத் தீங்கு செய்தவிடத்து) தக்காங்கு- கடுவாய்கின்று, காடி - (அதனை) ஆராய்ந்து, தலைச்செல்லாவண்ணத்தால்- (பின்னும்) அப்படிப்பட்ட காரியத்திலே செல்லாமற்பொருட்டு, ஒத்தாங்கு- (அக்குற்றத்தக்கு) ஏற்ப, ஒறுப்பது-(அவனை) தண்டிப்பவனே, வேந்து- அரசனுவான் எ-று.

(க-ரை) கடுவாய் கின்ற ஒருவன் குற்றத்தை யாராய்ந்து தக்கபடி தண்டிப்பவனே யரசன் என்பதாம்.

(வி-ரை) இதனுலே தகுந்ததண்டம் காடாமையும், வேறொருகாரணம் பற்றி அதிகமாகத் தண்டித்தலும், குடிகள் அஞ்சுந்தொழிலாதல் பெற்றும்.

'தக்காங்கு,' 'ஒத்தாங்கு' இவை முறையே 'தக்கவாங்கு' 'ஒத்தவாங்கு' என்பனவற்றின் விகாரங்களாகும். 'தக்காங்குகாடி' என்றது கடுகின்ற ஆராய் தலை. 'தலைச்செல்லாவண்ணம்' என்றது பின்னும் அப்பிழையை செய்யா வாறு என்பதாம். 'ஒத்தாங்கு' என்ற இடத்து அக்குற்றத்திற்கு ஒப்ப என்ப தாம். ஈண்டு குற்றம் என்பது வருவித்த உரை உரைக்கப்பெற்றது. "ஒருவன் தன்னின் மெலியார்மேற் சென்றவழி" என்றது இக்குறட்கு வருவித்த உரை.

கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்.

(பரி-உரை) கடிது ஓச்சி - அவ்வொத்தாங்கு ஒறுத்தல் தொடக்குக்கால் அளவிறப்பச் செய்வார்போற் றொடங்கி, மெல்ல எறிக - செய்யுங்கால் அளவிறவாமற் செய்க, ஆக்கம் நெடிது நீக்காமை வேண்டுபவர் - ஆக்கந் தக்கண் தொடங்கால கிற்றலே வேண்டுவார் எ-று.

கடிதோச்சல் குற்றஞ்செய்வார் அவனை யஞ்சுதற்பொருட்டும், மெல்ல வெறிதல் யாவரும் வெருவாமைப் பொருட்டுமாம். தொடங்கின அளவிற் நிறைதல்பற்றி மென்மை கூறப்பட்டது. ஓச்சுதல் எறிதலென்பன ரண்டும் உவமைபற்றி வந்தன. இவை இரண்டுபோட்டானும் குடிகள் வெருவந்த செய்யாமையது இயல்பு கூறப்பட்டது.

(ப-ரை) ஆக்கம் - செல்வமானது, கெடுதல் - கெடுக்காலம், நீக்காமை. நீக்காமையை, வேண்டுபவர்-விரும்புவோர், கடிதோச்சி (அத்தகுந்த தண்டம் செய்யத் தொடக்கும்போது) அளவுகடக்கச் செய்பவர்போலே தொடக்கி, மெல்லவெறிக-(செய்யும்போது) அளவுகடவாமற் செய்யக்கடவர் எ-று.

(க-ரை) செல்வம் வேண்டுவோர் வலிய தண்டனை செய்பவர்போலத் தொடக்கி மெலிய தண்டனை செய்யக்கடவர் என்பதாம்.

(வி-ரை) கடிதோச்சல்-குற்றஞ்செய்வார் அதனை அஞ்சுதற்பொருட்டும், மெல்லவெறிதல் யாவரும் அஞ்சாமைப் பொருட்டும் ஆம். தொடக்கின வளவுக்குக் குறைதல்பற்றி தகுந்ததண்டஞ் செய்தலை மெல்லவென்றார். ஓச்சுதல் எறிதல் இவ்விரண்டும் உவமைபற்றி வந்தன. [இவை இரண்டு பாட்டாலும் குடிகள் அஞ்சுவன செய்யாமையினது இலக்கணம் சொல்லப் பட்டது.]

'கடிதோச்சி' என்றது கடுமையாய் ஓங்குதல் என்னும் பொருளது. அதாவது அளவுக்கு மிகவும் கடுமையாய்த் தண்டிப்பதாக அச்சுறுத்திக் காட்டி என்பதாம். (இது குற்றஞ்செய்தான் அஞ்சும்பொருட்டாம்) மெல்ல எறிக' என்றது அளவுக்கு அதிகமாகாது தக்கவாறு தண்டிக்க என்பதாம். 'ஆக்கம் கெடுதல் நீக்காமைவேண்டுபவர்' என்றது செல்வம் தப்பாமல் நீண்ட காலம் நிலைத்திருக்க வேண்டுபவர் என்ற பொருளதாம். (2)

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னொருவந்த மொல்லைக் கெடும்.

(பரி-உரை) வெருவந்த செய்து ஒழுகும் வெங்கோலன் ஆயின்-குடிகள் வெருவிய செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலனுமாயின், ஒருவந்தம் ஒல்லைக் கெடும்-அரசன் ஒருதலையாகக் கடிதிற் கெடும் எ-று.

வெங்கோலனென்பது நண்டு வாளா பெயராய் நின்றது. ஒருவந்தம், ஒருதலை, நிகாந்தம் என்பன ஒருபொருட்கிளவி. அச்செயல்களுங் கேடுகளும் முன்னர்க் கூறப்படும்.

(ப-ரை) (அரசன்) வெருவந்த - (குடிகள்) அஞ்சப்பட்ட செயல்களை, செய்து-செய்து, ஒழுகும்-நடக்கும், வெங்கோலனாயின்-கொடுங்கோலனாயிருந்தால், ஒருவந்தம்-நிச்சயமாகவே, ஒல்லை-கடிதில், கெடும்-(அவன்) கெடுவான்.

(க-ரை) குடிகள் அஞ்சத்தக்கவற்றைச் செய்யுங் கொடுங்கோலாசன் விரைவிற் கெடுவான் என்பதாம்.

(வி-ரை) அச்செயல்களும் கேடும் பின்னே சொல்லப்படும்.

'வெருவந்த' என்றது குடிகள் அஞ்சத்தகுந்த கொடிய செயல்களை என்பதாம். 'வெங்கோல்' என்றது வெவ்வியகோல் என்பதாம்; இது கொடுங்கோலை. 'ஒருவந்தம்' இது ஐயமின்றி நிச்சயமாக என்னும் பொருளது. 'ஒல்லை' இது விரைவுகுறிக்குஞ் சொல். (3)

இறைகடிய னென்றுரைக்கு மின்னுர்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்.

(பரி-உரை) இறை கடியன் என்று உரைக்கும் இன்னுச்சொல் வேந்தன் குடிகளான் கம்மிறைவன் கடியனென்று சொல்லப்படும் இன்னுத சொல்லை புடைய வேந்தன், உறை கடுகி ஒல்லைக்கெடும்-ஆயுளுக் குறைத்து செல்வமுக் கடிதின் இழக்கும் எ-று.

கெஞ்சு கொந்த சொல்லுதலான் இன்னுமை பயப்பதாய சொல்லை இன்னுச்சொல் என்றார். உறையென்பத முதனிலைத் தொழிற்பெயர்; அஃத ஈண்டு ஆகுபெயராய் உறைதலைச்செய்யும் காண்மேனின்றது. அத குறைதலாவத அச்சொல் இல்லாதார்க்கு உள்ளதிற் சுருக்குதல்.

(ப-ரை) இறை (நம்) அரசனுனவன், கடியனென்று - பொல்லாதவ னென்று, உரைக்கும் - (குடிகளாலே) சொல்லப்படுகிற, இன்னுச்சொல்-தன்பக்தருஞ் சொல்லைபுடைய, வேந்தன் - அரசன், உறைகடுகி - ஆயுளுக் குறைந்து, ஒல்லைக்கெடும்-(செல்வமும்) கடிதினிழப்பான் எ-று.

(க-ரை) கொடியனென்று சொல்லப்பட்ட கொடுங்கோ லரசன் ஆயுள் குறைந்து செல்வமிழப்பான் என்பதாம்.

(வி-ரை) ஆயுள் குறைதலாவத அச்சொல்லில்லாதவர்க்கு உள்ளத்திலே குறைதல்.

'கடியன்' என்றது கடுமையுடையவன், கொடியன் என்பது. 'இன்னுச் சொல் வேந்தன்' என்றது இரண்டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை. இது இன்னுச்சொல்லை அடைந்த வேந்தன் என விரியும். 'உறை' தான் உலகில் உறையும்நாளாகிய ஆயுள்நாளைக் குறித்தது. 'கடுகி' என்றது குறைந்து என்னும் பொருளது. (4)

அருஞ்செவ்வி யின்னு முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

(பரி உரை) அருஞ்செவ்வி இன்னு முகத்தான் பெருஞ் செல்வம்-தன்னைக் காணவேண்டுவார்க்குக் காலம் அரியனுய்க் கண்டால் இன்னுத முகத்தினை புடையானது பெரிய செல்வம், பேய்கண்டு அன்னது உடைத்து-பேயாற் காணப்பட்டாற் போல்வதொரு குற்றமுடைத்து எ-று.

எனவே, இவை இரண்டும் வெருவந்த செய்தலாயின. இவை செய்வானைச் சார்வார் இன்மையின், அவனது செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன்படாதென்பதுபற்றிப் பேய்கண் டன்ன துடைத்தென்றார். காணுதல்-தன்வயமாக்குதல்.

(ப-ரை) அருஞ்செவ்வி-(தன்னைக் காண வேண்டுவோர்க்கு) அரிதாகிய சமயத்தையும், இன்னு முகத்தான் - (கண்டால்) இனிமையில்லாத முகத

தையும் உடையவனது. பெருஞ்செல்வம் - பெரிய செல்வம், பேய் பேயால், கண்டதன்னது - காணப்பட்டது போல்வதொரு குற்றத்தை, உடைத்து-உடையதாகும் எ-று.

(க-ரை) அரிய சமயத்தையும் கடிய முகத்தையுமுடைய அரசன் செல்வமானது பேய்கண்ட செல்வம்போலாம் என்பதாம்.

(வி-ரை) எனவே இவை இரண்டும் அஞ்சுவன செய்தலாயிற்று. இவை செய்வானை ஒருவரும் சோமையால் அவன் செல்வம தனக்கும் பிறருக்கும் பயன்படாதென்பதபற்றிப் பேய்கண்டன்னதுடைத்தென்றார். காணுதல்-தன்வசமாக்கல்.

'அருஞ்செவ்வி' என்றது குறை இரப்பார்க்குக் காணக்கிடைக்காமையன் என்னும் பொருளதாம். (செவ்வி-காலம்) 'இன்னமுகத்தன்' இது இனிமை யில்லாததாகிய கழுகுத்த முகத்தையுடையவன் என்பதாம். 'பேஎய்' இது செய்யுள் இசை நிறைக்கவந்த அளபெடை. (5)

கடுஞ்சொல்லன் கண்ணில னுயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

(பரி-உரை) கடுஞ் சொல்லன் கண் இலன் ஆயின் - அரசன் கடிய சொல்லையும் உடையனாய்க் கண்ணோட்டமு மிலனாயின், நெடுஞ்செல்வம் நீடுதின்றி ஆங்கே கெடும் - அவனது பெரியசெல்வம் நீடுதலின்றி அப் பொழுதே கெடும் எ-று.

"வேட்டலுங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதபொரு, ளீட்டலுங்கட் காமமோடேழு" எனப்பட்ட விதனக்களுட் கடுஞ்சொல்லையும் மிகுதண்டத் தையும் இவர் இவ்வெருவந்த செய்தலுள் அடக்கினார். கண்-ஆகுபெயர். இவை செய்தபொழுதே கெடுஞ் சிறுமைத்து அன்றாயினுமென்பார், நெடுஞ் செல்வமென்றார். நீடுதல்-நீட்டித்தல்.

(ப-ரை) (அரசன்) கடுஞ்சொல்லன் - கடிய சொல்லையுடையவனும், கண்ணிலன்-கண்ணோட்ட மில்லாதவனும், ஆயின்-ஆனால், நெடுஞ் செல்வம்-(அவனது) பெரிய செல்வமானது, நீடின்றி - நீடுதலில்லாமல், ஆங்கே-அப்பொழுதே, கெடும்-அழியும் எ-று.

(க-ரை) அரசன் கடுஞ்சொல்லுடையவனும் இரக்கமில்லாதவனுமானால் அவன் செல்வம் கெடும் என்பதாம்.

(வி-ரை) வேட்டலுங் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதபொரு, ளீட்டலுங்கண் காமமோ டேழு எனப்பட்ட வினைகளுள் கடுஞ்சொல்லையும், மிகுதண்டத் தையும் இவர் அச்சஞ்செய்தலுள் அடக்கினார். இவை செய்தபொழுதே நெடுஞ் சிறுமையதல்லாதாயினு மென்றற்கு நெடுஞ்செல்வமென்றார்.

'கடுஞ்சொல்' என்றது கடுமையாகிய சொல்லை. அதாவது வெட்டெ னப்பேசுதலை. 'கண்ணிலன்' என்றது கண்ணோட்டமில்லாதவன் என்பதாம்.

'கெடுஞ்செல்வம்' என்றது மிக்க செல்வத்தை. 'நீடின்றி' என்றது நீடுதலின்றி என்பதன் விகாரம்; அதாவது நெடுங்காலம் நிலைத்திராத என்பதாம். 'ஆங்கே' என்றது கடுஞ்சொல்லும் கண்ணிலாமையும் தோன்றிய அப்பொழுதே என்பதாம்.

(6)

கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த னெடுமுரண் டேய்க்கு மரம்.

(பரி-உரை) கடுமொழியும் கையிகந்த தண்டமும் - கடிய சொல்லுங் குற்றத்தின் மிக்க தண்டமும், வேந்தன் அடு முரண் தேய்க்கும் அரம். அரசனது பகை வெல்லுதற்கேற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அரமாம்.

கடுமொழியால் தானைபுங் கையிகந்த தண்டத்தால் தேசமுங் கெட்டு முரண்சுருங்கி வருதலின் அவற்றை அரமாக்கி, நிண்ணிதாயினுந் தேயுமென்றற்கு அடுமுரணை இரும்பாக்கினர். ஏகதேசவுருவகம். * அரமென்பதனைத் தனித்தனி கூட்டுக. இவை ஐந்துபாட்டானும் செவ்வியின்மை, இன்னுமுகமுடைமை கண்ணோட்டமின்மை, கடுஞ்சொற்சொல்லல், கையிகந்ததண்டம் என்றிவைகள் குடிகளஞ்சும் வினையென்பதூஉம், இவை செய்தான் ஆயுளும் அடுமுரணுஞ் செல்வமும் இழக்குமென்பதூஉங் கூறப்பட்டன.

(ப-ரை) கடுமொழியும் - கடியசொல்லும், கையிகந்த தண்டமும்- (குற்றத்தின்) மிகுந்த தண்டமும், வேந்தன் - அரசனது, அடும் - (பகை) வெல்லுதற்கு ஏற்ற, முரண் - மாறுபாடாகிய இரும்பை, தேய்க்கும்- தேய்க்கின்ற, அரம்-அரங்களாம் எ-று.

(க-ரை) வன்சொல்லும் அதிக தண்டமும் அரசன் பலன்களை யழிக்கும் அரங்களாம் என்பதாம்.

(வி-ரை) கடியசொல்லாற் சேனையும் அதிக தண்டத்தினாலே தேசமும் கெட்டு மாறுபாடு சுருங்கிவருதலால் அவைகளை அரமாக்கினர். (ஏகதேச வுருவகம்) [இவை ஐந்துபாட்டாலும் சமயமில்லாமை, இன்னுமுகமுடைமை, கண்ணோட்டமில்லாமை, கடுஞ்சொற்சொல்லல், அதிகதண்டம் இவைகள் குடிகள் அஞ்சுந்தொழில்களென்பதும், இவை செய்தவன் ஆயுளும் பகை வெல்லு முரணும் செல்வமும் இழக்குமென்பதூஉம் சொல்லப்பட்டன.]

'கையிகந்ததண்டம்' என்றது செய்த குற்றத்திற்கு மிக அதிகமாகத் தண்டிக்கும் தண்டனையை. 'மொழியும்' 'தண்டமும்' இதன்கண்வந்த உம்மைகள் எண்ணும்மைகள். 'அடுமுரண்' என்றது பகையை வெல்லும் மாறுபாட்டை. (முரண்-வலிமை) 'தேய்க்கும் அரம்' என்றதில் கடுமொழியையும், கையிகந்த தண்டத்தையும் அரமாக உருவகப்படுத்தற்கு ஏற்ப 'அடுமுரண்'

* இவ்வாறு ஒருமைப்பெயரை வாக்கியபேதமாகத் தனித்தனி கூட்டி முடிப்பதனைத் தேர்வட மிழுப்பார்போலப் பிரத்தியேக பக்தாக்நவயம் என்பர் வடநூலார்.

இரும்பாயிற்று. 'அரம்' என்பதற்கு எற்ப 'தேய்க்கும்' என்னும் வினை கூறப்பெற்றது. (7)

இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் சினத்தாற்றிச் சீறிற் சிறுகுந் திரு.

(பரி-உரை) இனத்தை ஆற்றி எண்ணுத வேந்தன் - காரியத்தைப் பற்றி வந்த எண்ணத்தை அமைச்சர்மேல் வைத்த அவரோடு தானும் எண்ணிச் செய்யாத அரசன், சினத்தை ஆற்றிச் சீறின்-அப்பிழைப்பால் தன் காரியம் தப்பியவழித் தன்னைச் சினமாகிய குற்றத்தின்கண்ணே செலுத்தி அவரை வெகுளுமாயின், திருச்சிறுகும்-அவன் செல்வம் நாடோறுஞ் சுருங்கும் எ-று.

அரசர் பாரம் பொறுத்தல் ஒப்புமையான் அமைச்சரை இனமென்றும், தான் பின் பிழைப்பாதலறிந்த அமையாத அதனை அவர்மேல் எற்றி வெகுளின் அவர் வெரீஇ நீக்குவர்; நீக்கவே, அப்பிழைப்புத் தீருமாறும் அப்பாரம் இனிதுய்க்குமாறும் இலனுமென்பதை நோக்கித் திருச்சிறுகு மென்றல் கூறினர். இதனாற் பகுதியஞ்சுமவினையும் அது செய்தான் எய்தும் குற்றமுங் கூறப்பட்டன.

(ப-ரை) (காரிய வெண்ணத்தை) இனத்தாற்றி - மந்திரிகளிடத்தே வைத்து, எண்ணுத - (அவரோடு தானும்) எண்ணிச் செய்யாத, வேந்தன்-அரசன், (தன் காரியந் தப்பியவிடத்து) சினத்தாற்றி-(தன்னைக்) கோபத்திலே செலுத்தி, சீறின் - (அவரைக்) கோபிப்பானாயின், திரு - (அவனது) செல்வமானது, சிறுகும்-(நாடோறும்) சுருங்கும் எ-று.

(க-ரை) காரியங்களை மந்திரிகளுக்கொப்பித்து அவரோடெண்ணிச் செய்யாத அரசன் அம்மந்திரிகளைக் கோபிக்கில் லவன் செல்வங்கெடும் என்பதாம்.

(வி-ரை) இராச்சியபாரத்தைத் தாங்கிச் செலுத்துத லொப்புமையால் மந்திரிகளை இனமென்றும், அத்தவறு தன்னதென்றிராமல் அவர்மேல் எற்றிக் கோபித்தால் அவர் அஞ்சி நீங்குவாராதலால் அத்தவறு தீரும்விதமும், அப்பாரம் இனிது செலுத்தும்விதமும், இலனுமென்பதை நோக்கித் திருச்சிறுகு மென்றும் சொல்லினர். [இதனால் மந்திரி முதலாகிய பகுதி அஞ்சும் தொழிலும், அது செய்தால் அடைவதுஞ் சொல்லப்பட்டன.]

'இனம்' என்றது அமைச்சரை. 'சினத்தாற்றிச் சீறில்' என்றது தன் பிழையை மந்திரிகளதாக ஆக்கிக் கோபித்தால் என்பதாம். 'சிறுகுந்திரு' இது செல்வம் சுருங்கும் என்னும் பொருளது. (8)

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன் வெருவந்து வெய்து கெடும்.

(பரி-உரை) சிறை செய்யா வேந்தன்-செரு வருதற்கு முன்னே தனக்குப் புகலாவதோர் அரண்செய்துகொள்ளாத அரசன், செருவந்த போழ்தில்

வெருவந்த வெய்த கெடும்-அது கந்தாலத்த ஏமம் இன்மையான் வெருவிக் கடிதிற் கெடும் எ-று.

பகையை வெருவிச் சேர்ந்தார் கீக்குதலிற்றமியனுய்த் தானும் வெருவி அப்பகையவயத்தனு மென்பதாம். இதனுல் தான் அஞ்சும் வினையும் அது செய்தான் எய்தும் பயனுங் கூறப்பட்டன.

(ப-ரை) சிறைசெய்யூ- (முன்னே தனக்கொரு காப்பிடமாக) அரண் செய்துகொள்ளாத, வேந்தன் - அரசன், செருவந்த போழ்தில் - போர்வந்த காலத்திலே, வெருவந்த-(காப்பு இல்லாமையால்) அஞ்சி, வெய்த-விரைவிலே, கெடும்-கெடுவோன் எ-று.

(க-ரை) அரண் கட்டிக்கொள்ளாத அரசன் விரைவிற் கெடுவான் என்பதாம்.

(வி-ரை) பகையை அஞ்சிச் சேர்ந்தவர் கீக்குதலால் தனியனுகித் தானும் அஞ்சிப் பகை வசத்தனுவனென்பதாம். [இதனுல் தான் அஞ்சும் செயலும் அது செய்தால் அடைவதும் சொல்லப்பட்டன.] ஏமம், காட்பு, ஒருபொருட் சொற்கள்.

'செரு' என்றது யுத்தத்தை. 'சிறை' என்றது தான் தங்கற்கு உரிய அரணை. 'வெருவந்த' என்றது அஞ்சி என்னும் பொருளது. 'வெய்த' இது கடிது என்னும் விரைவுப்பொருள் தந்தின்ற சொல். (9)

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

(பரி-உரை) கடுக்கோல் கல்லார்ப் பிணிக்கும்-கடுங்கோலனுய அரசன் நீதிநூன்முதலிய கல்லாதாரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டாகிற்கும், அது அல்லது நிலக்குப் பொறை இல்லை-அக்கூட்டம் அல்லது நிலத்திற்கு மிகையாய பாரம் பிறிதில்லை எ-று.

கடுங்கோலென்பது ஈண்டு மிக்க தண்டத்தின்மேற்றன்றி அதனைச் செய்வான் மேற்றுயிற்று. அவன் அது செய்தற்கு இயைவாரையல்லது கூட்டாமையிற் கல்லார்ப் பிணிக்குமென்றும், ஏனையவற்றையெல்லாம் பொறுக்கின்றது இயல்பாகலின் நிலத்திற்குப் பொறை அதுவல்லதில்லை யென்றுங் கூறினர். நிலக்கென்பது செய்பூள் விகாரம். இதனுல் வெருவந்த செய்தலின் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) கடுங்கோல்-கடுங்கோலனுகிய அரசன், கல்லார் - (நீதிநூலாதி களைக்) கல்லாதவரை, பிணிக்கும்-(தனக்குப் பகுதியாகக்) கூட்டாகிற்பான், அதுவல்லது-அக்கூட்டமல்லாமல், நிலக்கு-பூமிக்கு, பொறை - (அதிகமான) பாரம், இல்லை-(வேறை) இல்லை எ-று.

(க-ரை) கொடுங்கோலரசன் கல்வி கல்லாதவர்களை மந்திரிகளாக்கிக் கொள்வான் அதுவே பூமிக்குப் பாரம் என்பதாம்.

(வி-ரை) கடுங்கோல்-இங்கே அதிக தண்டம் செய்வானுக்கு ஆயிற்று. அவன் அது செய்தற்கு உடன்படுவாரை யல்லது கூடாமையால் கல்லார்ப் பிணிக்குமென்றும், மற்றவையெல்லாம் சுமக்கிறது இயல்பாகலால் நிலத் தக்குப் பாரம் அதுவல்ல நில்லையென்றும் சொல்லினர். [இதனால் அஞ்சுவனசெய்தலின் குற்றம் சொல்லப்பட்டது.]

'கடுங்கோல்' என்றது கடுங்கோலை உடைய அரசனை. 'கல்லார்' என்றது நிதிநூல், அறநூல், அறிவுநூல்களைக் கல்லாதவரை. 'பிணிக்கும்' என்றது தனக்குப் பகுதியாகக் கூட்டிக்கொள்வான் என்பதாம். 'நிலக்கு' இது நிலத்துக்கு என்பதன் தொகுத்தல் விகாரம். 'இதுவே பூமிக்குச் சுமை என்பார் 'அதுவல்ல நில்லை நிலக்குப் பொறை' என்றார். (10)

57-ம் அதி - வெருவந்தசெய்யாமை - முற்றிற்று.

58-ம் அதிகாரம்—கண்ணோட்டம்

(பரி-உரை) அஃதாவது: தன்னைடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேற் கண் சென்றவழி நிகழ்வ தாகலின் அப்பெயர்த்தாயிற்று. மேல் வெருவந்த செய்யாமையுட் கூறிய வதனையே சிறப்புப்பற்றி விரித்துக் கூறுகின்றமையின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தன்னோடு பழகினவராக்கண்டால் அவராலே சொல்லப்பட்டதனை மறுக்கமாட்டாமை. இது அவர்மேலே கண் ஓடிய விடத்து நிகழ்வதாகலால் அப்பெயர் பெற்றது. இது தாட்சண்ணியமென்றும், முகந்கொடுத்தலென்றும் சொல்லப்படுகின்றது. முன்னதிகாரத்திலே சொல் லப்பட்டதையே சிறப்புப்பற்றி இதிலே விரித்துச்சொல்லுதலால் அதன்பின் வைக்கப்பட்டது.

கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.

(பரி-உரை) கண்ணோட்டம் என்னும் கழி பெருங்காரிகை உண்மை யான்-கண்ணோட்டமென்று சொல்லப்படுகின்ற சிறப்புடைய அழகு அரசர் மாட்டு உண்டாகலான், இவ்வுலகு உண்டு-இவ்வுலகம் உண்டாகாநின்றது.

கழிபெருங்காரிகை யென்புழி ஒருபொருட்பன்மொழி இவ்வுயிரழகை சிறப்புணர்கின்றது. இவ்வழகு அதற்கு உறுப்பாகலின் உண்மையானென கிலேபேறுகூறினர். இன்மை வெருவந்த செய்தலாகலின் அவர்நாட்டு வாழ்வார் புலியையடைந்த புல்வாயினம்போன்ற எமஞ் சாராமைபற்றி இவ்வுலகுண்டென்றார்.

(ப-ரை) கண்ணோட்டமென்னும் - கண்ணோட்டமென்று சொல்லப் படுகிற, கழிபெருங்காரிகை - மிகவும் பெரிய அழகானது, உண்மையால்- (அரசரிடத்தே) உண்டாயிருக்கையால், இவ்வுலகு-இவ்வுலகமானது, உண்டு- உண்டாகின்றது எ-று.

(க-ரை) அரசனுக்குத் தாட்சண்ணியமென்னு மழகுண்டாயிருக்கை யால் இவ்வுலக முண்டாயிருக்கின்றது என்பதாம்.

(வி-ரை) கண்ணோட்டமில்லாமை வெருவந்த செய்தலென்கிற அஞ்சுவன செய்தலாகலால், அவர்நாட்டு வாழ்வார் புலியைச்சேர்ந்த மானினம்போற் காப்பிடம் பெறுமைபற்றி இவ்வுலகு உண்டென்றார்.

'கண்ணோட்டம்' என்றது தாட்சண்ணியத்தை. 'காரிகை' இது சண்டு அழகு என்னும் பொருளது. 'கழிபெரும்' இது மீமிசைச்சொல்; மிகப் பெரிய என்னும் பொருளது. (1)

கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா ருண்மை நிலக்குப் பொறை.

(பரி-உரை) உலகு இயல் கண்ணோட்டத்த உள்ளது-உலகாடை கண் ணோட்டத்தின்கண்ணே கிடப்பது, அஃது இலார் உண்மை நிலக்குப் பொறை-ஆலான், அக்கண்ணோட்ட மில்லாதார் உளராதல் இந்நிலத்திற்குப் பாரமாதற்கே; பிறிதொன்றற்கு அன்று எ-று.

உலகாடையாவது - ஒப்புரவுசெய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்தல் என்றிவை முதலாயின. அவை கிடப்பாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பதுபற்றி நிலக்குப்பொறையென்றார். ஆதற் கென்பது சொல்லெச்சம். இவை இரண்டுபாட்டானுங் கண்ணோட்டத்தது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) உலகியல்-உலகாடையானது, கண்ணோட்டத்த - கண்ணோட் டத்தினிடத்தே, உள்ளது - கிடப்பதாகும், (ஆதலால்) அஃதிலார் - அக்கண் ணோட்டமில்லாதவர், உண்மை - உளராதல், நிலக்கு - பூமிக்கு, பொறை- பாரமாவதற்கே (வேறொன்றற்கு அன்று) எ-று.

(க-ரை) உலகத் தாட்சண்ணியத்திலே கட்டப்பதாம், இஃதில்லாதவர் பூமிக்குப் பாரமாவர் என்பதாம்.

(வி-ரை) உலகாடையாவது-உபகாரஞ்செய்தல், காப்பாற்றல், பிழை பொறுத்தல் இவை முதலானவைகள். அவை உண்டாகாமையால் கண் ணோட்டமில்லாதவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பதுபற்றி நிலத் துக்குப் பொறையென்றார். [இவை இரண்டுபாட்டாலும் கண்ணோட்டத் தினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'அஃது' என்றது கண்ணோட்டத்தை. 'உண்மை' என்றது உலகத்து உளராதல் என்பதாம். 'நிலக்கு' இது நிலத்துக்கு என்பதன் தொகுத்தல் விகாரம், இது செய்புள் விகாரம். (2)

பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்
கண்ணோட்ட மில்லாத கண். [ஙங்

(பரி-உரை) பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல் - பண் என்ன பயத்ததாம் பாடற்றொழிலோடு பொருத்தம் இன்றாயின், கண் என்னும் கண்ணோட்டம் இல்லாத கண்-அதுபோலக் கண் என்னபயத்ததாம் கண்ணோட்ட மில்லாதவிடத்த எ-று.

பண் கண் என்பன சாதிப்பெயர். பண்களாவன: பாலையாழ் முதலிய நான்குமூன்று. பாடற்றொழில்களாவன: யாழின்கண் * வார்தல் முதலிய எட்டும், § பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின்கண் எடுத்தல் படுத்தல் கிளத்தல் கம்பிதம் குடிலமென்னு மைந்தும், பெருவண்ணம் இடைவண்ணம் கனப்புவண்ண முதலிய வண்ணங்கள் எழுபத்தாறுமாம். இவற்றோடியையாத வழிப் பண்ணுற் பயனில்லாதவாறுபோலக் கண்ணோட்டத் தியையாதவழிக் கண்ணுற் பயனில்லை யென்பதாம். கண் சென்றவழி கிடந்தல்பற்றி அதனை யிடமாக்கினர். இறைநிக்கட் கண்ணென்பதனைக் ‡ 'கண்ணகன் ஞாலம்" என்புழிப்போலக் கொள்க.

(ப-ரை) பண் - இசையானது, பாடற்கு - பாடற்றொழிலோடு, இயைபின்றேல் - பொருத்தமில்லையாயின், என்னும் - என்ன பயனுடைத்தாகும், (அதுபோல்) கண்-கண்ணானது, கண்ணோட்டமில்லாத கண் - கண்ணோட்ட மில்லாதவிடத்து, என்னும்-என்ன பயனுடைத்தாகும் எ-று.

(க-ரை) பாடற் இசையில்லாவிடிற் பயனில்லை, அதுபோலக் கண்ணிற் குத் தாட்சண்ணியமில்லாவிடிற் பயனில்லை என்பதாம்.

(வி-ரை) எப்படி பாடற்றொழிலோடு பொருந்தாதவிடத்து இசையினாலே பயனில்லையோ அப்படியே கண்ணோட்டத்தோடு பொருந்தாதவிடத்துக் கண்ணினாலே பயனில்லை என்பதாம்.

'இயைபின்றேல், இது பொருத்தம் இல்லாது இருக்குமாயின் என்பதாம். இதில் 'எல்' விகுதி. 'இல்லாதகண்' இதில் 'கண்' இடப்பொருள் தந்து நின்றது. (3)

உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண்.

---

* வார்தல் முதலிய இசைக்காரணங்கள் எட்டாவன: வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை எனவிவை.

§ பண்ணல் முதலிய கலைத்தொழில்கள் எட்டாவன: பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு எனவிவை.

‡ நிகண்டுசம்-1.

(பரி-உரை) முகத்த உளபோல் எவன் செய்யும் - கண்டார்க்கு முகத் தின்கண் உளபோற்றோன்றல் அல்லத வேறென்ன பயனைச் செய்யும், அவனுன் கண்ணோட்டம் இல்லாத கண் - அளவிறவாத கண்ணோடதலை புடையவல்லாத கண்கள் எ-று.

தோன்றல் அல்லத என்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன. கழி கண்ணோட்டத்தி னீக்குதற்கு அவனுனென்றார். ஒரு பயனையுஞ் செய்யா வென்பது குறிப்பெச்சம்.

(ப-உரை) அவனுல்-தகுமவனுல், கண்ணோட்டமில்லாத - தாட்சண் ணியமில்லாத, கண்-கண்களானவை, முகத்து-முகத்தினிடத்து, உளபோல்-உள்ளவைபோல், (கண்டோற்றுத் தோன்றுதலேயல்லாமல்) எவன் (யாதே) என்ன பயனை, செய்யும்-செய்யும் எ-று.

(க-உரை) கண்ணோட்டமில்லாத கண்கள் என்ன பயனைத்தரும் என்பதாம்.

(வி-உரை) தோன்றுதலே யல்லாமலென்னுஞ் சொற்கள் வருவிக்கப் பட்டன. அதிகமான கண்ணோட்டத்தை விலக்குதற்கு அவனுலென்றார். அக் கண்கள் ஒருபயனையும் செய்யாவென்பது கருத்து.

'உளபோல்' இது 'உள்ளதுபோல்' என்பதன் விகாரம். இது செய்யுள் பற்றிவந்த விகாரம். 'என்செய்யும்' இது ஒன்றுஞ் செய்யாது என்னுங் குறிப் பினது. 'அவனுல்' என்பது அளவுகடவாது அளவாக உள்ள என்பதாம். 'கண்' என்றது ஈண்டு சாதி ஒருமை. (4)

கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

(பரி உரை) கண்ணிற்கு அணி கலம் கண்ணோட்டம்-ஒருவன்கண்ணிற்கு அணியுங் கலமாவது கண்ணோட்டம், அஃது இன்றேல் புண் என்று உணரப் படும்-அக்கல மில்லையாயின் அஃது அறிவுடையாராற் புண்ணென் றறியப் படும் எ-று.

வேறணிகலமின்மையின் கண்ணிற் கணிகலமென்றும், கண்ணுய்த் தோன்றினும் நோய்களானும் புலன்பற்றலானுந் தயர்வினுளத்தல் நோக்கிப் புண்ணென் றுணரப்படுமென்றுங் கூறினர். இவை மூன்று பாட்டானும் ஓடாதநின்ற கண்ணின் குற்றங் கூறப்பட்டது.

(ப-உரை) கண்ணிற்கு - (ஒருவனது) கண்ணிற்கு, அணிகலம் - அணியும் அணியாவது, கண்ணோட்டம்-தாட்சண்ணியமாகும், அஃதின்றேல்-அவ்வணி யில்லையாயின், (அக்கண்) புண்ணென்று - புண்ணென்று, உணரப்படும்-அறிவுடையவரால்) அறியப்படும் எ-று.

(க-உரை) கண்ணிற்கு ஆபரணந் தாட்சண்ணியமாம், அஃதில்லாவிடில் அக்கண் புண் என்பதாம்.

(வி-மா) கண்ணிற்கு வேறே அணிபில்லாமையால் கண்ணிற் கணிகல மென்றும், கண்ணுய்த் தோன்றினுலும் நோய்களாலும் கீர்பற்றலாலும் தயர்வினேத்தலே நோக்கி புண்ணென் றுணரப்படுமென்றும் சொல்லினர். [இவை மூன்றபாட்டாலும் அது செய்யாத கண்ணின் குற்றம் சொல்லப் பட்டது.]

'அணிகலம்' என்றது ஆபரணத்தை. 'அஃது' என்றது கண்ணுக் கணிகலமாகிய கண்ணோட்டத்தை. (5)

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

(பரி-உரை) கண்ணோடு இயைந்த கண்ணோட்டாதவர் - ஒடுதற்குரிய கண்ணோடு பொருந்திவைத்த அஃதோடாதவர், மண்ணோடு இயைந்த மரத்த அனையர்-இயங்காகின்றாராயினும் மண்ணோடு பொருந்தி கிற்கின்ற மரத்தினே யொப்பர் எ-று.

ஒடாதவரென்புழிச் சினேவினே முதன்மேனின்றது. மாமுங் கண்ணோ டியைந்து கண்ணோடாமையின் இது தொழிலுவமம். இதனைச் சுதைமண் ணோடு கூடிய மரப்பாவையென் றுரைப்பாருமுளர். அஃது உரையன்மை காணப்படும் கண்ணுனன்றி அதனுண் மறைந்து கிற்கின்ற ஒருசாருள்ளீட் டாற் கூறினமையாலும், * "மாக்கண்ணே மண்ணுள்வார் கண்ணென், நிரக்கண்டாய்" என்பதனுலுமறிக.

(ப-மா) கண்ணோடு-(ஒடுதற்கு உரிய) கண்ணோடு, இயைந்து:பொருந்தி யிருந்தும், கண்ணோடாதவர்-அக்கண்ணோடுத லில்லாதவர், (சஞ்சரிக்கின்றவ ராயிருக்கினும்) மண்ணோடு-மண்ணுடன், இயைந்த-பொருந்திகின்ற, மரத் தனையர்-மரத்தினேயொப்பர் எ-று.

(க-மா) தாட்சண்ணியமில்லாதவர் மரத்திற்கொப்பாவார் என்பதாம்.

(வி-மா) கண்ணினது தொழிலாகிய ஒடுதல் கண்ணே புடையவன்மேல் கின்றது. மாம் கண்ணோடு பொருந்தியும் கண்ணோடாமையால் உபமான மாயிற்று.

'மண்ணோடு', 'கண்ணோடு' என்பதன்கண் கின்ற உருபுகள் மூன்றன் உருபுகள். 'மண்ணோடு இயைந்த மரம்' என்றது அசரமாகிய மரத்தை ஒத்தவாகுர் என்பதாம். (6)

கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையா
கண்ணோட்ட மின்மையு மில். [

* "வாக்கண்டு காணுதே வல்லியா னெஞ்சே, மாக்கண்ணே மண்ணுள் வார் கண்ணென் - நிரக்கண்டாய், வாளுழுவை வெல்கொடியான் வண்புக ழீர் நாடற்கென், றோளுழுவர் தோன்றத் தொழுது" முத்தொள்ளாயிரம்.

(பரி-உரை) கண்ணோட்டம் இல்லவர் கண் இலர்-கண்ணோட்ட மில்லாதவர் கண்ணுடையரும் அல்லர்; கண் உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல்-கண்ணுடையவர் கண்ணோட்ட மிலராதலும் இல்லை எ-று.

கண்ணுடையராயிற் காட்சிக்கண்ணே அஃதோடும் என்பதுபற்றிக் கண்ணோட்ட மில்லவர் கண்ணிலரெனக் கூறிப் பின் அதனை எதிர்மறை முகத்தான் விளக்கினர். உம்மை இறந்ததழீஇய எச்சவும்மை. [இவை பிரண்டு பாட்டானுங் கண்ணோடாதாரது இழிபு கூறப்பட்டது.]

(ப-ரை) கண்ணோட்டமில்லவர் - கண்ணோட்டமில்லாதவர், கண்ணிலர்-கண்ணுடையவருமல்லர், கண்ணுடையார் - கண்ணுளார், கண்ணோட்ட மின்மையும்-கண்ணோட்ட மில்லாதவராதலும், இல்-இல்லை எ-று.

(க-ரை) கண்ணோட்டமில்லாதவர் குருடர், கண்ணோட்டமுள்ளவர் கண்ணுளார் என்பதாம்.

(வி-ரை) நெருப்பு எங்கே யில்லையோ அங்கே புகையும் இல்லை புகை எங்கே இருக்கின்றதோ அங்கே நெருப்பும் இருக்குமென்பதுபோல், கண்ணோட்டம் எவரிடத்து இல்லையோ அவரிடத்தே கண்ணும் இல்லை. கண் எவரிடத்து இருக்கின்றதோ அவரிடத்தே கண்ணோட்டமும் இருக்கும் என அனுமானப் பிரமாணம் பற்றிச் சொல்லியது. [இவை இரண்டுபோட்டாலும் கண்ணோடாதார் நிழிவு சொல்லப்பட்டது.]

'கண்ணிலர்' என்றது கண்களிருந்தும் கண்களில்லாதவரே என்பதாம். அதாவது குருடரானவர் என்பதாம். 'இல்லவர்' இது 'இல்லாதவர்' என்பதன் விகாரம். கண்ணுடையவர் கண்ணோட்டமுடையவராகவே இருப்பரென்பது சாதிப்பார் 'கண்ணுடையார் கண்ணோட்ட மின்மையுமில்' என்றார். (7)

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.

(பரி-உரை) கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு-முறைசெய்தலாகிய தந்தொழில் அழியாமற் கண்ணோட வல்ல வேந்தர்க்கு, உரிமை உடைத்து இவ்வுலகு-உரித்தாந் தன்மையுடைத்து இவ்வுலகம் எ-று.

தம்மொடு பயின்றார் பிறரை யிடுக்கண்செய்தழி அவரைக் கண்ணோடி ஒறுதார்க்கு முறை சிதைதல் மேல் * "ஓர்ந்துகண்ணோடாது" என்ற முறை யிலக்கணதானும் பெற்றாம். முறை சிதைய வரும்வழிக் கண்ணோடாமையும் வாராவழிக் கண்ணோடலும் ஒருவற்கு இயல்பாத லருமையிற் கண்ணோட வல்லார்க்கு என்றும், அவ்வியல்புடையார்க்கு உலகமுழுதும் நெடுங்காலஞ் சேறலின் உரிமையுடைத்தென்றுங் கூறினர். இதனாற் கண்ணோடுமாறு கூறப்பட்டது.

---

* 55-ம் அதி - குறள்-1.

(ப-ரை) இவ்வுலகு-இச்சகவுலகம், கரும்ம் - (முறைசெய்தலாகிய தமது) தொழில், கையாமல் - அழியாமல், கண்ணோட வல்லார்க்கு - கண்ணோட்டஞ்செய்யவல்ல அரசர்க்கு, உரிமை - உரியதாந்தன்மையை, உடைத்து - உடையதாகும் எ-று.

(க-ரை) கண்ணோட்டமுடைய வரசருக் கிவ்வுலக முரிமைபுடையத என்பதாம்.

(வி-ரை) தம்மோடு பழகினவர் பிறருக்கு இடுக்கண் செய்தவிடத்த அவரைக் கண்ணோட்டத்தினாலே தண்டிக்காதவர்க்கு முறைகெடுதல் முன்னே ஓர்த்த கண்ணோடாதென்ற குறளிலே சொல்லப்பட்ட முறை பிலக்கணத்தாலும் பெற்றும். முறைகெட வருமிடத்துக் கண்ணோட்டஞ் செய்யாமையும், அது வாராதவிடத்துக் கண்ணோட்டஞ்செய்தலும், ஒருவனுக்குச் சபாவமாகுதல் அருமையாகலால் கண்ணோட வல்லாற்கென்றும், அச்சபாவமுடையவர்க்கு உலகமுழுதும் நெடுங்காலம் வசப்படுதலால் உரிமைபுடைத்தென்றும் சொல்லினர். [இதனால் கண்ணோட்டஞ்செய்யும் விதம் சொல்லப்பட்டது.]

'கரும்ம்' என்றது அரசுதொழிற் கருமத்தை. 'கண்ணோடவல்லார்க்கு' என்றது நாட்சண்யங்காட்ட வல்லார்க்கு என்பதாம். (8)

ஒறுத்தாற்றும் பண்பிலர் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

(பதி-உரை) ஒறுத்தாற்றும் பண்பிலர்கண்ணும் - தம்மை யொறுக்குமியல்புடையாரிடத்தும், கண்ணோடிப் பொறுத்தாற்றும் பண்பே தலை- கண்ணோட்டமுடையராய்க் குற்றத்தைப் பொறுக்குமியல்பே அரசர்க்குத் தலையாயவியல்பாவது எ-று.

பண்பிலை சென்றதனால் அவர் பயிற்சி பெற்றும். ஒறுத்தாற்றும், பொறுத்தாற்றும் என்பன சண்டு ஒரு சொன்னீர.

(ப-ரை) ஒறுத்தாற்றும் பண்பிலர் கண்ணும் - (தம்மை) ஒறுக்குமியல்புடையவரிடத்தும், கண்ணோடி-கண்ணோட்ட முடையவராகி, பொறுத்தாற்றும் பண்பே - (அக்குற்றத்தைப்) பொறுக்குமியல்பே, தலை - (அரசர்க்குத்) தலைமையான வியல்பு எ-று.

(க-ரை) தம்மை வருத்துவோரிடத்தும் கண்ணோட்டமுடைய வரசரே தலையாவார் என்பதாம்.

(வி-ரை) பண்பிலைசென்றதனால் அவர் பழக்கம் பெற்றும், ஒறுத்தாற்றும், பொறுத்தாற்றும் ஒருசொல்.

'ஒறுத்தாற்றும்' என்றது தண்டிக்கும் என்னும் பொருளது. 'பொறுத்தாற்றும்' இது பொறுக்கும் என்னும் பொருளது. 'பண்பு' இது இயல்பு

என்னும் பொருளது. 'கண்ணும்' இது இடத்தும் என்னும் பொருளது. இதன் 'உம்மை' இழிவுச்சிறப்பும்மை. 'பண்பே' இதன் ஈற்று ஏகாரம் தேற்றேகாரம். (9)

பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்.

(பரி-உரை) நஞ்சு பெயக் கண்டும் உண்டு அமைவர்-பயின்றார் தமக்கு நஞ்சிடக் கண்டுவைத்தும் கண் மறுக்கமாட்டாமையின் அதனை யுண்டு பின்னும் அவரோடு மேவுவர், நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்-யாவராலும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை வேண்டுமவர் எ-று.

நாகரிகமென்பது கண்ணோட்டமாதல் * "முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பி, னஞ்சு முண்பர் நனிநா கரிகர்" என்பதனானு மறிக. அரசர் அவரை யொறாது கண்ணோடற்பாலது தம்மாட்டுக் குற்றஞ் செய்துழி யென்பது இவ்விரண்டுபாட்டானுங் கூறப்பட்டது.

(ப-ரை) நயத்தக்க-(யாவராலும்) விரும்பத்தக்க, நாகரிகம்-கண்ணோட்டத்தை, வேண்டுபவர்-வேண்டுவோர், நஞ்சு-நஞ்சை, பெயக்கண்டும்-(பழகினவர்) இடக்கண்டும், உண்டு - (கண்மறுக்கமாட்டாமையால் அதனை) உண்டு, அமைவர் (பின்னும் அவரோடு) பொருந்துவார் எ-று.

(க-ரை) தாட்சிணியம் வேண்டுவோர் சினேகர் நஞ்சிடக்கண்டுமுண்டு சிநேகிப்பர் என்பதாம்.

(வி - ரை) [இவ்விரண்டு பாட்டாலும் அவரைத் தண்டிக்காமல் கண்ணோட்டஞ்செய்யவேண்டுவது பிறருக்குக் குற்றஞ்செய்தவிடத்தன்று தமக்குக் குற்றம் செய்தவிடத்தே யென்பது சொல்லப்பட்டது.]

'பெய' இது 'பெய்ய' என்பதன் தொகுத்தல் விகாரம். 'அமைவர்' என்றது அவரோடு பொருந்தி நட்பாய் இருப்பர் என்னும் பொருளதாம். 'நயத்தக்க' இது 'நயக்கத்தக்க' என்பதன் விகாரம் 'நாகரிகம்' என்றது ஈண்டு கண்ணோட்டத்தை. (10)

58-ம் அதி - கண்ணோட்டம் - முற்றிற்று.

---

* நற்றிணை-355.

59-ம் அதிகாரம்—ஒற்றுடல்

(பரி-உரை) அஃதாவது: பகை தொகுமல் கட்பு என்னும் மூன்று நிறத்தார்மாட்டும் நிகழ்ந்தனவறிதற்கு ஒற்றரையாளுதல். மேற்சொல்லிய இலக்கணத்தனைய அரசனுக்குத் தன்னுடு செலுத்தற்காலும் பிறர்நாடு கொள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றாராகலின், அவ்விருமைக்கும் இன்றியமையாதாய இது முன்வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: பகைவர் அயலோர் கட்பினர் என்னு மூன்று நிறத்தாரிடத்தும் நிகழ்ந்தவை அறிதற்கு ஒற்றரை ஆளுதலாம். முன் சொல்லப்பட்ட இலக்கணமுடைய அரசனுக்குத் தன்னுடு காக்கும்போதும் பிறர்நாடு பிடிக்கும்போதும் வேண்டுமவைகளைச் சொல்லத் தொடங்கினாதலால் அவ்விரண்டு காரியங்களுக்கும் அவசியம் வேண்டுவதாகிய இது முன்னே வைக்கப்பட்டது.

ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்.

(பரி-உரை) ஒற்றும் உரை சான்ற நூலும் இவை இரண்டும்-ஒற்றும் புகழமைந்த நீதிநூலுமாகிய இவையிரண்டனையும், மன்னவன் கண் தெற்றென்க-அரசன் தன்னிரண்டு கண்ணுமாகத் தெளிக எ று.

ஒற்றுத் தன்கண் செல்லமாட்டாத பாப்பெலாஞ்சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தனவெல்லாம் உணர்த்தலானும், நூல் அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளையெல்லாஞ் சொல்லி யுணர்த்தலானும், இவ்விரண்டனையுமே தனக்கு ஊனக்கண்ணுமும் ஞானக்கண்ணுமாகத் தணிந்துகொண்டு ஒழுகுக என்பதாம். ஒற்றினை ஒற்றென்றார், வேந்தனை வேந்தென்றாற்போல. தெற்றென்கவென்பது தெற்றெனென்பது முதனிலையாகவந்த வியங்கோள்; அது தெற்றெனவென்னுஞ் செயவெனெச்சத்தானறிக. இதனால் ஒற்றினது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) மன்னவன்-அரசனானவன், ஒற்றும்-ஒற்றனும், உரைசான்ற புகழ்நிறைந்த, நூலும்-நீதிநூலும், (ஆகிய) இவை இரண்டும்-இவ்விரண்டும், கண்-(தன்னிரு) கண்களுமாக, தெற்றென்க-தெளியக்கடவன் எ-று.

(க-ரை) அரசனானவன் ஒற்றினையும் நீதிநூலையுந் தன்னிருகண்களாகத் தெளியக்கடவன் என்பதாம்.

(வி-ரை) ஒற்றனானவன் தன் கண்ணுக்கு எட்டாத தூரமெல்லாம் போய்க் கண்டு, அங்கே நடந்தவையெல்லாம் அறிவித்தலாலும், நூலானது அந்நடந்தவைகளுக்குத் தன்னறிவுக்கு எட்டாத தொழில்களையெல்லாஞ் சொல்லி அறிவித்தலாலும், இவ்விரண்டனையுமே தனக்கு ஊனக்கண்ணும் ஞானக்கண்ணுமாக நிச்சயித்துக்கொண்டு நடக்கக்கடவனென்பதாம். [இதனால் ஒற்றினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'ஒற்ற' என்றது ஒற்றரை; இவர் ஒற்றிக்கேட்பவர் ஆதலால் ஒற்ற என்னும் பெயர் எய்திற்று. 'உளைசான்ற' இது புகழ்மிகுந்த என்னும் பொருளது. 'தெற்றென்க' இது தெளிக என்னும் பொருளது. 'இரண்டும்' என்பதன் ஈற்ற உம்மை முற்றும்மை. (1)

எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.

(பரி-உரை) எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம் எஞ்ஞான்றும் வல் அறிதல்-எல்லார்கண்ணும் நிகழ்வன எல்லாவற்றையும் காடோறும் ஒற்றுன் விளைந்தறிதல், வேந்தன் தொழில்-அரசனுக்குரிய தொழில் எ-று.

எல்லார்க்குமென்றது மூன்ற நிறத்தாரையும். நான்காவது ஏழாவதன் பொருட்கண் வந்தது. நிகழ்வனவெல்லாமென்றது நல்லவும் தீயவுமாய சொற்களையுஞ் செயல்களையும். அவை நிகழ்ந்தபொழுதே அவற்றிற்குத்தக்க அளியாகத் தெறலாகச் செய்யவேண்டுதலின் வல்லறிதலென்றும், அவ்விரு தொழிற்கும் அறிதல் காரணமாகலின் அதனையே யுபசாரவழக்காற் றொழி லென்றல் கூறினர். ஒற்றுனென்பது அதிகாரத்தான் வந்தது. இதனுல் ஒற்றினுல பயன் கூறப்பட்டது.

(ப-ரை) எல்லார்க்கும் - எல்லாரிடத்தும், நிகழ்பவையெல்லாம் - நடப்ப வைகளையெல்லாம், எஞ்ஞான்றும் - காடோறும், வல்லறிதல் - (ஒற்றனுல) விளைந்தறிதல், வேந்தன்றொழில்-அரசனுக்கு உரிய தொழில் எ-று.

(க-ரை) யாவரிடத்து நடப்பவைகளை யொற்றனுலறித லரசனது தொழிலாம் என்பதாம்.

(வி-ரை) எல்லார்க்குமென்றது பகைவர் அயலோர் நட்பினர் என்று மூவகையாரையும் நிகழ்பவை யெல்லாமென்றது நல்லவையும் தீயவையும் ஆகிய சொற்களையும், செயல்களையும். அவை நிகழ்ந்தபொழுதே அவைகளுக் குத்தக்க வழியாகவாவது தேறுதலாகவாவது செய்யவேண்டுதலால் வல்லறித லென்றார். அவ்விரு தொழில்களுக்கும் அறிதல் காரணமாகலால் அதனைத் தொழிலென்று உபசரித்தார். ஒற்று அதிகாரத்தால் வந்தது. [இதனுல் ஒற்றினுலாகிய பயன் சொல்லப்பட்டது.]

'எல்லார்க்கும்' இதின் நான்கன்உருபு 'கு' ஏழன்உருபாகிய 'கண்' என்னும் பொருளில் மயங்கிநின்ற உருபுமயக்கம். 'எஞ்ஞான்று' இது எக்கா லத்தும் என்னும் பொருளது. (ஞான்று-சமயம், பொழுது) ஈண்டு காடோறும் என்றுரை உரைக்கப்பெற்றது. 'வல்' இது ஈண்டு விரைவுக்குறிப்பாக வந்தமைந்தது. (2)

ஒற்றினு னெற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.

(பரி-உரை) ஒற்றினுன் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் - ஒற்றினுனே எல்லார்கண்ணும் விகழ்ந்தவற்றை ஒற்றவித்த அவற்றுன் எய்தும் பயனை ஆராயாத அரசன், கொற்றம் கொளக் கிடந்தது இல் - வென்றியடையக் கிடந்தது வேறொரு தெறியில்லை எ-று.

அக்கிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்கு எளியனுதல் பிறிதிற் றீராமையின் கொற்றங் கொளக்கிடந்ததில்லென்றுர். இதற்குக் கொளக் கிடந்ததொரு வென்றியில்லை யென்றதனைப்பினு மமையும். இதனுல் அத்தொழில் செய்யாதவழி வருங்குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) ஒற்றினுல்-ஒற்றினைக்கொண்டு, ஒற்றி-(எல்லாரிடத்தும் விகழ்ந்தவைகளை) அறிந்தவாச்செய்து, பொருள்-(அவைகளால் அடையும்) பயனை தெரியா - ஆராய்ந்தறியாத, மன்னவன் - அரசனுனவன், கொற்றங்கொளக் கிடந்தது-வெற்றியடையக் கிடந்தது, இல்-(வேறொருவழி) இல்லை எ-று.

(க-ரை) ஒற்றினைக்கொண்டு பகைவர் காரியங்களை யறியாத வரசன் வெற்றியடையான் என்பதாம்.

(வி-ரை) அக்கிகழ்ந்தவையும் பயனும் அறியாமல் பகைக்கு எளியனுதல் ஒற்றனுலே நீக்குவதன்றி வேறொன்றினுலே நீக்காமையால் கொற்றங் கொளக்கிடந்ததில்லென்றுர். [இதனுல் அத்தொழில் செய்யாதவிடத்து வரும் குற்றஞ் சொல்லப்பட்டது.]

'ஒற்றினுன்' இது ஒற்றர்களால் என்னும் பொருளது. 'ஒற்றி' இது ஒற்றிக் கேட்கச்செய்து என்னும் பொருளது. 'பொருள்' என்றது தன் காட்டும், பிறர்காட்டும் விகழும் விசேடங்களை என்பதாம். 'தெரியா' இது 'தெரியாத' என்பதன் கடைக்குறை விகாரம். 'கொற்றம்' இது வெற்றி என்னும் பொருளது. இது பகைவரைக் கொன்றுகிய புகழைக் குறித்தலின் இப்பெயர்த்தாயிற்று. இதற்கு 'கொல்' பகுதி. (3)

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றுங் கினைவரையு மாராய்வ தொற்று.

(பரி-உரை) தம் வினைசெய்வார் சுற்றம் வேண்டாதார் என்ற அனைவரையும் ஆராய்வது - தங்காரியஞ்செய்வார் சுற்றத்தார் பகைவர் என்று சொல்லப்பட்ட அனைவரையும் சொற்செயல்களானுராய்வானே, ஒற்று - ஒற்றனுவான் எ-று.

தம்மென்றது அரசனெனப்படுத்தி. அவனுக்குக் காரியஞ் செய்வார் செய்வனவும், சுற்றத்தார் தன்னிடத்தும் காட்டிடத்தஞ்செய்வனவும், பகைவர் தன்னற்றமாராய்தலும் மேற்றேறப்படுதலும் முன்னிட்டுத் தன்னிடத்துச் செய்வனவு மறிந்து, அவற்றிற்கேற்றன செய்யவேண்டுதலின், இம்மூவகையாரையும் எஞ்சாமலாராயவேண்டுமென்பார், அனைவரையு மாராய்வ தொற்றென்றுர்.

(ப-ரை) தம்-தம்முடைய, வினைசெய்வார் காரியஞ் செய்பவர், சுற்றம்-சுற்றத்தார், வேண்டாதார்-பகைவர், என்று-என்ற சொல்லப்பட்ட, அனைவரையும் - எல்லாரையும், ஆராய்வது - (சொல்லாலும் செயலாலும்) ஆராய்பவனே, ஒற்று-ஒற்றனுவான் எ-று.

(க-ரை) தொழிலானரையும் உறவினரையும் பகைவரையும் ஆராய்பவனே ஒற்றனுவான் என்பதாம்.

(வி-ரை) அரசனுக்குக் காரியஞ் செய்வோராலே செய்யப்படுமவையும், சுற்றத்தாராலே தன்னிடத்தும் நாட்டிடத்தும் செயப்படுமவையும், பகைவராலே தன் சோர்வு பார்த்தாலும் மேலே நேறப்படுதலும், முன்னிட்டுச் செய்யப்படுமவையும் அறிந்த அவைகளுக்கு ஏற்பவைகளைச் செய்யவேண்டுதலால் இம்மூவகையாரையும் குறையாமல் ஆராயவேண்டுமென்றற்கு அனைவரையு மாராய்வ தொற்றென்றார்.

'வினைசெய்வார்' என்றது தம்வினை செய்யும் பணியாட்களை. 'தம் சுற்றம்' என்றது தமது இனஞரை. 'தம் வேண்டாதார்' என்றது தமது பகைஞரை. இதில் தம் என்றது நடுவின்று முன்னும் பின்னும் இடையும் இயைந்து பொருள்தரலின் மத்திபதீபவலங்காரமாகும். 'அனைவரையும்' இதன் சுற்றென்ற உம்மை முற்றும்மை. (4)

கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

(பதி-உரை) கடா உருவொடு - ஒற்றப்பட்டார் கண்டால் ஐயுறுத வடிவோடு பொருந்தி, கண் அஞ்சாது-அவர் ஐயுற்று அறியலுறிற் செயிர்த்து நோக்கிய அவர் கண்ணிற்கு அஞ்சாது நின்று, யாண்டும் உகாமை வல்லதே ஒற்று - தான்கு உபாயமுஞ் செய்தாலும் மனத்துக் கொண்டவற்றை உமிழாமை வல்லவனே ஒற்றனுவான் எ-று.

கடாவென்பது கடுக்குமென்னும் பெயரொச்சத்தெதிர்மறை. ஐயுறுத வடிவாவன: பார்ப்பார், வணிகர் முதலாயினர் வடிவு.

(ப-ரை) (எவரது செய்தியை அறிதற்கு சென்றனனே அவராலே) கடாஅ - சந்தேகிக்கப்படாத, உருவொடு - வடிவோடு, (பொருந்தி) (அவர் சந்தேகித்து அறியத்தொடங்கினால்) கண்ணஞ்சாது - (கோபித்துப் பார்க்கின்ற அவர்) கண்ணிற்கு அஞ்சாமனின்று, யாண்டும் - நாலுபாயங்களும் செய்தாலும், உகாஅமை - (மனதிலுள்ளவைகளை) உமிழாதிருக்க, வல்லதே-வல்லவனே, ஒற்று-ஒற்றனுவான் எ-று.

(க-ரை) ஐயமில்லா வடிவோடு பொருந்தி யஞ்சாதிருந்து பகைவர் என்செய்யினு முள்ளதைச் சொல்லாதவனே ஒற்றன் என்பதாம்.

(வி-ரை) சந்தேகிக்கப்படாத வடிவு - பார்ப்பார், வணிகர் முதலானவர் வடிவு.

'கடாஅ' இது செய்யுள் இசைநிறைக்கவந்த அளபெடை. இது ஐயுறுதல் என்னும் பொருளது. 'உகாஅமை' இதவும் செய்யுள் இசைநிறைக்க வந்த அளபெடையே. 'உகாமை' இது சிந்தாமை, கொட்டிவிடாமை என்னும் பொருளது; சண்டு சொல்லாமை, வெளிப்படுத்தாமையைக் குறிக்கின்றது. (5)

துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று.

(பரி-உரை) துறந்தார் படிவத்தர் ஆகி இறந்த ஆராய்ந்த - முற்றத் துறந்தாராயும் விரதவொழுக்கினராயும் உள்புகுதற்கரிய விடங்களெல்லாம் உள்புக்கு ஆராயவேண்டுவன ஆராய்ந்தறிந்த, என் செயினும் சோர்வு இலத ஒற்று-ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்த எல்லாத் தன்பழுஞ் செய்த கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனுவான் எ-று.

விரதவொழுக்கம் - நிர்த்தயாதிநிலை முதலாயின. செயினுமென்பது அறவோரென்று செய்வாரின்மை விளக்கி நின்றது. மேல் நால்வகை உபாயத்தினுஞ் சோர்வின்மை சொல்லிவைத்த சண்டுத் தண்டத்தைப் பிரித்துக் கூறியது அதனது பொறுத்தற்கு அருமைச்சிறப்பு நோக்கி. இதனுள் படிவமென்றதனை வேடமாக்கித் துறந்தார் வேடத்தாராகியென் றுரைப்பாருமுனர்.

(ப-ரை) துறந்தார் - முழுதுந்துறந்தோரும், படிவத்தர் - விரதவொழுக்கத்தோரும், ஆகி-ஆகி, இறந்த-(போகக்கூடாத விடங்களிலெல்லாம்)போய், ஆராய்ந்த-ஆராயவேண்டியவைகளெல்லாம் ஆராய்ந்தறிந்த, என் செயினும்-அவ்விடத்தோர் (சாதேகித்துப்பிடித்த) என்ன தன்பஞ்செய்த கேட்டாலும், சோர்விலத - தன்னை வெளிப்படுத்தாதவனே, ஒற்று - ஒற்றனுவான் எ-று.

(க-ரை) துறவிகள் விரதர்கள் வடிவாகி எக்காலம்போயாராய்ந்தறிந்த பகைவர் தன்பஞ்செய்யினுந் தன்னைக்காட்டாதவனொற்றனுவான் என்பதாம்.

(வி-ரை) விரதவொழுக்கம் - நிர்த்தயாதிநிலை முதலானவை. செயினுமென்பது அறவோரென்று செய்யாரென்பதை விளக்கிநின்றது. முன்னே நால்வகை உபாயமுஞ் சொல்லி இக்கேயும் தண்டத்தைப் பிரித்துச் சொல்லியது அதன் பொறுத்தற்கருமைச் சிறப்புநோக்கி.

'துறந்தார்' என்றது துறவிகள், தபோதனர்களை. 'படிவம்' இது உருவம் என்னும் பொருளது. 'இறந்து' இது புகற்கு அரிய இடங்களெல்லாம் புகுந்து ஆராய்ந்த என்பதாம். 'சோர்வு' என்றது தன்கோளிற் குறைவுபடாமை என்பதாம். 'என்செயினும்' என்றது எதனைத்தண்டம் செயினும் என்பது பொருளாம்; இது எகாவினுவடியாகப்பிறந்த பெயர். (6)

மறைந்தவை கேட்கவற் றுசி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று.

(பரி-உரை) மறைந்தவை கேட்க வற்று ஆகி-ஒற்றப்பட்டார் மறையச் செய்த செயல்களை அவர்க்குள்ளாயினாற் கேட்க வல்லனாய், அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று - கேட்டறிந்த செயல்களிற் பின் ஐயப்படாத தன்மையவல்லவனே ஒற்றனாவான் எ-று.

மறைந்தவை சொல்லுவாரை அறிந்து, அவர் அபிராமற் சென்றொட்டித் தாமே சொல்லும்வகை அதற்கேற்ற சொல்லாகச் செயலாக முன்னே வினைத்த அத்தொடர்பாற் கேட்குங்காலும் உறுதார்போன்று கின்று கேட்க வேண்டுதலிற் கேட்க வற்றாகியென்றும், கேட்டறிந்தவற்றைத் தானே ஐயுற்றவர்க சொல்லின் ஆசனால் அவற்றிற்கேற்ற வினை செய்யலாகா மையின் ஐயப்பாடில்லதே யென்றுங் கூறினார். இவை நான்குபாட்டானும் ஒற்றினது இலக்கணங் கூறப்பட்டது.

(ப - ரை) மறைந்தவை - (எவரது செயல்களை அறியச்சென்றாலே அவரது) மறைவாயுள்ள செயல்களை, கேட்கவற்றாகி-(அவருக்கு உள்ளான வாலே) கேட்கவல்லவனாகி, அறிந்தவை - (கேட்டு) அறியப்பட்ட அச்செயல் களிலே, ஐயப்பாடில்லதே - (பின்) சந்தேகப்படுதலில்லாதவனே, ஒற்று - ஒற்றனாவான் எ-று.

(க-ரை) இரகசியங்களைக் கேட்க வல்லவனாகிப் பகைவர் சந்தேகப் படாதவனே ஒற்றனாவான் என்பதாம்.

(வி-ரை) அம்மறைவாயுள்ள செயல்களைச் சொல்லுவாரை அறிந்து அவர் சந்தேகியாதபடிபோய் ஒட்டி அவரே சொல்லும்படிக்கு அதற்கு ஏற்ற சொல்லையாவது செயலையாவது முன்னே உண்டாக்கி அச்சம்பந்தத்தினாலே கேட்கும்போதும் அன்னியர்போலே கின்று கேட்கவேண்டுதலால் கேட்க வற்றாகியென்றும், கேட்டு அறியப்படுமவைகளைத் தானே சந்தேகித்து வந்து சொன்னால் அரசனால் அவைகளுக்கு ஏற்றகாரியம் செய்யக்கூடாமையால் ஐயப்பாடில்லதேயென்றும் சொல்லினார். [இவை நான்கு பாட்டாலும் ஒற்றினது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'மறைந்தவை' என்றது இரகசியமாக நடக்கும் பொருள்களை என்பதாம். 'கேட்கவற்றாகி' இது கேட்கவல்லவனாகி என்பது பொருளாம். 'ஐயப்பாடு' யில் 'பாடு' என்றது விகுதி. (7)

ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ
ரொற்றினு லொற்றிக் கொளல்.

(பரி-உரை) ஒற்ற ஒற்றித் தந்தபொருளையும் - ஒருசொற்றன் ஒற்றிவந் றிவித்த காரியத்தன்மையும், மற்றும் ஓர் ஒற்றினால் ஒற்றிக்கொளல்-பிறன் சொற்றனாலும் ஒற்றவித்த ஒப்புமை கண்டுகொள்க எ-று.

ஒற்றப்பட்டாரோடு ஒத்தின்ற மாறுபடக் கூறலுங் கூடுமாகலின், ஒருவன் மாற்றம் தேறப்படாதென்பதாம்.

(ப-ரை) ஒற்ற - ஒரொற்றனுலே, ஒற்றி-மறைவாயறிந்த வந்து, தந்த-அறிவிக்கப்பட்ட, பொருளையும் - காரியத்தையும், மற்றுமோ ரொற்றினுல்-பின்னும் ஒரொற்றனுலும், ஒற்றி-அறிந்துவாச்செய்து, கொளல் - (ஒப்புமை கண்டு) கொள்ளக்கடவன் எ-று.

(க-ரை) ஒரொற்றனறிந்த வந்தபொருளை மற்றொரு ஒற்றனுலறிந்து வாச்செய்த அரசன் கொள்ளக்கடவன் என்பதாம்.

(வி-ரை) அவரோடு கலந்து நின்று மாறுபடச் சொல்லுதலும் கூடுமாகையால் அரசனுக்கு ஒருவன் சொல்லையே கம்பலாகாதென்பதாம்.

'ஒற்றொற்றித் தந்தபொருள்' என்றது ஒற்றர்கள் ஒற்றுக்கேட்டு அறிந்து வந்த பொருளை என்பதாம். 'பொருள்' என்றது சண்டு விஷயங்களை. 'மற்றுமோரொற்றினுல்' என்றது வேறு ஒரு ஒற்றினுல் என்பதாம். 'ஒற்றிக் கொளல்' என்றது ஒற்றுக் கேட்டுவாச்செய்த அது உண்மை என்று அறிந்தபின் கொள்க என்பதாம். (8)

ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்.

(பரி-உரை) ஒற்ற ஒற்ற உணராமை ஆள்க - ஒற்றரை யாளுமிடத்து ஒருவனை யொருவன் அறியாமல் ஆள்க, உடன் மூவர் சொல் தொக்க தேறப்படும்-அக்ஙனம் ஆண்ட வொற்றர் மூவரை ஒருபொருண்மேல் வேறு வேறவிட்டால் அம்மூவர் சொல்லும் பயனுல் ஒத்தனவாயின், அது மெய்யென்று தெளியப்படும் எ-று.

ஆயினென்பது வருவிக்கப்பட்டது. ஒருவனையொருவன் அறியிற் றம்மு ளிணைந்து ஒப்பக் கூறவராகலின் உணராமையாள்க என்றும், மூவர்க்குஞ் சென்று ஒற்றுமைப்படுதலும் பட்டால் நீடுகிற்றலுங் கூடாமையிற்றேறப்படு மென்றுங் கூறினர். இதனுனே அஃது ஒத்திலவாயிற் பின்னும் ஆராய்த லென்பதுமும் பெற்றும்.

(ப-ரை) (ஒற்றரை ஆளுமிடத்து) ஒற்ற-ஒரொற்றன், ஒற்ற-மற்றோ ரொற்றனை, உணராமை-அறியாதிருக்கும்படி, ஆள்க-ஆளக்கடவர், (அப்படி ஆளப்பட்ட ஒற்றர்களுள்) உடன்மூவர் - ஒரு பொருண்மேலே (வேறுவேறு விடப்பட்ட) மூவருடைய, சொல்-சொற்களும், தொக்க-பயனுல் ஒத்திருக்குமாயின், தேறப்படும்-(அப்பொருள் மெய்யென்று) தெளியப்படும் எ-று.

(க-ரை) ஒரொற்றன் மற்றோரொற்றனை யறியாதிருக்கும்படி யாளக்கடவன் என்பதாம்.

(வி-ரை) ஆயினென்பது வருவிக்கப்பட்டது. ஒருவனை ஒருவன் அறிந்தால் தம்மிலே கலந்துக்கொண்டு ஒப்பச்சொல்வாராகையால் உணரா

ுக்கவென்றும், மூவர்க்கும் ஒருசன்மைப்படுதலும் பட்டால் கீடித் திருத்தலும் கூடாமையால் தேற்பபடுமென்றும் சொல்லினர். இதனுலேமூவர் சொல்லும் ஒத்திராமற்போனுல் பின்னும் ஆராய்கவென்பதும் பெறப்பட்டது'

'ஒற்றுறற்றணராமை' என்றது ஒரு ஒற்றுரை மற்றூர் ஒற்றர் உணராதவகை என்பதாம். ஒரேவிடயத்தில் ஒருவரை ஒருவர் அறியாதவகை லிய மூன்று ஒற்றர்கள் சொல்லியதும் பேதமின்றி ஒத்திருந்தால் அது ண்மை என்று கொள்ளுக என்பார் 'உடன்மூவர் சொற்றுக்க தேறப்படும்' ன்றூர்.

(9)

சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற் புறப்படுத்தா னுகு மறை.

(பரி-உரை) ஒற்றின்கண் சிறப்பு அறியச் செய்யற்க • மறைந்தவை அறிந்த கூறிய ஒற்றின்கண் செய்புஞ் சிறப்பினை அரசன் பிறரறியச் செய்யா தொழிக, செய்யின்மறை புறப்படுத்தான் ஆகும்·செய்தானுயிற் றன்னகத்த அடக்கப்படும் மறையைத் தானே புறத்திட்டானும் எ·று.

மறையாவது: அவன் ஒற்றனுயதூஉம், அவன் கூறியதூஉமாம். சிறப்புப் பெற்ற இவன் யாவனென்றும், இது பெறுதற்குக் காரணம் யாதென்றும் வினவுவாரும் இறுப்பாரும் அயலார்களின் , புறப்படுத்தானுகுமென்றூர். இவை மூன்றுபாட்டானும் ஒற்றரை ஆளுமாறும், அவரானிகழ்ந்தன அறியுமாறும், அறிந்தாற் சிறப்புச் செய்யுமாறுங் கூறப்பட்டன.

(ப·உ) ஒற்றின்கண் - (மறைந்தவைகளை அறிந்துசொல்லிய) ஒற்றரிடத்து, சிறப்பு-சிறப்பை, அறிய-(பிறர்) அறிய, செய்பற்க-செய்யாதிருக்கக் டவன், செய்யின்-செய்தால், மறை (தன்னுள்ளே) அடக்கப்படுமவைகளை, றப்படுத்தானுகும்-(தானே) வெளியில் இட்டவனுவான் எ·று.

(க·உ) அரசன் ஒற்றனுக்குப் பிறரறியச் சிறப்புச் செய்யாதிருக்கக்கட ன், செய்தால் தனது இரகசியங்களை வெளிப்படுத்தினவனுவான் என்பதாம்.

(வி·உ) மறையாவது: அவன் ஒற்றுனதும், அவன் சொல்லியதும ும். சிறப்புப்பெற்ற இவன் யாரென்றும், இது பெறுதற்குக் காரணம் ாதென்றும், வினவுவாரும் சொல்வாரும் அயலாராகலால் புறப்படுத்தானுகு மன்றூர். [இவை மூன்றுபாட்டாலும் ஒற்றரை ஆளும்விதமும், அவராலே டந்தவை அறியும்விதமும், அறிந்தாற் சிறப்புச் செய்யும்விதமும் சொல்லப் ட்டன.]

'சிறப்பு' என்றது ஈண்டு நிறமைப்பற்றி ஒற்றருக்குச்செய்யுஞ் சிறப்பை. அறிய' என்றது பலர் அறிய என்பதாம். 'ஒற்றின்கண்' இதில் 'கண்' ஏழன் ருபு. 'புறப்படுத்தான் ஆகும்' இது வெளிப்படுத்தினவன் ஆகும் என்பது பாருளாம். 'மறை' என்றது இரகசியத்தை. இரகசியமாவது: இவன் ற்றன் என்பதும், அவன் ஒற்றி அறிந்த விஷயத்தையும்.

(10)

59-ம் அதி - ஒற்றுடல் - முற்றிற்று.

60-ம் அதிகாரம்—ஊக்கமுடைமை

(பரி-உரை) அஃதாவது: மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கே னோச்சியுடைத்தாதல். ஒற்றான் கிழந்தனவறிந்து அவற்றிற்கேற்ற வினை செய்வானுக்கு இஃது இன்றியமையாமையின் ஒற்றுடலின்பின் வைக்கப் பட்டது.

(உரை) அஃதாவது: மனமானது தொழில்செய்தலிலே எழுச்சியை உடைத்தாதலாம். ஒற்றால் கடந்தவை அறிந்து அவைகளுக்கு ஏற்ற தொழில்செய்வோனுக்கு இது அவசியம் வேண்டுதலால் அதன்பின் வைக்கப் பட்டது.

உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று.

(பரி-உரை) உடையர் எனப்படுவது ஊக்கம் ஒருவரை உடையரென்று சொல்லச்சிறந்தது ஊக்கம், அஃது இல்லார் மற்று உடையது உடையரோ. அவ்வூக்கமில்லாதார் வேறுடையது தானும் உடையராவரோ, ஆகார் எ-று.

வேறுடையதென்றது முன் எய்திநின்ற பொருளை. உம்மை விகாரத்தாற் றொக்கது. காக்கும் ஆற்றல் இலராகலின் அதவும் இழப்பரென்பதாம்.

(ப-உரை) உடையரெனப்படுவது (ஒருவரை) உடையவரென்ற சொல்லுக் குச் சிறந்தது, ஊக்கம் - மனவெழுச்சியாம், அஃதில்லார் - அம்மன வெழுச்சியில்லாதவர், மற்றுடையது - வேறுடையதானும், உடையரோ உடையவராவரோ, (ஆகார்) எ-று.

(க-உரை) உடையவரென்ற சொல்லத்தக்கது மனவெழுச்சியாம், அவ் வெழுச்சி யில்லாதவர் யாது மில்லாதவர் என்பதாம்.

(வி-உரை) வேறுடையதென்றது முன் அடைந்துநின்ற பொருளை. உம்மை வருவிக்கப்பட்டது. காப்பாற்ற வலிமையில்லாமையால் அதையும் இழப்பரென்பதாம்.

ஊக்கம் உடையவரே எல்லாம் உடையவர் ஆவர்; ஊக்கம் இல்லாதவர் என்னுடையரேனும் இல்லாதவரே என்பது இதன்பொருள். 'ஊக்கம்' என்றது மனவெழுச்சியை. 'அஃது' என்றது ஊக்கத்தைச் சுட்டியது. 'உடையது' என்றது பொருள் முதலாய உடைமைகளை. (1)

உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

(பரி-உரை) உள்ளம் உடைமை உடைமை - ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைகின்ற உடைமையாவது, பொருள் உடைமை நில்லாது நீக்கிவிடும்-மற்றைப் பொருளுடைமை நிலைகில்லாது நீக்கிப்போம் எ-று.

உள்ளம் ஆகுபெயர். ஊக்கம் உள்ளத்துப் பண்பாகலின், அதற்கு கிலகிற்றலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிதன்மாலத்தாகலின் அதற்கு கில கில்லாமையும் கூறினார். கூறவே, அஃது உடைமை யன்றென்பது பெறப்பட்டது.

(ப-ரை) (ஒருவனுக்கு) உள்ளமுடைமை - மனவெழுச்சி யுடைமையே, உடைமை-(கிலபெற்ற) வுடைமையாம், பொருளுடைமை-பொருளுடைமை, கில்லாதது-கிலபெறாமல், கீக்கிவிடும் நீக்கும் எ-று.

(க-ரை) மனவெழுச்சி கிலபுள்ளவுடைமையாம், பொருளுடைமை கிலபில்லாதாம் என்பதாம்.

(வி-ரை) மனவெழுச்சி வள்ளத்தின் குணமாகலால் அதற்கு கிலபெறுதலும், பொருள் உடம்பினும் வேறாய் அழிவதாயிருக்கையால் அதற்கு கிலபெறாமையும் சொல்லப்பட்டன. சொல்லவே அது உடைமை அன்றென்பது பெறப்பட்டது.

உள்ளம் உடைமை' என்றது ஊக்கம் உடைமையை. 'பொருளுடைமை' என்றது செல்வப்பொருளுடைமையை. (2)

ஆக்க மிழந்தேமென் றல்லவா வூக்க
மொருவந்தங் கைத்துடை யார்.

(பரி-உரை) ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார்-இழந்தாராயினும் யாம் கைப்பொருளே யிழந்தேமென் றலமரார், ஒருவந்தம் ஊக்கம் கைத்து உடையார்-கிலபெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக வுடையார் எ-று.

ஆக்கம்-ஆகுபெயர். ஒருவந்தமாய வூக்கமென்க. கைத்து-கையகத்தாய பொருள்: * "கைத்தண்டாம் போழ்தே காவா தறஞ்செய்ம்மின்" என்றார் பிறரும். அல்லாவாமைக்கேது வருகின்ற பாட்டாற் கூறுப.

(ப-ரை) ஒருவந்தம் - கிலபெற்றதாகிய, ஊக்கம் - மனவெழுச்சியை, கைத்து - கைப்பொருளாக, உடையார் - உடையவர் (இழந்தவராயினும்,) ஆக்கம்-கைப்பொருளை, இழந்தேமென்ற-இழந்துவிட்டோமென்று, அல்லாவார்-மனஞ்சுழலார் எ-று.

(க-ரை) மனவெழுச்சியுடையவர் பொருளிழந்தும் வருந்தார் என்பதாம்.

(வி-ரை) மனஞ்சுழலாமைக்கு ஏதுவருகின்ற பாட்டாற் சொல்லப்படுகின்றது.

'ஆக்கம்' என்றது கைப்பொருளை. 'அல்லாவார்' இது மனம் சுழன்றிருந்தார் என்னும் பொருளது. 'ஒருவந்தம்' இது கிலபெற்ற என்னும் பொருளது. 'கைத்துடையார்' என்றது கைப்பொருள்போலப் பெற்றவர் என்பதாம். (3)

* காலடியார்: இளமை கிலையாமை-6.

ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.

(பரி-உரை) அசைவு இலா ஊக்கம் உடையானுழை - அசைவில்லாத ஊக்கத்தை புடையான்மாட்டு, ஆக்கம் அதர் வினுய்ச் செல்லும் - பொருள் தானே வழிவினவிக்கொண்டு செல்லும் எ-று.

அசைவின்மை - இடுக்கண் முதலியவற்றுல் தளராமை. வழிவினவிச் சென்று சார்வார்போலத் தானே சென்று சாருமென்பார், அதர்வினுய்ச் செல்லுமென்ருர். எய்திகின்ற பொருளினும் அதற்குக் காரணமாய ஆக்கஞ் சிறந்ததென்பது இவை கான்குபாட்டானுங் கூறப்பட்டது.

(ப - ரை) அசைவிலா - அசைவில்லாத, ஊக்கமுடையானுழை- மனவெழுச்சிபுடையவனிடத்தே, ஆக்கம் - பொருளானது, அதர்வினுய்- வழிகேட்டுக்கொண்டு, செல்லும்-போகும் எ-று.

(க-ரை) மனவெழுச்சி புடையவனிடத்துச் செல்வம்வரும் என்பதாம்.

(வி-ரை) அசைவின்மை இடுக்கண் முதலாகியவைகளால் தளராமை வழிகேட்டுச் சென்ற சேர்வார்போலே தானேசென்று சேருமென்றற்கு அதர்வினுய்ச் செல்லுமென்ருர். [இவை கான்குபாட்டானும் அடைந்த கின்ற பொருளினும் அதற்குக் காரணமாகிய ஊக்கம் சிறந்ததென்பது சொல்லப்பட்டது]

'அசைவிலா' என்றது 'சலியா' 'தளராமை' என்னும் பொருளது. 'உழை' இது இடத்து என்னும் பொருளது. 'அதர்வினுய்ச் செல்லும்' இது வழி கேட்டுக்கொண்டு ஊக்கம் உடையான்பால் சென்று சேரும் என்பதாம். (4)

வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
முள்ளத் தனைய துயர்வு.

(பரி-உரை) வெள்ளத்த அனைய மலர் நீட்டம் - நின்ற நீரின் அளவினவாம் நீர்ப்பூக்களின் தாளினது நீளக்கள், மாந்தர்தம் உள்ளத்து அனைய உயர்வு-அதுபோல் மக்கள் தம் ஊக்கத்தளவினதாம் அவருயர்ச்சி எ-று.

மலர் - ஆகுபெயர் நீர் மிக்கதனையும் மலர்த்தான் நீளுமென்பது பட வெள்ளத்தனையவென்ருர். இவ்வுவமையாற்றலான் ஊக்கமிக்க தனையும் மக்களுயர்வென்பது பெறப்பட்டது. உயர்தல் - பொருள் படைகளான் மிகுதல்.

(ப-ரை) மலர் - நீர்ப்பூத்தான்களது, நீட்டம் - நீட்சியானவை, வெள்ளத் தனைய - நின்றநீரளவினவாம் (அதுபோல), மாந்தர் - மனிதர்கள், உயர்வு- உயர்ச்சியானது, உள்ளத்தனையது-(அவர்) மனவெழுச்சி யளவினதாம் எ-று.

(க-ரை) நீர்ப்பூத்தான்கள் நிறை நீரளவாம் அதுபோல மனிதர்களுயர்வு மனவெழுச்சியளவாம் என்பதாம்.

(வி-ரை) மலர் அதன்ருளுக்கு ஆகலால் ஆகுபெயர். நீர் மிகுந்தமட்டும் மலர்கள் நீளுமென்பதுதோன்ற வெள்ளத்தனையவென்ருர். இவ்வுபமான வலிமையால் ஊக்கமிகுந்தவனவும் மனிதர் உயர்வொன்பது பெறப்பட்டது. உயர்வு-பொருள் படைகளால் மிகுதல்.

'வெள்ளம்' என்றது நண்டு நீரை. 'மாந்தர்தம் உள்ளம்' என்றது மக்களது ஊக்கத்தை. 'வெள்ளத்தனைய மலர்நீட்டம்' என்றது உபமானம். 'உயர்வு' என்றது சிறப்பு உயர்வை. (5)

உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

(பரி-உரை) உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்-அரசாயினுர் கருதவ தெல்லாம் தம் உயர்ச்சியையே கருதுக; அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து-அவ்வுயர்ச்சி பால்வகையாற் கூடிற்றில்லையாயினும், அக்கருத்துத் தள்ளாமை நீர்மையுடைத்து எ-று.

உம்மை தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. தள்ளிய வழியுந் தானாண்மையிற் றவறின்றி கல்லோராற் பழிக்கப்படாமையின் தள்ளாவியற்கைத் தென்பதாம். மேல் உள்ளத்தனைய துயர்வு என்றதனையே வற்புறுத்தியவாறு.

(ப-ரை) (அரசரானவர்) உள்ளுவதெல்லாம் நினைப்பதெல்லாம், உயர்வு-(தமது) உயர்ச்சியையே, உள்ளல்-நினைக்கக்கடவர், அது-அவ்வுயர்ச்சியானது, தள்ளினும்-(ஊழ்வகையினுலே கூடாமற்போயினும்) அந்நினைப்பு, தள்ளாமை நீர்த்து-தள்ளாமைக் குணமுடையதாம் எ-று.

(க-ரை) அரசருயர்வை நினைக்கக்கடவர் அவ்வுயர்ச்சி கூடாவிடினு மந் நினைப்பு நீங்காக்குணமுடையதாம் என்பதாம்.

(வி-ரை) மற்று-அசை, தள்ளினுமென்றதனுல் தள்ளாமை மிகுதியாதல் விளக்கிற்று. தள்ளியவிடத்தும் முயற்சியிலே அவர் தவறுதல் இல்லாமல் கல்லோராலே பழிக்கப்படாமையால் தள்ளாத இயற்கையுடைத்தென்பதாம். முன்னே உள்ளத்தனையதுயர் வென்றதனை உறுதிசெய்தபடி.

'உள்ளுவது' இது எண்ணுவது என்னும் பொருளது. 'உயர்வு' என்றது தமது உயர்வை. 'அது' என்றது அவ்வுயர்வை. 'தள்ளினும்' என்றது ஊழாற் கூடவில்லையாயினும் என்பது பொருளாம். (6)

சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டேன்றுங் களிறு.

(பரி-உரை) களிறு புதை அம்பின் பட்டுப் பாடு ஊன்றும்-களிறு புதையாகிய அம்பாற் புண்பட்டவிடத்துத் தளராது தன் பெருமையை நிலை நாட்டும்; உரவோர் சிதைவிடத்து ஒல்கார்-அதுபோல ஊக்கமுடையார்

தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்தவிடத்தும் தளராது தம் பெருமையை நிலைநிறுத்தவர் எ-று.

புதை - அம்புக்கட்டு: பன்மை கூறியவாறு. பட்டாலென்பது பட்டெனத் திரிந்து நின்றது. ஒல்காமை, களிற்றடனும், பாடேன்றல் உரவோருடனும், சென்றியைந்தன. தள்ளுறா தவறுதல் உள்ளியது முடிப்ப ரென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஊக்கமுடையாரது உயர்ச்சி கூறப்பட்டது.

(ப-ரை) களிறு-யானையானது, புதையம்பின்-கட்டாகிய அம்பிலுலே, பட்டு-புண்பட்டவிடத்து, பாடேன்றம் - (தளராமல்தன்) பெருமையை நிலை நிறுத்தும், (அதுபோல) உரவோர் - மனவெழுச்சியை யுடையவர், சிதை விடத்து-(தாம் நினைத்த உயர்ச்சிக்கு) அழிவுவந்தவிடத்து, ஒல்கார்-தளராமல் தம்பெருமையை நிலைநிறுத்தவர் எ-று.

(க-ரை) யானை கணையாற் புண்பட்டவிடத்துந் தளராமற் பெருமையை நிறுத்தும்; அதுபோல மனவெழுச்சியுடையார் வருத்தம் வந்தவிடத்துந் தளரார் என்பதாம்.

(வி-ரை) பட்டு - பட்டாலென்பதன் பொருளிலே வந்தது. ஒல்காமை-களிற்றுக்கும், பாடேன்றல்-உரவோருக்கும், கூட்டப்பட்டன. நினைக்கப்பட்ட வுயர்ச்சியானது கூடாமற்போயினும் தவறுமல் அதனை முடிப்பரென்பதாம். [இவை மூன்றுபாட்டானும் ஊக்கமுடையாரது உயர்ச்சி சொல்லப்பட்டது.]

'சிதைவு' என்றது அழிவை. 'ஒல்கார்' இது தளரார் என்னும் பொருளது. 'உரவோர்' என்றது மனவூக்கம் உடையவரை. 'பாடு' (7) என்றது பெருமையை.

உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

(பரி-உரை) உள்ளம் இலாதவர் - ஊக்கமில்லாத அரசர், உலகத்த வள்ளியம் என்னும் செருக்கு எய்தார் - இவ்வுலகத்தாருன் யாம் வண்மை யுடையமென்று தம்மைத் தாமதித்தலைப் பெறார் எ-று.

ஊக்கமில்லையாகவே, முயற்சி, பொருன், கொடை, செருக்கு இவை மூறையே இலவாமாகலின், செருக்கெய்தாரென்றார். கொடை வென்றி யினைய வின்பம் தமக்கல்லது பிறர்க்குப் புலனுகாமையின் தன்மையாற் கூறப்பட்டது.

(ப-ரை) உள்ளமிலாதவர் - மனவெழுச்சியில்லாத அரசர், உலகத்த இவ்வுலகத்தாருன், வள்ளியமென்னும் - வண்மையை யுடையமென்று, (தம்மைத்தாமேமதிக்கும்) செருக்கு-மதிப்பை, எய்தார்-பெறார் எ-று.

(க-ரை) மனவெழுச்சி யில்லாதவர் மதிப்படையார் என்பதாம்.

(வி-உ) ஊக்கமில்லாதவர்க்கு முயற்சி, பொருள், கொடை, செருக்கு, இவை முறையே இல்லாமற்போதலால் செருக்கெய்தாரென்றார். கொடை வெற்றிகளால் ஆகியவின்பம் தமக்கல்லது பிறர்க்குக் காணப்படாமையால் தன்மையிடத்தாற் சொல்லப்பட்டது.

'உலகத்து' என்றது உலகத்து உள்ளவருள் என்னும் பொருளது. 'இலாதவர்' இது இல்லாதவர் என்பதன் தொகுத்தல் விகாரம். 'வல்லியம்' இது வண்மையுடையோம் என்னும் பொருளது. 'செருக்கு' என்றது ஈண்டு தம்மைத்தாம் மதித்தலே. (8)

பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

(பரி-உ) பரியது கூர்ங்கோட்டது ஆயினும் - எல்லா விலங்கினுந் தான் பேருடம்பினது, அதனேயுமன்றிக் கூரிய கோட்டையுமுடைய தாயினும், யானை புலி தாக்குறின் வெரூஉம் - யானை தன்னைப் புலி யெதிர்ப்படின் அதற்கஞ்சும் எ-று.

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின் மிக்க மெய்வலியுங் கருவிச் சிறப்புமுடைத்தாயினும் யானை ஊக்கமின்மையான் அஃதுடைய அதற்கு அஞ்சுமென்ற இது, பகைவரின் மிக்க மெய்வலியுங் கருவிச்சிறப்பு முடையராயினும் அரசர் ஊக்கமிலராயின் அஃதுடைய அரசர்க்கு அஞ்சுவரென்பது தோன்றின்றமையின், பிறிதுமொழிதல்.

(பத) யானை - யானையானது, பரியது - (எல்லா விலங்குகளினும்) பெரிய உடம்பையுடையது, (அதுவல்லாமலும்) கூர்ங்கோட்டது - கூர்மை யான கொம்புகளையு முடையது, ஆயினும் - ஆனாலும், புலி-புலியானது, தாக்குறின்-(தன்னை) எதிர்ப்படின், வெரூஉம்-(அதற்கு) அஞ்சும் எ-று.

(க-ரை) யானை பெரிதுங் கொம்புடையதுமானாலும் புலியடிக்கி அஞ்சும் என்பதாம்.

(வி-உ) பேருடம்பால் வலிமிகுதி சொல்லப்பட்டதாயிற்று. புலியைக் காட்டிலும் மிகுந்த உடல்வலிமையும் வெல்லுதற்குச் சிறந்த ஆயுதமும் உடையதாயினும் யானை ஊக்கமில்லாமையால் அதனையுடைய அப்புலிக்கு அஞ்சுமென்ற இத்தவாக்கியம், பகைவரைக் காட்டிலும் மிகுந்த உடல் வலிமையும், வெல்லுதற்குச் சிறந்த ஆயுதமும் உடையவராயினும் அரசர் ஊக்கமிலராயின் அதனையுடைய அரசர்க்கு அஞ்சுவரென்பது தோன்ற நின்றலால் பிறிதுமொழிதல்.

'பரியது' இது பெரிய உடம்பினது என்னும் பொருளது. 'வெரூஉம்' இது அஞ்சும் என்னும் பொருளது. வெரூஉம்' இது இசைநிறைக்கவந்த அசைபெற்றது. (9)

ஊரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

(பரி-உரை) ஒருவற்கு உரம் உள்ள வெறுக்கை-ஒருவற்குத் திண்ணிய அறிவாவது ஊக்கமிகுதி; அஃது இல்லார் மரம்-அவ்வூக்க மிகுதியில்லாதார் மக்களாகார் மரங்களாவார், மக்களாதலே வேறு - சாதிமரங்களோடு இம்மரங்களிடை வேற்றுமை வடிவு மக்கள் வடிவே; பிறிதில்லை எ-று.

உரமென்பது அறிவாதல்,* 'உரனென்னுந் தோட்டியான்' என்பதனானு மறிக. மரமென்பது சாதியொருமை. மக்கட்குள்ள கல்லறிவுங் காரிய முயற்சியு மின்மைபற்றி மரமென்றும், மரத்திற்குள்ள பயன்பாடின்மைபற்றி மக்களாதலே வேறென்றுங் கூறினர். பயன் - பழமுதலியவும், நீழல் கோட்டம், இல்லம், தேர், நாவாய்கட்கு உறப்பாதலும் முதலிய. இவை மூன்றுபாட்டானும் ஊக்கமில்லாதாரது இழிபு கூறப்பட்டது.

(ப-ரை) ஒருவற்கு - ஒருவனுக்கு, உரம்-திடமான அறிவாவது, உள்ள வெறுக்கை - மனவெழுச்சியின் மிகுதியாம், அஃது - அதனை, இல்லார்-இல்லாதவர், மரம்-(மனிதராகார்) மரங்களாவார், வேறு-(சாதிமரங்களோடு இம்மரங்களிடத்து) வேற்றுமை, மக்களாதலே-மனிதவடிவா யிருக்கையே (வேறில்லை) எ-று.

(க - ரை) ஒருவனுக் கறிவாவது மனவெழுச்சியாம் அஃதில்லாதவர் மரங்களுக் கொப்பாவர் என்பதாம்.

(வி-ரை) மனிதருக்கு இருக்கவேண்டிய கல்லறிவும் காரிய முயற்சியும் இல்லாமைபற்றி மரமென்றும், மரத்தில் உண்டாம்பயன் இல்லாமைபற்றி மக்களாதலே வேறென்றும் சொல்லினர். மரத்திற்குப்பயன்-பழமுதலாவை யும், நிழலயம், வீடு, தேர், மரக்கலம் இவைகளுக்கு உறப்பாதல் முதலாவை யும் ஆகும். [இவை மூன்றுபாட்டாலும் ஊக்கமில்லாதவரது இழிவு சொல்லப்பட்டது.]

'உரம்' என்றது கண்டு திண்ணிய அறிவு என்னும் பொருளது. 'உள்ள வெறுக்கை' என்றது ஊக்கத்தை. என்னை? ஊக்கத்தினும்-சிறந்த செல்வ மாதலின் என்க. 'அஃது' என்றது உள்ளவெறுக்கையை. (10)

60-ம் அதி - ஊக்கமுடைமை - முற்றிற்று.

---

* குறள், 3-ம் அதி. நீத்தார் பெருமை-4.

61-ம் அதிகாரம்—மடியின்மை

(பரி·உரை) அஃதாவது: கருதியன செய்யுங்காற் சோம்புதலில்லாமை. ஊக்கமுடையார்க்கு ஒரோவழிக் குணவயத்தான் மடி வருதலுண்டு, இஃது ஊக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: கிளைக்கப்பட்டவைகளைச் செய்யும்போது சோம்புதலில்லாமையாம். ஊக்கமுடையவர்க்கு ஒரோவிடத்தே குணவசத்தால் சோம்பல் வருதலுக்குறித்தது இது அதன்பின் வைக்கப்பட்டது.

குடியென்னுங் குன்ற விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்.

(பரி·உரை) குடி என்னும் குன்ற விளக்கம் - தான் பிறந்த குடியாகிய சந்தா விளக்கு, மடி என்னும் மாசு ஊர மாய்ந்து கெடும்·ஒருவன் மடியாகிய இருளடர மறைப்போம் எ·று.

உலகமடை புள்ளதனையும் இடையறுத தன்னுட் பிறந்தாரை விளக்குதலிற் குடியைக் குன்றுவிளக்கமென்றும், தாமதகுணத்தான் வருதலின் மடியை மாசென்றும், அஃது ஏனை யிருள்போலாது அவ் விளக்கைத் தான் அடர்ந்து மாய்க்கும் வலியுடைமையின் மாசூரமாய்ந்து கெடுமென்றுங் கூறினார். கெடுதல்-பெயர் வழக்குமில்லையாதல்.

(ப-ரை) குடியென்னுங் குன்றுவிளக்கம் - (தான்பிறந்த குடியாகிய முழுக்கா விளக்கானது, மடியென்னுமாசு - (ஒருவனது) சோம்பலாகிய இருளானது, ஊர-தெருக்க, மாய்ந்துகெடும்-மழுங்கிக்கெடும் எ-று.

(க-ரை) ஒருவன் குடி என்னும் விளக்கானது அவன் சோம்பலாற் கெடும் என்பதாம்.

(வி·ரை) உலகமடைபுள்ளவரைக்கும் இடையறுத தன்னுட்பிறந்தவரை விளக்குதலால் குடியைக்குன்ற விளக்கமென்றும், தமோகுணத்தினுலே வருதலால் சோம்பலை இருளென்றும், அது மற்றையிருள்போலாகாமல் விளக்கத்தைத் தான் தெருக்கி மாய்க்கும் வலியுடைமையால் மாசூர மாய்ந்து கெடுமென்றும் சொல்லினார். கெடுதல் - பெயரும் வழக்காமற் போகுதல்.

'குடி' என்றது சண்டு ஒருவன் பிறந்த குடியை. 'விளக்கம்' இது விளக்குஞ் செய்வதாகிய விளக்கைக் குறித்தது. இதில் 'அம்' கருவிப் பொருள் விகுதி. 'மடி' என்றது சோம்பலை. இது ஊக்கத்தின் அழிவு என்னும் காரணம் பற்றிவந்த பெயர். 'மாசு' என்றது அழுக்கை; சண்டு இருள் என்று உரைசெய்யப்பெற்றது. என்னை? குடியை விளக்கு என்றுதல் மாசு என்றற்கு இருள் எனப் பொருள் ஓதப்பெற்றது. இருளை விளக்குப் போக்கும் ஆதலால் மடியாகிய இருள் குடியாகிய விளக்கத்தை வலிந்து சென்று அழிக்கும் என்ற பொருள் கருதற்பாலதொன்றும். (1)

மடியை மடியா வொழுகல் குடியைப்
குடியாக வேண்டு பவர்.

(பரி-உரை) குடியைக் குடியாக வேண்டுபவர் - தாம் பிறந்த குடியை மேன்மேலுயரும் நற்குடியாக வேண்டுவார், மடியை மடியா ஒழுகல்-மடியை மடியாகவே கருதி முயற்சியோடொழுகுக எ-று.

முயற்சியோடென்பது அவாய்நிலையான் வந்தது. தெருப்பிற் கொடியது பிறிதின்மைபற்றி தெருப்பை தெருப்பாகவே கருதுகவென்றாற்போல மடியிற்றீயது பிறிதின்மைபற்றிப் பின்னும் அப்பெயர் தன்னானே கூறினார், அன்னவ் கருதி அதனைக் கடிந்து முயன்றொழுகவே தாம் உயர்வர், உயரவே, குடியுயருமென்பார், குடியைக் குடியாக வேண்டுபவரென்றார். அன்னம் ஒழுகாக்காற் குடியழிவுமென்பது கருத்து. இனி மடியாவென்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுகுகவென்ற உரைப்பாருமுளர்.

(ப-ரை) குடியை (தாம்பிறந்த) குடியை, குடியாக-(மேன்மேலுயரும்) நற்குடியாக, வேண்டுபவர்-வேண்டுவோர், மடியை-சோம்பலை, மடியா-சோம்பலாகவே (கினைத்த,) ஒழுகல்-(முயற்சியோடு) நடக்கக்கடவர் எ-று.

(க-ரை) தாம்பிறந்த குடியை நற்குடியாக வேண்டுவோர் சோம்பலை விடக்கடவர் என்பதாம்.

(வி-ரை) தெருப்பைக்காட்டிலும் கொடியது வேறில்லாமைபற்றி தெருப்பை தெருப்பாகவே கினைக்கவேண்டும் என்பதுபோல் மடியைக் காட்டிலும் கொடியது வேறில்லாமைபற்றிப் பின்னும் அப்பெயராற்றானே சொல்லினார். சோம்பலைச் சோம்பலாகவே கினைத்து முயற்சிசெய்து நடக்தால் தாம் உயர்தலாலே குடி உயருமென்றற்கு குடியைக் குடியாக வேண்டுபவ சென்றார். அப்படி நடவாமற்போனால் குடி அழியுமென்பது கருத்து.

'மடியை மடியா' என்றது சோம்பலைச் சோம்பலா என்றது பொருளாம் என்னை? சோம்பரைக் காட்டிலும் குடியை அழிக்கும் கொடியது ஒன்று இல்லை ஆதலின் 'மடியை மடியா' என மடியென்னும் பெயரை மீட்டும் மொழிந்தார். இது விஷத்தை விஷமா என்பது போலாம். மடியில்லாதார் தாம் உயர்வர், அவர் தாம் உயரவே குடியுயரும் ஆதலின் 'குடியைக் குடியாக வேண்டுபவர்' என்றார்.

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

(பரி-உரை) மடி மடிக்கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி-விடாது தருவதாய மடியைத் தன்னுள்ளே கொண்டொழுகும் அறிவில்லாதான் பிறந்தகுடி, தன்னினும் முந்த மடியும்-அவன்றன்னினும் முந்துற அழியும் என்றவாறு.

அழிவு தருவதனை அகத்தே கொண்டொழுகுதலிற் பேதை யென்றும் அவனாற் புறந்தரப்படுவதாகலிற் குடி தன்னினு முந்துற அழியுமென்றுங் கூறினார். ஆக்கத்திற் பிற்படினும் அழிவின் முற்படுமென்பதாம்.

(ப-ரை) மடி-மடிக்கத் தகுவதாகிய, மடி - சோம்பலை, கொண்டு-(தன்னுள்ளே) கொண்டு, ஒழுகும்-நடக்கும், பேதை - அறிவில்லாதவன், பிறந்த-பிறந்த, குடி-குடியானது, தன்னினும்-அவனினும், முந்து-முற்பட, மடியும்-அழியும் எ-று.

(க-ரை) சோம்பலுடையவன் குடியானது கெடும் என்பதாம்.

(வி-ரை) அழிவுதருஞ் சோம்பலை உட்கொண்டு நடத்தலாலே பேதை யென்றும், அவனாலே காப்பாற்றப்படுவதாதலால் குடி தன்னினு முந்து மடியுமென்றும் சொல்லினார். ஆக்கத்திலே பிற்படினும் அழிவிலே முற்படு மென்பதாம்.

'மடிமடி' என்றது மடிக்கத்தகுவதாகிய சோம்பலை. அகற்றத்தக்கதாகிய மடியை உள்ளத்தே கொண்டு ஒழுகலால் அறிவில்லாதவன் என்னும் பொருளில் 'பேதை' என்றார். 'தன்னினும்' என்றது மடிமடிக்கொண் டொழுகும் பேதையை. (3)

குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

(பரி-உரை) மடி மடிந்து மாண்ட உஞற்று இலவர்க்கு-மடியின்கண்ணே வீழ்தலாற் றிருந்திய முயற்சியிலராயினார்க்கு, குடி மடிந்து குற்றம் பெருகும்-குடியும் மடிந்து குற்றமும் பல்கும் எ-று.

மடிந்தெனத் திரிந்துநின்ற வினையெச்சம் இலவரென்னுங் குறிப்பு வினைப்பெயர் கொண்டது. குற்றங்கள் முன்னர்க் கூறுப. இவை நான்கு பாட்டானும் மடியின்றீமை கூறப்பட்டது.

(ப-ரை) மடி-சோம்பலிலே, மடிந்து - வீழ்தலால், மாண்ட வுஞற்றில வர்க்கு-திருத்தமாகிய முயற்சியில்லாதவராயினவர்க்கு, குடி-குடியும், மடிந்து-அழிந்து, குற்றம்-குற்றங்களும், பெருகும்-பல்கும் எ-று.

(க - ரை) முயற்சியில்லாதவர்க்குக் குடியுங்கெட்டுக் குற்றங்களும் பெருகும் என்பதாம்.

(வி-ரை) குற்றங்கள் பின்வருங்குறளிலே சொல்லப்படுகின்றன. [இவை நான்கு பாட்டாலும் சோம்பலினது தீமை சொல்லப்பட்டது.]

'குடிமடிந்து' என்றது குடி அழிதலை. 'குற்றம்' என்றது தாமதத்தையும், மறதியையும், துயிலையும், சிறந்த பயன் எய்தாமையையும், இடிபுரிந்து சான்னுஞ் சொற்கேட்கையும், கொன்னார்க்கு அடிமை ஆதலையும் உணர்த்தி நின்றது. 'மாண்ட' என்றது திருந்திய முயற்சியை. (4)

நெடுநீர் மறவி மடிதுயி லுன்குங்
கெடுநீரார் காமக் கலன்.

(பரி-உரை) மடி நெடுநீர் மறவி துயில் நான்கும்-மடியும் விரைந்து செய்வதனை நீட்டித்துச் செய்யுமியல்பும் மறப்பும் துயிலுமாகிய இந்நான்கும், கெடும் நீரார் காமக்கலன்-இறக்கும் இயல்பினையுடையார் விரும்பி யேறும் மரக்கலம் எ-று.

முன்னிற்கற்பாலதாய மடி செய்யுள் நோக்கி இடை நின்றது. நெடுமையாகிய காலப்பண்பு அதன்கண் நிகழ்வதாய செயன்மே னின்றது. காலநீட்டத்தையுடைய செயன்மூதல் மூன்றும் தாமதகுணத்திற் றோன்றி உடனிகழ்வனவாகலின், மடியோடு ஒருங்கு எண்ணப்பட்டன. இறக்கும் இயல்பு-காலுலகத்தல். இவை தன்புறநீரார்க்கு இன்புறத்தவபோன்று காட்டி அவர் விரும்பிக் கொண்டவழித் தன்பத்திடை வீழ்த்தலின், நாள் உலந்தார்க்கு ஆக்கம் பயப்பதுபோன்ற காட்டி அவர் விரும்பி யேறியவழிக் கடலிடை வீழ்க்குங் கலத்தினை யொக்குமென்னும் உவமைக்குறிப்புக் காமக்கல னென்னுஞ் சொல்லாற் பெறப்பட்டது. இதற்கு விரும்பிப்பூணும் ஆபரணமென் றுரைப்பாரு முளர்.

(ப-ரை) மடி-சோம்பலும், நெடுநீர்-(விரைவிற் செய்தற்குரியவைகளை) நீட்டித்துச் செய்யுங் குணமும், மறவி-மறதியும், துயில்-தயிலும் ஆகிய, நான்கும்-இந்நான்கும், கெடுநீரார்-இறக்கு மியல்பினை யுடையவர், காமக் கலன்-விரும்பியேறு மரக்கலமாம் எ-று.

(க-ரை) சோம்பலும், தாமதமும், மறதியும், நித்திரையும், கெடுவோ ரேறு மரக்கலங்களாம் என்பதாம்.

(வி-ரை) மடி செய்யுளமைவு நோக்கி நடுநின்றது. மடியோடு மற்றை மூன்றும் தமோகுணத்திலே தோன்றி உடனிகழ்வன வாதலால் சேர்த்த எண்ணப்பட்டன. காமக்கலனென்பதனால் எப்படி மரக்கலம் மரணம் சமீபித்தவர்க்குப் பெருக்கத்தருவதுபோலே தோன்றி அவர் விரும்பி ஏறியவிடத்துக் கட்டிலே விழுத்துமோ அப்படியே இந்நான்கும் தன்பஞ் சமீபித்தவர்க்கு இன்பஞ் செய்பவைபோலே தோன்றி அவர் அவைகளை விரும்பிக்கொண்ட விடத்தே தன்பத்திலே விழுத்துமென்பது தோன்றலறிக.

'நெடுநீர்' என்றது நீட்சித்தன்மை; அதாவது தொழில் செய்தலில் காலம் நீட்டிக்குந் தன்மையை. இதனை தாமதம் என்பர். 'நான்கும்' என்றதன்கண் நின்ற உம்மை முற்றும்மை. 'கெடும் நீரார்' என்றது அழிதன்மாலையனை. (நீர்-தன்மை) 'காமக்கலன்' விரும்பி ஏறுதற்கு உரிய மரக்கலம் என்றதாம். 'காமக்கலன்' என்றது உருவகவணி. இனி இதற்கு விரும்பிப்பூணும் ஆபரணம் எனவும் பொருள் கூறுவாரும் உண்டு. (5)

படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது.

(பரி-உரை) படி உடையார் பற்று அமைந்தக்கண்ணும் - நிலமுழுதும் ஆண்டாரது செல்வம் தானே வந்தெய்தியவிடத்தும், மடி உடையார் மாண்பயன் எய்தல் அரிது-மடியுடையார் அதனான் மாண்ட பயனை எய்தல் இல்லை எ-று.

உம்மை எய்தாமை விளக்கிநின்றது. மாண்பயன் - பேரின்பம். அச் செல்வம் அழியாமற் காக்கும் முயற்சியின்மையின் அழியும்; அழியவே, தற்றன்ப நீக்காதென்பதாம். இதற்கு நிலமுழுதுமுடைய வேந்தர் துணையாதல் கூடியவிடத்துமென் றுரைப்பாருமுளர்.

(ப-உரை) படியுடையார் - நிலமுழுதும் ஆண்ட வாசாத, பற்ற-செல்வ மானது, அமைந்தக் கண்ணும் (தானே வந்து) சேர்ந்தவிடத்தும், (அதனால்) மடியுடையார்-சோம்பலுடையவர், மாண்பயன் - பெரும்பயனை, எய்தலரிது-அடைதலில்லை எ-று.

(க-ரை) உலகொருங்குடைய அரசர் செல்வம் வலியவந்தாலும் சோம்ப லுடையவர் பயனடைதலில்லை என்பதாம்.

(வி-ரை) உம்மை-அமையாமையை விளக்கிநின்றது. பயன்-இன்பம். அச்செல்வம் காக்குமுயற்சி யில்லாமையால் அழிதலாலே தற்றன்பம் நீங்கா தென்பதாம்.

'படியுடையார்' இது உலகம் முழுதும் தன் ஆட்சிக்கண்ணே யுடையார் என்பது பொருளாம். 'படி'-பூமி, இது படிந்திருக்குங்காரணம் பற்றி வந்த பெயர். 'பற்று' என்றது பற்றுவைக்கப் படுவதாகிய செல்வத்தை யுண்டு குறித்தது. 'அமைந்தக்கண்ணும்' என்றதன் ஈற்று உம்மையால் அமைவதன் அருமை உணர்த்தியதாயிற்று. 'மாண்பயன்' என்றது சிறந்தபயனை. ஈண்டு 'அரிது' என்றது இல்லை என்னும் பொருள்தந்து நின்றது. (6)

இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து மாண்ட வுளுற்றி லவர்.

(பரி-உரை) மடி புரிந்து மாண்ட உளுற்ற இலவர் - மடியை விரும்புதலான் மாண்ட முயற்சியில்லாதார், இடி புரிந்து என்னும் சொற் கேட்பர்-தக் காட்டார் முன் கழறுதலை மிகச்செய்து அதனற் பயன் காணுமையிற் பின் இகழ்ந்து சொல்லுஞ் சொல்லைக் கேட்பர் எ-று.

இடியென்னும் முதனிலைத் தொழிற்பெயரான், கட்டாரென்பது பெற்றும். அவர் இகழ்ச்சி சொல்லவே, பிறர் இகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. அவற்றிற்கெல்லாம் மாறு சொல்லும் ஆற்றலின்மையின், கேட்ப சென்றார்.

(ப-ரை) மடிபுரிந்து - சோம்பலை விரும்புதலால், மாண்ட - பெருமை பொருந்திய, உளுற்றிலவர் - முயற்சியில்லாதவர், இடிபுரிந்து - (கட்பாளர்) கண்டித்துப் புத்திசொல்லி, (அதனற் பயன் காணுமையினாலே) என்னுஞ் சொல்-(பின்) இகழுஞ்சொல்லை, கேட்பர்-கேட்பார் எ-று.

(க-ரை) சோம்பலுடையவர் பிறரிகழுஞ் சொல்லுக்கேட்பர் என்பதாம்.

(வி-ரை) அவரிகழ்தல் சொல்லவே பிறரிகழ்தல் சொல்லவேண்டுவதில்லையாயிற்று. அவைகளுக்கெல்லாம் எதிர் பேசமாட்டமையால் கேட்பர் என்றார்.

'இடி' என்றது இடித்துக் கூறுவதாகிய கழற்றரையை. 'என்னுஞ் சொல்' என்றது இகழுரையை. உளுற்றதல்-செய்தல். (7)

மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னென்னுர்க்
கடிமை புகுத்தி விடும்.

(பரி-உரை) மடிமை குடிமைக்கண் தங்கின்-மடியினது தன்மை குடிமை புடையான்கண்ணே தங்குமாயின், தன் ஒன்னுர்க்கு அடிமை புகுத்திவிடும். அஃது அவனைத் தன் பகைவர்க்கு அடியனுர்தன்மையை யடைவித்து விடும் எ-று.

மடியினதுதன்மை-காரியக்கேடு. குடிமை-குடிசெய்தற்றன்மை. அஃது அதனைபுடைய அரசன்மேற்றுதல், தன் ஒன்னுர்க்கு என்றதனுன் அறிக. அடியனுர்தன்மை-தாழ்ந்துகின்று ஏவல் கேட்டல். [இவை தான்குபாட்டானும் மடிமைக் குற்றங்கள் கூறப்பட்டன.]

(ப-ரை) மடிமை - சோம்பற் றன்மையானது, குடிமைக்கண்-குடிமை புடைய அரசனிடத்தே, தங்கின் - தங்குமாயின் (அது), தன்னென்னுர்க்கு-தன் பகைவர்க்கு, அடிமை - அடியனுர்தன்மையை, புகுத்திவிடும்-(அவனை) அடைத்தவிடும் எ-று.

(க-ரை) சோம்பலாசனிடத்துத் தங்குமாலுலது அரசன் தன்னைப் பகைவருக் கடிமையாக்கும் என்பதாம்.

(வி-ரை) சோம்பலினது தன்மை-காரியக்கேடு. குடிமை-குடிசெய்தற் றன்மை. அது அதனைபுடைய அரசனுக்காதல் தன்னென்னுர்க் கென்ற தனுல் அறிக. அடியனுர்தன்மை - தாழ்ந்துகின்றேவல் கேட்டல். [இவை தான்குபாட்டாலும் சோம்பற் குற்றங்கள் சொல்லப்பட்டன.]

'குடிமைக்கண்' என்றது குடிமையுடையானது இடத்தே என்னும் பொருளது. 'ஒன்னுர்' இது ஒன்றபட்டாதவர் என்னுங் காரணம்பற்றி பகைவர்க்கு வந்த பெயர். (8)

குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

(பரி-உரை) ஒருவன் மடி ஆண்மை மாற்ற - ஒருவன் தன் மடியாளுந் தன்மையை ஒழிக்கவே, குடி ஆண்மையுள்வந்த குற்றம் கெடும் - அவன் குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் கெடும் எ-று.

மடியாளுந்தன்மை - மடியுடைமைக்கு ஏதுவாய தாமதகுணம். குடியாண்மையென்பது உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்த குற்றமென்றது மடியானன்றி முன்னே பிறகாரணங்களான் நிகழ்ந்தவற்றை. அவையும் மடியாண்மையை மாற்றி முயற்சியுடையனாக நீங்குமென்பதாம்.

(ப-ரை) ஒருவன்-ஒருவன், மடியாண்மை-சோம்பலை ஆளுந்தன்மையை, மாற்ற - ஒழிக்கவே, குடி-(அவனது) குடியுள்ளும், ஆண்மையுள் - ஆண்மையுள்ளும், (வந்த) குற்றம்-குற்றங்கள், கெடும்-அழியும் எ-று.

(க-ரை) ஒருவன் சோம்பலை யொழிக்க அவன் குடியிலும் ஆண்மையிலும் வந்த குற்றங்களழியும் என்பதாம்.

(வி - ரை) சோம்பலை ஆளுந்தன்மையாவது சோம்பலுடைமைக்கு ஏதுவாகிய தமோகுணம். அவற்றுள் வந்த குற்றமென்றது சோம்பலாலன்றி முன்னே வேறுகாரணங்களால் நிகழ்ந்தவைகளை. அவையும் சோம்பலுடைமையை ஒழித்து முயற்சியுடையவனாக நீங்குமென்பதாம்.

'குடியாண்மை' இது குடியும் ஆண்மையும் என விரிதலின் உம்மைத்தொகை. 'மடியாண்மை' என்றது தமோகுணக் காரியமாகிய சோம்பலை. 'மாற்ற' என்றது ஈண்டு இல்லாது அழித்தலை. 'குற்றம்' என்றது மேலே தான்காவது குறளிற்காட்டிய தாமதம், மறதி, துயில் முதலிய குற்றங்களை. (9)

மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு.

(பரி-உரை) அடி அளந்தான் தாயது எல்லாம் - தன் அடியளவானே எல்லாவுலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்புமுழுதையும், மடி இலா மன்னவன் ஒருங்கு எய்தும்-மடியிலாத அரசன் முறையானன்றி ஒருங்கே யெய்தும் எ-று.

அடியளந்தானென்றது வாளா பெயராய் நின்றது. தாவியதென்பது இடைக்குறைந்து நின்றது. எப்பொழுதும் வினையின்கண்ணே முயறலின், இடையீடின்றி யெய்துமென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் மடியிலாதான் எய்தும் பயன் கூறப்பட்டது.

(ப-ரை) மடியிலா-சோம்பலில்லாத, மன்னவன்-அரசன், அடி-(தன்) அடியளவினாலே, அளந்தான்-(எல்லாவுலகத்தையும்) அளந்த கடவுள், தாஅய தெல்லாம்-கடந்தபரப்பு முழுதையும், ஒருங்கு - ஒருசேர, எய்தும் - அடைவான் எ-று.

(க-ரை) சோம்பலில்லாவரசன் உலகெல்லாமடைவான் என்பதாம்.

(வி-ரை) எப்போதும் தொழிலினிடத்தே முயன்றால் இடையீடில்லாமல் அடைவானென்பதாம். [இவை இரண்டு பாட்டாலும் சோம்பலில்லாதவன் அடையும் பயன் சொல்லப்பட்டது.]

'அடியளந்தான்' என்றது உலகத்தை ஓரடியால் அளந்தவனுகிய மகாவிஷ்ணுவை. இது மகாவிஷ்ணுவின் வாமனவதாரத்தைக் குறித்தது. 'தாஅய' இது தாவிய என்பதன் இடைக்குறை விகாரம். இது செய்யுள் இசைநிறைக்கவந்த உபாயபெடை. 'ஒருங்கு' இது இடையீடின்றி ஒசோமட்டாக அடைவன் என்பதாம். (10)

61-ம் அதி - மடியின்மை - முற்றிற்று.

62-ம் அதிகாரம்:—ஆள்வினையுடைமை

(பரி-உரை) அஃதாவது: இடைவிடாத மெய்ம்முயற்சியுடையனுதல். அஃது ஆளும் வினையெனக் காரியத்தாற் கூறப்பட்டது. மடி கெடுத்தாலும் அஃது ஆளப்படாமையின், இது மடியின்மையின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: இடைவிடாத மெய்ம்முயற்சியை யுடையனுதல். அது ஆளும் வினையெனக் காரியத்தாற் சொல்லப்பட்டது. சோம்பலை கெடுத்தாலும் தொழிலை முயற்சியால்லாமல் ஆளக்கூடாமையினுலே இது மடியின்மையின் பின் வைக்கப்பட்டது.

அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

(பரி-உரை) அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்-தஞ் சிறுமைநோக்கி நாம் இவ்வினை முடித்த லருமையுடைத்தென்று கருதி தளராதொழிக; பெருமை முயற்சி தரும் - அது முடித்தற்கேற்ற பெருமையைத் தமக்கு முயற்சி யுண்டாக்கும் எ-று.

சிறுமைநோக்கி யென்பது பெருமை தரும் என்றதனுனும், வினைமுடித்தலென்பது அதிகாரத்தாலும் வருவிக்கப்பட்டன. விடாத முயலத் தாம் பெரியாவர்; ஆகவே, அரியனவும் எளிதின் முடியுமென்பதாம்.

(ப-ரை) (தமது சிறுமையை நோக்கி) அருமையுடைத்தென்று - நாம் இத்தொழிலை முடித்தல் அருமையையுடைத்தென்று கினைத்து, அசாவாமை வேண்டும் - தளராதிருக்கவேண்டும், பெருமை - அத்தொழிலை முடித்தற்கு ஏற்ற பெருமையை, முயற்சி - முயற்சியானது, தரும்-தமக்கு உண்டாக்கும் என்றவாறு.

(க - ரை) தொழிலைக்குறித் தருமையென்று தளராதுயற்சி பெருமைதரும் என்பதாம்.

(வி-ரை) சிறுமையை நோக்கியென்றது-பெருமை தருமென்றதனுனும், தொழிலை முடித்தலென்றது அதிகாரத்தாலும் வருவிக்கப்பட்டன. விடாத

முயற்சிசெய்தால். தாம் பெருமையை யுடையவராதலால் அரிய தொழில்களும் எளிதிலே முடியுமென்பதாம்.

'அருமை' என்றது தன் சிறுமைக்கும் பொருளினது பெருமைக்கும் சோக்க செய்தற்கு அருமையானது என்பதாம். 'அசாவாமை' என்றது மனந்தளராது இருக்கும் தன்மையை. 'பெருமை' என்றது அவ்அருமையுடையதைச் செய்துமுடிக்கும் பெருமையை. 'முயற்சி' என்றது விடாமுயற்சியை.

வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

(பரி-உரை) வினைக்குறை தீர்ந்தாரின் உலகு தீர்ந்தன்று - வினையாகிய நுறையைச் செய்யாது விட்டாரை உலகம் விட்டது, வினைக்கண் வினை கெடல் ஓம்பல் - ஆதலால், செய்யப்படும் வினைக்கண் தவிர்ந்திருத்தலை யொழிக எ-று.

குறை - இன்றியமையாப் பொருள். அது * "பயக்குறை யில்லைதாம் வாழுநாளே" என்பதனானு மறிக. இதற்கு வினைசெய்யவேண்டுங் குறையை நீக்கினரின் நீக்கிற்றென் றுரைப்பாருமுளர்.

(ப-ரை) உலகு - உலகம், வினைக்குறை - தொழிலாகிய குறையை, தீர்ந்தாரின்-செய்யாது விட்டவரை, தீர்ந்தன்று-விட்டது, அதனால் வினைக்கண்-செய்யத்தகும் தொழிலினிடத்தே, வினைகெடல் - செயலற்றிருக்கையை, ஓம்பல்-ஒழியக்கடவன் எ-று.

(க-ரை) தொழிலின் குறையைச் செய்யாதுவிட்டவரை யுலகம் விட்டதனையால் தொழிலிற் செய்கையற்றிருக்கையை விடக்கடவன் என்பதாம்.

(வி-ரை) குறை-அவசியம் வேண்டியபொருள்.

'வினைக்கண்' இது வினைசெய்தற்கண் என்பதாம். 'வினைகெடல்' என்றது தொழில் செய்யாது இருத்தலை. 'ஓம்பல்' இது முன்னிலையொருமை வினைமுற்று. உண்ணிடத்துப் பாதகாவ தொழிக என்பதாம்; அதாவது விட்டொழி என்னும் பொருளதாம். 'வினைக்குறை' என்றது வினையாகிய குறையை, இது பண்புத்தொகை. இது வினையாகிய இன்றியமையாச் செயலை என்பது பொருளாம். 'தீர்ந்தார்' என்றது செய்யாது விட்டவரை. 'தீர்ந்தாரில்' இது வேற்றுமைமயக்கம்; தீர்ந்தாரை என்னும் பொருளது. 'வினை' என்ற சொல்லும், 'தீர்' என்ற சொல்லும் திரும்பத் திரும்ப வந்தமை சொற்பொருட்பின்வருநிலையணி. (2)

நாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

* புறநானூறு-188.

(பரி-உரை) தாளாண்மை·என்னும் தகைமைக்கண் தக்கிற்ற - முயற்சி யென்ற சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின்கண்ணே கிலெபெற்றது, வேளாண்மை என்னும் செருக்கு-எல்லார்க்கும் உபகாரஞ் செய்தலென்னும் மேம்பாடு எ-று.

பொருள் கைகூடுதலான் உபகரித்தற்குரியார் முயற்சியுடையா ரென்பார் அவ்வக்குணங்கண்மேல் வைத்தும், அது பிறர்மாட் டில்லையென்பார் தக்கிற்றே யென்றுங் கூறினார். இவை மூன்று பாட்டானும் முயற்சியது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-உரை) வேளாண்மை யென்னுஞ் செருக்கு-(எல்லார்க்கும்) உபகாரஞ் செய்தலென்னு மேம்பாடானது, தாளாண்மையென்னுந் தகைமைக்கண்· முயற்சியென்னும் உயர்ந்த குணத்தினிடத்தே, தக்கிற்றே - கிலெபெற்றதே எ-று.

(க-உரை) உபகாரமென்மை முயற்சியினிடத்த கிலெபெற்றதை என்பதாம்.

(வி-உரை) பொருள் கைகூடுதலால் உபகாரஞ்செய்தற்கு உரியவர் முயற்சியை யுடையவரே யென்றற்கு அதனதன் குணத்தின்மேல் வைத்தும், அம் மேம்பாடானது பிறரிடத்தே இல்லையென்றற்குத் தக்கிற்றேயென்றுஞ் சொல்லினார். [இவை மூன்றுபாட்டானும் முயற்சியது சிறப்புச் சொல்லப் பட்டது.]

'தாளாண்மை' என்றது முயற்சியுடைமையை. 'தகைமை' இது சிறந்த குணம் என்னும் பொருளது. இது 'தகு' என்னும் பகுதியடியாகப் பிறந்தது. 'வேளாண்மை' என்றது உபகாரத்தன்மையை. 'தக்கிற்றே' இதில் ஏகாரம் தேற்றப்பொருளது. 'செருக்கு' இது செருக்குதற்கு உரிய மேம்பாட்டைக் குறிக்கும். (3)

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

(பரி-உரை) தாளாண்மை இல்லாதான் வேளாண்மை - முயற்சியில்லா வன் உபகாரியாத்தன்மை, பேடி கை வாள் ஆண்மை போலக் கெடும் - படை கண்டால் அஞ்சும் பேடி அதனிடைத் தன் கையில் வாளை ஆளுதற்றன்மை போல இல்லையாம் எ-று.

ஆனென்பது முதனிலைத்தொழிற்பெயர். பேடி வாளைப் பணி கோடற் கருத்துடையளாயினும் அது தன் அச்சத்தான் முடியாதவாறுபோல, முயற்சி யில்லாதான் பலர்க்கும் உபகரித்தாற் கருத்துடையனாயினும் அது தன் உறுமையான் முடியாதென்பதாம். வாளாண்மை யென்பதற்கு வாளாற் செய்யும் ஆண்மையென் றுரைப்பாருமுளர். இதனால் அஃதில்லாதான் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) தாளாண்மை யில்லாதான்-முயற்சியில்லாதவன், வேளாண்மை-உபகாரியான் தன்மையானது, பேடி-(சேனையைக் கண்டால் அஞ்சும்) பேடியானவன், கைவாளாண்மைபோல-(அச்சேனையிடத்தே) கையில் வாளை ஏந்துகைத் தன்மைபோல, தெறும்-இல்லையாம் எ-று.

(க-ரை) முயற்சியில்லாதவ னுபகாரத்தன்மை பேடி கைவாள்போலாம் என்பதாம்.

(வி-ரை) எப்படிப் பேடியானவன் வாளால் வெட்டுதற்குக் கருத்தடையனாயினும் அது அவனச்சத்தால் முடியாதோ அப்படியே முயற்சியில்லாதவன் பலருக்கும் உபகாரஞ் செய்தற்குக் கருத்தடையவனாயினும் அது அவன் வறுமையால் முடியாதென்பதாம். [இதனால் முயற்சியில்லாதவனது குற்றஞ் சொல்லப்பட்டது.]

'பேடி' இது ஆண் உருப்பும், பெண் உருப்பும் பெற்று ஆணுமாகாது பெண்ணுமாகாது இருக்கும் மக்கட்பிறப்பை உணர்த்தியது. இதனை ஆண் உருப்பு மிகுந்திருந்தால் ஆணெனவும், பெண் உருப்பு மிகுந்திருந்தால் பெண்ணெனவுங் கூறுவர். 'வாளாண்மை' இது வாளைத் தன்கையில் வைத்து ஆளுந் தன்மை என்றதாம். இனி இதற்கு பேடி கையில் வைத்திருக்கும் வாளால் ஆண்தன்மையைக் காட்டுதல் போலாம் எனவும் பொருள் கூறலும் ஒன்று.

இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

(பரி-உரை) இன்பம் விழையான் வினை விழைவான்-தனக்கின்பத்தை விரும்பாதே வினை முடித்தலையே விரும்புவான், தன் கேளிர் துன்பம் துடைத்த ஊன்றும் தூண்-தன் கேளிராகிய பாரத்தின் துன்பத்தினை நீக்கி அதனைத் தாங்கும் தூணும் எ-று.

இஃது ஏகதேசவுருவகம். ஊன்றுமென்றது அப்பொருட்டாதல் "மதலையாய் மற்றதன் வீழுஞ்சி யாங்கு" என்பதனுளு மறிக. சுற்றத்தார் கட்டாத வறுமையுந் தீர்த்து அவர்க்கு ஏமஞ்செய்யும் ஆற்றலுடைமையானே, தன்னைக் கூறவேண்டாவாயிற்று. காரியத்தை விழையாது காரணத்தை விழைவான் எல்லாப்பயனு மெய்துமென்றதனால், காரணத்தை விழையாது காரியத்தை விழைவான் யாது மெய்தானென்பது பெற்றும். இதனால் அஃதுடையானது கன்மை கூறப்பட்டது.

(ப-ரை) இன்பம் விழையான்-(தனக்கு) இன்பத்தை விரும்பாதவனாகி, வினைவிழைவான்-தொழில்முடித்தலையே விரும்புவோன், தன் கேளிர்-தன் சுற்றத்தாரும் கட்பாளருமாகிய கேளிரது, துன்பம்-(பாரத்தின்) துன்பத்தை, துடைத்த-ஒழித்த, ஊன்றும்-(அதனைத்) தாங்கும், தூண்-தூணும் எ-று.

* காலடியார், தாளாண்மை-7.

(க-ரை) தனக்கின்பம் விரும்பாதவனுகி முயற்சியை விரும்புவோன் தன்னுறவினர் தன்பத்தைத் தாங்குந் தூண் என்பதாம்.

(வி-ரை) கேளிரது வறுமையுந் தீர்த்த அவரைக் காத்தலுஞ் செய்ய வல்லவனுமெனவே தனக்கு அமைசெய்த கொள்ளுதல் சொல்ல வேண்டுவ தில்லையாயிற்று. காரியமாகிய இன்பத்தை விரும்பாமல் காரணமாகிய முயற் சியை விரும்புவோன் எல்லாப் பயன்களும் அடைவானென்றதனால் அக்கா ணத்தை விட்டு அக்காரியத்தை விரும்புவோன் ஒருபயனும் அடையானென் பது பெறப்பட்டது. (ஏகதேச வுருவகம்) [இதனால் அதனையுடையவனது மை சொல்லப்பட்டது.]

'விழையான்' இது விரும்பாதவனுகி என்னும் பொருளது. இதற்கு 'விழை' பகுதி. (விழை = விரும்பு) 'வினைவிழைவான்' என்றது தொழிலைச் செய்து முடித்தலையே விரும்புமவன் என்பது பொருளாம். 'கேளிர்' இது சுற்றத்தார் என்னும் பொருளது; இதற்கு 'கேள்' பகுதி. (கேள்-சுற்றம்) 'வன்றுணை' என்றது தாங்குந்தூண் என்பது பொருளாம். (5)

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

(பரி-உரை) முயற்சி திருவினை ஆக்கும் - அரசர்மாட்டுளதாய முயற்சி அவரது செல்வத்தினை வளர்க்கும்; முயற்று இன்மை இன்மை புகுத்திவிடும்- அஃதில்லாமை வறுமையை யடைத்தவிடும் எ-று.

செல்வம் - அறவகை அக்கங்கள். வறுமை அவற்றுன் வறியாதல், அதனை யடைவிக்கவே, பகைவரான் அழிவென்பது கருத்து.

(பத) முயற்சி - (அரசரிடத்தே உண்டாகிய) முயற்சியானது, திரு வினை - (அவரது) செல்வத்தை, ஆக்கும்-வளர்க்கும், முயற்றின்மை - அம் முயற்சியில்லாமையானது, இன்மை - வறுமையை, புகுத்திவிடும் - அடை வித்தவிடும் எ-று.

(க-ரை) முயற்சி செல்வத்தை வளர்க்கும் அம்முயற்சியில்லாமை தரித் திரத்தைக் கொடுக்கும் என்பதாம்.

(வி-ரை) இங்கே செல்வம் - மந்திரிமுதலாகிய அறவகை அக்கங்கள். வறுமை அவையில்லாதவராதல், அதனை அடைவித்த விடவே பகைவரால் அழிவென்பது கருத்து.

'திரு' என்றது 'படைகுடி கூழ்' எனக் கூறிய இராஜசெல்வம் ஆறை யுங் குறித்தது. 'முயற்றின்மை' இது முயற்சி இன்மை என்பதன் விகாரம். 'இன்மை' என்றது திரு இன்மையாகிய வறுமையை உணர்த்திநின்றது. (6)

மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
முளுளா டாமரையி னுள்.

(பரி-உரை) மா முகடி மடி உளான்-கரிய சேட்டை ஒருவன் மடியின் கண்ணே யுறையும், தாமரையினுள் மடி இலான் தான் உளான் என்ப. திருமகள் மடியிலாதானது முயற்சிக்கண்ணே யுறையுமென்று சொல்லுவர் அறிந்தோர் எ-று.

பாவத்தின் கருமை அதன் பயனுய முகடிமேலேற்றப்பட்டது. மடியும் முயற்சியும் உடையார்மாட்டு நிலையை அவை தம்மேல் வைத்துக் கூறினர். இவை பிரண்டுபாட்டானும் அவ்விருமைக்குமேது கூறப்பட்டது.

(ப-ரை) மாமுகடி-கரிய மூதேவியானவன், மடி-(ஒருவனது) சோம்பலினிடத்தே, உளாள்-இருப்பாள், தாமரையினுள்-திருவியானவள், மடியிலான்-சோம்பலில்லாதவனது, தாள்-முயற்சியினிடத்தே, உளாள்-இருப்பாள், என்ப-என்று (அறிந்தோர்) சொல்லுவர் எ-று.

(க-ரை) மூதேவி சோம்பலுடையவனிடத்திருப்பாள், திருவி சோம்பலில்லாதவனிடத்திருப்பாள் என்பதாம்.

(வி-ரை) பாவத்தின் கருமை அதன் பயனுகிய முகடிமேலேற்றப்பட்டது. சோம்பலையும் முயற்சியையும் உடையவரிடத்தே அவர்களிருத்தலே அவைகளின் மேலே ஏற்றினர். [இவை பிரண்டுபாட்டானும் அவ்விரண்டுக்கும் ஏதுக்கள் சொல்லப்பட்டன.]

'மடியுளாள்' என்றது ஒருவனினது சோம்பலினிடத்தே வசிக்கின்றாள் என்பதாம். 'மாமுகடி' என்றது கரிய நிறத்தையுடைய மூதேவியை; (மா-கருமை, முகடி-மூதேவி.) 'என்ப' இது அறிவுடையோர் கூறுவர் என்னும் பொருளதாம். 'மடியிலான்' என்றது சோம்பலற்றவனின் என்பதாம். 'தாளுளாள்' என்றது முயற்சியின்கண்ணேயுளாள் என்பதாம். 'தாமரையினுள்' என்றது செந்தாமரையில் வசிப்பவனாகிய திருமகள் என்பதாம். 'தாமரை' சிறப்புப்பற்றி செந்தாமரையைக் குறித்தது. (7)

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

(பரி-உரை) பொறி இன்மை யார்க்கும் பழியன்று-பயனைத்தருவதாய விதியில்லாமை ஒருவற்கும் பழியாகாது; அறிவு அறிந்த ஆள்வினை இன்மை பழி-அறிய வேண்டுமவற்றையறிந்த வினைசெய்யாமையே பழியாவது எ-று.

அறியவேண்டுவன வலி முதலாயின. தெய்வம் இலையாவழி ஆள்வினையுடைமையாற் பயனில்லை யென்பாரை நோக்கி, உலகம் பழவினைபற்றிப் பழியாத சண்டைக் குற்றமுடைமைபற்றியே பழிப்பதென்றார். அதனால் விடாது முயல்கவென்பது குறிப்பெச்சம்.

(ப-ரை) பொறியின்மை - (பயனைத் தருவதாகிய) விதியில்லாமை, யார்க்கும்-யாவருக்கும், பழியன்று-பழியாகாது, அறிவறிந்த-அறியவேண்டி

மலைகளை அறிந்த, ஊள்வினையின்மை - தொழில்செய்யாமையே, பழி பழியாகும் எ-று.

(க-ரை) யாவருக்கும் விதியில்லாமை பழியாகாத முயற்சியில்லாமை பழியாகும் என்பதாம்.

(வி-க்ரை) அறியவேண்டுமவை வலி முதலானவையாம். ஊழ்பொருந்தாத விடத்தே தொழில் செய்தலாலே பயன் இல்லையென்பவரைநோக்கி உலகம் பழைய வினைபற்றிப் பழியாத இவ்விடத்தே தொழில்செய்யாத குற்ற முடைமை பற்றியே பழிப்பென்றார். அதனால் விடாதமுயல்க என்பது கருத்து.

'பொறி' என்றது ஆகுமை. அதாவது, கல்வினையை. 'அறிவு' என்றது அறியவேண்டிய விஷயங்களை. 'ஊள்வினை' என்றது தொழில் செய்யும் முயற்சியை. (8)

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

(பரி-உரை) தெய்வத்தான் ஆகாத எனினும்-முயன்ற வினை பால் வகையாற் கருதிய பயனைத் தாராதாயினும், முயற்சி தன்மெய் வருத்தக் கூலிதரும்-முயற்சி தனக்கிடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும் பாழாகாது எ-று.

தெய்வத்தானையவழித் தன்னளவின் மிக்க பயனைத் தருமென்பது உம்மையாற் பெற்றும். இருவழியும் பாழாகவின்மையின் தெய்வநோக்கி யாத முயல்கவென்பது கருத்து.

(ப-ரை) (முயற்சி செய்த தொழில்) தெய்வத்தான் - ஊழ்வகையால், ஆகாதெனினும்-(கிளைக்கப்பட்டபயனைத்) தாராதாயினும், முயற்சி-முயற்சி, தன்மெய்-தனக்கிடமாகிய உடம்பு, வருத்தக்கூலி-(வருந்திய) வருத்தத்தின் கூலியளவு, தரும்-கொடுக்கும் (பாழாகாது) எ-று.

(க-ரை) ஊழில்லாவிடினு முயற்சி பலனைத்தரும் என்பதாம்.

(வி-ரை) ஊழினால் ஆகியவிடத்துத் தன்னளவின் மிகுந்த பயனைத்தரு மென்பது உம்மையால் பெற்றும். ஆனவிடத்தும் ஆகாவிடத்தும் பாழாகா மையால், ஊழை நோக்கி இராமல் முயல்கவென்பது கருத்து.

'தெய்வத்தான்' இதில் 'ஆன்' மூன்றன் உருபு; 'ஆகாதெனினும்' இதன் உம்மை தெய்வத்தால் ஆகாததில்லை என்னும் பொருளது. 'முயற்சிதன் மெய்' என்றது முயற்சிக்கு இடமாகிய உடம்பு என்பது பொருளாம். 'வருத்தக் கூலிதரும்' இது வருந்தியதற்கு ஏற்ற அளவினதாகிய கூலியைத்தரும் என்றதாம். (9)

ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(பரி-உரை) ஊழையும் உப்பக்கம் காண்பர் - பயனை விலக்குவதாய ஆழினையும் புறங்காணபர், உலவு இன்றித் தாழாத உளுற்றபவர்-அவ்வீலக் கறகு இளையாத வினையைத் தாழ்வற முயல்வார் எ-று.

தாழ்வறுதல் சூழ்ச்சியினும், வலிமுதலிய அறிதலினும், செயலினுக் குற்றமறுதல். ஊழ் ஒருகாலாக இருகாலாகவல்லத விலக்கலாகாமையிற் பலகான் முயல்வார் பயனெய்தவ ரென்பார், உப்பக்கங்காண்பரென்றார். தெய்வத்தான் இடுக்கண்வரினும் முயற்சி விடற்பாலதன்றென்பது இவை மூன்றுபாட்டானுங் கூறப்பட்டது.

(ப-உரை) ஊழையும் - (பயனை விலக்குவதாகிய) ஊழையும், உப்பக்கங் காண்பர் - புறங்காண்பார், உலவின்றி - (அவ்விலக்குதற்கு) இளையாமல், தாழாது-தாழ்வற, உளுற்றபவர்-(தொழிலை) முயல்வோர் எ-று.

(க-உரை) இடைவிடாத முயற்சி செய்வோர் விதியையும் விலக்குவார் என்பதாம்.

(வி-உரை) தாழ்வறுதல்-ஆலோசனையிலும் வலிமுதலானவையறிதலிலும், செயலிலும், குற்றமறுதல். ஊழானது தொழிலை ஒருகால் இருகால் அல்லாமல் விலக்காமையாலே பலகாலும் முயற்சி செய்வோர் பயனை அடைவரென்றற்கு உப்பக்கங் காண்பரென்றார். [ஊழினுலே இடுக்கண் வரினும், முயற்சி விடத்தக்க தல்லவென்பது இம்மூன்றுபாட்டாலும் சொல்லப்பட்டது.]

'ஊழையும்' இதன் ஈற்று உம்மை உயர்வுச் சிறப்புப்பொருளது. 'உப்பக்கம்' இது உகரச்சுட்டடியாகப் பிறந்த பெயர். பிற்பக்கம் என்பது பொருள் அதாவது 'புறங்காட்டலே' என்றதாம். 'உலவின்றி' என்றது ஊழ் வந்து தடுத்தற்கும் சலிப்பின்றித் தளராது என்பதாம். 'தாழாது' இது தாம் மேற்கொண்ட செயலில் தாழ்வு உண்டாகாதபடி என்பதாம். 'உளுற்றபவர்' என்றது முயற்சி செய்வோரை. (10)

62-ம் அதி - ஆள்வினையுடைமை - முற்றிற்று.

63-ம் அதிகாரம்—இடுக்கணழியாமை

(பரி-உரை) அஃதாவது: வினைவின்கண் முயல்வான், தெய்வத்தா னாக, பொருளின்மைபானாக, மெய்வருத்தத்தானுந் தனக்கு இடுக்கண் வந்தழி, அதற்கு மனங்கலங்காமை. அதிகார முறைமையும் இதனானே யினக்கும்.

(உரை) அஃதாவது: தொழிலிலே முயல்பவன் ஊழினுலாவது பொரு ளில்லாமையினுலாவது, மெய்வருத்தத்தாலாவது தனக்குத் துன்பம் வந்த விடத்து அதற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனுலே யினக்கும்.

இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

(பரி - உரை) இடுக்கண் வருங்கால் ககுக - ஒருவன் வினையா னனக்கிடுக்கண் வருமிடத்து அதற்கழியாது உள் மகிழ்க, அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல்-அவ்விடுக்கணை மேன்மேல் அடரவல்ல அம்மகிழ்ச்சி போல்வது பிறிதில்லையாகலான் எ-று.

வினை இனிது முடிக்குழி கிழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கிடை இடுக்கண் வருவழிச் செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியா அதனைத் தள்ளி அக்குறை முடிக்கும் ஆற்றலுடையனுமாகலின, அதை யடுத்தூர்வ தஃதொப்பதில்லென்றார.

(ப-ரை) (ஒருவன்) இடுக்கண்-துன்பமானது, வருங்கால்-வினையிலே தனகு வருமிடதது, ககுக-(அதற்கு அழியாமல்) உள்ள மகிழக்கடவன், அதனை - அதனுன்பதனை, அடுதது - மேலுமேலுமாய், ஊர்வது - தெருக்க வல்லது, அஃதொப்பது - அம்மகிழ்ச்சிபோல்வது, இல் - (வேறே) இல்ல (ஆதலால்) எ-று.

(க-ரை) ஒருவன் துன்பம் வரும்போது மகிழக்கடவன் அத்துன்பத்தை தெருக்கக்கடவன் என்பதாம.

(வி - ரை) தொழில் துன்றுக முடிந்தவிடத்தே உண்டாவதா மகிழ்ச்சியை அதற்கு நடுவிலே துனபம் வருமிடத்து உட்கொண்டால் அவ அழிவின்றி மனவெழுச்சியால் அதனைத்தள்ளி அக்குறைமுடிக்க வல்லவனா னதலில் அதனை யடுதது ஊர்வதஃதொப்பதில்லென்றார்.

'இடுக்கண்' இது துன்பம் என்னும் பொருளது. இது துன்ப உண்டானகாலத்து கண் இடுக்குதலால், கண் சிறுதது ப்போதலால் இதற்கு இடுக்கண, புண்கண் என்னும பெயர்த்தாதல் ஆராய்ந்து அறியத்தக தொன்றும். 'ககுக' இதற்குச் சிரிக்க என்பது பொருள்; ஈண்டு உண்மகிழ் என்ற உரைசெய்யப்பெற்றது கொண்டாடத்தக்கதொன்றும். 'அதனை' என்றது அவ் இடுக்கண்ணை. 'அடுத்தூர்வது' என்றது அவ் இடுக்கண்ணை எதிர்ததுப் போர்செய்து வெல்லவல்லது என்பது பொருளாம்; இனி இதற்கு அவ் இடுக்கண்களைத் தொலைத்து தான மேற்கொண்ட தொழிலை விடாது செய்யவல்லது என்பது பொருளாம். 'அஃது' என்றது அதனை. (1)

வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

(பரி - உரை) வெள்ளத்த அனைய இடும்பை - வெள்ளம்போல் கரைபிலவாய இடும்பைகளெல்லாம், அறிவுடையான் உள்ளத்தின் உள்ள கெடும்-அறிவுடையவன் தன் உள்ளத்தான் ஒன்றனை நினைக்க, அத்தனை யானே கெடும் எ-று.

இடும்பையாவது உள்ளத்து ஒருகோட்பாடேயன்றிப் பிறிதில்லை யென்றுஉம் அது மாறுபடக்கொள்ள நீங்குமென்பதுஉம் அறிதல் வேண்டுவின், அறிவுடையானென்றும் அவ்வுபாயத்தெண்மை தோன்ற உள்ளத்தினுள்ளவென்றுங் கூறினார். [இவை யிரண்டுபாட்டானும் ஊழினானாய இடுக்கணால் அழியாமைக்கு உபாயங் கூறப்பட்டது]

(ப-ரை) வெள்ளத்தனைய - வெள்ளம்போலே கரையில்லாத, இடும்பை-துன்பமெல்லாம், அறிவுடையான்-புத்தியுள்ளவன், உள்ளத்தின்-உள்ளத்தினாலே, உள்ள-(ஒன்றை) நினைத்தவளவிலே, கெடும்-அழியும் எ-று.

(க-ரை) அறிவுள்ளவ னொன்றை நினைக்கத் துன்பமெல்லாம் கெடும் என்பதாம்.

(வி-ரை) துன்பமாவது, உள்ளத்து ஒருகோட்பாடே என்பதும் அது மாறுபாடாகக் கொண்டால் நீங்குமென்பதும் அறியவேண்டுதலால், அறிவுடையானென்றும் அவ்வுபாயத்தி னெளிமைதோன்ற, உள்ளத்தினுள்ளவென்றும் சொல்லினார். [இவ்விரண்டுபாட்டாலும் ஊழினாலாகிய இடுக்கணால் அழியாமைக்கு உபாயம் சொல்லப்பட்டது]

'வெள்ளம்' என்றது ஈண்டு கரையற்ற நீர்ப்பெருக்கை. 'உள்ளத்தின்' ஈண்டு 'இன்' உருபு 'ஆல்' உருபுப்பொருளில் மயங்கிநின்றது. 'உள்ள' என்றது அவ்இடும்பைக்கு மாறுபாடாகிய ஒன்றை என்பதாம்; அதாவது அவ் இடும்பைகளை இன்பமாக நினைக்க என்பதாம். என்னை? இன்பமும் துன்பமும் மனோபாவனையாதலால் என்க. (2)

இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக் கிடும்பை படாஅ தவர்.

(பரி-உரை) இடும்பைக்கு இடும்பை படாதவர் - வினைசெய்யுங்கால் அதற்கிடையே வந்த துன்பத்திற்கு வருந்தாதவர், இடும்பைக்கு இடும்பை படுப்பர்-அத்துன்பந் தனக்குத் தாந்துன்பம் விளைப்பர் எ-று.

வருந்துதல்-இளைத்துவிடநினைத்தல். மனத்திட்பமுடையராய் விடாது முயலவே வினை முற்றுப்பெற்றுப் பயன்படும்; படவே, எல்லா இடும்பையுலைவாமாகலின், இடும்பைக்கிடும்பை படுப்பரென்றார். வருகின்ற பாட்டு இரண்டினும் இதற்கு இவ்வாறே கொள்க. சொற்பொருட்பின்வருநிலை.

(ப-ரை) இடும்பைக்கு-(தொழில்செய்யும்போது அதற்கு நடுவிலேவந்த) துன்பத்திற்கு, இடும்பை படாதவர்-வருந்தாதவர், இடும்பைக்கு-அத்துன்பத்திற்கு, இடும்பை-துன்பத்தை, படுப்பர்-உண்டாக்குவார் எ-று.

(க-ரை) துன்பத்திற்குத் துன்பப்படாதவர் துன்பத்திற்குத் துன்பத்தைக் கொடுப்பார் என்பதாம்.

(வி-ரை) வருத்துதல்-இளைத்தச் செய்யாமல் விடலினைத்தல். மனத்திட முடையவராய் விடாத முயன்றல் தொழில் முடிவுபெற்றுப் பயன்படு மாதலால் எல்லாத் துன்பங்களும் நீக்குமென்பதபற்றி இடும்பைக்கிடும்பை படுப்பசென்றார். வருகின்ற பாட்டிரண்டினும் இதற்கு இப்படியே பொருள் கொள்க.

'இச்செய்யுளில் 'இடும்பை' என்னுஞ் சொல் பன்முறையும் அதே பொருளின் வந்தமையால் இது சொற்பொருள் பின்வருநிலையணி எனப் பெறும். "படாஅதவர்" இது இசைநிறைக்கவந்த அளபெடை. (3)

மடுத்தவா யெல்லாம் பகடன்ன ஞற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

(பரி-உரை) மடுத்த வாய் எல்லாம் பகடு அன்னன் - விலக்கிய விடத்தெல்லாவற்றினுஞ் சகடம் ஈர்க்கும் பகடுபோல வினையை யெடுத்துக் கொண்டு உய்க்கவல்லானை, உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து-வந்தற்ற இடுக்கண் தானே இடர்ப்படுதலையுடைத்து எ-று.

மடுத்தவாயெல்லாமென்பது பொதுப்பட நின்றமையின், சகடத்திற்கு அளற்று நிலமுதலியவாகவும், வினைக்கு இடையூறுகளாகவுங் கொள்க. * பகடுமருப்பொற்றியும் மூக்குன்றியும் தாடவழ்ந்தும் அரிதின் உய்க்குமாறு போலத் தன் மெய்வருத்த நோக்காது முயன்றுய்ப்பானென்பார் பகடன்னென்றார்.

(ப-ரை) மடுத்தவாயெல்லாம்-தடைபட்டவிடங்களிலெல்லாம், பகடன்ன (பண்டியையிழுத்துச்செல்லும்) கடாப்போலே தொழிலுமேற்கொண்டு செலுத்த வல்லவனை, உற்ற-அடைந்த, இடுக்கண்-துன்பமானது, இடர்ப்பாடு (தானே) தன்பப்படுதலை, உடைத்து-உடைத்தாம் எ-று.

(க-ரை) தொழில்செய்ய வல்லவனையடைந்த துன்பமானது தானே துன்பப்படும் என்பதாம்.

(வி-ரை) தடைபடு மிடங்கள்-பண்டிக்குச் சேற்று நிலமுதலானவையும் தொழிலுக்கு இடையூறுகளும் ஆம். கடா - பக்கத்திலொற்றியும், மூக்குப் பிடித்தும், கால் மடக்கியும், அரிதிலே செலுத்தம் விதம்போல் தன் மெய்வருத்தம் நோக்காமல் முயன்று செலுத்துவா னென்றற்கு பகடன்னென்றார்.

'மடுத்தவாய்' என்றதை உளையால், மேடு பள்ளங்களால் தடைபட்ட இடம் என்பது பொருளாம். பொதுப்பட நின்றமையால் தடைபட்ட இடங்களிலு என்பதும் ஆம். 'பகடு' என்றது விடாது துன்பலமெல்லாங்கொண்டு பல்லாற்றானும்முயன்று இழுக்கும் காளையைக் குறித்தது. 'இடுக்கண் இடர்ப்பாடுடைத்து' என்றது இடுக்கண்ணே இடுக்கண்படும் என்பதாம். (4)

* சிவகசிந்தாமணி முத்தியிலம்பகம்-186.

அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

(பரி உரை) அடுக்கி வரினும் - இடைவிடாத மேன்மேல் வர்தன வாயினும், அழிவிலான் உற்ற இடுக்கண் இடுக்கண் படும் - தன்னுள்ளக் கோட்பாடு விடாதான் உற்ற இடுக்கண் தாம் இடுக்கணிலே பட்டுப்போம் எ-று.

ஒன்றே பலகால் வருதலும் வேறுபட்டன வாய் வருதலுமடங்க, அடுக்கிவரினுமென்றார். அழிவென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மே னின்றது. இவை மூன்றுபாட்டானும் தெய்வத்தானுயதற்கு அழியாமை கூறப்பட்டது.

(ப-ரை) அடுக்கிவரினும்-இடைவிடாத மேலுமேலும் வர்தனவாயினும், அழிவிலான் - (தன்னுள்ளக்கோட்பாடு) விடாதவனை, உற்ற - அடைந்த, இடுக்கண்-துன்பமானது, இடுக்கட்படும்-(தான்) துன்பத்திலேபடும் எ-று.

(க-ரை) தைரியம் விடாதவனை யடைந்த துன்பமானது துன்பப்படும் என்பதாம்.

(வி-ரை) ஒன்றே பலகால் வருதலும், வேறுபல கலந்துவருதலும், அடுக்க அடுக்கிவரினுமென்றார். அழிவென்னுங் காரணப்பெயர் காரியத்தின் மேல்நின்றது. [இவை மூன்றுபாட்டானும் ஊழாலாகிய துன்பத்திற்கு அழியாமை சொல்லப்பட்டது.]

'அடுக்கிவரினும்' என்றது மேன்மேலும் வருதலை. 'அழிவு' என்றது மனவூக்கத்தை அழிவை. (5)

அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றேம்புத றேற்றா தவர்.

(பரி-உரை) அற்றேம் என்று அல்லற் படுபவோ - வறுமைக்காலத்தும் யாம் வறியமாயினேமென்று மனத்தால் கையருழப்பரோ, பெற்றேம் என்று மேம்புதல் தேற்றாதவர் - செல்வக்காலத்தும் இது பெற்றேமென்று இவறுதலை யறியாதார் எ-று.

பெற்றவழி இவறுமை நோக்கி அற்றவழியும் அப்பகுதி விடாதாகலின், அல்லற்பாடு இல்லையாயிற்று. இதனுற் பொருளின்மையானுயதற்கு அழியாமையும் அதற்கு உபாயமுங் கூறப்பட்டன.

(ப-ரை) பெற்றேமென்று - (செல்வக்காலத்தும் இது) பெற்றேமென்று, மேம்புதல்-உலோபஞ்செய்தலை, தேற்றாதவர் - அறியாதவர், அற்றேமென்று-(வறுமைக்காலத்திலே) வறியமாஞமென்று, அல்லற்படுபவோ - (மனதிலே) துன்பப்படுவாரோ எ-று.

(க-ரை) செல்வத்திலு லோபஞ்செய்யாதவர் வறுமையில் விசனப்படார் என்பதாம்.

(வி-மை) பெற்றவிடத்த உலோபஞ் செய்யாமையை சோக்கி அற்ற விடத்தம் மக்கிரி முதலானவர்கள் விட்டு நீக்காமையால், அல்லற்படுதலில்லையாயிற்ற. [இதனுலே பொருளில்லாமையால் வந்த துன்பத்துக்கு அழியாமையும், அதற்கு உபாயமும் சொல்லப்பட்டன.]

'அற்றேம்' என்றது பொருளிழந்தேம் என்னும் பொருளது. 'அல்லல்' இது மனத்துன்பத்தை உணர்த்தியது. 'படுபவோ' இதன்கண் நின்ற ஈற்று ஓ எதிர்மறை வினு; படார் என்னும் பொருளது. 'ஓம்புதல்' என்றது உலோபஞ் செய்து அப்பொருளைக் காத்தல் என்ற பொருளதாம்.

இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக் கையாறுக் கொள்ளாதா மேல்.

(பரி-உரை) உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று-காற்கதியினும் உள்ள வுடம்புகள் இடும்பையென்னும் வாளுக்கு இலக்கென்று தெளிந்து, கலக்கத்தைக் கையாறுக்கொள்ளாதாம் மேல்-தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடையார் எ-று.

ஏகதேசவுருவகம். உடம்பு-சாதிப்பெயர். கலக்கமென்னுங் காரியப் பெயர் காரணத்தின்மே னின்றது. கையாறென்பது ஒருசொல்; இதற்கு ஒழுக்கமெறியென் றுரைப்பாருமுளர். இயல்பாகக் கொள்வதென்பது குறிப்பெச்சம்.

(ப-மை) மேல் - அறிவுடையார், உடம்பு-தேகமானது, இடும்பைக்கு துன்பமாகியவாளுக்கு, இலக்கமென்று-குறியிடமென்று தெளிந்து, கலக்கத்தை (தம்மேல்வந்த) துன்பத்தை, கையாறு-துன்பமாக, கொள்ளாதாம் கொள்ளார் எ-று.

(க-மை) அறிவுடையவன் துன்பத்தைத் துன்பமாகக் கொள்ளான் என்பதாம்.

(வி-மை) இடும்பையை வாளென்னுமல் உடம்பை இலக்கமென்றதனுல் ஏகதேசவுருவகம் இயல்பாகக் கொள்வதென்றறிக.

'இலக்கம்' இது இலக்காகும் என்பது பொருள். 'இலக்கம் உடம்பிடும்பைக்கு' என்றதன் கருத்தை 'இடும்பைக்கிடும்பை யியலுடம்பிதன்றே' என்ற பெரியார்வாக்கு நன்கு கிலாட்டும். 'கலக்கம்' என்றது இடும்பையை. 'கையாறு' இதவும் துன்பம், இடும்பை என்னும் பொருளதாம். 'மேல்' என்றது மேலனதாகிய அறிவுடையாரை.

இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான் றுன்ப முறுத லிலன்.

(பரி-உரை) இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான்-தன் உடம்பிற்கு இன்பமாயவற்றை விரும்பாதே வினையால் இடும்பை யெய்தி

யல்பென்ற தெளிந்திருப்பான், தன்பம் உறுதல் இலன்-தன் முயற்சியாற் ன்பமுறான் எ-று.

இன்பத்தை விழையினும், இடும்பையை யியல்பென்னுத காக்கக் ருதினும், தன்பம் வினைதலின், இவ்விரண்டுஞ் செய்யாதானைத் தன்ப முறுதலிலனென்றார்.

(ப-ரை) இன்பம்-(தன்னுடம்பிற்கு) இன்பமானவைகளை, விழைபான்-விரும்பானுகி, இடும்பை - (வினையால்) தன்பமடைதல், இயல்பென்பான்-யல்பென்ற தெளிந்திருப்பான், தன்பமுறுதலிலன் - (தன்முயற்சியால்) ன்பமடையான் எ-று.

(க-ரை) இன்பத்தை இச்சியாதவனுகித் தன்பத்தை யியல்பென்ற ணர்பவன் தன்பமடையான் என்பதாம்.

(வி-ரை) இன்பம் விரும்பினாலும், இயல்பென்னுத வாராமல் காக்கக் ருதினாலும், தன்பம் வினைதலால் இவ்விரண்டும் செய்யாதவனை தன்ப முறுத லிலனென்றார்.

'விழையான்' இது 'விழை' என்னும் பகுதியடியாகப் பிறந்த எதிர் றைவினை. விரும்பாதவனுகி என்னும் பொருளது. 'இலன்' இது இல்லா வனுவன் என்னும் பொருளது. (8)

இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட் டுன்ப முறுத லிலன்.

(பரி-உரை) இன்பத்துள் இன்பம் விழையாதான் - வினையாற் றனக் ன்பம் வந்தழி அதனை யனுபவியாகின்றே மனத்தான் விரும்பாதான், ன்பத்துள் தன்பம் உறுதல் இலன்-தன்பம் வந்தழியும் அதனை யனுப வியாகின்றே மனத்தான் வருந்தான் எ-று.

தன்பம் முயற்சியான் வரும் இடுக்கண். இரண்டையும் ஒருதன்மை ாகக் கோடலின், பயன்களு மிலவாயின.

(ப-ரை) இன்பத்துள் (வினையினுலே) இன்பம் வந்தவிடத்து, இன்பம்-வ்வினபதத்தை, விழையாதான் - (அனுபவித்துக்கொண்டே மனத்தால்) ிரும்பாதவன், துன்பதத்துள் - துன்பம் வந்தவிடத்தும், துன்பம் - அத்துன் தத்தை, உறுதலிலன் - (அனுபவித்துக்கொண்டே மனத்தால்) அடையான் ன்-று.

(க-ரை) இன்பத்தை இச்சியாதவன் துன்பத்தில் விசனப்படான் ன்பதாம்.

(வி-ரை) தன்ப முயற்சியால் வரும் இடுக்கண் இரண்டும் ஒருதன்மை ாக் கொள்ளலால் பயன்களும். இலவாயின.

'இன்பத்து இன்பம் விழையாதான்' என்றது வினைப்பாலால் வந்த ன்பத்தை அனுபவிக்குங்காலை அதனைத் தன்மனத்தே பற்றுவைத்த னுபவியாதவன் என்பதாம். 'துன்பத்துத் துன்பமுறுதலிலன்' என்றது னைவயத்தால் வந்த துன்பம் அவன் மனத்தை வருத்தாது என்பதாம். (9)

இன்னுமை யின்ப மெனக்கொளி னுகுந்தன்
னென்னுர் விழையுஞ் சிறப்பு.

(பரி-உரை) இன்னுமை இன்பம் எனக் கொளின் - ஒருவன் வினை செய்யுமிடத்து முயற்சியான் வரும் துன்பத்தன்னையே தனக்கு இன்பமாகக் கற்பித்துக்கொள்வனுயின், தன் ஒன்னுர் விழையும் சிறப்பு ஆகும்-அதனுற் றன்பகைவர் தன்கு மதித்தற்கு ஏதுவாய உயர்ச்சி யுண்டாம் எ-று.

துன்பத்தானும் உயிர்க்கு இயல்பன்றிக் கணிகமாய் மனத்திடைநிகழ்தோர் கோட்பாடாகலின், அதனை மாறுபடக் கொள்ளவே, அதற்கு அழிவின்றி மனமகிழ்ச்சி யுடையனுய் அதனுற் றொடங்கிய வினை முடித்தேவிடும் ஆற்றலுடையனுமென்பது கருத்து. இவை தான்குபாட்டானும் மெய்வருத்தத்தானுயதற்கு அழியாமையும் அதற்கு உபாயமும் கூறப்பட்டன.

(ப-ரை) (ஒருவன் தொழில் செய்யுமிடத்து) இன்னுமை - முயற்சியால் வரும் துன்பத்தையே, இன்பமெனக்கொளின் - (தனக்கு) இன்பமாக வினைத்துக் கொள்ளுவானுயின், (அதனல்) தன்னென்னுர் - தன்பகைவர், விழையும்-என்ற மதித்தற்கு ஏதுவாகிய, சிறப்பு - உயர்ச்சியானது, ஆகும் உண்டாகும் எ-று.

(கரை) துன்பத்தை யின்பமாகக் கொள்வானுயி லவன் பகைவராலே மதிக்கப்படு முயற்சியடைவான் என்பதாம்.

(வி-ரை) துன்பத்தானும் உயிர்க்கு இயல்பன்றிக் கணிதமாய் மனத்தினிடத்தே நிகழ்வதோர் கோட்பாடாகலின் அதனை மாறுபடக் கொண்டால் அதற்கு அழியாமல் மனமகிழ்ச்சி யுடையவனுயி அதனுலே தொடங்கிய தொழிலைமுடிக்க வல்லவனுகுமென்பது கருத்து. [இவை தான்குபாட்டானும் மெய்வருத்தத்தாலாகிய துன்பத்துக்கு அழியாமையும் அதற்கு உபாயமும் சொல்லப்பட்டது.]

'இன்னுமை' என்றது வினைசெய்யும் வழியுண்டாகும் துன்பத்தை. 'கொளின்' என்றதனல் கொள்ளற்கு அருமை குறிப்பித்ததாயிற்று; இதை கொண்டால் என்னும் பொருளது. 'ஒன்னுர்' என்றது பகைவரை. இது காரணம் பற்றிவந்தபெயர். 'விழையும்' என்றது ஈண்டு தன்கு மதிக்கும் என்னும் பொருளது. 'சிறப்பு' என்றது உயர்வை. (10)

63-ம் அதி - இடுக்கணழியாமை - முற்றிற்று.

ஆசியல் முற்றிற்று.

(பரி-உரை) இனி முறையானே அரசியல் உடாத்துதற்கண் ஒன்றற் கொன்று துணையாய அங்கங்கள் ஆறனதியல்பு முப்பத்திரண்டதிகாரத்தாற் உறவானெடுத்துக்கொண்டு, அவை யாறனுள்ளும் * "காவற் சாகாடு கைத்தற்கண்" அவ்வரசற்கு இணையாய அமைச்சனதியல்பு பதாதிகாரத் நாற் உறவான் றொடங்கி, முதற்கண் அமைச்சுக் கூறகின்றார்.

(உரை) இனி முறையானே அரசியலே உடத்துதலிலே ஒன்றற்கொன்று துணையாகிய அங்கங்களது இயல்பை முப்பதிரண்டு அதிகாரத்தாலே சொல்லதொடங்கி அவ்வங்கங்கள் ஆறனுள்ளும் ஆக்கிஞசக்காரத்தைச் செலுத்துதலிலே அவ்வரசனுக்குச் சமானமாகிய அமைச்சனது இயல்பு பதாதிகாரத்தினுலே சொல்லதொடங்கி முதலிலே அமைச்சுச் சொல்லு கின்றார்.

64-ம் அதிகாரம்—அமைச்சு

(பரி-உரை) அஃதாவது: அமைச்சனது தன்மை: என்றது அவன்றன் குணங்களையுஞ் செயல்களையும்.

(உரை) அஃதாவது: அமைச்சனது தன்மை, அத்தன்மை அவன் குணங்களும் செய்கைகளும் ஆம்.

கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு.

(பரி-உரை) கருவியும்-வினை செய்யுங்கால் அதற்கு வேண்டுங் கருவி களும், காலமும்-அதற்கேற்ற காலமும், செய்கையும் அது செய்யுமாறும், செய்யும் அருவினையும் - அவ்வாற்றிற் செய்யப்படும் அவ்வரிய வினைதானும், மாண்டது அமைச்சு-வாய்ப்பவெண்ண வல்லவனே அமைச்சனுவான் எ-று.

கருவிகள்-தானையும் பொருளும். காலம்-அது தொடங்குங் காலம். செய்கை யெனவே, அது தொடங்கும் உபாயமும், இடையூறு நீக்கி முடிவு போக்குமாறும் அடங்கின. சிறிய முயற்சியாற் பெரிய பயன் றருவதென் பார் அருவினையென்றார். இவை யைந்தினையும் வடநூலார் மந்திரத்திற்கு அங்கமென்ப.

(ப-ரை) (தொழில் செய்யும்போது) கருவியும் - (அதற்கு வேண்டுஞ்) சாதனங்களும், காலமும் - (அதற்கு ஏற்ற) காலமும், செய்கையும் - (அது) செய்யும்விதமும், செய்யுமருவினையும்-(அவ்விதத்திலே) செய்யப்படும் அரிய தொழில்களும், மாண்டது - பொருந்த வெண்ணவல்லவனே, அமைச்சு-மந்திரியாவான் எ-று.

* புறநானூறு-186.

(க-ரை) கருவியும் காலமும் செய்கையும் தொழிலும் இவற்றை யெண்ண வல்லவன் மந்திரி என்பதாம்.

(வி-ரை) சாதனங்கள்-சேனையும், பொருளும். காலம் - அத்தொழிலைத் தொடங்குங்காலம். செய்கையெனவே அது தொடங்கு முபாயமும், இடையூறு நீக்கி முடிக்கும்விதமும் அடங்கின. சிறிய முயற்சியினாலே பெரிய பயன் தருமென்றற்கு அருவினையென்றார். இவ்வைந்தையும் வடநூலார் மந்திரத்திற்கு அங்கமென்பார்.

இதன்கண் வந்த உம்மைகள் அனைத்தும் எண்உம்மைகள். 'மாண்டது' என்றது பொருந்த என்னும் வல்லமையாற் சிறந்தவனே என்னும் பொருளதாம். 'கருவி' என்றது யுத்தவினைக்குரியதாகிய படை, கூழ், நட்பு, அரண், முதலிய கருவிகளை. 'காலம்' என்றது வெற்றிபெறுங்காலத்தை. 'செய்கை' என்றது தொழில்செய்யுந் தந்திரத்தை. 'செய்யும் அருவினை' என்றது சிறுமுயற்சியாற் பெரும்பயன் பெறச்செய்யும் வினையை. (1)

வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

(பரி-உரை) வன்கண்-வினை செய்தற்கண் அசைவின்மையும், குடி காத்தல்-குடிகளைக் காத்தலும், கற்று அறிதல்-நீதிநூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும், ஆள்வினை-முயற்சியும், ஐந்துடன் மாண்டது அமைச்சு-மேற்சொல்லிய அவ்வங்கங்கள் ஐந்துடனே திருந்தவுடையானே அமைச்சனாவான் எ-று.

எண்ணொடு நீண்டது. அவ்வைந்தெனச் சுட்டு வருவிக்க. இந்நான்கனையும் மேற்கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையு மிவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்தென்னுந் தொகை பெறுதற்கும். இனி இதனை ஈண்டு எண்ணியவற்றிற்கே தொகையாக்கிக் குடிகாத்தலென்பதனைக் குடிப்பிறப்பும் அதனை யொழுக்கத்தாற் காத்தலுமென்ப் பகுப்பாரும், கற்றறித லென்பதனைக் கற்றலும் அறிதலுமெனப் பகுப்பாருமுளர். அவர் உடனென்பதனை முற்றும்மைப் பொருட்டாக்கியும், குடியென்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப.

(ப - ரை) வன்கண் - (தொழில்செய்தலிலே) அசைவில்லாமையும், குடிகாத்தல் - குடிகளைக்காத்தலும், கற்றறிதல் - (நீதிநூல்களைக்) கற்று (விதிவிலக்குகளை) அறிதலும், ஆள்வினை-முயற்சியும், ஐந்துடன்-(முன்சொல்லப்பட்ட) அங்கங்களைந்துடனே, மாண்டது-திருந்தவுடையவனே, அமைச்சு-மந்திரியாவான் எ-று.

(க - ரை) அசைவில்லாமையும் குடிகளைக்காத்தலும் கற்றறிதலும் முயற்சியும் உடையவன் மந்திரி என்பதாம்.

(வி-உ) இச்சான்றோனும் முன்னோய்வைகளோடு சேர்த்துச் சொல்லியது. அவைகளும் இவைகளோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுமென்பதை அறிவித்தற்கும் அல்ல ஐந்தென்னும் தொகைபெறுதற்கும் என்க.

'வன்கண்' என்றது வினைசெய்யுங்காலத்துச் சலியாதகிற்கும் வன்மைத்தை. 'குன்றாவினை' என்றது விடாமுயற்சியை. 'ஐந்து' என்றது தொகைக்குறிப்பு. ஈண்டு முற்கூறியவைகளையும் ஒருசொற் தொகையாகக் கூட்டிக் குறித்தது. (2)

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்ல தமைச்சு.

(பரி-உரை) பிரித்தலும்-வினைவன்றழிப் பகைவர்க்குத் துணையாயினரை அவரிற் பிரிக்கவேண்டிற் பிரித்தலும், பேணிக் கொளலும்-தம் பாலாரை அவர் பிரியாமற் கொடை இன்சொற்களாற் பேணிக்கொள்ளுதலும்; பிரிந்தார்ப் பொருத்தலும்-முன்னே தம்மினும் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டுப் பொருத்தவேண்டிற் பொருத்தலும், வல்ல தமைச்சு-வல்லவனே அமைச்சனுவான் எ-று.

இவற்றுள் அப்பொழுதை கிலக்கேற்ற செயலறிதலும் அதனை அவாறியாமல் ஏற்ற வுபாயத்தாற் கடைப்பிடித்தலும் அரியகாதல் நோக்கி, வல்லதென்றார். வடநூலார் இவற்றட் பொருத்தலைச் சந்தியென்றும், பிரித்தலை விக்கிரகமென்றுங் கூறுப.

(ப-ரை) (போர்வந்தவிடத்து) பிரித்தலும்-(பகைவர்க்குத் துணையாயின வரை அவரைவிட்டுப் பிரிக்கவேண்டினுல்) பிரித்தலும், பேணிக்கொளலும்-(தம்மிடத்தோரை அவர் பிரியாமல் கொடையினுலும் இன்சொல்லினுலும்) காத்துக்கொள்ளுதலும், பிரிந்தார் - (தம்மைவிட்டும் தம்மவரைவிட்டும்) பிரிந்தவரை, பொருத்தலும் - (மறுபடி பொருத்தவேண்டினுல்) பொருத்தலும், வல்லது-வல்லவனே, அமைச்சு-மந்திரியாவான் எ-று.

(க-ரை) பிரித்தலும் காத்தலும் பிரிந்தவரைப் பொருந்தச்செய்தலும் வல்லமையுடையவன் மந்திரி என்பதாம்.

(வி-உ) இவைகளுள் அப்பொழுதை கிலக்கு ஏற்ற செயலறிதலும், அதனை அவாறியாமல் அதற்கு ஏற்ற உபாயத்தால் முடிவுறப் பிடித்தலும், அருமையாதல் நோக்கி வல்லதென்றார். பொருத்தலுக்குச் சந்தியென்றும், பிரித்தலுக்கு விக்கிரகமென்றும் பெயர்கள்.

இச்செய்யுளின்கண் வந்த உம்மைகள் எண்ணும்மைகள். 'பிரித்தல்' என்றது மற்றூரின் கட்பினரை அவர் தம்மினின்றும் பிரித்தல் என்பதாம். 'பேணிக்கொளல்' என்றது தம் கட்பினரை மற்றூர் பிரியாவண்ணம் இன் சொல், கொடை முதலியவைகளாற் பேணிக்கோடலை. 'பொருத்தல்' என்றது தம்மினின்றும் பிரிந்தவர்களைச் சேர்த்தலும் என்னும் பொருளதாம்.

இனி இதற்கு, பகை அரசர்களினின்றும் பிரித்தவர்களைத் தம்பாற் சேர்த்தலும் எனவும் உரை கூறுவாருமுண்டு. (3)

தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச் சொல்லலும் வல்ல தமைச்சு.

(பரி-உரை) தெரிதலும்-ஒரு காரியச்செய்கை பலவாற்றுற் றோன்றின் அவற்றன் மூலத ஆராய்ந்தறிதலும், தேர்ந்த செயலும்-அது செய்யுங்கால் வாய்க்கும் நிறனுடிச் செய்தலும், ஒருதலையாச் சொல்லலும் - சிலரைப் பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க்கு இதனே செயற்பாலதென்ற தணிவு பிறக்கும்வகை சொல்லுதலும், வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனுவான் எ-று.

தெரிதல் செயன்மேலதாயிற்று, வருகின்றது அதனவாகலின்.

(ப - ரை) (ஒருகாரியச் செய்கை பலவிதமாகத் தோன்றினுல்) தெரிதலும்-(அவற்றன் மூலதை) ஆராய்ந்தறிதலும், தேர்ந்த செயலும்-(அது செய்யும்போது பலிக்கும் விதமும்) காடிச்செய்தலும் (சிலரைப் பிரித்தல் பொருத்தல் செய்தலிலே), ஒருதலையாச் சொல்லலும் - (அவர்க்கு இதனே தம்பத்தக்கதென்ற) தணிவு பிறக்கும் வகை சொல்லலும், வல்லது - வல்லவனே, அமைச்சு-மந்திரியாவான் எ-று.

(க-ரை) ஆராய்தலும் ஆராய்ந்த செய்தலும் ஒருதலையாகச் சொல்லலும் வல்லவன் மந்திரி என்பதாம்.

(வி-ரை) தெரிதல் செயலின்மேலாயிற்று வருகின்றது அதனவாகலின்.

'தெரிதலும்' என்றது வினைசெய்யுங்கால் அவ்வினை முற்றப்பெறற்கும் ஏற்றவழியைத் தெரிதலாம். 'தேர்ந்துசெய்தல்' என்றது தேர்ந்தவழியினே தெளிவுகொண்டு செய்தலை. 'ஒருதலையா' என்றது தணிவாக என்னும் பொருளது. (4)

அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந் திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

(பரி-ரை) அறன் அறிந்த ஆன்ற அமைந்த சொல்லான் - அரசனுல் செய்யப்படும் அறங்களை யறிந்த தனக்கேற்ற கல்வியா னிறைந்தமைந்த சொல்லையுடையனுய், எஞ்ஞான்றும் திறன் அறிந்தான்-எக்காலத்தும் வினை செய்யுந் திறங்களை யறிந்தான், தேர்ச்சித் துணை - அவர்க்குச் சூழ்ச்சித் துணையாம் எ-று.

தன்னாசன் சருங்கியகாலத்தும் பெருகியகாலத்தும் இடைகாய காலத்துமென்பார், எஞ்ஞான்றுமென்றார். சொல்லா னென்பதனை ஒரு வருபின் பொருட்டாய ஆன் உருபாக்கி புரைப்பாருமுனர். இவை யைந்து பாட்டானும் அமைச்சாதது குணத்தன்மை கூறப்பட்டது.

(ப-ரை) அறன் - (அரசனாலே செய்யப்படும்) அறங்களை, அறிந்து-தெரிந்து, ஆன்றமைந்த - (தனக்கு எற்ற கல்வியாலே) நிறைந்தமைந்த, சொல்லான்-சொல்லையுடையவனாகி, எஞ்ஞான்றும் - எந்நாளிலும், நிறன்-(தொழில் செய்யுங்) நிறங்களை, அறிந்தான்-அறிந்தவன், தேர்ச்சி - ஆலோசனைக்கு, துணை-அவனுக்குத் துணையாவான் எ-று.

(க-ரை) தருமங்களை யறிந்து தொழில்செய்யுங் நிறங்களைத் தெரிந்தவன் மந்திரி என்பதாம்.

(வி-ரை) தன்னரசன் சுருங்கிய காலத்திலும் பெருகிய காலத்திலும் நடுவான காலத்திலும் என்றற்கு எஞ்ஞான்றுமென்றார். [இவ்வைவர்க பாட்டாலும் மந்திரிகளது குணத்தன்மை சொல்லப்பட்டது.]

'அறன்' என்றது அரசியல் அறங்களை. 'ஆன்ற' என்றது கல்வியால் நிறைந்த என்பதாம். 'நிறன்' என்றது அரசியற்றிறனை. 'தேர்ச்சித்துணை' என்றது சூழ்ச்சி செய்தற்கு உரிய துணையாகிய அமைச்சு என்பதாம். (5)

மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம் யாவுள முன்னிற் பவை.

(பரி-உரை) மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு - இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய நூலறிவோடு உடையராய அமைச்சர்க்கு, அதிநுட்பம் முன் நிற்பவை யா உள-மிக்க நுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய் முன்னிற்பன யாவையுள எ-று.

மதிநுட்பமென்பது பின்மொழிநிலையல். அது தெய்வத்தா வேண்டுதலின் முற்கூறப்பட்டது. நூலென்பதூஉம் அதிநுட்பமென்பதூஉம் ஆகுபெயர். அதியென்பது வடசொல்லுள் மிகுதிப்பொருளதோரிடைச்சொல்; அது நிறைந்த நுட்பமென்பதனோடு தொக்கது. முன்னிற்றல் - மாற்றார் சூழ்ச்சியாயின் தஞ்சூழ்ச்சியால் அழியாத நிற்றல். இனி அதிநுட்பமென்று பாடமோதி, அதனினுட்பம் யாவென் றுரைப்பாருமுளர்; அவர் சூழ்ச்சிக் கமைாய் முன் சுட்டப்படுவதொன் றில்லாமையும், சுட்டுப்பெயர் ஐந்தாம் உருபேற்றவழி அவ்வாறு நில்லாமையுமறிந்திலர். பகைவர் சூழ்வனவற்றைத் தாமறிந்து அழித்து அவரறிந்தழியாதன தாஞ்சூழ்வரென்பது கருத்து. இதனால் அவரது சிறப்புக் கூறப்பட்டது.

(பதவுரை) மதிநுட்பம் - இயற்கையாகிய புத்திநுட்பத்தை, நூலோடு-செயற்கையாகிய நூலறிவோடு, உடையார்க்கு - உடைய மந்திரிகளுக்கு, அதிநுட்பம்-அதிக நுட்பத்தையுடைய ஆலோசனைகளாய், முன்னிற்பவை-எதிர்நிற்பவை, யாவுள-எவையுள எ-று.

(க - ரை) புத்தி நுட்பத்தையுடைய மந்திரிகளுக்கு முன்னிற்கு மாலோசனை எவையுள என்பதாம்.

(வி - ரை) நூல் - அதனறிவுக்கும், அதிநுட்பம் - அதனையுடைய ஆலோசனைக்கும் ஆகுதலால் ஆகுபெயர்கள். முன்னிற்றல் - பகைவ ராலோசனையால் தம்மாலோசனை அழியாத திற்றல். பகைவராலோசனை நாம் அறிந்த அழிந்த அவரறிந்த அழியாதவைகளைத் தாம் ஆலோசிப்ப தென்பதை கருத்த. [இதனால் அவாத சிறப்புச் சொல்லப்பட்டத.]

'மதிநுட்பம்' என்றத இயற்கை நண்ணறிவை. 'நூலோடுடையார்' இத நூலறிவோடு உடையவர் என்னும் பொருளத. 'அதிநுட்பம்' என்றத நண்ணிய அறிவாற் செய்யப்பெறுஞ் சூழ்ச்சிகளை. (6)

செயற்கை யறிந்தக் கடைத்து மூலகத் தியற்கை யறிந்து செயல்.

(பரி-உரை) செயற்கை அறிந்தக்கடைத்தும் - நூனெறியான் வினை செய்யுந் திறத்தை யறிந்தவிடத்தும், உலகத்த இயற்கை அறிந்து செயல். அப்பொழுத டைக்கின்ற உலகவியற்கையை யறிந்த அதனோடு பொருத்தச் செய்க எ-ற.

கடைத்தமென்புழித்த பகுதிப்பொருள் விகுதி. நூனெறியேயாயினும் உலகநெறியோடு பொருத்தாதன செய்யற்க, செய்யின் அத பழிக்குமென இயற்கையறிவாற் பயன் கூறியவாற.

(ப-ரை) செயற்கை - நூல்வழியிலுள் தொழில் செய்யுந் திறத்தை, அறிந்தக்கடைத்தும்-அறிந்தவிடத்தும், உலகத்த - உலகத்திலே, இயற்கை அப்போத டைக்கின்ற இயற்கையை, அறிந்த-தெரிந்த, செயல்-அதனோ பொருத்தச் செய்யக்கடவன் எ-ற.

(க-ரை) தொழில்செய்யுந் திறங்களை யறிந்தாலும் உலகடக்கையறிந்த செய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) நூல்வழியேயாயினும் உலகவழியோடு பொருந்தாதவைகளைச் செய்தால் அவ்வுலகம் பழிக்குமென்ற உலகியற்கையினறிவினுல் பயன் சொல்லியபடி.

'செயற்கை' என்றத நூலறிவால் வினைசெய்யும் திறத்தை. 'கடை' என்றத இடப்பொருள் உருபு. 'உலகத்த இயற்கை' என்றத உல இயற்கையை. (7)

அறிகொன் றறியா னெனினு முறுதி யுழையிருந்தான் கூறல் கடன்.

(பரி-உரை) அறி கொன்ற அறியான் எனினும்-அறிந்த சொல்லியாத அறிவையும் அழித்த அரசன் தானும் அறியானேயாயினும், உறதிகூற் உழையிருந்தான் கடன்-அக்குற்ற நோக்கி யொழியாத அவனுக்கு உறதி யாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை எ-ற.

அறிவென்பதை முதனிலைத் தொழிற்பெயர். கோறல் - தான் கொள்ளாமை மேலும் இகழ்ந்து கூறுதல். உழையிருந்தானெனப் பெயர் கொடுத்தார், அமாத்தியனென்னும் வடமொழிப்பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின். உறுதி கூருக்கால் அவனது இறுதியெய்தற் குற்றத்தை உலகந் தன்மே லேற்றுமென்பார், கூறல்கடனென்றார். இவை இரண்டுபோட்டாலும் அவர் செயல் கூறப்பட்டது.

(ப-ரை) அறிகொன்று-அறிந்து சொல்லினவாத அறிவையும் அழித்து, அறியானெனினும் - தானும் அறியானேயாயினும், அக்குற்றநோக்கிக் கைவிடாமல், உறுதி-அரசனுக்கு உறுதியானவைகளை, கூறல்-சொல்லுதல், உழையிருந்தான்-மந்திரியினது, கடன்-முறையாகும் எ-று.

(க-ரை) சொன்னவ ாறிவையழித்துத் தானறியாதெனினும் அரசனுக் குறுதியானவைகளைச் சொல்லுதல் மந்திரியின் கடமையாம் என்பதாம்.

(வி-ரை) அழித்தல் தான்கொள்ளாமல் மேலும் இகழ்ந்துசொல்லல், உறுதி சொல்லாதபோது அவன் முடிவெய்துவ குற்றத்தை உலகந் தன்மேல் ஏற்றமென்றற்கு உறல் கடனென்றார். [இவை இரண்டுபோட்டாலும் அவர் செயல் சொல்லப்பட்டது.]

'அறி' என்றது அறிந்து சொல்லியாதது அறிவு மொழியை. 'கொன்று' இது அழித்து என்னும் பொருளது. 'அறியான் எனினும்' என்றது தானும் அறியாதவனுக இருப்பின் என்றதாம். 'உறுதி' என்றது உறுதியாகிய சூழ்ச்சிகளை. 'உழை இருந்தான்' இது மந்திரியைக் குறித்தது. என்னை? எப்போழ்தும் அரசனுக்குப் பக்கத்தே இருக்குங் காரணம்பற்றி வந்த காரணப்பெயர்.

பழுதெண் ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும்.

(பரி-உரை) பக்கத்தன் பழுது எண்ணும் மந்திரியின் - பக்கத்திருந்து பிழைப்பவெண்ணும் அமைச்சனொருவனில், ஒரெழுபதுகோடி தெவ் உறும்- அரசனுக்கு எதிர் நிற்பார் ஒரெழுபதுகோடி பகைவருறுவர் எ-று.

எழுபது கோடியென்றது மிகப் பலவாய வெண்ணிற்கொன்று காட்டிய வாறு. வெளிப்படநிற்றலான் அவர் காக்கப்படுவர், இவன் உட்பகையாய் நிற்றலாற் காக்கப்படானென்பதுபற்றி, இவ்வாறு கூறினர். எழுபதுகோடி மடங்கு கல்லென்றுரைப்பாரும், எழுபதுகூறு தலையென்ற பாடம் ஓதுவாருமுளர்.

(ப ரை) பக்கத்தன் - பக்கத்திலிருந்து, பழுதெண்ணும் - தீங்குசெய்ய வெண்ணும், மந்திரியின் - மந்திரியொருவனில், தெவ் - (அரசனுக்கு) எதிர் நிற்பவர், ஒரெழுபதுகோடி-ஒரெழுபதுகோடிபகைஞர், உறும்-உறுவர் எ-று.

* அமாத்திய னென்பதனுள் 'அமா' என்பதற்குப் பொருள் 'அண்மை.'

(க-உ) அரசனுக்குத் தீங்குசெய்யு மந்திரியொருவனை எழுபதுகோடி பகைவரிலுங் கொடியன் என்பதாம்.

(வி-உ) எழுபதுகோடி யென்றது மிகவும் பலவாகிய எண்ணிக்கைக்கு ஒன்று காட்டியபடி. அவர் வெளிப்பட்டு கிற்கையால் அவருக்குத் தப்பலாம் உட்பகையாய் கிற்றலால் இவனுக்குத் தப்புதல் கூடாதென்பதுபற்றி இப்படிச் சொல்லினார்.

'பழுத' என்றது நீக்கை. 'மந்திரியில்' இதில் 'இல்' உருபு எல்லாப் பொருள் தர்தது நின்றது. 'தெவ்' என்றது பகைவரை. 'ஒரெழுபதுகோடி' இது மிக மிகுதிகாட்டியது. (9)

முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

(பரி-உரை) முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர் - செய்யப் படும் வினைகளை முன் அடைவுபடவெண்ணிவைத்தும், செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யாகிற்பர், திறப்பாடு இலாதவர் - முடித்தற்கேற்ற கூறுபாடில்லாதார் எ-று.

அக்கூறுபாடாவன - வந்த வந்த விடையூறுகட்கு ஏற்றவேற்ற பரிகார மறிந்து செய்தலும், தாம் நிண்ணிய ராதலுமாம். பிழையாம லெண்ண வல்லராய் வைத்தும் செய்துமுடிக்க மாட்டாரு முளரென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் அமைச்சருள் விடப்படுவாரது குற்றங் கூறப்பட்டது.

(ப-உ) (செய்யப்படுந் தொழில்களை) திறப்பாடு - (முடித்தற்கு ஏற்ற) கூறுபாடு, இலாஅதவர் - இல்லாதவர், முறைபடச் சூழ்ந்தும் - (அவைகளை முன்னே) அடைவுபட ஆலோசித்திருந்தும், முடிவிலவே செய்வர்-(செய்யும் போது அவைகள்) முடிவில்லனவாகவே செய்யாகிற்பர் எ-று.

(க-உ) செய்தொழிலிலே திறமில்லா மந்திரிகள் முன்பாலோசித்தும் பின்பு முடிவில்லாமற் செய்வார்கள் என்பதாம்.

(வி-உ) அக்கூறுபாடாவன-வந்தவந்த இடையூறுகளுக்கு ஏற்ற ஏற்ற பரிகாரம் அறிந்து செய்தலும், தாம் நிடமுடையவராதலும் ஆம். தப்பாமல் ஆலோசிக்க வல்லவராயிருந்தும் செய்து முடிக்கமாட்டாதவரும் உண்டென் பதாம். [இவை இரண்டு பாட்டாலும் மந்திரிகளுள் விடப்படுவாரது குற்றம் சொல்லப்பட்டது.]

'திறப்பாடு' என்றது முடிக்கும் ஆற்றல் இல்லாதவர் என்பதாம், 'இலாஅதவர்' இதுசெய்யுள் இசைநிறைக்கவந்த அளபெடை. (10)

64-ம் அதி - அமைச்சு - முற்றிற்று.

65-ம் அதிகாரம்—சொல்வன்மை

(பரி-உரை) அஃதாவது: தான் கருதிய வினை முடியுமாற்றால் அமைச்சியல் கடந்தற்கு ஏதுவாய சொற்களைச் சொல்ல வல்லதாதல் மேல் "ஒருதலையாச் சொல்லலும் வல்ல" தென்றதனையே சிறப்புப்பற்றி விரித்தலாற்சின்மையின், இஃது அமைச்சின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தான் கினைத்த தொழில் முடியும் வழியால் வார்த்தை சொல்ல வல்லவனாகுதல். முன்னதிகாரத்திலே ஒரு தலையாச் சொல்லலுமென்றதையே சிறப்புப்பற்றி விரித்துச் சொல்லுதலால் அதன் பின் வைக்கப்பட்டது.

நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று.

(பரி-உரை) நாநலம் என்னும் நலன் உடைமை-அமைச்சர்க்கு இன்றியமையாக் குணமாவது சான்றோரான் நாநலமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலத்தினை யுடையராதல், அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று. அந்நலம் பிறர்க்கும் பிறநல மெல்லாவற்றுள்ளும் அடங்குவதன்றி மிக்க நாநலான் எ-று.

நாவாலுளதாய நலமென விரியும். இந்நலம் உலகத்தைத் தம்வயத்தாக்கும் அமைச்சர்க்கு வேறுகவேண்டுமென்னும் நீதிநூல் வழக்குப்பற்றி நாநலமென்னு நலனென்றும், பிறர்க்கும் இதுபோற் சிறந்தது பிறிதின்மையான் அந்நலம் யாநலத்துள்ளதூஉமன்றென்றுங் கூறினார். பிரித்தல் பொருத்தல்முதலிய தொழிலில்லாதார்க்கும் இஃது இன்றியமையாதாயின் அத்தொழிலார்க்குக் கூறவேண்டுமோவென்பது கருத்து.

(ப-ரை) (மந்திரிகளுக்கு அவசியம் வேண்டிய குணமாவது) நாநல மென்னும்-நாநல்மென்று சிறப்பிதஞ்சொல்லப்படும், நலனுடைமை-நலத்தினை யுடையராதல், அந்நலம் - அந்த நலமானது, (பிறர்க்கும்) யாநலத்து-பிற நலங்களிலெல்லாம், உள்ளதூஉமன்று - அடங்குவதன்று, மிகுந்ததனாலால்) எ-று.

(க-ரை) மந்திரிகளுக்கு நாநலம்போல வேறு நலமில்லை என்பதாம்.

(வி-ரை) நாநலம் நாவாலுளதாகிய நலமென விரியும். இந்நலம் - உலகத்தைத் தம்வசமாக்கும் மந்திரிகளுக்கு வேறுயிருக்க வேண்டுமென்னும் நிதிநூல் வழக்கம்பற்றி நாநலமென்றும், பிறருக்கும் இதுபோற் சிறந்தது வேறில்லாமையால், அந்நலம் யாநலத்துள்ளதூஉ மன்றென்றுஞ் சொல்லினார். பிரித்தல் பொருத்தல் முதலாகிய தொழிலில்லார்க்கும் இதன் அவசியம் வேண்டுவதாலால் அத்தொழிலுடைய மந்திரிகளுக்குச் சொல்ல வேண்டுமோவென்பது கருத்து.

---

* திருக்குறள், 64-ம் அதி. அமைச்சு-4.

'காலம்' இது காவால் உளதாய காலம்; அதாவது சொல்வன்மை. 'அக்காலம்' என்றது அச்சொல்வன்மையை. 'யாகலம்' இது யாவினுவு யாகப் பிறந்த பெயர். 'உள்ளதுடம்' இது இன்னிசை அளபெடை. (1)

ஆக்கமுங் கேடு மதனுல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(பரி-உரை) ஆக்கமுங் கேடும் அதனுல் வருதலால் - தம் அரசற்கும் அவ்வரசட்கும் ஆக்கவழிகள் தஞ்சொல்லான் வருமாகலான், சொல்லின்கண் சோர்வு காத்த லோம்பல் - அப்பெற்றித்தாய சொல்லின்கட் சோர்தலை அமைச்சர் தங்கணிகழாமற் போற்றிக் காக்க எ-று.

ஆக்கத்திற்கு ஏதுவாய நற்சொல்லையும், கேட்டிற்கு ஏதுவாய தீச்சொல்லையும் சொல்லாத லொப்புமைபற்றி அதனுலென்றார். செய்யுளாகலின், சுட்டுப்பெயர் முன்வந்தது. பிறர் சோர்வுபோலாது உயிர்கட்கெல்லாம் ஒருக்குவருதலால், காத்தோம்பலென்றார். இவை யிரண்டு பாட்டானும் இஃது இவர்க்கு இன்றியமையாதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) (மந்திரிகள்) சொல்லின்கண் - சொல்லினிடத்து, சோர்வு சோர்தலை, காத்தோம்பல் - (தம்மிடத்தே உண்டாகாமல்) காக்கக்கடவர், (தம்மரசனுக்கும் அக்கங்களுக்கும்) ஆக்கமும் - பெருக்கமும், கேடும் அழிவும், அதனுல்-அச்சோர்வினுலே, வருதலால்-வருகையால் எ-று.

(க-ரை) செல்வமும் கேடும் சொல்லால் வருதலால் மந்திரிகள் சொற் சோர்வு வாராமற் காக்கக்கடவர் என்பதாம்.

(வி-ரை) ஆக்கத்துக்கு ஏதுவாகிய நல்லசொல்லையும், கேட்டுக்கு ஏதுவாகிய தீயசொல்லையும் சொல்லென்கிற ஒப்புமைபற்றி அதனுலென்றார். இவர் சொற்சோர்வு மற்றைச் சோர்வுபோலாகாமல் உயிர்களுக்கெல்லாம் ஒருசேர வருதலால் காத்தோம்பலென்றார். [இவை இரண்டு பாட்டாலும் சொல்வல்லமை மந்திரிகளுக்கு அவசியம் வேண்டுவதென்பது சொல்லப்பட்டது.]

ஆக்கம் சொல்வன்மையாலும், கேடு சொன்வன்மை இன்மையாலும் எய்துதலால் 'அதனுல்' என்றார். ஈண்டு 'அதனுல்' என்றது தம் வாய்ச் சொல்லால் என்பதாம். 'காத்தோம்பல்' என்றது தன்கண் சொற்சோர்வு வாராது தன்னைக் காத்துப் பேணுக என்பதாம். 'சொல்லின்கட்சோர்வு' என்றது சொல்வன்மை இன்றிச் சொற்குற்றப்படலை. (2)

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

(பரி-உரை) கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய் - கட்பாயேற்றர் கொண்டாரைப் பின் வேறுபடாமற் பிணிக்குங் குணங்களை அவாவி,

னாரும் கேட்பமொழிவது-மற்றைப் பகையாய் ஏற்றக்கொள்ளாதாரும் ின் அப்பகைமையொழித்து கட்பினை விரும்பும்வண்ணஞ் சொல்லப்படுவதே, சால்லாம்-அமைச்சர்க்குச் சொல்லாவது எ-று.

அக்குணங்களாவன-வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், ழுப்பயன்றருத லென்றிவை முதலாயின. அவற்றை யவாவுதலாவது-சால்லுவான் குறித்தனவேயன்றி வேறு நுண்ணுணர்வுடையோர் கொள்ப ற்றின்மேலும் நோக்குடைத்தாதல். அவாயென்னுஞ் செய்தெனெச்சம் மாழிவதென்னுஞ் செயப்பாட்டுவினை கொண்டது. இனிக் கேட்டார் னாரென்பதற்கு நூல்கேட்டார் கனாதாரெனவும், வினவியார் வினவா ாரெனவு முரைப்பாருமுளர். தகையவாயென்பதற்கு எல்லாருந் தகுதியை டையவாயென்றுரைத்தார்; அவர் அப்பண்மை மொழிவதென்னும் ருமையோடு இயையாமை நோக்கிற்றிலர். இதனாற் சொல்லினது லக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) கேட்டார் - (கட்பா) யேற்றக்கொண்டவரை, பிணிக்கும் - ின் வேறுபடாமற்) கட்டும், தகை-குணங்களை, அவாய்-அவாவி, கனாரும்- ற்றைப் பகையா) யேற்றக்கொள்ளாதவரும், கேட்ப - (பின் அப்பகைமை யொழித்து கட்பினை) விரும்பும்வண்ணம், மொழிவது-சொல்லப்படுவதே, சால்-சொல்லாம் எ-று.

(க-ரை) கேட்டாருவ் கனாதவரும் இச்சிக்கச் சொல்வதே சொல்லாம் ன்பதாம்.

(வி-ரை) அக்குணங்களாவன: வழுவில்லாமை, சொற்சுருக்குதல், பாருள்விளக்குதல், இனிதாதல், மேலான பயனைத்தருதல் இவை தலானவை. அவைகளை அவாவுதலாவது - அச்சொல் சொல்லுவான் றித்த பொருளையேயன்றி வேறே புத்தி நுட்பமுடையவராலே கொள்ளப் ட்டவைகளின். மேலும் நோக்குடைத்தாதல். [இதனால் சொல்லினது லக்கணம் சொல்லப்பட்டது.]

'கேட்டார்' என்றது கட்பினராய்க் கேட்டவர்களை. 'பிணிக்குந்தகைய ய்' என்றது மாறுபடாதபடி கட்பாகவே இருக்கும்படிக் கட்டிவைக்குந் ன்மையுடையதாய் என்பதாம். 'கனா' என்றது பகைவரை. 'வேட்ப' ன்றது கட்பாகி அவர் மொழிகளை கேட்க விரும்புந் தன்மையுடையதாக ன்பதாம்.

(3)

திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

(பரி-உரை) சொல்லைத் திறன் அறிந்து சொல்லுக-அப்பெற்றித்தாய சால்லை அமைச்சர் தம்முடையவுங் கேட்பாருடையவுமாய திறங்களை ிந்து சொல்லுக, அதனின் ஊக்கு அறனும் பொருளும் இல்-அங்ஙனஞ் சால்லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளு மில்லையாகலான் எ-று.

அத்திறக்களாவன-குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் என்பனவற்றுன் வரும் தகுதி வேறபாடுகள். அவற்றை யறிந்த சொல்லுதலாவது-அவற்றுற் றமக்கும் அவர்க்குமுளவாய எற்றத்தாழ்வுகளை யறிந்த அவ்வம்மாபாற் சொல்லுதல். அஃது உலகத்தோ டொட்டவொழு கலையும் இனிமையையும் பயத்தலின் அறனுயிற்று; தங்காரிய முடித்தலிற் பொருளாயிற்று. அறனும் பொருளுமெனக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறினர்.

(ப-ரை) (மந்திரிகள்) சொல்லே - அப்படிப்பட்ட சொல்லை, திறன்-(தம்) முடையவும் கேட்பாருடையவுமான திறங்களை, அறிந்து-தெரிந்து, சொல்லுக-சொல்லக்கடவர், அதனினூஉக்கு-அப்படி சொல்லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளும்-தருமமும் பொருளும், இல்-இல்லை (ஆதலால்) எ-று.

(க-ரை) மந்திரிகள் சொற்றிறங்களை யறிந்து சொல்லக்கடவர் என்பதாம்.

(வி-ரை) அத்திறக்களாவன: குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம் என்பனவைகளால் வரும் தகுதி வேறுபாடுகள். அவைகளை அறிந்த சொல்லுதலாவது: அவைகளாலே தமக்கும் அவர்க்கும் உண்டாகிய உயர்வு தாழ்வுகளை அறிந்து அவரவர்க்குத் தகுந்த மாபினுலே சொல்லுதல். அது உயர்ந்தோர் கடையோடு பொருந்தலையும் இனிமையையும் தருதலால் அறனுயிற்று. தமது காரியமுடிதலாலே பொருளாயிற்று. அறனும் பொருளுமெனக் காரணத்தைக் காரியமாக்கிச் சொல்லினர்.

'திறன்' என்றது தன்திறன் கேட்பார் திறன்களை. 'அறனும் பொருளும்' இதன்கண் நின்ற உம்மைகள் எண்ணும்மைகள். 'ஊக்கு' இது உயர்ந்தது என்னும் பொருளது. 'ஊஉக்கு' என அளபெடுத்தது இன்னிசை அளபெடை.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

(பரி-உரை) சொல்லைப் பிறிது ஓர்சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து-தாஞ் சொல்லக்கருதிய சொல்லைப் பிறிதோர் சொல்லாய் வெல்லவல்லதொரு சொல் இல்லாமை யறிந்து, அச்சொல்லைச் சொல்லுக-பிறர் அச்சொல்லைச் சொல்லுக எ-று.

பிறிதோர்சொல்-மாற்றுரைத மறுதலைச்சொல். வெல்லுதல்-குணக்களாலே மிகுதல். அதனை வெல்லச்சொல்லுகவென்பதாம். இனிப் பிறிதோர் சொல் வெல்லுஞ்சொல்லெனச் செவ்வெண்ணுக்கி, ஒத்தசொல்லும் மிக்க சொல்லு மூனவாகாமற் சொல்லுகவென் றுரைப்பாருமுளர். இது சொற் பொருட்பின்வருநிலை.

(ப-ரை) சொல்லை-தாம் சொல்லக்கருதிய சொல்லை, வெல்லுஞ்சொல் வெல்ல வல்ல சொல்லாகிய, பிறிதோர்சொல்-பிறிதோர்சொல், இன்மை

இல்லாமையை, அறிந்து - தெரிந்து, அச்சொல்லை - அந்தச்சொல்லை, சொல்லுக-சொல்லக்கடவர் எ-று.

(க-ரை) பிறர் சொல்லுஞ்சொல் வெல்லுஞ்சொல் லில்லாமையைக் கண்டு சொல்லக்கடவர் என்பதாம்.

(வி-ரை) பிறிதோர் சொல்லாவது-பகைவரது எதிரானசொல். வெல்லுதல்-குணங்களாலே மிகுதல். அதுவே வெல்லச்சொல்லுக வென்பதாம்.

'பிறிதோர் சொல்' என்றது பகைவரது பகைச்சொல்லை. 'அச்சொல்' என்றது தான் சொல்லிய அச்சொல்லை. இக்குறளில் 'சொல்' என்பது பன்முறையும் வந்தமையால் இது சொற்பொருட் பின்வருநிலையணி. 'இன்மை' இது இல்லாமை என்பதன் விகாரம். (5)

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன் மாட்சியின் மாசற்றூர் கோள்.

(பரி-உரை) வேட்பத் தாம் சொல்லிப் பிறர் சொற்பயன் கோடல். பிறர்க்குத் தாஞ்சொல்லுங்கால் அவர் பின்னுங் கேட்டலை விரும்புமாறு சொல்லி, அவர் தமக்குச் சொல்லுங்கால் அச்சொல்லின்பயனைக் கொண்டொழிதல், மாட்சியின் மாசு அற்றூர் கோள்-அமைச்சியலுட் குற்றமற்றூரது தணிபு எ-று.

பிறர் சொற்களுட் குற்றமுளவாயினும் அவை நோக்கி யிகழாரென்பதாம். வல்லாரை யிகழ்தல் வல்லுகர்க்குத் தகுதியன்மையின், இதுவுமுடன் கூறினர். இவை மூன்றுபாட்டானும் அதனைச் சொல்லுமாறு கூறப்பட்டது.

(ப-ரை) வேட்ப-(பிறர் பின்னுங்கேட்க) விரும்பும்படி, தாஞ்சொல்லி-தாங்கள் சொல்லி, பிறர்சொல் - (பிறர் தமக்குச்சொல்லுஞ்) சொல்லினது, பயன்கோடல் - பயனைக்கொண்டுவிடுதல், மாட்சியில் - (மந்திரி) யிலக்கணத்திலே, மாசற்றூர்-குற்றமற்றவரது, கோள்-தணிவு எ-று.

(க-ரை) பிறரிச்சுக்கும்படி சொல்லிப் பிறர்சொற் பயனைக் கொள்ளுதல் மந்திரிகள் கொள்கை என்பதாம்.

(வி-ரை) பிறர் சொற்களிலே குற்றமுளவாயினும் அவைநோக்கி இகழாரென்பதாம். வல்லமை இல்லாதவரை யிகழ்தல் வல்லவர்க்குத் தகுதியல்லாமையால் இதுவும் உடன் சொல்லினர். [இவை மூன்றுபாட்டாலும் அதனைச் சொல்லும்விதம் சொல்லப்பட்டது.]

'வேட்ப' என்றது பின்னும் கேட்கவேண்டுமென்ற விரும்புமாறு என்பதாம். 'மாட்சியின்' என்றது அமைச்சர் மாட்சியின் என்பதாம். 'மாசற்றூர்' என்றது அமைச்சர்க்கு ஆகாதனவென்று விதந்து ஒதிய குற்றங்களெல்லாம் இல்லாத (மந்திரிகள்) என்றதாம். 'கோள்' என்றது ஈண்டு 'தணிபு' எனப் பொருள் செய்யப்[illegible] (6)

சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

(பரி உரை) சொலல் வல்லன்-தான் எண்ணிய காரியங்களைப் பிறர்க் கேற்பச் சொல்லுதல் வல்லனாய், சோர்வு இலன்-அவை மிகப் பலவாயதனி லொன்றினுஞ் சோர்விலனாய், அஞ்சான்-அவைக்கு அஞ்சானுயிலான் யாவன், அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது - அவனை மாறுபாட்டின்கண் வெல்லுதல் யாவர்க்குமரிது எ-று.

ஏற்பச்சொல்லுதல்-அவர்க்கு அவை காரியமல்லவாயினும் ஆமெனத் தணியும்வகை சொல்லுதல். சோர்வு - சொல்லவேண்டுவதனை மறப்பாற் ஒழிதல். இம்மூன்று குணமுமுடையானை மாற்றாராய்ப் பிரித்தல் பொருத்தல் செய்து வெல்வாரில்லையென்பதாம்.

(ப-ரை) (தான் எண்ணிய காரியங்களை) சொலல்வல்லன் - (பிறர்க்கு ஏற்கச்) சொல்லுதல் வல்லவனாய், (அவை மிகவும் பலவானவிட்தே), சோர்விலன்-(ஒன்றினுஞ்) சோர்வில்லாதவனாய், அஞ்சான்-(சபைக்கு) அஞ்சாதவன், (யாவன்) அவனை - அவனை, இகல்-மாறுபாட்டிலே, வெல்லல் - வெல்லுதல், யார்க்கும்-எவர்க்கும், அரிது-அருமை எ-று.

(க-ரை) சொல்லில் வல்லவனும், சோர்வில்லாதவனும், அஞ்சாதவனு மாகியவனை வெல்லலரிது என்பதாம்.

(வி-ரை) ஏற்கச்சொல்லுதல் - அவருக்கு அவை காரியமல்லாதனவா யிருந்தாலும் ஆமென்று கப்பும்படி சொல்லுதல். சோர்வு-சொல்லவேண்டு வதனை மறதியாலொழிதல். இம்மூன்று குணமுடையவனைப் பகைவராய் பிரித்தல் பொருத்தல்செய்து வெல்வார் இல்லையென்பதாம்.

'சொலல் வல்லன்' என்றது தான் சொல்ல நினைத்தவைகளைக் கேட்போர் மறுக்காதவண்ணம் காரண காரியம் பொருத்த எடுத்து மொழியும் வல்லமை உடையவன் என்பதாம். 'சோர்வு' என்றது ஈண்டு மறதியை. 'அஞ்சான்' என்றது கற்றோர் அவை கண்டு அஞ்சாதிருக்குந் தன்மை யுடையவன் என்பதாம். 'இகல்வெல்லல்' என்றது மாறுபாட்டினிடத்து வெல்லுதல் என்பது பொருளாம். 'யார்க்கும்' என்றது எத்தகைய ஆற்றல் உடையவர்க்கும் என்பதாம். (7)

விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

(பரி உரை) தொழில் கிரந்த இனிது சொல்லுதல் வல்லார்ப்பெறின் சொல்லப்படுங் காரியங்களை கிரல்படக் கோத்த இனிதாகச் சொல்லுந் வல்லாரைப் பெறின், ஞாலம் விரைந்து கேட்கும் - உலகம் அவற்றை விரைந்து ஏற்றுக்கொள்ளும் எ-று.

தொழில் - சாதியொருமை. கிரல்படக் கோத்தல்-முன் சொல்லனவும் பின் சொல்லனவும் அறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல் - கேட்

டார்க்கு இன்பம் பயத்தல். சொல்லுதல்வல்லான் ஞாலபிரவருளொருவன் என்ற வடமொழிபற்றிப் பெறினென்றார். ஈண்டுக் கேட்டல் - ஏற்றுக் கோடல். இவை இரண்டுபோட்டாலும் அவ்வாற்றுற் சொல்லுதல் வல்லாதது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) தொழில்-(சொல்லப்படும்) காரியங்களை, திரந்து-ஒழுங்குபடக் கோத்து, இனிது-இனிதாக, சொல்லுதல்-சொல்லுதலில், வல்லார்-வல்லவரை, பெறின் - பெற்றால், ஞாலம் - உலகமானது, விரைந்து - விரைவாகி, கேட்கும் - (அவைகளை) ஏற்றுக்கொள்ளும் எ-று.

(க-ரை) சொல்காரியங்களை இனிதாகச் சொல்லுதலில் வல்ல மந்திரியை பெற்றால் உலகமேற்றுக்கொள்ளும் என்பதாம்.

(வி-ரை) ஒழுங்குபடக்கோத்தல் - முன்னே சொல்லவேண்டியவையும் பின்னே சொல்லவேண்டியவையும் அறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல்-கேட்பார்க்கு இன்பந்தருதல், சொல்லுதல்வல்லவன் ஞாலபிரம்பேருளொருவன் என்னும் வடமொழிபற்றி வல்லார்ப்பெறினென்றார். [இவை இரண்டுபோட்டாலும் அவ்விதங்களாலே சொல்லுதல் வல்லாதது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'திரந்து' என்றது ஒழுங்குபடக்கோத்து என்பதாம். 'இனிது சொல்லல்' என்றது சொல்லின்பம், பொருளின்பம்பட மொழிதல். 'சொல்லுதல் வல்லார்ப்பெறின்' இதில் 'பெறின்' என்றதால் பெறுதல் அருமை குறிப்பித்ததாகும். இதனைன்றே பெரியாரும் 'வார்த்தை பதினுயிரத்தொருவர்' என்றும், 'மாணவை மண்ணுறத்துஞ் செல்வமுமுண்டு சிலர்க்கு' என்றும் கூறியருளினர். (8)

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல தேற்றா தவர்.

(பத-உரை) மாசு அற்ற சில சொல்லல் தேற்றாதவர்-குற்றமற்றனவாய்ச் சிலவாய வார்த்தைகளை அவ்வாற்றுற்சொல்லுதலையறியாதார், பல சொல்லக் காமுறுவர்-பலவாய வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவர் எ-று.

குற்றம் மேற்சொல்லிய * குணங்கட்கு மறுதலையாயின. இடைவிடாது சொல்லுதலையுஞ் சொல்வன்மையென்று விரும்புவாருமுளர், அவர் அவ்வாறு சொல்லமாட்டாதாரே, வல்லார் அது செய்யாரென யாப்புறுப்பார், என்றவென்றார்.

(ப-ரை) மாசற்ற - குற்றமற்றவையாய், சில-சிலவாகிய வார்த்தைகளை, சொல்ல-(அப்படி) சொல்லுதலை, தேற்றாதவர் - அறியாதவர், பல - பலவாகிய வார்த்தைகளை, சொல்ல-பேச, காமுறுவர்-விரும்புவார் எ-று.

---

* சொற்குணங்களை 65-ம் அதி-8-வது திருக்குறளுரையிற் காண்க.

(க-ரை) குற்றமற்ற வார்த்தைகளைப்பேச அறியாதவர்கள் பலவார்த்தைகளைப்பேச விரும்புவார்கள். வார்த்தை-வசனம் என்பதாம்.)

(வி-ரை) குற்றம் - முன்சொல்லப்பட்ட குணங்களுக்கு எதிரானவை. இடைவிடாமற் பலசொல்லுதலேயும் சொல்வன்மையென்ற விரும்புவாருமுண்டு. அவர் அப்படிச் சொல்லமாட்டாதவரே வல்லவர் அதை செய்யாரென உறுதிப்படுத்தலற்கு மன்றவென்றார்.

'மாசற்ற' என்றது குற்றமற்ற சொல் என்பதாம்; குணமில்லாமையே குற்றம் என்பது கண்டு உணர்த்தக்கது. 'பல' என்றது பலசொற்களை. 'காமுறுவர்' இது விரும்புவர் என்னும் பொருளது. (9)

இணரூழ்த்து நாரு மலரினையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

(பரி-உரை) கற்றது உணர விரித்த உரையாதார் - கற்றுவைத்த நூலைப் பிறர் அறியும்வண்ணம் விரித்துரைக்கமாட்டாதவர், இணர் ஊழ்த்தும் நாரு மலர் அனையர் - கொத்தின்கண்ணே மலர்ந்துவைத்தும் நாறுத பூவைபோப் பர் எ-று.

செவ்விபெற மலர்ந்துவைத்தும் நாற்றமில்லாத பூச் சூட்டப்படாதவாறு போல, நூலைக் கற்றுவைத்தும் சொல்லமாட்டாதார் கன்குமதிக்கப்படாரென்றமையின், இது தொழிலுவமமாயிற்று. இவை இரண்டுபோட்டாலும் அது மாட்டாதாரது இழிபு கூறப்பட்டது.

(ப-ரை) கற்ற-கற்றநூல்களை, உணர - (பிறர்) அறியும்விதமாக, விரித்துரையாதார் - விரித்த உரைக்கமாட்டாதவர், இணர் - கொத்தினிடத்தே, ஊழ்த்தும் - மலர்ந்திருந்தும், நாறு - மணக்காத, மலரினையர் - பூப்போல்பவர் எ-று.

(க-ரை) கற்றநூல்களை விரித்துச் சொல்லாதவர்கள் வாசனையில்லா மலருக்கொப்பாவார் என்பதாம்.

(வி-ரை) எப்படி செவ்விபெற மலர்ந்திருந்தும் வாசனைசெய்யாத மலர் சூடப்படாதோ அப்படியே நூலைக்கற்றிருந்தும் சொல்லமாட்டாதவர் கன்குமதிக்கப்படாரென்பதாம். [இவை இரண்டுபோட்டாலும் அது மாட்டாதது இழிவு சொல்லப்பட்டது.]

'இணர்' என்றது கண்டு பூங்கொத்தை. 'ஊழ்த்தும்' இது மலர்ந்தும் என்னும் பொருளது. 'நாறு' இது வாசனை வீசாத என்னும் பொருளது. 'மலர்' இது பூவுக்கு விரியும் இயல்புபற்றிவந்த காரணப்பெயர். 'கற்றது' என்றது கற்ற நூற்பொருள்களை. 'உரை' என்றது கேட்போர் அறிந்து கொள்ளும்விதமாக என்பதாம். (10)

65-ம் அதி - சொல்வன்மை - முற்றிற்று.

66-ம் அதிகாரம்—வினைத்தூய்மை

(பரி-உரை) அஃதாவது: செய்யப்படும் வினைகள் பொருளேயன்றி அறமும் புகழும் பயந்து நல்லவாதல். சொல்லேயன்றிச் செயலும் நன்றாக வேண்டுமென்கின்றமையின், இது சொல்வன்மையின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: செய்யப்படுந் தொழில்கள் பொருளோமாத்திரமல்லாமல் அறமும் புகழுந்தந்து நல்லவையாதல். சொல்லேயல்லாமல் செயலும் நன்றாக வேண்டுமென்கின்றமையால் இது அதன்பின் வைக்கப்பட்டது.

துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்.

(பரி-உரை) துணை நலம் ஆக்கம் தருஉம்-ஒருவனுக்குத் துணையதன்மை செல்வமொன்றனையுங் கொடுக்கும்; வினை நலம் வேண்டிய எல்லாம் தரும்-அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையுங் கொடுக்கும் எ-று.

வேண்டியவெல்லாமென்றது இம்மைக்கண் அறம் பொருள் இன்பமுதலாயவற்றையும், மறுமைக்கண் தான் விரும்பிய பதங்களையும். இதனாற் காணப்படுந் துணைநன்மையினுங் கருதப்படும் வினைநன்மை சிறந்ததென வினைத்தூய்மையது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவனுக்கு) துணைநலம் - துணையினது நன்மையானது, ஆக்கம்-செல்வமொன்றையே, தருஉம்-கொடுக்கும், வினைநலம்-தொழிலினது நன்மையானது, வேண்டியவெல்லாம்-(அவன்) வேண்டியவைகளை எல்லாம், தரும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) ஒருவனுக்குத் துணைநன்மை செல்வமொன்றைத்தரும், தொழிலின் நன்மை வேண்டியவற்றைத்தரும் என்பதாம்.

(வி-ரை) வேண்டியவெல்லாமென்றது-இம்மையில் அறம்பொருளின்பமுதலானவைகளையும், மறுமையில் தான் விரும்பிய பதங்களையும். [இதனால் காணப்படுந்துணை நன்மையினும் கருதப்படுந் தொழினன்மை சிறந்ததென வினைத்தூய்மையது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'துணைநலம்' இது மொழி மாறிநின்றது. இதற்கு நல்லதுணை என்பது பொருளாம். 'ஆக்கம்' என்றது நண்டு இம்மைக்குரியதாகிய செல்வத்தை. 'தருஉம்' இது யாப்பின்கண் இசைநிறைக்கவந்த அளபெடை. 'வேண்டியவெல்லாம்' என்றது இம்மை மறுமைகளுக்கு வேண்டியவைகளை என்பதாம். (1)

என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

(பரி-உரை) புகழொடு என்றி பயவா வினை-தம்மரசனுக்கு இம்மைக்குப் புகழும் மறுமைக்கண் அறமும் பயவாத வினைகளை, என்றும் ஒருவுதல் வேண்டும்-அமைச்சர்க்கு எக்காலத்தும் ஒழிதல்வேண்டும் எ-று.

பெருகல், சுருக்கல், இடைகிற்றலென்னும் கிலவேறுபாடு காலத்தால் வருதலின், என்றுமென்றார். வேண்டுமென்பது சண்டு இன்றியமையா தென்னும் பொருட்டு.

(ப-உரை) (தம்மரசனுக்கு) புகழொடு - (இம்மைக்குப்) புகழையும், என்றி. (மறுமைக்கு) அறத்தையும், பயவா-தாராத, வினை-தொழில்களை, என்றும்-எக்காலத்திலும், ஒருவுதல்வேண்டும் - (மந்திரிகளுக்கு) ஒழிதல் வேண்டும் எ-று.

(க-உரை) அரசனுக்குப் புகழையும் தருமத்தையும் தாராத்தொழில்களை மந்திரிகள் விடவேண்டும் என்பதாம்.

(வி-உரை) பெருகல் சுருக்கல் கடுகிற்றல் என்கிற கிலவேறுபாடுகள் காலத்தினால் வருதலால் என்றுமென்றார்.

'என்றும்' என்றது எக்காலத்தும் என்பதாம். 'ஒருவுதல்' இது நீக்குதல் என்னும் பொருளது; (ஒருவு=நீக்கு) இதில் 'தல்' தொழிற்பெயர் விகுதி. 'புகழொடு' என்றது இம்மைக்கு உரியதாகிய புகழை; இதில் 'ஒ' உருபு எண்ணுப்பொருளில் வந்தது. 'என்றி' என்றது மறுமைக்குத் தகுவதாய அறத்தை. 'பயவா' இது 'பயவாத' என்பதன் கடைக்குறை விகாரம்.

ஓதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

(பரி-உரை) ஆதும் என்னுமவர் - மேலாகக்கடவேமென்று கருதுவர், ஒளிமாழ்குஞ் வினை செய் ஒதல்வேண்டும்-தம்மொளி கெடுதற்குக் காரணமாய வினையைச் செய்தலைத் தவிர்க எ-று.

ஓதல்வேண்டுமென்பது ஒருசொன்னீர்மைத்து. ஒவுதலென்பது குறைதலின்றது. ஒளி தாமுளகாலத்து எல்லாராலும் கன்குமதிக்கப்படுதல். செய்யென்னும் முதனிலைதொழிற்பெயர் மாற்றப்பட்டது. அன்றிச் செய்வினையென வினைத்தொகையாக்கியவழிப் பொருளின்மை யறிக. ஒளி கெடவருவது ஆக்கமன்றென்பதாம்.

(ப-உரை) ஆதும்-மேலாகக்கடவோம், என்னுமவர் - என்றுநினைப்பவர், ஒளி-(தம்) மொளி, மாழ்குஞ் - கெடுதற்குக்காரணமாகிய, வினை - தொழில, செய்-செய்தலை, ஓதலவேண்டும்-ஒழியக்கடவர் எ-று.

(க-உரை) மேலாவோமென் றெண்ணுவோர் கெடுதற்குக் காரணமான தொழில விடக்கடவர் என்பதாம்.

(வி-உரை) ஒளிவாவது - தாம் இருக்கின்றகாலத்திலே எல்லாராலும் கன்கு மதிக்கப்படுதல். ஒளிகெடவருமாக்கம் ஆக்கமன்றென்பதாம்.

'ஒதல்' இது 'ஓதுதல்' என்பதன் இடைக்குறைவிகாரம்; இது நூறைதல், நீக்குதல் என்னும் பொருளது. ஈண்டு தவிர்க்க என்றலை செய்யப்பெற்றது. 'ஆகாதம்' என்றது மென்மையாகக் கடிவலம். இது 'ஆகுதம்' என்பதன் இடைக்குறை விகாரம். 'ஒளிமாழ்குஞ் செய்வினை' என்றது (தமது புகழ்தற்குரிய) மேம்பாட்டைக் கெடச்செய்யும்படியாகிய வினை செய்தலை என்பது பொருளாம். 'ஒதல்' 'யாகாதம்' இவை செய்யுள் இசைநிறைக்கவந்த அளபெடை.

(3)

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார் நடுக்கற்ற காட்சி யவர்.

(பரி-உரை) இடுக்கட்படினும் இளிவந்த செய்யார் - தாமிடுக்கணிலே படவரினும், அது நீர்தற்பொருட்டு முன் செய்தார்க்கு இளி வந்த வினைகளைச் செய்யார், நடுக்கு அற்ற காட்சியவர்-தளக்கமற்ற தெளிவினை யுடையார் எ-று.

சிறிதுபோழ்திற் கழிவதாய இடுக்கணுக்கி எஞ்ஞான்றுக் கழியாத கேடு எய்தற்பாலதன்று என்பதூஉம், அஃது எய்தினாலும் வருவது மருமென்பதூஉம் தெளிவாகலால், செய்யாரென்றார்.

(ப-ரை) நடுக்கற்ற - அசைவற்ற, காட்சியவர் - தெளிவையுடையவர், இடுக்கட்படினும்-(தாம்) துன்பத்திலே படவரினும் (அது) நீர்தற்பொருட்டு, இளிவந்த - (முன்செய்தவர்க்கு) இழிவுவந்த தொழில்களை, செய்யார்-செய்யார் எ-று.

(க-ரை) அசைவில்லா வறிவினையுடையவர் துன்பம் வரினும் இழி தொழிலைச் செய்யார் என்பதாம்.

(வி-ரை) சிறிதுபோதிலே நீங்குவதாகிய துன்பத்தைநோக்கி எப் போதும் நீங்காத இழிவை அடையலாகாதென்பதும் அவ்விழிவை அடைந் தாலும் வருவதாயுள்ள அத்துன்பமானது வருமென்பதும் தெளிவாதலால் செய்யாரென்றார்.

'இடுக்கண்படினும்' இதன் ஈற்று 'உம்' துன்பப்பட்டாலும் என்னும் பொருளது. 'இளிவந்த' என்றது இழிவு உடைய காரியங்களை என்பதாம். 'நடுக்கற்ற காட்சி' என்றது அசையாத ஞானக்காட்சியை உடையவர் என்பதாம்.

(4)

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன் மற்றன்ன செய்யாமை நன்று.

(பரி-உரை) எற்று என்ற இரங்குவ செய்யற்க-யான் செய்தது எத்தன் மைத்தென்ற பின்னுளே யிரங்கும் வினைகளை ஒருகாலுஞ் செய்யாதொழிக; செய்வானேல் மற்று அன்ன செய்யாமை நன்று - அன்ற ஒருகான்மயக்கி லெற்றைச் செய்யுந் தன்மையனாயினனாயின், பின்னிருந்து அவ்விரங்கல் வினைச் செய்யாதொழிதல் நன்று எ-று.

இரங்குவவென முன் வந்தமையிற் பின் அன்னவெனச் சுட்டி யொழி தார் அவ்வினைகளது பன்மையான், இரக்கமும் பலவாயின. அச்செயற்கு பின்னிருந்திரங்குவனாயின், அது தீரும் வாயிலறிந்திலனெனவும், திட்பமி னெனவும், பயனில்லன செய்கின்றானெனவும், தன்பழியைத் தானே தூற்றுகின்றானெனவும், எல்லாருமிகழ்தலிற் பின்னிரங்காமை நன்றென்றா இதுவும், வினைத்தூயார் செயலாகலின், உடன் கூறப்பட்டது. பிற்றொட ருக்குச் செய்வானாயின் அவைபோல்வனவுஞ் செய்யாமை நன்றெனப் பிறரெல்லாம் இயைபறவுரைத்தார்.

(ப-ரை) எற்றென்று-(நான்செய்தது) எப்படிப்பட்டதென்று, இரங்கு (பின்தானே) இரங்குந் தொழில்களை, செய்யற்க-(ஒருகாலும்) செய்யாதிரு கக்கடவன், செய்வானேல்-ஒருகால் மயங்கி அவைகளைச் செய்வானாயின் மற்று-பின்பு, அன்ன-அவ்விரங்கல்களை, செய்யாமை-செய்யாமை, நன்று- நல்லது எ-று.

(க - ரை) தான் வருந்துந் தொழில்களைச் செய்யாதிருக்கக்கடவன் அவற்றைச் செய்வானாகிலும் பின் செய்யாமை நல்லது என்பதாம்.

(வி-ரை) தொழில் பலவாதலால் இரக்கமும் பலவாயிற்று. செய்துவிட் பின்பு இரங்குவானாயின் அது தீரும்வழி அறிந்திலனென்றும், தைரியமி னென்றும், பயனில்லாதவைகளைச் செய்கின்றானென்றும், தன்பழியை தானே தூற்றுகின்றானென்றும் எல்லாரும் இகழுவாராதலால் பின்பு இர காமை நன்றென்றார். [இரங்காமையும் நல்ல தொழில் செய்வோர் செயலா லால் உடன் சொல்லப்பட்டது.]

'எற்று' இது எத்தன்மைத்து என்னும் பொருளது. இது எகரவினா யாகப் பிறந்தபெயர். 'இரங்குதல்' இது மனம் வருத்தப்படுதல் என்னு பொருளது. 'அன்ன' என்றது இரங்குவதை. 'செய்வானேல்' இதில் 'ஏ விகுதி. இது ஆனால் என்னும் பொருள்தந்து நின்றது. (5)

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை.

(பரி-உரை) ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் - தன்னைப் பயந்தாள பசியை வறுமையாற்கண்டு இரங்குந் தன்மையனாயினானெனினு சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க-அது சுட்டி அறிவுடையார் பழிக்கு வினைகளை ஒருவன் செய்யாதொழிக எ-று.

இறந்த மூப்பினராய இருமுதுகுரவருங் கற்புடைமனைவியுங் குழவியு பசியான் வருந்துமெல்லைக்கண் தீயனபலவுஞ் செய்தாயினும் புறந்தரு வென்னும் அறநூற் பொதுவிதி பொருணூல்வழி யொழுகுதலும் அர தொழிற்குரியராதலும் நன்கு மதிக்கற்பாடுமுடைய அமைச்சர்க்கு எய்தாமை பற்றி, இவ்வாறு கூறினார். இவை ஐந்துபாட்டானும் பாவமும் பழியு பயக்கும் வினை செய்யற்க வென்பது கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவன்) ஈன்ருள்-தன்னைப் பெற்ற தாயினது, பசி-பசியை, ாண்பானுயினும்-வறுமையாலே கண்டிருக்கும் தன்மையனுயினுனெனினும், அதைக்குறித்த) சான்ரோர்-அறிவினுலே நிறைந்தோர், பழிக்கும்-நிந்திக்கின்ற, வினை-தொழில்களை, செய்யற்க-செய்யாதிருக்கக்கடவன் எ-று.

(க-ரை) தாய் பசியைக் கண்டானுயினும் அதைக்குறித்துப் பழிக்கும் தொழிலைச் செய்யாதிருக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) வயதுமுதிர்ந்த தாய்தந்தையரும், சுற்புடைய மனைவியும், குழந்தையும், பசியால் வருந்துமளவிலே நீயவை பலவும் செய்தாயினும் ாப்பாற்றுகவென்ற அறநூலிற் சொல்லப்பட்ட பொதுவிதி பொருளாலின் ழி நடத்தலும் அரசர் தொழிற்கு உரியராகலும் கண்கு மதிக்கப்படுதலும் டைய மந்திரிகளுக்கு ஆகாமைபற்றி இப்படிச்சொல்லினர். [இவை ஐந்த ாட்டாலும் பாவமும் பழியும் தருந்தொழிலைச் செய்பலாகாதென்பத சொல்லப்பட்டது.]

'ஈன்ருள்' இது 'ஈன்' என்னும் பகுதியடியாகப் பிறந்த பெயர்; தாய், பற்ருள் என்பது பொருள். 'காண்பானுயினும்' இது வறுமையால் காண ர்த்தாலும் என்பது பொருளாம். 'சான்ரோர்' என்றது அறிவு நிறைந் தாரை. (6)

பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்ரோர்
கழிநல் குரவே தலை.

(பரி-உரை) பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் - சாலாதார் நீயவினை ாச் செய்து அதனுற் பழியைத் தம்மேற்கொண்டு பெற்ற செல்வத்தின், ன்ரோர் கழி நல்குரவே தலை - அதுமேற்கொள்ளாத சான்ரோர் றுபவிக்கும் மிக்க நல்குரவே உயர்ந்தது எ-று.

நிலையாத செல்வத்தின்பொருட்டு நிலையின பழியை மேற்கோடல் ்போடு இயையாமையின், சான்ரோர்கழி நல்குரவே தலையென்ருர்.

(ப-ரை) (சான்ரோரல்லாதவர் நீயதொழில்களைச்செய்து) பழிமலைந்து- தனுற்) பழியைத தம்மேற்கொண்டு, எய்திய - பெற்ற, ஆக்கத்தின்- ல்வத்தைக்காட்டிலும், சான்ரோர் - (அது மேற்கொள்ளாத) சான்ரோ றுபவிக்கும், கழிநல்குரவே-மிகுந்த வறுமையே, தலை-உயர்ந்தது எ-று.

(க-ரை) பழியாலடைந்த செல்வத்திலும் பெரியோரனுபவிக்கும் மையே மேலாம் என்பதாம்.

(வி-ரை) நிலையில்லாத செல்வத்தின்பொருட்டு நிலபுள்ள பழியை ற்கொள்ளல் சான்ரோர் தன்மையோடு பொருந்தாமையால் சான்ரோர் ல் குரவே தலையென்ருர்.

'பழிமலைந்து' இது பழிப்பனவாய நீயவற்றைச்செய்து என்பதாம். சாலாதார் என்பது வருவித்துரைக்கப்பெற்றது. 'ஆக்கத்தில்' இதில்

'இல்' உருபு எல்லைப்பொருளில் வந்தது. 'கழிகல்குரவே' இதில் 'கழி' மிகுதிப்பொருள் காட்டவந்த இடைச்சொல். ஈற்று ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது. 'தலை' இது ஈண்டு உயர்ந்தது என்னும் பொருளது.

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும்.

(பரி-உரை) கடிந்த கடிந்த ஓரார் செய்தார்க்கு - நூலோர் கடிந்த வினைகளைத் தாமும் கடிந்தொழியாத பொருளைக்கிச் செய்த அமைச்சர்க்கு அவைதாம் முடிந்தாலும் பீழை தரும் - அவை தாயவன்மையின் முடிவு ஒருவாற்றான் முடியினும் பின்தன்பத்தையே கொடுக்கும் எ-று.

முடிதல்-கருதிய பொருள் தருதல். பீழை தருதலாகிய பொருள் தொழில் அதற்குக் காரணமாய வினைகண்மே லேற்றப்பட்டது.

(ப-ரை) கடிந்த-(நூலோர்) தள்ளிய, (தொழில்களை) கடிந்தோர் தாமும் தள்ளிவிடாராகி, செய்தார்க்கு - (பொருளைக்குறித்துச்) செய்த மந்திரிகளுக்கு, அவைதாம் - அவை தாம், (தாயவையல்லாமையால் முடி யாவாம்), முடிந்தாலும் - (ஒருவழியால்) முடிந்தாலும், (பின்) பீழை தன்பத்தை, தரும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) பெரியோர் தள்ளப்பட்ட தொழிலைக்கொள்ளப்பட்ட மந்திரி களுக்கு அத்தொழில் முன் முடியினும் பின் தன்பந்தரும் என்பதாம்.

(வி-ரை) முடிதல்-வினைத்தபொருளைத் தருதல்.

'கடிந்த' என்றது நூல்வல்லோரால் விலக்கப்பட்ட தியகாரியம் என்பதாம். 'கடிந்தொரார்' என்றது தாமும் விலக்கி ஒழிக்காதவர் என்பது. 'அவை' என்றது கடிந்தவைகள். 'முடிந்தாலும்' இதன் ஈற்றில் உள்ள உம்மை முடியாமை குறிப்பித்தது. 'பீழை' என்றது தன்பத்தை.

அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

(பரி-உரை) அழக்கொண்ட எல்லாம் அழப் போம்-ஒருவன் தீவினைசெய்து பிறர் இரக்கக்கொண்ட பொருளெல்லாம் இம்மையிலே அவன் இரக்கப்போகாநிற்கும், நற்பாலவை இழப்பினும் பிற்பயக்கும் - மற்று தாயவினையான் வந்த பொருள்கள் முன்னிழந்தானாயினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக்கும் எ-று.

பின்னெனவே, மறுமையும் அடங்கிற்று. பொருள்களான் அவற்றிற்குக் காரணமாய வினைகளது இயல்பு கூறியவாறு.

(ப-ரை) (ஒருவன்) அழக்கொண்டவெல்லாம் - தீய தொழில்கள் செய்து பிறர் இரக்கக்கொண்ட பொருளெல்லாம், அழப்போம் - தீய

லே அவன் இரங்கப்போகாநிற்கும், கற்பாலவை - மற்ற கல்ல தொழில் னால் வந்த பொருள்கள், இழப்பினும்-(முன்) இழந்தானெனினும், பிற்பயக் ம்-பின்வந்து பயன் கொடுக்கும் எ-று.

(க-ரை) பிறனழக்கொண்ட பொருள்யாவுந் தானழப்போகும் கல்வழி ல் வந்த பொருள்கள் முன்னிழந்தானெனினும் பின் பயன்கொடுக்கும் பதாம்.

(வி-ரை) பின்னெனவே மறுமையும் அடங்கிற்று. பொருள்களால் வைகளுக்குக் காரணமாகிய தொழில்களது இயல்பு சொல்லியபடி.

'அழக்கொண்ட' என்றது உடையார் அழும்படி தீவினையாற்கொண்ட ருள் என்றதாம். 'அழப்போம்' என்றது தீவினையாற் கொண்டவனை பொருடானும் அழவைத்துப் போகும் என்பதாம். 'இழப்பினும்' சற்று மையால் இழவாமை குறிப்பிக்கப்பெற்றது. 'பிற்பயக்கும்' என்றது னர் அப்பொருள் இழந்தானை வந்து அடைந்து நன்மை பயக்கும் பதாம். கற்பாலவை' என்றது கல்வினையான் வந்தெய்திய பொருள் பதாம். (9)

லத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
லந்துணீர் பெய்திரீஇ யற்று.

(பரி-உரை) சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் - அமைச்சன் தீய களாற் பொருள்படைத்து அதனால் அரசனுக்கு ஏமஞ்செய்தல், பசு லத்தான் நீர் பெய்து இரீஇயற்று-பசிய மட்கலத்தின்க ணிரைப்பெய்த ற்கு ஏமஞ் செய்ததனோடொக்கும் எ-று.

முன் ஆக்கம் பயப்பனபோற்றோன்றிப் பின்னழிவே பயத்தலால், வ சலமெனப்பட்டன. ஏமார்த்தலென்பது ஏமார்த்தலென்றுயிற்று. தையடையப்பண்ணுத லென்றவாறு. இருத்துதல்-நெடுங்கால மிருப் ய்தல். அரசனும் பொருளும் சேரப்போமென்பதாம். பிறரெல்லாம் தலென்று பாடமோதி, அதற்கு மயிழ்தலென்றும், இரீஇயற்று என் 5 வைத்தாற்போலுமென்று முரைத்தார்; அவர் அவை தன்வினையும் ன்வினையுமாய் உவமையிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர். ான்குபாட்டானும் அதற்குக் காரணம் கூறப்பட்டது.

ப-ரை) (மந்திரியானவன்) சலத்தால் - தீயதொழில்களால், பொருள் -பொருளேச்சம்பாதித்து, ஏமார்த்தல்-(அதனால் அரசனுக்குக்) காப்புச் ல், பசுமட்கலத்தின் - பசிய மண்ணின்பாத்திரத்தின், நீர்பெய்து- ார்த்து, இரீஇயற்று-(அதற்குக்) காப்புச்செய்ததனோடொக்கும் எ-று.

ரை) மந்திரி யரசனுக்கு வஞ்சிப்பால் பொருளைத் தேடிக்காத்தல் ண்பாத்திரத்தின்னே நீரைவார்த்துக் காத்தல்போலாம் என்பதாம்.

(வி-ரை) இருத்தல்-தொடுக்காலம் இருப்பாகச் செய்தல். அரசனும் பொருளும் ஒருசோப்போமென்பதாம். [இவை நான்குபாட்டாலும் அதற்கு காரணம் சொல்லப்பட்டது.]

'சலம்' என்றது நீயவழியை. 'எமார்த்தல்' இது (எமம்+ஆர்த்தல்) 'எமமார்த்தல்' என்பதன் விகாரம். 'எமம்' என்றது காவல் என்னும் பொருளது. 'பசுமட்கலம்' என்றது சுடாத மட்பாண்டத்தை. 'இரீஇயற்று' என்றது செய்ததை ஒக்கும் என்பதாம். இது இன்னிசை அளபெடை. (10)

66-ம் அதி - வினைத்தூய்மை - முற்றிற்று.

67-ம் அதிகாரம்—வினைத்திட்பம்

(பரி-உரை) அஃதாவது: அத்தூய வினை முடிப்பானுக்கு வேண்டுவதாம் மனத்திண்மை. அதிகாரமுறைமையும் இதனுனே விளக்கும்.

(உரை) அஃதாவது: அப்பரிசுத்தமாகிய தொழிலை முடிப்பவனுக்கு வேண்டுவதாகிய மனவலிமையாம். அதிகாரமுறைமையும் இதனுலேயே விளக்கும்.

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப மற்றைய வெல்லாம் பிற.

(பரி-உரை) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்-வினைசெய்தற்கட்டிண்மையென்று சொல்லப்படுவது அதனை முடித்தற்கு உரியனாகிய ஒருவன் மனத்தினது திண்மை; மற்றைய எல்லாம் பிற-அஃது ஒழிந்தனவாகிய எல்லாம் அதற்குத் திண்மையென்று சொல்லப்படா எ-று.

ஒழிந்தனவாவன - படை, ஆண், கட்பு முதலியவற்றின் திண்மைகளாம். அவையும் அதற்கு வேண்டுவனவாய் இனமாகலின் மற்றையவென்றும் வேண்டினும் அஃதில்வழிப் பயனிலவாகலிற் பிறவென்றுங் கூறினர். இதனுல் வினைத்திட்பமாவது இன்னதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) வினைத்திட்பமென்பது - தொழில் செய்புமிடத்து வலிமையென்று சொல்லப்படுவது, ஒருவன்-(அதனை முடித்தற்குரிய) ஒருவனது மனத்திட்பம்-மனத்தினது வலிமையாம், மற்றையவெல்லாம்-அது நீக்கலான வல்லமைகளெல்லாம், பிற - (அதற்கு) வலிமையென்று சொல்லப்படுவன வல்ல எ-று.

(க-ரை) தொழில் வலிமையென்று சொல்லப்படுவது ஒருவன் மனவலிமையாம். மற்ற வலிமை பிதற்கு நிகரல்லவாம் என்பதாம்.

(வி-ரை) அது நீக்கலானவை-படை ஆண் கட்பு முதலானவைகளின் வலிமைகள். அவையும் அதற்கு வேண்டுமவையாய் இனமாகலால் மற்றை யென்றும், அவை வேண்டியவையாயிருந்தாலும் அம்மனவலி இல்

விடத்தே பயனிலவாகலால் பிறவென்றும் சொல்லினர். [இதனால் வினைத்திட்பமாவது இன்னதென்று சொல்லப்பட்டது.]

'வினைத்திட்பம்' என்றது வினைசெய்தற்கண்ணதாய நிண்மையை. 'ஒருவன் மனத்திட்பம்' என்றது வினைசெய்பவனின் மனத்தின் நிண்மையாம். மனத்திட்பம் என்றது மனோநிடத்தை. 'மற்றையவெல்லாம்' என்றது படை, அரண், கட்பு முதலியவற்றை. 'பிற' என்றது நிண்மையல்லாதனவைகள் என்பதாம். என்னை? அவைகள் எல்லாம் மனோநிடம் இல்லாதபோழ்து பயனிலவாதலின் 'பிற' என்றார்.

(1)

ஊறொரா லுற்றபி னெல்காமை யிவ்விரண்டி
னிறென்ப ராய்ந்தவர் கோள்.

(பரி-உரை) ஆய்ந்தவர் கோள்-முன் நீதியாராய்ந்த அமைச்சரது கணிபு, ஊற ஓரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறு என்பர்-பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும் செய்யும்வினை-தெய்வத்தாற் பழுதுபட்டவழி அதற்குத் தளராமையுமாகிய இவ்விரண்டன் வழியெனபர் நூலோர் எ-று.

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளிகளது கணிபு தொகுத்தப் பின் * நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்ற மையின், ஈண்டு வினைத்தூய்மையும் உடன் கூறினர். உறுதலுடையதனை முன் ஊறென்றமையின், உற்றபினென்றும், இவ்விரண்டின்கண்ணே பட்டதென்பார் இரண்டினிறென்றுங் கூறினர். ஊறொராவென்ற பாடம் ஓதலாருமுளர். அஃது ஒல்காமையென்னு மெண்ணோடும் இரண்டென்னுந் தொகையோடும் இயையாமை அவரறிந்திலர்.

(ப-ரை) ஆய்ந்தவர்-(முன்பு நீதிநூலை) ஆராய்ந்த மந்திரிகளது, கோள்-கணிவு, ஊற-பழுதுபடுந்தொழிலை, ஓரால்-செய்யாமையும், உற்றபின்-(செய்யும்) தொழில் ஊழினுலே பழுதுபட்டவிடத்து, ஒல்காமை-(அதற்குத) தளராமையும் ஆகிய, இவ்விரண்டின்-இவ்விரண்டினது, ஆறு-வழியாகும், என்பர்-என்று (நூலோர்) சொல்லுவர் எ-று.

(க-ரை) மந்திரிகள் கணிவானது பழுதுபடுந் தொழிலைச் செய்யாமையும் அத்தொழிற் பழுதாகிற் றளராமையுமாம் என்பதாம்.

(வி-ரை) தேவர்க்கும் அசுரர்க்கும் மந்திரிகளாகிய பிரகற்பதி சுக்கிரன் இவர்களது கணிவைத தொகுத்தப் பின்னே நீதிநூலுடையோராலே சொல்லப்பட்டபடியே சொல்லுகின்றமையால் இங்கே வினைதூய்மையும் உடன் சொல்லினர்.

'ஊறோரால்' என்றது பழுதருஞ் செயல்களைச் செய்யாது இருத்தல். (ஓரால்-நீக்குதல், விலக்கல், ஒழிததல் என்னும் பொருளது) 'உறறபின்' என்றது செய்வினை தெய்வத்தால் பழுதுபட்டகாலை யன்பதாம். 'ஒல்காமை'

* ஈண்டு நீதிநூலுடையார் என்றது சாணக்கியரையும் காமந்தகரையும்.

இத மனம் தளர்ச்சி அடையாமை என்பதாம். 'ஆற' என்றத வழியை. 'ஆய்ந்தவர்' என்றத நீதிநூற்களை ஆய்ந்த அமைச்சரை. 'இவ்விரண்டின்' இதில் 'இவ்' என்றத வவ்விறசட்டு. (2)

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்
னெற்ரு விழுமந் தரும். [கி

(பரி-உரை) கடைக் கொட்கச் செய்தக்கத ஆண்மை - செயப்படும் வினையை முடிவின்கட் புலப்படும்வகை முன்னெல்லாம் மறைத்துச் செய்வதே திட்பமாவத, இடைக் கொட்கின் எற்ரு விழுமம் தரும்-அங்ஙன மன்றி இடையே புலப்படுமாயின் அப்புலப்பாடு செய்வானுக்கு நீக்காத இடும்பையைக் கொடுக்கும் எ-று.

மறைத்துச் செய்வதாவத - அங்கமைக்கும் எண்ணியவாறு பிறரறி யாமலும்; தானறிந்ததூடும், தன்னிக்ஙிதம் - வடிவு - செயல் - சொற்களால் அவர் உய்த்துணராமலும் அடக்கிச்செய்தல். அத்திட்பம், ஆண்டன்மையால் வருதலின், ஆண்மையெண்ப்பட்டத. எற்ரு விழுமமாவன - பகைவர் முன்னறிந்த அவ்வினையை விலக்குதல், செய்வானை விலக்குதல் செய்வாராகலின், அவற்ரான் வருவன. விழுமம் சாதிப்பெயர். இவை யிரண்டுபாட்டானும் அதனத பகுதி கூறப்பட்டத.

(ப - உ) (செய்யப்படுந்தொழிலை) கடை-முடிவிலே, கொட்க - சுழல, (வெளிப்படவென்றபடி) செய்தக்கத-அதற்கு முன்னெல்லாம் (மறைத்துச்) செய்வதே, ஆண்மை-வலிமையாகும், இடை-நடுவிலே, கொட்கின்-வெளிப் படுமாயின், (அவ்வெளிப்படுதல்) எற்ரு-நீக்கப்படாத, விழுமம்-துன்பத்தை, தரும்-செய்தவனுக்குக் கொடுக்கும் எ-று.

(க-உ) தொழிலை மறைத்த முடிவிற செய்வதே வலிமையாம், அத நடுவில் வெளிப்படுமாகிற் றுன்பமாம் என்பதாம்.

(வி - உ) மறைத்துச் செய்தலாவத சேனை முதலாகிய ஐந்த அங்கங்களும் எண்ணியவிதத்தை பிறர் அறியாதிருக்கவும்; தான் அறிந்த தையும், தன்னிக்ஙிதம், வடிவு, செயல், சொற்களால் அவர் ஆலோசித்த அறியாதிருக்கவும் அடக்கிச்செய்தல். அத்துன்பங்களாவன பகைவர் முன்னறிந்த அத்தொழிலை விலக்குதலும், செய்வானை விலக்குதலும் செய்வாராதலால் அவ்விலக்குதல்களால்வருவன. [இவை இரண்டுபாட்டாலும் அதன் பகுதி சொல்லப்பட்டத.]

'கொட்க' இத சுழல என்னும் பொருளத. ஈண்டு வெளிப்பட என்பதாம். 'செய்தக்கத' என்ற இடத்த மறைத்துச் செய்யத்தக்கத என்பதாம். ஈண்டு 'மறைத்த' என்றத வருவித்த உரைக்கப்பெற்றத. 'இடைக்கொட்கின்' இத மத்தியில் வெளிப்படுமாயின் என்பதாம். 'எற்ரு' இத விலக்கற்கரிய, தடுக்கவொண்ணாத என்னும் பொருளத. 'விழுமம்' இத சேது 'துன்பம்' என்னும் பொருளத. (3)

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

(பரி-உரை) சொல்லுதல் யார்க்கும் எளிய - யாம் இவ்வினையை இவ்வாற்றுற் செய்தமென கிரல்படச் சொல்லுதல் யாவர்க்குமெளிய, சொல்லிய வண்ணம் செயல் அரியவாம் - அதனை அவ்வாற்றுனே செய்தல் யாவர்க்கு மரியவாம் எ-று.

சொல்லுதல், செயல் என்பன சாதிப்பெயர். அரியவற்றை யெண்ணிச் சொல்லுதல் திட்பமில்லாதார்க்குமியறலின், எளியவென்றார். இதனால் அதனது அருமை கூறப்பட்டது.

(ப-ரை) சொல்லுதல் - (இத்தொழிலை இவ்விதத்தாலே செய்வோமென்று ஒழுங்குபடச்) சொல்லுதல், யார்க்கும்-எவர்க்கும், எளிய-எளியவையாகும், (அதனை) சொல்லியவண்ணம் - அச்சொல்லப்பட்ட விதத்தால், செயல்-செய்தல், அரியவாம்-அரியவையாம்.

(க-ரை) தொழில் செய்வோமென்றல் யார்க்குமெளிதாம் அதைச் சொல்லியபடி செய்தலரிதாம் என்பதாம்.

(வி-ரை) அரியவைகளை எண்ணிச் சொல்லுதல் மனவலிமை யில்லாதார்க்கும் கூடுமாதலால், எளியவென்றார். [இதனால் அதனது அருமை சொல்லப்பட்டது.]

'யார்க்கும்' என்றது ஆற்றல் இல்லாதார்க்கும் என்னும் பொருளது. செயல்' இது செய்தல் என்னும் பொருளது. 'அரியவாம் சொல்லிய வண்ணம்செயல்' ஈண்டும் 'யார்க்கும்' என்னுஞ்சொல் வருவித்து உரைக்கப் பெற்றது. ஈண்டு யார்க்கும் என்றது எத்தகைப் போாற்றலுடையவர்க்கும் என்பது பொருளாம்.

(4)

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும்.

(பரி-உரை) வீறு எய்தி மாண்டார் வினைத்திட்பம் - எண்ணத்தாற் சிறப்பெய்தித் பிறவிலக்கணங்களாலும் மாட்சிமைப்பட்ட அமைச்சரது வினைத்திட்பம், வேந்தன்கண் ஊறு எய்தி உள்ளப்படும் - வேந்தன்கண்ணே உறுதலையெய்தலான், எல்லாராலும் நன்கு மதிக்கப்படும் எ-று.

வேந்தன்கணூறெய்தல்-எடுத்தவினை அதனன் முற்றப்பெற்றச் செல்வமும் புகழும் அவன்கண்ணவாதல். எய்தலானென்பது திரிக்க நின்றது. உள்ளம்-மதிப்பான் மறவாமை. இதனால் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) வீறெய்தி-(எண்ணத்தினாலே) சிறப்பை அடைந்து, மாண்டார்-மற்றை யிலக்கணங்களாலும்) மாட்சிமைப்பட்ட மந்திரிகளது, வினைத்

திட்பம்-தொழில் வலிமையானது, வேந்தன்கண்-அரசனிடத்து, ஊறெய்தி-ஊறுதலில அடைதலாலே, உள்ளப்படும்-(எல்லாராலும்) நன்கு மதிக்கப்படும் எ-று.

(க-ரை) மந்திரிகன் தொழில் வலிமையானது அரசனிடத்துப் பொருந்துதல் யாவராலு மதிக்கப்படும் என்பதாம்.

(வி-ரை) வேந்தன்கணூறெய்தல்-எடுத்ததொழில் அதனால் முடித்தே செல்வழும் புகழும் அவனிடத்தே உண்டாதல். [இதனால் அதன் சிறப்புச் சொல்லப்பட்டது]

'வீறு' என்றது சிறப்பை; நன்கு என்னைத்தாற் சிறப்பெய்தி என்ற உரை உரைக்கப்பெற்றது. 'மாண்டார்' என்றது சிறந்தோர் என்னும் பொருளது. நன்கு பிற இலக்கணங்களால் மாட்சிமைப்பட்டோர் எனப் பெற்றது. 'வினைத்திட்பம்' என்றது வினைத்திடத்தை. 'வேந்தன்கண் ஊறெய்தி' என்றது அரசனிடத்து உறுதலைப்பெற்ற என்பதாம். உறவது ஊற என்பது நன்கு உணர்ற்பாலது. 'உள்ளப்படும்' என்றது எல்லாராலும் நன்கு மதிக்கப்படுதலை. (5)

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

(பரி-உரை) எண்ணிய எண்ணியாக்கு எய்துப-தாமெய்த எண்ணிப் பொருள்க ளெல்லாவற்றையும் அவ்வெண்ணியவாறே எய்துவர், எண்ணியார் திண்ணியராகப்பெறின்-எண்ணியவர் அவற்றிற்கு வாயிலாகிய வினைக்கட் டிண்மையுடையராகப் பெறின் எ-று.

எளிதினெய்துபவென்பார், எண்ணியாங்கெய்துபவென்றார். அவர் அவ்வாறல்ல தெண்ணுமெயிற் றிண்ணியராகவே வினைமுடியும், அது முடிய அவை யாவையுங் கைகூடுமென்பது கருத்து. இதனால் அஃதுடையார் செய்தும் பயன் கூறப்பட்டது.

(ப-ரை) எண்ணிய-(தம்மால்) எண்ணப்பட்ட பொருள்களெல்லாம், எண்ணியாங்கு-அவ்வெண்ணியபடியே, எய்துப-அடைவார், எண்ணியார்-(அவ்வெண்ணப்பட்ட பொருள்களுக்கு) வழியாகிய தொழிலிடத்தே, திண்ணியராகப்பெறின்-வலிமை புடையவராகப்பெற்றால் எ-று.

(க-ரை) தொழில் வலிமையுடையவராகில் கினைக்கப்பட்ட பொருள் கினைத்தபடி பெறுவார் என்பதாம்.

(வி-ரை) எளிதிலே அடைவாரென்றற்கு எண்ணியாங்கெய்துபவென்றார். அவர் அப்படியல்லாமல் எண்ணுமையில் வலிமையை புடையவராகவே தொழில் முடியும். அத்தொழில் முடியவே அவை எல்லாம் கைகூடுமென்பது கருத்து. [இதனால் அதனையுடையவர் அடையும் பயன் சொல்லப்பட்டது.]

'எண்ணிய' என்ற சொல் பன்முறை அதேபொருளில் வந்தமையான் சொற்பொருட் பின்வருநிலையணி. 'ஆங்கு' இது அவ்விதமே என்னும் பொருளது. 'திண்ணியர்' என்றது வினைத்திட்பம் உடையர் என்னும் பொருளது. 'பெறின்' இது பெற்றால் என்னும் பொருளது. (6)

உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தே
கச்சாணி யன்ன ருடைத்து. [ர்க்

(பரி-உரை) உருள் பெருந்தேர்க்கு அச்சு ஆணி அன்னர் உடைத்து. நனாகின்ற பெரிய தேர்க்கு அச்சின்கண் ஆணிபோல வினைக்கட்டிண்ணி ரையுடைத்து உலகம், உருவு கண்டு எள்ளாமை வேண்டும் - அதனால் வரை வடிவின் சிறுமை நோக்கி இகழ்தலை யொழிக எ-று.

சிறுமை, எள்ளாமைவேண்டும் என்பதனாலும், உவமையாலும் பெற்றும். ச்ச-உருள் கோத்த மரம். ஆணி - உருள் கழலாது அதன்கடைக்கட் ருகுமது; அது வடிவாற் சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைக் கொண் க்குந் திட்பமுடைத்து; அதுபோல, வடிவாற் சிறியராயிருந்தே பெரிய னைகளைக் கொண்டெய்க்குந் திட்பமுடைய அமைச்சருமுளர். அவரை ந்திட்பநோக்கி அறிந்துகொள்க வென்பதாம் இதனால் அவரை யறியுமாறு ப்பட்டது.

(பரை) (உலகமானது) உருள்-உருளாநின்ற, பெருந்தேர்க்கு - பெரிய ர்க்கு, அச்சாணியன்னர்-அச்சினிடத்தே ஆணிபோல் தொழிலினிடத்தே மையை புடையவரை, உடைத்து-உடையது, (அதனால்) உருவுகண்டு-வர்) வடிவினிடத்தே சிறுமை நோக்கி, எள்ளாமை வேண்டும்-(அவரை) ழாமை வேண்டும் எ-று.

(க-ரை) உலகம் தேர்க்கச்சாணிபோலத் தொழிலில் வலிமையுள் ாரைபுடையது. அதனால் வடிவுகண்டொருவரையிகழலாகாது என்பதாம்.

(வி-ரை) எள்ளாமை வேண்டுமென்றதனாலும், உவமானத்தாலும் மை வருவிக்கப்பட்டது. அச்சு - உருள்கோத்தமரம். ஆணி - உருள் ாமல் அதன் சடையிலே செருகுவது அது வடிவினாலே சிறிதாயிருந்தே பரிய பாரத்தைக்கொண்டு செலுத்துகிற வலிமையுடைத்தாதல்போல வினாலே சிறியராயிருந்தே பெரிய தொழிலைக்கொண்டு செலுத்துகிற மையுடைய மந்திரிகளும் உண்டு. அவரை அவ்வலிமை நோக்கி அறிந்து ாள்க வென்பதாம். [இதனால் அவரை அறியும்விதம் சொல்லப்பட்டது.]

'உருவு' என்றது தேகவடிவை. 'எள்ளாமை' என்றது இகழாமை. ள்ளாமை' என்னுங் குறிப்பால் உருவு என்பதற்கு உருவத்தின் சிறுமை ன 'சிறுமை' என்ற சொல் வருவித்து உரைக்கப்பெற்றது. 'உருள் பெருந் ர்க்கு அச்சாணி அன்னர் உடைத்து' என்றது உவமை. (7)

கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

(பரி-உரை) கலக்காத கண்ட வினைக்கண் - மனந்தெளிந்த செய்
தாகத் தணிந்த வினைபின்கண், தளக்காத தாக்கம் கடிந்த செயல் - பி
னைசதலின்றி கீட்டித்தலை யொழிந்த செய்க எ-று.

கலங்கியவழி ஒழிவதம் செய்வதபோற் றோன்றுமாகலின், தெளி
பலகால்ஆராய்ந்த தாஞ்செய்வதாக ஓர்ந்த வினையைக் கலக்காத கண்
வினையென்றார். தளக்காமை-நிட்பமுடைமை.

(ப-உரை) கலக்காத (மனம்) தெளிந்த, கண்ட-(செய்வதாகத்) தணி
வினைக்கண் - தொழிலிடத்த, தளக்காத - (பின்) அசைதலில்லாய
தாக்கங்கடிந்த-ஊலசியத்தை ஒழித்த, செயல்-செய்யச்கடவர் எ-று.

(க-உரை) மனந்தெளிந்த செய்யத்தணிந்த தொழிலிடத்த ஆல
மில்லாம லத்தொழிலைச் செய்யக்கடவர் என்பதாம்.

(வி-உரை) கலங்கியவிடத்த ஒழிவத செய்வதபோல் தோன்றுமாகலா
தெளிந்த பலகால் ஆராய்ந்தாலும் செய்வதாத லொத்த தொழிலை கலக்கா
கண்டவினை என்றார். தளக்காமை-வலிமையுடைமை.

'கலக்காத' என்றத மனங் கலங்காத என்பதாம்; அதாவது மன
தெளிவுடன் என்பத பொருளாம். 'கண்ட' என்றத மேற்கொண்ட என்ற
பொருளத. 'தளக்காத' என்றத மனச்சலனமின்றி என்பதாம். அதா
சலிப்புறுத என்பதாம். 'தாக்கம்' என்றத ஈண்டு தாமதித்தலை. 'தாக்
கடிந்த' என்றத தாமதத்தை யகற்றி என்பதாம்.

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

(பரி-உரை) துன்பம் உற வரினும் - முதற்கண் மெய்ம்முயற்சியா
றமக்குத் துன்பம் மிக வருமாயினும், இன்பம் பயக்கும் வினை துணி
ஆற்றிச்செய்க - அதுநோக்கித் தளராத முடிவின்கண் இன்பம் பயக்கு
வினையைத் திட்பமுடையராய்ச் செய்க எ-று.

துணிவு-கலங்காமை. அஃதடையார்க்கல்லத கணிகமாய முயற்சி
துன்பநோக்காத கிலபுதலுடைய * பரிணாமவின்பத்தை நோக்கிச் செய்
கூடாமையின், துணிவாற்றிச்செய்கவென்றார். இவை பாண்டுபாட்டா
அவர் வினைசெய்புமாற கூறப்பட்டத.

(ப-உரை) (முதலிலே மெய்ம்முயற்சியிலலே) துன்பம் - துன்பமான
உறவரினும் - (தமக்கு) மிகவரினும், (அதுகண்டு தளராமல்), இன்ப
சுகத்தை, பயக்கும் - (முடிவிலே) தருகின்ற, வினை-தொழிலை, துணிவாற்
வலிமையுடையராய், செய்க-செய்யக்கடவர் எ-று.

(க-உரை) துன்பம்வரினு மின்பந்தரும் தொழிலைச் செய்யக்கட
ரென்பதாம்.

---

* பரிணாமவின்பம்-முடிவிலுளதாகுஞ்சுகம்.

(வி-ரை) தணிவு - கலங்காமை. அக்கலங்காமை புடையவர்க்கல்ல திதகாலத்திலே நீக்குவதாகிய முயற்சித்தன்பம் நோக்காமல் அதனால் ண்டாய் கிலபெறும் இன்பத்தை நோக்கிச்செய்தல் கூடாமையாலே, ணிகாற்றிச்செய்கவென்றார். [இவை இரண்டுபோட்டாலும் அவர் தொழில் ய்யும்விதம் சொல்லப்பட்டது.]

'உறவரினும்' இதில் 'உற' என்றது மிகுதிப்பொருள் தந்தது. 'தணி ாற்றி' என்றது மனோதிட்பத்தைக்கொண்டு என்பதாம். (9)

வினைத்திட்ப மெய்திபக் கண்ணும் வினைத்திட்பம் வேண்டாரை வேண்டா துலகு.

(பரி-உரை) வினைத்திட்பம் வேண்டாரை - வினைத்திட்பத்தை இத க்குச் சிறந்ததென்ம கொள்ளாத அமைச்சரை, வினைத்திட்பம் எய்திபக் ண்ணும் - ஒழிந்த திட்பங்களெல்லாமுடையாராயவிடத்தும், வேண்டாத லகு-கன்குமதியார் உயர்ந்தோர் எ-று.

மனத்தின்கட்டிட்பமில்லாதார்க்குப் படை, அரண் கட்பு முதலிய ற்றின் திட்பங்களெல்லாம் உளவாயினும், வினை முடியாதாம்; ஆகவே, வையெல்லாங் கெடுமென்பதுபற்றி உலகு வேண்டாதென்றார். இதனால் னைத்திட்பமில்லாதாரை இழிபு கூறப்பட்டது.

(ப-ரை) உலகு - உயர்ந்தோர், வினைத்திட்பம் - தொழில் வலிமையை, ண்டாரை - (இது நமக்குச் - சிறந்ததென்று) கொள்ளாத மந்திரிகளை, னைத்திட்பம் - அவை நீங்கலாகிய வலிமைகளெல்லாம், எய்தியக்கண்ணும்- டையவராகிய விடத்தும், வேண்டாது-நன்கு மதியார் எ-று.

(க-ரை) உயர்ந்தோர் தொழில் வலிமையை விரும்பாத மந்திரிகளை தியார் என்பதாம்.

(வி-ரை) மனத்தினிடத்திலே வலிமையில்லாதவர்க்கு படை, அரண், ட்பு முதலானவைகளின் வலிமைகளெல்லாம் உண்டாயினும் தொழில் டியாமையால் அவ்வலிமைகளெல்லாம் கெடுமென்பதுபற்றி உலகு ண்டாதென்றார். [இதனால் தொழில் வலிமையில்லாதவரை இழிவு சால்லப்பட்டது.]

'வினைத்திட்பம்' என்றது மனோதிட்பம் ஒழிந்த வினைய திட்பங்களை. தகாலினுடியாகப் பிறந்தபெயர். 'எய்தியக்கண்ணும்' இது உண்டான டத்தும் என்னும் பொருளதாம். 'உலகு' என்றது உயர்ந்தோராகிய றிவுசான்றோரை. 'வேண்டாது' என்றது நன்கு மதித்துக்கொள்ளாது ற்பதாம். (10)

67-ம் அதி - வினைத்திட்பம் - முற்றிற்று.

68-ம் அதிகாரம்—வினைசெயல்வகை

(பரி-உரை) அஃதாவது: அத்திட்பமுடையவமைச்சன் அவ்வினை செய்புந்திறம். அதிகாரமுறைமையும் இதனுனே விளக்கும்.

(உரை) அஃதாவது: அவ்வலிமையுடைய மந்திரியானவன் அத்தொழிலைச் செய்புந்திறமாம். அதிகார முறைமையும் இதனுனே விளக்கும்.

சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு தாழ்ச்சியுட் டங்குத நீது.

(பரி-உரை) சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல்-விசாரத்திற்கு எல்லையாக விசாரிக்கின்றுன் இனி இது தப்பாதென்னுந் துணிவினைப் பெறுதல், அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் நீது அங்ஙனந் துணிவுபெற்ற வினை பிற்பட்டுப் பின்கட்டங்குமாயின், அது குற்றமுடைத்து எ-று.

சூழ்ச்சிமுடிவு துணிவெய்த லெனவே, துணிவெய்துமளவுஞ் சூழவேண்டு மென்பது பெற்றும். பின்னர்த் துணிவு ஆகுபெயர். நீட்டிப்பு-செய்யுங் காலத்துச் செய்யாமை. அஃதன்வழிக் காலக்கழிவாகலானும் பகைவர் அறிந்தழித்தலானும் முடியாமையின், அதனைத் நீதென்றுர்.

(பதவுரை) சூழ்ச்சி-ஆலோசனைக்கு, முடிவு எல்லையாவது, துணிவெய்தல் (ஆலோசிப்பவன் இனி இது தப்பாதென்னுங்) துணிவைப்பெறுதல், அத்துணிவு-அப்படித் துணிவுபெற்ற தொழில், தாழ்ச்சியுள்-(பின்) ஆலசியத்தில் தங்குதல்-தங்குதல், நீது-குற்றமுடையதாம் எ-று.

(க-ரை) ஆலோசனைக் கெல்லையாவது துணிவுபெறுதல் அத்துணிவு பின்னலசியப்படுதல் குற்றம் என்பதாம்.

(வ்-ரை) சூழ்ச்சி முடிவு துணிவெய்த லென்றதனுல் துணிவுபெறுவரைக்கும் ஆலோசிக்கவேண்டுமென்பதாயிற்று. பின்வந்த துணிவு-அதுபெற்ற தொழிலுக்கு ஆதலால் ஆகுபெயர். ஆலசியமுண்டானவிடத்துக் காலக்கழிவாகலாலும் பகைவர் அதை அறிந்து அழித்தலாலும் முடியாமையால் அதனைத் நீதென்றுர்.

'சூழ்ச்சி' என்றது ஆராய்ச்சி என்றதாம். 'முடிவு' என்றது முடிவெல்லையை. 'துணிவு எய்தல்' என்றது துணிவுபிறத்தலை. 'தாழ்ச்சி' என்றது காலநீட்டிப்பை; அதாவது தங்குதலை உணர்த்நின்றது. 'நீது' இது நீங்கு தருவதாகும் என்றதாம்.

தாங்குக தாங்கிச் செயற்பால தாங்கற்க தாங்காது செய்யும் வினை.

(பரி-உரை) தாங்கிச் செயற்பால தாங்குக - நீட்டித்துச் செய்புபகுதியவாய வினைகளுன் நீட்டிக்க, தாங்காது செய்யும் வினை தாங்கற்க நீட்டியாது செய்யும் வினைகளுன் நீட்டியாதொழிக எ-று.

இருவழியும் இறைக்கட் டொக்க ஏழாவது விரிக்கப்பட்டது. இருவகை வினைகளும் வலியானும் காலத்தானும் அறியப்படும். மாறிச் செயின், அவை வாயாவென்பது கருத்து. * மேற்றாக்காமை யென்றார், ண்டு அதனைப் பகுத்துக் கூறினார். இவை இரண்டுபோட்டானும் பொது. வகையால் வினைசெய்யுந்திறன் கூறப்பட்டது.

(ப-ரை) தூங்கி-ஆலசியத்து, செயற்பால-செய்யும் பகுதியையுடைய தொழில்களுள், தூக்குக - ஆலசியம் பண்ணக்கடவன், தூக்காது - ஆலசியம் பண்ணாமல், செய்யும் வினை-செய்யுந் தொழில்களுள், தூக்கற்க-ஆலசியம் பண்ணாதிருக்கக்கடவன் எ-று.

(க-ரை) ஆலசியமாகச் செய்யுந் தொழில்களை ஆலசியமாகச் செய்யக் கடவன். விரைவாகச் செய்யுந் தொழில்களை விரைவாகச் செய்யக்கடவன் என்பதாம்.

(வி - ரை) இருவகைத் தொழில்களும் வலியாலும் காலத்தாலும் அறியப்படும். மாறிச்செய்தால் அவை பலியாமற் போமென்பது கருத்து. முன்னே தூக்காமை என்றதை இங்கே பகுத்துச் சொல்லினார். [இவை இரண்டு பாட்டாலும் பொதுவகையால் தொழில் செய்யுந்திறம் சொல்லப் பட்டது.]

இக்குறளில் 'தூக்கு' என்ற சொல் பன்முறை அதேபொருளில் வந்தமையால் சொற்பொருட் பின்வருநிலையணி. 'தூங்கிச் செயற்பால' என்றது பொறுத்த இருந்து காலநீட்டித்துச் செய்யவேண்டியவைகளை என்பதாம். 'தூக்காது செய்யும் வினை' என்றது விரைந்து செய்யுந் தொழில் என்பதாம்.

(2)

ஒல்லும்வா யெல்லாம் வினை நன்றே யொல்லாக்காற் செல்லும்வாய் நோக்கிச் செயல்.

(பரி-உரை) ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்று - வினை செய்யுங்கால் இயலுமிடத்தெல்லாம் போராற் செய்தல் நன்று, ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கிச் செயல்-அஃது இயலாவிடத்து வினை மூன்று உபாயத்தன்னும் அது முடிவது ஒருபாயநோக்கிச் செய்க எ-று.

இயலுமிடம்-பகையிற்றான் வலியனைய காலம் அக்காலத்தைத் தண்டமே ன்றென்றார், அஞ்சுவது அதற்கேயாகலின். இயலாவிடம்-ஒத்தகாலமும் மெலியகாலமும். அவ்விரண்டு காலத்தும் -சாம பேத தானங்களுள் அது முடியுமுபாயத்தாற் செய்கவென்றார். அவை ஒன்றற்கொன்று வேறுபா டையவேனும் உடம்படுத்தற்பயத்தாற் றம்முளொக்குமாகலின். இதனுள் லியான், ஒப்பான், மெலியான் என சில மூவகைத்தென்பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன.

* திருக்குறள்: 39-ம் அதி. இறைமாட்சி-8.

(ப-ரை) (தொழில் செய்யும்போது) ஒல்லும் வாயெல்லாம்-கூடுமிடத் தெல்லாம், வினை-தண்டஞ்செய்தல், கன்று-கல்லதாகும், ஒல்லாக்கால்-(அது) கூடாதவிடத்து, (மற்றை மூன்று உபாயங்களிலே) செல்லும் வாய் நோக்கி. (அது) முடிவதோருபாயம் நோக்கி, செயல்-செய்யக்கடவன் எ-று.

(க-ரை) குற்றங் கூடுமிடத்தெல்லாந் தண்டித்தல் கல்லது, அது கூடாவிடத்து மூன்றுபாயங்களாற் செய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) கூடுமிடம் - பகைவனிலும் தான் வலியனாகிய காலம், அக்காலத்திலே பகைவர் தண்டத்துக்கே அஞ்சுவராகலால், அத்தண்டமே கன்றென்றார். கூடாதவிடம்-ஒத்தகாலமும், இளைத்தகாலமும் ஆம். [இதனுள் வலிமை, ஒப்புமை, மெலிமை, என மூலை மூவகைப்படுமென்பதும் அவைகளுள் வலிமையினது சிறப்பும் சொல்லப்பட்டன.]

'ஒல்லும்வாய்' என்றது செய்ய இயலும் இடத்து என்பதாம். 'வினை கன்றே' என்றது போர்செய்யும் வினை கல்லது என்பதாம். 'ஒல்லாக்கால்' என்றது போர் செய்ய இயலாதகாலத்து என்பதாம். 'செல்லும்வாய்' என்றது சாம, பேத, தானம் என்னும் மூன்றனுள் செல்லுவதொன்றை ஆராய்ந்து ஒன்றைநோக்கிச் செய்க என்பதாம். (3)

வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

(பரி-உரை) வினை பகை என்ற இரண்டின் எச்சம்-செய்யத் தொடங்கிய வினையும் கினையத்தொடங்கிய பகையுமென்று சொல்லப்பட்ட இரண்டனது ஒழிவும், நினையுங்கால் தீயெச்சம்போலத் தெறும்-ஆராயுங்கால் தீயினது ஒழிவுபோலப் பின் வளர்ந்து கெடுக்கும் எ-று.

இனி இக்குறை என்செய்வதென்று இகழ்ந்தொழியற்க, முடியச்செய்க வென்பதாம். பின் வளர்தலொப்புமைபற்றிப் பகையெச்சமும் உடன் கூறினார். இதனுள் வலியான் செய்யுந்திறங் கூறப்பட்டது.

(ப-ரை) வினை - (செய்யத்தொடங்கிய) தொழிலும், பகை-(அழிக்கத் தொடங்கிய) பகையும், என்றிரண்டின்-என்று சொல்லப்பட்ட இரண்டினது, எச்சம்-குறையும், நினையுங்கால்-ஆராயுமிடத்து, தீயெச்சம்போல - தீயினது குறைபோல், தெறும்-(பின் வளர்ந்து) கெடுக்கும் எ-று.

(க-ரை) தொழிலும் பகையும் அக்கினிபோல் வளர்ந்து கெடுக்கும் என்பதாம்.

(வி-ரை) இனி இக்குறை என்னசெய்யமாட்டுமென்று இகழ்ந்து விட்டு விடாமல் முடிவுபெறச்செய்க வென்பதாம். பின் வளர்தல் ஒப்புமைபற்றிப் பகையெச்சமும் உடன் சொல்லினார். [இதனால் வலியதன் செய்யுந்திறம் சொல்லப்பட்டது.]

'வினைஎச்சம்' என்றது போர்செய்யுந் தொழிலின் மீதத்தை. அதாவது போரை முடியச்செய்யாது சிறிது எஞ்சி நிற்கச்செய்வது என்பதாம். 'பகை எச்சம்' என்றது பகைச்சேடத்தை. 'தீயெச்சம்' என்றது உவமை. தீயை முற்றும் தொலைக்காது சிறிதாயினும் எஞ்சி நிற்காவிட்டால் பின்னர் அது பெருகி அழிப்பதுபோல வினைஎச்சமும், பகைஎச்சமும் வளர்ந்து அழிக்கும் என்பது உவமையாற் பெற்றாம். உம்மைகள் செய்யுள்நோக்கித் தொக்கு நின்றன. 'நினையுங்கால்' இது ஆராயுமிடத்து என்பதாம். (4)

பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்து மிருடீர வெண்ணிச் செயல்.

(பரி-உரை) பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும் - வினை செய்யுமிடத்துப் பொருளுங் கருவியுங் காலமும் வினையும் இடனுமாகிய இவ்வைந்தனையும், இருள் தீர எண்ணிச் செயல் - மயக்கமறவெண்ணிச் செய்க எ-று.

எண்ணொடு பிறவழியுங் கூட்டப்பட்டது. பொருள்-அழியும் பொருளும் ஆகும் பொருளும். கருவி - தன்றானையும் மாற்றார் தானையும். காலம்-தனக்காங் காலமும் அவர்க்காங் காலமும். வினை-தான் வல்லவினையும் அவர் வல்லவினையும். இடம் - தான் வெல்லுமிடமும் அவர் வெல்லுமிடமும். இவற்றைத் தான் வென்றியெய்துந் திறத்திற் பிழையாமலெண்ணிச்செய்க வென்பதாம்.

(ப-ரை) (தொழில் செய்யுமிடத்து) பொருள் - பொருளும், கருவி-சாதனமும், காலம் - காலமும், வினை - தொழிலும், இடன் - இடமும் ஆகிய, ஐந்தும்-ஐந்தும், இருடீர-மயக்கமற, எண்ணி நினைத்து, செயல்-செய்யக்கடவன் எ-று.

(க-ரை) பொருளும், சாதனமும், காலமும், தொழிலும், இடமும் இவ்வைந்து நினைத்துத் தொழில் செய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) பொருள்-அழியும் பொருளும், ஆகும் பொருளும். கருவி-தன் சேனையும், பகைவர்சேனையும். காலம்-தனக்கு ஆங்காலமும், அவர்க்கு ஆங்காலமும். வினை தான் வல்லதொழிலும் அவர் வல்லதொழிலும் இடன்-தான்வெல்லும் இடமும் அவர் வெல்லும் இடமும், இவைகளைத் தான் வெற்றி பெருந்திறத்தில் தப்பாமல் எண்ணிச் செய்கவென்பதாம்.

'பொருள், கருவி, காலம், இடம், வினை' என்பன தம்பொருள், தம் கருவி, தம்காலம், தம்இடம், தம்வினை என்பனவற்றையும், மாற்றான் பொருள், மாற்றான்கருவி, மாற்றான்காலம், மாற்றான்இடம், மாற்றான்வினை என்பனவற்றை என்பதையும் உணர்த்திநின்றன. 'ஐந்தும்' என்றதன் ஈற்று உம்மை முற்றும்மை. 'இருடீர' இது மயக்கமற என்னும் பொருளதாம். 'எண்ணி' என்றது ஆராய்ந்து அறிந்து ஏற்றவாறு நினைத்து என்பதாம். (5)

முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

(பரி-உரை) முடிவும் · வினைசெய்புக்கால் அது முடிதற்குளதாம் முயற்சியும், இடையூறும்-அதற்கு வருமிடையூறும், முற்றியாக்கு எய்தும் படுபயனும்-அது கிட்டி முடிக்தாற் ருனெய்தும் பெரும்பயனும், பார்த்துச் செயல்-சிர்தாக்கிச் செய்க எ-று.

முடிவு ஆகுபெயர். முயற்சி யிடையூறுகளதனாலிற் பயனதனை பெரிதாயிற் செய்கவென்பதாம்.

(ப-உரை) (தொழில்செய்யுமிடத்து) முடிவும்-(அது) முடிதற்கு உளதாகிய முயற்சியையும், இடையூறும் - (அதற்குவரும்) இடையூற்றையும், முற்றி-(அவ்விடையூறுகீக்கி) முடித்தால், எய்தும் - (தான்) அடையும், படுபயனும்-பெரும் பயனையும், பார்த்து-சிர்தாக்கி, செயல்-செய்யக்கடவன் எ-று.

(க-உரை) முயற்சியையும், இடையூற்றையும், பயனையும், ஆராய்ந்து தொழில் செய்யக்கடவன் என்பதாம்.

(வி-உரை) முடிவு-அதன் முயற்சிக்கு ஆகுதலால் ஆகுபெயர். முயற்சியளவுக்கும், இடையூளவுக்கும், பயனளவு பெரிதாயிருந்தால் அத்தொழிலைச் செய்கவென்பதாம்.

'முடிவு' என்றது போர்வினையின் முடிவை. அதாவது போர்செய்புக்கால் போர்செய்யும் முயற்சிகளையும் அகைகொண்டு செய்தவழி அதனுல் எற்படும் முடிவும் என்பதாம். 'இடையூறு' என்றது போர்வினை செய்புக்கால் மாற்ருனுல் கோக்கூடிய இடையீடுகளையும் அதன் பயனையும் அதனை அகற்றும் வழியையும் எண்ணி என்பதாம். 'முற்றியாங் கெய்தும் படுபயனும்' என்றது போர்வினை முடிக்தவழி அப்போர்வினையால் வரக்கடவதாகிய பயனை என்பதாம். இதன்கண் வந்த உம்மைகள் எண்ணும்மைகள். 'பார்த்தல்' என்றது தனுகை ஆராய்ந்துபார்த்தலை உணர்த்தி கின்றது. (6)

செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.

(பரி-உரை) செய்வினை செய்வான் செயன்முறை - அவ்வாற்ருற் செய்யப்படும் வினையைத் தொடங்கினுன் செய்யுமுறைமையாவது அவ்வினை உள் அறிவான் உள்ளம் கொளல் - அதனதனப்பாட்டினை யறிவான் கருத்தினைத் தானறிதல் எ-று.

அவ்வாறென்பது பொருண் முதலியவெண்ணிலும் முடிவுமுதலிய தாக்கிலும். உள்ளறிவான்-முன்செய்த போர்தவன் அவன் கருத்து-அவன் செய்த போர்த உபாயம். அதனை யறியவே, தானும் அதனைச்செய்த பய

னைத்தென்பதாம். இவை மூன்று பாட்டானும் ஒப்பான் செய்யுங் திறங் றப்பட்டது.

(பத) செய்வினை (அவ்வழியினை) செய்யப்படுந் தொழிலை, செய் ான் - செய்யத்தொடங்கினவன், செயன்முறை - செய்யுமுறைமையாவது, வ்வினை - அத்தொழிலினது, உள் உளப்பாட்டை, அறிவான் - அறிபவனது, ணம் : கருத்தை, கொளல் - (தான்) அறிதல் எ-று.

(க-ரை) தொழிலைச் செய்யத் தொடங்கினவன் செய்யுமுறையாவது த்தொழிலி னுளப்பாட்டை யறிதல் என்பதாம்.

(வி-ரை) அவ்வாறென்றது-பொருண் முதலானவைகளை எண்ணலையும், டிவு முதலானவைகளை ஆராய்தலையும், உள்ளறிவான் முற்செய்து வந்தவன். அவன் கருத்து அதனைச் செய்துவந்த உபாயம். அதனை றியவே தானும் அவ்வுபாயத்தினாலே செய்து பயனை அடைவானென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் ஒப்பவன் செய்யுந்திறம் சொல்லப்பட்டது.]

'செய்வான்' என்றது அத்தகைய வினையைச் செய்யத்தொடங்கினவன் ன்பதாம். 'செய்முறை' என்றது செய்முறை எனப்படுவதாவது என்னும் பாருளது. 'அவ்வினை உள்ளறிவான் உளங்கொளல்' என்றது அவ்வினையை ன் செய்தவன் உட்கருத்தையும் உட்கொள்ளுதல் என்பதாம். 'கொளல்' து கொள்ளல் என்பதன் தொகுத்தல் விகாரம். (7)

வினையான் வினையாக்கிக் கோட லனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

(பரி உரை) வினையான் வினை ஆக்கிக்கோடல்-செய்கின்ற வினையாலே ன்னது பிறிதும் ஓர் வினையை முடித்துக்கொள்க; கனைகவுள் யானையால் ானை யாத்தற்று - அது மதத்தானனைந்த கபோலத்தினையுடைய யானை லே அன்னது பிறிதுமோர் யானையைப் பிணித்ததனோடொக்கும் எ-று.

பிணித்தற்கு அருமைதோன்ற கனைகவுளென்பது பின்னுங் கூட்டப் ட்டது. தொடங்கிய வினையானே பிறிதும் ஓர் வினையை முடித்தற்கு பாயமாமாறு எண்ணிச் செய்க; செய்யவே, அம்முறையான் எல்லாவினையும் னிதின் முடியுமென்பதாம்.

(பத) வினையான் - (செய்யப்படுகின்ற) தொழிலினாலே, வினை- அப்படிப்பட்ட) வேறொரு தொழிலை, ஆக்கிக்கோடல் - முடித்துக்கொள்ளக் டவன், (அது) கனைகவுள் - (மதத்தால்) கனைத்த கபோலத்தையுடைய, ானையால் - யானையினால், யானை - (அப்படிப்பட்ட வேறொரு) யானையை, த்தற்று-கட்டியதோடு ஒக்கும் எ-று.

(க-ரை) தொழிலாலே தொழிலை முடித்துக்கொள்ளக்கடவன். அது னையை யானையாற் கட்டிய தொப்பாம் என்பதாம்.

(வி-ரை) பிணித்தற்கருமை தோன்ற கனைகவுளென்றார். தொடக்கி தொழிலாலே வேறுமொருதொழிலை முடித்தற்கு உபாயமாகும் வி ஆலோசித்துச்செய்தால், எல்லாத்தொழில்களும் எளிதிலே முடியுமெ பதாம்.

'வினையால்' என்றது செய்யத்தொடங்கிய வினையினால் என்பதா 'வினையாக்கிக்கோடல்' என்றது அதுபோலும் மற்றோர் வினையையும் ஆ கொள்ளுதல் என்பதாம். அதாவது ஒருவினையைத் தான் தொடக்கி வினையை முற்றப்பெற ஆக்கிக் கோடலோடு அதுபோன்ற மற்றமே வினையையும் முடித்துக்கொள்ளுதல் என்பதாம். 'கனைகவுள்' என்றது மத தால் கனைத்த கபோலத்தையுடைய என்பதாம்; இதனால் அகப்படுத்த கருமை குறித்தவாறும். 'கனைகவுள் யானையால் யானையாத்தற்று' இ உபமானம். 'யாத்தல்' இது கட்டுதல் என்னும் பொருளது.

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே யொட்டாரை யொட்டிக் கொளல்.

(பரி-உரை) நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே-வினை செய்வாரு றன் நட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படு ஒட்டாரை ஒட்டிக்கொளல் - தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக் நட்பாக்கிக் கோடல் எ-று.

அவ்வினை வாய்த்தற் பயத்தவாய இவ்விரண்டும் பகைவர்க்குத் த மெலிவு புலனுவதன்முன்னே செய்கவென்பார், விரைந்ததென்று விரைந்து செய்யப்படுவ தென்றவாறு. வினை செய்யுங் திறமாகவிற் ப கோடொட்டாராயிற்று. தன்னெட்டார் பிறருட் கூடாமல் மாற்றிவைத் லெனினுமமையும்.

(பதவுரை) (தொழில் செய்பவனால்) நட்டார்க்கு - (தனது) கட்பினருக்கு நல்ல செயலின்-நல்லவைகளைச் செய்தலினும், ஒட்டாரை-(தன் பகைவரது பகைவரை, ஒட்டிக்கொளல்-(தனக்கு) நட்பாக்கிக்கொள்ளுதல், விரைந்தே விரைந்து செய்யத்தகுவதாகும் எ-று.

(க-ரை) பகைவரைச் சிநேகமாக்கிக் கொள்ளுதல் சிநேகருக்கு நல்ல கனைச் செய்தலும் நல்லது என்பதாம்.

(வி-ரை) அத்தொழிலைப் பலிக்கச்செய்யும் அவ்விரண்டு காரி கனையும் பகைவர்க்குத் தன்மெலிவு தெரிவதன்முன்னே செய்கவென்றா விரைந்ததென்றார்.

'நட்டார்' என்றது நண்பினரை. இதற்கு 'நன்' பகுதி. 'நல்ல' என்ற அந்நண்பினர்க்கு இனியவாவனவற்றை. 'செயலின்' இது 'செய்யலின்' எ பதன் தொகுத்தல் விகாரம். 'விரைந்தது' என்றது அவசரமாயது என்பதா அதாவது தாமதத்திற் செய்யக்கடவது ஒன்றும் என்றதாம். 'ஒட்டார' என்றது தன் பகைவரின் பகைவரை என்பதாம். இது ஒட்டியாதல்

ன்னும் காரணம்பற்றிவந்த காரணப்பெயர். 'ஒட்டிக்கொளல்' என்றது ட்பாக்கிக்கொளல் என்பதாம். 'ஒட்டாரை ஒட்டிக்கொளல்' என்பதற்குத் ன் பகைவரைப் பிறரோடு சேயங்கொள்ளாத பாதகாத்துக் கோடல் ன்பதமாம். (9)

உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

(பதவுரை) உறை சிறியார் - ஆளுமிடஞ் சிறியராய அமைச்சர், உள் டுக்கல் அஞ்சி - தம்மின் வலியார் எதிர்த்தவழித் தம்பகுதி கடுக்கலையஞ்சி, றை பெறின் பெரியார்ப் பணிந்து கொள்வர்-அச்சிலைக்கு வேண்டுவதாய ந்த கூடுமாயின், அவரைத் தாழ்ந்து அதனை யேற்றுக்கொள்வர் எ-று.

இடம் நாடும் அரணும். அவற்றது சிறுமை ஆள்வார் மேலேற்றப்பட்டது. மலியாரோடு சந்திக்கு வலியார் இயைத லரிதாகலின், பெறினென்றார். டிவிலே மெலியாரினார் தம்பகுதியும் அஞ்சினீக்கின் முதலோடுங் கெடுவ ாகலின், அது வாராமற் சிறிது கொடுத்தஞ் சந்தியை யேற்றுக்கொள்க வன்பதாம். பணிதல் மானமுடையார்க்குக் கருத்தன்மையின், கொள்வரென லகியலாற் கூறினார். இவை மூன்றுபாட்டானும் மெலியான் செய்யுந்திறங் றப்பட்டது.

(ப-ரை) உறைசிறியார்-ஆளுமிடஞ் சிறியராகிய மந்திரிகள், (தம்மின் நந்த வலியவர் எதிர்த்தவிடத்தே), உள்-(தமது) அங்கங்கள், கடுக்கல்-டுக்குதலுக்கு, அஞ்சி-பயந்து, குறைபெறின்-(அச்சிலைக்கு வேண்டுவதாகிய) ந்த கூடுமாயின், பெரியார்-அப்பெரியவரை, பணிந்து-வணங்கி, கொள்வர்-அதனை ஏற்றுக்) கொள்ளுவர் எ-று.

(க-ரை) ஆளுமிடஞ் சிறியராகிய மந்திரிகள் பகைவரெதிர்த்தவிடத்துப் ணிந்துகொள்வர் என்பதாம்.

(வி-ரை) இடம் நாடும், அரணும். அவைகளின் சிறுமை உடையவர் மல் ஏற்றப்பட்டது. மெலியாரோடு சந்திக்கு வலியாரிசைதல் அரிதாகலால் பறினென்றார். அடியிலே மெலியாரினார் தம்மங்கங்களும் அஞ்சி ங்கினால் முதலோடும் கெடுவராகலின் அது வராமற் சிறிது கொடுத்தும் ந்தியை ஏற்றுக்கொள்க வென்பதாம். பணிதல் மானிகளுக்குக் கருத்தல்லா மையால் கொள்வாரென உலகியலாற் சொல்லினார். [இவை மூன்று ாட்டாலும் மெலியவன் செய்யுந்திறம் சொல்லப்பட்டது.]

'உறைசிறியார்' என்றது நாடும் அரணும் சிறிதாக உடையார் என்பதாம். டுக்கல்' என்றது தமது படையும் கட்பும் கடுங்கல் என்றதாம். 'உள்' ன்றது தமக்கு உளவாய துணையை. 'குறைபெறின்' என்றதற்கு சந்தி டுமாயின் என்பதாம்; சந்தி என்றது துறை. 'பெரியார்' என்றது லியராகிய பகைவரை. (10)

69-ம் அதி - வினைசெயல்வகை - முற்றிற்று.

69-ம் அதிகாரம்—தூது

(பரி-உரை) அஃதாவது: சந்தி விக்கிரகங்கட்கு வேற்று வேந்தரிடை செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும் மேல் வினைசெயல்வகை யென்றமையின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது. தான் வகுத்துக் கூறவான், கூறியது கூறவானெனத் தந்த இருவகைப்படும். அவருள் முன்னென் அமைச்சனோடு ஒப்பானுகலாலும், பின்னென் அவனிற் காற்கூற குணங் குறைந்தோனுகலாலும், இஃது அமைச்சியலாயிற்று.

(உரை) அஃதாவது: பொருத்தல் பிரித்தல்களுக்கு வேற்றரசரிடத்துச் செல்வாரது தன்மை. அவ்விரண்டனையும் முன் வினைசெயல்வகை பென்றமையால் இது அதன்பின் வைக்கப்பட்டது. தான் வகுத்துச் சொல்லுவோன் சொல்லியது சொல்லுவோன் எனத் தந்த இருவகைப்படும். அவருள் முன்னென் மந்திரியோடு சமானனுவானுகலாலும், பின்னென் அவனிற் காற்பங்கு குணங் குறைந்தோனுகலாலும், இஃது அமைச்சியலாயிற்று.

அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

(பரி-உரை) அன்பு உடைமை - தன் சுற்றத்தார்மாட்டு அன்புடை னுதலும், ஆன்ற குடிப்பிறத்தல் - அமைச்சுப் பூணற்கமைந்த குடியின்கட் பிறத்தலும், வேந்த அவாம் பண்பு உடைமை - அரசர்சாந்நி விரும்பும் பண்புடையனுதலும், தூது உரைப்பான் பண்பு-தூதுவார்த்தை சொல்லு லுக்கு இலக்கணம் எ-று.

முன்னையவிரண்டனலும், முறையே சுற்றத்தார்க்குத் தீங்கு வாராமற் முன்பேணி யொழுகலும், தன் முன்னோர் தாதியல்கேட்டறிதலும் பெற்றும். வேந்தவாம் பண்புடைமை முன்னர் மன்னரைச் சேர்ந்தொழுகுதற்கட் பெறப்படும். அதனுல் வேற்றரசரும் அவன் வயத்தராதல் பெறுதும்.

(பரை) அன்புடைமை-(தன் சுற்றத்தாரிடத்து) அன்புடையவனுதலும், ஆன்ற குடிப்பிறத்தல் - (மந்திரித்தொழில் செய்தற்கு) அமைந்த குடியிற் பிறத்தலும், வேந்தவாம் பண்புடைமை-அரசர்சாந்நி விரும்பும் குணமுடை யவனுதலும், தூதுரைப்பான் - தூதுவார்த்தையைச் சொல்லுவோனுக்கு பண்பு-இலக்கணமாம் எ-று.

(க-ரை) அன்பும் சற்குடியிற் பிறத்தலும் அரசர் விரும்பும் குணமு முடையனுதல் தூதனிலக்கணம் என்பதாம்.

(வி-ரை) முன்னையவிரண்டினலும் முறையே சுற்றத்தார்க்குத் தீங்கு வாராமல் தானே காத்து நடத்தலும், தம்முன்னோர், தாதியல் கேட்டு அறிதலும் பெற்றும். வேந்தவாம் பண்புடைமை - முன்பு மன்னரைச் சேர்ந்தொழுகலிலே அறியப்படும். அதனுல் - வேற்றரசரும் அவனுக்கு வசப்படுதல் கொள்ளப்படும்.

'அன்புடைமை' ஈண்டு அன்பு என்பது சுற்றத்தார்மாட்டுச் சென்றியைவதோர் உள்ள நெகிழ்ச்சி ஆகலின் சுற்றத்தாரிடத்து அன்புடைமை எனச் சுருப்பெற்றது. 'ஆன்றகுடி' என்றது உயர்குடியை. 'வேந்தவாம் அன்புடைமை' என்றது அரசன்விரும்பும் குணஞ் செயல்களை யுடைமையாம். இது மன்னரைச் சேர்ந்தொழுகல் என்ற அடுத்த அதிகாரத்து கன்கு விளக்கப்பெற்றுளது. ஆங்குக் கண்டுணர்க. (1)

அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்
இன்றி யமையாத மூன்று. [க்

(பரி-உரை) அன்பு - தம்மரசன்மாட்டு அன்புடைமையும், அறிவு - அவனுக்கு ஆவன அறியும் அறிவுடைமையும், ஆராய்ந்த சொல்வன்மை - அவற்றை வேற்றரசரிடைச் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லுதல் வன்மையுமென, தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று - தூது உரைக்க வரியார்க்கு இன்றியமையாத குணக்கள் மூன்று எ-று.

ஆராய்தல் - அவற்றிற்கு உடம்படுஞ் சொற்களைத் தெரிதல். இன்றியமையாத மூன்றெனவே, அமைச்சர்க்குச் சொல்லிய பிறகுணங்களும் வேண்டுமென்பது பெற்றும். இவை யிரண்டுபாட்டானும் இருவகையார்க்கும் பொதுவிலக்கணம் கூறப்பட்டது.

(ப-ரை) அன்பு - (தம்மரசனிடத்து) அன்புடைமையும், அறிவு - அவனுக்கு ஆமவைகளை அறியும்) அறிவுடைமையும், (அவைகளை வேற்றரசரிடத்துச் சொல்லும்போது) ஆராய்ந்த சொல்வன்மை - ஆராய்ந்து சொல்லுதல் வலியும் என, தூதுரைப்பார்க்கு - தூதுசொல்ல உரியவர்க்கு, இன்றியமையாத - அவசியமாகவேண்டிய குணங்கள், மூன்று - மூன்றும் எ-று.

(க-ரை) அன்பு, அறிவு, சொல்வன்மை, இவை தூது சொல்வோர்க்கு வேண்டுங்குணங்களாம் என்பதாம்.

(வி - ரை) ஆராய்தல் - அவைகளுக்குச் சம்மதிக்கும் சொற்களைத் தெரிதல். அவசியமாகவேண்டிய குணங்கள் மூன்றெனவே மந்திரிகளுக்குச் சொல்லிய மற்றைக் குணங்களும் வேண்டுமென்றதாயிற்று. [இவை இரண்டு பாட்டாலும் இருவகைத் தூதர்க்கும் பொதுவிலக்கணம் சொல்லப்பட்டது]

'அன்பு' என்றது ஈண்டு அரசன்மாட்டு அன்பு உடைமையை. 'அறிவு' என்றது அரசற்கு வேண்டும் நல்லனவற்றை ஆராய்ந்து அறியும் அறிவை. 'ஆராய்ந்த சொல்வன்மை' என்றது தான் சொல்லுவனவற்றுள் தனது அரசற்கு ஏதம் வராதபடி ஆராய்ச்சிசெய்து தூதுகேட்கும் அரசன் மனங்கொள இனிது சொல்லும் சொற்றிறனை. 'இன்றியமையாத' இது, இல்லாது முடியாது என்னும் பொருளது; அதாவது அவசியம் வேண்டுபவை என்பதாம். (2)

நூலாரு நூல்வல்ல ஞதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

(பரி-உரை) வேலாருள் வென்றி வினை உரைப்பான் பண்பு - வேலையுடைய வேற்றரசரிடைச்சென்ற தன் அரசனுக்கு வென்றிதரும் வினையைச் சொல்லுவானுக்கு இலக்கணமாவது, நூலாருள் நூல் வல்லன் ஆகுதல்- நீதிநூலை யுணர்ந்த அமைச்சரிடைத் தான் அந்நூலை வல்லனாதல் எ-று.

கோறன்மாலைய சென்பது தோன்ற வேலாரென்றும், * தூது வினை யிரண்டும் அடக்க வென்றிவினை யென்றுங் கூறினார். வல்லனாதல்-உணர்மாத்திர முடையனாய அவர் முன் வருக்கும் ஆற்றலுடையனாதல்.

(ப-ரை) வேலாருள்-வேலினையுடைய வேற்றரசரிடத்து, வென்றி-(தன் னரசனுக்கு) வெற்றியைத் தருகின்ற, வினையுரைப்பான் - தொழிலைச் சொல்வோனுக்கு, பண்பு - இலக்கணமாவது, நூலாருள்-நீதிநூலை அறிந்த மந்திரிகளிடத்து, நூல் வல்லனாதல் - (தான்) அந்நூலில் வல்லவனாதல் என்றவாறு.

(க-ரை) தூதனுக் கிலக்கணமாவது மந்திரிகளிடத்து வல்லவனாதல் என்பதாம்.

(வி-ரை) கொலைத்தொழிலோ சென்பது தோன்ற வேலாரென்றும், தூதத்தொழிலிரண்டுமடக்க வென்றிவினை யென்றும் சொல்லினார். வல்லனாதல்-அறிதன்மாத்திரா முடையனாகிய அவர் முன் வருக்கும் வல்லனாகுதல்-புடையனாதல்.

'வேலார்' என்றது வேலைத்தாங்கிய அரசரை. 'வேல்' இது வெல்லுதல் என்னுங் காரணம்பற்றிவந்த பெயர். இது வேல் என்னும் ஓர் ஆயுதத்தைக் குறிப்பதன்றி, ஆயுதப்பொதுவாகவும் வரும். 'வென்றி வினையுரைப்பான்' என்றது தன் அரசனுக்கு வெற்றி தருவனவாகிய காரியங்களைச் சொல்லுந் தூதனென்பதாம். 'வென்றி' இது 'வெற்றி' என்பதன் மெலித்தல் விகாரம். 'நூலார்' என்றது மந்திரிகளை. என்னை? நீதிநூல், அறநூல் அரசியல் நூல் உணர்ந்தவர் ஆதலின் என்க. 'நூல்வல்லனாகுதல்' என்றது தான் அம் மந்திரிகளினும் அந்நூல்களில் வல்லமையுடையனாக இருத்தல் என்பதாம்.

அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

(பரி-உரை) அறிவு-இயற்கையாகிய அறிவும், உரு-கண்டார் விரும்புந் தோற்றப்பொலிவும், ஆராய்ந்த கல்வி-பலரோடும் பலகாலும் ஆராயப்பட்ட கல்வியுமென, இம்மூன்றன் செறிவு உடையான்-தன்குமதித்தற்கு ஏதுவாகிய இம்மூன்றனது கூட்டத்தை யுடையான், வினைக்குச் செல்க-வேற்று வேந்தரிடைத் தூதவினைச்குச் செல்க எ-று.

* தூதவினை-சந்திவிக்கிரகம்.

இம்மூன்றும் ஒருவன்பாற் கூடுதல் அரிதாகலின், செறிவுடையா னென்றார். இவற்றான் நன்குமதிப்புடையனாகவே, வினை இனிதமுடியு மென்பது கருத்து.

(ப-ரை) அறிவு (இயற்கையாகிய) அறிவும், உரு-(கண்டோரிச்சிக்கும்) தோற்றப்பொலிவும், ஆராய்ந்த கல்வி-(பலரோடும் பலகாலும்) ஆராயப்பட்ட கல்வியும் என, இம்மூன்றின்-(நன்கு மதித்தற்கு ஏதுவாகிய) இம்மூன்றினை, செறிவுடையான் - கூட்டத்தை யுடையவன், வினைக்கு - (வேற்றரசரிடத்து ஏதுத்) தொழிலுக்கு, செல்க-செல்லக்கடவன் எ-று.

(க-ரை) அறிவு, உருவு, கல்வி இவற்றையுடையவன் தூது செல்லக் கடவன் என்பதாம்.

(வி-ரை) இம்மூன்றும் ஒருவனிடத்துக் கூடுதல் அரிதாகலால், செறி யுடையானென்றார். இவைகளோடு நன்குமதிப்புடையவனாகவே வினை இனிதமுடியு மென்பது கருத்து.

'அறிவு' என்றது இயற்கையறிவை. என்னை? நூலறிவு முன்னே நூனிற் கூறியதனால் ஈண்டு இயற்கைஅறிவு என்னப்பெற்றது. 'உருவு' என்றது கண்டார் விரும்பும் தோற்றத்தை அழகை. 'ஆராய்ந்தகல்வி' என்றது பலரோடும், பலகாலும் ஆராய்ந்து அறிந்த கல்விஅறிவை. 'செறிவு' என்றது பெருக்கத்தை; ஈண்டு இவை மூன்றும் ஒருங்கு அமைந்திருக்கப் பெறுதலை. 'வினைக்கு' என்றது தூதுரைக்கும் வினைக்கு என்பதாம். இம்மைகள் விகாரத்தாற் றொக்கன.

(4)

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி நன்றி பயப்பதாந் தூது.

(பரி-உரை) தொகச்சொல்லி - வேற்றரசர்க்குப் பல காரியங்களைச் சொல்லும்வழிக் காரணவகையால் தொகுத்துச் சொல்லியும், தூவாத நீக்கி நச் சொல்லி - இன்னுத காரியங்களைச் சொல்லும்வழி வெய்ய சொற்களை நீக்கி இனிய சொற்களான் மனமகிழச் சொல்லியும், நன்றி பயப்பது தாம்-தன் அரசனுக்கு நன்மையைப் பயப்பதனை தூதனுவான் எ-று.

பலகாரியங்கட்கு உடம்படாதார் பரம்பரையான் அவற்றிற்குக் காரண மாய தொன்மைச் சொல்ல அதனால் அவை விளையுமாறுய்த்துணர வருமை யானுஞ் சுருக்கத்தானு மூடம்படுவர், இன்னுதவற்றிற் குடம்படாதார் தம் னம மகிழச்சொல்ல அவ்வின்னுமை காணுத உடம்படுவாதலின், அவ்விரு ற்றானும் தன் காரியந் தவறுமல் முடிக்கவல்லா னென்பதாம். இம்மைகள் விகாரத்தாற் றொக்கன.

(ப-ரை) (வேற்றரசருக்குப் பலகாரியங்களைச் சொல்லுமிடத்து) நகச்சொல்லி - (காரணவகையால்) தொகுத்துச் சொல்லியும், (இனிமை யிலாத காரியங்களைச் சொல்லுமிடத்து) தூவாத நீக்கி-வெய்ய சொற்களை

நீக்கியும், கடச்சொல்லி - (இனிமையான சொற்களால்) மகிழச் சொல்லியும், நன்றி பயப்பது - (தன்னாசனுக்கு) நன்மையைச் செய்பவனே, தூதாம். தூதனுவான் எ-று.

(க-ரை) தொகுத்தச் சொல்லியும் கடுஞ்சொல்லை நீக்கியும் மகிழ்ச் சொல்லியு மாசனுக்கு நன்மை செய்பவனே தூத னென்பதாம்.

(வி-ரை) பலகாரியங்களுக்கு உடன்படாதவர் பரம்பரையால் அப்பலவும் முடித்தற்குக் காரணமான ஒருகாரியத்தைச் சொல்ல அதனால் அவை பயன்படும் விதத்தை ஆலோசித்தறிதல் அருமையாதலால், சுருக்கத்தால் உடன்படுவர், இனிமையில்லாத காரியங்களுக்கு உடன்படாதவர், மனமகிழ்ச் சொல்ல அவ்வினிமையில்லாமை தோன்றுமையால் உடன்படுவர். ஆதலால் அவ்விருவழியாலும் தன்காரியம் தவறுமல் முடிக்கவல்ல னென்பதாம்.

'தொகச்சொல்லி' என்றது காலம் நீட்டியாதவகை தொகுத்த விடத் கச்சொல்லி என்பதாம். 'தவாத' என்றது வெம்மைச்சொற்களை. 'கடச் சொல்லி' என்றது மனத்தை மகிழ்ச்சி உண்டாமாறு சொல்லி என்பதாம். 'நன்றி' என்றது தனது அரசனுக்கு நன்மையை என்பதாம். (5)

கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

(பரி-உரை) கற்ற-நீதிநூல்களைக் கற்று, செலச்சொல்லி-தான் சென்ற கருமத்தைப் பகைவேந்தர் மனங்கொளச் சொல்லி, கண் அஞ்சான் - அவர் செயிர்த்து நோக்கின் அந்நோக்கிற்கு அஞ்சாது, காலத்தால் தக்கது அறிவது தூதாம்-காலத்தோடு பொருந்த அது முடிக்கத்தக்கவுபாயம் அறிவானே தூதனுவான் எ-று.

அவ்வுபாய மறிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், அதனுனன்றிப் பிறி தொன்றுன் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்கவேண்டுதலிற் காலத் தால் தக்கது அறிதலும், இலக்கணமாயின.

(ப-ரை) கற்ற - (நீதிநூல்களைக்) கற்று, செல - (பகைவேந்தர்) மன கொள, சொல்லி - (தான் சென்ற கருமத்தைச்) சொல்லி, கண்ணஞ்சான் - அவர் கோபித்துப் பார்க்கில் அப்பார்வைக்கு அஞ்சாதவனுய், காலத்தால் காலத்தோடு பொருந்த, தக்கது - (அது முடிக்கத்) தக்க உபாயத்தை அறிவது-அறிபவனே, தூதாம்-தூதனுவான் எ-று.

(க-ரை) நீதிநூலைக் கற்றுப் பகையரசர் மனங்கொளச்சொல்லி யஞ்சா தவனும் காலத்திற்கேற்க வுபாய மறிபவனே தூதன் என்பதாம்.

(வி-ரை) அவ்வுபாயம் அறிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், அதனு லன்றி வேறொன்றுல் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்கவேண்டுதலா காலத்தாற்றக்கதறிதலும், இலக்கணமாயின.

'கற்று' என்றது நீதிநூற்களையும் அரசியல் நூற்களையும் கற்று என்பதாம். 'செலச்சொல்லி' என்றது பகைஅரசர் மனங்கொளச் சொல்லி என்பதாம். 'கண்ணஞ்சான்' என்றது பகைஅரசர்களின் கோபப்பார்வைக்கு அஞ்சாதவனாகி என்பதாம். 'காலத்தாற்றக்கதறிவது' என்றது காலத்திற்குத் தக்கபடி பொருத்தமான சொற்செயல்களை அறிந்து சொல்லுதலும் செய்தலும் என்பதாம். 'காலத்தால்' என்றது வேற்றுமைமயக்கம்; இது ஐந்தன் பொருளில் மயங்கியது. இதனை ஆல் உருபு ஒடுப்பொருளில் வந்ததாகக் கொண்டார் உரையாசிரியர். (6)

கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

(பரி-உரை) கடன் அறிந்து-வேற்றரசரிடத்துத் தான்செய்யுமுறைமை அறிந்து, காலம் கருதி - அவர் செவ்வி பார்த்து, இடன் அறிந்து - சென்ற விடமும் சொல்லுதற்கேற்ற இடமறிந்து, எண்ணி - சொல்லுமாற்றை முன்னே விசாரித்து, உரைப்பான் தலை-அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான் எ-று.

செய்யுமுறைமையாவது-அவர்நிலையும் தன்னரசனிலையும் தன்னிலையும் தக்கி அவற்றிற்கேற்பக் காணுமுறைமையும் சொல்லுமுறைமையும் முதலாயின. செவ்வி-தன் சொல்லை யேற்றுக்கொள்ளும் மனநிகழ்ச்சி. அது நிலவயத்ததாகலிற் காலமென்றார். இடம்-தனக்குத் துணையாவாருடனுய்டம். எண்ணுதல்-தான் அது சொல்லுமாறும், அதற்கு அவர் சொல்லுத்தாமும், அதற்குப் பின்னுன் சொல்லுவனவுமாக இவ்வாற்றுன் மேன்மற்றுனே கற்பித்தல். வட்டாரலார் இவ்விருவகையாருடன் ஒலைகொடுத்தற்பாரையுங் கூட்டித் தூதரைத் தலை, இடை, கடையென்ற வகுத்துக் கிறைராகலின், அவர் மதமுந்தோன்றத் தலையென்றார். தூதென்பது அதிகாரத்தான் வந்தது. இவை யைந்துபாட்டானும் தான் வகுத்துக் கூறவான இலக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) கடன் - (வேற்றரசனிடத்துத் தான்செய்யு) முறைமையை, அறிந்து-தெரிந்து, காலங்கருதி - (அவர்) சமயம் பார்த்து, இடன் - (சென்ற நமஞ் சொல்லுதற்கு ஏற்ற) விடத்தை, அறிந்து - தெரிந்து, எண்ணி-சொல்லும் (வழியை முன்னே) விசாரித்து, உரைப்பான்-(அவ்வழி) சொல்லுவான், தலை-தூதரில் மிக்கவன் எ-று.

(க-ரை) முறைதெரிந்து சமயம்பார்த்துத் தக்கவிடமறிந்து எண்ணிச் சொல்பவனே தூதன் என்பதாம்.

(வி-ரை) செய்பு முறைமையாவது - அவர்நிலையும், தன்னரசனிலையும் தன்னிலையும் சீர்தூக்கி அவைகளுக்கு ஏற்பக் காணுமுறைமையும் சொல்லுமுறைமையு முதலாயின. செவ்வி - தன்சொல்லை யேற்றுக்கொள்ளு மனநிகழ்ச்சி. அது காலத்தின் வசத்ததாதலால் காலமென்றார். இடன்-தனக்குத்

தணையாவார் உடனுரையிடம். என்னுதல்-தான் அதுசொல்லும் விதமும் அதற்கு அவர் சொல்லும் உத்தாரமும், அதற்குப்பின் தான் சொல்லுமவை களும் ஆக இவ்வழியால் மேலுமேலும் தானே என்னுதல். வடதுவார் இவ்விருவகையாருடனே ஓலைகொடுத்த கிற்பானையும் கூட்டித் தூதரை தலை இடை கடை என வகுத்துச்சொல்லினராகலால் அவர் மதமும் தோன்ற தலையென்றார். தூதென்பது அதிகாரத்தால் வந்தது. [இவை ஐந்துபாட்டா லும் தான் வகுத்துச் சொல்லுவானது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'கடன்' என்றது வேற்றரசர்மாட்டுத் தான் செய்யும் கடன்மைகளை. 'காலம்' என்றது தன் றூது உரைக்கும் செவ்வியை. 'இடம்' என்றது தன் றணையாவார் அரசன்மாட்டு இருக்கும் இடத்தை என்பதாம். 'எண்ணி' என்றது தேர்ந்தவரும் நன்மை தீமைகளை ஆராய்ந்து என்பதாம். 'தலை' என்றது முதன்மை என்னும் பொருளது. (7)

தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின் வாய்மை வழியுரைப்பான் பண்பு.

(பரி-உரை) வழி உரைப்பான் பண்பு-தன்னரசன் வார்த்தையை அவன் சொல்லியவாறே வேற்றரசர்க்குச் சென்று சொல்லுவானதிலக்கணமாவன, தூய்மை - பொருள் காமங்களாற் றூயனாதலும், துணைமை - தனக்கு அமைச்சர் துணையாந்தன்மையும், துணிவுடைமை - துணிதலுடைமையும், இம்மூன்றின் வாய்மை-இம்மூன்றோடு கூடிய மெய்ம்மையுமென்னவிவை எ-று.

பொருள் காமங்கள்பற்றி வேறுபடக் கூறுமைப்பொருட்டுத் தூய்மையும், தன்னரசனுக்கு உயர்ச்சி கூறியவழி எம்மனோர்க்கு அஃது இயல்பெனக் கூறி அவர் வெகுளி நீக்குதற்பொருட்டுத் துணைமையும், இது சொல்லின் இவர் எதஞ் செய்வரென் றொழியாமைப்பொருட்டுத் துணிவுடைமையும், யாவரானுந் தேறப்படுதற்பொருட்டு மெய்ம்மையும், வேண்டப்பட்டன. இன் ஒடுவின்பொருட்கண் வந்தது.

(ப-ரை) வழி-(தன்னரசன் வார்த்தையை) அவன் சொல்லிய வழியே, உரைப்பான்-(வேற்றரசர்க்குச்) சொல்லுவானது, பண்பு - இலக்கணமாவது, தூய்மை (பொருளாலும் காமத்தாலும்) பரிசுத்தனாதலும், துணைமை-(தனக்கு அவர் மந்திரிகள்) துணையாந்தன்மையும், துணிவுடைமை - துணிதலுடை மையும், இம்மூன்றின் - இம்மூன்றோடுகூடிய, வாய்மை - மெய்மையும் ஆம் என்றவாறு.

(க-ரை) சுத்தமும், துணையும், துணிவும், சத்தியமும், இந்நான்கும் தூ தினிலக்கணமாம் என்பதாம்.

(வி-ரை) பொருள் காமங்கள்பற்றி வேறுபடச் சொல்லாமைப் பொருட்டு தூய்மையும், தன்னரசனுக்கு உயர்ச்சி சொல்லியவிடத்தே எம்போல்வார்க்கு அது இயல்பென்று அவர் கோபத்தை நீக்கற்பொருட்டு துணைமையும், இது சொன்னால் இவர் தன்பம் செய்வரென்று ஒழியாமைப்

பொருட்டுத் துணிவுடைமையும், யாவராலும் நம்பப்படுதற்பொருட்டு மெய்மையும் வேண்டப்பட்டன.

'தூய்மை' என்றது மனச்சுத்தத்தை. என்னை? பொருட்பற்றும், காமப் பற்றும் உளவழி மாறுபடக்கூறும் ஆதலின் 'தூய்மை' வேண்டற்பாற்று. 'துணைமை' என்றது பகைஅரசர் அமைச்சர் தனக்குத் துணையாக இருக்குந்தன்மை என்பதாம். 'துணிவுடைமை' என்றது சொல்லுவசொல்லின் ஏதஞ்செய்வர் என்று அஞ்சிச்சொல்லா தொழியாதிருக்கும்பொருட்டு துணிவுடைமையாகிய அஞ்சாமை வேண்டும் என்றார். 'இம்மூன்றின்வாய்மை' என்றது இம்மூன்றோடுகூடிய வாய்மையும் என்பதாம். ஈண்டு 'இன்' உருபு ஒடுப்பொருள்தந்து நின்றது. 'வழியுரைப் பான்' என்றது தன் அரசன்சொல்லிய மாற்றத்தைத் தன் அரசன் சொல்லி மாங்கே சென்று கூறும் தூதன் என்பதாம். 'பண்பு' என்றது இலக்கணம் என்பதாம். (8)

விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம் வாய்சோரா வன்க ணவன்.

(பரி-உரை) விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் - தன்னரசன் சொல்லிவிட்ட வார்த்தையை வேற்றாசர்க்குச் சென்று சொல்லவுரியான், வடு மாற்றம் வாய்சோரா வன்கணவன் - தனக்கு வரும் ஏதத்திற்கு அஞ்சி அவனுக்குத் தாழ்வான வார்த்தையை வாய்சோர்ந்தும் சொல்லாத திண்மையையுடையான் எ-று.

தாழ்வு சாதிதருமமன்மையின், வடுவென்றார். வாய்சோராவெனக் காரியக் காரணத்தாலடக்கப்பட்டது.

(பதவுரை) விடுமாற்றம் - (தன்னரசன் சொல்லி) விட்ட வார்த்தையை, வேந்தர்க்கு-வேற்றாசர்க்கு, உரைப்பான்-சொல்லுதற்கு உரியவன், (தனக்கு வரும் தன்பத்திற்கு அஞ்சி) வடுமாற்றம் - (அவனுக்குத்) தாழ்வான வார்த்தையை, வாய்சோரா - வாய்சோர்ந்தும் சொல்லாத, வன்கணவன்- வலிமையை யுடையவன் எ-று.

(கருத்து) தன்னரசன் வார்த்தையை வேற்றாசர்க்குச் சொல்லுதற் குரியவனே தூதரில் வலியவன் என்பதாம்.

(விசேஷ உரை) தாழ்வு அரசர் சாதிக்குத் தருமமல்லாமையால் அதனை வடு வென்றார்.

'விடுமாற்றம்' என்றது தன் அரசன் சொல்லிவிட்ட சொற்களை. 'வேந்தர்க்கு உரைப்பான்' என்றது பகைஅரசர்க்குச் சென்று உரைக்கும் தூதன் என்பதாம். 'வடுமாற்றம்' என்றது தன் அரசனுக்குத் தாழ்வுதரும் சொல் என்பதாம். 'வாய்சோரா' என்றது வாய்சோர்ந்து சொல்லாத என் பதாம். 'வன்கணவன்' என்றது ஈண்டு வலிமையுடையவன் என்பதாம். (9)

இறந்தி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறந்தி பயப்பதாந் தூது.

(பரி-உரை) இறந்தி ப்யப்பினும் எஞ்சாது: அவ்வார்த்தை தன்னுயிர்க் கிறந்தி தருமாயினும் அதற்கு அஞ்சி யொழியாது, இறைவற்கு உறந்தி பயப்பது தூதாம்: தன்னாசன் சொல்லியவாறே அவனுக்கு மிகுதியை வேற்றாசரிடைச் சொல்லுவானே தூதனுவான் எ-று.

இறந்திபயப்பினு மென்றதனால், எனைய பயத்தல் சொல்லவேண்டா வாயிற்று. இவை மூன்றுபாட்டானும் கூறியது கூறவானதிலக்கணம் கூறப் பட்டது.

(ப-ரை) இறந்தி பயப்பினும் - (அவ்வார்த்தை தனக்கு) முடிவைத்தரு மாயினும்) எஞ்சாது-(அதற்கு) அஞ்சிவிடாது, (தன்னாசன் சொன்னபடியே) இறைவற்கு - அவ்வாசனுக்கு, உறந்தி - மிகுதியை, பயப்பது - (வேற்றாச னிடத்துச்) சொல்லுவானே, தூதாம்-தூதனுவான் எ-று.

(க-ரை) தனக்கு முடிவுவரினும் அஞ்சாது வேற்றாசனுக்குத் தன்னா சன் சொல்லைச் சொல்பவனே தூதன் என்பதாம்.

(வி - ரை) முடிவைத்தரினு மென்றதனால் மற்றைத் தண்பக்கோற் தருதல் சொல்லவேண்டுவதில்லையாயிற்று. [இவை மூன்றுபாட்டாலும் சொல்லியது சொல்லுவானது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'இறந்தி' என்றது அழிவை; அதாவது அத்தூதைச் சொல்லால் தன் உயிர் போவதாயிருந்தாலும் என்பதாம். 'எஞ்சாது' என்றது உயிர்போதற்கு அஞ்சி எஞ்சிவிடாது சொல்லாது விடாது. 'இறைவன்' என்றது சண்டை தூது கேட்கப்படும் அரசனை உணர்த்திற்று. 'உறந்தி' மிகுதி என்னும் பொருளது. (10)

69-ம் அதி - தூது - முற்றிற்று.

70-ம் அதிகாரம்—மன்னரைச்சேர்ந்தொழுகல்

(பரி-உரை) அஃதாவது, அமைச்சர் அரசரைப் பொருந்தி யொழுகு மாறு. இது * வேந்தவாம் பண்புடைமை யென மேலே வேண்டப்பட் டமையின், தூதின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: மந்திரி அரசரைப்பொருந்தி நடக்கும்விதம். இது வேந்தவாம் பண்புடைமையென முன் சொல்லப்பட்டமையால் தூதின் பின் வைக்கப்பட்டது.

---

* திருக்குறள்: 69-அதி. தூது-1.

அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

(பரி உரை) இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்-மாறுபடுதலேயுடைய அரசரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர், அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க-அவரை மிக நீங்குவதும் மிகச் செறிவதுஞ் செய்யாது தீக்காய்வார் போல இடைநிலத்திலே நிற்க எ-று.

கடிதின் வெகுளுந் தன்மையரென்பது தோன்ற, இகல்வேந்தரென்றார். வகலிற் பயன் கொடாது மிகவணுகின் அவமதிபற்றித் தெறும் வேந்தர்க்கு மிகவகலிற் குளிர் நீக்காது மிகவணுகிற் சுடுவதாய தீயோடனைதாய தாழிலுவமம் பெறப்பட்டது.

(ப-ரை) இகல்-மாறுபடுதலேயுடைய, வேந்தர்-அரசரை, சேர்ந்து-ஒத்த, ஒழுகுவார்-கடக்கு மந்திரிகள், (அவரை) அகலாது-மிக நீங்காமலும், அணுகாது-மிக நெருங்காமலும், தீக்காய்வார்போல்க-நெருப்பிற் குளிர் காய்வார்போல் நடுவிடத்து நிற்கக்கடவர் எ-று.

(கரை) மந்திரிகள் மாறுபாடுடைய வேந்தரிடத்து அகலாமலும் அணுகாமலு மிருக்கக்கடவர் என்பதாம்.

(வி-ரை) முன்கோபக்காரரென்பது தோன்ற இகல்வேந்தரென்றார். தீ நீக்கினும் பயன்கொடாமல் மிகநெருங்கினுல் அவமதிபற்றி வருத்தம் வேந்தர்க்கு மிக நீக்கினும் குளிர்நீங்காமல் மிக நெருங்கினும் சுடுவதாதலால் உபமானமாயிற்று.

'அகலாது' என்றது சண்டு மிக நீங்காது என்னும் பொருளது. 'அணுகாது' என்றது சண்டு மிக நெருங்காது என்னும் பொருளது. 'தீக்காய்வார்போல்' இது உபமானம். குளிர்நீங்கத் தீக்காய்பவர் என்பதாம். 'இகல்வேந்தர்' என்றது மாறுபடுதலேயுடைய அரசரை. (1)

மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

(பரி-உரை) மன்னர் விழைப விழையாமை - தம்மாற் சேரப்பட்ட மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதொழிதல், மன்னரான் மன்னிய ஆக்கம் தரும்-அமைச்சர்க்கு அவராலே நிலைபெற்ற செல்வத்தைக் கூடுக்கும் எ-று.

சண்டு விழைபவென்றது அவர்க்குச் சிறப்பாக வரியவற்றை. அவை சரப்படுவன, ஒப்பனை, மேன்மையென்றிவை முதலாயின; இவற்றை பிற்கு அஞ்சித் தாம் விழையாதொழியவே, அவ்வச்சநோக்கி யுவந்து ர்தாமே எல்லாச் செல்வமும் கல்குவரென்பது கருத்து. எனவே; ற்றை விரும்பிற் கேடுதரு மென்பதாம்.

(ப-ரை) மன்னர் (தம்) மன்னரால், விழைப - விரும்பப்பட்டவைகளை விழையாமை - (தாம்) விரும்பாதிருத்தல், மன்னரால் - அவ்வரசராலே மன்னிய - கிலபெற்ற, ஆக்கம் - செல்வத்தை, தரும் - (மந்திரிகளுக்குக்) கொடுக்கும் எ-று.

(க-ரை) தம்மரசரால் விரும்பப்பட்டவற்றை விரும்பாதிருத்தல் மந்திரிகளுக்கு அவரால் செல்வமுண்டாம் என்பதாம்.

(வி-ரை) இங்கே விரும்பப்பட்டவை என்றது அவர்க்குச் சிறப்பாய் உரியவைகளை. அவை உண்ணப்படுவனவும், அணியப்படுவனவும், முதலியனவை. இவைகளைச் சமமாய்த் தோன்றற்கு அஞ்சி விரும்பாதொழியாது அவ்வச்சநோக்கி மகிழ்ந்து அவர்தாமே எல்லாச்செல்வமும் தருவரென்பது கருத்து.

'மன்னர் விழைப' என்றது மன்னர்க்கே சிறப்பாக உடையனவற்றை அவை அனுபவிக்கப்படுபவையும், ஒப்பனையும், மேன்மையும் ஆகியவைகளை என்பதாம். 'மன்னிய' இது கிலபெற்ற என்னும் பொருளது. 'ஆக்கம்' என்றது செல்வத்தை.

போற்றி ன்ரியவை போற்றல் கடித்தபின்
றேற்றுதல் யார்க்கு மரிது.

(பரி-உரை) போற்றின் அரியவை போற்றல்-அமைச்சர் தம்மைக் காக்கு கருதின் அரிய பிழைகள் தங்கண் வாராமற் காக்க, கடுத்தபின் தேற்றுத யார்க்கும் அரிது - அவற்றை வஞ்சனவாகக்கேட்டு அவ்வாசர் ஐயுற்ற அவரைப் பின் தெளிவித்தல் யாவர்க்கும் அரிதாகலான் எ-று.

அரிய பிழைகளாவன-அவராற்பொறுத்தற்கரிய அறைபோதல், உரைபொடு மருவல், அரும்பொருள் வெவவலென் றிவை முதலாயின. அவற்றைக் காத்தலாவது - ஒருவன் சொல்லியக்கால், தகுமோ என்று ஐயுறுதகாதென்றே அவர் கணிய வொழுகல். ஒருவாற்றாற் தெளிவித்தாலுங் கடன்கொண்டான் தோன்றப் பொருள் தோன்றுமாறுபோலக் கண்டேயெல்லாம் அவை கிணைக்கப்படுதலின் யார்க்கு மரிதென்றார். இவை மூன்றாட்டானும் அத பொதுவகையாற் கூறப்பட்டது.

(ப-ரை) (மந்திரிகன்) போற்றின் - (தம்மைக்) காத்துக்கொள்ளவேண்டினால், அரியவை - அரிய பிழைகளை, போற்றல் - (தம்மிடத்திலே வாராமற்) காக்கக்கடவர், கடுத்தபின் - (அவ்வாசர் அவை வஞ்சனைகளாகக்கேட்டு) சங்தேகித்த பின்பு, தேற்றுதல் - (அவரைப்பின்) தெளிவித்தல் யார்க்கும் யார்க்கும், அரிது-அருமை (ஆதலால்) எ-று.

(க-ரை) மந்திரிகன் தங்களிடத்துக் குற்றம் வாராமற் காக்கக்கடவர் தம்மரசர் சங்தேகித்தபின் அவரைத் தெளிவித்தலரிது என்பதாம்.

(வி-ரை) அரியபிழைகள் - அவராலே பொறுத்தற்கரிய தீமைகள் தானவை. அவைகளைக் காத்தலாவது-ஒருவன் சொல்லியக்கால் அவர் ம்பாதிருக்கும்படி கடத்தல். பின் ஒருவழிபால் கம்புலித்தலும், கடன் கண்டவரைக் கண்டவிடத்தெல்லாம் அப்பொருள்போல் தம்மைக் கண்ட டத்தெல்லாம் அப்பிழை தோன்றுமாதலால் யார்க்குமரிதென்றார். [இவை ன்றபாட்டாலும் அது பொதுவகையாற் சொல்லப்பட்டது.]

'அரியவை' என்றது பொறுத்தற்கு அரியதாய பிழைகளை. 'கடுத்தபின்' ன்றது ஈண்டு சந்தேகித்தபிறகு என்னும் பொருளது. 'அவ் அரசர் அப் ழைகள் வந்தவைகளாகக் கேட்டு' என்றது வருவித்த உரை. 'தேற்றுதல்' ன்றது சந்தேகித்த அரசனைத் தெளிவுபெறச் செய்தல் என்பதாம். (3)

செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக லான்ற பெரியா ரகத்து.

(பரி-உரை) ஆன்ற பெரியார் அகத்து-அமைந்தவரசர் அருகிருந்தால், சவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல்-அவர் காண ஒருவன் சவிக்கட் சொல்லுதலையும் ஒருவன் முகநோக்கி நகுதலையும் தவிர்த் தாழுகுக எ-று.

சேர்தல் - பிறனொடு சேர்தல். செய்தொழுகின், தங்குற்றங் கண்டு ரய்தனவாகக் கொள்ளுமென்பது கருத்து.

(ப-ரை) ஆன்ற-நிறைந்த, பெரியாரகத்து அரசரிடத்திருக்கும்போது, சவிச்சொல்லும் - ஒருவன் காதிலே சொல்லுதலையும், சேர்ந்த நகையும்- ருவன் முக) நோக்கி நகைத்தலையும், அவித்து - நீக்கி, ஒழுகல் - நடக்கக் டவன் எ-று.

(க-ரை) மந்திரி அரசனிடத் திருக்கையில், ஒருவன் காதிற் சொல்லு லையும், ஒருவன் கண்டு நகைத்தலையும் நீக்கி நடக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) சேர்தல்-பிறனோடு சேர்தல். அவைசெய்தால் தஞ்சோர்வு ண்டு செய்தவையாகக் கொள்ளுமென்பது கருத்து.

'செவிச்சொல்' என்றது அரசர்காண ஒருவர் காதில் இரகசியமாகப் பசுதலை. 'சேர்ந்தநகை' என்றது அரசர்காண ஒருவன் முகநோக்கிச் ரித்தலை. 'அவித்து' என்றது நீக்கி என்னும் பொருளது. 'ஆன்ற' என்றது ண்டு அமைந்த நிறைந்த என்னும் பொருளது. 'பெரியார்' என்றது ரசரை. (4)

எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை விட்டக்காற் கேட்க மறை.

(பரி-உரை) மறை - அரசனுக்குப் பிறரோடு மறை நிகழ்வுழி, எப் பாருளும் ஓரார் - யாதொரு பொருளையுஞ் செவிகொடுத்துக் கேளாது,

தொடரார்-அவனை முடிவு வினவுவதஞ் செய்யாது, அப்பொருளை விட்டகால் கேட்க-அம்மறைப்பொருளை அவன்றானே அடக்காது சொல்லியக்கா கேட்க எ-று.

ஓர்தற்கு எற்கும் பொருளாயினு மென்பார், எப்பொருளுமென்றார் மற்று வினைமாற்றின்கண் வந்தது.

(பதவுரை) மறை (அரசனுக்குப் பிறரோடு) ரகசியம் நிகழுமிடத்து, எப் பொருளும்-யாதொருபொருளையும், ஓரார்-செவிகொடுத்துக் கேளாமலும், தொடரார்-அவனை முடுகிவினவாமலும், அப்பொருளை-அந்த ரகசியப் பொருளை, விட்டக்கால்-அவனே அடக்காமற் சொல்லினால், கேட்க கேட்கக்கடவர் எ-று.

(கருத்து) அரசனிரகசியம் பேசுகையிற் கேளாமலு மதை வினவாமலு மிருந்து அவன் சொன்னால் மந்திரிகள் கேட்கக்கடவர் என்பதாம்.

(விசேடவுரை) முடுகி வினவுதற்கு உரிய பொருளாயிருந்தாலு மென்றற்கு எப்பொருளுமென்றார்.

'மறை' என்றது இரகசியத்தை. 'எப்பொருளும் ஓரார்' என்றது அவ் இரகசியத்தில் ஒரு சிறிதையும் ஒற்றுக்கேட்டறியாதவர் ஆகி என்பதாம். 'தொடரார்' என்றது அவர்பால் முடுகிச்சென்று கேட்காமலும் என்பதாம். 'விட்டக்கால்' என்றது அவ்வரசனே அவ்விரகசியத்தை அடக்கமுடியாது வெளிவிட்டபொழுது என்பதாம். 'மற்று' என்றது வினைமாற்றப் பொருளில் வந்தது.

குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில வேண்டுப வேட்பச் சொலல்.

(பரிமேலுரை) குறிப்பு அறிந்த-அரசனுக்குக் காரியஞ் சொல்லுங்கால் அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினை யறிந்து, காலம் கருதி-சொல்லுதற்கேற்ற காலத்தையும்நோக்கி, வெறுப்பு இல வேண்டுப வேட்பச் சொல்-வெறுப்பிலவுமாய் வேண்டுவனவுமாய காரியங்களை அவன் மனம் விரும்புவ வகை சொல்லுக எ-று.

குறிப்புக் காரியத்தின்கணன்றிக் காமவெகுளி யுள்ளிட்டவற்றினிடமு வழியும் அதற்கு எலாக்காலத்தஞ் சொல்லுதல் பயனின்றாகலிற் குறிப்பறிந்த காலங்கருதி யென்றும், அவனுடம்படாதன முடிவுபோகாவமையி வெறுப்பிலவென்றும், பயனில்லவும் பயன் சுருங்கியவுஞ் செய்தல் வேண்டாமையின் வேண்டுப வென்றும், அவற்றை இனியவாய்ச் சுருங்கி விளங்கிய பொருளவாய சொற்களாற் சொல்லுகவென்பார் வேட்பச் சொலவென்றார் கூறினார்.

(பதவுரை) (அரசனுக்குக் காரியஞ்சொல்லும்போது) குறிப்பறிந்து-(அப் பொழுது நிகழ்கின்ற அவனது) குறிப்பை அறிந்து, காலங்கருதி-(சொல்லு

தற்கு ஏற்ற) காலத்தையும் பார்த்து, வெறுப்பில - வெறுப்பில்லாதனவும், வேண்டுப-வேண்டுவனவும் ஆகிய காரியங்களை, வேட்ப - (அவன் மனம்) விரும்பும் வகை, சொலல்-சொல்லக்கடவர் எ-று.

(க-ரை) குறிப்பறிந்து சமயம் பார்த்து வெறுப்பில்லாதவற்றையும் வேண்டுவனவற்றையுஞ் சொல்லக்கடவர் என்பதாம்.

(வி-ரை) அரசன் மனம் காரியத்திலன்றிக் காமவெகுளி யுள்ளிட்டவை களிலே நிகழுமிடத்தும், அதற்கு ஏற்காதகாலத்தும் சொல்லுதல் பயன் படாமற்போதலால் குறிப்பறிந்து காலங்கருதியென்றும், அவனுடன்படாத காரியங்கள் முடிவுபெருமையால் வெறுப்பிலவென்றும் பயனில்லாதவையும் பயன் சுருங்கியவையும் ஆகிய காரியங்களைச் செய்யவேண்டாமையால் வேண்டுபவென்றும், அவைகளை இனியவையாய்ச் சுருங்கி விளங்கிய பொருளுடையவையாகிய சொற்களாலே சொல்லுகவென்றற்கு வேட்பச் சொல்லென்றும் சொல்லினார்.

'குறிப்பு' என்றது அரசன் குறிப்பை. 'காலம்' என்றது அரசனது செவ்விமை. 'வெறுப்பில' என்றது வெறுக்கத்தகாத காரியங்களை என்பதாம். 'வேண்டுப' என்றது மிக்க அவசியமான காரியங்களை என்பதாம். 'வேட்ப' என்றது விரும்புமாறு என்பதாம். (6)

வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

(பரி-உரை) வேட்பன சொல்லி-பயன் பெரியனவுமாய் அரசன் விரும்பு வனவுமாய காரியங்களை அவன் கேட்டிலனாயினுஞ் சொல்லி, எஞ்ஞான்றும் வினை இல கேட்பினும் சொல்லாவிடல்-எஞ்ஞான்றும் பயனிலவாயவற்றைத் தானே கேட்டாலுஞ் சொல்லாதுவிடுக எ-று.

வினையிலவெனவுங் கேட்பினுமெனவும் வந்த சொற்களான், அவற்றின் மறுதலைச் சொற்கள் வருவிக்கப்பட்டன. வினையான் வருதலின் வினை யென்றும், வறுமைக் காலமுமடங்க எஞ்ஞான்று மென்றுங் கூறினார். சொல்லுவனவுஞ் சொல்லாதனவும் வகுத்துக் கூறியவாறு. இவை கான்கு பாட்டானும் சிறப்புவகையாற் கூறப்பட்டது.

(ப-ரை) (பெரும்பயனுள்ளவையும்) வேட்பன - (அரசன்) விரும்பு வனவும், (ஆகிய காரியங்களை) சொல்லி-(அவன் கேட்டிலனாயினும்) சொல்லி, எஞ்ஞான்றும் - எக்காலமும், வினையில - பயனில்லாதவைகளை, கேட்பினும்-(தானே) கேட்டாலும் சொல்லாவிடல்-சொல்லாது விடக்கடவன் எ-று.

(க-ரை) அரசன் விரும்பியவற்றைச் சொல்லிப் பயனில்லாதவற்றை அவன் கேட்டாலும் மந்திரி சொல்லாது விடக்கடவன் என்பதாம்.

(வி-ரை) வினையில கேட்பினும் என வந்த சொற்களால் அவைகளுக்கு நேரான சொற்கள் வருவிக்கப்பட்டன. வினையால் வருதலின் வினை

யென்றும், வறுமைக்காலமும் அடங்க எஞ்ஞான்றுமென்றும் சொல்லினார். சொல்லத்தக்கவையும் சொல்லத்தகாதவையும் வகுத்துச் சொல்லியபடி. [இவை நான்குபாட்டாலும் சிறப்புவகையால் சொல்லப்பட்டது.]

'வேட்பன' என்றது பெரும்பயன் உடையனவும் விரும்பத்தகுந்தது மாகிய காரியங்களை. 'வினையில' என்றது பயனில்லாத காரியங்களை. 'எஞ்ஞான்றும்' என்றது எக்காலத்தும் என்பதாம். ஈண்டு எகரம் விளை இடைச்சொல். (7)

இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற வொளியோ டொழுகப் படும்.

(பரி-உரை) இளையவர் இன முறையர் என்று இகழார்-இவர் எம்மின் இளையரென்றும் எமக்கு இன்ன முறையினையுடையரென்றும் அரசரை யவமதியாது, நின்ற ஒளியோடு ஒழுகப்படும்-அவர்மாட்டு நின்ற வொளியோடு பொருந்த ஒழுகுதல் செய்யப்படும் எ-று.

ஒளி * உறங்காநிற்கவுந் தாம் உலகங் காக்கின்ற அவர் கடவுட்டன்மை. அதனோடு பொருந்த வொழுகலாவது - அவர் கடவுளருந் தாம் மக்களுமா யொழுகுதல். அவ்வொளியாற் போக்கப்பட்ட விளமையும் முறையும்பற்றி இகழ்வராயின், தாமும் போக்கப்படுவரென்பது கருத்து.

(ப-ரை) இளையர்-(இவர் எமக்கு) இளையவர், இனமுறையார் - (எமக்கு) இன்னமுறையினர், என்றிகழார்-என்று (அரசரை) அவமதியாமல், நின்ற (அவரிடத்து) நிலைபெற்ற, ஒளியோடு - ஒளியோடு பொருந்த, ஒழுகப்படும் நடக்கத்தகும் எ-று.

(க-ரை) அரசரிளையவர் எமது சாதியார் என்றிகழாமல் மந்திரிகள் மதிக்கக்கடவர் என்பதாம்.

(வி-ரை) ஒளி நித்திரை செய்யாநிற்கவும் உலகங் காக்கின்ற அவரது தெய்வத்தன்மை. அதனோடு பொருந்த வொழுகுதலாவது - அவர் தேவரும் தாம் மனிதருமாக நடத்தல். அவ்வொளியினாலே நீக்கப்பட்ட இளமையும் முறைமையும்பற்றி இகழ்வாரானால் தாமும் நீக்கப்படுவரென்பது கருத்து.

'இளையர்' என்றது வயதாற் குறைந்தவர் என்னும் பொருளது. 'இன முறையர்' என்றது இன்னமுறையுடையவர் என்னும் பொருளது. இனி இதற்கு, இனமாகிய முறையார் எனவும் பொருள் கூறுவர். 'ஒளி' என்றது அரசன்பாலுள்ள கடவுட்டன்மையை. 'ஒட்டஒழுகல் என்றது அரசர்மாட்டு நின்ற கடவுட்டன்மைக்கேற்ப விநய வணக்கமுடன் நடந்துகோடலை. (8)

* "உறங்குமாயினு மன்னவன் றன்னொளி, கறங்கு தெண்டிரை வையகங் காக்குமா, லிறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந், தறங்கள் வெளவதன்புறங் காக்கலார்." சீவகசிந்தாமணி: நாமகளிலம்பகம்-219.

கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்
துளக்கற்ற காட்சி யவர். [யார்

(பரி-உரை) கொளப்பட்டேம் என்று எண்ணிக்கொள்ளாத செய்யார்-அரசனுல் யாம் கன்கு மதிக்கப்பட்டேம்என்று கருதி அவன் விரும்பாத தற்றைச் செய்யார், தனக்கு அற்ற காட்சியவர் - நிலைபெற்ற அறிவினையுடை யார் எ-று.

கொள்ளாதனசெய்து அழிவெய்தலார் கொளப்பாட்டிற்குப் பின் தம்மை வேறொருவராகக் கருதலராகலின், முன்னேயாராகவே கருதி யஞ்சி யொழுகுவாரைத் தனக்கற்ற காட்சியவரென்றார்.

(ப - ரை) தனக்கற்ற - அசைவற்ற, காட்சியவர் - அறிவுவயுடையவர், கொளப்பட்டேமென்று - (அரசனுல்) கன்கு மதிக்கப்பட்டோமென்று, எண்ணி - நினைத்து, கொள்ளாத - (அவன்) விரும்பாதவைகளை, செய்யார்-செய்யார்கள் எ-று.

(க-ரை) அறிவுடையவர் அரசனுலே மதிக்கப்பட்டோமென்று நினைத்து அவன் விரும்பாதவற்றைச் செய்யார் என்பதாம்.

(வி-ரை) விரும்பாதவைகளைச்செய்து அழிவடைவோர் கொள்ளப்பட்டபின்பு தம்மை வேறொருவராக நினைப்பவராதலால், முன்னேயாராகவே நினைத்து அஞ்சி நடப்பவரை தனக்கற்ற காட்சியவரென்றார்.

'கொளப்பட்டேம்' என்றது அரசனுல் கன்கு மதிக்கப்பட்டேம் என்பதாம். 'கொள்ளப்பட்டேம்' என்றது 'கொளப்பட்டேம்' என ஆயது தொகுத்தல்விகாரம். 'கொள்ளாத' என்றது அரசன் விரும்பாத காரியங்களை என்பதாம். 'தனக்கற்றகாட்சி' என்றது சலனமின்றி நிலைபெற்றதாகிய ஞானக்காட்சி என்பதாம். (9)

பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.

(பரி-உரை) பழையம் எனக் கருதிப் பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை - அரசனுக்கு யாம் பழையமெனக் கருதித் தமக்கு இயல்பல்லாதவற்றைச் செய்யுமுரிமை, கேடுதரும்-அமைச்சர்க்குக் கேட்டினைப் பயக்கும் என்று.

அவன் பொருளை செறும்பொழுதின் அப்பழைமைநோக்கிக் கண்ணேறாது உயிரை வெளவுதலான், அவன் வேண்டாதன செய்தற்கு ஏதுவாய கெழுதகைமை கேடுதருமென்றார். இவை மூன்றுபாட்டானும் பொறப்பன்ற அரசர் வெறுப்பன செய்யற்கென்பது கூறப்பட்டது.

(ப-ரை) பழையமென - (அரசனுக்குப்) பழமையோமென, கருதி-நினைத்து, பண்பல்ல-(தமக்கு) இயல்பல்லாதவைகளை, செய்யும்-செய்கின்ற,

கெழுதகைமை - உரிமையானது, கேடுதரும் - (மந்திரிகளுக்குக்) கேட்டைத் தரும் எ-று.

(க-ரை) அரசனுக்குப் பழைமையோமென்ற நினைத்த இயல்பல்லாத வற்றைச் செய்யு முரிமையானது மந்திரிகளுக்குக் கேட்டைத்தரும் என்பதாம்.

(வி-ரை) அவன் பொருத வருத்தம் பொழுதில் அப்பழைமை கொண்டு முகங்கொடாமல் உயிரை வௌவுதலால் அவன் வேண்டாதவை செய்தற்கு எதுவாகிய உரிமை கேடுதருமென்றார். [இவை மூன்று பாட்டாலும் பொறுப்பதொன்று அரசர்க்கு வெறுப்பாயுள்ளவைகளைச் செய்யலாகாதென்பது சொல்லப்பட்டது.]

'பழையம்' என்றது அரசன்பால் நெடுநாள் உள்ள பழைமையை. 'பண்பல்' என்றது நம் நகுதித் தகாதகாரியங்களை. 'கெழுதகைமை' இது உரிமை என்னும் பொருளது. 'கேடுதரும்' என்ற இடத்து அமைச்சர்க்கு என்பது வருவித்துக்கொள்ளற்பாலது. (10)

70-ம் அதி - மன்னரைச்சேர்ந்தொழுகல் - முற்றிற்று.

71-ம் அதிகாரம்—குறிப்பறிதல்

(பரி-உரை) அஃதாவது: அரசர் கருதியவதனை அவர் கூறுமலறிதல். இது மன்னரைச் சேர்ந்தொழுகற்கு இன்றியமையாததாகலின், அதன்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: அரசர் நினைத்ததை அவர் சொல்லாமல் அறிதல். இவை மன்னரைச்சேர்ந்து நடப்பவர்க்கு அவசியமானதாகலால், இது அதன்பின் வைக்கப்பட்டது.

கூறுமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறுநீர் வையக் கணி.

(பரி உரை) குறிப்புக் கூறுமை நோக்கி அறிவான் - அரசனுற் குறித்த கருமத்தை அவன் கூறவேண்டாவகை அவன் முகத்தானுங் கண்ணானும் நோக்கி அறியுமமைச்சன், எஞ்ஞான்றும் மாறுநீர் வையக்கு அணி-எஞ்ஞான்றும் வற்றாத நீராற்சூழப்பட்ட வையத்துள்ளார்க்கு ஓராபரணமாம் எ-று.

ஒட்பமுடையனாய் எல்லார்க்கும் அழகு செய்தலான், வையக்கணி யென்றார். குறிப்பும் வையமும் ஆகுபெயர். வையத்திற்கென்பது விகாரப் பட்டு நின்றது.

(ப-ரை) குறிப்பு - (அரசனுற்) குறிக்கப்பட்ட காரியத்தை, கூறுமை (அவன்) சொல்லவேண்டாவகை, நோக்கி-(அவன் முகத்தையாவது கண்ணை யாவது) பார்த்து, அறிவான் - அறிகிற மந்திரியானவன், எஞ்ஞான்றும்

ர்தாளும், மாருநீர் - வற்றுத நீராலே சூழப்பட்ட, வையக்கு - உலகத்துள் ார்க்கு, அணி-ஆபரணம் எ-று.

(க-ரை) அரசன் குறிப்பை யறிகிற மந்திரி உலகத்தார்க் காபரண ாவான் என்பதாம்.

(வி-ரை) அறிவுடையனாகி எல்லார்க்கும் அழகு செய்தலால் வையக் ணியென்றார். குறிப்பும் வையமும்: ஆகுபெயர்கள். வையத்திற்கென்பத ிகாரம்.

'கூருமை' இது எதிர்மறை மையீற்றுப்பண்புப்பெயர். இதற்கு அரசன் டறவேண்டாவகை என்பதாம். 'நோக்கிக் குறிப்பறிவான்' என்றது அரசன் நறித்த கருத்தை அவ்வரசனின் முகத்தாலுங் கண்ணாலும் நோக்கி அறியும் ந்திரி என்பதாம். 'மாருநீர் வையம்' என்றது வற்றுத நீரையுடைய டல்சூழ்ந்த உலகம் என்பதாம். 'வையக்கு' இது 'வையத்திற்கு' என்பதன் ிகாரம். இது ஆகுபெயராய் உலகத்து உள்ளாரைக் குறித்தது. (1)

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத் தெய்வத்தோ டொப்பக் கொளல்.

(பரி-உரை) அகத்தது ஐயப்படாது உணர்வானை - ஒருவன் மனத்தின் ண் நிகழ்வதனை ஐயப்படாது ஒருதலையாக வுணரவல்லானை, தெய்வத்தோடு ப்பக் கொளல் - மகனேயாயினும் தெய்வத்தோடொப்ப கன்கு மதிக்க எ-று.

உடம்புமுதலியவற்றான் ஒவ்வாவுயினும் பிறர் கினைத்தது உணரும் தெய்வத்தன்மை யுடைமையின், தெய்வத்தோ டொப்பவென்றார்.

(பத-ரை) அகத்தது-(ஒருவனது) மனத்தினிடத்திலே நிகழ்வதை, ஐயப் டா அது - சந்தேகப்படாமல், உணர்வானை - தணிவாக அறிய வல்லவனை, மனிதனேயாயினும்) தெய்வத்தோடொப்ப - தெய்வத்தோடு சமானமாக, காளல்-நன்கு மதிக்கக்கடவன் எ-று.

(க-ரை) மனத்தினிடத்து நடப்பதை அறிபவனைத் தெய்வத்தோடு மானமாகக் கொள்ளக்கடவன் என்பதாம்.

(வி-ரை) உடம்பு முதலானவைகளால் ஒப்பாகாவுயினும் பிறர் கினைத் தை அறிகிற தெய்வத்தன்மை யுடைமையால் தெய்வத்தோ டொப்ப வன்றார்.

'படா அது' இது யாப்பில் இசைகிறைக்கவந்த அளபெடை. 'அகத்தது' ன்றது ஒருவன் மனத்தினுள்ள விஷயக்கை என்பதாம். (2)

குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள் யாது கொடுத்துங் கொளல்.

(பரி-உரை) குறிப்பின் குறிப்பு உணர்வாரை - தங்குறிப்பு நிகழுமா ிக்கை அதனைப் பிறர் குறிப்பறியுந்தன்மையாரை, உறுப்பினுள் யாது

கொடுத்தும் கொளல் - அரசர் தம் உறுப்புக்களுள் அவர் வேண்டுவதொன்றினைக் கொடுத்தாயினும், தமக்குத் துணையாகக் கொள்க எ-று.

உள் கிழுறொறி யாவர்க்கும் ஒத்தலின், பிறர் குறிப்பதற்குத் தம் குறிப்புக் கருவியாயிற்று. உறுப்புக்களாவன - பொருளும் நாடும் யானை குதிரைகளும் முதலிய புறத்தறுப்புக்கள். இதற்குப் பிறர் முகக்குறிப்பாலே அவர் மனக்குறிப்புணர்வாரை யென்றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் குறிப்பறிவாரது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) குறிப்பின் - (தங்) குறிப்பு கிழுமம்விதம் அறிந்து, குறிப்புணர்வாரை-(அதனால்) பிறர்குறிப்பு அறியுந்தன்மையவரை, உறுப்பினுள்-(அரசர் தம்) முறுப்புகளுள், யாதுகொடுத்தும் - (அவர் வேண்டுவது) யாதொன்றைக் கொடுத்தாயினும், கொளல் (தமக்குத்) துணையாகக் கொள்ளக்கடவர் எ-று.

(க-ரை) குறிப்பால் குறிப்பறிபவரை வேண்டுவன கொடுத்துக் கொள்ளக்கடவர் என்பதாம்.

(வி-ரை) உள்ளே கிழுமம்வழி யாவர்க்கும் ஒத்தலால் பிறர் குறிப்பை அறிதற்குத் தங்குறிப்புச் சாதனமாயிற்று. உறுப்புகள்-பொருள், நாடுமுதலிய புறத்தறுப்புகள். [இவை மூன்றுபாட்டாலும் குறிப்பறிவாரது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'குறிப்பிற் குறிப்புணர்வாரை' என்றது தம் குறிப்புக்கொண்டு பிறர் குறிப்பு அறியவல்லாரை என்பதாம். இனி இதற்கு முகக்குறிப்பால் மனக்குறிப்பை அறியவல்லாரை என்னலுமாம். 'உறுப்பு' என்றது நாடு, பொருள், யானை, குதிரை முதலிய புறத்தறுப்புகளைக் குறித்ததாம். 'யாது' இடையிலுவடியாகப் பிறந்த பெயர். (9)

குறித்தது கூறுமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு.

(பரி-உரை) குறித்தது கூறுமைக் கொள்வாரோடு - ஒருவன் மனத்தைக் கருதியவதனை அவன் கூறவேண்டாமல் அறியவல்லாரோடு, ஏனை உறுப்பு ஒனையர் - மற்றை மாட்டாதார் உறுப்பால் ஒருதன்மையராக வொப்பாயினும், வேறு-அறிவான் வேறு எ-று.

கொள்ளாதாரென்பதூஉம், ஆயினுமென்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. சிறந்த அறிவின்மையின், விலங்கென்னுங் கருத்தான் வேறென்றார்.

(ப-ரை) குறித்தது-(ஒருவன் மனத்தி) னினைத்ததை, கூறுமை-(அவன்) சொல்லாமல், கொள்வாரோடு-அறியவல்லவரோடு, ஏனை - மற்றை, (அறிய மாட்டாதவர்) உறுப்பு - அவயவத்தால், ஒனையர் - ஒருதன்மையாக வொப்பினும், வேறு-(அறிவால்) வேறு எ-று.

(க-ரை) மனதில் கினைத்ததைச் சொல்லாமலறிய வல்லவரோடு அறிய மாட்டாதவர் வடிவாலொப்பினுமறிவால் வேறுவர் என்பதாம்.

(வி-உ) அறியமாட்டாதவரென்பதும், அறிவாலென்பதும் வருவிக்கப்பட்டன. சிறந்த அறிவில்லாமையால் மிருகமென்னும் கருத்தால் வேறென்றார்.

'குறித்தது' என்றது மனதிற் கருதிய பொருளை. 'கூருமைக் கொள்வார்' என்றது கூறவேண்டாமலே அறியவல்லார் என்பதாம். 'வேறு' என்றது முன்னை குறித்தது கூருமைக் கொள்ளாதார் என்பதாம். 'கூருமைக் கொள்ளாதார்' என்றது அவாய்நிலையான் வருவிக்கப்பெற்றது. 'உறுப்பு' என்றது தேகஅவயவங்களை. 'அனையரால்' என்றது ஒரு தன்மையர் என்பதாம். இதில் 'ஆல்' அசை. 'வேறு' என்றது ஆயினும் அறிவான் வேறு என்பதாம். ஈண்டு ஆயினும் என்றதும் அறிவால் என்பதும் அவாய்நிலையான் வந்தன. (4)

குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண்.

(பரி-உரை) குறிப்பின் குறிப்பு உணராவாயின்-குறித்தது காணவல்ல காட்சியாற் பிறர் குறிப்பினை புணர்மாட்டாவாயின், உறுப்பினுள் கண்ணென்ன பயத்தவோ - ஒருவன் உறுப்புக்களுட் சிறந்த கண்கள் வேறென்ன பயனைச் செய்வன? எ-று.

முதற்கட் குறிப்பு ஆகுபெயர், குறிப்பறிதற்கண் துணையாதற் சிறப்புப் பற்றி உயிர்தணர்வு கண்மேலேற்றப்பட்டது. அக்கண்களாற் பயனில்லை யென்பதாம். இவை யிரண்டுபோட்டாலும் குறிப்பறியாரதிழிவு கூறப்பட்டது.

(பத) குறிப்பின்-(குறித்ததை அறியவல்லதன்) காட்சியால், குறிப்புறர்) குறிப்பை, உணராவாயின் - அறியமாட்டாவாயின், (ஒருவனுக்கு) றுப்பினுள்-அவயவங்களுள், கண்-(சிறந்த) கண்கள், என்னபயத்தவோ-வேறு) என்னபயன் செய்வனவோ? எ-று.

(க-ரை) குறிப்பால் பிறர்குறிப்பை யறியாவிடில் கண்கள் என்ன னைத்தருவன என்பதாம்.

(வி-ரை) குறிப்பறியுமிடத்தே துணையாஞ் சிறப்புப்பற்றி உயிரினறிவு மேல் ஏற்றப்பட்டது. அக்கண்களாலே பயனில்லை என்பதாம். [இவை ரண்டுபோட்டாலும் குறிப்பறியாரிழிவு சொல்லப்பட்டது.]

'குறிப்பின்' என்றது குறிப்பறியவல்ல நோக்கத்தால் என்பதாம். றிப்புணராவாயின்' என்றது பிறர்குறிப்பை அறியாத போமேயாலும். றுப்பினுள்கண்' என்றது உறுப்புகளுக்குள்ளே சிறந்ததாகிய கண் என்பம்; இதில், சிறந்ததாகிய என்பது வருவித்த உரை. 'என்னபயத்தவோ' றது வேறு என்னபயனைச் செய்வனவாகும் என்பதாம். அதாவது அக் களால் பயன் யாதொன்றும் இல்லை என்பதாம். (5

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம்.

(பரி-உரை) அடுத்தது காட்டும் பளிக்குபோல்-தன்னையடுத்த பொருளி
றத்தைத் தானே கொண்டுகாட்டும் பளிக்குபோல, . நெஞ்சங் கடுத்த
முகம் காட்டும்-ஒருவன் நெஞ்சத்து மிக்கதனை அவன்முகந் தானே கொண்
காட்டும் எ-று.

அடுத்தனென்பது ஆகுபெயர். கடுத்தனென்பது கடியென்னும் உரி
சொலடியாய் வந்த தொழிற்பெயர். உவமை ஒரு பொருள் பிறிதொ
பொருளின் பண்பைக்கொண்டு தோற்றுதலாகிய தொழில்பற்றி வந்தது.

(ப-ரை) அடுத்தது (தன்னை) அடுத்த பொருளினது நிறத்தை, காட்டு
(தான்கொண்டு) காட்டுமிற, பளிக்குபோல் - பளிங்கினைப்போல், நெஞ்ச
(ஒருவனது) நெஞ்சத்தில், கடுத்தது-மிகுந்தகுணத்தை, முகம் - (அவ
முகமானது, காட்டும்-(தான்கொண்டு) காட்டும் எ-று.

(க - ரை) அடுத்த பொருளாக்காட்டும் கண்ணாடிபோல ஒருவ
மனத்தின் குணத்தை முகங்காட்டும் என்பதாம்.

(வி - ரை) அடுத்தனிறத்தை அடுத்தனெனலால் ஆகுபெயர். ஒ
பொருள் கேறொரு பொருளின் குணத்தைக்கொண்டு தோற்றுதலா
தொழிலுவமை.

'அடுத்தது காட்டும் பளிக்குபோல்' என்றது உபமானம். 'கடுத்த
என்றது மிக்கது என்னும் பொருளது. இது கடி என்னும் உரிச்சொல்
யாகப் பிறந்தது.

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்.

(பரி-உரை) உவப்பினும் காயினும் தான் முந்துறும் - உயிர் ஒருவ
புவத்தலானுங் காய்தலானுமுறின், தானறிந்த அவற்றின்கண் அதனி
மூற்பட்டு நிற்குமாகலான், முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ - மு
போல அறிவு மிக்கது பிறிதுண்டோ இல்லை எ-று.

உயிர்க்கே அறிவுள்ளது ஐம்பூதங்களானியன்ற முகத்திற்கில்
யென்பாரைநோக்கி, உயிரது கருத்தறிந்த அஃது உலக்குறின் மலர்த்
காய்வுறிற் கருகியும் வாலான், உண்டென மறப்பார் போன்ற, குறிப்
தற்குக் கருவி கூறியவாறு.

(ப-ரை) (உயிரானது) உவப்பினும்-விரும்பினாலும், காயினும்-கோ
நாலும், தான்-தான் (அறிந்து), முந்துறும்-(அவ்விரண்டிலும் அவ்வுயிர்
மூற்பட்டுநிற்கும், (ஆதலால்) முகத்தின் - முகம்போல், முதுக்குறைந்
அறிவு மிகுந்தது, உண்டோ-வேறுண்டோ எ-று.

(க-ரை) முகம்போல அறிவு மிகுர்தத வேறில்லை என்பதாம்.

(வி-ரை) அறிவு உயிர்க்கேயல்லாமல் முகத்திற்கு இல்லை என்பாரை நோக்கி உயிரினது கருத்தை அறிர்து அது விரும்பினால் தான் மலர்ந்தும், அது வெறுத்தால் தான் கருகியும் வாலால் உண்டென்று மறப்பவர்போல் நிறப்பறிதலுக்குச் சாதனம் சொல்லியபடி.

'முகத்தின்' இதில் 'இன்' உருபு ஒப்புப்பொருளில் வர்தது. 'முதக் நறைர்தத' இது அறிவு மிக்கது என்னும் பொருளது. 'உண்டோ' இதில் வினை 'இல்லை' என்னும் விடை தழுவிகின்றது. 'காய்தல்' என்றது வெறுத்தலை. (7)

முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

(பரி-உரை) அகம் நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின்-குறையுற ானும் தன் மனத்தைக் குறிப்பானறிக்து தானுற்றவதனைத் தீர்ப்பாரைப் பெறின், முகம்நோக்கி கிற்க அமையும்-அவர் தன்முகம் நோக்கும்வகை ானும் அவர் முகநோக்கி அவ்வெல்லைக்கணிற்க வமையும் எ-று.

உணர்வாரெனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினர். அவ்வெல்லை யக் கடர்த சொல்லுமாயின் இருவர்க்குஞ் சிறுமையாமாகலின், அது வண்டா வென்பதாம். குறையுறுவா னியல்பு கூறுவார்போன்ற கருவி டறியவாறு. இவை மூன்று பாட்டானுங் குறிப்பறிதற்கருவி முகமென்பது றப்பட்டது.

(பதவுரை) (குறையுறுவோன்) அகநோக்கி-(தன்) மனத்தைக் குறிப்பால் றிக்து, உற்றது-(தான்) உற்றதனை, உணர்வார்-அறிக்து தீர்ப்பாரை, பறின்-பெற்றால், (அவர் தன் முகத்தைப் பார்க்கும்படியாக) முகநோக்கி-அவர்) முகத்தைப்பார்த்து, கிற்க-(அவ்வளவிலே) கிற்க, அமையும்-பாதும் எ-று.

(க-ரை) மனத்தைக் குறிப்பாலறிர்து உற்றதை அறிவாரைப் பெற்றவர் முகம்பார்த்து கிற்கப்போதும் என்பதாம்.

(வி-ரை) அப்படி கில்லாமல் சொல்லுவானால் இருவருக்கும் சிறுமையாகலால், அது வேண்டாமென்பதாம். குறையுறுவோனது இயல்பு சொல்லுவார்போல் சாதனம் சொல்லியபடி. [இவை மூன்று பாட்டாலும் நிப்பறிதற்குச் சாதனம் முகமென்பது சொல்லப்பட்டது.]

'அகம்நோக்கி' என்றது மனத்தகத்தை முகக்குறிப்பால் அறிக்து ன்பதாம். 'பெறின்' இது பெற்றால் என்னும் பொருளது. 'பெறின்' ன்றதால் பெறுதல் அருமை குறிப்பித்ததாகும். 'முகநோக்கிநிற்க' என்றது ுகக்குறிப்பால் அகத்தது அறியும் அறிவானர் முகநோக்கி அவர் தாம் தம் ுகத்தை நோக்குமாறு கிற்க என்பதாம். 'அமையும்' இது போதுமானது ாய்ச்சொற்கள் தேவையில்லை என்பதாம். (8)

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்குங் கண்
வகைமை யுணர்வார்ப் பெறின். [ணிவ்

(பரி-உரை) கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின் - வேந்தர் கோக்கு வேறபாட்டின் றன்மையை அறியவல்ல அமைச்சரைப் பெறின் பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் - அவர்க்கு மனத்தகத்திட பகைமையையும் ஏனைக்கேண்மையையும் வேற்று வேந்தர் சொல்லிற்றி சாயினும் அவர் கண்களே சொல்லும் எ-று.

இறதிக்கட் கண் ஆகுபெயர். கோக்கு வேறபாடாவன வெறு கோக்கமும் உவந்த கோக்கமும். உணர்தல்-அவற்றை அவ்வக் குறிகள அறிதல்.

(ப-ரை) கண்ணின் வகைமை - (தமது) பார்வை வேறபாட்டி தன்மையை, உணர்வார்-அறியவல்ல மந்திரிகளை, பெறின்-(அரசர்) பெற்ற (அவர்க்கு) பகைமையும் கேண்மையும் - (மனத்திலுள்ள) பகைத்தன்மையு கட்புத்தன்மையும், (வேற்றரசர் சொல்லாமற் போயினும்) கண் - (அ கண்களே, உரைக்கும்-சொல்லும் எ-று.

(க-ரை) கண்ணின் தன்மையை யறியவல்ல மந்திரிகளை யரசர்பெற் லவர்க்குப் பகையையு கட்பையும் கண்காட்டும் என்பதாம்.

(வி-ரை) பார்வை வேறபாடாவன: வெறுத்த பார்வையும் விரும்பி பார்வையும் ஆம். உணர்தல்-அவைகளை அந்தந்தக் குறிகளால் அறி

'பகைமையும் கேண்மையும்' இவை யிரண்டும் பண்புப்பெயர்க உம்மைகள் இரண்டும் எண்ணும்மைகள். 'கண் உரைக்கும்' என்ற (வேற்றரசர் தம் வாயாற் சொல்லாவிடினும்) அவர்கள் கண் சொல்லு என்பதாம். ஈண்டு வேற்றரசர் தம் வாயாற் சொல்லாவிடினும் என்ற வருவித்த உரை. 'கண்ணின்வகைமை' என்றது கண்ணின் வேறபாட்டி தன்மையை. 'உணர்வார்' என்றது அறியவல்ல அமைச்சரை.

நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.

(பரி-உரை) நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் - யாம் நுண்ண வுடையே மென்றிருக்கும் அமைச்சர் அரசர் கருத்தினை உளர்ந் கோலாவது, காணுங்கால் கண்ணல்லது பிற இல்லை-ஆராயுமிடத்தி கண்ணல்லது பிறவில்லை எ-று.

அறிவினுண்மை அஃதடையார்மே லேற்றப்பட்டது. இங்கிதம், வடி தொழில், சொல்லென்பன முதலாகப் பிறர் கருத்தை அளக்குமனைக பல, அவையெல்லாம் முன் அறிந்தவழி-அவரான் மறைக்கப்படும், கோக் மனத்தொடு கலத்தலான் ஈண்டு மறைக்கப்படாதென்பதுபற்றி அதனை

றித்துக் கூறினர். இனி அலைக்குங்கோலென்ற பாடமோதி, நுண்ணிய மன்றிருக்கும் அமைச்சரை அரசாலைக்குக் கோலாவது கண்ணென ரைத்து, தன் வெகுளிகோக்கால் அவர் வெகுடற்குறிப்பறிகென்பது ருத்தாக்குவாருமுளர். இவை யிரண்டுபோட்டாலும் நுண்கருவி கோக் கென்பது கூறப்பட்டது.

(ப-ரை) நுண்ணியமென்பார்-நுட்பவறிவுடையே மென்றிருக்கு மந்திரி ள், அளக்குங்கோல்-(அரசரது கருத்தை) அளக்குங்கோலாவது, காணுங் ல்-ஓராயுமிடத்து, கண்ணல்லது-(அவரது) கண்களல்லாமல், பிற-வேறு, ல்லை-இல்லை எ-று.

(க-ரை) அரசர் கருத்தை யளக்குங் கோலாவது அவர்கள் கண்களே ல்லாமல் வேறில்லை என்பதாம்.

(வி-ரை) இங்கிதம், வடிவு, தொழில், சொல் என்பவை முதலான பிறர் நத்தளக்கிற அளவைகள் பலவும், முன்னறிந்தவிடத்தே அவராலே மறைக் ப்படும் பார்வை மனத்தோடு கலத்தலால் மறைக்கப்படாதென்பதற்றி தனையே பிரித்துச் சொல்லினர். [இவை இரண்டுபோட்டாலும் நுண்ணிய நவி பார்வையென்பது சொல்லப்பட்டது.]

'நுண்ணியம்' இது, யாம் நுண்ணறிவுடையோம் என்று கூறுவது ்பது பொருளாம். 'என்பார்' என்றது என்று கூறும் அமைச்சரை. ளக்குங்கோல்' என்றது அரசர் கருத்தினை அளக்கும் அளவுகோலாம். ணுங்கால்' என்றது ஓராயுமிடத்து என்பதாம். இதில் 'கால்' ஏழன்உருபு. ண் அல்லது பிற இல்லை' என்றதால் கண்ணே அளக்குங்கோல் என்பது றப்படும். (10)

71-ம் அதி - குறிப்பறிதல் - முற்றிற்று.

72-ம் அதிகாரம்—அவையறிதல்

(பரி-உரை) அஃதாவது: அரசனெடிருந்த அவையினதியல்பை யறிதல். ரியஞ் சொல்லுங்கால் அவன் குறிப்பறிதலேயன்றி இதவும் வேண்டு ன், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது அரசனெடிருந்த சபையியல்பை அறிதல், காரியஞ் ல்லுங்கால் அவன் குறிப்பறிதலே யல்லாமல் இதவும் வேண்டுதலால் வைக்கப்பட்டது.

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
திறுகையறிந்த தாய்மை யவர்.

(பரி-உரை) சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் - சொல்லின் குழுவினை யறிந்த தூய்மையினையுடையார், அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக-தாமொன்று சொல்லுங்கால் அப்பொழுதை யவையினை யறிந்து ஆராய்ந்து சொல்லுக எ-று.

சொல்லின் குழுவெனவே * செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச் சொல் என்னும் மூவகைச்சொல்லுமடங்கின. தூய்மை-அவற்றுள் தமக்கு ஆகாதனவொழித்து ஆவன கோடல். அவையென்றது ஈண்டதனளவை. அது மிகுதி, ஒப்பு, தாழ்வென மூவகைத்து. அறிதல்-தம்மொடு தூக்கியறிதல். ஆராய்தல் - இவ்வவைக்கட் சொல்லுங் காரியம். இது, சொல்லுமாறிது சொன்னால் அதன்முடிவு இதுவென்று இவையுள்ளிட்டனவாராய்தல்.

(ப-ரை) சொல்லின்றொகை - சொல்லின் கூட்டத்தை, அறிந்து தெரிந்த, தூய்மையவர் - பரிசுத்தகுணமுடையவர், (தாம் ஒன்று சொல்லும் போது) அவை-(அப்பொழுதுள்ள) சபையை, அறிந்து-தெரிந்து, ஆராய்ந்து ஆராய்ச்சி செய்து, சொல்லுக-சொல்லக்கடவர் எ-று.

(க-ரை) சொல்லின் தொகையை யறிந்தவர், சபையறிந்து சொல்லக் கடவர் என்பதாம்.

(வி-ரை) சொல்லின் தொகையெனவே செஞ்சொல், ஆக்கச்சொல் குறிப்புச்சொல் என மூவகைச்சொல்லும் அடங்கின. தூய்மை-அச்சொற்களில் தமக்கு ஆகாதவை ஒழித்து ஆமவைகொள்ளல். அவையினளவை அவை என்றார். அவ்வளவு மிகுதி, ஒப்பு, தாழ்வு என மூவகைப்படும். அறிதல்-தம்மோடு தூக்கிஅறிதல். ஆராய்தல்-இச்சபையிலே சொல்லப்படு காரியம். இது சொல்லும் விதம். இது சொன்னால் அதன் முடிவு இது என்று இவையுள்ளிட்டவை ஆராய்தல்.

'அவை' என்றது அரசஅவையை. 'அவைஅறிந்து' என்றது அரசன் குறிப்பையும் உள்ளார் குறிப்பையும் அறிந்து. 'ஆராய்ந்து' இது சொல்லத் தகுவனவற்றை ஆராய்ந்து என்பதாம். 'சொல்லின்றொகை' என்றது சொற்களின் கூட்டத்தை. 'தூய்மையவர்' என்றது தக்கன கொண்டு தகாதன தள்ளும் சுத்தமுடையோர் என்பதாம்.

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லினடைதெரிந்த நன்மை யவர்.

(பரி-உரை) சொல்லின் நடைதெரிந்த நன்மையவர் - சொற்களின் நடையினை ஆராய்ந்தறிந்த நன்மையினையுடையார், இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக-அவைக்கண் ஒன்று சொல்லுங்கால் அதன்செவ்வினை யாராய்ந்தறிந்து வழுப்படாமல் மிகவுந் தெளிந்து சொல்லுக எ-று.

* செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல், என்பனவற்றை முறையே வாசகம், லக்ஷகம், வியஞ்சகம் எனவும் கூறுவர் வடநூலார்.

• சொற்களினடையாவது அம்மூவகைச் சொல்லும் செம்பொருள், இலக்கணப்பொருள், குறிப்புப்பொருளென்னும் பொருள்களைப் பயக்குமாறு. செவ்வி-கேட்டற்கண் விருப்புடைமை. வழு-சொல்வழுவும், பொருள் வழுவும். இவை பிரண்டுபாட்டானும் ஒன்று சொல்லுங்கால் அவையறிந்தே சொல்லவேண்டுமென்பது கூறப்பட்டது.

(ப-ரை) சொல்லினடை - சொற்களது கடையை, தெரிந்த-ஆராய்ந்து அறிந்த, கன்மையவர்-கன்மையையுடையவர், (சபையினிடத்து ஒன்றுசொல்லும்போது) இடைதெரிந்து - (அதன் சமயத்தை) ஆராய்ந்தறிந்து, கன்குணர்ந்து-(வழுப்படாமல்)கிடவுந் தெளிந்து, சொல்லுக-சொல்லக்கடவர் எ-று.

(க - ரை) சொல்லினடையறிந்தவர் சமயமறிந்து சொல்லக்கடவர் என்பதாம்.

(வி-ரை) சொற்களினடையாவது அம்மூவகைச் சொற்களும் செம்பொருள், ஆக்கப்பொருள், குறிப்புப்பொருள் இவைகளை உணர்தலும்விதம். சமயம்-கேட்குதலில் ஆசையுடைமை. வழு-சொல்வழுவும் பொருள்வழுவும். [இவை இரண்டுபாட்டாலும் ஒன்று சொல்லும்போது சபையறிந்தே சொல்லவேண்டுமென்பது சொல்லப்பட்டது.]

'இடை' என்றது கேட்கும் விருப்பமுடைய காலம்பார்த்து என்பதாம். 'கன்குணர்ந்து' என்றது சொல்லின் குழுவையும், கடையையும் கன்றாய் அறிந்து என்பதாம். 'சொல்லின் கடை' என்றது செம்பொருள், ஆக்கப் பொருள் குறிப்புப்பொருள் என்னும்பொருள்களை விளக்கும் மொழிகடையை.

அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்
வகையறியார் வல்லதூஉ மில். [லின்

(பரி உரை) அவை அறியார் சொல்லல் மேற்கோள்பவர் சொல்லின் வகை அறியார் - அவையினது அவையறியாது ஒன்று சொல்லுதலைத் தம்மேற் கொள்வார் அச்சொல்லுதலின் கூறுபாடும் அறியார், வல்லதூஉம் இல்-கற்றவல்ல களியும் அவர்க்கில்லை எ-று.

அம்மூவகைச்சொற்களால் வருஞ் சொல்லுதல் வகைமை கேட்பாரது உணர்வுவகைமைபற்றி வருதலாற் சொல்லின்வகையறியா ரென்றும், இஃது அறியார் யாதுமறியாரென்று எல்லாராலுமிகழப்படுதலின் வல்லதூஉமில்லென்றுங் கூறினார். இதனால் அவை யறியாக்கால் வருங் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) அவை-சபையினவை, அறியார்-(அறியாதவராகி), சொல்லல்-(ஒன்று) சொல்லுதலை, மேற்கொள்பவர் - தம்மேற்கொள்பவர், சொல்லின் வகை - அச்சொல்லின் கூறுபாடும், அறியார் - அறியாராவர், வல்லதூஉம்-(மற்றும்) வல்லகளியும், இல்-(அவர்க்கு) இல்லை எ-று.

• அவை பொருளை உணர்த்தும் வகையினை முறையே அபிதை, இலக்கணை, லியஞ்சனை விருத்தி யெனவும் கூறுவர் வடநூலார்.

(கரை) அவையளவை யறியாராகிப் பேச மேற்கொள்பவர் சொல்லின் வகை அறியார் என்பதாம்.

(விரை) சொல்லுதல் வகைமை கேட்பவரது உணர்வு வகைமைபற்றி வருதலால் சொல்லின்வகையறியாரென்றும், இஃதறியார் யாது மறியா ரென்ற எல்லாராலும் , இகழப்படுதலால் வல்லதூஉ மிலரென்றும் சொல்லினர். [இதனால் சபையை அறியாதவிடத்து வரும் குற்றம் சொல்லப்பட்டது]

'அவையறியார்' என்றது அவையின் அளவறியாதவர் ஆகி என்பதாம் 'சொல்லின்வகை' என்றது சொல்லின் கூறுபாட்டை. 'வல்லதூஉம் இல்' என்றது சற்றவல்லகலையும் அவர்க்கு இல்லையாகும் என்பதாம். 'வல்லதூஉம்' இது இன்னிசையளபெடை. (3)

ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன் வான்சுதை வண்ணங் கொளல்.

(பரி-உரை) ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்-அறிவால் ஒள்ளியார் அவைக்கட் டாமும் ஒள்ளியராக, வெளியார்முன் வான்சுதை வண்ணம் கொளல்-அவை வெள்ளேகனவைக்கட் டாமும் வாலிய சுதையினிறத்தைக் கொள்க எ-று.

ஒள்ளியாரென்றது மிக்காரையும் ஒத்தாரையும். அது விகாரத்தால் ஒளியாரென நின்றது. ஒள்ளியராதல் தந்நூலறிவுஞ் சொல்வன்மையுந் தோன்ற விரித்தல். அவை யறியாத புல்லரை வெளியாரென்றது, வயிரமின் மாத்தை வெளிறென்னும் வழக்குப்பற்றி. அவர் மதிக்கும்வகை அவரினும் வெண்மையுடையராகவென்பார், வான்சுதை வண்ணங்கொளலென்றார். அவையளவறிந்தார் செய்புந் திறம் இதனற் றொகுத்துக் கூறப்பட்டது. முன்னர் விரித்துக் கூறப.

(பரை) ஒளியார் முன்-(அறிவால்) ஒளியாரது சபையினிடத்து, ஒள்ளியராதல்-தாமும் ஒள்ளியராகக்கடவர், வெளியார்முன்-(மற்றை) வெள்ளேகனது சபையினிடத்து, வான்சுதை வண்ணம்-(தாமும்) வெண் சுண்ணச்சாந்து நிறத்தை, கொளல்-கொள்ளக்கடவர் எ-று.

(கரை) அறிவாளிகள் சபைமுன்னே அறிவாளிகளாக்கக்கடவர், அறி வில்லார் சபைமுன்னே அறிவில்லாராகக்கடவர் என்பதாம்.

(விரை) ஒளியாரென்றது மிக்காரையும் ஒத்தாரையும். ஒள்ளியராதல் தமது நூலறிவும் சொல்வலிமையும் தோன்ற விரித்துரைத்தல். வைரம். இதன் பகுதி வேரம் வைரமில்லாத மரத்தை வெளிறென்பதுபோல் அவ்விரண்டு மறியாத புல்லரை வெளியாரென்றார். அவர் மதிக்கும்படிக்கு அவரினும் வெண்மையுடையராக வென்றற்கு வான்சுதை வண்ணங்கொள லென்றார். [சபையளவறிந்தார் செய்புந்திறம் இதனால் தொகுத்துச் சொல்லப்பட்டது.]

'ஒளியார்' இது ஒள்ளியார் என்பதன் தொகுத்தல் விகாரம். இது அறிவாளிகளை உணர்த்திற்று. ஈண்டு அறிவாளிகளின் அவையை உணர்த்திற்று. 'ஒள்ளியாராதல்' என்றது தாமும் அறிவால் ஒளியுடையர் ஆக என்பதாம். அதாவது ஆண்டு தன் நூலறிவையும் சொல்வன்மையும் காட்டுக என்பதாம். 'வெளியார்' இது வெள்ளியார் என்பதன் தொகுத்தல் விகாரம். இது வெள்ளையர் அறிவிலிகள் என்பதாம். ஈண்டு அறிவிலிகளின் அவையை உணர்த்திற்று. 'வான்சுதை வண்ணங்கொளல்' என்றது வாலிய சுதை நிறத்தைக் கொள்க என்பதாம்; அதாவது அவ்வெளியார் அவையில் அவரினும் வெளியராகக் காட்டிக்கொள்க என்பதாம். (4)

நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண் முந்து கிளவாச் செறிவு.

(பரி-உரை) நன்ற என்றவற்றுள்ளும் நன்றே-ஒருவற்கு இது நன்றென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நன்றே, முதுவருள் முந்து கிளவாச் செறிவு - தம்மின் மிக்கார் அவைக்கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லாத அடக்கம் எ-று.

தங்குறைவும் அவர் மிகுதியும் முந்தி னொருதாற் படுமிழுக்கும் கிளவாக்கா லெய்து நன்மையும் அறிந்தே யடங்கினமையின், அவ்வடக்கத்தினை நன்றென்றவற்றுள்ளு நன்றென்றார். முன் கிளத்தலேயே விலக்கினமையின், உடன்கிளத்தலும் பின்கிளத்தலுமாமென்பது பெற்றும். இதனால் மிக்கார் அவைக்கண் செய்யுந்திறங் கூறப்பட்டது.

(ப-ரை) முதுவருள்-(தம்மின்) மிகுந்தவரது சபையினிடத்து, முந்து-(அவருக்கு) முற்பட்டு, கிளவா-(ஒன்றைச்) சொல்லாத, செறிவு - அடக்கம், நன்றென்றவற்றுள்ளும்-(ஒருவர்க்கு இது) நல்லதென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்கள் பலவினும், நன்றே-நல்லதாகும் எ-று.

(க-ரை) அறிவுடையோர் சபையிலவர் முன்ன மொன்றைச் சொல்லாத வடக்கமானது நன்மை எல்லாவற்றுள்ளு நல்லது என்பதாம்.

(வி-ரை) தங்குறைவும், அவர் மிகுதியும், அவர் சொல்லுதற்கு முன்னே சொன்னால் உண்டாகிற இழுக்கும், சொல்லாவிட்டால் வருகிற நன்மையும், அறிந்தே அடங்கலால் அவ்வடக்கத்தை நன்றென்றவற்றுள்ளு நன்றே என்றார். முன் சொல்லுதலேயே விலக்கினமையால் உடன் சொல்லுதலும் பின் சொல்லுதலும் ஆமென்பது பெறப்பட்டது. [இதனால் மிகுந்தவரது சபையினிடத்துச் செய்யுந்திறம் சொல்லப்பட்டது.]

'நன்றே' என்றதன் ஈற்று ஏகாரம் தேற்றேகாரம். 'முதுவர்' என்றது நன்னின் அறிவான் முதிர்ந்தவரை. 'முந்துகிளவாச் செறிவு' என்றது அம்முதியர்க்கு முன் பேசாதிருக்கும் அடக்கம் என்பதாம். (5)

ஆற்றி னிலேதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

(பரி - உரை) ஆற்றின் நிலை தளர்ந்தற்று - வீடு எய்தற்பொருட்டு நன்னெறிக்கணின்றுளொருவன் அக்நெறியினின்றும் நிலை தளர்ந்து வீழ்ந்தாலொக்கும், வியன் புலம் எற்று உணர்வார் முன்னர் இழுக்கு - அகன்ற நூற்பொருள்களை யுட்கொண்டு அவற்றின் மெய்ம்மை யுணரவல்லார் அவைக்கண் வல்லாளொருவன் சொல்லிழுக்குப்படுதல் எ-று.

நிலைதளர்ந்து வீழ்தல் "உரனென்னுந் தோட்டியா னேரைந்தக்கா"த் தொழுயொன் பின்னிழுக்கிக் கூடாவொழுக்கத்தனுதல். பயனிழத்தலே யன்றி இகழவும்படு மென்பதாம். இதனுன் அதன்கண் இழுக்கியவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

(பதவுரை) வியன்புலம் - விரிந்த நூற்பொருள்களை, எற்று-உட்கொண்டு, உணர்வார்முன்னர் (அவைகளின் மெய்மையை) அறியவல்லவர் சபையினில், இழுக்கு-(வல்லவனெருவன்) சொல்லிழுக்குப்படுதல், (முத்திபெறற்பொருட்டு நல்வழியினின்றவனெருவன்) ஆற்றின் - அவ்வழியினின்றும், நிலைதளர்ந் தற்றே-நிலைதளர்ந்து வீழ்தலொக்கும் எ-று.

(க - ரை) நற்றவர் சபையில் நற்றவ னிழுக்குப்படுதல் நல்வழியினின்றவன் நீவழியில் விழுந்தாற்போலும் என்பதாம்.

(வி-ரை) நிலைதளர்ந்து வீழ்தல்-அறிவால் ஐம்பொறிவென் றொழுகியவன் பின்னினைந்து கூடாவொழுக்கத்தாலுருதல். பயனிழத்தலே யன்றி இகழவும் படுவானென்பதாம். [இதனுல் அச்சபையில் தவறியவிடத்துப் படும்குற்றம் சொல்லப்பட்டது.]

'ஆற்றின்' என்றது வீட்டுநெறியாகிய நிறவு நெறியின் என்பதாம். 'நிலைதளர்ந்து' என்றது அந்நிறவு நெறியிலிருந்தும் வழுவி என்பதாம். 'ஆற்றினிலைதளர்ந்தற்றே' என்றது உபமானம். 'வியன்புலம்' என்றது அநந்த நூற்பொருளறிவை. 'இழுக்கு' என்றது சொற்குற்றத்தை.

நற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

(பரி-உரை) கசடு அறச்சொற் றெரிதல் வல்லாரகத்து - வழுப்படாது சொற்களை யாராய்தல் வல்லாரவைக்கட் சொல்லின், நற்று அறிந்தார் கல்வி விளங்கும் - பலநூல்களோடுங் நற்று அவற்றினுய பயனை யறிந்தாரது கல்வியாவர்க்கும் விளக்கித்தோன்றும் எ-று.

சொல்லி னென்பது அவாய்நிலையான் வந்தது. ஈண்டே சொல்லுவென்பதாம்.

(பத) கசடற-வழுப்படாமல், சொற்றெரிதல்-சொற்களை ஆராய்தலில், வல்லாரகத்த - வல்லவர் சபையிடத்தே (சொல்லினுல்,) கற்ற - (பலநூல் களையும்) கற்ற, அறிந்தார்-(அவைகளாலாகிய பயனை) அறிந்தவரது, கல்வி-கல்வியானது, விளக்கும்-(யாவர்க்கும்) விளங்கித்தோன்றும் எ-று.

(க-ரை) குற்றமறக் கற்றவர் சபையிற் கற்றவர் கல்வி விளக்கும் என்பதாம்.

(வி-ரை) அப்படிப்பட்ட சபையிலேயே சொல்லக்கடவரென்பதாம்.

'கசடு' என்றது ஐயம், திரிபு, விபரீதம் என்னும் முக்குற்றங்களை. 'வல்லாரகத்து' என்றது வல்லவர் சபையை இக்குறளால் எக்கே சொல்ல வேண்டும் என்பது உணர்த்தியதாம். (7)

உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று.

(பரி-உரை) உணர்வது உடையார்முன் சொல்லல் - பிறர் உணர்த்த லின்றிப் பொருள்களைத் தாமேயுணரவல்ல அறிவினையுடையார் அவைக்கட் கற்றூர் ஒன்றனைச் சொல்லுதல், வளர்வதன் பாத்தியுள் நீர்சொரிந்தற்று-தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக்கண் நீரினைச் சொரிந்தாற் போலும் எ-று.

தானேயும் வளர்தற்குரிய கல்வி மிக வளருமென்பதாம். இவை இரண்டுபோட்டானும் ஒத்தாரவைக்கண் எவ்வழியுஞ் சொல்லுகவென்பது கூறப்பட்டது.

(ப-ரை) உணர்வது - (பொருள்களைத் தாமே) அறிய வல்ல அறிவை, டையார்முன்-உடையவர் சபையினிடத்து, சொல்லல்-(கற்றவர்) ஒன்றைச் சொல்லுதல், வளர்வதன் - (தானே) வளர்வதொரு பயிர்நின்ற, பாத்தியுள்-பாத்தியினுள், நீர் சொரிந்தற்று-நீரைச் சொரிந்தாற்போலும் எ-று.

(க-ரை) கற்றவர் சபையிற் கற்றவ ரொன்றைச் சொல்லல் பாத்தியில் ர்விட்டாற்போலும் என்பதாம்.

(வி-ரை) தானேயும் வளர்வதற்குரிய கல்வி மிக வளருமென்பதாம். இவை இரண்டுபோட்டாலும் ஒத்தாரது சபையிடத்து எவ்வழியும் சொல்லக் டவரென்பது சொல்லப்பட்டது.]

'முன்' என்றது அவைமுன் என்பதாம். 'வளர்வதன் பாத்தி' என்றது ானே வளரும் இயல்பு உடைய பயிர்ப்பாத்தி என்பதாம். 'தானே' என்றது ருவித்த உரை. (8)

புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவை
ணன்கு செல்ச்சொல்லு வார்.

70.

(பரி-உரை) கல்லவையுள் கன்கு செலச் சொல்லுவார் - கல்லாரிருந்த வவைக்கண் கல்ல பொருள்களை அவர் மனங்கொள்ளச் சொல்லுதற்குரியார், புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க - அவையறியாத புல்லரிருந்த அவைக்கண் அவற்றை மறந்தும் சொல்லாதொழிக எ-று.

சொல்லின் தம்மை அவையறியாமைநோக்கி கல்லவையும், பொருளறி யாமையாற் புல்லவைதானும் இகழ்தலின் இரண்டு அவைக்கும் ஆகா ரென்பதை கருதிப் பொச்சாந்தும் சொல்லற்கவென்றார்.

(ப-ரை) கல்லவையுள் - கல்லவரிருந்த சபையினிடத்து, கன்கு-கல்ல பொருள்களை, செல-(அவர்) மனங்கொள்ள, சொல்லுவார் - சொல்லுதற்கு உரியவர், புல்லவையுள் - (அவை யறியாத) புல்லரிருந்த சபையினிடத்து, பொச்சாந்தும்-மறந்தும், சொல்லற்க - (அவைகளைச்) சொல்லா தொழியக் கடவர் எ-று.

(க-ரை) கல்லோர் சபையிலே கற்பொருளைச் சொல்பவர் புல்லர் சபையிலே மறந்தும் சொல்லாதிருக்கக்கடவர் என்பதாம்.

(வி-ரை) சொல்வாராயின் தமக்குரிய சபையை அறியாத குற்றம்பற்றி கல்லோர் சபையும், சொன்ன பொருளறியாமையால் புல்லர் சபையும் இகழ்தலால், இரண்டு சபைக்கும் ஆகாரென்பதைகருதி பொச்சாந்தும் சொல்லற்க வென்றார்.

'புல்லவை' என்றது சொல்லும் கடையும் அறியும் அறிவிலிகளின் அவையை. 'பொச்சாந்தும்' இது மறந்தும் என்னும் பொருளதாம். 'கல்லறிவு' என்றது கற்றோர் அவையை. 'கன்கு' என்றது கற்பொருள்களை. 'செல' என்றது அவர் மனத்தைச் செல்லுமாறு என்பதாம். (9)

அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

(பரி-உரை) தம் கணத்தர் அல்லார்முன் கோட்டி கொளல்-கல்லார் தம் மினத்தாரல்லாதார் அவைக்கண் ஒன்றனையுஞ் சொல்லற்க, அங்கணத்தள் உக்க அமிழ்தற்று - சொல்லின் அது தாய்தலல்லாத முற்றத்தின்கணுக்க அமிழ்தினை யொக்கும் எ-று.

கொள்ளென்னும் முதனிலைத்தொழிற்பெயர் முன்னின்ற பின் எதிர் மறை அல் விகுதியோடு கூடி * 'மகனெனல்' என்பதுபோனின்றது. சொல்லின் அது என்பன அவாய்நிலையான் வந்தன. பிறரெல்லாக் கொள லென்பதனைத் தொழிற்பெயராக்கி யுரைத்தார்; அவர் அத்தொழில் அமிழ் தென்னும் பொருளுவமையோடு இயையாமை நோக்கிற்றிலர். சாவாமருந்தாத லறிக்த றகர்வார் கையினும் படாத அவ்வங்கணத்தக்கு மியைபின்றிக்

* திருக்குறள் 20-ம் அதி-பயனிலசொல்லாமை-6.

கெட்டவாறு தோன்ற உக்கவமிழ்தென்றார். அச்சொற் பயனிற்சொல்லா மென்பதாயிற்று. இவை இரண்டுபோட்டாலும் தாழ்ந்தார் அவைக்கண் ஒரு வழியுஞ் சொல்லற்கவென்பது கூறப்பட்டது.

(பதவு) (வல்லோர்) தக்கணத்த ரல்லார்முன்-தம்மினத்தவ ரல்லாதவர் சபையிடத்து, கோட்டி கொளல் - யாதொன்றையும் சொல்லாதிருக்கக் கடவர், (சொன்னூல் அது) அங்கணத்துள் - (பரிசுத்தமில்லாத) மூற்றத்தின், உக்க-வீழ்ந்த, அமிழ்தற்று-அமிர்தமொக்கும் எ று.

(க-ரை) தம்மினத்தாரல்லார் சபையில் ஒன்றுஞ் சொல்லாதிருக்கக் கடவன், சொல்லுதல் சேற்றுள் வீழ்ந்த வமிர்தமொக்கும் என்பதாம்.

(வி-ரை) சொல்லின் அது இவ்விரண்டும் வருவிக்கப்பட்டன. சாவா மருந்தாகுதலறிந்து உண்போர் கையிலும்படாமல் அம்மூற்றத்திற்கும் பொருத்தமில்லாமல் கெட்டவிதம் தோன்றற்கு உக்கவமிழ்தென்றார். அச்சொல் பயனில்லாத சொல்லாமென்பதாயிற்று. [இவை இரண்டுபோட் டாலும் தாழ்ந்தோர் சபையினிடத்து ஒருவழியும் சொல்லலாகாதென்பது சொல்லப்பட்டது.]

'அங்கணம்' என்றது பரிசுத்தமில்லாத மூற்றம் எனப் பொருளுரைக் கப்பெற்றது; இனி, 'அங்கணம்' என்பதற்கு சாக்கடை எம்பதும் ஆம். இதனை 'அங்கணீர் ஞாய்க்கால் வழியோடி' என்பதனாலும் அறிக. 'உக்க' இது சிந்திய, வீழ்ந்த என்னும் பொருளது. 'தக்கணத்தர்' என்றது தம் கூட்டத்தாராகிய அறிவுடையார் என்பதாம். 'மூன்' இது அவைமூன் என்பதாம். 'கோட்டிகொளல்' என்றது ஒன்றையும் சொல்லற்க என்பதாம். 'கொளல்' இது 'கொள்' என்னும் பகுதிஅடியாகப்பிறந்த எதிர்மறை வினைமுற்று. (10)

72-ம் அதி - அவையறிதல் - முற்றிற்று.

73-ம் அதிகாரம்—அவையஞ்சாமை

(பரி-உரை) அஃதாவது: சொல்லுதற்குரிய அவையினை யறிந்து சொல் லுங்கால் அதற்கு அஞ்சாமை. அதிகாரமுறைமையும் இதனானே விளக்கும்.

(உரை) அஃதாவது: சொல்லுதற்குரிய சபையை அறிந்து சொல்லுங் கால் அதற்கு அஞ்சாமை. அதிகாரமுறைமையும் இதனாலே விளக்கும்.

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
முகையறிந்த தூய்மை யவர்.

(பரி-உரை) வகை அறிந்து வல்லவை வாய் சோரார் - கற்றவல் லவை அல்லர் தாமவையென்னும் அவை வகையினையறிந்து வல்ல அவைக்

கண் ஒன்று சொல்லுங்கால் அச்சத்தான் வழுப்படச் சொல்லார், சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் · சொல்லின்றொகையெல்லாமறிந்த தூய்மையினையுடையார் எ-று.

இருந்தாரது கன்மை அவைமே லேற்றப்பட்டது. வல்லவை யென்பதற்குத் தாம் கற்றவல்ல நூற்பொருள்களே யென்றுரைப்பாருமுளர். அச்சத்தானென்பது அதிகாரத்தான் வந்தது. சொல்லின்றொகை, * தூய்மை என்பனவற்றிற்கு மேலுரைத்தாங்கு உரைக்க.

(ப-ரை) சொல்லின் றொகையறிந்த-சொற்களது தொகையை அறிந்த, தூய்மையவர் - பரிசுத்த குணமுடையவர், வகையறிந்து - (கற்ற வல்லசபை மூடசபை என்கிற சபையின்) வகைமை அறிந்து, வல்லவை - கற்ற வல்ல சபையில், (ஒன்று சொல்லும்போது) வாய்சோராது - (அச்சத்தாற் பிழைபடச்) சொல்லார் எ-று.

(க-ரை) சொல்லினது தொகையையறிந்தவர் சபையினது வகையையறிந்து பிழைபடச் சொல்லார் என்பதாம்.

(வி-ரை) இருந்தாரது வல்லமை சபைமேல் ஏற்றப்பட்டது. அச்சத்தாலென்பது அதிகாரத்தால் வந்தது.

'வகையறிந்து' என்றது இது கற்றவர் நிறைந்த அவை, இது கல்லார் நிறைந்த அவை என்னும் அவையின் வகையினை அறிந்து என்பதாம். 'வல்லவை' என்றது கற்றவர் நிறைந்த அவைக்கண்ணே என்பதாம். 'வாய் சோரார்' என்றது சிறிய விஷயங்களைச் சொல்லுமிடத்து அச்சத்தால் சொற் சோர்வு பொருட்சோர்வுபடாது சொல்லுவர் என்பதாம். இக்குறளில் பல சொற்கள் அவாய்நிலையான் வருவித்துப் பொருள் செய்யப்பெற்றன. (1)

கற்றருட் கற்று ரெனப்படுவர் கற்றூர்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

(பரி-உரை) கற்றருன் கற்றூர் எனப்படுவர் - கற்று ரெல்லாரினும் இவர் கன்கு கற்றுரென்று உலகத்தாராற் சொல்லப்படுவார், கற்றூர்முன் கற்ற செலச் சொல்லுவார் - கற்றூர் அவைக்கண் அஞ்சாதே தாம் கற்றவற்றை அவர் மனங் கொள்ளும்வகை சொல்ல வல்லார் எ-று.

உலகமறிவது அவரையேயாகலின், அதனுற் புகழப்படுவாரும் அவரென்பதாம்.

(ப்-ரை) கற்றூர்முன்-கற்றோர் சபையினிடத்தே, கற்ற-(தாம்) கற்றவைகளை, செல - (அவர்) மனங்கொள்ளும் வகை, சொல்லுவார் - (அஞ்சாமல்) சொல்ல வல்லவர், கற்றருன்-கற்றவரெல்லாரினும், கற்றூர்-(இவர்) கன்றுகக் கற்றவர், எனப்படுவர்-என்று (உலகத்தோராலே) சொல்லப்படுவர் எ-று.

* திருக்குறள் 72-ம் அதி-அவையறிதல்-1.

(க-ரை) கற்றவர் சபையிற் கற்றவற்றைச் சொல்லவல்லவர் கற்றவ ரெல்லாருள்ளுங் கற்றவரென்று சொல்லப்படுவர் என்பதாம்.

(வி-ரை) உலகமறிவது அவரையேயாகலின் அவ்வுலகத்தினுலே புகழப் படுவாரும் அவரே யென்பதாம்.

'கற்றருட் கற்றார்' என்றது கற்றவருள் மிகக்கற்றுச் சிறந்தவர் என்பதாம். 'செலச்சொல்லுவார்' என்றது கற்றவர் மனத்துள்ளே காரண காரி யங்காட்டி அவர் மனத்துச் செல்லுமாறு அஞ்சாது சொல்லும் ஆற்றல் உடையார் என்பதாம். 'கற்ற' என்றது தாம் கற்ற நூற்பொருளை என் பதாம். (2)

பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்.

(பரி-உரை) பகையகத்துச் சாவார் எளியர்-பகையிடை யஞ்சாது புக்குச் சாவவல்லார் உலகத்துப் பலர்; அவையகத்து அஞ்சாதவர் அரியர்-அவை யிடையஞ்சாது புக்குச் சொல்லவல்லார் சிலர் எ-று.

அஞ்சாமை சாவாரென்பதனோடுங் கூட்டி, அதனாற் சொல்லவல்லா ரென்பது வருவித்துரைக்கப்பட்டது. இவை மூன்றுபாட்டானும் அவை யஞ்சாது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) பகையகத்து - பகையினிடத்து, சாவார் - (அஞ்சாதுபோய்) இறக்க வல்லவர், எளியவர் - (உலகத்துப்) பலர், அவையகத்து - சபையி னிடத்து, அஞ்சாதவர் - அஞ்சாமற் (போய்ச் சொல்ல) வல்லவர், அரியர்- சிலர் எ-று.

(க-ரை) பகையினிடத் தஞ்சாதிறக்கவல்லவர் பலர் சபையினிடத் தஞ்சாது பேசவல்லவர் சிலர் என்பதாம்.

(வி-ரை) அஞ்சாமை சாவாரென்பதனோடுங் கூட்டி அதனாலே சொல்ல வல்லவரென்பது வருவிக்கப்பட்டது. [இவை மூன்றுபாட்டாலும் அவை அஞ்சாது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'எளியர்' என்றது ஈண்டு பலர் என்னும் பொருள்தந்து நின்றது. 'அரியர்' என்றது ஈண்டு வெகு சிலரே ஆவர் என்பதாம். 'அகத்து' என்ற ரண்டும் இடப்பொருள்தந்தன. அவற்றுள் அச்சு சாரியை. (3)

கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.

(பரி-உரை) கற்றார்முன் கற்ற செலச் சொல்லி-பலநூல்களையுங் கற்ற வைக்கட் டாங்கற்றவற்றை அவர்மனம் கொள்ளுமாற்றாற்சொல்லி, தாம் ற்ற மிக்க மிக்காருள் கொளல் - அவற்றின் மிக்க பொருள்களை அம்மிகக் ற்றாரிடத்து அறிந்துகொள்க எ-று.

எல்லாம் ஒருவர்க்குக் கற்றல் கூடாமையின் வேறுவேறுய கல்வியுடை யார் பலரிருந்த அவைக்கட்டாங் கற்றவற்றை அவர்க்கேற்பச் சொல்லுக; சொல்லவே, அவரும் அவையெல்லாஞ் சொல்லுவராகலான், ஏனைக் கற்கப் பெறுதன கேட்டறியலா மென்பதாயிற்று. இதனால் அதனை ஒருசார் பயன் கூறப்பட்டது.

(ப-ரை) கற்றார்முன் - (பலநூல்களையும்) கற்றோர் சபையினிடத்து கற்ற - தாம் கற்றவைகளை, செல - (அவர்) மனங்கொள்ளும்படி, சொல்லி. கற்ற - தாம் கற்றவைகளை, செல - (அவர்) மனங்கொள்ளும்படி, சொல்லி. சொல்லிக்காட்டி, தாங்கற்ற - தாம் கற்றவைகளினும், மிக்க - அதிகமான பொருள்களை, மிக்காருள் - அதிகமாகக் கற்றவரிடத்து, கொளல் (அறிந்து) கொள்ளக்கடவர் எ-று.

(க-ரை) கற்றவர்முன் கற்றவற்றைச் சொல்லித் தாங்கற்றவைகளினும் மிக்கவற்றைக் கற்றவரிடத்துக் கொள்ளக்கடவர் என்பதாம்.

(வி-ரை) எல்லா மொருவருக்குக் கற்றல் கூடாமையால் வேறு வேறுய கல்வியுடையவர் பலரிருந்த சபையில் தாங் கற்றவைகளைச் சொல்லிக் கற்கப் பெறுதலையும் கேட்டு அறியலாமென்பதாயிற்று. [இதனால் அதனை ஒருசார் பயன் சொல்லப்பட்டது.]

'தாங்கற்ற' என்றதில் 'தாம்' என்றது கற்றாரை உணர்த்தியது. 'கற்றார் முன்' என்றது கற்றார் அவையை. 'கொளல்' இதுகொள்க என்னும்பொருளது.

ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

(பரி-உரை) ஆற்றின் அளவு அறிந்து கற்க - சொல்லிலக்கண நெறி யானே அளவைநூலை அமைச்சர் உட்பட்டுக் கற்க, அவை அஞ்சா மாற்றம் கொடுத்தற்பொருட்டு - வேற்று வேந்தர் அவையிடை யஞ்சாது அவர் சொல்லிய சொற்கு உத்தாரஞ் சொல்லுதற்பொருட்டு எ-று.

அளவைநூல் சொன்னூல் கற்றே கற்கவேண்டுதலின், அதற்கு அஃது ஆறெனப்பட்டது. அளக்குங்கருவியை அளவென்றார், ஆகுபெயரான். அவர் சொல்லை வெல்ல வொருசொற் சொல்லலாவது, நியாயத்து வாத செப்ப விதண்டைகளும் சலசாதிகளும் முதலிய கற்றார்க்கேயாகலின், அவற்றைப் பிழையாமற் கற்கவென்பதாம். இதனால் அதன் காரணங் கூறப்பட்டது.

(ப-ரை) அவை - (வேற்றவேந்தர்) சபையில், அஞ்சா - அஞ்சாமல், மாற்றம் - எதிர்மொழியை, கொடுத்தற்பொருட்டு - கொடுக்குங்காரணமாக, ஆற்றின் - (சொல்லிலக்கண) வழியாலே, அளவு - அளவைநூலை, அறிந்து, தெரிந்து, கற்க-(மந்திரிகள்) கற்றுக்கடவர் எ-று.

(க-ரை) வேற்றரசர் சபையிலஞ்சா தெதிர்மொழி கொடுத்தற்பொருட்டுச் சொல்லிலக்கணவழியா லளவைநூலறிந்து மந்திரிகள் கற்றுக்கடவர்கள் என்பதாம்.

(வி-ரை) அளவையறுல் சொல்லிலக்கணத்தற்றே கற்கவேண்டுமாதலால் இதற்கு அதுவழி எனப்பட்டது. அளவை எனப்பட்ட தர்க்கநூலைக் கற்றவர்க்கே அவர் சொல்லை வெல்லக்கூடுமாகலால் அவைகளை பிழை படாமற் கற்கக்கடவரென்பதாம். [இதனால் அதன் காரணம் சொல்லப் பட்டது.]

'ஆற்றின்' இது சொல்லிலக்கணதெறியால் என்னும் பொருளது. ஈண்டு 'சொல்லிலக்கணம்' என்றது வருவித்த உரை. 'அளவு' என்றது ஈண்டு அளவையறுலை என்றார் உரையாசிரியர். 'மாற்றம்' என்றது ஈண்டு எதிர் மொழி, உத்தரம், மறுமொழி என்பன பொருளாம். (5)

வாளொடென் வன்கண்ணர் ல்லார்க்கு நூலொடெ
னுண்ணவை யஞ்சு பவர்க்கு.

(பரி உரை) வன்கண்ணரல்லார்க்கு வாளொடு என்-வன்கண்மையுடைய ரல்லாதார்க்கு வாளொடு என்ன இயையுண்டு, நுண்ணவை அஞ்சுபவர்க்கு நூலொடு என்-அதுபோல நுண்ணியாரது அவையை யஞ்சுவார்க்கு நூலோடென்ன வியையுண்டு எ-று.

இருந்தாரது நுண்மை அவைமேலேற்றப்பட்டது. நூற்குரியரல்ல ரென்பதாம்.

(ப-ரை) வன்கண்ணரல்லார்க்கு - சௌரியமுடையவரல்லாதவர்க்கு, வாளொடு - வாளாயுதத்துடன், என் என்ன (சம்பந்தமுண்டு), (அதுபோல்) நுண்ணவை - புத்திநுட்பமுடையவரது சபையை, அஞ்சுபவர்க்கு - அஞ்சு வோர்க்கு, நூலோடு-நூலுடனே, என்-என்ன (சம்பந்தமுண்டு) எ-று.

(க-ரை) சௌரியமில்லாதவர்க்கு வாளாயுதத்துட னென்ன சம்பந்த முண்டு. அதுபோலக் கற்றவர் சபைக்கஞ்சுவோர்க்கு நூலோடென்ன சம்பந்தமுண்டு என்பதாம்.

(வி-ரை) இருந்தாரது நுண்மை அவைமேல் ஏற்றப்பட்டது. நூலுக்கு ரியவரல்ல ரென்பதாம்.

'வாளொடென் வன்கண்ணரல்லார்க்கு' என்றது உவமை. 'வன்கண்ண ல்லார்க்கு' என்றது வீரமில்லாக் கோழைகட்கு என்னும் பொருளது. நுண்ணவை' என்றது நுண்ணியபொருளையும் எண்ணி ஆராய்ந்த கற்றவர் நிறைந்த அவையை. 'அதுபோல' என்றது உவமவுருபு தொக்குநின்றது. (6)

பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்.

(பரி-உரை) பகையகத்துப் பேடி கை ஒள்வாள்-எறியப்படும் பகை யென் அதனையஞ்சும் பேடி பிடித்த கூர்வாளை யொக்கும், அவையகத்து

அஞ்சுமவன் கற்ற நூல்-சொல்லப்படும் அவைநடுவண் அதனை யஞ்சுமவன் கற்றநூல் எ-று.

பேடி-பெண்ணியல்பு மிக்கு ஆணியல்புமுடையவள். களமும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்ததேயாயினும் பிடித்தவள் குற்றத்தால் வாள் சிறப்பின்றாயினாற்போல, அவையும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்ததேயாயினும் கற்றவன் குற்றத்தால் நூல் சிறப்பின்றாயிற்று.

(ப - ரை) அவையகத்து - (சொல்லப்படுஞ்) சபைநடுவில், அஞ்சுமவன் (அதனை) யஞ்சுமவன், கற்றநூல்-கற்றறிந்தநூல், பகையகத்து (எறியப்படும்) பகைநடுவில், பேடி (அதனை அஞ்சும்) பேடி, கை கையிற்பிடித்த, ஒள்வாள் கூர்வாளை யொக்கும் எ-று.

(க ரை) சபைக்கஞ்சுவோன் கற்றநூல் பேடி கைவாளை யொப்பாகும் என்பதாம்.

(வி ரை) பேடி-பெண்ணியல்பு மிகுந்து ஆணியல்பு முடையவள். இடமும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்ததேயாயினும் பிடித்தவனது குற்றத்தால் வாள் சிறவாமைபோல் சபையும் வாய்த்துத் தானும் நன்றாயிருந்ததேயாயினும், கற்றவனது குற்றத்தால் நூல் சிறவாதாயிற்று.

'பேடி' என்றது ஆண்டன்மையின்றிப் பெண்டன்மை அவாவி நின்றவளைக் குறித்தது. 'ஒள்வாள்' ஈண்டு 'ஒள்' கூர்மை குறித்து நின்றது. 'பகையகத்து பேடிகையொள்வாள்' என்றது உபமானம். 'கற்றநூல்' என்றது கற்ற நூற்பொருள் என்பதாம். (7)

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.

(பரி உரை) நல்லவையுள் நன்கு செலச் சொல்லாதார்-நல்லாரிருந்த அவைக்கண் நல்ல சொற்பொருள்களைத் தம்மச்சத்தான் அவர்க்கேற்கச் சொல்லமாட்டாதார், பல்லவை கற்றும் பயம் இலரே - பலநூல்களைக் கற்றாராயினும் உலகிற்குப் பயன்படுதலிலர் எ-று.

அறிவார்முற் சொல்லாமையிற் கல்வியினுண்மை யறிவாரில்லை யென்பதாம். இனிப் பயமிலர் என்பதற்குக் கல்விப்பய னுடையரல்லரென்றுரைப்பாருமுளர்.

(ப - ரை) நல்லவையுள் - நல்லவரிருந்த சபையுள், நன்கு-நல்ல சொற்பொருள்களை, செல-(அவர்க்கு) ஏற்க, சொல்லாதார் - (அச்சத்தால்) சொல்லமாட்டாதவர், பல்லவைகற்றும் - பலநூல்களைக் கற்றாராயினும், பயமிலரே (உலகத்துக்குப்) பிரயோசனப்படுதலிலர் எ-று.

(க-ரை) நல்லவர் சபையிலே நல்லபொருளைச் சொல்லாதவர் பல நூல்களைக் கற்றாராயினும் பயனில்லாதவர் என்பதாம்.

(வி-ரை) அறிவார்மூன் சொல்லாமையால் கல்வியிறுண்மை அறிவார் ல்லை என்பதாம்.

'பல்' 'லை' என்றது பல அரிய நூற்பொருளை. 'பயம்' என்றது ண்டு யனை. 'நிலை' இதன் ஈற்று ஏகாரம் தேற்றப்பொருளது, 'கல்லலை' ன்றது கற்றார் கிறைந்த அலையை. 'நன்கு' என்றது கல்ல பொருள்களை ன்பதாம். (8)

கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.

(பரி-உரை) கற்ற அறிக்தம் கல்லார் அலை அஞ்சுவார் - நூல்களைக் ற்றலைத்தம் அவற்றுற் பயன் அறிக்தலைத்தம் கல்லாரிருந்த அவையினை ஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை, கல்லாதவரின் கடை என்ப-உலகத்தார் ல்லாதவரினும் கடையரென்று சொல்லுவர் எ-று.

அக்கல்வியறிவுகளாற்பயன் தாமும் எய்தாத பிறரை எய்துவிப்பதஞ் செய்யாத, கல்வித்தன்மை யெய்திற்றலின், கல்லாதவரிற் கடையென லகம் பழிக்குமென்பதாம்.

(ப-ரை) கற்ற-(நூல்களைக்) கற்ற, அறிக்தம்-(அவைகளாலே பயனை) றிக்திருக்தம், கல்லார்-கல்லாதவரிருந்த, அவை-சபையை, அஞ்சுவார்-அஞ்சி அவ்விடத்திலே) சொல்லாதவரை, கல்லாதவரின்-மூடரினும், கடை-கூட்டியர், என்ப-என்ற (உலகத்தோர்) சொல்லுவார் எ-று.

(கரை) கற்றிருக்தும் கற்றவர் சபைக்கஞ்சுபவர் கல்லாதவரிலுங் டையாவர் என்பதாம்.

(வி-ரை) அக்கல்வி யறிவுகளாலே பயனைத் தாமும் அடையாமல் றரையும் அடைவிக்காமல் கல்வித்தன்மை அடைந்திற்கையால் கல்லா வரிற் கடையென உலகம் பழிக்கும் என்பதாம்.

'கல்லாதவரில்' இதில் 'இல்' உருபு எல்லைப்பொருளில் வந்தது. ல்லார்' என்றது கற்றறிந்தவரை. (9)

உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

(பரி-உரை) களன் அஞ்சிக் கற்ற செலச் சொல்லாதார்-அவைக்களத்தை ஞ்சித் தாங் கற்றவற்றை அதற்கேற்கச் சொல்லமாட்டாதார், உளர் எனினும் ல்லாரொடு ஒப்பர் - உயிர் வாழ்கின்றாராயினும் உலகத்தாரால் எண்ணப் டாமையின் இறந்தாரோடொப்பர் எ-று.

சண்டுக் களன் என்றது ஆண்டிருந்தாரை. [இவை ஐந்தபாட்டானும் வையஞ்சுவாரது இழிபு கூறப்பட்டது.

(ப-ரை) கனன் - சபைக்கு, அஞ்சி-பயந்து, கற்ற-(தாம்) கற்றவைகளை, செல-(அதற்கு) ஏற்க, சொல்லாதார் - சொல்லமாட்டாதவர், உளரெனினும்-உயிரோடிருந்தாலும், (உலகத்தோரால் எண்ணப்படாமையால்) இல்லாரோடொப்பர்-இறந்தவரோடொப்பாவார் எ-று.

(க-ரை) சபைக்கஞ்சிக் கற்றவற்றைச் சொல்லாதவர் உயிரோடிருந்தும் இறந்தவரோடொப்பர் என்பதாம்.

(வி-ரை) [இவை ஐந்து பாட்டாலும் சபைக்கு அஞ்சுவோர்க்கு இழிவு சொல்லப்பட்டது.]

'உளர்' இது 'உள்ளார்' என்பதன் விகாரம். 'கனன்' இது 'கனம்' என்பதன் கடைப்போலி. 'கனன்' என்றது அவையை. சண்டு ஆண்டுள்ள கற்றவர்களை உணர்த்திற்று. 'கற்ற' என்றது கற்ற நூற்பொருளை. (10

73-ம் அதி - அவையஞ்சாமை - முற்றிற்று.

அங்கவியலில் அமைச்சியல் முற்றிற்று.

ஆக அதிகாரம் 73-க்கு திருக்குறள்-730.

74-ம் அதிகாரம்—நாடு

(பரி-உரை) இனி அவ்வாசனலும் அமைச்சனலுங் கொண்டுய்க்கப் படுவதாய் ஏனை அரண்முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றுய நாடு ஓதிகாரத்தாற் கூறுகின்றார்.

(உரை) இனி அவ்வாசனலும் மந்திரியாலும் கொண்டு செலுத்தப் படுவதும், மற்றை அரண்முதலிய அங்கங்களுக்கு அவசியம் வேண்டுவதும், ஆகிய நாடு ஓதிகாரத்தினலே சொல்லுகின்றார். அஃதாவது: இப்படிப் பட்டதென்பதும் அதிகாரமுறையும் இதனுள் விளக்கும்.

**தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.**

(பரி-உரை) தள்ளா விளையுளும் - குன்றுத விளையுளைச் செய்வோரும், தக்காரும் - அறவோரும், தாழ்வு இலாச் செல்வரும் - கேடில்லாத செல்வ முடையோரும், சேர்வது நாடு-ஒருங்கு வாழ்வதே நாடாவது எ-று.

மற்றைபுயர்திணைப் பொருள்களோடுஞ் சேர்தற்றொழிலோடும் இயை யாமையின், விளையுளென்பது உழவர்மேனின்றது. குன்றுமை-எல்லாவுண வுகளும் நிறைய உளவாதல். இதனுன் வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப் பட்டது. அறவோர்-துறந்தோர், அந்தணர் முதலாயினர். * "நற்றவஞ்செய்

* சிவகசிந்தாமணி: நாமகளிலம்பகம்-48.

கார்க்கிடந் தவஞ்செய்வார்க்கு மஃதிடம்" என்றார் பிறரும். இதனால் அழிவின்மை பெறப்பட்டது. கேடில்லாமை-வழங்கத்தொலையாமை. செல்வர்-கலத்தினாலுங் காலினும் அரும்பொருள் தரும் வணிகர். இதனால் அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள் வாய்த்தல் பெறப்பட்டது.

(பதவுரை) நாடு-நாடாவது, தன்னாவிளையுளும்-குன்றாத விளைவுசெய்வாரும், தக்காரும்-அறவோரும், தாழ்விலாச்செல்வரும்-கேடில்லாத செல்வமுடையோரும், சேர்வது கூடிவாழ்வதேயாம் எ-று.

(தெ-உரை) உழவரும், அறிவோரும், செல்வரும் கூடிவாழ்வதே நாடாம் என்பதாம்.

(வி-உரை) தக்கார் முதலானவரோடும் சேர்தற் றொழிலோடும் பொருந்தாமையால், விளைவென்பது உழவரை உணர்த்திநின்றது. குன்றுமை-எல்லா உணவுகளும் நிறைய உண்டாதல். இதனால் வாழ்வோர்க்கு வறுமை யில்லாமை பெறப்பட்டது. அறவோர்-துறந்தோரும் அந்தணரு முதலாயினோர். இதனால் அழிவில்லாமை பெறப்பட்டது. கேடில்லாமை-கொடுக்கக் குறையாமை. செல்வர்-கப்பலினும், பண்டியினும், பொருள்தரும் வணிகர். இதனால்-அரசனுக்கும் வாழ்வோர்க்கும் பொருள் கிடைத்தல் பெறப்பட்டது.

'தன்னா' இது குறைவுபடாத என்னும் பொருள் தந்தது. 'விளையுள்' என்றதற்கு விளைவுசெய்வோர் என்ற உரை உரைக்கப்பெற்றது. 'தக்கார்' என்றது துறந்தார் அந்தணர் முதலாய அறவோரை. 'தாழ்விலாச்செல்வர்' என்றது அறத்தாற்று லீட்டிய கேடனடையாச் செல்வமுடையோரை. (1)

பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா
லாற்ற விளைவது நாடு.

(பரி-உரை) பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி-அளவிறந்த பொருளுடைமையாற் பிறதேயத்தாராலும் விரும்பத்தக்கதாய், அருங்கேட்டால் ஆற்றவிளைவது நாடு-கேடின்மையோடு கூடி மிகவிளைவதே நாடாவது எ-று.

அளவிறப்புப் பொருள்களது பன்மைமேலும் தனித்தனி அவற்றின் சிறுமைமேலும் நின்றது. கேடாவது-மிக்கபெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, அரசன்மை யென்றிவற்றான் வருவது. "மிக்கபெய லோடு பெயலின்மையெலி விட்டில்கிளி-யக்கணர சன்மையோ டாறு." இவற்றை உடனாலார் ஈதிகள் என்ப. இவற்றுண் முன்னையவற்றது இன்மை அரசன் ஆறத்தானும், பின்னையது இன்மை அவன் மறத்தானும் வரும். இவ்வின்மை யான் மிக விளைவதாயிற்று.

(ப-உரை) நாடு-நாடாவது, பெரும்பொருளால்-அளவற்ற பொருளுடைமையால், பெட்டக்கதாகி-(பிறதேசத்தாராலும்) விரும்பத்தக்கதாகி, அருங்

கேட்டால் - அழிவில்லாமையோடு கூடி, ஆற்றலிலாவது - மிக விளைவதே யாம் எ-று.

(க-ரை) அளவில்லாப் பொருளுடைமையால் பிறராலிச்சிக்கத்தக்கதாய் அழிவின்மைபொருந்தி மிக விளைவதே நாடாகும் என்பதாம். ...

(வி-ரை) கேடாவது: அதிகமழை, மழையில்லாமை, எலி, விட்டில், கிளி அரசாண்மை எனப்படுகிற இவைகளால்வருவது. இவைகளை வடநூலார் ஈதி பாவமென்றுசொல்வர். இவைகளுள் அரசாண்மை அரசன்றத்தாலும் மற்றவை அவன் மறத்தாலும் இலவாம். இவை இல்லாமற்போகவே மிக விளையுமென்பதாயிற்று.

'பெரும்பொருள்' என்றது அளவிறந்த மிக்க நிரவியத்தை. 'பெட்டக்கது' இது விரும்பத்தக்கது என்னும் பொருளது. ஈண்டு பிறதேயத்தாலும் என்பது வருவித்த உரை. 'பேண்டக்கது' என்றது பெட்டக்கது என மருவிற்று. 'அருங்கேட்டால்' இது கேடின்மையோடு என்பதாம். ஈண்டு 'ஆல்' உருபு ஒடுப்பொருளில் வந்தது. 'அருங்கேடு' என்றது 'அருங்கேடன்' என முன்னர் 210-ம் குறளில் வந்ததுபோலென்க. 'ஆற்ற' இது மிகுதிப்பொருள் தந்தது. 'ஆற்றப்பெரும் பொருள் வைத்தீர்' என்ற பிரயோகமும் ஈண்டு நோக்கற்பாலது.

பொறையொருங்கு மேல்வருங்காற் ருங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு.

(பரி-உரை) பொறை ஒருங்கு மேல் வருங்கால் தாங்கி - பிறநாடுகள் பொறுத்த பாரமெல்லாம் ஒருங்கே தன்கண் வருங்கால் அவற்றைத் தாங்கி, இறைவற்கு இறை ஒருங்கு நேர்வது நாடு - அதன்மேல் தன் அரசனுக்கு இறைப்பொருண் முழுதையும் உடம்பட்டுக் கொடுப்பதே நாடாவது எ-று.

பாரங்கள் - மக்கட்டொகுதியும், ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும். தாங்குதல் - அவை தத்தந் தேயத்துப் பகை வந்நிறுத்தாக, அரசு கோல்கோடியதாக, உணவின்மையானுகத் தன்கண் வந்தால் அவற்றைத் தேயங்களைப்போல இனிதிருப்பச்செய்தல். அச்செயலால் இறையைக் குறைபடுத்தாது தானே கொடுப்பதென்பார் இறையொருங்கு நேர்வதென்றார்.

(ப-ரை) நாடு-நாடாவது, பொறை-(பிறநாடுகள் சுமந்த) பாரமெல்லாம், ஒருங்கு-ஒருசேர, மேல்வருங்கால்-(தன்) மேல் வரும்போது, தாங்கி (அவைகளை) தாங்கி, (அதன்மேலும்) இறைவற்கு-(தன்) னரசனுக்கு, இறையொருங்கு - இறைப்பொருண் முழுதையும், நேர்வது-உடன்பட்டுக்கொடுப்பதேயாம் எ-று.

(க-ரை) பிறநாட்டுப்பாரம் தன்மேல் வரும்போது அவற்றைத் தாங்கி தன்னரசனுக் கிறைப்பொருண்முற்றுந் தருவதே நாடாம் என்பதாம்.

(வி-ரை) பாரமாவது மனிதர் கூட்டமும் பசு மூதலாயின் விலங்கின் கூட்டமும். தாங்குதலாவது - அவைகள் தத்தம் தேசங்களிலே பகைவர் வருதலாலாவது, அரசன் முறைதப்பலாலாவது, உணவில்லாமையாலாவது தன்னிடத்தி வந்தால் அவ்வத்தேசங்கள்போல் இனிதிருப்பச்செய்தல். அதனால் தன்னாசனுக்கு வரிப்பணம் குறைபடுத்தாமல் தானே கொடுப்ப தென்றதற்கு இறையொருங்கு சேர்வதென்றார்.

'பொறை' என்றது பிறநாட்டுப்பாரத்தை. அதாவது பஞ்சத்தாலானும், அரசு கோல்கோட்டத்தாலானும், பகை அரசுக்களுடைய வச்சத்தாலானும் குடியும் ஆவும் பிறவும்வரின் அப்பொறையை என்பதாம். 'ஒருங்கு' இது ஒரே மட்டாக என்பதாம். 'இறைவன்' என்றது அரசனை. இது தலைமையான் வந்த பெயர். கடவுட்பெயரை அரசற்கு ஆக்கியவிது உபசாரவழக்கு. 'இறை' என்ற இரண்டாவது சொல்லியது இறைவற்குத்தரும் இறைப்பொருளை. 'சேர்வது' இது கொடுப்பது என்னும் பொருளது. (3)

உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ் சேரா தியல்வது நாடு.

(பரி-உரை) உறு பசியும்-மிக்க பசியும், ஓவாப்பிணியும்-நீங்காத நோயும், செறு பகையும் சோதது-புறத்தின்றவர்க அழிவு செய்யும் பகையுமின்றி, இயல்வது நாடு-இனிது நடப்பதே நாடாவது எ-று.

உறுபசி-உழவருடைமையானும் ஆற்ற விளைதலானும் சோதாயிற்று. ஓவாப்பிணி நிக்காற்று மிக்கருளிர் வெப்பங்களும் நுகரப்படுமவற்றது நீமையு மின்மையிற் சோதாயிற்று. செறுபகை-அரசன் ஆற்றலும் கிலப்படையும் அடலியும் அரணுமுடைமையிற் சோதாயிற்று.

(ப-ரை) நாடு-நாடாவது, உறுபசியும் - அதிகபசியும், ஓவாப்பிணியும்-நீங்காத நோயும், செறுபகையும் - (புறத்திலிருந்தவர்க்) அழிவு செய்யும் பகையும், சோத-அடையப்பெறாமல், இயல்வது - இனிது நடப்பதேயாம் என்றவாறு.

(க-ரை) பசியும், பிணியும், பகையுஞ் சோதிருப்பது நாடாகும் என்பதாம்.

(வி-ரை) அதிகபசி-உழவருடைமையாலும், மிகவிளைதலாலும், சோதாயிற்று. நீங்காதநோய் நீக்காதற மிக்க குளிர்வெப்பங்களும், உண்ணப் படுமவைகளது நீமையும் இல்லாமையால் சோதாயிற்று. செறுபகை-அரசன் வலிமையும், கிலப்படையும், அடலியும், அரணும், உடைமையால் சோதாயிற்று.

'உறுபசி' என்றதில் 'உறு' என்றது மிகுதிப்பொருள் தந்தது. 'ஓவாப் பிணி' இதில் 'ஓவா' என்றது அகலா, நீங்கா என்னும் பொருளது. 'பிணி' இது நோய் என்னும் பொருளது. 'பிணித்தலின் பிணி' என்றார். இது பீடிப்பது பீடை என்றாற்போலும் கொள்க. 'செறுபகை' என்றது புறத்தே

இருந்து வந்து அழிவைச்செய்யும் பகையை. 'புறத்தின்றுவந்து' என்பது அவாய்நிலையான் வந்தது 'இயல்வது' இது இனிது கடப்பதென்னும் பொருளது. (4)

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்கு
கொல்குறும்பு மில்லது நாடு. [ங்

(பரி-உரை) பல் குழுவும்-சங்கேத வயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டமும், பாழ் செய்யும் உட்பகையும் - உடனுறையாகின்றே பாழாகச் செய்யும் உட்பகையும், வேந்து அலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு. அளவுவந்தால் வேந்தனை யலைக்குங் கொல்லினைக் குறும்பரு மில்லாததே காடாவது எ-று.

சங்கேதம் - சாதிபற்றியும், கடவுள்பற்றியும் பலர்க்குளதாம் ஒருமை. உட்பகை-ஆறலைப்பார், கள்வர், குறளைகூறுவார் முதலியமக்களும்; பன்றி, புலி, காடி முதலிய விலங்குகளும். உட்பகை குறும்பு என்பன ஆகுபெயர். இம்மூன்றும் அரசனுலும் வாழ்வாராலுங் கடியப்பட்டு கடப்பதே காடென்பதாம்.

(ப-உரை) நாடு-காடாவது, [பல்குழுவும் - (சங்கேதவசத்தால் மாறுபட்டுக் கூடும்) பலகூட்டமும், பாழ்செய்யும் - (உடனிருந்துகொண்டே) பாழாகச் செய்யும், உட்பகையும்-கள்ளர்முதலிய உட்பகையும், வேந்தலைக்கும்-(சமயம் வந்தால்) அரசனை அலைக்கின்ற, கொல் குறும்பும்-கொலைத்தொழிற் குறும் பரும், இல்லது-இல்லாததேயாம் எ-று.

(க - உரை) பலகூட்டமும் பகையும் கொலைத்தொழிற் குறும்பரும் இல்லாததே காடாகும் என்பதாம்.

(வி-உரை) சங்கேதம் - சாதிபற்றியும், சமயம்பற்றியும், பலர்க்கு உளதா மொருமை. உட்பகை-வழியலைத்துப் பறிக்குங்கள்வர் கோள் சொல்லுவோர் முதலாகிய மக்களும். பன்றி, புலி, காடி, முதலிய மிருகங்களும். இம் மூன்றும் அரசனுலும் வாழ்வோராலும் கடியப்பட்டு கடப்பதென்பதாம்.

'பல்குழு' என்றது சங்கேதவயத்தால் மாறுபட்டுக்கூடும் பலகூட்டம் என உரை செய்யப்பெற்றது. இதில் 'சங்கேதவயத்தால் மாறுபட்டுக்கூடும்' என்றது வருவித்தவுரை. (குழு = கூட்டம்) இதன்கண்வந்த உம்மைகள் பலவும் எண்ணும்மைகள். 'உட்பகை' என்றது நாட்டுக்குள்ளே இருந்து அழிவுசெய்யும் பகை என்பதாம். (5)

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்று
நாடென்ப நாட்டிற் றலை.

(பரி-உரை) கேடு அறியா - பகைவராற் கெடுதலறியாததாய், கெட்ட விடத்தும் வளம் குன்று நாடு - அரிதிற் கெட்டதாயினும் அப்பொழுதே

தன் வளக்குன்றுத நாட்டினை, நாட்டின் தலை என்ப-எல்லா நாட்டினுந் தலையென்று சொல்லுவர் நூலோர் எ-று.

அறியாத குன்றுத என்னும் பெயரெச்சங்களின் இறந்தகாலகண் விகாரத்தால் தொக்கன. கேடறியாமை அரசன் ஆற்றலானும், கடவுட்பூசை அறங்கள் என்றிவற்றது செயலானும் வரும். வளம்-ஆகாக்களிற்படுவனவும், வயலினுந் தண்டலையினும் விளைவனவுமாம். குன்றுமை - அவை செய்ய வேண்டாமல் இயல்பாகவே யுளவாயும் முன்னீட்டப்பட்டுக் குறைவறுதல். இவை ஆறபாட்டானும் நாட்டது இலக்கணங் கூறப்பட்டது.

(ப - ரை) கேடறியா - (பகைவராலே) கெடுதலறியாததும், கெட்ட விடத்தும் - (அரிதிற்) கெட்டவிடத்தும், வளக்குன்று - (அப்போதும்) வளக்குறையாததும் ஆன, நாடு-நாட்டை, நாட்டின் எல்லா நாடுகளிலும் தலை முதன்மையதாகும், என்ப-என்று நூலோர் சொல்லுவார் எ-று.

(க-ரை) கேடில்லாததும், வளக்குன்றுதலுமான நாட்டை எல்லா நாட்டிலு முதன்மையான நாடென்பர் என்பதாம்.

(வி-ரை) அறியாத குன்றுத என்பன இறந்தகெட்டு வந்தன. கேடறியாமை அரசன் வலிமையாலும், கடவுட்பூசை அறங்கள் என்றிவைகளாற் செயலாலும் வரும். வளம்-வளம், * ஆகரங்களிற்படுமவையும், வயல் தண்டலைகளில் விளையுமவையும் ஆம். குறையாமை-அவை சம்பாதிக்க வேண்டாமல் இயல்பாகவே உளவாவும் முன் சம்பாதிக்கப்படுங் குறையறுதலும். [இவை ஆறபாட்டாலும் நாட்டது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'கேடறியா' என்றது பகைவராற் கெடுத்த லறியாததாய் என்பதாம்.. இதில் 'பகைவரால்' என்பது வருவித்தவுரை. அதாவது எல்லா அரணும் உடையநாடு என்பது பெறப்படும். 'கெட்டவிடத்தும்' என்றதன் உம்மையால் கெடடையாது என்னும் நிண்மை பெறப்பட்டது. 'என்ப' என்றது என்று சொல்லுவர் நூல்வல்லார் என்பதாம். (6)

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுன்லும் வல்லரணு நாட்டிற் குறுப்பு.

(பரி-உரை) இருபுனலும்-கீழ்நீர் மேனீர் எனப்பட்ட தன்கணீரும், வாய்ந்த மலையும்-வாய்ப்புடைத்தாய மலையும், வரு புனலும்-அதனினின்றும் வருவதாய நீரும், வல்லரணும் - அழியாத சுகரியும், நாட்டிற்கு உறுப்பு-நாட்டிற்கு அவயவமாம் எ-று.

சுண்டுப் புனலென்றது தாவு கேணிகளும், ஏரிகளும், ஆறுகளுமாகிய நீராசுக்களை, அவயவமாதற்குரியன அவையேயாகலின் அவற்றுன் வானம் பறப்பினும் வளனுடைமை பெறப்பட்டது. இடையதன்றி யொருபுடைய நாகலும் தன்வளந்தருதலும் மாரிக்கண் உண்டநீர் கோடைக்கண் உமிழ்

* ஆகரம்-மணி, பொன் முதலியவை எடுக்குங் குழிகள்.

நலமுடைமைபற்றி வாய்ந்தமலையென்றார். அரண்-ஆகுபெயர். இதனால் அதன் அவயவம் கூறப்பட்டது.

(ப-ரை) இருபுனலும்-கீழ்நீர் மேனீர் எனப்படுகிற தன்னிடத்து நீரும், வாய்ந்த மலையும் வாய்ப்புடைத்தாகிய மலையும், வருபுனலும்-(அதிலிருந்து) வருவதாகிய நீரும், வல்லாணும்-அழியாத தகரியும், நாட்டிற்கு-நாட்டினுக்கு, உறப்பு-அவயவமாம் எ-று.

(க-ரை) நீருமலையு மலையில்வரு நீரும், தகரும் நாட்டிற்கு உறப்பாம் என்பதாம்.

(வி-ரை) இவ்விடத்துப் புனலென்றது தாவு, கேணிகளும், ஏரிகளும் ஆறுகளும் ஆகிய ஜலாதாரங்களை, அவயவமாதற்கு உரியன அவையே யாகலால், அவைகளால் மழைவறப்பினும் வளமுடைமை பெறப்பட்டது. கடுவதல்லாமல் ஒருபக்கத்தாகலும், தன்வளந்தருதலும், மாரியி லுண்டீர் கோடையி லுமிழ்தலு முடைமைபற்றி வாய்ந்தமலையென்றார். [இதனால் அதனது அவயவம் சொல்லப்பட்டது.]

'இருபுனல்' என்றது ஊற்றுநீரையும் மழைநீரான்வரும் ஆற்றுநீரையும். 'வாய்ந்தமலையும்' என்றது அருகுகவும் வளப்பமுடையதாகவும் அமைந்தமலை என்பதாம். 'வருபுனல்' என்றது அவ்வாய்ந்த மலையினின்றும் வரும் அருவி நீரை. என்னை? 'வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே' என்றபடி மழை வறந்தகாலத்தும் மலை உள்ளே முன் கொண்டநீரை வெளிப்படுத்தி யுலகுட்டலின் என்க. 'வல்லாண்' என்றது பகைவரால் அழிக்கமுடியாத வலிய தகரியை. இதில் வந்த உம்மைகள் அனைத்தும் எண்ணும்மைகள். (7)

பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(பரி-உரை) பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் எமம் இவ்வைந்தும் பிணியின்மையுஞ் செல்வம் விளைதல் இன்பம் காவல் என்றிவை யுடைமையுமாகிய இவ்வைகிணையும், நாட்டிற்கு அணி என்ப-நாட்டிற்கு அழகென்று சொல்லுவர் நூலோர் எ-று.

பிணியின்மை: நிலைலத்தான் வருவது. செல்வம்: மேற்சொல்லிய இன்பம் - விழவும் வேள்வியும் சான்றோரு முடைமையாலும், நுகர்வ துடைமையாலும், நிலநீர்களது நன்மையாலும், வாழ்வார்க்கு உண்ணிதழ்வது. காவலெனவே அரசன்காவலும், வாழ்வோர்காவலும், அரண்காவலும் அடங்கின. பிறதேயங்களினுள்ளாரும், விழைந்து பின் அவையுள்ளாமைக் கேதுவாய அதனழகு இதனுற் கூறப்பட்டது.

(ப-ரை) பிணியின்மை - கோயில்லாமையும், செல்வம் - செல்வமும், விளைவு-பயிர் விளைவும், இன்பம்-சுகமும், எமம்-காவலும், இவ்வைந்து-இவ்வைந்தினையும், நாட்டிற்கு-தேசத்திற்கு, அணி-அழகாகும், என்ப-என்று நூலோர் சொல்லுவார் எ-று.

(க-ரை) கோயில்லாமையும் செல்வமும் பயிர்விளைவு மின்பமும் காவலு மிவ்வைந்தும் நாட்டிற் கழகாகுமென்பர் என்பதாம்.

(வி-ரை) பிணியில்லாமை நிலநலத்தால் வருவது. செல்வம் முன் சொல்லியது. இன்பம் விழவும், வேள்வியும், சான்றோருமுடைமையாலும், அனுபவிப்பவையுடைமையாலும், நிலநீர்களது நன்மையாலும் வாழ்வார்க்கு உள்ளே நிகழ்வது. காவலெனவே அரசன் காவலும் வாழ்வோர் காவலும் அரண் காவலும் அடங்கின. [பிறதேசத்தோரும் இச்சித்துப் பின்னே அவைகளை நீங்கியாமைக்கு ஏதுவாகிய அதனழகு இதனாலே சொல்லப் பட்டது.]

'ஏமம்' என்றது காவலை; அதாவது அரண்காவல் அறக்காவல் அரசு காவல் என்னுங் காவல்களை. 'ஐந்து' என்ற இடத்து செய்யுள்விகாரத்தால் முற்றும்மை தொக்குநின்றது. (8)

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

(பரி-உரை) நாடா வனத்தன நாடு என்ப-தம்கண் வாழ்வார் தேடி வருந் தாமல் அவர்பால் தானே யடையுஞ் செல்வத்தை யுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர், நாட வனம் தரும் நாடு நாடு அல்ல-ஆகலால் தேடி வருந்தச் செல்வமடைவிக்கும் நாடுகள் நாடாகா எ-று.

நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மேனின்றது. * "பொருள் செய் வார்க்கு மஃதிடம்" என்றார் பிறரும். நூலோர் விதிபற்றி எதிர்மறை முகத்தாற் குற்றங்கூறியவாறு. இவ்வாறன்றி என்பவென்பதனைப் பின்னுங் கூட்டி இருபொருள்பட வுரைப்பின், அனுவாதமாம்.

(ப-ரை) நாடா - (தம்மிடத்து வாழ்வோர்) தேடி வருந்தாமல், அவரிடத்தே தானே அடையும்) வனத்தன - செல்வத்தையுடையவைகளை, நாடு-நாடுகள், என்ப-என்று (நூலோர்) சொல்லுவார், (ஆகலால்) நாட-தேடிவருந்த, வனந்தரும்-செல்வத்தை அடைவிப்பவையாகிய, நாடு-நாடுகள், நாடல்ல-நாடுகளாகாவாம் எ-று.

(க-ரை) தேடாத செல்வத்தை யுடையவற்றை நாடென்று சொல்லுவர் தேடிவருந்த செல்வத்தைத்தரு நாடுகள் நாடுகளல்ல என்பதாம்.

(வி-ரை) நூலோர் விதிபற்றி எதிர்மறைமுகத்தால் குற்றம் சொல் லியபடி.

'நாடாவனத்தன' என்றது தங்கண் வாழ்வோர் தேடிவருந்தாமல் தானே அவர்பாற் செல்லும் செல்வங்களை யுடையனவற்றை என்பதாம்.

* மேலே 562-ம் பக்கத்திற் காட்டிய 'நற்றவஞ் செய்வார்க்கிடம்' என்னுஞ் செய்யுளில் உள்ளது.

தக்கண் வாழ்வோர் தேடிவருந்தப் பின் வளந்தரும் நாடு நாடல்ல என்பார் 'நாடல்ல நாட வளந்தருநாடு' என்றார். 'நாடு, நாட' எனவந்தது முரண் தொடை இது சொல்லால் முரணி நின்றது. (பொருள் முரணில்லை என்பது தனியற்பாலது.) (9)

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

(பரி-உரை) வேந்த அமைவு இல்லாத நாடு-வேந்தனோடு மேவுதலில்லாத நாடு, ஆக்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம் இன்றே மேற்சொல்லிய குணங்களெல்லாவற்றானும் நிறைந்திருந்தாயினும் அவற்றாற் பயனுடைத்தன்று எ-று.

வேந்தமை எனவே, குடிகள் அவன்மாட்டு அன்புடையராதலும், அவன்றான் இவர்மாட்டு அருளுடையனாதலும் அடங்கின. அவையில்வழி வாழ்வோரின்மையின், அவற்றாற் பயனின்றாயிற்று. இவை யிரண்டு பாட்டானும் அதன்குற்றங் கூறப்பட்டது.

(ப-உரை) வேந்த - அரசனோடு, அமைவில்லாத - பொருந்துதலில்லாத, நாடு - நாடாவது, ஆக்கு - மேற்சொல்லிய குணங்களாலெல்லாம், அமை வெய்தியக்கண்ணும் - நிறைந்துள்ளதாயினும், பயமின்றே - (அவைகளாலே) பயனுடைத்தன்று எ-று.

(க-உரை) இராசனுடன் பொருந்தாத நாடானது எல்லா நிறைவுள்ள தாயினும் பிரயோசனமில்லை என்பதாம்.

(வி-உரை) வேந்தமையெனவே குடிகள் அவனிடத்தே அன்புடைய ராதலும் அவன் குடிகளிடத்தே அருளுடையனாதலும் அடங்கின. அவை யில்லாவிடத்து அந்நாட்டில் வாழ்வோரில்லாமையால் அவைகளாலே பயன் இல்லையாயிற்று. [இவை இரண்டு பாட்டாலும் அவனது குற்றம் சொல்லப்பட்டது.]

'ஆக்கு' என்றது மேற்கூறியவிதமாக எல்லாவளங்களும் பெற்ற என்பதாம். 'பயம்' என்றது பயனை. 'இன்றே' இதில் ஈற்று ஏகாரம் தேற்றப்பொருளது. (10)

74-ம் அதி - நாடு - முற்றிற்று.

75-ம் அதிகாரம்—அரண்

(பரி-உரை) இனி, அந்நாட்டிற்கு உறப்பாயடக்குமாயினும் பகைவ ராற்றொலைவு வர்தழி அது தனக்கும் அரசன்றனக்கும் ஏமமாதற் சிறப்புப்பற்றிப் பிறிதோரதிகாரமாக ஓதப்பட்ட அரண் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.

(உரை) இனி, அந்நாட்டிற்கு உறப்பாய் அடங்குமாயினும் பகைவரால் தொலைவுவர்தவிடத்து அதற்கும் அரசனுக்கும் காப்பாதற் சிறப்புப்பற்றியே வேறோரதிகாரமாகச் சொல்லப்பட்ட அரண் ஓரதிகாரத்தால் சொல்லு கின்றார். அஃதாவது: இன்னதென்பதும் அதிகாரமுறைமையும், இதனுள் விளக்கும்.

ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற் போற்று பவர்க்கும் பொருள்.

(பரி-உரை) ஆற்றபவர்க்கும் அரண்பொருள்-மூவகையாற்றலுமுடைய ராய்ப் பிறர்மேற் செல்வார்க்கும் அரண் சிறந்தது; அஞ்சித் தற்போற்று பவர்க்கும் (அரண்) பொருள்-அவையின்றித் தம்மேல் வருவார்க்கு அஞ்சித் தன்னையே யடைவார்க்கும் அரண் சிறந்தது எ-று.

பிறர்மேற்செல்லுங்கால் உரிமை பொருண் முதலியவற்றைப் பிற னொருவன் கௌவாமல் வைத்துச் செல்லவேண்டுமாகலானும், அப்பெருமை தொலைந்து இறந்துவர்தழிக் கடனடுவணுடைகலத்தார்போன்று ஏமங்காணுது இறவாகலானும், ஆற்றபவர்க்கும் போற்றபவர்க்கும் அரண் பொரு ளாயிற்று. ஆற்றலுடையராயினும் அரணில்வழி அழியும் பாலராகலின், அவரை முற்கூறினார். இதனுல் அரணினது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) அரண் - கோட்டையானது, ஆற்றபவர்க்கும் - (மூவகை வலி மையுமுடையவராய்ப்) பிறர்மேலே செல்வோர்க்கும், பொருள்-சிறந்ததாகும், அஞ்சி - (அவையல்லாமல் தம்மேல் வருவோர்க்கு) அஞ்சி, தற்போற்று பவர்க்கும்-தன்னையே அடைவோர்க்கும், பொருள்-சிறந்ததாகும் எ-று.

(க-ரை) கோட்டையானது போர்செய்வோர்க்கும் தன்னையடைந் தார்க்கும் சிறந்த பொருளாகும் என்பதாம்.

(வி-ரை) பிறர்மேற் செல்லும்போது உரிமைப்பொருள் முதலானவை யாப் பிறனொருவன் வௌவாமல் வைத்துச் செல்லவேண்டுதலாலும், பெருமைதொலைந்து முடிவுவர்தவிடத்துக் கடலினடுவே உடைகப்பற்காரர் போன்று காப்புக்காணுது முடிவாகலாலும், அவ்விருவகையோர்க்கும் அரண் பொருளாயிற்று. வலிமையுடையவராயினும் அரணில்லாதவிடத்து வழியுர்தன்மையராகலால், அவரை முன்சொல்லினர். [இதனுல் அரணினது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'ஆற்றவர்க்கும்' என்றது படை, கட்பு உடனே தாக்காமை, கல்வி, தணிவுடைமை என்னும் மூன்றுகுணமும் உடையராய்ப் பிறர்மேற் பொச் செல்வார்க்கும் என்பதாம். 'அரண்' என்றது மதிலரண்படை அரண்களை. 'தற்போற்றவர்' என்றது பகைகர்க்கு அஞ்சித் தன்னைப் பேணிக்கொள் வார்க்கும் என்பதாம். (1)

மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

(பரி-உரை) மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழற்காடும் உடையது அரண்-மணிபோலு நிறத்தினையுடைய நீரும், வெள்ளிடை நிலமும், மலையுங் குளிர்ந்த நிழலையுடைய காடுமுடையதே அரணவது எ-று.

எஞ்ஞான்றும் வற்றாத நீரென்பார் மணிநீரென்றும், நீருநிழலுமில்லா மருவில மென்பார் மண்ணென்றும், செறிந்த காடென்பார் அணிநிழற் காடென்றுங் கூறினர். மதிற்புறத்து மருவிலம் பகைவர் அரண்பற்றுமைப் பொருட்டு. நீராண், நிலவாண், மலையாண், காட்டாண் என இயற்கையுஞ் செயற்கையுமாய இந்நான்கு அரணுஞ் சூழப்படுவது அரண் என்பதாம்.

(ப-ரை) அரண் - கோட்டையானது, மணிநீரும்-மணிபோல் நிறத்தை யுடைய நீரும், மண்ணும்-வெளிநிலமும், மலையும்-மலையும், அணிநிழற்காடும்-குளிர்ந்த நிழலையுடைய காடும், உடையது-உடையதேயாம் எ-று.

(க-ரை) நீரையும், வெளிநிலத்தையும், மலையையும் காட்டையுமுடைய தே கோட்டையாம் என்பதாம்.

(வி-ரை) எக்காலும் வற்றாத நீரென்றற்கு மணிநீரென்றும், நீருநிழலு மில்லாத வெறுநிலமென்றற்கு மண்ணென்றும், செறிந்த காடென்றற்கு அணிநிழற்காடென்றும் சொல்லினார். மதிற்புறத்து வெளிநிலம் பகைவர் அரண்பற்றுமைப்பொருட்டு. நீரரண், நிலவரண், மலைபரண், காட்டரண் என்கிற இந்நான்கரணும் சூழப்படுவதை அரணென்பதாம்.

'மணி' என்றது நீலமணியை. என்னை? ஆழமுடைய நீர் நீலநிறமாகத் தோற்றுதலின் என்க. 'மண்' என்றது வெளிநிலத்தை. 'அணிநிழல்' காண்; அணி என்றது குளிர்ந்த என்னும் பொருளது. இதன்கண்வந்த உம்மைகள் எண்ணும்மைகள். (2)

உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர வினென்றுரைக்கு நூல்.

(பரி-உரை) உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின் அமைவு உயர்ச்சியும் அகலமும் திண்மையும் அருமையும் என்று சொல்லப்பட்ட இந் நான்கின் மிகுதியையுடைய மதிலை, அரண் என்ற உரைக்கும் நூல் அரணென்று சொல்லுவர் நூலோர் எ-று.

அமைவு நால் என்பன ஆகுபெயர். உயர்வு-எணியெய்தாதது. அகலம்-புறத்தோர்க்கு அகழனாகா அடியகலமும், அகத்தோர்க்கு நின்று வினை செய்யலாந் தலையகலமும். திண்மை-கல்லிட்டிகைகளாற் செய்தலிற் குத்தப் படாமை. அருமை - பொறிகளான் அணுகற்கருமை. பொறிகளாவன: "வளைவிற் பொறியு மயிற்செறி கிலையுங், கருவி லாகமுங் கல்லுமிழ் கவணும், பரிவுறு வெங்கையும் பாகடு குழிசியுங், காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுங், கண்டிலுங் குடக்கு மாண்டலை யடுப்புங், கலையுங் கழுவும் புதையும் புழையு, மையவித் தலாமுங் கையெய ருசியுஞ், சென்றெறி சிலையும் பன்றியும் பிணையு, மெழுவுஞ் சிப்பு முழுவிறற் கிணையமுங், கோலுங் குத்தமும் வேலுஞ் சூலமும்" என்றிவை முதலாயின.

(ப-ரை) உயர்வு-உயர்ச்சியும், அகலம்-அகலமும், திண்மை-வலிமையும், அருமை-அருமையும், (எனப்பட்ட) இந்நான்கின் - இந்நான்கினையு, அமைவு-திருத்தியையுடைய மதிலை, அரணென்று-கோட்டையென்று, நூல்-நூலோர், உரைக்கும்-சொல்லுவர் எ-று.

(க-ரை) உயர்வு, அகலம், வலிமை, அருமை, இந்நான்கின் திருத்தியை புடைய மதிலைக் கோட்டையென்று சொல்லுவர் என்பதாம்.

(வி-ரை) அமைவு நால் இரண்டும் ஆகுபெயர்கள். உயர்வு எணிக்கு எட்டாதது. அகலம் - புறத்தோர்க்குத் தோண்டக்கூடாத அடியகலமும் உள்ளிடத்தோர்க்கு நின்று தொழில் செய்தற்காந்தலையகலமும். திண்மை-கருங்கல் செங்கல்களாலே செய்தலால் குத்தப்படாமை. அருமை-பொறிகளாலே சேர்தற்கருமை. (பொறி-எந்திரப்பாவைகள்.)

'உயர்வு' என்றது எணிகொண்டும் எறற்கரிய உயர்வை. 'திண்மை' என்றது உறுதிபுடைமையை. 'அருமை' என்றது பொறிப்படைகளால் எட்டுதற்கு அருமையை. இக்குறளில் எண்உம்மைகள் தொக்கன. (3)

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை யூக்க மழிப்ப தரண்.

(பரி-உரை) சிறுகாப்பிற்பேர் இடத்தது ஆகி - காக்கவேண்டுமிடஞ் சிறிதாய் அகன்றவிடத்தை புடைத்தாய், உற பகை ஊக்கம் அழிப்பது அரண் - தன்னெவர்து முற்றிய பகைவரது மனவெழுச்சியைக் கெடுப்பதே அணுவது எ-று.

வாயிலும் வழியும் ஒழிந்த இடங்கள் மலை, காடு, நீர்நிலை யென் றிவற்றன் எற்பன வுடைத்தாதல்பற்றிச் சிறுகாப்பினென்றும், அகத்தோர் லிவின்றி யிருத்தல்பற்றிப் பேரிடத்ததாகியென்றும், நம்வலி நோக்கி இது பொழுதே யழித்தமென்று வரும் பகைவர் வந்த கண்டால் அவ்வூக்கம் ழிதல்பற்றி ஊக்கம் அழிப்பதென்றுங் கூறினர்.

---

* சிலப்பதிகாரம், அடைக்கலகாதை, 207-216.

(பத) அரண் கோட்டையானது, நெகாப்பின்-காக்கவேண்டியிட
நிதாய், பேரிடத்தாகி-பாந்தவிடத்தை புடையதாய், உறபகை (தன்னை
சூழ்ந்த பகைவரை, ஊக்கம் - மனவெழுச்சியை, அழிப்பது - கொப்பி
யாம் எ-று.

(க-ரை) காக்குமிடஞ் நிதாய்ப் பாந்தவிட முடையதாய்ப் பகை
வலிமையைக் கெடுப்பதே கோட்டை என்பதாம்.

(வி-ரை) வாயிலும் வழியும் ஒழிந்தவிடங்கள் மலை, காடு, நீர், நி
என்றிவைகளுள் ஏற்பனவைகளை உடைத்தாதல்பற்றி நெகாப்பினென்ற
உள்ளிடத்தோர் கலிவில்லாமல் இருத்தல்பற்றி பேரிடத்தாகியென்ற
தம் வலிமைகண்டு இப்பொழுதே அழிப்போமென்ற வரும் பகை
வர்த அதைகண்டால் அத்தைரியம் ஒழிதல்பற்றி ஊக்கமழிப்பதென்ற
சொல்லினர்.

'வாயில்' என்றது கோட்டைமதிலின்கண்ணுள்ள வாயில்கள் 'வ
என்பது உட்புகுதற்குரியவழி. மலை, காடு, நீர், நிலை முதலியன வொழி
விடங்கள் நெகாப்புடைமைபற்றி நெகாப்பு என்றார். 'பேரிடத்தது' என்ப
போர்செழுக்கால் அதற்தோர் தயரின்றி யிருத்தற்பொருட்டுப் பாந்தவிட
உடையது. 'உறபகை என்பது வலிமையுடைய பகைகர்; பகை பண்பா
பெயராய் அதனையுடைய மக்களை உணர்த்நிற்ற. 'ஊக்கமழிப்பது' என்ப
அதற்தார் செல்வப்பெருக்கும் உறுதியுமேயாம். (

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.

(பரி-உரை) கொளற்கு அரிதாய் புறத்தாராற் கோடற்கு அரிதாய்
கொண்ட கூழ்த்தாகி - உட்கொண்ட பலவகை புணவிற்றாய், அகத்தா
நிலைக்கு எளிதாம் நீரது அரண் - அகத்தாரது போர்நிலைக்கு எளிது
நீர்மையையுடையதே அரணவது எ-று.

கோடற்கருமை-நிலை நிடக்குகளாலும் பொறிகளாலும்-நிடங்கொள்ள
தற்கருமை. உணவு தலைமைபற்றிக் கூறினமையின், மற்றுள்ள தா
பலவனவும் அடங்கின. நிலைக்கெளிதா நீர்மையாவது-அகத்தார்விட்ட காவு
முதலிய புறத்தார்மேல் எளிதிற் சேறலும், அவர் விட்டன அகத்தாரே
செல்லாமையும், பதணப்பரப்பும் முதலாயின.

(ப-ரை) அரண்-கோட்டையானது, கொளற்கரிதாய் (புறத்தோரே
கொள்ளுதற்கரிதாய், கொண்ட - உட்கொண்ட, கூழ்த்தாகி - (பலவக
புணவை புடையதாகி, அகத்தார் - உள்ளிடத்தோரது, நிலைக்கு - (போ
நிலைக்கு, எளிதாம்-எளிதாகின்ற, நீரது-குணத்தையுமுடையதேயாம் எ-று.

(க-ரை) பகைவர் கொள்ளுதற்கரிதாய்ப் பலவகை புணவையுடை
தாய் உள்ளிட்டோர் போர்நிலைக்கெளியதாகிய குணமுடையதே கோட்ட
என்பதாம்.

(வி-ரை) கொள்ளுதற் கருமை - காவற்காடு கிடங்குகளாலும், பொறிக ளாலும், இடங்கொள்ளுதற்கருமை. உணவு-தலைமைபற்றிச் சொல்லினமை யால் மற்றுமுள்ள அனுபவிக்கப்படு மவைகளும் அடங்கின. கிலைக்கெளிதா ரீர்மையாவது - உள்ளிடத்தோரால் விடப்பட்ட ஆயுதமுதலானவை புறத் தோர்மேல் எளிதிலே செல்லலும், அவரால் விடப்பட்டவை உள்ளிடத்தோர் மேலே செல்லாமையும் பதணப்பரப்பும் முதலானவை. பதணம்-மதிலுண் மேடை.

'கொளற்கரிது' என்பது காவற்காடு நீர்க்கிடங்கு முதலியன உடைமை பற்றி பகைவர்களால் நெருங்குதற்கருமை. 'கிடங்கு' என்பது நீர் ஆழ்ந்த கிடங்கு. 'கூழ்த்து' இதில் அத்து சாரியை. 'நீரது' என்பது நீர்மை (தன்மை) என்ற பண்படியாகப் பிறந்தவினை. 'பதணப்பரப்பு' என்பது அகத்தோர் ஏவும்படை புறத்தோர்மேல் படவும், புறத்தோர் ஏவும்படை அகத்தோர் மேல் படாதபடி மதிலினுள் மறைந்துறையும் மேடை. (5)

எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண்.

(பரி-உரை) எல்லாப்பொருளும் உடைத்தாய்-அகத்தோர்க்கு வேண்டும் பொருள்க ளெல்லாவற்றையும் உள்ளேயுடைத்தாய், இடத்து உதவும் நல் லாள் உடையது அரண் - புறத்தோரால் அழிவெய்தும் எல்லைக்கண் அஃது ஏய்தாவகை யுதவிக் காக்கும் நல்ல வீரரையுமுடையதே அரணாவது எ-று.

அரசன்மாட்டு அன்பும், மானமும், மறமும், சோர்வின்மையும் முதலிய நற்குணங்க ளுடைமைபற்றி நல்லாளென்றார்.

(ப-ரை) அரண் - கோட்டையானது, எல்லாப்பொருளும் - (உள்ளிடத் தோர் வேண்டும்) பொருள்கள் யாவையும், உடைத்தாய் - உடையதாகி, இடத்து - (புறத்தோரால்) அழிவடையுமளவில், உதவும் - (அதுவராமற்படி) உதவிக் காக்கவல்ல, நல்லாள் - நல்ல வீரரையும், உடையது-உடையதேயாம் எ-று.

(க-ரை) எல்லாப்பொருளுள்ளதாய் வீரரையுடையது கோட்டை என்ப தாம்.

(வி-ரை) அரசனிடத்து அன்பும், மானமும், மறமும், சோர்வில்லா மையும் முதலாகிய நற்குணங்களை உடைமைபற்றி நல்லாளென்றார்.

'உடைத்தாய்' என்பது புறத்திருந்து எதிர்பாராது தன்னகத்தே மிகுதியு டைமையை உணர்த்தும். 'இடம்' என்பது பகைவரால் துன்பெய்துங் காலம். நன்மை+ஆள் = நல்லாள். நன்மை-அரசர்மாட்டுள்ள அன்பு, புறங் காடாமானம். மறம்-வீரம். 'சோர்வில்லாமை' என்பது மிகுதியுந் துன்புற்ற காலத்தும் மனங்கலங்காகிலை. (6)

முற்றியு முற்றா தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

(பரி-உரை) முற்றியும் - புகலொடு போக்கு ஒழியும்வகை நெருக்கிச் சூழ்ந்தும், முற்றாத எறிந்தும் - அங்ஙனஞ் சூழாத வெகிழ்ந்த விடமெங்கு ஒருமுகமாகப் பொருதும், அறைப்படுத்தும் - அகத்தோரை அவர் தெளிந்தோரைவிட்டுக் கீழறத்தைத் திறப்பித்தும், பற்றற்கு அரியது அரண் - புறத்தோராற் கொள்ளுதற்கு அரியதே அரணுவது எ-று.

இம்மூன்று உபாயத்தாலும் முதலாவது எல்லாப்பொருளுமுடைமையாலும், ஏனைய கல்லாலுடைமையாலும் வாயாவாயின.

(ப-ரை) அரண்-கோட்டையானது, முற்றியும் (வரவுபோக்கு) ஒழியும் வகை) நெருக்கிச் சூழ்ந்தும், முற்றாது - அப்படிச் சூழாமல், எறிந்தும் (வெகிழ்ந்த விடம்நோக்கி) ஒருமுகமாகப் போர்செய்தும், அறைப்படுத்தும் (உள்ளிடத்தோரை அவருக்கு நம்பிக்கையானவரைவிட்டுக்) கீழறுத்துத் திறப்பித்தும், பற்றற்கரியது - (புறத்தோராலே பிடித்துச்) கொள்ளுதற்கரியதேயாம்.

(க-ரை) சூழ்ந்தும் சூழாமலும் போர்செய்தும் கீழறைபெற்றும் பிறரால் கொள்ளுதற்கரியது கோட்டையாம் என்பதாம்.

(வி-ரை) இம்மூன்று உபாயங்களுள்ளும் முதலாவது எல்லாப்பொருளுமுடைமையாலும், மற்றவைகள் கல்லாலுடைமையாலும் பலிப்பன கல்லவாயின.

'முற்றுதல்' என்பது அகத்தோர் வெளிவராமலும் உட்செல்லாமலும் நெருக்கிச்சூழ்தல். 'வெகிழ்ந்த இடம்' என்பது அகத்தோர் தளர்ந்தகாலம். 'அறைப்படுத்தல்' என்பது அகத்தோருக்குப் பொருள் தருதலாலும், அவரிற் சிலரைக்கொண்டு அவர் தமதரசன்மாட்டுள்ள அன்பொழியுமாறு செய்தலுமாம். மூன்று உபாயங்கள்: முற்றுதல், படைஎறிதல், அறைப்படுத்தல். இவற்றுள் முன்னது அகத்தார்க்கு வேண்டுவனவெல்லாம் அமைந்திருப்பதும் பற்றியும் மற்றவிரண்டும் மானமும் மனமும் அன்பும் உடைய வீரரைக் கொண்டிருப்பதாலும் கூடியனவல்ல.

மூற்றூற்றி மூற்றி யவரையும் பற்றூற்றிப் பற்றியார் வெல்வ தரண்.

(பரி-உரை) முற்ற ஊற்றி முற்றியவரையும் - தானைப் பெருமையாற் சூழ்தல் வல்லாய் வந்து சூழ்ந்த புறத்தோரையும், பற்றியார் பற்ற ஊற்றி வெல்வது அரண் - தன்னைப்பற்றிய வகத்தோர் தாம் பற்றியவிடம் விடாதே நின்று பொருது வெல்வதே அரணுவது எ-று.

உம்மை சிறப்பும்மை. பற்றின்கண்ணே யாற்றியென விரியும். பற்று ஆகுபெயர். வெல்வதென உடையார்தொழில் அரண்மேனின்றது. பெரும் படையானைச் சிறுபுடையான் பொறுத்த கிற்குங் தானையன்றி வெல்லுமியல்பினதென்றதாம். இதற்குப் பிறிது உரைப்பாருமுளர். இவை யேழு பாட்டானும் அதனது இலக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) அரண் - கோட்டையானது, முற்ருற்றி - (சேனைப்பெருமை யால்) சூழ்தல் வல்லவராகி, முற்றியவரையும்-வந்துசூழ்ந்த புறத்தோரையும், பற்றியார் - (தன்னைப் பற்றிய) உள்ளிடத்தோர், பற்ருற்றி - (தாம்) பற்றிய விடம் விடாதே நின்று, வெல்வது-(போர்செய்து) வெல்வதேயாம் எ-று.

(க-ரை) தன்னைப்பற்றிச் சூழ்ந்தவரையும் தன்னிடத்திருந்தவர்பற்றி வெல்வதே கோட்டை என்பதாம்.

(வி-ரை) வெல்வதென அரணுடையார் தொழில் அரண்மேலேநின்றது. பெரும்படையானைச் சிறுபடையான் பொறுத்தநிற்குங் குணையேயன்றி வெல்லு மியல்பினதென்பதாம். [இவை எழுபாட்டாலும் அதனது இலக் கணம் சொல்லப்பட்டது.]

'முற்ற' என்றது முதனிலைத்தொழிற்பெயர்; சூழ்தலேபுணர்த்தும். முற்றியவரையும்' இதில் உம்மை உயர்வு சிறப்பும்மை. 'பற்று' என்றது பற்றதலையுடையது. தொழிலாகுபெயராக இடத்தைபுணர்த்தும்.'வெல்வதே' இதில் ஏகாரம் வெல்லும் உறுதியைக் காட்டிற்று. (8)

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

(பரி-உரை) முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து வீறு எய்தி-போர் தொடக்கினவனவிலே பகைவர் கெடும்வண்ணம் அகத்தோர் செய்யும் வினை வேறுபாடுகளான் வீறுபெற்று, மாண்டது அரண் மற்றும் வேண்டு மாட்சியையுடையதே அரணுவது எ-று.

தொடக்கத்திற் கெட்டார் பின்னுங் கூடிப் பொருதல் கூடாமையின் முனைமுகத்துச்சாயவென்ருர். வினைவேறுபாடுகளாவன: பகைவர் தொடங்கிய போரினையறிந்து எய்தல் எறிதல் குத்துதல் வெட்டுதல் என்றிவை முதலாய வினைகளுள் அதனைச் சாய்ப்பன செய்தல். மற்றும் வேண்டுமாட்சியென்றது புறத்தோரியாமற் புகுதல் போதல் செய்தற்குக்கண்ட சுருங்கைவழி முதலாயின வுடைமை.

(ப-ரை) அரண்-கோட்டையானது, முனைமுகத்து-போர்தொடங்கின வவிலே, மாற்றலர்-பகைவர், சாய-கெட, வினைமுகத்து - (உள்ளிடத்தோர் செய்யுஞ்) தொழில் வேறுபாடுகளால், வீறெய்தி - வீறுபெற்று, மாண்டது-மற்றும் வேண்டும்) பெருமையை யுடையதேயாம் எ-று.

(க-ரை) போரிடத்துப் பகைவர்கெடத் தொழிலிடத்துப் பெருமை யுடையது கோட்டை என்பதாம்.

(வி-ரை) ஆரம்பத்திலே கெட்டவர் பின்னுங் கூடிப் போர்செய்தல் கூடாமையால் முனைமுகத்துச் சாயவென்ருர். தொழில் வேறுபாடுகளாவன: பகைவர் தொடங்கிய போரை அறிந்து எய்தல் எறிதல் குத்துதல் வெட்டுதல் என்றிவை முதலாகிய தொழில்களுள் அப்போரை அழிப்பவைகளைச் செய்தல். மற்றும் வேண்டும் பெருமையென்றது புறத்தோர் அறியாமல்

புருஷல் போருதல் செய்தற்கு உண்டாக்கப்பட்ட சருக்கைவழி முதலானவை புடைமை.

'மூசத்த' இதில் அத்த சாரியை. சாய-பின்னடைவு. 'வீற' என்றது மற்றதற்கில்லாத சிறப்பு. 'சருக்கைவழி' என்றது இராசியவழி; தன்புற்ற காலங்களில் பகைவர் அறியாவண்ணம் தன்னைக் காக்குதல்வேண்டிச் செல்லுதற்குரிய மறைவழி. 'மாண்டத' இதில் மாண் பகுதி. (9)

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ளில்ல தரண்.

(பதி உரை) அரண்-அரண், எனை மாட்சித்த ஆகியக்கண்ணும்-மேற் சொல்லப்பட்ட மாட்சியெல்லா முடைத்தாயவிடத்தும், வினைமாட்சி இல்லார் கண் இல்லத - வினைசெய்தற்கண் மாட்சியில்லாதார்மாட்டு அமையிலதாம் எ-று.

வானாவிருத்தலும், அளவறியாத செய்தலும், எளாதத செய்தலும் எல்லாம் அடங்க வினைமாட்சி யில்லாரென்றதம், எற்ற வினையை யளவறித்து செய்த காகாக்கால் அம்மாட்சியினாற் பயனின்றி யழிபுமென்பார் அவை புடைத்தன்றென்றல் கூறினர். இவை இரண்டுபாட்டானும் காப்பாவ பின்றியமையாதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) அரண்-கோட்டையானது, எனைமாட்சித் தாகியக்கண்ணும் (முன் சொல்லப்பட்ட) பெருமையெல்லாம் உடைத்தாகியவிடத்தும், வினை-தொழில் செய்யுமிடத்து, மாட்சி-பெருமையை, இல்லார்கண் - இல்லாரிடத்து, இல்லத (அவை) இலதாம் எ-று.

(கரை) கோட்டை எவ்வளவு பெருமை புடைத்தாகிய விடத்தும் தொழிலிற் பெருமை யில்லாதவரிடத்துப் பயனிலதாம் என்பதாம்.

(வி-ரை) சும்மா விருக்கையும், அளவறியாத செய்தலும், எற்காத செய்தலும், எல்லாமடங்க வினைமாட்சி இல்லாரென்றதம், எற்றதொழிலை அளவறிந்த செய்த காப்பாற்றுமற்போலுல், அவ்வாணைத அப்பெருமையாலே பயனில்லாமல் அழிபுமென்றற்கு அவை புடைத்தன்றென்றல் சொல்லினர். [இவை இரண்டுபோட்டாலும் காப்பவர் அவசியம் வேண்டுமென்பத சொல்லப்பட்டத.]

'மாட்சித்த' என்றத பெருமையுடையத. 'மாட்சித்தாகியக்கண்ணும்' இதில் உம்மை பெருமையின் மிகுதியை உணர்த்திற்று. 'வினைமாட்சி யில்லார்' என்றத சிறப்பில்லாத தொழிலுடையார். அவர்செயல் சோம்பிருத்தல், செய்வதறியாத செய்தல், தகுதியில்லாதன செயல் முதலியவாம். 'இல்லத' என்றத அரண் எத்தனை சிறப்புடையதாயிருப்பினும் வினைமாட்சி யில்லாதவரின்றிப் பலனடையாதென்பதாம். (10)

75-ம் அதி - அரண் - முற்றிற்று.

76-ம் அதிகாரம்—பொருள்செயல்வகை

(பரி-உரை) -அஃதாவது: இனிப் பெரும்பான்மையும் காட்டாலும் அளவும் ஆக்கவுங் காக்கவும் படுவதாய பொருளாச் செய்தலின்றிறம் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.

(உரை) அஃதாவது: இனிப் பெரும்பாலும் காட்டாலும், அளவும் வளர்க்கவும், காக்கவும்படுவதாகிய பொருள் சம்பாதித்தலின் விதம் இவ்வதிகாரத்தாலே சொல்லுகின்றார். அஃதாவது இன்னதென்பதும் அதிகாரமுறைமையும் இதனுள் விளக்கும்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள்.

(பரி-உரை) பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருள் அல்லது - ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் படுவாராகச் செய்யுமல்ல பொருளையொழிய, பொருள் இல்லை ஒருவனுக்குப் பொருளாவதில்லை எ-று.

மதிக்கப்படாதார்-அறிவிலாதார், இழிகுலத்தார். இழிவு சிறப்பும்மை விரித்தாற்றொக்கது. மதிக்கப்படுவாராகச் செய்தல் - அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற்சென்று கிற்கப்பண்ணுதல். அதனால் சட்டப்படுவது அதுவே பிறிதில்லை யென்பதாம்.

(ப-ரை) பொருளல்லவரை - ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும், பொருளாகச் செய்யும் - பொருளாக மதிக்கப்படச் செய்பவல்ல, பொருளல்லது - பொருளையல்லாமல், பொருள் - ஒருவருக்குப்பொருள், இல்லை - வேறில்லை எ-று.

(க-ரை) மதிக்கப்படாதவரை மதிக்கப்படச்செய்யும் பொருளல்லாமல் ஒருவர்க்கு வேறு பொருளில்லை என்பதாம்.

(வி-ரை) மதிக்கப்படாதவர் - அறிவில்லாதவரும், இழிகுலத்தாரும். மதிக்கப்படச்செய்தல்-அறிவுடையவரும், உயர்குலத்தவரும் அவரிடத்திலே போய் கிற்கப்பண்ணுதல். அதனாலே சம்பாதிக்க வேண்டுவது அதுவே யென்பதாம்.

பொருள்-'நிலைவிட்டீட்டல் பொருள்' என்றதுபோல நல்லவழியே ஈட்டப்படுவதாய் இருமைப்பயனையும் தரவல்லதாய்ப் போற்றப்படுதற்குரிய தன்மையுடைய பொருள். 'பொருளல்லார்' என்றது பொருள்போல் போற்றி மதிக்கப்படாதவர். அறிவில்லாதவர்-இழிந்தவர். 'இழிகுலத்தார்' என்றது இழிந்தவரையாவர். 'பொருளல்லவரையும்' என்னும் உம்மை இழிவு சிறப்பை விளக்கும்; இது தொக்குகின்றது. 'பொருள் ஆக' என்றது பொருள்போல் மதிக்கப்படல் உண்டாக. 'பொருள் இல்லை' என்றது பொருளே பொருளாவதன்றி மற்றவை பொருளாகக் கருதப்படமாட்டா. 'மதிக்கப்படுவோ

ராகச் செய்தல்' என்றது பொருள் பெறுதனிமித்தம் அவரிடம் சென்று கிற்கப்பண்ணுதல். 'அதனால்' என்றது பொருளுடையார்மாட்டு கிற்கச் செய்வதனால். 'அதுவே' என்றது அப்பொருளே. (1)

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.

(பரி-உரை) இல்லாரை எல்லாரும் எள்ளுவர்-எல்லா கன்மையுமுடைய ராயினும் பொருளில்லாரை யாவருமிகழ்வர், செல்வரை எல்லாரும் சிறப்புச் செய்வர் - எல்லாத் தீமையுமுடையராயினும் அஃது உடையாரை யாவரும் உயரச்செய்வர் எ-று.

உயரச்செய்தல் - தாம் தாழ்ந்து கிற்றல். இகழ்தற்கண்ணும் தாழ்தற்கண் ணும் பகைவர், கட்டார், கொதுமலர் என்னும் மூவகையாரு மொத்தலின், யாவருமென்றார். பின்னுங் கூறியது அதனை வலியுறுத்தற்பொருட்டு.

(ப-ரை) (எல்லா கன்மையு முடையவரா யிருந்தாலும்) இல்லாரை-(பொரு) ளில்லாதவரை, எல்லாரும்-யாவரும், எள்ளுவர்-இகழ்வர், (எல்லாத் தீமையு முடையவராயிருந்தாலும்) செல்வரை - அப்பொருளுடையவரை, எல்லாரும்-யாவரும், சிறப்புச்செய்வர்-உயரச்செய்வர் எ-று.

(க-ரை) வறியவரை யாவருமிகழ்வர், செல்வரை யாவரும் புகழ்வர் என்பதாம்.

(வி-ரை) உயரச்செய்தல்-தாம் தாழ்ந்து கிற்றல். இகழ்விலும், தாழ் விலும், பகைவர், கடப்பினர், அயலவர் என்னு மூவகையோரும் ஒத்தலால் எல்லாருமென்றார். பின்னுஞ் சொல்லியது அதனை உறுதிசெய்தற்கு.

'இல்லாரை' என்றது எல்லாகலனு முடையராயிருப்பினும் பொரு ளில்லாவிடில் போற்றப்படலின்றிப் புறக்கணிக்கப்படலால் இல்லார் எனப் பட்டார். 'இல்லானை இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய்வேண் டாள்' என்றார் கல்வழியாசிரியராகிய பின்னோரும். 'எல்லாரும்' என்றது இன்பதன்பங்களை ஒக்க அனுபவிக்கும் மனைவியும் பெற்றெடுத்ததாயும் வேண்டாதபோது அனைவரும் வேண்டாது வெறுப்பர். 'செல்வர்' என்றது இக்கு மனைலமின்மை முதலியன பல தீக்குக்கிடமாயிருப்பினும் செல்வ முடையவர்களாயிருப்பார். அவர்கள் 'எல்லாரும்' என்றது பகைவர், கண்பர், கொதுமலர் என்னும் மூவகையினர். 'உயரச்செய்வர்' என்பது அவர்தம்மை உயர்த்தித் தம்மைத் தாழ்த்தி கிற்றல். 'எல்லாரும் செய்வர் சிறப்பு' என்ற மீட்டும் கூறியது பொருளின்தன்மை யித்தகைத்து என்பதனை உறுதி செய்தற் பொருட்டேயாம். (2)

பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

(பரி-உரை) பொருள் என்னும் பொய்யா விளக்கம் - பொருளென்ற ல்லாராலுஞ் சிறப்பிக்கப்படும் ஈந்தா விளக்கு, எண்ணிய தேயத்தச் சென்று இருள் அறுக்கும்-தன்னைச் செய்தவர்க்கு அவர் கினைத்த தேயத்தச் சென்று பகையென்னு மிருளைக் கெடுக்கும் எ-று.

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய் வருதல் பற்றிப் பாய்யா விளக்கமென்றும், ஏனை விளக்கோடு இதனிடை வேற்றுமை தான்ற எண்ணிய தேயத்தச் சென்றென்றுங் கூறினர். எகதேசவுருவகம். வை மூன்றுபாட்டாலும் பொருளது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) பொருளென்னும்-பொருளென்ற (எல்லாராலுஞ்) சிறப்பிக்கப் டும், பொய்யாவிளக்கம்-ஈந்தாவிளக்கானது, (தன்னைச் சம்பாதித்தவர்க்கு) ண்ணிய-(அவர்) கினைத்த, தேயத்து-தேசத்தில், சென்று-போய், இருள்-கையென்னு) மிருளை, அறுக்கும்-கெடுக்கும் எ-று.

(க - ரை) பொருளென்னும் விளக்கானது பகையென்னுமிருளைக் கடுக்கும் என்பதாம்.

(வி-ரை) பொருள் எல்லார்க்கும் எந்நாளும் அவசியம் வேண்டுவதாய் ருதல்பற்றி பொய்யா விளக்கமென்றும், மற்ற விளக்கோடு இதனிடத்து வற்றுமைதோன்ற எண்ணிய தேயத்தச் சென்றென்றும் சொல்லினர். கதேசவுருவகம். [இவை மூன்றுபாட்டாலும் பொருளது சிறப்புச் சால்லப்பட்டது.]

பொய்யா-பொய்க்காத; யாவர்க்கும் எப்பொழுதும் இன்றியமையாததாய் ருதல் காரணம்பற்றி பொய்பா என்றார். 'விளக்கம்' என்றது ஒரிடத்தி ருந்து எல்லும் ஒளிதருவதாயினும் எண்ணியதேயஞ்செல்வது கூடாமை தல்பற்றி இதனிடை வேற்றுமை தோன்றபாற எண்ணியதேயஞ் சென்று ன்றார். 'பொருளாகிய விளக்கம் இருளறுக்கும்' என்றது எகதேச உருவகம். வளது எய்த இருதலையும் (அறமும் இன்பமும்) எய்தும். காலடியார்: ற்று. எண்ணியதேயஞ்சென்று பகையாகிய இருளைப் போக்குதல் பொரு ன்னும் விளக்கிற்கின்றி ஏனைவிளக்கின்மையே இக்குள்ள வேறுபாடாம்.

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்.

(பரி-உரை) திறன் அறிந்த நீதி இன்றி வந்த பொருள் - செய்யுந் தத்தினையறிந்த அரசன் கொடுக்கோன்மையிலனாக வனதாயபொருள், றன் ஈனும் இன்பமும் ஈனும்-அவனுக்கு அறத்தையுங்கொடுக்கும், ன்பத்தையுங்கொடுக்கும் எ-று.

செய்யுந்திறம்-தான் பொருள் செய்தற்குரிய நெறி. இலனாகவென்பத ற்றியெனத் திரிந்தகின்றது. செங்கோலனென்று புகழப்படுதலானும் வுட்பூசை தானங்களாற் பயனெய்தலானும் அறனீனுமென்றும்,

கெடுக்கால கின்ற தைக்கப்படுதலான் இன்பமுமீனுமென்றுங் கூறினர். அதனான் அத்திறத்தானீட்டுக வென்பதாம்.

(ப-ரை) திறனறிந்த - (சம்பாதிக்குஞ்) திறத்தை அறிந்து, நீதிவழி (அரசன்) கொடுக்கோன்மையிலனாக, வந்தபொருள் - கிடைத்தபொருள், (அவனுக்கு) அறன் - அறத்தையும், ஈனும் - கொடுக்கும், இன்பமும் இன்பத்தையும், ஈனும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) குற்றமில்லாத வந்த பொருளானது தருமத்தையும் இன்பத்தையுந்தரும் என்பதாம்.

(வி-ரை) திறம் சம்பாதித்தற்கு உரியவழி. செங்கோலனென்று புகழப்படுதலாலும், கடவுட்பூசை தானங்களாலே பயன் அடைதலாலும், அறனீனுமென்றும், கெடுக்காலமிருந்து அனுபவிக்கப்படுதலால் இன்பமும் ஈனுமென்றும் சொல்லினர். ஆதலால் அத்திறத்தாற் சம்பாதிக்கவென்பதாம்.

'திறன்' என்றது தேடுதற்குரிய பலவழி; மக்கள் கலிவுறுவண்ணம் மன்னனுயிர்த்தே மலைதலைபுலகம் என்றவாறு. அன்புசெய்து மகிழ்வித்துப் பொருள் பெறுதல். பகைவர்ச் செறலால் வரும் பொருள் முதலிய பொருள் வரும்வழி. 'நீதி' என்றது தெரிதலறி ஆட்சிசெய்தல். 'இன்றி' என்றது இல்லாதவனுக. 'அறன் ஈனும்' என்பது தெரிதலரு ஆட்சி. * பார் புளிப்பினும், பகலிருளினும், கால்வேததெரிதிரியினும், நிரியாற்சுற்றமொடு முழுதுசேண்விளக்கி நடுக்கின்றி நிற்றல்போலப் புகழ்பெறுதல். கடவுட்பூசை தானங்களாற் பயன் எய்தல். 'இன்பமும் ஈனும்' என்றது கெடுக்காலத்து அனுபவிக்கப்படல். அதனால்-அறத்தையும் இன்பத்தையும் தருதலால். (4)

5 அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்.

(பரி-உரை) அருளொடும் அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம்-தான் குடிகண்மாட்டுச் செய்யும் அருளோடும் அவர் தம்மாட்டுச்செய்யும் அன்போடுங்கூடி வாராதபொருளீட்டத்தை, புல்லார் புரளவிடல் - தான் பொருந்தாது கழியவிடுக எ-று.

அவற்றோடு கூடிவருதலாவது ஆறிலொன்றாய்வருதல். அவ்வாறு வரும் பொருளீட்டம் பசுமட்கலத்தணீர்போலச் செய்தானையுஞ் சொண்டிறத்தலின் அதனைப் புல்லாதென்றெழியாத புரளவிட லென்றுங் கூறினர்.

(ப-ரை) அருளொடும்-(தாம் குடிகளிடத்துச் செய்யும்) கருணையோடும் அன்பொடும் - (அவர் தம்மிடத்துச் செய்யும்) அன்போடும், வாரா - (கூடி) வாராத, பொருளாக்கம் - பொருட் சம்பாத்தியத்தை, புல்லார் - (தான்) பொருந்தாராகி, புரளவிடல்-நீங்கவிடக்கடவர் எ-று.

* புறநானூறு.

(க-ரை) அருனோடு மன்போடும் வாராத பொருனை யரசர் நீக்கக்கடவர் ன்பதாம்.

(வி-ரை) அவைகளோடு கூடிவருதலாவது: ஆறிலொன்றாய் வருதல். ப்படிக்கு வாராதபொருள் பச்சை மண்பாண்டத்து நீர்போல் சம்பாதித் வனையும் கொண்டு இறத்தலால் அதனை புல்லாரென்றவனவிலே றத்தாமற் புரளவிடலென்றும் சொல்லினர்.

'அருளொடும் அன்பொடும் வாராப்பொருள்' என்றது அரசன் குடிகள் ாட்டுவைக்கும் அருளாலும் குடிகள் அரசனிடத்தில் செலுத்தும் ன்பினாலும் வரும் பொருள். இதனால் அரசன் அருள்செய்யவும் குடிகள் ன்புசெய்தற்கும் உரியவர். 'அருள்' என்றது தொடர்பின்றி யாவரிடத்தும் செய்வதாகிய கருணை. இது உயர்ந்தோர்மாட்டுரியது. 'அன்பு' என்றது தொடர்புடையாரிடத்து காரணம்பற்றிக்கொள்ளுதல். இது தாழ்ந்தோர் ாட்டுள்ள நேயம். 'அவற்றோடு' என்றது அருளோடும் அன்போடும். கூடி ருதல்-ஆறிலொன்றாய் வருதல். அவ்வாறு அருளோடு மன்போடுங்கூடி ஆறிலொன்றாக அருளைச் செலுத்தி யன்பினால் வாராத பொருளீட்டம் சுமட்பாண்டநீர் பாண்டமுமுடைத்து நீரும் இல்லாதுபோதல்போல செய்தானையும் கொண்டு இறத்தலினால் அரசர் அதனைப் பொருத்தாராகி க்க விட்டுவிடுவர். 'புல்லார்' என்றது அடையார். 'புரளவிடல்' என்றது ன்னைவிட்டு நீக்கவிடல். 'செய்தானையுங்கொண்டு இறத்தல்' என்றது ன்னைத் தேடிய அரசரோடு அப்பொருளும் அழியும். (5)

உறுபொருளு மூல்கு பொருளுந்தன் னென்னுர்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

(பரி உரை) உறுபொருளும் - உடையாரின்மையின் தானே வந்தற்ற பொருளும், உல்கு பொருளும் சுங்கமாகிய பொருளும், தன் ஒன்னுர்த் தெற பொருளும்-தன் பகைவரைத் திறையாகக்கொள்ளும் பொருளும், வேந்தன் பொருள்-அரசனுக்குரிய பொருள்கள் எ-று.

உறபொருள்-வைத்தா ரிறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கட் கிடந்த ன் கண்டெடுத்ததனையும், தாயத்தார் பெறுதலுமாம். சுங்கம்-கலத்தினுங் லினும்வரும் பண்டங்கட்கு இறையாயது. தெறபொருள் - தெறுதலான் ரும் பொருளென விரியும். ஆறிலொன்றெழியவும் உரியன கூறியவாறு. வை மூன்றுபாட்டானும் அஃது ஈட்டு நெறி கூறப்பட்டது.

(ப-ரை) உறபொருளும் - (உடையவர் இல்லாமையால் தானே வந்தி) டைத்தபொருளும், உல்குபொருளும்-சுங்கமாகிய பொருளும், தன்னென் ர் - தன்பகைவரை, தெறபொருளும் - வென்று (திறையாக்கொள்ளும்) பொருளும், வேந்தன்பொருள்-அரசனுக்குரிய பொருள்கள் எ-று.

(க ரை) உடையரில்லாப்பொருளும், சுங்கப்பொருளும், பகைவரை வன்ற திறைகொண்டபொருளு மரசன் பொருள்களாம் என்பதாம்.

(வி-மை) உறபொருள்-வைத்தவரிறந்துபோக நெடுங்காலம் நிலத்திற் கிடந்து பின் கண்டெடுத்ததமாம். சுங்கம்-மரக்கலத்திலும் பண்டியிலும் வரும் பண்டங்களுக்கு வாங்கும் வரி. தெறபொருள் - தெறுதலால்வரும் பொருளென விரியும். ஆறிலொன்றல்லாமலும் உரியவை சொல்லியபடி. [இவை மூன்றுபாட்டாலும் அது சம்பாதிக்கும் வழி சொல்லப்பட்டது.]

'உறபொருள்' என்றது உடையவரில்லாது பூமியில் கிடைத்தபொருள்; உரிமையுடையாரை யல்லாச் செல்வம். 'உல்கு' என்றது சுங்கம்; நீர்வை; கடல்வழியிலும் (மரக்கலத்திலும்) தரைவழியிலும் வருகிற பொருள்களுக்குத் தீர்வை விதித்தல். 'நிறை' என்றது பகைவரை பொருது கென்று கப்பமாகக் கொள்ளல். 'தெறபொருள்' என்றது தெறுதலாலாகிய பொருள் எனவிரியும். 'ஒன்னார்' இது ஒன்றுதவர் (தன்னைச் சாராதவர்) பகைவர் என்பதாம். 'ஆறிலொன்றொழியன' என்றது மக்கள் செலுத்துகின்ற ஆறிலொரு பங்கு நீங்க மற்ற வழிகளான்வரும் பொருள் கூறப்பட்டது. (6)

அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியா லுண்டு.

(பரி-உரை) அன்பு ஈன் அருள் என்னும் குழவி-அன்பினுலீனப்பட்ட அருளென்னுங் குழவி, பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு. பொருளென்று உயர்த்துச் சொல்லப்படுஞ் செல்வத்தையுடைய செவிலியான் வளரும் எ-று.

தொடர்பு பற்றுதே வருத்தமுற்றூர்மேற் செல்வதாய அருள் தொடர்பு பற்றிச் செல்லுமன்பு முதிர்ந்தழி உளதாவதாகலின் அதனை அன்பு ஈன் குழவியென்றும், அது வறியார்மேற் செல்வது அவ்வறுமை களையவல்லார்க் காதலிற் பொருளே அதற்குச் செவிலியென்றும், அஃது உலகிற் செவிலியர் போலாது தானே யெல்லாப்பொருளுமுதவி வளர்த்தலிற் செல்வச்செவிலி யென்றுங் கூறினார்.

(ப-மை) அன்பீன் - அன்பினுல் ஈன்றிடப்பட்ட, அருளென்னுஞ் அருளென்கின்ற, குழவி-குழந்தையானது, பொருளென்னும்-பொருளென்று உயர்த்திச் சொல்லப்படும், செல்வம் - செல்வத்தையுடைய, செவிலியாற் செவிலித்தாயால், உண்டு-வளரும் எ-று.

(க-மை) அன்பா லீன்றிடப்பட்ட அருளென்னுங் குழந்தையானது பொருளென்னுஞ் செவிலித்தாயால் வளரும் என்பதாம்.

(வி-மை) சம்பந்தம் பற்றுமல் வருத்தமடைந்தவரிடத்துச் செல்வதாகிய அருள் சம்பந்தம்பற்றிச் செல்லும் அன்பு மிகுந்தவிடத்து உண்டாவதாகலால் அதனை அன்பீன்குழவியென்றும், அது வறியவர்மேற் செல்வது அவ்வறுமை களையவல்ல பொருளுடையவர்க்கு மதலால் பொருளே அதற்குச்

செவிலியென்றும், அது உலகிற் செவிலிபோலல்லாமல் தானே எல்லாப் பொருளும் உதவி வளர்த்தலால் செல்வச்செவிலியென்றும் சொல்லினர்.

தொடர்புடையார் மாட்டு நிகழும் அன்பு முதிர்ந்தழி தொடர்பில்லாதே ருத்தமுற்றார் யாவர்பாலினுஞ் செல்வதற்கேதுவாதலால் 'அன்பிலனீனப் ட்ட அருள்' என்றார். இதனால் அன்பு இருந்தவழியே அருள் உண்டாகு மென்றும் அன்பின்றி அருளில்லை என்பதும் பெற்றும். அது-அவ்வருள். றிவர்மேற்செல்வது அவ்வறுமையைப் போக்கவல்ல நிறைமுடையார்க்கே ரித்தாதலின் பொருளைச் செவிலி என்றார். பொருளென்னும் செவிலி. பொருளாகியசெவிலி எனப்படும். மீட்டும் அப்பொருட்செல்வி எனைய லகிலுள்ள செவிலித்தாயர்போலல்லாது தானே எவ்வகைப்பொருளையு தவி வளர்த்தலினால் 'செல்வச்செவிலி' என்றுங் கூறினர். அன்பு ல்லறத்தாருக்குரியது. அருள் துறவறத்தாருக்குரியது. 'செவிலி' என்றது வர்க்குந்தாய்; இச்செவிலியின் மகளே தோழியெனப்படுவாள். (7)

குன்றேறி யானைப்போர் கண்டற்றுற் றன்கைத்தொ
றுண்டாகச் செய்வான் வினை. [ன்

(பரி-உரை) தன் கைத்து உண்டாக ஒன்று செய்வான் வினை - தன் கையதாகிய பொருளுண்டாக ஒருவினையை யெடுத்துக்கொண்டான் தனைச்செய்தல், குன்று ஏறி யானைப்போர் கண்டற்று-ஒருவன் மலைமே லறிநின்று யானைப்போரைக் கண்டா லொக்கும் எ-று.

ஒன்றென்பது வினையாதல் செய்வா னென்றதனாற் பெற்றும். குன்றேறியான் அச்சமும் வருத்தமுமின்றி நிலத்திடை யானையும் யானையும் பொருபோரைத் தான் இனிதிருந்து காணுமதுபோலக், கைத்தண்டாக வினையை மேற்கொண்டானும் அச்சமும் வருத்தமுமின்றி வல்லாரை வலித் தான் இனிதிருந்து முடிக்குமென்பதாம்.

(ப-ரை) தன்கைத்து-தன்கையதாகிய பொருள், உண்டாக-உண்டாக இருக்க, ஒன்று-ஒருதொழிலை, செய்வான்-செய்பவனது, வினை - செய்கை யானது, குன்றேறி - (ஒருவன்) மலைமேல் ஏறி நின்று, யானைப்போர்-யானைகளதுபோரை, கண்டற்று-கண்டதனை யொக்கும் எ-று.

(க-ரை) தன் பொருளிருக்க வொரு தொழிலைச் செய்பவன் செய்கை யானது மலைமேலேறி யானைகள் போரைக் கண்டதொக்கும் என்பதாம்.

(வி-ரை) எப்படிக் குன்றேறினவன் அச்சமும் வருத்தமும் இல்லாமல் நிலில் யானையும் யானையும் செய்கின்ற சண்டையைத் தான் இனிதிருந்து ண்பானே அப்படிக் கைப்பொருளுண்டாக ஒருதொழிலை மேற்கொண்ட னும் அச்சமும் வருத்தமும் இல்லாமல் வல்லவரை வலித் தான் இனி ருந்து முடிப்பானென்பதாம்.

'தன்கையத' என்றது தன்கையிலுள்ளபொருள். 'ஒன்று' என்றது தான் எடுத்துக்கொண்டசெயல். 'ருன்றேறியானைப்போர் கண்டற்று' என்றது மலையின்மேலேறினவன் அச்சமும் வருத்தமுமின்றி பூமியின்கண்ணுள்ள யானையையும் அதுசெய்கின்ற போரையும் தானினிது கோக்குதல்போல் கையில் பொருளதாக ஒருதொழிலை மேற்கொண்டவனும் அச்சமும் வருத்தமுமின்றி தொழிலில் வல்லவரை யேவித் தானினிதிருந்து முடிப்பான் என்பதாம். 'யானைப்போர்' என்றது அரசர் பொழுதுபோக்கல் நிமித்தம் செய்விக்கும் போர்களில் யானைப்போர் ஒன்றும்.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு மெஃகதனிற் கூரிய தில்.

(பரி-உரை) பொருளைச் செய்க - தமக்கு ஒன்றுண்டாகக் கருதுவார் பொருளை யுண்டாக்குக, செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு-தம் பகைவர் தருக்கினை யறுக்கும் படைக்கலம் அதுவாம்; அதனிற் கூரியது இல். அதற்கு அதுபோலக் கூரிய படைக்கலம் பிறிதில்லை எ-று.

அதுவான், அதற்கென்பன அவாய்நிலையான் வந்தன. பொருளைச் செய்பவே பெரும்படையும் கட்பு முடையராவர்; ஆகவே பகைவர் தருக்கொழிக்க தாமே யடங்குவரென்பார் செறுநர் செருக்கறுக்கு மெஃகென்றும், ஏனை யெஃகுகள் அதுபோல அருவப்பொருளை யறுக்க மாட்டாமையின் அதனிற்கூரிய தில்லென்றுங் கூறினார்.

(ப-ரை) (தமக்கு ஒன்று உண்டாக நினைப்பவர்) பொருள-திரவியத்தை செய்க - சம்பாதிக்கக்கடவர், (அப்பொருள்) செறுநர் - (தம்) பகைவரது செருக்கு-தருக்கை, அறுக்கும் - கெடுக்கும், எஃகு - ஆயுதமாம், (அதற்கு) அதனின்-அதுபோல், கூரியது-கூரிய ஆயுதம், இல்-(வேறு) இல்லை எ-று.

(க-ரை) திரவியத்தைச் சம்பாதிக்கக் கடவர் அத்திரவியம் பகைவர் செருக்கைக் கெடுக்கு மாயுதமாம். அதுபோல் கூரிய ஆயுதம் வேறில்லை என்பதாம்.

(வி-ரை) பொருளைச் சம்பாதித்தவர் பெருமையும் கட்பு முடையவராலே பகைவர் செருக்கு நீக்கித் தாமே அடக்குவாரென்பதற்கு செறுக்கறுக்கு மெஃகென்றும், மற்றையாயுதங்கள் அதுபோல் அருவப் பொருளை அறுக்க மாட்டாமையால், அதனிற் கூரியதில்லை யென்றும் சொல்லினார்.

'பொருளைச்செய்க' என்றது தமக்குப் பெருமை புகழ் முதலியன உண்டாதலைக் கருதுவோர் பொருளைத் தேடுக. பொருள் சேரவே பெரும்படையும் மற்றவர் கட்புமுடையராவர். இவை உண்டாக பகைவர் தருக்கொழிந்து வலியொடுங்குவர். ஆதலால் அப்பொருள் செறுநர் செருக்கறுக்கும் வேலாயிற்று. கண்ணால் காணமுடியாத அருவப்பொருளை ஏனைய எஃகுகள்

றக்கமாட்டாமையினால் 'அதனிற் கூரியதில்லை' என்றார். தருக்கு-தன்னை யர்த்தியென்னும் செருக்கு. அதுவாம் - அப்பொருளாம். படைக்கலம்- றைசெய்யத்தகும் கலம். 'அதற்கு அதுபோல' என்றது பகைவர் செருக்கிற்கு ச்செல்வம்போல. 'அவாய்நிலை' என்றது அவாவி (வேண்டி) நிற்குநிலை. ஒஃகு' என்பது அதுவாம் என்பதனையும், 'அதனின்' என்பது அதற்கு ன்பதனையும் வேண்டிநின்றன. அருவப்பொருள்-உருவமற்ற பொருள். (9)

ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு ளேனை யிரண்டு மொருங்கு.

(பரி-உரை) ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு-தெரியான் வரும் பொருளை இறப்ப மிகப் படைத்தார்க்கு, ஏனை இரண்டும் ஒருங்கு எண் பொருள்-மற்றை அறனும் இன்பமும் ஒருங்கே யெளிய பொருள்களாம் எ-று.

காழ்த்தல் - முதிர்தல். பயன் கொடுத்தல்லது போகாமையின் ஒண் பொருளென்றும், ஏனை யிரண்டும் அதன் வினைவாகலிற்றாமே யொரு காலத்திலே யுளவா மென்பார் எண்பொரு ளென்றுங் கூறினார். இவை ன்குபாட்டானும் அதனான் வரும் பயன் கூறப்பட்டது.

(பத) ஒண்பொருள் - கல்லவழியால்வரும் பொருளை, காழ்ப்ப-மிக திகமாக, இயற்றியார்க்கு - உண்டாக்கினவர்க்கு, ஏனையிரண்டும் - மற்றை றமும் இன்பமும், ஒருங்கு - ஒருசேர, எண்பொருள் - எளியபொருள் ளாம் எ-று.

(க-ரை) கல்லவழியால் வரும் பொருளை மிகவுமுண்டாக்கினவர்க்குத் ருமமுமின்பமும் மெளியனவாம் என்பதாம்.

(வி-ரை) காழ்த்தல்-முதிர்தல். அப்பொருள் பயன் கொடுத்தல்லது பாகாமையால் ஒண்பொருளென்றும், மற்றை யிரண்டும் அதன்வினை காலால் தாமே ஒருகாலத்திலே உண்டாகு மென்பதற்கு எண்பொரு னன்றும் சொல்லினார். [இவை நான்கு பாட்டாலும் அதன்பயன் சொல்லப் ட்டது.]

ஒண்பொருள்-ஒளியையுடையபொருள். பொருளுக்கு ஒளியாவது கல் தியாற் றேடப்படல். அவ்வகைப்பொருளுக்குச் சிறப்பு அறம் இன்பம் றும் பேற்றைத்தருவதாம். காழ்ப்ப-முதிர (மிக) ஒண்பொருளைத்தேடிய ர்க்கு அப்பொருளே ஏனை யிரண்டையும் தருதலால் 'எண்பொருள்' என்றார். ப்பொருளின் வினைவால் மற்றவையிரண்டும் தாமேயமையும் ஆதலின் ளிபொருள்' என்றார். அல்லது எண்ணுதற்குரிய பொருளென்றுமாம். றத்தையும் அதனாலின்பத்தையும் ஒருசேரத் தருதலால் 'ஒருங்கு' என்றார்

76-ம் அதி - பொருள்செயல்வகை - முற்றிற்று.

77-ம் அதிகாரம்—படைமாட்சி

(பரி-உரை) இனி அப்பொருளினுளுவதாய் வெல்வதாய படை இரண்டதிகாரத்தாற் கூறவான் றொடங்கி, முதற்கண் படைமாட்சி கூறகின்றார். அஃதாவது, படையினது கன்மை.

(உரை) இனிப்பொருளினுல் ஆவதாய் வெல்வதாகிய படையை இரண்டதிகாரத்தாலே சொல்லத் தொடங்கி முதலிலே படைமாட்சி சொல்லுகிறார்; அஃதாவது: சேனையினது கன்மையாம். அதிகார முறைமையும் இதனாலே விளக்கும்.

உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

(பரி-உரை) உறப்பு அமைந்த ஊறு அஞ்சா வெல்படை - யானை முதலிய நான்கு உறப்பாலும் நிறைந்து போரின்கண் ஊறபடுதற்கு அஞ்சாது நின்று பகையை வெல்வதாய் படை, வேந்தன் வெறக்கையுள் எல்லாம் தலை-அரசன் செல்வங்களெல்லாவற்றினுந் தலையாய செல்வம் என்றவாறு.

சண்டுப் படையென்றது அங்கான்கன் றொகுதியை. ஊறு அஞ்சியவழி வேறல் கூடாமையின் ஊறஞ்சாவென்றும், ஒழிந்த அங்கங்கட்கும் அரசனுக்கும் காவலாகலின் வெறுக்கையுளெல்லாந் தலையென்றுங் கூறினர்.

(ப-ரை) உறப்பு-(யானை முதலாகிய) காலுறப்புக்களாலும், அமைந்து நிறைந்து, ஊறு-(போரிலே) காயப்படுதற்கு, அஞ்சா - அஞ்சாது நின்று வெல்-(பகையை) வெல்வதாகிய, படை-சேனையானது, வேந்தன்-அரசனது வெறுக்கையுளெல்லாம் - செல்வங்களிலெல்லாம், தலை - முதன்மையாகிய (செல்வமாம்) எ-று.

(க-ரை) போரிலஞ்சாது நின்று வெல்லும்படையானது அரசன் செல்வம் யாவற்றிலும் தலைமை என்பதாம்.

(வி-ரை) இவ்விடத்திலே படையென்றது அங்கான்கின் கூட்டத்தை; சேனை ஊறஞ்சியவிடத்தே வெல்லுதல் கூடாமையால் ஊறஞ்சாவென்றும், அச்சேனை ஒழிந்த அங்கங்களுக்கும் அரசனுக்கும் காவலாகலால் வெறுக்கையுளெல்லாந் தலையென்றும் சொல்லினர்.

'உறப்பு' என்றது தேர் கரி பரி காலாள் என்ற நான்கு உறப்புக்களையும் தலைமைபற்றி யானைமுதலிய நான்கு என்றார், 'ஊறு' என்பது போரில் உறுதல் (காயம்படுதல்.) படை ஊறஞ்சியபோழ்து பகைவெல்லுதல் கூடாமையின் 'ஊறஞ்சா' என்றார். ஊறஞ்சாப் படையே வெல்படை; தன்மைபற்றி 'வெல்படை' என்றார். 'வெறுக்கை' என்றது செல்வம். 'ஒழிந்த அங்கங்கள்' என்றது நாடு தாண் பொருள் அமைச்சு கட்பு. இவ்வா

புக்களின்றி ஒழிந்த அங்கங்களும் அரசன் காவலும் பயன்படாமைபற்றியும் அவைகளுக்கு இவ்வுறுப்புக்களே காவலாகலாலும் 'வெறுக்கையுளெல்லாந் தலை' என்றுங் கூறினார். (1)

உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத் தொல்படைக் கல்லா லரிது.

(பரி-உரை) தொலைவிடத்து உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண்-தான் சிறிதாயவழியும் அரசற்குப் போரின்கண் உலைவு வந்தால் தன்மே லுறுவதற்கு அஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை, தொல் படைக் கல்லால் அரிது - அவன் முன்னோரைத் தொடங்கிவரும் படைக்கல்லது உளதாகாது எ-று.

இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை யென்னும் அறுவகைப்படையுள்ளுஞ் சிறப்புடையது மூலப்படையாகலான், அதனை அரசன் * "வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுங், கொல் களிறுமாவுங் கொடுத்தளிக்க" என்பது குறிப்பெச்சம். இப்படையை படநூலார் மௌலம் என்ப.

(ப-ரை) தொலைவிடத்து - (தான்) சிறிதாகியவிடத்தும், உலைவிடத்து-அரசனுக்குப் போரினிடத்து) அழிவுவந்தால், ஊறு-(தன்மேலே) காயம் படுதற்கு, அஞ்சா-அஞ்சாது நின்று தாங்கும், வன்கண்-சௌரியமானது, தொல்படைக்கல்லால் - அவன் முன்னோரைத் தொடங்கிவருஞ் சேனைக் கல்லாமல், அரிது-உண்டாகாது எ-று,

(க-ரை) அஞ்சாது நின்று தாங்குஞ் சௌரியமானது அரசன் பழைய சேனைக்கல்லது மற்றவர்க்கில்லை என்பதாம்.

(வி-ரை) இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, கைப்படை, எனப்படுகிற அறுவகைப்படைகளுள்ளுஞ் சிறப்புடையது மூலப்படையாதல் அரசன் அதற்கு வேண்டுமவைகளைக் கொடுத்து அதைக் காப்பாற்றுக வென்பது கருத்து.

'தொலைவிடம்' என்றது சிறிதாகியவிடம். தொலைதல் - (அழிதல்) அழித்தல். 'தொலைவிடத்தும்' இழிவு சிறப்பும்மை தொக்கது. 'ஊறஞ்சா' என்றது' காயம் உறுதற்கு அஞ்சாத. 'வன்கண்' என்றது அஞ்சாத்தன்மை. 'தொல்படை' என்றது பழமையானபடை (மூலப்படை). படை பலதிறப்படும்: கூலிகொடுத்துக் கொள்ளும்படை, நாட்டின்கண்ணுள்ளபடை, காட்டி நின்றும் வரும்படை, உறவினரும் துணைவரும் விடுக்கும்படை, துணையாக வரும்படை, பகைப்படை. 'மூலப்படை' என்பது அரசனது முன்னோரைத்

* வெண்பாமாலை: தும்பைப்படலம்-2.

தொடக்கிவரும் அன்புடைமையும் தான் சிறிதாகியவிடத்தும் வலியுடை மையும் உடைய படை. இஃது இராமாயணத்திலும் இந்திரசித்தொழிந்த பின் இராவணன் பகைவரையழிக்குமாறு மூலபலச்சேனையை விடுத்தான் என்பதனாலும் அறியலாம். குறிப்பெச்சம்-பொருள்குறிப்பாக அறியுமாறு குறைத்த கிற்குஞ் சொல்.

ஒலித்தக்கா லென்னு மூவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

(பரி-உரை) எலிப்பகை உவரி ஒலித்தக்கால் என்னும் - எலியாய பகை நிரண்டு கடல்போல வொலித்தால் காகத்திற்கு என்ன ஏதம் வரும்?, காகம் உயிர்ப்பக் கெடும்-அக்காகம் உயிர்த்தகணையானே அதுதானே கெடும் எ-று.

உவமைச்சொல் தொக்குகின்றது. இத்தொழி லுவமத்தாற் றிரிபு பெற்றும். வீரரல்லாதார் பலர் நிரண்டார்த்தால் அதற்கு வீரனஞ்சி அவன் வெளர்த்த கணையானே அவர் தாக்கெடுவரென்பது தோன்ற நின்ற மையின், இது பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம். வீரரல்லாதார் பலரினும் வீரனொருவனே யாடல் கன்றென்பதாம். [இவை மூன்று பாட்டானும் முறையே அரசனுக்குப் படை எனையங்கங்களுட் சிறந்தென்பதூஉம், அது தன்னுள்ளும் மூலப்படை சிறந்தென்பதூஉம், அது தன்னுள்ளும் வீரன் சிறந்தானென்பதூஉம் கூறப்பட்டன.

(ப-ரை) எலிப்பகை - எலிகளாகிய பகைநிரண்டு, உவரி - கடல்போல் ஒலித்தக்கால் - இரைத்தால், என்னும் - (பாம்புக்கு) என்ன துன்பம்வரும் காகம்-அப்பாம்பு, உயிர்ப்ப - மூச்செறிந்தவளவிலே, கெடும் - (அதுதானே) கெடும் எ-று.

(க-ரை) எலிகள்கூடிச்சப்திதத்தால் பாம்புக்கென்ன துன்பம்வரும் பாம்பு மூச்சவிட்டவளவில் எலிகளழியும் என்பதாம்.

(வி-ரை) இத்தொழி லுவமத்தால் நிரட்சிபெற்றும். வீரரல்லாதார் பலர் நிரண்டு ஆர்த்தால் அதற்கு வீரன் அஞ்சான் அவன் எழும்பின வளவிலே அவர் கெடுவரென்பது தோன்றநின்றமையால் இது பிறிதுமொழி லணி. வீரரல்லாதார் பலரினும் வீரனொருவனே ஆளுதல் நல்லதென்பதாம். [இவை மூன்றுபாட்டானும் முறையே அரசனுக்குப் படையானது மந்திரயங்கங்களுட் சிறந்தென்பதும், அதனுள்ளும் மூலப்படை சிறந்தென்பதும், அதனுள்ளும் வீரன் சிறந்தவனென்பதும் சொல்லப்பட்டன.]

'உவரிபோல' இதில் போலவென்னும் உவமவுருபிடைச்சொல் தொக்கு நின்றது. 'ஒலித்தக்கால்' இதில் ஒலித்தல் தொழிலுவமை எலிப்பகைபோல் காகத்திற்குக் கேடில்லை. ஆனால் 'காகமுயிர்ப்ப அவை கெடும்' என்பது வீரரல்லாத பலர் கிளர்ந்தவளவில் வீரனவனஞ்சான். அவ்வீரன் சென்ற வளவில் அவர் கெடுவர் என்றது தோன்ற நிற்கின்றது. பிறிதுமொழிதலோட்டென்பாருமுளர். இதனால் அரசன் வீரனை ஒருவனே ஆளுதல் சிறப்புடைத்து என்பது விளங்கும்.

அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

(பரி-உரை) அழிவு இன்ற - போரின்கண் கெடுதலின்றி, அறைபோகாகி - பகைவராற் சோறக்கப்படாததாய், வழிவந்த வன்கணதுவே படை - தான்றதொட்டு வந்த தறுகண்மையை யுடையதே அரசனுக்குப் படையாவது எ-று.

அழிவின்மையான் மறமானங்களுடைமையும், அறைபோகாமையான் அரசன்மாட்டு அன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன்கண்மை: "கன்னின்று னெய்தை கணவன் கனப்பட்டான், முன்னின்று மொய்ய ரந்தா ரென்னையர் - பின்னின்ற, கைபோய்க் கழுமுதைப்பக் காவலன்மே லாடி, யெய்போற் பிடர்த்தானென்னேறை." என்பதனானறிக. குற்றியலுகரத்தின் முன்னர் உடம்படுமெய் விகாரத்தான் வந்தது. இது வருகின்ற பாட்டுள்ளும் ஒக்கும்.

(ப-உரை) படை - (அரசனுக்குப்) படையாவது, அழிவின்ற - (போரிடத்தைக்) கெடுதலில்லாமல், அறைபோகாதாகி-(பகைவராலே) சோறக்கப்படாததாகி, வழிவந்த - பழமைமையாக வந்த, வன்கணதுவே - செவ்வியதே எ-று.

(க-உரை) போரிற்கெடுதலில்லாமல் பழமையாகவந்த செவ்வியமுடைத்த யரசனுக்குப் படையாம் என்பதாம்.

(வி-உரை) அழிவில்லாமையால் மறமானங்களுடைமையும், அறைபோகாமையால் அரசனிடத்து அன்புடைமையும் பெறப்பட்டன.

'அழிவின்மை' என்றது மறமும் (வீரம்) மானமும் கெடாது கொண்டுத்தல். 'மானம்' என்றது நிலையிற்றாழாமையும் குறைவுற்றவிடத்து உயிர் ழாமையுமாம். 'அறைபோகாமை' என்றது சோறக்கப்படாமை பகைவரால் வஞ்சிக்கப்படாதிருத்தல். 'வழிவந்தவன்கண்மை' என்றது போரின்ணஞ்சாமை. அதாவது போர்முகத்தில் அஞ்சாது பொருதலும் தனர்த்தத்து உயிர்விடலுமாகிய அஞ்சாமை. (4)

கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

(பரி-உரை) கூற்ற உடன்ற மேல்வரினும்-கூற்றவன்றானே வெகுண்டு வந்தாலும், கூடி எதிர்நிற்கும் ஆற்றல் அதனே படை - கொஞ்சொத்தார்கின்ற தாங்கும் ஆற்றலையுடையதே படையாவது எ-று.

† மருங்கில் கூற்றாகலின், உம்மை சிறப்பும்மை. மிகப் பலர் கெஞ்சுதற்குக் காரணம் அரசன்மேலன்பு. ஆற்றல்-மனவலி.

---

* வெண்பாமாலை: வாகைப்படலம்-22.

† "மருங்கில் கூற்றத் தருந்தொழில் சாயா" புறநானூறு-3.

(ப ரை) படை-சேனையானது, கூற்று-கூற்றுவன், உடன்று-கோபித்து மேல்வரினும் - தன்மேல்வரினும், கூடி - மனமொத்து, எதிர்நிற்கும்-எதிர்நின்றுதாங்கும், ஆற்றலதுவே-மனவலிமையையுடையதே எ-று.

(க ரை) இயமன் கோபித்து மேலிட்டுவரினு மெதிர்நின்று தாங்கும் வலிமையுடையதே படையாம் என்பதாம்.

(வி-ரை) மிகப்பலர் மனமொத்தற்குக் காரணம் அரசன்மேலன்பு உம்மை சிறப்பும்மை.

'கூற்று' என்றது உடலையும் உயிரையும் கூறுசெய்யும் தொழிலுடையை பற்றி இப்பெயராயிற்று. மருந்து இல் கூற்று - மருந்தாகிய தடை பரிகாரம். * 'மேல்வருதல்' என்றது தன்மேற் பொரவருதல். 'கூடி' என்றது மனமொத்து; வீரர் பலர் மனமும் ஒத்து. காரணம் அரசன்மேற்கொண்டுள்ள அன்பே. 'ஆற்றல்' என்பது மனவலியாம். (5)

மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

(பரி-உரை) மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம் என நான்கே தறுகண்மையும் மானமும் முன் வீரராயினார் சென்ற நன்னெறிக்கட் சேறலும் அரசனால் தேறப்படுதலும் என இந்நான்கு குணமுமே, படைக்கு ஏமம்-படைக்கு அரணாவது எ-று.

இவற்றான் முறையே பகைவரைக் கடிதிற் கொன்றுநிற்றலும், அரசனுக்குத் தாழ்வு வாராமற்காத்தலும், † "அழியுநர்புறக்கொடையயில்வளோச்சா" மை முதலியவும், அறைபோகாமையுமாகிய செய்கைகள் பெறப்பட்டன. இச்செய்கையார்க்குப் பகைவர் நணுகாராகலின், வேறாக்கு வேண்டாவென்பதாம்.

(ப-ரை) மறம்-சௌரியமும், மானம்-மானமும், மாண்ட - மாட்சிமைப்பட்ட, வழிச்செலவு-(முன்வீரர்சென்ற) நல்வழியிலேசெல்லுதலும், தேற்றம் அரசனால் நம்பப்படுதலும், எனநான்கே - என இந்நான்கு குணமுமே படைக்கு-சேனைக்கு, ஏமம்-அரணாம் எ-று.

(க-ரை) சௌரியமும், மானமும், நல்வழிச்செல்கையும் நம்பிக்கையும் ஆகிய விந்நாற்குணமுஞ் சேனைக்கரணாகும் என்பதாம்.

(வி-ரை) இவைகளால் முறையே பகைவரைச் சீக்கிரத்திலே கொன்றுநிற்கையும், அரசனுக்குத் தாழ்வுவாராமற் காத்தலும், தோற்பவர்மேற்படையெறியாமை முதலியவும், அறைபோகாமையும், ஆகிய செய்கைகள் பெறப்பட்டன. இச்செய்கையார்க்குப் பகைவர் நெருங்கமாட்டாராகலின் வேறாக்கு வேண்டாமென்பதாம்.

* புறநானூறு மருந்தில் கூற்றம்-31; மருந்தில்கணிச்சி-42.

† வெண்பாமாலை, வஞ்சிப்படலம்-20.

'மாண்டவழிச்செலவு' என்றது முன்னோராகிய வீரர் சென்றவழிச் செல்வது. அன்றியும் முன்னோர் சென்ற பெருமைபொருந்திய (மாண்ட-பெருமைபொருந்திய) வழிச்செல்லல். 'தேற்றம்' என்றது நம்பிக்கை. இவற்றான்' என்பது மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம். பகைவரை விரைவிற்கொன்று நிற்றல் மறம். அரசனுக்குத் தாழ்வு வாராமற் காத்தல் மானம். புறங்காட்டியோடுவார்மீது படையெடாமை மாண்ட வழிச்செலவு. அறைபோகாமை-தேற்றம். இச்செய்கைகளாய பகைவர் அணுகமாட்டாதலின் வேறரண் வேண்டாமென்பதாம். (6)

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த போர்தாங்குந் தன்மை யறிந்து.

(பரி உரை) தலைவந்த போர் தாங்கும் தன்மை அறிந்து - மாற்றாரால் குக்கப்பட்டுத் தன்மேல் வந்த படையின் போரை விலக்கும் வகுப்பறிந்து குத்துக்கொண்டு, தார் தாங்கிச் செல்வது தானை-அவர் தூசியைத் தன்மேல் ாராமற்றடுத்துத் தான் அதன்மேற் செல்வதே படையாவது எ-று.

படைவகுப்பாவது வியூகம்; அஃது எழுவகையுறுப்பிற்றாய், வகையால் ான்காய், விரியான் முப்பதாம். † உறுப்பு ஏழாவன - உரமுதற் கோடி றாயின. ‡ வகை நான்காவன-தண்டம், மண்டலம், அசங்கதம், போகம் ன விவை. § விரி முப்பதாவன-தண்டவிரி பதினேழும், மண்டலவிரி ரண்டும், அசங்கதவிரி ஆறும், போகவிரி ஐந்துமென விவை. இவற்றின் பயர்களும் இலக்கணமும் ஈண்டு உரைப்பிற் பெருகும். அவையெல்லாம் -நூல்களுட் கண்டு கொள்க. இவை நான்குபாட்டானும் படையினதிலக் னங் கூறப்பட்டது.

---

* இதனை நன்கு விளக்கும்: கான்படு தீயிற் கலவார்தன் மேல்வரினுந், ன்படை தீண்டாத் தறுகண்ணன்-வான்படர்தல், கண்ணியபி னன்றிக் த்தார் மறந்தொலைத, லெண்ணியபின் போக்குமோ வெஃகு.

† உறுப்பு ஏழாவன: உரம், இறக்கை யிரண்டு, மத்தியம், பிரதிக்கிரகம், ிஷ்டம், கோடி எனவிவை.

‡ தண்டம்: சேனையைக் குறுக்காக நிறுத்துவது. மண்டலம்: பாம்பு ட்டலமிடுவதுபோலச் சேனையை நிறுத்துவது. அசங்கதம்: சேனையை று வேறாக நிறுத்துவது. போகம்: சதுரங்கசேனையை ஒன்றுக்குப் பின் றாக நிறுத்துவது.

§ தண்டவிரி பதினேழாவன: பிரதரம், திருடகம், சியாவஸ்தம், குக்ஷி, திட்டம், சுப்பிரதிட்டம், சியேநம், விஜயம், சஞ்சயம், விசாலம், நிஜயம், , ஸ்தூணா, கர்ணம் சமூமுகம், ரதாசியம், வலயம் எனவிவை. மண்டல இரண்டாவன: சர்வதோபத்திரம் துர்ஜயம் எனவிவை. அசங்கதவிரி வன: அர்த்தசந்திரம், உத்தானம், சிருங்காடம், கர்க்கடக சிருங்காரி, பாரி, கோதிகா என விவை. போகவிரி ஐந்தாவன: கோமூத்திரிகை, கம், சஞ்சாரி, சகடம், பந்தம் எனவிவை. இவற்றைக் காமந்தகம் று நூலுட் கண்டுகொள்க.

(ப-ரை) தானை - சேனையாவது, தலைவந்த - (பகைவராலே வருக்கப் பட்டுத்) தன்மேல்வந்த, போர் - (படையின்) போரை, தாங்குந்தன்மை விலக்கும் வகுப்பை, அறிந்த-அறிந்த (வகுத்துக்கொண்டு), தார்-(அவரது) தானைப்படையை, தாக்கி - (தன்மேல் வராமல்) தடுத்து, செல்வது - (தான் அதன்மேலே) செல்வதே எ-று.

(க-ரை) தன்மேல்வந்த போரை விலக்கும் வகுப்பை யறிந்து பகைவர் தானைப்படையைத் தடுத்துச் செல்வதே படையாம் என்பதாம்.

(வி-ரை) படைவகுப்பாவது வியூகம்; அது எழுவகை உறுப்புக்களை யுடையதாய் வகையால் நான்காய் விரியால் மூப்பதாம். இவைகளின்பெயரும் இலக்கணங்களும் இக்கேசொன்னூல் விரியும். அவையெல்லாம் வடநூல்களுட் கண்டுகொள்க. [இவை நான்குபாட்டாலும் படையது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'தார்' என்றது கொடிதாங்கிச் செல்லும் முதற்படை. 'தாங்குந்தன்மை' என்றது விலக்குந்தன்மை. 'அறிந்த' என்றது வழியறிந்த. 'படைவகுப்பு' என்றது படைகளை முறைப்படுத்தி வகுத்தல். இதுவே வியூகம். உறுப்பு எழு-ஆம், இறக்கை யிரண்டு மத்திபம், பிரதிக்கிரகம், பிரிஷ்டம், கோடி வகை நான்கு. தண்டம் - சேனையைக் குறுக்காக நிறுத்தல். 'மண்டலம்' என்றது பாம்பு மண்டலமிடுவதுபோல நிறுத்தல். 'அசங்கதம்' என்றது சேனையை வேற்று வேறாக நிறுத்தல். 'போகம்' என்றது சேனைநான்கையும் ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்தல். 'வடநூல்' என்றது காமாந்தகமுதலியன தொடர்ந்து எழுதிக்கொள்க. (7)

அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்.

(பரி-உரை) தானை-தானை, அடற்றகையும் ஆற்றலும் இல் எனினும் பகைமேல் தான் சென்ற அடுக் தறுகண்மையும் அது தன்மேல் வந்துப் பொறுக்கும் ஆற்றலும் இல்லையாயினும், படைத்தகையால் பாடு பெறும் தன் தோற்றப் பொலிவானே பெருமை யெய்தும் எ-று.

இல்லெனினு மெனவே, அவற்றது இன்றியமையாமை பெறப்பட்டது. படைத்தகை யென்றது ஒருபெயர் மாத்திரமாய் நின்றது. தோற்றப்பொலிவாவது - அலங்கரிக்கப்பட்ட தேர், யானை, குதிரைகளுடனும்; பதாகை, கொடி, குடை, பல்லியம், காகள முதலியவற்றுடனும் அணிந்த தோற்றம் அழகு. பாடு-கண்டவளவிலே பகைவர் அஞ்சும் பெருமை.

(ப-ரை) தானை - சேனை, அடற்றகையும்-(பகைமேலே தான் சென்று போர்செய்யுஞ் சௌரியமும், ஆற்றலும்-(அது தன்மேல் வந்தால்) பொறுக்கும் வலிமையும், இல்லெனினும்-இல்லையாயினும், படைத்தகையால்-தன் தோற்றப் பொலிவாலே, பாடு-பெருமையை, பெறும்-அடையும் எ-று.

(க-ரை) சேனையானது சென்றியற்றும் வலிமையுமில்லையாயினும் பொலிவினாலே பெருமையை யடையும் என்பதாம்.

(வி - ரை) இல்லெனினு மெனவே அவசியம் அவைகள் வேண்டுமென்பது பெறப்பட்டது. தோற்றப் பொலிவாவது-அலங்கரிக்கப்பட்ட தேர், யானை, குதிரைகளுடனும், பதாகை, கொடி, குடை, பலவாத்தியம், காகளமுதலானவைகளுடனும் அணிந்து தோன்றும் அழகு. பாடு-கண்டவளவிலே பகைவாஞ்சும் பெருமை.

'அடல்தகை' என்றது பகைமேற்சென்று அடுதலாகிய தகைமை பெருமை) 'அது' என்றது அப்பகை. 'அடுதல்' என்றது பொருதல் வில்லெனினும் எனவே அவற்றைக்கொண்டிருத்தல் வேண்டும் என்ற அவசியம் பெறப்பட்டது. 'படைத்தகை' என்றது படையினது தோற்றமாகிய பெருமை. 'தோற்றப் பொலிவு' என்றது அலங்கரிக்கப்பட்ட தேர் யானை குதிரைகளுடனும் பதாகை கொடி குடை பல்லிசை முதலியவற்றுடனும் அணிந்து தோன்றுமழகு. 'பதாகை' என்றது பெருங்கொடி. 'காகளம்' என்றது எக்காளம் (ஊதுகுழல்). 'முதலிய' என்றது பம்பை முழப்பட்டம் போன்றன. 'பாடு' என்றது கண்டவளவில் பகைவரைப் படுத்தல் செய்யும் பெருமை. (8)

சிறுமையுஞ் செல்லாத் தனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை.

(பரி-உரை) சிறுமையும் செல்லாத் தனியும் வறுமையும் இல்லாயின்-தான் தேய்ந்து சிறிதாகலும் மனத்தினின்று நீங்காத வெறுப்பும் கல்குரவும் இல்லையாயின், படை வெல்லும்-படை பகையை வெல்லும் எ-று.

விட்டுப்போதலும் நின்றது கல்கூர்தலும் அரசன் பொருள் கொடாமையின் வருவன. செல்லாத்தனியாவது-மகளிரை வெளவல், இளிவரவாயினவற்றின் முதலியவற்றான் வருவது. இவை புள்வழி அவன்மாட்டு அன்பின்றி வெறுப்பொராமையின் இல்லாயின் வெல்லுமென்றார்.

(ப-ரை) சிறுமையும்-(தான்தேய்ந்து) சிறிதாகலும், செல்லாத் தனியும்-(அத்தினின்று) நீங்காத வெறுப்பும், வறுமையும் - தாரித்திரியமும், இலாயின் - (தனக்கு) இல்லையாயின், படை - சேனையானது, வெல்லும்-(பகையை) வெல்லும் எ-று.

(க-ரை) சிறிதாகிலும் வெறுப்பும் வறுமையும் இல்லாவிடின் சேனையானது பகையை வெல்லும் என்பதாம்.

(வி-ரை) விட்டுப் போதலும் வறுமை யடைதலும், அரசன் பொருள் கொடாமையால் வருவன. நீங்காவெறுப்பு மகளிரை வெளவ இழிவாயினவற்றால் முதலானவைகளால் வருவது. இவை புள்ளவிடத்து அவனிடத்து அன்பில்லாமல் உற்றுப்போர் செய்யாமையின் இல்லாயின் வெல்லுமென்றார்.

'சிறமை' என்றது சேனைகாடோறும் சம்பளங்கொடாமையால் நீக்கும், நீக்கவே சேனை சிறிதாகும். 'நின்றது' என்றது எஞ்சிநின்றதாகை. 'தனி' என்றது வெறப்பு. 'இளிவரவு' என்றது இகழ்தற்குரியனவாகிய சூது, கள் ளருந்தல், பொய்யுரைத்தல் முதலியன. 'முதலியன' என்றது ஆறிலொன் றைக் மேல்வாங்குதல், சுங்கவரிமிகுதி, உரியதைக்குறைத்தல் முதலியன. 'இலையுன்வழி' என்றது சிறுமையும் செல்லாத்தனியும் வறுமையும் உள்ள விடத்து. இலையுன்னவிடத்து அவ்வரசனிடத்தன்பின்றி உற்றுப் போர் செய்யாமையினாலே 'இல்லாயின் வெல்லும்' என்றார். (5)

நிலைமக்கள் சால வுடைத்தெனி னுந்தா னை
தலைமக்க ளில்வழி யில்.

(பரி - உரை) நிலைமக்கள் சால உடைத்து எனினும் - போரின்கண் நிலையுடைய வீரரை மிகவுடைத்தேயாயினும், தலைமக்கள் இல்வழித் தானை இல்-தனக்குத் தலைவராகிய வீரரில்லாதவழித் தானை நில்லாது எ-று.

படைத்தலைவர் நிலையுடையரன்றிப் போவாராயிற் காண்போ ரில்லெனப் பொராது தானும் போமென்பார், தலைமக்க ளில்வழி யில்லென்றார். இது மூன்று பாட்டானும் முறையே படைத்தகை யின்மையானும், அரசன் கொடைத் தாழ்வுகளானும், தலைவரின்மையானும், தாழ்வு கூறப்பட்டது.

(ப-ரை) நிலைமக்கள் - (போரினிடத்து) நிலையையுடைய வீரரை, சால வுடைத்தெனினும்-மிகவுடையதாயினும், தலைமக்கள்-(தனக்குத) தலைவராகிய வீரர், இல்வழி-இல்லாவிடத்து, தானை-சேனை, இல்-நில்லாது எ-று.

(க-ரை) சேனையானது வீரரை மிக வுடைத்தாயினும் படைத்தலை நில்லாவிடத்துப் போரினில்லாது என்பதாம்.

(வி - ரை) சேனைபதிகள் நிலையுடையரல்லாமல் போவாராயிற் காண்போ ரில்லெனப் போர்செய்யாமல் தானும் போமென்றற்கு தலைவர் களில் வழியில்லென்றார். [இவை மூன்று பாட்டாலும் முறையே படை தகைமையாலும், அரசன் கொடைத்தாழ்வுகளாலும், தலைவரில்லாமையாலும் தாழ்வு சொல்லப்பட்டது.]

'நிலைமக்கள்' என்றது போர்க்களத்தில் மறக்கொண்டு நிலத்தி பொரும் வீரர். 'தலைமக்கள்' என்றது எவ்வாற்றானும் முதன்மைபெற்று விளக்கும் தண்டத்தலைவர். 'தானையும்' என்றது சேனையும். 'கொடைத் தாழ்வு' என்றது வீரர்களுக்குப் பொருள்கொடுத்தல் பரிசளித்தல். இவை முதலியன அவ்வப்பொழுது செய்த வீரர்களைத் தனராதபடி ஊக்குந் பண்டை மரபு. தலைமக்களைக் காணுந்தோறும் அவர்கள் மேலுமேலு ஊக்கமுடையவராவர். அஃதின்றி ஊக்கமுங்கெடும். அதனால் 'தலைமக் ளில்வழி யில்' என்றார்.

77-ம் அதி - படைமாட்சி - முற்றிற்று.

78-ம் அதிகாரம்—படைச்செருக்கு

(பரி-உரை) அஃதாவது: அப்படையது மறமிகுதி. அதிகாரமுறை மயும் இதனானே விளங்கும்.

(உரை) அஃதாவது: அச்சேனையினது மறமிகுதியாம். அதிகாரமுறை மயும் இதனாலே விளங்கும்.

என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை முன்னின்று கன்னின் றவர்.

(பரி-உரை) தெவ்விர் என் ஐ முன் நின்று கல் நின்றவர் பலர்-பகைவீர் ன்றினூங்கு என்றலைவன் எதிர் போரேற்று நின்று அவன் வேல்வாய் ழ்ந்து பின் கல்லின்கண்ணே நின்ற வீரர் பலர்; என் ஐ முன் நில்லன்மின்- ிர் அதன்கணின்றி நும்முடற்கண் நிற்றல் வேண்டின், என் தலைவனெதிர் ாரேற்று நிற்றலை யொழிமின் எ-று.

என்னையெனத் தன்னொடு தொடர்புபடுத்துக் கூறினமையின் அவன் ல்வாய் வீழ்தல் பெற்றாம். * கல்-நடுகல். ‡ "நம்பன் சிலைவாய் நடக்குங் ன மிச்சிலில்லா, லம்பொன் முடிப்பூ ணரசும்மிலை" எனப் பதுமுகன் ினாற்போல ஒருவீரன் தன் மறம் அரசன்மேல்வைத்துக் கூறியவாறு. ப்பாட்டு நெடுமொழிவஞ்சி.

(ப-ரை) தெவ்விர்-பகைவரே, என்-என்னுடைய, ஐமுன்-தலைவனெதிர், று - (போரேற்று) நின்று, கன்னின்றவர் - (அவன் வேல்பட்டுவீழ்ந்து) ினிடத்தேனின்றவீரர், பலர் - பலராவர், (நீர் அதனிடத்து நில்லாமல் முடலிலே நிற்கையை வேண்டில்) என்-என்னுடைய, ஐமுன் - தலைவ திர், நில்லன்மின்-(போரேற்று) நில்லாதேயுங்கள் எ-று.

(க-ரை) பகைவரே யென்றலைவனெதிர் நின்று வெல்லாது இறந்து ாக நாட்டப்பட்டவர் பலராவர் நீங்களுயிரோடிருக்க விரும்பினால் என் வர்முன் னில்லாதீர்கள் என்பதாம்.

(வி-ரை) கல் போரில் வீரர் இறந்தவிடத்து அவருருவஞ்செய்து படுதல். ஒரு வீரன் தன்மறம் அரசன்மேல் வைத்துச் சொல்லியபடி. பாட்டு நெடுமொழிவஞ்சி.]

'என் ஐ' என்றது தலைவனைத் தன்னுடன்படுத்திக் கூறுமுகத்தால் ீரனதுதிறம் பெறப்படும். பகைவன் வேல்வாய் வீழ்தல் பெற்றாம். 'கல்' நடுதலும், அக்கல்லில் வீரனை நடுதலுமென இருவகைப்படும்.

நடுகல்லிலக்கணம், தொல்: பொருள், புறம், 5-ம் சூத்திரததுட் காண்க.
வகசிந்தாமணி: காந்தருவதத்தையாரிலம்பகம்-317.
நெடுமொழிவஞ்சியென்பது-ஒன்னாதார் படைகெழுமித் தன்னாண்மை துரைத்தன்று. வெண்பாமாலை: வஞ்சிப்படலம்-12.

அவருருவஞ்செய்த கடுதல். 'பதமுகன்' என்றது சிவகனுடைய நேசன். 'கெடுமொழிவஞ்சி' என்றது பகைவர்தஞ் சேனையைக்கிட்டித் தன்னுடை யுண்மைத்தன்மையை உயர்த்திச் சொல்லியது. "இன்னரெனவேண்டா வென்னுடைதிர் சிறி, முன்னர் வருக முரணகலு - மன்னர், பருத்: படையமருட் பல்லார் புகழ, விருத்தா யடைகுறுகார் விண்."

கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த வினிது.

(பரி-உரை) கான முயல் எய்த அம்பினில் - கானத்தின்கண் ஓ முயலைப் பிழையாமலெய்த அம்பை யேந்தலினும், யானை பிழைத்த வே எந்தல் இனிது - வெள்ளிடை கின்ற யானையை யெறிந்து பிழைத்த வே யேந்துதல் கன்று எ-று.

கானமுயலென்றதனால் வெள்ளிடைகின்றவென்பதும், பிழைத்தவேல் தனாற் பிழையாமலென்பதும், முயற்குத்தக எய்தவென்றதனால் யா குத்தக எறிதலும் வருவிக்கப்பட்டன. இது மாற்றாசன் படையொ பொருதான் ஓர் வீரன் அது புறங்கொடுத்ததாக காணிப் பின்னவன் றன்மே செல்லலுற்றானை கூற்று.

(ப-ரை) கானம்-காட்டில் ஓடுகிற, முயல் - முயலை, எய்த - (தப்பாமல் எய்த, அம்பினில்-அம்பை எந்துதலேப்பார்க்கிலும், யானை-(வெளிநிலத்தில் கின்ற) யானையை, (எறிந்து) பிழைத்தவேல்-தப்பியவேலை, எந்தல்-தாங்குதல் இனிது-கன்று எ-று.

(க-ரை) முயலையெய்த அம்பை யேந்துதலேப்பார்க்கிலும் யானை யெய்து தப்பிய அம்பை யேந்துதல் கல்லது என்பதாம்.

(வி-ரை) கானமுய லென்றதனால் வெளிநிலமென்பதும், பிழை வேலென்றதனால் தப்பாமலென்பதும், முயற்குத்தக எய்தவென்றதனா யானைக்குத்தக எறிதலும் வருவிக்கப்பட்டன. இது பகையரசனது சே யோடு சண்டைசெய்து அது தோற்றுப் பின்னிடக்கண்டு காணிப் பின் வரசன்மேற் செல்லலுற்ற ஒரு வீரனது சொல்லு.

'வெள்ளிடை' என்றது வெளிநிலம். 'பிழைத்தவேல்' என்றது குறிதவ வேல். 'புறங்கொடுத்தல்' என்றது முதுகொடுத்தோடல். முயலெய்தப்ப எய்த வேலினும் யானையெய்து தவறியவேல் சிறப்புடைத்து அ யேந்தலும் பெருமையுடைத்து என்பது போர்செய்த வீரனொருவன் புறங்கொடுத்ததாக காணிப் பின் அப்பகைமேற் சென்றானை கூற்றும்.

பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
ஈராண்மை மற்றது னெஃகு.

(பரி-உரை) தறுகண் பேராண்மை என்ப-பகைவர்மேற் கண்ணோட செய்யும் மறத்தை னலோர் மிக்க ஆண்டன்மை யென்று சொல்லு

ற உற்றக்கால் ஊராண்மை அதன் எஃகு (என்ப)-அவர்க்கு ஒருதாழ்வு
ததாயிற் கண்ணோடி அது தீர்த்துக் கோடற்பொருட்டு ஊராண்மை
ய்தலை நூலோர் அதற்குக் கூர்மையென்று சொல்லுவர் எ-று.

என்பவென்பது பின்னுமியைந்தது. ஊராண்மை-உபகாரியாந்தன்மை.
ஃதாவது, இலங்கையர்வேந்தன் போரிடைத் தன்றானை முழுதும்படத்
யனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியர் இறை மேற்
ல்லாது இன்றுபோய் நாளை நின்றானையோடு வாவென விட்டாற்
ால்வது. இவை யிரண்டு பாட்டுந் தழிஞ்சி.

(பரை) தறுகண் - (பகைவரிடத்தே முகங்கொடாமற்செய்கிற,) மறம்-
ாண்மை மிகுந்த வாண்மையாகும், ஒன்றுற்றக்கால் - (அவர்க்கு) ஒரு
வுவந்ததாயின் (அது தீர்த்துக்கொள்ளுதற்பொருட்டு,) ஊராண்மை-
ங்கொடுத்து) உபகாரியாந்தன்மை, அதன் - அதற்கு, எஃகு - கூர்மை
ும், என்ப-என்று (நூலோர்) சொல்லுவார் எ-று.

(க-ரை) பகைவரைவெல்லு மறமானது மிகுந்த வாண்மையாகு மப்பகை
குத் தாழ்வுவந்த காலத்துதவுதல் கூர்மையாகும் என்பதாம்.

(வி-ரை) மற்று அசை, இவை இரண்டு பாட்டும் * தழிஞ்சி.

'ஆண்மை' என்றது ஆளுந்தன்மை. 'கண்ணோடாது' என்றது தாட்சண்
ங்கொள்ளாமல். 'அவர்க்கு' என்றது அப்பகைவர்க்கு. 'அது' என்றது
ாழ்வு. 'அதற்கு' என்றது பேராண்மைக்கு. 'என்ப' என்பதை எஃகு
தனோடுங் கூட்டுக. 'ஊராண்மை' என்றது உபகாரஞ்செய்யுந்தன்மை.
பாவுனக் கமைந்தன மாதே மறைந்த, பூளையாயின கண்டனை யின்று
ப் போர்க்கு நாளைவாவென நல்கின னாகிளங் கமுகின், வாளைதாவுறு
லை நாடுடை வள்ளல்' என்ற இராமனுடைய கூற்று மெய்ப்பிக்கும்.
சி 'தழிச்சுதல் தழிஞ்சியாயிற்று' என்பர் நச்சினார்க்கினியர். புறப்
ன் வெண்பாமாலை "அழிகுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக்,
ா கண்மை காதலித் துரைத்தன்று" என்றாம். (3)

கவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மய்வேல் பறியா நகும்.

பரி-உரை) கைமேல் களிற்றொடு போக்கி வருபவன் - தன்கைப்
ாய வேலைத் தன்மேல் வந்த களிற்றோடு போக்கி வருகின்ற
க்கு வேல் நாடித் திரிவான், மெய் வேல் பறியா நகும் - தன்
ர்கண் நின்ற வேலைக்கண்டு பறித்து மகிழும் எ-று.

ளிற்றொடு போக்கல்-களிற்றினது உயிரைக் கொடுபோமாறு விடுதல்.
தேடியது எய்தலான். இதனுட்களிற்றையல்லது எறியானென்ப

தழிஞ்சியாவது தோற்றவர்மேலே ஆயுதஞ் செலுத்தாத மிகுமறம்
து.

தாகும், னெமிகுதியான். வேலிடை போந்தது அறிந்திலனென்பதாகும் பின்னும் போர்மேல் விருப்பினனென்பதாகும் பெறப்பட்டன. * தழிலாட்டு.

(ப-ரை) கைவேல் - (தன்) கைப்படையாகிய வேலை, களிற்றொடு (தன்மேல்வந்த) யானையோடு, போக்கி-எறிந்துவிட்டு, வருபவன்-(வருகின்ற யானைக்கு வேல்தெடித்) திரிபவன், மெய்வேல் - தன்மார்பிலிருந்த வேலை (கண்டு), பறியா-பிடுங்கி, நகும்-மகிழ்வான் எ-று.

(க-ரை) கைவேலை யானைமேலெறிந்து வருபவன் தன் மெய்வேலைப் பிடுங்கி மகிழ்வான் என்பதாம்.

(வி-ரை) களிற்றொடுபோக்கல் - களிற்றினுயிரைக் கொண்டுபோம்படி விடுதல். மகிழ்ச்சி தெடியதை அடைதலால். இதனுள் களிற்றையல்லது எறியா னென்பதும், கோபமிகுதியால் வேல் மார்பிலே புதைந்ததை அறிந்தி னென்பதும், பின்னும் போர்மேல் விரும்பினனென்பதும் பெறப்பட்டன. [*இதை தழிலாட்டு.]

'களிற்றொடுபோக்கல்' என்றது யானையினது உயிரைக் கொண்டு போகும்படி வேலை யெறிதல். 'களிறு' என்றது மதக்கொண்டு களித்திருக்கும் ஆண்யானை. 'வருபவன்' என்றது மற்றும் யானைக்குவேல் தெடித்திரிந்து வருபவன். 'நகும்' என்றது மகிழ்வன். இங்கு மகிழ்ச்சிதெடிய வேல் மெய்யி னிற்பெறலால் வந்தது. இதனுள் யானையல்லது சிறியதொன்றை யெறியான் என்பதும், கொண்டுள்ள கோபத்தின் மிகுதியினால் வேல் மார்பில் பினந்து புதைந்தது என்பதை அறியான் என்பதும் பின்னும் வேலைத்தெடித்திரிவான் என்பது மீட்டும் அவனது போர்விருப்பத்தையும் உணர்த்தியதாயிற்று. தழிலாட்டு "வளங் கழுமிய படையிரிய, வுளங் கழிந்த வேல் பறித்தோச் சின்ற" பகைவர் சேனைகெட தன் மார்பகத்திருந்த வேலைப் பறித்தெறிந்த புறப்பொருள் வெண்பாமாலை தும்பைப்படலம்-16. "மொய்யகத்த மன்னர் முரணினி யென்னுங்கொல், கையகத்துக் கொண்டான் புல்லிடலை-வெய்ய விடுசுடர் சிந்திவிசை யகலம் போழ்ந்த, படுசுட ரெஃகம் பறித்த." (4)

விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி னேட்டன்றே வன்க ணவர்க்கு.

(பரி-உரை) விழித்த கண்-பகைவரை வெகுண்டு நோக்கிய கண், வேல் கொண்டு எறிய அழித்த இமைப்பின்-அவர் வேலைக்கொண்டெறிய அஃது ஆற்றாத அந்நோக்கையழித்து இமைக்குமாயின், வன்கணவர்க்கு ஓட்டு அன்றே-அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம் எ-று.

அவ்வெகுளி நோக்க மீட்டலும் போரின்கண் மீட்சியெனக்கருதி அதனுஞ் செய்யாரென்பதாம்.

---

* தழிலாட்டு-பகைவர் ஓட மார்பிற் புதைந்து கிடந்த வாயுதம் பிடுங்கி எறிவது.

(ப-ரை) விழித்தகண் - (பகைவரைக்) கோபித்துப் பார்த்தகண், கேள் கொண்டு-(அவர்) கேலிக்கொண்டு, எறிய - எறிய, அழித்த - (அதற்குப் பொறுமல் அப்பார்வையை) அழித்த, இமைப்பின்-இமைக்குமாயின், (அவ் விமைத்தல்) வன்கணவர்க்கு-வீரர்க்கு, ஓட்டன்றே-தோற்பல்லவா எ-று.

(க-ரை) கோபித்துப்பார்த்த கண் கேல்கொண்டெறிய இமைக்கு மாயின் தோற்பல்லவா என்பதாம்.

(வி-ரை) அக்கோபப் பார்வை இமைத்தலும் போரினிடத்து இகழ்ச்சி யென்ற மனத்து அதுவும் செய்யாரென்பதாம்.

'அவர்' என்றது பகைவர். 'அஃது' என்றது கேலியெறிந்த செயலுக்கு. 'ஓட்டு' என்றது புறங்கொடுத்தல். 'வன்கண்' என்றது மறம்பொருந்தியகண். வீரர்க்கு வீரப்பார்வையையொழித்து கண்ணிமைத்தல் புறங்காட்டுதலாகும். அன்று, ஓ இரண்டெதிர்மறை ஒருடம்பாட்டுப் பொருளைத் தந்தது. (5)

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாள யெடுத்து.

(பரி உரை) தன் நாளை எடுத்து-தனக்குச் சென்ற நாள்களை யெடுத் தெண்ணி, விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும்-அவற்றுள் விழுப்புண்படாத நாள்களையெல்லாம் பயன்படாத கழிந்தநாளுள்ளே வைக்கும் வீரன் எ-று.

விழுப்புண்-முகத்திலும் மார்பிலும் பட்ட புண். போர் பெற்றிருக்கவும் அது பெறுத நாள்களோடுங் கூட்டுமென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் ஊறஞ்சாமை கூறப்பட்டது.

(ப-ரை) (வீரனெனவன்) தன்னாளை-தனக்குக்கழிந்தநினக்களை, எடுத்து-எடுத்தெண்ணி, (அந்நினங்களுள்) விழுப்புண் - பெருங்காயங்கள், படாத நாளெல்லாம்-படாதநினக்களையெல்லாம், வழுக்கினுள்-பயன்படாத கழிந்த நினக்களுள்ளே, வைக்கும்-வைப்பான் எ-று.

(க-ரை) சுத்தவீரனெனவன் போர்செய்யப்படாதநாளை வீணெனென் றெண்ணுவான் என்பதாம்.

(வி-ரை) விழுப்புண் - முகத்திலும் மார்பிலும் பட்டபுண். போர் பெற்றிருக்கவும் அது பெறுத நாள்களோடு கூட்டுவனென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் ஊறஞ்சாமை சொல்லப்பட்டன.]

'விழுப்புண்' என்றது வீரத்துடன் பகையெதிர்ப்பதனால் உரை முகத்திலும் மார்பிலும் உண்டாகும் புண்ணுளதால் 'விழுப்புண்' என்றார். 'வழுக்கினுள்' என்றது புண்படாதநாள். 'அதுபெறுதநாள்' என்றது அப் புண்படாதநாள். 'ஊற' என்றது (உறுதல்) மெய்யில் பகைவர் படையாலுண் டாகும் காயம். புண்படாமை வீரர்க்குச் சிறப்பன்றுதலின் விழுப்புண் படாநாளை 'போர்பெறு' நாளென்றுமுள்ளும். (6)

சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

(பரி-உரை) சுழலும் இசை வேண்டி வேண்டா உயிரார்-துறக்கத்தைத் தம்மொடு செல்லாது வையத்தைச் சூழ்ந்து நிற்கும் புகழை வேண்டி உயிர் வாழ்தலே வேண்டாத வீரர், கழல் யாப்புக் காரிகை நீர்த்து-கழல் கட்டுதல் அலங்கார நீர்மையையுடைத்து எ-று.

வையத்தைச் சூழுமெனவே, அதன் பெருமை பெற்றும். செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. சூழ்தல் - அகத்திடல். துறக்கமும் புகழும் எளிதின் எய்தலாகலின், ஆபரணமாவது அதுவேயென்பதாம்.

(ப-ரை) சுழலும்-(பூமியைச் சூழ்ந்துநிற்கும்), இசை-புகழை, வேண்டி-விரும்பி, வேண்டாவுயிரார்-உயிர்வாழ்தலே வேண்டாத வீரர், கழல்-வீரக் கழலே, யாப்பு-கட்டுதல், காரிகை நீர்த்து-அலங்காரகுணமுடையதாம் எ-று.

(க-ரை) புகழைவிரும்பி யுயிரைவிரும்பாதவர் வீரக்கழலைக் கட்டுதலவர்க்காபரணமாம் என்பதாம்.

(வி-ரை) பூமியைச் சூழுமெனவே அப்புகழின் பெருமை பெறப்பட்டது. அப்படிப்பட்ட வீரர் வானுலகமும் புகழும் எளிதிலே அடைவராகலால் ஆபரணமாவது அக்கழலேயென்பதாம்.

'சுழலும் இசை' என்றது பூமியினுள் என்றும் நிலைத்திருக்கும் இசை. 'இசை' என்றது வீரத்தாலாகிய புகழ். 'வேண்டா உயிரார்' என்றது உயிர் வாழ்க்கையில் விருப்பமில்லாதவீரர். 'யாப்பு' என்றது கட்டுதல். 'காரிகை' என்றது அழகு. 'நீர்த்து' என்றது நீர்மையினடியாகப் பிறந்த வினை. 'துறக்கம்' என்றது வீரசுவர்க்கம். புகழைவிரும்பி உயிர்வாழாதார் (உயிரைப் பொருட்படுத்தாதவீரர்) வீரருடன் பொருத போர்க்களத்தின்கண்ணே உயிர்விடுவராதலின் இவ்வுலகில் புகழையும் மறுமையில் வீரசுவர்க்கத்தையும் பெறுவர். ஆதலின் அவர்க்கு அழகாவது அவ்வீரத்தின் கழலே. (1)

உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

(பரி-உரை) உறின் உயிர் அஞ்சா மறவர் - போர்பெறிற் தம்முயிர்ப் பொருட்டு அஞ்சாத அதன் மேற்செல்லும் வீரர், இறைவன் செறினும் சீர் குன்றல் இலர் - தம்மிறைவன் அது வேண்டாவென்று முனியினும் அவ்வீரம் குன்றார் எ-று.

போர்பெற்றறியாமையின், அது பெற்றால் அரசன் தடுப்பினும் கில்லா ரென்பதாம். பிறரும் * "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" என்றும், ‡ "புட்பகைக், கேவா ஞகலிற் சாவேம் யாமென நீக்கா மறவர் வீக்குதோள் புடைப்ப" என்றற் கூறினர்.

---

* புறநானூறு-31. ‡ புறநானூறு-68.

(ப-ரை) உறின் - (போர்) பெறின், உயிர் - (தம்) முயிர்ப்பொருட்டு, அஞ்சா-அஞ்சாமல் (அதன்மேற் செல்லும்) மறவர் வீரர், இறைவன் - (தம்) மரசன், செறினும் (அது வேண்டாமென்று) கோபிக்கினும், சிர் குன்றல்-அவ்வீரமிகுதிகுறைதல், இலர்-இலராவர் எ-று.

(க-ரை) தம்முயிர்க் கஞ்சாது போர்செய்யும் வீரர் தம்மரசன் கோபிக்கினும் வீரங் குறையார் என்பதாம்.

(வி-ரை) வீரர் போர்பெற்று அறியாமையால் அது பெற்றால் அரசன் தடுப்பினும் நில்லாரென்பதாம்.

'உயிர் அஞ்சாமறவர்' என்றது உயிரைப் பெரிதாக எண்ணாது போர் மேற் செல்லும் வீரர். 'சிர்' என்றது வீரமாகிய சிறப்பு. 'அது வேண்டாம்'. என்றது போர்வேண்டாம். போரெனிற் புகலும் புனைகழன் மறவர்-(புறநானூறு-31) இதன்பொருள்: போரென்று கேட்பின் விரும்பும் அணிந்த வீரக்கழலையுடைய வீரர். இதனால் வீரர்கள் போரின்கண் மிக்க விருப்ப முடையவரென்பது பெற்றும். மண்டமர் நசையொடு கண்படை பெறூ அது (நற்றிணை 67) என்றார் பிறரும். புட்பகத்தேவனுகலிற் சாவேம்யாமென நீக்கா மறவர் புட்பகவிமானத்திற் செல்லும் தேவனுகவாதலினால் யாம் பொருத பகையெதிர்த்துச் சாவோமென்று (தம்முன் நீக்குதலில்லாத) வீரர் தமது பருத்த தோள்களைத் தட்ட; இதுமாறுக, 'புட்பகைக் கேவனுகலிற் சாவேம் யாமென நீக்கா மறவர் வீக்கு தோன்புடைப்ப' என்றுங் கூறப்படும். இதன்பொருள்: எம்மைப் புட்செய்யும் பகையிடத்து எவனுகலான் யாம் எம்மிற் பொருத மடியக்கடவேமென்று நீக்காத மறத்தையுடையதம் பூரித்த தோள்களைத்தட்ட. (8)

இழைத்த இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்.

(பரி-உரை) இழைத்தது இகவாமைச் சாவாரை-தாங் கூறின வஞ்சினந் தப்பாமற் பொருட்டுச் சென்று சாவவல்ல வீரரை, பிழைத்தது ஒறுக்கிற் பவர் யார்-அது தப்பியவாறு சொல்லி என்னுதற்குரியார் யாவர்? எ-று.

இழைத்தல் - இன்னது செய்யேனுயின் இன்னனுகுகவெனத் தான் வகுத்தல். சொல்லியென்பது அவாய்நிலையான் வந்தது. வஞ்சினமுடிப்பான் புக்கு முன்னே சாவினுந் தொலைவன்மையின், அது முடித்தாராவரெனச் சாதற்சிறப்புக் கூறியவாறு.

(ப-ரை) இழைத்தது (தாம்) சொல்லிய சபதம், இகவாமை - தப்பாமற் பொருட்டு, சாவாரை-(போய்ச்) சாகவல்லவீரரை, பிழைத்தது-(அது) தப்பிய பிதம், (சொல்லி) ஒறுக்கிற்பவர்-இகழ்தற்குரியவர், யார்-யாவர் எ-று.

(க-ரை) சபதப்படி போரிற் சாகும் வீரரை யிகழ்பவர் யார் என்பதாம்.

(வி ரை) இழைத்தல் - இன்னது செய்யேனுகில் இன்னனுகுகவெனத் தான் வருத்தல் சொல்லி யென்பது வருவிக்கப்பட்டது. சபதம் முடிக்கப் புகுந்து முன்னே இறந்தாலும் தொலவில்லாமையால் அதமுடித்தவராக வெனச் சாதற்சிறப்புச் சொல்லியபடி.

'இழைத்தல்' என்றது இன்னது செய்யேனுல் இத்தகையனுகு வெனத் தான் வருத்தக் கூறல் சபதம். 'இன்றபகலோ னிறவாமுனுன் னுரை, வென்ற களங்கொள்ளா வேலுயர்ப்பி னென்ற, மரண வியப்பாபு மடையார்மு னிற்பேன், மூணவிய மும்மூன் மொழிக்கு' என்பது புறப் பொருள் வெண்பாமாலே. பாரதபுத்தத்திலும் பதின்மூன்றுநாள் யுத்தத்தில் அருச்சுனன் சபதஞ் செய்தாற்போல்வது இக்கு கவனிக்கத் தக்கது. 'ஒறுக் கிற்பவர்' என்றது இகழ்தற்குரியவர் யார் ஒருவருமிலர் என்றபடி. 'தொலவு' என்றது தோல்வி. 'அதமுடித்தாராவர்' என்றது சபதம் முடித்தாராவர் வீரர் தாங்கள் கூறிய சபதத்தை முடிக்குமுன் இறந்தாலும் தோல்வியின்மை யினுல் அவ்வஞ்சினத்தை முடித்தவராவர் எனச் சாதற்சிறப்புக் கூறிய வாறும். (9)

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

(பரி-உரை) புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின் - தமக்குச் செய்த கன்றிகளை நினைத்து ஆண்ட அரசர் கண்கள் நீர் மல்கும்வகை போரிடைச் சாவப்பெறின், சாக்காடு இரந்து கோட்டக்கது உடைத்து - அச்சாக்காடு இரந்தாயினும் கொள்ளுந் தகுதியை யுடைத்து எ-று.

மல்குதலாகிய இடத்து நிகழ்பொருளின் றெழில் இடத்தின்மே னின்றது. நினையழி இல்லிடை கோவால் விளிவார் பழவினைப்பயனே யெய்தலின், அடுத்த வினையாற் றுறக்கமெய்துஞ் சாதலை இரந்து கோட்டக்க துடைத்தென்றார். இவை கான்குபாட்டானும் உயிரோம்பாமை கூறப்பட்டது.

(ப-ரை) (தமக்குச்செய்த கன்றிகளை நினைத்து) புரந்தார் - ஆண்ட வரசரது, கண்-கண்கள், நீர்மல்க-நீர்பெருகும்படி, சாகிற்பின் - (போரிலே) சாகப்பெறின், சாக்காடு-அச்சாவு, இரந்து - இரந்தாயினும், கோட்டக்கது கொள்ளுந்தகுதியை, உடைத்து-உடையது எ-று.

(க - ரை) வீரர்கள் அரசர் கண்கள் நீர்ததும்பப் போரிலிறந்தால் அவ் விறத்தல் கொள்ளத்தக்கது என்பதாம்.

(வி - ரை) சுற்றத்தார் அழ இல்லினிடத்து கோவினுலே சாவோர் பழவினைப்பயனை அடைதலால் அப்போதை வினையால் வானுலகத்தை அடையும் சாவை இரந்து கோட்டக்கதடைத்தென்றார். [இவை கான்கு பாட்டாலும் உயிர் காவாமை சொல்லப்பட்டது.]

'புரந்தார்' என்றது துன்பகற்றி யின்புறுத்திப் பாதுகாத்தோர். (அரசர்) 'சாதல்' என்றது போர்க்களத்தில் உயிர்விடல். 'கோட்டக்கது' என்றது கோள்தக்கது கொள்ளுதல் தக்கது. 'தக்கது உடைத்து' என்றது தகுதி யுடைத்து. 'பழவினை' என்றது முன்னைவினை. 'விளிவார்' என்றது சாவார். உறவினர் அழ இல்லிடை நோயாலிறப்பார் பழவினைப் பயனையே யடைவார். ஆதலின் முன்செய்தவினையால் வீரசுவர்க்கமடையும் சாவை யிரந்தாயினும் கொள்ளுந் தகுதியுடையது என்றார். 'உயிரோம்பாமை' என்றது வீரர்கள் தம்முயிரை விரும்பிப் பாதுகாக்க எண்ணாமை. (10)

78-ம் அதி - படைச்செருக்கு - முற்றிற்று.

79-ம் அதிகாரம்—நட்பு

(பரி-உரை) இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்து உதவுவதாய நட்பினை ஐந்ததிகாரம் விதிமுகத்தானும் பன்னிரண்டதிகாரம் எதிர்மறைமுகத்தானுங் கூறுவான் றொடங்கி, விதிமுகவதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார். அஃதாவது: இன்னதென்பதூஉம் அதிகார முறைமையும் இதனுள் விளங்கும்.

(உரை) இனி அப்படைபோல் அரசனுக்குத் தொழிலிடத்து உதவுவதாகிய நட்பை ஐந்ததிகாரத்தால் விதிமுகத்தாலும், பன்னிரண்டதிகாரத்தால் எதிர்மறைமுகத்தாலும், சொல்லத்தொடங்கி விதிமுகவதிகார மைந்தினுள்ளும் முதலிலே நட்புச் சொல்லுகின்றார். அஃதாவது: இன்னதென்பதும் அதிகாரமுறைமையும் இதனுள் விளங்கும்.

செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

(பரி-உரை) நட்பின் செயற்கரிய யா உள - நட்புப்போலச் செய்து கோடற்கு அரியபொருள்கள் யாவையுள? அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள - செய்துகொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கரிய காவலாவன யாவையுள எ-று.

நட்புச்செய்தற்காவாரைப் பெறுதலும், பெற்றாற் செய்யு முபாயமும், செய்தாற் றிரிபின்றி நிற்றலுமுதலிய அரியவாகலின் நட்பிற் செயற்கரியன வில்லையென்றும், செய்தாற் பகைவரஞ்சி வினைதொடங்காராகலின் அது போல வினை வாராமைக்கு அரிய காவலில்லையென்றுங் கூறினார். நட்புத் தான் இயற்கை செயற்கையென இருவகைப்படும். அவற்றுள் இயற்கை: பிறப்புமுறையானாயதூஉம் தேயமுறையானாயதூஉமென இருவகைப்படும். அவற்றுண் முன்னையது சுற்றமாகலின் அது சுற்றந்தழாலின் அடங்கிற்று; ஏனையது பகையிடையிட்ட தேயத்ததாகலின் அது துணைவலியென வலியறிதலுளடங்கிற்று. இனி ஈண்டுச் சொல்லப்படுவது முன்செய்த வுதவி பற்றிவருஞ் செயற்கையேயாகலின், அதன் சிறப்பு இதனாற் கூறப்பட்டது.

(பதம்) நட்பின் - நட்புப்போல், செயற்கரிய - சம்பாதித்துக்கொள்ளுதற்கு அரியபொருள்கள், யா-எவைகள், உள-இருக்கின்றன (சம்பாதித்துக் கொண்டால்) அதுபோல், வினைக்கரிய - (பகைவர்) செய்யுந்தொழிலுக்கும் (புகுதற்கு) அரிய, காப்பு-காவலானவை, யா-எவைகள், உள இருக்கின்றன.

(க-ரை) நட்பைப்போலச் சம்பாதித்தற்கரிய பொருளெவை யிருக்கின்றன என்பதாம்.

(வி-ரை) நட்புச்செய்தற்கு ஆவாரைப்பெறுதலும் பெற்றால் செய்யும் உபாயமும், செய்தால் வேறுபடாமல் நிற்றலும் முதலானவை அருமையாலால் நட்புப்போல் செயற்கரியனவில்லையென்றும், செய்தால் பகைவர் அஞ்சிப் போர்தொடங்காராதலால் அதுபோல் போர்வாராமற் காத்தற்கு அரிய காவலில்லையென்றும் சொல்லினர். நட்பு - இயற்கை, செயற்கை என இருவகைப்படும். அவைகளில் இயற்கை: நட்பு, பிறப்பு, முறையாலாகியதும், தெயமுறையாலாகியதும், என இருவகைப்படும். அவைகளுள் முன்னையது சுற்றமாகலால் சுற்றத்தழாலில் அடங்கிற்று. மற்றது பகையிடையிட்ட தெயத்ததாகலால் துணைவலியென வலியறிதலுள் அடங்கிற்று. [இனி இவ்வதிகாரத்திலே சொல்லப்படுவது முன்செய்த வுதவிபெற்று வருவதாகிய செயற்கை நட்பேயாகலால் அதன் சிறப்பு இதனுல் சொல்லப்பட்டது.]

நட்புச்செய்தற்கு ஆவாரைப்பெறுதலும், பெற்றால் செய்யும் உபாயமும், நட்பின் வேறுபாடின்றி யிருத்தலும் முதலாயின அரியனவாதலின் 'நட்பின் செயற்கரிய யாவுள' என்றார். நட்பின் என்ற மாத்திரத்தானே செய்தற்கரியனவின்று என்றுயிற்று. அவ்வாறு நட்புக்கொள்ளின் பகைவர் அஞ்சி வினை (போர்) தொடங்காராதலின் 'அதுபோல வினைக்கரிய காப்புயாவுள' என்றார். யாவுள என்றதனால் ஒன்றுமில்லை யென்றுயிற்று. இயற்கை செயற்கை யென்ற இருவகை நட்பில் முன்னைய இயற்கை நட்பு பிறப்பு முறையானுமியதனால் சுற்றத்தழுவலின் அடங்கிய தென்றும், தெயமுறையானுமெதென்பது பகையிடையிட்ட தெயத்ததாகலின் துணைவலிமையென வலியறிதல் என்னும் அதிகாரத்தில் அடங்கியதென்றும் இருவகைப்படும். (1)

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு.

(பரி-உரை) நீரவர் கேண்மை பிறை நிறை நீர - அறிவுடையார் நட்புக்கள் பிறை நிறைவுந் தன்மைபோல நாடோறு நிறையுந் தன்மையவாம், பேதையார் நட்பு மதிப்பின் நீர - மற்றைப் பேதைமையுடையார் நட்புக்கள் நிறைந்த மதி பின் குறையுந்தன்மைபோல நாடோறுங் குறையுந்தன்மையவாம் எ-று.

நீரவரென்றார், இனிமைபற்றி. கேண்மை, நட்பு என்பன ஒருபொருட்கிளவி. செய்தாரது பன்மையான் நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாருஞ் செய்தன முன்சுருங்கிப் பின்பெருகற்கும்; பேதையாரும்

பெதையாருஞ் செய்தன முன்பெருஇப் பின்சருங்கற்குங் காரணம் தம்முண் முன்னறியாமையும் பின்னறிதலுமாம்.

(ப-ரை) கீரவர்-அறிவுடையவரது, கேண்மை-நட்புக்கள், பிறை பிறை போல், கிறைகீர-(நாடோறும்) கிறையுங் தன்மையினவாம், பேதையார்-அறிவில்லாதவரது, நட்பு - நட்புக்கள், மதி - (கிறைந்த) சந்திரன்போல், பின்னீர-பின்னே நாடோறும் குறையுங் தன்மையனவாம் எ-று.

(க-ரை) அறிவுடையோர் நட்பு இளம்பிறைபோல்வனரும், அறிவில்லார் நட்பு கிறைசந்திரன்போல் குறையும் என்பதாம்.

(வி-ரை) இனிமைபற்றி கீரவரென்றார். அறிவுடையவர் தங்களிலே செய்த நட்பு முன்சருங்கிப் பின்பெருகற்கும், அறிவில்லாதவர் தங்களிலே செய்த நட்பு முன்பெருகிப் பின்சருங்கற்கும் காரணம் தம்முன் முன்னறியாமையும் பின்னறிதலுமாம்.

'கீரவர்' என்றது கீர்மையுடையவர்; இன்குணமுடைய அறிவுடையோர். 'கேண்மை' 'நட்பு' என்பன ஒரு பொருட்சொற்கள். 'பிறை' என்றது இளஞ்சந்திரன். அறிவுடையார் கேண்மை முன்சருங்கிப் பின்பெருகுவதற்குக் காரணம் முன்னறியாமையேயாம். பேதையர்நட்பு முன்பெருகிப் பின் சருங்குதலுக்குக் காரணம் பின்னறிதலுமேயாம். 'கீர' என்றது கீர்மையினடியாகப் பிறந்த பலவின்பால் விகுதியுற்று; பெரியவர் கேண்மை பிறைபோல என்பது காலடியார். (2)

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும் பண்புடை யாளர் தொடர்பு.

(பரி-உரை) பண்பு உடையாளர் தொடர்பு பயிறொறும் - கற்குண முடைய மக்கள் தம்மூட்செய்த கட்புப் பயிலுந்தோறும் அவர்க்கு இன்பஞ் செய்தல், நூல் நவிறொறும் நயம்போலும் - நூற்பொருள் கற்குந்தோறுங் கற்றார்க்கு இன்பஞ்செய்தலை யொக்கும் எ-று.

நயத்தினைச் செய்தலான், நயமெனப்பட்டது. இருமையினும் ஒரு காலைக்கு ஒருகால் மிகுமென்பதாம். இவை இரண்டுபோட்டானும் அச்சிறப்பிற்கு ஏது கூறப்பட்டது.

(ப-ரை) பண்புடையாளர்-கற்குணமுடைய மக்கள், தொடர்பு-(தங்களிலே செய்த) நட்பு, பயிறொறும்-பழகுந்தோறும், (அவருக்கு இன்பஞ் செய்தல்) நூல்-நூற்பொருள், நவிறொறும்-கற்குந்தோறும், நயம்போலும்-கற்பவர்க்கு) இன்பஞ்செய்தல்போலும் எ-று.

(க-ரை) நற்குணமுடையவர் நட்புப் படிக்குந்தோறும் நூல்பயன் கொடுத்தல்போலாம் என்பதாம்.

(வி-ரை) இரண்டிலும் ஒருபோதுக்கு ஒருபோது மிகுமென்பதாம். இவை இரண்டுபோட்டாலும் அச்சிறப்புக்கு ஏது சொல்லப்பட்டது.]

'கவில்தொறும்' என்றதை கற்குப்பொழுதெல்லாம். (பன்முறை யென்று பழி) 'கயம்' என்றதை இன்பம். அறிவாளிகள் நூற்பொருளைக் கற்குந்தோறும் கற்குந்தோறும் இன்பமடைதல்போல நற்குணமுடையார் கட்பு பழகுந்தோறும் பழகுந்தோறும் இன்பஞ்செய்யும். 'தொறும்' இது இடைச்சொல்; காலத்தை உணர்த்திற்று. பயில் என்றதை பயில்தல் (பழகல்) (3)

நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற் பொருட்டு.

(பரி-உரை) கட்டல் நகுதற்பொருட்டன்று - ஒருவனை டொருவன் கட்புச்செய்தல் தம்முன் நகுதற்கு இயைந்தன சொல்லி நகையாடற்பொருட்டன்று; மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற்பொருட்டு-அவர்க்கு வேண்டாத செய்கை புளதாயவழி முற்பட்டுக் கழறுதற்பொருட்டு எ-று.

பழியும் பாவமுந் தருஞ்செய்கை தன்பமேபயத்தலான் வேண்டப்படுதன்மையின் அதனை மிகுதியென்றும், அதுசெய்தற்கு முன்னே மீட்டல் வேண்டுதலின் மேற்சென்றென்றும், இன்சொற்கு மீளாமையின் இடித்தற் பொருட்டென்றுங் கூறினார். இதனுன் கட்பின்பயன் கூறப்பட்டது.

(ப-ரை) கட்டல்-(ஒருவனோடு ஒருவர்) கட்புச்செய்தல் (நகைசெய்தற்கு) எற்றைகொல்லி, நகுதற்பொருட்டு - நகைசெய்தற்பொருட்டு, அன்று அல்ல, மிகுதிக்கண்-(அவர்க்கு) வேண்டாதசெய்கை, (உண்டானவிடத்து) மேற்சென்று, முற்பட்டு-இடித்தற்பொருட்டு, கண்டித்து புத்திசொல்லுதற் பொருட்டு எ-று.

(க-ரை) சிநேகஞ் செய்தல் நகைக்கும் பொருட்டல்ல புத்திசொல்லும் பொருட்டே என்பதாம்.

(வி-ரை) பழியும்பாவமும் தருஞ்செய்கை தன்பமேதருதல்பற்றி வேண்டப்படுவ தல்லாமையால் அதனை மிகுதியென்றும், அது செய்தற்கு முன்னே நிருப்பவேண்டுதலால் மேற்சென்றென்றும் இனியசொல்லுக்குத் திரும்பாமையால் இடித்தற்பொருட்டென்றும் சொல்லினர். [இதனுல் கட்பின்பயன் சொல்லப்பட்டது.]

'கட்டல்' என்றது நேசித்தல். 'மிகுதி' என்றது வரம்புகடந்த ஒழுக்கம். இம்மைக்குரிய பழியையும் மறுமைக்குரிய பாவத்தையும் தருஞ்செயல் தன்பத்தையே பயத்தலான் விரும்பப்படுவதன்மையினுல் அதை அறிவுறுத்த 'மிகுதி' என்றார். இனி கட்டார் அது செய்தற்கு முன்னே அத்தீநெறியினின்றும் திருப்புதல் (மீட்டல்) வேண்டுதலால் அதன் உறுதியை யுணர்த்த 'மேற்சென்று' என்றார். மற்றும் அந்நெறியினின்றும் மீட்கப் புகுங்கால் அவ்வினியமொழிக்கு உடன்பட்டுத் திரும்பாதபோழ்து இடித்துரைத்தல் வேண்டுமாதலால் 'இடித்தற்பொருட்டு என்றார். இதனுனே கட்பின்பயனும் நற்குணமுடையாரை நேசித்தல் நகுதற்கல்லவென்பதும் வேண்டாத செயலைக் கண்டவிடத்து முற்பட்டு நீதியுரைத்தல் வேண்டும் என்பதும் அமிற்று

புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

(பரி-உரை) புணர்ச்சி பழகுதல் வேண்டா - ஒருவனே டொருவன் நட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை; உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் - இருவர்க்கும் ஒத்த உணர்ச்சிதானே நட்பாம் உரிமையைக் கொடுக்கும் எ-று.

புணர்ச்சி - ஒரு தேயத்தாராதல். * "இன்றே போல்கறும் புணர்ச்சி" என்றதும் அதனை. பழகுதல் பலகாற் கண்டுஞ் சொல்லாடியும் மருவுதல். † இவ்விரண்டுமின்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் போல உணர்ச்சியொப்பின், அதனே உடனுயிர் நீங்கு முரிமைத்தாய நட்பினைப் பயக்குமென்பதாம். நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தலென்னுங் காரண மூன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்தென்பது இதனுற் கூறப்பட்டது.

(ப-ரை) (ஒருவனுடு ஒருவன் நட்பாகுதற்கு) புணர்ச்சி-ஓரிடத்திலிருத்தலும், பழகுதல் - பலதாங்கண்டு பேசலும், வேண்டா - வேண்டுவதில்லை, உணர்ச்சி தான் - (இருவருக்கும்) ஒத்த அறிவுதானே, நட்பாம் - சிநேகமாம், கிழமை-உரிமையை, தரும்-கொடுக்கும் எ-று.

(க-ரை) இருவருக்கு மொத்தவறிவே சிநேகந்தரும் என்பதாம்.

(வி-ரை) இவை யில்லையாயினும் ஒருவரையொருவர் சமமாகவறிதலே உடனுயிர் நீக்குதற்குரிய நட்பை உண்டாக்குமென்பதாம். [நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தல் என்கிற காரணமூன்றனுள்ளும் பின்னது சிறப்புடையதென்பது இதனுல் சொல்லப்பட்டது.]

'புணர்ச்சி' என்றது ஒருதேயத்தாராயிருத்தல், 'இன்றேபோல்க நும் புணர்ச்சிதானே' (புறநானூறு-58) இதன்பொருள்: இன்றுபோல்க நுமது கூட்டம். 'பழகுதல்' என்றது பலகால்கண்டும் உரையாடியும் கூடுதல். புணர்ச்சி பழகுதல் என்னுமிரண்டு மில்லாத உறையூர் யிராசதானி யாகக் கொண்டிருந்த கோப்பெருஞ்சோழன் குறைந்திறந்ததைப் பாண்டி நாட்டிலுள்ள பிசிரென்னுமூரிலிருந்த பிசிராந்தையார் என்னும் புலவர் கேட்டுத் தாமும் உடனே இறந்ததுபோல இருவர் மனவுணர்ச்சியு மொப்பின் உடனே யுயிர் நீக்கும் உரிமையுடைய நட்பினைப் பயக்கும். (5)

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

(பரி-உரை) முகம் நக நட்பது நட்பு அன்று - கண்டவழி அகமொழிய முகமாத்திரமே மலரும்வகை நட்குமது நட்பாகாது; நெஞ்சத்து அகம் நக நட்பது நட்பு-அன்பால் அகமுமலர நட்குமதே நட்பாவது எ-று.

* புறநானூறு-58. † புறநானூறு-217.

செஞ்சின்கண் கிழ்வதனை செஞ்சென்றார். இறந்ததழீஇய எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. இதனால் இரண்டும் ஒருங்கே மலரவேண்டுமென்பது பெற்றும்.

(ப-ரை) முகாக - (கண்டவிடத்து) முகமாத்திரமே மலரும் வகை, கட்பது-நிகழ்ப்பது, கட்பன்று - நிகழ்கமன்று, செஞ்சத்தகாக - (அன்பால்) உள்ளமும் மலர, கட்பது நிகழ்ப்பதே, கட்பு-நிகழ்கமாம் எ-று.

(க-ரை) முகமலர்ந்து நிகழ்ப்பது நிகழ்கமல்ல அகமலர்ந்து நிகழ்ப்பதே நிகழ்கம் என்பதாம்.

(வி-ரை) செஞ்சத்தக முகமென்று மெச்சவும்மை தொக்குநின்றது. அதனால் இரண்டும் ஒருசேர மலரவேண்டுமென்பது பெற்றும்.

'செஞ்சம்' என்றது அன்பு. செஞ்சினிடத்து கிழ்வதாகிய அன்பினை செஞ்சென்ற இடவாகுபெயராற் கூறினர். 'அகம்' என்றது மனம். 'அகமும்' என்ற உம்மை இறந்ததைத்தழுவிய எச்சவும்மை. ஆதலால் முகமும் அகமுமாகிய இரண்டும் ஒருமித்து மலரவேண்டும் என்பது பெற்றும். 'மலர்தல்' என்றது இனர்ச்சியுடையதாதல். 'கிழ்வது' என்றது பொருந்துவது. (6)

அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு.

(பரி-உரை) அழிவினவை நீக்கி ஆறு உய்த்து - கேட்டினைத்தரும் நிலெறிகளைச் செல்லுங்கால் விலக்கி, எனை நன்னெறிகளைச் செல்லாக்காற் செலுத்தி, அழிவின்கண் அல்லல் உழப்பது நட்பாம் - தெய்வத்தாற் கோவர்தழி அது விலக்கப்படாமையின் அத்துன்பத்தை உடன் அனுபவிப்பதே ஒருவனுக்கு நட்பாவது எ-று.

ஆறென வருகின்றமையின், அழிவினை தருவனவென் றெழிந்தார். * "தெருண்ட வறிவினர்" என்புழிப்போல இன்சாரியை கிற்க இரண்டனுருபு தொக்கது. இனி நவையென்ற பாடம் ஓதி, அதற்குப் போழிவினுஞ் செல்வமழிவினும் வந்த துன்பங்களென்றும், அழிவின்கண் என்பதற்கு யாக்கை யழிவின்கண் என்றும் உரைப்பாருமுளர்.

(ப-ரை) நட்பு-(ஒருவனுக்கு) நட்பாவது, அழிவின்-அழிவைத் தருகிற, அவை - நியவழிகளை, நீக்கி - விலக்கி, ஆறு - நல்வழிகளை, உய்த்து-சேர்த்தி, அழிவின்கண் - (ஊழினாலே) கேடுவந்தவிடத்து, அல்லல் - அத்துன்பத்தை, உழப்பதாம்-உடனிருந்து அனுபவிப்பதே எ-று.

(க-ரை) நட்பாவது நியவழியை நீக்கி நல்லவழியை சேர்த்தித் துன்பத்தை யனுபவிப்பதாம் என்பதாம்.

(வி-ரை) ஆறென வருகின்றமைபால் அழிவினவை நியவழியெனப்பட்டது.

---

* காலடியார்: இரவச்சம்-1.

அழிவின் + அலை = அழிவினலை. கேட்டினைத் தருகின்ற நீயலை. ற்றம் இதை அழிவின் + சலை எனவும் பிரிப்பர். இக்கு அழிவு போழிவும் செல்வ அழிவுமாம். 'சலை' என்றது அலையிரண்டானும் வந்த தன்பங்கள். ஆறு' என்றது நல்வழி. 'உய்த்த' எனறது செல்லுமாறுசெய்து. அழிவி சலை என்ற முன்கூறிப் பின் ஆறு என்றமையால் நீயவழிகளல்லாத ல்வழி எனப்பட்டது. அழிவு + இன் = அழிவின், அறிவினவர், அறிவு + இன் + அ + வ் + அர் இதில் இன் சாரியையாகும். இரண்டனுருபு ஐ தொக்கு ன்றது. (7)

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

(பரி-உரை) உடுக்கை இழந்தவன் கைபோல-அலையிடை ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கைசென்ற உதவி அவ்விளிவால் களையுமாறுபோல, ஆங்கே இடுக்கண் களைவது நட்பாம் - கட்டனலுக்கு இடுக்கண் வந்தழி அப்பொழுதே சென்ற உதவி அதனைக்களைவதே நட்பாவது எ-று.

ஆற்றுங் காத்தற்கட் கை தன் மனத்தினு முற்படுதலின், அவ்வினைவு டுக்கண் களைவுழியும் அதற்கொத்த தொழிலுவமையினும் வருவிக்க. டையவன் தொழில் நட்பின்மேலேற்றப்பட்டது.

(ப-ரை) நட்பு - நட்பாவது, உடுக்கை யிழந்தவன் - (சபையினிடத்து) ஆடை குலைந்தவனுக்கு, கைபோல-கைசென்று உதவுதல்போல், (சிக்கெடுக்கப் பட்டவனுக்கு) ஆங்கே - அப்பொழுதே, இடுக்கண் - துன்பத்தை, களைவதாம்-நீக்குவதாகும் எ-று.

(க-ரை) ஆடை குலைந்தவன் கைபோலத் துன்பத்தை நீக்குவதே நட்பாம் என்பதாம்.

(வி-ரை) ஆடை குலைந்தவனுக்குக் கைபெப்படியோ அப்படியே துன்பத்தை அடைந்தவனுக்கு நட்பாளன் மனத்திலும் முற்பட்டு உதவிசெய்து துன்பம் ஒழிப்பானென்பதாம். நட்பினன் செயல் கட்பில் எற்றப்பட்டது.

உடுக்கை (உடு + க் + கை) ஆடை. 'ஆங்கு' என்றது துன்புற்ற அமயம். அற்றம்' என்றது சோர்வு. கைபோல இடுக்கண் களைதலாவது சபையினிடத்து ஆடைகுலைந்தவனுக்கு அது நிகழ்ந்த அப்பொழுதே கையானது மனத்திலு முற்பட்டு விரைந்துசென்று குலைந்த ஆடையைக் கட்டுவதுபோல துன்பனுக்குத் துன்பநேரிட்ட அப்பொழுதே விரைந்துசென்று உதவித் துன்ப மொழித்தல்வேண்டு மென்பதாம். கை உதவுதல்போல கட்பில் உதவுதல்வேண்டும் என்றமையின் தொழிலுவமமாயிற்று. (8)

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா-யூன்று நிலை.

(பரி-உரை) கட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் - கட்பிறுக்கு அரிருக்கை யாதெனின், கொட்பு இன்றி ஒல்லும் காய் ஊன்றும் நிலை அஃது எஞ்ஞான்றும் நிரிபின்றி இயலும் எல்லையெல்லாம் அறம் பொருள்களிற் றளராமைத் தாங்கும் நிண்மை எ-று.

ஒருஞான்றும் வேறுபடாத மறமையிம்மைகட்கு உறுதியாய அறம் பொருள்களிற்றளர்த்தழி அத்தளர்ச்சி நீக்கி அவற்றின்கண் நிறுத்தற்கு மேல் ஒருசெயலுமின்மையின், அதனை கட்பிற்கு முடித்தவெல்லை யென்றார்.

(ப-ரை) கட்பிற்கு - நிகேகத்திற்கு வீற்றிருக்கை - அரசிருக்கை யாதெனின் - யாதென்றால், (அது) கொட்பின்றி - எக்காலும் வேறுபடாமல், ஒல்லும்வாய் - கூடுமிடத்தெல்லாம், ஊன்றநிலை - (அறம்பொருள்களிலே தளராமல்) தாங்கும் நிண்மை எ-று.

(க-ரை) கட்பிற் காசிருக்கை யாதென்றால், எக்காலும் தாங்கும் நிண்மையாம் என்பதாம்.

(வி-ரை) ஒருகாலும் வேறுபடாமல் கூடுமிடத்தெல்லாம் மறமையிம்மைகளுக்கு உறுதியாகிய அறம் பொருள்களிலே தளர்ந்தவிடத்து அத்தளர்ச்சி நீக்கி நிறுத்தற்குமேல் ஒரு செயலும் இல்லாமையால் அதனை கட்பிற்கு முடித்த எல்லை என்றார்.

ஒருகாலும் வேறுபடாமல் மறமையிம்மைக்குறுதியாய அறம் பொருள்களிற் றளர்ச்சியுற்றவிடத்து அத்தளர்ச்சியை நீக்கி அவற்றின்கண் நிறுத்தற்கு மேலான செயலொன்று மின்மைபற்றி அச்செயலே 'கட்பிற்கு வீற்றிருக்கை' என்றார். 'ஊன்றநிலை' என்றது (அறம் பொருள்களிற் றளராமல்) தாங்கும் உறுதி. 'ஒல்லும்வாய்' என்றது கூடுமிடந்தோறும். (9)

இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று புனையினும் புல்லென்னு நட்பு.

(பரி-உரை) இவர் எமக்கு இனையர் யாம் இன்னம் என்று புனையினும் இவர் எமக்கு இத்தனை அன்பினர் யாம் இவர்க்கு இத்தன்மையமென்று ஒருவரை பொருவர் புனைந்து சொல்லினும், கட்புப் புல்லென்னும் - கட்புப் புல்லிதாய்த் தோன்றும் எ-று.

இவர்க்கென்பது வருவிக்கப்பட்டது. தாம் அவரொன்றும் வேற்றுமையின்றிவைத்துப் புனைந்துரைப்பினும் வேற்றுமை யுண்டாமாகலின், கட்புப் புல்லென்னு மென்றார். இவை ஐக்கபாட்டானும் கட்பினது இலக்கணங் கூறப்பட்டது.

(ப-ரை) இவர்-இவர், எமக்கு-எங்களுக்கு, இனையர்-இவ்வளவன்பினர், யாம்-நாங்கள், இன்னம் (இவர்க்கு) இவ்வளவன்பினம், என்று என்று, புனையினும் - (ஒருவரை) ஒருவர் சிறப்பிக்கினும், கட்பு - நிகேகம், புல்லென்னும் - நிறைதாய்த் தோன்றும் எ-று.

(க-ரை) இவரெங்களுக்கிவ்வளவன்பினர் நாங்களிவர்க்கிவ்வளவன்பினர் என்று சிறப்பிக்கிற சிநேகஞ் சிறிதாம் என்பதாம்.

(வி-ரை) தாம் அவர் என்கிற பேதமில்லாதிருந்தும் சிறப்பித்துச் சொல்லில் பேதம் உண்டாகலால் புல்லென்னுமென்றார். [இவை ஐந்து பாட்டாலும் நட்பினது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'இனையர்' என்றது இத்தகையவன்புடையவர். 'இன்னம்' என்றது இன்னவன்புடையேம். 'புனைதல்' என்றது ஒருவரையொருவர் சிறப்பித்துப் பாராட்டல், புல் என்னும்-அற்பமாகவிளங்கும் தாம் என்றும் அவர் என்றும் வேறுபாடு கருதாத நட்பிடத்தும், ஒருவரையொருவர் சிறப்பித்துக்கூற வேற்றுமை யுண்டாமாகலான் அது சிறப்புடைத்தாகாது. அற்பமாகத் தோன்றும், அற்பமாகத் தோன்றலுக்குக் காரணம் வேறுபிரித்துக் கூறலே யாம். 'இன்னரினையர்யோர்பிற ரென்னுஞ்சொல்' என்பது காலடியார். (10)

79-ம் அதி - நட்பு - முற்றிற்று.

80-ம் அதிகாரம்—நட்பாராய்தல்

(பரி-உரை) அஃதாவது: மேற்சொல்லிய இலக்கணத்தாரை யாராய்ந்தறிந்தே நட்கவேண்டுதலின், அவரை யாராயுந் திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

(உரை) அஃதாவது: முன் சொல்லப்பட்ட இலக்கணமுடையவரை ஆராய்ந்தறிந்தே சிநேகிக்கவேண்டுதலால், அவரை ஆராயுந்திறமும், அதிகாரமுறைமையும் இதனாலே விளங்கும்.

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

(பரி-உரை) நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை-நட்பினை விரும்பி அதன்கண்ணே நிற்பார்க்கு ஒருவனோடு நட்புச் செய்தபின் அவனை விடுதலுண்டாகாது, நாடாது நட்டலிற் கேடு இல்லை-ஆகலான், ஆராயாது நட்புச் செய்தல்போலக் கேடு தருவது பிறிதில்லை எ-று.

ஆராய்தல் - குணஞ் செய்கைகளது நன்மையை யாராய்தல். கேடு-ஆகு பெயர். நட்கின் தாம் அவரென்னும் வேற்றுமை யின்மையின் வீடில்லை யென்றும், அவ்வேற்றுமையின்மையான் அவன்கட் பழிபாவங்கள் தமவாமாகலின் இருமையுங் கெடுவரென்பது நோக்கி நாடாது நட்டலிற் கேடில்லை யென்றுங் கூறினார்.

(ப-ரை) நட்பாள்பவர்க்கு-நட்பைவிரும்பி (அதனிடத்தே நிற்பவர்க்கு), நட்டபின்-(ஒருவனோடு) நட்புச் செய்தபின், வீடு-(அவனை) விடுதல், இல்லை-

உண்டாகாது, (ஆதலால்) காடாது - ஆராயாமல், நட்டலின் - சிநேகித்தல் போல், கேடு-கேடுதருவது, இல்லை (வேறை) இல்லை எ-று.

(க - ரை) சிநேகிப்பவர்களுக்குச் சிநேகித்தபின் சிநேகத்தை விடுதல் இல்லை ஆராயாமல் சிநேகித்தல்போற் கேட்டைத் தருவதொன்றில்லை என்பதாம்.

(வி-ரை) ஆராய்தல் - குணகன்மை, செய்கை கன்மைகளை ஆராய்தல். கேடு தருவதைக் கேடெனலால் ஆகுபெயர். சிநேகித்தால்-தாம், அவரொன்றும் வேற்றமையில்லாமையால்; வீடில்லையென்றும், அவ்வொற்றுமையால் அவனிடத்துப் பழிபாவங்கள் தம்மையையாகலால் இருமையும் கெடுவ தென்பதை நோக்கி, காடாது நட்டலிற் கேடில்லை யென்றும் சொல்லினர்.

'நட்பினை ஆய்தல்' என்றது நட்பினைவிரும்புதலும் அதற்குத் தகுதிற்றலுமாம். 'வீடு' என்றது விடுதல், நீக்குதல். 'காடாது' என்றது நட்புச்செய்தற்குரியாரது நற்குண நற்செய்கைகளை யாராயாது காடாதுநட்டலின். 'கேடில்லை' என்றது ஆராயாமல் சிநேகஞ்செய்தல்போலக் கேடுதருவது மற்றொன்றில்லை என்றதனால் இதனால்வரும் கேட்டின் மிகுதி சொல்லாமலே பெறப்பட்டது. நட்டபின் தாம்வேறு அவர்வேறு என்ற வேறுபாட்டின்மையினால் 'வீடில்லை' என்றும், அவ்வேறுபாடின்றி நட்டபின் அவரா லிம்மையிலுண்டாகும் பழியும் மறுமையிலுண்டாகும் பாவமும் தம்முடையதாகலின் இருமையும் கெடுவர் என்பது தோன்ற நட்டலினும் கேடில்லை என்றல் கூறினர். (1)

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை தான்சாந் துயரந் தரும். [றை

(பரி-உரை) ஆய்ந்து ஆய்ந்து கேண்மை கொள்ளாதான் - குணமுஞ் செய்கையும் நல்லனென்பது பலகாலும் பலவாற்றானு மாராய்ந்து ஒருவனைநட்புக்கொள்ளாதவன், கடை முறைதான் சாம் துயரம் தரும் - முடிவில் தான் சாதற்கு ஏதுவாய துன்பத்தினைத் தன்மாற்றார் விளைக்கவேண்டாமல் தானே விளைக்கும் எ-று.

கடைமுறைக்கண்ணென இறுதிக்கண் தொக்க ஏழாவது விரிக்க. குணமுஞ் செயலுந் தீயானொடு கொள்ளின் அவற்குவரும் பகைமை யெல்லாந் தன் மேலவாய்ப் பின் அவற்றான் இறத்தலிடு மென்பதாம். இவை யிரண்டு பாட்டானும் ஆராயாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

(ப-உ) (குணமுஞ் செய்கையும் நல்லனென்பதும் அல்லனென்பதும்) ஆய்ந்து - (பலகால்) ஆராய்ந்தும், ஆய்ந்து - (பலவழியால்) ஆராய்ந்தும், கேண்மை (ஒருவனொடு) நட்பை, கொள்ளாதான் - கொள்ளாதவன், கடை முறை-முடிவில், தான் - தான், சாம் - சாவதற்கு ஏதுவாகிய, துயரம்-துன்பத்தை, தரும் தானே விளைத்துக்கொள்ளுவான் எ-று.

(க - ரை) ஆராய்ந்துகொள்ளாதவன் சிநேகஞ் சாவதற்கேதுவான துன்பந்தரும் என்பதாம்.

(வி-ரை) நீயகுணமுஞ் நீயசெயலு முடையவனோடு நட்புக்கொள்ளின் அவனுக்கு வரும் பகைமையெல்லாம் தனக்கும் வந்து பின் அவைகளால் இறந்துவிடுவனென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் ஆராயாதவிடத்துப் படும் இழுக்குச் சொல்லப்பட்டது.]

'ஆய்தல்' என்றது குணத்தின் நன்மையையும் செய்கையின் நன்மையையும் பலதால் விசாரித்தறிதல். 'ஆய்தல்' என்றது தொழிலின் பலதையும் ஆராய்தல். 'சாம்தயாம்' என்றது சாதற்கு ஏதுவாயதயாம் சாதலையொத்ததயாம் என்றும் கூறுவர். 'கடைமுறை' என்றது ஏழாம்வேற்றுமை புருபு கண் என்பதனை யீற்றில் விரித்துக்கூட்டிப் பொருள்கொள்க. ஆய்ந்தாய்ந்துகொள்ளாமல் நீயானோடு நட்புக்கொள்ளின் அந்நீயவனுக்கு வரும். பகையெல்லாம் தன்னைச்சேர்ந்து இறந்துபடும் என்பதாம். (2)

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்று
வினனு மறிந்தியாக்க நட்பு.

(பரி-உரை) குணனும் குடிமையும் குற்றமும் குன்று இனனும் அறிந்து-ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும் குறைவற்ற சுற்றத்தினையும் ஆராய்ந்தறிந்து, நட்பு யாக்க-அவனோடு நட்புச்செய்க எ-று.

குற்றமில்லாதார் உலகத்தின்மையின் உள்ளது பொறுக்கப்படுவதாயின் அவர் நட்பு விடற்பாற்றன்று என்பார் குற்றமுமென்றும், சுற்றப்பிணிப் படையார் கட்டாரோடும் பிணிப்புண்டு வருதலிற் குன்றுவினனுமென்றும், விடப்படிற் றக்குறையாமென்பார் அறிந்தியாக்க என்றுங் கூறினர்.

(ப-ரை) குணனும்-(ஒருவனது) குணத்தையும், குடிமையும்-குடிப்பிறப்பையும், குற்றமும்-குற்றத்தையும், குன்றுவினனும்-குறைவற்றசுற்றத்தையும், அறிந்த-(ஆராய்ந்) தறிந்த, நட்பு-சிநேகம், யாக்க (அவனோ) செய்யக் கடவன் எ-று.

(க-ரை) குணத்தையுங் குடிப்பிறப்பையுங் குற்றத்தையுஞ் சுற்றத்தையு மறிந்த நட்புச்செய்யக் கடவன் என்பதாம்.

(வி-ரை) குற்றமில்லாதவர் உலகத்திலே இல்லாமையால் பொறுக்கத் தக்க குற்றமுடையாராயிருந்தால் அவர் நட்பு விடக்கூடாதென்பதற்கு குற்றமுமென்றும், சுற்றத்தாரோடு கட்டுண்டிருப்பவர் நட்பானோடும் கட்டுண்டு வருதலால் குன்றுவினனுமென்றும், விடப்பட்டால் தக்குறையா மென்பதற்கு அறிந்தியாக்கவென்றும் சொல்லினர்.

'குணம்' என்றது சிறந்தகுணம். 'குடிமை' என்றது நற்குடிப்பிறப்பு. 'குற்றம்' என்றது பொறுத்தற்குரிய குற்றம். 'குன்று இனனும்' என்றது விட்டு நீக்காத இனத்தார். 'யாக்க' என்றது மேன்மேல் வளரச்செய்க. குற்றமில்லாதவர் உலகத்திலில்லாமையால் உள்ள குற்றம் பொறுக்கப்படுவதாயின் அவரை நட்பு விடுதற்குரியதன்று என்பதை விளக்க 'குற்றமும்' என்றார்

சுற்றப் பிணிப்புடையார் (சுற்றத்தாருடன் ஒத்த கருத்துடனிருப்போர்) கட்பினருடன் கட்டுண்டு (சேர்ந்த) வருபவராதலினால் 'குன்றுவினனும்' என்றார். அத்தகையாரது கட்பு விடப்பட்டால் அது தமது குறைவேயாம் என்றறிவித்தற்கு 'அறிக்க' என்றும், அத்தகையாளரை அறிந்துகொள்ளும் கட்பு மேன்மேலும் உயர்வடையும் என்று உணர்த்த 'ஆக்க' என்றும் கூறினர். (3)

குடிப்பிறந்து தன்கட் பழிநா ணுவானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

(பரி-உரை) குடிப்பிறந்த தன்கட் பழி காணுவானை - உயர்ந்த குடியின்கட் பிறந்த தன்மாட்டு உலகர் சொல்லும் பழிக்கு அஞ்சுவானை, கொடுத்தும் கட்புக் கொளல் வேண்டும்-சில கொடுத்தாயினும் கட்புக்கோடல் சிறந்தது எ-று.

குடிப்பிறப்பால் தான் பிழை செய்யாமையும், பழிக்கு அஞ்சலாற் பிழைத்தன பொறுத்தலும் பெற்றும். இவை யிரண்டுமுடையானைப் பெறுதல் அருமையின் அவன் கட்பை விலைகொடுத்துங் கொள்கவென்பதாம்.

(பத) குடிப்பிறந்த-உயர்ந்த குடியிற்பிறந்த, தன்கண்-தன்னிடத்து, பழி (உலகர் சொல்லும்) பழிக்கு, காணுவானை-அஞ்சுவானை, கொடுத்தும், (சில) கொடுத்தாயினும், கட்புக்கொளல் வேண்டும்-சிநேகங்கொள்ளவேண்டும் என்றவாறு.

(க-ரை) உயர்குலத்திற் பிறந்த பழிக்கஞ்சுபவனைப் பொருள் கொடுத்தஞ் சிநேகங்கொள்ளக்கடவன் என்பதாம்.

(வி-ரை) குடிப்பிறப்பால் தான் பிழைசெய்யாமையும், பழிக்கு அஞ்சலால் பிழைபொறுத்தலும் பெற்றும். இவை இரண்டு முடையவனைப் பெறுதல் அருமையாதலால் அவனட்பை விலைகொடுத்தும் கொள்கவென்பதாம்.

'குடிப்பிறந்து' என்றது நற்குடிப்பிறந்து. 'பழி' என்றது உலகத்திழிவுரை. 'காணுவான்' என்றது அஞ்சி (வெட்சி) தீயன செய்யாதொழுகுவான். 'கொளல் வேண்டும்' என்றது அவனது கட்பையே கொள்ளுதல் சிறந்தது மற்றொன்றன்று என்பதாம். நற்குடிப்பிறப்பான் தவறிழையான் என்பதும் பழிக்கும் அஞ்சுக்தன்மையால் பிறர் செய்த குற்றங்களை பொறுத்தலும் செய்வன் என்பதும் தோன்றியவாறுயிற்று. இவையிரண்டையுமுடையானைப் பெறலருமையானதால் அவன் கட்பை விலைகொடுத்துங் கொள்கவென்பதாயிற்று. விலைகொடுத்தலாவது அவன் விரும்பியவற்றைக் கொடுத்தல். (4)

அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.

(பரி-உரை) அல்லது அழச் சொல்லி-தாம் உலகவழக்கல்லது செயிற்கருதிற் சோகம் பிறக்கும்வகை சொல்லி விலக்கியும், இடித்து-செய்தக்கார்

பின்னுஞ் செய்பாவகை நெருக்கியும், வழக்கு அறியவல்லார் - அவ்வழக்குச் செய்பாவழிச் செய்விக்கவும் வல்லாரை, ஆய்ந்த கட்புக் கொளல்-ஆராய்ந்த கட்புக்கொள்க எ-று.

அழச்சொல்லி யிடித்தெனவந்த பரிகார வினைகளான் அவற்றிற்கேற்ற குற்றவினைகள் வருவிக்கப்பட்டன. வழக்கு-உலகத்தார் அடிப்படச் செய்து போந்த செயல். தம்மொடு கட்டாரும் அறியும்வகை அறிவித்தலரிதாகலின், அறியவல்லாரொன்றார். இரண்டாவது இறந்தக்கட்டொக்கது.

(ப-ரை) அல்லது-(தாம்) உலகடையல்லாததை, (செய்யகினைக்கின்) அழச்சொல்லி - அழும்வகைசொல்லி விலக்கியும், (செய்தக்கால்) இடித்து-(பின்னும்செய்பாவகை) நெருக்கியும், வழக்கு-அவ்வுலகடையைச் (செய்யாவிடத்து), அறிபவல்லார் - செய்விக்கவும் வல்லவரை, ஆய்ந்து-ஆராய்ந்து, கட்பு-நிகேகம், கொளல்-கொள்ளக்கடவர் எ-று.

(க-ரை) ஒருவன் பாவக்களைச்செய்ய நினைத்தா லழும்படிசொல்லி விலக்கியும் பாவக்களைச்செய்தால் செய்யாதிருக்க நெருக்கியும் உலகடை செய்விக்க வல்லவரைச் சிகேகிக்கக்கடவர் என்பதாம்.

(வி-ரை) அழச்சொல்லி இடித்து என வந்த பரிகாரத்தொழில்களுக்கு ஏற்ற குற்றத்தொழில்கள் வருவிக்கப்பட்டன. வழக்கு - உலகத்தார் ஆதிதொடங்கிச் செய்துவந்த செயல். தம்மோடு சிநேகித்தவரும் அறியும் வகை அறிதல் அரிதாகலால் அறியவல்லாரென்றார்.

'அல்லது' என்றது உயர்ந்தோரால் விலக்கப்பட்டது. (ஒப்புறவொழுகலல்லாதது.) 'அழச்சொல்லி' என்றது அவர் தம் மனதிற்குச் சோகந்தருவது பற்றி அழச்சொல்லியென்றார். 'இடித்து' என்றது இடித்துரைத்து (மனதிற் படுமாறு எடுத்துரைத்து) 'அறிபவல்லார்' என்றது அவர் அறியுமாறு செய்யவல்லமையுடையார். அழச்சொல்லி என்றதனாலும், இடித்து என்றதனாலும் அவைகளுக்கேற்ற செய்யக்கருதின் செய்தக்கால், என்ற குற்றவினைகள் வருவிக்கப்பட்டன. 'வழக்கு' என்றது உலகமென்பதுயர்ந்தோர் மாட்டே யென்றதுபோல உயர்ந்தோர்களது தொன்றுதொட்டுவந்த செயல். தம்மை நேசித்தவரும் அறியும்வகை அறிவித்தல் அருமைபற்றி 'அறியவல்லார்' என்றார். 'அறியவல்லார் ஆய்ந்து' என்றது அறியவல்லவரை யாய்ந்து எனக்கொள்க. (5)

கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

(பரி-உரை) கிளைஞரை நீட்டி அளப்பது ஓர்கோல் - ஒருவனுக்குக் கேடென்பது தன் கட்டாராகிய புலங்களை யெஞ்சாமலளப்பதோர்கோல்; கேட்டினும் ஓர் உறுதி உண்டு-ஆகலின் அதன்கண்ணும் அவனைப் பெறப் படுவதோர் நல்லறிவுண்டு எ-று.

தத்த கட்பு எல்லைகள் சுருங்கியிருக்கவும் செல்வக்காலத்துப் புறத்துத் தோன்றுமற்போச்தார் பின் கேடுவந்துழிச் செயல்வேறபடுதலின் அக்கேட்டால் அவை வரையறுக்கப்படுமென்பதுபற்றிக் கேட்டினைக் கோலாக்கியும், அதனால் அவரை யளந்தறிந்தால் ஆவாரையே கோடலின் அவ்வறிவை உறதியென்றுங் கூறினார். கிளைஞர் - ஆருபெயர். இஃது எகதேசவுருவகம். இவை தான்குபாட்டானும் ஆராயுமாறும், ஆராய்ந்தால் நட்கப்படுவர் இவரென்பதனுங் கூறப்பட்டன.

(ப-ரை) (ஒருவனுக்குக் கேடென்பது) கிளைஞரை - சுற்றத்தாரை நட்பாகிய (நிலங்களை), கீட்டியளப்பது-குறையாமல் அளப்பதாகிய, ஓர் கோல் ஒருகோலாம், (ஆதலால்) கேட்டினும் - அக்கேட்டினிடத்தும், ஒருதி- (அவராலே பெறப்படும்) ஒரு கல்லறிவு, உண்டு-உண்டாகும் எ-று.

(க-ரை) கேட்டினிடத்துஞ் சிநேகராற் பெறப்படு கல்லறிவுண்டாம் என்பதாம்.

(வி-ரை) தமது சிநேகத்தினெல்லை சுருங்கியிருக்கவும் செல்வக்காலத் திலே புறத்தை வெளிப்படாமல் வந்தவர் பின் கேடுவந்தவிடத்துச் செயல் வேறபடுதலால் அக்கேட்டால் சினேகத்தை அளவுசெய்யலாமென்பதுபற்றி கேட்டினைக் கோலாக்கியும், அதனால் அளந்தறிந்தால் ஆவாரையே கொள்ளு தலால், அவ்வறிவை உறதியென்றும் சொல்லினார். இஃது எகதேச வுருவகம். [இவை தான்குபாட்டாலும் ஆராயும்விதமும், ஆராய்ந்தால் சிநேகிக்கப்படுவார் இவரென்பதும் சொல்லப்பட்டன.]

'கேடு' என்றது துன்பம்; கேடாகிய கோல் என்னும் பொருளாம். 'உறதி' என்றது உறதிபயத்தற்குரிய கல்லறிவு. 'கிளைஞர்' என்றது கிளைஞராகியகிலம். தத்தமது கட்பினெல்லைகள் (அளவு) சுருங்கியிருக்கவும் செல்வ முற்றகாலத்தில் தத்தமது கட்பின் எல்லை சுருங்கியிருத்தல் வெளிக்குத் தோன்றுமலிருக்க கண்புசெய்து வந்தவர் பின் கேடுவந்தவிடத்துச் செயல் வேறபடுவர். ஆதலின் அக்கேட்டால் அந்கட்பினது தன்மைகள் அளவு செய்யப்படும் (அறிந்துகொள்ளப்படும்) என்பதைப்பற்றிக் கேட்டினை 'கீட்டி யளப்பதோர் கோல்' எனக் கோலாக்கினர். அதனால் அவரை யளந்தறிந்தால் அத்தகுதியுடையாரையே கொள்ளுதலால் அவ்வறிவை 'உறதி' என்றுங் கூறினர். 'கிளைஞர்' கட்டாரென அதன் பண்பாகிய கட்பையுணர்த்துதலால் பொருளாகுபெயர். கேட்டினைக்கோல் என்றவர் அதற்கியைய கிளைஞரைப் புலமென்றுருவகஞ் செய்யாமையான் இக்குறள் எகதேசவுருவகவணியாயிற்று. இந்நான்கினுள்ளும் கட்பையாராயும் தன்மையும், ஆராய்ந்து சிநேகிக்கப்படுவா (6) ரிவர் என்பதும் சொல்லப்பட்டன.

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார் கேண்மை யொரீஇ விடல்.

(பரி-உரை) ஒருவற்கு ஊதியம் என்பது - ஒருவனுக்குப் பேறு என்று சொல்லப்படுவது, பேதையார் கேண்மை ஒரீஇ விடல்-அறிவிலாரோடு நட்புக் கொண்டானுயின் அதனை யொழிந்து அவரின் நீங்குதல் எ-று.

நட்பொழிந்தாலும் நீக்காக்கால் * "வெறிகமழ் சந்தனமும் வேங்கை யும்போ"மாறுபோலத் தீங்கு வருதலின் விடலென்றும் நீங்கியவழித் தீங்கு ஒழிதலேயன்றி இருமை யின்பத்திற்கு உரிமை யெய்தலுமுடைமையின் அதனை யூதியமென்றல் கூறினர்.

(பத) ஒருவற்கு-ஒருவனுக்கு, ஊதியமென்பது-பேறென்று சொல் லப்படுவது, பேதையார் - அறிவில்லாதவரது, கேண்மை - நட்பை, ஒரீஇ-ஒழிந்து, விடல் (அவரை) விடுதல் எ-று.

(க - ரை) ஒருவனுக் கிலாபமென்று சொல்லப்படுவது அறிவில்லார் சிநேகத்தை விடுதல் என்பதாம்.

(வி-ரை) நட்பொழிந்தாலும் விட்டு நீக்காதவிடத்துத் தீங்குவருதலால் விடலென்றும் நீக்கியவிடத்துத் தீங்கொழித்தலேயல்லாமல் இருமை யின்பங் களுக்கும் உரிமை பெறுதலால் அதனை ஊதியமென்றும் சொல்லினர்.

'ஊதியம்' என்றது பேறு (இலாபம்.) 'ஒரீஇவிடல்' என்றது நட்பை பொழித்து அவனைச்சாராது விட்டுவிலகலாம். எனெனில்? நட்பொழிந்தா லும் அவனைச் சேர்ந்திருத்தலாகாது. அவனைவிட்டு விலகுதல்வேண்டும். விலகாவிடில் காட்டுமரக்கள் தீப்பற்றியபோது அவற்றேறியிருந்த சந்தன மும் வேங்கையும் பற்றி எரித்துவிடுதல்போலத் தீங்குறவாதலின் 'விடல்' என்றார். அவ்வாறு நீங்கினவிடத்து நீங்கொழிவதன்றி இம்மை மறுமை யின்பங்களை யெய்தலுமுடைமைபற்றி அதனை 'ஊதியம்' என்றார். இம்மை மறுமை யின்பங்களே மக்கள் அடைதற்குரியபேறு. (7)

உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க வல்லற்க வூற்றறுப்பார் நட்பு.

(பரி-உரை) உள்ளம் சிறுகுவ உள்ளற்க - தம் ஊக்கஞ் சுருங்குதற்குக் காரணமாய வினைகளைச் செய்ய நினையாதொழிக; அல்லற்கண் ஆற்று அறுப்பார் நட்புக் கொள்ளற்க - அதுபோலத் தமக்கு ஒருதுன்பம் வந்தழிக் கையிடுவார் நட்பினைக் கொள்ளாதொழிக எ-று.

உள்ளஞ் சிறுகுவவாவன - தம்மின் வலியாரோடு தொடங்கியனவும் பயனில்லனவுமாம். ஆற்றென்பது முதனிலைத் தொழிற்பெயர். முன்னெல் லாம் வலியாற்வார் போன்று ஒழிதலின், வலியறுப்பாரென்றார். எடுத்துக் காட்டுவமை. கொள்ளின் அழிந்தே விடுமென்பதாம்.

(பத) உள்ளம்-(தம்) மனவெழுச்சி, சிறுகுவ-சுருங்குதற்குக் காரண மாகிய தொழில்களை, உள்ளற்க - (செய்ய) நினையாதிருக்கக்கடவர், (அது

* காலடியார், நல்லினஞ்சேர்தல்-10.

போல்) அல்லற்கண் - (தமக்கொரு) துன்பம் வந்தவிடத்து, ஆற்றறப்பார். வகவிடுவோரை, கட்பு-சிநேகத்தை, கொள்ளற்க-கொள்ளாதிருக்கக்கடவர் எ-று.

(க-ரை) மனந்தளரும் தொழிலைச்செய்ய நினையாதிருக்கக்கடவர் துன்பத்திற் கைவிடுவோர் கட்பைக் கொள்ளாதிருக்கக்கடவர் என்பதாம்.

(வி-ரை) அத்தொழில்களாவன: தம்மின் வலியவரோடு தொடக்கிய வையும் பயனில்லாதவையும் ஆம். முன்னெல்லாம் வலியார்போலே கடத்தலால் ஆற்றறப்பாரென்றார். ஆற்றறுத்தல் - வலியறுத்தல் (எடுத்தக்காட்டுவமை) கொண்டால் அழித்தே விடுவனென்பதாம்.

. 'உள்ளம் சிறகுவ' என்றது மனவெழுச்சி குறைதற்குக் காரணமாகிய தொழில்கள். 'ஆற்றறுத்தல்' என்றது (ஆற்ற+அறுத்தல்) வலியறுத்தல் (கைவிடல்.) 'உள்ளம் சிறகுவ' என்றது தம்மின் வலியாரோடு தொடக்கியப் போர்த்தொழில்களும், பயனில்லாத செயல்களுமாகும். 'ஆற்ற' என்றது விகுதிபெறுத தொழிற்பெயராகும். விகுதிபெறின் ஆற்றுதல் என விரியும் முன் வலியாரைப் போன்ற ஒழுகிப் பின் நீக்குதலினால் 'ஆற்றறப்பார்' என்றார். 'கொள்ளற்க' என்றதனால் கொள்ளின் அழிந்தேவிடுவன் என்பதாம். உவமானமும் உவமேயமும் தனிவாக்கியங்களாக எடுத்துக் காட்டப்படின் எடுத்துக்காட்டுவமையாம். (8)

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை படுங்காலை யுள்ளினு முள்ளஞ் சுடும்.

(பரி-உரை) கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை - ஒருவன் கெடுங்காலத்தை அவனைவிட்டு நீக்குவார் முன் அவனோடு செய்தநட்பு, அடுங்காலை உள்ளினும் உள்ளம் சுடும் - தன்னைக் கூற்று அடுங்காலத்தை ஒருவன் நினைப்பினும், அந்நினைத்த வுள்ளத்தைச் சுடும் எ-று.

நினைத்ததனையானே இயைபில்லாத பிறனுக்குக் கூற்றினுங் கொடிதாமெனக் கைவீடெண்ணிச் செய்த கட்பின் கொடுமை கூறியவாறு. இனி அவன்றானே ஆக்கியகேடு தன்னை யடுங்காலை புள்ளினும் அக்கேட்டினுஞ் சுடுமென் றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் ஆராய்ந்தால் நட்கப்படாதார் இவரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) கெடுங்காலை-(ஒருவன்) கெடுங்காலத்தை, கைவிடுவார்-(அவனை விட்டு) நீக்குவார், கேண்மை-(முன் அவனோடுசெய்த) நட்பானது, அடுங்காலை-(கூற்றுவன்) கொல்லுங்காலத்தை, உள்ளினும்-(ஒருவன்) நினைக்கினும், உள்ளம்-(அந்நினைத்த) உள்ளத்தை, சுடும்-சுட்டுவிடும் எ-று.

(க-ரை) கெடுங்காலத்தைக் கைவிடுவோர் நட்பானது இயமன் கொல்லுங்காலத்தை நினைக்கினு முள்ளத்தைச் சுடும் என்பதாம்.

(வி-ரை) நினைத்தவனவிலே சம்பந்தமில்லாத பிறனுக்கும் கூற்றனினும் கொடியதாமென்று கைவிட எண்ணிச்செய்த நட்பின் கொடுமை

சொல்லியபடி. [இவை மூன்றுபாட்டாலும் ஆராய்ந்தால் ஒகேஒக்கப்படாதவர் இவரென்பது சொல்லப்பட்டது.]

'அடுக்காலே' என்றது நமன் உயிரைக் கொண்டுபோகும் காலம். 'கைவீடு' என்றது கைவிடுதல் நினைத்த வளவிலே இயைபில்லாத பிறனுக்கு யமனிலும் கொடிதாமென்று கெடுக்காலே விட்டுநீக்கும் நட்பின் கொடுமை கூறியவாறும். 'அடுக்காலே புள்ளினும் உள்ளஞ்சுடும்' என்றது நமன் கொல்லுங்காலத்தில் நினைத்தாலும் அக்கூற்றவனுடைய வருத்தத்தினும் மிகுதியும் வருத்தம் என்றபடி. (9)

மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து மொருவுக வொப்பிலார் நட்பு.

(பரி-உரை) மாசு அற்றார் கேண்மை மருவுக-உலகோடு ஒத்துக் குற்றமற்றார் நட்பினையே பயில்க; ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக-உலகோடு ஒத்தலில்லார் நட்பினை அறியாது கொண்டாராயின், அவர் வேண்டிய தொன்றினைக் கொடுத்தாயினும் விடுக எ-று.

உலகோடொத்தார் நட்பு இருமையின்பமும் பயத்தலின் மருவுக என்றும், அதனோடு மாறுபினர் நட்புத் தன்பமே பயத்தலின் அதனொழிவை விலைகொடுத்தும் கொள்கவென்றும் கூறினர். இதனுல் அவ்விருமையும் தொகுத்துக் கூறப்பட்டன.

(ப-உரை) மாசற்றார்-(உலகோடொத்துக்) குற்றமற்றவரது, கேண்மை-நட்பையே, மருவுக-பழகக்கடவன், ஒப்பிலார்-(உலகத்தோடு) ஒத்தலில்லாதவரது, நட்பு நட்பை, (ஆராயாது கொண்டால்) ஒன்று-(அவருக்கு வேண்டிய) ஒன்றை ஈத்தும்-கொடுத்தாயினும், ஒருவுக-விடக்கடவன் எ-று.

(க-உரை) குற்றமற்றவர் நிகேதத்தைக் கொள்ளக்கடவன். ஒப்பிலார் நிகேதத்தைப் பொருள் கொடுத்தாயினும் விடக்கடவன் என்பதாம்.

(வி-உரை) உலகோடொத்தவர் நட்பு இருமையின்பமும் தருதலால் மருவுகவென்றும், அதனோடு மாறுபினவர் நட்புத்தன்பமே தருதலால் அதை விலைகொடுத்தாயினும் விடுகவென்றும் சொல்லினர். [இதனுல் நிகேகிக்கப்படுவாரும் படாரும் ஆகிய அவ்விருமையும் தொகுத்துச் சொல்லப்பட்டது.]

'மாசற்றார்' என்றது உலகத்தோடொப்ப ஒழுகுவோர். 'ஒப்பிலார்' என்றது உலகம் ஒப்புதல் இல்லாதவர். உலகத்தோடொக்க வொழுகுவார் நட்பு இம்மை மறுமையென்ற விருவகை யின்பங்களையும் பயத்தலால் 'மருவுக' என்றார். அத்தகைய உயர்வொழுக்கத்தோடு மாறுபினவரது நட்பு தன்பமே பயத்தலினுல் 'ஒன்றீத்தும் ஒருவுக' என்றார். ஈத்தும் ஒருவுகவென்றதனுல் அத்தகைய நட்பை விடல்வேண்டும் என்று வற்புறுத்தியவாறாயிற்று. (10)

80-ம் அதி - நட்பாராய்தல் - முற்றிற்று.

81-ம் அதிகாரம்—பழமை

(பரி-உரை) அஃதாவது: கட்டாரது பழையராந்தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். காரணப்பெயர் காரியத்திற்கு ஆயிற்று. ஆராய்ந்து கட்கப்பட்டாரெனினும் பொறுக்கப்படுதல் குற்றமுடையராகலாலும் ஊழ்வகையாலும் கட்டார்மாட்டுப் பிழையுளதாமென்பது அறிவித்தற்கு, இது கட்பாராய்தலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: கட்பினரது பழையராந்தன்மைபற்றி அவர் செய்த பிழைகளைப் பொறுத்தல். ஆராய்ந்து கிகேகிக்கப்பட்டாராயினும் பொறுக்கப்படும் குற்றமுடையராகலாலும், ஊழ்வகையாலும் கட்புக்கொள்ளப்பட்டவரிடத்துப் பிழையுளதாமென்பது அறிவித்தற்கு இது கட்பாராய்தலின்பின் வைக்கப்பட்டது.

பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

(பரி-உரை) பழமை எனப்படுவது யாதெனின் - பழமையென்று சொல்லப்படுவது யாதென்றவினவின், கிழமையை யாதும் கீழ்ந்திடா நட்பு. அது பழமையோர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறிதுஞ் சிதையாது அவற்றிற்குடம்படும் கட்பு எ-று.

கிழமை-ஆகுபெயர். கெழுதகைமையென வருவனவுமது. உரிமையாற் செய்வனவாவன-கருமமாயின செய்புக்காற் கேளாதுசெய்தல், கெடும்வகை செய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவச்சக்களின்மையென் றிவைமுதலாயின. சிதைத்தல்-விலக்கல். இதனுற் பழமையாவது காலஞ் சென்றதன்று இப்பெற்றித்தாய கட்பென்பது கூறப்பட்டது.

(ப-ரை) பழமையெனப்படுவது - பழமையென்று சொல்லப்படுவது, யாதெனின் - யாதென்றால், (அது) கிழமையை - (பழமையோர்) உரிமையாலே செய்தவைகளை, யாதும் - சிறிதாயினும், கீழ்ந்திடா - சிதைக்காமல் (அவைகளுக்கு உடன்படுவதாகிய,) கட்பு-சிநேகம் எ-று.

(க-ரை) பழமையென்று சொல்லப்படுவதியாதென்றால், பழமையோர் செய்தவற்றைச் சிதையாமற் கொள்ளு கட்பாம் என்பதாம்.

(வி-ரை) கிழமை-ஆகுபெயர். பின் கெழுதகைமையெனவருவதுமது. உரிமையாற் செய்தவையாவன - கருமஞ்செய்யும்போது கேளாதுசெய்தல், கெடும்வகை செய்தல், தமக்கு வேண்டுமவைகளைத் தாமே கொள்ளுதல், பணிவச்சக்களில்லாமை, இவை முதலானவை. [இதனாலே பழமையானது காலஞ்சென்றதன்று இப்படிப்பட்ட கட்பென்பது சொல்லப்பட்டது.]

'கிழமை' என்றது உரிமை. இங்கு பழையமையோர் உரிமையாற்செய்யுங் காரியங்களை புணர்த்தும் கிழமை என்னும் காரணப்பெயர்; அதனாற்செய்யுங் காரியங்களை புணர்த்துதலால். கருவியாகுபெயர். 'கீழ்ந்திடல்' என்றது

சைதற்றல், 'கீழ்நிடா நட்பு' என்றது சிதைக்காமல் பழமையோர் உரிமை யால் செய்புஞ் செயல்களுச்குச் சம்மதிக்கும் நட்பு. உரிமையாற் செய்வன: நட்பின் சிறப்பின் மிகுதியால் ஒன்றைச் செய்யும்போது நட்டாரைக் கோதற செயல், கெடுந்தன்மைசெயல், தங்களுக்கு வேண்டுகனவற்றைத் தாமே கொள்ளுதல், பணிந்தாடத்தல் அஞ்சுதல் முதலியனவாம். இதனுல் பழமையானது காலஞ் சென்றதன்று. காலத்தின் அளவை உணர்த்தலில்லை. நட்பின் சிறப்பின் மிகுதி யித்தனைத்தென்ற கூறப்பட்டது. (1)

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற் குப்பாதல் சான்ரோர் கடன்.

(பரி-உரை) நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை நட்பிற்கு அவயவமாவன நட்டார் உரிமையாற் செய்வன, அதற்கு உப்பாதல் சான்ரோர் கடன். அதனுல் அவ்வுரிமைக்கு இனியாதல் அமைந்தார்க்கு முறைமை எ-று.

வேறன்மைதோன்ற உறப்பென்ரூர். உறப்பென்பது சண்டு இலக்கண படியாக வந்த குறிப்புச்சொல். 'அவயவமாதலறிந்தே இனியவராவரென்பது தோன்றச் சான்ரோர்மேல் வைத்தார்.

(பதவுரை) நட்பிற்கு-மித்திரத்திற்கு, உறுப்பு-அவயவமான, கெழுதகைமை-(நட்பினர்) உரிமையாற் செய்பவையாம், (ஆதலால்) அதற்கு - அவ்வுரிமைக்கு, உப்பாதல்-இனிமையாதல், சான்ரோர்-நிறைந்தோர்க்கு, கடன்-முறைமை எ-று.

(க-ரை) மித்திரத்திற் கவயவமான மித்திரருரிமையாற் செய்தவையாம் என்பதாம்.

(வி-ரை) மற்ற - அசை. வேறல்லாமை தோன்ற உறப்பென்ரூர். அவயவமாகுதலறிந்தே இனியவராவரென்பது தோன்ற சான்ரோர்மேல் வைத்தார்.

'உறப்பு' என்றது அவயவம். அவயவம்போன்று துணையாயிருப்பது. அவயவம் என்றதனுனே இதன் இன்றியமையாமை பெறப்பட்டது. 'கெழுதகைமை' என்றது முன்னர் கூறிய பழமையான நிலக்கணமுடையது. 'தகைமை' என்றது உரிய தகுதியுடைமையோடு செய்யும் காரியங்களை யுணர்த்நிற்று. 'உப்புதல்' என்றது உப்பாந்தன்மையாதல். 'சான்ரோர்' என்றது நற்குணநிறைந்தோர். அவயவமாதல் அறிந்தே இனியவராவர் என்பது தோன்ற சான்ரோரது கடன் என்ற சான்ரோர்மேல் வைத்தார்.(2)

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை செய்தாங் கமையாக் கடை.

(பரி-உரை) கெழுதகைமை செய்தாக்கு அமையாக்கடை-தாமுடம் டாதனவேனும் நட்டார் உரிமையாற் செய்தனவற்றிற்குத் தாஞ்செய்தாற்

போல உடம்படாராயின், பழைய நட்பு எவன் செய்யும் - அவரோடு பழைதாய் வந்த நட்பு என்ன பயனைச் செய்யும் எ-று.

செய்தாற்போல வுடம்படுதலாவது - தாமும் அவரிடத்து உரிமையுடம்படுதல். இவை யிரண்டுபாட்டானும் பழைமையான்வரு முரிமையுஞ் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) கெழுதகைமை - (நட்பினர்) உரிமையினாலே செய்தவைகளுக்கு, செய்தாக்கு-(தாம்) செய்தவைபோல், அமையாக்கடை-உடன்படாராயின், பழைய-(அவரோடு) பழையதாய்வந்த, நட்பு-நிகேகமானது, எவன்-என்ன பயனை, செய்யும்-செய்யும் எ-று.

(க-ரை) நட்பினர் செய்தவைகளுக்குத் தாஞ்செய்யாவிடத்து நட்பென்ன பயன் செய்யும் என்பதாம்.

(வி-ரை) அப்படி உடன்படுதலாவது - தாமும் அவரிடத்து உரிமையாக உடன்படுதல். [இவை இரண்டுபாட்டாலும் பழைமையால் வரும் உரிமையுஞ் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'அமையாக்கடை' என்றது நட்பினர் உரிமையினால் செய்தவைகளுக்குத் தாம் செய்தவைபோல மனம் ஒவ்வாதபோது 'எவன் செய்யும்' என்றது பயனில்லை என்றுமாயிற்று. இதனால் நட்பினர் உரிமையாற் செய்தவைகளுக்கு உடன்படல் வேண்டுமென்றுமாயிற்று. இல்லாவிடில் பழமை நட்பினாலாய பயனில்லை. (3)

விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

(பரி உரை) நட்டார் கெழுதகையால் கேளாது செயின்-தங்கருமத்தை நட்டார் உரிமையாற் கேளாது செய்தாராயின், விழைதகையான் வேண்டி யிருப்பர் - அச்செயலது விழையப்படுந் தன்மைபற்றி அதனை விரும்புவர் அறிவுடையார் எ-று.

ஒருவர்க்குத் தங்கருமந் தாமழியாமன் முடிந்திருத்தலினாலுண்டு நன்மையின்மையின், அச்செயல் விழையத்தக்கதாயிற்று. அதனை அவ்வாறறிந்து விரும்புதல் அறிவுடையார்க்கு அல்லது இன்மையின், அவர்மேல் வைத்துக் கூறினர். வேண்டியிருப்பவென்பது எழுந்திருப்பவென்பதுபோல ஒரு சொன்னீர்மைத்து. இதனாற் கேளாது செய்தழி அதனை விரும்புவரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) நட்டார் - நட்பினர், கெழுதகையால் - உரிமையால், கேளாது - தம்மைக்கேளாது, செயின் - (தங்கருமத்தைச்) செய்தாராயின், விழைதகையான்-(அச்செயலது) விரும்பப்படுந்தன்மைபற்றி (அறிவுடையோர்,) வேண்டியிருப்பர் (அதனை) விரும்புவர் எ-று.

(க-ரை) நட்பானர் உரிமையாற் கேளாது செய்தா லறிவுடையோரதனை விரும்புவர் என்பதாம்.

(வி-உ) ஒருவர்க்குத் தங்கருமம் தாம் அறியாமல் முடிந்திருக்கையைக் காட்டிலும் நன்மை இல்லாமையால் அச்செயல் விரும்பத்தக்கதாயிற்று. அதனை 'அப்படியறிந்து விரும்புதல் அறிவுடையார்க்கல்லது இல்லாமையால் அவர்மேல் வைத்துச் சொல்லப்பட்டது. [இதனால் கோதை செய்தவிடத்து அதனை விரும்புகவென்பது சொல்லப்பட்டது.]

'விழைதகை' என்றது நட்பினராய் விரும்பப்படுந்தன்மை ஒருவர்க்குத் தஞ்செயல் தாமறியாமல் முற்றப்பெற்றிருந்தலினும் சிறந்த நன்மையில்லாமையினால் அச்செயல் விழையத்தக்கதாயிற்று. அதனை முற்றுப்பெற்ற தன்மையை யறிந்து அவர் உரிமையோடு செய்தலை விரும்புதல் அறிவுடையார்க்கல்லது மற்றவர்க்கின்மையின் அவர்மேல் வைத்துக் கூறினர். இதனைக் கோதை செய்யினும் அவர் உரிமையினோடு பழமை கருதிச்செய்ததை விரும்புகவென்பது கூறப்பட்டது. (4)

பேதைமை யொன்றே பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

(பரி-உரை) நோதக்க நட்டார் செயின் - தாம் வெறுக்கத்தக்கனவற்றை நட்டார் செய்தாராயின், பேதைமை ஒன்றே பெருங்கிழமை என்ற உணர்க- அதற்குக் காரணம் ஒன்றிற் பேதைமையென்றுதல் ஒன்றின் மிக்க வுரிமை யென்றுதல் கொள்க எ-று.

ஒன்றேவென்பது எண்ணிடைச்சொல். செயினெனவே தம்மியல்பாற் செய்யாமை பெற்றும். இது வருகின்றவற்றுள்ளும் ஒக்கும். இழவுழான் வரும் பேதைமை யாவர்க்கு முண்மையிற் றமக்கு எதங்கொண்டாரென்றுதல் ஊழ்வகையான் எம்மின் வாற்பாலது ஒற்றமை மிகுதிபற்றி அவரின் வந்ததென்றுதல் கொள்வதல்லது அன்பின்மையென்று கொள்ளப்படாதென்பதாம். கெடும்வகை செய்யின் அதற்குக் காரணம் இதனாற் கூறப்பட்டது.

(ப-உ) நோதக்க - (தாம்) வெறுக்கத்தக்கவைகளை, நட்டார் - விரும்பினவர், செயின் - செய்தால், (அதற்குக் காரணம்) பேதைமையொன்றே- அறியாமையொன்றே, பெருங்கிழமை-மிகுந்த உரிமையுமாம், என்று-என்று, உணர்க-அறியக்கடவர் எ-று.

(க-உ) வெறுக்கத்தக்கவைகளைச் சிலேர்செய்தாலது மிகுந்த உரிமையாம் என்பதாம்.

(வி-உ) செயினெனவே தம்மியல்பிலே செய்யாமை பெற்றும். இது வருகின்றவைக்குள்ளும் ஒக்கும். இழவுழால்வரும் பேதைமை யார்க்கும் உண்டாகலால் தமக்கு எதங்கொண்டாரென்றுவது ஊழ்வகையால் எம்மால் வாக்கடவது ஒற்றமை மிகுதிபற்றி அவரால் வந்ததென்றுவது கொள்வதல்லது அன்பிலாமையென்று கொள்ளப்படாதென்பதாம். [கெடும்வகை செய்யின் அதற்குக் காரணம் இதனால் சொல்லப்பட்டது.]

'கேள்' என்றது தன்பம் தன்பத்துக்கேதுவானவை. 'பழமை' என்றது உரிமை. 'ஒன்றே' என்றது எண்ணிடைச்சொல். "ஒண்பொருளொன்றே தவக் கல்வி யாள்வினை யென்றிவற்றுளுங்குக் குலம்" காலடியார். செயின் எனவே, கட்டாரானமைபற்றி தம்மியல்பாற் செய்யாமை பெற்றும், பழவினையால் வரும் பேதைமை யாவர்க்கு முண்மையிற் றமக்குந் தன்பஞ் செய்தார் என்ற அவர் தம் பேதைமையைக் காரணமாகக் கொள்க. ஊழ் வகையினால் எம்மின் வரக்கூடியதை கட்பின் ஒற்றுமை மிகுதிபற்றி அவரிடத் தண்டாயதென்ற அவர் தம் பெருங்பிழமையைக் காரணமாகக் கொள்க. இவ்வாறன்றி அன்பின்மையே காரணமென்று கொள்ளப்படா தென்பதாம். பழமை பாராட்டி கட்டார் கெடும்வகை செய்யின் அதற்குக் காரணம் இதனுற் கூறப்பட்டது. (5)

எல்லைக்க ணின்றூர் துறவார் தொலைவிட.த்துந் தொல்லைக்க ணின்றூர் தொடர்பு.

(பரி-உரை) எல்லைக்கண் கின்றூர் - கட்புலம்பிகவாத அதன்கண்ணே கின்றவர், தொல்லைக்கண் கின்றூர் தொடர்பு தொலைவிடத்தும் துறவார்- தம்மொடு பழைமையிற் றிரியாத கின்றூரத கட்பினை அவாற்றொலவு வந்தவிடத்தும் விடார் எ-று.

பழைமையிற் றிரியாமை - உரிமை யொழியாமை. தொலவு-பொருட் கேடும் போர்க்கேடும்.

(ப-உரை) எல்லைக்கணின்றூர்-(கட்பின்) வரம்பிலே கின்றவர், தொல்லைக் ணின்றூர் - (தம்மோடு) பழமையில் வேறுபடாத கின்றவரத, தொடர்பு- கட்பை, தொலைவிடத்தும்-(அவாலே) தொலவு வந்தவிடத்தும், துறவார்- விடார் எ-று.

(க-உரை) கட்பிலே கின்றவர் பழமையோர் சிநேகத்தைவிடார் என் பதாம்.

(வி-உரை) பழமையில் வேறுபடாமையாவது-உரிமையொழியாமையாம். தொலவு-பொருட்கேடு போர்க்கேடு.

'எல்லை' என்றது கட்டார் ஒழுகவேண்டிய நெறி. 'தொலவு' என்றது அழிவு; அதாவது செல்வக்கேடும் போரில் அழிவும். 'பழமையில் நிரி யாமை' என்றது சிநேகத்தன்மை உரிமை நீக்காமை. 'தொலைவிடத்தும்' என்ற உம்மையால் பழமையிற்றிரியாத கட்பு பூண்டொழுகுவார்க் தொலவு வாராத என்றுமிற்ற. (6)

அழிவந்த செய்யினு மன்பரு ரன்பின் வழிவந்த கேண்மை யவர்.

(பரி உரை) அழிவந்த செய்யினும் அன்பு அரூர் - கட்டார் தமக்கு அழிவுவந்தவற்றைச் செய்தாராயினும் அவர்மாட்டு அன்பு ஒழியார், அன்பின்

ழி கந்த கேண்மையகர் - அன்புடனே பழையதாய் வந்த கட்பினையுடை யார் எ-று.

அழியென்பதை முதனிலைத் தொழிற்பெயர். அழிவு - மேற்சொல்லிய கேடுகள். இவை இரண்டுபாட்டானும் கேடுசெய்தக்கண்ணும் கட்பு விடற் பாற்றன்றென்பது கூறப்பட்டது.

(ப-ரை) அன்பின்-அன்புடனே, வழிவந்த-பழையதாய் வந்த, கேண்மை யகர்-கட்பினையுடையகர், (கட்பினர்) அழிவந்த-அழிவுவந்தனவாகிய, செய்யி னும் செய்தாலும், அன்பறூர்-(அவரிடத்தே) அன்பு நீக்கார் எ-று.

(க-ரை) பழைமையான கட்பினையுடையகர் பிறர் அழிவானவற்றைச் செய்தாலு மன்பைவிட்டகலார் என்பதாம்.

(வி-ரை) அழிவு - முன்சொல்லிய கேடுகள். [இவை இரண்டுபாட் டாலும் கேடுசெய்த விடத்தும் விடுத்தன்மைய தன்றென்பது சொல்லப் பட்டது.]

'அழி' என்றது வுவிகுதிபெறாத தொழிற்பெயர்; விகுதிபெற்ற அழிவு என்றுகும். அழிவந்த - அழிவுவந்த கேடுடைய செயல்கள். அன்பின்வழி- பழமையாகத் தொன்றுதொட்டு வந்த கட்பின்வழி. செய்யினும் என்ற உம்மையால் பழமைபற்றி வந்த கட்பானர் அழிவனசெய்யார் ஆயிற்று. (7)

கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின்.

(பரி-உரை) கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு- ட்டார் செய்த பிழையைத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னலுங் கொள் ளாத உரிமையறிய வல்லார்க்கு, நட்டார் இழுக்கம் செயின் நாள் - அவர் பிழை செய்வாராயின், அது புயன்பட்ட நாளாம் எ-று.

பிழையாவன - சொல்லாத நற்பொருள்வினவல், பணியாமை, அஞ் சாமை முதலாயின. கேட்டல்-உட்கோடல். கெழுதகைமை வல்லாரென்பது ஒருபெயராய்க் கேளாதவென்னு மெச்சத்திற்கு முடிபாயிற்று. செய்த போற் றழியல்லது அவ்வுரிமை வெளிப்படாமையின், செய்யாதன நாளல்லவாயின. இதனுற் பிழைபொறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) கேள்-நட்பினர்து, இழுக்கம்-பிழையை, கேளா-(பிறர் சொல் லினும்) கேளாத, கெழுதகைமை வல்லார்க்கு - உரிமையறிய வல்லவர்க்கு, நட்டார்-அந்நட்பினர், இழுக்கம்-பிழையை, செயின்-செய்தால், (அது) நாள்- (பயன்பட்ட) நாளாம் எ-று.

(க-ரை) நட்பானர் பிழையைக் கேளாதவற்கு நட்பானர் பிழையைச் செய்தலது பயன்பட்ட நாளாம் என்பதாம்.

(வி-ரை) பிழையாவன: முன்சொல்லிய பணியாமை, அஞ்சாமை, நற் பொருள்வினவல் முதலானவை. கேட்டல்-உட்கொள்ளுதல். செய்தவிடத்

தல்லாமல், அவ்வல்லமை வெளிப்படாமையால் செய்யாதவை காணல்ல வாயின. [இதனால் பிழைபொறுத்தற் சிறப்புச் சொல்லப்பட்டது.]

பிழையாவன: கட்பாளரிடம் சொல்லாது தமக்கினிய பொருளை வெளவல், பணியாமை, அஞ்சாமை முதலியன. 'கேட்டல்' என்றது மனத்தன் கோடல். செய்தவிடத்தன்றி அவ்வன்மை வெளித்தோன்றுதல் ஆதலின் செய்யாத கான் காணல்லவாயின. செயின் என்றதனால் செய்யார் என்பது பெறப்பட்டது. (8)

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு.

(பரி-உரை) கெடா வழி வந்த கேண்மையார் கேண்மை-உரிமையுரை பழையதாய்வந்த கட்பினையுடையாரது கட்பினை, விடார் உலகு விழையும்: அவர் பிழைகோக்கி விடுதல் செய்யாதாரை உலகம் கட்புக்குறித்து விரும்பும் எ-று.

கெடாதென்பதன் இறந்தகால விகாரத்தாற்றொக்கது. விடாதாரை யெனவே, விடுதற்காரணங் கூறப்பட்டது. கம்மாட்டும் இவர் இத்தன்மைய ராவரென்று யாவருந் தாமே வந்த கட்பாவரென்பதாம். கெடாரென்ற பாடமோதி, கட்புத்தன்மையிற் கெடாராகி யென்றுரைப்பாருமுளர்.

(ப-உரை) கெடாஅ - (உரிமை) கெடாமல், வழிவந்த-பழையதாய் வந்த, கேண்மையார்-கட்பையுடையவரது, கேண்மை - கட்பை, விடாஅர் - (அவர் பிழைநோக்கி) விடாதவரை, உலகு - உலகமானது, விழையும் - (கட்புக் குறித்து) விரும்பும் எ-று.

(க-ரை) பழைய நிலைகர் கட்பை விடாதவரை உலகமிச்சிக்கும் என்பதாம்.

(வி-ரை) விடாதாரையெனவே விடுதற்குக்காரணம் சொல்லப்பட்டது. கம்மிடத்தும் இவர் இப்படிப்பட்டவராவரென்று யாவரும் தாமே வந்த கட்பாவரென்பதாம்.

'வழிவந்த' என்றது பழைமை கட்பின் வழிவந்த. 'உலகு' என்றது உலகத்தார். 'கெடாது' என்றது கெடாஅ என்று தொக்குவந்தது; உரிமை கெடாமல் பழைமையாகவந்த கட்டார் கட்பைவிடார் என்று சொல்லவே, அத்தகுதியல்லாதார் கட்பை விடுதற்குரிய காரணங் கூறப்பட்டது. கம்மிடத்தும் இவரித்தன்மைய கட்பாளராவரென்று யாவரும் தாமே வந்த கட்பாவர் என்பது பெற்றும். கெடார் என்று பாடமோதி கட்புத்தன்மையாற் கெடாதவராகி என்றும் பொருளுரைப்பாருமுளர். (9)

விழையார் விழையப் படுப பழைபார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

(பரி-உரை) பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார் - பழையராட்டார் பிழை செய்தாராயினும் அவர்மாட்டுத் தம் பண்பிலீக்காதார், விழையார் விழையப்படுப - பகைவராலும் விரும்பப்படுவர் எ-று.

தம்பண்பாவது - செய்யாதமுன்போல அன்புடையராதல். மூன்றனுருபுஞ் சிறப்புவ்மையும் விகாரத்தாற் றொக்கன. அத்திரிபின்மை நோக்கிப் பகைவரும் கட்டாராவரென்பதாம். இவை பிரண்டுபாட்டானும் பழமை பறிவார் எய்தும் பயன் கூறப்பட்டது.

(ப-ரை) பழையார்கண்-பழைய கட்பினரிடத்து, (அவர் பிழைசெய்தாராயினும்) பண்பிற்றலைப் பிரியாதார் - (தம்) பண்பு நீக்காதவர், விழையார்-பகைவராலும், விழையப்படுப-விரும்பப்படுவர் எ-று.

(க-ரை) பழைய நேகரிடத்துச் நேகம் நீக்காதவர் பகைவராலும் விச்சிக்கப்படுவர் என்பதாம்.

(வி-ரை) தம்பண்பாவது செய்யாத முன்போல அன்புடையராதல். அக்குணநோக்கிப் பகைவரும் கட்பினராவ ரென்பதாம். [இவை இரண்டு பாட்டாலும் பழமைமையறிவார் அடையும்பயன் சொல்லப்பட்டது.]

'விழையார்' என்றது விரும்பப்படாதவர். (பகைவர்.) 'பழையார்' என்றது பழமையான கட்புரிமையுடையார். 'பண்பு' என்றது அன்புடையாராயிருக்குந்தன்மை. விழையார் மூன்றனுருபு ஆலும் சிறப்புவ்மையும் விகாரத்தால்தொக்கது. விழையாராலும் பழைய கட்டார் பிழை செய்யினும் பண்பினின்றும் நீக்காதிருக்கும் தகைமைபற்றி பகைவரும் கட்டாராக விரும்புவர். (10)

81-ம் அதி - பழமை - முற்றிற்று.

82-ம் அதிகாரம்—தீநட்பு

(பரி-உரை) இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையின் விடற்பாலதாய, கட்பு கட்பாராய்தற்கட் சுருங்கச்சொல்லிய தன்மையானடங்காமையின் அதனை விருவகைப்படுத்து இரண்டதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கண் தீநட்புக் கூறுகின்றார். அஃதாவது: தீக்குணத்தாரோடு உளதாய கட்பு குணத்தின்றீமை ஒற்றுமைபற்றி உடையார் மேற்றாய், அத பின் அவரோடுசெய்த கட்பின்மேற்றாயிற்று. அதிகாரமுறைமை கருமையே விளக்கும்.

(உரை) இனி பொறுக்கப்படாத குற்றமுடைமையால் விடத்தக்காகிய கட்பு கட்பாராய்த லதிகாரத்தில் சுருங்கச்சொல்லி அவ்வளவில் அடக்காமையால் அதனை இருவகைப்படுத்தி இரண்டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முன்னே தீநட்புச் சொல்லுகிறார். -அஃதாவது: தீக்குணத்தாரோடு உண்டாகிய கட்பாம். அதிகாரமுறைமை சொல்லாமலே விளக்கும்.

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை பெருகலிற் குன்ற லினிது.

(பரி-உரை) பருகுவார் போலினும் பண்பு இலார் கேண்மை - காதல் மிகுதியாற் பருகுவார்போன்றாராயினுந் தீக்குணமுடையார் கட்பு, பெருகலின் குன்றல் இனிது-வளர்தலிற் றேய்தனன்று எ-று.

• "பருகு வன்ன வருகா கோக்கமொடு" என்றார் பிறரும். கற்குணமில்லாரென்பது அருத்தாபத்தியான் வந்தது. பெருகினால் வருங்கேடு குன்றினால் வாராமையின், குன்றலினிதென்றார். இதனால் தீநட்பினது ஆகாமை பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப.

(ப-உரை) பருகுவார்போலினும்-(ஆசைமிகுதியால்) உண்பவர் போன்றாராயினும், பண்பிலார் - குணமிலாரது, (தீக்குணமுடையவரது என்றபடி) கேண்மை - கட்பானது, பெருகலின் - வளர்தலினும், குன்றல் - குறைதல், இனிது-இனிதாம் எ-று.

(க-ரை) கற்குணமில்லார் கட்பானது பெருகுதலினும் சிறுகுத லினாம் என்பதாம்.

(வி-ரை) பெருகினால் வருங்கேடு குன்றினால் வாராமையின் குன்றலினிதென்றார். [இதனால் தீநட்பினதாகாமை பொதுவகையாற் சொல்லப் பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுவர்.]

'பருகுவார்போலினும்' என்றது தீர்வேட்கையுடையானொருவன் தீரைக் கண்டாலன்ன அன்பு செய்யினும். 'பண்பு' என்றது கட்புச்செய்தற்குரிய தன்மை. பருகுவன்னவருகா கோக்கமொடு என்றார் பிறரும். (பொருளாற்றுப்படை-78-வரி) இதன்பொருள். தன்னைக்கண்ணுற் பருகுந்தன்மையை யொத்த கெட்டாத பார்வையொடு. பண்பிலார் கட்பு பெருகுவதனாலுண்டாகுங் கேடு. அது குறைவின் வாராமையினால் 'குன்றலினிது' என்றார். (1)

உறினட் டறினொருஉ மொப்பிலார் கேண்மை பெறினு மிழப்பினு மென்.

(பரி-உரை) உறின் கட்டு அறின் ஒருஉம் ஒப்பு இலார் கேண்மை-தமக்குப் பயனுள்வழி கட்புச்செய்து அஃதில்வழி ஒழியும் ஒப்பிலாரது கட்பினை, பெறினும் இழப்பினும் என் - பெற்றால் ஆக்க மியாது? இழந்தாற் கேடியாது? எ-று.

தமக்குற்றனபார்ப்பார் பிறரோடு பொருத்தமிலராகலின், அவரை ஒப்பிலாரென்றார். அவர்மாட்டு நொதுமற்றன்மையே அமையுமென்பதாம்.

• பொருளாற்றுப்படை, அடி-78.

(ப-ரை) உறின் - (தமக்குப்பயன்) உள்ளவிடத்து, நட்டு - சிநேகித்து, அறின்-(அது) இல்லாவிடத்து, ஒரூஉம்-ஒழியும், ஒப்பிலார்-ஒப்பில்லாதவரது, கேண்மை - சிநேகத்தை, பெறினும் - பெற்றாலும், (என்) - (ஆக்கம்) யாது, இழப்பினும்-இழந்தாலும், என்-(செல்வம்) யாது எ-று.

(க-ரை) செல்வம் வந்தவிடத்து சிநேகித்து அது இல்லாதவிடத்துக் கைவிடுவோர்கள் சிநேகத்தைப் பெற்றாலென்ன அற்றாலென்ன என்பதாம்.

(வி-ரை) தமக்கு உற்றவை பார்ப்பவர் பிறரோடு பொருத்தமிலராதலால் அவரை ஒப்பிலாரென்றார். அவரிடத்து அயலாந்தன்மையே பொருந்துமென்பதாம்.

'ஒப்பிலார்' என்றது தன்னையொத்தகுணம். செயலிலார் - தமக்குற்ற தன்மைகளிலேயே கண்ணாயிருப்பார் பிறர் குணம் செயல்களில் பொருத்தமிலராவர். ஆதலின் அவரை 'ஒப்பிலார்' என்றார். அவரிடத்தில் தன்மையே பொருந்தும். தமது காரியத்திலே கண்ணாயிருப்பவரது நட்பினால் யாதும் பயனில்லை யென்றவாறு. என் எனும் வினா எதிர்மறைப் பொருளில் வந்தது. (2)

உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது கொள்வாருங் கள்வரு நேர்.

(பரி-உரை) உறுவது சீர்தூக்கும் நட்பும் - நட்பளவு பாராது அதனால் வரும் பயனளவு பார்க்கும் நட்டாரும், பெறுவது கொள்வாரும் - கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கொள்ளும் பொதுமகளிரும், கள்வரும் - பிறர் கேடு நோக்காது அவர் சோர்வு நோக்குங் கள்வரும், நேர் - தம்முள் ஒப்பர் எ-று.

நட்பு - ஆகுபெயர். பொருளையேகுறித்து வஞ்சித்தொழுகலின் கணிகையர் கள்வரென் றிவரோடொப்ப ரென்பதாயிற்று. இவை யிரண்டு பாட்டானுந் தமக்குறுவது பார்ப்பார் நட்பின்றீமை கூறப்பட்டது.

(ப-ரை) உறுவது சீர்தூக்கு நட்பும் - (நட்பளவு பாராமல் அதனால்) வரும் பிரயோசனத்தளவுபார்க்கும்) நட்பினரும், பெறுவது - கொள்வாரும், (கொடுப்பாரைக் கொள்ளாமல்) விலையைக்கொள்ளும் வேசையரும், கள்வரும் - (பிறர் கேடுநோக்காது அவர் சோர்வுபார்க்கும்) கள்வரும், நேர்-(தம்முள்) ஒப்பர் எ-று.

(க-ரை) நட்பின் பயனை யெண்ணுவாரும் வேசையரும் கள்ளரும் நம்மிலொப்பாவர் என்பதாம்.

(வி-ரை) நட்பு-ஆகுபெயர். பொருள்களைக்குறித்து வஞ்சித்து நடத்தலால், அவ்விருவரோடும் ஒப்பாரென்பதாயிற்று. [இவை இரண்டுபாட்டாலும் தமக்குப் பிரயோசனம் பார்ப்பவரது நட்பினது தீமை சொல்லப்பட்டது.]

'உறவது' என்றது (கட்பார்தன்மை கருதாது) தானடைபு கன்மை. 'சேர்தல்கல்' என்றது தானடைதற்குரிய சிறப்பைக் காணல் 'பெறவது' என்றது கொடுப்பாரது குணம் செயல் கோக்காது தானடையப் பெறவது. 'கட்பு' என்றது ஆகுபெயராகக் கட்புடையாரை புணர்த்திற்று. தம்மை யுற்றவரது தன்மை நோக்காது பொருளையே குறித்து வஞ்சித்து ஒழுகலின் சுயலத்தை காடுபவனும், வேசையரும் கன்வரும் ஒப்பாராவர். (5)

அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னுர்
தமரிற் றனிமை தலை.

(பரி-உரை) அமரகத்த ஆற்ற அறக்கும் கல்லா மா அன்னுர் தமரின் அமர் வாராதமுன்னெல்லாங் காக்குவதுபோன்ற வஞ்சழிக் களத்திடை வீழ்த்தப்போங் கல்வியில்லாத புரவிபோல்வாரது தமர்மையில், தனிமை தலை-தனிமை சிறப்புடைத்த எ-று.

கல்லாமை * கதியைந்தும் சாரி பதினெட்டும் பொருமுரணுற்றலும் அறியாமை. தன்பம் வாராத முன்னெல்லாங் தணையாவார்போன்ற வஞ்சழி விட்டு நீக்குவதென்பது உவமையாற் பெற்றும். அவர் தமராலும் வரும் இறுதி தனியாலுல் வாராமையின், தனிமையையுத் தலையென்றுர். எனவே, அதவுந்தீதாதல் பெறுதும்.

(ப-ரை) (முன்னெல்லாங் காக்குவதுபோலிருந்து) அமரகத்த - போர் வஞ்சவிடத்து, ஆற்றறக்கும் - போர்க்களத்திலே தள்ளிவிட்டுப் போகின்ற, கல்லா - கல்வியில்லாத, மாவன்னுர் - குதிரைபோல்பவராது, தமரின்-தமராற் தன்மையிலும், தனிமை-தனிமையாதலே, தலை-சிறப்புடைத்த எ-று.

(க-ரை) போர்க்களத்தில் விட்டோடிப்போவோர் கட்பிலுந் தனிமையாக விருத்தனல்லது என்பதாம்.

(வி-ரை) கல்லாமை - கதியைந்தும், சாரியைபதினெட்டும், போர்செய்கிறமும், அறியாமை, தன்பம்வாராத முன்னெல்லாம் தணையாவார் போன்ற வஞ்சவிடத்து விட்டு நீக்குவாரென்பது உவமையாற் பெற்றும். அவர் தமாலுல் வரும் அழிவு தனியாலுல் வாராமையால் தனிமைதலை யென்றுர். எனவே அதவும் தீதாலறிக.

'ஆற்ற அறத்தல்' என்றது தனது வன்மையை ஒழித்தல்; அதாவது தனது போர்ச்செயல் கெடும்வண்ணம் கீழே தள்ளிவிடுதல். 'கல்லா' என்றது (கல்வியில்லாத) இக்கு போர்த்தொழில் கல்வி பயிற்றப்படாத. 'மா' என்றது மிருகம் (குதிரை) செல்லும் கதி, சாரி, பொருதற்குரிய வன்மை முதலியன பழக்குவிக்கப்படாத குதிரை தான் தாங்கியவனைப் போர்க்களத்தில் வீழ்த்தி அவலுக்கிறதியைப் பயப்பதுபோல தணையாவர் போன்

* "விக்கிரமம் வல்லிதம் வெல்லுமுபதண்டம், மத்திமஞ் சாரியோடைத்து" மல்லகதி முதலியவாக வேறு கூறவதமுண்டு.

நிருந்த அயர் வர்தாலத்த விட்டு நீக்குவார் கட்பைக்கொண்டு தன்புற வதைப்பார்க்கிலும் தனிமையாயிருத்தல் நன்று. அவ்விறந்தி சோமல் தன்னேத்தானே காத்தக்கொள்ளுர் தன்மைபற்றி தனிமையைத் 'தவி' என்ருர். இத்தகைய கட்பும் தீதேயென்ருர். (4)

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

(பரி-உரை) செய்த ஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை - செய்த வைத்தாலும் அணுகாத கீழ்மக்களத தீநட்பு, எய்தலின் எய்தாமை நன்று- ஒருவர்க்குண்டாதலின் இல்லேயாதல் நன்று எ-று.

செறப்பும்மை விகாரத்தாற்றெக்கத. அணுகாமை - தொலேவின்கண் விட்டு நீக்குதல். எய்தலின் எய்தாமை நன்றென்பதற்கு மேலுரைத்தாக்கு உரைக்க. சாராதவென்னும் பெயரெச்சங் கேண்மையென்னும் பெயர் கொண்டத; சிறியவரென்பதனைக் கொள்ளின், செய்தென்ப தின்று வற்றம். இவையிரண்டுபாட்டானுங் தொலேவிற் றுணேயாகாத கட்பின்தீமை கூறப்பட்டத.

(ப-ரை) செய்த-செய்தவைத்தாலும், ஏமஞ்சாரா-காப்பாகாத, சிறியவர்-கீழ்மக்களத, புன்கேண்மை-தீநட்பு, எய்தலின்-(ஒருவனுக்கு) உண்டாதலின், எய்தாமை-இல்லாதிருத்தல், நன்று-நல்லத எ-று.

(க-ரை) சிறியவர்களுடைய தீநட்பானத ஒருவனுக்கு உண்டாதலினு மில்லாதிருக்கை நல்லத என்பதாம்.

(வி-ரை) சிறப்பும்மை வருவிக்கப்பட்டத. காவலாகாமை - தொலேவி னிடத்தவிட்டு நீக்கல். எய்தலினெய்தாமை நன்றென்பதற்கு முன் உரைத்த படி உரைக்க. [இவை இரண்டு பாட்டானும் தொலேவிலே துணேயாகாதவர் கட்பினத தீமை சொல்லப்பட்டத.]

'ஏமம்' என்றத பாதகாப்பு. 'புல்' என்றத புன்மை. ஏமம் சாராச் சிறியவர்-தன்புற்றவிடத்த அடுத்தவரைவிட்டு நீக்கும் பேதையர் எய்தலி னும் எய்தாமை நன்று. அவரோடு கூடியிருந்த இறந்தியடைவதிலும் அவரைச் சாராதிருந்த நன்மையடைதல் சிறந்தது. தனிமையே தலேயாய சிறப்பைத்தரும். (5)

பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும்.

(பரி-உரை) பேதை பெருங்கெழீஇ கட்பின் - அறிவிலானத மிகச் செறிந்த கட்பின், அறிவுடையார் ஏதின்மை கோடி உறும்-அறிவுடையாரத பகைமை கோடிமடங்கு நன்று எ-று.

கெழீஇயவென்பதன் இறந்திலே விகாரத்தாற் றெக்கத. பன்மை உயர்த்தற்கண் வந்தத. அறிவுடையான் பகைமை ஒருதீங்கும் பயவாமை

யாறும், பேதைநட்பு எல்லாத்தீக்கும் பயத்தலானும், கோடியுறுமென்றார். பெருங்கழிநட்பென்ற பாடம் ஒதுவாருமுளர்.

(ப - ரை) பேதை - அறிவில்லாதவனது, பெருங்கெழீஇ நட்பின். மிக நெருங்கிய நட்பைப் பார்க்கிலும், அறிவுடையார் - அறிவுடையவரது, எதின்மை-பகைமை, கோடியுறும்-கோடிபங்கு நல்லது எ-று.

(க-ரை) அறிவில்லார் நட்பைப் பார்க்கிலும் அறிவுடையார் பகை நல்லது என்பதாம்.

(வி ரை) அறிவுடையவனது பகைமை ஒருதீக்கு செய்யாமையாலும், பேதையினது நட்பு பல தீக்கும் செய்தலாலும் கோடியுறுமென்றார்.

கெழீய நட்பு - நெருங்கிய நேசம். இறுதி தொக்கு கெழீஇ யென்றுமிற்று. அறிவுடையார் என்ற பன்மை அவரது உயர்வுடைமை புணர்த்திற்று. அறிவுடையானது பகைமை யொருதீக்கும் பயவாது. ஆனால் பேதையார் நட்பு எல்லாத் தீக்கையும் பயக்கும்; ஆகலின் அப்பேதையார் நட்பின் தீமையை விலக்கல் கோடியுறும் என்றார். (6)

நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற் பத்தடுத்த கோடி யுறும்.

(பரி-உரை) நகை வகையர் ஆகிய நட்பின் - தாமறிதல் வகையராகாது நகுதல்வகையராதற்கு ஏதுவாகிய நட்பான் வருவனவற்றின், பகைவரால் பத்து அடுத்த கோடி உறும் - பகைவரான் வருவன பத்தக்கோடிமடங்கு நல்ல எ-று.

நட்பு - ஆகுபெயர். அந்நட்பாவது - விடமருந் தார்த்தரும் வேழம்பரும் போன்ற பலவகையான் நகுவித்தற் தாம் பயன்கொண்டொழிவாரோடு உளதாயது. பகைவராலென்பது அவாய்நிற்றலின், வருவனவென்பது வருவிக்கப்பட்டது. பத்தடுத்தகோடி - பத்தாகத் தொகுத்தகோடி. அந்நட்பான் வருமின்பங்களின் அப்பகைவரான் வரும் துன்பங்கள் இறப்பநல்லவென்பதாம். இதற்குப் பிறரெல்லாஞ் சொல்லிலக்கணத்தோடு மாறுகொளவுரைத்தார்.

(ப-ரை) நகை வகையராகிய-(தாம் அறிதல் வகையராதற்கல்லாமல்) நகுதல் வகையராதற்கு ஏதுவாகிய, நட்பின் - நட்பால், (வருமவைகளின்) பகைவரால் - பகைவரால் (வருபவை), பத்தடுத்தகோடி - பத்தக்கோடி மடங்கு, உறும்-நல்லவையாம் எ-று.

(க-ரை) நகைக்கேதுவாகிய நட்பைவிட பகைக்கேதுவாகிய நட்பு நல்லவையாம் என்பதாம்.

(வி-ரை) அந்நட்பாவது - விடமரும், தார்த்தரும், கழைக்கூத்தரும் போன்ற பலவகையால் நகுவித்தற் தாம் பயன்கொண் டொழிவாரோடு உண்டாகியது. பத்தடுத்தகோடி-பத்தாகத் தொகுத்தகோடி. அந்நட்பில் வருமின்பங்களில் அப்பகைவரால் வருந்துன்பங்கள் மிக நல்லதென்பதாம்.

நகைவகையர் = அறிவனவறிந்து செய்ய வல்ல ஆற்றலிலாது நகுதல் முதலியனவற்றிற்கு ஏற்றவர். அவராவர் விடமர், தூர்த்தர், வேழம்பர் போல்வர். நட்பு = நட்டார். உறும் = உறுதற்குரிய நன்மை. முற்கூறிய நகைவகையர் பிறரை நகுவித்துத் தாம் பயன்கொண் டொழிவராதலின் அத்தன்மையாராலடையும் கேடு பகைவரானாய கேட்டினும் மிகுதியே யென்பதுபற்றி 'கோடியுறும்' என்றார். 'பத்தடுத்தகோடி' என்றதனால் அந்நகையாளர் நட்பால் வருமின்பத்திலும் பகைவரால் வருந்துன்பம் மிகுதியு நல்லது என்பது. (7)

ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை சொல்லாடார் சோர விடல்.

(பரி-உரை) ஒல்லுங் கருமம் உடற்றுபவர் கேண்மை - தம்மான்முடியுங் கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரோடு கொண்ட நட்பினை, சொல்லாடார் சோரவிடல் - அதுகண்டால் அவரறியச் சொல்லாதே சோரவிடுக எ-று.

முடியாதாக்குதல் முடியாதாக நடித்தல். சோரவிடல்-விடுகின்றவாறு தோன்றாமல் ஒருகாலைக்கொருகால் ஓயவிடுதல். அறியச்சொல்லினும் விடுகின்றவாறு தோன்றினும் அதுபொழுது பரிகரித்துப் பின்னு நட்பா யொழுகக் கருதுவராகலின், சொல்லாடாரென்றுஞ் சோரவிடலென்றுங் கூறினார். இவை மூன்றுபாட்டானும் முறையே பேதையார், நகுவிப்பார், இயல்வது செய்யாதாரென்றிவர்கள் நட்பின்றீமை கூறப்பட்டது.

(ப-ரை) ஒல்லுங் கருமம் - (தம்மாலே) முடியுந்தொழிலை, உடற்றுபவர்- முடியாதாகச் செய்பவரோடு கொண்ட, கேண்மை-நட்பை, (அது கண்டால்) சொல்லாடார் - (அதை அவரறியச்) சொல்லாமல், சோரவிடல்-தளரவிடக் கடவர் எ-று.

(க-ரை) தம்மாலே முடியுந்தொழிலை முடியாதாகச் செய்பவருடன் கொண்ட நட்பை விடக்கடவர் என்பதாம்.

(வி-ரை) சோரவிடல்-விடுகின்றவிதம் தோன்றாமல் ஒருகாலைக்கொரு கால் ஓயவிடுதல். அறியச் சொல்லினாலும், விடுக்கின்ற விதம்தெரிந்தாலும் அப்போது பரிகரித்துப் பின்னும் நட்பாயிருக்க) நினைப்பாராகலால் சொல்லாடாரென்றும் சோரவிடலென்றும் சொல்லினார். [இவை மூன்றுபாட்டாலும் முறையே பேதையர், நகுவிப்பவர், இயல்வது செய்யாதவர், இவர் நட்புத்தீமைகள் சொல்லப்பட்டன.]

'உடற்றுபவர்' என்றது முடியாதாக்குபவர்; முடியாதவண்ணமாக நடிப்பவர். 'சொல்லாடார்' என்றது உரையாடாது. 'சோரவிடல்' என்றது சாருமாறு (தளருமாறுவிடுதல்) கைவிடுகின்றவாறு தோன்றாமல் நாளுக்கு நாள் தளரவிடல். அவரறியச் சொன்னாலும் கைநெகிழவிடுகின்ற தன்மை தோன்றினும் அப்பொழு தச்செயலை விடுத்துப் பின்னும் நட்பு செய்யக்

கருதவாரானமையின், சொல்லாடாசென்றஞ் சோவிடலென்றும் கூறினர். இதனால் இயல்வதைச் செய்யாதாகட்பின் தீமை கூறப்பட்டது 0

கனவினு மின்னாது மன்னே வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு.

(பரி-உரை) வினை வேறு சொல் வேறு பட்டார் தொடர்பு - வினையுஞ் சொல்லும் ஒவ்வாது வேறுவேறு விருப்பார் கட்பு, கனவினும் இன்னாது. கனவின்கண்ணே யன்றிக் கனவின்கண்ணு மின்னாது எ-று.

வினை சொற்கனதொவ்வாமை முதன்மே லேற்றப்பட்டது. அஃதாவது, வினையிற் பகைவராய்ச் சொல்லின் கட்டாராயிருத்தல். நிகழ்வின்கண் உளதாயிருத்தலால், கனவினுமின்னாதென்றார். உம்மை எச்சவும்மை; இழிவு சிறப்பும்மையுமாம். மன்னும் ஓவும் அசைநிலை.

(ப-ரை) வினைவேறு-தொழில்வேறு, சொல்வேறு-சொல்வேறு, பட்டார்-பட்டவரது, தொடர்பு-கட்பு, கனவினும் - (கனவிலேமாத்திரமேயல்லாமல்) கனவிலும், இன்னாது-தன்பஞ்செய்வதாகும் எ-று.

(க-ரை) தொழில்வேறு, சொல்வேறு பட்டவர் நிகேகமானது கனவிலுந் தன்பத்தரும் என்பதாம்.

(வி-ரை) தொழிலுஞ் சொல்லும் ஒவ்வாமல் வேறுவேறு விருத்தல், தொழிலிலே பகைவராயும், சொல்லிலே கட்பினராயும், இருக்கை நிகழ்ச்சியிலே உண்டாயிருத்தலாலே கனவினுமின்னாதென்றார். மன்-ஓ-அசைநிலை.

'வினைவேறு சொல்வேறு' என்றது செய்யும் செயல் வேறுயிருத்தலும், சொல்லுஞ்சொல் செயலுக்கு மாறுபட்ட தன்மையாயிருத்தலுமாம். அதாவது உரைத்தல்போல வினைநிகழாமையுமாம். இவ்விரண்டின் மாறுபட்ட தன்மை முதன்மேலேற்றிச் சொல்லப்பட்டது. தொழிலின்கண் பகைமைத்தன்மை பூண்டு தன்னலத்தை முடிப்பித்தல். சொல்லின்கண் கட்டார்போன்ற உரையாடல். 'மனம் வேறு சொல் வேறு மன்று செயல்வேறு' என்றும் பிறரும். இவை நிகழ்வின்கண்ணுனதாயிருத்தல்பற்றி அதன் தீமை கருதியொழிக்கவேண்டி கனவிலும் 'இன்னா' தென்றார். உம்மை கனவின்கண் கனவிலும் என்பதனால் எச்சவும்மை. இழிவுசிறப்பும்மையுமாம்.

எனைத்துங் குறுகுத லோம்பன் மனைக்கெழீஇ மன்றிற் பழிப்பார் தொடர்பு.

(பரி-உரை) மனைக் கெழீஇ மன்றிற் பழிப்பார் தொடர்பு - தனியே மனைக்கணிருந்தழி கட்பாடிப் பலரோடு மன்றின்கணிருந்தழிப் பழிக்குமவர் கட்பு, எனைத்தும் குறுகுதல் ஓம்பல்-சிறிதாயினுந் தம்மை கணுகுதலை பரிகரிக்க எ-று.

மனைக்கட்கெழுமலும் மன்றின்கட்பழித்தலுர் நீதாகலின், அவர் ஒருகாலுர் தம்மை கறுகாவகை குறிக்கொண்டு காக்கென்பார், அவர் கட்பின்மேல் வைத்துக் கூறினுர். இவை பிரண்டுபொட்டானும் வஞ்சர் நட்பின்றீமை கூறப்பட்டது.

(ப-ரை) மனை - வீட்டிலே, (தனித்திருந்தபோத), கெழீஇ - நட்பாடி, மன்றில் - சபையிலே, (பலருடனிருந்தபோது), பழிப்பார் - பழிசொல்லு வோது, தொடர்பு-நட்பு, எனைத்தும்-எவ்வளவு சிறிதாயினும், குறுகுதல்-(தம்மைச்) சேர்தலே, ஓம்பல்-பரிகரிக்கக்கடவர் எ-று.

(க-ரை) வீட்டிலே தனித்திருக்கையிற் சிநேகித்துச் சபையிற் பழிப்பவர் நட்புக் கொள்ளாதிருக்கக்கடவர் என்பதாம்.

(வி-ரை) அவ்விருசெயலும் நீதாகலின் அவர் ஒருபோதும் தம்மைச் சோதவிதம் குறிக்கொண்டு காக்கவேண்டுமென்பதற்கு அவர் கட்பின் மேல் வைத்துச் சொல்லினுர். [இவை இரண்டு பாட்டாலும் வஞ்சர் கட்பின் றீமை சொல்லப்பட்டது.]

'எனைத்தும்' என்றது அற்பமும். 'குறைந்தவளவு' என்றது வீட்டில் தனித்து நட்பாடி யின்னுரைகவின்று. பலர்கூடிய சபையில் பழிப்பாரது தொடர்பு கேட்டையேதரும். அத்தகைய நட்பு ஒரு சிறிதுமில்லாதபடி ஒழிக்கவேண்டும் என்பதைக் 'காக்க' வென்றுர். அதனை அவர் கட்பின்மேல் வைத்து 'தொடர்பு ஓம்பன்மின்' என்றுர். வஞ்சகர் நட்பினின்றும் தம்மைக் காத்தல் வேண்டும் என்றுர். 'அகத்தாற் கூடாதிருத்தல்' என்றது மனத்தில் நேசபான்மையில்லாதிருத்தல். 'புறத்தால் கூடியொழுகல்' என்றது வெளிக்கு பேச்சில் நட்புடையார்போலுரையாடல். இது தமக்குக் காலம் பிட்டும் வரையிலும் உரையாடி வெளிக்கு நட்டார்போன்றிருந்து மனதில் ஒரு சிறிதும் நட்பின்றி பிருத்தல்பற்றி யகத்தில் கூடாநட்பென்றுர். (10)

82-ம், அதி - நீகட்பு - முற்றிற்று.

83-ம் அதிகாரம்—கூடாநட்பு

(பரி-உரை) இனி எனைக் கூடாநட்புக் கூறுகின்றுர். அஃதாவது பகைமையான் அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந் தணையும் புறத்தாற் கூடியொழுகுவார் நட்பு.

(உரை) இனி மற்றைக் கூடாநட்புச் சொல்லுகின்றுர். அஃதாவது பகைமையால் உள்ளே கூடாதிருந்தே சமயம் கிடைக்குமளவும் புறத்திலே கூடிகடப்பவர் நட்பு.

சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

(பரி-உரை) நேரா நிரந்தவர் நட்பு - கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந்துணையுங் கூடியொழுகுவார் நட்பு, சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை - அது பெற்றால், அறவெறிதற்குத் துணையாய பட்டடையாம் எ-று.

எறியுமெல்லை வாராமுனெல்லாந் தாங்குவதுபோன்றிருந்து வந்துழி அறவெறிப்பதாய பட்டடைக்கும்அத்தன்மைத்தாய நட்பிற்குந் தொழிலொப்புமை யுண்மையான், அதுபற்றி அந்நட்பினைப் பட்டடையாக வுபசரித்தார். தீர்விடமென்று பாடமோதி முடிவிடமென் றுரைப்பாருமுளர்.

(ப-ரை) நேரா-கூடாதிருந்தே, நிரந்தவர்-(வாய்க்குமிடம் காணுமளவும்) புறத்திற் கூடிநடப்பவரது, நட்பு - சிநேகம், சீரிடம் - வாய்க்குமிடத்தை, காணின்-கண்டால், எறிதற்கு-(அற) வெறிதற்குத் (துணையாகிய,) பட்டடை-பட்டடையாகும் எ-று.

(க-ரை) வாய்க்குமிடங் கூடாதிருந்தவர் நட்பானது அந்த இடத்தைக் கண்டா லெறிதற்குப் பட்டடையாம் என்பதாம்.

(வி-ரை) எறியுங்காலம் வாராமுன்னெல்லாந் தாங்குவதுபோலிருந்து வந்தவிடதது அறவெறிவிப்பதாகிய பட்டடைக்கும் அப்படிப்பட்டதாகிய நட்பிற்கும் தொழிலொப்புமை யிருத்தலால் அதுபற்றி அந்நட்பைப் பட்டடையாக உபசரித்தார்.

'நேரார்' என்றது நேர்மை (தன்மை) யில்லாத பகைவர். நிரந்தவர்-மனமொத்த நட்பினர்போன்று புறத்தில் நேசிப்பார். சீர்இடம் - வெற்றி தருதற்குரியவிடம். பட்டடை = படு + அடை; ஒன்றை வைப்பதற்கு ஆதாரமாக அடுத்திருப்பது. பொன் முதலிய வைத்து அடிப்பதற்கும் உளி முதலியவற்றால் கெட்டுதற்கும் ஆதாரமாயிருப்பது. (1)

இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர் மனம்போல வேறு படும்.

(பரி-உரை) இனம்போன்று இனமல்லார் கேண்மை-தமக்கு உற்றார் போன்று உறாதாரோடு உளதாய நட்பு, மகளிர் மனம்போல வேறுபடும்-இடம்பெற்றாற் பெண்பாலார் மனம்போல வேறுபடும் எ-று.

அவர் மனம் வேறுபடுதல் * "பெண்மனம் பேதின் றொருப்படுப்பேனென்னு. மெண்ணி லொருவன்" என்பதனானு மறிக. நட்பு வேறுபடுதலாவது-பழைய பகையேயாதல். இவை யிரண்டுபாட்டானும் கூடாநட்பினது குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) இனம்போன்று - (தமக்கு) உற்றவர்போன்று, இனமல்லார்-உறாதவரோடு உண்டாகிய, கேண்மை-நட்பானது, (இடம்பெற்றால்) மகளிர்-பெண்பாலார், மனம்போல-நெஞ்சம்போல, வேறுபடும்-வேறுபடும் எ-று.

* வளையாபதி.

(க-ரை) உறவினர்போன்ற உறவினராகாதகர் கட்பானதை பெண்ணிதயம்போல வேறபடும் என்பதாம்.

(வி-ரை) கட்பு வேறபடுதலாவது - இடம்பெற்ருல் பழைய பகையேயாகுதல். [இவை இரண்டுபோட்டாலும் கூடாநட்பினது குற்றம் சொல்லப்பட்டது.]

'இனம்போன்றினமல்லார்' என்றது தமக்குற்றவர்போலிருந்து அதற்கே உருதவர் (செயாதவர்.) 'மகளிர்' என்றது கற்புடை மகளிரல்லாதவர். எனெனில் கற்புடையராவார் கொண்டானிற் சிறந்த தெய்வமில்லையென்று பெரியோர் அறிவு கொளுத்தக் கொண்டதேயன்றி மனவேறபாட்டிற் குரியாரல்லாதலின் இவரல்லாத ஏனைக்கன்னியரே பிற்கு பெண்பாலார் என்ற கூறப்பட்டவராகர். பெண்மனம் பேதின் ரூருப்பாப்பேனென்ற மெண்ணில் ஒருவன் (இதன்பொருன்) பெண்களிணுடைய மனத்தை வேறபடுதலில்லாமல் ஒரு தன்மையதாகச் செய்வேன் என்று மாராய்ச்சி பில்லாத ஒருவன்.

(2)

பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணூர்க் கரிது.

(பரி-உரை) கல்ல பல கற்றக்கடைத்தும் - கல்லன பலநூல்களைக் கற்ற விடத்தும், மனம் கல்லர் ஆகுதல் மாணூர்க்கு அரித - அதனுன் மனத்திருந்து கட்பாதல் பகைவர்க்கில்லை எ-று.

கல்லன-மனக்குற்றங் கெடுப்பன. மனகல்லரெனச் சினைவினை முதன்மேனின்றது. கல்லாகுதல்-செற்றம் விடுதல். உள்ளே செற்றமுடையாரைக் கல்வியுடைமைபற்றி கட்பென்ற கருதற்க வென்பதாம்.

(ப-ரை) கல்ல - கல்லனவாகிய, பல - பலநூல்களை, கற்றக்கடைத்தும்-கற்றவிடத்தும், (அதனுல்) மனகல்லராகுதல்-மனத்திருந்து கட்பினராகுதல், மாணூர்க்கு-பகைவர்க்கு, அரித-இல்லை எ-று.

(க-ரை) பலநூலைக் கற்றவிடத்த மனகலத்தராகுதல் பகைவர்க்கில்லை என்பதாம்.

(வி-ரை) கல்ல நூல் - மனக்குற்றங் கெடுப்பன. கல்லாகுதல்-சலம் விடுதல். உட்சலமுடையாரைக் கல்வியுடைமைபற்றி கட்பென்ற கொள்ளலாகாதென்பதாம்.

'கல்ல' என்றது கன்மையைத்தருவன. (மனதின்கண்ணுள்ள குற்றங்களைக் கெடுப்பன) 'கற்றக்கடைத்தும்' என்றது கற்றறிந்தாலும் பகைமை கொண்ட மனத்தினராதல்பற்றி நலமையைக் கருதாதலன்றி கன்மையைக் கருதாராதல்பற்றி யவர்கற்ற கல்வி யொருசிறிதும் பயன்றராத என்பதை விளக்கும். பல என்ற மிகுதிப்பொருளை புணர்த்தஞ்சொல் அவர் சிறிதும்

மனலமுடையாராகார் என்பதை வற்புறுத்தும் மன ஈல்லது என்பது கல்வி என்ற சினை (உறப்பு) வினை முதன்மேனின்றது. 'கல்லார் ஆகுதல்' என்றது மனத்திற்குரிய குற்றங்களை யொழித்தல். வெஃகல்-வெகுளல். பொல்லாக் காட்சியென் றன்னந்தன்னி லுருப்பன மூன்று என்றார் பிறரும். (மணிமேகலை) உள்ளத்தின்கண்ணுள்ள குற்றமுடைமையாரைக் கல்வி புடைமைபற்றி கட்பென்ற கருதலாகாது. (3)

முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா வஞ்சரை யஞ்சப் படும்.

(பரி-உரை) முகத்தின் இனிய நகாஅ அகத்த இன்னா வஞ்சரை. கண்டபொழுத முகத்தால் இனியவாகச் சிரித்த எப்பொழுதும் மனத்தா லின்னாய வஞ்சரை, அஞ்சப்படும்-அஞ்சல்வேண்டும் எ-று.

நகையத வகைபற்றி இனியவென்றும்,- அகத்தச் செற்றம் சிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்த வினைத்தலின் வஞ்சரென்றும், அச்செற்றங் குறிப்பறிதற் கருவியாய முகத்தானுந் தோன்றுமையின் அஞ்சுதல் செய்யப்படுமென்றங் கூறினார். இவை யிரண்டுபோட்டானுங் குற்றத்திற்கு ஏதுவாய அவர் கொடுமை கூறப்பட்டது.

(ப-ரை) (கண்டபோது) முகத்தின் - முகத்தால், இனிய - இனிமை புள்ளனவாக, நகாஅ-சிரித்த, அகத்த மனத்தால், இன்னா-(எப்பொழுதும்) இனியராகாத, வஞ்சரை-வஞ்சகரை, அஞ்சப்படும்-அஞ்சல்வேண்டும் எ-று.

(க-ரை) முகமலர்ந்த நகைத்த அகமலராத வஞ்சகருக்குப் பயப்பட வேண்டும் என்பதாம்.

(வி-ரை) நகையத வகைபற்றி இனியவென்றும், மனத்திலே சலம் தோன்றுகிற்கவும் அதற்கு விரோதமாகிய நகையைப்புறத்திலே காட்டலால் வஞ்சரென்றும், அச்சலம் குறிப்பறிதற்குச் சாதனமாகிய முகத்தாலும் தோன்றுமையால் அஞ்சப்படுமென்றும் சொல்லினார். [இவை இரண்டுபோட்டாலும் குற்றத்திற்கு ஏதுவாகிய அவர் கொடுமை சொல்லப்பட்டது.]

'முகத்தின் இனிய' என்றது முகமலர்ச்சியால் இனிமைவாய்ந்த கட்பா ராக. முகமலர்ச்சியோடு கூடிய நகையுடைமைபற்றி 'இனிய' வென்றும், மனத்தின்கண் செற்ற முதலிய குற்றங்கள் சிகழவும், அவற்றிற்கு மாறாய நகையைப் புறத்தே காட்டுகின்ற வஞ்சமுடைமைபற்றி 'வஞ்சகர்' என்றும், மற்றும் அக்குற்றங்கள் குறிப்பறிதற்குரிய கருவியாகிய முகத்தானுந் தோன் றுமையால் அவையஞ்சுதல் வேண்டும் என்றறிவிக்க 'அஞ்சப்படும்' என்றும் கூறினார். (4)

மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ் சொல்லினுற் றேறற்பாற் றன்று.

(பரி-உரை) மனத்தின் அமையாதவரை - மனத்தாற் றம்மொடு மேவா தாரை, எனைத்தொன்றும் சொல்லிலுல் தேறற்பாற்று அன்று - யாதொரு கருமத்திலுஞ் சொல்லாற் றெளிதன்முறைமைத் தன்று நீதிநூல் எ-று.

நீதிநூலென்றது அகாய்நிலையான் வந்தது. பகைமை மறைத்தற் பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச் சொல்லைச் செவ்விய சொல்லெனக் கருதி அவரைக் கருமங்களிற்றெளிதல் நீதிநூன்முறைமை யன்றென்பதாம்.

(பதவுரை) மனத்தின்-மனத்தால், அமையாதவரை - (தம்மோடு) பொருந் தாதவரை, எனைத்தொன்றும்-யாதொரு கருமத்திலும், சொல்லிலுல்-சொல் லிலுல், தேறற்பாற்று-தெளிதன் முறைமையது, அன்று-அல்ல, (என்று நீதி நூல்) சொல்லும் எ-று.

(க - ரை) மனமொவ்வாதவரை யாதொரு சொல்லாலுந் தெளிதல் கூடாது என்பதாம்.

(வி-ரை) பகைமை மறைத்தற்பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச் சொல்லை நல்ல சொல்லென நினைத்து அவரைக் கருமங்களிலே தெளிதல் நீதிநூலின் முறைமை அன்றென்பதாம்.

'மனத்தால் பொருந்தாதவர்' என்றது மனமொத்த நட்பில்லாதவர். அதாவது ஒருமனப்படாதவர். கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தை யாருக்குமுள்ள மனப்பான்மையில்லார். மனமொவ்வாதபோது அதன்பின் நிகழும் சொல்லும், அதனைப்பற்றிவரும் செயலும் ஒவ்வாதென்பதாம். ஆதலின் அகத்தே நிகழும் பகைமையை மறைத்தல்வேண்டி, அவரது வஞ்சகச் சொல்லைச் செவ்வியதெனக்கொண்டு தெளிதல் நீதியன்று என்பதாம். (5)

நட்டார்போ னல்லவை சொல்லி னுமொட்டார்சொ லொல்லை யுணரப் படும்.

(பரி-உரை) நட்டார்போல் நல்லவை சொல்லினும் - நட்டார்போன்று ன்மைபயக்குஞ் சொற்களைச் சொன்னாலினும், ஒட்டார் சொல் ஒல்லை உணரப்படும்-பகைவர் சொற்கள் அது பயவாமை அச்சொல்லியபொழுதே றியப்படும் எ-று.

சொல்லினுமெனவே, சொல்லாமையே பெற்றும். ஒட்டாராதலாற் நீமைபயத்தல் ஒருதலையென்பார், ஒல்லை யுணரப்படுமென்றார்.

(பதவுரை) நட்டார்போல்-நட்பினர்போல், நல்லவை-நன்மையைத்தருஞ் சொற்களை, சொல்லினும்-சொன்னாலும், ஒட்டார்சொல்-பகைவர்சொற்கள், அது தாராமை) ஒல்லை - விரைவிலே, (சொல்லியபொழுதே யென்றபடி) உணரப்படும்-அறியப்படும் எ-று.

(க-ரை) நட்பாளர்போல நல்ல சொற்களைச் சொன்னாலும் பகைவர் சொற்கள் நலந்தாராமை யறியப்படும் என்பதாம்.

(வி-ரை) சொல்லினெனவே அவர் அவை சொல்லாமையே பெற்றும் பகைவராதலால் நீமை தருதற்கு ஐயமில்லை யென்பதற்கு ஒல்லை புணரப்படு மென்றார்.

'ஒட்டாதார்' என்றது மனம் வாக்கு செயல்களில் ஒன்றுதலர். கல்லவை சொல்லினும் என்ற உம்மை கல்லவை சொல்லார் நீயனவே சொல்வர் என்றுயிற்று. நிரிகரணங்களிலும் பொருந்திய கட்பில்லாதவர் செய்த நீமை பயத்தலே யென்பது நிண்ணமாதலால் ஒல்லை (விரைந்து) உணரப்படுமென்றார். (6)

சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வண
நீங்கு குறித்தமை யான். [க்கந்

(பரி-உரை) வில்வணக்கம் நீங்கு குறித்தமையான்-வில்லினது வணக்கம் எற்றவர்க்குத் நீமைசெய்தலைக் குறித்தமையால், ஒன்னார்கண் சொல்வணக்கம் கொள்ளற்க - பகைவர்மாட்டுப் பிறக்குஞ் சொல்லினது வணக்கத்தையும் தமக்கு நன்மை செய்தலைக் குறித்ததென்று கருதற்க எ-று.

தம்வணக்கமன்றென்பது தோன்றச் சொல்வணக்கமென்றும், வில்வணக்கம் வேறுயினும் வணங்குதலொப்புமைபற்றி அதன் குறிப்பை யேற்வாக்கியும் கூறினர். வில்லியது குறிப்பு அவனிறைய வில்வணக்கத்தின்மே னிற்றலான், ஒன்னாரது குறிப்பும் அவரிறைய சொல்வணக்கத்தின் மேனாயிற்று. இதவும் நீங்கு குறித்த வணக்கமென்றே கொண்டு அஞ்சிக்காக்க வென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அவரைச் சொல்லாற்றெளிபற்க வென்பது கூறப்பட்டது.

(ப-ரை) வில்வணக்கம் - வில்லினது வணக்கம், நீங்கு-(எற்றவர்க்குநீ) நீமைசெய்தலை, குறித்தமையான் - குறித்ததனால், ஒன்னார்கண் - பகைவரிடத்தே (பிறக்கும்), சொல்வணக்கம் - சொல்லினது வணக்கத்தையும், கொள்ளற்க-(தமக்கு நன்மைசெய்தலைக் குறித்ததென்று) கினையாதிருக்கக் கடவர் எ-று.

(க-ரை) வில்வணக்கக் நீக்கைத்தருதலால் பகைவரிடத்துச் சொல்வணக்கம் கொள்ளாதிருக்கக்கடவர் என்பதாம்.

(வி-ரை) தம்வணக்கம் அன்றென்பது தோன்ற சொல்வணக்கமென்றும், வில்வணக்கம் வேறுயினும் வணங்குதலொப்புமைபற்றி அதன்குறிப்பையே ஏதுவாக்கியும் சொல்லினர். வில்லினன்குறிப்பு அவனிறைய வில்வணக்கத்தின்மேல் நிற்றலால் பகைவரது குறிப்பும் அவரிறைய சொல்வணக்கத்தின் மேலதாயிற்று. இதவும் நீங்கு குறித்த வணக்கமென்றே கொண்டு அஞ்சிக்காக்க வேண்டுமென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் அவரைச் சொல்லாலே தெளியலாகாதென்பது சொல்லப்பட்டது.]

வில்வணக்கம் என்றது கணையெய்வதற்குக் காரணமாகையால் நீங்கு குறித்ததாயிற்று. சொல்வணக்கம் - மனமொன்றுதாது பணிவுடையசொல்

தம் வணக்கமென்பது-ஒத்த உண்மை கட்பிலுல் மனம் குழைவது. இத்தகைய உண்மை யில்லையென்பது தோன்ற சால்வணக்கம் என்றார். வில்லை புடையவன் குறிப்பை வில்லின்மேலேற்றிக் கூறியதுபோல பகைவரது குறிப்பையும் அவர் சொல்லின் வணக்கத்தின்மேலேற்றிச் சொல்லப்பட்டது. இத்தகைய வணக்கமும் நீமை குறித்ததேயென்று அஞ்சிக் காக்க வேண்டுமென்பதாம். (7)

தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னு ரழுதகண் ணீரு மினைத்து.

(பரி-உரை) ஒன்னுர் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் - ஒன்னுர் குறிப்பை புணரவல்லார்க்கு அவர் தொழுத கையகத்தும் படைக்கலம் மறைந்திருக்கும்; அழுத கண்ணீரும் அனைத்து - அவரழுத கண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருத்தற்கிடனும் எ-று.

தாடட்பென்பதனைத் தன்கையானுங் கண்ணுனுந் தேற்றிப் பின்கோறற்கு வாங்க விருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித் தேற்றுகின்றபொழுதே அவற்றன்னே தோன்றுமென்பார், ஒடுங்குமென்றார். பகைவர் தம்மென்மை காட்டித் தொழினுமழினும், அவர் குறிப்பையே நோக்கிக் காக்கவென் பதாம். இதனுல் அவரைச் செயலாற் தெளியற்கவென்பது கூறப்பட்டது.

(ப-உரை) (பகைவர் குறிப்பை அறியவல்லார்க்கு) ஒன்னுர் - பகைவர், தொழுதகையுள்ளும்-கும்பிட்ட கையுள்ளும், படை-ஆயுதமானது, ஒடுங்கும்-மறைந்திருக்கும், அழுதகண்ணீரும் - (அவர்) அழுதகண்ணீரும், அனைத்து-அப்படியே அது மறைந்திருத்தற்கு இடமாம் எ-று.

(க-உரை) பகைவர் கும்பிட்ட கையோடு மாயுத மறைந்திருக்கும், அப் பகைவ ரழுதகண்ணீரு மப்படியே என்பதாம்.

(வி-உரை) தாம் கட்பென்பதனைத் தன்கையாலும், கண்ணுலும், நம்புவித் தப் பின் கொல்லுதற்கு எடுக்கவிடுகின்ற ஆயுதம் ஆலோசித்தறியும்போது நம்புவிக்கின்றபொழுதே அவைகளுள்ளே தோன்றுமென்பதற்கு ஒடுங்கு மென்றார். பகைவர் தமது தளர்ச்சிகாட்டித் தொழுதாலும், அழுதாலும், அவர் குறிப்பையே நோக்கிக் காத்துக்கொள்க வென்பதாம். [இதனுல் அவரைச் செயலால் தெளியலாகாதென்பது சொல்லப்பட்டது.]

'ஒன்னுர்' என்றது ஒன்றுதவர். (நம்முடன் மனமொவ்வாதவர்) கட்பென் பதனை வணக்குகின்ற தன்கையானும், அன்புக் கறிகுறியாகிய அழுகையை புடைய கண்ணுலும் தெளியச்செய்து பின் வஞ்சமாகக் கொல்லவாங்க விருக் கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித் தேற்றுகின்றபொழுதே அவற்றன்னே காணப்படும் என்பது தோன்ற ஒடுங்குமென்றார். பகைவர் தம்மெளிமை காட்டித் தொழினும் அழினும் அவர் குறிப்பை யுய்த்துணர்ந்து காக்க வவரைச் செயலாற் தெளியாது குறிப்பாலுணர்க என்றுயிற்று. (8)

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

(பரி-உரை) மிகச் செய்த தம் எள்ளுவாரை - பகைமை தோன்றும் புறத்தின்கண் கட்பினை மிகச்செய்த. அதனின்கட் டம்மை மிகழும் பகை வரை, கட்பினுள் நகச்செய்த சாப் புல்லற்பாற்று - தாமும் அக்கட்பின் கண்ணே நின்று புறத்தின்கண் அவர் மகிழும் வண்ணஞ்செய்த அகத்தின் கண் அது சாம்வண்ணம் பொருந்தற்பான்மை புடைத்த அரசநீதி எ-று.

நின்றென்பதூஉம் அரசநீதியென்பதூஉம் அவாய்நிலையான் வந்தன. அகனொன்று புறனொன்றுதல் ஒருவற்குத் தகாதெனினும் பகைவர்மாட் டாயிற் றகுமென்பது நீதிநூற்றுணிபென்பார், அதன்மேல் வைத்துக் கூறினர். சாவவென்பத னிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. * "கோட்டில் வாய்ச் சாக்குத்தி" என்புழிப்போல. எள்ளுவாரைப் புல்லலெனக் கூட்டுக.

(ப-ரை) (அரசநீதியானது) மிகச்செய்த - (புறத்திலே கட்பை) மிகச் செய்து, தம்மெள்ளுவாரை - (உள்ளே) தம்மை இகழும் பகைவரை, கட்பி னுள்-(தாமும்) அக்கட்பினிடத்தே நின்று, நகச்செய்த - (புறத்திலே அவர்) மகிழும்படிசெய்து, சாப்புல்லற்பாற்று-(உள்ளே அது) சாம்படிக்குப் பொருந் தற் றன்மைபுடைத்த எ-று.

(க-ரை) இராசநீதியானது புறத்து கட்பை மிகச்செய்து இகழ்பவரை கட்பில் மகிழும்படிசெய்து பொருந்துந்தன்மை புடையது என்பதாம்.

(வி-ரை) நின்றென்பதும் அரசநீதியென்பதும் வருவிக்கப்பட்டன. உள்ளொன்று புறமொன்றுதல் ஒருவருக்குத் தகாதாயினும் பகைவரிடத் தானால், தருமென்பது நீதிநூலது துணிவென்பதற்கு அதன்மேல்வைத்துச் சொல்லினர். எள்ளுவாரைப் புல்லலெனக் கூட்டுக.

நின்றென்பதுவும் அரசநீதியென்பதுவும் வருவிக்கப்பட்டன. அஃதொன்றும் புறத்தொன்றுமாயிருத்தல் ஒருவற்குத் தக்கதல்லவென்னும் நீதிநூல். ஆனால் பகைவரிடத்தில் அவ்வாறிருத்தல் தகுமென்னும். சாவ வென்பதனிறுதிகெட்டது. 'சாவுபுல்லல்' என்றது மாணமடைதல். மனத்தில் அப்பகைமைக்குணம் கெடும்படி நட்புக்கொள்ளல் வேண்டும். (9)

பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட் டகநட் பொரீஇ விடல்.

(பரி-உரை) பகை நட்பாம் காலம் வருங்கால்-தம்பகைவர் தமக்கு நட்டாரா யொழுகுங்காலம்வந்தால், முகம் நட்பு அகம் நட்பு ஒரீஇ விடல். தாமும் அவரோடு முகத்தால் நட்புச்செய்த அகத்தால் அதனைவிட்டுப் பின்னதுவந்தவிர்க எ-று.

---

* கலி, முல்லை 5.

அக்காலமாவது - தம்மானும் பகையென்று வெளிப்பட நீக்கலாகாத வளவு. இதனானே ஆபத்தெல்லாம் நீக்குகவென்பது பெற்றும். இவை பிரண்டு பாட்டானும் அங்கட்பிடை யொழுகுமாறு கூறப்பட்டது.

(பதவுரை) பகை - (தம்) பகைவர், கட்பாங்காலம் - நட்பினராய் நடக்குங் காலம், வருங்கால் - வந்தால், முகம் - (காரும்) முகத்தால், கட்டு (அவரோடு) நட்புச்செய்த, அகம்-மனத்தால், நட்பு-டேபை, ஓரீஇ - நீக்கி, விடல்-(பின் அதவும்) விடக்கடவர் எ-று.

(கருத்து) பகை நட்பாகுங்காலத்தில் முகநட்பாய்ச் சிநேகித்து அகநட்பு விடல்வேண்டும் என்பதாம்.

(வி-வரை) அக்காலமாவது-தம்மாலும் பகையென்று வெளிப்பட நீக்கக் கூடாதவளவு. இதனாலே கூடுமளவெல்லாம் நீக்குகவென்பது பெற்றும் [இவை இரண்டுபாட்டாலும் அங்கட்பிடத்து நடக்கும்விதம் சொல்லப் பட்டது.]

'பகை' என்றது பண்பாகுபெயராய் பகைவரை யுணர்த்தும். பகைவர் நட்பாகுங் காலத்தும் தம் பகைமைக்குணம் ஒழியாராதலின் அவரைப் போலவே முகநட்டு அகத்தே அங்கட்பிணைக்கொள்ளாது விடுத்தல் வேண்டும். இவ்வகை சேசித்தாலன்றி நட்புறின் அவரால் நீக்குறுவர். இவ்விரண்டுபாட் டானும் அப்பகைவரிடம் நட்பின்கண் ணொழுகுந்தன்மை கூறப்பட்டது. (10)

83-ம் அதி - கூடாநட்பு - முற்றிற்று.

84-ம் அதிகாரம்—பேதைமை

(பரி-உரை) இனி, அங்கட்பினை யெதிர்மறுத்துப் பகைமுகத்தாற் கூறியதொடங்கினார். அப்பகைதான் முற்றக்கடியுங் குற்றவன்மையினுளவாய வெகுளியானுங் காமத்தானும் வருவதாம். அவற்றுள் வெகுளியான் வருவன ஐந்ததிகாரத்தானும், காமத்தான் வருவன ஐந்ததிகாரத்தானுங் கூறுவார். அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இருவகைப்படுத்து, இரண் டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட்பேதைமை கூறுகின்றார். அஃதாவது யாதுமறியாமை.

(உரை) இனி அங்கட்பை எதிர்மறுத்துப் பகைமுகத்தாலே சொல்லத் தொடங்கினார். அப்பகை தான் முழுவதும் விடலாகாத குற்றமாகிய குரோதத் தாலும், காமத்தாலும் வருவதாம். அவைகளுள், குரோதத்தால் வருபவை ஐந்ததிகாரத்தாலும் காமத்தால் வருபவை ஐந்ததிகாரத்தாலும் சொல்லு தற்கு அவ்விரண்டுக்கும் அடியாகிய மயக்கத்தை இருவகைப்படுத்தி இரண் டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முதலிலே பேதைமை சொல்லுகின்றார். அஃதாவது யாதொன்றும் அறியாமை.

பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொ
தியம் போக விடல். [ண்

(பரி·உரை) பேதைமை என்பது ஒன்று·பேதைமையென்று சொல்லப் படுவது ஒருவனுக்கு ஏனைக்குற்றங்களெல்லாவற்றினும் மிக்கதொன்று யாதை எனின் ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல்·அதுதான் யாதென்று வினவின், தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு ஆக்கம் பயப் பனவற்றைக் கைவிடுதல் எ·று.

கேடு·வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம்·செல்வம், புகழ், அறங்கள். தானே தன்னிருமைபுங் கெடுத்தக்கோட லென்பதாம்.

(ப·உரை) பேதைமையென்பது·அறியாமையென்று சொல்லப்படுவது ஒன்று·(மற்றைக் குற்றங்களினெல்லாம் மிகுந்த) தொன்று, 'யாதெனின்' (அது) யாதென்று வினவினால், ஏதங்கொண்டு·(தனக்குக்) கேடுதருமவை களைக் கைக்கொண்டு, ஊதியம்·ஆக்கந்தருமவைகளை, போகவிடல்·கைவிடு தல் எ·று.

(க·உரை) அறியாமை யென்பதி யாதென்றால் குற்றங்களைக்கொண்டு இலாபத்தை விடுதல் என்பதாம்.

(வி·உரை) கேடு·வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம்·செல்வம், புகழ், அறங்கள். பேதைமை·தானே தன் னிருமைப்பயனும் கெடுத்துக்கொள்ளு மென்பதாம்.

'பேதைமையே' என்றது ஏனைய குற்றங்கள் யாவற்றிற்கும் காரண மாகையால் குற்றங்களெல்லாவற்றினும் மிக்கதென்றார். 'கேடு' என்றது கெடுதற்குரிய வறுமை; பழி பாவங்கள். ஆக்கம்·ஒருவனது ஆக்கத்திற்கு (சுவர்க்கத்திற்குக்) காரணமானது செல்வம் புகழ் அறங்கள். 'ஊதியம் போக விடல்' என்றது ஆக்கந்தருமவைகளைக் கெடுத்தக்கோடல். (1)

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கட் செயல்.

(பரி·உரை) பேதைமையுள் எல்லாம் பேதைமை·ஒருவனுக்குப் பேதைமை யெல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது, கையல்லதன்கண் காதன்மைசெயல்·தனக்காகாத ஒழுக்கத்தின்கட் காதன்மை செய்தல் எ·று.

இருமைக்கும் ஆகாவென்று நூலோர் கடிந்த செயல்களை விரும்பிச் செய்தலென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் பேதைமையதிலக்கணங் கூறப்பட்டது.

(ப·உரை) (ஒருவனுக்குப்) பேதைமையுளெல்லாம்·பேதைமை யெல்லாவற் றுள்ளும், பேதைமை மிகுந்த பேதைமையாவது, கையல்லதன்கண்·(தனக்கு) ஆகாத செய்கையில், காதன்மை·ஆசையை, செயல்·செய்தல் எ·று.

(க·உரை) அறிவில்லாமை எல்லாவற்றுள்ளு மறிவில்லாமையாவது ஆகாத செய்கையைச் செய்தல் என்பதாம்.

(வி-ரை) இருமைக்கும் ஆகாவென்ற நூலோர் விதித்த செயல்களை விரும்பிச் செய்தலென்பதாம். [இவை இரண்டுபோட்டாலும் பேதைமையது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'கை' என்றது ஒழுக்கம். பேதைமையுள் பேதைமையென்பது மிக்க பேதைமை. இருமையென்பது இருமைப்பயன். 'கையல்லது' என்றது இருமைப்பயனை யடைதற்குத் தக்கனவல்லவென்ற நூலோர் விதித்த செயல்கள்.

நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில்.

(பரி-உரை) நாணுமை-நாணவேண்டுமவற்றுக்கு நாணுமையும், நாடாமை-நாடவேண்டுமவற்றை நாடாமையும், நார் இன்மை - யாவர்மாட்டும் முறிந்த சொற்செயலுடைமையும், யாதொன்றும் பேணுமை-பேணவேண்டுமவற்றுள் யாதொன்றினையும் பேணுமையும், பேதை தொழில் - பேதையது தொழில் எ-று.

நாணவேண்டுமவை-பழி பாவங்கள். நாடவேண்டுமவை - கருமங்களிற் செய்வன தவிர்வன. முறிதல் - கண்ணறுதல், பேணவேண்டுமவை - குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கமுதலாயின. இவை பேதைக்கு எஞ்ஞான்றும் மிடல் பாய் வருதலின் தொழிலென்றார்.

(ப-ரை) நாணுமை - (நாணவேண்டுமவைகளுக்கு) நாணுமையும், நாடாமை - (நாடவேண்டுமவைகளை) நாடாமையும், நாரின்மை - (யாவரிடத்தும்) முறிந்த சொற்செயலுடைமையும், யாதொன்றும்-(பேணவேண்டுமவைகளுள்) யாதொன்றையும், பேணுமை - பேணுமையும், பேதைதொழில்-மூடனது தொழில்களாம் எ-று.

(க-ரை) நாணுமையும் நாடாமையும் நாரின்மையும் யாதொன்றையும் பேணுமையும் அறிவீனருடைய தொழில்களாம் என்பதாம்.

(வி-ரை) நாணவேண்டுமவை - பழி பாவங்கள். நாடவேண்டுமவை-கருமங்களிலே விதிவிலக்குகள். முறிதல்-கண்ணறுதல். பேணவேண்டுமவை-குடிப்பிறப்புக் கல்வி யொழுக்க முதலாயின. இவை பேதைக்கு எக்காலும் மிடல்பாய் வருதலாலே தொழிலென்றார்.

நாணவேண்டுமவை - பழி பாவங்கள் "தலைபலாம் சொற்பழி யஞ்சி விடும்" என்பது காலடி. 'நாடவேண்டுவன' என்பது கைக்கொள்ளுதற்குரிய நற்செயல்களைச்செய்தல்; அகற்றுதற்குரிய தீச்செயல்களைக்கடிதல். அவை: 'கொலையே களவே காமத் தீவிழை, வுலாவா வுடம்பிற் றோன்றுவ மூன்றும், பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில், சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும், வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென், றன்னந் தன்னி னிருப்பன மூன்று"மென, (மணிமேகலை.) 'நாரின்மை'என்றது யாவரிடத்தும் முறிந்தசொல் செயலுடைமை. அதாவது: யாவரிடத்தும் கண்ணோட்ட

மில்லாத பேசுதலும் தொழில்செய்தலுமாலும். பேணவேண்டுமென்று போற்றுதற்குரியன. உயர்குடிப்பிறப்பு - கல்வி அறிவு ஒழுக்கமுதலியன. இவை பேதைக்கு என்ற மியற்கைத்தொழில்களாம்.

ஒரு யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப் பேதையிற் பேதையா ரில்.

(பரி-உரை) ஒரு-மனமொழிமெய்கள் அடக்குதற்கு ஏதுவாய நூல்களோதியும், உணர்ந்தும்-அவ்வடக்கத்தான் வரும் பயனையுணர்ந்தும், பிறர்க்குரைத்தும் - அதனை யறியலுறப் பிறர்க்குரைத்தும், தான் அடக்காப் பேதையின் - தான் அவையடக்கி யொழுகாத பேதைபோல, பேதையா ரில்-பேதையார் உலகத்தில்லை எ-று.

உம்மை மூன்றும் கூட்டப்பட்டது. இப்பேதைமை தனக்கு மருந்தாய இவற்றும் நீராமையாலும், வேற்றுமருந்தின்மையாலும், பேதையிற் பேதையாரில்லென்றார். இவை பிரண்டுபாட்டாலும் பேதையது தொழிற் பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறப.

(ப-உரை) ஒரு - (மன மொழி மெய்கள் அடக்குதற்கு ஏதுவாகிய நூல்களை) ஓதியும், உணர்ந்தும் - (அவ்வடக்கத்தால்வரும் பயனை) அறிந்தும், பிறர்க்கு-பிறருக்கு, உரைத்தும் - (அதனை அறியும்படி) சொல்லியும், தான் தான், அடக்கா - (அவை) அடக்கி நடவாத, பேதையின் - மூடன்போல், பேதையார் - மூடர், இல் - (உலகில்) இல்லை எ-று.

(க - ரை) கற்றறிந்தும் பிறர்க்குக் கற்பித்தந் தானடங்காத அறிவினன்போ லறிவீனனில்லை என்பதாம்.

(வி-ரை) இப்பேதைமை தனக்கு மருந்தாகிய இவைகளாலே நீராமையாலும், வேற்று மருந்தில்லாமையாலும், பேதையிற் பேதையாரில்லென்றார். [இவை இரண்டுபோட்டாலும் பேதையது தொழில் பொதுவகையால் சொல்லப்பட்டது.] இனிச் சிறப்புவகையாற் கூறுவர்.

'உணர்தல்' என்றது மனக்கொள்ளல். 'அடக்காப்பேதை' என்றது நீச்சிந்தை, நீச்சொல், நீச்செயல்களையுடைய பேதை. ஒருயுணர்தலும் பிறர்க்குரைத்தலும் பேதைமைக்கு மருந்தாயின. இம்மருந்துக்களாலும் ஒழிக்க முடியாமைபற்றி பேதையிற் பேதையாரில் என்றார்.

ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந் தான்புக்கழுந்து மளறு.

(பரி-உரை) பேதை-பேதையாயினுள், எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு - வரும் பிறவிகளெல்லாந் தான் புக்கழுந்தும் கிரயத்தினை, ஒருமைச் செயல் ஆற்றும் - இவ்வொரு பிறப்புள்ளே செய்துகொள்ள வல்லனும்,

எல்லாப்பிறப்பும் எழாயடக்குதல் அறியப்பட்டமையின் மூற்றும்மை காடுத்தார். அழுக்குதற்கிடனுய கிரயம்; ஈண்டைப் பிறப்புக்களிலும் காடுவினைவயத்தால் அக்கிரயத்தன்பமே யுழ்ந்துவருதலின் எழுமையுற்றான் க்கழுக்க மனறென்றார். முடிவில் காலமெல்லாம் தான் கிரயத்தன்ப் ழுக்குதற்கேதுவாக் கொடுவினைகளையேயறிக்க லெகாலத்தன்னே செய்த காடல் பிறர்க்கரிதாகலின் ஆற்றமென்றார். இதனுன் அவன் மறுமைச் ரயல் கூறப்பட்டது.

(ப-ரை) பேதை - மூடனுனவன், எழுமையும் - (வரும்) பிறவிகளிலெல் ாம், தான்-தான், புக்கு-புகுந்து, அழுக்கம்-அழுக்குதற்கிடமாகிய, அன்ற-ரகத்தை, ஒருமை-இவ்வொரு பிறப்புன்னே, செயலாற்றும்-செய்துகொள்ள ல்லவனுவான் எ-று.

(க-ரை) அறிவீனன் வரும் பிறவிகளிற்புகுந்த ரகத்தை யேற்றுக் ாள்வான் என்பதாம்.

(வி-ரை) எல்லாப்பிறப்பும் எழாய் அடக்குதல் அறியப்பட்டமையின் ழுமையுமென மூற்றும்மை கொடுத்தார். இவ்விடத்துப் பிறப்புக்களிலும் காடுவினைவசத்தால் அந்ரகத்தன்பமே அனுபவித்து வருதலால் எழுமை ுற்தான் புக்கழுந்த மனறென்றார். நெடுங்காலம் தான் ரகத்தன்பம் அனுப வித்தற்கு ஏதுவாம் கொடுவினைகளையே அறிந்து சிலகாலத்தன்னே செய்த கொள்ளுதல் பிறர்க்கு அரிதாகலின் ஆற்றமென்றார். [இதனுல் அவன் றுமைச்செயல் சொல்லப்பட்டது.]

'எழுமை' என்றது தோன்றுந்தன்மைத்தாய பிறவி. தன்பத்தில் ழுந்துதற் கிடமாகிய கிரயம். இப்பிறவியினன்றி வரும் பிறவிக்கும் கொடு னை வயத்தால் அந்ரகதன்பமே வருதலினுல் எழுமையும் புக்கழுந்தும் னற என்றார். சேறுபோல் அழுந்துதற்கிடமாகிய தன்பம். ஆற்றம் ன்பதனுல் பிறர்க்கு அரிதென்றும் இவனுக்குக் கூடுமென்பதும் பெறப் ட்டது. (5)

பொய்படு மொன்றே புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

(பரி-உரை) கை அறியாப் பேதை வினைமேற்கொளின் - செய்புழுறை மையறியாத பேதை ஒருகருமத்தை மேற்கொன்வனுயின், பொய்படும் ன்றே புனைபூணும்-அதவும் புரைபடும், தானுந் தனைபூணும் எ-று.

புரைபடுதல்-பின் ஆகாவகை உன்னழிதல். ஒன்றேவென்பது எண்ணி டைச்சொல். அதனைபுங் கெடுத்துத் தானுங் கெடுமென்பதாம். இதனுன் அவன் செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது.

(ப-ரை) கையறியா-செய்புழுறைமை யறியாத, பேதை-மூடனுனவன், வினை-ஒருதொழிலை, மேற்கொளின் - மேற்கொள்ளுவானுயின், பொய்படும்-

(அதவும்) புரைபடும், ஒன்றே-(அது) ஒன்றதானே, புனை பூணும்-(தானும்) தனை பூணும் எ-று.

(க-ரை) மூடனொரு தொழிலை மேற்கொள்வானுயினத்தொழில் குற்றப்படுமன்றியு மவன் தனை பூணுவான் என்பதாம்.

(வி-ரை) புரைபடுதல்-பின் ஆகாதபடி புன்னழிதல். அதனையும் கெடுத்தத் தானுங் கெடுமென்பதாம். [இதனால் அவன் செல்வம் படைக்குமாறு சொல்லப்பட்டது.]

'ஐை' என்றது கையாற் செய்யும் செயல். செய்முறை யறியாவொருவன் ஒருசெயலை மேற்கொளின் கையறியாமையால் அதையுங் கெடுத்துத் தானும் கெடுவான். 'புரைபடுதல்' என்றது முடியாதபடியால் மனம்வருந்தல்.

ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை பெருஞ்செல்வ மூற்றக் கடை.

(பரி-உரை) பேதை பெருஞ்செல்வம் உற்றக்கடை - பேதையாயினுன் பெரிய செல்வத்தைத் தெய்வத்தானெய்தியவழி, ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் - தன்னெடோரியையு மில்லாதார் கிறைய, எல்லா வியையுமுடைய தமராயினர் பசியாகிற்பர் எ-று.

எல்லா நன்மையுஞ்செய்த கோடற்கருவியென்பது தோன்றப் பெருஞ் செல்வமென்றும், அதனைப் படைக்குமாற்றலில்லாமைதோன்ற உற்றக்கடை யென்றும், எல்லாம் பெறுதலுண்ற ஆரவென்றும், உணவும் பெருமை தோன்றப் பசிப்பரென்றுங் கூறினர்.

(ப-ரை) பேதை-மூடனுனவன், பெருஞ்செல்வம்-பெரிய செல்வத்தை, உற்றக்கடை-(ஊழால்) அடைந்தவிடத்து, ஏதிலார்-(தன்னெடு) ஒரு சம்பந்தமுமில்லாதவர், ஆர-கிறைய, தமர்-(எல்லாச் சம்பந்தமுமுடைய) தம்மவர், பசிப்பர்-பசித்திருப்பர் எ-று.

(க-ரை) அறிவினன் செல்வமடைந்தவிடத்து அயலாரநுபவிக்கச் சுற்றத்தார் பசித்திருப்பர் என்பதாம்.

(வி-ரை) எல்லா நன்மைகளும் செய்துகொள்ளற்குச் சாதனமென்பது தோன்ற பெருஞ்செல்வமென்றும், அதனைப் படைக்கும் வலிமை இல்லாமை தோன்ற உற்றக்கடையென்றும், எல்லாம் பெறுதல்தோன்ற ஆரவென்றும், உணவும் பெருமைதோன்றப் பசிப்பரென்றும் சொல்லினர்.

'பேதை பெருஞ்செல்வம்' என்றது பேதை தன் முயற்சியாலன்றி தெய்வத்தால் அடைந்த செல்வம். 'பெருஞ்செல்வம்' என்றது எல்லா நன்மைகளையும் பயக்குங் காரணமாதல்பற்றி. பெருஞ்செல்வம் எனப்பட்டது. செல்வம் பெற்ற காரணம்பற்றி நன்மைகள் யாவும் கூடலால் 'ஆர' என்றார். 'பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்' என்றபடி இப்பத்தையும் ஒழிக்கவல்ல பசியைப் போக்கும் உணவின் பெருமைதோன்றப் பசிப்பரென்றார்.

மையல் லொருவன் களித்தற்றூற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.

(பரி-உரை) பேதை தன்கை ஒன்று உடைமை பெறின் - பேதையாயி னன் தன்கைக்கண்ணே ஒன்றினை யுடைமையாகப் பெற்றானாயின், மையல் ஒருவன் களித்தற்று - அவன் மயக்குதல் முன்னே பித்தினையுடையானொரு வன் அம்மயக்கத்தின்மேலே மதவுண்டு மயங்கினாற்போலும் எ-று.

பெறினெனவே தெய்வத்தானன்றித் தன்னாற் பெருமை பெற்றும். பேதைமையுஞ் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால் அவன்செய்வன மையலும் மதக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோற் றலைதடுமாறு மென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் அவன் செல்வமெய்தியவழிப் பயன் கொள்ளுமாறு கூறப்பட்டது.

(ப-ரை) பேதை - மூடனானவன், தன்கை - தன் கையில், ஒன்று-ஒரு பொருளை, உடைமைபெறின்-உடைமையாகப் பெற்றானாயின், மையலொரு வன் - பித்தினையுடைய ஒருவன், களித்தற்று - (அம்மயக்கத்தின்மேலே) மதவுண்டு மயங்கியதுபோலும் எ-று.

(க-ரை) அறிவில்லான் பொருளைப் பெற்றானில் வெறியினையுடைய வொருவன் மதவுண்டு மிகிழ்ந்தாற்போலும் என்பதாம்.

(வி-ரை) ஆல்-அசை. பெறினெனவே அவன் ஊழாலல்லது தன்னாலே பெருமை பெற்றும். பேதைமையும் செல்வக்களிப்பும் ஒருசேர உடைமை யால் அவன் செய்காரியங்கள் மையலும் மதக்களிப்பும் ஒருசேர உடையவன் செய்காரியங்கள்போலே தலைதடுமாறுமென்பதாம். [இவை இரண்டுபாட் டாலும் அவன் செல்வமடைந்தவிடத்துப் பயன் கொள்ளும்விதம் சொல்லப் பட்டது.]

பெறின் என்றமையால் தன் முயற்சியான் பெறமாட்டான் என்பது விளக்கமாயிற்று. பேதைமையாலும் தான் எதிர்பாராது பெற்ற செல்வக் களிப்பாலும் அவன் செயல் தலைதடுமாறுமாதலால் களித்தற்று என்றார். (8)

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

(பரி-உரை) பிரிவின்கண் தருவது பீழை ஒன்று இல் - பின் பிரிவுவந் தழி அஃதிருவர்க்குந் தருவதொரு துன்பமில்லை, பேதையார் கேண்மை பெரிது இனிது - ஆகலாற் பேதையாயினார் தம்முட்கொண்ட கட்பு மிக வினிது எ-று.

நாடோறுந் தெய்ந்து வருதலின் துன்பந்தாராதாயிற்று. புகழ்வார் பூண்டு பழித்தலாறு. இதனால் அவரது கட்பின்குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) பிரிவின்கண்-(பின்) பிரிவுவந்தவிடத்து, (அப்பிரிவு) தருவது. (இருவருக்கும்) தருவதாகிய, பீழையொன்று-துன்பமொன்று, இல்-இல்லை, (ஆதலால்) பேதையார்-மூடரது, கேண்மை-(தம்மூட்கொண்ட) கட்பு, பெரி தினிது-மிகவுமினிது எ-று.

(க-ரை) பிரிவினிடத்தத் துன்பமில்லை அறிவில்லார் கட்பு மிகு மினிது என்பதாம்.

(வி-ரை) தினைத்தோறும் தேய்த்து வருதலால் துன்பந் தாராதாயிற்று. புகழ்வார்போன்று பழித்தபடி. [இதனால் அவனது கட்பின் குற்றம் சொல் லப்பட்டடது.]

பேதையர் கட்பு காளுக்குநான் தேய்பிறைபோலக் குறைவதனால் துன்பந்தாராதாயிற்று. பேதையர் கட்பு மிகவுமினிது என்று புகழ்வது போல அவர் தம் கட்பின் தேய்வைக்காட்டிப் பழித்தவாறுயிற்று. இதனால் பேதையது கட்பின் குறைபாடுணர்த்தியிற்று. (9)

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றூற் சான்றோர் குழாஅத்துப் பேதை புகல்.

(பரி-உரை) சான்றோர் குழாத்தப் பேதை புகல்-சான்றோரவையின் கட் பேதையாயினன் புகுதல், கழாக்கால் பள்ளியுள் வைத்தற்று-தூய வல்ல மிதித்தகாலை இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற்போலும்.

கழுவாக்காலென்பது இடக்காடக்கு. அதனால் அவ்வமளியும் இழிக்கப் படுமாறுபோல, இவனால் அவ்வவையும் இழிக்கப்படு மென்பதாம். இதனால் அவன் அவையிடை இருக்குமாறு கூறப்பட்டது.

(ப-ரை) சான்றோர்-பெரியோரது, குழா அத்து-சபையினிடத்து, பேதை-மூட்னனவன், புகல்-புகுதல், கழாஅக்கால்-கழுவாத காலை, (அசுத்த மிதித்த காலை யென்றபடி) பள்ளியுள்-(இன்பந்தருஞ்) சயனத்தின்மேல், வைத்தற்று-வைத்தல்போலும் எ-று.

(க-ரை) பெரியோர் சபையி லறிவில்லான் புகுதல் கழுவாதகாலை சயனத்தில் வைத்தல்போலும் என்பதாம்.

(வி-ரை) ஆல்-அசை. அதனால் அச்சயனமும் இழிவுசெய்யப்படும் விதம் போல் இவனால் இச்சபையும் இழிவு செய்யப்படுமென்பதாம். [இதனால் அவன் சபையிடத்து இருக்கும்விதம் சொல்லப்பட்டது.]

'கழா அக்கால்' என்றது அசுத்தத்துடன் கூடிக் கழுவப்படாத கால். 'இடக்கர்' என்றது (சொல்லத்தகாதன) அடக்கல். தூய்மையாகிய அமளி இழிக்கப்படுவதுபோல அப்பெரியாரது அவையும் இப்பேதையுடைமைபற்றி இழித்தரைக்கப்படும். (10)

84-ம் அதி - பேதைமை - முற்றிற்று.

85-ம் அதிகாரம்—புல்லறிவாண்மை

(பரி உரை) இனி யினைப் புல்லறிவாண்மை கூறகின்றார். அது புல்லிய அறிவினை யாடற்றன்மையென விரியும். அஃதாவது: தான் சிற்றறிவினனு பிருந்தே தன்னைப் போறிவினனாக மதித்த உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொற்கொள்ளாமை.

(உரை) இனி மற்றைப் புல்லறிவாண்மை சொல்லுகின்றார். அது புல்லிய அறிவை யுளதற் றன்மையென விரியும். அஃதாவது தான் சிற்றறிவினனு பிருந்தே தன்னைப் போறிவனாக மதித்த உயர்ந்தோராலே சொல்லப்படும் உறுதிச்சொல்லைக்கொள்ளாமை.

அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை யின்மையா வையா துலகு.

(பரி-உரை) இன்மையுள் இன்மை அறிவின்மை - ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்கவில்லாமையாவது அறிவில்லாமை, பிறிதின்மை இன்மையா வையாது உலகு - மற்றைப் பொருளில்லாமையோ வெனின், அதனை அப்பெற்றித்தாய இல்லாமையாகக் கொள்ளார் உலகத்தார் எ-று.

அறிவென்பது ஈண்டுத் தலைமைபற்றி நல்லறிவின்மேனின்றது. புல்லறிவாளர் செல்வம் எய்தியவழியும் இம்மை மறுமைப்பயன் எய்தாமையின் அதனை இன்மையுளின்மையென்றும், நல்லறிவாளர் வறுமை யெய்தியவழியும் அஃதிழவாமையின் அதனை இன்மையா வையாதென்றுங் கூறினார். இதனாற் புல்லறிவினது குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) இன்மையுள்-(ஒருவனுக்கு) இல்லாமை பலவுள்ளும், இன்மை-மிகுந்த இல்லாமையாவது, அறிவின்மை - அறிவில்லாமை, பிறிதின்மை-மற்றைப் பொருளில்லாமையோவெனின், (அதனை) உலகு - உலகத்தார், இன்மையா-(அப்படிப்பட்ட) இல்லாமையாக, வையாது-கொள்ளார் எ-று.

(க-ரை) இல்லாமையுள்ளே யில்லாமையாவது அறிவில்லாமையாம் பொருளில்லாமையை யுலகத்தா ரில்லாமையாக வெண்ணார் என்பதாம்.

(வி-ரை) புல்லறிவாளர் செல்வமடைந்தவிடத்தும் இம்மை மறுமைப் பயனடையாமல் அதனை இன்மையுளின்மையென்றும், நல்லறிவாளர் வறுமை யடைந்தவிடத்தும் அப்பயனை யிழவாமையால், அதனை இன்மையாவை யாதென்றும் சொல்லினார். [இதனாற் புல்லறிவின் குற்றம் சொல்லப்பட்டது.]

'புல்லறிவாண்மை' என்றது புல்லிய (இழிந்த) அறிவினை யுளதல் தன்மை; அதாவது தான் சிற்றறிவினனுயிருந்தே தன்னைப் போறிவினனாக மதித்த உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொல்லைக் கொளாமை. 'அறிவு' என்றது உண்மையறிவு. 'புல்லறிவாளர்' என்றது புண்மையறிவாளர்; அதாவது

சிற்றறிவுடையோர் செல்வத்தைப்பெற்றாலும் உண்மை யறிவாலெய்துதற் குரிய இருமைப்பயனையும் எய்தாராகையால் 'இன்மைபுளின்மை' என்றார். இருமைப்பயன் இம்மையிற் புகழும் மறுமையிலின்பமுமாம். உண்மை யறிவானர் மறுமையுற்றவிடத்தும் அவ்விருமைப்பயனையு மிழவாமைபற்றி அவ்வாமையை யின்மையாகக்கொள்ளாத 'உலகம்' என்றார். 'உலகு' என்றது உலகமென்ப தயர்ந்தோர்மாட்டே யென்றபடி மேன்மக்களை புணர்த்திற்று. (1)

அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம்.

(பரி-உரை) அறிவிலான் நெஞ்சு உவந்த ஈதல் - புல்லறிவுடையான் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்று கொடுத்தல் கூடிற்றாயின், பெறுவான் தவம் பிறிது யாதும் இல்லை - அதற்குக் காரணம் பெறுகின்றவனல்லனையே, வேறொன்றுமில்லை எ-று.

ஒரோவழி நெஞ்சுவந்த ஈதல் கூடலிற் புல்லறிவானரும் கல்வினை செய்ப் என்பார்க்குப், பெறுவான் வீழ்பொருளெய்தியான் போல்வதல்லது இம்மை நோக்கியாக மறுமை நோக்கியாக ஈகின்றாரல்லனெனக் கூறியவாறு. கூடிற்றாயின் அதற்குக்காரண மென்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன. இதனால் அஃதுடையார் தம்மாட்டு நல்லனசெய்தலறியாமை கூறப்பட்டது.

(ப-ரை) அறிவிலான்-புல்லறிவுடையவன், நெஞ்சுவந்த-மனமகிழ்ந்த, ஈதல்-(ஒருவனுக்கு ஒன்று) கொடுத்தல், (கூடியதாயின் அதற்குக் காரணம்) பெறுவான்-பெறுகின்றவனது, தவம்-நல்வினையே, பிறிதியாதும்-வேறொன்றும், இல்லை-இல்லை எ-று.

(க-ரை) அறிவில்லா னொருவனுக் கொன்றைக் கொடுத்தல் பெற்றுக் கொள்பவனது தவமாம் என்பதாம்.

(வி-ரை) புல்லறிவானரும் ஒரோவிடத்தே மனமகிழ்ந்து கொடுத்தலால் அவரும், நல்வினை செய்வாரென்பார்க்குப் பெறுவான் வீழ்பொருள் அடைந்தவன்போல்வதல்லது இம்மைநோக்கியாவது மறுமை நோக்கியாவது ஈகின்றாரல்லரெனச் சொல்லியபடி. [இதனால் புல்லறிவானர் தம்மிடத்து நல்லவை செய்தலறியாமை சொல்லப்பட்டது.]

புல்லறிவுடையாளுக்கு அறிவுடைமைபற்றியும் அன்புடைமைபற்றியும் மனமுவந்தீதல் கூடப்பெறுமையினால் அது நிகழுதற்குக் காரணம் 'பெறுவான்றவ' மென்றார். பிறிது யாது மில்லையென்றதனால் இருமைப்பயனையும் கருதி ஈகின்றாரல்லர் என்றதாயிற்று. (2)

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

(பரி உரை) அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை - புல்லறிவுடை யார் தாமே தம்மை வருத்தும் வருத்தம், செறுவார்க்கும் செய்தல் அரிது- அது செய்தற்குரியராய தம் பகைவர்க்குஞ் செய்தலரிது எ-று.

பகைவர் தாம் அறிந்தொன்றனைக் காலம் பார்த்திருந்து செய்வதல்லது வறுமை, பழி, பாவமுதலிய பலவற்றையும் எக்காலத்துஞ் செய்யுமாட் டாமையின், அவர்க்குஞ் செய்தலரிதென்றார். இதனால் அவர் தம்மாட்டுச் செய்தலறிவொன்பது கூறப்பட்டது.

(ப-ரை) அறிவிலார்-புல்லறிவுடையவர், தாம்-தாமே, தம்மை-தங்களை, பீழிக்கும்-வருத்தும், பீழை-வருத்தமானது, செறுவார்க்கும் - (வருத்துதற் குரிய) பகைவர்க்கும், செய்தல்-செய்தல், அரிது-அரிதாம் எ-று.

(க-ரை) அறிவில்லார் தங்களை வருத்தும் வருத்தமானது வருத்தப் படுத்தும் பகைவர்க்குஞ் செய்தலரிது என்பதாம்.

(வி-ரை) பகைவர் தாம் அறிந்த ஒருதீவினைக் காலம் பார்த்திருந்து செய்வதல்லது வறுமை பழிபாவ முதலான பலவும் எக்காலமும் செய்ய மாட்டாமையால், அவர்க்கும் செய்தலரிதென்றார். [இதனால் அவர் தம்மிடத்துத் தீவினைசெய்தலே அறிவுகேடென்பது சொல்லப்பட்டது.]

'செறுவார்' என்றது பகைமை மேலிட்டால் செய்தற்குரிய பழி பாவங்களை அவை செய்தற்குரிய ஏற்றகாலமறிந்து செய்வார்களேயொழிய எக்காலத்தும் செய்யார். அதனாலே அவர்க்குஞ் செய்தலரிதென்றார். ஆதலால் அறிவிலார் தமதறிவீனத்தாலே எவ்வகைக் குற்றத்திற்கும் எக்காலத்தும் தம்மை யானாக்கிக்கொள்வர். (3)

வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு.

(பரி-உரை) வெண்மை எனப்படுவது யாது எனின் - புல்லறிவுடைமை யென்று சொல்லப்படுவது யாதென்று வினவின், யாம் ஒண்மை உடையம் என்னும் செருக்கு-அது தம்மைத்தாமே யாம் நல்லறிவுடையமென்று தன்கு மதிக்கும் மயக்கம் எ-று.

வெண்மையாவது அறிவுமுதிராமை. ஒண்மையெனக் காரியப்பெயர் காரணத்திற்காயிற்று. உலகத்தா ரிகழ்தல் அறிந்துவைத்தும் அவ்வாறு மதித்தலான், மயக்கமென்றார்.

(ப-ரை) வெண்மையெனப்படுவது - புல்லறிவுடைமை யெனப்படுவது, யாதெனின்-யாதென்றால், (அது) ஒண்மையுடையம்யாம்-நல்லறிவுடையோம் யாம், என்னும்-என்று (தம்மைத்தாமே) தன்குமதிக்கும், செருக்கு-மயக்கம் எ-று.

(க-ரை) அறிவில்லாமையென்று சொல்லப்படுவதியாதென்றால், நல்லறி வுடையோமென்னு மயக்கமாம் என்பதாம்.

(வி-ரை) வெண்மை - இளமை; அது அறிவுமுதிராமை, உலகத்தார் இகழ்தல் அறிந்திருந்தும் அப்பதி மதித்தலால் மயக்கமென்றார்.

'வெண்மை' என்றது சிற்றறிவுடைமை, 'வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை' என்றார் பிறரும். 'ஒண்மை' என்றது ஒளியுடைமை சிறப்புடைமை; 'ஒண்பொருளென்றார்' பிறரும். இங்கு சிறப்புடைமைக்குக் காரணமாகிய அறிவுக்காயிற்று. 'செருக்கு' என்றது சிற்றறிவுடைமையால் தன்னிலை தெரியாது மயங்குகின்ற மயக்கம். உலகம் தன்னை யிகழ்தலை யறிந்திருந்தும் தன்னைத்தானே மதித்தலால் மயக்கமென்றார். (4)

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற வல்லதூஉ மையந் தரும்.

(பரி-உரை) கல்லாத மேற்கொண்டு ஒழுகல்-புல்லறிவாளர் தாங் கல்லாத நூல்களையுங் கற்றாராகத் தாம் மேலிட்டுக்கொண்டு ஒழுகுதல், கசடுஅற வல்லதூஉம் ஐயம் தரும் - கசடறக் கற்றதொரு நூலுண்டாயின் அதன் கண்ணும் பிறர்க்கையத்தை விளைக்கும் எ-று.

வல்லதென ஏழாவது இறுதிக்கட்டொக்கது. உண்டாயினென்பது அவாய்நிலையான் வந்தது. ஐயம் அது வல்லரென்பதூஉம் இவ்வாறு கொல்லோவென்பது.

(ப-ரை) (புல்லறிவாளர்) கல்லாத - (தாம்) கல்லாத நூல்களையும், மேற்கொண்டு-(கற்றவராக) மேலிட்டுக்கொண்டு, ஒழுகல் - நடக்குதல், கசடற-குற்றமற, வல்லதூஉம்-கற்றதொருநூல் (உண்டாயின்) அதனிடத்தும், ஐயம்-ஐயத்தை, தரும்-(பிறருக்கு) விளைக்கும் எ-று.

(க-ரை) கல்லாத நூற்களைக் கற்றோமென்று சொல்லுதல் கற்ற நூற்களையுஞ் சந்தேகப்படுத்தும் என்பதாம்.

(வி-ரை) உண்டாயினென்பது வருவிக்கப்பட்டது. ஐயம்-இவர் அந்த நூலிலே வல்லவரென்பதும், இப்படித்தா னிருக்குமோ வென்பது.

'கல்லாத' என்றது ஐயந் திரிபறக் கல்லாதநூல்கள். 'மேற்கொண் டொழுகல்' என்றது கற்றவராகப் பிறர் தம்மை மதிக்குமாறு செருக்குற்றொழுகல். 'கசடு' என்றது ஐயம், திரிபு, மயக்கம் முதலிய குற்றங்கள். உண்டாயின் என்றது வருவித் துரைக்கப்பட்டது. 'வல்லதூஉம்' என்றது கற்று வல்ல நூலினிடத்தும் கல்லாத நூலைப்போலவே கற்றநூலினிடத்தும் ஐயம் தரும். (5)

அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற் குற்ற மறையா வழி.

(பரி-உரை) தம் வயின் குற்றம் மறையாவழி - புல்லறிவாளர் தங்கணிகழுங் குற்றங்களை யறிந்து கடியாராயின், அற்றம் மறைத்தலோ புல்

லறிவு - ஆடையால் அற்ற மறைத்தாராகத் தம்மைக் கருதாதலும் புல்லறிவாம் எ-று.

குற்றமறைத்தலாவது அவற்றை இலவாக்குதல். மறைக்கப்படுவன பலவற்றுள்ளும் உயர்ந்தவற்றையெல்லாம் மறையாது தாழ்ந்தொன்றனையே மறைத்து அவ்வளவாற் றம்மையு முலகவொழுக்கினராக மதித்தலும் புல்லறிவென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அவர் தம்மை வியத்தற் குற்றங் கூறப்பட்டது.

(பதவுரை) (புல்லறிவாளர்) தம்வயின் தம்மிடத்து உண்டாகும், குற்றம்-குற்றங்களை, மறையாவழி-(அறிந்து) கடியாராயின், அற்றம்-மறைக்கத்தக்க அவயவத்தை, மறைத்தலோ - (ஆடையால்) மறைத்தவராகத் தம்மை கினைத்தலும், புல்லறிவு-அற்பவறிவாகும் எ-று.

(கருத்துரை) அறிவில்லார் குற்றங்களைக் கடியாராயின் அதுவே யறிவில்லாமை என்பதாம்:

(வி-ரை) குற்றமறைத்தலாவது-அவைகளை இல்லாமற் போகச்செய்தல், மறைக்கப்படுமவை, பலவுள்ளும் உயர்ந்தவைகளையெல்லாம் மறையாது தாழ்ந்த வொன்றையே மறைத்து அவ்வளவிலே தம்மையும் உலகவடை புள்ளவராக மதித்தலும் புல்லறிவென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் அவர் தம்மை வியத்தற்குற்றம் சொல்லப்பட்டது.]

'மறையாவழி' என்றது பிறர் காணின் அருவருப்பொன்ற அறிந்து ஒழிக்காராயின். 'குற்றமறைத்தல்' என்றது பிறர் பழிக்கத்தக்கவை தம்மிடம் இலவாக்குதல். உயர்ந்தவற்றை மறையாது தாழ்ந்தொன்றனையே மறைத்து அவ்வளவிலே தம்மையும் சிறந்த வொழுக்கினராக மதித்தலும் சிற்றறிவே யாகுமென்பதாம். (6)

அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

(பரி உரை) அருமறை சோரும் அறிவிலான்-பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன், தானே தனக்குப் பெருமிறை செய்யும்-அவ்வுறுதி யறியாமையாற் றானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்துகொள்ளும் எ-று.

சோருமென இடத்து கிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது. மிக்க வருத்தம்-பொறுத்தற்கரிய துன்பங்கள். இனி அருமறை சோருமென்பதற்குப் பிறரெல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண்ணத்தை வாய் சோர்ந்து பிறர்க்குரைக்குமென் றுரைத்தார்; அது பெண்ணை யென்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மை யன்மையறிக.

(ப-ரை) அருமறை - பெறுதற்கரிய உபதேசப்பொருளை, சோரும்-(பெற்றாலும்) உட்கொள்ளாது போக்கும், அறிவிலான் - புல்லறிவாளன்,

(அவ்வுறதி அறியாண்மையால்) தானே-தானே, தனக்கு-தனக்கு, பெருமிறை. மிகுந்தவருத்தத்தை, செய்யும்-செய்வான் எ-று.

(க-ரை) இகழியப்பொருளைப் போக்கு மறிவில்லான் தனக்குத்தானே வருத்தத்தைச் செய்வான் என்பதாம்.

(வி-ரை) மிகுந்த வருத்தம்-பொறுத்தற்கரியதன்பம்.

'அருமறை' என்றது கேட்டற்கரிய பெரியார் வாய்ச்சொல். 'சோரும்' என்றது மனதில் வைக்காது விட்டுவிடும். 'இறை' என்றது தன்பம். 'பெருமிறை' என்றது பொறுத்தற்கரிய தன்பம். புல்லறிவானர் பெரியார்வாயின் கேட்டற்கரிய பொருளைக் கேட்டாலும் அதனை அகத்தே கொள்ளாது தம்மைத் தன்பத்தி லாழ்த்திக்கொள்வர். (7)

ஏவவுஞ் செய்கலான் முன்றேறு னவ்வுயிர் போஒ மளவுமோர் நோய்.

(பரி-உரை) ஏவவும் செய்கலான் - புல்லறிவானன் தனக்குறதியாய வற்றை அறிவுடையார் சொல்லாநிற்கவுஞ் செய்யான், தான் தேறுன்-அதவன்றித் தானுகவும் இவை செய்வனவென்றறியான், அவ்வுயிர் போமளவும் ஓர் நோய்-அவ்வுயிர் யாக்கையினீக்குமளவும் நிலத்திற்குப் பொறுத்தற்கரிய தொரு நோயாம் எ-று.

உயிர் தான் உணர்ற்றன்மைத்தாயிருந்தும் நின்ற யாக்கையத்தான் மருடற்றன்மைத்தாய் வேறுபடுதலின் அவ்வுயிரென்றும், அதனிவ்விய பொழுதே அதற்கு இரண்டனுளொன்று கூடுதலிற் போமளவுமென்றும், குலமலைமுதலிய பொறுக்கின்ற நிலத்திற்குப் பாவயாக்கை பெரும்பொறையாய்த் தன்பஞ்செய்தலின் ஒரு நோயென்றுங் கூறினர்.

(ப-ரை) (புல்லறிவானன்) ஏவவும் - (தனக்கு) உறுதியானவைகளை (அறிவுடையார்) சொல்லவும், செய்கலான்-செய்யான், (அதுவல்லாமல்) தான்-தானுகவும், தேறுன்-(இவை செய்பவையென்று) அறியான், அவ்வுயிர்-அவ்வுயிர், போமளவும் - (உடம்பைவிட்டுப்) போமளவும், ஓர்நோய் - (பூமிக்குப் பொறுத்தற்கரிய) ஒருநோயாம் எ-று.

(க-ரை) அறிவில்லான் பிறரேவவுந் தனக்குறுதிகளைச் செய்யான் தானுகவுந் தெளியான் என்பதாம்.

(வி-ரை) உயிர் தான் அறிவுந்தன்மையதாயிருந்தும் நின்ற தேகவசத்தால் மயங்குந் தன்மையதாய் வேறுபடுதலால் அவ்வுயிரென்றும், அதனினீங்கியபொழுதே அதற்கு இரண்டினுள் ஒன்று கூடுதலால் போமளவுமென்றும், குலமலை முதலானவைகளைச் சுமக்கின்ற பூமிக்கு இப்பாவவுடம்பு பெருஞ் சுமையாய்த் தன்பஞ்செய்தலால் ஓர்நோயென்றும் சொல்லினர்.

'ஏவவும்' என்றது உயிர்க்குறுதி பயக்குவனவற்றைச் செய்புமாற அறிவுடையோர் சொல்லுதல். 'தேறுன்' என்றது இவை செய்யத்தக்கனவென்ற

தெளியான். உயிர் உணர்ச்சியுடையதாயிருத்தம் யாக்கைபோடு கூடியவழி மயக்குற்றன்மைத்தாய் உணர்ச்சியினின்றம் மாறுபடுதலின் சுட்டிடைச் சொல்கொடுத்த - அவ்வுயிரென்றம் அவ்வுடலினின்று நீக்கியபொழுதே அதற்கு இரண்டினுளொன்று கூடப்பெறலால் போமளவும் என்றும், மலை முதலிய பொறக்குநிலத்திற்குப் (நிலத்தில்வாழுமக்களுக்கு) பாவயாக்கை தன்பத்திற் கேதுவாகலின் நோவென்றன் கூறினர். (8)

காணுதாற் காட்டுவான் முன்காணுன் காணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு.

(பரி-உரை) காணுதாற் காட்டுவான் தான் காணுன் - தன்னை எல்லா மறிந்தானுக மதித்தலாற் பிறரால் ஒன்றறியுந் தன்மையிலாதானை அறிவிக்கப்புகுவான் அவனுற் பழிக்கப்பட்டுத் தான் அறியானும் முடியும்; காணுதான் தான் கண்டவாறு கண்டானும் - இனி அவ்வறியுந்தன்மையில்லாதான் கொண்டது விடாமையாற் முனநிற்றவாற்றுல் அதனை அறிந்தானும் முடியும் எ-று.

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்றுனும் இயைவதன் றென்பதாம்.

(ப-ரை) (தன்னை எல்லா மறிந்தவனுக மதித்தலால்) காணுதான். (பிறரால் ஒன்றை) அறியுந்தன்மையில்லாதவனை, காட்டுவான் - அறிவிக்கப் புகுவான், தான்காணுன்-(அவனுலே பழிக்கப்பட்டுத்) தான் அறியாதவனும் முடியும், காணுதான் - (இனி) அவ்வறியுந்தன்மையில்லாதவன் (தான் கொண்டது விடாமையால்), தான் கண்டவாறு - தான் அறிந்தவிதத்தால், கண்டானும்-(அதனை) அறிந்தவனும் முடியும் எ-று.

(கரை) ஒன்று மறியாதவனைக் காட்டுவான். தானறிவில்லாதவனுவான் என்பதாம்.

(வி-ரை) புல்லறிவானனுக்கு நல்லறிவை வருவித்தல் ஒருவழியாலும் பொருந்துவதன் றென்பதாம்.

'காணுதான்' என்றது ஒன்றையு மறியாதவன் 'தான் காணுன்' என்றது அவனுல் பழிக்கப்படலால் தான் அவனை யறியாதவனுவான். 'கண்டானும்' என்றது தான்கண்டதன்மையால் கண்டவனுவானே பொழிய மற்றொன்றும் கண்டவனுகான். சிற்றறிவுடையோனுக்கு நல்லறிவு புகட்டினுலும் அவன் கொண்டதையொழிய மற்றொன்று மறியான். (9)

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

(பரி-உரை) உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் - உயர்ந்தோர் பலரும் உண்டென்பதோர் பொருளைத் தன் புல்லறிவானில்லையென்று

சொல்லுவான், வையத்து அலகையா வைக்கப்படும்-மகனென்று கருதப் படான், வையத்துக் காணப்படுவதோர் பேயென்று கருதப்படும் எ-று.

கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் முதலாக அவர் உளவென் பன பலவேனுஞ் சாதிபற்றி உண்டென்பதென்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும் வடிவால் ஒவ்வாமையுமுடைமையிற் றன்யாக்கை காத்த மக்கள் யாக்கையுட் டோன்றுதல்வல்ல அலகையென்றுங் கூறினர். இவை கான்குபாட்டானும் உறழ்ச்சொற் கொள்ளாமையது குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) உலகத்தார் - உயர்ந்தோர் பலராலும், உண்டென்பது. உண்டெனப்படுகிற பொருளை, இல்லென்பான் - (தன் புல்லறிவால்) இல்லை யென்று சொல்லுவோன், (மனிதனென்று மினைக்கப்படான்) வையத்து. பூமியிலே, அலகையா - (காணப்படுகிற) ஒரு பேயென்று, வைக்கப்படும். மினைக்கப்படுவான் எ-று.

(க-ரை) பெரியோருண்டென்பதை யில்லையென்பவன் பேயென்றெண் ணப்படுவான் என்பதாம்.

(வி-ரை) கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் முதலாக அவர் உண்டெனப்படுமவை பலவாயினும் சாதியொருமைபற்றி உண்டென்ப தென்றும், பேயும் இல்லை யென்பவனும் தானே வேண்டியவை சொல்லலால் ஒத்தலும், வடிவால் ஒவ்வாமையும் உடைமையால் தன்னுடம்பை மறைத்து மக்களுடம்பிலே தோன்றுதல்வல்ல அலகையென்றும் சொல்லினர். [இவை கான்கு பாட்டானும் உறழ்ச்சொல்லைக் கொள்ளாமையினது குற்றம் சொல்லப்பட்டது.]

உலகத்தார்-உயர்ந்தோர். 'உலகம்புகழு மோங்குயர் விழுச்சீர்' என்றார் பிறரும். 'இல்லென்பான்' என்றது உலகமுண்டென்பதனை தன் சிற்றறிவா லில்லையென்று சொல்லுவோன். சாதிபற்றி-இனம்பற்றி. காத்து-மறைத்து. 'உறழ்ச்சொல்' என்றது உயிர்க்கு உறழ்பயக்குஞ் சொற்கள். (10)

85-ம் அதி - புல்லறிவாண்மை - முற்றிற்று.

86-ம் அதிகாரம்—இகல்

(பரி-உரை) இனி அவற்றுள் வரும் வெகுளி காமங்களுள் அரசர்க்கு வெகுளி பெரும்பான்மைத்தாகலின், அதனுள் வருவன கூறலான் றொடங்கி, முதற்கண் இகல் கூறுகின்றார். அஃதாவது: இருவர் தம்முட் பொருத வலிதொலைதற் கேதுவாய மாறுபாடு.

(உரை) இனி அவைகளால் வரும் குரோத காமங்களுள் அரசர்க்குக் குரோதம் அதிகமா யுள்ளதாகலால் அதனுல் வருமவைகளைச் சொல்லத் தொடங்கி முதலிலே இகல் சொல்லுகின்றார். அஃதாவது: இருவர் தம் முன்னே போர்செய்த வலிமை தொலைதற்கு ஏதுவாகிய மாறுபாடாம்.

இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்.

(பரி உரை) எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பு இன்மை பாரிக்கும் நோய்-எல்லாவுயிர்கட்கும் பிறவுயிர்களோடு கூடாமையென்னுந் தீக்குணத்தை வளர்க்குங் குற்றம், இகல் என்ப - இகலென்று சொல்லுவர் நூலோர் எ-று.

மக்களோடும் விலங்குகளோடொப்பிப்பதென்பது தோன்ற எல்லா வுயிர்க்குமென்றும், பகுதிக்குணத்தை இடைநின்ற விளைத்தலிற் பகலென்னும் பண்பின்மையென்றுங் கூறினர். நற்குணமின்மை அருத்தாபத்தியாற் றீக்குணமாயிற்று. இதனால் இகலது குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) எல்லாவுயிர்க்கும் - சகலவுயிர்களுக்கும், பகலென்னும் - (பிற வுயிரோடு) கூடாமையென்னும், பண்பின்மை-நீயகுணத்தை, பாரிக்கும்-வளர்க்கும், நோய்-குற்றமாவது, இகல்-மாறுபாடாம், என்ப-என்று (நூலோர்) சொல்லுவர் எ-று.

(க-ரை) எல்லாவுயிர்க்குந் தீயகுணத்தை வளர்க்குங் குற்றமாவது மாறுபாடாம் என்பதாம்.

(வி-ரை) மக்களோடும் விலங்குகளோடு ஒப்பாக்குவதென்பது தோன்ற எல்லாவுயிர்க்குமென்றும், கூடாத தீக்குணத்தை நடுநின்று விளைத்தலால் பகலென்னும் பண்பின்மையென்றும் சொல்லினர். [இதனால் மாறுபாட்டது குற்றம் சொல்லப்பட்டது.]

'வெகுளி' என்றது கோபம். 'பெரும்பான்மைத்து' என்றது பகைவர் நற்றவாளிகள் முதலியோர்பக்கல் மிகுதியும் வரக்கூடிய தன்மையை யுடையது. அதனால் வருவன. வெகுளியால் வரும் பகைகளை. 'இகல்' என்றது இருவர் தம்முள் பொருது வலிதொலைதற்கு ஏதுவாய மாறுபாடு. 'இகல்' முதனிலைத் தொழிற்பெயர். 'பகல்' என்றது பிரித்தல்; அதாவது பிறவுயிரோடு கூடாமை. இதில் 'பகு' பகுதி. 'நூலோர்' என்றது உண்மை நூலுணர்ந்தோர். 'ஒப்பிப்பது' என்றது சமானமாக்குவது. இகல்தான் நல்லறி வுடைய மக்களையும் அவ்வறிவில்லாத விலங்குகளோடு ஒப்பாகச்செய்து விடுமென்பதுபற்றி எல்லா வுயிர்க்குமென்றார். 'பகுதி' என்றது பிரிவு. 'பண்பின்மை' என்றது நல்லகுணமில்லாமை. பண்பென்பது, இங்கே தலைமை பற்றி நற்பண்பின்மேல் நின்றது. அருத்தாபத்தியாவது - ஒரு பொருளைக் காணியமாத்திரத்தால் அதன் குறிப்புக்கொண்டு கூறப்படாத மற்றொன்றை நிறுத்தல். 'எல்லாம்' என்றது இருதிணைக்கும் பொது. (1)

பகல்கருதிப் பற்றூ செயினு மிகல்கருதி
யின்னாசெய் யாமை தலை.

(பரி-உரை) பகல் கருதிப் பற்ற செயினும்-தம்மொடு கூடாமையைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தானெயினும், இகல் கருதி இன்ன செய்யாமை தலை-அவனெடு மாறுபடுதலைக் குறித்தத் தாமவனுக்கு இன்னவற்றைச் செய்யாமை உயர்ந்தது எ-று.

செய்பிற் பகைமைவளரத் தாந்தாழ்ந்துவரலாலும், ஒழியின் அப் பற்றுதன தாமே யோய்ந்துபோகத் தாம் ஒய்வுவரலாலும், செய்யாமைதலை யென்றார். பற்றுதலென்பது விகாரமாயிற்று.

(ப-ரை) பகல்-(தம்மோடு) கூடாமையை, கருதி - நினைத்து, பற்று. வெறுப்பனவை, செயினும்-(ஒருவன்) செய்தானெயினும், இகல் கருதி. (அவனெடு) மாறுபடுதலைக் குறித்து, இன்ன - தன்பந்தருமவைகளை, செய்யாமை-(தாம் அவனுக்குச்) செய்யாமை, தலை-உயர்ந்தது எ-று.

(க-ரை) ஒருவன் வெறுப்பானவற்றைச் செய்தானெயினும் தன்பந்தருமவைகளைச் செய்யாமை தலைமை என்பதாம்.

(வி-ரை) தன்பந்தருமவைகளைச் செய்யில் பகைமை வளரத் தாம் தாழ்ந்து வருதலாலும் ஒழியில் அவ்வெறுப்பனைகள் ஒய்ந்துபோகத் தாம் ஒய்வு வருதலாலும் செய்யாமை தலையென்றார்.

'பற்று' என்றது வெறுக்கத்தக்க தீச்செய்கைகள். 'இன்ன' என்றது தன்பந்தரும் செயல்கள். 'செய்யின்' என்றது இன்னதவற்றைச் செய்தல். தாம் - செய்தவர். அப்பற்றுதன-அவன் செய்த தீங்குகள். தாமே ஒய்ந்து போக-ஒழிப்பாரின்மையால் வாவா வொழிந்துபோய்விட. 'பற்று' என்றது விரும்பாதன, எனவே, அருத்தாபத்தியால் வெறுப்பனவாயிற்று. 'இன்ன' என்பதும் இது. 'செயினும்' என்றதில் உம்மை இழிவுசிறப்பு. 'செய்யாமை' எதிர்மறைத்தொழிற்பெயர். 'தலை' என்றது தலைமையுடையது. வெறுப்பன செய்யாதானெடு மாறுபடலாகாமை சொல்லவேண்டாதாயிற்று. வெறுப்பன செய்யாதானுக்கு இன்னதனசெய்தல் கடையென்றும் செய்தவனுக்குஞ் செய்தல் இடையென்றும், செய்தவனுக்குஞ் செய்யாமை தலையென்றும் கூறியவாறும். (2)

இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத் தாவில் விளக்கந் தரும்.

(பரி-உரை) இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின் - மாறுபாடென்று சொல்லப்படுகின்ற தன்பத்தைச் செய்யு நோயை ஒருவன் தன் மனத்தினின்று நீக்குமாயின், தவல் இல்லாத் தாவில் விளக்கம் தரும் - அவனுக்கு அந்நீக்குதல் எஞ்ஞான்றும் உளனுதற்கேதுவாய புகழைக்கொடுக்கும் எ-று.

தவலில்லாமை அருத்தாபத்தியான் அப்பொருட்டாயிற்று. தாவில் விளக்கம் வெளிப்படை. யாவரு நண்பராவர், ஆகவே எல்லாச் செல்வமும் மெய்திக் கொடைமுதலிய காரணங்களோற் புகழ்பெறுமென்பதாம்.

(ப-ரை) (ஒருஉன்) இகலென்னும்-மாறுபாடெனப் படுகின்ற, எவ்வம்-துன்பத்தைச் (செய்யும்), நோய் - நோயை, நீக்கின் - (தன் மனத்திலிருந்து) நீக்குவானாயின், (அந்நீக்குதல்) தவலில்லா - (எந்நாளும்) அழிவில்லாமைக்கு ஏதுவாகிய, தாவில்-கெடாத, விளக்கம்-புகழை, தரும்-(அவனுக்குக்) கொடுக்கும் எ-று.

(க-ரை) ஒருவன் மாறுபாட்டை நீக்குவானாயினது புகழைத்தரும் என்பதாம்.

(வி ரை) யாவரும் நட்பாதலால் எல்லாச் செல்வமும் பெற்றுக் கொடை முதலான காரணங்களால் புகழ்பெறு மென்பதாம்.

'தவல்' என்றது அழிவு. 'தா' என்றது குற்றம். 'தன் மனத்தினின்று நீக்கும்' என்றது எண்ணாமலே விடுவான். 'உளனாதல்' என்றது அழிவில்லாதவனாயிருத்தல். 'தவலில்லாமை' என்றது அழியாமை. 'அப்பொருட்டு' என்றது அப்பொருளது. 'விளக்கம்' என்றது பொருட்களை விளங்கச் செய்வதற்குக் கருவியாவது; 'அம்' கருவிப்பொருள் விகுதி. 'தாஇல் விளக்கம்' என்றது கெடுதலில்லாத விளக்கு எனவே புகழென விளங்குகின்றது. உலகத்து எவ்விடத்தும் எந்நாளும் அழியாது நிலைநிற்றல்பற்றியும் அவியுந் தன்மையனவாகிய மற்ற விளக்குகளினும் இதற்குள்ள சிறப்பு தோன்றவும் 'தாவில் விளக்கம்' என்றார். "ஒன்றா வுலகத்துயர்ந்த புகழல்லாற் பொன்றாது நிற்பதொன்றில்" என்று வருவதுங் காண்க. 'புகழ்பெறும்' என்றது மாறுபாடு நீக்கினவன் கீர்த்தியைப் பெறுவான். புகழ்பெரும்பான்மையும் ஈதல் பற்றி வருதலால் கொடை முதலியவற்றால் புகழ்பெறுமென்றார். 'தவல்' இது தொழிற்பெயர்; 'தவு' முதனிலை. (3)

இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந் துன்பத்துட் டுன்பங் கெடின்.

(பரி-உரை) இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - மாறுபாடென்று சொல்லப்படுகின்ற துன்பங்களெல்லாவற்றினும் மிக்க துன்பம் ஒருவனுக்கில்லையாயின், இன்பத்துள் இன்பம் பயக்கும் - அவ்வின்மை அவனுக்கு இன்பங்களெல்லாவற்றினும் மிக்கவின்பத்தினைக் கொடுக்கும் எ-று.

துன்பத்துட்டுன்பம் - பலரொடு பொருது வலிதொலைதலான் யாவர்க்கு மெளியனாயுறுவது. அதனை இடையின்றியே பயத்தலின், இகலென்னுமென்றார். இன்பத்துளின்பம் யாவருநட்பாகலின் எல்லாப்பயனு மெய்தியுறுவது.

(ப-ரை) இகலென்னும் - மாறுபாடெனப்படுகின்ற, துன்பத்துள்-துன்பங்கள் பலவினும், துன்பம்-மிகுந்த துன்பம், கெடின்-(ஒருவனுக்கு) இல்லையாயின், (அவ்வில்லாமை) இன்பத்துள் - இன்பங்கள் பலவினும், இன்பம்-மிகுந்த வின்பத்தை, பயக்கும் (அவனுக்குக்) கொடுக்கும் எ-று.

(கரை) ஒருவனுக்கு மாறுபாடாகிய தன்ப நீக்குமாயினது மிகுந்த வின்பத்தைத்தரும் என்பதாம்.

(வி-ரை) தன்பத்துட்டுன்பம் - மாறுபாடுடையோன் பலரோடும் போர் செய்து வலிமை தொலைதலால் யாவர்க்கு மெளியனாயிருப்பது. அதன் விளைவிலே தருதலால், இகலென்னுமெவ்வமென்றார். இன்பத்துளின்பம் மாறுபாடில்லோன் யாவரும் கட்பாகலால் எல்லாப்பயனும் பெற்றிருப்பது.

'பொருத' என்றது போர்செய்து. 'வலிதொலைதலான்' என்றது பலம் அழிதலால். 'உறலது' என்றது அடைவது. இகல்தான் தன்பத்துட் டுன்பத்தை இடைவிடாது விளைவிலே தருதலால் இகலென்னுந் தன்பத்துட் டுன்பம் எனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார். 'கெடின்' என்றது கெடுதலின் அருமை குறித்து நின்றது. (4)

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே மிகலூக்குந் தன்மை யவர்.

(பரி-உரை) இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை - தம்மூன்னத்து மாறுபாடு தோன்றியவழி அதனை யேற்றுக்கொள்ளாது சாய்ந்தொழுக வல்லாரை, மிகல் ஊக்கும் தன்மையவர் யார் - வெல்லக்கருதுந் தன்மை யுடையார் யாவர் எ-று.

இகலை யொழிந்தொழுதல் வேந்தர்க்கு எவ்வாற்றானும் அரிதாகலின் வல்லாரையென்றும், யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருதுவார் யாவருமில்லை யென்றுங் கூறினர். இவை நான்குபாட்டானும் இவர்க்கு வரும் நன்மை கூறப்பட்டது.

(பதவுரை) இகல் - மாறுபாடு, (தம்மனத்துத்தோன்றியவிடத்து) எதிர் சாய்ந்தொழுகவல்லாரை-(அதனை) ஏற்றுக்கொள்ளாமற் சாய்ந்து நடக்க வல்ல வரை, மிகலூக்கும்-வெல்ல நினைக்கும், தன்மையவர்-தன்மையையுடையவர், யாரே-யாவர் எ-று.

(கருத்துரை) மாறுபாட்டை நீக்கும் வல்லவரை வெல்ல நினைப்பவர் யார் என்பதாம்.

(வி-ரை) மாறுபாட்டை நீக்கி நடத்தல் வேந்தருக்கு எவ்விதத்தானும் அரிதாகலால் வல்லாரையென்றும், அவர் யாவர்க்கும் நட்பாகலால், அவரை வெல்ல நினைப்பவர் யாவருமில்லை யென்றுஞ் சொல்லினர். [இவை நான்கு பாட்டானும் மாறுபடாதவர்க்கு வரும் நன்மை சொல்லப்பட்டது.]

'சாய்ந்த' என்றது தாழ்ந்த. 'ஒழுகவல்லார்' என்றது நடக்கவல்லார். 'அவர்' என்றது மாறுபாடுகொள்ளாத ஒழுகவல்லவர். 'யாவர்க்கும்' என்றது பகைவர்க்கு முட்பட. 'இகலாதார்' என்றது மாறுபடாதவர்; பகை என்னும் விளைப்பெயர் இங்கு இன்மைகுறித்து நின்றது. எகாரம்-அசை நிற்றலுமாம்.

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடவு நணித்து.

(பரி-உரை) இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை - பிறரொடு மாறுபடுதற்கண் மிகுதல் எனக்கு இனிதென்ற அதனைச் செய்வானது உயிர் வாழ்க்கை, தவலும் கெடலும் நணித்து - பிழைத்தலும் முற்றக்கெடுதலுஞ் சிறிது பொழுதின் உளவாம் எ-று.

மிகுதல் - மேன்மேலுயர்க்குதல். இனிதென்பது தான் வேறல் குறித்தல். பிழைத்தல் - வறுமையானின்றுதாதல். முற்றக்கெடுதல் - இறத்தல். இவற்றோடு நணித்தென்பதனைத் தனித்தனி கூட்டி, உம்மைகளை எதிரதும் இறந்ததுந் தழீஇய வெச்சவும்மைகளாக வுரைக்க. பொருட்கேடும் உயிர்க் கேடும் அப்பொழுதே புளவாமென்பதாம்.

(பதவுரை) இகலின்-(பிறரோடு) மாறுபடுதலிலே, மிகல்-மிகுதல், இனி தென்பவன்-(எனக்கு) இனிதென்ற செய்பவனது, வாழ்க்கை-உயிர்வாழ்க்கை, தவலும்-பிழைபடுதலும், நணித்து-சிறிதுபொழுதிலுண்டாம், கெடலும்-முழுதுங் கெடுதலும், (நணித்து)-சிறிதுபொழுதிலுண்டாம் எ-று.

(கருத்துரை) மாறுபடுதலி லினிதென்பவன் வாழ்க்கையானது வழுவுதலுங் கெடுதலுமுண்டாம் என்பதாம்.

(விசேடவுரை) மிகுதல்-மேலுமேலு மெழும்பல். இனிதென்பது தான் வெல்லுதல் குறித்தல். பிழைபடுதல்-வறுமையாலே தன்பப்படுதல். முழுதுங் கெடுதல்-இறத்தல். பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே உண்டாகு மென்பதாம்.

'மாறுபடுதற்கண்' என்றது மாறுபடுதலில். 'பிழைத்தல்' என்றது பொருட்கேடு. 'முற்றக்கெடுதல்' என்றது உயிர்க்கேடு. 'சிறிது பொழுதின்' என்றது விரைவில். 'ஊக்குதல்' என்றது கருதிமுயலுதல். 'வறுமை' என்றது நுகரப்படுவன இல்லாமை. 'இன்னுதல்' என்றது தன்புறுதல். இவற் றோடு நணித்தென்பதனைத் தனித்தனிகூட்டி தவலும் நணித்து, கெடலும் நணித்து தவலும், உம்மை கெடலும் நணித்தாமென்னும் பொருளைத் தருதலால், எதிரதுதழுவியவெச்சம். கெடலும், உம்மை தவல் நணித்தான தன்றி பகையென்னும் பொருளைத் தருதலால், இறந்ததுதழுவியவெச்சம். (6)

மிகன்மேவன் மெய்ப்பொருள் காணு நிகன்மேவ
லின்னு வறிவி னவர்.

(பரி-உரை) இகல் மேவல் இன்னு அறிவினவர் - இகலோடு மேவுதலை புடைய இன்னுதவறிவினையுடையார், மிகல் மேவல் மெய்ப்பொருள் காணார் - வெற்றி பொருந்துதலையுடைய நீதிநூற்பொருளை யறியமாட்டார் எ-று.

இன்னவறிவு - தமக்கும் பிறர்க்கும் தீங்கு பயக்குமறிவு. வெற்றி வழி கின்றூர்க்கு உளதாவது, காணப்படும் பயத்ததாகலின், மெய்ந்நூலெனப் பட்டது. இகலால் அறிவு கலங்குதலின், காணுரென்றூர். இவை யிரண்டு பாட்டானும் இகலினூர்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது.

(ப-ரை) இகன்மேவும்-மாறுபாட்டோடு பொருந்துதலையுடைய, இன்னு. தன்பஞ்செய்கின்ற, அறிவினவர்-அறிவையுடையவர், மிகன்மேவும்-வெற்றி பொருந்துதலையுடைய, மெய்ப்பொருள் - நீதிநூற்பொருளை, காணர்-அறியமாட்டார் எ-று.

(க-ரை) மாறுபாட்டாற் றன்பஞ்செய்யு மறிவினையுடையவர் நீதிநூற் பொருளை யறியார் என்பதாம்.

(வி-ரை) இன்னவறிவு - தமக்கும் பிறர்க்கும் தீங்கை உண்டாக்குங் அறிவு. வெற்றிவழி கின்றூர்க்கு உண்டாவது. காணப்படும் பிரயோசனத்தை யுடையதாதலால் மெய்ந்நூலெனப்பட்டது. மாறுபாட்டினாலே அறிவு கலங்குதலால் காணுரென்றூர். [இவை இரண்டு பாட்டாலும் மாறுபட்டவர்க்கு வரும் தீங்கு சொல்லப்பட்டது.]

'மேவுதல்' என்றது பொருந்துதல். 'இன்னு' என்றது தன்பஞ் செய்கின்ற. 'வழிகின்றூர்' என்றது நீதிநூல்வழியே நடப்பவர். 'காணப்படும் பயத்தது' என்றது கண்கூடாகத்தோன்றும் பயனையுடையது. 'இகலினூர்' என்றது மாறுபட்டவர். 'மெய்' என்றது நூலுக்கு ஆகுபெயர். (7)

இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

(பரி-உரை) இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம் - தன்னுள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை யெதிர்தலை யொழிதல் ஒருவனுக்கு ஆக்கமாம். அதனை மிகல் ஊக்கின் கேடு ஊக்குமாம்-அது செய்யாது அதன்கண் மிகுதலை மேற்கொள்வானுயிற் கேடுந் தன்கண் வருதலை மேற்கொள்ளும் எ-று.

எதிர்தல்-எற்றக்கோடல். சாய்ந்தபொழுதே வருதலின், சாய்தல் ஆக்க மென்றூர். இகலிற்கெனவும் அதனையெனவும் வந்தன வேற்றுமைமயக்கம்.

(ப-ரை) இகலிற்கு-(தன்னுள்ளத்து) மாறுபாடு தோன்றியவிடத்து, எதிர் சாய்தல்-(அதற்கு) எதிரிடுதலை யொழிதல், ஆக்கம்-(ஒருவனுக்கு) ஆக்கமாம், அதனை-அம்மாறுபாட்டிலே, மிகல் - மிகுதலை, ஊக்கின் - மேற்கொள்ளுவானுயின், கேடு-கேடும், ஊக்குமாம்-(தன்னிடத்து வருதலை) மேற்கொள்ளும்.

(க-ரை) மாறுபாட்டிற் கெதிர்சாய்தலே செல்வம் அதை மேற்கொள்ளிற்கேடாம் என்பதாம்.

(வி-ரை) எதிர்தல்-எற்றக்கொள்ளுதல். சாய்ந்தபொழுதே வருதலால் சாய்தலாக்கமென்றூர்.

'அதனை' என்றது அவ்விகலை. 'ஆக்கம்' என்றது நன்மை. 'அது செய்யாது' என்றது ஏற்றக்கொள்ளாமையைச் செய்யாமல் (ஏற்றக்கொண்டு என்றபடி) 'அதன்கண்' என்றது அம்மாறுபாட்டிலே. மாறுபாடு ஒழிந்த பொழுதே ஆக்கம் வருதலால், 'இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம்' எனக் காரணக்காரியமாக உபசரிக்கப்பட்டது. 'எதிர்' இது முதனிலைத் தொழிற் பெயர்.

(8)

இகல்காணு னுக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு.

(பரி-உரை) ஆக்கம் வருங்கால் இகல் காணுன் - ஒருவன் தன்கணுக்கம் வரும்வழிக் காரணமுண்டாயினும் இகலை நினையான், கேடு தரற்கு அதனை மிகல் காணும் - தனக்குக் கேடுசெய்த கோடற்கட் காரணமின்றியும் அதன்கண் மிகுதலை நினைக்கும் எ-று.

இகலான் வருங்கேடு பிறானன்றென்பது தோன்றத் தரற்கென்றார். நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வந்தன. ஆக்கக்கேடுகட்கு முன்னடப்பன இகலினது இன்மை உண்மைகளென்பதாம்.

(ப-ரை) (ஒருவன்) ஆக்கம்வருங்கால் - (தன்னிடத்து) ஆக்கம்வரும் போது, (காரணம் உண்டாயினும்), இகல்-மாறுபாட்டை, காணுன்-நினையான், கேடுதரற்கு-(தனக்குக்) கேடுசெய்துகொள்ளுமிடத்து (காரணம் இல்லாதிருந்தும்), அதனை-அதனிடத்தே, மிகல்-மிகுதலை, காணும்-நினைப்பான் எ-று.

(க-ரை) ஒருவன் செல்வம் வரும்போது மாறுபாட்டைக்காணுன், கேடு வரும்போ ததனைநினைப்பான் என்பதாம்.

(வி-ரை) மாறுபாட்டால் வருங்கேடு பிறரால் அன்றென்பது தோன்றத் தரற்கென்றார். ஆக்கக்கேடுகட்கு முன் மாறுபடாமையும் படுதலும் உண்டா மென்பதாம்.

இகலான் வருங்கேடு பிறரான் அன்று என்பது விளங்க 'தரற்கு' என்றார். 'கேடுசெய்த கோடற்கண்' என்றது கெடுதி செய்துகொள்ளுமிடத்து. 'அதன்கண்' என்றது இகலில். தன்மைக்குச்சிறந்த தாலென்னுஞ் சொல்லாற் கூறினதனால், தனக்குத்தானே கெடுதியை உண்டாக்கிக் கொள்ளுதற்கென்று பொருள். 'தரற்கு' என்னும் நான்காம் வேற்றுமையும், 'அதனை' என்னும் இரண்டாம்வேற்றுமையும், ஏழாம்வேற்றுமையின் இடப் பொருளில் வந்தன. இகல் இல்லையாயின் ஆக்கமும், இகல் உண்டாயின் கேடும் உண்டாமென்பதாம்.

இகலான மின்னுத வெல்லா நகலான
நன்னய மென்னுஞ் செருக்கு.

(பரி-உரை) இகலான் இன்னுத எல்லாம் ஆம் - ஒருவனுக்கு மாறுபாடொன்றுனே இன்னுதனவெல்லாம் உளவாம், நகலான் நன்னயம் என்னும்

செருக்கு ஆம் - கட்பொன்றுனே கல்ல நீதியென்னும் பெருஞ்செல்வம் உளதாம் எ-று.

இன்னுதன-வறுமை, பழி, பாவ முதலாயின. நகல்-மகிழ்தல். நகலென் பதூஉஞ் செருக்கென்பதூஉம் தத்தங் காரணங்கட்காயின. நயமென்னுஞ் செருக்கெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். இவை மூன்றுபாட் டானும் அவ்விருமையுங் கூறப்பட்டன.

(ப-ரை) இகலான் - மாறுபாடொன்றினுலே, இன்னதெல்லாம். துன்பஞ் செய்பவையெல்லாம், ஆம் - உண்டாகும், நகலான் - கட்பொன்றி னுலே, நன்னயமென்னும்-கல்லநீதியென்னும், செருக்கு-பெருஞ்செல்வம், ஆம்-உண்டாகும் எ-று.

(க-ரை) மாறுபாட்டாற் றன்பமெல்லாமுண்டாம், கட்பால் செல்வ முண்டாம் என்பதாம்.

(வி-ரை) இன்னுதன - வறுமை பழிபாவங்கள் முதலானவை. நகல்-மகிழ்தல். அதுவும் செருக்கென்பதும் தன்றன் காரணங்களுக்காயின. நயமென்னுஞ் செருக்கெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். [இவை மூன்றுபாட்டானும் அவ்விருமையும் சொல்லப்பட்டன.]

மகிழ்ச்சியென்னும் பொருளதாகிய நகலென்பது அதற்குக் காரண மாகிய கட்புக்கும், களிப்பென்னும் பொருளதாகிய செருக்கு என்பது அதற்குக் காரணமாகிய செல்வத்துக்குக் காரியவாகுபெயர். 'இருமை' என்றது இகலாதார்க்கு வரும் நன்மையும், இகலினர்க்குவரும் தீமையும். 'இகலான்' 'நகலான்' இதில் ஆன் மூன்றனுருபு. (10)

86-ம் அதி - இகல் - முற்றிற்று.

87-ம் அதிகாரம்—பகைமாட்சி

(பரி-உரை) அஃதாவது: அறிவின்மை முதலிய குற்றங்களுடைமை யாற் பகையை மாட்சிப்படுத்தல். அரசர்க்கு எவ்வாற்றானும் பகையின்மை கூடாமையின் மேற்பொதுவகையான் விலக்கப்பட்ட இகலே சண்டுச் சிறப்பு வகையான் விதிக்கின்றுராகலின் இஃததன்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: அறிவில்லாமை முதலாகிய குற்றக்களுடைமை யால் பகையை மாட்சிமைப்படுத்தல். அரசர்க்கு எவ்வழியாலும் பகையின் மை கூடாமையால், மேலே பொதுவகையால் விலக்கப்பட்ட இகல் இவ்விடத்தே சிறப்புவகையால் விதிக்கின்றுராகலால் இது அதன்பின் வைக்கப்பட்டது.

வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை.

(பரி-உரை) வலியார்க்கு மாறு ஏற்றல் ஒம்புக தம்மின் வலியார்க்குப் பகையா யெதிர்தலை ஒழிக; மெலியார்மேல் பகை ஒம்பா மேக-வென மெலியார்க்குப் பகையாதலை ஒழியாத விரும்புக எ-று.

வலியாரென்புழித் துணைவலியுமடங்கலின், மெலியா ரென்புழித் துணைவலி யின்மையுங் கொள்ளப்படும். அத்துணைதான் படை பொருள் முதலிய வேற்றுமைத்துணையும் கல்லறிவுடைமை நீதிநூல்வழியொழுகல் முதலிய வேற்றுமைத்துணையுமென விரண்டாம். அவ்விரண்டுமில்லாரை வெல்வார்க்கு வலிதொலையாமையின் அவரோடு பகைத்தல் விதிக்கப் பட்டது. சிக்கோக்காகிய இதனுட் பகைமாட்சி பொதுவகையாற் கூறப் பட்டது.

(ப-ரை) வலியார்க்கு - (தம்மின்) வலியவர்க்கு, மாறேற்றல் - பகையா யெதிர்தலை, ஒம்புக-ஒழியக்கடவர், மெலியார்மேல்-மற்றை மெலியவர்க்கு, பகை-பகையாகுதலை, ஒம்பா-ஒழியாமல், மேக-விரும்பக்கடவர் எ-று.

(க-ரை) வலியவர்க் கெதிர்தலை நீக்கக் கடவர் மெலியவர்க்குப் பகை யாதலை விரும்பக்கடவர் என்பதாம்.

(வி-ரை) வலியாரென்றவிடத்துத் துணைவலியும் அடங்கலால், மெலியா ரென்றவிடத்துத் துணைவலி யில்லாமையும் கொள்ளப்படும். அத்துணைதான் படை பொருள் முதலாகிய வேற்றுமைத்துணையும், கல்லறிவுடைமை நீதி வழியொழுகல் முதலாகிய ஒற்றுமைத்துணையும் என விரண்டாம். அவ் விரண்டுமில்லாரை வெல்வார்க்கு வலிமை தொலையாமையான் அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. [சிக்கோக்காகிய இதனுள் பகைமாட்சி பொதுவகையாலே சொல்லப்பட்டது.]

'பகைமாட்சி' என்றது அறிவில்லாமை முதலிய குற்றங்களையுடைய வர்களை கன்முக ஆராய்ந்தறிந்து அவர்களோடு பகைமைகொள்ளுதல். 'மாட்சி' என்றது பெருமை. 'தம்மின் வலியார்' என்றது தாஞ் செய்யக்கரு திய வினைவலியையும் அதனை செய்துமுடிக்குந் தம்வலியையுந் துணையாவார் வலியையுந் தம்மினும் மிகுதியாக வுடையவர். 'மெலியார்' என்றது அவ் வலிமைகளில் தம்மினும் எளியவர். 'என்புழி' என்றது என்றவிடத்து. 'வேற்றுமைத்துணை' என்றது தன்னினும் வேறுபடுதுணை. 'ஒற்றுமைத் துணை' என்றது தன்னினும் வேறுகாததுணை. சிக்கோக்காகிய இதனுள் ன்னும் பின்னும் பார்க்கின்ற சிக்கத்தின் பார்வையைப்போல முன்னதி காத்தையும் பின்னதிகாரத்தையும் நோக்குகின்ற இத்திருக்குறளில் 'மெலி ரர்மேல் மேகபகை' எனப் பொதுவாகக் கூறப்பட்டது. 'ஏற்றல்' இதில் ல்-பகுதி. (1)

அன்பில னென்ற துணையிலன் றுன்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு.

(பரி-உரை) அன்பு இலன் - ஒருவன் தன் சுற்றத்தின்மே லன்பிலன், ஆன்ற துணை இலன் - அதுவேயன்றி வலிய துணையிலன்; தான் துவ்வான். அதன்மேற்றான் வலியிலன்; ஏதிலான் துப்பு என் பரியும் - அப்பெற்றியான் மேல்வந்த பகைவன் வலியினை யாங்ஙனந் தொலைக்கும் எ-று.

சுற்றமும் இருவகைத்துணையும் தன்வலியு மிலனாகலின், அவன்மேற் செல்வார்க்கு வலி வளர்வதன்றித் தொலையாதென்பதாம். துவ்வான் - துவ்வினைச் செய்யான்.

(ப-ரை) (ஒருவன்) அன்பிலன் - (தன் சுற்றற்தார்மேல்) அன்பிலன், ஆன்ற துணையிலன் - (அதுவேயன்றி) வலிய துணையிலன், தான் றுவ்வான். (அதன்மேல்) தான் வலியிலன், (அப்படிப்பட்டவன்) ஏதிலான் - (தன்மேல் வந்த) பகைவனது. துப்பு-வலிமையை, என்பரியும்-எப்படி தொலைப்பான்.

(க-ரை) அன்பும் துணையும் வலிமையு மில்லாதவன் பகைவனது வலிமையை யெப்படி நீக்குவான் என்பதாம்.

(வி-ரை) சுற்றமும் முன் சொல்லப்பட்ட இருவகைத்துணையும் தன் வலியும் இலனாகலால் அவன் மேலே செல்வார்க்கு வலிவளர்வதல்லாமற் றொலையாதென்பதாம்.

'அன்பாவது' என்றது தொடர்புடையாரிடத்துக் காதலுடையனாதல். 'அப்பெற்றியான்' என்றது அப்படிப்பட்டவன். 'மேல்வந்த' என்றது தன் மேல் எதிர்த்துவந்த. 'இருவகைத்துணை' என்றது கீழ்க்கூறிய வேற்றுமைத் துணையும், ஒற்றுமைத்துணையும். 'செல்வார்' என்றது போருக்குச் செல்வார். 'அவ்வினை' என்றது வலிமையை. 'ஆன்ற' இதில் ஆன் முதனிலை. எவன் என்னும் வினாப்பெயர், என் என்று ஆய் இங்கு இன்மை குறித்துநின்றது. 'ஏதிலான்' என்றது ஏது + இலான்; யாதொரு சம்பந்தமுமில்லாதவன். (2)

அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு.

(பரி-உரை) அஞ்சும் - ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சா நிற்கும், அறியான் - அறியவேண்டுமவற்றை யறியான், அமைவு இலன் - பிறரோடு பொருத்தமிலன், ஈகலான் - இவற்றின்மேலும் யாவர்மாட்டும் இவறன்மாலையன், பகைக்குத் தஞ்ச மெளியன்-இப்பெற்றியான் பகைவர்க்கு மிகவெளியன் எ-று.

* தஞ்சமெளியனென்பன ஒருபொருட்பன்மொழி. இந்நான்கு குற்றமு முடையான் பகையின்றியு மழியுமாகலின் தஞ்சமெளியனென்றார்.

(ப-ரை) (ஒருவன்) அஞ்சும் - (அஞ்சவேண்டாதவைகளுக்கு) அஞ்சு வான், அறியான் - (அறியவேண்டுமவைகளை) அறியான், அமைவிலன்-(பிற ரோடு) பொருத்தமிலன், ஈகலான் - (இவைகளின்மேலும் யாவரிடத்தும்)

* "தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே" தொல்காப்பியம்: சொல்-296

லோபகுணமுடையவன், (இப்படிப்பட்டவன்) பகைக்கு · பகைகோக்கு, நஞ்சமெளியன்·மிகவெளியனுவான் எ று.

(க-ரை) அஞ்சவதும் மறியாதவறு சட்பில்லாதவறு முலோபனுமான வன் பகைவர்க் கெளியனுவான் என்பதாம்.

(வி-ரை) நஞ்சமெளியனென்பவை ஒருபொருளைக் குறித்துவந்த பல சொல். இக்ஙான்கு குற்றமுமுடையான் பகையில்லாமலும் அழியுமாகலால் நஞ்சமெளியனென்றார்.

'அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சாகிற்கும்' என்றதனுல், அதன் எதிர் மறையாகிய அஞ்சவேண்டுவனவற்றை அஞ்சாத எண்ணுத செய்த கிற்பா னென்பதுக்கொள்ளலாம். 'பொருத்தம்' என்றது சேர்க்கை. 'இவற்றின் மலும்' என்றது இலைமாத்திரமன்றி. 'இவறன்மாலையன்' என்றது லோப குணமுடையவன். 'எளியன்' என்றது எளியனுவான். 'நஞ்சம்' என்றது எளிமைப்பொருளுணர்த்துவதோர் இடைச்சொல்; 'நஞ்சக் கினவி யென் மைப் பொருட்டே' என்றார் தொல்காப்பியனுர். 'ஒருபொருட் பன்பொழி' என்றது ஒருபொருளைக் குறித்த வந்த பல சொற்கள்; இது மிகுதிப் பொருளது. 'பகையின்றியு மழியும்' என்றது தனக்குத்தானே அழிவான் பகையின்றியே யழியவல்லவன் பகைவரால் அழிதற்கு ஐயமின்றென்பது உறவேண்டாதாயிற்று. 'பகை' இது பகைவர்க்குப் பண்பாகுபெயர். (3)

நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.

(பரி-உரை) வெகுளி நீங்கான் - ஒருவன் வெகுளியினீங்கான், நிறை லென் - அதுவேயன்றித் தான் நிறையுடையனல்லன், எஞ்ஞான்றும் யாங்க ணும் யார்க்கும் எளிது - அவன்மேற்சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்குமெளிது எ-று.

• நிறை - மறைபிறராறியாமை. வெகுடன்மாலையனுகலானும், மறை வெளிப்படுத்தலானும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியுமறிந்து சேறல்வேண்டாதாயிற்று. இனி இனிதென்ற பாடமோதி அவன் பகைமை னிதென் றுரைப்பாருமுளர்.

(பதவுரை) (ஒருவன்) வெகுளி நீங்கான்-கோபத்தினின்றும் நீங்காதவன், நிறையிலன் - (அதுவேயன்றித் தான்) நிறையுடையனல்லன், (அவன்மேலே சல்லுதல்) எஞ்ஞான்றும்-எக்காலும், யாங்கணும்-எவ்விடத்தும், யார்க்கும்-யாவருக்கும், எளிது-எளிமை எ-று.

(க-ரை) கோபத்தையு நிறையில்லாமையு முடையவன் பகைவர்க்கெளி வனுவான் என்பதாம்.

• "நிறையென்ப படுவது மறைபிறராறியாமை" கலி: நெய்தல்-16.

(வி-ரை) கிறை - மறைபிறரறியாமை. இவன் கோபகுணமுடையவனாலும், இரகசியத்தை வெளிப்படுத்தலாலும் இவன்மேலே போர்க்குச்செல்வார்க்குக் காலமும் இடமும் வலியும் அறிந்துசொல்லுதல் வேண்டுவதில்லையாயிற்று.

'சேறல்' என்றது பகைத்துச் செல்லுதல். 'மறை பிறரறியாமை' என்றது மறைந்ததொரு காரியம் பிறர் அறியாமலொழுகுதல். 'கிறையின்மை' என்றது மனத்த அடக்கற்பாலனவற்றை அடக்காத வாய்விடுதல். 'வெடுடன்மாலையன்' என்றது கோபிக்குந்தன்மையுடையவன். வலி-வினைவலி, தன்வலி, மாற்றான்வலி, துணைவலி, அவர்களை எப்பொழுதும் எவ்விடத்தும் யாவர் எதிர்த்தாலும் வெற்றிபெறலா மென்றபடி. (4)

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான் பண்பிலன் பற்றார்க் கினிது. [ன்

(பரி-உரை) வழி நோக்கான் - ஒருவன் நீதிநூலையோதான், வாய்ப்பன செய்யான் - அது விதித்த தொழில்களைச் செய்யான், பழி நோக்கான் - தனக்குவரும் பழியைப் பாரான், பண்பு இலன்-தான் பண்புடையனல்லன், பற்றார்க்கு இனிது-அவன் பகைவர்க்கு அப்பகைமை யினிது எ-று.

தொல்லோரடிப்பட வழங்கிவந்ததாகலான் வழியென்றும், தப்பாது பயன்படுதலின் வாய்ப்பனவென்றும், இக்குற்றங்களுடையான் றானே யழிதலிற் பற்றார்க்கினிதென்றுங் கூறினார்.

(ப-ரை) (ஒருவன்) வழிநோக்கான் - நீதிநூலைக்கல்லான், வாய்ப்பன செய்யான் - (அது) விதித்த தொழில்களைச் செய்யான், பழிநோக்கான் (தனக்குவரும்) பழியைப்பாரான், பண்பிலன்-குணமுடையனல்லன், (அவன் பகைமை) பற்றார்க்கு-பகைவர்க்கு, இனிது-இன்பம் எ-று.

(க-ரை) நீதிநூல் கல்லாதான், விதித்தன செய்யாதவன், பழிநோக்காதவன், குணமில்லாதவன், பகைவர்க் கெளியனாவான் என்பதாம்.

(வி - ரை) பழையோராதியாக வழங்கிவருதலால் வழியென்றும், தப்பாது பிரயோசனப்படுதலால் வாய்ப்பனவென்றும், இக்குற்றங்களுடையவன் தானே அழிதலால் பற்றார்க்கினிதென்றும் சொல்லினார்.

'ஒதான்' என்றது படியான். 'பண்பு' என்றது நற்குணம். 'அப்பகைமை' என்றது அத்தகையதொரு கொண்ட பகை. 'தொல்லோர் அடிப்பட வழங்கிவந்தது' என்றது முன்னோர் முதலாக கடந்துவந்தது. 'வாய்ப்பன' என்றது தவறுது பயன்படுந்தொழில்கள். 'பண்பாவது' என்றது உலகொழுக்கமறிந்து ஒத்து ஒழுகல். "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்" என்றார் கலியிலும். 'பற்றார்' என்றது தன்னோடு பொருந்தாதவர்; எனவே பகைவர்.

காணைச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணமை பேணப் படும்.

(பரி-உரை) காணைச் சினத்தான்-தன்னையும் பிறரையும் தானறியாமைக் கேதுவாகிய வெகுளியையுடையான் யாவன், கழி பெருங்காமத்தான்-மேன் மேல் வளராகின்ற மிக்க காமத்தையுடையான் யாவன், பேணமை பேணப் படும்-அவரது பகைமை விரும்பிக் கொள்ளப்படும் எ-று.

காணைசினமென்பது விகாரமாயிற்று. முன்னேனுக்கு யாவரும் பகையாகலானும், எனேனுக்குக் காரியந் தோன்றுமையானும், தாமே யழிவ ரென்பதபற்றி இவர் பேணமை பேணப்படுமென்றார்.

(ப-ரை) காணைச்சினத்தான் - (தன்னையும் பிறரையும்) அறியாமைக்கு ஏதுவாகிய கோபத்தையுடையவன் (யாவன்,) கழிபெருங் காமத்தான்-மேன் மேலும் வளராகின்ற மிகுந்த காமத்தையுடையவன், (யாவன்) பேணமை-(அவரது) பகைமை, பேணப்படும்-விரும்பிக் கொள்ளப்படும் எ-று.

(க-ரை) கோபத்தையும் காமத்தையு முடையவன் பகைவர்க் கெளியவன் என்பதாம்.

(வி-ரை) முன்சொல்லப்பட்டவனுக்கு யாவரும் பகையாகலாலும், பின் சொல்லப்பட்டவனுக்குக் காரியம் தோன்றுமையாலும் தாமே அழிவரென்பதபற்றி பேணமை பேணப்படுமென்றார்.

'முன்னேன்' என்றது முன் சொல்லப்பட்டவன்; சினத்தான். 'எனேன்' என்றது மற்றையோன்; காமத்தான். 'காரியம்' என்றது செய்யவேண்டுந் தொழில். 'தோன்றுமையான்' என்றது மனத்திற்படாமையால். 'காணை' என்றது ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். 'பேணமை' என்றது விரும்பாமை; எனவே பகைமை. 'கழிபெரு' இதனை ஒருபொருட்பன்மொழியாகவுங் கொள்ளலாம். (6)

கொடுத்துங் கொளல்வேண்டுமன்ற வடுத்திருந்து
மாணுத செய்வான் பகை.

(பரி-உரை) அடுத்த இருந்த மாணுத செய்வான் பகை-வினையைத் தொடங்கியிருந்த அதற்கேலாதன செய்வான் பகைமையை, கொடுத்தும் கொளல் மன்ற வேண்டும்-சிலபொருளழியக் கொடுத்தாயினுங் கோடல் ஒருதலையாகவேண்டும் எ-று.

ஏலாதன-மெலியனுய் வைத்துத் தணிதலும், வலியனுய் வைத்துத் தணிதலும் முதலாயின. அப்பொழுது அதனுற் சிலபொருளழிவினும் பின் பொருளெய்தற்கு ஐயமின்மையின், கொளல் வேண்டுமன்ற வென்றார். இவை யாறுபாட்டானும் அது சிறப்புவகையாற் கூறப்பட்டது.

(ப-ரை) அடுத்திருந்து-(தொழிலை) தொடங்கியிருந்த, மாணுத-அதற்கு) ஏற்காதவைகளை, செய்வான்-செய்பவனது, பகை-பகைமையை,

கொடுத்தும் - (சில பொருள் அழியக்) கொடுத்தாயினும், மன்ற - நிச்சயமாக, கொளல்வேண்டும்-கொள்ளுதல்வேண்டும் எ-று.

(க-ரை) எலாதவற்றைச் செய்பவன் பகைமையைப் பொருள் கொடுத்துக் கொள்ளல்வேண்டும் என்பதாம்.

(வி-ரை) எற்காதவை மெலியவனுயிருந்த தணிதலும், வலியவனுயிருந்த தணிதலும் முதலாயின. அப்பொழுத அதனுலே சிலபொருள் அழியினும் பின்னே பல பொருள்களைப் பெறுதற்குச் சந்தேகம் இல்லாமையால் கொடுத்தற்கொளல் வேண்டுமென்றவென்ருர். [இவை ஆறுபாட்டாலும் அத சிறப்புவகையாலே சொல்லப்பட்டத.]

'எலாதன' என்றத தகாதவை. 'ஒருதலை' என்றத நிச்சயம். 'தெ யனுய் வைத்தத்தணிதல்' என்றத தான் வலிகுறைந்தவனுயிருந்தேயும் போர்க்கு நிச்சயித்தல். 'வலியனுய் வைத்தத் தணிதல்' என்றத தான் வலிமிகுந்தவனுயிருந்தேயும் போர்க்குச் செல்லாமல் அடக்குதல். 'அப் பொழுத' என்றத பொருள் கொடுத்துக்கொள்ளும்பொழுத. 'அதனுல்' என்றத அக்கொடையால். 'அத' என்றத பகைமாட்சி. 'கொடுத்தும்' இதில் உம்மை உயர்வுசிறப்பு. 'வேண்டும்' என்றத ஈண்டு இன்றியமையாதென்னும் பொருளத. 'மன்ற' இத தெளிவுப்பொருளுணர்த்தும் இடைச்சொல். 'மன்ற வெண்கிளவி தேற்றஞ் செய்யும்' என்ருர். (7)

குணனிலனுய்க் குற்றம் பலவாயின் மாற்ருர்க்
கினனிலனு மேமாப் புடைத்து.

(பரி-உரை) குணன் இலனுய்க் குற்றம் பலவாயின் இனன் இலனும் ஒருவன் குணனென்றமிலனுய் உடையகுற்றம் பலவாயவழி, அவன் இனனிலனும்; மாற்ருர்க்கு ஏமாப்பு உடைத்த-அவ்விலனுதருனே அவன் உர்க்குத் துணையாதலையுடைத்த எ-று.

குணம் - இறைமாட்சியுட் சொல்லியன. குற்றம் இவ்வதிகாரத்துட் சொல்லியனவும் மற்றுமத்தன்மையனவும். துணை-சுற்றம், நட்பு, பொருள் படைமுதலாயின. பகைவர்க்கு இவற்ருலுளதாம் பயன்ருனே புனராயின், ஏமாப்புடைத்தென்ருர். இலனுயென்னுஞ் செய்தெனைச்சம் உருவென வந்த பெயரெச்சக்குறிப்புக்கொண்டத.

(ப-ரை) (ஒருவன்) குணனிலனுய்-குணமொன்றமிலனுய், குற்றம் பலவாயின்-(உடைய) குற்றம் பலவாகியவிடத்த, இனனிலனும்-(அவன்) இனமில்லாதவனுகும்; (அவ்விலனுகுகையே) மாற்ருர்க்கு-(அவன்) பகைவர்க்கு ஏமாப்பு உடைத்த-துணையாகுகையை புடைத்த எ-று.

(க-ரை) குணமில்லாதவனுய்ப் பல குற்றமுடையவனுகில் துணையில்லாதவனுவான். அவன் பகைவர்க்கெளியன் என்பதாம்.

(வி-ரை) குணம் - இறைமாட்சியுள்ளே சொல்லப்பட்டவை. குற்றம்-இவ்வதிகாரத்துள்ளே சொல்லப்பட்டவையும், மற்றும் இப்படிப்பட்டவையும் ஆம். துணை-சுற்றம் நட்பு பொருள் படை முதலானவை. பகைவர்க்கும் இவ்வழியால் உண்டாகும் பயன் தானே உண்டாமாகலால் ஏமாப்புடைத்தென்றார்.

'இலன்' என்றது இல்லாதவன். இறைமாட்சி முப்பத்தொன்பதாம் அதிகாரத்திற் சொல்லிய குணங்கள்-அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், மாக்காமை, கல்வி, துணிவுடைமை மானமுடைமை முதலியன. இவ்வதிகாரத்துட் சொல்லியன - அன்பின்மை முதலியன. பகைவர்க்கு இவற்றானாம் பயன் தானே உளதாம். 'குணம்' என்றது குற்றமின்மை. 'துணை' என்றது இவை இல்லாதிருந்தும் இருந்தால் உண்டாகும் பயனாகிய வெற்றி இன்மையானோடு பகைமைகொண்ட மாத்திரத்தால் தானே யுண்டாகுமென்பதாம். 'குணன், இனன்' இரண்டும் ஈற்றுப்போலி. (8)

செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா வஞ்சும் பகைவர்ப் பெறின்.

(பரி-உரை) அறிவு இலா அஞ்சும் பகைவர்ப் பெறின் - நீதியை யறிதலில்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றால், செறுவார்க்குச் சேண் இன்பம் இகவா-அவரைச் செறுவார்க்கு உயர்ந்தவின்பங்கள் நீங்கா எ-று.

உபாயமறிதலும் அறிந்தாற் செய்துமுடிக்குந் திண்மையுமில்லாதாரே பகைவராதல் கூடாமையிற் பெறினென்றும், அவரை யறிந்து மேற்சென்ற பொழுதே பகையின்மையுஞ் செல்வமும் ஒருங்கே யெய்தலிற் சேணுடையின்பங்கள் இகவாவென்றுங் கூறினார்.

(ப-ரை) அறிவிலா - (நீதியை) அறிதலில்லாத, அஞ்சும்-அஞ்சுகின்ற, ...ர் - பகைவரை, பெறின் - பெற்றால், செறுவார்க்கு - (அவரை) வெல்லாக்கு, சேண்-உயர்வுள்ள, இன்பம்-இன்பங்கள், இகவா-நீங்கா எ-று.

(க-ரை) நீதியை யறியாத பகைவரைப் பெற்றால் வெல்பவர்க் கின்பம் ...தாம்.

(வி-ரை) உபாயமறிதலும் அறிந்தால் செய்துமுடிக்குந் திடமும் இல்லாதாரை பகைவராதல் கூடாமையால் பெறினென்றும், அவரை அறிந்து ...சென்றபொழுதே பகையில்லாமையும் செல்வமும் ஒருசேர அடைத்தலாற் சேணுடையின்ப மிகவாவென்றும் சொல்லினார்.

'உபாயம்' என்றது சாமபேத தான தண்டங்கள். 'கூடாமையின்' ...ன கிடைத்தலருமையால். 'சேண்' என்றது உயர்வு. 'சேணின்பம்' ...ரண்ட னுருபும்பயனுமுடன்றொக்கதொகை. (9)

கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று மொல்லானை யொல்லா தொளி.

(பரி-உ) கல்லான் வெகுளும் சிறு பொருள் ஒல்லானை - நீதிநூலை கல்லாதானெடு பகைத்தலான் வரும் எளியபொருளை மேவாதானை, எஞ்ஞான்றும் ஒளி ஒல்லாது-எஞ்ஞான்றும் புகழ்மேவாது எ-று.

சிறுபொருள் - முயற்சி சிறிதாய பொருள். நீதியறியாதானை வேந்து எளிதாயிருக்கவும் அது மாட்டாதானை வெற்றியான் வரும் புகழ் கூடாதென்பதாம்; ஆகவே, அச்சிறிய முயற்சியாற் பெரிய பயனெய்துக வென்றவாறாயிற்று. இதற்குப் பிறரெல்லாம் அதிகாரத்தோடு மாறுதன்மேலும் ஒரு பொருட்டொடர்பு படாமலுரைத்தார். இவை மூன்றுபாட்டானும் அதனாலாய பயன் கூறப்பட்டது.

(ப-ரை) கல்லான் - (நீதி நூல்களைக்) கல்லாதவனெடு, வெகுளும் - பகைத்தலால் வரும், சிறுபொருள் - எளியபொருளை, ஒல்லானை - அடையாதவனை, எஞ்ஞான்றும்-எக்காலும், ஒளி-புகழ், ஒல்லாது-அடையாது எ-று.

(க-ரை) கல்லாதவனுடன் பகைத்தலால் வரும்பொருளை யடையாதவனைப் புகழடையாது என்பதாம்.

(வி-ரை) சிறுபொருள்-முயற்சி சிறிதாகிய பொருள். நீதியறியாதவனை வெல்லுதல் எளிதாயிருக்கவும் அது மாட்டாதவனை வெற்றியால் வரும் புகழ் கூடாதென்பதாம். ஆகவே, இச்சிறிய முயற்சியாலே பெரிய பயனடைக வென்றபடியாயிற்று. [இவை மூன்றுபாட்டாலும் அதனாலாகிய பயன் சொல்லப்பட்டது.]

'நீதிநூலை' என்பது இசையெச்சம். 'மேவாதான்' என்றது விரும்பியடையாதவன். 'முயற்சி சிறிதாயபொருள்' என்றது பொருள் அதிகமாயினுஞ் சிறிய முயற்சியால் அடையப்படுவது. 'அதுமாட்டாதான்' என்றது வெல்லமாட்டாதவன். 'ஒருபொருட்டொடர்புபடாமல்' என்றது பொருட்சம்மந்தமொன்றுமில்லாது. 'அதனின்' என்றது பகைமாட்சியால். 'புகழ்' என்றது அது பெற்றவனை. உலகமுழுவதும் எக்காலத்தும் விளக்கச் செய்தலால், ஒளியெனப்பட்டது. (10)

87-ம் அதி - பகைமாட்சி - முற்றிற்று.

88-ம் அதிகாரம்—பகைத்திறந்தெரிதல்

(பரி-உரை) அஃதாவது: மாணாத பகையை ஆக்குதற்குற்றமும், மாளுகின்ற பகையுள் கட்பாக்கற்பாலதும், தொகுமலாக்கற்பாலதும், அவற்றின்கட் செய்வதும், வினைக்களைதற்பாலதன்கட் செய்வனவும், களையுமாறுவமும், களையாக்காற் படுமிழுக்கும் என்ற இத்திறங்களை ஆராய்தல். இரட்டுறமொழிதலென்பதனாற் பகையது திறமும் பகையிடத்தாக்குந் திறமுமென விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாணாப் பகையவாகலின், இது பகைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: மாட்சிமைப்படாத பகையை ஆக்குதற்குற்றமும், முன்னுய் நின்ற பகையுள் கட்பாக்குந் தன்மையதும், அயலாக்குந் தன்மையதும் அவைகளிலே செய்வதும், மற்றைக் களையுந் தன்மையதும், அதனிடத்தே செய்வனவும், களையும் பருவமும், களையாமற்போனுல் படுமிழுக்கமும் என்று இவ்விதங்களை ஆராய்தல். இவையெல்லாம் மாட்சிமைப்படாத பகையினவாகலால், இது பகைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

(பரி-உரை) பகை என்னும் பண்பு இலதனை-பகையென்று சொல்லப்படுந் தீமை பயப்பதனை, ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்று அன்று-ஒருவன் விளையாட்டின்கண்ணேயாயினும் விரும்புத லியற்கைத்தன்று நீதிநூல் எ-று.

மாணுதபகையை யாக்கிக்கோடல் எவ்வாற்றானுந் தீமையே பயத்தலிற் பண்பிலதென்றும், அதனை விளையாட்டின்கண் வேண்டினுஞ் செற்றமே விளக்கு மெய்யாமாகலின் நகையேயுமென்றும், வேண்டாமை தொல்லியோர் துணிவென்பார் நீதிநூன்மேல் வைத்துங் கூறினர். அப்பெயர் அவாய் நிலையான் வந்தது.

(ப-ரை) ஒருவன் - ஒருவன், பகையென்னும்-பகையென்று சொல்லப்படும், பண்பிலதனை - தீமை புண்டாக்குவதனை, நகையேயும் - விளையாட்டிடத்தேயாயினும் வேண்டற்பாற்றன்று - விரும்புதற்றன்மையுடையதன்று, (நீதிநூல்) எ-று.

(க-ரை) ஒருவன் பகையாகிய தீமைக்குணங்களை விளையாட்டிலும் விரும்பாதிருக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) மாட்சிமைப்படாத பகையை ஆக்கிக்கொள்ளுதல் எவ்விதத்தாலும் தீமையே தருதலால் பண்பிலதென்றும், அதனை விளையாட்டிடத்து வேண்டினும் கோபமே விளக்கு மெய்யாமாகலால் நகையேயுமென்றும், வேண்டாமை பழமையோர் துணிவென்றற்கு நீதிநூல்மேல்வைத்தும் சொல்லினர். [நீதிநூல் வருவிக்கப்பட்டது.]

'மாணுத' என்றது மாட்சிமைப்படாத, தனக்கு நன்மையைத்தராத. 'மாணுதபகையை ஆக்குதற்குற்றம்' என்றது அறிவின்மை முதலிய குற்றங்களில்லாதாரோடு பகைகொள்ளுதலால் வருங்குற்றம். 'தொகுமலாக்கற்பான்' என்றது கட்பும் பகையுமாகாமல் அயலாக விட்டுவைக்குந் தன்மையது. 'செற்றின்கண்' என்றது கட்பிடத்தும் தொகுமலிடத்தும். 'களைதற்பாலது' என்றது அடியோடு ஒழிக்குந்தன்மையது. 'இடற்றுறமொழிதல்' என்றது பொருள்படச் சொல்லுதல். 'விரும்புதலியற்கைத்து' என்றது விரும்புந்தன்மையுடைத்து. 'தொல்லியோர்' என்றது முன்னோர். 'அப்பெயர்' என்றது

நீதிநூலென்னும் பெயர். 'அவாய்நிலை' என்றது ஒருமொழி மற்றொன்றை வேண்டிநிற்றல். 'பாற்று' இது பான்மையென்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புமுற்று. (1)

வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

(பரி-உரை) வில் ஏர் உழவர் பகை கொளினும்-ஒருவன் வில்லை ஏராகவுடைய உழவரோடு பகைகொண்டானாயினும், சொல் ஏர் உழவர் பகை கொள்ளற்க-சொல்லை ஏராகவுடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக எ-று.

சொல் ஆகுபெயரான் நீதிநூல்மேனின்றது. வீரம் சூழ்ச்சியென்னும் ஆற்றல்களுள் வீரமேபுடையாரோடு பகைகொண்டாற் கேடுவருதல் ஒரு தலையன்று, வந்தாயினுந் தனக்கேயாம்; ஏனைச் சூழ்ச்சிபுடையாரோடாயிற் றன்வழியினுள்ளார்க்குந் தப்பாது வருதலின், அது கொள்ளினும் இது கொள்ளற்க வென்றார். உம்மையான் அதுவுமாகாமை பெறுதும். இரண்டு முடையாரோடு கொள்ளலாகாமை சொல்லவேண்டாவாயிற்று. உருவகவிசேடம்.

(ப-உரை) (ஒருவன்) வில்லேர் - வில்லை ஏராகவுடைய, உழவர் - உழவரோடு, பகைகொளினும் - பகைகொண்டாலும், சொல்லேர்-சொல்லை ஏராகவுடைய, உழவர் - உழவரோடு, பகை - பகையை, கொள்ளற்க - கொள்ளாதொழியக் கடவன் எ-று.

(க-உரை) வீரர் பகையைக் கொண்டாலு மந்திரிகள் பகையைக் கொள்ளாதிருக்கக்கடவன், சொல்லேருழவர் மந்திரிகள் என்பதாம்.

(வி-உரை) சொல் ஆகுபெயராய் நீதிநூலின்மேல் நின்றது. வீரம் ஆலோசனை என்கிற ஆற்றல்களுள் வீரமேபுடையவரோடு பகைகொண்டால் கேடு வருவது நிச்சயமன்று, வந்தாலும் தனக்கேயாம். மற்றை ஆலோசனைபுடையவரோடானால் தன் வமிசத்தோர்க்கும் தப்பாது வருவதலால், அது கொள்ளினும் இது கொள்ளற்கவென்றார். கொளினும் என்கிற உம்மையால் வில்லேருழவர் பகையும் ஆகாமை பெறப்படும். இரண்டுமுடையவரோடு கொள்ளலாகாமை சொல்லவேண்டாவாயிற்று.

'வில்' என்றது வாள் வேல்முதலிய படைகளுக்கும் உபலக்ஷணம். 'ஏர்' என்றது உழுபடை கலப்பை வில்லை ஏராகவுடைய உழவர் வீரரென்றபடி. 'சொல்லை ஏராகவுடையோர்' என்றது ஆலோசனைபுடையோர். 'சொல்' இது நீதிநூலுக்குக் கருவியாகுபெயர். 'தன்வழியினுள்ளார்' என்றது தன் வமிசத்தவர். 'அதுவும்' என்றது வீரர் பகையும். 'கொள்ளலாகாமை' என்றது பகைகொள்ளலாகாமை. 'வில்லேருழவர்' என்றது பகைவராகிய விளைநிலத்தை வில்லாகிய ஏரைக்கொண்டு உழுத அம்புகளாகிய விதைகளை விதைத்த வெற்றியாகிய பயனைக் கொள்பவர். (2)

ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

(பரி-உரை) தமியனாய்ப் பல்லார் பகைகொள்பவன் - தான் தனியனாய் வைத்துப் பலரோடு பகைகொள்வான், ஏமுற்றவரினும் ஏழை - பித்துற்றாரினும் அறிவிலன் எ-று.

தனிமை - சுற்றம் நட்புப் படைமுதலியவின்மை. மயக்கத்தால் ஒப்பாராயினும் ஏமுற்றவர் அதனாற் றீங்கெய்தாமையின், தீங்கெய்துதலுமுடைய இவனை அவரினும் ஏழையென்றார். தீங்காவது - துணையுள்வழியும் வேறல் ஐயமாயிருக்க அஃதின்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறு வேறு பொருதற்கண்ணும் ஒருங்கு பொருதற்கண்ணும் அழிந்தேவிடுதல். இவை மூன்றுபாட்டானும் பகைசோடற்குற்றம் பொதுவினுஞ் சிறப்பினுங் கூறப்பட்டது.

(ப-ரை) தமியனாய் - (தான்) தனியனா யிருந்துகொண்டு, பல்லார் - பலரோடும், பகைகொள்பவன்-பகையைக்கொள்வோன், ஏமுற்றவரினும்-பித்தங்கொண்டவரினும், ஏழை-அறிவிலன் எ-று.

(க-ரை) தனித்திருந்து பலர் பகையைக் கொள்பவன் பித்தரிலுறிவில்லான் என்பதாம்.

(வி-ரை) தனிமை சுற்ற நட்புப் படை முதலானவை இல்லாமை. மயக்கத்தால் அவ்விருவரும் ஒப்பாராயினும் பித்தங்கொண்டவர் அதனாலே தீங்கடையாமையால், தீங்கடைதலுமுடைய இவனை அவரினு மேழையென்றார். தீங்காவது-துணையுள்ளவிடத்தும் வெல்லுதல் சந்தேகமாயிருக்க, அத்துணையில்லாமலும் பலரோடும் பகைகொண்டு அவரால் வேறுவேறு பார்செய்யிடத்தும் அழிந்தேவிடுதல். [இவை மூன்றுபாட்டாலும் பகைகொள்ளுதற்குற்றம் பொதுவினுஞ் சிறப்பினும் சொல்லப்பட்டது.]

'பித்துற்றார்' என்றது பைத்தியம் பிடித்தவர். 'அஃதின்றியும்' என்றது அத்துணையில்லாமலும். 'ஏமுறு' என்றது ஏமமுறு என்பதன் விகாரம். 'ஏழமை' என்றது அறிவின்மை. 'ஏழை' இது பண்பாகுபெயர். (3)

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு.

(பரி-உரை) பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் - வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகச் செய்துகொண்டொழுகும் இயல்பினையுடைய அரசனது பெருமையுள்ளே, அடங்கிற்று உலகு-அடங்கிற்று இவ்வுலகு எ-று.

வேண்டியவழியென்பது ஆக்கத்தான் வந்தது. வேறுபடுத்தல் - பகைமையினீக்குதல். ஒழுகல்-நீதிவழியொழுகல், பெருமை-பொருள், படை

யென இருவகைத்தாய ஆற்றல். அதன் வழித்தாதற்கு எஞ்ஞான்றும் நிரிபின்மையின், அத்தணிவுபற்றித் தக்கிற்றென்றார்.

(ப-ரை) பகை - பகைமை, நட்பாக்கொண்டொழுகும் (வேண்டிய போது வேறுபடுத்தற்கே தனக்கு) நட்பாகச் செய்துகொண்டு நடக்கும், பல் புடையான்-இயல்பைபுடைய அரசனது, தகைமைக்கண்-பெருமைபுன்னே, உலகு-உலகம், தக்கிற்று-தக்கியது எ-று.

(க-ரை) பகைமையை நட்பாகக்கொண்டு நடக்கு மரசன் பெருமைக்குன்னே புலகந் தங்கியது என்பதாம்.

(வி-ரை) வேறுபடுத்தல் - பகைநிலையி னீக்குதல், ஒழுகல் - நீதிவழி நடத்தல், பெருமை-பொருள் படை என்கிற இருவகை ஆற்றல். அதன் வழியதாதற்கு என்றும் வேறுபாடில்லாமையால் அத்தணிவுபற்றித் தக்கிற்றென்றார்.

'வேறுபடுத்தி' என்றது மாற்றி. 'அடக்கிற்ற' என்றது கைவசப்பட்டது. 'அதன்வழித்த' என்றது பெருமையின் வழியது. 'தக்கிற்று' இதணிவினால் எதிர்வு இறந்ததாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி. 'தணிவு' என்றது தெளிவு. (4)

தன்றுணை யின்றூற் பகையிரண்டாற் றூலெருவ
னின்றுணையாக் கொள்கவற்றி லென்று.

(பரி-உரை) தன்றுணை இன்று - தனக்குதவுந் துணையோவெனின் இல்லை; பகை இரண்டு-கலிவு செய்யும் பகையோவெனின் இரண்டு; ஒருவன் தான் அவற்றின் ஒன்று இன்றுணையாக் கொள்க - அங்ஙனமாய் நின்றவழி ஒருவனுமிய தான் அப்பகை யிரண்டனுட் பொருந்தியதொன்றை அப் பொழுதைக்கு இனிய துணையாகச் செய்துகொள்க எ-று.

பொருந்தியது எனையதனை வேறற்கு ஏற்றது. அப்பொழுது-அவ்வெல்லும்பொழுது. நிரிபின்றுகச் செய்துகொள்கவென்பார், இன்றுணையவென்றார். ஆல்கள் அசை. இவை யிரண்டுபோட்டானும் நட்பாக்கற்பாலதே கூறப்பட்டது.

(ப-ரை) தன்றுணை-தனக்கு உதவுந் துணையோவெனில், இன்று-இல்லை பகை (கலிவு செய்யும்) பகையோவெனில், இரண்டு-இரண்டு, (இப்படியிருக்கின்றபோது), தானெருவன் - ஒருவனுகியதான், அவற்றின் - அப்பகை இரண்டனுள், ஒன்று-(பொருந்தியதாகிய) ஒன்றை, இன்றுணையா-(அப்பொழுதைக்கு) இனியதுணையாக, கொள்க-(செய்து) கொள்ளக்கடவன் எ-று.

(க-ரை) தனக்குதவுந் துணையில்லை வருத்தம் பகையிரண்டு இவ்விரண்டிற் பொருந்தியதொன்றைக் கொள்ளக்கடவன் என்பதாம்.

(வி-ரை) பொருந்தியதாவது மற்றதை வெல்லுதற்கு ஏற்றது. அப்பொழுது - அவ்வெல்லும்பொழுது. வேறுபாடில்லாமல் செய்துகொள்

வென்றிடுதற்கரியனவென்றார். கூலிரண்டும்-அரசன். [இவை இரண்டு பாட்டாலும் உட்பாக்கற்றன்மையது சொல்லப்பட்டது.]

'கல்பு' என்றது வருத்தம். 'வினையதனை' என்றது பகை; இரண்டனுள் மற்றொன்றை. 'திரிபின்றுக' என்றது மறுபடியும் வேறுபடாமல். (5)

தேறினுந் தேரு விடினு மழிவின்கட்
டேருன் பகாஅன் விடல்.

(பரி-உரை) தேறினும் தேருவிடினும்-பகைவனை முன் தெளிந்தாலுமே றும் தெளிந்திலனாயினும், அழிவின்கண் தேருன் பகான் விடல் - தனக்குப் புறத்தொரு வினையாற் சூழ்வுவந்தழிக் கூடாத சீக்காத இடையே விட்டு லக்க வேறு.

முன்தெளிந்தானாயினும் அப்பொழுது கூடாதொழிகவென்றது, உள் ாய் கின்ற கெடுத்தலேக்கி. தெளிந்திலனாயினும் அப்பொழுது சீக்கா தொழிகவென்றது, அவ்வழிவிற்குத் துணையாதலேக்கி. இதனுள் தொகை மாக்கற்பாலது கூறப்பட்டது.

(ப-ரை) (பகைவன்) தேறினும் - (முன்) தெளிந்தானாயினும், தேருவிடு றும்-தெளிந்திலனாயினும், அழிவின்கண்-(தனக்குப் புறத்தொரு தொழி லால்) தாழ்வு வந்தவிடத்து, தேருன் - கூடானாகியும், பகாஅன் - சீக்கானாகி யும், விடல்-(நடுவே) விட்டுலைக்கக்கடவன் எ-று.

(க-ரை) பகைவன் தெளிந்தானாயினும் தெளிந்திலனாயினும் தாழ்விடத் ங் கூடானாகியும் சீக்கானாகியு மிருக்கக்கடவன் என்பதாம்.

(வி-ரை) முன் தெளிந்தானாயினும் அப்போது கூடாதொழிகவென்றது ள்ளாய் கின்ற கெடுத்தலேக்கி. தெளிந்திலனாயினும் அப்போது சீக்கா தொழிகவென்றது அவ்வழிவிற்குத் துணையாதலேக்கி. [இதனுல் அயலாக்குக் ன்மையது சொல்லப்பட்டது.]

'தெளிதல்' என்றது பகைவ னன்றெனத்தேர்தல். 'தாழ்வு' என்றது 'தோல்வி. 'கூடாது சீக்காது' என்றது கூடானாகியும் சீக்கானாகியும். 'இடை ிட்டுலைத்தல்' என்றது தொகுமலாக்குதல். 'உள்ளாய்' என்றது உட்பகை ாய். 'அவ்வழிவிற்குத் துணையாதல்' என்றது தனக்கு வேறொரு தொழிலால் ண்டாகுந் தாழ்வுக்குத் துணையாய்த் தன்னையழித்தல். 'தேறினுந் தேருன்' இது தேருவிடினும் பகாஅன் என இயைத்து கிற்றலால் முறைகோ றிறைப்பொருள்கோள். 'தேருன், பகான்' இது எதிர்மறை முற்றெச்சங்கள். 'பகாஅன்' இது அளபெடை; செய்புளிசை கிறைக்கவந்தது. (6)

நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

(பரி உரை) கொத்தை அறியார்க்கு கோவற்க-கொத்தினைத் தாமாக வறியாத கட்டார்க்குத் தன்னோவு சொல்லற்க; மென்மை பகைவரகத்த மேவற்க - வலியின்மை பார்த்திருக்கும் பகைவர்மாட்டு அவ்வலிபின்மையை மேலிட்டுக்கொள்ளற்க எ-று.

கோவென்னும் முதனிலைத்தொழிற்பெயர் நின்று அதை சொல்லுதற் கணமிற்ற. பகைவர்கட் டவிர்வதை கூறுவார், கட்டார்கட் டவிர்வதும் உடன்கூறினர். இதனால் அவ்விருபகுதிக்கண்ணும் செய்வது கூறப்பட்டது.

(ப-ரை) கொத்தை - கொத்தினை, அறியார்க்கு - (தாமாக) அறியாத கட்பினர்க்கு, கோவற்க - (தன்) கோவுசொல்லாதிருக்கக்கடவன், மென்மை வலியில்லாமையை, பகைவரகத்த - (அதைப் பார்த்திருக்கும்) பகைவரிடத்த, மேவற்க-மேலிட்டுக்கொள்ளாதிருக்கக்கடவன் எ-று.

(க-ரை) கொத்தை யறியார்க்குத் தன்னோவைச் சொல்லாதிருக்கக் கடவன், வலியில்லாமையைப் பகைவரிடத்த மேலிட்டுக்கொள்ளாதிருக்கக் கடவன் என்பதாம்.

(வி-ரை) பகைவரிடத்தே செய்யலாகாதது சொல்ல வந்தவர் ட்பினரிடத்தே செய்யலாகாததும் உடன் சொல்லினர். [இதனால் அவ்விருவகை யிடத்தும் செய்வது சொல்லப்பட்டது.]

'தாமாக' என்றது கொத்தவன் சொல்லாமல். 'தோழனோடு மேழை பேசேல்' என்றார் ஔவையாரும். இங்கு கூறிய 'கட்டாரும் பகைவரும்' என்றது முன் ஆகின்ற பகையுள் கட்பாக்கப்பட்டவரும், கொதுமலாக்கப் பட்டவரும். 'மேலிட்டுக்கொள்ளுதல்' என்றது தன்னிடத்த இருப்பதாகக் காட்டுதல். 'அது' என்றது கோவு. 'தவிர்வது' என்றது விலக்கத்தக்கது. 'இருபகுதி' என்றது கட்பும், கொதுமலும். (1)

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும் பகைவர்கட் பட்ட செருக்கு.

(பரி-உரை) வகை அறிந்த தற்செய்த தற்காப்ப தான் வினைசெய்யும் வகையை அறிந்த அது முடிந்தற்கேற்பத் தன்னைப் பெருக்கி மறவி புகாமற் றன்னைக்காக்கவே, பகைவர்கண் பட்ட செருக்கு மாயும்-தன் பகைவர் மாட்டினதாய களிப்புக்கெடும் எ-று.

வகை - வலியறுத்தானெதிரே பொருமாறும், மெலியனாயவனிடத்து போர் விலக்குமாறும் முதலாயின. பெருக்கல் - பொருள் படைகளாற் பெருக்கச்செய்தல். களிப்பு - இவற்றுள் வேறுமென்றெண்ணி மகிழ்ந்திருத்தல். 'இவ்விறகுதலறிந்த தாமே அடக்குவரென்பதாம். இதனுட் கூறுதற்பாலன தன்கட் செய்வன கூறப்பட்டன.

(ப-ரை) வகையறிந்த-(தான் தொழில் செய்யும்) வகையை அறிந்த, தற்செய்த - (அது முடிந்தற்கு ஏற்பத்) தன்னைப்பெருக்கி, தற்காப்ப

மறதி அடையாமல்) தன்னைக் காக்கவே, பகைவர்கண் - (தன்) பகைவ ிடத்து, பட்ட-உண்டாகிய, செருக்கு-களிப்பு, மாயும்-கெடும் எ-று.

(க-ரை) தொழில்வகையறிந்து தன்னைக்காக்கப் பகைவர் செருக்குங் கெடும் என்பதாம்.

(வி-ரை) வகை வலியவனாய்த் தான் நேரே போர்செய்விதமும், மெலிய னாயவளவிலே போர் விலக்கும்விதமும் முதலானவை. பெருக்கல்-பொருள் படைகளாலே பெருகச்செய்தல். களிப்பு - இவ்வழியால் வெல்வோமென் றெண்ணி மகிழ்ந்திருத்தல். இவ்விறுகுதல் அறிந்து தாமே அடங்குவரென் பதாம். [இதனாற் களையுந் தன்மை யதனிடத்துச் செய்வன சொல்லப் பட்டன.]

'அது முடித்தற்கேற்ப' என்பது அத்தொழிலை முடிக்குமாறு. 'மறவி காமல்' என்றது மறதி (சோர்வு) அடையாமல். 'பொரும்ஆறு' என்றது போர்செய்யும்விதம். 'போர்விலக்கும்ஆறு' என்றது போரை ஒழியும்விதம். 'இவற்றான்' என்றது தம்மிடத்துள்ள பொருள் படைகளால். 'வேறும்' என்றது வெல்வோம். 'இவ்விறுகுதல்' என்றது இந்த (வகையறிந்து ற்செய்து தற்காக்கும்) கட்டுப்பாடு. (8)

இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

(பரி-உரை) முன் மரம் இளைதாகக் கொல்க - களையவேண்டுவதாய முண்மரத்தை இளையதாய நிலைமைக்கட்களைக; காழ்த்தவிடத்துக் களையுநர் கைகொல்லும் - அன்றியே முதிர்ந்த நிலைமைக்கட் களையலுறிற் களைவார் கையினை அதுதான் களையும் எ-று.

களையப்படுவதாய தம்பகையை அது மெலிதாய காலத்தே களைக; ன்றியே வலிதாயகாலத்துக் களையலுறிற் றம்மை அதுதான் களையு மன்பது தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதல். இதனாற் களையும்பருவங் கூறப்பட்டது.

(ப-ரை) முண்மரம் - (களையவேண்டுவதாகிய) முள்ளுமரத்தை, இளை தாக-இளையதாகிய நிலையிலே, கொல்க-களையக்கடவர்; (அல்லாமல்), காழ்த்த விடத்து - முதிர்ந்த நிலையில் (களையத்தொடங்கினால்), களையுநர்-களைபவரது, கை-கையை, கொல்லும் (அது தானே) களையும் எ-று.

(க-ரை) முள்ளாகிய மரத்தை யிளைமையிற் களையக்கடவர். அது முதிர்ந்தாற் களைபவர் கையைக் களையும் என்பதாம்.

(வி-ரை) களையப்படுவதாகிய தம்பகையை அது மெலிதாகிய காலத்தே களைக. அப்படி செய்யாமல் வலிதாகிய காலத்திலே களையத்தொடங் கினால், தம்மை அப்பகைதானே களையுமென்பது தோன்ற நின்றமையால் இது பிறிதுமொழிதலணி. [இதனாற் களையும்பருவம் சொல்லப்பட்டது.]

'முதிர்தல்' என்றது வைரம் பற்றுதல். 'களையலுறின்' என்றது அழிக்கத்தொடங்கினால். 'பிறிது மொழிதலாவது' என்றது கவி தன்னாற் கருதப்பட்டதொரு பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்தற்கு அதனோடு ஒத்த மற்றொருபொருளைக் கூறுவதோர் அணி. 'இளைது' இது இளைமையென்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புமுற்று. 'களையுநர்' இதில் உகரம் சாரியை; நகரவொற்று பெயரிடைநிலை. (9)

உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலா தார்.

(பரி-உரை) செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலாதார் - தம்மொடு பகைப்பாரது தருக்கினைக் கெடுக்கலாயிருக்க இகழ்ச்சியான் அது செய்யாதவரசர், உயிர்ப்ப உளரல்லர் மன்ற - பின் உயிர்க்குமாத்திரத்திற்கும் உளரல்லர் ஒருதலையாக எ-று.

அவர் வலியராய்த் தம்மைக் களைதல் ஒருதலையாகலின், இறந்தாரேயாவரென்பதாம். அவருயிர்த்த துணையானே தாமிறப்பரெனினுமமையும். இதனாற் களையாவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது.

(பரை) செயிர்ப்பவர் - (தம்மோடு) பகைப்பவரது, செம்மல்-தருக்கை, (கெடுக்கலாயிருக்க) சிதைக்கலாதார் - (இகழ்ச்சியால்) கெடுக்காத வரசர், உயிர்ப்ப-(பின்) மூச்சுவிடுமாத்திரத்திற்கும், மன்ற - நிச்சயமாக, உளரல்லர்-இருக்கின்றவரல்லர் எ-று.

(க-ரை) பகைப்பவர் செருக்கைக் கெடுக்காதவ ரிறப்பர் என்பதாம்.

(வி-ரை) அவர் வலியவராய்த் தம்மைக் களைதல் நிச்சயமாகலால், இறந்தாரேயாவரென்பதாம். [இதனால் களையாவழிப்படும் இழுக்குச் சொல்லப்பட்டது.]

'தருக்கு' என்றது களிப்பு. 'இகழ்ச்சி' என்றது அலட்சியமாக நினைத்தல் மூச்சுவிடும் மாத்திரத்திற்கும் இருக்கின்றவரல்லர்; இறப்பரென்றபடி. 'உயிர்த்ததுணையானே' என்றது மூச்சுவிட்டமாத்திரத்தாலே. 'தாம்' என்றது முன் சிதைக்காதவர். அவரால் மிக எளிதில் அழிக்கப்படுவர் என்பதே இரண்டாவது பொருளின் கருத்து. 'உயிர்ப்பவும்' என்னும் இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. (10)

88-ம் அதி - பகைத்திறந்தெரிதல் - முற்றிற்று.

89-ம் அதிகாரம்—உட்பகை

(பரி உரை) அஃதாவது: புறப்பகைக்கு இடனுக்கிக்கொடுத்த அது வெல்லுந் துணையும் உள்ளாய்நிற்கும் பகை. இதவும், கூழையப்படுவதன் பால தாகலின், பகைத்திறந் தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: புறப்பகைக்கு இடமாக்கிக்கொடுத்து, அது வெல்லுமளவும் உள்ளாய்நிற்கும் பகை. இதவும் கூழையப்படுவதிலே சேர்ந்த தாகலால், பகைத்திறம் தெரிதலின்பின் வைக்கப்பட்டது.

ர நிழனீரு மின்னுத வின்னு தமர்நீரு மின்னுவா மின்னு செயின்..

(பரி-உரை) கிழல் நீரும் இன்னுத இன்னு - ஒருவனுக்கு அனுபவிக்க வண்டுவனவாய கிழலும் நீரும் முன் இனியவேனும் பின கோய்செய்வன இன்னுவாம்; தமர்நீரும் இன்னுசெயின் இன்னுவாம் - அதுபோலத் தழுவ வண்டுவனவாய தமரியல்புகளும் முன் இனியவேனும் பின் இன்னுசெய் ன இன்னுவாம் எ-று.

கோய்-பெருங்கால், பெருவயிறு முதலாயின. தமரென்றதனால் உட் கையாதற்குரியராய ஞாதியரென்பதறிக. இன்னுசெயல் - முன் வெளிப் டாமைநின்று துணை பெற்றவழிக் கெடுத்தல்.

(ப-ரை) (ஒருவனுக்கு) கிழனீரும்-(அனுபவிக்கப்படுவனவாகிய) கிழலும் நும், இன்னுத - (முன் இன்பஞ் செய்வனவாயினும் பின்) கோய் செய்பு வை, இன்னு-இனியனவல்லவாம்; (அதுபோல்); தமர் நீரும்-(தழுவவேண்டு னவாகிய) தம்மவரியல்புகளும், இன்னுசெயின்-(முன் இன்பஞ் செய்வன யினும் பின்) துன்பஞ்செய்புமவை, இன்னுவாம்-இனியனவல்லவாம் எ-று.

(க-ரை) ஒருவனுக்கு கிழலு நீரு கோய்செய்பு மதுபோலத் தம்மினத்தா பல்புகளுஞ் துன்பஞ்செய்யும் என்பதாம்.

(வி-ரை) கோய் - பெருங்கால் பெருவயிறு முதலானவை. தமரென் னுல் உட்பகையாதற்குரிய ஞாதிகளெனவறிக. இன்னுசெயல் - முன் வளிப்படாதிருந்து துணைபெற்றவழிக் கெடுத்தல்.

'புறப்பகை' என்றது வெளிப்பகை. 'இடனுக்கிக்கொடுத்து' என்றது -க்கொடுத்து. 'அது' என்றது புறப்பகை. 'உள்ளாய்நிற்கும்' என்றது பாயிருக்கும். 'கூழையப்படுவதன்பாலது' என்றது நீக்கத்தக்கதிற் ர்ந்தது. 'தமர்' என்றது தம்மவர். தாம்-பகுதி. 'ஞாதியர்' என்றது பதாார். இன்னு என்னுஞ் சொல் மூன்றனுள் முனனைய இரண்டும் று; பின்னது பெயர். இன்னு என முன்னர்வந்த சொல்லும் பொருளும் னர் பலவிடதது ஒருங்குவந்ததனால், சொற்பொருட் பின்வருநிலையணி.()

வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

(பரி-உரை) வாள்போல் பகைவரை அஞ்சற்க - வாள்போல வெதிரென்று கெளிப்பட்டுகிற்கும் பகைவர் பகையினை அஞ்சாதொழிக, கேள்போல் பகைவர் தொடர்பு அஞ்சுக-அங்ஙனம் கில்லாது கேள்போல மறைந்து கிற்கும் பகைவர் கட்பினை அஞ்சுக எ-று.

பகைவர் - ஆகுபெயர். முன்னேயறிந்து காக்கப்படுதலான் அஞ்சற்க வென்றும், அங்ஙனம் அறியவும் காக்கவும்படாமையிற் கெடுதல் நிருசயமென்பதுபற்றி அஞ்சுகவென்றும் கூறினர். பின் செய்யும் பகையினும் கொடிதாகலானும், காக்கலாகாததாகலானும், அஞ்சப்படுவது முன்செய்த அவர் தொடர்பாயிற்று. இவை யிரண்டுபோட்டானும் உட்பகை யாகாதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) வாள்போல் - வாள்போலே (வெட்டுவோமென்று வெளிப்பட்டு கிற்கும்), பகைவரை - சத்துருக்களை, அஞ்சற்க - அஞ்சாதிருக்கக்கடவர், (அப்படி கில்லாமல்), கேள்போல் - உறவினர்போல (மறைந்து கிற்கும்), பகைவர்-பகைவரது, தொடர்பு-கட்பை, அஞ்சுக-அஞ்சக்கடவர் எ-று.

(க-ரை) வெட்டுவோமென்னும் பகைவர்க் கஞ்சாதிருக்கக்கடவர் உறவினர்போலிருக்கும் பகைவர்க் கஞ்சக்கடவர் என்பதாம்.

(வி-ரை) முன்னே அறிந்து காக்கப்படுதலால் அஞ்சற்கவென்றும், அப்படி அறியவும் காக்கவுங் கூடாமையால் கெடுதல் நிச்சயமென்பதுபற்றி அஞ்சுகவென்றும் சொல்லினர். பின் செய்யும் பகையினும் கொடிதாகலாலும், காக்குங்காலம் அதுவாகலாலும், அஞ்சப்படுவது முன்செய்த அவர் கட்பாயிற்று. இவை இரண்டுபோட்டாலும் உட்பகை யாகாதென்பது சொல்லப்பட்டது.]

'எதிரும்' என்றது வெட்டுவோம். 'கேள்' என்றது உறவினர்; உடன்கலந் கேட்பவர். 'தொடர்பு' என்றது கட்பு. (2)

உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மானத் தெறும்.

(பரி-உரை) உட்பகை அஞ்சித் தற்காக்க - உட்பகையாயினதை யஞ்சித் தன்னைக் காத்துக்கொண்டொழுகுக; உலைவிடத்து மட்பகையின் மானத் தெறும் - அங்ஙனமொழுகாதவழித் தனக்கோர் தளர்ச்சி வந்தவிடத்து குயவன் மட்கலத்தை யறுக்குங்கருவிபோல அவர் தப்பாமற்கெடுப்பர் எ-று.

காத்தல் - அவரணையாமலும் அவர்க்கு உடம்படாமலும் பரிகரித்தல். மண்ணைப் பருக்குங்கருவி மட்பகையெனப்பட்டது. பகைமை தோன்றுமுன்னாயிருந்தே கீழறுத்தலின், கெடுதல் தப்பாதென்பதாம்.

(ப-ரை) உட்பகை - உட்பகையாயினோரை, அஞ்சி-பயந்து, தற்காக்க-ன்னைக் காத்துக்கொண்டு நடக்கக்கடவர்; (அப்படி நடவாதபோது), உலை ிடத்து - (தனக்கு ஓர்) தளர்ச்சிவந்தவிடத்து, மட்பகையின் - (குயவன்) ட்கலத்தை அறுக்கும் ஆயுதம்போல், மாண - தப்பாமல், தெறும் - (அவர்) கெடுப்பர் எ-று.

(க - ரை) உட்பகைக்கஞ்சித் தன்னைக் காக்கக்கடவர், காவாவிடிற் கைவர் கெடுப்பர் என்பதாம்.

(வி-ரை) காத்தல்-அவரணையாமலும் அவருக்கு உடம்படாமலும் பரி ரித்தல். பகைமை தோன்றாமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலால் கெடுதல் ப்பாதென்பதாம்.

'மட்கலம்' என்றது மண்பாண்டம். 'அவர்' என்றது உட்பகையானோர். ரிகரித்தல்' என்றது நீக்குதல். 'மட்பகை' என்றது காரணப்பெயர். 'பகை ஞ்சி' என்பதனை பகையையஞ்சி, பகையான் அஞ்சி என இருவகையாக ரிக்கலாம் என்பது. "அச்சக் கிளவிக் கைந்துமிரண்டும், எச்சமிலவே பாருள்வயினான" என்பது தொல்காப்பியம் பகைக்கு அஞ்சியென்பது லகவழக்கு. 'மாண' என்றது நன்றாக. (3)

மனமாணா வுட்பகை தோன்றி னினமாணா வேதம் பலவுந் தரும்.

(பரி-உரை) மனம் மாணா உட்பகை தோன்றின் - புறந்திருந்தியது ான்று அகந்திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின், இனம் ணா ஏதம் பலவும் தரும்-அஃது அவனுக்குச் சுற்றம் வயமாகாமைக்கேது கிய குற்றம் பலவற்றையுங் கொடுக்கும் எ-று.

அவை சுற்றத்தாரை உள்ளாய்நின்று வேறுபடுத்தலும், அதனால் அவர் றுபட்டவழித் தான் றேறாமையும், பின் அவற்றான் விளைவனவுமாம்.

(ப-ரை) மனமாணா - (புறந்திருந்தியதுபோன்று) அகந்திருந்தாத, உட் கை - உள்ளுட்பகை, தோன்றின் - (அரசனுக்கு) உண்டாமாயின், (அது) னமாணா - சுற்றம் (வசப்படாமைக்கு) ஏதுவாகிய, ஏதம் பலவும் - குற்றம் வும், தரும்-(அவனுக்குத்) தரும் எ-று.

(க ரை) அரசனுக் குட்பகையுண்டாயின் பலகுற்றமுந் தரும் என் ாம்.

(வி - ரை) அவை சுற்றத்தாரை உள்ளாய்நின்று வேறுபடுத்தலும், னால் அவர் வேறுபட்டவிடத்தே தான்தேறாமையும், பின் அவைகளால் ளைவனவும் ஆம்.

'புறந்திருந்தியபோது அகந்திருந்தாத' என்றது வெளியால் நட்பானது லிருந்து மனத்தில் நட்பாகாத. 'வயம்' என்றது வசம். 'வேறுபடுத்தல்' றது ஒற்றுமையில்லையாக்குதல். 'தான்தேறாமை' என்றது அரசன்

தெளிவாமை. 'அவர்முன் வினாவன' என்றது வேறுபடுத்தலாலும், தேருவையாலும் உண்டாவன. 'பலவும்' இதில் உம்மை முற்று. (4)

உறன்முறையா வுட்பகை தோன்றினிறன்முறையா னேதம் பலவுந் தரும்.

(பரி-உரை) உறன் முறையான் உட்பகை தோன்றின் - புறத்த உரு முறைத்தன்மையோடு கூடிய உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின், இறன் முறையான் ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்கு இறத்தன் முறையோடு கூடிய குற்றம் பலவற்றையுங் கொடுக்கும் எ-று.

அவை புறப்பகைத் தூண்டாய் நின்றே அது தோன்றுமற் கோத்து முதலிய வஞ்சனை செய்தலும், அமைச்சர் முதலிய உறப்புகளோத் தேய்த்தலும் முதலாயின.

(ப-ரை) உறன்முறையான் - (புறத்தில்) உறவுமுறைத்தன்மையோடு கூடிய, உட்பகை-உட்பகையானது, தோன்றின்-(அரசனுக்கு) உண்டாயின், (அது) இறன்முறையான் - இறத்தன்முறைமையோடுகூடிய, ஏதம் பலவும்-குற்றம் பலவற்றையும், தரும்-(அவனுக்குக்) கொடுக்கும் எ-று.

(க-ரை) உறவின்முறை புட்பகை யரசனுக்குத் தோன்றி ஏத பல குற்றத்தையுந் தரும் என்பதாம்.

(வி-ரை) அவை புறப்பகைக்குத் தூண்டாய் நின்றே அது தோன்றுமு கொல்லுகை முதலாகிய வஞ்சனை செய்தலும், மந்திரிகண் முதலாகி அங்கங்களைத் தேய்த்தலும் முதலானவை.

'உறவுமுறைத்தன்மை' என்றது பங்குத்தவம். 'இறத்தல்முறை' என்ற சாகுந்தன்மை. 'அதுதோன்றுமல்' என்றது அப்படி தூணையாய் நிற்ப வெளிக்குத்தெரியாமல். 'கோறல்' என்றது கொல்லுதல். அமைச்ச முதலிய உறப்புக்கள் - ஆற அங்கங்களும். 'தேய்த்தல்' என்றது வாடு குறையச்செய்தல்.

ஒன்றுமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும் பொன்றுமை யொன்ற லரிது.

(பரி உரை) ஒன்றுமை ஒன்றியார்கண் மடின்-பகைமை தனக்குள்ளா ரர் மாட்டே பிறக்குமாயின், பொன்றுமை ஒன்றல் எஞ்ஞான்றும் அரி அரசனுக்கு இறவாமை கூடுதல் எஞ்ஞான்ற மரிது எ-று.

பொருள் படை முதலிய உறப்புக்களாற் பெரியனாயகாலத்தி பெ பார், எஞ்ஞான்றமென்றார். இவை கான்குபாட்டானும் அதனுற் றன வரும் நீக்கு கூறப்பட்டது.

(ப-ரை) ஒன்றுமை - பகைமை, ஒன்றியார்கண்-(தனக்கு) உள்ளாயினு டத்து, படின்-உண்டாகுமாயின், பொன்றுமை-இறவாமை, ஒன்றல்-(அர ற்குக்) கூடுதல், எஞ்ஞான்றும்-எக்காலும், அரிது-அருமை எ-று.

(க-ரை) தனக்குள்ளாயினுரிடத்துப் பகையுண்டாயி னாசனுக் கிறத் லத் தரும் என்பதாம்.

(வி-ரை) பொருள் படை முதலாகிய உறுப்புக்களாலே பெரியனுகிய ாலத்தை மென்றற்கு எஞ்ஞான்றுமென்றார். [இவை கான்குபாட்டானும் துதலால் தனக்குவரும் தீங்கு சொல்லப்பட்டது.]

'பிறக்குமாயின்' என்றது உண்டானால். 'முதலிய' என்றதனால், கட்புல் காள்க. 'பெரியன்' என்றது மிகுந்தவன். 'அதனால்' என்றது உட்பகையினால். ன்றியார்' என்றது சேர்ந்தவர்; இறந்தகாலவினையாலணையும்பெயர். (6)

செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே யுட்பகை யுற்ற குடி.

(பரி உரை) செப்பின் புணர்ச்சிபோல் கூடினும்-செப்பினது புணர்ச்சி பாலப் புறத்து வேற்றுமை தெரியாமற் கூடினுமாயினும், உட்பகை உற்ற டி கூடாது - உட்பகை உண்டாய குடியிலுள்ளார் அகத்துத் தம்மூட் டார் எ-று.

செப்பினது புணர்ச்சி-செப்பு மூடியோடு புணர்ந்த புணர்ச்சி. உட்பகை ன் மனம் வேறுபட்டமையிற் புறப்பகை பெற்றுழி வீற்றவீற்றுவென் ாம். குடி கூடாதென்பதனை நாடு வந்ததென்பதுபோலக் கொள்க. ட்பகை தானுற்ற குடியோடு கூடாதென்றும், உட்பகை யுண்டாயகுடி ப்பகையோடு கூடாதென்றும் உரைப்பாருமுளர்.

(ப-ரை) செப்பின்-செப்பினது, புணர்ச்சிபோல்-புணர்ச்சிபோல, கூடி ம்-(புறத்தே வேற்றுமை தெரியாமற்) கூடினுமாயினும், உட்பகை-உள்ளி த்துப்பகை, உற்ற-உண்டாகிய, குடி-குடியிலுள்ளார், கூடாதே-(அகத்தே ம்மூட்) கூடார் எ-று.

(க-ரை) உள்ளிற் பகைபொருந்திய குடியிலுள்ளார் செப்பின் மூடி ாற் கூடினுமாயினு மனவொற்றுமையிற் கூடார் என்பதாம்.

(வி-ரை) செப்பின் புணர்ச்சி - செப்பு மேன்மூடியோடு புணர்ந்த ர்ச்சி. அவர் உட்பகையால் மனம் வேறுபட்டமையால் புறப்பகை ற்றவிடத்தே வேறவேறுவ ரென்பதாம்.

'செப்பு' என்றது சிமிழ். 'வேற்றுமை' என்றது வேறுபாடு. 'பெற்றுழி' ன்றது சேர்ந்தபொழுது. 'வீற்றவீற்றுவர்' என்றது தனித்தனியாய்ப் வர். 'குடி' என்றது குடும்பம்; இடவாகுபெயர். இது பொருளால் ர்த்தினை. சொல்லால் அஃறினை. 'தான்உற்ற' என்றது தானுள்ள. (7)

அரம்பொரு[illegible]த் தேயு முரம்பொரு
[illegible]ட்பகை யுற்[illegible]

(பரி-உரை) உட்ப[illegible] வளர்ந்துவந்ததாயினும் உட்பகை யுண்டாய குடி, அரம் பொருத பொன்போலப் பொருது உரம் தேயும்-அரத்தாற் பொரப்பட்ட இரும்புபோல அதனாற் பொரப்பட்டு வலிதேயும் எ-று.

பொருதென்னுஞ் செயப்பாட்டுவினையெச்சம் தேயுமென்னும் வினை கொண்டது. அஃது உரத்தின்றொழிலாயினுங் குடிமேலேற்றுதலின், வினை முதல்வினையாயிற்று. காரியஞ்செய்வதுபோன்று பொருந்தி மெல்லமெல்லப் பிரிவித்தலான், வலி தேய்ந்து விடுமென்பதாம். இவை யிரண்டுபாட்டானும் அவன் குடிக்குவருந் தீங்கு கூறப்பட்டது.

(ப-ரை) (முன் வளர்ந்து வந்ததாயினும்) உட்பகையுற்ற குடி-உட்பகை யுண்டாகிய குடியானது, அரம் பொருத - அரத்தினாலே தேய்க்கப்பட்ட, பொன்போல-இரும்புபோல, பொருது - (அதனாலே) தேய்க்கப்பட்டு, உரம்-வலிமை, தேயும்-தேய்ந்துபோம் எ-று.

(க-ரை) உட்பகை பொருந்திய குடியானது அரத்தினாலே தேய்க்கப் பட்ட இரும்புபோலக் கெடும் என்பதாம்.

(வி-ரை) காரியஞ் செய்வதுபோன்று பொருந்தி மெல்லமெல்லப் பரிசயித்தலால், வலிமை தேய்ந்துவிடுமென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் அவன்குடிக்கு வரும் தீங்கு சொல்லப்பட்டது.]

'அரம்' என்றது வாள்விசேடம். 'பொரப்பட்ட' என்றது அராவப் பட்ட. 'அதனால்' என்றது உட்பகையால். 'பொரப்பட்டு' என்றது கீழறுக்கப்பட்டு. 'பிரிவித்தலான்' என்றது வேறுபடுத்தலான். 'பொன்' என்றது கரும்பொன்.

எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

(பரி-உரை) உட்பகை எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும் - அரசனது உட்பகை அவன் பெருமையை நோக்க எள்ளின் பிளவையொத்த சிறுமையுடைத்தேயாயினும், கேடு உள்ளதாம்-பெருமையெல்லாம் அழிவருங்கேடு அதனகத்ததாம் எ-று.

எத்துணையும் பெரியதாயகேடு தனக்கெல்லை வருந்துணையும் எத்துணையுஞ் சிறிதாய உட்பகையுள்ளே யடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டு கிற்றுமென்பதாம். இதனால் அது சிறிதென்று இகழப்படாதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) உட்பகை - (அரசனது) உட்பகை, (அவன் பெருமையை நோக்க) எட்பகவன்ன - எள்ளின் பிளவையொத்த, சிறுமைத்தேயாயினும்

றுமையுடையதே ாயினும், கேடு - (அப்பெருமையெல்லாம் அழியவரும்) கடு, உள்ளதாம்-(அத) னகத்ததாம் எ-று.

(க-ரை) உட்பகை யெட்பிளப்பிற் கொப்பான சிறிதாயினுங் கேடுண் ாம் என்பதாம்.

(வி-ரை) மிகவும் பெரிய கேட்டுக்கு எல்லை வருமளவும் மிகவுஞ்சிறிய ட்பகை உள்ளே அடங்கியிருந்து வந்தால் வெளிப்பட்டு நிற்குமென்பதாம். இதனால் அது சிறிதென்று இகழப்படாதென்பது சொல்லப்பட்டது.]

'பெருமை' என்றது அரசனது பெருமை. 'அதனகத்தது' என்றது தனிடத்தது. 'எத்துணையும்' என்றது மிகவும். 'எல்லை' என்றது வெளிப் டுங்காலம். 'அது' என்றது உட்பகை. 'பகவு' என்றது பிளவுறு பண்டத் க்குத் தொழிலாகுபெயர். இதில் 'பகு' பகுதி. (9)

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட் பாம்போ டுடனுறைந் தற்று.

(பரி-உரை) உடம்பாடு இலாதவர் வாழ்க்கை-மனப்பொருத்தமில்லாதா ாடுகூட ஒருவன் வாழும் வாழ்க்கை, குடங்கருள் பாமபோடு உடன் றைந்தற்று - ஒரு குடிலுள்ளே பாம்போடுகூட உறைந்தாற்போலும் எ-று.

குடங்கமென்னும் வடசொற்றிரிந்து நின்றது. இடச்சிறுமையானும் ிற்சியானும் பாமபாற் கோட்படல் ஒருதலையாம்; ஆகவே, அவ்வுவமை ல் அவனுயிர்க்கு இறுதிவருதல் ஒருதலையென்பது பெற்றாம். இதனாற் ண்ணோடாதவரைக் கடிகவென்பது கூறப்பட்டது.

(ப-ரை) உடம்பாடு இலாதவர் - மனப்பொருத்த மில்லாதவரோடு, ழ்க்கை - (ஒருவன்) கூடி வாழும் வாழ்வு, குடங்கருள் - ஒரு குடிசையி ள்ளே, பாமபோடு - நாகப்பாமபோடு, உடன் உறைந்தற்று - கூடி வாழ்ந் றபோலும் எ-று.

(க-ரை) மனவொற்றுமை யில்லாருடன் கூடிவாழும் வாழ்க்கை ாது ஒரு குடிசையுள்ளே பாம்புடன் கூடிவாழ்தல் போலாம் என்பதாம்.

(வி-ரை) இடச்சிறுமையாலும், பழக்கத்தாலும் பாம்பினாலே கடிக்கப் தல் நிச்சயமாம். ஆகவே, அவ்வுவமையால் அவனுயிர்க்கு முடிவுவருதல் சயமென்பது பெற்றாம். [இதனாலே கண்ணோட்டஞ் செய்யாதவரைக் பக்கடவனென்பது சொல்லப்பட்டது.]

'குடில்' என்றது குடிசை. 'குடங்கம்' என்றது குடங்கர். 'கோட்படல்' றது கடிக்கப்படல். 'இறுதி' என்றது முடிவு. 'கண்ணோடாதவர்' றது மனப்பொருத்தமில்லாதவர். 'கடிக' என்றது விலக்குக. 'அற்று' றது அற்றென்னும் உவமவுருபிடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்பு று. உவமானமும் உவமேயமும் உவமையுருபும் விரிந்துநிற்க, உயிர்க்கிறுதி தலாகிய பொதுத்தன்மையொன்றுந் தொக்குவந்ததனால், பொதுத் மைத் தொகையுவமையணி. (10)

89-ம் அதி - உட்பகை - முற்றிற்று.

90-ம் அதிகாரம்—பெரியாரைப்பிழையாமை

(பரி-உரை) பெரியராயினாரை அவமதித்து ஒழுகாமை. இரட்டு மொழிதலென்பதனாற் பெரியாரென்பது ஆற்றலாற் பெரியராய வேந்த மேலும் தவத்தாற் பெரியாராய முனிவர்மேலும் நின்றது. மேற்சொல்லாது எஞ்சிநின்றதாகலின், இது வெகுளியான் வருவனவற்றதிறுதிக்கண் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது பெரியராயினாரை அவமதித்து நடவாமை. இரட்டு மொழிதலாலே பெரியாரென்பது வலிமையினாலே பெரியராகிய வேந்த மேலும் தவத்தினாலே பெரியராகிய முனிவர்மேலும் நின்றது. மேற்சொல்லாமல் குறைந்து நின்றதாகலால் இது குரோதத்தால் வருமவைகளது முடிவில் வைக்கப்பட்டது.

ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார் போற்றலு ளெல்லாந் தலை.

(பரி-உரை) ஆற்றுவார் ஆற்றல் இகழாமை - எடுத்துக்கொண்ட யாவும் முடிக்க வல்லாருடைய ஆற்றல்களை அவமதியாமை, போற்றுவா போற்றலுள் எல்லாம் தலை-தங்கட்டீங்கு வாராமற்காப்பார் செய்யுங்காவல் ளெல்லாவற்றினும் மிக்கது எ-று.

ஆற்றலென்பது பெருமை, அறிவு, முயற்சியென்னும் மூன்றன்மேலு நிற்றலிற் சாதியொருமை. இகழ்ந்தவழிக் களையவல்லாரென்பது தோன் ஆற்றுவாரென்றும், அரண், படை, பொருள், நட்பு முதலிய பிறகாவல்க அவரானழியுமாகலின் அவ்விகழாமையைத் தலையாய காவலென்று கூறினார். பொதுவகையால் அவ்விருதிறத்தாரையும் பிழையாமையது சிறப் இதனாற் கூறப்பட்டது.

(ப-ரை) ஆற்றுவார் - (எடுத்துக்கொள்ளப்பட்டவை யாவும் முடிக்க வல்லாருடைய, ஆற்றல்-வல்லமைகளை, இகழாமை-அவமதியாமை, போற்றுவார் - (தம்மிடத்துத தீங்குவாராமற்) காப்பவனுடைய, போற்றலுளெல்லா காவல்களுக்குளெல்லாம், தலை-மிகுந்தது எ-று.

(க ரை) வல்லவருடைய வல்லமைகளை யிகழாமையே காவல்களெல்ல வற்றுள்ளுந தலை என்பதாம்.

(வி-ரை) ஆற்றலென்பது - பெருமை அறிவு முயற்சி என்கிற மூன்றி மேலும் நின்றது. இகழ்ந்தவிடத்தே தம்மைக் களையவல்லாரென்ப தோன்ற ஆற்றுவாரென்றும், அரண், படை, பொருள், நட்பு முதலாகி மற்றைக்காவல்கள் அவரால் அழியுமாகலால் அவ்விகழாமையைத் தலை யான காவலென்றும் சொல்லினார். [இதனாலே பொதுவகையால் அவ்வி வகைப் பெரியோர்க்கும் பிழைசெய்யாமையது சிறப்புச் சொல்லப்பட்டது.

'எடுத்துக்கொண்டன' என்றது தொடக்கின காரியங்கள். 'சாதி ஒருமை' என்றது சாதிபற்றிவந்த ஒருமை; அதாவது ஒருசொல் ஒருமை பிறதோன்ற நின்றும், தோன்றுதனின்றும், பின் ஒருமைப்பன்மைவினை பிறக மேல்வந்த முடிக்குஞ் சொற்களுமின்றித் தானே பன்மைப்பொருளுணர்த்துவது. 'கூற்றுவல்லார்' என்றது இகழ்ந்தவர்களை அழிக்கவல்லவர். 'அரண்' என்றது காவலாக இருக்கும் மதில் அகழி மலை, காடு, வெளியிலம் என்பன. 'இருநிறத்தார்' என்றது வேந்தரும் முனிவரும். (1)

பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற் போ விடும்பை தரும்.

(பதவுரை) பெரியாரைப் பேணுதை ஒழுகின் - ஆற்றல்களாற் பெரியாராயினாரை வேந்தர் கன்குமதியாத அவமதித்தை ஒழுகுவாராயின், பெரியாரால் போ இடும்பை தரும் - அவ்வொழுக்கம் அப்பெரியாரால் அவர்க்கு எஞ்ஞான்றும் நீக்காத துன்பங்களைக் கொடுக்கும் எ-று.

அத்துன்பங்களாவன - இருமையினும் இடையறாது வரும் மூவகைத் துன்பங்களுமாம். அவையெல்லாந் தாமே செய்துகொள்கின்றனவென்பதை நோன்ம, ஒழுக்கதனை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியுங் கூறினர். பொதுவகையால் அவரைப் பிழைத்தற்குற்றம் இதனாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறப.

(ப-ரை) (வேந்தர்) பெரியாரை - (வலிமைகளாலே) பெரியாராயினாரை, பேணுதை - கன்குமதியால் (அவமதித்து), ஒழுகின் - கடப்பாராயின், (அங்ஙடக்கையானது) பெரியாரால்-அப்பெரியாரால், போவிடும்பை-(எஞ்ஞாளும்) நீக்காத துன்பங்களை, தரும்-(அவருக்குக்) கொடுக்கும் எ-று.

(க-ரை) பெரியோரை யவமதித்து நடந்தா லந்நடத்தைதந் தீங்கைத் தரும் என்பதாம்.

(வி-ரை) அத்துன்பங்களாவன - இருமையிலும் ஓயாமல் வருகிற மூவகைத் துன்பங்களுமாம். அவையெல்லாம தாமே செய்துகொள்ளுகின்றவை யென்பது தோன்ற, ஒழுக்கதனை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியும் சொல்லினர். [பொதுவகையால் அவர்க்குப் பிழைசெயற்குறறம் இதனாற் சொல்லப்பட்டது.] இனிச் சிறப்புவகையாற் சொல்லுவர்.

'இம்மை' என்றது இம்மை மறுமை. 'மூவகைத்துன்பங்கள்' என்றது தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகைப்படும் பிறவித்துன்பங்கள்; இவற்றையே ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகமென்பர். ஆதியாத்மிகம் - உடலைப்பற்றிய தலைநோய் முதலியனவும் மனதைப்பற்றிய காமம் வெகுளி முதலியனவும், ஆதிபௌதிகம் - மனிதர் விலங்கு பிசாசு முதலியவர்களால் நேர்வன. ஆதிதைவிகம் - காற்று மழை இடி வெயில் முதலிய

வற்றுல் சேர்வன. 'அவரைப் பிழைத்தற்குற்றம்' என்றது அவ்விருவர்க்கும் பிழைசெய்வதனுலுண்டாய குற்றம். (2)

கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னுற்று பவர்க ணிழுக்கு.

(பரி-உரை) அடல் வேண்டின் ஆற்றபவர்கண் இழுக்கு - வேற்றவேந்தரைக் கோறல் வேண்டியவழி அதனை அப்பொழுதே செய்யவல்ல வேந்தர் மாட்டுப் பிழையினை, கெடல் வேண்டின் கேளாது செய்க - தான் கெடுதல் வேண்டினுயின் ஒருவன் நீதிநூலைக் கடந்துசெய்க எ-று.

அப்பெரியாரைச் * "காலனுங் காலம் பார்க்கும் பாராது, வேலின்று தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடுக்கும் வென்போர் வேந்தர்" என்றுர் பிறரும். நீதிநூல் செயலாகாதென்ற கூறலின், கேளாதென்றுர்.

(ப-ரை) அடல்வேண்டின் - (வேற்றவேந்தரைக்) கொல்லுதல் வேண்டியவிடத்து, ஆற்றபவர்காண்-(அதனை அப்பொழுதே) செய்யவல்ல வேந்தரிடத்து, இழுக்கு-பிழையை, கெடல்வேண்டின்-(தான்) கெடுதல் வேண்டினுயின், கேளாது - (நீதிநூலிலே சொல்லப்பட்டதைக்) கேளாமல், செய்க-(ஒருவன்) செய்யக்கடவன் எ-று.

(க-ரை) தான்கெட விரும்பினுல் வேற்றரசரை வெல்லும் வேந்தரிடத்துப் பிழைசெய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) நீதிநூல் அச்செயலாகாதென்ற சொல்லுதலாலே கேளாதென்றுர்.

'வேற்றவேந்தர்' என்றது பகையரசர். 'நீதிநூலைக் கடந்து' என்றது நீதிநூலில் சொல்லியபடி கடவாது. காலனும் காலம்பார்க்கும் புறநானூறு-41. யாவரையும் கொல்லும் இயமனும் அக்கொலைக்கேற்ப விதித்தகாலம் வரு தலையும் எதிர்பார்த்து நிற்பன். 'செயலாகாது' என்றது இத்தன்மையா நிடத்துப் பிழைசெய்யக் கூடாது. (3)

கூற்றத்தைக் கையால் விளித்தற்று லாற்றுவார்க்
காற்றுதா ரின்ன செயல்.

(பரி-உரை) ஆற்றுவார்க்கு ஆற்றுதார் இன்ன செயல்-மூவகையாற்றலு முடையார்கு அவையில்லாதார் தாம முற்பட்டு இன்னுதவற்றைச் செய்தல்: கூற்றத்தைக் கையால் விளித்தற்று - தானேயும் வாற்பாலனுய கூற்றமே அதற்குமுன்னே கைகாட்டி அழைத்தாலொக்கும் எ-று.

கையால் விளித்தல் இகழ்ச்சிக்குறிப்பிற்று. தானேயும் உயிர் முதலிய கோடற்குரியானை அதற்குமுன்னே விளித்து தம்மேல் வருவித்தக்கொள்

* புறநானூறு-41.

ார் இறப்பினது உண்மையும் அண்மையுங் கூறியவாறு. இவை பிரண்டு பாட்டாலும் வேந்தரைப் பிழைத்தலின் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) ஆற்றவார்க்கு - (மூவகை) யாற்றலுமுடையவர்க்கு, ஆற்றுதார் - அவ்வாற்றலில்லாதவர், இன்ஞ-இன்ஞதனவாகிய, செயல்-(முற்பட்டுச்) செய்தல், கூற்றத்தை - (தானேயும்வருந் தன்மையனாகிய) கூற்றுவனை, கையால்- (அதற்கு முன்னே) கைகாட்டி, விளித்தற்று-அழைத்தாலொக்கும் எ-று.

(க-ரை) வல்லமை யுடையவர்க்கு வல்லமையில்லாதார் அன்பஞ்செய்தல் தியனைக் கையாலழைத்தல்போலாம் என்பதாம்.

(வி-ரை) ஆல்-அசை. கையாலழைத்தல் இகழ்ச்சிக்குறிப்பு. தானேயும் யிர்முதலானவைகளைக் கொள்ளுதற்குரியவனை அதற்குமுன்னே விரைந்து ம்மேல் வருவித்துக்கொள்வாருக்கு மரணம் கிடமாகவும் சமீபமாகவும் ருமென்பது சொல்லியபடி. [இவை இரண்டுபாட்டாலும் கேந்தர்க்குப் ழைசெய்தலின் குற்றம் சொல்லப்பட்டது.]

'அவ்வி' என்றது அவ்வாற்றல்கள். 'வாற்பாலன' என்றது வருந்தன்மையன. 'குறிப்பிற்று' என்றது குறிப்பினையுடையது. 'முதலிய' என்பதல் இடம் பொருள் ஏவல்களுங் கொள்க. 'உண்மை' என்றது தவருமை ற்றத்தை உவமை கூறியதனால், நடுக்கலாகாமை விளக்குகின்றது. (4)

யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின் வேந்து செறப்பட் டவர்.

(பரி-உரை) வெந்தப்பின் வேந்த செறப்பட்டவர் - பகைவர்க்கு கெய்ய வலியினையுடைய வேந்தனாற்செறப்பட்ட அரசர், யாண்டுச் சென்றாண்டும் உளராகார் - அவனைத் தப்பி எங்கேபோயுளராவர், ஓரிடத்தும் ராகார் எ-று.

இடைவந்த சொற்கள் அவாய்நிலையான் வந்தன. வெந்தப்பின் வேந்தால் தன்னிலம் விட்டுப்போயவர்க்கு இடங்கொடுப்பாரில்லை; உளராயின், ர் இனியாகாரென்பது நோக்கி அவனெடு கட்புக்கோடற்பொருட்டும் னை வந்தெய்திய அவருடைமை கவருதற்பொருட்டுங் கொல்வர்; அன்னின், உடனே யழிவரென்பன நோக்கி, யாண்டுசென் றியாண்டுமுள ாரென்றார். இதனால் அக்குற்றமுடையார் அருமையுடைய அரண் ர்ந்தும் உய்யாரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) வெந்தப்பின் - கெவ்விதாகிய வலிமையையுடைய, வேந்தனால், செறப்பட்டவர் - கோபிக்கப்பட்ட அரசர், யாண்டுச்சென்று-அவனைத்தப்பி) எங்கேபோய், (உளராவார்) யாண்டும் - எவ்விடத்தும், ராகார் - உயிர் வாழ்வாராகார் எ-று.

(க-ரை) வல்லரசனாற் கோபிக்கப்பட்ட வரசர் எவ்விடத்துச் சென்று ர்வாழார் எ-று.

(வி-ரை) வெவ்விய வலியுடைய அரசனுதலாலே அவனது சீற்
விட்டுப்போனவர்க்கு இடம் கொடுப்பாரில்லை; உளராலுல் இவர் இனி
சென்பதை நோக்கி அவனோடு கட்புக்கொள்ளுதற்பொருட்டும் தாமே வந்
அடைந்த அவருடைமையை அபகரித்தற்பொருட்டும் கொல்லுவர். அ
றனின் உடனே அழிவென்பன நோக்கி, யாண்டுச் சென்றியாண்டு மு
ராகாசென்றார். [இதனுல் குற்றமுடையார் அருமையுடைய அரண்சேர்ந்
மூய்யாசென்பது சொல்லப்பட்டது.]

'வெய்தாய்' என்றது வெம்மையுடையதாகிய. 'செறல்' என்றது கோபம்
'உளராயின்' என்றது இடங்கொடுப்பவருண்டாலுல். 'இவர்' என்ற
செறப்பட்டவர். 'அவனோடு' என்றது வெற்றப்பின் வேற்றோடு. 'அக்குற்ற
என்றது பிழையாரைப் பிழைத்த குற்றம். 'அருமையுடைய அரண்சேர்ந்
உய்யார்' என்றது அழித்தற்கரிய கால்லிடத்தைச் சேர்ந்திருந்தாலு
பிழைக்கமாட்டார். நாலடியார் பிழையாரைப்பிழையாமை. 'வேந்து' இ
பண்பாகுபெயர்.

எளியாற் சுடப்படினு மூய்வுண்டா மூப்பார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

(பரி-உரை) எளியால் சுடப்படினும் உய்வு உண்டாம் - காட்டிடை
சென்றுளொருவன் ஆண்டைத் தீயாற்சுடப்பட்டாலுயினும் ஒருவாற்று
உயிருய்தல் கூடும்; பெரியார்ப் பிழைத்த ஒழுகுவார் உய்யார் - தவத்தா
பெரியாரைப் பிழைத்த ஒழுகுவார் எவ்வாற்றுலும் உயிருய்யார் எ-று.

தீ முன் உடம்பினைக் கதுவி அதவழியாக உயிர்மேற்சேறலி
இடையே உய்யவுங்கூடும், அருந்தவர் வெருளி அன்னதன்றித் தானிற்ப
கணமாய் அதற்குள்ளே * யாவர்க்குவ் காத்தலரிதாகலின், அது கூ
தாகலான், அதற்கேதுவாய பிழைசெய்யற்க வென்பதாம்.

(ப-ரை) (காட்டிடைச் சென்றுளொருவன்) எரியால் - (அவ்விடத்த
தீயால், சுடப்படினும் - சுடப்பட்டாலும், உய்வு - (ஒருவழியால்) உயிர்பிழை
தல், உண்டாம்-கூடும், பெரியார் - (தவத்தாற்) பெரியார்க்கு, பிழைத்தொ
குவார்-பிழைசெய்து நடப்பவர், உய்யார்-(எவ்வழியாலும்) உயிர்பிழையார்.

(க-ரை) தீயினுற் சுடப்படினு மொருவழியிற் பிழைப்புண்டாம், பெ
யோர்க்குப் பிழைசெய்து நடப்பவர் பிழையார் என்பதாம்.

(வி-ரை) தீ முன் உடம்பைப்பற்றி அதவழியாக உயிர்மேலே செல்
தலால் கடிவிலே உய்யவுங்கூடும். அருந்தவர் கோபம் அப்படிப்பட்டதல்லா
தான்றிற்பது கணமாய் அதற்குள் யாவர்க்கும் காத்தல் அரிதாகலின் அ
கூடாதாகலால் அதற்கு எதுவாகிய பிழைசெய்யற்க வென்பதாம்.

'ஆண்டைத்தி' என்றது அவ்விடத்தன்தீ. 'உயிருய்தல்' என்
பிழைத்தல். 'கதுவி' என்றது பற்றி. 'அதவழியாக' என்றது உடம்பின்

* திருக்குறள் 3-ம் அதி-நீத்தார்பெருமை-6.

ந்தவர்' என்றது முனிவர். 'காத்தலரிது' என்றது தடுத்தற்கரியது. அஞ்சி ப் வருகின்றவாறுபற்றி ஒரோவழி வெகுளிதோன்றியபொழுதே அதனை ப்புணர்வு. அழிக்குமாகலின் 'கிற்பதை கணமாய்' என்றும் கிறைமொழி ந்தாகலின் யாவர்க்குங் காத்தலரிது என்றுங் கூறினர். (6)

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்
தகைமாண்ட தக்கார் செறின். [ஞந்

(பரி உரை) தகைமாண்ட தக்கார் செறின் - சாப வருங்கட்கேதுவாய ருமை மாட்சிமைப்பட்ட அருந்தவர் அரசனை வெகுள்வராயின், வகை ண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என்னும் - உறப்பழகுபெற்ற அவ ாசாட்சியும் சுட்டிவைத்த பெரும்பொருளும் என்பட்டுவிடும்? எ-று.

உறப்பு - அமைச்சு நாடு அரண் படையெனவிவை. செறினென்பத ர் செருமை தோன்ற நின்றது. இவ்வெச்சத்தான் முன் வருவனவற் ுகும் இஃதொக்கும். அரசர் தஞ்செல்வக்களிப்பான் அருந்தவர்மாட்டுப் ழை செய்வராயின், அச்செல்வம் அவர் வெகுளித்தீயான் ஒருகணத்துள்ளே ந்தவிடுமென்பதாம்.

(ப-ரை) தகை - (சாபானுக்கிரகங்களுக்கு ஏதுவாகிய) பெருமையால், ண்ட - மாட்சிமைப்பட்ட, தக்கார் - அருந்தவர், செறின் - (அரசனைக்) ாபிப்பாராயின், வகை-அங்கங்களால், மாண்ட-அழகுபெற்ற, வாழ்க்கை - (அவ்) வாசாட்சியும், வான்பொருளும் - (சம்பாதித்துவைத்த) பெரும் ாருளும், என்னும்-என்பட்டுவிடும் எ-று.

(க-ரை) பெரியோர் கோபிப்பாராகி லாச வாசாட்சியு மவன்பொருளு ன்ன படன்படும் என்பதாம்.

(வி-ரை) அங்கம் - அமைச்சு நாடு அரண் படை எனவிவை. செறி ன்பது அவர் கோபியாமை தோன்ற நின்றது. பின்வருமவைகளுக்கும் ு ஒக்கும். அரசன் தன் செல்வக்களிப்பால் அருந்தவரிடத்துப் பிழை ய்வானுயின் அச்செல்வம் அவர் கோபத்தீயால் ஒருகணத்துள்ளே வெந்து மென்பதாம்.

'சாபம்' என்றது சபித்தல்; வெகுண்டு கூறும்மொழி. 'அருள்' என்றது ுக்கிரகம்; அருளிக்கூறும்மொழி. 'உறப்பு அழகுபெற்ற' என்றது ங்கள் தன்கு அமைத்த. 'என்பட்டுவிடும்' என்றது எப்படியாய்விடும்; ிந்தவிடும். 'மாண்ட' இதில் மாண் பகுதி. (7)

குன்றன்னர் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னர் மாய்வர் நிலத்து.

(பரி-உரை) குன்று அன்னர் குன்ற மதிப்பின் - குன்றத்தையொக்கும் ருந்தகர் கெட நினைப்பாராயின், நிலத்து நின்றன்னர் குடியொடு மாய்வர்-

அப்பொழுதே இச்சிலத்த கிலபெற்றாற்போலுஞ் செல்வர் தங்குடியொடு மாய்வர் எ-று.

வெயில் மழை மூதலிய பொறுத்தலுஞ் சலியாமையும் உள்ளிட்ட குணங்களுடைமையின் குன்றன்னானென்றார். * "மல்லன் மலையனைய மாதவர்" என்றார் பிறரும். கிலபெற்றாற்போறலாவது இறப்பப்பெரியாராகி இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லையென்ற கண்டாராற் கருதப்படுதல்.

(ப-ரை) குன்றன்னார் - மலையையொக்கு மருந்தவர், குன்ற - கெ மதிப்பின் - கிளைப்பாராயின், சிலத்த - இச்சிலத்த, கின்றன்னர் - (கிலபெ றாற்போ)லுள்ள செல்வர், குடியொடு-(தங்)குடியோடு, மாய்வர்-(அப்பொழு மாய்வர் எ-று.

(க-ரை) பெரியோர் கெடும்படி கிளைப்பாராகிற் செல்வர் குடியொ கெடுவர் என்பதாம்.

(வி-ரை) வெயில் மழை மூதலானவைகளைப் பொறுத்தலும் அசையாமையும் உள்ளிட்ட குணங்களுடைமையால் குன்றன்னானென்றார். கிலபெற்றாற் போலுதலாவது மிகவும் பெருஞ்செல்வ முடையோராதலால் இவர்க்கு எக்காலும் அழிவில்லையென்ற கண்டவரால் கிளைக்கப்படுதல்.

'சலியாமை' என்றது அசையாமை. 'உள்ளிட்ட குணங்கள்' என்ற அளவுசெய்யப்படாத பெருமையும் பொருளுடைமையும் எல்லும் அறிவும் படும் உயர்ச்சியும் எப்பொழுதும் பயன் கொடுக்குந்தன்மையும் அழித்தற்கரு மைபு மூதலியன. மல்லல்மலையனைய - சிவகசிந்தாமணி முத்தியிலம்பகம் அளவுசெய்யப்படாத பல வளங்களையுடைய மலைபோல யாவராலும் அளக்கப்படாத மிக்க தவத்தையுடைய முனிவர். 'இறப்ப' என்றது மிகவும்.

ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

(பரி-உரை) ஏந்திய கொள்கையார் சிறின் - காத்தற்கருமையால் உயர்ந்த விரதங்களை உடையார் வெகுள்வாராயின், வேந்தனும் இடை வேர் முரிந்த கெடும் - அவராற்றலான் இந்திரனும் இடையே தன்பதம் இழந்து கெடும் எ-று.

† "வேந்தன் மேய தீப்புன லுலகமும்" என்றார் பிறரும். ஈகுடனென் பான் இந்திரன்பதம் பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்புமிகுதி யான் அகத்தியன் வெகுள்வதோர்பிழை செய அதனைச் சாபமெய்தி அப்பத இடையே இழந்தானென்பதனை யுட்கொண்டு இவ்வாறு கூறினர். இவ் தான்குபாட்டானும் முனிவரைப் பிழைத்தலின் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) ஏந்தியகொள்கையார் - (காத்தற்கருமையால்) உயர்ந்த விர கனையுடையார், சிறின்-(அவர் வலிமையால்) கோபிப்பாராயின், வேந்தனு

---

* சிவகசிந்தாமணி: முத்தியிலம்பகம்-191.

† தொல்காப்பியம்: பொருளதிகாரம், அகத்திணையியல்-5.

திரனும், இடைமுரிந்து - நடுவே (தன்பத) மிழந்து, வேந்து - அழிந்து, டும்-கெடுவான் எ-று.

(க-ரை) தவத்திற் பெரியோர் கோபிக்கி லிந்திரனுங் கெடுவான் பதாம்.

(வி-ரை) இந்திரபதம் பெற்ற நகுடன் பிழைசெய்து அகத்தியமுனி த்தால் அதனை இழந்தானென்பதறிக. [இவை நான்குபாட்டாலும் முனி க்குப் பிழைசெய்தலின் குற்றம் சொல்லப்பட்டது.]

'விரதங்கள்' என்றது வினைமாசுதீர்ந்து அந்தக்கரணம் தூய்தாதற் ருட்டு இன்ன அறஞ்செய்வேனெனவும், இன்ன தீச்செயல் தவிர்வே னவும், தன்னாற்றலுக்கேற்ப வரைந்துகொண்டு துறந்தோராற் காக்கப் ம் அருளுடைமை. 'வேந்தன் மேய' என்பது தொல்காப்பியம் பொரு காரம் அகத்திணை. வேந்தன் என்னுஞ்சொல் தேவேந்திரன் என்னும் ருளில் வருதற்கு எடுத்துக்காட்டப்பட்டது. (9)

இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார் சிறந்தமைந்த சீரார் செறின்.

(பரி-உரை) சிறந்து அமைந்த சீரார் செறின் - கழியமிக்க தவத்தினை டயார் வெகுள்வராயின், இறந்து அமைந்த சார்பு உடையராயினும் உய் - அவரான் வெகுளப்பட்டார் கழியப் பெரிய சார்பு உடையராயினும் பற்றி உய்யமாட்டார் எ-று.

சார்பு-அரண் படை பொருள் நட்பெனவிவை. அவையெல்லாம் வெகுண் ரது ஆற்றலாற்றிரிபுரம்போல அழிந்துவிடுமாகலின் உய்யாரென்றார். டையது சீரெனப்பட்டது. இதனால் அக்குற்றமுடையார் சார்புபற்றியும் ாரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) சிறந்தமைந்த-மிகவும் அதிகமான, சீரார்-தவத்தையுடையவர், ின்-கோபிப்பாராயின், (அக்கோபிக்கப்பட்டவர்) இறந்தமைந்த-மிகவும் ய, சார்புடையாராயினும்-சார்பை யுடையவராயினும், உய்யார்-(அது) உய்யமாட்டார் எ-று.

(க-ரை) தவமுடையோர் கோபிக்கிற் சார்புடையவரும் பிழையார் தாம்.

(வி-ரை) சார்பு - அரண் படை பொருள் நட்பு ஆம். அவையெல்லாம் ிப்பவரது வலிமையால் திரிபுரம்போல் அழிந்துவிடுமாகலால் உய்யா ரார். [இதனால் அக்குற்றமுடையவர் சார்புபற்றியும் உய்யாரென்பது ல்லப்பட்டது.]

'கழியமிக்க' என்றது மிகவும் அதிகமான. 'சார்பு' என்றது துணை அங்கங்கள். 'திரிபுரம்' என்றது முப்புரம். 'சீர்' என்றது சிறப்பு; தவத் ப் பண்பாகுபெயர். (10)

90-ம் அதி - பெரியாரைப்பிழையாமை - முற்றிற்று.

91-ம் அதிகாரம்—பெண்வழிச்சேறல்

(பரி-உரை) இனிக் காமத்தான் வருவன சேரே பகையல்லவாயி ஊக்கஞ்சிதைத்தல் அழிவதலைத் தருதலென்னுந் தொழில்களாற் பகை டொத்தலிற் பகைப்பாற்படுவனவாமாகலான் அவற்றைப் பகைப்பகு நிறநிக்கட் கூறவான்றொடங்கி, முதற்கட் பெண்வழிச்சேறல் கூறின்று அஃதாவது: தன்வழிபொழுதற்பாலனாய இல்லான்வழியே தான் ஒழுகுதல்

(உரை) இனிக் காமத்தால் வருபவை சேரே பகையல்லவாயி பெருக்கஞ்சிதைத்தல் அழிவைத்தருதல் என்கிற தொழில்களாலே ப யோடு ஒத்தலால் அவைகளைப் பகைப்பகுதியின் முடிவிலே சொல் தொடங்கி முதலிலே பெண்வழிச்சேறல் சொல்லுகிறார். அஃதா தன்வழி கடத்தற்கு உரியவனாகிய மனையவன் வழியே தான் கடத்தல்.

மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவா வேண்டாப் பொருளு மது.

(பரி-உரை) மனை விழைவார் மாண் பயன் எய்தார் - இன்பங் காரு மாகத தம்மனையாலே விழைந்து அவடன்மையராய் ஒழுகுவார் தமக் இன்றியமையாத அறத்தினை யெய்தார், வினை விழைவார் வேண்ட பொருளும் அது-இனிப்பொருள் செய்தலை முயல்வார் அதற்கிடையீடென இகழும் பொருளும் அவ்வின்பம் எ-று.

மனையும் விழைதலும் படலும் ஒருபெயர். அவ்வின்பம் அவடன்மை ராதற்கு ஏதுவாயவின்பம். அஃது அவனாற்பயனுய அறத்திலும் அ திற்கும் தனக்கும் ஏதுவாய பொருளிலுஞ் செல்லவிடாமையின் விடற்ப றென்பதாம்.

(ப - ரை) மனைவிழைவார் - (இன்பங் காரணமாகத்) தம்மனைய விரும்பி (அவன்வழி) நடப்பவர், மாண்பயன் - (தமக்கு) இனிய தனைவர் (அறத்தை,) எய்தார்-அடையார், வினைவிழைவார்-பொருள் சம்பாதித்தலி முயல்பவர், வேண்டாப் பொருளும் - (அதற்கு விரோதமென்று) இகழ் பொருளும், அது-அவ்வின்பம் எ-று.

(க - ரை) மனையவன் வழியிலே நடப்பவர் தருமத்தை யடை என்பதாம்.

(வி ரை) அவ்வின்பம் அவனது தன்மையாதற்கு ஏதுவான வின்ப அது அவனாலே பயனுகிய அறத்திலும், அவ்வறத்திற்கும் தன்னதிகா திற்கும் ஏதுவாகிய பொருளிலும், அவரைச் செல்லவிடாமையால் வி படுந்தன்மை யென்பதாம்.

'ஆக்கம்' என்றது தலம். 'தலைத்தருதல்' என்றது மிருதியும் பயந்த 'இல்லான்வழி ஒழுகல்' என்றது அவனது சொல்வின்படி நடத்தல். 'வீ

ன்றது பொருள்தேடுதல்., மனை மனையாளையும் விழைவார் கடப்பவரையும் பயன் அறத்தையும் உணர்த்துதலால் ஆகுபெயர். 'அவடன்மையராதற்கு' ன்றது அவள்வசப்பட்டு அவள்வழியொழுகுதற்கு. 'அது' என்றது அவ் பின்பம். 'அவளாற்பயனுய அறம்' என்றது அவள் தூண்டியாற் செய்தற்குரிய றம். 'விடற்பாற்று' என்றது விடுதற்குரியது; "தையல்சொற் கேளேல்" ன்றார் ஔவையாரும்.

(1)

பேணுது பெண்விழைவா னுக்கம் பெரியதோர் நாணுக நாணுத் தரும்.

(பரி-உரை) பேணுத பெண் விழைவான் ஆக்கம் - தன்னுண்மையை ிட்டு மனையாளது பெண்மையை விழைவான் எய்தின்ற செல்வம், பெரி து ஓர் காண் ஆக நாணுத் தரும்-இவ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம் பெரியதோர் நாணுண்டாகத் தனக்கும் நாணுதலைக் கொடுக்கும் எ-று.

எய்தின்றதாயிற்று, படைக்கும் ஆற்றலிலனுகலின். அச்செல்வத்தால் தலுங் கைத்தலும் முதலிய பயன்கொள்வான் அவளாகலின், அவ்வாண் மைச் செய்கை அவள் கண்ணதாயிற்றென்று ஆண்பாலார் யாவரும் நாண தலுந் தன்னுண்மையின்மை அறிந்த பின் தானும் நாணுமென்பது நக்கிப் பெரியதோர் நாணுக நாணுத்தருமென்றார். இவை இரண்டுபொட் நும் மனைவிழைதற் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) பேணுத - (தன்னுண்மையை) விரும்பாமல், பெண்விழை ான் - (மனையவளது) பெண்மையை விரும்புவோனது, ஆக்கம் - செல்வம், வ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம்) பெரியதோர் நாண் - பெரிய வொரு ணம், ஆக-உண்டாக, நாணு-நாணுதலை, தரும்-(தனக்கும்) கொடுக்கும் று.

(க-ரை) மனையவன் பெண்டன்மையை விரும்புவோன் செல்வம் வெட் தைக் கொடுக்கும் என்பதாம்.

(வி-ரை) படைக்கும் வலிமையிலனுகலின். அச்செல்வத்தால் கொடுத் லும் அனுபவித்தலும் முதலாகிய பயன் கொள்வான் அவளாகலால் அவ் ண்மைச் செய்கை அவளிடத்தாயிற்றென்ற ஆண்பாலார் யாவரும் நாண னுலே தன்னுண்மையில்லாமை அறிந்த பின்னே தானும் நாணுவ ன்பது நோக்கிப் பெரியதோர் நாணுக நாணுத்தருமென்றார். [இவை ண்டுபோட்டாலும் அவளை விழைதற்குற்றம் சொல்லப்பட்டது.]

'ஆண்மை' என்றது ஆளுந்தன்மை. 'பெண்மை' என்றது பேணப்படுந் மை. 'ஆற்றல்' என்றது படையை எதிர்க்கும் வன்மை. 'யாவரும்நாண்' றது தன்பெண் தலைமையைக்கண்டு யாவரும்நாண. 'பெரியதோர் ' என்றது மிக்கநாண்.

(2)

இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று நல்லாரு ணாணுத் தரும்.

(பரி-உரை) இல்லான்கண் தாழ்ந்த இயல்பு இன்மை - ஒருவன் இல்லான்மாட்டுத் தாழ்தற்கு எதுவாய அச்சம், கல்லாருள் காணுங் எஞ்ஞான்றும் தரும் - அஃதிலாய கல்லாரிடைச் செல்லுங்கால் காணுதலை அவனுக்கு எக்காலத்தும் கொடுக்கும் எ-று.

அவடான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளை யஞ்சுதல் இயல்பின்மையாயிற்று, அங்ஙனமஞ்சியொழுகுதலின், அவளை யியமிப்பாரில்லையாம். ஆகவே, எல்லாக்குற்றமும் விளையுமென்பதை நோக்கி, எஞ்ஞான்றும் காணுந்தருமென்றார்.

(ப-ரை) (ஒருவன்) இல்லான்கண் - இல்லாளிடத்து, தாழ்ந்த வியல்பின்மை - தாழ்தற்கு எதுவாகிய அச்சம், கல்லாருள் - (அவ்வச்சமில்லாத) கல்லாரிடத்துச், (செல்லுங்கால்) காணுங்-காணுதலை, எஞ்ஞான்றும்-எந்நாளும், தரும் - (அவனுக்குக்) கொடுக்கும் எ-று.

(க-ரை) மனையவளுக் கஞ்சு மச்சமானது காணந்தரும் என்பதாம்.

(வி-ரை) அவன் தனக்கு அஞ்சி நடத்தல் இயல்பாகலால் அவளுக்கு அஞ்சுதல் இயல்பில்லாமையாயிற்று. அப்படி அஞ்சி நடத்தலால் அவளை யியமிப்பார் இல்லையாம். ஆகவே எல்லாக்குற்றங்களும் விளையுமென்பதை நோக்கி எஞ்ஞான்றும் காணுந்தருமென்றார்.

'கல்லார்' என்றது நற்குண நற்செய்கையுடையார். 'அவளையஞ்சுதல்' என்றது அவட்கு அஞ்சுதல். 'அவளை யியமிப்பார்' என்றது அவளைப் பெருமைப்படுத்தவார். (3)

மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

(பரி-உரை) மனையாளை அஞ்சும் மறுமை இலாளன் - தன்மனையாளை யஞ்சி ஒழுகுகின்ற மறுமைப்பயனில்லாதானுக்கு, வினை ஆண்மை வீறெய்தல் இன்று - வினையை ஆளுந்தன்மை உண்டாயவழியும் கல்லோரால் கொண்டாடப்படாது எ-று.

உண்டாயவழியுமென்பது அவாய்நிலையான் வந்தது. இல்லறஞ்செய்தற்குரிய தன்மையின்மையின் மறுமையிலானென்றும், வினையையாளுந் தன்மைதன்றன்மையில்லாத அதனுன் முடிவுபோகாமையின் வீறெய்தலின்றென்றும் கூறினார்.

(ப-ரை) மனையாளை - (தன்) மனையாளை, அஞ்சும் - அஞ்சிநடக்கின்ற மறுமையிலானன்-மறுமைப்பய னில்லாதவனுக்கு, வினையாண்மை-தொழிலை யாளுந்தன்மை, (உண்டாகிய வழியும்), வீறெய்தலின்று - (கல்லோரால்) கொண்டாடப்படாது எ-று.

(க-ரை) மனையாளுக் கஞ்சுவோனது தொழில் பெருமையடையாது என்பதாம்.

(வி ரை) இல்லறஞ் செய்தற்குரிய நன்மை இல்லாமையால், மறுமை லாளனென்று, தொழிலையாளுந் தன்மை தனது புருஷத்தன்மையில்லாத வனால் முடிவுபோகாமையால், வீறெய்தலின்றென்றும் சொல்லினார்.

'வீறு' என்றது பெருமை. உண்டாயவழியும் என்ற உம்மையால் ண்டாகாது என்பது பெறப்பட்டது. தன்வழியொழுகுதற்குரிய மனைவி ன்வழி தான் நடத்தலினால் நன்மையின்மையென்றார். மனையாளோடு டிச் செய்கின்ற நன்மையில்லாதபோழ்து மறுமைப்பயனுமின்மையாம். தலினால் மறுமையிலாளன் என்றார். தன் தன்மையில்லாதபோழ்து னையையாளுந் தன்மையும் இல்லையானதால் வீறெய்தலுமின்றாம். (4)

இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று நல்லார்க்கு நல்ல செயல்.

(பரி-உரை) இல்லாளை அஞ்சுவான் - தன்மனையாளை யஞ்சுவான், நல் ர்க்கு நல்ல செயல் எஞ்ஞான்றும் அஞ்சும்-தான்றேடிய பொருளேயாயினும் நனால் நல்லார்க்கு நல்லனசெய்தலை எஞ்ஞான்றும் அஞ்சாநிற்கும் எ-று.

நல்லார் - தேவர், அருந்தவர், சான்றோர், இருமுதுகுரவர் முதலாயி ரும் நல்விருந்தினரும். நல்லனசெய்தல் - அவர் விரும்புவன கொடுத்தல். செய்யவேண்டும் நாள்களினுமென்பார், எஞ்ஞான்றுமென்றார். * "இல் ளையஞ்சி விருந்தின்முகங் கொன்றநெஞ்சிற், புல்லாள னாக" என்றார் ரும்.

(ப-ரை) இல்லாளை யஞ்சுவான்-(தன்) மனையாளை யஞ்சுவோன், (தான் டிய பொருளேயாயினும்) நல்லார்க்கு - நல்லோர்களுக்கு, நல்லசெயல்- பொருளாலே) நல்லவைகள் செய்தற்கு, எஞ்ஞான்றும் - எந்நாளும், சும்-அஞ்சாநிற்பன் எ-று.

(க-ரை) மனைவிக் கஞ்சுவோ னல்லோர்க் குதவிசெய்ய வஞ்சுவான் தாம்.

(வி ரை) மற்று-அசைநிலை. நல்லார்-அருந்தவர் சான்றோர் தாய் தந்தை முதலாயினோரும் விருந்தினரும் ஆம். நல்லனசெய்தல் - அவருக்கு டுமவைகளைக் கொடுத்தல். அது செய்யவேண்டும் நாள்களிலு மென் எஞ்ஞான்றுமென்றார்.

'இல்லாளை அஞ்சுவான்' என்றது மனையாளது சொல்லுக்கு அடங்கி வன். 'நல்ல' என்றது நன்மை. 'நல்லார்' என்றது பெரியார். 'இருமுது ' என்றது தாய் தந்தையர். 'விருந்தினர்' என்றது புதிதாக மனைக்கு

* 'இல்லாளை யஞ்சி விருந்தின்முகங் கொன்ற நெஞ்சிற், புல்லாள னாக ாற்கிலெனப்பு கைந்து, வில்லா ளழுவம் பிளந்திட்டு வெகுண்டு க், கொல்யானை யுந்திக் குடைமேலுமோர் கோறொடுத்தான்" சீவக ணி: மண்மகளிலம்பகம்-217.

வருவோர். 'அத' என்றது கல்லத. இல்லாளுக்கு அஞ்சி புதிதாக மனைக்கு வந்தவரது முகம் வாடச்செய்த மனமுடைய கொடியன். (5)

இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்.

(பரி-உரை) இல்லான் அமை ஊர் தோன் அஞ்சுபவர்-தம்மில்லாளுடைய வேய்போலுந் தோளினை அஞ்சுவார், இமையாரின் வாழினும் பாடு இவ்வீரத்தாற் றறக்கமெய்திய அமரர்போல இவ்வுலகத்து வாழ்ந்தாராயினும் ஆண்மையிலர் எ-று.

அமரர்போல வாழ்தலாவது - பகைத்த வீரர் தோள்களெல்லாம் வேறலான் கன்குமதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையின் வாழினு மென்றார். அமையார் தோளெனவே, அஞ்சுதற்காரணத்தது எண்மை கூறிய வாறு. வீரர்தோள்களை வென்றாராயினும் இல்லாடோள்களை அஞ்சுவார் ஆண்மையிலரென்பதாம். இவை நான்குபாட்டானும் அவளை யஞ்சுதற் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) இல்லான் - (தம்) மில்லாளுடைய, அமையார்தோள் - வே போலுந்தோளுக்கு, அஞ்சுபவர் - பயப்படுபவர், இமையாரின் - (வீரத்தா சுவர்க்கமடைந்த) தேவர்போல, வாழினும்-(இவ்வுலகத்து) வாழ்ந்தாராயினு பாடிலரே-ஆண்மையிலர் எ-று.

(க-ரை) மனையாளுக்குப் பயப்படுவோர் பெருமையடையார் என்பது.

(வி-ரை) தேவர்போல் வாழ்தலாவது பகைத்த வீரர் தோள்களெல்லாம் வெல்லுதலால் கன்கு மதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையால் வாழினுமென்றார். அமையார் தோளெனவே அஞ்சுதற் காரணத்தின் எளிமை சொல்லியபடி. வீரத தோள்களை வென்றாராயினும், இல்லாள் தோள்களை அஞ்சுவோர் ஆண்மையிலரென்பதாம். [இவை நான்குபாட்டும் அவளை அஞ்சுதற்குற்றம் சொல்லப்பட்டது.]

'இமையார்' என்றது இமையாநாட்டமுடைய தேவர்; இமயத்தில் உறைபவர். 'பாடு' என்றது பெருமை. 'அமை' என்றது மூங்கில். 'அமரர்' என்பன்னெடுங்காலம் உயிரோடிருப்பவர். 'வேறல்' என்றது வெல்லுதல். மூங்கிலொத்த மெல்லிய தோளுக்கு அஞ்சுவர் என்றதனால் அவரது எளிமை விளங்குகின்றது. இத்தகையோர் வீரர் தோள்களை வெல்வது அரிது. மூங்கிலொத்த மெல்லிய தோள்களையுடைய பெருமைவாய்ந்த மெல்லியலார் பிரிவுக்கு ஆற்றாது அஞ்சுகின்றவர்களும் வினைமேற் சென்றாராயினும் மனையான்பாற்செல்லுதலின் வெற்றிதோன்றாது என்றும் பெ கூறலாம்.

பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னஞ்
பெண்ணே பெருமை யுடைத்து.

(பரி-உரை) பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் - * ாணின் த் தன்னில்லாளது ஏவற்றொழில்செய்து நிரிகின்றவனது ஆண்டன் மையின், ாண் உடைப் பெண்ணே பெருமை உடைத்து - ாணினையுடைய வள் பெண்டன்மையே மேம்பாடுடைத்து எ-று.

ாணுடைப் பெண்ணை வேண்டாது கூறியது தவனேவல் செய் னது ாணின்மை மூடித்தற்காதலின் அம்மறுதலைத்தொழில் வருவிக்கப் ட்டது. ஏவல்-ஆகுபெயர். இறந்தகட்பெண்ணென்பதூஉம் அது. ஏவல் ய்வித்தக் கோடற்சிறப்புத் தோன்றப் பெண்ணெனப் பிரித்தார்.

(ப-ரை) பெண் - இல்லானது, ஏவல்-ஏவற்றொழிலை, செய்தொழுகும்- ாணமில்லாமல்) செய்து நிரிகின்றவனது, ஆண்மையின் - ஆண்டன்மை யக்காட்டிலும், ாணுடை - ாணத்தையுடைய, பெண்ணே - (அவள்) ண்டன்மையே, பெருமை-மேம்பாட்டை, உடைத்து-உடையது எ-று.

(க-ரை) பெண்ணேவல்செய்து நடக்கு மாண்டன்மையிலு மப்பெண்ணே ருமையுடையது என்பதாம்.

(வி-ரை) ாணுடைப்பெண்ணை அதிகமாகச் சொல்லியது அவ ஏவல் செய்வோனது ாணில்லாமை மூடித்தற்காதலால் அது வருவிக்கப் ட்டது. ஏவல் செய்வித்துக்கொள்ளுதற் சிறப்புத்தோன்ற பெண்ணே ணைப் பிரித்தார்.

'பெண்மை' என்றது பெருமை. 'மேம்பாடு' என்றது சிறப்பு; உயர்ந்த ங்கல். 'பெண்' என்பது பெண்தன்மைக்காயிற்று. 'செய்வித்துக்கோடல்' றது செய்வித்துக்கொள்ளல். 'ாணின்மை' என்றது ாணமில்லாத் மை. ஆண்மகனுயினும் ஏவற்றொழிலுடைமைபற்றி ாணின்றி யிருப்ப லின் ாணமுடைய பெண் (பெருமை) தன்மையே சிறந்ததாம் என்றார்.

நட்டார் குறைமுடியார் நன்ருற்றூர் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.

(பரி-உரை) நன்னுதலான் பெட்டாங்கு ஒழுகுபவர்-தாம் வேண்டியவா றித் தம்மினையாள் வேண்டியவாறு ஒழுகுவார், நட்டார்குறை முடியார்- மொடு கட்புச்செய்தார் உற்றகுறை முடிக்கமாட்டார், நன்று ஆற்றூர்- வேயன்றி மறுமைக்குத் துணையாய அறஞ் செய்யவுமாட்டார் எ-று.

நன்னுதலாளென்பதனை †'அமையார்தோள்' என்புழிப்போலக் கொள்க. டானே அறிந்த ஏவலும் பொருள்கொடுத்தலுங் கூடாமையின் இருமைக் வேண்டுவன செய்யமாட்டாரென்பதாம்.

(ப-ரை) (தாம் வேண்டியபடியன்றி) நன்னுதலாள் - (தம்) மனையாள், ட்டாங்கு - வேண்டியபடி, ஒழுகுபவர் - நடப்பவர், நட்டார் - (தம்மோடு)

* "பெண்மை ஆண்மைகட்குப் பொருள் கட்புலனுகிய அமைதித் மை, ஞாந்தன்மை" என்பர் நச்சினார்க்கினியர்.

† திருக்குறள் 91-ம் அதி-பெண்வழிச்சேறல் 6.

நட்புச்செய்தவாறு, குறை-குறையை, முடியார்-முடிக்கமாட்டார், (அதுவல்லாமலும்) நன்று (மறுமைக்குத் துணையாகிய) அறத்தையும், ஆற்றார்-செய்யமாட்டார் எ-று.

(க-ரை) மனைவி மனப்படி நடப்பவர் சிநேகருக் குதவார் தருமஞ்செய்யார் என்பதாம்.

(வி-ரை) நன்னுதலாளென்பதனை அமையார்தோள் என்றதுபோற் கொள்க. அவள்தானே அறிந்து ஏவுதலும் பொருள்கொடுத்தலும் கூடாமையால் இருமைக்கும் வேண்டுவன செய்யமாட்டாரென்பதாம்.

'குறை' என்றது மனதிற்கொண்டகுறை. அவள்வழி ஒழுகுபவன் அவளுக் கறிவுறுத்தற்குரிய வாற்றலிலாதுபற்றியும், அவடானேயறிந்து ஏவலும் பொருள்கொடுத்தலுங் கூடாமைபற்றியும் இருமைக்கும் வேண்டுவன செய்யமாட்டாராயினர். (8)

அறவினையு மான்ற பொருளும் பிறவினையும் பெண்ணேவல் செய்வார்க ணில்.

(பரி-உரை) அறவினையும்-அறச்செயலும், ஆன்றபொருளும்-அது முடித்தற்கு ஏதுவாய பொருட்செயலும், பிறவினையும் - அவ்விரண்டின் வேறாய இன்பச்செயல்களும், பெண் ஏவல் செய்வார் கண் இல்-தம்மனையாள் ஏவல் செய்வார்மாட்டு உளவாகா எ-று.

புலன்களைந்தாகலின் பிறவினையெனப் பன்மையாயிற்று. அவைநோக்கி அறச்செயல் பொருட்செயல்கள் முன்னேயொழிந்தார்க்குத் தலைமை அவள் கண்ணதாகலின் பின் அவைதாமும் இலவாயினவென்பது தோன்ற அவற்றைப் பிரித்துக் கூறினார். இவை மூன்றுபாட்டானும் அவளேவல் செய்தற்குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) அறவினையும்-அறச்செயலும், ஆன்றபொருளும் - அது முடித்தற்கு ஏதுவாகிய பொருட்செயலும், பிறவினையும்-அவ்விரண்டின் வேறாகிய இன்பச்செயல்களும், பெண்ணேவல்-(தம்) மனையாளேவலை, செய்வார்கண்-செய்பவரிடத்து, இல்-உண்டாகா எ-று.

(க ரை) மனைவிக்கேவல் செய்பவரிடத்துத் தருமச்செய்கை பொருட்செய்கை இன்பச்செய்கை இம்மூன்றுமில்லை என்பதாம்.

(வி-ரை) இன்பச்செயல்களோக்கி அறச்செயல் பொருட்செயல்களை முன்னே ஒழிந்தார்க்குத் தலைமை அவளிடத்திருத்தலால் பின் அச்செயல்களும் இல்லையென்பது தோன்ற அவைகளைப் பிரித்துச்சொல்லினார். [இவை மூன்றுபாட்டாலும் அவளேவல் செய்தற்குற்றம் சொல்லப்பட்டது.]

'அது' என்றது அறச்செயல். 'அவ்விரண்டு' என்றது அறச்செயலும், பொருட்செயலும். 'மாட்டு' என்றது இடத்தில். 'தலைமை' என்றது முதன்மை (சிறப்பு) பெண்ணேவல் செய்தொழுகும் பேதை பொருள்தேடும் முயற்சி

வினைதலால் அப்பொருளா லடைதற்பாலனவாகிய அறவினையும் பிறவினை யும் இலவாயின வென்றார்.

(9)

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில். [றும்

(பதவுரை) எண் சேர்ந்த நெஞ்சத்த இடன் உடையார்க்கு - கருமச் சூழ்ச்சிக்கட் சென்ற நெஞ்சத்தினையும் அதனாலுய செல்வத்தினையும் உடையராய வேற்றார்க்கு, பெண் சேர்ந்த ஆம் பேதைமை எஞ்ஞான்றும் இல் - மனையாளைச் சேர்தலான் வினையும் பேதைமை எக்காலத்தும் உண் டாகாத எ-று.

• "இடனில் பருவத்தும்" எனவும் † "இடனின்றி யிருந்தோர்க்கு" எனவும் கூறுதலையான் இடனென்பது அப்பொருட்டாதலறிக. இளமைக் காலத்தை மென்பார், எஞ்ஞான்றுமென்றார். அப்பேதைமையாவது மேற் சொல்லிய வினைதல், அஞ்சல், எவல்செய்தலென்னும் மூன்றற்கும் காண மாயது. எதிர்மறைமுகத்தான் அம்மூன்றும் இதனாற் றொகுத்துக் கூறப் பட்டன.

(பதவுரை) எண்சேர்ந்த - (கரும) காலோசனையிலே சென்ற, நெஞ்சத்த மனத்தையும், இடன் (அதனாலாகிய) செல்வத்தையும், உடையார்க்கு-உடை யவர்க்கு, பெண்சேர்ந்தாம் - மனையாளைச் சேர்தலால் வினையும், பேதைமை அறியாமை, எஞ்ஞான்றும்-எக்காலத்தும், இல்-உண்டாகாத எ-று.

(க-ரை) கல்ல மனமும் கல்ல செல்வமுமுடையவர்க்கு மனைவியால் வரும் அறியாமையில்லை என்பதாம்.

(வி-ரை) இல்லாமைக்காலத்தை மென்றதற்கு எஞ்ஞான்றமென்றார். அப் பேதைமையாவது மேற்சொல்லிய வினைதல், அஞ்சல், எவல்செய்தல், என்கிற மூன்றற்கும் காரணமாகியது. [எதிர்மறை முகத்தால் அம்மூன்றும் இதனால் தொகுத்துச் சொல்லப்பட்டன.]

'எண்' என்றது எண்ணுதல்; மேலும்மேலும் சிந்தித்தல். நெஞ்சத்திடன் எனக்கொண்டு மனவுறுதியென்று பொருள்கூறலும் சாலப்பொருத்தம். எனெனில் மனவுறுதியுடையாரே மனைவாழ்ச்சேர்தலான் வினையும் பேதை மையை வெல்வர். 'கருமச்சூழ்ச்சி' என்றது காரியசித்திக்குரிய பலவழி களையும் இடைவிடாது சிந்தித்தல். 'இடனின்றி யிருந்தோர்' என்றது பொருளின்றி யிருந்தோர்; இடம் யாதொன்றற்கும் வழியில்லாத பிரத்தகர் என்றம் பொருள்கூறலாம். 'எஞ்ஞான்றும்' என்றதனால் காமமிக்க இளமைக் காலத்தும் என்பது விளக்கும்.

(10)

91-ம் அதி - பெண்வழிச்சேறல் - முற்றிற்று.

• திருக்குறள்: 22-ம் அதி-ஒப்புரவறிதல் 8. † கலி: பாலை-1.

92-ம் அதிகாரம்—வரைவின்மகளிர்

(பரி-உரை) அஃதாவது: தக்கலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஒவ்வார் ஆகாதாரென்னும் வரைவிலாத மகளிரது இயல்பு; ஆதலால் தமக்குரிய மகளிரான்வரும் குற்றத்தின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தக்கலம் விலைகொடுப்பவர் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஒவ்வார் ஆகாதார் என்கிற வரைவில்லாத மகளிரது இயல்பு. ஆகலால் தமக்குரிய மகளிரால் வரும் குற்றத்தின்பின் வைக்கப்பட்டது.

அன்பின் விழைபார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும்.

(பரி-உரை) அன்பின் விழைபவர் பொருள் விழையும் ஆய் தொடியார் ஒருவனை அன்புபற்றி விழைபவது பொருள்பற்றி விழையும் மகளிர், இன்சொல் இழுக்குத் தரும்-அது கைபுறுத்துணையும் தாம் அன்புபற்றி விழைந்தாராகச் சொல்லும் இனியசொல் அவனுக்குப் பின் இன்னாமையைப் பயக்கும் எ-று.

பொருளென்புழி இன் விகாரத்தாற் றொக்கது. ஆய்ந்ததொடியினையுடையா ரென்றதனானும், இனிய சொல்லென்றதனானும், அவர் கருவி கூறப்பட்டது. அச்சொல் அப்பொழுதைக்கு இனிதுபோன்று பின் வறுமைபயத்தலின் அது கொள்ளற்க வென்பதாம்.

(ப-உரை) அன்பின் விழையார் - (ஒருவனை) அன்புபற்றி விரும்பாராகி, பொருள்விழையும் - பொருள்பற்றி விரும்பும், ஆய்தொடியார்-மகளிர், இன்சொல்-(அது கைவருமளவும் அன்புபற்றி விரும்பினாராகச் சொல்லும்) இனிய சொல், இழுக்கு-இன்னாமையை, தரும்-(அவனுக்குத்) தரும் எ-று.

(க-ரை) அன்பால் விரும்பாது பொருளால் விரும்பும் வேசையர்களின் சொல்லானது துன்பந்தரும் என்பதாம்.

(வி-உரை) ஆய்தொடி-ஆராய்ந்த வளையல். ஆய்தொடி-இன்சொல் என்றதனால் அகர்மயக்குஞ் சாதனம் சொல்லப்பட்டது. அச்சொல் அப்பொழுது இனிதுபோன்று பின் வறுமையை உண்டாக்கலால் அது கொள்ளலாகாதென்பதாம்.

'விழைதல்' என்றது விரும்புதல். 'கைபுறுத்துணையும்' என்றது கைக்கொள்ளுமளவும். 'வறுமை பயத்தல்' என்றது செல்வத்தை யிழக்கச்செய்தல். (1)

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

(பரி உரை) பயன் தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர் ஒருவனுக்கு உள்ளபொருளை அளந்தறிந்து அஃதெய்தற்துணையும் நி-

பண்புடைமை சொல்லும் பண்பில்லாத மகளிரை, நயன் நாடி நள்ளாவிடல். ஒழுகலாற்றினை ஆராய்ந்தறிந்த அவரைப் பொருந்தாது விடுக எ-று.

பண்பு சொல்லின்கணல்லது தங்கட்கிடவாமைதோன்றப் பண்பின் மகளிரென்றும், அவர்க்கு அது சாதிதருமமாதல் நூலானேயன்றி அவர் செயலாலு மறிந்தென்பார் நயன்றாக்கியென்றும், அவ்வறிவு அவரை விடுதற்கு உபாயமென்பது தோன்றப் பின் நள்ளாவிடலென்றும் கூறினார்.

(ப-ரை) பயன்றாக்கி-(ஒருவனுக்குள்ள) பொருளே அளந்தறிந்து, பண்புரைக்கும்-(அது கிடைக்குமளவும்) தமது குணமுடைமை சொல்லும், பண்பின் மகளிர்-குணமில்லாத மகளிரை, நயன்றாக்கி-உடன்பாட்டினை ஆராய்ந்தறிந்து, நள்ளா-(அவரைப்) பொருந்தாமல், விடல்-விடக்கடவர் எ-று.

(க-ரை) பொருட்பயனைக் குறித்து நயம்பேசும் வேசையர் நடக்கையறிந்து அவரை விடக்கடவர் என்பதாம்.

(வி-ரை) பண்பு சொல்லில்லது அகரிடத்தில்லாமை தோன்றப் பண்பின்மகளிரென்றும், அது சாதிதருமமாதலால் நூலாலே யல்லாமல் அவர் செயலாலும் அறிந்தென்றற்கு நயன்றாக்கியென்றும், அவ்வாறு அவரைவிடுதற்கு உபாயமென்பது தோன்ற நள்ளாவிடலென்றும் சொல்லினார்.

'பண்பு' என்றது குற்குணம். 'எய்தற்தினையும்' என்றது தான் பெறுமளவும். 'பண்புடைமை' என்றது உறுப்புரலனும்குணரலனும். 'தங்கட்கிடவாமை' என்றது தங்களிடத்திற் பொருந்தாமை. 'நயன்றாக்கல்' என்றது நடக்கையை யாராய்தல். (2)

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறை
லேதில் பிணந்தழீஇ யற்று. [யி

(பரி-உரை) பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் - தொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையையுடைய முயக்கம், இருட்டு அறையில் ஏதில் பிணம் தழீஇயற்று - பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன்னறியாத பிணத்தைத தழுவினாற்போலும் எ-று.

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்தஞ்செயலும் ஆராயாது சாதியும் பருவமும் நோக்காதானை முயங்குங்கால் அவர் குறிப்புக் கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாததோரிடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை எடுக்நுங்கால் அவர் குறிப்போடொக்குமெனவே, அதனால் அருவாகின்றும் பொருணோக்கிப் புறத்தாற்றழுவுவர்; அதனை யொழிகவென்பதாம். இவை மூன்றுபாட்டாலும் அவர்சொல்லும் செயலும் பொய்யென்பது கூறப்பட்டது.

(ப-ரை) பொருட்பெண்டிர் - (தொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும்) பொதுமகளிரது, பொய்ம்மை-பொய்ம்மையையுடைய, முயக்கம்-தழுவுதல், (பிணமெடுப்பவர்) இருட்டறையில்-இருள்வீட்டில், ஏதில் பிணம்-முன்னறியாத பிணத்தை, தழீஇயற்று-தழுவினாற்போலும் எ-று.

(க-ரை) வேசையர்தம் பொய்யான புணர்ச்சியானது இருள் வீட்டின் அயலான் பிணத்தைத் தழுவினாற்போலும் என்பதாம்.

(வி-ரை) பொருளுக்குத் தழுவும் பரத்தையர் கருத்தும் செயலும் ஆராயாமல் சாதியும் பருவமும் ஒவ்வாதானைக் கூடும்போது அவர் குறிப்புங் கூலிக்குப் பிணமெடுப்பவர் காணப்படாத ஓரிடத்திலே சம்பந்தமில்லாத ஒரு பிணத்தை எடுக்கும்போது அவர் குறிப்போடொக்குமெனவே, அதனால் அருவாநின்றும் பொருளே நோக்கிப் புறத்தால் தழுவுவர்; அதனை ஒழியக்கடவரென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் அவர் சொல்லும் செயலும் பொய்யென்பது சொல்லப்பட்டது.]

'பொருட்பெண்டிர்' என்பதனால் கொடுப்பாரை விரும்பார். பொருளையே குறித்து விரும்புவார் என்பது பெறப்பட்டது. 'பொய்மைமுயக்கம்' என்றது மனமில்லாத முயக்கம். 'இயைபில்லாததோர் பிணம்' என்றது சம்பந்தமில்லாத பிணம். அதனால் அருவாநின்றும், மனமொவ்வாமையால் அருவருத்துப் புறத்தால் தழுவுவர். வெளிக்கு அன்புடையவர்போல் நடித்துத் தழுவுவர். புறத்தாற் றழுவலின் இன்பமிலாமைபற்றி யதனை யொழிக்வென்றார். (3)

பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு ளாயு மறிவி னவர்.

(பரி-உரை) பொருட்பொருளார் புன்னலம் - இன்பமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லியலத்தை, அருட்பொருள் ஆயும் அறிவினவர் தோயார் - அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்துசெய்யும அறிவினையுடையார் நீண்டார் எ-று.

அறமுதலிய நான்கும் பொருளெனப்படுதலின், பொருட்பொருள் அருட்பொருளென விசேடித்தார். புன்மை இழிந்தார்க்கே உரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவர் மெய்ந்நலம் மறுதலையாகலின், தோயாரென்பதாம்.

(ப-ரை) பொருட்பொருளார்-(இன்பமாகியபொருளை இகழ்ந்து) பொருளாகிய பொருளையே விரும்புமகளிரது, புன்னலம்-புல்லிய நலத்தை, அருட்பொருள் - அருளோடு கூடியபொருளை, ஆயும் - ஆராய்ந்து சம்பாதிக்கும், அறிவினவர்-அறிவையுடையவர், தோயார்-நீண்டார் எ-று.

(க-ரை) அருளை யாராயுமறிவுடையார் வேசையரைச் சேரார் என்பதாம்.

(வி-ரை) அறமுதலாகிய நான்கும் பொருளெனப்படுதலால் பொருட்பொருள் அருட்பொருள் என விசேடித்தார். புன்மை இழிந்தார்க்கே உரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத்திற்கு அவர் மெய்ந்நலம் விரோதமாகலால் தோயாரென்பதாம்.

'புல்லலம்' என்றது இழிந்தோர்க்கே புரிந்தாகிய அற்பலன். 'அற முதலிய நான்கு' என்றது அறம் பொருளின்பம் வீடு. 'அருட்பொருள்' என்றது அருளாகிய பொருள். 'ஆயும்' என்றது ஆராய்ந்தறியும். 'அறிவினர்' என்றது மெய்யறிவுடையார். 'தோயார்' இதில் தோய் முதனிலை. (4)

பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர்.

(பரி-உரை) மதி நலத்தின் மாண்ட அறிவினர் - இயற்கையாகிய மதி நன்மையான் மாட்சிமைப்பட்ட செயற்கையறிவினையுடையார், பொது நலத்தார் புன்னலம் தோயார் - பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொதுவாய ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார் எ-று.

மதிநன்மை - முற்பிறப்புக்களிற் செய்த கல்வினைகளான் மனத்தெளிவுடைத்தாதல். அதனுணன்றிக் கல்வியறிவு மாட்சிமைப்படாமையின் மதி நலத்தின் மாண்டவறிவினரொன்றும், அவ்வறிவுடையார்க்கு அவராசையது பொதுமையும் மெய்ந்நலத்தது புன்மையும் விளக்கித் தோன்றலின் தோயாரென்றுங் கூறினர்.

(ப-ரை) மதிநலத்தின் - (இயற்கையாகிய) மதிநன்மையால், மாண்ட-மாட்சிமைப்பட்ட, அறிவினர்-(செயற்கை) யறிவையுடையவர், பொதுநலத்தார் - (பொருள் கொடுப்பவர்க்கெல்லாம்) பொதுவாகிய ஆசையையுடைய மகளிரது, புன்னலம்-புல்லியநலத்தை, தோயார்-தீண்டார் எ-று.

(க-ரை) புத்திநலமுடைய பெரியோர் பரத்தையரைச் சேரார் என்றாம்.

(வி-ரை) மதிநன்மை - முற்பிறப்பிலே செய்த கல்வினைகளால் மனத்தெளிவுடைத்தாதல் அத்தெளிவினாலல்லாமல் அக்கல்வியறிவு மாட்சிமைப்பாடமையால், மதிநலத்தின் மாண்டவறிவினரொன்றும், அவ்வறிவுடையார்க்கு அவராசையது பொய்மையும் மெய்ந்நலம் பலருக்கும் பொதுவாகுக்கையும் விளக்கித் தோன்றுகையால் தோயாரென்றும் சொல்லினர்.

'மதிநலம்' என்றது அறிவாகிய நலம். 'மாண்ட' என்றது மாட்சிமைப்பட்ட; இதில் மாண் பகுதி. 'மதிநன்மை' என்றது கல்வினைப் பழக்கத்தால் மனம் தெளிவுடைத்தாதல். 'அதனுணன்றி' என்றது மனத்தெளிவானன்றி. மாட்சிமை' என்றது பெருமை. (5)

தகைசெருக்கிப் பாரிப்பார் தோயார் புன்னலம் பாரிப்பார் தோள்.

(பரி-உரை) தகை செருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள் - மூடல், மடல், அழகென்பனவற்றாற் களித்துத் தம்புல்லிய நலத்தை விலைகொடுப்பார் யாவர்மாட்டும் பரப்பும் மகளிர் தோளினை, தம் நலம் பாரிப்பார்

தோயார் - அறிவொழுக்கங்களாலுய தம்புகழை உலகத்துப் பரப்புதற்குரிய உயர்ந்தோர் நீண்டார் எ-று.

ஆடன்முதலிய மூன்றுமுடைமை அவர்க்கு மேம்பாடாகலின் தகை யென்றும், தோயின் அறிவொழுக்கங்கள் அழியுமாகலின் அவற்றுற் புகழ் பரப்புவார் தோயாரென்றுங் கூறினார். தக்கலமென்புழி கலம் ஆகுபெயர். இவை மூன்றுபாட்டாலும் அவரை உயர்ந்தோர் நீண்டாரென்பது கூறப் பட்டது.

(ப-ரை) தகை-ஆடல்பாடல் அழகென்பவைகளாலே, செருக்கி-களித்த, புன்னலம்-(தம்) புல்லியகலத்தை, பாரிப்பார் - (விலைகொடுப்பவர்க்கெல்லாம்) பரப்புமகளிரது, தோள்-தோளை, தக்கலம் (அறிவு ஒழுக்கங்களாலாகிய) தமது புகழை, பாரிப்பார் - (உலகத்தே பரப்புதற்குரிய) உயர்ந்தோர், தோயார் நீண்டார் எ-று.

(க-ரை) தமது புகழை விளக்கும் பெரியோர் வேசையர் தோளைச் சேரார் என்பதாம்.

(வி-ரை) ஆடல் முதலிய மூன்றுமுடைமை அவர்க்கு மேன்பாடா லால் தகையென்றும், தோய்ந்தால் அறிவொழுக்கங்கள் அழியுமாகலால் அவ்வறிவொழுக்கங்களாலே புகழ்பரப்புவோர் தோயாரென்றும் சொல்லி னார். [இவை மூன்றுபாட்டாலும் அவரை உயர்ந்தோர் நீண்டாரென்பது சொல்லப்பட்டது.]

('பாரித்தல்' என்றது பரப்புதல். 'தகை' என்றது ஆடல்பாடல் அழகு வற்றுலாயபெருமை. 'தோயின்' என்றது தழுவின். 'அவற்றால்' என்றது அறிவொழுக்கங்களால். 'புகழ்பரப்புவார்' என்றது பெரியோர்.

நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற் பேணிப் புணர்பவர் தோள்.

(பரி-உரை) நெஞ்சின் பிறபேணிப் புணர்பவர் தோள் - நெஞ்சினுற் பிறவற்றை ஆசைப்பட்டு அவை காரணமாகக் கொடுப்பாரை மெய்யா புணரும் மகளிர் தோள்களை, நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் - நிறையா நிருந்திய நெஞ்சமில்லாதார் தோய்வர் எ-று.

பொருளும் அதனற் படைக்கப்படுவனவும் விரும்பும் நெஞ்சு அ தின்மேலதாகலின், புணர்வது உடம்புமாத்திரமென்பதறிக்க அதை ஒடாதகிற்கும் நெஞ்சினையுடையார் தோயாமையின், அஃதிலார் தோ சென்றார்.

(பதவுரை) நெஞ்சின் - நெஞ்சினால், பிற - வேறுபொருள்களை, பே ஆசைப்பட்டு, (அவை கொடுப்பவரை) புணர்பவர் (அவை காரணமாக வே வினாலே) புணருமகளிரது, தோள்-தோள்களை, நிறைநெஞ்சமில்லவர்-நிற்ப செய்தலினாலே (நிருத்திய) நெஞ்சமில்லாதவர், தோய்வர்-சேர்வர் எ-று.

(க-ரை) நன்மனமில்லாதகர் வேசையர் தொன்மோச் சேர்வார் என்பதாம்.

(வி-ரை) பொருளும் அதனற் படைக்கப்படுவனவும் விரும்புற நெஞ்சு அவைமேலிருத்தலால், புணர்வது அவருடம்புமாத்திரமென்ப தறிந்து அதன்வழி ஓடாது கிற்கும் நெஞ்சையுடையார் தோயாமையால், அஃதில்லாதார் தோய்வரென்றார்.

'கிறைநெஞ்சம்' என்றது கல்விகேள்விகள் கிறைந்துள்ள நெஞ்சம். "கிறைநெஞ்சுடையாரே கல்குரவுஞ்சம்" என்றார் பிறரும். 'மெய்யாற் புணர்தல்' என்றது உடலால்புணர்தல். 'திருந்தியநெஞ்சம்' என்றது தெளிந்த அறிவுடைய நெஞ்சம். 'அஃதிலார்' என்றது கிறைநெஞ்சமில்லாதவர். (7)

ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் மூயக்கு.

(பரி-உரை) மாய மகளிர் மூயச்கு - உருவு சொற்செயல்களான் வஞ்சித்தலே வல்ல மகளிரது மூயக்கத்தை, ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப-அவ்வஞ்சனை ஆராய்ந்தறியுமறிவுடைய ரல்லார்க்கு அணங்காகென்ற சொல்லுவர் நூலோர் எ-று.

அணங்கு-காமநெறியான் உயிர்கொள்ளும் தெய்வமகள். தாக்கு-தீண்டல். இவ்வுருவகத்தான் அம்மூயக்கம் முன் இனிதுபோன்று பின் உயிர் கோடல் பற்றும். இது நூலோர் துணிவென்பதுதோன்ற அவர்மேல்வைத்துக் கூறினர். அப்பெயர் அவாய்நிலையான் வந்தது.

(ப-ரை) மாயமகளிர் - (உருவுசொற் செயல்களால்) வஞ்சித்தலில் வல்ல மகளிரது, மூயக்கு-புணர்ச்சியை, ஆயும்-(அவ்வஞ்சனையை) ஆராய்ந்தறியும், அறிவினரல்லார்க்கு - அறிவுடையவரல்லாதவர்க்கு, அணங்கு - அணங்காக்கு, என்ப-என்ற (நூலோர்) சொல்வர் எ-று.

(க-ரை) அறிவில்லார்க்கு வேசையர் புணர்ச்சியை நூலோர் அணங்கென்பர் என்பதாம்.

(வி-ரை) அணங்கு-காமவழியால் உயிர்கொள்ளுந் தெய்வமகளிர். தாக்கு-தீண்டல். இவ்வுருவகத்தால் அப்புணர்ச்சி முன்னே இனிதுபோலே தின்றிப் பின்பு உயிர் கொள்ளுதல் பெற்றும். இது நூலோர் துணிவென்றதோன்ற அவர்மேல் வைத்துச் சொல்லினர்.

'வஞ்சித்தலிலவல்ல' என்றது வஞ்சித்தலில்வல்ல. அழகிய வுருவத்தால் வஞ்சித்துப் பின் உயிர்கொள்ளும் தெய்வமகள்போல அழகினல்மயக்கி வறுமைக் கொடுப்பர். (8)

பரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
நரியர்க ளாழு மளறு.

(பரி-உரை) வரைவு இலா மாண் இழையார் மென்றோள் - உயர்ந்தோர் இழிந்தோரென்றிவை விலைகொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லிய தோள்கள், புரை இலாப் பூரியர்கள் ஆழும் அளறு-அக்குற்றத்தை யறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக்கழுந்தி நிரயம் எ-று.

உயர்தற்கேதுவாகலின், புரையெனப்பட்டது. சாதியானிழிந்தாரை விக்குதற்குப் புரையிலாப்பூரியர்களென்றும், அவர் ஆழ்தற்கேது உருவு முதலிய மூன்றுமென்பது தோன்ற மாணிழையார் மென்றோளென்றும், அவர்க்கு அளற்றினையிடையின்றிப் பயக்குமென்பது தோன்ற உருவுமாக்கியுங் கூறினர்.

(ப-ரை) வரைவிலா - (உயர்ந்தோர் இழிந்தோரென்னுதே விலைகொடுப்பவர் யாவரையும்) கூடும், மாணிழையார் - மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடையவரது, மென்றோள் - மெல்லிய தோள்கள், புரையிலா - (அக்குற்றத்தையறியும்) அறிவில்லாத, பூரியர்கள் - கீழ்மக்கள், ஆழும் - (புகுந்து) அழுந்தும், அளறு - நரகமாம் எ-று.

(க-ரை) வேசையர் தோள்கள் கீழ்மக்களழுந்து நரகமாம் என்பதாம்.

(வி - ரை) சாதியாலிழிந்தாரை நீக்குதற்குப் புரையிலாப் பூரியர்களென்றும் அவராழ்தற்கேது உருவமுதலாகிய மூன்றுமே யென்பதுதோன்ற மாணிழையார் மென்றோளென்றும், அவர்க்கு நரகத்தைத் தடையில்லாயருமென்பது தோன்ற உருவகமாக்கியும் சொல்லினர்.

'புரை' என்றது குற்றம். 'நிரயம்' என்றது நரகம். நரகம் தன்பத்தைத் தால்போல இவர் தோன்முயக்கம் வறமையுளாழ்த்தி தன்புறுத்தும்.

இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந் திருநீக்கப் பட்டார் தொடர்பு.

(பரி-உரை) இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் - கவர்த்த மனத்தினையுடைய மகளிரும் கள்ளும் சூதுமென இம்மூன்றும், திரு நீக்கப்பட்டார் தொடர்பு - திருமகளாற்றறக்கப்பட்டார்க்கு சட்பு எ-று.

இருமனம்-ஒருவனேடு புணர்தலும் புணராமையும் ஒருகாலத்தேயுடைமனம். கவறு - சூதுபெயர். ஒத்தகுற்றத்தவாகலின், கள்ளும் சூதும் உடனே கூறப்பட்டன. * வடநூலாரும் இக்கருத்தான் விதனமென உடன்கூறி வருகின்ற அதிகாரமுறைமையும் இதனோடறிக. திருவிலாயெண்ணியதன்மைபற்றி மூடிபுகோடலின், சண்டி, அஃறினையாற் கொண்டது. நீக்கப்பட்டமை இக்குறிகளான் அறியப்படுமென்பதாம். இவை காரணமாட்டாலும் சேர்வார் இழிந்தோரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) இருமனப் பெண்டிரும் - கவர்மனத்தையுடைய மகளிரும் கள்ளும் - கள்ளும், கவறும் - சூதும், திரு - திருமகளால், நீக்கப்பட்டாவிடப்பட்டவருக்கு, தொடர்பு - சட்புக்களாம் எ-று.

* காமந்தகம் அத்தியாயம்-11. சுலோகம் 124.

(க-ரை) வேசையரும், கள்ளும், சூதும், இலக்குமியால் விடப்பட்ட ஊர்க்கு கட்பாம் என்பதாம்.

(வி-ரை) இருமனம் - ஒருவனுடை கூடுதலும் கூடாமையும் ஒருகாலத் திலேயுடைய மனம். கள்ளும் சூதும் பாத்தையர்க்குச் சமானமான குற்ற முடையவையாகலாலே உடன் சொல்லப்பட்டன. வருகின்ற அதிகார முறைமையும் இதனுலே அறிக. திருவீக்கப்பட்டமை இவ்வடையாளங்களால் அறியப்படுமென்பதாம். [இவை தான்குபாட்டாலும் அது செய்பவர் இழிஞ ரென்பது சொல்லப்பட்டது.]

'வேர்த்தமனம்' என்றது வஞ்சகமனம். 'திருமகளாற் றறக்கப்பட்டார்' என்றது வறியோர். 'இருமனம்' என்றது புணர்ந்தும் புணராமைபோன் திருக்குமனம். அன்றியும், புணருவோனிடத்தும் புணரவிருப்போனிடத்தும் னம் கொண்டிருத்தலால் இருமனம் என்றுங் கூறலாம். (10)

92-ம் அதி - வரைவின்மகளிர் - முற்றிற்று.

93-ம் அதிகாரம்—கள்ளுண்ணுமை

(பரி-உரை) இனி ஒழுக்கமும் உணர்வு மழித்தற்கண் அவ்வரைவின்மக ரோடொப்பதாய கள்ளினுண்ணுமையது சிறப்பு எதிர்மறைமுகத்தாற் றுகின்றார்.

(உரை) அஃதாவது: இனி ஒழுக்கமும் உணர்வும் அழித்தலில் பரத்தை ரோடு ஒப்பதாகிய கள்ளினை உண்ணுமையது சிறப்பு எதிர்மறைமுகத் நலே சொல்லுகிறார்.

உட்கப் படாஅ ரொளியிழப்ப வெஞ்ஞான்றுங் கட்காதல் கொண்டொழுகு வார்.

(பரி-உரை) கட்காதல் கொண்டு ஒழுகுவார் - கள்ளின்மேற்காதல் செய் ாழுகுமாசர், எஞ்ஞான்றும் உட்கப்படார் - எஞ்ஞான்றும் பகைவரானஞ் ப்படார்; ஒளி இழப்பர் - அதுவேயன்றி முன்னெய்தி நின்ற ஒளியினையு நப்பர் எ-று.

அறிவின்மையால் பொருள் படை முதலியவற்றுற் பெரியராயகால த்தும் பகைவர் அஞ்சார், தம்முன்னோனெய்தினின்ற ஒளியினையும் இகழற் ட்டான் இழப்பனென்பதாம். இவை பிரண்டாலும் அரசு இனிதுசெல்லா ன்பது இதனுற் கூறப்பட்டது.

(ப-ரை) கட்காதல்கொண்டு - கள்ளின்மேலே ஆசைகொண்டு, ஒழுகு ர் - நடக்குமாசர், எஞ்ஞான்றும் - எக்காலும், உட்கப்படாதார் - (பகை ரால்) அஞ்சப்படார், (அதுவேயல்லாமல்) ஒளி - (முன்பெற்றநின்ற) ஒளி யும், இழப்பர்-இழந்தவிடுவர் எ-று.

(க-ரை) கள்ளிலிச்சைவைக்கு மரசர் அஞ்சார் புகழையிழப்பார் என்பதாம்.

(வி-ரை) அறிவில்லாமையால் பொருள் படை முதலியவைகளால் பெரியராகிய காலத்தும் பகைவர் அஞ்சார், தம்முன்னோராலே அடைந்த ஒளியும் இகழப்படுதலால் இழப்பரென்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் அரசநீதி இனிது செல்லாதென்பது இதனால் சொல்லப்பட்டது.]

'உணர்வு' என்றது அறிவு. 'ஒளி' என்றது புகழ். 'காதல்கொண்டு' என்றது ஆசைகொண்டு. 'உட்குதல்' என்றது அஞ்சுதல். 'கள்ளுண்ணா மரசை' என்றது பகைவர் வெல்வர் என்றபடி. ஏனெனில் அறிவை மயக்கும் தன்மை அதனிடத்து உண்டாமாதலினென்க. (1)

உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா னெண்ணப் படவேண்டா தார்.

(பரி-உரை) கள்ளை உண்ணற்க-அறிவுடையராயினார் அஃதிலராதற்கு ஏதுவாய கள்ளினை உண்ணாதொழிக; உணில் சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க - அன்றியே உண்ணல் வேண்டுவார் உளராயின், நல்லோரால் எண்ணப்படுதலை வேண்டாதார் உண்க எ-று.

பெறுதற்கரிய அறிவைப் பெற்றுவைத்தும் கள்ளானழித்துக்கொள்வாரை இயல்பாகவே அஃதில்லாத விலங்குகளுடனும் எண்ணாராகலின் சான்றோரா னெண்ணப்பட வேண்டாதாருண்கவென்றார்.

(ப-ரை) (அறிவுடையராயினோர்) கள்ளை - (அவ்வறிவு கெடுதற்கு ஏதுவாகிய) கள்ளினை, உண்ணற்க - உண்ணாதிருக்கக்கடவர், உணில் - உண்ண வேண்டுவாருண்டாயின், சான்றோரான் - நல்லோரால், எண்ணப்படவேண்டாதார்-மதிக்கப்படவிரும்பாதார், உண்க-உண்ணக்கடவர் எ-று.

(க-ரை) கள்ளை யுண்ணாதிருக்கக்கடவர், மதிக்கத்தகாதவ ருண்ணக்கடவர் என்பதாம்.

(வி-ரை) பெறுதற்கரிய அறிவைப் பெற்றிருந்தும் கள்ளால் அழித்துக் கொள்ளுவாரை இயல்பாகவே அறிவில்லாத மிருகங்களுடனேயும், எண்ணாராகலால் சான்றோரா லெண்ணப்பட வேண்டாதாருண்கவென்றார்.

'அஃது' என்றது அவ்வறிவு. 'ஏது' என்றது காரணம். எண்ணப்படுதல்' என்றது புகழப்படல். 'வேண்டாதார்' என்றது விரும்பாத கீழோ பின்னும் அஃது என்பது அவ்வறிவு.

ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச் சான்றோர் முகத்துக் களி.

(பரி-உரை) ஈன்றாள் முகத்தேயும் களி இன்னாது - யாதுசெய்யினும் உவக்குந்தாய் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்; மற்றுச் சான்றோர்முகத்து என்-ஆனபின், குற்றம் யாதும்பொறாத சான்றோர்முகத்து களித்தல் அவர்க்கியாதாம் எ-று.

மனமொழிமெய்கள் தம்வயத்த வண்மையான் நாணழியும், அழியவே, ன்ருட்கும் இன்னுதாயிற்று; ஆனபின், கள் இருமையுங் கெடுத்தலறிந்த 'சய்மைக்கண்ணே கடியுஞ் சான்ருேர்க்கு இன்னுதாதல் சொல்லவேண் மோ வென்பதாம்.

(ப-ரை) சான்ருண் முகத்தேயும்-(எதுசெய்தாலும் மகிழும்) தாய் முன் யினும், களி - (கள்ளுண்டு) களித்தல், இன்னுதை - தன்பஞ் செய்வதாம், ந்தலால்) மற்றச் சான்ருேர் முகத்தை - (பின் குற்றம் யாதும் பொருத) பெரியோர் முன்பு (அக்களித்தல்,) என்-(அவர்க்கு) யாதாகும்? எ று.

(க-ரை) தாய் முன்னங் கள்ளுண்டு களித்தல் தன்பமாம், பெரியோர் தன் கள்ளுண்டு களித்த லென்ன பயனும் என்பதாம்.

(வி-ரை) ஆல் - அசை. மனமொழிமெய்கள் தம்வசப்படாமையால் ாணம் அழியும்; அழியவே, தாய்க்கும் இன்னுதாயின. கள் இருமையும் கடுத்தலறிந்த தானத்தே கடியும் பெரியோர்க்கு இன்னுதாதல் சொல்ல வண்டுமோ வென்பதாம்.

'யாதை செய்யினும்' என்றது எத்தகைய தீங்கு செய்யினும். 'உவக்கும்' ன்றது மகிழும். யாதாம்' என்றது யாதுபயனைத்தரும்; ஒன்றுமில்லை பன்றபடி. 'வயம்' என்றது வசம். 'இருமை' என்றது இம்மை மறுமை. 'சய்மை' என்றது தானம்.

(3)

நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு. [னும்

(பரி-உரை) கள் என்னும் பேணுப் பெருங்குற்றத்தார்க்கு-கள்ளென்ற சால்லப்படுகின்ற யாவருமிகழும் மிக்க குற்றத்தினையுடையாரை, நாண் ன்னும் நல்லான் புறங்கொடுக்கும் - நாணென்ற சொல்லப்படுகின்ற உயர்ந் ன் நோக்குதற்கஞ்சி அவர்க்கெதிர்முகமாகான் எ-று.

காணுதற்குமஞ்சி உலகத்தார் சேய்மைக்கண்ணே நீங்குவராகலிற் ணுவென்றும், பின் ஒருவாற்ருலும் கழுவப்படாமையிற் பெருங்குற்ற ன்றும், இழிந்தோர்பானில்லாமையின் நல்லானென்றும் கூறினர். பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி. இவை மூன்றுபாட்டா ம் ஒளியிழத்தற்காரணங் கூறப்பட்டது.

(ப-ரை) கள்ளென்னும் - மதுவென்று சொல்லப்படுகின்ற, பேணு. வரும்) இகழும், பெருங்குற்றத்தார்க்கு - மிகுந்த குற்றத்தை யுடைய க்கு, நாணென்னு நல்லான்-நாணமாகிய நல்லவன், (அவரைப் பார்த்தற்கு ஞ்சிப்) புறங்கொடுக்கும்-எதிர்முகமாகான் எ-று.

(க-ரை) கள்ளுண்பவர்களுக்கு நாணமில்லை என்பதாம்.

(வி-ரை) காணுதற்கும் அஞ்சி உலகத்தார் தானத்தே நீங்குவாதலால் ணுவென்றும், பின் ஒருவழியிலும் நீக்கப்படாமையால் பெருங்குற்ற

* பிரயோகவிவேகம்: நிக்கப்படலம்-15.

மெய்ப்பும், நிறுத்தோரிடத்து மில்லாமையால் கல்லானென்றும் சொல்லினர்.
[இவை மூன்றுபாட்டாலும் ஒளிபிழத்தற்காரணம் சொல்லப்பட்டது.]

'கல்லான்' என்றது கல்லவன்; நன்மையைத்தருபவன். 'புறக்கொடுக்கும்' என்றது அவனைவிட்டு விலகிவிடும். 'உலகத்தார்' என்றது மேன்மக்கள். 'சேய்மை' என்றது தூரம். 'கழுவப்படல்' என்றது ஒழிக்கப்படல். 'பெரு' என்றது விரும்பப்படாத கள்ளருந்தவரைச் செல்வி அணுகான் என்றதாயிற்று.

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து மெய்யறி யாமை கொளல்.

(பரி-உரை) பொருள் கொடுத்து மெய் அறியாமை கொளல் - ஒருவன் விலைப்பொருளைக் கொடுத்துக் கள்ளாற் றனக்கு மெய்ம்மறப்பினைக்கொள்ளுதல், கை அறியாமை உடைத்து-அவன் பழவினைப்பயனுய செய்வதறியாமையைத் தனக்குக் காரணமாகவுடைத்து எ-று.

தன்னையறியாமை சொல்லவே, ஒழிந்தன யாவுமறியாமை சொல்லவேண்டாவாயிற்று. கை அப்பொருட்டாதல் * "பழனுடைப்பெருமை வீழ்ந்தெனைக் கையற்று" என்பதனுலுமறிக. அறிவார் விலைகொடுத்து ஒருவனைக் கொள்ளுங்காற் றீயதுகொள்ளாமையின் மெய்யறியாமைகொளல் முன்னையறியாமையான் வந்ததென்பதாம்.

(ப-ரை) (ஒருவன்) பொருள்கொடுத்து - விலைப்பொருளைக் கொடுத்து, மெய்யறியாமை-(கள்ளாலே தனக்கு) மெய்ம்மறதியை, கொளல்-கொள்ளுதல், கையறியாமை - (அவன் பழவினைப்பயனுகிய) செய்வதறியாமையை உடைத்து-(தனக்குக்காரணமாக) உடைத்து எ-று.

(க-ரை) கட்குடித்து மெய்ம்மறதியைக் கொள்ளுத லறிவில்லாரை யுடையது என்பதாம்.

(வி-ரை) தன்னையறியாமை சொல்லவே, மற்றவை யாவையும் அறியாமை சொல்லவேண்டாவாயிற்று. அறிவார் விலைகொடுத்து ஒன்றைக் கொள்ளுங்கால் தீயதைக் கொள்ளாமையால், மெய்யறியாமைகொளல் முன்னை யறியாமையால் வந்ததென்பதாம்.

'மெய்ம்மறதி' என்றது செய்வதின்னதை என்று அறிந்து கொள்ளாதது. மெய்தன்னைப்புக்கிருத்தல். 'கை' என்றது செயல். 'மறப்பு' என்றது மறதி. 'ஒழிந்தன' என்றது குணம் செயல்முதலியனவாம். 'கையற்று' என்றது செயலற்று.

நெஞ்சினர் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண்ப வர்.

* புறநானூறு-209.

(பரி-உரை) துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் - உறங்கினார், செத்தாரின் வேறாதலுடையரேனும், அக்காலத்தறிவின்மையான் வேறெனப்படார்; கள் உண்பவர் எஞ்ஞான்றும் நஞ்சு உண்பார் - அவ்வாறே கள்ளுண்பார், நஞ்சுண்பாரின் வேறாதலுடையரேனும், எக்காலத்துமறிவின்மையான் வேறெனப்படார், அவர்தாமே யாவர் எ-று.

உறங்கினார்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை உயிர்ப்புநிற்றல். வேறாதலும் வேறன்மையுமுடைமை காட்டற்கு உவமை புணர்க்கப்பட்டது. தனை நிரனிறையாக்கி, திரிக்கப்படுதலால் உறங்கினாரும் நஞ்சுண்பாருமொப்பர். கைவிடப்படுதலாற் செத்தாருங் கள்ளுண்பாருமொப்பரென்றாரைப்பாருமுளர்; அதிகாரப்பொருள் பின்னதாயிருக்க யாதுமியைபில்லாத நஞ்சுண்பார்க்கு உவமைபுணர்த்து ஈண்டுக்கூறல் பயனின்றாகலானும், சொற்கிடக்கை நிரனிறைக்கேலாமையானும், அஃதுரையன்மை யறிக. இவை யிரண்டுபாட்டானும் அவரதறிவிழத்தற்குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) துஞ்சினார் - உறங்கினவர், செத்தாரின் - இறந்தவரின், வேறல்லர் - (வேறாயினும் அக்காலத்தே அறிவில்லாமையால்) வேறெனப்படார், (அப்படியே) கள்ளுண்பவர் - கள்ளைக் குடிப்பவர், எஞ்ஞான்றும் - எக்காலத்தும், நஞ்சுண்பார் - (அறிவில்லாமையால்) நஞ்சுண்பவரேயாவர், (அவரின் வேறாயினும்) வேறெனப்படார் எ-று.

(க-ரை) கள்ளைக்குடித்தவர் நஞ்சைக்குடித்தவர்க் கொப்பாவர் என்றாம்.

(வி-ரை) உறங்கினவர்க்கும், கள்ளுண்பவர்க்கும், வேற்றுமை மூச்சுநிற்றல். [இவை இரண்டுபாட்டாலும் அவர் அறிவிழத்தலின் குற்றம் சொல்லப்பட்டது.]

'வேறாதலுடையார்' என்றது வேற்றுமையுடையார். 'அக்காலத்து' என்றது துஞ்சினகாலத்து. 'வேறெனப்படார்' என்றது ஒன்றெனக் கருதப்படுவர். 'உயிர்ப்பு' என்றது மூச்சுவிடுதல். 'சொற்கிடக்கை' இது சொல்லமைதி. (6)

உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

(பரி-உரை) கள் ஒற்றிக் கண் சாய்பவர் - கள்ளை மறைந்துண்டு அக்களிப்பாற்றம்மறிவு தளர்வார், உள்ளூர் உள் ஒற்றி எஞ்ஞான்று நகப்படுவர்- உள்ளூர் வாழ்பவரான் உண்ணிகழ்கின்ற துய்த்துணர்ந்து எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படுவர் எ-று.

உள்ளூர் - ஆகுபெயர். உண்டென்பது அவாய்நிலையான் வந்தது. உய்த்துணர்தல்-தளர்ச்சியாற் களிப்பினையுணர்ந்து அதனாற் கள்ளுண்டதுணர்தல்.

(ப-ரை) கள்ளொற்றி - கள்ளை மறைந்து (குடித்து), கண்சாய்பவர்- (அக்களிப்பால்) அறிவுசோர்பவர், உள்ளூர் - உள்ளூர் வாழ்பவரால், உள்

( ) (உள்ளே நடக்கிற காரியத்தை) ஆலோசித்தறிந்து, எஞ்ஞான்றும் எல்லாரும், நகப்படுவர் - சிரிக்கப்படுவோர் எ-று.

(க-ரை) கள்ளொருடித் தறிவுமயங்குவோர் சிரிக்கப்படுவர் என்பதாம்.

(வி-ரை) உய்த்துணர்தல் - சோர்வினுலே களிப்பினை அறிந்து அதனுல் கள்ளுண்டதை அறிதல்.

'மறைத்துண்டு' என்றது சான்றோர் அறியன் குற்றமாமென வஞ்சித்து மறைத்து அவர்காணுதலாறுண்டு. 'தளர்வார்' என்றது சோர்வார். 'உள்ளிகழ்கின்றது' என்றது உள்ளேநடக்கும் செயல். 'உய்த்துணர்ந்து' என்றது ஆராய்ந்தறிந்து. ஊர் ஊரிலுள்ளாரையுணர்த்தலால் இடவாகுபெயர்.

களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.

(பரி உரை) களித்து அறியேன் என்பது கைவிடுக - மறைத்துண்டு வைத்து யான் கள்ளுண்டறியேனென்று உண்ணுதபொழுது தம்மொழுக்கு கூறுதலையொழிக; நெஞ்சத்து ஒளித்ததும் ஆங்கே மிகும் - அவ்வுண்ட பொழுதே பிறாறியின் இழுக்காமென்று முன்னெஞ்சத்தொளித்த குற்றமும் முன்னையளவின்மிக்கு வெளிப்படுதலான் எ-று.

களித்தறியேனெனைக் காரியத்தாற் கூறினுர். இவை யிரண்டுபாட்டி லும் அது மறைக்கப்படாதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) களித்தறியேனென்பது - (மறைத்துண்டு) கள்ளுண்டறியே னென்ற (உண்ணுதபொழுது தமது ஒழுக்கு) சொல்லுதலை, கைவிடக்கடவர், (அவ்வுண்டபொழுதே) நெஞ்சத் தொளித்ததூஉம் - (முன் பிறர் அறிந்தால் இழுக்காமென்ற) மனத்தில் ஒளித்த குற்றமும், ஆங்கே மிகும்-(முன்னை யளவின்) மிகுந்து வெளிப்படும் (ஆதலால்) எ-று.

(க-ரை) கட்குடிக்கி லுட்பொருள் வெளிப்படுமாகையால், ஆராய்ந்து சோருதலைக் கைவிடக்கடவர் என்பதாம். [இவை இரண்டுபாட்டாலும் அது மறைக்கப்படாதென்பது சொல்லப்பட்டது.]

'என்பது' என்றது என்றசைச்சொல். 'நெஞ்சத்தொளித்ததூஉம்' என்றது பிறாறியாவாறு மனதில் ஒழிந்தகுற்றம். 'ஆங்கு' என்றது பிறர் அறிந்தபோது. 'மிகும்' என்றது பெருங்குற்றமாக வெளிப்படும்.

களித்தானைக் காரங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்தூரி இயற்று.

(பரி-உரை) களித்தானைக் காரணம் காட்டுதல் - கள்ளுண்டு களித்தவொருவனை இவ்வாறாகாதென்று பிறனொருவன் காரணங்காட்டித் தெளிவித்தல், கீழ்க் கீழ்க் குளித்தானைத் தீத்தூரி இயற்று-நீருண்மூழ்கினவொருவனை பிறனொருவன் விளக்கினுல் காடுதலை யொக்கும் எ-று.

களித்தானெயென்னுமிரண்டாவது * "அறிவுடை யந்தண னவனைக் காட்டென்றானே" என்புழிப்போல நின்றது. நீருள் விளக்குச் செல்லாற்போல அவன் மனத்துக் காரணஞ்செல்லாதென்பதாம். இதனான் அவனைத் தெளிவித்தல் முடியாதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) களித்தானை - (கள்ளுண்டு) களித்த ஒருவனை, காரணங்காட்டு தல் - (இது ஆதாதென்று மற்றொருவன்) காரணங்காட்டித் தெளிவித்தல், நீழ்நீர்க் குளித்தானை - நீருள்ளே மூழ்கிய ஒருவனை, நீ - விளக்கினால், நீ இயற்று (மற்றொருவன்) நெடுதலை யொக்கும் எ-று.

(க-ரை) கட்குடித்தவனைத் தெளிவித்தல் எதுபோலெனில் நீருள்ளே முழ்கினவனை விளக்கினாற் நேடுதலொக்கும் என்பதாம்.

(வி-ரை) நீருள் விளக்குச் செல்லாமைபோல் அவன் மனத்துள் காரணம் செல்லாதென்பதாம். [இதனாலவனைத் தெளிவித்தல் முடியாமை சொல்லப்பட்டது.]

'களித்தானை' என்றது கள்ளுண்டு களித்திருப்பவனை. 'காட்டுதல்' என்றது கூடாதென்று தெளிவித்தல். 'நீழ்நீர்' என்றது ஆழமுடையநீர். 'நீருவுதல்' என்றது நெடுதல். நீருள் விளக்குச்செல்லின் அணைந்துவிடும்; அதுபோல அறியாமை நிறைந்த மனத்துக்குள் கள்ளுண்ணுதலைத் தடுத்தற்குரிய காரணம் புதாது.

(9)

கள்ளுண்ணுப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.

(பரி-உரை) கள் உண்ணுப் போழ்தில் களித்தானை - கள்ளுண்பானொரு வன் தான் அஃதுண்ணுத தெளிர்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த வனைக் காணுமன்றே, காணுங்கால் உண்டதன் சோர்வு உள்ளான்கொல்- காணுங்கால் தாணுண்டபொழுது உளதாஞ்சோர்வினை அவன் சோர்வால் தவுமிற்றென்று கருதான்போலும் எ-று.

சோர்வு - மனமொழிமெய்கள் தன்வயத்தவல்லவாதல். கருதலளவை வன் அதனிழுக்கினை யுய்த்துணரின் ஒழியுமென இதனால் அஃதொழிதற் காணங் கூறப்பட்டது.

(ப - ரை) (கள்ளுண்பவனொருவன்) கள்ளுண்ணுப்போழ்தில் - கள்ளு ண்ணுமற் றெளிர்திருந்தபொழுதில், களித்தானை - (கள்ளுண்டு) களித்த வனை, காணுங்கால் - காணும்போது, உண்டதன்சோர்வு - (தான்) உண்ட பொழுது உண்டார்தன்சோர்வை, உள்ளான்கொல் - (அவன் சோர்வால் யாவும் இப்படிப்பட்டதென்று) கினையான்போலும் எ-று.

(க-ரை) கள்ளுண்பவன் தான் குடியாதபோது குடித்தவனைக்கண்டு சோர்வை கினையான்போலும் என்பதாம்.

---

* கலித்தொகை: மருதம்-7.

(வி-ரை) சோர்வு-மனமொழிமெய்கள் தன்வசப்படாமை. [கருதல வையால் அதனிழுக்கத்தை ஆலோசித்து அறிந்தால் ஒழியுமென இதனு அது ஒழிதற்காரணம் சொல்லப்பட்டது.]

'காணுங்கால்' என்றது காணும்பொழுது. 'சோர்வினை' என்றது தளர் சியை, மனமொழிமெய்கள் தன்வசப்படாதிருத்தல். 'கருதலளவையா என்றது உணருந்தன்மையால். 'அதன் இழுக்கினை' என்றது கள்ளருந் தலா லுண்டாகுங் குற்றத்தை. (1

93-ம் அதி - கள்ளுண்ணாமை - முற்றிற்று.

94-ம் அதிகாரம்—சூது

(பரி-உரை) இனி, அக்கள்ளுண்டல்போல அறம் பொருள் இன்பங்கட் இடையீடாகிய சூதாடலும் பிணியுழத்தலுங் கூறுவான்றொடங்கி, முதற் சூதினதியல்பு கூறுகின்றார்.

(உரை) அஃதாவது: இனி அக்கள்ளுண்டல்போல் அறம் பொருளின் களுக்குத் தடையாகிய சூதாடலும் பிணியனுபவித்தலும் சொல்லத் தொடங் முதலிலே சூதினது இயல்பு சொல்லுகின்றார்.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉ தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

(பரி-உரை) வென்றிடினும் சூதினை வேண்டற்க - தான்வெல்லுமா லுடையனாயினும் சூதாடலை விரும்பாதொழிக; வென்றதூஉம் தூண் பொன் மீன் விழுங்கியற்று - வென்று பொருளெய்துவார் உளராலெனி அவ்வென்ற பொருடானும் இரையான் மறைந்த தூண்டிலிரும்பினை இ யெனக்கருதி மீன் விழுங்கினாற்போலும் எ-று.

வேறல் ஒருதலையன்மையின் வென்றிடினுமென்றும், கருமங்கள் பல கெடுதலின் வேண்டற்கவென்றுங் கூறினார். எய்தியபொருள் சூதாடு நீங்காமைக்கு இட்டதோர் தளையென்பதூஉம், அதனாற்பின் றுயருழத்தலு உவமையாற் பெற்றாம்.

(ப-ரை) வென்றிடினும் - (தான்) வெல்லும் வலிமை யுடையனாயினு சூதினை - சூதாடுதலை, வேண்டற்க - விரும்பாதிருக்கக்கடவன், (வெ பொருள் பெறுவார் உண்டென்றால்) வென்றதூஉம்-அவ்வென்ற பொருளு தூண்டிற்பொன் - (இரையால் மறைந்த) தூண்டிலிரும்பை, மீன் விழு யற்று-மீன் விழுங்கியதுபோலும் எ-று.

(க-ரை) வெல்ல வல்லவனாயினுஞ் சூதை விரும்பாதிருக்கக்கடவ வென்றபொருளுந் தூண்டிலிரும்பை மீன் விழுங்கியதுபோலும் என்பதாம்.

(வி-ரை) வெல்லுதல் நிச்சயமல்லாமையால் வென்றினுமென்றும், க மங்கள் பலவுங் கெடுதலால் வேண்டற்கவென்றும் சொல்லினார். எய்தி

பாருள் சூதாடுவார் நீங்காமைக்கு இட்டதளையென்பதும், அதனாலே பின் யருழத்தலும் உவமையாற் பெற்றாம்.

'வெல்லும் ஆற்றல்' என்றது தோலாதுவென்றிபெறுந்திறன். 'வென்று' ன்றது சூதினால்வென்று. 'வென்றபொருள்' என்றது சூதினால் வென்ற சல்வம். 'வேறல்ஒருதலையன்மையின்' என்றது வெல்லுதல் நிச்சயம் இல்லா மையால். 'வேண்டற்க' என்றது மனத்தாலும் வேண்டாதொழிக. 'எய்திய பாருள்' என்றது சூதினாலாகிய செல்வம். 'தலை' என்றது பாசம். 'சூதாடு ார் நீங்காமைக்கு' என்றது சூதாடுவோர் விலகாமைக்கு அதாவது பொருள் ந்துழி நீங்குவதற்கு மனமின்றி மேலுமேலும் ஆடுதற்கு மனம் செல்லல். பொன்' என்றது கரும்பொன் (இரும்பு.) (1)

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ னன்றெய்தி வாழ்வதோ ராறு.

(பரி-உரை) ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும் - அத்தூண்டிற் பான் போன்ற ஒன்றனை முன்பெற்று இன்னும் பெறுதுமென்னுங் கருத் ல் நூற்றினையிழந்து வறியராஞ் சூதர்க்கும், நன்று எய்தி வாழ்வது ஓராறு ண்டாங்கொல் - பொருளால் அறனுமின்பமுமெய்தி வாழ்வதொரு நெறி ண்டாமோ? ஆகாது எ-று.

அவ்வாற்றாற் பொருளிழந்தே வருதலான், அதனாலெய்தும் பயனும் வர்க்கில்லை யென்பதாம்.

(ப-ரை) ஒன்றெய்தி - (அத்தூண்டி லிரும்புபோன்ற) ஒன்றனை முன் ற்று (இன்னும் பெறுவோமென்னுங் கருத்தால்) நூறிழக்கும்-நூற்றினை ழந்து வறியராகும், சூதர்க்கும் - சூதாட்டமுடையவர்க்கும், நன்றெய்தி- ப்பொருளால்) அறமு மின்பமும் பெற்று, வாழ்வதோராறு-வாழ்வதொரு ி, உண்டாங்கொல்-உண்டாமோ எ-று.

(க ரை) ஒருபொருள் பெற்று நூறுபொரு ளிழக்குஞ் சூதாடுவோர்க்கு மைபெற்று வாழும் வழியுண்டாமோ என்பதாம்.

(வி-ரை) அவ்வழியால் பொருளிழந்தே வருதலால், அதனாலே பெறும் னும் அவர்க்கு இல்லையென்பதாம்.

'நூறு' என்றது அளவு மிகுதியை யுணர்த்திற்று. 'வறியராம்' என்றது த்திரராகும். 'சூதர்' என்றது சூதாடுவோர். 'உண்டாம்கொல்' என்றது ண்டாமோ உண்டாகாது என்பதாயிற்று. (2)

உருளாய மோவாது கூறிற் பொருளாயம் போஒய்ப் புறமே படும்.

(பரி-உரை) உருள் ஆயம் ஓவாது கூறின் - உருளுங் கவற்றின்கட் ட ஆயத்தை இடைவிடாது கூறிச் சூதாடுமாயின், பொருள் ஆயம் ய்ப் புறமே படும் - அரசனீட்டியபொருளும் அவன் பொருள்வருவாயும் னைவிட்டுப் போய்ப் பகைவர்கண்ணே தங்கும் எ-று.

வேற்றினதுருட்சியை அதனிலுய ஆயத்தின்மேலேற்றியும், சூதாடலை அது கூறலாகிய காரணத்தின்மேலிட்டுங் கூறினர். பொருளாயமென்பது உம்மைத்தொகை. ஆயம் - வடமொழித்திரிசொல். காத்தற்கண்ணும் இயற்றற்கண்ணும் கருத்திலனுகலின், அவையிரண்டும் பகைவர்பாற் செல்லுமென்பதாம்.

(ப-ரை) உருளாயம் - உருளுங் (வேற்றில் அகப்பட்ட) ஆயத்தை, ஓவாது - இடைவிடாமல், கூறின் - சொல்லிச் (சூதாடு) மாயின், பொருள் - (அரசன் சம்பாதித்த) பொருளும், ஆயம் - (அவன்) பொருள்வரும் வழியும், போஒய் (அவனை விட்டுப்) போய், புறமேபடும்-பகைவரிடத்தே தங்கும் எ-று.

(க-ரை) அரசன் சூதாடுவானுயின் அவன் பொருளு மப்பொருள் வரும் வழியும் பகைவரிடத்தப்போம் என்பதாம்.

(வி-ரை) வேற்றினுருட்சியை அதனுலாகிய ஆயத்தின்மேல் ஏற்றியும், சூதாடுதலை அது சொல்லாகிய காரணத்தின்மேலிட்டும் சொல்லினர். காத்தலிலும் செய்தலிலும் கருத்திலனுகலால் அவை இரண்டும் பகைவரிடத்தே செல்லுமென்பதாம்.

'வேறு' என்றது சூது. 'ஆயம்' என்றது பொருள். 'ஈட்டிய' என்றது தேடிய. 'வருவாயும்' என்றது வருதற்குரிய வழியும். 'உருட்சி' என்றது உருளுதல். 'வேற்றினது உருட்சி' என்றது சூதாடுதல். 'பொருளும் ஆயமும்' என்பது உம்மைத்தொகை. பொருள்வரும் வழிகளை இயற்றுவதற்கும், இயற்றிய வழிகளைக் காத்தற்கும் கருத்திலாமை புடையவனுதல்பற்றி யவை பிரண்டும் பகைவர் கைபடுமென்ப. (3)

சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

(பரி-உரை) சிறுமை பல செய்து சீர் அழிக்கும் சூதின்-தன்னை விழைந்தார்க்கு முன்னில்லாத தன்பங்கள் பலவற்றையும் விளைத்து உள்ள புகழையும் கெடுக்குஞ் சூதுபோல், வறுமை தருவது ஒன்று இல் - கல்வியை கொடுக்கவல்லது பிறிதொன்றில்லை எ-று.

அத்தன்பங்கள் முன்னர்க் கூறப. கல்வினைகளையும் கல்வினத்தையும் கீழ்த் தீவினைகளையுந் தீயினத்தையுங் கூட்டுதலால் சீரழிக்குமென்று வறுமைக்கு எல்லையாவதொன்பதாம்.

(ப-ரை) சிறுமை பல - (முன்னில்லாத) தன்பங்கள் பலவும், செய்து (தன்னை விரும்பினவர்க்குச்) செய்து, சீர்-(உள்ள) புகழையும், அழிக்குங் கெடுக்கும், சூதின் - சூதுபோல், வறுமை - வறுமையை, தருவது - கொடுக்கவல்லது, ஒன்று-வேறொன்று, இல்-இல்லை எ-று.

(க-ரை) தன்பங்களை யுண்டாக்கிப் புகழையுங் கெடுக்குஞ் சூதைப் போல வறுமையையுங் கொடுப்பதொன்றில்லை என்பதாம்.

(வி-ரை) அத்துன்பங்கள் பின்னே சொல்லப்படும். நல்வினைகளையும் நல்லினத்தினையும் நீக்கித் தீவினைகளையும் தீயினத்தையும் கூட்டுதலால் சீரழிக்குமென்றார். சூதாடுவோர் வறுமைக்கு எல்லையாவரென்பதாம்.

'தன்னை விழைந்தார்' என்றது சூதாட விரும்பினார். 'நல்குரவு' என்றது தரித்திரம். 'பிறிதொன்றில்லை' என்றது மற்றொன்றில்லை அதுவே தரும் என்றபடி. 'சீர்' என்றது நற்செயலாற்றல் நல்லினஞ்சேர்தல். 'கூட்டுதல்' என்றது தருதல். (4)

கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார்.

(பரி-உரை) இல்லாகியார் - முற்காலத்துத் தாமுளராகியே இலராகி யொழுகினார், கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார் - கவற்றினையும் அஃதாடுங்களத்தினையும் அவ்வாடற்கு வேண்டுங் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாத வேந்தர் எ-று.

கைத்தொழில் - வெல்லுமாயம்படப் பிடித்தெறிதல். அவ்விவறுதலாற் பாண்டவர் தம்மரசுவிட்டு வனத்திடைப்போய் ஆண்டு மறைந்தொழுகினாரென அனுபவங் காட்டியவாறு. இவையைந்துபாட்டானும் அதனது வறுமை பயத்தற்குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) இல்லாகியார்-(முற்காலத்திலே தாம் இருந்தும்) இல்லாதவரா யொழுகினவர், கவறும் சூதினையும், கழகமும் - அதை யாடுமிடத்தினையும், கையும்-(அவ்வாடுதற்கு வேண்டுங்) கைத்தொழிலினையும், தருக்கியிவறியார்-மேற்கொண்டு கைவிடாத வேந்தர் எ-று.

(க-ரை) சூதையுஞ் சூதாடுமிடத்தையுஞ் சூதாடுதொழிலையுங் கைவிடாத வெல்லும்பொரு ளிருந்து மில்லாதவரே என்பதாம்.

(வி-ரை) கைத்தொழில்-வெல்லும்படி பிடித்தெறிதல். மேற்கொள்ளுதலாலே பாண்டவர் தம்மரசிழந்து காட்டிலேபோய் அங்கே மறைந்தொழுகினாரென அனுபவங் காட்டியபடி. இவை ஐந்துபாட்டாலும் அதனது வறுமை யுண்டாக்கற்குற்றம் சொல்லப்பட்டது.]

'கழகம்' என்றது கூட்டம்; இங்கு சூதாடுமிடம். 'கை' என்றது கைத்திறனும். 'உளராகியே இலராகியொழுகினார்' என்றது இருந்தும் இலராகினார். 'கைத்தொழில்' என்றது வெற்றியுண்டாக. ஆயத்தைப்பற்றி யெறிதலாகிய தொழில். 'இவறுதல்' என்றது தவறுதல். (5)

அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார்.

(பரி-உரை) சூது என்னும் முகடியான் மூடப்பட்டார் - தன்பெயர் சொல்லல் மங்கலமன்மையிற் சூதென்று சொல்லப்படும் முகடியான் விழுங்கப்

பட்டார், அகடு ஆரார் அல்லல் உழப்பர் - இம்மைக்கண் வயிறாரப்பெறார். மறுமைக்கண் நிரயத்துன்பமுழப்பர் எ-று.

செல்வங்கெடுத்து நல்குரவு கொடுத்தற்றொழில் வேறுபடாமையிற் சூதென்னு முகடியென்றும், வெற்றிதோல்விகணோக்கி ஒருபொழுதும் விடாராகலின் ஈண்டு அகடாராரென்றும், பொய்யுங்களவும் முதலிய பாவங்களீட்டலின் ஆண்டு அல்லலுழப்பரென்றுங் கூறினார். வயிறாராமை சொல்லவே ஏனைப்புலன்க ணுகரப்பெறாமை சொல்லவேண்டாவாயிற்று. உழப்பரென்பது எதிர்காலவினை.

(ப-ரை) சூதென்னும் - (தனது பெயர்சொல்லல் மங்கலமல்லாமையால்) சூதென்று (வேறுபெயர்) சொல்லப்படுகிற, முகடியால்-மூதேவியால், மூடப்பட்டார் - விழுங்கப்பட்டவர், அகடாரார் - (இம்மையிலே) வயிறு நிறையப் பெறார், அல்லலுழப்பர் - (மறுமையிலே) நரகத்துன்ப மனுபவிப்பர் எ-று.

(க-ரை) சூதென்னு மூதேவியால் விழுங்கப்பட்டவர் இம்மையில் வறுமையும் மறுமையில் நரகமு மனுபவிப்பர் என்பதாம்.

(வி-ரை) செல்வங்கெடுத்து வறுமை கொடுத்தற்றொழில் வேறுபடாமையால் சூதென்னு முகடியென்றும், வெற்றி தோற்புநோக்கி ஒருபொழுதும் விடாராகலால் இங்கே அகடாராரென்றும், பொய் களவு முதலாகிய பாவங்கள் சம்பாதித்தலால் அங்கே அல்லலுழப்பரென்றும் சொல்லினார். வயிறாராமை சொல்லவே மற்றை ஆடையணி முதலாகிய புலன்களை அனுபவிக்கப் பெறாமை சொல்லவேண்டாவாயிற்று.

'அகடு' என்றது வயிறு. 'ஆர்தல்' என்றது நிறைதல். 'அகடு ஆரார்' என்றது வயிறுநிறைய உண்ணப்பெறார். 'நிரயம்' என்றது நரகம். 'வேறுபடாமையால்' என்றது மாறுபடாமையால். 'சூதென்னுமுகடி' என்றது சூதாகிய மூதேவி. வெற்றிபெறினும் தோல்வியுறினும் விலகுதற்கு மனமின்றி மீட்டு மீட்டுமாடி வறுமையுற்று வயிற்றிற்குமிலராவர். வயிற்றுக்கு இல்லாதபோது 'அன்னமொடுங்க வைந்துமொடுங்கும்' என்பதுபோல மற்ற புலன்களும் நுகராமை விளங்கும். (6)

பழகிய செல்வமும் பண்புங் கெடுக்குங் கழகத்துக் காலை புகின்.

(பரி-உரை) காலை கழகத்துப் புகின் - அறம் பொரு ளின்பங்கட் கடைத்தகாலம் அரசனுக்குச் சூதாடுகளத்தின்கட் கழியுமாயின், பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் - அக்கழிவு தொன்றுதொட்டுவந்த அவன் செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கும் எ-று.

பழகியவென்பது பண்புடனுமியையும் தான் செய்துகொள்ளும் அறமுதலியவேயன்றி முன்னோரைத்தொடங்கி வருகின்ற செல்வமும், முன் செய்த நல்வினையின் பயனாய பண்பும் இலவாமென்பதாம்.

(பதவு) காலை - (அறம் பொருளின்பங்களுக்கு விதித்த) காலம், கழகத்து-சூதாடுமிடத்து, புகின்-(அரசனுக்குக்) கழியுமாயின், (அக்கழிவு) பழைய - நெடுநாளாய்வந்த, செல்வமும் - (அவன்) செல்வத்தையும், பண்புண்-நற்குணங்களையும், கெடுக்கும்-அழிக்கும் என்று.

(கருத்து) அரசன் சூதாடிலவ்வாட்டமவன் செல்வத்தையுங் குணத்தையு மழிக்கும் என்பதாம்.

(விசேடவுரை) தான் செய்துகொள்ளும் அறமுதலானவை மாத்திரமல்லாமல் முன்னோரைத்தொடங்கி வருகிற செல்வமும், முன்செய்த நல்வினையி னாலிய நற்குணங்களும் இல்லாமற்போமென்பதாம்.

'அறம்பொருளின்பங்கட் கடைத்தகாலம்' என்றது அறம் பொருளின் பங்களைத் தேடுதற்பொருட்டு விதிக்கப்பெற்றுள்ள காலம். 'சூதாடுகளம்' என்றது சூதாடுமிடம். 'அக்கழிவு' என்றது அங்ஙான்கழிதல். 'தொன்று தொட்டு வந்த' என்றது நீலமுறையாகவந்த. பழியவென்பதனை யிரண்டுக் குங் கூட்டி பழியசெல்வம் பழியபண்பு என்க. தான்றேடிய அறமுதலியன அழிவுபடுதலின்றி முன்னோர்காலமுதல் தொடங்கிவரும் செல்வமும் அவர் தம் குலப்பெருமையும் அழிவுபடும்.

(7)

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெ
டல்ல லுழப்பிக்குஞ் சூது. [டுத்

(பரி-உரை) சூது - சூது, பொருள் கெடுத்து - தன்னைப்பயின்றவன் பொருளைக்கெடுத்து, பொய் மேற்கொளீஇ - பொய்யை மேற்கொள்ளப் பண்ணி, அருள்கெடுத்து - மனத்தெழும் அருளைக்கெடுத்து, அல்லல் உழப் பிக்கும்-இவ்வாற்றான் அவனை இருமையிலுந் துன்பமுறுவிக்கும் என்று.

இத்தொழில்கண் மூன்றற்கும் சூது வினைமுதலாகவும், தோல்வி வெற்றி சென்றமென்பன முறையே கருவிகளாகவுங்கொள்க. முன்னதனான் இம்மை யிலும், ஏனையவற்றான் மறுமையிலுமாம். பொருள்கொடுத்தென்பது பாட மாயின் அவ்வெச்சத்திற்கு முடிவு மேற்கொளீஇயென்புழி மேற்கோட லாகிய வினைமுதல்வினை.

(பதவு) சூது-சூதாட்டமானது, பொருள்கெடுத்து - (தன்னைப் பழகின வனை) பொருளைக்கெடுத்து, பொய்-பொய்யை மேற்கொளீஇ-மேற்கொள் ளப்பண்ணி, அருள்கெடுத்து-(மனதில் எழுகிற) அருளைக்கெடுத்து, (இவ்வழி யால்) அல்லலுழப்பிக்கும்-(அவனை இருமையிலும்) துன்பமுறுவிக்கும் என்று.

(கருத்து) சூதாட்டமானது பொருளைக்கெடுத்தும் பொய்யை மேற்கொள் ளச்செய்து கிருபையைக் கெடுத்துத் துன்பத்தை விளைவிக்கும் என்பதாம்.

(விசேடவுரை) பொருள்கெடுத்தல்முதலாகிய மூன்றும் சூதினுடைய தொழில் களாகவும், அவைகளுக்குத் தோற்பு வெற்றி கோபம் என்பன முறையே

சாதனங்களோடும் கொள்க. முன்னையதால் இம்மையிலும், பின்னைவகளால் மறுமையிலும் ஆம்.

'குறிதன்னைப் பின்றவர்' என்றது குறாடியவன். 'பொய்மையை மேற் கொள்ளப்பண்ணி' என்றது பொய்யனுக்கி. 'அருள்' என்றது எல்லா வுயிரி னிடத்தும் செல்லும் அன்பு. 'விளைமுதல்' என்றது எழுவாய். 'செற்றம்' என்றது கெடுக்கலம் கிழுல்கோபம். (8)

ஊடைசெல்வ மூனிளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்.

(பரி உரை) ஆயம் கொளின் - அரசன் குறினைத் தனக்கு விளைதற் தொழிலாக விரும்புமாயின், ஒளி கல்வி செல்வம் ஊண் உடை என்ற ஐந்தும் அடையாகாம் - அவனை ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையுமென்றிவ்வைந்தும் சாராவாம் எ-று.

ஆயம் - ஆகுபெயர். இச்சிறப்புமுறை செய்யுளேக்கிப் பிறழின்றது. செல்வம் - அறவகையுறப்புக்கள். ஊணுடையென்பனவற்றால் தப்புரவுக செல்லால் கொள்ளப்படும். காலமும் சருத்தம் பெருமையின், இவையுமே வாகாவென்பதாம். இவை கான்குபாட்டானும் சிறமை பலசெய்த அவற்று னிருமையுள் கெடுத்தல் கூறப்பட்டது

(ப-ரை) (அரசன்) ஆயம்-குறினை, கொளின் - (தனக்கு விளையாட்டுத் தொழிலாக) விரும்புவானுயின், ஒளி-ஒளியும், கல்வி-கல்வியும், செல்வம்-செல்வமும், ஊண்-ஊணும், உடை-உடையும், என்றைந்து - என்றிவ்வைந்தும், அடையாவாம்-(அவனை) சேராவாம் எ-று.

(க-ரை) அரசன் குறாட்டத்தை விரும்புவானுயில் கீர்த்தியுங் கல்வியுஞ் செல்வமும் ஊணும் உடையும் அவனைச் சேராவாம் என்பதாம்.

(வி-ரை) ஆயம்-குறுக்கு ஆகுபெயர். இம்முறை செய்புளுக்கியையப் பிறழ்ந்தது. செல்வம் - அறவகை உறப்புக்கள். ஊணுடையென்பவை வால் அனுபவிக்கப்படுவனவெல்லாம் கொள்ளப்படும். காலமும் சருத்தம் பெருமையால் இவை உண்டாகாவென்பதாம். [இவை கான்குபாட்டாலும் சிறமை பலசெய்த அவைகளால் இருமையுங்கெடுத்தல் சொல்லப்பட்டது.]

'ஆயம்' என்றது குறு. 'விளைதற்தொழில்' என்றது விளைதமாகப் பொழுது போக்குதற்குரிய தொழில். 'தப்புரவுகள்' என்றது நகரப்படு மவைகள். 'இவை' என்றது இவ்வைந்தும். (9)

இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதே போற்றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர்.

(பரி-உரை) இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் - சூதாடலான் இருமைப்பயன்களோடு மிழக்குந்தோறும் அதன்மேற் காதல்செய்யுஞ் சூதன்

போல, தன்பம் உழத்தொறூஉம் காதற்று உயிர் - உடம்பான் மூவகைத் தன்பக்களையும் அநுபவிக்குந்தோறும் அதன்மேற் காதலைபுடைத்து உயிர் எ-று.

சூத-ஆகுபெயர். உயிரினதறியாமை உறவார்போன்ற சூதனதறியாமை உறதல் கருத்தாகலின், அதனை யாப்புறுத்தற்பொருட்டு உவமமாக்கிக் கூறினர். இதனைநிர்மறைமுகத்தாற் சூதினை வெறுத்தொழிவானை யொக்கும் உடம்பினை வெறுத்தொழிபு முயிரெனவுங்கொள்க. இதனுன் அஃதொழிதற்கருமையும், ஒழிந்தாரதை பெருமையுங் கூறப்பட்டன.

(ப-ரை) இழத்தொறூஉம் - (சூதாடலால் இருமைப்பயன்களையும்) இழக்குந்தோறும், காதலிக்கும் - (அதன்மேலே) ஆசைசெய்யும், சூதேபோல் - சூனேபோல், உயிர் - உயிரானது, தன்பமுழத்தொறூஉம் - (உடம்பால்) மூவகைத்தன்பங்களையும் அநுபவிக்குந்தோறும், காதற்று - (அதன்மேலே) ஆசையைபுடைத்து எ-று.

(க-ரை) இருமைப்பயன்களை யிழக்குந்தோறுஞ் சூதினை யிச்சிக்குஞ் சூதன்போல் உயிரானது தன்பங்களை யநுபவிக்குந்தோறும் அதன்மே லாசைபுடையது என்பதாம்.

(வி-ரை) சூத - ஆகுபெயர். உயிரினது அறியாமை சொல்லுவார் போன்ற சூதனது அறியாமை சொல்லுதல் கருத்தாகலில் அதனை உறுதிப் படுத்தற்பொருட்டு உவமானமாக்கினர். இதனைநிர்மறை முகத்தால் சூதை வெறுத்தொடப்பவனை யொக்கும் உடம்பினைவெறுத்து நடக்கின்ற உயிரை எனக்கொள்க. [இதனால் அதை விடுதற்கருமையும் விட்டவாறு பெருமை யும் சொல்லப்பட்டன.]

'சூதன்' என்றது சூதாடுவோன். 'உடம்பான் மூவகைத்தன்பங்கள்' என்றது ஆதியாத்மிகம் முதலிய மூவகைத்தன்பங்கள். 'உழத்தல்' என்றது அநுபவித்தல். 'காதற்று' இது காதலினடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று.

94-ம் அதி - சூத - முற்றிற்று.

95-ம் அதிகாரம்—மருந்து

(பரி-உரை) பழவினையாலும் காரணங்களாலும் மக்கட்கு வாதமுதலிய பிணிகள் வரும்; அவற்றட் பழவினையான் வருவன அதன் கழிவின்கணல்ல தீராமையின் அவையொழித்து, ஏனைக்காரணங்களான் வருவனவற்றைத் தீர்க்கும் மருந்தின்றிறங்கூறுகின்றார். காரணங்களாவன-உணவு செயல்கள் தொல்லாமையாகலின், பிணிகளுங் காரணத்தான் வருவனவாயின.

(உரை) பழவினையாலும் காரணங்களாலும் மனிதர்க்கு வாதமுத லாகிய பிணிகள்வரும். அவைகளுள் பழவினையால் வருவன அவ்வினை கழி யும்போதல்லாமல் தீராமையால் அவையொழித்த மற்றைக் காரணங்களால் வருமவைகளைத் தீர்க்கும் மருந்தின்றிறம் சொல்லுகின்றார். காரணங்க

ளாவன - உணவுதொழில்களது ஒவ்வாமையாதலால், பிணிகளும் காரணங்களால் வருவனவாயின.

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர் வளிமுதலா வெண்ணிய மூன்று.

(பரி-உரை) மிகினும் குறையினும் - உணவுஞ் செயல்களும் ஒருவன் பகுதிக்கொத்த வளவினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும், நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்றும் நோய் செய்யும் - ஆயுள்வேதமுடையாரால் வாதமுதலாக வெண்ணப்பட்ட மூன்றுநோயும் அவனுக்குத் துன்பஞ் செய்யும் எ-று.

நூலோரெண்ணியவெனவே, அவர் அவற்றான்வகுத்த வாதப்பகுதி பித்தப்பகுதி ஐப்பகுதியென்னும் பகுதிப்பாடும் பெற்றாம். அவற்றிற்குணவொத்தலாவது-சுவை வீரியங்களானும் அளவானும் பொருந்துதல். செயல்களொத்தலாவது-மனமொழி மெய்களாற்செய்யுந் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னேயொழிதல். இவை இரண்டும் இங்ஙனமன்றி மிகுதல் குறைதல்செய்யின், அவை தத்தநிலையினில்லாவாய் வருத்துமென்பதாம். காரணமிரண்டும் அவாய்நிலையான் வந்தன. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. இதனால் யாக்கைகட்கியல்பாகிய நோய் மூவகைத்தென்பதூஉம், அவை துன்பஞ்செய்தற் காரணம் இருவகைத்தென்பதூஉம் கூறப்பட்டன. இன்பஞ்செய்தற்காரணம் முன்னர்க் கூறுப.

(ப-ரை) (உணவும் செயல்களும் ஒருவன் சரீர சுபாவத்துக்கு ஒத்த வளவினவன்றி) மிகினும் - (அதனின்) மிகுமாயினும், குறையினும்-குறையுமாயினும், நூலோர் - ஆயுள்வேதமுடையோரால், வளிமுதலா-வாதமுதலாக, எண்ணிய - எண்ணப்பட்ட, மூன்று - மூன்றுநோயும், நோய் - துன்பத்தை செய்யும்-(அவனுக்குச்) செய்யும் எ-று.

(க-ரை) உணவும் தொழிலு மிகுந்தாலுங் குறைந்தாலும் பிணிமூன்றுந் துன்பஞ்செய்யும் என்பதாம்.

(வி-ரை) நூலோரெண்ணியவெனவே, அவர் அவைகளால் வகுத்த வாதப்பகுதி, பித்தப்பகுதி, சிலேஷ்மப்பகுதி என்கிற பகுதிப்பாடும் பெற்றாம். அவைகளுக்கு உணவு ஒத்தலாவது - சுவை வீரியங்களாலும் அளவாலும் பொருந்துதல். செயல்கள் ஒத்தலாவது - மனமொழி மெய்களாலே செய்யுந் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே யொழிதல். இவ்விரண்டும் இப்படியல்லாமல் மிகினுங் குறையினும் அவை தன்றன்னிலையிலே நில்லாமல் வருத்துமென்பதாம். [இதனால் உடம்புகளுக்கு இயல்பாகிய நோய் மூவகையென்பதும் அவை துன்பஞ்செய்தற்காரணம் இருவகையென்பதும் சொல்லப்பட்டன.] இன்பஞ்செய்தற்காரணம் பின்னே சொல்லுவர்.

'பழவினை' என்றது முன்னைவினை; அதாவது முன்னோர்களது வினை (தொழில்). 'காரணம்' என்றது அறியாமையால்வரும் காரணம். 'கழி

என்றது தீர்வு. 'பகுதி' என்றது உடல்தன்மை. 'நூலோர்' என்றது மருத்துவ நூலுணர்ந்தோர். 'மூன்றுநோய்' என்றது வாத பித்த ஐப்பகுதிகள். 'மாறுபடுதல்' என்றது வீரியம் முக்குணத்திற்கும் பொருந்துதல். 'அளவு' என்றது மிகுதியும் குறைவுப்படாமலும் உண்ணவேண்டிய அளவு. 'இவை விரண்டும்' என்றது சுவை வீரியம் அளவாற் பொருந்துதலும் செயல் ஒத்தலுமாகிய விரண்டும். (1)

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய தற்றது போற்றி யுணின்.

(பரி-உரை) அருந்தியது அற்றது போற்றி உணின்-ஒருவன் முன்னுண்டது அற்றபடியைக் குறிகளாற்றெளியவறிந்து பின்னுண்ணுமாயின், யாக்கைக்கு மருந்து என வேண்டாவாம்-அவன் யாக்கைக்கு மருந்தென்று வேறு வேண்டாவாம் எ-று.

குறிகளாவன-யாக்கைநொய்ம்மை, தேக்கின்றாய்மை, கரணங்கடொழிற்குரியவாதல், பசிமிகுதலெனவிவை முதலாயின. பிணிகள் யாக்கையவாகலின் யாக்கைக்கென்றார். உணினென்பது அதனருமை தோன்ற நின்றது.

(ப-ரை) (ஒருவன்) அருந்தியது-(முன்) உண்ணப்பட்டது, அற்றது-சீரணித்தபடியை, போற்றி - (குறிகளாலே) தெளியவறிந்து, உணின்-(பின்னே) உண்பானாயின், யாக்கைக்கு-(அவ)னுடம்புக்கு, மருந்தென-அவிழ்தமென்று, வேண்டாவாம்-(வேறு) வேண்டுவதில்லை எ-று.

(க-ரை) உண்ணப்பட்டது சீரணித்ததையறிந்து உண்பானாயின் அவனுக்கு மருந்து வேண்டாவாம் என்பதாம்.

(வி-ரை) குறிகளாவன-உடம்பு குறுகியிருத்தல், நோக்கம் பரிசுத்தமாயிருத்தல், காசரணாதி கரணங்கள் தொழிற்குரியவாதல், பசிமிகுதல், எனவிவை முதலாயின. பிணிகள் உடலுக்கே ஆகுதலால் யாக்கைக்கென்றார். உணினென்பது அதனருமை தோன்ற நின்றது.

'முன்னுண்டது' என்றது முன்னுண்ட வுணவு. 'அற்றபடி' என்றது சீரணித்ததன்மை. 'குறிகள்' என்றது பசி சோர்வு முதலியன. 'பின்னும்' என்றது பசித்தபின். 'மருந்தென்றுவேண்டா' என்றது மருந்துண்ணவேண்டாம். 'நொய்மை' என்றது மென்மை (சோர்வு) 'நோக்கு' என்றது பார்வை.

அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு பெற்றா னெடிதுய்க்கு மாறு.

(பரி-உரை) அற்றால் அளவு அறிந்து உண்க - முன்னுண்டது அற்றாற் பின்னுண்பதனை அறுமளவறிந்து அவ்வளவிற்றாக உண்க, உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு அஃது - இறப்பவும் பலவாய பிற யாக்கைகளிற்

பிழைத்துப் பெறற்கரிய இம்மானுடயாக்கையைப் பெற்றான் அதனை கெடுத் காலங்கொண்டு செலுத்தலெறி அதவாகலான் எ-று.

இம்மை மறுமை வீடுபேறுகளெய்தற்பாலதை ஈதொன்றுமேயாகலின் உடம்பு பெற்றுனென்றும், அது நெடிதன்றழி அவை பெருகச்செய்து கொள்ளலாமாகலின் நெடிதுய்க்குமாறென்றுங் கூறினர். பெற்றுலென்ற பாடமோதுவாருமுளர்.

(ப-ரை) அற்றல் - (முன் உண்ணப்பட்டது) அற்றல், (பின் உண்ணப் படுவதனை) அளவறிந்த - (அற) மளவறிந்து, உண்க - (அவ்வளவினதாக) உண்ணக்கடவன், உடம்பு-(பெறுதற்கரிய விம்மனித) உடம்பை, பெற்றான்- பெற்றவன், நெடிது - நெடுங்காலம், உய்க்குமாறு - (அதனைக்) கொண்டு செலுத்தும் வழி, அஃது-அதுவாம் (ஆகலால்) எ-று.

(க-ரை) உடலுக்கொண்டவன் அவனுடலிருக்கும்படி சீரணித்தவள வறிந்துண்ணக்கடவன் என்பதாம்.

(வி-ரை) இம்மை மறுமை வீடுபேறுகளை அடைதற்குரியது இம்மனித வுடம்பொன்றுமே யாகலால் உடம்புபெற்றுனென்றும், அது நெடுங்காலம் கின்றவிடத்து அவை பெருகச்செய்து கொள்ளலாமாகலால் நெடிதுய்க்குமா றென்றும் சொல்லினர்.

'அறமனவு' என்றது சீரணிக்குங்காலவளவு. 'பேறு' என்றது மக்கள் அடைதற்குரிய பேறுகள். 'ஈதொன்று' என்றது அளவறிந்துண்கை. 'நெடி துய்க்குமாறு' என்றது நெடுங்காலம்கொண்டு செலுத்தும் வழி. (3)

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல துய்க்க துவரப் பசித்து.

(பரி-உரை) அற்றது அறிந்து - முன்னுண்டது அற்றபடியையறிந்து துவரப்பசித்து - பின் மிகப்பசித்து, மாறல்ல கடைப்பிடித்துத் துய்க்க- உண்ணுங்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டுண்க எ-று.

அற்றதறிதென்னும் * பெயர்த்துரை அதனை யாப்புறத்தற்பொருட்டு. உண்டது அற்றலும் அதன்பயனுகிய ஓரதமருந்தாகலான் அதுவுமறல், வேண்டுமென்பார், மிகப்பசித்தென்றார். பசித்தல்வினை சண்டு உடையான் மேனின்றது. மாறுகொள்ளாமையாவது - உண்பான் பகுதியோடு மாறு கொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங் களாற் றம்முண் மாறுகொள்ளாமையுமாம். அவையாவன - முறையே வாத பித்த ஐனோஜய பகுதிக்கடாதவற்றைச் செய்வனவாதலும், பெரும் பொழுது சிறுபொழுதென்னுங் காலவேறுபாடுகளுன் ஒன்றற்காவன பிறி தொன்றற்காகாமையும், தேனுநெய்யுந் தம்முளவளவொத்து கஞ்சாதல் போல்

* பெயர்த்துரை-அநுவாதம்.

வனவுமாம். அவற்றைக் குறிக்கொள்ளாது மனம்பட்டவாற்றாற் றுய்ப்பின் அதனாலே நோயும் மரணமும் வருதலின், கடைப்பிடித்தென்றார்.

(ப-ரை) அற்றதறிந்து-(முன் உண்ணப்பட்டது) அற்றபடியே அறிந்து, துவரப்பசித்து-(பின்னே) மிகப்பசித்து, (உண்ணும்போது) மாறல்ல - மாறுகொள்ளாத வுணவுகளை, கடைப்பிடித்து-குறிக்கொண்டு, துய்க்க-உண்ணக் கடவன் எ-று.

(க-ரை) சீரணித்த வளவறிந்து மாறில்லா வுணவுகளை யுண்ணக்கடவன் என்பதாம்.

(வி-ரை) அற்றதறிந்தெனப் பின்னுஞ்சொல்லியது அதனை உறுதிப்படுத்தற்பொருட்டு. உண்டது அற்றாலும் அதன் பயனாகிய இரதம் அறாதாகலால், அதுவும் அறல்வேண்டு மென்றற்கு மிகப்பசித்தென்றார். மாறுகொள்ளாமையாவது - உண்பவன் சரீரசுபாவத்தோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும் சுவை வீரியங்களால் தம்முன்னே மாறுகொள்ளாமையும் ஆம். அவையாவன: முறையே உணவு வாத பித்த சிலேஷ்மங்களாலாகிய சரீரசுபாவங்களுக்கு அடைபடாதவைகளைச் செய்வனவாதலும், பெரும்பொழுது சிறுபொழுது என்கிற காலவேறுபாடுகளுள் ஒன்றற்கு ஆவன பிறிதொன்றற்கு ஆகாமையும், தேனும் நெய்யும் தம்முள் ஒத்து நஞ்சாதல் போல்வனவும் ஆம். அவைகளைக் குறிக்கொள்ளாது மனம்பட்ட வழியால் உண்டால் அதனால் நோயும் மரணமும் வருதலால் கடைப்பிடித்தென்றார்.

'துவர' என்றது மிகுதியாக. 'மாறுகொள்ளாத உணவு' என்றது சுவை வீரியம் அளவு முதலியவைகளுக்கு மாறாகாத உணவுகள். 'குறிக்கொண்டு' என்றது அறிந்து. 'இரதம்' என்றது இரசம். 'பெரும்பொழுதாறு' என்றது கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில். 'சிறுபொழுது ஐந்து' என்றது மாலை, யாமம், வைகறை, எற்படுகாலை, வெங்கதிர்காயும் நண்பகல். 'துய்ப்பின்' என்றது உண்ணின். 'கடைப்பிடித்து' என்றது உண்ணவேண்டுவனவற்றை மாறுபாடில்லாது குறிக்கொண்டு. (4)

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு.

(பரி-உரை) மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்-அம்மூவகை மாறுகோளுமில்லாத உணவைத் தன்னுள்ளம் வேண்டியவளவினானன்றிப் பிணிவாராவளவினால் ஒருவனுண்ணுமாயின், உயிர்க்கு ஊறுபாடு இல்லை-அவனுயிர்க்குப் பிணிகளாற் றுன்பம் விளைதலுண்டாகாது எ-று.

உறுவதனை ஊறென்றார்; அஃது இன்பத்திற்செல்லாதாயிற்று, இல்லையென்பது தொடர்பாகலின், துன்பமுறுவது உயிரேயாதலின், அதன்மேல் வைத்துக் கூறினார். மாறுபாடில்வழியுங் குறைதல் நன்றென்பதாம். இவை நான்குபாட்டானும் உண்ணப்படுவனவும், அவற்றதளவும், காலமும், பயனுங் கூறப்பட்டன.

(ப - ரை) மாறுபாடில்லாத - (அம்மூவகை) மாறுகோளும் இல்லாத, உண்டி-உணவை, மறுத்த-(தன்னுள்ளம்வேண்டியவளவை) மறுத்த, (பிணி வாராதவளவில்) உண்ணின்-(ஒருவன்) உண்டால், உயிர்க்கு-(அவ)வுயிர்க்கு, ஊறுபாடு - (பிணிகளாலே) தன்பம் விளைதல், இல்லை உண்டாகாது எ-று.

(க-ரை) கல்லுணவையுண்டாற் பிணிகளாற் றன்பமில்லை என்பதாம்.

(வி - ரை) தன்பமுறுவது உயிரேயாதலால் அதன்மேல்வைத்துச் சொல்லினர். மாறுபாடில்லாதவிடத்தும் குறைதல் நன்றென்பதாம். [இவை சான்குபாட்டாலும் உண்ணப்படுவனவும், அவைகளினளவும், காலமும், பயனும் சொல்லப்பட்டன.]

'உண்ணின்' என்றது அளவோடு உண்ணத்தக்க உணவை உண்டால். 'ஊறுபாடு' என்றது தன்புறுதல். 'மாறுபாடில்வழி' என்றது மாறுபாடில்லாதபோழ்தம். 'குறைதல்' என்றது உண்ணும் அளவு குறைதல். (5)

இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும் கழிபே ரிரையான்க ணோய்.

(பரி-உரை) இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல் - அக்குறை தலே நன்றென்றறிந்து அவ்வாறேபுண்பவன்மாட்டு இன்பம் நீக்காது நிலை நிற்குமாறுபோல், கழிபேர் இரையான்கண் நோய் நிற்கும் - மிகப்பெரிய விரையை விழுங்குவான்மாட்டு நோய் நீக்காது நிலைநிற்கும் எ-று.

அவ்வாறேபுண்டல் உண்ணலாமனவிற் சிறிது குறையவுண்டல். இன்பமாவது-வாதமுதலிய மூன்றும் தத்தநிலையிற்றிரியாமையின் மனமொழி மெய்கள் அவன் வயத்தவாதலும், அதனால் அறமுதலிய நான்குமெய்தலுமாம். இரையையளவின்றியெடுத்தது அதனுன் வருத்தம் விலங்கோடொத்தலின், நோயாயென்றார். விதியெதிர்மறைகளே உவமமும் பொருளுமாக்கியது இரண்டானும் பெறுதற்கு.

(ப-ரை) இழிவறிந்து - அக்குறைதலை (நல்லதென்று) அறிந்து, உண்பான்கண் - (அவ்வாறே) உண்பவனிடத்து, இன்பம்போல் - இன்பத்தைப் போல், கழிபேரிரையான்கண்-மிகப்பெரிய இரையை விழுங்குவோனிடத்து, நோய்-நோயானது, நிற்கும்-நீங்காதிருக்கும் எ-று.

(க-ரை) குறைவாக வுண்பவனிடத் தின்பம்போல் நிறைவாக வுண்பவனிடத்துத் தன்பமிருக்கும் என்பதாம்.

(வி-ரை) அவ்வாறேபுண்டல் - உண்ணலாமனவிற் சிறிது குறையவுண்டல். இன்பமாவது - வாதமுதலாகிய மூன்றும் தன்றன்னிலையில் வேறுபடாமையால் மனமொழிமெய்கள் அவன்வசப்படலும், அதனால் அறமுதலாகிய நான்கும் அடைதலும்மும். இரையை அருந்தமனவின்றி எடுத்தது அதனுன் வருத்தம் விருந்தோடொத்தலால் நோயாயென்றார்.

'உண்பவன்மாட்டு' என்றது உண்ணுவானிடம். 'அவ்வாறு உண்பவன்' என்றது குறைந்து உண்பவன். 'இன்பமாவது' என்றது வாத பித்த சிலேத்தும மூன்றும் தக்கிலையில் நிற்க நிரிசரணங்களும் தன்வசப்படும் அவை தன்வசப்பட அறமுதலிய நான்கும் எய்தலாகும் இவையை அவைகடந்தண்ணும் விலக்கினைக்கள் தம்முணர்ச்சியின்றி விருத்தல்போல இவையை யவிவின்றி உண்பவனு மிருப்பானுதலால் இவையான் என்றார். (6)

நீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னெயள வின்றிப் படும்.

(பரி உரை) தெரியான் நீ அளவு அன்றிப் பெரிது உண்ணின் - தன் பகுதியும் அதற்கேற்றவுணவும் காலமுமாராயாது வேண்டியதோருணவை வேண்டியதோர் காலத்து வயிற்றுத்தியளவன்றி ஒருவன் மிகவுண்ணுமாயின், நோய் அளவு இன்றிப் படும்-அவன்மாட்டு நோய்கள் எல்லையற வருமென்க.

தெரியாமை வினைக்குச் செயப்படுபொருள்கள் அதிகாரத்தான் வந்தன. நோய் சாதியொருமை. இவை பிரண்டுபாட்டானும் அவ்வகையுண்ணுவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது.

(ப-ரை) தெரியான் - (தன் சரீரசபாவமும் அதற்கேற்ற வுணவும் காலமும்) ஆராயாதே, (வேண்டிய வுணவை வேண்டிய காலத்து) நீயளவன்றி-(யிற்றத்) நீயளவல்லாமல், பெரிதுண்ணின் - (ஒருவன்) மிகவுண்ணுவானுமின், நோய் நோயானது, அளவின்றி-அளவில்லாமல், படும்-(அவனிடத்தே) வரும் என்க.

(க-ரை) சீரணித்ததறியாதவனும் மிகவுண்பானுகில் நோயவனிடத்தண்டாம் என்பதாம்.

(வி-ரை) இவை இரண்டுபோட்டாலும் அப்படி உண்ணுதவிடத்தே படும் வழுக்குச் சொல்லப்பட்டது.

'யிற்றத்தி' என்றது உண்டவுணவை சீரணிக்கும் உதாத்தி. 'வேண்டியதோருணவை' என்றது விரும்பிய உணவை. 'அவன்மாட்டு' என்றது அவனிடத்தில். 'எல்லையற' என்றது மிகுதியும். (7)

நோய்நாடி நோய்முத லுடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(பரி-உரை) நோய்நாடி-மருத்தவனுயினுன் ஆதான்மாட்டு நிகழ்கின்ற நோயை அதன் குறிகளான் இன்னதென்று தணிக்க, நோய் முதல் நாடி-பின் அது வருதற்காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, அது தணிக்கும் வாய் நாடி-பின் அது நீர்க்குமுபாயத்தினையறிந்து, வாய்ப்பச் செயல் - அதனைச் செய்யும்வழிப் பிழையாமற் செய்க என்க.

காரணம் - உணவுசெயலென மூற்கூறியவிரண்டும். அவற்றை ஆயுள் வேதமுடையார் நிதானமென்ப. அவை காதற்பயன் நோயினையும் காயினை யும் ஐயமறத்தணிதல். மருந்துசெய்தல், உதிரக்கலோதல், அறுத்தல், சுடுதல் முதலிய செயல்களெல்லாம் அடக்குதற்கு, அது தணிக்கும்வாயென்றார், பிழையாமை - பழைய மருத்துவர் செய்துவருகின்ற முறைமையிற்றப்பாமை.

(ப-ரை) (மருத்துவன்) நோய்-நோயாளியிடத்த (நிகழ்கின்ற) நோயை, காடி - (அதன்குறிகளால் இன்னதென்ற) தணிக்த, நோய்முதல் - (பின்பு) அந்நோய்வருதற் காரணத்தை, காடி-ஆராய்க்த, அதுதணிக்கும்வாய் - (பின்) அதனீர்க்கும் உபாயத்தினை, காடி - அறிக்த, வாய்ப்பச்செயல் - (அதனைப்) பிழைபடாமற் செய்யக்கடவன் எ-று.

(க-ரை) வைத்தியன் வியாதியையும் அதன் காரணத்தையும் அதனீக்கு முபாயத்தையும் ஆராய்க்த மருத்துவஞ் செய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) காரணம்-உணவுசெயலென மூன் சொல்லப்பட்டவை. அவ் விரண்டையும் காதற்குப்பயன் நோயையும், உபாயத்தையும், ஐயமறத் தணிதல். மருந்துசெய்தல், உதிரக்கலோதல், அறுத்தல், சுடுதல் முதலாகிய செயல்களெல்லாம் அடக்குதற்கு அது தணிக்கும்வாயென்றார். பிழை படாமை-பழைய மருத்துவர் செய்துவருகின்ற முறையிலே தப்பாமை.

'மருத்துவன்' என்றது வைத்தியன். 'ஆதான்' என்றது நோயாளி. 'அதன் குறிகள்' என்றது நோயின் குறிசன். 'அது' என்றது நோய். 'வழி பிழையாமல்' என்றது முறைதவறுமல். 'ஐயமற' என்றது சந்தேகமற. 'உதி ரக்கலோதல்' என்றது கெட்ட இரத்தத்தை அப்புறப்படுத்தல். 'பிழையாமை' என்றது தொன்றதொட்டுச் கையாடிய முறையில் தவறின்றி. (8)

உற்றுழி னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றுணர் கருதிச் செயல்.

(பரி-உரை) கற்றுணர் - ஆயுள்வேதத்தினைக் கற்ற மருத்துவன், உற்றுழ் அளவும் பிணி அளவும் காலமும் கருதிச் செயல் - அவ்வுபாயத்தினைச் செ புங்கால், ஆதானவளவினையும் அவன்தணிகழ்கின்ற நோயினளவினையும் த செயற்கேற்ற காலத்தினையும் அந்நூனெறியால் நோக்கி, அவற்றோடு பொரு தச்செய்க எ-று.

ஆதானவளவு - பருகி பருவம் வேதனை வலிகளினளவு. பிணியள † சாத்தியம், அசாத்தியம். யாப்பியமென்னுஞ் சாதிவேறபாடும், தொடக்

• புறநானூறு-34.

† சாத்தியம் - தீர்க்கத்தக்கது. அசாத்தியம் - தீர்க்கத்தகாதது. யா பியம்:- பெரும்பான்மை தீர்க்கத்தக்கதும், சிறபான்மை தீர்க்கத்தகாத மெனக் கொள்ளத்தக்கது.

நடுவீறென்னும் அதன் பருவ வேறுபாடும், வன்மைமென்மைகளு முதலாயின. காலம் - மேற்சொல்லியன. இம்மூன்றும் பிழையாமல் நூனெறியாலும் உணர்வுமிகுதியாலும் ஆராய்ந்து செய்கவென்பார், கற்றான்கருதிச் செயலென்றார். இவை யிரண்டுபாட்டாலும் அவ்விழுக்குப்பட்டுழி மருத்துவன் நீர்க்குமாறு கூறப்பட்டது.

(ப-ரை) கற்றான் - (ஆயுள்வேதத்தைக்) கற்ற மருத்துவன், (அவ்வுபாயத்தைச் செய்யுங்கால்) உற்றானளவும்-நோயாளி யளவையும், பிணியளவும்-(அவனிடத்து நிகழ்கின்ற) நோயினளவையும், காலமும் - (தன்செயற்கேற்ற) காலத்தினையும், கருதி-(அந்நூல்வழியால்) நோக்கி, செயல் - (அவைகளோடு பொருந்தச்) செய்யக்கடவன் எ-று.

(க-ரை) மருத்துவன் பிணியாளி யளவையும் பிணியளவையுங் காலத்தினளவையுமறிந்து பொருந்தச் செய்யக்கடவன் என்பதாம்.

(வி-ரை) நோயாளியளவு - சரீரசுபாவம் பருவம் வேதனைகளினளவு பிணியளவு - சாத்தியம், அசாத்தியம், யாப்பியம் என்கிற சாதிவேறுபாடும், தொடக்க நடுவீறென்னும் அதன் பருவ வேறுபாடும், வன்மை மென்மைகளும் முதலாயின. காலம் - முன்சொல்லியது. இம்மூன்றும் தப்பாமல் நூல்வழியாலும் அறிவு மிகுதியாலும் ஆராய்ந்து செய்கவென்பதற்கு கற்றான் கருதிச்செயலென்றார். [இவை இரண்டுபாட்டாலும் அவ்விழுக்கம் வந்தவிடத்துத் தீர்க்கும்வழி சொல்லப்பட்டது.]

'தொடக்கம் நடுவுஈறு' என்றது முதல் இடைகடை. 'உணர்வு' என்றது அறிவு. 'காலம்' என்றது பிணியினது காலம். (9)

உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்றப்பானாற் கூற்றே மருந்து.

(பரி-உரை) மருந்து - பிணிக்கு மருந்தாவது, உற்றவன் - அதனையுற்றவன், தீர்ப்பான் - அதனைத் தீர்க்குமருத்துவன், மருந்து-அவனுக்குக் கருவியாகிய மருந்து, உழைச் செல்வான் என்ற அப்பால் நாற்கூற்று - அதனைப் பிழையாமல் இயற்றுவானென்று சொல்லப்பட்ட நான்கு பகுதியையுடையான்கு திறத்தது எ-று.

நான்கென்னுமெண்வருகின்றமையின் அது நோக்கி அப்பாலென்றொடுத்தார். நாற்கூற்றதென்பது விகாரமாயிற்று. அவற்றுள் உற்றவன்வகை நான்காவன - பொருளுடைமை, மருத்துவன்வழிநிற்றல், நோய்நிலையுணர்த்தல் வன்மை, மருத்துத்துன்பம் பொறுத்தலெனவிவை. தீர்ப்பான்வகை நான்காவன - நோய்கண்டஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டோதிய கல்வியுடைமை, பலகாலுந்தீர்த்துவருதல், மனமொழிமெய்கடுயிலென விவை. மருந்தின்வகை நான்காவன - பலபிணிகட்கு மேற்றல், வீரியம் விளைவாற்றல்களான் மேம்படுதல், எளிதினெய்தப்படுதல்

பகுதியோடு பொருந்துதலெனவிவை. இயற்றுவான்வகை நான்காவன ஆதுரன்மாட்டன்புடைமை, மனமொழிமெய்கடுயவாதல், சொல்லியவ அவ்வாறே செய்தல் வன்மை, அறிவுடைமையெனவிவை. இவையெல்லா கூடியவழியல்லது பிணி தீராமையின், இத்தொகுதியையும் மருந்தென்றா ஆயுள்வேதமுடையாரும் இவை கால்களாக நடக்குமென்பதுபற்றிப் பா மென்றும், இவை மாறுபட்டவழிச் சாத்தியமுமுதிர்ந்து அசாத்தியம மென்றுங் கூறினார். இதனால் அதனைத் தீர்த்தற்கு வேண்டுவனவெல்லா தொகுத்துக் கூறப்பட்டன.

(ப-ரை) மருந்து - (பிணிக்கு) மருந்தாவது, உற்றவன் - (அதனை) யுற் வன், தீர்ப்பான்-(அதனைத்) தீர்க்குமருத்துவன், மருந்து - (அவனுக்குச் சா னமாகிய) மருந்து, உழைச்செல்வான் - (அதனைத்தப்பாமல்) செய்பவன் என்று-என்று சொல்லப்பட்ட, அப்பால்-அந்நான்கு பகுதியையுடைய, நா கூற்றே-நான்கு திறத்தது எ-று.

(க-ரை) பிணிக்கு மருந்தாவது நோயாளி வைத்தியன் மருந்துசெ பவன் இந்நான்குமாம் என்பதாம்.

(வி-ரை) அவைகளுள் உற்றவன்வகை நான்காவன - பொருளுடைமை மருத்துவன்வழிநிற்றல், நோய்நிலையுரைத்தல்வன்மை, மருந்துத்துன்ப பொறுத்தல் எனவிவை. தீர்ப்பான்வகை நான்காவன-நோய்ப்பார்த்தற்க சாமை, ஆசிரியனை வழிபட்டு அடைந்த கல்வி நுண்ணறிவுடைமை, பல லுந்தீர்த்துவருதல், மனமொழிமெய்கள் பரிசுத்தமாதல் எனவிவை. மரு தின்வகை நான்காவன - பலபிணிகளும் ஏற்றல், சுவை வீரியம் விளைவாற்ற களால் மேம்படுதல், எளிதிலே பெறப்படுதல், சரீரசுபாவத்தோடு பொருந்த எனவிவை. இயற்றுவான்வகை நான்காவன - நோயாளியிடத்தே அ புடைமை, மனமொழிமெய்கள் பரிசுத்தமாதல், சொல்லியபடியே செய்த வல்லமை, அறிவுடைமை எனவிவை. இவையெல்லாம் கூடிய விடத்தல்ல பிணி தீராமையால், இக்கூட்டத்தை மருந்தென்றார். [இதனால் அவ தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாம் தொகுத்துச் சொல்லப்பட்டது.]

'அதனை உற்றவன்' என்றது பிணியாளன். 'நாற்கூற்று' என்ற நான்குவகை. 'மருத்துவன்வழிநிற்றல்' என்றது மருத்துவன்சொல்வ ஒழுகல். 'நோய்காண்டற் கஞ்சாமை' என்றது பிணியின் கொடுமைக டஞ்சாதிருத்தல். 'பலபிணிகட்குமேற்றல்' என்றது பலபிணிகளையும் கு மாக்கல். 'இத்தொகுதி' என்றது இந்நான்கன் கூட்டம். (1

95-ம் அதி - மருந்து - முற்றிற்று.

ஆ அதிகாரம் 95-க்கு திருக்குறள்-950.

ஓழிபியல்

(பரி-உரை) இனி, அவ்வாசியலினும் அங்கவியலினும் அடக்கா தொழித் தவற்றதியல்பு பதின்மூன்றதிகாரத்தாற் கூறவான்றொடக்கி, தற்கட் குடிமை கூறகின்றார்.

(உரை) இனி அவ்வாசியன் முதலானவைகளிலே அடக்கா தொழிந்த வகளினியல்பைப் பதிமூன்றதிகாரத்தினுலே சொல்லத்தொடக்கி முத பிலே குடிமை சொல்லுகிறார்.

96-ம் அதிகாரம்—குடிமை

(பரி-உரை) அஃதாவது: உயர்ந்த குடியின்கட் பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு கால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின் அச்சிறப்புப்பற்றி இது முன் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: உயர்ந்த குடியினிடத்தப் பிறந்தவரது தன்மை. உயர்குடிப்பிறப்பு கால்வகை வருணத்தார்க்கும் அவசியம் வேண்டுவதாகலால் அச்சிறப்புப்பற்றி முன் வைக்கப்பட்டது.

இற்பிறந்தார் கண்ணல்ல தில்லே யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

(பரி-உரை) செப்பமும் காணும் ஒருங்கு - செம்மையும் காணும் சே, இற்பிறந்தார் கண் அல்லது இயல்பாக இல்லே - குடிப்பிறந்தார்மாட்டல்லது பிறர்மாட்டியற்கையாக உளவாகா எ-று.

இல்லுக் குடி குலமென்பன ஒருபொருள; ஈண்டுயர்ந்தவற்றின்மேல. செம்மை - கருததஞ் சொல்லுஞ் செயலுந்தம்முண் மாறுகாமை. நாண்-பழி பாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்காயின் ஒருவர் கற்பிக்க வேண்டாமற் ருமே புளவாம்; பிறர்க்காயிற் கற்பித்தலழியும் தெடிதுநில்லா வென்பதாம்.

(ப-ரை) செப்பமும்-செம்மையும், காணும்-நாணமும், ஒருங்கு-ஒன்ற சே, இற்பிறந்தார் கண்ணலது-உயர்ந்த குடியிலே பிறந்தவரிடத்தல்லாமல், பிறரிடத்தே) இயல்பாக-சுபாவமாக, இல்லே-உண்டாகா எ-று.

(க-ரை) செம்மையும், நாணமும், கற்குடியிற் பிறந்தவர்க்கல்லது மற்ற ரிடத்தில்லே என்பதாம்.

(வி-ரை) செம்மை - கருத்தும் சொல்லும் செயலும் தம்முள்ளே மாறு டாமை. நாண் - பழி பாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்கா ரே ஒருவர் கற்பிக்கவேண்டாமல் தாமே உண்டாகும். பிறர்க்காலுல் ற்பிதலவிடத்தும் தெடிதுநில்லா வென்பதாம்.

'உயர்ந்தகுடி' என்றது கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்தாரது குடி. 'நால்வகை வருணத்தார்' என்றது அந்தணர் (முனிவர்) அரசர் வணிகர் வேளாளர். 'செப்பம்' என்றது செம்மைக்குணம், மனமொழிமெய் மாறு படாதொழுகல். 'நாண்' என்றது பழிபாவங்களுக்குப் பின்னடைதல்; அதாவது அஞ்சிநடத்தல், 'இற்பிறந்தார்' என்றது உயர்குடியிற்பிறந்தார். உயர்குலமக்களுக்கு இயல்பாம். ஏனையோர்க்குச் செயற்கையாகக் கற்பிக்கினும் நெடிதுநில்லா. (1)

ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று மிழுக்கார் குடிப்பிறந் தார்.

(பரி-உரை) குடிப் பிறந்தார்-உயர்ந்த குடியின்கட் பிறந்தார், ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும் இழுக்கார் - தமக்குரிய ஒழுக்கம் மெய்ம்மை நாணெனப்பட்ட இம்மூன்றன்கண்ணும் கல்வியானன்றித் தாமாகவே வழுவார் எ-று.

ஒழுக்கமுதலியன மெய்ம்மொழி மனங்களினவாகலின், அம்முறையவாயின. இழுக்குதல் அறியாது வருகின்றமையின், இழுக்காரென்றார்.

(ப-ரை) குடிப்பிறந்தார் - உயர்ந்த குடியிலே பிறந்தவர், (தமக்குரிய) ஒழுக்கமும்-நன்னடக்கையும், வாய்மையும் - மெய்ம்மையும், நாணும்-நாணமும் ஆகிய, இம்மூன்றும் - இம்மூன்றிடத்தும், இழுக்கார்-(நூலறிவாலல்லாமல் தாமாகவே) வழுவார் எ-று.

(க-ரை) உயர்குடியிற் பிறந்தவர் நன்னடக்கை சத்தியம் வெட்கம் இம்மூன்றிலுந் தவறார் என்பதாம்.

(வி-ரை) ஒழுக்கமுதலாகிய மூன்றும் மெய்மொழி மனங்களுக்கு உரியவையாதலால், அம்முறை வைக்கப்பட்டன. இழுக்கல் - தாமறியாது வருதலால் இழுக்காரென்றார்.

'ஒழுக்கம்' என்றது நன்னடக்கை. 'மெய்ம்மை' என்றது மெய்யுரைத்தல். 'கல்வியானன்றி' என்றது கற்றறிவுடைமையாலன்றி. 'வழுவார்' என்றது தவறார். 'ஒழுக்கம்' என்றது மெய்யினதுசெயல். 'வாய்மை' என்றது மொழியினதுசெயல். 'நாண்' என்றது மனத்தினதுசெயல். 'இழுக்குதல்' என்றது தவறுதல். திரிகரணங்களும் ஒத்துநடத்தலின் இழுக்கார் என்றார்.

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும் வகையென்ப வாய்மைக் குடிக்கு.

(பரி-உரை) வாய்மைக் குடிக்கு - எக்காலத்துந் திரிபில்லாத குடியின்கட்பிறந்தார்க்கு, நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகை என்பவறியார் சென்றவழி முகமலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும், இன்சொல் சொல்லுதலும், இகழாமையுமாகிய இந்நான்கும் உரிய கூறென்று சொல்லுவர் நூலோர் எ-று.

பொய்ம்மை திரிபுடைமையிற் றிரிபின்மையை வாய்மையென்றும் *இல்லாரை யெல்லாரு மெள்ளுவராகலின் இகழாமையை அவர் கூருக்கியுங் கூறினர். குடி-ஆகுபெயர். ஈன்கின் வகையென்பது பாடமாயின், வாய்மைக் குடிப்பிறந்தார்க்குப் பிறரின் வேறுபாடு இன்கான்கா னுளதாமென் றுரைக்க. இவை மூன்றுபாட்டானுங் குடிப்பிறந்தாரியல்பு கூறப்பட்டது.

(ப-ரை) வாய்மை (எக்காலத்தும்) வேறுபடாத, குடிக்கு-குடியிற்பிறந்தார்க்கு, (வறியவர் சென்றவிடத்து) முகை - முகமலர்ச்சியும், முகை-(உள்ளவை) கொடுத்தலும், இன்சொல்-இன்சொற் (சொல்லுதலும்), இகழாமையும், (ஆகிய) ஈன்கும்-இன்றான்கும், வகை-(உரிய) வகையாகும், என்ப-என்று (நூலோர்) சொல்லுவர் எ-று.

(க-ரை) நற்குடியிற் பிறந்தவர்க்கு முகமலர்ச்சி கொடுத்தல் இன்சொல் இகழாமை இன்றான்கு முரித்தாம் என்பதாம்.

(வி-ரை) பொய்மை வேறுபடுதலுடைமையால், வேறுபடாமையை வாய்மையென்றும், இல்லாரை எல்லாரும் இகழ்வாராகலால் இகழாமையை அவர் கூருக்கியும் சொல்லினர். குடி-ஆகுபெயர். [இவை மூன்றுபாட்டானும் குடிப்பிறந்தாரியல்பு சொல்லப்பட்டது.]

'எக்காலத்தும்' என்றது வறுமைபுற்றகாலத்தும். 'திரிபு' என்றது மேலுமாறு. 'சென்றவழி' என்றது சென்றபோழ்து. 'உள்ளன கொடுத்தல்' என்றது உள்ளபொருளோக்கரவாது தருதல். 'இகழாண்மை' என்றது தாழ்த்துரையாமை. 'திரிபுடைமை' என்றது வேறுபாடுடைமை. 'பொய்மை' என்றது மாறுபாடுடையது. 'மெய்மை' என்றது மாறுபாடிலது. 'இல்லாரை' என்றது வறியவரை. 'கூறு' என்றது சொல். (3)

அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்.

(பரி-உரை) அடுக்கிய கோடி பெறினும் - பலவாக வடுக்கிய கோடி யனவிற்ருய பொருளைப் பெற்ருராயினும், குடிப்பிறந்தார் குன்றுவ செய்தலிலர்-உயர்ந்த குடியின்கட் பிறந்தார் தம்மொழுக்கங் குன்றுந் தொழில்களைச் செய்யார் எ-று.

அடுக்கியகோடி யென்பது ஈண்டெண்ணப்படும் பொருண்மேனின்றது. குன்றுந்தொழில்கள்-குன்றுதற் கேதுவாய தொழில்கள்.

(ப-ரை) அடுக்கிய - (பலவாக) அடுக்கிய, கோடி - கோடியனவினதாகிய பொருளை, பெறினும் - பெற்ருலும், குடிப்பிறந்தார் - உயர்ந்த குடியிலே பிறந்தவர், குன்றுவ - (தம்மொழுக்கந்) குன்றுந்தொழில்களை, செய்தலிலர்-செய்யார் எ-று.

* திருக்குறள்-78-ம் அதி-பொருள்செயல்வகை-2.

(க-ரை) உயர்குடியிற் பிறந்தவர் கோடிபொருளைப் பெற்றாலுங் குன்றுந் தொழிலைச் செய்யார்க ளென்பதாம்.

(வி-ரை) கோடியென்பது இங்கே எண்ணப்படும் பொருண்மேல் நின்றது. குன்றுந்தொழில்கள்-குன்றுதற்கு ஏதுவாகிய தொழில்கள்.

'அடுக்கியகோடி' என்றது அளவின் மிகுதியை புணர்த்துநின்றது. 'குன்றுந்தொழில்கள்' என்றது உயர்ந்த வொழுக்கத்திற்குக் குறைபாடுடைய செயல்கள். (4)

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

(பரி-உரை) பழங்குடி - தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார், வழங்குவது உள்வீழ்ந்தக்கண்ணும்-தாங் கொடுக்கும் பொருள் பண்டைமையிற் சுருங்கியவிடத்தும், பண்பின் றலைப்பிரிதல் இன்று-நம் பண்புடைமையின் நீங்கார் எ-று.

தொன்றுதொட்டு வருதல் - சோ சோழ பாண்டிய ரென்றிப்போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டு வருதல். அவர்க்கு கல்குரவாவது வழங்குவது உள்வீழ்வதாகலின், அதனையே கூறினார்.

(ப-ரை) பழங்குடி - பழமைதொட்டு வருகிற குடியிலே பிறந்தவர், வழங்குவது-(தாம்) கொடுக்கும் பொருள், உள்வீழ்ந்தக் கண்ணும் - முன்னை யளவிலே சுருங்கியவிடத்தும், பண்பின்-(தமது) குணமுடைமையில், தலைப் பிரிதலின்று-நீங்கார் எ-று.

(க-ரை) நற்குடியிற் பிறந்தவர் கொடுக்கும் பொருள் சுருங்கியவிடத்தும் குணமுடைமையிற் குறையார் என்பதாம்.

(வி-ரை) பழமை தொட்டுவருதல் - சோ சோழ பாண்டியரென்பதுபோல் ஆதிகாலந்தொடங்கி மேம்பட்டுவருதல். அவர்க்கு வறுமையாவது தாம் கொடுக்கும் பொருள் முன்னையளவிலே சுருங்குவதாகலால் அதனையே சொல்லினார்.

'பண்டையின்' என்றது முன்னையினும். 'சுருங்கியவிடத்தும்' என்றது குறைந்தவிடத்தும். 'மேம்பட்டு' என்றது சிறந்து. 'அவர்க்கு' என்றது பழங்குடியிற் பிறந்தவர்க்கு. 'கல்குரவு' என்றது வறுமை. 'வழங்குவது' என்றது பிறருக்கு ஈவது. (5)

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்.

(பரி-உரை) மாசு அற்ற குலம்பற்றி வாழ்தும் என்பார்-வசையற்ற வருகின்ற கற் குடிமாபிலே டொத்த வாழக்கடவேமென்று கருதி அவ்வாறு

வாழ்வார், சலம் பற்றிச் சால்பு இல செய்யார்-வறுமை யுற்றவழியும், வஞ்சனையைப் பொருந்தி, அமைவிலவாய தொழில்களைச் செய்யார் எ-று.

அமைவின்மை-அம்மாபிற் கேலாமை. இவை மூன்றுபாட்டானும் அவர் வறுமை யுற்றவழியும் அவ்வியல்பின் வேறுபடா ரென்பது கூறப் பட்டது.

(பதவுரை) மாசற்ற-வசையற்று வருகின்ற, குலம்பற்றி-(சமத) குடிமரபினைதொடர்ந்து, வாழ்தலென்பார்-வாழக்கடவோமென்ற நினைத்து, அப்படியே வாழ்வோர் (வறுமையுற்றவிடத்தும்) சலம்பற்றி-வஞ்சனையைப் பொருந்தி, சால்பில-அமைவில்லாத தொழில்களை, செய்யார்-செய்யார் எ-று.

(கருத்து) நற்குடிப்பிறப்பில் வாழ்பவர் வஞ்சனைபொருந்தி யமைவில் லாத தொழில்களைச் செய்யார் என்பதாம்.

(விசேடவுரை) அமைவில்லாமை-தங்குடிமரபினுக்குத் தகாமையாம். [இவை மூன்றுபாட்டானும் அவர் வறுமையுற்றவிடத்தும் அவ்வியல்பின் வேறு படாரென்பது சொல்லப்பட்டது.]

'வசையற்றவருகின்ற' என்றது பழிப்புக்கிடமில்லாது வருகின்ற. 'குடிமரபு' என்றது உயர்குடிக்கொத்ததன்மை. 'அவ்வாறவாழ்வார்' என்றது இசைபுடன் வாழ்வார். 'அமைவில' என்றது சகுதியில்லாத, சீரியர் செட்டாலுஞ் சீரியர் சீரியரே' என்றார் பிறரும். (6)

குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

(பரி-உரை) குடிப்பிறந்தார்கண் குற்றம்-உயர்ந்த குடியின்கட் பிறந்தார் மாட்டேதாக்குற்றம், விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து விளக்கும்-தான் சிறிதேயாயினும் விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல ஒக்கித் தோன்றும் எ-று.

உயர்குடிமுதலிய பொருள்வகை மூன்றற்கும் விசும்புமுதலிய உவமை வகையொத்தப் பான் மாறுபட்டது. குடியதுயர்ச்சியானும், மதிபோன்ற அவர் கற்குணங்களோடு மாறுதலானும், உலகெல்லாம் பார்த்து வெளிப்படு மென்பதாம்.

(பத-உரை) குடிப்பிறந்தார்கண்-உயர்ந்தகுடியிற் பிறந்தவரிடத்தே (உண்டாகிற), குற்றம்-குற்றமானது, (தான்சிறிதேயாயினும்) விசும்பின்-ஆகாயத்தில், மதிக்கண்-சந்திரனிடத்து, மறுப்போல்-களங்கம்போல், உயர்ந்து-ஓங்கி, விளக்கும்-தோன்றும் எ-று.

(கருத்து) உயர்குடியிற் பிறந்தவரிடத் தண்டாங்குற்றஞ் சிறிதாயினும் சந்திரனிற் களங்கம்போலோங்கி விளங்கும் என்பதாம்.

(விசேடவுரை) உயர்ந்தகுடிக்கு விசும்பும், அதிற் பிறந்தோருக்கு மதியும், அவர் குற்றத்திற்கு களங்கமும் உவமானங்கள். குடியினது உயர்ச்சியிலு

லும், சக்கிரன்போன்ற அவர் சுற்றுணைக்களோடு மாறுதலாலும், அக்குற்றமானது உலகெங்கும் பரந்து வெளிப்படு மென்பதாம்.

'தான்' என்றது குற்றம். 'விசும்பு' என்றது வானம். 'மற' என்றது கழுக்கம். 'உயர்குடி முதலிய பொருள்வகை மூன்று' என்றது ஒழுக்கம், வாய்மை காண் ஆகிய மூன்று. விசும்பினிடத்து விளக்கும் மதியினிடத்தள்ள மற யாவருக்குந் தோன்றுதல்போல மேம்பாட்டா லுயர்ச்சிபெற்ற விளக்குவோரிடத்துத் தோன்றும் குற்றம் சிறிதளவேயாயினும் ஒக்கத் தோன்றும். உயர்குடியது சிறப்பினாலும் சுற்றுணக்களினது பரப்பினாலும் அவர்மாட்டேடாய சிறிய குற்றமும் பரந்துதோன்றும். (7)

நலத்தின்க ணூரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணிழையப் படும்.

(பரி-உரை) நலத்தின்கண் சார் இன்மை தோன்றின்-குலநலமுடையனாய் வருகின்றவன்கண்ணே சாரின்மை புனதாமாயின், அவனைக் குலத்தின்கண் ஐயப்படும்-அவனை அக்குலப்பிறப்பின்கண்ணே ஐயப்படும் உலகம் எ-று.

நலமும் குலமும் ஆகுபெயர். காரின்மையாற் கொடாமையுங் கடுஞ்சொல்லு முதலிய கூறப்பட்டன. தோன்றினென்பது தோன்றுமை விளக்கிநின்றது. நலனுடையனாய் வருதலினிடையே இவை தோன்றலின், உள்ளது ஐயமாயிற்று. உலகமென்பது அவாய்நிலையான் வந்தது. ஐயப்படலென்பது பாடமாயின், ஐயப்படுகவென விதியாக்கி முரைக்க. இவை யிரண்டுபாட்டாலும் வேறுபட்டவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது.

(ப-ரை) நலத்தின்கண்·(குல) நலமுடையானாய் வருகின்றவனிடத்தே, காரின்மை-அன்பில்லாமை, தோன்றின்-உண்டாமாயின், (உலகம்) அவனை-அம்மனிதனை, குலத்தின்கண்-அக்குலப்பிறப்பிடத்தே, ஐயப்படும்-சந்தேகப்படும் எ-று.

(க-ரை) நலமுடையவனிடத்து அன்பில்லாமை புண்டாயினவனைக் குலமுடையனல்லனென் றையப்பாட்டில் வைக்கப்படும் என்பதாம்.

(வி-ரை) நலமும் குலமும் ஆகுபெயர். அன்பில்லாமையால் கொடாமை கடுஞ்சொல் முதலானவை சொல்லப்பட்டன. தோன்றினென்பது தோன்றுமை விளக்கிநின்றது. நலனுடையனாய் வருதலினிடையே இவை தோன்றலால் உள்ளது ஐயமாயிற்று. [இவை இரண்டுபாட்டாலும் வேறுபட்ட வழிப்படு மிழுக்கும் சொல்லப்பட்டது.]

'கண்' என்றது இடத்தில். 'சாரின்மை' என்றது அன்பின்மை. காரின்மையால்' என்றது அன்பின்மையால். 'தோன்றில்' என்றது தோன்றுத லென்பதை விளக்கிநின்றது. நலனுடையானிடம் காரின்மைதோன்றின் அவனிடத்துள்ளது ஐயமாயிற்று. நலனுடையானிடத்து காரின்மை தோன்றுத லென்பது பெறப்பட்டது. (8)

நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

(பரி-உரை) நிலத்திற் கிடந்தமை கால் காட்டும் - நிலத்தினியல்பை நன்கண் முளைத்த முளை காட்டும், குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல் காட்டும்-அதுபோலக் குலத்தினியல்பை அதன்கட் பிறந்தார்வாயிற் சொற் காட்டும் எ-று.

கிடந்தமை-உள்ளபடி. முளைத்தமாத்திரத்தானே நன்மையுந் தீமையுந் தெரிதலின், இலைமுதலிய கூறுராயினார்; ஆகவே, பொருளினுஞ் செயன் முதலியன வேண்டாவாயின. குலத்தியல்பறிதற்கருவி கூறுவார்போன்று, இன்சொல் வேண்டுமென்றவாறுயிற்று.

(பதவுரை) நிலத்திற்கிடந்தமை - நிலத்தினியல்பை, கால்-(அதனிடத்தே முளைத்த) முளையானது, காட்டும் - காண்பிக்கும், (அதுபோல்) குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்-நற்குலத்தில் பிறந்தவர் வாய்ச்சொல், காட்டும் - (அக் குலத்தினியல்பைக்) காட்டும் எ-று.

(க-ரை) நிலத்தியல்பை முளை காட்டும், குலத்தியல்பை வாய்மொழி காட்டும் என்பதாம்.

(வி-ரை) கிடந்தமை - உள்ளகுணம். முளைமாத்திரத்தால் நன்மையுந் தீமையும் தெரிதலால், இலைமுதலானவை காட்டுமெனச் சொல்லாராயினர். முளை, குலத்திற் பிறந்தார்க்கும் செயல்முதலானவை வேண்டாவாயின. குலத்தியல்பறிதற்குச் சாதனம் சொல்லுவார்போன்று இன்சொல் சொல்ல வேண்டுமென்றபடியாயிற்று.

'கால்' என்றது முளை. 'கிடந்தமை' என்றது இருக்குந்தன்மை. 'தன்னினியல்பு' என்றது விளைநிலம் விளையாநிலம் இவற்றின்தன்மை. 'காட்டும்'. என்றது முளை தனது வளர்ச்சியாலும் வளர்ச்சியின்மையாலும் காட்டும். (9)

நலம்வேண்டி னுண்ணுடைமை வேண்டுங் குலம்வே
வேண்டுக யார்க்கும் பணிவு. [ண்டின்

(பரி-உரை) நலம் வேண்டின் நான் உடைமை வேண்டும் - ஒருவன் நற்குலனுடைமையை வேண்டுவனாயின் தானுண்ணுடையனாதலை வேண்டுக; குலம் வேண்டின் யார்க்கும் பணிவு வேண்டுக-குலனுடைமையை வேண்டுவனாயின், பணியப்படுவார் யாவர்மாட்டும் பணிதலை வேண்டுக எ-று.

நலம் - புகழ் புண்ணியங்கள். வேண்டுமென்பது விதிப்பொருட்டாய் நின்றது, * "வினைப்படு தொகுகிளி னும்மைவேண்டும்" என்புழிப்போல. அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்மூன்றோர் தந்தை தாயென்றிவை

* தொல்காப்பியம்: கிளவியாக்கம்-33.
† வெண்பாமாலை: பாடாண்படலம்-33.

செல்லாரு மடங்க, யார்க்கு மென்ரூர். பணிவு - இருக்கை யெழலும், எதி செலவும் முதலாயின. இவை பிரண்டுபோட்டாலும் குடிமைக்கு வேண்டுவன கூறப்பட்டன.

(ப-ரை) (ஒருவன்) கலம்வேண்டின் - (தனக்கு) கலமுடைமை வேண்டி வாஞகிய, காணுடைமை - காணமுடையவனதலை, வேண்டும்-வேண்டக்கட வன், குலம் வேண்டின் - குலமுடைமையை வேண்டுவாஞயின், யார்க்கும் (வணங்கத்தக்க) யாவரிடத்தும், பணிவு-வணக்குதலை, வேண்டுக-வேண்டக் கடவன் எ-று.

(க-ரை) கலத்தை விரும்பினால் காணத்தைக் கொள்ளக்கடவன், குலத்வை விரும்பினால் வணக்கத்தைக் கொள்ளக்கடவன் என்பதாம்.

(வி-ரை) கலம் - புகழ் புண்ணியங்கள். அந்தணர், சான்ரோர், அரு தவத்தோர், தம்முன்னோர், தந்தை, தாய் இவரெல்லாம் அடங்க. யார்க்கு மென்ரூர். பணிவு - இருக்கையெழல், எதிர்செலல் முதலாயின. [இவை இரண்டுபோட்டாலும் குடிமைக்கு வேண்டுவன சொல்லப்பட்டன.]

'காணுடையவனதலைவேண்டுக' என்றதை உயர்குடிப்பிறந்தா னொருவன் காணமுடையவனுக. 'யார்க்கும்' என்றதை வணக்கத்தக்க யாவர்க்கும். 'அந்தணர்' என்றதை (முனிவர்) சான்ரோர். 'அருந்தவத்தோர்' என்றது தம்முன்னோர், தந்தை, தாய். 'பணிவு' என்றதை இருத்தலினின்றும் எழுதல் எதிர்சென்ற வணக்கல், இன்சொல்லுரைத்தல் முதலாயின. (10

96-ம் அதி - குடிமை - முற்றிற்று.

97-ம் அதிகாரம்—மானம்

(பரி-உரை) இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறவான் தொடங்கி, முதற்கண் மானம் கூறகின்ரூர். அஃதாவது, எஞ்ஞான்றும் த கிலையிற் ரூழாமையும், தெய்வத்தாற்ரூழ்வு வந்தழி உயிர் வாழாமையுமாம். இஃது, அக்குடிப்பிறப்பினை கிறத்தலுடைமையின், அச்சிறப்புப்பற்றி மு வைக்கப்பட்டது.

(உரை) இனிக் குடிப்பிறந்தவர்க்கு உரியகுணங்கள் சொல்லத்தொடங் முதலில் மானம் சொல்லுகின்ரூர். அஃதாவது எக்காலும் தன்னிலையி தாழாமையும், ஊழால் தாழ்வு வந்தவிடத்து உயிர் வாழாமையுமாம். இ அக்குடிப்பிறப்பை அழியாமல் கிறத்துதலாலே அச்சிறப்புப்பற்றி மு வைக்கப்பட்டது.

இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்.

(பரி-உரை) இன்றி அமையாச் சிறப்பின ஆயினும் - செய்யாதவழி தாம் அமையாத சிறப்பினை யுடையவே யெனினும், குன்ற வருப விட தக்குடிப்பிறப்புத் தாழவருஞ் செயல்களை யொழிக எ-று.

அமையாமை - இறத்தல். குடிப்பிறப்பென்பது அதிகாரமுறைமையான் வந்தது. * இறப்பவருவழி இளிவந்தன செய்தாயினும் உய்கவென்னும் உடன் முறைமையை மறத்தை, உடம்பினது கீலயின்மையையும் மானத்தினது கீலயுடைமையையுங் தாக்கி அவை செய்யற்கவென்பதாம்.

(ப-ரை) இன்றியமையா - செய்யாதவிடத்தே தாம் அமையாத, சிறப்பினாயினும் - சிறப்புடையவையாயினும், குன்ற - (தங்குடிப்பிறப்பானது) தாழ, வருப-வருஞ்செயல்களை, விடல்-விடக்கடவன் எ-று.

(க-ரை) மிகவுஞ் சிறப்புடையவையாயினும் தங்குடி தாழவருஞ் செயல்களை விடக்கடவன் என்பதாம்.

(வி-ரை) அமையாமை-இறத்தல். குடிப்பிறப்பென்பது அதிகாரமுறைமையால் வந்தது. தாம் இறக்கவருமிடத்தே இழிதொழில்களைச் செய்தாயினும் பிழையென்னும் வடநூலின் முறைமையை மறத்தை உடம்பினது கீலயில்லாமையும் மானத்தினது கீலயுடைமையும் ஆராய்ந்து அவை செய்யற்காதென்றபடி.

'குடிப்பிறந்தார்' என்றது உயர்குடிப்பிறந்தார். 'தன்கீலயில் தாழாமை' என்றது உயர்குடிக்கேற்ற ஒழுக்கத்திற் குறைவுபடாமை. 'குன்ற' என்றது குடிப்பிறப்பு கீழ்மையடைய. 'வருவ' என்றது செய்யவருஞ் செயல்கள். 'விடல்' என்றது செய்யாது ஒழிக்கக்கடவன். 'இழிவந்தன' என்றது தொழத்தக்க செயல்கள். 'வடநூன்முறை' என்றது வடநூலார் கொள்கை. அவை' என்றது இகழத்தக்கசெயல்கள். விடல்' என்றது மனமொழி மெய்களானும் விடல்வேண்டு மென்பதாயிற்று. (1)

சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

(பத-உரை) சீரினும் சீர் அல்ல செய்யார் - புகழ் செய்யுமிடத்துந் தங்குடிமைக்கொவ்வாத இளிவரவுகளைச் செய்யார், சீரொடு பேராண்மை வேண்டுபவர்-புகழுடனே மானத்தை நிறுத்துதலை விரும்புவார் எ-று.

எவ்விடத்தும் கீலகுலையாத நிண்மையான் உனதாதல்பற்றிப் பேராண்மை யெனப்பட்டது. கீலயுடைய புகழின்பொருட்டாகவுஞ் செய்யாரென்பதாம்.

(ப-ரை) சீரொடு - புகழுடனே, பேராண்மை-மானத்தை நிறுத்துதலை-வேண்டுபவர் - விரும்புபவர், சீரினும் - புகழ் சம்பாதிக்குமிடத்தும், சீரல்ல(தங்குடிக்கு) ஒவ்வாத (இழிதொழில்களை), செய்யார்-செய்யார் எ-று.

(க-ரை) மானத்தை விரும்புவோர் தங்குடிக்கொவ்வாத தொழில்களைச் செய்யார் என்பதாம்.

(வி-ரை) எவ்விடத்தும் கீலகுலையாத நிடத்தால் உண்டாதல்பற்றி, பேராண்மை யெனப்பட்டது. கீலயுடைய புகழின்பொருட்டாகவும் செய்யாரென்பதாம். எ-அசைகீலை.

* மநுஸ்மிருதி: அத்தியாயம்-10. சுலோகம்-104.

'குடிமை' என்றது குடிப்பிறப்பு. 'இளிவரவு' என்றது இழிதொழி
கள். 'எவ்விடத்தும் நிலைகுலையாததிண்மை' என்றது எவ்விதத் துன்பமுற்
காலத்தும் தன்குடிப்பிறப்புக்குத் தகுதியில்லாத காரியத்தைச் செய்ய
திருக்கு மனவுறுதி. 'நிலையுடைய' என்றது நிலைத்தலையுடைய. 'ஆண்மை
என்றது ஆளுந்தன்மை. 'சீரினும்' இங்கு சீர் அதனைத்தேடுமிடத்தில் மே
நின்றது. பெருமை+ஆண்மை=பேராண்மை. (2

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டு முயர்வு.

(பரி-உரை) பெருக்கத்துப் பணிதல் வேண்டும் - குடிப்பிறந்தார்க்கு
நிறைந்த செல்வ முளதாயவழி யாவர்மாட்டும் பணிவு வேண்டும்; சிறி
சுருக்கத்து உயர்வு வேண்டும் - குறைந்த நல்குரவுளதாயவழிப் பணியாமை
வேண்டும் எ-று.

பணியாமை-தாழ்வு வாராமற் பழைய வுயர்ச்சிக்கண்ணே நிற்றல். செ
வக்காலை அஃதுயர்ச்சி செய்யத் தாந் தாழ்தலும், அல்லற்காலை அது தாழ்
செய்யத் தாமுயர்தலும், வேண்டுமென்பதாம். இவை மூன்றுபாட்டானு
தாந்தாழ்தற்கேதுவான செய்யாமைச் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) (குடிப்பிறந்தவர்க்கு) பெருக்கத்து - நிறைந்தசெல்வம் உ
டானவிடத்து, பணிதல்-(யாவரிடத்தும்) பணிவு, வேண்டும்-வேண்டும், சிறி
குறைந்த, சுருக்கத்து - வறுமையுண்டானவிடத்து, உயர்வு - பணியாமை
வேண்டும்-வேண்டும் எ-று.

(க-ரை) நற்குடியிற் பிறந்தவர்க்குச் செல்வத்தில் வணக்கமும், மறு
யில் வணங்காமையும் வேண்டும் என்பதாம்.

(வி-ரை) பணியாமை - தாழ்வுவாராமல் பழைய வுயர்ச்சியிலே நிற்ற
செல்வமுடையபோது அது உயர்ச்சிசெய்தலினாலே தாம் தாழ்தலும், வறு
யுடையபோது அதுதாழ்வு செய்தலினாலே தாம் உயர்தலும் வேண்டுமெ
பதாம். [இவை மூன்றுபாட்டாலும் தாம் தாழ்தற்கு ஏதுவானவைக
செய்யாமையின் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'நிறைந்தசெல்வம்' என்றது குறைவற்றசெல்வம். 'யாவர்மாட்டு
என்றது யாவரிடத்தும். 'பணிவு' என்றது ஒடுக்கம். 'நல்குரவு' என்
வறுமை; இதில் நல்கூர் பகுதி. 'பழைய உயர்ச்சி' என்றது முன்
வுயர்நிலை. 'செல்வக்காலை' என்றது செல்வமுற்றபோழ்து. 'அல்லற்கா
என்றது வறுமையுற்றகாலத்து. 'தாழ்தற்கேதுவாயின' என்றது ஒழ்
யுறுவதற்கேற்ற செயல்கள். 'சிறிய' இது சிறுமையென்னும் பண்பினடியா
பிறந்த குறிப்புப்பெயரெச்சம். 'உயர்வு' இதில் உயர் பகுதி.

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர் நிலையி னிழிந்தக் கடை.

(பரி-உரை) மாந்தர்-குடிப்பிறந்த மாந்தர், நிலையின் இழிந்தக்கடை-தம் முயர்ந்த நிலையைவிட்டு அதனினின்றுந் தாழ்ந்தவழி, தலையின் இழிந்த மயிர் அனையர்-தலையைவிட்டு அதனினின்றும் வீழ்ந்த மயிரினை யொப்பர் எ-று.

அந்நிலையை விடாத நின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத் தாழ்ந்த வழி இழிக்கப்படுதலும், உவமையாற் பெற்றும்.

(ப-உரை) மாந்தர்-(குடிப்பிறந்த) மனிதர், நிலையின்-(தம்முயர்ந்த) நிலையிலிருந்து, இழிந்தக்கடை - தாழ்ந்தவிடத்து, தலையினிழிந்த - தலையிலிருந்து வீழ்ந்த, மயிரனையர்-மயிர்போல்வர் எ-று.

(க-ரை) சற்குடியிற் பிறந்தவர் நிலைகெட்டவிடத்தைத் தலையிலிருந்து நீங்கிய மயிர்க்கொப்பாவர் என்பதாம்.

(வி-ரை) அந்நிலையை விடாத நின்றவிடத்தே விரும்பி மரியாதை செய்யப்படுதலும், விட்டுத் தாழ்ந்தவிடத்தே இழிவு செய்யப்படுதலும் உவமானத்தாற் பெற்றும்.

'பேணப்படல்' என்றது போற்றப்படல். 'அந்நில' என்றது உயர்நில. 'அந்நிலையைவிடாத நின்றவழி' என்றது அவ்வுயர்குடிப்பிறப்புக்குத் தக்க வாறு ஒழுகுகின்றபோது. 'விட்டுத்தாழ்ந்தவழி' என்றது இருத்தற்குரிய நன்னிலையினின்றும் நீங்கியபோழ்து. 'இழிந்தக்கடை' இதில் கடையென் பது ஏழனுருபு. மயிர் தலையிலிருக்குந்தனையும் நறுமணமிக்க தைலாதிக ளிட்டுப் பேணப்படலும் அத்தலையினின்றும் இழிந்தபோது அருவருக்கப் பட்டு ஒதுக்கப்படலும்போல மக்கன்நிலையும் அத்தகைத்தாம் என்றபடி. (4)

குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.

(பரி-உரை) குன்றின் அனையாரும்-குடிப்பிறப்பான் மலைபோல வுயர்ந் தோரும், குன்றுவ குன்றி அனைய செயிற் குன்றுவர் - தாழ்தற்கேதுவாகிய செயல்களை ஒரு குன்றியளவாயினுஞ் செய்வராயிற்றாழ்வர் எ-று.

குன்றியனையவுமென்னும் இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தாழ்தற்கேதுவாய செயல்களாவன இளிவந்தன. சொற்பின்வருநிலை.

(ப-ரை) குன்றினனையாரும்-(குடிப்பிறப்பால்) மலைபோலுயர்ந்தவரும், குன்றுவ-தாழ்வதற்கு ஏதுவாகிய செயல்களை, குன்றியனைய - ஒருகுன்றியள வாயினும், செயின்-செய்தலால், குன்றுவர்-தாழ்வர் எ-று.

(க-ரை) மலையை நிகர்த்த குடிப்பிறப்பாளரும் தாழ்தற் கேதுவான செயல்களைச் செய்தால் தாழ்வார்கள் என்பதாம்.

(வி-ரை) குன்றியனையவும் என்கிற இழிவுசிறப்புவும்மை விகாரத்தால் தொக்கது. தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களாவன-பழிக்கப்படுஞ்செயல்கள்.

'மலைபோல உயர்ந்தோர்' என்றது சேய்மைக்கண்ணும் காட்சியாலும் பல்வனத்தாலும் யாகர்க்குச் சலக்குவதபோல ஒப்புயர்வற்ற தகுதியால் விளக்குபவர். மலை சொல்லப்பட்டபடியால் அதனளவுக்குச் சிறிய குன்றி மணி கூறப்பட்டது. மலையொத்த தகுதியுடையாராயினும் குன்றிமணியளைய சிறிய தகுதியற்றதைச் செய்யின் தாழ்ச்சியடைவர் என்பதாயிற்று. குன்றி என்ற முன்வந்த சொல்லே பின்னும் வந்தமையால் சொற்பின்வருநிலை யணியாகும். "முன்வருஞ்சொல்லும் பொருளும் பலவயிற் பின்வரு மென்னிற் பின்வருநிலையே" (5)

புகழின்ரூற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

(பரி-உரை) இகழ்வார்பின் சென்ற நிலை-மானத்தை விட்டுத் தன்னை யவமதிப்பார் பின்னே ஒருவன் சென்ற நிற்கின்றநிலை, புகழ் இன்ற-இவ் வுலகத்துப் புகழ் பயவாத, புத்தேள் நாட்டு உய்யாத-எனைப் புத்தேளுலகத்தச் செலுத்தாத, மற்று என்-இனி அவனுக்கு அது செய்வதியாது எ-று.

புகழ் பயப்பதனைப் புகழென்றார். பயனுய இவ்விரண்டுமின்றிக் கொன்னே மானம் கெடுகின்றது என்னை யென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அவை செய்தற் குற்றம் கூறப்பட்டது.

(ப-உரை) இகழ்வார்பின்-(தம்மை) அவமதிப்பவர்பின்னே, சென்றநிலை-(ஒருவன் மானம்விட்டுச்) சென்ற நிற்கின்றநிலை, புகழின்ற-(இவ்வுலகத்துப்) புகழுண்டாக்காத, புத்தேணாட்டு-மற்றைத் தெய்வலோகத்திலே, உய்யாது-செலுத்தாத, மற்று-இனி, என்-(அவனுக்குச் செய்வது) யாது? எ-று.

(க-உரை) இகழ்பவர் பின்செல்லுவோர் சில புகழை புண்டாக்காத தேவருலகத்துச் செலுத்தாது என்பதாம்.

(வி-உரை) சில் இரண்டும் அசைகள். புகழுண்டாக்குவ புகழென்றார். பயனுய இவ்விரண்டும் இல்லாமல் வீணுக மானங் கெடுகின்றது! என்னவென் பதாம். [இவை மூன்றுபாட்டானும் அவை செய்தற்குற்றம் சொல்லப் பட்டது.]

'நிற்கின்றநிலை' என்றது ஒழுகுகின்றதன்மை. 'புத்தேள்' என்றது விண்ணவர். 'செய்வது யாது' என்றது பயனில்லை யென்றபடி. தன்னை யவமதிப்பான் பின்னே தன்குடிக்குத்தக்க மானத்தைக் கைக்கொள்ளாது விடுத்தற்கு நிரியின் உலகமும் அவனை அவமதிக்கும், விண்ணுலகமும் அவமதிக்கும். ஆதலின் இருமையினும் பயனின்று என்றபடி. 'இன்று' இது இன்மையினடியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று. எவன் என்பது என்னுயிற்று." (6)

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று.

(பரி-உரை) ஒட்டார் பின் சென்ற ஒருவன் வாழ்தலின் - தன்னை யிகழ்வார் பின்னேசென்ற பொருள்பெற்ற அதனலொருவன் உயிர் வாழ்தலின், அங்கிலையே கெட்டான் எனப்படுதல் கன்று-அது செய்யாது இறந்தானென்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று எ-று.

ஒட்டுதல் - பொருந்துதல். அங்கிலையே யென்றது செல்லாத முன்னை நிலைக்கண்ணே நின்றென்றவாறு; அப்பொழுதேயென்றுமாம். புகழும் புத்தே ளுலகும் பயவாதேனும் பொருள்பெற்று உயிர்வாழ்வா மென்பாரை நோக்கிக் கூறியது.

(பத) ஒட்டார்பின் - (தன்னை) இகழ்வார்பின்னே, சென்ற-போய், (பொருள் பெற்ற) ஒருவன் வாழ்தலின்-(அதனால்) ஒருவன் உயிர்வாழ்தலைக் காட்டிலும், அங்கிலையே-முன்னை நிலையிலேநின்று, கெட்டானெனப்படுதல்-இறந்தானென்று சொல்லப்படுதல், நன்று-(அவனுக்கு) நன்று எ-று.

(கரை) ஒருவனிகழ்பவர் பின்சென்று வாழ்தலினும் முன்னிலையிலிருந் திறந்தானென்று சொல்லப்படுதலே நல்லது என்பதாம்.

(வி-உரை) புகழும் வானுலகமும் உண்டாக்காதேனும் பொருள்பெற்று உயிர்வாழ்வமென்பாரை நோக்கிச் சொல்லியது.

'அதனால்' என்றது பின் செல்லுதலால். 'உயிர்வாழ்தல்' என்றது ஜீவனம் செய்தல். 'அது' என்றது இகழ்வார்பின் செல்லுகை. 'ஒட்டுதல்' என்றது ஒன்றுதல்; அதாவது மனவாக்குக்காயங்களில் ஒத்தாடத்தல். 'ஒட்டார்' என்றது இவைகளுக்குமாறுவார். 'அங்கிலை' என்றது இகழ்வார்பின்னே செல்லாத தன் குடிப்பிறப்புக் கேற்றவாறு ஒழுகியநிலையில். 'கெட்டான்' என்றது அழிந்தான். 'ஒட்டார்' இதில் ஒட்டு பகுதி. (7)

மருந்தோமற் றூனேம்பும் வாழ்க்கை பெருந்தகை பீடழிய வந்த விடத்து. [மை

(பரி-உரை) பெருந்தகைமை பீடு அழிய வந்தவிடத்து-உயர்குடிப்பிறப் புத் தன் வலியாகிய மானம் அழியவந்தழி, ஊன் ஓம்பும் வாழ்க்கை மற்று மருந்தோ-இறத்தலொழிந்த பயனில்லாத வுடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னு மிறவாமைக்கு மருந்தாமோ? எ-று.

மற்றென்பது மேற்சொல்லிய இறப்பினை மாற்றிநின்றது. நற்குணங்கட் கெல்லாம் இடனுதற் சிறப்புப்பற்றிப் பெருந்தகைமையென்றும், அவை யெல்லாவற்றன்னும் அதற்கு வலியாதற்சிறப்புப்பற்றிப் பீடென்றும், அஃ தழிந்தால் நின்ற வெற்றுடம்பு இழிக்கப்படுதலின் அதனை ஊனென்றும், பின்னு மிறத்தல் ஒருதலையென்பார் மருந்தோவென்றுங் கூறினர். மானத் தின்மேலழிவு அதற்கிடனாகிய குடிப்பிறப்பின்மேனின்றது.

(பத) பெருந்தகைமை - உயர்குடிப்பிறப்பானது, பீடு-(தன்) வலியா யெ மானம், அழியவந்தவிடத்த-கெடவந்தபோது, ஊனேம்புஉ - (இறத்த

போகாமல் பயனில்லாத) உடம்பைக் காப்பாற்றும், வாழ்க்கை - வாழ்வானது, மற்று மருந்தோ-(பின்னு மிறவாமைக்கு) மருந்தாமோ? எ-று.

(க-ரை) மானமழியவந்தபோது உடலைக் காப்பாற்றும் வாழ்வானது இறவாமைக்கு மருந்தாமோ என்பதாம்.

(வி-ரை) அக்குடிப்பிறப்பு நற்குணங்களுக்கெல்லாம் இடனாதற் சிறப்புப்பற்றி பெருந்தகைமையென்றும், அக்குணம் பலவினும் மானமானது அக்குடிப்பிறப்புக்கு வலியாதற் சிறப்புப்பற்றி பீடென்றும், அம்மானம் அழிந்தால் நின்ற வெற்றுடம்பு இழிக்கப்படுதலால் அதனை ஊனென்றும், பின்னு மிறத்தல் நிச்சயமென்றற்கு மருந்தோவென்றும் சொல்லினார்.

'பயனில்லாத உடம்பு' என்றது மானமழிந்த வுடம்பு. உயர் குடிப்பிறப்பு நற்குணங்களுங்கெல்லாங் காரணமாதல்பற்றி பெருந்தகைமையெனப்பட்டது. 'பீடு' என்றது வலிமையாகிய மானம்; இது மற்றவைகளுக்கு வலியாதல்பற்றி பீடு எனப்பட்டது. ஏனைய நற்குணங்களுக்கெல்லாம் வலிதாதலையுடைய மானமழிந்துழி வெற்றுடம்புக்குச் சிறப்பில்லையாதல்பற்றி ஊன் என்றிழிக்கப்பட்டது. மானத்தின்றொழில் அதற்கிடனாகிய குடிப்பிறப்பின்மேல் நின்றது. (8)

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர்நீப்பர் மானம் வரின்.

(பரி உரை) மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் - தன் மயிர்த்திரளின் ஒரு மயிர்நீங்கினும் உயிர்வாழாத கவரிமாவையொப்பார், மானம் வரின் உயிர் நீப்பர் உயிர் நீங்கத் தான் மானமெய்து மெல்லைவரின் அதனைத் தாங்காதிறப்பர் எ-று.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. உயிரும் மானமும் உடனில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரை நீத்து எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தை யெய்துவரென்பதாம். உவமை அவர்க்கு அஃதியல்பென்பது விளக்கி நின்றது.

(ப-ரை) மயிர் நீப்பின்-(தன் மயிர்த்திரளில்) ஒரு மயிர்நீங்கினும், வாழா-உயிர் வாழாத, கவரிமா வன்னார் - கவரிமாவை யொப்பவர், 'மானம் வரின்-(உயிர் நீங்குதற்கான) மானம் பெறுமளவு வரின், உயிர்-அவ்வுயிரை, நீப்பர்-விடுவர் எ-று.

(க-ரை) கவரிமானுக்கொப்பானவர் மானங்கெடவரி னுயிரை விட்டு விடுவர் என்பதாம்.

(வி-ரை) நீப்பினுமென்னு மும்மை தொக்குநின்றது. உயிரு மானமும் உடனில்லாவிடத்துப் பின்னும் போவதாகிய வுயிரைநீக்கி எந்நாளு நிற்பதாகிய மானமடைவரென்பதாம். உவமானம் அவர்க்கு அது இயல்பென்பது விளக்கியது.

'உயிர்நீக்கம்' என்றது உயிர்விடல். 'அதனை' என்றது அவ்வுடலை; மயிர் நீங்கினும் என்ற இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. 'நீத்து' என்றது விடுத்து; இதில் 'நீ' பகுதி. 'நிற்பதாய' என்றது நிலைபெற்று விளங்குவதாகிய. 'அன்னார்' இது அன்ன என்ற உவமவிடைச்சொல்லடியாகப் பிறந்த பெயர். கவரிமான் தன் மயிர்த்திரளில் ஒரு மயிர் நீங்கினும் உயிர்விடுவது போல உயர்குடிப்பிறந்தார் மானமழியவரின் உயிர்வைத்திரார் என்றபடி. (9)

இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு.

(பரி-உரை) இளி வரின் வாழாத மானம் உடையார் ஒளி-தமக்கோரிழிவு வந்துழிப் பொறுத்து உயிர் வாழாது அதனை நீத்த மானமுடையாரது புகழ் வடிவினை, தொழுது ஏத்தும் உலகு - எஞ்ஞான்றுந் தொழுது துதியாநிற்பர் உலகத்தார் எ-று.

* "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவ னேவா வான ஊர்தி-யெய்து" வராகலின், துறக்கச் செலவு சொல்லவேண்டாவாயிற்று. இவை நான்குபாட்டானும் மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) இளிவரின் - (தமக்கு) ஓரவமானம் வந்தவிடத்து, வாழாத-(பொறாமல்) உயிர்வாழாத, மானமுடையார்-மானமுடையவரது, ஒளி-புகழ் வடிவை, உலகு - உலகத்தார், தொழுதேத்தும் - (எந்நாளுந்) தொழுது துதியாநிற்பர் எ-று.

(க-ரை) அவமானம் வந்தபோது உயிர்பெற்று வாழாத மானமுடையவர் புகழ்வடிவை யுலகத்தார் துதிப்பர் என்பதாம்.

(வி ரை) புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவனேவா வான ஊர்தி யெய்துவராதலால் சுவர்க்கம் பெறுதல் சொல்லவேண்டாவாயிற்று. இவை நான்கு பாட்டாலும் மானப்பொருட்டாகிய இறப்பின் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'உயிர்வாழாது' என்றது உயிர் வாழாமல். 'அதனை' என்றது அவ்வுயிரை. 'புகழ்வடிவு' என்றது புகழோடுகூடிய அவர் உருவை; அதாவது சூக்குமவடிவு. 'எஞ்ஞான்றும்' என்றது உலகுள்ளளவும். 'உலகு' இது இடவாகுபெயராய் உலகத்து வாழும் மக்களையுணர்த்தும். "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவன் ஏவா வான வூர்தி, யெய்துவர்" (புறநானூறு-27) என்பதற்குப்பொருள்: புலவராற் பாடப்படும் புகழையுடையோர் வானத்தின் கண்ணே பாகனாற் செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவார். ஆதலின் மேலுலகத்திற்குச் செல்லுதல் சொல்லவேண்டாவாயிற்று. (10)

97-ம் அதி - மானம் - முற்றிற்று.

---

* புறநானூறு-27.

98-ம் அதிகாரம்—பெருமை

(பரி உரை) அஃதாவது: செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர் குற்றங் கூறாமை என்றிவைமுதலிய நற்குணங்களாற் பெரியாரது தன்மை. நிலையினு மேன்மே லுயர்த்தற் பயத்தவாயவிவை உளவாவது நிலையிற் றாழாமை யுள்வழியாகலின் இது மானத்தின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: செய்தற்கரிய செய்தல், செருக்கில்லாமை, பிறர் குற்றஞ் சொல்லாமை என்றிவை முதலாகிய நற்குணங்களாலே பெரியராயினோரது தன்மையாம். நிலையிலிருந்து மேலுமேலும் உயர்த்துவதாகிய இக்குணங்கள் உண்டாவது நிலையிலிருந்து தாழாமை உள்ளவிடத்தேயாகலால் இது மானத்தின்பின் வைக்கப்பட்டது.

ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற் கஃதிறந்து வாழ்து மெனல்.

(பரி-உரை) ஒருவற்கு ஒளி உள்ள வெறுக்கை-ஒருவனுக்கொளியாவது பிறராற் செயற்கரிய செய்வேமென்று கருதும் ஊக்கமிகுதி, ஒருவற்கு இளி அஃது இறந்து வாழ்தும் எனல் - ஒருவனுக்கு மாசாவது அச்செயலை யொழிந்து உயிர் வாழக்கடவேமென்று கருதுதல் எ-று.

ஒளி-தானுளனாயகாலத்து மிக்குத் தோன்றுதலுடைமை. * "ஒளிநிறானோக்கு புகழ் செய்யான்" என்றார் பிறரும். மேலும் † 'செயற்கரிய செய்வார் பெரிய' ரென்றாராயினும், ஈண்டு அவை அளவிறந்த வொப்புரவு ஈகை முதலியவாம். அவற்றினானாய பெருமையை அதன் காரணத்தின்மேலிட்டு உள்ளவெறுக்கையென்றும், அது தன்னையே அதன்காரியமாகிய ஒளியாக்கியுங் கூறினார்- இவ்வாறு இதனெதிர்மறைக்கண்ணுமொக்கும். இதனாற் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது.

(பரை) ஒருவற்கு-ஒருவனுக்கு, ஒளி-ஒளியாவது, உள்ள வெறுக்கை (பிறராலே செய்தற்கரியவைகளைச் செய்வோமென்று நினைக்கிற்) மனவெழுச்சியின் மிகுதி, ஒருவற்கு-ஒருவனுக்கு, இளி-மாசாவது, அஃதிறந்து அச்செயலை யொழிந்து, வாழ்துமெனல் - உயிர் வாழக் கடவோமென்று நினைத்தல் எ-று.

(க-ரை) ஒருவனுக் கொளியாவது மனவெழுச்சியாம். இளியாவது மனவெழுச்சி யில்லாமையாம் என்பதாம்.

(வி-ரை) ஒளி - தான் உளனாயகாலத்து மிகுந்து தோன்றுதலுடைமை முன்னும் செய்தற்கரிய செய்வார் பெரியரென்றாராயினும் இங்கே அவை

* "உண்ணா னொளிநிறா னோக்கு புகழ்செய்யான், றுன்னருங் கேளி துயர்களையான்-கொன்னே, வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அவ விழந்தானென் றெண்ணப் படும்." நாலடியார்: செல்வநிலையாமை-9.

† திருக்குறள்: 3-ம் அதி. நீத்தார்பெருமை-6.

அளவிறந்த உபகாரம் ஈகை முதலானவையாம். அவைகளினாலாகிய பெருமையை அதன் காரணத்தின் மேலிட்டு உள்ள வெறுக்கையென்றும், அதனையே அதன் காரியமாகிய ஒளியாக்கியும் சொல்லினார். [இதனாற் பெருமையின் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'செயற்கரிய செய்தல்' என்றது செய்தற்கரியவற்றைச் செய்தல். 'தருக்கின்மை' என்றது செருக்கின்மை. 'நிலையினும்' என்றது தான் நிற்கு நிலையினும். 'மேன்மே லுயர்த்தற் பயத்தவாய இவை' என்றது மேன்மேலும் உயர்ச்சியைத் தருவனவாகிய இந்நற்குணங்கள். 'நிலையிற்றாழாமை' என்றது தன்னிலையிற்றிரியாது. 'ஒளி' என்றது புகழ்தருவது. 'மாசு' என்றது குற்றம். 'ஒப்புரவு' என்றது உயர்ந்தோர் ஒப்பவொழுகுதல். அவற்றானாய பெருமையை அவற்றை யடைதற்குக் காரணமாகிய ஊக்கத்தின் மேலிட்டு வெறுக்கையென்றார். 'அஃதுஇறந்து' என்றது செய்தற்கரிய செயலைச் செய்யாதொழிந்து. வாழ்தும்' என்றது வாழ்வோம். இதில் 'தும்' விகுதி எதிர்காலங் காட்டிற்று. (1)

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்.

(பரி-உரை) எல்லாவுயிர்க்கும் பிறப்பு ஒக்கும்-எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமேயெனினும், சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்-பெருமை சிறுமை யெனப்பட்ட சிறப்பியல்புக ளொவ்வா அவை செய்யுந் தொழில்களது வேறுபாட்டான் எ-று.

வேறுபாடு-நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும், இரண்டுமல்லவாயினவுமாய அளவிறந்த பாகுபாடுகள். வினைவயத்தாற் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்திநின்று அதன்பயனநுபவித்தல் எல்லா வருணத்தார்க்குமொத்தலிற் பிறப்பொக்குமென்றும், பெருமை சிறுமை ஒட்குக் கட்டளைக்கல்லாகிய தொழிற் பாகுபாடுகள வருணந்தோறும் யாக்கை தோறும் வேறுபடுதலிற் சிறப்பொவ்வாவென்றுங் கூறினார்.

(ப-ரை) எல்லா வுயிர்க்கும்-எல்லா மக்களுயிர்க்கும், பிறப்பு-(பொதுவாகிய) பிறப்பியல்பு, ஒக்கும்-ஒத்திருக்கும், (ஆயினும்) சிறப்பு - (பெருமை சிறுமை எனப்பட்ட) சிறப்பியல்புகள், ஒவ்வா-ஒத்திடாவாம், செய்தொழில்-செய்யுந் தொழில்களது, வேற்றுமையான்-வேறுபாட்டால் எ-று.

(க-ரை) மக்களுக்குப் பிறப்பியல்பு ஒத்திருக்கும், தொழில் வேற்றுமையாற் சிறப்பியல்பு ஒவ்வாவாம் என்பதாம்.

(வி-ரை) வேறுபாடு - நல்லவையும், தீயவையும், இரண்டுமானவையும், இரண்டு மல்லாதவையும் ஆகிய பல பிரிவுகள். வினைவசத்தால் பஞ்சபூத காரியமாகிய உடம்பைப் பொருந்திநின்று அதன் பயனனுபவித்தல் எல்லா ஒக்கும் ஒத்திருத்தலால் பிறப்பொக்குமென்றும், பெருமை சிறுமைகளுக்குக்

கட்டளைக்கல்லாகிய தொழிற்பிரிவுகள் உடம்புதோறும் வேறுபடுதலால் சிறப்பொவ்வாவென்றும் சொல்லினார்.

'எல்லாமக்களுயிர்க்கும்' என்றது இருபிரிவாகிய ஏற்றத்தாழ்வுடைய எல்லா மக்களுக்கும் அன்றி 'மக்கடாமே யாறறிவுயிரே' யென்றபடி மன வுணர்ச்சியோடுகூடிய ஏற்றத் தாழ்வென்ற விருபிரிவுக்குட்பட்ட மக்களாகிய உயிர்க்கும் என்றுமாம். 'வினை' என்றது நல்வினை தீவினை. வினைவயத்தால் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்திநின்று அதன்பயனனுப வித்தல் எல்லா மக்களுக்குமொத்தலிற் பிறப்பொக்குமென்றும் பெருமை சிறுமைகட்குக் கட்டளைக்கல்லாகிய தொழில் வேறுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் மாறுபடுதலின் சிறப்பொவ்வாவென்றுங் கூறினார். 'யாக்கை' என்றது எலும்பு தசை முதலிய சப்ததாதுக்களால் கட்டப்பட்டது; இதில் யா-பகுதி. இங்கு 'வருணம்' என்றது தொழில்பற்றிவந்த பிரிவு; அந்தணர், (முனிவர்) அரசர், வணிகர், வேளாளர் ஆவர். (2)

மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங் கீழல்லார் கீழல் லவர்.

(பரி-உரை) மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர்-* செயற் கரிய செய்கலாது சிறியராயினார், உயர்ந்த வமளி முதலியவற்றின் மிசை யிருந்தாராயினும் பெரியராகார், கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழ் அல்லார்- அவை செய்து பெரியராயினார் தாழ்ந்த வெறுநிலத்திருந்தாராயினும் சிறிய ராகார் எ-று.

மேலிருத்தல் கீழிருத்தல்களாற் செல்வநல்குரவுகளும், மேல் கீழ்களா பெருமை சிறுமைகளும் கருதப்பட்டன. இவை யிரண்டு பாட்டானும் முறையே குடிமைமாத்திரத்தானுஞ் செல்வமாத்திரத்தானும் அஃதுள தாகாமை கூறப்பட்டது.

(ப-ரை) மேலல்லார்-(செய்தற்கரியவைகளைச் செய்யமாட்டாமல்) சிறிய ராயினோர், மேலிருந்தும்-உயர்ந்த ஆதனங்களில் இருந்தாராயினும், மேலல் லர்-பெரியராகார், கீழல்லவர்-(அவை செய்து) பெரியராயினோர், கீழிருந்தும் தாழ்ந்த வெறுநிலத்தில் இருந்தாராயினும், கீழல்லார்-சிறியராகார் எ-று.

(க-ரை) சிறியவர் மேலிருந்தாலும் பெரியவராகார், பெரியவர் கீழிரு தாலுஞ் சிறியவராகார் என்பதாம்.

(வி-ரை) மேலிருத்தல் கீழிருத்தல்களாலே செல்வ வறுமைகளும், மே கீழ்களாலே பெருமை சிறுமைகளும் கருதப்பட்டன. [இவை இரண்டு பா டாலும் முறையே குடிப்பிறப்புமாத்திரத்தானும், செல்வமாத்திரத்தாலு பெருமை உண்டாகாமை சொல்லப்பட்டது-]

* திருக்குறள் 3-ம் அதி-நீத்தார்பெருமை-6.

'செயற்குஅரிய' என்றது செய்தற்கு அரியசெயல்கள். 'அமளி' என்றது படுக்கை. 'வெறுநிலம்' என்றது அமளிமுதலிய அணையில்லாத வெறிய நிலம். 'மேல்அல்லர்' என்றது மேலான குணமுடைய பெரியாரல்லர். 'கீழ்அல்லார்' என்றது கீழ்மைத்தன்மையுடைய சிறியாரல்லர். (3)

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகு மண்டு.

(பரி உரை) ஒருமை மகளிரே போல - கவராத மனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாமற் றம்மைத் தாங்காத்துக்கொண் டொழுகுமாறு போல, பெருமையும் தன்னைத்தான் கொண்டு ஒழுகின் உண்டு - பெருமைக் குணமும் ஒருவன் நிறையின் வழுவாமற் றன்னைத்தான் காத்துக்கொண் டொழுகுவானுயின் அவன்கணுண்டாம் எ-று.

பொருளின் றொழில் உவமையினும் வந்தது. கற்புண்டாதல் தோன்ற நின்றமையின் உம்மை எச்சவும்மை. ஒழுகுதல் - மனமொழி மெய்களை யொடுக்கி ஒப்புரவுமுதலிய செய்தபோதல். இதனால் அஃதனதாமாறு கூறப்பட்டது.

(ப-ரை) ஒருமை-பிளவுபடாத மனத்தையுடைய, மகளிரேபோல-கற் புள்ள மாதரைப்போல, பெருமையும் - பெருமைக்குணமும், தன்னைத்தான்- தன்னைத்தானே, கொண்டொழுகின் - (ஒருவன் நிறையின் வழுவாமல்) காத் துக்கொண்டு நடக்கவல்லனுயின், உண்டு - (அவனிடத்து) உண்டாம் எ-று.

(க-ரை) பெருமைக்குணமுங் கற்புள்ள மாதரைப்போலத் தன்னைக் காத்துக்கொண்டவனுக்குண்டு என்பதாம்.

(வி-ரை) ஒழுகுதல் - மனமொழி மெய்களை அடக்கி உபகாரமுதலா னவை செய்து வருதல். [இதனால் பெருமை உண்டாமாறு சொல்லப் பட்டது.]

'கவராமனம்' என்றது வஞ்சம் பொருந்திய மனம். 'நிறை' என்றது பெரியார் கற்பித்த நெறியில் தன்னை நிறுப்பதற்கு நெஞ்சுண்டாம்தன்மை. 'கற்பு' என்றது கற்றறிந்தார் கற்பித்த கல்வி. கற்பெனப்படுவது சொற்றிறம் பாமையென்றார் பிறரும். 'கற்பு' இதில் கல்-பகுதி; பு விகுதி 'ஒழுகுதல்' என்றது மனமொழி மெய்களையொடுக்கி ஒருவழிப்படுத்தி ஒப்புரவுசெய்தல். 'ஒப்புரவு' என்றது உலகம் ஒப்பக்கூடிய நற்செயல். 'ஒருமைமகளிர்' என்றது கொண்டகொள்கையினின்று மாறுபடாத ஒருமனப்பட்ட மகளிர். (4)

பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல்.

(பரி உரை) பெருமை உடையவர் - அவ்வாற்றுற் பெருமையுடையராயி ஞர், அருமை உடைய செயல் ஆற்றின் ஆற்றவர் - தாம் வறியராயவழியும்

பிறரால் செய்தற்கரியவாய தம்செயல்களை விடாது அவை செய்புதெறியால் கடைபோகச் செய்தலே வல்லாவர் எ-று.

வறியாயகழிபுமென்பதை முன்செய்த போக்தமை தோன்றப் பெருமையுடையவ சென்றதனானும், ஊற்றவாசென்றதனானும் பெற்றும். இதனால் அதனையுடையார் செய்தி கூறப்பட்டது.

(ப-ரை) பெருமையுடையவர்-(அவ்வழியாலே) பெருமையுடையவராயினர், (தாம் வறியாகிய வழியும்) அருமையுடைய - (பிறராலே செய்தற்கு) அருமையுடையவையாகிய, செயல் - (தஞ்) செயல்களை, ஊற்றின் - (அவை செய்யும்) வழியால், ஊற்றவார் (மூடிவுபெறச்) செய்யவல்லவராவர் எ-று.

(க-ரை) பெருமையுடையோர் அருமையுடைய செயல்களைச்செய்வர் என்பதாம்.

(வி-ரை) அரிய செயல்களை முன்செய்த வன்தமைதோன்ற பெருமை யுடையவசென்றதனாலும், ஊற்றவாசென்றதனாலும், வறியாகிய வழிபு மென்பது பெற்றும். [இதனால் அதனையுடையார் செய்தி சொல்லப்பட்டது.]

'அவ்வாற்றால் பெருமையுடையாரினர்' என்றது குடிப்பிறப்புக்குத் தக தன்னைக் காத்துக்கொள்ளுந்திறத்தால் பெருமையுடையார். 'தஞ்செயல்' என்றது தக்தகுதிக்கேற்ற வுயர்ந்தசெயல். 'கடைபோகச்செய்தல்' என்றது மூடிவுபெறச்செய்தல். 'அவ்வழியாலே' என்றது தன்னிலையிற் றவராகில வில் ஒழுகுவதனாலே. 'அருமையுடைய' என்றது தன்னைக் காத்தொழுகும் பெருமைக்குண மில்லாதாருக்குச் செய்தற்கு அருமையாகிய. (5)

சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப் பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

(பரி-உரை) பெரியாரைப் பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு· அப்பெற்றியாய பெரியாரை வழிபட்டு அவரியல்பினை யாங் கோடுமென் னுங் கருத்து, சிறியார் உணர்ச்சியுள் இல்லை·மற்றைச் சிறியாரினர் மனத் தின்கண் உளதாகாது எ-று.

குடிமை, செல்வம், கல்வி யென்றிவற்றது உண்மைமாத்திரத்தால் தம்மை விபத்திருப்பார்க்கு அவை கமக்கியல்பென்று அமைந்திருப்பாரை வழிபட்டு அஃதடையாதல் கடாதென்பதாம்.

(ப-ரை) பெரியாரை - (அப்படிப்பட்ட) பெரியாரை, பேணி-வழிபட்டு, கொள்வேமென்னும் - (அவரியல்பைக்) கொள்வேமென்னும், நோக்கு· கருத்து, சிறியார் - மற்றச் சிறியாரினோது, உணர்ச்சியுள் - மனத்தி னிடத்து, இல்லை-உண்டாகாது எ-று.

(க-ரை) பெரியாரை வழிபட்டுக் கொள்வோமென்னும் கருத்துச் சிறியோர் மனத்திடத்தில்லை என்பதாம்.

(வி-உ) குடிமை செல்வம் கல்வி யென்றிவை புடையவராயிருக்கை மாத்திரத்தால் தம்மை வியர்திருப்பார்க்கு அவை அமைக்கியல்பென்ற அடக்கி யிருப்பாரை வழிப்பட்டு அவ்வியல்புடையாராதல் கூடாதென்பதாம்.

'அப்பெற்றியாராய' என்றது அப்பெருமைக்குணமுடையவராகிய. "யாக் கோடும்' என்றது யாம் கைக்கொள்வோம். 'சிறியார்' என்றது சிறுமை யென்னும் பண்படியாகப்பிறந்த பெயர். (6)

இறப்பே புரிந்த தொழிற்ருஞ் சிறப்புந்தான்
சோல் லவர்கட் படின்.

(பரி-உரை) சிறப்புத் தானும்-தனக்கொக்கும் பெரியாரிடத்த அமைந் திருத்தலைச் செய்வதாய சிறப்புத்தானும், சீர் அல்லவர்கட் படின்-தனைச் சொல்லாத சிறியாரிடத்துப் படுமாயின், இறப்பே புரிந்த தொழிற்ரும்-அதனை யொழிந்த தருக்கின்கண்ணே மிக்க செயலுடைத்தாம் எ-று.

தருக்கினை மிகச் செய்யுமென்பதாயிற்று. சிறப்பு-குடிமை, செல்வம், கல்விகளினும மிகுதி. இவை மூன்றுபோட்டானும் அஃதிலார் செய்தி கூறப் பட்டது.

(ப-உ) சிறப்பும்-(தனக்குத் தகும் பெரியாரிடத்த அடக்கியிருத்தலைச் செய்வதாகிய) சிறப்பும், தான்-தான், சோல்லவர்கட்படின்-(தனக்குத் தகாத) சிறியாரிடத்த உண்டாமாயின், இறப்பே புரிந்த-(அடக்கியிருத்த லொழிந்த) செருக்கினிடத்திலே மிகுந்த, தொழிற்ரும்-செயலுடைத்தாம் எ-று.

(க-உ) சிறப்புஞ் சிறியவரிடத்தண்டாயின் செருக்கிலே மிகுந்த தொழிலுடையதாம் என்பதாம்.

(வி-உ) செருக்கினை மிகச் செய்யுமென்பதாயிற்று. சிறப்பு - குடிமை செல்வக் கல்விகளினுலாகிய மிகுதி. [இவை இரண்டுபோட்டாலும் அஃதில் லாதார் செய்தி சொல்லப்பட்டது.]

'அமைந்திருத்தல்' என்றது இயல்பாகப் பொருந்தியிருத்தல். 'பெரி யோர்' என்றது அரசர் முதலியோர். 'அடக்கியிருத்தல்' என்றது மன மொழி மெய்களில் அடக்கியிருத்தல். 'தருக்கின்கண்ணே மிக்க செயலு புடைத்தாம்' என்றது மிகுந்த செருக்கில் ஆற்றார். (7)

பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

(பரி-உரை) பெருமை என்றும் பணியும்-பெருமையுடையார் அச்சிறப் புண்டாயஞான்றுந் தருக்கின்றி அமைந்தொழுகுவர், சிறுமை (என்றும்) தன்னை வியந்த அணியும்-மற்றைச் சிறுமையுடையார் அஃதில்லாதஞான்றும் தம்மை வியந்த புனையாகிற்பர் எ-று.

பொருளின் றொழில்கள் பண்பின்மேலேற்றப்பட்டன. இஃது * அற்ற மறைக்கும் பெருமை யென்புழியுமொக்கும். என்றுமென்ப. பின்னும் வந்தியைந்தது. ஆமென்பன இரண்டும் அசை. புனைதல் - பிறரிற் றமக்கோர் மிகுதியை யேற்றிக்கோடல். இதற்கு உயர்ந்தார் தாழ்வார் தாழ்ந்தார் உயர்வார் இஃதொரு விரோதமிருந்தா றென்னென உலகியலை வியந்து கூறிற்றாக்குவாருமுளர்.

(ப-ரை) பெருமை - பெருமையுடையவர், என்றும் - சிறப்புண்டாகிய நாளிலும், பணியும்-அடங்கிநடப்பார், சிறுமை-(மற்றைச்) சிறுமையுடையவர், என்றும்-அது இல்லாதநாளிலும், தன்னை வியந்து-தம்மை மெச்சி, அணியும்-சிறப்பிப்பார் எ-று.

(க-ரை) பெருமையுடையவர் சிறப்புண்டாகியகாலத்து மடங்கி நடப்பர், சிறுமையுடையவர் சிறப்பில்லாகாலத்துந் தம்மைச் சிறப்பித்து நடப்பர். என்பதாம்.

(வி-ரை) †"பல்லோர் படக்கை முன்னிலை தன்மையிற் செல்லாதாகுஞ் செய்யுமென் முற்றே." என்ற விலக்கணத்திற்கு மாறாயினு மதற்குக்காரணம் பண்புடையவர் தொழில்கள் பண்பின்மேல் ஏற்றப்பட்டன. இது பின் அற்றமறைக்கு மென்னுமிடத்தும் ஒக்கும். ஆமிரண்டும் அசை. சிறப்பித்தல்-பிறரிலுந் தமக்கு ஒருயர்வை ஏற்றிக்கொள்ளல்.

'அச்சிறப்பு' என்றது தனக்குத் தகும் பெரியோரிடத்து அடங்கியிருத்தலைச் செய்வதாகிய சிறப்பு. 'அஃது' என்றது அச்சிறப்பு. 'புனையாநிற்பர்' என்றது புகழ்ந்துகொள்வர். 'புனைதல்' என்றது பிறரிடத்தில் தமக்கோர் மிகுதியை யேற்றிக்கொள்ளல். "சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர் எக்காலுஞ்சொல்லார் மிகுதிச்சொல், முந்திரிமேல் காணி மிகுவதேல் கீழ் தன்னை, யிந்திரனு வெண்ணி விடும்" என்ற நாலடியார் கருத்தும் இதனை நன்கு வலியுறுத்தும். (8)

பெருமை பெருமித மின்மை சிறுமை பெருமித மூர்ந்து விடல்.

(பரி-உரை) பெருமை பெருமிதம் இன்மை - பெருமைக்குணமாவது காரணமுண்டாயவழியும் அஃதியல்பாதனோக்கித் தருக்கின்றி யிருத்தல், சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல்-சிறுமைக்குணமாவது அஃதில்வழியும் அதனை யேற்றிக்கொண்டு தருக்கின் முடிவின்கண்ணே நின்றுவிடுதல் எ-று.

அளவறத் தருக்குத லென்பதாயிற்று, விடுமென்று பாடமோதுவாருமுளர்; முற்றுத்தொடரும் எழுவாய்த்தொடரும் தம்முளியையாமையின் அது பாடமன்மை யுணர்க.

(ப-ரை) பெருமை-பெருமைக் குணமாவது, பெருமிதமின்மை - (காரணம் உண்டாகியவிடத்தும் அது இயல்பாதனோக்கிச்) செருக்கில்லாதிருத்

* திருக்குறள்: 98-ம் அதி. பெருமை-10. † நன்னூல் சூத்திரம்.

தல், சிறுமை சிறுமைக்குணமாவது, பெருமித மூர்க்கவிடல் - (காரணம் இல்லாதவிடத்தும்) அதனை எற்றிக்கொண்டு செருக்கின் முடிவில் நின்று விடுதல் எ-று.

(க-ரை) பெருமைக்குணமாவது செருக்கில்லாதிருத்தல், சிறுமைக் குணமாவது செருக்குடைத்தாயிருத்தல் என்பதாம்.

(வி-ரை) அளவறச் செருக்கலென்பதாயிற்று.

'காரணமுண்டாயவழியும்' என்றது கல்வி செல்வம் முதலியவற்றால் பெருமை பாராட்டிக்கொள்வதற்குரிய காரணமுண்டான போழ்தும். 'அஃது'என்றது அப்பெருமைக்குணம். 'செருக்கின் முடிவு' என்றது மிகுதியும் செருக்குடைதல்.

(9)

அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான் குற்றமே கூறி விடும்.

(பரி-உரை) பெருமை அற்றம் மறைக்கும் - பெருமையுடையார் பிறர் மானத்தையே கூறி அவமானத்தை மறையாகிற்பர், சிறுமை குற்றமே கூறி விடும்-மற்றைச் சிறுமையுடையார் பிறர்குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறிவிடுவர் எ-று.

மறைத்தலும் கூறலும் எனையிடத்தமியையுந்தன. அற்றம்-ஆகுபெயர். மானென்பது அசை. இவை மூன்று பாட்டானும் இருவர்செயலும் ஒருங்கு கூறப்பட்டன.

(ப-ரை) பெருமை-பெருமையுடையவர், அற்றமறைக்கும்-(பிறர் மானத்தையே சொல்லி) அவமானத்தை மறையாகிற்பர், சிறுமை-மற்றைச் சிறுமையுடையவர், குற்றமே கூறிவிடும் - பிறர் குணத்தை மறைத்துக்) குற்றத்தையே சொல்லிவிடுவர் எ-று.

(க-ரை) பெரியோர் பிறரவமானத்தை மறைப்பர், சிறியோர் பிறர் குற்றத்தைச் சொல்லுவர் என்பதாம்.

(வி-ரை) மறைத்தலும் சொல்லலும் மற்றையிடத்தும் கூட்டப்பட்டன. மான்-அசை. [இவை மூன்றுபாட்டானும் இருவர்செயலும் சேர்த்துச் சொல்லப்பட்டன.]

'மானத்தைக் கூறல்' என்றது பெருமையினை எடுத்துரைத்தல். 'மறையாகிற்பர்' என்றது மறைப்பர். 'பிறர்குணம்' என்றது பிறரது சிறந்தகுணம். பெருமை பெருமிதக் குணத்துக்கேற்பப் பெருமையையும் சிறுமையுடையார் அது தீமைக்குணத்துக் கேற்ப அவர்தம் குற்றத்தையே யெடுத்துரைப்பர்.

98-ம் அதி - பெருமை - முற்றிற்று.

99-ம் அதிகாரம்—சான்றாண்மை

(பரி-உரை) அஃதாவது: பல குணங்களானுநிறைந்து அவற்றை யாடற்றன்மை. பல குணங்களானுமென்பது சாலுதற்றொழிலாற் பெறப்படுதலின் அவற்றையென்பது வருவிக்கப்பட்டது. பெருமையுளடங்காத குணங்கள் பலவற்றையுந் தொகுத்துக்கொண்டு நிற்றலின் இஃததன்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: பல குணங்களாலும் நிறைந்து அவைகளை ஆளுதற்றன்மை, பெருமையுள் அடங்காத பல குணங்களையும் தொகுத்துக்கொண்டு நிற்கையால் இது அதன்பின் வைக்கப்பட்டது.

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

(பரி-உரை) கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு-நமக்குத் தகுவது இதுவென்றறிந்து சான்றாண்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு, நல்லவை எல்லாம் கடன் என்ப - நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்குமென்று சொல்லுவர் நூலோர் எ-று.

சில குணங்களிலவாயவழியும் உள்ளன செய்துகொண்டனவாயவழியுஞ் சான்றாண்மையென்னுஞ் சொற்பொருள் கூடாமையின், நூலோர் இவ்வேதுப்பெயர்பற்றி அவரிலக்கணம் இவ்வாறு கூறுவரென்பதாம்.

(ப ரை) கடனறிந்து - (நமக்கு இது) தகுவதென்று அறிந்து, சான்று (பல குணங்களாலும்) நிறைந்து, ஆண்மை-(அவைகளை) ஆளுதற்றன்மையை மேற்கொள்பவர்க்கு-மேற்கொண்டு நடப்பவர்க்கு, நல்லவையெல்லாம்-நல்ல குணங்களெல்லாம், கடன் - இயல்பாயிருக்கும், என்ப - (என்று நூலோர் சொல்லுவர் எ-று.

(க-ரை) பெரியவர்களுக்கு நற்குணங்களை மேற்கொள்ளுதல் கடைமையாயிருக்கும் என்பதாம்.

(வி-ரை) சில குணங்களில்லாவிடத்தும், உள்ளவை இயல்பாயிராவிடத்தும், சான்றாண்மை யென்னுஞ் சொற்பொருள் கூடாமையால், இவ்வேதுப் பெயர்பற்றி அவரிலக்கணம் இப்படிச் சொல்லினாரென்பதாம்.

'ஆடற்றன்மை' என்றது ஆளுதல்தன்மை. பெருமையுளடங்காத குணங்கள் பலவற்றையும் கூட்டிக்கொண்டு நிற்றலின், இச்சான்றாண்மை பெருமையின்பின் வைக்கப்பட்டது. 'தகுவது' என்றது மனமொழி மெய்களாலு சிந்திக்கவும் உரையாடவும் செய்யவும் தக்கது. 'மேற்கொண்டு' என்றது கைகொண்டு. 'நூலோர்' என்றது நூலுணர்ந்தோர். 'சிலகுணங்கள்' என்றது சில நற்குணங்கள். 'இலவாயவழியும்' என்றது இல்லாதபோதும். 'கடன்' என்றது கடமை.

குணநலஞ் சான்றோர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று.

(பரி-உரை) சான்றோர் நலன் குணநலமே-சான்றோர் நலமாவது குணங்களானாய நலமே, பிற நலம் எந்நலத்தும் உள்ளது அன்று-அஃதொழிந்த புறப்புக்களானாய நலம் ஒருநலத்தினுமுள்ளதன்று எ-று.

அகநலத்தை முன்னே பிரித்தமையின் ஏனைப் புறநலத்தைப் பிறநலமென்றும், அது குடிப்பிறப்புங் கல்வியுமுதலாக நூலோரெடுத்த நலங்களுட் புகுதாமையின் எந்நலத்துள்ளதூஉ மன்றென்றுங் கூறினார். இவை யிரண்டு பாட்டானும் சால்பிற்கேற்ற குணங்கள் பொதுவகையாற் கூறப்பட்டன.

(பரை) சான்றோர் நலன் - சான்றோர் நலமாவது, குணநலம்-குணங்களாலாகிய நலமே, பிறநலம் - அது நீங்கலான உறுப்புக்களாலாகிய நலம், எந்நலத்துள்ளதூஉம்-எந்த நலத்திலுமுள்ளதும், அன்று-அல்ல எ-று.

(க-ரை) சான்றோர்க்குக் குணநன்மையே பெரிய நன்மையாம், மற்ற நன்மை நன்மையல்ல என்பதாம்.

(வி ரை) அகநலத்தை முன்னே பிரித்தமையால் மற்றைப் புறநலத்தை பிறநலமென்றும், அது குடிப்பிறப்புக் கல்விமுதலாக நூலோரிடத்த நலங்களுள்ளே சொல்லாமையால் எந்நலத்துள்ளதூஉ மன்றென்றும் சொல்லினார். [இவை இரண்டுபாட்டாலும் சால்புக்கு ஏற்ற குணங்கள் பொதுவகையாற் சொல்லப்பட்டன.]

'குணங்களானாயநலம்' என்றது நற்குணங்களுடைமையாலாகிய நன்மை. 'அஃது' என்றது அந்நற்குணங்கள். 'உறுப்புக்கள்' என்றது அவயவங்கள். 'நலம்' என்றது அழகு. 'அகநலம்' என்றது உள்ளத்தே பொருந்திய நற்குணங்களாலாயநன்மை. 'புறநலம்' என்றது அகத்திற்கு மாறாய புறநலம். இதனைப் பிறநலமென்றார். அந்நலம் கல்விமுதலிய நூலோர் கூறிய நலங்களுட் புகுதாமையின் (சேராமையின்) எந்நலத்துடனும் சேர்ந்ததன்றென்றார். (2)

அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மை
டைந்துசால் பூன்றிய தூண். [யோ

(பரி-உரை) அன்பு - சுற்றத்தார்மேலே யன்றிப் பிறர்மேலு முளதாய அன்பும், நாண் - பழிபாவங்களினாணலும், ஒப்புரவு-யாவர்மாட்டு மொப்புரவு செய்தலும், கண்ணோட்டம் - பழையார்மேற் கண்ணோடலும், வாய்மை எவ்விடத்தும் மெய்ம்மை கூறலுமென, சால்பு ஊன்றிய தூண் ஐந்து - சால்பென்னும் பாரத்தைத் தாங்கிய தூண்களைந்து எ-று.

எண்ணொடு முன்னவற்றோடுங் கூடிற்று. இக்குணங்களில் வழிச் சால்பு சிலபெறாமையின், இவற்றைத் தூணென்றார். ஏகதேசவுருவகம்.

(ப-ரை) அன்பு - (சுற்றத்தார்மேலே யல்லாமற் பிறர்மேலும் உண்டா யெ) அன்பும், நாண்-(பழிபாவங்களி) னுணலும், ஒப்புரவு-(யாவரிடத்தும்) உபகாரஞ் செய்தலும், கண்ணோட்டம் - (பழைபவர்மேல்) கண்ணோடலும், வாய்மையோடு - (எவ்விடத்தும்) மெய்ம்மை சொல்லுதலோடும். சால்பு-சால் பென்றும் (பாரத்தை), வான்றிய - தாங்கிய, தூண் - தூண்கள், ஐந்த - அஞ்சு எ-று.

(க-ரை) அன்பு, நாணம், உபகாரம், தாட்சணியம், சத்தியம், இவ்வை தஞ் சால்பென்றும் பாரத்தைத் தாங்கும் தூண்கள் என்பதாம்.

(வி-ரை) இக்குணங்கள் இல்லாவிடத்தே சால்பு கிலபெருமையால் இவைகளைத் தூணென்றார்.

சுற்றத்தார்பாலன்றிப் பிறர்மேலு முளதாகிய அன்பும், பழி பாவங்களி னுணலும், பழி பாவச்செயல்களுக்கு வெட்கி யதனைச் செய்வதற்கு அஞ்ச தலும். ஒப்புரவு = ஒப்பு + உரவு: உபகாரம். 'கண்ணோடல்' என்றது இரக்கம் வைத்தல். தணிவில்வழி பாரம் தாங்குவதில்லை, அதுபோல இக்குணங்களில் வழிசால்பு கிலபெரு. 'வாய்மை' என்றது இன்சொற்கூறலும் எண்ணுன்மை தொக்கின்றது. (3)

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

(பதி-உரை) நோன்மை கொல்லா கலத்தது - பிறவறங்களும் வேண்டு மாயினும் தவம் ஒருயிரையுங் கொல்லாத வறத்தின்கண்ணதாம்; சால்பு பிறர் தீமை சொல்லா கலத்தது - அதுபோலப் பிறகுணங்களும் வேண்டுமாயினுஞ் சால்பு பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தின் கண்ணதாம் எ-று.

கலமென்னும் ஒருபெயர்ப்பொருளிரண்டனையுந் தலைமை தோன்ற இவ்விரண்டற்கு மதிகாரமாக்கிக் கூறினர். தவத்திற்குக் கொல்லாவறஞ் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர் குற்றஞ்சொல்லாக்குணஞ் சிறந்ததென் பதாம்.

(ப-ரை) நோன்மை - தவமாவது, கொல்லா கலத்தது - (பிறவறங்களு வேண்டுமாயினும்) ஒருயிரையுங் கொல்லாத அறத்தினிடத்ததாம், (அ போல) சால்பு - சால்பாவது, பிறர்தீமை சொல்லாகலத்தது - (பிறர்குண களும் வேண்டுமாயினும்) பிறர் தீமையைச் சொல்லாத குணத்தினிடத் தாம் எ-று.

(க-ரை) நோன்பாவது யாதொன்றையுங் கொல்லாமையாம், சால்ப வது, பிறர்குற்றத்தைச் சொல்லாமையாம் என்பதாம்.

(வி-ரை) தவத்திற்குக் கொல்லா வறம்போல் சால்பிற்குப் பிறர்குற்ற சொல்லாக்குணம் சிறந்ததென்பதாம்.

'கொல்லாவறம்' என்றது கொலைசெய்யாத்தருமம்; கோன்மை கொல்லாமைத்தது. இதன்பொருளையே பிறரும் 'கோன்பென்பதுவே கொன்று தின்னுமை' என்றார். 'பிறர்நீமை' என்றது காணுமிடத்து பிறர்நீமைகளைச் சொல்லாலத்தது.

(4)

ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றுரை மாற்றும் படை.

(பரி உரை) ஆற்றுவார் ஆற்றல் பணிதல் - ஒரு கருமத்தைச் செய்து முடிப்பாரதாற்றலாவது அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதல், சான்றோர் மாற்றுரை மாற்றும் படை அது-இனிச் சால்புடையார் தம் பகைவரைப் பகைமை யொழிக்கும் கருவியும் அது எ-று.

ஆற்றல்-அது வல்லாந்தன்மை. இறந்ததழீஇய வெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. சால்பிற்கேற்ற பணிதற் குணத்தை நிறப்புக் கூறவர், வினையதுடன் கூறினர்.

(பதவுரை) ஆற்றுவார் (ஒரு கருமத்தைச்) செய்து முடிப்பவரது, ஆற்றல்-வலிமையாவது, பணிதல் - (அதற்குத் துணையாவாரைத்) தாழ்ந்து கூடிக் கொள்ளுதல், சான்றோர் - இனிச் சால்புடையவர், மாற்றுரை - பகைவரை, மாற்றும்படை-பகைமை யொழிக்குஞ் சாதனமும், அது-அப்பணிதல் எ-று.

(கருத்து) காரியமுடிப்பவர் வல்லமையாவது பணிதல் அது சத்துருக்களை வெல்லும் படையாம் என்பதாம்.

(விசேஷவுரை) ஆற்றல் - செயவல்லாந்தன்மை. சால்பிற்கு ஏற்ற பணிதற் குணத்தைச் நிறப்புச் சொல்லுவார். மற்றதுமுடன் சொல்லினர்.

'ஆற்றல்' என்றது ஒன்றைச்செய்து முடிக்குந்திறன். 'கூட்டிக்கொள்ளல்' என்றது துணையாகத் தன்னோடு சேர்த்துக்கொள்ளல். 'பகைவரைப் பகையை' என்றது பகைவரின் பகைமை. மாற்றும் படையும் என்பதன் உம்மை தொக்குநின்றது. இறந்ததழீஇய வெச்சவும்மையாகும். 'ஆற்றல்' இதில் ஆறு தன்வினைப்பகுதி. 'சான்றோர்' இதில் சால் என்ற பகுதியினடியாகப்பிறந்தபெயர்.

(5)

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றேர்வி
தலையல்லார் கண்ணுங் கொளல்.

(பரி-உரை) சால்பிற்குக் கட்டளை யாது எனின்-சால்பாகிய பொன்னினை உரைத்தற்கு உரைகல்லாகிய செயல் யாதெனின், தேர்வி தலை அல்லார் கண்ணும் கொளல்-அது தம்மினுயர்ந்தார்மாட்டுக் கொள்ளுந் தோல்வியை இழிந்தார்மாட்டுக் கோடல் எ-று.

தலை - ஒப்பு. எச்சவும்மையான் இருதிறத்தார்கண்ணும் வேண்டுதல் பெற்றும். கொள்ளுதல் - வெல்லுமாற்ற லுடையாயிருந்தே ஏற்றுக்கொள்

ஞதல். இழிந்தாரை வெல்லுதல் கருதித் தம்மோடொப்பித்துக்கொள் ளாத தோல்வியான் அவனுயர்வாயின், அதனுற் சால்பளவறியப்படு மென்பதாம்.

(ப-ரை) சால்பிற்கு - சால்பாகிய (பொன்னினை) வறிதற்கு, கட்டளை. உரைகல்லாகிய (செயல்), யாதெனில்-யாதென்றால், தோல்வி-(தம்மினுயர்ந் தவரிடத்துக் கொள்ளுந்) தோற்பை, அலையல்லார் கண்ணும் - இழிந்தவ ரிடத்தும், கொளல்-கொள்ளுதல் எ-று.

(க-ரை) சால்பிற்குரைகல் எதனெனில், இழிந்தவரிடத்துந் தோல்வி கொள்ளுதல் என்பதாம்.

(வி-ரை) எச்சவும்மையால் இருநிறத்தாரிடத்தும் வேண்டுதல்பெற்றும். கொள்ளுதல் வெல்லும் வலிமையுடையாயிருந்தே ஏற்றுக்கொள்ளுதல், இழிந்தாரை வெல்ல நினைத்தைத் தமக்குச் சமானமாக்கிக் கொள்ளாமல் தோற்பால் அவரின் உயர்வாயின் அதனுலே சால்பளவு அறியப்படுமென் பதாம்.

'அளவுஅறிதற்கு' என்றது தன்மையறிதற்கு. 'உரைகல்' என்றது மாற்றுரைகல். 'கொள்ளுதல்' என்றது வெல்லு மாற்றலுடையவராயிருந்தே தோல்வியை ஏற்றுக்கொள்ளுதல். இழிந்தவர்களோ வெல்லுதல் வேண்டி தம்மோடொப்பாகக் கொள்ளாத தோல்வியை ஏற்றுக்கொள்வதனுல் அவரைப்பார்க்கிலும் உயர்ந்த காணப்படுவாயின் அதனுல் சால்பினதளவு அறியப்படும். 'தோல்வி' இதில் தோல் பகுதி. (6)

இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா லென்ன பயத்ததோ சால்பு.

(பரி-உரை) இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் - தமக் கின்னுதவற்றைச் செய்தார்க்குஞ் சால்புடையார் இனியவற்றைச் செய்யா தாயின், சால்பு என்ன பயத்தது-அச்சால்பு வேறென்ன பயனை யுடைத்து? எ-று.

சிறப்பும்மை அவர் இன்னு செய்தற்கிடனுதல் விளக்கிநின்றது. ஒகாரம் அசை. வினு எதிர்மறைப்பொருட்டு. தாமுமின்னு செய்வாயின், சால்பா லொருபயனுமில்லை யென்பதாம். இவை ஐந்து பாட்டானுஞ் சிறப்புவகை யாற் கூறப்பட்டது.

(ப-ரை) (சால்புடையவர்) இன்னு - (தமக்குத்) தன்பத்தருமவைகளை, செய்தார்க்கும் - செய்தவர்களுக்கும், இனியவே - இன்பத்தருமவைகளையே, செய்யாக்கால் - செய்யாவிட்டால், சால்பு-சான்றுண்மை, என்ன பயத்தது-(வேறை) என்னபயனுடைத்து? எ-று.

(க-ரை) தன்பஞ் செய்தவர்களுக்கு மின்பஞ் செய்யாவிடில் சான் றுண்மை யென்னபயனைத்தரும் என்பதாம்.

(வி-ரை) ஒ-அசை. சிறப்பும்மை சால்புடையவரும் இன்னு செய்தற்கு இடமாதல் விளக்கின்றது. நாமும் அவர்க்கு இன்னுசெய்வாராயின் நம்முடைய சால்பால் ஒருபயனும் இல்லையென்பதாம். [இவை ஐந்து பாட்டாலும் சிறப்புவகையாற் சொல்லப்பட்டது.]

'இன்னாதவற்றைச் செய்தார்க்கும்' என்றது தன்புறத்தியவர்க்கும். 'சால்புடையார்' என்றது குடிப்பிறப்புக்கேற்ற குணங்களான் மிகைத்தோர். இன்னுசெய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்றதனால் தன்னைத் தன்புறத்தினவர்க்கும் இன்பஞ்செய்தலே சால்புடைத்து என்பது பெறப்பட்டது. இதனோடு "கடித்துக் கரும்பினைக் கண்டகாறும், இடித்த நீர் கொள்ளுமின்சுவைத்தேயாகும் வடுப்பட வைதிறந்தக்கண்ணும் குடிப்பிறந்தார் கூறுந்தம் வாயிற் சிதைத்து" என்ற காலடியார் செய்யுளை யொப்பு நோக்குக. 'செய்யாக்கால்' இது எதிர்காலவினையெச்சம். (7)

இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
தின்மையுண் டாகப் பெறின்.

(பரி-உரை) சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்-சால்பென்று சொல்லப்படும் வலியுண்டாகப்பெறின், ஒருவற்கு இன்மை இளிவு அன்று-ஒருவனுக்கு கல்குரவு இளிவாகாது எ-று.

தனாமை நாட்டுதலின் வலியாயிற்று. இன்மையான் வருவதனை இன்மை தானுக உபசரித்துக் கூறினர். சால்புடையார் கல்கூர்ந்தவழியும் மேம்படுதலுடைய ரென்பதாம்.

(ப-ரை) சால்பென்னும் - சால்பென்று சொல்லப்படும், திண்மை - வலிமை, உண்டாகப்பெறின் - தன்னிடத்துண்டாகப்பெற்றால், ஒருவற்கு - ஒருவனுக்கு, இன்மை - வறுமையால் (வருவது), இளிவன்று - இகழ்வாகாது எ-று.

(க-ரை) சால்பின் வலிமையுண்டாகப்பெற்றால் வறுமை இகழ்வாகாது எ-று.

(வி-ரை) தனாமல் நாட்டுதலால் வலியாயிற்று. சால்புடையவர் வறுமையிலும் மேன்படுவரென்பதாம்.

'கல்குரவு' என்றது வறுமை. 'தனாமை' என்றது சால்பிற்குன்றுமை. 'உண்டாகப்பெறின்' என்றது இருக்கப்பெற்றால்; சால்புடையார் வறுமைபுற்றவிடத்தும் மானமழியாது தன்னிலையைக் காத்தொழுகும் தன்மையராவாதலின் மேம்பாடுடையரேயாவர். வறுமையொரு இகழ்வாகாது. எனில் அது நிலைத்ததன்று. (8)

ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

(பரி·உரை) சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவோர்·சால்புடைமையாகிய கடற்குக் கரையென்ற சொல்லப்படுவார், ஆழி பெயரினும் தாம் பெயரார்· எனைக்கடலும் கரைபுணில்லாமற் காலந்தோறும் தாந்திரியார் எ·று.

சான்றாண்மையது பெருமைதோன்ற அதனைக் கடலாகியும், அதனைத் தாங்கிக்கொண்டு நிற்றலின் அஃதடையாரைக் கரையாக்கியுங் கூறினார்; • "பெருங்கடற் காழியனையன் மாதோ" என்றார் பிறரும். எகதேசவுரு வகம்.

(ப·உரை) சான்றாண்மைக்கு · சால்புடைமையாகிய (கடலுக்கு), ஆழி யெனப்படுவார் · கரையென்ற சொல்லப்படுவார், ஆழிபெயரினும் (மற் றைக் கடலும் கரைபுள் நில்லாமற்) காலம் வேறுபட்டாலும், தாம்பெயரார்· தாம் வேறுபடார் எ று.

(க உரை) சான்றோர்காலம் வேறுபடினுந் தாங்கள் வேறுபடார் என் பதாம்.

(வி·உரை) சான்றாண்மையின் பெருமைதோன்ற அதனை கடலாக்கியும், அதனைத் தாக்கிக்கொண்டு நிற்றலால் அதனை புடையாரை கரையாக்கியும் சொல்லினார். எகதேசவுருவகம்.

'எனையகடல்' என்றது நீர்க்கடல். எனையகடல் கரைபுணில்லாத காலம். ஆழிக்காலம். தாந்திரியார்-தமது குடிப்பிறப்பிலும் மானத்திலும் ஒருநிறந்தம் மாறுபடார். எல்லை காணமுடியாத ஆழத்தாலும் பரப்பாலும் பெருமையுடைய கடல்போன்ற பெருமையுடையது சான்றாண்மை. கரை கடலைத்தாக்கி நிற்பதுபோல சிறந்த குணக்களைத் தமது சால்பின் மிகுதி யால் காத்தொழுகுவதனால் கரையெனப்பட்டார். ஆழத்தை உண்மையிற் கொண்டிருப்பதனால் கரையாழியெனப்பட்டது. (9)

சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான் தாங்காது மன்னோ பொறை.

(பரி உரை) சான்றவர் சான்றாண்மை குன்றின் - பல குணக்களாலு நிறைந்தவர் தந் தன்மை குன்றுவராயின், இருநிலந்தான் பொறை தாங்காத· மற்றை யிருநிலத்தாலுந் தன் பொறையைத் தாங்காதாய் முடியும் எ·று.

தானுமென்னும் எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. அவர்க்கது குன்றுமையும் அதற்கது தாங்கலும் இயல்பாகலான், அவை யெஞ்ஞான்ற முனவாகாவென்பது தோன்றநின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓரம் அசை. இதற்கு இருநிலம் பொறை தாங்குவது சான்றவர் தணி யாக வருதலான் அதவும் அது தாங்கலாற்றுதென் றுரைப்பாரு முளர். இவை மூன்றபாட்டானும் அவற்று னிறைந்தவரது சிறப்புக் கூறப்பட்டது.

• புறநானூறு-330.

(ப-ரை) சான்றவர்-(பலகுணங்களாலும்) நிறைந்தவர், சான்றாண்மை-(தமது) தன்மை, குன்றின்-குன்றுவாராயின். இருநிலந்தான்-மற்றைப் பெரிய பூமிதானும், பொறை-(தன்) பாரத்தை, தாங்காது-தாங்காதாய் முடியும் எ-று.

(க-ரை) சான்றோர் சான்றாண்மை குன்றுவாராகில் பூமி பாரந்தாங்காது என்பதாம்.

(வி-ரை) தானுமென்னும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அவர்க்கு அது குன்றாமையும் அதற்கு அது தாங்கலும் இயல்பாகலால், அவை எந்நாளும்உண்டாகாநின்றனவென்பது தோன்றநின்றமையால்,மன்னென்பது *ஒழியிசையில் வந்தது. ஓகாரம்-அசை. [இவை மூன்று பாட்டாலும் பல குணங்களாலும் நிறைந்தவரது சிறப்புச் சொல்லப்பட்டது.]

குன்றுவராயின் எனவே சான்றாண்மையுடையர் தன்மை குன்றார் என்றாயிற்று. 'இருநிலம்' என்றது பெரியபூமி. இருநிலந்தானும் என்ற உம்மை எச்சவும்மை தொக்கது. குடிப்பிறந்தார் என்னும் சான்றாண்மை குன்றார் என்பதும் பூமியானது என்றும் பொறையைத் தாங்கிநிற்கும் என்பதும் தோன்ற நின்றமையினால், மன் ஒழியிசைக்கண்வந்தது. † சான்றவர் தன்னைச் சார்ந்திருப்பதால் இருநிலம் பொறை தாங்குவதாயிற்று. ஆகவே சான்றவர் சான்றாண்மையிற் குன்றலிலர்.

(10)

99-ம் அதி - சான்றாண்மை - முற்றிற்று.

100-ம் அதிகாரம்—பண்புடைமை

(பரி உரை) அஃதாவது: பெருமை சான்றாண்மைமகளிற்றாம் வழுவாது நின்றே எல்லா ரியல்புகளுமறிந் தொழுகுதல்; ‡ "பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்" என்றார் பிறரும். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

(உரை) அஃதாவது: பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்து நடத்தலுடையராதல். அதிகாரமுறைமையும் இதனால் விளங்கும்.

எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

(பரி-உரை) யார்மாட்டும் எண்பதத்தால் - யாவர்மாட்டு மெளிய செவ்வியராதலால், பண்புடைமை என்னும் வழக்கு எய்தல் எளிது என்ப - அரிதாய பண்புடைமை யென்னும் நன்னெறியினை யெய்துதல் எளிதென்று சொல்லுவர் நூலோர் எ-று.

---

* ஒழியிசை-ஒழிந்த சொற்பொருளைத் தருவது. † 'கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென் றம் மூன்றென்ப மனனைச் சொல்லே' என்பது தொல்காப்பியம். ‡ கலி, நெய்தல்-16.

குணக்களானிறைந்த செல்வி யெளியரு மாயக்காற் பண்புடைமை தானே உளதாமாகலின், என்பதத்தா லெய்த லெளிதென்றம், அஃதல தத்தையெல்லாம் உலோரித்தற் பயத்ததாகலின் அதனைத் தொல்லோர் சென்ற கன்னெறியாக்கியும், அதனை யெளிதி னெய்தற்கு இது நூலோ சோதிய வுபாயமென்பார் அவர்மேல் வைத்துங் கூறினர்.

(ப-ரை) யார்மாட்டும்-யாரிடத்தும், என்பதத்தால் - எளிய சமயத்தரா யிருந்தால், பண்புடைமையென்னும் பண்புடமை யெனப்படுகின்ற, வழக்கு-(அரிதாகிய) நல்வழியை, எய்தல் - அடைதல், எளிது-எளிது, என்ப என்ற (நூலோர் சொல்லுவர்) எ-று.

(க-ரை) யாவரிடத்தும் மெளிய சமயத்தாராக விருக்கிற் பண்புடைமை யென்னு நல்வழியடைதல் லெளிது என்பதாம்.

(பி-ரை) குணக்களால் நிறைந்த எளிய சமயத்தருமாகியபோது பண்புடைமை தானே உண்டாமாகலால், என்பதத்தாலெய்த லெளிதென்றும் அது உலகத்தையெல்லாம் உயமாக்கலால், அதனை பழையோர் சென்ற நல்வழியாக்கியும், அதனை எளிதிற்பெற இது நூலோரோதிய உபாயமென்றற்கு அவர்மேல் வைத்துஞ் சொல்லினர்.

'எளியசொல்லியர்' என்றது பணிவுடைய சொல்லியர். 'அரிதாய்' என்றது பெறுதற்கரிதாகிய. குணக்களானிறைந்து' என்றது கற்குணக்கள் நிறைவுற்ற. 'செல்வி என்றது சமயம். 'என்பதம்' என்றது யாவருங் காணுமாறு இருக்கும் எளியசமயம். 'உலகம்' என்றது உலகத்தவர். 'தொல்லோர்' என்றது முன்னோர். (1)

அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும் பண்புடைமை யென்னும் வழக்கு.

(பரி-உரை) அன்புடைமை ஆன்ற குடிப் பிறத்தல் இவ்விரண்டும்-பிறர்மே லன்புடையனுதலும் உலகத்தோடமைந்த குடியின்கட் பிறத்தலுமாகிய இவ்விரண்டும், பண்புடைமை என்னும் வழக்கு-ஒருவனுக்குப் பண்புடைமை யென்ற உலகத்தார் சொல்லும் கன்னெறி எ-று.

அமைதல் - ஒத்தவருதல். குடிப்பிறத்தலென்றது பிறந்தார் செயலே தனித்தவழி ஆகாது இரண்டுங் கூடியவழியே ஆவதென்பது தோன்ற, முறைமை கொடுத்தார். காரணக்கள் காரியமாக வுபசரிக்கப்பட்டன. இவை பிரண்டுபோட்டானும் பண்புடையராதற் காரணங் கூறப்பட்டது.

(ப-ரை) அன்புடைமை-(பிறர்மேல்) அன்புடையனுதலும், ஆன்ற குடிப் பிறத்தல் - (உலகத்தோடு) அமைந்த குடியிற்பிறத்தலும், இவ்விரண்டும் (ஆகிய) இவ்விரண்டும், பண்புடைமை யென்னும் - (ஒருவனுக்குப்) பண்புடைமை யென்ற (உலகத்தார்) சொல்லும், வழக்கு-நல்வழி எ-று.

(க-ரை) ஒருவனுக்கு அன்புடைமையும் நற்குடியிற் பிறத்தலுமே நல்வழியாம் என்பதாம்.

(வி-உ) அமைதல்-ஒத்துவருதல். குடிப்பிறத்தலென்றது குடிப்பிறந்தார்செயலை. இரண்டுங் கூடியவழியே பண்புடைமையாவதென்பது தோன்ற முற்றும்மை கொடுத்தார். [இவை இரண்டு பாட்டாலும் பண்புடையாராதற்குக் காரணம் சொல்லப்பட்டது.]

'உலகத்தோடமைத்தகுடி' என்றது உயர்ந்த மக்களோடு ஒத்த குடிக்குடி. 'இரண்டுங்கூடியவழி' என்றது அன்புடைமையும் ஆன்றகுடிப்பிறத்தலுமாகிய இரண்டுங்கூடியவழி. 'ஆவது' என்றது தோன்றவது. இரண்டும், உம்மை முற்றும்மை. அன்புடைமையும் ஆன்றகுடிப்பிறப்பும் ஒருவர்க்குப் பண்புடைமையாம். 'குடிப்பிறத்தல்' இது ஏழாம் வேற்றுமைத்தொகை. (2)

உறுப்பொத்தன் மக்களொப் பன்ரூல் வெறுத்தக்க
வண்பொத்த லொப்பதா மொப்பு.

(பரி-உரை) உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்று - செறியத்தகாத உடம்பாலொத்தல் ஒருவனுக்கு நன்மக்களோ டொப்பாகாமையின் அது பொருத்தவதன்று; ஒப்பதாம் ஒப்பு வெறுத்தக்க பண்பு ஒத்தல் - இனிப் பொருத்தவதாய வொப்பாவது செறியத்தக்க பண்பாலொத்தல் எ-று.

உடனூலார் அக்கமென்றமையின், உறுப்பென்றார். ஒருவனுக்கு நன்மக்களோடு பெறப்படு மொப்பாவது உயிரின் வேறாய், நிலையுதலில்லா வுடம்பொத்தலன்று, வேறன்றி நிலையுதலுடைய பண்பொத்தலாகலான், அப்பெற்றித்தாய அவர் பண்பினையுடையனாக வென்பதாம்.

(ப-ரை) உறுப்பொத்தல் - (செருக்கத்தகாத) உடம்பாலொத்தல், மக்கள்போப்பன்ற-(ஒருவனுக்கு) நல்ல மனிதரோடு, (ஒப்பாகாமையால்) பொருந்தலன்ற, ஒப்பதாம்-(இனிப்) பொருத்தலதாகிய, ஒப்பு-ஒப்பாவது, வெறுத்தக்க-செருக்கத்தக்க, பண்பொத்தல்-பண்பாலொத்தல் எ-று.

(க-ரை) அவயவத்தா லொப்பாத லொப்பல்ல, குணத்தா லொப்பாதலே யொப்பாம் என்பதாம்.

(வி-ரை) ஒருவனுக்கு நன்மக்களோடு பிறப்பொத்தலாவது உயிரின் வேறாய் நிலைபெறுத உடம்பொத்தலாகாது, வேறல்லாமல் நிறுபெறுத லுடைய பண்பொத்தலாகலால், அப்படிப்பட்ட அவர் பண்பினையுடையனாக வென்பதாம். சூல்-அவை.

'செறியத்தகாத' என்றது பொருத்தத்தகாத. 'உடம்பாலொத்தல்' என்றது உடம்பிலால் ஒன்றுபடல். 'அது' என்றது உடம்பாலொத்தல். 'பண்பு' என்றது உயர்குணம். 'நன்மக்கள்' என்றது அறிவுடைமக்கள். 'நிலையுதலில்லா' என்றது நிலையில்லா. (அழியுந்தன்மையுடைய) 'உடம்பொத்தலன்று' என்றது உறுப்புக்கள் ஒத்திருத்தலன்று. உடல் அழியினும் உயர்ந்த பண்பு அழியா நிலைப்புடைத்தாதலால் நிலையுதலுடைய பண்பு வென்றார். 'அப்பெற்றித்தாய' என்றது அத்தன்மைத்தாய, நல்ல மனித

சோடு நெருக்கத்தக்க பண்பொத்தலினல் ஒப்பாகலாமேயொழிய மக்களுறுப் பொத்தலால் ஆவதின்று. (3)

நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு மூலகு.

(பரி-உரை) நயனெடு நன்றி புரிந்த பயன் உடையார் பண்பு-தீதினையும் அறத்தையும் விரும்புதலாற் பிறர்க்குந் தமக்கும் பயன்படுதலுடையாரது பண்பினை, உலகு பாராட்டும்-உலகத்தார் கொண்டாடாநிற்பர் எ-று.

புரிந்தவென்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப்பொருட்டு. நயனெடு நன்றி புரிதலும் பயனுடைமையும் பண்புகாரணமாக வந்தமையின், அதனைப் பாராட்டு மென்றார்.

(ப-ரை) நயன் - தீதினையும், ஒடு-அதனுடன், நன்றி - அறத்தையும், புரிந்த-விரும்பிய, பயனுடையார்-(பிறர்க்குந் தமக்கும்) பயன்படுதலுடையவரது, பண்பு - பண்பை, உலகு - உலகத்தார், பாராட்டும் - கொண்டாடாநிற்பர் எ-று.

(க-ரை) தீதினையும் தருமத்தையும் விரும்பிய பயனுடையவர் குணத்தை உலகத்தார் புகழ்வர் என்பதாம்.

(வி-ரை) நயனெடு நன்றிபுரிதலும் பயனுடைமையும் பண்பு காரணமாக வந்தமையால், அதனைப் பாராட்டுமென்றார்.

'அறம்' என்றது ஆன்ற அறிவிற்சிறந்தார் விதித்தனகொள்ளலும் விலக்கியன வொழித்தலுமாம். 'கொண்டாடாநிற்பர்' என்றது கொண்டாடுவர். 'நயன்' என்றது விருப்பம். விருப்பத்தோடு நலஞ்செய்தலும் பயனுடைமையும் பண்பு காரணமாக வந்தமையினல் அதனை உலகு பாராட்டுமென்றார். (4)

நகையுள்ளு மின்ல நிகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

(பரி உரை) நிகழ்ச்சி நகையுள்ளும் இன்றை - தன்னை யிகழ்தல் ஒருவற்கு விளையாட்டின்கண்ணும் இன்றை; பாடு அறிவார்மாட்டுப் பகையுள்ளும் பண்பு உள - ஆகலாற் பிறர் பாடறிந்தொழுகுவார்மாட்டுப் பகைமையுள்வழியும் அஃதனதாகாத இனியவாய பண்புகளே உளவாவன எ-று.

பாடறிவா ரெனவே, அவ்வின்னுமை யறிதலும் பெற்றும். அதனை யறிந்தவர் பின் அதசெய்யார் இனியவே செய்வாரென்பது கருத்து. இதற்குப் பிறரெல்லாம் இரண்டு தொடருந் தம்முளியையாம லுரைப்பாரும், இன்றுதன்னுஞ் சொற்குப் பிறவாதென் றுரைப்பாருமாயினர்.

(ப-ரை) நிகழ்ச்சி-(தன்னை) யிகழ்தல், நகையுள்ளும் (ஒருவனுக்கு) விளையாட்டினிடத்தும், இன்றை - தன்பந்தருவதாம், (ஆகலால்) பாடறிவார் மாட்டு-(பிற) நியல்பறிந்து நடப்பவரிடத்து, பகையுள்ளும்-பகையுள்ளவிடத்

தம், பண்பு - (அப்பகை உண்டாகாமல் இனிமையாகிய) பண்புகளே, உல-
உண்டாவனவாம் எ-று.

(க-ரை) விளையாட்டிலு மிகழ்தலானதை தன்பந்தரும், கல்லவரிடத்துப் பகையிலு நற்குணமுண்டாம் என்பதாம்.

(வி-ரை) பாடறிவாரெனவே அவ்வின்னமை யறிதலும் பெற்றும். அதனை அறிந்தவர்பின் அதைசெய்யார் இனியவே செய்வாரென்பது கருத்து.

'தன்னைபிகழ்தல்' என்றது தன்னைத்தானே பிகழ்ந்துரையாடல். விளையாட்டின் கண்ணும் தன்னை பிகழ்ந்துரைத்தலாகாது. 'தோழனோடு மேழமை பேசேல்' என்றார் ஔவையாரும். 'பிறர்பாடறிந் தொழுகுவார்' என்றது பிறர் நற்செயலறிந்து ஒழுகுவார். பிறர் நற்செயலறிந்து ஒழுகுவாரிடத்து நற்பண்புகளே இருத்தற்பாலனவாம். 'நகையுள்' இதில் உள் ஏழனுருபு. (5)

பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்.

(பி-உரை) பண்பு உடையார்ப் பட்டு உலகம் உண்டு - பண்புடையார் கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்றுமுண்டாய் வாராநின்றது; இன்றேல் அது மண்புக்கு மாய்வது-ஆண்டுப்படுத லில்லையாயின், அது மண்ணின் கட்புக்கு மாய்ந்துபோவதாம் எ-று.

படவென்பது நிரிந்துநின்றது. உலகு ஆகுபெயர். மற்றைப் பண்பில்லார் சார்பன்மையின் ஓர் சார்புமின்றி மண்ணின்கட் புக்கு மாயுமது வேண்டாவாயிற்றென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. இவை நான்குபாட்டானும் அதனை புடையாரது உயர்ச்சி கூறப்பட்டது.

(ப-ரை) பண்புடையார் பண்புடையவரிடத்தே, பட்டு-படுதலால், உல-
கம்-உலகியல், உண்டு - (எக்காலும்) உளதாய் வாராநின்றது, இன்றேல்-
(அற்றுபடுதல்) இல்லையாயின், அது-அவ்வுலகியல், மண்புக்கு - மண்ணிலே புகுந்து, மாய்வது-மாய்ந்துபோவதாம் எ-று.

(க-ரை) பெரியவரிடத்து நற்குணமுண்டாதலால் உலகிய லெக்காலு முண்டாகின்றது, அது இல்லாவிடி லுலகியல் கெடும் என்பதாம்.

(வி-ரை) மற்றைப் பண்பில்லார் சார்பல்லாமையால் ஒரு சார்புமில்லாமல் மண்ணிற்புகுந்து மாயுமது வேண்டாவாயிற்றென்பது படநின்றமையால் மன்னென்பது ஒழியிசையில் வந்தது. [இவை நான்குபாட்டாலும் அதனை புடையவரது உயர்ச்சி சொல்லப்பட்டது.]

'பண்புடையார்கண்ணே படுதல்' என்றது சிறந்த நற்குண முடையாரிடத்திலேயே பிருத்தல். 'உலகியல்' என்றது ஒப்புரவு. 'ஆண்டுப்படுத லில்லையாயின்' என்றது அப்பண்புடையாரிடத்தே யில்லையாயின். 'உலகு' உலகியலைக் குறிப்பதால் ஆகுபெயர். பண்பில்லார் சார்பன்மையின் ஒரு சார்புமின்றி மண்ணின் மாய்ந்து போகுமது வேண்டாவாயிற்று. (6)

அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

(பரி-உரை) மக்கட்பண்பு இல்லாதவர் - தன்மக்கட்கேபுரிய பண்பில்லாதவர், அரம்போலும் கூர்மையரேனும் - அரத்தின் கூர்மைபோலுங் கூர்மையே புடையரேயாயினும், மரம் போல்வர் - ஓரறிவிற்குய மரத்தினையொப்பர் எ-று.

அரம் - ஆகுபெயர். ஓரறிவு-ஊற்றினையறிதல். உவமை பிரண்டனுன், முன்னது தான் மடிவின்றித் தன்னை புற்ற பொருள்களை மடிவித்தலாகிய தொழில்பற்றி வந்தது; எனையது விசேடவறிவின்மையாகிய பண்புபற்றி வந்தது. அவ்விசேட வறிவிற்குப் பயனுய மக்கட்பண்பின்மையின், அது தானு மில்லையென்பதாயிற்று.

(ப - ரை) மக்கள் - தன்மக்களுக்கேபுரிய, பண்பில்லாதவர் - நற்குணமில்லாதவர், அரம்போலும் - அரத்தைப்போலும், கூர்மையரேனும் - கூர்மையை புடையரேயாயினும், மரம்போல்வர் - (ஓரறிவினதாகிய) மரம்போல்வர் எ-று.

(க-ரை) தன்மக்களுக்குரிய குணமில்லாதவர் கூரிய புத்தியுடையாயினு மாத்தை நிகர்த்தவர் என்பதாம்.

(வி-ரை) ஓரறிவு - பரிசத்தை அறிதல். தான் மடிவில்லாமல் தன்னை புற்ற பொருள்களை மடித்தலாகிய தொழில்பற்றி வந்தது. பின்னுவமை விசேடவறிவில்லாமையாகிய குணம்பற்றி வந்தது. அவ்விசேட வறிவிற்குப் பயனுகிய மக்கட் பண்பில்லாமையால், அவ்வறிவுதானு மில்லையென்பதாயிற்று.

'மக்கட்கேபுரிய' என்றது மனவுணர்ச்சியோடுகூடிய மாந்தர்க்கே புரிந்தான. 'அரத்தின் கூர்மைபோலுங் கூர்மை' என்றது அரத்தின் கூர்மை போன்ற புத்திகூர்மை. ஓரறிவிற்குயமரம் - 'புல்லும் மரனும் ஓரறிவினவே' என்ற 'ஒன்றறிவதுவே உற்றறிவதுவே' என்பது தொல்காப்பியம். 'ஓரறிவு' என்றது உற்றறிதல். அரம் தன்னையடுத்த பொருளை மடிவிக்கும் தொழில்பற்றி வந்தது. இது தொழிலுவமம். மரம்போல்வர் என்பது சிறந்த அறிவின்மையாகிய பண்புபற்றி வந்தது. பண்பு உவமமாயிற்று. (7)

நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை.

(பரி-உரை) நண்பு ஆற்றுராகி நயம் இல செய்வார்க்கும் - தம்மொடு கட்பினைச் செய்யாத பகைமையைச் செய்தொழுகுவார்மாட்டும், பண்பு ஆற்றுராதல் கடை - தாம் பண்புடையரா யொழுகாமை அறிவுடையார்க் கிழுக்காம் எ-று.

நயம் - ஈரம். சிறப்புமை அவர் பண்பாற்றுமைக்கிடனுதல் தோன்றின்றது. அதனைச் செய்யிற் ருமும் அவர் தன்மையராவரென்பார், கடையென்றார்.

(ப-ரை) கண்பு - கட்பினை, ஆற்றாராகி - (தம்மொடு) செய்யாதவராகி, கயமில-பகைமையை, செய்வார்க்கும்-செய்து கடப்பவரிடத்தும், பண்பாற்றாதல் - (தாம்) பண்புடையவராய் நடவாமை, கடை - (அறிவுடையவர்க்கு) இழுக்காம் எ-று.

(க-ரை) கட்பைக் கொள்ளாராகிப் பகையைக் கொள்ளுவார்க்கும் குணமுடையவரா நடவாமையே கடை என்பதாம்.

(வி-ரை) கயம்-ஈரம். சிறப்பும்மை அவர் பண்பாற்றாமைக்கு இடனுதல் தோன்றநின்றது. அதனைச்செய்யின் தாமும் அவர் தன்மையராவ ரென்றற்கு கடையென்றார்.

'பகைமையைச் செய்தொழுகுவார்மாட்டும்' என்றது பகைவரிடத்தும். 'கயம்' என்றது ஈரம்; அதாவது அன்புடைமை. 'பண்பாற்றாமைக்கிடனுதல்' என்றது பண்புடையவராய் ஒழுகாமை. 'இழுக்காம்' என்றது குறைவாம். அறிவுடையார் பண்பிலார்மாட்டும் பண்புடையராய் ஒழுகுதல்வேண்டும். அவ்வாறின்றி ஒழுகின் அது இழுக்காம். (8)

நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

(பரி-உரை) நகல் வல்லர் அல்லார்க்கு-பண்பின்மையான் ஒருவரோடுங் கலந்து உண்மகிழ்தன் மாட்டாதார்க்கு, மாயிரு ஞாலம் பகலும் இருட்பாற் பட்டன்று-மிகவும் பெரிய ஞாலம் இருளில்லாத பகற்பொழுதினும் இருளின் கட் பிடந்ததாம் எ-று.

எல்லாரோடுங் கலந்தறியப் பெறுமையிற் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாதென்பார், உலகமிருளின்கட்பட்ட தென்றார். பாழ்பட்டன் றிரு வென்ற பாடமோதி, இருணீக்கிற்றன்றென்றுரைப்பாருமுளர்.

(ப-ரை) நகல்வல்லரல்லார்க்கு - (பண்பில்லாமையால் ஒருவரோடு கலந்த) உண்மகிழ்தல் மாட்டாதவர்க்கு, மாயிரு ஞாலம்-மிகவும் பெரிய பூமியானது, பகலும் - (இருளில்லாத) பகற்பொழுதினும், இருட்பால் - இருளிடத்தே, பட்டன்று பிடந்ததாம் எ-று.

(க-ரை) கட்புச்செய்து மகிழாதார்க்குப் பூமியானது இருளுடையதாகும் என்பதாம்.

(வி-ரை) எல்லாரோடும் கலந்து அறியப்பெறுமையால் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாதென்றற்கு உலகம் இருளினிடத்துப் பட்டதென்றார்.

'பண்பின்மையான்' என்றது பண்பிலாது. 'உண்மகிழ்தல்' என்றது மனமகிழ்தல். 'மாட்டாதார்க்கு' என்றது செய்யாதார்க்கு, பண்பில்லார் பாலோடுஞ் சேர்ந்தறியப் பெறுமையினால் உலகியல் தெரியார். அன்னார்க்கு உலகம் ஒளியாற் பிடப்பினும் இருளின்கண் பட்டதொக்கும். (9)

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.

(பரி-உரை) பண்பு இலான் பெற்ற பெருஞ்செல்வம்-பண்பில்லாதவன் முன்னை நல்வினையானெய்திய பெரியசெல்வம் அக்குற்றத்தால் ஒருவற்கும் பயன்படாது கெடுதல், நன்பால் கலந்தீமையால் திரிந்தற்று - நல்ல வான் பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன்சுவைத்தாகாது கெட்டாற்போலும் எ-று.

கலத்தீமையென்பது மெலிந்து நின்றது. தொழிலுவமமாகலின் பொருளின்கண் ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. படைக்குமாற்றலிலனாத றோன்றப் பெற்றவென்றும், எல்லாப்பயனுங் கோடற்கேற்ற இடனுடைமை தோன்றப் பெருஞ்செல்வமென்றுங் கூறினார். அச்செல்வமும் பயன்படாதென்ற இதனான் வருகின்ற அதிகாரப்பொருண்மையுந் தோற்றுவாய் செய்யப்பட்டது. இவை நான்குபாட்டானும் அஃதில்லாரதிழிவு கூறப்பட்டது.

(ப-ரை) பண்பிலான் - பண்பில்லாதவன், பெற்ற - (முன்னை நல்வினையினால்) அடைந்த, பெருஞ்செல்வம் - பெரியசெல்வம் (அக்குற்றத்தால் ஒருவர்க்கும் பயன்படாது கெடுதல்), நன்பால்-நல்ல(பசுவின்)பால், கலம் - (ஏற்ற) கலத்தினது, தீமையால்-குற்றத்தால், திரிந்தற்று-கெட்டாற்போலும்.

(க-ரை) குணமில்லாதவன் முன்னல்வினையாலடைந்த செல்வமானது பயன்படாது கெடுதல் பசுவின்பால் பாத்திரக்குற்றத்தாற் கெட்டாற்போலும் என்பதாம்.

(வி-ரை) கலத்தீமையென்பது - கலந்தீமையென விகாரப்பட்டது. தொழிலுவம மாகலால் உவமேயத்தில் ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. படைக்கும் வலிமையிலனாதல் தோன்றப்பெற்றவென்றும், எல்லாப்பயனுங் கொள்ளற்கு ஏற்ற இடமுடைமைதோன்ற பெருஞ்செல்வமென்றும் சொல்லினார். அச்செல்வமும் பயன்படாதென்ற இதனால் வருகிற அதிகாரப் பொருண்மையும் தோற்றுவாய் செய்யப்பட்டது. [இவை நான்குபாட்டாலும் அஃதில்லாரது இழிவு சொல்லப்பட்டது.]

கலத்தீமை என்பது கலந்தீமை என்று மெலிந்து நின்றது. பால் கெட்டதுபோல செல்வமும் கெட்டது என்பது ஒத்த தொழில்பற்றி வந்தபடியால் தொழிலுவமம். பண்பிலான் செல்வம்பெற ஆற்றலிலனாதல் தோன்ற பெற்ற என்றார். பயனெல்லாம் ஒருங்கே கொள்ளுதற்கேற்ற இடனுடைமைபற்றி பெருஞ்செல்வம் என்றார். அச்செல்வமும் பயன்படாதென்பது இவ்வதிகாரத்தால் விளங்கிற்று. 'பண்பில்லான்' என்றது நற்குணமில்லான். (10)

100-ம் அதி - பண்புடைமை - முற்றிற்று.

101-ம் அதிகாரம்—நன்றியில்செல்வம்

(பரி·உரை) அஃதாவது: ஈட்டியாற்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினதியல்பு. உடையானது குற்றஞ் செல்வத்தின்மே லேற்றப் பட்டது. அதிகாரமுறைமை மேற்றோற்றுவாய் செய்தலதனாற் பெற்றும்.

(உரை) அஃதாவது: சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினியல்பு. செல்வமுடையானது குற்றம் செல்வத்தின்மேல் ஏற்றப்பட்டது. அதிகாரமுறைமை முன்முன் தோற்றுவாய் செய்ததனாற் பெற்றும்.

வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணு
செத்தான் செயக்கிடந்த தில். [ன்

(பரி·உரை) வாய் சான்ற பெரும்பொருள் வைத்தான் அஃது உண்ணுன்·தன் மனையகலமெல்லாம் நிறைதற்கேதுவாய பெரும்பொருளை யீட்டி வைத்த உலோபத்தால் அதனை யுண்ணுதவன், செத்தான் செயக் கிடந்தது இல்·உலகியினுஞ் செத்தானும், அதன்கண் அவனுற் செயக்கிடந்ததோ ருரிமையின்மையான் எ-று.

வைத்தானென்பது முற்றெச்சம். உண்ணுதல்-அதனுணர்ம்புலன்களாலும் நுகர்தல். வாய்சான்ற பெரும்பொருளை வைத்தானொருவன் அதனையுண்ணுது செத்தவழி அதன்கண் அவனுற் செயக்கிடந்ததோருரிமை யில்லையாகலான், வையாது பெற்றபொழுதே நுகர்கவென்றவைப்பினு மமையும். இதற்குச் செத்தானென்பது எச்சம். இதனால் ஈட்டியானுக்குப் பயன்படலின்மை கூறப்பட்டது.

(பதவுரை) வாய் சான்ற (தன்) மனையிடமெல்லாம் நிறைதற்கு ஏதுவாகிய, பெரும்பொருள் - பெரியபொருளை, வைத்தான் - (சம்பாதித்து) வைத்தவனி, அஃது - அதனை, உண்ணுன் - (உலோபத்தால்) அனுபவியாதவன், (உலகியினும்) செத்தான்-செத்தானும், செயக்கிடந்தது-(அத்தனிடத்து அவனே) செயக்கிடந்ததோ ருரிமையானது, இல் - இல்லை (ஆதலால்) எ-று.

(கருத்து) பெரும்பொருளைத்தேடி வைத்தவனுகியப்பொருளை யனுபவியாதவனிருந்தாலு மிறந்தவனுக் கொப்பாவன் என்பதாம்.

(விளக்கம்) [இதனுலே சம்பாதித்தவனுக்கு அச்செல்வம் பயன்படலில்லாமை சொல்லப்பட்டது.]

'ஈட்டியாற்கும்' என்றது செல்வத்தைத் தேடினவனுக்கும். 'பிறர்க்கும்' என்றது மற்றவர்க்கும். 'மனையகலமெல்லாம்' என்றது வீடுமுழுவதும். 'உலோபம்' என்றது ஈயாக்குணம். 'வைத்தான்' இம்மூற்று இங்கு எச்சப் பொருளைத் தருவதால் மூற்றெச்சம். 'உண்ணுதல்' என்றது அனுபவித்தல். 'செயக்கிடந்ததோருரிமை' என்றது உரிமையுடன் செய்யத்தகுந்த செயல்.

'வையாது' என்றது பொருளைச் சேமித்து வைக்காது. 'நுகர்க' என்றது அனுபவிக்க. "கைத்துண்டாம்போழ்தே கரவாதறஞ்செய்மின்" என்றார். நாலடியாரும். 'சான்ற' இதில் சால் பகுதி. (1)

பொருளானா மெல்லாமென் றீயா திவறு
மருளானா மாணாப் பிறப்பு.

(பரி-உரை) பொருளான் எல்லாம் ஆம் என்று-பொருளொன்று முண்டாக அதனாலெல்லா முண்டாமென்றறிந்து அதனை யீட்டி, ஈயாது இவறும் மருளான் - பின் பிறர்க்கீயாது பற்றுள்ளஞ்செய்யு மயக்கத்தாலே, மாணாப் பிறப்பு ஆம்-ஒருவனுக்கு நிறைதலில்லாத பேய்ப்பிறப்புண்டாம் எ-று.

இருமையினு மெய்து மின்பங்கள் - பலவுமடங்க எல்லாமென்றும், ஈட்டுதற்கு முன்னுண்டாயவறிவு பின் மயங்குதலின் மருளென்றும், பொருளுண்டாயிருக்கப் பிறர் பசி கண்டிருந்த தீவினைபற்றி உணவுக ளுளவாயிருக்கப் பசித்து வருந்தும் பிறப்புள்தாமென்றுங் கூறினார்.

(ப-ரை) பொருளான் - பொருளொன்றினால், எல்லாம் - யாவும், ஆம்-உண்டாகும், என்று-என்று (அறிந்து), (அதனைச் சம்பாதித்து), ஈயாது-(பின் பிறர்க்குக்) கொடாது, இவறும்-உலோபத்துவஞ் செய்யும், மருளான் மயக்கத்தினாலே, மாணா-நிறைதலில்லாத, பிறப்பு (பேய்ப்) பிறப்பு, ஆம்-(ஒருவனுக்கு) உண்டாம் எ-று.

(க-ரை) பொருளைச் சம்பாதித்துக் கொடாமையாற் பிறப்புண்டாம் என்பதாம்.

(வி-ரை) இருமையிலும் அடையும் இன்பங்கள் பலவும் அடங்க எல்லாமென்றும், சம்பாதித்தற்கு முன்னே உண்டாகிய அறிவானது பின்னே மயங்குதலால் மருளென்றும், பொருள் உண்டாயிருக்கப் பிறருடைய பசி கண்டிருந்த பாவத்தால் உணவுகள் உண்டாயிருக்கப் பசித்து வருந்தும் பிறப்பு உண்டாமென்றும் சொல்லினார்.

'அதனால்' என்றது அப்பொருளால். 'எல்லாம்' என்றது இம்மை மறுமைக்குரிய எல்லா நலனும். 'பற்றுள்ளஞ் செய்யும்' என்றது மனம் பற்றுள்ளுக்கும் பொருளான் எல்லாம் ஆம். என்பதனைப் பின்னுள்ளோரும் "முன்னுவவெல்லாம் பொன்னால் முடியும்" என்று பாராட்டுவாராயினர். பொருளாத [illegible] இருத்தலும், அதனை யீட்டியபின்னர் அப்பொருளான் முன்னைய [illegible]தலினால் மருள் என்றார். பொருளைப் பெற்றிருந்தும் பிறர் பசி கண்டும் அதனைப் போக்க முயற்சிக்காதிருந்த தீவினையாலே பேய்ப்பிறப்புண்டாம் என்றார். நிறைதலிலாத பேய்ப்பிறப்பு பசியை யகற்றுதற்குரிய நல்லுணவுக ளுளவாயிருக்கப் பசித்து வருந்தும் பேய்ப்பிறப்பென்றார். 'இவறும்' இதில் இவறு முதனிலை. 'மாணா' இது ஈறு கெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; இதில் மாண் பகுதி. (2)

ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

(பரி உரை) ஈட்டம்-இவறி இசை வேண்டா ஆடவர் தோற்றம் - யாம் பிறரின் மிக வீட்டுதுமென்று பொருளினதீட்டன் மாத்திரத்தையே விரும்பி அதன் பயனாய புகழை விரும்பாத மக்களது பிறப்பு, நிலக்குப் பொறை-நிலத்திற்குப் பாரமாமத்துணையே எ-று.

இசை இருமைக்கு முறுதியாய அறமாகலின் ஈகையான் அதனையே வேண்டல் செய்யாது ஈட்டற்றுன்பத்தையும் காத்தற்றுன்பத்தையும் வேண்டிய வறிவின்மைபற்றி நிலக்குப் பொறையென்றார். பிறப்பென்றது அதற்குரிய வுடம்பினை.

(ப - ரை) ஈட்டம் - (பிறரின்மிகச்) சம்பாதிப்போமென்று, இவறி-(பொருள் சம்பாதிக்கை மாத்திரத்தையே) விரும்பி, இசை - (அதன் பயனாகிய) புகழை, வேண்டாவாடவர் - விரும்பாத மக்களது, தோற்றம்-பிறப்பு, நிலக்கு-பூமிக்கு, பொறை-பாரமாம் (அவ்வளவே) எ-று.

(க-ரை) பொருளை விரும்பிப் புகழை விரும்பாதவர் பிறப்புப் பூமிக்குப் பாரம் என்பதாம்.

(வி-ரை) புகழ் இருமைக்கும் உறுதியாகிய அறமாகலால் ஈகையால் அதனை வேண்டாமல் சம்பாதிக்கைத் துன்பத்தையும், காப்பாற்றல் துன்பத்தையும் வேண்டிய அறிவில்லாமைபற்றி நிலக்குப்பொறையென்றார். பிறப்பென்றது அதற்குரிய உடம்பினை.

'ஈட்டம்' என்றது சம்பாதிப்போம்; இது அம் விகுதிபெற்ற தன்மைப் பன்மை வினைமுற்று; 'ஈட்டு' முதனிலை. 'ஈட்டன் மாத்திரத்தையே' என்றது தேடுதற்றொழிலையே. 'அதன்பயன்' என்றது அச்செல்வத்தின் பயன். இறுமைக்குந் துணையாய இசையாகிய நல்லறத்தை யீகையான் விரும்பாது (அதாவது ஈந்து புகழ்பெறாது) பொருளை யீட்டலாகிய துன்பத்தையும் காத்தலாகிய துன்பத்தையும் கொண்டுள்ள பேதைமைபற்றி நிலத்துக்குப் பொறையென்றார். 'நிலக்கு' இதில் அக்கு சாரியை. (3)

எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவ
னச்சப் படாஅ தவன். [ரா

(பரி உரை) ஒருவரால் நச்சப்படாதவன் - ஒருபொருளு மீந்தறியாமையின் ஒருவராலும் நச்சப்படுதலில்லாதவன், எச்சமென்று என் எண்ணுங் கொல்-தானிறந்தவழி ஈண்டொழிந்து நிற்பதாக யாதனைக் கருதுமோ? எ-று.

ஈண்டொழிந்து நிற்கும் புகழ் ஈவான்மேலன்றி நில்லாமையின் அவனுக்கதனோடியாது மியைபில்லை யென்பார், என்னெண்ணுங் கொல்லோவென்றார். ஓகாரம் அசை. இவை மூன்றுபாட்டானும் பிறர்க்குப்பயன்படலின்மை கூறப்பட்டது.

(ப-ரை) ஒருவான்-(ஒருபொருளுக்கொடுத்த அறியாமையால்) ஒருவ ராலும், கச்சப்படாதவன் - இச்சிக்கப்படாதவன், (தான் இறந்தவிடத்து) எச்சமென்ற - (இவ்வே) ஒழிக்க கிற்பதாக, என் - எதை, எண்ணுக்கொல் கிஞைப்பானே? எ-று.

(க-ரை) ஒருவாலு மிச்சிக்கப்படாதவ னிறந்தபின் எதை கிஞைப்பானே என்பதாம்.

(வி-ரை) இவ்வே ஒழிக்கநிற்கும் புகழ் சுவார்மேலல்லாமல் கில்லாமை யால் இவனுக்கு அதனோடு எவ்வளவும் சம்பந்தம் இல்லையென்றற்கு என் னென்னுக் கொல்லென்றார். ஒ-அசை. [இவை மூன்றுபாட்டாலும் அச் செல்வம் பிறர்க்குப் பயன்படலில்லாமை சொல்லப்பட்டது.]

'எச்சப்படுதலில்லாதவன்' என்றது விரும்பப்படாதவன். 'இறந்தவழி' என்றது இறந்தபோது. 'ஈண்டு' என்றது இவ்வுலகம். 'யாதனைக்கருதும்' என்றது எண்ணுவதற் கொன்றுமில்லை. கில்லா வுலகத்து ஈண்டு கிலைத்து கிற்பது புகழே. அதவும் சுவான்மேலன்றி மற்றையோனிடத்து கில்லாமை யின் அவனுக்கு யாதொரு இயைபுயின்மைபற்றி என் எண்ணுக்கொல்லோ வென்றார். எச்சம் எஞ்சுவது சுச்சம். (4)

கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய கோடியுண் டாயினு மில்.

(பரி-உரை) கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு - பிறர்க்கீவதும் தாநுகர்வதுமாய இரண்டு செய்கையுமுடைய ரல்லாதார்க்கு, அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - பலவாக வடுக்கிய கோடி பொருளுண்டாயினும் ஒன்றுமில்லை எ-று.

இம்பத்தினும் அறஞ் சிறந்தமையின், கொடுத்தற்றொழில் முற்கூறப் பட்டது. அடுக்கியகோடி யென்றது ஈண்டெண்ணப்படும் பொருண்மே னின்றது. ஒன்று மில்லார்போலப் பயனிரண்டு மிழத்தலின் இல்லென்றார்.

(ப-ரை) கொடுப்பதூஉம் - (பிறர்க்கு) ஈவதும், துய்ப்பதூஉம் - (தான்) அநுபவிப்பதுமாகிய (இரண்டு செய்கையும்), இல்லார்க்கு - உடையரல்லா வர்க்கு, அடுக்கிய - (பலவாக) அடுக்கிய, கோடியுண்டாயினும் - கோடிப் பொருள் உண்டாயினும், இல் - (ஒன்றும்) இல்லை எ-று.

(க - ரை) கொடுத்தலு முண்ணுதலு மில்லாதவர்க்குக் கோடிபொரு ளிருந்தும் பயனில்லை என்பதாம்.

(வி-ரை) இம்பத்தினும் அறம் சிறந்தமையால் கொடுத்தல் முன்சொல் லப்பட்டது. ஒன்றுமில்லார்போற் பயனிரண்டும் இழத்தலால் இல்லென்றார்.

'கோடிபொருள்' என்றது அளவற்றபொருள். 'நுகர்வது' என்றது ஐம்புலன்களாலும் அநுபவிப்பது. 'இரண்டுசெய்கை' என்றது ஈதல்

நசர்தல். 'ஒன்றும் இல்லை' என்றது ஒன்றும் பயனில்லை. கோடிக் கணக்கான அளவற்றபொருள் உண்டாயினும் ஒன்றுமில்லார்போல ஈதலும் நசர்தலுமாகிய பயனிரண்டு மிழத்தலின் இல்லென்றார். கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இரண்டும் இன்னிசை யளபெடைகள். (5)

ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொ
றீத லியல்பிலா தான். [ன்

(பரி-உரை) தான் தவ்வான் தக்கார்க்கு ஒன்ற ஈதல் இயல்பிலாதான். தானுகானுய் அதன்மேலும் தகுதியுடையார்க்கு அவர் வேண்டியதொன் றனை ஈதலியற்கையிலனுயினுன், பெருஞ் செல்வம் ஏதம்-இரண்டுஞ் செய் தற்கிடனுடைத்தாய செல்வத்திற்கு ஒருநோய் எ-று.

தகுதி-தானஞ் கோடற்கேற்புடைமை. ஏதம்-ஆகுபெயர். நுகரப்படுதலும் ஈயப்படுதலுமாகிய தொழிற்குரியதனை அன்றுக்கினமையின் நோயென்றார். ஈதலியல்பிலாதானது பெருஞ்செல்வம் அவனுக்கு ஈட்டல் காத்தன் முதலிய வற்றுல் துன்பமேயாமென்றுரைப்பாருமுளர். இவை பிரண்டுபோட்டானும் அவ்விருமையும் உடன் கூறப்பட்டன.

(ப-உரை) தான்றவ்வான் - தான் அனுபவியாதவனுகி, (அதன்மேலும்) தக்கார்க்கு - தகுதியை யுடையவர்க்கு, ஒன்று-(அவர்வேண்டிய) தொன்றை, ஈதலியல்பிலாதான் - கொடுத்தற்றன்மையில்லாதவன், பெருஞ்செல்வம்-(அவ் விரண்டும் செய்தற்கு இடமுடையதாகிய) செல்வத்திற்கு, ஏதம்-ஒருநோய் எ-று.

(க-உரை) தானுண்ணுமலும் கொடாமலு மிருப்பவன் செல்வம் வியாதிக் கோப்பாம் என்பதாம்.

(வி-உரை) தக்கார்-தானம் வாங்குதற்கு ஏற்றவர். அனுபவிக்கப்படுதலும் ஈயப்படுதலுமாகிய தொழில்களுக்கு உரியதை அல்லாதாக்கினமையால் நோடென்றார். [இவை இரண்டுபோட்டாலும் அவ்விருமையும் உடன் சொல் லப்பட்டது.]

'துய்த்தல்' என்றது அனுபவித்தல். 'ஏதம்' என்றது துன்பம்; அதாவது துன்பஞ்செய்யும் நோய். 'தக்கார்' என்றது ஈவதைப் பெறுதற்குத்தக்க நற்குண நற்செயலுடையார். 'ஈதலியற்கையிலனுயினுன்' என்றது ஈதலாகிய வியற்கைக் குணமில்லாதவனுயினுன். 'இரண்டும்' என்றது ஈதலும் துய்த் தலும் ஆகிய இருசெயலும். 'தானஞ் கோடற் கேற்புடைமை' என்றது ஈயும் தானத்தை ஏற்பதற்குத் தகுதிபுடைமை. 'நுகரப்படுதலு மீயப்படுதலு மாகிய தொழிற்குரியதனை' என்றது நுகர்தலுக்கும் ஈதலுக்கும் ஏற்ற பொருளை. 'அன்றுக்கினமையின்' என்றது இல்லையாக்கினமையின். மற்றும் இவ்விருவித செயலுமில்லாதவனது செல்வம் அதனையுடையவனுக்கு ஈட்டல் பாதுகாத்தல் முதலியவற்றுல் துன்பமே என்றுஞ் சொல்வர். (6)

அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றா டமியண்மூத் தற்று.

(பரி உரை) அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் - ஒருபொருளு மிலராயினார்க்கு அவர் வேண்டிய தொன்றனைக் கொடாதானது செல்வம் கொன்னே கழிதல், மிகநலம் பெற்றாள் தமியள் மூத்தற்று - பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றா ளொருத்தி கொடுப்பா ரின்மையிற் கொழுந னின்றித் தமியளாய் மூத்ததன்மைத்து எ-று.

நலம் வடிவினன்மையும் குணத்தினன்மையும். இரண்டுமொருங்கு பெறுத லரிதாகலின் பெற்றாளென்றார். கொடுப்பாருங் கொழுநனுமேயன் றித் தானும் பயனிழந்து கழிந்த குமரியோடுவமை கூறினமையின், தானு மேற்பானுமேயன்றிச் செல்வமும் பயனிழந்து கழியுமென்பதாயிற்று.

(ப-ரை) அற்றார்க்கு - (ஒருபொருளு) மிலராயினார்க்கு, ஒன்று-(அவர் வேண்டிய) தொன்றனை, ஆற்றாதான் - கொடாதவனது, செல்வம் - செல்வ மானது வீணாகக்கழிதல், மிகநலம்-(பெண்டிரின்) மிகுந்த நலத்தினை, பெற் றாள் - பெற்றவொருத்தி, (கொடுப்பா ரில்லாமையினாலே) தமியள்-(கணவ னில்லாமல்) தனியளாய், மூத்தற்று மூத்ததன்மைத்து எ-று.

(க ரை) கொடாதவன் செல்வமானது அழகுள்ளவொருத்தி தன்னைக் கொடுப்பாரில்லாமையாற் கணவனில்லாது கிழவியானாற்போலும் என்பதாம்.

(வி-ரை) நலம் வடிவினன்மையும், குணத்தினன்மையும், இவ் விரண்டும் ஒரு சேரப்பெறுதல் அரிதாகலால் பெற்றாளென்றார். கொடுப் பாரும் கணவனுமேயல்லாமல் தானும் பயனிழந்து கழிந்த குமரியோடு உவமைசொன்னமையால் தானும் ஏற்பானுமேயல்லாமல் செல்வமும் பய னிழந்து கழியு மென்பதாம்.

'வேண்டியதொன்றனை' என்றது அவர் விரும்பியதொரு பொருளை. 'கொன்னேகழிதல்' என்றது செல்வத்தாற் பெற்ற பயனாகிய ஈந்து புகழ் பெறுதலாகிய பயனை யடையாது வீணேகழிதல். 'கொடுப்பாரின்மையின்' என்றது மணஞ்செய்து கொடுப்பாரின்மையால். 'கொழுநன்' என்றது நாயகன்; அதாவது அன்புசெய்து பற்றுதற்குரியவன். 'தமியளாய் மூத்த தன்மைத்து' என்றது தனித்து மூப்படைந்திருந்த தன்மையதாம். 'வடிவி னன்மை' என்றது உருவத்தினழகு. 'குணத்தினன்மை' என்றது குணத் தின் சிறப்பு. பெறலின் அருமைநோக்கிப் பெற்றாள் என்றார். மணஞ்செய்து கொடுப்பாரும் கொழுநனுமேயன்றித் தானும் தான் பெற்ற நலத்தால் பயனிழந்த குமரியேபோல, பொருளைப்பெற்ற தானும் அதனை யேற்பானுமே யன்றி யச்செல்வமும் பயனிழந்து கழியும் என்பதாயிற்று. ஏனென்றால் செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப் பல்கிளையுங் காத் தோம்பிப் பாத்துண்டு வாழ்தலியல்பாதலின் என்க. (7)

நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று.

(பரி-உரை) நச்சப்படாதவன் செல்வம் - வறியார்க் கணிமையிலிருத்தம் ஒன்றுங் கொடாமையின் அவரானச்சப்படாதவன் செல்வ மெய்தலால், ஊர் நடுவண் நச்சுமரம் பழுத்தற்ற - ஊரிடை நிற்பதோர் நச்சுமரம் பழுத்தாற் போலும் எ-று.

நடுவூரென்பது பின்முன்னுகத் தொக்க வாரும்வேற்றுமைத்தொகை. அண்மை யுடைமைகளாற் பயனில்லை யென்பதாம்.

(பதவுரை) (வறியவர்க்குச் சமீபமிருத்தம் ஒன்றும் கொடாமையால்) நச்சப்படாதவன் - (அவரால்) இச்சிக்கப்படாதவன், செல்வம் - செல்வம் (பெறுதல்), நடுவூருள்-ஊர்நடுவுள்ள, நச்சுமரம்-எட்டிமரம், பழுத்தற்று-பழுத்தல்போலும் எ-று.

(கருத்து) பிறரா லிச்சிக்கப்படாதவன் செல்வமானது ஊர்நடுவே எட்டிமரம் பழுத்தற்போலாம் என்பதாம்.

(விசேடம்) சமீபித்திருக்கைகளாற் பயனில்லை யென்பதாம்.

'வறியார்க்கணியன்' என்றது வறியோர்சென்று இரப்பதற்கு எளியனாயிருத்தம், அன்றியும் அணிமையிலிருத்தம் என்றும் கூறலாம். 'நச்சுதல்' என்றது விரும்புதல். 'நச்சுமரம்' என்றது கைக்கும் கனிதரும் மரம். 'ஊர்நடு' என்றது நடுவூர் என்றுயிற்று. நச்சப்படாதவன் நடுவூரிலிருத்தம் ஈதலுந் தப்பித்தலுமின்மையிலும் அண்மையிலிருத்தலாலும் பொருளுடைமையினாலும் பயனில்லையாயிற்று. (8)

அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர்.

(பரி-உரை) அன்பு ஒரீஇ-ஒருவன் கொடாமைப்பொருட்டுச் சுற்றத்தார் கட்டார்கண் அன்பு செய்தலை யொழிந்து, தற்செற்று-வேண்டுவன நுகராது தன்னைச் செறுத்து, அறம் நோக்காது-வறியார்க்கு ஈதன்முதலிய வறத்தை நினைப்பதஞ் செய்யாது, ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர் - ஈட்டிய கொள்ளிய பொருளைக் கொண்டுபோய்ப் பயன்பெறுவார் பிறர் எ-று.

பயனுய அறனும் இன்பமுஞ் செய்துகொள்ளாதானுக்குப் பொருளானது ஈட்டற்றன்பமேயென்பது தோன்ற ஈட்டியவென்றும், அவன் ஏழையினுள்ளார்க்கும் உதவாதென்பதுதோன்றப் பிறரென்றுங் கூறினார்.

(பதவுரை) (ஒருவன்) அன்பொரீஇ-(கொடாதிருத்தற்பொருட்டுச் சுற்றத்தாரிடத்தும் கட்பினரிடத்தும்) அன்புசெய்வதனை ஒழிந்து, தற்செற்று-(வேண்டுவன அனுபவியாமல்) தன்னை வருத்தி, அறன் - (வறியவர்க்குக் கொடுத்தலாதியாகிய) அறத்தை, நோக்காது - கினையாமல், ஈட்டிய - சம்பா

நித்த, ஒன்பொருள் - ஒன்னிய பொருளை, கொள்வார் - (கொண்டுபோய்ப் பயன்) கொள்ளுவார், பிறர் பிறர் எ-று.

(க-ரை) அன்பற்றத் தன்னை வருத்திச் சம்பாதித்த பொருளைப் பிறர் கொள்ளுவர் என்பதாம்.

(வி-ரை) பயனிய அறமும் இன்பமும் செய்துகொள்ளாதவனுக்குப் பொருளால் உள்ளதை சம்பாதித்தற் றன்பமே யென்பதுதோன்ற ஈட்டிய வென்றும், அவன் சுற்றத்தி லுழியிலுள்ளவர்க்கும் உதவாதென்பது தோன்ற பிறரென்றம் சொல்லினர்.

'கொடாமைப்பொருட்டு' என்றதை பொருளை யீயாமை வேண்டி. 'வேண்டான தகாத' என்றதை தான் விரும்பியதை அனுபவித்தாத. தன்னைச் செறுத்த' என்றது தன்னைத்தானே வருத்தி. 'ஒன்னியபொருள்' என்பது புகழ்பொருள். 'ஈட்டிய' வென்றதனால் அறனு மின்பமுஞ் செய்துகொள்ளாதற்குப் பொருளாலாகிய பயன் ஈட்டலாகிய தன்பமே யன்றி மற்றில்லை யென்றுயிற்று. 'கொள்வார்பிறர்' என்றதனால் அவனைச் சேர்ந்தோர் கொள்ளார்; கொள்பவர் பிறரே என்பது தோன்றலாயிற்று. (9)

சிறுடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

(பரி-உரை) சிர் உடைச் செல்வர் சிறுதுனி - புகழுடைத்தாய செல்வத் தினையுடையவரது சிற்குங்காலுஞ் சிறிதாய வறுமை, மாரி வறங் கூர்ந்தனை யது உடைத்து - உலகத்தையெல்லாம் நிலநிறுத்து மேகம் வறுமை மிக்காற் போல்வதோ நியல்பினையுடைத்து எ-று.

துனி-வெறுப்பு; அதனைச் செய்தலாற் றுனியெனப்பட்டது. யாவர்க்கும் பயன்பட்டார் அதனுன் வறியராயவழியும் அவ்வறுமை கடிதினீக்குதலிற் பின்புஞ் செல்வராய்ப் பயன்படுவரென்பது உவமையாற் பெறப்பட்டது. படவே, கன்றியில்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன்படாதென்பதாயிற்று. இதற்குச் சிறுடைச்செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில்வெறுப்புமாரி வறங்கூர்ந்தனைய தன்மையையுடைத்தென அதிகாரத்தோடு பொருத்தமை மேலும் ஓர் பொருட்டொடர்புபடாம லுரைப்பாருமுளர். இவை தான்கு பாட்டானும் அச்செல்வத்தது குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) சிறுடை - புகழுடைத்தாகிய, செல்வர் - செல்வத்தினையுடை யவரது, சிறுதுனி (சிற்குங்காலம்) சிறிய வறுமை, மாரி (உலகத்தை யெல்லா நிலநிறுத்தலிற) மேகம், வறங்கூர்ந்தனையது-வறுமை மிகுந்ததுபோல்வதோ நியல்பினை, உடைத்து-உடையது எ-று.

(க-ரை) மிகுந்த செல்வமுடையவர் எறுமையானது மழை வறுமை கொண்ட தன்மையுடையது என்பதாம்.

(வி-ரை) துனி-வெறுப்பு; அதனைச் செய்தலால் வறுமை துனியெனப் பட்டது. யாவர்க்கும் பயன்பட்டவர் அதனால் வறியராகியவிடத்தும் அப்

வறமை கடிதல் நீக்குதலால், பின்னும் செல்வராய்ப் பயன்படுவரென்பது உவமானத்தாற் பெறப்பட்டது. படவே, கன்றியில்லாத செல்வம் எந்நாளும் பயன்படா தென்பதாயிற்று. [இவை கான்குபாட்டாலும் அச்செல்வத்தின் குற்றம் சொல்லப்பட்டது.]

'தனி' என்றது வெறுப்பைத்தருவதால் தனியாயிற்று. யாவர்க்கும் பயன்பட்டார் அவ்விதலினால் வறியராயினும் அவ்வறமை யேனையோரால் கடிதின் விலக்கப்பட்டால் பின்னுஞ் செல்வராவர் என்பது உவமையால் விளக்கிற்று. எனினில் மேகம் வறக்கூர்ந்தகின்று. அன்றியும் கன்றியுடைய செல்வம் பயன்படும் எனவே கன்றியில்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன் படாதென்றுயிற்று.

101-ம் அதி - கன்றியில்செல்வம் - முற்றிற்று.

102-ம் அதிகாரம்—நாணுடைமை

(பரி-உரை) அஃதாவது: மேற்சொல்லிய சால்பு பண்புமுதலிய குணக் களோடுயர்ந்தோர் தமக்கொவ்வாத கருமங்களில் நாணுத லுடையராந் தன்மை. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

(உரை) அஃதாவது: முன்சொல்லப்பட்ட சால்பு பண்பு முதலாகிய குணங்களால் உயர்ந்தோர் தமக்குத்தகாத கருமங்களில் நாணுதலுடைய ராந்தன்மை. அதிகாரமுறைமையும் இதனுலே விளங்கும்.

கருமத்தா னணுத னணுத்திரு நுத
னல்லவர் நாணுப் பிற.

(பரி-உரை) நாணுக் கருமத்தால் நாணுதல் - நன்மக்கணுணுவது இழித்த கருமம் காரணமாக நாணுதல், பிற திரு நுதல் கல்லவர் நாணு- அஃதன்றி மனமொழி மெய்களதொடுக்கத்தான் வருவனவோவெனின், அவை அவரவரல்ல அழகிய நுதலினையுடைய குலமகளிர் நாண்கள் எ-று.

பிற குலமகளிர் நாணென்றதனான் ஏனைய நன்மக்களெனன்பதும், நாணுத லென்றதனாற் கருமத்த திழிவும் பெற்றும். திருநுதனல்லவரென் றுயர்ச்சிக் குறிப்பு. எதப்பன்மைபற்றிப் பிறவென்றார். இனி அற்ற நைத்தன் முதலியன பொதுமகளிர் நாணே டொக்குமென் றுரைப்பாரு னர்; அவர்க்கு நாண் கேடு பயக்குமென விலக்கப்பட்டமையானும், அவர் பெயரால் கூறப்படாமையானும் அஃதவரன்மை யறிக. இதனான் நாணின லக்கணம் கூறப்பட்டது.

(ப-ரை) நாணு-(நன்மக்களை) நாணுவது, கருமத்தால்-(இழித்த) கருமம் காரணமாக, நாணுதல்-நாணுதலாம், பிற-அதல்லாமல் (மனமொழிமெய்களை தொக்கத்தால் வருகிற) நாணங்கள், திருநுதல் - அழகிய நெற்றியையுடைய, நல்லவர்-குலமகளிரை, நாணு-நாணங்கள் போலும் எ-று.

(க-ரை) நாணமானது கருமங் காரணமாக நாணுவதாம்; பிறநாணங்கள் பெண்களுடைய நாணங்கள் போலாம் என்பதாம்.

(வி-ரை) பிற குலமகளிரது நாணென்றதனால் மற்றது நன்மக்களது நாணென்பதும், நாணுதலென்பதனால் கருமத்தினிழிவும் பெற்றாம். திருநுதனல்லவரென்பது புகழ்ச்சிக்குறிப்பு. [இதனால் நாணினது இலக்கணம் சொல்லப்பட்டது.]

'நன்மக்கள்' என்றது அறிவுசான்றமக்கள். 'ஏனையது' என்றது மனமொழி மெய்களது ஒடுக்கத்தான்வரும் குலமகளிரது நாணல்லாத மற்ற நாண். 'பொதுமகளிர்' என்றது விலைமகளிர். நன்மக்கள் நாண் இழிந்த செயலுக்கு நாணுதலே. குலமகளிர் நாண் மனமொழிமெய்களது ஒடுக்கத்தால்வரும் நாணேயென்பதும் பெறப்பட்டது. குலமகளிர்க்குரிய குணங்களில் நாண் என்பதும் ஒன்று. 'அச்சமும் நாணும் மடனுமுந்துறுதல், நிச்சமும் பெண்பாற்குரிய என்ப' என்றார் தொல்காப்பியனாரும். (1)

ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

(பரி-உரை) ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறு அல்ல. ஊணும் உடையும் அவை யொழிந்தனவும் மக்களுயிர்க்கெல்லாம் பொது; மாந்தர் சிறப்பு நாணுடைமை-நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே அவையல்ல எ-று.

ஒழிந்தன - உறக்கமும் அச்சமுங் காமமும். சிறப்பு - அவ்வுயிர்களின் வேறுபாடு. அச்சமென்று பாடமோதுவாரு முளர்.

(ப-ரை) ஊண் - உண்டியும், உடை - ஆடையும், எச்சம் - ஒழிந்தவைகளும், உயிர்க்கெல்லாம் - (மக்க) ளுயிர்க்கெல்லாம், வேறல்ல - பொதுவாம், மாந்தர்சிறப்பு - நன்மக்களுக்குச் சிறப்பாவது, நாணுடைமை - நாணமுடைமையாம் (அவையல்ல) எ-று.

(க-ரை) உணவு ஆடை மற்றவை யாவருக்கும் பொதுவாம்; நன்மக்களுக்குச் சிறப்பாவது நாணமுடைமையாம் என்பதாம்.

(வி-ரை) ஒழிந்தவை-உறக்கமும் காமமும் அச்சமும். சிறப்பு-அவ்வுயிர்களின் வேறுபாடு.

'எச்சம்' என்றது எஞ்சுவது (ஒழிந்தது) எச்சம். 'அவை யொழிந்தன' என்றது ஊணும் உடையுமொழிந்த உறக்கமும் பயமும் ஆசையுமாம். 'சிறப்பு' என்றது சிறப்பாகிய வேறுபாடு. நன்மக்களுக்கும் ஏனையோருக்கு முள்ள வேறுபாடு நாணுடைமையும் அஃதின்மையுமேயாம். 'எச்சம்' இதில் எஞ்சு முதனிலை. (2)

ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.

(பரி-உரை) உயிரெல்லாம் ஊனைக் குறித்த • எல்லா வுயிர்களும் உடம்பினைத் தமக்கு கிலக்களனாகக்கொண்டு அதனை விடா, சால்பு நான்ன என்னும் ன்மைக் குறித்தது-அதுபோலச் சால்பு நாணென்னு ன்மைக்குணத்தைத் தனக்கு கிலக்களனாகக்கொண்டு அதனைவிடாது எ-று.

உடம்பென்பது சாதியொருமை. ன்மை-ஆகுபெயர். உயிர் உடம்போடு டியல்லது பயனெய்தாதவாறுபோலச் சால்பு நாணோடுகூடியல்லது பயனெய்தா தென்பதாம். ஊனைக்குறித்தவென்று பாடமோதுவாருமுளர்.

(ப-ரை) உயிரெல்லாம்-உயிர்களெனைத்தும், ஊனை-உடம்பை, குறித்த-(தமக்கு) இருப்பிடமாகக்கொண்டு அதனைவிடாவாம், (அதுபோல்) சால்பு-(ற்குணங்களி) னிறைவானது, நாணென்னு ன்மை • நாணென்கிற ற்குணத்தை, குறித்தது • தனக்கு இருப்பிடமாகக்கொண்டு அதனை பிடாது எ-று.

(க-ரை) உயிர்களெல்லா முடம்பைவிடாவாம் ற்குண நாணத்தை பிடாது என்பதாம்.

(வி-ரை) உயிர் உடம்போடு கூடியல்லது பயனடையாத விதம்போல் சால்பு நாணோடு கூடியல்லது பயனடையாதென்பதாம்.

'கிலக்களன்' என்றது இருத்தற்குரியவிடம். 'ன்மைக்குணம்' என்றது னத்தைத்தரும் குணம்; ன்மைகுணத்திற்காவதால் ஆகுபெயர். உயிர் டம்போடுகூடிப் பயனடைவதுபோல சால்பு நாணோடுகூடியே பயன் ய்தமென்பதாம். அவ்வாறன்றி யெய்தப்பெறுதாம். 'ஊண்' என்றதை னவு என்றுரைப்பாருமுண்டு. 'சால்பு' இதில் சால் முதனிலை. (3)

அணியன்றே நாணுடைமை சான்றோர்க் கஃதின்
பிணியன்றே பீடு நடை. [றேற்

(பரி-உரை) சான்றோர்க்கு நாணுடைமை அணியன்றே-சான்றோர்க்கு ணுடைமை ஆபாணமாம், அஃது இன்றேல் பீடு நடை பிணியன்றே-வ்வாபாண மில்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் ணியாம் எ-று.

அழகு செய்தலின் அணியென்றும், பொறுத்தற்கருவமயிற் பிணி பன்றுங் கூறினர். ஒகாரவிடைச்சொற்கள் எதிர்மறைக்கண் வந்தன. னை மூன்றுபாட்டானும் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

(பத-ரை) சான்றோர்க்கு-பெரியோர்க்கு, நாணுடைமை-நாணமுடைமை, ணியன்றே • ஆபாணமல்லவோ, அஃதின்றேல் • அவ்வாபாணம் இல்லே பின், பீடுநடை • (அவர்) பெருமிதநடை, பிணியன்றே • (கண்டவர்க்கு) யன்றே எ-று.

(க-ரை) பெரியோர்க்கு நாணமுடைமை யாபாணமாம், அதில்லாவிடில் ர் நடை பிணியாம் என்பதாம்.

(வி-உ) அழகுசெய்தலால் அணியென்றும், பொறுத்தற்கருமையால் பிணியென்றும் சொல்லினர். [இவை மூன்றுபாட்டாலும் அதன் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'அணி' என்றது அணிவது அழகுபெறக்கொள்வதுமாம், சான்றோர் கூட்டத்தில் தமக்கழகுசெய்வதனால் அணி (ஆபரணம்) என்றார். அதனைக் கொள்ளாதபோழ்து தமது பெருமிதநடை மற்றையோர்க்குத் துன்பத்தைப் பயந்து பொறுத்தற்கரியதாய் விடுமாதலால் பிணியென்றுங் கூறினர். 'பீடு' என்றது பெருமிதம்; அதாவது கம்பீரம். சான்றோர்க்கு நாணுடைமை பின்றியவர் பெருமிதநடை பெருமை பயவாதாம். (4)

பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக் குறைபதி யென்னு முலகு.

(பரி-உரை) பிறர் பழியும் தம்பழியும் நாணுவார் - பிறர்க்கு வரும் பழியையுந் தமக்கு வரும்பழியையும் ஒப்ப மதித்து நாணுவாரை, உலகு நாணுக்குறைபதி என்னும்-உலகத்தார் நாணுக்குறைவிடமென்று சொல்லுவர் எ-று.

ஒப்பமதித்தல் - அதுவுந் தமக்கு வந்ததாகவே கருதுதல். அக்கருத்தடையார் பெரியராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வரென்பதாம். இதனால் அதனை யுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-உ) பிறர்பழியும் - பிறர்க்குவரும் பழியையும், தம்பழியும்-தமக்கு வரும் பழியையும், நாணுவார் - (ஒப்பாகமதித்து) நாணுவாரை, உலகு-உலகத்தார், நாணுக்கு-நாணத்திற்கு, உறைபதியென்னும்-இருப்பிடமென்று சொல்லுவர் எ-று.

(க-உ) பிறர்பழியையுந் தம்பழியையுமதித்து நாணுவாரை உலகத்தார் நாணத்திற் கிருப்பிடமென்பர் என்பதாம்.

(வி-உ) ஒப்பாகமதித்தல் - பிறர்க்குவந்த பழியையும் தமக்குவந்ததாகவே கினைத்தல். அக்கருத்தடையவர் பெரியராகலால், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வரென்பதாம். [இதனால் அதனையுடையவரது சிறப்புச் சொல்லப்பட்டது.]

'ஒப்பமதித்தல்' என்றது பிறர்பழியையும் தமக்குவந்த பழிபோல் கருதுதல். பிறருடையதையும் தமதாகப் பாவிக்கின்றவர் பெரியாராவர். அவரையே உலகமும் புகழும். ஆதலால் அவரை நாணுக்கிருப்பிடம் என்றது உம்மை எண்ணும்மை. 'உறைபதி' என்றது கிக்காதிருக்குமிடம். உலகு இடவாகுபெயர்.

நாண்வேலி கொள்ளாது மன்னே வியன்ஞாலம் பேணலர் மேலா யவர்.

(பரி-உரை) மேலாயவர் - உயர்ந்தவர், வேலி காண் கொள்ளாது-தமக் கேமமாக நாணினைக் கொள்வதன்றி, வியன் ஞாலம் பேணலர் - அகன்ற ஞாலத்தைக் கொள்ள விரும்பார் எ-று.

பழிபாவங்கள் புகுதாமற் காத்தலின், வேலியென்றார். நாணும் ஞாலமுந் தம்முண் மாறுயவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவை புகுத லெறியாய ஞாலத்தினைக் கொள்ள விரும்பாரென்பதாம். மன்னும் ஓவும் அசை. காணுடைய கேலியைப் பெற்றல்லது ஞாலம்பெற விரும்பாரென் றவைப்பாரு முளர்.

(ப-உரை) மேலாயவர் - உயர்ந்தவர், வேலி - (தமக்குக்) காப்பாக, காண்- நாணத்தை, கொள்ளாது - கொள்வதல்லாமல், வியன்ஞாலம் - பரப்பான பூமியை, பேணலர்-கொள்ளவிரும்பார் எ-று.

(க-உரை) உயர்ந்தோர் நாணத்தைக்கொள்ளாமல் உலகத்தை விரும்பார் என்பதாம்.

(வி-உரை) பழிபாவங்கள் அடையாமற் காத்தலால் வேலியென்றார். நாணமும் பூமியும் ஒன்றைவிட்டு ஒன்றைக்கொள்ளும்படி நேரிட்டவிடத்து நாணத்தைக்கொள்வதல்லது அப்பழிபாவங்கள் புகும்வழியாகிய பூமியைக் கொள்ள விரும்பாரென்பதாம். மன்னும் ஓவும் அசைகள்.

'உயர்ந்தவர்' என்றது கல்வி கேள்விகளிற் சிறந்தவர். 'ஏமம்' என்றது காப்பு. 'வேலி' என்றது பழிபாவங்கள் தம்மிடம் புகுதாமற் காத்தலின் நாணை வேலி என்றார். 'நாண்வேலி' என்றது நாணுகிய வேலியென்றும் பொருள் கூறலாம். சான்றோர் நாணுகிய வேலியைக் கொள்வதன்றி ஞாலம் பெற விரும்பார். ஞானம்பெறவரினும் அதனை விரும்பாத சிறந்த வேலி யாகிய நாணையே பெரிதுகொள்வர். 'வியன்ஞாலம்' என்றது பரப்பான பூமி. (6)

நாண வுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணண்டுறவார் நாணுள் பவர்.

(பரி-உரை) நாண் ஆள்பவர் - நாணினது சிறப்பறிந்து அதனை விடா தொழுகுவார், நாணல் உயிரைத் துறப்பர் - அந்நாணு முயிருந் தம்முண் மாறுயவழி நாண் சிதையாமற்பொருட்டு உயிரை நீப்பர்; உயிர்ப்பொருட்டு நாண் துறவார்-உயிர் சிதையாமற்பொருட்டு நாணினை நீக்கார் எ-று.

உயிரினும் நாண் சிறந்ததென்பதாம். இவை யிரண்டுபோட்டானும் அவர் செயல் கூறப்பட்டது.

(ப-உரை) நாணுள்பவர் - நாணத்தை (அதனை சிறப்பறிந்து) விடாது கடப்பவர், (அந்நாணும் உயிருங்கூடி நிற்கமாட்டாதவிடத்து), நாணல்-நாண் சிதையாமற்பொருட்டு, உயிர்-உயிரை, துறப்பார் - நீக்குவார், உயிர்ப்பொருட் டான்-உயிர் சிதையாமற்பொருட்டு, நாண்-நாணினை, துறவார்-நீக்கார் எ-று.

(க-ரை) நாணத்தைக்கொள்பவர் உயிரை நீக்குவார்; நாணத்தைக் கொள்ளாதவர் உயிரை நீக்கார் என்பதாம்.

(வி-ரை) நாண் உயிரினுஞ் சிறந்ததென்பதாம். [இவை இரண்டுபோட் டாலும் அவர்செயல் சொல்லப்பட்டது.]

'விடாதொழுகுபவர்' என்றது கைவிடாதிருப்பவர். 'நாணுமுயிருந் தம்முண்மாருயவழி' என்றது நாணும் உயிருங்கூடி நிற்கமாட்டாதவிடத்து. 'சிறுதல்' என்றது கெடல். 'நீப்பர்' என்றது விட்டுவிடுவர்; இதில் நீ முதனிலை. சான்றோர் நாண் சிதையாமலிருக்கும்பொருட்டுத் தமது உயிரை விடுவரேயொழிய உயிரின்பொருட்டு நாணினை நீக்கார். ஆகவே அவர்களுக்கு உயிரினும் நாணே சிறந்ததென்பதாம். (7)

பிறர்நாணத் தக்கது தானுணை னுயி
னறநாணத் தக்க துடைத்து.

(பரி-உரை) பிறர் நாணத்தக்கது தான் காணுனின் - கேட்டாருங் கண்டாரு நாணத்தக்க பழியை ஒருவன் தானுணுது செய்யுமாயின், அறம் நாணத்தக்கது உடைத்து - அந்நாணுமை அவனை அறம் விட்டு நீங்கத்தக்க குற்றத்தினை யுடைத்து எ-று.

தானெனைச் செய்வானைப் பிரிக்கின்றாராகலின், பிறரென்றார். நாணை டியையில்லாதானை அறஞ் சாராதென்பதாம்.

(ப-ரை) பிறர்-கேட்டவரும் கண்டவரும், நாணத்தக்கது-நாணத்தக்க பழியை,தானுணுனின்-(ஒருவன்) தானுணுது செய்வானாயின் (அந்நாணுமை) அறம்-தருமமானது, நாணத்தக்கது - அவனை விட்டு நீங்கத்தக்க குற்றத்தை, உடைத்து-உடையது எ-று.

(க-ரை) ஒருவனுணுது பழியைச்செய்வானாகில் அது குற்றத்தை யுடையது என்பதாம்.

(வி-ரை) நாணில்லாதவனை அறம் சாராதென்பதாம்.

'பிறர்' என்றது காதினால் கேட்டவரும் கண்ணாற் கண்டவர்களுமாகிய பிறர். 'நாணத்தக்க' என்றது அஞ்சத்தக்க. 'அறம் நாணுதல்' என்றது அறம் அவனிடம் இருத்தற்கு நாணி அவனைவிட்டு நீங்குதல். 'நாணுடையை பில்லாதானை' என்றது நாணில்லாதவனை. இதனால் நாணுடையவனை அறஞ் சார்ந்திருக்கும் என்பதும், நாணுடையைபில்லாதானை அறஞ்சாராதென் பதும் பெற்றாம். (8)

குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னிலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை.

(பரி-உரை) கொள்கை பிழைப்பிற் குலம் சுடும் - ஒருவனுக்கொழுக்கம் பிழைக்குமாயின் அப்பிழைப்பு அவன் குடிப்பிறப் பொன்றினையுஞ்

கெடுக்கும்; நாணின்மை கின்றக்கடை கலம் சுடும்-ஒருவன்மாட்டு நாணின்மை கின்றவழி அங்கில அவனலம் யாவற்றையுங் கெடுக்கும் எ-று.

கிற்றல்-ஒருபொழுது நீக்காமை. கலம் சாதிபொருமையாகலின், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனமென்றிவற்றுன் வந்தனவெல்லாங் கொள்ளப் படும். ஒழுக்கவழிவினும் நாணழிவு இறப்பத் தீதென்பதாம்.

(ப-ரை) கொள்கை-ஒழுக்கம், பிழைப்பின்-(ஒருவனுக்கு) வழுவுமாயின், (அவ்வழுவு) குலம்-(அவன்) குடிப்பிறப்பொன்றையும், சுடும்-கெடுக்கும், நாணின்மை-நாணில்லாமை, கின்றக்கடை-(ஒருவன்கண்ணே) கின்றவிடத்து, (அங்கில), கலம்-(அவ) னலம்யாவையும், சுடும்-கெடுக்கும் எ-று.

(க-ரை) ஒருவனுக்கொழுக்கம் வழுவுமாயின் அவ்வழுவு அவன் குலத் தைக்கெடுக்கும். ஒருவனுணாகை கின்றுல் அது கன்மையாவற்றையுங் கெடுக்கு மென்பதாம்.

(வி-ரை) கலம் பிறப்பு கல்வி குணம் செயல் இனம் என்றிவைகளால் வந்தனவெல்லாங் கொள்ளப்படும். ஒழுக்கவழினைக்காட்டிலும் நாணவழிவு மிகத் தீதென்பதாம்.

'ஒழுக்கம்' என்றது கல்லொழுக்கம். 'பிழைக்குமாயின்' என்றது தவறு மாயின். 'குடிப்பிறப்பொன்றையும்' என்றது உயர்குடிப்பிறப்பு ஒன்றை மாத்திரம். 'நாணின்மை' என்றது நாணமின்மை. 'கிற்றல்' என்றது ஒருபொழுதும் நீக்காதிருத்தல். 'கலம்' என்றது உயர்குடிப்பிறத்தல், கற்ற கல்வி குணம் கற்செயல் முதலியனவகளால் உடையவனுக்குண்டாகும் கன்மைகள். 'கொள்கை' இதில் கொள் முதனிலை. ஒழுக்கம் அழியினும் நீதில்லை. ஆனல் நாணழியின் மிகுதியுங் தீமை பயக்கும். ஆதலின் ஒழுக்கத்தினும் நாணே சிறப்புடைத்து. (9)

நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாண லுயிர்மருட்டி யற்று.

(பரி-உரை) அகத்து நாண் இல்லார் இயக்கம்-தம்மனத்தின்கண் நாணில்லாத மக்கள் உயிருடையார்போன் றியக்குகின்ற வியக்கம், மரப் பாவை நாணல் உயிர் மருட்டியற்று-மரத்தாற்செய்த பாவை இயந்திரக்கயிற் றினலய தன்னியக்கத்தால் உயிருடைத்தாக மயக்கினுற்போலும் எ-று.

கருவியே கருத்தாவாயிற்று. நாணில்லாத மக்களியக்கம் நாணுடைய பாவையியக்கம் போல்வதல்லது உயிரியக்கமன்றென்பதாம். இவை மூன்று பாட்டானும் நாணில்லாதிழிவு கூறப்பட்டது.

(ப-ரை) அகத்து-(தம்) மனத்தில், நாண்-நாணத்தை, இல்லார்-இல்லாத மக்கள், இயக்கம்-(உயிருடையவர்போன்று சஞ்சரிக்கின்ற) சஞ்சரிப்பு, மரப்பாவை-மரத்தாற்செய்யப்பட்ட பாவை, நாணல்-எந்திரக்கயிற்றினு லாகிய (சஞ்சரிப்பால்), உயிர்-உயிருடையதாக, மருட்டியற்று-மயக்குதல் போலும் எ-று.

(க-ரை) காணமில்லாமக்கள் சஞ்சரிப்பு மரத்தாற்செய்யப்பட்ட பாவை யிற்று லயிருடையதாக மருட்டியது போலாம் என்பதாம்.

(வி-ரை) காணில்லாத மக்களைசவு காணுடைய பாவை யசைவுபோல்வ தல்லத உயிரில்லை யென்பதாம். [இவை மூன்றுபாட்டாலும் காணில்லா நிழிவு சொல்லப்பட்டது.]

'இயக்குகின்ற இயக்கம்' என்றது வாழ்கின்ற வாழ்க்கை. 'இயக்கிரம்' என்றது பொறி. 'இயக்கம்' என்றது சஞ்சரிப்பு. 'கருத்தா' என்றது எழுவாய். 'மரப்பாவை' என்றது மரத்தாலாகிய பாவை. 'இயக்கம்' இதில் இயக்கு தன்வினைப்பகுதி. இயக்கு பிறவினைப்பகுதி. 'மருட்டியற்று' இதில் மருள் தன்வினைப்பகுதி. மருட்டு பிறவினைப்பகுதி. காணமில்லாத மக்க ளுடைய இயக்கம் காணுலாட்டப்படும் பாவையினியக்கம்போல்வதன்றி உயிரினது இயக்கமன்று என்பதாம். இதனால் காணில்லாத உயிரினிழிவு (10) கூறப்பட்டது.

102-ம் அதி - காணுடைமை - முற்றிற்று.

103-ம் அதிகாரம்—குடிசெயல்வகை

(பரி-உரை) அஃதாவது: ஒருவன்றன் பிறந்த குடியை உயரச்செய்த லின் நிறம். இது தாழ்வின்க ணுணுதலுடையார்க்குளதாவதாகலின் காணுடைமையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: ஒருவன் தான் பிறந்த குடியை உயரச்செய்தலின் விதம். இது தாழ்வினிடத்து காணுடையவர்க்கு உண்டாவதாகலால் அதன் பின் வைக்கப்பட்டது.

கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும் பெருமையிற் பீடுடைய தில்.

(பரி-உரை) கருமம் செயக் கைதூவேன் என்னும் பெருமையின் - தன் குடிசெய்தற்பொருட்டுத் தொடக்கிய கருமமுடியாமையின் எண்ணிய கருமஞ் செய்தற்கியான் கையொழியேனென்னும் ஆன்விளைப் பெருமைபோல, ஒருவன் பீடு உடையது இல் - ஒருவனுக்கு மேம்பாடுடைய பெருமை பிறிதில்லை எ-று.

குடிசெய்தற்கென்பது அதிகாரத்தான் வந்தது. பலவகைத்தாய கருமச் செயலாற் செல்வமும் புகழுமெய்திக் குடி யுயருமாகலின், பீடுடையதில் லென்றார். குடிசெய்தற் கருமமே கடத்தலால், தன் கருமஞ் செய்யவென்றம் பிறர்கருமஞ் செய்யவென்ற முனைப்பாருமூனர்; தன் கருமமும் அதனே யாகலானும், பிறசேவல் செய்தல் தலைமையன்மையானும், அவை புனை யன்மை யறிக.

(பத) ஒருவன்-ஒருவன், (தன்குடிசெய்தற்பொருட்டுத் தொடக்கிய கரும முடியாமையால்), கருமஞ்செய - அக்கருமஞ்செய்தற்கு, கைதூவே னென்னும்-கையொழியேனென்கிற, பெருமையின்-முயற்சிப்பெருமைபோல், பீடையது-மேம்பாடுடைய பெருமை, இல்-(அவனுக்கு) இல்லை எ-று.

(ந-ரை) ஒருவன் கருமஞ்செய்வதற்குக் கைவிடனென்னும் பெருமை போல் மேன்பாடுடையதில்லை என்பதாம்.

(வி-ரை) குடிசெய்தற்கென்பது அதிகாரத்தால் வந்தது. பலவகைக் கருமஞ்செய்தலாலே செல்வமும் புகழுமடைந்து குடி உயருமாகலால் பீடுடையதில்லையென்றார்.

'குடிசெய்தற்பொருட்டு' என்றது ஒருவன் தான்பிறந்த குடியைத் தக்க செயலாற்றி யுயர்த்துதற்பொருட்டு. 'கையொழியேன்' என்றது கைதள ரேன். 'ஆள்வினை' என்றது முயற்சி. 'மேம்பாடு' என்றது மேலோங்கும் சிறப்பு. பலவகைக் கருமங்களைச் செய்வதனால் பொருளும் புகழும் சேரக் குடிசிறப்படையுமாதலின் பீடுடையது பிறிதில்லை என்றார். குடிசெய்தற்குக் கருமமே யேதுவானதால் கருமஞ்செய வென்றார். கையொழியேன் என்னும் பெருமையை "இசையாதெனினு மியற்றியோராற்றல் அசையாது கிற்பதா மாண்மை" என்றார் காலடியாரும். 'மேம்பாடு' என்றது மேம்படுதல்; இதில் மேம்படு பகுதி. (1)

ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி.

(பரி-உரை) ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள்வினை யான்-முயற்சியும் நிறைந்த வறிவுமென்று சொல்லப்பட்ட இரண்டினையு முடைய இடையறாத கருமச்செயலால், குடி நீளும் - ஒருவன் குடியுயரும் எ-று.

நிறைதல் - இயற்கையறிவு செயற்கையறிவோடு கூடி நிரம்புதல். ஆள் வினை மடிபுகுதாமற் பொருட்டு. ஆன்றவறிவு உயர்தற்கேற்ற செயல்களும் அவை முடிக்குந்திறமும் பிழையாம லெண்ணுதற்பொருட்டு. இவையிரண்டு பாட்டானும் அச்செயற்குக் காரணங் கூறப்பட்டது.

(ப-ரை) ஆள்வினையும்-முயற்சியும், ஆன்றவறிவும் நிறைந்தவறிவும், என விரண்டின்-என்று சொல்லப்பட்ட இரண்டினையுமுடைய, நீள்வினையான்-ஓய்வில்லாத கருமச்செயலால், குடி-(ஒருவனது) குடி, நீளும்-உயரும் எ-று.

(க-ரை) முயற்சியும் அறிவுமாகிய விரண்டின் தொழிலாலொருவன் குடியுயரும் என்பதாம்.

(வி-ரை) நிறைதல்-இயற்கையறிவு செயற்கையறிவோடுகூடி நிரம்புதல் ஆள்வினை-சோம்பல் அடையாமற்பொருட்டு. ஆன்றவறிவு-உயர்தற்குயேற்ற செயல்களும் அவை முடிக்கும்விதமும் நாடிப் பிழைபடாமல் எண்ணுதற்

பொருட்டு. [இவை இரண்டோட்டாலும் அச்செயற்குக் காரணஞ் சொல்லப் பட்டது.]

'ஊன்வினை' என்றது முயற்சி; ஊன்றலாகிய தொழில். 'ஊன்ற அறிவு' என்றது குறைவிலாத கிறைந்த அறிவு. 'நீள்வினையால்' என்றது நீண்ட தொழில்; அதாவது ஓய்வு இலாத கருமச்செயல். 'கிறைந்த அறிவு' என்றது இயற்கையறிவு செயற்கையறிவோடுகூடி கிரம்பியவறிவு. 'குடி உயரும்' என்றது குடிசிறந்து வினங்கும். முயற்சியும் கிறைந்த அறிவோடுக்கூடிய இடைவிடாத கருமச்செயலால் ஒருவனது குடி உயர்ந்து வினங்கும். (2)

குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

(பரி-உரை) குடி செய்வல் என்னும் ஒருவற்கு - என் குடியினை யுயரச் செய்யக்கடவேனென்ற கொண்டு அதற்கேற்ற கருமங்களின் முயலும் ஒருவனுக்கு, தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும் - தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்தற்று கிற்கும் எ-று.

முயற்சியை அதன் காரணத்தாற் கூறினார். தற்றுதல்-இறக வடுத்தல். முன்னடப்பார் செயல் கியதிமே லேற்றப்பட்டது.

(ப-உரை): குடிசெய்வலென்னும்-(என்) குடியினை உயரச் செய்யக்கடவே னென்றகொண்டு (அதற்கு ஏற்ற கருமங்களின் முயலுகிற), ஒருவற்கு ஒருவனுக்கு, தெய்வம் - தெய்வமானது, மடி-உடையை, தற்று - இறக வடுத்திக்கொண்டு, தான்-தான், முந்துறும்-முன்னேயுற்று கிற்கும் எ-று.

(க-உரை) குடியை யுயரச் செய்வேனென்று மொருவனுக்குத் தெய்வ முன்னிற்கும் என்பதாம்.

(வி-உரை) முன்னடப்பார்செயல் ஊழ்மேல் யேற்றப்பட்டது.

'மடி' என்றது மடித்தக்கட்டுவதால் உடை. 'தற்றுதல்' என்றது இறக வுடுத்தல். குடியினை யுயரச்செய்யக்கடவேனென்பது முயற்சிக்குக்காரணம் ஒருதொழிலுக்குச் செல்வோன் அதற்கு இடையூறண்டாகாதவண்ணம் தனதாடை கெழாதபடி இறகவுடுத்துக்கொள்ளுதல் மரபு. தெய்வம் உடையை இறக வுடுத்தக்கொண்டு முன்னேகிற்கும் என்பது தன்குடி யுயர அதற்கேற்றசெயலில் முயலுகிறவனுக்கு இடையூறண்டாகாதவண்ணம் தெய்வம் முன்னின்று முட்டின்றி முடித்தத்தரும் என்பதாம். செய்வல் (3) இது எதிர்காலவினைமுற்று.

சூழாமற் றூனே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துளூற்று பவர்க்கு.

(பரி-உரை) தங்குடியைத் தாழாத உளூற்றுபவர்க்கு - தங்குடிக்காம் வினையை விரைந்து முயல்வார்க்கு, சூழாமல் தானே முடிவெய்தும்-அவ்வினை முடிக்குந்திறம் அவர் சூழவேண்டாமற்றானே முடிவெய்தும் எ-று.

குடி - ஆகுபெயர். தெய்வ முந்நிறுதலாற் பயன் கூறியவாறு. இவை பிரண்டு பாட்டானும் அதற்குத் தெய்வந் துணையாதல் கூறப்பட்டது.

(ப-ரை) தங்குடியை - தங்குடிக்காஞ்தொழிலை, தாழாஅ - விரைந்து, உளற்றபவர்க்கு-முயல்பவர்க்கு, (அத்தொழில் முடிக்கும்விதம்), சூழாமல் - ஆலோசிக்கவேண்டாமல், தானே முடிவெய்தும்-தானே முடிவுபெறும் எ-று.

(க-ரை) தங்குடிக்கான தொழிலைச் செய்வோர்க்கு அதுதானே முடிவு பெறும் என்பதாம்.

(வி-ரை) குடி அதற்காஞ்தொழிலுக்கு ஆகலால் ஆகுபெயர். ஊழ்முந் நிறுதலால் பயன்சொல்லியபடி. [இவை இரண்டுபோட்டாலும் அதற்கு ஊழ் துணையாதல் சொல்லப்பட்டது.]

'தம்குடிக்குஆம் வினையை' என்றது தங்குடி புயர்தற்கேற்ற செயலை. 'முடிக்குந்திறம்' என்றது முடிக்கும்வகை. குடி குடிக்காஞ் தொழிலை புணர்த்த ஆகுபெயராம். முன்னர் தெய்வம் முந்நிறும் என்றமையால், அதன்பயன் ஈண்டு அவன் சூழாதே முடிவெய்தும் என்றார். 'தாழாஅ' என்றது காலம் தாழ்க்காது. 'உளற்றுதல்' என்றது முயலுதல். இதில் உளற்ற முதனிலை.

(4)

குற்ற மிலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு.

(பரி-உரை) குற்றம் இலனுய்க் குடிசெய்து வாழ்வானை - குற்றமாயின செய்யாது தன்குடியை புயரச்செய்தொழுகுவானை, சுற்றமாச் சுற்றும் உலகு. அவனுக்குச் சுற்றமாக வேண்டித் தாமேசென்று சூழ்வர் உலகத்தார் எ-று.

குற்றமாயின-அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாமும் பயனெய்த வெஞ்சி யாவருஞ்சென்று சார்வதென்பதாம்.

(ப-ரை) குற்றமிலனுய்-குற்றமானவை செய்திலனுகி, குடிசெய்து-(தன்) குடியை உயரச்செய்து, வாழ்வானை - வாழ்பவனை, சுற்றமா - (அவனுக்குச்) சுற்றமாகவேண்டி, உலகு-உலகத்தார், சுற்றும்-(தாமேசென்று) சூழ்வர் எ-று.

(க-ரை) குற்றமற்றனுய் குடியை புயரச்செய்து வாழ்பவனை உலகத் தார் சூழ்வர் என்பதாம்.

(வி-ரை) குற்றமாயின - அறநீதிகளுக்கு விரோதமான செயல்கள். தாமும் பயனடைதலெஞ்சி யாவரும்சென்று சார்வதென்பதாம்.

'குற்றமாயின செய்யாது' என்றது அறத்திற்குமாறுய குற்றந்தருஞ் செயல்களைச் செய்யாது. 'குடிசெய்து' என்றது தகுந்தசெயல்களால் தன் குடியையுயர்த்தி. 'சுற்றம்ஆக' என்றது அவனுக்கு உறவாக. உலகு இடவாகு பெயர். அறத்தின்வழியே ஒழுகி தக்கசெயலாற்றித் தன்குடியை புயர்த்த வனைத் தாமும் பயனெய்தல் கருதி உலகத்தாரும் அவனைச் சூழ்ந்து உறவு கொள்வர்.

(5)

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்.

(பரி உரை) ஒருவற்கு நல்லாண்மை என்பது - ஒருவனுக்கு நல்ல ஆண்மையென்று உயர்த்துச் சொல்லப்படுவது, தான் பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல் - தான்பிறந்த குடியினையாளுந் தன்மையைத் தனக்குள தாக்கிக்கோடல் எ-று.

போர்த்தொழிலினீக்குதற்கு நல்லாண்மையென விசேடித்தார். குடியினையாளுந்தன்மை குடியிலுள்ளாரை யுயரச்செய்து தன்வழிப்படுத்தல். அதனைச் செய்துகோடல் நல்லாண்மை யாமாறு வருகின்ற பாட்டாற் பெறப்படும்.

(ப-ரை) ஒருவற்கு-ஒருவனுக்கு, நல்லாண்மையென்பது-நல்ல ஆண்மை யென்று உயர்த்திச் சொல்லப்படுவது, தான்பிறந்த - தானுற்பவித்த, இல்லாண்மை - குடியை யாளுந்தற்றன்மையை, ஆக்கிக்கொளல் - (தனக்கு) உண்டாக்கிக்கொள்ளுதல் எ-று.

(க-ரை) ஒருவனுக் காண்மையென்று சொல்லப்படுவது தன்குடியை யுயர்த்திக்கொள்ளுதல் என்பதாம்.

(வி-ரை) போர்த்தொழிலினீக்குதற்கு நல்லாண்மையென விசேடித்தார். குடியை யாளுந்தற்றன்மை குடியிலுள்ளவரை உயரச்செய்து தன் வழிப்படுத்தல். அதனைச் செய்துகொள்ளுதல் நல்லாண்மையாம்விதம் வருகிற பாட்டாற் பெறப்படும்.

'ஆக்கிக்கொளல்' என்றது மேலாக உண்டாக்கிக்கொள்ளல். போர்த் தொழிலுக்குரிய ஆண்மையன்று என்பது தோன்ற நல்லாண்மையென்றார். 'குடியினையாளுந்தன்மை' என்றது குடியிலுள்ளாரை நற்செயலால் மேம்பாடடையச்செய்து தன்வழிப்படுத்தல். (6)

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவார் மேற்றே பொறை.

(பரி-உரை) அமரகத்த வன்கண்ணர்போல - களத்தின்கட் சென்று பலாயினும் போர்தாக்குதல் வன்கண்ணர் மேலதாலுற்போல, தமரகத்தும் பொறை ஆற்றவார் மேற்றே - குடியின்கட் பிறந்தார் பலாயினும் அதன் பாரம் பொறுத்தல் அதுவல்லார் மேலதாம் எ-று.

பொருட்கொக்க வேண்டுஞ்சொற்கள் உவமைக்கண் வருவிக்கப் பட்டன. நன்கு மதிக்கப்படுவார் அவரேயென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அதசெய்வா ரெய்தஞ் சிறப்புக் கூறப்பட்டது.

(ப-ரை) அமரகத்த - களத்தினிடத்த, (சென்றவர் பலாயினும் போர் தாக்குதல்) வன்கண்ணர்போல - சூர் (மேலதாகுதல்) போல, தமரகத்தும்

குடியினிடத்தும், (பிறத்தவர் பலராயினும்) பொறை - (அதன்பாரம்) பொறத்தல், ஆற்றுவார்மேற்றே - வல்லவர்மேலதேயாம் எ-று.

(க - ரை) போர்க்களத்தில் வீரர்மேலாகுதல்போலக் குடியிடத்துப் பாரம்பொறத்தல் வல்லவர் மேலதாம் என்பதாம்.

(வி-ரை) கன்மைமதிக்கப்படுவார் அவரேயென்பதாம். [இவை மூன்று பாட்டாலும் அலை செய்வாரடைபும் சிறப்புச் சொல்லப்பட்டது.]

'அமராகம்' என்றது போர்செய்யுமிடம். 'வன்கண்ணர்' என்றது கருணையற்றவீர். 'போர்தாங்குதல்' என்றது படைவரை எதிர்த்துப் போர் செய்தல். 'வன்கண்ணர்மேலதாஞற்போல' என்றது வீரரது செயலாதல் போல, குடியினிடத்தும் சுற்றத்தாரை உபசரித்தல் முதலாகிய பொறையதனைத் தாங்குவார்மேலதாம். அதனால் கன்குமதிக்கப்படுவாரும் அப்பொறை தாங்குமாற்ற லுடையாராகிய அவரேயாம். (7)

குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து மானங் கருதக் கெடும்.

(பரி-உரை) மடிசெய்து மானம் கருதக்கெடும் - தக்குடியினை யுயரச் செய்வார் அச்செயலையே நோக்காது காலத்தைநோக்கி மடியினைச் செய்து கொண்டு மானத்தையுங் கருதுவராயிற் குடிகெடும்; குடி செய்வார்க்குப் பருவம் இல்லை-ஆகலான் அவர்க்குக் காலநியதி யில்லை எ-று.

காலத்தை நோக்கி மடிசெய்தல் - வெயின் மழை டனி யென்பன வுடைமைநோக்கிப் பின்னர்ச் செய்தமென் றெழிந்திருத்தல். மானங் கருதுதல் - இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் தன்ப முறவேன் யானேவென்ற உட்கோடல். மேல் * "இகல்வெல்லும் வேந்தற்கு வேண்டும்பொழு" தென்ற தட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோவென்று கருதினும் அது கருதற்கவென்ற மறுத்தவாறு.

(ப-ரை) மடிசெய்து-(குடியுயரச்செய்தலை நோக்காது காலத்தைநோக்கி) சோம்பல் செய்துகொண்டு, மானம் - மானத்தையும், கருதற்பாலதில், கெடும்-(குடி) கெடும்; (ஆகலால்), குடிசெய்வார்க்கு-தன் குடும்பத்தை யுயரச் செய்வார்க்கு, பருவம்-காலநியதி, இல்லை-இல்லை எ-று.

(க - ரை) குடும்பத்தை யுயரச்செய்வார்க்குக் காலநியதியில்லை என்பதாம்.

(வி-ரை) காலநோக்கி மடிசெய்தல் - வெயின் மழை பனி புஷ்டமை நோக்கிப் பின்னே செய்வோமென்ற ஒழிந்திருத்தல். மானங்கருதல் - இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற நான் இக்காலத்துத் தன்பமுறவேனே வென்ற உட்கொள்ளுதல். மூன் இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும்

* திருக்குறள்: 49-ம் அதி-காலமறிதல்-1.

பொழுது என்றதுகொண்டு இவர்க்கும் வேண்டுமோவென்று நினைக்கினும் அது நினைக்கலாகாதென மறுத்தபடி.

'மடியினைச்செய்துகொண்டு' என்றது சோம்பலைக் கைக்கொண்டு. 'காலநியதி' என்றது காலஉளவு. 'காலத்தைநோக்கி மடிசெய்தல்' என்றது வெயின் மழை பனி யென்பன வுடைமைநோக்கி அவ்வக்காலத்திற் செய்யத் தக்கவைகளைச்செய்யாது பின்னர்ச் செய்துமென் றொழிந்திருத்தல். 'மானங் கருதுதல்' என்றது இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இந்தக்காலத்தில் துன்பமுறுவேன் யானோவென்று உள்ளத்தில் கொள்ளல். 'குடியுயரச்செய் வோர்க்குக் காலமில்லையென்றதாயிற்று. (8)

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தை குற்ற மறைப்பா னுடம்பு. [க்

(பரி உரை) குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு - மூவகைத் துன்பமு முறற்பாலதாய தன்குடியை அவை யுறாமற் காக்க முயல்வானது உடம்பு, இடும்பைக்கே கொள்கலங் கொல் - அம்முயற்சித் துன்பத்திற்கே கொள்கலமா மத்துணையோ, அஃதொழிந்து இன்பத்திற்காதலில்லையோ?

* "உறைப்பெய லோலைபோல, மறைக்குவன் பெருமநிற்குறித்து வருவேலே" என்புழியும் மறைத்தல் இப்பொருட்டாயிற்று. என் குடிமுழுது மின்புற்றுயரவே நானிருமையு மெய்துதலான் இம் மெய்வருத்தமாத்திரம் எனக்கு நன்றென்று முயலு மறிவுடையான் அஃதொருஞான்று மொழி யாமை நோக்கி, இடும்பைக்கே கொள்கலங் கொல்லோவென்றார். இது குறிப்புமொழி. இவை யிரண்டுபாட்டானும் அவர் அதுசெய்யு மியல்பு கூறப்பட்டது.

(ப-ரை) குடும்பத்தை - தன்குடியை, குற்றமறைப்பான் - மூவகைத் துன்பங்களும் அடையாமற் காக்க முயல்பவனது, உடம்பு - உடலம், இடும்பைக்கே-(முயற்சித்) துன்பத்திற்கே, கொள்கலங்கொல் - கொள்கலமா மவ்வளவோ (இன்பத்திற் காகுதலில்லையோ?) எ-று.

(க ரை) தன் குடியைக் காக்க முயற்சிசெய்பவனுடலந் துன்பத்திற்குக் கொள்கலமாம் என்பதாம்.

(வி-ரை) என்குடிமுழுதும் இன்பமுற்று உயரவே நான் இருமையும் பெறுதலால் இம்மெய்வருத்தமாத்திரம் எனக்கு நல்லதென்று முயலும் அறிவுடையவன் அதனை எந்நாளும் விடாமை நோக்கி இடும்பைக்கே கொள்கலங் கொல்லென்றார். இது குறிப்புமொழி. ஓ - அசை. [இவை இரண்டுபாட்டாலும் அவர் அது செய்யுமியல்பு சொல்லப்பட்டது.]

'கொள்கலம்' என்றது இடமாயுள்ளது. "உறைப்பெயல் ஓலைபோல மறைக்குவன் பெருமநிற் குறித்து வருவேலே" என்பதன்பொருள்: மழை

* புறநானூறு-290.

பெய்யுமிடத்த அம்மழைத்துளிகள் மேலே வீழாதபடி காக்கும் குடையைப் போல, பெரும்வேல் உன்மீத படாதபடி தடுத்தற்கு முயலுவான் மறைத்தல் முயலுதல் என்ற பொருளில் வந்ததுகாண்க. தன்குடி முழுதமின்புற் றுயர, தானிருமைப்பயனு மெய்தலால் இச்சன்பமாத்திரம் தனக்கு கன்றென்று முயலும் அறிவுடையார் தன்புத்திரனின்றம் ஒழியாமைகோக்கி இடும்பைக்கே கொன்கலம் கொல்லோ என்றார். தன்குடியின் புறத்தான் என்றம் தன்பத்தையே விரும்புவன் என்றதாயிற்று. (9)

இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி.

(பரி-உரை) இடுக்கண் கால் கொன்றிட வீழும்-தன்பமாகிய கவியம் புகுந்த தன்முதலை வெட்டிச்சாய்க்க ஒருபற்றின்றி வீழாநிற்கும், அடுத்த ஊன்றம் நல்லாள் இலாத குடி-அக்காலத்துப் பற்றுவனகொடுத்துத் தாங்க வல்ல நல்ல வாண்மகன் பிறவாத குடியாகிய மரம் எ-று.

முதல்-அதன் வழிக்குரியார். வளர்ப்பாரைப் பெற்றழி வளர்த்த பயன்படுதலும் அல்லாவழிக் கெடுதலு முடைமையின், மரமாக்கினார்; * "தூக்கு நிறை வாவலுறை தொன்மரக்க ளன்ன, வோக்குகுல யையெத னுட்பிறந்த வீர், தாக்கல்கடன்" என்றார் பிறரும். இது குறிப்புருவகம். இதனுல் அவரில்லாத குடிக்குளதாங் குற்றங் கூறப்பட்டது.

(ப-உரை) அடுத்த-(தான் வீழும்போது) மூட்டுக்கொடுத்து, ஊன்றம்-தாங்கவல்ல, நல்லான்-நல்லவாண்மகன், இலாத-பிறவாத, குடி-குடியாகிய (மரம்), இடுக்கண்-தன்பமாகிய (கோடரியானது) கால்-(தன்) முதலை, கொன்றிட-வெட்டிச்சாய்க்க, வீழும்-(ஒருபற்றில்லாமல்) வீழாநிற்கும் எ-று.

(க-உரை) தாங்குவாரில்லாத குடியாகிய மரம் தன்பக்கோடரியானது வெட்டக்கெடும் என்பதாம்.

(வி-உரை) முதல்-அதன் வழிக்கு உரியார். வளர்ப்பாரைப் பெற்றவழி வளர்த்த பயன்படுதலும் அல்லாவழி கெடுதலும் உடைமையால் மரமாக்கினார். இது குறிப்புருவகம். [இதனால் அவரில்லாத குடிக்கு உளதாம் குற்றம் சொல்லப்பட்டது.]

'கவியம்' என்றது கோடரி. 'ஆள்' என்றது ஆள்தலையுடையமகன். 'வளர்ப்பார்' என்றது நீர்முதலியன கொடுத்துப் பேணுபவர். 'அல்லாவழி' என்றது வளர்ப்பாரைப் பெறுதவழி. மூட்டுக்கொடுக்காதமரம் கீழேயின்றிக் கீழே வீழுமாறுபோல வறுமையால் தன்புறக் குடியானது அதனைத் தாங்க வல்ல கல்லாண்மகனில்லாதபோழ்து கெடும் என்பதாம். இடுக்கணை கவிய மாகவும் குடியை மரமாகவும் அடுத்தூன்றும் என்னும் எதுவால் குறிப்பாக வுணருமாறு உருவகஞ்செய்தமையின் குறிப்புருவகமாயிற்று. (10)

103-ம் அதி - குடிசெயல்வகை - முற்றிற்று.

---

* சீவகசிந்தாமணி: காந்தருவதத்தையாரிலம்பகம்-6.

104-ம் அதிகாரம்—உழவு

(பரி-உரை) அஃதாவது: நெறான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை கோளர்க்குமுரித்தாய உழுசற்றொழில். செய்விக்குங்கால் ஏனையோர்க்கு முரித்த. இது மேற்குடி யுயர்தற்கேதுவென்ற வுள்விளை வகையாகலின் குடிசெயல்வகையின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: நெறான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை கோளிளர்க்கும் உரித்தாகிய உழுசற்றொழில். இது செய்விக்கும்போது மற்றவர்க்கும் உரித்தாகும். இது முன்னே குடி உயர்தற்கு ஏதுவென்ற முயறலியாதலான் குடிசெயல்வகையின்பின் வைக்கப்பட்டது.

சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனை
யுழந்து முழுவே தலை.

(பரி-உரை) சுழன்றம் ஏர்ப் பின்னை உலகம்-உழுதலான்வரும் மெய் வருத்த நோக்கிப் பிற தொழில்களைச் செய்த நிரிக்கும், முடிவில் ஏருடை யார் வழியதாயிற்று உலகம், அதனால் உழக்கும் தலை உழவே - ஆதலான் எல்லா வருத்தமுற்றம் தலையாய தொழில் உழவே எ-று.

ஏர்-ஆகுபெயர். பிற தொழில்களாற் பொருளெய்தியவழியும் உணவின் பொருட்டு உழுவார்கட் செல்லவேண்டுதலிற் சுழன்ற மேர்ப்பின்ன தலை மென்றம், வருத்த மிலவேனும் பிறதொழில்கள் கடையென்பது போதர உழக்குமுழவே தலையென்றற் கூறினர். இதனால் உழவினது சிறப்புக் கூறப்பட்டது.

(ப-உரை) உலகம்-உலகமானது, சுழன்றம் - (உழுதலால்வரு மெய்வருத்த நோக்கிப் பிறதொழில்களைச்செய்த) நிரிக்கும், ஏர்ப்பின்னது-(முடிவிலே) ஏருடையார் வழியதாயிற்று, அதனால்-ஆதலால், உழக்கும்-எல்லா வருத்த முற்றும், தலை-தலைமையாகிய (தொழில்), உழவே-உழுதலேயாம் எ-று.

(க-உரை) உலகமேருடையார் வழிபதாயிற்றத் தலைமையான தொழி லுழவேயாம் என்பதாம்.

(வி-உரை) ஏருடையார்க்கு ஆதலால் ஏர் ஆகுபெயர். பிறதொழில்க ளாலே பொருள் பெற்றவிடத்தும் உணவின்பொருட்டு உழுவாரிடத்துச் செல்லல் வேண்டுதலால் சுழன்ற மேர்ப்பின்ன தலைவென்றும் வருத்தம் இல்லையாயினும் பிறதொழில்கள் கடையென்பதுதோன்ற உழக்கு முழவே தலையென்றும்சொல்லினர். [இதனால் உழவினது சிறப்புச்சொல்லப்பட்டது.]

'வாணிகர்' என்றது வாணிபஞ்செய்வோர்; வாணிகர். தொல்காப்பியரும் "வைகென் பெறுமே வாணிக வாழ்க்கை" என்றார். 'வேளாளர்' என்றது வேளாண்மையுடையோர். (வேளாண்மை - உபகாரம்.) தொல்காப்பியரும் "வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது இல்லென மொழிய பிறவை

கேழ்ச்சி யென்றார். அன்றியும் பின்னோரும் "வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்" என்று விளக்கிக்காட்டியுள்ளார். இதனால் வாணிகஞ் செய்வோர் வாணிகரெனவும், வேளாண் டொழில்புரிவோர் எவரும் வேளாளரெனவும் பெறப்படும். அன்றி பிரிவின்று. இந்நூலுரையாசிரியர் வடநூலார் மதம்பற்றி சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கும் செய்விக்குங்கால் ஏனையோருக்கு முரித்தென்றார். இவ்வுரை நூலாசிரியர் கருத்துக் கொவ்வாதென்க. இவ்வுழவுத்தொழில் குடியுயர்தற் கேதுவென்ற ஆன்வினைவகையாதலினால் தன்குடி யுயர்த்துவான் முயலும் ஒவ்வொருவனும் கைக்கொள்ளுதற் குரித்தானதால் இது குடிசெயல்வகையின்பின் வைக்கப்பட்டது. 'திரிந்தும்' என்றது வாடியும். 'ஏருடையார் வழியதாயிற்று' என்றது உழவுத்தொழில் செய்கின்றவர் கையை எதிர்பார்ப்பதாயிற்று. 'தலையாயதொழில்' என்றது முதன்மையாயதொழில். ஔவையாரும் இதுபற்றி "தொழுதூண் சுவையின் உழுதூ ணினிது" என்றார். எத்தொழில் புரியினும் உணவின்பொருட்டு உழுவாரை எதிர்பார்க்கவேண்டுதலின் சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் என்றார். மற்றும் ஏனைய தொழில்களால் வருத்தமிலவேனும் அவை தொழுதூண் சுவையுடையதாதலின் கடையான தொழில் என்பது தோன்ற 'உழந்து முழவே தலை' என்றார். (1)

உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

(பரி-உரை) அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து-அவ்வுழுதலைச் செய்யமாட்டாது பிறதொழில்கண்மேற் செல்வார் யாவரையுந் தாங்குதலால், உழுவார் உலகத்தார்க்கு ஆணி-அதுவல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர் எ-று.

* "காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்" டென்றாற்போல உழுவாரென்றது உழுவிப்பார்மேலுஞ் செல்லும். உலகத்தாரென்றது ஈண்டிவரை யொழிந்தாரை. கலங்காமனிறுத்தற்கண் ஆணிபோறலின் ஆணியென்றார். பொறுத்தலானென்பது திரிந்துநின்றது. ஏகதேசவுருவகம். அஃதாற்றார் தொழுவாரேயெல்லாம் பொறுத்தென்று பாடமோதி, அதுமாட்டாதார் ஏப்பார் செய்யும் பரிபவமெல்லாம் பொறுத்து அவரைத் தொழுவாரே மாவரென் றுரைப்பாருமுளர்.

(ப-ரை) உழுவார் - உழுதலில் வல்லவர், அஃதாற்றாது - அவ்வுழுதலைச் செய்யமாட்டாமல், எழுவாரையெல்லாம் - (பிறதொழில்களிலே) மேற்செல்வார் யாவரையும், பொறுத்து - தாங்குதலால், உலகத்தார்க்கு - உலகத்தாராகிய (தேர்க்கு), ஆணி-அச்சாணியாவர் எ-று.

(க-ரை) உழுபவ ருலகத்தாராகிய தேர்க்கச்சாணியாவர் என்பதாம்.

* பட்டினப்பாலை: அடி-289-4.

(வி-ரை) உழுவாரென்பது உழுவிப்பாருக்கும் ஆம். உலகத்தாரென்றது இங்கே அவ்வுழவர் நீங்கலானவரை கலங்காமல் நிறுத்தலில் உழுவார் ஆணி போலுதலால் ஆணியென்றார். (ஏகதேசவுருவகம்.)

'உழுதலைச் செய்யமாட்டாது' என்றது உழவுத்தொழில் செய்யாது. 'பிறதொழில்கண்மேற் செல்வார்' என்றது பிறதொழில்களைச் செய்வார். 'அதுவல்லார்' என்றது உழவோர். 'காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு' என்றது காட்டையழித்துத் திரித்தி நாடாக்கி குளம்வெட்டுவித்து என்பதாம். இதனால் உழுவார் என்றது செல்வத்திற் சிறந்தோராகிய உழுவிப்பார் மேலுஞ் செல்லும். உலகத்தாரையென்றது உழவோரல்லாத மற்றவரை. அசையாது நிறுத்துகின்ற ஆணிபோல மற்றையோரைக் கலங்காமல் நிலைநிறுத்துதலினால் ஆணியென்றார். உழுவாரை (அச்சு) ஆணியாக உருவகஞ்செய்தவர் அதற்கியைய உலகத்தாரைத் தேராக உருவகஞ் செய்யாமையின், இக்குறள் ஏகதேசவுருவகவணியாயிற்று. (2)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

(பரி-உரை) உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் - யாவரு முண்ணும் வகை உழுதலைச்செய்து அதனாற்றாமுமுண்டு வாழ்கின்றாரே தமக்குரியராய் வாழ்கின்றவர்; மற்றெல்லாம் தொழுது உண்டு பின்செல்பவர் - மற்றையாரெல்லாம் பிறரைத் தொழுது அதனாற் றாமுண்டு அவரைப் பின்செல்கின்றவர் எ-று.

மற்றென்பது வழக்குப்பற்றி வந்தது. தாமும்மக்கட்பிறப்பினராய் வைத்துப் பிறரைத்தொழுது அவர் சிலகொடுப்பத் தம்முயிரோம்பி அவர் பின் செல்வார் தமக்குரியரல்லரென்பது கருத்து.

(ப-ரை) உழுது-(எல்லாரும் உண்ணும்படி) உழுதலைச்செய்து, உண்டு-(அதனால் தாமும்) உண்டு, வாழ்வாரே-வாழ்கின்றவரே, வாழ்வர்-(தமக்குரியராய்) வாழ்கின்றவர், மற்றெல்லாம்-மற்றவரெல்லாரும், தொழுது-(பிறரைத்) தொழுது, உண்டு-(அதனால் தாமும்) உண்டு, பின்செல்பவர்-(அவரைப்)பின் செல்லுகின்றவர் எ-று.

(க-ரை) உழுதுண்டு வாழ்பவரே வாழ்பவர்; மற்றவர் தொழுதுண்டு வாழ்பவர் என்பதாம்.

(வி-ரை) தாமும் மனிதராய்ப் பிறந்திருந்தும் பிறரைத்தொழுது அவர் சிலகொடுக்கத் தம்முயிர்காத்து அவர்பின் செல்வார் தமக்கு உரியரல்லரென்பது கருத்து.

'தமக்குரியராய் வாழ்கின்றவர்' என்றது தன் குடிப்பிறப்புக்கேற்ற மாண்புடைமையோடு வாழ்கின்றவராவர். 'மற்றையார்' என்றது உழவுத் தொழிலல்லாத பிறதொழில் செய்வோர். 'உழுதுண்டு வாழ்வாரே வா

வார்' என்றபடியால் கேளாண் வாழ்க்கை யுடையவர்களே சுதந்திரமும் மேம்பாடான வாழ்வுடையார் என்பதும், அவர்களது வாழ்க்கையே பெருமிதமான வாழ்க்கையென்பதும் பெறப்படும். மற்றொருவன் கொடுக்கத் தன்னுயிரோம்பின் தனக்குரிய மானமுடையவனல்லன் என்பதாம். (3)

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

(பரி-உரை) அலகு உடை நீழலவர் - உழுதற்றொழிலான் நெல்லினை யுடையராய தண்ணளியுடையோர், பலகுடைநீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்-பல வேந்தர் குடைநிழலதாய மண் முழுதினையுந் தம்மரசன் குடைக்கீழே காண்பர் எ-று.

அலகு-கதிர்; அஃதீண்டாகுபெயராய் நென்மேலதாயிற்று. உடையவென்பது குறைந்துநின்றது. நீழல்போறலின் நீழலெனப்பட்டது. நீழலவரென்றது இரப்போர்க்கெல்லாம் ஈதனோக்கி. ஒற்றுமைபற்றித் தங்குடையென்றார். குடைநீழலென்பதூஉம் ஆகுபெயர், * "ஊன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே" என்றதனால் தம்மரசனுக்குக் கொற்றம் பெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பரென்பதாம். † "இரப்போர் சுற்றமும் இரப்போர் கொற்றமு முழவிடை விளைப்போர்" என்றார் பிறரும்.

(ப - ரை) அலகுடை - (உழுதற்றொழிலால்) -நெல்லையுடையராகிய, நீழலவர்-தண்ணளியுடையோர், பலகுடை நீழலும் பல வேந்தர் குடைநிழலதாகிய, (பூமிமுழுதையும்) தங்குடைக்கீழ் - தம் (வேந்தர்) குடைக்கீழே காண்பர்-பார்ப்பார்கள் எ-று.

(க-ரை) உழவு முயற்சிசெய்வோர் பலவேந்தர் பூமியையுந் தம்வேந்தர் குடைநிழலிற் காண்பர் என்பதாம்.

(வி-ரை) அலகு - கதிர்; அது இங்கே நெல்லுக்காயிற்று. நீழல்போலுதலால் நீழலெனப்பட்டது. நீழலவரென்றது இரப்போர்க்கெல்லாம் ஈதனோக்கி. ஒற்றுமைபற்றி தங்குடையென்றார். குடைநீழலென்பதும் ஆகுபெயர். தம்மரசனுக்கு வெற்றிபெருக்கி மண்முழுதும் அவனதாகக் கண்டிருப்பரென்பதாம்.

'தண்ணளியுடையோர்' என்றது இனிய கருணையுடையோர். 'அலகுடைய' என்றது உடையெனக் குறைந்துநின்றது. நிழலினிமைபயப்பது போன்ற இனிய கருணையுடையார் மன்னனுக்குங் குடிக்குமுள்ள ஒற்றுமைபற்றி தங்குடையென்றார். மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம் ஆதலினென்க. குடைநிழலின் கண்ணதாகிய பூமியை யுணர்த்தலால் குடைநிழலும் ஆகுபெயர். "வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப், பொருபடை வருஉங் கொற்றமும் உழுபடை, யூன்றுசான் மருங்கி னீன்றதன் பயனே"

* புறநானூறு-35.

† சிலப்பதிகாரம்: நாடுகாண்காதை-149.

என்றதனால் போர்க்களத்தின்கண் வருகின்றபடையை எதிர்நின்று பொறுத்து அதுசரிந்து மீளும் புறக்கொடைகண்டு ஆர்த்துக்கொண்டு நின்போர்செய்யும் படைதரும் வெற்றியும் உழுகின்ற கலப்பை நிலத்தின்கண்ணே ஊன்ற சாலிடத்து விளைந்த நெல்லின்பயனே என்றதனால் தம்மரசனுக்கு வெற்றியைப்பெருக்கி பூமிமுழுவதும் அவனுடையதாகக் கண்டிருப்பார் என்பதாம். "இரப்போர் சுற்றமும் புரப்போர்கொற்றமும் உழவிடைவிளைப்போர்' இரப்பவரது இனத்தாரையும் அரசரது கொற்றத்தையும் உழுதொழில்பயனால் தருவோர் என்றார் சிலப்பதிகாரவாசிரியரும். (4)

இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது கைசெய்தூண் மாலை யவர்.

(பரி·உரை) கை செய்து ஊண் மாலையவர் இரவார் - தங்கையா லுழுதுண்டலை யியல்பாகவுடையார் பிறரைத் தாமிரவார், இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவர் - தம்மை யிரப்பார்க்கு அவர் வேண்டியதொன்றனைக் கரவாது கொடுப்பர் எ-று.

செய்தென்பதற்கு உழுதலையென வருவிக்க. கைசெய்தூண் மாலையவரென்பது ஒருஞான்றும் அழிவில்லாத செல்வமுடையரென்னும் ஏதுவை யுட்கொண்டு நின்றது.

(ப·ரை) கை·(தங்) கையால், செய்து·(உழுதல்) செய்து, ஊண் மாலையவர்·உண்ணுதலை இயல்பாகவுடையவர், இரவார் (பிறரைத்தாம்) இரவார், இரப்பார்க்கு·(தம்மை) இரப்பவர்க்கு, ஒன்று·அவர் (வேண்டிய) தொன்றை, கரவாது·ஒளிக்காமல், ஈவர்·கொடுப்பார் எ று.

(க·ரை) உழுதுண்பவர் யாசியார்; இரப்பவர்க்குக்கொடுப்பார் என்பதாம்.

(வி·ரை) கைசெய்தூண் மாலையவரென்பது எந்நாளும் அழிவில்லாத செல்வமுடையாரென்னும் ஏதுவை உள்ளேகொண்டு நின்றது.

'உழுதுண்டலை யியல்பாகவுடையார்' என்றது உழவுத்தொழில்செய்து உண்ணுதலை யியல்பாகவுடையவர். 'பிறரை' என்றது ஏனையோரை. 'தம்மை யிரப்பார்க்கு' என்றது தம்மிடத்தில் யாசிப்பவர்க்கு. 'கரவாது' என்றது ஒளிக்காது. 'கைசெய்து' என்றது கையில் உழவுத்தொழில்செய்து வேளாண் மக்கள் தம்மிடம் யாசிப்பவர்களுக்குக் கரவாது கொடுப்பார். (5)

உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம் விட்டேமென் பார்க்கு நிலை.

(பரி·உரை) உழவினார் கை மடங்கின்·உழுதலையுடையார் கை அதனைச் செய்யாது மடங்குமாயின், விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு நிலை இல்லை - யாவரும் விழையுமுணவும் யாந்துறந்தோமென்பார்க்கு அவ்வறத்தின்கணிற்றலு முளவாகா எ-று.

உம்மை இறந்தின்கண்ணும் வந்தியைந்தது. உணவின்மையால், தாமுண்டலும் இல்லறஞ் செய்தலும் யாவர்க்கு மில்லையாயின. அவருறப்பு மாத்திரமாய கை வாளாவிருப்பின் உலகத்த இம்மை மறுமை வீடென்னும் பயன்கள் நிகழாவென்பதாம். ஒன்றனை மனத்தால் விழைதலு மொழிதலே மென்பார்க்கென வுரைப்பாருமுளர். இவை யெற்றுபாட்டாலும் அதனைச் செய்வாதை சிறப்புக் கூறப்பட்டது.

(ப·ரை) உழவினுர்-உழுதலிலுடையவர், கைம்மடங்கின்·கை (அதனைச் செய்யாது) மடங்குமாயின், விழைவதூஉம்·(யாவரும்) விரும்புமுணவும், விட்டேமென்பார்க்கு·துறந்தோமென்பார்க்கு, நிலை·(அவ்வறத்திலே) நிற்றலும், இல்லை-உளவாகா எ-று.

(க·ரை) உழவர் கைம்மடங்குமாகில், யாவரும் விரும்பு முணவுந் துறந்தவர்க்கு நிலையுமில்லை என்பதாம்.

(வி·ரை) உம்மை இறந்திலும்வந்து கூடியது. உணவில்லாமையால் தாமுண்டலும், இல்லறஞ்செய்தலும் யாவர்க்கு மில்லையாயின. அவருறுப்பு மாத்திரமாகிய கை சும்மாவிருக்கின் உலகத்தில் இம்மை மறுமை வீடென்னும் பயன்கள் நிகழாவென்பதாம். [இவ்வைவர்த பாட்டாலும் அதனைச்செய்வாதை சிறப்புச் சொல்லப்பட்டது.]

'மடங்குமாயின்' என்றது ஒழியுமாயின். 'துறந்தோம் என்பார்க்கு' என்றது துறவிகளுக்கு. 'அவ்வறம்' என்றது அத்துறவறம். 'கைவாளா விருப்பின்' என்றது உழவுத்தொழிலைச் செய்யாது இருப்பின். உலகத்த இம்மை மறுமை வீடென்னும் பயன்கள் நிகழாவென்பதனால் உழவுத் தொழிலொன்றே இவைகளைப் பயக்குமென்பது பெற்றும். (6)

தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும் வேண்டாது சாலப் படும்.

(பரி·உரை) தொடிப் புழுதி கஃசா உணக்கின்·ஒரு நிலத்தினை புழுதவன் ஒருபலப் புழுதி கஃசாம்வண்ணம் அதனைக் காயவிடுவானுயின், பிடித்த எருவும் வேண்டாத சாலப் படும்·அதன்கட் செய்த பயிர் ஒரு பிடியின்கணடங்கிய எருவுமிடவேண்டாமற் பணைத்த விளையும் எ-று.

பிடித்த·பிடியின்கண்ணது. பிடித்தவென்பதன் விகார மென்பாருமுளர். வேண்டாமல், சான்று என்பன நிரிந்தநின்றன.

(ப·ரை) (ஒருநிலத்தினை புழுதவன்) தொடிப்புழுதி·ஒரு பலப்புழுதி, கஃசா·காற்பலமாம்படி, உணக்கின்·(அதனைக்) காயவிடுவானுயின் (அதனிடத்துக் செய்தபயிர்) பிடித்தெருவும்·ஒருபிடியில் அடங்கிய எருவும், வேண்டாத·(இட) வேண்டாமல், சாலப்படும்-பருத்தவிளையும் எ-று.

(க-ரை) ஒருபலப்புழுதி காற்பலமாகக் காயவிடுவானுகில் பிடியெருவுமில்லாமலப்பயிர் விளையும் என்பதாம்.

(வி-மை) பிடித்த-பிடியிலுள்ளது. சான்று-சாலவென்றபடி.

'அதனைக் காயவிடுவாளுயின்' என்றது, அப்புழுதியை வற்றச்செய்வாளுயின். 'அதன்கண்செய்தபயிர்' என்றது அதன்கண்ணிட்ட பயிர். 'பிணைத்து' என்றது பருத்து; அதாவது செழித்து. நிலத்தின்கண்ணிட்ட புழுதி கன்கு உலருமாயின் அந்நிலத்திற்கு எருவும் வேண்டாமென்பதாயிற்று.

எரினு நன்ரு லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

(பரி-உரை) எரினும் எரு இடுதல் நன்று - அப்பயிர்க்கு அவ்வுழுத லினும் எருப்பெய்தல் நன்று; கட்டபின் அதன்காப்பு நீரினும் நன்று - இவ் விரண்டுஞ் செய்த கூளைகட்டால் அதனைக் காத்தல் அதற்கு நீர்கால் யாத்த லினுநன்று எ-று.

எர் - ஆகுபெயர். காத்தல் - பட்டிமுதலியவற்றுன் அழிவெய்தாமற் காத்தல். உழுதல், எருப்பெய்தல், கூளைகட்டல், நீர்கால்பாத்தல், காத்த லென்னும்முறையான இவ்வைந்தும் வேண்டுமென்பதாம்.

(ப - மை) (அப்பயிர்க்கு) எரினும் - அவ்வுழுதலினும், எருவிடுதல் - எருப்பெய்தல், நன்று-நன்றாகும், கட்டபின்-(இவ்விரண்டுஞ்செய்த) கூளை பிடுங்கியபின், அதன்காப்பு - அதனைக்காத்தல், நீரினும் - நீர்ப்பாய்ச்சலினும், நன்று-நன்றாகும் எ-று.

(க-மை) உழுதலினு மெருப்போடுகிறது கல்லது; கூளைபிடுங்கிய பின் காத்தல் நீர்விடுதலினு கல்லது என்பதாம்.

(வி-மை) எர்-உழுதலுக்கு ஆகுபெயர். ஆல்-அசை. காத்தல்-பட்டி மாடு முதலானவைகளால் அழிவடையாமற் காத்தல். உழுதல், எருப்பெய்தல், கூளைபிடுங்கல், நீர்ப்பாய்ச்சல், காத்தல் என்ற இம்முறையினவாகிய ஐந்தும் வேண்டுமென்பதாம்.

'இவ்விரண்டும்' என்றது உழுதலும் எருப்பெய்தலுமாகிய விரண்டு தொழிலும். 'எர்' இது உழவுத்தொழிலைச்குறிப்பதால் ஆகுபெயர். 'பட்டி' என்பது வயலின் உரத்தின்பொருட்டு அவ்வயலின் ஆடுமாடுகள் அடைபட்டிருக்கும் இடம். 'பட்டிமுதலியவற்றுல்' என்றது பட்டியின்கண்ணுள்ள ஆடுமாடுகள் முதலியவற்றுல். நீர்கால்யாத்தல்' என்றது நீர்க்காலைக் கட்டல். 'உழுதலினும் எருப்பெய்தல் கன்று' என்றது உழுதலும் எருப்பெய்தலு மாகிய விரண்டுஞ்செய்த கூளைபிடுங்கியபின் அதனைக்காத்தல் நீர்ப்பாய்ச்ச லினும் கன்றும். 'ஆல்' அசை. 'காப்பு' இதில் கா-முதனிலை. (8)

செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

(பரி-உரை) கிழவன் செல்லான் இருப்பின் - அந்நிலத்திற்குரியவன் அதன்னேடோறுஞ் சென்று பார்த்த லுதவி செய்யாது மடிந்திருந்து

மாயின், கிலம் இல்லாளிற் புலர்த்த ஊடிவிடும்.அஃத அகனில்லான்போலத் தன்னுள்ளே வெறத்தப் பின்னவளோடிவிடும் எ-று.

செல்லுதல் - ஆகுபெயர். பிறரை யேவியாத தானே சேறல்வேண்டு மென்பத போதரச் சிழவனென்றார். தன்கட்சென்று வேண்டுவன செய்யாத வேறிடத்திருந்தவழி மனையாளூடுமாறுபோலவென்றத அவன் போக மிழத்தலேக்கி. இவை மூன்று பாட்டானும் அத செய்யுமாறு கூறப்பட்டத.

(ப-ரை) சிழவன் - (அக்கிலத்தக்கு) உரியவன், செல்லான் - (அத னிடத்துக் காள்தோறும்) போய்ப் பார்த்து வேண்டியவை செய்யானுகி, இருப்பின்-(சோம்பி) யிருந்தால், நிலம்-அக்கிலம், இல்லாளின்-மனைவிபோல், புலர்த்த-(தன்னுள்) வெறத்த, ஊடிவிடும்-(அவளோடு) பிணங்கிவிடும் எ-று.

(க-ரை) உழுபவன் வினைகிலத்திற் பேசாதிருக்கி லக்கில மவனுடன் பிணங்கிவிடும் என்பதாம்.

(வி-ரை) செல்லுதல் - ஆகுபெயர். பிறரை ஏவியாமல் தான் செல்ல வேண்டுமென்பத தோன்ற சிழவனென்றார். தன்னிடத்தவர்த வேண்டி யவைசெய்யாத வேறிடத்திருந்தவழி மனையான்போல் பிணங்குமென்றத அவன் போக மிழத்தலேக்கி. [இவை மூன்றுபாட்டாலும் அத செய்யும் விதம் சொல்லப்பட்டத.]

'அதன்கண் காடோறும்' என்றத நினமும் அகனிடத்திற்கு. 'அடுத்தன' என்றத அவ்வப்போத அவ்வயலுக்குச் செய்யவேண்டுவன. 'மடிந்திருக்குமாயின்' என்றத சோம்பியிருக்குமாலுல். 'சிழவன்' என்றத (சிழமை - உரிமை) உரிமையுடையவன் பிறரையேவாத தானேசென்று செய்வன செய்தற்குரியவன் என்பத தோன்ற சிழவன் என்றார். 'வேறிடத் திருந்தவழி' என்றத அப்பயிரினிடத்திற்குச் செல்லாத வேற்றிடத்திருந்த போத. மனைவியின் ஊடலேப்பெற்றவன் அவள்பாற்கொண்ட போக மிழத்தல்போல வினைபுலத்திற்குச்சென்று அவ்வப்போத செய்வன செய்யாத பிறிதிடத்திலிருப்பின் அப்புலத்தால் அடைதற்குரிய போகத்தை (விளைவை) மிழப்பான்.

(9)

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்.

(பரி-உரை) இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்-யாம் வறியே மென்று சொல்லி மடிந்திருப்பாரைக் கண்டால், நிலம் என்னும் நல்லாள் நகும் நிலமகளென்ற உயர்த்துச் சொல்லப்படுகின்ற நல்லாள் தன்னுள்ளே நகைக்கும் எ-று.

உழுதன்முதலிய செய்வார் யாவர்க்குஞ் செல்வம் கொடுத்த வருகின்ற வாறுபற்றி நல்லாளென்றும், அதுகண்டுவைத்தும் அத செய்யாத வறுமை புறுகின்ற பேதைமைபற்றி நகுமென்றுங் கூறினார். இரப்பாரையென்ற

பாடமோதவாரு முளர். இதனுன் அற செய்யாதவழிப் படுமிழுக்குக் கூறப்பட்டது. வருகின்றவதிகார முறைமைக்குக் காரணமுமிது.

(ப-ரை) இலமென்ற - வறியேமென்றசொல்லி, அசைஇ யிருப்பாரை- சோப்பி யிருப்பவரை, காணின் - கண்டால், நிலமென்னு நல்லாள் - நிலமக ளென்ற உயர்த்திச் சொல்லப்படுகிற நல்லாள், நகும்-(தன்னுள்ளே) சிரியா நிற்பள் எ-று.

(க-ரை) வறியேமென்று சோம்பலாயிருப்பவரை நிலமகள் கண்டாள் சிரிப்பாள் என்பதாம்.

(வி-ரை) உழுதல் முதலானவை செய்வோர் யாவர்க்கும் செல்வம் கொடுத்தவருகின்ற விதம்பற்றி நல்லாளென்றும், அதுகண்டிருந்தும் அற செய்யாத வறுமையுறுகின்ற அறிவில்லாமைபற்றி நகுமென்றும் சொல் லினர். [இதனுல் அற செய்யாதவிடத்த உண்டாம் இழுக்குச் சொல்லப் பட்டது.] வருகின்ற அதிகாரமுறைக்குக் காரணமுமிது.

'மடி' என்றது சோம்பல். 'மடிந்திருப்பார்' என்றது சோம்பியிருப்பார். 'நல்லாள்' என்றது அவரவர்கள் படும்பாட்டிற்குத் தக்க நன்மையைத் தருபவள். 'நகுதல்' என்றது சிரித்தல். பாடுக்குத்தக்க நல்ல பலனளிப் பதைப் பார்த்தும் அப்பாடுபடாத வறிதே வறுமையுறுகின்ற பேதைமை பற்றி நகும் என்னுர். 'இலம்' இது இன்மையினடியாகப்பிறந்த தன்மைப் பன்மை விகுதிமுற்று. 'நிலம்' இதில் நில்-முதனிலை. (10)

104-ம் அதி - உழவு - முற்றிற்று.

105-ம் அதிகாரம்—நல்குரவு

(பரி உரை) அஃதாவது: நுகரப்படுவன யாவுமில்லாமை.

(உரை) அஃதாவது: அனுபவிக்கப்படுவன யாவும் இல்லாமை.

இன்மையி னின்னுத நியாதெனி னின்மையி
னின்மையே யின்னு தது.

(பரி-உரை) இன்மையின் இன்னுதது யாது எனின் - ஒருவனுக்கு வறுமைபோல வின்னுதது யாதென்ற வினவின், இன்மையின் இன்னுத இன்மையே - வறுமைபோல வின்னுதது வறுமையே, பிறிதில்லை எ-று.

இன்னுதது - துன்பஞ்செய்வது. ஒப்பதில்லையெனவே, மிக்கதின்மை சொல்லவேண்டாவாயிற்று.

(ப-ரை) இன்மையின் - (ஒருவனுக்கு) வறுமைபோல், இன்னுத- துன்பஞ்செய்வது, யாதெனின்-யாதென்றவிஞ்வின், இன்மையின்-வறுமை போல், இன்னுதது-துன்பஞ்செய்வது, இன்மையே-வறுமையே எ-று.

(க-ரை) தரித்திரம்போலத் தன்பஞ்செய்வ தெதுவெனி லதுவே என்பதாம்.

(வி-ரை) ஒப்பதில்லையெனவே மிகுந்த தில்லாமை சொல்ல வேண்டா வாயிற்று.

'இன்னுதத' என்றது தன்பாற்றருவது. வறுமைபோல தன்பஞ்செய்வது பாதெனின் வறுமையேயன்றி மற்றொன்றன்று. (1)

இன்மை யெனவொரு பாவி மறுமையு மிம்மையு மின்றி வரும்.

(பரி-உரை) இன்மையென ஒருபாவி - வறுமையென்ற சொல்லப்படுவ தொரு பாவி, மறுமையும் இம்மையும் இன்றி வரும்-ஒருவனுழை வருங்கால் அவனுக்கு மறுமையின்பமும் இம்மையின்பமு மில்லையாக வரும் எ-று.

இன்மையென வொருபாவி யென்பதற்கு மேல் * "அழுக்காறென வொருபாவி" யென்புழி யுரைத்தாங்குரைக்க. மறுமை இம்மை யென்பன ஆகுபெயர். சுபாமையாலுக் தவ்வாமையாலும் அவை யிலவாயின. இன்றி வீடுமென்ற பாடமோதிப் பாவியாலென விரித்துரைப்பாருமுளர்.

(ப-ரை) இன்மையென-வறுமையெனப்படுகிற, ஒருபாவி-ஒப்பற்றபாவி, (ஒருவனிடத்து வரும்போது) மறுமையும் - மறுமையின்பமும், இம்மையும்-இம்மையின்பமும், இன்றி (அவனுக்கு) இல்லையாக, வரும்-வருவான் எ-று.

(க-ரை) தரித்திரமென்னு மொருபாவி யொருவனிடத்து வரும்போது இம்மை மறுமை யின்பமில்லாமல் வருவான் என்பதாம்.

(வி-ரை) இன்மையென ஒருபாவி யென்பதற்கு அழுக்காறென ஒரு பாவி யென்றதற்கு உரைசெய்தபடி உரைக்க. மறுமை இம்மை ஆகுபெயர். சுபாமையாலும் அனுபவியாமையாலும் அவை யிலவாயின.

'ஒருவனுழை' என்றது ஒருவனிடத்தில். 'அவையிலவாயின' என்றது மறுமையின்பமும் இம்மையின்பமும் இல்லையாயின. வறுமையுற்றவொருவன் இம்மை மறுமை யின்பங்களை யடையானென்பதாம். (2)

தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக நல்குர வென்னு நசை.

(பரி-உரை) நல்குரவு என்னும் நசை-நல்குரவென்ற சொல்லப்படுமாசை, தொல்வரவும் தோலும் தொகையாகக் கெடுக்கும் - தன்னைப் பற்றப்பட்டா னுடைய பழைய குடிவரவினையும் அதற்கேற்ற சொல்லினையும் ஒருக்கே கெடுக்கும் எ-று.

நசையில்வழி நல்குரவு மில்லையாகலின் நல்குரவையே நசையாக்கி, மேற்ற அக்குடியிற் றொல்லோர்க்கில்லாத இழிதொழில்களையும் இளிவந்த

* திருக்குறள்: 18-ம் அதி-வெஃகாமை-8.

சொற்களையு முளவாக்கலான் அவ்விரண்டனையு மொருங்கு கெடுக்கு மென்றார். * "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்" என்றார் பிறரும். தோலாவது † "இழுமென் மொழியால் விழுமியது நுவறல்" என்றார் தொல் காப்பியனாரும்; இதற்கு உடம்பென்றுரைப்பாருமுளர். அஃததற்குப் பெய ராயினும் உடம்பு கெடுக்குமென்றற்கோர் பொருட்சிறப்பில்லாமை யறிக.

(ப-ரை) நல்குரவென்னும் - வறுமையென்று சொல்லப்படுகிற, நசை. ஆசை, தொல்வரவும் - (தன்னாலே பற்றப்பட்டவருடைய) பழைய குடிவர வினையும், தோலும்-(அதற்கேற்ற) சொல்லினையும், தொகையாக-ஒருசேர, கெடுக்கும்-கெடுக்கும் எ-று.

(க-ரை) தரித்திரமென்னு மாசையானது பழங்குடிவரவையு மதற்குரிய சொல்லையுங் கெடுக்கும் என்பதாம்.

(வி-ரை) நசையில்லாவிடத்து வறுமையும் இல்லையாகலால், நல்குரவை நசையாக்கி அது அக்குடியிற் பழையோர்க்கு இல்லாத இழிதொழில்களையும் அவமானச்சொற்களையும் உண்டாக்கலால் அவ்விரண்டினையும் ஒருசேரக் கெடுக்குமென்றார்

'நல்குரவு' என்றது வறுமை, இதில் நல்கூர் முதனிலை. 'நசை' என்றது விருப்பம். தொல்லோர்' என்றது முன்னையோர். 'நசையிற் பெரியதோர் நல்குரவில்லை' என்பது முதுமொழிக்காஞ்சி. 'அஃது' என்றது நசை. 'அவ்விரண்டு' என்றது தொல்வரவும் தோலும். 'தொகையாக' என்றது ஒருமிக்க. 'குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங்கொல்லும்' என்னும் மணிமேகலை பாத்திரம் பெற்றகாதை. பொருள்: பசிப்பிணியானது தன்னாற் பற்றப்பட்டா ருடைய உயர்குடிப்பிறப்பையும் கெடுக்கும். அதற்கிருந்த சிறப்பையும் அழிக்கும். 'இழுமென் மொழியால் விழுமியது நுவறல்' பொருள்: மெல் லென்ற சொல்லால் அறம் பொரு ளின்பம் வீடு என்னும் சிறந்த பொரு ளுண்டாகக்கூறல். 'இதற்கு' என்றது தோல் என்பதற்கு. 'அஃததற்கு' என்றது தோல் உடம்பிற்கு. (3)

இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.

(பரி-உரை) இற்பிறந்தார் கண்ணேயும்-இளிவந்த சொற்பிறவாத குடிப் பிறந்தார்மாட்டேயும், இளிவந்த சொற்பிறக்கும் சோர்வு இன்மை தரும்- அது பிறத்தற்கேதுவாகிய சோர்வினை நல்குரவு உண்டாக்கும் எ-று.

சிறப்பும்மை அவர்மாட்டு அது பிறவாமை தோன்றநின்றது. இளிவந்த சொல் - இளிவருதற்கேதுவாகிய சொல்; அஃதாவது, எமக்கீயவேண்டு மென்றல். சோர்வு - தாமுறுகின்ற துன்பமிகுதிபற்றி ஒரோவழித் தம் பிறப்பினை மறந்து அது சொல்லுவதாக நினைத்தல்.

---

* மணிமேகலை: 11-வது பாத்திரம் பெற்ற காதை.

† பொருள்: செய்யுளியல்-239.

(ப-ரை) இன்மை-வறுமையானது, இற்பிறந்தார் கண்ணேயும்-உயர்ந்த குடிப்பிறந்தவரிடத்தேயும், இளிவந்தசொல் - அவமானச்சொல், பிறக்கும்-பிறத்தற்கு எதுவாகிய, சோர்வு சோர்வினை, தரும்-உண்டாக்கும் எ-று.

(க-ரை) தரித்திரமானது உயர்குடியிற் பிறந்தவரிடத்து மிழிவுசொற் பிறக்குஞ் சோர்வைத்தரும் என்பதாம்.

(வி-ரை) சிறப்பும்மை அவரிடத்து அது பிறவாமை தோன்றநின்றது. அவமானச்சொல்-எமக்கு ஈயவேண்டுமென்றல். சோர்வு - தாம்படுகிற துன்ப மிருதிபற்றி ஒரோவிடத்தே தங்குடிப்பிறப்பினைமறத்து அதுசொல்லுவதாக நினைத்தல்.

'இளிவந்த சொல்' என்றது இழிவைத்தருஞ் சொல். சொல் பிறவாத வென்றபடியால் 'கடுவணதெய்த விருகலையுமெய்தும்' என்பதற்கிணங்க நினைத்தை பிறவாத, செயல்பிறவாத வென்பதையும் கூட்டியுரைக்க. 'சோர்வு' என்றது தளர்ச்சி. அதாவது தாமனுபவிக்கின்ற துன்பமிருதிபற்றி ஒரோவழி தம் பிறப்பின்தன்மையை மறத்தல். (4)

நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

(பரி-உரை) நல்குரவு என்னும் இடும்பையுள்-நல்குரவென்று சொல்லப் படுந் துன்ப மொன்றனுள்ளே, பல் துன்பங்கள் சென்றுபடும் - பல துன்பங் களும் வந்து விளையும் எ-று.

குரை-இசைகிறை. செலவு விரைவின்கண் வந்தது. துன்பமும் தானு முடனே நிகழ்தலின் நல்குரவைத் துன்பமாக்கியும், அத்துன்பமடியாகச் செல்வர் கடைகோக்கிச் சேறற்றுன்பமும், அவரைக் காண்டற்றுன்பமும், கண்டான் மறத்தழி நிகழுந் துன்பமும், மருவழியும் அவர் கொடுத்தது வாங்கற்றுன்பமும், அது கொடுவந்து நுகர்வன கூட்டற்றுன்பமு முதலாயின வாடோறும் வேறுவேறுக வருதலின் எல்லாத்துன்பங்களு முளவா மென்றுங் கூறினர். இவையெல்லாபாட்டானும் நல்குரவின் கொடுமை கூறப்பட்டது.

(ப-ரை) நல்குரவென்னும் - வறுமையென்று சொல்லப்படும், இடும்பை யுள் - துன்பமொன்றினுள்ளே, பல்-பலவாகிய, துன்பங்கள் - துன்பங்களும், சென்று-வந்து, படும்-விளையும் எ-று.

(க-ரை) வறுமைத்துன்ப மொன்றனுள்ளே பல துன்பங்களும் வரும் என்பதாம்.

(வி-ரை) குரை-இசைகிறை. துன்பமும் தானும் உடனே தோன்றலால் வறுமையை துன்பமென்றும், அத்துன்பம் அடியாகச் செல்வர் மனைவாயி லுக்கிச் செல்லற்றுன்பமும், அவரைக் காணற்றுன்பமும், கண்டபின்

மறத்தவிடத்த உண்டாந்தன்பமும், மறக்காதவிடத்தும் அவர் கொடுத்தது வாங்கற்றன்பமும், அத கொண்டவத்த அநுபவிப்பவைகளோக் கூட்டுதற் றன்பமும் முதலானவை கான்தோறும் வேறவேறுக வருகலால் எல்லாத் தன்பங்களும் உண்டாமென்றம் சொல்லினர். [இவை ஐந்த பாட்டாலும் வறுமையின் கொடுமை சொல்லப்பட்டத.]

'கல்குரவு என்ற சொல்லப்படும் தன்பம்' என்றது கல்குரவாகிய தன்பம். 'குரை' என்றது இசைநிறைத்தற்கண் வந்தத. 'தானும்' என்றத கல்குரவு. 'செல்வர்கடை' என்றத செல்வர் தலைக்கடை. 'சேறல்தன்பம்' என்றத செல்லுதலாகிய தன்பம். இதில் செல் முதனிலை. 'மறத்தழி' என்றத விரும்பியதொன்றை பில்லையென்ற மறத்தபோத., 'மருவழி' என்றத மறக்காதவமயம். 'நுகர்வனகூட்டல்' என்றத அநுபவிக்கும் பொருளைச் சேர்த்தல்.

நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

(பரி-உரை) நற்பொருன் கன்கு உணர்ந்த சொல்லினும்-மெய்ந்நூற் பொருளைத் தெளியவறிந்த சொன்னாயினும், நல்கூர்ந்தாற் சொற் பொருன் சோர்வுபடும்-நல்கூர்ந்தார் சொல்லுஞ்சொற் பொருளின்மையைத் தலைப்படும் எ-று.

பொருளின்மையைத் தலைப்படுதலாவத யாதிகர் சொல்லியன விரும் பிக் கேட்குமாயிற் கண்ணோடி இவருறுகின்ற குறைமுடிக்கவேண்டுமென் றஞ்சி யாவருங் கோமையிற் பயனில சொல்லாய் முடிதல். கல்வியும் பயன் படாதென்-தாம்.

(ப-ரை) நற்பொருன் - மெய்ந்நூற்பொருளை, நன்குணர்ந்த - தெளிய வறிந்த, சொல்லினும்-சொன்னாயினும், நல்கூர்ந்தார்-வறுமைப்பட்டவரது, சொல் - சொல்லானது, பொருன்சோர்வு - பொருளில்லாமையை, படும்- கூடும் எ-று.

(க-ரை) வறிபவர் மெய்ப்பொருளைச் சொல்லிறு மச்சொல் பொரு ளில்லாமையைத் தரும் என்பதாம்.

(வி-ரை) பொருளில்லாமையைக் கூடுதலாவது யாம் விரும்பி இவர் சொல்லைக் கேட்டோமாகில் முகங்கொடுத்த இவர்குறை முடிக்கவேண்டு மென்ற அஞ்சி யாவரும் கோமையால் பயனிற்சொல்லாய் முடிதல். கல்வியும் பயன்படாதென்பதாம்.

'மெய்ந்நூற்பொருன்' என்றது உண்மையுணர்க்கும் நூலின்கண் சொல் லப்பட்ட பொருன். 'பொருளின்மையைத் தலைப்படும்' என்றது பயனற்று தாகிவிடும். 'சொல்லியன' என்றது சொன்ன சொற்கன். 'கண்ணோட' என்றது கண்டு கருணைகூர்ந்த. "கன்றுக் கணிகலங் கண்ணோட்டம்'

என்றார் பிறரும். 'குறை' என்றது வேண்டுகோள். நல்கூர்ந்தார் சொல் பயனற்றுப் போதலால் அவர் கற்ற கல்வியும் பயன்படாதாயிற்று. (6)

அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

(பரி-உரை) அறம் சாரா நல்குரவு - அறத்தோ டியையில்லாத நல்குரவுடையான், ஈன்ற தாயானும் பிறன்போல நோக்கப்படும் - தன்னை யீன்ற தாயானும் பிறனைக் கருதுமாறுபோலக் கருதி நோக்கப்படும் எ-று.

அறத்தோடு கூடாமை - காரண காரியங்களுளொன்றுயினையாமை. நல்குரவு-ஆகுபெயர். சிறப்பும்மை அவனதியற்கை யன்புடைமை விளக்கி நின்றது. கொள்வதின்றுதலேயன்றிக் கொடுப்பதண்டாதலு மூடைமையின் அதுநோக்கிச் சுற்றத்தார் யாவரும் துறப்பரென்பதாம்.

(ப-உரை) அறஞ்சாரா - அறத்தோடு பொருந்துதலில்லாத, நல்குரவு-வறுமையையுடையவன், ஈன்ற தாயினும் (தன்னைப்) பெற்ற தாயினாலும், பிறன்போல - அன்னியன்போல, நோக்கப்படும் - (நினைத்துப்) பார்க்கப் படுவன் எ-று.

(க-உரை) வறியவன் தன் தாயாலு மன்னியன்போலப் பார்க்கப்படுவான் என்பதாம்.

(வி-உரை) அறத்தோடு பொருத்தலில்லாமை-காரண காரியங்களுள் ஒன்றோடு மியையாமை. நல்குரவு-ஆகுபெயர். சிறப்பும்மை அவனது இயற்கை யன்புடைமை விளக்கிநின்றது. அவனிடத்தே கொள்வதில்லாமையே யன்றிக் கொடுப்பதண்டாதலும் உடைமையால் அதுநோக்கிச் சுற்றத்தார் யாவரும் கைவிடுவரென்பதாம்.

'இயைபில்லாத' என்றது ஒன்றுபடாத. 'ஈன்ற தாயானும்' என்றது "பெற்றவட்டே தெரியு மந்தவருத்தம் பின்னே பெருப்பேதை யறிவானோ" என்பதுபோல் அத்தகையவன் தன்புறநின்ற வீன்ற தாயானும் என்றமையால் மற்றையோரைக் கூறவேண்டாதாயிற்று. ஈன் முதனிலை. "இல்லாளும் வேண்டான்மற் றீன்றெடுத்த தாய்வேண்டான் செல்லா தவன்வாயிற் சொல்" என்றார் பிறரும். (7)

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு.

(பரி-உரை) நெருநலும் கொன்றதுபோலும் நிரப்பு-நெருநற்றுக் கொன்றதுபோன்ற எனக்கின்றுதவற்றைச் செய்த நல்குரவு, இன்றும் வருவதுகொல் - இன்றும் என்பால் வாக்கடவதோ, வந்தால் இனி யாது செய்வேன்? எ-று.

அவ்வின்னாதனவாவன: * மேற்சொல்லிய துன்பங்கள். நெருநன்மிக வருந்தித் தன்வயிறு நிறைத்தானொருவன் கூற்று.

(ப-ரை) நெருநலும்-நேற்றும், கொன்றதுபோலும்-கொன்றதுபோன்று, (எனக்குத் துன்பங்களைச்செய்த) நிரப்பு-வறுமையானது, இன்றும்-இன்றைக்கும், வருவதுகொல்-(என்னிடத்து) வரக்கடவதோ, (வந்தால் இனி யாது செய்வேன்?) எ-று.

(க-ரை) நேற்றுக்கொன்ற வறுமையானது இன்றும்வருமோ என்பதாம்.

(வி-ரை) அத்துன்பங்கள் முன் சொல்லப்பட்டன. நேற்று மிகவும் வருந்தி வயிறுநிறைத்த ஒருவன்சொல்லு. ஓ-அசைநிலை.

'நெருநற்றும்' என்றது நேற்றும். 'இன்னாதவை' என்றது துன்பம். 'வரக்கடவதோ' என்றது வருவதோ. இன்னாதன-சொற்சோர்வுதருதல், பல துன்பமுண்டாதல், ஈன்ற தாயினாலும் பிறன்போல நோக்கப்படல் முதலியன. 'கூற்று' என்றது சொல். (8)

நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது.

(பரி-உரை) நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்-மந்திர மருந்துகளான் ஒருவனுக்கு நெருப்பிடையே கிடந்துறங்கலுமாம், நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது-நிரப்பு வந்துழி யாதொன்றானு முறக்கமில்லை எ-று.

நெருப்பினும் நிரப்புக் கொடிதென்றவாறாயிற்று. இதுவுமவன்கூற்று. இவை நான்கு பாட்டாலும் நல்கூர்ந்தார்க்குளதாங் குற்றங் கூறப்பட்டது.

(ப-ரை) நெருப்பினுள்-தீயிற்கிடந்து, துஞ்சலும்-தூங்கலும், ஆகும்-(மந்திரமருந்துகளால் ஒருவனுக்குக்) கூடும், நிரப்பினுள் - வறுமை வந்தவிடத்து, யாதொன்றும் - யாதொன்றாலும், கண்பாடு - தூங்குதல், அரிது-இல்லை.

(க-ரை) தீயிலும் நித்திரைசெய்யலாம், வறுமையிலே நித்திரைசெய்யக் கூடாது என்பதாம்.

(வி-ரை) நெருப்பினும் வறுமை கொடிதென்றபடியாயிற்று. இதுவும் அவன்சொல்லு. [இவை நான்கு பாட்டாலும் வறுமைப்பட்டவர்க்கு உண்டாம் குற்றஞ் சொல்லப்பட்டது.]

'மந்திர மருந்துகள்' என்றது மந்திரங்களாலும் மருந்துகளாலும். 'கிடந்து' என்றது படுத்து. 'நிரப்பு' என்றது வறுமை. ஒருவனுக்குக் கொடியது நெருப்பினும் நிரப்பே (வறுமை) யென்றவாறாயிற்று. 'கண்பாடு' என்றது உறக்கம். இதில் கண்படு முதனிலை. கண்பாடு-முதனிலை திரிந்த தொழிற்பெயர். (9)

* திருக்குறள்: 105 ம் அதி-நல்குரவு 5.

தப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

(பரி-உரை) தப்புரவு இல்லார் தவரத் துறவாமை - நுகரப்படும் பொருள்க ளில்லாதார் தம்மாற் செயற்பால தை முற்றத்துறத்தலியலாகவும் அது செய்யாதொழிதல், உப்பிற்கும் காடிக்கும் கூற்று - பிறரில்லிலுளவாய உப்பிற்குங் காடிக்குங் கூற்றும் எ-று.

மானமழியாமையிற் செயற்பால தை அதுவேயாயிற்று. முற்றத்துறத்தல்-சுற்றத்தானே விட்டமையின் ஒருவாற்றாற் றுறந்தாராயினுங் கின்ற தம்முடம் பினையுந் துறத்தல். அது செய்யாது கொண்டிருத்தல் இரண்டனையு மாளப் பண்ணுதலின் அதனை அவற்றிற்குக் கூற்றென்றார். இனி முற்றத்துறத்த லாவது-தப்புரவில்லாமையின் ஒருவாற்றாற் றுறந்தாராயினுங் பின்னவற்றை மனத்தாற் றுறவாமையென் றுரைப்பாருமுளர். இதனுண் அஃதனதாயவழிச் செய்வது கூறப்பட்டது.

(ப-ரை) தப்புரவில்லார் - அனுபவிக்கப்படும் பொருளில்லாதவர், (தம்மாலே செய்யத்தகுவது முழுதுந் துறத்தலேயாகவும்) தவரத்துறவாமை-முழுதுந் துறவாதொழிதல், உப்பிற்கும் காடிக்கும் - (பிறர் வீட்டிலுள்ள) உப்பிற்குங் காடிக்கும், கூற்று-யமனுவர் எ-று.

(க-ரை) வறியவர்கள் துறவாதிருத்தல் அயல்வீட்டு உப்புக்கும் காடி கீருக்கும் யமனுவார்கள் என்பதாம்.

(வி-ரை) மானமழியாமையால் செயத்தகுவது அதுவேயாயிற்று. முழுதுந் துறத்தல் சுற்றத்தானே விட்டமையால் ஒருவழியால் துறந்தா ராயினுர். நின்ற தம்முடம்பினையுந் துறத்தலாம். அது செய்யாதுகொண் டிருத்தல்-அல்லாண்டினையும் மாளப்பண்ணுதலால் அதனை அவைகளுக்குக் கூற்றென்றார். [இதனால் அது உண்டானவிடத்துச் செய்வது சொல்லப் பட்டது.]

'அதுவேயாயிற்று' என்றது முழுதுந் துறத்தலே (இறத்தலே) யாயிற்று. 'சுற்றம் தானே விட்டமையின்' என்றது கல்கூர்ந்தவரைச் சுற்றத்தார் (கொள்ளுதின்மையினாலும் கொடுப்பதினாலும்) தாமே கைவிட்டமையின். 'அது செய்யாது' என்றது உடம்பினைத் துறத்தல் செய்யாது. 'இரண்டனை யும்' என்றது உப்பையும் காடியையும். 'அதனை' என்றது முற்றத்துறவா மையை. 'அவற்றிற்கு' என்றது அவ்வுப்புக்குங்காடிக்கும். 'அஃதனதாயவழி' என்றது அவ்வறுமை யுள்ளவிடத்து. (10)

105-ம் அதி - நல்குரவு - முற்றிற்று.

106-ம் அதிகாரம்—இரவு

(பரி - உரை) இனி மானக்கீராவிரவு இரவாமையோடொத்தலின், அதனாலும் வீடெய்தற் பயத்தனாய உடம்போம்பப்படுமென்னும் அதனால் வழக்குப்பற்றி மேலெய்திய கவாத்தறத்தல் விலக்குதற்பொருட்டு இரவு கூறகின்றார். அதிகாரமுறைமையும் இதனானே விளக்கும்.

(உரை) இனி மானக்கெடாத வீரத்தல் இரவாமையோடு ஒத்தலால், அவ்விரவினாலும் வீடுபெறுதற்கு உதவிசெய்வதாகிய உடம்பைக்காக்கலா மென்கிற அதனால் வழக்குப்பற்றி முன் கவாத்தாத்தலென்ற இரத்தலை விலக்குதற்பொருட்டு இரவு சொல்லுகின்றார். அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி னவர்பழி தம்பழி யன்று.

(பரி-உரை) இரத்தக்கார்க் காணின் இரக்க-நல்கூர்ந்தார் இரத்தற்கேற் புடையாரைக்காணில் அவர்மாட்டிரக்க, கரப்பின் அவர்பழி தம்பழி அன்று-இரந்தால் அவர் கரந்தாராயின் அவர்க்குப் பழியாவதல்லது தமக்குப் பழி யாகாமையான் எ-று.

இரவென்னு முதனிலைத்தொழிற்பெயரதிறுதிக்கண் கான்கனுருபு விகாரத்தாற்றொக்கது. இரத்தற்கேற்புடையராவார் உரையாமை முன் னுணரு மொண்மையுடையராய் மாற்றுதலார். அவர் உலகத்தரியராகலிற் காணினென்றும், அவர்மாட் டிரக்தார்க்கு இரவான்வரு மிழிவின்மையின் இரக்கென்றும், அவர் சுதலிற் குறைகாட்டாமையிற் கரப்பினென்றும், காட்டுவாயின் அப்பழி தாவெள்ளறுவைக்கண் மாசுபோல அவர்கட் கடிது சேறலின் அவர்பழிபென்றும், எற்பிலார்மாட்டிரவன்மையிற் றம்பழி யன்றென்றுங் கூறினார்.

(ப-ரை) (வறுமைப்பட்டவர்) இரத்தக்கார்-இரத்தற்கு ஏற்புடையவரை, காணின்-கண்டவிடத்து, இரக்க - (அவரிடத்தே) இரக்கக்கடவர், கரப்பின்-(அவர்) ஒளித்தாராயின், அவர்பழி - அவர்க்குப் பழியாம், தம்பழியன்று-தமக்குப் பழியாகாது (ஆகலால்) எ-று.

(க - ரை) தரித்திரர்கள் கொடுப்பவர்களைக் கண்டால் யாசிக்கடவர்கள். அவரொளித்தாராயின் அவர்க்குப் பழியல்லது தமக்குப் பழியென்பதாம்.

(வி-ரை) இரத்தற் கேற்புடையவராவார் - சொல்லுமுன்னே அடையாய் மாறுமற் கொடுப்பவர். அவர் உலகத்தில் அரியராதலால் னென்றும் அவரிடத்தே இரந்தார்க்கு இரவால்வரும் அவமானம் இல்லையால் இரக்கவென்றும், அவர் கொடுத்தலிலே குறைகாட்டாமை

சப்பியென்றும், காட்டுவாராயின் அப்பழி பரிசுத்த வெண்புடைவையில் அழுக்குப்போல் அவரிடத்தே கடிதுசெல்லுதலால் அவர் பழியென்றும், எற் பில்லாதவரிடத்தே இரவல்லாமையால் தம்பழி யன்றென்றும் சொல்லினர்.

'இரவு' என்றது இரத்தல். 'வீடு' என்றது பற்றற்றகில. 'ஒன்றுமற்றது' என்றது பொதுத்தரும் கிருவாணமென்பர். 'ஓம்பப்படுதல்' என்றது பேணப் படுதல். 'மேலெய்திய' என்றது நல்குரவதிகாரத்தில் கூறிய. 'தலைக்குறைத் தல்' என்றது முழுதுங்குறைத்தல். எற்புடையார்' என்றது தகுதியுடையார். 'காத்தல்' என்றது மறைத்தல். இரத்தக்கார் என்பதன் பகுதியான இரவென்பத னிறுதியில் கு என்னும் நான்கனுருபு விகாரத்தாற் றொக்குநின்றது. (1)

இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறுஅ வரின்.

(பரி-உரை) ஒருவற்கு இரத்தல் இன்பம் - ஒருவற்கு இரத்தலும் இன்பத்திற்கேதுவாம், இரந்தவை துன்பம் உறு வரின்-இரந்த பொருள்கள் ஈவாதுணர்வுடைமையாற் றுன்றன்புறுமல் வருமாயின் எ-று.

இன்பம்-ஆகுபெயர். உறுமலென்பது கடைக்குறைத்தநின்றது. துன்பம்-சாதி யொருமைப்பெயர். அவையாவன: ஈவார்கட் காலமு மிடனு மறிந்து சேறலும், அவர் குறிப்பறிதலும், அவரைத் தம்வயத்தராக்கலும், அவர் மனமெழிழ்வன நாடிச்சொல்லலு முதலியவற்றுன் வருவனவும், மறுத்தழி வருவனவுமாம். அவையுறுமல் வருதலாவது அவர் முன்னுணர்ந் தீயக் கோடல். இரந்தவர் துன்பமுறுவரினென்று பாடமோதி, இரக்கப்பட்டவர் பொருளின்மை முதலியவற்றுற் றன்புறுதல் எதிர்வந்தீவாயினென் றுரைப் பாருமுளர். இவை யிரண்டு பாட்டானும் நல்குரவா னுயிர்நீங்குமெல்லைக் கண் இனிவில்லாவிரவு விலக்கப்படாதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) ஒருவற்கு-ஒருவனுக்கு, இரத்தல்-இரத்தலும், இன்பம்-இன்பத் துக்கு ஏதுவாம், இரந்தவை - இரந்தபொருள்கள், (ஈவாரது அறிவுடைமை யால்) துன்பமுறுஅ-(தான்) துன்பமுறுமல், வரின்-வந்தால் எ-று.

(க-ரை) ஒருவனுக்கு யாசித்த பொருள்கள் துன்பமடையாமல் வந்தால் யாசித்தலு மின்பமாம் என்பதாம்.

(வி-ரை) இன்பம்-ஆகுபெயர். உறுமலென்பது கடைகுறைந்தது. துன்ப மாவன: ஈவாரிடத்துக் காலமும் இடமும் அறிந்து செல்லுதலும், அவர் குறிப்பறிதலும், அவரைத் தன்வசப்படுத்தலும், அவர் மனமிரங்கத்தக்கவை நாடிச்சொல்லலும், முதலானவைகளால் வருவனவும், மறுத்தவிடத்து வருவன வும். அவையுறுமல் வருதலாவது அவர்முன்னே அறிந்து கொடுக்கச் சொல்லுதல். [இவை இரண்டு பாட்டாலும் வறுமையால் உயிர் நீங்குமளவில் துன்பமில்லா விரவு விலக்கப்படாதென்பது சொல்லப்பட்டது.]

'இன்பம்' என்றது இன்பத்திற் கேதுவை யுணர்த்தலால் காரியவாகு பாம். 'உறுமல்' என்றது உறுஅ எனக் கடைக்குறைந்தது. துன்ப

மாவன: சுவார்கட் காலமு மிடறு மறிச்சேறலும், அவர்குறிப்புணர்தலும், அவரைத் தம்வயத்தராக்கலும், அவர் மனமிசைக்கத்தக்கனவற்றை யாராய்ந்து சொல்லலும் முதலியவற்றுல் வருவனவும், அவரில்லெனின்று மறத்தழி (2)
வருவனவுமாம்.

கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேவ ருடைத்து.

(பரி-உரை) கரப்பிலா நெஞ்சிற் கடன் அறிவார் முன்கின்று இரப்பும்-கரத்தலில்லா நெஞ்சினையுடைய மானமறிவார்முன்னர் கின்று அவர்மாட்டொன்றிரத்தலும், ஓர் உடைத்த-கல்கூர்ந்தார்க்கு ஓழகுடைத்தெ-று.

• "சிறிய சுருக்கத்த வேண்டு முயர்" வென்றதனுல்-அவர்க்கு அது கடனெனப்பட்டது. அதனை யறிதல்-சொல்லுதலுற் றலைக்கலாகாமைக் கேதுவாய அதனியல்பினையறிதல். அவ்வறிவுடையார்க்கு முன்னிற்றன்மாத் திரமே யமைதலின் முன்னின்றென்றும், சொல்லுதலான் வருஞ் சிறுமை யெய்தாமையின் ஓரேருடைத்தென்றுங் கூறினர். உம்மை அதனிழிபு விளக்கின்றது.

(ப-ரை) கரப்பிலா-ஒளித்தலில்லாத, நெஞ்சின்-நெஞ்சினையுடைய, கடனறிவார்முன்-மானமறிவார்முன், கின்று-கின்று, இரப்பும்-(அவரிடத்தே ஒன்றை) இரத்தலும், ஓர் ஏர்-ஓழகை, உடைத்து-(வறுமைப்பட்டவர்க்கு) உடைத்தெ-று.

(க-ரை) ஒளியாத நெஞ்சினையுடையவரிடத்து யாசித்தலும் ஓழகுடையதென்பதாம்.

(வி-ரை) சிறிய சுருக்கத்த வேண்டுமுயர்வு என்றதனுல் அவர்க்கு அது கடனெனப்பட்டது. மானமறிதல்-சொல்லத்தொடங்கி சொல்லமாட்டாமைக்கு ஏதுவாகிய அதனியல்பை அறிதல். அவ்வறிவுடையவர்க்கு முன்னே நிற்கைமாத்திரமே போதுமாகையால் முன்னின்றென்றும், சொல்லுதலால் வருஞ் சிறுமை அடையாமையால் ஓரேருடைத்தென்றும் சொல்லினர். உம்மை-அவ்விரவினிழிவு விளக்கிநின்றது.

'மானமறிவார்' என்றது யாசிப்பவரது மானமறிவார். 'அவர்க்கு' என்றது கரப்பிலா நெஞ்சத்தவர்க்கு 'அது' என்றது மானமறிதல். 'அதனை' என்றது மானத்தை. 'அதனியல்பினை' என்றது மானத்தின் தன்மையினை. 'அவ்வறிவுடையார்க்கு' என்றது மானத்தினியல்பினை யறிதலுடையார்க்கு. 'அதனையறிதல்' என்றது சொல்லத்தொடங்கிச் சொல்லமாட்டாமைக்குக் காரணமாகிய அதனியல்பினைத் தெரிதல். (3)

• திருக்குறள்: 97-ம் அதி-மானம்-3.

இரத்தலு மீதலே போலுங் காத்தல்
கனவிலுந் தேற்றுதார் மாட்டு.

(பரி-உரை) காத்தல் கனவிலும் தேற்றுதார்மாட்டு இரத்தலும் - தமக்குள்ளது காத்தலைக் கனவின்கண்ணு மறியாதார்மாட்டுச் சென்றுரைத்தலும், ஈதலேபோலும்-வறியார்க்கீதலேபோலும் எ-று.

உம்மை ஈண்டு மவ்வாறு கின்றது. தான் புகழ் பயவாதாயினும் முன்னுளதாய புகழ் கெட வாராமையின் ஈதலேபோலுமென்றார். ஏகாரம்-ஈற்றசை.

(பதவுரை) காத்தல் - (தமக்கு உள்ளது) மறைத்தலை, கனவிலும்-சொப்பனத்திலும், தேற்றுதார்மாட்டு-அறியாதவரிடத்து, இரத்தலும்-யாசித்தலும், ஈதலேபோலும்-(வறியவர்க்குக்) கொடுத்தலேபோலும் எ-று.

(க-ரை) சொப்பனத்திலும் உலுத்தகுண மில்லாதவரிடத்து யாசித்தலும் கொடுத்தலேபோலாம் என்பதாம்.

(வி-ரை) தான் புகழ் தாராதாயினும் முன்னுண்டாகிய புகழ் கெட வாராமையால் ஈதலேபோலுமென்றார். எ-அசை.

'தமக்குள்ளது' என்றது தமக்குள்ள பொருளை. கனவின்கண்ணும் அறியாதவர்மாட்டு என்றமையால் கனவில் அறியவேமாட்டார் என்பது விளக்கிற்று. உம்மை முன் குறளிலுள்ள உம்மைபோல இரத்தலினிழிவை விளக்கிற்று. 'தான்' என்றது இரத்தல். அவ்விரத்தல் தான் புகழுண்டாக்காதாயினும் முன்னுண்டாகிய புகழ் கெடும்படி வாராமையால் ஈதலேபோலுமென்றார். 'ஈதலே' இதன்கண்ணுள்ள ஏகாரம் ஈற்றசை. (4)

காரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.

(பரி-உரை) கண்ணின்று இரப்பவர் மேற்கொள்வது - சொல்லுதன்மாட்டாது முன்னிற்றன்மாத்திரத்தான் இரப்பார் உயிரோம்பற்பொருட்டு அதனை மேற்கொண்டு போதகின்றது, காரப்பிலார் வையகத்து உண்மையான்-அவர்க்கு உள்ளது காவாது கொடுப்பார் சிலர் உலகத்தளாராய தன்மையானே, பிறிதொன்றுனன்று எ-று.

அவரில்லையாயின், மானகீக்கமாட்டாமையின் உயிர்நீப்பரென்பதாம்.

(பதவுரை) கண்ணின்று - (சொல்லமாட்டாமல்) முன்னின்ற மாத்திரத்தால், இரப்பவர் - யாசிப்பவர், (உயிர் காத்தற்பொருட்டு) மேற்கொள்வது-(இரத்தலை) மேற்கொள்வது, காரப்பிலார் - (அவர்க்கு உள்ளது) ஒளிக்காமற் கொடுப்பவர், வையகத்து-உலகத்து, உண்மையால்-(இருக்கின்றபடியினாலே) [பிறிதொன்றுலன்று] எ-று.

(க-ரை) உள்ள பொருளை யொளியாத கொடுப்பவர் உலகிலிருக்கையால் யாசிப்பவர் யாசகத்தை மேற்கொள்வது என்பதாம்.

(வி-ரை) அவரில்லையாயின் மானம் விடமாட்டாமையால் உயிரை விடுவ ரென்பதாம்.

'உயிர் ஒம்பற்பொருட்டு' என்றது தமது உயிரைக் காப்பாற்றுதற் பொருட்டு. 'அதனை' என்றது இரத்தலை. 'அவர்க்கு' என்றது யாசகர்க்கு. காப்பிலா ரில்லையாலுல் (இரப்பவர்) மானத்தை விடமாட்டாமையால் உயிரை விட்டுவிடுவர். (5)

கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை யெல்லா மொருங்கு கெடும்.

(பரி-உரை) கரப்பிடும்பை இல்லாரைக் காணின்-உள்ளது காத்தலாகிய கோவில்லாரைக் கண்டால், கிரப்பிடும்பை எல்லாம் ஒருங்கு கெடும் - மானம் விடா கிரப்பார்க்கு கிரப்பான் வரும் துன்பங்களெல்லாஞ் சோர்கெடும் எ-று.

காத்தல் ஒருவற்கு வேண்டுவதொன்றன்மையின் அதனை நோயென்றும், அஃதில்லாத இரக்கத்தாரைக் கண்டபொழுதே அவர் கழிபுவகையாவ ராகலின் எல்லா மொருங்கு கெடுமென்றுங் கூறினர். இடும்பை-ஆகுபெயர். முழுதுங் கெடுமென்ற பாடமோதி எஞ்சாமற்கெடுமென் றுரைப்பாருமுளர்.

(ப-ரை) கரப்பிடும்பை-(உள்ளதை) ஒளித்தலாகியநோயை, இல்லாரை-உடையரல்லாரை, காணின்-கண்டால், (மானம்விடாம லிரப்பவர்க்கு) கிரப்பிடும்பையெல்லாம்-வறுமையால்வரும் துன்பங்களெல்லாம், ஒருங்குகெடும்-ஒருசேர்கெடும் எ-று.

(க-ரை) ஒளியாது கொடுப்பவரைக் கண்டால் யாசிப்பவர்களுக்குத் துன்பங்கெடும் என்பதாம்.

(வி-ரை) ஒளித்தல் ஒருவனுக்கு வேண்டுவதொன்றல்லாமையால் அதனை நோயென்றும், அந்நோயில்லாத இரக்கத்தக்கவரைக் கண்டபொழுதே அவ் விரப்பவர் மிகு மகிழ்ச்சியினாலாகலால் எல்லா மொருங்கு கெடுமென்றும் சொல்லினர். இடும்பை-துன்பம்; அது நோய்க்கு ஆகுபெயர்.

'உள்ளது' என்றது உள்ளபொருள். 'கிரப்பு' என்றது வறுமை. காத்தல் ஒருவனுக்கு வேண்டுவதொன்றல்லாமையால் அதனை ஆகுபெயரால் நோய் என்றார். 'அஃது இல்லாத' என்றது உள்ளது காத்தலாகிய நோயில்லாத. 'அவர்' என்றது யாசிப்பவர். இடும்பையென்னும் காரியப்பெயர் அதனைத் தருதற்குக்காரணமாகிய நோயை புணர்த்தலால் காரியவாகுபெயர். (6)

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள முள்ளு ளுவப்ப துடைத்து.

(பரி·உரை) இகழ்ந்த என்னாத சுவாரைக் காணின்-தம்மை யவமதித் திழிவுசொல்லாத பொருள் கொடுப்பாரைக் கண்டால், உள்ளம் மகிழ்ந்த உள்ளுள் உவப்பத உடைத்த-அவ்விரப்பாரத உள்ளமகிழ்ந்த உள்ளுள்ளே புவக்குந் தன்மையுடைத்த எ·று.

இகழ்ந்தெள்ளாதெனவே கண்கு மகிழ்தலும் இனியவை கூறலும் பெறுதம். கிரப்பிடும்பை கெடுதலனவேயன்றி ஐம்புலன்களாலும் பேரின்ப மெய்திஞராகக் கருதலான் உள்ளுளுவப்பதுடைத்தென்றார். இவை யைந்து பாட்டாலும் அவ்விரத்தக்காரதியல்பு கூறப்பட்டது.

(ப-ரை) இகழ்ந்த-(தம்மை) அவமதித்த, என்னாத-இழிவுசொல்லாமல், சுவாரை-(பொருள்) கொடுப்பவரை, காணின்-கண்டால், உள்ளம்-(அவ் விரப்பவரது) மனம், மகிழ்ந்த-மகிழ்தல்செய்த, உள்ளுள்-உள்ளுள்ளே, உவப்பத-மலருந்தன்மையை, உடைத்த-உடையது எ·று.

(கரை) பொருள் கொடுப்பவரைக் கண்டால் யாசிப்பீர் மனம் மகிழ்ச்சியை யுடையது என்பதாம்.

(வி·ரை) இகழ்ந்தெள்ளாதெனவே கண்குமகிழ்தலும் இனியவை சொல் லலும் கொள்ளப்படும். அவ்விரப்பவர்க்கு வறுமைத்துன்பம் கெடுவதுமாத் திரமேயன்றி தம்மை அவர் ஐம்புலன்களாலும் பேரின்பமடைந்தவராக நினைத்தாலும் உள்ளுளுவப்ப துடைத்தென்றார். [இவை ஐந்துபாட்டாலும் இரக்கத்தக்கவரியல்பு சொல்லப்பட்டது.]

'உள்ளுள்ளே உவக்கும்' என்றது மனத்திலுள்ளே மகிழும். 'கண்கு மகிழ்தல்' என்றது களாவித்தல். 'இகழ்ந்த என்னாத' எனவே, இகழ்ந்தெள் ளாடலிவார் இரப்பாரை கண்குமகிழ்தலும் அவர்க்கு இன்சொலுரைத்தலும் பொருப்படும். (அவ்விரப்பவரது) வறுமைத்துன்பம் கெடுவதுமாத்திரமே யன்றி ஐம்புலன்களாலும் பேரின்பத்தை யுற்றவராகத் தம்மை நினைத்தலால் (அவர் மனம்) 'உள்ளுவப்பதுடைத்து' என்றார். (7)

இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று.

(பரி உரை) இரப்பார் இல்லாயின்·வறுமையுற் றிரப்பா ரில்லையாயின், சீர்க்கண் மா ஞாலம்·குளிர்ந்தவிடத்தையுடைய பெரிய ஞாலத்துள்ளார் செலவு வரவுகன், மரப்பாவை சென்று வந்தற்று-உயிரில்லாத மரப்பாவை இயந்திரக்கயிற்றூற் சென்று வந்தாற்போலும் எ·று.

ஐகாரம் அசைநிலை. ஞாலமென்னும் ஆகுபெயர்ப்பொருட்கு உவமையோ டொத்த தொழில் வருவிக்கப்பட்டது. ஞாலத்துள்ளாரென்றது அவரை யொழிந்தாரை. அவர்க்கேதலைச் செய்த புகழும் புண்ணியமும் மெய்தாமையின் உயிருடையரல்லரென்பதாம். "சுவார்க் கொன்வாரு மில்லாத வானத்து·

வாழ்வாரேவன்க னவர்" என்றார் பிறரும். இத்தொடையின்ப நோக்காத இரப்பவ நில்லாயினென்ற பாடமோதவாருமுளர்.

(ப-ரை) இரப்பார்-(வறுமையுற்) றிரப்பவர், இல்லாயின்-இல்லையாயின், சுர்க்கண்மாருலம்-குளிர்ந்த இடமுடைய பெரிய பூமியிலுள்ளவரை, (செலவு வரவுகள்), மரப்பாவை - (உயிரில்லாத) மரப்பாவை, சென்றுவந்தற்று-(எந்திரக்கயிற்றால்) சென்ற வருதல்கன்போலும் எ-று.

(க-ரை) யாசகரில்லாவிடில் பூமியிலுள்ளோர் செலவு வரவுகள் மரப்பாவை சூத்திரத்தா லாடுதல்போலுமாம் என்பதாம்.

(வி-ரை) ஐ-அசை. ஞாலம்-ஆகுபெயர். உவமேயத்தக்கு உவமானத்தோடு ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. பூமியிலுள்ளாரென்றது இரப்பவ தொழிந்தவரை. அவர்க்கு சுற்ற புகழும் புண்ணியமும் அடையாமையால் உயிருடையரல்லரென்பதாம்.

இரப்பார், பொருளிருந்தும் இல்லென விரப்பார், பொருளில்லாத இரப்பார், உள்ள பொருள் தொலைவாகி பிரப்பாரென முத்திறப்படுவர் என்பர் தொல்காப்பியர். 'இயந்திரக்கயிறு' என்றது சூத்திரக்கயிறு. 'இரப்பாரை' இதில் ஐகாரம் அசைநிலை. ஞாலம் என்னுமிடப்பெயர் ஞாலத்திலுள்ளாரை புணர்த்தலால் இடவாகுபெயர். 'அவரை யொழிந்தவரை' என்றது இரப்பவொழிந்தவரை. 'அவர்க்கு' என்றது வறுமையுற் றிரப்பவர்க்கு. 'உயிருடையரல்லர்' என்றது இரப்பாரில்லாத ஞாலத்தார் உயிருடையரல்லர் என்பதாம். கொடுக்கின்றவரும் கொள்ளுகின்றவருமில்லாத விண்ணுலகத்தில் வாழுகின்றவரே கொடுமையுடையோராவர் என்பதாம். (8)

ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண் மேவா ரிலாவக் கடை.

(பரி-உரை) இரந்துகோள் மேவார் இலாக்கடை - அவர்பாற்சென்ற ஒன்றினை பிரத்துகோடலே விரும்புவாரில்வழி, ஈவார்கண் தோற்றம் என் உண்டாம்-கொடுப்பார்மாட்டு என்ன புகழுண்டாம்? யாதுமில்லை எ-று.

தோற்றம்-ஆகுபெயர். மேவுவாரென்பது விகாரமாயிற்று. கொடுத்தல் வன்மை வெளிப்படாமையின், அதனைப் புகழெய்தாரென்பதாம். இனை பிரண்டுபோட்டாலும் உலகிற்கிரப்பார் வேண்டுமென்பது கூறப்பட்டது.

(ப-ரை) இரந்து கோள் - (அவரிடத்தச்சென்ற ஒன்றினை) இரந்து கொள்ளுதலே, மேவாரிலாவக் கடை - விரும்புவா ரில்லாதவழி, ஈவார்கண்-கொடுப்பவரிடத்து, என்-என்ன, தோற்றம்-புகழ், உண்டாம்-உண்டாகும் (யாதுமில்லை) எ-று.

(க - ரை) யாசிப்பவரில்லாவிடிற் கொடுப்பவர்க்கென்ன புகழுண்டாம் என்பதாம்.

(வி-உரை) தோற்றம்-ஒருபெயர். மேவுகாரென்பது விகாரமாயிற்று. கொடுத்தல் வல்லமை வெளிப்படாமையால், அதனாலே புழுடையாரென்ப தாம். இவை இரண்டு பாட்டாலும் உலகிற்கு இரப்பார் வேண்டுமென்பது சொல்லப்பட்டது.]

'அகர்பாற்சென்று' என்றது கொடுப்பாரிடத்தச்சென்று. 'கோடலே' என்றது கொள்ளுதலே. தோற்றம் என்றுங் கருவிப்பெயர் அதனாலாகிய புகழினை புணர்த்தலால் கருவியாகுபெயராம். மேவுகாரென்பது மேவார் என. இடைக்குறை விகாரமாயிற்று. 'அதனால்' என்றது கொடுத்தல் வன்மை வெளிப்படாமையால். (9)

இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை தானேயுஞ் சாலுங் கரி.

(பரி-உரை) இரப்பான் வெகுளாமை வேண்டும் - ஈவானுக்குப் பொரு ளுதவாவழி இவனெனக்கிஞ்சிலனென்று அவனை யிரப்பான் வெகுளா தொழிதல் வேண்டும்; நிரப்பிடும்பை தானேயும் கரிசாலும் - அது வேண்டிய பொழுது உதவாதென்பதற்கு வேறுசான்று வேண்டா, நிரப்பாகிய தன் னிடும்பை தானேயுஞ் சான்றுதலைமையும் எ-று.

யாவர்க்கும் தேடவேண்டுதலும் நிலையின்மையு முதலிய பிறசான்று முண்டென்பதுட னின்றமையின் உம்மை எச்சவும்மை. தனக்கேயன்ற மற்றையிரந்தார்க்கும் அற்றைக்கன்ற பொருள் கடைக்கூட்டற்கு அவனுறுந் தன்பத்தைத் தனக்கேயாகவைத்துத் தானுறுந் தன்பந் தானறிந்து வெகுளற்கென்பதாம். இதனால் அவர்க்கின்றியமையாததோரியல்பு கூறப் பட்டது.

(ப-உரை) (ஈவானுக்குப் பொருள் உதவாதவிடத்தே) இரப்பான் - இரப் பவன், வெகுளாமைவேண்டும் - (இவன் எனக்குக் கொடுக்கின்றிலனென்று அவனைக்) கோபியாதொழிதல்வேண்டும், (அது வேண்டியபொழுது உதவா தென்பதற்கு வேறு சாட்சிவேண்டா) நிரப்பிடும்பை தானேயும் - வறுமை யாகிய தன்கோய் தானேயும், கரி-சாட்சியாதல், சாலும்-அமையும் எ று.

(க-உரை) யாசிப்பவன் கோபியாம லிருக்கவேண்டும் என்பதாம்.

(வி-உரை) யாவர்க்கும் தேடவேண்டுதலும், நிலையில்லாமையும் முதலாகிய பிறசாட்சிகளும் உண்டென்பதுபட நின்றமையால் உம்மை எச்சவும்மை. தனக்கேயல்லாமல் தன்னை யிரக்தவர்க்கும் அன்றைக்கன்ற பொருள் கூம்பாதிருத்தற்கு அவன்படுந் தன்பத்தைத் தனக்கேயாகவைத்துத் தான் பெற்ற தன்பம் தானறிந்து கோபியாதிருக்கக் கடவனென்பதாம். [இதனால் அவர்க்கு அவசியமான ஒரியல்பு சொல்லப்பட்டது.]

'அவனை' என்றது ஈசவரனை. 'அது' என்றது அப்பொருள். 'தானேயும்' இல் உம்மை எதிரது முழுவிய எச்சவும்மை. 'உண்டென்பது' என்றது

பொருளுக்கு உண்டென்பது. 'தனக்கேயன்றி' என்றது யாசிப்பவனுடைய தனக்கேயல்லாமல். 'அற்றைக்கன்று' என்றது அன்றைக்கன்று. 'கடைக் கூட்டல்' என்றது தேடல். 'அவன்' என்றது ஈகோன். 'அவர்க்கு' என்றது யாசிப்பவர்க்கு. 'இயல்பு' என்றது ஈகோனைக் கோபியாதிருத்தல். (10)

106-ம் அதி - இரவு - முற்றிற்று.

107-ம் அதிகாரம்—இரவச்சம்

(பரி-உரை) அஃதாவது: மானந்தீரவரு மிரவிற்கஞ்சுதல். அதிகார முறைமையும் இதனானே விளக்கும்.

(உரை) அஃதாவது: மானங் கெடவரும் இரத்தலுக்கு அஞ்சுதல். அதிகாரமுறைமையும் இதனாலே விளக்கும்.

காவா தவந்தீயுங் கண்ணன்னர் கண்ணு
மிரவாமை கோடி யுறும்.

(பரி-உரை) காவாத உவந்து ஈயும் கண் அன்னர் கண்ணும் இரவாமை தமக்குள்ளது காவாது இவர் வாப்பெற்றேமென்று உண்மகிழ்ந்து கொடுக்கும் கண்போலச் சிறந்தார்மாட்டும் இரவாதே ஒருவன் வறுமைகூர்தல், கோடி உறும்-இரத்த செல்வமெய்தலிற் கோடிமடங்கு நன்று எ-று.

கல்குரவு மறைக்கப்படாத கட்டார்மாட்டும் ஆகாதென்பதுபட நின்றமையின், உம்மை உயர்வுசிறப்பின்கண் வந்தது. அவ்விரவான் மானந் தீராதென்றுந் தணையல்லது அதற்கு மிகுதி கூடாமையின், வல்லதோர் முயற்சியா னுயிர்போம்பலே நல்லதென்பது கருத்து.

(ப-ரை) (ஒருவன்) காவாத - (தமக்குள்ளதை) ஒளிக்காமல், உவந்த-(இவர் வாப்பெற்றேமென்று) உள்ளமகிழ்ந்து, ஈயும்-கொடுக்கும், கண்ணன்னர்கண்ணும்-கண்போற் சிறந்தவரிடத்தும், இரவாமை-இரவாமல் வறுமைப்படுதல், கோடியுறும் - (இரத்த செல்வமடைதலிற்) கோடிமடங்கு நன்றும் எ-று.

(க-ரை) ஒளியாது கொடுக்குங் கண்ணிற்கொப்பானவரிடத்தும் யாசியாதிருத்தல் கோடிமடங்கு நன்மையாம் என்பதாம்.

(வி-ரை) வறுமை மறைக்கப்படாத கட்பினரிடத்தும் இரக்கலாகாதென்பதுபட நின்றமையால், உம்மை உயர்வுசிறப்பு. அவ்விரவால் மானங் கெடாதென்ப தொன்றேயல்லாமல் அதற்கு மிகுதி கூடாமையால் செய்ய வல்லதோர் முயற்சிசெய்து சீவனஞ்செய்தலே நல்லதென்பது கருத்து.

'இவர்' என்றது இரப்போர். 'கூர்தல்' என்றது மிகுதல். வறுமை மறைக்கப்படாத கட்பினர்களிடத்தும் யாசித்தல் கூடாதென்பது தொன்

ன்றமையால், கண்ணன்ஞர்கண்ணும் என்றவும்மை உயர்வுசிறப்பில் வந்தது. 'அதற்கு' என்றது அவ்விரக்கத்திற்கு. மிகுதி' என்றது மேம்பாடு. காதல கிண்ணன்பிற் கண்ணன்ஞர்கண்ணும் இரவாத வாழ்வதாம் வாழ்க்கை - பிரவினை உன்ளுங்கா லுன்ன முருகுமா லென்கொலோ கொன் ளுங்காற் கொல்வார் குறிப்பு' என்ற காலடியார் கூறலதிற்கு உணர்தற் பாலதாம். (1)

இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக வுலகியற்றி யான்.

(பரி-உரை) உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்-இவ் வுலகத்தைப் படைத்தவன் இன்கண் வாழ்வார்க்கு முயன்றுயிர்வாழ்தலே யன்றி இரந்து முயிர்வாழ்தலே வேண்டி விதித்தானுயின், பரந்த கெடுக-அக் கோடியோன்ருனும் அவரைப்போன்ற எல்லுமலமந்த கெடுவானுக எ-று.

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாய வுண்டியும் அதற்கேதுவாய செய்தொழிலும் பழவினைவயத்தாற் சருவொடு கலந்த என்றே அவன் சற்பிக்குமன்றே, அவற்றட் சிலவுயிர்க்கு இரத்தலையும் ஒரு செய்தொழிலாகக் கற்பித்தானுயின் அத்தீவினையாற்ருனும் அத்தன்பமுறல் வேண்டுமென்பதாம். இவை பிரண்டுபாட்டானும் அவ்விரவின் கொடுமை உறப்பட்டது.

(பதவு) உலகியற்றியான் - இவ்வுலகத்தைப் படைத்தவன் (இத னிடத்து வாழ்வார்க்கு முயன்று சீவனஞ் செய்தலையல்லாமல்), இரந்தும் - யாசித்தும், உயிர்வாழ்தல்வேண்டின் - சீவனஞ் செய்தலேவேண்டி விதித்தா னுயின், (அக்கொடியோன்) பரந்த-(தானும் அவர்போல்) எல்லுஞ்சுழன்று, கெடுக-கெடக்கடவன் எ-று.

(க-ரை) பிரமன் உலகத்தோரை யாசஞ்செய்யப் படைத்தானுகி னவன் கெடக்கடவன் என்பதாம்.

(வி-ரை) மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாகிய ண்டியும், அதற்கு ஏதுவாகிய செய்தொழிலும், பழவினைவசத்தாற் கரு வொடு கலந்த அப்போதே அவன் கற்பிப்பானன்றே அவைகளுன் சில யிர்க்கு இரத்தலேயும் ஒருசெய்தொழிலாகக் கற்பித்தானுயின் அத்தீவினை னால் தானும் அத்தன்ப மடையவேண்டுமென்பதாம். [இவ்விரண்டு பாட் டாலும் அவ்விரவின் கொடுமை சொல்லப்பட்டது.]

'உலகத்தைப்படைத்தவன்' என்றது பிரமன். 'அக்கொடியோன்ருனும்' என்றது அக்கொடிய பிரமனும். 'அவரை' என்றது இரந்து சீவனஞ்செய் யவரை. 'அதற்கு' என்றது அவ்வாழ்நாளிற்கு. 'அதற்கு' என்றது அவ்வுண் டிக்கு. 'அவன் கற்பிக்குமன்றே' என்றது அப்பிரமன் எற்படுத்தவா ன்றே. 'அவற்றன்' என்றது வாழ்நான், உண்டி, செய்தொழில் என்பன

வற்றுள். "நாறாத் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய், நீறாய்நிலத்து விளியரோ-வேறாய, புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும், நன்மக்கள் பக்கந் துறந்து." என்ற நாலடியார் செய்யுளை யிங்கு ஒப்புநோக்குக. (2)

இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும் வன்மையின் வன்பாட்ட தில்.

(பரி-உரை) இன்மை இடும்பை இரந்து தீர்வாம் என்னும் வன்மையின்-வறுமையான் வருந்துன்பத்தை முயன்று நீக்கக்கடவேமென்று கருதாது இரந்து நீக்கக்கடவேமென்று கருதும் வன்மைபோல, வன்பாட்டது இல்-வலிமைப்பாடுடையது பிறிதில்லை எ-று.

நெறியாய முயற்சி நிற்க நெறியல்லாத இரவாற்றீர்க்கக் கருதுதலின், வன்மையாயிற்று. வன்பாடு-முருட்டுத்தன்மை; அஃதாவது, ஓராது செய்து நிற்றல். இதனான் வறுமை தீர்தற்கு நெறி இரவன்றென்பது கூறப்பட்டது.

(ப-ரை) இன்மை-வறுமையால்வரும், இடும்பை-துன்பத்தை (முயற்சி செய்து நீக்கக்கடவோமென்று நினையாமல்), இரந்துதீர்வாமென்னும்-இரந்து நீக்கக்கடவோமென்று நினைக்கும், வன்மையின்-வல்லமைபோல், வன்பாட்டது-வலிமைப்பாடுடையது, இல்-இல்லை எ-று.

(க-ரை) வறுமைத்துன்பத்தை நீக்குவோமென்னும் வலிமைபோல வலிமையுடையதில்லை என்பதாம்.

(வி-ரை) அது நீக்கற்கு வழியாகிய முயற்சி இருக்க, வழியல்லாத இரவால் நீக்கநினைத்தலால் வன்மையாயிற்று. வலிமைப்பாடு - முரட்டுத் தன்மை; அது ஆவதை யாலோசியாதுசெய்து நிற்றல். [இதனால் இரவு வறுமை தீர்தற்கு வழியன்றென்பது சொல்லப்பட்டது.]

வறுமைத் துன்பத்தை யொழிப்பதற்குரிய வழியாகிய முயற்சியிருக்க வழியல்லாத யாசித்தலால் அதனை நீக்கக்கருதுதலால், (இரந்துதீர்வாம் என்பது) வன்மையாயிற்று. 'வன்பாடு' என்றது முரட்டுத்தன்மை. அதாவது மேற்கொள்ளுஞ்செயலை யாலோசிக்காமல் செய்துநிற்றல். (3)

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக் காலு மிரவொல்லாச் சால்பு.

(பரி-உரை) இடம் இல்லாக்காலும் இரவு ஒல்லாச் சால்பு-நுகரவேண்டு வனவின்றி நல்கூர்ந்தவழியும் பிறர்பாற்சென்றிரத்தலை யுடம்படாத அமைதி, இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே - எல்லாவுலகும் ஒருங்கியைந்தாலுங் கொள்ளாத பெருமையுடைத்து எ-று.

அவ்விரத்தலைச் சால்பு விலக்குமாகலின், இரவொல்லாமை அதன்மே லேற்றப்பட்டது. இதனான் அந்நெறியல்லதனைச் சால்புடையார் செய்யா ரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) இடமில்லாக்காலும்-அனுபவிக்கவேண்டுவதில்லாமல் வறுமைப் பட்டவிடத்தும், இரவு - (பிறரிடத்தச்சென்று) இரத்தலுக்கு, ஒல்லா-உடன்படாத, சால்பு-நிறைவு, இடமெல்லாம்-உலகமெல்லாம்(ஒருசோதியைத் தாலும்), கொள்ளாத்தகைத்தே-கொள்ளாத பெருமையுடைத்தே எ-று.

(க-ரை) தரித்திரத்திடத்தும் யாசியாமையே பெருமை என்பதாம்.

(வி-ரை) அவ்விரத்தலைச் சால்பு விலக்கலால் இரவொல்லாமை அதன் மேல் ஏற்றப்பட்டது. [இதனால் அவ்வழி யல்லாததைச் சால்புடையார் செய்யாரென்பது சொல்லப்பட்டது.]

'இரத்தலை உடன்படாத' என்றது-யாசித்தலுக்கு உடன்படாத. 'சால்பு' என்றது பலகுணங்களானும் மிக்குவினங்கல், சால்பினாலுண்டாகும் இர வொல்லாமையை யச்சால்போ டொற்றுமைசெய்து இரவொல்லாச்சால்பு என்ற கூறினர். 'அக்கெறியல்லதனை' என்றது பிறரிடத்தச் சென்று யாசித்தலை. சால்புடையார் பொருள்களின்றி வறுமையுற்றவிடத்தும் பிறர் பாற்சென்று யாசியார் என்பதாம். (4)

தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்.

(பரி-உரை) தான் தந்தது தெண்ணீர் அடுபுற்கையாயினும் - தெறியாய முயற்சி கொடுவந்து தந்தது தெளிந்த நீர்போலும் அடுபுற்கையேயாயினும், உண்ணலின் னூக்கு இனியது இல் - அதனை யுண்டற்குமே லினியதில்லை எ-று.

தாடந்தகூழ் செறிவின்றித் தெண்ணீர் போன்றதாயினும் இழிவாய பிரவான்வந்ததன்றித் தம்முடைமையாகலின், அமிழ்தத்தோடொக்குமென்றாம். இதனால் தெறியினுளுயது சிறிதேனும் அதுசெய்யுமின்பம் பெரிதென்பது கூறப்பட்டது.

(ப-ரை) தான்-(வழியாகிய) முயற்சி, தந்தது-(கொண்டுவந்து) தந்தது, தெண்ணீர் - தெளிந்த நீர்போலும், அடுபுற்கையாயினும் - சமைத்த கூழையாயினும், உண்ணலினூக்கு-(அதனை) உண்ணுதற்குமேல், இனியது-இன்பந்தருவது, இல்-இல்லை எ-று.

(க-ரை) முயற்சியால் வந்தது கூழாயினும் அதை யுண்ணுதல்போன்பமுடையதில்லை என்பதாம்.

(வி-ரை) முயற்சிதந்தகூழ் அழுத்தமில்லாமல் தெளிந்த நீர்போன்றாயினும் அகமானமாகிய இரவால் வந்ததல்லாமல் தம்முடையதாகலால், மிழ்தத்தோடொக்குமென்பதாம். [இதனால் வழியாலாகியது சிறிதெனினும் து செய்யுமின்பம் பெரிதென்பது சொல்லப்பட்டது.]

'தெறியாயமுயற்சி' என்றது ன்னெறியாகிய முயற்சி. 'முயற்சி கொடுந்த' என்றது முயற்சியால் வந்தடைந்த. 'அதனை' என்றது கூழை. 'தெறி

(கரை) பாசகமென்னும் தோணி ஒளித்தலென்னும் வலிய கிலர்தாக்கக் கெடும் என்பதாம்.

(வி-ரை) முயற்சியாற் கடப்பதனை இரவால் கடக்கலுற்றவன் அதன் கரை காணுமையால் எமாப்பிரேணியென்றார். எமாப்பின்மை தோணிமேல் ஏற்றப்பட்டது. அது கடத்தற்கு ஏற்றதல்லாமையாலும், கிலமறியாது செலுத்தியவழி உடைதலாலும், அதனிடத்தே ஏறலாகாதென்பதாம். (இது உருவகம்)

'இதனல்' என்றது இரத்தலென்னும் காவலற்ற தோணியால். 'சேமம்' என்றது காப்பு. 'அதன்கண்' என்றது வறுமையாகிய கடலில். 'வன்னிலம்' என்றது வலியகிலம் (கற்பாறை.) 'கடப்பதனை' என்றது கடப்பதாகிய வறுமைக்கடலை. 'அதன்' என்றது வறுமைக்கடலினை. 'எமாப்பின்மை' என்றது பாதுகாப்பவரில்லாமை. எமாப்பின்மையாலுண்டாகும் இரவாகிய தோணியை அவ்வேமாப்பின்மையோ டொற்றுமைசெய்து எமாப்பிரேணி யென்ற உறினமையின், இதுகாரணம் காரியமாய உபசாரவழக்காம். அது (இரத்தலென்னுமேமாப் பிரேணிகடத்தற்கேற்ற தன்மையாலும் (தரித்திரக் கடலைக் கடந்து செல்லுதற்குத் தகுதியுடையதன்றுதலாலும்) கிலமறி யாது (இடமறியாது) சென்றவிடத்து உடைதலாலும் அதன்கண் (இரவாகிய தோணியில்) ஏறற்கவென்பதாம். அவயவியை (உறப்பியை) நீக்கி அவயவக் கூமாத்திரம் தோணியென்றும் பாரென்றும் உருவகஞ்செய்தமையின், இக்குறள் அவயவவுருவக வணியாயிற்று. (8)

இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

(பரி-உரை) இரவு உள்ள உள்ளம் உருகும்-உடையார்முன் இல்லார் சென்றிரந்து கிற்றலின் கொடுமையை நினைந்தால் எம்முள்ளங் கரைந்தருகா கிற்கும்; கரவு உள்ள உள்ளதூஉம் இன்றிக்கெடும்-இனி அக்கிலையைக் கண்டு வைத்தவர் இல்லையென்றலின் கொடுமையை நினைந்தால் அவ்வுருகுமன வானுமின்றிப் பொன்றிவிடும் எ-று.

* "இரவினை, புள்ளுங்காலுள்ள முருகுமா லென்கொலோ, கொள்ளுங் காற் கொல்வார் குறிப்பு" என்றார் பிறரும். இரவினுங்கரவு கொடி தென்பதாம். இதற்குப் பிறரெல்லாம் இரக்கின்றவருள்ள முருகுமென் றுரைத்தார்.

* "கரவாத நிண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும், மிரவாத வாழ்வ தாம் வாழ்க்கை - மிரவினை, புள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ, கொள்ளுங்காற் கொல்வார் குறிப்பு." காலடியார்-இரவச்சம்.

(ப ரை) இரவு-(உடையார்முன் இல்லார்சென்று) இரந்து நிற்றலின் கொடுமையை, உள்ள நினைத்தால், உள்ளம் (எம்) உள்ளம், உருகும் - கரைந்துருகாநிற்கும், கரவு-(இது அந்நிலையைக்கண்டிருந்தவர்) இல்லையென்றலின் கொடுமையை, உள்ள - நினைத்தால், உள்ளதூஉம் - அவ்வுருகுமளவுதானும், இன்றி-இல்லாமல், கெடும்-அழிந்துபோம் எ-று.

(க ரை) யாசிப்பவர் கொடுமையை நினைத்தால் மனமுருகுகின்றது. இல்லையென்னுங் கொடுமையை நினைத்தால், உருகுமளவு மில்லாமற்கெடும் என்பதாம்.

(வி-ரை) இரவினும் கரவு மிகக்கொடிதென்றபடி.

இரவினை யுள்ளுங்காலுள்ள முருகுமா லென்கொலோ, கொள்ளுங்காற் கொள்பார் குறிப்பு. என்பது நாலடியார் இரவச்சம். இதன்பொருள். (பொருளுடையார்முன் அஃதில்லாதார் சென்று) இரந்துநிற்றலின் கொடுமையை நினைந்தால் எமதுள்ளங் கரைந்துருகும்; ஏற்பவர்கருத்து ஏற்குங் காலத்து யாதாகுமோ என்பதாம். யாசித்தலினும் இல்லையென்றுள்ளதை யொளித்தல் மிகக் கொடியதென்பதாம்.

(9)

கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவ
சொல்லாடப் போஒ முயிர். [ர்

(பரி-உரை) சொல்லாட இரப்பவர் உயிர் போம்-கரப்பார் இல்லையென்று சொல்லாடிய துணையானே இரப்பார்க்கு உயிர்போகாநின்றது; கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங்கொல் - இனிச் சொல்லாடுகின்ற அவர்தமக்கு உயிர் பின்னு நிற்றலான் அப்பொழுது எப்புரையுட் புக்கொளித்து நிற்கும்! எ-று.

உயிர்போகலாவது இனி யாமென்செய்துமென்றேங்கிச் செயலற்று நிற்றல்; * "அந்நிலையே, மாயானோ மாற்றிவிடின்" என்றார் பிறரும். கேட்டாரைக் கொல்லவற்றாய சொற் சொல்வாரைக்கோறல் சொல்லவேண்டாவாயினும் அது காண்கின்றிலம் இஃதென்னோவென்பதாம். வறுமையுற்றுழி மறையாது இரக்கப்படுவாராய கேளிர்கட்கும் அதனைச் சொல்லாட உயிர்போம், ஆனபின் மறைக்கப்படுவாராய பிறர்க்குச் சொல்லாடியக்காற் போகாதெங்கே யொளித்துநிற்கும் இரண்டானும் போமேயன்றோவென இரவஞ்சினானொருவன் கூற்றாக்கி யுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் அவ்விரவின் குற்றமும் கரவின் குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன.

(ப-ரை) சொல்லாட-(ஒளிப்பவர் இல்லையென்று) சொல்லிய மாத்திரத்தே, இரப்பவர்-இரப்பவர்க்கு, உயிர்-உயிரானது, போம் - போகாநின்றது, இரப்பவர்க்கு - (இனிச்சொல்லுகின்ற) அவ்வொளிப்பவர்க்கு (உயிர்பின்

* "புறத்துத்தன் னின்மை நலிய வகத்துத்தன், னன்ஞான நீக்கி நிறீஇயாருவனை, மீயா யெனக்கென் றிரப்பானே லந்நிலையே, மாயானோ மாற்றிவிடின்" நாலடியார்: இரவச்சம்.

னிருத்தலால்) யாக்கு.எப்புரையும், ஒளிக்குங்கொல் - (அப்பொழுது) புகுந்
தொளித்தது கிற்குமோ? எ-று.

(கரை) யாதிப்பவர்க் கில்லையென்றல், உயிர்போகும் ஒளிப்பவர்க்குயிர்
யெக்கேயொளிக்கும் என்பதாம்.

(வி-ரை) உயிர்போதலாவது, இனியாமென் செய்வோமென்று எத்திச்
செயலற்றகிற்றல். கேட்டாரைக் கொல்லவல்லதாகிய சொல் சொல்வாரைக்
கொல்லுதல் சொல்லவேண்டாகாயினும் அது காண்கின்றிலம் இதுயென்னே
வென்பதாம். ஓ-அசை. [இவை மூன்றபாட்டாலும் அவ்விரவின் குற்றமும்
காவின்குற்றமும் சேர்த்தச் சொல்லப்பட்டன.]

'சொல்லாடிய தினையானே' என்றது சொல்லியமாத்திரத்தில். 'அப்
பொழுது' என்றது இரப்பார்க்குக் காப்பார் பொருளில்லையென்றஞ்சு
கும்போது. 'எப்புரையும்' என்றது எத்தொலையும். "அங்கிலையே மாயானே
மாற்றிவிடின்" என்பதன்பொருள். (மானக்கேடாத யாசகனொருவன் பொரு
ளுடையா னொருவனிடஞ்சென்ற பொருளீவாயென்று யாசிக்கவுடன்படுவா
னெனில்) 'மாற்றிவிடின்' என்றது அப்பொருளுடையான் பொருளில்லை
யென்றசொல்லி மறுத்தவிடின். 'அங்கிலையே' என்றது அப்பொழுதே.
'மாயானே' என்றது அவன் உயிர் நீக்காமலிருப்பானே. (இரான்) என்பதாம்.
'அது' என்றது சொல்வாரைக் கொல்லுதல். 'கூற்று' என்றது சொல். (10)

107-ம் அதி - இரவச்சம் - முற்றிற்று.

108-ம் அதிகாரம்—கயமை

(பரி-உரை) அஃதாவது: மேல் அரசியலுள்ளும் அக்கவியலுள்ளுந்
தெறப்புவகையாற் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினுள்
யாவர்க்குமெய்த வைத்தமையின் ஆண்டுக் குறிப்பாற் கூறியனவும் சான்
டொழிபியலுள் வெளிப்படக் கூறியனவுமாய குணங்கள் யாவு மிலராய
தோராதசன்மை. அதனுல் இஃதெல்லாவற்றிற்கும்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: முன்னே அரசியலுள்ளும் அக்கவியலுள்ளும்
தெறப்புவகையாற் சொல்லப்பட்ட குணங்களுள் ஏற்புடையவைகளைக் குறிப்
பினுல் யாவர்க்கும் பொருந்தவைத்தமையால், அக்கே குறிப்பாற் சொல்லிய
வையும், இக்கே ஒழிபியலுள் வெளிப்படச் சொல்லியவையும், ஆகிய
குணங்களுள் யாதுமிலராகிய தோராதசன்மை. அதனுல் இது எல்லா
வற்றிற்கும்பின் வைக்கப்பட்டது.

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

(பரி-உரை) மக்களே போல்வர் கயவர் - வடிவான் முழுதும் மக்களை
யொப்பர் கயவர்; அவர் அன்ன ஒப்பாரி யாம் கண்டது இல் - அவர் மக்களை

யொத்தாற்போன்ற வொப்பு வேறிரண்டு சாதிக்கண் யாங் கண்டதில்லை எ-று.

முழுதுமொத்தல் தேற்றேகாரத்தாற் பெற்றாம். அவரென்றது அவர் மாட்டுளதாய வொப்புமையை. மக்கட்சாதிக்கும் கயச்சாதிக்கும் வடிவொத்தலிற் குணங்களது உண்மையின்மைகளானல்லது வேற்றுமை யறியப்படாதென்பதாம். இதனாற் கயவரது குற்றமிகுதி கூறப்பட்டது.

(ப-ரை) கயவர் - கீழோர், மக்களேபோல்வர் - (வடிவால்முழுதும் மக்களேபோ லிருப்பவர், அவரன்ன வொப்பாரி-அவர் அம்மக்களை யொத்தல் போன்றவொப்பு, யாம் - நாம், கண்டதில் - (வேறிரண்டு சாதிகளிடத்துக்) கண்டதில்லை எ-று.

(க-ரை) கீழ்மக்கள் வடிவாலே மக்களை யொப்பாவர், அவர்களை யொப்பானவரை யான் கண்டதில்லை என்பதாம்.

(வி-ரை) முழுதுமொத்தல் தேற்றேகாரத்தாற் பெற்றாம். அவரென்றது அவரிடத்தேயுள்ள வொப்புமையை. மக்கட்சாதிக்கும் கயவச்சாதிக்கும் வடிவொத்தலால் குணங்களினிருப்பினாலும், இல்லாமையாலும், அல்லது வேற்றுவமை அறியப்படாதென்பதாம். [இதனாற் கயவரது குற்றமிகுதி சொல்லப்பட்டது.]

'மக்களேபோல்வர் கயவர்' என்றது 'மக்கடாமே யாறறிவுயிரே' என்றார் தொல்காப்பியனார். கயவர் வடிவால் முழுதும் மக்களே போன்றாராயினும் மனவுணர்ச்சியில்லாதவர் என்பது பெறப்பட்டது. 'மனவுணர்வு' என்றது மக்கதின்னது தகாதின்னதென்றுணர்தல். 'முழுதுமொத்தல்' என்றது மக்களும் கயவரும் வடிவால் முழுதுமொத்திருத்தல். 'அவரென்றது' என்றது கயவர் என்று கூறியதாம். (1)

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

(பரி உரை) நன்று அறிவாரிற் கயவர் திரு உடையர் தமக்குறுதியாவன அறிவாரின் அவையறியாத கீழ்மக்கள் நன்மையுடையர், நெஞ்சத்து அவலம் மிலர் - அவர்போல அவை காரணமாகத் தந்நெஞ்சத்தின்கட் கவலையில்லாகலான் எ-று.

நன்றென்பது சாதியொருமை. உறுதிகளாவன-இம்மை மறுமை வீடுகட்டாரியவாய புகழறஞானங்கள். இவற்றை யறிவார் இவை செய்யாநின்றே நாகச் செயப்பெறுகின்றிலேமென்றும், செய்கின்றவிவை தமக்கு இடையூறுமாங்கொலென்றும், இவற்றின் மறுதலையாய பழிபாவமறியாமை யென்பனவற்றுள் யாது விளையுமோவென்றும், இவ்வாற்றாற் கவலை யெய்துவர்; கயவர் அப்புகழ்முதலிய வொழித்துப் பழிமுதலிய செய்யாநின்றும் யாதுங்

கவலையுடையரல்லராகலாற் றிருவுடையரெனக் குறிப்பா லிகழ்ந்தவாறு. இதனாற் பழிமுதலியவற்றிற் கஞ்சாரென்பது கூறப்பட்டது.

(பதம்) கன்ற-(தமக்கு) உறுதியாயினவைகளை, அறிவாரின் - அறிபவரின், கயவர்-(அவையறியாத) கீழ்மக்கள், திருவுடையர்-நன்மையுடையராவர், (அவர்போல்) நெஞ்சத்த - (தமது) நெஞ்சினிடத்து, அலமிலர் - (அவை காரணமாக) கலங்கிலர், (ஆதலால்) எ-று.

(க-ரை) நன்மைகளை யறிபவரிலும் நெஞ்சிற் கவலையில்லாதவராகிய கீழ்மக்கள் நன்மையுடையவர் என்பதாம்.

(வி-ரை) நன்றென்பது - சாதியொருமை. உறுதிகளாவன - இம்மை மறுமை வீடுகளுக்கு உரிபவாகிய புகழ் புண்ணிய ஞானங்கள். இவைகளை யறிவார் இவை செய்யாகின்றே அதிகமாகச் செய்யப்பெறுகின்றமை யென்றும், செய்கின்ற இவைகளுக்கு இடையூறு வருமோவென்றும், இவைகளுக்கு மாறுகிய பழிபாவமறியாமை யென்பவைகளில் யாதுவினையுமை வென்றும், இவ்வழியாலே கவலையடைவர்; கயவர் அப்புகழ் முதலானவைகளைவிட்டு பழிமுதலானவைகளைச் செய்யாகின்றமும், ஒருகவலையு மில்லாதிருப்பராகலால் திருவுடையரெனக் குறிப்பாலிகழ்ந்தபடி. [இதனால் புகழ் பாவ முதலானவைகளுக்கு அஞ்சாரென்பது சொல்லப்பட்டது.]

'அவை' என்றது தமக்கு உறுதியானவற்றை. 'அவர்' என்றது நன்றறிவார். 'அவை' என்றது தமக்குறுதியானவை. இம்மைக்குரியதுபுகழ், மறுமைக்குரியது அறம். வீட்டுக்குரியது ஞானம். 'இவற்றை' என்றது புகழற ஞானங்கள். 'இவற்றின் மறுதலையாய' என்றது புகழ்க்கு மறுதலையாயதபழி. 'அறத்திற்குப்பாவம்' என்றது ஞானத்திற்கு அறியாமை. இதனால் கயவர் பழிபாவமுதலியனவற்றிற்கு அஞ்சாரென்பதாம்.

தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

(பரி-உரை) தேவர் அனையர் கயவர்-தேவருங் கயவரும் ஒருதன்மையர், அவரும் தாம் மேவன செய்த ஒழுகலான்-அஃதியாதானெனின், தேவர் போன்ற தம்மை யெமிப்பாரின்றிக் கயவரும் தாம் விரும்புவனவற்றைச் செய்தொழுகலான் எ-று.

உயர்ச்சியும் இழிவுமாகிய தக்காரண வேறுபாடு குறிப்பாற்றோன்றமையின், இது புகழ்வார்போன்ற பழித்தவாருயிற்று. இதனால் தீக்கற்பாடின்றி வேண்டிய செய்வரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) தேவரனையர் கயவர் - தேவரும் கயவரும் ஒருதன்மையர் (அது எதனாலெனில்) அவரும்-அக்கயவரும் (தேவர்போலே தம்மையெமிப்பாரில்லாமல்), தாமேவன-தாம் விரும்புமவைகளை, செய்தொழுகலான்-செய்தொடக்கலால் எ-று.

(க-ரை) தேவருள் கயவரு மொப்பாவர் என்பதாம்.

(வி-ரை) உயர்ச்சியும் இழிவுமாகிய தங்காரண வேறபாடு குறிப்பால் தான்ற நின்றமையால் இது புகழ்வார்போன்று பழித்தபடியாயிற்று. இதனால் விலக்கப்படுதலில்லாமல் வேண்டியது செய்வாரென்பது சொல்லப்பட்டது.]

'உயர்வுமிழிவுமாகிய காரணவேறபாடுகள்' அதாவது விரும்புவனவற்றைச் செய்யாமை உயர்விற்குக் காரணம். நீக்கப்படுதலில்லாது விரும்புவனவற்றைச்செய்தல் இழிவிற்குக் காரணமாம். புகழ்வார்போன்று பழித்தது. 'தேவரேயர்கயவர்' என்று புகழ்வார்போன்று மேவனசெய்தொழுகல் என்னும் ஏதுவினால் கயவரைப் பழித்ததாயிற்று. இது புகழ்வது போலப்பழித்தல்.

(3)

அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.

(பரி-உரை) கீழ்-கீழாயினான், அகப்பட்டி யாவாரைக் காணின்-தன்னிற் குன்றிய பட்டியா யொழுகுவாரைக் கண்டானாயின்; அவரின் மிகப்பட்டுச் செம்மாக்கும்-அவ்வொழுக்கத்தின்கண் அவரிற் றான்மேம்பட்டு அதனாற்றன் செருக்காட்டி யிறுமாக்கும் எ று.

அகப்பட்டி-அகமாகியபட்டி. பட்டிபோன்று வேண்டியவாறே யொழுகின் பட்டியென்றார். * "நோதக்கசெய்புஞ் சிறுபட்டி" என்றார் பிறரும். ஆனால் அவர் மேம்படுமாறு கூறப்பட்டது.

(பதவுரை) கீழ்-கீழாயினான், அகப்பட்டியாவாரை - (தன்னிற்) குறைந்தவனாய் நடப்பவரை, காணின்-கண்டானாயின், (அவன் அங்ஙடக்கையிலே) அவரின்-அவரைக்காட்டிலும், மிகப்பட்டு - தான் மேம்பட்டு, செம்மாக்கும்-(அதனால் தன் மிகுதிகாட்டி) இறுமாப்பான் எ-று.

(க-ரை) கீழ்மகன் பட்டியாய் நடப்பவரைக்கண்டா லதனினு மேலாகுவான் என்பதாம்.

(வி-ரை) அகமாகிய மனம் பட்டிபோன்று வேண்டியபடி நடத்தலால் பட்டியென்றார். [இதனால் அவர் மேம்படும்விதம் சொல்லப்பட்டது.]

'பட்டியாய்' என்றது பாதுகாப்பு இலராய். 'அவரின்' என்றது அகப்பா யொழுகுவாரினும். 'அதனால்' என்றது அம்மேம்பாட்டினால். 'அகப்பட்' என்றது அகமாகிய மனம் சுருங்குதலுடையவராய்ப் பட்டிபோன்று விரும்பியவாறொழுகலின் அவரைப் பட்டி என்றார். நோதக்க செய்புஞ்சிறுபட்டி. இதன்பொருள்: நோவத்தக்க செயல்களைச் செய்புஞ் சிறியவனாவலில்லாதவன். 'அவர்' என்றது கயவர்.

(4)

* கலி: குறிஞ்சி-15.

அச்சமே கீழ்களை ஆசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

(பரி-உரை) கீழ்களை ஆசாரம் அச்சமே-பயவாதாய வாசாரக் கண்ட
டாயின் அதற்குக் காரணம் அரசனுள் எதம் வருமென்றஞ்சுமச்சமே,
எச்சம் அவா உண்டேல் சிறிது உண்டாம்-அஃதொழிந்தால் தம்மால் அவா
வப்படும் பொருள் அதனு லுண்டாமாயிற் சிறிதுண்டாம் எ-று.

ஆசாரத்தின் காரணத்தை ஆசாரமென்றும், அவாவப்படுவதனை அவா
வென்றும் கூறினார். எச்சத்தின்கண்ணென்று மேழாவது இறந்தக்கட்டோ
கை. பெரும்பான்மை அச்சம், சிறுபான்மை பொருட்பேறு இவ்விரண்டாலு
மன்றி இயல்பாக வுண்டாகாதென்பதாம். வேண்டியசெய்தலே இயல்பு
ஆசாரஞ்செய்தல் இயல்பன்றென்பது இதனாற் கூறப்பட்டது.

(ப-ரை) கீழ்களாசாரம் - கீழோரை ஆசாரம், (கண்டது உண்டாயின்
அதற்குக் காரணம்) அச்சமே - (அரசனுலே தன்பம் வருமென்ற அஞ்சுமே
அச்சமே, எச்சம் - (அது) ஒழிந்தால், அவா - அவாவப்படும் பொருள், உண்
டேல்-(அதனால்)உண்டாமாயின், சிறிது-சிறிது, உண்டாம்-உண்டாகும் எ-று

(க-ரை) கீழ்மக்கட் காசார மியல்பாகவில்லை என்பதாம்.

(வி-ரை) ஆசாரத்தின் காரணத்தை ஆசாரமென்றும், அவாவப்படுமதனை
அவாவென்றும் சொல்லினார். கீழ்மக்களுக்கு ஆசாரம் பெரும்பான்மை
அச்சத்தாலும், சிறுபான்மை பொருட்பேற்றாலுமல்லாமல் இயல்பாக
உண்டாகாதென்பதாம். [வேண்டியபடி செய்தலே இயல்பு, ஆசாரஞ்செய்தல்
இயல்பன்றென்பது இதனாற் சொல்லப்பட்டது.]

'பயவாதாய' என்றது பயவர்களுடையதாகிய. 'அதற்கு' என்றது அ
வாசாரத்திற்கு. 'எதம்' என்றது தீங்கு. 'அஃது' என்றது அவ்வச்சம்.
அதனால்' என்றது அவ்வாசாரத்தால். கீழ்மக்களது ஆசாரத்தின் காரண
மாகிய அச்சத்தை. 'அச்சமே கீழ்களாசாரம்' என்றாற்றமைப்பதேற்றி
கூறினமையின் இது காரண காரிய உபசார வழக்காம். அவாவென்பது
அவாவப்படுதற்கேற்ற பொருளை புணர்த்தலால் காரியவாகுபெயர்.
'பொருட்பேறு' என்றது மணி பொன் முதலிய பொருள்களைப் பெறு
லாம்.

அறைபறை யன்னார் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

(பரி-உரை) தாம் கேட்ட மறை உய்த்தப் பிறர்க்கு உரைக்கலான்-தாம்
கேட்ட மறைகளை இடந்தோறுந் தாங்கிக்கொண்டு சென்று பிறர்க்கு
சொல்லுதலான், கயவர் அறை பறை அன்னார்-கயவர் அறையப்படும் பறை
யினையொப்பர் எ-று.

மறை-கெளிப்படிற் குற்றம் வினைபுமென்ற பிறரை மறைத்த ஒருவன் சொல்லிய சொல். பிறர்-அம்மறைத்தற்குரியார். உய்த்தென்ற்ர் அவர்க்கது பெரும்பாரமாதலேக்கி. பறை ஒருவன் கையாற் றன்னை யறிவித்தலொன்றனை இடத்தோறுங் கொண்டுசென்று யாவரையும் அறிவிக்குமாகலான் தொழிலுவமம். இதனால் அவாத செறிவின்மை கூறப்பட்டது.

(பத) தாக்கேட்ட - தாக்கன் கேள்விப்பட்ட, மறை - இரகசியங்களை, உய்த்த (இடத்தோறுங்) தாங்கிக்கொண்டுபோய், பிறர்க்கு-அன்னியருக்கு, உரைக்கலான் - சொல்லுதலால், கயவர் - கீழ்மக்கள், அறைபறையன்னர்- அறையப்படும் பறைபோல்பவர் எ-று.

(க-ரை) கீழ்மக்கள் பறைக்கொப்பாவர் என்பதாம்.

(வி-ரை) மறையாவது கெளிப்பட்டால் குற்றம் வினைபுமென்ற பிறரை மறைத்த ஒருவன் சொல்லியசேல். பிறர்-எவருக்கு மறைக்கவேண்டுமோ அவர். உய்த்தென்ற்ர் அவர்க்கு அது பெரும்பாரமாதல் நோக்கி. பறை ஒருவன் கையால் தன்னை யறிவித்தலொன்றனை இடத்தோறுங் கொண்டு சென்று அறியாதவர் யாவரையும் அறிவிக்குமாதலால் இது தொழிலுவமம், [இதனால் அவாத செறிவில்லாமை சொல்லப்பட்டது.]

'மறை' என்றது கெளிப்படிற் றனக்குக் குற்றம் வினைபுமென்ற பிறரை மறைத்தக்கூறிய சொல். 'அவர்க்கது பெரும்பாரம்' என்றது கீழ்மக்களுக்கு. 'அது' என்றது நாம் கேட்ட இரகசியம். 'பெரும்பாரம்' என்றது பெரும் பளு. பறை ஒருவன் கையால் தன்னை யறிவித்தலொன்றை விடத்தோறுங் கொண்டுசென்று யாவர்க்கு மறிவித்தல்போன்று கீழ்மக்கள் நாங்கேட்ட இரகசியத்தை யுட்கொண்டு இடங்கடோறுஞ்சென்று பிறர்க்குச் சொல்லுதலால் இக்குறன் தொழிலுவமையாயிற்று. 'அவாத செறிவின்மை' என்றது கயவாது அடக்கமில்லாமை. (6)

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

(பரி-உரை) கயவர் கொடிறு உடைக்கும் கூன் கையர் அல்லாதவர்க்கு, கயவர் தக்கதப்பினை கெரிப்பதாக வினைத்த கையினையுடைய ரல்லாதார்க்கு. ஈர்ங்கை விதிரார் - தாமுண்டு பூசிய கையைத்தெறித்தல் வேண்டுமென் றிரந்தாலுந் தெறியார் எ-று.

வினைத்தகை-மூதுக்கியகை. மெலிவார்க்கு யாதுங் கொடார், கலிவார்க்கு வல்லாங் கொடுப்பரென்பதாம்.

(ப-ரை) கயவர்-கீழ்மக்கள், கொடிறுடைக்கும்-(தக்) கதப்பினை கெரிப்பதாக, கூன்-வினைத்த, கையரல்லாதவர்க்கு - கையினையுடையரல்லாதவர்க்கு, ஈர்ங்கை - (தாம்) உண்டு பூசிய கையை, (தெறிக்கவேண்டுமென்று இரந்தாலும்), விதிரார்-தெறியார் எ-று.

(க-ரை) கீழ்மக்க ளிரப்பகர்க்குக்கொடார். வருத்தமிவார்க்குக் கொடுப்பர் என்பதாம்.

(வி-ரை) வலுக்தகை-முறுக்கியகை. கீழோர் இரப்பவர்க்கு ஒன்றுக் கொடார், தம்மை வருத்தப்படுத்தவோருக்கு எல்லாங் கொடுப்பரென் பதாம்.

'கதப்பு' என்றது கன்னம். 'பூசியகை' என்றது கீர்கழுவியகை. 'வலுக்தகை' என்றது அடிப்பதற்கு முறுக்கியகை. 'மெலிவார்க்கு' என்றது உணவின்ற வருந்தி யாசிப்பவர்க்கு. "தளிர்மேலே கிற்பினுக் தட்டாமற் செல்லா, உளிகீரார் மாதோ கயவர்-அளிகீரார்க், கென்னலுஞ் செய்பா ரெனைத்தானுஞ் செய்பவே, இன்னலுக்கு செய்வார்ப் பெறின்" என்ற காலடியார் செய்யுளை ஒப்புநோக்குக. கீழ்மக்கள் தம்மை வருத்தவார்க்கன்றி மெலிவார்க்கு யாதுங் கொடாரென்பதாம். (7)

சொல்லப் பயன்படுவர் சான்ரோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

(பரி-உரை) சொல்லப் பயன்படுவர் சான்ரோர் - மெலியார் சென்ற தக்குறையைச் சொல்லிய அளவானே இரக்கிப் பயன்படுவர் மேலாயினர், கீழ் கரும்புபோல் கொல்லப் பயன்படும் - மற்றைக் கீழாயினர் கரும்புபோல வலியார் கைய செருக்கியவழிப் பயன்படுவர் எ-று.

பயன்படுதல்-உள்ளதுகொடுத்தல் கீழாயினரதிழிவு தோன்ற மேலாயினரையும் உடன்கூறினர். [இவை பிரண்டு பாட்டானும் அவர் கொடுக்கு மாறு கூறப்பட்டது.

(ப-ரை) சான்ரோர் - மேலாயினோர், சொல்ல - (மெலியவர்போய்த் தக்குறையைச்) சொல்லியவளவிலே, பயன்படுவர்-(இரக்கிப்) பிரயோசனப் படுவர், கீழ் - (மற்றைக்) கீழாயினோர், கரும்புபோல் - கரும்பைப்போல், கொல்ல - (வலியவர்) கைய செருக்கியவிடத்தே, பயன்படும் - பிரயோசனப் படுவர் எ-று.

(க-ரை) மேலோர் வருத்தஞ் சொன்னவுடன் பயன்படுவர் கீழோர் வருத்தத்தினுற் பயன்படுவர் என்பதாம்.

(வி-ரை) பயன்படுதல்-உள்ளது கொடுத்தல். கீழாயினோரை இழிவு தோன்ற மேலாயினரையும் உடன்சொல்லினர். [இவை இரண்டு பாட்டாலும் அவர் கொடுக்கும்விதம் சொல்லப்பட்டது.]

'சொல்லிய அளவானே' என்றது சொன்னமாத்திரத்திலே. 'உள்ளது கொடுத்தல்' என்றது உள்ள பொருளைக் கொடுத்தல். 'அவர்' என்றது கயவர். 'வலியவர்' என்றது கல்வர்முதலாயினோர். 'கயவர்' இது கொடுக்கும் தன்மை கூறப்பட்டது. (8)

உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

(பரி உரை) உடுப்பதூஉம் உண்பதூஉம் கீழ் காணின்-பிறர்செல்வத்தாற் பட்டுந் துகிலுமுடுத்தலையும் பாலோடடிசிலுண்டலையுங் கீழாயினான் காணுமாயின், பிறர்மேல் வடுக் காண வற்றாகும்-அவற்றைப் பொறாது அவர்மாட்டு வடுவில்லையாகவும் உண்டாக்க வல்லனாம் எ-று.

உடுப்பது உண்பதென்பன ஈண்டவ்வத்தொழின்மேனின்றன. அவற்றாற் பூண்டல் ஊர்தன்முதலிய பிறதொழில்களுங் கொள்ளப்படும். அவற்றைக் கண்டதுணையானே பொறாமையெய்தலிற் காணினென்றும், கேட்டார் இது கூடுமென்றியையப் படைத்தல் அரிதாகலின் வற்றாகுமென்றுங் கூறினார். இதனாற் பிறர்செல்வம் பொறாமை கூறப்பட்டது.

(ப-ரை) கீழ்-கீழாயினோன், உடுப்பதூஉம் (பட்டுந்துகிலும்) உடுத்தலையும், உண்பதூஉம் - (பாலுஞ்சோறும்) உண்ணுதலையும், காணின்-கண்டால், (அவைபொறாமல்) பிறர்மேல் - அந்நியர்மேல், (குற்றமில்லையாகவும்) வடுக் காண-குற்றமுண்டாக்க, வற்றாகும்-வல்லவனாவன் எ-று.

(க-ரை) கீழ்மகன் பிறருண்டாலும் உடுத்தாலுங் - கண்டாற் பொறாமை கொள்வான் என்பதாம்.

(வி-ரை) உடுப்பது உண்பது என்பவை அவ்வத்தொழிலின்மேல் நின்றன. அவைகளால் பூணுதல் வாகனமேறல் முதலாகிய பிறதொழில்களும் கொள்ளப்படும். அவைகளைக் கண்டமாத்திரத்தே பொறாமைப்படுதலாலே காணினென்றும், கேட்டவர் இக்குற்றம் அவரிடத்தி லிருக்கலாமென்று உடன்படச்செய்தல் அரிதாகலால் வற்றாகுமென்றும் சொல்லினார். இதனால் பிறர்செல்வம் பொறாமை சொல்லப்பட்டது.]

'அவற்றை' என்றது உடையையும் உணவையும். 'அவர்மாட்டு' என்றது பிறரிடத்தில். உடுப்பது உண்பது என்ற வினைமுற்றுக்கள் அவ்வத்தொழில் மேனின்றன. 'அவற்றால்' என்றது உடுத்தல் உண்ணல்களால். 'முதலிய' என்றது மலர்சூடுதல் முதலியன. 'கயவர் பிறர்செல்வம் பொறாமை' என்றது கயவர் பிறர்செல்வமுடையவரா யிருத்தலைக்கண்டு பொறாமையடைதல். இதனால் கீழ்மக்கள் பிறர் செல்வங்கண்டு பொறாமைப்படுதல் கூறப்பட்டது.

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

(பரி-உரை) கயவர் ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர். கயவர் தம்மை யாதானுமொரு துன்பமுற்றக்கால் அதுவே பற்றுக்கோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விற்றற்குரியர், எற்றிற்கு உரியர் - அதுவன்றி வேறெத்தொழிற்குரியர்? எ-று.

உணவின்மையாகப் பிரிதாக ஒன்று வந்துற்றதுணையானென்பது தோன்ற ஒன்றுற்றக்காலென்றும், கொள்கின்றார் தங்கயமையறிந்து வேண்டாவென்றற்கு முன்னே விற்றுநிற்றலின் விரைந்தென்றுங் கூறினார். ஒரு தொழிற்கு முரியரல்லரென்பது குறிப்பெச்சம். இதனாற்றாம் பிறர்க்கடிமையாய் நிற்பரென்பது கூறப்பட்டது.

(ப-ரை) கயவர் - கீழோர். ஒன்று-ஒருதுன்பம், உற்றக்கால் - (தம்மை) அடைந்தவிடத்து, (அதுவேசார்பாக), விரைந்து-விரைவுற்று, விற்றற்குரியர்-(தம்மைப் பிறர்க்கு) விலைசெய்தற்கு உரியவராவர், (அதுவல்லாமல்) எற்றிற்குரியர்-வேறே எத்தொழிலுக்கு உரியராவர் எ-று.

(க ரை) கீழோர் துன்பம் வந்தவிடத்துத் தங்களை விற்க வுரியராவர் என்பதாம்.

(வி ரை) உணவில்லாமையாகவாவது வேறொன்றாகவாவது ஒரு துன்பம் வந்து உற்றமாத்திரத்தென்பது தோன்ற ஒன்றுற்றக்காலென்றும், கொள்கின்றார் தங்கீழ்மையை அறிந்து வேண்டாவென்றற்கு முன்னே விற்றுநிற்றலால் விரைந்தென்றும் சொல்லினார். ஒருதொழிலுக்கும் உரியரல்லரென்பது குறிப்பெச்சம். [இதனால் தாமும் பிறர்க்கு அடிமையாய் நிற்பரென்பது சொல்லப்பட்டது.]

'பற்றுக்கோடாக' என்றது சார்பாக. 'பிறிதாக' என்றது உடுப்பது முதலியவற்றுள் யாதேனுமொன்றில்லாமையாலாவது. கயவர் ஒரு தொழிற்கு முரியாரல்லர் என்பது குறிப்பெச்சம். இதனால் கீழ்மக்கள் தாம் பிறர்க்கடிமையாய் நிற்பரென்பது கூறப்பட்டது. (10)

108-ம் அதி - கயமை - முற்றிற்று.

ஒழிபியல் முற்றிற்று.

இரண்டாவது பொருட்பால் முற்றிற்று.

ஆக அதிகாரம் 108-க்கு திருக்குறள்-1080.

காமத்துப்பால்

களவியல்

(பரி-உரை) இனி அப்பொருளைத் தெளிக்காரணமாக வுடைத்தாய் இம்மையே பயப்பதாய வின்பங் கூறவா னெடுத்துக்கொண்டார். சண்டின்ப மென்றது ஒருகாலத் தொருபொருளான் ஐம்புலனு நுகர்தற் கிறப்புடைத் தாய காமவின்பத்தினை. இச்சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனுஞ் சுவை பலவென்ற கூறவார் கூறை; யாங் கூறவதின்பச்சுவை யொன் றனையுமேயென இதனையே மிகுத்துக் கூறினன் இது புணர்ச்சி பிரிவென விருவகைப்படும். எனை இருத்தல், இரக்கல், ஊடலென்பனவோவெனின், இவர் பொருட்பாகுபாட்டினை அறம் பொரு ளின்பமென வடநூல் வழக்குப் பற்றி யோதுதலான், அவ்வாறே யவற்றைப் பிரிவின்கணடக்கினு மென்க. இனி அவை தம்மையே தமிழ்நூல்களோடும் பொருத்தப் புணர்ச்சியைக் கவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற் றைச் சுவையிருதி பயப்ப வுலகவடையோடு ஒப்புமைவ்வாமையு மூடைய தாக்கிக் கூறகின்றார். அக் கைகோளிரண்டனுள்ளுங் களவாவது பிணி யப்பிறப்புக்களின்றி எஞ்ஞான்று மொருதன்மையராய் உருவுந் திருவும் நலமுங் குலனுங் குணனு மன்பு முதலியவற்றாற் றம்மொப்புமையுடைய பதலைமகனுந் தலைமகளும் பிறர்கொடுப்பவு மடுப்பவுமன்றிப் பால்வகையாற் மே பெதிர்ப்பட்டுப் புணர்ந்தவருவது. அதனையேழதிகாரத்தாற் கூறவான் றுடக்கி, முதற்கட்டலைவணக்குறத்தல் கூறகின்றார்.

(உரை) இனி அப்பொருளைத் தெளிக்காரணமாக வுடைத்தாய் இம் மையே பயப்பதாகிய இன்பத்தைச் சொல்லும்படி எடுத்துக்கொண்டார். வ்விடத்தே காமமென்றது ஒருகாலத்திலே ஒரு பொருளால் சுவை ரி, ஊறு, ஓசை, நாற்றம் என்கிற ஐம்புலன்களையும் அநுபவித்தற் கிறப் டத்தாகிய காமவின்பத்தினை. இது புணர்ச்சி பிரிவு என விருவகைப்படும். தற்றை இருத்தல், இரக்கல், ஊடல் என்பனவோவென்றால், இவர் ருட்பாகுபாட்டினை அறம்பொரு ளின்பமென வடநூல் வழக்குப்பற்றிச் ல்லுதலால், அப்படியே அவைகளைப் பிரிவினிடத்தை அடக்கினரென்). இனி அவைகளையே தமிழ்நூல்களோடும் பொருத்த புணர்ச்சியைக் வென்றும், பிரிவைக் கற்பென்றும், பெரும்பான்மைபற்றி வகுத்த

---

* (தொல்காப்பியம்) இன்பமும் பொருளு மறனுமென்றாங் - கன்பொடு ர்ந்த வெள்ளிணைமருங்கிற் - காமக்கூட்டங் காணுங்காலை - மறையோர் த்த மன்றலெட்டனுட்-டெறியமை கல்யாழ்த் தெய்யோரியல்பே.

அவைகளைச் சுவைமிகுதி உண்டாக்க உலகநடையோடு ஒத்தலும் ஒவ்வா மையு முடையனவாக்கிச் சொல்லுகின்றார். அக்கைக்கோளிரண்டனுள்ளும், களவாவது பிணி மூப்பிறப்புகளில்லாமல் எந்நாளும் ஒருதன்மையராய் உருவும், திருவும், பருவமும் குலமும், குணமும், அன்பும் முதலானவை களாலே தம்முள் ஒப்புமையுடையராகிய தலைவனும் தலைவியும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இல்லாமல் ஊழ்வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்துவருவது. * அதனை ஏழதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முதலில் தகையணங்குறுத்தல் சொல்லுகின்றார்.

109-ம் அதிகாரம்—தகையணங்குறுத்தல்

(பரி-உரை) அஃதாவது: பொழில்விளையாட்டு விருப்பான் ஆயநீங்க அதன்கட்டமியனாய் நின்றாளை வேட்ட விருப்பான் இளையார்நீங்கத் தமியனாய் வந்து கண்ணுற்ற தலைமகன் அவள் வனப்புத் தன்னை வருத்த முறுவித்தலைச் சொல்லுதல். இது, கண்ணுற்றபொழுதே நிகழ்வதாகலின், முதற்கட் கூறப்பட்டது.

(உரை) அஃதாவது: பொழில்விளையாட்டு விருப்பால் மகளீர்கூட்டம் நீங்க அதனிடத்துத் தனித்து நின்றவளை வேட்டைவிருப்பால் இளையார் நீங்கத் தனித்துவந்து கண்டதலைவன் அவளழகு தனக்கு வருத்தமுண்டாக்கு தலைச் சொல்லுதல். இது கண்டபொழுதே தோன்றுவதாகலால் முதலிலே சொல்லப்பட்டது.

[தலைமகளுருவு முதலியன முன்கண் டறிவனவன்றிச் சிறந்தமையின் அவளைத் தலைமகன் ஐயுற்றது.]

அணங்குகொ லரய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

(பரி-உரை) கனங்குழை - இக்கனவியகுழையையுடையாள், அணங்கு கொல் - இப்பொழிற்க ணுறைவாளோர் தெய்வமகளோ? ஆய் மயில்கொல் அன்றி யொருமயில் விசேடமோ? மாதர்கொல் - அன்றி யொரு மானுட மாதரோ? என் னெஞ்சு மாலும் - இவளை யின்னளென்று துணியமாட்டாது என்னெஞ்சு மயங்கா நின்றது எ-று.

ஓ-அசை. ஆய்மயில் - டடைத்தோன் விசேடமாக வாய்ந்து படைத்த மயில்; மயிற்சாதியுட்டெரிந்தெடுத்த மயிலென்றுமாம். கனங்குழை ஆகு பெயர். கணங்குழை என்று பாடமோதிப் பலவாய்த்திரண்ட குழை

* இறையனாரகப்பொருள்: ஒப்புமுருவும் வெறுப்புமென்றாக் கற்புமேறு மெழிலுமென்றாச்-சாயலுநாணு மடனுமென்றா - நோயும் வேட்கையு நிகர்ப்பு மென்றாங் - காவயின்வருஉங் கிளவியெல்லா - நாட்டியமரபி னெஞ்சுகொளி னல்லது-காட்டலாகாப் பொருளவென்ப.

யென்றுரைப்பாருமுளர், எழுதலாகாவுருவுந் தன் வருத்தமும்பற்றி அணங்கு கொலென்றும், சாயலும் பொழில்வயி னிற்றலும்பற்றி ஆய்மயில்கொலென்றும், தன்னெஞ்சஞ் சென்றமையும் அவளெதிர்நோக்கியவாறும்பற்றி மாதர் கொலென்றுங் கூறினான்.

(ப-ரை) கனங்குழை - இக்கனம்பொருந்திய குழையையுடையவிவள், அணங்குகொல் - (இச்சோலையி லிருப்பவளாகிய) ஒரு தெய்வப்பெண்ணோ (அல்லாமல்), ஆய்மயில் கொல்-ஒருமயில் விசேஷமோ (அல்லாமல்) மாதர் கொல் - ஒரு மானுடமாதரோ, என்னெஞ்சு - என்மனம், மாலும் - (இவளை இன்னளென்று துணியமாட்டாமல்) மயங்காநின்றது எ-று.

(க-ரை) இவள் தெய்வப்பெண்ணோ மயிலோ மானிடப்பெண்ணோ, இன்னாளென்றறியாதென் மனமயங்குகின்றது என்பதாம்.

(வி ரை) ஓ-அசை. ஆய்மயில்-கடவுள் விசேஷமாக ஆராய்ந்து படைத்த மயில். கனங்குழை-ஆகுபெயர். * தெய்வப்பெண்போல் எழுதலாகாத வுருவும் தன்னை வருத்தலும்பற்றி அணங்குகொலென்றும், மயில்போல் சாயலும் பொழிலிடத்து நிற்றலும்பற்றி ஆய்மயில்கொலென்றும், தஞ்னெஞ்சு சென்றமையும் அவள் எதிர்நோக்கிய விதமும்பற்றி மாதர்கொலென்றும் சொல்லினான். (1)

[மானுடமாதராத றெளிந்த தலைமகன் அவணோக்கினானாய வருத்தங் கூறியது]

நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.

(பரி-உரை) நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் - இப்பெற்றித்தாய னப்பினை யுடையாள் என்னோக்கிற் கெதிர்நோக்குதல், தாக்கு அணங்கு தானைக் கொண்டன்னது உடைத்து-தானே தாக்கி வருத்துவதோ ரணங்கு தாக்குதற்குத் தானையையுங் கொண்டுவந்தாற்போலுந் தன்மையையுடைத்து.

மேலும் அணங்குகொலாய் மயில்கொலென்றமையான், இகரச்சுட்டு ருவிக்கப்பட்டது. எதிர்நோக்குத லென்றமையின், அது குறிப்புநோக் யிற்று. வனப்பால் வருந்துதன்மேலுங் குறிப்புநோக்கால் வருந்துதல் றியவாறு. நோக்கினாளென்பதற்கு என்னானோக்கப்பட்டாளென் றுரைப் ருமுளர்.

(ப-ரை) நோக்கினாள் - (இப்படிப்பட்ட) அழகையுடையவள், நோக் கதிர் - (என்) பார்வைக்கெதிரே, நோக்குதல் - நோக்குதல், தாக்கணங்கு- னே) தாக்கிவருத்துகிற ஒரு தெய்வப்பெண், தானைக்கொண்டன்னது- க்குதற்குச்) சேனையைக் கொண்டுவந்ததுபோலுந் தன்மையை, உடைத்து- டையது எ-று.

* (அகப்பொருள் விளக்கம) மடமானோக்கி வடிவுங்கண்டே - விடமுஞ் ந்துழி யெய்துவதையம்.

(க-கா) இவ் வென்பார்வைக்கறிதே பார்க்குதல் ஒரு தெய்வப்பெண் போர்செய்யச் சினைலைக் கொண்டுவந்தாலொப்பும் தன்மையையுடையது என்பதாம்.

(வி-கா) முன்பாட்டில் அணங்குகொலாய் மயில்கொலென்றமையால் இது கொச்சகம் வருவிக்கப்பட்டது. எதிர்கோக்குத லென்றமையால் இது குறிப்பு கோக்காயிற்று. தன்னை அழகால் வருத்துதலோடு பின்னும் குறிப்புப் பார்வையால் வருத்துதல் சொல்லியபடி. (2)

[இதவுமது]

பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.

(பி-உரை) கூற்ற என்பதனைப் பண்டு அறியேன்-கூற்றென்று நூலோர் சொல்வதனைப் பண்டு கேட்டறிவதல்லது கண்டறியேன், இனி அறிந்தேன், இப்பொழுது கண்டறிந்தேன், பெண்டகையால் பேர் அமர்க் கட்டு - அப் பெண்டகையுடனே பெரியவாய் அமர்த்த கண்களையுடைத்து எ-று.

பெண்டகை - காணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னுங் குணக்கள் அவை அவ்வக்குறிகளா ன்றியப்பட்டன. அமர்த்தல் - அமர்செய்தல்; பெ ரடியாயவினை. பெண்டகையால் இன்பம் பயத்தலுமுண்டேனும் துன்ப பயத்தன் மிகுதிபற்றிக் கூற்றுக்கிக் கூறினான்.

(ப-கா) கூற்றென்பதனை - கூற்றவனென்று (நூலோர்) சொல்வதை, பண்டறியேன்-முன் (கேட்டறிந்ததல்லது) கண்டறிந்திலேன், இனியறிந்தேன் - இப்பொழுது கண்டறிந்தேன், (அது) பெண்டகையால் - பெண் குணங்களுடனே, பேரமர் - பெரியவையாய்ப் போர்செய்கின்ற, கட்டு-கள் களையுடைத்து எ-று.

(க-கா) தலைவன் தலைவியினுடைய கண்களையே யமனென்று கூறினான் என்பதாம்.

(வி-கா) பெண்டகை-காணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்கிற குணங்கள். அவை அத்தத்தக் குறிகளால் அறியப்பட்டன. அப்பெண்மைக்குணங்களால் இன்பந்தருதலும் உண்டாயினும் அதிக துன்பந்தருதல்பற்றிக் கூற்றவனுக்கிச் சொல்லினான்.

[இதவுமது]

கண்டாருயி ருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.

(பி-உரை) பெண்டகைப் பேதைக்குக் கண்-பெண்டகைமையுடைவிப்பேதைக்கு உளவாய கண்கள், கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான் அமர்த்தன - தம்மைக் கண்டாருயிருண்ணுந் தோற்றத்துடனே அமர்ந்திருந்தன எ-று.

அமர்த்தல்-மாறுபடுதல். குணங்கட்கும் பேதைமைக்குமேலாத கொடியவாயிருந்தனவென்பதாம்.

(ப-ரை) பெண்டகை - பெண்குணங்களுடைய, பேதைக்கு - இப்பேதைக்கு, கண்-கண்கள், கண்டார் (தம்மைக்) கண்டவரை, உயிருண்ணுந் தொழிற்றால்-உயிரைபுண்ணுந் தொற்றத்தடனேகூடி, அமர்த்தன-மாறுபட்டிருந்தன எ-று.

(க-ரை) இப்பெண்ணின் கண்கள் கண்டவர்களுயிரை புண்ணுக்காட்சிபாக மாறகொண்டிருந்தன என்பதாம்.

(வி-ரை) கண்கள் குணங்களுக்கும் பேதைமைக்கும் தகாமற்கொடியவாயிருந்தன வென்பதாம்.

(4)

[இதவும்மத]

கூற்றமோ கண்ணே பிணையோ மடவர
லேக்கமிம் மூன்று முடைத்து.

(பரி-உரை) கூற்றமோ-என்னை வருத்தல லுடைமையாற் கூற்றமோ? ண்ணே - என்மேலோடுதலுடைமையாற் கண்ணே? பிணையோ-இயல்பாக வருவுதலுடைமையாற் பிணையோ? அறிகின்றிலேன்; மடவரல் நோக்கம் இம்மூன்றும் உடைத்த-இம்மடவரல் கண்களிலேக்கம் இம்மூன்றன் றன்மையயு முடைத்தாயிராகின்றத எ-று.

இன்பமும் துன்பமும் ஒருங்கு செய்யாகின்ற தென்பதாம். தொழில் ற்றிவந்த ஐயதிரிபுவமம்.

(ப-ரை) கூற்றமோ - (என்னை வருத்தலாலே) கூற்றமோ, கண்ணே-ன்மேலோடுதலாலே) கண்ணே, பிணையோ - (இயல்பாக அஞ்சுதலாலே) பண்மானே, (அறிகின்றிலேன்) மடவாலேக்கம் - இம்மாத (கண்களின்) ர்வையானத, இம்மூன்றும் - இம்மூன்றனுடைய தன்மைகளையும், டைத்த - உடைத்தாயிருக்கின்றத எ-று.

(க-ரை) இவள்பார்வை யமனே கண்ணே மானே அறியேன் என் ாம்.

(வி-ரை) இன்பமும் துன்பமும் ஒருசேச் செய்யாகின்ற தென்பதாம். ருத்தலாதித் தொழில்பற்றிவந்த ஐயதிரிபுவமம்.] (5)

[இதவுமத]

கொடும்புருவங் கோடா மறைப்பி னெடுங்களுர்
செய்யல மன்னிவள் கண்.

(பரி-உரை) கொடும் புருவம் கோடா மறைப்பின் - பிரியா கட்பாயாடும் புருவக்கடாஞ் செப்பமுடையவாய் விலக்கினவாயின், இவள் கண் ற்கு அளர் செய்யல-அவற்றைக் கடத்த இவள் கண்கள் எனக்கு நடுக்குர் ரைச் செய்யமாட்டா எ-று.

நட்டாரைக் கழறுவார்க்குத் தாஞ் செம்மையுடையராதல் வேண்டலிற் கோடாவென்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்ற தனக்கும் இடை நின்று விலக்குங்காலுஞ் சிறிதிடைபெறின் அதுவழியாக வந்து அஞர்செய்யு மாகலின் மறைப்பினென்றுங் கூறினார். நடுங்கஞர் - நடுங்கற்கேதுவாய வஞர். தாமியல்பாகக் கோடுதலுடைமையான் அவற்றை மிகுதிக்கண் மேற் சென்றிடிக்கமாட்டாவாயின வென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக் கண் வந்தது.

(ப - ரை) கொடும்புருவம் - (பிரியாநட்பாகிய) கொடிய புருவங்கள், கோடாமறைப்பின் - (தாம்) செவ்வையாயிருந்து விலக்கினால் (அவைகளைக் கடந்து) இவள்கண் - இவளது கண்கள், நடுங்கஞர்-நடுங்குதற்கு ஏதுவாகிய துயரை, செய்யல-(எனக்குச்) செய்யமாட்டா எ-று.

(க-ரை) இவளுடைய கண்கள் புருவங்களால் மறைக்கப்பட்டா லெனக் குத் துன்பத்தைச் செய்யாவாம் என்பதாம்.

(வி-ரை) நட்பினரைக் கண்டித்துப் புத்திசொல்வோர் தாம் செம்மை யுடையரா யிருக்கவேண்டுதலால் கோடாவென்றும், துயர்செய்கின்ற அவை களுக்கும் உறுகின்ற தனக்கும் நடுநின்று விலக்கும்போதும், சிறிது சந்து கிடைக்கப்பெற்றால், அதுவழியாகவந்து துன்பஞ்செய்யுமாகலால் மறைப்பி னென்றும் சொல்லினான். தாம் இயல்பாகக் கோணுதலுடைமையாக் அவைகளை மிகுதிக்கண்மேல் சென்றிடிக்கமாட்டாவாயின வென்பதுபட நின்றமையால் மன்னென்றது ஒழியிசையில் வந்தது. (6

[அவண் முலைகளினாய வருத்தங் கூறியது]

கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

(பரி-உரை) மாதர் படா முலைமேற் றுகில் - இம்மாதர் படாமுலைகளின் மேலிட்ட துகில், கடாக் களிற்றின்மேற் கட்படாம் - அவை கொல்லாமற் காத்தலின், கொல்வதாய மதக்களிற்றின்மேலிட்ட முகபடாத்தினை யொக் கும் எ-று.

கண்ணை மறைத்தல்பற்றிக் கட்படாமென்றான். துகிலான் மறைத்த நாணுடை மகளிர்க்கியல்பாகலின், அத்துகிலூடே அவற்றின் வெம்மையு பெருமையுங் கண்டு இத்துணையாற்றலுடையன இனியெஞ்ஞான்றுஞ் சா விலவெனக் கருதிப் படாமுலை யென்றான். உவமை சிறிது மறையாக உவை கொல்லுமென்பது தோன்ற நின்றது.

(ப-ரை) மாதர் - இம்மாதருடைய, படா முலைமேற்றுகில் - சாய்தலி லாத முலைகளின்மேலிட்ட ஆடையானது, (அவை கொல்லாமற்காத்தலா கடாஅக்களிற்றின்மேல் (கொல்லுவதாகிய) மதயானையின் மேலிட்ட, படாம்-முகபடாத்தினையொக்கும் எ-று.

(க-ரை) இவள் முலைகளின்மேலே தரித்த உஸ்திரமானது யானைமுகத்தின்மேலே தரித்த உஸ்திரத்தையொக்கும் என்பதாம்.

(வி-ரை) கண்ணை மறைத்தல்பற்றி கட்படாமென்றார். ஆடையால் மறைத்தல் நாணுடை மகளிர்க்கு இயல்பாகலால், அவ்வாடையோடே அவைகளின் வெம்மையும் பெருமையுங்கண்டு இவ்வளவு வலிமையுடையவை இனி எந்நாளுஞ் சாயாவென்று நினைத்துப் படாஅமுலையென்றான். உவமானம் சிறிது மறையா வழியும் கொல்லுமென்பது தோன்ற நின்றது. (7)

[நுதலினாய வருத்தங் கூறியது]

ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணாரு முட்குமென் பீடு.

(பரி-உரை) ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு - போர்க்களத்து ந்து கோராத பகைவரும் நேர்ந்தார்வாய்க் கேட்டஞ்சுதற் கேதுவாய ன்வலி, ஒண்ணுதற்கு உடைந்ததே - இம்மாதரதொள்ளிய நுதலொன் ற்குமே அழிந்துவிட்டது எ-று.

மாதரென்பது அதிகாரத்தான் வந்தது. ஞாட்பினு ளென்றதனாற் கைவராதல் பெற்றாம். பீடென்ற பொதுமையான் மனவலியுங் காயவலியுங் காள்க. ஓவென்னும் வியப்பின்கட்குறிப்பு அவ்வலிகளது பெருமையும் தலது சிறுமையுந்தோன்ற நின்றது. கழிந்ததற்கிரங்கலிற் றற்புகழ்த ன்றாயிற்று.

(ப-ரை) ஞாட்பினுள் - போர்க்களத்து, நண்ணாரும் - எதிர்த்திலாத கைவரும், உட்கும்-(எதிர்த்தவர் வாய்ச்சொற்கேட்டு) அஞ்சுதற்கு ஏதுவாகிய, ன்பீடு-என்வலி, ஒண்ணுதற்கு-(இம்மாதருடைய) ஒளிபொருந்திய நெற்றி யான்றற்குமே, உடைந்ததே-அழிந்துவிட்டது எ-று.

(க-ரை) என்னுடைய வலிமையானது இவளுடைய நெற்றிக்கழிந்தது ன்பதாம்.

(வி-ரை) மாதரென்பது அதிகாரத்தால் வந்தது. ஞாட்பினுளென் னால் பகைவராதல் பெற்றாம். பீடென்ற பொதுமையால் மனவலியும் யவலியும் கொள்க. ஓவென்னும் வியப்பினிடத்துக் குறிப்பு அவ்வலி ின் பெருமையும், நெற்றியின் சிறுமையும் தோன்ற நின்றது. கழிந்ததற் க்கலால் தற்புகழ்ச்சி அன்றாயிற்று. (8)

[அணிநலத்தானாய வருத்தங் கூறியது]

பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனோ வேதில தந்து.

(பரி-உரை) பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு - புறத்து ன்பிணையொத்த மடநோக்கினையும் அகத்து நாணினையு முடையளாய ட்கு, ஏதில தந்து அணி எவன் - ஒற்றுமையுடைய இவ்வணிகளே

யமைந்திருக்க வேற்றுமையுடைய வணிகளைப் படைத்ததணில் என்ன பயனுடைத்து? எ-று.

மடநோக்கு-வெருவுதலுடைய நோக்கு. இவட்குப் பாரமாதலும் எனக் கணங்காதலுங் கருதாமையின், அணிந்தார் அறிவிலரென்பதாம்.

(ப-ரை) பிணையேர்மடநோக்கு - (புறத்திலே) பெண்மான்போன்ற அஞ்சுதலுடைய பார்வையையும், நாணும் - (அகத்தில்) நாணினையும், உடையாட்கு-உடைய இவளுக்கு (ஒற்றுமையுடைய இப்பார்வையும் நாணமும் ஆகிய அணிகளே போதுமானவையாயிருக்க), ஏதிலதந்து - வேற்றுமையுடைய அணிகளை யுண்டாக்கி, அணி-அணிதல், எவன்-என்னபயனுடைத்து? எ-று.

(க-ரை) இவட்குப் பார்வையு நாணமு மாபரணங்களாயிருக்க, வேறாபரணங்களை யணிதலென்னபயன் என்பதாம்.

(வி-ரை) ஓ-அசை. இவ்வேற்றுமையுடைய அணிகள் இவளுக்குப் பாரமும் எனக்கு வருத்தமும் ஆமென்று எண்ணாமையால், அணிந்தார் அறிவிலாரென்பதாம். (9)

[தலைமகள் குறிப்பறிதலுற்றான் சொல்லியது]

உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

(பரி-உரை) அடுநறா - அடப்படு நறா, உண்டார்கண் அல்லது - தன்னை யுண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்வதல்லது, காமம்போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று - காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்தலுடைத்தன்று எ-று.

அடுநறா - வெளிப்படை. காமமென்றது ஈண்டு அது நுகர்தற்கிடனாகியாரை. கண்டார்கணென்னு மேழாவது இறுதிக்கட்டொக்கது. மகிழ்செய்தற்கட் காமம் நறவினுஞ்சிறந்ததே யெனினும் இவள் குறிப்பாராய்ந் தறியாமையின் யானதுபெற்றிலே னெனக் குறிப்பெச்சம் வருவித்துரைக்க, * "அரிமயிர்த்திரண்முன்கை" என்னும் புறப்பாட்டிற் குறிப்புப்போல.

(ப-ரை) அடுநறா - காய்ச்சப்பட்ட மதுவானது, உண்டார்கணல்லது (தன்னை) உண்டவரிடத்தேயல்லாமல், காமம்போல் கண்டார் - காமம்போல் கண்டவரிடத்தே, மகிழ்செய்தல் - மகிழ்ச்சிசெய்தலை, இன்று-உடைத்தன்று எ-று.

(க-ரை) மதுவுண்டால் மகிழ்ச்சி காமங்கண்டால் மகிழ்ச்சிதரும் என்பதாம்.

(வி-ரை) காமமென்றது அதை அனுபவிப்பதற்கு இடமாகிய மகளினை மகிழ்செய்தலிலே காமமானது மதுவினும் சிறந்ததேயெனினும் இவள் குறிப்பை ஆராய்ந்தறியாமையால் யான் அது பெற்றிலேனெனக் குறிப்பெச்சம் வருவித்துரைக்க. (10)

109-ம் அதி - தகையணங்குறுத்தல் - முற்றிற்று.

---

* புறநானூறு-11.

110-ம் அதிகாரம்—குறிப்பறிதல்

(பரி-உரை) அஃதாவது: தலைமகன் தலைமகள் குறிப்பினை யறிதலும், தோழி குறிப்பினை யறிதலும், அவடான் அவ்விருவர் குறிப்பினையு மறிதலு மாம். தகையணக்குற்ற தலைமகன் றலைமகளைக் கூடுங்கால் இது வேண்டு மாகலின், தகையணக்குறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தலைவன் தலைவிகுறிப்பைப் அறிதலும், தோழி குறிப்பை அறிதலும், அத்தோழி அவ்விருவர் குறிப்பையும் அறிதலும் ஆம். தலைவி யழகைக்கண்டு வருந்தியதலைவன் தலைவியைக் கூடும்போது, இது வேண்டுமாதலால், தகையணக்குறுத்தலின் பின்வைக்கப்பட்டது. உ-ம். *

[தலைமகன் தலைமகளைப்பாட்டுக் குறிப்பினை அவ
ளைக்கிழ னறிந்தது]

இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

(பரி-உரை) இவள் உண்கண் உள்ளது இருநோக்கு - இவளுடைய உண்கணைகத்ததாய நோக்கு இதுபொழுது என்மேலிரண்டு நோக்காயிற்று; ஒருநோக்கு நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து-அவற்றள் ஒருநோக்கு என்னுழைச் செய்யுநோக்கு, எனையது அந்நோய்க்கு மருந்தாய நோக்கு.

உண்கண் - மையுண்டகண். நோய்செய்யுநோக்கு-அவள் மனத்திலுய காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு. மருந்தாய நோக்கு - தன்க ணிருந்தின்ற அற்புநோக்கு. நோய்செய்யு நோக்கினைப் பொதுநோக்கென் றருமுனர்: அது நோய்செயிற் கைக்கிளையாவதல்லது அகமாசாமை யறிக. இவ்வருத்தம் தீரும் வாயிலுமுண்டாயிற் றென்பதாம்.

(ப-ரை) இவளுண்கண்-இவளுடைய (மை) யுண்ட கண்களில், உள்ளது. நிருந்தின்ற பார்வையானது, இருநோக்கு-(இப்பொழுது என்மேல்) இரண்டு பார்வையாயிற்று, (அவற்றுள்) ஒருநோக்கு - ஒரு பார்வையானது, நோய் நோக்கு-(என்னிடத்து) நோய்செய்யும் பார்வையாம், ஒன்று-மற்றொரு பார்வை யானது, அந்நோய்மருந்து - அந்நோய்க்கு மருந்தான பார்வையாம் எ-று.

(க-ரை) இவள் பார்வையானது இரண்டு, ஒன்று நோய்செய்யும் பார்வை, மற்றொன்று அந்நோய்க்கு மருந்தானபார்வை என்பதாம்.

(வி-ரை) நோய்செய்யுநோக்கு - அவளது மனத்தில் உண்டாகிய காமக் குறிப்பினை வெளிப்படுத்துகின்ற பார்வை. மருந்தாயநோக்கு - தன்னிடத்து உண்டாகின்ற அன்பிலுலாகிய பார்வை. எனக்கு இவ்வருத்தம் தீரும்வழியும் உண்டாயிற்றென்பதாம்.

(1)

* (தொல்காப்பியம்) காட்டமிரண்டு மறிவுடன்படுத்தற்கு கூட்டி யாக்குங் குறிப்புரையாகும்-குறிப்பே குறித்தக்கொள்ளுமாயி-னுக்கலை முமென்மனூர் புலவர்.

[இதுவுமது]

கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது.

(பரி-உரை) கண் களவு கொள்ளும் சிறுநோக்கம்-இவள் கண்கள் யான் காணாமல் என்மேனோக்குகின்ற அருகிய நோக்கம், காமத்தில் செம்பாகம் அன்று பெரிது - மெய்யுறு புணர்ச்சியின் ஒத்த பாதியளவன்று, அதனினு மிகும் எ-று.

தானோக்கியவழி நாணி யிறைஞ்சியும் நோக்காவழி உற்று நோக்கியும் வருதலாற் களவுகொள்ளுமென்றும், அஃதுளதாங்காலஞ் சிறிதாகலிற் சிறு நோக்கமென்றும், அஃது உளப்பாடுள்வழி நிகழ்வதாகலின் இனிப்புணர்தல் ஒருதலையென்பான் செம்பாகமன்று பெரிதென்றுங் கூறினான்.

(ப-ரை) கண் - (இவளது) கண்கள், களவுகொள்ளுஞ் சிறுநோக்கம்- நான் காணாமல் என்னைப் பார்க்கின்ற சிறியபார்வை, காமத்தில் - * மெய்யுறு புணர்ச்சியில், செம்பாகமன்று - ஒத்தபாதியளவன்று, பெரிது - (அதனிலும்) மிகும் எ-று.

(க-ரை) இவள் குறும்பார்வை காமத்தினு மதிகம் என்பதாம்.

(வி-ரை) நான் பார்த்தபோது நாணித் தலைகுனிந்தும் பாராவிடத்தே உற்றுப்பார்த்தும் வருதலாலே கண் களவுகொள்ளுமென்றும், அது உண்டாங்காலம் சிறிதாகலால் சிறுநோக்கமென்றும், அப்பார்வை உட்கருத்து உள்ளவிடத்தே உண்டாவதாகலால் இனி இவளைக்கூடுதல் நிச்சயமென்றற்கு செம்பாகமன்று பெரிதென்றும் சொல்லினான். (2)

[நோக்கினானு நாணினானு மறிந்தது]

நோக்கினா னோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்.

(பரி-உரை) நோக்கினாள் - யானோக்காவளவிற் றானென்னை யன்போடு நோக்கினாள், நோக்கி இறைஞ்சினாள்-நோக்கி ஒன்றனை யுட்கொண்டு நாணி இறைஞ்சினாள், அஃது யாப்பினுள் அவள் அட்டிய நீர் - அக்குறிப்பு இருவே மிடையுந் தோன்றிய அற்புப்பயிர் வளர அதன்கணவள் வார்த்த நீராயிற்று எ-று.

அஃதென்னுஞ் சுட்டுப்பெயர் அச்செய்கைக் கேதுவாய குறிப்பின்மே னின்றது. யாப்பினானாயதனை யாப்பென்றார். ஏகதேசவுருவகம்.

(ப-ரை) அவள்-அம்மாது, நோக்கினாள் - (நான் பாராதவளவிலே தான் என்னை அன்போடு) பார்த்தாள், நோக்கி - பார்த்து, இறைஞ்சினாள்-ஒன்றை (உட்கொண்டு நாணித்) தலைகுனிந்தாள், அஃது-அச்செய்கைக்கு ஏதுவாகிய

* மெய்யுறுபுணர்ச்சி - மெய்தொட்டுப் புணரும் புணர்ச்சி. உள்ளப் புணர்ச்சியென்று வேறேயிருக்கையால் இப்படிச் சொல்லப்பட்டது.

நறிப்பானை, யாப்பினுள் - (எம்மிருவரிடத்தும் தோன்றிய) அன்பாகிய பயிரின், அட்டியநீர்-(அதுவளரும்படி) வார்த்த நீராயிற்று எ-று.

(க-ரை) அவன் பார்த்தான் பார்த்தது தலைகுனிர்தான் அவன் குறிப்பு திருவான்பும் வளருந் தண்ணீராம் என்பதாம்.

(வி-ரை) யாப்பு - கட்டு யாப்பினுலாகிய அன்பை யாப்பென்றார். ஏகதேச உருவகவணி.] (3)

[காணினும் மகிழ்ச்சியினும் மறித்தது]

யானேக்குங் காலை நிலனேக்கு நோக்காக்காற்
றானேக்கி மெல்ல நகும்.

(பரி-உரை) மான் நோக்குங் காலை நிலன் நோக்கும்-யான்றன்னை நோக்குங்காற் றுனைநிர்நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்காநிற்கும், நோக்காக்கால் தான்நோக்கி மெல்ல நகும்-அஃதறிந்தியா னேக்காற்றுனென்னை நோக்கித் தன்னுள்னே மகிழாநிற்கும் எ-று.

மெல்ல - வெளிப்படாமல். மகிழ்ச்சியாற் புணர்தற்குறிப் பினிது விளக்கும். மெல்லநகுமென்பதற்கு முறுவலிக்குமென் றுரைப்பாருமுளர்.

(ப-ரை) யானேக்குங்காலை-(தன்னை) நான் பார்க்கும்போது, நிலனேக்கும்-(எதிர்பாராமல் நாணித் தலைகுனிந்து) நிலத்தைப்பாரா நிற்கின்றாள், நோக்காக்கால்-(அதையறிந்து நான்) பாராதபோது, தானேக்கி-தான் (என்னைப்) பார்த்து, மெல்லநகும் (தன்னுள்னே) மகிழாநிற்பள் எ-று.

(க-ரை) யான் பார்க்கும்போது பூமியைப்பார்க்கிறாள், யான் பாராத போது தான்பார்த்து நகைக்கின்றாள் என்பதாம்.

(வி-ரை) மெல்ல நகுதல்-வெளிப்படாமல் மகிழ்தல். அதனாலே புணர்தற் குறிப்பு இனிது விளக்குதல றிந்தது. (4)

[இதுவுமது]

குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

(பரி-உரை) குறிக்கொண்டு நோக்காமை அல்லால்-நேரே குறிக்கொண்டு நோக்காத் தன்மையல்லது, ஒருகண் சிறக்கணித்தான் போல நகும்-கண்ணைச் சிறக்கணித்தாள்போல என்னை நோக்கிப் பின்றன்னுள்ளே நகாநிற்கும் எ-று.

சிறக்கணித்தானென்பது செய்யுள் விகாரம். சிறக்கணித்தல்-சுருங்குதல். இதனும் வெளிப்பட நிகழாமையிற் போலவென்றார். நோக்கி யென்பது நோக்கம். இனி யிவளோ யெய்தாதல் ஒருதலை யென்பது குறிப்பெச்சம்.

(ப-ரை) குறிக்கொண்டு-(நேரே) குறிக்கொண்டு, நோக்காமையல்லால்-பாராமை மாத்திரமேயல்லது, ஒருகண் - ஒருகண்ணை, சிறக்கணித்தாள் போல-சுருக்கினவள்போல, நகும்-(என்னைப்பார்த்துத் தன்னுள்ளே) மகிழா நின்றாள் எ-று.

(க-ரை) நேரேபாராமல் ஒருகண்ணைச் சுருக்கினவள்போல் பார்த்து நகைக்கின்றாள் என்பதாம்.

(வி-ரை) சிறங்கணித்தல் சிறக்கணித்தாளெனச் செய்யுள் விகாரமாயிற்று. சிறங்கணித்தல்-சுருக்குதல். அதுவும் வெளிப்படத் தோன்றாமையால் போலவென்றார். பார்த்தென்பது வருவிக்கப்படுதலால் சொல்லெச்சம். இனி இவளை அடைவது நிச்சயமென்பது குறிப்பெச்சம். (5)

[தோழி சேட்படுத்தவழி அவள் குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது]

உறாஅ தவர்போற் சொலினுஞ் செறாஅர்சொ
லொல்லை யுணரப் படும்.

(பரி-உரை) உறாதவர்போல் சொலினும்-புறத்து நொதுமலர்போல கடுஞ்சொற் சொன்னாராயினும், செறார் சொல் ஒல்லை உணரப்படும்-அகத்து செறுதலிலாதார்சொற் பிற்பயத்தல் குறையுற்றாராற் கடிதினறியப்படு எ-று.

கடுஞ்சொலென்பது இவ்விடங் காவன்மிகுதியுடைத்து, வரல்பாலிரல் ரென்றன்முதலாயின. செறாரெனவே, அருளுடைமை பெறப்பட்டது தன்குறை முடிக்கக் கருதியே சேட்படுக்கின்றமை குறிப்பானறிந்து உலகியன்மேலிட்டுக் கூறியவாறு. இது வருகின்ற பாட்டிற்குமொக்கும்.

(ப-ரை) உறாஅ தவர்போல் - (புறத்திலே) அயலார்போல், சொலினும் (கடுஞ்சொல்) சொல்லினும், செறாஅர்சொல் - (உள்ளே) பகையாதவர்சொல் (பின் பிரயோசனப்படுதல்) ஒல்லையுணரப்படும்-(குறையிரந்தவராலே) கடிதி அறியப்படும் எ-று.

(க-ரை) புறம்பாகக் கடுஞ்சொல் சொல்லினும் உள்ளே பகையாத சொல் சீக்கிரமறியப்படும் என்பதாம்.

(வி-ரை) கடுஞ்சொல் இவ்விடம் மிகுந்த காவலையுடையது, வாராதே மென்று சொல்லுகை முதலானவை. செறாரெனவே அருளுடைமை பெ பட்டது, தன்குறை முடிக்கநினைத்தே தூரப்படுத்தலைக் குறிப்பாலறிந்து கியலின் மேல்வைத்துச் சொல்லியபடி. இது வருகின்றபாட்டிற்கும் ஒக்கு

[இதுவுமது]

செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கு
முறாஅர்போன் றுற்றார் குறிப்பு.

(பரி-உரை) செறுச் சிறுசொல்லும் - பின்னினிதாய் முன்னின்னுதாய சொல்லும், செற்றார்போல் நோக்கும் - அகத்துச் செறுதிருந்தே புறத்துச் செற்றார்போன்ற வெகுளிநோக்கும், உறார்போன்ற உற்றார் குறிப்பு-சொதை மலர் போன்ற கட்பாயினர்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவன எ-று.

குறிப்பு - ஆகுபெயர். இவை உள்ளே யொருபயன்குறித்துச் செய்தன்றன இயல்பல்லவாகலான், இவற்றிற்கஞ்சவேண்டா வென்பதாம்.

(ப-ரை) செறுஅச் சிறுசொல்லும் - (பின் இனிதாவதாய் முன்னே) இன்னுதாகிய சொல்லும், செற்றார்போலேக்கும்-(உள்ளே பகையாதிருந்தே புறத்தே) பகைத்தவர்போன்ற கோபப்பார்வையும், உறுஅர்போன்றுற்றார்-அயலார்போலிருந்த கட்பாயினவர்க்கு, குறிப்பு-ஒரு குறிப்புப்பற்றி வருவனவாம் எ-று.

(க-ரை) உள்ளன்பாகச் சொல்லுங் கடுஞ்சொல்லும் பகையாதலார்க்குங் கோபப்பார்வையும், ஆசைக்குறிப்பால் வரும் என்பதாம்.

(வி-ரை) குறிப்பு-ஆகுபெயர். இவை உள்ளே ஒருபயன் குறித்துச்செய்தன்றவை இயல்பல்லவாகலால் இவைகளுக்கு அஞ்சவேண்டாவென்பதாம்.

[தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக்கண்டு தலைமகன் கூறியது]

அசையியற் குண்டாண்டோ ரெளிர்யா லெக்கப்
பசையினள் பைய நகும்.

(பரி-உரை) யான் நோக்கப் பசையினள் பையநகும்-என்னை யகற்றுன்ற சொற்காற்றுதியானிரந்துநோக்கியவழி அஃதறிந்து கெகிழ்ந்துள்ளே மெல்ல நகாநின்றாள், அசை இயற்கு ஆண்டு ஒரோர் உண்டு-அதனுல் டங்கிய வியல்பினையுடையாட்கு அங்ஙனையின்கண்ணே தோன்றுகின்ற தார் நன்மைக் குறிப்புண்டு எ-று.

எர்-ஆகுபெயர். அக்குறிப்பு இனிப் பழுதாகாதென்பதாம்.

(ப-ரை) யாலெக்க (என்னை நீக்குகின்ற சொல்லுக்குப் பொருமல்) ான் (இரந்து) நோக்கியவிடத்து, பசையினள் - (அதனெரிந்து) இரங்கினவாகி, பையநகும் - உள்ளே நகாநின்றாள் (அதனுல்), அசையியற்கு-அசைந்தாயலுடையவளுக்கு, ஆண்டு - அங்ஙனையினிடத்து, ஒரோர் - ஒருநன்மைக்றிப்பு, உண்டு-உண்டு எ-று.

(க-ரை) நான்பார்த்தவிடத்து விரங்கிப்பார்த்து, நகைக்கிறாளதனுலே ழுண்டு என்பதாம்.

(வி-ரை) எர்-ஆகுபெயர். அக்குறிப்பு இனி பழுதாகாதென்பதாம். (8)

[தோழி மதியுடம்படுவா டன்னுள்ளே சொல்லியது]

எதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.

(பரி-உரை) எதிலார்போலப் பொதுநோக்கு நோக்குதல்-முன் னறியா தார்போல ஒருவரைபொருவர் பொதுநோக்கத்தா னேக்குதல், காதலர் கண்ணே உள-நிக்காதலையுடையார் கண்ணே புனலாகாநின்றன எ-று.

பொதுநோக்கு-யாவர்மாட்டும் ஒருதன்மைத்தாய நோக்கு. நோக்குதற் றொழில், ஒன்றேயாயினும் இருவர்கண்ணு நிகழ்தலானும், ஒருவர்கட்டானுங் குறிப்பு வேறுபாட்டாற் பலவாமாகலானும், உளவெனப் பன்மையாற் கூறப்பட்டது. இருவரும் "மதுமறைத்தண்டோர் மகிழ்ச்சிபோல உள்ளத் தன்னே மகிழ்"தலின் அதுபற்றிக் காதலாரென்றும், அது புறத்து வெளிப் படாமையின் எதிலார்போலவென்றுங் கூறினான்.

(ப-உரை) எதிலார்போல - முன்னறியாதவர்போல, பொதுநோக்கு நோக்குதல் - (ஒருவரையொருவர்) பொதுப்பார்வையாகப்பார்த்தல், காதலர் கண்ணே-ஆசையையுடைய இவ்விருவரிடத்தும், உள-உண்டாகின்றன எ-று.

(க-உரை) அயலார்போலப் பொதுப்பார்வை பார்த்த லாசையுள்ள் நிடத்தண்டு என்பதாம்.

(வி-உரை) பொதுநோக்கு - யாவரிடத்தும் ஒருதன்மையாகிய பார்வை, பார்த்தற்றொழிலொன்றேயாயினும் இருவரிடத்தும் உண்டாதலாலும், ஒருவரிடத்திலேயும் குறிப்பு வேறுபாட்டால் பலவாமாகலாலும், உளவெனப் பன்மையாலே சொல்லப்பட்டது. இருவரும் மது மறைத்தண்டோர் மகிழ்ச்சி போல் உள்ளத்தன்னே மகிழ்தலால் அதுபற்றிக் காதலாரென்றும், அது புறத்து வெளிப்படாமையால் எதிலாரென்றும் சொல்லினான். (8)

[இதவுமது]

கண்ணெறி கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொ
லென்ன பயனு மில. [ற்ற

(பரி-உரை) கண்ணெறி கண்ணிணை நோக்கு ஒக்கின் - காமத்திற்குரிய விருவருள் ஒருவர் கண்களோடு ஒருவர் கண்கள் நோக்கா லொக்குமாயின், வாய்ச்சொற்கள் என்னபயனும் இல-அவர் வாய்மைதோன்றச் சொல்லுகின்ற வாய்ச்சொற்கள் ஒருபயனுமுடையவல்ல எ-று.

நோக்காலொத்தல்-காதலெக்கினவாதல். வாய்ச்சொற்கள்-மனத்தின் றின்றி வாயளவிற் றோன்றுகின்ற சொற்கள். இருவர் சொல்லுங் கேட்டி உலகியன்மேல் வைத்துக் கூறியவாறு. இருவர் சொல்லுமாவன - அவர் புனக்காவன்மேலும் அவன் வேட்டத்தின்மேலுஞ் சொல்லுவன. பயனில் சொற்களாகலின், இவை கொள்ளப்படாவென்பதாம். இவை புணர்ந் னிமித்தம்.

(ப-உரை) (காமத்திற்குரியவிருவருள்), கண்ணெறி - (ஒருவரை) கண் னோடு, கண்ணிணை - (ஒருவர்) கண்கள், நோக்கொக்கின்-பார்வையால் ஒத்த மாயின், வாய்ச்சொற்கள் - (உண்மைதோன்றச் சொல்லுகின்ற) வாய்ச் சொற்கள், என்னபயனும்-ஒருபயனும், இல-உடையனவல்ல எ-று.

(க-ரை) இருவர் பார்வையு மொக்குமாயின் வாய்ச்சொற்கள் பயனில்லன ன்பதாம்.

(வி - ரை) பார்வையாலொத்தல் - ஆசைப்பார்வை யுடையனவாதல். ாய்ச்சொற்கள் - மனத்தில்லாமல் வாயளவிலே தோற்றுகின்ற சொற்கள். ருவர்சொல்லும்கேட்டு உலகியலின்மேல் வைத்துச் சொல்லியபடி. இருவர் சால்லும்விதமாவன. அவள் புனங்காவலின்மேலும், அவன் வேட்டத்தின் மலும் சொல்லுவன. பயனில் சொற்களாகையால், இச்சொற்கள் கொள் ப்படாவென்பதாம்.

(10)

110-ம் அதி - குறிப்பறிதல் - முற்றிற்று.

111-ம் அதிகாரம்—புணர்ச்சிமகிழ்தல்

(பரி-உரை) அஃதாவது: அங்ஙனங் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் ப்புணர்ச்சியினை மகிழ்ந்து கூறல். அதிகார முறைமையும் இதனானே ளங்கும்.

(உரை) அஃதாவது: அப்படிக் குறிப்பறிந்து புணர்ந்ததலைவன் அப் ணர்ச்சியை மகிழ்ந்து சொல்லுதல். அதிகாரமுறைமையும் இதனாலே ளங்கும். உ-ம். *

[இயற்கைப் புணர்ச்சி யிறுதிக்கட் சொல்லியது]

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

(பரி-உரை) கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்- ணாற் கண்டும் செவியாற் கேட்டும் நாவா லுண்டும் மூக்கான் மோந்தும் ய்யாற்றீண்டியும் அனுபவிக்கப்படு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே - இவ்வொள்ளிய தொடியையுடையாள்கண்ணே யுளவாயின எ-று.

உம்மை முற்றும்மை. தேற்றேகாரம் வேறிடத்தின்மை விளக்கிநின்றது. றுவேறு காலங்களில் வேறுவேறு பொருள்களானனுபவிக்கப்படுவன காலத்து இவள்கண்ணே யனுபவிக்கப்பட்டன வென்பதாம். வடநூலார் க்கர்ப் பொருளவாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில்களும் ஈண்டடக்கிக் ப்பட்டன.

---

* (அகப்பொருள் விளக்கம்) இரந்து பின்னிற்றற் கெண்ணலு மிரந்து, னிலைநிற்றலு முன்னிலையாக்கலு, மெய்தொட்டுப் பயிறலும் பொய் ாட்டலு, மிடம்பெற்றுத் தழாஅலும் வழிபாடு மறுத்தலு, மிடையூறு த்தலு நீடுநினைந்திரங்கலு, மறுத்தெதிர் கோடலும்வறிது நகைதோற்றலு, வற்குறிப்புணர்த்தலு முயங்குதலுறுத்தலும், புணர்ச்சியின் மகிழ்தலும் தலும் பிறவு, முணர்த்திய தலைவியிற் புணர்ச்சியின் விரியே.

(ப ரை) கண்டு-(கண்ணாலே) கண்டும், கேட்டு-(செவியாலே) கேட்டும், உண்டு (நாவாலே) உண்டும், உயிர்த்து-(மூக்காலே) மோந்தும், உற்றும்-(மெய்யாலே) தீண்டியும், அறியும்-அனுபவிக்கப்படுகிற, ஐம்புலனும் ஐம்புலனும், ஒண்டொடிகண்ணே-இவ்வொளிபொருந்திய வளையல்களையுடையவளிடத்தே, உள-உண்டாயின எ-று.

(க-ரை) கண்ணாற்கண்டும், காதாற்கேட்டும், நாவாலுண்டும், மூக்கால் மோந்தும், மெய்யாற் றீண்டியும், அனுபவிக்கப்படும் ஐம்புலன்களும் ஒள்ளிய வளையல்களையுடைய விவளிடத்தே உள்ளன என்பதாம்.

(வி-ரை) இது தலைவன் * இயற்கைப்புணர்ச்சி முடிவிலே சொல்லியது. உம்மை-முற்றும்மை. தேற்றேகாரம் வேறோரிடத்தில்லாமை விளங்கநின்றது. வேறுவேறு காலங்களிலே வேறுவேறு பொருள்களாலே அனுபவிக்கப்படுகிற புலன்களெல்லாம் ஒரேகாலத்தே இவளிடத்தே என்னால் அனுபவிக்கப்பட்டன வென்பதாம். (1)

[இடந் தலைப்பாட்டின்கட் சொல்லியது]

பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து.

(பரி-உரை) பிணிக்கு மருந்து பிற - வாதமுதலிய பிணிகட்கு மருந்தாவன அவற்றிற்கு நிதானமாயினவன்றி மாறாய வியல்பினை யுடையனவாய் அணியிழை தன்னோய்க்கு மருந்து தானே - அவ்வாறன்றி இவ்வணியினையுடையாள் தன்னினாய பிணிக்கு மருந்துந் தானேயாயினாள் எ று.

இயற்கைப் புணர்ச்சியை நினைந்து முன் வருந்தினானாகலிற் றன்னோயென்றும், அவ்வருத்தந் தமியாளை யிடத்தெதிர்ப்பட்டுத் தீர்ந்தானாகலிற் றானே மருந்தென்றுங் கூறினான். இப்பிணியும் எளியவாயவற்றாற் றீரப் பெற்றில மென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது.

(ப ரை) பிணிக்கு - (வாதமுதலாகிய) பிணிகளுக்கு, மருந்து - மருந்தாவன, பிற - (அவைகளுக்கு நிதானமானவையல்லாமல்) விரோதமாகிய குணத்தையுடையவையாம், (அப்படியல்லாமல்) அணியிழை - இவ்வணியினையுடையவள், தன்னோய்க்கு - தன்னாலாகிய பிணிக்கு, தானேமருந்து-தானே மருந்துமாயினாள் எ று.

(க-ரை) முப்பிணிகளுக்கு மருந்துகள் வேறேயுள்ளன; ஆபரணத்தையுடையவள் தன் காமநோய்க்குத் தானேமருந்தானாள் என்பதாம்.

* இயற்கைப்புணர்ச்சி-ஒரு ராஜகுமாரன் வேட்டைக்குப்போய் மலைச்சோலையிலே விளையாடவந்து தனித்துநின்ற குறக்கன்னிகையைக் கண்கூடியது

(வி-ரை) இத தலைவன் * இடந்தலைப்பாட்டிலே சொல்லியத. இயற்கைப் புணர்ச்சியை விரைந்த முன்வருந்தினதலால் தன்னையென்றும், அவ்வருத்தம் தனித்தலைவந்த கின்ற அவளை முன்கூடியவிடத்தே சென்று எதிர்ப்பட்டுத் தீர்ந்தானதலால் தானே மருந்தென்றும் சொல்லினன். இப்பிணியும் எளியவைகளால் தீரப்பெற்றிலமென்பதபட கின்றமையால், மன்னுழியிசையிலே வந்தத. உ-ம். †

(2)

[கிரந்சய விற்பத்திற்குரியரீ இச்சிற்றின்பத்திற் கின்னையாதல் தகாதென்ற பாங்கற்குச் சொல்லியத]

தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றுமரைக் கண்ண துலகு.

(பரி-உரை) தாம் வீழ்தார் மென்றோட்டுயிலின் இனிதுகொல்-ஐம்புலன்களோடு நுகர்வார்க்குத் தாம் விரும்புமகளிர் மெல்லிய தோளின்கட்டுயிலுந் துயில்போல வருந்தாம லெய்தலாமோ, தாமரைக்கண்ணன் உலகு - அவற்றைத் தந்த தவயோகி செய்தஞ் செங்கண்மாலுலகம் எ-று.

ஐம்புலன்களோடு நுகர்வாரென்னும் பெயர் அவாய்நிலையான் வந்தத. ப்பெற்றித்தாய தூயிலவிட்டுத் தவயோகத்தான் வருந்தவேண்டுதலின், ம்மனோர்க்காகாதென்னுங் கருத்தால் இனிதுகொலென்றான். இந்திரனுல கன் றுரைப்பாருமுளர். தாமரைக்கண்ணனென்பத அவனுக்குப் பெயர்மையின், அஃதசையன்மை யறிக.

(பத) (ஐம்புலன்களோடும் அனுபவிப்பவர்க்கு) தாம் வீழ்வார் - தாம் விரும்பு மகளிரத, மென்றோள் - மெல்லிய தோள்களிடத்தத் (தயிலும்), யிலின்-தயில்போல், தாமரைக்கண்ணனுலகு - (அனைகளோத் தரத்தயோகியால் அடையப்படுவதாகிய) கமலக்கண்ணனத உலகம், இனிதுகொல்-நத்தாம லடையக்கூடுவதோ? எ-று.

(க-ரை) தாம் விரும்பிய பெண்களின் மெல்லிய தோள்களிடத்தத் யில்போல விஷ்ணுவினுலகம் இன்பமாகுமோ என்பதாம்.

(வி-ரை) அனுபவிப்பவர்க்கென்பத வருவிக்கப்பட்டத. இப்படிப்பட்ட நிலவிட்டுத் தவயோகங்களால் வருந்தவேண்டுதலாலே எம்போல்வார்க்கு மாதென்னுங் கருத்தால் இனிதுகொலென்றான். (3)

[பாங்கற்கூட்டத் திறந்திக்கட் சொல்லியத.]

நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்ற ளிவள்.

---

* இடந்தலைப்பாடு - இரண்டாந்தடவை முன்கூடியவிடத்தே தலைவன் பவியைக் குறித்துச்சென்ற கூடியது.

† (அகப்பொருள் விளக்கம்) இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தினெய்தழி ற்சியின்றி முடிவதாகும்.

(பரி-உரை) கீக்கின் தொறூஉம் குறுகுக்கால் தண்ணென்னும் நீ-தன்னை யன்றழிச் சுடாகிற்கும், அறுகுழிக் குளிராகிற்கும் இப்பெற்றித்தாய நீயை, இவன் யாண்டுப் பெற்றான் - என்கட்டருதற்கு இவனெவ்வுலகத்துப் பெற்றான்? எ-று.

கடாமுன் தன்புறுதலின் கீக்கிற்றொறூஉ மென்றும், கடியபின்னிற் புறுதலிற் குறுகுக்காற் றண்ணென்னுமென்றும், இப்பெற்றியதோர் நீ உலகிற் நில்லையாமாகலின் யாண்டுப் பெற்றானென்றுங் கூறினான். தன் காமத்தைத் தன்னையே அவடத்தானாகக் கூறினான், அவனான் அது வெளிப்படுதலின்.

(ப-ரை) கீக்கின்-(தன்னை) கீக்கியபோது, தொறூஉம்-சுடாகிற்கும், குறுகுக்கால் -.நெருக்கும்போது, தண்ணென்னும் - குளிராகிற்கும், நீ-(இப்படிப்பட்ட) நீயை, (எனக்குத் தருவதற்கு) யாண்டு - எவ்வுலகத்திலே, இவன், பெற்றான்-அடைந்தான் எ-று.

(கரை) தன்னையகன்றவிடத்துச் சுடாகிற்கும் தன்னை நெருங்குமிடத்துக் குளிராகிற்கும்; இப்படிப்பட்ட நீயை இவன் எவ்வுலகத்திற்பெற்றானோ என்பதாம்.

(வி-ரை) தலைவன் * பாங்கற் கூட்டமுடிவிலே சொல்லியது. கடமுன் தன்பமடைதலால் கீக்கிற்றொறூஉ மென்றும், கடியபின் இன்மடைதலால் குறுகுக்காற் றண்ணென்னுமென்றும், இப்படிப்பட்டநீ உலகில்லாமையால் யாண்டுப்பெற்றானென்றும் சொல்லினான். தன் காமத்நீயையே அவன் தந்ததாகச் சொல்லினான், அவனால் அது வெளிப்படுதலால்.

[தோழியிற்கூட்டத் நிறுத்திக்கட் சொல்லியது]

வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினு டோள்.

(பரி-உரை) வேட்டபொழுதின் அவையவை போலுமே - மிகவிளைவாய பொருள்சேரப் பெறுத அவற்றின்மேல் விருப்பங்கூர்ந்த பொழுதின் கண் அவையவை தாமேவந் தின்பஞ்செய்யுமாறுபோல இன்பஞ்செய்யும், தோட்டார் கதுப்பினுன் தோள் - எப்பொழுதும் பெற்றப்புணரினும் பூவினையணிந்த தழைந்த கூந்தலினையுடையா டோள்கள் எ-று.

தொடு-ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூடத்துக்கண் முன்னரே கிழந்திருக்கப் பின்னரும் புதியவாய் தெய்வம் பிணித்தலின், அவ்வாராமைபற்றி இவ்வாறு கூறினான். தொழிலுவமம்.

(ப-ரை) (எப்பொழுது பெற்றக்கூடினும்) தோட்டார் கதுப்பினுள் மலரானிறைந்த கூந்தலையுடையவளது, தோள் - தோள்கள், வேட்ட

* பாங்கற்கூட்டம் - மூன்றாந்தடவை தலைவன் தனது தோழியை உடனாகக்கொண்டு தலைவியைக்கூடியது.

பொழுதின்-(மிகவும் இனிய பொருள்களைப்பெற) விரும்பியபொழுது, அவை வைபோலுமே-அவ்வப்பொருள்கள்போல்வந்து (இன்பஞ்செய்யும்) எ-று.

(க-ரை) பூவையணிந்த கூந்தலையுடையவளது தோள்கள் இச்சித்த பொழுது அவ்வவப்பொருள்கள்போலு மின்பஞ்செய்வனவாம் என்பதாம்.

(வி-ரை) இது தலைவன் * பாங்கியிற் கூட்டமுடிவிலே சொல்லியது. தாடு - இதழ்; அது பூவுக்கு ஆகுதலால் ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, டந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், இவைகளிலே முன்னமே அத்தோள்கள் னுபவிக்கப்பட்டிருந்தும் பின்னும் புதியவைபோலிருந்து நெஞ்சம் பிணித்த ால் அவ்வாராமைப்பற்றி இப்படி சொல்லினான். (5)

[இதுவுமது]

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.

(பரி-உரை) உயிர் உறுதோறு தளிர்ப்பத் தீண்டலால்-தன்னைப்பெறாது ாடிய என்னுயிர் பெற்றுறுந்தோறுந் தளிர்க்கும்வகை தீண்டுதலான், பதைக்குத் தோள் அமிழ்தின் இயன்றன - இப்பேதைக்குத் தோள்கள் ண்டப்படுவதோ ரமிழ்தினாற் செய்யப்பட்டன எ-று.

ஏதுவாகலாற் றீண்டல் அமிழ்திற்குமெய்திற்று. வாடிய வுயிரைத் ளிர்ப்பித்தல்பற்றி, அவை யமிழ்தி னியன்றனவென்றான். தளிர்த்தல்- ன்பத்தாற் றழைத்தல்.

(ப-ரை) உயிர் - (தன்னைப்பெறாது வாடிய) என்னுயிர், உறுதோறு- பற்று) உறுந்தோறும், தளிர்ப்ப - தளிர்க்கும்படி, தீண்டலால் - தீண்டுத லே, பேதைக்கு-இம்மங்கைக்கு, தோள்-தோள்கள், அமிழ்தினியன்றன- ண்டப்பட்ட) அமிழ்தினாலே செய்யப்பட்டன எ-று.

(க-ரை) என்னுயிர் தளிர்க்கும்படி தீண்டுதலால் இப்பெண்ணிற்குத் ாள்கள் அமிழ்தாற்சமைக்கப்பட்டன என்பதாம்.

(வி-ரை) ஏதுவாகலால் தீண்டல் அமிழ்திற்கும் பொருந்தியது. வாடிய ரைத்தளிர்ப்பித்தல்பற்றி அத்தோள்களை அமிழ்தினியன்றனவென்றான். ிர்த்தல்-இன்பத்தாலே தழைத்தல். (6)

வளை நீகரைந்துகொண்டு உலகோர் தம்மில்லிருந்து தமது பாத்துண்ணு மில்லறத்தோடுபடல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது]

தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு.

* பாங்கியிற்கூட்டம்-நாலாந்தடவை தோழியைத் துணையாகக்கொண்டு யது.

(பரி-உரை) அம் மா அரிவை முயக்கு-அழகிய மாமை நிறத்தையுடைய அரிவையது முழக்கம், தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்று - இன்பம் பயததற்கட்டமக்குரிய வில்லின்கணிருந்து உலகோர் தந்தாளான் வந்த பொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்கட்குப் பகுத்துத் தங்கூற்றை யுண்டாற்போலும் எ-று.

தொழிலுவமம். இல்லறஞ் செய்தாரெய்துந் துறக்கத்தின்பம் எனக் கிப்புணர்ச்சியே தருமென வரைவுடன்படான் கூறியவாறாயிற்று.

(ப-ரை) அம்மாவரிவைமுயக்கு-அழகிய மாமைநிறத்தையுடைய மாதின் புணர்ச்சியானது, (இன்பந்தருதலில்) தம்மிலிருந்து-தமக்குரிய மனையி லிருந்து, தமது-(உலகோர்) தம்முயற்சியால் வந்தபொருளை, பாத்து-(தென் புலத்தார் முதலாகிய ஐவர்க்கும்) பகுந்துகொடுத்து, உண்டற்று (தமதுபங்கை) உண்பதுபோல் இன்பஞ்செய்கின்றது எ-று.

(க-ரை) இப்பெண்ணின் புணர்ச்சியானது தம்முயற்சியால் வந்த பொருளைத் தென்புலத்தோர்முதலைவர்க்கும் பகுந்து கொடுத்துத் தன் பங்கை யுண்டதுபோலு மின்பஞ்செய்கின்றது என்பதாம்.

(வி-ரை) தொழிலுவமம். இல்லறஞ்செய்தாரடையும் சுவர்க்கவின் பத்தை எனக்கு இப்புணர்ச்சியே தருமென்று கல்யாணத்திற்கு உடன் படாதவன் சொல்லியபடியாயிற்று, மாமை-பொன்னிறம். ஆல்-அசை. (

[ஒத்தவன்புடைய றுமக்கு ஒருபொழுதும் விடாத முயக்கமே இனியதென வரைவுகடாய தோழிக்குச் சொல்லியது]

வீழு மிருவர்க் கினிதே வளியிடை போழப் படாஅ முயக்கு.

(பரி-உரை) நீ சொல்லுகின்றதொக்கும், வளி இடை போழப்பட முயக்கு-ஒரு பொழுது நெகிழாமையிற் காற்றாலிடை யறுக்கப்படாத முயக்கம் வீழும் இருவர்க்கு இனிதே - ஒருவரையொருவர் விழைவா ரிருவர்க்கு மினிதே எ-று.

முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்த ஈண்டு இருவரில்லை, இன்மையான் இஃதொவ்வாதென்பது கருத்து. கனவி புணர்ச்சியை மகிழ்ந்து வரைவுடன்படான் கூறியவாறு.

(ப-ரை) (நீ சொல்லுகின்றது ஒக்கும்) வளியிடைபோழப்படா (ஒருபொழுதும் நெகிழாமையால்) காற்றால் இடையறுக்கப்படாத, முயக்கு புணர்ச்சியானது, வீழுமிருவர்க்கு-(ஒருவரை ஒருவர்) விரும்புகிற இருவர்க்கு இனிதே-இனிதேயாகும் எ-று.

(க-ரை) காற்றா லிடையறுக்கப்படாத புணர்ச்சியானது இருவரு மின்பமாகும் என்பதாம்.

(வி ரை) முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. எகாரம் தேற்றம். இவ்வே திருவரில்லாமையால் அது ஒவ்வாதென்பது கருத்து. களவுப்புணர்ச்சியை ஒழித்த விவாகத்துக்கு உடன்படாதவன் சொல்லியபடி. (8)

[காதல் வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப் பயனுடைத்தென வரைவுடோவியாட்குச் சொல்லியது]

ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.

(பரி-உரை) ஊடல் உணர்தல் புணர்தல் இவை-புணர்ச்சி யினிதாதற் பொருட்டு வேண்டுவதாய ஊடலும் அதனை யளவறிந்து தீர்க்குதலும் அதன்பி னிகழ்வதாய வப்புணர்ச்சிதானுமென விவையன்றே, காமம் கூடியார் பெற்ற யன்-வரைந்துகொண்டு காமத்தை யிடைவிடாதெய்தியவர் பெற்ற பயன் ன்? எ-று.

ஊடலர்க்குப் பிரிவென்பதொன் றனதாதன்மேலும் அதுதான் பாத் நயர்மாட்டாதலும், அதனை யறிந்து மகளிருடனிற்றலும், அவ்வூடலைத் வறுசெய்தவர் தாமே தந் தவறின்மை கூறி நீக்கலும், பின்னுமவ்விருவரும் த்தவன்பினராய்க் கூடலுமன்றே முன்வரைந் தெய்தினர் பெற்ற பயன்; ப்பயன் இருதலைப்புள்ளிலே ருயிராய வுழுவலன்புடைய வெமக்கு வண்டாவென அவ்வரைந்தெய்தலே யிகழ்ந்து கூறியவாறு.

(பதவு) ஊடல்-(புணர்ச்சி இனிதாதற்பொருட்டு வேண்டு) மூடலும், ணர்தல்-(அதனை அளவறிந்து) தீர்க்குதலும், புணர்தல்-(அதன்பின் உண்டா ன்ற) அப்புணர்ச்சியும் என்கிற, இவை - இவையல்லவா, காமங்கூடியார்- வாகஞ் செய்துகொண்டு) காமத்தை இடைவிடா தடைந்தவர், பெற்ற பன்-பெற்ற பயன்கள் எ-று.

(க-ரை) ஊடலும் அதனை நீக்கலும் புணர்ச்சியும் விவாகஞ்செய்த காண்டவர் பெற்றபலன் என்பதாம்.

(வி-ரை) ஊடலர்க்குப் பிரிவென்பதொன்று உண்டாவதல்லாமல் தான் பாத்தையரிடத்தாதலும், அதனை அறிந்து மகளிர் ஊடிநிற்றலும், வ்வூடலைத் தவறுசெய்த அவர்தாமே தந் தவறில்லாமைசொல்லி நீக்கலும், ன்னும் அவ்விருவரும் ஒத்தவன்பினராய்க்கூடலும் அல்லவா. மூன் வாகஞ்செய்துகொண்டு அடைந்தவர் பெற்றபயன்; அப்பயன் இருதலைப் ள்ளிலே ருயிராகிய் மாறுவன்புடைய வெமக்கு வேண்டாவென அவ்விவாகஞ் ய்த அடைதலை இகழ்ந்து சொல்லியபடி. (9)

[புணர்ந்துடன்போகின்றான் றன்னுள்ளே சொல்லியது]

அறிதோ றறியாமை கண்டற்றுற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

(பரி-உரை) அறிதோறு அறியாமை கண்டற்று - தல்களானும் ணர்வுகளானும் பொருள்களை யறியவறிய முன்னை யறியாமை கண்டாற்

போலக் காணப்படாநின்றது, சேயிழைமாட்டுச் செறிதோறும் காமம்-சிவந்த விழையினையுடையாளை இடைவிடாது செறியச் செறிய இவண்மாட்டுக் காதல் எ-று.

களவொழுக்கத்திற் பலவிடையீடுகளானெய்தப்பெறாது அவாவுற்றான் இதுபொழுது நிரந்தரமாக வெய்தப் பெற்றமையின், செறிதோறு மென்றான். அறிவிற்கெல்லை யின்மையான் மேன்மேலறியவறிய முன்னையறிவு அறியாமையாய் முடியுமாறுபோலச், செறிவிற் கெல்லையின்றி மேன்மேற் செறியச் செறிய முன்னைச்செறிவு செறியாமையாய் முடியாநின்றதெனத் தன்னாராமை கூறியவாறு. இப்புணர்ச்சி மகிழ்தல் தலைமகட்குமுண்டேனும் அவண்மாட்டுக் குறிப்பானிகழ்வதல்லது கூற்றானிகழாமையறிக.

(ப - ரை) செறிதோறும் - புணரப்புணர, சேயிழைமாட்டு - செய்ய ஆபரணத்தையுடைய இவளிடத்து, காமம்-காதல், அறிதோறு-(நூல்களாலும், நுட்பவறிவாலும், பொருள்களை) அறியவறிய, அறியாமை - (முன்னை) யறியாமை, கண்ட்ற்று-காணப்படுதல்போலே காணப்படுகின்றது எ-று.

(க-ரை) இவளிடத்துப் புணரப்புணர வுண்டாமாசையானது நூலாறு மறிவாலும் பொருள்களை யறியவறிய முன்னறியாமை கண்டாற்போல காணப்படாநின்றது என்பதாம்.

(வி-ரை) களவிலே பலவிடை யீடுகளால் தன் கருத்தின்படி அனுபவிக்கப் பெறாமல் வருத்தமுற்றவன் உடன்கொண்டு போம்போது அதுதீர்தலால் செறிதோறுமென்றான். அறிவிற்கு எல்லையில்லாமையால் மேலுமேலும் அறியவறிய முன்னையறிவு அறியாமையாய் முடியுதல்போல புணர்தற்கு எல்லையில்லாமல் மேலுமேலும் புணரப்புணர முன்னைப்புணர்ச்சி புணராமையாய் முடிகின்றதெனத் தன்னாராமை சொல்லியபடி. இப்புணர்ச்சி மகிழ்தல் தலைவியிடத்துக் குறிப்பாலல்லது சொல்லால் நிகழாது. (10)

111-ம் அதி - புணர்ச்சிமகிழ்தல் - முற்றிற்று.

112-ம் அதிகாரம்—நலம்புனைந்துரைத்தல்

(பரி-உரை) அஃதாவது: தலைமகன்றலைமகணலத்தைப் புனைந்து சொல்லியது. இது, புணர்ச்சி மகிழ்ந்துழி நிகழ்வதாகலின், புணர்ச்சி மகிழ்தலின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தலைவன் தலைவி நலத்தினை வருணித்துச் சொல்லியது. இது புணர்ச்சியின் மகிழ்ந்தவிடத்து நிகழ்வதாகலான் அதன்பின் வைக்கப்பட்டது. (உ-ம்.) *

---

* (அகப்பொருள் விளக்கம்) கலந்துழி மகிழ்தலு நலம்பாராட்டலு மெற்புற வணிதலு மென்னுமிம்மூன்றும், போற்றிய தெய்வப் புணர்ச்சியிலிறியே.

[இயற்கைப்புணர்ச்சி யிறந்திக்கட் சொல்லியது]

நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள்.

(பரி-உரை) அனிச்சமே வாழி நன்னீரை-அனிச்சப்பூவே! வாழ்வாயாக! மன்மையால் நீ யெல்லாப்பூவினு நல்ல வியற்கையையுடையை, யாம் ழ்பவள் நின்னினும் மென்னீரன்-அங்ஙனமாயினும் எம்மால் விரும்பப் ட்டவள் நின்னினு மெல்லிய வியற்கையையுடையள் எ-று.

அனிச்சம் - ஒருபெயர். - வாழியென்பது உடன்பாட்டுக்குறிப்பு. இனி ளே மெல்லியனென்னுந் தருக்கினை யொழிவாயாக வென்பதாம். அது பாழுதற்றறிந்தாளுகலின், ஊற்றினினிமையையே பாராட்டினுன். இன் ரனென்ற பாடமோதுவாருமுளர்.

(பதவுரை) அனிச்சமே-அனிச்சப்பூவே! வாழி-வாழ்வாயாக, நன்னீரை-மன்மையாலே நீ எல்லாப்பூவினும்) நல்ல குணமுடையை, (அப்படியிருந் லும்) யாம்வீழ்பவள்-எம்மால் விரும்பப்பட்டவள், நின்னினு மென்னீரள்-ன்னினு மெல்லிய குணத்தையுடையள் எ-று.

(க-ரை) அனிச்சப்பூவே வாழ்வாயாக நீ எல்லாப்பூவிலும் நற்குண டையை எம்மால் விரும்பப்பட்டவள் உன்னிலு மெல்லியகுணத்தை டையவள் என்பதாம்.

(வி-ரை) அனிச்சம்-ஒருபெயர். வாழியென்பது உடன்பாட்டுக்குறிப்பு. நி நானே மெல்லிய குணமுடையே னென்னுஞ் செருக்கை ஒழிவாயாக ன்பதாம். |அப்பொழுது பரிசித்து அறிந்தாளுதலால் பரிசத்தினினிமை யே பாராட்டினுன்.

(1)

[இடந்தலைப்பாட்டின்கட் சொல்லியது]

மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

(பரி-உரை) நெஞ்சே - நெஞ்சே! இவள் கண் பலர்காணும் பூ ஒக்கும் ற - யானே காணப்பெற்ற இவள் கண்களைப் பலரானுங் காணப்படும் ள் ஒக்குமென்று கருதி, மலர்காணின் மையாத்தி - தாமரை, குவளை, தலிய மலர்களைக் கண்டால் மயங்காகின்றாய், நின்னறிவிருந்தவாறென்?

மையாத்தல் - ஈண்டு ஒவ்வாதவற்றை யொக்குமெனக் கோடல்: ாத்தல், செம்மாத்தலென்பனபோல வொருசொல். இயற்கைப்புணர்ச்சி முதலாகத் தலைமகள் கண்களைக் காணப்பெறுமையின் அவற்றோடொரு யொக்கு மலர்களைக் கண்டெழி யெல்லாம் அவற்றின்கட் காதல்செய்த தான். இதுபொழுது அக்கண்களினலழுழுதுந் தானே தமியாளைவிடத்

தெரிப்பட் டநுபவித்தா ளுகலின் அம்மலர்கள் ஒவ்வாமைகண்டு ஒப்புமை கருதிய சொஞ்சையிகழ்ந்த கூறியவாறு

(ப-ரை) வேய்தோ-மனமே! இவள்கண்-(யானே காணப்பெற்ற) இவள் கண்களை) பலர்காணும் - பலராலும் காணப்படுகிற, பூவொக்குமென்ற மலர்கள் ஒக்குமென்ற கினைத்தி, மலர்காணின் - (நாமரை குவளை நீ முதலாகிய) மலர்களைக் கண்டால், மையாத்தி - மயக்காகின்றாய், (உனக்கு அறிவிருந்த விதம் என்னை) எ று.

(க-ரை) மனமே இவள் கண்களைப் பலராற் காணப்படும் பூவொக்குமென்ற கினைத்தி நாமரை குவளை நீலமுதலிய மலர்களைக் கண்டால் மயக்காகின்றாய் கின்னறிவிருந்தவாறென் என்பதாம்.

(வி-ரை) மையாத்தல் - இல்லே ஒப்பாகாதனவைகளை ஒக்குமென்று சொள்ளுதல். இயற்கைப்புணர்ச்சி கீக்கியதை முதலாகத் தலைவி கண்களைக் காணப் பெறுமையால் அவைகளோடு சிறிதொத்திருக்கின்ற மலர்களை கண்டவிடத்தெல்லாம் அவைகளிடத்தை ஏசை செய்யாத தலைவி இப்பொழுது அக்கண்களினலருமுகம் தானே இவளே இடத்தெரிப்பட் அநுபவித்தாளுகலால் அம்மலர்கள் ஒப்பாகாமை கண்டு ஒப்புமை கருதி சென்னை இகழ்ந்து சொல்லியபடி.

[கட்டுரையற்ற பாங்கற்குத் தலைமகன் றலைமகளதியல்பு கூறியது]

முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

(பரி-உரை) வேய்த்தோளவட்கு - வேய்போலுந் தோளினையுடை வட்கு, மேனி முறி - நிறம் தளிர்நிறமாயிருக்கும், முறுவல் முத்தம் - பல் முத்தமாயிருக்கும், நாற்றம் வெறி-இயல்பாய நாற்றம் கறுநாற்றமாயிருக்கு, உண்கண் வேல்-உண்கண்கள் வேலாயிருக்கும் எ-று.

பெயரடையாலும் ஓரியல்பு கூறப்பட்டது. முறி, முறுவலென்ப ஆகுபெயர். உருவகவகையாற் கூறினமையின், புனைந்துரையாயிற் கின்னுற் சருதப்பட்டாளை யறியேனென்ற சேட்படுத்த தோழிக்கு தலைமகன் சொல்லியதாமாம்.

(பதவுரை) வேய்த்தோளவட்கு-மூங்கில்போலுந் தோள்களையுடையவளுக்கு மேனி - நிறம், முறி - தளிர்நிறமாயிருக்கும், முறுவல் - பல்லானது, முத்தாயிருக்கும், நாற்றம்-இயற்கை வாசனையானது, வெறி-கல்லவாசனையிருக்கும், உண்கண் (பை) புண்டகண்கள், வேல்-வேல்களாயிருக்கும்.

(க-ரை) மூங்கில்போலுந் தோள்களை யுடையவளுக்கு, மேனி, நிறம், பல், முத்தம், கண்கள், வேல்கள்போலும் என்பதாம்.

(வி-ரை) முறி, முறுவல் ஆகுபெயர். உருவகவணகையாலே சொல்லின மையால் புனைந்துரையாயிற்று. உன்னுலே கினைக்கப்பட்டவளை அறியே னென்று தாரப்படுத்திய தோழிக்குத் தலைவன் சொல்லியதுமாம். (3)

[பாங்கற் கூட்டத்துச் சென்ற சார்தலுறவான் சொல்லியது]

காணிற் குவளை கவிழ்ந்து நிலனேக்கு
மாணிழை கண்ணெவ்வே மென்று.

(பரி-உரை) குவளை-குவளைப்பூக்கடாமும், காணின்-காண்டற்றொழிலை டையவாயின், மாண் இழை கண் ஒவ்வேம் என்ற கவிழ்ந்த நிலன் நோக்கும்-மாண்ட விழையினையுடையாள் கண்களை யாமொவ்வேமென்ற நுதி அந்நாணினுலிறைஞ்சி நிலத்தினை நோக்கும் எ-று.

பண்பாளையன்றித் தொழிலானு மொவ்வாதென்பான் காணினென்றும், ண்டால் அவ்வொவ்வாமையால் காணுடைத்தாமென்பதை தோன்றக் கவிழ்ந் தன்றுக் கூறினுன். காட்சியுதாணுமின்மையிற் செம்மாந்த வாளை நோக்கினவென்பதாம்.

(பதவுரை) குவளை-குவளைமலர்கள், காணின்-பார்க்கிறதொழிலை உடைய வையிருந்தால், மாணிழைகண்-மாட்சிமைப்பட்ட ஆபரணங்களையுடை னைது கண்களை, ஒவ்வேமென்ற-நிகரேமென்ற கினைத்து, கவிழ்ந்த-(அச் ணத்தினுலே) தலைகுனிந்து, நிலன்-நிலத்தை, நோக்கும்-பார்க்கும் எ-று.

(கருத்து) குவளைமலர்கள் பார்க்கில் இவள் கண்ணிற் கொப்பாகேமென்று ழ்ந்த நிலத்தைப்பார்க்கும் என்பதாம்.

(வி-ரை) நிறத்தாலேயன்றி தொழிலாலும் ஒவ்வாதென்றற்கு காணி ன்றும், கண்டால் அவ்வொவ்வாமையால் காணுடையவாமென்பதை ன்ற கவிழ்ந்தென்றும் சொல்லினுன். காண்லும் காணலும் இல்லாமையால் மாந்த ஆகாயத்தை நோக்கினவென்பதாம். (4)

[பகற்குறிக்கட் பூவணிகண்டு சொல்லியது]

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

(பரி-உரை) அனிச்சப்பூக் கால் களையாள் பெய்தான்-இவள் தன் ர்மை கருதாது அனிச்சப்பூவை முதிர் களையாது சூடினுன், நுசுப்பிற்கு ற பறை படா-இனி யிவளிடைக்கு கல்ல பறைகளொலியா எ-று.

அம்முதிர்ப்பாரம் பொருமையின் இடை முரியும்; முரிந்தால் அதற்குச் தார்க்குரிய நெய்தற்பறையே படுவதென்பதாம். * மக்கட்குரிய சாக் ம் பறைபடுதலும் இலக்கணைக் குறிப்பால் நுசுப்பின்மே லேற்றப் ன.

* இவ்விலக்கணையடியாகத் தோன்றிய குறிப்பை வடநூலார் இலக்கண ; தொனியென்பர்.

(ப-ரை) (இவன் தன் மென்மை கினையாமல்) அனிச்சப்பூ - அனிச்ச மலரை, கால்கினையான்-தான்கினையானாகி, பெய்தான்-சூடினான், நுசப்பிற்கு (இனியில) விடைக்கு, கல்ல - கல்லவையாகிய, பறை - பறைகள், படாத ஒலியா என்று.

(க-ரை) இவன் தன்மென்மை கினையாமல் அனிச்சமலரைக் காம்பு கினையானாகிச் சூடினானாகையா லிடை முரியும் என்பதாம்.

(வி-ரை) இது தலைவன் * பகற்குறியிலே பூவணிகண்டு சொல்லியது. இம்மலர்த்தாளின் பாரம் பொறுமையால் இடைமுரியும்; முரித்தால் அதற்குச் செத்தவர்க்கு உரிய செய்தற்பறையே ஒலிக்கும் என்பதால் மனிதர்க்கு உரிய சாவும், பறையொலித்தலும், குறிப்பால் இடையின்பே எற்றப்பட்டன. ஒலியா-ஒலிக்கும்.

[இரவுக்குறிக்கண் மதிகண்டு சொல்லியது]

மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்.

(பரி-உரை) மீன் - வானத்து மீன்கள், மதியும் மடந்தை முகனு அறியா-வேறுபாடு பெரிதாகவும் தம்மதியினையும் எம்மடந்தை முகத்தினையு இதுமதி இதுமுகமென் றறியமாட்டாது, பதியின் கலங்கிய - தம்மி னின்றுங் கலக்கித் திரியாகின்றன என்று.

ஒரிடத்து கில்லாது எப்பொழுது மியங்குதல்பற்றிப் பதியிற்கலங் வென்றான்; வேறுபாடு வருகின்ற பாட்டாற் பெறப்படும், இனி இர டனையும் பதியிற்கலக்காத மீன்களறியுமல்லது கலங்கின மீன்கள் அறி வென் றுரைப்பினுமமையும்.

(ப-ரை) மீன் - நாரைகள், (வேறுபாடு பெரிதாயிருக்கவும்) மதியு (தமது) சந்திரனையும், மடந்தைமுகனும் - (எமது) மாத முகத்தை அறியா-(இது சந்திரன் இதுமுகமென்று) அறியமாட்டாமல், பதியின்-(த கிலையினின்றும், கலங்கிய-கலக்கித் திரியாகின்றன என்று.

(க-ரை) வானத்து மீன்கள் வேறுபாடு பெரிதாகவும் தம்மதியின மெம்மடந்தை முகத்தினையு மிதுமதி மிதுமுகமென் றறியமாட்டாது னிலையினின்று கலக்கித் திரியாகின்றன என்பதாம்.

(வி-ரை) இது † இரவுக்குறியிலே தலைவன் சந்திரனைக்கண்டு சொ லியது. ஒரிடத்து கில்லாமல் எப்போதும் உலாவுதல்பற்றி பதியிற்கலங் வென்றான். வேறுபாடு பின்பாட்டிற் சொல்லப்படும்.

---

* பகற்குறி-பகலிலே ஒரிடம் குறிவைத்து வந்து கூடல்.

† இரவுக்குறி-இரவிலே தலைவி மனையருகு வந்து கூடல்.

[இதவுமத]

அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

(பரி-உரை) அம்மீன்கள் அக்கனக் கலக்குதற்குக் காரணம் யாது? றுவாய் நிறைந்த அவிர் மதிக்குப்போல - முன் குறைந்தவிடம் வந்த ரம்பியே விளக்குமதிக்கட்போல, மாதர் முகத்த மற உண்டோ·இம்மாதர் கத்த மறுவுண்டோ எ-று.

இடம்-கலை. மதிக்கென்பத வேற்றமைமயக்கம். தெய்தலும் வளர் லும் மறுவுடைமையு மின்மைபற்றி வேறுபாடறியலாயிருக்க அறிந்திலை வன விகழ்ந்த கூறியவாறு.

(ப-ரை) (அத்தாரகைகள் அப்படி கலக்குதற்குக் காரணம் யாது?) றுவாய் நிறைந்த-முன்குறைந்தவிடம் வந்த நிறைந்த, அவிர்-விளக்குகிற, திக்குப்போல-சந்திரனிடத்தப்போல, மாதர்முகத்த - இம்மாதர் முகத்தி டத்த, மற-களங்கமானத, உண்டோ-உண்டோ எ-று.

(க-ரை) அம்மீன்க ளக்கனக் கலக்குதற்குக் காரணம் யாது? முன் றைந்தவிடம் வந்த நிறம்பியே விளக்கு மதிக்கண்போல இம்மாதர் த்த மறுவுண்டோ என்பதாம்.

(வி-ரை) தெய்தலவளர்தலும் களங்கமும் இல்லாமைபற்றி வேறுபாடு யலாயிருக்க அறிந்திலவென்ற இகழ்ந்த சொல்லியபடி. (7)

[இதவுமத]

மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலே வாழி மதி.

(பரி-உரை) மதி வாழி - மதியே! வாழ்வாயாக; மாதர் முகம்போல் விட வல்லையேல் காதலே - இம்மாதர் முகம்போல யான் மகிழும்வகை விச வல்லையாயின், நீயுமென் காதலையுடையையாதி எ-று.

மறுவுடைமையின் அத மாட்டாய்; மாட்டாமையின், என்னுற் காதலிக் ம் படாயென்பதாம். வாழியென்பத இகழ்ச்சிக்குறிப்பு.

(ப-ரை) மதி - சந்திரனே! வாழி - வாழ்வாயாக, மாதர் முகம்போல். ன்கள் முகம்போல், ஒளிவிட வல்லையேல் - (நான் மகிழும்படி) ஒளிவீச யாயாகில், காதலே (நீயும் என்னல்) இச்சிக்கப்படுதலையுடையையாவாய் ர்.

(க-ரை) சந்திரனே வாழ்வாயாக பெண்கள் முகம்போல ஒளிவீச யாயாகில் நீயுமென்னு லிச்சிக்கப்படுதலை புடையையாவாய் என்பதாம்.

(வி-ரை) மற உன்னிடத்திருத்தலால் அதமாட்டாய்; மாட்டாமையால் ல் இச்சிக்கவும் படாயென்பதாம். வாழி-இகழ்ச்சிக்குறிப்பு. (8)

[இவுமதி]

மலரன்ன கண்ணுண் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றல் மதி.

(பரி உரை) மதி-மதியே! மலர் அன்ன கண்ணுன் முகம் ஒத்தியாயின் இம் மலர்போலுங் கண்ணினையுடையாண் முகத்தை நீ யொக்கவேண்டுமாயின், பலர் காணத் தோன்றல்-இதுபோல யான் காணத் தோன்றுமாயின், பலர் காணத் தோன்றுதொழி எ-று.

தானே முகத்தினலமுழுதுங் கண்டனுபவித்தானுகலின் ஈண்டும் பலர் காணத் தோன்றலே மிழித்துக் கூறினன். தோன்றின் வினைக்கவ்வொப்புடாகாதென்பதாம்.

(பரி) மதி - சந்திரனே! மலரன்ன கண்ணுன் - இம்மலர்போலுங் கண்களையுடையவளது, முகம் - முகத்தை, ஒத்தியாயின் - ஒக்கவேண்டுமாயில், (இதுபோல் யான்காணத்தோன்று) பலர் காணத் தோன்றல்-பலர் காணத் தோன்றுதே எ-று.

(க-ரை) சந்திரனே மலர்போலுங் கண்களையுடையவள் முகத்தை யொக்க வேண்டுமையாகில் இதுபோல யான் காணத்தோன்று பலர் காணத் தோன்றுதொழி என்பதாம்.

(வி-ரை) தானே முகத்தி னலமுழுதுங்கண்டு அனுபவித்தானுகலின் ஈண்டும் பலர்காணத் தோன்றலே இழிவுபடுத்திச் சொல்லினுன். பலர் காணத் தோன்றில் உனக்கு அம்முகத்தோடு ஒப்புண்டாகாதென்பதாம்.

[உடன்போக்குரைத்த தோழிக்கு அதனருமை கூறி மறுத்தது]

அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

(பரி உரை) அனிச்சமும் அன்னத்தின் தூவியும்-உலகத்தாரான் மெல்லமைக் கொடுக்கப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப்புள்ளின் சிறகுமாகிய ஈரண்டும், மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம் - மாதரடிக்கு நெருஞ்சிப்பழம் போல வருத்தஞ்செய்யும் எ-று.

மூன் வலிதாதலுடைமையிற் பழமென்றுன். இத்தன்மைத்தாகிய பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கற்களையுடைய வெஞ்சுரத்தை யாங்ஙனங் கடக்கு மென்பது குறிப்பாற் பெறப்பட்டது. செம்பொருளேயன்றிக் குறிப்புப்பொருளும் அடிநலனழியாமையாகலின், இதுவுமிவ்வதிகாரத்தாயிற்று.

(ப-ரை) (உலகத்தாரால் மென்மைக்கு எடுக்கப்பட்ட) அனிச்சமலரும், அன்னத்தின் றூவியும் - அன்னப்பறவையி னிறகும், மாதர் அடிக்கு-மாதர்களடிக்கு, நெருஞ்சிப்பழம்-நெருஞ்சிப்பழம்போல் (வருத்தஞ் செய்யும்) எ-று.

(க-ரை) அனிச்சமலரும் அன்னப்பறவையி னிறகும் மாதர்னடிக்கு நெருஞ்சிப்பழம்போல் வருத்தஞ்செய்யும் என்பதாம்.

(வி-ரை) இது * உடன்போக்குச்சொன்ன தோழிக்குத் தலைவன் அது னருமையைச் சொல்லி மறுத்தது. முன் வலிதாதலால் பழமென்றார். இப்படிப் ட்ட அடிகள் கூர்ங்கல்லும் வெப்பமுமுள்ள பாலைவழியை எப்படி கடப்பா னென்பது குறிப்பாலே பெறப்பட்டது. செம்பொருளேயன்றிக் குறிப்புப் பொருளும் அடிதலனழியாமையாகலின் இதுவும் இவ்வதிகாரத்தாயது. (10)

112-ம் அதி - கலம்புனைந்துரைத்தல் - முற்றிற்று.

113-ம் அதிகாரம்—காதற்சிறப்புரைத்தல்

(பரி உரை) அஃதாவது: தலைமகன் தன் காதன் மிகுதிகூறலும், லைமகன் தன் காதன் மிகுதி கூறலுமாம். இது, புணர்ச்சியும் கலனும்பற்றி ழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தல் கலம்புனைந்துரைத்தல்களின்பின் வைக் ப்பட்டது.

(உரை) அஃதாவது: தலைவன் தன்னுரை மிகுதியைச் சொல்லலும், லவி தன்னுரை மிகுதியைச் சொல்லலும் ஆம். இது புணர்ச்சியும் கலனும் ற்றி நிகழ்கின்றதாகலால், அவற்றி னதிகாரங்களின்பின் வைக்கப்பட்டது.

[இயற்கைப்புணர்ச்சி பிறதிக்கட்டலைமகன்
றன்னயப் புணர்த்தியது]

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

(பரி-உரை) பணிமொழி வால் எயிறு ஊறிய நீர்-இம்மெல்லிய மொழி னையுடையானது வாலியவெயிறூறிய நீர், பாலொடு தேன்கலந் தற்று-டனே தேனைக்கலந்த கலவைபோலும் எ று.

கலந்ததற்றென்பது விகாரமாயிற்று, கலக்கப்பட்ட தென்றவாறு. லொடு தேனென்றவதனால் அதன் சுவைபோலுஞ் சுவையினையுடைத் ன்பதாயிற்று. எயிறூறியவென இடத்தினிகழ்பொருளின்மேறழில் இடத் மேனின்றது. வேறுவேறறியப்பட்ட சுவையவாய பாலுந் தேனுந் தழி அக்கலவை இன்னதென்றறியலாகாத இன்சுவைத்தாமாகலின், பொருளாகிய நீர்க்குமெய்தவிக்க.

(ப-ரை) பணிமொழி - இம்மெல்லிய சொல்லையுடையவளது, வாலெயி யநீர் - வெண்பல்லி லூறிய நீரானது, பாலொடு தேன்கலந்தற்றே-டனே தேனைக்கலந்த கலவைபோலும் எ-று.

---

* உடன்போக்கு-தலைவி தன்வீட்டாரறியாமல் தலைவனுடன் செல்லுதல்.

(க-ஸ) இம் மெல்லிய மொழியினையுடையாளது வாலிய பற்களினுமிய சோனது பாலுடனே தேனைக்கலந்த கலவைபோலும் என்பதாம்.

(வி-ரை) பாலொடு தேனென்றதனால் அதன் சுவைபோலுஞ் சுவை புடைத் தென்பதாயிற்று. வேறுவேறறியப்பட்ட சுவையையுடைய பாலும் தேனும் கலந்தவிடத்து அக்கலவை இன்னதென்று அறியக்கூடாத இனிய சுவையை புடையதாமாகலால் அச்சுவை கீர்க்கும் அடைவிக்க. (1)

[பிரிவச்சங் கூறியது]

உடம்பொ டுயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு.

(பரி-உரை) உடம்பொடு உயிரிடை என்ன அன்ன - உடம்போடே உயிரிடை புனலாய கட்புக்கள் எத்தன்மைய அத்தன்மைய, மடந்தையொடு எம்மிடை கட்பு-இம்மடந்தையோடு எம்மிடையுளவாய கட்புக்கள் எ-று.

என்னெனப் பன்மைபாற் கூறியது, இரண்டுந் தொன்றுதொட்டு வேற்றுமையின்றிக் கலந்துவருதல், இன்பத்தன்பங்களொக்க வனுபவித்தல், இன்றியமையாமை யென்றிவற்றை நோக்கி. தெய்வப்புணர்ச்சியாகலால் அதுபொழுது உணர்ச்சியிலனாகியான் பின்னுடையனாமன்றே, அயலார் இவன் யாவன்கொலெனவும் என்கண்புடையன்கொலெனவும் இவ் மிவனைத் தலைப்பெய்தல் கூடுங்கொலெனவும் அவண்மனத்தின்கணிகழ்ந் அக்கிகழ்வனவற்றைக் குறிப்பானறிந்து அவைதீரக் கூறியவாறு. என்ற யென்ற பாடமோதுவாருமூளர்.

(ப-ரை) மடந்தையொடெம்மிடை - இம்மாதோடு எம்மிடத்து உள் டாகிய, கட்பு - கட்புக்கள், உடம்பொடுயிரிடை - உடம்போடு உயிரிடத்து என்ன-எப்படிப்பட்டவை, அன்ன-அப்படிப்பட்டவையாகும் எ-று.

(க-ரை) உடம்போடு உயிரிடை புனலாகிய கட்புக ளெத்தன்மையே அத்தன்மையே இம்மடந்தையோடு எம்மிடை புனலாகிய கட்புக்கள் எ பதாம்.

(வி-ரை) எப்படிப்பட்டவையெனப் பன்மையாற் சொல்லிய இருவகை கட்புகளும் ஆதிதொடங்கி வேறுபாடில்லாமல் கலந்தவரும் இன்பத்தன்பங்களை ஒக்க அனுபவித்தல் அவசியம் வேண்டுதல் என்றிவ களை நோக்கி. ஊழினுலே கூட்டப்பட்ட புணர்ச்சியாகலால், அப்பொழு உணர்ச்சியில்லாதிருந்தவன் பின்னே உடையனாமென்றே ஆயவிடத்தி இவன் எவனெவென்றும், என்னிடத்தே அன்புடையனெவென்று பின்னும் இவனைக் கலத்தல் கூடுமோவென்றும் அவளுள்ளத்தேதோன்று அலை குறிப்பால் அறிந்த அவைதீரச் சொல்லியபடி. மற்று-அசை.

[இடந்தலைப்பாட்டின்கட் டலைமணிக்கத்தைச் சொல்லியது]

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்.

(பரி - உரை) கருமணியிற் பாவாய! நீபோதாய் - என் கண்ணிற் கருமணியின்கணுறையும் பாவாய! நீ யக்குகின்றம் போதருவாயாக; யாம் வீழும் திருநுதற்கு இடம் இல்லை - போதாதிருத்தியாயின், எம்மால் விரும் பப்பட்ட திருநுதலிலுடையாட்கு இருக்கவிடமில்லையாம் எ-று.

யான்காணுதலையாகையின் இவள்புறத்துப் போதற்பாலளன்றி என் கண்ணுளிருக்கற்பாலள், இருக்குங்கால் கின்னெடொருங்கிருக்க இடம் போதாமையின் நின்னிறுஞ் சிறந்தவிவட்கு அவ்விடத்தைக்கொடுத்த போதுவாயாகவென்பதாம்.

(ப ரை) கருமணியிற்பாவாய் - (என்கண்ணிற்) கருமணியி லிருக்கின்ற பாவையே!, நீ-நீ, போதாய் - (அவ்விடம்விட்டுப்) போவாயாக, (போகா திருப்பாயாகில்) யாம்வீழும்-எம்மால் விரும்பப்படுகின்ற, திருநுதற்கு-அழகிய நுதற்றியையுடையவளுக்கு, இடம்-இடம், இல்லை-இல்லை எ-று.

(க - ரை) என்கண்ணிற் கருமணியினிடத்துறையும் பாவையே! நீ அவ்விடம்விட்டுப் போவாயாக; போகாதிருப்பாயாகில் எம்மால் விரும்பப் பட்ட திருநுதலிலுடையாட்கு இருக்கவிடமில்லையாம் என்பதாம்.

(வி-ரை) நான் காணுமல் இருக்கமாட்டாமையால் இவள் புறத்துப் போந்தன்மையளல்லாமல் என் கண்ணுள் இருக்குந் தன்மையள் இருக்கும் போது உன்னெடு கூடியிருக்க இடம்போதாமையால், உன்னிலும் சிறந்த வளுக்கு அவ்விடத்தைக் கொடுத்து நீ போய்விடுவாயாகவென்பதாம். (3)

[பகற்குறிக்கட் புணர்த்து நீக்குவான் சொல்லியது]

வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன னீங்கு மிடத்து.

(பரி-உரை) ஆயிழை உயிர்க்கு வாழ்தல் அன்னள்-தெரிந்தவிழையினை டையாள் எனக்குப் புணருமிடத்து உயிர்க்குடம்போடு கூடிவாழ்தல் லும், நீக்குமிடத்து அதற்குச் சாதல் அன்னள் - பிரியுமிடத்து அதற்கு னினீக்கிப்போதல்போலும் எ-று.

எனக்கென்பதும் புணருமிடத்தென்பதும் அவாய்நிலையான் வந்தன. ற்காலத்து வேற்றுமையின்றி வழிகிற்றலானும், சாக்காலத்து வருத்தஞ் தலானும், அவற்றை அவன் புணர்வு பிரிவுகட்குவமையாக்கினான்.

(ப-ரை) (எனக்கு) ஆயிழை - ஆராய்ந்துகொள்ளப்பட்ட ஆபரணத்தை யுடையவள், (புணருமிடத்து), உயிர்க்கு-உயிருக்கு, வாழ்தலன்னள்-(உடம் டுகூடி) வாழ்தல்போலாகின்றாள், நீங்குமிடத்து-பிரியுமிடத்து, அதற்கு-யிர்க்கு, சாதலன்னள் - அவ்வுடம்பி னீக்கிப்போதல்போ லாகின் எ-று.

(க-ரை) தெரிந்த வாபரணத்தையுடையாள் எனக்குப் புணருமிடத் குடம்போடு கூடிவாழ்தல்போலும் பிரியுமிடத்து அவ்வுடம்பினின் பிரிதல்போலும் என்பதாம்.

(வி·மை) எனக்கென்பதும், புணருமிடத்தென்பதும், அவாய்நிலையால் வந்தன. வாழுங்காலத்து வேறுபாடில்லாமல் வழிபிற்றலாலும், சாக்காலத்து வருத்தஞ்செய்தலாலும், அவைகளை அகன் புணர்வு பிரிவுகளுக்கு உவமையாக்கினன். (4)

[ஒருவழித்தணக்கவந்த தலைமகன் நீயிர் தணந்தலுண்ட எம்மை யுள்ளியு மறிதிரோவென்ற தோழிக்குச் சொல்லியது]

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியே
னெள்ளமர்க் கண்ணுள் குணம்.

(பரி·உரை) ஒள்ளமர்க் கண்ணுள் குணம் யான் மறப்பின் உள்ளுவன் ஒள்ளியவாய் அமைச்செய்புங் கண்ணினையுடையாள் குணங்களை யான் மறந்தேனுயின், நினைப்பேன்; மறப்பு அறியேன் - ஒருபொழுதும் மறத்தலை யறியேன், ஆகலான் நினைத்தலையுமறியேன் எ-று.

மன் ஒழியிசைக்கண் வந்தது. குணக்கள் - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின. இத்தனையுந் தலைமகன் கூற்று; மேற்றலைமகள் கூற்று.

(ப·மை) யான் - நான், ஒள்ளமர்க் கண்ணுள் குணம் - ஒளியினையும் போர்செய்கின்ற கண்களையுடையவளது குணங்களை, மறப்பின் - மறந்தே னாயின், உள்ளுவன் - நினைப்பேன், மறப்பறியேன் - (ஒருபோதும்) மறத்தலை யறியேன், (ஆகலால் நினைத்தலு மறியேன்) எ-று.

(க·மை) ஒள்ளியவாய் போர்செய்யுங் கண்ணினையுடையாள் குணங்களை நான் மறந்தேனுயின் நினைப்பேன், ஒருபொழுது மறத்தலை யறியேனுமே நினைத்தலையுமறியேன் என்பதாம்.

(வி-மை) இது * ஒருவழித்தணக்க வந்தபோது எம்மையினைத்து மறிவீரோவென்ற தோழிக்குத் தலைவன் சொல்லியது. நினைத்தலு மறத்தலு மென்னும் பொருள்கொள்ள நிற்கையால் மன் ஒழியிசையில் வந்தது. குணக்கள்-நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலானவை. இதனைத் தலைவன் சொல்லியது, பின் தலைவி சொல்லுவது.

[ஒருவழித் தணப்பின்கட் டலைமகனைத் தோழி இயற்பழிக்குமென்றஞ்சி அவன் கேட்பத் தன்னுள்ளே சொல்லியது]

கண்ணுள்ளிற் போகா நிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.

(பரி - உரை) தாங்காணுமைபற்றிச் சேய்மைக்கட்போயினாரைக் கருதுவார் கருதுக, எங்காதலர் கண்ணுள்ளிற் போகார்·எம்முடைய கண்ணை எச்சண்ணகத்தின்றும் போகார்; இமைப்பிற்பருவரார்·யாமறியாதெனினு மாயின் அதனுல் வருத்தமஞ்செய்யார், நுண்ணியர்·ஆகலாற் காணப்படா நுண்ணியர் எ·று.

* ஒருவழித்தணத்தல் · தலைவன் யாதேனும் ஒருகாரியங் குறித்துப் பிரிதல்.

இடைவிடாத நினைவின் மூர்ச்சியான் எப்பொழுதும் முன்னே தான்றலிற் கண்ணுள்ளிற் போகாரென்றும், இமைத்தழியும் அதற்றலான் இமைப்பிற் பருவாரென்றவ் கூறினான்.

(பதவுரை) (தாம் சாணுமைபற்றித் தாரத்திலே போயினரென்று நினைப்பார் நினைக்கக்கடவர்) எக்காதலர் - எம்மூடையகாலவர், கண்ணுள்ளில்-மது) கண்ணுளரேனின்றும், போகார் - போகார், இமைப்பின்-(அறியாமல்) மைத்தேமாயின், பருவரார்-(அதனால்) வருந்தவதஞ்செய்யார் (ஆதலாலே), ண்ணியர்-(காணப்படாத) நுண்ணியர் எ று.

(க-ரை) தாங்காணுமைபற்றித் தாரத்திற் போயினரென்று நினைப்பவர் னக்கக்கடவர். எம்மூடைய நாயகர் எங்கண்ணுள்ளரேனின்றும் போகார் றியாம லிமைத்தோமாயில் அதனால் வருந்தவதஞ் செய்யார் ஆதலாற் ணப்படார் நுண்ணியர் என்பதாம்.

(வி-ரை) இடைவிடாத நினைவின் மூர்ச்சிபால் எப்போதும் முன்னே ான்றலால் கண்ணுள்ளிற் போகாரென்றும், இமைத்தபோதும் அதனால் இமைப்பிற் பருவாரென்றும் சொல்லினான். (6)

[இதவுமத]

நண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து.

(பரி-உரை) காதலவர் சண் உள்ளாராகக் கண்ணும் எழுதேம் - காதலர் பொழுது மெங்கண்ணி ணுள்ளாராகலாற் கண்ணினை அஞ்சனத்தாதலவதஞ் செய்யேம், கரப்பாக்கு அறிந்த - அத்தணைக்காலமும் அவர் தலை யறிந்த எ று.

இழிவுசிறப்பும்மை மாற்றப்பட்டது. காப்பாக்கென்பது வினைப்பெயர். ன்ற வேபாக்கென்பதமது. யானிடையீடின்றிக் காண்கின்றவரைப் தாரென்ற கருதமாறென்னையென்பது குறிப்பெச்சம்.

(பதவுரை) காதலவர்-எம்மேலாசையுள்ள தலைவர், கண்ணுள்ளாராக-(எப்) ணும் இருக்கின்றாராகலால், கண்ணுமெழுதேம்-கண்ணினை (மையினால்) வதஞ்செய்யேம், கரப்பாக்கறிந்த-(அவ்வளவுகாலமும் அவர்) மறைதலை த எ-று.

(க-ரை) எம்மூடைய நாயகர் எக்கண்ணுள் ளிருக்கின்றாராகலால், ின்மை யெழுதேம் அவர் மறைதலையறிந்த என்பதாம்.

வி-ரை) எம்மால் இடைவிடாமற் காணப்படுகின்றவரைப் பிரிந்தார் னைக்கும்விதம் என்னவென்பது குறிப்பெச்சம். (7)

[இதவுமத]

ஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
ந்நீரும் வேபாக் கறிந்து.

(பரி உரை) காதலவர் நெஞ்சத்தாராக வெய்த உண்டல் அஞ்சுதும்; காதலர் எங்ஙெஞ்சினுள்ளாராகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலு யஞ்சாகின்றேம், வேபாக்கு அறிக்க - அவர் அதனுன் வெய்தறலையறிந்து எ-று.

எப்பொழுதும் எங்ஙெஞ்சின்க ணிருக்கின்றவரைப் பிரிந்தாரென்; கருதுமா றென்னையென்பது குறிப்பெச்சம்.

(ப-உரை) காதலவர் - எமது தலைவர், நெஞ்சத்தாராக - நெஞ்சு ளிரு கின்றாதலால், (உண்ணும்போது) வெய்தண்டல் - சூடுள்ளதாக உண்ட தற்கு, அஞ்சுதும் - அஞ்சாகின்றேம், வேபாக்கறிக்க - (அவர் அதனு குறிறதலை அறிக்க எ-று.

(க-உரை) எம்முடைய நாயகர் நெஞ்சுள்ளிருக்கின்றாராகையால் உண்ணு போது வெய்தாக உண்டலை யஞ்சுவோம்; அவர் அதனுல் வெய்தறலை யறிக்க என்பதாம்.

(வி-உரை) எப்பொழுதும் என்னெஞ்சி லிருக்கிறவரைப் பிரிந்தாரென் கினைக்கும்விதம் என்னென்பது குறிப்பெச்சம்.

[வரைவிடை வைத்துப் பிரிவின்கட் டலைமகளாற்றுதற்பொருட்டுத் தோ, தலைமகனை யியற்பழித்தவழி அவளியற்பட மொழிந்தது]

இமைப்பிற் காப்பாக் கறிவ லினைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர்.

(பரி-உரை) இமைப்பிற் காப்பாக்கு அறிவல் - என்கண் ணினை மாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலையறிக்க இமையேன்; அ திற்கே எதிலர் என்னும் இவ்வூர் - அவ்வளவிற்கு அவரைத் தமியரா செய்தார் அன்பிலரென்ற சொல்லாநிற்கும் இவ்வூர் எ-று.

தன் கருத்தறியாமைபற்றிப் புலக்க சொல்லுகின்றுளாகலின், தோழி வேறுபடுத்த இவ்வூரென்றுன். ஒருபொழுதும் பிரியாதவரைப் பிரி சென்ற பழிக்கற்பாலையல்ல லென்பதாம்.

(ப-உரை) இமைப்பின் - (என்கண்) இமைக்குமாயின், காப்பாக்கறி (உள்ளிருக்கிற காதலர்) மறைதலறிக்க இமையேன், அவ்வளவிற்கே அ வுக்கே, இவ்வூர்-இவ்வூர், எதிலரென்னும்-(தக்காத கோய்செய்தார்) அ சென்னும் எ-று.

(க-உரை) என்கண்ணிமைக்குமாலுல் உள்ளிருக்கின்ற காதலர் ம யறிக்க இமையேன் அவ்வளவிற் கவரைத் தமிலாகோய் செய்தா சென்ற சொல்லாநிற்கு மிவ்வூர் என்பதாம்.

(வி-உரை) இது * வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிந்த தத் தலைவி பொறுத்திருத்தற்பொருட்டுத் தோழி தலைவனை இயற்

* வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதல் - கல்யாணஞ் பொருள் சம்பாதிக்கப் பிரிதல்.

டத்தே அவள் இயற்படச் சொல்லியது. தன் கருத்தறியாமைபற்றிக் காபித்துச் சொல்லலால், தோழியை வேறுபடுத்தி ஊரென்றாள். ஒரு பாதும் பிரியாதவரைப் பிரிதாரென்று பழிக்குந்தன்மையை யல்ல பன்பதாம். (9)

[இதவுமது]

உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ ரேதில ரென்னுமிவ் வூர்.

(பரி-உரை) என்றும் உள்ளத்துள் உவந்து உறைவர்-காதலர் எஞ்ஞான் ம் என்னுள்ளத்துள்ளே யுவந்துறையாநிற்பர், இகந்து உறைவர் எதிலர் ன்னும் இவ்வூர்-அதனை யறியாது அவரைப் பிரிந்துறையாகின்றார் அன்பில ன்று சொல்லாநிற்கும் இவ்வூர் எ-று.

உவந்துறைவரென்றதனால் அன்புடைமை கூறினாள். பிரியாமையும் ன்புமுடையாரை இலரெனப் பழிக்கற்பாலையல்ல யென்பதாம்.

(ப-ரை) (காதலர்) உள்ளத்துள் - மனத்துள், என்றும் - எப்பொழுதும், ந்து - மகிழ்ந்து, உறைவர் - வாசஞ்செய்யாநிற்பர், (அதனையறியாமல்) வூர் - இவ்வூர், இகந்துறைவர் - பிரிந்திராகின்றார், எதிலரென்னும். திலாரென்ற (அவரைச்) சொல்லுகின்றது எ-று.

(க-ரை) காதலர் எப்பொழுதும் என்னுள்ளத்துள்ளே மகிழ்ந்து வாசஞ் ய்யாநிற்பர். அதனை அறியாதவரைப்பிரிந்து வாசஞ்செய்யா கின்றார். திலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர் என்பதாம்.

(வி-ரை) உவந்துறைவரென்றதனால் அன்புடைமை கூறினாள். ாமையும் அன்பும் உடையவரை இலரென்று பழிக்குந் தன்மையை யென்பதாம். (10)

113-ம் அதி - காதற்சிறப்புரைத்தல் - முற்றிற்று.

114-ம் அதிகாரம்—நாணுத்துறவுரைத்தல்

(பரி-உரை) அஃதாவது: சேட்படுக்கப்பட்டு ஆற்றாமை நலமகன் ிக்குத் தன்ஞண்டுற வுரைத்தலும், அறத்தொடு நிற்பிக்கலுற்ற ன் அவட்குத் தன்ஞண்டுற வுரைத்தலுமாம். இது காதன்மிக்குழி தாகலின், காதற்சிறப்புரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

உரை) அஃதாவது: தூரப்படுத்தப்பட்டுப் பொறுதலாற்றிய நலனும் தொடு நிற்பிக்கத்தொடங்கிய நலனியும், தமது ாணுமிழத்தலைச் தலாம். இது காதல் மிகுந்தவிடத்து நிகழ்வதாகலால், காதற் ாத்தலின் பின் வைக்கப்பட்டது.

அறத்தொடு நிற்பித்தல் - இன்ன நலனி தன்காமத்தைப் பாங்கி லால் வெளிப்படுத்தல்.

[சேட்படுக்கப்பட்டு ஆற்றானாய தலைமகன் சொல்லியது]

காம முழந்து வருந்தினார்க் கேம
மடலல்ல தில்லை வலி.

(பரி-உரை) காமம் உழந்து வருந்தினார்க்கு - அரியராய மகளிரோ
காமத்தை யனுபவித்துப் பின்னதுபெறாது துன்புற்றவாடவர்க்கு, ஏம மட
அல்லது வலி இல்லை-பண்டும் ஏமமாய்வருகின்ற மடலல்லது இனியெனக்
வலியாவதில்லை எ-று.

ஏமமாதல் - அத்துன்பநீங்கும்வகை அவ்வனுபவத்தினைக் கொடுத்த
வலி-ஆகுபெயர். பண்டுமாடவராயினார் இன்பமெய்தி வருகின்றவாறு நி
நின்னையதற்குத் துணையென்று கருதிக் கொன்னே முயன்ற யா
இதுபொழுது அல்லாமையை யறிந்தேனாகலான் இனியானு மவ்வாற்றா
அதனை யெய்துவலென்பது கருத்து.

(ப-ரை) காமமுழந்து - (அரியமகளிரோடு) காமத்தை அனுபவித்
(பின் அதுபெறாமல்) வருந்தினார்க்கு-துன்பமடைந்த ஆடவர்க்கு, ஏம
லல்லது-(முன்னும்) காப்பாய்வருகின்ற * மடன்மாவல்லது, வலி-வலி
இல்லை-(இனியெனக்கு) இல்லை எ-று.

(க-ரை) அரியமகளிரோடு காமத்தை யநுபவித்தும் பின்னது பெ
துன்பமடைந்த ஆடவர்க்கு, முன்னுங்காப்பாய் வருகின்ற மடலல்லது இ
வலியதில்லை என்பதாம்.

(வி - ரை) ஏமமாதல் - அத்துன்பநீங்கும்வகை அவ்வனுபவத்
கொடுத்தல். வலி-ஆகுபெயர். முன்னும் ஆடவராயினார், இன்பமடை
வருகிற வழியிருக்கவும், உன்னை அதற்குத் துணையென்று நினைத்து வீ
முயன்ற நான் இப்போது துணையல்லாமை அறிந்தேனாகலால் இனியாயி
அவ்வழியால் அதனை அடைவேனென்பது கருத்து.

[நாணுடைய நுமக்கு அது முடியாதென மடல்விலக்க லுற்றாட்கு
சொல்லியது]

நோனா வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து.

(பரி-உரை) நோனா உடம்பும் உயிரும் மடல் ஏறும்-அவ்வருத்தத்தி
பொறாத வுடம்புமுயிரும் அதற்கேமமாய மடன்மாவினையூரக் கருதாநின்
நாணினை நீக்கிநிறுத்து-அதனை விலக்குவதாய நாணினையகற்றி எ-று.

வருந்தினார்க்கென மேல்வந்தமையிற் செயப்படுபொருள் ர
கூறாராயினார். மடல்-ஆகுபெயர். நீக்கிநிறுத்தென்பது ஒருசொன்னீர்
அறிவுநிறையோர்ப்புக் கடைப்பிடி முதலிய முன்னே நீங்கவும் நாணி

* மடன்மா-பனைமடலாலே செய்யப்பட்ட குதிரை.

கின்றது: அதவுமிதபொழுத நீக்கிற்றென்பான், உடம்புமுயிருமென்றான். அவைதாந் தம்முணீக்காமற் பொருட்டு மடலேறுமென்றத அவன் தன்னுற் றுமையறிந்த கடிதிற் குறைசோந்தனெக்கி.

(ப-ரை) நோனை - (அவ்வருத்தத்தைப்) பொறுத, உடம்பு முயிரும்-உடலும் உயிரும், மடலேறும்-(அதற்குக் காப்பாகிய மடன்மாவை) ஏற நினையா கின்றன, நாணினை - (அதனை விலக்குவதாகிய) நாணத்தை, நீக்கி றத்த-ஒழித்தவிட்டு எ-று.

(க-ரை) அவ்வருத்தத்தினைப் பொறுத உடம்பு முயிரும் அதற்குக் வலாகிய மடன்மாவினை யூக்கருதாகின்றன; அதனை விலக்குவதாய் ாணினையகற்றி என்பதாம்.

(வி-ரை) அறிவு முதலானவை முன்னே நீக்கவும் நாண் நீக்காத ன்றத. அதவும் இப்பொழுத நீக்கிற்றென்றற்கு உடம்புமுயிருமென்றான். வைதாம் தம்முன் நீக்காமைப் பொருட்டு மடலேறுமென்றத அவன் தன் பாருமையறிந்த கடிதிலே உடன்படுதல் குறித்து. (2)

[நாணையன்றி நல்லாண்மையு முடைமையின் முடியாதென்றுட்குச் சொல்லியது]

நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடை
காமுற்ரு ரேறு மடல். [யேன்

(பரி-உரை) நாணெடு நல்லாண்மை பண்டு உடையேன் - நாணும் மிக்க ண்டகைமையும் யான் பண்டுடையேன், காமுற்றூர் ஏறும் மடல் இன்று டையேன்-அவை காமத்தானீக்குதலான், அக்காமமிக்காரேறும் மடலினை ற்றுடையேன் எ-று.

நாண் - இழிவாயின செய்தற்கண் விலக்குவத. ஆண்மை - ஒன்றற்குந் ாத கிற்றல். அவை பண்டுள்ளன, இன்றுள்ளத இதுவேயாகலிற் நின் முடியுமென்பதாம்.

(ப-ரை) நாணெடு நல்லாண்மை - நாணத்தையும் மிகுந்த ஆண்மை யும், பண்டு - முன்னே, உடையேன் - உடையேன், (அவை காமத்தால் நதலால்) காமுற்றூரேறுமடல் - காமமிகுந்தவரேறுமடலை, இன்று- போத, உடையேன்-உடையேன் எ-று.

(க-ரை) நாணத்தையு மாண்மையையு முன்னமே புடையேன் அவை ந்தால் நீக்குதலால் காமமிக்காரேறு மடலினைபுடையேன் என்பதாம்.

(வி-ரை) நாண்-இழிவானவை செய்யுமிடத்த விலக்குவத. ஆண்மை-க்குந் தனாதகிற்றல். அவை முன்னுள்ளன, இன்றுள்ளத இதுவே ால் கடிதிலே முடியுமென்றபடி. (3)

[நாணுநல்லாண்மையுங் காமவெள்ளத்திற்குப் புணையாகலின் அதனுல் அவை நீக்குவனவல்ல வென்றுட்குச் சொல்லியது]

காமக் கடும்புன லுய்க்குமே நாணெடு
நல்லாண்மை யென்னும் புணை.

(பரி-உரை) நாணெடு நல்லாண்மை என்னும் புணை - யான்தன்னைக் கடத்தற்குக்கொண்ட நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை, காமக் கடும் புனல் உய்க்குமே - என்னிற்பிரித்துக் காமமாகிய கடியபுனல் கொண்டு போகா கின்றது எ-று.

அது செய்யமாட்டாத வெனைப்புனலினீக்குதற்குக் கடும்புனலென்றும், இப்புனற்கு அவை புணையாகா, அதனுன் அவை நீக்குமென்பதாம்.

(ப-உரை) (என்தன்னைக் கடத்தற்குக் கொண்ட) நாணெடு நல்லாண்மை யென்னும்புணை-நாணமும் நல்லாண்மையும் ஆகிய புணைகளை, காமக்கடும் புனல் - காமமாகிய கடியவெள்ளமானது, உய்க்குமே - (என்னிற் பிரித்து) கொண்டுபோகின்றது எ-று.

(க-உரை) நாணமும் ஆண்மையுமாகிய புணைகளைக் காமவெள்ளமானது கொண்டுபோகின்றது என்பதாம்.

(வி-உரை) அவை செய்யமாட்டாத மற்றை நீரினீக்குதற்கு கடும்புனலென்றுன். இந்த நீர்க்கு அவை புணையாகா, அதனுல் அவை நீக்குமென்பதாம்.

[இவ்வாற்றுமையும் மடலும் நுமக்கெவ்வாறு வந்தனவென்றுட்குச் சொல்லியது]

தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர்.

(பரி-உரை) மாலை உழக்கும் துயர் மடலொடு - மாலைப்பொழுதின்கண் நுகர்விக்கும் துயரினையும் அதற்குமருந்தாய மடலினையும் முன்னறியேன் தொடலைக் குறுந்தொடி தந்தான் - இதுபொழுது எனக்கு மாலைபோது தொடர்ந்த சிறவளையினையுடையா டந்தான் எ-று.

காமம் எனைப்பொழுதுகளினுமுளதெனினும் மாலைக்கண் மலர்தலுடைமையின் மாலையுழக்குந் துயரொன்றும், மடலும் அதுபற்றி வந்ததாயினும், அவ்விழிவும் அவனாற்றாப்பட்டதென்றும், அவடான் நீ கூறியதே கூறுமினமையனென்பது தோன்றத் தொடலைக்குறுந்தொடியென்றுங் கூறினும் அப்பெயர் உவமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையினை அவடந்தனவாகலின் தின்றுனீக்குமென்பது கருத்து.

(ப-உரை) மாலை யுழக்குந்துயர் - மாலைக்காலத்து அனுபவிக்குந் துன்பமும், மடலொடு (அதற்கு மருந்தாகிய) மடன்மாவையும், (முன்அறியேன்

தொடலைக் குறுந்தொடி-மாலைபோல் தொடர்ந்த சிறிய வளையலையுடையவள், தந்தாள்-(இப்பொழுது எனக்குத்) தந்தாள் எ-று.

(க-ரை) மாலைப்பொழுதினிடத்து அனுபவிக்குந் துன்பத்தையும் அதற்கு மருந்தாகிய மடலினையும் முன்னறியேன்; இப்பொழுது எனக்கு வளையலையுடையவள் தந்தாள் என்பதாம்.

(வி-ரை) காமம் மற்றைப்பொழுதுகளிலும் உண்டாயினும் மாலையிலே லர்தலால் மாலையுழக்குந் துயரென்றும், மடலும் அதுபற்றிவந்ததாகலால் அவவிளிவும் அவளாலே தரப்பட்டவென்றும், அவள்தான் நீ சொல்லியதே சொல்லுகிற இளமையளென்பதுதோன்றத் தொடலைக்குறுந்தொடியென்றும் சொன்னான். இவை அவள் தந்தவையாகலால் உன்னால் நீங்குமென்பது ருத்து.

(5)

[மடலூரும்பொழுது இற்றைக்குங் கழிந்ததென்றாட்குச் சொல்லியது]

மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்.

(பரி-உரை) பேதைக்கு என் கண் படல் ஒல்லா-நின்பேதை காரணமாக ன்கண்கள் ஒருகாலுந் துயிறலைப்பொருந்தா; யாமத்தும் மன்ற மடலூர்தல் ள்ளுவேன் - அதனால் எல்லாருந் துயிலுமிடை யாமத்தும் யானிருந்து -லூர்தலையே கருதாநிற்பேன் எ-று.

பேதையென்றது பருவம்பற்றியன்று மடமைபற்றி. இனிக் குறை டிப்பது காளையெனவேண்டாவென்பதாம்.

(ப-ரை) பேதைக்கு-(உன்) மாதுகாரணமாக, என்கண்-எனது கண்கள், லொல்லா-(ஒருபோதும்) தூங்குதல் பொருந்தாவாம், (அதனால்) யாமத்தும்- லாரும் தூங்குகிற) பாதியிரவிலும், மன்ற மடலூர்தல் - மடன்மாவே யே, உள்ளுவேன்-நினைப்பேன் எ-று.

(க-ரை) உன் மாதுகாரணமாக என்கண்கள் ஒருபோது நித்திரைசெய் ாம், அதனால் யாவரும் நித்திரைசெய்யும் பாதிராத்திரியில் மடன்மா தலை நினைப்பேன் என்பதாம்.

(வி-ரை) பேதையென்றது மடமைபற்றி. இனிக்குறை முடிப்பது யெனல் வேண்டாவென்பதாம்.

(6)

பதைக்கென்கண் படலொல்லா வென்பதுபற்றி அறிவிலராய மகளிரி ும் அஃதுஉடையராயவாடவரன்றே ஆற்றற்பால ரென்றாட்குச் சொல்லியது]

-லன்ன காம முழந்து மடலேறாப்
பண்ணிற் பெருந்தக்க தில்.

(பரி-உரை) கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப் பெண்ணின். கடல்போலக் கரையற்ற காமநோயினை யனுபவித்தும் மடலூர்தலைச் செய்யாது ஆற்றியிருக்கும் பெண்பிறப்புப்போல, பெருந்தக்கது இல்-மிக்க தகுதியினையுடைய பிறப்பு உலகத்திலில்லை எ-று.

பிறப்பு விசேடத்தால் அவ்வடக்கம் எனக்கில்லையாகாநின்றது; நீ யஃதறிகின்றிலை யென்பதாம். இத்துணையுந் தலைமகன் கூற்று; மேற்றலைமகள் கூற்று.

(ப-ரை) கடலன்ன காமமுழந்து - கடல்போற் கரையற்ற காமநோயை அனுபவித்தும், மடலேறா-மடன்மாவேறாமல் (பொறுத்திருக்கிற), பெண்ணின்-பெண் (பிறப்புப்போல்), பெருந்தக்கது-மிகுந்த தகுதியுடைய பிறப்பு, இல்-உலகத்தில் இல்லை எ-று.

(க-ரை) கடல்போலக் கரையற்ற காமநோயினை அனுபவித்து மடலேறாதலைச் செய்யாதிருக்கிற பெண்பிறப்புப்போலத் தக்க பிறப்பு உலகத்திலில்லை என்பதாம்.

(வி-ரை) பிறப்பு விசேடத்தால் அவ்வடக்கம் எனக்கு இல்லையாகின்றது. நீ அதை அறிகின்றிலை யென்பதாம். இதுவரைக்குந் தலைவன் சொல்லியது; பின்னே தலைவி சொல்லுவது.

[காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகியவழிச் சொல்லியது]

நிறையரியர் மன்னளிய ரென்னாது காம
மறையிறந்து மன்று படும்.

(பரி-உரை) நிறை அரியர் (என்னாது) - இவர் நிறையால் நாமீதுந்தகரியரென் றஞ்சுதல் செய்யாது, மன் அளியர் என்னாது - மிகவுமளிக்கத்தக்காரென் றிரங்குதல் செய்யாது, காமம் மறை இறந்து மன்றுபடும் மகளிர் காமமும் அவர் மறைத்தலைக்கடந்து மன்றின்கண்ணே வெளிப்படுவதா யிருந்தது எ-று.

என்னாதென்பது முன்னுங்கூட்டி மகளிரென்பது வருவிக்கப்பட்டது. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. மன்றென்பது தந்தை தன்னையன் நோக்கி. உலகத்துப் பெண்பாலார் காமத்தியல்பு கூறுவான்போன்று, தம் காமம் பெருகியவாறுகூறி இனியறத்தொடு நிற்றல்வேண்டுமென்பது குறிப்பாற் கூறியவாறாயிற்று.

(ப-ரை) (இவர்) நிறையறிய(ரென்னாது)-நிறையால் (நாம் மேற்கொள்ளுதற்கு) அரியரென்று அஞ்சாமலும், மன்னளிய ரென்னாது-மிகவும் அளிக்கத்தக்கவரென்று இரங்காமலும், காமம் - (மகளிரது) காமமும், மறையிறந்து - (அவர்) மறைத்தலைக்கடந்து, மன்றுபடும் - சபையிடத்து வெளிப்படுவதாயிருந்தது எ-று.

(க-ரை) இவர் சிறையால் காமேற்கொள்ளுதற்கு அரியரென் றஞ்சுதல் செய்யாத மிகவு மளிக்கத்தக்காரென் றிரங்குதல் செய்யாத மகளிர் காமமும் அவர் மறைத்தலிலக்கடந்த சபையிடத்த வெளிப்படுமாயிருந்தத என்பதாம்.

(வி-ரை) என்னுகென்பத முன்னுங்கூட்டி மகளிரென்பத வருவிக்கப் பட்டத. இங்கே மன்றென்றத-தந்தை முதலாகிய தன் குடும்பத்தார் கூட்டத்தை. உலகத்தப்பெண்களத காமத்தியல்பு சொல்லுவான்போல் தன் காமம் பெருகியபடிசொல்லி இனி அறத்தொடுநிற்றல் வேண்டுமென்பத நிறப்பித்தபடியாயிற்று. (8)

[இதவுமத]

அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு.

(பரி-உரை) எல்லாரும் அறிகிலார் என்ற-யான் முன்னடக்கிநிற்றலான் ல்லாருமென்னை யறிதலிலர் இனியவ்வாற நில்லாதியானே வெளிப்பட்டறி ப்பலென்ற கருதி, என் காமம் மறுகில் மருண்டு மறுகும்-என் காமம் வ்வூர்மறுகின்கண்ணே மயங்கிச் சுழலாநின்றத எ-று.

மயக்குதல்-அம்பலாதல். மறுகுதல்-அலராதல். அம்பலுமலருமாயிற்ற; னியறத்தொடு நிற்றல்வேண்டு மென்பதாம். அறிவிலாரென்பதனுடம்.

(ப-ரை) (யான் முன் அடக்கியிருக்கையால்) எல்லாரும் - எல்லாரும், கிலாரென்ற - (என்னை) அறிந்திலர் (இனி அப்படி அடக்கியிராமல் னை வெளிப்பட்டு அறிவிப்பே) னென்ற கினைத்த, என்காமம் - எனத மானத, மறுகில்-(இவ்வூர்) வீதியில், மருண்டு-மயக்கி, மறுகும்-சுழல் றத எ-று.

(க-ரை) யான் முன்னடக்கி நிற்றலால் எல்லாரும் என்னை யறிதலிலர்; ரியவ்வாற நில்லாத யானே வெளிப்பட்டு அறிவிப்பேனென்ற கினைத்த காமம் இவ்வூர் வீதியில் மயக்கிச்சுழல்கின்றத என்பதாம்.

(வி-ரை) மயக்குதல்-* அம்பலாதல். மறுகுதல்-† அலராதல். இவ்வி மாயிற்ற. இனி ‡ அறத்தொடுநிற்றல் வேண்டுமென்பதாம். (9)

[செவிலித்தாயைத்தொடு நின்றலைத்த யானிற்குமாறென்னையென்ற கையாடிய தோழியொடு புலத்த தன்னுள்ளே சொல்லியத]

ாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
ாம்பட்ட காம்படா வாறு.

---

* அம்பல்-மிலாறிற்த தம்மிற்பேசல்.
† அலர்-பலராறிற்த தூற்றல்.
‡ அறத்தொடுநிற்றல்-காமத்தைவெளிப்படுத்தல்.

(பரி-உரை) யாம் கண்ணிற்காண அறிவில்லார் நகுப - யாங்கேட்குமாறு மன்றிக் கண்ணாற்காணுமாறு எம்மை யறிவிலார் நகாநின்றார், யாம் பட்ட தாம் படாவாறு-அவரங்ஙனஞ்செய்கின்றது யாமுற்றநோய்கள் தாமுறாமை யான் எ-று.

கண்ணினென்றது முன்கண்டறியாமை யுணரநின்றது. அறத்தொடு நின்றமையறியாது வரைவு மாட்சிமைப்படுகின்றிலளெனப் புலக்கின்றா ளாகலின், ஏதிலாளாக்கிக் கூறினாள். இது, நகாநின்று சேட்படுக்குந் தோழிக்குத் தலைமகன் கூறியதாங்கால், அதிகாரத்திற்கேலாமையறிக.

(ப-ரை) யாம்-நாம், கண்ணிற்காண-(கேட்கும்படியுமன்றிக்) கண்ணாற் காணும்படி, அறிவில்லார் - அறிவில்லாதவர்கள், நகுப-(எம்மைச்) சிரிக் கின்றார், (அவர் அப்படிச்செய்கின்றது) யாம்பட்ட-யாம் அடைந்த (நோய் களை,) தாம்படாவாறு-தாம் அடையாமையால் எ-று.

(க-ரை) நாம் கேட்கும்படியல்லாமல் கண்ணாற் காணும்படி எம்மை அறிவில்லார் சிரிக்கின்றார், அவரங்ஙனஞ் செய்கிறது நாமடைந்த நோயைத் தாமடையாமையால் என்பதாம்.

(வி ரை) இது * செவிலிக்கு அறத்தொடு நின்றுவைத்து நான் நிற்கும் விதம் என்னென்று நகைசெய்த தோழியோடு புலந்து தலைவி தன்னுள்ளே சொல்லியது. கண்ணினென்றது முன்கண்டறியாமை யுணரநின்றது. அறத்தொடு நின்றமையறியாமல் மணஞ்செய்யு மாட்சிமைப் படுகின்றில ளென்று பிணங்குகின்றாளாகலால், அயலாளாக்கிச் சொல்லினாள். (10)

114-ம் அதி - நாணுத்துறவுரைத்தல் - முற்றிற்று.

115-ம் அதிகாரம்—அலரறிவுறுத்தல்

(பரி-உரை) அஃதாவது: களவொழுக்கம்வேண்டிய தலைமகன் பிறர் கூறுகின்றவலர் தனக்காகின்றவாற்றைத் தோழிக்கறிவுறுத்தலும், வரைவாக உடன்போக்காக ஒன்றுவேண்டிய தலைமகளும் தோழியும் அவ்வலரை யவன் றனக் கறிவுறுத்தலுமாம். இது, நாணுத்துறந்தவழி நிகழ்வதாகலான், நாணுத் துறவுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: களவொழுக்கம் வேண்டிய தலைவன் பிறர் சொல்லு கின்ற அலர் தனக்கு ஆகின்ற விதத்தைத் தோழிக்கு அறிவித்தலும், மனமாக உடன்போக்காக ஒன்றுவேண்டிய தலைவியும் தோழியும் அவ்வலரை அவனுக்கு அறிவுறுத்தலும் ஆம். இது நாணுத்துறந்தவழி நிகழ்வதாகலால், அதன்பின் வைக்கப்பட்டது.

---

* செவிலி-வளர்த்ததாய்.

[அல்ல குறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி யலர்கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது]

அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

(பரி-உரை) அலர் எழ ஆருயிர் நிற்கும்-மடந்தையொடெய்தின கட்பு ஊரின்கணலராயெழுதலான் அவளைப்பெறுத வருத்தமென்னரியவுயிர் பெற்றதுபோன்ற நிலைபெறும்; அதனைப் பாக்கியத்தால் பலர் அறியார். அந்நிலைபேற்றைத் தெய்வத்தால் யானே யறிவதல்லது கூறுகின்ற பலரு மறியார் எ-று.

அல்ல குறிப்பட்டுத் தலைமகளை யெய்தப்பெறுத வருத்தமெல்லாந் தோன்ற அரியவுயிரென்றும், அங்ஙனமறியாளை எளியனாக்கி யெடுக்கின்ற மையின், அஃதவ்வாருயிர்க்குப் பற்றுக்கோடாக நின்றதென்பான் அலரெழ வாருயிர் நிற்குமென்றும், பற்றுக்கோடாதலை அவ்வேதிலாரறியிற்றூற்று தொழிவர், ஒழியவே ஆருயிர் போமாதலான் அவரறியாதொழிகின்றது தெய்வத்தானென்றுங் கூறினன். மூற்றம்மை விகாரத்தாற் றொக்கது.

(ப-ரை) (உன் மாதுக்கும் எமக்கும் உண்டாகிய கட்பு) அலரெழ-(இவ்வூரில்) அலராயெழுதலால், ஆருயிர்-(அவளைப்பெறுத வருத்தின்ற என்) னரியவுயிரானது, நிற்கும்-(அவளைப்பெற்றதுபோல்) நிலைபெறும், அதனை-அந்நிலைபேற்றை, பாக்கியத்தால்-கல்லூழால், (தானே அறிவதல்லது), பலர்-(தூற்றுகின்ற) பலரும், அறியார்-தெரியார் எ-று.

(கரை) உன்மாதுக்கும் எமக்குமுண்டாகிய கட்பு அலரா யெழுதலால் என்னரிய வுயிரானது அவளைப்பெற்றதுபோல நிலைபெறும்; அந்நிலைபேற் றைத் தெய்வத்தால் தானே யறிவதல்லது பலருமறியார் என்பதாம்.

(வி-ரை) இரவுக்குறி நப்பித் தலைவியை அடையப்பெறுத வருத்த மெல்லாம் தோன்ற ஆருயிரென்றும், அப்படி அறியாளை எளியவளாக்கி எடுக்கின்றமையால் அது அவ்வாருயிர்க்குப் பற்றுக்கோடாய் நிற்கின்ற தென்றற்கு அலரெழ வாருயிர்நிற்குமென்றும், பற்றுக்கோடாதலை அவ்வய லார் அறிந்தால் தூற்றுதொழிவர், ஒழியவே ஆருயிர் போமாதலால் அவரறியாதிருக்கிறதை பாக்கியத்தாலென்றும் சொல்லினன். பலருமென்கிற மூற்றம்மை விகாரத்தால் தொக்கது. (1)

[இதுவுமது]

மலரன்ன கண்ணு ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்.

(பரி உரை) மலர் அன்ன கண்ணுள் அருமை அறியாத • மலர்போலுங் கண்ணையுடையானை எய்தற்கருமையறியாத, இவ்வூர் அலர் எமக்கு

சந்தன-இவ்வூர் அவரை யெளியனாக்கி அவனோடலர்கூறலை எமக்குபகரித்த தை எ-று.

அருமை அல்லகுறிப்பாட்டாலும் இடையீடுகளாலும் ஆயது. சந்தனென்றான் தனக்குப் பற்றக்கோடாகலின், அலர் கூறுவாரை அவர்செய்த வுதவிபற்றி இவ்வாறென்றான்.

(ப-ரை) மலரன்ன கண்ணாள்-மலர்போலும் கண்களையுடையவளது, அருமை-(அடைதற்) கருமையை, அறியாது-அறியாமல், இவ்வூர்-இவ்வூரி லுள்ளவர்கள் (அவரை யெளியவனாக்கி), அலர்-(அவனோடு) அலர் கூறலை, எமக்கு-எனக்கு, சந்தன-உபகரித்தனை எ-று.

(க-ரை) மலர்போலும் கண்களையுடையவளது அருமையறியாது இவ்வூர் அவரை யெளியனாக்கி அவனோடலர் கூறுதலை யெமக்குபகரித்தது என்பதாம்.

(வி-ரை) அருமை குறிப்பினழுத்தலாலும் இடையீடுகளாலும் ஆயது. சந்தனென்றான் அதற்குச் சார்பாகலால் அலர்தூற்றுவாரை அவர் செய்த உதவிபற்றி இவ்வாறென்றான். (2)

[இதவுமது]

உறுஅதோ வூரறிந்த கௌவை யதனைப்
பெறுஅது பெற்றன்ன நீர்த்து.

(பரி-உரை) ஊர் அறிந்த கௌவை உறுதோ - எக்கட்குக் கூட்ட முண்மை இவ்வூரறிதலான் விளைந்தவலர் எனக்குறுவதொன்றன்றே, அதனைப் பெறுத பெற்றன்ன நீர்த்த-அதுகேட்ட வென்மனம் அக்கூட்டத் தைப் பெறுதிருந்தே பெற்றாற்போலு நீர்மையையுடைத்தாகலான் எ-று.

பெற்றன்னநீர்மை பெற்றவழியுளதா!மின்பம்போலுமின்பமுடைமை. நீர்த்தென்பதற்கேற்ற மனமென்னும் விளைமுதல் வருவிக்கப்பட்டது.

(ப-ரை) ஊரறிந்த கௌவை-(எங்களுக்குப் புணர்ச்சி உண்டாயிருக் கையை) இவ்வூர் அறிதலால் விளைந்த அலரானது, உறுஅதோ-(எனக்கு) உறவதொன்றன்றே, (அதுகேட்ட என்மனமானது) பெறுஅது-(புணர்ச்சி யைப்) பெறுதிருந்தே, பெற்றன்ன நீர்த்த-பெற்றதுபோலுங் குணமுடைத்த (ஆகலால்) எ-று.

(க-ரை) எங்களுக்குப் புணர்ச்சி புண்டாயிருக்கையை இவ்வூரறிதலான் விளைந்தவலனெக் கூறுவதொன்றே, அதுகேட்ட என்மனம் அப்புணர்ச்சி யைப் பெறுதிருந்தே பெற்றதுபோலுங் குணமுடைத்த என்பதாம்.

(வி-ரை) பெற்றன்னநீர்மை பெற்றவழி உண்டாகிற இன்பம்போலு மின்பமுடைமை. நீர்த்தென்பதற்கு ஏற்ற மனம் வருவிக்கப்பட்டது. (3)

[இகவுமத]

கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து.

(பரி உரை) காமம் கவ்வையால் கவ்வித-என் காமம் இவ்வூரெங்கின்ற அலாலே யலர்தலை புடைத்தாயிற்று; அது இன்றேல் தன்மை இழந்த தவ்வென்னும் - அவ்வலரில்லையாயின், தன்னியல்பிழந்து சுருங்கும் எ-று.

அலர்தல்-மேன்மேன்மிகுதல். செவ்வையுடையதனைச் செவ்வியென்றும் போலக் கவ்வையுடையதனைக் கவ்வியென்றார். இயல்பு - இன்பம்பயத்தல். தவ்வென்னுமென்பது குறிப்புமொழி: * 'நல்கால் யாத்த மாலை வெண் குடை, தவ்வென் றசைஇத் தாழ்தளி மறைப்ப" என்புழியுமத.

(ப-ரை) காமம் - (என்) காமம், கவ்வையால் - (இவ்வூர்) எடுக்கின்ற அலால், கவ்வித - அலர்தலையுடைத்தாயிற்று, அதனின்றேல் - அவ்வலர் இல்லையாயின், தன்மையிழந்து - இன்பந்தருதலிழந்து, தவ்வென்னும் - சுருங்கிப் போகும் எ-று.

(க-ரை) என்காமம் இவ்வூரெடுக்கின்றவலரால் அலர்தலையுடைத்தாயிற்று, அவ்வலரில்லையாயில் தன்னியல்பிழந்து சுருங்கும் என்பதாம்.

(வி-ரை) அலர்தல் - மேலுமேலுமிகுதல். தன்மை - இன்பந்தருதல். தவ்வென்னுமென்றது குறிப்புமொழி. (4)

[இகவுமத]

களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றாற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

(பரி உரை) களித்தொறும் கள் உண்டல் வேட்டற்று-கள்ளுண்பார்க்குக் களிக்குந்தோறுங் கள்ளுண்டல் இனிதாமாறுபோல, காமம் வெளிப்படுந் தோறும் இனிது - எனக்குக் காமம் அலாந்தோறும் இனிதாகின்றது எ-று.

வேட்கப்பட்டற்றாலென்பது வேட்டற்றாலென்கின்றது. வேட்கை மிகுதியால் அலரும் இன்பஞ்செய்யாகின்றதென்பதாம்.

(ப-ரை) (கள்ளுண்பார்க்கு) களித்தொறும் - களிக்குந்தோறும், கள்ளுண்டல் - கள்ளுண்ணுதல், வேட்டற்று - இனிதாம் விதம்போல் (எனக்கு) காமம்-காமமானது, வெளிப்படுந்தோறும் - அலாந்தோறும், இனிது-இனிதாகின்றது எ-று.

(க-ரை) கள்ளுண்பார்க்குக் களிக்குந்தோறுங் கள்ளுண்ட லினிதாமாறு போல எனக்குக் காமம் அலாந்தோறு மினிதாகின்றது என்பதாம்.

(வி-ரை) வேட்கப்பட்டற்றா லென்பது வேட்டற்றாலென்கின்றது, வேட்கைமிகுதியால் அலரும் இன்பஞ்செய்கிறதென்பதாம். (5)

* தொல்காப்பியம், புறத்திணை-184-185.

[இடையீடுகளாலும் அல்லகுறியாலுந் தலைமகனை யெய்தற்பெறாத தலைமகள் அவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ வரைவுகடாயது]

கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

(பரி-உரை) கண்டது ஒருநாள்-யான் காதலரைக் கண்ணுறப் பெற்றது ஒருஞான்றே; அலர் திங்களைப் பாம்புகொண்டற்று - அதனினாயவலர் அவ்வளவிற்றன்றித் திங்களைப் பாம்பு கொண்டவலர்போன்று உலகெங்கும் பரந்தது எ-று.

காரியத்தைக் காரணமாகவுபசரித்துப் பாம்புகொண்டற்றென்றாள். இருவழியும் மன்னும் உம்மையும் அசைநிலை. காட்சியின்றியும் அலர்பரக்கின்ற இவ்வொழுக்கம் இனியாகாது, வரைந்துகோடல் வேண்டுமென்பதாம்.

(பரை) கண்டது - (தலைவனைநான்) காணப்பெற்றது, ஒருநாள் - ஒரு நாளேயாகும், அலர் - (அதனாலுண்டாகிய) அலரானது, (அவ்வளவினதன்றி) திங்களைப் பாம்புகொண்டற்று - சந்திரனைப் பாம்புகொண்ட அலர்போல் உலகெங்கும் பறந்தது எ-று.

(க-ரை) தலைவனை நான் காணப்பெற்றது ஒருநாளேயாம்; அதனாலுண்டான அலரானது அவ்வளவினதல்லாமல் சந்திரனைப் பாம்புகொண்ட அலர் போலெங்கும் பரந்தது என்பதாம்.

(வி-ரை) இது இடையீடுகளாலும் இரவுக்குறிதப்பலாலும் தலைவனைக் கூடப்பெறாத தலைவி அவன் * சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய் அவரை அறிவித்து மணஞ்செயல் வினாவியது. அலராகிய காரியத்தைக் காரணமாக உபசரித்துப் பாம்புகொண்டற்றென்றாள். பூமிநிழல் பாம்பெனப்பட்டது. இராகுவென்னும் வடநூல் வழக்குப்பற்றி அது சந்திரனை மறைத்தல் கணிதசித்தாந்தங்களிலே காண்க. இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலைகள். காட்சியின்றியும் அலர்பரக்கின்ற இவ்வொழுக்கம் இனியாகாது மணஞ்செய்துகொள்ளுதல் வேண்டுமென்பதாம். (6)

[வரைவுநீட ஆற்றாளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தானாதலறிந்த தோழி ஊரவரலரும் அன்னைசொல்லுநோக்கி யாற்றல்வேண்டுமெனச் சொல்லெடுப்பியவழி அவள் சொல்லியது]

ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந் நோய்.

(பரி-உரை) இந்நோய் - இக்காம்நோயாகிய பயிர், ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல் நீராக நீளும் - இவ்வூரின் மகளிரெடுக்கின்ற அலர் எருவாக, அது கேட்டு அன்னை வெகுண்டு சொல்லுகின்ற வெஞ்சொல் நீராக வளராநின்றது எ-று.

* சிறைப்புறம்-தலைவியைக் காவல்செய்தவிடத்தின் புறம்.

ஊரவரென்பது தொழிலான் ஆணைழித்து கின்றது. எகதேசவுரு வகம். சுருக்குதற்கேதுவாவன தாமே விரிதற்கேதுவாகின்றன வென்ப தாம். வரைவாளுதல் பயன்.

(ப-ரை) இக்கோய்-இக்காமநோயாகிய (பயிர்), ஊரவர்கொலைவ-இவ் வூரிலுள்ள (மகளிர் எடுக்கின்ற) அலரானது, எருவாக - எருவாக, அன்னை சொல் - (அதுகேட்டுக்கோபித்தத்) தாய்சொல்லுகின்ற கடுஞ்சொல்லானது, நீராக-தண்ணீரானது, நீளும்-வளராநின்றது எ-று.

(க-ரை) இக்காமநோயாகிய பயிர் இவ்வூரின் மகளிரெடுக்கின்ற அலரானது எருவாகத் தாய்சொல்லானது நீராக வளர்க்கின்றது என்பதாம்.

(வி-ரை) ஊரவரென்பது தொழிலால் ஆணைழித்து கின்றது. [எகதேச வுருவகம்] சுருக்குதற்கு ஏதுவாகின்றவை தாமே விரிதற்கு ஏதுவாகின்றன வென்பதாம். மணஞ்செய்வோளுதல் பயன். (7)

[இதவுமத]

நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றுற் கௌவையா
காம நுதுப்பே மெனல். [ற்

(பரி-உரை) கௌவையால் காமம் நுதுப்பேமெனல் - எதிலாரெடுக் கின்ற அலரால் நாங் காமத்தை யவித்தமென்று கருதுதல், நெய்யால் எரி நுதுப்பேமென்றற்று - நெய்யாலெரியை யவித்தமென்று கருதுதலோ டொக்கும் எ-று.

மூன்றனுருபுகள் கருவிக்கண் வந்தன. கினைத்தற்காரணமாய அலரால் அவித்தல் கூடாதென்பதாம்.

(ப-ரை) கௌவையால் - (அயலவர் எடுக்கின்ற) அலராலுண்டாகின்ற, காமம்-காமத்தை, நுதுப்பேவெனல்-அவிப்பேமென்று கினைத்தல், நெய்யால்-நெய்யினுலே, எரி - நெருப்பை, நுதுப்பேமென்றற்று - அவிப்பேமென்று கினைத்தலோ டொக்கும் எ-று.

(க-ரை) அயலாரெடுக்கின்ற அலராலுண்டாங் காமத்தை அவிப்பே மென்று கினைத்தல் நெய்யால் நெருப்பை அவிப்பேமென்று கினைத்தலோ டொக்கும் என்பதாம்.

(வி-ரை) காமம் வளர்தற்குக் காரணமாகிய அலரால் அதை அவித்தல் கூடாதென்பதாம். (8)

[வரைவிடை வைத்துப் பிரிவின்க ணூற்றாளாய தலைமகள் அவன் வந்து நிறைப்புறத்தானுதலறிந்து அலர்ஞியாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது]

அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றூர்
பலர்நாண நீத்தக் கடை.

(பரி-உரை) அஞ்சலோம்பு என்றூர் பலர் காண நீத்தக்கடை - தம்மை யெதிர்ப்பட்டனுன்று கின்னிற்பினியேன் அஞ்சலோம்பென்றவர் தாமே

இன்று கண்டார் பலரும் நாணும்வகை நம்மைத் துறந்தபின், அலர் நாண ஒல்வதோ-நாமேதிலார் கூறுமலருக்கு நாணக்கூடுமோ கூடாது எ-று.

நாணவென்றும் வினையெச்சம் ஒல்வதென்றுந் தொழிற்பெயருள் ஒல்லுதற் றொழிலோடு முடிந்தது. கண்டார் நாணுநிலைமையமாய யாம் நாணுதல் யாண்டையதென்பதாம்.

(ப-ரை) (தம்மைக்கண்டநாளில்) அஞ்சலோம்பென்றார்-(உன்னைவிட்டு நீங்கேன்) அஞ்சுதலொழி யென்றவரே, பலர்நாண - (இன்றுகண்டவர்) பலரும் நாணும்வகை, நீத்தக்கடை-(நம்மைவிட்டு)நீங்கியபின், அலர்-(அயலவர் தூற்றுகிற) அலருக்கு, நாணவொல்வதோ-(நாம்) நாணக்கூடுமோ எ-று.

(க-ரை) தம்மைக்கண்டநாளில் உன்னைவிட்டு நீங்கேன் அஞ்சுதலொழி யென்றவரே இன்றுகண்டார் பலரும் நாணும்வகை நம்மைத் துறந்தபின் நாமேதிலார்கூறும் அலருக்கு நாணக்கூடுமோ கூடாது என்பதாம்.

(வி-ரை) கண்டார் நாணுகிற நிலைமையேமாகிய நாம் நாணுதல் எவ்விடத்ததென்பதாம். (9)

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச் சொல்லியது]

தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்கு மிவ்வூர்.

(பரி-உரை) யாம் வேண்டும் கௌவை இவ்வூர் எடுக்கும்-உடன்போகற் கேதுவாகனோக்கி யாம்பண்டே விரும்புவதாய வலரை இவ்வூர்தானே யெடாநின்றது, காதலர்தாம் வேண்டின் நல்குவர் - இனிக்காதலர்தாமும் யாம் வேண்டியக்கால் அதனை யினிதினேர்வர், அதனால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது எ-று.

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. நங்கட் காதலுடைமையின்மறாரென் பது தோன்றக் காதலரென்றாள். இவ்விருபதுபாட்டும் புணர்தனிமித்தம்.

(ப-ரை) யாம் - நாம், வேண்டுங்கௌவை - (உடன்போதற்குக் காரண மாதல்பற்றி முன்னமே) இச்சிப்பதாகிய அலரை, இவ்வூர்-இந்தவூர், எடுக்கும்-(தானே) எடுக்கின்றது, காதலர் - (இனித்) தலைவர், வேண்டின் - (நாம்) வேண்டினால், தாம்-தாமும், நல்குரவர்-அதற்கு உடன்படுவர், (ஆதலால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது) எ-று.

(க-ரை) உடன்செல்லுதற்குக் காரணமாக நோக்கி நாம் முன் விரும்புவ தாகிய அலரை யிவ்வூர்தானே யெடாநின்றது; இனிக் காதலர் தாமும் யாம் வேண்டியக்காதலனை இனிது நேர்வதாதலின் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது என்பதாம்.

(வி-ரை) உம்மை வருவிக்கப்பட்டது. நம்மிடத்து ஆசையுடைமையால் மறாரென்பதுதோன்ற காதலரென்றாள். (10)

115-ம் அதி - அலரறிவுறுத்தல் - முற்றிற்று.

களவியல் முற்றிற்று.

(பரி-உரை) இனிக் கற்புப் பதினெட்டதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கட் பிரிவாற்றாமை கூறுகின்றார்.

(உரை) இனிக் கற்புப் பதினெட்டதிகாரத்தாலே சொல்லத்தொடங்கி முதலிலே பிரிவாற்றாமை சொல்லுகின்றார். உ-ம். *

116-ம் அதிகாரம்—பிரிவாற்றாமை

(பரி-உரை) அஃதாவது: வரைந்தெய்தியபின் தலைமகன் அறம்பொருளின்பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினுந் தலைமகளைப் பிரிந்து செல்லும்; செல்லுஞான்று அப்பிரிவினை அவளாற்றாளாந்தன்மை. அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழிகூறலும், அவடனக்குத் தலைமகடானே அவன் குறிப்பானுணர்ந்து கூறலும், பிரிவுணர்த்திய வழிக் கூறலும், தலைமகன் பிரிந்துழி ஆற்றுவிக்குந் தோழிக்குத் தலைமகள் மறுத்துக்கூறலுமென நால்வகையாற் கூறப்படும்.

(உரை) அஃதாவது: மணம் செய்துகொண்டபின் தலைவன் அறம் பொருளின்பங்களின் பொருட்டுத் தலைவியைப்பிரிந்து தூரத்திலும், அவ்விடத்திலும் செல்லுநாளில், அப்பிரிவை அவள் பொறுக்கமாட்டாதவளாந்தன்மையாம். அது இங்கே பிரிவை அறிவித்த தலைவனுக்குத் தோழி சொல்லலும், தோழிக்குத் தலைவி அவன் குறிப்பால் அறிந்து சொல்லலும், பிரிவை அறிவித்தவிடத்துச் சொல்லலும், பிரிந்தவிடத்து ஆற்றுவிக்குவிடத்துத் தோழிக்குச் சொல்லலும் என நால்வகையாலே சொல்லப்படும்.

[பிரிந்து கடிதின் வருவலென்ற தலைமகற்குத் தோழி சொல்லியது]

செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

(பரி-உரை) செல்லாமை உண்டேல் எனக்கு உரை - நீ யெம்மைப் பிரிவாமை யுண்டாயின் அதனை யெனக்குச் சொல், மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்கு உரை-அஃதொழியப் பிரிந்துபோய் விரைந்து வருதல் சொல்வையாயின் அதனை அப்பொழுது உயிர்வாழ்வார்க்குச் சொல் எ-று.

---

* (இறையனாரகப்பொருள்) கற்பினுட்டுறவே கடிவரையின்றே, ஓதல் வல் பகைதணிவினையே, வேந்தர்க்குற்றுழிப் பொருட்பிணிபரத்தையென் றாங்கவாறே உவ்வயிற்பிரிவே. (தொல்காப்பியம்) கற்பெனப்படுவது கரணமாடுபுணரக், கௌற்குறிமரபிற் கிழவன்கிழத்தியைக், கொடைக்குரிமரபினோர் கொடுப்பக்கொள்வதுவே. (அகப்பொருள்விளக்கம்) பொற்பமைப்பிற் கற்பெனப்படுவது, மகிழ்வுமூடலு மூடனுணர்த்தலும், பிரிவும் பிறவு மருவியதாகும்.

தலைமகளை யொழித்து எனக்கென்றாள், தானவளென்னும் வேற்றுமை யின்மையின். அக்காலமெல்லாமாற்றியிருந்து அவ்வரவு காணவல்லளல்லள், பிரிந்தபொழுதே யிறந்துபடுமென்பதாம். அழுங்குவித்தல் பயன். இதனைத் தலைமகள் கூற்றாக்கி யுரைப்பாருமுளர்.

(ப-ரை) செல்லாமையுண்டேல்-(நீ எம்மைப்) பிரியாமை உண்டாயின், எனக்கு-எனக்கு, உரை-(அதனைச்)சொல்லு, மற்று-அதுநீங்க, நின்வல்வரவு-(பிரிந்துபோய்) நின்விரைந்து வருதலை, வாழ்வார்க்கு - (அப்பொழுது) உயிர் வாழ்வார்க்கு, உரை-சொல்லு எ-று.

(க-ரை) நீ யெம்மைப் பிரியாமை யுண்டாயினதனை யெனக்குச்சொல் லஃதொழியப் பிரிந்துபோய் விரைந்துவருதல் சொல்லுவையாயினதனை யப் பொழுதுயிர் வாழ்வார்க்குச் சொல்லென்பதாம்.

(வி-ரை) தலைவியை யொழித்து எனக்கென்றாள், தான் அவள் என்கிற வேற்றுமையில்லாமையால். நீ பிரிந்திருக்குங் காலமெல்லாம் பொறுத் திருந்து அவ்வரவுகாணும் வலிமையுடையளல்லள் பிரிந்தபொழுதே இறந்து படுவளென்பதாம். அழுங்குவித்தல்-பயன். (1)

[பிரிவு தலைமகன் குறிப்பானறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது]

இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு.

(பரி-உரை) அவர் பார்வல் இன்கண் உடைத்து - தழையுங் கண்ணியுங் கொண்டு பின்னின்றஞான்று அவர் நோக்குமாத்திரமும் புணர்ச்சி குறித்த மையான் நமக்கின்பமுடைத்தாயிருக்கும், புணர்வு பிரிவஞ்சும் புன்கண் உடைத்து-இன்று அப்புணர்ச்சிதான் நிகழாநிற்கவும் அது பிரிவரென்றஞ்சு மச்சத்தினை யுடைத்தாயிற்று, அவரன்பினிலைமையிது எ-று.

பார்வலென்றதனாற் புணர்ச்சிபெறாத பின்னிலைக்காலம் பெறப்பட்டது. புன்கணென்னுங் காரணப்பெயர் காரியத்தின்மேலாயிற்று. அவ்வச்சத்தினை யுடைத்தாதலாவது * "முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக் கள்ளினு மகிழ்செய்பு மெனவுரைத்து மமையாரென், னொள்ளிழை திருத் தும்" பண்டையிற் சிறப்பால் அவன் பிரிதற் குறிப்புக்காட்டி அச்சஞ்செய்த லுடைமை. அழுங்குவித்தல்-பயன்.

(ப-ரை) (தழையுமாலையுங்கொண்டு பின்னின்றநாளில்) அவர்பார்வல் அவரது பார்வைமாத்திரமும், (புணர்ச்சி குறித்தலையால்) இன்கணுடைத்து (நமக்கு) இன்பமுடைத்தாயிருந்தது, (இன்று அப்புணர்ச்சிதான் நடந்து கொண்டிருக்கவும்) புணர்வு-அப்புணர்ச்சி, பிரிவஞ்சும்-பிரிவரென்றஞ்சுகிற புன்கண் - அச்சத்தினை, உடைத்து - உடைத்தாயிற்று (அவரன்பினிலைமை இது) எ-று.

* கலி, பாலை-3.

(க ரை) தழையுங் கண்ணியுங்கொண்டு பின்னின்ற ஞான்றவர் நோக்கு மாத்திரமும் புணர்ச்சி குறித்தமையா னமக்கின்ப முடைத்தாயிருக்குமின்று அப்புணர்ச்சிதானிகழா நிற்கவுமது பிரிவரென்றஞ்சு மச்சத்தினையுடைத்தா யிற் றவரன்பினிலைமை யிதுவென்றவா றென்பதாம்.

(வி-ரை) ஆல்-அசை. பார்வலென்றவதனாலே புணர்ச்சிபெறாமல் தலைவன் பின்னின்றகாலம் பெறப்பட்டது. புன்கண்-துன்பம். அது காரணத்தின் மேலாயிற்று. அவ்வச்சத்தினையுடைத்தாதலாவது புணரும்போது தன்னை மிகப்புகழ்தலாலும், அணிதிருத்தலாலும், தலைவன் பிரிதற்குறிப்புக்காட்டி அச்சஞ்செய்தலுடைமை. அழுங்குவித்தல்-பயன். (2)

[இதுவுமது]

அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.

(பரி-உரை) அறிவு உடையார் கண்ணும் பிரியேனென்ற தஞ்சொல்லும் நம்பிரிவாற்றாமையும் அறிதலுடையராய காதலர்கண்ணும், ஓரிடத்துப் பிரிவு உண்மையான்-ஒரோவழிப் பிரிவு நிகழ்தலான், தேற்றம் அரிது-அவர் சொல்லும் தலையளியும்பற்றி நம்மாட்டன்புடையரெனத் தேறுந்தேற்றம் அரிதாயிருந்தது எ-று.

அரோ-அசைநிலை. உம்மை உயர்வுசிறப்பின்கண் வந்தது.

(ப - ரை) அறிவுடையார்கண்ணும் - (பிரியேனென்றதஞ்சொல்லையும் நம்பிரிவு பொறாமையையும்) அறிதலுடையவராகிய காதலரிடத்தும், ஓரிடத்து - ஒரோவழி, பிரிவு - பிரிவுதலை, உண்மையான் - உண்டாதலால், தேற்றம் - (அவர்சொல்லும் தலையளியும்பற்றி நம்மேல் அன்புடையவரென்று தெளியுந்) தெளிவு, அரிது-அரிதாயிருந்தது எ-று.

(க-ரை) பிரியேனென்ற தஞ்சொல்லும் நம் பிரிவாற்றாமையு மறிதலுடையராய காதலர்கண்ணுமொரோவழிப்பிரிவு நிகழ்தலானவர் சொல்லுந் தலையளியும்பற்றி நம்மாட்டன்புடையரெனத் தெளிந்தேற்ற மரிதாயிருந்ததென்பதாம்.

(வி-ரை) அரோ-அசைநிலை. உம்மை-உயர்வுசிறப்பு. (3)

[இதுவுமது]

அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு.

(பரி-உரை) அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின்-எதிர்ப்பட்டஞான்றே லையளி செய்து நின்னிற் பிரியேன் அஞ்சலென்றவர் தாமே பின் பிரிவாயின், தெளித்த சொல் தேறியார்க்குத் தவறு உண்டோ - அவர்க்கன்றி

அவர் தெளிவித்த சொல்லை மெய்யெனத் தெளிந்தார்க்குக் குற்றமுண்டோ எ-று.

தேறியாரென்பதை தன்னைப் பிறர்போற்கூறல். சொல்லுஞ் செயலு மொவ்வாமைக் குற்றம் அவர்க்கெய்தும், அஃதெய்தாவகை யழுக்குவி யென்பதை கருத்தை.

(ப-ரை) ஆளித்த-(தெரிப்பட்டாளே) தலையளிசெய்த, அஞ்சலென் றவர்-(உன்னைவிட்டுப் பிரியேன்) அஞ்சாதிருவென்றவர் (தாமே), நீப்பின். (பின்னே) பிரிவாராயின், (அவர்க்கல்லாமல்) தெளித்தசொல் - (அவரால்) தெளிவிக்கப்பட்ட சொல்லை, தேறியார்க்கு-(மெய்யென்று) தெளிந்தவர்க்கு, தவறு-குற்றம், உண்டோ-உளவோ எ-று.

(க-ரை) எதிர்ப்பட்டளான்றே தலையளிசெய்த நின்னிற் பிரியேனஞ்ச லென்றவர் தாமே பின்பிரிவாராயினவர்க்கன்றி யவர் தெளிவித்த சொல்லை மெய்யெனத் தெளிந்தார்க்குக் குற்றமுண்டோ என்பதாம்.

(வி-ரை) தேறியாரென்றது தன்னைப் பிறர்போற் சொல்லியது. சொல்லும் செயலும் ஒத்திராமைக்குற்றம் அவர்க்கு உண்டாம், அது உண்டாகாதபடி அழுக்கச் செய்யென்பது கருத்தை. (4)

[இதவுமது]

ஓம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு.

(பரி-உரை) ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல் - என்னுயிரைச் செல்லாமற் காத்தியாயின், அதனையாளுதற்கமைந்தாருடைய செலவினை அழுக்குவிப்பாயாக, மற்று அவர் நீங்கிற் புணர்வு அரிது - அழுக்குவிப்பாரின்றி அவர் செல்வாராயின் அவராலாளப்பட்ட வுயிருஞ்செல்லும், சென்றுப் பின்னவரைக் கூடுதல் எனக்கரிதாம் எ-று.

ஆளுதற்கமைதல் - இறைவராதற்குத் தெய்வத்தாலேற்புடையராதல். மற்று-வினைமாற்றின்கண் வந்தது.

(ப-ரை) ஓம்பின் - (என்னுயிரைச்செல்லாமற்) காப்பாற்றுவையாயின் அமைந்தார் - (அதனை ஆளுதற்கு) அமைந்தவராகி, பிரிவு-செலவை, ஓம்பல் அழுக்குவிப்பாயாக, மற்று-அழுக்குவிப்பா ரில்லாமல், அவர்-அவர், நீங்கின் செல்வாராயின் (அவரால் ஆளப்பட்ட உயிரும் செல்லுமாதலால்), புணர்வு (பின்பு அவரைக்) கூடுதல், அரிது-(எனக்கு) அரிதாம் எ-று.

(க-ரை) என்னுயிரைச் செல்லாமற் காத்தியாயி னதனையாளுதற்கமைந் தாருடைய செலவினை யழுக்குவிப்பாயாக அழுக்குவிப்பாயன்றி அவர் செல்வாராயினவரா லாளப்பட்ட வுயிருஞ்செல்லும் சென்றுல் பின் அவரைக் கூடுதலெனக்கரிதாம் என்பதாம்.

(வி·ரை) ஆல் - அசை. ஆளுதற்கமைத்தல் - தலைவராதற்கு ஊழால் ஏற்புடையராதல்.

(5)

[தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்துசொல்லிய தோழிக்குச் சொல்லியது]

பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்
நல்குவ ரென்னு நசை.

(பரி·உரை) அவர் பிரிவு உரைக்கும் வன்கண்ணராயின் - நங்கவவுக் கடுமையறிந்த தலைவர்தாமே நம்முனின்று தம்பிரிவினையுணர்த்தும் வன் கண்மை யுடையராயின், நல்குவர் என்னும் நசை அரிது - அத்தன்மையார் பின்பு நம்மாற்றாமை யறிந்துவந்து தலையளி செய்வரென்றிருக்குமாசை விடப்படும் எ-று.

அருமை-பயன்படுதலில்லாமை. கூடியிருந்தே அன்பின்றிப் பிரிவெண் ணுதலும் உணர்த்தலும் வல்லராயினார் பிரிந்துபோய் அன்புடையராய் நம்மை நினைத்துவந்து நல்குதல் யாண்டையதென்பதாம். அழுங்குவித்தல் பயன்.

(ப·ரை) அவர் - (நமதுபிரிவு பொறாமையறிந்த) அத்தலைவர்தாமே (நம்முன்னின்றும்), பிரிவுரைக்கும்-(தம்) பிரிவை அறிவிக்கும், வன்கண்ண ராயின் - அருளில்லாமையை யுடையராயின் (அத்தன்மையரான பின்பு), நல்குவரென்னு நசை-(நம்பொறாமையை அறிந்துவந்து) தலையளி செய்வா ரென்னுமாசை, அரிது விடப்படும் எ-று.

(க·ரை) நங்கவவுக்கடுமை யறிந்ததலைவர் தாமே நம்முன்னின்று தம் பிரிவினை யுணர்த்தும் வன்கண்மை யுடையராயினாராயின் அத்தன்மைய ராயபின்பு நம்மாற்றாமை யறிந்துவந்து தலையளி செய்வரென்றிருக்குமாசை விடப்படும் என்பதாம்.

(வி·ரை) அருமை-பயன்படுதலில்லாமை. கூடியிருந்தே அன்பில்லாமற் பிரிவெண்ணுதலும் அறிவித்தலும் வல்லவராயினார் பிரிந்துபோய் அன்புடை யராகி நம்மை நினைத்துவந்து அளித்தல் எவ்விடத்ததென்பதாம். அழுங்கு வித்தல் பயன்.

(6)

[இதுவுமது]

துறைவன் றுறந்தமை தூற்றாகொன் முன்கை
யிறையிறவா நின்ற வளை.

(பரி·உரை) துறைவன் துறந்தமை-துறைவன் என்னைப் பிரியலுற்ற மையை, முன்கையிறை இறவாநின்ற வளை தூற்றாகொல் - அவனுணர்த் ாமற் றாமேயுணர்ந்து என் முன்கையினிறையினின்றும் கழலாநின்ற ளைகள் எனக்கறிவியாவோ? அவனுணர்த்தவுணர்ந்துவந்து நீயறிவித்தல் வண்டுமோ? எ-று.

முன்னே நிகழ்ந்தமையிற் றுறந்தமையென்றும், கேட்டதுணையான் மெலிந்து ஆற்றாமையின் இறவாநின்றவென்றுங் கூறினாள். அழுங்குவித்து வந்து கூறற்பாலை யல்லையாய் நீயும் இவ்வளைகள் செய்தெனவே செய்தாயெனப் புலந்து கூறியவாறு.

(ப-ரை) துறைவன்-செய்தநிலத்தலைவன், துறந்தமை-(என்னைப்) பிரியலுற்றமையை, (அவன் அறிவிக்காமல் தாமே அறிந்து) முன்கையிறை-(என்) முன்கையிறையினின்றும், இறவாநின்ற வளை - கழலாநின்ற வளையல்கள், நூற்றாகொல்-(எனக்கு) அறிவியாவோ (அவன் அறிவிக்க அறிந்துவந்து நீ அறிவித்தல் வேண்டுமோ?) எ-று.

(க-ரை) துறைவனென்னைப் பிரியலுற்றமையை யவனுணர்த்தாமற்றாமே யுணர்ந்து என் முன்கையினிறையினின்றும் கழலாநின்ற வளைகளெனக் கறிவியாவோ? அவனுணர்த்த வுணர்ந்துவந்து நீ யறிவித்தல் வேண்டுமோ என்பதாம்.

(வி-ரை) முன்னே நிகழ்ந்தமையால் துறந்தமையென்றும், கேட்டவளவில் மெலிந்து பொறாமையால் இறவாநின்றவென்றும் சொல்லினாள். அழுங்குவித்து அதுவந்து சொல்லுந் தன்மையையல்லாற நீயும் இவ்வளைகள் செய்தெனவே செய்தாயென்று பிணங்கிச் சொல்லியபடி. (7)

[இதுவுமது]

இன்னா தினனில்லூர் வாழ்த லதனினு
மின்னா தினியார்ப் பிரிவு.

(பரி-உரை) இனன் இல் ஊர் வாழ்தல் இன்னாது-மகளிர்க்குத் தங்குறிப்பறியுந் தோழியரில்லாத வேற்றூரின்கண் வாழ்தலின்னாது; இனியார்ப் பிரிவு அதனினும் இன்னாது-அதன்மேலுந் தங் காதலரைப்பிரிதல் அதனினுமின்னாது எ-று.

தலைவன் செலவினை யழுங்குவித்து வாராது உடன்பட்டுவந்தமை பற்றிப் புலக்கின்றாளாகலின், இனனில்லூரென்றாள். உலகியல் கூறுவாள் போன்று தனக்கவ்விரண்டு முண்மை கூறியவாறு.

(ப-ரை) இனனில்லூர்-(மகளிர்க்குத் தங்குறிப்பறிகிற) தோழியரில்லாத வேற்றூரினிடத்து, வாழ்தல்-வாழுதல், இன்னாது - துன்பஞ்செய்வதாகும் (அதன்மேலும்) இனியார்ப்பிரிவு - (தங்) காதலரைப்பிரிதல, அதனினும் அவ்வாழ்தலைக்காட்டிலும், இன்னாது-துன்பஞ்செய்வதாகும் எ-று.

(க-ரை) மகளீர்க்குத் தங்குறிப்பறியுந் தோழியரில்லாத வேற்றூரின்கண் வாழ்தலின்னாது அதனின்மேலுந் தங்காதலரைப்பிரித லதனினுமின்னாதென்பதாம்.

(வி-ரை) தலைவன் செல்லுதலை அழுங்குவித்து வாராது உடன்பட்டு வந்தமைபற்றிப் பிணங்குகின்றாளாகலால் இனனில்லூரென்றாள். உலகரை

சொல்லுகின்றபோ தனக்கு அவ்வாழ்வும் பிரிவும் உண்டாயிருக்கை சொல்லியபடி.

(8)

[காமஞ் தீயேபோன்ற தானின்றவிடத்தைச் சுடுமாகலான் நீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது]

தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ.

(பரி உரை) தீத்தொடிற் சுடிற் சுடலல்லது - தீத் தன்னைத் தொட்டாற் சுடுமாயிற் சுடுதலல்லது, காமநோய்போல விடிற் சுடல் ஆற்றுமோ-காமமாகிய நோய்போலத் தன்னையகன்றாற் றப்பாது சுடுதலை வற்றே, மாட்டாது எ-று.

சுடுமாயினென்பது மந்திரமருந்துகளாற் றம்பிக்கப்படாதாயி னென்ற வாறு. காமத்திற்கதுவுமில்லையென்பான் வானா சுடலென்றான். அகறல்-நோமை. சுடலென்பது முன்னும் கூட்டப்பட்டது. தீயினுங்கொடியதனை யாற்றுமாறென்னை யென்பதாம்.

(பத) தீ-நெருப்பானது. தொடின் - (தன்னைத்) தொட்டால், சுடிற் (சுட) லல்லது-சுட்டாற் சுடலல்லது, காமநோய்போல-காமமாகிய நோயைப் போல, விடின்-(தன்னை) விட்டு நீக்கினால், சுடலாற்றுமோ (தப்பாது) சுடல் லல்லதோ? எ-று.

(க-ரை) நீ தன்னைத் தொட்டாற் சுடுமாயிற் சுடுதலல்லது காமமாகிய நோய்போலத் தன்னை யகன்றாற் றப்பாது சுடுதலை வற்றோமாட்டாது என்பதாம்.

(வி-ரை) சுடினென்றது மந்திர மருந்துகளாலே தம்பிக்கப்படாதாயி னென்றபடி. காமத்திற்கு அதுவும் இல்லையென்றற்கு சும்மாசுடலென்றான். நோக்கல் - அனுபவியாமை. சுடல் முன்னும் கூட்டப்பட்டது. தீயினும் கொடியதனை கான் பொறுக்கும்விதம் என்னையென்பதாம்.

(9)

[தலைவியர் பலரும் பிரிவாற்றியிருப்பர், அது நீ செய்கின்றிலை யென்ற தோழிக்குச் சொல்லியது]

அரிதாற்றி யல்லலோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

(பரி-உரை) நீ சொல்லுகின்றதொக்கும், அரிது ஆற்றி அல்லல்நோய் நீக்கி - பிரிவுணர்த்தியவழி அதற்குடம்பட்டுப் பிரியுங்கால் நிகழும் அல்ல லாகிய நோயை நீக்கி, பிரிவு ஆற்றிப் பின் இருந்து வாழ்வார் பலர் - பிரிந்தால் அப்பிரிவுதன்னையுமாற்றிப் பின்னுமிருந்து உயிர்வாழுமவரிர் உலகத்துப் பலர் எ-று.

பண்டையிற் சிறப்பத் தலையளிபெற்றின்புறுகின்ற வெல்லக்கண்ணே நிகழ்ந்த தன்புறுதற்குடம்படுதல் அரியதொன்றாகலின் அரியதனைச்

செய்தென்றம், செல்லுர் தேயத்த அவர்க்கியாத ழுமென்றம், வருர் தணையும் யாமாற்றிபிருக்குமாறென்னென்றம், அவ்வாவுதான் எஞ்ஞான்ற வந்தெய்தமென்றம், இவ்வாற்றுனிசழுங்கவலை மனத்த நீக்காதாகலான் அல்லனெய் நீக்கியென்றர், பிரிந்தால் வருந்தணையும் அகத்த கிகழும் காமவேதனையும் புறத்த யாழிசை, மது, தென்றலென்றிவை முதலாக கொந்த இதனை வளர்ப்பனவும் ஆற்றலரியவாகலிற் பிரிவாற்றியென்றம், தங்காதலரை பின்றியமையா மகளிருன் இவையெல்லாம்பொறத்தப் பின்னுமிருந்த உயிர் வாழ்வார் ஒருவருமில்லையென்பத குறிப்பாற்றோன்றப் பின்னிருந்த வாழ் வார் பலரென்றன் கூறினுன். அரிதென்பத வினைக்குறிப்புப்பெயர். பிரிவின்கணிகழ்வனவற்றைப் பிரிவென்றுன். செய்த, நீக்கி, ஆற்றியென்பன ஒசைவகையான் அவ்வவற்றதருமை புணர கின்றன. சிறப்பும்மை விகாரத் தாற்றொக்கத. யாணுமிறந்த படுவலென்பத கருத்த.

(ப-ரை) (நீ சொல்லுகின்றத ஒக்கும்) அரிதாற்றி-(பிரிவை அறிவித்த விடத்த) அதற்கு உடன்பட்டு, அல்லனெய் - (பிரியும்போத உண்டாகிற) தன்பநோயையும், நீக்கி-ஒழிக்த, பிரிவாற்றி - (பிரிந்தால்) அப்பிரிவையும் பொறத்த, பின்னிருந்த - பின்னும் இருந்த, வாழ்வார் - உயிர்வாழ்மகளிர், பலர்-(உலகத்திற்) பலர் எ-று.

(க-ரை) நீ சொல்லுகின்றதொக்கும், பிரிவுவுணர்த்தியவழி யதற்குடன் பட்டுப் பிரியுங்காணிகழு மல்லனெயினைபு நீக்கிப் பிரிந்தால் பிரிவு தன்னை மாற்றிப் பின்னுமிருந்த உயிர்வாழ்மகளி ருலகத்தப் பலரென்பதாம்.

(வி-ரை) முன்னிலுஞ் சிறக்கத் தலையளிபெற்ற இன்பத்தை அனுப விக்கிற சமயத்தில் அதனைபிழந்த தன்பத்தை அனுபவித்தற்கு உடன்படுத்த அரியதொன்றுகலால் அரிதாற்றியென்றம், செல்லுந்தேசத்திலே அவருக்கு யாத சம்பவிக்குமோவென்றம், அவர் வருமளவும் நாம் பொறுத்திருக்கும் விதம் என்னென்றம், அவ்வாவுதான் மறுபடி என்றைக்குவந்த கிடைக் குமோவென்றம், இவ்விதக்களாலே தோன்றுகிற சலலை மனத்தைவிட்டு நீக்காதாகலால் அல்லனெய் நீக்கியென்றம், பிரிந்தால் வருமளவும் உள்ளே தோன்றுகிற காமவேதனையும், புறத்தில் வீணை, பிரை சந்திரன், தென்றல் இவைமுதலாய் வந்த அதனை வளர்ப்பவையும் பொறத்தல் அருமையாகலால் பிரிவாற்றியென்றம், தம்காதலரை விட்டிருக்கமாட்டாத மகளிருன் இவை பெல்லாம் பொறத்தப் பின்னும் இருந்த உயிர்வாழவல்லவர் ஒருவரும் இல்லையென்பத குறிப்பினுலே தோன்ற பின்னிருந்துவாழ்வார் பலரென்றுச் சொல்லினுன். பிரிவிலே நிகழ்பவைகளைப் பிரிவென்றுன். செய்த, நீக்கி, ஆற்றி யென்பவை ஒசைவகையால் அவைகளினருமைபுணர கின்றன. பிரிவையுமென்னு மும்மை விகாரத்தாற்றொக்கத. யாணும் இறந்த பகுதி (10) வென்பத கருத்த.

116-ம் அதி - பிரிவாற்றுமை - முற்றிற்று.

117-ம் அதிகாரம்—படர்மெலிந்திரங்கல்

(பரி-உரை) அது படரான் மெலிந்திரக்கலென விரியும், அஃதாவது: பிரிகாற்றுனாய தலைமகள் தானுறகின்ற தன்பத்தினை எப்பொழுதும் கினைத் தலின்·அக்கினைவான் மெலிந்திரக்குதல். அதிகாரமுறைமையும் இதனானே பினக்கும்.

(உரை) அஃதாவது பிரிவு பொறக்கமாட்டாதவளாகிய தலைவி தான் உறத்தகின்ற தன்பத்தை எப்போதும் கினைத்தலின் அக்கினைவால் மெலிந்த ரக்கலாம். அதிகாரமுறைமையும் இதனாலே பினக்கும்.

[காமநோயை வெளிப்படுத்தல் கின்னுறுக்கலோதென்ற தோழிக்குச் சொல்லியது]

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவர்
கூற்றுநீர் போல மிகும். [க்

(பரி-உரை) நோயை யான் மறைப்பேன் · இந்நோயைப்பிறரறிதலுணி ான் மறையாகின்றேன்; இஃதோ இறைப்பவர்க்கு ஊற்றுநீர்போல மிகும்- ற்பவும் இஃத அந்நாண்வரை கில்லாது நீர் வேண்டுமென்றிறைப்பவர்க்கு ற்றுநீர் மிகுமாறுபோன் மிகாகின்றது எ-று.

அம்மறைத்தலாற் பயனென்னென்பதுபட கின்றமையின், மன் ஒழி சைக்கண் வந்தது. "இஃதோ செல்வர்க்கொத்த னென்யான்" என்புழிப் பால சண்டுச் சுட்டுப்பெயரீறு திரிக்தகின்றது. இஃதோர் நோயை யன்ற பாடம் ஓதலாருமுனர்; அது பாடமன்மை யறிக. இனி அதற் ேத்தது நீ செயல்வேண்டுமென்பதாம்.

(பதவு) யான்-நான், நோயை-இந்நோயை, மறைப்பேன்-(பிறரறிதற்கு ணி) மறையாகின்றேன், (நிற்கவும்) இஃதோ-இந்நோயோ, இறைப்பவர்க்கு- ர் வேண்டுமென்று) இறைப்போர்க்கு, ஊற்றுநீர்போல · ஊற்றுகீரைப் ால, மிகும்-மிகும் எ-று.

(க-ரை) இந்நோயைப் பிறரறிதலுணி யான் மறையா கின்றே னிற்கவு ஃதந்நாளைவரை கில்லாதிறைப்பவர்க் கூற்றுநீர் மிகுமாறுபோல் மிகாகின்ற ன்பதாம்.

(வி-ரை) அம்மறைத்தலாலே பயன் யாதென்பதுபட நிற்கையால், மன்- பிசை. இனி அதற்கு அடுத்தது செயல்வேண்டு மென்பதாம். (1)

[சண்டையாதியாமன் மறைத்தல் ஆண்டையாதியத் தாதவிடத லென்று பிரண்டனுன் ஒன்று செயல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.]

காத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும்.

(பரி உரை) இந்நோயைக் கரத்தலும் ஆற்றேன் - இந்நோயை ஈண்டையாரறியாமன் மறைத்தலும் வல்லேனாகின்றிலேன், நோய் செய்தார்க்கு உரைத்தலும் நாணுத் தரும்-ஆகாக்கால், நோய் செய்தவர்க்குரைக்கவெனின், அதுவும் எனக்கு நாணினைத் தாராநின்றது, இனியென்செய்கோ? எ று.

ஒருகாலைக் கொருகான் மிகுதலிற் கரத்தலுமாற்றேனென்றும், சேயிடைச்சென்றவர்க்கு இதுசொல்லித் தூதுவிட்டால் இன்னுமிருந்தேனென்பது பயக்குமென்னுங் கருத்தால் நாணுத் தருமென்றுங் கூறினாள்.

(ப-ரை) இந்நோயை-இக்காமநோயை, கரத்தலு மாற்றேன்-(இவ்விடத்தோர் அறியாமல்) மறைத்தலும் வல்லேனாகின்றிலேன், (ஆகாக்கால்) நோய் செய்தார்க்கு - இந்நோயைச்செய்தார்க்கு, (சொல்லென்பையாயின்) உரைத்தலும்-சொல்லலும், நாணுத்தரும்-(எனக்கு) நாணந்தரும், (இனி என்செய்வேன்?) எ-று.

(க-ரை) இந்நோயை ஈண்டையாரறியாமல் மறைத்தலும் வல்லேனாகின்றிலே னாகாக்கா னோய்செய்தார்க்குரைக்க வெண்ணினதுவு மெனக்கு நாணினைத் தராநின்றதினி யென்செய்கோ வென்பதாம்.

(வி - ரை) ஒருவேளைக்கு ஒருவேளை மிகுதலால் கரத்தலுமாற்றேனென்றும், தூரதேசத்திலேபோயிருப்பவர்க்கு இதுசொல்லித் தூதுவிட்டால் இன்னும் சாவாதிருக்கிறாளென்பது தோன்றுமென்னுங்கருத்தால் நாணுத் தருமென்றும் சொல்லினாள்.

[இதுவுமது]

காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனா வுடம்பி னகத்து.

(பரி-உரை) காமமும் நாணும் - காமநோயும் அதனைச்செய்தவர்க்கு உரைக்கலொல்லாத நாணும், நோனா என் உடம்பின் அகத்து - தம்மைப் பொறாத என்னுடம்பின்கண்ணே, உயிர் காவாத்தூங்கும்-உயிர் காத்தண்டாக அதனிருதலையினுந் தூங்காநின்றன எ-று.

பொறாமை மெலிவானாயது. தூங்குமென்பது, ஒன்றினொன்று மிகாது இரண்டும் ஒத்தசீரவென்பது தோன்ற நின்றது. தூதுவிடவும் ஒழியவும் பண்ணுவனவாய காமநாண்கள் தம்முளொத்து உயிரினை யிறவிடாநின்றன, யான் அவற்றுளொன்றின்கணிற்கமாட்டாமையின் இஃதிற்றேனென்பதாம்.

(ப-ரை) காமமும்-காமநோயும், நாணும்-(அது செய்வதற்குச்) சொல்லவொட்டாத நாணும், என்னோனாவுடம்பினகத்து - (தம்மைப்) பொறாத என்னுடம்பினிடத்து, உயிர் - உயிர், காவா - காவடித்தண்டாக, தூங்கும் (அதி னிருதலையிலும்) தொங்குகின்றன எ-று.

(க-ரை) காமநோயு மதனைச்செய்வதற் கறியித்தலொல்லாத காணும் தம்மைப்பொருத வென்னுடம்பின்கண்ணே புயிர்காத்தண்டாக வவ்விரு தலையுங் தங்காகின்றன என்பதாம்.

(வி-ரை) பொருமை மெலிவிலுலாகியது. தவ்குமென்றது - ஒன்றி லொன்ற மிகாமல் இரண்டும் ஒத்தசோவென்பது தோன்றநின்றது. தாதவிடப் பண்ணுகிற காமமும் ஒழியப்பண்ணுகிற காணும் தம்முன் ஒத்த உயிரை இறக்கச்செய்கின்றன. யான் அவைளுன் ஒன்றில் கிற்கமாட்டாமையால் இது இற்றேவிடுமென்பதாம். (3)

[தலைவியர் காமக்கடற்படார், படினும் அதனை எற்ற புணையாலீர்ந்திக் கடப்பென்ற தோழிக்குச் சொல்லியது]

காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில்.

(பரி-உரை) உண்டு காமக் கடலே-யாவர்க்கும் உளவாய் வருகின்ற இவ்விரண்டனுள்ளும் எனக்குண்டாகின்றது காமக்கடலே, அது நீந்தும் ஏமப் புணை இல்-அதனைநீந்தும் அமைந்திய புணையில்லை எ-று.

இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலை. தாதவிட்டு இதற்குப் புணை யாகற்பாலையாய நீயும் ஆயிற்றிலையென்பது கருத்து.

(ப-ரை) (யாவர்க்கும் உண்டாய்வருகின்ற இரண்டினுள்ளும்) காமக் கடல்-காமக்கடலே, உண்டு-(எனக்கு) உண்டாகின்றது, அது நீந்தும்-அக்கட லைக் கடக்கும், ஏமப்புணை-காப்பாகியபுணை, இல்-(எனக்கு) இல்லை எ-று.

(க-ரை) யாவர்க்கு முளவாய்நின்ற விவ்விரண்டினுள்ளு மெனக்குண் டாகின்றது காமக்கடலே யதனை நீந்துமாறுகிய புணையில்லை என்பதாம்.

(வி-ரை) மன்னிரண்டும் - உம்மிரண்டும் - அசைநிலைகள். தாதவிட்டு இதற்குப் புணையாதற்குரிய நீயும் ஆனயில்லையென்பது கருத்து. (4)

[தாதவிடாமை கோக்கித் தோழியொடு புலந்து சொல்லியது]

துப்பி னெவனுவர் மற்கொ றுயர்வரவு
நட்பினு ளாற்று பவர்.

(பரி-உரை) நட்பினுள் துயர்வரவு ஆற்றுபவர் - இன்பஞ் செய்தற்குரிய ட்பின்கண்ணே துன்பவரவினைச் செய்ய வல்லவர், துப்பின் எவனுவர் கால்-துன்பஞ் செய்தற்குரிய பகைமைக்கண் என்செய்வர்கொல்லோ? -று.

துப்புப் பகையுமாதல் * "துப்பெதிர்க்தோர்க்கே புள்ளாச் சேய்மைய, ட்பெதிர்ந் தோர்க்கே யண்மையண்மையன்" என்பதனுலு மறிக ப்பகைமை நண்டுக் காணுமையின் அவர் செய்வதுமறியப் பெற்றிலேமென்

* புறநானூறு 380.

பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. துயர்வருதலை விலக்கலாயிருக்க அது செய்கின்றிலையெனப் புலக்கின்றமையின், துயர்வரவு செய்தாளாக்கியும் பிறளாக்கியுங் கூறினாள்.

(ப-ரை) நட்பினாள்-(இன்பஞ் செய்தற்கு உரிய) நட்பினிடத்து, துயர்வரவு - துன்பத்தின் வரவினை, ஆற்றுபவர் - செய்யவல்லவர், துப்பின்-(துன்பஞ்செய்வதற்கு உரிய) பகைமையிடத்து, எவனாவர்கொல் - என்ன செய்வரோ? எ-று.

(க-ரை) இன்பஞ்செய்தற்குரிய நட்பின் கண்ணே துன்ப வரவினைச் செய்யவல்லவர் துன்பஞ் செய்தற்குரிய பகைமைக்கண் ணென்செய்வர் கொல்லோ என்பதாம்.

(வி-ரை) அப்பகை இங்கே காணாமையால் அவர் செய்வதும் அறியப் பெற்றிலேனென்பதுபட நிற்கையால் மன் ஒழியிசை. துயர்வருதலை விலக்கலாயிருக்க அது செய்கின்றலையென்று பிணங்குகின்றமையால் தோழியைத் துயர்வரவு செய்தவளாக்கியும் பிறளாக்கியும் சொல்லினாள். (5)

[காமத்தானின்பமுற்றார்க்கு அதனினாய துன்பம் வருமென்ற தோழிக்குச் சொல்லியது]

இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது.

(பரி-உரை) காமம் இன்பம் கடல்-காமம் புணர்வாலின்பஞ் செய்யுங்கால், அவ்வின்பங் கடல்போலப் பெரிதாம்; மற்றஃது அடுங்கால் துன்பம் அதனிற்பெரிது - இனி அதுதானே பிரிவாற்றுன்பஞ் செய்யுங்கால், அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம் எ-று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. அடுங்காலென வந்தமையின், மறுதலையெச்சம் வருவிக்கப்பட்டது. பெற்றவின்பத்தோடொத்துவரின் ஆற்றலாம்; இஃததனதளவன்றென்பது கருத்து.

(ப-ரை) காமம் - காமம், (புணர்ச்சியால் இன்பஞ்செய்யும்போது) இன்பம் - அவ்வின்பம், கடல் - கடல்போற் (பெரிதாம்) மற்றஃது - இனி அக்காமந் தானே, அடுங்கால்-(பிரிவினாலே) துன்பஞ்செய்யும்போது, துன்பம் அத்துன்பம், அதனிற் பெரிது-அக்கடலினும் பெரிதாம் எ-று.

(க-ரை) காமம் புணர்வா லின்பஞ்செய்யுங்கா லவ்வின்பங் கடல்போலப் பெரிது, இனி அதுதானே பிரிவாற் றுன்பஞ்செய்யுங்கால் அத்துன்பம் அக்கடலினும் பெரிதாமென்பதாம்.

(வி-ரை) அடுங்காலெனவந்தமையால், அதற்கெதிரான இன்பஞ்செய்யும்போது என்கிறசொல் வருவிக்கப்பட்டது. பெற்றவின்பத்தோடு ஒத்துவரிற் பொறுக்கக்கூடும். இது அப்படிப்பட்டதல்லவென்பது கருத்து. (6)

[காமக்கடல் நிறைபுணையாக நீந்தப்படுமென்றாட்குச் சொல்லியது]

காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்.

(பரி-உரை) காமக் கடும்புனல் நீந்திக் கரை காணேன் - காமமாகிய கடலை நீந்தாதேனல்லேன், நீந்தியும் அதற்குக் கரைகாண்கின்றிலேன்; யாமத்தும் யானே உளேன் - அக்காணாமைக்காலந்தான் எல்லாருந் துயிலும் அரையிருளாயிற்று. அவ்வரை யிருட்கண்ணும் அதற்கொரு துணையின்றி யானே யாயினேன், ஆயும் இறந்துபட்டுய்ந்துபோகாதுளேனாகாநின்றேன், ஈதொரு தீவினைப்பயனிருந்தவாறென்? எ-று.

கடுமை ஈண்டு மிகுதிக்கணின்றது. உம்மை முன்னுங் கூட்டப்பட்டது. யானேயாயினேனென்பது நீ துணையாயிற்றிலையென்னுங் குறிப்பிற்று.

(ப-ரை) காமக்கடும்புனல் - காமமாகிய கடலை, நீந்தி - கடந்தும், கரை காணேன் - (அதற்கு) கரைகாண்கின்றிலேன், (அக்காணாமைக்காலந்தான் எல்லாரும் நித்திரைசெய்யும் பாதியிரவாயிற்று) யாமத்தும்-அப்பாதியிரவிலும், யானே-(அதற்கு ஒருதுணையில்லாமல்) யானேயாயினேன், (ஆகியும்) உளேன்-இறவாதிருக்கிறேன் (ஈதொரு தீவினைப்பயன் இருந்தவிதம் என்) எ-று.

(க-ரை) காமமாகியகடலை நீந்தாதேனல்லேன் நீந்தியுமதற்குக்கரை காண்கின்றிலேனக்காணாதகாலந்தா னெல்லாருந் துயிலுமரையிருளாயிற்று. அவ்வரையிருட்கண்ணு மதற்கொரு துணையின்றி யானேயாயினேன். ஆயுமிறந்து பட்டுய்ந்து போகாதுளேனாகாளின்றே னீதொருவினைப் பயனிருந்தவாறென்பதாம்.

(வி-ரை) உம்மை முன்னுங் கூட்டப்பட்டது. யானேயாயினே னென்றது நீ துணையாயினா யில்லையென்னுங் குறிப்பிற்று. (7)

[இரவின் கொடுமை சொல்லி யிரங்கியது]

மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லை துணை.

(பரி-உரை) இரா அளித்து-இவ்விரா அளித்ததாயிருந்தது, மன் உயிர் எல்லாம் துயிற்றி என்னல்லது துணை இல்லை-உலகத்து நிலைபெறுகின்ற உயிர்களையெல்லாந் தானே துயிலப்பண்ணுதலான் என்னையல்லது வேறு துணை யுடைத்தாயிற்றில்லை எ-று.

துயிற்றியெனத் திரிந்துநின்ற வினையெச்சம் அவாய்நிலையான் வந்த உடைத்தாதலோடு முடிந்தது. துணையோ டொன்றுகின்ற உயிர்களெல்லாம் விட்டு இறந்துபடுமெல்லையேனாய என்னையே துணையாகக் கோடலின் அறிவின்றென்பதுபற்றி அளித்தென்றாள்; இகழ்ச்சிக்குறிப்பு.

(ப-ரை) இரா-இவ்விரவு, அளித்த-அன்புடைத்தாயிருந்தது, மன்னுயி
ரெல்லாம்-(உலகத்தில்) னிலைபெற்ற உயிர்களெயெல்லாம், துயிற்றி-(தானே)
தூக்கச்செய்தலால், என்னல்லது-என்னையல்லது, துணை-(வேறு) துணையை,
இல்லை (உடைத்தாயிற்) றில்லை எ-று.

(க-ரை) இவ்விராவளித்தாயிருந்த துலகத்து நிலைபெறுகின்ற வுயிர்க
ளெல்லாந்தானே துயிலப்பண்ணுதலாலென்னையல்லது வேறுதுணை புடைத்
தாயிற்றில்லை என்பதாம்.

(வி-ரை) துணையோடு ஒன்றுகின்ற உயிர்களெயெல்லாம்விட்டு இறந்த
படுஞ் சமயமுடைபேருகிய என்னையே துணையாகக் கொள்ளுதலால்
அறிவுடைத்தன்றென்பது பற்றி அளித்தென்றான். இகழ்ச்சிக்குறிப்பு. (8)

[இதுவுமது]

கொடியார் கொடுமையிற் றுங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா.

(பரி-உரை) இக்கான் நெடிய கழியும் இரா - காதலொடு காமின்புற்ற
மூன்றுன்களிற் குறியவாய் அவர் பிரிவாற்றேமாகின்ற இக்கான்களிலே
நெடியவாய்ச் செல்கின்ற கங்குல்கள், கொடியார் கொடுமையின் தாம்
கொடிய - அக்கொடியாரது கொடுமைக்கு மேலே தாங்கொடுமை செய்யா
கின்றன எ-று.

தன்னுற்றுமை கருதாது பிரிதலின், கொடியாரென்றான். கொடுமை
கடிதின்வாராது நீட்டித்தல். அவர் பிரிவாலும் நீட்டிப்பாலுமுளதாய
துற்றுமைக்குக் கண்ணோடாமைமேலும் பண்டையினெடியவாய்க் கொடிய
வாகின்றனவென்பதாம்.

(ப-ரை) (காதலோடு காம் இன்புற்ற கான்களிலே குறியவையா
யிருந்த) இக்கான் - (அவர் பிரிவைப் பொறுக்கமாட்டாத) இக்கான்களிலே,
நெடிய-நெடியவையாய், கழியும்-செல்லுகின்ற, இரா-இரவுகள், கொடியார்-
அக்கொடியவரது, கொடுமையின்-கொடுமைக்குமேலே, தாம்-தாம், கொடிய-
கொடுமை செய்யாகின்றன எ-று.

(க-ரை) காதலோடு காமின்புற்ற மூன்றுன்களிற் குறியவாய் பிரிவாற்றே
மாகின்ற விக்கான்களிலே நெடியவாய்ச்செல்கின்ற கங்குல்கள் அக்கொடியா
ரது கொடுமைக்குமேலே தாங்கொடுமை செய்யாகின்றன வென்பதாம்.

(வி-ரை) தன்பொருமை நினையாது பிரிதலால் கொடியாரென்றான்.
கொடுமை கடிதிலே வராமல் நீட்டித்தல். அவர் பிரிவாலும் நீட்டிப்பாலும்
உண்டாகிய பொருமைக்கு முதற்கொடாமையன்றி முன்னையினெடியவாய்
கொடியவாகாகின்றன என்பதாம். (9)

[கின்கண்கள் போழகு அழிகின்றனவாகலின் அழற்பாலை
யல்லை யென்றுட்குச் சொல்லியது]

உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண்.

(பரி உரை) உள்ளன்போன்று உள்வழிச் செல்கிற்பின் · மனம்போலக் காதலருள்ள தேயத்துக் கடிதிற்செல்ல வல்லனவாயின், என் கண் வெள்ள நீர் நீத்தல்-என் கண்கள் இவ்வனம் வெள்ளமாகிய தன்னீரை நீத்தா எ-று.

அது மாட்டாமையின் இனி அவற்றிற்கு நீத்ததலே யுள்ளதென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. மனத்திற்குச் செலவாவது நினைவேயாகலின் உள்ளம்போன்றென்றும், மெய்க்கு நடந்துசெல்ல வேண்டுதலிற் கண்கள் அதனைநீடுசென்று காதலரைக்காண்டல் கூடாதென்னுங் கருத்தாற் செல்கிற்பினென்றுங் கூறினாள். இதனால் வருகின்றவதிகாரமுந் தோற்றமாய் செய்யப்பட்டது.

(ப-ரை) உள்ளம்போன்று-மனம்போன்று, உள்வழி-(காதலர்) இருக்கிற நாட்டிற்கு, செல்கிற்பின்-(கடிதிற்) செல்ல வல்லனவாயின், என்கண்-எனது கண்கள், வெள்ளநீர்-வெள்ளமாகிய (தன்) னீரை, நீந்தல்-நீந்தாவென்பதாம்.

(க-ரை) மனம்போலக் காதலருள்ள தேயத்துக் கடிதிற்செல்ல வல்லனவாயின் என்கண்கள் இவ்வனம் வெள்ளமாகிய தன்னீரை நீந்தாவென்பதாம்.

(வி ரை) அதமாட்டாமையால் இனி அவைகளுக்கு நீத்ததலே உள்ளதென்பது படநின்றமையால், மன்-ஒழியிசை ஓ-அசை. மனத்திற்குச் செலவு நினைவேயாகலால் உள்ளம்போன்றென்றும், மெய்க்கு நடந்துசெல்ல வேண்டுதலால் கண்கள் அதனைநீடுபோய்க் காதலரைக் காணல் கூடாதென்னுங் கருத்தால் செல்கிற்பினென்றும் சொல்லினாள். இதனால் வருகிற அதிகாரமும் தோற்றமாய் செயப்பட்டது.

(10)

117-ம் அதி - படர்மெலிந்திரங்கல் - முற்றிற்று.

118-ம் அதிகாரம்—கண்விதுப்பழிதல்

(பரி-உரை) அஃதாவது: கண்கள் தங்காட்சிவிதுப்பான் வருந்ததல். காட்சிவிதுப்புத் தலைமகனைக் காண்டற்கு விரைதல். இது படர்மெலிந்த வழி நிகழ்வதாகலின், பட்டமெலிந்திரங்கலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: கண்கள் தலைவனைக் காணுதற்கு விரைதலாலே வருந்ததல். இது படராலே மெலிந்தவிடத்து நிகழ்வதாகலால் அதன்பின் வைக்கப்பட்டது.

[கண்கள் கலுழ்ந்து தம்மழகு இழவாநின்றன, நீ யாற்றல்வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது]

கண்டாங் கலுழ்வதெவன் கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.

(பரி-உரை) தண்டா நோய் யாம் கண்டது தாம் காட்ட-இத்தன்மையை யாமறிந்தது தாமெமக்குக் காதலரைக் காட்டலானன்றே;

கண் தாம் கலுழ்வது எவன் கொல்-அன்று அத்தொழிலவாய கண்கள் இன்று எம்மைக் காட்டச்சொல்லி யழுகின்றது என் கருதி? எ-று.

காட்டவென்பதற்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. இன்றுந் தாமே காட்டுதலல்லது யாங்காட்டுதல் யாண்டைய தென்பதாம்.

(ப-ரை) தண்டாநோய்-இத்தீராத (காம) நோயை, யாம்-நாம், கண்டது-அறிந்தது, தாம் - தாம், காட்ட - (காதலரை எமக்குக்) காட்டலாலன்றோ, கண்டாம்-(அன்று அதுசெய்த) கண்கள்தாம், கலுழ்வது-(இன்று எம்மைக் காட்டச்சொல்லி) அழுகிறது, எவன்கொல்-யாதுநினைத்து? எ-று.

(க-ரை) அத்தணியா நோயினை யாமறிந்தது காதலரைத்தாம் எமக்குக் காட்டலா னன்றோ அன்று அத்தொழில்வாய் கண்கள் இன்று எம்மைக் காட்டச்சொல்லி யழுகின்றது என்கருதி என்பதாம்.

(வி - ரை) காட்டவென்பதற்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது. இன்றுந் தாமே காட்டுதலல்லது யாம்காட்டுதல் எவ்விடத்ததென் பதாம். (1)

[இதுவுமது]

தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப் பைத லுழப்ப தெவன்.

(பரி-உரை) தெரிந்து உணரா நோக்கிய உண்கண் - மேல்விளைவதனை யாராய்ந்தறியாது அன்று காதலரை நோக்கிநின்ற உண்கண்கள், பரிந்து உணராப் பைதல் உழப்பது எவன் - இன்று இது நம்மால் வந்ததாகலிற் பொறுத்தல் வேண்டுமெனக் கூறுபடுத்துணராது துன்பமுழப்பது என்கருதி? எ-று.

விளைவது - பிரிந்துபோயவர் வாராமையிற் காண்டற்கரியராய் வருந் துதல். முன்னே வருவதறிந்து அது காவாதார்க்கு அது வந்தவழிப் பொறுத்தலன்றே யுள்ளது. அதுவுஞ் செய்யாது வருந்துதல் கழிமடச் செய்கை யென்பதாம்.

(ப - ரை) தெரிந்துணரா - (மேல்விளைவதனை) ஆராய்ந்தறியாமல், நோக்கிய-(அன்று தலைவரைப்) பார்த்த, உண்கண்-(மை)யுண்ட கண்கள், (இன்று இது நம்மால் வந்ததாதலால் பொறுத்தல் வேண்டுமென்று) பரிந் துணரா - கூறுபடுத்தி அறியாமல், பைதலுழப்பது - துன்பமனுபவிப்பது, எவன்-யாது நினைத்து? எ-று.

(க-ரை) மேல்விளைவதனை யாராய்ந்தறியாதன்று காதலரை நோக்கி நின்ற வுண்கண்களின்று; இது நம்மால் வந்ததாகலிற் பொறுத்தல் வேண்டு மெனக் கூறுபடுத்துணராது துன்பமுழப்பதென்கருதி என்பதாம்.

(வி-ரை) விளைவது - பிரிந்துபோய் வராமையால் காணுதற்கரியராக வருந்துதல். முன்னே வருவதை அறிந்து காவாதார்க்கு அது வந்தவழிப்

பொறுத்தலன்றே உள்ளது. அதவும் செய்யாது வருத்தல் மிகுந்த அறியாமையாலாகிய செயலென்பதாம்.

(2)

[இதவுமது]

கருமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிருநகத் தக்க துடைத்து.

(பரி-உரை) நாம் கருமென நோக்கித் தாமே கலுழும் இது-இக்கண்கள் அன்று காதலரைத் தாமே விரைத்தநோக்கி இன்றுந் தாமே பிரிந்தழுகின்றவிது, நகத்தக்கது உடைத்து - நம்மாற்சிரிக்கத்தக்க வியல்பினை புடைத்தது எ-று.

கண்களென்பது அதிகாரத்தான் வந்தது. இதவென்றது மேற்கூறிய கழிமடச் செய்கையை. அது வருமுன்னர்க்காப்பார்க்கு நகை விளைக்குமாகலான், நகத்தக்கதுடைத்தென்றான்.

(ப-உரை) (இக்கண்கள்) கருமெனத்தாநோக்கி - (அன்று காதலரைத்) தாமே விரைத்தநோக்கி, தாமேகலுழும்-(இன்றும்) தாமேயிருந்து அழுகின்ற இது - இவ்வறிவாமைச்செயல், நகத்தக்கது - (நம்மாலே) சிரிக்கத்தக்க வியல்பை, உடைத்து-உடையது எ-று.

(க-உரை) இக்கண்களன்று காதலரைத் தாமே விரைத்தநோக்கி என்றுந் தாமே பிரிந்தழுகின்றவிது நம்மாற் சிரிக்கத்தக்க வியல்பினை புடைத்தென்பதாம்.

(வி-உரை) கண்களென்பது அதிகாரத்தால் வந்தது. அச்செயல் வருமுன்னே காப்பார்க்கு நகை விளைக்குமாதலால் நகத்தக்கதுடைத்தென்றான்.

(3)

[இதவுமது]

பெயலாற்று நீருலந்த வுண்க ணுயலாற்று
வுய்வினே யென்க ணிறுத்து.

(பரி-உரை) உண்கண் - உண்கண்கள், உயலாற்று உய்வு இல் கோய் உண்கண் நிறுத்த - அன்று யானுய்யமாட்டாமைக்கேதுவாய ஒழிவில்லாத நோயை என்கண்ணே நிறுத்தி, பெயலாற்று நீர் உலந்த - தாமுமழுதலே மாட்டாவண்ணம் நீர் வற்றிவிட்டன எ-று.

நிறுத்தல் பிரிதலும் பின்கூடாமையுமுடையாரைக் காட்டி அதனால் வலிபெறச்செய்தல். முன் எனக்கின்னுதன செய்தலாற் பின் நமக்கின்னுன நாமே வந்தனவென்பதாம்.

(ப-உரை) உண்கண் - (இத்தமை) புண்டகண்கள், உயலாற்று - (தான் வாழ்க்க) மாட்டாமைக்கு ஏதுவாகிய, உய்வினேய் - ஒழிவில்லாத நோயை,

எக்கண்-எனிடத்த, சிறத்த-சிறத்தி, பெயலாற்று (தாரும்) அழுமாட்டாத வண்ணம், கீருலர்த்த-கீர்வற்றிவிட்டன எ-று.

(க-ரை) உண்கண்கள் வாலுய்யமாட்டாமைக் கேதுவாகிய வொழி வில்லாத கோலை யெள்கண்ணேசிறத்தித் தாருமருதலுமாட்டாவாம்வண் ணம் கீர்வற்றிவிட்டனவென்பதாம்.

(வி-ரை) சிறத்தல் பிரிதலும் பின் கூடாமையு முடையாரை எனக்குக் காட்டி அதனால் கோலை கிலபெறச்செய்தல். முன் எமக்குத் தன்பக்கல் செய்தலால் பின் தமக்குத் தன்பக்கல் தாமே வந்தனவென்பதாம். (4)

[இதவுமை]

படலாற்று பைத லுழக்குங் கடலாற்றுக்
காமநோய் செய்தவென் கண்.

(பரி-உரை) கடல் ஆற்றுக் காமநோய் செய்த என்கண் - எனக்குக் கடலுஞ் சிறிதாம்வண்ணம் பெரிதாய காமநோயைச் செய்த என்கண்கள், படல் ஆற்று பைதல் உழக்கும் - அத்தீவினையாற்றுமுந் தயில்கிலவாய்த் தன்பத்தையு முழவாகின்றன எ-று.

காமநோய் காட்சியான் வந்ததாகலின், அதனைக் கண்களே செய்தாக்கிக் கூறினுள். தன்பம் அழுதலானுயது.

(ப-ரை) (எனக்கு) கடலாற்று-கடலும் சிறிதாம் வண்ணம், (பெரிதாகிய) காமநோய் - காமநோயை, செய்த - செய்த, என்கண் - எனது கண்கள், (அத்தீவினையாலே) படலாற்று - (தாரும்) தங்குதிலவாகி, பைதலுழக்கும் தன்பத்தையும் அநுபவிக்கின்றன எ று.

(க-ரை) எனக்குக் கடலுஞ் சிறிதாம் வண்ணம் பெரிதாய காமநோயைச் செய்த வென்கண்க ளத்தீவினையாற் ருழுந்துயிலிலவாய்த் தன்பமு முழவா கின்றன வென்பதாம்.

(வி-ரை) காமநோய் * காட்சியால் வந்ததாகலால் அதனைக் கண்கள் செய்ததாக்கிச் சொல்லினுள். தன்பம் அழுதலாகியது. (5)

[இதவுமை]

ஓஓ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.

(பரி-உரை) எமக்கு இந்நோய் செய்த கண் தாம் இதற்பட்டது-எமக் கிக்காமநோயினைச் செய்த கண்கடாமும் இத்துயிலாதழுதற் கண்ணே பட்டன, ஓஓ இனிதே-மிகவுமினிதாயிற்ற எ-று.

ஓவென்பது மிகுதிப்பொருட்கண்வந்த குறிப்புச்சொல். தம்மால்கருதி முற்ற வெமக்கு அது நீர்ந்தாற்போன்ற தென்பதாம்.

* காட்சி-காணுதல்.

(ப-ரை) எமக்கு-எமக்கு, இக்கோய்-இக்காமநோயை, செய்த-செய்த, கண்-கண்கள், தாம்-தாமும், இதற்பட்டது-இத்துக்காமல் அழுதலிலே பட்டது, ஒஒவினிதே (மிகவும்) இனிதாயிற்று எ-று.

(க-ரை) எமக்கு இக்காமநோயினைச்செய்த கண்கடாமும் தயிலாதழுதற் கண்ணேபட்டது மிகவுமினிதாயின வென்பதாம்.

(வி-ரை) ஒஒ வென்பது மிகுதிப்பொருளில் வந்த குறிப்புச்சொல். தம்மால் வருத்தமடைந்த எமக்கு அவ்வருத்தம் நீர்ந்ததுபோன்றதென்பதாம். ()

[இதவுமது]

உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்.

(பரி-உரை) விழைந்து இழைந்துவேண்டி அவர்க்கண்ட கண்-விழைந்து உண்ணெகிழ்ந்து விடாதே அன்று அவரைக் கண்ட கண்கள், உழந்துழந்து உள்ளீர் அறுக-இன்று இத் தயிலாதழுவ்கலாய துன்பத்தினை புழந்துழந்து தம்மகத்துள்ள நீர் அற்றேபோக எ-று.

அடுக்கு இடைவிடாமைக்கண் வந்தது. அறுதலாகிய இடத்தகிழ்பொருளின்மேழில் இடத்தின்மேனின்றது.

(ப-ரை) விழைந்து-விரும்பி, இழைந்து-உட்குழைந்து, வேண்டி-வேண்டி, அவர்க்கண்டகண்-(அன்று) அத்தலைவரைப்பார்த்த கண்கள், உழந்துழந்து-(இன்றதுக்காமல்) அழுதற்றுன்பத்தை, அனுபவித்து-அனுபவித்து, உண்ணீர்-(தம்) முள்ளிருக்கிற நீர், அறுக-அற்றப்போகுக எ-று.

(க-ரை) விழைந்துண் ணெகிழ்ந்துவிடாதே யன்றவரைக் கண்டகண்கள் தினித் தயிலாதழுவ்கலாகிய துன்பத்தினை புழந்துழந்து தம்மகத்துள்ளாகிய நீரற்றேபோக என்பதாம்.

(வி-ரை) அடுக்கு இடைவிடாமையில் வந்தது. (7)

[காதலர் பிரிந்துபோயினு ரல்லர் அவரீண்டினர் அவரைக் காணுமளவும் நீ யாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது]

பேணுது பெட்டா ருளர்மன்னே மற்றவர்க்
காணு தமைவில கண்.

(பரி-உரை) பேணுது பெட்டார் உளர்-நெஞ்சால் விழையாதவைத்துச் சான்மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தேயுளர்; மற்று அவர்க் கண்ணுது அமைவில-அவ்வுண்மையாற் பயன்யாது, அவரைக் கண்கள் காணுமென்றன வில்லையாயின எ-று.

செயலாற் பிரிந்தின்றமையிற் பேணுதென்றும், முன்னலம்பாராட்டிப் பிரிச்சமும் வன்புறையுங் கூறினராகலிற் பெட்டாரென்றுங் கூறினள்.

மன் ஒழியிசைக்கண் வந்தது. மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஓகாரம் அசைநிலை. யாஞற்றவுங் கண்கள் அவரைக் காண்டற்கு விரும்பாகின்றன வென்பதாம். இனிக் கொண்கனேயென்ற பாடமாயின், என்கண்கள் தம்மைக் காணுதலமைகின்ற கொண்கனைத்தாங் காணுதலமைகின்றனவில்லை. இவ்வாறே தம்மையொருவர் விழைடாதிருக்கத் தாமவரை விழைந்தார் உலகத்தனரோவென்றவாறாக்க. இதற்கு மன் அசைநிலை.

(ப-ரை) பேணுத-(மனத்தால்) விரும்பாதிருந்த, பெட்டார்-(சொல்லு மாத்திரத்தால்) விரும்பியவர், உளர்மன்-(இங்கே) பிருக்கின்றார், (அவ்விருத்த லாலே பயன்யாத), கண்-கண்கள், மற்ற அவர்க்காணுத-அவரைக்காணுமல், அமைவில-பொறுக்கின்றில எ-று.

(க-ரை) நெஞ்சால் விழையாதவைத்தச் சொன்னமாத்திரத்தால் விழைந்தவரிவ்விடத்தேபுன ரவ்வுண்மையாற் பயன்யாதவரைக் கண்கள் காணுதலமைகின்றன வில்லையாயி னென்பதாம்.

(வி-ரை) செயலாற் பிரிக்தகின்றமையால் பேணுதென்றும், முன்னே கலம்பாராட்டி * பிரிவச்சமும் † வன்புறையும் சொல்லினாகலால் பெட்டா ரென்றும் சொல்லினன். மன்-ஒழியிசை. மற்று-வினைமாற்று. ஓ-அசைநிலை. யான் பொறுக்கவும் கண்கள் அவரைக் காணுதற்கு விரும்புகின்றன வென் பதாம். (8)

[சீபுமாற்றி கின்கண்களுங் குயில்வனவாதல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது]

வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.

(பரி-உரை) வாராக்கால் துஞ்சா - காதலர் வாராதஞான்று அவர் வரவு பார்த்துத் துயிலா, வரின் துஞ்சா-வந்தஞான்று அவர்பிரிவாஞ்சித்துயிலா, ஆயிடைக் கண் ஆரஞர் உற்றன-ஆகலான் அவ்விருவழியும் என்கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தினையுடைய எ-று.

ஆயிடையெனச் சுட்டு நீண்டது. இனி அவற்றிற்குத் துயில் ஒருஞான்று மில்லையென்பதாம்.

(ப-ரை) வாராக்கால்-(காதலர்) வாராத நான்களிலே, துஞ்சா-(அவர் வரவுபார்த்துத்) தூங்காவாம், வரின் - வந்தாள்களிலே, துஞ்சா - (அவர் பிரிவாரென்ற தஞ்சித்) தூங்காவாம், (ஆகலால்) ஆயிடை-அவ்விருவழியும் கண் - எனது கண்கள், ஆரஞருற்றன-பொறுத்தற்கரிய துன்பத்தையுடை யனவாம் எ-று.

---

* பிரிவச்சம்-பிரிதற்கு அஞ்சுதல்.

† வன்புறை-கைவிடேனென்ற பலபிக உறுதிசொல்லல்.

(க-ரை) காதலர் வாராத ஞான்றவர் வரவுபார்த்துத் துயிலாதவர்த ஞான்றவர் பிரிவஞ்சித்துயிலா வாகலானவ்விருமிடியு மென்கண்கள் பொறுத் தற்கரிய தன்பத்தினையுடைய வென்பதாம்.

(வி-ரை) இனி அக்கண்களுக்குத் தூக்கம் ஒருநாளும் இல்லையென் பதாம். (9)

[காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர் கொடுமையை மறைக்கவேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது]

மறைபெற வூரார்க் கரிதன்று லெம்போ
லறைபறை கண்ணு ரகத்து.

(பரி-உரை) எம்போல் அறைபறை கண்ணூர் அகத்த மறை பெறல். எம்மைப்போலும் அறைபறையாகிய கண்ணினையுடையார் தங்கெஞ்சின் கண்டடக்கிய மறையை யறிதல், வூரார்க்கு அரிதன்று. இவ்வூரின்கணுள் ளார்க்கு எளிது எ-று.

மறையென்றது ஈண்டு மறைக்கப்படுவதனை. அகத்து நிகழ்வதனைப் புறத்துள்ளார்க்கறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமை புண்மையின், அறை பறையாகிய கண்ணென்றுன். இங்ஙனஞ் செய்புள்விகாரமாக்காது அறை பறைக் கண்ணென்று பாடமோதுவாருமுளர். யான் மறைக்கவும் இவை வெளிப்படுத்தாநின்றன வென்பதாம்.

(ப-ரை) எம்போல் - எம்மைப்போலும், அறைபறைகண்ணூர் - அறை பறையாகிய கண்ணையுடையவர், அகத்த - (தமது) நெஞ்சிலடக்கிய, மறை பெறல்-இரகசியத்தை அறிதல், வூரார்க்கு-இவ்வூரிலுள்ளவர்க்கு, அரிதன்று- எளிது எ-று.

(க-ரை) எம்மைப்போலு மறையாகின்ற பறையாகிய கண்ணினையுடை யார் தங்நெஞ்சின்கணடக்கிய மறையையறித லிவ்வூரிலுள்ளார்க் கெளிதென் பதாம்.

(வி-ரை) லும்-அசை. மறையென்றது இவ்விடத்து மறைக்கப்படுவதனை. உள்ளே நிகழ்வதைப் புறத்திலுள்ளார்க்கு அறிவித்தலாகிய தொழிலாலே பறையோடு ஒற்றுமையுடைமையால் அறைபறையாகிய கண்ணென்றுன். யான் மறைக்கவும் இவை வெளிப்படுத்துகின்றன என்பதாம். (10)

118-ம் அதி - கண்விதுப்பழிதல் - முற்றிற்று.

119-ம் அதிகாரம்—பசப்புறுபருவரல்

(பரி-உரை) அது பசப்புற்ற பருவமெனவிரியும். அஃதாவது: பசப்புறுதலாலுய வருத்தம். இதனைப் "பக்தெறிர்தவயர்" வென்பதுபோலக் கொள்க. பசப்பாவது பிரிவாற்றுமையான் வருவதோர் நிறவேறுபாடு. இது, தலைமகனைக் காணப்பெறுதவழி நிகழ்வதாகலின், கண்விதுப்பழிதலின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: பசப்புறுதலாலாகிய வருத்தம். பசப்பாவது பிரிவு பொறுமையால் வருவதோர் நிறவேறுபாடு. இது தலைமகனைக் காணப்பெறுத விடத்து நிகழ்வதாகலால் கண்விதுப்பழிதலின்பின் வைக்கப்பட்டது.

[முன் பிரிவுடம்பட்ட தலைமகன் அஃதாற்றுது பசந்தவழித் தன்னுள்ளே சொல்லியது]

நயந்தவர்க்கு நல்காமை நோர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற.

(பரி-உரை) நயந்தவர்க்கு நல்காமை நோர்ந்தேன்-என்னை நயந்தவர்க்கு அதுபொழுது பிரிவையுடம்பட்ட நான், பசந்த என் பண்பு யார்க்கு உரைக்கோ-அதனையாற்றுது இதுபொழுது பசந்தவென்னியல்பினை யார்க்குச் சொல்வேன் எ-று.

பிறவென்பது அசைநிலை. உடம்படாவழி ஒழிதல்குறித்துப் பிரிவுணர்த் தினாகலின் அவன்புடையவென்னுங் கருத்தான் நயந்தவரென்றும், இதனே புடம்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலின் இனி அவரைக்கூடுத லரிதென்னுங்கருத்தான் நல்காமையென்றும், முன்னருடம்படுதலும் பின்னாற்றுது பசத்தலும் பிறர் செய்தனவல்லவென்பாள் பசந்தவென்பண் பென்றும், யான் செய்துகொண்ட தன்பத்தினை இனி யொருவர்க்குச் சொல் லலும் பழியாமென்னுங் கருதலால் யார்க்குரைக்கோவென்றுங் கூறினள்.

(ப-ரை) நயந்தவர்க்கு - (என்னை) விரும்பிய தலைவர்க்கு, நல்காமை- பிரிவை, நோர்ந்தேன் - (அப்போது) உடன்பட்டேன், பசந்த - (அதனைப் பொறுமல் இப்பொழுது) பசப்புநிறமடைந்த, என்பண்பு-என்னியல்பை, யார்க்கு-எவர்க்கு, உரைக்கோ-சொல்வேன் எ-று.

(க-ரை) என்னை நயந்தவர்க் கதுபொழுது பிரிவையுடம்பட்ட யான் அதனையாற்று நிதுபொழுது பசந்தவென்னியல்பினை யார்க்குச் சொல்லுவே னென்பதாம்.

(வி-ரை) பிறவென்றது-அசைநிலை. தான் உடன்படாதவிடத்துப் பிரி வொழிதல்குறித்துப் பிரிவைத் தனக்கு அறிவித்தாராகலால் அவன்புடை யென்னுங்கருத்தால் நல்காமையென்றும், முன்னே உடன்படுதலும் பின்னே பொறுமல் பசத்தலும் பிறர்செய்தவை யல்லவென்றற்கு பசந்தவென்பண் பென்றும், யான் செய்துகொண்ட தன்பத்தை இனி ஒருவர்க்குச் சொல்

தலும் பழியாமென்றுக் கருத்தால், யார்க்குரைக்கோவென்றும் சொல்லினான்.

(1)

[ஆற்றுவனெனக் கவன்றதோழிக்கு ஆற்றுவலென்பதபடச் சொல்லியது]

அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு.

(பரி-உரை) யானுற்றிபுனேனுகவும், பசப்பு-இப்பசப்புத்தான், தம்தார் அவர் என்னும் தகையால்-என்னை புண்டாக்கினுர் அவரென்னும் பெருமிதத்தான், என் மேனிமேல் இவர்தந்த ஊரும்-என்மேனியை மேல் கொண்டுசெலுத்தாநின்றது எ-று.

• "குருதிகொப்புளிக்கும் வேலான் கூற்றன்மா லிவர்ந்து செல்ல" என் புழியும் இவர்தல் இப்பொருட்டாதலறிக, இஃது உரிமைபற்றி யூர்கின்றது, இதற்கு மீ கவலல் வேண்டாவென்பதாம்.

(ப-ரை) (நான்பொறுத்திருக்கவும்) பசப்பு - இப்பசப்பு கிறம், அவர்-அவர், தம்தாரென்னுந் தகையால்-(என்னை) உண்டாக்கினரென்னுங் களிப்பு மிகுதியால், என்மேனிமேல்-என்னுடம்பின்மேல், இவர்தந்த-எறி, ஊரும்-செலுத்தாகின்றது எ-று.

(க-ரை) யானுற்றிபுனேனுகவு மிப்பசப்புத்தானென்னை புண்டாக்கினு ரவரென்னும் பெருமிதத்தா னென்மேனியை மேல்கொண்டு செலுத்தா கின்ற தென்பதாம்.

(வி-ரை) இது உரிமைபற்றி ஊர்கின்றது. இதற்கு மீ கவலப்படாதே என்பதாம்.

(2)

[அழகுநாணுமழியாமல் நீ யாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது]

சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து.

(பரி-உரை) கைம்மாறு கோயும் பசலையும் தந்த - பிரிகின்றனான்றே அவ்விரண்டற்குந் தலைமாறுக இக்காமநோயினையும் பசலையையும் எனக்குத் தந்த, சாயலும் நாணும் அவர் கொண்டார்-என்மெனியழகினையும் நாணினை யும் அவர் கொண்டுபோயினர் எ-று.

தெளிவுரை. அடக்குந்தோறும் மிகுதலான், நோய் நாணிற்குத் தலை மாறுயிற்று. இனி அவர் தந்தாலல்லது அவையுனவாகலும் இலையில காலுங் கூடாவென்பதாம்.

(ப-ரை) (பிரிகின்ற பொழுதே) கைம்மாறு-(அவ்விரண்டிற்கும்) தலை மாறுக, நோயும் பசலையும்-இக்காமநோயையும் பசலையையும், தந்த-

• சிவகசிந்தாமணி விமலையாரிலம்பகம் 1.

(எனக்குத்) தன்னை, சாயலுநாணும் - என்மேனியழகையும் நாணத்தையும், [illegible] அவர்-அவர், கொண்டார்-கொண்டுபோயினர் எ-று.

(க-ரை) பிரிகின்றலுணர்ந்தே யவ்விரண்டிற்குந் தலைமாறுக விக்காம னோயினையும் பசலையையு மெனக்குத்தந் தென்மேனியழகினையும் நாணினையு மவர்கொண்டு சீக்கினரென்பதாம்.

(வி-ரை) நோய்க்கு - நாணும், பசலைக்கு - சாயலும், ஆதலால் எதிர் நினைறை. அடக்குந்தோறு மிகுதலால் நோய் நாணுக்குந் தலை மாறுபிற்று. இனி அவர் தந்தாலல்லது அவை உண்டாதலும், இவை இலவாதலும் கூடாவென்பதாம். (3)

[பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் கற்பிறங்களையு மறிதியாகலின் கீட்டியாதை வருவதென்றவழிச் சொல்லியது]

உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்நிறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு.

(பதவுரை) யான் உள்ளுவன் - அவர் சொற்களை யான் மனத்தா னினையாநிற்பேன்; உரைப்பது அவர்நிறம் - வாக்காலுரைப்பதும் அவர் கற்பிறங்களையே; பசப்புக் கள்ளம் - அங்ஙனஞ் செய்யாநிற்கவும், பசப்பு வந்து நின்றது, இது வஞ்சனையாயிருந்தது எ-று.

பிறவும் ஓவும் அசைநிலை. மெய் மற்றை மனவாக்குக்களின் வழித் தாகலின் அதன்கண்ணும் வாற்பாற்றன்றுயிருக்க வந்தமையின், இதன் செயல் கள்ளமாயிருந்ததெனத் தானுற்றதின்றமை கூறியவாருயிற்று.

(ப-ரை) யான்-தான், உள்ளுவன்-(அவர் சொற்களை மனத்தால்) நினைந் தின்றேன், உரைப்பது - (வாயால்) சொல்லப்படுவதும், அவர்நிறம் - அவர் கற்குணமே, (அப்படிச்செய்யாநிற்கவும்) பசப்பு - பசலைநிறம் (வந்துநின்றது), கள்ளம்-(இது) வஞ்சனையாயிருந்தது எ-று.

(க-ரை) அவர் சொற்களை யான் மனத்தானினையாநிற்பேன் வாய்ல் லுரைப்பது மவர் கற்பிறங்களையே யங்ஙனஞ் செய்யாநிற்கவும் பசப்புவந்து நின்ற திதவஞ்சனையாயிருந்த தென்பதாம்.

(வி-ரை) பிறவும் ஓவும்-அசைநிலைகள். மெய் மற்றை மனவாக்குகளின் வழிபுன்னதாகலால் அதனிடத்தம்வருந்தன்மையதன்றுயிருக்க வந்தபடியால் இதன்செயல் கள்ளமாயிருந்ததென்று தான் பொறக்கின்றமை சொல்லிய படியாயிற்று. (4)

[காதலர் பிரிந்தணித்தாயிருக்கவும் ஆற்றகின்றிலையென்ற தோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது.

உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது.

(பரி-உரை) எக்காதலர் உவக்காண் செல்வார் - பண்டும் எக்காதலர் உற்கே செல்வாராக, என்மேனி பசப்பூர்வதை இவக்காண் - என்மேனி பசப் பூர்வதிற்கேயன்றே? அப்பெற்றியதை இன்ற பிறிதொன்றுமோ? எ-று.

உவக்காண் இவக்காணென்பன ஒட்டிநின்ற விடைச்சொற்கள். தெய வண்மையாற் காலவண்ணம கருதப்பட்டது. அவர்செலவும் பசப்பினது வரவும் பகலிரவுகளின் செலவும் வரவுப்போல்வதறிக்கவைத்த அறியா தாய்போல நீ சொல்லுகின்ற தென்னையென்பதாம்.

(ப-ரை) உவக்காண்-அக்காலத்து, எக்காதலர்-எமது தலைவர், செல்வார். (பிரிந்து) செல்வாராக, என்மேனி - எனதுவடிவம், பசப்பூர்வது - பசலை நிறமடைவது, இவக்காண் - இற்கேயன்றே (அப்படிப்பட்டது இன்று வேறொன்றுமோ?) எ-று.

(க-ரை) பண்டு எக்காதலருஞ் செல்வாராக வென்மேனிப் பசப்பூர்வ திற்கேயன்றே வப்பெற்றியதின்று பிறிதொன்றுமோ வென்பதாம்.

(வி-ரை) உவக்காண் இவக்காணென்பன ஒட்டிநின்ற விடைச்சொற்கள். அவர்செலவும் பசப்பினது வரவும் பகலிரவுகளின் செலவு வரவுகள்போல் வதை அறிந்திருக்கும், அறியாதாய்போல் நீ சொல்லுகின்றது என்னை யென்பதாம். (5)

[இதவுமது]

விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

(பரி-உரை) விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல் - விளக்கினது மெலிவு பார்த்து செருக்கிவரு மிருளேபோல, கொண்கன் முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு - கொண்கன் முயக்கினது மெலிவுபார்த்து செருக்கிவரும் இப்பசப்பு எ-று.

பார்க்குமென்பன இலக்கணைச்சொல். முன் பிரியாதிருக்கவும் தனக் கவகாசம் பார்த்துவரும் பசப்புப் பிரிவுபெற்றால் என்செய்யாதென்பதாம்.

(ப-ரை) விளக்கு - விளக்கினது, அற்றம்பார்க்கும் - சோர்வுபார்த்து செருக்கிவருகிற, இருளேபோல்-இருளைப்போலவே, பசப்பு-இப்பசலை நிறம், கொண்கன்-தலைவனது, முயக்கு-புணர்ச்சியானது, அற்றம் பார்க்கும்-சோர்வு பார்த்து செருக்கிவரும் எ-று.

(க-ரை) விளக்கினது மெலிவுபார்த்து செருக்கிவரு மிருள்போலக் கொண்கனது முயக்கினது மெலிவுபார்த்து செருக்கிவரு மிப்பசப்பென் றாம்.

(வி-ரை) முன் பிரியாதிருக்கவும் தனக்குச் சமயம் பார்த்துவருகிற பசப்புப் பிரிவுபெற்றால் என்னசெய்யாதென்பதாம். (6)

[இதுவுமது]

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு.

(பரி-உரை) புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன்-முன்னொருஞான்று காதலரைப் புல்லிக்கிடந்த யான் அறியாது புடைபெயர்ந்தேன்; அவ்வளவில் பசப்பு அள்ளிக்கொள்வற்று - அப்புடைபெயர்ந்தவளவிலே பசப்பு அள்ளிக் கொள்வதுபோல வந்து செறிந்தது எ-று.

கொள்வதென்பது குறைந்துநின்றது. அள்ளிக்கொள்வது - அள்ளிக் கொள்ளப்படும் பொருள். அப்புடைபெயர்ச்சி மாத்திரத்துக்கு அவ்வாறாயது இப்பிரிவின்கணாமாறு சொல்லவேண்டுமோ வென்பதாம்.

(ப-ரை) புல்லிக்கிடந்தேன்-(முன்னொருநாளிலே காதலரைத்) தழுவிக் கிடந்தநான், புடைபெயர்ந்தேன்-(அறியாது) சற்றுவிலங்கினேன், அவ்வள வில்-அவ்விலங்கிய வளவிலே, பசப்பு-பசலைநிறமானது, அள்ளிக்கொள்வற்றே அள்ளிக்கொள்ளப்படும் பொருள்போல்வந்து நிறைந்தது எ-று.

(க-ரை) முன்னொருஞான்று காதலரைப் புல்லிக்கிடந்த யானறியாது புடைபெயர்ந்தெனப் புடைபெயர்ந்த வளவிலே பசப்பள்ளிக்கொள்வது போல வந்து செறிந்ததென்பதாம்.

(வி-ரை) கொள்ளவென்பது குறைந்துநின்றது. அப்புடைபெயர்ச்சி மாத்திரத்திற்கு அப்படியாகியது இப்பிரிவிடத்து ஆகும் விதம் சொல்ல வேண்டுமோ வென்பதாம். (7)

[நீ யிங்ஙனம் பசக்கற்பாலையல்லையென்ற தோழியொடு
புலந்து சொல்லியது]

பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்.

(பரி-உரை) இவள் பசந்தாள் என்பது அல்லால் - இவள் ஆற்றியிராது பசந்தாளென்று என்னைப் பழிகூறுவதல்லது, இவளை அவர் துறந்தார் என்பார் இல் - இவளையவர் துறந்துபோயினாரென்று அவரைக் கூறுவா ரொருவருமில்லை எ-று.

என்பாரென வேறுபடுத்துக் கூறினாள், தன்னையே நெருங்குதல்பற்றிப் புலக்கின்றமையின்.

(ப-ரை) இவள் - இவள், பசந்தாளென்பதல்லால் - (பொறுத்திராமல்) பசலைநிறமடைந்தாளென்று (என்னைப்) பழிசொல்லுவதல்லது, இவளை இம்மாதை, அவர்-அவர், துறந்தாரென்பார்-துறந்துபோயினாரென்று சொல்லு வார், இல்-இல்லை எ று.

(க-ரை) வெளாற்றியிராது பசந்தாளென் றென்னைப் பழிகூறுத லல்லது இவளை யவர்துறந்துபோயினாரென் றவரைக் கூறுவா ரொருவரு மில்லை யென்பதாம்.

(வி-ரை) தன்னையே நெருங்குதல்பற்றிப் பிணங்குகின்றமையால் என்பாரென வேறுபடுத்தி சொல்லினாள். (8)

[இதுவுமது]

பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார் நன்னிலைய ராவ ரெனின்.

(பரி-உரை) நயப்பித்தார் நன்னிலையராவர் எனின்-இப்பிரிவை யானே யுடம்படும் வகை சொல்லியவர் இன்று நின்கருத்தான் நல்ல நிலையின ராவராயின், என்மேனி பட்டாங்கு பசக்க - என்மேனி பட்டதுபடப் பசப்ப தாக எ று.

நன்னிலையராதல் - நன்மைக்கண்ணே நிற்றலையுடையராதல். பட்டாங் காகவென ஆக்கம் விரித்துரைக்க. முன் இப்பிரிவின் கொடுமையறியாத வென்னை இதற்குடம்படுத்திப் பிரிந்தவர் தவறிலராகவே ;வேண்டுவது, என்மேனியும் பசப்பும் யாதுசெய்யினென்னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

(ப-ரை) நயப்பித்தார் - (இப்பிரிவையானே) உடன்படும் வகைசொல்லி யவர், நன்னிலையராவரெனின்-(இன்று உன்கருத்தால்) நல்ல நிலையினராவ ராயின், என்மேனி-என்னுடம்பு, பட்டாங் (காக)-பட்டதுபட, பசக்க-பசலை நிறமடையக்கடவது எ-று.

(க-ரை) இப்பிரிவை யானே யுடன்படும்வகை சொல்லி யவரின்று ன் கருத்தானல்ல நிலையினராவராயி னென்மேனிப் பட்டதுபடப் பசப்ப ாகவென்பதாம்.

(வி-ரை) நன்னிலையராதல்-நன்மைக்கண்ணே நிற்றலையுடையராதல். ட்டாங்காகவென ஆக்கம் வருவித்துச் சொல்லப்பட்டது. முன் இப்பிரிவின் காடுமையறியாத என்னை இதற்கு உடன்படுத்திப் பிரிந்தவர் தவறிலராகவே வண்டுவது, என்மேனியும் பசப்பும் யாதுசெய்யில் என்னவென்பதுபட ற்கையால் மன் ஒழியிசையில் வந்தது. (9)

[தலைமகளாற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகனை யியற்பழித்தவழி அவள் இயற்பட மொழிந்தது]

பசப்பெனப் பேர்பெறுத னன்றே நயப்பித்தார் நல்காமை தூற்றா ரெனின்.

(பரி-உரை) நயப்பித்தார் நல்காமை தூற்றாரெனின்-அன்று தாங் குறை ப்பித்துக் கூடினவர்க்கு இன்று நல்காமையை நட்டோர் தூற்றாராயின்,

பசப்பெனப் பேர் பெறுதல் கன்றே-பசப்புற்றுரென வேற்றுமையானன்றிப் பசப்புத்தானுயிருனென ஒற்றுமையாற்றுஞ்சொல்ல அப்பெயரைப் பெறுதல் எனக்கு கன்று எ-று.

கட்டாரென்பது அவாய்நிலையான் வந்தது. இயற்பழித்தல்பொருதி புலக்கின்றுளாகலின், இகழ்ச்சிக்குறிப்பாற் கூறினுள். அவரை அருளிலரென்னுது இன்னும் பசத்தாளிவளென்னையே யானுற்ற தெறியாவதென்பதாம்.

(ப-ரை) கயப்பித்தார் - (அன்று) குறையப்பித்துக்கூடினவர்க்கு கல்காமை-(இன்று) அருளாமையை, தற்றுரெனின்-(கட்புற்றுர்) தற்றாயின், பசப்பென-பசப்புத்தானுயிருனென்ற (ஒற்றுமையால்தாம்) சொல் பேர்பெறுதல்-பேராப்பெறுதல, கன்றே-(எனக்கு) கன்றும் எ-று.

(க-ரை) அன்று தாங்குறை கயப்பித்துக் கூடினவர்க்கின்று மையை கட்டோர் தற்றுராயிற் பசப்புளாயிருனென வேற்றுமையானன்றப பசப்புற்றுளாயிருனென வொற்றுமையாற்றுஞ் சொல்ல வப்பெயரைப் பெறுதலெனக்கு கன்றென்பதாம்.

(வி-ரை) கட்பற்றுரென்பது வருவிக்கப்பட்டது. பாங்கி பழித்தற்குப் பொருமற் பிணக்குகின்றுளாதலால் இகழ்ச்சிக்குறிப்பால் சொல்லினுள். அவரை அருளிலரென்னுது இன்னும் பசலை அடைந்தான் இவளென்பதே (10 கான் பொறுக்கும்வழி யென்பதாம்.

118-ம் அதி - பசப்புறுபருவரல் - முற்றிற்று.

120-ம் அதிகாரம்—தனிப்படர்மிகுதி

(பரி-உரை) அது தனியாகிய படர்மிகுதியென விரியும். அஃதாவது படர்மிகுதி தலைவன்கணின்றித் தன்கண்ணதேயாதல் கூறுதல். அது பொருளுநோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லையாயிற்று. இது, பசப்பு வருந்தியாட்குரியதாகலின், பசப்புறுபருவரலின் பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தனியாகிய துன்பமிகுதியாம். அது பசப்புற் வருந்தினவளுக்கு உரியதாகலால் பசப்புறு பருவரலின்பின் வைக்கப் பட்டது.

[காதலரும் தின்னிணுமாற்றுராய்க் கடிதின் வருவர் நீயவரோடு
பேரின்ப நுகர்ச்சியென்ற தோழிக்குச் சொல்லியது]

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றுரே
காமத்துக் காழில் கனி.

(பரி-உரை) தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர்-தம்மாற் காதலிக்கப்ப கணவர் தம்மைக் காதலிக்கப்பெற்ற மகளிர், பெற்றுரே காமத்தைக் காழ் கனி-பெற்றுரன்றே காமநுகர்ச்சியென்னும் * பாலில்லாத கனியை எ-று

* பால் விதை.

காமம்-ஆகுபெயர். அத்த-அவ்வழிக்கண் வந்தது. முன்னை கல்வினை இல்வழிப் பெறப்படாமையிற் பெற்றொன்றும், அவராற்றடையின்றி நுகரப்படுதலிற் காழில்கனியென்றல் கூறிஞன். கற்காதலவர் பிரிதலேயன்றிப் பின் வாராமையுமுடைமையின், அக்கனி யாம் பெற்றிலேமென்பதாயிற்று.

(ப-உரை) தாம்வீழ்வார் - தம்மாலே விரும்பப்பட்ட கணவர், தம்வீழ்தம்மையிரும்ப, பெற்றவர் - பெற்றமகளிர், காமத்த - காமானுபவத்தினை, காழில் லித்தல்லாத, கனி-பழத்தை, பெற்றோ-பெற்றான்றே எ-று.

(க-உரை) தம்மாற் காதலிக்கப்படுங் கணவர் தம்மைக் காதலிக்கப்பெற்றகளிர் பெற்றொன்றே காமநுகர்ச்சியென்னும் பாலில்லாத பழத்தினை யென்பதாம்.

(வி-உரை) காமம்-ஆகுபெயர். காமத்தினை கனியென்றதில் எனதுபிரென்பதுபோல் ஒருவகை ஒற்றுமைப்பொருளில் வந்தது. முன்னை கல்வினை பில்லாதவிடத்துப் பெறக்கூடாமையால் பெற்றொன்றும், அவராலே தடைபில்லாமல் அனுபவிக்கப்படுதலால் காழில்கனியென்றும் சொல்லிஞன். கற்காதலர் பிரிதலேயல்லாமல் பின்வாராமையு முடைமையால் அக்கனி யாம் பெற்றிலேமென்பதாயிற்று.

(1)

[இதுவுமது]

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கு மளி.

(பரி-உரை) வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி-அறமும் பொருளு நோக்கிப் பிரிந்தாற் றம்மையின்றியமையா மகளிர்க்கு அவரையின்றியமை யாக்கணவர் அனவறிந்து வந்து செய்யுந்தலையளி, வாழ்வார்க்கு வானம் பயன்-தன்னையே நோக்கி உயிர்வாழ்வார்க்கு வானம் அனவறிந்து பெய்தாற் போலும் எ-று.

கற்காதலர் கம்மை விழையாமையின் அத்தலையளியில்லையாகலான், மற வறத்தழி அதனுன் வாழ்வார்போல இறந்துபடுதலே நமக்குள்ளதென்பதாம்.

(ப-உரை) (அறமும் பொருளும் இன்பமும் நோக்கிப் பிரிந்தால்) வீழ்ப்பார்க்கு - (தம்மை) விட்டிருக்கமாட்டாத மகளிர்க்கு, வீழ்வார் - (அவரை) விட்டிருக்கமாட்டாத கணவர், அளிக்கும்-அனவறிந்துவந்து செய்கிற, அளியையளி, வாழ்வார்க்கு - (தன்னையேநோக்கி) உயிர்வாழ்வார்க்கு, வானம்-முழு, பயந்தற்று-அனவறிந்துவந்து பெய்வதுபோலும் எ-று.

(க-உரை) அறமும் பொருளு மின்பமு நோக்கிப் பிரிந்தாற் றம்மையின்றியமா மகளிர்க்கவரை யின்றியமையாக் கணவனவறிந்துவந்துசெய்யுந் தலையளி தன்னையேநோக்கி யுயிர்வாழ்வார்க்கு வானமனவறிந்து பெய்தாற் போலுமென்பதாம்.

(வி-ரை) கற்காதலர் நம்மை விரும்பாமையால் அத்தலையளி யில்லாத லால் மழைவறந்தவிடத்த அதனால் வாழாதார்போல் இறந்தலே நமக்கு உள்ளதென்பதாம். (2)

[இதவுமது]

வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு.

(பரி-உரை) வீழுநர் வீழப்படுவார்க்கு அமையுமே - தாம் விழைபுங் கணவரான் விழையப்படுமகளிர்க்கு எற்புடைத்தா, வாழுநம் என்னும் செருக்கு-காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்த கடிதின்வருவர் வந்தால் காமின்புற்ற வாழ்தலென்றிருக்குந் தருக்கு எ-று.

காம் அவரான் வீழப்படாமையின், நமக்கமையாத இறந்தபாடென் பதாம்.

(பதவுரை) வீழுநர் - (தம்மால்) விரும்பப்படுதிற கணவரால், வீழப்படு வார்க்கு-விரும்பப்படுதிற மகளிர்க்கு, (காதலர் பிரிந்தாலும் நம்மை நினைந்த கடிதில் வருவார்) வாழுமென்னும்-(வந்தால் காம் இன்புற்ற) வாழ்வாமென் றிருக்திற, செருக்கு-தருக்கு, அமையுமே-எற்புடைத்தாம் எ-று.

(க-ரை) தாம் விழைபுங் கணவரால் விழையப்படு மகளிர்க் கேற்புடைத் தாக் காதலர் பிரிந்தாராயினு நம்மை நினைத்துக் கடிதின் வருவர் வந்தால் காமின்புற்ற வாழ்தலென்றிருக்குந் தருக்கென்பதாம்.

(வி-ரை) காம் அவரால் விரும்பப்படாமையால் நமக்கு அமைவு இறந்த படுதலே யென்பதாம். (3)

[காதலரை யியற்பழித்தலேயஞ்சி அவரருளின்மை மறைத்த நீ
கடவுட் கற்பினையாகலிற் கற்புடைமகளிரால் நன்கு
மதிக்கப்படுதியென்ற தோழிக்குச் சொல்லியது]

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின்.

(பரி-உரை) வீழப்படுவார்-கற்புடைமகளிரால் நன்குமதிக்கப்படுவாரும், தாம் வீழ்வார் வீழப்படாரெனிற் கெழீஇயிலர் - தாம் விரும்புங் கணவரான் விரும்பப்படாராயிற் றீவினையாட்டியர் எ-று.

நிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. கெழீஇயின்மை-நல்வினையின்மை; அஃதை அருத்தாபத்தியாற் றீவினையுடைமையாயிற்று. தீவினையுடையேற்கு அன்நன்குமதிப்பாற் பயனில்லையென்பதாம்.

(ப-ரை) வீழப்படுவார் - (கற்புடை மகளிராலே) நன்குமதிக்கப்படு வாரும், தாம்வீழ்வார் - தம்மால் விரும்பப்படுதிற கணவரால், வீழப்படா ரெனின்-விரும்படாராயின், கெழீஇயிலர்-தீவினையுடையரே யாவர் எ-று.

(க ரை) கற்புடை மகளிரால் நன்குமதிக்கப்படுவாருந் தாம் விரும்புங் கணவரான் விரும்பப்படாராயிற் றீவினையாட்டிய ரென்பதாம்.

(வி-ரை) உம்மை விகாரத்தால் தொக்கது. கெழீஇயின்மை-நல்வினையில்லாமை. தீவினையுடையேனுக்கு அந்நன்குமதிப்பால் பயனில்லையென்பதாம்.

[அவர்மேற்காதலுடைமையின் அவர் கருத்தறிந்தாற்றினா யென்ற தோழிக்குச் சொல்லியது]

நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை.

(பரி உரை) நாம் காதல் கொண்டார் நமக்கு எவன் செய்ப - நம்மாற் காதல் செய்யப்பட்டவர் நமக்கென்ன வின்பத்தைச் செய்வர், தாம் காதல் கொள்ளாக்கடை-அவ்வாறே தாமும் நங்கட் காதல் செய்யாவழி எ-று.

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அக்காதலுடைமையால் நாம் பெற்றது துன்பமே யென்பதாம்.

(ப-ரை) நாங்காதல் கொண்டார் - நம்மாலே காதல் கொள்ளப்பட்டவர், நமக்கு-நமக்கு, எவன் - என்னவின்பத்தை, செய்ப-செய்வார்? (அப்படியே) தாங்காதல் கொள்ளாக்கடை - தாமும் (நம்மிடத்துக்) காதல் செய்யாத விடத்து எ-று.

(க-ரை) நம்மாற் காதல்செய்யப்பட்டவர் நமக்கென்ன வின்பத்தைச் செய்வர். அவ்வாறே தாமுநங்கட் காதல் செய்யாவழி என்பதாம்.

(வி-ரை) அக்காதலுடைமையால் நாம் பெற்றது துன்பமே என்பதாம். ஓ-அசைநிலை.

(5)

[இதுவுமது]

ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது.

(பரி-உரை) காமம் ஒருதலையான் இன்னாது-மகளிர் ஆடவரென்னும் மிருதலையினும் வேட்கை ஒருதலைக்கண்ணேயாயின் அஃதின்னாது, காப்போல இருதலையானும் இனிது - காவினது பாரம்போல இருதலைக்கண்ணு மொப்பின், அஃதினிது எ-று.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன. கா - ஆகுபெயர். என்மாட்டுண்டாய வேட்கை அவர்மாட்டுமுண்டாயின், யானிவ்வாறு துன்ப முழத்தல் கூடுமோ வென்பதாம்.

(ப-ரை) (மகளிர் ஆடவர் எனப்படுகிற இரண்டிடங்களிலும்) காமம்-ஆசையானது, ஒரு தலையான்-ஓரிடத்தில் (உண்டாயின்), இன்னாது-துன்பஞ் செய்வதாம், காப்போல-காவடிப்பாரம்போல, இருதலையானும்-இரண்டிடங்களிலும் (ஒத்திருக்குமாயின்) (அது) இனிது-இன்பஞ்செய்வதாம் எ-று.

(க-ரை) மகளிராடவரென்று மிருதலையிலும் வேட்கை யொருதலைக் கண்ணேயாயி னஃதின்னுத காவினத பாரம்போல விருதலைக் கண்ணு மொப்பி னஃதினிதென்பதாம்.

(வி-ரை) ஆணுருபுகள் கண்ணுருபின் பொருளில் வந்தன. கா-அதன் பாரத்தக்கு ஆகுபெயர். என்னிடத்த உண்டாகியவாசை அவரிடத்தும் உண்டாயின் தான் இப்படித் தன்பமனுபவித்தல்கூடுமோ வென்பதாம். (6)

[இதவுமத]

பருவரலும் பைதலுங் காணுன்கொல் காம
னொருவர்க ணின்றொழுகு வான்.

(பரி-உரை) ஒருவர்கண் நின்று ஒழுகுவான் காமன் - காமநுகர்தற்குரிய விருவரிடத்தும் ஒப்பநிற்றலொழிந்த ஒருவரிடத்தே நின்று பொருகின்ற காமக்கடவுள், பருவரலும் பைதலும் காணுன்கொல்-அவ்விடத்துப் பசப்பா னுய பருவரலும் படர்மிகுதியும் அறியான்கொலோ! எ-று.

விழைவும் வெறுப்புமின்றி எல்லார்கண்ணு நிகழ்ந்தன வறிதற்குரிய கடவுளும் என்கண் வேறுபட்டான், இனியாதுய்யுமாறென்னை யென்பதாம்.

(ப-ரை) (காமத்தை அனுபவித்தற்குரிய இருவரிடத்தும் ஒத்தலில் லாமல்), ஒருவர்கணின்று-ஒருவரிடத்தேநின்று, ஒழுகுவான்-போர்செய்கின்ற வனுகிய, காமன்-காமன், (அவ்விடத்துப் பசப்பாலாகிய) பருவரலும்-நோயை யும், பைதலும்-தன்பமிகுதியையும், காணுன்கொல்-அறியானோ? எ-று.

(க-ரை) காமநுகர்தற்குரிய விருவரிடத்து மொப்பநிற்றலை யொழிந்த ஒருவரிடத்தேநின்று போர்செய்கின்ற காமக்கடவு ளவ்விடத்துப் பசப் பாலுய பருவரலும் படர்மிகுதியு மறியான்கொல்லோ வென்பதாம்.

(வி-ரை) விருப்பு வெறுப்பில்லாமல் எல்லாரிடத்தும் நிகழ்ந்தவை அறிதற்குரிய காமக்கடவுளும் என்னிடத்து வேறுபட்டான் இனி பிழைக்கும் வழி யாதென்பதாம். (7)

[தலைமகன் றூதுவாக்காணுது சொல்லியது]

வீழ்வாரி னின்சொற் பெருஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணு நில்.

(பரி உரை) வீழ்வாரின் இன்சொற் பெருது வாழ்வாரின் - தம்மால் விரும்பப்படுதல் காதலர்நிறத்துநின்றும் ஒரின்சொல்லளவும்பெருதே பிரி வாற்றி உயிர்வாழ்கின்ற மகளிர்போல, வன்கணர் உலகத்து இல்-வன்கண்மை புடையார் இவ்வுலகத்தில்லை எ-று.

காதலர்நிறத்துச்சொல் யாதானும் எனக்கினிதென்னுங் கருத்தால், இன்சொலென்றுன். இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. யான் வன் கண்ணேனுகலின் அதனும் பெருது உயிர்வாழாகின்ற னென்பதாம்.

(ப-ரை) வீழ்வாரின் - தம்மால் விரும்பப்படுங் காதலரிடத்திருந்து, இன்சொல் - ஓரின்சொலளவும், பெறா அது-பெறாது, வாழ்வாரின் - (பிரிவு பொறுத்து) உயிர் வாழ்கின்ற மகளிர்போல, வன்கணார் - தைரியமுடையவர், உலகத்து-உலகில், இல்-இல்லை எ-று.

(க-ரை) தம்மால் விரும்பப்படுங் காதலர் திறத்துநின்றும் ஓர் இன்சொல்லளவும் பெறாதே பிரிவாற்றி யுயிர்வாழ்கின்ற மகளீரைப்போல வன்கண்மையுடையா ரிவ்வுலகத்திலில்லை என்பதாம்.

(வி-ரை) காதலரிடத்துச்சொல் எதுவாயினும் எனக்கு இனிதாமென்னுங் கருத்தால் இன்சொலென்றாள். உம்மை விகாரத்தால் தொக்கது. நான் வன்கணேனாதலால் அதுவும் பெறாது உயிர்வாழ்கின்றே னென்பதாம்.

[இதுவுமது]

நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு.

(பரி-உரை) நசைஇயார் நல்கார் எனினும்-என்னால் நச்சப்பட்ட காதலர் என்மாட்டன்பிலரேயாயினும், அவர்மாட்டு இசையும் செவிக்கு இனிய-அவர் திறத்தியாதானு மோர்சொல்லும் என்செவிக்கினியவாம் எ-று.

இழிவுசிறப்பும்மை, அவர் வாரலரென்னுஞ் சொல்லாயினும் அமையுமென்பதுபடநின்றது, அதுவும் பெற்றிலேனென்பதாம்.

(ப-ரை) நசை இயார் - (என்னால்) விரும்பப்பட்ட தலைவர், நல்காரெனினும்-(எனக்கு) அருள்செய்யாராயினும், அவர்மாட்டு - அவரிடத்து, இசையும் - எச்சொற்களும், செவிக்கு-என் காதுகளுக்கு, இனிய-இன்பஞ் செய்வனவாம் எ-று.

(க-ரை) என்னா னச்சப்பட்ட காதலரென்கண் ணன்பிலரேயாயினும் அவர்திறத்தி யாதானுமோர் சொல்லுமென் செவிக்கினிய வென்பதாம்.

(வி-ரை) இழிவு சிறப்பும்மை. அவர் வாராரென்னுஞ் சொல்லாயினும் இனிதாய் அமையுமென்பதுபடநின்றது. அச்சொல்லும் பெற்றிலேனென்பதாம்.

[தலைமகன் றூதுவரப்பெறாது தான்றூதுவிடக் கருதியாள் நெஞ்சொடு சொல்லியது]

உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

(பரி-உரை) உறார்க்கு உறுநோய் உரைப்பாய் நெஞ்சு - நின்னோடுறாதார்க்கு நின்னுறுநோயை யுரைக்கலுற்றே நெஞ்சே! கடலைச் செறாய்-யோற்றாயாயினும் அரிதாய அதனையொழிந்து, நினக்குத்துயரஞ்செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக, அஃதெளிது எ-று.

உரைக்கலுற்றது அளவிறந்த நோயாகலானும் கேட்பார் உறவிலராகலானும் அது முடிவதொன்றன்று, முடிந்தாலும் பயனில்லையென்பது கருதாது, முயலாநின்றாயென்னுங்குறிப்பான், வாழியவென்றாள்.

(ப-ரை) உரு அர்க்கு (உள்ளுடு) உருதலர்க்கு, உறநோய் (உனத) மிகுந்தலையை, உரைப்பாய்-சொல்லலுற்ற, சொஞ்சு - சென்சே (நீ பொரு யாயிலும் அரிதாகிய அதனைவிட்டு) கடலை - (உனக்குத் தயாஞ்செய்கின்ற) கடலை, செரு அயர்-தார்க்க முயற்சிசெய் (அது எளிது) எ-று.

(க-ரை) கின்னுடுருதார்க்கு கின்னுறநோயையுரைக்கலுற்ற சென்சே நீயாற்றுயாயிலு மரிதாய வதனையொழிந்த கினக்குத் தயாஞ்செய்கின்ற கடலைத் தார்க்க முயல்வாயாக அஃதெளிதென்பதாம்.

(வி-ரை) சொல்லலுற்றது அளவிறந்த நோயாகலாலும் கேட்போர் உறவிலராகலாலும் அதுமுடியாது, முடித்தாலும் பயன் இல்லையென்பது கருதாமல், முயல்கின்றாய் என்கிற குறிப்பால் வாழியவென்றான். (10)

120-ம் அதி - தனிப்படர்மிகுதி - முற்றிற்று.

121-ம் அதிகாரம்—நினைந்தவர்புலம்பல்

(பரி-உரை) அஃதாவது: முன்கூடிய ஞான்றையின்பத்தினை நினைந்த தலைமகடனிலையெய்தலும், பாசறைக்கட்டலைமகன்றனிலையெய்தலுமாம். இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல்பற்றிப் பன்மைப்பாலாற் கூறப்பட்டது. இது, படர்மிகுதி தன்கண்ணதாக நினைந்த தலைமகட்கு மூரித்தாகலின், அவ்வியைபுபற்றித் தனிப்படர்மிகுதியின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: முன்கூடிய காலத்தினின்பத்தை நினைந்த பாசறை யிடத்தைத் தலைவன் தனிமையடைதலும் தலைவி தனிமையடைதலும் ஆம். இது படர்மிகுதி தன்னிடத்ததாக நினைந்த தலைவிக்கும் உரித்தாகலால், இச்சம்பந்தம்பற்றித் தனிப்படர்மிகுதியின்பின் வைக்கப்பட்டது.

[தானாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது]

உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

(பரி-உரை) உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்-முன் கூடிய ஞான்றையின்பத்தினைப் பிரிந்தழி நினைந்தாலும் அதுபொழுது பெற்றுப் போல தீர்காத மிக்க மகிழ்ச்சியைத் தருதலால், கள்ளினும் காமம் இனிது-உண்டழியல்லது மகிழ்ச்சிசெய்யாத கள்ளினுங் காமம் இன்பம்பயத்த லுடைத்து எ-று.

தன்றனிமையுந் தலைமகனை மறவாமையுங் கூறியவாறு.

(ப-ரை) (முன் அனுபவித்த காலையின்பத்தை) உள்ளினும் - (பிரிந்த விடத்து) நினைத்தாலும், (அப்பொழுது பெற்றதுபோல்) தீராப்பெருமகிழ் செய்தலால் - தீர்காப் பெருமகிழ்ச்சியைத் தருதலால், கள்ளினும் - (உண்டு போதல்லது மகிழ்ச்சிசெய்யாத) கள்ளைப்பார்க்கிலும், காமம் - காமமானது இனிது-இன்பந்தருதலையுடைத்து எ-று.

(க-ரை) முன் கூடியஞான்றை யின்பத்தினைப் பிரிந்துழி நினைந்தாலு மதுபொழுது பெற்றாற்போல நீங்காத மிக்க மகிழ்ச்சியைத் தருதலாலுண் டுழியல்லது மகிழ்ச்சிசெய்யாத கள்ளினுங் காமம் இன்பம் பயத்தலுடைத் தென்பதாம்.

(வி-ரை) தனது தனிமையும் தலைவியை மறவாமையும் சொல்லியபடி.

[இதுவுமது]

எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்.

(பரி உரை) தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல் - தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவின்கணினைத்தால் அந்நினைவார்க்கு அப்பிரிவான் வருவதோர் துன்பமில்லையாம்; காமம் எனைத்து இனிது ஒன்றேகாண். அதனாற் காமம் எத்துணையேனு மினிதொன்றே காண் எ-று.

புணர்ந்துழியும் பிரிந்துழியும் ஒப்பவினிதென்பான், எனைத்துமினி தென்றான். சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தானாற்றியவகை கூறியவாறு.

(ப-ரை) தாம்வீழ்வார் - தம்மால் விரும்பப்படுவாரை, நினைப்ப - (பிரிவி னிடத்து) நினைந்தால் (அந்நினைந்தவர்க்கு), வருவதொன்று - (அப்பிரிவால்) வருவதோர் துன்பம், இல்-இல்லையாம், (அதனால்) காமம்-காமம், எனைத்து-எவ்வளவாயினும், ஒன்றினிதேகாண்-இன்பந்தருவதொன்றேகாண் எ-று.

(க-ரை) தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவின்கணினைந்தா லந்நினை வார்க்குப் பிரிவான் வருவதோர் துன்பமில்லையாம், அதனாற் காமமெத் துணையேனு மினியதொன்றேகா ணென்பதாம்.

(வி-ரை) புணர்ந்தவிடத்தும் பிரிந்தவிடத்தும் சமமாக இனிதென்றற்கு எனைத்துமினிதென்றான். உம்மை தொக்கது. தான் பொறுத்திருந்தவகை சொல்லியபடி.

(2)

[தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது]

நினைப்பவர் போன்று நினையார்கொ றும்மல்
சினைப்பது போன்று கெடும்.

(பரி-உரை) தும்மல் சினைப்பதுபோன்று கெடும் - எனக்குத்தும்மல் எழுவதுபோன்று தோன்றிக் கெடாநின்றது; நினைப்பவர்போன்று நினையார் கொல் - அதனாற் காதலர் என்னை நினைப்பார்போன்று நினையாராகல் வேண்டும் எ-று.

சினைத்தல் - அரும்புதல். சேய்மைக்கண்ணராய கேளிர் நினைந்துழி அந் நினைக்கப்பட்டார்க்குத் தும்மறோன்றுமென்னுமுலகியல்பற்றித் தலைமக

னெடுத்தக்கொண்ட வினை முடிவதுபோன்ற முடியாமைபுணர்த்தான் சொல்லியதாயிற்று.

(ப-ரை) (எனக்கு) தம்மல்-தம்மல், நினைப்பதுபோன்று-அரும்புதல் போலத்தோன்றி, கெடும்-கெடுகின்றது, (அதனால்) நினைப்பவர்போன்று-(தலைவர்) எனை நினைப்பவர்போன்ற, நினையார்கொல்-நினையாராகல் வேண்டும் எ-று.

(க-ரை) எனக்குத்தம்ம லெழுவதுபோன்ற தோன்றிக் கெடாநின்ற தனைற் காதலனென்னை நினைப்பார்போன்ற நினையாராகவேண்டு மென்ப தாம்.

(வி-ரை) தாத்தன்னாராகிய உறவினர் நினைந்தவிடத்து நினைக்கப் பட்டவர்க்குத் தம்மல் தோன்றுமென்கிற உலகமடைபற்றித் தலைவன் எடுத்தக்கொண்ட தொழில் முடிவதுபோன்ற முடியாமையறிந்தவன் சொல்லியதாயிற்று. (3)

[இதவுமது]

யாழு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோழ வுளரே யவர்.

(பரி உரை) எந்நெஞ்சத்த அவர் ஓ உளரோ - எம்முடைய நெஞ்சத்த அவர் எப்பொழுதமுளரேயாயிராகின்றார்; அவர் நெஞ்சத்த யாழும் உளேக் கொல் - அவ்வகையே அவருடைய நெஞ்சத்தும் யாழுமுளமாதமோ, ஆகேமோ? எ-று.

ஓகாரவிடைச்சொல் ஈண்டிடைவிடாமைபுணர்த்திநின்றது. உளமாயும் வினை முடியாமையின் வாராராயினரோ, அது முடிந்தும் இலமாகலின் வாராராயினரோ வென்பது கருத்து.

(ப-ரை) எந்நெஞ்சத்த-எமது நெஞ்சத்தில், அவர்-அவர், ஓவுளரே (எப்பொழுதும்) உள்ளவராயே யிருக்கின்றார், (அப்படியே) அவர் நெஞ்சத்த அவரதெஞ்சிலும், யாழும்-நாமும், உளேக்கொல்-உள்ளேமாகின்றேமோ (ஆகேமோ) எ-று.

(க-ரை) எம்முடைய நெஞ்சத்தவ ரெப்பொழுது முளரேயாயிராகின்ற ரவ்வகையே யவருடைய நெஞ்சத்தும் யாழுமுளமாதமோ வாகேமோ வென்பதாம்.

(வி-ரை) ஓகாரம் இங்கே இடைவிடாமையை உணர்த்திநின்றது. யாம் இருத்தம், தொழில்முடியாமையால் வரவில்லையோ அது முடித்தி யாம் இல்லாமையால் வரவில்லையோவென்பது கருத்து. (4)

[இதவுமது]

தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணுர்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல்.

(பரி-உரை) தன்னெஞ்சத்தை எம்மைக் கடிகொண்டார். தம்முடைய நெஞ்சின்கண்ணே யாஞ்செல்லாமல் எம்மைக் காவல்கொண்ட காதலர், என்னெஞ்சத்தை ஓவாவரல் காணுர்கொல். தாமெம்முடைய நெஞ்சின்கண் ஒழியாத வருதலை காணுர்கொல்லோ எ-று.

ஒருவரைத் தக்கண் வருதற்கு ஒருகாலுமுடம்படாத தாமவர்கட் பலகாலுஞ் சேறல் காணுடையார் செயலன்மையின், காணுர்கொலென்றுள்.

(ப-ரை) தன்னெஞ்சத்தை - தமது நெஞ்சிடத்தை, (யாம் செல்லாமல்) எம்மை-எம்மை, கடிகொண்டார் - காவல்கொண்ட தலைவர், என்னெஞ்சத்தை. எமது நெஞ்சினிடத்தை, ஓவாவரல்-ஒழியாமல் (தாம்) வருதலுக்கு, காணுர் கொல்-காணுரோ எ-று.

(க-ரை) தம்முடைய நெஞ்சின்கண் யாஞ்செல்லாமல் எம்மைக் காவல் கொண்ட காதலர் தாமெம்முடைய நெஞ்சின்கண் ணொழியாத வருதலை காணுர் கொல்லோ வென்பதாம்.

(வி-ரை) ஒருவரைத் தம்மிடத்தவர ஒருகாலும் உடன்படாமல் தாம் அவரிடத்துப் பலகாலும் செல்லுதல் காணுடையார் செயலல்லாமையால் காணுர்கொலென்றுள். (5)

[அவரொடு புணர்ந்தஞான்றையின்பத்தை நினைத்த இறத்தபாடெய்தா கின்றுய், அதுமறத்தல்வேண்டுமென்றுட்குச் சொல்லியது]

மற்றியா னென்னுளேன் மன்றே வவரொடியா
னுற்றநா ளுள்ள வுளேன்.

(பரி-உரை) யான் அவரொடு உற்ற நாள் உள்ள உளேன்-யான் அவ ரோடு புணர்ந்தஞான்றையின்பத்தை நினைதலான் இத்தன்ப வெள்ளத்தும் உயிர்வாழ்கின்றேன்; மற்று யான் என்னுளேன் - அதுவின்றுயின், வேறெத் தால் உயிர்வாழ்வேன்! எ-று.

நாள்-ஆகுபெயர். உயிர்வாழ்தற்கு வேறுமுள, அவைபெற்றிலேனென் பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அவை அவன்றாது வருதல், தன்றாது சேறன்முதலாயின. அவையாவுமின்மையின், இதுவல்லது எனக்குப் பற்றுக்கோடில்லையென்ப தது கருத்து.

(ப-ரை) யான்-நான், அவரோடு-அவரோடு, உற்றநாள்-புணர்ந்தநாளை இன்பத்தை, உள்ள-நினைத்தலால், உளேன்-(இத்தன்ப வெள்ளத்தில்) உயிர் வாழ்கின்றேன், மற்று - அது இல்லையாயின், யான் - நான், என்னுளேன் வேறு எத்தால் உயிர்வாழ்வேன் எ-று.

(க-ரை) யானவரோடு புணர்ந்த ஞான்றை யின்பத்தை நினைதலா னித்தன்பவெள்ளத்து முயிர்வாழ்கின்றே னதுவின்றுயின் வேறெத்தா லுயிர்வாழ்வே னென்பதாம்.

(வி-ரை) கான்-ஒருபெயர். உயிர்வாழ்தற்கு வேறுமுண்டு. அவை பெற் றிலேனென்பதபட நின்றமையால் மன் ஒழியிசை. அவை அவனதுறை வருதல், தனது தூதுசெல்லுதல் முதலானவை. அவையாவும் இல்லாமையால் இதவல்லாமல் எனக்குப் பற்றுக்கோடு இல்லையென்பத கருத்த. (6)

[இதவுமத]

மறப்பி னெவனுவன் மற்கொன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும்.

(பரி உரை) மறப்பு அறியேன் உள்ளினும் உள்ளம் சுடும்-அவ்வின்பத்தை மறத்தலறியேனுய் நின்றன்னாகிற்கவும், பிரிவு என்னுள்ளத்தைச் சுடா நின்றத, மறப்பின் எவனுவன் - அக்னம் பிரிவாற்றுத யான் மறந்தால் இறந்தபடாத உனேனுவத எத்தால்? எ-று.

மறக்கப்படுவத அதிகாரத்தான்வந்தத. மன் சுண்டும் அதபடன்ற ஒழியிசையாயிற்று. கொல் - அசைநிலை.

(ப-ரை) மறப்பறியேன்-(அவ்வின்பத்தை)மறத்தலறியேனுகி, உள்ளினும்-இன்ற நினையாகிற்கவும், (பிரிவானத) உள்ளம் - (என்) னுள்ளத்தை, சுடும்-சுடுகின்றத, (அப்படி பிரிவுபொறுத தான்) மறப்பின்-மறந்தால், எவனுவன்-எத்தால் இறவாதிருப்பேன் எ-று.

(க-ரை) அவ்வின்பத்தை மறத்தலறியேனு யின்றன்னாகிற்கவும் பிரி வென்னுள்ளத்தைச் சுடாநின்றத அக்னம் பிரிவாற்றுத யான் மறந்தா லிறந்தபடாதனேனுவ தெத்தாலென்பதாம்.

(வி ரை) மன்னென்பத இக்கேயும் அவ்வொழியிசை. கொல்-அசை.()

[இத்தன்பமறிந்தவர்த காதலர் தினக்கின்பஞ்
செய்வனென்றுட்குச் சொல்லியத]

எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றே
காதலர் செய்யுஞ் சிறப்பு.

(பரி-உரை) எனைத்த நினைப்பினும் காயார் - தம்மை யானைத்தனேபும் மிகநினைந்தாலும் அதற்கு வெகுளார், காதலர் செய்யும் சிறப்பு அனைத்த அன்றே-காதலர் எனக்குச் செய்யுமின்பமாவத அவ்வளவன்றே! எ-று.

. வெகுளாமை அதற்குடன்பட்டு நெஞ்சின்கணிற்றல். தனக்கு அவ் வின்பத்திற் சிறந்ததின்மையின், அதனைச் சிறப்பென்றுன். காதலர் நம்மாட் டருனென்றும், செய்புக்குணமென்றும் பாடமோதுவாருமுளர். தோழி கூறியவதனைக் குறிப்பானிகழ்ந்த கூறியவாறு.

(ப-ரை) காதலர்-தலைவரானவர், எனைத்த நினைப்பினும்-(தான் தம்மை) எவ்வளவு மிகநினைந்தாலும், காயார் - (அதற்குக்) கோபியார், செய்யுஞ்

நிறப்பு - (அவர் எனக்குச்) செய்யுமின்பமாவது, அனைத்தன்றே - அவ்வளவன்றே எ-று.

(க-ரை) தம்மை யானைத்தணைபு மிகநினைந்தால் மதற்கு வெகுளார் காதலரெனக்குச் செய்யுமின்பமாவ தவ்வளவன்றே வென்பதாம்.

(வி-ரை) கோபியாமை அன்னினைத்தற்கு உடன்பட்டு நெஞ்சினிற்றல். தனக்கு அவ்வின்பத்திலும் நிறைந்த இல்லாமையால் அதனைச் நிறப் பென்றான். தோழி சொல்லியவதனைக் குறிப்பால் இகழ்ந்து சொல்லியபடி.()

[தலைமகன்றூதுவராக் காணுத வருந்துகின்றான் வற்புறுத்தற் தோழிக்குச் சொல்லியது]

விளியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா
ரளியின்மை யாற்ற நினைந்து.

(பரி உரை) வேறு அல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து-முன் பெல்லாம் காமிருவரும் வேறல்லமென்று சொல்லுவார தளியின்மையை மிகவுநினைந்து, என் இன்னுயிர் விளியும்-எனதினியவுயிர் கழியாநின்றது.

அளியின்மை பின்வருவாராதலுமாய்ப்பிரிதலும், பிரிந்துவாராமையும், ஆண்டின்றுழித் தாதவிடாமையும் முதலாயின. பிரிவாற்றல்வேண்டுமென வற்புறுத்தாட்கு என்னுயிர் கழிகின்றது பிரிவிற்கன்று அவரன்பின்மைக் கென எதிரழிந்து கூறியவாறு.

(ப-ரை) வேறல்லமென்பார் - (முன்னெல்லா காமிருவரும்) வேறல்லே மென்று சொல்லுவாரது, அளியின்மை-அருளில்லாமையை, ஆற்றநினைந்து-மிகவும் நினைந்து, என்னின்னுயிர் - எனது இனிதாயவுயிர், விளியும் - கழிகின்றது எ-று.

(க-ரை) முன்பெல்லா காமிருவரும் வேறல்லேமென்று சொல்லுவார தளியின்மையை மிகவுநினைந் தெனதினியவுயிர் கழியாநின்றதென்பதாம்.

(வி-ரை) அளியின்மை - பின்வருவாராதலுமாய்ப் பிரிதலும், பிரிந்து வாராமையும், அக்கே நின்றவிடத்துத் தாதவிடாமையும் முதலாயின. பிரிவு பொறுத்தல் வேண்டுமென்று நிடலுஞ்சொன்னவளுக்கு என்னுயிர் பிரிவைக் குறித்தல் அவரன்பில்லாமையைக் குறித்துக் கழிகின்றதென்று எதிரழிந்து சொல்லியபடி.

(9)

[வன்புறையெதிரழிந்தான் காமமிக்கதுழிபடாற் சொல்லியது]

விடாஅது சென்றூரைக் கண்ணினுற் காணப்
படாஅதி வாழி மதி.

(பரி-உரை) மதி-மதியே, விடாது சென்றூரைக் கண்ணினுல் காணப் படாதி-என்னெஞ்சின் நிடைவிடாதிருந்தே விட்டுப்போயினரை யானென் கண்ணினாலுங்கும் எதிர்ப்படும்வகை நீ படாதொழிவாயாக எ-று.

கண்ணளவா னெதிர்ப்படுதலாவது மதி இருவானுநோக்கப்படுதலின் இருவர்கண்ணும் அதன்கண்ணே சேர்தல். முதலொடு சினைக்கொற்றமை புண்மையிற் சென்றுரைக்காணவென்றும், குறையுறுகின்றுளாகலின் வாழி யென்றற்கூறினுள். இனிப்படாதென்பது பாடமாயின், கண்விடைக் கண் ணினுற் காணுமாறு மதிபடுகின்றதில்லையென அதனுற்றயில்பெறுதல வருத்து கின்றுள் கூற்றுக்கு. இப்பொருட்கு வாழியென்பது அசைநிலை.

(ப-ரை) மதி சக்திரனே, விடாஅத-(என்னெஞ்சை) விடாதிருந்தே, சென்றுரை - (விட்டுப்) போயினுரை, கண்ணுள் - கண்ணளவாலாயினும், காண - எதிர்ப்படும்வகை, படாஅதி - (நீ) மறையாதிருப்பாயாக, (அப்படிச் செய்தால்) வாழி-நீவாழ்வாயாக எ-று.

(க-ரை) மதியே என்னெஞ்சி னிடைவிடாதிருந்தே விட்டுப்போயி னுரை யானென் கண்ணளவானுயினு மெதிர்ப்படும்வகை நீ படாதொழிவா யாக, அப்படிச்செய்தால் நீ வாழ்வாயாக வென்பதாம்.

(வி-ரை) கண்ணளவா லெதிர்ப்படுதலாவது மதி யிருவாலும் படுதலால் இருவர் கண்களும் அதனிடத்தே சேர்தல். குறையுறுகின்றுளாகலின் வாழி யென்றுள். (10)

121-ம் அதி - நினைந்தவர் புலம்பல் - முற்றிற்று.

122-ம் அதிகாரம்—கனவுநிலையுரைத்தல்

(பரி-உரை) அஃதாவது: தலைமகன் தான்கண்ட கனவினது நிலைமை யைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு நனவின்கணினைவுமிகுதியாற் கண்டதாகலின் இது நினைந்தவர் புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தலைவி தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச்சொல்லியது. அக்கனவு * நனவினிடத்து நினைவு மிகுதியாலே கண்டதாகலால், இது நினைந்தவர் புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

[தலைமகன்றூதவரக்கண்டான் சொல்லியது]

காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாது செய்வேன்கொல் விருந்து.

(பரி உரை) காதலர் தூதொடு வந்த கனவினுக்கு-யான் வருந்தின்ற தறிந்த அதனீராக் காதலர் விடுத்த தூதினைக்கொண்டு என்மாட்டு வந்த கனவினுக்கு, விருந்து யாது செய்வேன் - யான் விருந்தாக யாதனைச்செய் வேன்? எ-று.

விருந்தென்றது விருந்திற்குச்செய்புறுமுபகாரத்தினை. அது கனவிற் கொன்று காணுமையின், யாது செய்வேனென்றுள்.

---

* கனவு-சாக்கிரம்; அது விழித்திருக்குங்காலம்.

(பத) (யான் வருந்துமிறமை அறிந்த அக நீவிடுத்த) காதலர்.தலைவரை, தாதொடு - தாளைக்கொண்டு, வந்த - (என்னிடத்து) வந்த, கனவிற்குக்-கனவிற்குக், விருந்து-விருந்தாக, யாதுசெய்வேன்-யாதுசெய்வேன்? எ-று.

(க-ரை) யான் வருந்துகின்றதறிந்த அதனீக் காதலர்விடுத்த தூதினைக் கொண்டு என்மாட்டெய்த கனவிற்கு யான் விருந்தாக யாதினைச்செய்வேனென்பதாம்.

(வி-ரை) கொல் - அசை. விருந்தென்றது - விருந்திற்குச் செய்யும் உபசாரத்தை. அது கனவிலே காணுமையால் யாதுசெய்வேனென்றாள். (1)

[தலைவிடக்கருதியாள் சொல்லியது]

கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

(பரி-உரை) கயல் உண்கண் யான் இரப்பத் துஞ்சின்-துஞ்சாது வருந்துகின்ற என் கயல்போலு முண்கண்கள் யானிரந்தாற்றுஞ்சுமாயின், கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன்-கனவிடைக் காதலரைக் காண்பேன், கண்டால் அவர்க்கியானுற்றியுளேனுயதன்மையை யானே விரியச் சொல்வேன் எ-று.

கயலுண்கணென்றாள், கழிந்தாலத்திற்கிரக்கி. உயல் - காமநோய்க்குத் தப்புதல். தூதர்க்குச்சொல்லாது யாமடக்குவனவும் சொல்லுவனவற்றுள் ளுஞ் சுருக்குவனவற்றின்பரப்புந் தோன்றச்சொல்வேனென்னுங் கருத்தாற் சாற்றுவேனென்றாள். இனி அவையுந்துஞ்சா சாற்றலுங்கூடாதென்பதபடின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. முன்னுங்கண்டான் கூற்றுகவின், கனவுநிலையுரைத்தலாயிற்று.

(ப-ரை) கயலுண் கண் - (தூங்காதழிகின்ற) என்கயல்போலுமுண்கண்கள், யான்-நான், இரப்ப - இரந்தால், துஞ்சின் - தூங்குமாயின், கலந்தார்க்கு-(கனவிலே காணப்பட்ட) தலைவர்க்கு, உயலுண்மை-பொறுத்திருக்கிறதன்மையை, சாற்றுவேன்-(யானே) விரியச்சொல்லுவேன் எ-று.

(க-ரை) துஞ்சாது வருந்துகின்ற வென்கயலேபோலு முண்கண்கள் யானிரந்தாற் றுஞ்சுமாயின் கனவிடைக் காதலரைக் காண்பேன், கண்டாலவர்க்கி யானுற்றியுளேனுயதன்மையை யானே விரியச்சொல்லுவே னென்பதாம்.

(வி-ரை) கயலுண்கணென்றாள், கழிந்த நாலத்திற்கிரக்கி. தூதர்க்கு யாம் சொல்லாமல் அடக்கப்படுவனவும், சொல்லுமனவுகளுள்ளும் சுருக்கப்படுவனவும் முதிய இவைகளின் பரப்பெல்லாம் தோன்றச்சொல்லுவேனென்னுங் கருத்தால் சாற்றுவேனென்றாள். இனி அவையுந் துஞ்சுவனவல்ல சாற்றுதலும் கூடாதென்பதபடின்றமையால், மன் ஒழியிசை. முன்னுங் கண்டான் சொல்லியதாகலால் கனவுநிலை யுரைத்தலாயிற்று. (2)

[ஆற்றாளெனக் கவன்றாட்கு ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது]

நனவினா னல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர்.

(பரி-உரை) நனவினான் நல்காதவரை - நனவின்கண் வந்து தலையளி செய்யாதாரை, கனவினாற் காண்டலின் என் உயிர் உண்டு-யான் கனவின்கட் கண்டகாட்சியானே என்னுயிருண்டாகாநின்றது எ-று.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன. அக்காட்சியானே யானாற்றியுளேனாகின்றேன். நீ கவலல்வேண்டாவென்பதாம்.

(ப-ரை) நனவினான் - நனவில்வந்து, நல்காதவரை - அருள்செய்யாத தலைவரை, கனவினால்-கனவிடத்து, காண்டலின்-காணுதலால், என்னுயிர்-என்னுயிரானது, உண்டு-நீங்காதிருக்கின்றது எ-று.

(க-ரை) நனவின்கண் வந்து தலையளிசெய்யாதவரை யான் கனவின்கட் காண்டலானே யென்னுயிருண்டாகாநின்ற தென்பதாம்.

(வி-ரை) ஆனுருபுகள் கண்ணுருபுப்பொருளில் வந்தன. அக்காணுதலாலே பொறுத்திருக்கிறேனாகிறேன். நீ கவலல்வேண்டா வென்பதாம். (3)

[இதுவுமது]

கனவினா லுண்டாகுங் காம நனவினா
னல்காரை நாடித் தரற்கு.

(பரி-உரை) நனவினான் நல்காரை நாடித் தரற்கு - நனவின்கண்வந்து தலையளி செய்யாதாரை அவர் சென்றுழி நாடிக்கொண்டுவந்து கனவு தருதலான், கனவினாற் காமம் உண்டாகும் - அக்கனவின்கண்ணே எனக் கின்ப முண்டாகாநின்றது எ-று.

காமம் ஆகுபெயர். நான்காவது மூன்றன்பொருண்மைக்கண் வந்தது. இயல்பான் நல்காதவரை அவர்சென்ற தேயமறிந்துசென்று கொண்டுவந்து தந்து நல்குவித்த கனவால் யானாற்றுவலென்பதாம்.

(ப-ரை) நனவினான்-நனவில்வந்து, நல்காரை-அருள்செய்யாதவரை, நாடித்தரற்கு-(அவர்போனவிடந்) தேடிக்கொண்டுவந்து தருதலால், கனவினான் - அக்கனவில், காமம் - இன்பமானது, உண்டாகும் - (எனக்கு) உண்டாகின்றது எ-று.

(க-ரை) நனவின்கண்வந்து தலையளி செய்யாதாரை அவர் சென்றுழி நாடிக்கொண்டுவந்து கனவுதருதலா லக்கனவின்கண்ணே யெனக் கின்ப முண்டாகாநின்ற தென்பதாம்.

(வி-ரை) காமம்-ஆகுபெயர். இயல்பாக அருள்செய்யாரை அவர்போன தேயமறிந்துபோய் கொண்டுவந்து அருள்செய்த கனவால் பொறுப்பனென்பதாம். (4)

[இகவுமத]

நனவினற் கண்டதூஉ மாங்கே கனவந்தான்
கண்ட பொழுதே யினிது.

(பரி-உரை) கனவினற் கண்டதூஉம் (இனிது) ஆக்கே-முன்னனவின் கண் அவளைக்கண்டு நகர்ந்த வின்பந்தானுமினிதாயிற்று அப்பொழுதே, கனவந்தான் கண்டபொழுதே இனிது-இன்று கனவின்கட் கண்டு நகர்ந்த வின்பமும் அக்கண்டபொழுதே யினிதாயிற்று, அதனால் எனக்கிரண்டு மொத்தன எ-று.

இனிதென்பது முன்னுங்கூட்டப்பட்டது. கனவு ஆகுபெயர். முன்னும் யான் பெற்றதிவ்வளவே, இன்னும் அதுகொண்டாற்றவலென்பதாம்.

(ப-உரை) கனவினன் - (முன்னே) கனவினிடத்து, கண்டதூஉம். (அவளைக்) கண்டு அனுபவித்தவின்பமும். ஆக்கே - அக்கண்டபொழுதே, இனிது - இனிதாயிற்று, கனவந்தான் - (இன்று) கனவினிடத்துக் (கண்டு அனுபவித்த வின்பமும), கண்டபொழுதே-இக்கண்டபொழுதே, இனிது-இனிதாயிற்று (அதனால் எனக்கு இரண்டும் ஒத்தன) எ-று.

(கரை) முன் கனவின்க ணவளைக்கண்டு கிழ்ந்தவின்பந்தானு மினி தாயிற்ற. அப்பொழுதே யின்று கனவின்கட்கண்டு நகர்ந்தவின்பமு மத கண்டபொழுதே யினிதாயிற் றதனாலெனக் கிரண்டுமொத்தன வென்பதாம்.

(வி-உரை) இனிதென்பது முன்னும் கூட்டப்பட்டது. கனவு-ஆகுபெயர். முன்னும் யான்பெற்றது இவ்வளவே, இன்னும் அதுகொண்டு பொறுப்பே னென்பதாம்.

(5)

[இகவுமத]

நனவென வொன்றில்லை யாயிற் கனவினற்
காதலர் நீங்கலர் மன்.

(பரி-உரை) கனவென ஒன்று இல்லையாயின்-கனவென்றுசொல்லப்படு கின்ற ஒரு பாவியில்லையாயின், கனவினற் காதலர் நீங்கலர் - கனவின்கண் வந்த கூடிய காதலர் என்னைப் பிரியார் எ-று.

ஒன்றென்பது அதன்கொடுமைவிளக்கி நின்றது. அஃது இடையே நின்று கனவைப்போக்கி அவரைப் பிரிவித்ததென்பதுபட நின்றமையின், ஈண்டு ஏழிசைசக்கண் வந்தது. கனவிற்பெற்றாற்றுகின்றமை கூறியவாறு.

(பதவுரை) கனவெனவொன்று-கனவென்ற சொல்லப்படுகின்ற ஒருபாவி, யில்லையாயின்-இல்லாவிட்டால், கனவினன்-கனவினிடத்து (வந்து கூடிய,) காதலர்-தலைவர், நீங்கலர்-(என்னைப்) பிரியார் எ-று.

(க-ரை) கனவென்ற சொல்லப்படுகின்ற வொருபாவியில்லையாயிற் கனவின்கண் வந்துகூடிய காதலரென்னைப் பிரியாரென்பதாம்.

(வி-ரை) ஒன்றென்பது அதன்கொடுமை விளக்கி நின்றது. அது நடுவே புகுந்து கனவைப்போக்கி அவரைப் பிரிவித்ததென்பதுபட நின்றமையால் மன் ஒழியிசை. கனவிலேபெற்றுப் பொறுக்கின்றமை சொல்லியபடி. (6)

[விழித்துழிக் காணாளாயினாள் கனவிற்கூட்டநினைந்து ஆற்றாளாய்ச் சொல்லியது]

நனவினா னல்காக் கொடியார் கனவினா னென்னெம்மைப் பீழிப் பது.

(பரி-உரை) கனவினான் நல்காக் கொடியார் ஒருஞான்றும் நனவின்கண் வந்து தலையளிசெய்யாத கொடியவர், கனவினான் எம்மைப் பீழிப்பது என்-நாடோறுங் கனவின்கண்வந்து நம்மைவருத்துவது எவ்வியைபுபற்றி? எ-று.

பிரிதலும் பின்னினைந்து வாராமையுநோக்கிக் கொடியாரென்றும், கனவிற் றோண்மேலராய் விழித்துழிக் கரத்தலின் அதனானுந் துன்பமாகா நின்றதென்பாள் பீழிப்பதென்றுங்கூறினாள். நனவினில்லது கனவினுமில்லை யென்பர், அது கண்டிலமென்பதாம்.

(ப-ரை) கனவினான்-(ஒருதினமாயினும்) நனவில்வந்து, நல்கா - அருள் செய்யாத, கொடியார்-பாதகர், கனவினான்-(தினந்தோறும்) கனவில் வந்து, எம்மை எம்மை, பீழிப்பது-வருத்துவது, என்-எந்தச் சம்பந்தம்பற்றி? எ-று.

(க-ரை) ஒருஞான்றும் நனவின்கண் வந்து தலையளிசெய்யாத கொடியவர் நாடோறுங் கனவின்கண்வந்து நம்மை வருத்துவ தெவ்வியைபு பற்றி என்பதாம்.

(வி-ரை) தன்னைத் தனியேவிட்டுப் பிரிதலும், பின்னினைந்து வாரா மையும் நோக்கிக் கொடியாரென்றும், கனவிலே தோளின்மேலராய் விழித்த போது மறைதலால், அதனாலும் துன்பமாகின்ற தென்றற்கு பீழிப்ப தென்றும் சொல்லினாள். உலகத்தார் நனவிலே இல்லாதது கனவிலும் இல்லையென்பார் யாம் அது கண்டிலமென்பதாம். (7)

[தானாற்றுதற்பொருட்டுத் தலைமகனையியற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது]

துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா னெஞ்சத்த ராவர் விரைந்து.

(பரி-உரை) துஞ்சுங்கால் தோண்மேலராகி - என்னெஞ்சுவிடாதுறை கின்ற காதலர் யான்றுஞ்சும்பொழுது வந்து என்றோண்மேலராய், விழி குங்கால் விரைந்து நெஞ்சத்தராவர் - பின் விழிக்கும்பொழுது விரைந் பழைய நெஞ்சின்கண்ணராவர் எ-று.

கலவி விட்டு மறையுங் கடுமைபற்றி விரைந்தென்றாள். ஒருகாலு என்னினீங்கி யறியாதாரை நீ நோவற்பாலையல்லையென்பதாம்.

(ப·ரை) (என்னெஞ்சுவிடாமல் உறைகின்றகாதலர்) துஞ்சுங்கால்-(யான்) தூங்கும்போது, தோண்மேலராகி-தோளின்மேலுள்ளவராகி, விழிக்குங்கால்-(பின்) விழிக்கும்போது, விரைந்து-விரைவுற்று, நெஞ்சத்தராவர்-(பழைய) நெஞ்சிலுள்ளவராவர் என்பதாம்.

(க·ரை) என்னெஞ்சுவிடாதுறைகின்ற காதலர் யான் றுஞ்சும்பொழுது வந்து என் றோண்மேலராய்ப் பின் விழிக்கும்பொழுது விரைந்து பழைய நெஞ்சின்கண்ணராவ ரென்பதாம்.

(வி·ரை) புணர்ச்சிவிட்டு மறைகிற கொடுமைபற்றி விரைந்தென்றாள். ஒருகாலும் என்னைவிட்டு நீங்கியறியாதவரை நீ நோவது தகாதென்பதாம்.(8)

[இதுவுமது]

நனவினா னல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர்.

(பரி·உரை) கனவினாற் காதலர்க் காணாதவர்-தமக்கொருகாதலரின்மையின் அவரைக் கனவிற்கண்டறியாத மகளிர், நனவினான் நல்காரை நோவர்-தாமறிய நனவின்கண் வந்து நல்காத நங்காதலரை அன்பிலரென நோவாநிற்பர் எ-று.

இயற்பழித்ததுபொறாது புலக்கின்றாளாகலின், அயன்மை தோன்றக் கூறினாள். தமக்குங் காதலருளராய் அவரைக்கனவிற் கண்டறிவாராயின் நங்காதலர் கனவின்கணாற்றி நல்குதலறிந்து நோவாரென்பதாம்.

(ப·ரை) (தமக்கு ஒருகாதலர் இல்லாமையாலே) கனவினான்-கனவிலே, காதலர்க்காணாதவர் - அக்காதலரைக் காணலறியாத மகளிர், நனவினால்-(தாமறிய) நனவில்வந்து, நல்காரை - அருள்செய்யாத (எனது) காதலரை, நோவர்-(அன்பிலரென்று) நோவாநிற்பர் எ-று.

(க·ரை) தமக்கொரு காதலர் இல்லாமையின் அவரைக் கனவிற் கண்டறியாத மகளீர் தாமறிய நனவின்கண்வந்து நல்காதவரை யன்பிலரென்று நோவாநிற்ப ரென்பதாம்.

(வி·ரை) இயற்பழித்தது பொறாது பிணங்குகின்றாளாகலால், பன்மை தோன்றச்சொல்லினாள். தமக்கும் தலைவராக அவரைக் கனவிலே கண்டு அறிவாராயின் நமது தலைவர் கனவினிடத்து நாம் அறியவந்து அருள்செய்தலறிந்து நோகாரென்பதாம். (9)

[இதுவுமது]

நனவினா னந்நீத்தா ரென்பர் கனவினாற்
காணார்கொ லிவ்வூ ரவர்.

(பரி·உரை) இவ்வூரவர் நனவினான் நந்நீத்தார் என்பர் - இவ்வூரின் மகளிர் நனவின்கண் நம்மை நீத்தாரென்று நங்காதலரைக் கொடுமைகூறா

கிற்பர்; கனவிலுற் காணர் சொல் - அவர் கனவின்கண் நீக்காதவருதல் கண்டறியாரோ? எ-று.

என்னுடை தன்னிடை வேற்றுமையின்றுயின் யான்கண்டது தானுங் கண்டமையும், அதுகாணுது அவரைக்கொடுமை கூறுகின்றமையின் அயலா னேயாமென்னுங் கருத்தால், இவ்வூரவனென்றான்.

(பதம்) இவ்வூரவர்-இவ்வூரின்மகளிர், கனவிலுல்-கனவினிடத்து, கூ நீத்தானென்பர் - கம்மைவிட்டு நீங்கினனென்று (தலைவர்மேலே கொடுமை) சொல்லாகிற்பர், கனவினுன்-கனவினிடத்து, காணர்கொல்-(அவர் நீங்காது வருதலைக்) கண்டறியாரோ? எ-று.

(கருத்து) இவ்வூரின் மகளிர் கனவின்கணம்மை நீத்தானென்று நங்காத லைக் கொடுமை கூறுகிற்பர்; அவர் கனவின்கண் நீங்காது வருதல் கண்டறி யாரோ வென்பதாம்.

(வி-ரை) எனக்குந் தனக்கும் வேற்றுமை யில்லையாயின் யான்கண்டது தானுங்கண்டமையும், அதுகாணுது அவர்மேலே கொடுமை சொல்லுகின்ற மையால் அயலானேயாமென்னுங் கருத்தால் இவ்வூரவனென்றான். (10)

122-ம் அதி - கனவுநிலையுரைத்தல் - முற்றிற்று.

123-ம் அதிகாரம்—பொழுதுகண்டிரங்கல்

(பரி-உரை) அஃதாவது: மாலைப்பொழுது வந்தழி அதனைக்கண்டு தலைமகளிரங்குதல். * "கனவுமுண்டருத வினையில்லை" யென்பதுபற்றிப் பகற் பொழுதாற்றி யிருந்தாட்கு உரியதாகலின், இது கனவுநிலையுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: மாலைப்பொழுது வந்தவிடத்து அதனைக்கண்டு தலைவி இரங்குதல். கனவுமுண்டருத வினையில்லை யென்பதுபற்றிப் பகற் பொழுது பொறுத்திருந்த தலைவிக்கு உரியதாகலால், இது கனவுநிலை யுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

[பொழுதொடு புலந்து சொல்லியது]

மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

(பரி-உரை) பொழுது-பொழுதே, நீ மாலையோ அல்லை - நீ முன்னுள் களின் வந்த மாலையோவெனின், அல்லை, மணந்தார் உயிர் உண்ணும் வேல் இருந்தவாற்றுன் அந்நாட் காதலனை மணந்த மகளிருயிரையுண்ணும் இறந்த காலமாயிருந்தாய் எ-று.

---

* பழமொழி-2.

முன்னுள்-கூடியிருந்தாள். அந்நாண்மணந்தாரெனவே, பின் பிரிந்தாராதல் பெறுதும். வாழியென்பது குறிப்புச்சொல்; "வாலிழை மகளிருயிர்ப் பொதி யவிழ்க்குங் காலை" என்றாற்போல சண்டுப் பொதுமைபாற் கூறப்பட்டது. வேலையென்பது ஆகுபெயர். வேலையென்பதற்கு வேலாயிருத்தாயென்பாருமுளர்.

(ப-ரை) பொழுது-பொழுதே, நீ-நீ, மாலையோவல்லை-(முன்னுள்களின் வந்த) மாலையோவல்லை, மணந்தார் - (அந்நாள்களிலே காதலைக்கூடிய) மகளிரது, உயிருண்ணும் - உயிரையுண்ணுகிற, வேல் - முடிவுகாலமாயிருத்தாய் எ-று.

(க-ரை) பொழுதே நீ முன்னுட்களின் வந்த மாலையோவெனி னல்லை, பிருந்தவாற்று னந்நாட் காதலரை மணந்த மகளீ ருயிரையுண்ணு மிறதிக் காலமா யிருந்தாயென்பதாம்.

(வி-ரை) முன்னுள்-கூடியிருந்தாள். அந்நாள் மணந்தாரெனவே பின் பிரிந்தாராதல் பெறப்பட்டது. வாழியென்பது குறிப்புச்சொல். (1)

[கண்ணுட்கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது]

புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ணை தோநின் றுணை.

(பரி-உரை) மருண்மாலை-மயக்கிய மாலாய், புன்கண்ணை-நீயுமெம்போலப் புன்கணுடையையாயிருத்தாய், நின்றுணை எங்கேள்போல் வன்கண்ணைதோ-நின்றுணையும் எந்துணைபோல வன்கண்மையுடையதோ கூறவாயாக எ-று.

மயக்குதல்-பகலுமிரவுந் தம்முள்ளே விரவுதல், கலக்குதலுந்தோன்றநின்றது. புன்கண்-ஒளியிழத்தல்; அதுபற்றித் துணையுமுண்டாக்கிக் கூறினுள். எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. எமக்குத் தன்பஞ்செய்தாய், நீயுமின்பமுற்றிலையென்னுங் குறிப்பால் வாழியென்றுள்.

(ப-ரை) மருண்மாலை - மயங்கியமாலையே! (நீயும்) புன்கண்ணை-(எம்போல்) ஒளியிழப்பை புடையையாயிருத்தாய், வாழி - வாழ்வாயாக, நின்றுணை - உனதுதுணையும், எங்கேள்போல் - எமதுதுணைபோல, வன்கண்ணைதோ-இரக்கமில்லாமை புடையதோ (சொல்லு) எ-று.

(க-ரை) மயக்கிய மாலாய் நீயுமெம்மைப்போலப் புன்கணுடையையாயிருந்தாய் நின்றுணையு மென்றுணைபோல வன்கண்மைபுடையதோ கூறவாகவென்பதாம்.

(வி-ரை) மயக்குதல்-பகலும் இரவும் தம்முள்ளே கலத்தல். ஒளியிழத்தல்பற்றித் துணையும் உண்டாக்கிச் சொல்லினுள். துணையுமென்னு மும்மை விகாரத்தால் தொக்கது. எமக்குத் தன்பஞ் செய்தாய் நீயும் இன்பமுற்றிலையென்னுங் குறிப்பால் வாழியென்றுள். (2)

* கலி, நெய்தல்-2.

[ஏற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது]

பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
தன்பம் வளர வரும்.

(பரி-உரை) பனி அரும்பிப் பைதல்கொள் மாலை-காதலர் கூடிய காலெல்லாம் என்முன் கடுக்கமெய்திப் பசந்துவந்த மாலை, தனி அரும்பித் தன்பம் வளர வரும்-இற்றான் எனக்கிறந்தபாடு வந்த தோன்றி அதற் குளதாந் தன்பம் ஒருகாலைக்கொருகால் மிக வாராகின்றது எ-று.

குளிர்ச்சி தோன்ற மயங்கிவருமாலையென்னுஞ் செம்பொருள் இக்குறிப் புணரகின்றது. தனி உயிர்வாழ்தற்கண்வெறப்பு. அதனால் யானுற்றமா றென்னையென்பது குறிப்பெச்சம்.

(ப-ரை) (தலைவர் கூடியகாலெல்லாம்) பனியரும்பி - (என் முன்னே) கடுக்கமடைந்த,பைதல்கொண்மாலை-பசந்துவந்தமாலையானது, தனியரும்பி- (எனக்கு) உயிர்வாழ்தலில் வெறுப்புண்டாகி, தன்பம் - (அதற்குண்டாகிற) தன்பம், வள-(ஒருகாலைக்கொருகால்) மிக, வரும்-வருகின்றது எ-று.

(க-ரை) காதலர்கூடிய காலெல்லா மென்முன் கடுக்கமெய்திப் பசந்த வந்த மாலை இற்றாவெனக் கிறந்தபாடு தோன்றி யதற்குளதாந் தன்ப மொருகாலைக்கொருகால் மிக வாராகின்ற தென்பதாம்.

(வி-ரை) குளிர்ச்சி தோன்ற மயங்கிவருமாலையென்னுஞ் செம்பொருள் குறிப்பால் அறியகின்றது. யான் பொறக்கும் வழி என்னென்பது குறிப் பெச்சம். (3)

[இதவுமது]

காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தெதிலர் போல வரும்.

(பரி-உரை) மாலை - காதலருள்ளபொழுதெல்லாம் என்னுயிர்தளிப்ப வந்தமாலை, காதலர் இல்வழி-அவரில்லாத இப்பொழுது, கொலைக்களத்த எதிலர்போல வரும் - அஃதொழிந்த கிற்றலேயன்றிக் கொல்லுக்களரியிற் கொலைஞர் வருமாறுபோல அவ்வுயிரைக்கோடற்கு வாராகின்றது எ-று.

எதிலர்-அருள்யாதுமில்லார். முன்னெல்லாம் எனக்கு கட்பாய் இன்பஞ் செய்த வந்தபொழுதும் இன்று என்மேற் பகையாய்த் தன்பஞ்செய்ய வாராகின்றது, இனியாளுற்றமாறென்னே யென்பதாம்.

(ப-ரை) மாலை-(தலைவர் உள்ளபொழுதெல்லாம் என்னுயிர் தளிர்த்த வந்த) மாலை, காதலரில்வழி-தலைவரில்லாத இப்பொழுது, கொலைக்களத்த கொலைசெய்கிற களத்தை, எதிலர்போல-கொலைஞர்போல, வரும்-(அவ்வுயி ரைக்கொள்ளுதற்கு) வருகின்றது எ-று.

(க-ரை) காதலருள்ளபொழுதெல்லாம் என்னுயிர் தளிப்ப வந்தமாலை யணிவில்லாத விப்பொழு தொழிந்த கிற்றலேயன்றிக் கொல்லுங் களிபிற் கொலைஞர் வருமாறுபோல வவ்வுயிரைக் கோடற்கு வாராகின்றதென்பதாம்.

(வி-ரை) எதிலர் - அருள்யாதமிலார். முன்னெல்லாம் எனக்கு டப்பா பின்பஞ்செய்த வந்தபொழுதும் இன்று யென்மேல் பகையாய்த் துன்பஞ் செய்த வருகின்றது, யான் பொறுக்கும்வழி என்னையென்பதாம். (4)

[இகவுமது]

காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யா
மாலைக்குச் செய்த பகை. [ன்

(பரி-உரை) காலையும், மாலையும், அவர் கூடியஞான்றபோலாது இஞ்ஞான்று வேறபட்டு வாராகின்றன; அவற்றுள், யான் காலைக்குச் செய்த நன்று என் - யான் காலைக்குச் செய்த வுபகாரம் யாது? மாலைக்குச் செய்த பகை எவன் - மாலைக்குச் செய்த அபகாரம் யாது? எ-று.

கூடியஞான்று பிரிவொன்றஞ்சப்பண்ணிய காலை அஃதொழிந்த இஞ்ஞான்று கங்குல்வெள்ளத்திற்குக் கரையாய் வாராகின்றதென்னுங் கருத்தால் நன்றென்கொலென்றும், கூடியஞான்று இன்பஞ்செய்துவந்த மாலை அஃதொழிந்த இஞ்ஞான்று அளவிறன்பஞ்செய்யாகின்றதென்னுங் கருத்தாற் பகையெவன்கொலென்றுங் கூறினாள். பகை - ஆகுபெயர். தன்னை டாத்த காலைபோலாது மாலை தன்கொடுமையாற் றுன்பஞ் செய்யாகின்ற தென்பதாம்.

(ப-ரை) (காலையும், மாலையும், அவர்கூடிய நான்போ லல்லாமல் இன்று வேறபட்டு வருகின்றன; அவைகளுள்) காலைக்கு - காலைப்பொழுதிற்கு, செய்த - (என்னுலே) செய்யப்பட்ட, நன்று - உபகாரம், என்-யாது? யான்-ான், மாலைக்கு-மாலைப்பொழுதிற்கு, செய்த-செய்யப்பட்ட, பகை-அபகாரம், வன்-யாது? எ-று.

(க-ரை) காலையு மாலையு மவர் கூடியஞான்றபோலா திஞ்ஞான்று வேறபட்டு வாராகின்றன; அவற்றுள் யான் காலைக்குச் செய்தவுபகாரம் ாது? மாலைக்குச் செய்தவபகாரம் யாது என்பதாம்.

(வி-ரை) கொல் இரண்டும்-அசைகள். கூடியகாளிலே பிரிவாரென்ற ஞ்சப்பண்ணியகாலை அதனீக்கி இக்காளிலே கங்குல் வெள்ளத்திற்குக் ரையாய் வருகின்றதென்னுங் கருத்தால் நன்றென்கொலென்றும், கூடிய ாளிலே இன்பஞ்செய்த மாலை அதனீக்கி இக்காளிலே அளவில்லாத ன்பஞ்செய்யாகின்றதென்னுங் கருத்தால், பகையெவன்கொலென்றும் சால்லினாள். பகை-ஆகுபெயர். தன்னோடு ஒத்த காலைபோலாமல் மாலை ன் கொடுமையால் துன்பஞ் செய்கின்றதென்பதாம். (5)

[இன்று இன்னையாகின்ற நீ அன்று அவர் பிரிவிற்குடம்பட்ட தென்னையென்றாட்குச் சொல்லியது]

மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன்.

(பரி-உரை) மாலை நோய் செய்தல் - முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்துபோந்த மாலை இன்று பகையாய்த் துன்பஞ்செய்தலை, மணந்தார் அகலாதகாலை அறிந்தது இலேன் - காதலர் பிரிதற்குமுன்னே அறியப் பெற்றிலேன்! எ-று.

இங்ஙனம் வேறுபடுதலறிந்திலேன், அறிந்தேனாயின் அவர் பிரிவிற்குடம்படேனென்பதாம்.

(ப-ரை) மாலை - (முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ்செய்து வந்த) மாலை, நோய்செய்தல் - (இன்று பகையாய்த்) துன்பஞ்செய்தலை, மணந்தார் - தலைவர், அகலாதகாலை - பிரிதற்குமுன்னே, அறிந்ததிலேன்- அறியப்பெற்றிலேன் எ-று.

(க-ரை) முன்னெல்லாமெனக்கு நட்பாய் யின்பஞ் செய்து போந்த மாலை யின்றுபகையாய்த் துன்பஞ்செய்தலைக் காதலர் பிரிவதற்குமுன்னே யறியப்பெற்றிலே னென்பதாம்.

(வி-ரை) இப்படி வேறுபடுதல் அறிந்திலேன், அறிந்தேனாயின் அவர் பிரிவிற்கு உடன்படே னென்பதாம். (6)

[மாலைப்பொழுதின்கண் இனையையாதற்குக் காரண மென்னையென்றாட்குச் சொல்லியது]

காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

(பரி-உரை) இந்நோய் - இக்காமநோயாகிய பூ, காலை அரும்பி-காலைப் பொழுதின்கணரும்பி, பகல் எல்லாம் போது ஆகி - பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து, மாலை மலரும் - மாலைப்பொழுதின்கண் மலர நிற்கும் எ-று.

துயிலெழுந்தபொழுதாகலிற் கனவின்கட்கூட்டநினைந்தாற்றுதல் பற்றி காலையரும்பியென்றும், பின் பொழுது செலச்செல அதுமறந்து பி வுள்ளியாற்றாளாதல்பற்றிப் பகலெல்லாம் போதாகியென்றும், தத்தந்துனை யையுள்ளி வந்துசேரும் விலங்குகளையும் மக்களையுங் கண்டு தான் அக்காலத் னுகர்ந்த வின்ப நினைந்தாற்றாமைமிகுதிபற்றி மாலைமலருமென்றுங் கூறினா பூப்போல இந்நோய் காலவயத்ததாகாநின்ற தென்பது உருவகத்தாற் பெ பட்டது. ஏகதேசவுருவகம்.

(ப-ரை) இச்சோய் - இக்காமநோயாகிய (பூ), காலையரும்பி - காலைப் பொழுதில் அரும்பி, பகலெல்லாம் போதாகி - பகற்பொழுதெல்லாம் பெரிய அரும்பாய் முதிர்ந்த, மாலை மலரும்-மாலைப்பொழுதில் மலர்கின்றதை எ-று.

(க-ரை) இக்காமநோயாகிய பூ காலைப்பொழுதின்க ணரும்பிப் பகற் பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்த மாலைப்பொழுதின்கண் மலரா நிற்குமென்பதாம்.

(வி-ரை) தளர்ந்தபெழுந்த பொழுதாகலால், கனவிலே புணர்ந்தமை நினைந்த பொறுத்தல்பற்றி காலையரும்பியென்றும், பின் பொழுத செல்லச் செல்ல அதமறந்த பிரிவுநினைத்த பொருளாதல்பற்றிப் பகலெல்லாம் போதாகியென்றும், தத்தக்குணங்களே நினைத்த வந்தசேரும் விலக்குகளையும் மக்களையும் கண்டு தான் அக்காலத்த அனுபவித்த இன்பத்தை நினைந்த பொருமை மிகுதல்பற்றி மாலைமலருமென்றும் சொல்லினுன். (7)

[இதவுமத]

அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.

(பரி-உரை) ஆயன் குழல்-முன்னெல்லாம் இனியதாய்ப்போந்த ஆயன் குழல், அழல்போலும் மாலைக்குத்தூதாகி-இதபொழுத அழல்போலச் சுடுவ தாய மாலைக்குத் தூதுமாய், கொல்லும்படை அது-வந்தென்னைக் கொல்வுழிக் கொல்லும் படையுமாயிற்று எ-று.

பின்னின்ற போலுமென்பத உரையசை. முன்னரே வரவுணர்த்தலிற் றூதாயிற்று, கோறற்கருவியாகவிற் படையாயிற்று. தானே சுடவல்லமாலை இத்தணையும் பெற்றுல் என்செய்யாதென்பதாம்.

(ப-ரை) ஆயன்குழல் - (முன்னெல்லாம் இன்பஞ்செய்த) இடையனத வேணுநாதம், அழல்போலும் - (இப்போத) நெருப்புப்போல சுடுவதாகி, மாலைக்குத்தூதாகி-மாலைக்குத்தூதுமாகி, (அம்மாலைவந்த என்னைக்கொல்லு மிடத்த), கொல்லும்படை-கொலைசெய்யும் படையுமாயிற்று எ-று.

(க-ரை) முன்னெல்லா மினிதாய்ப்போந்த ஆயன்குழல் இன்றழல் போலச் சுடுவதாய் மாலைக்குத் தூதுமாயத வந்தென்னைக் கொல்வுழிக் கொல்லும் படையுமாயிற்றென்பதாம்.

(வி-ரை) பின்வந்த போலுமென்பத உரையசை. முன்னே வரவை அறி வித்தலால் தூதாயிற்று. கொல்லுதற் கருவியாதலால் படையாயிற்று. தானே சுடவல்லமாலை இத்தத் தணையையும் பெற்றுல் என்னசெய்யாதென்பதாம். ()

[இதவுமத]

பகிமருண்டு பைத லழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

(பரி உரை) இதற்கு முன்னெல்லாம் யானேமயங்கி கோபுழுக்தேன், மதி மருண்டு மாலை படர்தரும் போழ்து - இனிக் கண்டாரும் மதிமருளும் வகை மாலை வரும்பொழுது, பதி மருண்டு பைதல் உழக்கும் - இப்பதியெல் லாம் மயங்கி கோபுழுக்கும் எ-று.

மதிமருளவென்பது மதிமருண்டெனத் திரிந்துநின்றது. கூற்றமாகக் கருதிக் கூறினளாகலின் மாலைபடர்தரும் போழ்தென்றாள். யாளிறந்து படுவ தென்பதாம். மாலை மயங்கிவரும் போழ்து என் பதி நிலைகலங்கி கோபுழுக்கு மென்றனைப்பாருழனர்.

(ப-ரை) (இதற்குமுன்னெல்லாம் யானே மதிமயங்கி கோபுழுக்தேன்) மதிமருண்டு - (இனிக்கண்டாரும்) மதிமருளும்வகை, மாலை - மாலைக்காலம், படர்தரும்போழ்து-வரும்பொழுது, பதி-இவ்வூரெல்லாம், மருண்டு-மயக்கி, பைதலுழக்கும்-கோயை அனுபவிக்கும் எ-று.

(க-ரை) இதற்கு முன்னெல்லாம் யானே மயங்கி கோபுழுக்தேன், இனிக் கண்டாரு மதிமருளும்வகை மாலை வரும்பொழுது இப்பதியெல்லா மயங்கி கோபுழுக்குமென்பதாம்.

(வி-ரை) பின் மருண்டென்பது மருளவென்பதன் பொருளில் வந்தது. கூற்றமாக கினைத்துச் சொல்லினளாகலால் மாலைபடர்தரும் போழ்தென்றாள். யான் இறந்தபடுவனென்பதாம். (9)

[இதவுமது]

பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர்.

(பரி-உரை) மாயா என் உயிர் - காதலர்பிரிவைப் பொறுத்து இறந்த படாதிருந்த என்னுயிர், பொருண்மாலையானரை உள்ளி மருண்மாலை மாயும்- இன்ற பொருளியல்பே தமக்கியல்பாகவுடையவரை கினைந்து, இம்மயக்கு மாலைக்கண்ணே இறந்துபடாகின்றது எ-று.

குறித்தபருவக் கழியவும் பொருண்முடிவுகோக்கி வாராமையிற் சொல் வேறுபடாமையாகிய தம்மியல்பொழிந்தவர் அப்பொருளியல்பே தம்மியல்பா வினர்; காலமிதவாயிற்று, இனி நீ சொல்லுகின்றவாற்றுற் பயனில்லை யென்பதாம்.

(ப-ரை) என் மாயாவுயிர் - (பிரிவைப்பொறுத்த) இறவாதிருந்த என் னுயிரானது, பொருண்மாலையானரை - பொருளியல்பே தமக்கியல்பா வுடையவரை, உள்ளி-கினைந்து, மருண்மாலை இம்மயக்குமாலையிலே, மாயும்- மாய்கின்றது எ-று.

(க-ரை) காதலர் பிரிவைப் பொறுத்திறந்துபடாதிருந்த வென்னுயி ரின்றும் பொருளியல்பே தமக்கியல்பாக வுடையவரை கினைந் திம்மயக்கு மாலைக்கண்ணே யிறந்துபடாகின்ற தென்பதாம்.

(வி-உ) வருதற்குக் குறித்தபருவம் கழியவும் பொருண்முடிவு கோக்கு வாராமையால் சொல்வேறு படாமையாகிய தம்மிற்பொழிந்தவர் அப் பொருளியல்பே தம்மியல்பாயினர். காலம் இதுவாயிற்று. இனிச் சொல்லு சென்றவிதத்தால் பயனில்லையென்பதாம். (10)

123-ம் அதி - பொழுதுகண்டிரங்கல் - முற்றிற்று.

124-ம் அதிகாரம்—உறுப்புநலனழிதல்

(பரி-உரை) அஃதாவது: தலைமகடன் கண்ணும், தோளும், நுதல் முதலாய அவயவங்கள் தம்மழகழிதல். இஃது, இரக்கமிக்குழி கிழ்வ தாகலின், பொழுதுகண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தலைவியினுடைய கண்ணும், தோளும், நெற்றியும் முதலாகிய அவயவங்கள் தம்மழகழிதல். இஃது இரக்கமிகுந்தவிடத்து கிகழ்வ தாகலால் பொழுதுகண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.

[ஆற்றுமை மிகுதியான் வேறபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது]

சிறுமை நமக்கொழியச் சேட்சென்ற ருள்ளி
நறுமலர் நாணின கண்.

(பரி-உரை) சிறுமை நமக்கு ஒழியச் சேட்சென்றார் உள்ளி - இவ்வாற் றுமை கங்கண்ணே கிற்பத் தாஞ்சேணிடைச் சென்ற காதலரை கீ கினைத் தழுதலால், கண் நறுமலர் நாணின - கின் கண்கள் ஒளியிழந்து முன்றமக்கு ணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன எ று.

நமக்கென்பது வேற்றுமைமயக்கம். உள்ளவென்பது உள்ளியெனத் திரிந்து கின்றது. உள்ளுதலென்பது காரணப்பெயர் காரியத்திற்காய வாகு பெயர். இவைகண்டார் அவரைக் கொடுமைகூறுவர், கீயாற்றல் வேண்டு மென்பது கருத்து.

(ப-உரை) சிறுமை-இப்பொறுமை, நமக்கொழிய-நம்மிடத்தகிற்க, சேட் சென்றார் - நெடுந்தூரத்திலேசென்ற தலைவரை, உள்ளி - கினைத்தழுதலால், கண்-உன் கண்கள், (ஒளியிழந்து) நறுமலர்-(முன்னே நமக்கு நாணின) கல்ல மலர்களுக்கு, நாணின-(இன்று) நாணிவிட்டன எ று.

(க-உரை) இவ்வாற்றுமை நங்கண்ணே கிற்பத் தாஞ் சேணிடைச்சென்ற காதலரை கீ கினைத்தழுதலால் கின்கண்க ளொளியிழந்து முன்றமக்கு ணிய நறுமலர்கட் கின்று தாம் நாணிவிட்டன வென்பதாம்.

(வி-உ) உள்ளுதலென்பது காரியத்திற்கு ஆகுதலால் ஆகுபெயர். இவை கண்டார் அவரைக் கொடியரென்று சொல்லுவர். கீ பொறுத்தல் வேண்டுமென்பது கருத்து. (1)

[இதவுமை]

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண்.

(பரி-உரை) பசந்த பனிவாரும் கண் - பசப்பெய்தன்மேனீர்வார்கின்ற கின்கண்கள், நயந்தவர் கல்காமை சொல்லுவ போலும் - கம்மானயக்கப்பட்ட வாது கல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவபோலாகின்றன, இனி நீ யாற்றல் வேண்டும் எ-று.

சொல்லுவபோறல் - அதனை யவருணர்தற் கறுமானமாதல். நயந்தவர்க் கென்ற பாடமோதுவாருமுளர்.

(ப-உரை) பசந்த - நிறம்வேறுபட்டு, பனிவாருங்கண் - நீர்வார்கின்ற கண் கள், நயந்தவர் - (நம்மால்) விரும்பப்பட்டவாது, நல்காமை - அருள்செய்யா மையை, சொல்லுவபோலும் - (பிறர்க்குச்) சொல்லுவ போல்கின்றன, (இனி நீ பொறுத்தல் வேண்டும்) எ-று.

(க-ரை) பசப்பெய்தன்மேல் நீர்வார்கின்ற கின்கண்கள் நம்மா னயக்கப் பட்டவாது கல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவபோலா கின்றன, இனி நீ யாற்றல்வேண்டுமென்பதாம்.

(வி-உரை) சொல்லுவபோறல் - அதனை அவர் அறிதற்கு அறுமான (2)
மாக்குதல்.

[இதவுமை]

தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள்.

(பரி-உரை) மணந்த நான் வீங்கிய தோள் - காதலர் மணந்தஞான்ற இன்பமிகுதியாற் பூரித்த கின்றோள்கள், தணந்தமை சால அறிவிப்பபோலும், இன்ற அவர் பிரிந்தமையை வினக்க உணர்த்தலதுபோல மெலியாகின்றன, இத தகாத எ-று.

அன்ற மவ்வாற பூரித்த இன்ற மிவ்வாற மெலிந்தால் இரண்டும் கண்டவர் கடிதினறிந்த அவரைத் தகவின்மை கூறுவரென்பதாம்.

(ப-உரை) மணந்தநான் - (தலைவர்) கூடியகாளில், வீங்கிய-(இன்பமிகுதி யால்) பூரித்த, தோள் - (நினத) தோள்கள், தணந்தமை - (இன்ற அவர்) பிரிந்தமையை, சாலவறிவிப்பபோலும் - வினக்க அறிவிப்பனைபோல் வாடு கின்றன (இததகாத) எ-று.

(க-ரை) காதலர் மணந்தஞான்ற இன்பமிகுதியாற் பூரித்த கின் ரோள்கள் இன்ற அவர் பிரிந்தமையை வினக்கவுணர்த்தலதுபோல் மெலியா கின்றன. இத தகாதென்பதாம்.

(வி-ரை) அன்றம் அப்படி பூரித்த இன்றம் இப்படி மெலிக்தால் இரண்டே கண்டவர் கடிதில் அறிக்த அவரை அயோக்கியரென்பாரென்பதாம். (3)

[இதவுமது]

பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

(பரி-உரை) அணை நீங்கித் தொல் கவின் வாடிய தோள் - அன்றந்தத் துணைவர் நீக்குதலான் அவராற்பெற்ற செயற்கையழகேயன்றிப் பழைய வியற்கையழகுமிகுந்த இத்தோள்கள், பணைநீங்கிப் பைந்தொடி சோரும். இன்றதற்குமேலே தம்பெருமையிழந்த வளை கழலாகின்றன, இவை பிரிவனஞ் செயற்பாலவல்ல எ-று.

பெருமையிழத்தல் - மெலிதல். பைந்தொடி - பசிய பொன்னுற்செய்த தொடி. சோருமென்னும் வளைத்தொழில் தோண்மேனின்றது. அன்றம் பிரிந்தாரென்ற அவரன்பின்மையுணர்த்தி இன்றக் குறித்தபருவத்து வந்திலரென்ற அவர் பொய்மை யுணர்த்தாகின்றன; இனி அவற்றைக் கூறுகின்றார் மேற் குறையுண்டோவென்பதாம்.

(ப-ரை) துணைநீங்கி - (அன்றுப்) துணைவர் நீக்குதலால், (அவராலே பெற்ற செயற்கையழகுமாத்திரமல்லாமல்) தொல்கவின் - பழைய இயற்கை யழகும், வாடியதோள் - இழந்த இத்தோள்கள், (இன்று அதற்குமேலே) பணைநீங்கி - (தம்) பெருமையிழந்து, பைந்தொடி - பசும்பொன் வளைகள், சோரும் கழலுகின்றன (இவை இப்படி செய்யுந் தன்மையனவல்ல) எ-று.

(க-ரை) அன்றுந் தந்துணைவர் நீக்குதலா லவராற்பெற்ற செயற்கை யழகேயன்றிப் பழையவியற்கையழகு மிழந்த வித்தோள்களின்றதற்குமேலே தம்பெருமையிழந்து வளைகழலா கின்றன. இவை பிரிவனஞ் செயற்பால வாகாவென்பதாம்.

(வி-ரை) அன்றம் பிரிந்தாரென்ற அவரன்பில்லாமையுணர்த்தி இன்றம் குறித்த பருவத்தில் வந்திலரென்ற அவர் பொய்மை யுணர்த்தகின்றன. இனி அவைகளைச் சொல்லுகிறவர்மேல் குறையுண்டோ வென்பதாம். (4)

[இதவுமது]

கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

(பரி-உரை) கொடியார் கொடுமை உரைக்கும் - கவவுக்கை கெகிழினும் ஆற்றுதாட்கு இக்கால நீட்டத்த என்னுமென்ற கினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லாகின்றன, தொடியொடு தொல்கவின் வாடிய தோள் - வளைகளுங் கழன்று பழைய வியற்கையழகுமிழந்த இத்தோள்கள், இனியதனை யாமறைக்குமாறென்னை! எ-று.

உரைக்குமென்பது அப்பொருண்மைதோன்ற நின்ற குறிப்புச்சொல். ஒடு வேறு வினைக்கண் வந்தது. அவரொடு கலந்த தோள்களே சொல்லுவன வானால் அயலார் சொல்லுதல் சொல்லவேண்டுமோ வென்பதாம்.

(ப-ரை) கொடியார் - (ரழுவுங்கை விலகினும் பொறாதவளுக்கு இப்படி காலநீட்டிப்பில் என்னாமென்று நினையாத) கொடியார் - கொடியவரது, கொடுமை - பொல்லாங்கை, உரைக்கும் - சொல்லுகின்றன, தொடியொடு-வளைகளுங் கழன்று, தொல்கவின் வாடியதோள் - பழைய இயற்கையழகு மிழந்த இத்தோள்கள், (இனி அதனை மறைக்கும் வழியாது?) எ-று.

(க-ரை) கவவுக்கை நெகிழினு மாற்றாதாட்கிங்ஙனம் காலநீட்டித்த தென்னாமென்று நினையாத கொடியாரது கொடுமையைத் தான் சொல்லி நின்றன. வளைகளுங் கழன்று பழையவியற்கை யழகுமிழந்த வித்தோள்க ளினியதனை யாமறைக்குமாறென்னை யென்பதாம்.

(வி-ரை) அவரோடுகலந்த தோள்களே சொன்னால் அயலார் சொல்லுதல் சொல்லவேண்டுமோ வென்பதாம். (5)

[தானாற்றுதற்பொருட்டியற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது]

தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக்கூற னொந்து.

(பரி-உரை) தொடியொடு தோள் நெகிழ - யானாற்றவும் என் வயத்த வன்றித் தொடிகள் கழலுமாறு தோள்கண்மெலிய, அவரைக் கொடியர் எனக் கூறல் நொந்து நோவல்-அவற்றைக் கண்டு நீயவரைக் கொடியரெனக் கூறுதலைப் பொறாது யானென்னுள்ளே நோவாநின்றேன் எ-று.

ஒடு மேல்வந்தபொருண்மைத்து. யானாற்றேனாகின்றது அவர் வாராத தற்கன்று, நீ கூறுகின்றதற்கென்பதாம்.

(ப-ரை) (யான் பொறுக்கவும் என்வசப்படாமல்) தொடியொடு-வளைகள் கழலும்படி, தோணெகிழ - தோள்கள்வாட, (அவற்றைக்கண்டு) அவரை-அவரை, கொடியரெனக்கூறல்-(நீ) கொடியவரென்று சொல்லலை, நொந்து பொறாமல், நோவல்-(என்னுள்ளே) நோகின்றேன் எ-று.

(க-ரை) யானாற்றவு மென்வயத்தவன்றித் தொடிகள் கழலுமாறு தோள் கண்மெலிய வவற்றைக்கண்டு நீயவரைக்கொடியரெனக் கூறுதலைப்பொறாதி யானென்னுள்ளே நோவாநின்றேனென்பதாம்.

(வி-ரை) யான் பொறாதவளாகின்றது அவர் வாராதிருத்தற்கல்ல, சொல்லுகின்றதற்கென்பதாம். (6)

[அவ்வியற்பழிப்புப்பொறாது தன்னெஞ்சிற்குச் சொல்லியது]

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து.

(பரி·உரை) சொஞ்சே·சொஞ்சே!, கொடியார்க்கு என் வாடுதோட்பூசல் உரைத்த · இவள் கொடியாரென்கின்றவர்க்கு நீசென்ற என்மெலிகின்ற தோளிஞல் வினைகின்ற ஆரவாரத்தைச்சொல்லி, பாடு பெறுதியோ · ஒரு மேம்பாடெய்தவல்லேயோ, வல்லேயாயின் அதனையொப்பதில்லை எ·று.

கொடியார்க்கென்பது கொடியரல்லரென்பது தோன்றநின்ற குறிப்புச் சொல். வாடுதோளென்பதும் அவை தாமே வாடாநின்றனவென்பது தோன்றநின்றது. பூசல்·ஆகுபெயர். அஃது அவள்தோணோக்கி யியற்பழித் தன்மேலும் அதனுற் றனக்காற்றுமை மிகன்மேலும் நின்றது. நின்னுரை கேட்டலும் அவர் வருவர், வந்தால் இவையெல்லாநீக்கும், நீக்க அஃதெனக் குக் காலத்தினுற்செய்த சன்றியாமாகலின், அதன்பயனெல்லாமெய்துதி யென்னுக் கருத்தாற் பாடுபெறுதியோவென்றுள்.

(ப·உரை) சொஞ்சே · மனமே! கொடியார்க்கு · (இவளாலே) கொடியா ரென்ற சொல்லப்பட்டவர்க்கு, என்வாடுதோள்-என்வாடுகின்ற தோளிஞல் வினைகிற, பூசல்·ஆரவாரத்தை, உரைத்த·சொல்லி, பாடு ஒருமேம்பாட்டை, பெறுதியோ · அடையவல்லேயோ (வல்லேயாயின் அதனையொப்பத இல்லை) எ·று.

(நு·உரை) சொஞ்சே! இவள் கொடியாரென்கின்றவர்க்கு நீ சென்ற என் மெலிகின்ற தோளிஞல் வினைகின்ற ஆரவாரத்தைச்சொல்லி யொருமேம்பா டெய்தவல்லேயோ, வல்லேபாயினதனை யொப்பதில்லையென்பதாம்.

(வி·உரை) கொடியார்க்கென்பது · கொடியாரல்லரென்பது தோன்றநின்ற குறிப்புச்சொல். வாடுதோளென்பது · அவைதாமே வாடாநின்றவென்பது தோன்றநின்றது. உன்சொல்லைக் கேட்டவுடன் அவர் வருவர். வந்தால் தினையெல்லாம் நீக்கும், நீக்கலால் அது எனக்குக் காலத்தினுற்செய்த சன்றியாம். ஆகலால், அதன்பயனெல்லாம் அடைவாயென்னுக் கருத்தால் பாடு பெறுதியோவென்றுள்.

(7)

[வினைமுடித்து மீடலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது கினைத்து தன்னுள்ளே சொல்லியது]

முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

(பரி·உரை) முயங்கிய கைகளை ஊக்க·தன்னையிறக முயங்கிய கைகளை விட்டு நோமென்று கருதி ஒருஞான்றியேனெகிழ்த்தேனுக, பைந்தொடிப் பேதை நுதல் பசந்தது · அத்தினையும் பொருது பைந்தொடிகளோ யணிந்த பேதையது நுதல் பசந்தது, அப்பெற்றித்தாய நுதல் இப்பிரிவிற்கியாது செய்யுமோ? எ·று.

இனிக்கடிதிற் செல்லவேண்டுமென்பது கருத்து.

(ப·உரை) முயங்கிய கைகளை·(தன்னை இறுகத்) தழுவியகைகளை, (இவ ருக்கு நோமென்றவினைத்து) ஊக்க·(ஒருதினம்) தளர்த்தினேனுக, (அம்மாத்

நிரமும் பொறாமல்) பைந்தொடிப் பேதைநுதல் - பசிய வளைகளையணிந்த பேதையது நெற்றியானது, பசந்தது - நிறம் வேறுபட்டது, (அப்படிப்பட்ட நெற்றி இப்பிரிவிற்கு யாதுசெய்யுமோ? எ-று.

(க-ரை) தன்னை முயங்கிய கைகளை யிவட்கு நோமென்று கருதியொருஞான்றியா னெகிழ்த்தேனாக வத்துணையும்பொறாது பைந்தொடிகளை யணிந்த பேதையது நுதல் பசந்தது. அப்பெற்றித்தாகிய நுதலிப்பிரிவிற்கு யாது செய்யுமோ என்பதாம்.

(வி-ரை) இனிக் கடிதிலே செல்லவேண்டுமென்பது கருத்து. (8)

[இதுவுமது]

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற பேதை பெருமழைக் கண்.

(பரி உரை) முயக்கிடைத் தண் வளி போழ-அங்ஙனங்கைகளை யூக்குதலான் அம்முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக, பேதை பெருமழைக் கண் பசப்புற்ற - அத்துணையிடையீடும் பொறாது, பேதையுடைய பெரிய மழைக்கண்கள் பசப்புற்றன; அத்தன்மையவான கண்கள் மலைகளும், காடும், நாடுமாய இவ்விடையீடுகளையெல்லாம் யாங்ஙனம் பொறுத்தன? எ-று.

தண்மை ஈண்டு மென்மைமேனின்றது. போழவென்றது உடம்பிரண்டும் ஒன்றானதுதோன்ற நின்றது. மழை - குளிர்ச்சி.

(ப-ரை) (அப்படி தழுவிய கைகளைத் தளர்த்தலால்) முயக்கிடை - அப்புணர்ச்சிக்குநடுவே, தண்வளிபோழ - சிறுகாற்று நுழைந்ததாக, (அவ்வளவிடையீடும்பொறாமல்) பேதை பெருமழைக்கண் - பேதையினது பெரிய குளிர்ந்த கண்கள், பசப்புற்ற-பசலைநிறமடைந்தன, (அப்படிப்பட்ட கண்கள் மலைகளும் காடுகளும் நாடுகளும் ஆகிய இவ்விடையீடுகளையெல்லாம் எப்படி பொறுத்தன) எ-று.

(க-ரை) அங்ஙனம் கைகளை யூக்குதலான் முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக வத்துணையிடையீடு பொறாது பேதையது பெரிய மழைக் கண்கள் பசப்புற்றன. அத்தன்மையவான கண்கள் மலைகளும் காடும் நாடுமாய் இவ்விடையீடுகளையெல்லாம் யாங்ஙனம் பொறுத்தனவென்பதாம்.

(வி-ரை) தண்மை இங்கே மென்மைமேல் நின்றது. போழவென்றது உடம்பிரண்டும் ஒன்றானதுதோன்ற நின்றது. (9)

[இதுவுமது]

கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே யொண்ணுதல் செய்தது கண்டு.

(பரி-உரை) கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்று - தண்வளிபோழ வந்த கண்ணின்பசப்புத் துன்பமுற்றது, ஒண்ணுதல் செய்தது கண்டு-தனக்கயலாய ஒண்ணுதல் விளைத்த பசப்பைக்கண்டு எ-று.

அது கைகளையூக்க அவ்வளவிற்பசந்தது, யான் கைகளையுமூக்கி மெய்களுநீங்கிச் சிறுகாற்று ஊடறுக்குந் துணையும் பசந்திலனெனத் தன்வன்மையும் அதன்மென்மையுங்கருதி வெள்கிற்றென்பதாம்: ஆகவே, அவளுறுப்புக்கள் ஒன்றினொன்று முற்பட்டு நலனழியும், யாங்கடிதிற் சேறுமென்பது கருத்தாயிற்று.

(ப-ரை) கண்ணின்பசப்போ - (சிறுகாற்று நுழையவந்த) கண்களின் பசப்போ, பருவரலெய்தின்று - துன்பமடைந்தது, ஒண்ணுதல் - (தனக்கு அயலாகிய) ஒளிபொருந்திய நெற்றியால், செய்தது-விளைக்கப்பட்ட பசப்பை, கண்டு-பார்த்து எ-று.

(க-ரை) தண்வளி போழவந்த கண்ணின்பசப்புத் துன்பமுற்றது. தனக்கயலாய வொண்ணுதல் விளைத்த பசப்பைக்கண்டென்பதாம்.

(வி-ரை) அது கைகளைத் தளர்த்திய வளவிலே பசந்தது யான் கைகளையும் தளர்த்தி மெய்களும் நீங்கி அக்காற்று உள்ளே நுழையுமட்டும் பசந்திலேனென்று தன் வன்மையும் அதன் மென்மையும் கருதி வெள்கிற்றென்பதாம். ஆகவே அவளுறுப்புக்கள் ஒன்றினொன்று முற்பட்டு நலனழியும் யாம் கடிதிலே செல்லுவோமென்பது கருத்தாயிற்று. (10)

124-ம் அதி - உறுப்புநலனழிதல் - முற்றிற்று.

125-ம் அதிகாரம்—நெஞ்சொடுகிளத்தல்

(பரி-உரை) அஃதாவது ஆற்றாமை மீதூரத் தனக்கோர் பற்றுக்கோடு காணாத தலைமகள் தன்னெஞ்சொடு செய்திறனறியாது சொல்லுதல். இஃது உறுப்புக்கள் தந்நலனழிந்தவழி நிகழ்வதாகலின், உறுப்பு நலனழிதன்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: பிரிவுபொறாமை மேற்படத் தனக்கு ஓர் பற்றுக்கோடு காணாத தலைவி தன்னெஞ்சொடு செய்திறன் அறியாது சொல்லுதல். இஃது உறுப்புக்கள் தமது நலனழிந்தவழி நிகழ்வதாகலால் அதன்பின் வைக்கப்பட்டது.

[தன்னாற்றாமை தீருந்திறனாடியது]

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்
மெவ்வநோய் தீர்க்கு மருந்து. [தொன்று

(பரி-உரை) நெஞ்சே-நெஞ்சே!, எவ்வநோய் தீர்க்கும் மருந்து ஒன்று-இவ்வெவ்வநோயினைத் தீர்க்குமருந்தாவ தொன்றனை, எனைத்து ஒன்றும் நினைத்துச் சொல்லாய் - யானறியுமாற்றலிலன், எத்தன்மையதியாதொன்றாயினும் நீயறிந்தெனக்குச் சொல் எ-று.

எவ்வம் ஒன்றுமுள் நோமை. உயிரிறுஞ் சிறந்த காணினை விட்டுச் செய்வதியாதொன்றுமிறு மென்பான், எனைத்தொன்று மென்றான்.

(ப-ரை) நெஞ்சே - மனமே, எவ்வநோய் - ஒன்றுமுள் நோதநோயை நீர்க்குமருந்தை - நீர்க்குமருந்தாவது, ஒன்ற-ஒன்றை (நான் அறிபும்படியாக) எனைத்தொன்றும்-எப்படிப்பட்டதொன்றுயினும், கினைத்தை-அறிந்தை, சொல்லாயோ-(எனக்குச்) சொல்லாயோ எ-று.

(க-ரை) நெஞ்சே! இவ்வெவ்வநோய் நீர்க்கு மருந்தாவ தொன்றினை யானறிபுமாற்றலில னெந்தன்மையதி யாதொன்றுயினும் நீயறிந்தெனக்குச் சொல்லென்பதாம்.

(வி-ரை) உயிரிறுஞ் சிறந்த காணினை விட்டுச் செய்வ தியாதொன் றுயிறு மென்றற்கு எனைத்தொன்று மென்றான். (1)

[தலைமகனைக் காண்டற்கண் வேட்கைமிகுதியாற் சொல்லியது]

காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

(பரி உரை) என் நெஞ்சு வாழி - என்னெஞ்சே, வாழ்வாயாக; அவர் காதல் இலராக நீ நோவது - அவர் நங்கட்காதலிலராகவும் நீயவர் வரவு நோக்கி வருந்துதற்கே, பேதைமை-நின்பேதைமையே, பிறிதில்லை எ-று.

நம்மை நினையாமையின் நங்கட்காதலிலரென்ப தறியலாம், அஃதறியாமை மேலும் அவர்பாற்செல்லக் கருதாது அவர்வரவுபார்த்து வருந்தாநின்றாய்; இது நீ செய்துகொண்டின்றதென்னுங் கருத்தாற் பேதைமையென்றான். வாழி-இகழ்ச்சிக்குறிப்பு. யாமவர்பாற்சேறலே அறிவாவதென்பதாம்.

(ப-ரை) என்னெஞ்சு-எனது நெஞ்சே!, வாழி-வாழ்வாயாக, அவர்-அத் தலைவர், காதலிலராக-(நம்மேல்) ஆசையிலராகவும், நீ நோவது-நீ (அவர் வரவு பார்த்து) வருந்துதற்குக்காரணம், பேதைமை - (உன்) னறியாமையேயாம் வேறொன்று இல்லை.

(க-ரை) என்னெஞ்சே வாழ்வாயாக, அவர் நங்கட் காதலிலராகவும், நீயவர் வரவுநோக்கி வருந்துதற்கே நின்பேதைமையே பிறிதில்லை யென்பதாம்.

(வி-ரை) நம்மை நினையாமையால் நம்மிடத்து ஆசையிலரென்ப தறியலாம். அதையறியாமை மேலும் அவரிடத்துப்போக நினையாது அவர்வரவு பார்த்து வருந்துகின்றாய். இது நீ செய்துகொள்ளுகின்றதென்னுங் கருத்தால் பேதைமையென்றான். வாழி-இகழ்ச்சிக்குறிப்பு. யாம் அவரிடத்துச் செல்லுதலே அறிவாவதென்பதாம். (2)

[இதவுமது]

இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதலெனப் செய்தார்க ணில்.

(பரி-உரை) நெஞ்சே இருந்த உள்ளிப் பரிதல் என் - நெஞ்சே, அவர் பாற் செல்வதஞ் செய்யாத ஈண்டிறந்துபடுவதஞ் செய்யாதிருந்த அவர் வரவுநினைந்த நீவருந்துகின்ற தென்னை!, பைதல் நோய் செய்தார்கண் பரிந்த உள்ளல் இல் - இப்பையுணோய் செய்தார்மாட்டு நமக்கிரங்கிவரக் கருதல் உண்டாதாது எ-று.

நம்மாட்டருளுடையான்மையிற் றுமாக வாரார், நாஞ்சேறலே இனித் தகுவதென்பதாம்.

(ப-ரை) நெஞ்சே - மனதே, இருந்த - (அவரிடத்தைக்குப் போகாமல் நீங்கியும் இறந்திடாமல்) இருந்த, உள்ளி-(அவர்வரவை) நினைந்த, பரிதல்-(நீ) வருந்துகின்றது, என்-என்னை? பைதலோய் செய்தார்கண் - இத்தன்ப நோய் செய்தவரிடத்து, பரிந்த-(நமக்கு) இரங்கி, உள்ளல்-(வர) நினைத்தல், இல்-உண்டாகாது எ-று.

(க-ரை) நெஞ்சே! அவர்பாற் செல்வதஞ் செய்யாத ஈண்டிறந்து படுவதஞ் செய்யாதிருந்தவர் வரவுநினைந்த நீ வருந்துகின்றதென்னை? இப்பைதலோய் செய்தார்மாட்டு நமக்கிரங்கிவரக் கருதாதலுண்டாகா தென்பதாம்.

(வி-ரை) நம்மிடத்து அருளுடையவ ரல்லாமையால் தாமாக வாரார், நாம் அவரிடத்துச் செல்லுதலே இனித் தகுவதென்பதாம். (3)

[இதவுமது]

கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்கானை லுற்று.

(பரி-உரை) நெஞ்சே கண்ணும் கொளச் சேறி - நெஞ்சே நீ யவர்பாற் சேறலுற்றாயின் இக்கண்களோடும் உடன்கொண்டு செல்வாயாக; இவை அவர்க்காணல் உற்று என்னைத் தின்னும்-அன்றி நீயே சேறியாயின், இவை நாம் காட்சிவிதப்பிலுல் அவரைக் காண்டல்வேண்டி நீகாட்டென்று என்னைத் தின்பனபோன்று கலியாநிற்கும் எ-று.

கொண்டென்பது கொளவெனத் திரிந்தநின்றது. தின்னுமென்பது ஒக்கலைக் குறிப்பு. அங்ஙனிவு நீர்க்கவேண்டுமென்பதாம்: என்றது தான் சேறல்குறித்து.

(ப-ரை) நெஞ்சே - மனதே! (நீ அவரிடத்துச் செல்லலுற்றாயின்) கண்ணுங்கொளச்சேறி-இக்கண்களோடும் உடன்கொண்டுசெல்லு, (அல்லாமல் நீ மாத்திரம் செல்வாயானுல்) இவை - இக்கண்கள், அவர் காணலுற்ற-வரைக்காணல்வேண்டி, என்னை - என்னை, தின்னும் - (நீ காட்டென்று) தின்பனைபோல் வருத்தும் எ-று.

(க-ரை) நெஞ்சே! நீ யவர்பாற் செல்லலுற்றாயின் இனிக்கண்களோடும் உடன்கொண்டு செல்வாயாக. அன்றி நீயே சேறியாயினிவைதாக் காட்சி

விருப்பினா லவரைக் காண்டல்வேண்டி நீகாட்டென் றென்னைத் தின்பனை போன்று நலியாநிற்குமென்பதாம்.

(வி-ரை) கொளவென்பது கொண்டென்பொருளில் வந்தது. அந்நலிவு தீர்க்கவேண்டுமென்பதாம். என்றது தான்செல்லல் குறித்து. (4)

[இதுவுமது]

செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா முற்றா லுறாஅ தவர்.

(பரி-உரை) நெஞ்சே - நெஞ்சே, யாம் உற்றால் உறாதவர்-யாம் தம்மை யுறத் தாமுறாத நங்காதலரை, செற்றாரெனக் கைவிடல் உண்டோ-வெறுத் தாரென்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும்வலி நமக்குண்டோ, இல்லை எ-று.

உறுதல் - அன்புபடுதல். அவ்வலியின்மையின் அவர்பாற்செல்வதே நமக்குத் தகுவதென்பதாம்.

(ப-ரை) நெஞ்சே - மனதே, யாம் - நாம், உற்றால் - (தம்மை) விரும்பி உறாஅதவர்-(நம்மை) விரும்பாத தலைவரை, செற்றாரென-வெறுத்தாரென்று நினைந்து, கைவிடல்-(பிணங்கிக்) கைவிட்டிருக்கும் வழி, உண்டோ-(நமக்கு) உண்டோ? (இல்லை) எ-று.

(க-ரை) நெஞ்சே! யாந் தம்மையுறத் தாமுறாத நங்காதலரை வெறுத்தாரென்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும் வலிநமக்குண்டோ? இல்லையென்பதாம்.

(வி-ரை) அவ்வலியில்லாமையால் அவரிடத்துக்குச் செல்வதே நமக்கு தகுவதென்பதாம்.

[தலைமகன் கொடுமைநினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக் கழறியது]

கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணரா பொய்க்காய்வு காய்தியென் னெஞ்சு.

(பரி-உரை) என்னெஞ்சு-என் நெஞ்சே, கலந்து உணர்த்தும் காதலர் கண்டாற்புலந்து உணராய்-யான்றம்மொடு புலந்தால் அப்புலவியைக் கலந்தன்னானே நீக்கவல்ல காதலரைக் கண்டாற் பொய்யேயாயினும் ஒருகால் புலந்து பின்னதனை நீங்கமாட்டாய், பொய்க் காய்வு காய்தி அதுவுமாட்டாய் நீ இப்பொழுது அவர் கொடியரெனப் பொய்க்காய்வு காயாநின்றாய்; இதனை யொழிந்து அவர்பாற்செல்லத் துணிவாயாக எ-று.

கலத்தலானென்னும் பொருட்டாய கலக்கவென்பது திரிந்து நின்றது. அதனானுணர்த்தலாவது கலவியின்பத்தைக் காட்டி அதனான் மயக்கிப் புலவி குறிப்பினை யொழித்தல். பொய்க்காய்வு - நிலையில் வெறுப்பு. கண்டாற் மாட்டாதநீ காணாதவழி வெறுக்கின்றதனாற் பயனில்லை யென்பதாம்.

) (ப-ரை) என்னெஞ்சு-எனதுநெஞ்சே! (யான் தம்மோடு பிணங்கினால்) ...ந்து - புணர்தலால், உணர்த்துங் காதலர் - (அப்பிணக்கை), நீக்கவல்ல ...லைவரை, கண்டால் - பார்த்தால், புலந்து - (பொய்யாகவாயினும் ஒருதரம்) ...ணங்கி, உணராய்-(பின்) அதனை நீங்கமாட்டாய். (அதுவுமாட்டாத நீ ...ப்போது) பொய்க்காய்வு காய்தி - (அவரைக் கொடியரென்று) பொய்க்காய் ...கக் காய்கின்றாய், (இனி அதனையொழிந்து அவரிடத்துச் செல்லத்துணி) ...று.

(க-ரை) என்னெஞ்சே! யான்றம்மோடு புலந்தா லப்புலவியைக் கலவி ...ன்னானே நீக்கவல்ல காதலரைக் கண்டாற் பொய்யேயாயினு மொருகாற் ...ந்து பின்னதனை நீங்கமாட்டாய் அதுவுமாட்டாத நீ யிப்பொழுதவர் ...கொடியரெனப் பொய்க்காய்வு காயாகின்றாய், இனியிதனை யொழிந்தவர்பாற் ...செல்லத்துணிவாயாக வென்பதாம்.

(வி - ரை) புணர்தலால் உணர்த்தலாவது கலவியின்பத்தைக்காட்டி ...தனால் மயக்கிப் புலவிக்குறிப்பை யொழித்தல். கண்டால் வெறுக்கமாட் ...த நீ காணாதவழி வெறுக்கின்றதனால் பயனில்லை யென்பதாம். (6)

[காண்டடுத்தலின் அச்செலவொழிவாள் சொல்லியது]

காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு.

(பரி-உரை) நன்னெஞ்சே-நல்லநெஞ்சே, ஒன்று காமம் விடு-ஒன்றின் ...ண்விடமாட்டாயாயிற் காமவேட்கையை விடு, (ஒன்று) நாண் விடு- ...ன்றின் அதுவிடமாட்டாயாயின் நாணினைவிடு, இவ்விரண்டு யானோ ...பொறேன் - அன்றியே இரண்டும் விடாமை நின் கருத்தாயின், ஒன்றற் ...கொன்று மறுதலையாய இவ்விரண்டனையும் உடன்றாங்குமதுகை, யானிலன் ...று.

யானோவென்னும் பிரிநிலை நீ பொறுப்பினு மென்பது படநின்றது. ...னெஞ்சே யென்றது, இரண்டையும் விடாது பெண்மையை நிலைபெறுத் ...ின், நல்லையென்னுங் குறிப்பிற்று. அது நன்றே யெனினும் என்னுயி ...ண்டாதல் சாலாமையின், அதற்காகின்றிலேனென்பதாம். முற்றும்மை ...காரத்தாற்றொக்கது.

(ப-ரை) நன்னெஞ்சே-நல்லமனமே! காமம்விடுவொன்று-ஒன்று (நாணம் ...டமாட்டாயாகில்) காமவிருப்பத்தை விடு, நாண்விடு-ஒன்று (காமவிருப் ...த்தை விடமாட்டாயாகில்) நாணத்தை விடு, (இரண்டும்விடாமை உன்சருத் ...கில்) இவ்விரண்டு - (ஒன்றற்கொன்று பகையாகிய) இவ்விரண்டையும், ...னோ-நானோ, பொறேன்-(ஒருசேரத்) தாங்கவல்லேனல்லேன் எ-று.

(க-ரை) நல்லநெஞ்சே காமவேட்கையைவிடு ஒன்றி னதுவிடமாட்டா ...யின் நாணினைவிடு அன்றியே யிரண்டும் விடாமை நின்கருத்தாயி

னொன்றற்கொன்று மறுதலையா யவ்விரண்டினையு முடன்றாங்கும் வகையா னில்லேனென்பதாம்.

(வி-ரை) யானோவென்னும் பிரிநிலை யோகாரம் நீ பொறுப்பினுமென்பது படநின்றது. நன்னெஞ்சே யென்றது இரண்டையும்விடாமல் பெண்மையை நிலைபெறச்செய்தலால், நல்லையென்னுங் குறிப்பாயிற்று. அது நன்றேயெனி னும் என்னுயிருண்டாதல் போதாமையால் அதற்கு ஆகின்றிலேனென்ப தாம். இரண்டுமென்பதன் முற்றும்மை விகாரத்தால் தொக்கது. (7)

[இதுவுமது]

பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு.

(பரி-உரை) என் நெஞ்சு-என்னெஞ்சே, அவர் பரிந்து நல்காரென்று-அவர் இவ்வாற்றாமையை யறியாமையின் நொந்துவந்து தலையளிசெய்யா ராயினாரென்று கருதி, பிரிந்தவர்பின் ஏங்கிச் செல்வாய் பேதை-அஃதறிவித் தற்பொருட்டு நம்மைப்பிரிந்துபோயவர்பின் ஏங்கிச்செலலுற்ற நீயாது மறியாய் எ-று.

ஆற்றாமைகண்டுவைத்தும் நல்காது போயினாரைக் காணாதவழிச்சென் றறிவித்த துணையானே நல்கவருவரென்று கருதினமையிற் பேதை யென்றாள்.

(ப-ரை) என்னெஞ்சு - எனதுநெஞ்சே! அவர்-அவர், (இப்பொறாமை அறியாமையால்) பரிந்து-நொந்துவந்து, நல்காரென்று-அருள்செய்யாராயினா ரென்று, நினைந்து-(அதை அறிவித்தற்பொருட்டு), பிரிந்தவர்பின்-(நம்மைப் பிரிந்துபோகிய தலைவர்பின்னே, ஏங்கி-துன்பமுற்று, செல்வாய் - போ லுற்றநீ, பேதை-ஒன்றுமறியாய் எ-று.

(க-ரை) என்னெஞ்சே! இவ்வாற்றாமை யறியாமையி னொந்துவந் தலையளி செய்யாராயினாரென்று கருதி யஃதறிவித்தற்பொருட்டு நம்மை பிரிந்துபோ யவர்பின்னேங்கிச் செல்லலுற்ற நீ யாதுமறியாயென்பதாம்.

(வி-ரை) பொறாமை யறிந்திருந்தும் அருள்செய்யாமல் போயினாரை காணாதவிடத்தே நாம்போய் அறிவித்தமாத்திரத்தில் அருள்செய வரு ரென்று நினைத்தமையால் பேதைமையென்றாள்.

[இதுவுமது]

உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு.

(பரி-உரை) என் நெஞ்சு - என்னெஞ்சே, காதலவர் உள்ளத்தார காதலர் நின்னகத்தாராக, நீ உள்ளி யாருழைச் சேறி-முன்பெல்லாங் கண் வைத்து இப்பொழுது நீ புறத்துத் தேடிச் செல்கின்றது யாரிடத்து எ-

உள்ளமென்புழி அம்மும் பகுதிப்பொருள்விகுதி. நின்னகத்திருக்கின்ற வரை அஃதறியாது புறத்தைத்தேடிச் சேறல் நகையுடைத்து, அதனை யொழியென்பதாம்.

(பதவுரை) என்னெஞ்சு - எனதுநெஞ்சே! காதலவர்-அன்பர், உள்ளத்தாராக-(உன்)னுள்ளிருப்பவராக, (முன்னெல்லாங் கண்டிருந்தும்) நீ-நீ, உள்ளி-(இப்பொழுதுபுறத்தே) தேடி, யாருழை-யாரிடத்து, சேறி-செல்லுகின்றாய்? எ-று.

(கருத்து) என்னெஞ்சே! காதலர் நின்னகத்தாராக முன்பெல்லாங் கண்டு வைத்து இப்பொழுது நீ புறத்தைத் தேடிச் செல்கின்றது யாரிடத்தென்பதாம்.

(விசேடவுரை) உன்னுளிருக்கிறவரைப் புறத்தைத்தேடிச் செல்லல் நகையுடைத்து, அதை யொழியென்பதாம்.

(9)

[அவரை மறந்தாற்றல்வேண்டுமென்பதுபடச் சொல்லியது]

கன்னுக் குறைந்தாரை நெஞ்சத் துடையேமா
வின்னு மிழத்துங் கவின்.

(பரிபாடலுரை) கன்னுக் குறைந்தாரை நெஞ்சத்து உடையேமா - நம்மைக் கூடாவண்ணங் குறைந்துபோயினாரை நாம் நம்மகத்துடையேமாக, இன்னும் கவின் இழத்தும் - முன்னிழந்த புறக்கவினேயன்றி நின்ற அகக்கவினுமிழப்பேம் எ-று.

*"குன்றி-னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்" என்புழிப்போல நெஞ்சென்பது ஈண்டும் அகப்பொருட்டாய் நின்றது. அவர் நம்மைத்தன்னுள்ளுறைந்தாராகவும், நாமவரை மறத்தன்மாட்டேமாகவும், போன மெய்க்கவினேயன்றி நின்றகவினுமிழப்பேமென்பதாம்.

(பதவுரை) கன்னு - (நம்மைக்) கூடாதவண்ணம், குறைந்தாரை - குறைந்துபோயினாரை, நெஞ்சத்துடையேமா - (நாம்) உள்ளுடையேமாக, (முன்னிழந்த புறத்தழகேயன்றி) இன்னும்-இன்னமும், கவின்-(அகத்)தழகையும், இழத்தும்-இழப்போம் எ-று.

(கருத்து) நம்மைக் கூடாவண்ணங் குறைந்துபோயினாரை நாம் நம்மகத்துடையேமாக முன்னிழந்த புறக்கவினேயன்றி நின்ற வகக்கவினையு மிழப்பேமென்பதாம்.

(விசேடவுரை) அவர் நம்மைக் கூடாமல் குறைந்தாராகவும், நாம் அவரை மறக்கமாட்டேமாகவும், போன மெய்யழகேயன்றி நின்றகவினையும் இழப்போமென்பதாம்.

(10)

125-ம் அதி - நெஞ்சோடுகிளத்தல் - முற்றிற்று.

---

*குறுந்தொகை; கடவுள் வாழ்த்து.

126-ம் அதிகாரம்—நிறையழிதல்

(பரி-உரை) அஃதாவது: தலைமகன் மனத்தடக்கற்பாலனவற்றை வேட்கைமிகுதியான் அடக்கமாட்டாத வாய்விடுதல்: * "நிறையெனப்படுவது மறைபிற வரியாமை" என்றார் பிறரும். அஃதழிதற்காரணம் சொல்சொடு னைத்தலைமேன், இது சொல்சொடுனைத்தலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தலைவி மனதிலே அடக்கப்படுமவைகளை ஆசை மிகுதியால் அடக்கமாட்டாமல் வாய்விடுதல். அது அழிதற்குக் காரணம் சொல்சொடு சொல்லுதலால் இது சொல்சொடுனைத்தலின் பின் வைக்கப் பட்டது.

[காணுநிறையுமழியாமை யீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது]

காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

(பரி-உரை) காணுத் தாழ் வீழ்த்த நிறையென்னும் கதவு - காணுமை தாழினைக் கோத்த நிறையென்னுங் கதவினை, காமக் கணிச்சி உடைக்கும். காமவேட்கையாகிய கணிச்சி முறியாகின்றது, இனி அவை நிற்றலுமில்லை, யாணுற்றலுமில்லை எ-று.

கணிச்சி-கூர்தாலி. காணுள்ளதனையும் நிறையழியாதாகலின் அதனைத் தாழாக்கியும், அதற்குக்கிடந்தன பிறர்கொள்ளாமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலியவாய்த் தாமாக நீக்காத அவ்விரண்டனையும் ஒருவன் நீக்கலிற் றன்காமவேட்கையைக் கணிச்சியாக்கியுங் கூறினான்.

(ப-உ) காணுத்தாழ்வீழ்த்த-காணுகிய தாழினைக்கோத்த, நிறையெனுங்கதவு-நிறையென்ற சொல்லப்படுகிற கதவை, காமக்கணிச்சி-காமவேகையாகிய குந்தாலி, உடைக்கும்-முறிக்கின்றது, இனி அவைநிற்றலும் இல்லையான் பொறுத்தலும் இல்லை எ-று.

(க-உ) காணுகிய தாழினைக்கோத்த நிறையென்னுங் கதவினைக் காவேட்கையாகிய கணிச்சி முறியாகின்றது இனியவை நிற்றலுமில்லை யாறுமில்லை யென்பதாம்.

(வி - உ) காணுள்ளவனைக்கும் நிறை அழியாதாகலால், அதனைத் தாழாக்கியும், உள்ளிருப்பவைகளைப் பிறர்கொள்ளாமற் காத்தலால் நிறையைக் கதவாக்கியும், வலியவையாய்த் தாமாக நீக்காத அவ்விரண்டினையும் ஒருவன் நீக்கலால் தன்காமவேட்கையைக் கணிச்சியாகச் சொல்லினான்.

* கலி; நெய்தல்-16.

[நெஞ்சின்கட்டோன்றிய காமம் நெஞ்சாலடக்கப்படு மென்றுட்குச் சொல்லியது]

காம மெனவொன்றே கண்ணின்றென் னெஞ்சத்
யாமத்து மாளுந் தொழில்.

[தை

(பரி உரை) யாமத்தும் என் நெஞ்சத்தைத் தொழில் ஆளும்-எல்லாருந் தொழிலொழியு மிடையாமத்தும் என்னெஞ்சத்தையொறுத்துத் தொழில் கொள்ளாநின்றது, காமமென ஒன்று கண் இன்று-ஆகலாற் காமமென்று சொல்லப்பட்ட வொன்று கண்ணேட்டமின்றே யிருந்தது எ-று.

ஒவென்பது இரக்கக்குறிப்பு. தொழிலின்கண்ணேயாடல் - தலைமகன் பாற்செலவிடுத்தல். தானையப்பணிகோடல் உலகியலன்மையிற் காமமென வொன்றென்றும், அது தன்னைக் கொள்கின்றது அளவறியாது கோடலிற் கண்ணின்றென்றல் கூறினான். அடக்கப்படாமை கூறியவாறு.

(ப-ரை) யாமத்தும் - (எல்லாருந் தொழிலொழிகிற) கடோத்தினியிலும், என்னெஞ்சத்தை-என்மனதை, தொழில்-தொழிலிலே, ஆளும்-(தண்டித்து) ஆளுகின்றது, (ஆகலால்) காமமெனவொன்று-காமமென்று சொல்லப்பட்ட ஒன்று, ஓ-ஐயோ, கண்ணின்று-கண்ணேட்டமில்லதா யிருந்தது எ-று.

(க-ரை) எல்லாருந் தொழிலொழியு மிடையாமத்து மென்னெஞ்சத்தை யொறுத்துத் தொழில் கொள்ளாநின்ற தாகலாற் காமமென்று சொல்லப் பட்டவொன்று கண்ணேட்டமின்றே யிருந்தென்பதாம்.

(வி-ரை) தொழிலிலே ஆளுதல் - தலைவனிடத்துச் செல்லவிடுதல், தானைத் தொழில்கொள்ளுதல், உலகாடை யல்லாமையால் காமமென வொன்றென்றும், அது தன்னைக் கொள்ளுகின்றது அளவறியாது கொள் ளுதலால் கண்ணின்றென்றும் சொல்லினான். காமம் தன்னாலே அடக்கப் படாமை சொல்லியபடி.

(2)

[மகளிர்காமம் மறைக்கப்படுமென்றுட்குச் சொல்லியது]

மறைப்பேன்மற் காமத்தை யாரே குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும்.

(பரி-உரை) காமத்தை யான் மறைப்பேன் - இக்காமத்தை யானென் னெஞ்சே மறைக்கக் கருதுவேன், குறிப்பு இன்றித் தும்மல்போல் தோன்றி விடும்-அதனாலென், இஃதென்கருத்தின் வாராத தும்மல்போல வெளிப் பட்டே விடாநின்றது எ-று.

மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் இரக்கற்கண் வந்தது. தும்ம டங்காதாற்போல அடங்குகின்றதில்லை யென்பதாம்.

(ப-ரை) காமத்தை-இக்காமத்தை, யான்-நான், ஓ-ஐயோ, மறைப்பேன்-(நெஞ்சே) மறைக்க நினைப்பேன், (அதனால்) குறிப்பின்றி - (இது) என்

கருத்தின் வழிவாராமல், தம்மல்போல் - தம்மலைப்போல், தோன்றிவிடும் - வெளிப்பட்டே விடுகின்றதை எ-று.

(க-ரை) இக்காமத்தை யானென்றுள்ளே மறைக்கக் கருதுவேனதனை நீஃதென் கருத்தில் வாராத தம்மல்போல வெளிப்பட்டே விடாதின்றதென்பதாம்.

(வி-ரை) மன் ஒழியிசையில் வந்தது. எப்படித் தம்மல் அடக்குகின்றதில்லையோ அப்படியே காமம் அடக்குகின்றதில்லை யென்பதாம். (3)

[இதவுமது]

நிறையுடையே னென்பேன்மன் யானெனவென் காம மறையிறந்து மன்று படும்.

(பரி-உரை) யான் நிறையுடையேன் என்பேன் - இன்றினாங்கெல்லாம் யானென்னை நிறையுடையேனென்று கருதியிருந்தேன், என் காமம் மறை இறந்து மன்று படும் - அதனாலென், இன்றென்காமம் மறைத்தலைக்கடந்து மன்றின்கண் வெளிப்படாதின்றது எ-று.

மன்றும் ஓவும் மேலவற்றின்கண் வந்தன. மன்றுபடுதல்-பலருமறிதல். இனி என்னைத்தன்றென்பதாம்.

(ப-ரை) யான்-நான், ஓ-ஐயோ, நிறையுடையேனென்பேன் - (இ லையும் என்னை) நிறையுடையேனென்று நினைத்திருப்பேன், (அதனால்) என்காமம்-எனதுகாமம், மறையிறந்து - மறைத்தலைக்கடந்து, மன்றுபடும் பலருமறியப்படுகின்றது எ-று.

(க-ரை) இன்றினாங்கெல்லாம் யானென்னை நிறையுடையேனென்று கருதியிருந்தேனதனாலென் இன்றென்காமம் மறைத்தலைக்கடந்து மன்றின் கண் வெளிப்படாதின்றதென்பதாம்.

(வி-ரை) மன் ஒழியிசையில் வந்தது. இனி இக்காமமானது என்னை (4) வினதல்ல வென்பதாம்.

[தம்மைமறந்தாரை நாமுமறக்கற்பாலமென்றூட்குச் சொல்லியது]

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ யுற்றார றிவதொன் றன்று.

(பரி-உரை) செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை - தம்மையகன்றார் சென்றார் பின் செல்லாத நாமும் அகன்றதிற்குநிறையுடைமை, காமநோ உற்றார் அறிவது ஒன்று அன்று - காமநோயினையுறுதார் அறிவதொன்றன்று உற்றார் அறிவதொன்றன்று எ-று.

இன்பதொடு கழிபுன்காலத்தைத் துன்பத்தொடு கழியுமாறு செய்தலி செற்றாரென்றார். பின்சேறல்-மனத்தால் இடைவிடாது நினைத்தல். பெரு

தகைமை ஈண்டாகுபெயர், காமநோயுறாதார்-மானமுடையார். நன்றென வுணரார் மாட்டுஞ்சென்றேநிற்கும் யானறிவதொன்றன்றென்பதாம்.

(ப ரை) செற்றார் பின்-தம்மை நீங்கிப்போனவர் பின், செல்லா-செல்லாது, (தாமும் நீங்கிநிற்கிற) பெருந்தகைமை-நிறையுடைமையானது, காமநோயுற்றார்-காமநோயடைந்தவரால், அறிவதொன்றன்று-அறியப்படுவதொன்றன்று எ-று.

(க-ரை) தம்மையகன்றுசென்றார் பின் செல்லாது தாமுமகன்று நிற்கு நிறையுடைமை காமநோயினையுறாதா ரறிவதொன்றன்றி யுற்றாரறிவதொன்றன்று வென்பதாம்.

(வி-ரை) இன்பத்தோடு கழியுங்காலத்தைத் துன்பத்தோடு கழியும்படி செய்தலாலே செற்றாரென்றாள். பின்செல்லுதல்-மனத்தால் இடைவிடாது நினைத்தல். பெருந்தகைமை-ஆகுபெயர். காமநோயுறாதார்-மானமுடையார் நன்றென வறியாரிடத்தும் சென்றே நிற்கும் யான் அறிவதொன்றன்றென்பதாம். (5)

[இதுவுமது]

செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னை யுற்ற துயர்.

(பரி-உரை) செற்றவர்பின் சேறல் வேண்டி-என்னையகன்று சென்றார் பின்னே யான் சேறலைவேண்டுதலால், என்னை உற்ற துயர் எற்று அளித்து-என்னை யுற்ற துயர் எத்தன்மையது? சால நன்று எ-று.

செற்றவரென்றது ஈண்டும் அப்பொருட்டு. வேண்டவென்பது வேண்டியெனத் திரிந்துநின்றது. அளித்தென்பது இகழ்ச்சிக்குறிப்பு. இக்காமநோய் யான் சொல்லவுங்கேட்கவுமாவதொன்றன்று, சாலக்கொடிதென்பதாம்.

(ப ரை) செற்றவர்பின் - (என்னை நீங்கிச்) சென்றவர் பின்னே, சேறல் வேண்டி-(யான்) செல்லல் வேண்டுதலால், என்னையுற்றதுயர்-என்னையடைந்த துன்பமானது, எற்று-எத்தன்மையது? அளித்து-மிகநன்று எ-று.

(க ரை) என்னையகன்று சென்றார்பின்னே யான் சேறலைவேண்டுதலா என்னை யுற்றதுய ரெத்தன்மையது? சாலநன்றென்பதாம்.

(வி-ரை) அரோ-அசை. அளித்தென்பது இகழ்ச்சிக்குறிப்பு. இக்காமநோயானது யான் சொல்லவும் கேட்கவும் ஆவதொன்றன்று, மிகக் கொடியதென்பதாம். (6)

[பரத்தையிற்பிரிந்துவந்த தலைமகனோடு நிறையழிவாற்கூடிய தலைமகள் நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச் சொல்லியது]

நாணென வொன்றோ வறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின்.

(பரி-உரை) பேணியார் காமத்தாற் பெட்ப செயின்-தம்மால் விரும்பப் பட்டவர் வர்த காமத்தால் தாம் விரும்பியவற்றைச் செய்புமனவின், தாண் என ஒன்றே அறியலம் - தாணென்றொன்றையும் அறியமாட்டேமாயிருந் தேம் எ-று.

பேணியாரெனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. விரும்பியன-வேட்கைமிகவினாற் சருகியிருந்த கலவினன். தாண்-பாத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு தாணுதல். ஒன்றென்பது ஈண்டுச் சிறிதென் னும் பொருட்டு. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. சிறையழிவான் அறியாத கூடிய தன்குற்றநோக்கி, அவளையுமுளப்படுத்தான்.

(பதவுரை) பேணியார் . (தம்மால்) விரும்பப்பட்ட தலைவர் (வர்த), காமத் தால் - காமத்தினாலே, பெட்ப - (தாம்) விரும்பியவைகளை, செயின் - செய்பு மனவில், தாணென்றொன்றே - தாணென்ற சொல்லப்பட்ட ஒன்றையுமோ, அறியலம்-அறியமாட்டேமாயிருந்தது எ-று.

(கருத்து) தம்மால் விரும்பப்பட்டவர்வர்த காமத்தால் தாம் விரும்பிய வற்றைச் செய்புழவி தாணென்றொன்றையு மறியமாட்டேமா யிருந்தே னென்பதாம்.

(விசேடம்) விரும்பியவை வேட்கைமிகுதியினாலே சினைத்திருந்த கலவினன். சிறையழிவால் அறியாமற்கூடிய தன் குற்றநோக்கி அவளையுந் தன்னோ(1) சேர்த்தக்கொண்டு சொன்னான்.

[இதவுமதி]

பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை.

(பரி-உரை) தம்பெண்மை உடைக்கும் படை - தன்னிறையாகியவரனை யழிக்குந்தானை, பன்மாயக் கள்வன் பணிமொழியன்றோ - பல பொய்களை வல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்களன்றோ? ஆனபின் அதனிற்குமா றென்னை? எ-று.

பெண்மை ஈண்டுத் தலைமைபற்றி நின்றதேனின்றது. வந்தாற் புலக்கற் கடவேமென்றும், புலத்தால் அவன்சொற்களானுஞ் செயல்களானும் நீக்கே மென்றும் இவை முதலாகவெண்ணிக்கொண்டிருந்தன யாவுங் காணுதற் கலவிக்கட்டன்னினு முற்படும் வகைவந்ததோன்றினனென்பாள், பன்மாய கள்வனென்றாள். பணிமொழி-தம்மினுந்தானன்பு மிகுதியுடையனாகச் சொ லுஞ் சொற்கள். அவன் அத்தன்மையனாக, சொற்கள் அவையாக, தன்னை யுழியாதொழியுமோ வென்பதாம்.

(பதவுரை) தம்பெண்மை-தமது தன்னிறையாகிய (அரணத்தை), உடைக்கும் அழிக்கிற, படை-ஆயுதம், பன்மாயக்கள்வன்-பலபொய்கள் பேசவல்ல கள் ளனுடைய, பணிமொழியன்றோ-தாழ்ந்தசொற்களன்றோ? (ஆனபின் அதனிற் கும்விதம் யாதோ?) எ-று.

(க-ரை) நந்நிறையாகிய வரணையழிக்குந் தானை பல பொய்களை வல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்களன்றோ? ஆனபின்னது நிற்குமாறென்னை யென்பதாம்.

(வி-ரை) பெண்மை இங்கே தலைமைபற்றி நிறைமேல் நின்றது. வந்தால் பிணங்கக்கடவேமென்றும், பிணங்கினால் அவன் சொற்களாலும் செயல்களாலும் நீங்கேமென்றும் இவைமுதலாக எண்ணிக்கொண்டிருந்த யாவையும் காணாமல் கலவியிலே தன்னிலும் முற்படும்படி வந்து தோன்றினானென்றற்கு, பன்மாயக்கள்வனென்றான். பணிமொழி-நம்மினும் அதிகவன்புடையோனாகச் சொல்லுஞ்சொற்கள். அவன் அப்படிப்பட்டவனாக; சொற்கள் அவையாக, நமதுநிறை அழியாதொழியுமோ வென்பதாம். (8)

[இதுவுமது]

புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு.

(பரி-உரை) புலப்பல் எனச் சென்றேன்-அவர் வந்தபொழுது புலக்கக்கடவேனென்று கருதி முன்னில்லாது பிறிதோரிடத்துப் போயினேன்; நெஞ்சம் கலத்தலுறுவது கண்டு புல்லினேன்-போயும், என்னெஞ்சம் நிறையினில்லாது அறைபோய் அவரோடு கலத்தறொடங்குதலையறிந்து, இனி அது வாயாதென்று புல்லினேன் எ-று.

வாயாமை - புலத்தற்கருவியாய நெஞ்சுதானே கலத்தற்கருவியாய் நிற்றலின் அது முடியாமை.

(பரை) (அவர்வந்தபொழுது) புலப்பலென-பிணங்கக்கடவேனென்று நினைத்து, சென்றேன் - (அவரெதிர்நில்லாமல் வேறோரிடத்திலே) போயினேன், (போகியும்) நெஞ்சம் - (என்) நெஞ்சமானது, (நிறையினில்லாமல் மறுத்துக்கொண்டுபோய்) கலத்தலுறுவது-(அவரோடு) கலத்தலைத் தொடங்குவதை, கண்டு - அறிந்து, புல்லினேன் - (இனி அதுவாயாதென்று) தழுவினேன் எ-று.

(க-ரை) அவர் வந்தபொழுது புலக்கக்கடவேனென்று கருதி முன்னில்லாது பிறிதோரிடத்துப் போயினேன், போயுமென்னெஞ்சம் நிறையினில்லாதறைபோ யவரோடு கலத்தற்றொடங்குதலையறிந் தினியது வாயாதென்று புல்லினேனென்பதாம்.

(வி-ரை) வாயாமை-பிணங்குதற்குக் காரணமாகிய நெஞ்சுதானே கலத்தற்குக் காரணமாய் நிற்றலால் அந்நினைப்பு முடியாமை. (9)

[இதுவுமது]

நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

(பரி-உரை) நினம் நீயில் இட்டன்ன நெஞ்சினுர்க்கு நினைத்தைத் நீயின் கண்ணே யிட்டால் அஃதருகுமாறுபோலத் தக்காதலரைக்கண்டால் நிறை யழிக்தருகு நெஞ்சினையுடைய மகளிர்க்கு, புணர்ந்த ஊடி நிற்பேம் எனல் உண்டோ-அவர் புணர யாமூடிப் பின்பு உணராது அங்கிலையே நிற்கக்கடவே மென்ற கருதலுண்டாகுமோ? ஆகாது எ-று.

புணர்தல் - கண்டு மிகவறுகுதல், எதிர்ப்படலுமாம். புணர வென்பது புணர்தனைத் நிரிக்கின்றது. யானத்தன்மையேனுகலின் எனக்கஃதில்லை யாயிற்றென்பதாம்.

(ப-உரை) நினைத்தீயிலிட்டன்ன - நினைத்தைத் நீயிலிட்டால் அது உருகு மாறுபோல் (தக்கலவரைக்கண்டால் நிறையழிக்த உருகுகின்ற) நெஞ்சி னர்க்கு - நெஞ்சினையுடைய மகளிர்க்கு, ஊடி - (யாம்) பிணங்கி, புணர்த்த (பின்) புணர்க்த, நிற்பேமெனல் - (அங்கிலையிலே) நிற்கக்கடவேமென்ற நினைத்தல், உண்டோ-உண்டாகுமோ? எ-று.

(க-உரை) நினைத்தைத் நீயின்கணிட்டா லஃதருகுமாறுபோலத் தக் காதலரைக் கண்டா னிறையழிக்தருகு நெஞ்சினையுடைய மகளிர்க் கியா மூடிப் பின் புணரா தங்கிலையே நிற்கக்கடவேமென்ற கருதலுண்டாமோ? ஆகாதென்பதாம்.

(வி-உரை) யான் அத்தன்மையேனுகலால், எனக்கு அது இல்லையாயி (10) றென்பதாம்.

126-ம் அதி - நிறையழிதல் - முற்றிற்று.

127-ம் அதிகாரம்—அவர்வயின்விதும்பல்

(பரி-உரை) அஃதாவது: சேயிடைப்பிரிவின்கட்டலைமகனுர் தலைம லும் வேட்கைமிகவினுன் ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல். தலை மகன்பிரிவும் தலைமகனாற்ருமையும் அதிகாரப்பட்டு வருகின்றமையின், இரு வரையுஞ்சுட்டிப் பொதுவாகிய பன்மைப்பாலாற் கூறினுர். பிறரெல்லா மிதனைத் தலைமகனே நினைந்து தலைமகன் விதுப்புறலென்ருர்: சுட்டுப்பெ சொல்லுவான் குறிப்பொடு கூடிய பொருளுணர்த்துவதல்லது தானென்ற குப் பெயராகாமையானும், கவிகூற்ருய அதிகாரத்தைத் தலைமகன் உயர் தற்பன்மையாற் கூறப்படாமையானும், அஃதையன்மை யறிக. இதனு டலைமகன் கூற்ற நிறையழிவானிகழ்ந்ததாகலின், அவ்வியையுபற்றி கி யழிதலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தாரதேசப்பிரிவிலே தலைவனும் தலைவியும் தூ மிகுதியால் ஒருவரையொருவர் காணுதற்கு விரைதல். இதனுன் தலை சொல் நிறையழிவால் உண்டாதலால், அச்சம்பற்றம்பற்றி அதன்பி வைக்கப்பட்டது.

[தலைமகள் காண்டல்விதுப்பினாற் சொல்லியது]

வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

(பரி-உரை) அவர் சென்ற நாள் ஒற்றி விரல் தேய்ந்த - அவர் நம்மைப் பிரிந்துபோய நாள்கள் சுவரின்கணிழைத்தவற்றைத்தொட்டு எண்ணுதலான் என்விரல்கடேய்ந்தன; கண்ணும் வாள் அற்றுப் புற்கென்ற - அதுவேயன்றி அவர்வரும் வழிபார்த்து என்கண்களும் ஒளியிழந்து புல்லியவாயின; இவ்வாறாயும் அவர்வரவுண்டாயிற்றில்லை எ-று.

நாள் - ஆகுபெயர். புல்லியவாதல்-நுண்ணிய காணமாட்டாமை. ஒற்றவென்பது ஒற்றியெனத் திரிந்துநின்றது. இனி யான்காணுமாறென்னையென்பதாம். நாளெண்ணலும் வழிபார்த்தலும் ஒருகாற் செய்தொழியாது இடையின்றிச்செய்தலான், விதுப்பாயிற்று.

(ப-ரை) விரல் - (என்) விரல்கள், அவர் சென்றநாள் - அவர் (நம்மைப் பிரிந்து) போகியநாள்களை, ஒற்றி (சுவரிலே குறிவைத்துத்) தொட்டெண்ணுதலால், தேய்ந்த - தேய்ந்தன, (அதுவேயன்றி) கண்ணும் - (என்) கண்களும், வாளற்று-(அவர் வரும்வழி பார்த்து) ஒளியிழந்து, புற்கென்ற-புல்லியவாயின (இவ்வாறாகியும் அவர் வரவு உண்டாயிற்றில்லை) எ-று.

(க-ரை) அவர் நம்மைப் பிரிந்துபோய நாள்கள் சுவரின்கணிழைத்தவற்றைத்தொட்டு எண்ணுதலா லென்விரல்கடேய்ந்தன, அதுவேயன்றி அவர்வரும் வழிபார்த் தென்கண்களு மொளியிழந்து புல்லியவாயின, இவ்வாறாயு மவர் வரவுண்டாயிற்றில்லை யென்பதாம்.

(வி-ரை) நாள்-ஆகுபெயர். புல்லியவாதல்-நுட்பமானவைகளைக் காணமாட்டாமை. இனி யான் காணும்விதம் யாதென்பதாம். நாளெண்ணலும் வழிபார்த்தலும் ஒருகாற் செய்தொழியாமல் எப்போதும் செய்தலால் விதுப்பாயிற்று. (1)

[ஆற்றாமைமிகுதலின் இடையின்றி நினைக்கற்பாலையல்லை சிறிது மறக்கல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது]

இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து.

(பரி-உரை) இலங்கு இழாய் - விளங்காநின்ற விழையினையுடையாய், இன்று மறப்பின் - காதலரை இன்று யான் மறப்பேனாயின், மேல் காரிகை நீத்து என்றோள் கலங்கழியும்-மேலுங்காரிகையென்னை நீப்ப என்றோள்கள் கலங்கழல்வனவாம் எ-று.

இலங்கிழாயென்பது இதற்கு நீ யாதும் பரியலையென்னுங் குறிப்பிற்று. இன்று - யானிறந்துபடுகின்றவின்று. மேலும்-மறுபிறப்பினும். எச்சவும்மை

விகாரத்தாற் றொக்கது. கீப்பவென்பது கீத்தெனத் திரிந்தின்றது. கழியுமென்றும் இடத்தினிழ் பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது. இவ்வெல்லைக்கணினைந்தால் மறைமைக்கண் அவளை யெய்தியின்புறலாம், அதனுன் மறக்கற்பாலேனல்லேனென்பதாம்.

(ப-ரை) இலங்கிழாய் - விளங்காகின்ற ஆபரணமுடையாய்! இன்ற. (இறந்தபடுகின்ற) இக்காளில், மறப்பின்-(தலேவனை) மறப்பேனுயின், மேல். மறபிறப்பிலும், காரிகை - அழகானது, கீத்த - (என்னைவிட்டு) நீங்க, என் றேன் - எனது தோள்கள், கலங்கழியும் - வளையல்கள் கழலப்பெறுவனவாம் எ-று.

(க-ரை) விளங்காகின்ற விழையினை யுடையாய்! காதலரையின்ற யான் மறப்பேனுயின் மேலுங் காரிகை யென்னை நீப்ப வென்றேள்கள் வளைகழல் வனவா மென்பதாம்.

(வி-ரை) இலங்கிழாயென்பது இதற்கு நீ யாதும் பரிகின்ற பில்லை யென்றுங் குறிப்பிற்று. கீத்தென்பது நீப்பவென் பொருளில்வந்தது. இச்சம யத்திலே அவளை நினைந்தால், மறைமையிலே அவளை அடைந்து இன்புறலாம். அதனுல் மறக்குந்தன்மையேனல்லே னென்பதாம். (2)

[இதவுமது]

உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றூர்
வரனசைஇ யின்னு முளேன்.

(பரி-உரை) உரன் நசைஇ உள்ளம் துணையாகச் சென்றூர்-இன்ப நுக தலே நச்சாத வேறலே நச்சி நாந்துணையாதலிகழ்ந்த தம்மூக்கந்துணை யாகப் போயினர், வரல் நசைஇ இன்னும் உளேன்-அவற்றையிகழ்ந்த நான் வருதலே நச்சுதலான், யானிவ்வெல்லையினுமுளேனுயினேன் எ-று.

உரனென்பது ஆகுபெயர். அந்நசையானுயிர்வாழாகின்றேன். அஃதில்லே யாயின் இறந்தபடுவனென்பதாம்.

(ப-ரை) உரனசைஇ-(இன்பத்தை விரும்பாமல்) வெற்றியை விரும்பி உள்ளந்துணையாக (நாம் துணையாதலே இழந்த) தம்மனவெழுச்சி துணையா சென்றூர்-போயினவர், வரனசைஇ - (அவைகளே இழந்த இக்கு) வருதலே விரும்புதலால், இன்னும் - இவ்வெல்லையிலும், உளேன் - உயிரோடிருக்கின் றேன் எ-று.

(க-ரை) இன்பநுகர்தலே நச்சாத வேறலே நச்சி நாந்துணையாதலி ழந்த தம்மூக்கந் துணையாகப் போயினரவற்றை யிகழ்ந்தீண்டு வருதலே நச்சுதலான் யானிவ்வெல்லையினுமுளேனுயினே னென்பதாம்.

(வி-ரை) உரன்-ஆகுபெயர். அவ்வாசையால் உயிர்வாழ்கின்றேன் அ இல்லையாயின் இறந்தபடுவேனென்பதாம்.

[இதுவுமது]

கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு.

(பரி உரை) பிரிந்தார் கூடியகாமம் வரவு உள்ளி - நீங்கியகாமத்தராய் நம்மைப் பிரிந்துபோயவர் மேற்கூடிய காமத்துடனே நங்கண் வருதலை நினைந்து, என்னெஞ்சு கோடுகொடு ஏறும்-என்னெஞ்சு வருத்தமொழிந்து மேன்மேற் பணைத்தெழா நின்றது எ-று.

வினைஉயிற்பிரிவுழிக் காமவின்பநோக்காமையையும் அது முடிந்துழி அதுவே நோக்கலுந் தலைமகற்கியல்பாகலின், கூடியகாமமொடென்றாள். ஒடுவுருபு விகாரத்தாற்றொக்கது. கோடுகொண்டேறலாகிய மரத்ததுதொழில் நெஞ்சின்மேலேற்றப்பட்டது. கொண்டென்பது குறைந்துநின்றது. அஃதுள்ளிற்றிலேனாயின் இறந்துபடுவலென்பதாம்.

(ப-ரை) பிரிந்தார்-(நீங்கிய காமத்தாராகிய நம்மைப்) பிரிந்துபோனவர், கூடியகாமம் - கூடிய காமத்துடனே, வரவுள்ளி - (நம்மிடத்து) வருதலை நினைத்தலால், என்னெஞ்சு - எனது மனமானது (வருத்தமொழிந்து), கோடுகொடேறும்-மேன்மேலும் பருத்தெழுகின்றது எ-று.

(க-ரை) நீங்கிய காமத்தாராய் நம்மைப் பிரிந்துபோயவர் மேற்கூடிய காமத்துடனே நங்கண் வருதலை நினைந்தென்னெஞ்சு வருத்தமொழிந்து மேன்மேற் பணைத்தெழா நின்றதென்பதாம்.

(வி-ரை) போர்க்குப் பிரியும்போது காமவின்ப நோக்காமையும், அது முடிந்தவிடத்து அதுவே நோக்கலும் தலைவனுக்கு இயல்பாதலால் கூடிய காமமோடென்றாள். பருத்தெழுதலாகிய காமத்தினது தொழில் நெஞ்சின் மேல் ஏற்றப்பட்டது. அவ்வரவை நினையாமற் போவேனாயின் இறந்துபடுவேனென்பதாம்.

(4)

[தலைமகன் வரவுகூறி ஆற்றாயாய்ப் பசக்கற்பாலை
யல்லையென்ற தோழிக்குச் சொல்லியது]

காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு.

(பரி-உரை) கண் ஆரக் கொண்கனைக் காண்க - என் கண்களாரும்வகை கொண்கனை யான் காண்பேனாக, கண்டபின் என் மென்றோட்பசப்பு நீங்கும் - அங்ஙனங்கண்டபின் என் மெல்லியதோளின்கட்பசப்புத் தானே நீங்கும் எ-று.

காண்கவென்பது ஈண்டு வேண்டிக்கோடற்பொருட்டு. அதுவேண்டு மென்பதுபட நின்றடைபின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கேட்டதுணையா நீங்காதென்பதாம்.

(ப-ரை) கண்ணார - (என்) கண்களாரும்வகை, கொண்கனை - (என்) கணவனை, காண்க-(நான்) காண்பேனாக, கண்டபின்-(அப்படிக்) கண்டபின்பு, என்மென்றோல்-என்மெல்லியதோளிலுள்ள, பசப்பு-பசலை, நீங்கும்-(தானே) நீங்கும் எ-று.

(க-ரை) என்கண்களாரும்வகையென்கொண்கனை யான் காண்பேனாக. அங்ஙனம் கண்டபினென்மெல்லிய தோளின்கட் பசப்புத் தானே நீங்கு மென்பதாம்.

(வி-ரை) காண்கவென்றது-இங்கே வேண்டிக்கொள்ளுதற் பொருளிலே வந்தது. அது வேண்டுமென்பதுபட நின்றமையால், மன் ஒழியிசை. கேட்ட வளவிலே நீங்காதென்பதாம். (5)

[இதுவுமது]

வருகமற் கொண்க னொருநாட் பருகுவன்
பைதனோ யெல்லாங் கெட.

(பரி-உரை) கொண்கன் ஒருநாள் வருக - இத்துணைநாளும் வாரா கொண்கன் ஒருநாள் என்கண் வருவானாக, பைதல் நோயெல்லாம் கெட பருகுவன்-வந்தாற் பையுளைச்செய்கின்ற இந்நோயெல்லாங்கெட அவ்வமி தத்தை வாயில்களைந்தானும் பருகக்கடவேன் எ-று.

வருகவென்பதற்கும் மன்னென்பதற்கும் மேலுரைத்தவாறே கொள் அக்குறிப்பு அவ்வொருநாளைக்குள்ளே இனி வரக்கடவ நோய்களுங் கெடுப் லென்பதாம்.

(ப-ரை) கொண்கன் - (இத்தனைநாளாக வாராதிருந்த) தலைவன், ஒ நாள் - ஒருதினம், வருக - (என்னிடத்து) வருவானாக, (வந்தால்) பைதனோ யெல்லாம் - துன்பஞ்செய்கின்ற இந்நோயெல்லாம், கெட-நீங்க, (அவ்வமி தத்தை) பருகுவன் (ஐம்பொறிகளாலும்) உண்பேன் எ-று.

(க ரை) இத்துணைநாளும் வாராதகொண்க னொருநா ளென்கண் வ வானாக வந்தாற் பையுளைச் செய்கின்ற இந்நோயெல்லாங்கெட வவ்வமி தத்தை வாயில்களைந்தானும் பருகக்கடவேனென்பதாம்.

(வி-ரை) வருகவென்றதற்கும் மன்னென்றதற்கும் முன் சொல் பட்டபடியே கொள்க. அக்குறிப்பு அவ்வொருநாளைக்குள்ளே இனி வ கடவ நோய்களையும் கெடுப்பனென்பதாம்.

[இதுவுமது]

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பே
கண்ணன்ன கேளிர் வரின். [ன்கொ

(பரி-உரை) கண் அன்ன கேளிர் வரின்-கண்போற்சிறந்த கேளிர் வ ராயின், புலப்பேன்கொல் - அவர்வரவு நீட்டித்தமை நோக்கி யான் புல

டவேனே, புல்லவேன்கொல் - அன்றி என்னுற்றுமைநோக்கிப் புல்லக் டவேனே, கலப்பேன்கொல் - அவ்விரண்டும் வேண்டுதலான் அவ்விரு செயல்களையும் விரவக்கடவேனே, யாதுசெய்யக்கடவேன் எ-று.

புலவியும் புல்லலும் ஒருபொழுதின்கண் விரவாமையிற் கலப்பென்கொ லென்றான். மூன்றனையுள் செய்தல் கருத்தாகலின், விதப்பாயிற்று. இனிக் கலப்பென்கொலென்பதற்கு ஒருபுணர்மைசெய்யாத பிரியாதநாட்போலக் லந்தொழுகுவேனே வென்றுரைப்பாருமுளர்.

(ப-ரை) கண்ணன்னகேளிர்-கண்போற் சிறந்த நண்பர், வரின் - வருவா ராயின், புலப்பேன்கொல் - (அவர்வரவு கீட்டித்ததைக்குறித்தப்) பிணக்கு தழுவுவேனே? புல்லவேன்கொல் - (என்பொறுக்கமாட்டாமையைக் குறித்தத்) செயல்களையும்) கலப்பேனே?, யாதுசெய்யக் கடவேன்? எ-று.

(க-ரை) கண்போலச்சிறந்த கேளிர் வருவாயி னவர்வரவு கீட்டித்தமை நோக்கி யான் புலக்கக்கடவேனோ? அன்றி என்னுற்றுமை நோக்கிப் புல்லக் கடவேனே? அவ்விரண்டும் வேண்டுதலா னவ்விருசெயல்களையும் விரவக் கடவேனே? யாதுசெய்யக்கடவே னென்பதாம்.

(வி-ரை) ஓ-அசை. பிணக்குதலும் தழுவுதலும் ஒருபொழுதிலே கூடா மையால் கலப்பேன்கொலென்றான். மூன்றனையுள் செய்தல் கருத்தாகலால் விதப்பாயிற்று.

(7)

[வேந்தற்குற்றழிப்பிரிந்த தலைமகன் வினைமுடிவு கீட்டித்தழித் தலைமகளை நினைத்த தன்னுள்ளே சொல்லியது]

வினைகலந்து வெல்போக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து.

(பரி-உரை) வேந்தன் வினை கலந்த வென்றீக-வேந்தன் வினைசெய்த லைப்புரிந்த வெல்வாளை; மனை கலந்த மாலை விருந்த அயர்கம்-யாமும் மனை விளைச் சென்றகூடி ஆண்டை மாலைப்பொழுதிற்கு விருந்தயர்வேமாக எ-று.

மனையென்பது ஈண்டாகுபெயர். * "மங்கலமென்ப மனைமாட்சி" என்புழிப்போல. வினைசெய்தற்கண்வந்த மாலைப்பொழுதிற்கு எதிர்கோடல் அலங்கரித்தன்முதலிய வின்மையின், மனைகலந்த மாலைக்கு விருந்தயர்க மென்றான். தான்கணவருபு விகாரத்தாற்றொக்கது. இது வினைமுடியாமுன் கூறலான் விதப்பாயிற்று. பிறரெல்லாம் இதனைத் தலைமகன் கூற்றுக்கி புரைத்தார். தலைமகனைக் கூறுத வேந்தன் வெல்கவென்றும், மனைகலந் தென்றும், மாலைப்பொழுதின்கண் விருந்தயர்கமென்றும் வந்த அவ்வுரை யானே அது கூடாமைக்குக் காரியாயிற்று.

* திருக்குறள் 6 ம் அதி-வாழ்க்கைத்துணைநலம்-10.

(ப-ரை) வேந்தன்-அரசன், வினைகலந்த-போர்செய்தல்புரிந்த, வெல் தீ வெல்வானுக, (யாரும்) மனைகலந்த - மனைவியைச் சென்றுகூடி, மாலை (அவ்விடத்த) மாலைக்கு, விருந்த-விருந்தினை, அயர்கம்-செய்யக்கடவேம்

(க-ரை) வேந்தன் வினைசெய்தலைப் புரிந்த வெல்வானுக, யாரும் மனைவியைச்சென்று கூடி ஈண்டை மாலைப்பொழுதிற்கு விருந்தயர்வேமாக வென்பதாம்.

(வி-ரை) மனை - ஆகுபெயர். போர்செய்தற்கண் வந்த மாலைக்கு எதிர் கொள்ளுதல் அலங்கரித்தல்முதலியவை இல்லாமையால், மனைகலந்த மாலைக்கு விருந்தயர்கமென்றான். இத தொழின் முடியாமுன் சொல்லலால் விதப்பாயிற்ற. (8)

[இதவுமத]

ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார் வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

(பரி-உரை) சேண் சென்றார் வருநாள் வைத்து ஏங்குபவர்ச்சு. சேணிடைச்சென்ற தங்காதலர் மீண்டு வாக்குறித்த நாளையுட்கொண்டு அத வருந்தினையும் உயிர்தாங்கி வருந்த மகளிர்க்கு, ஒருநான் எழுநான்போல் செல்லும்-ஒருநான் பலநான்போல நெடிதாகக் காட்டும் எ-று.

எழென்பத அதற்குமேலாய மிக்கபன்மைகுறித்த கின்றது. "ஒருவர் கூறை யெழுவருடுத்த" என்றாற்போல. தலைமகன் வருத்தம் பிறர்மேலிட்டுக் கூறியவாறு. இதனுன் இதவுந் தலைமகன் கூற்றுகாமையறிக. இருநா னென்ற பாடமோதுவாருமுனர்.

(ப-ரை) சேட்சென்றார் - தூரதேசத்திற்சென்ற தங்காதலர், வருநாள் வைத்த - (திரும்பி) வாக்குறித்தநாளை உட்கொண்டு, ஏங்குபவர்க்கு - (அத வருமனவும் உயிரைத்தாங்கி) வருந்த மகளிர்க்கு, ஒருநான்-ஒருநானானது, எழுநான்போல்-பலநான்போல், செல்லும்-நெடிதாகக்காட்டும் எ-று.

(க-ரை) சேணிடைச்சென்ற தங்காதலர் மீண்டுவாக்குறித்த நாளையுட் கொண்டு அதவருந்தினையு முயிர்தாங்கி வருந்த மகளிர்க்கொருநாட் பலநாட் போல நெடிதாகக்காட்டுமென்பதாம்.

(வி-ரை) எழென்பத அதற்குமேலாய் மிக்க பன்மை குறித்த கின்றது. (9) தலைவி வருத்தம் பிறர்மேலிட்டுச் சொல்லியபடி.

[இதவுமத]

பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னு முள்ள முடைந்துக்கக் கால்.

(பரி உரை) உள்ளம் உடைந்த உக்கக்கால் - காதலி கப்பிரிவிஞ யாற்றுத உள்ளமுடைந்திறந்தபட்டவழி, பெறின் என்-நம்மைப் பெறக்கடை

னாலென்?, பெற்றக்கால் என்-அதனன்றியே பெற்றாலென்?, உறின் என்-அதனன்றியே மெய்யுறக் கலந்தாற்றானென்? இவையொன்றாலும் பயனில்லை எ-று.

இம்மூன்றும் உடம்பொடுபுணர்த்திக் கூறப்பட்டன. அதன்மேலும் முன்னை வழக்குண்மையின். அதற்குமுன்னே யான் செல்லவேண்டுமென்பதை கருத்தாகலின், விதப்பாயிற்று. இது தலைமகன் கூற்றாயவழி இரக்கமாதல்லது விதப்பாகாமை யறிக.

(ப-ரை) காதலி உள்ளமுடைந்து - (காதலி தம் பிரிவுபொறாமல்) உள்ளமுடைந்து, உக்கக்கால்-இறந்தவிடத்து, பெறினென்னும்-(தம்மைப்) பெறக் கடவனானால் என்னபயன்? பெற்றக்காலென்னும் - (அன்றிப்) பெற்றால் என்னபயன்? உறினென்னும் - (அன்றி) மெய்யுறக் கலந்தால் என்னபயன்? (இவையொன்றாலும் பயன் இல்லை) எ-று.

(த-ரை) காதலி தம்பிரிவினையாற்றாது உள்ள முடைந்திறக்கப்பட்டவழி தம்மைப் பெறக்கடவனானாலென்? அன்றியே பெற்றாலென்? அன்றியே மெய்புறக்கலந்தாற்றானென்? அன்றியே மெய்யுறக் கலவா தொழிந்தாற்றானென்? இவையொன்றாலும் பயனில்லை யென்பதாம்.

(வி-ரை) இம்மூன்றும் உடம்பொடு புணர்த்திச் சொல்லப்பட்டன. அதன்மேலும் முன்னை வழக்கமிருத்தலால். அதற்குமுன்னே தாம் செல்லவேண்டுமென்பதை கருத்தாகலால் விதப்பாயிற்று. (10)

127-ம் அதி - அவர்வயின்விதும்பல் - முற்றிற்று.

128-ம் அதிகாரம்—குறிப்பறிவுறுத்தல்

(பரி-உரை) அஃதாவது: தலைமகன், தலைமகள், தோழியென்றிவர் ஒருவர் குறிப்பினை யொருவர்க்கறிவுறுத்தல். இது, பிரிந்துபோய தலைமகன் வந்துகூடியவழி நிகழ்வதாகலின், அவர்வயின் விதும்பலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தலைவன் தலைவி தோழி என்றிவர்கள் ஒருவர் குறிப்பை ஒருவர்க்கு அறிவுறுத்தல். இது பிரிந்துபோகிய தலைவன் வந்து கூடிய விடத்தே நிகழ்வதாகலால், அவர்வயின் விதும்பலின்பின் வைக்கப்பட்டது.

[பிரிந்துகூடிய தலைமகன் வேட்கைமிகவினாற் புதுவது பன்னாளும் வாராட்டத் தலைமகன் இதுவொன்றடைந்தென வஞ்சியவழி அதனை யவன் குறிப்பானறிந்து அவனவட்குச் சொல்லியது]

கரப்பினுங் கையிகந் தொல்லா நின் னுண்க
ணுரைக்க லுறுவதொன் றுண்டு.

(பரி-உரை) கரப்பினும் - நீ சொல்லாது மறைத்தாயாயினும், ஒல்லாயிகந்து - அதற்குடம்படாதே நின்னைக் கைகடந்து, நின் உண் கண்

உரைக்குறலை ஒன்ற உண்டின்றுண்கண்களே எமக்குச் சொல்லுறவ தொரு காரியமுண்டாயிராகின்றது, இனியதனை நீயே தெளியச்சொல்வா யாக எ-று.

காத்தல்-காணுனடக்குதல். தன்கட்பிரிதற்குறிப்புளதாகக்கருதி வேறு பட்டானது வேறுபாடு குறிப்பானறிந்து அவட்குத் தன்பிரியாமைக் குறிப் பறிவுறுத்தலாறு.

(பதவுரை) காப்பிறும்-(சொல்லாது) மறைத்தாயாயினும், ஒல்லா-அதற்கு உடன்படாமல், கையிகந்த-(உன்னைக்) கைகடந்த, கின்றுண்கண்-உன் (மை) புண்டகண்களே, உரைக்குறலை-(எனக்குச்) சொல்வது, ஒன்று. ஒருகாரியம், உண்டு-உண்டாயிருக்கின்றது, (இனி அதனை நீயே தெளியச் சொல்லு) எ-று.

(க-ரை) நீ சொல்லாது மறைத்தாயாயினும் அதற்குடன்படாதே கின்னைக் கைகடந்த கின்றுண்கண்களே யெமக்குச் சொல்லுறவதொரு காரிய முண்டாயிராகின்றது. இனியதனை நீயே தெளியச்சொல்வாயாக வென்பதாம்.

(வி-ரை) காத்தல்-காணுல் அடக்குதல். தன்னிடத்துப் பிரிதற்குறிப்பு இருக்கிறதாக கினைந்து வேறுபட்டவனது வேறுபாடு குறிப்பால் அறிந்து அவளுக்குத் தன்பிரியாமைக் குறிப்பை அறிவுறுத்தபடி. (1)

[காணுல் அவன் அதுசொல்லாளாயவழி அவன்றோழிக்குச் சொல்லியது]

கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது. [குப்

(பரி உரை) கண் நிறைந்த காரிகைக் காம்பு வர் தோட்பேதைக்கு என் கண்ணிறைந்த வழகினையும் வேயையொத்த தோளினையுமுடைய கின் பேதைக்கு, பெண் நிறைந்த நீர்மை பெரிது-பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந்தது எ-று.

இலதாயபிரிவினைத் தன்கணேற்றி அதற்கஞ்சுதலான், இவ்வா கூறினன்.

(ப-ரை) கண்ணிறைந்த காரிகை-(என்) கண்ணிறைந்த அழகையும் காம்பேர்தோள்-மூங்கில்போன்ற தோள்களையும் உடைய, பேதைக்கு-(உன் னுடைய) மாதருக்கு, பெண்ணிறைந்த நீர்மை-பெண்பாலாரிடத்து நிறைந் அறியாமை, பெரிது-(அவ்வளவினதன்றி) மிகுந்தது எ-று.

(க-ரை) என்கண்ணிறைந்த வழகினையும் வேயையொத்த தோளினை முடைய கின்பேதைக்குப் பெண்ணியல்பாகிறைந்த மடமை யவ்வளவன்றி மிகுந்தென்பதாம்.

(வி-ரை) தன்னிடத்து இல்லாத பிரிவினைத் தன்னிடத்து ஏற் அதற்கு அஞ்சுதலால் இப்படிச் சொல்லினன்.

[இகவுமத]

மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு.

(பரி-உரை) மணியில் திகழ்தரும் நூல்போல் - கோக்கப்பட்ட பளிக்கு மணியகத்தக்கிடந்த புறத்துப் புலனுநூல்போல, மடந்தை அணியில் திகழ் தல ஒன்று உண்டு-இம்மடந்தைய தணியகத்தக் கிடந்த புறத்துப் புலனு ன்ற தொருகுறிப்புண்டு எ-று.

அணி - புனர்ச்சியாலாயவழகு. அதனகத்தக்கிடந்தலாவது அதனோடு டனிகழ்தற்பாலதன்றிலைவத்த உடனிகழ்தல். அதனையானறிகின்றிலேன், யறிந்து கூறல்வேண்டுமென்பது கருத்து.

(ப-ரை) மணியில் - (கோக்கப்பட்ட) படிகமணிக்குளிருந்த, திகழ்தரும்-புறத்தே) காணப்படுகிற, நூல்போல்-நூலைப்போல், மடந்தை-இம்மடந்தை னது, அணியில் - அழகுக்குளிருந்த, திகழ்வது - (புறத்தே) காணப்படுவ தாய, ஒன்று-ஒருகுறிப்பு, உண்டு உண்டு எ-று.

(க-ரை) கோக்கப்பட்ட பளிக்குமணியகத்தக்கிடந்த புறத்துப் புலனு ல்போல இம்மடந்தைய தணியகத்தக்கிடந்த புறத்துப் புலனுகின்றதோர் றிப்புண்டென்பதாம்.

(வி-ரை) அணி - புனர்ச்சியாலாகிய அழகு. அதற்குளிருத்தலாவது னோடு உடனிகழ்வதல்லாதிருந்தும் உடனிகழ்தல். அதனையான் அறி ன்றிலேன், நீ அறிந்துசொல்லல் வேண்டுமென்பது கருத்து. (3)

[இகவுமத]

முகைமொக்குள்ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்குள்ளுள்ளதொன் றுண்டு.

(பரி உரை) முகை மொக்குள் உள்ளது நாற்றம்போல - முகையது திழ்ப்பிலுளதாய் புறத்துப் புலனுகாத நாற்றம்போல, பேதை நகை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு - இன்பேதை என்னோடு நகக்கருதி நகை ய முகிழ்ப்பிலுளதாய்ப் புறத்துப் புலனுகாததோர் குறிப்புண்டு எ-று.

முகிழ்ப்பு - முறிர்ச்சியாற்புடைபடுதல். நகை - புனர்ச்சி யின்பத்தா ந்துவது.

(ப-ரை) முகைமொக்குள் - அரும்பினது முகிழ்ப்பிலுள், உள்ளது-தாய்ப் (புறந்தோன்றுத), நாற்றம்போல் - வாசனைபோல், பேதை-(உன்) னது, நகைமொக்குள் - (என்னோடு நகைக்க எண்ணுகிற) நகையது திழ்ப்பிலுள், உள்ளது - உளதாய்ப் (புறந்தோன்றுத), ஒன்று-ஒருகுறிப்பு, ண்டு-உண்டு எ-று.

(க-ரை) முகையது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனாகாத நாற்றம் போல நின்பேதை யென்னொடு நகக்கருது நகையது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனாகாததோர் குறிப்புண்டென்பதாம்.

(வி-ரை) முகிழ்ப்பு-முதிர்ச்சியாற் புடைபடுதல். நகை-புணர்ச்சியின்பத்தா (4 னிகழ்வது.

[இதுவுமது]

செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர் தீர்க்கு மருந்தொன் றுடைத்து.

(பரி-உரை) செறி தொடி செய்து இறந்த கள்ளம்-நெருங்கிய வளைகளை புடையாள் என்கண்ணில்லாதொன்றனையுட்கொண்டு அது காரணமா என்னை மறைத்துப் போன குறிப்பு, உறு துயர் தீர்க்கு மருந்து ஒன் உடைத்து-என் மிக்க துயரைத் தீர்க்குமருந் தாவதொன்றனையுடைத்து எ-று

உட்கொண்டது பிரிவு. கள்ளம்-ஆகுபெயர். மறைத்தற்குறிப்புத் தா முடன்போக்குட்கொண்டது. உறுதுயர் நன்றுசெய்யத் தீங்குவிளைதலாலு அதுதான் நீர்திறம்பெறாமையாலும் உளதாயது. மருந்து - அப்பிரிவின் தோழியாற்றெளிவித்தல். நீயது செய்தல்வேண்டுமென்பதாம்.

(ப-ரை) செறிதொடி-நெருங்கிய வளைகளையுடையவள், செய்து (எ னிடத்து இல்லாத பிரிவை) நினைந்து, இறந்தகள்ளம் - (அது காரணம என்னை மறைத்துப்) போன குறிப்பு, உறுதுயர் - (என்) மிகுந்ததுயரை தீர்க்குமருந்தொன்று - தீர்க்காநின்ற மருந்தொன்று, உடைத்து-உடைய எ-று.

(க ரை) நெருங்கிய வளைகளையுடையா ளென்கண்ணில்லாத தொ றனையுட்கொண் டதுகாரணமாக வென்னை மறைத்துப்போன குறிப்பு எ மிக்கதுயரைத் தீர்க்குமருந்தாவதொன்றனையுடைத் தென்பதாம்.

(வி-ரை) மறைத்தற்குறிப்பு தானும் உடன்போக உட்கொண்ட உறுதுயர் - நன்றுசெய்யத் தீங்கு விளைதலாலும் அதுதான் தீர்க்குந் தி பெறாமையாலும் உளதாயது. மருந்து-பிரியாமை தோழியால் தெளிவித்த நீ அது செய்தல்வேண்டுமென்பதாம்.

[தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக்கறிவுறுத்தது]

பெரிதாற்றிப் பெட்பக் கலந்த லரிதாற்றி யன்பின்மை சூழ்வ துடைத்து.

(பரி உரை) பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல் - காதலர் வந்து தம் வினானாய துன்பத்தினை மிகவுமாற்றி நாமகிழும்வண்ணங் கலக்கின்ற க

ரித தற்றி அன்பின்மை சூழ்வ தடைத்த - இருந்தாற்றான் மேலுமத் தன்பத்தினை அறிதாகவாற்றியிருந்த அவரன்பின்மையை நினைபுர்தன்மை டைத்த எ-று.

பிரிதற்குறிப்பினைச் செய்கின்றதாகலான், முடிவில் இன்னுதாகா கின்ற தென்பதாம்.

(பத) பெரிதாற்றி-(தலைவர்வர்த தம் பிரிவினுலாகிய தன்பத்தை) மிகுமாற்றி, பெட்பக்கலத்தல்-(காம்) மகிழும் வண்ணம் கூடுகின்ற புணர்ச்சி னத, அரிதாற்றி-(பின்னும் அத்தன்பத்தை) அரிதாகப் பொறத்திருந்த, ரன்பின்மை-(அவரத) அன்பில்லாமையை, சூழ்வத - நினைபுர்தன்மையை, டைத்த-உடையத எ-று.

(க-ரை) காதலர் வர்த தம்பிரிவினுலுய தன்பத்தை மிகவுமாற்றி காம் ழும்வண்ணம் கலக்கின்ற கலவி பிருந்தவாற்றான் மேலுமத்தன்பத்தினை ரிதாகவாற்றி பிருந்தவ ரன்பின்மையை நினைபுர்தன்மைபுடைத் தென் தாம்.

(வி-ரை) பிரிதற்குறிப்பினுலே செய்கின்றதாகலால், முடிவிலே தன் ந் செய்வதாகின்ற தென்பதாம். (6)

[இதவுமத]

தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை.

(பரி-உரை) தண்ணத்துறைவன் தணந்தமை-குளிர்ந்த துறையையுடை ன் நம்மை மெய்யாற்கூடியிருந்தே மனத்தாற்பிரிந்தமையை, நம்மினும் ள முன்னம் உணர்ந்த - அவன்குறிப்பானறிதற்குரிய நம்மினும் இவ்வளை ் முன்னேயறிந்தன எ-று.

கருத்த நிகழ்ந்ததாகலிற் றணந்தமையென்றும், யான்றெளியவுணர் ற்குமுன்னே தோள்கண் மெலிந்தனவென்பாள் அதனை வளைமேலேற்றி தன்னையுணர்வுடைத்தாக்கியுங் கூறினர்.

(பத) தண்ணத்துறைவன் - குளிர்ந்த துறையையுடையவன், தணந் மை - (நம்மை மெய்யினுலே கூடியிருந்தே மனத்தினுலே) பிரிந்தமையை, மினும்-(அவன் குறிப்பால் அறிதற்குரிய) நம்மினும், வள - இவ்வளையல் ், முன்னம்-முன்னமே, உணர்ந்த-அறிந்தன எ-று.

(க-ரை) குளிர்ந்த துறையையுடையவன் நம்மை மெய்யாற் கூடியிருந்தே னத்தாற் பிரிந்தமையை யவன் குறிப்பானறிதற்குரிய நம்மினு மிவ்வளைகள் ன்னேயறிந்தன வென்பதாம்.

(வி-ரை) கருத்த நிகழ்ந்ததாகலால் தணந்தமையென்றும், யான் ளிய அறிதற்குமுன்னே தோள்கள் மெலிந்தனவென்றற்கு அதனை வளைமேலேற்றி அதையும் உணர்வுடைத்தாக்கிச் சொல்லினுள். (7)

[இதுவுமது]

நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து.

(பரி-உரை) எங்காதலர் சென்றார் நெருநற்று - எங்காதலர் பிரிந்து போயினார் நெருநற்றே, யாமும் மேனி பசந்து எழுநாளேம்-அப்பிரிவிற்கு யாமும் மேனிபசந்து ஏழுநாளுடையமாயினேம் எ-று.

நெருநற்றுச்செய்த தலையளியாற் பிரிவு துணியப்பட்டதென்பாள் நெருநற்றுச் சென்றாரென்றும், அதனையையுற்றுச்செல்கின்றது ஏழுநாளுண்டாகலின் அன்றே மேனிபசந்ததென்பாள் மேனி பசந்தெழுநாளேமென்றுங் கூறினாள். இவ்வாற்றாற் றலைமகனது பிரிதற்குறிப்பினையுணர்த்திநின்றது.

(ப-ரை) எங்காதலர் - எமதுதலைவர், நெருநற்று - நேற்றே, சென்றார்-பிரிந்துபோயினார், யாமும் - நாமும், மேனிபசந்து - (அப்பிரிவுக்கு) உடம்பு வேற்றுநிறமடைந்து, எழுநாளேம்-ஏழுநாளுடையேமாயினேம் எ-று.

(க-ரை) எங்காதலர் பிரிந்துபோயினார். நெருநற்றே அப்பிரிவிற்குயாமும் மேனிபசந் தெழுநாளுடையேமாயினே னென்பதாம்.

(வி-ரை) நேற்றுச்செய்த அருளினால் பிரிவு நிச்சயிக்கப்பட்டதென்றற்கு நெருநற்றுச் சென்றாரென்றும், அதனைச் சந்தேகித்துச் செல்கின்றது ஏழுநாள் உண்டாகலால் அன்றே மேனிபசந்த தென்றற்கு மேனிபசந் தெழுநாளேமென்றும் சொல்லினாள். இவை தலைவனது பிரிதற்குறிப்பை அறிவித்துநின்றது.

[தலைமகள் குறிப்பறிந்ததோழி அதனைத் தலைமகற்கறிவித்தது]

தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது.

(பரி-உரை) யானது தெளிவித்தவழித் தெளியாது, தொடி நோக்கி அவர் பிரிய யானீண்டிருப்பின் இவை நில்லாவெனத் தன்றொடியைநோக்கி மென்றோளும் நோக்கி - அதற்கேதுவாக இவை மெலியுமெனத் தன்மென்றோள்களையு நோக்கி, அடி நோக்கி-பின் னிவ்விரண்டும் நிகழாமல் நடந்து காத்தல்வேண்டுமெனத் தன்னடியையுநோக்கி, ஆண்டு அவள் செய்தது அஃது-அங்ஙனம் அவள் செய்த குறிப்பு உடன்போக்காயிருந்தது எ-று.

செய்தகுறிப்பு - செய்தற்கேதுவாய குறிப்பு. அஃதென்றாள் * "செய்தொடி செய்திறந்தகள்ள" மென்றானாகலின். பிரிதற்குறிப்புண்டாயின் அதழுங்குதல் பயன்.

(ப ரை) (யான் அது தெளிவித்தவிடத்தே தெளியாதவர் பிரிய நாடு இங்கேயிருந்தால்) தொடிநோக்கி - (இவை நில்லாவென்று தன்) வ

* திருக்குறள்-128-ம் அதி குறிப்பறிவுறுத்தல்-5.

யல்களைப்பார்த்த, மென்றோளுநோக்கி - (அதற்கு ஏதுவாக இவை மெலியு மென்ற) மெல்லிய தோள்களையும்பார்த்த, அடிநோக்கி-(பின் இவ்விரண்டும் உண்டாகாமல் நீர் கடந்த காதல் வேண்டுமென்ற தன்) னடிகளையும் பார்த்த, ஈண்டு - அவ்விடத்தி, அவன் செய்தது - அவன் செய்தகுறிப்பு, அஃது-உடன்போக்கா யிருந்தது எ-று.

(க-ரை) யானது தெளிவித்தவழித் தெளிபா தவர் பிரிய யானீண் டிருப்பி னிலை கில்லாவெனத் தன்றோடியை நோக்கி யதற்கேதுவாக விலை மெலியுமெனத் தன்மென்றோள்களையுநோக்கி பின்னரவ்விரண்டும் நிகழாம வீர் கடந்த காதல்வேண்டுமெனத் தன்னடியையுநோக்கி அன்ன மவன் செய்த குறிப்பு உடன்போக்காயிருந்ததென்பதாம்.

(வி-ரை) செய்தகுறிப்பு-செய்தற்கேதுவான குறிப்பு. அஃதென்றுன் "செறிதொடி செய்திருந்த கள்ள" மென்றுரைகலின். பிரிதற்குறிப்புண்டா யின் அது அழுங்குதல் பயன். (9)

[தலைமகன் பிரியாமைக்குறிப்பினைத் தோழிக்குறிவுறுத்தது]

பெண்ணிறற் பெண்மை யுடைத்தென்ப கண்ணிறை
காமநோய் சொல்லி யிரவு. [ற்

(பரி-உரை) காமநோய் கண்ணிறற் சொல்லி இரவு-மகளிர் தங்காம நோயினைத் தோழியர்க்கும் வாயாற்சொல்லாது கண்ணிறற்சொல்லி அது நீர்க்கவேண்டுமென்று அவரையிரவாது உடன்போதல் குறித்தைத் தம்மடி யினையிரத்தல், பெண்ணிறல் பெண்மை உடைத்து என்ப - தமக்கியல்பாகிய பெண்மைமேலும் ஒருபெண்மையுடைத்தென்று சொல்லுவர் அறிஞர்.

தலைமகளுடன்போதற்றணிபு தோழியாற் றெளிந்தாலுகலின், தன் பிரிவின்மைக் குறிப்பினையறிவுறுப்பான், அவன்பெண்மையினைப் பிறர் மேலிட்டு வியந்துகூறியவாறு.

(ப-ரை) (மகளிர்) காமநோய்-(தங்) காமநோயை, கண்ணிறற் சொல்லி-(தோழியர்க்கும் வாயாற் சொல்லாது) கண்ணிறற் சொல்லி, இரவு - (அது தீர்த்தல்வேண்டுமென்ற அவரையிரவாமல் உடன்போதல் குறித்தைத் தம்மடி யினை) இரத்தல், பெண்ணிறல் - (தமக்கு இயல்பாகிய) பெண்மைமேலும், பெண்மை யுடைத்தென்ப-ஒரு பெண்மையை யுடைத்தென்று (அறிஞர்) சொல்லுவர் எ-று.

(க-ரை) மகளிர் தங்காமநோயினைத் தோழியர்க்கும் வாயாற்சொல் லாது கண்ணிறற்சொல்லி யது தீர்க்கவேண்டுமென் றவரையிரவாதுடன் போகக்குறித்தை தம்மடியினையிரத்தற் றமக்கியல்பாகிய பெண்மை மேலு மொரு பெண்மையுடைத்தென்று சொல்லுவ ரறிஞரென்பதாம்.

(வி-ரை) தலைமகளை உடன்போதற்றணிவு தோழியாலே தெளிதலால், தான் பிரிவிலாதிருக்குங் குறிப்பினை அறிவித்தற்கு, அவன் பெண்மை யைப் பிறர்மேலிட்டு வியந்து சொல்லியவாறு. (10)

128-ம் அதி - குறிப்பறிவுறுத்தல் - முற்றிற்று.

129-ம் அதிகாரம்—புணர்ச்சிவிதும்பல்

(பரி-உரை) அஃதாவது: தலைமகனுந் தலைமகளும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். மேற்புணர்ச்சி மிகுதிபற்றித் தலைமகன்பிரிதற்குறிப்பறிவுறுத்த தலைமகள் அவன்மாட்டே நிகழாது வேட்கைமிகவினாற் பின்னுந் தன் கண்ணே நிகழ்தலான், இது குறிப்பறிவுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

(உரை) அஃதாவது: தலைவனும் தலைவியும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். மேலே புணர்ச்சிமிகுதிபற்றித் தலைவன் பிரிதற்குறிப்பை அறிவுறுத்த தலைவி அவனிடத்தே நிகழாது ஆசைமிகுதியினாலே பின்னும் தன்னிடத்தே நிகழ்தலால், இது குறிப்பறிவுறுத்தலின் பின் வைக்கப் பட்டது.

[பிரிதற்குறிப்பினனாகியானோடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது]

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

(பரி-உரை) உள்ளக் களித்தலும்-நினைந்த துணையானே களிப்பெய்தலும், காண மகிழ்தலும்-கண்டதுணையானே மகிழ்வெய்தலும், கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு-கள்ளுண்டார்க்கில்லை, காமமுடையார்க்குண்டு.

களித்தல்-உணர்வழியாதது. மகிழ்தல்-அஃதழிந்தது. இவ்விரண்டும் உண்டுழியல்லதின்மையிற் கள்ளுக்கில்லென்றாள். உண்டென்பது இறுதி விளக்கு. அப்பெற்றித்தாய காமமுடைய யான்புலத்தல் யாண்டையதென் பதாம்.

(பரை) உள்ளக்களித்தலும் - நினைத்தவளவிலே களிப்படைதலும், காணமகிழ்தலும்-கண்டவளவிலே மகிழ்ச்சியடைதலும், கள்ளுக்கு - கள்ளுண் டார்க்கு, இல்-இல்லை, காமத்திற்கு-காமமுடையார்க்கு, உண்டு-உண்டு எ-று.

(கரை) நினைந்த துணையானே களிப்பெய்தலும் கண்டதுணையானே மகிழ்ச்சியெய்தலும், கள்ளுண்டார்க்கில்லை காமமுடையார்க்குண் டென்ப தாம்.

(வி-ரை) களித்தல் - உணர்வழியாதது. மகிழ்தல் - அவ்வுணர்வழிந்தது. இவ்விரண்டும் உண்டவிடத்திலே யல்லாமல் இல்லாமையினாலே கள்ளுக் கில்லென்றாள். அப்படிப்பட்ட காமமுடைய நான் பிணங்கல் எவ்விடத்த தென்பதாம். (1)

[இதுவுமது]

நினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையு
காம நிறைய வரின். [ங்

(பரி-உரை) காமம் பனைத்துணையும் நிறைய வரின் - மகளிர்க்குக் காமம் பனையளவினும் மிகவுண்டாமாயின், நினைத்துணையும் ஊடாமை வேண்டும்.

அவரால், தன்காதலரோடு நினையளவுமூடுதல் செய்யாமை வேண்டப்படும் எ-று.

பனைத்தினையுமென்புழி ஐந்தலுருபு விகாரத்தாற்றொக்கது. ஊடின்வருந்தமிகுமெனப் பிறர்க்குறுதிகூறலான்போன்ற தன்விதுப்புக் கூறியவாறு.

(ப-ரை) காமம் - காமமானது, பனைத்தினையும் நிறைய - பனையளவினும், வரின் - (மகளிர்க்கு) உண்டாமாயின், நினைத்தினையும் - நினையளவும், ஊடாமை - (தன்தலைவரோடு) பிணங்காமை, வேண்டும் - (அவரால்) விரும்பப்படும் எ-று.

(க-ரை) மகளிர்க்குக் காமம் பனையளவினும் மிகவுண்டாமாயினவராற் றன்காதலரோடு நினையளவுமூடுதல் செய்யாமை வேண்டப்படுமென்பதாம்.

(வி-ரை) ஊடினால் வருந்தமிகுமென்று பிறர்க்கு உறுதி சொல்வான் போன்று தன்விரைவு சொல்லியபடி.

(2)

[இகவுமது]

பேணுது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணுதமையல கண்.

(பரி-உரை) பேணுது பெட்பவே செய்யினும் - நம்மை யவமதித்துத் தான் வேண்டியனவே செய்யுமாயினும், கொண்கனைக் கண்காணுதமையல-கொண்கனை என் கண்கள் காணுதமைகின்றனவில்லை எ-று.

தன்விதப்புக் கண்கண்மேலேற்றப்பட்டது. அத்தன்மையேன் அவனோடு புலக்குமாறென்னை யென்பதாம்.

(ப-ரை) பேணுது-(நம்மை) அவமதித்து, பெட்பவே-(தான்) வேண்டுமனவனையே, செய்யினும்-செய்தாலும், கொண்கனை-கணவனை, கண்-(என்) கண்கள், காணுது-பாராமல், அமையல-அமைகின்றனவில்லை எ-று.

(க-ரை) நம்மை யவமதித்துத் தான் வேண்டியனவே செய்யுமாயினும் கொண்கனை என்கண்கள் காணுதமைகின்றனவில்லை யென்பதாம்.

(வி-ரை) தன்விரைவு கண்களின்மேல் ஏற்றப்பட்டது. அத்தன்மையேன் அவனோடு பிணங்கும்வழி யாதென்பதாம்.

(3)

[இகவுமது]

ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.

(பரி-உரை) தோழி-தோழீ! ஊடற்கண் சென்றேன்-காதலரைக் காணுமுன் அவர்செய்த தவற்றைத் தன்னோடு நினைந்தயானவரோடூடுதற்கண்ணே சென்றேன், என்னெஞ்சு அது மறந்து கூடற்கண் சென்றது - கண்டபின் என்னெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றது எ-று.

சேறனிகழ்தல் நினைத்தநெஞ்சிற்குமொத்தலின் அது மறந்தென்றாள். அச்செலவாற் பயனென்னென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அவ்வெல்லையிலே நெஞ்சு அறைபோகலான் அதுமுடிந்ததில்லை யென்பதாம்.

(ப-ரை) தோழி-தோழியே! (அன்பரைக் காணுதற்குமுன் அவர்செய்த குற்றத்தைத் தன்னோடு எண்ணி) ஊடற்கட்சென்றேன்-(அவரோடு) பிணங்குதலிலே சென்றேன், என்னெஞ்சு-என்மனது, (கண்டபின்) அதுமறந்து-அதைமறந்து, கூடற்கண்சென்றது-புணர்தலிலே சென்றது எ-று.

(க-ரை) தோழீ! காதலரைக் காணாமுன் அவர்செய்த தவற்றைத் தன்னோடு நினைந்து யானவரோடூடுதற்கண்ணே சென்றேன், கண்டபின் என்னெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றதென்பதாம்.

(வி-ரை) செல்லுதற்றொழிலினிது நிகழ்ச்சி நினைத்த நெஞ்சிற்கும் ஒத்தலால் அது மறந்தென்றாள். அச்செல்லுதலால் பயன் ஒன்றும் இல்லையென்பதுபட நின்றமையால் மன் ஒழியிசை. அச்சமயத்திலே நெஞ்சு கீழறுத்துக் கொண்டு போகலால் அது முடிந்ததில்லை யென்பதாம். (4)

[இதுவுமது]

எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்
பழிகாணேன் கண்ட விடத்து. [கன்

(பரி-உரை) எழுதுங்கால் கோல் காணாக் கண்ணேபோல் - முன்னெல்லாங் கண்டிருந்தும் எழுதுங்காலத்து அஞ்சனக்கோலினியல்பு காணமாட்டாத கண்ணேபோல, கொண்கன்பழி கண்டவிடத்துக் காணேன்-கொண்கனது தவறு காணாதவிடத்தெல்லாங் கண்டிருந்து அவனைக் கண்டவிடத்துக் காணமாட்டேன் எ-று.

கோல்-ஆகுபெயர். இயல்பு-கருமை. என்னியல்பிதுவாகலின் மேலும் அது முடியாதென்பதாம்.

(ப-ரை) (முன்னெல்லாங்கண்டிருந்தும்) எழுதுங்கால்-எழுதும்போது, கோல்-அஞ்சன்க்கோலினியல்பை, காணா-காணமாட்டாத, கண்ணேபோல்-நேத்திரம்போல், கொண்கன்பழி-கணவனது குற்றத்தை, (அவனைக் காணாதவிடத்தெல்லாம் கண்டிருந்து) கண்டவிடத்து - (அவனைக்) கண்டவிடத்து, காணேன்-காணமாட்டேன் எ-று.

(க-ரை) முன்னெல்லாங் கண்டிருந்து மெழுதுங்காலத் தஞ்சனக்கோலினியல்பு காணமாட்டாத கண்ணேபோலக் கொண்கனது தவற்றைக் காணாதவிடத்தெல்லாங் கண்டிருந்து அவனைக்கண்டவிடத்துக் காணமாட்டேனென்பதாம்.

(வி-ரை). கோல் - அதனியல்புக்கு ஆகுதலால் ஆகுபெயர். இயல்பு-கருமை. என்னியல்பு இதுவாகலால் மேலும் அது முடியாதென்பதாம். (5)

[இசவுமது]

காணுங்காற் காணேன் றவருரு காணுக்காற்
காணேன் றவறல் லவை.

(பரி-உரை) காணுங்கால் தவருரு காணேன்-கொண்கனே யான் காணும் பொழுது அவன்றவருருவத்தைக் காண்கின்றிலேன், காணுக்கால் தவறல் லவை காணேன்-காணுதபொழுது அவையேயல்லது பிறவற்றைக் காண் கின்றிலேன் எ-று.

செயப்படுபொருள் அதிகாரத்தான் வந்தது. முன்பு கான் கின்றெடு சொல்லிய தவறுகள் இதபொழுது காணுமையிற் புலந்திலேனென்பதாம்.

(ப-ரை) (நான்) காணுங்கால் - (கணவனைக்) காணும்பொழுது, தவருரு-(அவன்) குற்றங்களானவைகளை, காணேன் - காண்கின்றிலேன், காணுக் கால்-(அவனைக்) காணுதபொழுது, தவறல்லவை - குற்றங்களல்லாதவைகளை, காணேன்-காண்கின்றிலேன் எ-று.

(க-ரை) கொண்கனே யான் காணும்பொழுது அவன்றவருருவத்தைக் காண்கின்றிலேன் - காணுதபொழுது அவையல்லது பிறவற்றைக் காண்கின் றிலேன் என்பதாம்.

(வி-ரை) கணவனென்பது அதிகாரத்தால் வந்தது. முன்பு கான் கின்றெடு சொல்லிய தவறுகள் இப்போது காணுமையாலே பிணக்கிலே னென்பதாம்.

(6)

[இசவுமது]

உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து.

(பரி-உரை) உய்த்தல் அறிந்து புனல்பாய்பவரேபோல்-தம்மையீர்த்துக் கொண்டுபோதலறிந்தவைத்த ஒழுகுகின்ற புனலுட்பாய்வார் செயல்போல, பொய்த்தல் அறிந்த புலந்த என் - புலவி முடிவுபோகாமை யறிந்தவைத்துக் கொண்டேடு புலந்த பெறவதென்? எ-று.

பாய்பவரென்பது ஒருபெயர்.. பொய்த்தல்-புரைபடுதல். புலந்தாலும் பயனில்லை யென்பதாம். பொய்த்தலறிந்தேனென்பது பாடமாயின், உய்த்த லறிய ஓடுநீருட்பாய்வார்போல முடிவறியப் பண்டொருகாற் புலந்து முடி வுமையறிந்தேன், இனி அது செயற்பாற்றன்றென வுரைக்க.

(ப-ரை) உய்த்தலறிந்த - (தம்மை) யீர்த்துக்கொண்டுபோது லறிந் திருந்த, புனல்பாய்பவரேபோல் - (ஒடுகின்ற) நீரிலே பாய்வோர்செயல் போல், பொய்த்தலறிந்த-(பிணக்கு) முடிவுபோகாமை யறிந்திருந்த, புலந்த-(வனைவேடு) பிணக்கி, என்-(பெறவது) யாது? எ-று.

(க-ரை) தம்மை மீர்த்தக்கொண்டுபோதலறிந்தலைத்த ஒழுகுன்ற புனலுட்பாய்வார் செயல்போலப் புலவிமுடிவு போகமை யறிந்தலைத்தக் கொண்கனெடு புலர்த பெறுவதென்னென்பதாம்.

(வி-ரை) பாய்பவனென்பத ஆகுபெயர். பொய்த்தல் - புரைபடுதல். பிணக்கினாலும் பயன் இல்லை யென்பதாம். (7)

[தலைமகன் புணர்ச்சி விதப்பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது]

இளித்தக்க வின்ன செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

(பரி உரை) கள்வ-வஞ்சகா, களித்தார்க்கு இளித்தக்க இன்னசெயினும் கள்ளற்றே - தன்னைபுண்டு களித்தார்க்கு இளிவரத்தக்க இன்னதவற்றைச் செய்யினும், அவரால் மேன்மேல் விரும்பப்படுவதாய கள்ளுப்போலும், நின் மார்பு-எக்கட்கு நின்மார்பு எ-று.

அவ்வின்னதன - நாணின்மை, நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மை யென்றிவை முதலாயின. எக்கட்கு நாணின்மை முதலியவற்றைச் செய்யுமாயினும் எக்களால் மேன்மேல் விரும்பப்படா நின்றதென்பதாம். கள்வவென்றதும் அதுநோக்கி.

(ப-ரை) கள்ள-கள்வனே! நின்மார்பு - (எக்களுக்கு) உனதுமார்பு, களித்தார்க்கு - (தன்னை புண்டு) களித்தவர்க்கு, இளித்தக்க - அவமானமடையத் தக்க, இன்னசெயினும் - இனிமையில்லனவைகளைச் செய்தாலும், கள்ளற்றே - (அவராலே மேலும்மேலும் விரும்பப்படுவதாகிய) கள்ளுப்போலும் எ-று.

(க-ரை) தன்னைபுண்டு களித்தார்க்கு இளிவரத்தக்க வின்னதவற்றைச் செய்யினும் அவரான் மேன்மேலும் விரும்பப்படுவதாய கள்ளுப்போலும் எக்கட்கு நின்மார்பென்பதாம்.

(வி-ரை) அவ்வினிமையில்லாமை - நாணில்லாமை, ஒழுக்கமில்லாமை, உணர்வில்லாமை, நிறையில்லாமை இவை முதலாயின. எக்களுக்கு நாணில்லாமை முதலியவைகளைச் செய்யினும் எக்களாலே மேன்மேலும் விரும்பப்படுகின்றதென்பதாம். கள்வவென்றதும் அதுநோக்கி. (8)

[உணர்ப்புவயின் வாராவூடற்கட்டலைமகன் சொல்லியது]

மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

(பரி-உரை) காமம் மலரினும் மெல்லிது-காமவின்பம் மலரினு மெல்லிதாயிருக்கும், அதன்செவ்வி தலைப்படுவார் சிலர் - அங்ஙனம் மெல்லிதாதலை யறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர் எ-று.

தொட்டதினையானே மணச்செவ்வி யழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிதென்பதை விளக்கலின் உம்மை சிறப்பின்கண்வந்தது. குறிப்பும் கேட்கையும் நுகர்ச்சியும் இன்பமும் ஒருகாலத்தின்கண்ணே யொத்து நுகர் தற்குரியாரிருவர் அதற்கேற்ற இடனுங்காலமும் உபகரணங்களும் பெற்றுக் கூடி நுகரவேண்டுதலின் அதன் செவ்விதலைப்படுவார் சிலசென்றும், அவற்றுள் யாதானுமொன்றனுற் சிறிது வேறுபடினும் வாடுதலின் மலரினு மெல்லிதென்றுங் கூறினுன். குறிப்பொவ்வாமையின் யானதுபெறுகின்றிலே னென்பதாம். தலைமகளுடனீர்வது பயன்.

(பதவுரை) காமம்-காமவின்பம், மலரினும்-பூவினும், மெல்லிது-மெல்லிய தாயிருக்கும், (அப்படி மெல்லியதாயிருக்கையை அறிந்து) அதன் செவ்வி-அதன் பக்குவத்தை, தலைப்படுவார்-பெறுவோர், சிலர்-(உலகத்திலே) சிலர்.

(க-ரை) காமவின்பம் மலரினு மெல்லிதாயிருக்கும்; அங்ஙனம் மெல்லி தாதலையறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலரென்பதாம்.

(வி-ரை) தொட்டவளவிலே வாசனைப்பக்குவம் அழிவதாகிய மலர் எல் லாவற்றினும் மெல்லியதென்பதை விளக்கலால் உம்மை சிறப்பின்கண் வந் தது. குறிப்பும் கேட்கையும் அனுபவிப்பும் இன்பமும் ஒருகாலத்திலே ஒத்து அனுபவித்தற்குரியவரிருவர் அதற்கு ஏற்ற காலமும் இடமும் உபகரணங் களும் பெற்றுக் கூடி அனுபவிக்கவேண்டுதலால் அதன் செவ்வி தலைப்படுவார் சிலசென்றும், அவைகளுள் யாதானும் ஒன்றிலே சிறிது வேறுபடினும் வாடுதலால் மலரினுமெல்லிதென்றும் சொல்லினுன். குறிப்பு ஒவ்வாமையால் பான் அது பெறுகின்றிலேனென்பதாம். தலைமகன் கூடலொழிவது பயன்.

[இதவுமது]

கண்ணிற் றுனித்தே கலங்கினுள் புல்லுத
லென்னினுந் தான்விதுப் புற்று.

(பதவுரை) கண்ணின் துனித்தே-காதலி முன்னொருநாள்று புல்லல் விதுப்பினுற்சென்ற என்னெடு தன்கண் மாத்திரத்தானுடி, புல்லுதல் என் னினும் தான் விதுப்புற்றுக் கலங்கினுள்-புல்லுதலே என்னினுந் தான் விதும் பலான் அது தன்னையும் அப்பொழுதே மறந்து கூடிவிட்டான், அதனுல் பானித்தன்மையேனுகவும் விதுப்பின்றி யூடிநிற்கின்றவிவன் அவளல்லன்.

கண்மாத்திரத்தானுடல்-சொன்னிகழ்ச்சியின்றி அது சிவந்த தினையே பாதல். அவளாயின் இங்ஙனமூடற்கு ணிடாளென்பது பயன்.

(பதவுரை) (என் காதலி முன்னொருநான் புணர்ச்சென்ற என்னெடு) கண் நீற் துனித்தே - (தன்) கண்மாத்திரத்தாலே பிணங்கி, புல்லுதல் - புணர்த லை, என்னினும்-என்னைப்பார்க்கிலும், தான் விதுப்புற்று - தான் விரை புற்று, கலங்கினுள் - (அதனையும் அப்பொழுதே) மறந்து கூடிவிட்டான்,

(அதனால் காண் இப்படி வருந்தவும் விரையாமல் பிணங்கி நிற்கின்ற இவன் அவனல்லன்) எ-று.

(க-ரை) காதலி முன்னொருஞான்ற புல்லல்விதப்பிற்றற் சென்றவென் னெஞ் தன்கண் மாத்திரத்தாலூடிப் புல்லுதலே யென்னிலுஞ் தான் விதும்ப லானதை தன்னேயு மப்பொழுதே மறந்த கூடிவிட்டான்; அதனால் யானித் தன்மையேனுவும் விதப்பின்றி யூடிநிற்கின்றவிவ னவனல்லனென்பதாம்.

(வி-ரை) கண்மாத்திரத்தாலே பிணங்கல் - சொன்னிகழ்ச்சியில்லாமல் அத னெவ்வளவேயாதல், அவளாயின் இப்படி ஊடற்கண்ணே நீடானென் பதபயன். (10)

129-ம் அதி - புனர்ச்சிவிதும்பல் - முற்றிற்று.

130-ம் அதிகாரம்—நெஞ்சோடுபுலத்தல்

(பரி-உரை) அஃதாவது: காரணமுண்டாயவழியும் புலக்கக்கருதாத புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும், தலைமகன் புலத் தலுமாம். அதிகாரமுறைமையும் இதனானே விளக்கும்.

(உரை) அஃதாவது: காரணம் உண்டாகியவிடத்தும் பிணக்கினையா மல் புணர்ச்சியை விரும்புகின்ற நெஞ்சுடனே தலைவி பிணக்குதலும், தலைவன் பிணக்குதலுமாம். அதிகாரமுறைமையும் இதனாலே விளக்கும்.

[தலைமகன்கட் டவறண்டாயவழியும் புலவிகருதாத நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது]

அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது.

(பரி-உரை) நெஞ்சே-நெஞ்சே! அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல்கண்டும், அவருடைய நெஞ்சு கம்மை நினையாது அவர்க்காய்நிற்றல் கண்டுவைத்தும், நீ எமக்கு ஆகாதது எவன்-நீ யெமக்காய் நில்லாது அவரை நினைத்தற்கா ணம் யாது? எ-று.

அவர்க்காதல் - அவர்கருதியதற்குடம்படுதல். எமக்காகாதென்றது புலவிக்குடம்படாமையை. ஒருகருமத்தைத் தாமாகவறிந்து செய்யமாட் டாதார் செய்வாரைக் கண்டாயினுஞ் செய்வர். நீயதவுஞ் செய்கின்றி யென்பதாம்.

(ப-ரை) நெஞ்சே-(எனது) மனமே! அவர்நெஞ்சு-அவரதுமனம், அவர் காதல்கண்டும்-(கம்மை நினையாமல்) அவர்க்காய் நிற்றல் கண்டிருந்தும், யெமக்காகாதது-நீ (அவரையே நினைத்து) எமக்காய் நில்லாமைக்குக் கா ணம், எவன்-யாது? எ-று.

(க-ரை) செஞ்சே! அவருடைய நெஞ்சு நம்மை நினையாதவர்க்காய் கிற்றல் கண்டுவைத்தும். நீ யெமக்காய் கில்லாதவரை நினைத்தற்காணம் பாதென்பதாம்.

(வி-ரை) அவர்க்காதல்-அவர் நினைத்தற்கு உடன்படுதல். எமக்காகாதென்றது பிணக்கற்கு உடன்படாமையை. ஒருகாரியம் தானாக அறிந்து செய்ய மாட்டாதவர் செய்வாரைக் கண்டாயினுஞ் செய்வர். நீ அதனும் செய்கின்றிலை யென்பதாம். (1)

[இதவுமது]

உறுஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
செறுஅரெனச் சேறியென் னெஞ்சு.

(பரி-உரை) என்னெஞ்சு-என்னெஞ்சே!, உறுதவர்க் கண்ட கண்ணும்-மேலும் நம்மாட்டன்புடையராகாதவரை உள்ளவாறறிந்தவிடத்தும், செறுரென அவரைச் சேறி - நாஞ்சென்றால் வெகுளாரென்பதுபற்றி நீயவர்மாட்டுச் செல்லாகின்றாய், இப்பெற்றியது மேலுமோரறியாமையுண்டோ? எ-று.

அவரையென்பது வேற்றுமைமயக்கம். பழங்கண்ணோட்டம்பற்றி வெகுளாரென்பது கருதாகச் சென்றாய், நீ கருதியது முடியுமோவென்பதாம்.

(ப-ரை) என்னெஞ்சு - எனதுமனமே! உறு அதவர்க்கண்ட கண்ணும்-(நம்மிடத்து) அன்பில்லாத தலைவரை (உள்ளபடி) அறிந்தவிடத்தும், செறுரென-(நாம்போனால்) கோபியாரென்பதுபற்றி, அவரை-அவரிடத்து, சேறி-செல்கின்றாய், (உனக்கு இப்படிப்பட்டதும் ஓரறியாமையுண்டோ?) எ-று.

(க-ரை) என்னெஞ்சே! மேலும் நம்மாட்டன்புடையராகாதவரை யுள்ளவாறறிந்தவிடத்தும் நாம் சென்றால் வெகுளாரென்பதுபற்றி நீயவர்மாட்டுச் செல்லாகின்றாய். இப்பெற்றியது மேலும் ஓர் அறியாமையுண்டோ வென்பதாம்.

(வி-ரை) அவரையென்பது வேற்றுமைமயக்கம். பழமையான தாட்சியம்பற்றிக் கோபியாரென்பது கருத்தாகச் சென்றாய், நீ நினைத்தது முடியுமோவென்பதாம். (2)

[இதவுமது]

கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

(பரி-உரை) நெஞ்சே - நெஞ்சே!, நீ பெட்டாங்கு அவர்பின் செலல்-நின்மாட்டு கில்லாது நீ விரும்பியவாறே அவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம், கெட்டார்க்கு நட்டார் இல்லென்பதோ - கெட்டார்க்கு நட்டார் உலகத்தில்லையென்றோ நினையாவோ, நின்னியல்போ, கூறுவாயாக எ-று.

எவ்வளவிட்டு அவர்மாட்டுச்சேறல் நீபண்டே பயின்றதென்பாள் பெட்டாய்க்கென்றும், தானிதுபொழுது மானமிலளாகவிற்_கெட்டார்க்கென்றுங் கூறினள். பின்னென்பது சுண்டிடப்பொருட்டு. செலலென்பது ஏகுபெயர். "நெஞ்சிடத்தலப்பிலா வணர்விலார் தொடர்" பாயிற்று கின்றொடர்பென்பதாம்.

(பதவுரை) நெஞ்சே! மனமே! (என்னிடத்து கில்லாமல்) பெட்டாங்கு விரும்பியபடியே, அவர்பின்செல்-அவரிடத்தை செல்லுதற்குக் (காரணம்), கெட்டார்க்கு கட்டாரில்லென்பதோ - கெட்டவர்க்கு ஈட்புற்றவர் (உலகத்திலே) இல்லையென்கிற கினவோ, (உன்னிப்பல்போ சொல்லு) எ-று.

(க-ரை) நெஞ்சே! நீ என்மாட்டு கில்லாத கீவிரும்பியவாறே யவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம் கெட்டார்க்கு கட்டார் உலகத்தில்லையென்னுங் கினவோ கின்னியல்போ கூறவாயாக வென்பதாம்.

(வி-ரை) என்னைக் கைவிட்டு அவரிடத்தை செல்லுதல் நீமுன்னமே பழகியதென்றார்க்கு பெட்டாங்கென்றும், தான் இப்பொழுது மானமில்லாதலாலே கெட்டார்க்கென்றும் சொல்லினள். செல்-ஏகுபெயர். தனர் விடத்து உடன்வருந்தொழுது மூடாத தொடர்பாயிற்று உனது தொடர்பென்பதாம். (3)

[இதவுமத]

இனியன்ன நின்னெடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

(பரி-உரை) நெஞ்சே-நெஞ்சே, துனி செய்து மற்றுத் துவ்வாய் நீ யவரைக் கண்டபொழுதே இன்பநுகராக் கருதுவதல்லது அவர்தவறுநோக்கி முன் புலவியையுண்டாக்கி அதனையளவறிந்து பின்னுகராக் கருதாய், இனி அன்ன கின்னெடு சூழ்வார் யார் - ஆகலான், இனி யப்பெற்றிப்பட்டவற்றை கின்னெடெண்ணுவார் யார்? யானது செய்யேன் எ-று.

அப்பெற்றிப்பட்டன - புலக்குறிநற்கள். காணென்பது உரையசை. மற்று - வினைமாற்றின்கண் வந்தது. முன்னெல்லாம் புலப்பதாகவெண்ணி பிருந்து பின் புணர்ச்சி விதம்பலின், இவ்வாறு கூறினள்.

(ப-ரை) நெஞ்சே-மனமே! (நீ அவரைக்கண்டபொழுதே இன்பமனுபவிக்க கினைப்பதல்லது), துனிசெய்து-(அவர் தவறுநோக்கி) பிணக்கையுண்டாக்கி, மற்றுத்துவ்வாய்-(அதனை அளவறிந்து) பின் அநுபவிக்க கினையாய் (ஆதலால்) இனி-இனி, அன்ன - அப்படிப்பட்டவைகளை, கின்னெடு-உன்னுடனே, சூழ்வார்-எண்ணுவோர், யார்-யாவர்? (நான் அது செய்யேன்) எ-று.

(க-ரை) நெஞ்சே! நீயவரைக்கண்டபொழுதே யின்பநுகராக் கருதுதல்லது அவர் தவறுநோக்கி முன் புலவியையுண்டாக்கி யதனையளவறிந்து பின்

* கலி-பாலை 25.

ளுகரக் கருதாய், ஆகலானினி யப்பெற்றிப்பட்டவற்றை நின்னோடு எண்ணு வார் யார்? யானதுசெய்யேனென்பதாம்.

(வி ரை) அப்படிப்பட்டவை - பிணக்குந் திறங்கள். காண் உரையசை. முன்னெல்லாம் பிணங்க எண்ணியிருந்து பின் புணர்ச்சிக்கு விரைதலால் இப்படிச் சொல்லினாள். (4)

[வாயிலாகச் சென்ற தோழி கேட்பத் தலைமகள் சொல்லியது]

பெறாஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மறாஅ விடும்பைத்தென் னெஞ்சு.

(பரி உரை) பெறாமை அஞ்சும்-காதலரைப் பெறாத ஞான்று அப்பெறாமைக்கஞ்சாநின்றது, பெறின் பிரிவு அஞ்சும் - பெற்றக்கால் வரக்கடவ பிரிவினையுட்கொண்டு அதற்கஞ்சாநின்றது, என்னெஞ்சு அறா இடும்பைத்து-ஆகலான், என்னெஞ்சம் எஞ்ஞான்றும் நீங்காதவிடும்பையை யுடைத்தாயிற்று எ-று.

காதலரைப் பெற்றுவைத்துக் கலவியிழத்தல் உறுதியன்றென்னுங்கருத்தான் வாயினேர்கின்றாளாகலிற் பெறாமையஞ்சுமென்றும், கலவியாராமையின் இன்னுமிவர் பிரிவராயின் யாதுசெய்துமென்பது நிகழ்தலிற் பெறிற் பிரிவஞ்சுமென்றும், இவ்விரண்டுமல்லது பிறிதின்மையின் எஞ்ஞான்றுமறா விடும்பைத்தென்றுங் கூறினாள்.

(ப-ரை) (தலைவரைப் பெறாத நாளிலும்) பெறாஅமை யஞ்சும் - அப்பெறாமைக்கு அஞ்சாநிற்கும், பெறின்-பெற்றநாளிலும், பிரிவஞ்சும் - (அவரது) பிரிவைநினைந்து அஞ்சாநிற்கும், (ஆதலால்) என்னெஞ்சு - என் மனமானது, அறாவிடும்பைத்து - (எந்நாளும்) நீங்காத துன்பமுடைத்தாயிற்று எ-று.

(க-ரை) காதலரைப் பெறாதஞான்று அப்பெறாமைக் கஞ்சாநிற்கும் பெற்றஞான்று மவர்பிரிவினை யுட்கொண்டு அதற்கஞ்சாநிற்கு மாகலான் என்னெஞ்சமெஞ்ஞான்றும் நீங்காதவிடும்பையை யுடைத்தாயிற் றென்பதாம்.

(வி-ரை) காதலரைப்பெற்றிருந்து புணர்ச்சியை இழத்தல் உறுதியன்று என்கிற கருத்தால் தூதுக்கு உடன்படுகின்றாளாகலால், பெறாமையஞ்சுமென்றும், புணர்ச்சியாறாமையினால் இன்னும் இவர் பிரிவாராயின் யாது செய்வோமென்பது நிகழ்தலால் பெறிற்பிரிவஞ்சுமென்றும் இவ்விரண்டுமல்லாமல் வேறேயில்லாமையால், அறாவிடும்பைத்தென்றும் சொல்லினாள். ()

[இதுவுமது]

தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு.

(பரி உரை) என்னெஞ்சு இருந்தது-என்னெஞ்சு ஈண்டிருந்தது, தனியே இருந்து நினைத்தக்கால்-காதலரைப்பிரிந்திருந்து அவர் கொடுமைகளை யான்

றன்னொடு நினைத்தக்கால், என்னைத் தினிய - அவ்வளவறிந்து - என்னைத் தின்பதுபோன்று துன்பஞ்செய்தற்கே எ-று.

எம்மாட்டிருந்தது அன்று அவர் கொடுமைகளை யுட்கொண்டு எனக் காற்றாமை செய்தற்கே, இன்று அவைநோக்கி அவரொடு புலத்தற்கன்றென்பதாம்.

(ப-ரை) என்னெஞ்சு-என்மனமானது, இருந்தது-(இங்கே) இருந்தது, தனியே இருந்து-அன்பரைப் பிரிந்திருந்து, நினைத்தக்கால் (அவர் கொடுமைகளை நான் தன்னோடு) நினைத்தக்கால், (அச்சமயமறிந்து) என்னை - என்னை, தினிய-தின்பதுபோல் துன்பஞ்செய்தற்பொருட்டே எ-று.

(க-ரை) என்னெஞ்சு ஈண்டிருந்தது காதலரைப் பிரிந்தவர் கொடுமைகளை யான் றன்னோடு நினைத்தக்கால் அவ்வளவறிந்து என்னைத் தின்பதுபோன்று துன்பஞ்செய்தற்கே என்பதாம்.

(வி-ரை) என்னிடத்திருந்தது அப்போது அவர்கொடுமைகளை உட்கொண்டு எனக்குப் பொறுக்கமாட்டாமையைச் செய்தற்கே, இப்போது அவைநோக்கி அவரோடு பிணங்குதற்கன்றென்பதாம். (6)

[இதுவுமது]

நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணா மடநெஞ்சிற் பட்டு.

(பரி-உரை) அவர் மறக்கல்லா என் மாணா மடநெஞ்சிற் பட்டு - தன்னை மறந்த காதலரைத் தான் மறக்கமாட்டாத என் மாட்சிமையில்லாத மடநெஞ்சுடனே கூடி, நாணும் மறந்தேன்-என்னுயிரினுஞ் சிறந்த நாண்டன்னையும் மறந்துவிட்டேன் எ-று.

மாணாமை-ஒருநிலையினில்லாமை. மடமை-கண்டவழி நினைந்து காணாவழி மறக்குந் தவற்றைக் காணாவழி நினைந்து கண்டவழி மறத்தல். நாண்-எஞ்ஞான்றுங் கூடியொழுகினும் அஞ்ஞான்று கண்டார்போன்றொடுங்குதல். கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலின் அதனையுமறந்தேனென்றாள்.

(ப-ரை) அவர் மறக்கல்லா - (தன்னைமறந்த) அவரை மறக்கமாட்டாத, மாணா-மாட்சியில்லாத, என் மடநெஞ்சிற்பட்டு - எனது அறிவில்லாத மனத்தோடுகூடி, நாணும் - (என்னுயிரினுஞ் சிறந்த) நாணத்தையும், மறந்தேன்-மறந்துவிட்டேன் எ-று.

(க-ரை) தன்னைமறந்த காதலரைத் தான் மறக்கமாட்டாத என் மாட்சியில்லாத மடநெஞ்சுடனேகூடி என்னுயிரினுஞ்சிறந்த நாண் டன்னையு மறந்துவிட்டே னென்பதாம்.

(வி-ரை) மடமை-கண்டவிடத்து நினைந்து காணாதவிடத்து மறத்தல் நாண்-எந்தநாளுங் கூடியொழுகினும் அந்நாள் கண்டார்போல் ஒடுங்குதல் கண்டபொழுதே புணர்ச்சிக்கு விரைதலால் அதனை மறந்தேனென்றாள். (7)

[இதவுமது]

எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
முள்ளு முயிர்க்காத னெஞ்சு.

(பரி-உரை) உயிர்க்காதல் நெஞ்சு - உயிர்மேற் காதலுடைய என் னெஞ்சு, எள்ளின் இளிவு ஆம் என்று எண்ணி - கம்மையெள்ளிச் சென்று சென்ற காமுமெள்ளுவோமாயிற் பின்னமக்கிளிவாமென்ற கருதி, அவர் திறம் உள்ளும்-அவர் திறத்தினையே நினையாகின்றது எ-று.

எள்ளுதல்-வாயின்மறுத்தல். இளிவு - வழிபடாமையாலும், பிரிவாற்றுமையாலும், காணும் நிறையுமுதலியவழித்தலாலும் உளதாவது. திறம்-வாயினேர்தலும் வருதலும் கூடலுமுதலாயின. இளிவிற்கஞ்சுதலாலும் இறந்தபடமாட்டாமையாலும் கூடக்கருதாநின்றதென்பதாம்.

(பதவுரை) உயிர்க்காதனெஞ்சு-உயிர்மேல் ஆசையுடைய (என்) னெஞ்சு, (கம்மை இகழ்ந்துசென்றுசென்ற), எள்ளின் - (காமும்) இகழ்வோமாயின், இளிவாமென்றெண்ணி - (பின்பு நமக்கு) அவமானமாமென்றநினைத்து, அவர் திறம்-அவர் திறத்தையே, உள்ளும்-நினைக்கின்றது எ-று.

(த - ரை) உயிர்மேற் காதலுடையவென்னெஞ்சு கம்மையெள்ளிச் சென்றுசென்ற காமுமெள்ளுவோமாயிற் பின்நமக்கு இளிவாமென்ற கருதி அவர் திறத்தினையே நினையாகின்றதென்பதாம்.

(வி-ரை) எள்ளுதல்-தாதுமறுத்தல். இளிவு-வழிபடாமையாலும், பிரிவு பெருமையாலும், காணிறைமுதலியவை இழத்தலாலும் உண்டாவது. திறம்-நாதக்குடன்படலும் வருதலும் கூடலும் முதலானவை. இளிவிற்கு அஞ்சலாலும் இறந்தபடமாட்டாமையாலும்கூட நினைக்கின்றதென்பதாம். (8)

[உணர்ப்பு வயின்வாரா வூடற்கட் டலைமகன் சொல்லியது]

தன்பத்திற் கியாரே துணையாவார் காமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

(பரி-உரை) தன்பத்திற்கு-ஒருவர்க்குத் தன்பம்வந்தழி, அது நீக்குதற்கு, தாம் உடைய நெஞ்சம் துணையல்வழி - தாமுரித்தாகப்பெற்ற தம்முடைய நெஞ்சந் துணையாகாவழி, துணையாவார் யாரே-வேறுதுணையாவார் ஒருவருமில்லை எ-று.

சண்டுத் தன்பமாவது வூடலுணர்ப்புவயின்வாராமை. அதற்கு நெஞ்சுதுணையாகாமையாவது அவனையன்பிலனென்றொழியாது கூடற்கண்ணே நிற்றம்பல். ஒருதுணையுமின்மையின், இஃதற்றவிடத்தலே பிள்ளதென்பதாம்.

(பதவுரை) தன்பத்திற்கு - (ஒருவர்க்குத்) தன்பம்வந்தவிடத்து, (அதை நீக்குதற்கு) காமுடைய - தாம் உரித்தாகப்பெற்ற, நெஞ்சம்-(தமது) மனமா

வை, அணையல்வழி - அணையாகாதவிடத்த, அணையாவார் - அணையாகின்றவர்கள், யாசே-யார் (ஒருவரும் இல்லை) எ-று.

(க-ரை) ஒருவர்க்குத் தன்பம்வர்தழி அதை கீக்குதற்குத் தாமுரித்தாகப் பெற்ற தம்முடைய நெஞ்சந் தணையாகாவழி வேறதணையாவார் ஒருவருமில்லை யென்பதாம்.

(வி-ரை) இக்கே தன்பமாவது ஒழித்தற்கு வாராதபிணக்கு. நெஞ்சந் தணையாகாமையாவது அதனை அன்பிலனென்றொழியாத கூடற்கண்ணே விரைதல். ஒரு தணைபுமில்லாமையால் இத்தன்பமுற்றவிடதலே உள்ளதென்பதாம். (9)

[இதவுமை]

நஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி.

(பரி-உரை) தாம் உடைய நெஞ்சம் தமர் அல்வழி-தாமுரித்தாகவுடைய நெஞ்சம் ஒருவர்க்குத் தமரல்லாவழி, ஏதிலார் தமர் அல்லர் நஞ்சம்-அயலார் தமரல்லாதல் சொல்லவேண்டுமோ? எ-று.

பிறனொருத்தியைக் காதலியென்ற கருதி என்னெஞ்சே என்னை வருத்தாகின்றபின் அப்பிறள் புலக்கின்றதெளிதென்பதாம்.

(பத) தாமுடைய-தாம் உரித்தாகவுடைய, நெஞ்சம்-மனம், தமர்வழி - (ஒருவர்க்குத்) தம்மவராகாதவிடத்த, ஏதிலார் - அயலார், தமரல்லர்-தம்மவரல்லாகுதல், நஞ்சம்-எளிதன்றே? எ-று.

(க-ரை) தாமுரித்தாகவுடைய நெஞ்சம் ஒருவர்க்குத் தமரல்லாவழி அயலார் தமரல்லாதல் சொல்லவேண்டுமோ வென்பதாம்.

(வி-ரை) வேறொருத்தியைக் காதலிடென்ற நினைத்த என்னெஞ்சே என்னை வருத்தகின்ற பின்பு வேறொருத்தி பிணக்குகின்றதை எளிதென்பதாம். (10)

130-ம் அதி - நெஞ்சொடுபுலத்தல் - முற்றிற்று.

131-ம் அதிகாரம்—புலவி

(பரி-உரை) அஃதாவது: இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாத புலக்கருதியவழி ஒருவரோடொருவர் புலத்தல். அதிகாரமுறைமையும் இதனானே விளக்கும்.

(உரை) அஃதாவது: இருவர் நெஞ்சும் புணர்ச்சி விரும்பாத பிணக்கினைத்தவிடத்த ஒருவரோடு ஒருவர் பிணக்கல். அதிகாரமுறைமையும் இதனால் விளக்கும்.

[வாயிலாகச்சென்ற தோழி தலைமகள் வாயினேர்தற்பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது]

புல்லா திராஅப் புலத்தை யவருறு
மல்லனோய் காண்கஞ் சிறிது.

(பரி-உரை) அவர் உறும் அல்லல் நோய் சிறிது காண்கம் - அங்ஙனம் புலந்தாற் காதல்ரெய்துமல்லனோயினை யாஞ்சிறிது காணக்கடவேம்; புல்லாது இராப் புலத்தை - நீயவரை விரைந்துசென்று புல்லாதே இத்தொழிலை மேலிட்டுக்கொண்டிருந்து புலப்பாயாக எ-று.

அல்லனோய்-துன்பத்தைச் செய்யுங் காமநோய். சிறிதென்றாள், புலவியை நீளவிடலாகாதென்பதுபற்றி. புலத்தை யென்புழி ஐகாரம் * "கடம் பூண்டொருகானீ வந்தை" என்புழிப்போல முன்னிலைவினைவிகுதி. புலத்தி யென்பதூஉம் பாடம். புலவிக்குறிப்புக்கண்டு அவள்வழியளாய் நின்று நாமுற்ற வருத்தம் அவருஞ்சிறிதுற்றறிதல் வேண்டுமென நகையாடி நேர்வித்தவாறு.

(ப-ரை) அவருறும்-அக்காதலரடையும், அல்லனோய் - துன்பநோயினை, சிறிது-சிறிது, காண்கம்-காணக்கடவோம், புல்லாது - (நீ அவரை விரைந்து போய்த்) தழுவாமல், இராஅ - (இத்தொழிலை மேலிட்டுக்கொண்டு) இருந்து, புலத்தை-பிணங்கு எ-று.

(க-ரை) அங்ஙனம் புலந்தாற் காதலரெய்து மல்லனோயினை யாஞ்சிறிது காணக்கடவேம் நீயவரை விரைந்துசென்று புல்லாதே இத்தொழிலை மேலிட்டுக்கொண்டிருந்து புலப்பாயாக வென்பதாம்.

(வி-ரை) அல்லனோய் - துன்பஞ்செய்யுங் காமநோய். சிறிதென்றாள் பிணக்கை நீளவிடலாகாதென்பதுபற்றி புலவிக்குறிப்புக் கண்டு அவள் வழியளாய் நின்று நாம் உற்றவருத்தம் சிறிது உறலறிதல் வேண்டுமென நகை செய்து நேர்வித்தபடி.

(1)

[புலவியொழிந்து வாயினேரும்வகை அவள் சொல்லியது]

உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல்.

(பரி உரை) புலவி உப்பு அமைந்தற்று - புலவி கலவி இன்பஞ்செயற்கு வேண்டுமளவிற்றாதல் உப்புத் துய்ப்பனவற்றை இன்சுவையவாக்கற்கு வேண்டுமளவிற்றாதல் போலும்; சிறிது நீளவிடல் அது மிக்கற்று-இனி அதனை அவளவிற்சிறிதுமிகவிடுதல் அவ்வுப்பு அளவின்மிக்காற்போலும் எ-று.

நீளவிடல்-அளவறிந்துணராது கலவிமேலெழுந்த குறிப்பழுங்குமளவுஞ் செய்தல். சிறிது நீளவிடலாகாதென்றாள், நேர்விக்கின்றாளாகலின், உப்பு

* கலி: குறிஞ்சி-27.

மிக்கவழித்துய்ப்பது சுவையின்றானாற்போலப் புலவி மிக்கவழிக் கலவி இன்பமின்றாமென்றமையின், இது பண்புவமை.

(ப-ரை) புலவி-பிணக்கு (புணர்ச்சியின்பஞ் செய்தற்கு வேண்டுமளவினதாகுதல்,) உப்பமைந்தற்று-உப்பானது (உணவுகளை இன்சுவையாக்குதற்கு) வேண்டுமளவினதாகுதல்போலும், நீளவிடல் - (இனி அதனை அவ்வளவிற் சிறிது) மிகவிடுதல், அதுசிறிது மிக்கற்று - அவ்வுப்பளவு சிறிது மிகுந்தது போலும் எ-று.

(க-ரை) புலவி கலவியின்பஞ் செய்தற்கு வேண்டுமளவிற்றாத லுப்புத் துய்ப்பனவற்றை யின்சுவையாக்கற்கு வேண்டுமளவிற்றாதல்போலும்; இனி யதனை யவ்வளவிற்சிறிது மிகவிடுதல் அவ்வுப்பளவின் மிக்காற்போலுமென்பதாம்.

(வி-ரை) நீளவிடுதல் - அளவறிந்து ஒழியாமல் புணர்ச்சி மேலெழுந்த குறிப்பு அழுங்குமளவுஞ் செலுத்தல். சிறிதும் நீளவிடலாகாதென்றாள், நேர் விக்கின்றாளாகலால், உப்புமிகுந்தவிடத்து உணவு சுவையில்லாமற்போதல் போல் பிணக்கு மிகுந்தவிடத்துப் புணர்ச்சி இன்பமில்லாமற் போமென்றமையால் இது பண்புவமை. (2)

[பரத்தையரிடத்துநின்றும் வந்த தலைமகனொடு தலைமகள் புலந்து சொல்லியது]

அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் றம்மைப் புலந்தாரைப் புல்லா விடல்.

(பரி-உரை) தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல் - தம்மைப்பெறாது புலந்த மகளிரைப் புலவிநீக்கிக் கலவாது ஆடவர்சேறல், அலந்தாரை அல்லல் நோய் செய்தற்று-பண்டே துன்பமுற்றழிந்தாரை அதன்மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற்போலும் எ-று.

பிறர்பாற்சேறலின் நும்மைப்பெறாது புலந்தூடியிருக்கின்ற பரத்தையரைப்போய்ப் புலவிநீக்கிப் புல்லீராயின், அவராற்றாரென்பதாம்.

(ப-ரை) (ஆடவர்) தம்மைப் புலந்தாரை - தம்மைப்பெறாது பிணங்கிய மகளிரை (அப்பிணக்குநீக்கி), புல்லாவிடல்-புணராமல்விடுதல், அலந்தாரை (முன்னமே துன்பமுற்று) அழிந்தவர்க்கு, அல்லனோய் செய்தற்று (அதன் மேலும்) மிகுந்த துன்பநோய் செய்ததுபோலுமாம் எ-று.

(க-ரை) தம்மைப்பெறாது புலந்த மகளீரைப் புலவிநீக்கிக் கலவாது ஆடவர்சேறல் பண்டே துன்பமுற்றழிந்தாரை யதன்மேலும் மிகத் துன்பத்தினைச் செய்தாற்போலு மென்பதாம்.

(வி-ரை) பிறரிடத்துச் செல்லுதலால், உம்மைப்பெறாது பிணங்கியிருக்கின்ற பரத்தையரைப்போய்ப் பிணக்குநீக்கிப் புணரீராயின் அவ்வாறாரென்பதாம்.

[இதுவுமது]

ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

(பரி-உரை) ஊடியவரை உணராமை - நும்மோடூடிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடாதொழிதல்; வாடிய வள்ளி முதல் அரிந்தற்று - பண்டே நீர்பெறாது வாடிய கொடியை அடியிலே யறுத்தாற்போலும் எ-று.

நீர் பரத்தையரிடத்திராயவழி எம்புதல்வரைக் கண்டாற்றியிருக்கற்பாலமாய யாம் நும்மோடூடுதற்குரிய மல்லம், அன்மையின் எம்மை யுணர்த்தல்வேண்டா, உரியராயூடிய பரத்தையரையே உணர்த்தல் வேண்டுவது, அதனால் ஆண்டுச்சென்மினென்பதாம்.

(ப-ரை) ஊடியவரை - (உம்மோடு) பிணங்கிய பரத்தையரை, உணராமை - பிணக்குத்தீர்த்துக் கூடாமை, வாடிய - (முன்னமே நீர்பெறாமல்) வாடிய, வள்ளி-கொடியை, முதலரிந்தற்று-அடியிலே அறுத்தல்போலும் எ-று.

(க-ரை) உம்மோடூடிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடாதொழிதல் பண்டே நீர் பெறாதுவாடிய கொடியை அடியிலே யறுத்தாற்போலு மென்பதாம்.

(வி-ரை) நீர் பரத்தையரிடத் திருக்கும்போது எம்புதல்வரைக் கண்டு பொறுத்திருக்கவல்ல யாம் உம்மோடு பிணங்குதற்கு உரியமல்லேம். ஆகையால் எமக்குப் பிணக்குத் தீர்த்தலும்வேண்டாம். உரியராய்ப் பிணங்கிய பரத்தையருக்கே பிணக்குத் தீர்க்கவேண்டுவது, அதனால் அங்கே செல்லுமென்பதாம்.

(4)

[தலைமகளைப் புலவிநீக்கிக் கூடிய தலைமகன் றன்னுள்ளே சொல்லியது]

நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து.

(பரி-உரை) நலத்தகை நல்லவர்க்கு ஏர் - நற்குணங்களாற் றகுதியுடைய ராய தலைவர்க்கும் அழகாவது, பூ அன்ன கண்ணார் அகத்துப் புலத்தகை - ம்பூவன்னகண்ணார் நெஞ்சின்கண் நிகழும் புலவிமிகுதியன்றே எ-று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தவறில்லார்க்கும் புலவி இனிதென்பான், நலத்தகை நல்லவர்க்குமென்றான். அழகு - இன்பப்பயனைத் தலைப்படுதல். தானுகர்ந்தவின்பத்திற்கேதுவாகிய புலவியை வியந்து கூறியவாறு.

(ப-ரை) நலத்தகை-நற்குணங்களாலே தகுதியுடைய, நல்லவர்க்கு-தலைவர்க்கும், ஏர்-அழகாவது, பூவன்ன கண்ணாரகத்து-மலர்போலுங் கண்ணியர் நெஞ்சிலுண்டாகின்ற, புலத்தகை-பிணக்கின் மிகுதியன்றோ? எ-று.

(க-ரை) நற்குணங்களாற் றருதியுடையராய தலைவர்க்கும் அழகாவது தம் பூவன்ன கண்ணார் நெஞ்சி னிகழும் புலவி மிருதியன்றே யென்பதாம்.

(வி-ரை) தலைவர்க்குமென்கிற சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தவறில்லாதார்க்கும் அப்பிணக்கு இனிதென்றற்கு நலத்தகை நல்லவர்க்கு மென்றான். அழகு-இன்பப்பயனைப்பெறுதல். தான் அனுபவித்த இன்பத்திற்கு ஏதுவாகிய பிணக்கை வியந்து சொல்லியபடி. (5)

[இதுவுமது]

துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கறுக்காயு மற்று.

(பரி-உரை) துனியும் புலவியும் இல்லாயின் - முதிர்ந்த கலாமாகிய துனியும் இளைய கலாமாகிய புலவியும் இல்லையாயின், காமம் கனியும் கறுக்காயும் அற்று-காமம் செவ்வி முதிர்ந்தபழமும் இளங்காயும்போலும் எ-று.

மிகமுதிர்ந்திறுமெல்லைத்தாய கனி நுகர்வார்க்கு மிகவுமினிமை செய்யாதாதலிற் றுனியில்லையாயிற்கனியற்றென்றும், கட்டிளைமைத்தாய காய் நுகருஞ்செவ்விதன்றாகலிற் புலவியில்லையாயிற் கருக்காயற்றென்றுங் கூறினான். இவ்விரண்டும் வேண்டுமென்று வியந்து கூறியவாறு.

(ப-ரை) துனியும்-பெரும்பிணக்கும், புலவியும்-சிறுபிணக்கும், இல்லாயின்-இல்லையாயின், காமம்-காமமானது, கனியும்-பக்குவமுதிர்ந்த பழமும் கருக்காயுமற்று-இளங்காயும்போலும் எ-று.

(க-ரை) முதிர்ந்த கலாமாகிய துனியும் இளையகலாமாகிய புலவியு மில்லையாயிற் காமம் செவ்வி முதிர்ந்தபழமுங் காயும்போலு மென்பதாம்.

(வி-ரை) மிகமுதிர்ந்து இறுமளவினதாகிய பழம் அனுபவிப்பார்க்கு மிகவும் இன்பஞ் செய்தலால், பெரும்பிணக்கு இல்லையாயின் கனியற்றென்றும், கட்டிளமைத்தாகிய காய் தின்னப்படுகிற பக்குவத்தன்றாகலால், சிறுபிணக்கு -இல்லையாயின் கருக்காயற்றென்றும் சொல்லினான். இரண்டும் வேண்டுமென்று வியந்து சொல்லியபடி. (6)

[இதுவுமது]

ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.

(பரி-உரை) புணர்வது நீடுவது (கொல்) அன்றுகொல் என்று - இனி புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோவென்று கருதலான், ஊடலின் துன்பம் உண்டு - இன்பத்திற்கின்றியமையாத ஊடலின்கண்ணேயும் துன்ப மிகழும் எ-று.

என்றென்னுமெச்சத்திற்குக் கருதலானென்பது வருவிக்கப்பட்டது. சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கொல்லென்பதனை நீடுவதென்பதனுடனுங்கூட்டுக. ஆங்கென்பது அசைநிலை. ஊடல் - கூடற்கண் விரைவித்தல் கூறியவாறு.

(ப-ரை) புணர்வது - புணர்ச்சியானது, நீடுவதுகொல் - நீட்டிக்குமோ, அன்றுகொல்-நீட்டியாதோ, என்று-என்றுநினைத்தால், ஊடலின் - (இன்பத்திற்கு அவசியம்வேண்டும்) பிணக்கிலேயும், ஓர் துன்பம்-ஒருதுன்பம், உண்டு-உண்டாம் எ-று.

(க-ரை) இனிப்புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோவென்று கருதலால் இன்பத்திற்கின்றியமையாத வூடலின்கண்ணேயும் துன்பநிகழுமென்பதாம்.

(வி-ரை) ஊடலினுமென்கிற சிறப்பும்மை விகாரத்தாலே தொக்கது. கொல்லென்பதனை நீடுவ தென்பதனுடனுங் கூட்டப்பட்டது. ஆங்கென்பது அசைநிலை. ஊடலானது கூடலிலே விரைவித்தல் சொல்லியபடி. (7)

[உணர்ப்புவயின்வாராவூடற்கட் டலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது]

நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதல ரில்லா வழி.

(பரி-உரை) நொந்தாரென்று அஃது அறியும் காதலர் இல்லாவழி-இவர் நம்பொருட்டாக நொந்தாரென்று அந்நோவினையறியு மன்புடையாரைப்பெறாவழி, நோதல் மற்று எவன் - ஒருவர் நோகின்றதனாற்பயனென் எ-று.

அறிதல்-ஈண்டுடலையினிதுணர்தல். மற்று வினைமாற்றின்கண் வந்தது. இவள் நங்காதலியல்லள், அன்மையின் இந்நோவறியாள், அறியாமையின் நாம் புலக்கின்றதனாற் பயனில்லையெனத் தன்னாற்றாமையுணர்த்தியவாறு.

(ப-ரை) நொந்தாரென்று - (இவர் நம்பொருட்டு) நொந்தாரென்று, அஃதறியும்-அந்நோயை அறிகிற, காதலர்-அன்புடையவரை, இல்லாவழி-பெறாதவிடத்து, நோதல்-(ஒருவர்) நோகின்றவனாதல், எவன்மற்று-(பயன்) ஏது? எ-று.

(க-ரை) இவர் நம்பொருட்டாக நொந்தாரென்று அன்னோயினையறியும் அன்புடையாரைப் பெறாவழி யொருவர் நோகின்றதனாற் பயனென்ன வென்பதாம்.

(வி-ரை) இவள் நமது தலைவியல்லள் அல்லாமையால், இந்நோவறியாள் அறியாமையால் நாம் பிணங்குதலாலே பயன் இல்லையென்று தன்பொறாமை அறிவித்தபடி. (8)

[இதவுமத]

நீரு நிழல நினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது.

(பரி-உரை) நீரும் நிழலதே இனித - உயிர்க்கின்றியமையாத நீரும் நிழலின்கண்ணதே இனிதாவது, ஏனை வெயிலின்கண்ணது ஆகாது; புலவியும் வீழுநர்கண்ணே இனித - அதபோலக் கலவிக்கின்றியமையாத புலவியும் அன்புடையார்கண்ணே இனிதாவது, ஏனையன்பிலார்கண் ஆகாது எ-று.

கிழற்கணிருந்த நீர் குளிர்ச்சியிக்குத் தாகத்தணித்தலின் இனிதாயிற்று. வீழுநர் ஆற்றுமைக்கு நோதலும் கூடுதற்கண் வேட்கையுடையராவார். இவன் கம்மாட்டு அவ்விரண்டுமின்மையின் இப்புலவிதானு மின்னுதாகாகின்ற தென்பதாம்.

(பரை) நீரும்-(உயிர்க்கு அவசியம்வேண்டும்) நீரும், நிழலதே - நிழலுள்ளதே, இனித-இனிதாகும், (அதபோல்) புலவியும்-(புணர்ச்சிக்கு அவசியம்வேண்டும்) பிணக்கும், வீழுநர்கண்ணேயினித-அன்புடையரிடத்தே இனிதாகும், (மற்றையன்பிலாரிடத்த) ஆகாத எ-று.

(க-உரை) உயிர்க்கு இன்றியமையாத நீரும் நிழலின் கண்ணதே யினிதாவத, ஏனை வெயிலின்கண்ணதாகாத அதபோலக் கலவிக்கின்றியமையாத புலவியும் அன்புடையார் கண்ணே யினிதாவது ஏனை யன்பில்லார் கண்ணதாகாத என்பதாம்.

(வி-உரை) நிழலிடத்துள்ள நீர் மிகுந்த குளிர்ச்சியுடையதாய்த் தாகத்தணித்தலால் இனிதாயிற்று. அன்புடையவர் பொருமைக்கு நோகுதலும் கூடுதலிலே ஆசையும், உடையராவார். இவரிடத்த அவ்விரண்டும் இல்லாமையால் இப்பிணக்குதலும் தன்பஞ்செய்கின்ற தென்பதாம்.

[இதவுமத]

உளட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா.

(பரி-உரை) உடல் உணங்க - தானூடற்கண்ணே மெலியாகிற்கவும் விடுவாரோடு கூடுவேம் என்பத என்னெஞ்சம் அவா - விட்டிருக்க வல்லாரோடு கூடக்கடவேமென்ற என்னெஞ்சம் முயறற்கேத தன்னவாய்ப் பிறிதில்லை எ-று.

அன்பு மருளுமில்லாதாரை உடையரென்றம் அவரோடியாங் கூடுமென்றவ் கருதி அதற்கு முயறல் அவாவுற்றார் செயலாகலின், கூடுவேமென்பதவாவென்றான். காரியக் காரணமாக வுபசரிக்கப்பட்டத. இக்கூட்டம் முடியாதென்பதாம்.

(ப-ரை) ஊடலுணங்க - (தான்) பிணக்கிலே வருத்தாகிற்கவும், விடு மாரோடு - (தன்னை) விட்டிருக்க வல்லாரோடு, என்னெஞ்சம் - என்மனம், ஊடலேமென்பது-கூடக்கடவேமென்ற முயற்சிசெய்தற்குக் காரணம், அவா-(தன்)ஞசையே (வேறில்லை) எ-று.

(க-ரை) தானூடற்கண்ணே மெலியாகிற்கவும் விட்டிருக்க வல்லாரோடு கூடக்கடவேமென்ற என்னெஞ்சம் முயறற்கேதுதன் அவாவே பிறிதில்லை யென்பதாம்.

(வி-ரை) அன்பும் அருளும் இல்லாரை உடையரென்றும், அவரோடு மாம் பொருந்தவேமென்றும், கினைத்த அதற்கு முயலுதல் அவாவுற்றார் செயலாகலால் கூடவேமென்பது அவாவென்றார். இக்கூட்டம் முடியா தென்பதாம். (10)

131-ம் அதி - புலவி - முற்றிற்று.

132-ம் அதிகாரம்—புலவிநுணுக்கம்

(பரி-உரை) அது புலவியது நுணுக்கமென விரியும். அஃதாவது தலை மறைந் தலைமகளும் ஓரமளிக்கட் கூடியிருந்தழி அவன்மாட்டுப் புலத்தற் காரண மில்லையாகவுங் காதல் கைம்மிகுதலான் நுண்ணியதோர் காரண முளதாகவுட்கொண்டு அதனை யவன்மேலேற்றி அவள் புலத்தல். காரணத்தி னுணுக்கம் காரியத்தின்மேனின்றது. அதிகாரமுறைமையும் இதனானே யாக்கும்.

(உரை) அஃதாவது: தலைவனும் தலைவியும் ஒருபடுக்கையிலே கூடி யிருந்தவிடத்து அவனிடத்துப் பிணங்குதற்குக்காரணம் இல்லாதிருக்கவும் யுசை அதிகப்படுதலால் நுட்பமாகிய ஒருகாரணம் இருக்கிறதாக உட் கொண்டு அதனை அவன்மேல் ஏற்றி அவள் பிணங்குதல். காரணத்தி னுணுக்கம் காரியத்தின்மேல் நின்றது. அதிகாரமுறைமையும் இதனாலே யாக்கும்.

[உலாப்போய்வந்த தலைமகன் பள்ளியிடத்தாஞ்சுத் தலைமகள் சொல்லியது]

பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்
தண்ணேன் பாத்தநின் மார்பு. [பர்

(பரி-உரை) பாத்த - பாத்தமையுடையாய்!, பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர் - நின்னைப் பெண்ணியல்பினையுடையார் யாவருங் கண்ணுற் பொதுவாக வுண்பர், நின் மார்பு தண்ணேன் - அதனால் அவர் சிலாய நின்மார்பினைப் பொருந்தேன் எ-று.

சாயல் நாண்முதலிய நற்குணங்களின்மையிற் பாத்தையர்க்குள்ளது பெண்ணியற்கை மாத்திரமே யென்றுங் கருத்தாற் பெண்ணியலாரென்றார்.

பொதுவாகவுண்டல் - தருசேரிச்செலவின் முறையானன்றி ஒருகாலத் தொருக்குகோக்குதல்; அதுவுமோர் குற்றம். தாகோக்கியின்புற்றவாறே அவருகோக்கி யின்புறவென வுசங்கித்த அகர்பாற் பொருமையெய்தல வின், நுணுக்கமாயிற்று.

(ப-ரை) பரத்த - பரத்தையரிடத்துச் செல்லுதலுடையாய்!, பெண் ணியலாரெல்லாரும் - பெண்ணியல்பினை யுடையாரெல்லாரும், கண்ணின் - (தமது) கண்களால், பொதுவுண்பார்-பொதுவாக (உன்னை) அநுபவிப்பார், (அதனால்) நின்மார்பு-(அவரொச்சிலாகிய) நின்மார்பை, நண்ணேன்-பொருந் தேன் என்க.

(க-ரை) பரத்தமையுடையாய்! நின்னைப் பெண்ணியல்பினை யுடை யார் யாவருந் தங்கண்ணுற் பொதுவாகவுண்பர் அதனாலவர் மிச்சிலாய நின் மார்பினைப் பொருந்தே னென்பதாம்.

(வி-ரை) கற்பு நாண்முதலாகிய கற்குணங்கள் இல்லாமையால் பரத்தை யர்க்கு உள்ளதெ பெண்ணியிருக்கை மாத்திரமே என்கிற கருத்தால் பெண் ணியலாரென்றார். பொதுவாகவுண்டல் - தமது சேரியிலே செல்லுகையில் முறையாலன்றி ஒருகாலத்து ஒருசேரகோக்குதல். அதுவும் ஓர் குற்றம்; தான் கோக்கி இன்புற்றபடியே அவரும் கோக்கி இன்புறவென்று வுசங்கித்த அவன் அவரிடத்துப் பொருளை யடைதலால் நுணுக்கமாயிற்று. (1)

[தலைமகளீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகன் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது]

ஊடி யிருந்தேமாத் தும்மினர் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

(பரி-உரை) ஊடி இருந்தேமாத் தும்மினர்-யாந்தம்மோடுடியுரையாடா திருந்தேமாகக் காதலர் தும்மினர், யாம் தம்மை நீடுவாழ்கென்பாக்கு அறிந்து-அது கீக்கித் தம்மை நீடுவாழ்கென் றுரையாடுவேமாகக் கருதி எ-று.

தும்மியக்கால் வாழ்த்துதல் மரபாகலான், உரையாடல் வேண்டி தென்பதாம். இயல்பானிகழ்ந்த தும்மலைக் குறிப்பானிகழ்ந்ததாகக் கோட லின், நுணுக்கமாயிற்று.

(ப-ரை) ஊடி-(யாம் தம்மோடு) பிணங்கி, இருந்தேமா-(பேசா)திருந்தே மாக, தும்மினர்-(காதலர்) தும்மினர், (அப்பிணக்குநீக்கி) யாம்-நாம், தம்மை தம்மை, நீடுவாழ்கென்பாக்கறிந்த - நெடுங்காலம் வாழ்கவென்ற சொல்லு வேமாக நினைத்த எ-று.

(க-ரை) யாந்தம்மோடுடி யுரையாடாதிருந்தேமாகக் காதலர் தும்மின அதுநீக்கித்தம்மை நீடுவாழ்கென்றுரையாடுவேமாகக் கருதியிருந்தென்பதாம்.

(வி-ரை) தும்மியக்கால் வாழ்த்துதல் மரபாகலால், பேசவேண்டி தாயிற்றென்பதாம். இயல்பாக வுண்டாகிய தும்மலைக் குறிப்பால் உண் டாகியதாகக் கொள்ளுதலால் நுணுக்கமாயிற்று. (2)

[தலைமகள் புலவிக்குறிப்பினைக் கண்டு சீவிர் கூடியொழுகாநிற்கவும் இது கெழ்தற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது]

கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று.

(பரி-உரை) கோட்டுப்பூச் சூடினும் - யான் கோதலைச் செய்யுமாலையைச் சூடினேனெயினும், ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று காயும் - நும்மாற்காதலிக்கப்பட்டாளொருத்திக்கு இப்பூவணி காட்டல்வேண்டிச் சூடினீரென்று வெகுளாநிற்கும்; இத்தன்மையாட்கு ஒருகாரணம் வேண்டுமோ? எ-று.

கோடென்பது முதனிலைத் தொழிற்பெயர். பூ - ஆகுபெயர். வினையாகச் சூடினுமென்பதாம்; * "கோட்டங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும்" என்றார் பிறரும். இனி அம்மருதநிலத்தப்பூவன்றி வேற்றுநிலத்தக் கோட்டுப்பூவைச் சூடினேனெயினும் சண்டையான் பிறனொருத்திக்கு அவ் வேற்றுப்பூவணி காட்டல்வேண்டிச் சூடினீரென்று வெகுளுமெனினுமமையும்.

(ப-ரை) கோட்டுப்பூ-வினவாகிய பூமாலையை, சூடினும்-சூடினேனெயினும், ஒருத்தியை - (உம்மால் இச்சிக்கப்பட்ட) ஒருத்திக்கு, காட்டிய - (இப்பூவல்லாப்பினைக்) காட்டுதல்வேண்டி, சூடினீரென்று - அணிந்தீரென்று, காயும்-கோபியாகிற்பன், (இப்படிப்பட்டவளுக்கு ஒருகாரணம் வேண்டுமோ?) எ-று.

(க-ரை) யான் கோதலைச் செய்யு மாலையைச் சூடினேனெயினும் நும்மாற் காதலிக்கப்பட்டா ளொருத்திக்கு இப்பூவணி காட்டல் வேண்டிச் சூடினீரென்று வெகுளாநிற்கும்; இத்தன்மையாட்கு ஒருகாரணம் வேண்டுமோவென்பதாம்.

(வி-ரை) பூ-ஆகுபெயர். வினையாக வெனினுமாம். (3)

[இதவுமது]

யாரினுங் காதல மென்றேனு மூடினுள்
யாரினும் யாரினு மென்று.

(பரி-உரை) யாரினும் காதலம் என்றேனு-காமநுகர்தற்குரிய விருவாருள்ளாரினும் யாம் மிக்க காதலையுடையேமென்பது கருதி யாரினுங் காதலமென்றேனுக, யாரினும் யாரினும் என்று ஊடினுள் - கின்றோழி அதனையுணராது, என்னுற் காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் கின்கட்சாதலையுடையேனென்றேனுகக்கருதி, அம்மகளிர் யாரினும் என்கட் காதலுடையையாயினீரென்று சொல்லிப் புலந்தாள் எ-று.

தலைமகன் கருத்திற்குத் தன்மைப்பன்மை உயர்ச்சிக்கண் வந்தது. "அன்பு மிகுதியாற் சொல்லியதனைக் கருத்தை வேறுபடக் கொண்டதல்லது நிதகாரண மில்லையென்பதாம்.

* புறநானூறு-275.

(பதவு) (காமம் அறுபவித்தற்கு உரிய இருவராயுள்ளவர். எவரிலும் காம் மிகுந்த காதலுடையமென்பதை நினைத்து) யாரிலுங் காதலமென் றேனை யாரிலும் மிகுந்த காதலுடையமென்று சொன்னேனுக, (உனது தோழி அதனையாமல் உன்னுல் விரும்பப்பட்ட மகளிர் பலருள்ளும், உன்னிடத்தமிகுந்த காதலுடையமென்றேனுகநினைத்த), யாரிலும் யாரிலுமென்ற - யாரிலும் யாரிலும் (என்னிடத்தக் காதலுடையீர்) என்ற சொல்லி, வாடினுள் பிணக்கினுள் எ-று.

(க-ரை) காமமுகர்த்தற்குரிய விருவராயினுர் யாவரிலும் காமிக்க காதலுடையமென்பதை கருதி யாரிலுங் காதலமென்றேனுக கின்றேழி யதை கருதாதவன்னுற் காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளுங்கின்கட்காதலுடையமென்றேனுகக் கருதிய மகளிர் யாரிலு மென்கட் காதலுடையராயினீ ரென்ற சொல்லிப் புலந்தா னென்பதாம்.

(வி-ரை) தலைவி சருத்தக்குக் காதலன் என்ற தன்மைப்பன்மை தலைவன் தன்னை உயர்த்திச் சொல்லியதாக வந்தது. யான் அன்பு மிகுதி யினுலே சொல்லியதைக் கருத்தா வேறுபடக்கொண்டதல்லது வேறுரு காரணம் இல்லையென்பதாம். (4)

[இதவுமை]

இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனுக்
கண்ணிறை நீர்கொண்ட னள்.

(பரி-உரை) இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனு - காதன்மிகுதியான் இம்மையாகிய பிறப்பின்கண் யாம் பிரியேமென்று சொன்னேனுக, கண் நிறை நீர்கொண்டனன் - அதனுன் வேனை மறுமையாகிய பிறப்பின்கட் பிரிவலென்னுங் குறிப்பினேனுகக்கருதி, அவன் தன்கண்ணிறைந்த நீரினைக் கொண்டான் எ-று.

வெளிப்படுசொல்லைக் குறிப்புச்சொல்லாகக் கொள்கின்றதல்லது என் பாற்றவரில்லை யென்பதாம்.

(ப-ரை) (காதன்மிகுதியால்) இம்மைப்பிறப்பில்-இப்பிறப்பிலே, பிரியமென்றேனு - பிரியேனென்று சொன்னேனுக, (அதனுல் என்னை மறுபிறப்பிலே பிரிவேன் என்கிற கருத்தடையேனுக நினைத்த) கண்ணிறை நீர் கொண்டனன்-(அவன்) கண்ணிறைந்த நீரைக்கொண்டாள் எ-று.

(க-ரை) காதன்மிகுதியால் இம்மையாகிய பிறப்பின்கண் யான் பிரியேனென்ற சொன்னேனுக அதனுலேனை மறுமையாகிய பிறப்பின்கட் பிரிவலென்னுங் குறிப்பினேனுகக் கருதி அவன் தன் கண்ணிறைந்த நீரைக் கொண்டானென்பதாம்.

(வி-ரை) வெளிப்படுசொல்லைக் குறிப்புச் சொல்லாகக் கொள்கின்றதல்லது என்னிடத்தைத் தவறில்லையென்பதாம். (5)

[இகவுமத]

உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றெ
புல்லாள் புலத்தக் கனள். [ன்னைப்

(பரி-உரை) உள்ளினேன் என்றேன் - பிரிந்தகாலத்து கின்னை யிடை யின்றி கினைந்தேனென்னுங்கருத்தால் யானுள்ளினேனென்றேன்; மற்று என் மறந்தீர் என்ற என்னைப் புல்லான் புலத்தக்கனள்-என, அதனை ஒருகான் மறந்த பின்னரினைக்தே னென்றதாகக்கருதி, என்னையிடையே மறந்தீ ரென்ற சொல்லி முன் புல்லுதற் கமைந்தவன் அஃதொழிந்த புலத்தற் கமைந்தான் எ-று.

மற்று-வினைமாற்றின்கண் வந்தது. அருத்தாபத்திவகையான் மறத்தலை யுட்கொண்டு புலந்தானென்பதாம்.

(ப-உரை) உள்ளினேனென்றேன் - (பிரிவில் இடைவிடாமல் உன்னை கினைகதேன் என்ற கருத்தால்) கினைந்தேனென்றேன், (அவன் அதனை ஒருகால் மறந்த பின் கினைந்தேனென்ற சொல்லியதாக எண்ணி) மற்று-அதற்கு விரோதமாக, என்மறந்தீரென்ற-என்னை மறந்தீரென்றசொல்லி, (முன்னே தழுவுதற்கு அமைந்தவன்), என்னை-என்னை, புல்லான்-தழுவானாகி, புலத்தக்கனள்-பிணக்கற்கு அமைந்தான் எ-று.

(க-உரை) பிரிந்தகாலத்து கின்னை யிடையின்றி கினைந்தேனென்னுங் கருத்தால் யானுள்ளினே னென்றேனென அதனை யொருகால் மறந்த பின்னை கினைந்தேனுகக்கருதி என்னை மறந்தீரென்ற சொல்லி முன் புல்லுதற்கமைந்தவன் அஃதொழிந்த புலத்தற்கமைந்தானென்பதாம்.

(வி-உரை) மற்று - வினைமாற்று. அருத்தாபத்திவகையால் மறத்தலை உட்கொண்டு பிணக்கினனென்பதாம். (6)

[இகவுமத]

வழுத்கினை டும்மினே னைக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று.

(பரி-உரை) தும்மினேனைக வழுத்கின்னள் - கூடியிருக்கின்றவன் யான் தும்மினேனைகத் தன்னியற்கைபற்றி வாழ்த்கினள்; அழுத்த யார் உள்ளித் தும்மினீர் என்று அழுதாள்-அவ்வனம் வாழ்த்தியதானே மறித்த, நும்மை கினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் கினைத்தலாற் தும்மினீரென்று சொல்லிப் புலந்தழுதான் எ-று.

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின், அழித்தென்றான். அன்புடையார் கினைத்தவழி அக்கினைக்கப்பட்டார்க்குத் தும்மலுன்றுமென்பது மரபுவழக்கு. இவ்வழக்கை உள்வழக்காகக் கருதிப் புலந்தானென்பதாம்.

(ப-ரை) (கூடியிருக்கின்றவள்) தம்மினேனெ-(யான்) தம்மினேனெ, வழுத்தினன் - (தன்னியற்கைபற்றி) வாழ்த்தினன், (அப்படி வாழ்த்திய தானே) அழித்த - (அக்கருத்தை) மறித்த, (உம்மைநினைந்த வருந்துகின்ற மகளிருள்) யாருள்ளி-யார் நினைத்தலால், தம்மினீரென்ற-தம்மினீரென்ற, அழுதாள் (பிணக்கி) அழுதாள் எ-று.

(க-ரை) கூடியிருக்கின்றவன் யான் தம்மினேனெனத் தன்னியற்கை பற்றி வாழ்த்தினன்; அங்ஙனம் வாழ்த்தியதானே மறித்த நம்மைநினைந்த வருந்துகின்ற மகளிருள் யாஞர் நினைத்தலாற் றம்மினீரென்றசொல்லிப் புலந் தழுதாளென்பதாம்.

(வி-ரை) வாழ்த்தலொடு பிணக்கல் பொருந்தாமையால் அழித்தென் றான். அன்புடையார் நினைத்தவழி நினைக்கப்பட்டவர்க்குத் தம்மல் தோன்ற மென்பது மகளிர் வழக்கு. இல்வழக்கையும் உள்ளதாக நினைத்துப் பிணக்கினா (7) னென்பதாம்.

[இதவுமது]

தும்மூச் செறுப்ப வழுதா ணுமருள்ள
லெம்மை மறைத்திரோ வென்று.

(பரி-உரை) தம்மூச் செறுப்ப-எனக்குத் தம்மற்றேன்றியவழி யாருள் ளித்தம்மினீரென்ற புலத்தலையஞ்சி, அதனை யானடக்கினேன்; அங்ஙன மடக்கவும், நுமர் உள்ளல் எம்மை மறைத்திரோ என்ற அழுதாள் - நுமர் நும்மை நினைத்தலை எம்மை மறைக்கலுற்றீரோவென்ற சொல்லிப் புலந்தழு தாள் எ-று.

தும்மூவென்பது முதனிலைத்தொழிற்பெயர். செறுப்பவென்புழி இரக் கதனதழீஇய வெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. எம்மையென்பது நும் மோடியாத மியைபில்லாத வெம்மை யென்பதுபட நின்ற இசையெச்சம். இதனை வடநூலார் காகுவென்ப. தம்மிறுக் குற்றம் ஒழியினுக் குற்றமாயக் காற் செயற்பாலதியாதென்பதாம்.

(ப-ரை) (எனக்குத் தம்மல்தோன்றியவிடத்தே யார்நினைத்தலால் தம் மினீரென்ற பிணக்குதற்கு அஞ்சி), தும்மூச்செறுப்ப-அத்தும்மலை அடக்கி வும், நுமருள்ளல்-உம்மவர் (உம்மை) நினைத்தலை, எம்மை மறைத்திரோ வென்ற-(உம்மோடு ஒரு சம்பந்தமும் இல்லாத) எமக்கு மறைக்கலுற்றீரோ வென்ற சொல்லி, அழுதாள்-(பிணக்கி) அழுதாள் எ-று.

(க-ரை) எனக்குத் தம்மற்றேன்றியவழி யாருள்ளித் தம்மினீரென்ற புலத்தலையஞ்சி அதனையானடக்கினேன்; அங்ஙன மடக்கவும் நுமர் நும்மை நினைத்தலை எம்மை மறைக்கலுற்றீரோவென்ற சொல்லிப் புலந்தழுதா ளென்பதாம்.

(வி-ரை) செறுப்பவும் என்பதினும்மை விகாரத்தால் தொக்கது. தம்மிறுக்குற்றம் ஒழியினுங்குற்றம் ஆகிபக்கால் இனி யான் செய்தற் றன்மையற யாதென்பதாம்.

(8)

[இதவுமது]

தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
நிந்நீர ராகுதி யென்று.

(பரி உரை) தன்னை உணர்த்தினுங் காயும் - இவ்வாற்றானுடிய தன்னை யான் பணிந்துணர்த்துங்காலும் வெகுளாநிற்கும், பிறர்க்கும் நீர் இந்நீர்ப் புகுநிர் என்ற - பிறமகளிர்க்கும் அவருடியவழி இவ்வாறே பணிந்துணர்த்த நீர்மையையுடையீராகுதியென்று சொல்லி எ-று.

இவன் தெளிவித்தவழியுந் தெளியாளென்பதுபற்றி என்மேலேற்றிய வற்றை உடம்பட்டுப் பணிந்தேன்; பணிய அதனாலும் புலத்தற்கேதுவாய் முடிந்தது; இனி யிவண்மாட்டுச் செய்யத்தகுவதியா தென்பதாம்.

(ப-ரை) தன்னை (இவ்விதத்தாலே பிணங்கிய) தன்னை, உணர்த்தினும்- (நான்வணங்கிப்) பிணக்குத் தீர்க்கும்போதை, காயும் - கோபியாநிற்பன், பிறர்க்கும் - பிறமகளிர்க்கும், நீர்-நீர், இந்நீராகுதியென்ற (அவர் பிணங்கிய போது) இப்படியே வணங்கிப் பிணக்குத்தீர்க்குந் தன்மையீராகின்றீரென்று சொல்லி எ-று.

(கு-ரை) இவ்வாற்றானுடிய தன்னை யான் பணிந்துணர்த்துங்காலும் வெகுளாநிற்கும், பிறமகளிர்க்கும் அவருடியவழி இவ்வாறே பணிந்துணர்த்த நீர்மையை யுடையீராகுதியென்று சொல்லியென்பதாம்.

(வி-ரை) இவன் தெளிவித்தவழியும் தெளியாளென்பதுபற்றி என்மேல் ஏற்றிக்கொண்டு அக்குற்றங்களுக்கு உடன்பட்டு வணங்கினேன்; வணங்கியதவும் பிணங்குதற்கு ஏதுவாய் முடிந்தது; இனி இவ்விடத்துச் செய்யத்தகுவது யாதென்பதாம்.

(9)

[இதவுமது]

நினைத்திருந்து நோக்கினுங் காயு மினைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று.

(பரி-உரை) நினைத்து இருந்து நோக்கினும் காயும் - என் சொற்களுஞ் செயல்களும் பற்றித் தான் வெகுடலான், அவற்றையொழிந்திருந்து தன் வடிவுகுணதொப்பின்மையை நினைந்து அவற்றையே நோக்கினும், என்னை வெகுளாநிற்கும், அனைத்தும் நீர் நோக்கினீர் யார் உள்ளி என்று-என்னவடிவ மனைத்தும் நோக்கினீர் அவற்றதொப்புமையான் எம்மகளிரை நினைந்தென்று சொல்லி எ-று.

யான் எல்லாவவயவங்களாலும் ஒருத்தியோடொத்தல் கூடாமையின் ஒன்றலொருவராகப் பலரையுங்கினைக்கவேண்டும்; அவரெல்லாரையும் யானறியச் சொல்லுமினென்றுங் கருத்தால், அனைத்தகோக்கிளீர் யாருள்ளியென்றான். வாளாவிருத்தலும் குற்றமாயிற்றென்பதாம்.

(ப-ரை) (என் சொற்களும் செயல்களும்பற்றித் தான் கோபித்தலால்) இருத்த - (அவைகளையொழித்த) இருத்த, கினைத்த - (தன்னவயவங்களிற் ஒப்பில்லாமையை) கினைத்த, கோக்கிலும்-(அவைகளை) பார்த்துக்கொண்டிருந்தாலும், காயும்-(என்னைக்) கோபியாகிற்பன், அனைத்தம் - (என்னவயவமெல்லாம், கீர்-கீர், யாருள்ளி கோக்கினீரென்ற-(அவைகளிலெப்புமையால்) யாவரை கினைத்துப்பார்த்தீரென்ற சொல்லி எ-று.

(க-ரை) என் சொற்களுஞ் செயல்களும்பற்றித் தான் வெகுடலான் அவற்றை யொழித்திருந்த தன்னவயவங்களை தொப்பின்மையை கினைந்த அவற்றையேகோக்கிலும் என்னைவெகுளாகிற்கும் என்னவயவமனைத்தும் கோக்கினீர் அவற்ற தொப்புமையால் எம்மகளீரை கினைந்தென்ற சொல்லிபென்பதாம்.

(வி-ரை) யான் எல்லாவவயவங்களாலும் ஒருத்தியோடு ஒத்தல் கூடாமையால் ஒன்றல் ஒருவராகப் பலரையும் கினைக்கவேண்டும்; அவரெல்லாரையும் யான் அறியச்சொல்லுமென்கிற கருத்தால் அனைத்தகோக்கினீர் யாருள்ளியென்றான். சும்மாவிருத்தலும் குற்றமாயிற்றென்பதாம். (10)

132-ம் அதி - புலவிநுணுக்கம் - முற்றிற்று.

133-ம் அதிகாரம்—ஊடலுவகை

(பரி-உரை) அஃதாவது: அப்பெற்றித்தாய ஊடலாற் றமக்குக் கூடலின்பஞ் சிறக்குழி அச்சிறப்பிற்கேதுவாய அவ்வூடலைத் தலைமகளுகந்தலும் தலைமகலுவந்தலுமாம். அதிகாரமுறைமையும் இதனானே விளக்கும்.

(உரை) அஃதாவது: அப்படிப்பட்ட ஊடலால் தமக்குக் கூடலின்பஞ் சிறந்தவிடத்த அச்சிறப்புக்கு ஏதுவாகிய அவ்வூடலைத் தலைவி மகிழ்தலும் தலைவன் மகிழ்தலும் ஆம். அதிகாரமுறைமையும் இதனாலே விளக்கும்.

[தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி அக்ஙன மீ புலக்கின்றதென்னை யென்றூட்கு அவன் சொல்லியது]

இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.

(பரி உரை) அவர்க்குத் தவறு இல்லையாயினும்-அவர்மாட்டுத் தவறில்லையாயினும், அவர் அளிக்குமாறு ஊடுதல் வல்லது - தமக்கவர் தலையளிசெய்கின்றவாறு அவரோடூடுதலை விளக்க வற்றாகின்றது எ-று.

அவர்க்கென்பது . வேற்றுமைமயக்கம். அளவிறந்தவின்பத்தாலின் யானெய்தற்பாலதாய இத்தலையளி ஒழிந்தாருமெய்தவெனக்கருதி அது பொருமையான் ஊடனிகழாகின்றதென்பதாம்.

(ப-ரை) அவர்க்கு - அவரிடத்து, தவறு - பிழைகள், இல்லையாயினும். இல்லாதிருந்தாலும், அவளிக்குமாறு - (எமக்கு) அவர் அருள்செய்கின்ற விதம், ஊடுதல்வல்லது-பிணங்கல (விலக்க) வல்லதாகின்றது எ-று.

(க-ரை) அவர்மாட்டுத் தவறில்லையாயினும் எமக்கு அவர் தலையளி செய்கின்றவாறு அவரோடு ஊடுதலை விலக்கவல்லதாகின்றதென்பதாம்.

(வி-ரை) அவர்க்கென்பது வேற்றுமைமயக்கம். அளவிறந்த இன்பத்தாலால் யான் அடைதற்றன்மையதாகிய இத்தலையளி மற்றவரும் அடைவரென்ற கினைத்து அது பொருமையால் ஊடல் நிகழ்கின்றதென்பதாம். (1)

[புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃதிழந்து புலவியான் வருத்தல தென்னையென்றூட்கு அவன் சொல்லியது]

ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

(பரி-உரை) ஊடலின் தோன்றும் சிறுதுனி - ஊடலேதுவாக எய்தோன்றுகின்ற சிறிய துனிதன்னால், நல்லளி வாடினும் பாடுபெறும்-காதலர் செய்பு நல்ல தலையளி வாடுமாயினும் பெருமையெய்தும் எ-று.

தவறின்றி நிகழ்கின்றவூடல் கடிதினீங்கலின் அத்தன்பருமில்லாதென்பான் சிறுதுனியென்றும், ஊராமைபற்றி நிகழ்தலின் அதனான் நல்லளி வாடாதென்பான் வாடினுமென்றும், பின்னே பேரின்பம் பயக்குமென்பான் பாடு பெறுமென்றுங்கூறினான். அது வருத்தமெனப்படாதென்பதாம்.

(ப-ரை) ஊடலிற்றோன்றும்-பிணக்குதலாலே (எம்மிடத்துத்) தோன்றுகின்ற, சிறுதுனி - சிறியதுன்பத்தால், நல்லளி - (தலைவர்செய்கிற) நல்லருள், வாடினும்-வாடுமாயினும், பாடு-பெருமையை, பெறும்-பெறும் எ-று.

(க-ரை) ஊடலேதுவாக நிகழ்கட்டோன்றுகின்ற சிறிய துனிதன்னால் காதலர் செய்பு நல்ல தலையளி வாடுமாயினும் பெருமையெய்துமென்பதாம்.

(வி-ரை) தவறில்லாமல் நிகழ்கின்ற ஊடல் கடிது நீங்கலால் அத்துன்பமும் இல்லாதென்றற்கு சிறுதுனியென்றும், ஊராமைபற்றி நிகழ்தலால் அதனால் நல்லளி வாடாதென்றற்கு வாடினுமென்றும், பின் பேரின்பமருமென்றற்கு பாடுபெறுமென்றும் சொல்லினான். அது வருத்தமெனப்படாதென்பதாம். (2)

[இதுவுமது]

புலத்தலிற் புத்தேணாண் டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ன நகத்து.

(பரி-உரை) நிலத்தொடு நீர் இயைந்தன்னதாகத்துப் புலத்தலின்-நிலத் தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர்மாட்டுப் புலத்தல் போல, புத்தேள் காடு உண்டோ - நமக்கின்பந்தருவதொரு புத்தேளுலகு முண்டோ? இல்லை எ-று.

நீர் தானின்ற நிலத்தியல்பிற்றுமாறுபோலக் காதலருந் தாங்கூடிய மகளிரியல்பினராகலான் அதுபற்றி அவரோடு புலவி நிகழுமென்பான் நிலத் தொடு நீரியைந்தன்னதாகத்தென்றும், அவர் நமக்கும் அன்னராகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயவாநின்றதென்பாள் புலத்தலிற் புத்தேளு முண்டோவென்றுங் கூறினாள். உலமம் பயன்பற்றி வந்தது.

(ப-உரை) நிலத்தொடு-நிலத்திலெறு, நீர்-நீரானது, இயைந்தன்னதாக. கலந்ததுபோல் ஒற்றுமையுடைய காதலரிடத்து, புலத்தலின் - பிணக்குதல் போல், (நமக்கு இன்பஞ் செய்வது) புத்தேளுறு - ஒரு தெய்வலோகம், உண்டோ-உண்டோ? (இல்லை) எ-று.

(க-உரை) நிலத்தொடு நீர்கலந்தாற்போல வொற்றுமையுடைய காதலர் மாட்டுப் புலத்தல்போல நமக்கின்பந் தருவதொரு புத்தேளுலகுமுண்டோ இல்லையென்பதாம்.

(வி-உரை) எப்படி நீரானது தானின்ற நிலத்தியல்பினதாமோ அப் படியே காதலரும் தாங்கூடிய மகளிரியல்பினராதலால், அதுபற்றி அவரோடு பிணக்குதல் நிகழுமென்றற்கு நிலத்தொடு நீரியைந்தன்னதாகத்தென்றும், அவர் நமக்கும் அப்படிப்பட்டவராதலால் அப்பிணக்குப்பின்னே பேரின்பம் தருகின்றதென்றற்கு புலத்தலிற் புத்தேளுறுண்டோவென்றும் சொல்லினாள். (3) உலமம் பயன்பற்றிவந்தது.

[அப்புலவி இனி யாதானீக்குமென்றூட்குச் சொல்லியது]

புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென் னுள்ள முடைக்கும் படை.

(பரி-உரை) புல்லி விடாப் புலவியுள் தோன்றும் - காதலரைப்புல்லி கொண்டு பின் விடாமைக் கேதுவாகிய அப்புலவிக்கண்ணே புனதாம், என் உள்ளம் உடைக்கும் படை-அதன்மேற்சென்ற என்னுள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம் எ-று.

புலவியுனென்றுமேழாவது விளைகிழச்சிக்கண் வந்தது. என்னுள்ள முடைக்கும் படைக்கலமென்றது வணக்கத்தையும் பணிமொழியையும் படைக்கலமென்றூன், அவற்றூன் அப்புலவியுள்ள மழிதலின், புலவிநீக்கு நிறக்கூறியவாறு.

(ப-உரை) புல்லி-(அன்பரைத்) தழுவிக்கொண்டு, விடாஅ-(பின்) விடு மைக்கு ஏதுவாகிய, புலவியுள்-அப்பிணக்கினுள்ளே, என்னுள்ளமுடைக்கும்

(தன்மேற்சென்ற) என்னுள்ளத்தைச் சென்றெற, படை-ஆயுதம், தோன்றும்-உளதாகும் எ-று.

(க-ரை) காதலரைப் புல்லிக்கொண்டு பின்விடாமைக்கேதுவாகிய அப்புலவிக்கண்ணே யுளதாம்; அதன்மேற்சென்ற வென்னுள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலமென்பதாம்.

(வி-ரை) வணக்கத்தையும், பணிமொழியையும், உள்ளழுடைக்கும் படையென்றார். அவற்றால் அப்பிணக்குள்ளம் அழிதலால் பிணக்கு நீக்கும் விதம் சொல்லியபடி. (4)

[தலைமகளோடனீக்கிக் கூடிய தலைமகன் கழிபுவகையை
ஞய்த் தன்னுள்னே சொல்லியது]

தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளகறலி னுங்கொன் றுடைத்து.

(பரி-உரை) தவற இலராயினும் தாம் வீழ்வார் மென்றோள் அகறலின். ஊடவர் தங்கட்டவறிலராயினும் உடையார்போலவூடப்பட்டுத் தாம் விரும்பு மகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெறுதலெல்லைக்கண், ஆங்கு ஒன்ற உடைத்த - அவர்க்கு அப்பெற்றிய தோரின்பம் பயத்தலுடைத்த எ-று.

உடையராயக்கால் இறந்தவின்பத்தோடு வருமின்பமுமெய்தலராகலின் அது மிகுன்று. மற்றையிலராயக்காலும் வருமின்பத்தை மிகழ்ந்தறில்லையென்னுங் கருத்தால் தவறிலராயினு மாங்கொன்றுடைத்தென்றார். ஊடலினையவின்பம் அளவிறத்தலிற் கூறற்கரிதென்பான், அப்பெற்றியதொன்றென்றார். தவறின்றியூடியதூடலும் எனக்கின்பமாயிற்றென்பதாம்.

(ப-ரை) தவறிலராயினும்-(ஊடவர் தம்மிடத்துப்) பிழையில்லாதவராயிருந்தாலும், (உடையார்போல் பிணக்கப்பட்டு) தாம் வீழ்வார் - தம்மால் விரும்பப்படு மகளிரது, மென்றோள்-மெல்லிய தோள்களை, அகறலின்-கூடப் பெறுத சமயத்தில், ஆங்கொன்று - (அவர்க்கு) அகப்பட்டதோரின்பம், உடைத்து-(பயத்த) லுடைத்து எ-று.

(க-ரை) ஊடவர் தங்கட்டவறிலராயினு முடையார்போல வூடப்பட்டுத் தாம் விரும்பு மகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெறுதலெல்லைக் கண் அவர்க்கு அப்பெற்றியதோரின்பம் பயத்தலுடைத்தென்பதாம்.

(வி-ரை) தவறுடையார்க்கு ஊடியக்கால் இறந்தவின்பத்தோடு வருமின்பமும் அடைவராகலால் அது மிகவும் நன்று. மற்றைத் தவறிலார்க்கும் வருமின்பத்தை இகழ்ந்தறில்லையென்னுங் கருத்தால் தவறிலராயினும் ஆங்கொன்றுடைத்தென்றார். ஊடலினாலாகிய இன்பம் அளவிறத்தலால், சொல்லுதற்கு அரிதென்றற்கு அப்படிப்பட்டதொன்றென்றார். தவறில்லாமல் ஊடியதலும் எனக்கு இன்பமாயிற்றென்பதாம். (5)

[இதவும்ச]

உணலிறு முண்ட தறலினி று காமம்
புணர்தலி னூட லினி று.

(பரி-உரை) உணலினும் உண்டது அறல் இனிது-உயிர்க்கு மேலுண்பதனினும் முன்னுண்டதறுதல் இன்பந்தரும், காமம் புணர்தலின் ஊடல் இனிது-அதபோலக் காமத்திற்கு மேற்புணர்தலினும் முன்னைத்தவறுபற்றி யூடுதல் இன்பந்தரும் எ-று.

காமத்திற்கென்புழிச் சாரியையும் கான்கனுருபும் விகாரத்தாற்றொக்க. பசித்துண்ணும்வழி மிகவுண்ணலுமாய் இன்சுவைத்துமாய்; அதபோல, அன்றுகூடும்வழி ஆராதமாய்ப் பேரின்பத்ததுமாமெனத் தன்னனுபவம் பற்றிக் கூறியவாறு.

(ப-ரை) (உயிர்களுக்கு) உணலினும் - (மேலே) உண்ணுதலினும், உண்டதறல் - முன்னுண்ணப்பட்டது சோணித்தல், இனிது - இன்பந்தரும், (அதபோல்) காமம் - காமத்துக்கு, புணர்தலின் - (மேலே) புணர்தலினும், ஊடல்-(முன்னைத்தவறுபற்றிப்) பிணக்கல், இனிது-இன்பந்தரும் எ-று.

(க-ரை) உயிர்க்கு மேலுண்பதனினு முன்னுண்டதறலின்பந்தரும்; அதபோலக் காமத்திற்கு மேற்புணர்தலினும் முன்னைத் தவறுபற்றி யூடுதல் இன்பந்தருமென்பதாம்.

(வி-ரை) காமத்திற்கு என்பதிலே சாரியையும் கான்காம்வேற்றுமை புருபும் விகாரத்தால் தொக்கன. பசித்துண்ணும்வழி மிகவுண்ணலுமாய் இன்பசுவையதுமாம். அதபோல் அன்றுகூடும்வழி ஆராததுமாய்ப் பேரின்பத்ததுமாமென்ற தன்னனுபவம்பற்றிச் சொல்லியபடி. (6)

[இதவுமத]

ஊடலிற் ரோற்றவர் வென்ரு ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.

(பரி-உரை) ஊடலின் தோற்றவர் வென்றூர் - காமநுகர்தற்குரிய இருவருள் ஊடலின்கட் டோற்றவர் வென்றூராவர், அது கூடலிற் காணப்படும் அஃதப்பொழு தறியப்படாதாயினும் பின்னைப் புணர்ச்சியின்கண் அவாலறியப்படும் எ-று.

தோற்றவர்-எதிர்தலாற்றாது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக்கட் பேரின்பமெய்தலின் வென்றூராயினர். மன்னும் உம்மும் அசைநிலை. யானதபொழுது சாய்தலின் இதபொழுது பேரின்பம் பெற்றேனென்பதாம்.

(ப-ரை) (காமம் அனுபவித்தற்குரிய இருவருள்) ஊடலிற் ரோற்றவர்: பிணக்கிலே தோற்றவர், வென்றூர் - வென்றூராவர், அது - (அப்பொழுது

அறியப்படாதாயினும்) கூடலிற்காணப்படும்-(பின்னே) புணர்ச்சியிலே (அவரால்) அறியப்படும் எ-று.

(க-ரை) காமநுகர்தற்குரிய இருவருள் ஊடலின்கட்டோற்றவர் வென்றாராவர், அஃதப்பொழுது அறியப்படாதாயினும் பின்னர் புணர்ச்சியின்கண் அவராலறியப்படுமென்பதாம்.

(வி-ரை) தோற்றவர்-எதிரிடமாட்டாமல் சாய்ந்தவர். அவர் புணர்ச்சியிடத்தே பேரின்பத்தை அடைதலால் வென்றாராயினர். மன்-உம்-அசை கிலேசன். யான் அதபொழுத சாய்தலால் இதபொழுத பேரின்பம்பெற்றேனென்பதாம். (7)

[இதவுமத]

ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் ரோன்றிய வுப்பு.

(பரி-உரை) நுதல் வெயர்ப்பக் கூடலில் தோன்றிய உப்பு-இதபொழுத இவணுதல் வெயர்க்கும்வகை கலவியின்கணுளதாய இனிமையை, ஊடிப் பெறுகுவங் கொல்லோ-இன்னுமொருகால் இவளூடியாம்பெறவல்லேமோ? எ-று.

கலவியத விசேடம்பற்றி நுதல்வெயர்ப்பவென்றான். இனிமை கண்டு கேட்டுண்டுயிர்த்தற்றறிதலாலாய வின்பம். இனி அப்பேற கூடாதெனப் பெற்றதன்சிறப்புக் கூறியவாறு.

(ப-ரை) நுதல்வெயர்ப்ப-(இப்போத இவனத) நெற்றிவெயர் வரும்புவகை, கூடலிற்ரோன்றிய-புணர்ச்சியிடத்த உள்ளதாகிய, உப்பு-இனிமையை, (இன்னுமொருகால்) ஊடி-(இவள்) பிணக்கி, பெறுகுவங்கொல்-(யாம்) பெறவல்லமோ? எ-று.

(க-ரை) இதபொழுத இவணுதல் வெயர்க்கும்வகை கலவியின்கணுளதாய இனிமையை இன்னுமொருகால் இவளூடியாம் பெறவல்லேமோ வென்பதாம்.

(வி-ரை) புணர்ச்சியினத விசேடம்பற்றி நுதல்வெயர்ப்பவென்றான். இனிமை கண்டு கேட்டுண்டுயிர்த்தற்றதனல் ஆகிய இன்பம். இனி அப்பேற கூடப்பத அரிதென்ற பெற்றதன்சிறப்புச் சொல்லியபடி. (8)

[இதவுமத]

ஊடுக மன்னே வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னே விரா.

(ப-ரை) ஒளியிழை ஊடுகமன்-ஒளியிழையினேபுடையாள் இன்னுமம்மோடேவானாக; யாம் இரப்ப இரா நீடுகமன்-அக்கனம் அளவூடி

கிற்றற்கும் அதனைபுணர்த்தற்பொருட்டு யாமிரந்த கிற்றற்கும் காலம் பெறும்வகை இவ்விரவு விடியாது நீட்டித்தல்வேண்டுக எ-று.

ஊடுக நீடுகவென்பன வேண்டிக்கோடற்பொருள. மன்னிரண்டும் ஆக்கத்தின்கண் வந்தன. ஓகாரங்கள் அசைநிலை. கூடலின் ஊடலேயமைபு மென்பதாம்.

(ப-ரை) ஒளியிழை - விளங்குகின்ற ஆபரணத்தையுடையவள், ஊடுக மன் - (இன்னும் எம்மோடு) பிணங்குவளாக, (அப்படி பிணங்கி கிற்றற்கும் அதனைத் தீர்த்தற்பொருட்டும்) யாம்-காம், இரப்ப-இரந்தகிற்றற்குக் (காலம் பெறும்வகை) இரா-இவ்விரவு, நீடுகமன் - (விடியாது) நீட்டித்தல் வேண்டுக எ-று.

(க-ரை) ஒளியிழையினையுடையாள் இன்னுமெம்மோடுவளாக. அங்ஙனம் அவளூடி அதனைபுணர்த்தற்பொருட்டியாமிரந்த கிற்றற்குங்காலம் பெறும்வகை யிவ்விரவு விடியாது நீட்டித்தல் வேண்டுகவென்பதாம்.

(வி-ரை) ஊடுக நீடுகவென்பன வேண்டிக்கொள்ளுதற் பொருளில் வந்தன. மன்னிரண்டும் ஆக்கத்தில்வந்தன. ஓகாரங்கள் அசைநிலைகள். கூடுதலே காட்டிலும் ஊடலே அமைபுமென்பதாம். (9)

[இதவுமது]

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

(பரி-உரை) காமத்திற்கு இன்பம் ஊடுதல்-காமநுகர்ச்சிக்கு இன்ப மாவது அதனை நுகர்தற்குரியராவார் ஆராமைபற்றித் தம்முளூடுதல், அதற்கு இன்பங்கூடி முயங்கப்பெறின்-அவ்வூடுதற்கின்பமாவது, அதனையவரிரந்து நீக்கித் தம்மூட்கூடி முயக்குதல் கூடுமாயின், அம்முயக்கம் எ-று.

கூடுதல்-ஒத்தவனவினராதல். முதிர்ந்ததனியாயவழித் தன்பம் பயத்த லானும், முதிராத புலவியாயவழிக் கலவிபின்பம் பயவாமையானும், இரண் டற்குமிடையாகிய வனவறிந்து நீக்குதலரிதென்பதுபற்றிக் கூடிமுயங்கப் பெறினென்றான். அவ்விரண்டின்பமும் யான் பெற்றேனென்பதாம்.

ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு ஆற்றுமை விதப்புப் புலவியென கால்வகைத்தாகக் கூறினார். அவற்றுட்செலவு பிரிவாற்றுமை யுள்ளும், ஆற்றுமை: படர்மெலிக்கிரக்கன் முதல் கிறையழிதலீறாயவற்றுள் ளும், விதப்பு அவர்வயின்விதும்பன்முதற் புணர்ச்சிவிதும்பலீறாயவற்றுள் ளும், புலவி சொல்சொடுபுலத்தன்முதல் ஊடலுவகையீறாயவற்றுள்ளும் கண்டுகொள்க. அஃதேல் வடநூலார் இவற்றுடனே சாபத்தினையு நீக் கதினையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத்தென்றாராலெனின், அஃது அறம் பொரு ளின்பமென்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவன்மையானும்,

முனிவராணையான் ஒருகாலத் தோர்குற்றத்தனதாவதல்லத உலகியல்பாய் வாராமையானும், ஈண்டொழிக்கப்பட்டதென்க.

(ப-ரை) காமத்திற்கு - காமவனுபவத்திற்கு, இன்பம் - இன்பமாவது, ஊடுதல் - (அதனை அனுபவித்தற்குரியோர் ஆணைபற்றித்தம்முள்) ஊடுதலாம், அதற்கு - அவ்வூடுதற்கு, இன்பம் - இன்பமாவது, கூடி - (அதனை அளவறிந்தீக்கித்தம்முள்) கூடி, முயக்கப்பெறின் - புணர்தல் கூடுமாயின் (அப்புணர்ச்சியாம்) எ-று.

(க-ரை) காமநுகர்ச்சிக்கு இன்பமாவது அதனை நுகர்தற்குரியாவார் ஆணைபற்றித் தம்முளூடுதல். அவ்வூடுதற்கின்பமாவது அதனை யளவறிந்தீக்கித் தம்முட்கூடி முயங்குதல் கூடுமாயின் அம்முயக்கமென்பதாம்.

(வி-ரை) கூடுதல்-ஒத்தவனவினாதல். முதிர்ந்த பெரும் பிணக்காகிய விடத்தைத் தன்பஞ்செய்தலாலும் முதிராத சிறுபிணக்காகிய விடத்துப் புணர்ச்சியின்பம் செய்யாமையாலும் இரண்டார்க்கும் நடுவாகிய அளவறிந்தீக்குதல் அரிதென்பதுபற்றி கூடிமுயங்கப்பெறினென்றான். அவ்வூடலின்பமும் கூடலின்பமும் யான் பெற்றேனென்பதாம். (10)

இக்காமத்துப்பாலுக்குக் காமத்தைக் குறித்துச் செம்பொருளாகச் சொல்லப்பட்ட இச்சிற்றின்பப் பொருளன்றி மோட்சத்தைக் குறித்துக் குறிப்புப்பொருளாகச் சொல்லப்பட்ட பேரின்பப்பொருளும் உண்டு.

133-ம் அதி - ஊடலுவகை - முற்றிற்று.

கற்பியல் முற்றிற்று.

காமத்துப்பால் முற்றிற்று.

ஆக பால் 3-க்கு அதிகாரம் 133 க்கு திருக்குறள்-1330.

திருவள்ளுவர் திருக்குறள் மூலமும் உரையும் முற்றுப்பெற்றன.

திருவள்ளுவநாயனார் திருவடி வாழ்க.

திருக்குறள் செய்யுள் அகராதி

குறள்	பக்கம்
அ	
அகரமுத	1
அகடாரார	725
அகப்பட்டி	835
அகலாதீண்டு	533
அகழ்வாரைத்	107
அகன்மார்க்கீ	68
அகன்மார்க்கு	63
அஃகாமை	125
அஃதியகன்ற	123
அக்கணத்	554
அசையிய	853
அச்சமுடையா	412
அச்சமேகீழ்	536
அஞ்சாமையல்	383
அஞ்சாமையீ	290
அஞ்சுமறி	670
அஞ்சுவதஞ்	328
அஞ்சுவதோரு	276
அடக்கமமரு	87
அடல்வேண்டு	255
அடற்றலை	594
அடுக்கிய	741
அடுக்கிவரி	481
அடுத்தசீ	544
அணக்கு	842
அணியன்றே	787
அத்தனொன்	23
அத்தனார்	419
அமரகத்தா	632
அமரகத்தை	796
அமிழ்தினு	49
அமைச்சா	365
அரக்கின்றி	308
அரம்பொருத	690
அரம்போலும்	774
அரிதரோ	891
அரிதாற்றி	895
அரியகற்	389
அரியவற்று	340
அரியவென்	414
அருக்கேட	147
அருஞ்செவ்வி	435
அருட்செல்வஞ்	171
அரும்பய	139
அருமறை	657
அருமையுடை	470
அருவினை	372
அருவல்ல	181
அருளில்லா	175
அருளென்னு	584
அருளொடு	582
அருள்கருதி	207
அருள்சேர்ந்த	172
அருள்வெஃகி	124
அலக்காரை	988
அலரெழ	883
அலர்காண	887
அல்லவை	71
அல்லலரு	174
அல்லற்பட்	428
அவர்தக்கா	911
அவர்நெஞ்	980
அவாவில்	277
அவாவினை	277
அவாவென்ப	272
அவிசொரி	185
அவையறிந்	547
அவையறியா	549
அவ்வித்தழுக்கா	117
அவ்வில	119
அழக்கொண்ட	506
அழச்சொல்லி	616
அழல்போலு	939
அழிவதூஉ	354
அழிவந்த	626
அழிவின்றை	591
அழிவினவை	610
அழுக்கற்றகன்	120
அழுக்காறவா	27
அழுக்காறுடையார்	116
அழுக்காறுடையான்	96
அழுக்காறென	118
அழுக்காற்றி	116
அளவல்ல	210
அளவளா	404
அளவறிந்தார்	209
அளவறிந்து	369
அளவின்க	208
அளித்தஞ்ச	891
அறங்கூரு	127
அறஞ்சாரா	813
அறஞ்சொல்லு	130
அறத்தாறி	28
அறத்தாற்றி	36
அறத்தான்	30
அறத்திற்கே	57
அறத்தினூஉ	25
அறம்பொரு	386
அறவாழிய	7
அறவினையா	235
அறவினைபு	706
அறனழீஇ	128
அறனறிந்தான்	48
அறனறிந்தமூ	338
அறனறிந்தவெ	125
அறனெக்கம்	115
அறனியலா	104
அறனிழுக்	292
அறனீனு	581
அறனென	38
அறனோக்கி	139
அறன்கடை	101
அரன்வரை	106
அறிகிலா	881
அறிகொன்	490
அறிதோ	861
அறிந்தாற்	398
அறிவற்றங்	323
அறிவிலார்	654
அறிவிலானெ	654
அறிவினு	230
அறிவினு	142

குறள்	பக்கம்
அறிவின்மை	653
அறிவுடையார	327
அறிவுடையாரெ	329
அறிவுரு	526
அறுவாய்	867
அறைபறை	836
அற்காவிய	246
அற்றதறி	732
அற்றமறைக்	761
அற்றமறைத்	656
அற்றவ	275
அற்றாழி	158
அற்றுரை	391
அற்றூர்	782
அற்றூல	731
அற்றே	481
அனிச்சப்பூக்	865
அனிச்சமூ	868
அன்பகத்	59
அன்பறிவா	525
அன்பறிவு	396
அன்பிலரு	669
அன்பிலா	55
அன்பிற்கு	54
அன்பின்வழிய	60
அன்பின்விழை	708
அன்பீறு	56
அன்புடைமை	524
அன்புடைமை	770
அன்புரா	763
அன்புமற	36
அன்புற்றமர்ந்த	57
அன்போ	55
அன்பொரீஇ	783
அன்றறிவா	28

ஆ

குறள்	பக்கம்
ஆகாறன	369
ஆகூழாற்	281
ஆக்கத்ரு	956
ஆக்கமதர்	458
ஆக்கமிழக்	457
ஆக்கமுங்	494
ஆக்கமெ	570
ஆபயன்கு	432
ஆபுமறிவி	713
ஆய்க்தாய்	614
ஆராயிபற்	279
ஆலிற்குரீ	828
ஆல்லிலை	793
ஆல்ரூருமா	380
ஆற்றினளவறி	368
ஆற்றினளவறிக்	558
ஆற்றினிலெ	552
ஆற்றிலெழு	38
ஆற்றின்வரு	360
ஆற்றபவர்	571
ஆற்றவாராற்ற	692
ஆற்றவாராற்றல்	765
ஆற்றவா	158

இ

குறள்	பக்கம்
இகலாஞ்மி	667
இகலிற்கெ	666
இகலின்மிக	665
இகலெதிர்	664
இகலென்ப	661
இகலென்னு	662
இகல்காணு	667
இகழ்ச்சியிற்	416
இகழ்ந்தெ	820
இடமெல்	826
இடனில்	153
இடிக்குந்	343
இடிபுரிக்	467
இடிப்பாரை	344
இடுக்கட்	503
இடுக்கண்கா	799
இடுக்கண்வ	478
இடும்பைக்கி	479
இடும்பைக்கே	798
இடைதெ	548
இணரூழ்	500
இணைரெரி	225
இதனையித	399
இமைப்பிற்	874
இமையாரி	704
இம்மைப்	996
இயல்பாகு	256
இயல்பிலு	37
இயல்புளி	421
இயற்றலு	293
இரக்கவிரத்	816
இரத்தலி	161
இரத்தலு	819
இரத்தை	825
இரப்பனிர	828
இரப்பாரை	821
இரப்பான்	823
இரவாரிர	804
இரவுள்ள	830
இரவென்	829
இருணீக்கி	262
இருநோக்கி	849
இருத்தள்ளி	948
இருத்தோம்பி	61
இருபுனலு	567
இருமனப்	714
இருமைவகை	18
இருவேறு	283
இழுக்சேரு	4
இலக்கமுட	482
இலங்கிழா	961
இலமென்ற	807
இலமென்று	122
இலர்பலரா	193
இலனென்று	143
இலனென்னு	156
இல்லதெனி	42
இல்லாரை	580
இல்லாளெ	703
இல்லான்	701
இல்லெதவ	1000
இல்வாழ்வா	32
இவறலுமா	331
இழத்தொ	728
இழிவறிக்	734
இழுக்கலு	318
இழுக்காமை	414
இழைத்தநி	603
இளித்தக்க	978
இளிவரின்	753
இளைதாக	683
இளையரி	538
இறந்தமை	699
இறந்தவெ	410
இறந்தாரி	226

குறள்	பக்கம்
இறலீனு	126
இறப்பே	759
இறுதிபய	532
இறைகடிய	435
இறைகாக்	422
இற்பிறந்தார்கண்	739
இற்பிறந்தார்க	810
இனத்தாற்றி	438
இனம்போ	638
இனியவுள	73
இனியன்ன	982
இனைத்துணைத்	64
இனையரி	612
இன்கணு	890
இன்சொலாலீத்	296
இன்சொலாலீர	68
இன்சொலினி	72
இன்பங்க	900
இன்பத்து	663
இன்பத்துளின்	483
இன்பமிடை	278
இன்பமொ	817
இன்பம்விழை	473
இன்பம்விழை-ன்	482
இன்மை	826
இன்மையிடும்	826
இன்மையி	430
இன்மையினி	808
இன்மையுளின்	108
இன்மையெ	809
இன்மையொ	767
இன்றியமை	746
இன்றும்வரு	813
இன்னாசெ-ரை	229
இன்னாசெ ர்	766
இன்னாதிரக்	157
இன்னாதின	894
இன்னாமையின்	484
இன்னாவென	231
ஈ	
ஈட்டமிவ	779
ஈதலிசைபட	162
ஈத்துவக்கு	160
ஈர்ங்கைவி	837
ஈவார்கனெ	822
ஈன்றபொழு	52
ஈன்றாண்	716
ஈன்றாள்பசி	504
உ	
உடம்பா	691
உடம்பொ	870
உடுக்கையி	611
உடுப்பதூஉ	839
உடைசெல்	728
உடைத்தம்	365
உடைமையு	66
உடையரெ	456
உடையார்	303
உட்கப்படாஅ	715
உட்பகை	686
உணர்வ	553
உணலினு	1004
உண்டார்க	848
உண்ணற்க	716
உண்ணாது	113
உண்ணாமைவே	1[illegible]3
உண்ணாமையு	182
உதவிவரை	77
உப்பமைந்	987
உயர்வகலந்	572
உயிருடம்	243
உயிர்ப்பவு	684
உய்த்தலறி	977
உரமொரு	462
உரனசை	962
உரனென்னும்	19
உருவுகண்	513
உருளாய	723
உரைப்பா	163
உலகத்தாரு.	659
உலகத்தோ	99
உலகந்தழீஇ	326
உலைவிட	589
உவக்கா	912
உவந்துறை	875
உவப்பத்	302
உழந்துழந்	907
உழவினார்	804
உழுதுண்டு	802
உழுவாரு	801
உழைப்பி	409
உளபோன்	442
உளரெனி	561
உளரென்	311
உளவரை	370
உள்ளக்களி	974
உள்ளத்தார்	952
உள்ளத்தாலு	205
உள்ளத்தாற்	214
உள்ளமிலா	460
உள்ளமுடை	456
உள்ளம்	902
உள்ளற்க	619
உள்ளியதெ	417
உள்ளியவெ	226
உள்ளினுந்	922
உள்ளினே	997
உள்ளுவ	459
உள்ளுவன்	872
உள்ளுவன்ம	912
உள்ளொற்றி	719
உறங்குவ	251
உறன்முறை	688
உறாஅதவர்க்க	981
உறாஅதவர்போ	852
உறாஅதோ	884
உறாஅர்க்கு	921
உறினட்	630
உறினுயிர	602
உறுதோ	859
உறுபசியு	565
உறுப்பமை	588
உறுபொருளு	583
உறுப்பொத்	771
உறுவது	631
உறைசிறி	523
உற்றநோய்நீக்	339
உற்றநோய்நோன்	186
உற்றவன்	737
உற்றானள	736
ஊ	
ஊக்கமு	374
ஊடலிற்றோற்ற	1004
ஊடலிற்றோன்	1001
ஊடலினு	990

குறள்	பக்கம்
ஊடலுணவ்	992
ஊடலுணர்தல்	861
ஊடற்கட்	975
ஊடிப்பெ	1005
ஊடியவ	989
ஊடியிரு	994
ஊடுகமன்	1005
ஊடுதல்	1006
ஊணுடை	786
ஊதிய	618
ஊரவர்	886
ஊருணி	150
ஊழிபெ	767
ஊழிற்பெரு	288
ஊழையு	476
ஊறொரீ	509
ஊனைக்	786
எ	
எச்சமென்	779
எட்பகவன்	690
எண்சேர்ந்த	707
எண்பதத்தா	423
எண்பதத்தாலெ	769
எண்பொரு	325
எண்ணித்தா	359
எண்ணிய	512
எண்ணியா	381
எண்ணென்ப	300
எதிரதாக்	329
எந்நன்றி	80
எப்பொருளு	535
எப்பொருளெ	265
எப்பொருள்	324
எய்தற்கரி	376
எரியாற்	696
எல்லாப்	575
எல்லார்க்குநன்	89
எல்லார்க்குமெ	419
எல்லாவின	218
எல்லைக்க	626
எவ்வத	327
எழுதங்கா	976
எழுபிறப்பும்	48
எழுமையெழு	78
எளிதென	103
எள்ளாத	362
எள்ளாமை	204
எள்ளினிளி	985
எற்றிற்கு	839
எற்றென்	503
எனைத்தானு	319
எனைத்தானுமெ	232
எனைத்திட்	515
எனைத்தும்	636
எனைத்துணைய	102
எனைத்தநி	926
எனைத்தொ	923
எனைப்பகை	145
எனைமாட்சி	578
எனைவகை	397
என்பிலதனை	58
என்றுமொ	501
என்னுழுன்	597
ஏ	
ஏதம்பெரு	781
ஏதிலார்குற்றம்	133
ஏதிலார்போ	853
ஏதிலாராரத்	650
ஏந்தியகொள்	698
ஏமற்றல	679
ஏரினுநன்	806
ஏரினுழாஅ	11
ஏவுஞ்செ	658
ஐ	
ஐந்தவித்தா	19
ஐயத்தினீ	263
ஐயப்படா	541
ஐயுணர்வெ	264
ஒ	
ஒட்டார்	750
ஒண்ணுதற்	847
ஒண்பொரு	587
ஒத்ததறி	150
ஒப்புரவினல்	154
ஒருத்தாற்றா	446
ஒருதலையா	919
ஒருநாளெ	966
ஒருபொழு	249
ஒருமைக்கட்	305
ஒருமைச்	648
ஒருமைமக	757
ஒருமையுளா	90
ஒலித்தக்கா	590
ஒல்லுக்கரு	635
ஒல்லும்வகை	26
ஒல்லும்வா	517
ஒல்வதறிவ	364
ஒழுக்கத்தினெல்	97
ஒழுக்கத்தினெய்	97
ஒழுக்கத்து	16
ஒழுக்கமுடைமை	95
ஒழுக்கமுடைய	99
ஒழுக்கமும்	740
ஒழுக்கமவிழுப்ப	94
ஒழுக்காருக்	114
ஒளியார்முன்	550
ஒளியொரு	754
ஒறுத்தாரை	109
ஒறுத்தார்க்	110
ஒறுத்தாற்றும்	446
ஒற்கினு	449
ஒற்றும	448
ஒற்றுமுற்றி	453
ஒற்றுமுற்று	454
ஒன்றுகொல்	237
ஒன்றுமை	688
ஒன்றுவல	164
ஒன்றுனுக்	91
ஒன்றெய்தி	723
ஒன்னார்தொ	188
ஓ	
ஓதல்வே	502
ஓதாவினிதே	906
ஓதியுணர்ந்	648
ஓம்பினமை	892
ஓர்தலன்ன	267
ஓர்ந்தகண்	418
க	
கடலன்ன	879
கடலோடா	882
கடனறிந்	529
கடனென்ப	762
கடாஅக்களி	846
கடாஅவுரு	451
கடிதோச்சி	433

குறள்	பக்கம்
கடிந்தகடி	506
கடுஞ்சொல்	436
கடுமொழி	437
கடைக்கொட்	510
கணைகொடி	201
கண்களவு	850
கண்டது	886
கண்டாங்க	903
கண்டாருயி	844
கண்டுகேட்	855
கண்ணிறை	968
கண்ணிற்கணி	443
கண்ணிற்று	979
கண்ணின்ப	946
கண்ணின்று	129
கண்ணுங்	149
கண்ணுடைய	301
கண்ணுள்ளார்	873
கண்ணுள்ளிற்	872
கண்ணொடுகண்	854
கண்ணோட்டத்	441
கண்ணோட்டமி	444
கண்ணோட்டமெ	440
கதங்காத்து	93
கதுமெனத்	905
கயலுண்கண்	929
கரத்தலுமா	897
கரப்பவர்க்	831
கரப்பிடும்பை	820
கரப்பிலாநெ	818
கரப்பிலார்	819
கரப்பினுங்	967
கரவாதுவந்	824
கருமஞ்சி	445
கருமஞ்செ	792
கருமணியிற்	870
கருமத்தானா	785
கருவியுங்	485
கலங்காது	513
கலந்துணர்	950
கல்லாதமே	656
கல்லாதவரிற்	561
கல்லாதவரு	309
கல்லாதானொ	310
கல்லாதான்	309
கல்லார்ப்பி	439
கல்லாவொரு	311
கல்லான்வெ	675
கவறுங்கழ	725
கவ்வையாற்	885
கழாஅக்கா	652
களவினாலா	206
களவின்கட்	206
களவென்	209
களத்தறியே	720
களித்தானை	720
களித்தொ	885
கள்வார்க்கு	211
கள்ளுண்ணா	721
கறுததின்	228
கற்கக்கசடற	299
கற்றதனா	2
கற்றறிந்தார்	552
கற்றாருட்	556
கற்றாற்முற்	557
கற்றிலனா	317
கற்றீண்டு	266
கற்றுக்கண்	528
கனவினா	930
கனவினு	636
கா	
காக்கபொரு	88
காக்கைகர	407
காட்சிக்கெ	294
காணாச்சினத்	673
காணாதாற்	659
காணிற்கு	865
காணுங்காற்	977
காண்கம	963
காதலகாத	337
காதலர்தூ	928
காதலரில்	936
காதலவரில்	948
காதன்மை	392
காமக்கடன்	899
காமக்கடுபுனனீ	901
காமக்கடும்புன	878
காமக்கணிச்	954
காமமுநா	898
காமமுழந்	806
காமமென	955
காமம்விடு	951
காமம்வெகு	270
காலங்கரு	373
காலத்தினாற்	75
காலாழ்களரி	385
காலைக்குச்	937
காலையரும்	938
கானமுய	598
கு	
குடம்பை	250
குடிசெய்வ	794
குடிசெய்வார்	797
குடிதழீஇ	420
குடிபுறங்	424
குடிப்பிறந்தார்	743
குடிப்பிறந்துகு	388
குடிப்பிறந்துத	616
குடிமடிந்து	465
குடியாண்	468
குடியென்னு	463
குணநலஞ்	763
குணநாடிக்	389
குணமென்	23
குணனிலனா	674
குணனுங்	615
குலஞ்சுடுங்	790
குழலினி	50
குறிக்கொ	851
குறித்தது	542
குறிப்பறி	536
குறிப்பிற்	543
குறிப்பிற்கு	541
குற்றமில	795
குற்றமே	332
குன்றன்னார்	697
குன்றினனை	749
குன்றேறி	585
கூ	
கூடியகாம	963
கூத்தாட்	245
கூழுங்குடி	428
கூறாமை	540
கூற்றங்குதி	192

குறள்	பக்கம்
கூற்றத்தை	694
கூற்றமோ	845
கூற்றட	591
கெ	
கெடல்வே	694
கெடாஅ	628
கெடுக்கா	620
கெடுப்பதூ	12
கெடுவல்யா	84
கெடுவாக	81
கெட்டார்ச்சு	984
கே	
கேடறியா	566
கேடில்	307
கேடும்பெரு	83
கேட்டார்ப்பி	494
கேட்டிறு	617
கேட்பிறு	321
கேளிழுக்	627
கை	
கைம்மாறு	148
கையறியா	718
கைவேல்	509
கொ	
கொக்கொக்	377
கொடியார்-மி	902
கொடியார்-பு	943
கொடித்தலு	405
கொடித்தல்	673
கொடுப்பதழு	117
கொடுப்பதூ	780
கொடும்பு	845
கொடையளி	298
கொலமே	426
கொலயிற்	424
கொலவினை	242
கொல்லாகல	764
கொல்லாமை	239
கொல்லான்	185
கொளப்பட்	539
கொளற்கரி	574
கொன்றன்ன	79
கோ	
கோட்டுப்	995
கோளில்	7

குறள்	பக்கம்
ச	
சமன்செய்து	85
சலத்தாற்	507
சலம்பற்றி	742
சா	
சாதலினின்	161
சாயலுசா	911
சார்புணர்ந்	269
சால்பிற்குக்	765
சான்றவர்	768
சி	
சிதைவிடத்	459
சிறப்பறிய	455
சிறப்பீனுஞ்	24
சிறப்பீனுஞ்செ	228
சிறப்பொடு	14
சிறிடாருண	759
சிறுகாப்பி	573
சிறுபடை	384
சிறுமைகமக்	941
சிறுமைபல	724
சிறுமையுஞ்	595
சிறுமையுணீ	72
சிறைகாக்	44
சிறைநல	384
சிற்றின	346
சிற்றின்பம்	122
சினத்தைப்	224
சினமென்	223
சீ	
சீரிடங்	637
சீரினுஞ்	747
சீருடைச்	784
சீர்மை	137
சு	
சுடச்சுட	191
சுவையொளி	21
சுழலுமிசை	602
சுழன்று	800
சுற்றத்தா	405
சூ	
சூழாமற்றூ	794
சூழ்சிமு	516
சூழ்வார்	341

குறள்	பக்கம்
செ	
செப்பமுடை	81
செப்பின்	689
செயற்கரிய	20
செயற்கரியயா	605
செயற்கை	490
செயற்பாலசெ	335
செயற்பாலதோ	31
செயிரிற்றலை	184
செய்தபொ	586
செய்தக்க	358
செய்தேமஞ்	633
செய்யாமற்செற்	229
செய்யாமற்செய்	74
செய்வானே	399
செய்வினை	520
செருக்குஞ்	330
செருவகத	438
செல்லாமை	889
செல்லாவி	221
செல்லான்	806
செல்லிடத்	220
செல்வத்தட்	315
செல்விருந்	64
செவிமை	297
செவிக்குண	316
செவிச்சொ	535
செவியிற்	322
செவியுண	317
சேரு அச்சி	852
சேறிதொடி	970
சேறிவறிந்து	88
சேறலரை	376
சேறலார்க்	675
சேற்றவர்பி	957
சேற்றரொ	950
சேற்றர்பின்	950
சேன்ற	324
சொ	
சொலல்வல்ல	498
சொல்லப்	838
சொல்லுகசொல்	140
சொல்லுக	496
சொல்லுதல்	511
சொல்வண	642
சொற்கோட்ட	85

குறள்	பக்கம்
ஞா	
...லங்கரு	378
த	
...திமென	81
...காங்கு	433
...காரி	342
...கார்	82
...ஞ்சந்தமர	986
...ணந்தமை	942
...ண்ணந்து	971
...ந்தைமக	51
...ந்நலம்	711
...ந்நெஞ்சத்	924
...மராகித்	408
...ம்பொரு	48
...ம்மிலிருந்	859
...ம்மிற்பெ	341
...ம்மிற்றம்	51
...லைப்பட்டார்	259
...லையினிழி	748
...வஞ்செய்	190
...வமறைந்	197
...வமுந்தவ	187
...வறிலராயி	1003
...ள்ளாவி	562
...ற்காத்து	43
...னக்குவமை	6
...னியேயி	983
...ன்குற்ற	334
...ன்றுணை	680
...ன்னுயிர்க்கி	233
...ர்தா	192
...ற்றுள்ள...ர்நீ	240
...ரியரும்	179
...மாயக்...ந்ச	214
...ான்கா	222
...பெற...ன்	146
...த்தூண்...த்	999
...லொடு	
பி	
...ணிக்குமரு	306
...ணியின்மை	916
...ணியேர்	857
...ரித்த...ம்	888
...ரி...ர்க்கு	593
	472

குறள்	பக்கம்
தாளாண்மை	471
தாளாற்றி	149
தானந்தவ	14
தி	
திறனல்ல	111
திறனறிந்	495
தினற்பொரு	183
தினைத்துணைந	76
தினைத்துணையா	332
தினைத்துணையு	974
தீ	
தீப்பால	144
தீயவைசெய்	145
தீயவைதீய	141
தீயளவன்	735
தீயினாற்	92
தீவினையார	141
து	
துஞ்சினார்	718
துஞ்சுங்	932
துணைநல	501
துப்பார்க்கு	10
துப்பினெ	899
துப்புரவில்	815
தும்முச்	998
துளியின்	430
துறந்தாரிற்	112
துறந்தார்க்கு	188
துறந்தார்க்குந்	33
துறந்தார்ப	452
துறந்தார்பெரு	17
துறப்பார்	286
துறைவன்	893
துனியும்	990
துன்பத்தி	985
துன்பமு	514
துன்புறூஉந்	69
துன்னாத்	953
துன்னியார்	132
தூ	
தூங்காமை	291
தூங்குக	516
தூய்மை	274
தூஉய்மை	530

குறள்	பக்கம்
தெ	
தெண்ணீரடு	827
தெய்வத்தா	476
தெய்வந்தொ	43
தெரிதலுந்	488
தெரிந்தவி	355
தெரிந்துண	904
தெருளா	177
தெளிவில	357
தென்புல	34
தே	
தேரான்பிற	392
தேரான்றெ	394
தேவரனை	834
தேறற்க	393
தேறினுந்	681
தொ	
தொகச்சொல்	527
தொடங்கற்	378
தொடலைக்	878
தொடிநோ	972
தொடிப்பு	805
தொடியொடு	944
தொடிற்	895
தொட்டனை	304
தொல்வரவு	809
தொழுதகை	643
தோ	
தோன்றிற்	166
ந	
நகல்வல்ல	775
நகுதற்	608
நகையீகை	740
நகையு	222
நகையுள்ளு	772
நகைவகை	634
நசைஇயார்	921
நச்சப்படா	783
நடுவின்றி	120
நட்டார்குறை	705
நட்டார்க்கு	522
நட்டார்போ	641
நட்பிற்குவீ	611
நட்பிற்குறு	623
நண்பாற்	774

குறள்	பக்கம்
கத்தம்போற்	165
கபன்சாரா	136
கயத்தகர்	910
கயத்தகர்கல்	942
கயனிலசொல்	138
கயனிலனென்	136
கயனீண்று	71
கயறுடையா	153
கயனுடை	772
கலக்குநிபார்	106
கலத்தகை	989
கலத்திக்க	744
கலம்கேண்டி	745
கல்குரல்கெண்	811
கல்லலை	284
கல்லாண்மை	796
கல்லார்கட்	313
கல்லாதனை	238
கல்லாதனை	156
கல்லாற்று	171
கல்லினத்தி	353
கவிறுறை	607
கற்பொருண	812
கனவிஞ்ஞ்	981
கனவிஞனக்	933
கனவிஞனல்காக்	932
கனவிஞனல்காத	930
கனவிஞனல்காரை	933
கனவென	931
கன்மையும்	395
கன்றறி	833
கன்றுகு	241
கன்றுங்கா	287
கன்றுற்ற	361
கன்றிற்கு	98
கன்றிமறப்பது	78
கன்றென்ற	551
கன்றேதரி	82
கன்னீரை	863
நா	
காக்காதல்	919
காச்செற்று	248
காடாது	613
காடென்ப	569
காடொறுகாடி	427
காடோறுகாடு	165
காணத்தி	136
காணுமை	910
காணுவு	942
காணுமறன்	138
காணென்னு	136
காணென	71
காணெனு	153
காண்பிலி	772
காதலென்	106
காவென	989
நி	
கிணர்நீயி	744
கிளத்தியல்	745
கிளச்சிற்	811
கிளவரை	284
கிளைட்கள்	796
கிளையஞ்சி	313
கிளையிறிசி	238
கில்லாதவற்	156
கிழவீருமி	171
கிறைகீர	353
கிறைகொஞ்ச	607
கிறைமொழி	812
கிறையரியர்	981
கிறையுடைமை	933
கிறையுடையே	932
கினைத்திருக்	930
கினைத்தொ	933
கினைப்பவர்	931
நீ	395
கீக்கான்வெ	833
கீக்கிற்றெ	241
கீரின்றமைபா	287
கீருங்கிழல	361
நு	98
நுணங்கிய	78
நுண்ணியநூ	551
நுண்ணியமெ	82
நுண்மாணு	863
நுணிக்கொ	
நூ	
நூலாருணு	
நெ	
நெஞ்சத்தார்	402
நெஞ்சிற்று	791
நெடுங்கடலுர்	647
நெடுநீர்ம	789
நெடும்புனலு	984
நெய்யாலெ	717
நெருநலுள	957
நெருநற்று	877
நெருப்பிலுட்	788
நோ	
நோக்கினுணெ	493
நோக்கினு	247
நோதலெவ	
நோயெல்	959
நோய்காடி	347
நோவற்க	745
நோனுவுட	164
ப	596
பகச்சொல்லி	239
பகல்சருங்கப்	89
பசல்வெல்	244
பசுத்தண்	685
பகைகட்பாக்	606
பகைகட்பாவ்	712
பகைபாவ	22
பகைமைபுவ்	880
பகையகத்தச்	109
பகையகத்துப்	956
பகையென்	999
பசக்கமற்	947
பசத்தாளிவ	923
பசப்பெனப்	
படலாற்று	671
படியுடை	857
படுபயன்	15
படைகுடி	992
படைகொண்	
பணியுமாமெ	321
பணிவுடைட	282
பணைதீக்	546
பண்டறிவ	312
பண்பெ	367
பண்பீ	
பண்புர	526
பதிமரு	
பயனில	873

குறள்	பக்கம்
...ல்சொற்	137
...மரமு	151
...றூக்கார்	75
...றூக்கி	708
...தவர்கல்	952
...தோம்பிக்	94
...தோம்பிப்	65
...துகூர்ங்	461
...னுமா	285
...வார்	630
...த்தோ	371
...ரலும்	920
...டைநீ	803
...சால்ல	499
...ல்லகற்	639
...ழுவும்	566
...வைகற்	560
...ார்பகை	345
...ார்முனி	134
...யசெல்	726
...யநட்	623
...மலைந்	505
...யஞ்சி	35
...தெண்	491
...மை	622
...யமெ	539
...ற்றகண்	403
...ற்றகண்ணே	260
...ற்றே	198
...விடா	258
...கபற்	260
...ன்ன	335
...பரும்பி	936
...மாயக்க	958
பா	
...பெறு	944
...ஞ்ண்	159
...லொடு	869
பி	
...க்குமரு	856
...யின்மை	568
...யேர்	847
...ம்	487
...க்கு	893
	320

குறள்	பக்கம்
பிறப்பென்	267
பிறப்பொக்	755
பிறர்க்கின்	233
பிறர்நாணத்	790
பிறர்பழியுந்	788
பிறவிப்பெருங்	9
பிறன்பழி	130
பிறன்பொ	100
பிறன்மனை	105
பீ	
பீலிபெய்சா	366
பு	
புகழின்றாற்	750
புகழ்ந்தவை	415
புகழ்படவா	136
புகழ்புரிந்தி	45
புக்கிலமை	252
புணர்ச்சிபழ	609
புத்தேளுல	149
புரந்தார்கண்	604
புலத்தலிற்	1001
புலப்பலென	959
புலப்பேன்	964
புல்லவையு	553
புல்லாதிரா	987
புல்லிக்கிடந்	914
புல்லிவிடா	1002
புறங்குன்றி	200
புறங்கூறிப்	128
புறத்துறு	59
புறந்தூய்	217
புன்கண்ணை	935
பெ	
பெண்ணிய	993
பெண்ணிற்	42
பெண்ணினா	973
பெண்ணேவல்	704
பெயக்கண்டு	447
பெயலாற்	905
பெரிதாற்றி	970
பெரிதினிது	651
பெரியாரை	693
பெருக்கத்து	748
பெருங்கொ	406
பெருமைக்கு	390

குறள்	பக்கம்
பெருமைபெ	760
பெருமையு	757
பெரும்பொ	563
பெறாஅமை	983
பெறினென்	966
பெறுமவற்றுள்	47
பெற்றாற்	45
பே	
பேணாதுபெட்	907
பேணாதுபெட்	975
பேணாதுபெண்	701
பேதைபெ	633
பேதைப்படு	282
பேதைமையு	646
பேதைமையெ	645
பேதைமையொ	625
பேராண்மை	598
பொ	
பொச்சாபுக்	411
பொச்சாப்பா	412
பொதுநலத்	711
பொதுநோ	407
பொய்படு	649
பொய்ம்மையு	213
பொய்யாமைபொ	216
பொய்யாமை	216
பொருடீர்ந்த	139
பொருட்பெ	709
பொருட்பொ	710
பொருணீங்	175
பொருண்மா	940
பொருள்கரு	519
பொருள்கெ	727
பொருளல்லவ	579
பொருளல்லவற்	261
பொருளற்றார்	176
பொருளாட்சி	180
பொருளானா	778
பொருளென்னும்	580
பொள்ளென	375
பொறியின்	475
பொறிவாயி	5
பொறுத்தலிறப்	108
பொறை	564

குறள்	பக்கம்
போ	
போற்றினரி	534
ம	
மகன்றந்தை	53
மக்கண்மெய்	50
மக்களே	832
மங்கலமென்ப	46
மடலூர்தல்	879
மடிமடிக்	464
மடியிலா	469
மடியுளாண்	474
மடிமைகுடி	468
மடியைமடி	464
மடுத்தவா	480
மணிநீருமண்	572
மணியிற்றிக	969
மண்ணோடி	444
மதிநுட்ப	489
மதியுமடந்	866
மயிர்நீப்பின்	752
மருந்தாகித்	152
மருந்தென	731
மருந்தோம	751
மருவுகமாசற்	612
மலரண்ண-ண்மு	868
மலரன்ன-ளரு	883
மலரினுமெ	978
மலர்காணின்	863
மலர்மிசை	3
மழித்தலுநீ	202
மறத்தல்வெ	221
மறந்தும்பிறன்	143
மறப்பினு	95
மறப்பினெ	926
மறமானமா	592
மறவற்கமா	77
மறைந்தவை	453
மறைபெற	909
மறைப்பேன்மற்	955
மறைப்பேன்மன்	897
மற்றியா	927
மறறுந்தொ	257
மனத்தினமை	640
மனத்துக்கண்	26
மனத்தது	201
மனத்தொடு	215
மனத்தானா	348
மனத்துளது	349
மனந்தூய்மை	350
மனந்தூயார்	350
மனநலமன்	351
மனநலநன்கு	352
மனநலத்தி	353
மனமாணா	687
மனைத்தக்க	40
மனைமாட்சி	41
மனையாளை	702
மனைவிழை	700
மன்னர்க்கு	429
மன்னர்வி	533
மன்னுயிரெ	901
மன்னுயிரோ	173
மா	
மாதர்முகம்	867
மாலைநோய்	938
மாலையோ	934
மாறுபாடி	738
மி	
மிகச்செய்	644
மிகன்மேவன்	665
மிகினுங்கு	730
மிகுதியான்	111
மு	
முகத்தான	69
முகத்தினினி	640
முகத்தின்மு	544
முகநகநட்ப	609
முகநோக்கி	545
முகைமொக்	969
முடிவுமி	520
முதலிலார்க்	341
முயக்கிடை	946
முயங்கிய	945
முயற்சிதிரு	474
முரண்சேர்ந்	379
முறிமேனி	864
முறைகோடி	431
முறைசெய்	296
முறைப்பட	492
முற்றாற்றி	576
முற்றியுமு	[illegible]
முனைமுகத்	[illegible]
முன்னுறக்	[illegible]
மே	
மேலிருந்து	[illegible]
மேற்பிறந்	[illegible]
மை	
மையலொரு	[illegible]
மோ	
மோப்பக்குழை	[illegible]
யா	
யாகாவாரா	[illegible]
யாங்கண்ணி	8[illegible]
யாண்டுச்செ	6[illegible]
யாதனின்யா	2[illegible]
யாதானுநா	3[illegible]
யாமுமுளே	9[illegible]
யாமெய்யா	2[illegible]
யாரினுங்கா	9[illegible]
யானெனதெ	2[illegible]
யானோக்கு	8[illegible]
வ	
வகுத்தான்வ	2[illegible]
வகைமாண்ட	6[illegible]
வகையறச்சூ	3[illegible]
வகையறிந்துவ	5[illegible]
வகையறிந்துத	68[illegible]
வசையிலா	16[illegible]
வசையென்ப	16[illegible]
வசையொழிய	16[illegible]
வஞ்சமனத்	19[illegible]
வருகமற்	96[illegible]
வருமுன்னர்	33[illegible]
வருவிருந்து	5[illegible]
வரைவிலாமா	71[illegible]
வலியார்க்கு	66[illegible]
வலியார்முற்	17[illegible]
வலியினிலை	19[illegible]
வழங்குவ	74[illegible]
வழிநோக்	67[illegible]
வழுத்தினாடு	99[illegible]
வறியார்க்	15[illegible]
வன்கண்குடி	48[illegible]
வா	
வாணிகஞ்செய்	8[illegible]